சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

இரண்டாம் திருமுறை

(தமிழிலும் ஆங்கிலத்திலும் உரைநடையில் விரிவான விளக்கங்களுடன்)

வெளியீடு

சமூக சமயச் சங்கம்

'அப்பர் இல்லம்", 21-ஐந்தாம் குறுக்குத் தெரு,
மகாராஜ நகர், திருநெல்வேலி - 627 011
தமிழ்நாடு, இந்தியா,

THĒVAARAM

Divine outpourings of saint Thiru-Gnaana-Sambandar
Second Thirumurai
(With Elaborate Commentary both in Tamil and English)

PUBLISHERS

SOCIO RELIGIOUS GUILD

"APPAR ILLAM", 21, FIFTH CROSS STREET,
MAHAARAAJA NAGAR, THIRUNELVELI - 627 011
TAMIL NADU, INDIA.

2016

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

இரண்டாம் திருமுறை

(தமிழிலும் ஆங்கிலத்திலும் உரைநடையில் விரிவான விளக்கங்களுடன்)

வெளியீடு
சமூக சமயச் சங்கம்
'அப்பர் இல்லம்", 21-ஐந்தாம் குறுக்குத் தெரு,
மகாராஜ நகர், திருநெல்வேலி - 627 011
தமிழ்நாடு, இந்தியா,

THĒVAARAM

Divine outpourings of saint Thiru-Gnaana-Sambandar
Second Thirumurai
(With Elaborate Commentary both in Tamil and English)

PUBLISHERS
SOCIO RELIGIOUS GUILD
"APPAR ILLAM", 21, FIFTH CROSS STREET,
MAHAARAAJA NAGAR, THIRUNELVELI - 627 011
TAMIL NADU, INDIA.

2016

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

இரண்டாம் திருமுறை

[தமிழிலும் ஆங்கிலத்திலும் உரைநடையில் விரிவான விளக்கங்களுடன்]

வெளியீடு

சமூக சமயச் சங்கம்

'அப்பர் இல்லம்", 21-ஐந்தாம் குறுக்குத் தெரு,
மகாராஜ நகர், திருநெல்வேலி - 627 011
தமிழ்நாடு, இந்தியா,

THĒVAARAM

Divine outpourings of saint Thiru-Gnaana-Sambandar
Second Thirumurai
(With Elaborate Commentary both in Tamil and English)

PUBLISHERS

SOCIO RELIGIOUS GUILD

"APPAR ILLAM", 21, FIFTH CROSS STREET,
MAHAARAAJA NAGAR, THIRUNELVELI - 627 011
TAMIL NADU, INDIA.

2016

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ

உ
திருச்சிற்றம்பலம்
சிவமயம்

திருக்கைலாய பர்வதம் – Holy Mount Kailaas

காளை வாகனத்தில் ஸ்ரீகண்ட பரமசிவன் – பார்வதி – விநாயகர் – பாலமுருகன்

Lord Civa - Goddess Parvathi - Lord Vinayakar - Lord Murugan





சிவன் - நடராஜர் CIVAN - NATARAJAR
பதஞ்சலி முனிவர்
SAINT PATANJALI
வியாக்கரபாத முனிவர்
SAINT VYAKRAPAATHAR
சிவகாமி SIVAKAMI
மாணிக்கவாசக சுவாமிகள்
SAINT MAANIKKAVAACHAKAR



செந்தமிழ் சிவநெறிச் செல்வர்
தெய்வத்திரு வை. ஆறுமுகம் பிள்ளை
நிறுவனர் தலைவர்
சமூக சமயச் சங்கம்
திருநெல்வேலி.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் வாழ்த்து

(சேக்கிழார் சுவாமிகள் அருளியது)

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

வேத நெறி தழைத்து ஓங்க மிகு சைவத்துறை விளங்கப்
பூத பரம்பரை பொலியப் புனித வாய் மலர்ந்து அழுத
சீத வள வயல் புகலித் திரு ஞான சம்பந்தர்
பாத மலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

VĒDA NERI THALAITHTHU ŌNGA MIHU SAIVATH THURAI VILANGA
BOOTHA PARAMBARAI POLIYA PUNITHA VAAI MALARNTHU AZHUTHA
SEETHA VALA VAYAL PUKALI-TH THIRU GNAANA SAMBANDAR
PAATHA MALAR THALAI-K-KONDU THIRU-TH-THONDU PARAVUVAAM.

INVOCATION HYMN TO SAINT THIRU-GNAANA-SAMBANDAR

(By Sek-kizhaar Swaamigal)

Aloft we hold the sacred flowery Feet of Saint Thiru-Gnaana-Sambandar on our head and work to propagate his divine vedic message. This saint was born in Pukali (See-Kaazhi) which is surrounded by cool and fertile paddy fields.

A crying voice "AMMAYĒ APPAA" (அம்மையே அப்பா) blossomed forth from the holy mouth of the sage child while he was standing on the banks of the Temple Tank (of Pirama-Puram). This resulted in the rich Vedic Culture and the vast Saiva Cult growing and spreading everywhere. May the traditional giant servitors (Army of Boothas of Lord Civa) glow in fame!

சேக்கிழார் சுவாமிகள் திருவடிகள் போற்றி!
திருஞான சம்பந்த சுவாமிகள் திருவடிகள் போற்றி போற்றி!!
Let the renown of Sekkizhaar and Thiru-Gnaanasambandar be remembered
all over the world for ever.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நால்வர் வயது

அப்பருக்கு எண்பத்தொன்று அருள் வாதவூரருக்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம் – இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன் ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினாறு அறி.

அப்பருக்கு எண்பத்தொன்று அருள் வாதவூரருக்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம் – இப்புவியில்
சுந்தரருக்கு மூவாறு தொல் ஞான சம்பந்தருக்கு
அந்தம் பதினாறு அறி.

APPAR-UK-KU ENNPATHTHŌNDRU ARUL VAATHA VOORA-RUK-KU-CH
CHEPPIYA NAALETTIL THEIVEEKAM IP-PUVIYIL
SUNDARA-RU-KU MOOVAARU THŌL GNAANA SAMBANDA-RU-KU
ANTHAM PATHI-NAARU ARI.

AGE OF THE FOUR SAINTS

Saint Appar (Thiru-Naavu-k-karasu Swaamigal) was blessed with eighty one years of life while Saint Maanickavaachaka Swaamigal attained Para Mukthi at thirty two. Here, in this earth Saint Sundaramoorthy Swaamigal lived upto eighteen years, while Saint Thiru-Gnaana-Sambanda Swaamigal had a spell of life for sixteen years.

நால்வர் புகழ் ஓங்குக உலகெலாம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நால்வர் குருபூசை நட்சத்திரங்கள்

சித்திரைச்சதயம் அப்பர் சிறந்தவை காசிமூலம்
அத்தரைப்பணி சம்பந்தர் ஆனிமாமகத் தில்அந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல்ஆடி தன்னில்
சுத்தமாஞ்சோதி நாளில்சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

சித்திரைச் சதயம் அப்பர் சிறந்த வைகாசி மூலம்
அத்தரைப் பணி சம்பந்தர் ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாஞ் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

CHITHIRAI-CH CHATHAYAM APPAR CHIRANTHA VAIKAASI MOOLAM
ATHTHARAI-P-PANI SAMBANDAR AANI-MA MAKATH-THIL ANDHA
MUTH-THAMIL VAATHA-VOORAR MUTHIA NAL AADI THANNIL
SUTH-THA-MAANCH CHŌTHI NAALIL SUNDARAR KAILAI CHĒRNTHAAR.

STARS ON THE GURU POOJA DAY OF THE FOUR SAINTS

In the Tamil month of "Chithirai" with star "Sathayam" (சதயம்-24th Star) Saint Appar Swaamigal reached Lord Civan's Holy Feet; In the Tamil month of "Vaikaasi" with star Moolam (மூலம்-19th Star) Saint Thiru-Gnaana-Sambandar attained Mōksha; In the Month of "Aani" with star "Maham" (மகம்-10th Star) Saint Maanickavaachakar became one with Lord Nataraaja at Chidambaram. While in the Tamil month of "Aadi" with star "Swaathi" (சுவாதி-15th Star) Saint Sundara Moorthy Swaamigal reached Lord Civan's aboard in Mount Kailas, riding on a white elephant.

நால்வர் திருவடிகள் போற்றி போற்றி!!

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
வழங்கியருளிய

ஆசியுரை

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் – சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

–ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர்.

திருமுறைகள்

சைவ சமய நூல்களைச் சான்றோர் தோத்திரம், சாத்திரம் என இருவகையாகப் பகுத்துக் கூறுவர். அவற்றுள் தோத்திரம் அன்பின் அடிப்படையில் எழுந்தது. சாத்திரம் அறிவின் அடிப்படையில் தோன்றியது. இவ்விரு திறத்து நூல்களும் மெய்யுணர்வாளர்களால் அருளிச் செய்யப் பெற்றவை.

தோத்திரங்களில் தலையானவைகளாக விளங்குவன பன்னிரு திருமுறைகளாகும். முறை– நூல். திருமுறை என்ற சொல்லுக்கு, தெய்வத் தன்மை வாய்ந்த நூல் என்பது பொருளாகும். தெய்வத் தொடர்புடைய கோயில், குளம், நந்தவனம் முதலானவற்றைத் திருக்கோயில், திருக்குளம், திருநந்தவனம் என வழங்குதல் போலத் தெய்வத் தொடர்புடைய இந்நூல்களையும் திருமுறை என வழங்கினர் நம் முன்னோர். திருமுறை என்ற சொல், திருவை அடையச் செய்யும் நூலுக்குப் பெயராயிற்று. திரு என்பது சிவம். ‘சிவமே பெறும் திருஎய்திற்றிலேன்’ என்பது மணிவாசகர் திருவாக்கு. அவர் சிவத்தைத் திரு என்றே குறிப்பிடுகிறார்.

‘திரு’ என்ற சொல்லுக்கு உண்மை, அறிவு, ஆனந்தம் என்ற மூன்று பொருளும் உண்டு. சிவபரம்பொருளைச் சச்சிதானந்த வடிவமாகக் காட்டுகின்றன ஞானநூல்கள். சத் – உள்ளது, சித் – அறிவு, ஆனந்தம் – இன்பம். இம்மூன்றையும் உடையது எதுவோ அதுவே உண்மைத் “திரு” எனப்படும். ‘சத்’ என்பது சிவம். ‘சித்’ என்பது உமாதேவி. ‘ஆனந்தம்’ என்பது முருகன். எனவே, உண்மை, அறிவு, இன்பம் இம்மூன்றும் நிறைந்ததே முழுமையான பரம்பொருளாகும்.

இப்பரம்பொருளை அடைய வழிகூறும் நூலே திருமுறை எனப்படும். முறை என்ற சொல், நூல் என்ற பொருளில் கந்தபுராணத்துள் வந்துள்ளமையைக் காணலாம்.

'இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறைவரை வேன்என முயல்வது ஒக்குமால்'

என்பது கந்தபுராண அவையடக்கப் பாடல் பகுதியாகும்.

தேவாரம்

திருமுறைகள் பன்னிரண்டாகப் பகுக்கப் பெற்றுள்ளன. இவற்றை அருளியவர்கள் திருஞானசம்பந்தர் முதலாகச் சேக்கிழார் ஈறாக 27 அருளாசிரியர்கள் ஆவர். இருபத்தேழு நட்சத்திரங்களும் புற இருளைப் போக்குவது போல இவ்விருபத்தேழு அருளாசிரியர்கள் அருளிய நூல்கள் மக்கள் உள்ளத்தின்கண் உள்ள அக இருளைப் போக்கும் தன்மையன. இவற்றுள் முதல் ஏழு திருமுறைகளை அருளிச் செய்தவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் ஆவர். இவை பழந்தமிழ் இசையமைப்பில் பண்ணமைப்புடன் கூடிய இசைப் பாடல்களாதலின் தேவாரம் எனப் போற்றப் பெறும். தே–தெய்வம். வாரம் – இசைப்பாடல். தெய்வத்தைக் குறித்த இசைப்பாடல் என்ற பொருளில் இவை அப்பெயரால் வழங்கப் பெறுகின்றன.

தேவாரத்தை 'மூவர் தமிழ்' என ஔவையார் போற்றியுரைப்பார். 'மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ்' என அறிஞர்கள் போற்றி உரைப்பர். இம்மூன்று அருளாசிரியர்களையும் மூவர் முதலிகள் எனவும், இவர்களோடு திருவாசகம், திருக்கோவையார் அருளிய மணிவாசகரையும் இணைத்து, சமயாசாரியர் எனவும் கூறுவர். இந்நால்வர் பெருமக்களும் சைவ சமயம், வேற்றுச் சமய நெறிகளால் நிலை குலைந்திருந்த காலத்தில் இறைவன் திருவருளால் இந்நிலவுலகில் அவதரித்து, சைவசமயத்தை நிலைநிறுத்திய பெருமக்களாதலின் சமயாசாரியார்கள் எனப் போற்றப்படுகின்றனர்.

அடங்கல் முறை

தேவாரத் திருப்பதிகங்களின் தொகுப்பு நூல் அடங்கல் முறை எனப்படும். இவ்வடங்கல் முறை – தலமுறை, பண்முறை, வரலாற்று முறை என மூவகைப்படும். இவற்றுள் பண் அமைப்புடன் தொகுத்துள்ள அடங்கலே முதல் ஏழு திருமுறைகள் ஆகும். ஏழு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தரால் அருளிச் செய்யப்பட்டவை. 384 திருப்பதிகங்களையும், 4181

பாடல்களையும் கொண்டவை. 4, 5, 6 திருமுறைகள் திருநாவுக்கரசு சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டவை. 313 திருப்பதிகங்களையும், 3066 பாடல்களையும் உடையவை. 7ஆம் திருமறை சுந்தரரால் அருளிச் செய்யப்பட்டது. 100 பதிகங்களையும் 1026 பாடல்களையும் கொண்டது. பதிகம் என்ற சொல்லுக்கு பத்துப் பாடல்களைக் கொண்டது என்பது பொருள். இவற்றுட் சில பதிகங்கள் கூடியோ குறைந்தோ வந்துள்ளன.

அப்பர் திருமுறை

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவரும் சைவப் பணியைச் சற்றே கடந்தும் புரிந்ததில் சம காலத்தவர். நாவுக்கரசர் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும் 7ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலும் வாழ்ந்தவர். இவர் காலத்தில் அரசு புரிந்த மன்னர்கள் முதலாம் மகேந்திரவர்ம பல்லவனும் (கி.பி. 580–630), நரசிம்மவர்ம பல்லவன் (கி.பி. 630–668) ஆவர். திருஞானசம்பந்தரையும், திருநாவுக்கரசரையும் சைவ சமயத்தின் இருகண்கள் எனச் சேக்கிழார் போற்றுகிறார். திருஞானசம்பந்தர் திருமுறைகள் உண்மைப் பொருளைச் சுருங்க உரைக்கும் முறையில் வேதங்களைப் போல் அமைந்தவை. திருநாவுக்கரசர் திருமுறைகள் அதனை விரித்துக் கூறும் முறையில் சிவாகமங்களைப் போல் அமைந்தவை. இவ்விருவர் பாடல்களையும் கேட்டு மகிழும் இயல்பினன் இறைவன் என்பதை சுந்தரர் 'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக் கரையனும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை' எனப் போற்றி உரைக்கிறார்.

செப்பேட்டில் திருமுறை

கி.பி. 1070 முதல் கி.பி.1120 வரை ஆட்சி புரிந்தவன் முதல் குலோத்துங்கன். இவன் படைத்தலைவர்களுள் ஒருவனான மணவிற்கூத்தன் காளிங்கராயன் என்பான், மூவர் தேவாரத்திருப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்து, திருக்கோயிலுள் சேமமுற வைத்தான் என்று தில்லைக் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. அதுபற்றிய வெண்பா:

> "முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவா(று)
> ஒத்தமைத்த செப்பேட்டி னுள்எழுதி – இத்தலத்தின்
> எல்லைக் கிரிவாய் இசைஎழுதி னான்கூத்தன்
> தில்லைச்சிற் றம்பலமே சென்று"

தில்லைச் சிற்றம்பலத்தின் மேல்பால் மூவர் கை அடையாளம் உள்ள அறையில் இருந்த திருமுறைகள் செல்அரித்திருந்தமையை உணர்ந்தமையால் செல் அரியாவண்ணம் இப்படைத்தலைவன் காளிங்கராயன் செப்பேடு செய்வித்தான். திருவாரூரிலும் திருமுறைகள் செப்பேடு செய்திருந்தமையை, அச்செப்பேட்டிலிருந்து படிஎடுத்த தருமை ஆதீன ஓலைச்சுவடியால் புலனாகிறது. இப்படியெல்லாம் திருமுறைகளின் அருமை, பெருமை தெரிந்து போற்றிய முன்னோர்களின் திருவுள்ளக் கருத்தை உணர்வோமாக.

ஓலைச்சுவடிகளில் திருமுறை

மற்றொரு வகையில் திருமுறைகண்ட சோழன் பற்றிச் சிந்திப்போம். ஞானசம்பந்தர் காலத்தில் அவருடனே இருந்து அவர் பாடல்களையெல்லாம் எழுதி வந்த சம்பந்த சரணாலயரே திருமுறைகளை முதன்முதலில் ஓலைச்சுவடிகளில் எழுதியவர். அதன்பிறகு ஏறத்தாழ ஞானசம்பந்தர் காலத்தில் இருந்தவராகக் கருதப்பெறும் சீகாழி கணநாதநாயனார், திருமுறைகளை எழுதுவோர் வாசிப்போரைத் தயாரித்தார் என்பது அவரைப்பற்றிய செய்தி.

மூத்த திருப்பதிகம்

இத்திருமுறையில் எட்டுப் பண்களில் அமைந்த 136 திருப்பதிகங்கள் உள்ளன. அவற்றுள் முதல் திருப்பதிகம் “தோடுடைய செவியன்” என்பது. ஞானசம்பந்தர் காலத்திற்கு முன்பே பண்ணோடு திருப்பதிகம் பாடி நெறிகாட்டியவர் காரைக்கால் அம்மையார். அவர் பாடிய நட்டபாடைப் பண்ணையே முதலில் ஞானசம்பந்தரும் அருளினார். இதுபற்றியே அம்மையார் அருளிய திருப்பதிகம் மூத்த திருப்பதிகம் என்ற பெரைப் பெறுவதாயிற்று.

மூவினைகள்

திருவாரூரில் பாடிய ‘பாடலன் நான்மறையன்’ என்ற பதிகத்துள் இரண்டாம் பாடலில், ‘காலையும் மாலையும் போய்ப் பணிதல் கருமமே’ என்று கடமையை உணர்த்துகின்றார். வழிபாட்டாலும், தேவாரத் திருப்பதிகங்களை ஓதுவதாலும் பழவினை (சஞ்சிதம்), வருவினை – மேல் எதிர்காலத்து வருவினை (ஆகாமியம்), இப்பிறப்பில் நாம் அனுபவிக்க இருக்கும் வினை (பிராரத்தவினை) ஆகிய இவையெல்லாம் தீரும் என்பது ஆளுடைய பிள்ளையாரின் அறிவுரை.

'வல்லதோர் இச்சையினால் வழிபாடிவை பத்தும் வாய்க்கச் சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பம் துடைப்பாரே'. இது பொதுவாக வினையினால் வரும் துன்பம் நீங்கும் என்கிறது.

'தோடுடைய செவியன்' கடைசிப் பாடலில், தொல்வினை – பழவினை தீர்தல் எளிதாம் என்றறிவித்துள்ளமை காண்க. திருநள்ளாற்றுப் போகமார்த்த பூண்முலையாள் என்னும் பதிகக் கடைசிப் பாடலில் 'உண்பு நீங்கி வானவரோடு உலகில் உறைவாரே'. உண்பு – பிராரத்தவினை. இதில் பிராரத்த வினை நீங்கும் என்கிறார்.

'கண்ணார் கோயில் கைதொழு வார்கட் கிடர்பாவம்
நண்ணா வாகும் நல்வினை யாய நணுகும்மே'

என்பதனால் ஆகாமியமாகிய எதிர்வினை நணுகாது என்கிறார் ஞானசம்பந்தர். இவ்வாறு பலபாடல்களால் சஞ்சித, ஆகாமிய, பிராரத்த வினைகள் நீங்கும் என்பதை இம்முதல் திருமுறையிலேயும் குறிப்பிட்டுள்ளார். **மூவினையும் முற்றிலும் நீங்காது. நீங்கினால் பிறவி இல்லையாகிவிடும். எனவே இலேசாகத் தாக்கும் என்பதையே நீங்கும் என்பதற்குப் பொருளாகக் கொண்டு ஓதி உணர்ந்து கொள்க.**

நமது திருமடத்து அடியார் **செந்தமிழ் சிவநெறிச் செல்வர் வை. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்** இரண்டாம் திருமுறையில் உள்ள 1331 பாக்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் (வசன நடை மற்றும், விரிவான நடை), எழுத்துப் பெயர்ப்பும் (Transliteration) மிகச் சிறப்பாக செய்துள்ளார். இந்தப் பெரிய நூலுக்குப் பணி செய்த அவரும், அவர் குடும்பத்தாரும், அவருக்குப் பல்வேறு வகையில் உதவிபுரிந்த அனைத்து அன்பர்களும், மேலும் மேலும் சமயப் பணிகள் பல புரிந்து, இனிது வாழ எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க சிவநெறி! வளர்க திருமுறை!! வாழ்க உலகெலாம்!!!

திருஞானசம்பந்தர் அருளிய

தேவாரம் 2ஆம் திருமுறை

பதிப்புரை

எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருளாலும் தருமபுரம் ஆதீனம் 26ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் குருவருளாலும் எங்களுடைய சமூக சமயச் சங்கம் (Socio Religious Guild) 1999–இல் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக இன்றுவரை வளர்ந்து வருகிறது.

எங்களுடைய முதல் வளர்ச்சி பெரிய அதிசயத்தில் நடந்தது. மாணிக்கவாசகர் குருபூஜை எனது இல்லத்தில் சிறப்பாக நடந்தது. அது முடிந்தவுடன் நான் மாணிக்கவாசகரை வணங்கி என்னை மானசீகமாக வாழ்த்த இறைஞ்சினேன். அவர் எனது உள்ளத்தில் திருவாசகத்தினை நல்லமுறையில் வெளியிடு என்று குறிப்பில் உணர்த்தினார்.

நான் உடனே தருமபுரம் சென்று குருமகா சந்நிதானத்திடம் இந்த நிகழ்வுகளைக் கூறினேன். அவர் மிகவும் ஆச்சரியப்பட்டு எனக்கும் இதே மாதிரி கனவு ஒரு வாரத்திற்கு முன்பு வந்தது. அதனால் இது தெய்வீக வாக்கு. நீ உடனே திருவாசகத்தினை ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடு என்று சொன்னார்கள். சந்நிதானத்தின் உத்தரவை நிறைவேற்றுவதற்கு இந்த சங்கத்தை நிறுவினேன். இந்த சங்கத்தின் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெயரான ‘சமூக சமயச் சங்கம் (Socio Religious Guild)’ எனது காலஞ்சென்ற எனதருமைத் தம்பி சி.சு. மணி அவர்கள் உருவாக்கினார். அதன்படி அடியேனும் எனது சகாக்களும் சேர்ந்து இந்த சங்கத்தை உருவாக்கினோம். அடியேனை நிரந்தர தலைவராக ஏகமனதாக அனைவரும் தீர்மானித்தார்கள்.

நாங்கள் அனைவரும் ஐந்து வருடங்களாக உழைத்து எட்டாம் திருமுறையான திருவாசகத்தை அச்சில் ஏற்றினோம். அந்நூலானது 1400 பக்கங்களைக் கொண்டதாகவும் இரண்டு தொகுதிகளாக அச்சிடப்பட்டு, தருமபுரம் குருமகா சந்நிதானம் அவர்களின் திருக்கரங்களால் சிதம்பரம் நடராஜப் பெருமானின் திருவடிகளில் வைத்து பூஜை செய்யப்பட்டு ஆயிரங்கால் மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது. நிகழ்ச்சியில் பல்வேறு மடாதிபதிகளும் மற்றும் மொழி அறிஞர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியினைச் சிறப்பு செய்தார்கள். ஒரு ஆங்கிலேயரும் தமிழ்மொழி அதிகமாகத் தெரியாதபோதிலும் நூலை வாங்கிச் சென்றார். ஆறு மாத காலத்திற்குள் அச்சிட்ட 1000 பிரதிகளும்

விநியோகம் செய்யப்பட்டு விட்டன. அதன்பிறகும் 2ஆவது பதிப்பு அச்சிடப்பட்டு உரியவர்களுக்கு இலவசமாக விநியோகம் செய்கிறோம்.

தருமபுரம் சந்நிதானம் திருவாசத்தினைப் படித்துப் பார்த்து ஏனைய பதினோரு திருமுறைகளையும் தமிழ்–ஆங்கிலம் ஆகிய இருமொழி பதிப்பாக வெளியிட ஆணையிட்டார்கள். எனது நண்பர்களுடன் ஆலோசனை செய்து அரும்பாடுபட்டு திருஞானசம்பந்தப் பெருந்தகையார் அருளிச்செய்த தேவாரம் – முதல் திருமுறையினைத் தருமைக் குருமகா சந்நிதானம் தனது திருக்கரங்களால் குருஞானசம்பந்தர் குருபூசை அன்று அவர்தம் திருவடிகளில் வைத்து பூசை செய்து வெளியிட்டார்கள். அச்சிட்ட அத்துனை பிரதிகளும் இரண்டு வருடங்களில் விநியோகம் செய்யப்பட்டு தீர்ந்துவிட்டன.

தற்சமயம் இரண்டாம் திருமுறையினையும் எழுதி அச்சிட ஏற்பாடுகள் பலவற்றை மேற்கொண்டு வருகிறேன். இன்னும் மூன்று மாத காலத்தில் நிறைவுபெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

நூல் விபர அட்டவணை

நூலின் தலைப்பு	:	**தேவாரம் - இரண்டாம் திருமுறை**
பதிப்பாசிரியர்	:	செந்தமிழ் சிவநெறிச் செல்வர் வை. ஆறுமுகம்
பொருள்	:	சைவ சமயத் தோத்திரப் பாடல்கள்
மொழி	:	தமிழ் மற்றும் ஆங்கிலம்
பதிப்பு	:	முதல் பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	ஜூலை, 2015
நூலின் அளவு	:	11" X 8.5"
தாள்	:	70 GSM MAP LITHO
கட்டமைப்பு	:	அட்டைக்கட்டு
அச்சு எழுத்து	:	12 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	1528
பிரதிகள்	:	300
பக்க வடிவமைப்பு	:	சிவா கம்ப்யூட்டர்ஸ், 12, பரஞ்சுடர் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002 தமிழ் நாடு, இந்தியா. ✆ 91 - 462 - 2579673
அச்சிட்டோர்	:	**ஸ்ரீனிவாஸ் பைன் ஆர்ட்ஸ் பிரிண்ட் (பி) லிமிடெட், சிவகாசி.**
வெளியீடு	:	சமூக சமயச் சங்கம், 'அப்பர் இல்லம்' 21– ஐந்தாம் குறுக்குத் தெரு, மகாராசநகர், திருநெல்வேலி – 627 011. தமிழ் நாடு, இந்தியா. ✆ 91 - 462 - 2574468

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**Thēvaaram – Second Thirumurai**
General Editor	:	Senthamil Sivaneri Chelvar **V. Arumugam**
Content	:	Hymns in praise of Lord Civan
Language	:	Tamil and English
Edition	:	First
Year of Edition	:	July 2015
Size of the Book	:	11" X 8.5"
Paper	:	70 GSM MAP LITHO
Binding	:	Hard Binding
Type	:	12 Point
Total Pages	:	1528
Copies	:	300
Typesetting	:	Siva Computers, 12, Paranjudar Street, Palayamkottai, Tirunelveli - 627 002 Tamil Nadu, India. ✆ 91 - 462 - 2579673
Printed by	:	SFA Print (P) Ltd., Sivakasi
Publishers	:	SOCIO RELIGIOUS GUILD, 'APPAR ILLAM' 21- Fifth Cross Street, Maharajanagar, Tirunelveli - 627 011. Tamil Nadu, India. ✆ 91 - 462 - 2574468

TRANSLITERATION CODE

Tamil	Transliteration	Approximate Pronunciation	Tamil	Transliteration	Approximate Pronunciation
அ	a	u in up	க்	k	k in cake
ஆ	A	a in father	ங்	g	ng in bangle, English
இ	i	i in sit	ச்	c	c in charm
ஈ	I	i in unique	ஞ்	nj	nj in Kanji
உ	u	u in pull	ட்	T	t in butter; d in bed
ஊ	U	oo in woo	ந்	n	n in new
எ	e	c in fed	த்	t	th in cloth
ஏ	E	a in plane	ன்	n2	n in new
ஐ	ai	i in site	ண்	N	N in new
ஒ	o	o in mobile	ப்	p	p in deep
ஓ	O	o in noble	ம்	m	m in man
ஔ	au	ow in now	ய்	y	y in yellow
ஸ்	S	S in BUS	ர்	r	r in revive
ஹ்	h	h in hulk	ல்	l	l in salt
ஜ்	j	j in Haj	வ்	v	v as in English but so firm
க்ஷ	x	x in box	ழ்	z	z pronounced with the tongue curled as far back as possible
ஷ்	ch / sh	sh in shine	ள்	L	l pronounced with the tongue curled back
ஸ்ரீ	C / sr	sr in sri	ற்	R	r in true, dr in drew

தமிழ் எழுத்து	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ
Transliteration Code	ka	kA	ki	kI	ku	kU	ke	kE	kai	ko	kO

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தப் பெருமான்அருளிச் செய்த

தேவாரம்

THĒVAARAM

Bestowed by St. Thiru-Gnaana-Sambandar

இரண்டாம் திருமுறைப் பதிகங்களின் அட்டவணை
List of Hymns in Second Thirumurai

பதிக எண் Hymn No.	பதிகத்தின் பெயர் Name of the Place	பக்க எண் Page No.
1	திருப்பூந்தராய் – THIRU-P-POONTHARAAI	1
2	திருவலஞ்சுழி – THIRU-VALAN-CHUZHI	15
3	திருத்தெளிச்சேரி – THIRU-TH-THELI-CH-CHERI	28
4	திருவான்மியூர் – THIRU-VAAN-MIYOOR	41
5	திருஅனேகதங்காவதம் – THIRU-ANEGA-THANGA-VATHAM	54
6	திருவையாறு – THIRU-VAIYAARU	66
7	திருவாஞ்சியம் – THIRU-VAANJIYAM	85
8	திருச்சிக்கல் – THIRU-CH-CHIKKAL	100
9	திருமழபாடி – THIRU-MAZHA-PAADI	111
10	திருமங்கலக்குடி – THIRU-MANGALAK-KUDI	123
11	சீகாழி – SEERKAAZHI	136
12	திருக்கச்சியேகம்பம் – KACH-CHITH-THIRUVEGAMBAM	147
13	திருக்கோழம்பம் – THIRU-K-KOZHAMBAM	160
14	திருவெண்ணியூர் – THIRU-VENNIOOR	171
15	திருக்காறாயில் – THIRU-K-KAARAAYIL	182

பதிக எண் Hymn No.	பதிகத்தின் பெயர் Name of the Place	பக்க எண் Page No.
16	திருமணஞ்சேரி – THIRU-MANANCH-CHERI	193
17	திருவேணுபுரம் – THIRU-VENU-PURAM	204
18	திருமருகல் – THIRU-MARUKAL	214
19	திருநெல்லிக்கா – THIRU-NELLIKKAA	225
20	திருஅழுந்தூர் – THIRU-ALUNDOOR	237
21	திருக்கழிப்பாலை – THIRUK-KALIP-PAALAI	248
22	திருக்குடவாயில் – THIRUK-KUDA-VAAYIL	260
23	திருவானைக்கா – THIRU-VAA-NAIKKAA	271
24	திருநாகேச்சுரம் – THIRU-NAAKECH-CHURAM	284
25	திருப்புகலி – THIRUP-PUKALI	295
26	திருநெல்வாயில் – THIRU-NEL-VAAYIL	306
27	திருஇந்திரநீலப் பருப்பதம் – THIRU-INDIRA-NEELA-PARUP-PATHAM	317
28	திருக்கருவூரானிலை – THIRUK-KARUVOOR-AANILAI	328
29	திருப்புகலி – THIRU-PUKALI	340
30	திருப்புறம்பயம் – THIRUP-PURAM-BAYAM	351
31	திருக்கருப்பறியலூர் – THIRUK-KARUP-PARIYALOOR	364
32	திருவையாறு – THIRU-VAI-YAARU	375
33	திருநள்ளாறு – THIRU-NALLAARU	388
34	திருப்பழுவூர் – KEELAP-PAZHU-VOOR	400
35	திருத்தென்குரங்காடுதுறை – THIRUTH-THEN-KURANGU-AADUTHURAI	412
36	திருவிரும்பூளை – THIRU-IRUM-POOLAI	423
37	திருமறைக்காடு – THIRU-MARAIK-KAADU	433

பதிக எண் **Hymn No.**	பதிகத்தின் பெயர் **Name of the Place**	பக்க எண் **Page No.**
38	திருச்சாய்க்காடு – THIRUCH-CHAAYK-KAADU	446
39	திருக்ஷேத்திரக் கோவை – THIRU-SHETRAK-KOVAI	458
40	திருப்பிரமபுரம் – THIRU-BRAHMA-PURAM	470
41	திருச்சாய்க்காடு – THIRUCH-CHAAYK-KAADU	482
42	திருஆக்கூர் – THIRU-AAKKOOR	494
43	திருப்புள்ளிருக்கு வேளூர் – THIRUP-PULLIRUKKU-VELOOR	506
44	திருஆமாத்தூர் – THIRU-AAMAATH-THOOR	520
45	திருக்கைச்சினம் – THIRUK-KAICH-CHINAM	532
46	திருநாலூர்மயானம் – THIRU-NAALOOR-MAYAANAM	542
47	திருமயிலாப்பூர் – THIRU-MY-LAAP-POOR	553
48	திருவெண்காடு – THIRU-VEN-KAADU	567
49	சீகாழி – SEERKAAZHI	581
50	திருஆமாத்தூர் – THIRU-AAMAATH-THOOR	593
51	திருக்களர் – THIRUK-KALAR	605
52	திருக்கோட்டாறு – THIRU-K-KOTTAARU	617
53	திருப்புறவார்பனங்காட்டூர் – THIRU-P-PURAVAAR – PANANG-KAATTOOR	630
54	திருப்புகலி – THIRU-P-PUKALI	643
55	திருத்தலைச்சங்காடு – THIRU-TH-THALAICH-CHANGAADU	654
56	திருஇடைமருதூர் – THIRU-IDAI-MARUTHOOR	666
57	திருநல்லூர் – THIRU-NALLOOR	678
58	திருக்குடவாயில் – THIRU-K-KUDA-VAAYIL	690
59	சீகாழி – SEERKAAZHI	701

பதிக எண் Hymn No.	பதிகத்தின் பெயர் Name of the Place	பக்க எண் Page No.
60	திருப்பாசூர் – THIRU-P-PAASOOR	713
61	திருவெண்காடு – THIRU-VENN-KAADU	726
62	திருமீயச்சூர் – THIRU-MEEYACH-CHOOR	738
63	திருஅரிசிற்கரைப்புத்தூர் – THIRU-P-PUTH-THOOR	751
64	திருமுதுகுன்றம் – THIRU-MUTHU-KUNDRAM	765
65	திருப்பிரமபுரம் – THIRU-P-PIRAMAPURAM	777
66	திருஆலவாய் திருநீற்றுப்பதிகம் – THIRU-AALA-VAAI – THIRU-NEETTRU-P-PATHIGAM	789
67	திருபெரும்புலியூர் – THIRU-P-PERUM-PULIYOOR	803
68	திருக்கடம்பூர் – THIRU-K-KADAMBOOR	816
69	திருப்பாண்டிக்கொடுமுடி – THIRU-P-PAANDI-K-KODUMUDI	830
70	திருக்கழுமலம் – THIRU-K-KAZHU-MALAM	842
71	திருக்குற்றாலம் – THIRU-K-KUTRALAM	856
72	திருநணா – THIRU-NANAA	870
73	திருப்பிரமபுரம் – THIRU-P-PIRAMAPURAM	883
74	திருப்பிரமபுரம் – THIRU-P-PIRAMAPURAM	895
75	சீகாழி – SEERKAAZHI	906
76	திருஅகத்தியான்பள்ளி – THIRU-AGATH-THIAAN-PALLI	917
77	திருஅறையணிநல்லூர் – THIRU-ARAI-ANI-NALLOOR	928
78	திருவிளநகர் – THIRU-VILA-NAGAR	939
79	திருவாரூர் – THIRU-AAROOR	953
80	திருக்கடவூர்மயானம் – THIRUK-KADA-OOR-MAYAANAM	972
81	திருவேணுபுரம் – THIRU-VENU-PURAM	983

பதிக எண் Hymn No.	பதிகத்தின் பெயர் Name of the Place	பக்க எண் Page No.
82	திருத்தேவூர் – THIRU-THEVOOR	993
83	திருக்கொச்சைவயம் – THIRU-KOCH-CHAI-VAYAM	1005
84	திருநனிபள்ளி – THIRU-NANI-PALLI	1015
85	கோளறுதிருப்பதிகம் – KOLARU-THIRU-P-PATHIGAM	1029
86	திருநாரையூர் – THIRU-NAARAIYOOR	1041
87	திருநறையூர்ச்சித்தீச்சரம் – THIRU-NARAIYOOR-CHITH-TH-EECHARAM	1054
88	தென்திருமுல்லைவாயில் – THEN-THIRU-MULLAI-VOYIL	1066
89	திருக்கொச்சைவயம் – THIRU-K-KOCHAI-VAYAM	1079
90	திருநெல்வாயிலரத்துறை – THIRU-NEL-VOYIL-ARA-TH-THURAI	1089
91	திருமறைக்காடு – THIRU-MARAI-K-KAADU	1101
92	திருப்புகலூர்வர்த்தமானீச்சரம் – THIRU-P-PUGALOOR – VARTHA-MAANEECH-CHARAM	1113
93	திருத்தெங்கூர் – THIRU-TH-THENKOOR	1124
94	திருவாழ்கொளிபுத்தூர் – THIRU-VAAZH-KOZHI-PUTH-OOR	1135
95	திருஅரசிலி – THIRU-ARACILI	1147
96	சீர்காழி – SEERKAAZHI	1159
97	சீர்காழி – SEERKAAZHI	1170
98	திருத்துருத்தி – THIRU-TH-THURUTHI	1180
99	திருக்கோடிகா – THIRU-K-KODIKA	1192
100	திருக்கோவலூர்வீரட்டம் – THIRU-K-KOVALOOR-VEERATTAM	1203
101	திருஆரூர் – THIRU-AAROOR	1214
102	திருச்சிரபுரம் – THIRU-CH-CHIRAPURAM	1225
103	திருஅம்பர்மாகாளம் – THIRU-AMBAR-MAAKAALAM	1237

பதிக எண் Hymn No.	பதிகத்தின் பெயர் Name of the Place	பக்க எண் Page No.
104	திருக்கடிகுளம் – THIRU-K-KADIK-KULAM	1249
105	திருக்கீழ்வேளூர் – THIRU-K-KEEZH-VELOOR	1261
106	திருவலஞ்சுழி – THIRU-VALAM-CHUZHI	1272
107	திருக்கேதீச்சரம் – THIRU-K-KETHEE-CHURAM	1283
108	திருவிற்குடிவீரட்டம் – THIRU-VIRKUDI-VEERATTAM	1295
109	திருக்கோட்டூர் – THIRU-K-KOTTUR	1305
110	திருமாந்துறை – THIRU-MAANTH-THURAI	1316
111	திருவாய்மூர் – THIRU-VAAI-MOOR	1327
112	திருஆடானை – THIRU-AADAANAI	1339
113	சீகாழி – SEER-KAAZHI	1349
114	திருக்கேதாரம் – THIRU-K-KETHARAM	1359
115	திருப்புகலூர் – THIRU-P-PUGALOOR	1370
116	திருநாகைக்காரோணம் – THIRU-NAAGAI-K-KAARONAM	1383
117	திருஇரும்பைமாகாளம் – THIRU-IRUMBAI-MAAGAALAM	1395
118	திருத்திலதைப்பதி – THIRU-TH-THILATHAIP-PATHI	1405
119	திருநாகேச்சரம் – THIRU-NAAKECH-CHURAM	1416
120	திருமூக்கீச்சரம் – THIRU-MUKKEECH-CHURAM	1427
121	திருப்பாதிரிப்புலியூர் – THIRU-P-PAATHIRI-P-PULIYOOR	1438
122	திருப்புகலி – THIRU-P-PUKALI	1449
	முதல் திருமுறை – பாட்டு முதற்குறிப்பகராதி	1459
	இரண்டாம் திருமுறை – பாட்டு முதற்குறிப்பகராதி	1481

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 137 *பதிக எண்: 1*

1. திருப்பூந்தராய் 1. THIRU-P-POONTHARAAI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

இத்திருப்பிரமபுரத் திருத்தலமானது சோழவள நாட்டில் காவிரி வடகரையில் அமைந்துள்ள 14ஆவது தலமாகும். நாகை மாவட்டத்தில் சீகாழி கோட்டத்தின் தலைநகர். மயிலாடுதுறை – சிதம்பரம் இருப்புப்பாதையில் இரயில் நிலையம், பேருந்து வசதிகள் உள்ள பெரிய ஊர். **பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, சீகாழி, கொச்சைவயம், கழுமலம்** என்ற பன்னிரண்டு திருநாமங்களை உடையது. இவற்றின் பெயர்க்காரணங்களைப் பதிகம் அறுபத்து மூன்றில் திருஞானசம்பந்தர் சுவாமிகளே எடுத்து விளக்கி உள்ளார்கள். அது ‘பல்பெயர்ப்பத்து’ என அமைக்கப் பெற்றுள்ளது. திருக்கழுமல மும்மணிக்கோவையுள் ‘வசையில் காட்சி’ என்னும் செய்யுளில் இப்பன்னிரண்டு பெயர்களும் பன்னிருயுகத்தில் வழங்கினவாகப் பட்டினத்தடிகளால் உணர்த்தப் பெறுகின்றது. இவையன்றி, சங்கநிதிபுரம் முதலாகப் பதினான்கு பெயர்களும் உள்ளனவாகத் தலபுராணம் சொல்லும்.

புறவாழிக் கடல் பொங்கி எழுந்த பேரூழிக்காலத்தில் இறைவன் அறுபத்துநான்கு கலைகளையும் ஆடையாக உடுத்திப் பிரணவத்தை தோணியாகக் கொண்டு அம்மையப்பனாக எழுந்தருளி வரும்போது ஊழியிலும் அழியாத இத்தலத்தில் தங்கினார். இங்கே ஒரு மலை உண்டு. இது இறைவன் ரோமச முனிவருக்காகத் திருக்கயிலைச் சிகரமொன்றை இந்த இடத்தில் தோற்றுவித்து, தானும் அம்மையுமாக இருந்து காட்சி வழங்கும் இடம். இதனை ‘இருபது பறவைகள் ஏந்திக் கொண்டிருக்கின்றன’. **இங்கே குரு, இலிங்க, சங்கமமாகிய மூன்று திருமேனியையும் வழிபடலாம். குருமூர்த்தம் தோணியப்பர்; இலிங்க மூர்த்தம் பிரமபுரீசர்; சங்கம மூர்த்தம் சட்டைநாதர்.** இதுவே திருஞானசம்பந்தப் பெருமானின் அவதாரஸ்தலமாகும்.

சுவாமி பிரமபுரீசர், அம்மை திருநிலைநாயகி. சுவாமி–அம்மன் கோயில்களுக்கு இடையில் திருஞானசம்பந்தர் ஆலயம் இருப்பது சோமாஸ்கந்தர் நிலையை நினைவூட்டுகிறது. திருத்தோணிச் சிகரத்துள்ள இறைவர் பெரியநாயகர்; தோணியப்பர் எனவும் வழங்கப் பெறுவர்.

இறைவி பெரியநாயகி; திருஞானசம்பந்தப் பெருமானுக்குச் சிவஞானப்பால் அளித்தவர் இவரே.

பிரமதீர்த்தம், காளிதீர்த்தம், கழுமலநதி, விநாயகநதி, புறவநதி முதலிய இருபத்திரண்டு தீர்த்தங்கள் உள்ளன.

முருகன், காளி, பிரமன், இந்திரன் முதலியோர். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்து அடிகள், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார், அருணகிரிநாதர் முதலியோர் போற்றியுள்ளனர். கணநாத நாயனார் அவதரித்த தலம். திருக்கயிலாய பரம்பரையில் வந்தருளிய திருநமச்சிவாயர், காழிக்கங்கைமெய்கண்டார், சிற்றம்பலநாடிகள் முதலியோர் வாழ்ந்த தலம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அர்த்தயாமத்தில் ஸ்ரீசட்டைநாதருக்கு விசேஷ வழிபாடு நடைபெறும். சித்திரை மாதம் இறைவன் இறைவியர்க்குப் பெருவிழா நடைபெறும். அதில் இரண்டாம் திருநாள் திருஞானசம்பந்தருக்கு உமையம்மை அளித்தருளிய திருமுலைப்பால் திருவிழா. இவ்விழாக்களில் பெரும்பகுதி திருஞானசம்பந்தர் ஐதீகத்தை ஒட்டியனவேயாம்.

பதிக வரலாறு

இத்திருப்பதிகம் சீகாழிப் பதிகங்களுள் ஒன்று. அவற்றுள் சில பதிகங்களுக்கே வரலாறு காணப்படுகின்றது.

1470. செந்நெலங் கழனிப்பழனத் தயலேசெழும்
புன்னைவெண் கிழியிற்பவ ளம்புரைபூந்தராய்
துன்னிநல் லிமையோர்முடிதேய் கழலீர்சொலீர்
பின்னுசெஞ் சடையிற்பிறைபாம் புடன்வைத்ததே. 1

*செந்நெல் அம் கழனிப் பழனத்து அயலே செழும்
புன்னை வெண் கிழியில் பவளம் புரை பூந்தராய்
துன்னி, நல் இமையோர் முடி தேய் கழலீர்! சொலீர் -
பின்னுசெஞ்சடையில் பிறை பாம்பு உடன் வைத்ததே?*

cennel am kazan2ip pazan2attu ayalE cezum
pun2n2ai veN kiziyil pavaLam purai pUntarAy
tun2n2i, nal imaiyOr muTi tEy kazalIr! colIr--
pin2n2ucenjcaTaiyil piRai pAmpu uTan2 vaittatE?

பொருள்: திருப்பூந்தராய் என்னும் சீகாழிப் பதியில் செந்நெல் விளையும் அழகிய வயல்கள் எங்கும் உள்ளன. வயல்களின் அருகே புன்னை மரச் சோலைகள் உள்ளன. அம்மரங்களில் இருந்து உதிர்ந்த பூக்கள், வெண்மையான துணியில் பவளங்கள் பரப்பினாற்போலக் காட்சி அளிக்கின்றன. இவ்வாறு விளங்கும் திருப்பூந்தராய்ப் பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திருவடிகளை, நல்ல தேவர்கள் நெருங்கி வந்து தங்களின் முடிகளைத் தோய்த்து வணங்குகிறார்கள். இவ்வாறு வணங்கப்பெறும் திருவடிகளை உடைய இறைவரே! பின்னிய உமது செஞ்சடையில் இளம்பிறையையும், அதற்குப் பகையாக உள்ள பாம்பையும் சேர்த்து வைத்துள்ளது ஏனோ? சொல்லுவீராக.

குறிப்புரை: திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இத்திருப்பதிகம் முதலாக நான்கு பதிகத்தில், சிவபெருமானை முன்னிலையிற் பெற்று, வினாவுதலும், விடை கூறியருள வேண்டுதலும் அமையப் பாடியிருத்தல்பற்றி, இவற்றை, 'வினாவுரை' என்றனர். இத்தலைப்புடைய பிறமூன்றும் காண்க. இதன் ஒவ்வொரு திருப்பாடலிலும் வெவ்வேறு பொருளைக் குறித்து வினாவினார். முதல் வினா இறைவன் திருமுடிச் சார்புடையது. ஈற்றுவினா, திருவடிச் சார்புடையது. இடையிலே எருதேற்றம், மாதுபாகம், காமதகனம், கங்கையடக்கம், குழையும் தோடும் குலவும் முகம், இராவணனுக்கு அருளிய ஆக்கம் என்பவை வினாவிற்குரிய பொருளாயுள்ளன. மூன்றாம் அடிகளிலுள்ள விளிகளால் திருவடிப் பெருமையும், அமலமும் (யானையுரித்த வரலாறும்), விருப்பு வெறுப்பில்லாத வித்தகமும் (பிறையும் பாம்பும் சூடிய வரலாறும்), உயிர்களைத் தாங்கியுதவும் அருளுடைமையும் (மானேந்தியதால் விளங்கும் பசுபதித்துவமும்), திருவெண்ணீற்றுத் திருமேனிப் பொலிவும், மால்விடையூரும் மாட்சியும், மறை முதலாகும் இறைமையும், அடியாரைக் காக்கும் அடியும் (காரணமும்) குறிக்கப்பட்டன. இவ்வாறு பதிகந்தோறும் உய்த்துணர்ந்து போற்றிவரின், சிவபிரான் திருவருள் எளிதின் எய்தும் திருமுறையைப் பாராயணம் புரிவோர் அதனால் பெறும் பயன் அவரவர் அநுபவத்தால் அன்றி அறிய ஒண்ணாது. பாக்கள் வெளிப்படையாகத் தோன்றலாம். கருத்து அருள்வெளியைக் கவர்ந்தது. மருளுலகம் இவ்வண்மையை உணராது, வேதத்தின் இயல்பே இதன் இயல்பு.

முதற்பத்துத் திருப்பாடல்களுள்ளும் 'சொல்வீர்' என்று விடையிறுத்தருள வேண்டுவதுணர்க. சடையில் பிறையும் பாம்பும் ஒருசேர வைத்ததற்குக் காரணம் சொல்ல வேண்டுகின்றார்; சந்திரனைப் பாம்பு விழுங்குவதாகக் கொள்ளும் ஐதிகத்தைக் கருத்திற்கொண்டு, பகைப்பொருள்கள் இரண்டும் ஓரிடத்தில் இருப்பது குற்றம் என்பார்க்கு, 'வேண்டுதல் வேண்டாமை இல்லான்' ஆகிய சிவபிரான் சடையில், பகை

நீங்கி உறவுகொள்ளும் நிலையை அவ்விரண்டும் அடைந்துள்ளன என்றார். பிறையைச்சூடிய வரலாறு, சிவாபராதம் புரிந்தாரும் அதனை உணர்ந்து அந்த இறைவனை வணங்குவராயின், அவர்க்குத் திருவருள் கிடைப்பது உறுதி என்னும் உண்மையை உணர்த்துவது. ஐந்தலைப் பாம்பணிந்தது. 'பிறவி ஐவாய் அரவம் பொரும் பெருமான்' (திருவாசகம் 139) என்ற கருத்தினது. "தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறியா மதியான் என அமைத்தவாறே" (பட்டினத்தார் ஒருபா ஒருபஃது 6).

"சோழ வளநாடு சோறுடைத்து" இதிலுள்ள செந்நெல் அம்கழனிப்பழனம் உடைமை. சீகாழிக்கும் உரித்தாயிற்று. கிழி – துணி. கிழி (துணியும் அறுவையும்) காரணப்பெயர். புரை – ஒத்த. துன்னி – நெருங்கி. துன்னித்தோய்கழல் என்க. பழனத்தின் அயலிடங்களில் புன்னைப் பூக்கள் விழுந்துகிடக்கும் தோற்றம் வெள்ளைத் துணியில் பவளம் கிடக்கும் காட்சியை ஒத்திருந்தது என்க. 'புன்னை பொன்தாது உதிர்மல்கும் அந்தண்புகலி' (தி. 3. ப. 7. பா. 9) என்றதால் அதன் பூக்கள் செம்பவளம் போல்வன ஆதல் அறியப்படும். பாண்பு என்பது பாம்பு என்று திரிந்தது. பாண் – பாட்டு. பாட்டைக் கேட்கும் இயல்புடையது பாண்பு. இதில், பிறையும் பாம்பும் சடையில் ஒருங்கு வைத்தவற்றை வினாவினார்.

Thirup-poontharai is one of the twelve names of Sirkazhi and Lord Civan is seated in the Temple here. This city is surrounded by fertile red paddy fields. Along with these fields thick groves of mastwood trees (Calophyllum) are grown in plenty. White flowers with coral coloured top petals fall from the trees in the grove. This scenery looks like corals strewn over a broad white sheet in the entire grove. In such a rich place, oh Lord Civa! You are seated in the big temple; where the blessed devas arrive, bow their heads with their hair lapping on the ground and offer their worship. We wonder why You should adorn Your head both with the young crescent moon and its enemy the snake. You may tell me.

1471. எற்றுதெண் டிரையேறிய சங்கினொடிப்பிகள்
பொற்றிகழ் கமலப்பழனம் புகுபூந்தராய்ச்
சுற்றிநல்லி மையோர்தொழு பொற்கழலீர் சொலீர்
பெற்றமேறு தல்பெற்றிமை யோபெருமானிரே. 2

எற்று தெண் திரை ஏறிய சங்கினொடு இப்பிகள்
பொன்-திகழ் கமலப் பழனம் புகு பூந்தராய்ச்
சுற்றி, நல் இமையோர் தொழு பொன்கழலீர்! சொலீர் -
பெற்றம் ஏறுதல் பெற்றிமையோ? - பெருமானிரே!

eRRu tiN tirai ERiya cagkin2oTu ippikaL
pon2-tikaz kamalap pazan2am puku pUntarAyc
cuRRi, nal imaiyOr tozu pon2kazalIr! colIr--
peRRam ERutal peRRimaiyO?--perumAn2irE!

பொருள்: பூந்தராய் என்னும் சீகாழிப் பதியின்கண் உள்ள தெளிந்த கடலில் அலைகள் மாறி மாறி வந்து கரையில் மோதுகின்றன. அந்த அலைகளில் ஏறிவந்த சங்குகளும் சிப்பிகளும் பொன்போல் விளங்கும் தாமரை மலர்கள் மலர்ந்த வயல்களில் வந்து புகுகின்றன. நல்ல தேவர்கள் சூழ்ந்து தொழும் அழகிய திருவடிகளை உடைய சீகாழிப்பதி இறைவரே! அயிராவதம் முதலிய ஊர்திகள் இருக்க, விடைஏறி வருதல் உமக்கு ஏற்றத் தன்மைத்தாகுமோ? சொல்லுவீராக.

குறிப்புரை: எற்று – எறிந்த. திரை – அலை. இப்பி – சங்கினத்துள் முதலாவது. இடம்புரியும் வலம்புரியும் சலஞ்சலமும் பாஞ்ச சன்னியமும் ஆகிய சங்கினம் நான்கும் முறையே இப்பி முதல் சலஞ்சல முடியக்கூறும் நான்காலும் ஆயிரம் ஆயிரமாகச் சூழப்பெற்ற பெருமையின. (நிகண்டு, தொகுதி 3 பா. 73) பெற்றம் – எருது. பெற்றிமை – தன்மை, பேறு, உயர்வுடையது. சிறந்த பாக்கியம் என்னுங் கருத்தில் வந்தது. பெருமகன் என்பது பெருமான் என்று மருவிற்று. மகன் – தேவன், (மகள் – தேவி, திருமகள் – நாமகள்) பெருமாளிர் – விளி, ஏகாரம் ஈற்றசை, சீகாழிக்கழனியிற் சங்கும் இப்பியும் பொன்போல் விளங்கும் தாமரைகளும் மிக்குள்ளன. பெற்றமேறுதல் – 'பசு வேறும் பரமன்' விடையேறுதல்; பசுபதி என்பதைக் குறித்தது. இதில் விடை (பசு) ஏறும் உண்மையை வினாவினார்.

The city of Poontharaai is enriched with lotus ponds of golden coloured flowers lending to the place a golden appearance. The seashore is near the city. There, the conches and oysters are widely mixed with each other and reach the banks and thereafter roll into the lotus ponds. In such a glorious city, the blessed devas (angels) flock together and offer worship to Your holy feet bearing golden anklets. Now tell me, You the great Lord! is it fit for You to mount the bull to go round the world, though You have for Your comforts, the elephant of Devendra (Iyravadham) and many more vehicles at Your disposal?

1472. சங்குசெம் பவளத்திரள் முத்தவை தாங்கொடு
பொங்குதெண் டிரைவந்தலைக் கும்புனற்பூந்தராய்த்
துங்கமால் களிற்றின்னுரி போர்த்து கந்தீர்சொலீர்
மங்கைபங் கமுமங்கத் தொடொன்றிய மாண்பதே. 3

சங்கு செம்பவளத்திரள் முத்து அவைதாம்கொடு
பொங்கு தெண்திரை வந்து அலைக்கும் புனல் பூந்தராய்,
துங்க மால்களிற்றின் உரி போர்த்து உகந்தீர்! சொலீர் -
மங்கை பங்கமும் அங்கத்தொடு ஒன்றிய மாண்பு அதே?

cagku cempavaLattiraL muttu avaitAm koTu
pogku teNtirai vantu alaikkum pun2al pUntarAy,
tugka mAlkaLiRRin2 uri pOrttu ukantIr! colIr--
magkai pagkamum agkattoTu on2Riya mANpu atE?

பொருள்: நீர்வளம் மிகுந்த பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில் உள்ள தெளிந்த கடலில், பொங்கி வரும் அலைகள் சங்கு, செம்பவளம், முத்து ஆகியவற்றைக் கொண்டு வந்து கரைகளில் வீசுகின்றன. உயரிய பெரிய யானையை உரித்து அதன் தோலைப் போர்த்து மகிழ்ந்து உறையும் சிவபெருமானே! உமது திருமேனியின் இடப்பாகமாக உமையம்மையை ஒருடம்பில் ஒன்றுவித்துள்ள மாண்பு யாதோ? சொல்லுவீராக.

குறிப்புரை: பொங்குதல் – உயர்தல், மிகுதல், புனல் – நீர், துங்கம் – உயர்ச்சி. பவளத்தின் அடைமொழியால் மற்றையிரண்டின் நிறம் வெளிப்படை. திரள் – திரட்சி; தொகுதியுமாம். களிறு – மதக்களிப்புடையது (யானையின் ஆண்). மால் – பெருமை, மயக்கமுமாம். உரி – தோல், உகந்நீர் – உயர்ந்தவரே, பங்கம் – கூறு (பங்கம் + அம்). அங்கம் – உறுப்பு, இங்குத் திருமேனியைக் கொள்க. ஒன்றிய மாண்பு – அர்த்தநாரீச்சுரவடிவின் சிறப்பு. யானையை உரித்தது ஆணவமல நாசம் என்பர், மங்கை பங்கு; போகியாயிருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் பற்றியும் உயிர்க்கு இச்சாஞானக் கிரியா பலத்தை மிக விளைத்தல் பற்றியும் ஆயிற்று. ஆற்றலுக்கு அதுவே ஏது. களிற்றையுரித்த போது தேவியார் அஞ்சியதாகச் சொல்வது. ஞானமும் அஞ்சத் தக்க அத்துணைக் கொடியது இருண்மலம் என்பதுணர்த்த. இதில் மெய்ப்பாதியில் மாதிருக்கும் உண்மையை வினாவினார்.

In the city of Poontharaai the surging water of the sea flings conch shells, corals and beautiful pearls on the shore. Lord Civa! You are seated in the temple of the city gracefully. You were pleased to wear the skin of the great male elephant removing its fleece after killing it. Despite this terrific deed and decoration You have accepted the

tender body of Uma Devi on the left side of Your body. These two incongruities may be explained to me.

1473. சேமவன் மதில்பொன் னணிமாளிகை சேணுயர்
பூமணங் கமழும்பொழில் சூழ்தருபூந்தராய்ச்
சோமனும் மரவுந்தொடர் செஞ்சடையீர்சொலீர்
காமன் வெண்பொடி யாகக்கடைக் கண்சிவந்ததே. 4

சேம வல் மதில் பொன் அணி மாளிகை சேண் உயர்
பூ மணம் கமழும் பொழில் சூழ்தரு பூந்தராய்,
சோமனும் அரவும் தொடர் செஞ்சடையீர்! சொலீர் -
காமன் வெண்பொடி ஆகக் கடைக்கண் சிவந்ததே?

cEma val matil pon2 aNi mALikai cEN uyar
pU maNam kamazum pozil cUztaru pUntarAy,
cOman2um aravum toTar cenjcaTaiyIr! colIr--
kAman2 veN poTi Akak kaTaikkaN civantatE?

பொருள்: பூந்தராய் என்னும் சீகாழிப் பதியில் பாதுகாவலாக அமைந்த வலிய மதில்களும், பொன்னால் அழகுறுத்தப் பெற்ற அழகிய மாளிகைகளும், மிக உயர்ந்து மலர் மணங்கமழும் சோலைகளும் சூழ்ந்துள்ளன. இத்துணை வளமுள்ள சீகாழிப்பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே! உமது திருமுடியின் செஞ்சடையில் சந்திரனும், பாம்பும் தங்கியுள்ளன. உயிர்கட்கு போகத்தின்மேல் அவாவினை விளைவிக்கும் மன்மதன் வெண்பொடி ஆகுமாறு அவனைக் கடைக்கண் சிவந்து அழித்தது ஏனோ? சொல்லுவீராக.

குறிப்புரை: சேமம் – காவல். சேண் உயர்தல் – விண்ணில் மிக வோங்குதல். பொழில் – சோலை. சோமன் – பிறை. அரவு – பாம்பு. காமன் – மன்மதன். வெண்பொடி – (எரித்த) சாம்பல். சிவத்தல் – கோபக்குறிப்பு. "கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள்" (தொல், சொல், உரிச்சொல் 76). மன்மத தகனம், யோகியாய், யோகமூர்த்தி உதவுதற் பொருட்டு நிகழ்கின்ற இயற்கை (சித்தியார் 70) இதில் காமனை எரித்தவாற்றை வினாவினார்.

Poontharaai is surrounded by strong ramparts all around. Also the palaces and mansions are all gold plated. In addition, the city is enriched by the gardens of fragrant flowers in the trees which rise to touch the high sky. Oh Lord Civa! in Your matted hair of red beauty the young moon and the snake reside and follow You for salvation. You know well that kaaman or cupid (the Roman god of Love, the son of Roman goddess

Venus and Greek equivalent god Eros) is the god to be invoked for marital happiness of human beings. In spite of this, You got angry with him for his petty fault and winked Your lotus eye for a second. In a moment he was burnt into white ashes. Oh Lord! please tell us why You have destroyed him into ashes.

1474. பள்ளமீனி ரைதேர்ந்துழலும் பகுவாயன
புள்ளுநா டொறுஞ்சேர் பொழில்சூழ் தருபூந்தராய்த்
துள்ளு மான்மறியேந் தியசெங்கை யினீர்சொலீர்
வெள்ள நீரொருசெஞ் சடைவைத்த வியப்பதே. 5

பள்ளம் மீன்இரை தேர்ந்து உழலும் பகுவாயன
புள்ளும் நாள்தொறும் சேர் பொழில் சூழ்தரு பூந்தராய்,
துள்ளும் மான்மறி ஏந்திய செங்கையினீர்! சொலீர் -
வெள்ளநீர் ஒரு செஞ்சடை வைத்த வியப்பு அதே?

paLLam mIn2 irai tErntu uzalum pakuvAyan2a
puLLum nALtoRum cEr pozil cUztaru pUntarAy,
tuLLum mAn2maRi Entiya cegkaiyin2Ir! collr--
veLLa nIr oru cenjcaTai vaitta viyappu atE?

பொருள்: சோலைகளால் சூழப்பட்ட பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில் நீர்நிலைகள் வளப்பமாக உள்ளன. அவைகளில் இருக்கும் மீன்களை இரையாகக் கொள்ளுவதற்கு பிளந்த வாயை உடைய நாரைப் பறவைகள் நாள்தோறும் பலஇடங்களிலிருந்து வந்து தங்குகின்றன. இவ்வளவு செழிப்பான சீகாழிப்பதியில் எழுந்தருள்புரிகின்ற சிவபெருமானே! துள்ளுகின்ற மான்கன்றை செங்கையில் உடையவராய் விளங்குகின்றீர். பெருகிவந்த கங்கைநதியின் வெள்ளத்தைச் சிவந்த உமது சடையில் தடுத்து நிறுத்தித் தாங்கிய வியத்தகு செயலுக்குக் காரணம் யாதோ? சொல்லுவீராக.

குறிப்புரை: நீர்ப்பள்ளங்களில் இருக்கும் மீன்களை இரையாகத் தேர்ந்து அலையும் நாரைகள் நாள்தொறும் சோலையில் தங்கும் வளமுடையது சீகாழி. நாரை பகுந்த (பிளந்த) வாய் உடைமையால் பகுவாயன புள்ளு என்றார். 'வெண் குருகும் பகுவாயன நாரையும் திரைவாய் இரைதேரும் வலஞ்சுழி' (தி.2 ப.2 பா.2) என்றது காண்க. உணவும் இரையும் ஒன்றல்ல என்பதை "இழிவறிந்துண்பான்கண் இன்பம்போல் நிற்கும் கழிபேர் இரையான்கண் நோய்" (குறள் 946). என்றதனால் அறிக. செஞ்சடைமேல் நீர்ப்பெருக்கை வைத்த வியப்பைச் சொல்வீர் என்று துள்ளுகின்ற மான்கன்றை ஏந்திய செங்கையை உடைய சிவபெருமானை நோக்கி வேண்டுகின்றார். காட்டில் இருக்கத்தக்க மானைக் கையிலும் கையில்

இருக்கத்தக்க (கமண்டல) நீரைச் சடைக் காட்டிலும் ஏந்தியது வியப்பு. இதில் கங்கையைத் தாங்கிய ஆற்றலை வினாவினார்.

All sides of Poontharaai city are surrounded by beautiful gardens. The split-billed herons (storks, water birds) throng in this garden of Poontharaai from all four sides everyday. They prey on fish in brooks nearby for their food. In such a flourishing city Lord Civa, You are seated in the great temple holding in Your fair left hand a leaping deer. Oh Lord! Why have You arrested the Ganges river of gushing water on Your reddish matted hair! You stopped the flow of the river and kept it on Your head. What is the reason for this great action? Please tell me!

1475. மாதிலங் கியமங்கை யராடமருங்கெலாம்
போதிலங் கமலம்மது வார்புனற்பூந்தராய்ச்
சோதியஞ் சுடர்மேனி வெண்ணீ றணிவீர்சொலீர்
காதிலங் குழைசங்க வெண்தோடு டன்வைத்ததே. **6**

மாது இலங்கிய மங்கையர் ஆட, மருங்குஎலாம்
போதில் அம் கமலம் மது வார் புனல் பூந்தராய்,
சோதிஅம்சுடர்மேனி வெண்நீறு அணிவீர்! சொலீர் -
காதில் அம் குழை சங்கவெண்தோடுஉடன் வைத்ததே?

mAtu ilagkiya magkaiyar ATa, marugku elAm
pOtil am kamalam matu vAr pun2al pUntarAy,
cOti am cuTar mEn2i veN nIRu aNivIr! collr--
kAtil am kuzai cagka veNtOTu uTan2 vaittatE?

பொருள்: நீர்வளம் மிக்க பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில் உள்ள அழகிய பெண்கள் ஆங்காங்கே நடனம் ஆடுகின்றார்கள். இந்த ஊரின் மருங்கெல்லாம் பூத்துள்ள அழகிய தாமரை மலர்கள் தம்மிடம் நிறைந்துள்ள தேனை ஒழுக விடுகின்றன. இத்துணை செழிப்பான சீகாழிப்பதியில் எழுந்தருளிய சிவபெருமானே! உமது ஒளிமிக்க அழகிய திருமேனியில் வெண்ணீறு அணிந்துள்ளீர். உமது காதுகள் இரண்டனுள் ஒன்றில் குழையையும், மற்றொரு காதில் சங்குத் தோட்டையும் அணிந்துள்ளீர். இவ்வாறு மாறுபட்ட அணிகலன்கள் அணிவதற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

குறிப்புரை: மாது – அழகு. இலங்குதல் – விளங்குதல். மருங்கு – பக்கம். போது – மலரும் பருவத்து அரும்பு. கமலம் – தாமரை, மது – கள், குழையும் தோடும் காதணிகள். சீகாழியில் அழகிய மங்கையர்

ஆடுதற்குப் பரிசாகத் தாமரை, மலர்கள் தேனை ஒழுக்குகின்றன என்று நீர்நிலவளம் உணர்த்தப்பட்டது. செம்மேனியில் வெண்ணீற்றை அணிவீர் என்று அழைத்து, திருக்காதில் குழையும் தோடும் உடன் வைத்த புதுமையை வினாவினார். 'தோடுடையான் குழையுடையான்' (தி.1 ப.61. பா.8) 'தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும் . . . . . உடைத்தொன்மைக் கோலம்' என்பது திருவாசகம் (232).

In the city of Poontharaai beautiful damsels dance all over the places. The city is enriched by plenty of lotus ponds. These flowers pour their honey into the water of the pond, which is already sweet. Oh Lord Civa! Your divine body, glowing already is adorned with sacred white powder. Oh Lord! please tell us why You have adorned one of You ears with thodu (conch) and the other with beautifully carved ear jewel.

7. ஏழாவது பாட்டு கிடைக்கப் பெறவில்லை.

1476. வருக்கமார் தருவான் கடுவன்னொடு மந்திகள்
தருக்கொள் சோலைதருங் கனிமாந்திய பூந்தராய்த்
துரக்குமால் விடைமேல் வருவீரடிகேள் சொலீர்
அரக்கனாற் றலழித்தரு ளாக்கியஆக்கமே. 8

வருக்கம் ஆர்தரு வான் கடுவ(ன்)னொடு மந்திகள்
தருக் கொள் சோலை தரும் கனி மாந்திய பூந்தராய்,
துரக்கும் மால்விடைமேல் வருவீர்! அடிகேள்! சொலீர் -
அரக்கன் ஆற்றல் அழித்து அருள் ஆக்கிய ஆக்கமே?

varukkam Artaru vAn2 kaTuva(n2)n2oTu mantikaL
taruk koL cOlai tarum kan2i mAntiya pUntarAy,
turakkum mAlviTaimEl varuvIr! aTikEL! colIr--
arakkan2 ARRal azittu aruL Akkiya AkkamE?

பொருள்: பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில் பழங்கள் தரும் மரங்கள் நிறைந்து விளங்கும் சோலைகள் பல உள்ளன. அச்சோலைகளில் ஆண் குரங்குகளும், பெண் குரங்குகளும் கூடி, மரங்களில் உள்ள கனிகளை வயிறார உண்டு மகிழ்ந்து வாழ்கின்றன. இப்பதியில் எழுந்தருளி இருக்கின்ற சிவபெருமானே! திருமால் உமக்கு வாகனமாக வரவேண்டுமென்று விரும்பி காளை உருவம் தாங்கிவர, அதன்மேல் அமர்ந்து காட்சி தரும் அடிகளே! இராவணனை உமது கயிலாய மலையின்கீழ் அடர்த்தி அவன் தருக்கினை அழித்தீர். இடையூறு செய்த அவனுக்கு உடனே அருளும் வழங்கினீர். இந்த ஆக்கச் செயலுக்குக் காரணம் யாதோ? சொல்லுவீராக.

குறிப்புரை: வருக்கம் – இனம். கடுவன் – ஆண் குரங்கு. மந்தி – பெண் குரங்கு. தரு – மரம். மாந்திய – தின்ற. துரக்கும் – துரத்தும் (பிறவினை) துரந்த, துரந்து எனல் தன்வினையாட்சி. அருகிய வழக்கு. வருவீராகிய அடிகேள் என்று விளித்து. இராவணனது ஆற்றலை அழித்து அருள்கொடுத்த ஆக்கத்தைப் பற்றி இதில் வினாவினார்.

Poontharaai city is surrounded by thick groves full of fruit yielding tall trees. Male and female monkeys in this area join in groups and enter into the groves. Here they select the sweet fruits and eat well to their hearts' content and play with each other. In this Poontharaai, Lord Civan appears riding on the bull of Thirumaal (At the request of Thirumaal, Lord Civa gave permission to be transformed into a Bull and to be his vehicle). Oh my Lord Civa! My Supreme! tell me why You punished the all powerful demon king of Sri Lanka; but immediately blessed him also with divine grace.

1477. வரிகொள்செங் கயல்பாய்புனல் சூழ்ந்தமருங்கெலாம்
புரிசைநீடுயர் மாடநிலா வியபூந்தராய்ச்
சுருதிபாடி யபாணியல்தூ மொழியீர்சொலீர்
கரியமா லயன்நேடியுமைக் கண்டிலாமையே. 9

வரி கொள் செங்கயல் பாய் புனல் சூழ்ந்த மருங்கு எலாம்
புரிசை நீடு உயர் மாடம் நிலாவிய பூந்தராய்,
சுருதி பாடிய பாண் இயல் தூ மொழியீர்! சொலீர் -
கரிய மால் அயன் நேடி உமைக் கண்டிலாமையே?

vari koL cegkayal pAy pun2al cUznta marugku elAm
puricai nITu uyar mATam nilAviya pUntarAy,
curuti pATiya pAN iyal tU moziyIr! collr--
kariya mAl, ayan2, nETi umaik kaNTilAmaiyE?

பொருள்: பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில் மதில்களால் சூழப்பட்ட நீண்டு உயர்ந்த மாட மாளிகைகள் எங்கும் விளங்குகின்றன. அதன் பக்கங்களில் எல்லாம் நீர்நிலைகள் சூழ்ந்துள்ளன. இந்த நீர்நிலைகளில் வரிகளைக் கொண்டுள்ள செவ்விய கயல்மீன்கள் பாய்ந்து துள்ளி விளையாடிக் கொண்டிருக்கின்றன. இப்பதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! நீர் வேதங்களைப் பாடுவதும், இசைப்பாடல் போன்ற இனிய மொழிகளைப் பேசுவதுமாக விளங்குகின்றீர். கரிய திருமாலும், பிரமனும் உம்மைத்

தேடியும் காண இயலாத அனற்பிழம்பாகத் தோன்றினீர். இதற்குக் காரணம் யாதோ? சொல்லுவீராக.

குறிப்புரை: சீகாழியில் உள்ள மாட மாளிகைகளின் உயர்வும் நீள்வும், புரிசையும், நீர்வளமும், அந்நீரிற்பாயும் மீன்களின் செழுமையும் குறிக்கப்பட்டன. வேதாகமங்கள் சிவபெருமான் திருவாக்காதலின், சுருதிபாடிய பாண் இயல் தூமொழியீர் என்று விளித்தார். இதில், அரியும் அயனும் அடிமுடி தேடிக் காணாமையை வினாவினார். பாடிய பாண் (பாட்டு) இயலும் மொழி தூமொழி. சுருதி – கேள்வி, எழுதாக்கிளவியாதலின் கேள்வியால் தொன்று தொட்டுணர நின்றன. நேடி – தேடி.

In the city of Poontharaai ramparts are so high as to touch the sky. All around the city brooks run, always with profuse water. In these brooks streaked red carp fish leap and move all around for their prey. Oh Lord Civa! You are the Originator and the Author of all the Vedas and aagamaas that are meant for the benefit of human race. Oh Lord Civa! can You enlighten me how Lord Vishnu and Brahma could not trace Your holy feet and supreme head when You appeared as an infinite fiery column, even after tireless search for millions of years?

1478. வண்டலங் கழனிம்மடை வாளைகள் பாய்புனற்
புண்டரீக மலர்ந்துமதுத் தருபூந்தராய்த்
தொண்டர் வந்தடிபோற்றி செய்தொல் கழலீர்சொலீர்
குண்டர் சாக்கியர் கூறியதாங் குறியின்மையே. 10

*வண்டல் அம் கழனி(ம்) மடை வாளைகள் பாய் புனல்
புண்டரீகம் மலர்ந்து மதுத் தரு பூந்தராய்,
தொண்டர் வந்து அடி போற்றிசெய் தொல்கழலீர்! சொலீர் -
குண்டர்சாக்கியர் கூறியது ஆம் குறிஇன்மையே!*

vaNTal am kazan2i(m) maTai vALaikaL pAy pun2al
puNTarIkam malarntu matut taru pUntarAy,
toNTar vantu aTi pORRicey tol kazalIr! colIr--
kuNTar cAkkiyar kURiyatu Am kuRi in2maiyE?

பொருள்: பூந்தராய் என்னும் சீகாழிப் பதியில் எங்கும் வயல்கள் சூழ்ந்துள்ளன. அதில் வளம் மிக்க வண்டல் மண் மிகுதியாக உள்ளன. வயல்களின் மடைகளில் வாளைமீன்கள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. எல்லா மருங்கிலும் நீர்நிலைகள் மிகுதியாக உள்ளன. இங்கு தாமரை

மலர்கள் மலர்ந்து தேனைத் தந்து கொண்டிருக்கின்றன. இத்துணை வளம் மிக்க சீகாழிப்பதியில் எழுந்தருளிய சிவபெருமானே! உமது கழல் அணியப் பெற்ற பழமையான திருவடிகளில் தொண்டர்கள் வந்து வணங்கும் வண்ணம் உள்ளார்கள். சமணர்களும், சாக்கியர்களும் (புத்த சமயத்தவர்களும்) உம்மைக் கூறும் பொருளற்ற பழிச் சொல்லுக்குக் காரணம் யாதோ? சொல்லுவீராக.

குறிப்புரை: வண்டல் – வெள்ளத்தால் அடித்துக் கொண்டு வரப்பட்ட உரம்மிக்க மணல். மடை – நீர்மடை. புண்டரிகம் – தாமரை. தொல்கழல் – திருவடியின் தொன்மை. ஆதியும் மத்தியும் அந்தமும் இல்லாதது. கழல் என்பது எருதினது கொம்பு போல் அமைந்தது. பகைவர் உடம்பில் ஊறுபடுத்த, வலக்காலில் தரிக்கப்படுவது. "தாள், களங்கொளக் கழல்பறைந்தன கொலல் லேற்றின் மருப்புப் போன்றன" (புறநானூறு 4. 3–4) என்னும் அடிகளால் அறிக. தேய்ந்த பின் மழுமழுவென்றாகி எருதின் கொம்பை ஒத்தது. வடிவில் முழுதும் ஒப்பது. குண்டர் – சமணர். குறியின்மை – பிழையாத குறி இல்லாமை (தி.2. ப.82. பா.10). இதில் புறப் புறச்சமயத்தார் செய்யும் நிந்தையின் பொருளின்மையை வினாவினார்.

The city of Poontharaai is encircled by paddy fields of rich sediment soil. Through the water outlet, the excess water in the field flows out of the fields carrying the Trichiurus lepturus fish (Vaalai fish) that reach the lotus ponds, which now overflow with the honey dripping in them. The water in the lotus tank, naturally sweet, now becomes sweeter. In such a plentiful city of Sirkazhi, also called Poontharaai, devotees in large groups gather in the temple and worship the ancient holy feet of Lord Civa. Oh Lord Civa! Tell me how You are not affected by the harsh words of the denying sects – Jains and Buddhists.

1479. மகரவார் கடல்வந் தணவும்மணற் கானல்வாய்ப்
புகலிஞான சம்பந்தனெழில் மிகுபூந்தராய்ப்
பகவனாரைப் பரவுசொன் மாலைபத்தும் வல்லார்
அகல்வர் தீவினைநல் வினையோடுடனாவரே. 11

மகர வார்கடல் வந்து அணவும் மணல் கானல்வாய்ப்
புகலி ஞானசம்பந்தன், எழில் மிகு பூந்தராய்ப்
பகவனாரைப் பரவு சொல்மாலைபத்தும் வல்லார்
அகல்வர், தீவினை; நல்வினையோடு உடன்ஆவரே.

makara vArkaTal vantu aNavum maNal kAn2alvAyp
pukali njAn2acampantan2, ezil miku pUntarAyp
pakavan2Araip paravu colmAlaipattum vallAr
akalvar, tIvin2ai, nalvin2aiyOTu uTan2 AvarE.

பொருள்: வீடும் அதற்கு ஏதுவாய ஞானமும் பெற விரும்புவீராயின், விரதங்களை மேற்கொண்டு உடல் வாடுவதனால் ஞானம் வந்துறுமோ? திருப்பூந்தராயை அடைந்து ஞானசம்பந்தர் ஓதியருளிய செந்தமிழை இசையோடு பாடும் ஞானம் வாய்க்கப் பெற்றவர்களின் திருவடிகளை வழிபடுவதொன்றே ஞானத்தைத் தருவதாகும்.

குறிப்புரை: மகரம் – சுறாமீன். அணவும் – பொருந்தும். கானல் – கடற்கரைச்சோலை. புகலி – சீகாழி. எல்லாவுயிர்க்கும் புகலிடமானது. பகவனார் – திரு, ஞானம் முதலிய ஆறு குணங்களும் உடையவர். பரவுதல் – வாழ்த்தல். தீவினையை அகல்வர் – நல்வினையை அகலாது உடனாவார். ஒடு உடன் இரண்டும் இணைந்து வந்தவாறு அறியத்தக்கது.

The seacoast in Pukali (Sirkazhi) is full of white sand. This is bathed by the waves full of sharks. This city is the birthplace of Gnanasambandar. He sang these ten songs in praise of Lord Civa of this place. Whoever could recite these ten songs sincerely and continuously for long, will shed all evils from their life, retaining only good. They will also be blessed with boons.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

1ஆம் பதிகம் முற்றிற்று
End of 1st Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 138 *பதிக எண்: 2*

2. திருவலஞ்சுழி 2. THIRU-VALAN-CHUZHI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

பிலத்தினுள் சென்றுவிட்ட காவிரி வெளிப்படும் பொருட்டு ஏரண்ட முனிவர் பிலத்தினுள் இறங்க, காவிரி வெளிவந்து வலமாகச் சுழித்துக் கொண்டு சென்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது. இது கும்பகோணம் – தஞ்சாவூர் தொடர்வண்டிப் பாதையில், சுவாமிமலை தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கே முக்கால் கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் 25ஆவது தலம் ஆகும். கும்பகோணம் – தஞ்சை நெடுஞ்சாலையில் இத்தலம் உள்ளது. இறைவர் கற்பகநாதேசுரர். இறைவியார் பெரியநாயகி. தீர்த்தம் காவிரி. அமுதம் பெறுதற் பொருட்டுத் தேவர்கள் பாற்கடலைக் கடைந்த பொழுது பூசித்த வெள்ளைப் பிள்ளையாரை இந்திரன் இங்குக் கொண்டு வந்து எழுந்தருளுவித்து வழிபட்டான். வெள்ளைப் பிள்ளையார் கோயில் மிகவும் வேலைப்பாடுடையது. இக்கோயிலில் ஏரண்ட முனிவரின் பிரதிமையும், பக்கத்தில் வலஞ்சுழி நாதர் என்னும் சிவலிங்கத் திருமேனியும் இருக்கின்றன. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகங்கள் மூன்று, திருநாவுக்கரசு நாயனார் பதிகம் ஒன்று ஆக நான்கு பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

முத்தமிழ் விரகர், மாதவத்து முதிரும் அன்பர்கள் எதிர்கொள, வலஞ்சுழிப் பெருமான் கோயில் வந்து எய்திக் கோபுரம் இறைஞ்சி, உள்புகுந்து, வலங்கொண்டு, உச்சிமேல் அஞ்சலியினராய்ப் பெருகும் ஆதரவுடன் பணிந்தெழுந்து ஊனமில் இசையுடன் விளங்கிய இத்திருப்பதிகத்தைப்பாடி வினாவியருளினார்.

திருச்சிற்றம்பலம்

1480. விண்டெலா மலரவ்விரை நாறுதண்தேன்விம்மி
வண்டெலா நசையாலிசை பாடும்வலஞ்சுழித்
தொண்டெலா ம்பரவுஞ்சுடர் போலொளியீர்சொலீர்
பண்டெலாம் பலிதேர்ந்தொலி பாடல்பயின்றதே. 1

விண்டு எலாம் மலர(வ்)விரை நாறு தண் தேன் விம்மி,
வண்டுஎலாம் நசையால் இசை பாடும் வலஞ்சுழி,
தொண்டுஎலாம் பரவும் சுடர் போல் ஒளியீர்! சொலீர் -
பண்டு எலாம் பலி தேர்ந்து ஒலிபாடல் பயின்றதே?

viNTu elAm malara(v) virai nARu taN tEn2 vimmi,
vaNTu elAm nacaiyAl icai pATum valanjcuzi,
toNTu elAm paravum cuTar pOl oLiyIr! colIr--
paNTu elAm pali tErntu olipATal payin2RatE?

பொருள்: திருவலஞ்சுழியில் செழிப்பான சோலைகள் எங்கும் சூழ்ந்து விளங்குகின்றன. அச்சோலைகளில் மலர்கள் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கின்றன. அம்மலர்களில் குளிர்ச்சியான தேன் உள்ளன. அத்தேனை உண்ணும் விருப்பினால் வண்டுகள் இசை பாடிக் கொண்டு பூக்களிடம் வந்து சேருகின்றன. இத்துணை செழிப்பான திருவலஞ்சுழியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே! செஞ்சுடர் போன்ற ஒளி உமது திருமேனியில் திகழ்கின்றது. தொண்டர்கள் பலர் உம்மைப் பாடிப் பரவுகின்றனர். முன்பெல்லாம் நீர் இசையோடு பாடல்களைப் பாடியும் உலகெலாம் சுற்றிக் கொண்டு அங்கு வாழும் பெண்களிடமிருந்து பலி ஏற்பதற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

குறிப்புரை: விண்டு – திறந்து, எல்லாம் – போதுகள் யாவும், விண்டு மலர என்க. விரை – மணம். நசை – விருப்பம். தொண்டு – தொண்டர் (ஆகுபெயர்). சுடர் – செஞ்சுடர். ஒலிபாடல் – வினைத்தொகை.

In the city of Thiru-valan-chuzhi many flower gardens exist. The fragrant flowers in these gardens spread their aroma in the air all around. The flowers are filled with honey. The bees with a desire to devour the cool honey, hum pleasingly and fly towards the flower gardens. Their delightful humming reverberates all over the area. In such a glorious city, inside the Hindu temple, Lord Civa! seated in the sanctum sanctorum You bless the devotees who sing Your greatness. There, You shed very bright light, which looks like sun's bright red rays. In those days, Oh Lord Civa! You used to move all around the cosmos, singing very melodious songs and asking for

offerings (*பலி* - food for gods) from ladies living in those areas. Oh Lord Civa! kindly tell me the reason why You behaved like this.

1481. பாரல்வெண் குருகும்பகுவா யனநாரையும்
வாரல்வெண் டிரைவாயிரை தேரும்வலஞ்சுழி
மூரல்வெண் முறுவல்நகு மொய்யொளியீர்சொலீர்
ஊரல்வெண் டலைகொண்டு லகொக்கவுழன்றதே. 2

பாரல் வெண்குருகும் பகுவாயன நாரையும்
வாரல் வெண்திரைவாய் இரை தேரும் வலஞ்சுழி,
மூரல் வெண்முறுவல் நகு மொய் ஒளியீர்! சொலீர் -
ஊரல் வெண்தலை கொண்டு உலகு ஒக்க உழன்றதே?

pAral veN kurukum pakuvAyan2a nAraiyum
vAral veN tiraivAy irai tErum valanjcuzi,
mUral veN muRuval naku moy oLiyIr! colIr--
Ural veN talai koNTu ulaku okka uzan2RatE?

பொருள்: திருவலஞ்சுழியில் உள்ள காவிரி நதியில் தண்ணீர் வெண்மையான அலைகளோடு எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கின்றது. நீளமான கழுத்தினை உடைய கொக்குகளும் பிளவுண்ட வாயை உடைய நாரைகளும், தங்களுடைய இரையை அத்தண்ணீரில் தேடிக் கொண்டிருக்கின்றன. இவ்வளவு செழிப்பான திருவலஞ்சுழியில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! புன்னகை புரியும் வெண்மையான பற்களோடு ஒளிச்சுடராய் எழுந்தருளியிருக்கிறீர். இத்தகைய சிறப்பான தோற்றத்தை உடைய நீர், மண்டை ஓட்டை மாலையாக அணிந்து கொண்டு கையில் ஒரு கபாலத்தையும் ஏந்திக் கொண்டு உலகம் முழுவதும் சுற்றி அங்குள்ள மாதர்களிடமிருந்து பலி ஏற்பதற்குக் காரணம் யாதோ? சொல்லுவீராக!

குறிப்புரை: பாரல் – நீளல், அல்விகுதி. வாரல் – வார்தல், ஒழுகுதல். திரைவாய் இரைதேரும் – அலை நீரிலுள்ள மீன் உணவு ஆராயும், குருகு – கொக்கு, மூரல் – புன்னகை, முறுவல் – பல், நகு – விளங்கும். ஊரல் – ஊர்தல். பாரல் – நீளல், நீண்டவாய், பிளத்தல் – பிளந்தவாய் எனில் 'பகுவாய்' கூறியது கூறலாகும். 'பாரல் வாய்ச்சிறுகுருகு' (தி. 3. ப. 63. பா. 5) பார்க்க.

In the city of Thiru-valan-chuzhi, the river Cauvery flows all around the city with pure waters, and small waves dashing on both the banks of the river. The long billed white storks as well as the split-billed herons seek their prey on the shores of the

rippling Cauvery water. In such a nice city Oh Lord Civa! You are seated in the sanctum sanctorum of the Hindu temple with a smiling face and gleaming white teeth shedding light of greatness all around. In spite of such a beauteous appearance in the temple, Oh Lord Civa! You wear a garland of skulls on Your body and hold a skull in Your hand, wandering over the cosmos, seeking food (பலி) everywhere. Kindly tell me the reason for such behaviour.

1482. கிண்ண வண்ணம ருங்கிளர்தா மரைத்தாதளாய்
வண்ண நுண்மணல் மேலனம்வைகும் வலஞ்சுழிச்
சுண்ண வெண்பொடிக் கொண்டுமெய் பூசவலீர்சொலீர்
விண்ண வர்தொழவெண் டலையிற்பலி கொண்டதே. 3

கிண்ண வண்ணம் மல்கும் கிளர் தாமரைத் தாது அளாய்
வண்ண நுண்மணல்மேல் அனம் வைகும் வலஞ்சுழி,
சுண்ணவெண்பொடிக்கொண்டு மெய்பூச வலீர்! சொலீர் -
விண்ணவர் தொழ வெண்தலையில் பலி கொண்டதே?

kiNNa vaNNam malkum kiLar tAmarait tAtu aLAy
vaNNa nuN maNal mEl an2am vaikum valanjcuzi,
cuNNa veN poTik koNTu mey pUca valIr! colIr--
viNNavar toza, veNtalaiyil pali koNTatE?

பொருள்: காவேரி நதியின் கரையில் உள்ள பொடி மணலில் அன்னம் (தாமரைப் பூந்தாதுக்கள் பொருந்திய) தங்கி விளையாடுகின்றன. இவ்வளவு வளமுடைய திருவலஞ்சுழியில் உடம்பெல்லாம் திருநீற்றைப் பூசியவனாய் ஒளி மிகுந்து விளங்குகின்ற சிவபெருமானே! தேவர்கள் அனைவரும் உம்மை வந்து வணங்குகிறார்கள். அவர்களுக்கெல்லாம் தலைமைத் தன்மை கொண்ட சிவபெருமானே! வெள்ளிய தலை ஓட்டை கையில் எடுத்துக்கொண்டு நீர் பலி ஏற்பதற்காக உலகம் முழுவதும் திரிவதற்குக் காரணம் யாதோ? சொல்லுவீராக!

குறிப்புரை: தாமரைகள் கிண்ணத்தின் உருவம்போல மலர்தலை உணர்த்தினார். கிளர் – விளங்குகின்ற. அளாய் – அளாவி, கலந்து, வண்ணம் – நிறம், அழகு, அன்னம் தாமரைப்பூந் தாதுக்களைப் பொருந்திய அழகுடன் பொடி மணலில் வைகும் வளத்தது வலஞ்சுழி, பொடிக்கொண்டு பூசுதலின் வன்மை சர்வ சங்கார கர்த்திருத்துவத்தைக் குறித்தது. வைகல் – தங்குதல்.

In the city of Thiru-valan-chuzhi swans in bevy rest on the fine sand bed of the Cauvery river, after collecting the pollens of the blooming bowl shaped red lotuses in the ponds nearby. In such a nice city, Oh Lord Civa! You are seated in the sanctum sanctorum of the Hindu temple. Holding a skull in Your hand, You wander all over the cosmos seeking food (*பலி*) from all. Kindly tell me the reason for such behaviour.

1483. கோடெலா நிறையக்கு வளைம்மலருங்குழி
மாடெலா மலிநீர்மண நாறும்வலஞ்சுழிச்
சேடெலா முடையீர்சிறு மான்மறியீர்சொலீர்
நாடெலா மறியத்தலை யின்னறவேற்றதே. 4

கோடுஎலாம் நிறையக் குவளை(ம்) மலரும் குழி
மாடுஎலாம் மலிநீர் மணம் நாறும் வலஞ்சுழி,
சேடுஎலாம் உடையீர்! சிறுமான்மறியீர்! சொலீர் -
நாடுஎலாம் அறியத் தலையில் நறவு ஏற்றதே?

kOTu elAm niRaiyak kuvaLai(m) malarum kuzi
mATu elAm malinIr maNam nARum valanjcuzi,
cETu elAm uTaiyIr! ciRumAn2 maRiyIr! colIr--
nATu elAm aRiyat talaiyil naRavu ERRatE?

பொருள்: திருவலஞ்சுழியில் கிண்ணம் போல் வாய் விரிந்து செவ்வண்ணம் பொருந்தியதாய் விளங்கும் தாமரை மலர்கள் நிறைந்த தடாகங்கள் உள்ளன. அந்தப் பூக்கள் பொழிகின்ற தேனைக் குடிப்பதற்கு அன்னங்கள் இத்தடாகத்திற்கு வந்து தாமரை மலர்களைச் சுற்றிச் சுற்றி வந்து தேனைக் குடிக்கின்றன. இவ்வாறு பறந்து சுற்றும் பொழுது அதன் இறகுகள் பூக்களின் உட்பக்கம் உள்ள தாதுக்களில் உராயப்பட்டு இறகுகள் முழுமையும் தாதுக்களால் அணியப்பட்டுள்ளன. இந்த அன்னங்கள் நடமாடும் திருவலஞ்சுழியில் உள்ள குழிகளிலும், குழிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் குவளை மலர்கள் நிறைந்துள்ள சிறுசிறு குட்டைகளில் உள்ள தண்ணீரில் வசிக்கின்றன. அதனால் குவளை மலரின் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன. இத்துணை வளமிக்கது திருவலஞ்சுழி. இங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! நீவீர் சிறிய அழகான மான்குட்டியைக் கையில் ஏந்திக் கொண்டு யாவரும் வியக்க காட்சி கொடுத்து அருள்வழங்கிக் கொண்டிருக்கிறீர். அவ்வாறு இருந்தும் தலையோட்டைக் கையில் ஏந்திக் கொண்டு உலகெலாம் சுற்றிவந்து பலிகொள்வது எதற்காக? சொல்லுவீராக.

குறிப்புரை: கோடு – கரைகள், குழி – அக்கரைகளுக்கு நடுவிலுள்ள பள்ளம். மாடு – பக்கம். கரைகளில் பூத்த குவளை மலரின் மணம் பள்ளத்திலுள்ள நீரில் நாறும். சேடு – பெருமை, தலை – பிரமகபாலம். நறவு – ஈண்டுப் பிச்சையேற்ற உணவு குறித்து நின்றது.

In the city of Thiru-valan-chuzhi, a good number of pits exist. They are full of water and nelumbo (*குவளைமலர்*) flowers in plenty, swans go round the lakes to drink the honey dripping from the lotus. These flowers dissipate their sweet smell all over the surrounding areas. In such a beautiful city Oh Lord Civa! You are seated in the city temple with name and fame. You hold a small beautiful deer in Your hand. But what a contrast, You carry also a skull of human head, and accept alms in it roaming in the cosmos, while the whole world watches such a disgrace.

1484. கொல்லைவெண் றபுனத்திற்குரு மாமணி கொண்டுபோய்
வல்லைநுண் மணல்மேலனம் வைகும்வலஞ்சுழி
முல்லைவெண் முறுவல்நகை யாளொளியீர்சொலீர்
சில்லைவெண் டலையிற்பலி கொண்டுழல் செல்வமே. 5

கொல்லை வேனல் புனத்தின் குரு மா மணி கொண்டு போய்,
வல்லை நுண்மணல்மேல் அன்னம் வைகும் வலஞ்சுழி,
முல்லை வெண்முறுவல் நகையாள் ஒளியீர்! சொலீர் -
சில்லை வெண்தலையில் பலி கொண்டு உழல் செல்வமே?

kollai vEn2al pun2attin2 kuru mA maNi koNTu pOy,
vallai nuN maNal mEl an2n2am vaikum valanjcuzi,
mullai veN muRuval nakaiyAL oLiyIr! collr--
cillai veN talaiyil pali koNTu uzal celvamE?

பொருள்: முல்லை நிலக்காடுகளில் மணிகள் கிடக்கின்றன. அம்மணிகளை எடுத்து வந்த அன்னங்கள் திருவலஞ்சுழியிலுள்ள மணல் பரப்பில் வாழுகின்றன. இவ்வளவு வளமுடையது திருவலஞ்சுழி. முல்லைப் பூப்போன்ற பற்களையும் புன்முறுவலையும் உடைய பார்வதியின் சிவபெருமானே! நீவிர்! ஒளிபோன்று வெண்மைமயமாக விளங்குகின்ற தலையோட்டினைக் கையில் ஏந்திக்கொண்டு உலகெலாம் சுற்றி வந்து பலிகொண்டு திரிவதை, இந்தச்சிறுமையான செயலைச் செல்வமாக எண்ணுவது ஏனோ? சொல்லுவீராக.

குறிப்புரை: குரு – நிறம், வல்லை – விரைவு. முல்லைப்பூ வெண்முறுவலை உடைய நகை (பற்)களுக்கு ஒப்பு. சில்லை – சிறுமை. முல்லை வெண்முறுவல் நகை – பார்வதி.

In the wild jasmine forest (முல்லைக்காடு - கொல்லை) gems are available everywhere. The river Cauvery carries the gems, and scatters them on the bank. The swans pick up those gems and rest on the sand banks of the river Cauvery. In such a luxurious and flourishing city, Oh! Lord Civa! You are seated in the Hindu temple enjoying the company of Your consort Uma Devi who is beautiful with her smile and her pure white teeth resemble the jasmine flower. Your brightness also combines with hers. Oh Lord Civa! tell me why You carry the skull of dead people in Your hand and roam everywhere in the cosmos. Why do You regard this mean action as an act that brings You wealth?

1485. பூசநீர் பொழியும்புனற் பொன்னியிற் பன்மலர்
வாசநீர் குடைவாரிடர் தீர்க்கும் வலஞ்சுழித்
தேசநீர் திருநீர்சிறு மான்மறியீர் சொலீர்
ஏசவெண் டலையிற்பலி கொள்வதிலாமையே. 6

பூசம் நீர் பொழியும் புனல்பொன்னியில் பல்மலர்
வாசம் நீர் குடைவார் இடர் தீர்க்கும் வலஞ்சுழி,
தேசம் நீர்; திரு நீர்; சிறுமான்மறியீர்! சொலீர் -
ஏச, வெண்தலையில் பலி கொள்வது இலாமையே?

pUcam nIr poziyum pun2al pon2n2iyil palmalar
vAcam nIr kuTaivAr iTar tIrkkum valanjcuzi,
tEcam nIr; tiru nIr; ciRumAn2maRiyIr! colIr--
Eca, veNtalaiyil pali koLvatu ilAmaiyE?

பொருள்: தை முதல் பன்னிரு மாதங்களின் பூச நன்னாளில் மலரோடு நீர் உருகி வரும் மணம் கமழும் காவிரி நீரில் மூழ்கி நீராடுபவர்களின் துயர்களைத் துடைத்து அருள்பவர் திருவலஞ்சுழியில் உறையும் சிவபெருமானே! நீவீர் சிறிய மான்குட்டியைக் கையில் ஏந்தியுள்ளீர். சிறப்புடைய தோடும் திருவும் உடைய சிவபெருமானே! இறந்தவர்களின் தலையோட்டைக் கையில் ஏந்திக்கொண்டு பலிகொள்வது உமக்கு செல்வமில்லை என்ற வறுமையா என்பதைச் சொல்லுவீராக.

குறிப்புரை: பூசம் – தை முதலிய பன்னிரு திங்களிலும் வரும் நன்னாள், பூச நட்சத்திரம். "பூசம் புகுந்தாடிப் பொலிந்தழகாய ஈசன் உறைகின்ற இடைமருது ஈதோ" (தி. 1 ப. 32 பா 5) என்றருளியது

உணர்க. குடைவார் – முழுகுவார். தேசமும் திருவும் நீவிரே. பலி கொள்வதாகிய இல்லாமை என விரிக்க. இல்லாமை – வறுமை.

The river Cauvery with profuse water flows by the side of Thiru-valan-chuzhi city carrying different kinds of fragrant flowers. Here on the holy day of Poosam (தைப்பூச நன்னாள்) people gather in large numbers, take holy bath in the sweet smelling water and pray to Lord Civan to wash off all their sufferings. Oh Lord Civa! You are the holy place; You are wealth; You are everything; You are the remover of all distress. You carry a small beautiful deer in one of Your hands. Oh Lord Civa! in spite of such a glory, You beg with a skull in Your hand and roam all over the cosmos provoking people to cast aspersions on You. Does it indicate Your wealth or Your poverty? Tell me.

1486. கந்தமா மலர்ச்சந் தொடுகாரகிலுந்தழீஇ
வந்தநீர் குடைவாரிடர் தீர்க்கும் வலஞ்சுழி
அந்தநீர் முதல்நீர் நடுவாமடி கேள்சொலீர்
பந்தநீர் கருதாதுல கிற்பலி கொள்வதே. 7

கந்தமாமலர்ச் சந்தொடு கார்அகிலும் தழீஇ,
வந்த நீர் குடைவார் இடர் தீர்க்கும் வலஞ்சுழி,
அந்தம் நீர், முதல் நீர், நடு ஆம் அடிகேள்! சொலீர் -
பந்தம் நீர் கருதாது, உலகில் பலி கொள்வதே?

kantamAmalarc cantoTu kAr akilum tazli,
vanta nIr kuTaivAr iTar tIrkkum valanjcuzi,
antam nIr, mutal nIr, naTu Am aTikEL! collr-
pantam nIr karutAtu, ulakil pali koLvatE?

பொருள்: மணமுள்ள மலர்கள், சந்தன, அகில் மரங்களைத் தாங்கி வருவது காவிரி ஆறு. காவிரியாற்றில் குளிப்பவர்களின் துன்பங்களைத் துடைப்பவர் திருவலஞ்சுழியில் உறையும் சிவபெருமானே! முதலும் நடுவும் முடிவுமாய் விளங்கும் சிவபெருமானே! பலிகொள்வது பற்றை விளைவிப்பது என்று மக்களைப் போல் எண்ணாமல், இறைவரே நீவிர் பலிகொள்வது ஏனோ? சொல்லுவீராக.

குறிப்புரை: கந்தம் – மணம், சந்து – சந்தனவிருட்சம், கார்அகில் – கரிய அகில், அந்தமும் ஆதியும் நடுவும் நீவிரே. 'அடிகள்' விளியாங் கால் அடிகேள் என்றும் ஆகும். பந்தம் கருதாமை; பிச்சையேற்றலில் உயிர்க்கு ஆகும் பந்தம். இறைவனுக்கு இன்மையை உணர்த்தி நின்றது. பந்தமென்று கருதாமல் என்னும் உரைசிறவாது.

The holy river Cauvery running in Thiru-valan-chuzhi brings multi-coloured fragrant flowers, sandal branches, and Aloe wood (அகில்). Local people in large numbers go to this river, take bath very happily and then reach the Civan temple. There the devotees offer prayers to Lord Civan and request You to dispel all their sufferings. You bless them. Oh Lord Civa! You are there; You are the beginning; You are the middle; and the end of all; You are different from ordinary people who are affected by worldly attachment. As our Lord You must be completely detached. Tell me, why You beg for alms all around the world like a man of wordly attachment.

1487. தேனுற்ற நறுமாமலர்ச் சோலையில் வண்டினம்
வானுற்ற நசையாலிசை பாடும் வலஞ்சுழிக்
கானுற்ற களிற்றின்னுரி போர்க்க வல்லீர்சொலீர்
ஊனுற்ற தலைகொண்டு லகொக்கவுழன்றதே. 8

தேன் உற்ற நறுமாமலர்ச் சோலையில் வண்டுஇனம்
வான் உற்ற நசையால் இசை பாடும் வலஞ்சுழி,
கான் உற்ற களிற்றின்(ன்) உரி போர்க்க வல்லீர்! சொலீர் -
ஊன் உற்ற தலை கொண்டு, உலகு ஒக்க உழன்றதே?

tEn2 uRRa naRu mA malarc cOlaiyil vaNTu in2am
vAn2 uRRa nacaiyAl icai pATum valanjcuzi,
kAn2 uRRa kaLiRRin2(n2) uri pOrkka vallIr! collr--
Un2 uRRa talai koNTu, ulaku okka uzan2RatE?

பொருள்: திருவலஞ்சுழிப்பதி முழுவதும் பெரிய மலர்ச்சோலைகள் செழிப்பாக உள்ளன. அங்கு தேன் நிறைந்துள்ள மலர்கள் அதிக அளவில் உள்ளன. இந்த மலர்களில் உள்ள தேனை உண்ண வேண்டும் என்ற ஆசையால் வண்டுகள் கூட்டம் கூட்டமாக உயரிய இசையைப் பாடிக் கொண்டே, மலர்ச்சோலைகளில் புகுந்து பறந்து கொண்டும் பாடிக்கொண்டும் அங்குள்ள மலர்களில் உள்ள தேனைக் குடித்து இசை பாடுவதால் திருவலஞ்சுழியில் இந்த ஓசை ஊரெங்கும் நிலவுகின்றது. இத்துணை சிறந்த

திருவலஞ்சுழியில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! உம்மைக் கொல்ல வந்த காட்டு யானையை எதிர்த்து நின்று அதன் தோலை உரித்து உமது உடலில் போர்த்திக் கொள்ளக் கூடிய அளவிற்கு ஈடுஇணையற்ற மிகுந்த வலிமை உடைய சிவபெருமானே! இத்தனை வலிமை உடையவராக இருந்தும், நீர் ஊன் பொருந்திய தலையோட்டைக் கையில் ஏந்திக் கொண்டு உலகெங்கும் சென்று வருவது ஏனோ? சொல்லுவீராக.

குறிப்புரை: நசை – விருப்பம், களிறு – ஆண்யானை, மதக்களிப்பை உடையது என்னுங் காரணப் பொருளது. கான் – காடு, உலகு ஒக்க – உலகெல்லாம் என்றவாறு.

Thiru-valan-chuzhi city is encircled by very big gardens of blossoms, full of honey. Bees in large numbers, desirous to devour the nectar in the flowers reach the groves humming pleasantly and this reverberates in the city creating a pleasant atmosphere. Oh Lord Civa! You reside in this city. When a male elephant ferociously ran towards You to kill You, Oh Lord! You had the greatest strength to kill the elephant, You skinned the elephant's body and covered Your body with that skin. You had such greatness, which had no parallel. Despite this valorous deed, why do You beg for alms wandering all over the cosmos, holding a fleshy human skull in Your hand? Tell me.

1488. தீர்த்த நீர்வந்திழி புனற்பொன்னியிற் பன்மலர்
வார்த்த நீர்குடை வாரிடர்தீர்க்கும் வலஞ்சுழி
ஆர்த்து வந்த அரக்கனை யன்றடர்த்தீர் சொலீர்
சீர்த்த வெண்டலை யிற்பலிகொள் வதுஞ்சீர்மையே. 9

தீர்த்தநீர் வந்து இழி புனல் பொன்னியில் பல்மலர்
வார்த்த நீர் குடைவார் இடர் தீர்க்கும் வலஞ்சுழி,
ஆர்த்து வந்த அரக்கனை அன்று அடர்த்தீர்! சொலீர் -
சீர்த்த வெண்தலையில் பலி கொள்வதும் சீர்மையே?

tIrttanIr vantu izi pun2al pon2n2iyil palmalar
vArtta nIr kuTaivAr iTar tIrkkum valanjcuzi,
Arttu vanta arakkan2ai an2Ru aTarttIr! collr--
cIrtta veNtalaiyil pali koLvatum cIrmaiyE?

பொருள்: திருவலஞ்சுழியில் புனிதமான நீர் ஓடிக்கொண்டிருக்கும் காவிரி நதியில் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து பலவிதமான மலர்களைத் தூவி அவ்வாற்று நீரில் மூழ்கி அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானை உள்ளன்போடு வணங்குகிறார்கள். அவர்களுடைய

இடர்களைச் சிவபெருமான் போக்கி அருள்பாலித்து வருகிறார். அக்காலத்தில் இராவணன் தன் வலிமையைப் பெரிது எனக்கருதி ஆரவாரித்துக் கொண்டு நீவிர் வீற்றிருக்கும் கயிலையங்கிரியை அசைத்து அகற்றுவதற்கு முற்பட்டான். அப்பொழுது அவனை அடர்த்திய பெருமைமிகக் கொண்டவரே. இத்துணை பெருமை உடையவராய் இருந்தும் நீர் உமது திருக்கரத்தில் சிறுமை பொருந்திய வெள்ளிய தலையோட்டில் பலி ஏற்று உண்பது உம்பெருமைக்கு அழகோ? சொல்லுவீராக.

குறிப்புரை: தீர்த்த நீர் – பரிசுத்தம் புரியும் ஆற்றலுடைய நீர், காவிரி முதலிய ஆறுகள் புண்ணிய நதிகள் ஆகும். தீர்த்தமாகா நதிகளும் உள. பொன்னி – காவிரி, ஆர்த்து – ஆரவாரம் செய்து, சீர்த்த – சீருடைய.

The river Cauvery which flows along the city of Thiru-valan-chuzhi carrying the sacred water is beautified on the surface with varied fragrant flowers. The sufferings and woes of these devotees, who take a dip in the sacred water of the river Cauvery, are wiped out by the grace of Lord Civan who stays in the temple nearby. Oh Lord Civa! You are there; and once when the demon king Raavanan arrogantly attempted to move Your abode to make way for his Airplane in which he was flying, You crushed him by slightly pressing Your mountain abode. He got crushed under it and could not extricate himself out of it. The whole world knows that You have no parallel for such great valour. Instead of this good behaviour, is it right for you to beg for alms in the white human skull roaming all over the cosmos?

1489. உரமனுஞ் சடையீர் விடையீரும தின்னருள்
வரமனும் பெறலாவது மெந்தை வலஞ்சுழிப்
பிரமனுந் திருமாலு மளப்பரியீர் சொலீர்
சிரமெனுங் கலனிற்பலி வேண்டிய செல்வமே. 10

உரம் மனும் சடையீர்! விடையீர்! உமது இன்அருள்
வரம் மனும் பெறல்ஆவதும்; எந்தை! வலஞ்சுழிப்
பிரமனும் திருமாலும் அளப்ப(அ)ரியீர்! சொலீர் -
சிரம் எனும் கலனில் பலி வேண்டிய செல்வமே?

uram man2um caTaiylr! viTaiylr! umatu in2 aruL
varam man2um peRal Avatum; entai! valanjcuzip
piraman2um tirumAlum aLappa(a)riylr! collr--
ciram en2um kalan2il pali vENTiya celvamE?

பொருள்: பெருமை பொருந்திய சடையினை உடையவரே! விடையை ஊர்ந்து வருபவரே! நிலையான வரம் பெறுதற்குரிய இடமாய் உள்ள வலஞ்சுழியில் விளங்கும் எந்தையே! பிரமன் திருமால் ஆகியோரால் அளத்தற்கு அரியரானவரே, நீர் தலையோடாகிய உண்கலனில் பலியைச் செல்வமாக ஏற்றதற்குக் காரணம் யாதோ? சொல்லுவீராக.

குறிப்புரை: உரம் – பெருமை. (சிவபிரானுக்குச் சடையும் ஞானமாதலின்) அறிவுமாம். பலியேற்கும் பாத்திரம் பிரமகபாலமாதலின் "சிரமெனுங்கலம்" என்றார். பா. 5.10இல் செல்வம் என்றது குறிப்பு. வரம்பெறலாவதும் மன்னும் என மாற்றலுமாகும்.

Oh Lord Civa of Thiru-valan-chuzhi! Your matted hair represents not only true wisdom (the state of the most exalted ascetic) but also Your immense strength; whenever You want to move anywhere You have the divine bull; You bestow all the boons on those who pray to You with devotion. And You are the one who could not be easily seen by Lord Vishnu and Brahma when they tried to see Your holy feet and head. In spite of all this esteem, tell me, why You beg for wealth, by carrying a human skull in Your hand, and roam all over the cosmos.

1490. வீடுஞான மும்வேண்டு திரேல்விரதங்களால்
வாடிஞான மென்னாவது மெந்தை வலஞ்சுழி
நாடிஞான சம்பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடுஞானம் வல்லாரடி சேர்வது ஞானமே. 11

வீடு ஞானமும் வேண்டுதிரேல், விரதங்களால்
வாடின் ஞானம் என் ஆவதும்? எந்தை வலஞ்சுழி
நாடி, ஞானசம்பந்தன செந்தமிழ்கொண்டு இசை
பாடு ஞானம் வல்லார், அடிசேர்வது ஞானமே.

vITum njAn2amum vENTutirEl, viratagkaLAl
vATin2 njAn2am en2 Avatum? entai valanjcuzip
nATi, njAn2acampantan2a centamiz koNTu icai
pATu njAn2am vallAr, aTi cErvatu njAn2amE.

பொருள்: வீடு பெறுதற்கும் அதற்கு ஏதுவாய ஞானமும் பெற விரும்புவர்கள், விரதங்களை மேற்கொண்டு உடல் வாடுவதனால் ஞானம் வந்து விடாது என்பதை உணருங்கள். எந்தையாகிய சிவபெருமான் வீற்றிருந்து அருளும் திருவலஞ்சுழியை அடைந்து அல்லது மனத்தால் நாடி, வாக்கால் திருஞானசம்பந்தப் பெருமான் ஓதி அருளிய செந்தமிழ் பாக்களை இசையோடு பாடும் ஞானம் வாய்க்கப் பெற்றவர்களின் திருவடிகளை வழிபடுவது ஒன்றே ஞானத்தைத் தருவதாகும் என்று உணர்க.

குறிப்புரை: வீடும் அதற்கு ஏதுவான ஞானமும் வேண்டுவீரெனில், விரதங்களால் உடல்மெலிந்தால் ஞானம் ஆவதும் என்? என்று வினாவுக. விரதங்களால் உடல்வாட்டம் அன்றி உண்மை ஞானப்பேறு வாயாது என்றவாறு. எந்தையாகிய சிவபிரானது திருவலஞ்சுழியை (மனத்தால்) நாடி, (வாக்கால்) ஞானசம்பந்தருடைய செந்தமிழ் கொண்டு இசைபாடும் ஞானம் வல்லவர் திருவடி சேர்வது ஒன்றே ஞானமாகும் என்று பொருள்கொள்க. இத்திருமுறை பாடுவாரடிமலர் சேர்வதே வீடுதரும் ஞானமாகும் என்பது கருத்து. 'சைவமும் தமிழும் தழைத்து இனிதோங்குக' என்று இக்காலத்தில் வழங்கும் தொடரில், 'தமிழ்' என்றது திருமுறைகளையே குறிக்கும். பழந்தமிழ் நூல் களையும் தமிழ் மொழியையும் குறித்ததன்று. அவை வேறு பல சமயக் குறிப்புக்களையும் கொண்டிருத்தலாலும், சைவத்தொடு நெருங்கிய தொடர்பில்லாமையாலும், தமிழில் பிறசமய நூல்கள் பல உள்ளமையாலும் அவற்றை ஈண்டுச் சைவத்தொடு சேர்த்து வாழ்த்தினார் என்றல் பொருந்தாது. பிற்காலப் பதிப்புக்களில் 'வாடி' என்ற பாடமே உளது.

Oh! You people of this world! If you are sincerely interested in salvation and holy wisdom, do not resort to penances, which result in torturing Your body rendering it weak. Your hopeful actions are totally wrong. To attain salvation think of great saints, who possess sublime religious knowledge and sing harmoniously the pure Tamil songs of Thiru-gnana-Sambandar on Lord Civan of Thiru-valan-chuzhi. Then pray in full devotion at their pure feet and repeat the songs of Thiru-gnana-Sambandar on Lord Civan of Thiru-valan-chuzhi. This is the wise way to be spiritually wise. In case you can yourself sing harmoniously all these Tamil songs of Thiru-gnana-Sambandar on Lord Civan of Thiru-valan-chuzhi, you may do so. These are the only ways to attain salvation and wisdom.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

2ஆம் பதிகம் முற்றிற்று
End of 2nd Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 139 *பதிக எண்: 3*

3. திருத்தெளிச்சேரி

3. THIRU-TH-THELI-CH-CHERI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

இத்திருப்பதிகம் கோயில்பத்து என்று வழங்கப் பெறுகின்றது. இத்தலம் காரைக்காலுக்கு வடபால் உள்ளது. பொறையாறு – காரைக்கால் பேருந்து வழியில் காவிரிக்குத் தென்கரையில் உள்ள ஐம்பதாவது தலமாகும். இறைவரின் திருப்பெயர் பார்வதீசுவரர். இறைவியாரின் திருப்பெயர் சத்தியம்மை. பங்குனி மாதத்தில் 13ஆம் தேதி முதல் பத்துநாள்களுக்குச் சூரிய பூசை நிகழ்வது. ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று உள்ளது.

இவ்வூருக்கு அணிமையில் போதிமங்கை என்னும் ஊர் இருக்கின்றது. அவ்வூர், புத்தர்கள் வசிக்கப்பெற்றது. அதன் வழியாக ஞானசம்பந்தரது அடியார் திருக்கூட்டம், பரசமய கோளரி வந்தார் என்று முத்துச் சின்னங்களை ஊதிச் சென்றது. அதைப் பொறாத புத்தர்கள் தடுத்தனர். அப்பொழுது தேவாரத் திருமுறையெழுதும் சம்பந்த சரணாலயர் 'புத்தர் சமண்கழுக்கையர்' என்று தொடங்கும் பஞ்சாட்சரப் பதிகத் திருப்பாட்டை ஓத, புத்தர்கள் தலைவனான புத்தநந்தி தலையில் இடி விழுந்தது. உடனே அவன் இறந்து போனான். மீளவும் புத்தர்கள் சாரிபுத்தனைத் தலைவனாகக் கொண்டு வாது செய்ய வந்தனர். சம்பந்த சராணலயர் ஞானசம்பந்தர் முன்னிலையில் அவர்களை வாதில் வென்று சைவர் ஆக்கினார். கோயில் மேற்குச் சந்நிதி. கோயில் முழுதும் செட்டிமார்களால் புதுப்பிக்கப்பட்டது.

பதிக வரலாறு

சண்பை வள்ளலார் திருநள்ளாறு வணங்கிச் சென்று திருத்தெளிச்சேரியினைச் சேர்ந்து பரவிப்பாடிய பதிகம் இது.

திருச்சிற்றம்பலம்

1491. பூவலர்ந்தனகொண்டுமுப்போதுமும்பொற்கழல்
தேவர்வந்துவணங்குமிகுதெளிச்சேரியீர்
மேவருந்தொழிலாளொடுகேழற்பின்வேடனாம்
பாவகங்கொடுநின்றதுபோலுநும்பான்மையே. 1

பூ அலர்ந்தன கொண்டு முப்போதும் உம் பொன்கழல்
தேவர் வந்து வணங்கும் மிகு தெளிச்சேரியீர்!
மே வரும் தொழிலாளொடு கேழல்பின் வேடன்ஆம்
பாவகம்கொடு நின்றதுபோலும், நும் பான்மையே?

pU alarntan2a koNTu muppOtum um pon2kazal
tEvar vantu vaNagkum miku teLiccEriyIr!
mE varum tozilALoTu kEzalpin2 vETan2 Am
pAvamkoTu nin2RatupOlum, num pAn2maiyE?

பொருள்: அலர்ந்தனவான பூக்கள்! அவற்றைக் கொண்டு மூன்று வேளைகளிலும் அருச்சித்துத் தேவர்கள் வந்து வழிபடுவர். அத்தகு புகழ்மிக்க திருத்தெளிச்சேரியில் விளங்கும் இறைவரே! யாவராலும் செய்தற்கரிய செயல்களைப் புரிபவள் உமையம்மை. நீர் பொய்வேடந்தரித்து அம்மையையும் வேடச்சியாக வேடந்தரிக்கச் செய்து பன்றியின்பின் வேடர்களாகச் சென்றது உம் பெருமைக்கு ஏற்ற செயலாகுமா?

குறிப்புரை: தெளிச்சேரியில் மூன்று வேளையிலும் தேவர்கள் பூக்களைக் கொண்டு வந்து சிவபூசை செய்த வரலாறு உணர்த்தப்பட்டது. மேவரும்தொழில், சிவசத்தியின் கிருத்தியம் ஏனையோரெவராலும் அடைதற்கரியவை. கேழல் – பன்றி. சிவனும் உமையும், வேடனும் வேட்டுவிச்சியுமானதை உணர்த்திற்று. பாவகம் – மெய்யல்லாமை குறித்தது.

In the Civan temple situated in Thiru-th-theli-ch-cheri facing the western direction, Lord Civan Paarvatheeswarar along with his consort Sathiammai graces the devotees who gather here to worship Him. The devas (celestials) visit this temple thrice a day and offer their worship bowing at Lord Civan's golden feet with flowers blooming. In such a famous city temple, Your consort Sathiammai, who is non-parallel and carries on the entire operations in the universe which none else can do, is also seated. Oh Lord Civa! What made You consider Your action of following a pig, along with Your consort Uma Devi, both as hunters, as one that will bring fame to You?

1492. விளைக்கும்பத்திக்குவிண்ணவர்மண்ணவரேத்தவே
திளைக்குந்தீர்த்தமறாததிகழ்தெளிச்சேரியீர்
வளைக்குந்திண்சிலைமேலைந்துபாணமுந்தானெய்து
களிக்குங்காமனையெங்ஙனநீர்கண்ணிற்காய்ந்ததே. 2

விளைக்கும் பத்திக்கு விண்ணவர் மண்ணவர் ஏத்தவே,
திளைக்கும் தீர்த்தம் அறாத திகழ் தெளிச்சேரியீர்!
வளைக்கும் திண் சிலைமேல் ஐந்துபாணமும் தான் எய்து,
களிக்கும் காமனை எங்ஙனம் நீர் கண்ணின் காய்ந்ததே?

viLaikkum pattikku viNNavar maNNavar EttavE,
tiLaikkum tIrttam aRAta tikaz teLiccEriyIr!
vaLaikkum tiN cilaimEl aintu pANamum tAn2 eytu,
kaLikkum kAman2ai eggan2am nIr kaNNin2 kAyntatE?

பொருள்: பக்தியை விளைத்தீர்! விண்ணவரும் மண்ணவரும் உம்மை வழிபட வருவர். அவர் திளைத்து மூழ்கும் தீர்த்தம் விளங்கும் திருத்தெளிச்சேரியில் எழுந்தருளிய இறைவரே! வளைந்த வரிய வில்லில் ஐந்து மலர்களைப் பாணமாக உம்மீது எய்து களிப்புற்றான் மன்மதன். நீர் அவனை நெற்றிக்கண்ணினால் எரித்தது ஏன்?

குறிப்புரை: சிவபத்தியை விளைத்தலால் தெளிச்சேரி தீர்த்தத்தில் விண்ணோரும், மண்ணோரும், திளைப்பர். அத்தகைய தீர்த்தம் இடையறாத கீர்த்தியை, அத்தலம் உடையது. சிலை – (கரும்பு) வில். ஐந்து (மலர்க்)கணை. எய்து களித்த மன்மதனை நெற்றிக் கண் நெருப்பைப் பெய்த்தெரித்தது எங்ஙனம் என வினாவினார். காய்தல் – எரித்தல். காம தகனம் புரிந்ததைக் குறித்தது.

In Thiru-th-theli-ch-cheri, there is a tank, which holds pure holy water perennially. All the celestials and all the men on the earth gather here in large numbers with a firm belief that they will ward off all their sufferings if they come to Thiru-th-theli-ch-cheri to worship You, after taking bath in the holy tank. Due to unwanted pressure given by Lord Maha Vishnu, cupid - god of love shot five flowers using his sugarcane bow at Lord Civa who was then in yogic stage. His yoga was disturbed. So He got angry and opened his third eye in His forehead from where very dreadful fire darted forth against cupid and he died instantaneously. Oh Lord Civa! Why did You burn cupid into ahses?

1493. வம்படுத்தமலர்ப்பொழில்சூழமதிதவழ்
செம்படுத்தசெழும்புரிசைத்தெளிச்சேரியீர்
கொம்படுத்ததொர்கோலவிடைமிசைக்கூர்மையோ
டம்படுத்தகண்ணாளொடுமேவலழகிதே. 3

வம்பு அடுத்த மலர்ப்பொழில் சூழ, மதி தவழ்
செம்பு அடுத்த செழும் புரிசைத் தெளிச்சேரியீர்!
கொம்பு அடுத்தது ஓர் கோல விடைமிசை, கூர்மையோடு
அம்பு அடுத்த கண்ணாளொடு மேவல் அழகிதே?

vampu aTutta malarppozil cUza, mati tavaz
cempu aTutta cezum puricait teLiccEriyIr!
kompu aTuttatu or kOla viTaimicai, kUrmaiyOTu
ampu aTutta kaNNALoTu mEval azakitE?

பொருள்: மணம் பொருந்திய மலர்களை உடையன பொழில்கள். அவற்றால் சூழப்பெற்றது திருத்தெளிச்சேரி. மேலும் செம்பினை உருக்கி வார்த்துச் செய்த மதில்கள் சூழ்ந்தும் விளங்குகிறது. அங்கு எழுந்து அருளிய இறைவரே! கூரிய அம்புகளைப் போன்ற கண்களை உடையவள் பார்வதிதேவியார். அவளோடு, கொம்புகளை உடைய அழகிய விடைமீது மேவி வருவது அழகு தரும் செயலாகுமா?

குறிப்புரை: வம்பு – மணம். மதி – சந்திரம். செம்பு – உலோகம். புரிசை – மதில். செம்பு மதில், கொம்பு – எருதின்கோடு, கோலம் – அழகு. கண்ணாள் – பார்வதி தேவியார், மேவல் – எழுந்தருளியிருக்கும் காட்சி, இடபாரூடரானதை உணர்த்திற்று.

In and around the city of Thiru-th-theli-ch-cheri groves with fragrant flowers are many. The forts surrounding the city are very high and look as though their tops touch the moon. The construction of these walls is extraordinary because they are built of a mixture of melted copper and other materials such as mortar etc. In such an appealing city of Thiru-th-theli-ch-cheri, Lord Civan is seated in His temple blessing the devotees who gather before Him. Goddess Uma with her narrowed eyes, which look like sharp arrows, is beauty in divinity. Oh Lord Civa! You and Uma move about riding the admirable bull, which has very strong horns. Is such an appearance of Yours an attractive one?

1494. காருலாங்கடலிப்பிகள்முத்தங்கரைப்பெயும்
தேருலாநெடுவீதியதார்தெளிச்சேரியீர்
ஏருலாம்பலிக்கேகிடவைப்பிடமின்றியே
வாருலாமுலையாளையொர்பாகத்துவைத்ததே. 4

கார் உலாம் கடல் இப்பிகள் முத்தம் கரைப் பெயும்
தேர் உலாம் நெடுவீதிஅது ஆர் தெளிச்சேரியீர்!
ஏர் உலாம் பலிக்கு ஏகிட, வைப்புஇடம் இன்றியே
வார் உலாம் முலையாளை ஒர்பாகத்து வைத்ததே?

kAr ulAm kaTal ippikaL muttam karaip peyum
tEr ulAm neTuvIti atu Ar teLiccEriyIr!
Er ulAm palikku EkiTa, vaippu iTam in2RiyE
vAr ulAm mulaiyALai orpAkattu vaittatE?

பொருள்: நீர் முகந்து செல்லும் மேகங்கள் உலவுவது கடலுக்கு மேல் உள்ள வெளி. முத்துச் சிப்பிகளையும், முத்துக்களையும் கடல் அலைகள் கரையில் கொண்டு வந்து சேர்க்கின்றன. தேர் உலாவும் நீண்ட வீதிகளையும் உடையது திருத்தெளிச்சேரி. அங்கு விளங்கும் இறைவரே! எழுச்சிமிக்கவராய்ப் பலியேற்கச் செல்கின்றீர் நீர். கச்சணிந்த தனபாரங்களை உடையவள் உமையம்மை. அவளைப் பாதுகாப்பாக வைத்துச் செல்லுதற்கு வேறு இடமில்லையோ? உமது திருமேனியில் ஒருபாகமாக வைத்துக் கொண்டு அர்த்த-நாரீச்சுவரராகக் காட்சியளிப்பது அழகாகுமோ?

குறிப்புரை: கார் – மேகம். இப்பி – (முத்துப் பிறக்குமிடங்களுள் ஒன்றாய) சங்கினத்தின் முதற்பிறப்பு. முதற்பதிகம். இரண்டாவது பாட்டின் குறிப்பிற்காண்க. தேருலாவும் பெருந்தெரு. ஏர் – எழுச்சி, அழகு. வார் – கச்சு. அர்த்தநாரீச்சுர வடிவமானதை உணர்த்திற்று.

The water bearing clouds gather and drift round the sky over the sea, city of Thiru-th-theli-ch-cheri. Now and then the clouds pour water into the sea. The waves of the sea dash against the sea shore along with conches and pearls in large numbers. Inside the city during the festival of the Hindu temple, the chariots carrying Lord Civan moves along the long streets making people merry in the festival crowd. Oh Lord Civa! You move about the cosmos for alms, keeping Your consort Uma Devi, with her brassiere-bound breasts, on one half of Your body. Is it because You consider that as the safest place for her?

1495. பக்கநுந்தமைப்பார்ப்பதியேத்திமுன்பாவிக்கும்
செக்கர்மாமதிசேர்மதில்சூழ்தெளிச்சேரியீர்
மைக்கொள்கண்ணியர்கைவளைமால்செய்துவெளவவே
நக்கராயுலகெங்கும்பலிக்குநடப்பதே. 5

பக்கம் நும்தமைப் பார்ப்பதி ஏத்தி முன் பாவிக்கும்
செக்கர் மா மதி சேர் மதில் சூழ் தெளிச்சேரியீர்!
மைக் கொள் கண்ணியர் கைவளை மால் செய்து வெளவவே,
நக்கராள் உலகு எங்கும் பலிக்கு நடப்பதே?

pakkam numtamaip pArppati Etti mun2 pAvikkum
cekkar mA mati cEr matil cUz teLiccEriyIr!
maik koL kaNNiyar kaivaLai mAl ceytu vauvavE,
nakkarAy ulaku egkum palikku naTappatE?

பொருள்: உம்மை ஒரு பாகமாக உள்ளவள் பார்வதி தேவி. அவள் எக்காலத்திலும் உம்மைத் துதித்து, தன் உள்ளத்தே பாவித்து வழிபடுகின்றாள். செவ்வானத்தில் தோன்றும் பூரணச் சந்திர ஒளி மதில்மேல்படும் தலமாகிய இத்திருத்தெளிச்சேரியில் எழுந்தருளிய இறைவரே! ஆடையின்றிப் பல இடங்களுக்கும் நடந்து சென்று பலி ஏற்றதற்குக் காரணம், தாருகாவனத்தில் வசிக்கும் மைபூசப்பெற்ற இளம்பெண்களை மயக்கி அவர்களின் கைவளையல்களைக் கவர்வதற்குத் தானோ? சொல்லுவீராக.

குறிப்புரை: முதற்பாட்டிலும் எட்டாவது பாட்டிலும் உள்ளவாறே இதிலும் முன்னிலை ('உம்', 'நும்') நின்றவாறுணர்க. பார்ப்பதி – பருவதபுத்திரி. செக்கர் – செவ்வானம். மாமதி – பூரணசந்திரன். தேவி பூசித்த திருத்தலம் ஆதலை ஈரடியில் உணர்த்தினார். கண்ணியர் – தாருகாரணியத்து மாதர். வளை – வளையல். மால் – காம மயக்கம். வெளவல் – கவர்தல். நக்கர் – (நக்நர்) ஆடையில்லாதவர். 'இக்கலிங்கம் போனால் என் ஏகலிங்க மாமதுரைச் சொக்கலிங்கம் உண்டே துணை' என்று நக்நராதலாலும் கூறினார் இரட்டைப் புலவருள் ஒருவர். பலியேற்றதைச் சொல்லிற்று.

Oh Lord Civa! You are manifest as a great personage in the renowned city of Thiru-th-theli-ch-cheri, where the high forts around the city touch the moon in the reddish sky. Here Your consort Paarvathi Devi keeps You always in her mind and worships You. You walk around the cosmos in nude form. Is it Your intention to

fascinate them and then to steal the bangles from those eye-tex adorned women of Daarukaa forest who come out of their houses to offer alms to You? Please tell me.

1496. தவளவெண்பிறைதோய்தருதாழ்பொழில்சூழநல்
திவளமாமணிமாடந்திகழ்தெளிச்சேரியீர்
குவளைபோற்கண்ணிதுண்ணெனவந்துகுறுகிய
கவளமால்கரியெங்ஙனநீர்கையிற்காய்ந்ததே. 6

தவள-வெண்பிறை தோய்தரு தாழ்பொழில் சூழ, நல்-
திவள மா மணி மாடம் திகழ் தெளிச்சேரியீர்!
குவளை போல் கண்ணி துண்ணென, வந்து குறுகிய
கவள மால்கரி எங்ஙனம் நீர் கையில் காய்ந்ததே?

tavaLa-veNpiRai tOytaru tAzpozil cUza, nal-
tivaLa mA maNi mATam tikaz teLiccEriyIr!
kuvaLai pOl kaNNi tuNNen2a, vantu kuRukiya
kavaLa mAlkari eggan2am nIr kaiyin2 kAyntatE?

பொருள்: திருத்தெளிச்சேரி என்ற ஒரு சிறந்த ஊரில் அருள் செய்து வரும் சிவபெருமானே! உமது ஊரில் விண்ணில் வெண்மையான பவள நிறத்தை ஒத்த அழகிய சந்திரன் உலவிக் கொண்டிருக்கிறான். மிக உயரமான மரங்களைக் கொண்ட தோட்டங்களின் உச்சியிலும் அழகிய ஒளியினை வீசுகின்ற மணிகளால் இழைக்கப்பட்ட மாடமாளிகைகளின் உச்சியிலும் சந்திரன் தவழ்ந்து செல்லுகின்ற காட்சி மிகவும் அற்புதமானது. இத்துணை சிறந்த நகரில் இருந்து நீர் அடியார்களுக்கு அருள்புரிந்து வருகின்றீர். குவளை மலர் போன்ற கண்களை உடைய உம்முடைய தேவியாகிய உமையம்மையும் நீரும் ஒன்றாக வீற்றிருக்கும் சமயம் கவளம் சாப்பிடுகின்ற ஓர் ஆண் யானை மதமயக்கம் கொண்டு உங்கள் இருவரையும் நோக்கி விரைவாக வந்தது. அந்த யானையைக் கண்டவுடன் அம்மை நடுக்கலுற்றாள். உடனே நீர் யானையின் எதிரே சென்று உமது கைகளால் அழித்து அதன் தோலை உரித்து உமது உடலில் போர்வையாகக் போட்டுக் கொண்டீர். நீர் எவ்வாறு உமது கைகளால் இந்தக் கொடிய வேலையைச் செய்தீர்? சொல்லுவீராக.

குறிப்புரை: தவளம் – வெண்மை. அழகுமாம். வெண்பிறை என்றது. அடையின் பொருளின்றிப் பெயரளவாய் நின்றது போலும். திவள் அம் எனப் பிரித்து, திவள்கின்ற அழகிய எனப் பொருள் கொள்க. திவளல் – அசைதல், திகழ்தல் – விளங்குதல் 'குவளைக் கண்ணி கூறன் காண்க'. துண்ணெனல் விரைவுக் குறிப்பு. கவளம் – யானை கொள்ளும் உணவுத் திரட்சி, மால்கரி – மத மயக்கமும் துதிக்கையும் உடைய யானை. கரத்தை உடையது கரி. யானையுரித்ததை உணர்த்திற்று.

All around the city of Thiru-th-theli-ch-cheri grand tall trees are in plenty. The white crescent moon traverses over these tall trees of the groves. These gardens surround the balconies of the palaces studded with all kinds of gems in the city. When Lord Civa, You and Your consort the lotus eyed Uma, were together a very large frenzied elephant, rushed towards You to kill. Uma suddenly got frightened at the sight of the elephant approaching. At this stage, Oh Lord Civa! how You went near the mad elephant, killed it and covered Your body with its skin is an enigma. Please tell us.

1497. கோடடுத்தபொழிலின்மிசைக்குயில்கூவிடும்
சேடடுத்ததொழிலின்மிகுதெளிச்சேரியீர்
மாடடுத்தமலர்க்கண்ணினாள்கங்கைநங்கையைத்
தோடடுத்தமலர்ச்சடையென்கொல்நீர்சூடிற்றே. 7

கோடு அடுத்த பொழிலின்மிசைக் குயில் கூவிடும்
சேடு அடுத்த தொழிலின் மிகு தெளிச்சேரியீர்!
மாடு அடுத்த மலர்க்கண்ணினாள் கங்கைநங்கையைத்
தோடு அடுத்த மலர்ச் சடை என்கொல் நீர் சூடிற்றே?

kOTu aTutta pozilin2micaik kuyil kUviTum
cETu aTutta tozilin2 miku teLiccEriyIr!
mATu aTutta malarkkaNNin2AL kagkai nagkaiyait
tOTu aTutta malarc caTai en2kol nIr cUTiRRE?

பொருள்: மரக்கொம்புகள் நிறைந்துள்ள பொழிலின்கண் இசைபாடும் குயில்கள் இருந்து கூவுகின்றன. பெருமையான தொழிலின்கண் ஈடுபட்டோர் மிகுதியாக வாழ்கின்றனர். அத்தகைய திருத்தெளிச்சேரியில் எழுந்தருளிய இறைவரே! செல்வம் நிறைந்தவளும், மலர் போன்று கண்ணினளும் ஆகியவள் கங்கை நங்கை. இதழ்கள் பொருந்திய கொன்றை மலர்கள் அணிந்த சடையின்கண் அவளைச் சூடியது ஏனோ? கூறுவீர்.

குறிப்புரை: கோடு – கொம்பு. பொழில் – சோலை. சேடு – பெருமை. மாடு – பொன். செல்வம். கண்ணினாளும் கங்கையுமாகிய நங்கை. தோடு – இதழ். கங்கை சூடியதைக் கூறிற்று.

In the outskirts of the city gardens of tall trees are many. Here the cuckoo birds sing melodiously and their music floats in the air. In this city, a large number of people are engaged in honourable occupations, deserving Lord Civan's blessings. Oh Lord

Civa! You wear the beautiful petalled cassia flowers on Your matted hair. Tell me why You keep on the same hair the wealthy and lotus-eyed Ganges, the beautiful damsel.

1498. கொத்திரைத்தமலர்க்குழலாள்குயில்கோலஞ்சேர்
சித்திரக்கொடிமாளிகைசூழ்தெளிச்சேரியீர்
வித்தகப்படைவல்லஅரக்கன்விறற்றலை
பத்திரட்டிக்கரநெரித்திட்டதும்பாதமே. **8**

கொத்து இரைத்த மலர்க் குழலாள், குயில்கோலம் சேர்
சித்திரக் கொடி மாளிகை சூழ் தெளிச்சேரியீர்!
வித்தகப் படை வல்ல அரக்கன் விறல்-தலை, -
பத்து, - இரட்டிக் கரம், நெரித்திட்டது, உம் பாதமே?

kottu iraitta malark kuzalAL, kuyilkOlam cEr
cittirak koTi mALikai cUz teLiccEriyIr!
vittakap paTai valla arakkan2 viRal-talai,--
pattu,--iraTTik karam, nerittiTTatu, um pAtamE?

பொருள்: வண்டுகள் விரிந்த மலர்க் கொத்துக்களைச் சூடிய கூந்தலினள் பார்வதி தேவி. குயில் வடிவம் கொண்டு அவள் வழிபட்ட தலம் திருத்தெளிச்சேரி. ஓவியம் எழுதப்பட்ட கொடிகள் கட்டப்பட்ட மாளிகைகள் சூழ்ந்தது அத்தலம். அங்கு வாழும் இறைவரே! தவத்தால் பெற்ற வாள்போரில் வல்லவன் இராவணன். தலைகள் பத்தும் கைகள் இருபதும் கொண்டவன். அவனைக் கால் விரலால் நெரித்தது உம்பாதம் அன்றோ? சொல்லுவீராக.

குறிப்புரை: தெளிச்சேரியில், தேவியார் குயிலுருவுற்றிருக்கின்றார் போலும்! மலர்க்கொத்து – (வண்டுகள்) இரைத்த மலர், குழல் – கூந்தல். அத்தலத்து மாளிகையின் மேலுள்ள கொடியின் சித்திரம் எனலாம். சித்திரம் – அழகுமாம். வித்தகப்படை – சிவன் தந்த வாள். அரக்கன் – இராவணன். விறல் – வலிமை. தலைபத்து, கரம் – கை. இரட்டி – இருபது. 'பத்துமோ ரிரட்டி தோளன்' (தி.4. ப.70 பா.10) இராவணனை அடக்கிய திறம் குறித்தது.

In the city of Thiru-th-theli-ch-cheri, goddess Paarvathi Devi adds beauty to her appearance by adorning her hair with flower bunches. Once, she took the form of a cuckoo bird in this city and worshipped Lord Civa. In Thiru-th-theli-ch-cheri, there are many tall palaces where flags with pictures are tied to the top portion of these buildings. These flags with pictures are attractive and in this appealing city, Oh Lord

Civa! You are manifested. Once King Raavanan of Sri Lanka, with his strong ten heads and twenty hands, won a sword from You for the penance he observed and became the most chivalrous warrior of his time. Prompted by egoism and bravery he attempted to move, a little aside, Your abode on Mount Kailash. The mountain very slightly got tilted. Lord Civa understood the situation and pressed the mountain with His toe and crushed him under. Tell me how Your Holy Feet did that action.

1499. காலெடுத்ததிரைக்கைகரைக்கெறிகானல்சூழ்
சேலடுத்தவயற்பழனத்தெளிச்சேரியீர்
மாலடித்தலம்மாமலரான்முடிதேடியே
ஓலமிட்டிடஎங்ஙனமோருருக்கொண்டதே. 9

கால் எடுத்த திரைக்கை கரைக்கு எறி கானல் சூழ்
சேல் அடுத்த வயல் பழனத் தெளிச்சேரியீர்!
மால் அடித்தலம், மா மலரான் முடி, தேடியே
ஓலம் இட்டிட எங்ஙனம் ஓர் உருக் கொண்டதே?

kAl eTutta tiraikkai karaikku eRi kAn2al cUz
cEl aTutta vayal pazan2at teLiccEriyIr!
mAl aTittalam, mA malarAn2 muTi, tETiyE
Olam iTTiTa, eggan2am Or uruk koNTatE?

பொருள்: காற்றால் எடுத்துக் கொணரப் பெறுவது கடலின் திரைகளாகிய கைகள். அவை கரையின்கண் வீசப்பெறும். கடற்கரையில் சோலைகள் சூழ்ந்து விளங்கும். சேல்மீன்கள் தவழும் வயல்களை உடைய மருதநிலம் பொருந்தியுள்ளது. அத்தகைய திருத்தெளிச்சேரியில் உறையும் இறைவனே! திருமால் அடியையும், தாமரை மலரில் உறையும் நான்முகன் முடியையும் தேட முற்பட்டனர். காணாது ஓலம் இட்டனர். நீர் எவ்வாறு ஒப்பற்ற பேருருக் கொண்டீர்? உரைப்பீராக.

குறிப்புரை: கால் – காற்று, திரை – அலை. சேல் – மீன்வகையுள் ஒன்று. திருவடியைத் திருமாலும் திருமுடியைப் பிரமனும் தேடிக் காணாத அருமையைத் தெரிவித்தது.

In the eastern side of Thiru-th-theli-ch-cheri, the Bay of Bengal makes it a seashore, heavy wind over the sea, creates big waves in the sea. These hands of the sea waves dash against the coast and backwaters are formed. In the beaches big gardens with rich and tall trees are many. Here paddy fields filled with water and carp fish are

also many. Oh Lord Civa! You are manifested in such a delightful city of Thiru-th-theli-ch-cheri. Thirumaal (one of the manifestations of Maha Vishnu) made a very serious effort to search for Lord Civan's holy feet by digging the earth for many years. Alas! He could not succeed in his efforts. Simultaneously Brahma (Naanmugan) residing in the lotus flower took the form of a swan and flew over the sky to find Your head. He flew for many many years, but could not succeed. They both realised their inability to see Your holy feet and head but wailed in the end. Oh Lord Civa! How did You take this matchless, biggest holy body of fiery column? Tell us how?

1500. மந்திரந்தருமாமறையோர்கள்தவத்தவர்
செந்திலங்குமொழியவர்சேர்தெளிச்சேரியீர்
வெந்தலாகியசாக்கியரோடுசமணர்கள்
தந்திறத்தனநீக்குவித்தீரோர்சதிரரே. 10

மந்திரம் தரு மா மறையோர்கள், தவத்தவர்,
செந்து இலங்கு மொழியவர், சேர் தெளிச்சேரியீர்!
வெந்தல் ஆகிய சாக்கியரோடு சமணர்கள்-
தம் திறத்தன நீக்குவித்தீர்; ஓர் சதிரரே?

mantiram taru mA maRaiyOrkaL, tavattavar,
centu ilagku moziyavar, cEr teLicEriyIr!
vental Akiya cAkkiyarOTu camaNarkaL-
tam tiRattan2a nIkkuvittIr; Or catirarE?

பொருள்: வேத மந்திரங்கள் ஓதுபவர் மறையோர்கள். பெரும் தவத்தை உடையவர்கள். செந்து என்ற பண் போன்ற இனிய மொழி பேசுபவர் மகளிர். அத்தகையோர் வாழும் திருத்தெளிச்சேரியில் உறையும் ஒப்பற்ற சதுரரே! கருநிறங் கொண்ட சாக்கியர்களும், சமணர்களும் பேசும் சமய சிந்தனைகளை எவ்வாறு நீக்குவித்தீர்? அந்தச் சாமர்த்தியம் எவ்வாறு உமக்கு வந்தது? சொல்லுவீராக.

குறிப்புரை: மறையோர்கள், தவத்தவர் (தவத்தையுடையவர்) என்று பிரிக்க. செந்து – ஒரு பெரும் பண். செந்தினத் திசையறுபதமுரல் (தி.2 ப.82 பா.9) நல்ல செந்திசைப்பாடல் (தி.1 ப.114 பா.11) செந்துநேர் மொழியார் (தி.2 ப.51 பா.11) மொழியவர் – சொல்லுடைய மகளிர், வெந்தல் – எரிந்தகட்டை. திறம் பற்றிய உவமை. ஆகிய – உவம உருபு. அது சமணர்க்கும் அடையாகும். 'காரமணர்' என்ற வழக்குணர்க. சினமுமாம். திறத்தன – வகையின. நீக்குவித்தீர் – நீங்கச் செய்தீர். சதிரர் – மேம்பட்டவர் சாமர்த்தியர்.

In this famous city of Thiru-th-theli-ch-cheri learned people who are exponents of vedas live in large numbers. They always utter the sacred mantras in the proper tone. Several men, good at penance, also live in this city. There are damsels, who are well trained in musical mode called Chendu (செந்து) and they play it very often. Like this many good people with different associations live in this city. Oh Lord Civa! You are manifested in such a great city as an unparalleled sagacious person. There You have proved Your capability in defeating the red-ochred Jains and the Buddhists. What an omnipotence it is!

1501. திக்குலாம்பொழில்சூழ்தெளிச்சேரியெஞ்செல்வனை
மிக்ககாழியுள்ஞானசம்பந்தன்விளம்பிய
தக்கபாடல்கள்பத்தும்வல்லார்கள்தடமுடித்
தொக்கவானவர்சூழஇருப்பவர்சொல்லிலே. 11

திக்கு உலாம், பொழில் சூழ், தெளிச்சேரி எம் செல்வனை,
மிக்க காழியுள் ஞானசம்பந்தன் விளம்பிய
தக்க பாடல்கள்பத்தும் வல்லார்கள், தட முடித்
தொக்க வானவர் சூழ இருப்பவர், சொல்லிலே.

tikku ulAm, pozil cUz, teLiccEri em celvan2ai,
mikka kAziyuL njAn2acampantan2 viLampiya
takka pATalkaL pattum vallArkaL, taTa muTit
tokka vAn2avar cUza iruppavar, collilE.

பொருள்: எட்டுத் திசைகளிலும் பொழில் சூழ்ந்து இலங்கும் திருத்தெளிச்சேரியில் உறையும் எம் செல்வரே! உம்மீது புகழ்மிக்க காழிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய பதிகம் இதுவே. பத்துப் பாடல்களையும் ஓதவல்லவர்கள் அடையும் பயன் என்ன? பெரிய முடிகளைச் சூடிய வானவர்கள் சூழ்ந்து இருப்பவர்களைச் சுற்றி ஓதவல்லவர்கள் பாடிக்கொண்டே இருப்பார் ஆவர்.

குறிப்புரை: திக்கு – எட்டு திக்குகளிலும், மிக்க – எல்லா உலகிலும் மேம்பட்ட. தட – பெரிய. தொக்க – ஒன்றுகூடிய. வல்லார்கள் – எழுவாய். இருப்பவர் – பயனிலை. சொல்லில் என்பது சொல்லுங்கால் என்றவாறு. சொல்லில், பத்தும் வல்லவர் வானவர்சூழ இருப்பவர் ஆவர் என்க.

In all the eight directions of Thiru-th-theli-ch-cheri, gardens are plenty with tall trees and flowers and beautify the city. Sri Thiru-gnana-Sambandar born in Seerkazhi, the very famous city in the universe, sang on our Lord Civan of Thiru-th-theli-ch-cheri who is manifested in the city, ten most appealing songs in appropriate melodious tone. Those devotees residing in this city who are experts in singing all these ten songs according to vedic rules in proper tone will be great, i.e., they (their souls) will go to the devas' world and be respected by them. These devotees will be surrounded by the congregation of devas who wear flowers and crowns.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

3ஆம் பதிகம் முற்றிற்று
End of 3rd Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 140 *பதிக எண்: 4*

4. திருவான்மியூர்

4. THIRU-VAAN-MIYOOR

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vina Urai*

திருத்தல வரலாறு

சென்னையிலுள்ள தலம். வான்மீக முனிவர் பூசித்த பதியாதலால் இப்பெயர் பெற்றது. இது மயிலாப்பூருக்குத் தெற்கே 5 கி.மீ. தொலைவில் இருக்கின்றது. இது தொண்டை நாட்டின் இருபத்தைந்தாவது தலமாகும். இறைவர் திருப்பெயர் பால்வண்ணநாதர். இறைவி திருப்பெயர் சொக்கநாயகி. இலிங்கத் திருமேனி சற்று வடபக்கமாகச் சாய்ந்திருக்கின்றது. வான்மீகி முனிவர்க்கு இவ்வூரில் தனிக்கோயில் இருக்கின்றது. இவ்வூர்த் தலபுராணம் பூவை கல்யாண சுந்தர முதலியார் அவர்களால் எழுதப்பெற்றது. அச்சில் வெளிவந்துள்ளது.

பதிக வரலாறு

அழுது உலகை வாழ்வித்த ஆளுடைய பிள்ளையார் திருமயிலைப் பதியில் அமர்ந்தருளிய நாளில், பல தலங்களை வணங்கிச் சென்று நிறைகாதலருத்தியொடும் திருவான்மியூரை அணைந்து, திருத்தொண்டர் எதிர்கொள்ளச் சென்று, திருக்கோபுரத்தை வணங்கி வலங்கொண்டு உள்ளணைந்து, பிறவி மருந்தான பெருந்தகையை வினாவுரைச் சொன்மாலையாகப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1502. கரையுலாங்கடலிற்பொலிசங்கம்வெள்ளிப்பிவன்
திரையுலாங்கழிமீனுகளுந்திருவான்மியூர்
உரையுலாம்பொருளாயுலகாளுடையீர்சொலீர்
வரையுலாமடமாதுடனாகியமாண்பதே. 1

கரை உலாம் கடலில் பொலி சங்கம் வெள்இப்பி வன்
திரை உலாம் கழி மீன் உகளும் திரு வான்மியூர்
உரை உலாம் பொருள்ஆய் உலகு ஆள் உடையீர்! சொலீர் -
வரை உலாம் மடமாது உடன்ஆகிய மாண்புஅதே?

karai ulAm kaTalil poli cagkam veL ippi van2
tirai ulAm kazi mIn2 ukaLum tiru vAn2miyUr;
urai elAm poruL Ay ulaku AL uTaiyIr! collr--
varai ulAm maTamAtu uTan2 Akiya mANpu atE?

பொருள்: கடலின் கண் விளங்குவது சங்குகளும், வெண்ணிறமான சிப்பிகளும் ஆகும். அவை கரையில் வந்து உலாவுமாறு அலைகள் வீசுகின்றன. அவ்வலைகளை உடைய கழிகளில் மீன்களும் பிறழ்கின்றன. அத்தகைய தலம் திருவான்மியூர். அங்கே எல்லோராலும் புகழப்படும் பொருளாய் விளங்கும் இறைவரே! உலகம் அனைத்தையும் ஆட்சி புரிபவரே! மலைமாது எனப்படுபவள் பார்வதி தேவி. அவளை ஓர் உடலில் உடனாகக் கொண்டுள்ள மாண்பிற்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

குறிப்புரை: கடலில் விளங்கும் சங்குகளும் வெள்ளையிப்பிகளும் கரையில் வந்து உலாவும்படி வலியனவாக அலைகள் வீசுகின்றன. அவ்வலைகளையுடைய கழிகளில் மீன்கள் பிறழ்கின்றன. உகளல் – பிறழ்தல். அத்தகைய வளமுடைய திருவான்மியூரில் எழுந்தருளிய சிவபிரானை முன்னிலையாக்கி வினாவியருளினார். 'சொற்பொருளாயும் எல்லாம் உலகங்களையும் ஆளுபவராயும் இருக்கும் சுவாமீ!' மலைமங்கையுடனாகிய மாட்சியை மொழிவீர்' என்றார். மாதியலும் பாதியனான உண்மைகளை வினாவிற்று இத்திருப்பாடல். சொல் – உமை. பொருள் – சிவம். உரையுலாம் பொருள் – மங்கை பங்கன்; அம்மையப்பன்.

The Bay of Bengal borders on the eastern side of the city of Thiru-vaan-miyoor. The strong waves of this sea bring along with the sea water glittering conches and the white coloured oysters in plenty to the shore. Also the waves bring fishes of various types and they leap into the backwaters. All the people in the world praise You; Oh Lord Civa! You are the world and its meaning. You rule over the whole world. You keep Your consort the daughter of the Himalayan mountain - goddess Uma Devi on half of Your body on the left side as concordance. Is it for Your virtuous dignity You keep Your consort like this? Please tell me the reason!

1503. சந்துயர்ந்தெழுகாரகில்தண்புனல்கொண்டுதம்
சிந்தைசெய்தடியார்பரவுந்திருவான்மியூர்ச்
சுந்தரக்கழல்மேற்சிலம்பார்க்கவல்லீர்சொலீர்
அந்தியின்னொளியின்னிறமாக்கியவண்ணமே. 2

சந்து உயர்ந்து எழு கார் அகில் தண்புனல் கொண்டு, தம்
சிந்தைசெய்த அடியார் பரவும் திரு வான்மியூர்,
சுந்தரக்கழல்மேல் சிலம்பு ஆர்க்க வல்லீர்! சொலீர் -
அந்தியின்(ன்) ஒளியின் நிறம் ஆக்கிய வண்ணமே?

cantu uyarntu ezu kAr akil taNpun2al koNTu, tam
cintai ceytu aTiyAr paravum tiru vAn2miyUr,
cuntarakkazalmEl cilampu Arkka valllr! collr--
antiyin2(n2) oLiyin2 niRam Akiya vaNNamE?

பொருள்: திருவான்மியூரில் அடியார்கள் சந்தனமும் உயர்ந்து வளர்ந்த கரிய அகிலும், குளிர்ந்த அபிடேகத் தீர்த்தம் ஆகியவற்றைக் கொண்டு வந்து தியானம் புரிந்து ஆட்டுவர். தமது சிந்தையில் இறைவரை நினைந்து பரவுவர். அத்தகைய தலம் திருவான்மியூர். அங்கே வலது திருவடியில் அழகிய கழல் அணிந்துள்ளீர். இடது திருவடியில் சிலம்பு விளங்குகிறது. இவை ஆரவாரிக்கும் திருவடிகளை உடையவரே! மாலை அந்தியின் ஒளி போன்ற செவ்வண்ணத்தை உம் நிறமாகக் கொண்ட காரணம் யாதோ? சொல்வீராக.

குறிப்புரை: திருவான்மியூரில் அடியார், சந்தனமும், அகிலும் அபிடேக தீர்த்தமும் கொண்டு, தியானம் புரிந்து வழிபடுஞ்சிறப்பும், அழகிய திருவடியில் சிலம்பும் கழலும் கட்டவல்லராதலும், அந்தி வண்ணராதலும் இதிற் குறிக்கப்பட்டன. சந்து – சந்தனம். கார் அகில் – கரிய அகிற்கட்டை, (புகைத்தற்குரியது). கழல் – வெற்றி குறித்து வலக்காலில் அணிவதொரு படை, எருதின் கொம்பு போன்ற வடிவுங்கூர்மையும் அன்றி அருப்புத் தொழிலும் அமைந்தது. 'தாள் களங்கொளக் கழல் பறைந்தன', கொல்லேற்றின் மருப்புப் போன்றன. சுந்தரம் – அழகு. அந்தி – மாலையந்தி, வண்ணம் – அழகு.

The devotees of Thiru-vaan-miyoor collect sandalwood sticks and eaglewood sticks and cool water, and give You the sacred bath meditating on Your glory. Then they extol Your greatness. In such an atmosphere Oh Lord Civa! You are manifested wearing on Your right leg the victorious warrior's bracelet and on the left leg the ringing anklet. Your feet are holy and are worshipped by one and all. You have turned

the colour of Your body into red like that of the twilight in the evening. What is the purpose, behind the changed colour of Your body? Kindly tell me.

1504. கானயங்கியதண்கழிசூழ்கடலின்புறம்
தேனயங்கியபைம்பொழில்சூழ்திருவான்மியூர்த்
தோனயங்கமராடையினீரடிகேள்சொலீர்
ஆனையங்கவ்வுரிபோர்த்தனலாடவுகந்ததே. 3

கான் அயங்கிய தண்கழி சூழ் கடலின் புறம்
தேன் அயங்கிய பைம்பொழில் சூழ் திரு வான்மியூர்,
தோல் நயங்கு அமர் ஆடையினீர்! அடிகேள்! சொலீர் -
ஆனை அங்க(வ்) உரி போர்த்து, அனல் ஆட உகந்ததே?

kAn2 ayagkiya taNkazi cUz kaTalin2 puRam
tEn2 ayagkiya paimpozil cUz tiru vAn2miyUr,
tOl nayagku amar ATaiyin2Ir! aTikEL! collr--
An2ai agka(v) uri pOrttu, an2al ATa ukantatE?

பொருள்: திருவான்மியூரின் கடற்கரைகளில் சோலையும் உப்பங்கழிகளும் சூழ்ந்து விளங்குகின்றன. அதன் புறத்தே தேன் சொரியும் பசுமையான பொழில்களும் சூழ்ந்து விளங்கும். அங்கு புலித்தோலை ஆடையாகக் கொண்டு எழுந்தருளிய அடிகளே. நீர் யானையின் தோலை உரித்துப் போர்த்தியும் கையில் நெருப்பை வைத்துக் கொண்டும் ஆடலை விரும்பியது ஏனோ? சொல்வீராக.

குறிப்புரை: கான் – காட்டில், அயங்கியசுழி – பள்ளமானகழி, அசங்குதல் என்பதன் மருஉவாக் கொண்டுரைத்தலுமாம். கான், கழி, கடல் ஆம் மூன்றன் வேறுபாடும் ஈண்டு உணர்க. தேன் அயங்கிய – தேன் சொரிந்த பொழில் – சோலை, தோல் – நயங்கு+அமர்+ஆடை நயங்கு அமர் தோலாடையினீர் என்றலுமாம். ஆடையினீர் – உடையை அணிந்தவரே, நயங்க – நசங்க முன்னைய நிலைமை குலைய (ப.162 11: 211:4) அடிகேள் – அடிகளென்பதன் விளியுருவம். அங்கம் உரி என்பது அங்கவ்வுரி என்று விகாரமாயிற்று. அங்கம் – உடம்பு. உரி – தோல், தீயாடியதை வினாவினார். ஆடல் என்றிருந்ததோ? 'தோனயங்கம ராடையினீர்' என்பதற்குச் செம்பொருள் கொள்ளல் எளிதன்று. தோல் ஆடை இரண்டற்கும் இடையில் உள்ளதைப் பிரித்தல் எவ்வாறு? நயம் கமர் என்னின் 'கமர்' என்பதன் பொருள் யாது? நயங்கு அமர் என்னின் 'நயங்கு' என்பது தமிழில் இல்லை. தோன் எனப் பிரித்தல் ஒவ்வாது.

In Thiru-vaan-miyoor by the side of the seashore, there are forest like gardens; also cool and deep backwaters. In these green gardens nectar filled flower trees are in large numbers. In such a graceful city of Thiru-vaan-miyoor, Oh Lord Civa! You are manifested wearing the tiger skin on Your loins. You cover Your body also with the elephant's skin and perform that cosmic dance with fire on one hand. Why do You do so? Kindly tell me the reason.

1505. மஞ்சுலாவியமாடமதிற்பொலிமாளிகைச்
செஞ்சொலாளர்கள்தாம்பயிலுந்திருவான்மியூர்த்
துஞ்சுவஞ்சிருளாடலுகக்கவல்லீர்சொலீர்
வஞ்சநஞ்சுண்டுவானவர்க்கின்னருள்வைத்ததே. 4

மஞ்சு உலாவிய மாட மதில் பொலி மாளிகைச்
செஞ்சொலாளர்கள்தாம் பயிலும் திரு வான்மியூர்,
துஞ்சு அஞ்சு இருள் ஆடல் உகக்க வல்லீர்! சொலீர் -
வஞ்ச நஞ்சு உண்டு, வானவர்க்கு இன்அருள் வைத்ததே?

manjcu ulAviya mATa matil poli mALikaic
cenjcolALarkaL tAm payilum tiru vAn2miyUr,
tunjcu anjcu iruL ATal ukakka vallIr! collr--
vanjca nanjcu uNTu, vAn2avarkku in2 aruL vaittatE?

பொருள்: திருவான்மியூரில் உள்ள மாடமாளிகைகளின் உயர்வு மேகங்கள் தங்கும் அளவினதாயிருந்தது. மதில்களையும், அழகிய மாளிகைகளையும் கொண்டது. இனிய சொற்களைப் பேசுவோர் வாழ்வதாய் விளங்குவது. எல்லாரும் உறங்கும் கரிய இருட்போதில் ஆடலை விரும்பி மேற்கொள்ளுபவரே! வன்மையை உடையவராய் இலங்கும் இறைவனே! கரிய விடத்தை நீர் உண்டு தேவர்களுக்கு இனிய அருள் வழங்கியது ஏனோ? சொல்வீர்.

குறிப்புரை: பொருண்மொழி வல்லார் வாழ்ந்தவூர். நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதர், நஞ்சுண்டு வானோரைக் காத்தருளிய திறத்தை வினாவினார். மஞ்சு – மேகம், செஞ்சொல் – பொருள் பொருந்திய செவ்விய சொல். துஞ்சுதல் – துயிலுதல். இருள் தூங்கும்பொழுது ஆடல். வஞ்சு – வஞ்சம், கறுப்பு. வஞ்சிருள் – காரிருள். வஞ்சநஞ்சு – கருவிடம். பயிலும் – பெருகியிருக்கும்.

In the city of Thiru-vaan-miyoor, mansions, forts and compound walls - all these are very tall. Therefore, the clouds traverse over the top portion of these mansions and

other buildings. The devotees living in this town always speak pure words gently and sweetly. These scholars go to worship Lord Civan in the temple. Oh Lord Civa! You do Your cosmic dance in the city during dark midnight. Oh Lord Civa! Tell me how You drank the poison that came out of the sea while the devas and asuras were churning. You know well that it is a highly destructive poison. Yet You drank it and rescued the devas and the universe from total destruction. Kindly tell me why You bestowed grace on them!

1506. மண்ணினிற்புகழ்பெற்றவர்மங்கையர்தாம்பயில்
திண்ணெனப்புரிசைத்தொழிலார்திருவான்மியூர்த்
துண்ணெனத்திரியுஞ்சரிதைத்தொழிலீர்சொலீர்
விண்ணினிற்பிறைசெஞ்சடைவைத்தவியப்பதே. 5

மண்ணினில் புகழ் பெற்றவர் மங்கையர்தாம் பயில்
திண்ணெனப் புரிசைத் தொழில் ஆர்திரு வான்மியூர்,
துண்ணெனத் திரியும் சரிதைத் தொழிலீர்! சொலீர் -
விண்ணினில் பிறை செஞ்சடை வைத்த வியப்புஅதே?

maNNin2il pukaz peRRavar magkaiyartAm payil
tiNNen2ap puricait tozil Ar tiru vAn2miyUr,
tiNNen2at tiriyum caritait tozilIr! colIr--
viNNin2il piRai cenjcaTai vaitta viyappu atE?

பொருள்: திருவான்மியூர் மங்கையர் கற்பு முதலியவற்றாலும் சிவபத்தியாலும் உலகம் புகழப் பெற்றிருந்தனர். அவ்வூர் மதில் உறுதியும் வேலைப்பாடும் நிறைந்தது. எல்லாரும் வியப்படையும் வண்ணம் பலியேற்கச் செல்லும் தொழிலை மேற்கொண்டு உறைபவரே! நீர் வானத்தில் விளங்கும் வெண்பிறையை உம் செஞ்சடைமேல் வைத்துள்ளீர். அவ்வியப்புடைய செயலை ஏன் செய்தீர்? சொல்வீராக.

குறிப்புரை: திண்ணெனல் – உறுதிப்பாடு. புரிசை – மதில். தொழில் – வேலைப்பாடு. ஆர்தல் – நிறைதல். துண்ணெனல் – குறிப்புமொழி. திரியுஞ்சரிதைத் தொழில் – பிச்சையேற்கச் செல்லுந்தொழில் (சிந்தாமணி. 3072. 3 உரை) இதில் பா.9இன் வினாக் காண்க. பிறை – பிறத்தலுடையது. பிறைசூடியதை வினாவினார். செஞ்சடை என்றதால் வெண்பிறை எனக் கொள்ள வைத்தார். விண்பிறையைச் செஞ்சடையில் வைத்தது வியப்பாதல் அறிக.

The forts in the city of Thiru-vaan-miyoor built of strong materials with highly skilled labour, stand very firmly for many many years. In this city beautiful ladies of very fine chastity, character and discipline live in large numbers. They are praised by all the people in the city. Oh Lord Civa! You are manifested in this town; but You go round the cosmos begging with a bowl of human skull. All the people of the town wonder at Your begging. Oh Lord Civa! Tell me why You retain the white crescent moon of the sky, on Your red entangled hairlock which makes people wonder at it.

1507. போதுலாவியதண்பொழில்சூழ்புரிசைப்புறம்
தீதிலந்தணரோத்தொழியாத்திருவான்மியூர்ச்
சூதுலாவியகொங்கையொர்பங்குடையீர்சொலீர்
மூதெயில்லொருமூன்றெரியூட்டியமொய்ம்பதே. 6

போது உலாவிய தண்பொழில் சூழ் புரிசைப் புறம்
தீதுஇல் அந்தணர் ஓத்து ஒழியாத் திரு வான்மியூர்,
சூது உலாவிய கொங்கை ஓர்பங்கு உடையீர்! சொலீர் -
மூதெயில்(ல்) ஒருமூன்று எரியூட்டிய மொய்ம்புஅதே?

pOtu ulAviya taNpozil cUz puricaip puRam
tItu il antaNar Ottu oziyAt tiru vAn2miyUr,
cUtu ulAviya kogkai orpagku uTaiyIr! colIr--
mUteyil(l) orumUn2Ru eriyUTTiya moympu atE?

பொருள்: மலர்கள் நிறைந்த குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்தது. மதில்களைப் புறத்தே உடையது. வேதபாடசாலை, வீடு, சத்திரம் முதலியவற்றில், மாசற்ற அந்தணர்கள் வேதங்களை நிறுத்தாமல் அத்தியாயனம் செய்து வரும் சிறப்புடையது திருவான்மியூர். அத்தகைய திருவான்மியூரில், சூதாடு கருவி போல வடிவத்தை உடைய தனங்களைக் கொண்ட பார்வதி தேவியை ஒரு பாகமாகக் கொண்டு எழுந்தருளி இருப்பவரே! பழமையான முப்புரங்களை எரிசெய்து அழித்த உமது வீரச் செயலுக்குக் காரணம் யாதோ? சொல்வீராக.

குறிப்புரை: போது – பூக்கும் பருவத்தது. பொழில் – சோலை. புரிசைப்புறம் – மதிற்புறத்தில் உள்ள வேதபாடசாலை, வீடு, சத்திரம் முதலியவற்றில், மாசற்ற அந்தணர் வேதாத்திய நயம் ஒழியாச் சிறப்புடையது திருவான்மியூர். சூது – சூதாடுதற்கருவியாகிய வல்லுக்கு ஆகு பெயர். கொங்கைக்கு

உவமை. கொங்கை – உமாதேவி. ஆகு பெயர். முதுமை + எயில் = மூதெயில். மொய்ம்பு – வலிமை. திரிபுர சங்காரத்தை வினாவினார்.

The city of Thiru-vaan-miyoor is surrounded by forest like groves surrounded by the city fort. In the groves buds just before blooming along with the breeze add to the coolness of the place. Here blemishless Brahmins recite vedas ceaselessly. Oh Lord Civa! You have manifested Yourself in this city along with goddess Paarvathi Devi with breasts looking like gamblers' conical pieces. You burnt and destroyed the three ancient aerial cities flying in the air. Tell me the reason for such a valorous deed!

1508. வண்டிரைத்தடம்பொழிலின்நிழற்கானல்வாய்த்
தெண்டிரைக்கடலோதமல்குந்திருவான்மியூர்த்
தொண்டிரைத்தெழுந்தேத்தியதொல்கழலீர்சொலீர்
பண்டிருக்கொருநால்வர்க்குநீருரைசெய்ததே. 7

வண்டு இரைத்த தடம் பொழிலின் நிழல் கானல்வாய்த்
தெண்திரைக் கடல் ஓதம் மல்கும் திரு வான்மியூர்,
தொண்டு இரைத்து எழுந்து ஏத்திய தொல்கழலீர்! சொலீர் -
பண்டு இருக்கு ஒருநால்வர்க்கு நீர் உரைசெய்ததே?

vaNTu iraitta taTam pozilin2 nizal kAn2alvAyt
teNtiraik kaTal Otam malkum tiru vAn2miyUr,
toNTu iraittu ezuntu Ettiya tolkazalIr! collr--
paNTu irukku orunAlvarukku nIr uraiceytatE?

பொருள்: திருவான்மியூரைச் சுற்றி வண்டுகள் ஒலிக்கின்ற பெரிய சோலைகள் உள்ளன. அதன் நிழலிலும், கானலிலும் தெளிந்த அலைகள் மோதிக் கொண்டிருக்கின்றன. அங்கே அடியவர்கள் சிவநாமங்களைச் சொல்லித் துதிப்பர். பழமையான கழல்களை அணிந்துள்ள இறைவரே! முற்காலத்தே நீர் சனகாதியர் நால்வருக்கு (சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர்) மட்டும் சிவஞானத்தை உபதேசித்தது ஏனோ? கூறுவீர்.

குறிப்புரை: இரைத்தல் – ஒலித்தல். திரை – அலை. ஓதம் – நீர், தொண்டு – தொண்டர், இரைத்து – சிவநாம தோத்திரஞ்செய்து, பண்டு – கல்லாலின் நிழற்கீழ் உபதேசித்த அன்று. இருக்கு – சிவஞானோபதேசம். வேதமுமாம். நால்வர் – சனகாதியர். தட்சினாமூர்த்தியாய் இருந்து உபதேசித்ததை வினாவினார்.

The bees boom becomes melodies in the fertile big groves in the coastal area of Thiru-vaan-miyoor. The sea waves, so clear and pure, bring coolness to the shores. Oh Lord Civa! Your age-old anklets are worshipped loudly by Your devotees of this city repeating Your name as Om! Sivaaya Namaha:, which is the mystical word (Mantra – மந்திரம்). In ancient days, as Dakshinamoorthy You sat under the shadow of stone banyan tree and transmitted divine knowledge (மெய்ஞ்ஞானம்) (Civa Gnaanam and other Vedas) through Your gestures - only to the four saints Sanakar, Sananthanar, Sanathanar and Sanarkumarar. Please tell me why You did so.

1509. தக்கில்வந்ததசக்கிரிவன்றலைபத்திறத்
திக்கில்வந்தலறவ்வடர்த்தீர்திருவான்மியூர்த்
தொக்கமாதொடும்வீற்றிருந்தீரருளென்சொலீர்
பக்கமேபலபாரிடம்பேய்கள்பயின்றதே. 8

தக்கில் வந்த தசக்கிரிவன் தலைபத்து இறத்
திக்கில் வந்து அலற(வ்) அடர்த்தீர்! திரு வான்மியூர்த்
தொக்க மாதொடும் வீற்றிருந்தீர்! அருள் என்? சொலீர் -
பக்கமே பலபாரிடம் பேய்கள் பயின்றதே?

takkil vanta tacakkirivan2 talaipattu iRat
tikkil vantu alaRa(v) aTarttIr! tiru vAn2miyUrt
tokka mAtoTum vIRRiruntIr! aruL en2? collr--
pakkamE palapAriTam pEykaL payin2RatE?

பொருள்: இலங்கை மன்னனாகிய இராவணன் தகுதியற்ற நெறியில் கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்டான். அவன் தலைகள் பத்தும் பல திசைகளிலும் வெளிப்பட்டன. தலைகள் கயிலையின்கீழ் நசுக்கப்பட்டபோது அவன் அலறுமாறு அவனை அடர்த்தவரே! திருவான்மியூரில் தன் திருமேனியோடு இணைந்த உமையம்மையாரோடும் வீற்றிருந்து அருளியவரே! பல பூதகணங்களும், பேய்க் கணங்களும் உம்மைச் சூழ்ந்து பயிலக் காரணம் யாதோ? சொல்வீராக.

குறிப்புரை: தகு இல் – தகுதியில்லாத நெறியினில், தசக்கிரீவன் – பத்துத்தலை இராவணன். கிரீவம் – கழுத்து. திருக்கயிலையை எடுத்தபோது அடர்த்த வரலாறு. இதில் இரண்டு முறை விளித்ததை அறிக. பலபாரிடம் – பூதகணம்.

Oh Lord Civa! You have manifested Yourself in Thiru-vaan-miyoor by keeping Your consort Uma Devi on the left half of Your body and grace all Your devotees. The king Raavanan of Sri Lanka impertinently, with excessive egoism came to Your abode - Mount Kailash and tried his best to shift the mountain a little to the other side. He failed in his attempt and got crushed under the mountain with his ten heads. He cried aloud through his ten heads towards all directions. Oh Lord Civa! You slightly pressed the mountain with Your toe after which he suffered and begged Your pardon. Many aids of Yours - the dwarf goblins and ghosts come near You to help You in this avocation. Oh Lord Civa! Please tell me the reason why Your goblins and ghosts wish to follow Your avocations.

1510. பொருதுவார்கடலெண்டிசையுந்தருவாரியால்
திரிதரும்புகழ்செல்வமல்குந்திருவான்மியூர்ச்
சுருதியாரிருவர்க்குமறிவரியீர்சொலீர்
எருதுமேல்கொடுழன்றுகந்தில்பலியேற்றதே. 9

பொருது வார்கடல் எண்திசையும் தரு வாரியால் -
திரிதரும் புகழ் செல்வம் மல்கும் திரு வான்மியூர்,
சுருதியார் இருவர்க்கும் அறிவு அரியீர்! சொலீர் -
எருதுமேற்கொடு உழன்று, உகந்து இல் பலி ஏற்றதே?

porutu vArkaTal eN ticaiyum taru vAriyAl--
tiritarum pukaz celvam malkum tiru vAn2miyUr,
curutiyAr iruvarkkum aRivu ariyIr! colIr--
erutumERkoTu uzan2Ru, ukantu il pali ERRatE?

பொருள்: பெரிய கடல் எட்டுத் திசைகளில் இருந்தும் முத்து, பவளங்களைக் கொண்டு வந்து தரும். அவ்வளங்களால் பரவிய புகழ், செல்வம் ஆகியன நிறைந்தது திருவான்மியூர். அங்கே வேதங்களை ஓதி திருமாலும் பிரமனும் மகிழ்வர். அந்த இருவர்க்கும் அறிதற்கரியவராய் விளங்கும் இறைவரே! எருதின்மேல் ஏறி உழன்று பல இடங்கட்கும் செல்வீர். மகிழ்வோடு சென்று பலியேற்றற்குரிய காரணத்தைக் கூறுவீராக.

குறிப்புரை: பொருது – அலைகள் மோதி, வார் – நீளும். வாரி – வருவாய். புகழ் செல்வம் – வினைத்தொகையும் உம்மைத் தொகையும் ஆக நின்றது அறிக. சுருதியார் – வேதங்களில் கூறப்பட்ட அயனும் அரியும், சிவபரத்துவங் கேட்டவர் எனலுமாம். ஆனேறிச் சில்பலிக்குத் திரிந்த வரலாறுணர்த்தினார். இதனை, 5இல் விளியாற் குறித்தது உணர்க.

Very big waves of the sea bring pearls and corals from all directions to the shores of Thiru-vaan-miyoor. These stones are of all sizes and shapes and become very famous all over the world and the city abounds in such wealth. Oh Lord Civa! You are unknown to both Maha Vishnu and Brahma who happily recite the vedas daily; You become a riddle to both. However, You ride on Your Bull, go round the cosmos and beg for alms from Your devoted ladies. Please tell me the reason for Your begging like this.

1511. மைதழைத்தெழுசோலையின்மாலைசேர்வண்டினம்
செய்தவத்தொழிலாரிசைசேர்திருவான்மியூர்
மெய்தவப்பொடிபூசியமேனியினீர்சொலீர்
கைதவச்சமண்சாக்கியர்கட்டுரைக்கின்றதே. 10

மை தழைத்து எழு சோலையில் மாலை சேர் வண்டுஇனம்
செய் தவத்தொழிலார் இசை சேர் திரு வான்மியூர்
மெய் தவப் பொடி பூசிய மேனியினீர்! சொலீர் -
கைதவச் சமண்சாக்கியர் கட்டுரைக்கின்றதே?

mai tazaittu ezu cOlaiyil mAlai cEr vaNTu in2am
cey tavattozilAr icai cEr tiru vAn2miyUr
mey tavap poTi pUciya mEn2iyin2Ir! collr--
kaitavac camaNcAkkiyar kaTTuraikkin2RatE?

பொருள்: திருவான்மியூரில் கரிய மேகங்களால் சூழப்பட்ட சோலைகள் உள்ளன. மாலை நேரத்தில் இச்சோலைகளை நோக்கி வண்டுகள் கூட்டம் கூட்டமாக ரீங்காரம் செய்து கொண்டு சோலைப்பூக்களில் உள்ள தேனைக் குடிக்க வருகின்றன. இந்த வண்டுகளின் ரீங்காரம் அந்தணர்கள் இராகத்தோடு வேதங்களை ஓதிக்கொண்டிருக்கும் ஓசையுடன் கலந்து அவைகளும் இசைபாடுவது போல் தோன்றுகிறது. மேனிமீது மிகுதியாக வெண்பொடி அணிந்த திருமேனியை உடைய சிவபெருமானே! வஞ்சனையை உடைய சமணர், சாக்கியர் உம்மீது பொய்யுரை கூறிப் பழித்துரைக்கக் காரணம் யாதோ? கூறுவீர்.

குறிப்புரை: மை – மேகம். கரியது என்னும் பொருள்தரும் மைப்பு என்ற பெயரின் மரூஉவாகிய மப்பு என்னும் வழக்குமொழியை உணர்க. மாலை – ஈண்டுப்பொழுது, செய்தவம் ஆகிய தொழிலுடைய அந்தணர். முனிவர் இசை – வேதாகம முழக்கம். புகழெனல் பொருந்தாது. மெய்தவப் பொடிபூசல் – பால்வண்ண நாதர் என்னும் பெயர்க்கொப்பத் திருமேனியில் தவக்கோலத்தின் குறியாகிய திருநீற்றைப்

பூசுதல். வழிபடுவார் உடம்பு (பிறவி) ஒழிய வெண்பொடி பூசுதல் எனினுமாம். கைதவம் – வஞ்சகம். சமண் – சமணர். கட்டுரைத்தல் – கட்டிச்சொல்லும் பொய்யுரை, புறப்புறச் சமயத்தார் பொருளில்லாத மொழியைக் குறித்த வினா இது.

The deep dark clouds rise above the tall groves around the city of Thiru-vaan-miyoor. In the evening hours bees in large numbers gather, humming round the flowers for honey. This humming resembles the reciting of the vedas in pure note by the Brahmins for penance. Oh Lord Civa! You appear in this city smearing the holy white ashes all over Your body, and appear graceful. Oh Lord Civa! Please tell me the reason why the cunning Jains and Buddhists attribute much falsehood to You.

1512. மாதொர்கூறுடைநற்றவனைத்திருவான்மியூர்
ஆதியெம்பெருமானருள்செய்யவினாவுரை
ஓதியன்றெழுகாழியுள்ஞானசம்பந்தன்சொல்
நீதியால்நினைவார்நெடுவானுலகாள்வரே. 11

மாது ஓர் கூறுஉடை நல்-தவனைத் திரு வான்மியூர்
ஆதிஎம்பெருமான் அருள்செய்ய, வினாஉரை
ஓதி, அன்று எழு காழியுள் ஞானசம்பந்தன் சொல்
நீதியால் நினைவார் நெடுவான் உலகு ஆள்வரே.

mAtu Or kURu uTai nal-tavan2ait tiru vAn2miyUr
AtiemperumAn2 aruLceyya, vin2Aurai
Oti, an2Ru ezu kAziyuL njAn2acampantan2 col
nItiyAl nin2aivAr nETuvAn ulaku ALvarE.

பொருள்: திருவான்மியூரில் உறையும் ஆதியாகிய சிவபிரான் உமையம்மையை தமது உடம்பில் ஒரு கூறாக உடையவர். நல்ல தவத்தின் வடிவானவர். அவர் அருளிச் செய்தற் பொருட்டு வினாவி இதனை ஓதினார் ஞான சம்பந்தர். ஊழி முடிவாகிய அக்காலத்தே மிதந்து எழுந்தது காழிப்பதி. அதனுள் தோன்றியவன் ஞான சம்பந்தன். அவன் சொல்லால் எழுந்தது இப்பதிகம். இதனை முறையோடு ஓதி நினைபவர் நீண்ட வானுலகை ஆள்வர்.

குறிப்புரை: நல்தவன் – நல்ல தவத்தன். செய்ய – செய்யற் பொருட்டு. வினாவுரை – இறந்தகால வினைத்தொகை. உரையை ஓதி என்க. நீதி – சைவாசாரத்தில் விதித்த ஒழுங்கு. நெடுவானுலகு – திருவடி நீழல் அருள்செய்த என்ற பாடம் பின்னோர் படைத்தது அது பொருந்தாது.

Oh Lord Civa! the ancient and the first and foremost, You reside in Thiru-vaan-miyoor along with Your consort Uma Devi kept on Your left side. To enable Him to shower His grace on His devotees these ten poems were sung by Thiru-gnana-Sambandar. He makes it appear in this poem as though he questions Lord Civa for his various avocations. Thiru-gnana-Sambandar was born in the world famous city of Seerkaazhi unique in its history. This city was the only one floating in water while the entire universe fully went under water. He sang this chapter of ten verses. Those who can study and sing in the proper musical tone all these eleven verses of this hymn will rule the great heaven.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

4ஆம் பதிகம் முற்றிற்று
End of 4th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 141 *பதிக எண்: 5*

5. திருஅனேகதங்காவதம் 5. THIRU-ANEGA-THANGA-VATHAM

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vina Urai*

திருத்தல வரலாறு

இத்திருத்தலம் வடநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. கேதாரம் செல்லும் வழியில் உள்ளது. இறைவி கௌரி என்னும் திருநாமத்தோடு தவஞ்செய்த பதியாதலின் கௌரிகுண்டம் என்றும் கூறப்பெறும். இமயத் தலங்களில் ஒன்றாக விளங்கும் இத்தலத்தை, திருக்கேதார யாத்திரை செல்வோர் எளிதில் தரிசித்து இன்புறலாம். ரிஷிகேசத்திலிருந்து கேதாரம் செல்வோர் கௌரி குண்டம் வரை பேருந்துகளில் செல்லலாம். கௌரி குண்டத்தில் உள்ள சிறிய வெந்நீர் ஊற்று நீராடற்கேற்றது. இங்குள்ள ஆலயமே அனேகதங்காவதமாகும். இதில் சந்திரர் சூரியர் வழிபட்டுப் பேறு பெற்றனர். இதற்குத் திருஞானசம்பந்தரது பதிகம் ஒன்று உள்ளது. இறைவரின் திருப்பெயர் அனேகதங்காவதநாதர். இறைவியாரின் திருப்பெயர் மனோன்மணி.

பதிக வரலாறு

பாடிய சமயம் எழுதப்பட்டிலது.

திருச்சிற்றம்பலம்

1513. நீடல்மேவுநிமிர்புன்சடைமேலோர்நிலாமுளை
சூடல்மேவுமறையின்முறையாலொர்சுலாவழல்
ஆடல்மேவுமவர்மேயஅனேகதங்காவதம்
பாடல்மேவுமனத்தார்வினைபற்றறுப்பார்களே. 1

நீடல் மேவு நிமிர்புன்சடை மேல் ஓர் நிலாமுளை
சூடல் மேவு, மறையின் முறையால் ஓர் சுலாவு அழல்-
ஆடல் மேவுமவர் மேய அனேகதங்காவதம்
பாடல் மேவும் மனத்தார் வினை பற்று அறுப்பார்களே!

nITal mEvu nimirpun2caTaimEl or nilAmuLai
cUTal mEvu, maRaiyin2 muRaiyAl or culAvu azal-
ATal mEvumavar mEya an2EkatagkAvatam
pATal mEvum man2attAr vin2ai paRRu aRuppArkaLE!

பொருள்: சிவபெருமான் தனது நீண்டு உயர்ந்த சடைமுடிமீது பிறைமதியைச் சூடியுள்ளார். வேத விதிப்படி வளர்க்கப் பெற்றுச் சுழன்று எரியும் தீயில் அவர் ஆடுதலை விரும்புபவர். அவர் உறையும் தலம் அனேகதங்காவதம். அத்தலத்தைப் பற்றிப் பாடுதலை விரும்பும் பக்தர்கள் இசையோடு பாடுகின்றார்கள். இறைவர் அவர்கள் வினைகளையும் அவற்றால் விளையும் பற்றுக்களையும் அறுத்து அவர்களை ஆசீர்வதிப்பார்.

குறிப்புரை: நீடல் – (நீள் + நல்) நீளல், நீடுமாம். நிமிர்தல் – உயர்தல். புன்மை – மென்மை, பொன்மையுமாம். நிலாமுளை – பிறையாகிய முளை. சூடல் – சூடுதல். மறையின்முறை – வேதவிதி. கலாவு அழல் – கழன்றெரியுந்தீ. அழலாடல் – தீயிலாடுதல். அனேகதங்காபதம் – வடநாட்டிலுள்ளதொரு மலை. பாடல் – பாடுதலை. மேவும் – விரும்பும். வினைபற்று – வினையும் அதனால் வரும் பற்றும். உம்மைத்தொகை.

Goddess Uma Devi with another name Gowri did penance in a place called Gowrikundam in the Himaalayaas where hot water spring exists. This place is on the way from Rishikesh to Ketharam. The temple in this place is called 'Thiru-anega-thanga-vatham' (*திருஅனேகதங்காவதம்*). The God in this place is called 'Anega-thanga-vatha-naathar'. Goddess is called 'Manonmani'. Lord Civan is manifested in the temple here. He retains the crescent moon on His long matted hair. He does His delightful dancing in the whirling flames of the sacred fire raised as per vedic norms. The devotees who take satisfaction in singing the songs of this place in proper tone will get rid of their past bad deeds and the resultant good effect will be enjoyed by them.

1514. சூலமுண்டுமழுவுண்டவர்தொல்படைசூழ்கடல்
ஆலமுண்டபெருமான்றனனேகதங்காவதம்
நீலமுண்டதடங்கண்ணுமைபாகம்நிலாயதோர்
கோலமுண்டளவில்லைகுலாவியகொள்கையே. 2

சூலம் உண்டு, மழு உண்டு, அவர் தொல் படை; சூழ் கடல்-
ஆலம் உண்ட பெருமான்தன் அனேகதங்காவதம்,
நீலம் உண்ட தடங்கண் உமை பாகம் நிலாயது ஓர்
கோலம் உண்டு; அளவு இல்லை, குலாவிய கொள்கையே!

cUlam uNTu, mazu uNTu, avar tol paTai; cUz kaTal-
Alam uNTa perumAn2tan2 an2EkattagkAvatam,
nIlam uNTa taTagkaN umai pAkam nilAyatu Or
kOlam uNTu; aLavu illai, kulAviya koLkaiyE!

பொருள்: அனேகதங்காவதத்தில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் சிவபெருமான் சூலத்தையும், மழுவையும், படைக்கலங்களாகக் கொண்டவர். இறைவன் உலகைச் சூழ்ந்துள்ள ஆழமான கடலில் தோன்றிய விடத்தை உண்டு உலகைக் காத்தருளிய பெருமான் ஆவார். நீலநிறம் பொருந்திய பெரிய கண்களை உடையவள் உமையம்மை. அவளை ஒரு பாகமாக விளங்கும் அழகினர். அவ்வம்மையோடு குலாவும் செயல்களுக்கு அளவில்லை.

குறிப்புரை: உண்டு என்னும் இரண்டும் வினைமுற்று. அவர் தொல்படையாகச் சூலமும் மழுவும் உள என்க. ஆலம் – நஞ்சு. நீலம் – நீலநிறம். நீலோற்பலமுமாம். கோலம் – திருக்கோலம். நிலாவுதல் – பிரகாசமாயிருத்தல். குலாவுதல் – பொருந்துதல்.

Lord Civa at Thiru-anega-thanga-vatham owns in His hands a trident and an axe as His ancient war weapons. He consumed the poison that came out of the deep sea which surrounded the universe and thus saved the entire humanity in the world. He appears with His consort Uma Devi, whose eyes are beautifully blue, keeping her on the left half of His body. His beauty has no bounds and His love is limitless.

1515. செம்பினாருமதில்மூன்றெரியச்சினவாயதோர்
அம்பினாலெய்தருள்வில்லியனேகதங்காவதம்
கொம்பின்நேரிடையாளொடுங்கூடிக்கொல்லேறுடை
நம்பன்நாமவிலாதனநாவெனலாகுமே. 3

செம்பின் ஆரும் மதில்மூன்று எரிய, சின வாயது ஓர்
அம்பினால் எய்துஅருள் வில்லி, அனேகதங்காவதம்
கொம்பின் நேர் இடையாளொடும் கூடிக் கொல்ஏறு உடை
நம்பன், நாமம் நவிலாதன நா எனல் ஆகுமே?

cempin2 Arum matilmUn2Ru eriya, cin2a vAyatu Or
ampin2Al eytu aruL villi, an2EkatagkAvatam
kompin2 nEr iTaiyALoTum kUTik kol ERu uTai
nampan2, nAmam navilAtan2a nA en2al AkumE?

பொருள்: விண்ணிலே சதா காலமும் பறந்து சென்று கொண்டிருக்கும் திரிபுரம் என்று சொல்லப்படும் மூன்று கோட்டைகளை செம்பு உலோகத்தால் மிக உறுதியாகக் கட்டி அதில் அசுரர்கள் சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் சதாவும் தேவர்களுக்கு துன்பங்களைக் கொடுத்து வந்தார்கள். தேவர்கள் சிவபெருமானிடம் தங்களின் குறைகளைக் கூறிக் காப்பாற்ற வேண்டினார்கள். அனேகதங்காவதத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் அவர்களுக்கு இரங்கி முனையில் அக்கினி உள்ள பாணத்தை அந்தத் திரிபுரத்தின் மதில்களை நோக்கி செலுத்தினார். மூன்று கோட்டைகளும் அதில் உள்ள அசுரர்கள் அனைவரும் அழிந்தனர். சிவனை சதாவும் வணங்கும் மூவர் உயிர் தப்பினர். பூங்கொம்பு போன்ற இடையினை உடையவள் உமையம்மை. அவளோடு கூடிய சிவபெருமான் கொல்லேற்றை ஊர்தியாகக் கொண்டவர் ஆவார். அப்பெருமான் திருப்பெயரைச் சொல்லிப் பழகாத நாக்கள் நாக்கு ஆகமாட்டா.

குறிப்புரை: மதில் மூன்று – திரிபுரம். சினம் வாயது – எரிதலையுடைய முனையுடையது. விண்டுவாகிய பாணத்தின் முனையில் அக்கினியிருப்பதுபற்றிச் சினவாய் எனப்பட்டது. கொம்பின் நேர் இடையாள் – கொம்புபோன்ற இடையினையுடைய அம்பிகை. நம்பன் – எல்லா உயிர்களாலும் விரும்புதற்கு உரியவன். சிவநாமத்தைச் சொல்லிச் சொல்லிப் பழகாத நாக்கள் நாவாக. (தி. 3 ப. 4 பா. 6, 9) நவிலல் – நாவாற் சொல்லி அடிப்படல். 'மறை நவில் அந்தணர்' (புறநானூறு, கடவுள் வாழ்த்து).

The three aerial flying fortresses were mainly built of copper. They were very strong buildings. The asuras who lived in these fortresses troubled devas always. At the request of the devas, Lord Civa decided to destroy the three fortresses. Mount Meru was used by Civa as His bow and He created fire at the tip of the arrow and shot the arrow at these three fortresses. Instantly all the three fortresses were completely destroyed and all the asuras were killed except the three who were sincere devotees of Lord Civa. Thus He graced the devas. He is manifested in Thiru-anega-thanga-vatham and He shares half His body with His consort Uma Devi. Whenever He moves about on His bull He keeps Uma Devi also on the Bull. Those tongues which do not recite the great name of our Lord Civa cannot be called tongues.

1516. தந்தத்திந்தத்தடமென்றருவித்திரள்பாய்ந்துபோய்ச்
சிந்தவெந்தகதிரோனொடுமாசறுதிங்களார்
அந்தமில்லவளவில்லஅனேகதங்காவதம்
எந்தைவெந்தபொடிநீறணிவார்க்கிடமாவதே. 4

தந்தத்திந்தத்தடம் என்ற அருவித்திரள் பாய்ந்து போய்ச்
சிந்த வெந்த கதிரோனொடு மாசுஅறு திங்கள் ஆர்
அந்தம் இல்ல அளவு இல்ல, அனேகதங்காவதம்
எந்தை வெந்தபொடி-நீறு அணிவார்க்கு இடம்ஆவதே.

tantattintattaTam en2Ra aruvittiraL pAyntu pOyc
cinta venta katirOn2oTu mAcu aRu tigkaL Ar
antam illa aLavu illa, an2EkatagkAvatam,
entai ventapoTi-nIRu aNivArkku iTam AvatE.

பொருள்: சிவபெருமான் அனேகதங்காவதத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகிறார். இந்த ஊரில் நான்கு பக்கங்களிலும் மிகுந்த உயரத்தில் இருந்து அளவற்ற மழைநீரோடு சதாவும் விழுந்து ஊர் முழுவதும் நீர் சிந்தி ஓடுகின்றது. இந்த அருவிக்கூட்டம் பாயும்போது தந்தத்திந்தத்தடம் என்ற ஒலிக்குறிப்போடு பாய்கின்றன. சுடர்ந்த கதிர்களை உடைய சூரியன் தன் வெங்கதிர்களை வீசிக் கொண்டிருக்கின்றான். சந்திரனும் குற்றமற்ற ஒளியை வீசிக் கொண்டிருக்கின்றான். இந்த இரண்டிற்கும் நாசமும் இல்லை அளவும் இல்லை. இந்த சிறப்பான இடத்தில் எந்தையாகிய சிவபெருமான் திருநீற்றை உடல்முழுவதும் பூசிய அடியார்களுக்கு அருள்வழங்கி வருகின்றான்.

குறிப்புரை: அருவிக்கூட்டம் பாயும்போது உண்டாகும் ஒலிக்குறிப்பு. 'தந்தத் திந்தத் தடம்' என்றுள்ளதாம். பாய்தலால் சிந்துகின்றன. வெந்த – சுடர்ந்த. கதிரோன் – கதிர்களையுடைய சூரியன். வெந்தகதிர் – வெங்கதிர். மாசு – குற்றம். திங்கள் – சந்திரன். அந்தம் – முடிவு. அளவு – எல்லை. நாசமுமில்லை அளவுமில்லை என்றபடி.

In the city of Thiru-anega-thanga-vatham torrential water falls bring water that flows all over the city. The water falling from a height makes a heavy noise. It resembles a musical note 'Thanthath, Thinthath thadam'. The warm sun's rays as well as the flawless rays of the moon fall on the city. There is no beginning nor any end to these two rays. In this grand city Lord Civa who has adorned His body with holy ashes, has manifested Himself here and graces the devotees who pray to Him.

1517. பிறையுமாசில்கதிரோனறியாமைப்பெயர்ந்துபோய்
உறையுங்கோயில்பசும்பொன்னணியாரசும்பார்புனல்
அறையுமோசைபறைபோலுமனேகதங்காவதம்
இறையெம்மீசனெம்மானிடமாகவுகந்ததே. 5

பிறையும் மாசுஇல் கதிரோன் அறியாமைப் பெயர்ந்து போய்
உறையும் கோயில், பசும்பொன் அணியார், அசும்பு ஆர் புனல்
அறையும் ஓசை பறை போலும் அனேகதங்காவதம்
இறை, எம் ஈசன், எம்மான், இடம்ஆக உகந்ததே.

piRaiyum mAcu il katirOn2 aRiyAmaip peyarntu pOy
uRaiyum kOyil, pacumpon2 aNiyAr, acumpu Ar pun2al
aRaiyum Ocai paRai pOlum an2EkatagkAvatam,
iRai, em Ican2, emmAn2, iTam Aka ukanatatE.

பொருள்: அனேகதங்காவதத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் கோயில் வானளாவியது. விண்ணில் பாய்ந்து செல்லும் சந்திர சூரியர்கள் இந்தக் கோயிலின் உயரத்தை அறியாமல் திருக்கோபுரத்தைத் தாண்டுவதற்கு உயர்ந்து செல்ல மாட்டாமல் பக்கத்தில் பெயர்ந்து போவர். பசும்பொன் போன்ற நீர்த்துளிகளை உடைய பறை போன்று ஒலித்து ஒழுகும் அருவிகள் ஊரைச் சுற்றி உள்ளன. அத்தகையது அனேகதங்காவதம். அதுவே நம் ஈசனாகிய இறைவன் தனது இடமாகக் கொண்டு உகந்து அருளுகிறான்.

குறிப்புரை: பிறையும் – சந்திரனும். மாசு – குற்றம். கதிரோன் – சூரியனும். அறியாமை – அறியாமல். கோயிலின் உயர்ச்சியை அறிய மாட்டாமல். பெயர்ந்து – அப்பால் விலகி. சூரிய சந்திரர் திருக்கோபுரத்தை தாண்டற்கு உயர்ந்து செல்ல மாட்டாமல் பக்கத்திற் பெயர்ந்து போவர் என்றது. அசும்பு – நீர்த்துளி. துளித்தல் பொருந்திய புனல். புனல் – நீர். அறையும் – ஒலிக்கும். பறை – வாத்திய ஓசை.

The temple towers in the city of Thiru-anega-thanga-vatham look tall as the sky. The moon and the faultless sun while traversing through the sky are unable to traverse and cross the temple towers due to its tallness. Therefore, they both change their pathway in the sky and move away from the towers and pass through. The shining waters in the falls make echoes like drum beating and the bright water flows around the city of Thiru-anega-thanga-vatham. Lord Civa has selected this town as His commanding abode and graces the devotees who approach Him in the temple.

1518. தேனையேறுநறுமாமலர்கொண்டடிசேர்த்துவீர்
ஆனையேறுமணிசாரலனேகதங்காவதம்
வானையேறுநெறிசென்றுணருந்தனைவல்லிரேல்
ஆனையேறுமுடியானருள்செய்வதும்வானையே. 6

தேனை ஏறு நறுமாமலர் கொண்டு அடி சேர்த்துவீர்!
ஆனை ஏறும் அணிசாரல் அனேகதங்காவதம்
வானை ஏறும் நெறி சென்று உணரும்தனை வல்லிரேல்,
ஆன்நெய் ஏறு முடியான் அருள்செய்வதும் வானையே.

tEn2ai ERu naRumAmalar koNTu aTi cErttuvIr!
An2ai ERum aNi cAral an2EkatagkAvatam
vAn2ai ERum neRi cen2Ru uNarum tan2ai vallirEl,
An2ney ERu muTiyAn2 aruLceyvatum vAn2aiyE.

பொருள்: தேனை மிகுதியாகப் பெற்றவை மணம் கமழும் சிறந்த மலர்கள். அவற்றைப் பறித்து இறைவன் திருவடிகளில் சேர்ப்பிக்கும் அடியவர்களே! வீடுபேறு அடைதற்குப் பின்பற்றுவன சரியை, கிரியை முதலான நெறிகள். அவற்றில் நின்று அவனை உணர நீவீர் வல்லீரோ? அவ்வாறாயின் சிவபிரான் உங்கட்கு வானுலகப் பேற்றினை வழங்கி அருளுவான். யானைகள் ஏறி உலாவும் அழகிய சாரலை உடையது அனேகதங்காவதம். அங்கே விளங்கும் இறைவன், ஆனைந்தாடும் தலைவனாகிய சிவபெருமான் ஆவான்.

குறிப்புரை: தேனையேறும் – தேனை மிகுதியாகப் பெற்ற. அடி – திருவடியில். சேர்த்துவீர் – (தூவித்) தொழுபவர்களே என்று விளித்தார். ஆனை – யானை. வானை – பேரின்ப வீட்டு வகை. நெறி – சரியை முதலிய நான்குநெறி. உணருந்தனை – உணரும் அளவை. ஆன்ஐ – பசுவினிடத்துண்டாகும் பால் தயிர் நெய் முதலிய ஐந்து ஆனிலங்கிளர் ஐந்தும் அவிர்முடியாடி. வானை ஏறு நெறியுணர வல்லீரேல் ஆனையேறுமுடியவன் அருள்வதும் வானையே (தி. 2 ப. 10 பா. 5) என்று ஐயந்தீர்த்தருளினார்.

The devotees in the city of Thiru-anega-thanga-vatham collect sweet smelling flowers full of honey and offer them at the holy feet of Lord Civan. If you are capable of receiving His grace, do not think of any other place than Thiru-anega-thanga-vatham. To get salvation you should follow the principles consisting the four fold as explained in the aagamaas, called 'Carya and Kriya'. Then worship Lord Civan in the temple at Thiru-anega-thanga-vatham where elephants climb the hill with fine falls, and roam happily. In this renowned place, Lord Civa rests Himself happily, it is He who delights

in His sacred bath of the five items obtained from the cow. He will grace you with the divine salvation to reach heaven, if you really aspire for it.

1519. வெருவிவேழமிரியக்கதிர்முத்தொடுவெண்பளிங்
குருவிவீழவயிரங்கொழியாவகிலுந்திவெள்
அருவிபாயுமணிசாரலனேகதங்காவதம்
மருவிவாழும்பெருமான்கழல்சேர்வதுவாய்மையே. 7

வெருவி வேழம் இரிய, கதிர் முத்தொடு வெண்பளிங்கு
உருவி வீழ, வயிரம் கொழியா, அகில் உந்தி, வெள்-
அருவி பாயும் அணி சாரல் அனேகதங்காவதம்
மருவி வாழும் பெருமான் கழல் சேர்வது வாய்மையே.

veruvi vEzam iriya, katir muttoTu veNpaLigku
uruvi vIza, vayiram koziyA, akil unti, veL-
aruvi pAyum aNi cAral an2EkatagkAvatam
maruvi vAzum perumAn2 kazal cErvatu vAymaiyE.

பொருள்: அனேகதங்காவதம் என்னும் மலையின் மேலிருந்து பாயும் வெள்ளருவி ஒலியால் யானைகள் அஞ்சி ஓடும். அவ்வருவி முத்துக்களையும் பளிங்குகளையும் வைரங்களையும் அகில் முதலிய மரங்களையும் அடித்து வருகின்றது. அத்தகைய அழகிய சாரல் உடைய அம்மலைமேல் எழுந்தருளிய இறைவன் திருவடி சேர்வது மெய்ந்நெறி. வெருவி அதனை அடைந்து அங்கு வாழும் பெருமான் திருவடிகளை அடைவதே மெய்ந்நெறியாகும்.

குறிப்புரை: வெருவி – அஞ்சி. வேழம் – யானை. இரிய – ஓட. உருவி – ஊடுருவி. வயிரம் – வச்சிரமணி. கொழியர் – கொழித்து. அகில் – மணமுள்ளதொருமரம். வாய்மை – மெய்ந்நெறிக்குப் பண்பாகுபெயர்.

The city Thiru-anega-thanga-vatham has very attractive mountains in the vicinity. Pure silvery waterfalls flow in plenty from clouds gathering on hilltops. The elephants grazing near the falls, hear the great noise and become panicky without knowing wherefrom the noise comes, and run hither and thither. The stream brings very bright pearls, white marbles and diamonds and eaglewood. These rush in the water flow and settle along the brook banks. Oh! Ye gentlemen! Please go to this

enchanting hill country of attractive slopes where Lord Civan resides. Worship His holy feet and this is only correct path to virtue and salvation.

1520. ஈரமேதுமிலனாகியெழுந்தஇராவணன்
வீரமேதுமிலனாகவிளைத்தவிலங்கலான்
ஆரம்பாம்பதணிவான்றனனேகதங்காவதம்
வாரமாகிநினைவார்வினையாயினமாயுமே. 8

ஈரம்ஏதும் இலன் ஆகி எழுந்த இராவணன்
வீரம்ஏதும் இலன்ஆக விளைத்த விலங்கலான்,
ஆரம் பாம்புஅது அணிவான்தன், அனேகதங்காவதம்
வாரம்ஆகி நினைவார் வினைஆயின மாயுமே.

Iram Etum ilan2 Aki ezunta irAvaNan2
vIram Etum ilan2 Aka viLaitta vilagkalAn2,
Aram pAmpu atu aNivAn2tan2, an2EkatagkAvatam
vAram Aki nin2aivAr vin2ai Ayin2a mAyumE.

பொருள்: இலங்கை மன்னனாகிய இராவணன் தன்னிடம் 'அன்பு' என்று ஒரு சிறிதும் இன்றித் தன் வலிமையைப் பெரிது என்று எண்ணி கயிலை மலையை நகர்த்த எழுந்தான். பக்தியின்றி வீரம் ஒன்றே கொண்டு கயிலையைத் தூக்கிய இராவணனுக்கு அவ்வீரம் சிறிதும் இல்லாதவனாக்கினார் சிவபிரான். பாம்பை ஆரமாக அணிபவனாகிய சிவபிரானின் அனேகதங்காவதத்தை அன்போடு நினைப்பவர் வினைகள் யாவும் மாயும்.

குறிப்புரை: ஈரம் – அன்பு. ஏதும் – யாதும், சிறிதும். விலங்கல் – (கயிலை) மலை. ஆரம் – மாலை. வாரம் – அன்பு.

King Raavanan of Sri Lanka had egoistic feelings and had pride regarding his unparalleled physical courage. He forgot his respectful love to Civan, Lord of Thiru-anega-thanga-vatham. Raavanan, therefore, once tried his best to move Mount Kailash, the abode of Lord Civan a little to the farther side, but failed, got crushed under the mountain and cried. Lord Civan who has His abode on Mount Kailash and wears the snake round his neck totally destroyed the bravery of Raavanan. Those devotees who think deeply of the greatness of Lord Civan and pray will get their sufferings and evils chased fully.

1521. கண்ணன்வண்ணமலரானொடுங்கூடியோர்க்கையமாய்
எண்ணும்வண்ணமறியாமையெழுந்ததோராரழல்
அண்ணல்நண்ணுமணிசாரலனேகதங்காவதம்
நண்ணும்வண்ணமுடையார்வினையாயினநாசமே. 9

கண்ணன் வண்ண மலரானொடும் கூடியோர்க்கு ஐயம்ஆய்
எண்ணும் வண்ணம், அறியாமை எழுந்தது ஓர்ஆர்அழல்
அண்ணல் நண்ணும் அணி சாரல் அனேகதங்காவதம்
நண்ணும் வண்ணம் உடையார் வினைஆயின நாசமே.

kaNNan2 vaNNa malarAn2oTum kUTiyOrkku aiyam Ay
eNNum vaNNam, aRiyAmai ezuntatu Or Ar azal
aNNal naNNum aNi cAral an2EkatagkAvatam
naNNum vaNNam uTaiyAr vin2ai Ayin2a nAcamE.

பொருள்: திருமாலும் நான்முகனும் கூடி சிவபிரானின் அடிமுடி அறிய முற்பட்டனர். அவர்கள் அறிய முடியுமா என ஐயுறும் வண்ணம் நிகழ்ந்தது ஒன்று. அவர்கட்கு இடையே எழுந்தது ஓர் அழற்பிழம்பு. அச்சிவபெருமான் எழுந்தருளிய அழகிய சாரலை உடையது அனேகதங்காவதம். அதனை நண்ணும் இயல்புடையார் வினைகள் நாசமாகும்.

குறிப்புரை: கண்ணன் – கிருட்டிணனாக அவதரித்த திருமால். வண்ணமலர் – தாமரை. வண்ணம் – அழகு. ஐயம் – சந்தேகம். அறியாமை – அறியாமல். ஆர் அழல் – நிறைந்த பெரிய தீப்பிழம்பு (அக்கினிமலை வடிவம்) அண்ணல் – சிவபிரான். நண்ணும் – சேர்ந்து வழிபடும். வண்ணம் – வகை கூட்டியோர்க்கு ஐயமாய் எனப் பொருள் காண்க. மதுரைத் திருஞானசம்பந்தப்பிள்ளைப்பதியில் 'கையமாய்' என்ற பாடமுளது.

Lord Thirumaal and the four faced Brahma argued about their superiority in the world. They came to a conclusion that among the two whoever was the first in seeing Lord Civan's head or feet will be superior to the other. Thirumaal went underground in search of Civan's holy feet; while Brahma went in search of the Lord's head in the sky. They both failed in their search. At that moment Lord Civa rose between them boundlessly as a fire of indescribable appearance which Vishnu and Brahma could not even dream of. That Lord Civan is in this attractive place of mountains and valleys known as Thiru-anega-thanga-vatham. The devotees who can approach this place and offer worship to Lord Civan will be relieved of all their malevolent actions and their effect.

1522. மாபதம்மறியாதவர்சாவகர்சாக்கியர்
ஏபதம்படநின்றிறுமாந்துழல்வார்கள்தாம்
ஆபதம்மறிவீருளிராகிலனேகதங்
காபதம்மமர்ந்தான்கழல்சேர்தல்கருமமே. 10

மா பதம் அறியாதவர் சாவகர் சாக்கியர்,
ஏ பதம் பட நின்றி இறுமாந்து உழல்வார்கள்தாம்
ஆ பதம் அறிவீர்உளிர்ஆகில், அனேகதங்
காபதம் அமர்ந்தான் கழல் சேர்தல் கருமமே.

mA patam aRiyAtavar cAvakar cAkkiyar,
E patam paTa nin2Ru iRumAntu uzalvArkaL tAm
A patam aRivIr uLir Akil, an2Ekatag-
kApatam amarntAn2 kazal cErtal karumamE.

பொருள்: சிறந்த சிவபதத்தை அறியாதவர் சமண, புத்த சமயத்தவர்கள். அவர்கள் பிறரால் இகழப்படுபவர்கள். இறுமாப்புடையவராய் உழல்பவர்கள் ஆவர். நாம் அடையத் தக்கது சிவபதம் என்று அறியாதவர்களாயின் அனேகதங்காவதத்துள் எழுந்தருளியுள்ள சிவபிரான் திருவடிகளை ஆராய்ந்து உணர்தலே நீவீர் செய்யத்தக்க கருமம் ஆகும்.

குறிப்புரை: மாபதம் – பெரிய பதவி. ஏ பதம் – ஏ ஏ என்னும் இகழ்கின்ற சொல்; 'ஏ ஏ இவள் ஒருத்தி பேடியோ' என்றார் (சீவக சிந்தாமணி. பா. 652) அறிவீருளிர் – அறிவீராயிருப்பீர் (ஆகில்). கருமம் – இன்றியமையாது செயல்பாலதொருகடன்.

Those Jains and Buddhists, also called Savakar and Saakiar, are all ignorant people and do not understand the Supreme Holiness of Lord Civan and His highest state of achievements. They are always on the beaten track of ignorance. They are scorners of Saivite philosophy and are always conceited. You devotees, if you are really interested in reaching the true abode of eternal bliss, then it is your duty to reach the holy feet of Lord Civan at Thiru-anega-thanga-vatham.

1523. தொல்லையூழிப்பெயர்தோன்றியதோணிபுரத்திறை
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தன்நல்லார்கள்முன்
அல்லல்தீரவுரைசெய்தஅனேகதங்காவதம்
சொல்லநல்லஅடையும்மடையாசுடுதுன்பமே. 11

தொல்லைஊழிப் பெயர் தோன்றிய தோணிபுரத்து இறை -
நல்ல கேள்வித் தமிழ் ஞானசம்பந்தன் - நல்லார்கள்முன்
அல்லல் தீர உரைசெய்த அனேகதங்காவதம்
சொல்ல நல்ல அடையும்; அடையா, சுடுதுன்பமே.

tollai Uzip peyar tOn2Riya tONipurattu iRai--
nalla kELvit tamiz njAn2acampantan2--nallArkaL mun2
allal tIra urai ceyta an2EkatagkAvatam
colla, nalla aTaiyum; aTaiyA, cuTutun2pamE.

பொருள்: பழமையான ஊழிக்காலத்தே தோணியாய் மிதந்த காரணத்தால் தோணிபுரம் என்னும் பெயர் பெற்றது சீகாழிப்பதி. அதன் தலைவனும், நல்ல நூற்கேள்வியை உடையவனும் ஆகியவன் தமிழ்ஞானசம்பந்தன். நல்லோர்கள் திருமுன்னர், அல்லல் தீர உரைத்து அவர் அருளியது இப்பதிகம். அத்தகு அனேகதங்காவதத்தைப் புகழ்ந்து போற்றின், நல்லன வந்துறும். நம்மைச் சுடும் துன்பங்கள் நம்மை அடைய மாட்டா.

குறிப்புரை: தோணிபுரம் – சீகாழி. இறை – தலைவர். தமிழ் – சைவத்தமிழ் நூல்களை அருளும். கேள்வி – சுருதி. ஒவ்வொரு பதிகமும் ஒவ்வொரு நூலாதல் ஆசிரியர் திருவாக்காலறியலாம். 'கழுமலத்தின் பெயரை நாளும் பரவிய சீர்ப் பன்னிரண்டும் நன்னூலாப் பத்திமையால் பனுவல்மாலை' (தி.2. ப.70 பா.12). 'வன்றொண்டன் பன்னு தமிழ் நூல் வல்லார்' (தி. 7 ப. 41 பா. 10) நல்லார்கள் – சிவனடியார்கள். நல்ல – நல்லன. நல்ல அடையும், சுடுதுன்பம் அடையா என்க.

Thiru-gnana-Sambandar in this last poem of this chapter gives the name of Seerkaazhi as Thoni-puram, one of the twelve names of the sacred place from ancient times. Here he was born, he was an eminent scholar of good inquisitive talent. He was graced by Lord Civan of Thonipuram. Thiru-gnana-Sambandar sang these songs to dispel the sufferings of the virtuous men. Those people who recite these verses in proper tune and in the proper mode on Lord of Thiru-anega-thanga-vatham and praise Him will have all benevolence, malevolence will not strike them.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

5ஆம் பதிகம் முற்றிற்று
End of 5th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 142 *பதிக எண்: 6*

6. திருவையாறு 6. THIRU-VAIYAARU

பண் : இந்தளம் *Pann: Indhalam*

திருத்தல வரலாறு

கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி முடியத் திருவையாற்றிலிருந்து கண்டியூர் வரை காவிரி நதிதான் பரவியிருந்தது. கண்டியூர், திருச்சோற்றுத்துறை இவைகளைப் பாடிய தேவார ஆசிரியர்கள் இவ்விரு பதிகளையும் காவிரிக்கரையிலுள்ள பதிகளாகவே குறிப்பிட்டுள்ளனர்.

திருவையாற்றுக்கும் கண்டியூருக்கும் இடையிலுள்ள குடமுருட்டியாறு அக்காலத்தில் இல்லை. அது காவிரியிலிருந்து கும்பகோணத்திற்குக் கிழக்கே பிரிந்து சென்றது. கடுவாய் என்பது குடமுருட்டியாறாகும். இக்கடுவாய்க்கரையிலுள்ள புத்தூரை, கடுவாய்க்கரைப்புத்தூர் என்று சிவநெறி காட்டியருளிய குரவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல, அக்காலத்தில் குடமுருட்டியாகிய கடுவாயாறு கண்டியூர்ப் பக்கமாக ஓடியிருக்குமானால் அதைக் கடுவாய்க்கரைக் கண்டியூர் என்றே கூறியிருக்க வேண்டுமே! அங்ஙனம் குறிப்பிடாததன் காரணத்தையும் உணரவேண்டும். இதற்குப் பிற்காலத்தேதான், திருக்காட்டுப்பள்ளியைத் தலைப்பாகக் கொண்டு, குடமுருட்டியாற்றை வெட்டி, கும்பகோணத்திற்குக் கிழக்கிலிருந்து செல்லும் கடுவாயாற்றோடு சேர்த்து, காவிரி ஆற்றைக் குறுக்கி, மக்கள் வாழ்வுக்கும், சாகுபடிக்கும் பயன்படுத்தியிருக்க வேண்டும். இதனால் ஒரே நதியெனல் பொருந்தும் என்பர் சிலர். தஞ்சாவூர் முதல் திருவையாறு முடிய இருக்கும் வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்னும் ஐந்து ஆறுகளை உடையது. ஆகையால் ஐயாறு என்று பெயர் பெற்றது என்பார் சிற்சிலர். சூரியபுட்கரணி, சந்திரபுட்கரணி, கங்கை, பாலாறு, நந்திதீர்த்தம் (நந்திவாய்நுரை) என்னும் ஐந்து தெய்வீக நதிகள் தம்முள் கலப்பதால் ஐயாறு என்று பெயர் பெற்றது என்பர் சிற்சிலர். பஞ்சநதம் என்பது, ஐயாறு என்னும் தமிழுக்கு ஒத்த வடசொல். இக்கோயில் தருமபுர ஆதீன அருளாட்சியில் விளங்குவதாகும்.

திருவையாறு தஞ்சாவூருக்கு வடக்கே 10 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. தஞ்சை, கும்பகோணம் திருக்காட்டுப்பள்ளி முதலிய நகர்களிலிருந்து பேருந்துகள் உள்ளன. இறைவரின் திருப்பெயர் ஐயாறப்பர்; வடமொழியில் பஞ்சநதீசுவரர்; பிரணதார்த்திஹரர் என்பர். இறைவியாரின்

திருப்பெயர் அறம் வளர்த்த நாயகி; வடமொழியில் தர்மசம்வர்த்தினி என்பர். தீர்த்தம் காவிரி, சூரியபுட்கரணி என்பன.

இது சமயக்குரவர்கள் நால்வராலும் பாடப்பெற்றது. 'நந்தி அருள்பெற்ற நன்னகர்' என்று சேக்கிழார் இப்பதியைச் சிறப்பித்துள்ளார். சிலாதமுனிவர்க்குத் திருமகனாய் அவதரித்த திருநந்திதேவர், சுயசாதேவியை மணந்து, ஐயாறப்பரைப் பூசித்து சிவசாரூபம் பெற்றமையை உட்கொண்டு சேக்கிழார் இவ்வாறு கூறலானார். கடலரசன் இங்கு வந்து ஐயாறப்பரைப் பூசித்துப் பேறு பெற்றான். 'ஆழிவலவனின்றேத்தும்' என்னும் இவ்வூர்த் தேவாரப்பகுதி இதற்குச் சான்றாகும். இலக்குமியால் பூசிக்கப் பெற்றது. இலக்குமிக்கு இரண்டாம் பிரகாரத்தில் தனிக்கோயில் இருக்கின்றது. வெள்ளிக்கிழமை தோறும் இலக்குமி புறப்பாடு இத்தலத்தில் நடைபெற்று வருகின்றது. வடகயிலையில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோலத்தை அப்பர் பெருமானுக்குக் காட்டியருளிய காட்சியை உணர்த்தும் அழகிய வேலைப்பாடுடன் கூடிய கற்கோயில், பெரியபுறத் திருச்சுற்றாலையின் தென்பால் (மூன்றாம் தெற்குப் பிரகாரத்தில்) இருக்கின்றது. அங்கு இறைவர் மணவாளக் கோலத்தோடு, சக்தியும் சிவமுமாக வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றார். அப்பர் பெருமானின் அழகு திகழும் பிரதிமையும் அங்கு இருக்கின்றது.

சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கண்டியூரை வணங்கிய பொழுது எதிரே தோன்றிய திருவையாற்றையும் வணங்க விரும்பினர். அப்பொழுது காவிரியில் வெள்ளப்பெருக்கு மிகுதியாக இருந்தமையால் அக்கரையிலிருந்த சுந்தர மூர்த்தி நாயனார் 'ஐயாறுடைய அடிகளோ' என்று திருப்பதிகம் பாடிய அளவில், வந்து மீளுமளவும் காவிரியை வழிவிடச் செய்த பெருமையை உடையது இத்தலம். தம்மை வழிபட்டு வந்த ஒரு அந்தணச் சிறுவனைத் தொடர்ந்து வந்த யமனைத் தண்டித்து, அச்சிறுவனைச் சோதி வடிவமாக ஆட்கொண்ட காரணம்பற்றி ஆட்கொண்டார் என்னும் பெயருடையாரது திருமேனி தெற்குக் கோபுர வாயிலின் மேல்பால் இருக்கின்றது. அவருக்கு அருகில் தென்மேற்கு மூலையில் இருப்பவர் ஓலம் இட்ட பிள்ளையார் ஆவர். ஆட்கொண்டார்க்கு எதிரில் குங்கிலியக்குழி ஒன்று இருக்கிறது. அதில் மக்கள் குங்கிலியத்தை இட்டு வழிபடுகின்றனர். இத்தலத்தே இந்திரன், வாலி முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றார்கள். இச்செய்தியை 'எண்ணிலி தேவர்கள் இந்திரன் வழிபட' எனச் சம்பந்தரும், 'வாலியார் வணங்கி ஏத்தும் திருவையாறு அமர்ந்ததேன்' என அப்பர் பெருந்தகையும் அருளிச் செய்துள்ளதை இத்தலத்துத் தேவாரப் பகுதிகளால் அறியலாம்.

இறைவரைப் பூசித்த சைவர் ஒருவர் காசிக்குச் சென்று, குறிப்பிட்ட காலத்தில் வாராமையால் பூசைமுறை தவறியது. அதுபொழுது இறைவர் அச்சைவருடைய வடிவோடு இருந்து தம்மைத்தாமே பூசித்த சிறப்புடையது. இதைத்தான் 'ஐயாறதனில் சைவனாகியும்' என்பார் திருவாசகத்தில். இப்பதிக்குப் பதினெட்டுத் தேவாரப் பதிகங்கள் இருக்கின்றன. திருவடிப் பெருமைகளை அப்பர் பெருமான் இருபது திருப்பாடல்களால் இத்தலத்தில் உணர்த்தியதுபோல் வேறு எப்பதியிலும் உணர்த்தாத அவ்வளவு பெருமையை உடையது.

இத்தலத்தில் நிகழும் விழாக்களுள் நந்திதேவர் திருமணத் திருவிழா. 'சித்திரைப் பெருந்திருவிழா' என்பவை மிகச் சிறந்தனவாகும். இவைகளுள் நந்திதேவர் திருமணத் திருவிழா, பங்குனி மாதத்தில் நிகழ்வதாகும். அதுபொழுது அம்மையப்பர் ஒரு தனி வெட்டிவேர் பல்லக்கிலும், நந்திதேவர் வேறு ஒரு வெட்டிவேர் பல்லக்கிலும் எழுந்தருளி, திருமழபாடிக்குச் செல்வர். அங்கே நந்திதேவர்க்குத் திருமணத்தை முடித்துக் கொண்டு அன்று இரவே ஐயாற்றுக்கு எழுந்தருளும் விழா இதுவாகும்.

சித்திரைப் பெருந்திருவிழா

இது சித்திரை மாதத்தில் நிகழ்வது. இதைப் பிரமோற்சவம் என்றும் வழங்குவர். இதில் ஐந்தாம் நாள் விழா தன்னைத்தான் பூசிப்பதாகும். இவ்விழாவின் முடிவில் ஐயாறப்பர் அறம் வளர்த்த நாயகியாருடன் நன்கு அலங்கரிக்கப்பட்ட கண்ணாடிப் பல்லக்கிலும், நந்திதேவர் தனியொரு வெட்டிவேர்ப் பல்லக்கிலும் எழுந்தருளித் திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் எனும் தலங்களுக்கு எழுந்தருள, அந்தந்த ஊர்களின் இறைவரும் தனித்தனி வெட்டிவேர்ப் பல்லக்குகளில் எதிர்கொண்டு அழைத்து உடன்தொடர மறுநாட்காலை ஐயாற்றுக்கு எழுந்தருளுவார். இதை ஏழூர் விழா அல்லது சப்தஸ்தானத் திருவிழா என்பர். தென்னாட்டில் இதைப் போன்றதொரு விழாவைக் காண முடியாது. இவ்விழாவில் பல லட்சக்கணக்கான மக்கள் குழுமி ஏழ் ஊர்களையும் சுற்றிவரும் காட்சி போற்றத்தக்கதாகும்.

இத்திருக்கோயில் திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்து அருளாட்சியில் உள்ளது. இப்பொழுது ஆதீனத்தில் இருப்பத்தாறாவது பட்டத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், பழங்காலத்துச் சோழ மன்னர்களுடைய ஆட்சிக் காலங்களில் நடைபெற்ற சிறப்புக்களைப் போலவே இத்திருக்கோயிலின் நித்திய நைமித்திகங்கள் எல்லாவற்றையும் மிக்க சிறப்புறச் செய்வித்தருளுகின்றார்கள்.

இத்திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரம் பெரியபுறத் திருச்சுற்றாலை என்று கல்வெட்டுக்களில் கூறப்பெற்றுள்ளது. இப்பிரகாரத்தின் வடபால் ஒலோகமாதேவீச்சரம் என்னும் பெயருள்ள ஒருகற்கோயில் இருக்கின்றது. அது முதலாம் இராசராச சோழனுடைய மனைவியாராகிய ஒலோகமாதேவியால் கட்டப்பெற்றதாகும்.

அம்மன்கோயில் புதிய திருப்பணியை உடையது. புலவர்கள் செய்யுளை அலங்கரிப்பதுபோல், தேவகோட்டை உ. ராம. மெசுப. சேவு. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் அழகுறத் திருப்பணி செய்திருக்கின்றனர். ஆடி அமாவாசை நாள் அப்பருக்குக் காட்சி கொடுத்த நாளாகும். அன்றும் திரளான மக்கள் வந்து கூடுவர். ஐயடிகள் காடவர்கோன் நாயனார் ஒரு வெண்பாவால் திருவையாற்றைப் பாடியுள்ளார்கள். அது சேத்திரத் திருவெண்பாவில் சேர்க்கப் பெற்றுள்ளது. அப்பாடல் வருமாறு:

குந்தி நடந்து குனிந்தொருகைக் கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி – வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.

இத்தல புராணம் ஞானக்கூத்தரால் இயற்றப் பெற்றது. தருமை ஆதீனத்தார் அச்சிட்டுள்ளனர். இத்திருக்கோயிலுள் அமைந்த ஐயாறப்பர் கோயில், தென்கயிலைக் கோயில், ஒலோகமாதேவீச்சரம் ஆகிய மூன்று கோயில்களில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

திருஞானசம்பந்தப் பெருமான் தொண்டர் எதிர்கொள்ள, முத்துப்பல்லக்கில் சென்று திருவையாற்றை அடைந்து அந்நன்னகரை முன்னிறைஞ்சி, புந்திநிறை செந்தமிழின் சந்த இசையில், 'புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி அலமந்த போதாக அஞ்சேலென்று அருள்செய்வார் அமருங்கோயிலை' அணுகி, நீடுகோபுரத்தைத் தொழுது, உள்ளே புகுந்து வலங்கொண்டு தாழ்ந்து, 'கோடல் கோங்கம்' என்னும் இத்திருப்பதிகக் குலவுமாலையை, 'நீடு பெருந் திருக்கூத்து நிறைந்த திருவுள்ளத்து நிலைமை தோன்ற' ஆடுமாற்றைப் பாடியாடினார்.

திருச்சிற்றம்பலம்

1524. கோடல்கோங்கங்குளிர்கூவிளமாலைகுலாயசீர்
ஒடுகங்கைஒளிவெண்பிறைசூடுமொருவனார்
பாடல்வீணைமுழவங்குழல்மொந்தைபண்ணாகவே
ஆடுமாறுவல்லானுமையாறுடையையனே. 1

கோடல், கோங்கம், குளிர் கூவிளமாலை, குலாய சீர்
ஒடு கங்கை, ஒளிவெண்பிறை, சூடும் ஒருவனார் -
பாடல் வீணை, முழவம், குழல், மொந்தை, பண்ஆகவே
ஆடும்ஆறு வல்லானும் - ஐயாறு உடை ஐயனே.

kOTal, kOgkam, kuLir kUviLamAlai, kulAya cIr
OTu kagkai, oLi veNpiRai, cUTum oruvan2Ar--
pATal vINai, muzavam, kuzal, montai, paN AkavE
ATum ARu vallAn2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: இந்தப் பதிகத்தில் முதல் இரண்டடிகளில் சிவபெருமான் சூடுவனவற்றுள் ஐந்தும் பின் இரண்டடியில் அவனது திருக்கூத்து வன்மையும் இசைக்கருவிகளும் கூறப்பட்டுள்ளன. சிவபெருமான் திருவையாற்றில் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகிறார். அவருடைய திருமுடியில் வெண்மையான காந்தள் மலரும், கோங்கு மரத்தின் தளிர்களும், வில்வத்தின் மூன்று இலைகளைக் கொண்ட தளிர்களும், பாய்ந்து ஓடுகின்ற கங்கை நதியும், ஒளி பொருந்திய வெண்மையான தேயாத பிறைச் சந்திரன் ஆகியன கண்டு வணங்கி வாழ்த்தி அவனுடைய பெருமைகளை அடியார்கள் பாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

சிவபெருமான் வீற்றிருக்கின்ற எல்லாத் திருக்கோயில்களிலும் அவனது நடனம் வணங்கப் பெறும் உண்மை சாத்திரம் உணர்ந்தோர்க்கே விளங்கும். திருநாவுக்கரசர் அருளிச் செய்தபடி 'ஆடல் அமர்ந்துறைகின்ற ஐயாறு' - இங்குள்ள திருக்கோவில் ஐயாறப்பர் நீடு பெருந்திருக்கூத்தை ஆடிக்கொண்டுள்ளார். அடியார்கள் இசைப்பாட்டும் பண்ணோடு பாடிக் கொண்டிருக்கிறார்கள். பாடுகின்ற பாட்டுக்களுக்கு இணையாக வீணை, மத்தளம், குடமுழா, வேய்ங்குழல், மொந்தை முதலியனவும் பண்ணோடு இசைத்து ஒலியைக் கிளப்பி உள்ளத்தைப் பரவசமாக்கிக் கொண்டிருக்கின்றன.

குறிப்புரை: கோடல் – வெண்காந்தள். பாடல் – இசைப்பாட்டு. முழவம் – தண்ணுமை, மத்தளம், குடமுழா. குழல் – வேய்ங்குழல். மொந்தை – ஒருகட் பறை வகை. பண்ணாக ஆடல் – இவ்விசைக்கருவிகளின் ஒலி ஆடலுக்கேற்ற பண்ணிசையாக அமைய ஆடுதல். ஐயாறு – பஞ்சநதம் என்பது வடமொழிப் பெயர்.

The history of the city Thiruvaiyaaru gives all details about this very big temple owned and well maintained by Dharmapuram Mutt. All the temple festivals are well celebrated in a very grand manner.

Five rivers such as Vadavaaru (வடவாறு), Vennaaru (வெண்ணாறு), Vettaaru (வெட்டாறு), Kudamurutti (குடமுருட்டி) and Cauvery (காவேரி) flow through this city. That is why the city itself is called (Thiru-Iyyaaru - five rivers running along the city) five rivers. Lord Civan is called here Iyyaarappar (ஐயாறப்பர் and in Sanskrit He is called Panchanadeeswarar (பஞ்சநதீஸ்வரர்).

Oh Behold! Civa is the Lord of Thiruvaiyaaru, His head is adorned beautifully with flowers such as glory lily (வெண்காந்தள் கோடல்), Cochleosperns (கோங்கம்), bael leaves (வில்வம்). The descending Ganges and the white crescent moon also find a place on His head along with the flowers. He does His cosmic dance to the accompaniment of Veena, and other percussions such as drum, flute and a drum with one face, played in conformity to the music.

1525. தன்மையாருமறிவாரில்லைதாம்பிறரெள்கவே
பின்னுமுன்னுஞ்சிலபேய்க்கணஞ்சூழத்திரிதர்வர்
துன்னவாடையுடுப்பர்சுடலைப்பொடிப்பூசுவர்
அன்னமாலுந்துறையானுமையாறுடையையனே. 2

தன்மை யாரும் அறிவார் இலை; தாம் பிறர் எள்கவே,
பின்னும் முன்னும் சிலபேய்க்கணம் சூழத் திரிதர்வர்;
துன்னஆடை உடுப்பர்; சுடலைப்பொடி(ப்) பூசுவர்;
அன்னம் ஆலும் துறையானும் - ஐயாறு உடை ஐயனே.

tan2mai yArum aRivAr ilai; tAm piRar eLkavE,
pin2n2um mun2n2um cilapEykkaNam cUzat tiritarvar;
tun2n2a ATai uTuppar; cuTalaip poTi(p) pUcuvar;
an2n2am Alum tuRaiyAn2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: அன்னங்கள் ஒலிக்கும் ஐயாறுடைய ஐயனின் தன்மையை அறிபவர் எவரும் இல்லை. அத்தகைய இறைவர் பிறர் எள்ளுமாறு சில பேய்க்கணங்கள் பின்னும் முன்னும் சூழத் திரிவார். கந்தலான ஆடையை இடையிலே கட்டியிருப்பார். இடுகாட்டின் சாம்பலை மேனிமேல் பூசுவார்.

குறிப்புரை: எள்க – இகழ. திரிதர்வர் – திரிதருவார், திரிவார். துன்னம் – துளைத்தல். தைத்தல். துன்னவாடை – கந்தை. 'துன்னங் கொண்ட உடையான்' (தி. 2 ப. 76 பா 2) 'துன்னிலினாடை யுடுத்து' (ப. 1 ப. 41 பா. 3) எனப் பிற பதிகங்களிலும் காணலாம். சிவபிரானியல்பை அறிபவர் எவரும் இல்லை. அவர் பின்னும் முன்னும் சில பேய்க்கூட்டம் சூழத் திரிவதைக் கண்டு பிறர் இகழ்தலுங்கூடும். கந்தலணிவார். சுடுகாட்டுப் பொடி பூசுவார். அவற்றால் அவனை அளந்தறியலாகாது. அன்னப்புட்கள் ஆலும் ('ஒலிக்கும், ஆடும்') துறை.

Oh! Behold! Lord Civa is seated in Thiruvaiyaaru temple. Swans congregate in large numbers on the banks of the rivers. No one knows His divinity and some mock at His way of life, because He wanders on the burial ground and dances, surrounded by ghosts at front and back. He wears rugs of torn cloth. He smears His body with the white ashes of the burial ground.

1526. கூறுபெண்ணுடைகோவணமுண்பதும்வெண்டலை
மாறிலாருங்கொள்வாரில்லைமார்பிலணிகலம்
ஏறுமேறித்திரிவரிமையோர்தொழுதேத்தவே
ஆறுநான்குஞ்சொன்னானுமையாறுடையையனே. 3

கூறு பெண்; உடை கோவணம்; உண்பது வெண்தலை;
மாறில், ஆரும் கொள்வார் இலை, மார்பில் அணிகலம்;
ஏறும் ஏறித் திரிவர்; இமையோர் தொழுது ஏத்தவே
ஆறும் நான்கும் சொன்னானும் - ஐயாறு உடை ஐயனே.

kURu peN; uTai kOvaNam; uNpatu veNtalai;
mAril, Arum koLvAr ilai, mArpil aNikalam;
ERum ERit tirivar; imaiyOr tozutu EttavE
ARum nAn2kum con2n2An2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: ஐயாறுடைய ஐயன், ஒரு கூறாக உமையம்மையைக் கொண்டவர். கோவண ஆடை உடுத்தவர். வெள்ளிய தலையோட்டில் பிச்சையேற்று உண்பவர். மார்பில் அணிந்துள்ள அணிகலன்களோ பண்டமாற்றாகப் பிறர் கொள்பவர் இல்லாத ஆமையோடு, பன்றிக்கொம்பு, பாம்பு முதலானவை. இடபத்தில் ஏறித்திரிபவர். தேவர் பலரும் வணங்க நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் அருளியவர்.

குறிப்புரை: கூறு – இடப்பால், பெண் – உமாதேவியார், உடை கோவணம், உண்பதும் வெண்டலையில். மார்பிலணிந்தன முற்றலாமை யிளநாகமொடு ஏனமுளைக் கொம்பு, பரிவர்த்தனஞ் செய்து கொள்ளு முறையில், ஏனைப் பொற்கலம் மணிக்கலம் போலக் கொள்வார் எவருமில்லை. மாறில் – பரிவர்த்தனஞ் செய்ய வேண்டின். இப்பொருளில் உலக வழக்குமுண்டு. ஏறு – எருது. ஆறும் – சிக்கை, கற்ப சூத்திரம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்னும் அங்கம் ஆறும்; நான்கும் – வேதம் நான்கும், (தி.2. ப.84, பா.11) சொன்னான் – சிவபிரான். 'மிக்க வேத மெய்ந்நூல் சொன்னவனே' திருவாசகம் 147.

Oh! Behold! It is Civa who is the Lord of Thiruvaiyaaru city. His body is half male and half female (In Tamil He is called Arthanaareeswarar – *அர்த்தநாரீசுவரர்*). His dress is only a loin cloth (*கோவணம்*). He carries in His hand the skull of Brahma as a bowl for alms. He wears on his chest horn, turtle and snake. He wanders all over the cosmos on the bull. He is the author of the four Vedas, Aagamaas and six Angas. Above all these, understand that He is worshipped by one and all in the world including the Devas and other celestials.

1527. பண்ணினல்லமொழியார்பவளத்துவர்வாயினார்
எண்ணினல்லகுணத்தாரிணைவேல்வென்றகண்ணினார்
வண்ணம்பாடிவலிபாடித்தம்வாய்மொழிபாடவே
அண்ணல்கேட்டுகந்தானுமையாறுடையையனே. 4

பண்ணின் நல்ல மொழியார், பவளத்துவர்வாயினார்,
எண் இல் நல்ல குணத்தார், இணைவேல் வென்ற கண்ணினார்,
வண்ணம் பாடி வலிபாடி, தம் வாய்மொழி பாடவே,
அண்ணல் கேட்டு உகந்தானும் - ஐயாறு உடை ஐயனே.

paNNin2 nalla moziyAr, pavaLattuvar vAyin2Ar,
eN il nalla kuNattAr, iNaivEl ven2Ra kaNNin2Ar,
vaNNam pATi, vali pATi, tam vAymozi pATavE,
aNNal kETTu ukantAn2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: திருவையாற்றில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்புரிந்து வரும் ஐயாறப்பர் அத்தலத்தில் பண்ணிசையிலும் இனிய பாடல்களை அவர்திருமுன்பு சேயிழையார்கள் பாடுவதனைக் கேட்டு உவந்தார். அவர்களை ஆசீர்வதிக்கிறார். அந்தச் சேயிழையார்கள் பவளம் போன்ற செந்நிற வாயை உடையவர்கள். அவர்கள் பண் கலந்து பாடும் தமிழிசையில் வல்லவர்களாகவும் நற்குணத்தவராகவும் விளங்குகிறார்கள். அவர்கள்

வேலினை வென்ற கூர்மையான கண்களை உடையவர்களாக உள்ளனர். அவன் அருளைத் தங்கள் கண்களால் காணும் தன்மை உடையவர்கள். மந்திரமும், தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருள்வானாகிய அவனது வலியையும் பாடுகிறார்கள். அவர்கள் வாய்மொழி எப்பொழுதும் சிவநாமத்தையே பாடும் தோத்திரங்களாக அமைகின்றன. இவ்வாறு காரிகையர்கள் பண்பாடலைக் கேட்டு ஐயாறப்பர் மிகவும் உகந்து அவர்களை ஆசீர்வதித்து ஆட்சி புரிந்து வருகிறார்.

குறிப்புரை: பண்ணின் – பண்ணிசைபோல, பண்ணிசையிலும், நல்ல – இனிய, பவளம் போன்ற துவர் வாயினார்; துவர் – செந்நிறம். எண் இல் – கணக்கில்லாத, எண்ணில் என்பது வினையெச்சமாக் கோடலமையாது. கண் இரண்டாதலின், இணை வேலில் (இரண்டு) ஒப்பாக்கப்பட்டன. வண்ணம் – அவனருளே கண்ணாகக் காணும் வண்ணம். தன்மை. வலி – மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருளும் வன்மை. தம் வாய்மொழி – சிவநாமமே பாடும் நல்ல வாயின் மொழியுந் தோத்திரங்களை. மொழி – ஆகு பெயர். அண்ணல் – சிவபெருமான். அக்காலத்தில் திருவையாற்றில் இளமகளிர் சிவபத்தியிற் சிறந்திருந்தனர் என்று கருத இடமுண்டு. 'காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாட . . . சேயிழையார் நடமாடுந் திருவையாறு' என்று வருந்தேவாரமும் (தி.1. ப 130 பா.6) ஈண்டுக் கருதுக.

Numerous girls in the city of Thiruvaiyaaru used to sing poems on Lord Civa about His glory and might. Their beautiful and melodious voices denote their talent in music. Their mouths resemble coral in colour. They have pairs of spear like eyes. Of course they are embodiments of many virtues. Oh! Behold! Civa, the Lord of Thiruvaiyaaru is well pleased with these beautiful songs of these young damsels and He bestows His grace on them and reigns supreme.

1528. வேனலானைவெருவவுரிபோர்த்துமையஞ்சவே
வானையூடறுக்கும்மதிசூடியமைந்தனார்
தேனெய்பால்தயிர்தெங்கிளநீர்கரும்பின்றெளி
ஆனஞ்சாடுமுடியானுமையாறுடையையனே. 5

வேனல் ஆனை வெருவ உரி போர்த்து உமை அஞ்சவே,
வானை ஊடுஅறுக்கும் மதி சூடிய மைந்தனார் -
தேன், நெய், பால், தயிர், தெங்குஇளநீர், கரும்பின் தெளி
ஆன்அஞ்சு, ஆடு முடியானும் - ஐயாறு உடை ஐயனே.

vEn2al An2ai veruva uri pOrttu umai anjcavE,
vAn2ai UTu aRukkum mati cUTiya maintan2Ar--
tEn2, ney, pAl, tayir, tegku iLanIr, karumpin2 teLi,
An2anjcu, ATu muTiyAn2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: திருவையாற்றில் உள்ள திருக்கோவிலில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்புரிந்து வரும் ஐயாறப்பர் விண்ணை அறுத்துச் செல்லும் பிறை மதியைத் தன் சடையில் சூடியுள்ளார். இவருக்கு அபிடேகம் செய்வதற்கு ஏழுவிதமான தேன், நெய், பால், தயிர், இளநீர், கரும்பின் தெளிந்த சாறு முதலியன உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. நெய், பால், தயிர், பசுவின் கோமியம், கோசலம் ஆகியவைகளை ஆனைந்து என்றும் வழங்கும் பெயராலும் அபிடேகம் செய்வர். அவனுடைய சக்தியாகிய உமாதேவியாரும் அவனை விட்டுப் பிரியாது அவன் அருகிலேயே இருப்பவள். ஒரு சமயம் கெடிலக்கரை நதிப் பக்கம் இருந்து ஒரு மதம் பிடித்த வெம்மையோடு விளங்கும் யானை ஒன்று இவர்கள் இருவரையும் நோக்கி வேகமாகச் சீற்றத்துடன் வந்தது. அதனைக் கண்டவுடன் உமையம்மை சிறிது அஞ்சினாள். மறுகணத்தில் ஐயாறப்பராகிய சிவபிரான் அந்த யானையை நோக்கிச் சென்று, அதனைக் கொன்று அதன் தோலை உரித்துத் தனது உடலில் போர்த்துக் கொண்டார். அம்மையின் அச்சம் அகன்றது.

குறிப்புரை: வேனல் – வெம்மை. 'கெடிலக்கரை வேனலானையுரித்த வீரட்டர்' (தி. 5 ப. 54 பா.5). வானையூடறுக்கும் மதி – விண்ணூடு அறுத்துச் செல்லும் பிறை. தேன் முதலிய ஏழும் அபிடேகத் திரவியங்கள். நெய், பால், தயிர் என்னும் மூன்றும் தனித்தனி ஆட்டற்குரியன. இம்மூன்றையும் 'ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்' என்று தனித்தும், 'ஆனிலங்கிளரைந்தும் அவிர் முடியாடி' என்று ஐந்தாகச் சேர்த்தும் கூறுதல் திருமுறை வழக்கு. 'ஆனஞ்சு' பஞ்ச கௌவியம். (ஞானபூசாவிதி. 14. உரை பார்க்க) தெளி – தெளிந்த சாறு (ஆகுபெயர்). தெங்கு – தென்னை, தென்கு என்பதன் மரூஉ.

Oh! Behold! It is Civa who is the Lord of Thiruvaiyaaru He has adorned His head with the moon, which crosses the sky. Once goddess Uma Devi shuddered to see the fierce elephant rushing amok towards her. Immediately Lord Civa chased the elephant, killed it and covered His body with its hide. He is in the temple and is daily given the sacred bath with honey, ghee, milk, curd, tender coconut water and sugarcane juice along with five holy things obtained from the cow.

1529. எங்குமாகிநின்றானுமியல்பறியப்படா
மங்கைபாகங்கொண்டானுமதிசூடுமைந்தனும்
பங்கமில்பதினெட்டொடுநான்குக்குணர்வுமாய்
அங்கமாறுஞ்சொன்னானுமையாறுடையையனே. 6

எங்கும்ஆகி நின்றானும், இயல்பு அறியப்படா
மங்கை பாகம் கொண்டானும், மதி சூடும் மைந்தனும்,
பங்கம் இல் பதினெட்டொடு நான்குக்கு உணர்வும்ஆய்
அங்கம்ஆறும் சொன்னானும் - ஐயாறு உடை ஐயனே.

egkum Aki nin2RAn2um, iyalpu aRiyappaTA
magkai pAkam koNTAn2um, mati cUTu maintan2um,
pagkam il patin2eTToTu nAn2kukku uNarvum Ay
agkam ARum con2n2An2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: திருவையாற்றில் வீற்றிருக்கும் ஐயாறப்பராகிய சிவபிரான் அண்டசராசரங்கள் யாவற்றிலும் வியாபித்து விளங்குபவன். இந்தப் பேரியல்பை ஆன்மாக்களால் அறியப்படாதவனாயும் விளங்குகிறான். உமாதேவியைச் சிவபிரான்தன் உடம்பின் இடப்பக்கத்தில் ஒரு பாகமாக வைத்துக் காட்சி அளிக்கிறான். அவன் தன் சடாமுடியில் வெண்நிறமுள்ள பிறைச் சந்திரனைச் சூடியுள்ளான். இந்தச் சிவபிரானால் சொல்லப்பட்டது பதினெட்டுப் புராணங்கள். அவை மச்சபுராணம், கூர்மபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், சிவமகாபுராணம், இலிங்கபுராணம், பவிடிய புராணம், காந்தபுராணம், மார்க்கண்டேய புராணம், பிரம்மாண்ட புராணம், விஷ்ணு புராணம், பாகவத புராணம், கருடபுராணம், நாரதீய புராணம், பிரமபுராணம், பதுமபுராணம், ஆக்கினேய புராணம், பிரமவைவர்த்த புராணம் ஆகியனவாகும். ருக், யசூர், சாம மற்றும் அதர்வண வேதம் என வேதங்கள் நான்காகும். மலம் அகற்றற் பொருட்டு உயிரினிடத்து நிலைபெற்றுள்ள பர(சிவ) ஞானமாகிய திருவருளும், அத்திருவருளைத் தெளிய ஓதுகின்ற அபரஞானமாகிய சிவாகமங்களும். சிட்சை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கற்பம் என வேதாங்கங்கள் ஆறும் ஆக இந்த 30 கலைகளையும் சொன்னவர் சிவபிரானாகிய திருவையாற்றில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஐயாறப்பர் ஆவார்.

குறிப்புரை: எங்குமாகி நின்றான் – அகண்ட வியாபகன். இயல்பு அறியப்படாமங்கை. சிவனுக்கும் ஏற்றிக்கூறலாம். பங்கம் – இழிவு. பதினெட்டு – பதினெண் புராணம் 'சூதன் ஒலிமாலை' (தி.3. ப.54. பா.8) பெரிய புராணம், திருஞான. 840) நான்கு – நாலு வேதம். உணர்வு – மலம் அகற்றற் பொருட்டு

உயிரினிடத்து நிலை பெற்றுள்ள பர (சிவ) ஞானமாகிய திருவருளும், அத்திருவருளைத் தெளியவோதுகின்ற அபர ஞானமாகிய சிவாகமங்களும், அங்கம் – வேதாங்கங்கள் (பா. 3 உரை).

Oh! Behold! It is Civa, the Lord of Thiruvaiyaaru who expliccated the eighteen Puranaas, four Vedas and Six Angaas for the benefit of mankind. He is omnipresent. His attributes are not known. He has on the left portion of His body goddess Uma. He has adorned His head with the crescent moon. Oh! Ye devotees go to His temple and worship Him.

1530. ஓதியாருமறிவாரில்லையோதியுலகெலாம்
சோதியாய்நிறைந்தான்சுடர்ச்சோதியுட்சோதியான்
வேதியாகிவிண்ணாகிமண்ணோடெரிகாற்றுமாய்
ஆதியாகிநின்றானுமையாறுடையையனே. 7

ஓதி யாரும் அறிவார் இலை; ஓதி உலகுஎலாம்
சோதிஆய் நிறைந்தான்; சுடர்ச்சோதியுள் சோதியான்;
வேதிஆகி, விண்ஆகி, மண்ணோடு எரி காற்றும்ஆய்,
ஆதிஆகி, நின்றானும் - ஐயாறு உடை ஐயனே.

Oti yArum aRivAr ilai; Oti ulaku elAm
cOti Ay niRaintAn2; cuTarc cOtiyuL cOtiyAn2;
vEti Aki, viN Aki, maNNOTu eri kARRum Ay,
Ati Aki, nin2RAn2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: திருவையாற்றிலுள்ள திருக்கோவிலில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்புரிந்து வருகின்ற சிவபிரான் ஆகிய ஐயாறப்பரை நூல்கள் ஓதுவதனால் அறிபவர் ஒருவரும் இலர். எல்லா உயிர்களுக்கும் ஓதி அறிவிப்பவர் அவரே. எல்லா உயிர்களையும் தானாகவே அறிபவர் அவரேயாவார். எல்லா உலகங்களிலும் அவர் சோதியாய் நிறைந்துள்ளார். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய சுடர்களுக்கெல்லாம் ஒளி தருபவர் அவரே. நான்கு வேதங்களையும் உலகுக்கு அளித்தவர் அவரே. அவர்தான் விண்ணாகவும், மண்ணோடு நெருப்பும் காற்றுமாகவும், யாவற்றுக்கும் ஆதியாக நின்றவரும் திருவையாற்றில் உள்ள ஐயாறப்பரே ஆவார்.

குறிப்புரை: வேதி – வேதசொரூபன். விண் – ஆகாயம், எரி – தீக்கடவுள். ஆதி – முதற்பொருள். ஓதியறிவார் யாரும் இல்லை. உயிர்கள் ஓதியறிதலில்லையேனும், சிவபிரான் தானே தன்னை உயிர்க்கு ஓதுவித்தும் உணர்வித்தும், சேதனாசேதனப் பிரபஞ்சம் எல்லாம் சோதி (ஒளி) யாய் நிறைந்துள்ளான்.

சுடரையுடைய சோதிகளாகிய சூரிய சந்திராக்கினிக்குள் சோதியாய் உறைபவன் (திருவிசைப்பா. 2) வேதியாகி – சேதன சொரூபியாகி, விண் . . . ஆகி – அசேதனரூபமாகி, (தடத்த வடிவத்தைச் சார்ந்தது). பழம் பதிப்பில் உள்ள 'எரிகாற்றுமாய்' என்ற பாடமே சிறந்தது. எரி – தீ. எறியுங்காற்று எனின், காற்று என்பதில் உள்ள பொருளே எறிதலுமாதலின் சிறப்பில்லை.

Lord Civa, residing in Thiruvaiyaaru, need not be preached by anybody to know about life in the universe. He is the preacher and the activating force for all. He is the divine light, pervading all the worlds. He is the inner flame of the light in the sun, the moon and fire. He is the origin of all and appears as the five elements, air, earth, water, fire and the sky. He is the material and the immaterial. The three aspects of the Lord - omniscience, omnipotence and omnipresence - are stressed in this hymn.

1531. குரவநாண்மலர்கொண்டடியார்வழிபாடுசெய்
விரவிநீறணிவார்சிலதொண்டர்வியப்பவே
பரவிநாள்தொறும்பாடநம்பாவம்பறைதலால்
அரவமார்த்துகந்தானுமையாறுடையையனே. 8

குரவநாள்மலர்கொண்டு அடியார் வழிபாடுசெய்,
விரவி நீறு அணிவார் சிலதொண்டர் வியப்பவே,
பரவி நாள்தொறும் பாட, நம் பாவம் பறைதலால்,
அரவம் ஆர்த்து உகந்தானும் - ஐயாறு உடை ஐயனே.

kurava nAL malar koNTu aTiyAr vazipATu cey,
viravu nIRu aNivAr cilar toNTar viyappavE.
paravi nALtoRum pATa, nam pAvam paRaitalAl,
aravam Arttu ukantAn2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: திருவையாற்றுத் திருக்கோவிலில் வீற்றிருக்கும் ஐயாரப்பரை அடியார்கள் பலரும் பலவிதமாக வழிபாடு செய்து வருகிறார்கள். அடியார்களில் ஒருசிலர் குரா மரத்தின் அன்றலர்ந்த பூக்களைப் பறித்து ஐயாரப்பரின் திருவடிகளில் சொரிந்து வழிபாடு செய்கிறார்கள். இவர் உடம்பு முழுவதும் நீறணிந்து இறைவன் திருமுன்பு நின்று வழிபாடு செய்கிறார்கள். மற்றும் சிலர் அவன்திரு முன்பு நின்று அவன் புகழைப் பாடுவதையே கடமையாகக் கொண்டு நீண்ட நேரம் நாள்தோறும் பாடிக் கொண்டே இருப்பார்கள். இந்த அடியார்களுடைய பாவத்தை எல்லாம் அறவே நீக்கி அருள்பாலித்து வருகிறார் ஐயாறப்பர். அவர் பாம்பை அணிந்து உயர்ந்தவர்.

குறிப்புரை: குரவம் – குராமரம். நாள் மலர் – காலையிற் பூத்த பூ. வியப்ப – புகழ்ந்துரைக்க. பரவி – வாழ்த்தி. பறைதல் – நீங்குதல். அரவம் – பாம்பு. ஆர்த்து – கட்டி (அணிந்து). உகந்தான் – உயர்ந்தவன். 'விரவி' என்றது புதிய பாடம்.

Oh! Behold! Civa who is the Lord of Thiruvaiyaaru is worshipped in different ways. Devotees go daily in the morning to His temple carrying fresh bright flowers and offer them to Him, they recite prayers and sing His glory. These devotees have smeared their body with holy ashes. Lord Civa hearing all these recitations, is well pleased to bestow boons on all the devotees and absolves them of all their sins. Ayyarappan is elevated, wearing a snake on His body.

1532. உரைசெய்தொல்வழிசெய்தறியாவிலங்கைக்குமன்
வரைசெய்தோளடர்த்தும்மதிசூடியமைந்தனார்
கரைசெய்காவிரியின்வடபாலதுகாதலான்
அரைசெய்மேகலையானுமையாறுடையையனே. 9

உரைசெய் தொல் வழி செய்து அறியா இலங்கைக்கு மன்
வரை செய் தோள் அடர்த்து(ம்) மதி சூடிய மைந்தனார்;
கரைசெய் காவிரியின் வடபாலது காதலான்;
அரை செய் மேகலையானும் - ஐயாறு உடை ஐயனே.

uraicey tol vazi ceytu aRiyA ilagkaikku man2
varai cey tOL aTarttu(m) mati cUTiya maintan2Ar;
karai cey kAviriyin2 vaTapAlatu kAtalAn2;
arai cey mEkalaiyAn2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: இலங்காபுரியின் முடிஅரசனாகிய தசக்கிரீவன், மிக்க சிவபக்தனாகிப் பூமி, அந்தரம், சுவர்க்கம் ஆகிய மூன்று உலகங்களுக்கும் அதிபதி (திரிலோகாதிபதி). அதற்குரிய தொன்மையான வேத ஆகம வழிகளையெல்லாம் அறிந்து அதன்வழி நின்று நடந்தவன். அவனுக்கு இந்த வழிகள் எல்லாம் புது வழியன்று. மிகத் தொன்மையான பழைய வழிகளே ஆகும். இத்தனை சிறந்த அறிவுகளை உடைய தசக்கிரீவனுக்கு அறியாமை மேலிட்டது. மேலிட்ட காலத்தில் இந்தத் தொன்மையான வழிகளையெல்லாம் மறந்து விட்டான். ஒரு சமயம் விண்வழியே அவன் தன் ஊர்தியில் செல்லும்போது, சிவபிரானும் அம்மையும் தங்கியிருக்கும் திருக்கயிலை மலைவழியே அவன் ஊர்தி பறக்க முடியவில்லை. அவன் உடனே கீழே இறங்கி கயிலை மலையைத் தூக்கி நகர்த்தி வைக்க முயற்சி செய்தான்.

முயற்சியில் தோற்றான். தனது இருபது தோள்களுடன் கயிலை மலையின்கீழ் அகப்பட்டு நசுங்கிப் போனான். அழுதான்; அறியாமை நீங்கிற்று. சிவபிரான்மீது சாமகீதம் பாடினான். மன்னிப்புக் கிடைத்தது. இராவணன் என்ற திருநாமத்தையும் மேலும் பலவரங்களையும் பெற்றான். இந்த உதவிகளைச் செய்த வீரனாகிய சிவபிரானாகிய ஐயாறப்பர், தனது இடுப்பில் பொன்னாலாகிய மேகலை என்ற ஆபரணத்தை அணிந்து கொண்டு காவிரியின் வடகரையில் அமைந்துள்ள திருக்கோவிலில் வீற்றிருந்து அடியார்களுக்கெல்லாம் அருள்புரிந்து வருகின்றார்.

குறிப்புரை: இராவணன் மிக்க சிவபக்தனாகித் திரிலோகாதி பத்தியம் முதலிய பெருவரங்களைப் பெற்றவன். அதற்குரிய வேதாகமவழி அவனுக்குப் புதுவழியன்று. தொல் (பழைய) வழியே. அறியாமை மேலிட்டபோது, அத்தொல்வழி மறந்து திருக்கயிலையைப் பெயர்த்து எடுக்க முயன்றான். அதனால், அவனுடைய மலைகளைப் போன்ற தோள்களை நசுக்கப் பெருவிரல் நுனியை மட்டும் ஊன்றி அருளினார் சந்திர சேகரரான வீரனார். மதி – வளராததும் தேயாததும் ஆன திங்கட்பிறை. மைந்தனார் – வீரனார். திருவையாறு காவிரியின் வடகரைக் கண் உள்ளது. காதல் – அத்தலத்தில் எழுந்தருளியிருக்க விரும்புதல். அரைசெய் மேகலையான் – மேகலாபரணம் இடுப்பிற் கொண்டவன். மேகலை – பொன்னாடை விசேடம். 'எண்கோவை மேகலை'.

Oh! Behold! It is Civa, the Lord of Thiruvaiyaaru. He adorns His head with the moon which neither wanes not waxes. In His loin He wears the golden ornament. He stays in the temple, which is situated north of the river Cauvery. Once the king of Sri Lanka Raavana found his flight was obstructed by mount Kailash, forgot the holy ancient traditions and went to lift the abode of Civa - Mount Kailash. Lord Civa very slightly pressed the top of the mountain with His toe. Raavanaa's mighty mountain like shoulders got crushed under the mountain. Later when he prayed and sang Saama Geetham he was forgiven and got boons and the name Raavanan.

1533. மாலுஞ்சோதிமலரானுமறிகிலாவாய்மையான்
காலங்காம்புவயிரங்கடிகையன்பொற்கழல்
கோலமாய்க்கொழுந்தீன்றுபவளந்திரண்டதோர்
ஆலநீழலுளானுமையாறுடையையனே. 10

மாலும், சோதி மலரானும், அறிகிலா வாய்மையான்;
காலம் காம்பு வயிரம் கடிகையன் பொன்கழல்;
கோலம்ஆய்க் கொழுந்து ஈன்று பவளம் திரண்டது ஓர்
ஆலநீழல் உளானும் - ஐயாறு உடை ஐயனே.

mAlum, cOti malarAn2um, aRikilA vAymaiyAn2;
kAlam kAmpu vayiram kaTikaiyan2 pon2kazal;
kOlam Ayk kozuntu In2Ru pavaLam tiraNTatu Or
AlanIzal uLAn2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: திருவையாற்றின் திருக்கோவில் வீற்றிருக்கும் சிவபிரானாகிய ஐயாறப்பர் திருமாலும், பிரமனும் அடிமுடி தேடியும் அறிய முடியாத பெருமை உடையவர். சிறப்பான ஆடையை அணிந்தவன். அவனுடைய திருவடிகளில் பொன்னால் ஆய அணிகலன்களை அணிந்தவன். பவள நிறத்தை ஒத்த சிவந்த ஒளியை வீசிக் கொண்டிருக்கின்றான். கல்லால மரத்தின் நிழலில் இருந்து நான்கு முனிவர்களுக்கு அவர்கள் கேட்ட சந்தேகங்களை மௌனமாக இருந்து கைமுத்திரைகளினால் பதில் அளித்து அவர்களுக்குத் திருப்தி அளித்தவன். இத்தகைய பெருமான்தான் திருவையாற்றுத் திருக்கோவிலை இடமாகக் கொண்டு அடியார்களுக்கு அருள்புரிந்து வருகின்றான்.

குறிப்புரை: மால் – (மயக்கம்) விண்டு. சோதிமலர் – தாமரைப்பூ. வாய்மையான் – சத்திய சொரூபி. காலம் காம்பு வயிரம் கடிகையன் என்பதன் பொருள் புலப்பட்டிலது. ஆயினும் ஒருவாறு எழுதலாம். கால் – திருவடி. அம் காம்பு – அழகிய காண்பு. வயிரம் – வைரத்னம், கடிகை – துண்டு. கால்போலக் காம்பு. கழல்போலக் கொழுந்து. கடிகையம் பொற்கழல் என்றிருந்தது போலும். ஆலமரம் இறைவனது பொற்கழல்போலப் பொன்மையும் மென்மையும் ஒளியும் அழகும் உடைய கோலமாய்க் கொழுந்தீன்று என்க. ஈன்று – தோன்றி. ஆலம்பழம் செந்நிறமுடையது ஆதலின், பவளம் திரண்டதோர் ஆலம் என்றார். பவளம் போன்ற செந்நிறம் உடைய பழங்களைப் பவளமென்றது உவமையாகு பெயர். கல்லாலுக்குச் சாதியடை.

Oh! Behold! Civa is the Lord of Thiruvaiyaaru. His truth and greatness were incomprehensible even to Lord Vishnu and Brahma. He wears excellent coat on His body. His divine legs are magnificent with beautiful golden anklets. Sitting under the

banyan tree with coral like fruits and buds, He dispelled the ignorance of the four sages and transmitted His wisdom to them with particular mudras of His fingers.

1534. கையிலுண்டுழல்வாருங்கமழ்துவராடையால்
மெய்யைப்போர்த்துழல்வாருமுரைப்பனமெய்யல
மைகொள்கண்டத்தெண்டோள்முக்கணான்கழல்வாழ்த்தவே
ஐயந்தேர்ந்தளிப்பானுமையாறுடையையனே. 11

கையில் உண்டு உழல்வாரும், கமழ் துவர் ஆடையால்
மெய்யைப் போர்த்து உழல்வாரும், உரைப்பன மெய் அல;
மை கொள் கண்டத்து எண்தோள் முக்கணான் கழல் வாழ்த்தவே,
ஐயம் தேர்ந்து அளிப்பானும் - ஐயாறு உடை ஐயனே.

kaiyil uNTu uzalvArum, kamaz tuvar ATaiyAl
meyyaip pOrttu uzalvArum, uraippan2a mey ala;
mai koL kaNTattu eNtOL mukkaNAn2 kazal vAzttavE.
aiyam tErntu aLippAn2um--aiyARu uTai aiyan2E.

பொருள்: சமணர்கள் தங்கள் கைகளில் உணவை ஏந்தி உண்ணும் தன்மை உடையவர்கள். புத்தர்கள் பவளம் போன்ற நாற்றம் வீசும் பழுப்பேறிய ஆடையால் உடல் முழுவதையும் போர்த்திக் கொண்டுள்ளவர்கள். இவர்கள் வேற்று நெறியினர். இவர்கள் உரைப்பன எல்லாம் பொய்யென்று கருதிச் சிவனடியார்கள் அவர்களைப் பின்பற்ற மாட்டார்கள். சிவபிரான் மைபோன்ற கரிய கண்டத்தைக் கொண்டவன். அவனே திருநீலகண்டனாக விளங்குகின்றான். அவன் எட்டுத் தோள்களை உடையவன். மூன்று கண்களைக் கொண்டுள்ளவன். அவனுடைய திருவடிகளைப் போற்றி வழிபாடு செய்யும் அடியார்களின் ஐயங்களைத் தீர்த்துத் தெளிவு செய்பவன் அவனே. அத்தகைய சிறப்புடைய சிவபெருமான் திருவையாறு என்று கூறப்படும் ஊரைத் தனது இடமாகக் கொண்டுள்ள தலைவனாவான்.

குறிப்புரை: கையில் உண்டு உழல்வார் – கையில் உணவை ஏந்தி உண்டு திரியுஞ் சமணர். கமழ் . . . உழல்வார் – நாற்றம் வீசும் பழுப்பேறிய ஆடையால் உடம்பைப் போர்த்துத் திரியும் புத்தர். மைகொள் கண்டம் – நீலகண்டம். முக்கண் – சோமசூரியாக்கினி. ஐயம் – பிச்சை.

The Jains who eat their food from their hands and the Buddhists who cover their body with ochre robes of foul smell do not speak the truth. Ye devotees! do not follow these two races. Lord Civa of Thiruvaiyaaru whose neck is black and who has eight

shoulders and three eyes is always ready to help you. Go to Him and pray at His holy feet. He will dispel all your doubts.

1535. பலிதிரிந்துழல்பண்டங்கன்மேயஐயாற்றினைக்
கலிகடந்தகையான்கடற்காழியர்காவலன்
ஒலிகொள்சம்பந்தனொண்தமிழ்பத்துமவல்லார்கள்போய்
மலிகொள்விண்ணிடைமன்னியசீர்பெறுவார்களே. 12

பலி திரிந்து உழல் பண்டங்கன் மேய ஐயாற்றினை,
கலி கடந்த கையான் - கடல்காழியர்காவலன்,
ஒலி கொள் சம்பந்தன் - ஒண்தமிழ்பத்தும் வல்லார்கள், போய்
மலி கொள் விண்இடை மன்னிய சீர் பெறுவார்களே.

pali tirintu uzal paNTagkan2 mEya aiyARRin2ai,
kali kaTinta kaiyAn2--kaTalkAziyar kAvalan2,
oli koL campantan2--oNtamizpattum vallArkaL, pOy
mali koL viN iTai man2n2iya cIr peRuvArkaLE.

பொருள்: திருவையாற்றில் உள்ள திருக்கோவிலில் இருந்து அருளாட்சி செய்துவரும் சிவபிரான் ஆகிய திருவையாறப்பர் பண்டரங்கம் என்று சொல்லப்படும் திருக்கூத்தை ஆடிக் கொண்டு அண்டசராசரங்களில் எல்லாம் சென்று பலி ஏற்று வருகிறார். சீகாழிப்பதியில் வாழும் அந்தணர்கள் தங்கள் இன்னல்கள் யாவும் நீங்குவதற்காக வேதம் ஓதிக் கொண்டும், யாகம் வளர்த்துக் கொண்டும் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வூரின்கண் தோன்றிய ஞானசம்பந்தன் இப்பதியின் அறக்காவலனாகிய சிவபிரான் நாமத்தைச் சந்தம் மல்க ஒலிக்கப் பாடுகின்றான். அவன் இந்த ஒளி மிக்க சிவஞானத் தமிழ்த் திருப்பதிகத்தை ஐயாறப்பர்மீது வாழ்த்திப் பாடியுள்ளான். இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் வளம் மிக்க விண்ணவர் உலகத்தில் சிறப்பான புகழைப் பெறுவார்கள்.

குறிப்புரை: பண்டங்கள் – பாண்டரங்கம் என்னுந் திருக்கூத்தை ஆடுபவன். கலி–வறுமை. கலிகடிந்தகையான் என்றது திருஞான சம்பந்தர் எரி ஓம்பும் திருக்கையால் அளவற்றோர் வறுமை நீக்கிய உண்மையை உணர்த்தி நின்றது. கடிந்த – நீக்கிய, 'உரவார் கலையின் கவிதைப் புலவர்க்கு ஒருநாளுங் கரவாவண்கைக் கற்றவர் சேருங் கலிக்காழி' (தி. 1 ப.102 பா.1)யில், திருஞானவேந்தர் திருக்கைகளை உலகவர் கலி (வறுமை) முதலிய துன்பங்களைக் கடிதலில் ஐயமின்று. கடந்த என்றது புதியது. கடந்த என்பதே பாடம்.

காழியர் காவலன் என்றதால், பாலறாவாயரான காரணம் பற்றி, அக்காழியில் இருந்த அந்தணர் எல்லோரும் அப்பெருமான் திருவடித் தொண்டர் ஆயினர் என்பதும், காழி வேந்தர் தலைவரானார் என்பதும், சிவனருள் பெற்றவரையே, நல்லோர், தமக்குக் காவலராக் கொள்ளும் வழக்கம் உடையவராயிருந்தனர் என்பதும் புலப்படும். 'ஒலிகொள் சம்பந்தன்' – பரநாதத்தைக் கொண்டு பாட்டாக அருளும் சிவஞான சம்பந்தர் கொள் தமிழ் எனலுமாம்.

Oh! Ye devotees listen. If you are capable of reciting these ten sanctified Tamil verses of Mantras uttered by Gnanasambandan on the Lord of Thiruvaiyaaru all your sufferings will be dispelled. Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi. He sang these songs on the Lord of Thiruvaiyaaru who performed the Panduranga dance while going out for alms. Those who recite these ten illustrious verses will reach the celestial world and attain great heights.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

6ஆம் பதிகம் முற்றிற்று
End of 6th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 143 *பதிக எண்: 7*

7. திருவாஞ்சியம் 7. THIRU-VAANJIYAM

பண் : இந்தளம் *Pann: Indhalam*

திருத்தல வரலாறு

இலக்குமியை வாஞ்சித்து (விரும்பி), திருமால் பூசித்த தலமாதலின் இப்பெயர் பெற்றது. மயிலாடுதுறை – பேரளம் தொடர்வண்டிப் பாதையில் நன்னிலம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே 9 கீ.மீ. தூரத்தில் இருக்கிறது. காவிரித் தென்கரைத் தலங்களுள் 70ஆவது தலம் ஆகும். நன்னிலத்திலிருந்து பேருந்துகளில் செல்லலாம்.

இறைவர் திருப்பெயர் வாஞ்சியநாதர். இறைவியார் திருப்பெயர் வாழவந்த நாயகி. தீர்த்தம் குப்த கங்கை. இது கோயிலுக்கு வடபால் இருக்கிறது. கார்த்திகை ஞாயிறு நாள்களில் மக்கள் விசேடமாக நீராடுகின்றனர். தலவிருட்சம் சந்தனமரம். இது பிரகாரத்தில் இருக்கின்றது. இயமன் பூசித்துப் பேறு பெற்றான். இத்தலத்தில் இறப்பவர்களுக்கு இயமவாதனை இல்லை. இயமனுக்குத் தனிக் கோயிலும் இருக்கின்றது. இது முத்தியளிக்கும் தலங்களுள் ஒன்றாகும். இது மூவராலும் பாடப்பெற்றது. மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

காழிவேந்தர், தவமுனிவரான சொல்வேந்தரோடும் கூடச் சிவதலங்கள் வணங்கப் போவாராய், தென்திருவாஞ்சியமூதூர் சென்று சேர்ந்து அங்கு எழுந்தருளிய முக்கண் நீலமிடற்றரு மணியை வணங்கிப் போற்றி, வன்னி கொன்றை எனும் இத்திருப்பதிகத்தைப் பாடி அத்திருவாஞ்சியத்து என்றும் நின்ற இறையானை உணர்ந்து அடியேத்தினார்.

திருச்சிற்றம்பலம்

1536. வன்னிகொன்றைமதமத்தமெருக்கொடுகூவிளம்
பொன்னியன்றசடையிற்பொலிவித்தபுராணனார்
தென்னவென்றுவரிவண்டிசைசெய்திருவாஞ்சியம்
என்னையாளுடையானிடமாகவுகந்ததே. 1

வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்
பொன் இயன்ற சடையில் பொலிவித்த புராணனார்,
தென்ன என்று வரிவண்டு இசைசெய் திரு வாஞ்சியம்
என்னை ஆள்உடையான், இடம்ஆக உகந்ததே.

van2n2i kon2Rai matamattam erukkoTu kUviLam
pon2 iyan2Ra caTaiyil polivitta purANan2Ar,
ten2n2a en2Ru varivaNTu icai cey tiru vAnjciyam,
en2n2ai AL uTaiyAn2, iTam Aka ukantatE.

பொருள்: வன்னி இலை, கொன்றை மலர், ஊமத்த மலர், எருக்கம்பூ, வில்வ இலை ஆகியவற்றைத் தன் செஞ்சடையில் தாங்கி அவற்றினுக்கு ஏற்றம் தந்தவர் பழம்பொருளான பரமசிவனார் என்க. அவர் திருவாஞ்சியம் என்னும் திருத்தலத்தில், வண்டுகள் தென்னதென்ன என்று பாட கோயில் கொண்டவர் ஆவார். என்னை ஆட்கொண்டருளும் எம்பெருமான் உகந்து வீற்றிருக்கும் திருவாஞ்சியத்தை நானும் விரும்பிப் போற்றுவேனாக!
விளக்க உரை: இலை, மலர் எல்லாம் இறைவனுக்கு ஒரே தன்மையுடையனவே. அவனது வேண்டுதல் வேண்டாமை இல்லா நிலையை இலையும் மலரும் விளக்குகின்றன. இறைவனை அடைந்தால் எப்பொருளும் மேன்மையுறும் என்க. வண்டுகள் தென்னதென்ன என முழங்குகின்றன. நாம் தென்னா என்னாமுன் தீசேர் மெழுகாக உருகி வழிபடுவோமாக. என்னை ஆளும் இறைவன் விரும்பி உறையும் இடம் திருவாஞ்சியம். என்னை ஆளுடைய நாயகி சிவனாரின் இடப்பாகத்தில் விரும்பிப் பொருந்தியுள்ளாள் என்க.

குறிப்புரை: வன்னி – வன்னிமரத்திலை. கொன்றைப்பூ, ஊமத்தம் மலர். எருக்கம்பூ. கூவிளம் – வில்வம். பொன் இயன்ற – பொன் போன்ற. சடையில் வன்னி முதலியவற்றைப் பொலிவு பெறச் சூடிய புராணனார். புராணன் – முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாயுள்ளவன். தென்ன என்று இசை செய்வன வரிவண்டுகள். உகந்தது – விரும்பியது (வினையாலணையும் பெயர்). மேலும் இவ்வாறாதல் அறிக.

Oh! Behold! It is this holy place Thiru-vaanjiyam where my Lord the oldest of the old is manifest; He has taken me as His slave. He has adorned His matted locks of golden hair with colaphyllum and cassia flowers, and calotropis flowers and bilwa

leaves rendering them beautiful. Here the striped bees gather in large numbers creating musical notes reverberating everywhere in the city. The ancient Lord is pleased to abide in Thiru-vaanjiyam with His devi on His left.

1537. காலகாலர்கரிகானிடைமாநடமாடுவர்
மேலர்வேலைவிடமுண்டிருள்கின்றமிடற்றினர்
மாலைகோலமதிமாடமன்னுந்திருவாஞ்சியம்
ஞாலம்வந்துபணியப்பொலிகோயில்நயந்ததே. 2

காலகாலர், கரிகான்இடை மாநடம் ஆடுவர்,
மேலர், வேலைவிடம்உண்டு இருள்கின்ற மிடற்றினர்,
மாலை கோல மதி மாடம் மன்னும் திரு வாஞ்சியம்
ஞாலம் வந்து பணியப் பொலி கோயில் நயந்ததே.

kAlakAlar, karikAn2 iTai mAnaTam ATuvar,
mElar, vElaiviTam uNTu iruLkin2Ra miTaRRin2ar,
mAlai kOla mati mATam man2n2um tiru vAnjciyam
njAlam vantu paNiyap poli kOyil nayantatE.

பொருள்: உலகெலாம் வந்து பணியுமாறு மதி (சந்திரன்) தேயும் மாடங்கள் நிறைந்த திருவாஞ்சியம் என்னும் திருத்தலத்தில் எம்பெருமான் கோயில் கொண்டுள்ளார். அவரே காலனுக்கும் காலன் ஆவார். அவரே சுடுகாட்டில் சிறப்பாக நடனமாடுபவர். அவரே எப்பொருளுக்கும் மேலானவர் ஆவார். அவரே கடலில் தோன்றிய விடத்தை உண்டதால் நீலகண்டரானார்.

விளக்கவுரை: காலன் உடலில் பொருந்திய உயிர்தனை நீக்குபவன். அவனையும் அழிக்கும் பெரும் சிறப்பிற்கு உரியவரே சிவனார் ஆவார். உயிர்களுக்கு அச்சம் தரும் சுடுகாட்டில் நடனமாடுவதன் மூலம் அச்ச நீக்கத்தை அருளுபவரும் அவரே! விடத்தைத் தான் உண்டு தேவர்களுக்கு அமுதை வழங்கியவரும் அவரே! மதியினைத் தலையில் சூடியுள்ள அவரே, மதி தோய்கின்ற மாடங்கள் நிறைந்த திருவாஞ்சியத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: காலகாலர் – இயமனுக்குங் காலமுடிவைச் செய்பவர். இயமனுக்கியமன் என்பாருமுளர். கரிகான் – கரிந்தகாடு. மேலர் – எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் எத்தேவர்க்கும் மேலாயுள்ள முழுமுதல்வர். வேலை – கடல். மிடறு – கழுத்து. நஞ்சுண்டிருண்ட கண்டத்தர். 'இருள்கின்ற' என நிகழ்வாற் கூறியதால், இன்னும் இருளும்படி செய்யுங் கொடிய நஞ்சையுண்டு வாழ்வித்த கருணைத் திறத்தை அறியலாம். திருவாஞ்சியத்து மாடங்கள் சந்திரமண்டலத்தின் அளவும் ஓங்கியவை என்று உயர்த்துக்

கூறினார். மதிமண்டலத்தை அளாவிய மாடம். மாலைமதி, கோலமதி, மாலைப்பொழுதும் அழகும் மதிக்கு அடை, ஞாலம் – உலகத்துயிர்கள், இடவாகு பெயர், ஞாலம் – தொங்குவது என்னுங் காரணப் பொருளதாய், முன்னோரது பூகோள ககோள ஞானத்தை உணர்த்துவது அறிக. நயந்தது – விரும்பியது.

Oh! Behold! It is Civa who resides in Thiru-vaanjiyam who is the Master and Supreme God also for the attendant of death called Yama. He does the great cosmic dance on the burning ghat. He is the super mundane in the world. His neck is dark because he drank the deadly poison that rose from the sea of milk. In the evening the beautiful moon laps over the big mansions of Thiru-vaanjiyam to take some rest. It is He who draws the whole world to bow at His feet in the temple in Thiru-vaanjiyam.

1538. மேவிலொன்றர்விரிவுற்றஇரண்டினர்மூன்றுமாய்
நாவின்நாலருடலஞ்சினராறரேழோசையர்
தேவிலெட்டர்திருவாஞ்சியம்மேவியசெல்வனார்
பாவந்தீர்ப்பர்பழிபோக்குவர்தம்மடியார்கட்கே. 3

மேவில் ஒன்றர், விரிவுஉற்ற இரண்டினர், மூன்றும்ஆய்
நாவில் நாலர், உடல் அஞ்சினர், ஆறர், ஏழ்ஓசையர்,
தேவில் எட்டர் - திரு வாஞ்சியம் மேவிய செல்வனார்;
பாவம் தீர்ப்பர், பழி போக்குவர், தம் அடியார்கட்கே.

mEvil on2Rar, virivu uRRa iraNTin2ar, mUn2Rum Ay
nAvil nAlar, uTal anjcin2ar, ARar, Ez Ocaiyar,
tEvil eTTar--tiru vAnjciyam mEviya celvan2Ar;
pAvam tIrppar, pazi pOkkuvar, tam aTiyArkaTkE.

பொருள்: ஒப்பற்ற ஒருவனாகிய சிவனாரே, சிவன் சக்தி என இரண்டாகவும், படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலும் முத்தி உடையவராகவும், நான்கு வேதங்களையும் ஓதுபவராகவும், பஞ்சபூதங்களாகவும், வேதத்தின் ஆறு அங்கங்களாகவும், ஏழிசையாகவும், எண்குணத்தவராகவும் உள்ளார். அவரே திருவாஞ்சியம் என்னும் திருத்தலத்திலும் பொருந்தியுள்ளார். அடியவர்களின் பாவத்தைத் தீர்ப்பவரும் அவரே! பழி போக்குபவரும் அவரே என்க.

விளக்கவுரை: இறைவனின் தன்மைகள் எண்ணலங்கார முறையில் (ஒன்று முதல் எட்டு வரையில்) இத்திருப்பாட்டில் கூறப்பெற்றுள்ளன. ஏகன், அனேகன், இறைவன் என்பது இத்திருப்பாட்டில் விளக்கம் பெறுகிறது. எங்கும் நிறைந்த அவர் இங்கும் உள்ளார் என்க.

உலகில் உள்ள எல்லாப் பொருள்களுள்ளும் இரண்டறக் கலந்து அருவமாய் விளங்குபவர் அவரே! ஒன்று இரட்டித்தலும், அவ்விரண்டு இரட்டித்தலும் அவ்விரண்டு மேலும் இரட்டித்து நான்காதலும், அந்நான்கும் இரட்டித்து எட்டாதலும், இவ்வாறு விரிந்து செல்லக்கூடிய இறைவனின் திறம் இத்திருப்பாட்டில் சிறப்பாகப் பேசப்படுகிறது. ஐம்பெரும் பூதங்களாகவும் ஐம்பெரும் சக்திகளாகவும் (ஆதிசக்தி, பராசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி) அவரே எங்கும் நிறைந்துள்ளார் என்க. நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் என்ற பூதங்களாகவும், சூரியன், சந்திரன் என்ற இரு சுடர்களாகவும், ஆன்மா என்ற தன்மையும் கொண்டு அவன் எட்டாக விளங்குகிறான் என்க. தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, வரம்பில் இன்பமுடைமை, முடிவில் ஆற்றலுடைமை என்ற எண்குணங்களும் பொருந்தியவன் இறைவன் என்க. எண்குணத்தான் தாளை வணங்காத் தலையால் பயனில்லை என்பது குறள் தரும் கருத்து என்க. தன் செயலால் விளைவது பாபம்! பிறர் சொல்லால் விளைவது பழி! அவ்விரண்டையும் நீக்கியருள்பவன் இறைவனே என்க.

குறிப்புரை: இதனுள் ஒன்று முதல் எட்டீறாகிய எண்ணுப்பெயர் அமைந்த அழகு உணரத் தக்கது. 79,380–ஆம் (திருக்கழுமலம், திருவோமமாம்புலியூர்த்) திருப்பதிகங்களுள் வரும் 'எண்ணிடை யொன்றினர்' 'மணந்திகழ் திசைகளெட்டும்' எனத் தொடங்குந் திருப்பாடல்களை இங்கு நோக்கின், இவ்வாசிரியர்க்கு இவ்வாறு பாடியருளும் எளிமை இனிது விளங்கும். மேவில் ஒன்றர் – விரும்பி வழிபட்டால் அநந்நியமாதலை உடையவர், 'அறிபவன் அருளினாலே அநந்நியமாகக் காண்பன்' என்பதும் 'அறிய வல்லான் ஒருவனுக்கு அச்சிவப்பொருள் அவனோடு ஒற்றித்து நின்று அவ்வருளானே அறியற் பாலதாம்' என்னும் அதன் உரையும் (சித்தியார் 245), சைவ உபநிடதங்களினும் சைவாகமங்களினும் அந்நியமின்றி நின்றுணரும் அநுபவ மாத்திரையிற் கோசரிப்பது என்று ஓதப்படுஞ் சிவனருளாம் மெய்ப் பொருள் என்னும் சிவஞான பாடிய வசனமும் (சூ. 6). ஈண்டுணரத் தக்கன. ஒன்றர் – ஒருபொருளாயிருப்பவர் எனலுமாம். விரிவுற்ற இரண்டினர் – விரிதலடைந்த ஞானமும் கிரியையும் உடையவர். சிவமும் சத்தியுமானவர் எனலுமாம். சிவசத்தி மூன்றனுள் யாண்டும் ஒரு பெற்றித் தாய் வியாபரிக்கும் இச்சையை ஒழித்து, ஒழிந்த ஞானக் கிரியைகள் இரண்டும் தனித்தனி வியாபரித்தலானும் ஒத்து வியாபரித் தலானும் தம்முள் ஏறிக் குறைந்து வியாபரித்தலானும் (சித்தியார் உரை – 85) விரிவுற்றன. இரண்டு – சொரூபம் தடத்தம் எனலுமாம். விரிவுற்ற இரண்டு – போகமும் முத்தியும் ஆதலும் பொருந்தும். மூன்றுமாய் – இச்சா ஞானக் கிரியையாய். ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை

என்று ஒரு மூன்றாகி (சித்தியார் 83). அவை முறையே உயிர்கட்கு மலந்தீர்த்துச் சிவங்கொடுக்கும் கருணையும், அதற்கான உபாயங்களை அறியும் அறிவும், அவற்றை அவ்வாறே கொண்டு செய்யும் சங்கற்பமும் ஆகும். இலயம் போகம் அதிகாரமாய், ஒன்றாய் வேறாய் உடனாய், மூன்று தீயுமாய், முச்சுடருமாய் எனினும் பொருந்தும். மூன்றும்ஆய் நாவின் நாலர் என்று கொண்டு பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருளையும் ஆய்ந்துணர்த்தும் நான்மறை நாவர் எனலுமாம். உடல் அஞ்சினர் – பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்னும் ஐவகைச் சத்தியாகிய திருமேனியை உடையவர். பஞ்சப் பிரம மந்திர தேகமும் ஆம். அருவம் இரண்டு, அருவுருவம் ஒன்று, உருவம் இரண்டு ஆகிய ஐந்து உடலும் சொரூபமல்லவாயினும் உபசாரத் திருமேனியாகும். அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனுக்குத் தன்னுருவமாகிய உலகத்தைத் தொழிற்படுத்தற் பொருட்டும் வேறொருருவம் வேண்டப்படுவதன்றாயினும். . . . உயிர் வர்க்கங்கள் பொருளியல்பு உணர்ந்து வீடுபெறுமாறு வேதாகமங்களைக் கோவைப்படச் செய்தற் பொருட்டும் அதனைக் குருபரம்பரையின்கண் வைத்தற்பொருட்டும் திருமேனி ஒருதலையான் வேண்டப்படும் (சித்தியார் 66 உரை). ஆறர் – அறுகுணத்தர், (ஷாட்குண்யர்) முற்றறிவு முதலியவை. பகவர் எனலுமாம். உடலஞ்சினர். ஆறர் – பிறவியையஞ்சிய நல்லோர் வழியில் விளங்குபவர். உடலஞ்சு – பஞ்சகோசம். ஆறர் – கங்கையாற்றினர் எனினுமாம். ' நன்மூவிருதொன்னூலர்' 'முத்தீயர்' 'நால்வேதத்தர்' 'வீழிமிழலையார்' (தி. 3 ப. 9. பா. 7) என்றதில் வருமாறுங் கொள்ளலாம். 'திருவெழுகூற்றிருக்கை'யும் நோக்குக. ஏழ் ஓசையர் – ஏழிசையாய் (இசைப்பயனாய்) இருப்பவர். தேவில் – தெய்வத் தன்மையில். எட்டர் – அட்டமூர்த்தி, எண்குணத்தர் எனின் ஆறர் என்பதற்கு ஷாட்குண்யர் என்னாது வேறுரைக்க. பாவம் – தீவினை. பழி – தீச்சொல். முறையே செயலும் மொழியுமாய்த் தன் திரிகரணத்தாலும் பிறர் வாயாலும் நிகழ்வன. அடியார்கட்கே பாவந்தீர்ப்பர் பழி போக்குவர் எனவே அல்லார்க்கு இல்லை என்றதாம்.

Oh! Behold! It is Civa the Supreme who is the Lord at Thiru-vaanjiyam. He is unique and the single entity in the entire universe. Yet He appears dual as Lord Civa and Sakthi, His consort. He is also three in number i.e., the sun, moon and fire. He is four having produced the four vedas. He is five because He is the makes of all the five elements the earth, the water, the fire, the wind and the sky. He is the six angangas of vedas such as Chitchai, Viyakaranam, Santhus, Nirutham, Jothidam, and Karpam. He also represents the seven kinds of sound such as Sanchamam, Rishapam, Kaanthaaram, Mathymam, Panchamam, Thaivatham, Nishaatham, SA-RI-KA-MA-PA-THA-NI

(சரிகமபதநி). He has eight divine attributes of virtues, such as Than Vayathanaathal, Thooya Udambinan Aathal, Iyarkai Unarvinan Aathal, Mutrunarthal, Iyalbaaka Paasangalil Irunthu Neenguthal, Perarul Udamai, Mudivillatha Aatral Udaimai, Varambillatha Inbam Udamai. This perfect one is seated in Thiru-vaanjiyam. He shows His grace to His devotees and absolves them of all their sins and chases their woes.

1539. சூலமேந்திவளர்கையினர்மெய்சுவண்டாகவே
சாலநல்லபொடிப்பூசுவர்பேசுவர்மாமறை
சீலமேவுபுகழாற்பெருகுந்திருவாஞ்சியம்
ஆலமுண்டஅடிகள்ளிடமாகஅமர்ந்ததே. **4**

சூலம் ஏந்தி வளர் கையினர்; மெய் சுவண்டுஆகவே
சால நல்ல பொடி(ப்) பூசுவர்; பேசுவர் மாமறை;
சீலம் மேவு புகழால் பெருகும் திரு வாஞ்சியம்,
ஆலம் உண்ட அடிகள்(ள்) இடம்ஆக அமர்ந்ததே.

cUlam Enti vaLar kaiyin2ar; mey cuvaNTu AkavE
cAla nalla poTi(p) pUcuvar; pEcuvar, mAmaRai;
cIlam mEvu pukazAl perukum tiru vAnjciyam,
Alam uNTa aTikaL(L) iTam Aka amarntatE.

பொருள்: ஈசன், சூலப்படையைத் திருக்கரத்தின்கண் ஏந்தியவர். அருள் வழங்கும் திருக்கரத்தினர். மணமிக்க திருநீற்றைத் திருமேனியில் தாங்கியவர். வேதங்களை விரித்துரைப்பவர். சீலம் மிக்க புகழுடை திருவாஞ்சியத்தில் விளங்குபவர். ஆலம் அருந்தி தேவர்களைத் தன்னருளால் காத்தவர்.

விளக்கவுரை: விபூதியானது கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்று மூன்று வகையானது. சகல செல்வங்களையும் வழங்குவது. ஆன்மாக்களுக்குக் கவசம் போன்று துணையாக விளங்குவது. சிவத்துவத்தைப் பெருக்க வல்லது. பாவங்களை நீக்குவது. உயிர்களை மலநீக்கம் பெறச் செய்வது. இதனை நல்லபொடி என்றும் கூறுவர். திருநீற்றுப் பெருமை கூறும் பதிகத்தை ஓதி உணர்க (மந்திரமாவது நீறு).

குறிப்புரை: சுவண்டு – பொருத்தம். சால – மிக. பொடி – திருநீறு. மறைபேசுவர் என மாற்றுக. சீலம் – பெருந்தகைமையுள் ஒன்று. ஒழுக்கமுமாம். ஆலம் – நஞ்சு. ஒற்று(ள்) மிகை.

Oh! Behold! It is Civan who is the Lord of Thiru-vaanjiyam. He holds a trident in His blessing hand. He has smeared the holy fragrant powder on His body. He speaks all the four Vedas. He drank the poison that came out of sea of milk. Since the people pursue all the prescribed sacred rites and rules regarding moralities Thiru-vaanjiyam, where our Lord resides is well-renowned for virtuosity.

1540. கையிலங்குமறியேந்துவர்காந்தளம்மெல்விரல்
தையல்பாகமுடையாரடையார்புரஞ்செற்றவர்
செய்யமேனிக்கரியம்மிடற்றார்திருவாஞ்சியத்
தையர்பாதமடைவார்க்கடையாஅருநோய்களே. 5

கை இலங்கு மறி ஏந்துவர், காந்தளஅம்மெல்விரல்-
தையல் பாகம் உடையார், அடையார் புரம் செற்றவர்,
செய்யமேனிக் கரிய(ம்) மிடற்றார் - திரு வாஞ்சியத்து
ஐயர்; பாதம் அடைவார்க்கு அடையா, அருநோய்களே.

kai ilagku maRi Entuvar, kAntaL ammelviral-
taiyal pAkam uTaiyAr, aTaiyAr puram ceRRavar,
ceyyamEn2ik kariya(m) miTaRRAr--tiru vAnjciyattu
aiyar; pAtam aTaivArkku aTaiyA, arunOykaLE.

பொருள்: ஈசனார், கையில் மான் ஏந்துபவர். காந்தள் மலர் போன்ற விரல்களை உடைய சக்தியை இடபாகத்தில் கொண்டவர். முப்புரங்களைச் சிரித்தே அழித்தவர். கரிய கண்டத்தைக் கொண்டவர். திருவாஞ்சியம் என்ற திருத்தலத்தில் உறைபவர். அந்தத் தலைவரின் திருவடிகளை அடைந்தவர்களுக்குப் பிறவி நோய் சாராது.

விளக்கவுரை: துள்ளிப்பாயும் மான் ஈசனாரின் விரல்களில் கட்டுண்டு நிற்பது போல துள்ளித் துள்ளி வரும் நம்மனமும் அவர்திரு முன்பு கட்டுண்டு அமைதியுறும். தாயினுடைய விரல்களின் மென்மையை அடியார்களைத் தவிர வேறு யார் உணர்ந்து அனுபவிக்க முடியும். அரத்த மேனியாய் அருள் செய் அன்பரும் நீயும் ஆங்கே எழுந்தருளி இங்கு எனை இருத்தினாய் முறையோ? என மணிவாசகர் கூறுவதன் மூலம் சிவனார் செம்மேனி கொண்டவர் என உணரலாம். செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ற நாம் சாகா நிலை - பிறவா நிலை அடைய இறைவனின் திருவடிகளைச் சேர்தலே வழியாம் என்க.

குறிப்புரை: மறி – மான்கன்று. காந்தட்பூ கைவிரல்கட்குவமை. தையல் – கட்டழகுடைமையாற் பெண்ணைக் குறிக்கும் பெயர். இங்குப் பார்வதி தேவியாரை உணர்த்திற்று. தையல் எல்லார்க்கும் நாயகியாதலின். அடையார் – பகைவர். புரம் செற்றவர் – திரிபுரதகனம் செய்தவர். 'முப்புரமாவது

மும்மலகாரியம்' என்பது திருமந்திரம். மிடறு – கழுத்து. செய்ய, கரிய முரண். ஐயர் – முதல்வர். அருநோய் அடையா – நீங்கற்கரிய பிறவி நோய் முதலியயாவும். திருவடியடையும் அன்பர்க்கு இல்லை.

Oh! Behold! It is Civa who is the Lord of Thiru-vaanjiyam, holding a deer in His hand. He shares His body on the left with His consort Uma. Uma's fingers are very soft like the glorious flower. Once He destroyed the three flying forts of asuraas and killed them all except three. His body is reddish with the graceful appearance, whereas his neck is black because of the poison He drank. The devotees who approach the Lord's holy feet and worship Him will not suffer the disease of birth any more.

1541. அரவம்பூண்பரணியுஞ்சிலம்பார்க்கஅகந்தொறும்
இரவில்நல்லபலிபேணுவர்நாணிலர்நாமமே
பரவுவார்வினைதீர்க்கநின்றார்திருவாஞ்சியம்
மருவியேத்தமடமாதொடுநின்றவெம்மைந்தரே. 6

அரவம் பூண்பர்; அணியும் சிலம்பு ஆர்க்க அகம்தொறும்
இரவில் நல்ல பலி பேணுவர்; நாண்இலர்; நாமமே
பரவுவார் வினை தீர்க்க நின்றார் - திரு வாஞ்சியம்
மருவி ஏத்த மடமாதொடு நின்ற எம் மைந்தரே.

aravam pUNpar; aNiyum cilampu Arkka akamtoRum
iravil nalla pali pENuvarl nAN ilar; nAmamE
paravuvAr vin2ai tIrkka nin2RAr--tiru vAnjciyam
maruvi Etta maTamAtoTu nin2Ra em maintarE.

பொருள்: ஈசர், நாகத்தை ஆபரணமாகப் பூண்டு இருப்பார். திருப்பாதத்தில் சிலம்பணிந்து அது ஆர்த்து ஒலிக்க விரும்பிப் பிச்சை ஏற்பார். அதற்காக நாணமாட்டார். தேவியுடன் வீற்றிருக்கும் அவர் தன் நாமத்தைக் கூறி வழிபடுபவர்க்கு அருளவே திருவாஞ்சியத்தில் கோயில் கொண்டுள்ளார்.

விளக்கவுரை: இல்லங்கள்தோறும் எழுந்தருளும் பெருங்கருணையாளனே இறைவன். அவன் பிச்சையாக ஏற்க இருப்பதும், நம் நல்உள்ளங்களையே என்க. மானிட உடல்பெற்ற நம் ஆன்மா நிறைவடைவதும் குறைவுறுவதும் உள்ளத்தாலேயேயாம். நாகத்தைக் கண்டு உயிர்கள் அஞ்சி நடுங்கும். ஆனால் அந்த நாகமோ அவரிடத்தில் கொஞ்சி ஆடும். நம் வினை தீர்க்க அவர் கால்கடுக்க நடந்து வருகிறாரே! நாம் சிந்திக்க வேண்டாவோ?

குறிப்புரை: அரவம் – பாம்பு. பூண்பர் – சூடுவர். அணியுஞ்சிலம்பு – அலங்காரமாகப் பூணும் வேதச்சிலம்பு. ஆர்க்க – ஒலிக்க. அகம் – வீடு. பேணுவர் – விரும்புவர். நாமமே பரவுவார் – திருநாம ஜபமே செய்பவர். வினை – கர்மம். மடமாது – உமாதேவியார். மைந்தர் – வீரர்.

Civa, the Lord of Thiru-vaanjiyam has adorned His body with snakes. He mvoes about the entire cosmos at night for alms to all houses with the sound of His anklets. His begging appears shameless, but this is begging for our hearts, for our sake. This Lord who is seated with His devi resides in Thiru-vaanjiyam in order to bless and dispel the karma of those devotees who always chant His name.

1542. விண்ணிலானபிறைசூடுவர்தாழ்ந்துவிளங்கவே
கண்ணினாலநங்கன்னுடலம்பொடியாக்கினார்
பண்ணிலானஇசைபாடல்மல்குந்திருவாஞ்சியத்
தண்ணலார்தம்மடிபோற்றவல்லார்க்கில்லையல்லலே. 7

விண்ணில் ஆன பிறை சூடுவர், தாழ்ந்து விளங்கவே;
கண்ணினால் அநங்கன்(ன்) உடலம் பொடி ஆக்கினார்;
பண்ணில் ஆன இசைபாடல் மல்கும் திரு வாஞ்சியத்து
அண்ணலார்தம் அடி போற்ற வல்லார்க்கு இல்லை, அல்லலே.

viNNil An2a piRai cUTuvar, tAzntu viLagkavE;
kaNNin2Al anagkan2(n2) uTalam poTi Akkin2Ar;
paNNil An2a icaipATal malkum tiru vAnjciyattu
aNNalAr tam aTi pORRa vallArkku illai, allalE.

பொருள்: ஈசர், தம் தலையில் பிறையைச் சூடிக் கொள்வார். தம் கண்களால் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கினார். பண்ணுடன் பொருந்திய பாடல்கள் முழங்கப் பெறும் திருவாஞ்சியத்தில் அடியார்களுக்கு அருள எழுந்தருளுவார். இனி அடியார்களுக்கு அல்லல் இல்லை.

விளக்கவுரை: விண்ணில் விளங்கி ஒளி தந்த சந்திரன் இறைவனருள் பெற்ற பின்பே குறை நீங்கப் பெற்றான். மகிழ்ந்து உலா வரப்பெற்றான். பிறரால் பெற்ற பழி நீங்கப் பெற்றான். மன்மதன் புல்லறிவினனாய் - தனக்கே எல்லாம் தெரியும், எல்லாம் செய்ய முடியும் என்று தன்முனைப்புடன் செயல்பட்டதால் எரிந்து சாம்பலாயினான். அவனுக்கும் அருட்கண் கொண்டு அருள் செய்தவர் எம்பிரானார். பண்ணும் பாடலும் போல் விளங்கும் இறைவனார் திருவாஞ்சியத் திருத்தலத்துள் எழுந்தருளி உள்ளார். அவரது தாளில் நம் தலை பொருந்த (தாடலை) வணங்குவோமாக.

குறிப்புரை: பிறை – பிறத்தலுடையது என்னுங் காரணப் பொருட்டான பெயர். திங்கள் துண்டம். அநங்கன் – அங்கமில்லான். உருவிலி, மன்மதன். பண்ணும் இசையும் முறையே ஆதாரமும் ஆதேயமுமாதலின் பண்ணில் ஆன இசை என்றார். போற்ற வல்லார் – போற்றுதலில் வேதாகம ஞானவல்லபம் உடையவர், நிஷ்டாநுபூதிமான்கள். அல்லல் – துன்பம்.

Civan who occupies the temple in Thiru-vaanjiyam has adorned His matted hair with the floating crescent moon in the low horizon. He once destroyed the body of cupid – the god of love – called Anangan or Manmathan by opening the third eye in His forehead. Many devotees gather in His temple in large numbers and sing all kinds of songs in prayer with melodious notes. Their voices are echoed all around. Those who praise His holy feet will never suffer.

1543. மாடநீடுகொடிமன்னியதென்னிலங்கைக்குமன்
வாடியூடவரையாலடர்த்தன்றருள்செய்தவர்
வேடவேடர்திருவாஞ்சியமேவியவேந்தரைப்
பாடநீடுமனத்தார்வினைபற்றறுப்பார்களே. 8

மாடம் நீடு கொடி மன்னிய தென் இலங்கைக்கு மன்
வாடி ஊட வரையால் அடர்த்து அன்று அருள் செய்தவர்,
வேடவேடர், திரு வாஞ்சியம் மேவிய வேந்தரைப்
பாட நீடு மனத்தார் வினை பற்று அறுப்பார்களே.

mATam nITu koTi man2n2iya ten2 ilagkaikku man2
vATi UTa varaiyAl aTarttu an2Ru aruL ceytavar,
vETavETar, tiru vAnjciyam mEviya vEntaraip
pATa nITu man2attAr vin2ai paRRu aRuppArkaLE.

பொருள்: கொடி நிறைந்த மாடங்கள் பொருந்திய இலங்கை நகருக்கு மன்னன் இராவணன். அவன் தெளிவின்றிச் சினத்தினால் மலை எடுத்து வாட்டம் உற்றான். பின்பு தெளிவு பெற்றுப் பாடிப் பரவினான். அவனுக்கு நீண்ட ஆயுளும், வாட்படையும் வழங்கினார் சிவனார். வேட்டுவ வடிவம் கொண்டு அர்ச்சுனனுக்குப் பாசுபதம் என்னும் அஸ்திரத்தை அருளியவரும் அவரே ஆவார். திருவாஞ்சியம் என்னும் திருத்தலத்தில் கோவில் கொண்டுள்ள அவரை வணங்கும் பக்தர்கள் பற்று அறுக்கப் பெறுவார்கள் என்க.

விளக்கவுரை: முற்பிறவியில் செய்த வினையே இப்பிறவிக்கும் இப்பிறவில் அடையும் துன்பத்திற்கும் காரணமாகும். பிறவி அடைதல் வினையின் காரணமாகவே அமையும்.

வினை நீக்கம் பெற, பற்றுக்கள் (உலக ஆசைகள்) நீங்கப் பெற வேண்டும். ஈசனோடு ஆயினும் ஆசை நீங்கப் பெறுதல் வேண்டும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறள் நுட்பம் உணர்ந்து மகிழ்க.

குறிப்புரை: மாடம் – உயரிய வீடுகள். கொடி – துகிற்கொடிகள். மன்னிய – நிலைத்த. மன் – அரசன். இராவணன். வரை – கைலாசகிரி. வேடவேடர் – வேட்டுவக் கோலத்தர். வினைபற்று உம்மைத் தொகை. வினை – கர்மம். பற்று – மூலகர்மம். "இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின் வருபவக் கடலில்வீழ் மாக்கள்" (பெரிய. அப்பர் 129) என்புழியறிக.

Oh! Behold! It is Civan who is the Lord of Thiru-vaanjiyam. He subdued the mighty king of Sri Lanka. Sri Lanka's capital and all the cities are very famous for their tall palaces, victorious flags and long cords hung with garlands. The king Raavanan was a very famous devotee of Lord Civa and a mighty warrior. However at one stage he forgot his virtue and tried to move the Himalayas, the abode of Lord Civa and His consort. He failed in his attempt and got crushed under the mountains. He later realised his fault and prayed to Lord Civa to forgive him and to bless him. Lord Civa pardoned him and also gave long life, a divine sword and some boons and the name 'Raavanan'. This Lord of Thiru-vaanjiyam once took the form of a hunter to meet Arjuna who prayed Him in the forest to get a divine weapon called Paasupathasthiram. He met him and gave him the divine arrow. Those who sing His glorious name will certainly be relieved of all their karma, the present, the past and also all the wordly desires.

1544. செடிகொள்நோயின்னடையார்திறம்பார்செறுதீவினை
கடியகூற்றமுங்கண்டகலும்புகல்தான்வரும்
நெடியமாலொடயனேத்தநின்றார்திருவாஞ்சியத்
தடிகள்பாதமடைந்தாரடியாரடியார்கட்கே. 9

செடி கொள் நோயின் அடையார்; திறம்பார், செறு தீவினை;
கடிய கூற்றமும் கண்டு அகலும்; புகல்தான் வரும் -
நெடிய மாலொடு அயன் ஏத்த நின்றார், திரு வாஞ்சியத்து
அடிகள், பாதம் அடைந்தார் அடியார், அடியார்கட்கே.

ceTi koL nOyin2 aTaiyAr; tiRampAr, ceRu tIvin2ai;
kaTiya kURRamum kaNTu akalum; pukaltAn2 varum--
neTiya mAloTu ayan2 Etta nin2RAr, tiru vAnjciyattu
aTikaL, pAtam aTaintAr aTiyAr, aTiyArkaTkE.

பொருள்: திருமாலும், பிரமனும் போற்றித் துதித்து வணங்குமாறு இறைவன் திருவாஞ்சியத் தலத்துள் கோவில் கொண்டுள்ளார். அவ்விறைவரின் திருவடிகளைப் போற்றி வணங்கும் அடியவர்களுக்கு நோய்கள் வாரா. உள்ளத்தில் உறுதி நிலை பெறும். எம பயம் நீங்கப் பெறும் என்க.

விளக்கவுரை: உடலுக்கு வருவன நோய்கள். உள்ளத்தில் பொருந்தி இருப்பன அழுக்காறு, அவா, வெகுளி போன்ற தீய பண்புகள். உயிருக்கு வருவது பிறவித் துயர். இம்மூன்றும் வாஞ்சியப்பெருமானை வணங்க நீங்கப் பெறும். பெருமானைத் திரிகரண சுத்தியுடன் (மனம், மொழி, மெய்) வணங்குதல் வேண்டும்.

குறிப்புரை: செடி – துன்பம். பாவமுமாம். திருவாஞ்சியத்துப் பெருமான் திருவடியை அடைந்தவருடைய அடியார்க்கு அடியார் ஆனவர்க்கு நோயின்மையும், தீவினை நீக்கமும், இறவாமையும், சிவகதியும் உண்டு என்றது. இத்திருப்பதிகத்துள் (3, 5, 6, 7, 8, 10, 11) அடியார் சிறப்புணர்த்திய உண்மையை உணர்க. கூற்றம் – இயமன். புகல் – சிவகதி. "தன்னைச் சரணென்று தாளடை" (தி. 4 ப. 105 பா. 1) வதே புகலாகும்.

Devotees bow at the holy feet of the Lord of Thiru-vaanjiyam. Those who pray at the feet of these devotees also will get the grace of the Lord of Thiru-vaanjiyam. They will not get dreadful diseases of body, mind and soul. Evils will disappear from them. Even the cruel death will shun them and salvation by Civan will be assured to them. Thirumaal and Brahma also prayed and worshipped the Supreme Lord at Thiru-vaanjiyam.

1545. பிண்டமுண்டுதிரிவார்பிரியுந்துவராடையார்
மிண்டர்மிண்டும்மொழிமெய்யலபொய்யிலையெம்மிறை
வண்டுகெண்டிமருவும்பொழில்சூழ்திருவாஞ்சியத்
தண்டவாணனடிகைதொழுவார்க்கில்லையல்லலே. 10

பிண்டம் உண்டு திரிவார், பிரியும் துவர் ஆடையார்,
மிண்டர் மிண்டு(ம்) மொழி மெய் அல; பொய் இலை, எம் இறை;
வண்டு கெண்டி மருவும் பொழில் சூழ் திரு வாஞ்சியத்து
அண்ட வாணன் அடி கைதொழுவார்க்கு இல்லை, அல்லலே.

piNTam uNTu tirivAr, piriyum tuvar ATaiyAr,
miNTar miNTu(m) mozi mey ala; poy ilai, em iRai;
vaNTu keNTi maruvum pozil cUz tiru vAnjciyattu
aNTavANan2 aTi kaitozuvArkku illai, allalE.

பொருள்: பேருணவு உண்டு, எங்கும் திரிந்து, தருக்கம் புரியும் மிண்டர்களின் உரைகள் மெய்ம்மையில்லாதனவாம். ஈசனார் என்றும் மெய்யாய் உள்ளவர். அவர் வண்டுகள் மொய்க்கும் சோலைகள் சூழ்ந்த திருவாஞ்சியத் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளார். உலக நாயகனாகிய இறைவரின் திருவடிகளை வணங்குவார்க்குத் துன்பமே இல்லையாம்.

விளக்கவுரை: உணவு சுருங்கிடின் இறைநினைவு பெருகும். மெல்லுணவே நல்லுணர்வைப் பெருக்கும். "ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி" என்ற திருவாசக உரையினை எண்ணுக. இறைவன் உண்மைப் பொருள் என்றும், உண்மை உணவே இறைவன் ஆன்மாக்களுக்கு தனுவினை (உடலினை - மெய்யினை) வழங்கியுள்ளார் என்க.

குறிப்புரை: பிண்டம் – பிண்டித்த சோறு, மிண்டர் – வலியர். கெண்டி – கிளறி, பொழில் – சோலை. அண்டவாணன் – அண்டமுழுதும் வாழ்நன். வாணன் மரூஉமொழி, பாவாணன், அம்பலவாணன், மன்ற வாணன், அண்டவாணன் என்னும் வழக்கால் இறைவனியல்பு உணர்தல் கூடும்.

The words of those Jains who eat their food from their hands and of those of the Buddhists who wear ochre robes - are not really good. The Supreme God of Thiru-vaanjiyam is free from falsehood. The holy place of Thiru-vaanjiyam is surrounded by groves where the bees in large number gather humming forever. Those devotees who pray to the Lord of Thiru-vaanjiyam, who is the Lord of the whole universe, will get no sufferings at all.

1546. தென்றல்துன்றும்பொழில்சென்றணையுந்திருவாஞ்சியத்
தென்றுநின்றஇறையானையுணர்ந்தடியேத்தலால்
நன்றுகாழிமறைஞானசம்பந்தனசெந்தமிழ்
ஒன்றுமுள்ளமுடையாரடைவாருயர்வானமே. 11

தென்றல் துன்று பொழில் சென்று அணையும் திரு வாஞ்சியத்து
என்றும் நின்ற இறையானை உணர்ந்து அடி ஏத்தலால்,
நன்று காழி மறைஞானசம்பந்தன செந்தமிழ்
ஒன்றும் உள்ளம் உடையார் அடைவார், உயர்வானமே.

ten2Ral tun2Ru pozil cen2Ru aNaiyum tiru vAnjciyattu
en2Rum nin2Ra iRaiyAn2ai uNarntu aTi EttalAl,
nan2Ru kAzi maRai njAn2acampantan2a centamiz
on2Rum uLLam uTaiyAr aTaivAr, uyarvAn2amE.

பொருள்: இனிய தென்றல் காற்று மருவி விளங்கும் பொழில்கள் நிறைந்த திருவாஞ்சியத்தில் பொருந்திய, இறைவனைச் சீர்காழிப் பெருமானாகிய ஞானசம்பந்தர் பாடிப் பரவுகின்றார். அப்பாடல்களை உள்ளம் பொருந்தப் பாடிப் பரவுபவர்கள் வீடு பேற்றைப் பெறுவார்கள் என்க.

விளக்கவுரை: ஞானசம்பந்தப் பெருமானின் திருப்பாடல்கள் செவிக்கு இனிமையும், சிந்தைக்கு நிறைவும் அறிவிற்குத் தெளிவும், ஆன்மாவிற்கு அமைதியும் அளிக்க வல்லன. ஞானப்பால் உண்ட அருளாளர் வழங்கிய பாடல்கள் நம் உள்ளத்துள் இன்பத் தேனாய் இனிக்கட்டும்.

குறிப்புரை: என்றும் நின்ற இறையான் – நித்தியகர்த்தா. செந்தமிழ் – திருப்பதிகம். ஒன்றும் உள்ளம் – ஒன்றியிருந்து நினைக்கும் உள்ளம். இப்பதிகம் ஒன்றும் மனம் என்பதே ஆசிரியர் உட்கோள். வானம் – வீடு.

A pleasant southern wind blows through the rich groves of Thiru-vaanjiyam rendering i8t attractive. Civan, the Lord Supreme, known as Vaanchi-Naatheswarar, resides in this temple forever. Saint Thiru-gnana-Sambandar who hails from Seerkaazhi is an expert in Vedas. He sang the ten pure Tamil verses on the omnipresent Lord at Thiru-vaanjiyam. Those scholars who sing these ten pure Tamil verses, identifying their emotions fully with its meaning, will reach the high celestial world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

7ஆம் பதிகம் முற்றிற்று
End of 7th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 144 *பதிக எண்: 8*

8. திருச்சிக்கல் 8. THIRU-CH-CHIKKAL

பண் : இந்தளம் *Pann: Indhalam*

திருத்தல வரலாறு

வசிட்டர், காமதேனுவின் வெண்ணெயினால் சிவலிங்கத் திருமேனியை எழுந்தருளுவித்துப் பூசித்தார். பூசைமுடிவில் அதை எடுக்க முயன்றபோது, எடுக்கக் கூடாமல் சிக்கிய காரணத்தால் இப்பெயர் பெற்றது. இத்திருத்தலம் நாகப்பட்டினத்திற்கு மேற்கே 8 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் 83ஆவது தலமாகும். திருவாரூர் – நாகப்பட்டினம் பேருந்து வழியில் செல்லும் பேருந்துகளில் சிக்கல் செல்லலாம். இறைவரின் திருப்பெயர் வெண்ணெய்ப்பிரான். இறைவியாரின் திருப்பெயர் வேல்நெடுங்கண்ணி. "சிக்கலுள் வேலவொண் கண்ணியினாளையோர் பாகன் வெண்ணெய்ப்பிரான் பாலவண்ணன் கழலேத்த நம்பாவம் பறையுமே" என இவ்வூர்ப்பதிகத்தில் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் அம்மை, அப்பர் திருப்பெயர்களை எடுத்து ஆண்டிருப்பது பெருமகிழ்ச்சிக்கு உரியதாகும். தீர்த்தம் க்ஷீரபுஷ்கரணி. தலவிருட்சம் மல்லிகை. திருக்கோயில் கட்டுமலையின்மேல் இருக்கின்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்குச் சிங்காரவேலவர் என்று பெயர். இங்குச் சூரசம்ஹார விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தலத்திற்குப் பதிகம் ஒன்றாகும்.

பதிக வரலாறு

ஞானசம்பந்தர் கடல்நாகைக் காரோணத்தை வணங்கி நீங்கிப் பரவிய பதிகள் பல. அவற்றுள் திருச்சிக்கல், திருக்கீழ்வேளூர் முதலியனவும் ஆம். அவற்றைப் பணிந்து பாடிய திருப்பதிகங்களுள் 'வானுலாவுமதி' என்னும் இதுவும் ஒன்று.

திருச்சிற்றம்பலம்

1547. வானுலாவும்மதிவந்துலாவும்மதில்மாளிகை
தேனுலாவும்மலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகந்நினைவார்வினையாயினநையுமே. 1

வான் உலாவும் மதி வந்து உலாவும் மதில் மாளிகை,
தேன் உலாவும் மலர்ச்சோலை, மல்கும் திகழ் சிக்கலுள்
வேனல் வேளை விழித்திட்ட வெண்ணெய்ப் பெருமான் அடி
ஞானம்ஆக நினைவார் வினைஆயின நையுமே.

vAn2 ulAvum mati vantu ulavum matil mALikai,
tEn2 ulAvum malarccOlai, malkum tikaz cikkaluL
vEn2am vELai vizittiTTa veNNeypperumAn2 aTi
njAn2am Aka nin2aivAr vin2ai Ayin2a naiyumE.

பொருள்: வானில் மகிழ்ந்து உலாவுகின்ற சந்திரன், வந்து உலாவுகின்ற திருச்சிக்கல் என்ற திருத்தலத்துள் கோயில் கொண்டுள்ள வெண்ணெய்ப் பெருமானே! நீ, அகன்ற உயர்ந்த மாளிகைகளும் சோலைகளும் நிறைந்த திருச்சிக்கலுள் பொருந்தியுள்ளாய். தன்முனைப்புடன் உன்மீது மலர்களைத் தூவிய மன்மதனை நீ அழித்தாய். உண்மையான அன்பு கொண்டு உன்னை நினைத்து வழிபடுவோர்க்கு அருளுவாய். வழிபடும் எங்களின் வினைகளும் நீங்கப் பெறும்.

குறிப்புரை: வான் உலாவும் மதி – தன்மேல் வந்துலாவும் அளவு உயரிய மாளிகை. 'வண்கொண்டல் விட்டு மதி முட்டுவன மாடம்' என்றார் கம்பர். வேனல் – சினம். வேள் – மன்மதன். விழித்திட்ட – நெற்றிக் கண்ணைத் திறந்து எரித்த. எரித்தவன் வெண்ணெய்ப் பெருமான் என்ற நயம் உணர்க. ஞானமாக நினைவார் – 'பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதி ஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாதநீழற்கீழ் நீங்காதே' (சித்தியார் 292) நினைந்து நிற்பவர். நையும் – நைந்தொழியும்.

It is Civan the Lord residing in the place called Thiru-ch-chikkal, known as Vennaip-piraan. The moon strolls in Thiru-ch-chikkal's sky over the broad, tall and beautiful mansions. The city abounds in gardens that are full of honey filled flowers. In this city the Lord opened His third eye and destroyed the god of love cupid (மன்மதன்). Those devotees who worship You with great wisdom will get Your blessings and their karma will languish.

1548. மடங்கொள்வாளைகுதிகொள்ளும்மணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொள்மாமறையோரவர்மல்கியசிக்கலுள்
விடங்கொள்கண்டத்துவெண்ணெய்ப்பெருமானடிமேவியே
அடைந்துவாழும்மடியாரவரல்லலறுப்பரே. 2

மடம் கொள் வாளை குதிகொள்ளும் மணமலர்ப்பொய்கை சூழ்,
திடம் கொள் மா மறையோர் அவர் மல்கிய சிக்கலுள்
விடம் கொள் கண்டத்து வெண்ணெய்ப்பெருமான் அடி மேவியே
அடைந்து வாழும் அடியார்அவர் அல்லல் அறுப்பரே.

maTam koL vALai kutikoLLum maNamalarp poykai cUz,
tiTam koL mA maRaiyOr avar malkiya cikkaluL
viTam koL kaNTattu veNNeyp perumAn2 aTi mEviyE
aTaintu vAzum(m) aTiyAr avar allal aRupparE.

பொருள்: நீலகண்டனாகிய வெண்ணெய்ப் பெருமானே! நீர், துள்ளிக் குதிக்கும் மீன்கள் நிறைந்து வாழும் பொய்கைகளும் மன அமைதியோடு வழிபாடு செய்யும் மாமறையோர்களும் வாழ்கின்ற திருச்சிக்கல் என்ற திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளீர். உமது திருவடிகளைப் பொருந்தும் அடியார்களுக்கு என்றும் அல்லல் இல்லையாம்.

குறிப்புரை: மடம் – மடப்பம். குதி – குதித்தல். முதனிலைத் தொழிற்பெயர். பொய்கை – இயற்கை நீர்நிலை. திடம் – சிவபெருமானே மெய்ப்பொருட் கடவுள் என்னும் வேதாகம பரத்துவ நிச்சயம். மல்கிய – நிறைந்த. மேவி – விரும்பி. அல்லல் அறுத்தல் – பிறவித் துன்பந் தீர்த்தல்.

It is Civan the Lord who stays in Thiru-ch-chikkal known as Butter Lord. This city is surrounded by ponds of fragrant flowers and the scabbard fish leaping about for food. Here the learned men of Vedas are always of one strong faith on the Lord of this place whose neck is black. The Lord will certainly snap the ties of birth of those devotees who reach His feet.

1549. நீலநெய்தல்நிலவிம்மலருஞ்சுனைநீடிய
சேலுமாலுங்கழனிவ்வளமல்கியசிக்கலுள்
வேலொண்கண்ணியினாளையொர்பாகன்வெண்ணெய்ப்பிரான்
பாலவண்ணன்கழலேத்தநம்பாவம்பறையுமே. 3

நீலம் நெய்தல் நிலவி(ம்) மலரும் சுனை நீடிய
சேலும் ஆலும் கழனி(வ்) வளம் மல்கிய சிக்கலுள்
வேல்ஒண்கண்ணியினாளை ஓர்பாகன், வெண்ணெய்ப்பிரான்
பாலவண்ணன், கழல்ஏத்த, நம் பாவம் பறையுமே.

nIlam neytal nilavi(m) malarum cun2ai nITiya
cElum Alum kazan2i(v) vaLam malkiya cikkaluL
vEl oNkaNNiyin2ALai orpAkan2, veNNeyppirAn2,
pAlavaNNan2, kazal Etta, nam pAvam paRaiyumE.

பொருள்: வேல்விழி கொண்ட இறைவியோடு பொருந்திய பெருமானே! நீலநிற மலர்கள் பொய்கைகளில் நிறைந்துள்ளன. அந்த நெய்தல் நிலத்தில் உள்ள வயல்வெளிகளில் மீன்கள் துள்ளிக் குதிக்கின்றன. இத்தகைய வளம் பொருந்திய இந்தத் திருச்சிக்கல் தலத்தில் கோவில் கொண்டுள்ள வெண்ணெய்ப் பெருமானே! உன் திருவடிகளைத் தொழுது, எங்கள் பாவங்கள் நீங்கப் பெறுவோமாக!

குறிப்புரை: நெய்தல் – நெய்தல் மலர். நிலவி – விளங்கி. ஆலும் – அசையும், துள்ளும், மாலும் என்று கொண்டு மயங்குமெனலுமாம். வேல் – வேல்போன்ற, வேலவொண் கண்ணியினாள் என்றது புதியது. வேல் நெடுங்கண்ணி என்னும் அத்தலத்தின் திருநாமத்தைக் குறித்தது. இவ்வாறு பல திருப்பதிகங்களுட் காணலாம். பிற்காலத்தில் வடமொழிப் பெயராக மாறிய காரணத்தால் சிற்சில பதிகங்களுள் அம்முறை விளங்கவில்லை. பாலவண்ணன் – பால்போலும் வெண்ணிறத்தன். பாலனாந் தன்மையனுமாம். பறையும் – நீங்கும்.

It is Civan the Lord of Thiru-ch-chikkal. This city is surrounded by ponds which contain the nilumboo flowers of blue in large numbers. They incense the ponds. This city also contains plenty of fields, which are filled with leaping fish known as Trichiurus lepturus. In such a fertile landscape of Thiru-ch-chikkal, the white coloured Lord of Butter shares half of His body with the lancer-eyed goddess, Umaa, His consort. If we worship His graceful feet our sins will vanish.

1550. கந்தமுந்தக்கைதைபூத்துக்கமழ்ந்துசேரும்பொழிற்
செந்துவண்டின்னிசைபாடல்மல்குந்திகழ்சிக்கலுள்
வெந்தவெண்ணீற்றண்ணல்வெண்ணெய்ப்பிரான்விரையார்கழல்
சிந்தைசெய்வார்வினையாயினதேய்வதுதிண்ணமே. 4

கந்தம் உந்தக் கைதை பூத்துக் கமழ்ந்து சேரும் பொழில்
செந்து வண்டு இன்இசை பாடல் மல்கும் திகழ் சிக்கலுள்
வெந்தவெண்நீற்று அண்ணல், வெண்ணெய்ப்பிரான், விரை ஆர் கழல்
சிந்தைசெய்வார் வினைஆயின தேய்வது திண்ணமே.

kantam untak kaitai pUttuk kamazntu cErum pozil
centu vaNTu in2icai pATal malkum tikaz cikkaluL
venta veN nIRRu aNNal, veNNeyppirAn2, virai Ar kazal
intaiceyvAr vin2ai Ayin2a tEyvatu tiNNamE.

பொருள்: வெண்ணெய்ப் பெருமானே! நீவிர் கோயில் கொண்டுள்ள திருச்சிக்கல் என்னும் திருத்தலத்தில், எப்பொழுதும் தாழை மணம் கமழ்கிறது. வண்டுகள் இன்னிசை பாடுகின்றன. அடியார்களாகிய நாங்கள் மனநிறைவுடன் உன் புகழைப் பாடிப்பரவி மகிழ்வோம். எங்களது வினைகள் தேய்ந்து மறைந்துவிடும்.

குறிப்புரை: கந்தம் – மணம். முந்த – முற்பட்டுச் சென்று வீசிப்பரவ. கைதை – தாழை. கமழ்ந்து – மணந்து. செந்து – ஒரு பெரும் பண். தி.2. பா. 3. ப. 10 குறிப்பைப் பார்க்க. இசை ஐந்து என்பது சந்து என்றாகிச் செந்து என்று மருவிற்று எனலுமாம். ஜயம் – சயம். செயம். கஜம் – (கசம்) கெசம் என்பன போலப் பலவுள. வெந்த வெண்ணீறு – விதிப்படி கற்பஞ்செய்யப் பெற்ற திருவெண்பொடி. திண்ணம் – உறுதி.

Civan the Lord of Butter stays in Thiru-ch-chikkal. This city is full of seashore groves where the screw pine plants (Pandanus oderatissma) are in plenty. The flowers of this plant spread their sweet fragrance all over the area. Here the beetles' humming is similar to the attractive musical note called Chendu. Our Lord of Butter, the Lord of white ashes resides in this holy city. Those sincere devotees who always ponder over the graceful feet of our Lord of Butter will certainly be relieved of all their sins.

1551. மங்குல்தங்கும்மறையோர்கள்மாடத்தயலேமிகு
தெங்குதுங்கப்பொழிற்செல்வமல்குந்திகழ்சிக்கலுள்
வெங்கண்வெள்ளேறுடைவெண்ணெய்ப்பிரானடிமேவவே
தங்குமேற்சரதந்திருநாளுந்தகையுமே. 5

மங்குல் தங்கும் மறையோர்கள் மாடத்து அயலே மிகு
தெங்கு துங்கப் பொழில் செல்வம் மல்கும் திகழ் சிக்கலுள்
வெங் கண் வெள்ஏறு உடை வெண்ணெய்ப்பிரான்அடி மேவவே
தங்கும், மேன்மை; சரதம் திரு, நாளும், தகையுமே.

magkul tagkum maRaiyOrkaL mATattu ayalE miku
tegku tugkap pozil celvam malkum tikaz cikkaluL
veg kaN veL ERu uTai veNNeyppirAn2 aTi mEvavE,
tagkum, mEn2mai; caratam tiru, nALum, takaiyumE.

பொருள்: வெண்ணெய்ப் பெருமானே! நீவிர் கோயில் கொண்டுள்ள திருச்சிக்கல் தலத்தில் உயர்ந்த மாடங்கள் நிறைந்துள்ளன. அம்மாடங்களில் தென்னை மரச் சோலைகள் பொருந்தியுள்ளன. மறையோர்கள் ஏறுடைப் பிரானாகிய உம்மையே புகழ்ந்து பாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உன் அருட்செல்வம் என்றும் எங்களிடம் பொருந்தும் என்க.

குறிப்புரை: மங்குல் – மேகம். தங்கும் மாடம் என்று சேர்க்க. மறையோர்களது மாடம் என்க. தெங்கு – தென்கு தென்னை என்பதால் அதன் தொல்லுரு விளங்கும். துங்கம் – உயர்ச்சி. ஏறு – விடை. மேல் – மேலானகதி. சரதம் – உண்மை. திரு – இலக்குமி. தகையும் – பொருந்தும். அழகு பெற்றிருக்கும், வீற்றிருக்கும். 'பூவீற்றிருந்த திருமாமகள்' (சிந்தாமணி 30) 'மேன்மை' புதியது. மேற்கதி என்றிருந்ததோ?

It is Civan the Lord of Butter who stays in Thiru-ch-chikkal. Here the men of Vedas live in their tall palaces where the clouds embrace the top of these buildings. The tall coconut trees, which are dense in this area represent the wealth of the people. Here our Lord of Butter mounts the wild eyed white bull to roam about the cosmos. His holy feet are worshipped daily by all the people of this place. Therefore, this place is blessed by goddess Lakshmi, and it will always be known for its prosperity and propriety and gracefulness.

1552. வண்டிரைத்தும்மதுவிம்மியமாமலர்ப்பொய்கைசூழ்
தெண்டிரைக்கொள்புனல்வந்தொழுகும்வயற்சிக்கலுள்
விண்டிரைத்தம்மலராற்றிகழ்வெண்ணெய்ப்பிரானடி
கண்டிரைத்தும்மனமேமதியாய்கதியாகவே. 6

வண்டு இரைத்து(ம்) மது விம்மிய மா மலர்ப்பொய்கை சூழ்,
தெண்திரைக் கொள் புனல் வந்து ஒழுகும் வயல் சிக்கலுள்
விண்டு இரைத்த(ம்) மலரால் - திகழ் வெண்ணெய்ப்பிரான் அடி
கண்டு இரைத்து(ம்) மனமே! மதியாய், கதி ஆகவே!

vaNTu iraittu(m) matu vimmiya mA malarppoykai cUz,
teNtiraik koL pun2al vantu ozukum vayal cikkaluL
viNTu iraitta(m) malarAl-tikaz veNNeyppirAn2 aTi
kaNTu iraittu(m), man2amE! matiyAy, kati AkavE!

பொருள்: வெண்ணெய்ப் பெருமானே! நீவிர் கோயில் கொண்டுள்ள திருச்சிக்கல் தலத்தில் உள்ள பொய்கைகளில் மலர்கள் நிறைந்துள்ளன. வண்டுகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. மலர்களில் உள்ள தேன் பெருகிப் பொய்கைகளிலும் வயல் வெளிகளிலும் நிறைந்து விளங்குகின்றது. அதுபோல் நாங்களும் எங்கள் பிறவிப் பயனைப் பெற்றுச் சிறப்புறுகிறோம் என்க.

குறிப்புரை: இரைத்து – ஒலித்து. விம்மிய – மிக்குச் சொரிந்த. மாமலர் – தாமரைப்பூ. திரை – அலை. விண்டு இரைத்து மலர் – திருமால் அருச்சனை செய்த (பத்திர புட்பங்கள்). இரைத்து – துதி செய்து. மதியாய் – தியானிப்பாய். கதி – சிவகதி. ஆக – எய்தலாக ஆக மதியாய் என்க.

Civan, known as Lord of Butter stays in Thiru-ch-chikkal, which is surrounded by groves and ponds. Here the beetles' humming is always heard in its high pitch. Honey spills from fragrant flowers and all the groves are filled with its profuse flow. Here the crystal like pure water flows into the paddy fields. In such a rich and holy place Vishnu worshipped Lord Butter's holy feet with 1000 flowers. Oh! You my mind! worship and meditate on the holy feet of our Lord of Butter to get salvation from Him.

1553. முன்னுமாடம்மதில்மூன்றுடனேயெரியாய்விழத்
துன்னுவார்வெங்கணையொன்றுசெலுத்தியசோதியான்
செந்நெலாரும்வயற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
உன்னிநீடம்மனமேநினையாய்வினைஓயவே. 7

முன்னு மாடம் மதில்மூன்று உடனே எரிஆய் விழத்
துன்னு வார்வெங்கணை ஒன்று செலுத்திய சோதியான்,
செந்நெல் ஆரும் வயல் சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் அடி
உன்னி நீட(ம்), மனமே! நினையாய், வினைஓயவே!

mun2n2u mATam matil mUn2Ru uTan2E eri Ay vizat
tun2n2u vArvegkaNai on2Ru celuttiya cOtiyAn2,
cennel Arum vayal cikkal veNNeypperumAn2 aTi
un2n2i nITa(m), man2amE! nin2aiyAy, vin2ai OyavE!

பொருள்: வெண்ணெய்ப் பெருமானே! நீவிர், உயர்ந்த மதில்களைக் கொண்ட முப்புரங்களைச் சிரித்தே அழித்த பேராற்றல் பொருந்தியவர். நீவிர் கோயில் கொண்டுள்ள திருச்சிக்கல் தலத்தில் செந்நெல் வயல்கள் பொருந்தியுள்ளன. உம்மையே நாங்கள் எங்கள் மனம் பொருந்த ஓதுவோம். வினை நீங்கப் பெறுவோமாக!

குறிப்புரை: துன்னுகணை, வார்கணை, வெங்கணை என்க. உன்னிநீட – தியானித்து அழியாது வாழ. ஒய்தல் – தேய்ந்தொழிதல்.

Civan, the Lord of Thiru-ch-chikkal is known as Butter Perumaan. Once the Devaas requested Him to protect them from the onslaught of the Asuraas. To save the Devaas, He directed a powerful arrow which burnt completely all the three flying forts of the Asuraas around their high palaces and ramparts. This Lord resides in Thiru-ch-chikkal surrounded by rich, paddy fields. Oh! You mind! If you want to be relieved of previous birth effects think of the Lord Butter, pray well and worship Him.

1554. தெற்றலாகியதென்னிலங்கைக்கிறைவன்மலை
பற்றினான்முடிபத்தொடுதோள்கள்நெரியவே
செற்றதேவன்நஞ்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
உற்றுநீநினையாய்வினையாயினஓயவே. 8

தெற்றல்ஆகிய தென்இலங்கைக்கு இறைவன், மலை
பற்றினான், முடிபத்தொடு தோள்கள் நெரியவே
செற்ற தேவன், நம் சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் அடி
உற்று, நீ நினையாய், வினைஆயின ஓயவே!

teRRal Akiya ten2 ilagkaikku iRaivan2, malai
paRRin2An2, muTipattoTu tOLkaL neriyavE,
ceRRa tEvan2, nam cikkal veNNeyp perumAn2 aTi
uRRu, nI nin2aivAy, vin2ai Ayin2a OyavE!

பொருள்: வெண்ணெய்ப் பெருமானே! சிவபக்தனான இலங்கை வேந்தன் இராவணன் தன்முனைப்பால் தவறிழைத்தான். உமது திருக்கயிலாய மலையினைத் தூக்க நினைந்து துன்புற்றான். அவனையும் இறுதியில் ஆட்கொண்டருளிய சிக்கல் பெருமானே! உம்மை எங்கள் மனம் பொருந்த வழிபட்டு வினைகள் நீங்கப் பெறுவோமாக!

குறிப்புரை: தெற்றல் – அறிவில் தெள்ளியவன். நடைகற்ற தெற்றல் (திவ். பெரியதி. 11.4.9.) மாறுபாடுடையவன் என்பது இக்காலத்தார் கூறிய புதுப்பொருள். அதற்கு ஆதாரமில்லை. இராவணன் ஒழுக்கத்திற் பிழைத்தவனேயாயினும் அறிவிற் சிறந்தவன். செற்ற – (வலியை) அழித்த.

The great Civa devotee of Sri Lanka king Dasakreevan once got frustrated while travelling in his airplane since the Himalayan mountain obstructed his journey. Despite

his knowledge he tried to move the mountain where Lord Civan and His consort resided, a little aside to enable him to proceed on his way. Out Lord Butter of Thiru-ch-chikkal slightly pressed with His toe the top of the mountain. Alas! Dasakreevan got crushed with his ten heads and strong shoulders. He prayed to our Lord to forgive his wrongdoing. He was pardoned by our Lord. Oh! you my mind, if you want to get relieved of evils, always think of our Lord Butter and pray.

1555. மாலினோடருமாமறைவல்லமுனிவனும்
கோலினார்குறுகச்சிவன்சேவடிகோலியும்
சீலந்தாமறியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே. 9

மாலினோடு அருமாமறை வல்ல முனிவனும்
கோலினார் குறுக, சிவன் சேவடி கோலியும்
சீலம் தாம் அறியார் திகழ் சிக்கல் வெண்ணெய்ப்பிரான்
பாலும் பல்மலர் தூவ, பறையும், நம் பாவமே.

mAlin2OTu arumAmaRai valla mun2ivan2um
kOlin2Ar kuRuka, civan2 cEvaTi kOliyum
cIlam tAm aRiyAr; tikaz cikkal veNNeyp pirAn2
pAlum palmalar tUva, paRaiyum, nam pAvamE.

பொருள்: வெண்ணெய்ப் பெருமானே! உம்மை உணராமல் திருமாலும், மறை ஓதும் பிரமனும் உம்மைக் காண முயன்றனர். முடியாமல் தோற்றனர். நீரோ எல்லோருக்கும் அருள் திருச்சிக்கல் தலத்துள் எழுந்தருளி உள்ளீர்! உம்மை அன்பால் பால் அபிடேகம் செய்து பூசித்தும் மலரிட்டுப் போற்றிப் பூசனை செய்யும் நாங்கள் எங்களின் பாவங்கள் நீங்கப் பெறுவோமாக!

குறிப்புரை: மால் – திருமால். முனிவன் – பிரமன். சிவன் சேவடி குறுகக் கோலினார். கோலியும் அறியார் என்க. கோலுதல் – வழி வகுத்தல். அடிமுடிதேட மாறிமுயலுதல். இங்குக் கோலுதலாம். சீலம் – பரமசிவன் மெய்த்தன்மை. பால் – பக்கம் – பசும்பாலும், மலரும் என்று உம்மைக் கூட்டிப் பாலும் மலரும் என்க. பாலபிடேகம் புரிய. பறையும் – நீங்கும்.

Maha Vishnu and Brahma did their best to pursue to see the holy feet and head of Civa, but failed. But He is there in Thiru-ch-chikkal as Lord of Butter. If we worship

Him by giving Him a sacred bath with milk and offer at His holy feet various good flowers our sins will vanish.

1556. பட்டைநற்றுவராடையினாரொடும்பாங்கிலாக்
கட்டமண்கழுக்கள்சொல்லினைக்கருதாதுநீர்
சிட்டன்சிக்கல்வெண்ணெய்ப்பெருமான்செழுமாமறைப்
பட்டன்சேவடியேபணிமின்பிணிபோகவே. 10

பட்டை நல்-துவர்ஆடையினாரொடும் பாங்கு இலாக்
கட்டு அமண்கழுக்கள் சொல்லினைக் கருதாது, நீர்,
சிட்டன், சிக்கல், வெண்ணெய்ப்பெருமான், செழுமாமறைப்
பட்டன், சேவடியே பணிமின், பிணி போகவே!

paTTai nal-tuvar ATaiyin2AroTum pAgku ilAk
kaTTu amaNkazukkaL collin2aik karutAtu, nIr,
ciTTan2, cikkal veNNeypperumAn2, cezumAmaRaip
paTTan2, cEvaTiyE paNimin2, piNi pOkavE!

பொருள்: வெண்ணெய்ப் பெருமானே! துவராடை கொண்ட சமணர்களும், சாக்கியர்களும் உம்மை உணராமல் தேவையற்ற சொற்களையே சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் இன்னாத மொழிகளை நாங்கள் ஏற்க மாட்டோம். திருச்சிக்கல் தலத்தில் கோயில் கொண்டுள்ள உமது திருவடிகளை இனிய மொழி கூறியே வழிபாடு செய்வோம். எங்களது பிறவிப் பிணிகள் நீங்கப் பெறுவோமாக.

குறிப்புரை: பட்டை நற்றுவராடையினார் – சாக்கியர். துவர் – செந்நிறம். காவியேறியது. பட்டை என்பது துவர்ப்பட்டை. நிறம் துணிக்கு ஊட்டும் வழக்கம் நினைவூட்டும். பாங்கிலாமை – முறையற்ற பண்பு. கட்டு – உடற்கட்டு. கழுக்கள், கழுவேறுதற்குற்ற அபசாரம் செய்தவர்கள். அமண் – சமண், க்ஷமண் என்பதன் திரிபு. சிட்டன் – வேதாகமம் வல்ல பெருமான். சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் (தி. 1 ப. 80 பா 10) பட்டன் – புலவன். தன்னைத்தானே அருச்சித் தானாதலின் அருச்சகன் எனினும் பொருந்தும். 'ஆலநிழற் பட்டன்' (திருப்பல்லாண்டு) என்ற தால் ஆசாரியனுமாம். ஏகாரம் – பிரிநிலை. பிணி – பிறவிப் பெரும் பிணி முதலிய பலவுமாம்.

Oh! you staunch devotees, do not pay heed to the words of Buddhists who wear ochre robes on their body and to those of the Jains who receive and eat their food from their hands. You may come here to Thiru-ch-chikkal where our Lord of Butter, the embodiment of the Vedas rules. Worship His holy feet with all sincerity and be rid of the affliction of birth.

1557. கந்தமார்பொழிற்காழியுள்ஞானசம்பந்தனல்
செந்தண்பூம்பொழிற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடிச்
சந்தமாச்சொன்னசெந்தமிழ்வல்லவர்வானிடை
வெந்தநீறணியும்பெருமானடிமேவரே. 11

கந்தம் ஆர் பொழில் காழியுள் ஞானசம்பந்தன், நல்
செந் தண்பூம்பொழில் சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் அடிச்
சந்தமாச் சொன்ன செந்தமிழ் வல்லவர் வான்இடை
வெந்தநீறு அணியும் பெருமான் அடி மேவரே.

kantam Ar pozil kAziyuL njAn2acampantan2, nal
cen taNpUmpozil cikkal veNNeypperumAn2 aTic
cantamAc con2n2a centamiz vallavar, vAn2 iTai
venta nIRu aNiyum perumAn2 aTi mEvarE.

பொருள்: வெண்ணெய்ப் பெருமானே! நறுமணம் மிக்க பொழில்களால் நிறைந்து விளங்கும் சீர்காழிப் பதியில் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமான், பொழில் சூழ்ந்த திருச்சிக்கல் தலத்தில் கோவில் கொண்டுள்ள உம்மைச் செந்தமிழ் மணம் பொருந்தப் பாடியுள்ளார். அதனை நாங்கள் மனம் பொருந்த இசையுடன் பாடி, உமது திருவடிகளை அடைவோமாக.

குறிப்புரை: சந்தம் – இசை. செந்தமிழ் – இத்திருப்பதிகத்தை உணர்த்திற்று. வான் – பேரின்ப வீட்டுலகு. தேவாரத்தில் 'வான்' என்று வரும் இடங்களிற் பெரும்பாலும் இப்பொருளே கொள்ளல் வேண்டும். 'வானிடை அடிமேவர்' என்றதால் துறக்கம் ஈண்டுப் பொருந்தாமை அறிக. 'கேடிலா வானுலகம்', 'தூயவிண்' 'வானசம்பந்தத் தவரொடும் மன்னி வாழ்வாரே' என்ற திருமுறை வசனங்களை நோக்குக.

Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi which is surrounded by many big gardens of sweet smelling flowers. He ably recited these melodious blessed Tamil verses on Lord of Butter. He stays in Thiru-ch-chikkal temple which is encircled by cool flowery gardens. Oh my mind! concentrate on His holy feet and repeat the song of Thiru-gnana-Sambandar, you will then reach the holy feet of our Lord of Butter smeared with white ashes, in heaven.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

8ஆம் பதிகம் முற்றிற்று
End of 8th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 145 *பதிக எண்: 9*

9. திருமழபாடி 9. THIRU-MAZHA-PAADI

பண் : இந்தளம் *Pann: Indhalam*

திருத்தல வரலாறு

சேரர் கிளையினராகிய மழவர் பாடி செய்து கொண்டிருந்தமையால் இப்பெயர் பெற்றது. பாடி – தங்குமிடம். பாடி எனினும் பாசறை எனினும் ஒக்கும். சிவபெருமான் மழுநிர்த்தஞ் செய்த தலமாதலால் மழுவாடி ஆயிற்று என்பர்.

இது திருவையாற்றிற்கு வடமேற்கே சுமார் 6 கி. மீ. தூரத்தில் கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் இருக்கின்றது. அரியலூர், திருவையாறு, திருச்சியிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. இது காவிரி வடகரைத் தலங்களுள் ஒன்று. இறைவரின் திருப்பெயர் வயிரத்தூண் நாதர். இத்திருப்பெயரை, இவ்வூர்த் திருத்தாண்டகத்தில் அப்பர் பெருமான், "மலையடுத்த மழபாடி வயிரத்தூணே", "மறை கலந்த மழபாடி வயிரத் தூணே" முதலான தொடர்களில் எடுத்து ஆண்டுள்ளனர். இதை வடமொழியில் வஜ்ரஸ்தம்பேசுவரர் என்று கூறுவர். பிரமனுலகத்திருந்த சிவலிங்கத்தைப் புருஷாமிருகம் இங்குக் கொண்டு வந்து எழுந்தருளுவித்தது. அதை மீளவும் கொண்டு போதற்காகப் பிரமதேவர் அதைப் பெயர்த்து எடுக்க முயன்றார். அதை எடுக்க முடியாத பிரமன், 'இது வயிரத் தூணோ' என்று வியந்தமையால் இப்பெயர் பெற்றது. இறைவியாரின் திருப்பெயர் அழகம்மை. தீர்த்தம் கொள்ளிடப் பேராறு. தலவிருட்சம் பனை.

இந்திரன், திருமால் இவர்கள் வழிபட்டுப் பேறு எய்தினர். திருநந்தி தேவர் திருவையாற்றிலிருந்து எழுந்தருளி – சுயசை அம்மையாரை மணஞ்செய்து கொண்ட தலம். சுந்தரமூர்த்தி நாயனார், திருவாலம்பொழிலில் எழுந்தருளியிருக்க, மழபாடி இறைவன், அவரது கனவில் தோன்றி, 'மழபாடிக்கு வர மறந்தனையோ' என்று கூற, உடனே சுந்தரர், 'பொன்னார் மேனியனே' என்று தொடங்கும் பதிகம் பாடி வழிபட்ட பதி. திருஞான சம்பந்தர் பதிகம் மூன்று, திருநாவுக்கரசு நாயனார் திருத்தாண்டகப் பதிகம் இரண்டு, சுந்தர மூர்த்தி நாயனார் பதிகம் ஒன்று ஆக ஆறு பதிகங்களைக் கொண்ட பெருமை உடையது. இத்தலத்திற்கு ஸ்ரீ கமலை ஞானப் பிரகாச தேசிகர் அவர்களால் இயற்றப்பட்ட தலபுராணம் ஒன்று இருக்கின்றது. அது இனிய எளிய தமிழ் நூல். அச்சில் வெளிவந்துள்ளது. நந்தியெம்பெருமானின் திருமணத் திருவிழா ஆண்டு தோறும் பங்குனி மாதத்தில் நடைபெறுகின்றது.

பதிக வரலாறு

கைத்தாளம் பெற்ற கவுணியர் பெருமான் நெய்த்தானப் பதியினின்று, திருமழபாடியைச் சேர்ந்து, 'மங்கைவாழ் பாகத்தார் மழபாடி தலையினால் வணங்குவார்கள் பொங்கு மாதவமுடையார்' எனத் தொழுது போற்றிசைத்துக் கோயிலுட் புக்கு வலங்கொண்டு வழிபட்டு வயிரமணித் தூணைக் கும்பிட்டுப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1558. களையும்வல்வினையஞ்சல்நெஞ்சேகருதார்புரம்
உளையும்பூசல்செய்தானுயர்மால்வரைநல்விலா
வளையவெஞ்சரம்வாங்கியெய்தான்மதுத்தும்பிவண்
டளையுங்கொன்றையந்தார்மழபாடியுளண்ணலே. 1

களையும், வல்வினை; அஞ்சல், நெஞ்சே! கருதார் புரம்
உளையும் பூசல் செய்தான்; உயர்மால்வரை நல் விலா
வளைய வெஞ்சரம் வாங்கி எய்தான் - மதுத் தும்பிவண்டு
அளையும் கொன்றைஅம்தார் மழபாடியுள் அண்ணலே.

kaLaiyum, valvin2ai; anjcal, nenjcE! karutAr puram
uLaiyum pUcal ceytAn2; uyarmAlvarai nal vilA
vaLaiyA venjcaram vAgki eytAn2--matut tumpivaNTu
aLaiyum kon2Rai amtAr mazapATiyuL aNNalE.

பொருள்: மழபாடியுள் அண்ணலே! நீவிர் உம்மை வணங்காமல் பகைமை கொண்ட முப்புரத்து அசுரர்களை மேருமலையை வில்லாக வளைத்து, சரமும் தொடுக்க முயன்று முடிவில் சிரித்தே அதனை அழித்தருளிய பெருமைக்கு உரியவர் ஆவீர்! முப்புரம் அழித்தல் என்பது மும்மல அழிவுதானே! எனவே நாங்கள் எங்கள் வினை நீக்குதல் பற்றி அஞ்சமாட்டோம். வண்டுகள் நிறைந்த கொன்றை மாலை அணிந்த உம் திருவடிகளையே வணங்கி வினை நீங்கப் பெறுவோமாக!

குறிப்புரை: நெஞ்சே, அஞ்சல், வல்வினையை மழபாடி அண்ணல் களைவான் என்க. விற்பூட்டுப் பொருள்கோள். கருதார் – பகைவர் (திரிபுரத்து அசுரர்). உளையும் – வருந்தும். பூசல் – போர். வரை – மேரு மலையாகிய வில். விலா – வில்லாக. சரம் – பாணம் (திருமாலாகிய கணை). மது – கள். தும்பி வண்டு – வண்டினங்கள். அளையும் – துழாவும். தார் – மாலை. மழபாடி – மழுவாடி என்பதன் மரூஉ என்பர். அண்ணல் – பெருமான்.

Oh! My heart; you need not be afraid of the evils of the previous karma. Why should you? Here is our great Lord of Thiru-mazha-paadi. Do not you know His ability? He bent the high Meru mountain as a bow and shot an arrow and destroyed the three great forts of Asuraas. He is garlanded with the nectarfilled cassia flowers with bees meddling inside. He is our saviour. Therefore worship Him without fear of karma.

1559. காச்சிலாதபொன்னோக்குங்கனவயிரத்திரள்
ஆச்சிலாதபளிங்கினனஞ்சுமுன்னாடினான்
பேச்சினாலுமக்காவதென்பேதைகாள்பேணுமின்
வாச்சமாளிகைசூழ்மழபாடியைவாழ்த்துமே. 2

காச்சிலாத பொன் நோக்கும் கன வயிரத்திரள்
ஆச்சிலாத பளிங்கினன்; அஞ்சும் முன் ஆடினான்;
பேச்சினால் உமக்கு ஆவது என்? - பேதைகாள்; பேணுமின்!
வாச்ச மாளிகை சூழ் மழபாடியை வாழ்த்துமே!

kAccilAta pon2 nOkkum kan2a vayirattiraL
AccilAta paLigkin2an2; anjcum mun2 ATin2An2;
pEccin2Al umakku Avatu en2?--pEtaikAL, pENumin2!
vAcca mALikai cUz mazapATiyai vAzttumE!

பொருள்: மழபாடி அண்ணலே! நீவிர் ஒளிமிக்க பொன்னும், உறுதியான வைரமும், தெளிந்த பளிங்கும் போன்று விளங்குகின்றீர்! பஞ்ச கவ்வியத்தை விரும்பி ஆடுகின்றீர்! வாசனைமிக்க மழபாடித் திருத்தலத்தில் உறைகின்றீர்! உம்மை வாழ்த்துவது ஒன்றே எம் வாழ்வின் பயனாம் என்க.

குறிப்புரை: பேதைகாள் – அறிவிலிகளே. பேச்சினால் – சிவசம்பந்தமில்லாத அவப்பேச்சால். உமக்கு ஆவதென் – உமக்கு ஆவது யாது? மழபாடியைப் பேணுங்கள். வாழ்த்துங்கள் என்க. காய்ச்சு – தீயிலிட்டுச் சுடல். காய்ச்சிலாத – காய்த்தல் இல்லாத. காய்ச்சு – காச்சு. முதனிலைத் தொழிற்பெயர். பிள்ளைத்தாய்ச்சி – பிள்ளைத்தாச்சி என்பது போல மருவிற்று. காய்ச்சப் பெறாத இயற்கையில் ஒளிரும் பொன் என்றபடி. பொன் – தேவியார். நோக்கும் – பார்க்கும். கன வயிரத்திரள் – இறைவன் திருத்தோள்களைக் குறித்த உவமையாகுபெயர். இறைவன் திருநாமம் வச்சிரத்தம்ப நாதர் என்பதாகும். மகளிர்க்கு ஆடவர் தோள் நோக்கலும், ஆடவர்க்கு மகளிர் கொங்கை நோக்கலும் இயல்பு (பார்க்க: கம்பர், மிதிலைக் காட்சிப் பா. 36). ஆய்தல் – நுணுக்கம். ஆய்த்தல் – நுணுக்கம் புரிதல். பளிங்கு – தன்பாற்

பட்டதை நுணுக்கஞ் செய்யாது புறத்தே விளங்கச் செய்வது. அதனால் ஆச்சிலாத பளிங்கு என்றனர். சிவபெருமானைத் 'தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே' என்றார் திருமாளிகைத் தேவர். அஞ்சு – ஆனைந்து. ஆடினானது மழபாடியை என்க. வாச்ச – (இலக்கணமெல்லாம்) வாய்க்க.

Oh! You the ignorant devotees! what is the use of mere chatting? Come and praise our Lord at Mazhapadi temple surrounded by palaces. He is like unmelted pure gold. He is also like hard diamond heap. Also He is like a huge crystal devoid of impurity. He is pleased to be bathed with the five things collected from the cow such as milk, curd, ghee, cow's urine and cow dung. You devotees always praise His name.

1560. உரங்கெடுப்பவனும்பர்களாயவர்தங்களைப்
பரங்கெடுப்பவன்நஞ்சையுண்டுபகலோன்றனை
முரண்கெடுப்பவன்முப்புரந்தீயெழச்செற்றுமுன்
வரங்கொடுப்பவன்மாமழபாடியுள்வள்ளலே. 3

உரம் கெடுப்பவன், உம்பர்கள் ஆயவர் தங்களை;
பரம் கெடுப்பவன், நஞ்சை உண்டு; பகலோன்தனை
முரண் கெடுப்பவன்; முப்புரம் தீ எழச் செற்று, முன்,
வரம் கொடுப்பவன் - மா மழபாடியுள் வள்ளலே.

uram keTuppavan2, umparkaL Ayavar tagkaLai;
param keTuppavan2, nanjcai uNTul pakalOn2tan2ai
muraN keTuppavan2, muppuram tI ezac ceRRu, mun2,
varam koTuppavan2--mA mazapATiyuL vaLLalE.

பொருள்: மழபாடி வள்ளலே! நீவிர் பகைமை கொண்டவர்களை அழிப்பவர் ஆவீர்! வணங்கியவர்களுக்கு உரம் கொடுப்பவர் ஆவீர்! சூரியனின் பற்களை உடைத்து முப்புரங்களையும் எரித்தவர் ஆவீர்! நஞ்சை உண்டு உலகைக் காத்தவர் ஆவீர். மழபாடி வள்ளலே! உம்மை வாழ்த்தி வணங்குகின்றோம்.

குறிப்புரை: உரம் – வலிமை. உம்பர்கள் – தக்கன் வேள்வியிற் கலந்த தேவர்கள். பரம் – தேவத்தன்மை; திவ்வியம். பகலோன் முரண் கெடுப்பவன் – சூரியன் பல்லைத் தகர்த்தவன். வரம் – மூவர்க்குத் தந்த வரம். வள்ளல் – எவ்வுயிர்க்கும் எப்பொருளும் எப்பொழுதும் அருள்வோன். மழபாடிப் பெருமானது திருநாமம் வள்ளல் என்பதும் (தி. 2 ப. 9 பா. 4, 8, 11) வயிரத்திரள் (தி. 2 ப. 9 பா. 2) என்பதும் ஆதலறிக.

Civan, residing in the temple at Thiru-mazha-paadi, is called Vaidianaathar. He destroyed the three flying fortresses of the Asuraas by holding the big majestic Meru mountain on His head as His bow and shot at the fortresses and destroyed everyone of them along with their palaces. However He saved the three Asuraas who worshipped Him always. They were known as

1. Thaarakashan (Sudarman)
2. Kamalakshan (Suneethi)
3. Vidyunmaali (Subuththi)

Lord Vaidyanathar gave the three their second names and kept them in His temple as entrance bodyguards and the third one as a drum musician for Him. Civan eliminated all demons and others during Thakkan's ablations in his sacrificing hall through Veerabadran His guard. It is He who drank the poison from sea of milk and saved the Devaas and the whole humanity. He subdued the brightness of the sun god. Ye! He blesses all who bow at His feet and pray forever.

1561. பள்ளமார்சடையிற்புடையேயடையப்புனல்
வெள்ளமாதரித்தான்விடையேறியவேதியன்
வள்ளல்மாமழபாடியுள்மேயமருந்தினை
உள்ளமாதரிமின்வினையாயினஓயவே. 4

*பள்ளம் ஆர் சடையில் புடையே அடையப் புனல்-
வெள்ளம் ஆதரித்தான், விடை ஏறிய வேதியன்,
வள்ளல், மா மழபாடியுள் மேய மருந்தினை
உள்ளம் ஆதரிமின் வினைஆயின ஓயவே!*

paLLam Ar caTaiyin2 puTaiyE aTaiyap pun2al-
veLLam AtarittAn2, viTai eRiya vEtiyan2,
vaLLal, mA mazapATiyuL mEya maruntin2ai
uLLam Atarimin2, vin2ai Ayin2a OyavE!

பொருள்: மழபாடி வள்ளலே! நீவிர் விடையின்மீது அமர்ந்து அருளுவீர். சடையில் கங்கையைத் தாங்கி அதற்கும் சிறப்பு அருளுவீர்! திருமழபாடியுள் அமர்ந்த அண்ணலாகிய உமது திருவடிகளை நாங்கள் வணங்கி எங்கள் வினை நீங்கப் பெறுவோமாக!

குறிப்புரை: பள்ளம் – சடைமுடி நடுவிற்பொருந்திய குழிவு. பள்ள மார்புனல் வெள்ளம் (கங்கைப் பெருக்கம்) எனலுமாம். மேய – மேவிய. விரும்பிய. மருந்து – பிறவிப் பிணிக்கொரு பெருமருந்து.

உள்ளம் – மனம். ஆதரிமின் – விரும்புங்கள். வாயாலுண்ணும் மருந்தன்று. "உன்னுமுள தைய மிலதுணர்வாய் ஓவாது மன்னுபவம் தீர்க்கும் மருந்து" (திருவருட்பயன் 10) என்றபடி நினைக்கும் மருந்து.

Oh Lord of Thiru-mazha-paadi! You ride on Your bull and roam all over the cosmos blessing one and all. You have kept the lady of powerful water, the Ganges on Your matted hair. He is the embodiment of Vedic knowledge. He is the most benevolent, the great medicine - for sufferings of humanity, as His name Vaidyanaathar suggests. Oh! You devotees if you want to be relieved of all evils you may meditate the holy feet of the Lord of Thiru-mazha-paadi.

1562. தேனுலாமலர்கொண்டுமெய்த்தேவர்கள்சித்தர்கள்
பால்நெயஞ்சுடனாட்டமுன்னாடியபால்வணன்
வானநாடர்கள்கைதொழுமாமழபாடியெங்
கோனைநாள்தொறுங்கும்பிடவேகுறிகூடுமே. 5

தேன்உலா மலர் கொண்டு, மெய்த்தேவர்கள், சித்தர்கள்,
பால்நெய்அஞ்சு உடன்ஆட்ட, முன்ஆடிய பால்வணன் -
வானநாடர்கள் கைதொழு - மா மழபாடி எம்
கோனை நாள்தொறும் கும்பிடவே, குறி கூடுமே.

tEn2 ulAm malar koNTu, meyt tEvarkaL, cittarkaL,
pAl ney anjcu uTan2 ATTa, mun2 ATiya pAlvaNan2--
vAn2a nATarkaL kaitozu--mA mazapATi em
kOn2ai nALtoRum kumpiTavE, kuRi kUTumE.

பொருள்: மழபாடி அண்ணலே! தேன்நிறைந்த மலர் கொண்டு உம்மைத் தேவர்களும் சித்தர்களும் வணங்குகிறார்கள். பால், நெய் முதலிய பஞ்சகவ்வியம் கொண்டு அபிஷேகம் செய்து, போற்றி வழிபடுகிறார்கள். நாங்களும் அவர்களைப் போன்று, உம்மைப் போற்றி வணங்கி உம் திருவடிப் பேற்றை அடைவோமாக!

குறிப்புரை: மெய்த்தேவர்களும் சித்தர்களும் தேன்செரியும் பூக்களைக் கொண்டு பாலும் நெய்யும் தயிருமாகிய ஆனைந்தும் அபிடேகிக்க ஆடிய பால்வண்ணன். ஆடிய – அபிடேகிக்கப் பெற்ற. நடனமாடிய வானநாடர்கள் – துறக்கத்தில் வாழ்பவர்கள். அம்மெய்த் தேவர்வேறு இவர் வேறு. கோன் – தேவாதி தேவேசன். குறிகூடல் – 'அறிவதொரு குறி குருவினருளினா லறிந்து மன்னு சிவன்றனை யடைந்து' நிற்றலும், 'குறியொடு தாம் அழியும் நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுத'லும் பின்பு வாய்ப்பன.

'குறியதனால் இதயத்தே அரனைக்கூடு'தலே ஈண்டுக் குறித்தது. "அருள் ஞானக்குறியில் நின்று கும்பிட்டுத் தட்டம் இட்டுக் கூத்தாடித் திரி" என்று விதித்தமை உணர்க.

Behold! It is Civan the Lord of Thiru-mazha-paadi who is given His sacred bath by angels and sages with milk and ghee and other things five collected from the cow. They bring nectarfilled of flowers also and offer them at His holy feet. All the celestials raise their hands and offer their prayers. Ye devotees! if you also do so it is certain that you will get salvation.

1563. தெரிந்தவன் புரமூன்றுடன்மாட்டியசேவகன்
பரிந்துகைதொழுவாரவர்தம்மனம்பாவினான்
வரிந்தவெஞ்சிலையொன்றுடையான்மழபாடியைப்
புரிந்துகைதொழுமின்வினையாயினபோகுமே. 6

தெரிந்தவன், புரம்மூன்று உடன்மாட்டிய சேவகன்,
பரிந்து கைதொழுவார் அவர்தம் மனம் பாவினான்,
வரிந்த வெஞ்சிலை ஒன்று உடையான், மழபாடியைப்
புரிந்து கைதொழுமின்! வினைஆயின போகுமே.

terintavan2, puram mUn2Ru uTan2mATTiya cEvakan2,
parintu kaitozuvAr avartam man2am pAvin2An2,
varitta venjcilai on2Ru uTaiyAn2, mazapATiyaip
purintu kaitozumin2! vin2ai Ayin2a pOkumE.

பொருள்: மழபாடி அண்ணலே! நீவிர் முப்புரங்கள் மூன்றையும் ஒன்றாக அழித்தவர். அன்பு கொண்ட அடியவர்களின் உள்ளங்களில் பொருந்தியவர். மேரு மலையை வில்லாக வளைத்த பேராற்றலை உடையவர். மழபாடியுள் பொருந்தியுள்ள உம்மைத் தொழுது நாங்கள் எங்களுடைய வினைகள் நீங்கப் பெறுவோமாக!

குறிப்புரை: தெரிந்தவன் – சருவஞ்ஞன். முற்றுணர்வுடையவன். தெரிந்த வன்மை, புரம் என்றல் அமையாது. மாட்டிய – மாள்வித்த, தீயை மாட்டிய எனலுமாம். சேவகன் – வீரன், பரிந்து – அன்பு கொண்டு. பாவினான் – பரவியவன். வரிந்த – கட்டிய. சிலை – மேருவில். புரிந்து – விரும்பி வினையாயின – பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம் என்னும் மூன்றும், அவற்றின் உட்பட்ட பல்வகையும் ஆகிய கர்மங்கள்.

Behold! It is Civan the Lord of Thiru-mazha-paadi who like a valiant soldier had a mountain bow in His hand and burnt the three flying fortresses of the Asuraas and destroyed them and helped devaas to be saved from the onslaught of Asuraas. He abides in the hearts of His devotees who pray to Him with all sincerity. You the devotees - if you want to be relieved of all the three sorts of karma bow at His feet with all earnestness.

1564. சந்தவார்குழலாளுமைதன்னொருகூறுடை
எந்தையானிமையாதமுக்கண்ணினனெம்பிரான்
மைந்தன் வார்பொழில்சூழ்மழபாடிமருந்தினை
சிந்தியாவெழுவார்வினையாயின தேயுமே. 7

சந்த வார்குழலாள் உமை தன் ஒருகூறு உடை
எந்தையான், இமையாத முக்கண்ணினன், எம்பிரான்,
மைந்தன், வார் பொழில் சூழ் மழபாடி மருந்தினை
சிந்தியா எழுவார் வினை ஆயின தேயுமே.

canta vArkuzalAL umai tan2 oru kURu uTai
entaiyAn2, imaiyAta mukkaNNin2an2, empirAn2,
maintan2, vAr pozil cUz mazapATi maruntin2aic
cintiyA ezuvAr vin2ai Ayin2a tEyumE.

பொருள்: மழபாடி அண்ணலே! நீவிர் மணமிக்க கூந்தலைக் கொண்ட உமையாளை உடம்பின் ஒருபாகமாகக் கொண்டவர் ஆவீர்! எங்களுக்குத் தந்தை ஆவீர்! மூன்று திருக்கண்களைக் கொண்டவர் ஆவீர்! சோலைகள் நிறைந்த திருமழபாடித் தலத்துள் பொருந்தி இருப்பவர் ஆவீர்! வைத்திய நாதராகிய உம்மை, மனமொழி மெய்கள் பொருந்தத் தொழுது எங்களது வினைகள் நீங்கப் பெறுவோமாக.

குறிப்புரை: சந்தம் – அழகு. வார் – நீளம், ஒழுகுதல். கூறு – இடப்பால். எந்தையான் – எம் அப்பன். முக்கண்ணினன் – சோம சூரியாக்கினி நேத்திரங்களை உடையவன். மழபாடி மருந்து – திருமழபாடியில் உள்ள பவரோக வைத்தியநாதன். இம்மருந்து உடற்கின்றி உயிர்க்காதலின், உண்ணலின்றி உன்ன நினைத்தலுக்குரியதால் எழுவார் என்றார். சிந்தியா – சிந்தித்து, நினைத்து, செய்யா என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். வடசொற் பகுதியடியாகப் பிறந்தது.

It is Civa, the Lord of Thiru-mazha-paadi. Our Lord shares His body with His consort Umaa of fragrant hair. He is our Father. He has three winkless eyes. The third

one is in His forehead. He is the great God of, medicine of sinlessness. Those who contemplate on His greatness and pray to Him will shed off the evil effects of karma.

1565. இரக்கமொன்றுமிலானிறையான்திருமாமலை
உரக்கையாலெடுத்தான்றனதொண்முடிபத்திற
விரற்றலைந்நிறுவியுமையாளொடுமேயவன்
வரத்தையே கொடுக்கும்மழபாடியுள் வள்ளலே. 8

இரக்கம் ஒன்றும் இலான், இறையான் திருமாமலை
உரக் கையால் எடுத்தான் தனது ஒண் முடிபத்து இற
விரல்-தலை(ந்) நிறுவி, உமையாளொடு மேயவன் -
வரத்தையே கொடுக்கும் மழபாடியுள் வள்ளலே.

irakkam on2Rum ilAn2, iRaiyAn2 tirumAmalai
urak kaiyAl eTuttAn2 tan2atu oN muTipattu iRa
viral-talai(n) niRuvi, umaiyALoTu mEyavan2--
varattaiyE koTukkum mazapATiyuL vaLLalE.

பொருள்: மழபாடி வள்ளலே! இரக்கமற்ற இராவணன் உமது கயிலை மலையைத் தனது ஆற்றலால் எடுக்க முயன்றான். அவனது பத்துத் தலைகளும் துன்பம் அடைய நீவிர் உமது திருவிரலை ஊன்றினீர்! இறுதியில் அருளும் புரிந்து உமையாளோடு பொருந்தி விளங்கினீர். அருளும் உம்மை நாங்கள் வணங்கி மகிழ்வோமாக.

குறிப்புரை: இரக்கம் – பக்தி. இறையான் – சிவபிரான். மலை – கயிலாயம். உரம் – வலிமை. இலான், எடுத்தான், மேயவன் மூன்றும் வினையாலணையும் பெயர்கள். ஒள்முடி – ஒளியுடைய முடிகள். இற – இற்றொழிய. விரல் – ஈண்டு. காற்பெருவிரல் மட்டும். நிறுவி – ஊன்றி, ஊன்றியதும் கருணைப் பொருட்டாதலை வரத்தையே கொடுக்கும் என்றதாலறிக (தி.2. ப.9. பா.3, 4, 8, 11) வள்ளல் என்றதும் 'வரங்கொடுப்பவன்' 'வரத்தையே கொடுப்பான்' என்றதும் அறியின், சிவதலயாத்திரைக் கருத்தும் பயனும் விளங்கும்.

Behold! It is Civan who is in the temple at Thiru-mazha-paadi. The king of Sri Lanka, great devotee of Lord Civan, once became merciless and demonish in habits. He tried to lift mount Kailash without minding Lord Civan and His consort who stayed on the mountain top. Lord Vaidyanaathar pressed His toe slightly on the hill. The ten heads and shoulders of Raavanaa got crushed. He realised his fault and cried. Then he prayed to our Lord who bestowed His mercy on him along with goddess Uma. He is

our Lord at Thiru-mazha-paadi, who always gives boons along with His consort to His devotees.

1566. ஆலமுண்டமுதம்மரர்க்கருளண்ணலார்
காலனாயிருவீட்டியமாமணிகண்டனார்
சாலநல்லடியார் தவத்தார்களுஞ்சார்விடம்
மாலயன் வணங்கும்மழபாடியெம்மைந்தனே. 9

ஆலம் உண்டு அமுதம்(ம்) அமரர்க்கு அருள் அண்ணலார்,
காலன் ஆர்உயிர் வீட்டிய மா மணிகண்டனார் -
சால நல் அடியார் தவத்தார்களும் சார்வுஇடம்,
மால் அயன் வணங்கும், மழபாடி எம் மைந்தனே.

Alam uNTu amutam(m) amararkku aruL aNNalAr,
kAlan2 Ar uyir vITTiya mA maNikaNTan2Ar--
cAla nal aTiyAr tavattArkaLum cArvu iTam,
mAl ayan2 vaNagkum, mazapATi em maintan2E.

பொருள்: மழபாடி மாமணியே! நீவிர் ஆலத்தை உண்டு அமுதத்தை வழங்கியவர்! காலனைக் காலால் உதைத்து அருளியவர்! விடத்தைக் கண்டத்தில் அடக்கிய நீலகண்டர்! அன்புடை அடியார்களாலும் தவத்தோர்களாலும் வணங்கப் பெற்றவர். திருமாலும் பிரமனும் தேவர்களும் போற்றும் உம்மை நாங்களும் போற்றி வணங்குவோமாக.

குறிப்புரை: தான் உண்டது நஞ்சு. அமரர் (தேவர்)க்கு அருளியது அமுதம். ஆயினும் நஞ்சின் பயனாம் இறப்புத் தனக்கில்லை. அமுதத்தின் பயனாம் வாழ்வு அத்தேவர்க்கு இருக்கின்றது. இதனால் உயிர்களின் வாழ் முதல் இறைவன் என்னும் சிவபரத்துவம் இனிது விளங்கும். தன்னைப் புகலடைந்தவர்க்கு மரணபயம் போக்கும் ஆற்றல் உடையவன் என்னும் வாய்மைக்குக் 'காலகாலன்' 'நீலகண்டன்' என்ற திருநாமமே சான்றாம் என்பார். 'காலனாருயிர் வீட்டிய மாமணி கண்டனார்' என்றார். அடியவர்க் குளதாகும் நலத்தை அளவிடலரிதென்பதை, 'சால நல்லடியார்' என்று விளக்கினார். தவத்தார்களும் என்றதால் அடியார்களும் என்க. சார்விடம் – புகலிடம் (சரணாகதி ஸ்தானம்). மைந்தனே – சிவபெருமானே. அடியார் – திருவடி அடைந்தவர். தவத்தார் – அடி அடையத் தவஞ்செய்பவர். தவம் – சரியை, கிரியை, யோகம், அடி – ஞானம். மால் – திருமால். அயன் – பிரமன்.

Behold! It is Civan the Lord of Thiru-mazha-paadi who drank the dreaded poison, but gave the nectar to the celestials. His neck is beautiful with the bluish poison. He gave death to the god of death. His holy feet are worshipped by staunch

devotees and men of penance. Vishnu and Brahma also worshipped Him. He is our Lord of Thiru-mazha-paadi.

1567. கலியின்வல்லமணுங்கருஞ்சாக்கியப்பேய்களும்
நலியுநாள்கெடுத்தாண்டஎன்நாதனார்வாழ்பதி
பலியும்பாட்டொடுபண்முழவும்பலவோசையும்
மலியுமாமழபாடியைவாழ்த்திவணங்குமே. 10

கலியின் வல்அமணும், கருஞ்சாக்கியப்பேய்களும்,
நலியும் நாள் கெடுத்து ஆண்ட என் நாதனார் வாழ் பதி -
பலியும் பாட்டொடு பண் முழவும், பலஓசையும்,
மலியும் - மா மழபாடியை வாழ்த்தி வணங்குமே.

kaliyin2 val amaNum, karunjcAkkiyappEykaLum,
naliyum nAL keTuttu ANTa en2 nAtan2Ar vAz pati--
paliyum pATToTu paN muzavum, palaOcaiyum,
maliyum-mA mazapATiyai vAztti vaNagkumE!

பொருள்: மழபாடி அண்ணலே! நீவிர் வலிமை பொருந்திய சமணர்களும் சாக்கியர்களும் அடியவர்களுக்குக் கொடுமை புரிந்த காலத்தில் அருள்புரிந்து காத்தீர்! பண்ணும் பாட்டும் பொருந்திட உம் புகழை நாங்கள் பாடி எங்களையே அர்ப்பணிப்போம். அருள்புரிவீராக!

குறிப்புரை: கலி – துன்பம். இங்குத் துன்பஞ் செய்தலைக் குறித்தது. அமண் – சமணர். நலியும் நாள் – தமிழ் நாட்டு மக்களை வருத்திய காலத்தில். கெடுத்து – அவ்வருத்தத்தைப் போக்கி, ஆண்ட – சைவத்தை நிலைநாட்டிப் பரவச் செய்து சிவநெறியிற் புகுத்திய, 'என்நாதனார்' என்றது இங்கு மிக்க பொருத்தமாகி இவர் திருவருளை முன்னிட்டுப் பரசமய நிராகரணம் புரிந்த உண்மையை விளக்குகின்றது. திருமழபாடியில் பலி, பாட்டு, பண், முழவு, பலவோசை எல்லாம் மலிந்திருந்தன என்பதால் அக்காலத்துச் சிவாலய பரிபாலன மகிமையை அறியலாம். வாழ்த்தி வணங்கும் என்றது முன்னிலைப் பன்மை ஏவல்வினை (பார்க்க. திரு. 2 ப 9. பா. 2, 4, 6).

Behold! It is Civan the Lord of Thiru-mazha-paadi who protected this world and the people when these Jains and Buddhists tortured His followers. He is our Supreme, chased the alien elements and established the saivite code. He is in the temple at Thiru-mazha-paadi, which is a very holy place. Here the prayer song, musical rhythms, percussion sounds typical of saivism are all incessant. Let us pray to the Lord, praise Him and bow at His holy feet.

1568. மலியுமாளிகைசூழ்மழபாடியுள்வள்ளலைக்
கலிசெய்மாமதில்சூழ்கடற்காழிக்கவுணியன்
* *
* 11

மலியும் மாளிகை சூழ் மழபாடியுள் வள்ளலைக்
கலிசெய் மா மதில் சூழ் கடல் காழிக் கவுணியன்,
ஒலிசெய் பாடல்கள் பத்துஇவை வல்லார்
* உலகத்திலே

maliyum mALikai cUz mazapATiyuL vaLLalaik
kalicey mA matil cUz kaTal kAzik kavuNiyan2,
olicey pATalkaL pattu ivai vallAr.......ulakattilE.

பொருள்: மழபாடி அண்ணலே! நீவிர் மாடங்கள் நிறைந்த மழபாடியுள் கோயில் கொண்டுள்ளீர். உம்மை மதில் சூழ்ந்த சீர்காழியில் தோன்றிய ஞானசம்பந்தப் பெருமான் போற்றிப் பாடியுள்ளார். அவரது திருப்பாடல்களை நாங்கள் மகிழ்ந்து பாடுவோம். எங்களது வினைகள் திண்ணமாக நீங்கும் என்க.

குறிப்புரை: மழபாடி, மாளிகைச் சிறப்புடையதென்று இரண்டாவது திருப்பாடலிலும் கூறினார். கலி – வலிமை. எழுச்சி . கவுணியன் – கௌண்டின்ய கோத்திரத்தான்.

These verses were sung by Thiru-gnana-Sambandar who hails from Seerkaazhi a city with seashore and strong fortress. The Vaidyanaathar temple in Thiru-mazha-paadi is surrounded by tall palaces. Thiru-gnana-Sambandar born in gothra sect sang on Vaidyanaathar of the palace. We will be rid of our sins when we sing these hymns with joy.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

9ஆம் பதிகம் முற்றிற்று
End of 9th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 146 *பதிக எண்: 10*

10. திருமங்கலக்குடி

10. THIRU-MANGALAK-KUDI

பண் : இந்தளம் *Pann: Indhalam*

திருத்தல வரலாறு

திருமங்கலக்குடி என்னும் இத்திருத்தலம் மயிலாடுதுறை கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், ஆடுதுறைத் தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கே சுமார் 4.5 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஆடுதுறையிலிருந்து – திருப்பனந்தாள் செல்லும் பேருந்துகளில் இவ்வூரை அடையலாம். காவிரி வடகரைத் தலங்களுள் ஒன்று. இறைவரது திருப்பெயர் புராணேசுவரர். இத்திருப்பெயர், இவ்வூர்ப் பதிகம் முதல் திருப்பாட்டில்,

'நீரின் மாமுனி வன்னெடுங் கைகொடு நீர்தனைப்
பூரித்தாட்டி யர்ச்சிக்க விருந்த புராணனே'

என ஞானசம்பந்தரால் எடுத்தாளப்பட்டுள்ளது. இதிலுள்ள வரலாறு குறிப்புரையில் உணர்த்தப் பட்டது. இறைவியாரது திருப்பெயர் மங்கள நாயகி. தீர்த்தம் காவிரி. காளி, சூரியன், திருமால், பிரமன், அகத்தியர் இவர்களால் அர்ச்சிக்கப் பெற்றது. இச்செய்தி,

'மங்க லக்குடி யீசனை மாகாளி
வெங்கதிர்ச் செல்வன் விண்ணொடு மண்ணுநேர்
சங்கு சக்கர தாரி சதுமுகன்
அங்க கத்திய னும்மர்ச்சித் தாரன்றே'

என்னும் இவ்வூர்க்கு உரிய அப்பர் பெருமானின் குறுந்தொகைப் பாடலால் தெரிகின்றது. இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று அப்பர் பதிகம் ஒன்று ஆக இரண்டு பதிகங்கள் உள்ளன.

பதிக வரலாறு

திருக்கஞ்சனூர், திருமாந்துறை இரண்டையும் வழிபட்டு மீண்டும் திருமங்கலக்குடியை அடைந்து பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1569. சீரினார்மணியும்மகில்சந்துஞ்செறிவரை
வாரிநீர்வருபொன்னிவடமங்கலக்குடி
நீரின்மாமுனிவன்நெடுங்கைகொடுநீர்தனைப்
பூரித்தாட்டியர்ச்சிக்கவிருந்தபுராணனே. 1

சீரின் ஆர் மணியும்(ம்) அகில் சந்தும் செறி வரை
வாரி நீர் வரு பொன்னி வடமங்கலக்குடி,
நீரின் மா முனிவன் நெடுங்கைகொடு நீர்தனைப்
பூரித்து ஆட்டி அர்ச்சிக்க இருந்த புராணனே.

cIrin2 Ar maNiyum(m) akil cantum ceRi varai
vAri nIr varu pon2n2i vaTamagkalakkuTi,
nIrin2 mA mun2ivan2 neTugkaikoTu nIr tan2aip
pUrittu ATTi arccikka irunta purANan2E.

பொருள்: வடமங்கலக்குடி எம்பெருமானே! ஒளி மிக்க மணி, அகில், சந்தனம் ஆகியவற்றை மலையிலிருந்து உருட்டிக் கொண்டு வரும் காவிரியாற்றின் கரையில் உள்ள பதியே திருமங்கலக்குடியாகும். அவ்வூரில் முன்னொரு காலத்தில் வாழ்ந்த முனிவர் ஒருவர் அக்காவிரி நீற்றைக் கங்கை பொருந்திய உமது தலையில் ஊற்றிப் பூசித்துச் சிறந்தார் என்பர். எந்த நீரையும் ஏற்றருளும் பெருமானே நீரே எம் தலைவர் ஆவீர்!

குறிப்புரை: சீர் – கனம், புகழ், மணியும் அகிலும் சந்தனமும் மிக்குள்ள மலை. சந்து – சந்தனம். வரை – மலை. வாரி – வெள்ளம். பொன்னி – காவிரி. பொன்னி வடமங்கலக்குடி – ஆற்றின் வடகரையிலுள்ள தலம். இத்தலத்தில் வாழ்ந்த முனிவர் ஒருவர் சிவபூசைக்குரிய திருமஞ்சனநீரை அமர்ந்த வண்ணமே திருக்கைகளை நீட்டி, ஆற்று நீரை முகந்து அபிடேகம் புரிந்தார் என்பது வரலாறு. அவ்வுண்மையை முதற்றிருப் பாட்டில் உணர்த்தியருளியதால் ஆசிரியர் திருவுள்ளக் கிடக்கையில் அது முந்தி நின்றவாறறியலாம். ஆற்றினளவும் நீண்டதால் 'நெடுங்கை' என்றார். பூரித்து – நிறைத்து. ஆட்டி – அபிடேகித்து. அர்ச்சிக்க – அருச்சனைபுரிய. புராணன் – முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருள், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன் என்னும் இருபொருளும் தருமாறு பிரிக்கப்படும் வடசொல்.

It is Civan, the Lord of Vada-mangalak-kudi who is on the northern bank of the river Cauvery. This is a holy place where the river Ponni (Cauvery) brings in abundance bright rich gems, eaglewood and sandalwood from rich mountains. Civan, the Lord of this temple is called Purana-varatheswarar. In olden days a great sage

brought the Cauvery water in his palm by stretching his hand to the river and gave the sacred bath daily to the Lord of this place. Our Lord was very pleased by the bath given by the old sage and blessed him.

1570. பணங்கொளாடரவல்குல்நல்லார்பயின்றேத்தவே
மணங்கொள்மாமயிலாலும்பொழில்மங்கலக்குடி
இணங்கிலாமறையோரிமையோர்தொழுதேத்திட
அணங்கினோடிருந்தானடியேசரணாகுமே. 2

பணம் கொள் ஆடுஅரவு அல்குல் நல்லார் பயின்று ஏத்தவே,
மணம் கொள் மா மயில் ஆலும் பொழில் மங்கலக்குடி,
இணங்கு இலா மறையோர் இமையோர் தொழுது ஏத்திட,
அணங்கினோடு இருந்தான் அடியே சரண் ஆகுமே.

paNam koL ATu aravu alkul nallAr payin2Ru EttavE,
maNam koL mA mayil Alum pozil magkalakkuTi,
iNagku ilA maRaiyOr imaiyOr tozutu EttiTa,
aNagkin2OTu iruntAn2 aTiyE caraN AkumE.

பொருள்: வடமங்கலக்குடி எம்பெருமானே! அழகுமிக்க பெண்கள் நாள்தோறும் திருக்கோவில் வந்து உம்மை வழிபடுகிறார்கள். திருக்கோயிலைச் சுற்றி மயில்கள் ஆடும் மங்கலக்குடியில் கோயில் கொண்டுள்ளீர். திருமாலும் பிரமனும் தேடியும் காண முடியாத உம்மை இந்த நகரில் வாழும் மறையோதும் அந்தணர்களும் தேவர்களும் நெருங்கி நாளும் வணங்குகின்றனர். உமாதேவியுடன் பொருந்தி விளங்கும் உம்மை நாங்களும் வணங்கி உமது அடியைச் சரணடைவோமாக.

குறிப்புரை: பணம் – அரவின் படம். நல்லார் – பெண்டிர். மணம் கொள் பொழில் – வாசனை கொண்ட சோலை. ஆலும் – ஆடும். இணங்கிலா மறையோர் என்பதிலும், இணங்கிலாமை மறைகட்குரிய அடைமொழியே ஆகும். மறைகள் மெய்ப்பொருளை அறிந்து இணங்காதன. ஆரணம் அறியா அரும்பெருங்கடவுள் பரமசிவன் என்பதும் அவன் 'இணங்கிலி' (திருவாசகம் 389) என்பதும் பிரசித்தம். இமையோர் – இமைகொட்டாத வானோர். விழித்தகண் குருடாய்த் திரிவீரராகிய யோகியருமாம். அணங்கு – உமையம்மையார். சரண் – கதி, புகல்.

Civan the Lord of Vada-mangalak-kudi known as Piranavaratheswarar is in the temple along with His consort Umaa Devi. To this holy place of groves with dancing peacock, beautiful damsels came daily and worship Him for the betterment of their life. The Lord could not be searched and seen by Thirumaal and Brahma. However, the Vedic scholars of this place as well the celestials could see Him and worship Him here. Ye devotees bow at His holy feet.

1571. கருங்கையானையினீருரிபோர்த்திடுகள்வனார்
மருங்கெலாமணமார்பொழில்சூழ்மங்கலக்குடி
அரும்புசேர்மலர்க்கொன்றையினானடியன்பொடு
விரும்பியேத்தவல்லார்வினையாயினவீடுமே. 3

கருங்கையானையின் ஈர்உரி போர்த்திடு கள்வனார்,
மருங்குஎலாம் மணம் ஆர் பொழில் சூழ் மங்கலக்குடி,
அரும்பு சேர் மலர்க்கொன்றையினான் அடி அன்பொடு
விரும்பி ஏத்த வல்லார் வினைஆயின வீடுமே.

karugkaiyAn2aiyin2 Ir uri pOrttiTu kaLvan2Ar,
marugku elAm maNam Ar pozil cUz magkalakkuTi,
arumpu cEr malarkkon2Raiyin2An2 aTi an2poTu
virumpi Etta vallAr vin2ai Ayin2a vITumE.

பொருள்: மங்கலக்குடி எம்பெருமானே! நீவிர் கரிய யானையின் தோலை உரித்து போர்த்திக் கொண்டு எம் உள்ளம் கவரும் கள்வராவீர்! மணம் மிக்க பொழில்கள் நிறைந்த மங்கலக்குடியில் கோயில் கொண்டுள்ளீர்! கொன்றை மலரை விரும்பிச் சூடும் உமது திருவடிகளை நாங்கள் விரும்பிப் போற்றுவோம். எங்கள் வினைகள் நீங்கப் பெறுவோம்.

குறிப்புரை: கருங்கை – பெரிய துதிக்கை. கருமையை யானைக்குச் சேர்த்து நிறத்தைக் கொள்ளலும் ஆம். ஈர்உரி – ஈர்ந்த தோல். வினைத்தொகை. இத்தொடரின் உண்மைக் கருத்து ஆணவ மலத்துட்படும் உயிரின் உள்ளொளி வடிவுடையன் மெய்ப்பொருள் என்பதாம். 'ஒளிக்கும் இருட்கும் ஒன்றே இடம்' எனத் தொடங்கும் கொடிப் பாட்டின் உட்கிடக்கையை இங்கு உணர்க. மருங்கு – பக்கம். அன்பு – பக்தி, விருப்பம் – ஆர்வம். வீடும் – அழியும்.

It is Civan the Lord of Vada-mangalak-kudi who once upon a time killed a male elephant with large trunk and covered His body with its thick skin. He has captivated our hearts. He crowns His head with cassia flowers and beads. His temple is surrounded by fragrant flower gardens. Those devotees who worship Him with deep desires will be freed of all evils.

1572. பறையினோடொலிபாடலுமாடலும்பாரிடம்
மறையினோடியல்மல்கிடுவார்மங்கலக்குடிக்
குறைவிலாநிறைவேகுணமில்குணமேயென்று
முறையினால்வணங்கும்மவர்முன்னெறிகாண்பரே. 4

“பறையினோடு ஒலிபாடலும் ஆடலும் பாரிடம்,
மறையினோடு இயல் மல்கிடுவார் மங்கலக்குடிக்
குறைவு இலா நிறைவே! குணம் இல் குணமே!” என்று
முறையினால் வணங்கு(ம்) அவர் முன்நெறி காண்பரே.

"paRaiyin2OTu olipATalum ATalum pAriTam,
maRaiyin2OTu iyal malkiTuvAr magkalakkuTik
kuRaivu ilA niRaivE! kuNam il kuNamE!" en2Ru
muRaiyin2Al vaNagku(m)mavar mun2neRi kANparE.

பொருள்: மங்கலக்குடியில் அருள்புரியும் எம்பெருமானே! நீர், இன்னிசை வாத்தியங்கள் முழங்க, பூதகணங்கள் பாடியாட, அந்தணர்கள் வேதங்களை ஓத மங்கலக்குடியில் கோயில் கொண்டுள்ளீர்! உம்மை குறைவில்லா நிறைவு என்றும் குணமில் குணம் என்றும் உணர்ந்து வணங்கும் அடியார்கள் உயர் நெறியை உணர்ந்து அதனை அடைவார்கள் என்க.

குறிப்புரை: பறை – வாத்தியம். பாரிடம் – பூதகணம். மறையினோடு இயல் மல்கிடுவார் – வேதஞானமும் வேதவொழுக்கமும் மிக்கவர் அந்தணர். குறைவிலா நிறைவே என்றது பரிபூரணன் பரசிவனன்றி வேறில்லாமை உணர்த்திற்று. ஏனைய நிறைவெல்லாம் அதனிற் பெரிய பிறிதொரு நிறைவை நோக்கின் குறைவுடையதாகும். ஏரி நீர் நிறைவை நோக்கி வாவி நீர் நிறைவு குறைவுடையதாதல் போல; பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம் ஒன்றே குறைவிலா நிறைவு என்க. ‘குறைவிலா நிறைவே கோதிலா அமுதே’ ‘குறைவிலா நிறைவே குணக்குன்றே’ என்ற ஆசிரிய வசனங்களும் அறிக. குணம் இல் குணம் – எண் குணத்தவன். முறை – சிவாகம விதிமுறை. முன்னெறி – சமயநெறி எல்லாவற்றிறுகும் முதன்மையுடைய சிவநெறி. நெறி என்பது அந்நெறியொழுகிப் பெறும் பேரின்பப் பயனை உணர்த்தும் ஆகுபெயர்.

It is Civan who is the Lord of Vada-mangalak-kudi. This city is a holy place where the Lord is glorified with percussion music, devotional songs, and graceful dances by good looking damsels. Vedic scholars gather, chanting Vedas in many places. There if the devotees pray in the relevant way saying "Oh! Lord! You are perfection devoid of imperfections! Oh Lord! Your attributes are par supreme devoid of attributes", they will reach the pinnacle of glory, and joy, following the perfect saivite code (of conduct).

1573. ஆனிலங்கிளரைந்துமவிர்முடியாடியோர்
மானிலங்கையினான்மணமார்மங்கலக்குடி
ஊனில்வெண்டலைக்கையுடையானுயர்பாதமே
ஞானமாகநின்றேத்தவல்லார்வினைநாசமே. 5

ஆனில்அம்கிளர்ஐந்தும் அவிர் முடி ஆடி, ஓர்
மான் நில் அம் கையினான், மணம் ஆர் மங்கலக்குடி,
ஊன்இல் வெண்தலைக் கை உடையான் உயர் பாதமே
ஞானம்ஆக நின்று ஏத்த வல்லார் வினை நாசமே.

An2il amkiLar aintum avir muTi ATi, Or
mAn2 nil am kaiyin2An2, maNam Ar magkalakkuTi,
Un2 il veNtalaik kai uTaiyAn2 uyar pAtamE
njAn2am Aka nin2Ru Etta vallAr vin2ai nAcamE.

பொருள்: மங்கலக்குடியில் அருள்புரியும் எம்பெருமானே! நீவிர் பசுவின்பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் பஞ்சகவ்வியத்தை ஏற்றருள்வீர்! கையில் மானை அடக்கி நிற்பதுபோல அடியவர்களின் அலையும் மனத்தை அடக்கி நிற்பீர்! கையில் கபாலத்தை ஏந்தி நிற்பீர். உமது திருவடிகளை ஞானத்தால் உணர்ந்து ஏத்துபவர்களின் வினைகள் நிச்சயம் நாசமடையும்!

குறிப்புரை: ஆனில் அம் கிளர் ஐந்தும் – கோ (பசு) வினிடத்து உண்டாகிய பால், தயிர், நெய், கோமயம், கோமூத்திரம் என்னும் ஐந்தும்; ஆயினும் முதன் மூன்றே சைவாசாரியர் கொண்டாடியன. 'ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்' மான் நில்அம்கை – மான் நிற்கும் அழகிய கை. மான் இலம் கை என்பதில் நடுமொழி யீறு குறைந்ததெனினும் பொருந்தும். மானுக்கு இல்லமாகிய கையுமாம். ஊன் இல் வெள்தலை – தசையற்ற வெள்ளைத்தலை, பிரம்ம கபாலம். உயர்பாதம் – திருவடி. இதில் திருவடிஞானம் ஒன்றே வீடு

பேறளிக்கும் உண்மை உணர்த்தினார். முன்னர் 'வெண்ணெய்ப் பெருமானடி ஞானமாக நினைவார் வினையாயின நையுமே' என்றதும் அறிக. 'அவனடி அவ்வொளி ஞானம்' 'அடிஞானம் ஆன்மாவிற்றோன்றும்' 'இறைவனடி ஞானமே ஞானம் என்பர்' 'ஆசான் அருளால் அடிசேர் ஞானம் வந்திடும் மற்றொன்றாலும் வாராதாகும்' (சித்தியார்).

It is Civan, the Lord of Vada-mangalak-kudi known as Pirana-varatheswarar. The temple in which He abides is surrounded by sweet flower gardens. He is pleased with a sacred bath in the fine sacred elements of cow such as milk, curd, cow dung and cow's urine. He clasps in one of His hands the young deer. In His other hand He holds the fleshless white human skull. Ye devotees! go to the temple and worship our Lord who is the embodiment of wisdom. The effects of your evil will be wiped out when you glorify His feet with perfect realisation of His greatness.

1574. தேனுமாயமுதாகிநின்றான்தெளிசிந்தையுள்
வானுமாய்மதிசூடவல்லான்மங்கலக்குடி
கோனைநாள்தொறுமேத்திக்குணங்கொடுகூறுவார்
ஊனமானவைபோயறுமுய்யும்வகையதே. 6

தேனும்ஆய் அமுதுஆகி நின்றான், தெளிசிந்தையுள்;
வானும்ஆய் மதி சூட வல்லான்; மங்கலக்குடிக்
கோனை நாள்தொறும் ஏத்திக் குணம்கொடு கூறுவார்
ஊனம்ஆனவை போய் அறும்; உய்யும்வகை, அதே.

tEn2um Ay amutu Aki nin2RAn2, teLi cintaiyuL;
vAn2um Ay mati cUTa vallAn2; magkalakkuTik
kOn2ai nALtoRum Ettik kuNamkoTu kURuvAr
Un2am An2avai pOy aRum; uyyum vakai, atE.

பொருள்: மங்கலக்குடி இறையவனே! நீவிர் தெளிந்த உள்ளம் கொண்ட அடியவர்களுக்குத் தேனாகவும் அமுதாகவும் விளங்குகின்றீர்! மதிசூட வல்ல நீவிர் வான் வெளியாகவும் விளங்குகின்றீர்! மங்கலக்குடியில் கோயில் கொண்டுள்ள உம்மை அடியவர்களாகிய நாங்கள் நாளும் ஏத்தி உமது குணங்களை மனத்திற்கொண்டு வணங்குவோம். எங்களுக்கு உய்யும் திறம் அதுவே. எங்களது குறைபாடுகள் அனைத்தையும் நீக்கி அருளுவீர்!

குறிப்புரை: தேனுமானான். அமுதும் ஆனான். தெளிந்த சிந்தை என இறந்த காலப் பெயரெச்சமாக விரிக்க. தெளியாத சிந்தையுள் ஞானாகாசம் எய்தாது. வான் – ஞானவெளி. மதி – பிறை. கோன் – முதல்வன். கூறுவார் – தோத்திரஞ் செய்வார். ஊனமானவை – பிறவிக் கேதுவான மும்மல காரியங்கள். உய்யும்வகை – பாசம் நீங்கிச் சிவம் பிரகாசிக்கும் திறம். இஃது ஆன்மாக்கள் உய்யுமாறு அருளிச் செய்தது. இந்த உய்வினை நாடாதிருப்பது . . . ஊனம்.

It is Civan, the Lord of Vada-mangalak-kudi. To your devotees of perfect realisation you are like honey and ambrosia. The moon mounts on your head and hence You appear also as the space. Those devotees who worship this Lord of Vada-mangalak-kudi every day, praising His divine virtues, will certainly be cured of their defects in body and mind and the three excesses in human nature. This is the only way for salvation.

1575. வேள்படுத்திடுகண்ணினன்மேருவில்லாகவே
வாளரக்கர்புரமெரித்தான்மங்கலக்குடி
ஆளுமாதிப்பிரானடிகள்ளடைந்தேத்தவே
கோளுநாளவைபோயறுங்குற்றமில்லார்களே. 7

வேள் படுத்திடு கண்ணினன், மேரு வில்ஆகவே
வாள் அரக்கர் புரம் எரித்தான், மங்கலக்குடி
ஆளும் ஆதிப்பிரான், அடிகள்(ள்) அடைந்து ஏத்தவே,
கோளும் நாள்அவை போய் அறும்; குற்றம் இல்லார்களே.

vEL paTuttiTu kaNNin2an2, mEru vil AkavE
vAL arakkar puram erittAn2, magkalakkuTi
ALum AtippirAn2, aTikaL(L) aTaintu EttavE,
kOLum nAL avai pOy aRum; kuRRam illArkaLE.

பொருள்: மங்கலக்குடி எம்பெருமானே! நீர் மன்மதனை நெற்றிக்கண்ணால் சாம்பலாக்கினீர்! கொடிய அரக்கர்களுக்கு உரித்தாய முப்புரங்களையும் சிரித்தே அழித்தீர்! மங்கலக்குடியில் கோயில் கொண்டுள்ளீர்! உமது திருவடிகளை ஏத்தி வணங்கிட எங்களுக்கு கிரகங்களாலும், விண்மீன்களாலும் உண்டாகும் தீமைகள் நிச்சயம் நீங்கப் பெறும். நாங்கள் குற்றம் இல்லாதவர்களாய் விளங்கிடுவோமாக!

குறிப்புரை: வேள் – கருவேள், மன்மதன், படுத்திடுகண் – அழித்த நெற்றித் தீவிழி. கண்ணினன் – கண்ணுடையவன். வாள் – கொடுமை, வாட்படையுமாம். அரக்கர் – பிறர் தீமை செய்யாதிருப்பவும் தீங்கிழைப்பவர். (அசுரர் – தீங்கிழைத்தவர்க்கு அது செய்பவர்). ஆளும் – ஆட்கொள்ளும் ஆதிப்பிரான் – முதற்கடவுள். அடிகள் – பாசநீக்கமும் சிவப்பேறுமாகிய இரண்டு திருவடிகள். 'யான்' 'எனது' என்னும் இருசெருக்கும் அறுதலாகிய இரண்டெனலும் சாத்திர சம்மதம், 'பரை உயிரில் யான் எனதென்றற நின்றதடியாம்' (உண்மை நெறி விளக்கம்) 'யான் எனதென்றற்ற இடமே திருவடி' (ஏத்த – வழிபட. துதிக்க. எடுத்தல் என்பதன் மரூஉ. ஏத்தல் – இறைவன் புகழை எடுத்தோதுதல். எடுத்தலோசையே தோத்திரங்கட்கு உரியது. கோள் – கிரகங்கள். நாள் – மீன்கள். குற்றம் – ஆணவம் முதலிய முக்குற்றம்.

It is Civan, the Lord of Vada-mangalak-kudi who burnt cupid with His eyes. He also burnt the three flying fortresses of the wicked demons using mount Meru as His bow. It is He the Lord of Vada-mangalak-kudi, the ancient one. Those devotees who reach and bow at His holy feet will not be affected by the evil effects of planets and stars. These devotees will be blemishless.

1576. பொலியுமால்வரைபுக்கெடுத்தான்புகழ்ந்தேத்திட
வலியும்வாளொடுநாள்கொடுத்தான்மங்கலக்குடிப்
புலியினாடையினானடியேத்திடும்புண்ணியர்
மலியும்வானுலகம்புகவல்லவர்காண்மினே. 8

பொலியும் மால்வரை புக்கு எடுத்தான் புகழ்ந்து ஏத்திட,
வலியும் வாளொடு நாள் கொடுத்தான்; மங்கலக்குடிப்
புலியின் ஆடையினான்; அடி ஏத்திடும் புண்ணியர்
மலியும் வான்உலகம் புக வல்லவர்; காண்மினே!

poliyum mAlvarai pukku eTuttAn2 pukazntu EttiTa,
valiyum vALoTu nAL koTuttAn2; magkalakkuTip
puliyin2 ATaiyin2An2; aTi EttiTum puNNiyar
maliyum vAn2 ulakam puka vallavar; kANmin2E!

பொருள்: மங்கலக்குடி எம்பெருமானே! உமது கயிலாய மலையினைப் பெயர்த்து எடுக்க முயன்றான் இராவணன். முதலில் துன்புற்றுப் பிறகு தெளிந்து உம்மைப் புகழ்ந்து பாடினான். அதனால் வலிமைமிக்க வாளையும் நீண்ட வாழ்நாளையும் பெற்றான். புலித்தோல் ஆடை அணிந்த உமது திருவடிகளை வணங்கிடும் புண்ணியர்கள் உயர்ந்த முத்திப் பேற்றை எளிதாகப் பெறுவர் அன்றோ!

குறிப்புரை: பொலியும் – விளங்கும். வரை – கயிலைமலை. வலி – பலம். வாளும் நாளும் – வாட்படையும் ஆயுளும் அருளிய இவ்உண்மை பயின்று வருதல் காணலாம். புலியினாடையினான் – புலித்தோலுடை தரித்தவன். புண்ணியர் – சிவபுண்ணியத்தவர். மலியும் – இன்பம் மிகும். வானுலகம் – வீட்டுலகு. வல்லவர் – வன்மையுடையவர். காண்மின் என்றது ஆசிரியர் திருமுன் அந்நாளில் இருந்தவரை நோக்கி.

Civan, the Lord of Vada-mangalak-kudi wears tiger's skin as His dress. The Lord of Vada-mangalak-kudi once blessed the king of Sri Lanka - Dasakreevan and offered a mighty sword. He was forgiven despite his misguided attempt to lift mount Kailash. Those devotees who worship the Lord's holy feet are themselves holy and they will very easily enter the celestial world.

1577. ஞாலமுன்படைத்தான்நளிர்மலர்மேலயன்
மாலுங்காணவொணாவெரியான்மங்கலக்குடி
ஏலவார்குழலாளொருபாகமிடங்கொடு
கோலமாகிநின்றான்குணங்கூறுங்குணமதே. 9

ஞாலம் முன் படைத்தான் நளிர்மலர்மேல் அயன்,
மாலும் காண ஒணா எரியான்; மங்கலக்குடி
ஏல வார்குழலாள் ஒருபாகம் இடம்கொடு
கோலம்ஆகி நின்றான்; குணம் கூறும்! குணம் அதே.

njAlam mun2 paTaittAn2 naLirmAmalarmEl ayan2,
mAlum, kANa oNA eriyAn2; magkalakkuTi
Ela vArkuzalAL oru pAkam iTamkoTu
kOlam Aki nin2RAn2; kuNam kURum! kuNam atE.

பொருள்: மங்கலக்குடி பெருமானே! நீர் தாமரை மலர்மேல் இருந்து உலகைப் படைக்கும் பிரமனாலும் திருமாலாலும் காண முடியாத ஒளி உருவினர் ஆவீர்! மங்கலக்குடியில் மணமிக்க கூந்தலைக் கொண்ட உமாதேவியோடு பொருந்தி அழகுற நிற்கும் உம்மைப் போற்றிப் புகழ வல்லவர்கள் நற்பண்புமிக்க சிறப்புறுவர் என்க.

குறிப்புரை: ஞாலம் – பூமி. நளிர் – குளிர்ச்சி. படைத்தானாகிய அயன் (பிரமன்) மாமலர் – தாமரை. எரியான் – தீப்பிழம்பானவன். ஏலம் – மயிர்ச்சாந்து. 'ஏலவார் குழலாள்' என்பது அம்பிகையின்

திருநாமங்களுள் ஒன்று. இது திருமுறையுட் பயின்றது. கோலம் – அழகு. குணத்தைக் கூறுங்கள். அதுவே குணமாகும். மற்றவை குணமாகா.

Brahma who resides in cool lotus flower is the creator of the world. He and Vishnu explored the unvierse to find the holy head and feet of our Lord but failed. Then our Lord had stood as an endless column of bright light. Lord Civa sharing His body with His consort Umaa of fragrant hair stands in a graceful posture at Vada-mangalak-kudi. Ye devotees whenever you go to this temple to worship Him speak of His divine virtues and this is the only way to get salvation.

1578. மெய்யின்மாசினர்மேனிவிரிதுவராடையர்
பொய்யைவிட்டிடும்புண்ணியர்சேர்மங்கலக்குடிச்
செய்யமேனிச்செழும்புனற்கங்கைசெறிசடை
ஐயன்சேவடியேத்தவல்லார்க்கழகாகுமே. 10

மெய்யில் மாசினர், மேனி விரி துவர் ஆடையர்,
பொய்யை விட்டிடும் புண்ணியர் சேர் மங்கலக்குடிச்
செய்யமேனிச் செழும் புனல்கங்கை செறி சடை
ஐயன் சேவடி ஏத்த வல்லார்க்கு அழகு ஆகுமே.

meyyil mAcin2ar, mEn2i viri tuvar ATaiyar,
poyyai viTTiTum puNNiyar cEr magkalakkuTic
ceyyamEn2ic cezum pun2alkagkai ceRi caTai
aiyan2 cEvaTi Etta vallArkku azaku AkumE.

பொருள்: மங்கலக்குடியில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானே! மெய்மாசு கொண்டும் துவராடை உடுத்தியும் விளங்கும் சமணரும் சாக்கியரும் உம்மைப் பற்றி உணராமல் பொய் வார்த்தை கூறித் திரிவர். ஆனால் மெய்யன்பர்கள் (சிவனடியார்கள்) அதனை ஒருபோதும் நம்ப மாட்டார்கள். சிவந்த மேனியையும், தலையில் கங்கையாற்றையும், சடாமுடிகளையும் கொண்ட உம்மையே ஏத்தி வழிபாடு செய்வார்கள். அதுவே அடியவர்க்குரிய அழகாகும்.

குறிப்புரை: மெய்யின் மாசு – உடலழுக்கு. சமணர் சாக்கியர் ஆகிய பரசமயத்தவர் பொய்யுரைகளை விட்டுச் சைவ உண்மையை உணர்த்தொழுகுவோர் புண்ணியர். அத்தகையவர் சேர்ந்துறையும் புகழ் மங்கலக்குடிக்குள்ளது. செய்ய மேனி – சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான். புனல் –

வெள்ளம். ஐயன் – பரத்துவக் கடவுள். சேவடி – சிவந்த திருவடி. சிவஞானப் பிரகாசம். அழகு – பேரின்ப வாழ்வு.

The city of Vada-mangalak-kudi where our Lord Pirana-varatheswarar resides is a very blessed place. Since the holy men of Lord Civa assemble here and shower their adulations on Him. They never listen to the false preaching of the impure bodied Jains and the ochre robed Buddhists. They adore only our Lord of Vada-mangalak-kudi whose fair body is golden coloured. He has adorned His matted hair with the gushing waters of the Ganges. Praising and praying to this Lord is a beautiful action and His devotees do nothing but that.

1579. மந்தமாம்பொழில்சூழ்மங்கலக்குடிமன்னிய
எந்தையையெழிலார்பொழிற்காழியர்காவலன்
சிந்தைசெய்தடிசேர்த்திடுஞானசம்பந்தன்சொல்
முந்தியேத்தவல்லாரிமையோர்முதலாவரே. 11

மந்த மாம்பொழில் சூழ் மங்கலக்குடி மன்னிய
எந்தையை எழில் ஆர் பொழில் காழியர்காவலன் -
சிந்தைசெய்து அடி சேர்த்திடு ஞானசம்பந்தன்-சொல்
முந்தி ஏத்த வல்லார், இமையோர்முதல் ஆவரே.

manta mAmpozil cUz magkalakkuTi man2n2iya
entaiyai, ezil Ar pozil kAziyarkAvalan2--
cintai ceytu aTi cErttiTu njAn2acampantan2--col
munti Etta vallAr, imaiyOrmutal AvarE.

பொருள்: மங்கலக்குடி பெருமானே! எழில் மிக்க சோலைகளால் நிறைந்த சீர்காழிப் பதியில் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான் எப்பொழுதும் சிந்தை செய்வது மங்கலக்குடியில் கோயில் கொண்டுள்ள உம்மைத்தான். அவர் உம்மைப் புகழ்ந்து பாடிய பாடல்களை அடியார்களாகிய நாங்களும் பாடிப் பரவுவோம். தேவர் முதல்வர் ஆவோமாக!

குறிப்புரை: மந்தம் – தென்றல் (வீசுதல்). மன்னிய – நிலைபெற்ற. எழில் – அழகு. இத்திருப்பதிகம் திருவடியிற் சேர்க்க வல்லது. சிந்தை செய்தல் சேர்த்திடற்கும் ஏத்தற்கும் பொருந்துதலறிக. இமையோர் முதல் – தேவர் கோமகன்.

Seerkaazhi is a very ancient city and holy place, surrounded by beautiful gardens. Here was born Thiru-gnana-Sambandar who always thinks of the divine ruler of Seerkaazhi who is also the Lord at Vada-mangalak-kudi. This city also is surrounded by gardens of beautiful flowers and a fine breeze. Thiru-gnana-Sambandar prayed to Lord of Vada-mangalak-kudi, composing these verses on Him. Those devotees who come forward to recite these verses of Thiru-gnana-Sambandar with emotional involvement will be the leaders of the celestials.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

10ஆம் பதிகம் முற்றிற்று
End of 10th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 147 *பதிக எண்: 11*

11. சீகாழி

11. SEERKAAZHI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

1580. நல்லானைநான்மறையோடியலாறங்கம்
வல்லானைவல்லவர்பால்மலிந்தோங்கிய
சொல்லானைத்தொன்மதிற்காழியேகோயிலாம்
இல்லானையேத்தநின்றார்க்குளதின்பமே. 1

நல்லானை, நான்மறையோடு இயல் ஆறு அங்கம்
வல்லானை வல்லவர்பால் மலிந்து ஓங்கிய
சொல்லானை, தொல் மதில் காழியே கோயில் ஆம்
இல்லானை, ஏத்த நின்றார்க்கு உளது, இன்பமே.

nallAn2ai, nAlmaRaiyOTu iyal ARuagkam
vallAn2ai, vallavarpAl malintu Ogkiya
collAn2ai, tol matil kAziyE kOyil Am
illAn2ai, Etta nin2RArkku uLatu, in2pamE.

பொருள்: சீகாழிச் சிவனை நல்லான் என்றும், நான்மறை ஆறங்கம் வல்லான் என்றும் அடியவர்களின் உள்ளத்தில் பொருந்திய சொல்லான் என்றும் மதில் சூழ்ந்த சீர்காழியில் கோயில் கொண்டுள்ளான் என்றும் ஏத்தி நின்று வழிபடுவோர்க்கு எக்காலத்தும் இன்பமேயாம்!

குறிப்புரை: நல்லான் – மங்களவடிவினன், சிவன். நான்மறை – சைவத்திற்கு உரியனவாயிருந்த பழைய நான்கு மறைகள். 'தத்துவாதீதமெனச் சாற்றுங்காண் சைவமறை அத்துவா எல்லாம் அற' (துகளறுபோதம் 20). ஆறு அங்கம் – சிக்ஷை. வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கற்பம் என்பன. இவை

சைவமறைக்கும் உரியன. 'மறைகள் – வேதம்' (தி. 2 ப. 12 பா 7). வல்லான் – வன்மையுடைய சிவபிரான். வல்லவர் – வன்மையுடைய அந்தணர். பால் – ஏழனுருபு. மலிந்து – நிறைந்து. சொல்லான் – துதிவடிவானவன். கோயிலாம் இல்லான் – கோயில் என்னும் பெயரினதாய வீட்டினன். நின்றார் – நிலைத்தவர். இன்பம் உளது. உளது – அழியாது என்றும் இருப்பது.

Behold! It is Civan the Lord of Seerkaazhi who is the embodiment of good conduct in the world. He exhibited to the world all the four Vedas along with the rules and the six angaas, needed for comprehending such sciences, considered as dependant on the four Vedas. He also manifested Himself as words of the learned ones who enrich Seerkaazhi of ancient ramparts by dwelling in that divine abode. Those devotees who pray at the feet of our Lord are sure to experience the joy of liberation.

1581. நம்மானமாற்றிநமக்கருளாய்நின்ற
பெம்மானைப்பேயுடனாடல்புரிந்தானை
அம்மானையந்தணர்சேருமணிகாழி
எம்மானையேத்தவல்லார்க்கிடரில்லையே. 2

நம் மானம் மாற்றி நமக்கு அருள் ஆய் நின்ற
பெம்மானை, பேய்உடன் ஆடல் புரிந்தானை,
அம்மானை, அந்தணர் சேரும் அணி காழி
எம்மானை, ஏத்த வல்லார்க்கு இடர் இல்லையே.

nam mAn2am mARRi namakku aruL Ay nin2Ra
pemmAn2ai, pEy uTan2 ATal purintAn2ai,
ammAn2ai, antaNar cErum aNi kAzi
emmAn2ai, Etta vallArkku iTai illaiyE.

பொருள்: சீகாழிச் சிவனை, பிறவின் வழி எம்மோடு பொருந்திய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை நீக்கி எமக்கருளும் பெருமானை, பேயுடன் காட்டில் ஆடல் புரிபவனை, வேதம் ஓதும் அந்தணர்கள் வாழும் சீர்காழியில் கோயில் கொண்டுள்ள எம்மானை, உணர்ந்து ஏத்த வல்லார்க்கு இடர் இல்லையாம் என்க.

குறிப்புரை: நம் மானம் – நம் குற்றங்களாகிய ஆணவம். மாயை, கன்மம் (மூன்றும்). மாற்றி – தீர்த்து. மாறச்செய்து, வீடுற்ற உயிர்களின் நீங்கி ஏனையுயிர்களையுற்று. அருளாய் – சிவஞானமாகி, 'மருமகன்' மருமான் என்றானதுபோலப் 'பெருமகன்' பெருமான் என மருவிற்று. பேயோடு கூத்தாடிய வரலாறு.

புரிதல் – செய்தல். அருமகன் என்பது அம்மான் என்று மருவி அருமைக் கடவுள் என்றதாம். எம்மான் – எம் கடவுள். மகன், மைந்தன் என்பவை வீரன். ஆடவன், கடவுள் என்னும் பொருளில் ஆளப் பட்டன. இடர் – கேவலாவத்தையும் சகலாவத்தையும் அவற்றுட்பட்ட துயரும்.

Behold! It is He the Lord of Seerkaazhi who cleanses us of our three evils or passions of the soul, such as aanavam, kanmam and maayaa. He is a great one who bestows His grace to His devotees. He performs the cosmic dance with devils on the burial ground. He is the rarest god of the rare and the Lord of Seerkaazhi which is also the abode for Brahmins. Those who pray feelingfully at His feet will have no obstacles.

1582. அருந்தானையன்புசெய்தேத்தகில்லார்பாற்
பொருந்தானைப்பொய்யடிமைத்தொழில்செய்வாருள்
விருந்தானைவேதியரோதிமிடைகாழி
இருந்தானையேத்துமின்நும்வினையேகவே. 3

அருந்தானை, அன்பு செய்து ஏத்தகில்லார் பால்;
பொருந்தானை, பொய் அடிமைத் தொழில் செய்வாருள்;
விருந்தானை; வேதியர் ஓதி மிடை காழி
இருந்தானை; ஏத்துமின், நும் வினை ஏகவே!

aruntAn2ai, an2pu ceytu EttakillArpAl;
poruntAn2ai, poy aTimait tozil ceyvAruL;
viruntAn2ai; vEtiyar Oti miTai kAzi
iruntAn2ai; Ettumin2, num vin2ai EkavE!

பொருள்: சீகாழிச் சிவன் தனக்கென்று உண்ணும் பொருள் ஏதும் இல்லாதவனாய், தன்மீது அன்பு கொண்டு வழிபடாதவரிடத்து பொருந்தாமலும், பொய்யடிமைத் தொழில் புரிவருக்கு புரியாதவனாய் விளங்குவார். வேதம் ஓதும் அந்தணர்கள் நிறைந்த சீர்காழியில் கோயில் கொண்டுள்ளார். அவரை மெய்யாய் வணங்குபவர்களின் வினைகள் நிச்சயம் நீங்கும் என்க.

குறிப்புரை: அருந்தானை – உண்ணலாகாதென்ற நோன்பியை. 'தன் உடம்பின் ஊன்கெடினும் உண்ணார் கைத்து உண்ணற்க' (நாலடி 80). அன்பு – பக்தி. ஏத்தகில்லார் – ஏத்தமாட்டாதவர். அன்பு செய்து ஏத்தமாட்டாதவரிடத்தில் யாதும் அருந்தாத (உண்ணாத)வனை. பொய்யடிமைத் தொழில் செய்பவருள் பொருந்தாதவனை. விருந்தானை – புதியனை. வேதியர் – மறையோர். ஓதி – வேதம் ஓதி. நும் வினைபோக ஏத்துமின்.

Behold! It is He the Lord of Seerkaazhi who takes no food from those loveless people who do not pray. He will not abide in the minds of those false devotees. He resides in Seerkaazhi amidst the chanting of Vedas by scholars. Ye devotees, recite His glory always sincerely, then your evil effects will vanish.

1583. புற்றானைப்புற்றரவம்மரையின்மிசைச்
சுற்றானைத்தொண்டுசெய்வாரவர்தம்மொடும்
அற்றானையந்தணர்காழியமர்கோயில்
பற்றானைப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே. 4

புற்றானை, புற்று அரவம்(ம்) அரையின்மிசைச்
சுற்றானை, தொண்டு செய்வார் அவர் தம்மொடும்
அற்றானை, அந்தணர் காழி அமர் கோயில்
பற்றானை, பற்றி நின்றார்க்கு இல்லை, பாவமே.

puRRAn2ai, puRRu aravam(m) araiyin2micaik
cuRRAn2ai, toNTu ceyvAr avartammoTum
aRRAn2ai, antaNar kAzi amar kOyil
paRRAn2ai, paRRi nin2RArkku illai, pAvamE.

பொருள்: சீகாழிச் சிவன் புற்றாகவும் புற்றில் வாழும் அரவத்தை அரையில் சுற்றியவராகவும் விளங்குகின்றார். தொண்டு செய்யும் அடியவர்பால் பொருந்துகின்றார். தன்முனைப்பு அற்றவர்பால் உறைகின்றார். வேதம் ஓதும் அந்தணர்கள் நிறைந்த சீர்காழியில் கோயில் கொண்டுள்ளார். அவரைப்பற்றி நின்றவர்களைப் பாவங்கள் பற்றாது என்க.

குறிப்புரை: புற்றான் – புற்றானவன் (வன்மீக நாதன், புற்றிடங்கொண்டான் என்பன திருவாரூர்ப் பெருமான் திருநாமங்கள். பந்தணை நல்லூர் முதலிய வேறு தலங்களிலும் புற்றிடத்தில் இறைவன் எழுந்தருளிய உண்மையை அறியலாம்). புற்று அரவம் – புற்றில் வாழும் பாம்பு. அரை – இடை. சுற்றான் – சுற்றுதலை உடையவன். பாம்பை இடுப்பிற் சுற்றியவன். தொண்டு செய்வார் அவர் தம்மொடும் – தொண்டுகளைச் செய்பவராகிய அவரொடும். அற்றானை – அற்றவர்க்கு அற்ற சிவனை. 'அற்றவர்க்கு அற்ற சிவன்' என்பதன் தாற்பரியம் ஆராய்ந்து உணரத்தக்கது. எல்லாப்பற்றும் அற்றவர்க்கே சிவபிரான் 'பற்றற்றான்' எனல் விளங்கும். 'புற்றில் வாளரவும் அஞ்சேன் பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன், கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி மற்றும் ஓர் தெய்வந் தன்னை உண்டு என நினைந்து எம் பெம்மாற்கு அற்றிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே' என்னுந் திருவாசகத்தின் கருத்தே

ஈண்டுக் கொள்ளல் வேண்டும். 'அற்றவர்கள் நற்றுணைவன்' (சம்பந்தர் திருக்கயிலாயம் 2). 'பாவம் அற்றவர் நாளும் ஏத்த அயவந்தி அமர்ந்தவனே' (திருச்சாத்த மங்கை 6). 'நெஞ்சு அற்றவர் அருவினை யிலரே' (திருச்சிறுகுடி 5). 'உறவும் ஆகி அற்றவர்களுக்கு மாநெதிகொடுத்து நீள்புவி இலங்கு சீர்ப்புறவ மாநகர்க் கிறைவனே எனத் தெறகிலாவினையே' (திருப்பிரமபுரம் 8). 'உலகினில் இயற்கையை ஒழிந்திட்டு அற்றவர்க்கு உற்ற சிவன் உறைகின்ற ஆலவாய் ஆவதும் இதுவே' (2). 'தம் வினையான எலாம் அற அற்றவர் ஆரூர் அரனெறி' (அப்பர் 5). 'அற்றவர்க்கு அன்பர்' அற்றுப் பற்றின்றி யாரையும் இல்லவர்க்கு உற்ற நற்றுணை யாவான் (திருவாஞ்சியம் 6). அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி, அற்றார்க் கருள்செய்யும் ஐயாறன்னே, அற்றார்கட்கு அற்றானாய் நின்றான் கண்டாய், அற்றவர்க்கு அருள் செய்பாச்சிலாச் சிராமத்து அடிகள், அற்றவனார் அடியார் தமக்கு . . . நின்றியூரே, பங்கயச் சேவடிக்கே செல்ல அற்றனன் அற்றனன், சோற்றுத்துறையுள் . . . முதல்வன் பாதத்து அற்றார் அடியார் அடிநாயூரன், ஒன்றுமிலாதவரைக் கழற்போதிறைஞ்சி (திருவாசகம் 524), அற்றவர்க்கு அற்ற சிவன் (பொன் வண்ணத்தந்தாதி 74, இருபாஇருபஃது 20) எனத் தோத்திரமும் சாத்திரமும் இதனைப் பலமுறைக் குறித்தல் அறிதற்பாலது. 'ஒருபற்றிலாமையும் கண்டிரங்காய்' என்றதாலும் இதனை இனிதுணரலாம். இன்னும் பல இடங்களில் இதனைத் திருமுறைகள் வற்புறுத்துகின்றன. பற்றான் – பற்று உடையவன்.

Behold! It is He the Lord of Seerkaazhi. He represents snake pit while He wears the snake on His waist, which beautifies His appearance. He never parts with those devotees of staunch service. He resides in the hearts of those devotees who shed all their desires. He abides in Seerkaazhi temple where the Vedic pandits are many. Those devotees who grip His holy feet firmly will have no sins at all.

1584. நெதியானைநெஞ்சிடங்கொள்ளநினைவார்தம்
விதியானைவிண்ணவர்தாம்வியந்தேத்திய
கதியானைக்காருலவும்பொழியற்காழியாம்
பதியானைப்பாடுமின்நும்வினைபாறவே. 5

நெதியானை, நெஞ்சுஇடம் கொள்ள நினைவார்தம்
விதியானை, விண்ணவர் தாம் வியந்து ஏத்திய
கதியானை, கார் உலவும் பொழில் காழி ஆம்
பதியானை, பாடுமின், நும் வினை பாறவே!

netiyAn2ai, nenjcu iTam koLLa nin2aivArtam
vitiyAn2ai, viNNavartAm viyantu Ettiya
katiyAn2ai, kAr ulavum pozil kAzi Am
patiyAn2ai, pATumin2, num vin2ai pARavE!

பொருள்: சீகாழிச் சிவன் அரிய செல்வமும், தியானம் செய்யும் அடியவர் உள்ளத்தில் பொருந்தி இருப்பவரும், விண்ணவர்கள் வியக்கும் நெறியும் ஆவார். சோலைகள் சூழ்ந்த சீர்காழிப் பதியில் உறைபவரும் அவரே. அவரைப் பாடும் நம் வினைகளை நீக்கி அருள்பவரும் அவர்தாம்.

குறிப்புரை: நெதி – நிதி என்பதன் மரூஉ. இவ்வாறாள்வது பயின்றுள்ளது. விதி – கட்டளை. கதி – நெறி. கார் – மேகம். பொழில் – சோலை. பதி – நகர். பாற – அழிய.

Behold! It is He the Lord of Seerkaazhi who is all wealth to have. He is the guide to those who think of Him wholeheartedly. When the celestials worship Him with awe and wonder, He shows the path to get salvation. His abode is there in Seerkaazhi, a holy place of gardens, where clouds always move. Ye devotees, sing His glory and He will chase all evils.

1585. செப்பானமென்முலையாளைத்திகழ்மேனி
வைப்பானைவார்கழலேத்திநினைவார்தம்
ஒப்பானையோதமுலாவுகடற்காழி
மெய்ப்பானைமேவியமாந்தர்வியந்தாரே. 6

செப்பு ஆன மென்முலையாளைத் திகழ் மேனி
வைப்பானை, வார் கழல் ஏத்தி நினைவார்தம்
ஒப்பானை, ஓதம் உலாவு கடல் காழி
மெய்ப்பானை, மேவிய மாந்தர் வியந்தாரே.

ceppu An2a men2mulaiyALait tikaz mEn2i
vaippAn2ai, vAr kazal Etti nin2aivArtam
oppAn2ai, Otam ulAvu kaTal kAzi
meyppAn2ai, mEviya mAntar viyantArE.

பொருள்: சீகாழிச் சிவன் உமாதேவியை இடபாகத்தில் கொண்டு ஒளித்திருமேனியோடு காட்சியளிப்பவர். தம்முடைய திருவடிகளை நினைந்து வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்பவர். கடல் அலைகள் உலாவி வரும் சீர்காழிப் பதியில் மெய்யாய் மேவுபவர் தம்மை வணங்கும் அடியார்கள் பெரும் பேறு பெற்றவர்கள் ஆவார்கள்.

குறிப்புரை: செப்பு ஆன – செப்பை ஒத்த. மேனி – திருமேனியின் இடப்பாதியில் வைப்பானை – வைத்தலுடையவன, வைப்பவனை எனின் முக்காலத்தும் ஒத்தியல்வதாகாது. தொல்காப்பியம் செய்யும் என்னும் வாய்பாட்டு நிகழ்காலத்து வினையாற் சொல்க என்றது (வினையியல் 43). முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை எம் முறைச் சொல்லும் நிகழுங்காலத்து மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும் (பெயரியல் 19). 'நிகழூஉ நின்ற பால் வரை கிளவி' (வினையியல் 30) பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை அவ்வயின் மூன்றும் நிகழுங்காலத்துச் செய்யும் என்னுங் கிளவியோடு கொள்ளா என்பவற்றை நோக்குக. ஒப்பானை – ஒப்புதலுடையவனை. பராவுசிவர் (தி. 3 ப. 67 பா. 6, சித்தியார் 287) என்ற உண்மையை நோக்குக. ஓதம் – கடலின் அலை. குளிர்ச்சி. மெய்ப்பான் – மெய்யாதலை உடையவன். அவனே மெய்ப்பொருள். மேவிய – விரும்பி வழிபட்ட. மாந்தர் – மனிதரிற் சிறந்தவர். வியந்தார் – பிறரால் பேசப்படும் புகழ்க்குரியவர். பிறரை ஏவியாட்கொள்ளும் மேன்மையர் எனலும் பொருந்தும். மெய்ப்பானை வியந்தாரெனலும் ஆம்.

Behold! It is He the Lord of Seerkaazhi. He shares left portion of His body with the tender casket-like breasted Umaa, He gives His majestic appearance in this posture with Umaa. He gives His grace equally to all those devotees of constant prayer at His holy feet. He alone is the embodiment of truth forever. His abode is in Seerkaazhi, a holy place where cool sea breeze always blows. Those who worship Him pleasingly are always gazed by others with awe and wonder.

1586. துன்பானைத்துன்பமழித்தருளாக்கிய
இன்பானையேழிசையின்னிலைபேணுவார்
அன்பானையணிபொழிற்காழிநகர்மேய
நம்பானைநண்ணவல்லார்வினைநாசமே. 7

*துன்பானை, துன்பம் அழித்து அருள் ஆக்கிய
இன்பானை, ஏழ்இசையின் நிலை பேணுவார்
அன்பானை, அணி பொழில் காழிநகர் மேய
நம்பானை, நண்ண வல்லார் வினை நாசமே.*

tun2pAn2ai, tun2pam azittu aruL Akkiya
in2pAn2ai, Ez icaiyin2 nilai pENuvAr
an2pAn2ai, aNi pozil kAzinakar mEya
nampAn2ai, naNNa vallAr vin2ai nAcamE.

பொருள்: சீகாழிச் சிவன், அடியவர்களை ஆட்கொள்ளும் பொருட்டு அவர்களுக்குத் துன்பம் தருபவரும், இறுதியில் துன்பத்தை நீக்கி அருளின்பத்தைத் தருபவரும், ஏழிசையின் இன்பமாய் உறைபவரும் ஆவார். அழகிய சீர்காழி நகரில் உறைபவரை விரும்பி வணங்கும் அடியார்களின் வினைகள் உறுதியாக நாசமடையும் என்க.

குறிப்புரை: துன்பானை – துன்ப வடிவாயிருப்பவனை. அருள் ஆகிய இன்பானை – சிவஞானந் தந்த பேரின்ப வடிவினனை. 'இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே', பந்தமுமாய் வீடும் ஆயினார், அருள் நிதிதர வரும் ஆனந்தமலையே என்ற திருவாசகக் கருத்து இங்குக் கொள்ளற்பாலது. இன்பமும் நீயே துன்பமும் நீயே (பெருந்தேவபாணி 59). ஏழிசையின் நிலை பேணுவார் – ஏழிசையின் நிலையை விரும்புவார். ஏழிசையாய் இசைப்பயனாய், இன்னிசை வீணையில் இசைந்தோன், ஏழிசையோன் கொச்சையை மெச்சினை, எழுவகையோசையும் . . . ஆகிய பரமனை, ஏழிலின்னரம் பிசைத்தனை. அன்பான் – அன்பு வடிவானவன். அன்பே சிவம் ஆவது. அணி – அழகு. நம்பான் – உயிர்களால் விரும்பப்படுபவன். நம்பும் மேவும் நசையாகும்மே (தொல்காப்பியம்). நண்ண – விரும்ப; அடைய; செறிய. நாசம் – அழிவு.

Behold! It is He the Lord of Seerkaazhi. He represents both sorrow and joy. He is responsible for suffering in the beginning, later He destroys that suffering and gives blessings with His grace. He loves music and also those expert musicians who play the seven notes. His abode is in Seerkaazhi, the holy place of beautiful gardens. He is our beloved Lord. Those who desire to reach His holy feet will certainly get all their sins wiped out.

1587. குன்றானைக்குன்றெடுத்தான்புயநாலைந்தும்
வென்றானைமென்மலரானொடுமால்தேட
நின்றானைநேரிழையாளொடுங்காழியுள்
நன்றானைநம்பெருமானைநணுகுமே. 8

குன்றானை, குன்று எடுத்தான் புயம் நால்-ஐந்தும்
வென்றானை, மென்மலரானொடு மால் தேட
நின்றானை, நேரிழையாளொடும் காழியுள்
நன்றானை, நம்பெருமானை, நணுகுமே!

kun2RAn2ai, kun2Ru eTuttAn2 puyamnAl-aintum
ven2RAn2ai, men2malarAn2oTu mAl tETa
nin2RAn2ai, nErizaiyALoTum kAziyuL
nan2RAn2ai, namperumAn2ai, naNukumE!

பொருள்: சீகாழிச் சிவன் குறைவற்ற நிறைவானவன். கயிலாய மலையைத் தூக்க முயன்ற இராவணனின் இருபது கைகளின் வலிமையினை அழித்தவன். பிரமனும் திருமாலும் அடிமுடி தேடிட ஒளிமயமாய் நின்றவன். உமாதேவியுடன் சீர்காழிப் பதியில் உறையும் நம்பெருமானை வணங்கி மகிழ்வோமாக!

குறிப்புரை: குன்றான் – கயிலை முதலிய குன்றுகளை உடையவன். குன்றெடுத்தான் – கயிலையைத் தூக்கிய இராவணன். வென்றான் – நொறுக்கியவன். மலரான் – பிரமன். மால் – விண்டு. நேர் இழையாள் – திருநிலைநாயகி. இழை – ஆபரணம். நன்றான் – பெரியவன். நல்லதுடையான். சிவன் – குறைவிலா மங்கலக் குணத்தன். நணுகும் முன்னிலை ஏவல் வினை.

Behold! It is He the Lord of Seerkaazhi. He has His abode on the Kailash mountain. He is changeless as a mountain. He very easily crushed the king of Sri Lanka with twenty hands, when he tried to lift His mountain. He is unknown to Brahma who resides in Lotus flower as well as to Vishnu. He abides in Seerkaazhi along with His consort, the bejewelled goddess Umaa. He is the Supreme God of perfection. Ye devotees reach our Lord in this sacred place and be happy.

1588. சாவாயும்வாதுசெய்சாவகர்சாக்கியர்
மேவாதசொல்லவைகேட்டுவெகுளேன்மின்
பூவாயகொன்றையினானைப்புனற்காழிக்
கோவாயகொள்கையினானடிகூறுமே. 9

சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல் அவை கேட்டு வெகுளேன்மின்!
பூஆய கொன்றையினானைப் புனல் காழிக்
கோஆய கொள்கையினான் அடி கூறுமே!

cAvAyum vAtu cey cAvakar cAkkiyar
mEvAta col avai kETTu vekuLEn2min2!
pU Aya kon2Raiyin2An2aip pun2al kAzik
kO Aya koLkaiyin2An2 aTi kURumE!

பொருள்: சமணரும் சாக்கியரும் எப்பொழுதும் விதண்டா வாதம் செய்யக்கூடியவர்கள். அவர்கள் கூறுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். அவர்கள் சொல்லைக் கேட்டு அவர்கள்மீது சினம் கொள்ளவும் மாட்டோம். கொன்றை மலர்சூடி சீர்காழிப் பதியில் கோயில் கொண்டுள்ள எங்கள் தலைவனைப் பாடிப் பரவுவோம்.

குறிப்புரை: சாவாயும் வாது செய்தல் – நம்கட்சி அழிந்தபோதும் வாதம் புரிதல். சாவு ஆயும் எனலுமாம். மேவாத – செல்லாத. வெகுளேன்மின் – கோபிக்காதீர்கள். (ஏவல்வினை) பகைவனை வெறுத்தல் வேண்டா என்றேனும் பகைவர் தீயுரை கேட்டுச் சைவத்தை வெறுத்தல் வேண்டா என்றேனும் கருத்துக் கொள்ளலாம். அடிகூறும் – திருவடியைத் துதி செய்யுங்கள் – கோ ஆய கொள்கையினான் – பரத்துவக் கடவுளாகிய கொள்கைக்கு உரியவன், பரமசிவன்.

You people of Seerkaazhi, don't be disturbed by the harsh words of denial, uttered by the Jains and the Buddhists. They will go on arguing even after defeat. Forget them and forbid anger. You may come and bow at the holy feet of Lord of Seerkaazhi, which is a seashore city. Our Lord always wears garlands made of cassia flowers. Praise His glory always.

பாட்டு – 10

பத்தாவது பாட்டு கிடைக்கப்பெறவில்லை.

1589. கழியார்சீரோதமல்குங்கடற்காழியுள்
ஒழியாதுகோயில்கொண்டானையுகந்துள்கித்
தழியார்சொல்ஞானசம்பந்தன்தமிழரா
மொழிவார்கள்மூவுலகும்பெறுவார்களே. 11

கழிஆர் சீர் ஓதம் மல்கும் கடல் காழியுள்
ஒழியாது கோயில் கொண்டானை, உகந்து உள்கித்
தழி ஆர் சொல் ஞானசம்பந்தன் தமிழ் ஆர
மொழிவார்கள், மூஉலகும் பெறுவார்களே.

kazi Ar cIr Otam malkum kaTal kAziyuL
oziyAtu kOyil koNTAn2ai, ukantu uLkit
tazi Ar col njAn2acampantan2 tamiz Ara
mozivArkaL, mUulakum peRuvArkaLE.

பொருள்: சீகாழிச் சிவன், உப்பங்கழிகள் நிறைந்த கடற்காழியுள் கோயில் கொண்டுள்ளவரை மனமொழி மெய் பொருந்த ஞானசம்பந்தப் பெருமான் போற்றிப் பாடியுள்ளார். அவர் பாடிய ஞானத் தமிழ்ப் பாடல்களை பாடுபவர்கள் மூவுலகினாலும் போற்றப்படுவார்கள்.

குறிப்புரை: கழி – கழிகள். ஆர் – பொருந்திய. சீர் ஓதம் – மிக்க கடல் நீர். உகந்து – விரும்பி. உள்கி – நினைந்து. தழி – தழுவி. ஆர – நிறைய. மொழிவார் – பாடுவார். கள் விகுதி பிற்கால வழக்கில் வழங்குவது. மூவுலகும் – மண். விண், பாதலம் மூன்றும். தழியார் – தழுவிய சிவஞானியர். சொல் – புகழ்ந்து போற்றுகின்ற எனலும் பொருந்தும்.

Behold! It is He the Lord of Seerkaazhi who resides in the temple of this town. This is a holy place in the seacoast. The backwater of the sea brings dampness and coolness to the entire area. Those devotees, who with earnestness, recite these Tamil verses sung by Thiru-gnana-Sambandar on the Lord eternal of Seerkaazhi, embracing His divinity in their hearts, will be blessed and praised in all the three worlds.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

11ஆம் பதிகம் முற்றிற்று
End of 11th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 148 *பதிக எண்: 12*

12. திருக்கச்சியேகம்பம் 12. KACH-CHITH-THIRUVEGAMBAM

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

திருக்கச்சியேகம்பம் என்னும் இத்திருத்தலமானது தற்போது காஞ்சிபுரம் என்னும் பெயருடன் விளங்குகின்றது. மாமரத்தைத் தலமரமாகக் கொண்டுள்ளமையால் இப்பெயர் பெற்றது. ஆமரம் என்பது வடசொல். அது தமிழில் வழங்கும்போது தமிழ் இலக்கணத்திற்கு ஒத்தவாறு மகரத்துக்கு இனமாகிய பகரத்தைப் பெற்று ஆம்பரம் என்று ஆயிற்று. மகரத்தின் பின் ரகரம் தமிழில் மயங்காது. ஆம்ரம் என்பது ஏகமென்னும் சொல்லோடு புணர்ந்து ஏகாம்பரம் என்று (வடமொழி விதிப்படி) ஆயிற்று. ஏகாம்பரம் என்பது ஏகம்பம் என்றும், கம்பம் என்றும் மருவிற்று. கள்ளக்கம்பனை, நல்லகம்பனை என்பவைகளில் காண்க.

இத்திருத்தலம் காஞ்சிபுரம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே சுமார் 2–5 கீ.மீ. தூரத்தில் இருக்கின்றது. சென்னை, செங்கற்பட்டு, திண்டிவனம், அரக்கோணம், வேலூர் முதலிய பல நகரங்களிலிருந்தும் காஞ்சிபுரம் வரப் பேருந்துகள் உள்ளன. இறைவரின் திருப்பெயர் தழுவக்குழைந்த நாதர், உலகம் உய்ய ஆகமவழியின்படி இறைவரைப் பூசிக்க இறைவியார் கயிலையினின்று காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளினார். அங்கே கம்பையாற்றின் கரையில் திருவருளால் முளைத்து எழுந்த சிவலிங்கத் திருவுருவைக் கண்டு பூசித்தார். அதுபொழுது கம்பை மாந்தி பெருக்கெடுத்து வந்தது. அம்மையார் பயந்து பெருமானை இறுகத் தழுவிக் கொண்டார். அது பொழுது இறைவர் திருமேனி குழைந்து வளைத்தழும்பும் முலைத்தழும்பும் தோன்றக் காட்சியருளினார். அதுகாரணம்பற்றித் தழுவக்குழைந்த நாதர் என்னும் திருப்பெயர் உண்டாயிற்று. திருவேகம்பர் என்ற வேறு பெயரும் உண்டு. இறைவியாரின் திருப்பெயர் ஏலவார்குழலி, காமாட்சியம்மை ஆகியனவாம். இத்திருத்தலத்தில் உள்ள விநாயகரின் திருப்பெயர் விகடசக்கர விநாயகர். இவர் தெற்கு திருவாசலில், ஆயிரங்கால் மண்டபத்தின் முன்புறத்தில் எழுந்தருளி இருக்கின்றார்.

தீர்த்தம் கம்பைமாநதி மற்றும் சிவகங்கை என்பன. தலப்பெருமையாவது, இத்திருத்தலம் முத்திதரும் தலங்கள் ஏழனுள் முதன்மை பெற்றது. சூளுறவு பிழைத்ததின் காரணமாகத்

திருவொற்றியூர் எல்லையைத் தாண்டிய அளவில் இருகண்பார்வைகளும் மறையப் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனார்க்கு இடக்கண் பார்வையை இறைவர் கொடுத்தருளிய தலம். க்ஷேத்திர வெண்பாக்களைப் பாடிய ஐயடிகள் காடவர்கோன் நாயனார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், சாக்கிய நாயனார், இவர்கள் அருள்பெற்ற பதி. இதில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் என்னும் மூவரும் பூசித்த இலிங்கங்கள் இருக்கின்றன. அவை முறையே வெள்ளக்கம்பம், கள்ளக்கம்பம், நல்லகம்பம் என்னும் பெயர்களுடன் விளங்குகின்றன. இக்கச்சியேகம்பத்திற்கு மாத்திரம் பன்னிரண்டு பதிகங்கள் இருக்கின்றன. இவை மூவராலும் பாடப்பெற்றவை.

இவ்வூரில் (காஞ்சிபுரத்தில்) கச்சியேகம்பத்துடன் கச்சிமேற்றளி, கச்சிஓணகாந்தன்றளி, கச்சிநெறிக்காரைக்காடு, கச்சியநேகதங்காவதம் என்னும் தேவாரம் பெற்ற கோயில்களும் கச்சிமயானம் என்னும் ஒரு வைப்புத்தலமும் ஆக ஆறுகோயில்கள் இருக்கின்றன. இவைகளுள் கச்சிமயானம், திருக்கச்சி ஏகம்பத்தினுள் கொடிமரத்தின் முன்னுள்ளது.

இக்கோயிலின் வெளிமதில் கி.பி.1799இல் ஹாச்ஸன் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. அதில் புத்தர் மகாநிர்வாணம் முதலிய உருவங்கள் எல்லாம் சேர்ந்துவிட்டன. இச்சிலையில் சிலபகுதியில் மகேந்திரன் காலத்து எழுத்துக்கள் சில இருக்கின்றன. சில இடங்களில் விஜயநகரச் சின்னங்கள் (வராகமும், கட்கமும்) இருக்கின்றன. முன்மண்டபத்தில் இருக்கும் ஒரு சிலை கரிகாலன் உருவம் என்பர். அதற்குத் தாடி இருக்கின்றது. சுவாமி சந்நிதி கிழக்கு. ஆனால் கோபுரவாயில் தெற்கே இருக்கின்றது. திருவாடுவதுறை ஆதீனத்து மாதவச்சிவஞானயோகிகள் அருளிய காஞ்சிப்புராணமும், கச்சியப்ப முனிவர் அருளியதும், அதனுடைய இரண்டாங்காண்டம் என்று சொல்லப்படுவதுமாகிய காஞ்சிப்புராணமும், கச்சியப்ப முனிவர் இயற்றிய கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூதும், இரட்டையர்கள் பாடிய ஏகாம்பரநாதர் உலாவும், பட்டினத்துப்பிள்ளையார் அருளிய திருவேகம்பமுடையார் திருவந்தாதியும், மாதவச் சிவஞான யோகிகள் அருளிய கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம், திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு, திருஏகம்பர் (யமக) அந்தாதி ஆகிய இவைகளும் இத்திருத்தலத்தைப் பற்றிய நூல்கள் ஆகும்.

பதிக வரலாறு

வேதமோடு சைவநீதி விளங்கவந்த கவுணியனார் காஞ்சியை அணைந்து, மதிற்புறத்தே சென்று சேர்ந்து வணங்கினார். அளவற்ற தொண்டர்கள் அஞ்சலித்து வாழ்த்திய ஒலி வானளாவப் பெருகிற்று. பூமாரியும், பொற்சுண்ணமும் புயல்போல் பொழிந்தன. காமக்கண்ணி தழுவக்

குழைந்த கச்சியேகம்பரை, உருகிய அன்பு உள்ளலைப்பப் பருகிய மெய்யுணர்வினோடும் பாடியருளிய பதிகம் இது.

திருச்சிற்றம்பலம்

1590. மறையானைமாசிலாப்புன்சடைமல்குவெண்
பிறையானைப்பெண்ணொடாணாகியபெம்மானை
இறையானையேர்கொள்கச்சித்திருஏகம்பத்
துறைவானையல்லதுள்காதெனதுள்ளமே. 1

மறையானை, மாசு இலாப் புன்சடை மல்கு வெண்-
பிறையானை, பெண்ணொடு ஆண் ஆகிய பெம்மானை,
இறையானை, ஏர் கொள் கச்சித் திரு ஏகம்பத்து
உறைவானை, அல்லது உள்காது எனது உள்ளமே.

maRaiyAn2ai, mAcu ilAp pun2caTai malku veN-
piRaiyAn2ai, peNNoTu ANAkiya pemmAn2ai,
iRaiyAn2ai, Er koL kaccit tiru Ekampattu
uRaivAn2ai, allatu uLkAtu, en2atu uLLamE.

பொருள்: ஏகம்பத்துறை இறைவா! வேத வடிவானவனே! தலையில் பிறையைத் தாங்கியவனே! பெண்ணோடு ஆணாகிய பெம்மானே! இறைவனே! உன்னை அல்லாது வேறு எதையும் என் உள்ளம் நினையாது.

குறிப்புரை: மறையான் – வேதசொரூபன், வேதங்களை அருளியவன் எனலுமாம். மாசு – குற்றம். புன்சடை – மென்மையை உடைய சடை. புன்மை, பொன்மையுமாம். பிறையான் – பிறையை அணிந்தவன். பெண்ணும் ஆணும் ஆகிய பெருமான். இறையான் – எப்பொருளினும் உறைவான். ஏர் – எழுச்சி. அழகும் ஆம். கச்சி – சிவதலம், காஞ்சிபுரம். திருவேகம்பம் – அங்குள்ள பெரிய சிவாலயம். திருவேகம்பத்து உறைவான் – திருவேகம்பம் எனப் பெயரிய திருக்கோயிலுள் வாழ்பவன். உள்காது – எண்ணாது. ஏகம்பம் – ஏகாமரம், ஏகாம்பரம். ஏகம் – ஒன்று. ஆமரம் – மாமரம்.

It is Civan the Lord who has His abode at that beautiful temple called Ekaambaranaathar temple in the city of Kanchi commonly known as Kaanjipuram. He is the embodiment of all the four Vedas. His long matted hair has been beautified with that white crescent moon. He is both a male and female called Arthanaareeswaran. He resides in every thing. My mind will not think a god, other than the god at Kach-chith-thiruvegambam.

1591. நொச்சியேவன்னிகொன்றைமதிகூவிளம்
உச்சியேபுனைதல்வேடம்விடையூர்தியான்
கச்சியேகம்பம்மேயகறைக்கண்டனை
நச்சியேதொழுமின்நும்மேல்வினைநையுமே. 2

நொச்சியே, வன்னி, கொன்றை, மதி, கூவிளம்,
உச்சியே புனைதல் வேடம்; விடைஊர்தியான்;
கச்சி ஏகம்பம் மேய கறைக்கண்டனை
நச்சியே தொழுமின்! நும்மேல் வினை நையுமே.

nocciyE, van2n2i, kon2Rai, mati, kUviLam,
ucciyE pun2aital vETam; viTai UrtiyAn2;
kacci Ekampam mEyakaRaikkaNTan2ai
nacciyE tozumin2! nummEl vin2ai naiyumE.

பொருள்: ஏகம்பத்துறை இறைவனே! நொச்சி இலை, வன்னி இலை, வில்வ இலை, கொன்றை மலர், சந்திரன் ஆகிய ஐந்தினையும் தலையில் தாங்கி அழகுறக் காட்சி அளிப்பவனே! கச்சிப்பதியில் உறைபவனே! இடப வாகனத்தில் காட்சி தரும் நீலகண்டனே! உம்மை அன்புடன் விரும்பித் தொழும் அடியவர்களுக்கு அவர்களது வினைகள் அழிந்தே போகும் என்க.

குறிப்புரை: நொச்சியிலை. வன்னிபத்திரம், கொன்றைப்பூ, பிறை. கூவிளம் (வில்வம்) ஆகியவற்றைச் சிவபெருமான் முடியிற் புனைவது அவனது திருவேடமாகும். உர்தி – வாகனம், எருது வாகனத்தன். கறை – (நஞ்சுண்டதன் காரணமாகப் பொருந்திய அதன்) கறுப்புக் கண்டன் – திருக்கழுத்தினன். நச்சி – விரும்பி. பக்தி கொண்டு. தொழுமின் – வழிபடுங்கள். நையும் – அழியும்.

It is Civan, the Lord at Ekambaram temple called Ekaambaranaathar. He has adorned His long matted hair with vitex, mesquit and cassia flowers with bael leaves besides the white moon. He mounts on the bull to roam around the cosmos. His neck is black because He drank poison from the sea of milk. Ye devotees! do come to pray that Lord at Kanchipuram. If you do so, the bad effects of your karma will vanish.

1592. பாராருமுழவமொந்தைகுழல்யாழொலி
சீராலேபாடலாடல்சிதைவில்லதோர்
ஏரார்பூங்கச்சியேகம்பனையெம்மானைச்
சேராதாரின்பயமாயந்நெறிசேராரே. 3

பார் ஆரும் முழவம், மொந்தை, குழல், யாழ், ஒலி
சீராலே பாடல் ஆடல் சிதைவு இல்லது ஓர்
ஏர் ஆர் பூங் கச்சி ஏகம்பனை, எம்மானை,
சேராதார் இன்பம் ஆய(ந்) நெறி சேராரே.

pAr Arum muzavam, montai, kuzal, yAz, oli
cIrAlE pATal ATal citaivu illatu Or
Er Ar pUg kacci Ekampan2ai, emmAn2ai,
cErAtAr in2pam Aya(n) neRi cErArE.

பொருள்: ஏகம்பத்துறை இறைவனை, அடியார்கள் சிறந்த முழவு, மொந்தை, குழல், யாழ் போன்றவைகளை முழக்கி அன்புடன் பாடிப் பரவுவர். அதுபோல அன்புடன் பாடி பரவாதவர்கள் அவர் அருள் இன்ப வழியை அடையாதவர்களே ஆவார்கள் என்க.

குறிப்புரை: பார் – நிலம். ஆரும் – நிறைந்து முழங்கும். முழவம், மொந்தை, குழல், யாழ் என்னும் இசைக்கருவிகளின் ஒலியும், சீரும், பாடலும், ஆடலும் கச்சியுள் அக்காலத்தில் மிக்கிருந்த உண்மை புலனாகும். சிதைவு – கேடு. ஏர் – எழுச்சி, அழகு. சேராதார் – இடைவிடாது நினையாதவர். இன்பமாய் நெறி – பேரின்பத்தை எய்துவதற்குரிய நன்னெறியை (சன்மார்க்கத்தை). நகரமெய் விரித்தல். சேரார் – அடையார்.

It is Civan who abides in Kach-chith-thiruvegambam, a holy place which is very beautiful with a lot of flowers. In this temple, the scholar devotees sing the divine hymns amid dancing for rhythmic sounds of percussion drums like monthai and muzhavu along with the melodies of flute. These beautiful sounds are always echoed all around.

1593. குன்றேய்க்குநெடுவெண்மாடக்கொடிகூடிப்போய்
மின்றேய்க்குமுகில்கள்தோயும்வியன்கச்சியுள்
மன்றேய்க்குமல்குசீரான்மலியேகம்பம்
சென்றேய்க்கும்சிந்தையார்மேல்வினைசேராவே. 4

குன்று ஏய்க்கும் நெடுவெண்மாடக் கொடி கூடிப் போய்
மின் தேய்க்கும் முகில்கள் தோயும் வியன்கச்சியுள்,
மன்று ஏய்க்கும் மல்கு சீரால் மலி ஏகம்பம்
சென்று ஏய்க்கும் சிந்தையார்மேல் வினை சேராவே.

kun2Ru eykkum neTuveNmATak koTi kUTip pOy
min2 tEykkum mukilkaL tOyum viyan2kacciyuL,
man2Ru Eykkum malku cIrAl mali Ekampam
cen2Rum Eykkum cintaiyArmEl vin2ai cErAvE.

பொருள்: ஏகம்பத்துறை இறைவா! நீவிர் கோயில் கொண்டுள்ள கச்சியம்பதியில் உயர்ந்த மாடங்கள் பொருந்தியுள்ளன. அம்மாடங்களில் உள்ள கொடிகள் மேகத்தைத் தடவும் நிலையில் உயர்ந்து விளங்குகின்றன. அத்தகைய கச்சியில் உறையும் இறைவனை நினைந்து நினைந்து வணங்கும் அடியவர்களுக்கு என்றும் வினை பொருந்தாது என்க.

குறிப்புரை: குன்று ஏய்க்கும் நெடுவெண்மாடம் – நெடிய (உயரிய) சுதையால் தீற்றப்பட்ட மாடங்கள் மலைகளைப்போல் விளங்குகின்றன. கொடிகூடிப்போய் மின்தேய்க்கும் முகில்கள் தோயும் அம்மாடங்களின்மேல் கட்டிப் பறக்கவிட்ட துணிக்கொடிகள் எல்லாம் ஒருங்குசேர்ந்து சென்று மின்னல்கள் ஒன்றோடொன்று உராயும் மேகமண்டலத்தை அளாவிப் படியும். மன்று – பிருதிவியம்பலத்தை. மிகுதியாய்ப் பரவித் தேய்க்கும் சீரால் எனலுமாம். மல்குசீரான் – மிக்க சிறப்புடைய சிவபிரான். ஏய்க்கும் – பொருந்தச் செய்யும்.

It is Civan, the Lord of Ekambam temple which is situated in the city of Kachchi. The entire world knows the fame of this city. Here very beautiful mansions are hill-like strong and tall. The flags on the top of these mansions, waving in air, touch the clouds where lightning glitters every now and then. In this famous city of Kachchi, the admirable beauty of the temple of Civan is very well known. The devotees of the city, deeply concentrating on the Lord of Ekambam temple, worship Him. They will not get any sufferings on account of their karma.

1594. சடையானைத்தலைகையேந்திப்பலிதருவார்தம்
கடையேபோய்மூன்றுங்கொண்டான்கலிக்கச்சியுள்
புடையேபொன்மலருங்கம்பைக்கரையேகம்பம் 5
உடையானையல்லதுள்காதெனதுள்ளமே.

சடையானை, தலை கை ஏந்திப் பலி தருவார்தம்
கடையே போய் மூன்றும் கொண்டான் கலிக் கச்சியுள்,
புடையே பொன் மலரும் கம்பைக்கரை ஏகம்பம்
உடையானை, அல்லது உள்காது, எனது உள்ளமே.

caTaiyAn2ai, talai kai Entip pali taruvArtam
kaTaiyE pOy mUn2Rum koNTAn2 kalik kacciyuL,
puTaiyE pon2 malarum kampaikkarai Ekamparam
uTaiyAn2ai, allatu uLkAtu, en2atu uLLamE.

பொருள்: ஏகம்பத்துறை இறைவா! நீவிர் அழகிய சடாமுடியினைக் கொண்டவர் ஆவீர். நீர் பிரம கபாலத்தைக் கையில் ஏந்திக் கொண்டு தாருகாவனத்துச் சென்று முனிபத்தினிகளின் உடல், பொருள், ஆவி மூன்றையும் கவர்ந்தருளினீர். கொன்றை மலர்கள் பூத்துக் குலுங்கும் கம்பை நதிக்கரையில் விளங்கும் ஏகம்பத் திருக்கோவில் வீற்றிருப்பவரே. உமது திருவடிகளைத் தவிர என் உள்ளம் வேறு எதையும் நாடாது என்க.

குறிப்புரை: தலை ஏந்தி – தலையை (பிரமகபாலத்தை)க் கையில் தாங்கி, தருவார் – தாருகாவனத்துப் பெண்டிர். கடை – வாயிற்கடை. மூன்றும் – உடல் பொருள் ஆவி எல்லாம். உயிர், நாண், கற்பு என்றலுமாம். புடை – நகரின் பக்கங்களில். பொன் மலரும் – பொன் (போற்கொன்றைகள்) பூக்கும். பொன் விளையும் எனல் பொருந்தாது. கம்பை – கம்பாநதி. உடையான் – சுவாமி. உள்காது – நினையாது.

It is Civan, the Lord of Kach-chith-thiruvegambam temple has matted locks of hair. He carried a human skull on His hand and went to the entrance of the holy Daaruga Vanam to meet the ladies of the sages at the entrance. He then coveted all the three alms such as their body, soul and wealth from those ladies. Such a Supreme Lord resides in the Ekambam temple at Kachchi city on the bank of the river abounding in cassia flowers. My mind will never brood on any god other than our Lord at this temple.

1595. மழுவாளோடெழில்கொள்சூலப்படைவல்லார்தம்
கெழுவாளோரிமையாருச்சியுமையாள்கங்கை
வழுவாமேமல்குசீரால்வளரேகம்பம்
தொழுவாரேவிழுமியார்மேல்வினைதுன்னாவே. 6

மழுவாளோடு எழில் கொள் சூலப்படைவல்லார்தம்-
கெழு வாளோர் இமையார், உச்சி உமையாள் கங்கை
வழுவாமே மல்கு சீரால் வளர் - ஏகம்பம்
தொழுவாரே விழுமியார்; மேல்வினை துன்னாவே.

mazuvALOTu ezil koL cUlappaTai vallArtam--
kezu vALOr, imaiyAr, ucci umaiyAL kagkai
vazuvAmE malku cIrAl vaLar--Ekampam
tozuvArE vizumiyAr; mElvin2ai tun2n2AvE.

பொருள்: ஏகம்பத்துறை இறைவா! நீவிர் மழு, வாள், அழகிய திரிசூலம் இவற்றைக் கையில் தாங்கியுள்ளீர்! உமையவளை இடபாகத்தும் கங்கையாளைத் தலையிலும் கொண்டு அழகுறக் காட்சி அருளுகின்றீர். திருஏகம்பத்துள் உறைகின்ற உம்மை அன்புடன் வணங்கும் அடியார்களை வினைகள் சேராவாம் என்க.

குறிப்புரை: மழு, வாள், சூலம் என்னும் படைகள் ஏந்த வல்லவர். வாள் – கட்கம். எழில் – அழகு. வல்லார்தம் ஏகம்பம், கெழுவாள், உமையாள், வாளோர் இமையர் (இமயமலையார்). வாளோர் – ஒளியுடையவர். உச்சி, பொது, உமையாளும் கங்கையும் மல்குசீர். வழுவாமே – தவறாமல். தொழுவாரே – வணங்குவாரே. விழுமியார் – சிறந்தவர். துன்னா – நெருங்கா.

It is Civan who resides in the Thiru-Ekambam temple in the holy city of Kachchi. He clasps in His hands axe, sword and beautiful trident. His consort Umaa Devi, daughter of the famous and glittering king of Himalayas, is with Him. Also the lady of river Ganges adorns His head. In this holy temple full of virtues abides our Lord with a majestic appearance as above. The devotees who always pray to Him without fail are really the best ones. They will not be approached by any evil.

1596. விண்ணுளார்மறைகள்வேதம்விரித்தோதுவார்
கண்ணுளார்கழலின்வெல்வார்கரிகாலனை
நண்ணுவாரெழில்கொள்கச்சிநகரேகம்பத்
தண்ணலாராடுகின்றஅலங்காரம்மே. 7

விண் உளார்; மறைகள் வேதம் விரித்து ஓதுவார்-
கண் உளார்; கழலின் வெல்வார், கரி காலனை;
நண்ணுவார் எழில் கொள் கச்சிநகர் ஏகம்பத்து
அண்ணலார்; ஆடுகின்ற அலங்கார(ம்)மே!

viN uLAr; maRaikaL vEtam virittu OtuvAr-
kaN uLAr; kazalin2 velvAr, kari kAlan2ai;
naNNuvAr ezil koL kaccunakar Ekampattu
aNNalAr; ATukin2Ra alagkAra(m)mE!

பொருள்: ஏகம்பத்துறை இறைவா! நீவிர் உயர்ந்த வேதத்துள்ளும், அவ்வேதத்தை விரித்து ஓதும் அந்தணர் உள்ளத்துள்ளும் நிறைந்துள்ளீர். காலனை கழலணிந்த காலால் உதைத்து அருளினீர்! ஏகம்பத்துள் கோயில் கொண்டுள்ளீர். அடியார் தரும் பூசனைப் பொருட்களை ஏற்று நீர் ஆடிடும் அழகே அழகாம் என்க.

குறிப்புரை: விண்ணிலும் வேதங்களை விரித்துப் பொருள்கூறும் அறிஞர் கண்ணிலும் இருப்பவர். கரி(ந்த) காலன் – யமதர்மன். கழல் – திருவடிக்கு ஆகுபெயர். யமனைக் காலால் உதைத்து வென்றவர். வெல்வார். நண்ணுவார் – அடைவார், விரும்புவார். எழில் கொள்ளல் – வண்ணம் பெறல். நண்ணுவாரெழில் கொள்ளல் – இறைவன் தன்னைச் சேர்ந்தவர் வண்ணத்தைத் தான் கொள்ளுதல். 'பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல் அந்நிறம் அண்ணலும் அம்பி கையும்' (திருக்களிறு 79) என்றும் (ஈறாகி . . . முதலொன்றாய் . . . எண் வகையாய் . . . வேறாய் . . . உருவுடைமை . . . இருக்கின்றான்' (மேற்படி 86) என்றும் உள்ள சிவாகம வசனத்தை நோக்குக. 'தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை' என்றதும் உணர்க. நண்ணுவார் எழில்கொள்ள நகர் கொடுக்கும் என்ற கருத்தும் பொருந்தும். எழில் – சிவப்பொலிவு.

Oh! Ye devotees! Have you seen the magnificent cosmic dance of our Lord Ekambaranaathar? It is a beauty at its best played by our Lord at Ekambaram temple in Kachchi city. Our Lord is in the celestial world as well as the scholars who explicate the four Vedas. He kicked the god of death to die. This Lord has His abode in the most sacred temple Ekambam which lies in the beautiful city of Kachchi.

1597. தூயானைத்தூயவாயம்மறையோதிய
வாயானைவாளரக்கன்வலிவாட்டிய
தீயானைத்தீதில்கச்சித்திருவேகம்பம்
மேயானைமேவுவாரென்தலைமேலாரே. 8

தூயானை, தூயஆய(ம்) மறை ஓதிய
வாயானை, வாள் அரக்கன் வலி வாட்டிய
தீயானை, தீது இல் கச்சித் திரு ஏகம்பம்
மேயானை, மேவுவார் என் தலைமேலாரே.

tUyAn2ai, tUya Aya(m) maRai Otiya
vAyAn2ai, vAL arakkan2 vali vATTiya
tIyAn2ai, tItu il kaccit tiru Ekampam
mEyAn2ai, mEvuvAr en2 talaimElArE.

பொருள்: ஏகம்பத்துறை இறைவா! நீரே தூயவர். தூய்மை பொருந்திய மறையை ஓதிய வாயினர். கொடிய இராவணனின் வலிமையைக் குறைத்தவர். தீயினைக் கரத்தில் ஏந்தியவர். கச்சியில் கோயில் கொண்டவர். உம்மை வணங்கும் அடியார்களே எம்மால் வணங்கத் தக்கவர்கள் ஆவார்கள்.

குறிப்புரை: தூயவனும், தூயனவாகிய மறைகளை ஓதியருளிய வாயவனும், வாளேந்திய அரக்கனாகிய இராவணனது வலியை வாடச் செய்த தீயவனும், தீயது இல்லாத திருக்கச்சியேகம்பத்தில் மேவியவனும் ஆகிய சிவபெருமானை விரும்பித்தொழுவார் என்தலைமேல் இருப்பவர். இத்திருப்பாட்டின் ஈற்றடிப் பொருளால், திருஞானசம்பந்தர்க்குச் சிவனடியாரிடத்தில் உள்ள பத்திச் சிறப்பு விளங்குகின்றது.

The Lord of Kachchi is the purest of the pure. He is the foremost to have exhibited the valued and celebrated four Vedas through His utterances. He holds fire in one of His hands. He subdued the mightiness of Raavanan. He is the Supreme in the city of Kachchi which destroys all the evil disposition that is prevalent in the city. The fact is those devotees who always pray the Lord of Kach-chith-thiruvegambam deserve always to be worshipped by us.

1598. நாகம்பூணேறதேறல்நறுங்கொன்றைதார்
பாகம்பெண்பலியுமேற்பர்மறைபாடுவர்
ஏகம்பமேவியாடுமிறையிருவர்க்கும்
மாகம்பமறியும்வண்ணத்தவனல்லனே. 9

நாகம் பூண்; ஏறுஅது ஏறல்; நறுங்கொன்றை, தார்;
பாகம் பெண்; பலியும் ஏற்பர்; மறை பாடுவர்;
ஏகம்பம் மேவி ஆடும் இறை இருவர்க்கும்
மா கம்பம் அறியும் வண்ணத்தவன் அல்லனே!

nAkam pUN; ERu atu ERal; naRugkon2Rai, tAr;
pAkam peN; paliyum ERpar; maRai pATuvar;
Ekampam mEvi ATum iRai iruvarkkum
mA kampam aRiyum vaNNattavan2 allan2E!

பொருள்: ஏகம்பத்துறை இறைவா! நீரே நாகத்தை அணிகலன்களாகக் கொண்டவர். இடப வாகனத்தில் அமர்ந்து அருளுபவர். நறுங்கொன்றை மலரைச் சூடியவர். உமையாளை இடபாகத்தில் கொண்டவர். கபாலம் ஏந்திப் பலி கொள்பவர். வேதம் அருளியவர். ஏகம்பத்தில் உறைபவர். பிரமன், திருமால் இருவரும் அறிய முடியாமல் பெரிய தீப்பிழம்பு தூண் போன்று நெடிது விளங்குபவர் ஆவீர். உம்மை வணங்கி மகிழ்வோம்.

குறிப்புரை: பூண்நாகம், ஏறல்ஏறது. நார் நறுங்கொன்றை, பாகம் பெண் என்று இயைத்து சர்ப்பாபரணம், இடப வாகனம், கொன்றை மாலை. மாதியலும் பாதியைக் கொண்டுரைக்க. பலியும் ஏற்பர் – பிச்சை கொள்வர். உம்மை பலியின் இழிவை மிகுந்து நின்றது. மறை – வேதம். ஏகம்பம் மேவி ஆடும் இறை – திருவேகம்பத்தில் (பிருதிவியம்பலத்தில்) எழுந்தருளிய கடவுள். ஆட்டம் – காமாட்சியம்மையாரைத் தன்பால் ஒடுக்கிய இடமாதலின், வகாரத்தைத் தன்பால் அடக்கிய சிகாரத்தின் நிலையாகிய சிவாநந்தத் தாண்டவம். இருவர் – பிரமவிட்டுணு. மாகம்பம் – அறியும் வண்ணத்தவன் அல்லன்.

Our Lord Ekambaranaathar places on His body the ornament of snake. He uses the bull as His vehicle. He wears the garland of sweet smelling cassia flowers. He shares His body with our goddess Umaa. Yet He goes out for alms. He utters the four Vedas in a musical tone. He could not be seen by Vishnu and Brahma in spite of their strenuous efforts. But He stood as a huge tall fire pillar, with no beginning and no end. He is the Lord who abides in the Ekambaram temple in the city of Kachchi.

1599. போதியார்பிண்டியாரென்றிவர்பொய்ந்நூலை
வாதியாவம்மினம்மாவெனுங்கச்சியுள்
ஆதியார்மேவியாடுந்திருவேகம்பம்
நீதியாற்றொழுமின்நும்மேல்வினைநில்லாவே. 10

போதியார், பிண்டியார், என்று இவர் பொய்ந்நூலை
வாதியா வம்மின்! அம் மா எனும் கச்சியுள்
ஆதியார் மேவி ஆடும் திரு ஏகம்பம்
நீதியால் - தொழுமின்! நும்மேல் வினை நில்லாவே.

pOtiyAr, piNTiyAr, en2Ru ivar poynnUlai
vAtiyA vammin2! am mA en2um kacciyuL
AtiyAr mEvi ATum tiru Ekampam
nItiyAl-tozumin2! nummEl vin2ai nillAvE.

பொருள்: ஏகம்பத்துறை இறைவா! பௌத்தர்களும் சமணர்களும் பொய்நூலை அடிப்படையாகக் கொண்டு வாதம் செய்வார்கள். ஏகம்பத்துறை இறைவனை உணராமல் பேசும் அவர்கள் கூற்றை நாங்கள் ஏற்க மாட்டோம். கச்சியுள் பொருந்தி விளங்கும் இறைவனேயே நாங்கள் முறைப்படி தொழுவோம். எங்கள் வினை நில்லாது ஓடிவிடும் என்க.

குறிப்புரை: போதியார் – போதிமரத்தின் கீழமர்ந்த புத்தனை வணங்குவோர். பிண்டியார் – பிண்டி (அசோக) மரத்தின் கீழமர்ந்த அருகனை வணங்குவோர். பொய்ந்நூல் – மெய்ப் பொருளை அறிந்தெழுதப் படாத புத்தகம். வாதியா – வாதிக்காமல். வம்மின் – வாருங்கள். அம்அழகிய. மா – மாமரம். ஏகாம்பரம். மா எனும் கச்சி – திருவேகம்பம் எனப்படும் கச்சி. ஆதியார் – முதல்வர். நீதியால் – சிவாகம முறைப்படி. தொழுமின் – வழிபடுங்கள். நும்மேல் – உங்கள்பால். வினைநில்லா – காமம்பற்றா.

Oh! You citizens of Kachchi come here to me. You need not argue with the Jains and the Buddhists over their false scriptures. They sit under Asoka and Ficus trees and propagate ideas without realising our Lord. Here is our Lord Supreme, performing cosmic dance in the Ekambaram temple of Kachchi which is a sacred and rich city. He is the first and the foremost in the entire universe. Oh! You people bow at His feet with devotion at heart. Then you will not be affected by evils.

1600. அந்தண்பூங்கச்சியேகம்பனையம்மானைக்
கந்தண்பூங்காழியூரன்கவிக்கோவையால்
சந்தமேபாடவல்லதமிழ்ஞானசம்
பந்தன்சொற்பாடியாடக்கெடும்பாவமே. 11

அம் தண் பூங்கச்சி ஏகம்பனை, அம்மானை,
கந்து அண் பூங்காழிஊரன் கவிக்கோவையால்
சந்தமே பாட வல்ல தமிழ் ஞானசம்-
பந்தன் சொல் பாடி ஆட, கெடும், பாவமே.

am taN pUgkacci Ekampan2ai, ammAn2ai,
kantu aN pUgkAzi Uran2 kalikkOvaiyAl
cantamE pATa valla tamiz njAn2acam-
pantan2 col pATi ATa, keTum, pAvamE.

பொருள்: ஏகம்பத்துறை இறைவா! அழகிய பூக்களால் குளிர்ந்து விளங்கும் கச்சியம்பதியில் கோயில் கொண்ட இறைவா! சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தர் பாடிய சந்த நயமிக்க தமிழ்ப்பாடல்களை நாங்கள் பாடி உம்மை வணங்குவோம். அன்பர்களாகிய எங்கள் பாவமும் நீங்கும் அன்றே!

குறிப்புரை: அம்தண்பூ – அழகும் குளிர்ச்சியும் பொலிவும் பொருந்திய. கந்தண்பூங்காழியூர் – நீரும் குளிர்ச்சியும் அழகும் உடைய சீகாழிப்பதி. கலிக்கோவை – ஒலிமாலை. 'பூத முதல்வன் முதலே முதலாகப் பொலிந்த சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே' (தி. 3. ப. 54 பா 8) என்று திருப்பாசுரத்தில் அருளியது அறிக. சந்தம் – இசைப்பாடல். சொல் – சொல்மாலை. பாடி ஆடப்பாவம் கெடும். காழியூரனாகிய தமிழ் ஞானசம்பந்தன். கலிக்கோவையால் சந்தமே பாடவல்ல ஞானசம்பந்தன். 'ஒண்கலியைப் பொன்றும் கவுணியன்' அருளிய கோவை ஆதலின், கலியைத் தீர்க்கும் கோவை எனலும் ஆம். கலியுகத்துக் கோவை, கலிவிருத்தக் கோவை எனல் பொருந்துமேற்கொள்க.

These are the musical verses in Tamil sung by Thiru-gnana-Sambandar. He hails from Kazhiyur, a place of fragrant flower gardens. He sang these songs on Ekambaranaathar at Thiru-Ekambam temple in the city of Kachchi. Here the beautiful flowers in the gardens add to the grace and coolness of the entire city. Those people who can recite these verses with fervour and dance will find their sins perish.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

12ஆம் பதிகம் முற்றிற்று
End of 12th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 149 *பதிக எண்: 13*

13. திருக்கோழம்பம் — 13. THIRU-K-KOZHAMBAM

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

திருக்கோழம்பம் என்னும் இத்திருத்தலமானது மயிலாடுதுறை – கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், நரசிங்கன் பேட்டை தொடர்வண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே 5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. திருவாவடுதுறையிலிருந்தும் செல்லலாம். அங்கிருந்து தெற்கே சுமார் 2.5 கி.மீ தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் முப்பத்தைந்தாவது தலம் ஆகும். இறைவரது திருப்பெயர் – கோகிலேசுவரர். இறைவியாரது திருப்பெயர் – சௌந்தரநாயகி. இந்திரனால் குயிலுருவமாகுமாறு சபிக்கப் பெற்ற சந்தன் என்னும் வித்தியாதரன் இங்குவந்து இறைவனை வழிபட்டுப் பழைய உருவம் எய்தினன். இது திருஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற பெருமை வாய்ந்தது. இதற்கு இரண்டு பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

ஆளுடையபிள்ளையார், 'திருவாவடுதுறை அமர்ந்தாரைப் பணிந்து உறைந்து போந்து திருக்கோழம்பம் சேர்ந்தார். அங்குக் 'கொன்றைவார் சடைமுடியாரை இறைஞ்சி என்றும் நீடிய இன்னிசைப் பதிகம்' ஆகிய இதனைப் பாடினார்.

திருச்சிற்றம்பலம்

1601. நீற்றானைநீள்சடைமேல்நிறைவுள்ளதோர்
ஆற்றானையழகமர்மென்முலையாளையோர்
கூற்றானைக்குளிர்பொழிற்கோழம்பமேவிய
ஏற்றானையேத்துமினும்மிடரேகவே. 1

நீற்றானை, நீள்சடைமேல் நிறைவு உள்ளது ஓர்
ஆற்றானை, அழகு அமர் மென்முலையாளை ஓர் -
கூற்றானை, குளிர் பொழில் கோழம்பம் மேவிய
ஏற்றானை, ஏத்துமின், நும் இடர் ஏகவே!

nIRRAn2ai, nILcaTaimEl niRaivu uLLatu Or
ARRAn2ai, azaku amar men2mulaiyALai Or-
kURRAn2ai, kuLir pozil kOzampam mEviya
ERRAn2ai, Ettumin2, num iTar EkavE!

பொருள்: திருவெண்ணீறு பூசிய பெருமானை, நீண்ட சடையின்மீது கங்கையைத் தரித்தவனை, உமையவளை உடம்பின் பாகத்தில் உடையவனை, குளிர்ச்சியான சோலைகளால் சூழப்பெற்ற கோழம்பம் என்னும் திருத்தலத்தில் உறைவானை, இடப வாகனனை வழிபடுங்கள். அடியவர்களே உங்கள் இடர் தீரும்.

குறிப்புரை: நீற்றானை – திருநீற்றை அணிந்தவனை. நிறைவு – பூரணம். ஆற்றானை – கங்கையாற்றை அணிந்தவனை, மென்முலையாள் – உமாதேவியார். ஓர் கூற்றானை ஒரு (வாம) பாகத்தை உடையவனை. பொழில் – சோலை. ஏற்றான் – எருது வாகனத்தன். இடர் ஏக ஏத்துமின் – துன்பம் தொலையத் தொழுங்கள்.

Behold! It is Civan the Lord of Kozhambam who has smeared white ashes all over His body. His long matted hair is beautified brimful with the Ganges. He shares His body with the tender breasted beautiful goddess, He has His abode in Kozhambam, a holy place of cool gardens. He rides on the bull to go round the cosmos. He is our God Supreme, pray Him; there will be no more karma and you will be free.

1602. மையானைகண்டனைமான்மறியேந்திய
கையானைக்கடிபொழிற்கோழம்பமேவிய
செய்யானைத்தேனெய்பாலுந்திகழ்ந்தாடிய
மெய்யானைமேவுவார்மேல்வினைமேவாவே. 2

மைஆன கண்டனை, மான்மறி ஏந்திய
கையானை, கடிபொழில் கோழம்பம் மேவிய
செய்யானை, தேன் நெய் பாலும் திகழ்ந்து ஆடிய
மெய்யானை, மேவுவார்மேல் வினை மேவாவே.

mai An2a kaNTan2ai, mAn2maRi Entiya
kaiyAn2ai, kaTipozil kOzampam mEviya
ceyyAn2ai, tEn2 ney pAlum tikazntu ATiya
meyyAn2ai, mEvuvArmEl vin2ai mEvAvE.

பொருள்: நீல கண்டத்தை உடையவனை, மானை ஏந்திய கையானை, சோலைகள் சூழ்ந்த திருக்கோழம்பத் தலத்தில் கோயில் கொண்டவனை, தேன், நெய், பால் இவற்றால் சூடப் பெறுபவனை, மெய்யானவனை நினைந்து பாடுபவர்களை வினைகள் சென்று பொருந்தாவாம் என்க.

குறிப்புரை: மை – கருமை. மேகமும் ஆம். ஆன – ஆகிய, ஒத்த. கண்டனை – திருக்கழுத்து உடையவனை. மறி – கன்று. கடி – மணம். பொழில் – சோலை. செய்யான் – செந்நிறமுடையவன். செம்மை உடையவன் (தி.195, ப.59, பா.5) 'திருநின்ற செம்மை' 'செம்மையுள் நின்றவன்' (சுந்தரர்) 'செம்பொருள்' தேன், நெய், பால் என்பன அபிடேகப் பொருள்களுள் அடங்கியவை, திகழ்ந்து – விளங்கி ஆடிய – அபிடேகிக்கப்பெற்ற. மெய் – திருமேனி, சத்தியமுமாம். மேவுவார் – இடைவிடாது தியானிப்பவர். மேவா – அடைய மாட்டா.

Behold! It is Civan the Lord of Kozhambam whose neck is black in colour. He holds in one of His hands the young deer. He is golden red in colour. He has His abode in Kozhambam, a place of fragrant gardens. He is bathed with honey, ghee and milk. He is our Lord Supreme. Evils will not infect those who meditate on His Holy Feet.

1603. ஏதனையேதமிலாவிமையோர்தொழும்
வேதனைவெண்குழைதோடுவிளங்கிய
காதனைக்கடிபொழிற்கோழம்பமேவிய
நாதனையேத்துமினும்வினைநையவே. 3

ஏதனை, ஏதம் இலா இமையோர் தொழும்
வேதனை, வெண்குழை தோடு விளங்கிய
காதனை, கடிபொழில் கோழம்பம் மேவிய
நாதனை, ஏத்துமின், நும் வினை நையவே!

Etan2ai, Etam ilA imaiyOr tozum
vEtan2ai, veNkuzai tOTu viLagkiya
kAtan2ai, kaTipozil kOzampam mEviya
nAtan2ai, Ettumin2, num vin2ai naiyavE!

பொருள்: எல்லாவற்றுக்கும் காரணமானவனை, தங்களது குற்றங்கள் நீங்க தேவர்களால் தொழப்பெறும் வேதமுதல்வனை, ஆணும் பெண்ணுமாய் குழையும் தோடும்

கொண்டவனை, சோலைகள் சூழ்ந்த திருக்கோழம்பத்தில் கோயில் கொண்டவனை நம் தலைவனாகிய சிவபெருமானை, அடியவர்களே துதி செய்யுங்கள். வினைகள் நீங்கும்.

குறிப்புரை: ஏதன் – குற்றமுடையவன். 'குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்' (தி.3. ப.52 பா.3) என்று இவ்வாசிரியர் திருவாக்கேயிருத்தல் அறிக. ஏதம் – குற்றம். காரணனுமாம். இமையோர் என்பதற்குத் தேவர் என்று பொருள்கூறுவர். இது சைவநூல்கட்கு ஒவ்வாது. இமைத்தலில்லாதவர் – இமையோர் என்னும் சாமான்யம் பற்றி இவ்வாறு கூறுவர். 'இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப் புலியூர்த் தோன்றாத் துணையாயிருந்தனன்' என்பதில் தேவர்க்கு அன்பன் எனல் பொருந்துமோ? கண்ணிமைத்துக் காணாத யோகியர், விழித்தகண் குருடாத் திரி வீரர் என்பதே உண்மைப் பொருள். வேதன் – மறைகளை அருளியவன். வெண்குழை தோடு – சங்கத்தோடுங் குழையும். நைய – வருந்த (நீங்க).

Behold! It is Civan the Lord of Kozhambam who is the cause and effect for evils too. The flawless celestials worship the Lord who is the embodiment of the Vedas. He has adorned His ear with white coloured kuzhai and also stud since He is man as well as woman. He has His abode in Kozhambam, a serene place of fragrant gardens. He is our Lord Supreme. Ye devotees! Reach His temple and bow at His holy feet; your evils will be wiped out.

1604. சடையானைத்தண்மலரான்சிரமேந்திய
விடையானைவேதமும்வேள்வியுமாயநன்
குடையானைக்குளிர்பொழில்சூழ்திருக்கோழம்பம்
உடையானையுள்குமினுள்ளங்குளிரவே. 4

சடையானை, தண்மலரான் சிரம் ஏந்திய
விடையானை, வேதமும் வேள்வியும் ஆய நன்கு
உடையானை, குளிர்பொழில் சூழ் திருக் கோழம்பம்
உடையானை, உள்குமின், உள்ளம் குளிரவே!

caTaiyAn2ai, taNmalarAn2 ciram Entiya
viTaiyAn2ai, vEtamum vELviyum Aya nan2ku
uTaiyAn2ai, kuLirpozil cUz tiruk kOzampam
uTaiyAn2ai, uLkumin2, uLLam kuLiravE!

பொருள்: செஞ்சடையவனை, பிரமனின் கபாலத்தைக் கையில் ஏந்தியவனை, இடப வாகனனை, வேதமாகவும் வேள்வியாகவும் விளங்குபவனை, சோலைகள் நிறைந்த திருக்கோழம்பத்தில் மேவியவனை நினைத்தாலே நம் உள்ளம் குளிரும் என்க.

குறிப்புரை: தண்மலரான்சிரம் – பிரமகபாலம். 'வேத வேள்வியை' (நிந்தனை செய்துழல் ஆதமில்லி) (தி.3 ப.108 பா.1) என்றதறிக. நன்கு – நன்மை. உடையான் – உடையவன். சுவாமியும் ஆம். உள்குமின் – தியானம் புரியுங்கள்.

Behold! It is Civan the Lord of Kozhambam who has matted hair He holds the skull of Brahma (seated in lotus flower) in His hand for alms and rides on His bull. He is pleased with the Vedic prayers and adulations by scholars. He has His abode in Kozhambam, a sacred place surrounded by cool gardens. He is our Lord Supreme. Ye devotees! Think of His holy feet always, your mind will be serene and cool.

1605. காரானைக்கடிகமழ்கொன்றையம்போதணி
தாரானைத்தையலோர்பால்மகிழ்ந்தோங்கிய
சீரானைச்செறிபொழிற்கோழம்பமேவிய
ஊரானையேத்துமினும்மிடரொல்கவே. 5

காரானை, கடி கமழ் கொன்றை அம்போது அணி
தாரானை, தையல் ஓர்பால் மகிழ்ந்து ஓங்கிய
சீரானை, செறி பொழில் கோழம்பம் மேவிய
ஊரானை, ஏத்துமின், நும் இடர் ஒல்கவே!

kArAn2ai, kaTi kamaz kon2Rai ampOtu aNi
tArAn2ai, taiyal OrpAl makizntu Ogkiya
cIrAn2ai, ceRi pozil kOzampam mEviya
UrAn2ai, Ettumin2, num iTar olkavE!

பொருள்: மேகம் போன்று குளிர்ந்து அருள்பவனை, மணமிக்க கொன்றை மாலையை அணிபவனை, உமாதேவியை திருமேனியின் ஒருபாகத்தில் கொண்டுள்ளவனை, சோலைகள் நிறைந்த கோழம்பத்தலத்தில் உறைபவனை வழிபடின் நம் துன்பங்கள் நீங்கும் என்க.

குறிப்புரை: காரான் – மேகமாயிருப்பவன். 'கனத்தகத்தான் கயிலாயத்துச்சியுள்ளான்' போது – பூ. தார் – (மாலை, கண்ணி) தார். தையல் – பாலாம்பிகை. சீரான் – கனவான். ஒல்க – சுருங்க. கோழம்பம்

மேவிய ஊர் என்றதால் திருக்கோயிலின் திருநாமம் கோழம்பம் என்க. 'கோழம் பங்கோயிலாக் கொண்டான்' என மேல்வருதலும் காண்க.

Behold! It is Civan the Lord of Kozhambam, who like cold clouds loaded with water, showers His grace. He wears the garland of fragrant cassia flowers. He has the virtue of sharing His body with our goddess. He has His abode in Kozhambam which is a place of thick gardens. He is our Lord Supreme. Ye devotees! Bow at His holy feet, your sufferings will be gone forever.

1606. பண்டாலின்நீழலானைப்பரஞ்சோதியை
விண்டார்கள்தம்புரம்மூன்றுடனேவேவக்
கண்டானைக்கடிகமழ்கோழம்பங்கோயிலாக்
கொண்டானைக்கூறுமினுள்ளங்குளிரவே. 6

பண்டு ஆலின் நீழலானை, பரஞ்சோதியை,
விண்டார்கள்தம் புரம்மூன்று உடனேவேவக்
கண்டானை, கடி கமழ் கோழம்பம் கோயிலாக்
கொண்டானை, கூறுமின், உள்ளம் குளிரவே!

paNTu Alin2 nIzalAn2ai, paranjcOtiyai,
viNTArkaL tam purammUn2Ru uTan2E vEvak
kaNTAn2ai, kaTi kamaz kOzampam kOyilAk
koNTAn2ai, kURumin2, uLLam kuLiravE!

பொருள்: முன்னொரு காலத்தில் ஆலமரத்தின் அடியில் அமர்ந்து சனகாதி முனிவர்களுக்கு அருள் செய்தவனை, மாறுபட்ட முப்புர அசுரர்களை சிரித்தே அழித்தவனை, திருக்கோழம்பத்தில் கோயில் கொண்டவனை வழிபடின் நம் உள்ளம் குளிரும், அமைதி பெறும் என்க.

குறிப்புரை: ஆல் – கல்லாலமரம். பரஞ்சோதி – மெய்யொளி. விண்டார்கள் – பகைவராகிய திரிபுரத்தசுரர்கள். புரம் மூன்று – முப்புரம். கண்டான் – கண்வன். வினையாலணையும் பெயர். கூறுமின் – புகழுங்கள். கடவுள் புகழை வாயாற கூறுதல் உள்ளக் குளிர்ச்சிக்குக் காரணம் என்றவாறு.

Behold! It is Civan the Lord of Kozhambam, who as a preacher sat under the huge banyan tree as Dakshinaamoorthy facing south and cleared the doubts of the four saints. He is the greatest effulgence of all lights. He destroyed the three fortresses of

the evil minded Asuraas. He has His abode in Kozhambam which is a blessed temple of fragrance. He is our Supreme Lord. Ye devotees, speak loudly about the glories of our Lord; then your mind will be serene and cool.

1607. சொல்லானைச்சுடுகணையாற்புரமூன்றெய்த
வில்லானைவேதமும்வேள்வியுமானானைக்
கொல்லானையுரியானைக்கோழம்பமேவிய
நல்லானையேத்துமினும்மிடர்நையவே. 7

சொல்லானை, சுடுகணையால் புரம்மூன்று எய்த
வில்லானை, வேதமும் வேள்வியும் ஆனானை,
கொல் ஆனை உரியானை, கோழம்பம் மேவிய
நல்லானை, ஏத்துமின், நும் இடர் நையவே!

collAn2ai, cuTukaNaiyAl puram mUn2Ru eyta
villAn2ai, vEtamum vELviyum An2An2ai,
kol An2ai uriyAn2ai, kOzampam mEviya
nallAn2ai, Ettumin2, num iTar naiyavE!

பொருள்: மந்திர மொழியாக விளங்குபவனை நெருப்புக் கணையால் முப்புரங்களை எரிவிக்க மேருமலை என்னும் தேரில் ஏறி நின்றவனை, வேதமும் வேள்வியும் ஆனவனை, கரிய யானையைக் கொன்று அதன் தோலை உரித்து ஆடையாகக் கொண்டவனை, திருக்கோழம்பத்து உறைவானை, நல்லவனை வழிபடின் நம் துயரெல்லாம் நீங்கும் என்க.

குறிப்புரை: சொல்லான் – சொல்வடிவாகிய அம்பிகையை உடையவன். சொல்லாயிருப்பவன் எனலும் பொருந்தும். கணை – திருமாலாகிய அம்பு. வில் – மேருவில். வேதவேள்வி, (தி.2 ப.13. பா.4) கொல்லானை – கொல்லும் யானை வினைத்தொகை. (உரி – தோல்) உரியான் – தோலைப் போர்த்துக் கொண்டவன். நல்லான் – சிவன், மங்கல வடிவன்.

Behold! It is Civan the Lord of Kozhambam who is the embodiment of all mantras and its resultant sound. He holds the bow that burnt the three forts with a sharp arrow. He is the personification of all Vedas and religious rites. He killed the ferocious elephant and peeled its skin and covered His body. He has His abode in Kozhambam. He is the manifestation of benevolence and perfection. He is our Lord Supreme. Ye devotees! Praise His glory to be relieved of your woes.

1608. விற்றானைவல்லரக்கர்விறல்வேந்தனைக்
குற்றானைத்திருவிரலாற்கொடுங்காலனைச்
செற்றானைச்சீர்திகழுந்திருக்கோழம்பம்
பற்றானைப்பற்றுவார்மேல்வினைபற்றாவே. 8

வில்-தானை வல்அரக்கர் விறல் வேந்தனைக்
குற்றானை, திருவிரலால்; கொடுங்காலனைச்
செற்றானை; சீர் திகழும் திருக் கோழம்பம்
பற்றானை; பற்றுவார்மேல் வினை பற்றாவே.

vil-tAn2ai val arakkar viRal vEntan2aik
kuRRAn2ai, tiruviralAl; koTugkAlan2aic
ceRRAn2ai; cIr tikazum tiruk kOzampam
paRRAn2ai; paRRuvArmEl vin2ai paRRAvE.

பொருள்: மேருமலையை வில்லாக வளைத்தவனை, அரக்கர் வேந்தன் இராவணனின் அகந்தையை தன் கால்விரல் கொண்டு அடக்கியவனை, காலனை காலால் காய்ந்தவனை, திருக்கோழம்பத்து உறைவானை பற்றினால் நம்மை வினைகள் பற்றாவாம்.

குறிப்புரை: வில்தானை – விற்படை. வல் அரக்கர் – வலிய இராக்கதர். அசுரர் காரணம் பற்றி வருந்துபவர். இராக்கதர். ஒரு காரணமும் பற்றாது வருந்துபவன். அரக்கர் வேந்தன் – இராவணன். குற்றான் – சிறுமைப்படுத்தியவன், நசுக்கியவன் விரலாற் குற்றான் என்று கொள்க. காலனைச் செற்றான் – காலசங்காரக் கடவுள். பற்றான் – பற்றுதலை உடையவன். பற்றுவார் – அடியார். பற்றா – தொடரா.

Behold! Civan the Lord of Kozhambam is our God Supreme. Raavanan, the king of Sri Lanka was the supreme head of all his race of Raakshasas. His might and loftiness were subdued by our Lord of Kozhambam. He once kicked and killed the god of death. Our Lord has His abode at glorified Thiru-k-Kozhambam. Those devotees who grip His holy feet with great love will never be gripped by evils.

1609. நெடியானோடயனறியாவகைநின்றதோர்
படியானைப்பண்டங்கவேடம்பயின்றானைக்
கடியாருங்கோழம்பமேவியவெள்ளேற்றின்
கொடியானைக்கூறுமினுள்ளங்குளிரவே. 9

நெடியானோடு அயன் அறியா வகை நின்றது ஓர்
படியானை, பண்டங்கவேடம் பயின்றானை,
கடி ஆரும் கோழம்பம் மேவிய வெள்ஏற்றின்
கொடியானை, கூறுமின் உள்ளம் குளிரவே!

neTiyAn2OTu ayan2 aRiyA vakai nin2Ratu Or
paTiyAn2ai, paNTagkavETam payin2RAn2ai,
kaTi Arum kOzampam mEviya veL ERRin2
koTiyAn2ai, kURumin2, uLLam kuLiravE!

பொருள்: திருமாலும், பிரமனும் அடிமுடி தேடி அறியா வகையில் நெருப்பு வடிவாய் நின்றவனை, பாண்டரங்கம் என்னும் கூத்தினை ஆடிட, அதற்குரிய வேடத்தைக் கொண்டவனை, சோலைகள் நிறைந்த கோழம்பப் பதியில் உறைபவனை பாடிப்பரவுவாரின் உள்ளங்கள் குளிர்வு பெறும்.

குறிப்புரை: நெடியான் – விக்கிரமன், திருமால். அயன் – அஜன், பிரமன். படியான் – உருவத்தை உடையவன் (படியனார். தி.2 ப.79 பா.10) பண்டங்க வேடம் – பாண்டரங்கம் என்னும் கூத்துக்காகக் கொண்ட திருவேடம். வெள்ளேற்றின் கொடி – இடபத்துவசம். எருதின்கொடி.

Behold! It is Civan the Lord of Kozhambam who plays the dance called Pandaranga. Once Lord Vishnu and Brahma attempted to see the holy head and holy feet of our Lord in vain. Then He stood in an irrecognizable form. He mounts with His flag the white bull on which He rides. Our Lord has His abode at fragrant Kozhambam. He is our God Supreme. Ye devotees! speak of His glory to one and all and be happy with your mind, serene and cool.

1610. புத்தருந்தோகையம்பீலிகொள்பொய்ம்மொழிப்
பித்தரும்பேசுவபேச்சல்லபீடுடைக்
கொத்தலர்தண்பொழிற்கோழம்பமேவிய
அத்தனையேத்துமினல்லலறுக்கவே. 10

புத்தரும், தோகை அம்பீலி கொள் பொய்ம்மொழிப்
பித்தரும், பேசுவ பேச்சு அல்ல பீடு உடைக்
கொத்து அலர் தண்பொழில் கோழம்பம் மேவிய
அத்தனை ஏத்துமின், அல்லல் அறுக்கவே!

puttarum, tOkai amplli koL poymmozip
pittarum, pEcuva pEccu alla; pITu uTaik
kottu alar taNpozil kOzampam mEviya
attan2ai Ettumin2, allal aRukkavE!

பொருள்: புத்தரும், மயிற்பீலியைக் கையில் கொண்ட சமணரும் பொய்மொழிகளையே எப்பொழுதும் பேசித் திரிவர். அவர்களுடைய சொற்கள் மெய்யானவை அல்லவாம். எனவே, அடியவர்களே நீங்கள் மலர்கள் நிறைந்த சோலையில் உறையும் மெய்ம்மையாம் சிவனையே வழிபாடு செய்யுங்கள். உங்களது துன்பம் எல்லாம் நீங்கப் பெறும் என்க.

குறிப்புரை: தோகையம்பீலி – மயிற்பீலியாகிய வார்கோல். பொய்மொழிப்பித்தர் – மெய்யுரையாத மயக்கவுணர்வினராய சமணர். பீடு – பெருமை. அத்தன் – பிதா. அல்லல் – பிறவிப் பிணி முதலிய துன்பங்கள். அறுக்க – அறச்செய்ய.

The speeches of the Buddhists and the Jains who have peacock feathers in their hands are not true. Ye! the citizens of Kozhambam praise your Lord who resides in the temple which is surrounded by cool gardens of flower bunches. Your sufferings will be severed at once.

1611. தண்புனலோங்குதண்ணந்தராய்மாநகர்
நண்புடைஞானசம்பந்தன்நம்பானுறை
விண்பொழிற்கோழம்பமேவியபத்திவை
பண்கொளப்பாடவல்லார்க்கில்லைபாவமே.. 11

தண்புனல் ஓங்கு தண்அம் தராய் மா நகர்
நண்பு உடை ஞானசம்பந்தன், நம்பான் உறை
விண் பொழில் கோழம்பம் மேவிய பத்து இவை
பண் கொளப் பாட வல்லார்க்கு இல்லை, பாவமே.

taNpun2al Ogku taN am tarAy mA nakar
naNpu uTai njAn2acampantan2, nampAn2 uRai
viN pozil kOzampam mEviya pattu ivai
paN koLap pATa vallArkku illai, pAvamE.

பொருள்: குளிர்ந்த நீர் வளம் கொண்ட திருத்தலம் சீர்காழி. அப்பதியில் அவதரித்தவரே திருஞானசம்பந்தர். அவர் உயர்ந்த சோலைகள் சூழ்ந்த கோழம்பரை பக்தியுடன் பாடி அருளியுள்ளார். அதனை நாமும் பாடி நம் பாவங்கள் நீங்கப் பெறுவோமாக.

குறிப்புரை: தராய் – சீகாழியின் பெயர். நம்பான் – சிவபிரான். விண்பொழில் – வானை அளாவிய சோலை. பத்தும் இவை – இப்பதிகத்தை. பண்கொளப் பாடவல்லார் – பண்ணிசையுடன் பாடும் வன்மை உடையவர்.

It is Civan the Lord of Kozhambam who resides in the temple which is surrounded by sky kissing gardens. Thiru-gnana-Sambandar hails from Thannantharai surrounded by cool waters everywhere. Those devotees who are capable of reciting in proper musical note these ten hymns sung by Thiru-gnana-Sambandar on our Lord of Kozhambam with much devotion and fervour, will have no sins; If they have any it will be wiped out.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

13ஆம் பதிகம் முற்றிற்று
End of 13th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 150 *பதிக எண்: 14*

14. திருவெண்ணியூர்

14. THIRU-VENNIOOR

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

திருவெண்ணியூர் என்னும் இத்திருத்தலமானது தஞ்சாவூர் – திருவாரூர் தொடர் வண்டிப் பாதையில், கோயில் வெண்ணி என்னும் தொடர்வண்டி நிலையத்திற்கு 2.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. தஞ்சை – நீடாமங்கலம், தஞ்சை – திருவாரூர் பேருந்துகளில் கோயில் வெண்ணி என வழங்கும் இவ்வூரை அடையலாம். இது காவிரித் தென்கரையிலுள்ள நூற்றிரண்டாவது தலம் ஆகும். இறைவரது திருப்பெயர் வெண்ணிக் கரும்பர். இறைவியாரது திருப்பெயர் அழகியநாயகி. இறைவர் திருமேனி கரும்புக்கழிகளை ஒன்று சேர்த்து வைத்தாற்போல் இருக்கின்றது.

பதிக வரலாறு

பாலறாவாயர் வேதிகுடியினில் தமிழ் வேதத்தின் ஓங்கிசையை ஓதி, முதல்வரைப் போற்றித் தொழுது வந்து, திருவெண்ணிப் பதியினிற் கோயிலை நண்ணிக் காதலின் வணங்கி, 'சடையானை' எனும் இப்பதிகத்தைப் பாடினார்.

திருச்சிற்றம்பலம்

1612. சடையானைச்சந்திரனோடுசெங்கண்ணரா
உடையானையுடைதலையிற்பலிகொண்டூரும்
விடையானைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியை
உடையானையல்லதுள்காதெனதுள்ளமே. 1

சடையானை, சந்திரனோடு செங்கண் அரா
உடையானை, உடைதலையில் பலி கொண்டு ஊரும்
விடையானை, விண்ணவர்தாம் தொழும் வெண்ணியை
உடையானை, அல்லது உள்காது, எனது உள்ளமே.

caTaiyAn2ai, cantiran2OTu cegkaN arA
uTaiyAn2ai, uTaitalaiyil pali koNTu Urum
viTaiyAn2ai, viNNavartAm tozum veNNiyai
uTaiyAn2ai, allatu uLkAtu, en2atu uLLamE.

பொருள்: சடைமுடி உடையவனை, சந்திரனையும் பாம்பையும் அணிந்தவனை, பிரம கபாலத்தைக் கையில் ஏந்தி பலி தேர்பவனை, தேவர்களும் தொழும் வெண்ணிப் பதியானை, நான் எப்பொழுதும் நினைவேன். அவனைத் தவிர என் உள்ளம் வேறு எவரையும் நினைக்காது.

குறிப்புரை: சடையானை என்றதன் பின் கூறியதால், சந்திரனையும் சிவந்த கண்களை உடைய பாம்பையும் அச்சடைமேல் உடையான் என்க. அரா – பாம்பு. உடைதலை – உடைந்த தலை, பிரமகபாலம். ஊரும்விடை – ஏறிச்செலுத்தப்படும் எருது. விண்ணவர் – தேவர். வெண்ணி – வென்றி என்பதன் மரூஉ. நன்றி – நண்ணி. பன்றி – பண்ணி. மன்று – மண்ணு. கன்று – கண்ணு என்பனவற்றில் உள்ள னகரமும் றகரமும் உற்ற திரிபை நோக்குக. உள்காது – நினையாது.

It is Civan, the Lord of Venni called Venni-naathar who resides in Vennioor with matted hair. He has adorned His head with the moon and the red eyed snake. He mounts His bull and goes round the cosmos for alms carrying a skull on His hand. He is in Venni, a holy place and is prayed by the celestials. I will always contemplate on Him, I cannot entertain anybody else in my heart.

1613. சோதியைச்சுண்ணவெண்ணீறணிந்திட்டவெம்
ஆதியையாதியுமந்தமுமில்லாத
வேதியைவேதியர்தாந்தொழும்வெண்ணியில்
நீதியைநினையவல்லார்வினைநில்லாவே. 2

சோதியை, சுண்ணவெண்நீறு அணிந்திட்ட எம்
ஆதியை, ஆதியும் அந்தமும் இல்லாத
வேதியை, வேதியர்தாம் தொழும் வெண்ணியில்
நீதியை, நினைய வல்லார் வினை நில்லாவே.

cOtiyai, cuNNaveNnIRu aNintiTTa em
Atiyai, Atiyum antamum illAta
vEtiyai, vEtiyartAm tozum veNNiyil
nItiyai, nin2aiya vallAr vin2ai nillAvE.

பொருள்: ஒளி மயமானவனை, வெண்ணீறு அணிந்திட்ட எம் ஆதியனை, ஆதியும் அந்தமும் இல்லாத வேதியனை, அந்தணர்களால் விரும்பி வணங்கப் பெறுபவனை, வெண்ணிப் பதியில் உறைபவனை, நினைப்பவர்கள் வினை நீக்கப் பெறுவார்கள் என்க.

குறிப்புரை: சுண்ணம் – பொடி. ஆதியும் அந்தமும் இல்லாத வேதியை – முதலும் முடிவும் இல்லாத மறையோனை. வேதத்தை அருளியதால் வேதியானான். நீதியை – தரும சொரூபியை. நினைதல் எளிதன்று. அரிதாகப் பெறத்தக்கது ஆதலின் வல்லார் என்றார்.

It is Civan the Lord of Venni who is light Himself. He has smeared His body with white sacred powder. He is the origin and the absolute. He is an embodiment of the Vedas and the Infinite. He is the personification of the virtue of dharma. He resides in Venni. Those devotees who can always think of His holy feet and pray will never find any evil lingering in their lives.

1614. கனிதனைக்கனிந்தவரைக்கலந்தாட்கொள்ளும்
முனிதனைமூவுலகுக்கொருமூர்த்தியை
நனிதனைநல்லவர்தாந்தொழும்வெண்ணியில்
இனிதனையேத்துவரேதமிலாதாரே. 3

கனிதனை, கனிந்தவரைக் கலந்து ஆட்கொள்ளும்
முனிதனை, மூஉலகுக்கு ஒரு மூர்த்தியை,
நனிதனை, நல்லவர்தாம் தொழும் வெண்ணியில்
இனிதனை, ஏத்துவர் ஏதம் இலாதாரே.

kan2itan2ai, kan2intavaraik kalantu ATkoLLum
mun2itan2ai, mUulakukku oru mUrttiyai,
nan2itan2ai, nallavartAm tozum veNNiyil
in2itan2ai, Ettuvar Etam ilAtArE.

பொருள்: நற்கனி போன்றவனை, உள்ளம் கனிந்தவரை ஆட்கொள்ளும் அண்ணலை, மூவுலகுக்கும் ஒப்பற்ற தலைவனாக விளங்கும் இறைவனை, நல்லவர்களால் வணங்கப் படுபவனை, திருவெண்ணிப் பதியில் கோயில் கொண்டுள்ளவனை, ஏத்தி வழிபடும் அடியவர்கள் குற்றமற்றவராய் துன்பமின்றி விளங்குவர்.

குறிப்புரை: கனிதனை – பழத்தை. கனிந்தவர் – மனங் கனிந்துருகி வழிபடுபவர். முனிதனை – மனனசீலனை, நனிதனை – மேம்பட்டவனை. நனி – மிகுதி. உரிச் சொல்லடியாக நின்ற பெயர். நல்லவர் – சரியை, கிரியை, யோகங்களில் முதிர்ந்த ஞானிகள், சைவ நலமுடையவரெனப் பொதுப் பெயருமாம். இனிதனை – (இனிது + அன் + ஐ) இன்புருவானவனை. ஏதம் – இருவினைக் குற்றம்.

It is Civan the Lord of Venni who is the fruit of absolute wisdom. He is a sage activating those with mature emotions that melt out of love. He is the Supreme God, unique in all the three worlds. He is superior to all and everything in the universe. He bestows His grace with sweetness on all those good people who pray at Venni. Those who praise His holy feet and pray to Him, who embodies joy, will be free of the two evils - sorrows and flaws.

1615. மூத்தானைமூவுலகுக்கொருமூர்த்தியாய்க்
காத்தானைக்கனிந்தவரைக்கலந்தாளாக
ஆர்த்தானையழகமர்வெண்ணியம்மான்றன்னை
ஏத்தாதாரென்செய்வாரேழையப்பேய்களே. 4

மூத்தானை, மூஉலகுக்கு ஒரு மூர்த்திஆய்க்
காத்தானை, கனிந்தவரைக் கலந்து ஆள்ஆக
ஆர்த்தானை, அழகு அமர் வெண்ணி அம்மான் தன்னை,
ஏத்தாதார் என் செய்வார்? ஏழை, அப் பேய்களே!

mUttAn2ai, mU ulakukku oru mUrtti Ayk
kAttAn2ai, kan2intavaraik kalantu AL Aka
ArttAn2ai, azaku amar veNNi ammAn2 tan2n2ai,
EttAtAr en2 ceyvAr? Ezai, ap pEykaLE!

பொருள்: முன்னைப் பழம் பொருளாய் உள்ளவனை, மூவுலகிற்கும் தலைவனை, உயிர்களைக் காத்து அருள்பவனை, உள்ளம் கனிந்தவர்களின் உள்ளத்தில் பொருந்தி இருப்பவனை, அழகான வெண்ணிப் பதியில் உறைபவனை ஏத்தி வணங்காதவர்கள் கீழ்மைத்தனம் கொண்டவர்களாய் பேய் போன்றவர்கள் என்க.

குறிப்புரை: மூத்தான் – முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாயிருப்பவன். மூவுலகுக்கு ஒரு மூர்த்தி: – சிவபரத்துவம் கூறியவாறு, முற்பாட்டினிலும் காண்க. காத்தான் – மூவுலகையும் காத்தவன், காக்கின்றவன், காப்பவன். கனிந்தவரைக் கலந்தாட் கொள்ளல் மேலும் கூறப்பட்டது. அழகமர் வெண்ணி என்றதால் தவச்சிறப்பு விளங்கும். அம்மான் – அரிய மகன். மகன் – கடவுள். மகள் – திருமகள், நாமகள். ஏத்தாதார் – துதித்து வணங்காதார். ஏத்துதல் – தோத்திரத்தால் வழிபடல். சிவபிரானை ஏத்தாதவர் மக்கட் பிறப்பினராயினும் பேய் போன்றவரேயாவர். 'மனத்துன்னை நினைப்பின்றிப் பேயாய்த் திரிந்தெய்த்தேன்' என்னும் அருள்மொழிப் பகுதியைக் காண்க. திருவள்ளுவரும் 'வையத்தலகை' என்றார்.

It is Civan the Lord of Venni who is the foremost and the primordial. He is the only one Supreme God of all the three worlds who protects one and all. There are true and mature people, who with wisdom and melting emotions, pray on the Lord. Our Lord mixes in the minds of such people happiness and grace. He abides in His beautiful city of Venni. There might be some people who do not pray to our Lord. They will be abject and mean, become very low like devils and wander in the world in future.

1616. நீரானைநிறைபுனல்சூழ்தருநீள்கொன்றைத்
தாரானைத்தையலொர்பாகமுடையானைச்
சீரானைத்திகழ்தருவெண்ணியமர்ந்துறை
ஊரானையுள்கவல்லார்வினையோயுமே. 5

நீரானை, நிறை புனல் சூழ்தரு நீள் கொன்றைத்-
தாரானை, தையல் ஓர்பாகம் உடையானை,
சீரானை, திகழ்தரு வெண்ணி அமர்ந்து உறை
ஊரானை, உள்க வல்லார் வினை ஓயுமே.

nIrAn2ai, niRai pun2al cUztaru nIL kon2Rait
tArAn2ai, taiyal OrpAkam uTaiyAn2ai,
cIrAn2ai, tikaztaru veNNi amarntu uRai
UrAn2ai, uLka vallAr vin2ai OyumE.

பொருள்: ஒளிமயமானவனை, நிறை புனலாகிய கங்கையைத் தன் தலையில் கொண்டவனை, கொன்றை மலர் மாலை அணிந்தவனை, உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டவனை, சிறப்புமிக்கவனை வெண்ணிப் பதியில் கோயில் கொண்டவனை, அன்புடன் நினைப்பவர்களின் வினை எல்லாம் நீங்கப் பெறும்.

குறிப்புரை: நிறைபுனல் – கங்கைநீர். தலையிற் கங்கையைச் சூழக் கொன்றை மாலை அணிந்தான். திருவெண்ணியூர் அமர்ந்து உறைவான் என்று இயைத்துக் கொள்க. தோத்திரம் புறப் பூசையினும் சிறந்தது. அகத்தில் செய்யும் தியானம் அவ்விரண்டினும் பெரும்பயன் அளிப்பது. திரிகரணங்களாலும் ஆகும் வினைகளை அத்திரிகரணங்களாலும் தீர்க்கும் வழிகள் தியானம், தோத்திரம், நமஸ்காரம், பூஜை முதலியவை. அவற்றுள் தியானமே உத்தமம் ஆதலின், உள்க வல்லார் வினை ஓயும் என்று அருளினார்.

Civan, the Lord of Venni is the purest and brightest light. He has the profuse river Ganges on His head. He is cool and serene as water itself. He has beautified His matted hair with the garland of cassia flowers. He shares His body with our goddess Uma. He is the embodiment of all virtues. He abides in Venni. Those who always meditate on His holy feet will not suffer bad karma in their life.

1617. முத்தினைமுழுவயிரத்திரள்மாணிக்கத்
தொத்தினைத்துளக்கமிலாதவிளக்காய
வித்தினைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியில்
அத்தனையடையவல்லார்க்கில்லையல்லலே. 6

முத்தினை, முழுவயிரத்திரள் மாணிக்கத்-
தொத்தினை, துளக்கம் இலாத விளக்குஆய
வித்தினை, விண்ணவர்தாம் தொழும் வெண்ணியில்
அத்தனை, அடைய வல்லார்க்கு இல்லை, அல்லலே.

muttin2ai, muzuvayirattiraL mANikkat-
tottin2ai, tuLakkam ilAta viLakku Aya
vittin2ai, viNNavar tAm tozum veNNiyil
attan2ai, aTaiya vallArkku illai, allalE.

பொருள்: முத்தாகவும், வயிரமாகவும், மாணிக்க மணியாகவும் விளங்குகின்ற ஈசனை, அணையா விளக்காக விளங்குபவனை, எல்லாப் பொருள்களுக்கும் வித்தானவனை, விண்ணவர்களால் வணங்கப் பெறுபவனை, வெண்ணித்தலத்தின் நாதனை அன்புடன் அடைய வல்லார்களுக்கு அல்லல் என்பதே இல்லையாம் என்க.

குறிப்புரை: முத்து, முழு வயிரத்திள், மாணிக்கத் தொத்து முதலியவை, ஒப்பில்லாத கடவுளுக்கு அன்பின் மேலீட்டால், ஒப்புறுத்திச் சொல்லும் உபசார வழக்கு, 'பொருள்சேர் புகழ்' என்ற வள்ளுவர் கருத்தும் ஈண்டு நினைக்கத் தக்கது. தொத்து – கொத்து. துளக்கம் – அசைவு. இங்கு அணைதலைக் குறித்தது. அணையா விளக்கு என்க. நமக்கு அல்லல் இல்லையாம்படி சிவனை அடையும் வன்மையைப் பெறத் தவஞ்செய்தல் வேண்டும்.

Civan the Lord of Venni is a perfect pearl, a wholesome well-developed diamond, as well as a bunch of valuable ruby. He is the seed of all and everything from which inextinguishable lights emerge. He is worshipped at Venni by all the celestials.

He is our Supreme Master. Those devotees who aspire and succeed in reaching and worshipping Him will be free of all trouble in life.

1618. காய்ந்தானைக்காமனையுஞ்செறுகாலனைப்
பாய்ந்தானைப்பரியகைமாவுரித்தோல்மெய்யில்
மேய்ந்தானைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியில்
நீந்தானைநினையவல்லார்வினைநில்லாவே. 7

காய்ந்தானைக் காமனையும் செறு காலனைப்
பாய்ந்தானை, பரிய கைம்மாஉரித்-தோல் மெய்யில்
மேய்ந்தானை, விண்ணவர்தாம் தொழும் வெண்ணியில்
நீந்தானை, நினைய வல்லார் வினை நில்லாவே.

kAyntAn2aik kAman2aiyum, ceRu kAlan2aip
pAyntAn2ai, pariya kaimmA urit-tOl meyyil
mEyntAn2ai, viNNavartAm tozum veNNiyil
nIntAn2ai, nin2aiya vallAr vin2ai nillAvE.

பொருள்: மன்மதனைக் காய்ந்து பொடிப்பொடியாக்கியவனை, காலனைக் காலால் உதைத்து அருளியவனை, கரியின் தோலை உரித்து ஆடையாகக் கொண்டவனை, விண்ணவர்களால் தொழப் பெறுபவனை, வெண்ணியில் உறைபவனை நினைய வல்லார்களின் வினைகள் நில்லாவாம்.

குறிப்புரை: காமன் – பெண்ணாசையை வளர்ப்பவன், மன்மதன், காமத்திற்கு அதிதேவதை. காமன் – இயமன். காய்ந்தான் – கோபித்து எரித்தான். பாய்ந்தான் – பாய்ந்து உதைத்தான். பரிய – பருமையுடைய, பருத்த. கை – துதிக்கை. மா–யானை. உரி – உரித்த தோல். உரித்தோல் – உரியாகிய தோல். உரி – முதனிலைத் தொழிற்பெயர். அஃது ஆகுபெயராய்த் தோலை உணர்த்துமிடமும் உண்டு. இங்குத் தோல் என்று அடுத்திருப்பதால் தொழிற்பெயராய் மட்டும் கொள்ளப்பட்டது. மெய் – திருமேனி. மேய்ந்தான் – வேய்ந்தான், அணிந்தான். நீந்தான் – கடவுள்.

It is Civan the Lord of Venni who once got wild with cupid, the god of love and killed him with the fire from His third eye. On another occasion He kicked the god of death, Kaalan, to death. Once He skinned the huge elephant, killed it and covered His body with its skin. He is always worshipped by the celestials. He abides always in

Venni. Those devotees who approach Him, and contemplate on Him will not suffer the evil effects of their karma.

1619. மறுத்தானைமாமலையைமதியாதோடிச்
செறுத்தானைத்தேசழியத்திகழ்தோள்முடி
இறுத்தானையெழிலமர்வெண்ணியெம்மானெனப்
பொறுத்தானைப்போற்றுவாராற்றலுடையாரே. 8

மறுத்தானை, மாமலையை மதியாது ஓடிச்
செறுத்தானைத் தேசு அழியத் திகழ் தோள்முடி
இறுத்தானை, "எழில் அமர் வெண்ணி எம்மான்" எனப்
பொறுத்தானை, போற்றுவார் ஆற்றல் உடையாரே.

maRuttAn2ai, mAmalaiyai matiyAtu OTic
ceRuttAn2ait tEcu aziyat tikaz tOLmuTi
iRuttAn2ai, "ezil amar veNNi emmAn2!" en2ap
poRuttAn2ai, pORRuvAr ARRal uTaiyArE.

பொருள்: இறைவனை மறந்து கயிலாய மலையைத் தூக்கிட நினைத்த இராவணனின் வலிமையை அழித்தவனை, அவனது தோள்களையும் முடிகளையும் நெறித்தவனை, அழகு பொருந்திய வெண்ணிப் பதியில் உறைபவனை, போற்றும் அடியார்கள் எல்லாவிதமான ஆற்றலையும் பெற்றவர்கள் ஆவார்கள்.

குறிப்புரை: மறுத்தானை – பகைவனை. ஒன்றார் பொருந்தாதார் மறுத்தார் என்பவைப் போலப் பகைவரைக் குறித்தற்கு ஆளும் பெயர்களை அறிந்து கொள்ளலாம். மறுத்தவர் திரிபுரம் மாய்ந்தழியக் கறுத்தவன் (தி. 1 ப. 109 பா. 8) செறுத்தான் – கோபித்தவனை. மறுத்தல், செறுத்தல் இரண்டும் இராவணன் தொழில். இறுத்தல் – முரித்தல். இறுத்தவனும் பொறுத்தவனும் சிவபிரான். ஆற்றல் – ஞானபலம் முதலிய யாவும்.

Civan, the Lord of Venni, is our Lord Supreme. The king of Sri Lanka was a very great devotee of Lord Civa. At one stage due to his ego and arrogance, he tried to lift the great mountain Kailash defying Lord Civan and His consort Umaa who resided there. Our Lord of Venni subdued him with his twenty strong shoulders. The king realised his mistake, begged for pardon and sang very beautiful songs about the glory

of our Lord in Saama tune. Our Lord pardoned and blessed him. Those devotees who hail His virtues will become mighty in all respects.

1620. மண்ணினைவானவரொடுமனிதர்க்கும்
கண்ணினைக்கண்ணனுநான்முகனுங்காணா
விண்ணினைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியில்
அண்ணலையடையவல்லார்க்கில்லையல்லலே. 9

மண்ணினை, வானவரொடு மனிதர்க்கும்
கண்ணினை, கண்ணனும் நான்முகனும் காணா
விண்ணினை, விண்ணவர் தாம் தொழும் வெண்ணியில்
அண்ணலை, அடைய வல்லார்க்கு இல்லை, அல்லலே.

maNNin2ai, vAn2avarOTu man2itarkkum
kaNNin2ai, kaNNan2um nAn2mukan2um kANA
viNNin2ai, viNNavar tAm tozum veNNiyil
aNNalai, aTaiya vallArkku illai, allalE.

பொருள்: மண்ணாகவும் விளங்கும் இறைவனை, தேவர்க்கும் மனிதர்க்கும் கண்ணாக இருப்பவனை, கண்ணனும் நான்முகனும் அறிய முடியாப் பெருமானை, தேவர்களால் வணங்கப் பெறும் சிறப்புடையவனை, வெண்ணியின் அண்ணலை அடைய வல்லவர்களுக்கு அல்லல் இல்லை என்க.

குறிப்புரை: மண்ணினை – அஷ்டமூர்த்தத்துள் பிருதுவிரூபமாக இருக்கின்ற சிவனை. உலகுக்கெல்லாம் ஒருகண், உயிர்க்கெல்லாம் கண் என்பதனால், வானவர்க்கும் மனிதர்க்கும் கண்ணினை என்றார். பெண்ணவன்காண் . . . எல்லாம் காணும் கண்ணவன்காண் (தி. 6 ப. 48 பா. 7) கலைபயில்வோர் ஞானக்கண் ஆனான்கண்டாய் (தி. 6 ப. 73 பா. 2) விண் – திருச்சிற்றம்பலம். அண்ணல் – முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள். அல்லல் – பிறவித் துன்பம், இம்மையில் உறும் துயரம் எல்லாம்.

It is Civan, Lord of Venni is our Supreme. He is the embodiment of eight denominations such as air, earth, water, fire, sky, sun, moon and soul. Here He is represented as earth and the divine eye to both the celestials and the earthly people. Once Vishnu and Brahma attempted to apprehend our Lord, but in vain. He is worshipped by the celestials. He is our Lord of Venni; those who can reach His holy feet will have no evils in life.

1621. குண்டருங்குணமிலாதசமண்சாக்கிய
மிண்டர்கள்மிண்டவைகேட்டுவெகுளேன்மின்
விண்டவர்தம்புரமெய்தவன்வெண்ணியில்
தொண்டராயேத்தவல்லார்துயர்தோன்றாவே. 10

குண்டரும் குணம் இலாத சமண்சாக்கிய-
மிண்டர்கள் மிண்டு அவை கேட்டு வெகுளேன்மின்!
விண்டவர்தம் புரம் எய்தவன் வெண்ணியில்-
தொண்டராய் ஏத்த வல்லார் துயர் தோன்றாவே.

kuNTarum kuNam ilAta camaNcAkkiya-
miNTarkaL miNTu avai kETTu vekuLan2min2!
viNTavartam puram eytavan2 veNNiyil-
toNTarAy Etta vallAr tuyar tOn2RAvE.

பொருள்: சமணரும், சாக்கியரும் நற்குணமற்றவர்கள். முரட்டுத்தனம் கொண்டவர்கள் ஆவார்கள். அவர்கள் கூறும் பொய்யுரை கேட்டு கோபம் கொள்ள வேண்டாம். நம் பெருமான் முப்புரங்களை சிரித்தே எரித்தவர் ஆவார். அவர் கோயில் கொண்டுள்ள வெண்ணிப் பதியில் வாழ்கின்ற மெய்த்தொண்டர்களே நீங்கள் எம்பெருமானையே ஏத்தி வழிபாடு செய்யுங்கள். உங்களைத் துன்பமே வந்து அடையாது என்க.

குறிப்புரை: குண்டர் – கற்குண்டு போலக் கட்டமைந்த உடம்பினர். சமணர், சாக்கியர். மிண்டர் – மிடுக்குடையவர். மிண்டவை – அதிக பிரசங்கம். வெகுளேல்மின் – சைவாகமப் பொருள் உண்மைகளைக் கோபித்து அலட்சியம் செய்யாதீர்கள். எதிர்மறைப் பன்மையேவல். மின் பன்மை விகுதி. அது நீங்கின் ஒருமையாதல் தெரியும். விண்டவர் – பகைவர்.

You people of Venni, need not be angry while hearing the boisterous words of those stout bellied Jains and the Buddhists lacking in character. Ye devotees! come here to Venni where our Lord who destroyed the enemies of three forts resides, bow at His holy feet and find no sufferings.

1622. மருவாருமல்குகாழித்திகழ்சம்பந்தன்
திருவாருந்திகழ்தருவெண்ணியமர்ந்தானை
உருவாருமொண்தமிழ்மாலையிவைவல்லார்
பொருவாகப்புக்கிருப்பார்புவலோகத்தே. 11

மரு ஆரும் மல்கு காழித் திகழ் சம்பந்தன்,
திரு ஆரும் திகழ்தரு வெண்ணி அமர்ந்தானை,
உரு ஆரும் ஒண்தமிழ்மாலைஇவை வல்லார்
பொருஆகப் புக்கு இருப்பார், புவலோகத்தே.

maru Arum malku kAzit tikaz campantan2,
tiru Arum tikaztaru veNNi amarntAn2ai,
uru Arum oN tamizmAlai ivai vallAr
poru Akap pukku iruppAr, puvalOkattE.

பொருள்: மணம் நிறைந்த சீர்காழிப்பதியில் அவதரித்தவரே திருஞான சம்பந்தர் ஆவார். அவர் அழகு பொருந்திய வெண்ணிப் பதியில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானை நினைத்து தமிழ்மாலை செய்துள்ளார். அதனை விரும்பிப் பாடும் அடியார்கள் சிவலோகத்தை அடைந்து சிறப்புறுவார்கள் என்க.

குறிப்புரை: மருவாரும் – மணம் நிறையும். பொருந்ாதவரும் காழியைப் பொருந்தி வழிபடு சிறப்புணர்த்தியதுமாம். மல்கு – நிறையும். திரு – நீர்வளம் முதலிய எல்லாச் செல்வங்களும். ஆரும் – நிறைந்துள்ள. திகழ்தரு–விளங்குகின்ற. (பிரசித்தி குறித்தது) அமர்ந்தான் – திருக்கோயில் கொண்டிருக்கின்றவன். உரு ஆரும் – ஞானவடிவம் பூரணமாயிருக்கும். பொரு – (உறழ்பொரு) சிறப்பு. பூலோகத்தினும் மேலானது புவலோகம். அஃது இங்குச் சிவலோகத்தை உணர்த்திற்று.

Saint Thiru-gnana-Sambandar hails from fragrant Kaazhi. He sang these ten verses of pure beautiful Tamil as a garland of music on the Lord of Venni. This Venni is a very rich place of all sorts of wealth. Those who can repeat these ten verses from memory will live happily in the Civa Loka, the brightest place in the cosmos.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

14ஆம் பதிகம் முற்றிற்று
End of 14th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 151 *பதிக எண்: 15*

15. திருக்காறாயில்

15. THIRU-K-KAARAAYIL

பண் : இந்தளம் – வினாஉரை

Pann: Indhalam - Vinaa Urai

திருத்தல வரலாறு

திருக்காறாயில் என்னும் இத்திருத்தலமானது திருவாரூர்க்குத் தெற்கே சுமார் 12 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கின்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் நூற்றுப் பத்தொன்பதாவது ஆகும். திருவாரூரிலிருந்து கச்சனம், திருத்துறைப்பூண்டி செல்லும் பேருந்துகளில் செல்லலாம். இறைவரது திருப்பெயர் கண்ணாயிர நாதர். இறைவியாரது திருப்பெயர் கைலாச நாயகி. சப்தவிடங்கத் தலங்களில் இத்திருத்தலமும் ஒன்று. தீர்த்தம் இந்திர தீர்த்தம். இது கோயிலுக்கு வடபுறத்தில் உள்ளது.

இத்தீர்த்தத்தின் வடகரையில் கடுக்காய்ப் பிள்ளையார் கோயில் இருக்கின்றது. ஒரு வியாபாரி ஜாதிக்காய் மூட்டைகளைக் கடுக்காய் மூட்டைகள் எனக்கூற, இப்பிள்ளையாருடைய திருவிளையாடலால் அவைகள் கடுக்காய் மூட்டைகள் ஆயின. பின் வணிகனின் வேண்டுகோளின்படி அவைகள் முன்போலவே ஜாதிக்காய்கள் ஆயின. ஆதலால் அப்பிள்ளையாருக்கு அப்பெயர் வந்தது என்பர்.

இது முசுகுந்த சக்கரவர்த்தி தேவேந்திரனிடம் பெற்றுக் கொண்டு வந்த தியாகேசர் திருமேனிகள் ஏழனுள் ஒன்றை எழுந்தருளுவித்த சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்றாகும். தேவேந்திரன் மற்றும் முசுகுந்த சக்கரவர்த்தி பூசித்த பதி. புரட்டாசி மாதம் பௌர்ணமியே தேவேந்திரன் பூசித்த நாளாகும் என்பர். இன்றும் அப்பூசையை மக்கள் நடத்தி வருகின்றனர். இது ஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. அவருடைய பதிகம் ஒன்றை உடையது. இக்கோயிலின் அருகே வெள்ளையாறு ஒடுகின்றது. கோயிலின் பரப்பளவு 115–172 ஆகும்.

பதிக வரலாறு

திருவைந்தெழுத்தின் மெய்ம்மையை உணர்ந்த பிள்ளையார், திருவாரூர்ப் புற்றிடங் கொண்டாரைப் போற்றிப் பணிந்து வைகுங்காலத்தில், 'வலிவலம் கோளிலி முதலாம்' பதி பலவற்றுள் ஒன்றான இத்திருக்காறாயிலை வணங்கிப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1623. நீரானேநீள்சடைமேலொருநிரைகொன்றைத்
தாரானேதாமரைமேலயதான்தொழும்
சீரானேசீர்திகழுந்திருக்காறாயில்
ஊரானேயென்பவரூனமிலாதாரே. 1

"நீரானே! நீள்சடைமேல் ஒரு நிரை கொன்றைத்-
தாரானே! தாமரைமேல் அயன்தான் தொழும்
சீரானே! சீர் திகழும் திருக் காறாயில்
ஊரானே!" என்பவர் ஊனம் இலாதாரே.

"nIrAn2E! nILcaTaimEl or nirai kon2Rait-
tArAn2E! tAmarai mEl ayan2tAn2 tozum
cIrAn2E! cIr tikazum tiruk kARAyil-
UrAn2E!" en2pavar Un2am ilAtArE.

பொருள்: கங்கையைத் தலையில் தரித்தவனை, நீண்ட சடையில் கொன்றை மலர் மாலையை அணிந்தவனை, தாமரை மலர்மீது விளங்கும் பிரமனால் தொழப்பட்டவனை, சிறப்புமிக்க திருக்காறாயில் தலத்தில் பொருந்தியவனை வழிபடுபவர் குறைபாடு அற்றவர் ஆவர்.

குறிப்புரை: நீள்சடைமேல் நீரான் – நீண்ட சடையின்மேல் கங்கை நீரை உடையவன். நிரை – வரிசை. தார் – மாலை. தாமரைமேல்அயன் – செந்தாமரையில் வீற்றிருக்கும் பிரமன். அயன் அஜன், தோன்றாதவன் என்பது அடிச்சொற்பொருள். சீரான் – மேன்மையை உடையவன். ஊனம் – பிறவி முதலிய குறைகள்.

Behold! Civan, the Lord of Thiru-k-kaaraayil has adorned His long matted hair with Ganges river, and garland of cassia flowers. He is worshipped by the deity Brahma who resides in lotus flower and His abode is Thiru-k-kaaraayil. This city is a holy place of virtues. Those who recite His glories thus will be free of all troubles including rebirth.

1624. மதியானேவரியரவோடுடன்மத்தஞ்சேர்
விதியானேவிதியுடைவேதியர்தாந்தொழும்
நெதியானேநீர்வயல்சூழ்திருக்காறாயிற்
பதியானேயென்பவர்பாவமிலாதாரே. 2

"மதியானே! வரிஅரவோடு உடன் மத்தம் சேர்
விதியானே! விதி உடை வேதியர் தாம் தொழும்
நெதியானே! நீர் வயல் சூழ் திருக் காறாயில்
பதியானே!" என்பவர் பாவம் இலாதாரே.

"matiyAn2E! vari aravOTu uTan mattam cEr
vitiyAn2E! viti uTai vEtiyartAm tozum
netiyAn2E! nIr vayal cUz tiruk kARAyil-
patiyAn2E!" en2pavar pAvam ilAtArE.

பொருள்: பிறைமதியைத் தலையில் சூடிய இறைவன் என்றும் பாம்பையும் ஊமத்த மலரையும் அணிந்தவன் என்றும் வேதவிதிப்படி அந்தணர்களால் தொழப்படுபவன் என்றும் வயல்கள் சூழ்ந்த காறாயில் பதியில் உறைபவன் என்றும் உளம் மகிழ்ந்து கூறும் அடியார்கள் பாவமில்லாதவர் ஆவர் என்க.

குறிப்புரை: மதி – பிறைச்சந்திரன். அரவு – பாம்பு. மத்தம் – ஊமத்தம்பூ. விதியான் – ஊழானவன், பாக்கியமானவன், விதிக்குங்கர்த்தா. விதித்தலை உடையவன். விதி உடை வேதியர் – வேதத்தில் விதித்தவை செய்தலும் விலக்கியவை செய்யாமையுமாகிய விதியை உடைய மறையவர். நெதி – நிதி, செல்வம்.

Behold! It is Civan the Lord of Thiru-k-kaaraayil. He has adorned His head with the moon, striped snake and datura flowers. He is the destiny maker for all the souls as per their fate. He is the personification of wealth. He is worshipped by the Vedic scholars as per the Vedic rules and His abode in Thiru-k-kaaraayil is a holy place surrounded by plenty of ponds and paddy fields. Devotees who offer worship and pray, citing these details, will be sinless. They would not be in the grip of their bad karma.

1625. விண்ணானேவிண்ணவரேத்திவிரும்புஞ்சீர்
மண்ணானேமண்ணிடைவாழுமுயிர்க்கெல்லாம்
கண்ணானேகடிபொழில்சூழ்திருக்காறாயில்
எண்ணானேயென்பவரேதமிலாதாரே. 3

"விண்ணானே! விண்ணவர் ஏத்தி விரும்பும் சீர்
மண்ணானே! மண் இடை வாழும் உயிர்க்கு எல்லாம்
கண்ணானே! கடிபொழில் சூழ் திருக் காறாயில்
எண்ணானே!" என்பவர் ஏதம் இலாதாரே.

"viNNAn2E! viNNavar Etti virumpum cIr
maNNAn2E! viN iTai vAzum uyirkku ellAm
kaNNAn2E! kaTipozil cUz tiruk kARAyil
eNNAn2E!" en2pavar Etam ilAtArE.

பொருள்: ஆகாயம் போல் அனைத்தையும் தன்னுள் அடக்கியவன் என்றும், தேவர்களால் வழிபடப்படுபவன் என்றும், மண்ணில் பொருந்தியவன் என்றும், மண்ணில் வாழும் உயிர்களுக்குக் கண் போன்றவன் என்றும், மணமிக்க சோலைகள் நிறைந்த திருக்காறாயில் என்ற திருத்தலத்தில் கோயில் கொண்டவன் என்றும் ஈசனே என்றும் போற்றுபவர்கள் குற்றம் நீங்கப் பெற்றவர்கள் ஆவர்.

குறிப்புரை: விண் – வீட்டுலகம், உயிர்க்கெல்லாம் கண். (தி. 2 ப. 14 பா. 9) எண் – எண்ணம். எண்ணான் – உள்ளத்தில் இருப்பவன். எண்ணப்படாதவன், எண்ணுதற்குப் பொருளாய் இருப்பவன், அளக்கும் அளவாய் உள்ளவன். ஏதம் – குற்றம், கேடு, துன்பம் (எல்லாம்).

Behold! It is Civan, the Lord of Thiru-k-kaaraayil. He is the celestial world itself. Though He is part and parcel of this world, He is also the earth and is worshipped by the celestials. He is the vital vision of the souls on the earth. He abides in the hearts of the people of Thiru-k-kaaraayil surrounded by fragrant gardens. The devotees praying to the Lord of this place, quoting these details, will be free of blemishes and sorrows.

1626. தாயானேதந்தையுமாகியதன்மைகள்
ஆயானேயாயநல்லன்பர்க்கணியானே
சேயானேசீர்திகழுந்திருக்காறாயில்
மேயானேயென்பவர்மேல்வினைமேவாவே. 4

"தாயானே! தந்தையும் ஆகிய தன்மைகள்
ஆயானே! ஆய நல் அன்பர்க்கு அணியானே!
சேயானே! சீர் திகழும் திருக் காறாயில்
மேயானே!" என்பவர் மேல் வினை மேவாவே.

"tAyAn2E! tantaiyum Akiya tan2maikaL
AyAn2E! Aya nal an2parkku aNiyAn2E!
cEyAn2E! cIr tikazum tiruk kARAyil
mEyAn2E!" en2pavarmEl vin2ai mEvAvE.

பொருள்: தாயாக விளங்குபவனே! தந்தையாய் விளங்கி அருள்புரியும் நாதனே! நல்லடியார்களுக்கு அருகிருந்து உதவுபவனே! அல்லாதவர்களையும் சேய்மையில் இருந்து காப்பவனே! சீர் திகழும் திருக்காறாயில் தலத்தில் உறைபவனே என்றெல்லாம் இறைவனை போற்றி வணங்குபவர்களை வினைகள் சென்று அடையாவாம்.

குறிப்புரை: தாயான் + தந்தை . . . ஆயான் – அம்மையப்பர். மெய்யுணர்வும் அன்பும் உடைய இருநிறத்தாரையும் நல்லன்பர் என்பது வழக்கம். கண்ணப்பர் நல்லன்பர், மெய்கண்டார் மெய்யுணர்வினர்; இருவரும் அன்பிற் சிறிதும் வேறுபடார். சேயான் – செந்நிறத்தன் எனப் பொருள் கூறலாம். ஆயினும் முன் அணியான் என்றதனால் சேய்மை (தூரம்) இடத்தினன் என்பதே பொருத்தம். மேயான் – மேவியவன். மேவா – பொருந்தா.

Behold! It is Civan the Lord of Thiru-k-kaaraayil. He is Mother Supreme, Father Supreme, and the paternal embodiment for one and all. He is very near all His sincere devotees. Yet He is a distant one for other people. He has His abode at Thiru-k-kaaraayil, a place of virtues. Those devotees who recite His greatness and adore Him thus will never suffer the evil effects of karma.

1627. கலையானேகலைமலிசெம்பொற்கயிலாய
மலையானேமலைபவர்மும்மதில்மாய்வித்த
சிலையானேசீர்திகழுந்திருக்காறாயில்
நிலையானேயென்பவர்மேல்வினைநில்லாவே. 5

"கலையானே! கலை மலி செம்பொன் கயிலாய-
மலையானே! மலைபவர் மும்மதில் மாய்வித்த
சிலையானே சீர் திகழும் திருக் காறாயில்
நிலையானே!" என்பவர் மேல் வினை நில்லாவே.

"kalaiyAn2E! kalai mali cempon2 kayilAya-
malaiyAn2E! malaipavar mummatil mAyvitta
cilaiyAn2E! cIr tikazum tiruk kARAyil
nilaiyAn2E!" en2pavarmEl vin2ai nillAvE.

பொருள்: வேத சாத்திரப் பொருளானே! வேதம் முழங்கும் கயிலாய மலையில் பொருந்தியவனே! முப்புரங்களை அழித்த பெருமானே! சீர்திகழ் காறாயில் தலத்தில் உறைபவனே என்று போற்றி வணங்குபவரிடத்து வினைகள் சென்று சேராவாம்.

குறிப்புரை: கலையான் – கலைகளாயும் அவற்றின் ஞானமாயும் உள்ளவன். செம்பொற் கயிலாயமலை – வெண்மைநிறமுடையது. வெண்கயிலை என்றதற்கு முரணன்று. இமயத்தை மேரு என்றும் மேருவை இமயம் என்றும் நூல்களிற் கூறுவதுபோல் கூறப்பட்டது. பனிமலையில் தவளகிரியும் காஞ்சனசிருங்கமும்

உண்டு. மலைபவர் – போர்செய்பவர், திரிபுரத்தசுரர். சிலை – மேருவில். நிலை – உறையுள்; திருக்கோயில், நிலையானவனுமாம்.

Behold! It is Civan the Lord of Thiru-k-kaaraayil. He is the founder of all arts and scriptures. He has that bow in His hand with which He destroyed all the three forts of the enemies. He is the occupant of the beautiful golden mount Kailash. He has His abode in Thiru-k-kaaraayil. It is a place of sanctity. Those devotees who praise His glories and worship Him with such words will have trouble-free life forever.

1628. ஆற்றானேயாறணிசெஞ்சடையாடா
வேற்றானேயேழுலகும்மிமையோர்களும்
போற்றானேபொழில்திகழுந்திருக்காறாயில்
நீற்றானேயென்பவர்மேல்வினைநில்லாவே. 6

"ஆற்றானே! ஆறு அணி செஞ்சடை ஆடுஅரவு
ஏற்றானே! ஏழ்உலகும்(ம்) இமையோர்களும்
போற்றானே! பொழில் திகழும் திருக் காறாயில்
நீற்றானே!" என்பவர் மேல் வினை நில்லாவே.

"ARRAn2E! ARu aNi cenjcaTai ATu aravu
ERRAn2E! Ez ulakum(m) imaiyOrkaLum
pORRAn2E! pozil tikazum tiruk kARAyil
nIRRAn2E!" en2pavarmEl vin2ai nillAvE.

பொருள்: யாவையுமாகி இருப்பவனே! கங்கை நதியை அணிந்த சடையில் அரவையும் ஏற்றவனே! ஏழுலக உயிர்களாலும் இமையவர்களாலும் தொழப் பெறுபவனே! பொழில்கள் நிறைந்த திருக்காறாயில் தலத்தில் கோயில் கொண்டவனே! திருநீற்றை அணிந்தவனே! என்று போற்றித் துதிப்பவர்களிடத்து வினைகள் நிலை பெறாவாம் என்க.

குறிப்புரை: ஆற்றான் – ஆறுடையவன். வேதாகம வழியினன். ஆடரவு – ஆடும் பாம்பு. ஏற்றான் – தாங்கியவன். போற்று – துதி. பொழில் – சோலை. நீற்றான் – திருநீற்றை அணிந்தவன்.

Behold! It is Civan the Lord of Thiru-k-kaaraayil. He is the embodiment of everything in the world. He has the river Ganges on His matted red hair. He beautifies His matted hair with the dancing snake. People in all the upper seven worlds and in the lower seven worlds and the devaas, celestials and all others worship Him. The

upper seven worlds are: (1) Boolokam, (2) Buvar Lokam, (3) Suvar Lokam, (4) Sana Lokam, (5) Dhabo Lokam, (6) Mahaa Lokam and (7) Sathya Lokam. The lower seven worlds are: (1) Adhalam, (2) Vidhalam, (3) Sudhalam, (4) Tharaadhalam, (5) Mahaadhalam, (6) Rasaadhalam and (7) Paadhalam. His body is smeared with white ashes. He has His abode in Thiru-k-kaaraayil. Those devotees who praise His virtues and worship the Lord will get no bad karma.

1629. சேர்த்தானேதீவினைதேய்ந்தறத்தேவர்கள்
ஏத்தானையேத்துநன்மாமுனிவர்க்கிடர்
காத்தானேகார்வயல்சூழ்திருக்காறாயில்
ஆர்த்தானேயென்பவர்மேல்வினையடராவே. 7

"சேர்த்தானே! தீவினை தேய்ந்து அறத் தேவர்கள்
ஏத்தானை! ஏத்தும் நல் மா முனிவர்க்கு இடர்
காத்தானே! கார் வயல் சூழ் திருக் காறாயில்
ஆர்த்தானே!" என்பவர் மேல் வினை அடராவே.

"cErttAn2E! tIvin2ai tEyntu aRat tEvarkaL
EttAn2E! Ettum nal mA mun2ivarkku iTar
kAttAn2E! kAr vayal cUz tiruk kARAyil
ArttAn2E!" en2pavarmEl iTar vin2ai aTarAvE.

பொருள்: பல பிறவிகள் வாயிலாகச் சேர்ந்த தீயவினைகள் அற்று நீங்கும்படி செய்த பெருமானே! தேவர்களால் வழிபடப்படுபவனே! வழிபடும் முனிவர்களின் துன்பங்களை நீக்குபவனே! வயல்கள் சூழ்ந்த திருக்காறாயில் தலத்தில் பொருந்தியவனே! எனத் துதி செய்து வணங்குபவர்களிடத்து தீவினைகள் சென்று சேராவாம்.

குறிப்புரை: ஏத்தான் – புகழ்களை எடுத்துச் சொல்லுதலைப் பெற்றவன். காத்தான் – தடுத்தவன். கார் – மேகம். வானோர்க்கும் பயிர்க்கிடம் ஆதலின் கார்வயல் என்றார். விளைபயிர் தோற்றம் பற்றியதுமாம். ஆர்த்தான் – நிறைந்தவன். ஊட்டியவன். ஆடா – வெல்லா. ஆடராவே என்பது பின்னோர் பதிப்பின் பாடம். அடரா – தாக்கா.

Oh Civa! He is the Lord of Thiru-k-kaaraayil. He destroyed all our bad karmas which we accumulated in all our previous births. He is worshipped by all devaas. He is the great saviour of those worshipping sages against obstacles. He has His abode in

Thiru-k-kaaraayil which is surrounded by dark green paddy fields. Thos devotees who in this way cite His glories will get all benefits from Him. They will not be affected by their bad karma, since it will be inoperative.

1630. கடுத்தானேகாலனைக்காலாற்கயிலாயம்
எடுத்தானையேதமாகம்முனிவர்க்கிடர்
கெடுத்தானேகேழ்கிளருந்திருக்காறாயில்
அடுத்தானேயென்பவர்மேல்வினையடராவே. 8

"கடுத்தானே காலனைக் காலால் கயிலாயம்
எடுத்தானை ஏதம் ஆக(ம்) முனிவர்க்கு இடர்
கெடுத்தானே! கேழ் கிளரும் திருக் காறாயில்
அடுத்தானே!" என்பவர் மேல் வினை அடராவே.

"kaTuttAn2E, kAlan2aik kAlAl! kayilAyam
eTuttAn2ai Etam Aka(m), mun2ivarkku iTar
keTuttAn2E! kEz kiLarum tiruk kARAyil
aTuttAn2E!" en2pavarmEl vin2ai aTarAvE.

பொருள்: காலனைக் காலால் காய்ந்தவனே! கயிலாயத்தை எடுத்த இராவணனின் வலிமையைக் கெடுத்தவனே! முனிவர்களின் துன்பத்தை நீக்கியவனே! ஒளிதிகழ் திருக்காறாயில் தலத்துள் உறைபவனே! என இவ்வாறு போற்றி வழிபடும் அடியவர்களிடத்து வினைகள் சென்று பொருந்தாவாம்.

குறிப்புரை: கடுத்தான் – கோபித்(து உதைத்)தான். ஆக+முனிவர் என்புழி மகரம் இசைபற்றி நின்றது. இராவணனுக்கு – ஏதம் (துன்பம்) ஆகுமாறும் முனிவர்களுக்கு இடர்கெடுமாறும் செய்தவன். கேழ் – (ஒளிரும்) நிறம்.

Oh Civa! He is the Lord of Thiru-k-kaaraayil. He kicked Kaalan, the god of death, with His legs when he was about to take away the life of Maarkandeyar. He subdued the mightiness of Raavanan by crushing his head and shoulders when he attempted to lift His abode, mount Kailash. He chased the sufferings of the sages. He has His abode in Thiru-k-kaaraayil, a very bright place. The devotees who praise His virtues will not have cruel fate in their life. Bad karma will become ineffective in their lives.

1631. பிறையானேபேணியபாடலொடின்னிசை
மறையானேமாலொடுநான்முகன்காணாத
இறையானேயெழில்திகழுந்திருக்காறாயில்
உறைவானேயென்பவர்மேல்வினையோடுமே. 9

"பிறையானே! பேணிய பாடலொடு இன்இசை
மறையானே! மாலொடு நான்முகன் காணாத
இறையானே! எழில் திகழும் திருக் காறாயில்
உறைவானே!" என்பவர் மேல் வினை ஓடுமே.

"piRaiyAn2E! pENiya pATaloTu in2icai
maRaiyAn2E! mAloTu nAn2mukan2 kANAta
iRaiyAn2E! ezil tikazum tiruk kARAyil
uRaivAn2E!" en2pavarmEl vin2ai OTumE.

பொருள்: பிறை நிலவைத் தலையில் அணிந்தவனே! பண்ணும் பாடலும் பொருந்தியதைப் போல் வேதமும் பயனுமாய் பொருந்தி நிற்பவனே! திருமால், பிரமன் இவர்களால் அறிய முடியா ஒளியாய் விளங்குபவனே! அழகுமிக்க திருக்காறாயில் தலத்தில் உறைபவனே! எனப் போற்றித் துதிப்பவர்களை வினைகள் சென்று சேராவாம்.

குறிப்புரை: இசை மறையான் – சாமவேதத்தவன். இறையான் – இறைவன். எங்கும் தங்கியவன். எழில் – அழகு. உறைவான் – திருக்கோயில் கொண்டவன்.

Civa is the Lord of Thiru-k-kaaraayil, handsome with the crescent moon. He has merged with the Vedas like music with hymns. He is the absolute Lord, who could not be perceived by the deities Vishnu and Brahma. He has His abode in Thiru-k-kaaraayil which is a holy place of blessed beauty. Those devotees of this place who worship Him with such glorifying words will not be affected by their bad karma, since it will become ineffective.

1632. செடியாரும்புன்சமண்சீவரத்தார்களும்
படியாரும்பாவிகள்பேச்சுப்பயனில்லை
கடியாரும்பூம்பொழில்சூழ்திருக்காறாயில்
குடியாருங்கொள்கையினார்க்கில்லைகுற்றமே. 10

செடி ஆரும் புன்சமண் சீவரத்தார்களும்
படி ஆரும் பாவிகள் பேச்சுப் பயன் இல்லை;
கடி ஆரும் பூம்பொழில் சூழ் திருக் காறாயில்
குடி ஆரும் கொள்கையினார்க்கு இல்லை, குற்றமே.

ceTi Arum pun2 camaN cIvarattArkaLum
paTi Arum pAvikaL pEccup payan2 illai;
kaTi Arum pUmpozil cUz tiruk kARAyil
kuTi Arum koLkaiyin2Arkku illai, kuRRamE.

பொருள்: கொடிய சமணர்களும் சாக்கியர்களும் பயனற்ற சொற்களையே பேசித் திரிவர். அவர்களது பேச்சினைக் கேட்பதில் பயன் ஏதும் இல்லை. எனவே அடியவர்களே! பொழில் சூழ்ந்த காறாயில் இறைவனின் புகழையே எப்போதும் பேசும் அடியார்களைக் குற்றங்கள் வந்து பொருந்தா!

குறிப்புரை: செடி – தீநாற்றம். சீவரத்தார்கள் – அழுக்குடையதும். பிறர்பால் காணாததும் அவர்க்கே. வழக்கத்தால் உரியதுமான துவரூட்டிய உடையினை உடுத்தவர்கள் (சமணர் முதலோர்) படி – நிலம். கடி – மணம். குடியாருங் கொள்கை – தலவாசம் புரியும் விரதம். அடியார் குடியாவர் (தி. 6 ப. 17 பா. 6) அடியார்கள் குடியாக (தி. 2 ப. 43 பா. 5) என் புழிப்படும் பொருளை உணர்க. குற்றம் – ஆணவம் முதலியன.

The Jains and Buddhists living in Thiru-k-kaaraayil preach false and sinful sayings. Oh devotees! never listen to them; only avoid them. Those who go to Thiru-k-kaaraayil temple which is surrounded by fragrant gardens, pray to the Lord and remain consistently as His devotees always blemishless.

1633. ஏய்ந்தசீரெழில்திகழுந்திருக்காறாயில்
ஆய்ந்தசீரானடியேத்தியருள்பெற்ற
பாய்ந்தநீர்க்காழியுண்ஞானசம்பந்தன்சொல்
வாய்ந்தவாறேத்துவார்வானுலகாள்வாரே. **11**

ஏய்ந்த சீர் எழில் திகழும் திருக் காறாயில்
ஆய்ந்த சீரான் அடி ஏத்தி அருள் பெற்ற
பாய்ந்த நீர்க் காழியுண் ஞானசம்பந்தன் சொல்
வாய்ந்தஆறு ஏத்துவார் வான்உலகு ஆள்வாரே.

Eynta clr ezil tikazum tiruk kARAyil
Aynta clrAn2 aTi Etti aruL peRRa
pAynta nIrk kAziyuL njAn2acampantan2 col
vAynta ARu EttuvAr vAn2 ulaku ALvArE.

பொருள்: நீர்வளம் நிறைந்த சீர்காழிப் பதியில் அவதரித்தவர் திருஞானசம்பந்தர் ஆவார். அவர், எழில் மிக்க திருக்காறாயில் தலத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானைப் புகழ்ந்து பாடியுள்ளார். இறைவனருளையும் பெற்றுள்ளார். அவர் பாடியருளிய பாடல்களை அடியவர்கள் பாடி இறையருள் பெற்று வானுலகு ஆளும் சிறப்பைப் பெறுவர்.

குறிப்புரை: ஏய்ந்த – பொருந்திய. ஆய்ந்தசீர் – வேதாகமங்களுள் ஆராயப்பட்ட (பொருள் சேர்) புகழ். பாய்ந்த நீர்க்காழி – வெள்ளப் பெருக்கில் அழியாத உண்மை குறித்ததும் வளமுரைத்ததுமாம். வந்தவணம் ஏத்துமவர் வானமடைவாரே என்றது காண்க.

Our famous saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi, surrounded by cool water ways and ponds. He received the blessings of our Lord in Thiru-k-kaaraayil and also got inspiration from Him. Thereafter he sang these sacred ten hymns on Him. The devotees of this place who recite these hymns of Thiru-gnana-Sambandar with fervour and offer worship to our Lord of this place will certainly reach the celestial world and rule there.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

15ஆம் பதிகம் முற்றிற்று
End of 15th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 152 *பதிக எண்: 16*

16. திருமணஞ்சேரி

16. THIRU-MANANCH-CHERI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

திருமணஞ்சேரி என்னும் இத்திருத்தலமானது மயிலாடுதுறை–கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், குத்தாலம் தொடர் வண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே சுமார் 5.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. மயிலாடுதுறையிலிருந்து இத்தலத்துக்கு நகரப் பேருந்துகள் உள்ளன. இது காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்று. இறைவர் திருப்பெயர் அருள்வள்ளல்நாதர். இறைவியார் திருப்பெயர் யாழினும் மென்மொழியம்மை. மன்மதன் பூசித்துப் பேறுபெற்றான். ஆமை பூசித்து மனித உருப்பெற்றது. இதற்கு ஞானசம்பந்தர் அருளிய பதிகம் ஒன்று, அப்பர் அருளிய பதிகம் ஒன்று ஆக இரு பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

வேதந்தமிழால் விரித்த வித்தகர், பந்தணைநல்லூரைப் பணிந்து, திருமணஞ்சேரியில் தொண்டரோடும் சென்று தொழுது இசைபாடியபோது, 'அயிலாரும் அம்பு' எனத் தொடங்கிப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1634. அயிலாருமம்பதனாற்புரமூன்றெய்து
குயிலாருமென்மொழியாளொருகூறாகி
மயிலாருமல்கியசோலைமணஞ்சேரிப்
பயில்வானைப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே. 1

அயில் ஆரும் அம்பு அதனால் புரம் மூன்று எய்து,
குயில் ஆரும் மென்மொழியாள் ஒருகூறுஆகி,
மயில் ஆரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கு இல்லை, பாவமே.

ayil Arum ampu atan2Al puram mUn2Ru eytu,
kuyil Arum men2moziyAL oru kURu Aki,
mayil Arum malkiya cOlai maNanjcErip
payilvAn2aip paRRi nin2RArkku illai, pAvamE.

பொருள்: கூர்மையான அம்பினால் முப்புரங்களை எரித்தவர் சிவபெருமான். அவர் உமாதேவியை திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டவர். மயில்கள் விளையாடும் சோலைகள் நிறைந்த மணஞ்சேரி என்னும் இத்திருத்தலத்தில் உறைகின்றவர். அவரைப்பற்றி நின்றார்க்கு பாவம் இல்லை என்க.

குறிப்புரை: அயில் – கூர்மை. அம்பு – திருமாலாகிய கணை. 'குயில் வாய்மொழியம்மை' என்பது அம்பிகை திருநாமம். பயில்வான் – கோயில் கொண்டு பயில்பவன். பற்றி நிற்றல் – பற்று விடுமாறு வழிபடல்.

It is Civan, our Lord in Thiru-mananch-cheri, which is a holy place where peacocks dance in evergreen gardens. He burnt the three forts with a sharp arrow. He has shared His body with our goddess Umaa, whose voice is musical like the cuckoo's. He has His abode in Thiru-mananch-cheri. The holy people of this city clasping His holy feet are blessed by our Lord; their sin will vanish.

1635. விதியானைவிண்ணவர்தாந்தொழுதேத்திய
நெதியானைநீள்சடைமேல்நிகழ்வித்தவான்
மதியானைவண்பொழில்சூழ்ந்தமணஞ்சேரிப்
பதியானைப்பாடவல்லார்வினைபாறுமே. 2

விதியானை, விண்ணவர்தாம் தொழுது ஏத்திய
நெதியானை, நீள்சடைமேல் நிகழ்வித்த வான்-
மதியானை, வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்-
பதியானை, பாட வல்லார் வினை பாறுமே.

vitiyAn2ai, viNNavartAm tozutu Ettiya
netiyAn2ai, nIlcaTaimEl nikazvitta vAn2-
matiyAn2ai, vaNpozil cUznta maNanjcErip-
patiyAn2ai, pATa vallAr vin2ai pARumE.

பொருள்: எல்லாவற்றிற்கும் காரணம் ஆனவனை, விண்ணவர் தொழுது ஏத்தும் செல்வனை, நீண்ட சடையில் நிலவினை வைத்தவனை, பொழில் சூழ்ந்த திருமணஞ்சேரியில் கோயில் கொண்டவனைப் புகழ்ந்து பாடவல்லவர்களின் வினைகள் நீங்கப் பெறும்.

குறிப்புரை: விதியானை – வேதாகம விதியானவனை, படைப்பவனாகியவனை; 'கரியானை நான்முகனை' (தி.6, ப.1, பா.1) 'நாரணன் காண்' 'நான்முகன் காண்' (தி. 6, ப.8, பா.3) நெதி – செல்வம். நிதியின் மருஉ. மொழி முதல் இகாரம் எகாரமாயொலிக்கும். விலை – வெலை போல. வான்மதி – வெண்பிறை. வானூர்மதியுமாம். பாறும் – அழியும்.

It is Civan, our Lord of Thiru-mananch-cheri. He is the personification of law Himself. He is the Lord of indiminishable wealth itself. All the celestials pray and worship Him always. He beautifies His long matted hair with the crescent moon, which always moves from one end to the other end of the sky. He has His abode in Thiru-mananch-cheri, which is a sacred place with fragrant gardens. Those people of this city who recite His glory always will be relieved of the bad karma of their previous life.

1636. எய்ப்பானார்க்கின்புறுதேனளித்தூறிய
இப்பாலாயெனையுமாளவுரியானை
வைப்பானமாடங்கள்சூழ்ந்தமணஞ்சேரி
மெய்ப்பானைமேவிநின்றார்வினைவீடுமே. 3

எய்ப்பு ஆனார்க்கு இன்புஉறு தேன் அளித்து ஊறிய
இப்பால்ஆய் எனையும் ஆள உரியானை,
வைப்பு ஆன மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை, மேவி நின்றார் வினை வீடுமே.

eyppu An2Arkku in2pu uRu tEn2 aLittu URiya
ippAl Ay en2aiyum ALa uriyAn2ai,
vaippu An2a mATagkaL cUznta maNanjcEri
meyppAn2ai, mEvi nin2RAr vin2ai vITumE.

பொருள்: விரதம் பூண்டு இளைத்த மேனியராய் எய்த்துப் போனவர்களுக்குத் தேன் போன்றவனை, என்னையும் ஆட்கொண்டருளும் எம்பெருமானை, உறுதியான மாடங்கள் நிறைந்த திருமணஞ்சேரி என்னும் இத்திருத்தலத்தில் மெய்ப்பொருளாய் விளங்குபவனை மேவி ஏத்தும் அடியார்களின் வினைகள் நீங்கிடும் என்க.

குறிப்புரை: எய்ப்பு – இளைப்பு. மெய்ப்பான் – பொய்யாதல் இல்லாதவன். உண்மைப் பொருள். வீடும் – அழியும்.

It is Civan, our Lord in personification. The servitors do not pay attention to their food; they care more to divert their attention to praise the glory of our Lord by singing His hymns. By so doing without proper food they become bodily very weak. But during this state of their life, our Lord graces them like nectar. The servitors become happy with our Lord's timely help. He has His abode in Thiru-mananch-cheri, which is surrounded by well-built palaces. Those devotees, who always think of His holy feet and pray, will be relieved of their bad karma.

1637. விடையானைமேலுலகேழுமிப்பாரெல்லாம்
உடையானையூழிதோறூழியுளதாய
படையானைப்பண்ணிசைபாடுமணஞ்சேரி
அடைவானையடையவல்லார்க்கில்லையல்லலே. 4

விடையானை, மேல்உலகு ஏழும் இப் பார்எல்லாம்
உடையானை, ஊழிதோறுஊழி உளதுஆய
படையானை, பண்இசை பாடு மணஞ்சேரி
அடைவானை, அடைய வல்லார்க்கு இல்லை அல்லலே.

viTaiyAn2ai, mEl ulaku Ezum ip pAr elAm
uTaiyAn2ai, UzitOTu Uzi uLatu Aya
paTaiyAn2ai, paN icai pATu maNanjcEri
aTaivAn2ai, aTaiya vallArkku illai, allalE.

பொருள்: இடப வாகனத்தை உடையவனை, ஈரேழு உலகங்களையும் உடையவனை, ஊழிதோறும் தனது எண்ணத்தின்படியே படைத்து அருள்பவனை, பண்ணிசை பாடப்பெறும் திருமணஞ்சேரியில் உறைபவனை அடைய வல்ல அடியார்களுக்கு துன்பங்களே இல்லையாம் என்க.

குறிப்புரை: விடையான் – எருதேறி. படையான் – படைகளை உடையவன். ஊழிதோறும் உள்ள படை ஞானவாட்படை, 'ஞான வாளேந்தும் ஐயர்' (திருவாசகம் 613). மணஞ்சேரியில், ஆசிரியர் சென்றருளிய காலத்தில் பண்ணிசை பாடுதல் சிறந்திருந்தது.

It is Civan, the Lord of Thiru-mananch-cheri, who rides on His bull to go round the cosmos. His Supreme rule prevails all over the seven top worlds as well as in this earthly world. He is the only one present everywhere forever after deluges that come

one after the other for every millennium and He then exhibits Himself as the embodiment of true wisdom (Gnosis), which is a part and parcel of His being. He has His abode in Thiru-mananch-cheri, a place of sweet songs. Those devotees who reach His holy feet, pray and worship will never experience the state of suffering in their lifetime.

1638. எறியார்பூங்கொன்றையினோடுமிளமத்தம்
வெறியாருஞ்செஞ்சடையாரமிலைந்தானை
மறியாருங்கையுடையானைமணஞ்சேரிச்
செறிவானைச்செப்பவல்லார்க்கிடர்சேராவே. 5

எறி ஆர் பூங்கொன்றையினோடு இள மத்தம்
வெறி ஆரும் செஞ்சடை ஆர மிலைந்தானை,
மறி ஆரும் கை உடையானை, மணஞ்சேரிச்
செறிவானை, செப்ப வல்லார்க்கு இடர் சேராவே.

eRi Ar pUgkon2Raiyin2OTum iLa mattam
veRi Arum cenjcaTai Ara milaintAn2ai,
maRi Arum kai uTaiyAn2ai, maNanjcEric
ceRivAn2ai, ceppa vallArkku iTar cErAvE.

பொருள்: ஒளிமிக்க கொன்றை மலர்களையும் ஊமத்தம் பூக்களையும் நீண்ட மணங்கமழும் சடையில் கொண்டவனை, ஆடுகின்ற மானை அடக்கிக் கையில் தாங்கியவனை, மணஞ்சேரித் தலத்தில் கோயில் கொண்டவனைப் புகழ்ந்து பாடவல்லார்க்கு இடர் சேராதாம் என்க.

குறிப்புரை: எறிஆர் – ஒளிபொருந்திய (எறித்தல் – ஒளிவிடல்). வெறி – மணம். ஆர் – நிறைய, மிலைத்தான் – சூடினான். மறி – மான் கன்று. கொன்றையினோடும் மத்தம், சடை ஆரமிவைத்தானும் மறிக்கையுடையானும் செறிவானும் ஆகிய சிவனைச் செப்பவல்லார் என முடிக்க.

It is Civan, the Lord of Thiru-mananch-cheri, who has beautified His sweet smelling matted hair with large quantities of bright golden fragrant cassia flowers and tender datura flowers. He has in one of His hands that young deer controlling it's running. Lord Kalyana Sundarar has His abode at Thiru-mananch-cheri. Those servitors who sing and praise all His glories will have a trouble-free life.

1639. மொழியானைமுன்னொருநான்மறையாறங்கம்
பழியாமைப்பண்ணிசையானபகர்வானை
வழியானைவானவரேத்துமணஞ்சேரி
இழியாமையேத்தவல்லார்க்கெய்துமின்பமே. 6

மொழியானை, முன் ஒரு நால்மறை ஆறுஅங்கம்;
பழியாமைப் பண்இசைஆன பகர்வானை;
வழியானை வானவர் ஏத்தும் மணஞ்சேரி
இழியாமை ஏத்த வல்லார்க்கு எய்தும், இன்பமே.

moziyAn2ai, mun2 oru nAlmaRai ARuagkam
paziyAmaip paN icai An2a pakarvAn2ai;
vaziyAn2ai; vAn2avar Ettum maNanjcEri
iziyAmai Etta vallArkku eytum, in2pamE.

பொருள்: மணஞ்சேரி இறைவனாகிய சிவபெருமான் ஆதியிலிருந்தே 'ஓம்' என்ற அடிப்படை மந்திரமாக விளங்குபவன். நான்கு மறைகளையும் அருளியவனை, ஆறு அங்கங்களையும் அளித்தவனை, பண்ணிசையாய்ப் பொருந்தியவனை, நன்னெறியால் விளங்குபவனை, வானவர்கள் வணங்கும் திருமணஞ்சேரி ஆகிய இத்திருத்தலத்தில் கோயில் கொண்டவனை மனத்தில் குற்றமின்றிப் பாடிடும் அடியார்களுக்கு இன்பமே கிட்டும் என்க.

குறிப்புரை: 'எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும் பிரமனுக்கும் ஈசன் என்னத்தக்க முதல் பரப்பிரம்மம் சதாசிவன் ஓம் என வேதம் சாற்றும்' (காஞ்சிப். குமர. 16). 'சொல்லும் பொருளெலாம் ஆனாய் நீயே' (தி.6, ப.78, பா.5) 'இமையோர் ஏத்தும் சொல்தான்காண்' (தி.6, ப.8. பா.4) என்பன வேதவுண்மையாதலின் மொழியான் என்றார். 'சொல்லானை' (தி.2, ப.16, பா.9) எனப் பின் வருதலும் அறிக. நான்மறையும் அம்மறைப் பொருளுணர்ச்சிக்குக் கருவியாகிய ஆறு அங்கங்களும் மொழிந்தவன் சிவனே ஆதலால், அவற்றைப் பழியாதவாறு காத்தல் அவன் கடமையாகும். 'தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம், வகுத்தவன்', 'விரித்தவன் அருமறை' (தி.3, ப.23, பா.6, 7). 'மருவினிய மறைப்பொருளை', 'விரித்தானை நான்மறையோடங்கம் ஆறும்' (தி.6, ப.80, பா. 6, 10) 'வேதத்தை வேதவித்தை' (தி.6, ப.79, பா.3) அதுபற்றிப் பண்ணிசைகளையும் அளித்தருளினான். அஸ்யமஹதோ பூதஸ்ய நிஸ்வஸித மேத த்ருக் வேதோ யஜுர் வேதஸ் ஸாம வேத: இருக்குவேதம், யஜுர் வேதம், சாமவேதம் (முதலியவை) இம்மெய்ப்பொருளின் உயிர்ப்பு என்று பிருகதாரண் யோபநிடதம் (4, 4, 10, 6, 5, 11) கூறுகின்றது. பகர்தல் – சொல்லுதல், ஆன – ஆனவை. வினையாலணையும் பெயர். வழியான் – வேதாகம வழி. திருவருள்நெறி. ஒளிசேர்நெறி. இழியாமை – இகழாமல்.

It is Civan, the Lord of Thiru-mananch-cheri, who is the primordial mantra sound 'Ohm'. He is the four Vedas Himself; He elucidates the inner hidden meanings of it as well as the resultant six Angaas with niceties and ease. He is all the virtuous one Himself. No one can defame His exhibits. He is a part of all musical tones and the intricacies. He is righteousness itself. He has His abode in Thiru-mananch-cheri. Those who always praise His virtues will have bliss forever.

1640. எண்ணானையெண்ணமர்சீரிமையோர்கட்குக்
கண்ணானைக்கண்ணொருமூன்றுமுடையானை
மண்ணானைமாவயல்சூழ்ந்தமணஞ்சேரி
பெண்ணானைப்பேசநின்றார்பெரியோர்களே. 7

எண்ணானை, எண் அமர் சீர் இமையோர்கட்குக்
கண்ணானை, கண் ஒருமூன்றும் உடையானை,
மண்ணானை, மா வயல் சூழ்ந்த மணஞ்சேரி
பெண்ணானை, பேச நின்றார் பெரியோர்களே.

eNNAn2ai, eN amar cIr imaiyOrkaTkuk
kaNNAn2ai, kaN oru mUn2Rum uTaiyAn2ai,
maNNAn2ai, mA vayal cUznta maNanjcErip
peNNAn2ai, pEca nin2RAr periyOrkaLE.

பொருள்: நம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவனை, உள்ளத்தில் பொருந்தி வழிபடும் அடியவர்களுக்கு ஞானக்கண்ணாக விளங்குபவனை, சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று கண்களைக் கொண்டவனை, நிலமாக விளங்குபவனை, வயல் சூழ்ந்த மணஞ்சேரித் தலத்தில் உமாதேவியோடு உறைபவனைப் புகழ்ந்து பேசுபவர்கள் என்றும் பெரியோர்களாய் போற்றப்படுவர்.

குறிப்புரை: எண்ணானை – யாவராலும் மனத்தால் எண்ணி அறியப்படாதவனை, மனாதீதனை. எண் – அளவு. பெண்ணான் – மங்கைபங்கன், கங்கைச்சடையன். பெரியோர்க்கு உரிய இலக்கணத்துள், சிவகீர்த்தனம் பாடுதலும் ஒன்று.

Civan, the Lord of Thiru-mananch-cheri, could not be comprehended by anyone. He is beyond the thoughts of all human beings. He is the eye-like divine wisdom for the scholarly celestials. He is our three-eyed Lord. He shares His body with goddess

Umaa. He has His abode in Thiru-mananch-cheri, which is surrounded by broad paddy fields. Those servitors who speak of this Lord here praising His greatness will themselves be considered great.

1641. எடுத்தானையெழில்முடியெட்டுமிரண்டுந்தோள்
கெடுத்தானைக்கேடிலாச்செம்மையுடையானை
மடுத்தாரவண்டிசைபாடுமணஞ்சேரி
பிடித்தாரப்பேணவல்லார்பெரியோர்களே. 8

எடுத்தானை எழில் முடி எட்டும் இரண்டும் தோள்
கெடுத்தானை, கேடு இலாச் செம்மை உடையானை,
மடுத்து ஆர வண்டு இசை பாடும் மணஞ்சேரி
பிடித்து ஆரப் பேண வல்லார் பெரியோர்களே.

eTuttAn2ai ezil muTi eTTum iraNTum tOL
keTuttAn2ai, kETu ilAc cemmai uTaiyAn2ai,
maTuttu Ara vaNTu icai pATum maNanjcEri
piTittu Arap pENa vallAr periyOrkaLE.

பொருள்: கயிலாய மலையைத் தூக்கி நகர்த்த முற்பட்ட இராவணனின் தோள்களை வலியிழக்கச் செய்தவனை, கேடற்ற சிறப்புக்கள் பொருந்தியவனை, வண்டுகள் ஒலிக்கும் மணஞ்சேரித் தலத்தில் உறைபவனைப் பற்றிப்பிடித்தவர்கள் பெரியோர்களாய் திகழ்வார்கள் என்க.

குறிப்புரை: இராவணன் முடிபத்தும் தோள் (இருபதும்) கெடுத்த சிவனை, கேடிலாச் செம்மை – அழிவில்லாத 'திருநின்ற செம்மை' எனப்படும் பேரின்பம். வண்டுகள் மடுத்து (உண்டு) ஆர – நிறைய. பிடித்துஆர – சிக்கெனப்பற்றிப் பூரணமாக, பேண – பத்திசெய்ய, பெரியோர்க்கு இதுவும் இலக்கணம்.

It is Civan, the Lord of Thiru-mananch-cheri, who subdued the mightiness of Raavanan, the king of Sri Lanka when he tried to lift mount Kailash, where Lord Civan resided. He crushed his ten heads and powerful shoulders. He is the embodiment of blemishless virtues. He has His abode in Thiru-mananch-cheri, where the pleasant musical humming of bees is heard always. Those devotees who cling to our Lord's golden feet will always be brilliant and great.

1642. சொல்லானைத்தோற்றங்கண்டானுநெடுமாலும்
கல்லானைக்கற்றனசொல்லித்தொழுதோங்க
வல்லார்நன்மாதவரேத்துமணஞ்சேரி
எல்லாமாமெம்பெருமான்கழலேத்துமே. 9

சொல்லானை; தோற்றம் கண்டானும், நெடுமாலும்,
கல்லானை; கற்றன சொல்லித் தொழுது ஓங்க
வல்லார், நல் மா தவர் ஏத்து மணஞ்சேரி
எல்லாம் ஆம் எம்பெருமான்; கழல் ஏத்துமே!

collAn2ai; tORRam kaNTAn2um, neTumAlum,
kallAn2ai; kaRRan2a collit tozutu Ogka
vallAr, nal mA tavar, Ettu maNanjcEri
ellAm Am emperumAn2; kazal EttumE!

பொருள்: வேதமொழியாக விளங்கும் பெருமானை, படைக்கும் பிரமனும், காக்கும் திருமாலும் காணமுடியா வகையில் நின்றானை, தாம் கற்ற முறையில் திருந்தச் சொல்லி வணங்கும் அடியவர்களிடத்தும் மாதவர்களிடத்தும் பொருந்தி உள்ளவனை, மணஞ்சேரியில் கோயில் கொண்டவனை, எம்பெருமானை வாழ்த்தி வணங்குவோமாக.

குறிப்புரை: சொல்லானை (பார்க்க: தி. 2, ப.2, பா.6) தோற்றம் – படைப்பு. சிருட்டி, கண்டான் – பிரமன். கல்லானை – கற்றுணரப்படாத பெருமை உடைய சிவனை, கற்றன – கற்றறிந்த சிவகீர்த்தனங்களை, ஓங்க வல்லார் – திருவருளுயர்ச்சியை அடையவல்லார். 'ஓங்குணர்வு' (திருவருட்பயன். 91) 'எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி' 'ஒருவனே எல்லாம் ஆகி அல்லானாயுடனுமாவன்' (சித்தியார். 47) ஏத்தும் – ஏத்துங்கள்.

It is Civan, the Lord of Thiru-mananch-cheri, who is the Supreme Author of the divine wisdom of every term in the Vedas. Brahma, the deity of creation and the great Vishnu were unable to see our Lord who is non-comprehensible to them. He has His abode in Thiru-mananch-cheri. This is a very holy place. Learned sages and scholars live in large numbers in this city and He is with them too. They always recite His holy hymns and worship Him. Like these noble men let us worship His golden feet.

1643. சற்றேயுந்தாமறிவில்சமண்சாக்கியர்
சொற்றேயும்வண்ணமொர்செம்மையுடையானை
வற்றாதவாவிகள்சூழ்ந்தமணஞ்சேரி
பற்றாகவாழ்பவர்மேல்வினைபற்றாவே. 10

சற்றேயும் தாம் அறிவு இல் சமண்சாக்கியர்
சொல்-தேயும் வண்ண மொர் செம்மை உடையானை,
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்று ஆக வாழ்பவர் மேல் வினை பற்றாவே.

caRREyum tAm aRivu il camaNcAkkiyar
col-tEyum vaNNam Or cemmai uTaiyAn2ai,
vaRRAta vAvikaL cUznta maNanjcEri
paRRA Aka vAzpavar mEl vin2ai paRRAvE.

பொருள்: சமணர்களும், சாக்கியர்களும் கொஞ்சம்கூட பொருந்தாமல் உரையாற்றுவார்கள். அவர்களது சொற்கள் தேயுமாறு செம்மையாய் விளங்குபவர் நம் பெருமான் ஆவார். அவர் நீர்வற்றாத குளங்கள் நிறைந்த திருமணஞ்சேரியில் கோயில் கொண்டுள்ளார். அவரிடம் பற்றுக்கொண்டு வாழும் அடியவர்களை வினைகள் பற்றா என்க.

குறிப்புரை: சற்று – சிறிது. சொல்தேயும் வண்ணம் – பிதற்றுரைகள் பொருளுறாதனவாய் ஒழியும் வகை. 'செம்மை உடையானை' (பா. 8). வாவி – குளம். பற்று ஆக – உண்மையன்பிற்குரிய தலமாக.

It is Civan, the Lord of Thiru-mananch-cheri, who bestows salvation on His devotees after wiping out the useless, sinful words of the Jains and the Buddhists of dark ignorance. Our Lord has His abode in Thiru-mananch-cheri, where the perennial ponds flourish. Those devotees who have attachment to our Lord will have no other attachment and the resulting karma in their life forever.

1644. கண்ணாருங்காழியர்கோன்கருத்தார்வித்த
தண்ணார்சீர்ஞானசம்பந்தன்தமிழ்மாலை
மண்ணாருமாவயல்சூழ்ந்தமணஞ்சேரி
பண்ணாரப்பாடவல்லார்க்கில்லைபாவமே. 11

கண் ஆரும் காழியர்கோன் கருத்து ஆர்வித்த
தண் ஆர் சீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை,
மண் ஆரும் மா வயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண் ஆரப் பாட வல்லார்க்கு இல்லை, பாவமே.

kaN Arum kAziyarkOn2 karuttu Arvitta
taN Ar cIr njAn2acampantan2 tamizmAlai,
maN Arum mA vayal cUznta maNanjcEri,
paN Arap pATa vallArkku illai, pAvamE.

பொருள்: எம்பெருமான் சீர்காழிப்பதியில் நம் கண்ணுக்கினிய காட்சிதரும் வகையில் கோயில் கொண்டுள்ளார். அச்சீர்காழிப்பதியில் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான் திருமணஞ்சேரியில் இறைவன் உறைவதைப் புகழ்ந்து பாடியுள்ளார். அதனை நாமும் பாடிப்பரவுவோம், நம் பாவங்கள் நீங்கப் பெறுவோமாக.

குறிப்புரை: காழியர்கோன் – தோணியப்பர். கருத்து – திருவுள்ளம். ஆர்வித்த – நிறைவித்த. ஒவ்வொரு திருப்பதிகமும் ஒவ்வொரு தமிழ்மாலை என்னும் உண்மையை இதில் அறியலாம். பண்ணாரப்பாடுதல் வல்லார்க்குப் பாவம் இல்லை. 'கண் . . . . . சீர்' என்றது ஆசிரியர் சிறப்பை உணர்த்துகின்றது. கண் – வேணு வனம், கண் – மூங்கில். 'கண்ணார் கமழ்காழியர்' (தி.2, ப.23, பா.11) என்றது காண்க.

Our saint Thiru-gnana-Sambandar was born in Seerkaazhi, where our Lord resides as a beautiful sight for our eyes. Thiru-gnana-Sambandar's sweet meaningful Tamil verses with musical tone made on the Lord of Thiru-mananch-cheri are meant to guide us for purposeful way of good life. Those who recite this garland of Tamil verses, on the Lord of Thiru-mananch-cheri, a city of pilgrimage amidst broad paddy fields, will be sinless and boonful.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

16ஆம் பதிகம் முற்றிற்று
End of 16th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 153 பதிக எண்: 17

17. திருவேணுபுரம் 17. THIRU-VENU-PURAM

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

1645. நிலவும்புனலுந்நிறைவாளரவும்
இலகுஞ்சடையார்க்கிடமாமெழிலார்
உலவும்வயலுக்கொளியார்முத்தம்
விலகுங்கடலார்வேணுபுரமே. 1

நிலவும், புனலும், நிறை வாள்அரவும்,
இலகும் சடையார்க்கு இடம்ஆம் - எழிலார்
உலவும் வயலுக்கு ஒளி ஆர் முத்தம்
விலகும் கடல்ஆர் வேணுபுரமே.

nilavum, pun2alum, niRai vAL aravum,
ilakum caTaiyArkku iTam Am--ezilAr
ulavum vayalukku oLi Ar muttam
vilakum kaTal Ar vENupuramE.

பொருள்: அழகுமிக்க உழத்தியர் வேணுபுர வயல்வெளிகளில் மகிழ்ந்து உழுதொழில் புரிவர். அவர்களது ஒளிமிக்க பற்களோடு போட்டியிடுவதுபோல் கடலில் உள்ள முத்துக்களும் வேணுபுர வயல்களில் வந்து சிதறுகின்றன. எல்லாம் ஒன்றுபட்டு விளங்குவதற்குக் காரணம் வேணுபுரப் பெருமான் தலையில் மாறுபட்ட பொருள்களாகிய பிறைநிலவும், கங்கைநதியும், கொடிய பாம்பும் ஒன்றுபட்டிருப்பதைக் காணமுடிந்த பாக்கியம்தான் என்க.

குறிப்புரை: நிலவு – பிறை, ஆகுபெயர். புனல் – கங்கை. நிறைவாள் – நிறைந்த கொடுமையை உடைய, சாதி அடை. இலகும் – விளங்கும். எழிலார் – அழகுடைய மகளிர். எழுச்சி உடைய உழத்தியருமாம்.

கடல் முத்துக்கள் வயலை அடைகின்றன. வெள்ளத்தில் மிதந்த வரலாறுபற்றி. கடலார் வேணுபுரம் என்றார்.

Behold! It is Civan who is the Lord of Thiru-venu-puram, and this is one of the twelve names of Seerkaazhi. The Lord of this place has beautified His matted hair with the crescent moon, the Ganges and the glistening snake thereby bringing unity among diverse elements. In the paddy fields adjoining the sea coast, the women of ploughmen of surpassing beauty work, the sea waves bring and scatter their pearls in these paddy fields and these seem to complete with the bright teeth of the ploughing ladies. Our Lord resides in this blessed place, a seaside town of greatness, which once escaped destruction by the sea.

1646. அரவார்கரவன்னமையார்திரள்தோள்
குரவார்குழலாளொருகூறனிடங்
கரவாதகொடைக்கலந்தாரவர்க்கு
விரவாகவல்லார்வேணுபுரமே. 2

அரவு ஆர் கரவன்(ன்), அமை ஆர் திரள்தோள்
குரவு ஆர் குழலாள் ஒருகூறன், இடம் -
கரவாத கொடைக்கு அலந்தார் அவர்க்கு
விரவுஆக வல்லார் வேணுபுரமே.

aravu Ar karavan2(n2), amai Ar tiraLtOL
kuravu Ar kuzalAL oru kURan2, iTam--
karavAta koTaikku alantAr avarkku
viravu Aka vallAr vENupuamE.

பொருள்: தன்னிடத்தில் உள்ள பொருளை மறைக்காமல் பிறருக்குக் கொடுத்து உதவும் வள்ளல்கள் நிறைந்து வாழுமிடமே வேணுபுரமாகும். அங்குதான் பாம்பைக் கங்கணமாகக் கொண்டவனும் மூங்கில் போன்ற தோளும் குராமலர் நிகர்த்த மணம் கமழும் கூந்தலை உடைய உமையாளை ஒருபாகமாகக் கொண்டவனுமாகிய பெருவள்ளல் சிவபெருமான் கோயில் கொண்டு உள்ளார் என்க.

குறிப்புரை: அரவு ஆர்கரவன் – பாம்பைக் கங்கணமாக அணிந்த கையினன். அமை – மூங்கிற்கணுக்களின் இடைப்பகுதியை. ஆர் – ஒத்த. திரள் – திரண்ட. குரவு – குராமலர்மாலை.

'கரவாது உவந் தீயுங்கண் அன்னார்' (குறள் 1061). குழலாள் – கூந்தலை உடைய அம்பிகை. கூறன் – பாகத்தை உடையவன். கரவாத – மறைக்காத. கலந்தார் அவர்க்கு – கூடியவராகிய அவர்க்கு. விரவு ஆகவல்லார் – நட்பாக. வல்லவர்கள் (வல்லவர்கள் வாழும் வேணுபுரம் என்க).

Behold! It is Civan, the Lord of Thiru-venu-puram. He wears around His arm the snakes. He shares His body with our goddess Umaa. Her shoulders are beautiful, bamboo like. She beautifies her hair with sweet smelling bottle flowers. Our Lord has His abode in this glorious town. In this place a large number of good people live who donate their wealth to one and all without concealing it. Such people are all closely associated with each other, even though the Lord of this place graces His devotees with whatever they need.

1647. ஆகம்மழகாயவள்தான்வெருவ
நாகமுரிபோர்த்தவனண்ணுமிடம்
போகந்தருசீர்வயல்சூழ்பொழில்கண்
மேகந்தவழும்வேணுபுரமே. 3

ஆகம்(ம்) அழகுஆயவள்தான் வெருவ,
நாக(ம்) உரி போர்த்தவன் நண்ணும் இடம் -
போகம் தரு சீர் வயல் சூழ் பொழில்கண்
மேகம் தவழும் வேணுபுரமே.

Akam(m) azaku AyavaLtAn2 veruva,
nAkam(m) uri pOrttavan naNNum iTam--
boham tharu seer vayal chool pozhilkaN
MEham Thavalum Venu purame.

பொருள்: செழிப்பான வளம் மிக்க வயல்களாலும் சோலைகளாலும் சூழப்பெற்றது வேணுபுரம் ஆகும். அங்கு எப்பொழுதும் மழை மேகங்கள் சூழ்ந்து மழையைப் பொழிந்து மூன்று போகங்களும் விளையும். அவ்வேணுபுரத்தில்தான் அழகான உமையவளும் அஞ்சுமாறு, கரிய யானையின் தோலினை உரித்துத் தன் உடம்பில் போர்த்திய சிவனும் கோயில் கொண்டுள்ளான் என்க.

குறிப்புரை: ஆகம் அழகு ஆயவள் – அழகிய திருமேனியை உடைய அம்பிகை. ஆகம் – உடம்பு. வெருவ – அஞ்ச. நாகம் – யானை. உரி – தோல். இரண்டடியிலும் வந்த மகர ஒற்றுக்கள் இசைபற்றி

வந்த விகாரம். போகம் – வயல்விளைவாகக் கிடைக்கும் உணவுப் பொருள்கள். முதல் போகம் இரண்டாம் போகம் என்னும் வழக்கு உணர்க. பொழில்கண் மேகம் என்பதில் கண் உருபும். கள் விகுதியும் ஆகப்பிரித்துப் பொருள் கூறலாம்.

Behold! It is Civan, the Lord of Thiru-venu-puram. Our beautiful goddess Umaa was once seated by the side of our Lord. Suddenly a fierce wild elephant rushed towards her. She shuddered to see it. However our Lord faced the elephant, killed it, and skinned it. Then He wore the skin as His coat. Umaa's fear subsided. Our Lord has His abode in this sanctified town, which is surrounded by gardens and rich paddy fields. Clouds move over the tall trees in the dense gardens. All the fields are very rich and they yield three harvests every year.

1648. காசக்கடலில்விடமுண்டகண்டத்
தீசர்க்கிடமாவதுஇன்நறவ
வாசக்கமலத்தனம்வன்றிரைகள்
வீசத்துயிலும்வேணுபுரமே. 4

காசு அக் கடலில் விடம் உண்ட கண்டத்து
ஈசர்க்கு இடம்ஆவது - இன் நறவ
வாசக்கமலத்து அனம், வன் திரைகள்
வீச, துயிலும் வேணுபுரமே.

kaAcu ak kaTalil viTam uNTa kaNTattu
Icarkku iTam Avatu--in2 naRava
vAcakkamalattu an2am, van2 tiraikaL
vIca, tuyilum vENupuramE.

பொருள்: மணமிக்க தாமரை மலரில் உள்ள அன்னங்கள் துயில் கொள்ளும் வகையில் கடல் அலைகள் வீசும். அத்தகைய வளமிக்க வேணுபுரத்தில் பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்ட நீலகண்டராகிய சிவபெருமான் கோயில் கொண்டுள்ளார் என்க.

குறிப்புரை: காசு அக்கடல் – மணிகளையுடைய அழகிய பாற்கடல். இன் நறவவாசக் கமலம் – இனிய தேனையும் மணத்தையும் உடைய கமலம். அனம் – அன்னப்பறவை. இடைக்குறை. அன்னம் கமலத்தில் வலிய அலைகள் வீசுதலால் சிறுதுயில் கொள்ளும்.

Behold! It is Civan, Lord of Thiru-venu-puram. The ocean of milk contains gold, gems, amrit and so many other good things as well as dreadful poison. The devaas and asuraas churned the sea to get amrit, for longivity of life. However deadly poison came out of the churned sea of milk, which was about to destroy the whole universe. Our Lord Civan of Thiru-venu-puram drank the venom, as a result His neck turned out black in colour. Our Lord has His abode in this Thiru-venu-puram, a place of serenity. Here swans in groups reach the lotus pond and drink the honey in the lotus flowers and take rest in the flowers. These flowers get tossed by the waves of the sea and the swans enjoy their nap.

1649. அரையார்கலைசேரனமென்னடையை
உரையாவுகந்தானுறையுமிடமாம்
நிரையார்கமுகின்னிகழ்பாளையுடை
விரையார்பொழில்சூழ்வேணுபுரமே. 5

*அரை ஆர் கலை சேர் அனமென்னடையை
உரையா உகந்தான் உறையும் இடம்ஆம் -
நிரை ஆர் கமுகின் நிகழ் பாளை உடை
விரை ஆர் பொழில் சூழ் வேணுபுரமே.*

arai Ar kalai cEr an2amen2n2aTaiyai
uraiyA ukantAn2 uRaiyum iTam Am--
nirai Ar kamukin2 nikaz pALai uTai
virai Ar pozil cUz vENupuramE.

பொருள்: சிறந்த பாளைகளைக் கொண்ட பாக்கு மரங்களும் மணமிக்க சோலைகளும் நிறைந்ததே வேணுபுரமாகும். அப்பதியில்தான் அரையில் மேகலாபரணத்தையும் நடையில் அன்னத்தையும் கொண்ட உமையவளுக்கு எம்பெருமான் ஈசன் வேத சாத்திர உண்மைகளை உரைத்தருளினார் என்க.

குறிப்புரை: அரை ஆர் கலைசேர் அனம் மெல் நடையை – திருவிடையில் உடுத்தல் பொருந்திய மேகலை முதலிய திருப்புடைவை சேர்ந்த அன்னத்தினது மெல் நடைபோலும் நடை உடைய திருநிலை நாயகியை. உரையா – (புகழ்ந்து) உரைத்து. உகந்தான் – உயர்ந்தவன். மகிழ்ந்தவன் எனலுமாம். நிரை – வரிசை; நிகழ் – விளங்கிய; உடை விரை – உடைதலால் பரவும் மணம். உடைய பொழில் என்றும் இயையும்.

Our goddess Umaa wears the most beautiful golden waist belt. She walks like the swans. Our Lord of Thiru-venu-puram explained the philosophical, deep meanings of the Vedas, the Puraanas, the Aagamaas and the Pranavas etc., to His consort, whenever she was available after finishing her daily sacred rituals. Our Lord has His abode in Thiru-venu-puram, a place where the high grown arecanut trees spread the sweet fragrance through their spade-like leaves. This is Thiru-venu-puram, a town of numerous gardens.

1650. ஒளிரும்பிறையும்முறுகூவிளவின்
தளிருஞ்சடைமேலுடையானிடமாம்
நளிரும்புனலின்நலசெங்கயல்கள்
மிளிரும்வயல்சூழ்வேணுபுரமே. 6

ஒளிரும் பிறையும்(ம்) உறு கூவிள இன்
தளிரும் சடைமேல் உடையான் இடம்ஆம் -
நளிரும் புனலின் நல செங்கயல் கள்
மிளிரும் வயல் சூழ் வேணுபுரமே.

oLirum piRaiyum(m) uRu kUviLa in2
taLirum caTaimEl uTaiyAn2 iTam Am--
naLirum pun2alil nala cegkayal kaL-
miLirum vayal cUz vENupuramE.

பொருள்: குளிர்ந்த நீரில் வளமிக்க செங்கயல்கள் பெருகி வாழும் வயல்கள் சூழ்ந்த வளமிக்க பதியே வேணுபுரமாகும். அப்பதியில்தான் ஒளிரும் பிறைச் சந்திரனையும் வில்வ இதழ்களையும் தன் தலையில் கொண்ட செஞ்சடைச் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளார் என்க.

குறிப்புரை: பிறையும் தளிரும் உடையான். கூவிளம் – வில்வம். நளிரும் – குளிரும். மிளிரும் – விட்டு விட்டு விளங்கும். கண் மிளிரும் – கண்போல் விளங்கும் என்பதுமாம்.

Behold! It is Civan, our Lord of Thiru-venu-puram. He has beautified His matted hair with the bright moon and the tender bael leaves. This city is surrounded by many water ponds and paddy fields always full of water. Here, plenty of rich carp fish

flourish. Thiru-venu-puram is such a town of rich fields and wealth, and our Lord with reddish hair abides here.

7. பாடல் கிடைக்கப்பெறவில்லை.

1651. ஏவும்படைவேந்தனிராவணனை
ஆவென்றலறஅடர்த்தானிடமாந்
தாவும்மறிமானொடுதண்மதியம்
மேவும்பொழில்சூழ்வேணுபுரமே. 8

ஏவும் படை வேந்தன் இராவணனை,
"ஆ" என்று அலற அடர்த்தான் இடம்ஆம் -
தாவும் மறிமானொடு தண்மதியம்
மேவும் பொழில் சூழ் வேணுபுரமே.

Evum paTai vEntan2 irAvaNan2ai,
"A" en2Ru alaRa, aTarttAn2 iTam Am--
tAvum maRimAn2oTu taNmatiyam
mEvum pozil cUz vENupuramE.

பொருள்: துள்ளித்தாவும் இளமானும், குளிர்ந்த சந்திரனைத் தடவும் சோலைகளும் நிறைந்த ஊரே வேணுபுரமாகும். அவ்வேணுபுரத்தில்தான், பகைவர்களைத் தான் இருந்த இடத்திலிருந்தே படைகளை ஏவி அழித்திட வல்ல இராவணனை, எம்பெருமான் வலிமை குன்றிடச் செய்தார் என்க.

குறிப்புரை: ஏவும்படை – குறிதவறாது வினையாற்றும் ஆயுதம். ஆ என்று அலற – அலறுவோர் ஒலிக்குறிப்புக்களுள் 'ஆ' என்பது தலைமையானது. அஃது ஆஆ என அடுக்கியும் பின் 'ஆவா' என்று உடம்படுமெய் பெற்றும் வரும். அதனைத் திருமுறைகளில் பல இடங்களில் காணலாம். அடர்த்தான் – தாக்கியவன். மறிமான் – மான்கன்று. மறிகளும் மான்களும் ஆம். பொழிலின் உள்ளே மானும் மேலே மதியமும் மேவும் என்க. மதியின் களங்கமுமாம்.

The king of Sri Lanka, Raavanan, was the greatest warrior of his time. Without moving from his place, he destroyed completely the armies of his enemies with his remote command. This is the place where our Lord of Thiru-venu-puram subdued such a mighty warrior Raavanan to cry 'Aaa Aaa' by crushing him under His mount Kailash when he tried to lift and move it with his ten heads and shoulders. He has His

abode in Thiru-venu-puram, a place of beautiful gardens where deer in large numbers leap and play all around. Here clouds embrace the tall trees in the dense gardens around the city. The Lord of this great sacred place is to be praised.

1652. கண்ணன்கடிமாமலரிற்றிகழும்
அண்ணல்லிருவரறியாவிறையூர்
வண்ணச்சுதைமாளிகைமேற்கொடிகள்
விண்ணிற்றிகழும்வேணுபுரமே. 9

கண்ணன், கடிமாமலரில் - திகழும்
அண்ணல், இருவர் அறியா இறை ஊர் -
வண்ணச் சுதை மாளிகைமேல் கொடிகள்
விண்ணில் திகழும் வேணுபுரமே.

kaNNan2, kaTimAmalaril-tikazum
aNNal(l), iruvar aRiyA iRai Ur--
vaNNac cutai mALikaimEl koTikaL
viNNil-tikazum vENupuramE.

பொருள்: வண்ணங்கள் பூசப்பட்ட மாளிகைகள் சூழ இருப்பதே வேணுபுரம். அங்கு கொடிகள், வளர்ந்து மாளிகையின் மேற்பகுதியைத் தாண்டி விண்ணிலும் படர்ந்திடத் துடிக்கும். அவ்வூரில்தான் பிரமன் திருமால் என்ற இருவராலும் தேடிக் காணமுடியாத சிவபெருமான் பொருந்தியுள்ளார் என்க.

குறிப்புரை: கண்ணன் – (திருமால்) கரியவன். கடி – மணம். மலர் – தாமரை. அண்ணல் – பிரமன். இறை – இறைவன் (சிவன்). வண்ணம் – அழகு. சுதை – சுண்ணம்.

Behold! It is Civan, the Lord of Thiru-venu-puram which is a place for pilgrimage and it is the abode of our Lord. Our Lord could not be comprehended by Lord Vishnu and by Lord Brahma who normally resides in the fragrant lotus flower. The city of Thiru-venu-puram has beautiful palaces constructed with carved crystals. Flags fly on the top of these palaces. The beauty of these tall palaces, with flags flying in the sky, resembles that of city in Deva Loka.

1653. போகம்மறியார்துவர்போர்த்துழல்வார்
ஆகம்மறியாவடியாரிறையூர்
மூகம்மறிவார்கலைமுத்தமிழ்நூல்
மீகம்மறிவார்வேணுபுரமே. 10

போகம்(ம்) அறியார், துவர் போர்த்து உழல்வார்,
ஆகம் அறியா அடியார் இறைஊர் -
மூகம்(ம்) அறிவார் கலை முத்தமிழ் நூல்
மீகம் அறிவார் வேணுபுரமே.

pOkam(m) aRiyAr, tuvar pOrttu uzalvAr,
Akam(m) aRiyA aTiyAr iRai Ur--
mUkam(m) aRivAr, kalai muttamiz nUl
mI kam aRivAr, vENupuramE.

பொருள்: வேணுபுரத்தில், இறைவனை மௌனமாக வீற்றிருந்து தியானம் செய்யும் முனிவர்களும் பொருந்தியிருப்பர். முத்தமிழைக் கற்றுணர்ந்த சான்றோர்களும் பொருந்தியிருப்பர். வேதம் அறிந்தவர்களும் பொருந்தியிருப்பர். அங்குதான் சிவயோகம் பற்றி அறியாத சமணர்களும் சாக்கியர்களும் உறைந்திருப்பர். இறை உண்மை பற்றி உணர்ந்த அடியவர்களும் அங்கு பொருந்தியிருப்பர் என்க.

குறிப்புரை: போகம் – சிவானந்த போகத்தை. துவர் – பழுப்பு ஏறிய ஆடைக்கு ஆகுபெயர். உழல்வார் – திரிவார் (சமணர் சாக்கியர்) ஆகம் அறியா அடியார் – சிவநிந்தை செய்யும் பிற மதத்தரை ஏறெடுத்தும் பார்க்காத சிவனடியார். ஆகம் – உடம்பு. மூகம் – மௌனம். மீகம் – வானோர்க்குயர்ந்த உலகம். (கம் – வான். மீ – மேல்). முகம் அறிவாரும் கலை முத்தமிழ் நூலால் மீகம் அறிவாரும் வாழ்கின்ற வேணுபுரம் அறிவார் – ஞானியர்.

Thiru-venu-puram has people, varied in their behaviour. The Jains and Buddhists join together in this city and preach without knowing true bliss. They wear ochre robes and suffer a lot. Our devotees do not care for these people and never face them. They segregate themselves and congregate in large numbers in Thiru-venu-puram. In this city learned scholars of Tamil read and sing the scriptures and teach others. Here sages also live and carry on their penance and meditation in solitude. Thiru-venu-puram is such a great sacred city of serenity. In one and the same city people of ignorance and men with true realisation of God live.

1654. கலமார்கடல்போல்வளமார்தருநற்
புலமார்தருவேணுபுரத்திறையை
நலமார்தருஞானசம்பந்தன்சொன்ன
குலமார்தமிழ்கூறுவர்கூர்மையரே. 11

கலம் ஆர் கடல் போல் வளம் ஆர்தரு, நல்
புலம் ஆர்தரு, வேணுபுரத்து இறையை,
நலம் ஆர்தரு ஞானசம்பந்தன், சொன்ன
குலம் ஆர் தமிழ் கூறுவர் கூர்மையரே.

kalam Ar kaTal pOl vaLam Artaru, nal
pulam Artaru, vENupurattu iRaiyai,
nalam Artaru njAn2acampantan2, con2n2a
kulam Ar tamiz kURuvar kUrmaiyarE.

பொருள்: வேணுபுரத்தில் கடல் போன்று பெரும் நல்வளம் தரும் வயல்கள் நிறைந்திருக்கும். அங்குதான் வேணுபுரத்து ஈசனும் பொருந்தியிருப்பார். ஈசனைப்பற்றி ஞானசம்பந்தப் பெருமான் நலமாகப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவரது பதிகத்தைப் பாடவல்லவர்கள் சிறப்புற்று வாழ்வார்கள் என்க.

குறிப்புரை: கலம் – மரக்கலம். ஆர்தல் – நிறைதல், பொருந்துதல். நற்புலம் – (நல் புலம்) நன்செய். நலம் – சிவம், சிவத்தைச் சார்வித்தற்குரிய ஞானத்தின் தொடர்பு. குலம் – மேன்மை. தமிழ் – இத்திருப்பதிகத்தை. கூறுவர் – அன்பொடு பாராயணம் செய்வோர். கூர்மையர் – திருவருட் பெருக்கம் அடைபவர்.

Behold! It is Civan the Lord of Thiru-venu-puram. This city is surrounded by very large and rich paddy fields that look like vast sea. Our saint Thiru-gnana-Sambandar hailing from Seerkaazhi is an embodiment of divine virtues. He has sung on the Lord of Thiru-venu-puram, His glories in pure Tamil. The wealth brought by ships from other countries is equal to the wealth brought by the local people from their paddy fields. The people who recite these verses of greatness sung by Thiru-gnana-Sambandar will be graceful always and will attain true greatness and bliss.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

17ஆம் பதிகம் முற்றிற்று
End of 17th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 154 *பதிக எண்: 18*

18. திருமருகல்

18. THIRU-MARUKAL

பண் : இந்தளம் – வினாஉரை

Pann: Indhalam - Vinaa Urai

திருத்தல வரலாறு

திருமருகல் என்னும் இத்திருத்தலமானது, மருகல் என்னும் ஒருவகை வாழையைத் தலமரமாகக் கொண்டுள்ளமையால் இப்பெயர் பெற்றது. இது, மயிலாடுதுறை – பேரளம் தொடர் வண்டிப் பாதையில் நன்னிலம் தொடர்வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 10.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. திருவாரூரிலிருந்து திருமருகல் செல்ல நகரப் பேருந்துகள் உள்ளன. இறைவரின் திருப்பெயர் மாணிக்கவண்ணர். இறைவியாரின் திருப்பெயர் வண்டுவார்குழலி. தலவிருட்சம் வாழை.

திருமருகலுக்கு அருகிலுள்ள வைப்பூர் என்னும் ஊரில் தாமன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஏழு பெண்கள். ஆனால் மூத்த மகளை அவ்வணிகன் தன் மருமகனுக்குக் கொடுப்பதாக வாக்களித்தான். பணம் பெற்று வேறு ஒருவனுக்குக் கொடுத்துவிட்டான். இங்ஙனமே ஏனைய ஐந்து பெண்களையும் மணஞ்செய்து கொடுத்துவிட்டான். ஏழாவது பெண் உளம் தளர்ந்து தாய் தந்தையருக்குத் தெரியாமல் மருமகனோடு உடன் வந்துவிட்டாள். வந்தவர்கள் மருகல் பெருமான் கோயிலின் பக்கத்தில் ஒரு மடத்தில் தூங்கினார்கள்.

அதுபொழுது அம்மருமகன் அரவு தீண்டப்பெற்று ஆவி நீங்கும் தன்மையைக் கண்ட அப்பெண் அயர்ந்து சிவனருளையே சிந்தித்துப் புலம்பினாள். அப்புலம்பலைக் கேட்டு அங்கு முன்னரே எழுந்தருளியிருந்த ஞானசம்பந்தப் பெருந்தகையார் செய்தியை அறிந்து 'சடையா யெனுமால்' என்று தொடங்கும் இத்திருப்பதிகத்தைப் பாடி அம்மருமகனை உயிர்ப்பித்து அவ்விருவர்க்கும் மணத்தை முடித்து வைத்தருளினார். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டு, திருநாவுக்கரசு நாயனார் பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் உள்ளன. இப்பதிக்குரிய ஞானசம்பந்தர் பதிகங்கள் இரண்டனுள் 'அங்கமும் வேதமும்' என்று தொடங்கும் பதிகம் திருமருகலையும் திருச்செங்காட்டங்குடியையும் சேர்த்துப் பாடியதாகும்.

பதிக வரலாறு

கணபதீச்ரத்தை வழிபட்டு மீண்ட கவுணியர்கோன், அருகிலுள்ள திருமருகலில் எழுந்தருளிய மாணிக்கவண்ணர் கழலினை வணங்கி, 'உருகிய அன்புறுகாதல் உள்ளலைப்பத் தெள்ளுமிசையுடன் பெருகும் தமிழ்த்தொடை சார்த்தி' அங்கிருந்தார். அவை இப்பொழுது கிடைத்தில. அந்நகரில், அந்நாளில் வணிகன் மகள் ஒருத்தி, தன்னை மணக்க இருந்தவன் மடத்தில், இரவில் துயிலும்போது பாம்பு கடித்து இறக்க, அழுது புலம்பும் ஒலி கேட்டது. அங்குச் சென்ற புகலிவேந்தர் 'பயப்படேல் நீ' என்று அபயம் தந்து, வரலாறுணர்ந்து, அவன் விடம் தீர்ந்து எழுந்து நிற்கச் செய்தற்பொருட்டு அருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1655. சடையாயெனுமால்சரண்நீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமால்
மடையார்குவளைமலரும்மருகல்
உடையாய்தகுமோஇவளுண்மெலிவே. 1

"சடையாய்!" எனுமால்; "சரண் நீ!" எனுமால்;
"விடையாய்!" எனுமால்; வெருவா விழுமால்; -
மடை ஆர் குவளை மலரும் மருகல்
உடையாய்! - தகுமோ, இவள் உண் மெலிவே?

"caTaiyAy!" en2umAl; "caraN nI!" en2umAl;
"viTaiyAy!" en2umAl; veruvA vizumAl;--
maTai Ar kuvaLai malarum marukal
uTaiyAy!--takumO, ivaL uN melivE?

பொருள்: நீர் நிறைந்த மடைகளில் குவளைப் பூக்கள் மலர்ந்து மணம் பரப்பும் அழகிய திருமருகல் என்னும் தலத்தில் உறைகின்ற இறைவனே! கணவனாக வரப்போகும் தலைவனைப் பிரிந்த இப்பெண், இறைவா உன்னையே சரணடைந்து சடையாய் என்று அலறுகிறாள். நீயே சரண் எனப் புலம்புகிறாள். விடையாய் என்ற பலவிதமாக அழுது புலம்புகிறாள். மயங்கி விழுகிறாள். இவளது துன்பத்தை நீவிர் போக்கி அருளுவீராக.

குறிப்புரை: 'எனும்' 'விழும்' செய்யுமென்னும் வாய்ப்பாட்டு முற்றுவினை; ஈண்டுப் பெண்பாற்குவந்தது. 'ஆல்' என்பன அசைகள். சரண் நீ – நீயே அடைக்கலம். வெருவா – வெருவி. 'அஞ்சி வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட கள்ளக்கம்பனை' (சுந்தரர், கச்சியேகம்பம்) அஞ்சுதல் உள்ள நிகழ்ச்சி. வெருவுதல்

வாயொலி. மடை – நீர் மடையில். மருகல் – ஒருவகை வாழை மரத்தாற்பெற்ற தலப்பெயர். உடையாய் – சுவாமீ. உள் மெலிவு – மனநோய் (வருத்தம்).

Oh Lord! You reside in Thiru-marukal, where blue nelumbium flowers blossom in plenty in the cool ponds. In Your city a woman suffers and screams on seeing her life partner dead due to snake bite; he is lying in the yard where they both were staying from previous night. She laments "Oh! my god of matted hair! Oh my god mounting the bull! Your holy feet are my asylum". Thus she shudders, falls down rolling. Oh Lord! Is it right for You to keep the lady suffering like this?

1656. சிந்தாயெனுமால்சிவனேயெனுமால்
முந்தாயெனுமால்முதல்வாஎனுமால்
கொந்தார்குவளைகுலவும்மருகல்
எந்தாய்தகுமோஇவளேசறவே. 2

"சிந்தாய்!" எனுமால்; "சிவனே!" எனுமால்;
"முந்தாய்!" எனுமால்; "முதல்வா!" எனுமால்; -
கொந்து ஆர் குவளை குலவும் மருகல்
எந்தாய்! - தகுமோ, இவள் ஏசறவே?

"cintAy!" en2umAl; "civan2E!" en2umAl;
"muntAy!" en2umAl; "mutalvA!" en2umAl;--
kontu Ar kuvaLai kulavum marukal
entAy!--takumO, ivaL EcaRavE?

பொருள்: குவளை மலர்கள் நிறைந்து விளங்கும் மருகல் தலத்துறை இறைவனே! இவள், "சிந்தையில் உறையும் இறைவனே! சிவபெருமானே! எல்லாவற்றிற்கும் முந்தியவனே! முதல்வனே!" என்றெல்லாம் உன்னை அழைத்துப் புலம்புகிறாள். இவளது துன்பத்தை நீக்கி அருள்வீராக!

குறிப்புரை: சிந்தாய் – சிந்தையே. அழியாதவனே எனலுமாம். முந்தாய் – முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே. முதல்வா – ஆதியனே. கொந்து – பூங்கொத்து. எந்தாய் – எம் அப்பனே. எம் அன்னையே. ஏசறவு – மெய்மறத்தல்.

Oh my Father! Your abode is Thiru-marukal where the blue nelumbium flowers blossom in bunches shedding fragrance all around. Is it proper that You let this damsel

suffer like this crying "Oh my god Civa! You are the first and You are the foremost! You are the Lord of everything in the universe". Like this, she forgets herself, her mind melts and she seeks solution (The poet's intention was that the Lord should grace her and relieve her from suffering).

1657. அறையார்கழலும்மழல்வாயரவும்
பிறையார்சடையும்முடையாய்பெரிய
மறையார்மருகல்மகிழ்வாயிவளை
இறையார்வளைகொண்டெழில்வவ்வினையே. 3

அறை ஆர் கழலும், அழல் வாய் அரவும்,
பிறை ஆர் சடையும்(ம்), உடையாய்! பெரிய
மறையார் மருகல் மகிழ்வாய்! இவளை
இறை ஆர் வளை கொண்டு, எழில் வவ்வினையே?

aRai Ar kazalum, azal vAy aravum,
piRai Ar caTaiyum(m), uTaiyAy! periya
maRaiyAr marukal makizvAy! ivaLai
iRai Ar vaLai koNTu, ezil vavvin2aiyE?

பொருள்: மருகல் திருத்தலத்தில் உறைபவன் நீயே! ஆர்த்து ஒலிக்கும் கழலையும், நஞ்சுடைய பாம்பையும், பிறைச் சந்திரனையும் அணிந்தவன் நீயே! பெரும் மறையாம் அருமறையை அருளிய நீ இவளுக்கு அருள வேண்டாவோ. இவள் இப்போது தன் கையில் உள்ள வளையல்கள் தானாக நெகிழ்ந்து தரையில் கிடக்க தன் அழகையும் இழந்து துடிக்கின்றாளே! இவளது துயரைத் துடைக்க வேண்டாமோ!

குறிப்புரை: அறை – ஒலி. அழல்வாய் அரவு – (நஞ்சு) வெப்பம் பொருந்திய வாயுடைய பாம்பு. மறையார் மருகல் – வேதங்களை உணர்ந்தவர் வாழ்கின்ற திருமருகல். இறை – கைச்சந்து. எழில் – அழகு.

Oh Lord of Thiru-marukal! You are pleased to hear the Vedic recitations of the learned scholars of this town. You wear ringing anklets on Your holy feet. You wear snakes with heat emitting mouth all over Your body. You wear the moon on Your head. Is it fit for her to be deprived of her virgin beauty? Also her bangles drop down her hands without her noticing. Will You not chase her agony?

1658. ஒலிநீர்சடையிற்கரந்தாயுலகம்
பலிநீதிரிவாய்பழியில்புகழாய்
மலிநீர்மருகல்மகிழ்வாயிவளை
மெலிநீர்மையளாக்கவும்வேண்டினையே. 4

ஒலிநீர் சடையில் கரந்தாய்! உலகம்
பலி நீ திரிவாய்! பழி இல் புகழாய்!
மலி நீர் மருகல் மகிழ்வாய்! இவளை
மெலி நீர்மையள் ஆக்கவும் வேண்டினையே?

olinIr caTaiyil karantAy! ulakam
pali nI tirivAy! pazi il pukazAy!
mali nIr marukal makizvAy! ivaLai
meli nIrmaiyaL Akkavum vENTin2aiyE?

பொருள்: ஓடிவரும் கங்கையைத் தலையில் தாங்கியவன் நீ! பிரம்ம கபாலம் ஏந்தி பலிதேர்ந்து வருபவன் நீ! குற்றமற்ற புகழுக்கு உரியவன் நீ! திருமருகல் தலத்தில் கோயில் கொண்டுள்ளவன் நீ! நீயே துன்புறும் இப்பெண்ணிற்குத் தக்கவாறு உதவாமல் இருக்கலாமோ?

குறிப்புரை: ஒலிநீர் – முழங்குங் கங்கை. கரந்தாய் – மறைத்தாய். பலி – பிச்சை. நீர்மலி மருகல் என்றும் மாற்றலாம்.

Oh my Lord of Thiru-marukal! You have hidden the torrential river Ganges in Your matted hair. You go over all the worlds begging for alms. You have flawless fame. You feel happy to stay in the cool watered Thiru-marukal. Is it just for You, to make this damsel languish and lament and to become lean?

1659. துணிநீலவண்ணம்முகில்தோன்றியன்ன
மணிநீலகண்டமுடையாய்மருகல்
கணிநீலவண்டார்குழலாளிவள்தன்
அணிநீலவொண்கண்ணயர்வாக்கினையே. 5

துணி நீலவண்ணம் முகில் தோன்றியன்ன
மணிநீலகண்டம்(ம்) உடையாய், மருகல்!
கணி நீலவண்டு ஆர் குழலாள் இவள் தன்
அணி நீலஒண்கண் அயர்வு ஆக்கினையே?

tuNi nIlavaNNam mukil tOn2Riyan2n2a
maNi nIlakaNTam(m) uTaiyAy, marukal!
kaNi nIlavaNTu Ar kuzalAL ivaLtan2
aNi nIla oNkaN ayarvu Akkin2aiyE?

பொருள்: கரிய நிறமுடன் மழைமேகம் காட்சியளிப்பது போல, இறைவா நீ, நீலகண்டனாகக் காட்சியளிக்கின்றாய். கரிய வண்டுகள் ஒலிக்கும் குவளை மலர்கள் நிறைந்த மருகல் தலத்தில் கோயில் கொண்டுள்ளாய். அழகான நீலமலர் போன்ற கண்களைக் கொண்ட இப்பெண் துன்புற நீ பார்த்துக் கொண்டிருக்கலாமோ?

குறிப்புரை: துணி நீல . . . கண்டம் – தெளிந்த நீலநிறம் உடைய மேகம் தோன்றினாற்போன்ற அழகிய நஞ்சாற் கறுத்த திருக்கழுத்தை. கணி – கருதுகின்ற. அயர்வு – சோர்வு. மறதி.

Oh Lord! You resemble the black clouds that bring rain, with Your bluish neck. Thiru-marukal abounds in nelumbium flowers around which bees keep on humming. You reside in the temple at Thiru-marukal. Around the hair of this damsel also bees used to hum. But now she is exhausted, devoid of her mirth. Watching her agony You do not seem to feel for her. Why do you remain so?

1660. பலரும்பரவப்படுவாய்சடைமேல்
மலரும்பிறையொன்றுடையாய்மருகல்
புலருந்தனையுந்துயிலாள்புடைபோந்
தலரும்படுமோஅடியாளிவளே. 6

பலரும் பரவப்படுவாய்! சடைமேல்
மலரும் பிறை ஒன்று உடையாய், மருகல்!
புலரும் தனையும் துயிலாள், புடை போந்து
அலரும் படுமோ, அடியாள் இவளே?

palarum paravappaTuvAy! caTaimEl
malarum piRai on2Ru uTaiyAy, marukal!
pularum tan2aiyum tuyilAL, puTai pOntu
alarum paTumO, aTiyAL ivaLE?

பொருள்: அடியவர்கள் பலராலும் போற்றி வணங்கப் பெறும் இறையவனே! சடைமேல் பிறைநிலவைத் தாங்கி அருட்காட்சி கொடுப்பவனே! மருகல் தலத்து உறைபவனே! இப்பெண் இரவு முழுவதும் துயிலாமல் உன் திருவடிகளையே சார்ந்து நின்று

கொண்டிருக்கிறாளே. இவளுக்கு அருள வேண்டாமா? உலகம் இவளைப் பழிக்கும் நிலையிலிருந்து காக்க வேண்டாமா?

குறிப்புரை: பரவ – துதிக்க. மலரும் – பரவும். புலரும்தனை – விடியுமளவும். துயிலாள் – தூங்காதவள். புடை – பக்கம், வெளி. அலர் – பழிச்சொல்.

Oh my Lord of Thiru-marukal! You are worshipped by all devotees in this town daily. You have the bright moon on Your matted hair. Is it not a pity to the servitors to see this damsel staying in the temple whole night without sleep and coming out of the inner vista of the temple to wail and lament loudly? Oh Lord! save her from the adverse criticism of the world.

1661. வழுவாள்பெருமான்கழல்வாழ்கவெனா
எழுவாள்நினைவாளிரவும்பகலும்
மழுவாளுடையாய்மருகற்பெருமான்
தொழுவாளிவளைத்துயராக்கினையே. 7

வழுவாள்; "பெருமான்கழல் வாழ்க!" எனா
எழுவாள்; நினைவாள், இரவும் பகலும்; -
மழுவாள் உடையாய்! மருகல் பெருமான்! -
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே?

vazuvAL; "perumAn2kazal vAzka!" en2A
ezuvAL; nin2aivAL, iravum pakalum;--
mazuvAL uTaiyAy! marukal perumAn2!--
tozuvAL ivaLait tuyar Akkin2aiyE?

பொருள்: மழுவினையும் வாளினையும் தாங்கியபடியே மருகல் தலத்துள் கோயில் கொண்ட எம்பெருமானே! இப்பெண் உன்னை வணங்கும் நிலையிலிருந்து ஒருபோதும் தவிராள். தூக்கத்திலிருந்து எழும்போதும் உன் நாமத்தைக் கூறிக்கொண்டே எழுவாள். எப்பொழுதும் உன்னையே தொழும் இத்தலத்தில் அடியவள் துன்பமடைய நீ பார்த்துக் கொண்டிருக்கலாமோ?

குறிப்புரை: பெருமான் கழல் வாழ்க எனா வழுவாள் எழுவாள் என மாற்றுக. எனா – என்று. வழுவாள் – தவறாதவனாய். எழுவாள் – உறங்கிவிழித் தெழுவாள். இரவும் பகலும் நினைவாள். மழுவாள் – மழுவாகிய படை.

This damsel as and when she hears the voice of devotees going to the temple in the early morning singing "The holy feet of our Lord be hallowed forever", gets up from her bed, brings to her mind our Lord and prays. This lady never turned away from her saiva faith. She used to pray day and night to You without any short fall saying "Praise to Thee". Oh Lord of Thiru-marukal! It gives me much pain, indescribable, to see this damsel in the sea of sorrow. Oh Lord! You have the small axe on Your hand. How could You punish Your worshipper in this way?

1662. இலங்கைக்கிறைவன்விலங்கல்லெடுப்பத்
துலங்கல்விரலூன்றலுந்தோன்றலனாய்
வலங்கொள்மதில்சூழ்மருகற்பெருமான்
அலங்கல்லிவளையலராக்கினையே. 8

இலங்கைக்கு இறைவன் விலங்கல்(ல்) எடுப்ப,
துலங்கல் விரல் ஊன்றலும், தோன்றலனாய்;
வலம்கொள் மதில் சூழ் மருகல்பெருமான்!
அலங்கல்(ல்) இவளை அலர் ஆக்கினையே?

ilagkaikku iRaivan2 vilagkal(l) eTuppa,
tulagka(v) viral Un2Ralum, tOn2Ralan2Ay;
valamkoL matil cUz marukal perumAn2!
alagkal(l) ivaLai alar Akkin2aiyE?

பொருள்: மதில்கள் சூழ்ந்த மருகல் தலத்தில் உறைபவனே! இலங்கை வேந்தன் இராவணன் தன்முனைப்பால் நீ இருக்கும் கயிலாய மலையை எடுக்க முயன்றான். நீ அவனை முதலில் அடர்த்துப் பின்பு அருள் செய்தாய். ஆனால் பூவினும் மென்மையான இப்பெண் துன்பப்படுகின்றபோதும் அருளாது இருக்கின்றாயே! இது முறையோ?

குறிப்புரை: இறைவன் – அரசன் (இராவணன்). விலங்கல் – மலை (கயிலை) துலங்கு – விளங்கிய. ஊன்றலும் – அழுத்தியதும். தோன்றவனாய் – செய்வது இன்னதென்று தோன்றப் பெறாதவனாய். வலம் கொள் – வலமாக வந்து பணிந்து வேண்டி வரம் கொண்ட. தோன்றலனாய் என்பது. வலங்கொள் என்பதொடு இயையும். இன்றேல். முடிபில்லாதொழியும். அலங்கல் – மாலை. அசைந்திடுதலும் ஆம்.

Oh Lord of Thiru-marukal! You subdued the mighty king of Sri Lanka when he tried to lift Your abode of mount Kailash. You pressed the top of the mountain with

Your single toe slightly. The king got crushed with all his heads and shoulders under the mountain. He could not escape. He cried and prayed to You and sang songs on Your glory. You forgave him and granted him Your grace. Oh Lord! You reside in the city of Thiru-marukal which is surrounded by strong walls of the city. Now, it is cruelty that You could not grace, this damsel who looked like a garland previously, but now is pathetic like a flower.

1663. எரியார்சடையும்மடியும்மிருவர்
தெரியாததொர்தீத்திரளாயவனே
மரியார்பிரியாமருகற்பெருமான்
அரியாளிவளையயர்வாக்கினையே. 9

எரி ஆர் சடையும்(ம்), அடியும்(ம்), இருவர்
தெரியாதது ஓர் தீத்திரள் ஆயவனே!
மரியார் பிரியா மருகல் பெருமான்!
அரியாள் இவளை அயர்வு ஆக்கினையே?

eri Ar caTaiyum(m), aTiyum(m), iruvar
teriyAtatu Or tIttiraL Ayavan2E!
mariyAr piriyA marukal perumAn2!
ariyAL ivaLai ayarvu Akkin2aiyE?

பொருள்: ஒளிமிக்க சடையினை உடையவனே! பிரமன், திருமால் ஆகிய இருவராலும் அறிய முடியாத ஒளிப்பிளம்பாக நின்றவனே! அடியார்களைவிட்டு நீங்காமல் திருமருகல் தலத்தில் கோயில் கொண்டவனே! உன் அடியவளாக விளங்கும் இப்பெண்ணிற்கு நீ துன்பத்தைத் தரலாமோ? விரைவில் இவளது துயரத்தை நீக்கி அருள்வாயாக!

குறிப்புரை: எரிஆர் சடை – நெருப்பைப் போலும் சிவந்த சடை. தீத்திரள் – ஒளிப்பிழம்பு. இலிங்க புராண வரலாறு. மரியார் – திருவடி வழிபாட்டால் பிறவி நீங்கியவர் (ஜீவன் முக்தர்) அரியாள் – அரியவள்.

Oh Lord of Thiru-marukal! You were the cluster of all fires when Vishnu and Brahma tried to see Your holy head and feet; they failed finally since they could not see Your matted hair and ankleted feet. You are the Lord residing in Thiru-marukal where the celebrated devotees of deathlessness do not part from You. I feel very sorry to know that You made this damsel, a rare devotee of Yours, to wail and suffer.

1664. அறிவில்சமணும்மலர்சாக்கியரும்
நெறியல்லனசெய்தனர்நின்றுழல்வார்
மறியேந்துகையாய்மருகற்பெருமான்
நெறியார்குழலிநிறைநீக்கினையே. 10

அறிவு இல் சமணும்(ம்) அலர் சாக்கியரும்
நெறிஅல்லன செய்தனர், நின்று உழல்வார்;
மறி ஏந்து கையாய்! மருகல் பெருமான்!
நெறி ஆர் குழலி நிறை நீக்கினையே?

aRivu il camaNum(m) alar cAkkiyarum
neRi allan2a ceytan2ar, nin2Ru uzalvAr;
maRi Entu kaiyAy! marukal perumAn2!
neRi Ar kuzali niRai nIkkin2aiyE?

பொருள்: நல்அறிவில்லாத சமணர்களும் சாக்கியர்களும் நெறியற்ற செயல்களைச் செய்து துன்புறுவர். மானைக் கையில் ஏந்திய எம்பெருமானே! இப்பெண் முறையான நெறியில் வாழ்பவள் அன்றோ? இவளுக்கு நீ துன்பம் தரலாமோ? இவளது துன்பத்தை நீக்கி அருள்வாயாக.

குறிப்புரை: அறிவு இல் சமண் – மெய்ப்பொருள் உணர்வில்லாத சமணர். அலர் – பலராகப் பரவிய. நெறி அல்லன – சைவநெறி அல்லாத புன்னெறிகள். மறி – மான்கன்று. நெறி – நெறித்தல். அடர்ந்திருத்தல். நிறை – நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல் (குறள் – 57 உரை) நிறை எனப்படுவது மறை பிறரறியாமை (கலித்தொகை 136) என்றதன் கருத்தும் அறிக.

The senseless and ignorant Jains and Buddhists deviate from the right path of our Lord of Thiru-marukal. Let them suffer for their ignorance. You hold a deer in one of Your hands. It is a pity to see this damsel suffer. She is a woman of strong conviction and devotion. You have shattered her integrity. Let her be relieved of her sorrow.

1665. வயஞானம்வல்லார்மருகற்பெருமான்
உயர்ஞானமுணர்ந்தடியுள்குதலால்
இயன்ஞானசம்பந்தனபாடல்வல்லார்
வியன்ஞாலமெல்லாம்விளங்கும்புகழே. 11

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர் ஞானம் உணர்ந்து, அடி உள்குதலால்,
இயல் ஞானசம்பந்தன பாடல் வல்லார்,
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும், புகழே.

vayanjAn2am vallAr marukal perumAn2
uyar njAn2am uNarntu, aTi uLkutalAl,
iyal njAn2acampantan2a pATal vallAr,
viyan2 njAlam ellAm viLagkum, pukazE.

பொருள்: தன் வயத்தினராகிய மருகல் பெருமானுடைய திருக்குறிப்பின் வழிமேவும் ஞானசம்பந்தன் அப்பெருமானின் திருவடிகளை நினைந்து பத்துப் பாடல்களைப் பாடி அருளியுள்ளார். அவற்றையே பக்தியுடன் பாட வல்லவர்கள் புகழ் உலகம் உள்ளளவும் நிலைக்கும்.

குறிப்புரை: வயஞானம் – தன்வயமாக்கிய திருவருண் ஞானம். அருள்வயமான நல்லோர் வாழும் மருகல் என்க.

Civan, our Lord resides in Thiru-marukal, where persons of fine attributes live. Thiru-gnana-Sambandar of Seerkaazhi with our Lord's inspiration sang these hymns on our Lord, keeping in mind the greatness of the divine wisdom. Those devotees who worship His golden feet, purely singing these songs will have their fame and greatness spread all over the vast earth.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

18ஆம் பதிகம் முற்றிற்று
End of 18th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 155 *பதிக எண்: 19*

19. திருநெல்லிக்கா

19. THIRU-NELLIKKAA

பண் : இந்தளம் – வினாஉரை

Pann: Indhalam - Vinaa Urai

திருத்தல வரலாறு

திருநெல்லிக்கா என்னும் இத்திருத்தலமானது நெல்லிமரத்தைத் தலமரமாகக் கொண்டதால் இப்பெயர் பெற்றது. நெல்லிமரம் பிரகாரத்தில் இருக்கின்றது. திருநெல்லிக்கா தொடர்வண்டி நிலையத்திலிருந்து மேற்கே அரை கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது காவிரிக்குத் தென்கரையில் உள்ள நூற்றுப்பதினேழாவது தலமாகும். திருவாரூரிலிருந்து இவ்வூருக்கு நகரப் பேருந்துகள் உள்ளன. இறைவர் திருப்பெயர் நெல்லிவனநாதர். இறைவி திருப்பெயர் மங்களநாயகி. தீர்த்தம் பிரமதீர்த்தம், சூரிய தீர்த்தம் என்பன. தலமரம் நெல்லி. ஞாயிறும் பிரமனும் வழிபட்ட தலம். ஐப்பசி கிருஷ்ணபட்ச சதுர்த்தசி முதல் ஏழுநாளும் மாசிமாதம் 18ஆம் தேதி ஏழுநாளும் அஸ்தமன சமயத்தில் சூரியனுடைய கிரணங்கள் இறைவனது திருமேனியில் விழுகின்றன. இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று உள்ளது.

பதிக வரலாறு

தேவூர் அணைந்து போற்றிய திருஞானசம்பந்தர், திருநெல்லிக்காவைப் பணிந்து பாடியது இத்திருப்பதிகம் ஆகும்.

திருச்சிற்றம்பலம்

1666. அறத்தாலுயிர்காவலமர்ந்தருளி
மறத்தான்மதில்மூன்றுடன்மாண்பழித்த
திறத்தாற்றெரிவெய்தியதீவெண்டிங்கள்
நிறத்தான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 1

அறத்தால் உயிர் காவல் அமர்ந்து அருளி,
மறத்தால் மதில்மூன்றுஉடன் மாண்பு அழித்த
திறத்தால் தெரிவு எய்திய தீ, வெண்திங்கள்,
நிறத்தான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.

aRattAl uyir kAval amarntu aruLi,
maRattAl matil mUn2Ru uTan2 mANpu azitta
tiRattAl,-terivu eytiya tI, veNtigkaL,
niRattAn2--nellikAvuL nilAyavan2E.

பொருள்: எம்பெருமான் அறக்கருணை கொண்டு உயிர்களைக் காத்தருளுகிறான். மறக்கருணை கொண்டு முப்புரங்களை அழித்தருளுகிறான். அறக்கருணையும் மறக்கருணையும் பொருந்தி இருப்பதை விளக்குவதைப் போன்றே அவன் வெண்ணீறு அணிந்து செம்மேனியனாய் திருநெல்லிக்கா என்ற தலத்தில் காட்சியளிக்கின்றான்.

குறிப்புரை: அறத்தால் – தருமத்தை நிலை நிறுத்த வேண்டி. உயிர் காவல் – உயிர்களைக் காத்தல். மறம் – அதர்மம். மாண்பு – மாட்சி. தெரிவு – விளக்கம். தீ நிறத்தான் – அழல் வண்ணன். வெண்டிங்கள் நிறத்தான் – பவளம் போன்ற திருமேனியில் பால்போலும் திருவெண்ணீற்றைப் பூசிய திருக்கோலத்தால், வெண்டிங்கள் போலும் தண்ணொளி உடையவனான பரமசிவன். நிலாயவன் – நிலவி நின்றவன். நிலாயவனே நிறத்தான் என்றும் இயையும். 'தான்' அசையுமாம். மேலும் இவ்வாறே அசையாதலாம்.

See there! He is Civan, our Lord of Thiru-nellikkaa. The divine grace of our Lord of Thiru-nellikkaa has two folds. One is: He is the protector of virtue (அறக்கருணை). Another is: The valorous divine grace that chastises (மறக்கருணை). Our Lord of Thiru-nellikkaa has both the graces:

1. He drank the poison from the sea of milk and saved the entire humanity in the cosmos. This behaviour is as protector of virtue (அறக்கருணை).
2. He destroyed the three flying forts of the asuraas and protected the devaas. This is valorous grace that chastised (மறக்கருணை).

Our Lord of Thiru-nellikkaa with His excellence, exhibited His body with reddish fire; He exhibits His body also in the contrasting white, rubbing the holy ashes all over His body.

1667. பதிதானிடுகாடுபைங்கொன்றைதொங்கல்
மதிதானதுசூடியமைந்தனுந்தான்
விதிதான்வினைதான்விழுப்பம்பயக்கும்
நெதிதான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 2

பதிதான் இடுகாடு; பைங்கொன்றை தொங்கல்;
மதிதான் அது சூடிய மைந்தனும் தான்;
விதி தான்; வினை தான்; விழுப்பம் பயக்கும்
நெதி தான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.

patitAn2 iTukATu; paigkon2Rai togkal;
matitAn2 atu cUTiya maintan2um tAn2;
viti tAn2; vin2ai tAn2; vizuppam payakkum
neti tAn2--nellikkAvuL nilAyavan2E.

பொருள்: எம்பெருமான் நெருப்பு நிறைந்துள்ள சுடுகாட்டில் இருக்கிறான். அவனே குளிர்ந்த கொன்றை மலர் மாலையையும் நிலவையும் தலையில் அணிந்துள்ளான். அழிக்கும் விதியாகவும் விதிக்குக் காரணமான வினையாகவும் மாறுபட்ட நிலையில் (சூடும் குளிர்ச்சியும் போல்) திருநெல்லிக்காவுள் மேவியுள்ளான்.

குறிப்புரை: பதி இடுகாடு. தொங்கல் – (மாலை) கொன்றை. மதி – பிறை. மைந்தன் – வலியன், வீரன். விதியும் வினையும் நிதியும் எல்லாம் அவனன்றி வேறில்லை என்றபடி. விழுப்பம் – மேன்மை. திருவருளே தனக்கு மேலொன்றில்லாச் செல்வமாதலின் 'விழுப்பம் பயக்கும் நெதி' எனப்பட்டது. 'செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே' 'சிவமேபெறும் திரு' 'சென்றடையாத திரு' 'சென்றடையாச் செல்வன்' என்பன காண்க. நிலாயவன் பதி இடுகாடு. தொங்கல் கொன்றை என்றும் நிலாயவனே மைந்தனும் விதியும் வினையும் நெதியும் என்றும் கொள்க.

Lord Civan is full of contrasts. He dances on the burial ground of fire; but He wears only cool flowers and the cool crescent moon on His matted hair. Destructive destiny and the actions which decide and bring the destiny are two different factors. Yet our Lord is both. He is in fact all in all; He is the destiny of the souls; the action that begets the destiny and also all the wealth in the universe which is bestowed by Him differently on different people. On the whole He is the divinity that formulates our destiny, deeds, wealth and greatness. Our Lord of such power and contrasts, Nelli-vaneswarar resides in Thiru-nellikkaa.

1668. நலந்தானவன்நான்முகன்றன்தலையைக்
கலந்தானதுகொண்டகபாலியுந்தான்
புலந்தான்புகழாலெரிவிண்புகழும்
நிலந்தான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 3

நலம்தான் அவன்; நான்முகன் தன் தலையைக்
கலம் தான் அது கொண்ட கபாலியும் தான்;
புலம் தான்; புகழால் எரி விண் புகழும்
நிலம் தான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.

nalamtAn2 avan2; nAn2mukan2tan2 talaiyaik
kalamtAn2 atu koNTa kapAliyum tAn2;
pulam tAn2; pukazAl eri viN pukazum
nilam tAn2-nellikkAvuL nilAyavan2E.

பொருள்: உயிர்களுக்கு நன்மை செய்யும் எம்பெருமானே! உயிர்களுக்காக உலகைப் படைத்த பிரமனின் தலையைக் கொய்தான். அதனை பிச்சைப் பாத்திரமாக ஏந்தி பலிதேர்ந்து வருகிறான். பலிதேர்ந்து வரும் அவனே தேவர்களின் மிகுபுகழுக்கும் உரியவனாய்த் திருநெல்லிக்காவுள் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: நலம் தான் அவன் – அவனே நலம். மங்கலம். சிவம் அல்லாது வேறு நலம் உயிர்கட்கு இல்லை. 'குறைவிலாமங்கல குணத்தன்' (காஞ்சிப்புராணம் திருநெறிக் 23). நகராநலம் (தி.2, ப.19, பா.11) பிரமனது தலையைக் கிள்ளிக் கையிற் கொண்ட வரலாறு முற்பகுதியிற் கூறப்பட்டது. கபாலி – பிரமகபாலத்தைத் தாங்கியவன். புலம் – சிவஞான சொரூபம். புகழால் எரிவிண் – கீர்த்தியால் விளங்கும் வானம். விண்புகழும் நிலம் – வானோர் துதிக்கும் சிவதலம் (திருநெல்லிக்கா). நலம்தான் கபாலியும்தான், புலம்தான், நிலம்தான் என்று கொள்ளின். நிலம் என்பது மிசை நிலம், வீட்டுலகு ஆம். 'நிலமிசை நீடுவாழ்வார்' (குறள் 3) 'மீதானம்' (திருக்களிறு).

Civan, seems to be a bundle of contradictions in his actions. He is the Lord of Thiru-nellikkaa. He is the personification of virtue; however He controls the virtue and performs beneficial actions for the sake of all life in the universe. Yet, He plucked one head of Brahma for his wrong doing and after it was cleaned, used it as His begging bowl. Despite this humiliating action, it is He who is praised by the celestials for His

divine wisdom. He stands for the earth and also for the celestial world. This Lord of immense fame resides in Thiru-nellikkaa.

1669. தலைதானதுஏந்தியதம்மடிகள்
கலைதான்திரிகாடிடம்நாடிடமா
மலைதானெடுத்தான்மதில்மூன்றுடைய
நிலைதான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 4

தலைதான் அது ஏந்திய தம் அடிகள்;
கலைதான் திரி காடுஇடம் நாடுஇடம் ஆம்;
மலைதான் எடுத்தான், மதில்மூன்று உடைய;
நிலை தான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.

talaitAn2 atu Entiya tam aTikaL;
kalaitAn2 tiri kATu iTam nATu iTam Am;
malaitAn2 eTuttAn2, matilmUn2Ru uTaiya;
nilai tAn2--nellikkAvuL nilAyavan2E.

பொருள்: பிரமனின் தலையைக் கையில் ஏந்தி எம்பெருமான் நாட்டிலும் காட்டிலும் ஓடி ஆடித் திரிகிறான். முப்புரத்தையுடை அசுரர்களை அழிப்பதற்காக மேருமலையை வில்லாக வளைத்தான். அப்பெருமான் திருநெல்லிக்காவுள் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: தலை – பிரமகபாலம். கலை – மான். ஏந்தியது தலை, காடிடம் நாடிடமாம். காடாகிய இடம் நாடுகின்ற இடம், நாடாகிய இடமுமாம். மதில் மூன்றுடைய மலைதான் எடுத்தான் – முப்புரமும் உடைந்தழிய மேருமலை வில்லை எடுத்தவன். நிலை – உறையுள்.

See there! It is Civan, the Lord of Thiru-nellikkaa, which is the holy of the holy. He holds in His hand the dried skull of Brahma for begging alms. He seeks the forest where the deer leaps at its dwelling place. He keeps it in one of His hands and prevents it from running out of His hand. Once He bent the big Meru mountain as His bow and burnt the three flying forts of the asuraas and helped the devaas to escape the asuraas' misdeed. He is our Lord who for ever stays there in Thiru-nellikkaa.

1670. தவந்தான்கதிதான்மதிவார்சடைமேல்
உவந்தான்சுறவேந்தனுருவழியச்
சிவந்தான்செயச்செய்துசெறுத்துலகில்
நிவந்தான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 5

தவம் தான்; கதி தான்; மதி வார்சடைமேல்
உவந்தான்; சுறவேந்தன் உரு அழியச்
சிவந்தான்; செயச்செய்து செறுத்து உலகில்
நிவந்தான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.

tavam tAn2; kati tAn2; mati vArcaTaimEl
uvantAn2; cuRavEntan2 uru aziyac
civantAn2; ceyacceytu ceRuttu ulakil
nivantAn2--nellikkAvuL nilAyavan2E.

பொருள்: சிவபெருமானே தவம் செய்பவன் ஆவான். தவத்தின் முடிவும் அவனே ஆவான். சந்திரனைத் தலையில் தரித்தவனும் அவனே. மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்தவனும் அவனே. பூவுலகில் ஏற்படுகின்ற மாறுபட்ட செயல்களுக்கு உரியவனும் அவனே, விரும்பி திருநெல்லிக்காவுள் மேவியுள்ளான்.

குறிப்புரை: தவமும் அத்தவத்தின் பயனாக எய்தும் கதியும் தானே (சிவனே) ஆவான். வார்சடைமேல் மதியை உவந்தான். உவத்தல் – மகிழ்தல். சுறவேந்தன் – மீனக்கொடி உடைய மன்மதன். உருஅழிய – (உருவிலியாக) வடிவம் எரிந்து சாம்பலாக சிவந்தான். கோபித்தான். சிவந்தான் (ஆகச்) செய்யச் செய்து. செறுத்து – அழித்து. நிவந்தான் – ஓங்கினான். செயற்செய்து என்னும் பாடத்திற்குச் சிவந்தானது செயலைச் செய்து என்று கொள்க. செய (ஜெய) – வெற்றி எனலுமாம். செயம் என்றதன் விகாரமாகக் கொள்க.

See there! It is Civan, our Lord of Thiru-nellikkaa. He is the personification of 'penance'. Also He is the resulting salvation which arises out of penance. He is happy with the cool moon on His long matted hair. His body turned to be red-hot with anger when he burnt cupid, the god of love, for his misbehaviour. Thus, He exhibits His destroying power in the entire universe thereby proving his ultimate greatness. He is our Lord, ever stays in Thiru-nellikkaa.

1671. வெறியார்மலர்க்கொன்றையந்தார்விரும்பி
மறியார்மலைமங்கைமகிழ்ந்தவன்றான்
குறியாற்குறிகொண்டவர்போய்க்குறுகும்
நெறியான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 6

*வெறி ஆர் மலர்க்கொன்றைஅம்தார் விரும்பி;
மறி ஆர் மலைமங்கை மகிழ்ந்தவன் தான்;
குறியால் குறி கொண்டவர் போய்க் குறுகும்
நெறியான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.*

veRi Ar malarkkon2Rai am tAr virumpi;
maRi Ar malaimagkai makizntavan2 tAn2;
kuRiyAl kuRi koNTavar pOyk kuRukum
neRiyAn2--nellikkAvuL nilAyavan2E.

பொருள்: எம்பெருமான், மணமிக்க கொன்றை மாலையை விரும்பி அணிந்துள்ளான். அவனே மலைமகளை விரும்பி மணந்துள்ளான். சூரியன், சந்திரன், திருமால், பிரமன் ஆகியோர் தாம் நற்பேறு பெற வேண்டும் என்னும் பெருநோக்கத்தால், நம் இறைவனிடம் வந்து சேரவிரும்பியதால், நம் இறைவன் தன்னை அடையாளம் காட்டும் நிலையில் அவனே திருநெல்லிக்கா தலத்துள் கோயில் கொண்டு அருள் வழங்கி வருகின்றான்.

குறிப்புரை: வெறி – மணம். தார் – மாலை. மறி – மான். மலைமங்கை இமாசலகுமாரி. குறியால் குறிகொண்டவர் போய்க் குறுகும் நெறியான் – குரு உபதேசித்த குறியினால் தியானித்துணர்ந்து கொண்டவர் சென்று அடையும் ஒளி நெறி உடையவன். 'அறிவதொருகுறி குருவினருளினால் அறிந்து மன்னு சிவன்றனையடைந்து நின்று' அருள் ஞானக் குறியில் நின்று கும்பிட்டுத் தட்டம் இட்டுக் கூத்தாடித்திரி (சித்தியார் 286, 323) 'குறியொடுதாம் அழியும் நெறி' (சித்தியார் 324) அதனின் மேலாயது.

See there! It is Civan who is our Lord in Thiru-nellikkaa. He has adorned Himself with fragrant cassia flowers. The king's mountain is the Himalayaas, where deer in large numbers live and enjoy their life. The king's daughter Umaa observed penance in order to marry Lord Civa. Our Lord agreed to her wish and married her. He is the ultimate destination for those devotees who follow the well-guided path established by the sacred scholars of the past. He is our Lord in Thiru-nellikkaa. He has identified Himself as the ultimate goal for all souls.

1672. பிறைதான்சடைச்சேர்த்தியஎந்தைபெம்மான்
இறைதானிறவாக்கயிலைமலையான்
மறைதான்புனலொண்மதிமல்குசென்னி
நிறைதான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 7

பிறைதான் சடைச் சேர்த்திய எந்தைபெம்மான்;
இறை தான்; இறவாக் கயிலைமலையான்;
மறை தான்; புனல், ஒண்மதி, மல்கு, சென்னி
நிறை தான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.

piRaitAn2 caTaic cErttiya entaipemmAn2;
iRai tAn2; iRavAk kayilaimalaiyAn2;
maRai tAn2; pun2al, oNmati, malku cen2n2i
niRai tAn2-nellikkAvuL nilAyavan2E.

பொருள்: தலையில் பிறையைத் தாங்கி நிற்கும் எம்பெருமானே, கயிலாய மலையின் உச்சியில் அமர்ந்துள்ளான். மறைகளுக்கும் மேலானவன் அவனே; கங்கை, சந்திரன் முதலியவைகளைத் தன் தலையில் அணிந்து மக்களுக்கு வெளிப்படுமாறு செய்துள்ளான். அவனே, துவர்ப்பும் இனிப்பும் நிறைந்த நெல்லிக்கா போல நெல்லிக்காவுள் உறைந்துள்ளான் என்க.

குறிப்புரை: சடைச்சேர்த்திய – சடைமேல் சேரச் செய்த. ஏழன்தொகை. இறவாக் கயிலைமலை – என்றதால் அழிவில்லாத சிறப்புணர்க. புனல் – கங்கை. முதலடியிற் பிறையும் சடையும். மூன்றாவதடியில் மதியும், சென்னியும் என ஓரிடமும் நோக்கின் இப்பதிகத்தைப்பற்றி ஒரு சிந்தனை தோன்றும்.

See there! It is Civan our Lord of Thiru-nellikkaa. He, my father has adorned His matted hair with the crescent moon. He is the Almighty; He is the Eternal; the Supreme God of mount Kailash. He is the venerable Vedas. He has on His head the Ganges along with the bright moon. He is an epitome of perfection in everything. He is our Lord ever abiding in Thiru-nellikkaa.

1673. மறைத்தான்பிணிமாதொருபாகந்தன்னை
மிறைத்தான்வரையாலரக்கன்மிகையைக்
குறைத்தான்சடைமேற்குளிர்கோல்வளையை
நிறைத்தான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 8

மறைத்தான், பிணி மாது ஒருபாகம் தன்னை;
மிறைத்தான், வரையால் அரக்கன் மிகையைக்
குறைத்தான்; சடைமேல் குளிர் கோல்வளையை
நிறைத்தான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.

maRaittAn2, piNi mAtu orupAkam tan2n2ai;
miRaittAn2, varaiyAl, arakkan2 mikaiyaik
kuRaittAn2, caTaimEl kuLir kOlvaLaiyai
niRaittAn2--nellikkAvuL nilAyavan2E.

பொருள்: எம்பெருமான் உமாதேவியைப் பிணித்து இருக்கிறான். அவனே பிணித்ததைப் பிறர் அறியாவண்ணம் அர்த்தநாரியாய் ஒன்றுபட்டும் காட்சியளிக்கிறான். கயிலாய மலையைத் தூக்க முயன்ற அரக்கனை அடர்த்தும் அருளியுள்ளான். கங்கையைத் தலையில் தாங்கி மறைத்து வைத்தலையும் புரிகிறான். அவனே நெல்லிக்காவுள் உள்ளான் என்க.

குறிப்புரை: ஒரு பாகத்தில் மாதினைப் பிணித்து மறைத்தான். பிணி மறைத்தான் – வரிப்புனைபந்து என்புழிப்போலும். மிறைத்தான் – வருத்தினான். மிகை – மீச்செலவை, குறைத்தான் – அடக்கினான். கோல்வளையை – கங்கையை – அன்மொழித் தொகை. கோல் – திரட்சி. வளை – வளையலை உடையவள். நிறைத்தான் – நிறைய அடக்கிக் கொண்டான்.

See there! It is Civan, our Lord of Thiru-nellikkaa. He keeps His consort on the left side of His body, concealing her true form. He subdued the valour of Raavanan by pressing the top of mount Kailash with His toe, when Raavanan tried to lift the mountain and keep it aside. He keeps the cool river Ganges with her broad bangles on His matted hair in Thiru-nellikkaa. He is our Lord there forever.

1674. தழல்தாமரையான்வையந்தாயவனும்
கழல்தான்முடிகாணியநாணொளிரும்
அழல்தானடியார்க்கருளாய்ப்பயக்கும்
நிழல்தான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 9

தழல் தாமரையான், வையம் தாயவனும்,
கழல்தான் முடி காணிய, நாண் ஒளிரும்
அழல்தான்; அடியார்க்கு அருள் ஆய்ப் பயக்கும்
நிழல் தான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.

tazal tAmaraiyAn2, vaiyam tAyavan2um,
kazaltAn2 muTi kANiya, nAN oLirum
azaltAn2; aTiyArkku aruL Ayp payakkum
nizaltAn2--nellikkAvuL nilAyavan2E.

பொருள்: குளிர்ந்த செந்தாமரை மலரில் இருக்கும் பிரமனுக்கும் நெடிய வடிவு எடுத்து உலகை அளந்த திருமாலுக்கும் எம்பெருமான் ஒளிர்ந்து ஓங்கும் நெருப்பு வடிவு கொண்டே காட்சி கொடுத்து அருளினான். அவனே சிவனடியார் பொருட்டு குளிர்ந்த நிலையில் நெல்லிக்காவுள் கோயில் கொண்டுள்ளான் என்க.

குறிப்புரை: தழல் தாமரையான் – தீயைப் போன்ற செந்தாமரையில் வாழும் பிரமன். வையம் தாயவன் – உலகம் அளந்த திருமால். கழல் முடி – காலும் தலையும். காணிய – காண்பதற்கு. அழல் – தீப்பிழம்பு. அடியாருக்கு – யான் எனது என்னும் செருக்கற்றுத் திருவடிஞானம் பெற்றார்க்கு. அருளாய்ப் பரக்கும் நிழல் – திருஞானமாய்ப் பரவியுள்ள பேரொளி.

See there! It is Civan, our Lord of Thiru-nellikkaa. Brahma is seated in red lotus flower. Vishnu measured the entire earth with one step of his legs. Both these Lords were unable to see the origin or end of our Lord. He rose in the indescribable bright form. He has changed His image from the fiery column into a divine shade for bestowing grace on His sincere devotees who have shed their ego and gained divine wisdom. This Lord of shelter resides permanently in Thiru-nellikkaa.

1675. கனத்தார்திரைமாண்டழற்கான்றநஞ்சை
எனத்தாவெனவாங்கியதுண்டகண்டன்
மனத்தாற்சமண்சாக்கியர்மாண்பழிய
நினைத்தான்நெல்லிக்காவுள்நிலாயவனே. 10

கனத்து ஆர் திரை மாண்டு அழல் கான்ற நஞ்சை,
"என் அத்தா!" என, வாங்கி அது உண்ட கண்டன்;
மனத்தால் சமண்சாக்கியர் மாண்பு அழிய
நினைத்தான் - நெல்லிக்காவுள் நிலாயவனே.

kan2attu Ar tirai mANTu azal kAn2Ra nanjcai,
"en2 attA!" en2a, vAgki atu uNTa kaNTan2;
man2attAl camaNcAkkiyar mANpu aziya
nin2aittAn2--nellikkAvuL nilAyavan2E.

பொருள்: பாற்கடலில் தோன்றிய நஞ்சைக் கொண்டுவந்த தேவர்கள், அத்தனே! காவாய் என முறையிட்டு இறைஞ்சியபோது நஞ்சை உண்டு காத்தருளியவன் எம்பெருமான்! அவனே இப்போது சமணரும் சாக்கியரும் மனம் திருந்தாமல் கொடுமை செய்வதைத் தடுக்க திருநெல்லிக்காவுள் கோயில் கொண்டுள்ளான் என்க.

குறிப்புரை: கனத்து ஆர் திரை – மேகத்தால் உண்ணப்படுங் கடல், ஈண்டுப் பாற்கடல் என்க. திரை – அலை. ஆகுபெயர். மாண்டு – பெருகி. அழல் – வெப்பம். கான்ற – வீசிய. உமிழ்ந்த. 'என் அத்தா' என்று தேவர் வேண்ட. வாங்கி அது உண்ட கண்டன் என்க. மாண்பு – மாட்சி.

See there! It is Civan our Lord in Thiru-nellikkaa. The devaas and the asuraas were churning the sea of milk to get amirtham and to consume it for longivity. But a dreadful poison came out of the sea of milk. The devaas cried "Oh Lord! Our Father! Kindly save us from death that spreads from the severe odour of the poison, thus they worshipped our Lord. He then drank the poison and saved the entire humanity. However, His neck turned black because of the poison He drank and thereafter He is called 'Neelakandan'. The Jains and Buddhists carry on propaganda against our Lord. The so called greatness of these races has to be destroyed. Therefore, our Lord ever stays in Thiru-nellikkaa.

1676. புகரேதுமிலாதபுத்தேளுலகில்
நிகராநெல்லிக்காவுள்நிலாயவனை
நகராநலஞானசம்பந்தன்சொன்ன
பகர்வாரவர்பாவமிலாதவரே. 11

புகர்ஏதும் இலாத புத்தேள் உலகின்
நிகர் ஆம் நெல்லிக்காவுள் நிலாயவனை,
நகரா நல ஞானசம்பந்தன் சொன்ன,
பகர்வார் அவர் பாவம் இலாதவரே.

pukar Etum ilAta puttEL ulakin2
nikar Am nellikkAvuL nilAyavan2ai,
nakarA nala njAn2acampantan2 con2n2a,
pakarvAr avar pAvam ilAtavarE.

பொருள்: திருநெல்லிக்கா திருத்தலம் குற்றமற்ற திருத்தலம். தேவர் உலகிற்கு நிகரான சிறப்பு பொருந்திய திருத்தலம். அத்திருத்தலத்தில் மேவியுள்ள எம்பெருமானை நன்நகராகிய சீர்காழி தலத்தில் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். அவர் பாடிய பாடல்களை மனமுருகி பாடவல்லார்கள் பாவம் இல்லாதவர்கள் - புண்ணியம் செய்தவர்கள் ஆவார்கள் என்க.

குறிப்புரை: புகர் – குற்றம். புத்தேள் உலகு – தேவருலகம். நிகரா – ஒப்பாகாத. நகராநலம் – அழியாத நன்மை. சிவம், சொன்ன – சொல்லிய. இப்பாமாலையை. பகர்வார் – பாடித் தொழுவார்.

See there! He is our Lord of Thiru-nellikkaa. This town Thiru-nellikkaa is a very holy, flawless place having no equal even in the celestial world. Our Thiru-gnana-Sambandar hails from the town called Seerkaazhi which has never had any destruction through all the ages. This virtuous Thiru-gnana-Sambandar sang these Tamil verses on our Lord of Thiru-nellikkaa. Those devotees who can recite these holy verses sung by him will be always considered holy and sinless.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

19ஆம் பதிகம் முற்றிற்று
End of 19th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 156 *பதிக எண்: 20*

20. திருஅழுந்தூர்
20. THIRU-ALUNDOOR

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

திருஅழுந்தூர் என்னும் இத்திருத்தலமானது சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம் ஆகும். நாகை மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் உள்ளது. மயிலாடுதுறை, கும்பகோணம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகளில் தேரழுந்தூர் செல்லலாம். மயிலாடுதுறை – கும்பகோணம் தொடர் வண்டிப் பாதையில் உள்ள தேரழுந்தூர் தொடர்வண்டி நிலையத்தில் இறங்கி தெற்கே 3 கி.மீ. சென்றால் ஊரை அடையலாம். இது தென்கரைத் தலங்களுள் முப்பத்தெட்டாவது தலம் ஆகும்.

அகத்திய முனிவர் கீழே இறைவரைப் பூசித்திருந்ததை அறியாது ஊர்த்துவ ரதன் என்னும் அரசன் ஆகாயத்தில் செலுத்திய தேர் செல்லாது அழுந்தியதால் இப்பெயர் பெற்றது என்பர். இது இக்காலம் தேரழுந்தூர் என்று வழங்கப்பெறுகின்ற பெயருக்கேற்றபடி இவ்வரலாறு தோற்றப்பெற்றது போலும். கம்பர் பிறந்த கம்பன் மேடு உள்ள இடம். இறைவரின் திருப்பெயர் வேதபுரீசுவரர். இறைவியாரின் திருப்பெயர் சௌந்தரியாம்பிகை. வேததீர்த்தம். இது சந்நிதிக்குத் தென்பால் இருக்கின்றது. வேதங்கள், தேவர்கள், திக்குப்பாலகர்கள், முனிவர்கள் இவர்கள் பூசித்துப் பேறு எய்தினர்.

இது திருஞானசம்பந்தருடைய ஒரே பதிகத்தைப் பெற்றது. இக்கோயில் 'மாமடம்' எனப்படும் சிறப்பு இவ்வூர்த் தேவாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூர் அழுந்தை என்று மருஉ. மொழியாக வழங்கப் பெறுவதுண்டு. இவ்வழக்கம் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் காலத்தே வழக்கில் இருந்தது என்பது அவர் தேவாரத்தால் அறியக் கிடக்கின்றது. இவ்வூர் மறையோர் இறைவனைத் தொழுது வழிபடுதலில் வல்லவர்.

பதிக வரலாறு

ஞானப்பாலுண்டவர் திருநல்லம் முதலிய திருப்பதிகளைப் பணிந்து திருவழுந்தூர் மாடக்கோயிலை அடைந்தார். அம் மாமடம் மகிழ்ந்த வான்பொருளினை வணங்கிப் பாடிய பதிகம் இது.

திருச்சிற்றம்பலம்

1677. தொழுமாறுவல்லார்துயர்தீரநினைந்
தெழுமாறுவல்லாரிசைபாடவிம்மி
அழுமாறுவல்லாரழுந்தைமறையோர்
வழிபாடுசெய்மாமடமன்னினையே. 1

தொழும்ஆறு வல்லார், துயர் தீர நினைந்து
எழும்ஆறு வல்லார், இசை பாட விம்மி
அழும்ஆறு வல்லார், அழுந்தை மறையோர்
வழிபாடுசெய் மா மடம் மன்னினையே.

tozum ARu vallAr, tuyar tIra nin2aintu,
ezum ARu vallAr, icai pATa vimmi
azum ARu vallAr, azuntai maRaiyOr
vazipATu cey mA maTam man2n2in2aiyE.

பொருள்: எப்பொருளையும் விரும்பாமல் உன்னைத் தொழுபவர்கள்; தங்கள் துயர்தீர வேண்டி உன்னைத் தொழுபவர்கள்; பக்தியினால் பாடிவிம்மி அரற்றும் அடியவர்கள்; ஆகம முறைப்படி வழிபடும் மறையவர்கள் ஆகிய அனைவருக்கும் அருள, திருவழுந்தூரில் கோயில் கொள்ள திருவுள்ளம் கொண்டனையே.

குறிப்புரை: திருவழுந்தூரிலுள்ள வேதியர் (கட்டி) வழிபாடு செய்யும் பெரிய மடத்தில் (பா.3) சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். அவ்வேதியர்கள் சிவபிரானைத் தொழும் வகையிலும், பிறவித் துன்பம் போயொழிய நினைந்தெழும் வகையிலும், இசை பாடிட விம்மி அழும் வகையிலும் வன்மையுற்ற பயிற்சியுடையவர்கள், அழுந்தை என்பது அழுந்தூர் என்பதன் மரூஉ. இது புலவர் செய்து கொள்ளும் மரூஉச் சொற்களுள் ஒன்று. புலியூர் – புலிசை, மறைக்காடு – மறைசை, ஆவடுதுறை – துறைசை முதலிய அறிக. தொட்டிக்கலை – கலைசை, திருவோத்தூர் (வேதபுரி, மறைநகர்) – மறைசை என்பவை வழங்கி மருவாதன ஆயினும் புலவர் வழக்கில் உள.

Oh Civa! You are the Lord of Alundur. You have Your abode in this town, which has a good number of big palaces. Here Vedic scholars performing daily religious rites with fervour worship You. There are people in this town who pray without making any request for their selfish desires. There is a second type of people who offer worship to you bearing in their minds that their suffering should vanish soon. There is another type of servitors who out of strong devotion sing Your praise and weep with pious emotions. Oh Lord! You stay in Thiru-alundoor so as to bless all the above devotees.

1678. கடலேறியநஞ்சமுதுண்டவனே
உடலேயுயிரேயுணர்வேயெழிலே
அடலேறுடையாயழுந்தைமறையோர்
விடலேதொழமாமடமேவினையே. 2

கடல் ஏறிய நஞ்சு அமுது உண்டவனே!
உடலே! உயிரே! உணர்வே! எழிலே!
அடல் ஏறு உடையாய்! அழுந்தை மறையோர் -
விடலே! தொழ, மா மடம் மேவினையே.

kaTal ERiya nanjcu amutu uNTavan2E!
uTalE! uyirE! uNarvE! ezilE!
aTal ERu uTaiyAy! azuntai maRaiyOr-
viTalE! toza, mA maTam mEvin2aiyE.

பொருள்: கடலில் தோன்றிய விடத்தை அமுதாக உண்டருளியவனே! எனது உடலாகவும், உயிராகவும், உணர்வாகவும் உள்ளவனே! அழகானவனே! இடப வாகனத்தை உடையவனே! மறையோர்களால் வணங்கப்படுபவனே! திருவழுந்தூரில் கோயில் கொண்டு அருள் வழங்க திருவுள்ளம் கொண்டனையே.

குறிப்புரை: பாற்கடல், உடலும், உயிரும், உணர்வும், எழிலும் ஆக இருப்பவன் சிவபிரான், அடல் – வலிமை. கொலையுமாம். 'கொல்லேறு'. விடலே – தலைவனே.

Oh Civa! You are my Lord of Thiru-alundoor. You drank the poison that came out of the sea of milk. By drinking the poison, You saved all lives in the universe thereby becoming one with all the body and the life of the whole universe. You are the

origin of their emotional content and their comeliness. You ride on Your bull to go round the cosmos. You are the Almighty worshipped by the Vedic scholars of Thiru-alundoor, a place with a raised temple for Your abode.

1679. கழிகாடலனேகனலாடலினாய்
பழிபாடிலனேயவையேபயிலும்
அழிபாடிலராயழுந்தைமறையோர்
வழிபாடுசெய்மாமடமன்னினையே. 3

கழிகாடலனே! கனல்ஆடலினாய்!
பழிபாடு இலனே! அவையே பயிலும்
அழிபாடு இலராய், அழுந்தை மறையோர்
வழிபாடு செய் மா மடம் மன்னினையே.

kazikATalan2E! kan2al ATalin2Ay!
pazipATu ilan2E! avaiyE payilum
azipATu ilarAy, azuntai maRaiyOr
vazipATu cey mA maTam man2n2in2aiyE.

பொருள்: சுடுகாட்டில், நெருப்பைக் கையில் ஏந்தி ஆடிக்கொண்டிருப்பவனே! குற்றமற்றவனே! நல்லதையே பயின்று அழிபாடு இன்றி வழிபாடு செய்யும் மறையவர்கள் நிறைந்த அழுந்தூர்தன்னில் அமர்ந்தவனே!

குறிப்புரை: கழிகாடலனே – சுடுகாட்டில் (இரவில்) ஆடுபவனே, கரிகாடலினாய் (தி. 2, ப.21, பா.8). சுடலையாடி, கனல் ஆடலினாய் – தீயில் ஆடுதலை உடையவனே. பழிபாடு இலனே – பழிக்கப்படுதல் இல்லாதவனே. அழிபாடு – அழிவுபடுதல்.

Oh Civa! You are my Lord of Thiru-alundoor. You visit the burial ground now and then and dance there holding fire on your hand followed by Your ghosts. You are the most blemishless that nobody could disgrace You. Just as You are blemishness, the Vedic scholars of this place also are blameless and therefore without any defeat in their life. They protect the virtues of one and all. They worship You, our Lord of Thiru-alundoor whose abode is a raised temple here.

1680. வானேமலையேயெனமன்னுயிரே
தானேதொழுவார்தொழுதாள்மணியே
ஆனேசிவனேயழுந்தையவரெம்
மானேயெனமாமடமன்னினையே. 4

வானே! மலையே! என மன்உயிரே!
தானே தொழுவார் தொழு தாள் மணியே!
ஆனே! சிவனே! அழுந்தையவர், "எம்-
மானே!" என, மா மடம் மன்னினையே.

vAn2E! malaiyE! en2a man2uyirE!
tAn2E tozuvAr tozu tAL maNiyE!
An2E! civan2E! azuntaiyavar, "em-
mAn2E!" en2a, mA maTam man2n2in2aiyE.

பொருள்: வானாக விளங்குபவனே! மலையாகத் திகழ்பவனே! உயிராக உறைபவனே! தானே விரும்பித் தொழும் அடியார்களுக்குத் திருவடிப்பேற்றை அருள்பவனே! சிவன் ஆனவனே! அழுந்தை நகரில் கோயில் கொண்டனையே.

குறிப்புரை: வான் – வானம். வானம் மலை என்று தொழமன்னிய உயிரே. வானே என மலையே என மன்னும் உயிர். தொழுவார் தொழு – வணங்குவார் வணங்குதற்குரிய. தாள் – திருவடி. ஆனே – பசுபதி என்னும் பொருட்டு. ஆன் – பசு. அழுந்தையவர் – திருவழுந்தூர் மறையோர். எம்மானே – எம்பெருமானே. என – என்று கூவித்தொழ.

Oh Civa! You are my Lord of Thiru-alundoor. All the sentient souls of the universe pray and declare "Oh You are the sky! You are the Kailash mountain; You are my life". You are the Gem worshipped by devotees; these devotees are all worshipped by others. You are our Lord Civan, Lord of Thiru-alundoor. You have Your abode in the raised temple in Thiru-alundoor.

1681. அலையார்புனல்சூழழுந்தைப்பெருமான்
நிலையார்மறியுந்நிறைவெண்மழுவும்
இலையார்படையும்மிவையேந்துசெல்வ
நிலையாவதுகொள்கெனநீநினையே. 5

அலை ஆர் புனல் சூழ் அழுந்தைப் பெருமான்!
நிலை ஆர் மறியும், நிறை வெண்மழுவும்,
இலை ஆர் படையும்(ம்), இவை ஏந்து செல்வ!
நிலையா அது கொள்க என, நீ நினையே!

alai Ar pun2al cUz azuntaip perumAn2!
nilai Ar maRiyum, niRai veNmazuvum,
ilai Ar paTaiyum(m), ivai Entu celva!
nilaiyA atu koLka en2a, nI nin2aiyE!

பொருள்: அலைகள் விளங்கும் நீர்நிலைகள் சூழ்ந்த அழுந்தை நகரில் எழுந்தருளிய சிவனே! நீ அலையும் மானை அசையாமல் உன் கையில் அடக்கியுள்ளாய். ஒளிமிக்க மழுவையும் சூலப்படையையும் எப்பொழுதும் ஏந்தி உள்ளாய். இயக்கத்தையும் இயக்கமின்மையும் உன்னிடத்தில் பொருத்திக் காட்டும் உன்னை நானும் வணங்குகிறேன்.

குறிப்புரை: இலையார் படை – திரிசூலாயுதம். இவையே நிலையான செல்வம். ஏனைய அழியும் என்றவாறு.

Oh my mind! Always think of Him, who is our Lord of Thiru-alundoor which is surrounded by ponds of surging waves. He holds in one of His hands a deer. In another hand He holds a bright axe. In the third hand, You hold a three-leaved trident. Oh my mind! think of these always for they are real wealth. Oh Lord! I think of You as one who represents both action and inaction.

1682. நறவார்தலையின்நயவாவுலகில்
பிறவாதவனேபிணியில்லவனே
அறையார்கழலாயழுந்தைமறையோர்
மறவாதெழமாமடமன்னினையே. 6

நறவு ஆர் தலையின் நயவா! உலகில்
பிறவாதவனே! பிணி இல்லவனே!
அறை ஆர் கழலாய்! அழுந்தை மறையோர்
மறவாது எழ, மா மடம் மன்னினையே.

naRavu Ar talaiyin2 nayavA! ulakil
piRavAtavan2E! piNiillavan2E!
aRai Ar kazalAy! azuntai maRaiyOr
maRavAtu eza, mA mATam man2n2in2aiyE.

பொருள்: தலையில் தலைமாலை அணிந்தவனே! பிறவா யாக்கைப் பெரியோனே! பிணிக்கப்படும் வினையால் பிணைக்கப்படாதவனே! பிணிக்கப்படும் வினை முதலானவற்றால் ஆட்படாத நின்மலனே! ஒலிக்கின்ற கழலினை அணிந்தவனே! அழுந்தை

நகரில் வாழும் மறையோர்களால் மறவாது வணங்கப்படுபவனே! உன்னை நானும் மறவாமல் வணங்கிடுவேன்.

குறிப்புரை: நறவு – தேன், நயவா – நயமுடையவன். நயம் – மகிழ்ச்சி, இன்பம், நன்மை, நீதி, உலகியல் பிறவாதவன் – பிறவா யாக்கைப் பெரியோன். பிறப்பிலி இறப்பிலி (பாரதம்). பிணி இல்லவன் – நோயில்லான். அறை – ஒலி.

Oh Civa! You are my Lord residing in Thiru-alundoor. You have beautified Your hair with nectared flowers. You are birthless in all the worlds. You are beyond and free from all effects of karma. Your holy feet wear the golden ringing anklets. You have Your abode in Thiru-alundoor, where the Vedic scholars pray with clubbed hands holding Your holy feet at that raised temple.

1683. தடுமாறுவல்லாய்தலைவாமதியம்
சுடுமாறுவல்லாய்சுடரார்சடையில்
அடுமாறுவல்லாயழுந்தைமறையோர்
நெடுமாநகர்கைதொழநின்றனையே. 7

தடுமாறு வல்லாய்! தலைவா! மதியம்
சுடும் ஆறு வல்லாய்! சுடர்ஆர் சடையில்
அடும்ஆறு வல்லாய்! அழுந்தை மறையோர்
நெடு மா நகர் கைதொழ, நின்றனையே.

taTumARu vallAy! talaivA! matiyam
cuTum ARu vallAy! cuTar Ar caTaiyil
aTum ARu vallAy! azuntai maRaiyOr
neTu mA nakar kaitoza, nin2Ran2aiyE.

பொருள்: தடுமாற்றம் இல்லாச் சிவபெருமானே! உன்னை நாடிவரும் எங்களை முதலில் நீ தடுமாறச் செய்வாய். உன் காலில் விழுந்த சந்திரனை நீ தலையில் வைத்துள்ளாய். ஓடிவரும் கங்கையை நீ உன் தலையில் நிலைபெறச் செய்தாய். அழுந்தை நகரில் கோயில் கொண்டு மறையவர்களுக்கு அருளும் நீ எனக்கும் அருள்வாயாக!

குறிப்புரை: தடுமாறுவல்லாய் – உயிர்கள் உன்னை உணர்வதில் தடுமாறுதலைச் செய்ய வல்லவனே. உணர்ந்தார்க்கு உணர்வரியோன் என்றது இத்தடுமாற்றத்தை வலியுறுத்தும். தடுமாறுதல் – தட்டுமாறுதல் என்பதன் மரூஉ வாகக் கொண்டு அஃது ஈண்டுத் திருக்கூத்தைக் குறித்து நின்றது எனலுமாம்.

ஆடவல்லாய் ஆடுமாறு வல்லானும் ஐயாறுடை ஐயனே எனவரும் தேவாரங்களால் உணர்க. மதியம் சுடும் ஆறு – பிறையால் (காதல் கொண்ட) மகளிரைச் சுடும் வகை. சூடுமாறு என்பதன் முதற்குறுக்கமுமாம். அடும் ஆறு – கங்கைப் பெருக்கு. நெடுமாநகர் – நீள்பெருங்கோயில்.

Oh Civa! You are my Lord residing in Thiru-alundoor. You have no confusion, but You are capable of hiding Yourself and confusing the minds of those who shedding their ego seek You. You are our Master. You have beautified Your head with that bright and beautiful crescent moon. You have stationed the gushing turbulent river Ganges on Your matted hair. You have Your abode in Thiru-alundoor where the Vedic scholars pray holding Your holy feet with their clubbed hands. You are seated suitably in the raised temple.

1684. பெரியாய்சிறியாய்பிறையாய்மிடறும்
கரியாய்கரிகாடுயர்வீடுடையாய்
அரியாயெளியாயழுந்தைமறையோர்
வெரியார்தொழமாமடமேவினையே. 8

பெரியாய்! சிறியாய்! பிறையாய்! மிடறும்
கரியாய்! கரிகாடு உயர்வீடு உடையாய்!
அரியாய்! எளியாய்! அழுந்தை மறையோர்
வெரியார் தொழ மா மடம் மேவினையே.

periyAy! ciRiyAy! piRaiyAy! miTaRum
kariyAy! karikATu uyarvITu uTaiyAy!
ariyAy! eLivAy! azuntai maRaiyOr
veriyAr toza, mA maTam mEvin2aiyE.

பொருள்: சிவபெருமானே! பெரியவனும் நீயே! மிகமிகச் சிறியவனும் நீயே! ஒளிமிக்க பிறையைத் தலையில் கொண்டவனும் நீயே! கரிய விடத்தைக் கண்டத்தில் அடக்கியவனும் நீயே! சுடுகாட்டில் உறைபவனும் நீயே! நாட்டில் கோயில் கொண்டு அருள்பவனும் நீயே! திருவழுந்தையில் மறையவர்களால் வேதமுறைப்படி வணங்கப்பெறுபவனும் நீயே! அடியவர்களில் அன்புக்குரியவனும் நீயே! உன்னை நானும் வணங்குகின்றேன்.

குறிப்புரை: கரியமிடறாய் – நீலகண்டனே. சர்வசங்கார காலத்தில் எல்லாம் அழியுமாதலின், கரிகாடு என்றும் அதுவே முதல்வனுக்குக் கோயிலாதலின் உயர்வீடு என்றும் அருளினார். கோயில், சுடுகாடு

பெருமை, சிறுமை, அருமை, எளிமை எல்லாம் ஆண்டவனுக்குள. வெரியார் – பழிபாவங்களை அஞ்சுதலுடைய அம்மறையோர். வேரியார் (தேன்போலும் இனியர்) என்பதன் முதற்குறுக்கம் எனல் அமைவுடையதன்று.

Oh Civa! You are my Lord of Thiru-alundoor. You have things of high contrast. You are the greatest one of the earliest and You are the smallest atom of everything in the universe. You have the bright moon on Your head and a black neck, because of the poison You drank, and because of this You are called Neelakandan. You visit the burning burial ground and dance there treating it as Your temple. You are incomprehensible to some; but You are so easy and accessible to some others. Your abode is in the raised temple in Thiru-alundoor. In this place Vedic scholars who shun all sins, gather together and pray for Your grace.

1685. மணிநீள்முடியான்மலையையரக்கன்
தணியாதெடுத்தானுடலந்நெரித்த
அணியார்விரலாயழுந்தைமறையோர்
பணிமாமடமன்னியிருந்தனையே. 9

*மணி நீள் முடியால் மலையை அரக்கன்
தணியாது எடுத்தான் உடலம் நெரித்த
அணி ஆர் விரலாய்! அழுந்தை மறையோர்
பணி மா மடம் மன்னி இருந்தனையே.*

maNI nIL muTiyAl malaiyai arakkan2
taNiyAtu eTuttAn2 uTalam neritta
aNi Ar viralAy! azuntai maRaiyOr
maNi mA maTam man2n2i iruntan2aiyE.

பொருள்: மணிகள் பதித்த அழகிய தலைமுடியைக் கொண்ட இராவணன், தன்முனைப்பு கொண்டு நீயிருக்கும் கயிலாய மலையை எடுக்க முயன்றான். அப்பொழுது உன் கால்விரலால் அவனை அடர்த்த, அவன் அழுது புலம்பித் தொழுத பின்னர், அவனுக்கு அருளினாய். திருவழுந்தையூரில் மறையவர்களுக்கு உன் அடியினால் அருளிக் கொண்டு இருக்கிறாய். என்னே உன் திருவடி அருள்!

குறிப்புரை: மணிமுடி – ரத்தகிரீடம். அரக்கன் – இராவணன். நெரித்த – நொறுங்கிய. அணி – அழகு. பணி – பணிகின்ற.

Oh Civa! My Lord of Thiru-alundoor. When the mighty king of Sri Lanka audaciously tried to lift Your abode mount Kailash, You pressed the top of Your abode with Your toe. Raavanan got crushed, wept and prayed. Then You graced him. You are there in the raised temple of many ornaments in Thiru-alundoor, where all the Vedic scholars gather and worship You. You bless them too.

1686. முடியார்சடையாய்முனநாளிருவர்
நெடியான்மலரான்நிகழ்வாலிவர்கள்
அடிமேலறியாரழுந்தைமறையோர்
படியாற்றொழமாமடம்பற்றினையே. 10

முடி ஆர் சடையாய்! முனம்நாள், இருவர் -
நெடியான், மலரான் - நிகழ்வால் இவர்கள்
அடி மேல் அறியார்; அழுந்தை மறையோர்
படியால்-தொழ மா மடம் பற்றினையே.

muTi Ar caTaiyAy! mun2amnAL, iruvar--
neTiyAn2, malarAn2--nikazvAl ivarkaL
aTi mEl aRiyAr; azuntai maRaiyOr
paTiyAl-toza, mA maTam paRRin2aiyE.

பொருள்: நீண்ட சடாமுடியினைக் கொண்ட எம்பெருமானே! திருமாலும் பிரமனும் உன் அடிமுடி தேடியும் அவர்களால் காண முடியாமல் அயர்வுறுமாறு செய்தவனே! ஆனால் திருவழுந்தைத் தலத்தில் உன்முடிபோல் உயர்ந்த கோபுரத் தரிசனத்தையும் அருளுகின்றாய். உன் திருவடித் தரிசனத்தையும் மறையவர்களுக்கு அருளுகின்றாய்.

குறிப்புரை: முடியார் சடையாய் – சடைமுடியுடையாய், நெடியான் – திரிவிக்கிரமனாகிய மாயோன். அடிமேல் – அடிமுடி. படியால் – விதிப்படி. பற்றினை – பற்றாகக் கொண்டாய்.

Oh Civa! My Lord of Thiru-alundoor. You have Your beautified matted hair. Once Brahma and Vishnu decided to see Your holy head and feet, but they were exhausted and failed. Then You appeared as a measureless form of fire. Oh my Lord residing in the raised temple in Thiru-alundoor! You draw the Vedic scholars of that place around You, they worship You, and recite the Vedas as per the customary rules. You grace them.

1687. அருஞானம்வல்லாரழுந்தைமறையோர்
பெருஞானமுடைப்பெருமானவனைத்
திருஞானசம்பந்தனசெந்தமிழ்கள்
உருஞானமுண்டாமுணர்ந்தார்தமக்கே. 11

அரு ஞானம் வல்லார் அழுந்தை மறையோர்
பெரு ஞானம் உடைப் பெருமான் அவனைத்
திருஞானசம்பந்தன செந்தமிழ்கள்,
உருஞானம் உண்டுஆம், உணர்ந்தார்தமக்கே.

aru njAn2am vallAr azuntai maRaiyOr
peru njAn2am uTaip perumAn2 avan2ait
tirunjAn2acampantan2a centamizkaL,
urunjAn2am uNTu Am, uNarntAr tamakkE.

பொருள்: அருமையான மறையோதும் மறையோர்கள் தொழும் திருவழுந்தைத் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானை, திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய தமிழ் மாலைகளைக் (பாடல்கள்) கொண்டு வழிபாடு செய்பவர்கள் உண்மையான திருவருள் ஞானம் பெற்றுச் சிறப்புறுவார்கள் என்க.

குறிப்புரை: அருஞானம் – எய்தற்கு அரிய திருவருண்ஞானம். திருஞானசம்பந்தன் – திருஞானசம்பந்தனுடைய. அ – ஆறனுருபு, பன்மை, செந்தமிழ்கள் – செந்தமிழ்ப்பாக்கள், உருஞானம் – சொரூப ஞானம், உண்மையுணர்வு.

Our saint Thiru-gnana-Sambandar sang before our Lord in Thiru-alundoor ten pure Tamil hymns; In this temple our Lord of pure wisdom, is worshipped by knowledgeable Vedic scholars of Thiru-alundoor. Those who sing these ten songs to worship the Lord of Thiru-alundoor will certainly be blessed with true knowledge.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

20ஆம் பதிகம் முற்றிற்று
End of 20th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 157 *பதிக எண்: 21*

21. திருக்கழிப்பாலை

21. THIRUK-KALIP-PAALAI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

இத்திருத்தலம் சிவபுரி என வழங்கப்பெறுகிறது. இது முன்பு கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் காரைமேடு என்னும் இடத்தில் இருந்தது. அங்கிருந்த பொழுது கொள்ளிடத்தின் வெள்ளப்பெருக்கு, திருக்கோயிலை முற்றிலும் பாழ்படுத்திவிட்டது. படுகை முதலியார் குடும்பத்தில் திரு. பழநியப்ப முதலியார் என்பவர் சிவபுரிக்குத் தெற்கில் கோயில்கட்டி அதில் கழிப்பாலை இறைவரையும், இறைவியாரையும், ஏனைய பரிவார தேவதைகளையும் எழுந்தருளுவித்துள்ளார்.

இது சிதம்பரத்திற்குத் தென்கிழக்கே சுமார் 10 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது சோழநாட்டு வடகரைத் தலங்களுள் நான்காவது, சிதம்பரத்திலிருந்து பேருந்துகள் உள்ளன. வான்மீகி முனிவர் பூசித்துப் பேறு எய்தினர். இத்தலத்திற்கு ஞானசம்பந்தரது பதிகங்கள் இரண்டு, திருநாவுக்கரசரது பதிகங்கள் ஐந்து, சுந்தரரது பதிகம் ஒன்று ஆக எட்டுத் திருப்பதிகங்கள் இருக்கின்றன. இவற்றுள் திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்துள்ள 'வனபவள வாய்திறந்து' என்று தொடங்கும் அகப்பொருள்துறைகள் அமைந்த பாடல்கள் படித்து இன்புறத்தக்கன. சுவாமியின் பெயர் பால்வண்ண நாதர். இறைவியின் பெயர் வேதநாயகி.

பதிக வரலாறு

பாலறாவாயர் மன்றாடும் ஐயன் திருக்கூத்துக் கும்பிட்டு அணைவுறும் நாளில் கைம்மான் மறியார் கழிப்பாலையுள் அணைந்து இம்மெய்ம்மாலைச் சொற்பதிகம் பாடினார்.

திருச்சிற்றம்பலம்

1688. புனலாடியபுன்சடையாயரணம்
அனலாகவிழித்தவனேயழகார்
கனலாடலினாய்கழிப்பாலையுளாய்
உனவார்கழல்கைதொழுதுள்குதுமே. 1

புனல் ஆடிய புன்சடையாய்! அரணம்
அனல்ஆக விழித்தவனே! அழகு ஆர்
கனல் ஆடலினாய்! கழிப்பாலை உளாய்!
உன வார் கழல் கைதொழுது உள்குதுமே.

pun2al ATiya pun2caTaiyAy! araNam
an2al Aka vizittavan2E! azaku Ar
kan2al ATalin2Ay! kazippAlai uLAy!
un2a vAr kazal kaitozutu uLkutumE.

பொருள்: கங்கையைத் தலையில் தரித்த எம்பெருமானே! முப்புரங்கள் சாம்பலாகுமாறு விழித்து எரித்தவனே! நெருப்பினைக் கையில் ஏந்தி அழகுற ஆடியவனே! கழிப்பாலைக் கடவுளே! உன் நீழ்கழலடிகளைத் தொழுது போற்றி வணங்குகின்றேன்.

குறிப்புரை: புன்சடையாய் – பொன்போலும் சடையுடையாய். அரணம் – திரிபுரக்கோட்டை. திரிபுரத்தை விழித்தெரித்தான் என்றும் வரலாறுண்டு. கனல் – தீ. உனவார்கழல் – உன்னுடைய நீள்கழலடிகள். உள்குதும் – தியானம் செய்வோம்.

Oh Civan! You are the Lord of Thiruk-kalip-paalai. You have that golden coloured matted hair, washed by the water of the holy Ganges. You opened Your forehead eye and immediately a fierce fire came out of Your eye and completely destroyed the three flying forts and all the asuraas who lived there, except the three who were Your followers, worshipping You all along their life. You used to visit the burial ground and dance there holding fire in one of Your hands. We will survive by worshipping Your ankleted golden feet.

1689. துணையாகவொர்தூவளமாதினையும்
இணையாகவுகந்தவனேயிறைவா
கணையாலெயிலெய்கழிப்பாலையுளாய்
இணையார்கழலேத்தஇடர்கெடுமே. 2

துணை ஆக ஓர் தூ வள மாதினையும்
இணை ஆக உகந்தவனே! இறைவா!
கணையால் எயில் எய் கழிப்பாலை உளாய்!
இணை ஆர் கழல் ஏத்த, இடர் கெடுமே.

tuNai Aka or tU vaLa mAtin2aiyum
iNai Aka ukantavan2E! iRaivA!
kaNaiyAl eyil ey kazippAlai uLAy!
iNai Ar kazal Etta, iTar keTumE.

பொருள்: தூயவளாம் உமையவளைத் துணையாக ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமானே! அவளுக்கும் தனக்கு இணையான சிறப்பினைக் கொடுத்தவனே! இறைவனே! கணைகளைக் கையில் கொண்டு முப்புரங்களை அழித்தவனே! கழிப்பாலையுள் உள்ள உனது திருவடிகளைத் தொழுது எங்களது இடர் நீங்கப் பெறுவோமாக!

குறிப்புரை: இறைவா! கழிப்பாலை உள்ளாய்! (உன்) கழல் ஏத்த (எம்) இடர்கெடும் என்று இயைத்துக் கொள்க. தூ – தூய்மை. எல்லாப் பொருள்கட்கும் பற்றுக்கோடு. பெண்ணுரு ஒருதிறன் ஆகின்றது. அவ்வுறுத் தன்னுள் அடக்கிக் கரக்கினுங்கரக்கும் (புறம் – கடவுள் வாழ்த்து) என்றதன் உரையைக் காண்க. துணை – துணைவி. இணை – இருவரென்னாதவாறு இணைதல். எயில் – திரிபுரம். எய் – எய்த. எய்கழிப்பாலை உள்ளாய் – வினைத்தொகை. கழிப்பாலையுள்ளாய் என்பது சிவனென்னும் பொருட்டாய் எய்யென்னும் பகுதியோடு தொக்கு வினைத்தொகை ஆயிற்று.

Oh Civa! You are my Lord residing in Thiruk-kalip-paalai. You are so pleased as to have that young, pure and beautiful goddess Umaa as Your life partner. You keep her on the left side of Your holy body and so You are called Artha-naareeswarar. Using Your bow and arrow You burnt the three flying forts of asuraas and helped the devaas to be freed from their distress. You are our God; You are in Thiruk-kalip-paalai. We will be relieved of our evil by praying to Your ankleted feet.

1690. நெடியாய்குறியாய்நிமிர்புன்சடையின்
முடியாய்சுடுவெண்பொடிமுற்றணிவாய்
கடியார்பொழில்சூழ்கழிப்பாலையுளாய்
அடியார்க்கடையாஅவலம்மவையே. 3

நெடியாய்! குறியாய்! நிமிர் புன்சடையின்-
முடியாய்! சுடுவெண்பொடி முற்று அணிவாய்!
கடி ஆர் பொழில் சூழ் கழிப்பாலை உளாய்!
அடியார்க்கு அடையா அவலம்(ம்) அவையே.

neTiyAy! kuRiyAy! nimirpun2caTaiyin2-
muTiyAy! cuTuveNpoTi muRRu aNivAy!
kaTi Ar pozil cUz kazippAlai uLAy!
aTiyArkku aTaiyA, avalam(m) avaiyE.

பொருள்: பேரண்டமாக விளங்கும் இறைவனே! அணுவுக்குள் அணுவாய் மிகச் சிறிய நிலையிலும் பொருந்தியவனே! சடைமுடி உடைய சிவனே! வெண்ணீறு அணிந்தவனே! மணம் மிகும் சோலைகள் நிறைந்த கழிப்பாலைத் திருத்தலத்துள் உறைபவனே! உன்னை வணங்கும் அடியார்களுக்கு அவலங்கள் வந்து பொருந்தாவாம் என்க.

குறிப்புரை: நெடியாய் – நீண்டவனே. குறியாய் – குறியவனே. புன்சடைமுடி – பொன்போலும் செஞ்சடைமுடி. சுடுவெண் பொடி – திருநீறு. முற்று அணிவாய் – முழுதும் அணிவாய். கடி – மணம். அடியார் – யான் எனதென்னும் செருக்கற்றவர். அவலம் அடையா.

Oh Civa! You are my Lord in Thiruk-kalip-paalai. You are not only the tallest, but also the largest, You cover the entire universe. You are the smallest of all small atoms everywhere. You have the crown of matted hair on Your head. You beautify Your holy body with that white ash. Oh Lord! You are there in Thiruk-kalip-paalai, a blessed place, where fragrant gardens are plenty. The devotees who worship You there always, will have no suffering in their life.

1691. எளியாயரியாய்நிலநீரொடுதீ
வளிகாயமெனவெளிமன்னியதூ
ஒளியாயுனையேதொழுதுன்னுமவர்க்
களியாய்கழிப்பாலையமர்ந்தவனே. 4

எளியாய்! அரியாய்! நிலம், நீரொடு, தீ,
வளி, காயம், என வெளி மன்னிய தூ
ஒளியாய்! உனையே தொழுது உன்னுமவர்க்கு
அளியாய்! கழிப்பாலை அமர்ந்தவனே.

eLiyAy! ariyAy! nilam, nIroTu, tI,
vaLi, kAyam, en2a veLi man2n2iya tU
oLiyAy! un2aiyE tozutu un2n2umavarkku
aLiyAy! kazippAlai amarntavan2E!

பொருள்: கழிப்பாலைத் தலத்துள் அமர்ந்தவனே! நீயே அன்பர்களுக்கு எளியோனாகவும், அல்லாதவர்களுக்கு அரியனாகவும் விளங்குகிறாய். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களாகவும் உள்ளாய். தூய ஒளியாகவும் உள்ளாய், உன்னைத் தொழுது தியானிப்பவர்க்கு திருவருட்பேறு எய்தும்.

குறிப்புரை: அன்பர்க்கு எளியாய். அல்லாதார்க்கு அரியாய். காண்டற்கு அரிய கடவுள் கண்டாய். கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய் (தி.6 ப.23 பா.1) நிலம் . . . . காயம் – மண் முதலிய ஐம்பெரும் பூதங்கள், இறைவன் அட்ட மூர்த்தியாய் விளங்குதல் பற்றி நிலம் . . . . . வெளிமன்னிய தூ ஒளியாய் என்றருளினார். உனையே தொழுது உன்னுமவர்க்கு அளியாய் – ஆமாத்தூ ரம்மான்றன் சாம்பல் அகலத்தார் சார்பல்லாற் சார்பிலமே – (தி.2 ப.44 பா.3) என்றருளியவாறு சிவனையே தொழுது தியானிப்பவர்க்கு திருவருட்பேறு எய்தும் என்பது தாற்பரியம்.

Oh Civa! You are my Lord in Thiruk-kalip-paalai. You cannot be comprehended easily by those who are not Your servitors. However You are gentle and approachable to Your devotees. You constitute the five elements such as earth, water, fire, air and the sky. You are pure and absolute light brightening all the space and the galaxy. You are very simple to be approached for the devotees who always think and worship only You in Thiruk-kalip-paalai, they are sure to get salvation.

1692. நடம்நண்ணியொர்நாகமசைத்தவனே
விடம்நண்ணியதூமிடறாவிகிர்தா
கடல்நண்ணுகழிப்பதிகாவலனே
உடன்நண்ணிவணங்குவனுன்னடியே. 5

நடம் நண்ணி, ஓர் நாகம் அசைத்தவனே!
விடம் நண்ணிய தூ மிடறா! விகிர்தா!
கடல் நண்ணு கழிப்பதி காவலனே!
உடல் நண்ணி வணங்குவன், உன் அடியே.

naTam naNNi, or nAkam acaittavan2E!
viTam naNNiya tU miTaRA! vikirtA!
kaTal naNNu kazippati kAvalan2E!
uTal naNNi vaNagkuvan2, un2 aTiyE.

பொருள்: நடனம் ஆடுதலை விரும்புபவனே! பாம்பை ஆபரணமாக அணிந்தவனே! விடத்தை மிடற்றில் அடக்கி அருளியவனே! அன்பு நிறைந்தவனே! கடல் சூழ்ந்த கழிப்பாலைத் தலத்தில் உறைபவனே! உன் திருவடிகளை நிலம் வீழ்ந்து வணங்குகின்றேன்.

குறிப்புரை: அசைத்தவன் – கட்டியவன். நண்ணி அசைத்தவன் என்க. நடம் – திருக்கூத்து. விடம் . . . மிடறா – திருநீலகண்டனே. விகிர்தன் – விரூபாக்கன் முதலிய நிலைமையன. விளையாடவல்ல விகிர்தத்துருக் கொள் விமலன் (தி. 2 ப. 83 பா. 10) கடல் நண்ணு கழிப்பதி – கடற்கரைக் கழியிலுள்ள தலம். உடல் நண்ணி வணங்குவன் – அஷ்டாங்க நமஸ்காரம் செய்வேன். உன் அடியே – ஏகாரம் பிரிநிலை. தோற்றிய திதியே என்புழி. ஏகாரம் இயைபின்மை நீக்குதற்கும், பிறி தினியைபு நீக்குதற்கும் பொதுவாய் நின்ற பிரிநிலை என்ற சிவஞான போதச் சிற்றுரைப் பகுதியைக் காண்க. உடன் எனப்பிரித்தல் பொருந்தாது. நண்ணுதற்குச் செய்யப்படுபொருள் நிலமும் திருவடியும்.

Oh Civa! You are my Lord in Thiruk-kalip-paalai. You wear the snake around Your waist. Whenever You did Your cosmic dance, the snake also danced to the music. You have that pure and beautiful neck blackened by poison You drank out of the sea of milk when it was churned. You are the protector of the scholars in Thiruk-kalip-paalai, which is surrounded by the sea. I will approach Your holy feet with devotion and prostrate wholeheartedly before You with my heart and soul.

1693. பிறையார்சடையாய்பெரியாய்பெரியம்
மறையார்தருவாய்மையினாயுலகிற்
கறையார்பொழில்சூழ்கழிப்பாலையுளாய்
இறையார்கழலேத்தஇடர்கெடுமே. 6

பிறை ஆர் சடையாய்! பெரியாய்! பெரிய(ம்)
மறை ஆர் தரு வாய்மையினாய்! உலகில்
கறை ஆர் பொழில் சூழ் கழிப்பாலை உளாய்!
இறை ஆர் கழல் ஏத்த, இடர் கெடுமே.

piRai Ar cATaiyAy! periyAy! periya(m)
maRai Artaru vAymaiyin2Ay! ulakil
kaRai Ar pozil cUz kazippAlai uLAy!
iRai Ar kazal Etta, iTar keTumE.

பொருள்: பிறைச் சந்திரனைத் தலையில் தரித்தவனே! முதற்பொருளாய் விளங்கும் பெரியவனே! நான்மறையினை அருளிச் செய்த திருவாயினை உடையவனே! குளிர்ந்த சோலைகள் நிறைந்த திருக்கழிப்பாலைத் தலத்துள் கோயில் கொண்டு விளங்குபவனே! உன்னுடைய திருவடிகளையே போற்றி வணங்குபவர்களின் இடர்கள் எல்லாம் நீங்கும்.

குறிப்புரை: ஆர் – பொருந்திய. பெரியாய் – முழு முதல்வனே. பெருமை – பரத்துவம். பெரிய மறை ஆர்தரு வாய்மையினாய் – வேதத்திற் சொல்லப்பட்ட உண்மைப் பொருளானவனே. மகர மெய் விரித்தல் விகாரம். இறை ஆர் கழல் – (எங்கும்) தங்குதலை உடைய திருவருளாகிய கழல். இறை – இறைமையும் ஆம்.

Oh Civa! You are my Lord of Thiruk-kalip-paalai. You have adorned Your matted hair with the crescent moon. You are the greatest and the first and foremost in the universe. You are the ultimate truth spoken of in the sacred Vedas.. You are there in Thiruk-kalip-paalai, a sacred place surrounded by cloud floating gardens. The sufferings of those servitors will vanish from their life when they worship Your holy feet of grace, present everywhere.

1694. முதிருஞ்சடையின்முடிமேல்விளங்குங்
கதிர்வெண்பிறையாய்கழிப்பாலையுளாய்
எதிர்கொள்மொழியாலிரந்தேத்துமவர்க்
கதிரும்வினையாயினஆசறுமே. 7

முதிரும் சடையின்முடிமேல் விளங்கும்
கதிர் வெண்பிறையாய்! கழிப்பாலை உளாய்!
எதிர்கொள் மொழியால் இரந்து ஏத்துமவர்க்கு
அதிரும் வினை ஆயின ஆசு அறுமே.

mutirum caTaiyin2 muTimEl viLagkum
katir veNpiRaiyAy! kazippAlai uLAy!
etirkoL moziyAl irantu Ettumavarkku
atirum vin2ai Ayin2a Acu aRumE.

பொருள்: நீண்ட சடாமுடியின் மேல் அழகிய பிறைச் சந்திரனை அணிந்து அருள்பவனே! திருக்கழிப்பாலைத் தலத்துள் கோயில் கொண்டவனே! உன்னை வணங்கிப் போற்றும் அடியார் பெருமக்களின் வினைகள் எல்லாம் தானாகவே நீங்கிவிடும்.

குறிப்புரை: கதிர் வெண்பிறை – வெண்மை கதிர்க்கும் பிறைக்கும் உரியது. எதிர்கொள்மொழி – முன்னிலை மொழியாகிய துதிகள். அதிரும் நடுக்கத்தை விளைவிக்கும். ஆயின ஆசு – ஆனவையாகிய குற்றங்கள், பெயரெச்சமும் ஆம். அரன்பணியில் நின்றிடவும் அகலுங்குற்றம். ஆசுபடுமல மாயை அருங்கன்மம் அனைத்தும் அகலும் (சித்தியார் பா. 304 291).

Oh Civa! You are my Lord of Thiruk-kalip-paalai. You have adorned Your long matted hair with the radiating white crescent moon. The sufferings of Your devotees who beg and pray before You reciting the sacred hymns glorifying Your holy feet, will be snapped immediately and throughout their life they will be free of shocking sorrows.

1695. எரியார்கணையாலெயிலெய்தவனே
விரியார்தருவீழ்சடையாயிரவிற்
கரிகடலினாய்கழிப்பாலையுளாய்
உரிதாகிவணங்குவனுன்னடியே. 8

எரி ஆர் கணையால் எயில் எய்தவனே!
விரி ஆர் தரு வீழ்சடையாய்! இரவில்
கரி கடலினாய்! கழிப்பாலை உளாய்!
உரிது ஆகி வணங்குவன், உன் அடியே.

eri Ar kaNaiyAl eyil eytavan2E!
viri Artaru vIzcaTaiyAy! iravil
kari kATalin2Ay! kazippAlai uLAy!
uritu Aki vaNagkuvan2, un2 aTiyE.

பொருள்: அக்கினித் தேவனைக் கூர்மையான அம்பாகக் கொண்டு அசுரர்களின் முப்புரங்களையும் எரித்து அழித்தவனே! நாற்புரமும் விரிந்த சடையினைக் கொண்டவனே! இரவில் சுடுகாட்டில் ஆடுவதில் மகிழ்பவனே! திருக்கழிப்பாலையுள் கோயில் கொண்டுள்ள உனது திருவடிகளை எப்போதும் நான் வணங்குவேன்.

குறிப்புரை: எரிஆர்கணை – அக்கினியை நுனியிற் பெற்ற திருமாலாகிய பாணம். எயில் – (முப்புரம்) மும்மதில். கரிகாடல் – கரிந்த காடு. காழிகாடலனே (பதி. 156 பா. 3) கழிகாடு ஆடவனே என்பதன் விகாரம் என்றாருமுளர். உரிது – உரியது.

Oh Civa! You are my Lord in Thiruk-kalip-paalai. You fixed the God of fire at the tip of Your arrow and shot it at the three flying fortresses of asuraas and burnt them into ashes. Your matted hair widely spreads on all the sides. During night hours You proceed to the burial ground and enjoy dancing there. You have Your abode in the temple in the city of Thiruk-kalip-paalai. I, Your servitor, will pray, write Your hymns and worship Your holy feet always.

1696. நலநாரணன்நான்முகன்நண்ணலுறக்
கனலானவனேகழிப்பாலையுளாய்
உனவார்கழலேதொழுதுன்னுமவர்க்
கிலதாம்வினைதானெயிலெய்தவனே. 9

நல நாரணன், நான்முகன், நண்ணல்உற,
கனல் ஆனவனே! கழிப்பாலை உளாய்!
உன வார் கழலே தொழுது உன்னுமவர்க்கு
இலதுஆம் வினைதான்; எயில் எய்தவனே!

nala nAraNan2, nAn2mukan2, naNNal uRa,
kan2al An2avan2E! kazippAlai uLAy!
un2a vAr kazalE tozutu un2n2umavarkku
ilatu Am, vin2aitAn2; eyil eytavan2E!

பொருள்: காத்தல் தொழிலைச் செய்யும் நாராயணனும் படைத்தல் தொழிலைச் செய்யும் பிரமனும் உனது அடிமுடி தேடிய பொழுது, அவர்கள் காண முடியாமல் ஒளி உருவாய் நின்றவனே! மதில்கள் மூன்றையும் அழித்தவனே! கழிப்பாலையுள் உறைபவனே! உன்னுடைய திருவடிகளையே நினைந்து தொழும் அடியவர்களுக்கு வினை இல்லை, துன்பம் இல்லையாம்.

குறிப்புரை: நலம் – காத்தற்றொழிலாகிய நன்மை. அழகும் ஆம். உள – உன்னுடைய (ஆறனுருபு பன்மை பார்க்க. தி. 2 ப. 2 பா. 1). உன்னுமவர் – தியானம் புரிபவர். எயில் எய்தவன் – திரிபுராரி. முப்புரமெரித்த முதல்வன். வினைதான் இலதாம் என்க.

Oh Civa! You are my Lord residing in Thiruk-kalip-paalai. Vishnu is the sole benefactor of all souls in the universe while his counterpart Brahma is fully responsible for creation of all the souls. These two great deities once wrangled between themselves for their superiority over each other, and finally decided whoever saw first Lord Civa's holy head and feet, would be deemed greater. They failed in spite of years of rummage by both. At this stage, You, my Lord You grew as a huge and tall inferno when those two got bewildered and prayed to You. Then You changed Your form and graced them. You destroyed the three fortress by Your mighty arrow. Oh my Lord! You are there in the temple in Thiruk-kalip-paalai. Devotees who worship You, recite hymns and meditate on You will not get the evil effects of karma and they will have no sufferings in their life forever.

1697. தவர்கொண்டதொழிற்சமண்வேடரொடுந்
துவர்கொண்டனநுண்துகிலாடையரும்
அவர்கொண்டனவிட்டடிகளுறையும்
உவர்கொண்டகழிப்பதியுள்குதுமே. 10

தவர் கொண்ட தொழில் சமண்வேடரொடும்
துவர் கொண்டன நுண்துகில் ஆடையரும்,
அவர் கொண்டன விட்டடு, அடிகள் உறையும்-
உவர் கொண்ட - கழிப்பதி உள்குதுமே.

tavar koNTa tozil camaNvETaroTum,
tuvar koNTan2a nuNtukil ATaiyarum,
avar koNTan2a viTTu, aTikaL uRaiyum--
uvar koNTa--kazippati uLkutumE.

பொருள்: சமணர்களும் சாக்கியர்களும் தவவேடம் கொண்டவர்கள். துவராடையை அணிந்தவர்கள். நல்லாடையை நீக்கிய அவர்களது சொற்களை நாங்கள் ஏற்கமாட்டோம். தேன் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கழிப்பாலையுள் கோயில் கொண்டுள்ள இறைவனாகிய உன்னை நாங்கள் வணங்குவோமாக.

குறிப்புரை: சமண் வேடர்க்குரிய தொழிலன்று. தவர் (தவத்தோர்)க்குரிய தொழிலைப் (போலியா)க் கொண்டவர். துவர் – பழுப்பு நிறம். நுண்துகில் – மெல்லிய துகில். துகில் – ஆடை; ஈண்டு இருபெயரொட்டு. அவர் – அப்புறச் சமயத்தார். கொண்டன – கொண்ட கொள்கைகள், வினையாலணையும் பெயர். அடிகள் – பரமேசுவரன். உவர் கொண்ட கழிப்பதி – உவர் நீர் கொண்ட கடற்கழியிலுள்ள பாலைப்பதி. உள்குதும் என முதற்பாட்டிற் கூறியதே முடிவிலுங் கூறியதால் சிறப்பாகத் தியானம் புரிதற்குரிய நலமென்றுணர்க. மூவர் திருப்பதிகங்களும் இத்தலத்தின் தனிச்சிறப்பை விளக்குகின்றன.

The Jains and the Buddhists preach penance. The Buddhists wear ochre robes. We do not listen to the preachings of these false saints and we shun their presence. Let us think always about this temple of sanctity, a holy place on the seashore which is the abode of our Lord and worship Him.

1698. கழியார்பதிகாவலனைப்புகலிப்
பழியாமறைஞானசம்பந்தனசொல்
வழிபாடிவைகொண்டடிவாழ்த்தவல்லார்
கெழியாரிமையோரொடுகேடிலரே. 11

கழி ஆர் பதி காவலனைப் புகலிப்
பழியா மறை ஞானசம்பந்தன சொல்
வழிபாடு இவை கொண்டு அடி வாழ்த்த வல்லார்,
கெழியார், இமையோரொடு; கேடு இலரே.

kazi Ar pati kAvalan2aip pukalip
paziyA maRai njAn2acampantan2a col
vazipATu ivai koNTu, aTi vAztta vallAr,
keziyAr, imaiyOroTu; kETu ilarE.

பொருள்: உப்பங்கழிகள் நிறைந்திருக்கும் திருக்கழிப்பாலைத் திருத்தலத்தில் கோயில் கொண்ட எம்பெருமானே! உன்னை உன் பெருமையை ஞானசம்பந்தப் பெருமான் உள்ளவாறு சொல்லிப் பாடிப் பாராட்டியுள்ளார். நாங்களும் அவர் பாடிய பாடல்களைப் பாடி உன்னை வணங்கித் தொழுவோர்கள் உன் அருளை நிறைவாகப் பெற்று தேவர்களோடு இணைந்து கேடிலராய் என்றும் வாழ்ந்திருப்பார்கள்.

குறிப்புரை: காவலன் – சிவபிரான். மறைஞானசம்பந்தன் என்ற திருப்பெயர். வேதநெறி தழைத்தோங்கப் புனிதவாய் மலர்ந்தழுத சிறப்பிற் பெற்றது. அகரம் – ஆறனுருபு பன்மை. வழிபாடு இவை – இத்திருப்பதிகப் பாடல் வழிபாடு. இமையோரொடு கெழியார் – வானோரொடு பொருந்தி விளங்குவார். கேடு இலர் – பிறவி முதலாய கேடு இல்லாதவராவர்.

Oh Civa! You are the Lord residing in the temple near the salt pans situated along the seashore of Thiruk-kalip-paalai. Our saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi, he is an expert in Vedas. He sang these ten sacred hymns on our Lord in Thiruk-kalip-paalai. Those devotees who worship You and recite these hymns before our Lord will become angels and join the celestials. They will have no evil effects of karma in their life forever.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

21ஆம் பதிகம் முற்றிற்று
End of 21st Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 158 பதிக எண்: 22

22. திருக்குடவாயில்

22. THIRUK-KUDA-VAAYIL

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

திருணபிந்து முனிவர்க்குச் சிவபெருமான் குடத்தின் வாயில் வெளிப்பட்டுக் குட்டநோய் தீர்த்தருளிய காரணம்பற்றி, இப்பெயர் பெற்றது என்பர். கும்பகோணத்திலிருந்து தென்கிழக்கில் 15 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. தஞ்சாவூர் – திருவாரூர் தொடர்வண்டிப் பாதையிலுள்ள கொரடாச்சேரி தொடர்வண்டி நிலையத்திலிருந்து வடக்கே 9 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரையில் தொண்ணூற்று நான்காவது தலமாகும். திருவாரூர் மற்றும் கும்பகோணம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகளில் செல்லலாம்.

இறைவரது திருப்பெயர் கோணேசுவரர். இறைவியாரது திருப்பெயர் பெரிய நாயகி. திருணபிந்து முனிவர் பூசித்து அமுதம் பெற்றுத் தானும் தன் தாயும் சாபம் நீங்கப் பெற்ற தலம். அது காரணமாகவே திருமதிலின்மேல் கருடன் உருவங்கள் வைக்கப் பெற்றுள்ளன. இத்தலத்தை ஞானசம்பந்தர் மட்டும் இரண்டு பதிகங்களில் பாடியுள்ளார். இங்குள்ள கோயில் பெருங்கோயில் (மாடக் கோயில்) அமைப்பு உடையது.

மகிழும் பெருமான் குடவாயின் மன்னி
நிகழும் பெங்கோயினி லாயவனே

என்னும் இவ்வூர்த் தேவாரப் பகுதியால் அறியலாம்.

பதிக வரலாறு

தமிழ் விரகர் அரதைப் பெரும்பாழி, திருச்சேறை, திருநாலூர் என்னும் தலங்களை வழிபட்ட பின், குடவாயிலை அடைந்து பெருங்கோயிலை வணங்கிப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1699. திகழுந்திருமாலொடுநான்முகனும்
புகழும்பெருமானடியார்புகல
மகிழும்பெருமான்குடவாயில்மன்னி
நிகழும்பெருங்கோயில்நிலாயவனே. 1

திகழும் திருமாலொடு நான்முகனும்
புகழும் பெருமான்; அடியார் புகல,
மகிழும் பெருமான் - குடவாயில் மன்னி
நிகழும் பெருங்கோயில் நிலாயவனே.

tikazum tirumAloTu nAn2mukan2um
pukazum perumAn2; aTiyAr pukala,
makizum perumAn2--kuTavAyil man2n2i
nikazum perugkOyil nilAyavan2E.

பொருள்: பெருமைமிக்க திருமாலும் நான்முகனும் புகழ்ந்து போற்றும் எம்பெருமான்; அன்புடன் அடியவர்கள் புகழ்ந்து பாடிட மகிழும் எம் பெருமான்; குடவாயில் என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள பெருங்கோயிலில் நிலையாகக் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: திகழும் – அவர் அவர்க்குள்ள புவனங்களில் விளக்கம் பெறும். புகல – விரும்பித் துதிக்க. நிகழும் – பிரசித்தி பெற்றுள்ள. (பா.11இல்) 'பெருங்கோயில்' என்று உணர்த்தியதால் ஆசிரியர் திருவுள்ளம் அதனது பெருமையில் ஈடுபட்டமை புலனாகும். வேறு சில தலங்களிலும் கோயிலின் பெருமை கூறப்பட்டுள்ளது.

Our deity Maha Vishnu who takes rest on the five-headed snake bed in the ocean, His counterpart the four-faced Brahma - these two deities themselves praise our Lord in Thiruk-kuda-vaayil. Our Lord is pleased to hear the recitations of the ardent devotees of this place. Our Lord has His abode in the great temple of tall towers called Perunth-thiru-koil in Thiruk-kuda-vaayil.

1700. ஓடுந்நதியும்மதியோடுரகம்
சூடுஞ்சடையன்விடைதொல்கொடிமேல்
கூடுங்குழகன்குடவாயில்தனில்
நீடும்பெருங்கோயில்நிலாயவனே. 2

ஓடும் நதியும், மதியோடு, உரகம்,
சூடும் சடையன்; விடை தொல்கொடிமேல்
கூடும் குழகன் - குடவாயில் தனில்
நீடும் பெருங்கோயில் நிலாயவனே.

OTum natiyum, matiyOTu, urakam,
cUTum caTaiyan2; viTai tol koTimEl
kUTum kuzakan2--kuTavAyil tan2il
nITum perugkOyil nilAyavan2E.

பொருள்: பாய்ந்து ஓடிவரும் நதியையும் ஊர்ந்து செல்லும் நிலாவையும் சீறும் பாம்பையும் சடையில் தரித்தவர்; இடபத்தை கொடியாக ஏந்தியும் இடபத்தின் மீது (அமர்ந்தும்) ஏறியும் காட்சி தருபவர்; எம்பெருமான் குடவாயில் திருத்தலத்தில் நிலைபெற்று இருப்பவரே.

குறிப்புரை: நதி – கங்கை. மதி – பிறை. உரகம் – பாம்பு. மார்பால் நகர்வது. உரம் – மார்பு. கம் – செலவு. தொல்கொடி – பழங்கொடி. கொடிமேல் விடைகூடும் என்றியைக்க. குடவாயில்தனில் நீடும் பெருங்கோயில் என்றதால், அதன் பழமையும் பெருமையும் விளங்கும்.

Behold! It is Civan, Lord of Thiruk-kuda-vaayil. He has adorned His head with the flowing river Ganges, the cool moon, and the dancing snake. He has inscribed the sign of His bull on His great old flag. He looks young and handsome in His manifestation. He is the inhabitant of the great temple of tall towers situated in Thiruk-kuda-vaayil.

1701. கலையான்மறையான்கனலேந்துகையான்
மலையாளவள்பாகமகிழ்ந்தபிரான்
கொலையார்சிலையான்குடவாயில்தனில்
நிலையார்பெருங்கோயில்நிலாயவனே. 3

கலையான்; மறையான்; கனல் ஏந்து கையான்;
மலையாள் அவள் பாகம் மகிழ்ந்த பிரான்;
கொலை ஆர் சிலையான் - குடவாயில் தனில்
நிலை ஆர் பெருங்கோயில் நிலாயவனே.

kalaiyAn2; maRaiyAn2; kan2al Entu kaiyAn2;
malaiyAL avaL pAkam makiznta pirAn2;
kolai Ar cilaiyAn2--kuTavAyil tan2il
nilar Ar perugkOyil nilAyavan2E.

பொருள்: பீதாம்பரதாரியாகிய திருமாலாகவும், மறைகள் ஓதிய பிரம்மாகவும் விளங்கும் எம்பெருமானே! கனலைக் கையில் ஏந்திய எம்பெருமானே! உமையாளை இடப்பாகத்தில் கொண்டு மகிழ்ந்து காட்சி தருபவரே! முப்புரத்தை எரிக்க மேருமலையை வில்லாக

வளைத்த எம்பிரானே! குடவாயில் தன்னில் மன்னும் பெருங்கோயிலில் நிலையாகக் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: கலையான் – பீதாம்பரதாரி, திருமால். மறையான் – வேதா ஆன பிரமன். கனல் – நெருப்பு. மலையாள் – இமாசல குமாரி. கொலை ஆர்சிலை – மேருமலையாகிய வில்லுக்குக் கொலை திரிபுரசங்கார கிருத்தியம். நிலை – திருக்கோபுர நிலை.

Behold! Civan is the Supreme Divinity in Thiruk-kuda-vaayil. Our Lord called 'Biruganaathar' manifests Himself as the Supreme Divinity in the renowned temple called Perunth-thiru-koil situated in the city of Thiruk-kuda-vaayil (God is one; we attribute to Him thousand names; we have in our mind that He has many assistants to help Him. Thiru-gnana-Sambandar in this poem describes the Lord of Biruganaathar representing Himself as under:)

1. Creator: As Brahma who recites the Vedas.
2. Protector: As Vishnu who wears very rich golden dress.
3. Destroyer: As Rudra holding fire in His hand.
4. Protector of Virtues: He shares half of His body with Uma, His consort to show grace.
5. Chastising action first and then grant of benign grace: Carries Meru Mountain (as bow) to destroy evil and to grant grace to non-evil doers.

1702. சுலவுஞ்சடையான்சுடுகாடிடமா
நலமென்முலையாள்நகைசெய்யநடம்
குலவுங்குழகன்குடவாயில்தனில்
நிலவும்பெருங்கோயில்நிலாயவனே. 4

சுலவும் சடையான்; சுடுகாடு இடமா,
நல மென்முலையாள் நகைசெய்ய, நடம்
குலவும் குழகன் - குடவாயில் தனில்
நிலவும் பெருங்கோயில் நிலாயவனே.

culavum caTaiyAn2; cuTukATu iTamA,
nala men2mulaiyAL nakaiceyya, naTam
kulavum kuzakan2--kuTavAyil tan2il
nilavum perugkOyil nilAyavan2E.

பொருள்: விரிந்து பரந்து விளங்கும் செஞ்சடையான்; சுடுகாட்டை இடமாகக் கொண்டு ஆடல் புரிபவர்; உமாதேவி மகிழுமாறு நடனம் புரிபவர்; குடவாயில் தலத்தில் அமைந்திருக்கும் பெருங்கோயிலில் நிலையாகக் கோவில் கொண்டவர்.

குறிப்புரை: சுலவும் – சுற்றும். நலம் – அழகு. நகைசெய்ய – மகிழ. சிரிக்க என்றுமாம். குழகன் – இளைஞன். நிலவும் – ஒளிவிடும். நிலா, நிலவு என்பன வெள்ளொளியைக் குறித்தல் அறிக.

Behold! It is Civan, the Lord of Thiruk-kuda-vaayil. His matted hair expands on all four sides. Now and then He goes to burial ground and dances there. His consort Uma with her soft breasts is pleased to see His dance. He likes dancing. He is young and handsome. He has His abode in the great temple of tall towers, in the city of Thiruk-kuda-vaayil.

1703. என்றன்னுளமேவியிருந்தபிரான்
கன்றன்மணிபோல்மிடறன்கயிலைக்
குன்றன்குழகன்குடவாயில்தனில்
நின்றபெருங்கோயில்நிலாயவனே. 5

என்தன் உளம் மேவி இருந்த பிரான்;
கன்றன்; மணி போல் மிடறன்; கயிலைக்-
குன்றன்; குழகன் - குடவாயில் தனில்
நின்ற பெருங்கோயில் நிலாயவனே.

en2tan2 uLam mEvi irunta pirAn2;
kan2Ran2; maNi pOl miTaRan2; kayilaik-
kun2Ran2; kuzakan2--kuTavAyiltan2il
nin2Ra perugkOyil nilAyavan2E.

பொருள்: என்னுடைய உள்ளத்தில் விரும்பி இருப்பவர்; நீலமணி போன்ற கரிய கண்டத்தைக் கொண்டு அருள்பவர்; கயிலை மலையை இடமாகக் கொண்ட அழகானவர்; அன்புடையவர்; குடவாயில் தலத்தில் அமைந்த பெருங்கோயிலில் கோயில் கொண்டவர்.

குறிப்புரை: என்றன் உளம் மேவி இருந்த பிரான் என்று சிவஞான முண்டார் அன்றி மற்று எவர் சொல்லத்தக்கார்? கன்றல்மணி – கன்றிய நீலமணி. கன்றன் – இளைஞன். மான் கன்றுடையவன்

எனலுமாம். மிடறன் – திருக்கழித்தினன். மிடற்றன் என்னற்பாலது ஒற்றிரட்டாது நின்றது. எயிறன், வயிறன், கயிறன் எனல்போல் (தி. 2 பா. 23 ப. 1) பார்க்க.

Behold! It is Civan, Lord of Thiruk-kuda-vaayil. He is pleased to be all pervasive in my heart holding a young deer in His hands; His neck portion shows negritude in appearance like a glistening gem; He rules over mount Kailash as Supreme God. He is youthful and attractive. He manifests Himself as the Supreme Divinity in the Perunth-thiru-koil of tall towers in the city of Thiruk-kuda-vaayil.

1704. அலைசேர்புனலன்னனலன்னமலன்
தலைசேர்பலியன்சதுரன்விதிரும்
கொலைசேர்படையன்குடவாயில்தனில்
நிலைசேர்பெருங்கோயில்நிலாயவனே. 6

அலை சேர் புனலன்(ன்); அனலன்(ன்); அமலன்;
தலை சேர் பலியன்; சதுரன்; விதிரும்
கொலை சேர் படையன் - குடவாயில் தனில்
நிலை சேர் பெருங்கோயில் நிலாயவனே.

alai cEr pun2alan2(n2); an2alan2(n2); amalan2;
talai cEr paliyan2; caturan2; vitirum
kolai cEr paTaiyan2--kuTavAyil tan2il
nilai cEr perugkOyil nilAyavan2E.

பொருள்: அலைகள் பொருந்திய கங்கை நதியைச் சடையில் தாங்கி அருள் செய்யும் எம்பெருமான்; நெருப்பைக் கையில் ஏந்திய ஈசன்; மும்மலம் அற்ற அமலன்; கபாலத்தைக் கையில் ஏந்தி பலிதேர்ந்து வருபவன்; ஆற்றல் நிறைந்தவன்; சூலப்படையை ஏந்திய எம்பெருமான்; குடவாயில் தன்னில் உள்ள பெருங்கோயிலில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: புனல் – கங்கை. அனல் – தீ. அமலன் – மும்மல மில்லாதவன். (எண் குணத்துள் ஒன்று) தலைசேர் பலியன் – பிரம கபாலத்திற் பலி பெறுபவன். சதுரன் – மூவர்க்கும் முதல்வன். விதிரும் – நடுங்கும். படை – திரிசூலம். மழுவாயுதம் முதலியன.

Behold! It is Civan, who is the Lord in Thiruk-kuda-vaayil. He keeps on His head the surging river Ganges. He holds a smoulder in one of His hands. He is completely detached from the effects of the three inherent evil passions of the soul. He

begs for alms in the skull held in His hand. He is the primordial God absolute. He holds in His hand the killing weapons of terror such as the three-leaved trident and the axe. He is manifested as the Supreme Divinity in the Perunth-thiru-koil of tall towers in the city of Thiruk-kuda-vaayil.

1705. அறையார்கழலன்னழலன்னியலின்
பறையாழ்முழவும்மறைபாடநடம்
குறையாவழகன்குடவாயில்தனில்
நிறையார்பெருங்கோயில்நிலாயவனே. 7

அறை ஆர் கழலன்(ன்); அழலன்(ன்); இயலின்
பறை யாழ் முழவும் மறை பாட, நடம்
குறையா அழகன் - குடவாயில் தனில்
நிறை ஆர் பெருங்கோயில் நிலாயவனே.

aRai Ar kazalan2(n2); azalan2(n2); iyalin2
paRai yAz muzavum maRai pATa, naTam
kuRaiyA azakan2--kuTavAyiltan2il
niRai Ar perugkOyil nilAyavan2E.

பொருள்: ஒலிக்கின்ற கழலைக் காலில் அணிந்தவன்; நெருப்பைக் கையில் ஏந்தியவன்; பறை, யாழ், முழவு போன்ற இன்னிசைக் கருவிகள் முழங்க, மறைபாட நடனமிடும் அடிகளாகிய எம்பெருமான் குடவாயில் தலத்தில் உள்ள பெருங்கோயிலில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: அறை – ஒலி. இயலின் பறை – இசையியலின் கண் அமைந்த வாத்தியம். நடம் – திருக்கூத்து. குறையா அழகன் – பூரணாலங்காரன்.

Behold! It is Civan, the Lord of Thiruk-kuda-vaayil. His anklets make musical sound whenever He dances. He holds a smoulder in one of His hands. His cosmic dance matches the musical tone of the recitation of Vedas as well as the sound of percussion instruments such as the drum with one sided instrument, the lute and the tabret. He is youthful, decorates Himself with ornaments and appears very attractive. He manifests Himself as the Supreme Divinity in the Perunth-thiru-koil of tall towers, in the city of Thiruk-kuda-vaayil.

1706. வரையார்திரள்தோளரக்கன்மடியவ்
வரையாரவொர்கால்விரல்வைத்தபிரான்
வரையார்மதில்சூழ்குடவாயில்மன்னும்
வரையார்பெருங்கோயில்மகிழ்ந்தவனே. 8

வரை ஆர் திரள்தோள் அரக்கன் மடிய(வ்)
வரை ஆர் ஓர் கால்விரல் வைத்த பிரான் -
வரை ஆர் மதில் சூழ் குடவாயில் மன்னும்
வரை ஆர் பெருங்கோயில் மகிழ்ந்தவனே.

varai Ar tiraLtOL arakkan2 maTiya(v)
varai Ar orkAlviral vaitta pirAn2--
varai Ar matil cUz kuTavAyil man2n2um
varai Ar perugkOyil makizntavan2E.

பொருள்: மலை போன்ற வலிய தோள்களைக் கொண்ட அரக்கனாகிய இராவணன் வருந்த உலகிலேயே பெரிய மலையாகிய கயிலாய மலையைத் தன் கால் விரலால் ஊன்றி அழுத்தியவர்; மலைபோன்ற உயர்ந்த மதில்கள் சூழ்ந்த குடவாயில் தலத்தில் என்றும் நிலையாக அமைந்த பெருங்கோயிலில் கோயில் கொண்டவர்.

குறிப்புரை: வரைஆர் – மலையை ஒத்த. வரை – கயிலை. ஆர் – சுமை (யாக அழுந்திப்) பொருந்த. வகரமெய்விரித்தல் விகாரம். வரை ஆர்மதில் – மலைகளைப் போல உயரிய மதில்கள். பெருங்கோயிலும் அத்தகையதே. வரையார் – வழிபாட்டை ஒழியாத அடியார் என்றும் உரைத்தல் கூடும். அரக்கன் – இராவணன்.

Behold! It is Civan, the Lord of Thiruk-kuda-vaayil. With his mountain like big and mighty shoulders and heads the king of Sri Lanka tried to lift mountain Kailash and keep it aside. Our Lord residing there pressed the top of this mountain with His toe and crushed Raavanan. Mountain-like very tall walls around all the big palaces were the fortifications of the city of Thiruk-kuda-vaayil. The mountain like big temple called Perunth-thiru-koil is the abode of our Lord in the big city of Thiruk-kuda-vaayil where He happily manifests Himself as the Supreme Divinity (Our boy saint Thiru-gnana-Sambandar uses the same word mountain in the beginning of the four lines of this verse and this is to be noted).

1707. பொன்னொப்பவனும்புயலொப்பவனும்
தன்னொப்பறியாத்தழலாய்நிமிர்ந்தான்
கொன்னற்படையான்குடவாயில்தனில்
மன்னும்பெருங்கோயில்மகிழ்ந்தானே. 9

பொன் ஒப்பவனும், புயல் ஒப்பவனும்,
தன் ஒப்பு அறியாத் தழல்ஆய் நிமிர்ந்தான்;
கொல்-நல் படையான் - குடவாயில் தனில்
மன்னும் பெருங்கோயில் மகிழ்ந்தானே.

pon2 oppavan2um, puyal oppavan2um,
tan2 oppu aRiyAt tazal Ay nimirntAn2;
kol-nal paTaiyAn2-kuTavAyil tan2il
man2n2um perugkOyil makizntavan2E.

பொருள்: பொன் போன்ற நிறமுடைய பிரமனும், மழை மேகம் போன்ற நிறமுடையவனும் அறியமுடியாதவாறு செந்தழல் பிழம்பாய் ஓங்கி உயர்ந்து நின்ற எம்பெருமான்; தீமைகளை அழிக்கும் கொடிய படைக்கலங்களைக் கையில் ஏந்தியவன்; குடவாயில் தலத்தில் மன்னும் பெருங்கோயிலில் கோயில் கொண்டவன்.

குறிப்புரை: பொன் ஒப்பவன் – பிரமன். புயல் ஒப்பவன் – கார்வண்ணன். மால், தன் ஒப்பு அறியாத் தழல் ஆய் நிமிர்ந்தான் – தனக்குவமை இல்லாதவனாகிச் சோதிப் பிழம்பாய் ஓங்கிப் பெருகிய பரசிவன். கொல்நல்படை – பா. 6ஐப் பார்க்க.

Behold! It is Civan, the Lord of Thiruk-kuda-vaayil. Vishnu coloured like strong clouds and the golden coloured Brahma were wrangling over their superiority over each other. They decided whosoever saw first the holy head and feet of Civan would be superior to the other. They both departed and made their search for years and failed. Then our Lord Biruganaathar rose like a huge and tall pillar-like flame without any beginning or end and non-comparable. These two secondary gods got bewildered and prayed to our Lord. Our Lord holds in His hand deadly, but benevolent war weapons. He manifests Himself as the Supreme Divinity in the Perunth-thiru-koil of tall towers in the city of Thiruk-kuda-vaayil.

1708. வெயிலின்நிலையார்விரிபோர்வையினார்
பயிலும்முரையேபகர்பாவிகள்பால்
குயிலன்குழகன்குடவாயில்தனில்
உயரும்பெருங்கோயிலுயர்ந்தவனே. 10

வெயிலின் நிலையார், விரி போர்வையினார்,
பயிலும்(ம்) உரையே பகர் பாவிகள்பால்
குயிலன்; குழகன் - குடவாயில் தனில்
உயரும் பெருங்கோயில் உயர்ந்தவனே.

veyilin2 nilaiyAr, viri pOrvaiyin2Ar,
payilum(m) uraiyE pakar pAvikaLpAl
kuyilan2; kuzakan2-kuTavAyiltan2il
uyarum perugkOyil uyarntavan2E.

பொருள்: வெயிலின் நிறம் போன்ற தூய காவி உடையினை அணிந்து கொண்டே சமணர்கள் செந்தழல் மேனியனாகிய சிவனைப் பழித்து உரைப்பர். அந்தப் பாவியரின் சொற்களில் பொருந்தி அமையாத குழகனே ஈசன் ஆவான். அவன் குடவாயில் தலத்தில் அமைந்த பெருங்கோயிலில் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: நிலையார் – நிற்றலை உடையவர். வெயில் காய்பவர் என்றபடி. உரை – பிறமத போதனை. குயிலன் – குயிலாதவன். பதியாதவன். குயிலல் – பதிதல். செய்தல், சொல்லல் எனல் இங்குப் பொருந்தாது.

Behold! It is Civan, the Lord of Thiruk-kuda-vaayil. The Jains cover their body with dress bright and shining during all the day. The Buddhists cover their body with fully spread ochre robes. They always preach their false philosophy to others. Our Lord is beyond all their sinful sayings as He is an embodiment of true wisdom. Our Lord is youthful and very attractive. He manifests Himself as the Supreme Divinity in the Perunth-thiru-koil of tall towers in the city of Thiruk-kuda-vaayil.

1709. கடுவாய்மலிநீர்குடவாயில்தனில்
நெடுமாபெருங்கோயில்நிலாயவனைத்
தடமார்புகலித்தமிழார்விரகன்
வடமார்தமிழ்வல்லவர்நல்லவரே.. 11

கடுவாய் மலி நீர் குடவாயில் தனில்
நெடு மா பெருங்கோயில் நிலாயவனை,
தடம் ஆர் புகலித் தமிழ் ஆர் விரகன்,
வடம் ஆர் தமிழ் வல்லவர் நல்லவரே.

kaTuvAy mali nIr kuTavAyil tan2il
neTu mA perugkOyil nilAyavan2ai,
taTam Ar pukalit tamiz Ar virakan2,
vaTam Ar tamiz vallavar nallavarE.

பொருள்: நீர்வளம் மிகுந்த குடவாயில் தலத்தில் உள்ள பெருங்கோயிலில் உறைகின்ற எம்பெருமானை, தோண்டிய இடமெல்லாம் நீர் ஊறுகின்ற தன்மைபோல, நினைத்த போதெல்லாம் தமிழ்பாடும் திருஞான சம்பந்தப் பெருமான் அன்புடன் பல பாக்கள் பாடி அருளியுள்ளார். அத்தமிழ்ப் பாடல்களைப் பாடவல்லார்கள் நல்லவர்களாவார்கள் என்க.

குறிப்புரை: கடுவாய் – வேகம் வாய்ந்த, நீர்மலி குடவாயில் என்று அதன் வளம் உணர்த்தியபடி. நெடுமாபெருங்கோயில் என்றது இப்பதிகம் முழுதும் கூறியவற்றால் உறுதிப்படுகின்றது. திருமுறைகளுள் பெருங்கோயிலையும் சிறுகோயிலையும் பிரித்துணர்த்துங் குறிப்பு மிகுதியாயுள்ளது. அதிகைமாநகர் என்பது முதலியவற்றை உணர்க. மாநகர் – பெருங்கோயில்.

Our boy saint Thiru-gnana-Sambandar is a very skilful exponent in Tamil language. He sang ten superb sacred songs in the reputed Tamil language on our Lord, who is manifested in the Perunth-thiru-koil of supreme grandeur. This temple is situated in Thiruk-kuda-vaayil which is a fertile and wealthy city with abundance of water everywhere. Those devotees who are capable of reciting these hymns of sacred Tamil are definitely good and respectable.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

22ஆம் பதிகம் முற்றிற்று
End of 22nd Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 159 *பதிக எண்: 23*

23. திருவானைக்கா 23. THIRU-VAA-NAIKKAA

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

திருவானைக்கா என்னும் இத்திருத்தலமானது யானை பூசித்துப் பேறு எய்தியதால் இப்பெயர் பெற்றது. இத்தலம் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் காவிரி வடகரையில் விளங்கும் தலமாகும். திருச்சிராப்பள்ளியிலிருந்து நகரப் பேருந்துகள் பல உள்ளன. இறைவரின் திருப்பெயர் நீர்த்திரள்நாதர். இத்திருப்பெயரை இவ்வூர்த் திருத்தாண்டகத்தில் அப்பர் பெருந்தகையார், 'செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேனே' என எடுத்து ஆண்டுள்ளார். இதுவன்றி ஜம்புகேசுவரர் என்று வேறு திருப்பெயரும் உண்டு. வெண்ணாவல் மரத்தின் அருகில் எழுந்தருளியிருப்பதால் இப்பெயர் பெற்றார். (ஜம்பு – நாவல்) இறைவியாரின் திருப்பெயர் அகிலாண்ட நாயகி. தலவிருட்சம் வெண்ணாவல். தீர்த்தங்கள் காவிரி, இந்திரதீர்த்தம், சந்திரதீர்த்தம் என்பன.

கோயில் ஐந்து பிரகாரம் கொண்ட பெரிய கோவில், ஆயிரங்கால் மண்டபம் உண்டு. முதல் மண்டபம் மிகச் சிறந்தது. சுவாமி சந்நிதி மேற்கு, அம்மன் சந்நிதி கிழக்கு. சுவாமி பிரகார மண்டபத்தில் கிழக்கு நோக்கியபடி நிஷ்டாதேவி உருவம் இருக்கிறது. இதனை சனீஸ்வரர் என்று தவறாக எழுதி இருந்தார்கள். நான்காவது மதில் (திருநீற்று மதில்) மிகப் பெரியது. இது பஞ்சபூதத் தலங்களுள் அப்புத்தலம் ஆகும். (அப்பு – தண்ணீர்) சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தில் நீர் ஊறி வருவது இன்றும் காணத்தக்கது. முற்பிறப்பில் சிலந்தியாய் இருந்து சிவபெருமானை வழிபட்ட புண்ணியத்தின் பயனாய் அரசனாய்ப் பிறந்த கோச்செங்கட்சோழனால் கட்டப்பெற்ற கற்றளியை உடையது. வெளிப்புறத்து மதிலுக்கு திருநீறு இட்டான் திருமதில் என்று பெயர்.

இறைவர் சித்தராய் எழுந்தருளித் திருநீற்றைக் கூலியாகக் கொடுத்து எடுப்பித்த காரணத்தால் அம்மதில் அப்பெயர் பெற்றது. திருக்கயிலையிலிருந்து எழுந்தருளி இறைவி இங்குத் தவஞ்செய்து ஞானோபதேசம் பெற்ற காரணத்தால் ஞானஸ்தலம் எனவும் இது வழங்கப்படும். உறையூர்ச் சோழர் மணியாரம் தரித்துக் கொண்டு காவிரியில் நீராடினார். அது ஆற்றில்

விழுந்துவிட்டது. உடனே அவர் 'சிவபெருமானே கொண்டருளும்' என வேண்டினார். அந்த மணியாரம் திருமஞ்சனக்குடத்தில் புக அதனை இறைவருக்கு அபிடேகிக்கும்போது அவர் அதனை ஆரமாக ஏற்றுக் கொண்டு சோழனுக்கு அருள் புரிந்ததும் இப்பதியேயாகும். இச்செய்தியை, சுந்தரமூர்த்தி நாயனார், இவ்வூர்ப் பதிகத்தில்,

'தாரமாகிய பொன்னித் தண்டுறையாடி விழுத்து
நீரினின்றடி போற்றி நின்மலர்க் கொள்ளென் வாங்கே
ஆரங்கொண்ட வெம்மானைக் காவுடையா தியைநாளும்'

எனவும், திருஞானசம்பந்தப் பெருமான்,

'ஆரம் நீரோ டேந்தினா னானைக்காவு சேர்மினே'

எனவும் சேக்கிழார் பெருமான், ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணத்தில்,

'வளவர் பெருமான் திருவாரஞ் சாத்திக் கொண்டு வரும் பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற
அளவில் திருமஞ் சனக்குடத்தி லதுபுக்காட்ட வணிந்தருளி
தளரு மவனுக் கருள்புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினார்'

எனவும் போற்றுவாராயினர்.

தலத்தின் பெருமையை உணர்த்தும் புராணப்பாடல் ஒன்று பின்வருமாறு:

'மேதகைய பயன்விழையோர் ஞானதலத்
துறைகுவது மேவாதாயின்
ஓதுக அத்தலப்பெயரை யாங்கதுவு முற்றாதே
காதலொடு கேட்டவரு மூவகைய பாதகமுங்
காதலொடு கேட்டவரு மூவகைய பாதகமுங்
கடந்துமேலாம்
போதமுணர்ந் தெமதடியிற் புக்கிருப்ப ரிஃதுண்மை
பொலங்கொம்பன்னாய்'

– திருவானைக்கா புராணம் – தலவிசேடப் படலம்.

பதிக வரலாறு

திருச்சிராப்பள்ளியினின்றும் புறப்பட்டுத் திருவானைக்காவை அடைந்த பெருமானார், அங்கு வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளை வணங்கி, யானை வழிபட்டதையும் கோச்செங்கட்சோழ நாயனார் செய்த அடிமையையும் அமைத்துப் பாடிய பண்ணுறு செந்தமிழ் மாலை இது.

திருச்சிற்றம்பலம்

1710. மழையார்மிடறாமழுவாளுடையாய்
உழையார்கரவாஉமையாள்கணவா
விழவாரும்வெண்நாவலின்மேவியஎம்
அழகாஎனுமாயிழையாளவளே. 1

*"மழை ஆர் மிடறா! மழுவாள் உடையாய்!
உழை ஆர் கரவா! உமையாள் கணவா!
விழவு ஆரும் வெண்நாவலின் மேவிய எம்
அழகா!" எனும் - ஆயிழையாள் அவளே.*

"mazai Ar miTaRA! mazuvAL uTaiyAy!
uzai Ar karavA! umaiyALkaNavA!
vizavu Arum veNnAvalin2 mEviya em
azakA!" en2um--AyizaiyAL avaLE.

பொருள்: மழை மேகம் போன்ற கரிய கண்டத்தை உடையவனே! மழுப்படையை ஏந்திய நாதனே! மானைக் கையில் ஏந்தியவனே! திருவானைக்கா திருத்தலத்தில் வெண்ணாவல் மரத்தடியில் அமர்ந்திருப்பவனே! உமையவளால் அழகன் என்று போற்றப்படும் பெருமானே! உம்மை வணங்குகிறேன்.

குறிப்புரை: மழை ஆர் மிடறா – மேகம்போலக் கறுத்த திருக்கழுத்தை உடையவனே! உழை – மான், புல்வாய், மரை, கவரிவேறு, உழை வேறு. கரவா – திருக்கையினை உடையவனே! விழவு – திருவிழாக்கள். வெண்நாவல் – ஜம்புகேச்சுரம். எம் அழகா என்னும் ஆயிழையாள் என்க. எனும் – என்று அழைப்பாள். ஆய் இழையாள் – நுண்ணிய வேலைப்பாடமைந்த ஆபரணத்தை அணிந்தவள். ஆராய்ந்திழைத்த இழையாள் எனலுமாம்.

Behold! It is Umaa, the goddess of Civan in the name of Akila-anda-easwari who came to this temple called Jambu-kech-charam in the town called Thiru-vaa-naikkaa.

She came from Mount Kailash, manifested herself here and worshipped Civan for the betterment of all the souls in the universe. The king of the Himalayan mountain called 'Parvatha Raajan' pronounces 'My daughter who wears golden jewellery made with intricate workmanship worships Lord Civan and praises Him by saying "Oh Lord Your neck looks like dark coloured clouds in the sky! You have the weapon axe in one of Your hands! In another hand You are holding a deer! You are my Lord - But people refer to You as the husband of Umaa! You are the most attractive one. You are manifest in the temple called Jambu-kech-charam where many religious festivals take place all through the year. Oh my Lord! I occupy half of Your physical stature and will be with You wherever You are. Occasionally on Your demand and permission I live elsewhere as a fully independent entity. As such I am now manifested in Jambu-kech-charam. Here I am now worshipping You and doing the rituals on my imaginary sand Lingam made by me. I do this all times during day and night, enjoying Your grace.

There is no dearth of Your grace for me ever. Likewise, I now appeal to You to kindly bestow Your grace on all the souls in the universe, imparting the ways and means for their virtuous life. This will enable them to get rid of the evil effects of their bad karma and aanava in their life, and also to get rid of the cycle of birth and death once forever. Thus my daughter recited these above words in Jambu-kech-charam and praised her Lord contemplating on Him always in her mind.

1711. கொலையார்கரியின்னுரிமூடியனே
மலையார்சிலையாவளைவித்தவனே
விலையாலெனையாளும்வெண்நாவலுளாய்
நிலையாஅருளாயெனுநேரிழையே. 2

"கொலை ஆர் கரியின்(ன்) உரி மூடியனே!
மலை ஆர் சிலையா வளைவித்தவனே!
விலையால் எனை ஆளும் வெண்நாவல் உளாய்!
நிலையா அருளாய்!" எனும் - நேரிழையே.

"kolai Ar kariyin2(n2) uri mUTiyan2E!
malai Ar cilaiyA vaLaivittavan2E!
vilaiyAl en2ai ALum veNnAval uLAy!
nilaiyA aruLAy!" en2um--nErizaiyE.

பொருள்: கொலைத்தன்மை மிக்க யானையைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்தவனே! மேருமலையை வில்லாக வளைத்தவனே! என்னை ஆண்டு கொண்டவனே! வெண்ணாவல் தலத்துள் பொருந்தியவனே! உமையவளால் எப்பொழுதும் 'அருள்பவன்' என்று போற்றப்படுபவனே உன்னை நான் வணங்குகின்றேன்.

குறிப்புரை: கரி – யானை, கரத்தை உடையது என்னுங் காரணத்தால் பெற்ற பெயர். உரி – தோல். மூடியன் – போர்வையன். மலை – மேரு கிரி. சிலை – வில். விலையால் – விலைக்குப் பெறும் அடிமைத்தன்மையால் (பா. 8) நேரிழை – அன்மொழித் தொகை.

Our goddess Uma, seriously performing the rituals and worshipping the Lord of Thiru-vaa-naikkaa who is known there as Jambu-naathar, praised her Lord as under:

"Oh Lord! You killed the mighty and fearceful elephant and covered Your body with its hide which You tore away from its body! You bent the big mountain Meru and You hold it in Your hand as whenever You need it. You condescend to grace me; but I humbly request you to grace the entire humanity of this universe in order to make them realise what they should do to be relieved of their bad karma in their life.

Oh my Lord! You are manifested in the Jambu-kech-charam temple a holy place in Thiru-vaa-naikkaa. Here a white Jambalonum tree exists. You grace Your devotees. Kindly grace the entire humanity also in the cosmos".

1712. காலாலுயிர்காலனைவீடுசெய்தாய்
பாலோடுநெய்யாடியபால்வணனே
வேலோடுகையாயெம்வெண்நாவலுளாய்
ஆலார்நிழலாயெனுமாயிழையே. 3

"காலால் உயிர் காலனை வீடுசெய்தாய்!
பாலோடு நெய் ஆடிய பால்வணனே!
வேல் ஆடு கையாய்! எம் வெண்நாவல் உளாய்!
ஆல் ஆர் நிழலாய்!" எனும் - ஆயிழையே.

"kAlAl uyir kAlan2ai vITu ceytAy!
pAlOTu ney ATiya pAlvaNan2E!
vEl ATu kaiyAy! em veN nAval uLAy!
Al Ar nizalAy!" en2um AyizaiyE.

பொருள்: உயிர்களைக் கவர்ந்து செல்லும் காலனைக் காலால் காய்ந்தவனே! பால் நெய் இவற்றால் நீராடப் பெற்றவனே! சூலப்படையினைக் கையில் ஏந்தியவனே! வெண்ணாவல் தலத்துள் மேவியவனே! உமையவளால் கல்லால மரத்தடியில் அறம் உரைத்தவன் என்று போற்றப்படுபவனே! உன்னை நான் போற்றுகின்றேன்.

குறிப்புரை: காலனைக் காலால் உயிர்வீடு செய்தாய் – யமனைத் திருவடியால் உதைத்து உயிரைப் போக்கியவனே. பால், நெய், தயிர் மூன்றும் சொல்லி நிறுத்தி. 'ஆனைந்து' என்பது சைவ சம்பிரதாயம். கோமயம், கோசலம் இரண்டும் திருமுறையுட் கூறப்படாமை அறிக. பால்வண்ணன் – இறைவனுக்கு இத்தலத்தில் வழங்கிய திருப்பெயர். வேல் – திரிசூலம். ஆர்ஆர்நிழலாய் – கல்லால மரத்தின் நிழலின்கண் வீற்றிருந்து அறம் உரைத்தவனே. ஆயிழை – அன்மொழித் தொகை.

The king of Himalayan mountain Parvatha Raajan said "My daughter while doing her daily religious sacred rituals, recites the glory of her Lord" as under:

"Oh my Lord! You killed the god of death 'Kaalan' by kicking him down with Your right leg! You enjoy Your bath given to You by Your servitors who use a mixture of milk, ghee and other things. Your body is already pure white in colour. It now brightens further with the use of milk. You hold the trident in one of Your hands! You manifested Yourself in the shade of the stone banyan tree and cleared the doubts of the four saints with the signs of Your hand.

Oh my Lord! You bless me and I am grateful to You. I request You to inspire all the souls to lead a virtuous life which will enable them to get rid of their aanavam and bad karma".

1713. சுறவக்கொடிகொண்டவனீறதுவாய்
உறநெற்றிவிழித்தவெமுத்தமனே
விறல்மிக்ககரிக்கருள்செய்தவனே
அறமிக்கதுவென்னுமெனாயிழையே. 4

"சுறவக் கொடி கொண்டவன் நீறுஅதுஆய்
உற, நெற்றி விழித்த எம் உத்தமனே!
விறல் மிக்க கரிக்கு அருள் செய்தவனே!
அறம் மிக்கது" எனும் - ஆயிழையே.

"cuRavak koTi koNTavan2 nIRu atu Ay
uRa, neRRi vizitta em uttaman2E!
viRal mikka karikku aruLceytavan2E!
aRam mikkatu" en2um--AyizaiyE.

பொருள்: மீன்கொடி ஏந்திவந்த மன்மதன் சாம்பலாகுமாறு நெற்றிக் கண்ணால் விழித்தவனே! பக்தி கொண்டு வழிபட்ட யானைக்கு அருளியவனே! என்னால் அறமிக்க செயல்களைச் செய்பவன் நீதான் என்று பாராட்டப் பெறுபவனே! உன்னை நான் வணங்குகிறேன்.

குறிப்புரை: கறவக்கொடி கொண்டவன் – மீன்கொடி உடைய மன்மதன். நீறு – சாம்பல். அது – பகுதிப்பொருள் அன்றி வேறு குறியாது, விகுதிபோல் நிற்பது. அவர் முதலியன அங்ஙனம் நில்லா என்பது தமிழ் மரபு. நீராய் உறவிழித்த உத்தமன் என்க. நெற்றி விழித்த – நெற்றிக்கண்ணால் விழித்த. நெற்றி – நெற்றிக்கண், இடவாகு பெயர். உத்தமன் – மேலவர்க்கும் மேலானவன். விறல் – வலிமை. கரி – யானை.

My daughter praises her Lord during her daily rituals as under:

"Oh Lord! You opened Your third eye in Your forehead and the fire that emitted from that eye darted towards Manmathan (cupid) and instantly burnt him into ashes. You graced the elephant that daily worshipped You and bathed You pouring water on Your head, through its trunk. A spider was spreading its web over Your head to prevent the dried leaves falling on Your head. The elephant was destroying the spider's web daily by pouring water over Your head through the spider's web. The spider became hot tempered over the action of the elephant and therefore entered into its trunk and started biting it fiercely. The elephant could not bear the pain and dashed its trunk again and again on the ground and died.

Oh Lord! You understood the sincerity of both. Therefore You graced the elephant. Of course You graced the spider also to become the king in its next birth in chola country. You are the holy of the holy. You are the embodiment of virtue. People speak of Your virtuous grace to all souls through me. You are the cleverest one!

Oh my Lord! You are manifested in the Jambu-kech-charam temple a holy place in Thiru-vaa-naikkaa. Here a white Jambalonum tree exists. You grace Your devotees. Kindly grace the entire humanity also in the cosmos".

1714. செங்கட்பெயர்கொண்டவன்செம்பியர்கோன்
அங்கட்கருணைபெரிதாயவனே
வெங்கண்விடையாயெம்வெண்நாவலுளாய்
அங்கத்தயர்வாயினளாயிழையே. 5

செங்கண் பெயர் கொண்டவன் - செம்பியர்கோன் -
அம் கண் கருணை பெரிதுஆயவனே!
வெங் கண் விடையாய்! எம் வெண்நாவல் உளாய்!
அங்கத்து அயர்வு ஆயினள், ஆயிழையே.

cegkaN peyar koNTavan2--cempiyarkOn2--
am kaN karuNai peritu Ayavan2E!
veg kaN viTaiyAy! em veN nAval uLAy!
agkattu ayarvu Ayin2aL, AyizaiyE.

பொருள்: முற்பிறப்பில் சிலந்தியாய் இருந்து வழிபட்ட உயிர் மறுபிறப்பில் செம்பியான் என்ற கோசோழனாய் அரச கோச்செங்கட்சோழன் என்ற திருப்பெயரோடு விளங்கிடப் பேரருள் புரிந்தவனே! இடப வாகனனே! வெண்ணாவல் கோயிலில் உறைபவனே! என்று பலவாறு மலைமகள் நைந்து கூவி உடல் சோர்வுற்றாள். உன்னை நான் வணங்குகின்றேன்.

குறிப்புரை: செங்கட் பெயர் – கோச்செங்கட்சோழன் என்னும் திருப்பெயர். செம்பியர்கோன் – சோழன். அம்கண் கருணை பெரிது ஆயவன் – கண்ணிற்கு அழகாகிய கருணையில் மிக்குள்ளவன் என்றவாறு. வெம்கண் – கண்ணில் விளங்கும் சினக்குறிப்பை உணர்த்துவது. சாதியிடை அங்கம் – உடம்பு. அவயவம் எனலுமாம். அயர்வு – சோர்வு. காதலால் நேர்ந்தது.

The Himalayan king Parvatha Raajan said "My daughter selected the best jewellery among the many and wore it and started her daily religious rituals and said, "Oh my Lord! You blessed the chola king Chembian, other wise called 'Koch-cheng-kann-aan' by giving him the most beautiful and bright reddish eyes at the time of his birth. For ever he was Your celebrated devotee and built big granite temples with entrance doors very small in order to prevent the elephants from entering into the temple. You have the bull with very fierce eyes for Your ride! You are manifested in the temple in Thiru-vaa-naikkaa". "Thus she praised Him in many ways and became enervated", said Parvatha Raajan.

1715. குன்றேயமர்வாய்கொலையார்புலியின்
தன்தோலுடையாய்சடையாய்பிறையாய்
வென்றாய்புரமூன்றைவெண்நாவலுளே
நின்றாயருளாயெனுநேரிழையே. 6

"குன்றே அமர்வாய்! கொலை ஆர் புலியின்-
தன் தோல் உடையாய்! சடையாய்! பிறையாய்!
வென்றாய், புரம் மூன்றை! வெண் நாவலுளே
நின்றாய், அருளாய்!" எனும் - நேரிழையே.

"kun2RE amarvAy! kolai Ar puliyin2-
tan2 tOl uTaiyAy! caTaiyAy! piRaiyAy!
ven2RAy, puram mUn2Rai! veN nAvaluLE
nin2RAy, aruLAy!" en2um--nErizaiyE.

பொருள்: கயிலாய மலையில் வீற்றிருப்பவனே! கொடிய புலியின் தோலை உடுத்தியவனே! நீண்ட சடாமுடியினைக் கொண்டவனே! பிறைநிலவைத் தலையில் தாங்கியவனே! முப்புரங்களையும் அழித்தவனே! வெண்ணாவல் தலத்துள் இருப்பவனே! அருள்வாயாக என்று உமாதேவி வேண்டுகின்றாள்.

குறிப்புரை: குன்று – கயிலை. புலியின்தன் தோல் என்றும் புரம்மூன்றையும் வென்றாய் என்றும் கொள்க. நின்றாய் – திருக்கோயில் கொண்டு வீற்றிருப்பவனே என்று எதிர்காலத்திற் கொள்க.

The Himalayan king Parvatha Raajan said, Oh! my daughter wears jewellery that befits her status and starts her daily rituals and worships her Lord riciting thus:

"Oh Lord! You are manifested on Mount Kailash! You wear the hide of the tiger which is a killer animal! You have decorated Your matted hair; the holy moon brightens Your head and hair. You destroyed the three forts of asuraas and killed those who lived there.

Thus my daughter recites these above words in Jambu-kech-charam praising her Lord and contemplates on Him always.

பாட்டு – 7: கிடைக்கப்பெறவில்லை

1716. மலையன்றெடுத்தவ்ரக்கன்முடிதோள்
தொலையவ்விரலூன்றியதூமழுவா
விலையாலெனையாளும்வெணாவலுளாய்
அலசாமனல்காயெனுமாயிழையே. 8

"மலை அன்று எடுத்த(வ்) அரக்கன் முடிதோள்
தொலைய(வ்) விரல் ஊன்றிய தூ மழுவா!
விலையால் எனை ஆளும் வெண்நாவல் உளாய்!
அலசாமல் நல்காய்!" எனும் - ஆயிழையே.

"malai an2Ru eTutta(v) arakkan2 muTitOL
tolaiya(v) viral Un2Riya tU mazuvA!
vilaiyAl en2ai ALum veNnAval uLAy!
alacAmal nalkAy!" en2um--AyizaiyE.

பொருள்: கயிலை மலையைப் பெயர்த்த அரக்கனாகிய இராவணனின் முடியையும் தோள்களையும் கால்விரலால் அழுத்தி முடிவில் அருள் செய்தவனே! தூய மழு என்ற ஆயுதத்தைக் கையில் ஏந்தியவனே! என்னை ஆட்கொள்ள வெண்ணாவல் மரத்தடியில் அமர்ந்தவனே! என்று உமாதேவியால் வணங்கப் பெறுபவனே! காத்தருள்வாயாக.

குறிப்புரை: அரக்கன் – இராவணன். தொலைய – நொறுங்க என்னும் பொருட்டாய் நின்றது. வகரமெய் விரித்தல் விகாரம் (பார்க்க பா. 2) அலசாமல் – அலைக்காமல். வருத்தாமல். நல்காய் – வந்து அணைந்து இன்பங்கொடுப்பாய். எனும் – என்பாள்.

Raavanan tried to move aside the Kailash hill where our Lord is manifested. Oh Lord! with Your toe, You pressed the top of the mountain and Raavanan's head and shoulders got crushed under the mountain! You hold the axe in one of Your hands! Oh Lord! to make me Your devotee, You have manifested Yourself under the Jambulonum tree, and grace me to become free from all trouble!

Thus my daughter recites these above words in Jambu-kech-charam and praises her Lord and contemplates on Him always.

1717. திருவார்தருநாரணன்நான்முகனு
மருவாவெருவாஅழலாய்நிமிர்ந்தாய்
விரையாரும்வெணவலுள்மேவியஎம்
அரவாஎனுமாயிழையாளவளே. 9

"திரு ஆர்தரு நாரணன், நான்முகனும்,
அருவா, வெருவா, அழல்ஆய் நிமிர்ந்தாய்!
விரை ஆரும் வெண்நாவலுள் மேவிய எம்
அரவா!" எனும் - ஆயிழையாள் அவளே.

"tiru Artaru, nAraNan2, nAn2mukan2um,
aruvA, veruvA, azal Ay nimirntAy!
virai Arum veNnAvaluL mEviya em
aravA!" en2um--AyizaiyAL avaLE.

பொருள்: திருமகளைப் பெற்ற திருமாலும் பிரமனும் நெருங்காநிலையில் அவர்கள் அஞ்சிட அழலாய் நின்றவனே! மணமிக்க வெண்ணாவல் மரத்தடியில் கோயில் கொண்டவனே! உமாதேவியால் அரனே என்று அழைக்கப்படும் எம்பெருமானே! உன்னை நானும் இறைஞ்சுகின்றேன்.

குறிப்புரை: திரு – இலக்குமி. மருவா – மருவி. வெருவா – அச்சத்தால் வாயால் அரற்றி (நிற்க) என்று ஒரு சொல் வருவித்து முடிக்க. வெருவி (நிற்க) அழலாய் நிமிர்ந்தாய் என்றபடி. விரை – மணம். அரவா – பாம்பணிந்தவனே. ஹர! வா எனலும் பொருந்தும். எம் அரனேயோ என்றென்று.

The king of the Himalayas Parvatha Raajan says "My daughter Umaa wears the choice ornaments and prays to her Lord as under:"

"Oh Lord! when the prosperous Vishnu came along with the god of Vedas near You to worship You, You turned Yourself into a tall and big immeasurable fiery column. They were confused and got afraid. Oh Lord! You are now manifested in Thiru-vaa-naikkaa in the temple, a holy place of white Jambulonum, god of serpents". Thus my daughter praises You, You are the Supreme Lord!

1718. புத்தர்பலரோடமண்பொய்த்தவர்கள்
ஒத்தவ்வுரைசொல்லிவையோரகிலார்
மெய்த்தேவர்வணங்கும்வெணாவலுளாய்
அத்தாஅருளாயெனுமாயிழையே. 10

"புத்தர் பலரோடு அமண்பொய்த்தவர்கள்
ஒத்த(வ்) உரை சொல் இவை ஓரகிலார்;
மெய்த் தேவர் வணங்கும் வெண்நாவல் உளாய்!
அத்தா அருளாய்!" எனும் - ஆயிழையே.

"puttarpalarOTu amaNpoyttavarkaL
otta(v) urai col ivai OrakilAr;
meyt tEvar vaNagkum veNnAval uLAy!
attA! aruLAy!" en2um--AyizaiyE.

பொருள்: புத்தர்களும் சமணர்களும் பொய்த்தவம் புரிபவர்கள். ஒன்றுபட்டு அவர்கள் சொல்லும் வார்த்தைகளை நம்ப வேண்டாம். மெய்த்தவர்களான தேவர்கள் புத்தரும் சமணரும் கூறுவனவற்றை ஏற்காமல் வெண்ணாவல் தலத்துள் கோயில் கொண்ட எம்பெருமானைப் புகழ்ந்து பாடுவார்கள். உமையவளால் அன்புடைய இறைவன் என்று போற்றப்படும் எம்பெருமானே! உன்னை வணங்கும் எனக்கு அருள்வாயாக!

குறிப்புரை: அமண் – சமணர். பொய்த்தவர்கள் – மெய்த்தவரல்லாதவர்கள். பொய்த்தவத்தை உடையவர்கள் என்று ஒரு மொழியும் தொடர்மொழியுமாக் கொள்ளலாம். ஒத்தவ்வுரை – வகரம் விரித்தல் விகாரம். ஓரகிலார் – உணரமாட்டார்.

Oh my Lord! the Buddhists, many in number and the Jains of false penance speak untruth. The true celestials do not heed to them. But pray to Your holy feet. My Lord at Thiru-vaa-naikkaa! My Master Supreme! shower Your grace on me and on all the good souls in the Universe". Thus my daughter Umaa, wearing carved jewellery prays to her Lord daily.

1719. வெணாவலமர்ந்துறைவேதியனைக்
கண்ணார்கமழ்காழியர்தந்தலைவன்
பண்ணோடிவைபாடியபத்தும்வல்லார்
விண்ணோரவரேத்தவிரும்புவரே. 11

வெண்நாவல் அமர்ந்து உறை வேதியனைக்,
கண் ஆர் கமழ் காழியர்தம் தலைவன்,
பண்ணோடு இவை பாடிய பத்தும் வல்லார்
விண்ணோர் அவர் ஏத்த விரும்புவரே.

veNnAval amarntu uRai vEtiyan2ai,
kaN Ar kamaz kAziyartam talaivan2,
paNNOTu ivai pATiya pattum vallAr
viNNOr avar Etta virumpuvarE.

பொருள்: வெண்ணாவல் திருத்தலத்தில் கோயில் கொண்டு அமர்ந்துள்ள எம்பெருமானை, ஞானம் கைவரப் பெற்ற ஞானசம்பந்தப் பெருமான் பண்ணோடு பத்துப் பாடல்களைப் பாடியருளி உள்ளார். அப்பத்துப் பாடல்களையும் உணர்ந்து அன்புடன் பாட வல்லவர்கள் தேவர்களாலும் விரும்பிப் புகழப்படுவார்கள்.

குறிப்புரை: வேதியன் – வேதத்தைப் படைத்த பரசிவன். வல்லவரை விண்ணோர் ஏத்த விரும்புவர் என்றபடி. கண்ணாருங்காழியர் (தி. 2 ப. 16 பா 11) என்றது காண்க. கண் – மூங்கில். வேணுவனம் ஞானக்கண் என்று கொண்டு அதையுடையார்க்கு ஆகுபெயராக்கலுமாகும். திருஞானசம்பந்த சுவாமிகள் பண்ணோடு பாடிய உண்மை ஈண்டும் புலனாகின்றது.

These ten hymns of melody have been sung by our divine saint Thiru-gnana-Sambandar hailing from Seerkaazhi, a holy place surrounded by bamboo forests on the Lord of Thiru-vaa-naikkaa. Those who recite these hymns with deep love of our Lord will be praised by the celestials.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

23ஆம் பதிகம் முற்றிற்று
End of 23rd Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 160 *பதிக எண்: 24*

24. திருநாகேச்சுரம் 24. THIRU-NAAKECH-CHURAM

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

ஐந்தலை அரவால் பூசிக்கப் பெற்ற கோயிலை உடையது ஆதலின் இப்பெயர் பெற்றது. இச்செய்தி இக்கோயிலுக்குரிய நாவுக்கரசரது திருக்குறுந்தொகையிலுள்ள (திருப்பாட்டு 4),

"ஐந்தலை யரவின் பணி கொண்டருள்
மைந்தர் போன்மணி நாகேச் சுவரரே"

என்ற தேவாரப் பகுதியால் அறியலாகும்.

மயிலாடுதுறை – கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில் திருநாகேச்சுரம் தொடர்வண்டி நிலையத்திலிருந்து தெற்கே சுமார் 2 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரிக்குத் தென்கரையிலுள்ள 29ஆவது தலமாகும். கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

இறைவர் திருப்பெயர் சண்பகாரணியர். இறைவி திருப்பெயர் குன்றமுலைநாயகி. தீர்த்தம் சூர்யபுஷ்கரிணி. ஐந்தலை நாகமன்றி, சந்திர சூரியர்களால் பூசிக்கப்பெற்றது. தெய்வப் பாக்கிழாராகிய சேக்கிழார் தமது ஊராகிய குன்றத்தூரில் ஒரு கோயில் எடுப்பித்து அதற்குத் திருநாகேச்சுரம் என்று பெயர் வைத்துள்ளமை இதை நன்கு புலப்படுத்தும்.

திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டு, திருநாவுக்கரசு நாயனாரது பதிகம் மூன்று, சுந்தரமூர்த்தி நாயனாரது பதிகம் ஒன்று ஆக ஆறு பதிகங்களைப் பெற்ற பெருமை உடையது. நாளும் வணங்குவார் பிணி தீர்க்கும் பெற்றியுடையது.

"நாளு நாதனமர் கின்ற நாகேச்சுர நண்ணுவார்
கோளு நாளுந் தீயவேனு நன்காங் குளிக்கொண்மினே"

என்னும், இக்கோயில் சம்பந்தர் தேவாரப்பகுதி சிந்திக்கற்பாலது.

பதிக வரலாறு

ஆதிசேடன், சிவராத்திரியொன்றில், நான்கு யாமங்களிலும் முறையே திருவலஞ்சுழி, திருநாகேச்சுரம், திருப்பாம்புரம், திருநாகைக்காரோணம் என்னும் நான்கு திருத்தலங்களையும் அடைந்து பூசித்த வரலாறு 'மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி' என்பதிற் குறித்தருளினார் அருண்மொழித்தேவர். அவற்றுள் ஒன்றான திருநாகேச்சுரத்தில் காழிப்புரவலனார் சென்று பரவுவார் பிணிதீர்க்கும் தலம் போற்றிப் பாடியது இது.

திருச்சிற்றம்பலம்

1720. பொன்நேர்தருமேனியனேபுரியும்
மின்நேர்சடையாய்விரைகாவிரியின்
நன்நீர்வயல்நாகேச்சரநகரின்
மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே. 1

"பொன் ஏர்தரு மேனியனே புரியும்
மின் நேர் சடையாய்! விரை காவிரியின்
நன்நீர் வயல் நாகேச்சு ரநகரின்
மன்னே!" என, வல்வினை மாய்ந்து அறுமே.

"pon2 Ertaru mEn2iyan2E! puriyum
min2 nEr caTaiyAy! virai kAviriyin2
nan2nIr vayal nAkEccuranakarin2
man2n2E!" en2a, valvin2ai mAyntu aRumE.

பொருள்: பொன் போன்ற அழகிய மேனியை உடையவன் என்றும், மின்னல் போன்ற ஒளியுடைச் சடையன் என்றும், காவிரி பாயும் நன்னிலமாகிய திருநாகேச்சுர நகரில் கோயில் கொண்டவன் என்றும், என்றும் நிலையானவன் என்றும் எம்பெருமானைப் போற்றி வணங்குபவர்களின் வினைகள் நீங்கப்பெறும் என்க.

குறிப்புரை: பொன் ஏர் தரு மேனியன் – பொன்னைப்போல ஒளிரும் திருமேனியுடையவன். ஏர் – உவமவுருபு, விரை (காவிரி) நீர் – விரைந்தோடும் (காவிரி) நீர். நீர்வயல் – நீர் நிலவளம் உணர்த்தியவாறு. மன்னே – இறைவனே. வல்வினை மாய்ந்து அறும் என்றதுபோல இத்திருப்பதிகம் முழுதும் பாடி அருளியதால் இத்தலவழிபாடு நம் பழவினைப் பற்றறுக்கும் என்பது உறுதியாதலறிக. என – என்று துதிக்க. மேலும் இவ்வாறே கொள்க.

Oh my Lord! You have the golden coloured attractive body. You have the shining, matted, red coloured beautiful hair. The river Cauvery, full of sweet smelling water, overflows the paddy fields. The city is surrounded by plenty of rich fields with profuse water. Oh Lord! You are manifested in this holy city and grace Your servitors. I worship Your holy feet. I know for certain that the evil effects of my bad karma will definitely be snapped and my sufferings will vanish.

1721. சிறவார்புரமூன்றெரியச்சிலையில்
உறவார்கணையுய்த்தவனேயுயரும்
நறவார்பொழில்நாகேச்சரநகருள்
அறவாஎனவல்வினையாசறுமே. 2

"சிறவார் புரம்மூன்று எரியச் சிலையில்
உற வார்கணை உய்த்தவனே! உயரும்
நறவு ஆர் பொழில் நாகேச்சுர நகருள்
அறவா!" என, வல்வினை ஆசு அறுமே.

"ciRavAr puram mUn2Ru eriyac cilaiyil
uRa vArkaNai uyttavan2E! uyarum
naRavu Ar pozil nAkEccuranakaruL
aRavA!" en2a, valvin2ai Acu aRumE.

பொருள்: முப்புரங்களை ஆண்ட அசுரர்களை அழிக்க, மேருமலையை வில்லாகவும், திருமாலை நீண்ட அம்பாகவும் கொண்டு செலுத்தியவனே, தேன்பொழியும் உயர்ந்த மரங்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பெற்ற திருநாகேச்சுர நகருள் கோயில் கொண்டவனை, தருமசொரூபியானவனைத் துதிப்பவர்களின் வினைகள் நீங்கும் என்க.

குறிப்புரை: சிறவார் – சிறக்காதவர் (திரிபுத்தசுரர்). சிலையில் உற – மேருவில்லிற் பொருந்த. வார்கணை – நீண்ட அம்பு. உய்த்தவன் – செலுத்தியவன். உயரும் பொழில். நறவு ஆர் பொழில். நறவு. கள், தேன். நகர் – திருக்கோயில். அறவா – தருமசொரூபி. ஆசு – குற்றம்.

The three asuraas called Thiri-puraththu-asurar who had no good conduct lived in the three flying forts with their followers. Our Lord of Thiru-naakech-churam used the Meru mountain as His bow and deputed Thirumaal to become the long arrow of His bow and shot at the three forts and completely destroyed them along with the

people. Oh Lord! You are now manifested in the holy temple in Thiru-naakech-churam. This city is surrounded by big gardens of nectarined flowers. You are the embodiment of all virtuous dispositions. Those devotees who worship Your holy feet will get rid of all the evil effects of their bad karma.

1722. கல்லால்நிழல்மேயவனேகரும்பின்
வில்லானெழில்வேவவிழித்தவனே
நல்லார்தொழுநாகேச்சரநகரில்
செல்வாவெனவல்வினைதேய்ந்தறுமே. 3

"கல்லால்நிழல் மேயவனே! கரும்பின்-
வில்லான் எழில் வேவ, விழித்தவனே!
நல்லார் தொழும் நாகேச்சுர நகரில்
செல்வா!" என, வல்வினை தேய்ந்து அறுமே.

"kallAl nizal mEyavan2E! karumpin2-
villAn2 ezil vEva, vizittavan2E!
nallAr tozum nAkEccuranakaril
celvA!" en2a, valvin2ai tEyntu aRumE.

பொருள்: கல்லால மரத்தின் அடியில் எழுந்தருளியவன் என்றும், கரும்பு வில்லைக் கொண்ட மன்மதனை எரித்தவன் என்றும், நன்னெறியாகிய சிவஞானத்தையும் நற்பண்புகளையும் உடைய நல்லவர்கள் தொழுகின்ற திருநாகேச்சுர நகரில் கோயில் கொண்டருள்பவன் என்றும், எல்லாச் செல்வங்களும் பொருந்தப் பெற்றவன் என்றும், ஈசனைத் தொழுபவர்களின் வினைகள் தேய்ந்து நீங்கிவிடும் என்க.

குறிப்புரை: கல் ஆல் நிழல் மேயவன் – கல்லாலின் நிழலில் வீற்றிருந்தவன். கரும்பின் வில்லான் – கரும்பை வில்லாகவுடைய மன்மதன். எழில் – அழகு. ஆகுபெயராய் உடம்பைக் குறித்தது. விழித்தவன் – தீ விழி திறந்து எரித்தவன். நல்லார் – நன்னெறியாகிய சிவஞானத்தை உடையார். நற்பண்புடையாருமாம். செல்வா – சென்றடையாத திருவுடையானே.

Oh Lord! You taught all the unknown wisdom to four of Your servitors by manifesting Yourself under a stone banyan tree. You opened Your third eye and burnt the good looking god of love, Manmathan, who carried the sugarcane as his bow. The devotees with good manners and thorough knowledge of Saiva Neri worship Your holy

feet at Thiru-naakech-churam. You are the abode of all wealth. Those who worship You, citing these details, will get rid of the evil effects of their bad karma, for karma fades and dissolves completely when we worship Civa wholeheartedly.

1723. நகுவான்மதியோடரவும்புனலும்
தகுவார்சடையின்முடியாய்தளவம்
நகுவார்பொழில்நாகேச்சரநகருள்
பகவாஎனவல்வினைபற்றறுமே. 4

"நகு வான்மதியோடு அரவும் புனலும்
தகு வார்சடையின் முடியாய்! தளவம்
நகு வார் பொழில் நாகேச்சுர நகருள்
பகவா!" என, வல்வினை பற்று அறுமே.

"naku vAn2matiyOTu aravum pun2alum
taku vArcaTaiyin2 muTiyAy! taLavam
naku vAr pozil nAkEccuranakaruL
pakavA!" en2a, valvin2ai paRRu aRumE.

பொருள்: ஒளிமிக்க சந்திரனையும், சீறும் பாம்பையும், வேகமாக ஓடிவரும் கங்கை நதியையும் தன்சடையில் பொருந்துமாறு இருக்கச் செய்தவனே! செம்முல்லை மலர்கள் நிறைந்து விளங்கும் திருநாகேச்சுர தலத்துள் கோயில் கொண்ட இறைவனே! என உன்னை அன்புடன் தொழுபவர்களின் வினையினால் வரும் பற்றுக்கள் நீங்கப்பெறும் என்க.

குறிப்புரை: நகு – விளங்குகின்ற. வான்மதி – விண்ணிலூரும் திங்கள். வெண்டிங்களுமாம். அரவு – பாம்பு. புனல் – கங்கை. தகு – தக்க. வார் – நீண்ட. தளவம் – முல்லை. நகுவார் – பல்லைக் காட்டிச் சிரிப்பார் (போலப்பூக்கும் பொழில்) தளவம் நகும்வார் பொழில் எனல் வெளிப்படை. பகவா – கடவுளே, ஷாட்குண்யனே.

The fascinating crescent moon creeping in the sky, the snake and the Ganges river have adorned Your matted long hair. With all these three You are very attractive. This city is surrounded by long-stretching gardens full of aralian jasmine flowers in their bloom; it appears as though the flowers show their teeth and laugh. My Lord, You are now manifested in Thiru-naakech-churam, You are my absolute; I bow at Your holy feet; I am sure my evils are stripped off.

1724. கலைமான்மறியுங்கனலும்மழுவும்
நிலையாகியகையினனேநிகழும்
நலமாகியநாகேச்சரநகருள்
தலைவாஎனவல்வினைதானறுமே. 5

"கலைமான்மறியும் கனலும் மழுவும்
நிலைஆகிய கையினனே! நிகழும்
நலம் ஆகிய நாகேச்சுர நகருள்
தலைவா!" என, வல்வினைதான் அறுமே.

"kalaimAn2maRiyum kan2alum mazuvum
nilai Akiya kaiyinanE! nikalum
nalam Akiya nAkEccuranakaruL
talaivA!" en2a, valvin2aitAn2 ARumE.

பொருள்: துள்ளிக் குதித்தோடும் மான்மறியையும், நெருப்பையும், மழுவாயுதத்தையும், நிலையாகக் கையில் ஏந்தியவனே! நலம் நிறைந்த திருநாகேச்சுர தலத்துள் விளங்கும் தலைவனே! என அன்புடன் வணங்குபவர்களின் வல்வினைகள் தாமே நீங்கப் பெறும்.

குறிப்புரை: கலைமான்மறி – ஆண் மான்கன்று. கனல் – தீ. மழு – மழுவாயுதம். நிலை – நிற்றல். நிகழும் நலம் – உலகப் பிரசித்தி பெற்ற வினை தீர்தலாகிய நன்மை. நகர் – திருக்கோயில்.

Oh Lord of Thiru-naakech-churam! You hold in one of Your hands the male deer, in another hand a ball of fire and in the third hand an axe permanently. You are manifested in Thiru-naakech-churam, a place renowned for blessings, gracing the devotees for their welfare. My God! I bow at Your holy feet saying all these. I know that my evils are snapped off.

1725. குரையார்கழலாடநடங்குலவி
வரையான்மகள்காணமகிழ்ந்தவனே
நரையார்விடையேறுநாகேச்சரத்தெம்
அரைசேயெனநீங்குமருந்துயரே. 6

"குரை ஆர் கழல் ஆட நடம் குலவி,
வரையான்மகள் காண, மகிழ்ந்தவனே!
நரை ஆர் விடை ஏறும் நாகேச்சுரத்து எம்
அரைசே!" என, நீங்கும், அருந்துயரே.

"kurai Ar kazal ATa naTam kulavi,
varaiyAn2 makaL kANa, makizntavan2E!
narai Ar viTai ERum nAkEccurattu em
araicE!" en2a, nIgkum, aruntuyarE.

பொருள்: மலையரசன் மகளாகிய பார்வதிதேவி கண்டு மகிழ ஒலிக்கின்ற வீரக்கழல்கள் அணிந்து, நடனம் ஆடி மகிழ்ந்தவனே! வெண்மை நிறம் கொண்ட இடப வாகனத்தில் ஏறி இருந்து அருள்பவனே! திருநாகேச்சுர நகரத்தில் கோயில் கொண்ட அரசே! என்றெல்லாம் போற்றி வணங்கும் தொண்டர்களின் அருந்துயரங்கள் நீங்கும் என்க.

குறிப்புரை: குரை – ஒலி. நடம் – நிருத்தம். வரையான் – இமாசலராசன். நரை – வெண்மை. ஆர் – பொருந்திய. விடையேறு (தொல்காப்பியம், மரபியல் சூ. 37, 38). அரைசு – மொழியிடை நின்ற ஐகாரம் போலி. அரசனே என்று விளித்தது. நீங்குதற்கு அரிய துயரமும் நீங்கும் என்றவாறு.

Oh my God of Thiru-naakech-churam! You were delighted to please our goddess Paarvathi Devi, daughter of the Himalayan mountains, making her witness Your celestial cosmic dance, with ringing anklets and the accompanying music supreme. You mount on the white bull whenever You want to move about. Oh King of Thiru-naakech-churam! Those devotees who address You in this prayerful way will find their bitter sufferings gone forever.

1726. முடையார்தருவெண்டலைகொண்டுலகில்
கடையார்பலிகொண்டுழல்காரணனே
நடையார்தருநாகேச்சரநகருள்
சடையாஎனவல்வினைதானறுமே. 7

"முடை ஆர்தரு வெண்தலை கொண்டு, உலகில்
கடை ஆர் பலி கொண்டு உழல் காரணனே!
நடை ஆர் தரு நாகேச்சுர நகருள்
சடையா!" என, வல்வினைதான் அறுமே.

"muTai Artaru veNtalai koNTu, ulakil
kaTai Ar pali koNTu uzal kAraNan2E!
naTai Ar taru nAkEccuranakaruL
caTaiyA!" en2a, valvin2aitAn2 aRumE.

பொருள்: பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி, தாருகாவனத்து முனிவர்களின் வீட்டு வாசல்களின்முன் பலி தேர்ந்து நிற்பவனே! எல்லாவற்றுக்கும் காரணகர்த்தாவாக விளங்கும் ஈசனே! ஒழுக்கம் நிறைந்தவர்கள் வாழும் திருநாகேச்சுர தலத்துள் கோயில் கொண்டிருப்பவனே! என்றெல்லாம் உன்னைப் போற்றி வணங்குபவர்களின் வினைப் பயன்கள் தாமே நீங்கப் பெறும்.

குறிப்புரை: முடை – புலால், நாற்றமுமாம். கடை – கடை வாயில். காரணம் – முதல்வன். நடை – ஒழுக்கம். சடையா – (ஞானமான) சடையனே. நுண்சிகை ஞானமாம்.

Oh my Lord of Thiru-naakech-churam! You are the prime cause of all thoughts, words and deeds; but You carry in Your hands the skull of Brahma and roam all over the world, particularly around the residence of the rishis of Daaruga forest, begging for alms. We are unable to understand Your above action. You the Lord of matted hair! You have manifested Yourself in Thiru-naakech-churam where people of good morality and discipline abide. Those devotees who pray to our Lord saying these words will be free of all their evils.

1727. ஓயாதஅரக்கனொடிந்தலற
நீயாரருள்செய்துநிகழ்ந்தவனே
வாயாரவழுத்துவர்நாகேச்சரத்
தாயேயெனவல்வினைதானறுமே. 8

"ஓயாத அரக்கன் ஒடிந்து அலற,
நீ ஆர் அருள் செய்து நிகழ்ந்தவனே!
வாய் ஆர வழுத்துவர் நாகேச்சுரத்
தாயே!" என, வல்வினை தான் அறுமே.

"OyAta arakkan2 oTintu alaRa,
nIr Ar aruL ceytu nikazntavan2E!
vAy Ara vazuttavar nAkEccurat
tAyE!" en2a, valvin2aitAn2 aRumE.

பொருள்: ஆணவ மலம் மிகப் பெற்ற அரக்கனாகிய இராவணனை ஆற்றல் இழந்து அலறச் செய்தவனே! உன்னை அன்புடன் விளங்கும் அடியார்களுக்கு அருள்புரிபவனே! நாகேச்சுர நகருள் கோயில் கொண்ட தாயானவனே! என உன்னை வணங்குபவர்களின் வினைகள் தாமே நீங்கும் என்க.

குறிப்புரை: ஓயாத – (தான் செய்யும் குற்றத்தை உணர்தற்கு உணர்வில்) நுணுகாத, இடைவிடாத என்றலுமாம். நீ – தேவரீர். ஆரருள் – பூரணகருணை வாயார வழுத்துவர் – வாயாரப் பாடுந்தொண்டர். தாயே – தாயாய் முலையைத் தருவானே (முத்தி நிச்சயப் பேருரை பக்கம் 78–9, 192–3இல் உள்ள விளக்கம் பார்க்க) (தி. 2 ப. 86 பா. 4 குறிப்புரை காண்க).

Raavanan, the king of Sri Lanka, out of arrogance, fought ceaselessly against his enemies. He committed wrong actions also against You. Therefore, You punished him severely, crushing his heads and shoulders. When he screamed and prayed for mercy, You showed him compassion with the kind heart of a mother. Mentioning this incident, devotees will refer to You as the 'Mother templed at Thiru-naakech-churam!' Such devotees who worship You in this way will be freed of their bad karma.

1728. நெடியானொடுநான்முகன்நேடலுறச்
சுடுமாலெரியாய்நிமிர்சோதியனே
நடுமாவயல்நாகேச்சரநகரே
இடமாவுறைவாயெனஇன்புறுமே. 9

"நெடியானொடு நான்முகன் நேடல் உற,
சுடு மால் எரிஆய் நிமிர் சோதியனே!
நடு மா வயல் நாகேச்சுர நகரே
இடமா உறைவாய்!" என, இன்பு உறுமே.

"neTiyAn2oTu nAn2mukan2 nETal uRa,
cuTu mAl eri Ay nimir cOtiyan2E!
naTu mA vayal nAkEccuranakarE
iTamA uRaivAy!" en2a, in2pu uRumE.

பொருள்: திருமாலும், நான்முகனும் அடிமுடி தேடிட பெருநெருப்பாய் நிமிர்ந்து ஓங்கிய சிவபெருமானே! வயல் வளம் நிறைந்த திருநாகேச்சுரத் தலத்துள் கோயில் கொண்டு அருள்பவனே! என்றெல்லாம் உன்னைப் புகழ்ந்து கூறிடும் அடியவர்கள் என்றும் இன்புறுவார்கள்.

குறிப்புரை: நெடியான் – விக்கிரமன்; திருமால். நேடல் – அடிமுடி தேடுதல். மால் – பெரிய. சோதியன் – தீப்பிழம்பானவன். நடு – நாற்று நடுகின்ற. மாவயல் – நீள் கழனி. நகரே இடமா உறைவாய் – திருக்கோயிலே உறையுளாக எழுந்தருளியவனே. இன்பு – இம்மை மறுமை வீட்டின்பம்.

Lord Vishnu and the four faced Brahma were roaming all over the cosmos to see Your head and feet. Then You rose as an immeasurable light with full brightness. Those two were bewildered. Oh my Lord! You have chosen to be always manifested in the temple in Thiru-naakech-churam where the many rich paddy fields bring all the fertility. The devotees who say this will be in bliss always.

1729. மலம்பாவியகையொடுமண்டையதுண்
கலம்பாவியர்கட்டுரைவிட்டுலகில்
நலம்பாவியநாகேச்சரநகருள்
சிலம்பாஎனத்தீவினைதேய்ந்தறுமே. 10

*மலம் பாவிய கையொடு மண்டை அது உண்-
கலம்பாவியர் கட்டுரை விட்டு, "உலகில்
நலம் பாவிய நாகேச்சுர நகருள்
சிலம்பா!" என, தீவினை தேய்ந்து அறுமே.*

malam pAviya kaiyoTu maNTai atu uN-
kalampAviyar kaTTurai viTTu, "ulakil
nalam pAviya nAkEccura nakaruL
cilampA!" en2a, tIvin2ai tEyntu aRumE.

பொருள்: சமணர்கள் குற்றம் நிறைந்தவர்கள். மனிதர்களின் மண்டை ஓட்டில் ஊன் ஏற்று உண்டு வாழ்பவர்கள். அவர்கள் கூறும் தப்பான உரைகளை அடியவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம். நலம் நிறைந்த நாகேச்சுர நகரத்துள் கோயில் கொண்டுள்ள சிலம்பணிந்த சிவபெருமானே எனப் போற்றி வணங்குவோரின் தீவினைகள் எல்லாம் நீங்கப் பெறும்.

குறிப்புரை: மலம் – அழுக்கு. பாவிய – பரவிய. மண்டை – உணவு கொள்ளும் பொருட்டு. விரிந்த பனையோலை முதலியவற்றால் செய்யப்பட்டது. உண்கலம் – உண்ணும் பாத்திரம். பாவியர் – தீவினை உடையவர். கட்டுரை – கட்டிச் செல்லும் பொய்ம்மொழி. சிலம்பா – சிலம்பு அணிந்தவனே. கயிலை மலையானை.

The Jains utter words which cannot be relied upon; they eat their food with impure hands using mud vessels. Oh Lord of Thiru-naakech-churam! Your devotees of this place neglect the words of those evil men. You are manifested in Thiru-naakech-churam where all goodness prevails for ever. The ankleted Lord of Mount Kailash!

residing at Thiru-naakech-churam, a place abounding in bliss and goodness - those who glorify You in such words will find their bad karma fading and fleeing.

1730. கலமார்கடல்சூழ்தருகாழியர்கோன்
தலமார்தருசெந்தமிழின்விரகன்
நலமார்தருநாகேச்சரத்தரனைச்
சொலமாலைகள்சொல்லநிலாவினையே. 11

கலம் ஆர் கடல் சூழ்தரு காழியர்கோன் -
தலம் ஆர்தரு செந்தமிழின் விரகன் -
நலம் ஆர்தரு நாகேச்சுரத்து அரனைச்
சொலல் மாலைகள் சொல்ல நிலா, வினையே.

kalam Ar kaTal cUztaru kAziyarkOn2--
talam Artaru centamizin2 virakan2--
nalam Artaru nAkEccurattu aran2aic
colal mAlaikaL colla, nilA, vin2aiyE.

பொருள்: மரக்கலன்கள் நிறைந்த கடல் சூழ்ந்த சீர்காழிப் பதியில் அவதரித்த செந்தமிழ் விரகராகிய ஞானசம்பந்தப் பெருமான், நாகேச்சுர நகரில் கோயில் கொண்ட சிவபெருமானைப் புகழ்ந்து போற்றி பத்துப் பாடல்கள் அருளி உள்ளார். அப்பாடல்களை உணர்ந்து அன்புடன் பாட வல்லவர்களின் வினைகள் தாமே நீங்கும் என்க.

குறிப்புரை: கலம் – மரக்கலம். தலம் – சிவதலம். விரகன் – வல்லவன், அறிஞன். சொலல் – சொல்லுதலை உடைய, புகழுடைய. சொல் – புகழ். சொல்ல – இசையுடன் பாட, வினை நில்லா என்க.

The town Seerkaazhi is on the bank of the seashore where a number of ships float and ply about. Our skilful Thiru-gnana-Sambandar hails from this place. He is a great exponent of pure classical Tamil songs. These garlands of pure words were sung on the Lord of Thiru-naakech-churam where goodness overflows. Those devotees who recite these ten verses in chaste musical note before our Lord of Thiru-naakech-churam will be relieved of all evils instantly.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

24ஆம் பதிகம் முற்றிற்று
End of 24th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 161 *பதிக எண்: 25*

25. திருப்புகலி

25. THIRUP-PUKALI

பண் : இந்தளம் – வினாஉரை

Pann: Indhalam - Vinaa Urai

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

1731. உகலியாழ்கடலோங்குபாருளீர்
அகலியாவினையல்லல்போயறும்
இகலியார்புரமெய்தவன்னுறை
புகலியாநகர்போற்றிவாழ்மினே. 1

உகலி ஆழ்கடல் ஓங்கு பார் உளீர்! -
அகலியா வினை அல்லல் போய் அறும் -
இகலியார் புரம் எய்தவன்(ன்) உறை
புகலியா நகர் போற்றி வாழ்மினே!

ukali AzkaTal Ogku pAruLIr!--
akaliyA vin2ai allal pOy aRum--
ikaliyAr puram eytavan2(n2) uRai
pukali mA nakar pORRi vAzmin2E!

பொருள்: பகைமை உணர்வு மிகக்கொண்டு திரிபுரங்களை ஆண்டு வந்த கொடிய அசுரர்களை அழித்த புண்ணியன் சிவபெருமான் ஆவர். அவர் புகலி என்று சொல்லப்படும் சீர்காழித் தலத்தில் கோயில் கொண்டுள்ளார். கடல் சூழ்ந்த உயர்ந்த உலகில் வாழும் அடியவர்களாகிய நீங்கள் ஈசனையே போற்றி வாழுங்கள், உங்கள் வினைகளும் துன்பங்களும் நீங்கிவிடும்.

குறிப்புரை: உகலி – தாவி (உகளி என்பதன் போலி) உகுதலை உடைய எனலுமாம். ஆழ் – ஆழ்ந்த. பார் – பூமி. உளீர் – உள்ளவர்களே. வினை அகலியா – வினைகள் பெருகாமல் ஒழியும். அல்லல் போய் அறும். இகலியார் – பகைவர். புகலியாம் நகர் – சீகாழித் திருக்கோயிலை. போற்றி – வழிபட்டு. வாழ்மின் – இன்ப வாழ்க்கை எய்துங்கள்.

People living in this world Thirup-pukali which is surrounded by roaring deep sea with waves dashing the shores may listen. Our Supreme Lord Civan destroyed the three flying fortresses of the asuraas who were opposed to Him. All of you come here to this city of Thirup-pukali where our Lord is manifested. Praise this great city called Thirup-pukali which is generally known as Seerkaazhi and offer worship and pray at His holy feet, your evils and sufferings will be wiped out.

1732. பண்ணியாள்வதோரேற்றர்பால்மதிக்
கண்ணியார்கமழ்கொன்றைசேர்முடிப்
புண்ணியன்னுறையும்புகலியை
நண்ணுமின்நலமானவேண்டிலே. 2

*பண்ணி ஆள்வது ஓர் ஏற்றர், பால்மதிக்-
கண்ணியார், கமழ் கொன்றை சேர் முடிப்
புண்ணியன்(ன்), உறையும் புகலியை
நண்ணுமின், நலம் ஆன வேண்டிலே!*

paNNi ALvatu Or ERRar, pAlmatik-
kaNNiyAr, kamaz kon2Rai cEr muTip
puNNiyan2(n2), uRaiyum pukaliyai
naNNumin2, nalam An2a vENTilE!

பொருள்: இடப வாகனத்தில் அமர்ந்து அருள்பவரும், வெண்ணிற நிலவைத் தலையில் அணிந்தவரும், கொன்றை மாலையைத் தலையில் அணிந்தவரும், புண்ணியம் பொருந்தியவருமாகிய சிவபெருமான் புகலித் தலத்தில் கோயில் கொண்டுள்ளார். அடியவர்களே! அவரை அன்புடன் வழிபட்டு உங்களுக்கு வேண்டியவற்றை அடைவீர்களாக.

குறிப்புரை: பண்ணி – அலங்காரம் செய்து. ஏறி ஊர்வது இங்கு ஆள்வதாயிற்று. ஏற்றா – எருதுடையவர். மதிக்கண்ணி – பிறையாகிய கண்ணி தலையிற் சூடுவதும் காம்புகளை ஒருபால் வைத்துக் கட்டுவதுமாகிய பூங்கண்ணியாகப் பிறையைக் கொண்டவன் சிவன். நலம் ஆன – நலங்களானவை. வேண்டில் – விரும்பினால்.

Those who are really interested in getting all the desirable things needed in your life and also the blessings of our Supreme Lord Civan, may come to the city of Pukali at

the earliest. Our Lord Civan is manifested in this city. He rides on His vehicle, the bull, decorated with many attractive things which carries Him all over the cosmos. He has adorned His head with the white crescent moon. He wears on His head the garland made of cassia flowers. If You worship the Lord of Pukali with great love You will be blessed by Him with all that You require for a good life.

1733. வீசுமின்புரைகாதன்மேதகு
பாசவல்வினைதீர்த்தபண்பினன்
பூசுநீற்றினன்பூம்புகலியைப்
பேசுமின்பெரிதின்பமாகவே. 3

வீசும் மின் புரை காதல் மேதகு
பாச வல்வினை தீர்த்த பண்பினன்,
பூசும் நீற்றினன், பூம் புகலியைப்
பேசுமின், பெரிது இன்பம் ஆகவே!

vIcum min2 purai kAtal mEtaku
pAca valvin2ai tIrtta paNpin2an2,
pUcum nIRRin2an2, pUm pukaliyaip
pEcumin2, peritu in2pam AkavE!

பொருள்: அடியவர்களே! உங்களது தீர்க்க முடியாத வினைகளை எல்லாம், எம்பெருமான் மின்னல் வீசுவது போன்று கண நேரத்தில் நீக்கி அருளுவான். திருநீறு பூசியவனாகிய அவன் புகலியூரில் கோயில் கொண்டுள்ளான். நீங்கள் அந்தப் புகலியூர் எம் பெருமானையே போற்றி வழிபட்டு பேரின்பம் பெறுவீர்களாக.

குறிப்புரை: வீசும் மின் புரை – வீசுகின்ற மின்னலை ஒத்த. பெரிது ஆகப் பேசுமின் என்க. பெரிது இன்பம் – பேரின்பம் எனலுமாம்.

People of this world may understand that our Supreme Lord Civan is manifested in the holy city of Poompukali, a very sacred place. He has smeared white ashes all over His body. He wears on His ears brilliant lightning-like jewellery. He is the embodiment of great virtues that could destroy the evil effects of our karma in a second. Therefore, understand these factors of our Lord Civan, praise the city of Pukali and His greatness, and worship His holy feet, You will attain great bliss.

1734. கடிகொள்கூவிளமத்தம்வைத்தவன்
படிகொள்பாரிடம்பேசும்பான்மையன்
பொடிகொள்மேனியன்பூம்புகலியுள்
அடிகளையடைந்தன்புசெய்யுமே. 4

கடி கொள் கூவிளம் மத்தம் வைத்தவன்,
படி கொள் பாரிடம் பேசும் பான்மையன்,
பொடி கொள் மேனியன், பூம் புகலியுள்
அடிகளை அடைந்து அன்பு செய்யுமே!

kaTi koL kUviLam mattam vaittavan2,
paTi koL pAriTam pEcum pAn2maiyan2,
poTi koL mEn2iyan2, pUm pukaliyuL
aTikaLai aTaintu an2pu ceyyumE!

பொருள்: எம்பெருமான், சிறப்புமிக்க வில்வ இலை, ஊமத்தமலர் இவற்றைத் தன் தலையில் கொண்டவன். அன்பு கொண்ட அடியவர்களிடம் பேசும் தன்மையன். திருநீற்றை மேனியில் பூசியவன். பூம்புகலியுள் கோயில் கொண்டவன். அடியவர்களே! அவன்மீது அன்பு கொண்டு அவனது திருவடிகளை வணங்குவீர்களாக.

குறிப்புரை: கடி – மணம். கூவிளம் – வில்வம், மத்தம் – ஊமத்தம் பூ. படி – உருவம் (நாற்றம் உடைமை ஆகிய) பண்புமாம். பாரிடம்– பூமி. படிகொள் பாரிடம் – பெரிய உருவங்கொண்ட பூதகணங்கள் என்பதும் பொருந்தும். பொடி – திருநீற்றுப் பொடி. அன்பு – பக்தி.

All of you should know that our Lord Civan manifests Himself in Poompukali. He has adorned His head with fragrant Indian Bael leaves and Datura flowers. He has smeared His body with white ashes. He is approachable to His bhutas as well as to His disciples, who are attached to Him, and He would talk to them. Therefore, you devotees all over this universe! go to the admirable holy city of Pukali and show your deep devotion to Him.

1735. பாதத்தாரொலிபல்சிலம்பினன்
ஓதத்தார்விடமுண்டவன்படைப்
பூதத்தான்புகலிந்நகர்தொழ
ஏதத்தார்க்கிடமில்லையென்பரே. 5

பாதத்து ஆர் ஒலி பல்சிலம்பினன்,
ஓதத்து ஆர் விடம் உண்டவன், படைப்-
பூதத்தான், புகலி(ந்) நகர் தொழ,
ஏதத்தார்க்கு இடம் இல்லை என்பரே.

pAtattu Ar oli palcilampin2an2,
Otattu Ar viTam uNTavan2, paTaip-
pUtattAn2, pukali(n)nakar toza,
EtattArkku iTam illai en2parE.

பொருள்: எம்பெருமான், தன் திருவடிகளில் சிலம்புகளைப் பொருத்தமுற அணிந்தவன். பாற்கடலில் தோன்றிய விடத்தினை அருந்தி அருளியவன். பூத கணங்களைப் படையாகக் கொண்டவன். புகலியூரில் பொருந்தி இருப்பவன். அவனை அன்போடு தொழுவார்க்கு துன்பமே இல்லை.

குறிப்புரை: பாதத்து – திருவடிகளில். ஆர் – பொருந்திய. ஒலி – ஒலிக்கின்ற. ஓதத்து – பாற்கடலில். படைப்பூதத்தான் – பூதப்படை உடையவன். ஏதத்தார்க்கு – துன்பத்திற்கு. ஏதம் – துன்பம். இங்கு ஆர் விகுதி இழிவு பற்றியது. பசியார் என்பது போன்றதொரு வழக்கு.

People of this universe may realise for their good that our Lord Civan manifests Himself in this holy city of Pukali. He wears suitable anklets on His legs. He drank the poison, which came out of the ocean of milk. He owns big army of bhutas, dwarfish goblins to obey and carry out His orders. Those who go to this holy city of Thirup-pukali, reach His temple and pray to Him with sincere devotion will find that there is no room in their lives for sins and the resulting afflictions.

1736. மறையினானொலிமல்குவீணையன்
நிறையினார்நிமிர்புன்சடையனெம்
பொறையினானுறையும்புகலியை
நிறையினாற்றொழநேசமாகுமே. 6

மறையினான் ஒலி மல்கு வீணையன்,
நிறையின் ஆர் நிமிர் புன்சடையன், எம்
பொறையினான், உறையும் புகலியை
நிறையினால்-தொழ, நேசம் ஆகுமே.

maRaiyin2An2 oli malku vINaiyan2,
niRaiyin2 Ar nimirpun2 caTaiyan2, em
poRaiyin2An2, uRaiyum pukaliyai
niRaiyin2Al-toza, nEcam AkumE.

பொருள்: ஈசன், நான்மறைகளை அருளியவன்! இனிய ஒலி எழும் வீணையைத் தடவி பாடுபவன். நிமிர்ந்த சடையினைக் கொண்டவன்! எம் பூஜைக்கு என்றும் உரியவன். திருப்புகலியூரில் கோயில் கொண்டவன்! சிவனையன்றி வேறு ஒருவரையும் வழிபாட்டிற்குக் கொள்ளாத அன்பினால் மனநிறைவுடன் தொழும் அடியவர்களுக்கு நேசன் ஆவான்.

குறிப்புரை: மறையினான் – வேதகர்த்தா. வீணையன் – மிக நல்ல வீணை தடவி. நிறை – நிறைவு. பொறை – பொறுமை. எட்டுப் பூக்களுள் ஒன்று. ஞானபூஜைக்குரியது. நிறை – சிவனையன்றி வேறு ஒன்றும் வழிபாட்டிற்குக் குறிக்கோளாகக் கொள்ளாத கற்பு. நேசம் – அன்பு.

People of this world may listen. Our Lord Civan, manifested in this holy city of Thirup-pukali, is the embodiment of the Vedas. He plays on the Indian lute which gives out melodious music; He has adorned His red matted hair by keeping it firm and straight. He considers our patience as the flower we offer to Him at His holy feet. If you hold in your mind Civan as the only object of your deep devotion He will become your ardent lover.

1737. கரவிடைமனத்தாரைக்காண்கிலான்
இரவிடைப்பலிகொள்ளுமெம்மிறை
பொருவிடையுயர்த்தான்புகலியைப்
பரவிடப்பயில்பாவம்பாறுமே. 7

கரவுஇடை மனத்தாரைக் காண்கிலான்
இரவுஇடைப் பலி கொள்ளும் எம் இறை,
பொரு விடை உயர்த்தான், புகலியைப்
பரவிட, பயில் பாவம் பாறுமே.

karavu iTai man2attAraik kANkilAn2,
iravu iTaip pali koLLum em iRai,
poru viTai uyarttAn2, pukaliyaip
paraviTa, payil pAvam pARumE.

பொருள்: சிவபெருமான், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை விரும்பான். அன்புடையவர்களை நாடிச் சென்று இரவிலும் பலி தேர்வான். இடப வாகனத்தில் அமர்ந்திருப்பான். திருப்புகலியிலும் கோயில் கொண்டு உள்ளான். அவனைப் புகழ்ந்து போற்றிட நம் பாவங்கள் நீங்கும்.

குறிப்புரை: கரவு – வஞ்சகம். பொருவிடை – இடபக்கொடி உயர்த்தவன் – எடுத்துப் பிடித்தவன். பரவிட – வாழ்த்த. பாறும் – அழியும்.

People of this world should know that our Supreme Lord Civan is manifested in the temple at Thirup-pukali. He does not care to look at those false devotees, who are fraudulent and hypocritic. He goes out at night for begging alms from his devotees. He is our Supreme God. His flag contains the figure of a bull beautifully inscribed. Come to Pukali to pray our Lord in the temple praise His virtues and worship Him, your tormenting sins will disappear.

1738. அருப்பினார்முலைமங்கைபங்கினன்
விருப்பினானரக்கன்னுரஞ்செகும்
பொருப்பினான்பொழிலார்புகலியூர்
இருப்பினானடியேத்திவாழ்த்துமே. 8

அருப்பின் ஆர் முலை மங்கை பங்கினன்,
விருப்பினான் அரக்கன்(ன்) உரம் செகும்
பொருப்பினான், பொழில் ஆர் புகலிஊர்
இருப்பினான், அடி ஏத்தி வாழ்த்துமே!

aruppin2 Ar mulai magkai pagkin2an2,
viruppin2An2 arakkan2(n2) uram cekum
poruppin2An2, pozil Ar pukali Ur
iruppin2An2, aTi Etti vAzttumE!

பொருள்: அன்புடைய உமையவளைத் தன் இடபாகத்தில் கொண்டவனே எம்பெருமான். மலையை எடுத்த அரக்கன் இராவணனின் செருக்கை அடக்கியவன் எம்பெருமான். சோலைகள் நிறைந்த புகலியூரில் கோயில் கொண்டவன் சிவபெருமான். அவனது திருவடிகளை வணங்கிப் போற்றுவோமாக!

குறிப்புரை: அருப்பு – அரும்பு. ஆர் – ஒத்த. விருப்பினான் – பக்தன். உரம் – வலிமை. செகும் – அழிக்கும். பொருப்பு – மலை. இருப்பு – வாசம். விருப்பு, பொருப்பு இருப்பு மூன்றும் இன்சாரியையும் ஆன விகுதியும் பெற்றுப் பெயரடியாகப் பிறந்த பெயராயின. விருப்பும் இருப்பும் தொழிற்பெயர்.

People of this world, may make a vow to come to Pukali, where our Lord Civan is manifested. He forms a corporate body with His consort Umaa on the left side of His body and is called Arthanaareeswarar. Her breast is attractive resembling the lotus bud. Raavanan was a deeply devoted servitor of our Lord Civan, yet he developed haughtiness in his mind and indulged in misdeeds. Therefore our Lord Civan manifested in the Himalayas, reduced his misused strength. Our Lord manifests Himself also in Pukali, a sacred place surrounded by gardens. Ye people! come and bow at His feet.

1739. மாலுநான்முகன்றானும்வார்கழற்
சீலமும்முடிதேடநீண்டெரி
போலுமேனியன்பூம்புகலியுள்
பாலதாடியபண்பனல்லனே. 9

மாலும், நான்முகன் தானும், வார் கழல்
சீலமும் முடி தேட, நீண்டு எரி
போலும் மேனியன் - பூம் புகலியுள்
பால்அதுஆடிய பண்பன் - அல்லனே?

mAlum, nAn2mukan2tAn2um, vAr kazal
cIlamum muTi tETa, nINTu eri
pOlum mEn2iyan2--pUm pukaliyuL
pAl atu ATiya paNpan2--allan2E?

பொருள்: திருமாலும் நான்முகனும் அறியாமையால் செருக்குடன் அடிமுடி தேடிய பொழுது நீண்ட நெருப்பாய்த் தோன்றி அருளியவன் சிவபெருமான். நெருப்பு போன்ற சிவந்த மேனியன் சிவபெருமான். திருப்புகலியூரில் பொருந்தியவன் சிவபெருமான். பால் அபிடேகத்தை விரும்பி ஏற்கும் புண்ணியன் (பண்பு நிறைந்தவனே) சிவபெருமான். அவனைப் போற்றி வணங்குவோமாக.

குறிப்புரை: கழல்சீலம் – திருவடிப்பான்மை. சீலமோ உலகம் போலத் தெரிப்பரிது (சித்தியார் 50). முடியும் என்று உம்மைக் கூட்டிக் கொள்க. எரிபோலும் மேனியன் – தீ வண்ணன். பாலது ஆடிய – பாலால் அபிடேகம் செய்யப் பெற்ற. நல்லன் – சிவன். அல்லனே என வினாவாக் கொள்ளலும் அமையும். புகலி உட்பாலது ஆடிய என்பதற்குத் திருப்புகலியின் உட்பக்கத்திலுள்ள திருக்கோயிலில் திருக்கூத்தியற்றிய எனலுமாம்.

Thirumaal and the four faced Brahma left their place and went out to reach and worship our Lord's sacred head and holy feet. They tried their best for years and failed in their attempts. At that time our Lord Civan rose as an infinite column of big fire and stood before these two. They were bewildered. He feels happy to reside in the fascinating town of Pukali and to have a sacred bath with milk and other related materials. Come and bow at His feet. He will do all good to you.

1740. நின்றுதுய்ப்பவர்நீசர்தேரர்சொல்
ஒன்றதாகவையாவுணர்வினுள்
நின்றவன்நிகழும்புகலியைச்
சென்றுகைதொழச்செல்வமாகுமே. 10

நின்று துய்ப்பவர், நீசர்தேரர், சொல்
ஒன்றுஅதுஆக வையா உணர்வினுள்
நின்றவன் நிகழும் புகலியைச்
சென்று கைதொழ, செல்வம் ஆகுமே.

nin2Ru tuyppavar, nIcartErar, col
on2Ru atu Aka vaiyA uNarvin2uL
nin2Ravan2 nikazum pukaliyaic
cen2Ru kaitoza, celvam AkumE.

பொருள்: சமணர்களும், சாக்கியர்களும் தவறான நெறியில் நின்று சிவனைப் பழித்துக் கொண்டிருப்பர். அவர்களது சொற்கள் தவறானவை. அதனை சிவனடியார்கள் ஏற்க மாட்டார்கள். அடியவர்கள் தம் உணர்வினுள் பொருந்தி நிற்கும் பூம்புகலியூர் உறையும் சிவனையே ஏத்தி வழிபடுவார்கள் அதுவே நற்செல்வமாம் என்க.

குறிப்புரை: துய்ப்பவர் – உண்பவர். நின்றுண்போர் எனப்பிற இடங்களில் வருதலும் காண்க (பதிகம் 38.95). நின்றுண் சமணர் இருந்துண்தேரர் (பதிகம் 71). ஒன்று – ஒருபொருள். வையா – வைத்து மதிக்காத. செல்வம் – இம்மை, மறுமை. வீட்டுக்குரிய செல்வங்கள்.

The people of this world may come to Pukali. This city is the abode of our Lord Civan. The Jains eat food they beg from others. The Buddhists also behave like the Jains. These two races could not comprehend our Lord Civan. Their false statements will not be listened to by our devotees and they do not care about these two races. They who pray only at the holy feet of our Lord Civan who resides at Thirup-pukali will get all real wealth for the present life and for future life in heaven.

1741. புல்லமேறிதன்பூம்புகலியை
நல்லஞானசம்பந்தன்நாவினாற்
சொல்லும்மாலையீரைந்தும்வல்லவர்க்
கில்லையாம்வினையிருநிலத்துளே. 11

புல்லம்ஏறிதன் பூம் புகலியை,
நல்ல ஞானசம்பந்தன் நாவினால்
சொல்லும் மாலை ஈர்ஐந்தும் வல்லவர்க்கு
இல்லைஆம் வினை, இரு நிலத்துளே.

pullam ERitan2 pUm pukaliyai,
nalla njAn2acampantan2 nAvin2Al
collum mAlai Ir aintum vallavarkku,
illai Am vin2ai, iru nilattuLE.

பொருள்: சிவபெருமான் இடப வாகனத்தில் ஏறியிருந்து அருள்புரிபவன் ஆவான். பூம்புகலித் தலத்துள் கோயில் கொண்டுள்ள அச்சிவனைப் புகழ்ந்து ஞான சம்பந்தப் பெருமான் பத்துப் பாடல்கள் பாடி அருளியுள்ளார். அதனை ஓத வல்லவர்க்கு வினைகள் இல்லையாம் என்க.

குறிப்புரை: புல்லம் – எருது. புல்வாய் போன்றதொரு காரணப் பெயர். ஏறி – ஏறுகின்றவன். இகர விகுதியுடைய பெயர்ச்சொல் மாலை ஈர் ஐந்து – இப்பத்துப் பாக்களாலாகிய மாலையை. இருநிலம் – மாநிலம், பெரும்பூமி.

Our Lord Civan rides on His bull to go round the cosmos. He is manifested in this graceful, ideal city of Thirup-pukali. Our holy saint Thiru-gnana-Sambandar, blessed by our Lord Civan sang on the Lord who is manifested in Pukali, these ten garlands of Tamil verses with his divine tongue. Those who are capable of reciting these ten verses properly will have no evil effects of karma during their lifetime on this great earth.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

25ஆம் பதிகம் முற்றிற்று
End of 25th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 162

பதிக எண்: 26

26. திருநெல்வாயில

26. THIRU-NEL-VAAYIL

பண் : இந்தளம் – வினாஉரை

Pann: Indhalam - Vinaa Urai

திருத்தல வரலாறு

திருநெல்வாயில் என்னும் இத்திருத்தலமானது தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் சிதம்பரம் தொடர்வண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கே 13.5 கி.மீ. தூரத்தில், அண்ணாமலை நகருக்குத் தெற்கே 1.5 கி.மீ. தூரத்தில் உள்ளது. தற்போது சிவபுரி என்று வழங்கப்பெறுகிறது. புதுப்பிக்கப்பெற்ற தலமாகும். சிவபுரி மான்மியம் என்ற தலவரலாறும் இதற்கு உண்டு. சுவாமியின் பெயர் உச்சிநாதேசுவரர். தேவியின் பெயர் கனகாம்பிகை. உச்சியார் என்பது தேவாரப் பெயர்.

பதிக வரலாறு

ஞானப்பாலுண்ட பெருமான் மன்றாடும் ஐயன் திருக்கூத்துக் கும்பிட்டு, திருக்கழிப்பாலையைப் பணிந்து பாடி, கொன்றைச் செம்மாலைவேணித் திருவுச்சி மேவியுறை அம்மானைப் பாடிய அருந்தமிழ்ப் பதிகம் இது.

திருச்சிற்றம்பலம்

1742. புடையினாற்புள்ளிகால்பொருந்திய
மடையினார்மணிநீர்நெல்வாயிலார்
நடையினால்விரற்கோவணந்நயந்
துடையினாரெமதுச்சியாரே. 1

புடையின் ஆர் புள்ளி கால் பொருந்திய
மடையின் ஆர் மணிநீர் நெல்வாயிலார்,
நடையின் நால்விரல்கோவணம் நயந்த
உடையினார், எமது உச்சியாரே.

puTaiyin2 Ar puLLi kAl poruntiya
maTaiyin2 Ar maNi nIr nelvAyilAr,
naTaiyin2 nAlviral kOvaNam nayanta
uTaiyin2Ar, ematu ucciyArE.

பொருள்: நெல்லி மரங்களுக்கு மத்தியில் கோவில் கொண்டவர் ஈசன். அவர் சிறு பறவைகள் பொருந்தி வாழும் மடைகள் சூழ்ந்த நெல்வாயில் என்னும் தலத்தில் கோயில் கொண்டுள்ளார். உயர் பண்புகள் அனைத்தும் நிறைந்த அவர், மறைநான்கையும் நால்விரற் கோவண ஆடையாகக் கொண்டுள்ளார். உச்சியார் என்னும் திருப்பெயர் கொண்ட அவரே என்து தலைஉச்சியிலும் பொருந்திய மாண்பினர்.

குறிப்புரை: புடையின் – வயற்பக்கத்தில். ஆர் – பொருந்திய புள்ளி – நண்டு. கால் – வாய்க்கால். மடையின் – நீர் மடையில். ஊர்ப்பெயர்க்கேற்ப வளம் கூறப்பட்டிருக்கின்றது. நடை – ஒழுக்கம். நால்விரற்கோவணம் ஐவிரற்கோவணம் உடைதனில் நால்விரற்கோவண வாடை (தி. 1 ப. 39 பா. 2) ஐவிரற் கோவணவாடை பாறருமேனியர் (தி.1 ப.44 பா.6) இரண்டும் இவர் திருமுறையுட் கூறப்பட்டன. நயந்து – விரும்பி. உடையினார் – உடை உடுத்தவர். உச்சியார் என்பது இத்தலத்து இறைவர் திருப்பெயர். நெல் வாயிலார், உடையினார் என்பன இறைவரைக் குறிப்பன.

Behold! It is Civan the Lord of Thiru-nel-vaayil carrying the name as Uch-chi-yaar. In this city, a number of birds move about along the sides of paddy fields. On one side of the canal the sluices carry water to the fields, which is very crystal clear like the blue coloured gem. In such a fertile lush city our Lord manifests Himself as the supreme disciplinarian of self-control. He wears His loin cloth of four fingers width only. He is an epitome of virtue. I think of Him and He is my inner being, as well as the crown of my head.

1743. வாங்கினார்மதில்மேற்கணைவெள்ளந்
தாங்கினார்தலையாயதன்மையர்
நீங்குநீரநெல்வாயிலார்தொழ
ஓங்கினாரெமதுச்சியாரே. 2

வாங்கினார் மதில்மேல் கணை, வெள்ளம்
தாங்கினார், தலைஆய தன்மையர் -
நீங்கு நீர நெல்வாயிலார்; தொழ
ஓங்கினார், எமது உச்சியாரே.

vAgkin2Ar matilmEl kaNai, veLLam
tAgkin2Ar, talai Aya tan2maiyar--
nIgku nIra nelvAyilAr; toza
Ogkin2Ar, ematu ucciyArE.

பொருள்: முப்புரங்களையும் அழித்தவர் எம்பெருமான். பெருகி வந்த கங்கையினைத் தலையில் தாங்கியவர் அவரே. அடியவர்கள் தொழ நீர்வயல்கள் நிறைந்த நெல்வாயிலில் கோயில் கொண்டுள்ளார். எனது தலை உச்சியிலும் பொருந்தியுள்ளார்.

குறிப்புரை: மதில்மேல் – திரிபுரத்து மதிலின்மீது. கணை – பாணம். வாங்கினார் – (வில்லை) வளைத்(துஎய்) தார். வெள்ளம் – கங்கைப் பெருக்கு. தலையாயதன்மையர் – முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாந் தன்மை முதலிய ஆறும் உடையவர். ஷாட்குண்யர், எண்குணமுமாம். நீங்கும் நீர – ஓடும் நீர்ப் பெருக்காகிய வளமுடைய நீள்கு என்பதன் மரூஉவே நீங்கு என்பது. நீங்கிற்றெறூஉம் குறுகுங்கால் தண் என்னுந் தீ (குறள் 1104) என்னுங் குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையை நுணுகி நோக்கின் இது விளங்கும்.

Behold! It is Civan our Lord of Thiru-nel-vaayil. He bent the bow and shot the arrow at the flying three forts and destroyed them. He gives protection to the Ganges river on His head around the matted hair. He is the embodiment of all that is the best. He manifests Himself in Thiru-nel-vaayil where the water flows in the canals and brooks perennially. He manifests Himself with all fame in the Arath-thurai temple to enable the devotees to come and worship Him there. I think of Him always and therefore He is the crown of my head and thoughts.

1744. நிச்சலேத்துநெல்வாயிலார்தொழ
இச்சையாலுறைவாரெம்மீசனார்
கச்சையாவதோர்பாம்பினார்கவின்
இச்சையாரெமதுச்சியாரே. 3

நிச்சல் ஏத்தும் நெல்வாயிலார், தொழ
இச்சையால் உறைவார்; எம் ஈசனார்;
கச்சை ஆவது ஓர் பாம்பினார்; கவின்
இச்சையார்; எமது உச்சியாரே.

niccal Ettum nelvAyilAr, toza
iccaiyAl uRaivAr; em Ican2Ar;
kaccai Avatu Or pAmpin2Ar; kavin2
iccaiyAr; ematu ucciyArE.

பொருள்: தினமும் அடியவர்கள் அன்புடன் தொழுது வணங்கிட அருள்புரியும் இச்சையுடன் உறைவார் எம்பெருமான். அவர் பாம்பினைத் தனது அரைக்கச்சையாக அணிந்து காட்சி தருவார். திருநெல்வாயிலில் கோயில் கொண்டுள்ள அவரே எமது தலைமேலும் பொருந்தி உள்ளார்.

குறிப்புரை: நிச்சல் – நித்தல். நாடோறும். கச்சை – அரையிற் கட்டும் கயிறு. வடம். அரவக்கச்சு. கவின் – அழகு. இச்சையார் – உயிரின் இச்சைக்குக் காரணமான இச்சா சக்தியை உடையவர். இச்சை உயிர்க்கு அருள்நேசம் ஆகும் (சிவஞானசித்தியார் 83).

Behold! It is Civan our Lord of Thiru-nel-vaayil called Uch-chi-yaar. He is our Supreme God. He wears the dreadful snake as belt around His waist. The devotees every day worship Him with affection. He is the embodiment of all desires. Therefore He fulfils His devotees' desires along with His goddess. I think of Him and He is always on the crown of my head.

1745. மறையினார்மழுவாளினார்மல்கு
பிறையினார்பிறையோடிலங்கிய
நிறையினாரநெல்வாயிலார்தொழும்
இறைவனாரெமதுச்சியாரே. 4

மறையினார், மழுவாளினார், மல்கு
பிறையினார், பிறையோடு இலங்கிய
நிறையினார் - அ(ம்) நெல்வாயிலார்; தொழும்
இறைவனார், எமது உச்சியாரே.

maRaiyin2Ar, mazuvALin2Ar, malku
piRaiyin2Ar, piRaiyOTu ilagkiya
niRaiyin2Ar--a(m) nelvAyilAr; tozum
iRaivan2Ar, ematu ucciyArE.

பொருள்: நான்கு வேதங்களாக விளங்குபவர் எம்பெருமான். மழுப்படையை உடையவர் எம்பெருமான். பிறைச்சந்திரனைத் தலையில் தாங்கியவர் எம்பெருமான். அவர் நெஞ்ச நிறைவுடன் வழிபடும் அடியவர்களுக்கு அருள நெல்வாயிலில் கோயில் கொண்டுள்ளார். அவரே எமது தலைமேலும் பொருந்தியுள்ளார்.

குறிப்புரை: மறையினார் – வேதகர்த்தா, மழுவாளினார் – மழுப்படையுடையவர். பிறையோடு இலங்கிய நிறையின் ஆர் அம் நெல் என்பது வானளாவ வளர்ந்து நிறைய விளங்கிய அழகிய நெற்பயிர் என்று

குறித்தது. விண்தயங்கு நெல் என (பா. 10) வருதல் காண்க. நிறையினார் – கற்புடைய கங்காதேவியை உடையவர் எனலுமாம்.

Behold! It is Civan, the Lord of Thiru-nel-vaayil. He is the Vedas themselves. He grasps the battle axe in one of His hands. He adorns His head with the attractive baby moon. He is complete perfection. In the paddy fields plenty of rich plants grow closely and tall enough to reach the sky and they are rich and dense at the entrance of the city. Therefore, the city is called Nel-vaayil. In such a fertile and rich place our Lord Uch-chi-yaar manifests Himself. We worship Him as our God. I think of Him and He is always on the crown of my head.

1746. விருத்தனாகிவெண்ணீறுபூசிய
கருத்தனார்கனலாட்டுகந்தவர்
நிருத்தனாரநெல்வாயில்மேவிய
ஒருத்தனாரெமதுச்சியாரே. 5

விருத்தன் ஆகி வெண்நீறு பூசிய
கருத்தனார், கனல்ஆட்டு உகந்தவர்,
நிருத்தனார் - அ(ம்) நெல்வாயில் மேவிய
ஒருத்தனார், எமது உச்சியாரே.

viruttan2 Aki veN nIRu pUciya
karuttan2Ar, kan2al ATTu ukantavar,
niruttan2Ar--a(m) nelvAyil mEviya
oruttan2Ar, ematu ucciyArE.

பொருள்: வயது முதிர்ந்தவர் போலத் தோற்றத்துடன் திருவெண்ணீறு பூசிக் கொண்டு காட்சி கொடுப்பவர் எம்பெருமான். நெருப்பைக் கையில் ஏந்தி விளங்குபவர் எம்பெருமான். எப்பொழுதும் திருநடனம் புரிதலை விரும்பியவர் எம்பெருமான். அன்பர்களுக்காகத் திருநெல்வாயில் தலத்துள் பொருந்திய அவரே எனது உச்சிமேலும் பொருந்தியுள்ளார்.

குறிப்புரை: விருத்தன் – முதியவன். கருத்தன் – தலைவன். கனலாட்டு – தீயில் ஆடல். உகந்தவர் – விரும்பியவர். நிருத்தனார் – கூத்தர். ஒருத்தனார் – தனிமுதல்வர்.

Behold! It is Civan our Lord of Thiru-nel-vaayil. He changes His appearance into an old man's. He smears His body with white ashes. He is our Supreme Head. He is

pleased to do cosmic dance, holding smouldering fire in His hand. He is the Master of all and everything. He is the only God who manifests Himself in Thiru-nel-vaayil. I think of Him and He is always on top of my head.

1747. காரினார்கொன்றைக்கண்ணியார்மல்கு
பேரினார்பிறையோடிலங்கிய
நீரினார்நெல்வாயிலார்தொழும்
ஏரினாரெமதுச்சியாரே. 6

காரின் ஆர் கொன்றைக்கண்ணியார், மல்கு
பேரினார், பிறையோடு இலங்கிய
நீரினார் - அ(ம்) நெல்வாயிலார் தொழும்
ஏரினார், எமது உச்சியாரே.

kArin2 Ar kon2RaikkaNNiyAr, malku
pErin2Ar, piRaiyOTu ilagkiya
nIrin2Ar--a(m) nelvAyilAr; tozum
Erin2Ar, ematu ucciyArE.

பொருள்: கார்காலத்தில் மலரும் கொன்றை மலர்களைத் தலையில் சூடுபவர் எம்பெருமான். பல (நாமங்களை) திருப்பெயர்களைக் கொண்டவர் எம்பெருமான். பிறைநிலவையும் கங்கை நதியையும் தலையில் அணிந்தவர் எம்பெருமான். அடியார்கள் வழிபாடு செய்ய திருநெல்வாயில் தலத்துள் பொருந்தி இருப்பவர் எம்பெருமான். அவரே எமது உச்சித் தலையிலும் பொருந்தியுள்ளார்.

குறிப்புரை: காரின் ஆர் கொன்றை – கார்காலத்தில் மலரும் கொன்றை மலர். கார்நறுங் கொன்றை (புறம் – கடவுள் வாழ்த்து) மல்குபேசினார் – நிறைந்த பெயர் (புகழ்) உடையார். நீரினார் – கங்கை (சடை)யர். இலங்கிய – விளங்கிய. பிறைக்கும், நீர்க்கும் பொது அடைமொழியாகக் கொள்ளலும் ஆம், ஏரினார் – அழகர்.

Behold! It is Civan who is our Lord in Thiru-nel-vaayil called Uch-chi-yaar. He is very happy with the adornment of His head with garlands of cassia flowers blooming in spring season. He is all attributes of praise and fame. He has beautified His head with the crescent moon and the Ganges. He is beauty Himself in Thiru-nel-vaayil. He is great for our worship. I think of Him and He is always the Lord on my head.

1748. ஆதியாரந்தமாயினார்வினை
கோதியார்மதில்கூட்டழித்தவர்
நீதியாரநெல்வாயிலார்மறை
ஓதியாரெமதுச்சியாரே. 7

ஆதியார், அந்தம் ஆயினார், வினை
கோதியார், மதில் கூட்டு அழித்தவர்,
நீதியார் - அ(ம்) நெல்வாயிலார்; மறை
ஓதியார் - எமது உச்சியாரே.

AtiyAr, antam Ayin2Ar, vin2ai
kOtiyAr, matil kUTTu azittavar,
nItiyAr--a(m) nelvAyilAr; maRai
OtiyAr, ematu ucciyArE.

பொருள்: முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருள் எம்பெருமான். பின்னைப் புதுமைக்கும் புதுமை எம்பெருமான். தீவினை மிக்க அசுரர்களின் முப்புரங்களை அழித்தவர் எம்பெருமான். ஆசார ஒழுக்கம் நிறைந்த அடியவர்கள் வாழும் நெல்வாயில் உறைபவர் எம்பெருமான். அவரே எமது தலைமேலும் உறைகின்றார்.

குறிப்புரை: ஆதியார் – முதல்வர், அந்தமாயினார் – (சங்கார காரணர்) முடிவுமானார், வினை கோதியார் – குரோத வினையுடையார். திரிபுரத்தசுரர். குரோதி என்பதன் திரிபு கோதி என்பது. கோதித்த நெஞ்சன் (பாரதம்) மறையோதியார் – வேதங்களை ஓதி அருளியவர்.

Behold! It is Civan our Lord of Thiru-nel-vaayil. He explicits all Vedas. He is the beginning and end of everything. He destroyed all the three flying fortresses of the wicked minded asuraas. He is embodiment of justice. He is manifest in Thiru-nel-vaayil. I think of Him as though He is always on my head.

1749. பற்றினானரக்கன்கயிலையை
ஒற்றினாரொருகால்விரலுற
நெற்றியாரநெல்வாயிலார்தொழும்
பெற்றியாரெமதுச்சியாரே. 8

பற்றினான் அரக்கன் கயிலையை
ஒற்றினார், ஒரு கால்விரல் உற,
நெற்றி ஆர - நெல்வாயிலார்; தொழும்
பெற்றியார், எமது உச்சியாரே.

paRRin2An2 arakkan2 kayilaiyai
oRRin2Ar, orukAl viral uRa,
neRRi Ara--nelvAyilAr; tozum
peRRiyAr, ematu ucciyArE.

பொருள்: அரக்கனாகிய இராவணன் கயிலாய மலையினைப் பெயர்த்து எடுக்க முயன்றபோது, தன்கால் விரலினை ஊன்றி அவனது செருக்கை அடக்கியவர் சிவபெருமான். அவரே அடியவர்கள் அடி பணிந்து வணங்கும் வகையில் திருநெல்வாயிலில் குடிகொண்டுள்ளார். அவரே எமது தலைமேலும் பொருந்தி உள்ளார்.

குறிப்புரை: நெற்றி – இராவணனது உச்சி. ஆர் – பொருந்த. பெற்றியார் – தன்மையை உடையவர். ஒரு கால் விரல் உறநெற்றி ஆர ஒற்றினார் என்று இயைக்க. திருவொற்றாடை.

Behold! It is Civan who is our Lord of Thiru-nel-vaayil. The king of Sri Lanka, Raavanan once, with extreme egoism tried his best to lift mount Kailash, the abode of our Supreme Lord from its original place. Then our Lord Uch-chi-yaar slightly pressed the top of the mountain with His toe. Instantly Raavanan's head and shoulders got crushed beneath the mountain. Our Lord is manifested in Thiru-nel-vaayil. We worship Him as our Supreme. I think of Him the Lord on my head.

1750. நாடினார்மணிவண்ணன்நான்முகன்
கூடினார்குறுகாதகொள்கையர்
நீடினாரநெல்வாயிலார்தலை
ஓடினாரெமதுச்சியாரே. 9

நாடினார் மணிவண்ணன், நான்முகன்,
கூடினார் குறுகாத கொள்கையர்
நீடினார் - அ(ம்) நெல்வாயிலார்; தலை-
ஓடினார், எமது உச்சியாரே.

nATin2Ar maNivaNNan2, nAn2mukan2,
kUTin2Ar kuRukAta koLkaiyar
nITin2Ar--a(m) nelvAyilAr; talai-
OTin2Ar, ematu ucciyArE.

பொருள்: கருநிறமுடைய திருமாலும் பிரமனும் கூடி எம்பெருமானின் அடிமுடி தேட முயன்றனர். அவர்கள் கண்டு கொள்ள முடியாத நிலையில் விளங்கியவரே எம்பெருமான்.

நெல்வாயில் தலத்தில் கோயில் கொண்டுள்ளவரும் அவரே. பிரமகபாலத்தை ஏந்தி பலிதேர்ந்து வருபவரும் அவரே. அவரே எமது தலைமேலும் பொருந்தியுள்ளார் என்க.

குறிப்புரை: நாடினார் – விரும்பினவர், தேடினவர். மணிவண்ணன் – திருமால். கூடினார் – கூடி. முற்றெச்சம், குறுகாத – (கண்டு) நெருங்காத. நீடினார் – சோதிப்பிழம்பாக நீண்டார். தலை ஓடினார் – பிரமகபாலத்தை உடையவர்.

Behold! It is Civan, the Lord of Thiru-nel-vaayil. He carries in His hand the human skull and goes out to beg alms. Thirumall is very colourful like blue gem. He and his colleague, the four headed Brahma left their place and roamed all over the cosmos, above in the sky and below the earth - all in vain. At that time our Lord of Thiru-nel-vaayil, Uch-chiyaar stood as an immeasurable column of tall fire with no beginning or end. The two junior gods were bewildered. This Lord Civan manifests Himself in Thiru-nel-vaayil. I think of Him as the Lord on my head.

1751. குண்டமண்துவர்க்கூறைமூடர்சொல்
பண்டமாகவையாதபண்பினர்
விண்டயங்குநெல்வாயிலார்நஞ்சை
உண்டகண்டரெம்முச்சியாரே. 10

குண்டுஅமண், துவர்க்கூறை மூடர், சொல்
பண்டம் ஆக வையாத பண்பினர் -
விண் தயங்கு நெல்வாயிலார்; நஞ்சை
உண்ட கண்டர் எம் உச்சியாரே.

kuNTu amaN, tuvarkkURai mUTar, col
paNTam Aka vaiyAta paNpin2ar--
viN tayagku nelvAyilAr; nanjcai
uNTa kaNTar, em ucciyArE.

பொருள்: குண்டர்களாகிய சமணர்களும் துவராடை அணிந்த மூடர்களாகிய புத்தர்களும் அறியாமை உடையவர்கள். நற்சொற்களைப் பேசாதவர்கள். அவர்களது பண்பற்ற சொற்களை ஏற்க வேண்டாம். நீடு உயர்ந்த நெல்வயல்கள் நிறைந்த திருநெல்வாயில் தலத்தில் கோயில் கொண்டுள்ள நீலகண்டரின் திருவடிகளையே தலைமேல் கொண்டு போற்றி வாழுங்கள்.

குறிப்புரை: குண்டு அமண் – குண்டராகிய அமணர். துவர்க்கூறை – துவர்ப்பேறிய ஆடை. பண்டம் – பொருள். விண் தயங்கு – வான் (அளாவி) விளங்கிய. நஞ்சு – விடம்.

Behold! It is Civan our Lord of Thiru-nel-vaayil. He drank the poison out of the ocean of milk and saved humanity; His neck became dark blue because of the poison. He is therefore called Neelakandar. The big bellied Jains and the ochre robed Buddhists vocalized the base principles of their religion. Our Supreme Lord is too above these religionists' words. He manifests Himself in Thiru-nel-vaayil where the paddy plants grow to the sky level and He bestows grace on His devotees. I think of Him as the Lord always on my head.

1752. நெண்பயங்குநெல்வாயிலீசனைச்
சண்பைஞானசம்பந்தன்சொல்லிவை
பண்பயன்கொளப்பாடவல்லவர்
விண்பயன்கொளும்வேட்கையாளரே. 11

நெண்பு அயங்கு நெல்வாயில் ஈசனைச்
சண்பை ஞானசம்பந்தன் சொல் இவை
பண் பயன்கொளப் பாட வல்லவர்,
விண் பயன்கொளும் வேட்கையாளரே.

neNpu ayagku nelvAyil Ican2aic
caNpai njAn2acampantan2 col ivai,
paN payan2 koLap pATa vallavar,
viN payan2koLum vETkaiyALarE.

பொருள்: அன்புடன், அடியவர்கள் போற்றி வணங்கிட எம்பெருமான் திருநெல்வாயில் தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அந்த ஈசனைப் போற்றி சீகாழிப்பதியில் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான் பத்துப் பாடல்களைப் பாடி அருளியுள்ளார். அப்பாடல்களை விரும்பிப் பாடும் அடியவர்களின் நல்விருப்பங்கள் அனைத்தும் ஈடேறும்.

குறிப்புரை: நெண்பு – நண்பு. அயங்கு – அசங்கிய (பதி 140). சண்பை – சீகாழி. பண்பயன்கொளப் பாடவல்லவர் என்றதால் தேவாரம் பாடும் முறையை அறியும் இன்றியமையாமை புலனாகின்றது. விண் – வீட்டுலகம். பயன் – பேரின்பம். இம்மை மறுமைப் பயனுமாம். வேட்கையாளர் – விருப்பத்தை ஆள்பவர்.

Our Lord Uch-chiyaar of Thiru-nel-vaayil is manifested in the temple called Arath-thurai in this city. He is very merciful and graces all His devotees. Our divine saint Thiru-gnana-Sambandar who was born in Seerkaazhi sang ten sacred verses on the Lord of Thiru-nel-vaayil where the paddy plants grow to the sky level. Those experts who can sing this garland of ten verses in the same musical note and worship our Lord of Thiru-nel-vaayil will enjoy the bliss in heaven if they are earnest in their aim.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

26ஆம் பதிகம் முற்றிற்று
End of 26th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 163 பதிக எண்: 27

27. திருஇந்திரநீலப் பருப்பதம் 27. THIRU-INDIRA-NEELA-PARUP-PATHAM

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

இந்திரன் பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது. மேகங்கள் மேலே கவிழ்ந்து சூழ்ந்திருப்பதால் நீலபர்ப்பதம் எனப் பெயர் பெற்றது போலும் என்பார் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். இது வடநாட்டுப்பதிகள் ஐந்தனுள் ஒன்று.

இந்திரன் பூசித்த செய்தி இவ்வூர்த் திருஞானசம்பந்தர் தேவாரத்தின் திருக்கடைக் காப்பிலுள்ள இந்திரன் தொழு நீலபர்ப்பதம் என்னும் பகுதியால் அறியக் கிடக்கின்றது. இதற்குத் திருஞான சம்பந்தரது பதிகம் ஒன்றுள்ளது.

இது நார்க்கட்டியகன்ஜ் – பிக்னதொரி இருப்புப்பாதையில் பிக்னதொரி தொடர் வண்டி நிலையத்தில் இருந்து 52 மணிநேர பயணத் தொலைவில் உள்ளது. இறைவரின் திருப்பெயர் நீலாசலநாதர். இறைவியாரின் திருப்பெயர் நீலாம்பிகை. இமயத் தலமாகிய பத்ரிநாத்திலிருந்து விடியற்காலம் 4.30 மணி அளவில் இம்மலைச் சிகரத்தைத் தரிசிக்கலாம்.

பதிக வரலாறு

சண்பை வேந்தர் திருக்காளத்தியிலிருந்து அம்மலைத் தேனை அறிவால் நுகர்ந்த நாளில், அருந்தமிழ் வழக்கில்லாத வடக்கிலும் குடக்கிலும் உள்ள சிவதலங்களை நினைந்து பாடினார். அவை வடகயிலை, திருக்கேதாரம், கோகர்ணம், திருப்பருப்பதம், திருஇந்திரநீலப் பருப்பதம் என்பவை. அதனால் 'உள்க நல்கும்' என்று அருளியதை இதன் முதற்பாட்டிறுதியிற் காண்க.

HISTORY

This is not any peopled village or town. It is an area near mount Kailash in the Himalayan region. It is supposed Indiran came to this area and worshipped Lord Civan, who manifests Himself here and walks around. Our divine saint Thiru-gnana-Sambandar saw in his imagination holy places in the north and west and sang these verses. So, it is described as Vaipputh-thalam; it refers to places not visited by our four

saints but contains the description of these places. Thiru-gnana-Sambandar sings the verses about these places in the north and west as he saw them in his mind. This place Thiru-indira-neela-parup-patham is one among the five holy places in the north. They are Kailash, Badrinath, Kedarnath, Thiru-indira-neela-parup-patham and Amarnath.

திருச்சிற்றம்பலம்

1753. குலவுபாரிடம்போற்றவீற்றிருந்
திலகுமான்மழுவேந்துமங்கையன்
நிலவுமிந்திரநீலப்பர்ப்பதத்
துலவினானடியுள்கநல்குமே. 1

குலவு பாரிடம் போற்ற வீற்றிருந்து
இலகு மான் மழு ஏந்தும் அம் கையன்
நிலவும் இந்திரநீலப்பர்ப்பதத்து
உலவினான், அடி உள்க, நல்குமே.

kulavu pAriTam pORRa vIRRiruntu
ilaku mAn2 mazu Entum am kaiyan2,
nilavum intira nIlapparppatattu
ulavin2An2, aTi uLka, nalkumE.

பொருள்: பூதகணங்கள் மகிழ்ந்து போற்ற வீற்றிருப்பவர் எம்பெருமான்! மானையும் சூலப்படையையும் ஏந்துபவர் எம்பெருமான்! கரிய நீலநிறம் பொருந்திய மலை மேல் வீற்றிருப்பவர் எம்பெருமான்! அவருடைய திருவடிகளை விரும்பித் துதிக்கும் அடியவர்கள் எண்ணியவை எல்லாவற்றையும் எய்துவர்.

குறிப்புரை: பாரிடம் – பூதகணம். அங்கையன் – அகங்கையுடையவன். பர்ப்பதத்து – மலைமேல். உலவினான் – உலாவியவன். உள்க – தியானம் செய்ய. நல்கும் – அருள் செய்யும்.

You devotees of our Supreme Lord Civan! think these following, He holds a deer in one of his hands. In another hand He holds the battle-axe. Bhutas - goblins of Civan move in this area of the mountain where dark blue clouds always hang all over the area, and offer worship to their chief Lord Civan who occasionally exhibits Himself in that area and gives Darshan to His followers. Devotees who worship Lord Civan of this area will definitely get all their wishes fulfilled.

1754. குறைவிலார்மதிசூடியாடல்வண்
டறையுமாமலர்க்கொன்றைசென்னிசேர்
இறைவனிந்திரநீலப்பர்ப்பதத்
துறைவினான்றனையோதியுய்ம்மினே. 2

குறைவு இல் ஆர் மதி சூடி, ஆடல் வண்டு
அறையும் மா மலர்க்கொன்றை சென்னி சேர்
இறைவன் இந்திரநீலப்பர்ப்பதத்து
உறைவினான் தனை ஓதி உய்ம்மினே!

kuRaivu il Ar mati cUTi, ATal vaNTu
aRaiyum mA malarkkon2Rai cen2n2i cEr
iRaivan2, intiranIlapparppatattu
uRaivin2An2tan2ai Oti uymmin2E!

பொருள்: குறைதல் இன்றி என்றும் ஒரு கலையாய் நிறைவு பெறும் பிறையைச் சென்னியில் வைத்துள்ளார். வண்டுகள் மொய்க்கும் கொன்றைமலர் மாலையைச் சூடியுள்ளார். இறைவனாகிய அவர் இந்திர நீல மலையில் கோயில் கொண்டுள்ளார். அப்பெருமானைப் போற்றி நற்கதி அடைவீராக.

குறிப்புரை: குறைவு இல் ஆர் மதி – குறைதல் இன்றி நிறைவு பொருந்திய பிறை. கடவுள் சடைமேல் உள்ள பிறைக்குக் குறைவும் அழிவும் இல்லை. உறைவினான் – வாழ்தலை உடையவன்.

You the devotees should know that our Lord Civan manifests Himself in the mountain area known as Thiru-indira-neela-parup-patham. The baby moon which adorns our Lord's head will never diminish in size. The moon will always be the same sized, as against the other moon in the sky, which waxes and wanes every fortnight. He wears garlands made of cassia flowers in which the bees hum always. He manifests Himself on the mountain of Thiru-indira-neela-parup-patham. Praise Him. You will get salvation.

1755. என்பொனென்மணியென்னஏத்துவார்
நம்பனான்மறைபாடுநாவினான்
இன்பனிந்திரநீலப்பர்ப்பதத்
தன்பன்பாதமேயடைந்துவாழ்மினே. 3

"என் பொன்! என் மணி!" என்ன ஏத்துவார்
நம்பன், நால்மறை பாடு நாவினான்,
இன்பன், இந்திரநீலப்பர்ப்பதத்து
அன்பன், பாதமே அடைந்து வாழ்மினே!

"en2 pon2! en2 maNi!" en2n2a EttuvAr
nampan2, nAlmaRai pATu nAvin2An2,
in2pan2, intiranIlapparppatattu
an2pan2, pAtamE aTaintu vAzmin2E!

பொருள்: அடியவர்களால் என் பொன்னே, என் மணியே என்று போற்றப் பெறுபவன் எம்பெருமான் ஆவார். அவர் எப்போதும் நான்கு மறைகளைப் பாடிக் கொண்டே இருப்பார். இந்திரநீலப் பருப்பதத்தில் குடியிருக்கும் இறைவனும் அவனே ஆவார். அவரது திருவடிகளையே சரணாகதி அடைந்து வாழ்வீராக.

குறிப்புரை: என்பொன், என்மணி என்ன ஏத்துவார் நம்பன் – என் பொன்னே என் மணியே என்று எடுத்துப் புகழ்ந்து போற்றுவாரை விரும்பியருள்பவன். நம்பும் மேவும் நசையா கும்மே என்றார் தொல்காப்பியர். பாதமே என்றதில் ஏகாரம் பிரிநிலை.

You the devotees should realise that our Lord Civan exhibits Himself in the Himalayan mountain area called the Thiru-indira-neela-parup-patham. He is very dear and near as kith and kin to those who pray to Him by saying "Oh Lord! You are my gold; You are my gem". He is agreeable and pleasant always. He chants the four Vedas incessantly. He develops attachment to Thiru-indira-neela-parup-patham. He manifests Himself on that mountain; you pray to His holy feet which will be your asylum so that you may live happily.

1756. நாசமாம்வினைநன்மைதான்வரும்
தேசமார்புகழாயசெம்மையெம்
ஈசனிந்திரநீலப்பர்ப்பதம்
கூசிவாழ்த்துதுங்குணமதாகவே. 4

நாசம் ஆம், வினை; நன்மைதான் வரும்;
தேசம் ஆர் புகழ் ஆய செம்மை எம்
ஈசன், இந்திரநீலப்பர்ப்பதம்
கூசி வாழ்த்துதும், குணம் அது ஆகவே.

nAcam Am, vin2ai; nan2maitAn2 varum;
tEcam Ar pukaz Aya cemmai em
Ican2, intiranIlapparppatam
kUci vAzttutum, kuNam atu AkavE.

பொருள்: ஈசன், நம்முடைய வினைகளை நாசம் செய்வார். நமக்கு நன்மைகளை அருளுபவர். செம்மை நிறமும் புகழும் பொருந்திய அவர் இந்திரநீல மலையில் உறைபவர். அவரைப் பணிந்து வாழ்த்தும் அடியவர்கள் நற்குணம் ஓங்கப் பெறுவார்கள்.

குறிப்புரை: வினைநாசம் ஆம் என்க. நன்மைவரும் கூசிவாழ்த்துதலும் – இறைவன் பெருமையையும் நம் சிறுமையையும் எண்ணிக்கூசி, வாழ்த்துவோம். நேசம் தண்பால் இல்லாத நெஞ்சத்து நீசர்தம்மைக் கூசன் காண் கூசாதார் நெஞ்சுதஞ்சே குடிகொண்ட குழகன்காண் என்ற அப்பர் திருவாக்கில் வந்த கூசுதல் வேறு. இது வேறு. தேசம் ஆர் – தேசம் (முழுதும்) நிறைந்த.

You the devotees! to enable your evil karma to vanish from you and all benefactions to come to you, our Lord of nation-wide fame and uprightness, manifested in Thiru-indira-neela-parup-patham, may be praised. Speak out your diminutiveness in your mind feeling ashamed of it, you need not expose it to others. Think of His fame and good qualities and exhibit them. Praise all His benevolent deeds and worship Him in your mind. You will have all benevolent good qualities as well as all that is needed in your lifetime.

1757. மருவுமான்மடமாதொர்பாகமாய்ப்
பரவுவார்வினைதீர்த்தபண்பினான்
இரவனிந்திரநீலப்பர்ப்பதத்
தருவிசூடிடுமடிகள்வண்ணமே. 5

மருவு மான் மடமாது ஒர் பாகம் ஆய்ப்
பரவுவார் வினை தீர்த்த பண்பினான்,
இரவன், இந்திரநீலப்பர்ப்பதத்து
அருவி சூடிடும் அடிகள் வண்ணமே!

maruvu mAn2maTamAtu orpAkam Ayp
paravuvAr vin2ai tIrtta paNpin2An2,
iravan2, intiranIlapparppatattu
aruvi cUTiTum aTikaL vaNNamE!

பொருள்: எம்பெருமான் மானைக் கையில் ஏந்தியவர். உமையவளை இடபாகத்தில் கொண்டு அருள்செய்பவர். வணங்கும் அடியார்கள் வினைகளை தீர்க்கும் உயர்பண்பு நிறைந்தவர். இந்திரநீல மலையில் பொருந்தி இருப்பவர். பலி தேர்ந்து வருபவர். கங்கையைத் தலையில் அணிந்தவர். இவையே அவரது வண்ணமாம் என்க.

குறிப்புரை: மருவு . . . பண்பினான் – அம்மையப்பராகத் தொழுத அன்பர். கன்மத்தைத் தீர்த்த குணமுடையவன். இரவன் – இரத்தலைச் செய்தவன். இரவாகியவன். அன்பர் இரத்தற்குரிய வள்ளல். அருவி – மலையருவி, கங்கையுமாம். வண்ணம் – இயல்பு.

Behold! It is our Supreme Lord Civan who has manifested Himself in Thiru-indira-neela-parup-patham. He happily enjoys utilising the various waterfalls in His area as garlands along with the Ganges on His hair. Umaa, daughter of the king of Himalayas, with eyes like deer's, wanted to be united with our Lord. He accepted her and corporated her on the left side of His body. This Lord with the begging bowl deserves to be praised for His patronage to the devotees. Those who praise Him will find their evil karma fleeing them.

1758. வெண்ணிலாமதிசூடும்வேணியன்
எண்ணிலார்மதிலெய்தவில்லினன்
அண்ணலிந்திரநீலப்பர்ப்பதத்
துண்ணிலாவுறுமொருவன்நல்லனே. 6

வெண் நிலாமதி சூடும் வேணியன்,
எண்ணிலார் மதில் எய்த வில்லினன்,
அண்ணல், இந்திரநீலப்பர்ப்பதத்து
உள்-நிலாவுறும் ஒருவன் நல்லனே.

veNnilAmati cUTum vENiyan2,
eNNilAr matil eyta villin2an2,
aNNal, intiranIlapparpatattu
uL-nilAvuRum oruvan2 nallan2E.

பொருள்: எம்பெருமான் வெண்ணிலவைத் தன்தலையில் சூடி மகிழ்பவர். பகையைக் கொண்ட அரக்கர்களின் முப்புரங்களை அழிக்க மேருமலையை வில்லாகக் கொண்டவர். இந்திரநீல மலையில் வீற்றிருக்கும் அண்ணல் அவரே. நம் மனத்தில் பொருந்தி இருக்கக் கூடிய நல்லவர் அவரே ஆவார்.

குறிப்புரை: வேணி – சடை. எண்ணிலார் – நினையாத பகைவர். வில் – மேருவில். அல்லனே ஏகாரம் வினா.

Behold! Civan is one incomparable Lord of the universe. He has beautified His matted hair with the glistening white moon. He used mount Meru as the bow and used it with an arrow and destroyed the three flying forts of the enemies. He is our Lord Supreme who manifests Himself in Thiru-indira-neela-parup-patham in the Himalayan area.

1759. கொடிகொளேற்றினர்கூற்றுதைத்தவர்
பொடிகொள்மேனியிற்பூண்டபாம்பினர்
அடிகளிந்திரநீலப்பர்ப்பதம்
உடையவாணருகந்தகொள்கையே. 7

கொடி கொள் ஏற்றினர், கூற்று உதைத்தவர்,
பொடி கொள் மேனியில் பூண்ட பாம்பினர்,
அடிகள் இந்திரநீலப்பர்ப்பதம்
உடைய வாணர், உகந்த கொள்கையே!

koTi koL ERRin2ar, kURRu utaittavar,
poTi koL mEn2iyil pUNTa pAmpin2ar,
aTikaL, intira nIlapparparppatam
uTaiya vANar, ukanta koLkaiyE!

பொருள்: எம்பெருமான் இடபக் கொடியைக் கையில் ஏந்தியவர். எமனைக் காலால் உதைத்தவர். திருநீறு பூசிய மேனியர். பாம்பினை அணிகலனாகப் பூண்டவர். இந்திரநீல மலையில் கோயில் கொண்டவர். அவரையே விரும்பி வழிபடுவோமாக.

குறிப்புரை: ஏற்றினர் – விடையுடையவர். கூற்று – யமன். உயிர் வேறு உடல் வேறாகக் கூறுபடுத்துவோன் கூற்றுவன். பொடி – திருநீறு. வாணன் – வாழ்நன். உகந்த – உயர்ந்த, விரும்பிய.

Behold! He is Civan the Lord of Thiru-indira-neela-parup-patham. He has on His flag the bull's picture, the significant imprint of His sign. He kicked off with His right leg the god of death, Kaalan, to fall down dead. He has smeared His body with the holy ashes. Also He wears the snakes over His body as His ornaments. He is our God Supreme and these are His natural qualities.

1760. எடுத்தவல்லரக்கன்கரம்புயம்
அடர்த்ததோர்விரலானவனையாட்
படுத்தனிந்திரநீலப்பர்ப்பதம்
முடித்தலம்முறமுயலுமின்பமே. 8

எடுத்த வல்அரக்கன் கரம்புயம்
அடர்த்தது ஓர் விரலான், அவனை ஆட்-
படுத்தன், இந்திரநீலப்பர்ப்பதம்
முடித்தலம்(ம்) உற, முயலும், இன்பமே!

eTutta val arakkan2 karampuyam
aTarttatu Or viralAn2, avan2ai AT-
paTuttan2, intiranIlapparppatam
muTittalam(m) uRa, muyalum, in2pamE!

பொருள்: கயிலாய மலையை எடுத்த அரக்கன் இராவணனின் கைகளையும் தோள்களையும் தன் கால் கட்டைவிரலால் அடர்த்தவர் எம்பெருமான். பிறகு இராவணனுக்கு அருள் செய்தவரும் அவரே ஆவார். இந்திர நீல மலையில் அவரை அன்புடன் மனத்தால் அடைந்து வழிபாடு செய்திட நமக்கு பேரின்பம் கையுறும்.

குறிப்புரை: கரம் – கை. புயம் – தோள். அடர்த்து – நெருங்கியது. விரலான் – விரலால். படுத்தன் – படுத்தியவன். முடித்தலம் – உச்சியிடம். உச்சியிலுள்ள ஸ்தலமுமாம். உற – அடைந்து வழிபட முயலும். இன்பம்– நாம் அடைய முயலும் இன்பமே எளிதின் வாய்க்கும் என்றபடி.

Behold! He is Civan who manifests Himself in Thiru-indira-neela-parup-patham. Raavanan, the king of Sri Lanka is a staunch devotee of Lord Civan. However, due to arrogance about his mightiness as the greatest warrior, he tried to lift the mountain of our Lord. Our Lord in meditation pressed the top of His mountain with His toe very slightly. Raavanan's heads and shoulders got crushed under the mountain. However, Raavanan repented and begged for pardon and praised and worshipped our Lord. Lord Civan forgave and graced him. Think well of Lord Civan and the mountain Thiru-indira-neela-parup-patham, the place of His manifestation and pray to the holy place; you will be in bliss forever.

1761. பூவினானொடுமாலும்போற்றுறும்
தேவனிந்திரநீலப்பர்ப்பதம்
பாவியாதெழுவாரைத்தம்வினை
கோவியாவருங்கொல்லுங்கூற்றமே. 9

பூவினானொடு மாலும் போற்றுஉறும்
தேவன் இந்திரநீலப்பர்ப்பதம்
பாவியாது எழுவாரைத் தம் வினை
கோவியா வரும்; கொல்லும், கூற்றமே.

pUvin2An2oTu mAlum pORRu uRum
tEvan2 intira nIlapparppatam
pAviyAtu ezuvArait tam vin2ai
kOviyA varum; kollum, kURRamE.

பொருள்: திருமாலும் நான்முகனும் போற்றி வணங்கும் தலைவனே எம்பெருமான். அவர் இந்திரநீல மலையில் கோயில் கொண்டுள்ளார். அவரை உணராமல் வாழுபவர்கள் வினைகள் நீங்காமல் பற்றிக் கொள்ளும். மேலும் அத்தகையோரை எமனும் சினந்து துன்புறுத்துவான் என்க.

குறிப்புரை: பூவினான் – செந்தாமரை மலரிலுள்ள பிரமன். போற்று – துதி. உறும் – அடையும். பாவியாது – தியானம் பண்ணாமல். கோவியா – கோபித்து. கூற்றம் வரும் என்க.

Behold! He is Civan the Lord who is manifested in Thiru-indira-neela-parup-patham. The junior god Brahma who is seated in the lotus flower and Thirumaal - both offer their prayers and worship our Lord Civan belonging to Thiru-indira-neela-parup-patham in the Himalayan region. If there are people who do not think and hear about the greatness of our Lord Civan on the mountain Thiru-indira-neela-parup-patham and pray, they will suffer all evils and the god of death will kill them.

1762. கட்டர்குண்டமண்தேரர்சீரிலர்
விட்டரிந்திரநீலப்பர்ப்பதம்
எட்டனைநினையாததென்கொலோ
சிட்டதாயுறையாதிசீர்களே. 10

கட்டர் குண்டு அமண், தேரர், சீர் இலர்,
விட்டர், இந்திரநீலப்பர்ப்பதம்
எள்-தனை நினையாதது என்கொலோ,
சிட்டு அதுஆய்உறை ஆதி சீர்களே?

kaTTarkuNTu amaN, tErar, cIr ilar,
viTTar intira nIlapparppatam,
eL-tan2ai nin2aiyAtu en2kolO,
ciTTu atu Ay uRai Aki cIrkaLE?

பொருள்: சமணர்களும் பௌத்தர்களும் நற்பண்பு இல்லாதவர்கள் ஆவார்கள். எம்பெருமான் கோயில் கொண்டிருக்கும் இந்திரநீல மலையின் சிறப்பை எள் அளவும் நினையாது வாழ்வார்கள். அவர்களுக்கு எந்தச் சிறப்பும் இவ்வுலகில் வந்து பொருந்தாது என்க.

குறிப்புரை: கட்டர் – உடற்கட்டுடையவர். சீர் – சிறப்பு. விட்டர் – விட்டொழிய நின்றவர். விட்டல் – வீடுதல். திருவிளையாடல். எள்தனை – எள்ளளவும். சிட்டதாய் – நல்லறிவுமயமாய். உறை – வாழும். ஆதி – முதல்வன்.

The Jains are not perfect, big-bellied people. The Buddhists also are of the same character. They are both men of lowliness. We must banish them even from our mind.

Why do not they remember Him the Lord of Thiru-indira-neela-parup-patham, even for a moment, about His never ending and ever present position and all about His virtues? Without thinking of Him they will never attain greatness.

1763. கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியான்
இந்திரன்தொழுநீலப்பர்ப்பதத்
தந்தமில்லியையேத்துஞானசம்
பந்தன்பாடல்கொண்டோதிவாழ்மினே. 11

கந்தம் ஆர் பொழில் சூழ்ந்த காழியான்,
இந்திரன் தொழும் நீலப்பர்ப்பதத்
அந்தம் இ(ல்)லியை ஏத்து ஞானசம்-
பந்தன் பாடல் கொண்டு ஓதி வாழ்மினே!

kantam Ar pozil cUznta kAziyAn2,
intiran2 tozum nIlapparpatattu
antam i(l)liyai Ettu njAn2acam-
pantan2 pATal koNTu Oti vAzmin2E!

பொருள்: மணமிக்க சோலைகள் நிறைந்த சீர்காழிப் பதியில் அவதரித்தவரே திருஞான சம்பந்தர் ஆவார். அவர் இந்திரன் வணங்கும் இந்திரநீல மலையில் விளங்கும் சிவபெருமானைப் புகழ்ந்து பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். அப்பாடல்களை அடியவர்கள் ஓதி வழிபட்டு நன்நிலையில் வாழ்வார்களாக.

குறிப்புரை: கந்தம் – மணம். அந்தம் இல்லி – முடிவில்லாதவன் – அநந்தன்.

Our divine saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi, a holy place surrounded by fragrant gardens. He sang on the Lord of Thiru-indira-neela-parup-patham where Indiran, head of the Devas worshipped our Lord Civan who has no end and manifests Himself in the holy place. You devotees! recite these verses of Thiru-gnana-Sambandar and worship our Supreme Lord Civan and live happily.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

27ஆம் பதிகம் முற்றிற்று
End of 27th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 164 *பதிக எண்: 28*

28. திருக்கருவூரானிலை
28. THIRUK-KARUVOOR-AANILAI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

ஊரின் பெயர் கருவூராயினும் இங்குள்ள கோயிலுக்குத் திருவானிலை என்று பெயர். காமதேனு பூசித்த காரணம்பற்றி இப்பெயர் பெற்றது. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 52 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருச்சிராப்பள்ளி – கரூர் இரயில் வசதியும் உள்ளது. இது கொங்கு நாட்டுத் தலங்கள் ஏழனுள் ஒன்று.

தொழில் வளர்ச்சி பெருகிய பெரு நகர்களில் ஒன்றான இவ்வூருக்குத் திருச்சி, கோவை, ஈரோடு முதலான பல நகரங்களில் இருந்தும் பேருந்துகளில் செல்லாம். இறைவரின் திருப்பெயர் பசுபதீசுவரர். இறைவியாரின் திருப்பெயர் கிருபாநாயகி. தீர்த்தம் ஆம்பிராவதி ஆறு. இது சோழ மன்னர் முடிசூட்டிக் கொள்ளும் பதிகள் ஐந்தனுள் ஒன்று. புகழ்ச்சோழர் ஆட்சி செலுத்திய இடம். எறிபத்த நாயனார் சிவகாமியாண்டார் இவர்கள் இருந்தபதி. திருவிசைப் பாக்களைப் பாடிய கருவூர்த் தேவரும் இவ்வூரினரே. இது ஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. அவருடைய ஒரே பதிகத்தைப் பெற்றது. இருபத்தொரு சருக்கங்களையும் ஆயிரத்து நூற்றிருபத்தொன்பது திருவிருத்தங்களையும் கொண்ட புராணம் ஒன்று உள்ளது. அதை ஆக்கியோர் இன்னாரென்று புலப்படவில்லை. கோயமுத்தூர் வித்துவான் திரு. கந்தசாமி முதலியார் அவர்கள் பல ஆண்டுகளுக்குமுன் அச்சிட்டு வெளியிட்டார்.

பதிக வரலாறு

பாண்டிக் கொடுமுடியை அடைந்து வணங்கித் தமிழ்மாலை மகிழ்ந்து சாத்தி, வெஞ்சமாக்கடல் விடையவர் தானம் பல போற்றிக் கிழக்கில் போந்து, திருவானிலைக் கோயிலை உடைய கருவூரை மருவி அடைந்து அக்கோயிலுட் புகுந்து இறைஞ்சிப் பாடிய நல்லிசை வண்டமிழ்ச் சொற்றொடை இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1764. தொண்டெலாமலர்தூவியேத்தநஞ்
சுண்டலாருயிராயதன்மையர்
கண்டனார்கருவூருளானிலை
அண்டனாரருளீயுமன்பரே. 1

தொண்டுஎலாம் மலர் தூவி ஏத்த, நஞ்சு
உண்ட ஆர் உயிர்ஆய தன்மையர்;
கண்டு அனார் - கருவூருள் ஆன்நிலை
அண்டனார், அருள் ஈயும் அன்பரே.

toNTu elAm malar tUvi Etta, nanjcu
uNTa Ar uyir Aya tan2maiyar;
kaNTu an2Ar--karuvUrul2 An2 nilai
aNTan2Ar, aruL Iyum an2parE.

பொருள்: திருத்தொண்டர்கள் மலர் தூவி சிவபெருமானை வழிபடுவர். அவர் நஞ்சுண்டு கருத்த கண்டத்தினைக் கொண்டவராய் கருவூரானிலை திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளார். அண்டங்களுக்கெல்லாம் தலைவராகிய அவரை நாமும் அன்புடன் வழிபடுவோம். அவர் உறுதியாக அருள்புரிவார்.

குறிப்புரை: தொண்டு எலாம் – தொண்டர்கள் எல்லாரும். உண்டல் – உண்ணல், உண்டலாருமாம். ஆருயிர் – அரிய உயிர், உயிர்க்குயிர். கண்டுஅனார் – கண்டு போலினிப்பவர். திருக்கருவூரில் உள்ள திருக்கோயில் ஆநிலை, ஆன்நிலை எனப்படும். பசுபதி என்னுந் திருப்பெயருண்மை உணர்க. அண்டனார் – தேவர். அன்பர் – அன்பை உடையவர்.

Behold! It is Civan, the Lord of Karuvoor. In this city the temple is called Aanilai. The Lord drank the dreadful poison, yet He was not affected by it. The cows worshipped the deity here. The devotees strew the flowers at His holy feet and pray. He is the life giving grace, a very pleasing deity like sugar candy. He has manifested Himself in the Aanilai temple in Karuvoor. He bestows His blessings on angels and others. You devotees! worship Him, the Lord of the whole universe, and be blessed by Him.

1765. நீதியார்நினைந்தாயநான்மறை
ஓதியாரொடுங்கூடிலார்குழைக்
காதினார்கருவூருளானிலை
ஆதியாரடியார்தமன்பரே. 2

நீதியார், நினைந்து ஆய நால்மறை
ஓதியாரொடும் கூடிலார், குழைக்
காதினார் - கருவூருள் ஆன்நிலை
ஆதியார், அடியார்தம் அன்பரே.

nItiyAr, nin2aintu Aya nAlmaRai
OtiyAroTum kUTalAr, kuzaik
kAtin2Ar--karuvUruL An2nilai
AtiyAr, aTiyArtam an2parE.

பொருள்: ஆகம முறைப்படி நினைந்து வேதங்களை ஓதும் அடியார்களோடு எம்பெருமான் எப்போதும் கூடியிருப்பான். குழை என்னும் ஆபரணத்தை அணிந்த எம்பெருமான் கருவூரானிலைத் தலத்தில் பொருந்தியுள்ளார். அவர் சிவனடியார்களைத் தம் அன்பர்களாகக் கொண்டு அருள்புரிவார்.

குறிப்புரை: நீதியார் – நீதியே வடிவான சிவபெருமான். நினைந்து ஆய நான்மறை ஓதியார் – எண்ணி ஆராய்ந்த நான்கு மறைகளை ஓதுவார். கூடலார் – கூடுவார். குழைக்காதினார் – குழையணிந்த திருச்செவியை உடையவர். குழை தோட்டின் வேறானது. இதனைக் குழையும் சுருள்தோடும் என்ற திருவாசகத்தானறிக. ஆதியார் – முதல்வர். அடியார்தம் அன்பர் – அடியார்களுக்கு அன்பராயிருப்பர்.

Behold! It is Civan, the Lord of Karuvoor Aanilai. He is the embodiment of justice. He mingles with those devotees who recite the enlightening and ever expanding Vedas with earnest righteousness. He wears in one of His ears the Kuzhai, an ear-jewel. He is the first and the ultimate God. He is a friend in need to the devotees and blesses them always.

1766. விண்ணுலாமதிசூடிவேதமே
பண்ணுளார்பரமாயபண்பினர்
கண்ணுளார்கருவூருளானிலை
அண்ணலாரடியார்க்குநல்லவரே. 3

விண் உலாம் மதி சூடி, வேதமே
பண் உளார், பரம் ஆய பண்பினர்,
கண் உளார் - கருவூருள் ஆன்நிலை
அண்ணலார், அடியார்க்கு நல்லவரே.

viN ulAm mati cUTi, vEtamE
paN uLAr, param Aya paNpin2ar,
kaN uLAr--karuvUruL An2nilai
aNNalAr, aTiyArkku nallavarE.

பொருள்: சிவபெருமான், விண்ணில் உலாவும் சந்திரனைத் தன் தலையில் சூடி இருப்பார். வேதம் ஓதும் அந்தணர்கள் நிறைந்த இடங்களில் பொருந்தியிருப்பார். திருக்கருவூரானிலைத் தலத்தில் கோயில் கொண்டுள்ளார். அவர் என்றும் அடியார்களுக்கு நல்லவராய் அருள்புரிவார்.

குறிப்புரை: விண் – ஆகாயம். சூடி – வினையெச்சம். வேதமே பண் உளார் – வேதத்தில் சரூபமாக இருப்பவர். பரம் ஆடிய பண்பினர் – மேலாகிய பண்பை உடையவர். பண்பு – எண் குணம். கண்ணுள் – கூத்து. கண்ணுளார் – கூத்தர். கண் – உளார். உயிர்களுக்குக் கண்ணாய் இருப்பவர். பண்பினர்கண் உளாருமாம். அண்ணலார் – தலைவர், பெரியர். அடியார்க்கு நல்லார் என்பது இறைவன் திருப்பெயர்களுள் ஒன்று.

Behold! It is Civan, the Lord of Karuvoor Aanilai. He used to sing Vedas in rhythmic musical tone. He has adorned His head with the sky-traversing moon. His attributes are too great to be comprehended. He is eye-like to the devotees. He manifests Himself in the Aanilai temple in Karuvoor city. He is the greatest and the ultimate, always good to His worshippers.

1767. முடியர்மும்மதயானையீருரி
பொடியர்பூங்கணைவேளைச்செற்றவர்
கடியுளார்கருவூருளானிலை
அடிகள்யாவையுமாயஈசரே. 4

முடியர், மும்மதயானை ஈர்உரி;
பொடியர்; பூங்கணை வேளைச் செற்றவர்;
கடிஉளார் - கருவூருள் ஆன்நிலை
அடிகள், யாவையும் ஆய ஈசரே.

muTiyar, mummatayAn2ai Ir uri;
poTiyar; pUgkaNai vELaic ceRRavar
kaTiuLAr--karuvUruL An2nilai
aTikaL, yAvaiyum Aya IcarE.

பொருள்: சிவபெருமான், மதங்கொண்ட யானையின் தோலை உரித்து ஆடையாக அணிந்தவர். திருநீறு பூசியவர். மலரம்புகளைக் கொண்ட மன்மதனை எரித்து அழித்தவர். மணமிக்க மலர்கள் பொருந்திய சோலைகள் நிறைந்த கருவூரானிலைத் தலத்தில் பொருந்தி இருப்பவர். எல்லாவற்றையும் தமதாகக் கொள்ளும் அவரே எமது ஈசர் ஆவார்.

குறிப்புரை: முடியர் – சடைமுடி உடையவர். வணங்குவோர் உச்சியருமாம் (பதி 162 உச்சியார்) மும்மதம் – கன்னம், கோசம், கை என்னும் மூன்றிடத்தும் ஒழுகும் மதநீர், கன்னமும் கோசமும் கையும் என்னும் இன்னமுத்தானத்து இழிவன மும்மதம் – (பொருட்டொகைநிகண்டு) ஈர்தல் – உரித்தல். ஈர்உரி – உரித்த தோல். உரியென்பது முதனிலைத் தொழிலாகு பெயர். பொடியர் – திருவெண்பொடியை உடையவர். உரியை அணிந்த பொடியர். வேளை – மன்மதனை. கருவேளை. செற்றவர் – அழித்தவர். கடி – சிறப்பு. அதிசயம், யாவையும் ஆய ஈசர் – ஒருவனே எல்லாமாகி அல்லனாய் உடனுமாவான் (சித்தி. 46) முழுதுமாகிய மூர்த்தி (பா. 9).

Behold! Civan, the Lord of Karuvoor has matted hair. He killed the rutted elephant and peeled of its hide. He has smeared His body with white ashes. He opened His third eye in the forehead. Fierce smoulder came out of His eye and darted against Manmathan, god of love who was carrying the bow of flowers. Instantaneously he fell down dead. Civan is manifested in the Aanilai temple in Karuvoor surrounded by gardens. He is our Lord; He is in each and everything and is all embracive.

1768. பங்கயம்மலர்ப்பாதர்பாதியோர்
மங்கையர்மணிநீலகண்டர்வான்
கங்கையர்கருவூருளானிலை
அங்கையாடரவத்தெம்மண்ணலே. 5

பங்கயம் மலர்ப்பாதர், பாதி ஓர்
மங்கையர், மணிநீலகண்டர், வான்-
கங்கையர் - கருவூருள் ஆன்நிலை
அம் கை ஆடுஅரவத்து எம் அண்ணலே.

pagkayam malarppAtar, pAti Or
magkaiyar, maNi nIlakaNTar, vAn2-
kagkaiyar--karuvUruL An2 nilai,
am kai ATuaravattu em aNNalE.

பொருள்: ஈசனார், தாமரை மலர் போன்ற மென்மையான பாதங்களைக் கொண்டவர். உமையவளைத் தன் உடம்பில் இடபாகத்தில் கொண்டவர். நீலமணி போன்ற கண்டத்தினைக் கொண்டவர். கங்கை நதியை தலையில் தாங்கியவர். கருவூரானிலைத் தலத்துள் இருப்பவர். அங்கையில் ஆடும் அரவத்துடன் காட்சி அளிக்கும் அண்ணல் அவரே ஆவார்.

குறிப்புரை: பங்கயம் – (சேற்றில் முளைப்பது) தாமரை. மலர்ப்பாதர் – மலர் போன்ற திருவடியை உடையவர். பாதி ஓர் மங்கையர் – அர்த்தநாரீச்சுரர். மணி – அழகிய. வான் கங்கையர் – ஆகாச கங்கையை அணிந்தவர். அம் – அழகு. ஆடு அரவத்து – ஆடுகின்ற பாம்பை உடைய.

Behold! It is Civan, the Lord of Karuvoor. His holy feet are soft like the lotus flower. He has shared the left side of His body with our goddess Umaa. His neck looks like the dark blue gem. The celestial river Ganges flows through His head. He is our Supreme Master. He does the cosmic dance by holding the dancing snake in His hand. He has manifested Himself in the Aanilai temple in Karuvoor.

1769. தேவர்திங்களும்பாம்புஞ்சென்னியில்
மேவர்மும்மதிலெய்தவில்லியர்
காவலர்கருவூருளானிலை
மூவராகியமொய்ம்பரல்லரே. 6

தேவர், திங்களும் பாம்பும் சென்னியில்
மேவர், மும்மதில் எய்த வில்லியர்,
காவலர் - கருவூருள் ஆன்நிலை
மூவர் ஆகிய மொய்ம்பர் அல்லரே!

tEvar, tigkaLum pAmpum cen2n2iyil
mEvar, mummatil eyta villiyar,
kAvalAr--karuvUruL An2nilai,
mUvar Akiya moympar allarE!

பொருள்: ஈசனார், தேவர்கள் போற்றுமாறு சந்திரனையும் பாம்பையும் தலையில் கொண்டவர். முப்புரங்களை அழிக்க அம்பினைக் கையில் கொண்டவர். கருவூரானிலைத் தலத்துள் கோயில் கொண்டு அன்பர்களுக்கு அருள்புரிபவர். மும்மூர்த்திகளுள் ஒருவராகவும் விளங்கும் ஆற்றலைக் கொண்டவர் அவரே ஆவார்.

குறிப்புரை: சென்னி – தலை. மேவர் – பொருந்துதலை உடையவர். வில்லியர் – மேருவாகிய வில்லை உடையவர். மூவர் ஆகிய மொய்ம்பர் அல்லரே – அயன் முதலிய மூவருமாகிய சக்தியை உடையவர் அல்லரோ. மொய்ம்பு – சக்தி.

Behold! It is Civan, the Lord of Karuvoor. He is God of the whole cosmos. His head is adorned with the moon and the snake. He used the Meru Mountain as His bow and sent an arrow and destroyed all the three forts of the asuraas. He is the protector of all. He has manifested Himself in the Aanilai temple, who is the Supreme of all the three viz., Brahma, Vishnu and Rudran. Is He not the Supreme, who gave energy to all the three above?

1770. பண்ணினார்படியேற்றநீற்றர்மெய்ப்
பெண்ணினார்பிறைதாங்குநெற்றியர்
கண்ணினார்கருவூருளானிலை
நண்ணினார்நமையாளுநாதரே. 7

பண்ணினார், படி ஏற்றர், நீற்றர், மெய்ப்
பெண்ணினார், பிறை தாங்கும் நெற்றியர்,
கண்ணினார் - கருவூருள் ஆன்நிலை
நண்ணினார், நமை ஆளும் நாதரே.

paNNin2Ar, paTi ERRar, nIRRar, meyp
peNNin2Ar, piRai tAgkum neRRiyar,
kaNNin2Ar, karuvUruL An2 nilai
naNNin2Ar, namai ALum nAtarE.

பொருள்: ஈசனார், பண்ணின் இசையாக விளங்குபவர். இடப வாகனத்தின் மீதேறி இருப்பவர். உமையவளைப் பாகமாகக் கொண்டவர். பிறைநிலவைத் தலையில் தாங்கி இருப்பவர். நெற்றிக்கண் கொண்டவர். கருவூரானிலைத் தலத்தில் கோயில் கொண்டிருப்பவர். வழிபடும் அடியார்களுக்கு என்றும் அருள்புரிபவர் அவரே.

குறிப்புரை: பண்ணினார் – பண்ணாயிருப்பவர். படி ஏற்றார் – படி (ந்து அமர்) தற்குரிய விடையை உடையவர். மெய்ப்பெண்ணினார் – பெண்ணை ஒருபாற் கொண்ட மெய்யார். மெய் – உடம்பு. நெற்றியர் – உச்சியர். கண்ணினார் – உலகுக்கொரு கண்ணாயிருப்பவர். ஞானக் கண்ணருமாம். நண்ணினார் – சேர்ந்தார். நமை – தம்மை. நாதர் – தலைவர். உடையவர்.

Behold! It is Civan, the Lord of Karuvoor. He is the embodiment of divine music. He uses the bull as His vehicle for His ride. He has smeared His body with white ashes. He has shared the left portion of His body with His consort Umaa Devi. He holds the moon in His head. He has a third eye in His forehead. He is manifested in the Aanilai temple in Karuvoor. He is our Lord ruling over all of us.

1771. கடுத்தவாளரக்கன்கயிலையை
எடுத்தவன்தலைதோளுந்தாளினால்
அடர்த்தவன்கருவூருளானிலை
கொடுத்தவன்னருள்கூத்தனல்லனே. 8

கடுத்த வாள் அரக்கன், கயிலையை
எடுத்தவன், தலை தோளும் தாளினால்
அடர்த்தவன் - கருவூருள் ஆன்நிலை
கொடுத்தவன், அருள் கூத்தன் அல்லனே!

kaTutta vAL arakkan2, kayilaiyai
eTuttavan2a, talai tOLum tALin2Al
aTarttavan2--karuvUruL An2nilai,
koTuttavan2(n2), aruL; kUttan2 allan2E!

பொருள்: இராவணன் கயிலாய மலையைத் தூக்க முயன்றபோது, ஈசனார் சினம் கொண்டு அவனது தலைகளையும் தோள்களையும் நெரித்து அவனது ஆற்றலை அடக்கியவர். கருவூரானிலைத் தலத்துள் கோயில் கொண்டுள்ளவர். அடியவர்களுக்கு என்றும் அருள்புரியும் கூத்தன் அவரே ஆவார்.

குறிப்புரை: கடுத்த – கோபித்த. தலைதோளும் – தலைகளும் தோள்களும். தாள் – திருவடி. அருள்கொடுத்தவன் என்க.

Behold! It is Civan, the Lord of Karuvoor. Raavanan, the mighty king of Sri Lanka once was proceeding in the sky in his air vehicle called Pushpaga Vimaanam. He could not proceed to his desired place in the same route, as the mount Himalaya was situated directly on his pathway. The angry king tried to lift the mountain and keep it aside from his pathway. He used his mightiness to lift the hill. Our Lord Civan pressed the top of the mountain very slightly with His toe. Raavanan's head and shoulders got crushed under the mountain. He repented and prayed to our Lord. Pasupatheswarar exonerated him, and granted boons to him. He is the cosmic dancer. He was worshipped by the cows of Karuvoor city. He is our God of gracefulness manifesting Himself in Aanilai temple as the Supreme.

1772. உழுதுமாநிலத்தேனமாகிமால்
தொழுதுமாமலரோனுங்காண்கிலார்
கழுதினான்கருவூருளானிலை
முழுதுமாகியமூர்த்திபாதமே. 9

உழுது மா நிலத்து ஏனம் ஆகி மால்,
தொழுது மா மலரோனும், காண்கிலார் -
கழுதினான், கருவூருள் ஆன்நிலை
முழுதும் ஆகிய மூர்த்தி பாதமே.

uzutu mA nilattu En2am Aki mAl,
tozutu mA malarOn2um, kANkilAr--
kazutin2An2, karuvUruL An2nilai
muzutum Akiya mUrtti pAtamE.

பொருள்: பன்றி வடிவில் பூமியைத் தோண்டிச் சென்ற திருமாலும், அன்னத்தின்மீது பறந்து சென்ற பிரமனும் காணமுடியாத சிறப்புக் கொண்டவரே சிவபெருமான் ஆவார். பேய்க்கூட்டத்தோடு ஆடல் புரியும் அவரே, கருவூரானிலைத் தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அவரது திருவடிகளே எங்கும் நிறைந்த முழுமை நிலையாம் என்க.

குறிப்புரை: ஏனம் – பன்றி. கழுதினான் – பேயன். முழுதும் ஆகிய மூர்த்தி – யாவையும் ஆய ஈசர் (பா. 4).

Behold! It is Civan, the Lord of Aanilai. He is all pervasive. Vishnu took the form of a huge pig, tilled the big earth and went in search of our Lord's holy feet. Similarly, Brahma of lotus flower also went in search of our Lord's head in the sky. Both failed to see our Lord's head and feet. However, our Lord Pasupatheswarar who dances with His bhutas is manifested in the Aanilai temple. He is easily available to be worshipped by devotees, who are aware of His holy feet pervading and blessing everywhere.

1773. புத்தர்புன்சமணாதர்பொய்யுரைப்
பித்தர்பேசியபேச்சைவிட்டுமெய்ப்
பத்தர்சேர்கருவூருளானிலை
அத்தர்பாதமடைந்துவாழ்மினே. 10

*புத்தர் புன் சமண்ஆதர், பொய்உரைப்
பித்தர், பேசிய பேச்சை விட்டு மெய்ப்
பத்தர் சேர் கருவூருள் ஆன்நிலை
அத்தர் பாதம் அடைந்து வாழ்மினே!*

puttar pun2 camaNAtar, poy uraip
pittar, pEciya pEccai viTTu, meyp
pattar cEr karuvUruL An2nilai
attar pAtam aTaintu vAzmin2E!

பொருள்: புத்தர்களும், சமணர்களும் கூறுகின்ற வார்த்தைகள் பொய்மை நிறைந்தவை. அப்பித்தர்கள் கூறுகின்ற சொற்களை ஏற்க வேண்டாம். மெய்ப்பக்தர்கள் என்றும் வழிபாடு செய்யும் கருவூரானிலை ஈசனையே அடைந்து வழிபட்டு உய்வு பெறுவீர்களாக.

குறிப்புரை: ஆதர் – அறிவிலார். மெய்ப்பத்தர் – உண்மை அன்பர். அத்தர் – இறைவர், உயர்ந்தவர்.

If you want to be redeemed please do not listen to the ingenuine preaching of the Jains and Buddhists. Instead, you may reach the Aanilai temple of Karuvoor, where sincere devotees always worship the Lord. You may assemble in that holy temple and pray at His feet so that you may live happily and be redeemed ultimately.

1774. கந்தமார்பொழில்காழிஞானசம்
பந்தன்சேர்கருவூருளானிலை
எந்தையைச்சொன்னபத்தும்வல்லவர்
சிந்தையிற்றுயராயதீர்வரே. 11

*கந்தம் ஆர் பொழில் காழி ஞானசம்-
பந்தன் சேர் கருவூருள் ஆன்நிலை
எந்தையைச் சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தையில்-துயர்ஆய தீர்வரே.*

kantam Ar pozil kAzi njAn2acam-
pantan2 cEr karuvUruL An2nilai
entaiyaic con2n2a pattum vallavar,
cintaiyil-tuyar Aya tIrvarE.

பொருள்: மணம் நிறைந்த சோலைகள் பொருந்திய சீர்காழிப் பதியில் அவதரித்தவரே ஞானசம்பந்தப் பெருமான் ஆவார். அவர் கருவூரானிலையில் கோயில் கொண்டுள்ள எந்தையாகிய ஈசனைப் புகழ்ந்து பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். அதனைச் சிந்தையில் கொண்டு பாடியவர்களின் துயரமெல்லாம் நீங்கும் என்க.

குறிப்புரை: கந்தம் – வாசனை. துயர் ஆய் – துன்பமானவை.

Our divine saint Thiru-gnana-Sambandar was born in Seerkaazhi surrounded by fragrant flower gardens. He reached our Aanilai temple and sang on the Supreme God Pasupatheswarar in Thiru-k-karuvoor, ten sacred verses in Tamil. Those people who can recite these ten verses with sincere devotion will have no agonizing experience in their life. Their minds will be serene and peaceful.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

28ஆம் பதிகம் முற்றிற்று
End of 28th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 165 *பதிக எண்: 29*

29. திருப்புகலி

29. THIRU-PUKALI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

137ஆவது பதிகத்தைக் காண்க.

பதிக வரலாறு

137ஆவது பதிகத்தைக் காண்க.

திருச்சிற்றம்பலம்

1775. முன்னியகலைப்பொருளும்மூவுலகில்வாழ்வும்
பன்னியவொருத்தர்பழவூர்வினவின்ஞாலந்
துன்னியிமையோர்கள்துதிசெய்துமுன்வணங்குஞ்
சென்னியர்விருப்புறுதிருப்புகலியாமே. 1

முன்னிய கலைப்பொருளும், மூஉலகில் வாழ்வும்,
பன்னிய ஒருத்தர் பழ ஊர் வினவின் - ஞாலம்
துன்னி இமையோர்கள் துதிசெய்து முன் வணங்கும்
சென்னியர் விருப்புஉறு திருப் புகலிஆமே.

mun2n2iya kalaipporuLum, mUulakil vAzvum,
pan2n2iya oruttar paza Ur vin2avin2--njAlam
tun2n2i imaiyOrkaL tuticeytu mun2 vaNagkum
cen2n2iyar viruppu uRu tirup pukali AmE.

பொருள்: ஆய கலைகள் அனைத்தையும் அவற்றோடு பொருந்தி வாழும் வாழ்வையும் நமக்குக் கொடுக்கும் தலைவர் சிவபெருமான் ஒருவரே ஆவார். அவர் தேவர்களால் வணங்கப் பெறும் சிறப்பினை உடையவர். அவர் விருப்பமுடன் வீற்றிருந்து அருளும் இடம் திருப்புகலி ஆகும்.

குறிப்புரை: முன்னிய – பொருந்திய, முந்திய, நினைக்க. கலை – அறுபத்து நான்கு கலைகள். உவமையிலாக் கலைஞானம் எனலுமாம். மூவுலக வாழ்வு – மூன்று உலகத்திலும் வாழும் வாழ்க்கை.

பன்னிய – ஆராய்ந்த. ஒருத்தர் – தனிமுதல்வர். வினவின் – கேட்டால். ஞாலம் – பூமி. துன்னி – நெருங்கி. இமையோர்கள் – தேவர்கள். துதி – தோத்திரம். சென்னியர் ஆரம்போல் மேம்பட்டவர். சென்னியிலுள்ளவர் என்றுமாம்.

Our Supreme Lord Civan during the time of creation of this universe, brought into existence the three worlds (1) Swarkkam, (2) Math-thi-yam, and (3) Paa-thaa-lam. Of course, all the three worlds were His. Later He thought of humanity that could live in all these three worlds. He therefore exhibited the art of living, temporal prosperity, morality, virtuous life etc., and established these morals for humanity to follow.

After this, He decided about the art of erudition - learning for the humanity. He, therefore, authored a treatise containing 64 arts and science and enumerated them in detail. The sixty-four arts and science are called:

1. அக்கர இலக்கணம் i.e., the knowledge of spelling and reading. It is called 'orthography', i.e., the science of reading.
2. இலிசிதம் 'Caliography' means Penmanship, the materials required for writing such as எழுத்தாணி -'A style', பனை ஓலை - Palmyrah leaf etc.
3. கணிதம் : The art of computation - arithmetic - the science of numbers.

Please refer to page 258 in the book "Tamil - English Dictionary by M. Winslow for the remaining 61 arts and science.

Our Lord Civan, the Supreme of the entire universe (cosmos) is the originator, founder and embodiment of everything such as the three worlds and learning. Then you might ask a question, which is the oldest place He selected for His manifestation in this earth. The answer is "It is the place where all devaas and celestials arrive, and worship by placing their head on the holy feet of our Lord Civan. This sacred and oldest place is called 'Thirup-pukali'. Only here our Lord Civan manifested Himself at the time of the creation of the universe. This name of the city is one of the twelve names of Seerkaazhi.

1776. வண்டிரைமதிச்சடைமிலைத்தபுனல்சூடிப்
பண்டெரிகையாடுபரமன்பதியதென்பர்
புண்டரிகவாசமதுவீசமலர்சோலைத்
தெண்டிரைகடற்பொலிதிருப்புகலியாமே. 2

வண்டு இரை மதிச் சடை மிலைத்த புனல் சூடிப்
பண்டு எரி கை ஆடு பரமன் பதிஅது என்பர் -
புண்டரிக வாசம்அது வீச, மலர்சோலைத்
தெண்திரை கடல் பொலி திருப் புகலிஆமே.

vaNTu irai matic caTai milaitta pun2al cUTip
paNTu eri kai ATu paraman2 pati atu en2par--
puNTarika vAcam atu vIca, malarccOlait
teNtirai kaTal poli tirup pukali AmE.

பொருள்: கங்கை ஆற்றையும் பிறை நிலவையும் தலையில் அணிந்தவர் சிவபெருமான். நெருப்பைக் கையில் ஏந்திய பரமன் அவரே. அவர் தாமரை மலர் மணம் கமழும் சோலைகளும், அலைகள் பொருந்திய கடலும் சூழ்ந்த திருப்புகலித் தலத்தில் பொருந்தியுள்ளார்.

குறிப்புரை: வண்டு இரை என்றால் புனலில் உள்ள மணம் பற்றியதாகும். வண்திரை என்றால் புனல் (நீர்) அலையின் வளம் உரைத்ததாகும். மதிச்சடை – பிறைசூடிய சடைமேல். மிலைத்த – சூடிய புனல் – கங்கை நீர். எரி – தீ. ஆடுபரமன் – ஆடும் கடவுள். தீயில் ஆடும். தீ ஏந்தி ஆடும் என்றிரண்டும் ஆகும். பதியது – தலம். அது – பகுதிப் பொருள் விகுதி. புண்டரிகம் – தாமரை. வாசம் – மணம். கடல்பொலி – கடலில் மிதந்து விளங்கிய காழி.

It is the sacred and holy place Thirup-pukali where our Lord Civan has manifested Himself. In this city, the fragrant smell of lotus flower spreads all around His temple as well as around the city. The city is surrounded by gardens of flowers. In the seashore, the waves carry clear water dashing against the shore. Here a good number of boats always land and others depart giving a grand appearance. Our Lord has adorned His matted hair with the Ganges river which has its rich waves. He holds in one of His hands the age-old smouldering fire and dances.

1777. பாவணவுசிந்தையைவர்பத்தரொடுகூடி
நாவணவுமந்தணன்விருப்பிடமதென்பர்
பூவணவுசோலையிருள்மாலையெதிர்கூரத்
தேவணவிழாவளர்திருப்புகலியாமே. 3

பா அணவு சிந்தையைவர் பத்தரொடு கூடி,
நா அணவும் அந்தணன் விருப்பு இடம் அது என்பர் -
பூ அணவு சோலை, இருள் மாலை எதிர் கூர,
தே வண விழா வளர் திருப் புகலிஆமே.

pA aNavu cintaiyavar pattaroTu kUTi,
nA aNavum antaNan2 viruppu iTam atu en2par--
pU aNavu cOlai, iruL mAlai etir kUra,
tE vaNa vizA vaLar tirup pukali AmE.

பொருள்: ஈசன், பக்திப்பாடல்களைப் பாடும் பக்தர்களின் சிந்தையில் விளங்குவார். பக்தர்கள் பாடும் பாடல்களிலும் பொருந்தித் தோன்றுவார். பூக்கள் நிறைந்த சோலைகளிலும் விளங்குவார். பெரிய மாலைகளைச் சூடிக் கொண்டு தெய்வ வழிபாடு செய்யும் திருவிழாக்களிலும் விளங்குவார். அவரே திருப்புகலித் திருத்தலத்திலும் கோயில் கொண்டுள்ளார். எங்கும் எதிலும் பொருந்தியவரே ஈசன் என்க.

குறிப்புரை: பா – பாடல். அணவு – கிட்டும். சிந்தையவர் – சித்தத்தை உடையவர். பத்தர் – அன்பர். நா அணவும் – நாக்கில் (புகழ் வடிவாகப்) பொருந்திய. அந்தணன் – சிவன், அம்+தண்+அன் – அழகும் குளிர்ச்சியும் உடையவன். அந்தத்தை அண்ணுதலை, உடையவன் என்றாருமுளர் 'அந்தத்தை அணவுவார்' என்றார் நச்சினார்க்கினியர். கூர – மிக. தேவணவிழா – தெய்வ வடிவான திருவிழா.

Our Lord lives in the minds of the devotees who sing sacred songs about His fame. He gets merged into these songs as well as with these men. He dwells on their tongues. He is a part of the flower abounding gardens. He is present at the religious festivals celebrated in this city when darkness sets in. Our Lord lives also at the temple of Thirup-pukali. He is a part and parcel of everything and participates everywhere.

1778. மைதவழுமாமிடறன்மாநடமதாடி
கைவளையினாளொடுகலந்தபதியென்பர்
செய்பணிபெருத்தெழுமுருத்திரர்கள்கூடித்
தெய்வமதிணக்குறுதிருப்புகலியாமே. 4

மை தவழும் மா மிடறன், மாநடம்அது ஆடி,
கை வளையினாளொடு கலந்த பதி என்பர் -
செய் பணி பெருத்து எழும் உருத்திரர்கள் கூடி,
தெய்வம் அது இணக்கு உறு திருப் புகலிஆமே.

mai tavazum mA miTaRan2, mAnaTam atu ATi,
kai vaLaiyin2ALoTu kalanta pati en2par--
cey paNi peruttu ezum uruttiragkaL kUTi,
teyvam atu iNakku uRu tirup pukali AmE.

பொருள்: கருமை நிறம் பொருந்திய கொண்ட கண்டத்தை உடையவரே சிவபெருமான். எப்பொழுதும் திருநடனம் புரிபவரே சிவபெருமான். அவர் உமாதேவியுடன் உடனாகி உறையும் தலம் எது என்று கேட்பின், உருத்திரர்கள் (சிவகணத்தவர்) கூடி நின்று பணி செய்யும் திருப்புகலித் தலமே அது என்க.

குறிப்புரை: மை – நஞ்சின் கறுப்பு. மை தவழும் – மேகம் போலும் கருநிறம் பரவிய. மா – கரிய. மிடறன் – திருக்கழுத்தை உடையவன். மாநடம் – மகாதாண்டவம். பணி – தொண்டு, இணக்கு. உறு – இணங்குதல் உற்ற.

The city of Thirup-pukali is the place of our Lord Civan. The colour of His neck is dark blue signifying the colour of dark clouds. He happily performs the cosmic dance, which goes on forever. He manifests Himself along with His consort Umaa Devi who wears rich bangles around her hands in this holy place. The Rudraas perform elaborate divine services keeping company with our Lord. All these attractions take place in Thirup-pukali.

1779. முன்னமிருமூன்றுசமயங்களவையாகிப்
பின்னையருள்செய்தபிறையாளனுறைகோயில்
புன்னையமலர்ப்பொழில்களக்கினொளிகாட்டச்
செந்நெல்வயலார்தருதிருப்புகலியாமே. 5

முன்னம் இரு-மூன்றுசமயங்கள்அவை ஆகி,
பின்னை அருள்செய்த பிறையாளன் உறைகோயில் -
புன்னைய மலர்ப்பொழில்கள் அக்கின் ஒளி காட்ட,
செந்நெல் வயல் ஆர் தரு திருப் புகலிஆமே.

mun2n2am iru-mUn2Ru camayagkaL avai Aki,
pin2n2ai aruLceyta piRaiyALan2 uRai kOyil--
pun2n2aiya malarppozilkaL akkin2 oLi kATTa,
cennel vayal Artaru tirup pukali AmE.

பொருள்: ஆறு சமயங்களாக பிரிந்து நிற்பவன் சிவபெருமான். பின்னர் அவை அனைத்தையும் ஏற்று அருள்பவனும் அவனே ஆவான். பிறைநிலவைத் தலையில் தாங்கிய அச்சிவபிரான் புன்னை மலர்கள் சங்கினைப் போல் ஒளியுடன் விளங்கித் தோன்றும் வயல் நிறைந்த திருப்புகலித் தலத்துள் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: இரு மூன்று சமயங்கள், 'அறுவகைச் சமயம்' அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் (சித்தியார் 2) அக்கு – உருத்திராக்க மாலை, சங்குமணியுமாம்.

Our Lord Civan has manifested Himself in Thirup-pukali. In the first instance He is the origin behind the existence of all the six religions with different beliefs according to the individual sects, and He guards all of them. The temple in which our Lord is manifested is surrounded by groves with alexandrian laurel flowers bright like conches. Fertile, red paddy fields also exist around this city where our Lord resides.

1780. வங்கமலியுங்கடல்விடத்தினைநுகர்ந்த
அங்கணனருத்திசெய்திருக்குமிடமென்பர்
கொங்கணவியன்பொழிலின்மாசுபனிமூசத்
தெங்கணவுதேன்மலிதிருப்புகலியாமே. 6

வங்கம் மலியும் கடல் விடத்தினை நுகர்ந்த
அங்கணன் அருத்தி செய்து இருக்கும் இடம் என்பர் -
கொங்கு அண வியன்பொழிலின் மாசு பனி மூச,
தெங்கு அணவு தேன் மலி திருப் புகலிஆமே.

vagkam maliyum kaTal viTattin2ai nukarnta
agkaNan2 arutti ceytu irukkum iTam en2par--
kogku aNa viyan2 pozilin2 mAcu paNi mUca,
tegku aNavu tEn2 mali tirup pukali AmE.

பொருள்: பாற்கடலில் தோன்றிய விடத்தினை அமுதமாக உண்டு அருள் செய்த எம்பெருமான், விருப்பமுடன் பொருந்தியிருக்கும் திருத்தலம் திருப்புகலியே ஆகும். அங்கு தேன் நிறைந்த சோலைகளில் எப்பொழுதும் பனி நிறைந்திருக்கும். தென்னை மரங்களிலிருந்து தேன் பெருகிக் கொண்டே இருக்கும். அத்தகைய வளம் நிறைந்த பதியில்தான் எம்பெருமான் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: வங்கம் – மரக்கலம். கடலுக்குச் சாதியடை. அங்கணன் – கருணைக் கண்ணன். அருத்தி – விருப்பம். கொங்கு – மணம், தேன், பூந்தாது. அண – அண்ண, வியன் (வியல்) – அகலம். தெங்கு – தென்னை.

Our Lord Civan is very much desirous of staying in Thirup-pukali. He is our graceful Lord who drank the poison that arose from the ocean of milk. Here ships and boats in large numbers arrive and move back. The city is surrounded by gardens of fragrant flowers, which add to the flow of honey in the groves. The dewdrops falling on garden trees further enhance this flow. The city is surrounded by sweet coconut trees also. In this fertile city our Lord resides.

1781. நல்குரவுமின்பமுநலங்களவையாகி
வல்வினைகள்தீர்த்தருளுமைந்தனிடமென்பர்
மல்குமடியார்கள்படியாரஇசைபாடிச்
செல்வமறையோருறைத்திருப்புகலியாமே. 7

நல்குரவும் இன்பமும் நலங்கள் அவை ஆகி,
வல்வினைகள் தீர்த்து அருளும் மைந்தன் இடம் என்பர் -
மல்கும் அடியார்கள் படி ஆர இசை பாடி,
செல்வ மறையோர் உறை திருப் புகலிஆமே.

nalkuravum in2pamum nalagkaL avai Aki,
valvin2aikaL tIrttu aruLum maintan2 iTam en2par--
palkum aTiyArkaL paTi Ara icai pATi,
celva maRaiyOr uRai tirup pukali AmE.

பொருள்: அடியவர்களுக்கு வறுமையையும் இன்ப நலன்களையும் கொடுப்பவன் சிவபெருமானே. அவனே நம் வினைகளையும் நீக்கி அருளுவான். அவனே அடியார்கள் விருப்புடன் பாடி ஆடல் புரிகின்றதும் செல்வ மறையோர்கள் உறைகின்றதுமாகிய திருப்புகலித் தலத்தில் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: நல்குரவு – வறுமை. நல்க ஊர்தல் என்னுந் தொடர் நல்கூர்தல் என்று மருவிற்று. பிறர் நல்க – வீடு வீடாக ஊர்ந்து சென்று வேண்டி நிற்றல் பற்றிய காரணப் பெயர். இன்பம் – இன்பந்தரும் பொருள். மைந்தன் – வலிமை உடைய வீரன். படி – நிலம்.

Our Lord Civan is very mighty. It is He who gives us the two extreme forms of fortune, poverty and blissful plenty (all that is good). He Himself chases our bad karma when we worship His holy feet. He is manifested in Thirup-pukali, a holy place, consisting of devotees who sing and dance, praising His name. This holy place is known also for Vedic scholars who reside there in large number.

1782. பரப்புறுப்புகழ்ப்பெருமையாளன்வரைதன்னால்
அரக்கனையடர்த்தருளுமண்ணலிடமென்பர்
நெருக்குறுகடற்றிரைகள்முத்தமணிசிந்தச்
செருக்குறுபொழிற்பொலிதிருப்புகலியாமே. 8

பரப்புஉறு புகழ்ப் பெருமையாளன், வரை தன்னால்
அரக்கனை அடர்த்து அருளும் அண்ணல், இடம் என்பர் -
நெருக்குஉறு கடல்-திரைகள் முத்தம்மணி சிந்த,
செருக்குஉறு பொழில் பொலி திருப் புகலிஆமே.

parappu uRu pukazp perumaiyALan2, varaitan2n2Al
arakkan2ai aTarttu aruLum aNNal, iTam en2par--
nerukku uRu kaTal-tiraikaL muttammaNNi cinta,
cerukku uRu pozil poli tirup pukali AmE.

பொருள்: விரிந்த புகழுக்கு உரியவன் சிவபெருமான். கயிலாய மலையைத் தூக்கிட முயன்ற இராவணனின் செருக்கை அடக்கி அருளியவர் அவரே. அவர், கடல் அலைகள், முத்துக்களையும் மணிகளையும் அள்ளிக் கொண்டு வந்து ஒதுக்கும் சோலைகள் நிறைந்த திருப்புகலித் திருத்தலத்துள் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: பரப்பு – பரவுதல். பெருமை புகழ் ஆளன் – பெரும் புகழை ஆள்பவன். புகழினது பெருமையை ஆள்பவன் எனக் கிடந்தவாறுங் கொள்ளலாம். வரை – கயிலை மலை. திரை – அலை. முத்தம்மணி – முத்துக்களையும் மணிகளையும்.

Our Lord Civan's fame dissiminates all over the world. He pressed the top of the Himalayan mountain with His toe and suppressed the mightiness of Raavanan. Later when Raavanan repented, our Lord forgave him. He is our Supreme God. He has displayed His greatness in Thirup-pukali. The waves of the surging sea in the city, dashing against the shore, bring and scatter pearls and gems of all kinds. The city becomes rich because of the gems in plenty, the tall and big trees abound in the towering gardens of Thirup-pukali.

1783. கோடலொடுகூன்மதிகுலாயசடைதன்மேல்
ஆடரவம்வைத்தருளுமப்பனிருவர்க்கும்
நேடஎரியாகியிருபாலுமடிபேணித்
தேடவுறையுந்நகர்திருப்புகலியாமே. 9

கோடலொடு கூன்மதி குலாய சடைதன்மேல்
ஆடுஅரவம் வைத்து அருளும் அப்பன், இருவர்க்கும்
நேட எரி ஆகி, இருபாலும் அடி பேணித்
தேட, உறையும் நகர் - திருப் புகலிஆமே.

kOTaloTu kUn2mati kulAya caTaitan2mEl
ATu aravam vaittu aruLum appan2, iruvarkkum
neTa eri Aki, irupalarum aTi peNit
tETa, uRaiyum nakar-tru pukali Ame.

பொருள்: கோட்டுப் பூவாகிய காந்தள் மலரையும், வளைந்த பிறைநிலவையும் தலையில் அணிந்தவரே சிவபெருமான். பாம்பைத் தன் தலையில் வைத்திருக்கும் அப்பனும் அவரே ஆவார். பிரமன், திருமால் ஆகிய இருவராலும் கண்டறியப்பட முடியாத அவரே திருப்புகலித் தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அவரது திருவடிகளை வணங்கி அடியார்கள் உய்வு பெறுவார்கள் என்க.

குறிப்புரை: கோடல் – வெண்காந்தள். குலாய – குலவிய. நேட – தேட. பேணி – விரும்பி.

It is Lord Civa of Thirup-pukali. He has beautified His matted hair with glory flowers and also the curved crescent moon. He has adorned His head with the dancing snake also along with the above. Vishnu and Brahma went out to reach our Lord's head and feet, but in vain. At that moment our Lord stood before them as an immeasurable, tall flame of fire. This Lord Civan displays His greatness in the holy temple in the city of Thirup-pukali.

1784. கற்றமணருற்றுலவுதேரருரைசெய்த
குற்றமொழிகொள்கையதிலாதபெருமானூர்
பொற்றொடிமடந்தையருமைந்தர்புலனைந்துஞ்
செற்றவர்விருப்புறுதிருப்புகலியாமே. 10

கற்ற(அ)மணர், உற்று உலவு தேரர், உரை செய்த
குற்றம் மொழி கொள்கைஅது இலாத பெருமான் ஊர் -
பொன்-தொடி மடந்தையரும், மைந்தர், புலன்ஐந்தும்
செற்றவர், விருப்புஉறு திருப் புகலிஆமே.

kaRRa (a)manar, urru ulavu terar, urai ceyta
kuRRam mozi koLkai atu lAta perumAn2 Ur-
pon2-toTi matantaiarum, maintar, pulan2 aintum,
ceRRavar, viruppu uRu tirup pukali AmE.

பொருள்: மெய்நூற்களைக் கற்று உணராத சமணர்களும் சாக்கியர்களும் கூறும் மொழிகள் குற்றமுடைய மொழிகளேயாகும். அவர் மொழிகளை எம்பெருமான் ஏற்றருளார். அவர் ஆடவரும் மகளிரும் ஐம்புலன் அடக்கி வாழும் திருப்புகலித் தலத்திலேயே கோயில் கொண்டுள்ளார் என்க.

குறிப்புரை: கற்ற அமணர் – அவைதிக நூல்களைப் படித்த சமணர். குற்றம் மொழி – குற்றங்களை உடைய வார்த்தைகளை. கொள்கையது – கொள்ளுவது. தொடி – வளையல். மடந்தையர் – மகளிர். மைந்தர் – ஆடவர். புலன் ஐந்தும். செற்றவர் – ஐம்புலத்தாசையையும் அகற்றிய ஞானியர்.

The Jains study the non-religious books. Buddhists also learn unholy books. These two sects without any knowledge of the divine being, preach baseless principles and false hopes. Our Lord never cares a jot for these people's sayings. This lord happily has manifested Himself in Thirup-pukali where damsels of gold bangled hands

and men, sincere devotees of our Lord, who have subdued their five senses live like holy saints.

1785. செந்தமிழ்பரப்புறுதிருப்புகலிதன்மேல்
அந்தமுதலாகிநடுவாயபெருமானைப்
பந்தனுரைசெந்தமிழ்கள்பத்துமிசைகூர
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. 11

செந்தமிழ் பரப்புஉறு திருப் புகலி தன்மேல்,
அந்தம் முதல்ஆகி நடுவுஆய பெருமானைப்
பந்தன் உரை செந்தமிழ்கள் பத்தும் இசை கூர
வந்த வணம் ஏத்துமவர் வானம் உடையாரே.

centmiz parppu uRu tirup pukali tan2mEl,
antam mutal Aki naTuvu Ay peruman2aip
pantan2 urai centamizkaL pattum icai kUra
vanta vaNam Ettumavar vAn2am utaiyarE.

பொருள்: முதல், நடு, ஈறு என்ற மூன்றிடத்தும் பொருந்தியவரே எம் பெருமான். அவர் செந்தமிழ்ப் பாடல் நிறைந்த திருப்புகலித் தலத்தும் உறைகின்றார். அவரைப் புகழ்ந்து ஞான சம்பந்தப் பெருமான் பத்துப் பாடல்களைப் பாடி அருளியுள்ளார். அப்பாடல்களை அன்புடன் ஓதுபவர்கள் இங்கேயே வானச் சிறப்பினை அடைவர்.

குறிப்புரை: செந்தமிழ் பரப்பு உறு திருப்புகலி என்றதால், பண்டு சீர்காழியின் கண் இருந்த தமிழ் வளர்ச்சி புலனாகும். முதல் அந்தம் ஆகி என மாற்றுக. பந்தன் – சம்பந்தர். தமிழ்கள் – தமிழ்ப்பாடல்கள். இசைகூர – பண்ணிசைமிக. வந்தவணம் – வந்தவாறு (பார்க்க 170:112).

Our divine saint Thiru-gnana-Sambandar has sung in chaste Tamil language these ten verses on our Lord of Thirup-pukali. Our Lord exhibits Himself in three ways such as He is the origin, He is the middle and He is the end of everything. Those people who sing in a delightful musical tone these ten verses of Thiru-gnana-Sambandar will be eligible to reach the celestial world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

29ஆம் பதிகம் முற்றிற்று
End of 29th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 166 *பதிக எண்: 30*

30. திருப்புறம்பயம் 30. THIRUP-PURAM-BAYAM

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

புறம்பயம் என்பது பக்கத்தே தண்ணீரை உடையது என்று பொருள்படும். இதற்கு ஏற்ப திருக்கோயிலின் மேல்புறத்தில் மதிலை ஒட்டி நீர்நிலை இன்றும் இருக்கின்றது. ஒரு காலத்தில் பிரளயம் வந்தபொழுது அது ஊரினுள் புகாதவாறு தடைபட்டு புறத்தே நின்றமையால் இப்பெயர் பெற்றது என்பர். அதற்கு ஏற்ப இவ்வூர்த் தல விநாயகர்க்குப் பிரளயங்காத்த விநாயகர் என்ற பெயர் இருக்கின்றது.

கும்பகோணத்திற்கு வடமேற்கே 9 கி.மீ. தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் இருக்கின்றது. கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது. இறைவரது திருப்பெயர் புறம்பய நாதர், சாட்சிநாதர். ஒரு வணிகப் பெண்ணின் நிமித்தம் இவ்வூர்ச் சிவபெருமான் மதுரை சென்று சாட்சி கூறினமையால் சாட்சிநாதர் எனப் பெயர் பெற்றார். இறைவியாரது திருப்பெயர் கரும்படுசொல்லி. இத்திருப்பெயரை (தி. 2 ப. 196 பா. 5) ஞானசம்பந்தப் பெருந்தகையார் 'ஓர் பாகம் கரும்பொடுபடு சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்' என்று எடுத்தாண்டுள்ளது பெருமகிழ்ச்சியைத் தருவதாகும். கரும்படு சொல்லி என்பதற்குக் கரும்பை வென்ற சொல்லை உடையவள் என்பது பொருள்.

தீர்த்தம் பிரம தீர்த்தம், இது இராஜகோபுரத்திற்கு வடகிழக்கில் இருக்கின்றது. சத்தசாகர தீர்த்தம், இது பிரமதீர்த்தத்திற்கு கிழக்கில் நந்த வனத்தில் இருக்கிறது. பிரளய காலத்தில் அழிக்க வந்த ஏழுகடல்களும் இதனுள் அடங்கி இருக்கின்றது என்று புராணம் கூறுகின்றது. மண்ணியாறு, இது ஊரின் கிழக்கே இருக்கிறது. கொள்ளிடப் பேராறு, இது ஊருக்கு வடபால் 2 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. தல விருட்சம், புன்னை. இது முதல் பிரகாரத்தில் வடமேற்கில் இருக்கின்றது.

சனகர் முதலிய நால்வர்களுக்குச் சிவபெருமான் இத்தலத்தில் அறத்தை உணர்த்தினார். இச்செய்தியை இவ்வூர் பதிகத்திலுள்ள 'நால்வர்க் கறம்பயனுரைத்தனை புறம்பயமமர்ந்தோய்' என்னும் முதலாவது திருப்பாட்டிலிருந்து அறியலாம். இத்தலத்தில், தன் தங்கை மகளுடன் வந்தடைந்த காவிரிப் பூம்பட்டினத்து வணிகன் அரவு கடித்து இறந்து போக, சிவபெருமான் அவனுக்கு உயிர் அளித்ததோடு அவனுக்கு அப்பெண்ணைத் திருமணம் புரிவித்தார். அப்பெண்

மதுரையில், அவளது கணவனின் முதல் மனைவியால் பழிக்கப் பெற்றபோது, வன்னி, கிணறு, மடைப்பள்ளி இவைகளோடு சென்று சாட்சி பகர்ந்தார். திருக்கோயிலுக்கு நாளும் விறகு கொண்டு வந்த ஒரு ஆதிதிராவிடற்கு வீடு பேற்றை அருளினார். துரோணர் இறைவனை வழிபட்டு அசுவத்தாமா என்ற புதல்வனைப் பெற்றார். விசுவாமித்திரர், சுக்ரீவன் வழிபட்டும் பேறு பெற்றார்கள்.

இத்தலத்திற்கு தமிழில் ஒரு புராணம் இருக்கின்றது. அது இதுவரை அச்சிடப் பெறவில்லை. அதை ஆக்கியோரும் இன்னாரென்று புலப்படவில்லை. இத்தலத்திற்கு உலா ஒன்று இருந்தது. அதில் சில கண்ணிகள்தான் கிடைக்கப்பெற்றுள்ளன. இத்தலத்திற்கு புறம்பயமாலை என்ற நூலும் உண்டு. அதில் பத்துப் பாடல்களே கிடைத்துள்ளன. எஞ்சியவைகள் கிடைத்தில. அவைகளைத் திருவையாறு, வித்துவான் திரு வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் அச்சிட்டு உள்ளார்.

இத்தல விநாயகருக்குப் பிரளயங் காத்த விநாயகர் என்று பெயர். இவருடைய திருமேனி கடல்படு பொருள்களாகிய இப்பி, சங்கு இவைகளால் ஆக்கப் பெற்றுள்ளது. இவர்க்கு ஆண்டுதோறும் ஆவணி மாதத்துச் சதுர்த்தியில் ஒரு ஆடம்தேன் அபிடேகம் நடைபெற்று வருகின்றது. அவ்வளவு தேனும் அவர் திருமேனியில் சுவறி விடுகின்றது.

இங்கு தட்சிணாமூர்த்திக்குத் தனிக்கோயில் சந்நிதியில் இருக்கின்றது. வணிகப் பெண்ணின் பொருட்டுச் சிவபெருமான் மதுரை சென்று சாட்சி பகர்ந்ததை உணர்த்தும் நாடகம் ஒன்று இவ்வூரில் வைகாசி மாதத்தில் நடைபெறுகின்றது. அதை மக்கள் 'வன்னி நாடகம்' என்று கூறுகின்றனர்.

இக்கோயில் பணிமகளராகிய ஒரு அம்மையார் ஆதனூரில் உள்ள தம் காதல் கிழவனுடன் ஒரு நாள் மாலைப்பொழுதில் செல்லும்பொழுது மண்ணியாற்றில் ஓடம் விட்டவன், யாரும் இல்லாத நிலையை உணர்ந்து அவ்வம்மையாருடைய அணிகலன்கள், கூறைகள் முதலியவைகளைப் பறித்துக்கொண்டு அவளைக் கொன்று ஆற்றில் தள்ளிவிட்டான். ஆற்றைக் கடப்பதற்குள் அவனும் தவறி ஆற்றில் விழுந்து இறந்துவிட்டான். இவ்வரலாற்றை உட்கொண்டுதான், நிறைமொழி மாந்தராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"குற்றொ ருவரைக் கூறை கொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாஞ்
செற்றொ ருவரைச் செய்த தீமைக
இம்மை யேவருந் திண்ணமே"

என (தி. 7 ப. 35 பா. 4) அருளியுள்ளார்கள் என்பார்கள்.

இவ்வூர்ச் சிவபெருமான், மதுரை சென்று சாட்சி பகர்ந்த வரலாற்றுக் குறிப்பு, சிலப்பதிகாரத்தில்,

"வன்னிமரமும் மடைப்பளியும் சான்றாக
முன்னிறுத்துக் காட்டிய மொய்குழலாள்"

எனக் குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வூர்க்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசர் பதிகம் ஒன்று, சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன. மாணிக்கவாசகர், 'புறம் பயம்தனில் அறம்பல அருளியும்' என இவ்வூரைப் பாடியுள்ளார். இக்கோயில் மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது.

பதிக வரலாறு

திருவிசய மங்கையினின்றும் போந்த ஆளுடை பிள்ளையார், திருவைகாலில் அணைந்து பாடி வழிபட்டு, இத்திருப்புறம்பயத்தைக் கண்டு மேன்மேல் விருப்புறப் பெற்று, செந்தமிழ் நிறம்பயில் இசையுடன் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1786. மறம்பயமலைந்தவர்மதிற்பரிசறுத்தனை
நிறம்பசுமைசெம்மையொடிசைந்துனதுநீர்மை
திறம்பயனுறும்பொருள்தெரிந்துணருநால்வர்க்
கறம்பயனுரைத்தனைபுறம்பயமமர்ந்தோய். 1

மறம் பயம் மலைந்தவர் மதில் பரிசு அறுத்தனை;
நிறம் பசுமை செம்மையொடு இசைந்து, உனது நீர்மை
திறம் பயன் உறும் பொருள் தெரிந்து உணரும் நால்வர்க்கு
அறம்பயன் உரைத்தனை - புறம்பயம் அமர்ந்தோய்!

maRam payam malintavr matil paricu aruttan2ai;
niram pacumai cemmaiyOtu icaintu, un2atu nIrmai
tiRam payan2 uRum poruL terintu unarum nalvarkku
aRam payan2 uraittan2ai-purampayam amarntOy!

பொருள்: திருப்புறம்பயம் திருத்தலத்தில் கோயில் கொண்டவர் சிவபெருமான்! உயிர்களைத் துன்புறுத்தும் அரக்கர்களின் முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கியவர் சிவபெருமான்! பசுமையும் செம்மையும் கலந்தது போல் உமாதேவியுடன் கலந்து காட்சி அளிப்பவர் சிவபெருமான்! அறங்களை சனகாதி முனிவர்களுக்கு உபதேசித்தவரும் அவரே ஆவார்!

குறிப்புரை: மறம் – வீரம், பாவமுமாம். பயம் – அச்சம். மறத்தையும் அச்சம் விளைவிப்பதையும் உடைய. மலைந்தவர் – (பகைவர்) போராடியவர், திரிபுரத்தசுரர். பரிசு – (பெயர்ந்து சென்று அழிக்குந்) தன்மை. அறுத்தனை – அறுத்தாய். செம்மை நிறம் அப்பனது, பசுமை நிறம் அம்மையினது. அம்மையப்பர் நிறம் இரண்டும் கூறப்பட்டன. பயன் உறும் பொருள் – உயிர்க்குறுதியை அடைவிக்கும் ஆகமாந்தப் பொருள். நால்வர்க்கு – சநகாதியர்க்கு. அறம்பயன் – அறமாகிய பயன். அமர்ந்தோய் – வீற்றிருந்தருளியவனே. அறுத்தனை உரைத்தனை என்க.

Oh Lord Civa! I bow to You. You completely destroyed the three flying fortresses of the haughty asuraas who with courage, but with fear, misbehaved and did outrageous acts against the devaas and ruined them. The four celebrated sages, spiritual sons of Brahma – Sanakar, Sananthanar, Sanaathanar and Sanarkumarar came to our Lord to improve their knowledge i.e., particularly about the effect and inner meanings of the aagamaas that are explained therein. Our Lord enriched their knowledge with His signs, to guide them to Supreme Virtue. The complexion of His body is both green (colour of goddess Umaa) and redness (golden of our Lord Civan). This Lord has manifested Himself in Thirup-puram-bayam.

1787. விரித்தனைதிருச்சடையரித்தொழுகுவெள்ளம்
தரித்தனையதன்றியும்மிகப்பெரியகாலன்
எருத்திறவுதைத்தனையிலங்கிழையொர்பாகம்
பொருத்துதல்கருத்தினைபுறம்பயமமர்ந்தோய். 2

விரித்தனை, திருச்சடை; அரித்து ஒழுகு வெள்ளம்
தரித்தனை; அது அன்றியும், மிகப் பெரிய காலன்
எருத்து இற உதைத்தனை; இலங்கிழை ஓர் பாகம்
பொருத்துதல் கருத்தினை - புறம்பயம் அமர்ந்தோய்!

virittan2ai, tiriuccaTai; arttu ozuku veLLam
tarittAn2ai; atu an2Riyum, mikap periya kAlan2
eruttu iRa utaittAn2ai; ilagkzai orpakam
poruttutal karuttin2ai-puRampayam amarntOy!

பொருள்: விரிந்த சடாமுடியினை உடையவனே! விரைந்து வரும் கங்கை வெள்ளத்தைத் தன் தலையில் தரித்தவனே! காலனின் வலிமை கெடுமாறு அவன் கழுத்தில் உதைத்தவனே! உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவனே! திருப்புறம்பயத் தலத்தில் கோயில் கொண்ட நாதனே! உன்னை வணங்குகின்றேன்.

குறிப்புரை: சடை விரித்தனை; வெள்ளம் தரித்தனை. எருத்து – கழுத்து, பிடர். இலங்கிழை – விளங்கிய பூண் உடைய உமாதேவியார். கருத்தினை – கருத்தை உடையாய்.

Oh Lord Civa! You unfolded your matted hair and have adorned it with the fast descending Ganges. You have gone beyond these activities by causing death to the god of death. The god of death fell down dead when You kicked his neck, though his figure was very bulky. You have shared the left side of Your body with goddess Umaa Devi. You have manifested Yourself in Thirup-puram-bayam where all of us worship You.

1788. விரிந்தனைகுவிந்தனைவிழுங்குயி ருமிழ்ந்தனை
திரிந்தனைகுருந்தொசிபெருந்தகையுநீயும்
பிரிந்தனைபுணர்ந்தனைபிணம்புகுமயானம்
புரிந்தனைமகிழ்ந்தனைபுறம்பயமமர்ந்தோய். 3

விரிந்தனை; குவிந்தனை; விழுங்கு உயிர் உமிழ்ந்தனை;
திரிந்தனை; குருந்து ஒசி பெருந்தகையும் நீயும்
பிரிந்தனை; புணர்ந்தனை; பிணம் புகு மயானம்
புரிந்தனை; மகிழ்ந்தனை - புறம்பயம் அமர்ந்தோய்!

virittan2ai; kuvittan2ai; vizugku uri umizntan2ai;
tirintan2ai; kuruntu oci peruntakaiyum nIyum
pirintan2ai; punarntan2ai; piNam puku mayAn2am
purintan2ai; makizntan2ai-purampayam amarntOy!

பொருள்: எல்லாமாக விரிந்தவனே! எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டவனே! உயிர்களின் வினைகளை - வினைப்பயன்களை - அவ்வுயிர்களோடு பொருத்தி செம்மை செய்பவனே! குருந்த மரத்தை ஒடித்த திருமால் பெண்ணாக விளங்க உடன் திரிந்த அன்பனே! மயானத்தில் நடனம் புரிபவனே! திருப்புறம்பயத்துள் கோயில் கொண்டவனே! உன்னை வணங்குகின்றேன்.

குறிப்புரை: விழுங்கு உயிர் உமிழ்ந்தனை – இளைப்பாற்றற் பொருட்டு உடலினின்றும் பிரிக்கப்பட்ட உயிர்களை மீண்டும் அவற்றின் வினைகளைக் கழித்தற்பொருட்டு உடம்பிற் புகுத்தினாய். குருந்து ஒசி பெருந்தகை – குருந்த மரத்தை வளைத்த பெரிய தகைமையை உடைய மாயன்; திருமால் மோகினி வடிவம் கொண்டு மனைவியாகிய வரலாறு காண்க. மயானம் புரிந்தனை – சுடுகாட்டை விரும்பினாய். 'கள்ளி முதுகாட்டிலாடி', 'கோயில் சுடுகாடு'.

Oh Lord Civa! You expanded Yourself into the many and big things of the world. You contracted Yourself as an atom. At the time of universal deluge and destruction of all things, all souls took refuge under You. After the end of the deluge You guided maaya to allow all the souls to be born again in all forms in the universe such as from man to other living beings. You changed Your stature and took many more shapes according to the need and moved all over the cosmos. Thirumaal once felled the kuruntha tree. As per Your instructions Thirumaal took the form of the most beautiful lady, mohini. She came and You moved along with her to attract people. You feel pleased to enter the burial ground where the dead bodies of humans are brought to be burnt and happily dance there. You have manifested Yourself in Thirup-puram-bayam.

1789. வளங்கெழுகடும்புனலொடுஞ்சடையொடுங்கத்
துளங்கமரிளம்பிறைசுமந்தது விளங்க
உளங்கொளவளைந்தவர்சுடுஞ்சுடலைநீறு
புளங்கொளவிளங்கினைபுறம்பயமமர்ந்தோய். 4

வளம் கெழு கடும்புனலொடும் சடை ஒடுங்க,
துளங்கு அமர் இளம்பிறை சுமந்தது விளங்க,
உளம் கொள அளைந்தவர் சுடும் சுடலை நீறு
புளம் கொள விளங்கினை - புறம்பயம் அமர்ந்தோய்!

vaLam kezu katumpun2alOTum caTai oTugka,
tuLagku amar iLampiRai cumantatu viLagka,
uLam koLa aLaintavar cuTum cuTalai nIru
puLam koLa viLgkin2ai-purampayam amarntOy!

பொருள்: பெருகி வரும் கங்கையைத் தன் தலையில் ஒடுங்குமாறு செய்தவனே! அச்சடையில் பிறை நிலவை உலவச் செய்தவனே! இறந்தவர்களின் உடலைச் சுடுகின்ற மயானத்தில் உள்ள சுடலை நீற்றைப் பூசி உள்ளவனே! திருப்புறம்பயத் தலத்தில் கோயில் கொண்டவனே! உன்னை வணங்குகின்றேன்.

குறிப்புரை: புனல் – கங்கை. துளங்கு – அசைவு. முதனிலைத் தொழிற்பெயர். அளைந்தவர் – கலந்தவர், குழந்ததவருமாம். புலம் – புளம். லகரலளகரப்போலி. அளமரு – அலமரு என்பது போல. மெய்யினிடம் என்றபடி.

Oh Lord Civa! You have received and arrested the fast flow of the profuse water of the Ganges river and concealed it in Your matted hair. Your holy head bears that beautiful shining baby moon along with the Ganges river. You have smeared all over Your body the hot white ashes collected from the burning ghat. You exhibit this stature to Your devotees who worship You feeling oneness with You, shedding tears from their eyes, and showing their love in their minds. Oh Lord! You are there in Thirup-purambayam.

1790. பெரும்பிணிபிறப்பினொடிறப்பிலையொர்பாகம்
கரும்பொடுபடுஞ்சொலின்மடந்தையைமகிழ்ந்தோய்
சுரும்புணஅரும்பவிழ்திருந்தியெழுகொன்றை
விரும்பினைபுறம்பயமமர்ந்தஇறையோனே. 5

பெரும் பிணி பிறப்பினொடு இறப்பு இலை; ஓர் பாகம்,
கரும்பொடுபடும் சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்;
சுரும்புஉண அரும்பு அவிழ் திருந்தி எழு கொன்றை
விரும்பினை - புறம்பயம் அமர்ந்த இறையோனே!

perum piNi pirappin2otu iRappu ilai; or pAkam,
karumpoTu paTmcolin2 maTantaiyai makizntOy;
curumpu uNa arumpu aviz tirunti ezu kon2Rai
virumpin2ai-puRampayam amarnta iRaiyOn2E!

பொருள்: வினைத் தொடர்பும், பிறப்பும் இறப்பும் இல்லாத பெருமானே! கரும்பினும் இனிய சொல்லினை உடைய உமையவனை ஒரு பாகத்தில் கொண்டவனே! வண்டுகளின் ரீங்காரம் கேட்டு மலரும் கொன்றை மலர்களை மாலையாக அணிந்தவனே! திருப்புறம்பயத்துள் கோயில் கொண்டவனே! உன்னை வணங்குகின்றேன்.

குறிப்புரை: பிணியும் பிறப்பும் இறப்பும் இல்லாய் என்றபடி. கரும்பொடு படுஞ்சொலின் மடந்தை – கரும்பன்ன சொல்லம்மை என்னும் அம்பிகையின் திருப்பெயர். பல திருப்பதிகங்களுள் இறைவனுக்கும் இறைவிக்கும் அக்காலத்தில் வழங்கிய திருப்பெயர்களைக் குறித்தல் மூவர் இடத்தும் உண்டு. கரும்பு – வண்டு.

Oh Lord Civa! You are not to suffer the killing disease of karma. You have no birth, You have no death, You have only eternity. You are pleased to bear on one half

of Your body goddess Umaa whose words are sweeter than sugarcane. You have adorned Your hair with cassia flowers which bloom on hearing the humming of bees around them. You have manifested Yourself in Thirup-puram-bayam.

1791. அனற்படுதடைக்கையவரெத்தொழிலரேனும்
நினைப்புடைமனத்தவர்வினைப்பகையுநீயே
தனற்படுசுடர்ச்சடைதனிப்பிறையொடொன்றப்
புனற்படுகிடைக்கையைபுறம்பயமமர்ந்தோய். 6

அனல் படு தடைக்கையவர், எத்தொழிலரேனும்,
நினைப்பு உடை மனத்தவர் வினைப்பகையும் நீயே;
தனல் படு சுடர்ச் சடை தனிப் பிறையொடு ஒன்றப்
புனல் படு கிடைக்கையை - புறம்பயம் அமர்ந்தோய்!

an2al paTu taTaikkaiyavar, et tozilarEn2um,
nin2aippu uTai man2attavar vin2aippakaiyum nIyE;
tan2al paTu cuTarc caTai tan2ip piRaiyoTu on2Rap
pun2al paTu kiTaikkaiyai--puRampayam amarntOy!

பொருள்: தீ வளர்க்கும் நீண்ட கையை உடைய அந்தணர்கள் உன்னையே என்றும் நினைப்பவர்கள் ஆவார்கள். அவர் எத்தொழிலை மேற்கொண்டவர் ஆயினும் அவர்தம் தீவினைகட்குப் பகையாய் இருந்து தீர்ப்பன் நீயே. தீக்கொழுந்து போன்ற ஒலி பொருந்திய சடையில் தனித்த பிறைச் சந்திரனோடு பொருந்தக் கங்கையை கிடக்குமாறு செய்துள்ளவர் சிவபெருமான். திருப்புறம்பயத்தலத்துள் உறைபவரும் அவரே ஆவார்.

குறிப்புரை: அனல்படு தடக்கையர் – செந்தீ வளர்க்கும் கையுடைய அந்தணர். எரியோம்புஞ் சிறப்பர் (தி.1 ப.80 பா.2) வினைப்பகை – வினைக்குப் பகைவன். தனல் – தணல். புனல் – கங்கை. கிடக்கையை – கிடத்தலை உடையாய்.

Oh Lord Civa! The scholars do their daily ritual of augmenting a sacred fire as one of the duties of the Brahminical householder. Their hands are very long. They always think of You in their mind and praise You. You are the enemy of the evil effects of previous births of those devotees and You sustain them, whatever their occupation might be. You have that beautiful sparkling fire like red matted hair on which that incomparable crescent moon lies merging with with the Ganges. You are there in Thirup-puram-bayam.

1792. மறத்துறைமறுத்தவர்தவத்தடியருள்ளம்
அறத்துறையொறுத்துனதருட்கிழமைபெற்றோர்
திறத்துளதிறத்தினைமதித்தகலநின்றும்
புறத்துளதிறத்தினைபுறம்பயமமர்ந்தோய். 7

மறத்துறை மறுத்தவர், தவத்து அடியர், உள்ளம்
அறத்துறை ஒறுத்து உனது அருள்கிழமை பெற்றோர்,
திறத்து உள திறத்தினை மதித்து அகல நின்றும்,
புறத்து உள திறத்தினை - புறம்பயம் அமர்ந்தோய்!

maRattuRai maRuttavar, tavattu aTiyar, uLLam
aRattuRai oRuttu un2atu aruLkizamai peRROr,
tiRattu uLa tiRattin2ai matittu akala nin2Rum,
puRattu uLa tiRattin2ai--puRampayam amarntOy!

பொருள்: சத்துவ குணம் நிறைந்த அடியவர் உள்ளத்துள் பொருந்தியவன் சிவபெருமான்! அருளைத் தவிர அறப்பயன்களும் வேண்டாவாம் என வாழும் உரிமை பெற்றோர் உள்ளத்துள் பொருந்தியவனும் நீயே. சிவஞானியர்களின் திறத்திற்குத் தக்கபடி பொருந்தியும் வேறாகியும் விளங்குபவனும் நீயே. திருப்புறம்பயம் தலத்தில் உறைபவனும் அவனே ஆவான்.

குறிப்புரை: மறத்துறை – பாபமார்க்கம். மறுத்தவர் – வேண்டாதார். தவத்து அடியர் – தவத்தை உடைய அடியவர். அறத்துறை – ஒறுத்து – புண்ணிய மார்க்கத்தையும் கடிந்து. இருவினை யொப்புடைமை குறித்தபடி. அருட்கிழமை – சிவஞானத்திற்கு உரியராந்தன்மை. திறம் – சரியை முதலிய நான்கு திறங்கள். சரியையாளர் திறத்திற்குத் தக்கவாறு அருள் செய்யும் இறைவனது திறத்தைக் குறித்தபடி. மதித்து அகல நின்றும் புறத்து உள நிறத்தினை என்பது இறைவனது ஒன்றாய் வேறாய் உடனாயிருக்கும் மூன்று இயல்புகளுள் வேறாய் நிற்பதைக் குறித்தது.

Oh Lord Civa! You dwell in the hearts of devotees who with balanced minds, follow the life of penance, defying sinful ways. You dwell also in the hearts of those who defy even the blessed state of penance and virtue since they believe in Your grace for a blanaced life. Based on the capacity of Your devotees You become one with them or appear different from them. You are the one who resides in Thirup-puram-bayam.

1793. இலங்கையரிறைஞ்சிறைவிலங்கலின்முழங்க
உலங்கெழுதடக்கைகளடர்த்திடலுமஞ்சி
வலங்கொளஎழுந்தவன்நலங்கவினஅஞ்சு
புலங்களைவிலங்கினைபுறம்பயமமர்ந்தோய். 8

இலங்கையர் இறைஞ்சு இறை, விலங்கலில் முழங்க
உலம் கெழு தடக்கைகள் அடர்த்திடலும், அஞ்சி,
வலம் கொள எழுந்தவன் நலம் கவின, அஞ்சு-
புலங்களை விலங்கினை - புறம்பயம் அமர்ந்தோய்!

ilagkaiyar iRainjcu iRai, vilagkalil muzagka
ulam kezu taTakkaikaL aTarttiTalum, anjci,
valamkoLa ezuntavan2 nalam kavin2a, anjcu-
pulagkaLai vilagkin2ai--puRampayam amarntOy!

பொருள்: இலங்கை வேந்தனாகிய இராவணன் கயிலை மலையை எடுத்தபோது கதறச் செய்தவர் சிவபெருமான். அவனது வலிமை மிக்க கைகளை நெரித்தவர் சிவபெருமான். அஞ்சா உளங்கொண்ட அவனையும் அஞ்சுமாறு செய்தவர் சிவபெருமான். இறுதியில் அவனது ஆணவத்தை அடக்கி வழிபடச் செய்தவர் சிவபெருமான். திருப்புறம்பயத்துள் கோயில் கொண்டு இருப்பவரும் அவரே.

குறிப்புரை: இலங்கையர் – இலங்கையில் வாழ்ந்தவர். இறைஞ்சு இறை – வணங்கும் அரசனாகிய இராவணன். விலங்கலில் கயிலையை எடுக்குந் திறத்தில். உலம் – திரண்ட கல்லை. கெழு – ஒத்த. கவின் – அழகு செய்ய. அஞ்சு – அஞ்சுகின்ற. ஐம்புலன் எனலுமாம்.

Raavanan, the king of Sri Lanka was worshipped by all its citizens. He was the greatest and the mightiest warrior in the world and a staunch follower of Lord Civan. This famous king, due to egoism, once tried to lift mount Kailash with his broad and strong shoulders and hands. Oh Civa! You subdued his strength. He then cried and prayed for clemency. You suppressed him and his vanity. Thereafter You graced him and gave him a sacred sword and longevity. Oh Civa! You subdued and kept his five senses of threatening nature under Your control. You are there in Thirup-purambayam.

1794. வடங்கெடநுடங்குணஇடந்தவிடையல்லிக்
கிடந்தவனிருந்தவனளந்துணரலாகார்
தொடர்ந்தவருடம்பொடுநிமிர்ந்துடன்வணங்கப்
புடங்கருள்செய்தொன்றினைபுறம்பயமமர்ந்தோய். 9

வடம் கெட நுடங்குண இடந்த இடை அல்லிக்
கிடந்தவன், இருந்தவன், அளந்து உணரல் ஆகார்
தொடர்ந்தவர், உடம்பொடு நிமிர்ந்து உடன் வணங்க,
புள் தங்கு அருள்செய்து ஒன்றினை - புறம்பயம் அமர்ந்தோய்!

vaTam keTa nuTagkuNa iTanta iTai allik
kiTantavan2, iruntavan2, aLantu uNaral AkAr
toTarntavar, uTampoTu nimirntu, uTan2 vaNagka,
puL tagku aruLceytu on2Rin2ai--puRampayam amarntOy!

பொருள்: ஆலிலையில் கிடந்த திருமாலும் தாமரை மலரில் இருந்து பிரமனும் ஆணவத்தால் அடிமுடி தேடிய பொழுது இருவரும் அறிய முடியாநிலையில் ஒளிவுருவாய் நின்றவர் சிவபெருமான். இருவரும் ஆணவம் அடங்கப் பெற்று வணங்கியபோது அருள்புரிந்தவர் சிவபெருமான். திருப்புறம்பயத்துள் கோயில் கொண்டு இருப்பவரும் அவரே ஆவார்.

குறிப்புரை: வடம் – ஆலமரம், இங்கு ஆலிலையை உணர்த்திற்று. துடங்கு உள – அசைவுள்ள. தூங்க என்றபடி. இடந்த – பெயர்ந்த. இடை அல்லி – கொப்பூழிடையில். பூத்த – (அகவிதழையுடைய) தாமரையோடு, கிடந்தவன் – திருமால். இருந்தவன் – அம்மலர்மேல் இருந்த பிரமன். புடம் – மறைப்பு. கருள் – இருள். இருள் மறைக்கப் பட்டாற்போல (ஒளிப்பிழம்பாய் இருந்தும் இருவரும் அடிமுடி காணாது) அறியாமையான் மறைக்கப்பட்டார்கள். 'கருள்தரு கண்டத்து எம் கயிலையார்' (தி. 3 ப. 109 பா. 4). புடங்கருள் செய்து – புள்தங்க அருள் செய்து எனப்பிரித்துக் கருடப்புள், அன்னப்புள் இரண்டின் மேலும் தங்க அருள் செய்து எனலும் ஆம். பெயரெச்சத்து அகரம் தொக்கது. புள்தங்கு – புட்டங்கு என இரட்டிக்காதது. எதுகை நோக்கிற்றாம். தி. 2 ப. 92 பா 1 காண்க. 'புட்டன் பேடையொடாடும் பூம்புகலூர்த் தொண்டர் போற்றி வட்டஞ்சூழ்ந்தடி பரவும் வர்த்த மானீச்சரத்தாரே' (தி. 2 ப. 92 பா. 21) என்பதில் புள்+தன் = புட்டன் என்று புணர்ந்தமையால். இங்கும் புள் தங்கு என்பனவற்றின் புணர்ச்சி எனக் கொள்வதில் தடை இராது.

Vishnu the demigod who takes his rest on a banyan leaf, Brahma, another demigod who had his birth in the lotus of Vishnu's navel, they both did not realise Your greatness. They both tried to see Your supreme head and holy feet, by displaying the form of a swine and swan. They failed. Later they worshipped You with their original

posture. You then graced them and gave them garuda and the swan as their conveyance birds of vehicles. He also commanded them gracefully to do the duty of creation and sustentation to Brahma and Vishnu respectively.

1795. விடக்கொருவர்நன்றெனவிடக்கொருவர்தீதென
உடற்குடைகளைந்தவருடம்பினைமறைக்கும்
படக்கர்கள்பிடக்குரைபடுத்துமையொர்பாகம்
அடக்கினைபுறம்பயமமர்ந்தவுரவோனே. 10

விடக்கு ஒருவர் நன்றுஎன, விடக்கு ஒருவர் தீது என,
உடற்கு உடை களைந்தவர், உடம்பினை மறைக்கும்
படக்கர்கள், பிடக்குஉரை படுத்து, உமை ஓர்பாகம்
அடக்கினை - புறம்பயம் அமர்ந்த உரவோனே.

viTakku oruvar nan2Ru en2a, viTakku oruvar tItu en2a,
uTaRku uTai kaLaintavar, uTampin2ai maRaikkum
paTakkarkaL, piTakku urai paTuttu, umai orpAkam
aTakkin2ai-puRampayam amarnta uravOn2E!

பொருள்: சமணரும் சாக்கியரும் தமக்குள்ளேயே மாறுபாடு கொண்டு ஊன் நல்லது எனவும் தீயது எனவும் கூறிக் கொள்வர். உடம்பினை மறைக்கும் உடையும் வேண்டா எனத் திரியும் திகம்பரர்கள். அவர்களின் தீமொழிகளை ஏற்றுக் கொள்ளாதீர். உமையவளை உடம்பின் ஒரு பாகமாகக் கொண்டு திருப்புறம்பயத்துள் அமர்ந்த இறைவனையே வணங்குங்கள்.

குறிப்புரை: விடக்கு - ஊன். ஒருவர் நன்றென்றும் - தேரையும். தீதென்னும் சமணரையும் குறித்ததாகும். (உடற்கு உடைகளைந்தவர், திகம்பர சைனர்) படக்கர்கள் - உடையுடுத்தோர். படக்கு - உடை. பிடக்கு உரை - பிடக நூல்மொழி 'பிடக்கே உரைசெய்வார்' (தி. 1 ப. 13 பா. 19). புத்தர்களுடைய திரிபிடகம்.

Oh Lord Civa! You shared half of Your body with our goddess Umaa. You never cared for the false words of the Jains and the Buddhists. Some of them say meat-eating is good. Others say it is bad. A group called Digambaras, prefer to be nudes; others cover their body with dress. Thus there is contradiction among themselves. Oh Lord! You have manifested Yourself in Thirup-puram-bayam.

1796. கருங்கழிபொருந்திரைகரைக்குலவுமுத்தம்
தருங்கழுமலத்திறைதமிழ்க்கிழமைஞானன்
சுரும்பவிழ்புறம்பயமமர்ந்ததமிழ்வல்லார்
பெரும்பிணிமருங்கறஒருங்குவர்பிறப்பே. 11

கருங்கழி பொரும் திரை கரைக் குலவு முத்தம்
தரும் கழுமலத்து இறை - தமிழ்க் கிழமை ஞானன் -
சுரும்பு அவிழ் புறம்பயம் அமர்ந்த தமிழ் வல்லார்,
பெரும் பிணி மருங்கு அற, ஒருங்குவர், பிறப்பே.

karugkazi porum tirai karaik kulavu muttam
tarum kazumalattu iRai-tamizk kizamai njAn2an2--
curumpu aviz puRampayam amarnta tamiz vallAr,
perum piNi marugku aRa, orugkuvar, piRappE.

பொருள்: உப்பங்கழிகள் நிறைந்ததும் பேரலைகளால் முத்துக்கள் ஒதுங்கப் பெறுவதுமாகிய தலமே கழுமலமாம். அங்கு அவதாரம் செய்தவரே தமிழுக்கு உரிமை பூண்ட ஞானசம்பந்தப் பெருமான் ஆவார். அவர் திருப்புறம்பயத்திறைவனைப் போற்றி, பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். அந்தப் பாடல்களை அன்புடன் பாடுபவர்கள் பிணிநீங்கப் பெறுவர். பிறவா நிலையும் உறுவர்.

குறிப்புரை: கழி – உப்பளம். கரைக்குலவு முத்தம் – கரைமேல் விளங்கும் முத்து. கழுமலத்து இறை – காழிவேந்தர். அமர்ந்த தமிழ் – விரும்பிப் பாடிய இப்பதிகம். மருங்கு அற – இருந்த இடமும் தெரியாது ஒழிய. பிறப்பு ஒருங்குவர் – பிறப்பு ஒழியப் பெறுவர். ஒருங்குவது பிறப்பில் வினை. பிறவி ஒருங்கப் பெறுவது இத்தமிழ் வல்லார் வினை. அப்பிறப்பு ஒருங்கப் பெறுவர் எனற்பாலது பிறவி ஒருங்குவர் எனப்பட்டது. நோயொழிவர், காலொடிவர் என்பவை போல்வது.

Our saint Thiru-gnana-Sambandar hails from Kazhumalam. He is the prime head of the citizens of this place. Here the saltpans contain a good number of pearls brought by the big waves of the sea nearby. Thiru-gnana-Sambandar has great respect for and heritage of Tamil language. He sang sacred songs on the god who has manifested Himself in Thirup-puram-bayam where the bees hum music always. Those devotees who are well versed in these Tamil songs of Thiru-gnana-Sambandar will have no inflicting diseases. And more than that they will have no rebirth at all.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

30ஆம் பதிகம் முற்றிற்று
End of 30th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 167 *பதிக எண்: 31*

31. திருக்கருப்பறியலூர்

31. THIRUK-KARUP-PARIYALOOR

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

திருக்கருப்பறியலூர் என்னும் இத்திருத்தலமானது வைத்தீசுவரன்கோயில் தொடர்வண்டி நிலையத்திற்கு வடமேற்கே 7.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. தலைஞாயிறு என வழங்கப்பெறுகிறது. மயிலாடுதுறையிலிருந்தும் பந்தணைநல்லூர், வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்தும் செல்லப் பேருந்து வசதிகள் உள்ளன.

ஊரின்பெயர் கருப்பறியலூராக இருப்பினும், கோயிலுக்குக் கொகுடிக்கோயில் என்று பெயர். முல்லைக் கொடியைத் தலக்கொடியாக உடைமையால் இப்பெயர் பெற்றது என்பர் ஒரு சிலர். கோயில் அமைப்புப்பற்றி இப்பெயர் பெற்றது என்பது வேறுசிலர்.

இறைவரது திருப்பெயர் குற்றம்பொறுத்தநாதர். ஒரு காலத்தில் இந்திரன் இறுமாப்புடன் கயிலைக்குச் சென்றான். அப்பொழுது இறைவர் பூதவடிவாய் அவன்முன் தோன்றினார். அவன் அதை அறிந்துகொள்ளாது வச்சிராயுதத்தை அவர் மேல் எறிந்தான். அதன்பின் இறைவர் என்று அறிந்து தன்பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினான். அதைப் பொறுத்த காரணம்பற்றி இப்பெயர் பெற்றார். இறைவியாரது திருப்பெயர் கோல்வளைநாயகி. தீர்த்தம் இந்திரதீர்த்தம்.

இக்கோயில் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமானது. இவ்வூர் அந்தணர்களை இவ்வூர்த் தேவாரத்தில்,

"பொய்யாத வாய்மையாற் பொடிப்பூசிப் போற்றிசைத்துப் பூசை செய்து
கையினா லெரியோம்பி மறைவளர்க்கு மந்தணர்தங் கருப்பறியலூர்"

எனச் சிறப்பித்துக் கூறியுள்ளது. அம்பலவாணர் இயற்றிய புராணம் அச்சில் வந்துள்ளது.

பதிக வரலாறு

திருநாரையூரை அருந்தமிழ் புனைந்து வழிபட்ட நாயனார், அடியார்களை வானுலகம் ஏற்றக் கற்றவனாகிய சிவபிரான் வீற்றிருக்குங் கருப்பறியலூர் அடைந்த பொழுது, பாடிப் பரவிய அடியவர் வினையை எளிதில் ஒழித்திடுமாறு பாடியருளியது இத்தமிழ்க் கிளவி.

திருச்சிற்றம்பலம்

1797. சுற்றமொடுபற்றவைதுயக்கறஅறுத்துக்
குற்றமில்குணங்களொடுகூடுமடியார்கள்
மற்றவரைவானவர்தம்வானுலகமேற்றக்
கற்றவனிருப்பதுகருப்பறியலூரே. 1

சுற்றமொடு பற்று அவை துயக்கு அற அறுத்து,
குற்றம் இல் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்று அவரை வானவர் தம் வானுலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது - கருப்பறியலூரே.

cuRRamoTu paRRu avai tuyakku aRa aRuttu,
kuRRam il kuNagkaLoTu kUTum aTiyArkaL
maRRu avarai vAn2avar tam vAn2 ulakam ERRak
kaRRavan2 iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: நம்முடைய அகப்பற்று புறப்பற்றுக்களை நீக்க உதவுபவன் சிவபெருமான்! தூய அடியவர்களுக்கு வானுலக வாழ்வை அருள்பவன் சிவபெருமான். கருணை உடைய அவனே கருப்பறியலூர் என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: சுற்றமொடு பற்று அவை – (துணையும்) சுற்றமும் பற்றும் ஆகியவற்றை. இவ்வாறு கருமூலத்தைப் பறிப்பதால் கருப்பறியலூர் என்றாயிற்று. கலந்தவர் கருப்பறியல் என ஆசிரியரே இப்பதிக முடிவில் ஊர்ப்பெயர்ப் பொருளை உணர்த்தியது உணர்க. துயக்கு – அறிவு வேறுபடல். சிவபிரானையே அறியும் அறிவு வேறுபடாதவாறு சுற்றம் முதலியவற்றை அறுத்த என்றபடி. மற்று அசை – அடியார்களாகிய அவரை என்க. வானுலகம் – வீட்டுலகு. கற்றவன் – இயல்பாகவே உணர்ந்த சிவன்.

Behold! It is Civan, the Lord of Thiruk-karup-pariyaloor. In this city, sincere devotees are many in number. They have snapped their ties of attachments with their kith and kin and have shed their life desires entirely. They are faultless people, full of virtues, are bent upon comprehending the Lord in the widest way without any wordly

deviation. They all join, go to the temple, and worship on our Lord's holy feet. Kutram-poruth-tha-naathar, our Lord who is gratified and naturally knows to arrange to lift these devotees to heaven, the world of devaas, is manifested in Thiruk-karup-pariyaloor.

1798. வண்டணைசெய்கொன்றையதுவார்சடைகள்மேலே
கொண்டணைசெய்கோலமதுகோளரவினோடும்
விண்டணைசெய்மும்மதிலும்வீழ்தரவொரம்பால்
கண்டவனிருப்பதுகருப்பறியலூரே. 2

வண்டு அணைசெய் கொன்றைஅது வார்சடைகள்மேலே
கொண்டு; அணைசெய் கோலம்அது, கோள் அரவினோடும்;
விண்டு அணைசெய் மும்மதிலும் வீழ்தர, ஓர் அம்பால்;
கண்டவன் இருப்பது - கருப்பறியலூரே.

vaNTu aNaicey kon2Rai atu vAr caTaikaL mElE
koNTu; aNaicey kOlam atu, kOL aravin2OTum;
viNTu aNai cey mumatilum vIztara, or ampAl;
kaNTavan2 iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலர் மாலையைத் தன் தலையில் சூடிக் கொள்பவன் சிவபெருமான்! வலிமைமிக்க பாம்பினை அணிந்து கொள்பவன் சிவபெருமான்! முப்புரங்களை அழிக்க ஓரம்பினைத் தொடுத்தவன் சிவபெருமான்! அவன் கோயில் கொண்டிருப்பது திருக்கருப்பறியலூர் திருத்தலமே என்க.

குறிப்புரை: வண்டு அணைசெய் – வண்டுகள் அணைதலைச் செய்கின்ற. கோலம் – திருக்கோலம், அழகு. கோள் – துன்பம், வலிமையுமாம். விண்டு – (இடம்) விண்டு. நீங்கி, விள்ளல் உற்று.

Behold! It is Civan, the Lord of Thiruk-karup-pariyaloor. He has beautified His long matted hair with cassia flowers, embraced by bees inside. Along with this He allows the venomous snake also on His matted hair. With a single shot He felled down the three flying fortresses of the asuraas which fell down on the earth. This our Lord manifests Himself in Thiruk-karup-pariyaloor.

1799. வேதமொடுவேதியர்கள்வேள்விமுதலாகப்
போதினொடுபோதுமலர்கொண்டுபுனைகின்ற
நாதனெனநள்ளிருண்முனாடுகுழைதாழும்
காதவனிருப்பதுகருப்பறியலூரே. 3

"வேதமொடு வேதியர்கள் வேள்வி முதல்ஆகப்
போதினொடு போது, மலர், கொண்டு புனைகின்ற
நாதன்" என, நள்இருள் முன்ஆடு, குழை தாழும்
காதவன் இருப்பது - கருப்பறியலூரே.

"vEtamoTu vEtiyarkaL vELvi mutal Akap
pOtin2oTu pOtu, malar, koNTu pun2aikin2Ra
nAtan2" en2a, naL iruL mun2 ATu, kuzai tAzum
kAtavan2 iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: மறையவர்கள் ஓதும் மறைகளில் பொருந்தியவர் சிவபெருமான்! அவர்கள் செய்யும் வேதச் சடங்குகளிலும் உறைபவன் சிவபெருமான்! அவர்கள் மலர் தூவிச் செய்யும் வழிபாட்டில் நிறைந்திருப்பவன் சிவபெருமான்! அடியவர்களால் நாதன் என்று போற்றப் பெறுபவன் சிவபெருமான்! நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் சிவபெருமான், அசையும் காதணியை குழைக்காதில் அணிந்தவன் சிவபெருமான். கருப்பறியலூரிலும் கோயில் கொண்டிருப்பவன் அவனே என்க.

குறிப்புரை: முதலாக – முதலிய பல நற்செயல்களிலும். போதினொடு – (காலம்பெறப்) பொழுதொடு. போது – மலரும் பருவத்து. மலர் – பூ. குழைதாழும் காதவன் – குழைக்காதன் என்னும் திருப்பெயரைக் குறித்தது.

Behold! It is Civan, the Lord of Thiruk-karup-pariyaloor for whom the Vedic scholars recite the Vedas and light the sacrificial fire almost daily. Then in the early hours of the day, they collect the buds and flowers of fine quality and strew them on our Lord and worship Him. He is our God and Master whose earing suspends from His tender ear and is visible even in midnight darkness. This Lord, manifested in Thiruk-karup-pariyaloor, is the same Civan.

1800. மடம்படுமலைக்கிறைவன்மங்கையொருபங்கன்
உடம்பினைவிடக்கருதிநின்றமறையோனைத்
தொடர்ந்தணவுகாலனுயிர்காலவொருகாலால்
கடந்தவனிருப்பதுகருப்பறியலூரே. 4

மடம் படு மலைக்கு இறைவன் மங்கை ஒரு பங்கன்,
உடம்பினை விடக் கருதி நின்ற மறையோனைத்
தொடர்ந்து அணவு காலன் உயிர் கால ஒரு காலால்
கடந்தவன், இருப்பது - கருப்பறியலூரே.

maTam paTu malaikku iRaivan2 magkai orupagkan2,
uTampin2ai viTak karuti nin2Ra maRaiyOn2ait
toTarntu aNavu kAlan2 uyir kAla orukalAl
kaTantavan2, iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: முனிவர்கள் உறையும் மடங்கள் நிறைந்த மலை அரசனின் மகளாகிய அழகிய உமையவளை இடபாகத்தில் கொண்டவன் எம்பெருமான்! மார்க்கண்டேயனைக் காக்க எமனைக் காலில் உதைத்தவன் எம்பெருமான்! அப்பெருமான் பொருந்தி இருக்குமிடம் கருப்பறியலூர் ஆகும்.

குறிப்புரை: மடம் – அழகு. துறவிகள் உறையும் இடம். பல உடையதால் மடம் படு மலை என்று இமயத்தினைக் குறித்தல் பொருந்தும். இறைவன் – அரசன். மறையோன் – மார்க்கண்டேய முனிவன். அணவு – கிட்டிய. காலன் – யமன். கால் – கக்க. கடந்தவன் – கடக்க வுதைத்தவன்.

Behold! It is Civan, the Lord of Thiruk-karup-pariyaloor. He shares His left side body with beautiful Umaa, daughter of the king of the Himalayan mountain range, a place of scenic beauty and a dwelling place for holy saints. Maarkandeyan, the boy of sixteen years, realised the fact that his soul would leave his body on a particular day. On that day, He worshipped our Lord fervently embracing Him in the temple. At that moment, the god of death, Kaalan went near Maarkandeyan to capture his soul. Instantly, our Lord kicked Kaalan to death with His right leg. This Lord has manifested Himself in Thiruk-karup-pariyaloor.

1801. ஒருத்தியுமையோடுமொருபாகமதுவாய
நிருத்தனவன்நீதியவன்நித்தன்நெறியாய
விருத்தனவன்வேதமெனஅங்கமவையோதும்
கருத்தவனிருப்பதுகருப்பறியலூரே. 5

ஒருத்தி உமையோடும் ஒரு பாகம்அதுஆய
நிருத்தன் அவன், நீதி அவன், நித்தன், நெறிஆய
விருத்தன் அவன், வேதம் எனஅங்கம் அவை ஓதும்
கருத்தவன், இருப்பது - கருப்பறியலூரே.

orutti umaiyOTum orupAkam atu Aya
niruttan2 avan2, nIti avan2, nittan2, neRi Aya
viruttan2 avan2, vEtam en2a agkam avai Otum
karuttavan2, iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: உமையவளை உடம்பின் ஒரு பாகமாகக் கொண்டு திருநடனம் புரிபவன் எம்பெருமான்! நீதியாக விளங்குபவன் எம்பெருமான்! நித்தியமானவன் எம்பெருமான்! பழம்பொருளாக விளங்குபவன் எம்பெருமான்! வேதமாகவும் அதன் அங்கங்களாகவும் விளங்குபவன் எம்பெருமான்! அவனே, கருப்பறியலூரில் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: நிருத்தன் – கூத்தன். நித்தன் – அழியாதவன். விருத்தன் – முதியோன். வேதம் அங்கம் – நான்மறையும் ஆறங்கமும் கருத்தவன் – தலைவன். கருத்துள் இருப்பவன் (தி. 6 ப. 83 பா. 5).

Behold! It is Civan, the Lord of Thiruk-karup-pariyaloor. He shares half of His body with our incomparable goddess Umaa. He performs the cosmic dance along with her. He is the embodiment of justice. He is eternal. He is the epitome of virtue and the most ancient. He is the author of the four Vedas and the six sub-items of the Vedas; He also recites them whenever He likes them. This Lord has manifested Himself in Thiruk-karup-pariyaloor.

1802. விண்ணவர்கள்வெற்பரசுபெற்றமகள்மெய்த்தேன்
பண்ணமருமென்மொழியினாளையணைவிப்பான்
எண்ணிவருகாமனுடல்வேவஎரிகாலும்
கண்ணவனிருப்பதுகருப்பறியலூரே. 6

விண்ணவர்கள் வெற்பு அரசு பெற்ற மகள், மெய்த் தேன்-
பண் அமரும் மென்மொழியினாளை, அணைவிப்பான்
எண்ணி வரு காமன் உடல் வேவ, எரி காலும்
கண்ணவன் இருப்பது - கருப்பறியலூரே.

viNNavarkaL veRpu aracu peRRa makaL, meyt tEn2-
paN amarum men2moziyin2ALai, aNaivippAn2
eNNi varu kAman2 uTal vEva, eri kAlum
kaNNavan2 iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: மலையரசன் பெற்ற மகளே உமையவள் அவள் பண் போலும் இன்மொழி பேசுபவள். அவளை இறைவனுக்கு மணம் செய்து கொடுக்க தேவர்கள் விரும்பினார்கள். தேவர்கள் பொருட்டு எம்பெருமானின் யோகநிலையைக் கலைக்க முயன்றான் மன்மதன். அவன் ஆணவம் கொண்டு செயல்பட்டதால், அவனை எம்பெருமான் நெற்றிக்கண்ணால் எரித்து அருளினான். அவர் கோயில் கொண்டிருப்பது திருக்கருப்பறியலூரில் என்க.

குறிப்புரை: விண்ணவர்களுக்கு, வெற்புக்கு அரசு எனக் கூட்டுக. எரிகாலும் கண் – நெருப்பைக் கக்கும் கண். இது பெருமானது வெகுண்ட நிலையைக் குறித்தது. அணைதல் அம்பிகையது. அணைவித்தல் ஆண்டவனது. தேன்மொழி பண்மொழி என்றவாறு.

Behold! It is Civan, our Lord of Thiruk-karup-pariyaloor. The devaas and all celestials desired that our Lord should be united with the daughter of the king of the Himalayas who talks pleasing words like mustic. He opened His third eye, which emitted fire to kill the god of love, Manmathan, for his misdeed and arrogance. This Lord has manifested Himself in Thiruk-karup-pariyaloor.

1803. ஆதியடியைப்பணியஅப்பொடுமலர்ச்சேர்
சோதியொளிநற்புகைவளர்க்குவடுபுக்குத்
தீதுசெயவந்தணையுமந்தகனரங்கக்
காதினனிருப்பதுகருப்பறியலூரே. 7

ஆதி அடியைப் பணிய, அப்பொடு, மலர்ச் சேர்
சோதிஒளி, நல் புகை, வளர்க் குவடு புக்குத்
தீது செய வந்து அணையும் அந்தகன் அரங்கக்
காதினன் இருப்பது - கருப்பறியலூரே.

Ati aTiyaip paNiya, appoTu, malarc cEr
cOtioLi, nal pukai, vaLark kuvaTu pukkut
tItu ceya vantu aNaiyum antakan2 aragkak
kAtin2an2 iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: இறைவனே ஆதி நாயகன் ஆவான். அவனது திருவடியைப் புனித நீரால் அபிடேகம் செய்து, மலர் தூவி தூப தீபம் காட்டி வணங்கினான் மார்க்கண்டேயன்! அவனைக் கொல்ல வந்தான் காலன். அக்காலனைக் காலால் உதைத்தவர் எம்பெருமான். அவர் கோயில் கொண்டிருப்பது திருக்கருப்பறியலூரே ஆகும்.

குறிப்புரை: அப்பு – சலம். சோதி ஒளி – தூபம். நற்புகை – தூமம். வளர்க் குவடு புக்கு – வளர்தலை உடைய கருப்பறியலூர்க் கோயில் கட்டுமலை மேலுள்ளதாதலின் அதனுள் புகுந்து. அரங்க – புடை பெயர். அழியவுமாம். காதினன் – ஈண்டு உதைத்தவன் என்னும் பொருட்டு.

Behold! It is Civan, Lord of Thiruk-karup-pariyaloor. Maarkandeyan knew that our Lord Civan is the supreme deity and the source of all beings. He, therefore, took water, flowers, the lamp for light, incense for pleasant smoke and reached the temple Kokudik-kovil on the hard and tall mountain top and started his worship embracing our Lord's image of Civalingam. At that moment Kaalan, the god responsible for the final separation of souls, came near Maarkandeyan to capture his soul from his body. Our Lord instantly kicked, with His right leg, Kaalan to die. This Lord is manifested in Thiruk-karup-pariyaloor.

1804. வாய்ந்தபுகழ்விண்ணவரும்மண்ணவருமஞ்சப்
பாய்ந்தமர்செயுந்தொழிலிலங்கைநகர்வேந்தற்
கேய்ந்தபுயமத்தனையுமிற்றுவிழமேனாள்
காய்ந்தவனிருப்பதுகருப்பறியலூரே. 8

வாய்ந்த புகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்து அமர் செயும் தொழில் இலங்கைநகர் வேந்தற்கு
ஏய்ந்த புயம் அத்தனையும் இற்று விழ, மேல்நாள்
காய்ந்தவன் இருப்பது - கருப்பறியலூரே.

vAynta pukaz viNNavarum maNNavarum anjcap
pAyntu amar ceyum tozil ilagkai nakar vEntaRku
Eynta puyam attan2aiyum iRRu viza, mElnAL
kAyntavan2 iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: புகழ்மிக்க விண்ணவர்களும் மண்ணவர்களும் அஞ்சுமாறு போர் புரிந்தவன் இராவணன். இலங்கை அரசனாகிய அவன் கயிலாய மலையை எடுக்க முயன்றான்.

அப்போது அரக்கனது தோள் ஆற்றல் அழிய இறுத்தவரே எம்பெருமான். அவர் கோயில் கொண்டிருப்பது திருக்கருப்பறியலூரில் என்க.

குறிப்புரை: வாய்ந்த புகழை உடைய விண்ணவர் என்றும் மாறிக் கூட்டிப் புகழ் வாய்ந்த என்றும் கொள்ளலாம். இற்றுவிழ – ஒடிந்துவிழ. காய்ந்தவன் – சினந்தவன். ஏய்ந்த – பொருந்திய.

Behold! It is Civan, Lord of Thiruk-karup-pariyaloor. Raavanan, the king of Sri Lanka was the mightiest warrior. He used to declare war and defeat all his enemies. The famous celestials as well the people on the earth shuddered to hear the name of Raavanan. However, our Lord Civan got wild and crushed Raavanan under the bottom of His mountain, and this resulted in the breakage of all his broad shoulders. This Lord manifests Himself in Thiruk-karup-pariyaloor.

1805. பரந்ததுநிரந்துவருபாய்திரையகங்கை
கரந்தொர்சடைமேன்மிசையுகந்தவளைவைத்து
நிரந்தரநிரந்திருவர்நேடியறியாமல்
கரந்தவனிருப்பதுகருப்பறியலூரே. **9**

பரந்தது நிரந்து வரு பாய் திரைய கங்கை
கரந்து, ஓர் சடைமேல்-மிசை உகந்து அவளை வைத்து,
நிரந்தரம் நிரந்து இருவர் நேடி அறியாமல்
கரந்தவன் இருப்பது - கருப்பறியலூரே.

parantatu nirantu varu pAy tiraiya kagkai
karantu, or caTaimEl-micai ukantu avaLai vaittu,
nirantaram nirantu iruvar nETi aRiyAmal
karantavan2 iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: விரிந்து பரந்து பெருகிவரும் கங்கையைத் தலையில் தாங்கி நிற்பவர் எம்பெருமான். பிரமனும் திருமாலும் மாறுகொண்டு நின்றபோது ஒளி உருவில் அடிமுடி அறிய முடியா நிலையில் நின்றவரே எம் பெருமான்! அவர் கோயில் கொண்டிருக்கும் தலமே கருப்பறியலூர் என்க.

குறிப்புரை: நிரந்து – வரிசையாக. பரந்து – பரவி. சடைமேல் மிசை – சடையினது. மேலிடத்தில். நிரந்தரம் – எப்போதும். நேடி – தேடி. கரந்தவன் – ஒளித்தவன்.

Behold! It is Civan, the Lord of Thiruk-karup-pariyaloor. He controlled the surging Ganges river which rushed with tumultuous waves and concealed it in His matted hair. He happily welcomed the goodess of the river, Ganga Devi and has kept her on His head. He concealed Himself too from Thirumaal and Brahma, the demigods, who were searching for Him for years. This Lord manifests Himself in Thiruk-karup-pariyaloor.

1806. அற்றமறையாவமணராதமிலிபுத்தர்
சொற்றமறியாதவர்கள்சொன்னசொலைவிட்டுக்
குற்றமறியாதபெருமான்கொகுடிக்கோயில்
கற்றெனவிருப்பதுகருப்பறியலூரே. **10**

அற்றம் மறையா அமணர், ஆதம்இலி புத்தர், -
சொற்றம் அறியாதவர்கள் - சொன்ன சொலை விட்டு,
குற்றம் அறியாத பெருமான் கொகுடிக் கோயில்
கற்றென விருப்பது - கருப்பறியலூரே.

aRRam maRaiyA amaNar, Atam ili puttar,--
coRRam aRiyAtavarkaL-con2n2a colai viTTu,
kuRRam aRiyAta perumAn2 kokuTik kOyil
kaRRen2a iruppatu--karuppaRiyalUrE.

பொருள்: உடையால், உடலை மறைக்காமல் உலவுபவர்களே சமணர்கள், புத்தர்கள். அவர்கள் கூறும் குற்றம் நிறைந்த சொற்களைக் கேட்டு நடக்காதீர். குற்றமற்ற எம்பெருமான் திருக்கருப்பறியலூரில் கோயில் கொண்டுள்ளார். அவனது திருவடிகளை வணங்கி உய்வு பெறுங்கள்.

குறிப்புரை: அற்றம் மறையா அமணர் – மறைக்க வேண்டிய உறுப்புக்களை மறைக்காத சமணர் 'அற்றம் மறைப்பதுமுன் பணியே' என்றதுணர்க. சொற்றம் – சொல்லும் சொற்கள். சொல்+து+அம். கொகுடி – ஒருவகை முல்லை. குற்றமறியாத பெருமான் – இத்தலத்துப் பெருமான் திருப்பெயர். கற்றென் – நிலையாக. கல்+து+கற்று கல்லைப் போன்று உறுதியானது.

Behold! It is Civan, the Lord of Thiruk-karup-pariyaloor. The Jain monks roam about the city without properly covering their body. The Buddhists have no regard for ultimate knowledge and do not try to acquire it. Oh! Ye devotees, do not listen to them. Get away from them. Follow our Lord who is the only God of blemishlessness. He is

manifested in Kokudi temple in Thiruk-karup-pariyaloor. Go to His temple and worship Him.

1807. நலந்தருபுனற்புகலிஞானசம்பந்தன்
கலந்தவர்கருப்பறியல்மேயகடவுள்ளைப்
பலந்தருதமிழ்க்கிளவிபத்துமிவைகற்று
வலந்தருமவர்க்குவினைவாடலெளிதாமே. 11

நலம் தரு புனல் புகலி ஞானசம்பந்தன்,
கலந்தவர் கருப்பறியல் மேய கடவு(ள்)ளைப்
பலம் தரு தமிழ்க்கிளவி பத்தும்இவை கற்று,
வலம் தருமவர்க்கு வினை வாடல் எளிதுஆமே.

nalam taru pun2al pukali njAn2acampantan2,
kalantavar karuppaRiyal mEya kaTavu(L)Laip
palam taru tamizkkiLavi pattum ivai kaRRu,
valam tarumavarkku vin2ai vATal eLitu AmE.

பொருள்: நலன் தரும் நீர்வளம் மிக்க சீர்காழிப் பதியில் அவதரித்தவரே ஞானசம்பந்தப் பெருமான் ஆவார். அவர் கருப்பறியலூரில் கோயில் கொண்டுள்ள எம்பெருமான்மீது பத்து தமிழ்ப்பாடல்களை பாடி அருளியுள்ளார். அப்பாடல்களை அன்புடன் பாடிடும் அடியவர்களின் வினைகள் எளிதாக நீங்கும் என்க.

குறிப்புரை: கடவுள்ளை – கடவுளை (விரித்தல் விகாரம்). பலம் – பலன். வலந்தருதல் – உயிர்க்கு வன்மையை அளித்தல். திருக்கோயிலை வலம் வருதலுமாம். வினை வாடல் – கருப்பறிதல். 'கலந்தவர் கருப்பறிதல்' என்ற தொடர் இத்திருத்தலத்தின் பெயர்ப் பொருளைக் குறித்தது. பறியல்மேய – பறியலில் மேவிய.

Our holy saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi, a holy place of pure and profuse water, providing richness to one and all. He sang on the Lord of Thiruk-karup-pariyaloor in chaste Tamil language, ten beneficial verses. Those who learn these ten songs and strengthen off their mind and repeat them often will easily see their evils of karma wiped off.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

31ஆம் பதிகம் முற்றிற்று
End of 31st Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 168 பதிக எண்: 32

32. திருவையாறு

32. THIRU-VAI-YAARU

பண் : இந்தளம் – வினாஉரை

Pann: Indhalam - Vinaa Urai

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 142ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகத் தொடர் எண் 142ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

1808. திருத்திகழ்மலைச்சிறுமியோடுமிகுதேசர்
உருத்திகழெழிற்கயிலைவெற்பிலுறைதற்கே
விருப்புடையஅற்புதரிருக்குமிடமேரார்
மருத்திகழ்பொழிற்குலவுவண்திருவையாறே. 1

திருத் திகழ் மலைச்சிறுமியோடு மிகு தேசர்,
உருத் திகழ் எழில் கயிலைவெற்பில் உறைதற்கே
விருப்பு உடைய அற்புதர், இருக்கும் இடம் - ஏர் ஆர்
மருத் திகழ் பொழில் குலவு வண் திரு ஐயாறே.

tirut tikaz malaicciRumiyOTu miku tEcar,
urut tikaz ezil kayilaiveRpil uRaitaRkE
viruppu uTaiya aRputar, irukkum iTam--Er Ar
marut tikaz pozil kulavu vaN tiru aiyARE.

பொருள்: செல்வம் பொருந்திய மலையரசனின் மகளே பார்வதி தேவியார். அவளை விரும்பி மணம் கொண்டவரே சிவபெருமான். அவர் கயிலாய மலையில் ஒளியுடன் வீற்றிருப்பார். அற்புதராகிய அவர் மணமிக்க சோலைகள் நிறைந்த திருவையாறு தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: திரு – அழகு. திகழ் – விளங்குகின்ற. மலைச்சிறுமி – இமாசல குமாரியாகிய பார்வதி தேவியார். தேசர் – ஒளிவடிவினர். உரு – வெண்மை உருவம். எழில் – அழகு. வெற்பு – மலை.

உயர்ச்சியிற்பிற எல்லாவற்றையும் வெல்லுங்காரணத்தாற் பெற்ற பெயர். ஏர் – அழகு. மரு – மணம். அற்புதர் இருக்குமிடம் திருவையாறு எனக்கூட்டுக. 7, 8 பாக்களில் கூறியபடி, வண்மை – கொடையாளர், ஈகையை உணர்த்துக.

Behold! It is Civan, Lord of Thiru-vai-yaaru. His body is very bright and glowy. He is happily united with the most beautiful daughter of the Himalayan mountain who is called Paarvathi Devi. He dwells on the most beautiful white peaks of the Hiamalayan mountain. However, He is manifest also in the holy place of fertile fields called Thiru-vai-yaaru where sweet smelling flowers are plenty all over the fields. Here good philanthropists do live and worship our Lord. Iyaarappar. A good number of Vedic scholars also live in this city. All of them are highly philanthropic and perform daily spiritual rituals without fail. Thereafter, they go to the temple, praise our Lord Civan and worship His holy feet.

1809. கந்தமரவுந்துபுகையுந்தலில்விளக்கேர்
இந்திரனுணர்ந்துபணியெந்தையிடமெங்கும்
சந்தமலியுந்தருமிடைந்தபொழில்சார
வந்தவளிநந்தணவுவண்திருவையாறே. 2

கந்து அமர உந்து புகை உந்தல் இல் விளக்கு ஏர்
இந்திரன் உணர்ந்து பணி எந்தை இடம் - எங்கும்
சந்தம் மலியும் தரு மிடைந்த பொழில் சார,
வந்த வளி நந்து அணவு வண் திரு ஐயாறே.

kantu amara untu pukai untal il viLakku Er
intiran2 uNarntu paNi entai iTam--egkum
cantam maliyum taru miTainta pozil cAra,
vanta vaLi nantu aNavu vaN tiru aiyARE.

பொருள்: நறுமணமும் நறும்புகையும் சூழ்ந்த இடத்தில் ஒளிமயமாய் விளங்குபவர் சிவபெருமான். இந்திரன் அவரை உணர்ந்து பணி செய்த இடமே திருவையாறு திருத்தலம் ஆகும். அத்தலத்தில் சந்தன மரங்கள் நிறைந்த சோலைகளை நிறைந்துள்ளன. அவற்றில் பொருந்தி வந்த காற்றும் நன்மணத்தோடு வீசும் என்க.

குறிப்புரை: கந்து – பற்றுக்கோடு. அமர – பொருந்த. உந்தல் – தூண்டல், செலுத்துதல். இல் – இல்லாத. விளக்கு ஏர் – விளக்கினது அழகை. பணி – பணிகின்ற. இந்திரனுணர்ந்தது செம்பொற் சோதியைப் போலும். இதன் முதலடியிற் குறித்த 'விளக்கோ' என்பதன் உண்மை புலப்பட்டிலது. திருவையாற்றுப் புராணம் – பஞ்சநதிச் சருக்கம். பா. 15ல் உணர்த்தும் வரலாறு காண்க. சந்தம் – அழகு. சந்தனமுமாம். தரு – மரங்கள். வளி – காற்று. நந்து – நந்தவனம். அணவு – கிட்டும். பொருந்தும். எந்தையிடம் திருவையாறு எனக்கூட்டுக.

Civan, the Lord of Thiru-vai-yaaru was realised as the Supreme Lord by Indiran and this king of the devaas and swargam served our Lord and worshipped Him. Our Lord has the complexion of the purest golden red. He has manifested Himself in the temple of Thiru-vai-yaaru, encircled by pleasant smoke and fragrance from the incense. The city is full of gorgeous gardens where sandal trees are many. The wind blowing along these gardens becomes pleasant, fragrant breeze because of the sandal trees. The city consists of many philanthropists who worship our Lord. The Vedic scholars of this place are also highly philanthropic. These scholars perform their spiritual rituals daily without fail. Our Lord's place is filled with pleasant breeze and pleasing people.

1810. கட்டுவடமெட்டுமுறுவட்டமுழவத்தில்
கொட்டுகரமிட்டவொலிதட்டுவகைநந்திக்
கிட்டமிகநட்டமவையிட்டவரிடஞ்சீர்
வட்டமதிலுள்திகழும்வண்திருவையாறே. 3

கட்டு வடம்எட்டும் உறு வட்டமுழவத்தில்
கொட்டு கரம் இட்ட ஒலி தட்டும் வகை நந்திக்கு
இட்டம் மிக, நட்டம் அவை இட்டவர் இடம் - சீர்
வட்டமதிலுள்-திகழும் வண் திரு ஐயாறே.

kaTTu vaTam eTTum uRu vaTTa muzavattil
koTTu karam iTTa oli taTTum vakai nantikku
iTTam mika, naTTam avai iTTavar iTam--cIr
vaTTamatiluL--tikazum vaN tiru aiyARE.

பொருள்: வட்டமான முழவினை எட்டு வார்களால் கட்டியிருப்பர். அதனைத் தன் கரம் கொண்டு தட்டி இனிய ஓசையை எழுப்பி இசைப்பவர் நந்திதேவர் ஆவார். அம்முழவொலியின் தாளசதிக்கு ஏற்ப அவருக்கு பெருவிருப்பம் உண்டாகி நடனமாடுபவர்.

சிவபெருமான் அவர் விரும்பி உறையும் இடமே வட்டமான மதில்களால் சூழப்பெற்றதும், வன்றண்மையோர் வாழும் அழகிய திருவையாறு திருத்தலம் ஆகும்.

குறிப்புரை: முழவம் எட்டு வடத்தைக் கொண்டு கட்டப்பட்டது. வட்டமானது, நந்திதேவரால் கொட்டப்படுவது. கரம் – கை. இடம் – விருப்பம். நட்டம் அவை இட்டவர் – திருக்கூத்து வகைகளை ஆடியவர் (சிவபெருமான்) இட்டவர் இடம் திருவையாறு என்க. சீர் வட்டம் இரண்டும் மதிலை விசேடித்தன. மதிலுள் திகழும் திருவையாறு. வண்மை – வளத்தைக் குறித்தது.

Behold! It is Civan, Lord of Thiru-vai-yaaru. Nandi Devar creates pleasant music in his circular percussion instrument, with eight strings by beating it with his hands. This musical sound and the cymbal harmony urge and inspire Lord Civa who is highly happy then to dance to its rhythm. Thiru-vai-yaaru which has fortifying walls all around the city is our Lord's place. Also here lives a large number of philanthropists who offer worship to our Lord Civan. A good number of Vedic scholars, highly philanthropic do a lot of charities to those people who are in need of help. All these scholars perform their daily spiritual rituals without fail. Thereafter, they go to the temple, praise our Lord Civan and worship His holy feet.

1811. நண்ணியொர்வடத்தின்நிழல்நால்வர்முனிவர்க்கன்
றெண்ணிலிமறைப்பொருள்விரித்தவரிடஞ்சீர்த்
தண்ணின்மலிசந்தகிலொடுந்திவருபொன்னி
மண்ணின்மிசைவந்தணவுவண்திருவையாறே. 4

நண்ணி ஓர் வடத்தின் நிழல் நால்வர்முனிவர்க்கு, அன்று
எண் இலி மறைப்பொருள் விரித்தவர் இடம் - சீர்த்
தண்ணின் மலி சந்து அகிலொடு உந்தி வரு பொன்னி
மண்ணின் மிசை வந்து அணவு வண் திரு ஐயாறே.

naNNi or vaTattin2 nizal nAlvar mun2ivarkku, an2Ru,
eN ilimaRaipporuL virittavar iTam--cIrt
taNNin2 mali cantu akiloTu unti varu pon2n2i
maNNin2 micai vantu aNavu vaN tiru aiyARE.

பொருள்: கல்லால மரத்து அடியில் வீற்றிருந்து, சனகாதியர் முனிவர்கள் நால்வர்க்கும் நான்மறைப் பொருளைச் சொல்லாமல் விரித்து தெளிவுபடுத்தியவர் சிவபெருமான்.

அப்பெருமானே குளிர்ச்சி நிறைந்த சந்தனம், அகில் போன்ற மரங்களை அடித்து வருகின்ற பொன்னி நதிக்கரையில் உள்ள அழகிய திருவையாறு திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளார் என்க.

குறிப்புரை: வடத்தின் நிழல் – கல்லால மரத்தின் நிழல். நால்வர் – சனகாதியர். விரித்தவர் – விரித்துரைத்தவர், (சின்முத்திரைக் குறிப்பால்) சீர் – சிறப்பு. கனமுமாம். தண்ணின் மலி – குளிர்ச்சியில் மிக்க. சந்து அகில் – சந்தனமும் அகிலுமாகிய மரங்கள். பொன்னி – காவிரி. விரித்தவர் – இடம் திருவையாறு என்க.

Behold! It is Civan, Lord of Thiru-vai-yaaru. Once seated under the stone banyan tree, He made the four famous saints known as Janakaathiyar understand their doubts on the countless intricate details of divine knowledge contained in Vedas by simply making mudras in His hands. The city of Thiru-vai-yaaru has plenty of glories. It is a celebrated fertile place. Here the river Ponni brings with its dashing water-current, sandalwood and akil wood. The bank of the river abounds in these logs of wood. This is the place where our Lord Civan is manifest. A good number of Vedic scholars do live in this city. They and the philanthropic people of the city do a lot of charities to those people who are in need of help. All these scholars perform their daily spiritual rituals without fail. They praise our Lord Civan and worship His holy feet at Thiru-vai-yaaru.

1812. வென்றிமிகுதாரகனதாருயிர்மடங்கக்
கன்றிவருகோபமிகுகாளிகதமோவ
நின்றுநடமாடியிடநீடுமலர்மேலால்
மன்றல்மலியும்பொழில்கொள்வண்திருவையாறே. 5

வென்றி மிகு தாருகனது ஆர்உயிர் மடங்க,
கன்றி வரு கோபம் மிகு காளி கதம் ஓவ,
நின்று நடம் ஆடி இடம் - நீடு மலர் மேலால்
மன்றல் மலியும் பொழில் கொள் வண் திரு ஐயாறே.

ven2Ri miku tArukan2atu Ar uyir maTagka,
kan2Ri varu kOpam miku kALi katam Ova,
nin2Ru naTam ATi iTam--nITu malarmElAl
man2Ral maliyum pozil koL vaN tiru aiyARE.

பொருள்: வரபலம் கொண்ட தாரகாசுரன் உலகத்தைத் துன்புறுத்தி வந்தான். அவனது வெற்றியை அடக்க காளி விரும்பினாள். சினங்கொண்டு போரிட்டு அசுரனை அழித்தாள். அப்போது நடனம் புரிந்து அவளது சினத்தைத் தணித்தவரே சிவபெருமான். அவர், மலர் மணம் நிறைந்து விளங்கும் திருவையாறு தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: வென்றி – வெற்றி. தாருகன் – ஓர் அசுரன். ஆருயிர் மடங்க – அரியவுயிர் மடிய. கன்றி – மனங்கன்றி. கதம் – கோபாவேசம். ஓவ – நீங்க. நடமாடி – பெயர்ச்சொல். நடராசப் பெருமான். மன்றல் – மணம். மேலால் பொலியும் பொழில் என்றும் நடமாடி இடம் திருவையாறு என்றும் கூட்டுக.

Behold! It is Civan, the Lord of Thiru-vai-yaaru. Daarukan, otherwise called Daarakaasuran, was an asuraa, i.e., an evil demigod. He did a lot of penance for many years. At last the Supreme Being appeared before him and gave him a lot of boons he asked for. Daarakan became the mightiest warrior in the world with many capacities. He started torturing the devaas who were his enemies causing havoc to their life. He won in many battles. At the request of the devaas, our goddess decided to wage war against him and kill him. Our goddess Paarvathi Devi took the special form of a dreadful combatant called Kaali, wife of Veerabadran or Civan. With her fierce appearance and divine ire she fought against him and finally killed him. Even after his death, her rage became aggravated as a disease. Lord Civan decided to tranquilize her. He told her to participate with Him in a dance competition. She agreed. Civa danced several postures and she repeated it equally. At last, Lord Civan danced the very special pose called 'Oorth-thuva-thaandavam'. Paththirakaali could not do this dance. She calmed down. She bowed before Him and accepted His superiority and took the original status of His wife as Paarvathi Devi. The status of Pathi-thira-kaali disappeared. This Lord Civan has manifested Himself in Thiru-vai-yaaru where many rich gardens flourish. These gardens have sweet smelling flowers. A good number of Vedic scholars do live in this city along with many philanthropic people who are charitable to those people in need of help. All these scholars do their daily spiritual

rituals without fail. Such is the greatness of Thiru-vai-yaaru where our Lord is worshipped.

1813. பூதமொடுபேய்கள்பலபாடநடமாடிப்
பாதமுதல்பையரவுகொண்டணிபெறுத்திக்
கோதையரிடும்பலிகொளும்பரனிடம்பூ
மாதவிமணங்கமழும்வண்திருவையாறே. 6

பூதமொடு பேய்கள்பல பாட நடம்ஆடி,
பாத முதல் பைஅரவு கொண்டு அணி பெறுத்தி,
கோதையர் இடும் பலி கொளும் பரன் இடம் - பூ
மாதவி மணம் கமழும் வண் திரு ஐயாறே.

pUtamoTu pEykaL pala pATa naTam ATi,
pAtal mutal pai aravu koNTu aNi peRutti,
kOtaiyar iTum pali koLum paran2 iTam--pU
mAtavi maNam kamazum vaN tiru aiyARE.

பொருள்: பூதகணங்களுடன் பேய்க்கணங்களும் பாடிட அதற்கு ஏற்ற வகையில் நடனம் ஆடுபவரே சிவபெருமான். அவர் தமது அடிமுதல் முடிவரை பாம்புகளையே அணிகலன்களாகக் கொண்டவர். தாருகா வனத்து முனிதேவியர்கள் இடும் பிச்சைப் பொருளை ஏற்க வந்தவரும் அவரே. அவரே மாதவிப் பூக்களின் மணம் நிறைந்து விளங்கும் திருவையாறு திருத்தலத்திலும் பொருந்தியுள்ளார்.

குறிப்புரை: பூதமொடு பேய்கள் பல பாட இறைவன் நடமாடினான். பை – படம். சர்ப்பாபரணத்தைப் பாதாதிகேசாந்தம் அழகு பெறக் கொண்டவன். கோதையர் – தாருகாவனத்து ரிஷிபத்தினிகள். பரன் – மேலானவன். மாதவி – குருக்கத்தி. பரன் இடம் திருவையாறு என்க.

Behold! It is Civan, the Lord of Thiru-vai-yaaru. He dances to the tunes of ghosts and goblins who are His followers. He wears the snakes on His body from head to foot and adorns Himself with these. He goes out for alms carrying in His hand the human skull as the begging bowl and accepts the alms from the chaste and faithful wives of the sages of Daaruka forest. This city is full of glories. There are many gardens around the city where sweet, fragrant jasmine flowers flourish. A good number of Vedic scholars do live in this city and also many highly philanthropic people. They do a lot of charities

to those people who are in need of help. All these scholars perform their daily spiritual rituals without fail. Thereafter, they go to the temple, praise our Lord Civan and worship His holy feet.

1814. துன்னுகுழல்மங்கையுமைநங்கைசுளிவெய்தப்
பின்னொருதவஞ்செய்துழல்பிஞ்ஞகனுமங்கே
என்னசதியென்றுரைசெயங்கணனிடஞ்சீர்
மன்னுகொடையாளர்பயில்வண்திருவையாறே. 7

துன்னு குழல் மங்கை உமைநங்கை சுளிவு எய்த,
பின் ஒரு தவம் செய்து உழல் பிஞ்ஞகனும், அங்கே,
"என்ன சதி?" என்று உரைசெய் அங்கணன் இடம் - சீர்
மன்னு கொடையாளர் பயில் வண் திரு ஐயாறே.

tun2n2u kuzal magkai umainagkai cuLivu eyta,
pin2 oru tavam ceytu uzal pinjnjakan2um, agkE,
"en2n2a cati?" en2Ru uraicey agkaNan2 iTam--cIr
man2n2u koTaiyALar payil vaN tiru aiyARE.

பொருள்: நீண்டு அடர்ந்த கூந்தலை உடைய உமாதேவி மகிழுமாறு அவளுடன் பொருந்தி இருப்பவர் சிவபெருமான். உமாதேவியின் தவத்தைச் சிறப்புறச் செய்து, அவளை எல்லோரும் காண மணம் புரிந்தவரே சிவபெருமான். அந்த அங்கணராகிய சிவபெருமான், கொடையாளர் நிறைந்த திருவையாறு தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: துன்னு – நெருங்கிய. குழல் – கூந்தல். மங்கையுமை நங்கை – உமாதேவியார். களிவு எய்த – கோபம் அடைய. பின் ஒரு தவம் செய்து – பின்னரும் ஒரு தவத்தைச் செய்து. உழல் – உழலுதற்குக் காரணமான. பிஞ்ஞகன் – சடைமுடி உடையவன். அங்கே – தவஞ்செய்த இமய மலைச்சாரலில் என்ன சதி என்று உரை செய் அங்கணன் – சதி என்ன காரணத்தால் நீ தவம் செய்கின்றாய் என்று வினாவியன். சதி – பதிவிரதை. அங்கணன் – கருணைக் கண்ணன். சீர் மன்னு கொடையாளர் – சிறப்பு நிலை பெற்ற கொடையை ஆள்பவர்.

Behold! It is Civan, Lord of Thiru-vai-yaaru. Our goddess Umaa with long, dense, sweet smelling hair once became ill tempered and went to do penance for a second time. Then our Lord approached her and asked her the reason for her animosity. She pacified Him. After that our Lord married her because He had great

graceful eyes. A good number of Vedic scholars do live in this city along with many philanthropic people. They do a lot of charities to those people who are in need of help. All these scholars perform their daily spiritual rituals without fail. They praise our Lord Civan and worship His holy feet at Thiru-vai-yaaru.

1815. இரக்கமில்குணத்தொடுலகெங்குநலிவெம்போர்
அரக்கன்முடியத்தலைபுயத்தொடுமடங்கத்
துரக்கவிரலிற்சிறிதுவைத்தவரிடஞ்சீர்
வரக்கருணையாளர்பயில்வண்திருவையாறே. 8

இரக்கம் இல் குணத்தொடு உலகு எங்கும் நலி வெம்போர்
அரக்கன் முடிபத்து அலை புயத்தொடும் அடங்கத்
துரக்க, விரலின் சிறிது வைத்தவர் இடம் - சீர்
வரக் கருணையாளர் பயில் வண் திரு ஐயாறே.

irakkam il kuNattoTu ulaku egkum nali vempOr
arakkan2 mutipattu alai puyattoTum aTagkat
turakka, viralin2 ciRitu vaittavar iTam--cIr
varak karuNaiyALar payil vaN tiru aiyARE.

பொருள்: இராவணன் இரக்கமற்றவன். உலகத்தை எல்லாம் துன்புறுத்தியவன். கொடிய போரினை விரும்பிச் செய்தான். அவனது முடிகளும் தோள்களும் நலிவடையத் தன் திருப்பாத விரல்களை ஊன்றி அடர்த்துப் பின்னர் அருளியவரே சிவபெருமான். அவர் சிறப்புமிக்க கருணைக் குணம் நிறைந்தவர்கள் வாழ்கின்ற திருவையாறு திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: இல் – இல்லாத. நலி – வருந்துகின்ற. அரக்கன் – இராவணன். முடியத்தலை புயத்தொடும் அடங்க – இருபது தோள்களோடும் பத்துத் தலைகளும் நெரிந்தழிய. துரக்க – செலுத்த (அழுத்த என்றவாறு) சீரும் வரமும் கருணையும் ஆள்பவர்.

Raavanan, the king of Sri Lanka was a very great warrior. He was merciless and waged reckless wars. He tortured all the people in all the worlds and inflicted several woes on them. Our Lord Civan just pressed the top of the mountain where he was resting with Umaa with His toe. Raavanan's head and shoulders got crushed under the mountain. The same Lord resides at Thiru-vai-yaaru where Vedic scholars and highly

philanthropic people extend alms to those people who are in need of help. All these scholars perform their daily spiritual rituals without fail. They go to the temple, and worship His holy feet in this city.

1816. பருத்துருவதாகிவிண்ணடைந்தவனொர்பன்றிப்
பெருத்துருவதாயுலகிடந்தவனுமென்றும்
கருத்துருவொணாவகைநிமிர்ந்தவனிடங்கார்
வருத்துவகைதீர்கொள்பொழில்வண்திருவையாறே. 9

பருத்துஉருஅதுஆகி விண் அடைந்தவன், ஓர் பன்றிப்
பெருத்து உருஅதுஆய் உலகு இடந்தவனும், என்றும்
கருத்து உரு ஒணா வகை நிமிர்ந்தவன் இடம் - கார்
வருத்து வகை நீர் கொள் பொழில் வண் திரு ஐயாறே.

paruttu uru atu Aki viN aTaiyavan2, or pan2Rip
perutta uru atu Ay ulaku iTantavan2um, en2Rum
karuttu uru oNA vakai nimirntavan2 iTam-kAr
varuttu vakai nIr koL pozil vaN tiru aiyARE.

பொருள்: பறவை உருக்கொண்டு விண்ணில் ஏறி பிரமன் இறைவனின் திருமுடியைக் காண முயன்றான். பன்றி உருக்கொண்டு உலகைத் தோண்டிச் சென்று இறைவனின் திருவடியைக் காண முயன்றான் திருமால். இருவரும் காணும் வகையில் ஒளி உருவாய் விளங்கிய தேவரே சிவபெருமான். அவர் மழை மேகம் பொருந்தும் உயர்ந்த மரங்கள் சூழ்ந்த திருவையாறு திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: பருத்து உரு அது – பருந்து உருவம். வலித்தல் விகாரம். விண்ணடைந்தவன் – பிரமதேவன். பெருத்த பன்றி உருவதாய் – பெரிய பன்றி வடிவமாய். பெயரெச்சத்து அகரம், தொக்கது. உலகிடந்தவன் – உலகங்களைப் பேர்த்தவன். திருமால், பிரமன் ஒரு கற்பத்தில் கழுகாகி முடிதேடினான் என்னும் உண்மை இதில் குறிக்கப்பட்டது. பூவார் பொற்றவிசின் மிசை இருந்தவனும், பூந்துழாய் புனைந்த மாலும், ஓவாது கழுகு ஏனமாய் உயர்ந்து ஆழ்ந்து உற நாடி உண்மை காணாத், தேவாரும் திருவுருவன் (தி.1 ப.131 பா.9) என்று முன்னும் அருளியது உணர்க. ஏனங்கழுகானவருன்னை முனென்கொல் வானந்தலமண்டியும் கண்டிலாவாறே என்றது காண்க. (தி.2 ப.37 பா.9) ''புண்டரிகத்துள்ளிருந்த, புத்தேள் கழுகுருவாய், அண்டரண்டம் ஊடுருவ ஆங்கோடிப் பண்டொருநாள், காணான் இழியக் கனக முடிகவித்துக் கோணாது நின்ற குறி போற்றி'' (தி. 11, நக்கீரர் போற்றித்திருக்கலி வெண்பா 4, 5 கண்ணிகள்) கருத்து உரு ஒணாவகை – அவர்கள் கருத்தில் இறைவன் உருவம் (அடிமுடி) ஒன்றாவகை,

ஒன்றாமை – ஒண்ணாமை மருஉ. கார்வருத்து வகை. தீர்கொள் பொழில் – வானோங்கி வளர்தலால் ஆங்குச் செல்லும் முகிலைத் தடுத்து வருத்தும் வகையால், வெயிலால் காய்ந்த வெப்பத்தை மழையால் தீர்தலைக் கொள்ளும் சோலை. காரை வருவித்தலால் எனலுமாம். வருத்தல் (வருவித்தல்) என்பது வழக்கிலும் உண்டு. நிமிர்ந்தவன் இடம் திருவையாறு எனக்கூட்டுக.

Brahma, the demigod, the creator of the world took the form of a swan, went upwards in the sky to reach our Lord's holy head. Vishnu, the demigod who looks after the sustenance of all the souls in the universe took the form of huge hog and went down into the earth to reach our Lord's holy feet. They both failed in their attempts for our Lord became the tallest column of light beyond the imagination of these two demigods. The city of Thiru-vai-yaaru has many rich gardens full of trees tall enough to dash against clouds, which reduce the heat of the place. A good number of Vedic scholars do live in this city and also philanthropic people. They do a lot of charities to those people who are in need of help. All these scholars perform their daily spiritual rituals without fail. They go to the temple too, pray there and worship His holy feet.

1817. பாக்கியமதொன்றுமில்சமண்பதகர்புத்தர்
சாக்கியர்களென்றுடல்பொதிந்துதிரிவார்தாம்
நோக்கரியதத்துவனிடம்படியின்மேலால்
மாக்கமுறநீடுபொழில்வண்திருவையாறே. 10

*பாக்கியம் அது ஒன்றும் இல் சமண்பதகர், புத்தர்-
சாக்கியர்கள் என்று உடல் பொதிந்து திரிவார்தாம்,
நோக்க(அ)ரிய தத்துவன் இடம் - படியின்மேலால்
மா(க்)கம் உற நீடு பொழில் வண் திரு ஐயாறே.*

pAkkiyam atu on2Rum il camaNpatakar, puttar-
cAkkiyarkaL en2Ru uTal polintu tirivArtAm,
nOkka(a)riya tattuvan2 iTam--paTiyin2mElAl
mA(m)kam uRa nITu pozil vaN tiru aiyARE.

பொருள்: சிவபெருமானை வணங்கும் புண்ணியம் பொருந்தாதவர்களே சமணர்கள், புத்தர்கள், சாக்கியர்கள், பயனற்ற நிலையில் பிறவி கொண்டு திரியும் அவர்களால் உணரப்பட்ட முடியாதவனே சிவபெருமான். அவர் உயர்ந்த சோலைகள் நிறைந்த திருவையாற்றில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: பாக்கியம் – நல்வினை. இல் – இல்லாத. ஒன்றும் – சிறிதும். பதகர் – பாதகர். பொதிந்து – மறைந்து. மூடி. நோக்கு அரிய தத்துவன் – நோக்கிற்கு அரிய மெய்ப்பொருளானவன். படி – பூமி. நீடு – வளர்ந்த. மாக்கம் – விண். மாகம் மாக்கமென விரித்தல் விகாரம். தத்துவனிடம் திருவையாறு என்க.

The Jains lack good conduct and the Buddhists cover their body with big cloth and roam in the streets. Our Lord is beyond the perception of these two races for even to know about Him and worship Him we need His benediction and blessings. These two races are unable to comprehend and follow His faith since they lack His will and blessings. He is the really divine, Supreme Being who evades the perception of these two races; therefore their births are useless. Thiru-vai-yaaru is a city known for Vedic scholars and philanthropic people who perform religious rites and charitable work regularly, without fail. In this beautiful city, full of groves with tall trees our Civan resides and is worshipped by all its people.

1818. வாசமலியும்பொழில்கொள்வண்திருவையாற்றுள்
ஈசனையெழிற்புகலிமன்னவன்மெய்ஞ்ஞானப்
பூசுரனுரைத்ததமிழ்பத்துமிவைவல்லார்
நேசமலிபத்தரவர்நின்மலனடிக்கே. 11

*வாசம் மலியும் பொழில் கொள் வண் திரு ஐயாற்றுள்
ஈசனை, எழில் புகலி மன்னவன் - மெய்ஞ்ஞானப்
பூசுரன்-உரைத்த தமிழ் பத்தும் இவை வல்லார்,
நேசம் மலி பத்தர் அவர், நின்மலன் அடிக்கே.*

vAcam maliyum pozil koL vaN tiru aiyARRuL
Ican2ai, ezil pukali man2n2avan2--meynjnjAn2ap
pUcuran2--uraitta tamiz pattum ivai vallAr,
nEcam mali pattar avar, nin2malan2 aTikkE.

பொருள்: மணமிக்க சோலைகளால் சூழப்பெற்ற திருத்தலமே திருவையாறு ஆகும். அத்தலத்தினைப் பொருந்தி வாழும் சிவபெருமானைப் புகழ்ந்து போற்றியுள்ளார் சீர்காழிப்பதியில் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான். திருநீறு பூசிய ஞானசம்பந்தர் உரைத்த தமிழ்ப்பாடல்கள் பத்தினையும் பாட வல்லவர்களே சிவனடியார்கள் ஆவார்கள்.

குறிப்புரை: வாசம் – மணம். புகலி மன்னவன் – காழி வேந்தன். மெய்ஞ்ஞானப் பூசுரன் – திருஞானசம்பந்தன். பூசுரர் – பூ தேவர். நேசம் – அன்பு. பத்தர் – பக்தர். நின்மலன் – அழுக்கில்லாதவன். மலரகிதன்.

Our holy saint Thiru-gnana-Sambandar is the head of beautiful city of Pukali. He is a man of par excellence in perfect divine knowledge. He sang on the Lord of Thiru-vai-yaaru, the holiest city fully surrounded by rich gardens of sweet smelling flowers, ten holy hymns. Those who are capable of reciting these ten hymns are the true devotees at the holy feet of God Supreme who is manifest in this glorious city.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

32ஆம் பதிகம் முற்றிற்று
End of 32nd Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 169 *பதிக எண்: 33*

33. திருநள்ளாறு
33. THIRU-NALLAARU

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

இது நளன் பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது என்பர். பேரளம் – காரைக்கால் தொடர்வண்டிப் பாதையில் திருநள்ளாறு தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் இருக்கின்றது. இது காவிரிக்குத் தென்கரையில் உள்ள ஐம்பத்திரண்டாவது திருத்தலமாகும். காரைக்கால், நாகை, மயிலாடுதுறை, திருவாரூர் நகரங்களிலிருந்து பேருந்துகள் உள்ளன.

இறைவரின் திருப்பெயர் தர்ப்பாரண்யேசுரர். தேவாரத்தில் நம் பெருமான் எனக் கூறப்பட்டுள்ளது. இறைவியாரின் திருப்பெயர் போகமார்த்த பூண்முலையாள். இத்திருப்பெயரை இவ்வூர்ப் பதிகத்தில் ஞானசம்பந்தர் எடுத்து ஆண்டுள்ளார். தீர்த்தம் நளதீர்த்தம், சிவகங்கை முதலியன. தலவிருட்சம் தர்ப்பை.

நளன் பூசித்துக் கலி நீங்கப் பெற்றான். இத்தலத்தே திருமால், பிரமதேவர், திக்குப் பாலகர், வசுக்கள், அகத்தியர், அர்ச்சுனன், போசன் முதலியோரும் வழிபட்டனர். முசுகுந்தச் சோழர் எழுந்தருளுவித்த விடங்கர் தலங்கள் ஏழனுள் இது ஒன்று. திருஞானசம்பந்தர், மதுரையில் சமணர்களோடு அனல்வாதம் நடத்தியபோது அனலில் இடுவதற்கு தாம் பாடிய பதிகங்களில் கயிறு சாத்தியபோது, ‘போகமார்த்த பூண்முலையாள்’ என்று தொடங்கும் இப்பதிக்குரிய பதிகம் கிடைத்தது. அதை அனலில் இட அது வேகாது இருந்து சைவ சமயத்தின் பெருமையை நிலைநாட்டியது. இதைப் பச்சைத் திருப்பதிகம் என்றும் கூறுவர். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகங்கள் நான்கு, அப்பர் பதிகம் இரண்டு, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக ஏழு பதிகங்கள் இருக்கின்றன. நளன் பூசித்து வழிபட்ட செய்தி,

“வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே”

என்னும் இவ்வூர் ஞானசம்பந்தர் தேவாரப் பகுதியால் உறுதி எய்துகின்றது. இத்தலத்தில் சனிபகவான் சந்நிதி மிகவும் சிறப்புப் பெற்றது. சனிப்பெயர்ச்சி விழாக்களில் பல்லாயிர மக்கள்

நளதீர்த்தத்தில் எண்ணெய் முழுக்காடி எள்முடிச்சுக் கட்டி எண்ணெய் விளக்கேற்றி சனிபகவானை வழிபடுவர். தங்கக் காக வாகனவிழா நடைபெறும். இவ்வூருக்குக் கிழக்கே ஒருமைல் தூரத்தில் தக்களூர் என்னும் வைப்புத்தலம் இருக்கிறது. இதற்குத் தலபுராணம் ஒன்று இருக்கிறது. இது சுப்பிரமணியக் கவிராயரால் எழுதப்பெற்று அச்சில் வெளிவந்துள்ளது. இத்திருக்கோவில் தருமை ஆதீன ஆளுகைக்கு உட்பட்டது.

பதிக வரலாறு

போகமார்த்த பூண்முலையாள் எனத் தொடங்கும் திருப்பதிகத்தோடு பாடப்பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

1819. ஏடுமலிகொன்றையரவிந்துவிளவன்னி
மாடவலசெஞ்சடையெம்மைந்தனிடமென்பர்
கோடுமலிஞாழல்குரவேறுசுரபுன்னை
நாடுமலிவாசமதுவீசியநள்ளாறே. 1

ஏடு மலி கொன்றை, அரவு, இந்து, இள வன்னி,
மாடு அவல செஞ்சடை எம் மைந்தன் இடம் என்பர் -
கோடு மலி ஞாழல், குரவு, ஏறு சுரபுன்னை,
நாடு மலி வாசம் அது வீசிய நள்ளாறே.

ETu mali kon2Rai, aravu, intu, iLa van2n2i,
mATu avala cenjcaTai em maintan2 iTam en2par--
kOTu mali njAzal, kuravu, ERu curapun2n2ai,
nATu mali vAcam atu vIciya naLLARE.

பொருள்: இதழ்களால் சிவந்த கொன்றை மலர், அரவு, சந்திரன், வன்னி இலை ஆகியவற்றைத் தலையில் அணிந்தவர் சிவபெருமான். அவர் திருநள்ளாறு தலத்தில் பொருந்தியுள்ளார். அத்தலத்தில் கோங்கு, குரவம், சுரபுன்னை ஆகிய மலர்களின் மணம் நிறைந்திருக்கும்.

குறிப்புரை: ஏடு – இதழ். இந்து – பிறை. வன்னி – வன்னிப் பத்திரம். மாடு அவல செஞ்சடை – பொன்னை ஒவ்வாதென்று அவலம் உறுத்தும் செஞ்சடை. கோடு – கொம்புகள். ஞாழல் – புலிநகக் கொன்றை. கோங்கு எனலுமாம். குரவு – குராமரம். வாசம் – மணம். நள்ளாறே மைந்தனிடம் என்பர். இவ்வாறே ஏனையவும் ஒட்டுக.

It is Civan who is the Lord of Thiru-nallaaru. His reddish matted hair constitutes the colour of weak gold. He has adorned His matted hair with multi-petalled cassia flowers, the snake, the moon and the tender laburnum leaves. Here in the gardens, many branched wagaty bottle flowers and caulophy trees shed and spread sweet fragrance all around the city. This is the holy place where our Lord has manifested Himself. Our Lord's matted red hair claims superiority over gold for its redness, gold may feel sorry for its weakness.

1820. விண்ணியல்பிறைப்பிளவறைப்புனல்முடித்த
புண்ணியனிருக்குமிடமென்பர்புவிதன்மேல்
பண்ணியநடத்தொடிசைபாடுமடியார்கள்
நண்ணியமனத்தின்வழிபாடுசெய்நள்ளாறே. 2

விண் இயல் பிறைப்பிளவு, அறைப்புனல், முடித்த
புண்ணியன் இருக்கும் இடம் என்பர்-புவிதன்மேல்
பண்ணிய நடத்தொடு இசை பாடும் அடியார்கள்
நண்ணிய மனத்தின் வழிபாடுசெய் நள்ளாறே.

viN iyal piRaippiLavu, aRaippun2al, muTitta
puNNiyan2 irukkum iTam en2par--puvitan2mEl
paNNiya naTattoTu icai pATum aTiyArkaL
naNNiya man2attin2 vazipATucey naLLARE.

பொருள்: எம்பெருமான், பிறைநிலவையும், பாய்ந்து வரும் கங்கையையும் தலையில் சூடியவர். அவர், பண்ணுடன் பாடி ஆடி வழிபாடு செய்யும் அடியவர்கள் நிறைந்த திருநள்ளாறு திருத்தலத்துள் கோயில் கொண்டுள்ளார். நாமும் உளம் பொருந்த எம்பெருமானை வழிபாடு செய்வோமாக.

குறிப்புரை: விண் இயல் பிறை பிளவு – வானூர் பிறைத்துண்டம். அறைப்புனல் – ஒலிநீர்கங்கை. புவி – பூமி. பண்ணிய – செய்த. பண்ணோடு கூடிய எனலுமாம். நண்ணிய – விரும்பிய. வழிபாடு – அருள்வழி உயிர்க்குப் படுதல்.

The people of this city say that it is the holy place of their Lord who is the holiest of the holy. He has adorned His head with the split crescent moon which traverses in the sky. Along with it, He keeps the gushing Ganges river also on His head. Our Lord

is manifest in Nallaaru where sincere devotees sing hymns in musical tones and wholeheartedly and fervently worship Him always.

1821. விளங்கிழைமடந்தைமலைமங்கையொருபாகத்
துளங்கொளஇருத்தியவொருத்தனிடமென்பர்
வளங்கெழுவுதீபமொடுதூபமலர்தூவி
நளன்கெழுவிநாளும்வழிபாடுசெய்நள்ளாறே. 3

விளங்கு இழை மடந்தை மலை மங்கை ஒருபாகத்து
உளம் கொள இருத்திய ஒருத்தன் இடம் என்பர் -
வளம் கெழுவு தீபமொடு, தூபம், மலர் தூவி,
நளன் கெழுவி நாளும் வழிபாடுசெய் நள்ளாறே.

viLagku izai maTantai malaimagkai orupAkattu
uLam koLa iruttiya oruttan2 iTam en2par--
vaLam kezuvu tIpamoTu, tUpam, malar tUvi,
naLan2 kezuvi nALum vapATu cey naLLARE.

பொருள்: அன்பு கொண்டு குழைந்துவரும் இயல்பினளே மலைமகள் ஆவார். அவளைத் தன் உடம்பின் ஒருபாகத்தில் வைத்துக் கொண்டுள்ளவரே சிவபெருமான். அவர் விரும்பி கோயில் கொண்டுள்ள திருநள்ளாற்று தலத்தில், நளன் தீபமோடு தூபம் காட்டி, மலர் தூவி நாள்தோறும் வழிபாடு செய்து கலிநீங்கப் பெற்றான்.

குறிப்புரை: இழை – ஆபரணம், முதல்நிலைத் தொழிலாகு பெயர். உளங்கொள – திருஉள்ளங்கொள்ள. விரும்ப. இருந்திய – பிறவினை. ஒருத்தன் – தனி முதல்வன். நளன் வழிபட்ட வரலாறு உணர்த்தப்பட்டது. பூசிக்கும் முறையும் கூறப்பட்டது.

Nallaaru is the most sacred place for only in this city, King Nalan was completely relieved of his misery. Nalan worshipped the Lord of this place daily with bright lamp, incense powder and strewed fragrant flowers on His feet. He is our Lord who has shared the left portion of His body with the Himalayan king's daughter, wearing bright jewels.

1822. கொக்கரவர்கூன்மதியர்கோபர்திருமேனிச்
செக்கரவர்சேருமிடமென்பர்தடமூழ்கிப்
புக்கரவர்விஞ்சையரும்விண்ணவருநண்ணி
நக்கரவர்நாமநினைவெய்தியநள்ளாறே. 4

கொக்கு, அரவர், கூன்மதியர், கோபர், திருமேனிச்
செக்கர் அவர், சேரும் இடம் என்பர் - தடம் மூழ்கிப்
புக்கு, அரவர் விஞ்சையரும் விண்ணவரும் நண்ணி,
நக்கர்அவர் நாமம் நினைவு எய்திய நள்ளாறே.

kokku, aravar, kUn2matiyar, kOpar, tirumEn2ic
cekkar avar, cErum iTam en2par--taTam mUzkip
pukku aravar vinjcaiyarum viNNavarum naNNi,
nakkaravar nAmam nin2aivu eytiya naLLARE.

பொருள்: ஈசனார், கொக்கின் நிறம் போன்ற வெண்ணிற பாம்பையும், வெண்ணிறப் பிறையையும், தலையில் சூடியவர். அவர் உயிர்களுக்கு அருள் செய்யவே நெற்றிக் கண்ணைக் கொண்டுள்ளார். அவர் சிவந்த மேனியை உடையவர். அவர் பொருந்தி வாழும் இடம் திருநள்ளாறு திருத்தலம் ஆகும். அவரைப் பாதாளத்தாரும் விண்ணவரும் வந்து துதிப்பர். நள்ளிரவில் அடியவர்களும் அவரை வழிபாடு செய்வர்.

குறிப்புரை: கொக்கு – கொக்கிறகு. கொக்கிற்கு சென்னி உடையான் கண்டாய் (தி. 6 ப. 39 பா. 2) அரவர் – பாம்பணிந்தவர். கூன் மதியர் – இளம் பிறைசூடி. கோபர் – கோபத்தை உடையவர். செக்கர் திருமேனியர் – செவ்வானம் போலும் வண்ணத்தை உடைய திருமேனியர், அந்தி வண்ணர். புக்கு – புகுந்து. அரவர் – நாகலோகத்தவர். விஞ்சையர் – வித்யாதரர். நக்கர் – நக்நர், திகம்பரர். நாமம் – திருப்பெயர். திருவைந்தெழுத்துமாம்.

It is Civan, Lord of Nallaaru. He wears on His head crane's feathers along with the broken ark-like crescent moon and the serpent. He is wrathful on certain occasions. His divine body is red like the evening sky. People from nether worlds such as Nagalanders, vidyaadarars, a type of demigods and devaas arrive here in Nallaaru. They take bath in the tanks and then worship our Lord Supreme, who is also called Digambaram. Then they repeat the five lettered mantraas and worship His holy feet. Our Lord is manifest in this holy city Thiru-nallaaru.

1823. நெஞ்சமிதுகண்டுகொளுனக்கெனநினைந்தார்
வஞ்சமதறுத்தருளுமற்றவனைவானோர்
அஞ்சமுதுகாகியவர்கைதொழஎழுந்த
நஞ்சமுதுசெய்தவனிருப்பிடநள்ளாறே. 5

"நெஞ்சம் இது கண்டுகொள், உனக்கு!" என நினைந்தார்
வஞ்சம்அது அறுத்து அருளும் மற்றவனை; வானோர்
அஞ்ச, முதுகு ஆகியவர் கைதொழ, எழுந்த
நஞ்சு அமுது செய்தவன்; இருப்புஇடம் - நள்ளாறே.

"nenjcam itu kaNTukoL, un2akku!" en2a nin2aintAr
vanjcam atu aRuttu aruLum maRRavan2ai; vAn2Or
anjca, mutuku Akiyavar kaitoza, ezunta
nanjcu amutu ceytavan2; iruppu iTam--nallARE.

பொருள்: நெஞ்சே! கண்டு கொள்வாயாக! உனக்கென எதையும் கருதாதே! நம்முடைய கண்ணுக்குத் தெரியாத கொடிய வினைகளை நீக்கி நம்மை ஆள்பவன் சிவனே ஆவான். அவன்தான் வானோர்கள் விடத்தைக் கண்டு அஞ்சி ஓடிய போது, அவ்விடத்தை அமுதாக்கி அருந்தி அவர்களைக் காத்தவன் ஆவான். அவன் கோயில் கொண்டுள்ள இடமே திருநள்ளாறு திருத்தலமாகும் என்க.

குறிப்புரை: நினைந்தார் – நினைந்தவரது. வஞ்சம் அது – வஞ்சத்தை, பொய்யை, பாற்கடலினின்றெழுந்த விஷத்தை அஞ்சிப் புறங்காட்டி ஓடிய வானவர் கைதொழ, அந்நஞ்சை அமுதாகக் கொண்டு அவர்களைக் காத்த சிவபெருமான்.

It is Civan, Lord of Thiru-nallaaru. Sincere devotees think of Him always saying "See our hearts are Yours". They also advise their minds to believe that the divine way and the only way to clear their sins is to pray and worship our Lord at Nallaaru. Our Lord will wipeout their sins and grace them. Once the devaas saw the deadly poison that came out of the ocean of milk and ran away. Then they reached our Lord and worshipped Him and begged to save them from the poison which started spreading in the whole universe. Our Lord took the poison entirely and saved them. This Lord is manifest in Thiru-nallaaru.

1824. பாலனடிபேணவவனாருயிர்குறைக்குங்
காலனுடன்மாளமுனுதைத்தஅரனூராம்
கோலமலர்நீர்க்குடமெடுத்துமறையாளர்
நாலின்வழிநின்றுதொழில்பேணியநள்ளாறே. 6

பாலன் அடி பேண, அவன் ஆர்உயிர் குறைக்கும்
காலன் உடன்மாள முன் உதைத்த அரன் ஊர்ஆம் -
கோல மலர், நீர்க்குடம், எடுத்து மறையாளர்
நாலின்வழி நின்று, தொழில் பேணிய நள்ளாறே.

pAlan2 aTi pENa, avan2 Ar uyir kuRaikkum
kAlan2 uTan2mALa mun2 utaitta aran2 Ur Am__
kOla malar, nIrk kuTam, eTuttu maRaiyALar
nAlin2vazi nin2Ru, tozil pENiya naLLARE.

பொருள்: பாலனாகிய மார்க்கண்டேயனின் உடலிலிருந்து உயிரைக் கவர வந்த காலனைத் தன் காலால் உதைத்து, மார்க்கண்டனுக்கு அருள்புரிந்தவர் சிவபெருமான். அவர் உறையும் தலமே திருநள்ளாறு. அத்தலத்தில் மறையவர்கள், பூவும் நீரும் எடுத்து வந்து நான்மறை முறைப்படி வழிபாடு செய்வார்கள்.

குறிப்புரை: பாலன் – மார்க்கண்டேய முனிவர். பேண – விரும்பித்தொழ. காலன் உடல் – எமனுடைய தேகம். உடன்மாள – உடனே அழிய என்றுமாம். அரன் – சிவபெருமான். கோலமலர் – அழகிய பூக்கள். நீர்க்குடம் – அபிஷேக ஜலபாத்திரம். நாலின்வழி – நால்வேதநெறி. தொழில் – அருச்சனைத் தொழில்.

It is Civan, Lord of Thiru-nallaaru. The young Brahmin boy, Maarkandeyan of sixteen years worshipped Him sincerely and strictly according to the divine ways. At that moment Kaalan, the god of death reached him to take his soul from his body and threw his spread noose over the Civalinga and the body of Maarkandeyan who was then embracing the Lingam. Our Lord instantaneously kicked with His right leg the god of death. He fell down dead. In this city, the scholars of the four Vedas, worship Him with fine flowers and pure water. In this holy city our Lord is manifested.

1825. நீதியர்நெடுந்தகையர்நீள்மலையர்பாவை
பாதியர்பராபரர்பரம்பரரிருக்கை
வேதியர்கள்வேள்வியொழியாதுமறைநாளும்
ஓதியரன்நாமமுமுணர்த்திடுநள்ளாறே. 7

நீதியர், நெடுந்தகையர், நீள்மலையர், பாவை
பாதியர், பராபரர், பரம்பரர், இருக்கை -
வேதியர்கள், வேள்வி ஒழியாது, மறை நாளும்
ஓதி, அரன் நாமமும் உணர்த்திடும் நள்ளாறே.

nItiyar, neTuntakaiyar, nILmalaiyar, pAvai
pAtiyar, parAparar, paramparar, irukkai--
vEtiyarkaL, vELvi oziyAtu, maRai nALum
Oti, aran2 nAmamum uNarttiTum naLLARE.

பொருள்: இறைவன் நீதியாய் விளங்குபவர். உயர் பண்புகள் நிறைந்தவர். நீண்ட கயிலாயத்தைப் பொருந்தியவர். உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவர். பரஞானமும் அபரஞானமுமாகத் திகழ்பவர். மகாதேவர். எங்கும் நிறைந்தவர். திருநள்ளாறு தலத்துள் உறைபவர். அவரை மறைப்படி வேள்விகள் செய்தும், சிவநாமத்தை ஓதியும் அந்தணர் வழிபடுவர்.

குறிப்புரை: நீதியர் – நீதிவடிவாய் விளங்குபவர். நெடுந்தகையர் – பெருங்குணங்களுக்கு உறைவிடமானவர். நீள்மலையார் – நீண்ட திருக்கயிலை மலையை உடையவர். பாவை பாதியர் – அர்த்தநாரீசுரர். பராபரர் – மேலவர்க்கும் மேலவர். பராபரன் என்பது தமது பேராக்கொண்டார் (அப்பர். ப.310 பா.11) பரமும் அபரமும் ஆயவர் எனலும் பொருந்தும். பின்தானும் முன்தானும் ஆனான் (திட 6 ப.11 பா.2). முன்னவன்காண் பின்னவன்காண் (தி.6 ப.48 பா.8). முன்பனை உலகுக்கெல்லாம் (தி.4 ப.74 பா.2). முன்னவன் உலகுக்கு. (தி.5 ப.60 பா.8). முன்பாகி நின்ற முதலே போற்றி (தி.4 ப.56 பா.2). முன்பின் முதல்வன் (தி.4 ப.90 பா.3) முன்னியா நின்ற முதல்வா போற்றி (தி.6 ப.57 பா.5) முன்னையார் . . . பின்னையார் (தி.5 ப.16 பா.7). வேள்வி – யாகம். நாளும் – நாள்தோறும். காலைதோறும் எனலுமாம்.

It is Civan, Lord of Thiru-nallaaru. He is embodiment of justice, He is embodiment of great virtues. He has shared half of His left side with our goddess, daughter of the tall and long mountain. He is manifest on Mount Kailash as He Himself owns the mountain. In the city of Thiru-nallaaru, Vedic scholars perform the

divine rituals of adulation everyday, recite the Vedic mystic words along with the names of our Lord. This Nallaaru is the place where our Lord manifests Himself.

1826. கடுத்துவல்லரக்கன்முன்நெருக்கிவரைதன்னை
எடுத்தவன்முடித்தலைகள்பத்துமிகுதோளும்
அடர்த்தவர்தமக்கிடமதென்பரளிபாட
நடத்தகலவைத்திரள்கள்வைகியநள்ளாறே. 8

கடுத்து, வல்அரக்கன், முன் நெருக்கி வரைதன்னை
எடுத்தவன், முடித் தலைகள்பத்தும் மிகு தோளும்
அடர்த்தவர்தமக்கு இடம்அது என்பர் - அளி பாட,
நடத்த கலவைத்திரள்கள் வைகிய நள்ளாறே.

kaTuttu, val arakkan2, mun2 nerukki varaitan2n2ai
eTuttavan2, muTit talaikaL pattum miku tOLum
aTarttavar tamakku iTam atu en2par--aLi pATa,
naTatta kalavattiraLkaL vaikiya naLLARE.

பொருள்: அரக்கனாகிய இராவணன் சினம் கொண்டு கயிலாய மலையைத் தூக்கிட முயன்றான். அவனது முடியினையும் தோள்களையும் இறுத்தவர் சிவபெருமான். அவர் திருநள்ளாறு தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அங்குள்ள சோலைகளில் வண்டுகள் ஒலித்துக் கொண்டேயிருக்க, மக்கள் நடைமுறையில் பயன்படுத்தும் மணப்பொருள்களின் நறுமணம் எங்கும் நிறைந்திருக்கும் தலம் திருநள்ளாறு ஆகும்.

குறிப்புரை: வரை – மலை. அளி – வண்டு. கலவத்திரள்கள் – வாசனைக் கலப்புடைய பொருள்களின் கூட்டம். கலவத் திரள் – ஆண் மயில் கூட்டம் எனினும் ஆம். நடத்த – பெயரெச்சம்.

King Raavnanan with severe rage tried to lift mount Kailash and place it aside. Our Lord of Nallaru pressed the mountain with His toe on its top. Due to the oppression, Raavanan's jewelled ten heads and the twenty shoulders got crushed. The bees hum musical tones in this city. The articles needed by people for their daily use in marriage celebrations spread their sweet smell all around the city. This is the place, Nallaaru where our Lord has manifested Himself. He is the mighty Lord who crushed Raavanan. He resides in this city filled with music and auspicious articles.

1827. உயர்ந்தவனுருக்கொடுதிரிந்துலகமெல்லாம்
பயந்தவன்நினைப்பரியபண்பனிடமென்பர்
வியந்தமரர்மெச்சமலர்மல்குபொழிலெங்கும்
நயந்தருமவேதவொலியார்திருநள்ளாறே. 9

உயர்ந்தவன், - உருக்கொடு திரிந்து, - உலகம் எல்லாம்
பயந்தவன், நினைப்ப(அ)ரிய பண்பன் இடம் என்பர் -
வியந்து அமரர் மெச்ச மலர் மல்கு பொழில் எங்கும்
நயம் தரும் அ(வ்)வேதஒலி ஆர் திரு நள்ளாறே.

uyarntavan2,--urukkoTu tirintu, --ulakam ellAm
payantavan2, nin2aippa(a)riya paNpan2 iTam en2par-
viyantu amarar mecca malar malku pozil egkum
nayam tarum a(v) vEta oli Ar tiru naLLARE.

பொருள்: உலகத்தை அளக்க உரு எடுத்தவர் திருமால். உலகத்தைப் படைத்தவர் பிரமன். இருவராலும் அடிமுடி தேடிக் காண முடியாத நிலையில் உள்ளவரே சிவபெருமான். அவர் கோயில் கொண்டுள்ள இடமே திருநள்ளாறு திருத்தலம் ஆகும். அங்கு மலர்களின் மணமும், வேத ஒலியின் ஓசையும் எப்போதும் நிறைந்திருக்கும்.

குறிப்புரை: உயர்ந்தவன் – திருவிக்கிரமன், திருமால். பயந்தவன் – பெற்றவன். பிரமன், அமரர் வியந்து மெச்ச. நயம் தருமம் – நயத்தை உடைய தருமம். தரும வேதம் – வேதத்தை விட்ட அறமில்லை (திருமந்திரம்) நயம் தரும் அவ்வேதவொலி எனலுமாம். ஆர் – நிறைந்த. நயந்தமரு என்றது பிழை.

It is Civan, our Lord of Nallaaru. Thirumaal, a very tall figure roamed all over the earth, Brahma the creator of the world, flew in the sky. They both could not trace the where abouts of our Lord. He was imperceptible and incomprehensible to these two. This holy city is full of well-grown trees and flowers appreciable even to the devaas. The fragrant air fills the city. In all the surrounding areas the voice chanting Vedas gets reverberated. This city Thiru-nallaaru filled with Vedic mantras and fragrance, belongs to our Lord. The whole world is also His and He is full of rare virtues.

1828. சிந்தைதிருகற்சமணர்தேரர்தவமென்னும்
பந்தனையறுத்தருளுகின்றபரமன்னூர்
மந்தமுழவந்தருவிழாவொலியும்வேதச்
சந்தம்விரவிப்பொழில்முழங்கியநள்ளாறே. 10

சிந்தை திருகல் சமணர், தேரர், தவம் என்னும்
பந்தனை அறுத்து அருளுகின்ற பரமன்(ன்) ஊர் -
மந்த முழவம் தரு விழா ஒலியும், வேதச்
சந்தம் விரவி, பொழில் முழங்கிய நள்ளாறே.

cintai tirukal camaNar, tErar, tavam en2n2um
pantan2ai aRuttu aruLukin2Ra paraman2(n2) Ur-
manta muzavam taru vizA oliyum, vEtac
cantam viravi, pozil muzagkiya naLLARE.

பொருள்: மாறுபட்ட சிந்தையுடையவராய் சமணர்களும் புத்தர்களும் திரிவர். அவர்களுடைய தொடர்பினைச் சிவனடியார்கள் அறுத்துக் கொள்ளும் வண்ணம் சிவபெருமான் திருநள்ளாற்றுத் தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அங்கு இன்னிசைக் கருவிகளின் ஒலியும், விழா ஒலியும் வேத ஒலியும் எப்பொழுதும் நிறைந்திருக்கும்.

குறிப்புரை: திருகல் – மாறுபாடு. வேதச்சந்தம் – வேதத்தை ஓதும் சந்தையொலி. பொழிலில் விரவி முழங்கிய நள்ளாறு.

It is Civan, the Lord of Nallaaru who has blessed us to snap our ties with the Jains who are perverted and the Buddhists of false penance. Our Lord has manifested Himself in Thiru-nallaaru. In this city the music of percussion instruments and the overwhelming noise of several festivals are always heard. In addition, the voices of scholars chanting the Vedas are also heard. The gardens surrounding the temple with sweet and fragrant flowers not only spread their fragrance, but also reverberate the Vedic chanting in the city. Such is the greatness of Thiru-nallaaru where our Lord resides.

1829. ஆடலரவார்சடையனாயிழைதன்னோடும்
நாடுமலிவெய்திடஇருந்தவன்நள்ளாற்றை
மாடமலிகாழிவளர்பந்தனதுசெஞ்சொல்
பாடலுடையாரையடையாபழிகள்நோயே. 11

ஆடல் அரவு ஆர் சடையன் ஆயிழைதன்னோடும்
நாடு மலிவு எய்திட இருந்தவன் நள்ளாற்றை
மாடம் மலி காழி வளர் பந்தனது செஞ்சொல்
பாடல் உடையாரை அடையா, பழிகள் நோயே.

ATal aravu Ar caTaiyan2 Ayizaitan2OTum
nATu malivu eytiTa iruntavan2 naLLARRai,
mATam mali kAzi vaLar pantan2atu cenjcol
pATal uTaiyArai aTaiyA, pazikaL nOyE.

பொருள்: ஆடுகின்ற பாம்பைத் தன் தலையில் சூடியவன் சிவபெருமான், அவன் நாடு செழிக்க திருநள்ளாறு திருத்தலத்துள் கோயில் கொண்டுள்ளான். அப்பெருமானைப் புகழ்ந்து சீர்காழித் தலத்துள் அவதரித்த ஞானசம்பந்தர் தமிழ்ப்பாடல்கள் பாடியுள்ளார். அப்பாடல்களைப் பாடுபவர்களைப் பழிசெயல் பொருந்தாது; பிறவிப் பிணியும் நீங்கப் பெறும்.

குறிப்புரை: ஆர் – பொருந்திய. ஆய் இழை – உமாதேவியார் போகமார்த்த பூண் முலையாள் தன்னோடும் பொன் அகலம்பாகம் ஆர்த்த . . . அண்ணல் என்றதை நினைப்பிக்கும் இடம் இது. காழிச் சிறப்புணர்த்திற்று. பந்தன் – திருப்பெயர்ச் சுருக்கம். பாடலுடையாரைப் பழிகளும் நோய்களும் அடையா என்க.

Our godly saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi, a holy place full of storeyed palaces. Our Lord Civan of Thiru-nallaaru wears the dancing serpent on His matted hair. He is manifest in Nallaaru along with our goddess Umaa, with the sole aim of granting welfare to people and also happiness to the whole universe. Our Thiru-gnana-Sambandar sang on the Lord of Thiru-nallaaru these hymns of ten verses in sacred, divine words. Those devotees who recite these sacred hymns before our Lord and worship Him will have no evil effects and diseases in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

33ஆம் பதிகம் முற்றிற்று
End of 33rd Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 170 *பதிக எண்: 34*

34. திருப்பழுவூர்

34. KEELAP-PAZHU-VOOR

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

ஆலமரத்தைத் தலமரமாக உடைமையால் இத்திருத்தம் திருப்பழுவூர் என்னும் பெயர் பெற்றது. பழு – ஆலமரம். பழுவூர் மேலப்பழுவூர், கீழப்பழுவூர் என்னும் இரு பகுதிகளாக இருக்கின்றது. இவற்றுள் மேலப்பழுவூர் மறவனீச்சரம் என்னும் கோயிலைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவது. கீழப்பழுவூரே தேவாரம் பெற்ற தலம்.

திருவையாற்றிலிருந்து அரியலூருக்குப் போகும் பேருந்துப் பெருவழியில் இருக்கின்றது. காவிரிக்கு வடகரையில் ஐம்பத்தைந்தாவது தலம். இறைவர் திருப்பெயர் வடமூலநாதர். இறைவி திருப்பெயர் அருந்தவ நாயகி. இதற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கின்றது. பரசுராமர் தம் தாயைக் கொன்ற பழிநீங்கப் பூசித்த தலம்.

சோழ சம்பந்திகளாகிய சேரர் கிளையினரைப் பற்றிய கல்வெட்டுக்கள் மேலப்பழுவூரில் காணக் கிடைக்கின்றன. அவர்கள் இங்கு வந்த காலத்திலேயே இக்கோயில் பூசனைக்கு மலையாள அந்தணர்களை உடன் கொண்டுவந்தார்கள். அது காரணம் பற்றியே,

‘அந்தணர்க ளான மலையாள ரவரேத்தும்
பந்த மலிகின்ற பழுவூ ரரனை’

என ஞானசம்பந்தர் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

பதிக வரலாறு

திருநெல்வெண்ணெய் முதலிய சிவ தலங்களை மெய்யன்பர் பலரொடுந் தொழுது அருள்பெற்று மீளும்பொழுது, ஞானப்பாலூட்டிய தேவியாரோடு தோணியப்பர் திருக்காட்சி, காழிக்கோமானார் திருவுள்ளங் கொள்ளப் புகுந்து, அவரது உணர்வில் வெளிப்பட்டது. பாடலால் உருகினார். புகலியை நண்ண மனம் வைத்தார். திருவரத்துறை அடிகளை வணங்கிப் பேரருள் விடைகொண்டு போனார். உள்ளே நடங்கொண்டு நிறைந்த பூங்கழலிணையை உச்சிமேற் கொண்டே முத்துச் சிவிகை மேற்கொண்டார். மறையும் தமிழும் வயிலும் வளையும் காளமும் முரசும் பிறவும் முழங்க, அன்பர்சூழ, பூரணகும்பங்களொடு நகரினர் எதிர்கொள்ளத் தலம்பல வழிபட்டு

மாதியலும்பாதியர் மகிழ பெரும்பழுவூர் சேர்ந்து அங்கு மலைநாட்டந்தணர் புரிந்த பணிகளையும் பாராட்டிப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1830. முத்தன்மிகுமூவிலைநல்வேலன்விரிநூலன்
அத்தனெமையாளுடையஅண்ணலிடமென்பர்
மைத்தழைபெரும்பொழிலின்வாசமதுவீசப்
பத்தரொடுசித்தர்பயில்கின்றபழுவூரே. 1

முத்தன், மிகு மூஇலை நல்வேலன், விரி நூலன்,
அத்தன், எமை ஆள்உடைய அண்ணல், இடம் என்பர் -
மைத் தழை பெரும் பொழிலின் வாசம்அது வீச,
பத்தரொடு சித்தர் பயில்கின்ற பழுவூரே.

muttan2, miku mUilainalvElan2, viri nUlan2,
attan2, emai AL uTaiya aNNal, iTam en2par--
mait tazai perum pozilin2 vAcam atu vIca,
pattaroTu cittar payilkin2Ra pazuvUrE.

பொருள்: ஈசன் மலமற்றவர். மூன்று பிரிவுகளைக் கொண்ட சூலப்படையை உடையவர். உயர்ந்த நூலாகிய வேதத்தை அருளியவர். அன்புடையவர். எம்மை ஆள்பவர். அப்பெருமான் பசுமை நிறைந்த பொழில்களால் சூழப்பெற்ற பழுவூரில் கோயில் கொண்டுள்ளார். அங்கு பக்தர்களும் சித்தர்களும் நிறைந்து விளங்குகின்றனர்.

குறிப்புரை: முத்தன் – இயல்பாகவே பாசம் இல்லாதவன். நல்மூவிலை வேலன் – அழகிய திரிசூலப்படையினன். விரிநூலன் – விரிந்து பெருகிய மறை (நூல்களை அருளிய) முதல்வன். அத்தன் – தலைவன். மை – மேகம். தழை – தழைக்கின்ற (பொழில்). வாசம் – மணம். பத்தர் – பத்துடையர். பத்து – பற்று. அன்பு, பக்தி என்னும் வடசொற்றிரிபுமாம். சித்தர் – சித்துடையர். சித்தத்தார் என்பது சித்தம் அடியாகத் தோன்றும் பெயர். பயில்கின்ற பழுவூர் என்றதால், நம் ஆசிரியர் காலத்து இருந்த அத்திருத்தலத்தின் சிறப்பு விளங்குகின்றது. பழுவூரே இடமென்பர் என்று பாடல்தோறும் இயைத்துக் கொள்க.

Our Lord Civan by His nature is the Supreme Being, unattached to any desire and bondage. He holds in His hand the trident as spear. He is the author of the four Vedas, He is our Lord and ruler. In this city of Keelap-pazhu-voor, devotees are very

religious and kind hearted to one and all. The siddars who have acquired super human powers perform miracles. Such people do live in this city and worship our Lord's holy feet. Here in this city of Keelap-pazhu-voor our Lord is manifest where sweet fragrance from the big gardens of dense flora spreads over all the places.

1831. கோடலொடுகோங்கவைகுலாவுமுடிதன்மேல்
ஆடரவம்வைத்தபெருமானதிடமென்பர்
மாடமலிசூளிகையிலேறிமடவார்கள்
பாடலொலிசெய்யமலிகின்றபழுவூரே. 2

கோடலொடு கோங்குஅவை குலாவு முடிதன்மேல்
ஆடுஅரவம் வைத்த பெருமனது இடம் என்பர் -
மாடம் மலி சூளிகையில் ஏறி மடவார்கள்
பாடல் ஒலி செய்ய, மலிகின்ற பழுவூரே.

kOTaloTu kOgku avai kulAvu muTitan2mEl
ATu aravam vaitta perumAn2atu iTam en2par--
mATam mali cULikaiyil ERi, maTavArkaL
pATal oli ceyya, malikin2Ra pazuvUrE.

பொருள்: வெண்காந்தள், கோங்கு ஆகிய மலர்களைத் தலையில் சூடியவரே எம்பெருமான். ஆடுகின்ற அரவத்தையும் சூடி நடனம் ஆடுபவரே எம்பெருமான். அவர் கோயில் கொண்டுள்ள பழுவூர்த் திருத்தலத்தில் மாடங்கள் மிகுந்துள்ளன. அம்மாடங்களின் மேல் ஏறி பெண்கள் ஈசனைப் புகழ்ந்து பாடி ஆடி மகிழ்வார்கள்.

குறிப்புரை: கோடல் – வெண்காந்தள் மலர். கோங்கு – கோங்க மலர். மாடம் – உயரிய வீடு. குளிகை – வீட்டின் உச்சி. மலிதல் இரண்டும் தலத்தின் செல்வச் சிறப்பைக் குறித்தன.

It is Civan, Lord of Keelap-pazhu-voor. He has adorned in His head with flowers of gloria and ironwood. He keeps the dancing cobra also along with the flowers on His head. In this city beautiful girls sing in melodious voice songs of praise of our Lord, climbing the terraces of attractive palaces. This sound is reverberated all over the city. In such a holy city, our Lord has manifested Himself happily. The buildings are palatial and the city displays plenty and prosperity.

1832. வாலியபுரத்திலவர்வேவவிழிசெய்த
போலியவொருத்தர்புரிநூலரிடமென்பர்
வேலியின்விரைக்கமலமன்னமுகமாதர்
பாலெனமிழற்றிநடமாடுபழுவூரே. 3

வாலிய புரத்திலவர் வேவ விழி செய்த
போலிய ஒருத்தர், புரிநூலர், இடம் என்பர் -
வேலியின் விரைக்கமலம் அன்ன முக மாதர்,
பால் என மிழற்றி நடம்ஆடு பழுவூரே.

vAliya purattilavar vEva viziceyta
pOliya oruttar, purinUlar, iTam en2par--
vEliyin2 viraikkamalam an2n2a muka mAtar,
pAl en2a mizaRRi naTam ATu pazuvUrE.

பொருள்: வலிமை மிக்க முப்புரங்களை நெற்றிக் கண்ணால் சாம்பலாக்கியவர் சிவபெருமான். அவர் முப்புரி நூலை அணிந்திருப்பார். அவர் பழுவூர் திருத்தலத்தில் பொருந்தி உள்ளார். அத்தலத்தில் தாமரை மலர் போன்ற முகத்தையும் அன்னம் போன்ற நடையையும் பால்போன்ற இனிய சொல்லையும் உடைய மாதர்கள் ஈசனைப் புகழ்ந்து பாடி, ஆடிக் கொண்டிருப்பர்.

குறிப்புரை: வாலிய – பெரிய. புரத்திலவர் – முப்புரத்தை இல்லமாக உடையவர். புரத்தில் அவர் எனலுமாம். அவர் – பண்டறிகட்டு. வேவவிழிசெய்த – திரிபுரத்தைச் சிரித்து எரித்ததுமன்றி விழித் தெரித்ததும் ஒருகற்பத்தில் நிகழ்ந்தது என்பர். 'அரணம் அனலாக விழித்தவனே' (பதி.157 பா.1) 'பார்த்ததுவும் அரணம் படர் எரிமூழ்கவே' (பதி.212 பா.5) 'கடை நவில் மும்மதிலும் எரி ஊட்டிய கண்ணுதலான்' (பதி.319 பா.3) 'முதுமதிள் வெவ்வழல் கொளநனி முனிபவர்' (பதி.342 பா.4) 'நெடுமதில் ஒருமூன்றும் கொலையிடைச் செந்தீவெந்நறக்கண்ட குழகனார்' (பதி.376 பா.7) என்று பிறாண்டும் ஆசிரியர் அருளியவாற்றறிக. 'மதில் மூன்றுடைய அறவைத் தொழில் புரிந்து அந்தரத்தே செல்லும் மந்திரத் தேர்ப் பறவைப்புரம்' (தி.4 பதி.111 பா.7) என்னும் திரிபுரத்தின் இயல்பை உணர்க. போலிய – போன்ற. தடத்தமென்றபடி. வேலி – வயலிலுள்ள. விரை – மணம். கமலம் – தாமரை. அன்ன – போன்ன. பால் என – பால்போல இனியது என்ன. மிழற்றி – பாடி(க் கொண்டு) பாடி ஆடும் (வளமுடைய) பழுவூர்.

It is Civan, Lord of Keelap-pazhu-voor. He burnt the three flying fortresses of the asuraas with a wink of His eye. He wears the sacred thread of three strings on His

chest. In this city, good looking damsels with lotus like faces, swan's way of walking and sweet words sing in melodious voices, songs in praise of our Lord and dance His glory. In such a holy city of Keelap-pazhu-voor, our Lord is manifest and graces the devotees.

1833. எண்ணுமொரெழுத்துமிசையின்கிளவிதேர்வார்
கண்ணுமுதலாயகடவுட்கிடமதென்பர்
மண்ணின்மிசையாடிமலையாளர்தொழுதேத்திப்
பண்ணினொலிகொண்டுபயில்கின்றபழுவூரே. 4

எண்ணும், ஓர் எழுத்தும், இசையின் கிளவி, தேர்வார்
கண்ணும் முதல்ஆய கடவுட்கு இடம்அது என்பர் -
மண்ணின்மிசை ஆடி, மலையாளர் தொழுது ஏத்தி,
பண்ணின் ஒலி கொண்டு பயில்கின்ற பழுவூரே.

eNNum, or ezuttum, icaiyin2 kiLavi, tErvAr
kaNNum mutal Aya kaTavuTku iTam atu en2par--
maNNin2micai ATi, malaiyALar tozutu Etti,
paNNin2 oli koNTu payilkin2Ra pazuvUrE.

பொருள்: எண்ணாகவும், எழுத்தாகவும் எழுத்தின் பொருளாகவும் விளங்குபவரே எம்பெருமான். உயிர்களின் கண்ணாகவும் விளங்குபவர் சிவபெருமான். அவர் பழுவூர் தலத்தினுள் கோயில் கொண்டுள்ளார். அவரை மலை நாட்டிலிருந்து வந்த அந்தணர்கள் பண்ணுடன் பொருந்திய பாடல்களைப் பாடி ஆடித் தொழுது ஏத்திப் பாடி வழிபடும் பழுவூர் என்க.

குறிப்புரை: எண்ணும் எழுத்தும் இசையின் கிளவி (யும்) தேர்வார் கண்ணும் முதல் ஆய கடவுள் – எண்ணையும் எழுத்தையும் இசையொடு கூடிய இனிய கிளவியையும் ஆராய்வார் கருதும் முதற்பொருளாகிய கடவுள், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப' என்பதைப் போல ஈண்டும் இருப்பொருள் கொள்ளல் பொருந்தும். 'எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர் தாமொழியப் பண்ணின் இசைமொழி பாடிய வானவர் தாம் பணிவார் திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான்' (தி.4 ப.90 பா.6). மலையாளர் ஆடியும் தொழுதும் ஏத்தியும் பாடியும் பயில்கின்ற பழுவூர் என்றதால், அத்தலத்தில் அந்தணர்களான மலையாளர் வந்து செய்யும் திருத்தொண்டு, ஆசிரியர் கண்கூடாக் கண்டவுண்மையாதல் விளங்கும். இப்பதிகத்தின் திருக்கடைக் காப்பிற் காண்க.

It is Civan, the Lord of Keelap-pazhu-voor, He is our Lord, who is all letters and all the numbers. He is the means of music, also like eye to the body. The Malayali

Brahmins of western land reach this city and go to the temple to worship Him. There they sing His glories on the earth, dance together in all happiness and worship His holy feet. Those scholars have rendered the place holy and Lord Civan has chosen to reside in this Keelap-pazhu-voor.

1834. சாதல்புரிவார்சுடலைதன்னில்நடமாடும்
நாதன்நமையாளுடையநம்பனிடமென்பர்
வேதமொழிசொல்லிமறையாளரிறைவன்றன்
பாதமவையேத்தநிகழ்கின்றபழுவூரே. **5**

*சாதல்புரிவார் சுடலைதன்னில் நடம்ஆடும்
நாதன், நமை ஆள்உடைய நம்பன், இடம் என்பர் -
வேதமொழி சொல்லி மறையாளர் இறைவன்தன்
பாதம் அவை ஏத்த நிகழ்கின்ற பழுவூரே.*

cAtal purivAr cuTalai tan2n2il naTam ATum
nAtan2, namai AL uTaiya nampan2, iTam en2par--
vEtamozi colli maRaiyALar iRaivan2tan2
pAtam avai Etta nikazkin2Ra pazuvUrE.

பொருள்: இறந்தவர்களின் உடல்களை எரிக்கும் சுடலையில் நடனமாடுபவரே எம்பெருமான். நம்மை ஆள்பவரும் அவரே ஆவார். அவரே பழுவூர் திருத்தலத்திலும் பொருந்தியுள்ளார். அவ்விறைவரை வேதமொழிகளைக் கூறி, மறையாளர், திருமுடிகளைப் போற்றி வணங்கி மகிழ்வர்.

குறிப்புரை: கோயில் சுடுகாடு என்றது, திருவாசகம். மறையாளர் – (மலையாளத்து) வேதியர். 'ஏத்த' பின்னோர் பாடம்.

It is Civan, our Lord of Keelap-pazhu-voor. He dances on the burial ground now and then where dead bodies of human beings are burnt to ashes. He is our Lord Supreme. We are His servitors. From the place, now called Kerala, Vedic scholars arrive in this city and go to the temple. There they recite the Vedas and sing sacred songs in praise of the holy feet of our Lord. In this holy city of Keelap-pazhu-voor, our Lord abides.

1835. மேவயருமும்மதிலும்வெந்தழல்விளைத்து
மாவயரவன்றுரிசெய்மைந்தனிடமென்பர்
பூவையைமடந்தையர்கள்கொண்டுபுகழ்சொல்லிப்
பாவையர்கள்கற்பொடுபொலிந்தபழுவூரே. 6

மேவு அயரும் மும்மதிலும் வெந்தழல் விளைத்து,
மா அயர அன்று உரிசெய் மைந்தன் இடம் என்பர் -
பூவையை மடந்தையர்கள் கொண்டு புகழ் சொல்லி,
பாவையர்கள் கற்பொடு பொலிந்த பழுவூரே.

mEvu ayarum mummatilum ventazal viLaittu,
mA ayara an2Ru uricey maintan2 iTam en2par--
pUvaiyai maTantaiyarkaL koNTu pukaz colli,
pAvaiyarkaL kaRpoTu polinta pazuvUrE.

பொருள்: முப்புரங்கள் இடம் பெயர்ந்து சென்று அழிவைத் தரவல்லன. மாயையும் வஞ்சனையும் பொருந்திய அரக்கர்களின் முப்புரங்களை அழித்துச் சாம்பலாக்கியவர் எம்பெருமான். கோபம் கொண்டு வந்த யானையைக் கொன்று அதன் தோலை உரித்து, போர்த்திக் கொண்டவர் எம்பெருமான். அவர் உறையும் இடமே பழுவூர்த் தலமாம். அத்தலத்தில் வாழும் கற்புடைய பெண்கள் நாகணவாயப் பறவைகளை வளர்த்துப் பழக்கி இறைவனின் புகழைப் பேசச் செய்து கேட்டு மகிழ்வர்.

குறிப்புரை: மேவு அயரும் – பொருந்துவதால் துயர் உறுத்தும், மேவ அயரும் எனலுமாம். தழல் – தீ. விளைத்து – தோற்றி, மா – யானை. உரிசெய் – உரித்தலைச் செய்த. மைந்தன் – வீரன். பூவை – நாகணவாய்ப் பறவை. 'பொறிப்பில் நின்றன பொலிவு' அப்பொறுப்பு. கற்பால் நீடுநிற்கும். கற்பிலார் பொற்புக் கடிதில் அழிவது கண்கூடு.

It is Civan, the Lord of Keelap-pazhu-voor. The asuraas fly in the air in their flying fortresses and dash against the devaas causing havoc to them. Therefore at the request of the devaas, our Lord Supreme burnt the three forts with sparkling fire from His third eye. Once He killed the fierce elephant which came to attack Him. He removed the hide of the elephant and covered His body with it. He is such a mighty God. In this Keelap-pazhu-voor city, ladies of conjugal fidelity train the special species of mina called Naakanavaai to chant the name of our Lord. The birds speak it very

correctly and our ladies enjoy the birds' chanting of the name of our Lord. In the holy city of Keelap-pazhu-voor, our Lord is manifest and graces these devotees.

1836. மந்தணமிருந்துபுரிமாமடிதன்வேள்வி
சிந்தவிளையாடுசிவலோகனிடமென்பர்
அந்தணர்களாகுதியிலிட்டஅகில்மட்டார்
பைந்தொடிநன்மாதர்சுவடொற்றுபழுவூரே. 7

மந்தணம் இருந்து புரி மா மடி தன் வேள்வி
சிந்த விளையாடு சிவலோகன் இடம் என்பர் -
அந்தணர்கள் ஆகுதியில் இட்ட அகில், மட்டு ஆர்
பைந்தொடி நல் மாதர் சுவடு ஒற்று பழுவூரே.

mantaNam iruntu puri mA maTitan2 vELvi
cinta viLaiyATu civalOkan2 iTam en2par--
antaNarkaL Akutiyil iTTa akil, maTTu Ar
paintoTi nal mAtal cuvaTu oRRu pazuvUrE.

பொருள்: முறையாக அறிவிக்காமல், ஈசனை நிந்தனை செய்யும் வகையில் தக்கன் வேள்வி செய்தான். எம்பெருமான் வீரபத்திரரை ஏவிட, அவர் சென்று தக்கனின் வேள்வியை அழித்தார். அச்சிவலோகர், பழுவூர் தலத்தில் கோயில் கொண்டுள்ளார். அங்கு வேள்வி செய்யும் அந்தணர்கள் ஆகுதியாக அகில், தேன் முதலிய மணமிக்க பொருள்களை வேள்வியில் இட்டு வணங்குவர். நல்ல மாதர்கள் அங்குவந்து தொண்டுசெய்து வணங்கி மகிழ்ந்து செல்லும்போது உண்டாகும் காலடிச்சுவடுகள் உடையது பழுவூர் தலம்.

குறிப்புரை: மந்தணம் – இரகசியம். மாமடி – மாமன்; தக்கன். வேள்வி – யாகம். சிந்த – அழிய. விளையாடு – வீரபத்திரராய்ச் சென்று போர்விளையாட்டைச் செய்த. யாகத்தைப் போராக்கொள்ளாது விளையாட்டாக் கொண்டழித்த என்றபடி. 'சுருதியான் தலையும் நாமகள் மூக்கும் சுடரவன் கரமும் முன் இயங்கு பரிதியான் பல்லும் இறுத்து அவர்க்கு அருளும் பரமனார்' (தி. 3 ப. 376 பா. 5) என்று பின்னும், ஆசிரியர் அவ்விளையாட்டைக் குறித்தருளுமாறறிக. ஆர் – பொருந்துகின்ற (மாதர்) சுவடு – அடிச்சுவடு. அகில் தூபவர்க்கங்களுள் ஒன்று. மட்டு – தேன். ஆர் – ஆர்கின்ற. உண்ணுகின்ற – கருப்பு மட்டு வாய்மடுத்து திருவாசகம் (பதி. 80 பா. 5).

It is Civan, our Lord of Keelap-pazhu-voor. His father-in-law i.e., Dakshayini's father, Dakshan, secretly without the knowledge of Civan, his son-in-law, arranged a

great sacrificial fire and did not invite Him. Our Lord Civan commanded, His form Veerabadran to go there to destroy the sacrifice. He destroyed it completely and punished Dakshan and all other invitees. In this city, the Vedic scholars light the daily sacrificial fire and drop in it akil, honey and other materials. The sweet smoke arising out of the sacrificial fire adds to the softness of the girls who served to prepare the sacrificial fire. These girls' foot print is seen all over the city. In such a holy city our Lord is manifest and graces His devotees.

1837. உரக்கடல்விடத்தினைமிடற்றிலுறவைத்தன்
றரக்கனையடர்த்தருளுமப்பனிடமென்பர்
குரக்கினம்விரைப்பொழிலின்மீதுகனியுண்டு
பரக்குறுபுனற்செய்விளையாடுபழுவூரே. 8

உரக் கடல் விடத்தினை மிடற்றில் உற வைத்து, அன்று
அரக்கனை அடர்த்து அருளும் அப்பன் இடம் என்பர் -
குரக்கு இனம் விரைப் பொழிலின்மீது கனி உண்டு,
பரக்குஉறு புனல் செய் விளையாடு பழுவூரே.

urak kaTalviTattin2ai miTaRRil uRa vaittu, an2Ru
arakkan2ai aTarttu aruLum appan2 iTam en2par--
kurakku in2am viraip pozilin2mItu kan2i uNTu,
parakku uRu pun2al cey viLaiyATu pazuvUrE.

பொருள்: பாற்கடலில் தோன்றிய விடத்தினைத் தன் கண்டத்தில் அடக்கி அருள் செய்தவர் சிவபெருமான். அரக்கன் இராவணன் கயிலாய மலையைத் தூக்க முயன்றபோது அவனை அடர்த்தவர் எம்பெருமான். அவர் பழுவூர் தலத்தில் கோயில் கொண்டுள்ளார். அத்தலத்தைச் சுற்றிலும் சோலைகள் சூழ்ந்துள்ளன. அங்குள்ள கனிகளைக் குரங்குகள் உண்டு, நீர் நிறைந்த வயல்களில் விளையாடி மகிழும்.

குறிப்புரை: உரம் – வலிமை. மிடற்றில் – கழுத்தில். குரங்கு இனம் – குரக்கினம் (வலித்தல் விகாரம்). விரை – மணம். பரக்கு – பரத்தல். புனல் செய் – நீர்வளமிக்க வயல். குரங்கினம் கனியுண்டு செய்யில் விளையாடும் ஊர் என்க. 'புணர் செய்' என்ற பழைய பாடத்திற்குக் கலவி பொருளாகும். புணர்தலைச் செய்யும் விளையாட்டு.

It is Civan, the Lord of Keelap-pazhu-voor. Once upon a time He drank the killing poison that came out of the ocean of milk and retained it at His throat. On another occasion, He punished Raavana for his misdeeds, but later when he repented and begged for pardon our Lord graced him. In this city of Keelap-pazhu-voor, monkeys in groups enter the big gardens and eat all the fruits available there. Then they move to the fertile fields full of water and play there. In such a holy rich city our Lord is manifest.

1838. நின்றநெடுமாலுமொருநான்முகனுநேட
அன்றுதழலாய்நிமிருமாதியிடமென்பர்
ஒன்றுமிருமூன்றுமொருநாலுமுணர்வார்கள்
மன்றினிலிருந்துடன்மகிழ்ந்தபழுவூரே. 9

நின்ற நெடுமாலும் ஒரு நான்முகனும் நேட,
அன்று தழல்ஆய் நிமிரும் ஆதி இடம் என்பர் -
ஒன்றும் இரு-மூன்றும் ஒருநாலும் உணர்வார்கள்
மன்றினில் இருந்து உடன்மகிழ்ந்த பழுவூரே.

nin2Ra nETumAlum oru nAn2mukan2um nETa,
an2Ru tazal Ay nimirum Ati iTam en2par--
on2Rum iru-mUn2Rum orunAlum uNarvArkaL
man2Rin2il iruntu uTan2 makiznta pazuvUrE.

பொருள்: அடிமுடி தேட முயன்ற மாலும் பிரமனும் காண முடியா நிலையில் ஒளி உருவாய் நின்றவர் எம்பெருமான். அவர் பழுவூர் தலத்தில் கோயில் கொண்டுள்ளார். ஏகப் பொருளாய் விளங்குபவர் ஈசனாரே. நான்கு வேதமாய் விளங்குபவர் அவர். வேதத்தின் ஆறு அங்கங்களாக விளங்குபவரும் அவரே. இவற்றை எல்லாம் உணர்ந்த அந்தணர்கள் பொது இடங்களில் பேசி மகிழ்ந்து உறையும் பழுவூர் என்க.

குறிப்புரை: ஒன்றும் – தனிமுதலாகிய சிவபெருமானையும், இருமூன்றும் – ஆறு அங்கங்களாய் வேதார்த்த சாதகமாயுள்ளவற்றையும். ஒருநாலும் – நாலு வேதங்களையும், உணர்வார்கள்–உணரும் அந்தணர். மன்று – அம்பலம், சபை. (பெரிய, திருநீல கண்ட) 'அருமறையோடாறங்கம் ஆய்ந்து கொண்டு பாடினார் நால்வேதம்' (தி. 6 ப. 83 பா. 5) என் பதில் மறையும் வேதமும் வெவ்வேறு ஆதல் அறிக.

It is Civan, Lord of Keelap-pazhu-voor. The tall Vishnu and the four faced Brahma were in search of our Lord's head and feet in vain. Then our Lord who is the origin of all rose above the sky as an immeasurable, infinite fire. In the Keelap-pazhu-voor city scholars who have mastered the knowledge about the only one and the Absolute, the six useful substitute parts of vedanta and the four Vedas, assemble in the big hall and happily discuss the various aspects of these religious articles as explained to them. In this holy city such big hall exists. In this holy place our Lord is manifest.

1839. மொட்டையமணாதர்துகில்மூடுவிரிதேரர்
முட்டைகண்மொழிந்தமுனிவான்றனிடமென்பர்
மட்டைமலிதாழையிளநீரதிசைபூகம்
பட்டையொடுதாறுவிரிகின்றபழுவூரே. 10

மொட்டை அமண்ஆதர், துகில் மூடு விரி தேரர்,
முட்டைகள் மொழிந்த முனிவான்தன் இடம் என்பர் -
மட்டை மலி தாழை இளநீர் அது இசை பூகம்,
பட்டையொடு தாறு விரிகின்ற பழுவூரே.

moTTai amaN Atar, tukil mUTu viri tErar,
muTTaikaL mozinta mun2IvAn2 tan2 iTam en2par--
maTTai mali tAzai iLanIr atu icai pUkam,
paTTaiyoTu tARu virikin2Ra pazuvUrE.

பொருள்: தலைமயிரை நீக்கிய சமணர்களும், புத்தர்களும் சாக்கியர்களும் கூறும் மொழிகள் பொருந்தா மொழிகளே. அம்மொழிகளை விரும்பாதவனே எம்பெருமான். அவர் விரும்பி உறையும் இடமே பழுவூர் தலமாம். அவ்வூரில் தாழை, தென்னை, பாக்கு ஆகியன செழித்து ஓங்கியிருக்கும்.

குறிப்புரை: அமணர் ஆதர் – சமணராகிய அறிவிலிகள். ஆதம் – அறிவின்மை. மொட்டை – தலைமயிர் பறித்தலால் ஆனது. முட்டைகள் – வழுவினர், குறைவினர், வறியர், பதர்கள் எனப் பல பொருளும் பொருந்தும். மொழிந்த – சொல்லியவை. முனிவான் – வெறுப்பவன். இளநீரது என்க. இசை – இசைந்த. பூகம் – பாக்குமரம். தாறு – குலை.

The Jains who remove the hair and have baldheads and the Buddhists who cover their body with ochre robes, utter falsehood hated by our Lord. Our Lord desires to live in Keelap-pazhu-voor. In the city Keelap-pazhu-voor, the long sheathed pandanus,

rich and tall coconuts are in plenty. Similarly, the arecanut trees also have long sheaths, out of which the areca bunches protrude and develop. These trees are in plenty, in and around the city of Keelap-pazhu-voor. In such an attractive city, our Lord is manifest.

1840. அந்தணர்களானமலையாளரவரேத்தும்
பந்தமலிகின்றபழுவூரரனையாரச்
சந்தமிகுஞானமுணர்பந்தனுரைபேணி
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. 11

அந்தணர்கள்ஆன மலையாளர் அவர் ஏத்தும்
பந்தம் மலிகின்ற பழுவூர் அரனை, ஆரச்
சந்தம் மிகு ஞானம் உணர் பந்தன் உரை பேணி,
வந்த வணம் ஏத்துமவர் வானம் உடையாரே.

antaNarkaL An2a malaiyALar avar Ettum
pantam malikin2Ra pazuvUr aran2ai, Arac
cantam miku njAn2am uNar pantan2 urai pENi,
vanta vaNam Ettumavar vAn2am uTaiyArE.

பொருள்: மலைநாட்டு அந்தணர்கள் போற்றிப் புகழ்ந்து பாடும் பழுவூர் நாதனை ஞானசம்பந்தப் பெருமான் புகழ்ந்து பத்து பாடல்களைப் பாடி அருளியுள்ளார். அத்தமிழ்ப் பாடல்களை அன்புடன் பாடிப் பரவும் அடியார்கள் சிவலோகம் பெறுவார்கள்.

குறிப்புரை: முன் உள்ள பாக்கள் 4, 5, 7, 9 காண்க. ஏத்தும் பந்தம் – வழிபட்டு நிற்கும் அருளுறவு. ஆர – நிறைய. ஞானம் உணர்பந்தன் என்று திருப்பெயர் பொருள் விளங்குமாறுணர்க. பேணி – விரும்பி. பதிகம் 165 முடிவிலும் இவ்வடி அமைந்தமை காண்க.

Vedic Brahmin scholars from western region called Malayalees come to Keelap-pazhu-voor, go to the temple and praise our Lord's divinity. There is a graceful bond between the Lord and His devotees. Our wise saint Thiru-gnana-Sambandar sang in devotional musical tone ten verses on our Lord in Keelap-pazhu-voor. Those devotees who recite these hymns on our Lord in proper musical tone and worship Him will reach heaven.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

34ஆம் பதிகம் முற்றிற்று
End of 34th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 171 பதிக எண்: 35

35. திருத்தென்குரங்காடுதுறை

35. THIRUTH-THEN-KURANGU-AADUTHURAI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

திருத்தென்குரங்காடுதுறை என்னும் திருத்தலமானது மயிலாடுதுறை – கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில் ஆடுதுறை தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கே 3/4 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களில் முப்பத்தோராவது தலமாகும். மயிலாடுதுறை – கும்பகோணம் பேருந்து வழியில் உள்ளது. கும்பகோணம், மயிலாடுதுறை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகள் செல்கின்றன.

இறைவரது திருப்பெயர் ஆபத்சகாயர் (ஆபத்சகாயேசர்). இறைவியாரது திருப்பெயர் (பவளக்கொடியம்மை) வண்டார் கருமென்குழல் மங்கை. இப்பெயரை இவ்வூர்ப் பதிகத்தின் இரண்டாம் திருப்பாட்டில் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் எடுத்துரைக்கின்றார். வாலி, அநுமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றது.

திருவையாற்றிற்குக் கிழக்கே 9 கி.மீ. தூரத்தில் காவிரியின் வடகரையில் குரங்காடுதுறை என்னும் ஊர் ஒன்று இருக்கிறது. அது வட குரங்காடுதுறை ஆகும். இது காவிரிக்குத் தென்கரையில் இருப்பதால் தென்குரங்காடுதுறை என்னும் பெயர் பெற்றது. இவ்வூரை மக்கள் ஆடுதுறை என்றே அழைக்கின்றனர். இது உத்தமசோழ தேவரது தாயாராகிய செம்பியன் மாதேவியாரால் கட்டப்பெற்ற கற்றளியை உடையது.

பதிக வரலாறு

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருவிடைமருதூரை வழிபட்டுப் பாடித் திருநாகேச்சுரத்தையும் பணிந்து மற்றும் நற்பதிபல நண்ணிப் போற்றிக் குரங்காடுதுறையை அணைந்து, குழகனார் குரைகழல்களைப் பெருங்காதலால் பேணிய இன்னிசை பெருக அருள்செய்தது இந்த அருங்கலை நூற்றிருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1841. பரவக்கெடும்வல்வினைபாரிடஞ்சூழ
இரவிற்புறங்காட்டிடைநின்றெரியாடி
அரவச்சடையந்தணன்மேயஅழகார்
குரவப்பொழில்சூழ்குரங்காடுதுறையே. 1

பரவக் கெடும், வல்வினை - பாரிடம் சூழ,
இரவில் புறங்காட்டுஇடை நின்று எரி ஆடி;
அரவச் சடை அந்தணன்; மேய அழகு ஆர்
குரவப்பொழில் சூழ், குரங்காடுதுறையே.

paravak keTum, valvin2ai--pAriTam cUza,
iravil puRagkATTu iTai nin2Ru eri ATi;
aravac caTai antaNan2; mEya, azaku Ar
kuravappozil cUz, kuragkATutuRaiyE.

பொருள்: பூதகணங்கள் சூழ, இரவில் மயானத்தில் நெருப்பைக் கையில் ஏந்தித் திருநடனம் புரிபவரே சிவபெருமான். தலையில் அரவத்தை அணிந்தவரே சிவபெருமான். அவரே குரவ மலர்கள் நிறைந்து விளங்கும் குரங்காடுதுறை தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அவரைப் பரவித் தொழும் அடியவர்களின் வல்வினைகள் கெட்டு அழியும்.

குறிப்புரை: குரங்காடுதுறை பரவ வல்வினை கெடும் என்றியைக்க. பாரிடம் – பூதகணம். ஆடி – பெயர்ச்சொல். அந்தணன் – அறவாழியந்தணன். மேய – எழுந்தருளிய (மேவிய – விரும்பிய) குரவம் – குராமரம். பரவுதல் – முன் நின்று துதித்தல்.

See! It is Civan, Lord of Thiruth-then-kurangu-aaduthurai. He dances on the burial ground at midnight surrounded by ghosts carrying fire in His hand. He has a serpent on His matted hair. He is the Supreme God called 'Anthanan' (This word has been used by Thiru-valluvar also in the first chapter 8th verse). He is the embodiment of all virtues. He manifests Himself in Thiruth-then-kurangu-aaduthurai an attractive place, surrounded by a number of gardens of bottle flower trees.

1842. விண்டார்புரமூன்றுமெரித்தவிமலன்
இண்டார்புறங்காட்டிடைநின்றெரியாடி
வண்டார்கருமென்குழல்மங்கையொர்பாகம்
கொண்டான்நகர்போல்குரங்காடுதுறையே. 2

விண்டார் புரம்மூன்றும் எரித்த விமலன்,
இண்டு ஆர் புறங்காட்டுஇடை நின்று எரிஆடி
வண்டு ஆர் கருமென் குழல் மங்கை ஒர் பாகம்
கொண்டான், நகர்போல் - குரங்காடுதுறையே.

viNTAr puram mUn2Rum eritta vimalan2,
iNTu Ar puRagkATTu iTai nin2Ru eri ATi,
vaNTu Ar karumen2kuzal magkai orpAkam
koNTAn2, nakarpOl--kuragkATutuRaiyE.

பொருள்: பகைமை கொண்ட அசுரர்களின் முப்புரத்தை எரித்த விமலனாரே எம்பெருமான். இண்டுச் செடிகள் நிறைந்த புறங்காட்டில் நெருப்பைக் கையில் ஏந்தி ஆடுபவரே எம்பெருமான். வண்டுகள் மொய்க்கும் மணமிக்க கூந்தலைக் கொண்ட மங்கையைத் தன் இடபாகத்தில் கொண்டவரே எம்பெருமான். அவர் கோயில் கொண்டிருக்கும் தலமே தென்குரங்காடுதுறை என்க.

குறிப்புரை: விண்டார் – பகைவர். விமலன் – மலமில்லாதவன். இண்டு – புலிதொடக்கிக் கொடி. மென்குழல் மங்கை – இத்தலத்தின் அம்பிகையின் திருப்பெயராயிருக்கலாம். கொண்டான் – கொண்ட சிவபிரான். வினையாலணையும் பெயர். கொண்டானது நகர் போலும் என்க.

It is Civan, Lord of Thiruth-then-kurangu-aaduthurai. He is the purest Supreme Being. The asuraas had enmity with our Lord. He therefore destroyed their three flying forts. He is free from impurities. He dances on the cremation ground carrying fire in His hand, where accacur climber grows. He shares the left half of His body with our goddess Umaa. The bees hum around the black, fragrant hair of Umaa. Our Lord has manifested Himself in the holy place of Thiruth-then-kurangu-aaduthurai.

1843. நிறைவில்புறங்காட்டிடைநேரிழையோடும்
இறைவில்லெரியான்மழுவேந்திநின்றாடி
மறையின்னொலிவானவர்தானவரேத்தும்
குறைவில்லவனூர்குரங்காடுதுறையே. 3

நிறைவு இல் புறங்காட்டு இடை, நேரிழையோடும்
இறைவு இல் எரியான், மழு ஏந்தி நின்று ஆடி;
மறையின்(ன்) ஒலி வானவர் தானவர் ஏத்தும்
குறைவுஇல்லவன்; ஊர் - குரங்காடுதுறையே.

niRaivu il puRagkATTu iTai, nErizaiyOTum
iRaivu il eriyAn2, mazu Enti nin2Ru ATi;
maRaiyin2(n2) oli vAn2avar tAn2avar Ettum
kuRaivu illavan2; Ur--kuragkATutuRaiyE.

பொருள்: என்றும் நிறைவற்ற இடமே சுடுகாடு என்க. அக்காட்டில் உமையாளோடு நெருப்பைக் கையில் ஏந்தி ஆடுபவனே சிவபெருமான். கையில் மழு என்ற ஆயுதத்தை ஏந்தி நிற்பவனே சிவபெருமான். குரங்காடுதுறையில் பொருந்தி இருப்பவனே சிவபெருமான். அத்தலத்தில் மறைஒலி முழங்கிக் கொண்டே இருக்கும். வானவர்களும் தானவர்களும் இறைவனை வழிபாடு செய்து கொண்டே இருப்பர். குறைவற்ற இறைவன் அவனே ஆவான்.

குறிப்புரை: நிறைவு இல்புறங்காடு – எல்லார் புறனும் தான் கண்டு உலகத்து மன்பதைக் கெல்லாம் தானாய்த் தன்புறங்காண்போர்க் காண்பறியாது (புறம் – 356) என்று கூறப்பட்ட புறங்காடு 'இனிவரும் பிணத்திற்கு இங்கு இடமில்லை' என்று நிறைதல் என்றும் இல்லாதது. இறைவு – இறைதல் (அழிதல்). இல் – இல்லாத. எரியான் – தீயுடையவன். சிவபிரான் ஏந்திய தீக்கு என்றும் அழிவில்லை. ஆடி – பெயர்ச்சொல். தானவர் – அசுரர். குறைவு இல்லான் – குறைவிலா நிறைவினன்.

It is Civan, Lord of Thiruth-then-kurangu-aaduthurai. The cremation ground is a place never satiated in receiving the dead body. In this place, our Lord dances with our goddess Umaa who wears selected jewels. He holds on His hand the never ending fire. He holds an axe in another hand. He is such a Supreme Being of perfection devoid of flaws. On hearing the Vedic chanting by scholars Devaas, Asuraas and all other celestials arrive and worship our Lord in this place. In such a holy place, our flawless Lord has manifested Himself.

1844. விழிக்குந்நுதன்மேலொருவெண்பிறைசூடித்
தெழிக்கும்புறங்காட்டிடைச்சேர்ந்தெரியாடிப்
பழிக்கும்பரிசேபலிதேர்ந்தவனூர்பொன்
கொழிக்கும்புனல்சூழ்குரங்காடுதுறையே. 4

விழிக்கும் நுதல்மேல் ஒரு வெண்பிறை சூடி,
தெழிக்கும் புறங்காட்டுஇடைச் சேர்ந்து எரிஆடி,
பழிக்கும் பரிசே பலி தேர்ந்தவன், ஊர் - பொன்
கொழிக்கும் புனல் சூழ் குரங்காடுதுறையே.

vizikkum nutalmEl oru veNpiRai cUTi,
tezikkum puRagkATTu iTaic cErntu eri ATi,
pazikkum paricE pali tErntavan2, Ur--pon2
kozikkum pun2al cUz kuragkATutuRaiyE.

பொருள்: நெற்றிக் கண்ணை உடையவனே எம்பெருமான். தலையில் வெண்பிறையைச் சூடியவனே எம்பெருமான். புறங்காட்டில் நெருப்பைக் கையில் ஏந்தி ஆடுபவனே எம்பெருமான். பிறர் அறியாமல் பழித்துக் கூறும் நிலையில் பிச்சை ஏற்றுத் திரிபவனே எம்பெருமான். பொற்றுகளைச் சுமந்து வரும் பொன்னி ஆற்றங்கரையில் உள்ள குரங்காடுதுறை தலத்துள் கோயில் கொண்டவனே எம்பெருமான் என்க.

குறிப்புரை: விழிக்கும் நுதல் மேல் – தீக்கண் திறக்கும் திருநுதலின் மேலிடத்தில் (சென்னியின் முற்பக்கத்தில் என்றபடி). பிறைநுதல் வண்ணம் ஆகின்று (புறம் – கடவுள்) சூடி, ஆடித் தேர்ந்தவன் ஊர் குரங்காடுதுறை என்க. தெழிக்கும் – ஒலிக்கும். பழிக்கும் பரிசேபலியேற்கின்றானென்று பழிக்குந் தன்மையிலே. பொன் கொழிக்கும் புனல் – பொன்னியாகிய காவிரி நீர்.

It is Civan, Lord of Thiruth-then-kurangu-aaduthurai. He has a third eye in His forehead. At the top portion of His head, above the third eye, He allows the baby moon to rest. He dances on the cremation ground, a place of terrible sounds. He wanders in the entire cosmos carrying a begging bowl and accepts the oblations given by ladies. The world despises such behaviour of His. The river Cauvery brings gold dashing against the banks of the city. In such a glorious city our Lord is manifest.

1845. நீறார்தருமேனியன்நெற்றியொர்கண்ணன்
ஏறார்கொடியெம்மிறையீண்டெரியாடி
ஆறார்சடையந்தணனாயிழையாளோர்
கூறான்நகர்போல்குரங்காடுதுறையே. 5

நீறு ஆர் தரு மேனியன், நெற்றி ஓர் கண்ணன்,
ஏறு ஆர் கொடி எம் இறை, ஈண்டு எரி ஆடி,
ஆறு ஆர் சடை அந்தணன், ஆயிழையாள் ஓர் -
கூறான், நகர்போல் - குரங்காடுதுறையே.

nIRu Artaru mEn2iyan2, neRRi Or kaNNan2,
ERu Ar koTi em iRai, INTu eri ATi,
ARu Ar caTai antaNan2, AyizaiyAL Or-
kURAn2, nakarpOl-kuragkATu tuRaiyE.

பொருள்: ஈசன், திருநீற்றை மேனியில் பூசி உள்ளான். நெற்றிக் கண்ணைக் கொண்டு அருள்புரிவான். இடபக் கொடியை ஏந்தி நிற்பான். நெருப்பைக் கையில் ஏந்தி ஆடுவான்.

கங்கை ஆற்றைத் தலையில் அணிந்துள்ளான். உமாதேவியைத் தன்உடம்பின் பாகமாகக் கொண்டிருப்பான். அவன் கோயில் கொண்டுள்ள தலமே தென்குரங்காடு துறையாம் என்க.

குறிப்புரை: நீறு ஆர்தரு மேனியன் – திருவெண்ணீற்றினை நிறையப் பூசிய திருமேனியன்; ஏறுஆர் கொடி – (பா. 9) விடைக்கொடி. (ஆர்தல் – பொருந்துதல்) ஈண்டு எரி – வினைத்தொகை. திரண்டதீ. ஆறு – கங்கை. ஆயிழையாள் ஓர் கூறான் – மங்கை பங்கன்.

It is Civan, our Lord of Thiruth-then-kurangu-aaduthurai. He has smeared His body with sacred ashes. He has a third eye in His forehead. He is our Master. His flag has the figure of a bull as His insignia. He dances over plentiful fires. He has accommodated the river Ganges on His matted hair. He is a very graceful Supreme Being. He shares His left side body with our goddess Umaa. In such a holy city, our Lord is manifest.

1846. நளிரும்மலர்க்கொன்றையுநாறுகரந்தைத்
துளிருஞ்சுலவிச்சுடுகாட்டெரியாடி
மிளிரும்மரவார்த்தவன்மேவியகோயில்
குளிரும்புனல்சூழ்குரங்காடுதுறையே. 6

நளிரும் மலர்க்கொன்றையும் நாறு கரந்தைத்
துளிரும் சுலவி, சுடுகாட்டு எரிஆடி,
மிளிரும்(ம்) அரவு ஆர்த்தவன் மேவிய கோயில் -
குளிரும் புனல் சூழ் குரங்காடுதுறையே.

naLirum malarkkon2Raiyum nARu karantait
tuLirum culavi, cuTukATTu eri ATi,
miLirum(m) aravu Arttavan2 mEviya kOyil--
kuLirum pun2al cUz kuragkATutuRaiyE.

பொருள்: எம்பெருமான் கொன்றை மலர்மாலையை அணிந்திருப்பான். மணமிக்க திருநீற்றையும் பூசியிருப்பான். நெருப்பைக் கையில் ஏந்திச் சுடுகாட்டில் ஆடுவான். ஒளிமிக்க பாம்பை ஆபரணமாக அணிந்திருப்பான். அவன் குளிர்ந்த புனல் சூழ்ந்த குரங்காடுதுறை தலத்தில் கோயில் கொண்டிருப்பான்.

குறிப்புரை: நளிரும் – குளிரும். கரந்தைத் துளிர் – கரந்தை என்னும் மரத்தின் தளிர். சுலவி – சுற்றி. மிளிரும் – விளங்கும். கீழ் மேலாகும் எனலுமாம்.

See! It is the place of Thiruth-then-kurangu-aaduthurai. Our Lord Civan dances on the cremation ground wearing cool cassia flowers along with the sweet smelling tender leaves of Siva Kaantham tree around the hair. He is the most handsome Supreme Being. He has pacified the dreadful snake, using it as His belt on His loins. Our Lord is manifest in the temple in Thiruth-then-kurangu-aaduthurai, a place surrounded by cool pools.

1847. பழகும்வினைதீர்ப்பவன்பார்ப்பதியோடும்
முழவங்குழல்மொந்தைமுழங்கெரியாடும்
அழகன்னயில்மூவிலைவேல்வலனேந்தும்
குழகன்நகர்போல்குரங்காடுதுறையே. 7

பழகும் வினை தீர்ப்பவன்; பார்ப்பதியோடும்,
முழவம் குழல் மொந்தை முழங்க, எரிஆடும்
அழகன்(ன்); அயில்மூஇலைவேல் வலன் ஏந்தும்
குழகன்; நகர்போல் - குரங்காடுதுறையே.

pazakum vin2ai tIrppavan2; pArppatiyOTum,
muzavam kuzal montai muzagka, eri ATum
azakan2(n2); ayil mU ilaivEl valan2 Entum
kuzakan2; nakarpOl--kuragkATutuRaiyE.

பொருள்: உயிரைத் தொடர்ந்துபற்றித் துன்பம் தரும் வினைகளைத் தீர்ப்பவனே எம்பெருமான். பார்வதிதேவியோடு பொருந்தி இருப்பவனே சிவபெருமான். முழவம், குழல், மொந்தை போன்ற இசைக்கருவிகள் முழங்க, நெருப்பைக் கையில் ஏந்தி ஆடுபவனே சிவபெருமான். மூவிலைச் சூலத்தை ஏந்தியிருப்பவனே சிவபெருமான். அவனே குரங்காடுதுறை தலத்துள் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: பழகும் வினை – பிறவிதொறும் உயிரை இடைவிடாது தொடர்ந்து பழகும் பழவினை. பார்ப்பதி – பார்வதி தேவியார். முழவம். குழல், மொந்தை என்னும் இசைக் கருவிகள் முழங்க எரியில் ஆடும் அழகன் என்க. முழங்கு எரி – வினைத்தொகையுமாம். அயில் – கூர்மை. மூவிலைமேல் – திரிசூலம். வலன் – வலக்கையில். குழகன் – இளைஞன்.

See! It is the sacred place, Thiruth-then-kurangu-aaduthurai. Raavanan, king of Sri Lanka made a frightful roaring sound and tried to lift Mount Kailash and keep it

aside. Our Lord pressed the mountain with His toe. Raavanan got crushed and his mightiness was suppressed. In this city on both the banks of the Cauvery, an ever-flowing perennial river, are beautiful gardens with variety of tall trees in good numbers. This is the holy city, where our Lord Civan has manifested Himself.

1848. வரையார்த்தெடுத்தவ்வரக்கன்வலியொல்க
நிரையார்விரலானெரித்திட்டவனூராம்
கரையார்ந்திழிகாவிரிக்கோலக்கரைமேல்
குரையார்பொழில்சூழ்குரங்காடுதுறையே. 8

வரை ஆர்த்து எடுத்த(வ்) அரக்கன் வலி ஒல்க,
நிரை ஆர் விரலால் நெரித்திட்டவன் ஊர்ஆம் -
கரை ஆர்ந்து இழி காவிரிக் கோலக் கரைமேல்,
குரை ஆர் பொழில் சூழ், குரங்காடுதுறையே.

varai Arttu eTutta(v) arakkan2 vali olka,
nirai Ar viralAl nerittiTTavan2 Ur Am--
karai Arntu izi kAvirik kOlak karaimEl,
kurai Ar pozil cUz, kuragkATutuRaiyE.

பொருள்: கயிலாய மலையை எடுக்க முயன்ற அரக்கன் இராவணனின் வலிமையைத் தன் கால்விரலை ஊன்றி அழித்தவனே சிவபெருமான். அவன் விரைந்து வரும் காவிரி நதியின் கரையில் ஒலி பொருந்திய பொழில் சூழ்ந்துள்ள குரங்காடு துறை தலத்துள் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: ஒல்க – தளர, சுருங்க. கோலம் – அழகு. நெரித்திட்டவன் – நெரியச் செய்தவன். குரை – ஒலி.

See! It is the sacred place of Thiruth-then-kurangu-aaduthurai where our Lord Civan resides. He dispels all the sufferings of birth. Carrying fire in one hand, He dances with our goddess Paarvathi Devi on the cremation ground for the music of tabret, drum open at one end and flute. He is the most handsome Supreme Being, dancing on fire. He looks youthful holding a trident to represent His victory. This our Lord is manifest in Thiruth-then-kurangu-aaduthurai.

1849. நெடியானொடுநான்முகனுந்நினைவொண்ணாப்
படியாகியபண்டங்கனின்றெரியாடி
செடியார்தலையேந்தியசெங்கண்வெள்ளேற்றின்
கொடியான்நகர்போல்குரங்காடுதுறையே. 9

நெடியானொடு நான்கனும் நினைவு ஒண்ணாப்
படிஆகிய பண்டங்கன், நின்று எரி ஆடி,
செடி ஆர் தலை ஏந்திய செங்கண் வெள்ஏற்றின்
கொடியான், நகர்போல் - குரங்காடுதுறையே.

neTiyAn2oTu nAn2mukan2um nin2aivu oNNAp
paTi Akiya paNTagkan2, nin2Ru eri ATi,
ceTi Ar talai Entiya cekgaN veL ERRin2
koTiyAn2, nakarpOl--kuragkATutuRaiyE.

பொருள்: திருமாலும் நான்முகனும் அடிமுடி காணாதவாறு நெருப்புருவாய் ஓங்கி நின்றவன் சிவபெருமான். கையில் நெருப்பை ஏந்தி ஆடுபவன் சிவபெருமான். பிரம கபாலத்தைக் கையில் ஏந்திப் பலிதேர்பவன் சிவபெருமான். சிவந்த கண்களைக் கொண்ட இடபத்தைக் கொடியாகக் கொண்டவன் சிவபெருமான். அவனே குரங்காடுதுறை தலத்துள் கோயில் கொண்டுள்ளான் என்க.

குறிப்புரை: படி – தன்மை. உருவம். பண்டங்கள் – பாண்டரங்கம் என்னும் கூத்தை ஆடுபவன். பசுபதீ பண்டரங்கா என்றேன் நானே (தி. 6 பதி. 37 பா. 63) செடியார்தலை – பிரமகபாலம். செங்கண் வெள்ளேற்றின் கொடியான் – சினக்குறிப்பை உணர்த்தும் சிவந்த கண்ணை உடைய வெள்ளை விடையை எழுதிய கொடியை உடையவன் (பா. 5).

It is Civan, the Lord of Thiruth-then-kurangu-aaduthurai. Once, He assumed the form of endless illumination. He could not be comprehended by the tall Vishnu, demigod, and the four faced Brahma, also a demigod. He performs the Panduranga dance whenever He wants to. He also dances over the fire in the cremation ground. He holds in His hand the stinking, fleshy skull for begging alms. The insignia of His flag is the figure of the red eyed white bull, which is none other than Thirumal. Our Lord is manifest in Thiruth-then-kurangu-aaduthurai.

1850. துவராடையர்வேடமலாச்சமண்கையர்
கவர்வாய்மொழிகாதல்செய்யாதவனூராம்
நவையார்மணிபொன்னகில்சந்தனமுந்திக்
குவையார்கரைசேர்குரங்காடுதுறையே. 10

துவர்ஆடையர், வேடம் அலாச் சமண்கையர்,
கவர் வாய்மொழி காதல் செய்யாதவன் ஊர்ஆம் -
நவை ஆர் மணி, பொன், அகில், சந்தனம், உந்திக்
குவை ஆர் கரை சேர் குரங்காடுதுறையே.

tuvar ATaiyar, vETam alAc camaNkaiyar,
kavar vAymozi kAtal ceyyAtavan2 Ur Am--
navai Ar maNi, pon2, akil, cantan2am, untik
kuvai Ar karai cEr kuragkATutuRaiyE.

பொருள்: துவராடை அணிந்த பௌத்தர் மற்றும் சமணர் எப்பொழுதும் முரண்பட்ட மொழிகளையே பேசித் திரிவார்கள். அம்மொழிகளை விரும்பாதவனே சிவபெருமான். நவமணிகளையும் பொன்னையும் சந்தனத்தையும் உருட்டிவரும் பொன்னி ஆற்றங்கரையில் உள்ள குரங்காடுதுறை தலத்தில் நம் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: கையர் – கீழ்மக்கள். கவர்வாய்மொழி – கவர்த்த (ஐயத்தை விளைவிக்கும்) வாய்ப்பேச்சு. நவை – சிதைவு என்னும் பொருட்டாய் நின்றது. குவை – குவியல்.

It is Civan, the Lord of Thiruth-then-kurangu-aaduthurai. He slights the words of the Buddhists who wear ochre robes as well as those of the Jains who wear robes which are not suitable to their way of life. In the city of Thiruth-then-kurangu-aaduthurai, the water of river Cauvery falling from the mountain carries gems, gold, akil, and sandalwood logs. Plenty of all these materials are found on the banks of the river in Thiruth-then-kurangu-aaduthurai. Our Lord is manifest in such a fertile place.

1851. நல்லார்பயில்காழியுள்ஞானசம்பந்தன்
கொல்லேறுடையான்குரங்காடுதுறைமேல்
சொல்லார்தமிழ்மாலைபத்துந்தொழுதேத்த
வல்லாரவர்வானவரோடுறைவாரே. 11

நல்லார் பயில் காழியுள் ஞானசம்பந்தன்,
கொல் ஏறு உடையான் குரங்காடுதுறைமேல்
சொல் ஆர் தமிழ்மாலைபத்தும், தொழுது ஏத்த
வல்லார் அவர், வானவரோடு உறைவாரே.

nallAr payil kAziyuL njAn2acampantan2,
kol ERu uTaiyAn2 kuragkATutuRaimEl
col Ar tamiz mAlaipattum, tozutu Etta
vallAr avar, vAn2avarOTu uRaivArE.

பொருள்: நல்ல பண்பாளர்கள் நிறைந்த சீர்காழிப் பதியில் அவதரித்தவர் ஞானசம்பந்தப் பெருமான். அவர் இடப வாகனத்தில் அமர்ந்து அருளும் குரங்காடுதுறை இறைவனைப் போற்றி தமிழ்ப்பாடல்கள் பாடியுள்ளார் அத்தமிழ்ப்பாடல்களைப் பாடிப் பரவ வல்லவர்கள் வானுலக வாழ்வை அடைந்து அடியார்களுடன் கூடி மகிழ்ந்திருக்கப் பெறுவார்கள்.

குறிப்புரை: நல்லார் – ஞானியர். கற்றவர்கள் பணிந்தேத்தும் கழுமலத்துள்ளீசன்றன் கழல் மேல் நல்லோர் நற்றுணையாம் பெருந்தன்மை (129–11). வானவர் – வீட்டுலகடைந்தோர். உறைவார் – வாழ்வார்.

Our godly saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi where good people do live in large numbers. He sang on our Lord Thiruth-then-kurangu-aaduthurai ten Tamil hymns of divinity. Those devotees who are capable of reciting these ten Tamil hymns in good musical tone will live along with the devaas in the celestial world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

35ஆம் பதிகம் முற்றிற்று
End of 35th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 172 *பதிக எண்: 36*

36. திருவிரும்பூளை
36. THIRU-IRUM-POOLAI

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

பூளை என்ற செடியைத் தலத்துக்குறியாக உடைமையால் இது இப்பெயர் பெற்றது. இது இப்பொழுது ஆலங்குடி என்று வழங்கப் பெறுகின்றது. இது தஞ்சாவூர் – கும்பகோணம் – நீடாமங்கலம் பேருந்துச் சாலையில் உள்ள தலம். பேருந்து வசதிகள் உள்ளன. இது காவிரியின் தென்கரையில் உள்ள தொண்ணூற்றெட்டாவது பதி. இறைவரின் திருப்பெயர் காசியாரணியர். வடமொழியில் ஆபத்சகாயர். இறைவியாரின் திருப்பெயர் ஏலவார்குழலி.

விசுவாமித்திரர் பூசித்துப் பேறுபெற்ற பதி. இதற்குத் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பதிகம் ஒன்று இருக்கிறது. கோயிலில் தெற்குக் கோபுரம் பெரியது. கிழக்குக் கோபுரம் சிறியது. முப்புறமும் அகழி போன்ற திருக்குளம் சூழ்ந்து வெகு அழகாக இருக்கிறது. குருஸ்தலம். தட்சிணாமூர்த்தி விழா சிறப்பானது. அவருக்கு உற்சவரும் மூலவரும் உண்டு. அம்மன் கோயில் தனி. இரண்டிற்கும் இடையில் ஒரு மண்டபமும் உண்டு. புராணம் உண்டு.

பதிக வரலாறு

ஆளுடைய பிள்ளையார் திருவாறை வடதளியினின்றும் எப்பொருளுமாய் நின்ற இறைவரது இரும்பூளை என்னும் தலத்தை எய்தித் தொண்டர் தொழ, அண்டர்பிரான் கோயிலை அடைந்து, இறைஞ்சி, அடியார்களை வினவியவாற்றால் அருமறையின் பொருள் விரியப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1852. சீரார்கழலேதொழுவீரிதுசெப்பீர்
வாரார்முலைமங்கையொடும்முடனாகி
ஏராரிரும்பூளையிடங்கொண்டஈசன்
காரார்கடல்நஞ்சமுதுண்டகருத்தே. 1

சீர் ஆர் கழலே தொழுவீர்! இது செப்பீர் -
வார் ஆர் முலை மங்கையொடும்(ம்) உடன்ஆகி,
ஏர் ஆர் இரும்பூளை இடம் கொண்ட ஈசன்
கார் ஆர் கடல்நஞ்சு அமுது உண்ட கருத்தே?

cIr Ar kazalE tozuvIr! itu ceppIr--
vAr Ar mulai magkaiyoTum(m) uTan2 Aki,
Er Ar irumpULai iTam koNTa Ican2
kAr Ar kaTal nanjcu amutu uNTa karuttE?

பொருள்: உமையவளை உடம்பின் ஒருபாகமாகக் கொண்டவன் சிவபெருமான். அவன் இரும்பூளைத் தலத்துள் கோயில் கொண்டுள்ளான். அவனது திருவடிகளை அன்புடன் தொழும் அடியவர்களே, அவன் கரிய கடலில் தோன்றிய நஞ்சை அமுதாக உண்பது ஏன் என்பதை அறிவீர்கள். அறிந்தால் சொல்லுங்கள்.

குறிப்புரை: சீர்ஆர் கழலே – எல்லா உலகங்களையும் அளித்த சீர் நிறைந்த திருவருளையே. தொழுவீர் – தொழுகின்றவரே! கருத்தாகிய இது செப்பீர் என்க. மேலும் இவ்வாறே இயைத்துப் பொருள் கொள்க. ஏர் – அழகு. கார் – கருமை, மேகமுமாம். கடல் – பாற்கடல். நஞ்சு அமுது – நஞ்சமாகிய அமுதம். நஞ்சத்தை அமுதாக என்று ஆக்கச் சொல் வருவித்தும் முடிக்கலாம்.

Devotees worship the opulent holy feet of Lord Civa, whose grace rescued the whole world. You devotees! tell me why Lord Civa who is manifest in Thiru-irum-poolai, along with Umaa, whose breast is covered well, consumed the poison which came out of the black sea, treating it as Ambrosia. Tell me details about the Lord's eating of the dreadful poison.

1853. தொழலார்கழலேதொழுதொண்டர்கள்சொல்லீர்
குழலார்மொழிக்கோல்வளையோடுடனாகி
எழிலாரிரும்பூளையிடங்கொண்டஈசன்
கழல்தான்கரிகானிடையாடுகருத்தே. 2

தொழல் ஆர் கழலே தொழு தொண்டர்கள் சொல்லீர் -
குழல் ஆர் மொழிக் கோல்வளையோடு உடன்ஆகி,
எழில் ஆர் இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
கழல்தான் கரிகான்இடை ஆடு கருத்தே?

tozal Ar kazalE tozu toNTarkaL collIr--
kuzal Ar mozik kOl vaLaiyOTu uTan2 Aki,
ezil Ar irumpULai iTam koNTa Ican2
kazaltAn2 karikAn2 iTai ATu karuttE?

பொருள்: தொழுவதற்குரிய சிவபெருமானின் திருவடிகளை தினமும் தொழுது போற்றும் திருத்தொண்டர்களே! ஈசன், இன்மொழியை உடைய, திரண்ட வளையலையும் அணிந்த உமாதேவியை உடனாகக் கொண்டு அழகிய இரும்பூளைப்பதியில் கோயில் கொண்டு உள்ளான். அவன் மயானத்திலும் நடனம் ஆடுகிறானே. யாதோ? சொல்லுவீராக.

குறிப்புரை: தொழல் ஆர் கழலே – தொழுதற்குப் பொருந்திய திருவடி. தலைவைத்தது திருவடியை வணங்கற்கேயாதலின், அத்தலை தாழ்த்துதல் முதலிய தொழிலுக்குப் பொருந்தியதும் திருவடி அல்லாது வேறில்லை. தொழு தொண்டர்கள் – வினைத்தொகை. குழல் ஆர் – மொழி நமக்கு வேய்ங்குழலிசை இன்பம் போல இறைவனது செவிக்கு இன்பஞ் செய்யும் மொழி. 'குழல்வாய்மொழியம்மை' என்பது அம்பிகையின் திருப்பெயர்களுள் ஒன்று. கோல் – திரட்சி. வளை – வளையல். மொழியும் வளையும் உடையாள் என்க. எழில் – அழகு. கழல் – திருவடிக்கு ஆகு பெயர். தொண்டர்கள் (விளி) கருத்து சொல்லீர் என்க.

People of servitude who worship the holy feet of our Lord Civan, you may kindly answer me. Our Lord is manifest in the glorious city of Thiru-irum-poolai along with our goddess Umaa. She wears white bright bangles in Her hands. Her words resemble flute's music. Why does our Lord then dance in the cremation ground with His anklet clinking around His feet? Please tell me.

1854. அன்பாலடிகைதொழுவீரறியீரே
மின்போல்மருங்குல்மடவாளொடுமேவி
இன்பாயிரும்பூளையிடங்கொண்டஈசன்
பொன்போற்சடையிற்புனல்வைத்தபொருளே. 3

அன்பால் அடி கைதொழுவீர்! அறியீரே -
மின் போல் மருங்குல் மடவாளொடு மேவி,
இன்புஆய் இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
பொன் போல் சடையில் புனல் வைத்த பொருளே?

an2pAl aTi kaitozuvIr! aRivIrE--
min2 pOl marugkul maTavALoTu mEvi,
in2pu Ay irumpULai iTam koNTa Ican2
pon2 pOl caTaiyil pun2al vaitta poruLE?

பொருள்: அன்புடன் ஈசனாரின் திருவடிகளைத் தொழுது வணங்கும் அடியவர்களே! அவன் மின்னல் போன்ற இடைகொண்ட உமையோடு திருஇரும்பூளைத் தலத்துள் கோயில் கொண்டுள்ளான். அவன் தன் தலையில் கங்கை நதி என்னும் பெண்ணைத் தூக்கி வைத்துள்ள காரணம் என்ன என்று அறிந்தால் கூறுவீர்கள்.

குறிப்புரை: அன்பு – பத்தி. அடி – திருவடி. தொழுவீர் – விளி. அறியீரே – அறிவீர்களோ? அறிவீர் என்று முன்பின் உள்ளவாறுங் கொள்ளலாம். மின்போல் மருங்கும் – மின்னிடை. புனல் – கங்கைநீர்.

You who worship the holy feet of our Lord Civan sincerely, you may answer my question. Our Lord has manifested Himself in the temple of the attractive city of Thiru-irum-poolai. Here He exhibits Himself with our goddess Umaa, whose beauty has no parallel in the world as her hip is thin like lightning. However, He has adorned in His golden matted hair with the lady of Ganges river too. Please tell me why.

1855. நச்சித்தொழுவீர்கள்நமக்கிதுசொல்லீர்
கச்சிப்பொலிகாமக்கொடியுடன்கூடி
இச்சித்திரும்பூளையிடங்கொண்டஈசன்
உச்சித்தலையிற்பலிகொண்டுழலூணே. 4

நச்சித் தொழுவீர்கள்! நமக்கு இது சொல்லீர் -
கச்சிப் பொலி காமக்கொடிஉடன் கூடி,
இச்சித்து இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
உச்சித்தலையில் பலி கொண்டு உழல் ஊணே?

naccit tozuvIrkaL! namakku itu colIIr--
kaccip poli kAmakkoTi uTan2 kUTi,
iccittu, irumpULai iTamkoNTa Ican2
uccittalaiyil pali koNTu uzal UNE?

பொருள்: காஞ்சிப்பதியில் பொலிவுடன் அறங்களைச் செய்பவள் காமாட்சியான உமையாள். அவளை இச்சித்து இறைவன் தன்னுடன் கொண்டு இரும்பூளைத் தலத்துள் கோயில் கொண்டுள்ளான். அவன் பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி ஊர்தோறும் பலிதேர்ந்து திரிகிறானே. ஏன்? அவனது திருவடிகளை விரும்பித் தொழும் அடியவர்களே! கூறுங்கள்.

குறிப்புரை: நச்சி – விரும்பி. தொழுவீர்கள் (விளி). கச்சி – காஞ்சிபுரம். திருக்கச்சி. பொலி – திருக்கோயில்கொண்டு விளங்குகின்ற. காமக்கொடி – காமாட்சி தேவியாராகிய வல்லி. இச்சித்து – விரும்பி. ஊண்பொருட்டுப் பலிகொண்டு உழல்வது ஏன் சொல்லீர் என்றபடி.

You wise people! worship the holy feet of Lord Civan very sincerely with your kith and kin. Kindly answer my doubt. Our Lord shares His left side body with our goddess Umaa who has the most attractive glistening hair. Then why should He carry the skull of Brahma and beg for alms, roaming around? Kindly tell me the answer.

1856. சுற்றார்ந்தடியேதொழுவீரிதுசொல்லீர்
நற்றாழ்குழல்நங்கையொடுமுடனாகி
எற்றேயிரும்பூளையிடங்கொண்டஈசன்
புற்றாடரவோடென்புபூண்டபொருளே. 5

சுற்று ஆர்ந்து அடியே தொழுவீர்! இது சொல்லீர் -
நல்-தாழ்குழல் நங்கையொடும்(ம்) உடன் ஆகி,
எற்றே இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
புற்று ஆடுஅரவோடு என்பு பூண்ட பொருளே?

cuRRu Arntu aTiyE tozuvIr! itu colIIr--
nal-tAzkuzal nagkaiyoTum(m) uTan2 Aki,
eRRE irumpULai iTamkoNTa Ican2
puRRu ATu aravOTu pUNTa poruLE?

பொருள்: நீண்ட கூந்தலைக் கொண்ட உமாதேவியுடன் உடனாகிய ஈசன் இரும்பூளைத் தலத்தில் கோயில் கொண்டுள்ளான். அவன் புற்றில் பொருந்தி வாழும் பாம்பினை ஆபரணமாக அணிந்து உள்ளானே. ஏன்? அடியார்களாகிய சுற்றத்தாருடன் கூடியிருந்து அவனையே போற்றும் அன்பர்களே! கூறுங்கள்.

குறிப்புரை: சுற்று ஆர்ந்து – சூழ்ந்து நிறைந்து. அடியார் சுற்றம் நிறைந்து என்றுமாம். நல்தாழ்குழல் – அழகிய தொங்குகின்ற கூந்தலை உடைய. நங்கை – தேவியார்க்கெல்லாந் தலைவி. புற்று ஆடு அரவு – புற்றில் உறைவதும் ஆடுவதும் ஆகிய பாம்பு என்றவாறு முறையே இடமும் தொழிலும் பற்றிய அடைமொழிகள். என்பு – எலும்புமாலை. பொருள் – பயன். பொருள் என்றே சொல்லீர் என்று இயைத்துரைக்க. எற்றே – எத்தன்மையதோ? எல் (இகழ்ச்சி) தேய – தேய்ந்த. இல்லாத எனலும் ஆம். எல்து – ஒளியுடையது. ஏய் – பொருந்திய எனலும் அமையும்.

You holy people! You worship our Lord Civan with ardent devotion. Then answer my point. Our Lord selected the city, Thiru-irum-poolai, as His abode as per His desires. Goddess Umaa Devi with her long, beautiful hair abides with Him on this temple. Why does our Lord wear as an ornament the snake, a dreadful creature? The devotees of our Lord, who worship Him with your kith and kin, may explain this strange behaviour of our Lord.

1857. தோடார்மலர்தூய்த்தொழுதொண்டர்கள்சொல்லீர்
சேடார்குழற்சேயிழையோடுடனாகி
ஈடாஇரும்பூளையிடங்கொண்டஈசன்
காடார்கடுவேடுவனானகருத்தே. 6

தோடு ஆர் மலர் தூய்த் தொழு தொண்டர்கள்! சொல்லீர் -
சேடு ஆர் குழல் சேயிழையோடு உடன் ஆகி,
ஈடுஆய் இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
காடு ஆர் கடு வேடுவன் ஆன கருத்தே?

tOTu Ar malar tUyt tozu toNTarkaL! collIr--
cETu Ar kuzal cEyizaiyOTu uTan2 Aki,
ITu Ay irumpULai iTam koNTa Ican2
kATu Ar kaTu vETuvan2 An2a karuttE?

பொருள்: அடர்ந்த கூந்தலைக் கொண்ட உமாதேவியுடன் உடனாகிய ஈசன் இரும்பூளைத் தலத்துள் கோயில் கொண்டுள்ளான். அவனே காட்டில் வேட்டுவன் உருவில் வந்தான். ஏன் என்பது பற்றி ஈசனை மலர்தூவி வணங்கிடும் பக்தர்களே கூறுங்கள்.

குறிப்புரை: தோடு – இதழ், தொகுதியுமாம். தூய் – தூவி. சேடு – திரட்சி. சேயிழை – செய்ய பூண்களை உடைய அம்பிகை. (அன்மொழித் தொகை) ஈடு – பெருமை. சமமுமாம். காடு ஆர் – காட்டில்

பொருந்திய வேடுவன். (அருச்சுனனோடு போர் செய்த) வேடன். ஏவார்சிலை எயினன் உருவாகி எழில்விசயற்கு ஓவாத இன்னருள் செய்த எம் ஒருவன் (தி. 1 பதி. 12 பா. 6).

You scholarly men! You are devotees of purity. You carry fineflowers whenever you go to the temple to worship our Lord who is manifest in the temple in Thiru-irum-poolai along with His consort Umaa. Of course, He shares His left body with Umaa, our goddess. Her hair is very thick and glossy with a very sweet smell. Then why should our Lord wander all over the surroundings as a cruel hunter? Kindly give me the answer.

7ஆவது பாட்டு கிடைக்கப்பெறவில்லை.

1858. ஒருக்கும்மனத்தன்பருள்ளீரிதுசொல்லீர்
பருக்கைம்மதவேழமுரித்துமையோடும்
இருக்கையிரும்பூளையிடங்கொண்டஈசன்
அரக்கன்னுரந்தீர்த்தருளாக்கியவாறே. 8

ஒருக்கும் மனத்து அன்பர்உள்ளீர்! இது சொல்லீர் -
பருக் கை மதவேழம் உரித்து, உமையோடும்
இருக்கை இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
அரக்கன்(ன்) உரம் தீர்த்து அருள் ஆக்கிய ஆறே?

orukkum man2attu an2par uLLIr! itu colllr--
paruk kai mata vEzam urittu, umaiyOTum
irukkai irumpULai iTam koNTa Ican2
arakkan2(n2) uram tIrttu aruL Akkiya ARE?

பொருள்: வலிமைமிக்க யானையின் தோலை உரித்து அதனை போர்வையாக அணிந்தவன் சிவபெருமான். அவனே உமையாளுடன் உடனாகி இரும்பூளைத் தலத்துள் கோயில் கொண்டுள்ளான். மனத்தைப் புலன்வழிச் செல்லாமல் காத்து, அன்பர்களுடன் கூடி வாழும் பக்தர்களே! ஈசன் அரக்கனாகிய இராவணனின் வலிமையைக் கெடுத்துப் பிறகு ஆட்கொண்டது ஏன்? என்பது பற்றித் தெரிந்தால் கூறுங்கள்.

குறிப்புரை: ஒருக்கும் மனத்து – இறைவன் திருவடியே, ஒன்றியிருந்து உணர்ந்து உணர்ந்து. மற்றெல்லாப் பற்றுக்களும் ஒருங்கச் செய்த மனத்தினை உடைய அன்பர் உள்ளீர் – அன்பர் கூட்டத்தைச்

சார்ந்தவரே. பருக்கை – பரியதாகிய துதிக்கையை உடைய. உமையோடும் இருக்கையை உடைய என்க. உரம் – வலிமை. அருள் – நாளும் வாளும் பிறவும் நல்கிய கருணை.

You the devotees of our Lord Civan! good at controlling your senses, worship the Lord with sincere devotion. I have a question. The fierce elephant with long tusk came rushing towards our Lord. He immediately killed it. Then He removed the hide of the elephant and covered His body with it. He exhibits Himself in the temple in Thiru-irum-poolai along with His consort. In another instance, He crushed the head and shoulders of Raavanan for his fault and quelled his mightiness. However, Raavanan begged for pardon. Then our Lord graced him and blessed him with longevity and also gave him a holy sword. Why did He do this?

1859. துயராயினநீங்கித்தொழுந்தொண்டர்சொல்லீர்
கயலார்கருங்கண்ணியொடும்முடனாகி
இயல்பாயிரும்பூளையிடங்கொண்டஈசன்
முயல்வாரிருவர்க்கெரியாகியமொய்ம்பே. 9

துயர் ஆயின நீங்கித் தொழும் தொண்டர்! சொல்லீர் -
கயல் ஆர் கருங்கண்ணியொடும்(ம்) உடன்ஆகி,
இயல்பு ஆய் இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
முயல்வார் இருவர்க்கு எரி ஆகிய மொய்ம்பே?

tuyar Ayin2a nIgkit tozum toNTar! collIr--
kayal Ar karugkaNNiyoTum(m) uTan2 Aki,
iyalpu Ay irumpULai iTamkoNTa Ican2
muyalvAr iruvarkku eri Akiya moympE?

பொருள்: கயல் போன்ற அழகிய கண்களைக் கொண்ட உமாதேவியுடன் உடனாகியவன் ஈசன். அவனே இரும்பூளைத் தலத்துள் கோயில் கொண்டுள்ளான். எளிமையாகக் காட்சியருளும் அவன் திருமாலும் நான்முகனும் காண முடியாப் பேருருவை எடுத்த காரணம் பற்றித் தொண்டர்களே! கூறுங்கள்.

குறிப்புரை: ஆயின – வினையாலணையும் பெயர். துயர் – பிறவி, மறதி முதலியவை. கயல் – மீன் விசேடம், அங்கயற்கண்ணியார். இருவர் – அரிய அயன். மொய்ம்பு – வன்மை, ஆற்றல்.

You people, have no suffering in your life, you who worship our Lord Civan. I have a doubt. Our Lord is manifest in the temple in Thiru-irum-poolai with His consort, our goddess Umaa. He shares half of His body with Umaa who has fishlike black eyes, which add to Her beauty. Our demigods Vishnu and Brahma tried their best in vain to comprehend and meet our Lord. Then He rose before them as an infinite column of light and fire. Why should He do so? Kindly answer.

1860. துணைநன்மலர்தூய்த்தொழுந்தொண்டர்கள்சொல்லீர்
பணைமென்முலைப்பார்ப்பதியோடுடனாகி
இணையில்லிரும்பூளையிடங்கொண்டஈசன்
அணைவில்சமண்சாக்கியமாக்கியவாறே. 10

துணை நல்மலர் தூய்த் தொழும் தொண்டர்கள்! சொல்லீர் -
பணைமென்முலைப் பார்ப்பதியோடு உடன்ஆகி,
இணை இல்(ல்) இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
அணைவு இல் சமண் சாக்கியம் ஆக்கியஆறே?

tuNai nal malar tUyt tozum toNTarkaL! collIr--
paNai men2 mulaip pArppatiyOTu uTan2 Aki,
iNai il(l) irumpULai iTamkoNTa Ican2
aNaivu il camaN cAkkiyam Akkiya ARE?

பொருள்: பார்வதி தேவியை உடனாகக் கொண்டவன் சிவபெருமான். அவன் இரும்பூளைத் தலத்துள் கோயில் கொண்டுள்ளான். அவனது இணையான திருவடிகளைத் தொழுது போற்றும் தொண்டர்களே! சமணர், சாக்கியர், என்றும் முரண்பட்டவர்களையும் அவன் படைத்தது ஏன் என்பது பற்றித் தெரிந்தால் சொல்லுங்கள்.

குறிப்புரை: துணை – ஒப்பு. பணை – பருமை. இணை – ஈடு, ஒப்பு அணைவு இல் – அணை (ந்து வழிபடு) தல் இல்லாத. சமண் சாக்கியம் – சமணரும் சாக்கியரும் (ஆகிய புறப்புறச் சமயம்) உம்மைத் தொகை.

You devotees, all of you pray to our Lord Civan offering peerless flowers. I would like to know one thing about our Lord. Our Lord exhibits Himself in the temple at Thiru-irum-poolai. He shares His left body with Umaa. Our goddess Paarvathi Devi with soft breasts is praised by one and all in the universe. Why did our Lord create the Jains and Buddhists, people of unacceptable religious faith? Kindly tell me the reason.

1861. எந்தையிரும்பூளையிடங்கொண்டஈசன்
சந்தம்பயில்சண்பையுண்ஞானசம்பந்தன்
செந்தண்தமிழ்செப்பியபத்திவைவல்லார்
பந்தம்மறுத்தோங்குவர்பான்மையினாலே. 11

எந்தை இரும்பூளை இடம்கொண்ட ஈசன்,
சந்தம் பயில் சண்பையுள் ஞானசம்பந்தன்
செந்தண்தமிழ் செப்பிய பத்து இவை வல்லார்,
பந்தம்(ம்) அறுத்து ஓங்குவர், பான்மையினாலே.

entai irumpULai iTamkoNTa Ican2,
cantam payil caNpaiyuL njAn2acampantan2
centaN tamiz ceppiya pattu ivai vallAr,
pantam(m) aRuttu Ogkuvar, pAn2maiyin2AlE.

பொருள்: எந்தையும், இரும்பூளைத் தலத்துள் கோயில் கொண்ட இறைவனுமாகிய ஈசனைப் போற்றி சீர்காழியில் பிறந்த ஞானசம்பந்தப் பெருமான் பத்துப் பாடல்களைப் பாடியருளியுள்ளார். செந்தமிழில் பாடப் பெற்ற அப்பாடல்களைப் பக்தியுடன் பாட வல்லவர்கள் பந்தம் அறுக்கப் பெறுவர். உயர் சிறப்பை உறுவர் என்க.

குறிப்புரை: சந்தம் பயில் – வேதம் ஓதாது ஓதியுணர்ந்து. சந்தக்கவி பாடிப் பயின்ற எனலும் ஆம். பந்தம் – (மும்மலக்) கட்டு. ஈசனது சண்பையை உள்குகின்ற ஞானசம்பந்தன். செப்பிய – பாடிய. பான்மை – தன்மை.

Our saint Thiru-gnana-Sambandar hails from Sanbai (Seerkaazhi), a holy city full of divine music, heard all over, always. Thiru-gnana-Sambandar sang on our Lord at Thiru-irum-poolai ten pure chaste Tamil verses. Those scholars who are capable of singing these ten Tamil verses in good musical tone will snap the ties of their life and will reach great height.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

36ஆம் பதிகம் முற்றிற்று
End of 36th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 173 *பதிக எண்: 37*

37. திருமறைக்காடு 37. THIRU-MARAIK-KAADU

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

மறைகள் பூசித்த காரணம் பற்றி இப்பெயர் பெற்றது. இச்செய்தி ‘சதுரம் மறைதான் துதி செய்து வணங்கு மதுரம் பொழில்சூழ் மறைக்காட்டுறை மைந்தா’ என்னும் திருஞான சம்பந்தரது இத்தலத் தேவாரப் பகுதியால் (பண் – இந்தளம். திருப்பாட்டு 1) விளங்குகின்றது. திருத்துறைப்பூண்டி, வேதாரணியம் தொடர்வண்டிப் பாதையில் வேதாரணியம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே முக்கால் கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்றது. திருத்துறைப்பூண்டி, நாகை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

இறைவரின் திருப்பெயர் மறைக்காட்டுமணாளர். இத்திருப்பெயர், இவ்வூர்க்குரிய அப்பர் பெருமானின் ‘மறைக்காட்டுறையும் மணாளன்றானே’ என்னும் திருத்தாண்டகத்தால் அறியக் கிடக்கிறது. வேதாரண்யேசுவரர் என்னும் பெயரும் உண்டு. இறைவியாரின் திருப்பெயர் யாழைப்பழித்த மொழியம்மை. இத்திருப்பெயரைச் சுந்தரமூர்த்தி நாயனார், இவ்வூர்ப் பதிகத்தில் முதலாம் திருப்பாட்டில் ‘யாழைப் பழித்தன்ன மொழி மங்கையொரு பங்கன்’ என எடுத்தாண்டு உள்ளார். தீர்த்தம் – வேததீர்த்தம், கடல்துறை, மணிகர்ணிகை, தேவயூடணம் என்பன. தலவிருட்சம் – வன்னி.

பார்வதி தேவியாரின் திருமணத்தின் பொருட்டுத் தேவரும் பிறரும் கூடிய கூட்டத்தின் காரணமாக வடதிசை உயர்ந்து, தென்திசை தாழ்ந்தது. அதைச் சமண் செய்யச் சிவபெருமான் அகத்தியரைத் தென்திசைக்கு அனுப்பினார். பெருமானது மணக் கோலத்தைக் காண முடியாது போவது பற்றி அகத்தியர் வருந்தினார். அப்பொழுது சிவபெருமான் மணக்கோலத்தைத் திருமறைக்காட்டில் காட்டியருள்வதாகத் திருவாய் மலர்ந்து அதன்படி அக்கோலத்தைக் காட்டியருளினார். மணவாளக்கோலம் மூலத்தானத்தில் சிவலிங்கப் பெருமானுக்குப் பின்பக்கத்தில் இருக்கின்றது. இராமர் இராவணனைக் கொன்ற பழி நீங்கப் பூசித்த தலமாதல் பற்றி இது கோடிக்கரை என்றும் பேசப்படும். இங்குள்ள மணிகர்ணிகைத் தீர்த்தத்தில் மூழ்கி, கங்கை

புனிதமானாள். இங்கு உள்ள தேவபூடணத் தீர்த்தத்தில் மூழ்கி, காவிரி பரிசுத்தத் தன்மை எய்தனள். பிரமதேவர் முதலானோர் பூசித்துப் பேறு பெற்றனர்.

வேதங்களால் பூசிக்கப் பெற்றுத் திருக்காப்பிடப் பட்டிருந்த திருக்கதவை, திருஞானசம்பந்தர் கட்டளைப்படி திருநாவுக்கரசர் 'பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ' என்று தொடங்கிய பத்துப் பாடல்களைப் பாடிக் கதவைத் திறப்பித்தார். ஞானசம்பந்தர் தேவாரம் பாடி அதை அடைப்பித்தார். முசுகுந்தச் சக்கரவர்த்தி தியாகேசப் பெருமானை எழுந்தருளுவித்த ஏழுவிடங்கத் தலங்களுள் ஒன்று, தியாகர்புவனவிடங்கர் நடனம் ஹம்ச நடனம். சுந்தரமூர்த்தி நாயனாருடன், சேரமான் பெருமான் நாயனாரும் இங்கே வழிபட்டனர். இதற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் நான்கு, திருநாவுக்கரர் பதிகம் ஐந்து, சுந்தரர் பதிகம் ஒன்று ஆகப் பத்துப் பதிகங்கள் இருக்கின்றன.

இத்திருக்கோயிலில் எரியும் விளக்கில் இருந்த நெய்யை உண்ணுதற்கு வந்த எலி, அணையும் நிலையில் இருந்த திரியைத் தூண்டி, அதன் விளைவாய் மறுபிறப்பில் மாவலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது. இச்செய்தியை அப்பர் சுவாமிகள் திருக்குறுக்கைத் திருநேரிசையில் எட்டாம் திருப்பாட்டில்,

> நிறைமறைக் காடு தன்னி ணீண்டெரி தீபந்த தன்னைக்
> கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
> நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்ட வானுலக மெல்லாங்
> குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கை வீரட்டனாரே

என அருளியுள்ளார்கள்.

தலபுராணம், இவ்வூரில் தோன்றி அருளியவரும் திருவிளையாடற்புராணம் எழுதியவருமாகிய பரஞ்சோதி முனிவரால் எழுதப் பெற்றது. அச்சில் வெளிவந்துள்ளது. மறைசையந்தாதி இது யாழ்ப்பாணம் சின்னத்தம்பிப் புலவரால் எழுதப்பெற்றது. புலவர் பெருமக்கள் பெரிதும் பாராட்டும் நூல் இவை.

பதிக வரலாறு

மேதினிமேற் பொய்மிகுந்து, ஆதி அருமறை வழக்கமும் அரனடியார்பாற் பூதிசாதன விளக்கமும் முறையே அருகிப் போற்றல் பெறாது ஒழியக் கண்டு, இடர் உழந்த சிவபாத இருதயர் புரிந்த தவப்பயனாகப், பரசமயம் நிராகரித்து நீறாக்கும் பொருட்டுத் திருவவதாரஞ்செய்த

முதல்மறைப் பிள்ளையார், திருமறைக்காட்டை அடைந்தார். அங்கு, முன்பே சென்ற திருநாவுக்கரசு நாயனாரைக் கூடினார். திறப்பும் அடைப்பும் இல்லாதிருந்த திருக்கோயிற் கதவங்களைத் திறக்கவும் மூடவும் முறையே இருவரும் பாடி அருளினர். அவதார காரணங்களிரண்டனுள் ஒன்றான வேதநெறி தழைத்தோங்குதலை வேதாரணியத்துள் தொடங்கி நிறுவியருளிய உண்மையை உணர்த்துவது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1862. சதுரம்மறைதான்துதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
இதுநன்கிறைவைத்தருள்செய்கவெனக்குன்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. 1

சதுரம்(ம்) மறைதான் துதிசெய்து வணங்கும் -
மதுரம் பொழில்சூழ் - மறைக்காட்டு உறை மைந்தா!
இது நன்கு இறை வைத்து அருள்செய்க, எனக்கு உன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே!

catura(m) maRaitAn2 tuticeytu vaNagkum--
maturam pozil cUz--maRaikkATTu uRai maintA!
itu nan2ku iRai vaittu aruLceyka, en2akku un2
katavam tirukkAppuk koLLum karuttAlE!

பொருள்: நான்கு மறைகளும் துதிசெய்து வணங்கிய இடமே திருமறைக்காடாம். அழகிய சோலைகள் சூழ்ந்த திருமறைக்காட்டில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானே! கோயில் திருக்கதவங்கள் காப்பிடுமாறு அருள்புரிவீராக! இதுவே எனது வேண்டுகோளாகும்.

குறிப்புரை: சதுரம் மறை – நால்வேதம் (மகரவொற்று விரித்தல்). மதுரம் – தேனினிமை. இறை – விடை. மறை துதிசெய்து வணங்கும் காரணத்தால் மறைக்காடு என்றான உண்மையை உணர்த்தியருளியவாறறிக. பின்வருவன வினாக்களாதலின், அவற்றிற்குச் 'செவ்வனிறையோ இறைபயத்தாலோ செய்க' என்பார். 'இறைவைத்தருள் செய்க' என்றருளினார். எனக்கு அருள் செய்க என்று இவ்வாறு வேண்டுவது ஆசிரியர் திருவாக்கில் வேறு எங்கும் காண்டல் அரிதாகும். இதற்குப் பிறர் உரைத்தது பொருந்துமோ?

Behold! It is Civan, the Lord of Thiru-maraik-kaadu. This city is surrounded by gardens spreading fragrance all around. The four Vedas came to this temple in the

good old days and worshipped You, Oh the mighty one! The doors of this temple as in the previous days should be easy to close just as it was opened just now. You may grace my request with Your answer.

1863. சங்கந்தரளமவைதான்கரைக்கெற்றும்
வங்கக்கடல்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
மங்கையுமைபாகமுமாகவிதென்கொல்
கங்கைசடைமேலடைவித்தகருத்தே. 2

சங்கம், தரளம்(ம்)அவை, தான் கரைக்கு எற்றும்
வங்கக் கடல் சூழ் மறைக்காட்டு உறை மைந்தா!
மங்கைஉமை பாகமும் ஆக, இது என்கொல்,
கங்கை சடைமேல் அடைவித்த கருத்தே?

cagkam, taraLam(m)avai, tAn2 karaikku eRRum
vagkak kaTal cUz maRaikkATTu uRai maintA!
magkai umai pAkamum Aka, itu en2kol,
kagkai caTai mEl aTaivitta karuttE?

பொருள்: சங்கு, முத்து இவைகளைக் கரையில் உந்தித்தள்ளும் கடல்சூழ்ந்த மறைக்காட்டுத் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானே! உமாதேவியை உடம்பின் ஒருபாகத்தில் கொண்டுள்ள நீவிர் கங்கைப் பெண்ணாளையும் தலையில் வைத்துக் கொண்டுள்ள கருத்து என்சொல்?

குறிப்புரை: சங்கம் – சங்குகள். தரளம் – முத்துக்கள். எற்றும் – (அலைகள்) எறியும். வங்கம் – மரக்கலம். உமையோடு கூடியிருந்தும் கங்கையைச் சடைமேல் அடையச் செய்ததன் கருத்தை வினாவியது.

Oh my Lord of Thiru-maraik-kaadu. The sea called the Bay of Bengal is on the eastern side of this city. Here the ships arrive and move away. The waves reaching the seashore bring along with the water conches and pearls and deposit them on the seashore. You have accommodated Your consort Umaa on the left side of Your body; we appreciate, but I fail to understand why You have accommodated the body of the Ganges river also on Your matted hair.

1864. குரவங்குருக்கத்திகள்புன்னைகள்ஞாழல்
மருவும்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
சிரமும்மலருந்திகழ்செஞ்சடைதன்மேல்
அரவம்மதியோடடைவித்தவழகே. 3

குரவம், குருக்கத்திகள், புன்னைகள், ஞாழல்,
மருவும் பொழில் சூழ் மறைக்காட்டு உறை மைந்தா!
சிரமும் மலரும் திகழ் செஞ்சடைதன்மேல்
அரவம் மதியோடு அடைவித்தல் அழகே?

kuravam, kurukkattikaL, pun2n2aikaL, njAzal
maruvum pozil cUz maRaikkATTu uRai maintA!
ciramum malarum tikaz cenjcaTai tan2 mEl
aravam matiyOTu aTaivittal azakE?

பொருள்: குராமரம், குருக்கத்தி, புன்னை, புலிநகக் கொன்றை ஆகியவை ஓங்கி வளர்ந்துள்ள மறைக்காட்டில் கோயில் கொண்டுள்ள ஈசனே! தலைமாலை அணிந்தும் மலர்சூடியும் திகழும் செஞ்சடைமீது அரவமும் சந்திரனும் பொருந்தி இருக்குமாறு செய்த கருத்தின் காரணம் யாதோ?

குறிப்புரை: குரவம் – குராமரம். குருக்கத்தி – மாதவி. ஞாழல் – புலிநகக்கொன்றை, கோங்குமாம். சிரம் – தலை, தலைமாலை. 'தலைமாலை தலைக்கணிந்து தலையாலே பலிதேருந்தலைவன்' இது பாம்பைப் பிறையொடு சூடிய அழகை வினாவியது. வினாச் சொல்லை வருவித்துரைக்க. திங்களை விழுங்கும் பகைமை கருதி 'அழகு' என்று குறித்தருளினார்.

Oh my Lord of Thiru-maraik-kaadu! Your abode in this city is surrounded by fragrant gardens. Here jasmine, bottle flowers, caulophyllum and wagaty trees are in plenty. You have adorned Your matted hair with the head garland and all other flowers. To beautify it more should You allow the baby moon and its enemical snake?

1865. படர்செம்பவளத்தொடுபன்மலர்முத்தம்
மடலம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
உடலம்முமைபங்கமதாகியுமென்கொல்
கடல்நஞ்சமுதாவதுண்டகருத்தே. 4

படர் செம்பவளத்தொடு, பல்மலர், முத்தம்,
மடல் அம் பொழில் சூழ் மறைக்காட்டு உறை மைந்தா!
உடலம்(ம்) உமை பங்கம் அது ஆகியும், என்கொல்,
கடல்நஞ்சு அமுதா அது உண்ட கருத்தே?

paTar cempavaLattoTu, palmalar, muttam,
maTal am pozil cUz maRaikkATTu uRai maintA!
uTalam(m) umai pagkam atu Akiyum, en2kol,
kaTal nanjcu amutA atu uNTa karuttE?

பொருள்: திருமறைக்காடு என்ற திருத்தலத்தில் செம்பவளங்களும், பல மலர்களும், முத்துக்களும் அகன்ற மடல்களைக் கொண்ட தாழை மலர்களும் நிறைந்து விளங்குகின்றன. அத்தலத்துள் கோயில் கொண்டுள்ள ஈசனே! நீ அமுதாகிய உமையவளை உடலின் ஓர் பாகமாகக் கொண்டுள்ளாய். (அது ஏற்புடைத்து) ஆனால் கடலில் தோன்றிய நஞ்சையும் அமுதாக உண்டாயே! அது ஏன்?

குறிப்புரை: மடல் – மரத்தில் உள்ள மடல்கள். பூவிதழுமாம். பங்கமது – பாகத்தை உடையது. பாற்கடலினின்று எழுந்த நஞ்சினை உண்ட கருத்தை வினாவியது.

Oh my Lord of Thiru-maraik-kaadu. The city is surrounded by beautiful gardens of all variety of flowers. The people in the city collect red corals and white coloured pearls and beautify themselves. You have accommodated Your consort Umaa on the left half of Your body. We are all happy with this arrangement. But You dared to drink the sea venom as though it was elixir. What was Your aim?

1866. வானோர்மறைமாதவத்தோர்வழிபட்ட
தேனார்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
ஏனோர்தொழுதேத்தஇருந்தநீயென்கொல்
கானார்கடுவேடுவனானகருத்தே. 5

வானோர், மறை மா தவத்தோர், வழிபட்ட -
தேன் ஆர் பொழில் சூழ் மறைக்காட்டு உறை மைந்தா!
ஏனோர் தொழுது ஏத்த இருந்த நீ, என்கொல்,
கான் ஆர் கடு வேடுவன் ஆன கருத்தே?

vAn2Or, maRai mA tavattOr, vazipaTTa--
tEn2 Ar pozil cUz--maRaikkATTu uRai maintA!
En2Or tozutu Etta irunta nI, en2kol,
kAn2 Ar kaTu vETuvan2 An2a karuttE?

பொருள்: தேவர்களும், நான்மறைகளும், மாதவத்தோர்களும் வழிபாடு செய்யும் தலமே திருமறைக்காடாம். தேன் நிறைந்த மலர்களால் நிறைந்த திருமறைக்காட்டில் கோயில்

கொண்ட ஈசனே! எல்லோரும் வணங்க சிறப்புடன் காட்சியளிக்கும் நீ, காட்டில் வேடன் உருவத்தை ஏற்றுத் திரிந்தது ஏன்?

குறிப்புரை: வானோர் – தேவர்கள். மறை மா தவத்தோர் – வேதியரும் பெருந்தவத்தருமாகிய பெரியோர். ஏனோர் – தானல்லாத பிறர். தன்னையேதான் பூசித்த உண்மையும் அறிக. கான் – காடு. ஆர் – பொருந்துகின்ற. கடு வேடுவன் – கொடிய வேடன் (தி. 2 ப. 3 பா. 1) "குழலியோடு வேடுவனாய் . . . விசயன் போரில் மிகு பொறை யளந்து பாசுபதம் அளித்த" கருத்தை வினாவியது (தி. 1 ப. 131 பா. 2).

Behold! Oh my Lord of Thiru-maraik-kaadu. The gardens around the city are full of flowers. They bring forth large quantities of honey. The devaas and sages who were great scholars of Vedas used to visit this city, go to the temple, and worship our Lord. Oh! Lord of all wealth, You are manifest in such a glorious city. All the devotees worship You alone. You are such a great graceful Supreme Being. Then why did You become a cruel hunter in the forest when all the people wait to worship You?

1867. பலகாலங்கள்வேதங்கள்பாதங்கள்போற்றி
மலரால்வழிபாடுசெய்மாமறைக்காடா
உலகேழுடையாய்கடைதோறும்முன்னென்கொல்
தலைசேர்பலிகொண்டதிலுண்டதுதானே. 6

பலகாலங்கள், வேதங்கள் பாதங்கள் போற்றி,
மலரால் வழிபாடு செய் மா மறைக்காடா!
உலகுஏழ் உடையாய்! கடைதோறும் முன், என்கொல்,
தலை சேர் பலி கொண்டு அதில் உண்டதுதானே?

palakAlagkaL, vEtagkaL pAtagkaL pORRi,
malarAl vazipATu cey mA maRaikkATA!
ulaku Ez uTaiyAy! kaTaitORum mun2, en2kol,
talai cEr pali koNTu atil uNTatu tAn2E?

பொருள்: ஈசனே! உன்னை வேதங்கள் போற்றி உன் திருவடிகளை வணங்கி பல காலம் வழிபாடு செய்த தலமே திருமறைக்காடு. அத்தலத்தில் கோயில் கொண்டுள்ள சிவனே! எல்லா உலகங்களையும் உடையவனே! எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்ட நீ ஏன் பிரமகபாலத்தை ஏந்தியபடியே பலிதேர்ந்து அதை உண்டு களிப்பதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

குறிப்புரை: இத்தலத்தில் நான்கு வேதங்களும் பலகாலம் பூசித்த உண்மையை முதல் இரண்டடியிலும் உணர்த்தியருளினார். உலகு ஏழ் உடையாய் – ஏழுலகுக்கும் சுவாமியே, ஜகதீசா! முன் கடைதோறும் தலைசேர் பலிகொண்டு அதில் உண்டதுதான் ஏன்? என்று இறைவன் பலியேற்ற வரலாற்றின் கருத்தை வினாவியது.

Behold! Oh Civa of Thiru-maraik-kaadu! You are the Supreme Ruler of all the seven worlds. You are manifest in the city of Thiru-maraik-kaadu. This place of Yours Vedas visited for many ages and worshipped Your holy feet strewing flowers. I fail to understand how and why You can go for alms carrying the human skull as Your begging bowl in Your hand. You own the whole universe, but You visit the residences of many people in the cosmos, collect food from them and eat it from the bowl. What is the reason for such a behaviour of Yours? Kindly tell me.

1868. வேலாவலயத்தயலேமிளிர்வெய்தும்
சேலார்திருமாமறைக்காட்டுறைசெல்வா
மாலோடயனிந்திரனஞ்சமுனென்கொல்
காலார்சிலைக்காமனைக்காய்ந்தகருத்தே. 7

வேலாவலயத்து அயலே மிளிர்வு எய்தும் -
சேல் ஆர் திரு மா-மறைக்காட்டு உறை செல்வா!
மாலோடு அயன் இந்திரன் அஞ்ச முன், என்கொல்,
கால் ஆர் சிலைக் காமனைக் காய்ந்த கருத்தே?

vElAvalayattu ayalE miLirvu eytum--
cEl Ar tiru mA--maRaikkATTu uRai celvA!
mAlOTu ayan2 intiran2 anjca mun2, en2kol,
kAl Ar cilaik kAman2aik kAynta karuttE?

பொருள்: வேல் போன்ற வடிவத்தையும், ஒளிரும் தன்மையையும் கொண்ட சேல்கள் (மீன்கள்) நிறைந்து விளங்கும் திருமறைக்காடு என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்ட சிவனே! நீ திருமாலும், பிரமனும், இந்திரனும் அஞ்ச, மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியது ஏன்?

குறிப்புரை: வேலாவலயத்து அயல் – கடலின் பக்கத்தில். மிளிர்வு – விளங்குதல். சேல் – மீன். முன் மாலும் அயனும் இந்திரனும் அஞ்சும்படி மன்மதனை எரித்ததன் கருத்து என்னை என்று வினாவியது.

கால் ஆர் சிலை – வலக்காலால் மிதித்தல் பொருந்திய வில். 'அறனிலாதான் வெஞ்சின்கோலின் நோன்றாள் மிதித்து மெய்குழைய வாங்கிச் செஞ்சிலை நெடுநாண்பூட்டித் திருவிரல் தெறித்துத்தாக்கி' (திருவிளையாடல் – கூடற் – யானை எய்த. 29) சிலை எனப்படும் மரத்தாற் செய்யப்படுதலின். 'சிலை' (கலி. 15–1. உரை) எனப்பட்டது. 'சிலைவிற்கானவன்' (குறுந். 385).

Oh my Lord of Thiru-maraik-kaadu! You are the embodiment of all wealth; You are at Thiru-maraik-kaadu. In this city, the seawater brings to its coast the glistening carp fish in plenty and makes people rich. I fail to understand the truth behind Your angry action, of burning the god of love (Manmathan). He was bearing the bow bent at his leg when he was burnt. Vishnu, Brahma and Indran - all shuddered to see the sudden death of Manmathan who had obliged these three demigods and acted to please them.

1869. கலங்கொள்கடலோதமுலாவுங்கரைமேல்
வலங்கொள்பவர்வாழ்த்திசைக்குமறைக்காடா
இலங்கையுடையானடர்ப்பட்டிடரெய்த
அலங்கல்விரலூன்றியருள்செய்தவாறே. 8

கலம் கொள் கடல் ஓதம் உலாவும் கரைமேல் -
வலம்கொள்பவர் வாழ்த்து இசைக்கும் - மறைக்காடா!
இலங்கை உடையான் அடர்ப்பட்டு இடர் எய்த
அலங்கல் விரல் ஊன்றி அருள்செய்தஆறே?

kalam koL kaTal Otam ulAvum karaimEl--
valam koLpavar vAzttu icaikkum maRaikkATA!
ilagkai uTaiyAn2 aTarppaTTu iTar eyta,
alagkal viral Un2Ri, aruL ceyta ARE?

பொருள்: மரக்கலங்கள் நிறைந்து விளங்கும் கடலின் கரையில் பொருந்திய தலமே திருமறைக்காடு ஆகும். அத்தலத்தில் கோயில் கொண்ட சிவனே! உன் திருக்கோயிலை அடியவர்கள் வலம் வந்து வழிபாடு செய்வார்கள். ஆனால் இலங்கை வேந்தன் இராவணன் உம்மை வணங்காமல் கயிலை மலையைத் தூக்க முயன்று முதலில் இடர்பட்டான். பின்பு அவனுக்கும் நீரே அருள் செய்தீர். அது ஏன்?

குறிப்புரை: கலம் – மரக்கலம். ஓதம் – நீர். கரைமேல் வலங்கொள்பவர் – திருமறைக்காட்டில் வலம்வரும் முறைமை ஏனைய சிவதலங்களில் வலம் வருதலினும் விசேடம் உடையது. திருக்கோயில் வலம் மட்டும் பிறதலங்களில் நிகழும். இங்குத் திருமறைக்காட்டையே வலம் வருதல் வேண்டும். இதனை ஆளுடைய அரசரும் 'மண்ணினார் வலம்செய் மறைக்காடார்' என்று குறித்தருளியது உணர்க. உடையான் – இராவணன். அடர் – முதல் நிலைத் தொழிற்பெயர். அலங்கல் – அசைதல். அன்பர்கள் திருவடிக்கண் சார்த்திய மாலையுமாம். 'ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலில், தாள் தளையிடுமின்' (திருவாசகம் திருவண்டபகுதி 142–143). இராவணன் கயிலையை எடுத்தபோது அடர்த்து அருள்செய்ததன் கருத்தை வினாவியது. வினாச்சொல் வருவித்துரைக்க.

Oh my Lord Civan of Thiru-maraik-kaadu! In this city many ships get anchored and stay there long for loading and unloading. The devotees in this city circumvent the whole city and the temple together and enter into the temple and worship strewing flowers at His holy feet. In such a sacred temple of this holy city, oh Lord! You are manifested. Here the cool sea breeze brings peace to one and all. Here, I do pray and worship You; but I fail to comprehend how You subdued the mighty Raavanan, king of Sri Lanka and made him suffer the maximum by pressing Your toe on the top of the mountain. Yet, when he begged pardon, You showed Your mercy to Him. Please tell me the reason for such a peculiar behaviour.

1870. கோனென்றுபல்கோடியுருத்திரர்போற்றும்
தேனம்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா
ஏனங்கழுகானவருன்னைமுனென்கொல்
வானந்தலமண்டியுங்கண்டிலாவாறே. 9

"கோன்" என்று பல்கோடி உருத்திரர் போற்றும் -
தேன் அம் பொழில் சூழ் மறைக்காட்டு உறை செல்வா!
ஏனம் கழுகு ஆனவர் உன்னை முன், என்கொல்,
வானம் தலம் மண்டியும் கண்டிலா ஆறே?

"kOn2" en2Ru palkOTi uruttirar pORRum--
tEn2 am pozil cUz--maRaikkATu uRai celvA!
En2am kazuku An2avar, un2n2ai mun2, en2kol,
vAn2am talam maNTiyum kaNTilA ARE?

பொருள்: பலகோடி உருத்திரர்களால் தலைவன் என்று போற்றப்படும் ஈசனே! தேன் நிறைந்த மலர்கள் நிறைந்து விளங்கும் திருமறைக்காடு என்ற திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள ஈசனே! பலருக்கும் காட்சி அளிக்கும் உன்னை பன்றி உருவாகி திருமாலும் பறவைமீது பிரமனும் தேடினர். அவர்கள் அடிமுடி அறியமுடியாதவாறு உன்னை நீ மறைத்துக் கொண்டது ஏன்?

குறிப்புரை: பல்கோடி உருத்திரர்கோன் என்று போற்றும் செல்வா என்று இயைக்க. 'நீலத்தார் கரியமிடற்றார் நல்ல நெற்றிமேல் உற்ற கண்ணினார் பற்று, சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார், சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம்' (தி. 3 ப. 1 பா. 3) எனத் தில்லையிற்கண்ட உருத்திரகண தரிசனத்தை உணர்த்தியவாறறிக. ஏனம் – பன்றி. கழுகானவர் – பிரமனார். (தி. 2 ப. 168 பா. 9) வானத்தில் கழுகும் தலத்தில் ஏனமும் என இயைக்க. எதிர்நிரல்நிறை. அரியும் அயனும் அடிமுடி தேடியதன் கருத்தை வினாவியது.

Oh my Lord Civa of Thiru-maraik-kaadu! The city of Thiru-maraik-kaadu is surrounded by big gardens full of nectar yielding flowers. You are hailed by several crores of Rudras (demigods inferior manifestations of Civan being eleven in number) daily come to this city to worship You, as their Supreme Ruler. Then how is it Lord Vishnu took the form of a wild hog and Brahma the form of a swan, yet could not comprehend You, despite their thorough search on the earth and in the heaven?

1871. வேதம்பலவோமம்வியந்தடிபோற்ற
ஓதம்முலவும்மறைக்காட்டிலுறைவாய்
ஏதில்சமண்சாக்கியர்வாக்கிவையென்கொல்
ஆதரொடுதாமலர்தூற்றியவாறே. 10

வேதம்பல ஓமம் வியந்து அடி போற்ற,
ஓதம்(ம்) உலவும் மறைக்காட்டில் உறைவாய்!
ஏதில் சமண்சாக்கியர் வாக்கு இவை, என்கொல்,
ஆதரொடு தாம் அலர் தூற்றியஆறே?

vEtam pala Omam viyantu aTi pORRa,
Otam(m) ulavum, maRaikkATTil uRaivAy!
Etil camaN cAkkiyar vAkku ivai, en2kol,
AtaroTu tAm alar tURRiya ARE?

பொருள்: ஈசனே! வேதமுறைப்படி வேள்விகள் புரிந்து அந்தணர் உன்னை வணங்குவர். கடல் அலைகள் மோதும் கரையில் அமைந்த திருமறைக்காடு தலத்தில் பொருந்தியவனே! பக்தர்கள் எல்லோரும் உன் திருவடிகளில் மலர்தூவி வணங்குவர். ஆனால் சமணரும், சாக்கியரும் பழிச்சொற்களைக் கூறி உன்னை வணங்காமல் தூற்றுவது ஏன்?

குறிப்புரை: ஓமம் – யாகம். மறைக்காடு என்றதன் பெயர்க்காரணம் ஈண்டும் விளக்கி அருளினார். ஓதம் – கடல். ஏதில் – அயல். 'ஏதிலார் குற்றம்' 'ஏதிலார் ஆர' (திருக்குறள்) ஈண்டுச் சமயத்தால் அயலவராயினார். ஆதர் – அறிவின்மை உடையவர். அலர் – பழிச் சொல். அவைதிக மதத்தினர் அழியாத வைதிக சைவ சமயத்தைப் பழித்துரைத்ததன் கருத்தை வினாவியது.

Oh my Lord of Thiru-maraik-kaadu! In this city, the holy sacrificial fire is always lighted by Vedic scholars chanting Vedas. The Vedic gods come to this city, hail You with awe and praise You. But the ignorant Jains and the Buddhists who are without any real spiritual knowledge revile You! What is the reason for this?

1872. காழிந்நகரான்கலைஞானசம்பந்தன்
வாழிம்மறைக்காடனைவாய்ந்தறிவித்த
ஏழின்னிசைமாலையீரைந்திவைவல்லார்
வாழியுலகோர்தொழவானடைவாரே. 11

காழி(ந்) நகரான் கலை ஞானசம்பந்தன்
வாழி(ம்) மறைக்காடனை வாய்ந்து அறிவித்த
ஏழ்இன்இசைமாலை ஈர்-ஐந்துஇவை வல்லார்,
வாழி உலகோர் தொழ, வான் அடைவாரே.

kAzi(n) nakarAn2 kalai njAn2acampantan2
vAzi(m) maRaikkATan2ai vAyntu aRivitta
Ez in2 icaimAlai Ir-aintu ivai vallAr,
vAzi ulakOr toza, vAn2 aTaivArE.

பொருள்: சீர்காழிப் பதியில் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான், திருமறைக்காடு என்ற திருத்தலத்துள் கோயில் கொண்டுள்ள ஈசனைப் போற்றி, பத்துப்பாடல்களைப் பண்ணோடு பாடி அருளியுள்ளார். அப்பத்துப் பாடல்களையும் அன்புடன் பாட வல்லவர்கள் உலகோரால் தொழப்படுவார்கள். வானுலகப் பேற்றையும் பெறுவார்கள்.

குறிப்புரை: காழிந்நகரான் – விரித்தல் விகாரம். கலை – சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானம். ஞானம் – பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானம். சம்பந்தன் – அவ்விரண்டு ஞானங்களின் சம்பந்தத்தை உடையவன். வாழி – வாழ்ச்சியை உடைய. வாய்ந்து – திறக்கப்படாத கதவு திறக்கப் பெற்றுத் தரிசிக்க வாய்ந்து என்றவாறு. அறிவித்த இது நன்கு இறை வைத்தருள் செய்க (பா. 1) என்று பல வினாக்களை அறிவித்த. இம்மாலை வல்லார் உலகோர் தொழ வான் அடைவார் என்க.

Those devotees, who are capable of reciting these ten melodious verses of music with seven notes, sung on Lord of Thiru-maraik-kaadu by Thiru-gnana-Sambandar, a wise sage, hailing from Seerkaazhi will live long and reach heaven and also people here hail them.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

37ஆம் பதிகம் முற்றிற்று
End of 37th Hymn



திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 174 *பதிக எண்: 38*

38. திருச்சாய்க்காடு

38. THIRUCH-CHAAYK-KAADU

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

ஆதிசேடனது நாகமணி ஒளி வீசியதால் இப்பெயர் பெற்றது என்பது. இவ்வொளிக்குச் சாய்ஒளி என்பர். இது சாயாவனம் எனவும் வழங்கப்பெறும். இது சீகாழிக்குத் தென்கிழக்கே 11.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது காவிரி வடகரைத் தலங்களுள் ஒன்பதாவது ஆகும். சீகாழி, மயிலாடுதுறை ஆகிய நகரங்களிலிருந்து பூம்புகார் செல்லும் பேருந்துகளில் செல்லலாம்.

இறைவரது திருப்பெயர் – அமுதேசுவரர், சாயாவனேசுவரர். இறைவியாரது திருப்பெயர் குயிலினும் நன்மொழியம்மை. தீர்த்தம் – காவிரி, ஐராவத தீர்த்தம். இது கோயிலுக்கு எதிரில் இருக்கின்றது. உபமன்யு முனிவர் பூசித்துப் பேறு பெற்றார். இந்திரனது தாயார் நாளும் வந்து இத்தலத்தைப் பூசித்து வந்தார். அவரது கஷ்டத்தைப் போக்க, இந்திரன் சிவலிங்கத் திருமேனியைத் தேவ உலகிற்கு கொண்டுபோக எண்ணித் தோண்டிப் பார்த்தான். பாதாள லோகம் வரை அவருடைய திருமேனி சென்றிருந்தமையால் அவரை மீளவும் அங்கேயே எழுந்தருளச் செய்வித்தான் என்பர். இதற்குச் சம்பந்தர் பதிகங்கள் இரண்டு, அப்பர் பதிகங்கள் இரண்டு ஆக நான்கு இருக்கின்றன. இத்தலத்தை ஐயடிகள் காடவர்கோன் நாயனார் பாடியுள்ளனர். அப்பாடல் பின்வருமாறு:

அஞ்சனஞ்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பமதாய்க்
குஞ்சி வெளுத்துடலங் கோடாமுன் – நெஞ்சமே
போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து.

தலத்தைப் பற்றிய சிறுகுறிப்பு

'சாய்' என்பதற்குத் தமிழில் கோரை என்று பொருள். கோரைக் காடு செறிந்த இப்பகுதி சாய்க்காடு என்று பெயர் பெற்றது. சாய் என்னும் வழக்கு, கோரை என்ற பொருளில் பழந்தமிழ் நூல்களில் உள்ளது. 'அயத்து வளர்பசாய்' என்பது காண்க.

பதிக வரலாறு

'அம்பிகை அளித்த ஞானம் அகிலமும் உய்ய உண்ட நம்பெருந்தகையார்' தலைச்சங்காடு பணிந்து, திருச்சாய்க்காட்டைச் சேர்ந்து போற்றி 'மண்புகார் வான் புகுவார்' என்ற திருப்பதிகம் பாடித் திருவெண்காட்டை அடைந்து வழிபட்டு மீண்டும் போந்து இத்திருப்பதிகம் பாடியருளியது போலும்.

திருச்சிற்றம்பலம்

1873. நித்தலுந்நியமஞ்செய்துநீர்மலர்தூவிச்
சித்தமொன்றவல்லார்க்கருளுஞ்சிவன்கோயில்
மத்தயானையின்கோடும்வண்பீலியும்வாரித்
தத்துநீர்ப்பொன்னிசாகரமேவுசாய்க்காடே. 1

நித்தலும் நியமம் செய்து, நீர்மலர் தூவி,
சித்தம் ஒன்ற வல்லார்க்கு அருளும் சிவன் கோயில் -
மத்தயானையின் கோடும் வண்பீலியும் வாரி,
தத்து நீர்ப் பொன்னி, சாகரம் மேவு சாய்க்காடே.

nittalum niyamam ceytu, nIrmalar tUvi,
cittam on2Ra vallArkku aruLum civan2 kOyil--
mattayAn2aiyin2 kOTum vaN pIliyum vAri,
tattu nIrp pon2n2i, cAkaram mEvu cAykkATE.

பொருள்: தினந்தோறும் முறைப்படி மனம் ஒன்றுபட்டு வழிபாடு செய்யும் அடியவர்களுக்கு அருள் செய்பவனே சிவபெருமான்! அவர் யானையின் வெண்ணிறத் தந்தங்களையும் மயிற்தோகைகளையும் உருட்டி வரும் பொன்னி நதிக் கரையில் பொருந்திய சாய்க்காடு தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: நித்தலும் – நாள்தோறும். நியமம் – தின நியமம் ஆகக் கொண்டொழுகும் வழிபாடுகள் (ஆன்மார்த்தம்) கடன்களுமாம். நீர் மலர் தூவல் – புறப்பூசை. சித்த மொன்றல் – அகப்பூசை, தியானம் முதலியன. பீலி – மயிற்பீலி. சாகரம் – கடல். சிவன்கோயில் – சாய்க்காடே என்க. மேலும் இவ்வாறே கொள்க. காவிரி நீர் நாட்டு வளத்திற்கே பெரிதும் பயன்பட்டுக் கடலில் சேர்வது மிகச் சிறிதேயாதலின், பாயும் என்னாது 'மேவும்' என்றார். (விடையின் மேல் வருவார் அமுது செய அஞ்சாதே விடம் அளித்ததெனக் கருதி மேதினிக்கு வளம் நிறைத்தே கடல் வயிறு நிறையாத காவிரி) என்றருளினார் சேக்கிழார்.

Behold! It is Civan, the Lord of Thiruch-chaayk-kaadu. The river Cauvery joins the sea here. It brings along with its water the tusks of rutted elephants and the rich peacock feathers. Our God is manifest in this temple. He bestows His grace on those devotees of staunch concentration worshipping Him everyday in a regular sacred manner with water and flowers. In this city of Thiruch-chaayk-kaadu, our God manifests Himself.

1874. பண்டலைக்கொண்டுபூதங்கள்பாடநின்றாடும்
வெண்டலைக்கருங்காடுறைவேதியன்கோயில்
கொண்டலைத்திகழ்பேரிமுழங்கக்குலாவித்
தண்டலைத்தடமாமயிலாடுசாய்க்காடே. 2

பண் தலைக்கொண்டு பூதங்கள் பாட நின்று ஆடும்,
வெண்டலைக் கருங்காடு உறை, வேதியன் கோயில் -
கொண்டலைத் திகழ் பேரி முழங்க, குலாவித்
தண்டலைத்தடம் மா மயில் ஆடு சாய்க்காடே.

paN talaikkoNTu pUtagkaL pATa nin2Ru ATum,
veNtalaik karugkATu uRai, vEtiyan2 kOyil--
koNTalait tikaz pEri muzagka, kulAvit
taNTalait taTam mA mayil ATu cAykkATE.

பொருள்: பண்ணோடு பொருந்த பூதகணங்கள் பாடல்களைப் பாடி ஆடி மகிழும். மண்டை ஓடுகள் நிறைந்த சுடுகாட்டில் எம்பெருமானும் பூதகணங்களுடன் ஆடுவார். அவர் கோயில் கொண்டுள்ள இடமே திருச்சாய்க்காடாம். அங்கு மழை மேகங்கள் நிறைந்து விளங்கும். பேரிகைகள் முழங்கும். மயில்கள் நின்று ஆடும்.

குறிப்புரை: பண் – பண்ணிசை. தலைக்கொண்டு – மேற்கொண்டு பண்பாட ஆடும் வேதியன் என்க. காட்டின் கருமையும் அங்குள்ள தலைகளின் வெண்மையும் முரண்டொடை அமைய நின்றன. கொண்டல் – (குணக்கிலிருந்து வீசுங்காற்றால் உந்தப்பட்ட) மேகம். ஏனை முத்திசைக் காற்றும் முறையே தென்றல் கோடை வாடை எனப்படும். பேரி – பேரிகை. தண் தலைதடம் – குளிர்ந்த இடப்பரப்பையுடைய சோலை (க்குக் காரண)ப் பெயர். தட – வளைவு எனலுமாம். 'தட வெண்கிளவி கோட்டமும் செய்யும்' (தொல் உரி).

Behold! It is Civan, our Lord of Thiruch-chaayk-kaadu. He is the embodiment of all the Vedas. He does that cosmic dance in cremation forests. Here the ghosts sing

about His praise, the various white skulls are to be found here and there. In the cool gardens near the temple the peacocks dance, seeing the clouds above in the sky and hearing the sound of trumpets as thunder. This city is known as Thiruch-chaayk-kaadu where our Lord manifests Himself.

1875. நாறுகூவிளநாகிளவெண்மதியத்தோ
டாறுசூடும்மமரர்பிரானுறைகோயில்
ஊறுதேங்கனிமாங்கனியோங்கியசோலைத்
தாறுதண்கதலிப்புதல்மேவுசாய்க்காடே. 3

நாறு கூவிளம், நாகுஇளவெண்மதியத்தோடு,
ஆறு, சூடும் அமரர்பிரான் உறை கோயில் -
ஊறு தேங்கனி மாங்கனி ஓங்கிய சோலை,
தாறு தண் கதலிப் புதல், மேவு சாய்க்காடே.

nARu kUviLam, nAku iLa veNmatiyattOTu,
ARu, cUTum amararpirAn2 uRai kOyil--
URu tEgkan2i mAgkan2i Ogkiya cOlai,
tARu taN katalip putal, mEvu cAykkATE.

பொருள்: ஈசனார் மணங்கமழும் வில்வ இலைகளைத் தலையில் சூடியிருப்பார். இளம்பிறையையும் கங்கையையும் தலையில் அணிந்திருப்பார். அவர் கோயில் கொண்டுள்ள தலமே திருச்சாய்க்காடாம். அத்தலத்தில் தென்னை மரங்களும், மாமரங்களும், வாழை மரங்களும் நிறைந்திருக்கும்.

குறிப்புரை: நாறு – மணம் வீசும். கூவிளம் – வில்வம். நாகு இளமதியம் – மிக்க இளையதாகிய பிறை. அமரர் பிரான் – தேவர்கட்குப் பிரியத்தைச் செய்பவன். ஊறு – (சுவை) ஊறுகின்ற. தேங்கனி – 'தெங்கங்காய்', 'தெங்கம்பழம்' என்பவைபோல் இதுவும் அரியதொரு பிரயோகம். தாறு – குலை. கதலி – வாழை விசேடம். புதல் – புதர். திருச்சாய்க்காட்டின் இயற்கைவளம் உணர்த்தப்பட்டது.

Behold! It is Civan, our Lord of Thiruch-chaayk-kaadu. He is the Supreme Lord of the celestials. He has adorned His head with fragrant bael leaves, the baby moon and the lady of river Ganges. In the gardens near the temple a lot of coconut fruits hang from the trees. The mango fruits also are in plenty in the trees; long bunches of plantain also hang from banana trees. All these spread their tasty flavour all around the area. In

such an attractive city our Lord manifests Himself in the temple in Thiruch-chaayk-kaadu.

1876. வரங்கள்வண்புகழ்மன்னியஎந்தைமருவார்
புரங்கள்மூன்றும்பொடிபடஎய்தவன்கோயில்
இரங்கலோசையுமீட்டியசரத்தொடுமீண்டித்
தரங்கநீள்கழித்தண்கரைவைகுசாய்க்காடே. 4

வரங்கள் வண்புகழ் மன்னிய எந்தை, மருவார்
புரங்கள் மூன்றும் பொடிபட எய்தவன், கோயில் -
இரங்கல் ஓசையும் ஈட்டிய சரத்தொடும் ஈண்டி,
தரங்கம் நீள்கழித் தண் கரை வைகு சாய்க்காடே.

varagkaL vaNpukaz man2n2iya entai, maruvAr
puragkaL mUn2Rum poTipaTa eytavan2, kOyil--
iragkal Ocaiyum ITTiya cAratoTum INTi,
taragkam nILkazit taN karai vaiku cAykkATE.

பொருள்: எம்பெருமான், பெரும்புகழுக்கு உரியவர். நம் தந்தையாகிய அவர் நமக்கு நல்வரங்களை அருளுவார். அவரே பொருந்தாதவர்களின் முப்புரங்களையும் எரித்தவர். அவர் கோயில் கொண்டுள்ள இடமே திருச்சாய்க்காடாம். அத்தலம் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. எனவே, அங்கு கலன்களில் பொருள்களைக் கொண்டு வந்து இறக்கி வைக்கும் ஓசையும் விளைந்த பொருள்களைக் கலன்களில் ஏற்றி வைக்கும் ஓசையும் எப்பொழுதும் (அடியவர்களின் வழிபாட்டு ஓசை எப்பொழுதும் ஒலிப்பது போல) ஒலித்துக் கொண்டே இருக்கும்.

குறிப்புரை: வரங்களை அருளும் வண்மையால் எய்தும் புகழ் அழியாமல் நிலைபெற்ற என் அப்பன். மருவார் – பகைவர். இரங்கல் ஓசை – நெற்தற்றிணையுரிப் பொருளை நினைவூட்டுவது. சரக்கொடும் என்னும் பாடமே சிறந்தது. ஈட்டிய – (பொருள் தேடிச்) சேர்த்த (சரக்கு). ஈண்டி – கூடி, நெருங்கி. தரங்கம் – அலைகள். நீள்தண் கழிக்கரை என்க.

Behold! It is Civan, our Lord of great fame in Thiruch-chaayk-kaadu, He is our father, the Supreme Being. He bestows grace with boons on all His devotees. He is the embodiment of all wealth. He destroyed the three flying forts of the asuraas who were traitors to the devaas and others. This city is situated in the maritime tract near the seashore. Here the peculiar sound related to the maritime area is heard always. In

addition the mixed noise of merchants bringing their products for loading into the ship also is heard. In such an area cool breeze always blows from the saltpans and here our Lord has manifested Himself in the temple in Thiruch-chaayk-kaadu.

1877. ஏழைமார்கடைதோறுமிடுபலிக்கென்று
கூழைவாளரவாட்டும்பிரானுறைகோயில்
மாழையொண்கண்வளைக்கைநுளைச்சியர்வண்பூந்
தாழைவெண்மடற்கொய்துகொண்டாடுசாய்க்காடே. 5

ஏழைமார் கடைதோறும், இடு பலிக்கு என்று,
கூழைவாள் அரவு ஆட்டும் பிரான் உறை கோயில் -
மாழைஒண்கண் வளைக்கை நுளைச்சியர், வண் பூந்
தாழை வெண்மடல் கொய்து, கொண்டாடு சாய்க்காடே.

EzaimAr kaTaitORum, iTu palikku en2Ru,
kUzaivAL aravu ATTum pirAn2 uRai kOyil--
mAzai oNkaN vaLaikkai nuLaicciyar, vaN pUn
tAzai veNmaTal koytu, koNTATu cAykkATE.

பொருள்: மகளிர் வாழும் இல்லங்கள் தோறும் பலிதேர்ந்து திரிபவரே சிவபெருமான். அவர்கள் இடும் பலிக்காக கூழைபண் ஒளி பொருந்திய பாம்பை ஆடச் செய்து மகிழ்விக்கும் பரமன் உறையும் கோயில் சாய்க்காடாம். அத்தலத்தில் மான்விழி கொண்ட வளைக்கை பொருந்திய செம்படவப் பெண்கள் தாழை மடலைக் கொய்து அணிந்து கொண்டு இறைவனை வணங்கி மகிழ்வர்.

குறிப்புரை: ஏழைமார் – மகளிர். 'ஏழைப் பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்' என்னுந் திருவாசகத்திற்கு வறியர் பங்கை ஆள்பவன் என்று பொருள் கூறுதல் மாபாதகம். கடை – கடைவாயில். கூழை – கடை குறைந்தது (தோற்றம்) மாழை – பொன். மேலும் இவ்வாறு நெய்தற்றினைக் கருப்பொருள் சில கூறல் அறிக. கண்ணையும் கையையும் உடைய நுளைச்சியர் கொய்து கொண்டாடும் சாய்க்காடு எம்மான் உறையும் கோயில் என்க. பாம்பின் உருவத்தைத் தலை முதலாக நோக்கின், கடை குறைந்திருத்தல் ஆகிய கூழைமை புலப்படும்.

Behold! It is Civan, our Lord of Thiruch-chaayk-kaadu. Whenever, He goes to the doorsteps of the womenfolk for begging alm, He swirls the cruel white snakes around His head, thereby makes the womenfolk enjoy the way in which He plays with

the snakes. The fisher women have very beautiful golden coloured eyes. They wear plenty of bangles in their hands. They pluck and gather the white fertile spadices of pandanus plants and wear them happily. In such a glorious city, our Lord is manifest in the temple of Thiruch-chaayk-kaadu.

1878. துங்கவானவர்சூழ்கடல்தாம்கடைபோதில்
அங்கொர்நீழலளித்தஎம்மானுறைகோயில்
வங்கமங்கொளிரிப்பியுமுத்துமணியுஞ்
சங்கும்வாரித்தடங்கடலுந்துசாய்க்காடே. 6

துங்க வானவர் சூழ் கடல் தாம் கடைபோதில்,
அங்கு ஓர் நீழல் அளித்த எம்மான் உறை கோயில் -
வங்கம் அங்கு ஒளிர் இப்பியும் முத்தும் மணியும்
சங்கும் வாரி, தடங்கடல் உந்து சாய்க்காடே.

tugka vAn2avar cUz kaTal tAm kaTaipOtil,
agku or nIzal aLitta emmAn2 uRai kOyil--
vagkam agku oLir ippiyum muttum maNiyum
cagkum vAri, taTagkaTal untu cAykkATE.

பொருள்: வானவர்கள் கடலைக் கடைந்தபோது எழுந்த நஞ்சை உண்டு அவர்களுக்கு அபயம் கொடுத்த அண்ணலே சிவபெருமான்! அவர் திருச்சாய்க்காடு தலத்துள் கோயில் கொண்டுள்ளார். கடற்கரைப் பகுதியில் அமைந்த அத்தலத்தில் கடல் அலைகள் ஒளிமிக்க சிப்பி, முத்து, மணி, சங்கு இவைகளை வாரிவந்து கரையில் ஒதுக்கிக் கொண்டே இருக்கும் என்க.

குறிப்புரை: துங்கம் – உயர்ச்சி. கடல் தாம் கடை(யும்) போதில் என்க. பொழுது – போழ்து – போது என மருவிற்று. நீழல் – நஞ்சின் வெப்பம் தணித்தற்கு அளித்த அருணிழல். வங்கம் – மரக்கலம். இப்பி – சிப்பி. கடல் வங்கத்தையும் அங்கு ஒளிர்கின்ற இப்பியையும் முத்தினையும் மணியினையும் சங்கினையும் வாரி உந்தும் என்க. அங்கு வங்கம் வாரி உந்து மெனல் பொருந்தாது. ஒளிர்தல் முத்து முதலியவற்றிற்கும் உரியது. சங்கங்களும் இலங்கிப்பியும் வலம்புரிகளும் இடறி, வங்கங்களும் உயர்கூம்பொடு வணங்கும் மறைக்காடே (சுந்தரர் – 721).

Behold! It is Civan, our Lord of Thiruch-chaayk-kaadu. The eminent devaas churned the ocean of milk which surrounded the earth (to get nectar but instead came

venom). The celestials noticed the venom coming out of the ocean of milk. All of them got shuddered and ran out of fear and finally reached our Lord and prostrated at His feet and begged to save their life from the killing venom. Our Lord poured the venom into His mouth and stopped it from going down His throat. Thus He graced the devaas and all others and gave them complete protection. This our Lord is manifest in the temple in Thiruch-chaayk-kaadu. The wide seashore near His temple is dashed by big waves always. There ships, big boats are all anchored. Oysters, pearls, gems and conches etc., dash against the boats and they glitter. Such a glorious city is Thiruch-chaayk-kaadu.

1879. வேதநாவினர்வெண்பளிங்கின்குழைக்காதர்
ஓதநஞ்சணிகண்டருகந்துறைகோயில்
மாதர்வண்டுதன்காதல்வண்டோடியபுன்னைத்
தாதுகண்டுபொழில்மறைந்தூடுசாய்க்காடே. 7

வேத நாவினர், வெண்பளிங்கின் குழைக் காதர்,
ஓதநஞ்சு அணி கண்டர், உகந்து உறை கோயில் -
மாதர் வண்டு, தன் காதல்வண்டு ஆடிய புன்னைத்-
தாது கண்டு, பொழில் மறைந்து, ஊடு சாய்க்காடே.

vEta nAvin2ar, veNpaLigkin2 kuzaik kAtar,
Ota nanjcu aNi kaNTar, ukantu uRai kOyil--
mAtar vaNTu, tan2 kAtalvaNTu ATiya pun2n2ait
tAtu kaNTu, pozil maRaintu, UTu cAykkATE.

பொருள்: ஈசன், வேதத்தை ஒலிக்கும் நாவினர்! வெண் பளிங்கு போன்ற குழையினைக் காதில் அணிந்துள்ளவர். கடலில் தோன்றிய நஞ்சை உண்ட கண்டத்தவர். அவர் விரும்பி உறையும் திருத்தலமே திருச்சாய்க்காடாம். அத்தலத்துள் காதல் கொண்ட பெண் வண்டுகள் தம் காதல் வண்டுகள் வாய்வைத்து ஊதிய புன்னை மலர்களில் உள்ள தாதுக்களில் பொருந்தி இருந்து ஊடல் செய்யும்.

குறிப்புரை: சிவபிரான் வேதத்தை முதன் முதலாகச் சொல்லியருளிய திருநாவுடையார். பளிங்காலான குழை அணிந்த திருச்செவியார். ஓதம் நஞ்சு – பாற்கடலில் எழுந்த விடம். அணி கண்டர் – அழகு செய்யும் திருநீல கண்டர். அணிந்த எனலுமாம். உகந்து – உயர்ந்து, விரும்பி. மாதர் – அழகு,

இச்சையுமாம். மாதர் வண்டு – பெண். காதல் வண்டு – ஆண். ஆடுதலும் ஊடுதலும் உணர்த்தப்பட்டமை அறிக.

Behold! It is Civan, our Lord of Thiruch-chaayk-kaadu. His tongue was the first to pronounce the four Vedas. His neck looks dark blue in colour, because He devoured the poison of the sea. He wears the superior kind of white globular lead in an earring, called kuzhai. Our Lord Civan with such properties manifests Himself in the temple in Thiruch-chaayk-kaadu. Near the temple in the grove the female beetles join their loving male beetles and dance in the pollen dust of Caulophylium flowers and enjoy their life. Thereafter they indulge in feigned quarrels with their male partners and hide themselves in the grove and thereafter enjoy their life.

1880. இருக்குநீள்வரைபற்றியடர்த்தன்றெடுத்த
அரக்கனாகநெரித்தருள்செய்தவன்கோயில்
மருக்குலாவியமல்லிகைசண்பகம்வண்பூந்
தருக்குலாவியதண்பொழில்நீடுசாய்க்காடே. 8

இருக்கும் நீள்வரை பற்றி அடர்த்து அன்று எடுத்த
அரக்கன் ஆகம் நெரித்து அருள்செய்தவன் கோயில் -
மருக் குலாவிய மல்லிகை, சண்பகம், வண் பூந்
தரு, குலாவிய தண்பொழில் நீடு சாய்க்காடே.

irukkum nILvarai paRRi aTarttu, an2Ru eTutta
arakkan2 Akam nerittu, aruLceytavan2 kOyil--
maruk kulAviya mallikai, caNpakam vaN pUn
taru, kulAviya taNpozil nITu cAykkATE.

பொருள்: எம்பெருமான் ஆட்சி செய்யும் கயிலாய மலையைப்பற்றி எடுக்க முயன்றான் அரக்கன் இராவணன். அவனை நெரித்து பின்பு அருள் செய்தவரே சிவபெருமான். அவர் கோயில் கொண்டிருக்கும் இடமே திருச்சாய்க்காடாம். அங்குள்ள சோலைகளில் மணமிக்க மல்லிகை மலர்களும் சண்பக மலர்களும் நிறைந்திருக்கும்.

குறிப்புரை: இருக்கும் நீள்வரை – வீற்றிருக்கும் உயர்ந்த கயிலை மலையை. ஆகம் – உடம்பு. மரு – மணம். தரு – மரம். நீடுதல் – ஓங்கிப் பரந்து அழியாமை குறித்தது. இருக்கும் வரையை எடுத்த அரக்கன். தூண் துரும்பாகும் இழிநிலையை எய்தி, அஞ்சி இறைவனை இன்புறுத்த இன்னிசைபாடி

மகிழ்வித்து. நாளும் பெற்றான் வாளும் பெற்றான் என்பது குறித்தே. 'நெரித்து' என்பதை அடுத்து 'அருள் செய்தவன்' என்றருளினார் ஆசிரியர்.

Behold! It is Civan, our Lord of Thiruch-chaayk-kaadu. His permanent abode is the long and high and old Himalayan mountain. Raavanan, the king of Sri Lanka due to his egoism, tried to lift our Lord's mountain and keep it aside. Our Lord pressed the mountain. Raavanan got crushed. He begged for pardon. Our Lord pardoned him and graced him and gave boons. This Lord is manifest in temple in Thiruch-chaayk-kaadu. Near the temple big groves are plenty, full of tall trees. The flower yielding trees are many. Jasmine and champaka flowers shed fragrance all over the area.

1881. மாலினோடயன்காண்டற்கரியவர்வாய்ந்த
வேலையார்விடமுண்டவர்மேவியகோயில்
சேலின்நேர்விழியார்மயிலாலச்செருந்தி
காலையேகனகம்மலர்கின்றசாய்க்காடே. **9**

மாலினோடு அயன் காண்டற்கு அரியவர், வாய்ந்த
வேலை ஆர் விடம் உண்டவர், மேவிய கோயில் -
சேலின் நேர் விழியார் மயில்ஆல, செருந்தி
காலையே கனகம்மலர்கின்ற சாய்க்காடே.

mAlin2OTu ayan2 kANTaRku ariyavar, vAynta
vElai Ar viTam uNTavar, mEviya kOyil--
cElin2 nEr viziyAr mayil Ala, cerunti
kAlaiyE kan2akammalarkin2Ra cAykkATE.

பொருள்: ஈசன், திருமால், பிரமன் முதலானோர்க்குக் காண்பதற்கு அரியவர். கடலில் தோன்றிய நஞ்சை உண்டருளியவர். அவர் கோயில் கொண்டுள்ள தலமே திருச்சாய்க்காடாம். அத்தலத்தில் சேல்விழி கொண்ட மாதர்கள் மயில் போல ஆடித் திரிவர். செருந்தி மலர்களும் பொன்னிறம் கொண்ட பிற மலர்களும் எப்பொழுதும் பொருந்தி இருக்கும் இடமே திருச்சாய்க்காடாம் என்க.

குறிப்புரை: வேலை – கடல். நேர் – ஒத்த. செருந்தி. கனகம் – (பொன்) போலப் பூப்பது. ஆறு சாமத்திலும் பூக்கும் வெவ்வேறு இனங்களுள் காலையிற் பூப்பது செருந்தி. நாண்மலர் (நாள்+காலை) என்னும் தொல் வழக்குணர்க. 'அல்லி' அல்லிற்பூப்பது பற்றிய காரணப்பெயர்.

Behold! It is Civan, our Lord of Thiruch-chaayk-kaadu. He could not be comprehended by Vishnu and Brahma. He once drank the poison that came out of the sea. This Lord Civa is manifested in the temple in Thiruch-chaayk-kaadu. In this city young damsels with fish-like eyes live in large numbers. The peacocks unfold their feathers and dance all around the city. Here chrysanthamum flowers blossom like gold in the morning hours and spread the fragrance all around the area. This is the holy city of our Lord.

1882. ஊத்தைவாய்ச்சமண்கையர்கள்சாக்கியர்க்கென்றும்
ஆத்தமாகஅறிவரிதாயவன்கோயில்
வாய்த்தமாளிகைசூழ்தருவண்புகார்மாடே
பூத்தவாவிகள்சூழ்ந்துபொலிந்தசாய்க்காடே. 10

ஊத்தைவாய்ச் சமண்கையர்கள் சாக்கியர்க்கு என்றும்
ஆத்தம்ஆக அறிவு அரிதுஆயவன் கோயில் -
வாய்த்த மாளிகை சூழ்தரு வண் புகார் மாடே,
பூத்த வாவிகள் சூழ்ந்து, பொலிந்த சாய்க்காடே.

UttaivAyc camaNkaiyarkaL cAkkiyarkku en2Rum
Attam Aka aRivu aritu Ayavan2 kOyil--
vAytta mALikai cUztaru vaN pukAr mATE,
pUtta vAvikaL cUzntu, polinta cAykkATE.

பொருள்: பொய்யுரை புகலும் சமணர்களும் சாக்கியர்களும் என்றும் அறிய அரியவனே சிவன். அவனே திருச்சாய்க்காடு தலத்தில் கோயில் கொண்டுள்ளான். அத்தலத்தில் மாட மாளிகைகள் நிறைந்திருக்கும். வாவிகளில் மலர்கள் பூத்துப் பொலிந்திருக்கும்.

குறிப்புரை: ஆத்தம் – ஆப்தம், உண்மை. அறிவு அரிது ஆயவன் – அறிவதற்கு அரிய உண்மைப் பொருளாயுள்ளவன். புகார்க்கு அருகில் சாய்க்காடு இருத்தல் கூறப்பட்டதறிக. புகார்க்கு மாளிகையும் காட்டுக்கு வாவிகளும் விசேடம். புகா ஆறு என்றதன் மரூஉவே புகார் என்பது. இதன் முதற்பாட்டில் 'பொன்னி சாகரம் மேவு' என்றதற்கு எழுதிய குறிப்பைக் காண்க.

Behold! It is Civan, our Lord of Thiruch-chaayk-kaadu. Our Lord is the embodiment of truth. He is beyond the comprehension of those ill tongued and dull-witted Jains and the unreliable Buddhists. However, our Lord had affection for them; but they could not have awareness of our Lord; He is a rarity for them. Our Lord has manifested Himself in the temple in Thiruch-chaayk-kaadu, where flower ponds all

around the area are in plenty. The city of Poom-pukar, near this place, is filled with such ponds and beautiful palatial buildings.

1883. ஏனையோர்புகழ்ந்தேத்தியஎந்தைசாய்க்காட்டை
ஞானசம்பந்தன்காழியர்கோன்நவில்பத்தும்
ஊனமின்றியுரைசெயவல்லவர்தாம்போய்
வானநாடினிதாள்வரிம்மாநிலத்தோரே. 11

ஏனையோர் புகழ்ந்து ஏத்திய எந்தை சாய்க்காட்டை,
ஞானசம்பந்தன்-காழியர்கோன்-நவில் பத்தும்
ஊனம் இன்றி உரைசெய வல்லவர்தாம், போய்
வானநாடு இனிது ஆள்வர், இம் மாநிலத்தோரே.

En2aiyOr pukazntu Ettiya entai cAykkATTai,
njAn2acampantan2--kAziyarkOn2--navil pattum
Un2am in2Ri uraiceya vallavartAm, pOy,
vAn2anATu in2itu ALvar, im mAnilattOrE.

பொருள்: ஏனையோர் பலராலும் போற்றப்படுபவரே எந்தை ஈசன் ஆவார். அவர் திருச்சாய்க்காடு தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அவரைப் புகழ்ந்து சீர்காழித் தலத்துள் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான் பத்துப் பாடல்கள் பாடி அருளியுள்ளார். அப்பாடல்களைப் பாட வல்லவர்கள் இப்பூவுலகில் புகழுடன் விளங்குவர்.

குறிப்புரை: ஏனையோர் – உபமன்யு முனிவர், இயற்பகை நாயனார், ஆதிசேடன் முதலியோர் (தி.4 பதி.56 பா.5) ஊனம் – சொற்குற்றம், பொருட்குற்றம். அநாசாரம், அன்பின்மை முதலியவை பாராயணத்துக்கு ஊனங்கள்.

The people on the earth may note this. Our saint Thiru-gnana-Sambandar, the ruler of Kaazhi had sung on the Lord of Thiruch-chaayk-kaadu ten divine songs in chaste Tamil. Those devotees other than the Jains and Buddhists, praise our father, who is the Supreme Lord of Thiruch-chaayk-kaadu. Those who can recite these verses or sing these ten verses in praise of our Lord without mistakes will definitely reach and rule the celestial world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

38ஆம் பதிகம் முற்றிற்று
End of 38th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 175

பதிக எண்: 39

39. திருக்ஷேத்திரக் கோவை

39. THIRU-SHETRAK-KOVAI

பண் : இந்தளம் – வினாஉரை

Pann: Indhalam - Vinaa Urai

1884. ஆரூர்தில்லையம்பலம்வல்லம்நல்லம்
வடகச்சியுமச்சிறுபாக்கம்நல்ல
கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணி
கடல்சூழ்கழிப்பாலைதென்கோடிபீடார்
நீரூர்வயல்நின்றியூர்குன்றியூருங்
குருகாவையூர்நாரையூர்நீடுகானப்
பேரூர்நன்னீள்வயல்நெய்த்தானமும்
பிதற்றாய்பிறைசூடிதன்பேரிடமே. 1

ஆரூர், தில்லைஅம்பலம், வல்லம், நல்லம்,
வடகச்சியும், அச்சிறுபாக்கம், நல்ல
கூரூர், குடவாயில், குடந்தை, வெண்ணி,
கடல் சூழ் கழிப்பாலை, தென் கோடி, பீடுஆர்
நீர்ஊர் வயல் நின்றியூர், குன்றியூரும்,
குருகாவையூர், நாரையூர், நீடு கானப் -
பேரூர், நல்-நீள் வயல் நெய்த்தானமும்,
பிதற்றாய், பிறைசூடிதன் பேர் இடமே!

ArUr, tillai ampalam, vallam, nallam, vaTakacciyum, acciRupAkkam, nalla
kUrUr, kuTavAyil, kuTantai, veNNi, kaTal cUz kazippAlai, ten2 kOTi, pITu Ar
nIr Ur vayal nin2RiyUr, kun2RiyUrum, kurukAvaiyUr, nAraiyUr, nITu kAn2ap
pErUr, nal-nIL vayal neyttAn2amum, pitaRRAy, piRaicUTitan2 pEr iTamE!

பொருள்: திருவாரூர், தில்லையம்பலம், வல்லம், நல்லம், திருக்கச்சி, அச்சிறுபாக்கம், கூரூர், குடவாயில், குடந்தை, வெண்ணியூர், திருக்கழிப்பாலை, திருநின்றியூர், குன்றியூர், குருகாவூர், நாரையூர், திருக்காளப் பேரூர், திருநெய்த்தானம் ஆகிய தலங்களில் கோயில் கொண்டுள்ள பிறைசூடிய பெம்மானாகிய சிவனைத் தொழுவாயாக.

குறிப்புரை: பீடு – பெருமை. நீர் ஊர் வயல் – நீர் பரவிய கழனி. பிதற்றாய் – இத்தலங்களின் திருநாமங்களை மீண்டும் மீண்டும் பிதற்றிக் கொண்டிருப்பாய். பிதற்றுதலாலேயே பெரும்பயன் எய்துவாய் என்றபடி. பிறைசூடி – சந்திரசேகரன். பேரிடம் – பெருந்தலங்கள். குடந்தை, குடந்தைக் கீழ்க்கோட்டம், குடமூக்கு, குடந்தைக் காரோணம் நான்கும் இப்போது கும்பகோணம் என்னும் நகரில் உள்ள வெவ்வேறு

சிவத்தலங்கள். இதில் குடவாயில் குடந்தை என்றும், பா. 9–இல் குடமூக்கென்றும் வெவ்வேறு கூறப்படுதல் காண்க. இப்பதிகத்துள் அடங்கிய வைப்புத் தலங்கள் தனியாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

Oh my mind! babble always these places, which are blessed to have abodes for our Lord with the crescent decorated head; Aarur, Thillaiambalam, Vallam, Nallam, Kachchi, Achiruppakkam, Kazhippalai surrounded by the sea, nearer the south, Ninriyur of paddy fields, Kundriyur, Kurugavaiyur, Naraiyur, Needukanapperur and Neythaanam with *fertile fields, worship the Lord of these places.*

1885. அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தா
றகலாமுதுகுன்றங்கொடுங்குன்றமுங்
கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோணம்
பயில்கற்குடிகாளத்திவாட்போக்கியும்
பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான்
பரங்குன்றம்பருப்பதம்பேணிநின்றே
எண்ணாய்இரவும்பகலும்
இடும்பைக்கடல்நீந்தலாங்காரணமே. 2

அண்ணாமலை, ஈங்கோயும், அத்தி முத்தாறு
அகலா முதுகுன்றம், கொடுங்குன்றமும்,
கண் ஆர் கழுக்குன்றம், கயிலை, கோணம்
பயில் கற்குடி காளத்தி, வாட்போக்கியும்,
பண் ஆர் மொழி மங்கை ஓர்பங்கு உடையான்
பரங்குன்றம், பருப்பதம், பேணி நின்றே,
எண்ணாய், இரவும் பகலும்!
இடும்பைக்கடல் நீந்தல் ஆம், காரணமே.

aNNAmalai, IgkOyum, atti muttARu akalA mutukun2Ram, koTugkun2Ramum
kaN Ar kazukkun2Ram, kayilai, kONam payil kaRkuTi, kALatti, vATpOkkiyum,
paN Ar mozi magkai Orpagku uTaiyAn2 paragkun2Ram, paruppatam, pENi nin2RE,
eNNAy, iravum pakalum! iTumpaikkaTal nIntal Am, kAraNamE.

பொருள்: திருவண்ணாமலை, ஈங்கோய்மலை, திருமுதுகுன்றம், கொடுங்குன்றம், திருக்கண்ணார்கோயில், திருக்கழுக்குன்றம், திருக்கயிலை, திரிகோணமலை, திருகற்குடி, திருக்காளத்தி, திருவாட்போக்கி, திருப்பரங்குன்றம், திருப்பருப்பதம் ஆகிய தலங்களில் எம்பெருமான் தேவியோடு கோயில் கொண்டுள்ளான். அவனை வணங்கி நீ துன்பக் கடலிலிருந்து கரை ஏறுவாயாக.

குறிப்புரை: முத்தாறு – விருத்தாசலத்தின் அருகே ஓடும் ஆற்றின் பெயர். வாட்போக்கி – ரத்தகிரி. வாள் – ஒளி. போக்கி – போகச் செய்வது. ஒளிவீசும் அரதனகிரி என்க. ஈற்றடி கிடைத்திலது.

Oh my mind! think always both night and day, these glorious pilgrimage centres by visiting which we can swim off the sea of sorrows - Annamalai, Eengoi, Aththi, Mutharu, Muthukundram, Kodungundram, Thiru-k-Kazhukundram, Kayilai-k-Konam, Karkudi, Kalathi, Vatpokki, Thirupparangundram and Thiruparuppatham where our Lord with our goddess of musical words resides.

1886. அட்டானமென்றோதியநாலிரண்டும்
மழகன்னுறைகாவனைத்துந்துறைகள்
எட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங்
குளமூன்றுங்களமஞ்சும்பாடிநான்கும்
மட்டார்குழலாள்மலைமங்கைபங்கன்
மதிக்கும்இடமாகியபாழிமூன்றும்
சிட்டானவன்பாசூரென்றேவிரும்பாய்
அரும்பாவங்களாயினதேய்ந்தறவே. 3

அட்டானம் என்று ஓதிய நால்-இரண்டும்,
அழகன்(ன்) உறை காஅனைத்தும், துறைகள் -
எட்டுஆம், திருமூர்த்தியின் காடுஒன்பதும்,
குளம்மூன்றும், களம்அஞ்சும், பாடி நான்கும்,
மட்டு ஆர் குழலாள் மலைமங்கைபங்கன்
மதிக்கும்(ம்) இடம் ஆகிய பாழிமூன்றும்,
சிட்டானவன் பாசூர் என்றே விரும்பாய்,
அரும்பாவங்கள் ஆயின தேய்ந்து அறவே!

aTTAn2am en2Ru Otiya nAl-iraNTum, azakan2(n2) uRai kA an2aittum, tuRaikaL-
eTTu Am, tirumUrttiyin2 kATu on2patum, kuLam mUn2Rum, kaLam anjcum, pATi nAn2kum,
maTTu Ar kuzalAL malaimagkai pagkan2 matikkum(m) iTam Akiya pAzimUn2Rum,
ciTTAn2avan2 pAcUr en2RE virumpAy, arumpAvagkaL Ayin2a tEyntu aRavE!

பொருள்: இறைவன், வீரட்டானம் என்றழைக்கப் பெறும் திருக்கண்டியூர், திருக்கடவூர், திருப்பறியலூர், திருக்குறுக்கை, திருவிற்குடி, திருவதிகை, திருக்கோவலூர், திருவழுவை என்ற எட்டுத் தலங்களிலும், திருக்கோலக்கா, திருக்குரங்குக்கா, திருக்கோடிக்கா, திருவானைக்கா, திருநெல்லிக்கா என்றழைக்கப்பெறும் தலங்களிலும், ஆலந்துறை, திருமாந்துறை, திருப்பாற்றுறை, கடம்பந்துறை, பராய்த்துறை, பெருந்துறை, வெண்துறை, அரத்துறை என்ற எட்டுத் துறைகளிலும், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, தலைச்சங்காடு,

கொள்ளிக்காடு, திருமறைக்காடு, திருநெறிக்கரைக்காடு, திருவாலங்காடு, திருவேற்காடு, தலையாலங்காடு என்ற ஒன்பது காடுகளிலும், மூன்று குளத்தலங்களிலும், திருவேட்களம், நெடுங்களம் போன்ற ஐந்து தளங்களிலும் பாடிகள் நான்கினும் பாழி மூன்றினும் பொருந்தியவன் திருப்பாய்ச்சூர் இறைவன் என்றே தொழுவீராக. பாவங்கள் நீங்கப் பெறுவீராக!

குறிப்புரை: அட்டானம் என்று ஓதிய நாலிரண்டும் – எட்டு வீரட்டங்களும். அட்டானம் – அஷ்டஸ்தாநம் என்பதன் திரிபு. கா, துறை, காடு, குளம், களம், பாடி, பாழி என முடியும் தலங்களையும் அவற்றுள் கா அல்லாதவற்றின் தொகையையும் குறித்தமை காண்க. சிட்டன் – சிஷ்டன். காடொன்பது – திருமறைக்காடு, தலைச்சங்காடு, தலையாலங்காடு, சாய்க்காடு, கொள்ளிக்காடு, ஆலங்காடு, பனங்காடு, வெண்காடு, வேற்காடு, கோட்டுக்காடு, நிறைக்காடு, மிறைக்காடு, இறைக்காடு என்பவும் உள. (சுந்தரர் ஊர்த்தொகை. 3) குளமூன்றும் களம் அஞ்சும் – திருக்குளம், இடைக்குளம், பாற்குளம், வளைகுளம், கடிக்குளம், தஞ்சைத் தளிக்குளம் என்பவற்றுள் எம்மூன்றோ? 'வளைகுளமும் தளிக்குளமும் நல்லிடைக் குளமும் திருக்குளத்தோடு அஞ்சைக்களம் விள்ளாத நெடுங்களம் வேட்களம்' (அப்பர், அடைவு திருத்.), வேறு இரண்டு களம் யாவையோ? பாடி நான்கு – எதிர்கொள்பாடி, மழபாடி; பிற எவையோ? வலிதாயம் (பாடி) சேரின் மூன்றாம். பாழி மூன்று – திருவரதைப் பெரும்பாழி, களப்பாழி பிறிதொன்று யாதோ?

Oh my mind! to be relieved of cruel sins, you may visit these holy places where our Lord dwells, sharing His body with the daughter of the mountain, a damsel of long hair, beautified with honey filled flowers - eight attanams, the places, the names of end in Ka, Thurai, Kadu, Kulam etc., the nine places bearing the names of the forests, three places of tanks, fields five and padi four, and the three sites ending in Paazhi, our Lord likes most Paasur , He may be called Lord of Thiruppaasur.

1887. அறப்பள்ளிஅகத்தியான்பள்ளிவெள்ளைப்
பொடிப்பூசியாறணிவானமர்காட்டுப்பள்ளி
சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளி
திருநனிபள்ளிசீர்மகேந்திரத்துப்
பிறப்பில்லவன்பள்ளிவெள்ளச்சடையான்
விரும்புமிடைப்பள்ளிவண்சக்கரமால்
உறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளி
உணராய்மடநெஞ்சமேஉன்னிநின்றே. 4

அறப்பள்ளி, அகத்தியான்பள்ளி, வெள்ளைப்-
பொடிப் பூசி ஆறு அணிவான் அமர் காட்டுப்பள்ளி
சிறப்பள்ளி, சிராப்பள்ளி, செம்பொன்பள்ளி,
திரு நனிபள்ளி, சீர்மகேந்திரத்துப்
பிறப்புஇல்லவன் பள்ளி, வெள்ளச் சடையான்
விரும்பும்(ம்) இடைப்பள்ளி வண் சக்கரம் மால்
உறைப்பால் அடி போற்றக் கொடுத்த பள்ளி
உணராய் மட நெஞ்சமே, உன்னி நின்றே!

aRappaLLi, akattiyAn2paLLi, veLLaip poTi pUci ARu aNivAn2 amar kATTuppaLLi
ciRappaLLi, cirAppaLLi, cempon2paLLi, tiru nan2ipaLLi, clr makEntirattup
piRappu illavan2 paLLi, veLLac caTaiyAn2 virumpum(m) iTaippaLLi, vaN cakkaram mAl
uRaippAl aTi pORRak koTutta paLLi, uNarAy, maTa nenjcamE, un2n2i nin2RE!

பொருள்: ஈசன், அறப்பள்ளித் தலத்தில் திருநீறு அணிந்து தோன்றுவான். திருக்காட்டுப் பள்ளியில் கங்கையைத் தலையில் தாங்கி நின்று அருளுவான். அவன் சிறப்புடன் சிராப்பள்ளி, செம்பொன்பள்ளி, திருநனிபள்ளி, மயேந்திரப்பள்ளியிலும் தோன்றுவான். பிறப்பு இறப்பு இல்லாத அவன், கங்கையைத் தலையில் தாங்கியபடியே பிற தலங்களிலும் காட்சி கொடுப்பான். அவன் கோயில் கொண்டுள்ள தலங்களுக்கெல்லாம் சென்று அவனைப் போற்றுவீராக. நலன்களைப் பெறுவீராக.

குறிப்புரை: பிறப்பில்லாதவன் – பிஞ்ஞகா பிறப்பிலி பிறப்பிற்குக் காரணமாகிய பேதைமை இயல்பாகவே இல்லாதவன். உறைப்பு – திருவருள் உறைப்பு, அன்பின் அழுத்தம்.

You, foolish mind, worship at your heart these blessed places Arappalli, Agathianpalli, Kattuppalli, the abode of our Lord, who has smeared His body with the white powder and who beautifies His head with the river - Cirappalli, Cemponpalli, Thirunanipalli, Mahendrapalli, where our birthless God abides. Idaippalai is liked by the God of matted hair with the Ganges flood and also Chakramaalpalli, where Lord bestowed His grace on Lord Vishnu, when he worshipped Him.

1888. ஆறைவடமாகறல்அம்பர்ஐயா
றணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர்
சேறைதுலைபுகலூரகலா
திவைகாதலித்தானவன்சேர்பதியே

* *

* 5

ஆறை, வடமாகறல், அம்பர், ஐயாறு,
அணி ஆர் பெருவேளூர், விளமர், தெங்கூர்,
சேறை, துலை புகலூர், அகலாது
இவை காதலித்தான் அவன் சேர் பதியே
* *
* *

aRai, vaTamAkaRal, ampar, aiyARu, aNi Ar peruvELUr, viLamar, tegkUr,
cERai, tulai pukalUr, akalAtu ivai kAtalittAn2 avan2 cEr patiyE.
....
....

பொருள்: ஈசன், திருமாகறல், அம்பர்மாகாளம், திருவையாறு, பெருவேளூர், இமைத் திருத்தென்கூர், திருச்சேறை புகலூர் ஆகிய தலங்களை விரும்பி அங்கெல்லாம் கோயில் கொண்டுள்ளார் என்க.

குறிப்புரை: மாகறல், அம்பர், ஐயாறு, அணி – அழகு. துலைபுகலூர் – என்ற குறிப்பால். பெயர்க்காரணம் ஒருவாறு ஊகிக்கப்படுகின்றது.

These are the holy places loved by our God, not leaving Aarai, Makaral north, Ambarmaakaalam, Iyaaru; beautiful Peruvelur, Vilamar, Thengur, Cherai, Pukaloor ...

1889. மணவஞ்சர்மற்றோடமுன்மாதரரு
மதிகூர்திருக்கூடலில்ஆலவாயும்
இனவஞ்சொலிலாஇடைமாமருதும்
இரும்பைப்பதிமாகாளம்வெற்றியூரும்
கனமஞ்சினமால்விடையான்விரும்புங்
கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின்
தவமாமலமாயினதானறுமே. 6

மண வஞ்சர் மற்று ஓட, முன் மாதர் ஆரும்
மதி கூர் திருக் கூடலில் ஆலவாயும்,
இன வஞ்சொல் இலா இடைமாமருதும்,
இரும்பைப்பதிமாகாளம், வெற்றியூரும்,
கனம் அம் சின மால்விடையான் விரும்பும்
கருகாவூர், நல்லூர், பெரும்புலியூர்,
தன மென்சொலில்-தஞ்சம் என்றே நினைமின்!
தவம் ஆம்; மலம்ஆயினதான் அறுமே.

manavanchar maRROTa munmAtha rArum mathikUr thirukkUTa lilAla vAyum
inavany cholilA iTaimA maruthumirumpaip pathimA kALamveR RiyUrum^
kanamam chinamAl viTaiyAn virumpuN^ karukA vUrn^al lUrperum puliyUr
thanamen cholil tanchamenRE n^inaimin thavamAm malamA yinathA narumE.

பொருள்: வஞ்சமனம் உடையோர் அஞ்சி ஓடிடவும், நன்மாதர்கள் பொருந்தி வணங்கவும், ஈசன் கூடல்மாநகரில் ஆலவாய்த் திருக்கோயில் கோயில் கொண்டுள்ளான். கொடுஞ்சொல் போந்த அடியவர் நிறைந்த இடைமருதூரிலும் நிறைந்துள்ளான். திருக்கருகாவூர், நல்லூர் பெரும்புலியூரிலும் உள்ளான். எங்கும் நிறைந்த அவனையே தஞ்சம் எனக் கொண்டு வழிபாடு செய்யுமின். உங்களது வினைகள் எல்லாம் நீங்கப் பெறும்.

குறிப்புரை: மனவஞ்சர் – வஞ்சமனத்தர். மற்றோட என்பது இங்குப் பொருந்துமாறு புலப்பட்டிலது. திருக்கூடலில் ஆலவாய் – திருக்கூடலில் உள்ள ஆலவாயென்னும் திருக்கோயில். இனவஞ்சொல் இலா – வண்சொல் இனம் இல்லாத. கனம் அம்சினம் மால்விடை – மேன்மையும் அழகும் கோபமும் உடைய திருமாலாகிய விடை தஞ்சம் – அடைக்கலம் (தண்+து+அம்). தவமாம் – தவமாகும். மலம் ஆயினதான் அறுமே – மும்மலமும் தானே அற்றொழியும்.

Oh my mind! think of these sacred places as sanctuaries of salvation, all our flaws will be snapped off, Thirukkoodal Alavaay, where the cunning fellows run away, where the womenfolk worship always; Idaimamarudu, a place which knows no cunning words, Irumpaipathi Maakalam, Verriyur, Karukavur liked most by God Vishnu, the grand and handsome, and angry bull and also Nallur Perumpuliyur. Pray there with soft words and surrender Yourself at His feet; this is penance enough and therefore Your karma will be snapped off.

1890. மாட்டூர்மடப்பாச்சிலாச்சிராமம்
முண்டீச்சரம்வாதவூர்வாரணாசி
காட்டூர்கடம்பூர்படம்பக்கங்கொட்டுங்
கடலொற்றியூர்மற்றுறையூரவையும்
கோட்டூர்திருவாமாத்தூர்கோழம்பமுங்
கொடுங்கோவலூர்திருக்குணவாயில்

* 7

மாட்டூர், மடப் பாச்சிலாச்சிராமம்,
மயிண்டீச்சரம், வாதவூர், வாரணாசி,
காட்டூர், கடம்பூர், படம்பக்கம் கொட்டும்
கடல் ஒற்றியூர், மற்று உறையூர் அவையும்,
கோட்டூர், திரு ஆமாத்தூர், கோழம்பமும்,
கொடுங்கோவலூர், திருக் குணவாயில்,
* *

mATTUr maTappAch chilAchchi rAmam muNTIch charamvAtha vUrvAra NAchi
kATTUr kaTampUr paTampakkaN^ koTTuN^ kaTaloRRi yUrmaR RuRaiyU ravaiyuN^
kOTTUr thiruvAmAth thUrkO zampamuN^ koTuN^kO valUrthiruk kuNavAyil
....

பொருள்: மாட்டூர், பாச்சிலாச்சிராமம், மயின்பீச்சரம், நாதவூர், வாரணாசி, காட்டூர், கடம்பூர், திருவொற்றியூர், உறையூர், கோட்டூர், திருவாமாத்தூர், கோழம்பம், கொடுங்கோவலூர், திருக்குளவாயில் முதலான தலங்களில் கோயில் கொண்டுள்ள முதல்வனை வணங்கி உய்வு பெறுங்கள்.

குறிப்புரை: மற்று உறையூர். இப்பாவின் முழுப்பகுதி கிடைத்திலது.

Mattur, Matappaaccilaciraamam, Munteechuram, Vathavur, Varanasi, Kattur, Katambur, Orriyur in the eastern coast where the sounds of percussions are heard, other nearby places, Kottur, Thiruvamathur, Kolambam, Kotungovalur and Thirukkunavayil.

1891. *
* * * * * * * * * * குலாவுதிங்கட்
சடையான்குளிரும்பரிதிநியமம்
போற்றூரடியார்வழிபாடொழியாத்தென்
புறம்பயம்பூவணம்பூழியூரும்
காற்றூர்வரையன்றெடுத்தான்முடிதோள்
நெரித்தானுறைகோயிலென்றென்றுநீகருதே. 8

* *
* * * * * * * * * * குலாவு திங்கள்
சடையான் குளிரும் பரிதிநியமம்,
போற்று ஊர் அடியார் வழிபாடு ஒழியாத் தென்-
புறம்பயம், பூவணம், பூழியூரும்,
காற்று ஊர் வரை அன்று எடுத்தான் முடிதோள்
நெரித்தான் உறை கோயில் என்றுஎன்று நீ கருதே!

.... kulAvu tigkaL caTaiyAn2 kuLirum pariti niyamam,
pORRu Ur aTiyAr vazipATu oziyAt ten2 puRampayam, pUvaNam, pUziyUrum,
kARRu Ur varai an2Ru eTuttAn2 muTitOL nerittAn2 uRai kOyil en2Ru en2Ru nI karutE!

பொருள்: ஈசன், திங்களைச் சடையில் தரித்துள்ளான். தன்னை அன்புடன் வணங்கும் அடியார்களின் வழிபாட்டை ஏற்க புறம்பயம், பூவணம், பூழியர் போன்ற திருத்தலங்களில் கோயில் கொண்டுள்ளான். ஆணவத்துடன் கயிலையைத் தூக்க முயன்ற இராவணனை நெரித்தான். அவனே எங்கும் நிறைந்தவன் ஆவான். அவனை வணங்குவோமாக.

குறிப்புரை: என்று – என்றும் நீ கருது என்க. இதன் முழுப் பகுதியும் கிடைத்திலது. பருத்தி நியமத்துறைவாய் (சுந்தரர் ஊர்த்தொகை 8) என்று வேறொன்றுமுண்டு. அதனை வைப்புத் தலத்தில் அடக்கினர்.

Oh my mind! think again and again of these temples of glory, where our Lord, who destroyed the heads and shoulders of that demon when he tried to lift the mountain, resides - Parithiniyamam where God of matted hair decorated by the moon, dwells, South Purambayam, where the worship with prayer of the devotees is endless. Poovanam, Poozhiyur - worship the Lord of these places.

1892. நெற்குன்றம் ஒத்தூர் நிறைநீர் மருகல்
நெடுவாயில் குறும்பலா நீடுதிரு
நற்குன்றம் வலம்புரம் நாகேச்சுரம்
நளிர்சோலையுஞ் சேனைமாகாளம் வாய்மூர்
கற்குன்ற மொன்றேந்தி மழைதடுத்த
கடல்வண்ணனும் மாமலரோனுங் காணாச்
சொற்கென்றுந் தொலைவிலாதா
னுறையுங் குடமூக்கென்று சொல்லிக்குலாவுமினே. 9

நெற்குன்றம், ஒத்தூர், நிறைநீர் மருகல்,
நெடுவாயில், குறும்பலா, நீடு திரு
நற்குன்றம், வலம்புரம், நாகேச்சுரம்,
நளிர்சோலை உஞ்சேனைமாகாளம், வாய்மூர்,
கற்குன்றன் ஒன்று ஏந்தி மழை தடுத்த
கடல்வண்ணனும் மா மலரோனும் காணாச்
சொற்கு என்றும் தொலைவு இலாதான் உறையும்
குடமூக்கு, என்று சொல்லிக் குலாவுமினே!

neRkun2Ram, OttUr, niRai nIr marukal, neTuvAyil, kuRumpalA, nITu tiru
naRkun2Ram, valampuram, nAkEccuram, naLircOlai unjcEn2aimAkALam, vAymUr,
kalkun2Ram on2Ru Enti mazai taTutta kaTalvaNNan2um mA malarOn2um kANAc
coRku en2Rum tolaivu ilAtAn2 uRaiyum kuTamUkku, en2Ru collik kulAvumin2E!

பொருள்: நெற்குன்றம், திருவோத்தூர், திருமருகல், நெடுவாயில், திருக்குற்றாலம், வலம்புரம், திருநாகேச்சுரம், மாகாளம், திருவாய்மூர் என்ற தலங்களில் கோயில் கொண்டுள்ளான் ஈசன். மலையை ஏந்தி மழையைத் தடுத்த திருமாலும், மாமறையோனாகிய பிரமனும் அறிய முடியா நிலையில் விளங்கிய ஈசனே அடியார்களுக்காக குடமூக்கு என்றும் தலத்தில் கோயில் கொண்டுள்ளான். அவனைப் புகழ்ந்து பாடித் தொழுவோமாக.

குறிப்புரை: குறும்பலா – திருக்குற்றாலத் தலவிருட்சம். கற்குன்றம் – கோவர்த்தனகிரி. காணாச் சொற்கு – காணாத புகழ்க்கு. தொலைவு – அழிவு.

Oh my mind! Be joyful and praise always these holy centres of divinity, where our Lord dwells who is beyond the reach of all words, who could not be comprehended by Lord Vishnu, the sea-coloured god, who stopped the rain with an umbrella of a mountain and Brahma in the big lotus - Nerkundram, Othur, Marukal of running waters, Neduvayil, Kurumbala, Narkundram of rich people, Valampuram, Nageswaram, Makalam of cool gardens and Vaymur and Kudamookku. Tese are the holy places where the Infinite resides.

1893. குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ்
குருந்தங்குடிதேவன்குடிமருவும்
அத்தங்குடிதண்டிருவண்குடியும்
அலம்புஞ்சலந்தன்சடைவைத்துகந்த
நித்தன்நிமலன்உமையோடுங்
கூடநெடுங்காலம்உறைவிடமென்றுசொல்லாப்
புத்தர்புறங்கூறியபுன்சமணர்
நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்ம்மினே. 10

"குத்தங்குடி, வேதிகுடி, புனல்சூழ்
குருந்தங்குடி, தேவன்குடி, மருவும்
அத்தங்குடி, தண் திரு வண்குடியும்-
அலம்பும் சலம் தன் சடை வைத்து உகந்த
நித்தன், நிமலன், உமையோடும்கூட
நெடுங் காலம் உறைவு இடம்" என்று சொல்லாப்
புத்தர், புறம்கூறிய புன் சமணர்
நெடும் பொய்களை விட்டு நினைந்து உய்ம்மினே!

"kuttagkuTi, vEtikuTi, pun2al cUz kuruntagkuTi, tEvan2kuTi, maruvum
attagkuTi, taN tiru vaNkuTiyum--alampum calam tan2 caTai vaittu ukanta
nittan2, nimalan2, umaiyOTum kUTa neTug kAlam uRaivu iTam" en2Ru collAp
puttar, puRamkURiya pun2 camaNar, neTum poykaLai viTTu, nin2aintu uymmin2E!

பொருள்: ஈசன், குத்தங்குடி. வேதிகுடி, குருந்தங்குடி, தேவன்குடி, அத்தன்குடி, வண்குடி போன்ற தலங்களில் கோயில் கொண்டுள்ளான். அவன் தன் தலையில் கங்கையை அணிந்துள்ளான். நித்தன் நிமலன் என்று போற்றப்பெறும் அவனே உமாதேவியாருடன் எல்லாத் தலங்களிலும் கோயில் கொண்டுள்ளான். அதனை அறியாமல் புத்தர்களும் சமணர்களும் பொய்யுரை கூறித் திரிவர். அவர் உரைகளை விட்டுவிட்டு நீங்கள் ஈசனையே வழிபட்டு உய்வு பெறுவீர்களாக.

குறிப்புரை: அலம்பும் சலம் – அலையாய்ப் பெருகுங் கங்கைநீர். சொல்லா – புகழ்ந்து போற்றாத.

Oh my mind! Get your salvation by thinking of these holy places, ignoring the utter lies of the Jains and the Buddhists. Our Lord is here, the Holy one, who has on His matted hair, the Ganges; who is purity itself; who shares His body with Umaa; - Kuththangudi, Vedikudi, Kurunthangudi surrounded by water, Devankudi, Athangudi and Thiruvangudi of cool water.

1894. அம்மானையருந்தவமாகிநின்ற
அமரர்பெருமான்பதியானவுன்னிக்
கொய்ம்மாமலர்ச்சோலைகுலாவுகொச்சைக்
கிறைவன்சிவஞானசம்பந்தன்சொன்ன
இம்மாலையீரைந்தும்இருநிலத்தில்
இரவும்பகலுந்நினைந்தேத்திநின்று
விம்மாவெருவாவிரும்பும்அடியார்
விதியார்பிரியார்சிவன்சேவடிக்கே. 11

அம்மானை, அருந்தவம் ஆகிநின்ற
அமரர்பெருமான், பதிஆன உன்னி,
கொய்ம் மா மலர்ச்சோலை குலாவு கொச்சைக்கு
இறைவன் - சிவ ஞானசம்பந்தன் - சொன்ன
இம் மாலைஈர்-ஐந்தும் இரு நிலத்தில்
இரவும் பகலும் நினைந்து ஏத்தி நின்று,
விம்மா, வெருவா, விரும்பும்(ம்) அடியார்,
விதியார் பிரியார், சிவன் சேவடிக்கே.

ammAn2ai, aruntavam Akinin2Ra amararperumAn2, pati An2a un2n2i,
koym mA malarccOlai kulAvu koccaikku iRaivan2--civa njAn2acampantan2--con2n2a
im mAlai Ir-aintum iru nilattil iravum pakalum nin2aintu Etti nin2Ru,
vimmA, veruvA, virumpum(m) aTiyAr, vitiyAr piriyAr, civan2 cEvaTikkE.

பொருள்: ஈசன் அன்பு வடிவானவன். அருந்தவமானவன் அமரர் தலைவன். அவன் மலர்நிறைந்த சோலைகள் சூழ்ந்த கொச்சைவயம் பதியில் கோயில் கொண்டுள்ளான். அத்தலத்தில் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான் இறைவனைப் புகழ்ந்து பத்துப் பாடல்கள் பாடி அருளியுள்ளார். அப்பாடல்களை இரவும் பகலும் இடைவிடாமல் நினைந்து ஏத்தி விம்மாமல் வெருவாமல் விரும்பிப் பாடும் அடியவர்கள் சிவன் சேவடியைச் சேர்ந்து பேரின்பம் பெறுவர்.

குறிப்புரை: பதியான – தலமானவற்றை. விம்மா – விம்மி. வெருவா – வெருவி. விதியார் – செல்வமுடையவர். சேவடிக்குப் பிரியார்.

Those devotees, who on this vast earth, night and day, think and recite these ten verses, with weeping and sobbing, will be very rich. Sivagnanasambandan, the Lord of Kochai, a place of flower gardens, sang on the Lord, these ten verses, the embodiment of rare penance. Those who sing it, feeling and praising our Lord fervently, will be the celestials forever under the lotus feet of Lord Civa.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

39ஆம் பதிகம் முற்றிற்று
End of 39th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 176 *பதிக எண்: 40*

40. திருப்பிரமபுரம்

40. THIRU-BRAHMA-PURAM

பண் : சீகாமரம் *Pann: Seekaamaram*

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

தல வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

1895. எம்பிரான்எனக்கமுதமாவானுந்தன்னடைந்தார்
தம்பிரான்ஆவானுந்தழலேந்துகையானுங்
கம்பமாகரியுரித்தகாபாலிகறைக்கண்டன்
வம்புலாம்பொழிற்பிரமபுரத்துறையும்வானவனே. 1

எம்பிரான், எனக்கு அமுதம் ஆவானும், தன் அடைந்தார்
தம்பிரான் ஆவானும், தழல் ஏந்து கையானும்,
கம்ப மா கரி உரித்த காபாலி, கறைக்கண்டன் -
வம்பு உலாம் பொழில் பிரமபுரத்து உறையும் வானவனே.

empirAn2, en2akku amutam AvAn2um, tan2 aTaintAr
tampirAn2 AvAn2um, tazal Entu kaiyAn2um,
kampa mA kari uritta kApAli, kaRaikkaNTan2--
vampu ulAm pozil piramapurattu uRaiyum vAn2avan2E.

பொருள்: எம்பிரான், எனக்கு அமுதமாக விளங்குபவர். தன்னை வணங்கி அடைந்தவர்களுக்குத் தலைவர் ஆவார். அவர் நெருப்பைக் கையில் ஏந்தியிருப்பார். யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டிருப்பவர். கண்டம் கறுத்தவர். மணம் கமழும் பொழில் சூழ்ந்த பிரமபுரத்துள் கோயில் கொண்டுள்ளார் அவரை வணங்குவோமாக.

குறிப்புரை: எம்பிரான் ஆவானும், தன்னை அடைந்தவர் தம்பிரான் ஆவானும், தழல் ஏந்திய கையானும், காபாலியும், கறைக்கண்டனும் வானவனே என்று முடிக்க. தம் – ஆன்மாக்கட்கு. பிரமன் – இனியன். பிரியமானவன் என்றும் ஆன்மாக்கள் அநேகமாதலின் 'தம்' என்றும், ஆண்டவன் ஏகனாதலின் தன்

என்றும் குறித்தனர் முன்னோர். தன்னானந்தக் கொடி – 'சிவகாமவல்லி' என்புழிக்காண்க. கம்பம் – அசைவு. கட்டுந்தூண். கரி – கரத்தை உடையது. யானை, காபாலி – பிரம கபாலத்தை ஏந்தியவன். கறை – நஞ்சு. வம்பு – மணம்.

Behold! It is Civan, Lord of Thiru-brahma-puram. He is our Master, sweet like elixir. He is the Thambiran – God and Supreme Being of those who worship His holy feet. He holds fire in His hand. He removed the hide of the big rutted elephant and covered His body with that hide. His neck is dark blue in colour. Such a great Supreme Being is manifest in Thiru-brahma-puram where fragrance spreads all over the city from the multiple flowers of the groves. He is the Supreme Being of the firmament.

1896. தாமென்றுமனந்தளராத்தகுதியராயுலகத்துக்
காமென்றுசரண்புகுந்தார்தமைக்காக்குங்கருணையினான்
ஓமென்றுமறைபயில்வார்பிரமபுரத்துறைகின்ற
காமன்றனுடலெரியக்கனல்சேர்ந்தகண்ணானே. 2

தா என்றும் மனம் தளராத் தகுதியராய், உலகத்துக்
"காம்!" என்று சரண் புகுந்தார்தமைக் காக்கும் கருணையினான் -
"ஓம்!" என்று மறை பயில்வார் பிரமபுரத்து உறைகின்ற
காமன் தன்(ன்) உடல் எரியக் கனல் சேர்ந்த கண்ணானே.

tAm en2Rum man2am taLarAt takutiyarAy, ulakattuk
"kAm!" en2Ru caraN pukuntAr tamaik kAkkum karuNaiyin2An2--
"Om" en2Ru maRai payilvAr piramapurattu uRaikin2Ra
kAman2 tan2(n2) uTal eriyak kan2al cErnta kaNNAn2E.

பொருள்: அடியவர்கள் தமக்கு ஏற்படும் துன்பங்களைக் கண்டு மனம் தளர மாட்டார்கள். எல்லாம் இறைவன் அருளே என்று கொண்டு அவனையே சரணடைவார்கள். அவர்களைக் காக்கும் கருணை நிறைந்தவனே ஈசன். மறையவர்கள் ஈசனையே ஓம் என்று கூறி ஓதி மகிழ்வர். அவனே பிரமபுரத்துள் கோயில் கொண்டுள்ளான். அவனே தேவர்கள் சொல்லக் கேட்டு நடந்து கொண்ட காமனை எரித்த கண்ணை உடையவனும் ஆவான்.

குறிப்புரை: உலகத்துக்கு அடைக்கலம் சருவேசுவரன் ஒருவனே ஆவான் என்று, என்றும் மனம் தளராத தகுதியை உடையவராகி, அச்சிவபிரானையே சரணம் அடைந்தவர்களைக் காக்கும் கிருபாகரன். ஓம்

என்று – ஓம் என்று பிரணவ மந்திரத்தை ஓதி. உறைகின்ற கண்ணான்; எரியச்சேர்ந்த கண் என்க. மன்மத தகனம்.

Behold! It is Civan, Lord of Thiru-brahma-puram. He is merciful to protect those devotees who do not give up their will power. They have crystal clear faith in their minds and submit themselves at His lotus feet. They accept everything as the grace of God. In the city of Thiru-brahma-puram, Vedic scholars recite the absolute sacred mantra 'Ohm' always and forever. Our Lord burnt the god of love for his misdeed with His fire-filled, forehead eye. He is our Supreme God who is manifest in Thiru-brahma-puram.

1897. நன்னெஞ்சேயுனையிரந்தேன்நம்பெருமான்திருவடியே
உன்னஞ்செய்திருகண்டாயுய்வதனைவேண்டுதியேல்
அன்னஞ்சேர்பிரமபுரத்தாரமுதையெப்போதும்
பன்னுஞ்சீர்வாயதுவேபார்கண்ணேபரிந்திடவே. 3

நன்னெஞ்சே! உனை இரந்தேன்; நம்பெருமான் திருவடியே
உன்னம்செய்து இருகண்டாய்! உய்வதனை வேண்டுதியேல்,
அன்னம் சேர் பிரமபுரத்து ஆரமுதை, எப்போதும்
பன், அம் சீர் வாய்அதுவே! பார், கண்ணே, பரிந்திடவே!

nan2 nenjcE! un2ai irantEn2; namperumAn2 tiruvaTiyE
un2n2am ceytu iru kaNTAy! uyvatan2ai vENTutiyEl,
an2n2am cEr piramapurattu Aramutai, eppOtum
pan2, am clr vAy atuvE! pAr, kaNNE, parintiTavE!

பொருள்: நன்னெஞ்சே! உன்னை வேண்டுகிறேன்! நீ எப்பொழுதும் நம்பெருமானின் திருவடிகளையே நினைத்துக் கொண்டிரு. நீ நற்கதி அடைய பிரமபுரத்துள் கோயில் கொண்டு விளங்கும் நம்பெருமானின் சிறப்புக்களையே பேசிக் கொண்டிரு. அவனது திருக்கோலத்தையே உன் கண்ணால் எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருப்பாயாக.

குறிப்புரை: நல்ல நெஞ்சமே! நீ உய்தி வேண்டுவாயானால் உன்னை இரந்தேன். இரந்தது என்ன என்றால், நம்பெருமான் திருவடிகளையே சதாகாலமும் நினைவுசெய்திரு. அன்னம் ஆசிரியர் காலத்திலிருந்தமை புலப்பட்டது. வாயதுவே – வாயே! எப்போதும் ஆரமுதைப் பன். அம்சீர்பன் – அழகிய

கீர்த்தியைப் பன்னுக. கண்ணே! பரிந்திடப்பார். பரிந்திட – சிவபிரான் இரங்கி அருள்செய்ய. பார் – கேசாதிபாதம் + பாதாதிகேசம் தரிசித்துக் குளிர்வாய்.

Behold! It is Civan, our Lord at Thiru-brahma-puram. Oh my blessed mind! I beg you, listen. If you want really to get salvation, you should always ponder over the holy lotus feet of our Lord at Thiru-brahma-puram. In this city you see groups of swans float together. They move round the temple of our Lord and pray. He is a very rare Supreme Being like nectar and is manifest in Thiru-brahma-puram. Oh my mind! Praise His glory ever with your mouth. Oh my eyes! always see Him and enjoy His beauty. He will shower benign compassion on you. Let us, with out heart and soul, and tongue and eyes, praise Him and speak of Him.

1898. சாநாளின்றிம்மனமேசங்கைதனைத்தவிர்ப்பிக்குங்
கோனாளுந்திருவடிக்கேகொழுமலர்தூவெத்தனையுந்
தேனாளும்பொழிற்பிரமபுரத்துறையுந்தீவணனை
நாநாளுமநல்நியமஞ்செய்தவன்சீர்நவின்றேத்தே. 4

*சாம் நாள் இன்றி(ம்), மனமே! சங்கைதனைத் தவிர்ப்பிக்கும்
கோன் ஆளும் திருவடிக்கே கொழு மலர் தூவு! எத்தனையும்
தேன் ஆளும் பொழில் பிரமபுரத்து உறையும் தீவணனை,
நா, நாளும் நன்நியமம் செய்தவன், சீர் நவின்று ஏத்தே!*

cAm nAL in2Ri(m), man2amE! cagkaitan2ait tavirppikkum
kOn2 ALum tiruvaTikkE kozumalar tUvu! ettan2aiyum
tEn2 ALum pozil piramapurattu uRaiyum tIvaNan2ai,
nA, nALum nan2niyamam ceytu, cIr navin2Ru EttE!

பொருள்: மனமே! சாவைப்பற்றி நினையாதே! சாகும் நாள் வரை உன்னை ஈசன் காப்பான்! ஐயம் வேண்டாம். அவனது திருவடிகளில் மலர் தூவி வணங்கு. தேன்நிறைந்த பூக்கள் உள்ள சோலைகள் சூழ்ந்த பிரமபுரத்துள் கோயில் கொண்டுள்ள ஈசனை நீ எந்நாளும் போற்று. அத்தீவண்ணனை நாளும் வழிபடு. அதுவே நீ செய்ய வேண்டுவனவாம்.

குறிப்புரை: சாம்நாள் இன்றி, இகரத்தைச் சுட்டாக்குதல் பொருந்தாது. சங்கை – சாகும் நாள் உண்டோ இன்றோ என்னும் சந்தேகம். தவிர்ப்பிக்கும் – தவிரப்போக்கும். கோன் – தலைவன் (சிவபிரான்) மேல் 'திருவடியே' என்றும் இங்கு, 'திருவடிக்கே' என்றும் அருளியதை உணர்ந்து, மறந்து மற்றொன்றை

எண்ணாமை வேண்டும். தீவணன் – அழல் வண்ணத்தவன். நா – நாவே! நல்ல நியமம் செய்து அவன் சீரை நவின்று ஏத்து. நல்நியமம் – தோத்திரம் புரிதற்கு முன் செய்யற்பாலன ஆகிய பூஜாங்கங்களைத் தவறாமல் செய்யும் நியமம்.

Oh my mind! As long as you live you should live happily until your death. He will dispel all the doubts and fears from your mind. Everyday, you should go to the temple and strew sweet smelling flowers at His holy feet as much as you can. Oh my tongue! Have a disciplined way of spiritual life and praise our Lord's glory and worship Him, the Lord of fire. He is manifest in Thiru-brahma-puram, which is surrounded by groves full of trees and flowers with profuse honey. Do this you can live happily.

1899. கண்ணுதலான்வெண்ணீற்றான்கமழ்சடையான்விடையேறி
பெண்ணிதமாமுருவத்தான்பிஞ்ஞகன்பேர்பலவுடையான்
விண்ணுதலாத்தோன்றியசீர்பிரமபுரந்தொழவிரும்பி
எண்ணுதலாஞ்செல்வத்தையியல்பாகஅறிந்தோமே. 5

கண் நுதலான், வெண்ணீற்றான், கமழ் சடையான், விடைஏறி,
பெண் இதம்ஆம் உருவத்தான், பிஞ்ஞகன், பேர்பல உடையான்,
விண் நுதலாத் தோன்றிய சீர்ப் பிரமபுரம் தொழ விரும்பி
எண்ணுதல் ஆம் செல்வத்தை இயல்புஆக அறிந்தோமே.

kaN nutalAn2, veN nIRRAn2, kamaz caTaiyAn2, viTai ERi,
peN itam Am uruvattAn2, pinjnjakan2, pErpala uTaiyAn2,
viN nutalAt tOn2Riya cIrp piramapuram toza virumpi
eNNutal Am celvattai iyalpu Aka aRintOmE.

பொருள்: ஈசன், நெற்றிக் கண்ணை உடையவன். திருநீற்றை அணிந்தவன். நீண்ட சடையினை உடையவன். இடப வாகனத்தில் ஏறி அமர்ந்தவன். அர்த்தநாரீஸ்வரன். உயர் புகழ் கொண்ட பிரமபுரத்துள் கோயில் கொண்டவன். உயர் செல்வமாக விளங்கும் அவனைத் தொழும் புண்ணியத்தை இயல்பாகவே நாம் பெற்றுள்ளோம்.

குறிப்புரை: கண்நுதலான் – நுதலிற் கண்ணை உடையவன். கண்ணை உடைய நுதலினன். நுதலும் (கருதும்) இடமாதலின், 'நுதல்' எனப்பட்டது; கண்ணுதல் என்றதும் அதுபற்றியே. செந்தீயான் (கண்ணுதலான்) என்று கருதின் வெண்ணீற்றான் முரண்டொடையாம். ஏறி பெயர்ச்சொல். இதம் –

நன்மை. பிஞ்ஞகன் – தலைக்கோலத்தன். பேர்பல – 'பேராயிரம் (பரவிவானோர் ஏத்தும் பெம்மான்') விண் – விண்ணோர்க்கு இடவாகுபெயர். நுதலா – கருதுதலாக. எண்ணுதலாம் செல்வத்தை – தியானிக்கும் ஐசுவரியத்தை. இயல்பாக – உள்ளவாறு.

Oh devotees! All of us naturally understand and know that the Supreme Being at Thiru-brahma-puram is alone our Lord. He has one more eye at the center of His forehead. He has smeared His body with white ashes. He keeps His matted hair always fragrant. He has a bull for His transport. He shares the left side of His body with His consort Umaa. He takes different forms according to the need of time. He has many names to identify Him. He is manifest in the temple at Thiru-brahma-puram, as glories and wealth. We pray at His holy feet and this prayerful nature is ours. We will attain salvation, you may believe.

1900. எங்கேனும்யாதாகிப்பிறந்திடினுந்தன்னடியார்க்
கிங்கேயென்றருள்புரியுமெம்பெருமானெருதேறிக்
கொங்கேயுமலர்ச்சோலைக்குளிர்பிரமபுரத்துறையுஞ்
சங்கேயொத்தொளிர்மேனிச்சங்கரன்றன்றன்மைகளே. 6

எங்கேனும் யாது ஆகிப் பிறந்திடினும்; தன் அடியார்க்கு
"இங்கே" என்று அருள்புரியும் - எம்பெருமான், எருது ஏறி,
கொங்கு ஏயும் மலர்ச்சோலைக் குளிர் பிரமபுரத்து உறையும்
சங்கே ஒத்து ஒளிர் மேனிச் சங்கரன், தன் தன்மைகளே!

egkEn2um yAtu Akip piRantiTin2um, tan2 aTiyArkku
"igkE" en2Ru aruLpuriyum--emperumAn2, erutu ERi,
kogku Eyum malarccOlaik kuLir piramapurattu uRaiyum
cagkE ottu oLir mEn2ic cagkaran2, tan2 tan2maikaLE!

பொருள்: எந்த இடத்திலும் மற்றும் எவ்வகையிலும் பிறந்த அடியவர்களுக்கும் அருள்பவனே ஈசன் ஆவான். அவன் அடியவர்களுக்கு எளிதில் அருள்புரியவே, சோலைகள் சூழ்ந்த பிரமபுரத்துள் கோயில் கொண்டுள்ளான். சங்கு போன்ற வெண்ணிறமுடைய அச்சங்கரனை அத்தலத்துள் கண்டு இன்புறுவோமாக.

குறிப்புரை: எங்கு யாது பிறந்திடினும் என்பதும், எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் என்பதும் பொருள் வேறுபாடுடையன, இடமும் பிறப்பும் வேறுபட்டாலும் அடியார்க்கு ஆண்டவனருள் கிடைப்பது திண்ணம்.

'எங்கேனும் இருந்து, எங்கே போவேனாயிடினும், எங்கேனும் போகினும்' என்னுந் தொடக்கத்துத் திருப்பாட்டுக்களை (திருமுறை 7) அறிக. இங்கே என்றது பிறந்த இடத்தையும் அப்பிறவியையும் குறித்து நின்றது. கொங்கு – மணம். ஏயும் – பொருந்தும். பவளம் போலும் மேனியிற்பால் வெண்ணீறு சண்ணித்த. திருமேனிக்குச் சங்கு ஒப்பு. எம்பெருமான் சங்கரன்றன் தன்மைகள் இங்கே என்று அருள்புரியும் என்றியைக்க.

Behold! It is Civan, our Lord at Thiru-brahma-puram. All around this city of Thiru-brahma-puram, there are many gardens full of tall trees and a number of flowering plants. They yield good honey. Our Lord is graceful to all - wherever they were born and whichever birth, they might have had. He tells us to go to Thiru-brahma-puram, where He is manifested. He waits for His devotees to grace them. He rides on the bull wherever He wants to reach. His body is pure white like conch. These are the virtues of our Lord Sankaran who is manifest in Thiru-brahma-puram along with His consort Umaa. Let us go to the temple and worship His holy feet and be happy.

1901. சிலையதுவெஞ்சிலையாகத்திரிபுரமூன்றெரிசெய்த
இலைநுனைவேல்தடக்கையனேந்திழையாளொருகூறன்
அலைபுனல்சூழ்பிரமபுரத்தருமணியையடிபணிந்தால்
நிலையுடையபெருஞ்செல்வம்நீடுலகிற்பெறலாமே. 7

சிலை அதுவே சிலைஆகத் திரிபுரம் மூன்று எரிசெய்த
இலைநுனை வேல்-தடக்கையன், ஏந்திழையாள் ஒருகூறன்,
அலை புனல் சூழ் பிரமபுரத்து அருமணியை அடி பணிந்தால்,
நிலை உடைய பெருஞ்செல்வம் நீடு உலகில் பெறல் ஆமே.

cilai atuvE cilai Akat tiri puram mUn2Ru ericeyta
ilai nun2ai vEl-taTakkaiyan2, EntizaiyAL orukURan2,
alai pun2al cUz piramapurattu arumaNiyai aTi paNintAl,
nilai uTaiya perunjcelvam nITu ulakil peRal AmE.

பொருள்: ஈசன், மேரு மலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எரித்தான். அவனே சூலப்படையினைக் கையில் கொண்டுள்ளான். உமையவளைத் தன் உடம்பின் இடபாகத்தில் கொண்டுள்ளான். கடல் சூழ்ந்த பிரமபுரத்துள் கோயில் கொண்டுள்ள அருமணியாகிய அவனைத் தொழுது நிலையான செல்வத்தை நாம் பெறுவோமாக.

குறிப்புரை: சிலை அது – மேரு மலையானது. (அது; பகுதிப் பொருள் விகுதி) சிலை – வில் (பதிகம் 173, பா. 7, குறிப்புணர்க) திரிபுரம் – வினைத்தொகை. 'திரிதருபுரம் எரிசெய்த சேவகன்' (தி.3 ப.23 பா.9). 'திரியும் மூவெயில்' (தி.4 ப.20 பா.7, தி.5 ப.25 பா.4) 'திரியும் மும்மதில்' (தி.5 பதி.36 பா.10). 'திரியும் முப்புரம்' (சுந்தரர் பா. 626, 685, 809) இலை – உவமை. நிலையுடைய பெருஞ் செல்வம் – சிவாநந்தாநுபவம். நீடுலகு – வானோர்க்குயர்ந்த உலகம்.

Behold! It is Civan, our Lord of Thiru-brahma-puram. He bent mount Meru as a bow and shot an arrow on the three flying forts of the adversary, the asuraas. The forts were burnt and completely destroyed. He holds in His long hand the three leaf pointed long lancer. He shares half of His left body with His consort Umaa. This our Lord is manifest in Thiru-brahma-puram which is surrounded by the sea, He exhibits Himself as a rare gem. Those devotees who worship the holy feet of our Lord in Thiru-brahma-puram, can get the immense, permanent wealth of salvation in the celestial world of the devaas.

1902. எரித்தமயிர்வாளரக்கன்வெற்பெடுக்கத்தோளொடுதாள்
நெரித்தருளுஞ்சிவமூர்த்திநீறணிந்தமேனியினான்
உரித்தவரித்தோலுடையானுறைபிரமபுரந்தன்னைத்
தரித்தமனமெப்போதும்பெறுவார்தாந்தக்காரே. 8

எரித்த மயிர் வாள் அரக்கன் வெற்பு எடுக்க, தோளொடு தாள்
நெரித்து அருளும் சிவமூர்த்தி, நீறு அணிந்த மேனியினான்,
உரித்த வரித்தோல் உடையான், உறை பிரமபுரம் தன்னைத்
தரித்த மனம் எப்போதும் பெறுவார் தாம் தக்காரே.

eritta mayir vAL arakkan2 veRpu eTukka, tOLoTu tAL
nerittu aruLum civamUrtti, nIRu aNinta mEn2iyin2An2,
uritta varittOl uTaiyAn2, uRai piramapuram tan2n2ait
taritta man2am eppOtum peRuvAr tAm takkArE.

பொருள்: ஈசன், கயிலை மலையைத் தூக்க முயன்ற இராவணனின் தோளையும் தாளையும் நெரித்தார். அவரே பின்பு அவனுக்கு அருளினார். நீறணிந்த மேனியராகிய அவரே, யானையைக் கொன்று அதன் தோலை உரித்து ஆடையாகப் போர்த்தி உள்ளார். அவரே

பிரமபுரத் தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அவரை மனமார வணங்கியவர்கள் எப்போதும் பெருந்தகை உடையாராக வாழ்வார்கள்.

குறிப்புரை: சிவமூர்த்தி – சிவமாகிய மூர்த்தி. தக்கார் – பெருந்தகையுடையார். மாண்டி சேர்தல் தக்காரிலக்கணம் எனப்பட்டது. கற்றதனாலாய பயன் அதுவே. பார்க்க. பா. 10. 'தோளொடு தாள்' என்புழித் தோளொடு தாளையும் தாளொடு தோளையும் சேர்த்து நெரித்து என்று கொள்ளலாகாது. தோளையும் தாளையும் நெரித்து எனல் வேண்டும். சிவமூர்த்தி என்பதில், மூர்த்தியும் மூர்த்தி மானும் ஆக வெவ்வேறாக கொள்ளாமல் அபேதபுத்தியொடு தியானம் பண்ணுக.

Behold! It is Civan, our Lord in Thiru-brahma-puram. He has smeared His body with holy ashes. A fierce rutted elephant came running towards Him. Our Lord killed the elephant and covered His body with its hide. Raavanan, the king of Sri Lanka had hair like burning fire. Holding a dagger in his hand, he tried to lift the mount Himalayas, the abode of our Lord Civan. Instantaneously our Lord crushed his shoulders and heads. Later when Raavanan begged pardon our Lord graced him. This Lord manifests Himself in the temple in Thiru-brahma-puram. Those devotees who wholeheartedly and always think about the holy place Thiru-brahma-puram in their minds will be noble-minded forever. Let Him dwell forever in our minds.

1903. கரியானும்நான்முகனுங்காணாமைக்கனலுருவாய்
அரியானாம்பரமேட்டிஅரவஞ்சேரகலத்தான்
தெரியாதானிருந்துறையுந்திகழ்பிரமபுரஞ்சேர
உரியார்தாமேழுலகுமுடனாளவுரியாரே. 9

கரியானும் நான்முகனும் காணாமைக் கனல் உருஆய்
அரியான்ஆம் பரமேட்டி, அரவம் சேர் அகலத்தான்,
தெரியாதான், இருந்து உறையும் திகழ் பிரமபுரம் சேர
உரியார் தாம் ஏழ்உலகும் உடன் ஆள உரியாரே.

kariyAn2um nAn2mukan2um kANAmaik kan2al uru Ay
ariyAn2 Am paramETTi, aravam cEr akalattAn2,
teriyAtAn2, iruntu uRaiyum tikaz piramapuram cEra
uriyArtAm Ez ulakum uTan2 ALa uriyArE.

பொருள்: கரிய நிறமுடைய திருமாலும் பிரமனும் ஈசனைக் காண முயன்றனர். அவர்கள் அடிமுடி தேடிக் காணமுடியா நிலையில் நெருப்பு வடிவில் விளங்கியவரே ஈசன். அவனே பாம்பினை அணிந்துள்ளான். யார்க்கும் எளிதில் அறிய முடியாத தத்துவனும் அவனே. பிரமபுரத்துள் கோயில் கொண்டுள்ள அவனை வணங்குபவர்களே, ஏழுலகத்தையும் ஆளும் உரிமை உடையவர்கள் ஆவார்கள்.

குறிப்புரை: பரமேட்டி – தன்னின் மேலதில்லாத. உயரிய நிலையினை. அரவம் – பாம்பு. அகலம் – மார்பு. தெரியாதவன் – சிந்தையும் மொழியுஞ் சென்று தெரிதற்கு அரியவன். போய்க்காடே மறைத் துறைதல் புரிந்தானும் (ப.177 பா.2) ஆம். பிரமபுரத்தை இடைவிடாது சேர்ந்து தியானம் புரியும் உரிமையடைவார்க்கு ஏழுலகாட்சியுரிமை உண்டு. உலகாட்சி ஆண்டவனை வழிபட்டால்தான் எய்தும்.

Behold! It is Civan, Lord of Thiru-brahma-puram. The demigods Thirumaal and the four-faced Brahma did their best to see our Lord's head and foot for years in vain. Then our Lord rose as an infinite column of fire. Our Lord could not be comprehended by these two demigods. He is God Supreme. He has adorned His chest with snake. He is invisible to human's naked eye. This our Lord manifests Himself in the temple in Thiru-brahma-puram. Those good people who can reach the temple in Thiru-brahma-puram and worship our Lord, will be really blessed by Him to deserve to rule all the seven worlds.

1904. உடையிலார்சீவரத்தார்தன்பெருமையுணர்வரியான்
முடையிலார்வெண்டலைக்கைமூர்த்தியந்திருவுருவன்
பெடையிலார்வண்டாடும்பொழிற்பிரமபுரத்துறையுஞ்
சடையிலார்வெண்பிறையான்தாள்பணிவார்தக்காரே. 10

உடை இலார், சீவரத்தார், தன் பெருமை உணர்வு அரியான்;
முடையில் ஆர் வெண்தலைக் கை மூர்த்திஆம் திருஉருவன்;
பெடையில் ஆர் வண்டு ஆடும் பொழில் பிரமபுரத்து உறையும்
சடையில் ஆர் வெண்பிறையான்; தாள் பணிவார் தக்காரே.

iTai ilAr, cIvarattAr, tan2 perumai uNarvu ariyAn2;
muTaiyil Ar veNtalaik kai mUrtti Am tiru uruvan2;
peTaiyil Ar vaNTu ATum pozil piramapurattu uRaiyum
caTaiyil Ar veNpiRaiyAn2; tAL paNivAr takkArE.

பொருள்: ஈசன் பிரம கபாலத்தை ஏந்திய மூர்த்தி ஆவான். அழகிய உருவினன் ஆவான். வண்டுகள் மொய்க்கும் சோலைகள் நிறைந்த பிரமபுரத்துள் கோயில் கொண்டவன் ஆவான். பிறை நிலவைத் தன் தலையில் கொண்டவன் ஆவான். அவனது பெருமைகளைச் சமணர்களும் சாக்கியர்களும் உணரமாட்டார்கள். இறைவனின் திருவடிகளைப் பணிபவர்களே உணரும் தகுதியுடைய சிறந்தோர் ஆவர்.

குறிப்புரை: உடையிலார் – திகம்பரர். சீவரத்தார் – புத்தர். முடையில் – சுடுநாற்றத்தில். ஆர் – பொருந்திய. மூர்த்தியாந் திருவுருவு – ஞானமூர்த்தி, மந்திரமூர்த்தி, அத்துவாமூர்த்தி முதலியன. உருவன் – மூர்த்திமான், உருவை உடையவன் தக்காரிலக்கணம் (பார்க்க. பா. 8).

Behold! It is Civan, our Lord in Thiru-brahma-puram. The Jains who are often naked and the Buddhists who cover their body with white robes are unable to comprehend our Lord. For obvious reasons our Lord occasionally carries human skull for alms, which emits fleshy odour. He has adorned His head with the white baby moon. Our Lord is manifest in the temple in Thiru-brahma-puram. In this city, there are many gardens around the temple and other areas, where the male beetles with their females make humming music and play together. Those servitors are really great and virtuous who worship the holy feet of our Lord. They will be blessed by our Lord.

1905. தன்னடைந்தார்க்கின்பங்கள்தருவானைத்தத்துவனைக்
கன்னடைந்தமதிற்பிரமபுரத்துறையுங்காவலனை
முன்னடைந்தான்சம்பந்தன்மொழிபத்துமிவைவல்லார்
பொன்னடைந்தார்போகங்கள்பலவடைந்தார்புண்ணியரே. 11

தன் அடைந்தார்க்கு இன்பங்கள் தருவானை, தத்துவனை,
கன் அடைந்த மதில் பிரமபுரத்து உறையும் காவலனை,
முன் அடைந்தான் சம்பந்தன் மொழி பத்தும் இவை வல்லார்
பொன் அடைந்தார்; போகங்கள் பல அடைந்தார்; புண்ணியரே.

tan2 aTaintArkku in2pagkaL taruvAn2ai, tattuvan2ai,
kan2 aTainta matil piramapurattu uRaiyum kAvalan2ai,
mun2 aTaintAn2 campantan2 mozi pattum ivai vallAr
pon2 aTaintAr; pOkagkaL pala aTaintAr; puNNiyarE.

பொருள்: ஈசன், தன்னை அடைந்த பக்தர்களுக்கு இன்பம் தருபவன் ஆவான். அவன் மதில் சூழ்ந்த பிரமபுரத்துள் மேவிய காவலன் ஆவான். அவனைப் புகழ்ந்து அன்புடன் அடைந்த

ஞானசம்பந்தப் பெருமான் பத்துப் பாடல்களைப் பாடி அருளியுள்ளார். அப்பாடல்களைப் பாடிட வல்லவர்கள் இவ்வுலகில் இன்பங்களை அடைவர். மறுமைக்குரிய நற்பேற்றையும் பெறுவர்.

குறிப்புரை: தன் அடைந்தார்க்கு – தன்னை அடைந்த அன்பர்க்கும் அறிவர்க்கும் இன்பங்கள் – பெத்தத்திலுள்ள சிற்றின்பங்களும் முத்திப் பேரின்பமும். தத்துவன் – மெய்ப்பொருள். கன் – கல் (அடைந்த மதில்) முன் – முற்பிறப்பு, இளமை, சந்நிதி, தந்தை முதலியோர் எதிர் என்ற பொருளும் குறித்து நிற்றலறிக. வல்லார் எழுவாய் அடைந்தார் இரண்டும் வினைப்பயனிலை, புண்ணியர் பெயர்ப்பயனிலை உம்மை கொடுத்து ஆக்கம் (ஆவர்) வருவித்து முடித்தலுமாம்.

Our saint Thiru-gnana-Sambandar hails from Thiru-brahma-puram. This city of Thiru-brahma-puram is surrounded by blue granite stone compound walls. Our Lord who is the embodiment of philosophy blesses all devotees who pray at His holy feet. Our saint Thiru-gnana-Sambandar was specially blessed and graced with serene knowledge when he was three years old by our Lord o f Thiru-brahma-puram. With his divine knowledge he sang these ten divine songs on our Lord of Thiru-brahma-puram. Those scholars and holy men who can recite in good musical tone these ten divine songs on our Lord of Thiru-brahma-puram will be blessed by our Lord. They will be blessed with gold and prosperity, needed in this world, and with benediction and bliss in the immaterial world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

40ஆம் பதிகம் முற்றிற்று
End of 40th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 177 *பதிக எண்: 41*

41. திருச்சாய்க்காடு

41. THIRUCH-CHAAYK-KAADU

பண் : இந்தளம் – வினாஉரை *Pann: Indhalam - Vinaa Urai*

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண்: 174–ஐப் பார்க்க.

பதிக வரலாறு

திருவலம்புரத்தை வழிபட்ட திருஞானசம்பந்தப் பெருமானார், நீர்வளம் நிறைந்த சீர்வளர் சாய்க்காட்டைத் தொழுதற்கு நினைந்து சென்று, திருப்பல்லவனீச்சரத்தைச் சொல்லழகும் பொருளழகும் பேரின்புற்றும் அமையப் பாடிப்பரவி, பொன்னிசூழ் புகாரில் நீடிய புனிதரது திருச்சாய்க்காட்டை, திருத்தொண்டர் பலரும் எதிர்கொள்ளச் சென்று, வானளாவி உயர்ந்த திருவாயினுள் வலங்கொண்டு, புகுந்து பணிந்து போற்றியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1906. மண்புகார்வான்புகுவர்மனமிளையார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்தாள்சார்ந்தாரே. 1

மண் புகார், வான் புகுவர், மனம் இளையார்; பசியாலும்
கண் புகார்; பிணி அறியார்; கற்றாரும் கேட்டாரும்
விண் புகார் என வேண்டா - வெண் மாட நெடுவீதித்
தண் புகார்ச் சாய்க்காட்டு எம் தலைவன் தாள் சார்ந்தாரே.

maN pukAr, vAn2pukuvar; man2am iLaiyAr; paciyAlum
kaN pukAr; piNi aRiyAr; kaRRArum kETTArum
viN pukAr en2a vENTA--veN mATa neTuvItit
taN pukArc cAykkATTu em talaivan2 tAL cArntArE.

பொருள்: மாடங்கள் பொருந்திய பெரிய வீதிகளைக் கொண்டது சாய்க்காடு என்னும் தலம். அத்தலத்தில் கோயில் கொண்டுள்ள ஈசனைச் சார்ந்த அன்பர்கள் மண்ணில் பிறந்து

உளைந்து வருந்தார். விண்ணுலக இன்பத்தை இங்கேயே உறுவர். மனம் வருந்தார். பசித்துன்பம் அடையார். பிணி அடையார். இறைவனை எப்போதும் வழிபட்டு இன்புறுவர்.

குறிப்புரை: மண் புகார் – பிறவார் என்றவாறு. வான்புகுவார் – பேரின்பம் அடைவார் என்றவாறு. மனம் இளையார் முதலிய மூன்றும் இம்மை நலம் குறித்தவை. கண்புகார் – இடுக்கண் உறார் (இடுங்குகன்) கற்றவரும் கேட்டவரும் என்பது இடைநிலை விளக்கா நின்று முன்னும் பின்னும் உள்ள பயனிலைகட்கு எழுவாயாயின. விண்ணிற் புகமாட்டார் எனல் வேண்டா, அதனினும் உயர்ந்த சிவலோகம் சேர்ந்து, திருவடியைச் சார்ந்தாரே. வீதிக்கு வெண்மாடம் விசேடம். புகார் – காவிரிப்பூம்பட்டினம் (பா. 4).

Behold! It is Civan, our Lord in Thiruch-chaayk-kaadu. The city is full of white palaces and long bazaars. Those blessed people who pray at the lotus feet of the Lord at Thiruch-chaayk-kaadu situated near Poompukar, will not suffer on this earth. Those who study and recite the glory of our Lord and those who hear these divine glories, will not be born again in this world; they will reach heaven. They will never be depressed in their minds. They will be free from the pangs of hunger. No disease will inflict them. Those who learn or hear His glories need not go to the celestial world. They will have all bliss on this earth itself.

1907. போய்க்காடேமறைந்துறைதல்புரிந்தானும்பூம்புகார்ச்
சாய்க்காடேபதியாகவுடையானும்விடையானும்
வாய்க்காடுமுதுமரமேயிடமாகவந்தடைந்த
பேய்க்காடல்புரிந்தானும்பெரியோர்கள்பெருமானே. 2

போய்க் காடே மறைந்து உறைதல் புரிந்தானும், பூம் புகார்ச்
சாய்க்காடே பதிஆக உடையானும், விடையானும்,
வாய்க் காடு முதுமரமே இடம்ஆக வந்து அடைந்த
பேய்க்கு ஆடல் புரிந்தானும், பெரியோர்கள் பெருமானே.

pOyk kATE maRaintu uRaital purintAn2um, pUm pukArc
cAykkATE pati Aka uTaiyAn2um, viTaiyAn2um,
vAyk kATu mutumaramE iTam Aka vantu aTainta
pEykku ATal purintAn2um, periyOrkaL perumAn2E.

பொருள்: ஈசனே! காட்டில் மறைந்து உறைதலை விரும்புபவன். திருச்சாய்க்காட்டைத் தலமாகக் கொண்டு உறைபவன். இடப வாகனத்தைக் கொண்டவன். பேய்கள் விரும்பி

ஆடும் ஆலமரங்கள் நிறைந்த சுடுகாட்டில் ஆடல் புரிபவன். பெரியோர்களால் பெரிதும் போற்றப்படும் பெருமான் அவனே ஆவான்.

குறிப்புரை: காடே போய் மறைந்து உறைதல் புரிந்தான் – காட்டிலே சென்று ஒளிந்து வாழ்தலை விரும்பினவன். புகாரும் சாய்க்காடும் நெருங்கியிருத்தலால் புகார்ச்சாய்க்காடு என்றார். பதி – வாழுமிடம். வாய்க்காடு, காட்டுவாய் என மாற்றிக் காட்டின்கண் என்று உரைத்துக் கொள்க. வாய் – இடம் (அகன்ற) காடு என்றுமாம். முது மரம் – ஆல மரம். பேய்க்கு ஆடல் – பேயின் பாடலுக்குத்தக ஆடுதலை. 'பேயடைந்த காடிடமாப் பேணுவது' 'பேயாயினபாடப் பெரு நடமாடிய பெருமான்' (தி. 1 பதி. 48 பா. 5; தி. 1 பதி. 15 பா. 3). புரிந்தாலும் முதலிய நான்கும் கூட்டிப் பெருமானே என்பதொடு முடிக்க.

Behold! It is Civan, our Lord at Thiruch-chaayk-kaadu near Poompukar. He desires to reside secluded and hidden at the thick forest. He owns a bull for His transport. In the forest area there is an age old banyan tree. Under this tree devils sing the songs of glory of our Lord. He dances there according to their music. He is the Supreme Lord glorified by great men.

1908. நீநாளும்நன்னெஞ்சேநினைகண்டாய்யாரறிவார்
சாநாளும்வாழ்நாளுஞ்சாய்க்காட்டெம்பெருமாற்கே
பூநாளுந்தலைசுமப்பப்புகழ்நாமஞ்செவிகேட்ப
நாநாளும்நவின்றேத்தப்பெறலாமேநல்வினையே. 3

நீ நாளும், நன்நெஞ்சே, நினைகண்டாய்! ஆர் அறிவார்,
சாநாளும் வாழ்நாளும்? சாய்க்காட்டு எம்பெருமாற்கே
பூ நாளும் தலை சுமப்ப, புகழ் நாமம் செவி கேட்ப,
நா நாளும் நவின்று ஏத்த, பெறல் ஆமே, நல்வினையே.

nI nALum, nan2nenjcE, nin2aikaNTAy! Ar aRivAr,
cAnALum vAznALum? cAykkATTu emperumARkE
pU nALum talai cumappa, pukaz nAmam cevi kETpa,
nA nALum navin2Ru Etta, peRal AmE, nalvin2aiyE.

பொருள்: நல்நெஞ்சமே! சாநாளும், வாழ்நாளும் யாருக்கும் தெரியாது. எனவே நீ தினந்தோறும் திருச்சாய்க்காடு ஈசன்மீது அன்பு கொண்டு, நல்ல மலர்களைப் பறித்து வந்து இறைவனின் நாமங்களைச் சொல்லியும் கேட்டும் வழிபாடு செய்வாயாக. அவ்வாறு செய்தால் நீ நல்வினைப் பயன்களைப் பெறலாம்.

குறிப்புரை: நல்நெஞ்சே! நீ நாளும் நினை. சாம்நாளும் வாழ்நாளும் அறிவார் ஆர்? எம்பெருமானுக்கே நாளும் தலை பூக்களைச் சுமக்கவும் செவிகள் அவன் திருப்புகழ்களையும் அவற்றைக் குறிக்கும். திருப்பெயர்களையும் கேட்கவும், நாக்கு அவற்றை நாளும் நவின்று ஏத்தவும் (செய்யும்) நல்வினையைப் பெறலாம். நல்வினையாற் பெறலாம் என்றுமாம். நவின்று – நாவால் சொல்லி அடிபட்டு, மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே (புறம், கடவுள் வாழ்த்து) இறப்பும் இருப்பும் அறியாமையால். இருக்கும்போதே முன்னை நல்வினைப் பயனாக நாடோறும் திருவடி நினைவு. பூச்சுமை, புகழ்க்கேள்வி. நாநவிற்சி ஆகிய சிவபுண்ணியங்களைத் தேடிக் கொள்க.

Oh my good mind! You think every day of our Lord of Thiruch-chaayk-kaadu who knows our day of birth and death. No one knows about it. Therefore, you collect flowers every day in the morning and carry them on your head to the temple where our Lord resides. Use your ears to hear the sacred words of His praise spoken by the sacred people of the temple - Archakars. Use your tongue everyday to pronounce His holy name sincerely with devotion. If you act daily according to this, you will get salvation and there is no doubt about it.

1909. கட்டலர்த்தமலர்தூவிக்கைதொழுமின்பொன்னியன்ற
தட்டலர்த்தபூஞ்செருந்திகோங்கமருந்தாழ்பொழில்வாய்
மொட்டலர்த்ததடந்தாழைமுருகுயிர்க்குங்காவிரிப்பூம்
பட்டினத்துச்சாய்க்காட்டெம்பரமேட்டிபாதமே. 4

கட்டு அலர்த்த மலர் தூவிக் கைதொழுமின் - பொன் இயன்ற
தட்டு அலர்த்த பூஞ்செருந்தி கோங்கு அமரும் தாழ்பொழில்வாய்,
மொட்டு அலர்த்த தடந்தாழை முருகு உயிர்க்கும் காவிரிப்பூம்-
பட்டினத்துச் சாய்க்காட்டு எம் பரமேட்டி பாதமே!

kaTTu alartta malar tUzik kaitozumin2--pon2 iyan2Ra
taTTu alartta pUnjcerutti kOgku amarum tAzpozilvAy,
moTTu alartta taTantAzai muruku uyirkkum kAvirippUm-
paTTin2attuc cAykkATTu em paramETTi pAtamE!

பொருள்: நல்ல மணமிக்க மலர்களைக் கொண்டு ஈசனை வழிபடுங்கள். நல்ல பொன்னிறமிக்க செருந்தி, கோங்கு முதலிய அழகிய மலர்களைத் தூவியும் வழிபடுங்கள். மொட்டவிழ்க்கும் தாழைமலர் போன்ற மணமிக்க சாய்க்காடு இறைவனின் திருவடிகளை வழிபடுங்கள்.

குறிப்புரை: கட்டு – (கள்+து) கள்ளுடைய அரும்புகளின் உறுதி நிலை; பிணிப்புமாம். அலர்ந்த – அலரச் செய்த. பிறவினை. சிவபூஜை செய்க என்று ஏவியருளியவாறு, பொன் இயன்ற தட்டு அலர்த்தபூ – பொன்னால் ஆகிய தட்டுப்போலும் பூத்த பூ, கோங்கு அமரும் பொழில், மொட்டு – அரும்புகள். முருகு – மணம். உயிர்க்கும் – (வெளி) விடும். பரமேட்டி – தனக்கு மேலில்லாத உயர்ந்த இடத்தினை உடையவன். பாதமே கைதொழுமின் என்று விற்பூட்டாக் கொள்க.

You the devotees! Collect fragrant and sweet flowers, go to the temple where our Lord has manifested Himself, strew the flowers and pray with both the hands to our Lord of Thiruch-chaayk-kaadu, a holy place near Kaaveri-poom-pattinam. There are many good gardens around the temple and city, with bending branches. The kongu plants blossom with honey. There the Pandanus plants shed the nectar from their blossomed spadix. These flowers are beautiful, like golden plates, strew such flowers at His feet, close your two hands, praise His name, and raise your joined hands in worship.

1910. கோங்கன்னகுவிமுலையாள்கொழும்பணைத்தோட்கொடியிடையைப்
பாங்கென்னவைத்துகந்தான்படர்சடைமேற்பால்மதியந்
தாங்கினான்பூம்புகார்ச்சாய்க்காட்டான்தாள்நிழற்கீழ்
ஓங்கினாரோங்கினாரெனவுரைக்குமுலகமே. 5

"கோங்கு அன்ன குவிமுலையாள், கொழும் பணைத்தோள் கொடியிடையைப்
பாங்கு என்ன வைத்து உகந்தான், படர்சடைமேல் பால்மதியம்
தாங்கினான் - பூம் புகார்ச் சாய்க்காட்டான்; தாள்நிழல்கீழ்
ஓங்கினார், ஓங்கினார்" என உரைக்கும், உலகமே.

"kOgku an2n2a kuvimulaiyAL, kozum paNaittOL koTiyiTaiyaip
pAgku en2n2a vaittu ukantAn2, paTarcaTaimEl pAlmatiyam
tAgkin2An2--pUm pukArc cAykkATTAn2; tAL nizal kIz
Ogkin2Ar, Ogkin2Ar" en2a uraikkum, ulakamE.

பொருள்: கோங்கு போன்றும், மூங்கில் போன்றும் பூங்கொடி போன்றும் விளங்குபவளே உமாதேவியைத் தன் இடபாகமாகக் கொண்டவரே ஈசன் ஆவார். அவர் தனது தலையில் சந்திரனைத் தாங்கியுள்ளார். அவர் பூம்புகாருக்கு அருகில் அமைந்த திருச்சாய்க்காட்டில்

கோயில் கொண்டுள்ளார். அவ்விறைவனை வணங்குபவர்களையே இவ்வுலகம் பெரிதும் போற்றிக் கொண்டாடும்.

குறிப்புரை: கோங்கு – கோங்கினரும்பு. அன்ன – ஒத்த. பனை – மூங்கில். பாங்கு – (பால்+கு) இடப்பால். பால் மதியம் – பால்போலும் வெண்டிங்கள். தாள்நிழல் கீழ் ஓங்கினார் – ஓங்குணர்வின் உள் அடங்கி உள்ளத்துள் இன்பு ஒடுங்கத் தூங்குவர் (திருவருட்பயன் 91) திருவடிக்கீழ் ஓங்கினவரே ஓங்கினவர், மற்று எங்கு ஓங்கினும் அஃது ஓங்குதலாகாது; தாழ்தலேயாகும். என உலகம் உரைக்கும் என்று மாற்றுக.

Behold! It is Civan, the Lord of Thiruch-chaayk-kaadu. He was very pleased to share half of His body with His consort Umaa. Her breasts are convexed like the bud of kongu flower; Her shoulders are as luxurious as a bamboo tree. Her waist is like tender creepers. His head He has adorned with the milk white baby moon. He has manifested Himself in the Thiruch-chaayk-kaadu temple near Poompukar. Those devotees who stand before His holy feet, raise their hands and worship Him will become praiseworthy persons on this earth.

1911. சாந்தாகநீறணிந்தான்சாய்க்காட்டான்காமனைமுன்
தீந்தாகமெரிகொளுவச்செற்றுகந்தான்திருமுடிமேல்
ஓய்ந்தாரமதிசூடியொளிதிகழும்மலைமகள்தோள்
தோய்ந்தாகம்பாகமாவுடையானும்விடையோனே. 6

சாந்து ஆக நீறு அணிந்தான், சாய்க்காட்டான், காமனை முன்
தீந்து ஆக எரி கொளுவச் செற்று உகந்தான், திருமுடி மேல்
ஓய்ந்து ஆர மதி சூடி ஒளி திகழும் மலைமகள் தோள்
தோய்ந்து ஆகம் பாகமா உடையானும், விடையோனே.

cAntu Aka nIRu aNintAn2, cAykkATTAn2, kAman2ai mun2
tIntu Akam eri koLuvac ceRRu ukantAn2, tirumuTimEl
Oyntu Ara mati cUTi, oLi tikazum malaimakaL tOL
tOyntu Akam pAkamA uTaiyAn2um, viTaiyAn2E.

பொருள்: ஈசன், திருநீற்றை அணிந்தவன். சாய்க்காட்டில் கோயில் கொண்டுள்ளவன். காமனை நெற்றிக்கண்ணால் எரித்துச் சாம்பலாக்கியவன். தனது தலையில் மதியைச் சூடியவன். மலைமகளைத் தன் உடம்பில் ஒருபாகமாகக் கொண்டவன். இடப வாகனத்தைக் கொண்டவனும் அவனே.

குறிப்புரை: சாந்து – சந்தனம். சாந்தாக நீறணிந்தான் – சாந்தம் ஈது என்று எம்பெருமான் அணிந்த நீறு (தி.1 பதி.52 பா.7). தீந்து – தீய்ந்து, எரிந்து. ஆகம் – உடம்பு. ஆகத்தைத் தீய்ந்து எரிகொளுவச் செற்று உகந்தான் என்க. கொள்ள – தன்வினை. கொளுவ – பிறவினை. கொளுத்த; பொருத்த. ஓய்ந்து ஆர – நுணுகிப் பொருந்த, ஓய்தலுற்றுத் தங்க எனலுமாம். மலைமகள் (உமாதேவி) தோய்ந்து – தழுவி.

Behold! It is Civan, the Lord of Thiruch-chaayk-kaadu. He has smeared His body with holy ashes. He burnt with the eye of His forehead, the god of love for his misdeed. Later He blessed him. He has adorned His graceful head with the baby moon in perfection. He enjoyed the tender shoulder of our goddess Umaa and gave her His left portion to share. He is our god who mounts on the bull whenever He moves about.

1912. மங்குல்தோய்மணிமாடம்மதிதவழும்நெடுவீதிச்
சங்கெலாங்கரைபொருதுதிரைபுலம்புஞ்சாய்க்காட்டான்
கொங்குலாவரிவண்டின்இசைபாடுமலர்க்கொன்றைத்
தொங்கலானடியார்க்குச்சுவர்க்கங்கள்பொருளலவே. 7

மங்குல் தோய் மணிமாடம் மதி தவழும் நெடுவீதி,
சங்கு எலாம் கரை பொருது திரை புலம்பும் சாய்க்காட்டான் -
கொங்கு உலா வரிவண்டு இன்இசை பாடும் அலர்க்கொன்றைத்-
தொங்கலான்-அடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருள் அலவே.

magkul tOy maNi mATam tavazum neTuvIti,
cagku elAm karai porutu tirai pulampum cAykkATTAn2--
kogku ulA varivaNTu in2icai pATum alarkkon2Rait-
togkalAn2--aTiyArkkuc cuvarkkagkaL poruL alavE.

பொருள்: மேகங்கள் தோய்கின்ற உயர்ந்த மாடங்கள் நிறைந்த வீதிகளில் சங்குகள் அலைகளால் கொண்டு வந்து ஒதுக்கப்பட்டு நிறைந்து விளங்கும். அத்தகைய வளம் நிறைந்த திருச்சாய்க்காட்டுத் தலத்தில் வண்டுகள் கொன்றை மலர்களில் நிறைந்து விளங்கும். வண்டுகள் மொய்க்காத கொன்றை மலர் மாலைகளை அணிந்த சிவபெருமானின் அடியவர்கள் சொர்க்கப் பதியையும் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள்.

குறிப்புரை: மங்குல் – மேகம். புலம்பும் – ஒலிக்கும். கொங்கு – மணம். தேன் உலாமலர். கொங்கிற்கு உலா வண்டு எனலுமாம். தொங்கலான் – மாலையினன். சுவர்க்கங்கள் – தேவ லோகங்கள். வானோர்க்கும் உயர்ந்த உலகத்தை அடையத்தக்க சிவனடியார்க்கு வானோருலகம் பொருளாகா.

Behold! It is Civan, the Lord of Thiruch-chaayk-kaadu. He has manifested Himself in the temple in Thiruch-chaayk-kaadu. In this city towering palaces are many in number; the clouds lap over them. They are in the long clear roads, which also are many in numbers. The white moon splashes its brightness all along the roads. In the seashore the waves bring a large number of conches, embracing the shores with their murmur. In such an attractive city, our Lord has manifested Himself wearing the garland of cassia flowers in which the bees and beetles make music. This Lord's devotees who praise the Lord with such garlands do not bother about the celestial world since they find heaven on the earth wherever Civan resides.

1913. தொடலரியதொருகணையாற்புரமூன்றுமெரியுண்ணப்
படஅரவத்தெழிலாரம்பூண்டான்பண்டரக்கனையுந்
தடவரையாற்றடவரைத்தோளூன்றினான்சாய்க்காட்டை
இடவகையாடைவோமென்றென்னுவார்க்கிடரிலையே. 8

"தொடல் அரியது ஒரு கணையால் புரம்மூன்றும் எரியுண்ண,
படஅரவத்து எழில் ஆரம் பூண்டான், பண்டு அரக்கனையும்
தடவரையால்-தடவரைத்தோள் ஊன்றினான், சாய்க்காட்டை
இட வகையா அடைவோம்" என்று என்னுவார்க்கு இடர் இலையே.

"toTal ariyatu oru kaNaiyAl puram mUn2Rum eriyuNNa,
paTa aravattu ezil Aram pUNTAn2, paNTu arakkan2aiyum
taTavaraiyAl-taTavaraittOL Un2Rin2An2, cAykkATTai
iTa vakaiyA aTaivOm" en2Ru eNNuvArkku iTar ilaiyE.

பொருள்: ஒப்பற்ற கணையைக் கொண்டு மூன்று புரங்களையும் நெருப்புப் பற்றச் செய்தவரே ஈசன். படம் கொண்ட அரவத்தை அணிகலனாகக் கொண்டவரே ஈசன். கயிலாயத்தைத் தூக்க முயன்ற இராவணன் என்ற அரக்கனின் தோளை நெரித்தவரே ஈசன். அவர் கோயில் கொண்டுள்ள திருச்சாய்க்காடு தலத்தை அடைய நினைப்பவர்களுக்குத் துன்பம் இல்லை.

குறிப்புரை: தொடல் – (தொடு + அல்) தொடுத்தல், தொடுதல் என்னும் இருபொருளும் அமையும்; தீக்கணையாதலின் படஅரவத்து எழில் ஆரம் – படத்தை உடைய அழகிய மாலை. தடவரை . . . ஊன்றினான். இராவணனது பெரிய மலைபோலும் தோள்களை விசாலமான கயிலை மலையால் அழுத்திய பரமசிவன். இடர் – பிறவித் துன்பம் முதலிய எல்லாம்.

Behold! It is Civan, the Lord of Thiruch-chaayk-kaadu. He shot a burning arrow on the three flying forts of the asuraas for their misbehaviour and destroyed them completely. The arrow was too terribly hot at the tip to be touched by any body. He has put on His body the snakes as His jewellery. In the olden days our Lord pressed His mountain with His toe and crushed the shoulders of Raavanan for his egoism and subdued him. This Lord has manifested Himself in the temple in Thiruch-chaayk-kaadu. This is a very holy place. Those devotees who consider this city as a very holy place and worship our Lord will have no suffering in their life.

1914. வையநீரேற்றானும்மலருறையுநான்முகனும்
ஐயன்மாரிருவர்க்குமளப்பரிதாலவன்பெருமை
தையலார்பாட்டோவாச்சாய்க்காட்டெம்பெருமானைத்
தெய்வமாப்பேணாதார்தெளிவுடைமைதேறோமே. 9

வையம் நீர் ஏற்றானும், மலர் உறையும் நான்முகனும்,
ஐயன்மார்இருவர்க்கும் அளப்பு அரிதால் அவன் பெருமை;
தையலார் பாட்டு ஓவாச் சாய்க்காட்டு எம்பெருமானைத்
தெய்வமாப் பேணாதார் தெளிவுஉடைமை தேறோமே.

vaiyam nIr ERRAn2um, malar uRaiyum nAn2mukan2um,
aiyan2mAr iruvarkkum aLappu aritAl, avan2 perumai;
taiyalAr pATTu OvAc cAykkATTu emperumAn2ait
teyvamAp pENAtAr teLivu uTaimai tEROmE.

பொருள்: கடலில் படுத்திருக்கும் திருமால், மலரில் உறையும் பிரமன் ஆகிய இருவராலும் அளப்பதற்கு அரியவனே சிவபெருமான். அவரது பெருமைகளைத் திருச்சாய்க்காட்டில் வாழும் பெண்டிர் பாடல்களாகப் பாடி மகிழ்வர். அவரை வழிபடாதவர்கள் தெளிவுடைமை இல்லாதவர்களே ஆவார்கள்.

குறிப்புரை: வையம் – பூமி, மூவடிமண். நீர் – தத்தஞ் செய்நீர். ஏற்றான் – மாவலிபால் இரந்த திருமால். ஐயன்மார் இருவர் – அயனும் அரியுமாகிய துவி கர்த்தர்கள். அளப்பு – அளவிடுதல். தையலார் – பெண்டிர். ஓவா – இடைவிடாத. பேணாதார் – விரும்பி வழிபடாதவர். தெளவி – ஞானத்தேற்றம்.

சீலத்தால் ஞானத்தால் தேற்றத்தால் சென்றகன்ற
காலத்தால் ஆராத காதலால் – ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாம்
கச்சிக்கச் சாலைக்கனி

எனப் பின்வந்த ஞானப்பாடலை அறிக. தேறோம் – அதை ஒரு தெளிவாகக் கொள்ளோம். மதியோம் என்றபடி.

Behold! It is Civan, the Lord of Thiruch-chaayk-kaadu. Thirumaal, the demigod of sustenance forced king Maavali to give him the earth by pouring water on his head as sacrifice. He and the four-faced demigod who rests in the lotus flower, were unable to understand the glory of our Lord and also unable to see the physical body of our Lord. Our Lord has manifested Himself in the temple in Thiruch-chaayk-kaadu. He enjoys hearing the endless music of the damsels of Thiruch-chaayk-kaadu. We will not respect those people who do not worship our Lord of Thiruch-chaayk-kaadu for they lack in right thinking.

1915. குறங்காட்டுநால்விரலிற்கோவணத்துக்கோலோவிப்போய்
அறங்காட்டுஞ்சமணருஞ்சாக்கியருமலர்தூற்றுந்
திறங்காட்டல்கேளாதேதெளிவுடையீர்சென்றடைமின்
புறங்காட்டிலாடலான்பூம்புகார்ச்சாய்க்காடே. 10

குறங்கு ஆட்டும் நால்விரலில்கோவணத்துக்கு உலோவிப் போய்
அறம் காட்டும் சமணரும், சாக்கியரும், அலர் தூற்றும்
திறம் காட்டல் கேளாதே, தெளிவு உடையீர்! சென்று அடைமின்,
புறங்காட்டில் ஆடலான் பூம் புகார்ச் சாய்க்காடே!

kuRagku ATTum nAlviral kOvaNattukku ulOvip pOy
aRak kATTum camaNarum, cAkkiyarum, alar tURRum
tiRam kATTal kELAtE, teLivu uTaiyIr! cen2Ru aTaimin2,
puRagkATTil ATalAn2 pUm pukArc cAykkATE!

பொருள்: சமணரும், சாக்கியரும் குறைந்த ஆடையினை அணிந்து எங்கும் உலவித் திரிவர். அடியவர்களே, நீவிர் அவர்கள் கூறும் பொய்யுரைகளைக் கேளாது தெளிவுடைய மதியினராய் திருச்சாய்க்காட்டை சென்றடைமின். சிவஞானத் தெளிவுடைய நீவிர் புறங்காட்டில் ஆடும் இறைவனே சாய்க்காட்டிலும் கோயில் கொண்டுள்ளான் என்பதை உணர்ந்து வழிபாடு செய்யுங்கள். எல்லாப் பேறுகளையும் பெற்று சிறப்படையுங்கள்.

குறிப்புரை: முதலீரடியும் புறப்புறச்சமயத்தார் நிலையும் செயலும் உணர்த்துகின்றன. குறங்கு ஆட்டும் – துடையில் அசைக்கும். உலோவி – சிக்கனம். கொண்டாடி. மெய்யொழுக்கத்தால் உண்டெனத்

தோற்றுதல் இன்றித் தம் பொய்யொழுக்கத்தை நூலாலும் பேச்சாலும் மறைத்து, தம்மிடத்தில் அறம் உள்ளது போலக் காட்டுதலால். அறம் காட்டும் என்றார். அவர் – பழி. காட்டல் – காட்டுவதை. கேளாதே – பொருட்படுத்தாமல் தம்மிற்புணராமை கேளாம்புறன் (சிவஞானபோத வெண்பா 1. உரை) தெளிவுடையீர் கேளாதே சாய்க்காடே சென்று அடைமின் என்க.

Oh! people of Thiruch-chaayk-kaadu, do not listen to the untrue words of the Jains and the Buddhists who roam in the street wearing four finger wide loin cloth. Neglect them and their insincere words. With wisdom and clear thinking, you may go to the temple, and worship our Lord who is manifested in Thiruch-chaayk-kaadu. You may realise that the Lord who dances on the burial ground is the one who resides at this temple.

1916. நொம்பைந்துபுடைத்தொல்குநூபுரஞ்சேர்மெல்லடியார்
அம்பந்தும்வரிக்கழலுமரவஞ்செய்பூங்காழிச்
சம்பந்தன்தமிழ்பகர்ந்தசாய்க்காட்டுப்பத்தினையும்
எம்பந்தமெனக்கருதியேத்துவார்க்கிடர்கெடுமே. 11

நொய்ம் பந்து புடைத்து ஒல்கு நூபுரம் சேர் மெல்அடியார்
அம் பந்தும் வரிக்கழலும் அரவம் செய் பூங் காழிச்
சம்பந்தன் தமிழ் பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையும்,
"எம்பந்தம்" எனக் கருதி, ஏத்துவார்க்கு இடர் கெடுமே.

noym pantu puTaittu olku nUpuram cEr mel aTiyAr
am pantum varik kazalum aravam cey pUg kAzic
campantan2 tamiz pakarnta cAykkATTup pattin2aiyum
"em pantam" en2ak karuti, EttuvArkku iTar keTumE.

பொருள்: சிலம்பணிந்த மகளிர் பந்தடித்து ஆடுவர். அவர்களின் மென்மையான பாதங்கள் குதித்து ஆடும் ஒலியும், பந்துகள் அடிக்கப்படும் ஒலியும் நிறைந்து காணப்படும் தலமே சீர்காழித் தலமாம். அத்தலத்தில் அவதரித்த சம்பந்தப் பெருமான், சாய்க்காட்டு இறைவனைப் புகழ்ந்து, பத்துப்பாடல்கள் பாடி அருளியுள்ளார். அப்பத்துப் பாடல்களையும் விரும்பி ஏத்துவார்க்கு இடர் இல்லை என்க.

குறிப்புரை: நொம் – நோகும். பைந்து – பந்து. தண்மலர் நறும்பைந்து ஊழ் அறிந்து உருட்டா (பெருங். மகத 8 – 64). புடைத்து – (பந்து) அடித்து. ஒல்கு – தளரும். நூபுரம் – (பாதக்) கிண்கிணி. சிலம்பு.

அம்பந்து – அழகிய பந்து. கழல் – பெண்கள் விளையாடும் கழற்காய். அரவம் – ஓசை. எம்பந்தம் – எம்முடைய பற்று(க்கோடு). ஏத்துவார் – பாராயணம் புரிபவர்.

Our holy saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi. This city is surrounded by gardens full of many different flowers. Here young damsels used to play all kinds of games and dance together with other children of their age. While playing they have in their hands balls, Kazharkaai - The first of circles - Guilandina Bonducella. The damsels wear on their feet, 'tinkling ankle rings'. These rings make good sound while the girls dance, jump and play. The sound created by the tinkling ankle rings is louder than the noise produced by the balls, which therefore, feel shy and get reduced (repentance) for a lesser sound than the tinkling sound of the ankle rings. The dance and play bring joviality to one and all. Such a holy and beautiful city is Seerkaazhi. Thiru-gnana-Sambandar who hailed from this city went to Thiruch-chaayk-kaadu temple and prayed before our Lord and sang in chaste Tamil, in good musical tone ten verses containing the glory of our Lord Civan. The devotees who think that reciting these ten verses will create a good relationship with our Lord of Thiruch-chaayk-kaadu sing these ten songs, these devotees will be fully relieved of their sufferings by our Lord Civan.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

41ஆம் பதிகம் முற்றிற்று
End of 41st Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 178 *பதிக எண்: 42*

42. திருஆக்கூர் (தான்தோன்றி மாடம்) 42. THIRU-AAKKOOR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

திருஆக்கூர்த் தான்தோன்றி மாடம் என்னும் திருத்தலமானது சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலம் ஆகும். மயிலாடுதுறை – பொறையாறு பேருந்து வழியில் ஆக்கூர் உள்ளது. மயிலாடுதுறை சீர்காழி ஆகிய ஊர்களிலிருந்து நகரப் பேருந்துகளும் உள்ளன. பேருந்து நிலையத்திற்கு அருகில் ஆலயம் உள்ளது.

ஊரின் பெயர் ஆக்கூர் ஆயினும் அங்குள்ள கோயிலுக்குத் தான்தோன்றிமாடம் என்று பெயர். அதாவது தான்தோன்றியப்பர் (சுயம்பு மூர்த்தியாகிய இறைவர்) எழுந்தருளியிருக்கும் மாடக்கோயில் என்று பொருள்படும். மாடக்கோயில் என்பது யானை ஏற முடியாதபடி படிக்கட்டுகள் வைத்துக் கட்டப்பெற்றதாகும். இத்தகைய கோயில்கள் கோச்செங்கணான் என்னும் சோழ மன்னனால் கட்டப் பெற்றன என்பர்.

இறைவரின் திருப்பெயர் தான்தோன்றியப்பர். வடமொழியில் சுயம்புநாதர் என்பர். இறைவியாரின் திருப்பெயர் வாணெடுங்கண்ணியம்மை. வடமொழியில் கட்கநேத்திரி. அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய சிறப்புலி நாயனார் வாழ்ந்த பதி. இத்தலத்து வேளாளர்களைத் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் இவ்வூர்ப் பதிகத்தில்,

வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாள ராக்கூரிற் றான்றோன்றி மாடமே

எனச் சிறப்பித்திருப்பது பெருமகிழ்ச்சியைத் தருவதாகும்.

பதிக வரலாறு

காழியர் வாழவந்தருளிய மறைவேந்தர், மொழி வேந்தரொடு திருக்கடவூர் தொழுது, விரவு நண்புடைய குங்கிலியப் பெருங்கலயர் திருமனை விருந்துண்டருளித் திருமயானம் பணிந்து, சிலநாள் அமர்ந்து, மறைப்பெருந் திருக்கலயரும் உடன்பட வணங்கிய மகிழ்வுடன் அறப்பெரும்

பயன்போன்ற தொண்டர்சூழ இத், திருவாக்கூர்த் தான்றோன்றி மாடத்தை அணைந்து, அண்ணலைப் போற்றிப் பாடிய செந்தமிழ்த் தொடை இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1917. அக்கிருந்தஆரமுமாடரவுமாமையும்
தொக்கிருந்தமார்பினான்தோலுடையான்வெண்ணீற்றான்
புக்கிருந்ததொல்கோயில்பொய்யிலாமெய்ந்நெறிக்கே
தக்கிருந்தாராக்கூரில்தான்தோன்றிமாடமே. 1

அக்கு இருந்த ஆரமும், ஆடுஅரவும், ஆமையும்,
தொக்கு இருந்த மார்பினான்; தோல்உடையான்; வெண்நீற்றான்;
புக்கு இருந்த தொல் கோயில் - பொய் இலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தார் ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

akku irunta Aramum, ATu aravum, Amaiyum,
tokku irunta mArpin2An2; tOl uTaiyAn2; veN nIRRAn;
pukku irunta tol kOyil--poy ilA meynneRikkE
takkiruntAr AkkUril-tAn2 tOn2Ri mATamE.

பொருள்: எலும்பு மாலையும், ஆடுகின்ற பாம்பும், ஆமைஓடும் பொருந்திய மார்பினை உடையவன் ஈசனே! யானைத்தோலையும் புலித்தோலையும் ஆடையாகக் கொண்டவன் ஈசன். திருநீற்றைப் பூசிய அப்பெருமான் பொய்யற்ற மெய்ந்நெறியாளர் பொருந்தியிருக்கும் ஆக்கூர் தான் தோன்றி மாடத்தில் விளங்குகின்றான்.

குறிப்புரை: அக்கு – உருத்திராக்கம். எலும்பும் ஆம். ஆரம் – மாலை, என்புமாலை, தலைமாலை, கொன்றைமாலை, உருத்திராக்க மாலை முதலியவற்றுள் முதலும் முடிவும் இங்குப் பொருந்தும். அரவு – பாம்பு. முற்றல் ஆமை இள நாகமொடு ஏனமுளைக் கொம்பவை பூண்டு (ப. 1, பா. 2) தோலுடையான் – யானைத்தோலும் புலித்தோலுமாகிய உடையினன். உடையவனுமாம். சைவநெறி பசுபாசக் கலப்பாகிய பொய்யில்லாதது மட்டுமன்று, சிவத்துவமாகிய மெய்யேயாய் நிற்பது, கேவலம் சகலம் – பொய். சுத்தம் – மெய், அந்நெறிக்கே தக்கிருந்தார் – ஆக்கூர்ச் சைவர்கள் (பா. 3, வேளாளராகிய தாளாளர் முதலியோர்) இப்பதிகத்துள் முதற்பத்திலும் ஆக்கூர் சைவர் சிறப்பு உணர்த்துதல் அறிக. இது தொல்கோயில் என ஆசிரியர் காலத்தே விளங்கியது. அவ்வாறே இன்றும் எண்ணக் கிடக்கின்றது. தான்தோன்றி மாடமே வெண்ணீற்றான் புக்கு இருந்த தொல்கோயில் என்று கூட்டுக. பூங்கோயில் (4) என்றும் சொல்லப்படும் இதைத் தரிசித்தவரே இதன் பெருமை, தொன்மை முதலியவற்றை நன்கு உணர்வர்.

Behold! It is Civa; self-emerged Lingam in the sanctum sanctorum of Thiru-aakkoor temple. He is our Lord. He has beautified His chest with garlands of rudraaksha, dancing cobra, and the bone of turtle - all joined together. He wears the hides of elephant and the tiger. He has smeared His whole body with white ashes. Our Lord has manifested Himself in the very old temple called Thaan-thontri-maadam in the city of Thiru-aakkoor. In this city, a good number of people do live who never know any falsehood. They lead a life of divine knowledge known as Saiva religion. They follow the rules and regulations as prescribed in the aagamaas. This famous very old city is known as Thaan-thontri-maadam, where our Lord abides.

1918. நீராரவார்சடையான்நீறுடையானேறுடையான்
காரார்பூங்கொன்றையினான்காதலித்ததொல்கோயில்
கூடராரல்வாய்நிறையக்கொண்டயலேகோட்டகத்தில்
தாராமல்காக்கூரில்தான்தோன்றிமாடமே. 2

நீர் ஆர வார்சடையான், நீறு உடையான், ஏறு உடையான்,
கார் ஆர் பூங்கொன்றையினான், காதலித்த தொல் கோயில் -
கூர் ஆரல் வாய் நிறையக் கொண்டு அயலே கோட்டகத்தில்
தாரா மல்கு ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

nIr Ara vArcaTaiyAn2, nIRu uTaiyAn2, ERu uTaiyAn2,
kAr Ar pUgkon2Raiyin2An2, kAtalitta tol kOyil--
kUr Aral vAy niraiyak koNtu ayalE kOttakattil
tArA malku AkkUril-tAn2 tOn2Ri mATamE.

பொருள்: ஈசன், கங்கையைத் தலையில் தரித்துள்ளான். திருநீற்றைப் பூசியுள்ளான். இடப வாகனத்தில் அமர்ந்துள்ளான். கொன்றை மலர் மாலையினை அணிந்துள்ளான். அப்பெருமான் விரும்பிய தொன்மையான கோயில் ஆக்கூர் தான்தோன்றி மாடம் ஆகும். அங்கு மீன்களை மிகுதியாக அலகில் எடுத்துக் கொண்ட நாரைகள் பறக்கும் ஆக்கூரில் விளங்கும் தான் தோன்றி மாடம் ஆகும்.

குறிப்புரை: நீர் – கங்கை. ஆர – பொருந்த, நிறைய. வார் – நீண்ட கார்ஆர் பூங்கொன்றை – 'கண்ணி கார்நறுங் கொன்றை'. ஆரல் – ஆரல்மீன்களை. தாரா – நாரையினம். வாய்நிறைய ஆரலைக் கொண்டு அயலே கோட்டகத்தில் தாராமல்கும் ஆக்கூர் என்று இயைக்க. கோடகம் – நீர்நிலை, நீர்க்கரை,

தான்தோன்றி – சுயம்பு. ஊர்க்கும் திருக்கோயிற்கும் வெவ்வேறு பெயர் வழங்கிய பழைய மரபை ஈண்டும் காணலாம்.

Behold! It is self-emerged Siva Lingam at the temple in Thiru-aakkoor. He is our Lord. He has adorned His long matted hair with the lady of river Ganges. He has beautified His body with holy ashes. He owns a bull for His conveyance. He wears on His head the cassia flowers which blossom in the rainy season. In this city the flock of cranes collects in their mouths aaral fishes and fly to water banks and live there in abundance. Here our Lord is manifested in the Thaan-thontri-maadam temple in the city of Thiru-aakkoor.

1919. வாளார்கண்செந்துவர்வாய்மாமலையான்றன்மடந்தை
தோளாகம்பாகமாப்புல்கினான்தொல்கோயில்
வேளாளரென்றவர்கள்வள்ளன்மையான்மிக்கிருக்கும்
தாளாளராக்கூரில்தான்தோன்றிமாடமே. 3

வாள்ஆர்கண், செந்துவர்வாய், மாமலையான்தன்மடந்தை
தோள் ஆகம் பாகமாப் புல்கினான் தொல் கோயில் -
வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கு இருக்கும்
தாளாளர் ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

vAL Ar kaN, centuvarvAy, mAmalaiyAn2 tan2 maTantai
tOL Akam pAkamAp pulkin2An2 tol kOyil--
vELALar en2RavarkaL vallaNmaiyAl mikku irukkum
tALALar AkkUril--tAn2 tOn2Ri mATamE.

பொருள்: ஒளிமிக்க கண்களையும், பவளம் போன்ற சிவந்த வாயினையும் உடையவளே மலையரசனின் மகளாகிய உமாதேவி. அவளைத்தன் உடம்பின் ஒருபாகமாகக் கொண்டவரே உமாதேவன். அப்பெருமான் வள்ளன்மை மிக்க வேளாளர்கள் நிறைந்து விளங்கும் ஆக்கூர் தான் தோன்றி மாடத்தில் விரும்பிக் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: வாள்ஆர் – வாள்போன்ற ஒளிபொருந்திய. துவர் – பவளம். துவர்வாய் – உவமைத்தொகை. மடந்தை – உமாதேவியார். தோள்ஆகம்பாகமா (பார்க்க. ப. 177 பா. 6). புல்கினான் – புணர்ந்தான். வள்ளன்மை – வள்ளலாந்தன்மை, கொடைமை. தாள் – முயற்சி. தாளாளர் – ஆக்கம் அதர் வினாய்ச் சாரத்தக்க ஊக்கமுடையர். வேளாளர் – அவ்வாக்கத்தைப் பிறர்க்கு உபகரிக்கும் வண்மையாளர். வேள் –

மண் என்று கொண்டு உழவர் எனலும் உண்டு. வேளாண்மை – உபகாரம். வேளாண்சிறுபதம் (புறம் 74 உரை). கொன்றையினான் காதலித்த கோயில் என்றதனால், வேண்டுதல் வேண்டாமை இல்லாத கடவுளுக்குக் காதல் உண்டென்ற குற்றம் தோன்றும் எனலாம். ஆயினும் அது பொருந்தாது. அன்பர்க்கு அன்பன், அல்லாதார்க்கு அல்லன் என்புழிப் பக்குவா பக்குவங்களைக் காரணமாக் கொள்ளல் போற்கொள்க. ஆண்டவனுக்கு வேறுபாடில்லை.

Behold! It is self-emerged Siva Lingam in the sanctum santorum. Our goddess Paarvathi Devi is the daughter of the Himalayan mountain king. Her eyes are very brilliant. Her lips are in coral colour. Our Lord shares half of His body with her and receives her warmly with affection. In this city of Thiru-aakkoor many Vellaalar do live. All of them are good helpers to one and all with a highly charitable mind, i.e., they are known for their philanthropic attitude in their life. Here exists the very famous age old temple called Thaan-thontri-maadam.

1920. கொங்குசேர்தண்கொன்றைமாலையினான்கூற்றடரப்
பொங்கினான்பொங்கொளிசேர்வெண்ணீற்றான்பூங்கோயில்
அங்கம்ஆறோடுமருமறைகளைவேள்வி
தங்கினாராக்கூரில்தான்தோன்றிமாடமே. 4

கொங்கு சேர் தண்கொன்றை மாலையினான், கூற்று அடரப்
பொங்கினான், பொங்கு ஒளி சேர் வெண்நீற்றான், பூங்கோயில் -
அங்கம்ஆறோடும் அருமறைகள் ஐவேள்வி
தங்கினார் ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

kogku cEr taNkon2Rai mAlaiyin2An2, kURRu aTarap
pogkin2An2, pogku oLi cEr veN nIRRAn2, pUgkOyil--
agkam AROTum arumRaikaL aivELvi
tagkin2Ar AkkUril-tAn2 tOn2Ri mATamE.

பொருள்: ஈசன், தேன் நிறைந்த குளிர்ந்த கொன்றை மலர்களால் ஆகிய மாலையை அணிந்துள்ளான். அவன் எமனையும் வருத்தச் சினத்தவனும் ஆவான். அவன் திருநீற்றைப் பூசியுள்ளான். அவன் வேதத்தின் ஆறு அங்கங்களும் அருமறைகள் நான்கும் வேள்விகள் ஐந்தும் நிறைந்து விளங்கும் ஆக்கூர் தான்தோன்றி மாடத்தின்கண் விரும்பிப் பொருந்தியுள்ளான்.

குறிப்புரை: கொங்கு – தேன், மணம், தாது. கூற்று அடர – இயமனை வருத்த. பொங்கினான் – கோபம் மிகுந்தான். ஆறு அங்கம் – வேதாங்கம் ஆறும். ஐவேள்வி தாங்கினார் – பஞ்ச மகாயக்ஞம் புரிவோர். வேள்வி – யாகம். பூஜை. தேவயாகம். பூத யாகம் முதலியன. (பா. 7 பார்க்க).

Behold! It is self-emerged Siva Lingam. He is our Supreme Being. He wears the garland of cool and honey filled cassia flowers. Our Lord showed fury for the misdeed of Yama, the god of death and kicked him to suffer. He has smeared His body with the pure holy ashes. In this city Aakkoor there lived the learned scholars who have mastered the rare four Vedas and the six vedaangaas - known as angangals. They observe the rituals of five different sacrificial fires. In such a holy city there exists the temple of Thaan-thontri-maadam where our Lord is manifested.

1921. வீக்கினானாடரவம்வீழ்ந்தழிந்தார்வெண்டலையென்
பாக்கினான்பலகலன்களாதரித்துப்பாகம்பெண்
ஆக்கினான்தொல்கோயிலாம்பலம்பூம்பொய்கைபுடை
தாக்கினாராக்கூரில்தான்தோன்றிமாடமே. 5

வீக்கினான், ஆடுஅரவம்; வீழ்ந்து அழிந்தார் வெண்தலை என்பு
ஆக்கினான், பல்கலன்கள்; ஆதரித்துப் பாகம் பெண்
ஆக்கினான்; தொல் கோயில்-ஆம்பல்அம்பூம் பொய்கை புடை
தாக்கினார் ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

vIkkin2An2, ATu aravam; vIzntu azintAr veN talai en2pu
Akkin2An2, palkalan2kaL; Atarittup pAkam peN
Akkin2An2; tol kOyil Ampal ampUm poykai puTai
tAkkin2Ar AkkUril-tAn2 tOn2Ri mATamE.

பொருள்: ஈசன், ஆடுகின்ற பாம்பினை அரையில் கச்சையாகக் கட்டியுள்ளான். இறந்தவர்களின் எலும்பையும் தலையோட்டினையும் மாலையாகக் கொண்டுள்ளான். உமாதேவியை உடம்பின் ஒருபாகமாகக் கொண்டுள்ளான். அவன் ஆம்பல் போன்ற அழகிய மலர்கள் நிறைந்து விளங்கும் பொய்கைகளால் சூழப்பெற்ற ஆக்கூர் தான்தோன்றி மாடத்தில் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: வீக்கினான் – (அரவக்கச்சு) கட்டினான். வீந்து – மாண்டு. அழிந்தார் – அழிந்தவரது. தலை என்பு – தலையும் எலும்பும். கலன்கள் – ஆபரணங்கள். ஆதரித்து – விரும்பி. பாகம் – இடப்பால்.

பெண் – உமாதேவியார். ஆம்பல் அம்பூம் பொய்கை – ஆம்பல் மலரும் அழகிய பூங்குளம். பூ – பொலிவு. ஆம்பற்பூவுமாம். பொய் கையைப் புடையில் (எதிர்ப்பக்கத்தில்) தாக்கினார் (வெட்டினார்) வாழும் ஆக்கூர் என்க. ஆதரித்து ஆக்கினான் என முன்னும் பின்னும் கூட்டுக.

Behold! It is self-emerged Siva Lingam in Thaan-thontri-maadam. He is our Lord. He puts on the dancing cobra around His waist as belt. He wears the bones and skulls of dead persons as jewels around His body. He is pleased to share half of His body with His consort Uma. In this city of Aakkoor, there are good and beautiful ponds full of lily flowers. To strengthen the ponds, the cultivators have raised the banks and done their job very carefully. Such ploughmen live in plenty in this city of Aakkoor, where the temple Thaan-thontri-maadam exists.

1922. பண்ணொளிசேர்நான்மறையான்பாடலினோடாடலினான்
கண்ணொளிசேர்நெற்றியினான்காதலித்ததொல்கோயில்
விண்ணொளிசேர்மாமதியந்தீண்டியக்கால்வெண்மாடம்
தண்ணொளிசேராக்கூரில்தான்தோன்றிமாடமே. 6

பண் ஒளி சேர் நால்மறையான், பாடலினோடு ஆடலினான்
கண் ஒளி சேர் நெற்றியினான், காதலித்த தொல் கோயில் -
விண் ஒளி சேர் மா மதியம் தீண்டியக்கால் வெண் மாடம்
தண் ஒளி சேர் ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

paN oLi cEr nAlmaRaiyAn2, pATalin2OTu ATalin2An2,
kaN oLi cEr neRRiyin2An2, kAtalitta tol kOyil--
viN oLi cEr mA matiyam tINTiyakkAl veN mATam
taN oLi cEr AkkUril-tAn2 tOn2RimATamE.

பொருள்: ஈசன், பண் நிறைந்த நான்மறைப் பாடல்களுக்கு ஏற்ப ஆடும் திறத்தினன். நெற்றிக் கண்ணை உடையவன். அவன் விண்ணில் தவழும் நிலவின் ஒளியால் சிறந்து விளங்கும் மாடங்கள் நிறைந்த ஆக்கூர் தான்தோன்றி மாடத்தின்கண் விரும்பிப் பொருந்தி உள்ளான்.

குறிப்புரை: ஒளி – அறிவினொளி. கண்ணொளி – நெருப்புக் கண்ணொளி. தண் ஒளி – குளிர்ச்சி ஆக்கும் ஒளி.

Behold! It is Civan, our Lord of Aakkoor. He is the genuine authority of the four Vedas which are in musical mode and convey divine knowledge. He is the

embodiment of all the songs and dances. He has a very bright third eye in His forehead. In this city of Thiru-aakkoor, very tall palaces are many in number. The brightening rays of the moon, moving in the sky, fall on the palaces; the white palaces become very cool and bright. Our Lord was highly attracted by the age-old temple Thaan-thontri-maadam and He is manifested there.

1923. வீங்கினார்மும்மதிலும்வில்வரையால்வெந்தவிய
வாங்கினார்வானவர்கள்வந்திறைஞ்சுந்தொல்கோயில்
பாங்கினார்நான்மறையோடாறங்கம்பலகலைகள்
தாங்கினாராக்கூரில்தான்தோன்றிமாடமே. 7

வீங்கினார் மும்மதிலும் வில்வரையால் வெந்து அவிய
வாங்கினார், வானவர்கள் வந்து இறைஞ்சும், தொல் கோயில் -
பாங்கின் ஆர் நால்மறையோடு ஆறுஅங்கம் பல்கலைகள்
தாங்கினார் ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

vIgkin2Ar mummatilum vilvaraiyAl ventu aviya
vAgkin2Ar, vAn2avarkaL vantu iRainjcum, tol kOyil--
pAgkin2 Ar nAlmaRaiyOTu ARu agkam palkalaikaL
tAgkin2Ar AkkUril-tAn2 tOn2Ri mATamE.

பொருள்: ஈசன், ஆணவ மலத்தால் செருக்குற்ற திரிபுரத்தவர்களின் முப்புரங்களை. மேருமலையை வில்லாகக் கொண்டு எரித்துச் சாம்பலாக்கியவர். வானவர்களால் என்றும் தொழப் பெறுபவர். அவர், நான்மறைகளும் ஆறு அங்கங்களும் பலகலைகளும் நிறைந்து விளங்கும் ஆக்கூர் தான்தோன்றி மாடத்தில் விரும்பி அமர்ந்துள்ளார்.

குறிப்புரை: வீங்கினார் – பெருமையுடைய சிவபிரான், திரிபுரத்சுரரையுங் குறிக்கும். செலவில் மிக்கார் – மீச்செலவினார். (பகைவர்) வில்வரை – மேருவில். வில்லாகிய வரை. மறை+அங்கம்+பல கலைகள். தாங்கினார் – கற்றுணர்ந்து கொண்டவர். அந்தணர் (பா. 4 பார்க்க).

Behold! It is self-emerged Siva Lingam. He is the eminent Supreme Lord. He burnt the three flying forts of the egocentric asuraas by bending the mount Meru as a bow. All the devaas and celestials come to Thiru-aakkoor and worship here. In this city, learned scholar Brahmins are many in number. They are masters of the four

Vedas, the six subsidiaries of Vedas and all other connected scriptures. This is the place of Thaan-thontri-maadam where our Lord has manifested Himself.

1924. கன்னெடியகுன்றெடுத்தான்தோளடரக்காலூன்றி
இன்னருளாலாட்கொண்டஎம்பெருமான்தொல்கோயில்
பொன்னடிக்கேநாள்தோறும்பூவோடுநீர்சுமக்கும்
தன்னடியாராக்கூரில்தான்தோன்றிமாடமே. 8

கல்-நெடிய குன்று எடுத்தான் தோள் அடரக் கால் ஊன்றி,
இன் அருளால் ஆட்கொண்ட எம்பெருமான் தொல் கோயில் -
பொன் அடிக்கே நாள்தோறும் பூவோடு நீர் சுமக்கும்
தன் அடியார் ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

kal-neTiya kun2Ru eTuttAn2 tOL aTarak kAl Un2Ri,
in2 aruLAl ATkoNTa emperumAn2 tol kOyil--
pon2 aTikkE nALtORum pUvOTu nIr cumakkum
tan2 aTiyAr AkkUril-tAn2 tOn2Ri mATamE.

பொருள்: மிக உயர்ந்த வலிய கயிலாய மலையைத் தூக்கிட முயன்றவன் இராவணன். அவனது தோள் நெரியுமாறு திருப்பாதம் ஊன்றி இறுதியில் அருளால் ஆட்கொண்டவர் எம்பெருமான். அவர், நாள்தோறும் பூவும் நீரும் கொண்டு வழிபாடு செய்யும் அடியவர்கள் நிறைந்த ஆக்கூர் தான்தோன்றி மாடத்தில் விரும்பிப் பொருந்தியுள்ளார்.

குறிப்புரை: கல்நெடிய குன்று – திருக்கயிலை மலை. பொன் . . . அடியார் – 'பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர்சுமக்கும் நின் அடியார்' (தி. 1 பதி. 52 பா. 3).

Behold! It is self-emerged Siva Lingam at the temple in Thiru-aakkoor. Our Lord Civan's abode is the long range of mount Kailash. Raavanan, the king of Sri Lanka due to egoism tried to lift mount Kailash and replace it aside in vain. Our Lord pressed the top of the mountain with His toe. Raavanan got crushed under the mountain. He realised his fault and begged for pardon. Our Lord excused him and graced him with boons. In this city of Thiru-aakkoor a good number of devotees of our Lord Civan do live. They collect flowers daily and go to the temple together with pure water and worship the golden feet of our Lord. This Lord is manifested in Thaan-thontri-maadam temple in Thiru-aakkoor.

1925. நன்மையராம்நாரணனும்நான்முகனுங்காண்பரிய
தொன்மையான்தோற்றங்கேடில்லாதான்தொல்கோயில்
இன்மையார்சென்றிரந்தார்க்கில்லையென்னாதீந்துவக்குந்
தன்மையாராக்கூரில்தான்தோன்றிமாடமே. 9

நன்மையராம் நாரணனும் நான்முகனும் காண்பு அரிய
தொன்மையான், தோற்றம் கேடு இல்லாதான், தொல் கோயில் -
இன்மையால் சென்று இரந்தார்க்கு "இல்லை" என்னாது, ஈந்து உவக்கும்
தன்மையார் ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

nan2maiyAm nAraNan2um nAn2mukan2um kANpu ariya
ton2maiyAn2, tORRam kETu illAtAn2, tol kOyil--
in2maiyAl cen2Ru irantArkku, "illai" en2n2Atu, Intu uvakkum
tan2maiyAr AkkUril-tAn2 tOn2Ri mATamE.

பொருள்: காத்தல் தொழில் புரியும் திருமாலும், படைத்தல் தொழில் புரியும் பிரமனும் காணமுடியாத பழைமையான வடிவுடையவனே ஈசன். தோற்றம் கேடு இல்லாதவனே ஈசன். அவன், நாடி வந்து இரந்தவர்க்கு இல்லை என்று கூறாமல் கொடுக்கும் வள்ளல்கள் நிறைந்த ஆக்கூர் தான்தோன்றி மாடத்தின்கண் பொருந்தியுள்ளான்.

குறிப்புரை: தொன்மையான் – 'தொல்லோன்' தோற்றம் கேடு – பிறப்பும் இறப்பும். இன்மை – வறுமை. ஈந்துவக்கும் தன்மையார் – 'ஈத்துவக்கும் இன்பம்' அறிந்தவராய், தம் உடைமை வைத்திழவாத தண்ணளியர், (சிறப்புலி நாயனார் புராணம் 1).

Behold! It is Civan, the Lord of Thiru-aakkoor. The demigod Vishnu is the god of sustenance; Brahma is the god of creation. They both were unable to see our Lord in spite of their best efforts for years. Our Lord is too ancient to be comprehended. He has no beginning or end. He manifests Himself in the very ancient temple Thaan-thontri-maadam in Thiru-aakkoor. In this sacred city many philanthropic people live who are very charitable and never refuse to help the needy. Hence, our Lord has chosen to reside here.

1926. நாமருவுபுன்மைநவிற்றச்சமண்தேரர்
பூமருவுகொன்றையினான்புக்கமருந்தொல்கோயில்
சேல்மருவுபைங்கயத்துச்செங்கழுநீர்பைங்குவளை
தாமருவுமாக்கூரில்தான்தோன்றிமாடமே. 10

நா மருவு புன்மை நவிற்ற, சமண்தேரர்,
பூ மருவு கொன்றையினான் புக்கு அமரும் தொல் கோயில் -
சேல் மருவு பைங்கயத்துச் செங்கழுநீர் பைங்குவளை
தாம் மருவும் ஆக்கூரில்-தான்தோன்றிமாடமே.

nA maruvu pun2mai naviRRa, camaN tErar,
pU maruvu kon2Raiyin2An2 pukku amarum tol kOyil--
cEl maruvu paigkayattuc cegkazu nIr paigkuvaLai
tAm maruvum AkkUril-tAn2 tOn2Ri mATamE.

பொருள்: புல்லிய சொற்களையே நாவினால் எப்பொழுதும் கூறி வருபவரே சமணரும், தேரரும் ஆவர். (அவர் சொற்களைக் கேட்க வேண்டாம்). கொன்றை மலர்மாலைகளை அணிந்த சிவபெருமான் ஆக்கூர் தான்தோன்றி மாடத்தின்கண் விரும்பி அமர்ந்துள்ளான். அங்கு பொய்கைகள் நிறைந்திருக்கும் அதில் மீன்களும், செங்கழுநீர் மலர்களும் குவளை மலர்களும் நிறைந்து விளங்கும்.

குறிப்புரை: புன்மை – அற்பக் கொள்கைகள் 'புன்பேச்சு' (ப. 182 பா. 10)ம் ஆம். நவிற்ற – பிதற்ற. சமண்தேரர் – சமணரும் தேரரும். சேல் – மீன். பைங்கயம் – பசிய நீர்நிலை. தாம் – கழுநீர் குவளைகளைக் குறித்த பன்மைப் பெயர்.

Behold! It is Civan, Lord of Thiru-aakkoor. The Jains and the Buddhists are of mean habits and they speak pseudo words. Ignore them. Our Lord who has adorned His head with cassia flowers has manifested Himself in the Thaan-thontri-maadam temple in Thiru-aakkoor. Here in the fields and ponds plenty of carp fish play and move about. The city Thiru-aakkoor is very fertile and has pleasant scenery. Here lily and nelumbia flowers are in plenty and the temple of Thaan-thontri-maadam is situated here. Our Lord has manifested Himself in this holy city.

1927. ஆடலமர்ந்தானைஆக்கூரில்தான்தோன்றி
மாடமமர்ந்தானைமாடஞ்சேர்தண்காழி
நாடற்கரியசீர்ஞானசம்பந்தன்சொல்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. 11

ஆடல் அமர்ந்தானை, ஆக்கூரில்-தான்தோன்றி-
மாடம் அமர்ந்தானை, மாடம் சேர் தண் காழி,
நாடற்கு அரிய சீர், ஞானசம்பந்தன் சொல்
பாடல் இவை வல்லார்க்கு இல்லைஆம், பாவமே.

ATal amarntAn2ai, AkkUril-tAn2 tOn2Ri-
mATam amarntAn2ai, mATam cEr taN kAzi,
nATaRku ariya cIr, njAn2acampantan2 col
pATal ivai vallArkku illai Am, pAvamE.

பொருள்: மாடங்கள் நிறைந்த சீர்காழிப் பதியில் அவதரித்தவரே ஞானசம்பந்தர் பெருமான் ஆவார். அவர் திருநடனம் புரியும் ஆக்கூர் தான்தோன்றி மாடத்தில் உறையும் ஈசனைப் புகழ்ந்து பத்துப்பாடல்கள் பாடியுள்ளார். அதை விரும்பிப் பாடும் அடியவர்களுக்குப் பாவமே பற்றாதாம்.

குறிப்புரை: ஆடலமர்ந்தான் – திருக்கூத்தை விரும்பியாடியவனை. அமர்ந்தான் – விரும்பியவன், தங்கியவன். நாடற்கு – ஆராய்தற்கு.

Our saint Thiru-gnana-Sambandar, a great knowledgeable man hails from prestigious cool Kaazhi full of palaces. He went to the temple Thaan-thontri-maadam and prayed to our Lord who always desires to dance. There he sang ten verses in praise of our Lord. Those devotees who can recite these verses will find no room for sins in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

42ஆம் பதிகம் முற்றிற்று
End of 42nd Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 179 பதிக எண்: 43

43. திருப்புள்ளிருக்கு வேளூர் 43. THIRUP-PULLIRUKKU-VELOOR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

சம்பாதி, சடாயு என்ற கழுகரசர் இருவர்களும், வேதங்களும், முருகக் கடவுளும், பூசித்துப் பேறுகளைப் பெற்ற தலமாதலால் இப்பெயர் பெற்றது. இது வைத்தீசுவரன்கோயில் என்று வழங்கப் பெறுகின்றது. இது மயிலாடுதுறை – சிதம்பரம் தொடர்வண்டிப் பாதையில், வைத்தீசுவரன் கோயில் தொடர் வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 1 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. மயிலாடுதுறையிலிருந்து சீகாழி செல்லும் பேருந்துகளில் வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் இத்தலத்தை அடையலாம். இது காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்று.

இறைவரின் திருப்பெயர் வைத்தியநாதர். இறைவியாரின் திருப்பெயர் தையல்நாயகி. முருகன் – செல்வமுத்துக் குமாரர். தீர்த்தம் சித்தாமிர்தத் தீர்த்தம். இது திருக்கோயிலின் உள்ளே இருக்கின்றது. இது மிகப் பெருமை வாய்ந்தது. இதில் நீராடியவர் நோய் நீங்கப் பெறுவர்.

சூரியன், செவ்வாய், இராமலக்குமணர், அநுமார் முதலானோர் வழிபட்டுப் பேறு எய்தினர். இங்கு எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள் முத்துக்குமார சுவாமி என்னும் திருப்பெயருடன் விளங்கி, அன்பர்களுக்கு வேண்டும் வரங்களை அளித்து வருகிறார். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, நாவுக்கரசர் பதிகம் இரண்டு ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

வடுகநாத தேசிகர் எழுதிய தலபுராணமும், குமரகுருபரர் அருளிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழும் அச்சில் வெளிவந்துள்ளன. இவைகளன்றி மூவர் அம்மானை முதலான பல நூல்களில் இத்தலத்துச் சிவபெருமானைப் பற்றிய புகழ்ப் பாக்கள் இருக்கின்றன.

சடாயு, சம்பாதி இவர்கள் வழிபட்ட செய்தி,

தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே

என்னும் ஞானசம்பந்தரின் தேவாரப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

சம்பாதி, புள்ளிருக்கு வேளூர் இறைவனை வழிபடற்குக் காவிரி பூம்பட்டினத்திலிருந்து நாளும் பூக்கொண்டு வந்த செய்தி,

யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளுமொழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே

என்னும் அவரது தேவாரப் பகுதியில் குறிக்கப் பட்டுள்ளது. இச்சம்பாதி வனம் மணிமேகலையுள்ளும் கூறப்பட்டுள்ளது.

சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனோடு பொருது, சடாயு உயிரிழந்த செய்தி,

மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே

என்னும் அவரது தேவாரப் பகுதியிலும் சொல்லப்பட்டு உள்ளது. ‘மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்’ என்னும் அப்பர் பெருமானின் தேவாரப் பகுதி. இறைவன் வைத்தியநாதர் என்னும் பெயர் பூண்ட காரணத்தைப் புலப்படுத்துவதாகும். இங்ஙனம், இவ்வூர்த் தேவாரப் பகுதிகளில் பல சரித்திர சம்பந்தமான உயர்ந்த செய்திகள் காணப்படுகின்றன.

இக்கோயில், திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது. இதுபொழுது இருபத்தாறாம் பட்டத்தில், தருமை ஆதீனத்தில் அருளாட்சி நடத்தி வரும் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஒவ்வொரு வாரத்தில் செவ்வாய்க் கிழமையிலும், ஒவ்வொரு மாதத்தில் கிருத்திகை நாளிலும் வைத்தீசுவரன் கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடு செய்தருளுகின்றார்கள். இக்காலங்களிலன்றி, நிர்வாகத் துறையில் திடீரென்று எழுந்தருளி நித்திய நைமித்திகங்கள் உரிய காலங்களில் நன்கு நடைபெறுகின்றனவா எனவும் கவனித்தருளுகின்றார்கள்.

பதிக வரலாறு

திருமறைச் சண்பையராளி திருக்கண்ணார் கோயிலை ஏத்தினார், பிற கோயிலும் இறைஞ்சினார். காவிரி வடபால் குடதிசை நோக்கி வருவாராய்க், காதல் பெருகப் புள்ளிருக்கு வேளூர்க் கோயிலை நண்ணினார். ஏற்ற அன்பு எய்த வணங்கினார். இருவர் புள்வேந்தர் இறைஞ்சி ஆற்றிய பூசையைச் சாற்றி இந்த நன்சொற்பதிகத்தை அணிவித்தார்.

திருச்சிற்றம்பலம்

1928. கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதியம்
உள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பர்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே. 1

கள் ஆர்ந்த பூங்கொன்றை, மதமத்தம், கதிர் மதியம்
உள் ஆர்ந்த சடைமுடி எம்பெருமானார் உறையும் இடம் -
தள்ளாய சம்பாதி, சடாயு, என்பர்தாம் இருவர் -
புள்ஆனார்க்கு அரையன் இடம் - புள்ளிருக்குவேளூரே.

kaL Arnta pUgkon2Rai, matamattam, katir matiyam,
uL Arnta caTaimuTi emperumAn2Ar uRaiyum iTam--
taLLAya campAti, caTAyu, en2pArtAm iruvar-
puL An2Arkku araiyan2 iTam--puLLirukkuvELUrE.

பொருள்: ஈசன், தேன் நிறைந்த கொன்றை மலர்களையும் ஊமத்தம் பூவினையும், சந்திரனையும் தன் தலையில் கொண்டவர். அவர் சம்பாதி சடாயு என்னும் பறவைப் பிறப்புடைய தேவர்கள் வழிபட்ட புள்ளிருக்கு வேளூர் தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: கள் – தேன். ஆர்ந்த – நிறைந்த. மதமத்தம் – சுடுநாற்றத்தையுடைய ஊமத்தம். முடியையுடைய பெருமானார் என்க. தள்ளா – தாழ்ந்த பறவைகள் எனக் கருதித் தள்ளிவிடத் தகாத உயிர்களாகிய சம்பாதி சடாயு என்பர்தாம். இருவர் புள் ஆனார். சம்பாதியும் சடாயுவும் பறவைப் பிறப்பை அடைந்து வழிபட்ட வரலாறு. அரையன் – வைத்தியநாதர். இதில் இருவரையும் உணர்த்தினார். 'மேல்' 2, 4, 6, 8, 9, 10., சடாயுவையும் 3, 5, 7 சம்பாதியையும் ஒருமையாகக் குறித்தனர் எனலாம். புள்ளிருக்கு வேளூர் என்றதன் பெயர்க் காரணத்துள் ஒருபகுதி கூறப்பட்டது. சேக்கிழார் பெருமான் 'புள்ளிருக்கும் திருவேளூர்' எனப்பாடுதலால்.

Behold! It is Civan, our Lord who has manifested Himself in Thirup-pullirukku-veloor also called Vytheeswaran-kovil. Our Lord has beautified His matted hair with nectar filled cassia flowers along with datura flowers, which smell bad. Along with this He allows the bright baby moon also to stay on His head. Our Lord blessed the two eagle birds to be king of birds, which were then born with noble status. These two eagle birds daily used to bring fresh flowers from Kaveri-poom-pattinam and strew them over the Lord of this place Thirup-pullirukku-veloor and worshipped with sincere devotion. Our Lord has manifested Himself in the temple in Thirup-pullirukku-veloor.

1929. தையலாளொருபாகஞ்சடைமேலாளவளோடும்
ஐயந்தேர்ந்துழல்வாரோரந்தணனாருறையுமிடம்
மெய்சொல்லாஇராவணனைமேலோடியீடழித்துப்
பொய்சொல்லாதுயிர்போனான்புள்ளிருக்குவேளூரே. 2

தையலாள் ஒருபாகம், சடைமேலாள் அவளோடும்
ஐயம் தேர்ந்து உழல்வார், ஓர் அந்தணனார், உறையும் இடம் -
மெய் சொல்லா இராவணனை மேல்ஓடி ஈடு அழித்து,
பொய் சொல்லாது உயிர்போனான் புள்ளிருக்குவேளூரே.

taiyalAL orupAkam, caTaimElAL avaLOTum
aiyam tErntu uzalvAr, Or antaNan2Ar, uRaiyum iTam--
mey collA irAvaNan2ai mElOTi ITu azittu,
poy collAtu uyirpOn2An2 puLLirukku vELUrE.

பொருள்: தையல்நாயகி என்ற நாமத்தை உடைய உமாதேவியைத் தன் உடம்பின் பாகமாகக் கொண்டவரே ஈசர். அவர் கங்கையைத் தலையில் தரித்துள்ளார். பிரம கபாலத்தை ஏந்தியபடியே பலிதேர்வார். அவர், இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும்போது எதிர்த்துப் போரிட்டு, கீழே விழுந்து, பின்பு இராமனிடம் உண்மையைக் கூறி உயிர் துறந்த, சடாயு வழிபட்ட புள்ளிருக்குவேளூர் தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: தையலாள் – தலத்தின் அம்பிகை திருநாமம். சடை மேலாள் – கங்காதேவி. மேல் ஓடி – வானிற்பறந்து. ஈடு – (இராவணனது) வலியை. இராவணன் மெய்சொல்லாதவன்; சடாயு பொய் சொல்லாதவன் என்று குறித்த திறம் உணர்க.

Behold! It is Civan, the Lord of Thirup-pullirukku-veloor. He shares half portion on the left side of His body with His consort Thyal-Nayagi, our goddess. He supports the lady of the river Ganges in His matted hair. He goes out for alms like a Brahmin saint and behaves like a gracious Supreme Being. The bird king Jadaayu flew in the air and attacked Raavanan, the king of Sri Lanka who never spoke truth while he was carrying Sita in his air conveyance, and subdued his mightiness. However, Raavanan forcibly attacked Jadaayu and he fell down losing his wings. Yet, Jadaayu was able to meet Lord Rama who was on His way searching for Sita. Jadaayu, who spoke only

truth told Rama the encounter events he had with Raavanan and died thereafter. That Jadaayu used to worship our Lord in Thirup-pullirukku-veloor where He is manifested.

1930. வாசநலஞ்செய்திமையோர்நாள்தோறும்மலர்தூவ
ஈசனெம்பெருமானாரினிதாகவுறையுமிடம்
யோசனைபோய்ப்பூக்கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான்புள்ளிருக்குவேளூரே. 3

வாசநலம் செய்து இமையோர் நாள்தோறும் மலர் தூவ,
ஈசன், எம்பெருமானார், இனிது ஆக உறையும் இடம் -
யோசனை போய்ப் பூக் கொணர்ந்து, அங்கு ஒருநாளும் ஒழியாமே,
பூசனை செய்து இனிது இருந்தான் புள்ளிருக்குவேளூரே.

vAca nalam ceytu imaiyOr nALtORum malar tUva,
Ican2, emperumAn2Ar, in2itu Aka uRaiyum iTam--
yOcan2ai pOyp pUk koNarntu, agku orunALum oziyAmE,
pUcan2ai ceytu in2itu iruntAn2 puLLirukku vELUrE.

பொருள்: நாள்தோறும் ஒரு யோசனை தூரம் உள்ள காவிரிப்பூம்பட்டினம் சென்று அங்குள்ள நல்ல மணமுள்ள பூக்களைப் பறித்து வந்து வழிபாடு செய்யும் பறவையே சடாயுவாம். அச்சடாயு இருக்கும் இடமே புள்ளிருக்கு வேளூர். அவ்வூரையே தம் கோயிலாகக் கொண்டவர் சிவபெருமான். அவரைத் தேவர்கள் நாடோறும் மலர்தூவி வணங்கி மகிழ்வர்.

குறிப்புரை: வாசம் – தலவாசம். நலம் – தீர்த்தஸ்நானம். மூர்த்தி தரிசனம் முதலியன. இமையோர் – தேவர், சூரியன், செவ்வாய் முதலோர். மலர் தூவ – அர்ச்சித்து வழிபட. யோசனை – நான்கு கூப்பீடு. கொணர்ந்து – கொண்டு வந்து. ஒழியாமே – தவறாமல். பூசனை – சிவார்ச்சனை. இருந்தான் – சம்பாதி. இவன் காவிரிப் பூம்பட்டினத்தில் பூங்கா வைத்து நாள்தோறும் அங்கிருந்து மலர் கொண்டு வந்து வழிபட்ட வரலாற்றைக் குறித்தது.

Behold! It is Civan, the Lord of Thirup-pullirukku-veloor. The devaas and other celestials used to visit and stay daily for long in Thirup-pullirukku-veloor. Then they take bath in the sacred water, collect fragrant flowers, strew them over our Lord and offer worship. He is our Supreme Pre-eminent Being. The two eagle king birds used to fly daily 13 miles without any break and reach Kaverip-poom-pattinam. They collected

fine flowers and strewed them over our Lord of this place and worshipped Him. In such a holy place our Lord Civan agreeably has manifested Himself and this is called Thirup-pullirukku-veloor.

1931. மாகாயம்பெரியதொருமானுரிதோலுடையாடை
ஏகாயமிட்டுகந்தஎரியாடியுறையுமிடம்
ஆகாயந்தேரோடும்இராவணனையமரின்கண்
போகாமேபொருதழித்தான்புள்ளிருக்குவேளூரே. 4

மா காயம் பெரியது ஒரு மான் உரி தோல் உடைஆடை
ஏகாயம் இட்டு உகந்த எரிஆடி உறையும் இடம்
ஆகாயம் தேர் ஓடும் இராவணனை அமரின்கண்
போகாமே பொருது அழித்தான் புள்ளிருக்குவேளூரே.

mA kAyam periyatu oru mAn2 uri tOl uTai ATai
EkAyam iTTu ukanta eri ATi uRaiyum iTam--
AkAyam tEr OTum irAvaNan2ai amarin2kaN
pOkAmE porutu azittAn2_ puLLirukku vELUrE.

பொருள்: பேருடலைக் கொண்டவரே எம்பெருமான். சிறிய மான்தோலை உடையாகக் கொண்டவரும் அவரே. நெருப்பைக் கையில் ஏந்தி சுடுகாட்டில் ஆடுபவரும் அவரே. அவர், ஆகாய வழியாக இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும்போது எதிர்த்துப் போரிட்ட மடிந்த கழுகாசனர் சடாயு வழிபாடு செய்த புள்ளிருக்கு வேளூரில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: காயம் – திருமேனி. ஏகாயம் – (ஏகாசம்) உத்தரீயம். ஆகாயத்தில் ஓடுந்தேர், புட்பக விமானம். அமர் – போர். பொருது – தாக்கி. அழித்தான் – சடாயு.

Behold! It is Civan, the Lord of Thirup-pullirukku-veloor. His body becomes big boulder-like whenever He wants so. But His dress is small, only the deer's skin. He killed the big fierce rutted elephant and used its hide as His overcoat. He dances over fire in the cremation ground. He is worshipped by the eagle king Jadaayu, who flew in the sky and attacked Raavanan, while he was carrying Sita in his flying chariot. The bird dashed against the king and inflicted many wounds on his body and did his best to prevent him from carrying Sita; but finally his wings were cut off and he fell down. However, he was able to meet Rama on his way and narrated all the events with

Raavanan and then died. Our Lord in Thirup-pullirukku-veloor is worshipped daily by this king bird and in this holy place our Lord has manifested Himself and this place is called Thirup-pullirukku-veloor.

1932. கீதத்தைமிகப்பாடுமடியார்கள்குடியாகப்
பாதத்தைத்தொழநின்றபரஞ்சோதிபயிலுமிடம்
வேதத்தின்மந்திரத்தால்வெண்மணலேசிவமாகப்
போதத்தால்வழிபட்டான்புள்ளிருக்குவேளூரே. 5

கீதத்தை மிகப் பாடும் அடியார்கள் குடிஆகப்
பாதத்தைத் தொழ நின்ற பரஞ்சோதி பயிலும் இடம் -
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவம்ஆக,
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்குவேளூரே.

kItattai mikap pATum aTiyArkaL kuTi Akap
pAtattait toza nin2Ra paranjcOti payilum iTam--
vEtattin2 mantirattAl, veNmaNalE civam Aka,
pOtattAl vazipaTTAn2 puLLirukku vELUrE.

பொருள்: வேத மந்திரமொழிகளைக் கூறி, மணலையே சிவலிங்கமாகப் பாவித்து சம்பாதி ஈசனை வழிபட்டான். அவ்விடமே புள்ளிருக்கு வேளூர் ஆகும். அவ்வூரில் பக்திப் பாடல்களைப் பண்ணோடு பாடி அடியவர்கள் ஈசனின் திருவடிகளை வணங்கி மகிழ்வர். ஒளிமயமான ஈசனார் கோயில் கொண்டுள்ள இடமே புள்ளிருக்கு வேளூராம்.

குறிப்புரை: கீதம் – பாட்டு. மணம் ஒன்றி உரை. ஆர்கீதம் பாட நல்ல உவப்பு இல் அருள் செய்தார். (தி.1 ப.71 பா.8) அடியார்கட்குப் பாதமே குடி. குடியாகத் தொழ நின்ற சோதி என்க. பரஞ்சோதி – மெய்யொளி. மணலைச் சிவமாகப் போதத்தால் பாவித்து வேத மந்திரத்தால் வழிபட்டவன் சம்பாதி. போதம் – ஞானம்.

Behold! It is Civan, the Lord of Thirup-pullirukku-veloor. This is the place where many scholars jointly assemble before our Lord and recite the Vedic songs and worship the holy feet of our Lord daily. He is the Lord of ultimate truth. The two big eagle birds Jadaayu and Sampaathi created in white sand, the Siva Lingam for their daily rituals. Then they recited the mystical words of the Vedas in the presence of the Siva Lingam and worshipped our Lord with divine knowledge. Our Lord Civa attracted to such a holy place has manifested Himself in Thirup-pullirukku-veloor.

1933. திறங்கொண்டஅடியார்மேல்தீவினைநோய்வாராமே
அறங்கொண்டசிவதன்மமுரைத்தபிரானமருமிடம்
மறங்கொண்டங்கிராவணன்றன்வலிகருதிவந்தானைப்
புறங்கண்டசடாயென்பான்புள்ளிருக்குவேளூரே. 6

திறம் கொண்ட அடியார் மேல் தீவினை நோய் வாராமே,
அறம் கொண்டு சிவதன்மம் உரைத்த பிரான் அமரும் இடம் -
மறம் கொண்டு அங்கு இராவணன் தன் வலி கருதி வந்தானைப்
புறம் கண்ட சடாய் என்பான் புள்ளிருக்குவேளூரே.

tiRam koNTa aTiyArmEl--tIvin2ai nOy vArAmE,
aRam koNTu civatan2mam uraitta pirAn2 amarum iTam--
maRam koNTu agku irAvaNan2 tan2 vali karuti vantAn2aip
puRam kaNTa caTAy en2pAn2 puLLirukku vELUrE.

பொருள்: பக்தியுடன் வணங்கும் அடியவர்களுக்குத் தீவினை நோய் வராமல் காப்பவரே எம்பெருமான். சனகாதி முனிவர்களுக்கு அறத்தை உபதேசித்தவரும் அவரே ஆவார். வலிமைமிக்க இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும்போது எதிர்த்துப் போரிட்ட சடாயு வழிபாடு செய்த தவமே புள்ளிருக்கு வேளூராம். அவ்விடத்தில் கோயில் கொண்டவரே எம்பெருமான் ஆவார்.

குறிப்புரை: திறம் – சைவத்திறம். அறம் – அன்று ஆலின்கீழ் இருந்து உரைத்த அறம். சிவதன்மம் – சரியையும், கிரியையும் சிவதன்மம் என்பது சைவ சம்பிரதாயம் ஆயினும். இங்கு நான்கிற்கும் பொதுவாய் நின்றது. (இது தலவரலாற்றுக் குறிப்பு) மறம் – வீரம். தன்வலி – தனது பலத்தை. வந்தானை – வந்த (இரா) வ (ண) னை. புறம் கண்ட – முதுகு பார்த்த. வென்ற என்றபடி.

Behold! It is Civan, our Lord at Thirup-pullirukku-veloor. The devotees who are very sincere in Saiva culture and follow its principles and worship our Lord at Thirup-pullirukku-veloor are protected always by our Lord. He graces them and prevents sufferings from reaching His devotees. The divine virtues attached to Saiva culture were explained by our Lord to the four sages sitting under the stone banyan tree. Raavanan, the king of Sri Lanka was dependent on his own mightiness rather than virtues. He carried away Sita in his flying chariot from the forest to Sri Lanka. On his way the eagle king Jadaayu saw him and inflicted several injuries on him. This eagle

king worshipped our Lord Civan in Thirup-pullirukku-veloor where He has manifested Himself.

1934. அத்தியினீருரிமூடியழகாகஅனலேந்திப்
பித்தரைப்போற்பலிதிரியும்பெருமானார்பேணுமிடம்
பத்தியினால்வழிபட்டுப்பலகாலந்தவஞ்செய்து
புத்தியொன்றவைத்துகந்தான்புள்ளிருக்குவேளூரே. 7

அத்தியின்ஈர்உரிமூடி, அழகுஆக அனல் ஏந்தி,
பித்தரைப் போல் பலி திரியும் பெருமானார் பேணும் இடம் -
பத்தியினால் வழிபட்டு, பலகாலம் தவம் செய்து,
புத்தி ஒன்ற வைத்து உகந்தான் புள்ளிருக்குவேளூரே.

attiyin2 Ir uri mUTi, azaku Aka an2al Enti,
pittaraip pOl pali tiriyum perumAn2Ar pENum iTam--
pattiyin2Al vazipaTTu, palakAlam tavam ceytu,
putti on2Ra vaittu ukantAn2 puLLirukku vELUrE.

பொருள்: ஈசன், யானையின் தோலை உரித்துப் போர்வையாகச் சூடியுள்ளான். அவன் அனலை ஏந்தி ஆடுவான். பித்தரைப்போல் விரும்பி, கோயில் கொண்டுள்ள இடமே புள்ளிருக்கு வேளூராம். அவ்விடத்தில்தான் சடாயு பக்தியோடு பலகாலம் ஈசனை நோக்கித் தவம் செய்து சிறப்புற்ற இடம் புள்ளிருக்கு வேளூர். இது சிவபெருமான் விரும்பி உறையும் இடமாகும்.

குறிப்புரை: அத்தி – யானை. மூடி – போர்த்து. பித்தரைப் போல் என்றதால். இறைவனைப் பித்தனெனல் ஏலாது. பத்தி – பக்தி. திருவடிக்கு அன்பு. புத்தி – ஞானம். ஒன்ற – சிவத்தொடு பொருந்த. ஒன்றி இருந்து நினைமின்கள். உகந்தான் – விரும்பினான், உயர்ந்தவன் (சம்பாதி).

Behold! It is Civa who is manifested in Thirup-pullirukku-veloor. He once killed the rutted elephant and covered His body with its hide. He carries fire in His hand and moves all over the cosmos, begging for alms. The eagle king Jadaayu worshipped our Lord with sincere devotion for many years, did penance by concentrating on the Supremacy of our Lord and happily for many years visited our Lord in Thirup-pullirukku-veloor. This city is very much desired as His abode by our Lord Siva Perumaan.

1935. பண்ணொன்றஇசைபாடுமடியார்கள்குடியாக
மண்ணின்றிவிண்கொடுக்கும்மணிகண்டன்மருவுமிடம்
எண்ணின்றிமுக்கோடிவாழ்நாளதுடையானைப்
புண்ணொன்றப்பொருதழித்தான்புள்ளிருக்குவேளூரே. 8

பண் ஒன்ற இசை பாடும் அடியார்கள் குடிஆக
மண் இன்றி விண் கொடுக்கும் மணிகண்டன் மருவும் இடம் -
எண் இன்றி முக்கோடி வாழ்நாள் அது உடையானைப்
புண் ஒன்றப் பொருது அழித்தான் புள்ளிருக்குவேளூரே.

paN on2Ra icai pATum aTiyArkaL kuTi Aka
maN in2Ri viN koTukkum maNikaNTan2 maruvum iTam--
eN in2Ri mukkOTivANAL atu uTaiyAn2aip
puN on2Rap porutu azittAn2 puLLirukkuvELUrE.

பொருள்: எண்ணிக்கையில் மிகுந்த முக்கோடி வாழ்நாளைத் தவத்தால் பெற்றவன் இராவணன். அவனது மார்பில் புண் உண்டாகும்படி போரிட்டு மடிந்தான் சடாயு. அச்சடாயு என்ற பறவை வழிபட்ட இடமே புள்ளிருக்கு வேளூர் ஆகும். அத்தலத்தில் அடியவர்கள் பண்ணோடு பாடி இறைவனை வணங்குவர். அவர்களுக்கு விண்ணுலக வாழ்வைக் கொடுப்பவன் ஈசன். அம்மணிகண்டன் விரும்பி உறைவது புள்ளிருக்கு வேளூர் தலமே ஆகும்.

குறிப்புரை: ஒன்ற – பொருந்த. 'பண்பொருந்த இசைபாடும் பழனம் சேர் அப்பன்' (தி.4 ப.12 பா.5) குடியாகக் கொடுக்கும் மணிகண்டன் என்க. மண் இன்றி என்றது. பிறவாமைக்கும், விண் கொடுக்கும் என்றது. வீடு பேற்றிற்கும் எனக் கொள்க. எண் – கணக்கு. வாணாள் – வாழ்நாள் என்பதன் மரூஉ. அழித்தான் – சடாயு.

Behold! It is Thirup-pullirukku-veloor, the abode of our Lord Civa. His sincere devotees who sing devotional songs in suitable musical tone on our Lord live permanently in this city. Our Lord blesses these people with good life of virtue on the earth and also in heaven. He is Neelakandan since His neck is blue. It was in this place where king Jadaayu attacked Raavanan who had been blessed with longevity of life for more than three crores of years. Jadaayu fought with Raavanan to prevent him from carrying Sita to Sri Lanka and finally inflicted wounds on him. The eagle king

worshipped Lord Civan in this place for many years. Our Lord loved to be manifested here.

1936. வேதித்தார்புரமூன்றும்வெங்கணையால்வெந்தவியச்
சாதித்தவில்லாளிகண்ணாளன்சாருமிடம்
ஆதித்தன்மகனென்னஅகன்ஞாலத்தவரோடும்
போதித்தசடாயென்பான்புள்ளிருக்குவேளூரே. 9

வேதித்தார் புரம் மூன்றும் வெங்கணையால் வெந்து அவியச்
சாதித்த வில்லாளி, கண்ணாளன், சாரும் இடம் -
ஆதித்தன்மகன் என்ன, அகன் ஞாலத்தவரோடும்
போதித்த சடாயு என்பான் புள்ளிருக்குவேளூரே.

vEtittAr puram mUn2Rum vegkaNaiyAl ventu aviyac
cAtitta villALi, kaNNALan2, cArum iTam--
Atittan2makan2 en2n2a, akan2 njAlattavarOTum
pOtitta caTAyu en2pAn2 puLLirukkuvELUrE.

பொருள்: பகை கொண்ட முப்புர அசுரர்களின் கோட்டைகளை வலிமையான கணை தொடுத்து அழித்தவர் சிவபெருமான். மேரு மலையை வில்லாக வளைத்தவன் சிவபெருமான். நெற்றிக்கண் கொண்டவர் சிவபெருமான். அவர், ஆதித்தனின் மக்களாகத் தோன்றிய சம்பாதி, சடாயு என்ற இரு பறவைகளும் வழிபட்ட புள்ளிருக்கு வேளூர் தலத்தில் கோயில் கொண்டுள்ளார் சிவபிரான்.

குறிப்புரை: வேதித்தார் – பேதித்தவர், பகைவர். சாதித்த – கொன்ற. வில்லாளி – (மேரு) வில்லை ஆள்பவன். கண் ஆளன் – ஞானக் கண்ணாயிருந்து. எல்லாவுயிர்களையும் ஆள்பவன், அடையாதார்க்கு செய்யும் மறக்கருணையின் வேறாய், அடைந்தார்க்கு நல்கும் அறக்கருணையைக் காட்டுங் கண்ணை ஆள்பவன் எனலும் பொருந்தும். ஆதித்தன் – சூரியன். இதிற் குறித்த வரலாறு: சூரியனுக்குச் சம்பாதி, சடாயு இருவரும் மக்கள் என்றும், ஞாயிற்று மண்டலம் வரை பறந்து சென்று சிறகுகள் கரிந்து தலத்தில் வீழ்ந்து வழிபட்டுச் சிறகும் வரமும் பெற்றனரென்றும் புராணம் உள்ளது. இச்செய்தி இராமாயணத்தில் முறையே ஆரண்ய காண்டத்திலும், கிஷ்கிந்தா காண்டத்திலும் கூறப்பெற்றுள்ளன. அகல் – அகலிய, பரந்த. ஞாலத்தவர் – உலகத்தவர்.

Behold! It is Thirup-pullirukku-veloor, the abode of our Lord Civan. He has a third eye at the centre of His forehead. He performs two different duties with the same

eye - protecting virtue and chastising vice. He is the Supreme Bowman, using mount Meru as His bow He destroyed the three flying forts of the asuraas who deviated from god. The two eagle birds Jadaayu and Sampaathi were the sons of Aathithan - the Sun god. They both were born on this earth as birds. However they were very virtuous in their life. They recited the divine knowledge about our Lord and worshipped our Lord in Thirup-pullirukku-veloor. Our Lord Civa was pleased and has manifested Himself in this holy city of Thirup-pullirukku-veloor.

1937. கடுத்துவருங்கங்கைதனைக்கமழ்சடையொன்றாடாமே
தடுத்தவரெம்பெருமானார்தாமினிதாயுறையுமிடம்
விடைத்துவருமிலங்கைக்கோன்மலங்கச்சென்றிராமற்காய்ப்
புடைத்தவனைப்பொருதழித்தான்புள்ளிருக்குவேளூரே. **10**

கடுத்து வரும் கங்கைதனைக் கமழ் சடை ஒன்று ஆடாமே
தடுத்தவர் எம்பெருமானார், தாம்இனிதுஆய் உறையும் இடம் -
விடைத்து வரும் இலங்கைக் கோன் மலங்கச் சென்று, இராமற்காய்ப்
புடைத்து அவனைப் பொருது அழித்தான் புள்ளிருக்குவேளூரே.

kaTuttu varum kagkaitan2aik kamaz caTai on2Ru ATAmE
taTuttavar, emperumAn2Ar, tAm in2itu Ay uRaiyum iTam--
viTaittu varum ilagkaik kOn2 malagkac cen2Ru, irAmaRkAp
puTaittu avan2aip porutu azittAn2 puLLirukkuvELUrE.

பொருள்: சீறிப்பாய்ந்து வந்த கங்கையை மணமிக்க தன் தலையில் தழும்பிச் செல்லாதவாறு தாங்கியவரே சிவபெருமான். இராவணனை இராமனுக்காக எதிர்த்துப் போரிட்டு இறந்த சடாயு வழிபட்ட புள்ளிருக்கு வேளூர் தலத்தில் எம்பெருமான் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: கடுத்து – கோபித்து. சடைமேல் கங்கையைத் தடுத்தவர். ஒன்று – சிறிதும். ஆடாமே – முழுகாமல். விடைத்து – சீறி, வேறுபடுத்து. மலங்க – அலைய. இராமற்கு – இராமபிரானுக்கு. புடைத்து – அடித்து. அலைத்து. அவனை – அவ்விராவணனை. பொருது – அழித்து. அழித்தான்; சடாயு, அழிக்கப்பட்டது வலி (கம்பர். சடாயுவுயிர் நீத்த 118) அவனைப் புடைத்து அழித்தான் என்று கூட்டுக.

எறிந்தான் அதுநோக்கி இராவணன் நெஞ்சின் ஆற்றல்
அறிந்தான் முனிந்து ஆண்டதோர் ஆடகத்தண்டு வாங்கிப்
பொறிந்தாங் கெரியின் சிகை பொங்கியெழப் புடைத்தான்
மறிந்தான் எருவைக்கிறை மால்வரை போல மண்மேல்

(பா. 121), என்றதை நோக்கிப் புடைத்தவன் என்று கொண்டே இராவணன் என்று கூறலும் நன்றாகும்.

Behold! It is Civan, our Lord of Thirup-pullirukku-veloor. He blocked with His matted hair the fast descending flood of the river Ganges. He is our God. The eagle bird king Jadaayu, out of love of Lord Rama, attacked with his powerful wings and inflicted wounds on the body of Raavanan and reduced his mightiness by fighting against him. This eagle king used to worship daily our Lord in Thirup-pullirukku-veloor. This holy city is the abode of our Lord Civan.

1938. செடியாயவுடல்தீர்ப்பான்தீவினைக்கோர்மருந்தாவான்
பொடியாடிக்கடிமைசெய்தபுள்ளிருக்குவேளூரைக்
கடியார்ந்தபொழிற்காழிக்கவுணியன்சம்பந்தன்சொல்
மடியாதுசொல்லவல்லார்க்கில்லையாம்மறுபிறப்பே. 11

செடி ஆய உடல் தீர்ப்பான், தீவினைக்கு ஓர் மருந்து ஆவான்,
பொடி ஆடிக்கு அடிமை செய்த புள்ளிருக்குவேளூரை,
கடி ஆர்ந்த பொழில் காழிக் கவுணியன்-சம்பந்தன்-சொல்
மடியாது சொல்ல வல்லார்க்கு இல்லைஆம், மறுபிறப்பே.

ceTi Aya uTal tIrppAn2, tIvin2aikku Or maruntu AvAn2,
poTi ATikku aTimai ceyta puLLirukkuvELUrai,
kaTi Arnta pozil kAzik kavuNiyan2--campantan2--col
maTiyAtu colla vallArkku illai Am, maRupiRappE.

பொருள்: மணமிக்க சோலைகள் சூழ்ந்த சீர்காழிப்பதியில் அவதரித்தவர் ஞானசம்பந்தப் பெருமான். சிவன், செடிபோல் உயிரைப்பற்றி வரும் உடலை அழிப்பவர். தீவினைகளுக்கு மருந்தாக விளங்குபவரும் அவரே ஆவார். அப்புள்ளிருக்கு வேளூர் இறைவனைப் புகழ்ந்து, பத்துப் பாடல்கள் பாடி அருளியுள்ளார் ஞானசம்பந்தர், அதனைக் குறைவின்றி சொல்ல வல்லவர்களுக்கு மறுபிறப்பே இல்லையாம் என்க.

குறிப்புரை: செடி – குணமில்லாமை. ஆய – ஆகிய. உடல் தீர்ப்பான் – பிறப்பில்லாமல் அருள்பவன். 'தீவினைக்கு ஓர்மருந்து ஆவான்'. 'வரும் பிறவி நோய் தீர்ப்பான்காண் வானவர்க்கும் தானவர்க்கும் மண்ணுளோர்க்கும்' (தி.6 ப.64 பா.4) 'உள்ளம் உள்கி உகந்து சிவன் என்று மெள்ள உள்க வினை கெடும் மெய்ம்மையே' (தி.5 ப.79 ப.8–9) 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்' (தி.6 ப.54 பா.8). இத்தலத்தில் நோய் நீங்கும் பொருட்டு மக்கள் திரள் திரளாக வந்து வழிபடுதலை இன்றும் காணலாம். பொடியாடிக்கு – திருநீற்றில் மூழ்கிய சிவபிரானுக்கு. அடிமை – அடித்தொண்டு. கடி –

மணம், காவல். மடியாது – சோம்பியிராமல், வாளாபிறந்திறவாது எனலுமாம். இத்தலத்தை வழிபட்டவர்க்கு மேற்கூறியவாறு. தீராத பிறவி நோயையும் தீர்த்தருள் வான் சர்வலோகங்கட்கும் ஏகவைத்தியனான நாதன் என்னும் உண்மையை விளக்க. 'இல்லையாம் மறு பிறப்பே' என்றருளினார். இத்திருப்பதிகத்தை மட்டும் நாடோறும் பாராயணஞ் செய்வோர்க்குப் பிறவி ஒழியும் என்பது உறுதி.

Our saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi which is surrounded by big and rich gardens. Here the flowers bloom in large numbers and spread fragrance all over the city. Thiru-gnana-Sambandar became the servitor of our Lord and sang ten verses praising the glory of our Lord Civan who is manifested in the city of Thirup-pullirukku-veloor. Our Lord Civan destroys our body, which like a coil, encircles our soul, dispels all the evils of birth of His devotees. Those devotees who can recite these ten verses sung by Thiru-gnana-Sambandar without any slackening will have no rebirth in this world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

43ஆம் பதிகம் முற்றிற்று
End of 43rd Hymn



திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 180 பதிக எண்: 44

44. திருஆமாத்தூர் 44. THIRU-AAMAATH-THOOR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

பசுக்களுக்குத் தாயாக இறைவன் இருந்து அருளும் தலம். இங்கே பசு என்றது உயிர்த்தொகுதியை. விழுப்புரம் தொடர்வண்டி நிலையத்திற்கு வடமேற்கில் 6 கி.மீ. தூரத்தில் பம்பையாற்றின் வடகரையில் உள்ளது இத்திருத்தலம். விழுப்புரம் பேருந்து நிலையத்திலிருந்து சூரப்பட்டு நகரப் பேருந்தில் திருவாமாத்தூர் செல்லலாம். இது நடுநாட்டுத் தலங்களுள் ஒன்று.

இறைவரின் திருப்பெயர் அழகிய நாதர். இத்திருப்பெயரைத் திருக்குறுந்தொகையில் அப்பர் பெருமான் எடுத்தாண்டிருப்பது மகிழ்தற்கு உரியதாகும். இறைவியாரின் திருப்பெயர் முத்தாம்பிகை. முத்தை வென்ற முறுவலாள். முத்தார் நகை அழகுடையார் என்பர் அருணகிரி நாதர். தீர்த்தம் பம்பை ஆறு. தலவிருட்சம் வன்னிமரம்.

பிருங்கி முனிவர் சிவபெருமானையே வழிபடுபவர். அம்மையாரை வழிபடாதவர். அம்மையார் ஒரு பாகத்தைப் பெற்றபோதும் வண்டு உருவெடுத்துத் துளைத்துச் சிவனையே வழிபட்டார். அதனால் அவரை அம்மையார் வன்னிமரம் ஆகுமாறு சபித்தார். பின்னர் முனிவர் அம்மையாரை வழிபட்டு அவர் அருளால் சாபநீக்கம் பெற்றார். இத்தலம் மூவராலும் பாடப்பெற்றது.

திருக்கோயில் பாதைக்கு இருபுறமாகக் கட்டப்பெற்றுள்ளது. மேல்புறம் சுவாமி, கீழ்புறம் அம்பாள் சந்நிதிகள் அமைந்திருக்கின்றன. ஒன்றை ஒன்று எதிர்நோக்கி இருக்கின்றன. சுவாமியின் முன்கோபுரம் பூர்த்தியாகவில்லை. சுவாமி கோயிலுக்கு நேர்வழியில்லை. தெற்குவாயில் வழியே சென்று பிறகு மேற்கே திரும்ப வேண்டும். எதிரில் இராமர் கோயில் இருக்கின்றது. இராமன் வழிபட்டதனால் அபிராமேசர் என்று பெயர் வந்தது.

அர்த்த மண்டபத்தில் நிலவறை உண்டு. அச்சுதராயர் உருவர் செதுக்கப்பட்டு இருக்கிறது. அவர் திருப்பணி செய்ததாக வரலாறு. அம்மன் கோயில் உயர்த்தப்பட்டு இருக்கின்றது. அதற்குத்தான் பிரகாரமும் கோபுரமும் உண்டு. இரட்டைப் புலவர்கள் இவ்வூர் இறைவன்மீது

கலம்பகம் பாடியுள்ளனர். புலவர் புராணம் பாடிய தண்டபாணி சுவாமிகள் இவ்வூரினர். அவருடைய சமாதி ஊரின்புறத்தே இருக்கின்றது. இவ்வூருக்கு, சம்பந்தர் பதிகங்கள் இரண்டு. அப்பர் பதிகங்கள் இரண்டு. சுந்தரர் பதிகம் ஒன்று ஆக ஐந்து பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

திருவதிகை வீரட்டத்தை வழிபட்ட திருஞானசம்பந்தப் பெருமானார் திருவாமாத்தூர் அணைந்து பாடியவற்றுள் இத்திருப்பதிகமும் ஒன்று.

திருச்சிற்றம்பலம்

1939. துன்னம்பெய்கோவணமுந்தோலுமுடையாடை
பின்னஞ்சடைமேலோர்பிள்ளைமதிசூடி
அன்னஞ்சேர்தண்கானலாமாத்தூரம்மான்றன்
பொன்னங்கழல்பரவாப்பொக்கமும்பொக்கமே. 1

துன்னம் பெய் கோவணமும் தோலும் உடை ஆடை,
பின் அம் சடை மேல் ஓர் பிள்ளைமதி சூடி,
அன்னம் சேர் தண் கானல் ஆமாத்தூர் அம்மான்தன்
பொன் அம் கழல் பரவாப் பொக்கமும் பொக்கமே.

tun2n2am pey kOvaNamum tOlum uTai ATai,
pin2 am caTaimEl Or piLLaimati cUTi,
an2n2am cEr taN kAn2al AmAttUr ammAn2tan2
pon2 am kazal paravAp pokkamum pokkamE?

பொருள்: சிவபெருமான் வேதங்களைக் கோவணமாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்டுள்ளார். தனது பின்னிய சடைமேல் பிறைநிலவைச் சூடி உள்ளார். அன்னப் பறவைகள் நிறைந்த ஆமாத்தூரில் கோயில் கொண்டுள்ளார். அவரது திருவடிகளைத் தொழுதலே நம் கடனாகும். வணங்காதிருத்தல் பெருங்குற்றமாகும்.

குறிப்புரை: துன்னம் – தைத்தல். பெய் – செறிந்த; இட்ட பெய் கோவணம்; வினைத்தொகை. பின் – பின்னிய. அம் – அழகிய. பொக்கம் – பொலிவு. பொலிவும் ஒரு பொலிவோ? பொலிவு அன்று என்க. பா. 5, 9, 10 பார்க்க.

Behold! it is Civan, Lord of Thiru-aamaath-thoor. He wears on His loins a stitched small piece of cloth. He killed an elephant and removed its hide and used it as

His mantle. He accommodates the young baby moon on His plaited hair. He has manifested Himself in Thiru-aamaath-thoor surrounded by cool gardens where many swans join together and stay there. Those people who do not worship and pray to the beautiful golden feet of our Lord of Thiru-aamaath-thoor will never get prosperity. They will lack beauty and prosperity in their life.

1940. கைம்மாவின்தோல்போர்த்தகாபாலிவானுலகில்
மும்மாமதிலெய்தான்முக்கணான்பேர்பாடி
அம்மாமலர்ச்சோலையாமாத்தூரம்மானெம்
பெம்மானென்றேத்தாதார்பேயரிற்பேயரே. 2

கைம்மாவின்தோல் போர்த்த காபாலி, வான்உலகில்
மும் மா மதில் எய்தான், முக்கணான், பேர் பாடி
"அம் மா மலர்ச்சோலை ஆமாத்தூர் அம்மான்! எம்-
பெம்மான்" என்று ஏத்தாதார் பேயரின் பேயரே.

kaimmAvin2tOl pOrtta kApAli, vAn2 ulakil
mum mA matil eytAn2, mukkaNAn2, pEr pATi,
"am mA malarccOlai AmAttUr ammAn2! em-
pemmAn2!" en2Ru EttAtAr pEyarin2 pEyarE.

பொருள்: யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டவரே சிவபெருமான். அவர் பிரம கபாலத்தைக் கையில் எந்தி பலிதேர்ந்து வருவார். மும்மதில்களை எரித்தவர். மூன்று திருக்கண்களைக் கொண்ட அவரைத் தலைவர் என்று கருதி வணங்காதவர்கள் பேய்த்தன்மை உடைய கீழோர்கள் ஆவர்.

குறிப்புரை: கைம்மா – துதிக்கையை உடைய யானை. மும்மா மதில் – மூன்று பெரிய புரம். பேர் – திருநாமம். அம்மான், பெம்மான் என்பவை, அருமகன் பெருமகன் என்பவற்றின் மரூஉ. கோமகன் என்பது கோமான் என்று மருவியதுபோல (பா. 81). ஏத்தாதார் – (உயர்த்துப்) புகழாதார். பேயரிற் பேயர் – கடவுளைப் புகழ்ந்து போற்றி வழிபடாதவர் மக்கள் வடிவினராயினும் பேயரே என்பது பெரியோர் முடிவு. 'நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்தெய்த்தேன்' என்பது நம்பியாரூரர் திருவாக்கு. 'வையத் தவகை' என்றார் நாத்திகரை வள்ளுவர்.

Behold! It is Civan, Lord of Thiru-aamaath-thoor. He killed a rutted elephant and used its hide as His mantle and is called Kaabaali. He shot an arrow and

completely destroyed the three flying forts of the asuraas who flew in the air and caused havoc to the celestials. He has a third eye at the center of His forehead. Our Lord is manifested in the temple in Thiru-aamaath-thoor, which is surrounded by very big rich gardens of flowers. Those people who do not praise our Lord by saying "Oh You are the Supreme Head of the Universe and the Ultimate Lord and our Mother" are none but real devils though they bear human body; good people will slight them in this way.

1941. பாம்பரைச்சாத்தியோர்பண்டரங்கன்விண்டதோர்
தேம்பலிளமதியஞ்சூடியசென்னியான்
ஆம்பலபூம்பொய்கையாமாத்தூரம்மான்றன்
சாம்பலகலத்தார்சார்பல்லாற்சார்பிலமே. 3

பாம்பு அரைச் சாத்தி ஓர் பண்டரங்கன், விண்டது ஓர்
தேம்பல் இளமதியம் சூடிய சென்னியான்,
ஆம்பல்அம்பூம் பொய்கை ஆமாத்தூர் அம்மான்தன்
சாம்பல் அகலத்தார் சார்பு அல்லால் சார்பு இலமே.

pAmpu araic cAtti Or paNTaragkan2, viNTatu Or
tEmpal iLamatiyam cUTiya cen2n2iyAn2,
Ampal AmpUm poykai AmAttUr ammAn2tan2
cAmpal akalattAr cArpu allAl cArpu ilamE.

பொருள்: சிவபெருமான் பாம்பைத் தன் அரையில் அணிகலனாக அணிந்துள்ளார். பாண்டரங்கம் என்னும் திருக்கூத்தை ஆடியவரும் அவரே ஆவார். அவர் தன் தலையில் இளம்பிறையை அணிந்துள்ளார். அவர் ஆம்பல் மலர்கள் நிறைந்த பொய்கைகள் சூழப்பெற்ற திருஆமாத்தூரில் கோயில் கொண்டுள்ளார். அவர் தம் மார்பில் திருநீற்றைப் பூசியுள்ளார். அத்திருநீற்றின்மீது பற்றில்லாதவர்கள் மெய்ச்சார்பு இல்லாதவர்கள் ஆவார்கள்.

குறிப்புரை: அரை – இடுப்பில். பண்டரங்கன் – பாண்டரங்கம் என்னும் திருக்கூத்தை ஆடியவன். விண்டது – பிளந்தது. தேம்பல் – மெலிதல், வாடுதல். 'மதிப்பிளவு' 'தேய்பிறை' என்னும் வழக்குணர்க. சென்னியான் – தலையன். சாம்பல் – திருநீறு அகலத்தார் – மார்பினர் (அடியார்) திருஞானசம்பந்தர்க்குச் சிவனடியாரின் இணக்கத்திலுள்ள பேரன்பும் உறுதியும் விளங்கும். 'நக்கனாரவர் சார்வலானல்கு சார்விலோம் நாங்களே' 'சைவனாரவர் சார்வலால் யாதுஞ் சார்விலோம் நாங்களே' (தி.2 ப.77 பா.8)

'சாதுக்கண் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே' (தி.3 ப.54 பா.5) 'கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே' (தி. 7 பா. 872) 'சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்' (தி. 6 ப. 98 பா. 5).

Behold! It is Civan, Lord of Thiru-aamaath-thoor. He wears the snake around His waist. He used to dance the very famous play called Paandurangam. He has adorned His head with the axe shaped baby moon. He is manifested in the temple situated in the city of Thiru-aamaath-thoor, which is surrounded by water tanks full of blossomed lily flowers. He has smeared His body with the holy ashes. Those who have no close association with His devotees will have no connection with any good in their life.

1942. கோணாகப்பேரல்குல்கோல்வளைக்கைமாதராள்
பூணாகம்பாகமாப்புல்கியவளோடும்
ஆணாகங்காதல்செய்ஆமாத்தூரம்மானைக்
காணாதகண்ணெல்லாங்காணாதகண்களே. 4

கோள் நாகப் பேர்அல்குல் கோல்வளைக்கை மாதராள்
பூண் ஆகம் பாகமாப் புல்கி, அவளோடும்
ஆண்ஆகம் காதல்செய் ஆமாத்தூர் அம்மானைக்
காணாத கண்எல்லாம் காணாத கண்களே.

kOL nAkap pEr alkul kOlvaLaikkai mAtarAL
pUN Akam pAkamAp pulki, avaLOTum
AN Akam kAtal cey AmAttUr ammAn2aik
kANAta kaN ellAm kANAta kaNkaLE!

பொருள்: வளைந்த படம் கொண்ட நாகத்தைப் போன்ற அல்குலையும் கையில் வளையல்களையும் கொண்ட மாதரசியே உமாதேவி ஆவாள். உமாதேவியைத் தன் உடம்பில் ஒரு பாகமாகவும், பாம்பினை அணிகலன்களாகவும் கொண்டவரே சிவபெருமான். அவர் திருஆமாத்தூர் தலத்துள் அழகுறக் கோயில் கொண்டுள்ளார். அவரைக் காணாத கண்கள் பயனற்ற கண்களேயாம்.

குறிப்புரை: கோலி – வலிமை. கொலையுமாம். நாகம் – பாம்பு 'பையரவல்குல்'. கோல் – திரட்சி. ஆகம் – உடம்பு மார்புமாம். புல்கி – தழுவி. புல்கியவள் என்றுமாம். ஆண் ஆகம் – ஆண் உடம்பு. ஆள் நாகம் –

ஆளுகின்ற (மலைபோன்ற) கொங்கை எனலுமாம். நாகம் – உவமையாகுபெயர். காணாத கண்களே – குருட்டுக் கண்களே.

Behold! It is Civan, Lord of Thiru-aamaath-thoor. Our goddess Paarvathi Devi wears around her hip a cobra like hood, she wears also rich and big bangles. She wears many jewels all over her body. Our Lord shares the left side of His body with our goddess Paarvathi Devi. However, He exhibits Himself in the temple only as a male. He graces His consort and is manifested happily in the temple. Those people who do not visit this temple and see the beautiful form of our Lord have no real eyes, their eyes are blind.

1943. பாடல்நெறிநின்றான்பைங்கொன்றைத்தண்தாரே
சூடல்நெறிநின்றான்சூலஞ்சேர்கையினான்
ஆடல்நெறிநின்றானாமாத்தூரம்மான்றன்
வேடநெறிநில்லாவேடமும்வேடமே. 5

பாடல் நெறி நின்றான், பைங்கொன்றைத்தண்தாரே
சூடல் நெறி நின்றான், சூலம் சேர் கையினான்,
ஆடல் நெறி நின்றான், ஆமாத்தூர் அம்மான்தன்
வேடநெறி நில்லா வேடமும் வேடமே?

pATal neRi nin2RAn2, paigkon2RaittaN tArE
cUTal neRi nin2RAn2, cUlam cEr kaiyin2An2,
ATal neRi nin2RAn2, AmAttUr ammAn2tan2
vETa neRi nillA vETamum vETamE?

பொருள்: சிவபெருமான், வேதம் போற்றி வழிபட நிற்பவன். கொன்றை மலர் மாலைகளை அணிந்தவன். சூலப்படையினைக் கையில் ஏந்தி நிற்பவன். திருநடனம் புரிபவன். ஆமாத்தூரில் கோயில் கொண்டுள்ளவன். திருநீறு அணிந்த அவனது வேடத்தைப் போற்றிப் புகழாமல் இருப்பதும் அடியவர்களுக்குப் பொருந்துமோ? பொருந்தாதாம்.

குறிப்புரை: பாடல் நெறி – பாடுதலாகிய வழியில். சூடுதல் – அணிதல். வேடநெறி – உணர்ந்தறிந்தோர்க்கு உய்வேடமாகும்படி பயன் செய்யும் மெய்வேட மார்க்கம் (திருமந்திரம் 1660). வேடமும் – மெய்வேடம் போலவே பூண்ட பொய் வேடமும், வேடமே, ஒரு வேடமாக மதிக்கப்படுமோ? படாது. 'வேடநெறி நில்லார் வேடம் பூண்டு என்ன பயன்?' (திருமந்திரம் 240) சிவவேடமே மெய்ப்பொருள்

எனத்தொழுது கொண்டொழுகுதலே வேடநெறி. 'மாலறநேய மலிந்தவர் வேடமும் . . . . அரன்' என்பது சிவஞானபோதம் (சூ. 12).

Behold! It is Civan, Lord of Thiru-aamaath-thoor. He is the embodiment of all Vedic songs in the best musical tone. He wears on His head the cool fresh cassia flowers. He holds in one of His hands the trident. He likes to perform the cosmic dance whenever He can. He has manifested Himself in the temple in Thiru-aamaath-thoor and exhibits His beauty in the best sacred form. Those people who do not follow the divine knowledge of our Lord and who do not worship His form smeared with holy ashes in the temple are people of falsehood in their life. Let us worship and glorify His appearance as it is.

1944. சாமவரைவில்லாகச்சந்தித்தவெங்கணையால்
காவல்மதிலெய்தான்கண்ணுடைநெற்றியான்
யாவருஞ்சென்றேத்தும்ஆமாத்தூரம்மானத்
தேவர்தலைவணங்குந்தேவர்க்குந்தேவனே. 6

சாமவரை வில் ஆகச் சந்தித்த வெங்கணையால்
காவல் மதில் எய்தான், கண் உடை நெற்றியான்,
யாவரும் சென்று ஏத்தும் ஆமாத்தூர் அம்மான், அத்
தேவர் தலைவணங்கும் தேவர்க்கும் தேவனே.

cAmavarai vil Akac cantitta vegkaNaiyAl
kAval matil eytAn2, kaN uTai neRRiyAn2,
yAvarum cen2Ru Ettum AmAttUr ammAn2,at
tEvar talaivaNagkum tEvarkkum tEvan2E.

பொருள்: மேருமலையை வில்லாக வளைத்தவன் சிவன். கொடிய காளையைக் கொண்டு முப்புரங்களை எரித்து அழித்தவர் சிவபெருமான். அவர் நெற்றிக் கண்ணை உடையவர் ஆவார். யாவராலும் வணங்கப் பெறும் நிலையில் அவர் திருஆமாத்தூர் தலத்தில் கோயில் கொண்டுள்ளார். தேவாதி தேவனாக விளங்கும் அவரை நாளும் பிற தேவர்களும் வணங்கி மகிழ்வர்.

குறிப்புரை: சாமவரை என்பது மதில்; திரிபுரம். யாவரும் – சாவாதவர், பிறவாதவர், தவமே மிக உடையார் மூவாதபல் முனிவர் எல்லோரும் (தி.1 ப.12. பா.6). அகரச்சுட்டு – உலகறிகட்டு, பண்டறிகட்டுமாம். தேவர்

தலைவணங்கும் தேவர் – இந்திரன், பிரமன், மால் முதலியோர். தேவர்க்கும் தேவன் – தேவதேவேசனாகிய சிவபிரான். 'தேவர்கோ அறியாத தேவதேவன் செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கும் மற்றை மூவர்கோனாய் நின்ற முதல்வன்' (திருவாசகம்) அம்மான் – தேவனே என்று முடிக்க.

Behold! It is Civan, the Lord of Thiru-aamaath-thoor. Our Lord held the golden mount Meru as His bow and shot an arrow which had a fiery tip and destroyed the three flying forts of the asuraas which had a strong defence arrangement. Our Lord has a third eye at the center of His forehead. He deserves to be prayed and worshipped by one and all in the universe including the devaas and Indra because He is the Chief and Supreme of all devaas. He is manifested in the temple at Thiru-aamaath-thoor.

1945. மாறாதவெங்கூற்றைமாற்றிமலைமகளை
வேறாகநில்லாதவேடமேகாட்டினான்
ஆறாததீயாடியாமாத்தூரம்மானைக்
கூறாதநாவெல்லாங்கூறாதநாக்களே. 7

மாறாத வெங் கூற்றை மாற்றி, மலைமகளை
வேறாக நில்லாத வேடமே காட்டினான்,
ஆறாத தீஆடி, ஆமாத்தூர் அம்மானைக்
கூறாத நாஎல்லாம் கூறாத நாக்களே!

mARAta veg kURRai mARRi, malaimakaLai
vERAka nillAta vETamE kATTin2An2,
ARAta tI ATi, AmAttUr ammAn2aik
kURAta nA ellAm kURAta nAkkaLE!

பொருள்: தன் கருத்தில் மாற்றமின்றி மார்க்கண்டேயனின் உயிரைக் கவர்ந்து செல்ல வந்தவனே எமன். அவனை வதைத்தவரே சிவபெருமான். அவர் தம் உடம்பின் ஒரு பாகத்தில் உமாதேவியைக் கொண்டுள்ளார். நெருப்பைக் கையில் ஏந்தி ஆடுபவரும் அவரே ஆவார். அவர் திருஆமாத்தூர் தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அவரது பெருமைகளைப் புகழ்ந்து கூறாத நாக்கள் பயனற்ற நாக்குகளேயாம்.

குறிப்புரை: மாறாத கூற்றை மாற்றி – ஒழியாத இயமனை ஒழித்து. மலைமகள் – இமாசல குமாரி (அம்பிகை) வேறாக நில்லாத வேடம் – அர்த்தநாரீசுவர வடிவம். ஆறாத – தணியாத. கூறாத – புகழ்ந்து வாழ்த்தாத கூறாத நாக்களே; ஊமைகளே என்றபடி.

Behold! It is Civan, Lord of Thiru-aamaath-thoor. He has the graceful form of oneness with goddess Umaa since He has given the left portion of His body to His consort, daughter of mount Himalayas. He dances in the eternal fire whenever He wants to. He subdued the all powerful god of death. Those people who do not recite the holy name of our Lord might have tongues in the mouth, but they are tongues in vain.

1946. தாளாலரக்கன்றோள்சாய்த்ததலைமகன்றன்
நாளாதிரையென்றேநம்பன்றன்நாமத்தால்
ஆளானார்சென்றேத்துமாமாத்தூரம்மானைக்
கேளாச்செவியெல்லாங்கேளாச்செவிகளே. 8

*"தாளால் அரக்கன் தோள் சாய்த்த தலைமகன்தன்
நாள் ஆதிரை" என்றே, நம்பன்தன் நாமத்தால்,
ஆள்ஆனார் சென்று ஏத்தும் ஆமாத்தூர் அம்மானைக்
கேளாச் செவிஎல்லாம் கேளாச் செவிகளே!*

"tALAl arakkan2 tOL cAytta talaimakan2tan2
nAL Atirai" en2RE, nampan2tan2 nAmattAl,
AL An2Ar cen2Ru Ettum AmAttUr ammAn2aik
kELAc cevi ellAm kELAc cevikaLE!

பொருள்: கயிலாய மலையை ஆணவத்தால் தூக்க முயன்ற இராவணனின் ஆற்றலைத் தன் காலால் அழித்தவரே சிவபெருமான். அவருக்கு உரிய நாள் ஆதிரைத் திருநாள். அடியவர்கள் ஆதிரையான் என்று அன்போடு கூறி அவரை வழிபடுவர். அவர் திருஆமாத்தூர் தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அவரைப் பற்றிய புகழ்மொழிகளைக் கேளாத செவிகள் கேளாச் செவிகளே (செவிட்டுச் செவிகளேயாம்).

குறிப்புரை: தாள் – திருவடி. தலைமகன் – கோமகன் (பா. 2) நாள் ஆதிரை – திருவாதிரை நாள். நம்பன் – விருப்பிற்குரியவன் (சிவன்) ஆள் – அடிமை. நாமத்தால் – திருவைந் தெழுத்தால்; திருப்பெயர்களாலுமாம். நாமத்தால் ஏத்தும் ஊர் என்க. கேளாச் செவிகளே – செவிட்டுக் காதுகளே என்றபடி. கேளாமை – சிவபுராணம். சிவகீர்த்தி, சிவநாமம் முதலியவற்றைக் கேட்டல் இல்லாமை.

Behold! It is Civan, Lord of Thiru-aamaath-thoor. Raavanan, the king of Sri Lanka never faced defeat in any war in his life. Our Lord subdued the mightiness of Raavana's shoulders by pressing the mountain top with His toe. The most auspicious day for our Lord is Aathirai day. Those devotees who realise this fact about the

Aathirai day, go to the temple on this day and recite sacred songs, worship Him and hear His glory. Those ears which fail to hear the glory of our Lord are merely deaf ears.

1947. புள்ளுங்கமலமுங்கைக்கொண்டார்தாமிருவர்
உள்ளுமவன்பெருமைஒப்பளக்குந்தன்மையதே
அள்ளல்விளைகழனியாமாத்தூரம்மானெம்
வள்ளல்கழல்பரவாவாழ்க்கையும்வாழ்க்கையே. 9

புள்ளும் கமலமும் கைக்கொண்டார்தாம் இருவர்
உள்ளுமவன் பெருமை ஒப்பு அளக்கும்தன்மையதே?
அள்ளல் விளை கழனி ஆமாத்தூர் அம்மான், எம்
வள்ளல், கழல் பரவா வாழ்க்கையும் வாழ்க்கையே.

puLLum kamalamum kaikkoNTArtAm iruvar
uLLumavan2 perumai oppu aLakkum tan2maiyatE?
aLLal viLaikazan2i AmAttUr ammAn2, em
vaLLal, kazal paravA vAzkkaiyum vAzkkaiyE?

பொருள்: கருட வாகனத்தைக் கொண்ட திருமாலும், தாமரை மலர்மீது வீற்றிருக்கும் பிரமனும் போற்றும் சிவனின் பெருமை நம்மால் அளந்தறியக் கூடியதோ? வளமான வயல்கள் நிறைந்த திருஆமாத்தூரில் கோயில் கொண்டுள்ள இறைவனின் திருவடிகளைப் பரவாத வாழ்க்கையும் நல்வாழ்க்கை ஆகுமோ? ஆகாதாம் என்க.

குறிப்புரை: புள் – கருடப் பறவை. கமலம் – தாமரை. கைக்கொண்டார் – ஊர்தியாக் கொண்ட மால், ஆசனமாகக் கொண்ட அயன், உள்ளும் அவன் – தியானிக்கப்படும் அப்பரமசிவனது. ஒப்பு அளக்கும் தன்மையதே – ஒப்பாக அளவிடப்பெறும் தன்மையை உடையதோ! இல்லை என்றபடி. அள்ளல் – சேறு. வள்ளல் – எல்லாம் அருளும் பரம்பொருளினும் வேறு வள்ளல் உண்டோ? கழல் – (தானியாகு பெயர்) திருவடி. பரவா – வாழ்த்தாத. வாழ்க்கையோ – ஒரு வாழ்வாகு(மதிக்கப்படு)மோ? வாழ்வன்று என்றபடி.

Behold! It is Civan, our Lord who is manifested in Thiru-aamaath-thoor. The demigod Vishnu has the eagle for his transport. The other creator god Brahma is seated in the lotus flower. They both pray and worship our Lord Civan whose abode is Thiru-aamaath-thoor. Is the glory of our Lord worshipped by these two, measurable to our small minds? No. In Thiru-aamaath-thoor our Lord's temple is surrounded by paddy fields, very fertile and the ground, muddy and full of water. Is it a life worthy to be noted, if it does not praise our God Supreme of Thiru-aamaath-thoor?

1948. பிச்சைபிறர்பெய்யப்பின்சாரக்கோசாரக்
கொச்சைபுலால்நாறஈருரிவைபோர்த்துகந்தான்
அச்சந்தன்மாதேவிக்கீந்தான்றனாமாத்தூர்
நிச்சல்நினையாதார்நெஞ்சமேநெஞ்சமே. 10

பிச்சை பிறர் பெய்ய, பின் சார, கோ சார,
கொச்சை புலால் நாற, ஈஉரிவை போர்த்து உகந்தான் -
அச்சம் தன் மா தேவிக்கு ஈந்தான்தன் - ஆமாத்தூர்
நிச்சல் நினையாதார் நெஞ்சமே நெஞ்சமே?

piccai piRar peyya, pin2 cAra, kO cAra,
koccai pulAl nARa, Ir urivai pOrttu ukantAn2--
accam tan2 mA tEvikku IntAn2 tan2--AmAttUr
niccam nin2aiyAtAr nenjcamum nenjcamE?

பொருள்: சிவபெருமான் பிரம கபாலத்தைக் கையில் ஏந்தி பிறர் இடும் பிச்சையை விரும்பி வருவார். புலால் நாறும் யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவரும் அவரே ஆவார். அவரது செயல் கண்டு அச்சமுற்று நின்றாள் உமாதேவி. அவளைத் தன் உடம்பின் ஒரு பாகமாகக் கொண்டு அருளியவரும் அவரே. அவர் ஆமாத்தூர் தலத்துள் கோயில் கொண்டுள்ளார். அவரைத் தினமும் நினைந்து போற்றாதார் நெஞ்சம், நெஞ்சாகுமோ? ஆகாதாம் என்க.

குறிப்புரை: கோ – தலைமை. சார – (தன்னையே) பொருந்த. கொச்சை – இகழ்வு. உரிவை தோல் – யானைத்தோல் போர்த்தும். மாயாதிருத்தல்பற்றிக் 'கோசார' என்றார் (சிந்தாமணி 2787 உரை பார்க்க). 'யானையின் பசுந்தோல் பிறர் உடம்பிற்பட்டால் கொல்லும் என்று உணர்க' என்றார் நச்சினார்க்கினியர், பின்சாரப் போர்த்துகந்தான், கோசாரப் போர்த்துகந்தான் என்றியைத்துப் பொருள் உணர்க. 'கோசாரங்' என்று பாடபேதம் உண்டு என்று காட்டியுள்ளார் மதுரை ஞானசம்பந்தப்பிள்ளை. கோ – மலை. யானைக்கு உவமை ஆகுபெயராகக் கொண்டு. யானை சார எனவும் பொருந்தும். தன்மாதேவிக்கு அச்சம் ஈந்தான் என்றது யானையை உரித்த வரலாறு பற்றியது. (பார்க்க தி. 1 ப. 75 பா. 7). 'மலைக்கு மகள் அஞ்ச மதகரியை உரித்தீர்' (தி. 7 ப. 9 பா.1).

Our Lord moves into the cosmos and begs for alms. The young ladies give alms to Him and follow Him. Once, He faced an elephant, killed it and removed its hide, which had the bad smell of the dead elephant's flesh. He made it His overcoat and happily appeared before Umaa and dispelled her fear. The hearts of those who do not

think, praise and worship our Lord of Thiru-aamaath-thoor daily do not deserve to be called hearts at all.

1949. ஆடலரவசைத்தஆமாத்தூரம்மானைக்
கோடலிரும்புறவிற்கொச்சைவயத்தலைவன்
நாடலரியசீர்ஞானசம்பந்தன்றன்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. 11

ஆடல் அரவு அசைத்த ஆமாத்தூர் அம்மானை,
கோடல் இரும் புறவின் கொச்சைவயத் தலைவன் -
நாடல் அரிய சீர் ஞானசம்பந்தன் தன்
பாடல்இவை வல்லார்க்கு இல்லைஆம், பாவமே.

ATal aravu acaitta AmAttUr ammAn2ai,
kOTal irum puRavin2 koccaivayat talaivan2--
nATal ariya clr njAn2acampantan2 tan2--
pATal ivai vallArkku illai Am, pAvamE.

பொருள்: ஆடும் அரவத்தை அரையில் அணிந்த ஆமாத்தூர் அண்ணலே சிவபெருமான் ஆவார். அவரைப் புகழ்ந்து கொச்சைவம் என்றழைக்கப் பெறும் சீர்காழிப்பதியில் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான் பத்துப் பாடல்கள் பாடியருளியுள்ளார். அப்பாடல்களைப் பாட வல்லவர்க்கு பாவம் இல்லையாம்.

குறிப்புரை: ஆடல் அரவம் – படம் விரித்து ஆடுதலை உடைய பாம்பு. அசைத்த – கச்சாகக் கட்டிய. கோடல் – வெண்காந்தள். இரும்புறவு – பெரியகாடு. முல்லை நிலம். புறவு, கொச்சைவயம் காழியின் வேறு பெயர்கள் – பாவம் இல்லை ஆகும் என்க.

Our saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi. This city, forest oriented, is a very fertile place. Thiru-gnana-Sambandar has attained high glory. He came to Thiru-aamaath-thoor and praised our Lord, worshipped Him and sang ten Tamil verses containing the supreme glory of our Lord. Our Lord wears the serpent around His waist. Those devotees who can recite these hymns of Thiru-gnana-Sambandar will have no sins at all in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

44-ஆம் பதிகம் முற்றிற்று
End of 44th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 181 *பதிக எண்: 45*

45. திருக்கைச்சினம் / 45. THIRUK-KAICH-CHINAM

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

திருவாரூருக்குத் தெற்கிலுள்ள திருநெல்லிக்கா என்னும் தொடர்வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது காவிரிக்குத் தென்கரைத் தலங்களுள் 122ஆவது ஆகும். திருவாரூர் திருத்துறைப்பூண்டி பேருந்து வழியிலுள்ளது.

இந்திரன் இங்கு மணலால் சிவலிங்கத் திருமேனியை எழுந்தருளுவித்துப் பூசித்தான். முடிவில் அதைக் கையினால் எடுக்க முயன்றபோது அது எடுக்க வாராமல் அவனது கை அடையாளம் அவரது திருமேனியில் பதிந்துவிட்டது. ஆதலின் இப்பெயர் பெற்றது என்பது. (சின்னம் – அடையாளம். கைச்சின்னம் – என்பது கைச்சினம் என்று ஆயிற்று).

இறைவரது திருப்பெயர் – கைச்சினநாதர். இறைவியாரது திருப்பெயர் – வெள்ளை நாயகி. தீர்த்தம் – இந்திர தீர்த்தம். வச்சிரதீர்த்தம் என்பன. தலமரம் – கோங்கிலவு. தேவேந்திரன், திருணபிந்து இவர்கள் பூசித்துப் பேறு பெற்றனர். இது ஞானசம்பந்தப் பெருந்தகையாரால் பாடப்பெற்றது. அவருடைய பதிகம் ஒன்று இருக்கின்றது. மதுரை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்ட கோயில் இது.

பதிக வரலாறு

சண்பை நகர் வேந்தர் சொல்வேந்தரொடு திருவாஞ்சியத்தில் திருநீலகண்டப் பெருமானை வணங்கினார். தலையாலங்காடு முதலிய தலங்களையும் பணிந்தார். திருவாரூர் சென்றார். திருக்காறாயில், தேவூர், திருநெல்லிக்கா என்னும் தலங்களை வழிபட்டுத் திருக்கைச்சினத்தைப் பரவிப் பாடிய திருப்பதிகம் இது.

திருச்சிற்றம்பலம்

1950. தையலோர்கூறுடையான்தண்மதிசேர்செஞ்சடையான்
மையுலாமணிமிடற்றான்மறைவிளங்குபாடலான்
நெய்யுலாமூவிலைவேலேந்திநிவந்தொளிசேர்
கையுடையான்மேவியுறைகோயில்கைச்சினமே. 1

தையல் ஓர் கூறு உடையான், தண்மதி சேர் செஞ்சடையான்,
மை உலாம் மணிமிடற்றான், மறை விளங்கு பாடலான்,
நெய் உலாம் மூஇலைவேல் ஏந்தி நிவந்து ஒளி சேர்
கை உடையான், மேவி உறை கோயில் - கைச்சினமே.

taiyal Or kURu utaiyAn2, taNmati cEr cenjcataiyAn2,
mai ulAm maNimiTaRRn2, maRai vilagku paTalAn2,
ney ulAm mU ilaivEl Enti nivantu oLi cEr
kai utaiyAn2, mEvi uRai kOyil-kaiccin2amE.

பொருள்: சிவன் உமாதேவியை ஒருபாகத்தில் கொண்டவன். பிறைச்சந்திரனைச் சூடிய சிவந்த சடையினன். நீலகண்டத்தினைக் கொண்டவன். மறைகளை விரித்து இசைப்பவன். நெய் பூசப்பெற்ற மூவிலைச் சூலத்தைக் கையில் ஏந்தியவன். ஒளிதிகழும் தேவேந்திரனின் கைரேகை பதியப் பெற்றவன். அவன் விரும்பி உறைகின்ற திருத்தலமே கைச்சினம் ஆகும்.

குறிப்புரை: தையல் – உமாதேவியார். கூறு – இடப்பாகம். மை – மேகம். உலாம் – ஒத்த. நிவந்து – மேலோங்கி. ஒளி – தீ. கைச்சிம் – இந்திரனது கைச்சின்னம் (குறி). சிவபிரான் திருமேனியில் பட்டது பற்றிய காரணப்பெயர். 1, 2, 3, 6 ஆம் பாடல்களில் உணர்த்திய மறைப்பாடல் இத்தலத்தின் விசேடமாதல் அறியலாம்.

Oh! It is Civan, the Lord of Thiruk-kaich-chinam. He shared His left side body with His consort Umaa. He retains the cool baby moon in His red matted hair. His neck is dark blue in colour. He sings the four Vedas whenever He wants to. He holds in one of His hands the trident to which the ghee is applied for its maintenance. The impression of Indra's hand is glistening in the Siva Lingam. Indira tried his best to remove the Siva Lingam, he created in sand for his worship, to be taken to his Indira Loka; he could not lift it; he could not even move it. That impression of his palm could be seen forever in the Siva Lingam with his fingerprint. This Lord desired to manifest Himself in the temple in Thiruk-kaich-chinam.

1951. விடமல்குகண்டத்தான்வெள்வளையோர்கூறுடையான்
படமல்குபாம்பரையான்பற்றாதார்புரமெரித்தான்
நடமல்குமாடலினான்நான்மறையோர்பாடலினான்
கடமல்குமாவுரியானுறைகோயில்கைச்சினமே. 2

விடம் மல்கு கண்டத்தான், வெள்வளை ஓர்கூறு உடையான்,
படம் மல்கு பாம்பு அரையான், பற்றாதார் புரம் எரித்தான்,
நடம் மல்கும் ஆடலினான், நான்மறையோர் பாடலினான்,
கடம் மல்கு மா உரியான், உறை கோயில் - கைச்சினமே.

viTam malku kaNTattAn2, veLvaLai Or kURu uTaiyAn2,
paTam malku pAmpu araiyAn2, paRRAtAr puram erittAn2,
naTam malkum ATalin2An2, nAlmaRaiyOr paTalin2An2,
kaTam malku mA uriyAn2, uRai kOyil-kaiccin2amE.

பொருள்: சிவன், கண்டத்தில் விடத்தினை உடையவன். உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவன். படமுடைய பாம்பினை அணிந்தவன். பற்றற்ற அசுரர்களின் முப்புரங்களை எரித்து அழித்தவன். நடனமிடுபவன். நான்மறைகளில் பொருந்தியவன். யானையின் தோலைப் போர்த்திக் கொண்டவன். அவனே கைச்சினம் என்ற தலத்தில் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: விடம் – நஞ்சு. மல்கு – நிறைந்த. கண்டத்தான் – கழுத்தினன். பற்றாதார் – பகைவர். (தாரகாட்சன் முதலிய மூவர்). நடம் – தாண்டவத்தின் வகை. ஆடல் – ஆடுதல். நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் (திருவாசகம்). கடம் – மதநீர், காடுமாம். உரியான் – தோலுடையான்.

Oh! It is Civan, our Lord at Thiruk-kaich-chinam. His neck is dark blue in colour because He consumed the poison of the ocean. On His left side, His consort Umaa Devi is embedded, she wears white bangles. He has admitted on His waist the dancing snake. He burnt the three flying forts of the repugnant asuraas. His vocation is the cosmic dance, whenever He wants He performs it. He chants the songs of the four Vedas. He killed the rutted elephant, removed its skin and covered His body with its hide. This Lord Civan desired to be manifested in Thiruk-kaich-chinam.

1952. பாடலார்நான்மறையான்பைங்கொன்றைபாம்பினொடும்
சூடலான்வெண்மதியந்துன்றுகரந்தையொடும்
ஆடலானங்கையனலேந்தியாடரவக்
காடலான்மேவியுறைகோயில்கைச்சினமே. 3

பாடல் ஆர் நால்மறையான்; பைங்கொன்றை பாம்பினொடும்
சூடலான், வெண்மதியம் துன்று கரந்தையொடும்;
ஆடலான், அங்கை அனல் ஏந்தி; ஆடுஅரவக்-
காடலான்; மேவி உறை கோயில் - கைச்சினமே.

pATal Ar nAlmaraiyAn2; paigkon2Rai pampin2oTum
cuTalAn2, venmatiyum tun2Ru karantaiyOTum;
ATalAn2 agkai anal Enti; atu aravak-
katAlan2; mevi uRai kOyil-kaicin2AmE.

பொருள்: ஈசன், நான்மறைகளாக விளங்குபவன். கொன்றை மலர் மாலைகளை அணிந்தவன். பாம்பினை அரையில் அணிந்தவன். வெண்ணிலவையும், திருநீற்றுப் பச்சையும் தரித்து நெருப்பை ஏந்தி ஆடுபவன். சுடுகாட்டில் மேவி உறையும் அவனே கைச்சினம் என்ற தலத்திலும் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: சூடல் – சூடுதல். துன்று – நெருங்கிய. கரந்தை – பூ. காடலான் – காட்டினன். அரவக்காடலான் – சடைக்காடு, தாமரைக்காடு. வெள்ளக்காடு போல மிகுதியை உணர்த்தியது.

Oh! It is Civan, Lord of Thiruk-kaich-chinam. He is the author of the four Vedas, which contain musical songs. He has adorned His head with fresh cassia flowers. He has kept also the serpent on His matted hair. He retains on His head the young baby moon along with the well-grown tender leaves of the bael plant. His main vocation is to dance whenever He desires to do it. He holds in His good-looking hands fire. He dances in the cremation ground and wears dancing snakes around His waist. This Lord Civa has desired to be manifested in the temple in Thiruk-kaich-chinam.

1953. பண்டமரர்கூடிக்கடைந்தபடுகடல்நஞ்
சுண்டபிரானென்றிறைஞ்சியும்பர்தொழுதேத்த
விண்டவர்கள்தொல்நகரம்மூன்றுடனேவெந்தவியக்
கண்டபிரான்மேவியுறைகோயில்கைச்சினமே. 4

"பண்டு அமரர் கூடிக் கடைந்த படு கடல் நஞ்சு
உண்ட பிரான்" என்று இறைஞ்சி உம்பர் தொழுது ஏத்த,
விண்டவர்கள் தொல்-நகரம்மூன்று உடனேவெந்து அவியக்
கண்ட பிரான் மேவி உறை கோயில் - கைச்சினமே.

"paNTu amrar kUtik kaTainta patu kaTal nanjcu
uNTa pirAn2' en2Ru iRainjci. umpar tozutu Etta,
vintavarkaL tol-nakaram mUn2Ru utan2E ventu aviyak
kaNta pirAn2 mEvi uRai kOyil-kaiccin2ame.

பொருள்: முன்பு ஒருகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் ஒன்றுசேர்ந்து பாற்கடலைக் கடைந்தனர். அப்போது அதிலிருந்து நஞ்சு தோன்றியது. அதனைச் சிவன் உண்டருளினார். அவரை அமரர் தொழுது போற்றினர். பகைமை உணர்வு கொண்டதால் திரிபுரத்தசுரர் என்ற அசுரர்களின் முப்புரங்களையும் எரித்து அழித்தவரும் சிவனே. அவரே விரும்பி கைச்சினம் என்ற தலத்தில் கோயில் கொண்டுள்ளார் என்க.

குறிப்புரை: பண்டு – முன்பு. அமரர் – தேவர். படுகடல் – ஆழ்கடல். விண்வர்கள். தொல்நகரம் – பகைவர்களின் பழைய திரிபுரம்.

Oh! It is Civan, Lord of Thiruk-kaich-chinam. In the olden days, the devaas and th asuraas jointly churned the ocean of milk. A very severe poison came out of the sea which was about to destroy the whole universe. Then our Lord swallowed the poison and kept it at His throat and prevented it from going down to the stomach. All the devaas and all the celestials worshipped our Lord for saving their life. Our Lord helped the devaas by relieving them of their intolerable sufferings inflicted on them by the asuraas, by destroying their three flying fortresses and killing them completely. Thus Lord Civan desired to be manifested in Thiruk-kaich-chinam.

1954. தேய்ந்துமலிவெண்பிறையான்செய்யதிருமேனியினான்
வாய்ந்திலங்குவெண்ணீற்றான்மாதினையோர்கூறுடையான்
சாய்ந்தமரர்வேண்டத்தடங்கடல்நஞ்சுண்டனங்கைக்
காய்ந்தபிரான்மேவியுறைகோயில்கைச்சினமே. 5

தேய்ந்து மலி வெண்பிறையான், செய்யதிருமேனியினான்,
வாய்ந்து இலங்கு வெண்நீற்றான், மாதினை ஓர் கூறு உடையான்,
சாய்ந்து அமரர் வேண்டத் தடங்கடல் நஞ்சு உண்டு அநங்கைக்
காய்ந்த பிரான், மேவி உறை கோயில் - கைச்சினமே.

tEyntu mali venpiRaiyan2, ceyytrumEn2iyin2an2,
vAyntu ilagku venniRran2, matin2aior kuRu uTaiyan2,
cAyntu amrar ventat taTagkaTal nanjcu uNTu anagkaik
kAynta prAn2, mEvi uRai kOyil-kaiccin2AmE.

பொருள்: சிவபெருமான் தேய்ந்து மெலிந்த சந்திரனுக்கு அபயம் அளித்து அதனைத் தலையில் சூடிக் கொண்டுள்ளார். அவர் சிவந்த மேனியினைக் கொண்டவர் ஆவார். அவர் வெண்ணீற்றை அணிந்திருப்பார். மங்கையை ஒரு பாகமாகக் கொண்டு காட்சியளிப்பார். அமரர் வேண்ட கடல் நஞ்சை உண்டவர் அவரே. காமனைக் காய்ந்தவரும் அவரே. அவர் கைச்சினம் என்ற தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: தேய்ந்து மலி – குறைந்து வளரும். திங்களுக்கு இயல்பு அடைமொழி. இது சிவபெருமான் திருமுடிமேற் பிறைக்கு அன்று. இலங்கு – விளங்கும். மாது – உமாதேவியார். காய்ந்து – மெலிந்து, ஒடியெனலுமாம். அநங்கை – அநங்கனை, உருவிலியாகிய மன்மதனை. பெருந்திறத்து அநங்கனை அநங்கமா விழித்ததும் பெருமை போலும் (ப.349, பா.9). மாய்ந்தன தீவினை . . . அநங்கைக் காய்ந்தபிரான் கண்டியூர் எம்பிரான் (தி.4 பா.93 ப.9). அநங்கனை என்பது அநங்கை எனக் குறைந்தது போலும்.

Oh! It is Civan, Lord of Thiruk-kaich-chinam. Our Lord retains the moon which fades and grows. His entire body is bright red. He has embedded His consort on the left side of His body. He consumed the poison emitted out of the ocean. He burnt the formless god of love for his misdeed. This Lord Civa desired to be manifested in Thiruk-kaich-chinam.

1955. மங்கையோர்கூறுடையான்மன்னுமறைபயின்றான்
அங்கையோர்வெண்டலையானாடரவம்பூண்டுகந்தான்
திங்களொடுபாம்பணிந்தசீரார்திருமுடிமேல்
கங்கையினான்மேவியுறைகோயில்கைச்சினமே. 6

மங்கை ஓர் கூறு உடையான், மன்னும் மறை பயின்றான்,
அங்கை ஓர் வெண்தலையான், ஆடுஅரவம் பூண்டு உகந்தான்,
திங்களொடு பாம்பு அணிந்த சீர் ஆர் திருமுடிமேல்
கங்கையினான், மேவி உறை கோயில் - கைச்சினமே.

magkai or kURu utaiyAn2, man2n2um maRai payin2Ran2,
agkai or ventlaiyan2,atu aravam puNtu ukantAn2,
tigkalOtu pampu aninta cir Ar tirumutimel
kagkaiyin2an2, meviuRai kOyil-kacicin2amE.

பொருள்: சிவன், மங்கையை ஒரு பாகமாகக் கொண்டவன். மறைகளை ஓதுபவன். கையில் பிரம கபாலத்தை ஏந்தியவன். ஆடும் பாம்பினை அரையில் அணிந்திருப்பவன். திங்களையும் பாம்பையும் தலைமேல் கொண்டவன். தலையில் கங்கை நதியையும் தாங்கியவன். அவனே கைச்சினம் என்ற தலத்தில் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: அங்கையோர் வெண்டலையான் – பிரமகபாலத்தை ஏந்திய கையன். பூண்ட அரவம் – அணிந்த பாம்பு. முறையே திருமேனியிலும் திருமுடியிலும் இருத்தல்பற்றி ஆதலின் கூறியது கூறலன்று (ப.155 பா.7 பார்க்க).

Oh! It is Civan, our Lord at Thiruk-kaich-chinam. His consort is embedded on the left side of His body. He used to chant the songs of the four Vedas. He carries in His hand the white human skull. He wears the dancing serpent on His body and feels happy. He has adorned His head with the moon, the snake and the lady of Ganges. This Lord Civan desired to be manifested in Thiruk-kaich-chinam.

1956. வரியரவேநாணாகமால்வரையேவில்லாக
எரிகணையால்முப்புரங்களெய்துகந்தஎம்பெருமான்
பொருசுடலையீமப்புறங்காட்டான்போர்த்ததோர்
கரியுரியான்மேவியுறைகோயில்கைச்சினமே. 7

வரிஅரவே நாண்ஆக, மால்வரையே வில் ஆக,
எரிகணையால் முப்புரங்கள் எய்து உகந்த எம்பெருமான்,
பொரி சுடலை ஈமப் புறங்காட்டான், போர்த்தது ஓர்
கரிஉரியான், மேவி உறை கோயில் - கைச்சினமே.

variaravE nan aka. malvaraiyE vilAka.
erikaniyAl muppuragkal eytu ukanta emperumAn2.
pori cuTalai Emap puragkatan2, pOrttatu or
kariuriyAn2, mEviuRAi kOyil-kaiccin2amE.

பொருள்: வாசுகி என்ற பாம்பினை நாணாகவும், பெருமைமிக்க மேருமலையை வில்லாகவும் அக்கினியை நெருப்பாகவும் கொண்டு, சிவபெருமான் முப்புரங்களை எரித்து அழித்தார். அவரே சுடுகாட்டில் உறைபவர். யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொள்பவர். அவரே கைச்சினம் என்ற தலத்தினுள்ளும் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: வரி அரவு – வாசுகியென்னும் பாம்பு. நாண் – வில்லின் நாண் (கயிறு). மால்வரை – பெரிய மேருமலை. எரி கணை – அக்கினியை நுனியிலுடைய பாணம். சுடலை – சுடுதலைக் கொண்ட ஈமப் புறங்காடு – புறத்தேயுள்ள ஈமக்காடு. கரிஉரி – யானைத்தோல். போது – மலரும் பருவத்து. நீதியினால் ஏத்த – முறைப்படித் துதிக்க.

Oh! It is Civan, our Lord at the Thiruk-kaich-chinam. Our Lord bent mount Meru as His bow, used the striped snake as the rope, at the tip of the arrow He fixed a fireball and then shot the arrow and completely destroyed the three flying forts and its people who lived there. His vocation is to dance in the cremation ground where people strew fried rice. He killed the rutted elephant and covered His body using its hide as His coat. This Lord Civan desired to be manifested Himself in Thiruk-kaich-chinam.

1957. போதுலவுகொன்றைபுனைந்தான்திருமுடிமேல்
மாதுமையாளஞ்சமலையெடுத்தவாளரக்கன்
நீதியினாலேத்தநிகழ்வித்துநின்றாடும்
காதலினான்மேவியுறைகோயில்கைச்சினமே. 8

போது உலவு கொன்றை புனைந்தான், திருமுடிமேல்;
மாதுஉமையாள் அஞ்ச மலை எடுத்த வாள் அரக்கன்
நீதியினால் ஏத்த நிகழ்வித்து, நின்று ஆடும்
காதலினான்; மேவி உறை கோயில் - கைச்சினமே.

pOtu ulavu kon2Rai pun2aintan2 tirumuTimEl;
maTu umaiyaL anjca malai eTutta vAL arakkan2
nitiyin2Al Etta nikazvittu, nin2Rru aTum
katalin2An2; mEvi urai kOyil-kaiccin2Ame.

பொருள்: சிவபெருமான், கொன்றை மலர்மாலைகளை அணிந்தவர். இராவணன் கயிலாயத்தில் இருந்த உமாதேவி அஞ்சுமாறு அம்மலையைத் தூக்க முயன்றான். அவனை முறைப்படி அடர்த்துப் பின் அருள் செய்தவரே சிவபெருமான். அவர் எப்போதும் திருநடனம் புரிபவர். அவர் விரும்பி கோயில் கொண்டுள்ள தலமே கைச்சினம் ஆகும்.

குறிப்புரை: திருமுடிமேல் கொன்றை மாலையை அணிந்தான். முடிபோதுகள் பொருந்திய கொன்றை. உலவு கொன்றை – வினைத்தொகை. உமையாள் அஞ்ச மலையை எடுத்தான் அரக்கன். நிகழ்வித்து– (பண்டுபோல்) விளங்கச்செய்து. புனைந்தானும் காதலினானும் ஆகிய சிவபெருமான் கைச்சினம் என்றியைக்க.

Oh! It is Civan, Lord of Thiruk-kaich-chinam. When Raavanan, king of Sri Lanka tried to lift mount Himalayas, our goddess shuddered. However, Raavanan was driven by our Lord to regret and with sincere devotion, finally he praised and worshipped our Lord. Our Lord showed mercy to him, graced him and restored his previous position to

him. Our Lord beautifies Him self on His head with budding cassia flowers. He loves to dance on the cremation ground. Our Lord Civan desired to be manifested in the temple in Thiruk-kaich-chinam.

1958. மண்ணினைமுன்சென்றிரந்தமாலும்மறையவனும்
எண்ணறியாவண்ணமெரியுருவமாயபிரான்
பண்ணிசையாலேத்தப்படுவான்றன்நெற்றியின்மேல்
கண்ணுடையான்மேவியுறைகோயில்கைச்சினமே. 9

மண்ணினை முன் சென்று இரந்த மாலும், மறையவனும்,
எண் அறியா வண்ணம் எரி உருவம் ஆய பிரான்;
பண் இசையால் ஏத்தப்படுவான்; தன் நெற்றியின்மேல்
கண் உடையான், மேவி உறை கோயில் - கைச்சினமே.

maNNin2ai mun2 cen2Ru iranta mAlum, marairyavan2um,
eN ariyA vaNNam eriuruvam Aya pirAn2;
paN icaiyAl EttappatuvAn2; tan2 neRRiyin2 mEl
kaN utaiyAn2; mevi uRai kOyil-kaicin2amE.

பொருள்: மாபலிச் சக்கரவர்த்தியின்பால் குறள் வடிவில் சென்று யாசித்தவனே திருமால். மலரின்மீது வீற்றிருப்பவனே பிரமன். அவ்விருவரும் காண முடியா நிலையில் நெருப்பு வடிவமாக விளங்கியவரே சிவபெருமான் ஆவார். அவரை அடியவர்கள் பக்தியால் பாடிப் பரவுவர். நெற்றிக் கண்ணை உடைய அவரே கைச்சினம் என்ற தலத்தில் கோயில் கொண்டுள்ளார்.

குறிப்புரை: இரந்த – மாவலியினிடத்து யாசித்த. எண் – எண்ணம். பண்ணிசையால் ஏத்தப்படுவான். ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்குதல் பற்றியது.

Oh! It is Civan, our Lord in Thiruk-kaich-chinam. The demigod Vishnu who requested Maavali King to give him three feet of earth and Brahma who is seated in lotus flower - they both could not even guess the form of our Lord Civa. Our Lord then appeared before them as unlimited light. Our Lord has a third eye at the center of His forehead. The devotees with proper musical mode pray before our Lord and worship Him. This Lord Civan desired to be manifested in Thiruk-kaich-chinam.

10 ஆவது பதிகம் கிடைக்கப்பெறவில்லை.

1959. தண்வயல்சூழ்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
கண்ணுதலான்மேவியுறைகோயில்கைச்சினத்தைப்
பண்ணிசையாலேத்திப்பயின்றஇவைவல்லார்
விண்ணவராயோங்கிவியனுலகமாள்வாரே. 11

தண்வயல் சூழ் காழித் தமிழ் ஞானசம்பந்தன்,
கண்நுதலான் மேவி உறை கோயில் கைச்சினத்தை,
பண் இசையால் ஏத்திப் பயின்ற இவை வல்லார்,
விண்ணவராய் ஓங்கி வியன்உலகம் ஆள்வாரே.

taNvayal cUz kAzit tamiz njAn2campantan2,
kaNNutalAn2 mEvi urai kOyil kaicin2attai,
paN icaiyAl Ettip payin2Ra ivai vallAr,
viNNavarAy Ogki, viyan2 ulakam ALvArE.

பொருள்: வயல்களால் சூழப்பெற்ற சீர்காழிப் பதியில் அவதரித்தவரே ஞானசம்பந்தப் பெருமான் ஆவார். அவர், கண்ணுதலான் விரும்பி உறையும் கைச்சினத் தலத்தையும், இறைவனையும் புகழ்ந்து பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். அதனை விரும்பி ஓதும் பக்தர்கள் விண்ணவராய் ஓங்கி வியனுலகை ஆளும் சிறப்பினை அடைவார்கள்.

குறிப்புரை: பண்ணிசையால் ஏத்திப் பயின்ற இவை என்றதால் ஆசிரியருடைய இசை உணர்வின் மிகுதியையும் இப்பதிகத்தைப் பலமுறைபாடி மகிழ்ந்ததையும் உணரலாகும். வியனுலகம் – சொர்க்கம். வீடுமாம். வியல் (வியன்) அகலம்.

Our saint Thiru-gnana-Sambandar hails from Kaazhi, surrounded by cool paddy fields. He sang ten musical verses praising our Lord who has a third eye on His forehead and Thiruk-kaich-chinam, the city where Lord Civan resides. Those devotees who can worship our Lord with these ten musical verses sung by our saint Thiru-gnana-Sambandar will rise above as angels and rule the celestial world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

45ஆம் பதிகம் முற்றிற்று
End of 45th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: *182* பதிக எண்: *46*

46. திருநாலூர்மயானம்

46. THIRU-NAALOOR-MAYAANAM

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

திருநாலூர்மயானம் என்னும் இத்திருத்தலமானது கும்பகோணத்திற்கு தென்கிழக்கே 16 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இது காவிரிக்குத் தென்கரையில் தொண்ணூற்றாறாவது திருத்தலம் ஆகும். கும்பகோணத்திலிருந்து குடவாசல் செல்லும் பேருந்துகளில் செல்லலாம். நான்கு வேதங்களும் வணங்கிய பதியாகும். ஆபத்தம்பஇருடியால் பூசிக்கப் பெற்றது. இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கின்றது. இவ்வூரார் அடிக்கடி சிவபெருமான் திருமேனிமேல் பாம்பு ஊர்வதாகக்கூறி, அதற்குப் ‘பாலூருமலைப் பாம்பும் பனிமதியுமத்தமும் மேலூரும் செஞ்சடையான்’ என்னும் இவ்வூர்த் தேவாரப் பகுதியைக் காட்டுவர். இறைவர் திருப்பெயர் பலாசவனநாதர். இறைவி திருப்பெயர் பெரியநாயகி.

பதிக வரலாறு

செம்பொன்மலை வல்லியார் அருள்ஞானப்பாலுண்ட சம்பந்தப் பெருமான் திருஅரதைப் பெரும்பாழி முதலாகிய திருத்தலம் பல அடைந்து வழிபட்ட பின்னர்த் திருநாலூர் மயானம் அடைந்து நயந்து இறைஞ்சிப்பாடிய நீடுதமிழ்த் தொடை இது.

திருச்சிற்றம்பலம்

1960. பாலூருமலைப்பாம்பும்பனிமதியும்மத்தமும்
மேலூருஞ்செஞ்சடையான்வெண்ணூல்சேர்மார்பினான்
நாலூர்மயானத்துநம்பான்றனடிநினைந்து
மாலூருஞ்சிந்தையர்பால்வந்தூராமறுபிறப்பே. 1

பால் ஊரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேல் ஊரும் செஞ்சடையான், வெண்நூல் சேர் மார்பினான்,
நாலூர் மயானத்து நம்பான்தன் அடி நினைந்து,
மால் ஊரும் சிந்தையர்பால் வந்து ஊரா, மறுபிறப்பே.

pAl URum malaippampum pan2imatiyum mattamum
mEl urum cenjcataiyan2veNnUL cer mArpinAn2,
nAlUr mayan2attu nampan2 tan aTi nin2aintu,
mAl Urum cintaiyar pAl vantu UrA, maRuppipE.

பொருள்: ஈசன், ஊர்ந்து செல்லும் மலைப்பாம்பையும், குளிர்ந்த சந்திரனையும் ஊமத்த மலரையும் தன் தலையில் கொண்டவன்! முப்புரிநூல் அணிந்த மார்பினன், நாலூர் மயானத்துள் கோயில் கொண்டவன்; அவனது திருவடிகளையே நினைந்து உருகும் அடியவர்களுக்கு மறுபிறப்பு வந்து பொருந்தாது.

குறிப்புரை: பால் – பக்கத்தில். ஊரும் – ஊர்ந்து செல்லும். மத்தம் – ஊமத்தை. நம்பான் – சிவன். மால் – அன்பு சிவபத்தி. (பதி – 191, பா. 6) 'மாலுங்காட்டி வழிகாட்டி வாராவுலக நெறியேறக் கோலங்காட்டியாண்டான்' (திருவாசகம் ஆனந்த மாலை 3) 'மால் கொடுத்து ஆவி வைத்தார் மாமறைக் காடனாரே' (தி. 4 ப. 33 பா. 4) 'மாலொடுந் தொழுவார் வினை வாடுமே' (தி. 5 ப. 34 பா. 9) 'என்னிடைமாலும் உண்டு இறை என்றன் மனத்துளே' (தி. 5 ப. 35 பா. 5) மறுபிறப்பு வந்து ஊரா – மறு பிறவிகள் வந்து பரவாவாம். ஊரா – செலுத்தா எனலுமாம்.

See! It is Civan, our Lord in Thiru-naaloor-mayaanam. Our Lord wears the snake, which creeps over His matted hair. Along with this our Lord retains the cool moon. In the red matted hair, all above these, datura flowers are to be found. He has put on the white sacred thread over His chest. Those devotees who pray in their minds to the holy feet of our Lord at Thiru-naaloor-mayaanam and are allured by their piety to Him will never suffer the cycle of rebirth.

1961. சூடும்பிறைச்சென்னிச்சூழ்காடிடமாக
ஆடும்பறைசங்கொலியோடழகாக
நாடுஞ்சிறப்போவாநாலூர்மயானத்தைப்
பாடுஞ்சிறப்போர்பாற்பற்றாவாம்பாவமே. 2

சூடும், பிறை சென்னி; சூழ்காடு இடம் ஆக
ஆடும் பறைசங்கு ஒலியோடு அழகுஆக;
நாடும் சிறப்பு ஓவா நாலூர் மயானத்தைப்
பாடும் சிறப்போர்பால் பற்றாஆம், பாவமே.

cuTum, piRai cen2n2i;cUzkAtu iTam Aka
Atum paRaicagku oliyOTu azaku Aka;
nATum ciRappu ova naLyur myan2attaip
patum cirapporpAl paRRa Am, pavamE.

பொருள்: ஈசன், இளம்பிறையைத் தலையில் சூடியவன்; சுடுகாட்டினை இடமாகக் கொண்டவன்; பறை, சங்கு போன்ற இன்னிசைக் கருவிகள் ஒலிக்க ஆடுபவன்; சிறப்புக்கள் பொருந்திய நாலூர் மயானத்தைப் போற்றிப் புகழும் சிறப்புடையவர்களைப் பாவங்கள் சென்று சேராவாம்.

குறிப்புரை: அழகாக ஆடும் என்க. ஓவா – ஒழியாத. சிறப்போர் பால் – சிறப்புடையோரிடத்தில். பாவம் பற்றாவாம் – பாவங்கள் பற்ற மாட்டாதொழிவனவாம்.

Oh! It is Civan, our Lord in Thiru-naaloor-mayaanam. Our Lord retains the moon on His head. His avocation is to dance perfectly on the cremation ground near the forest. He dances beautifully to the sound of the drum and conches. Sins will not chase those who sing the glories of our Lord in Thiru-naaloor-mayaanam, a sacred place of virtues where our Lord is manifested and where devotees in large number are drawn.

1962. கல்லால்நிழல்மேவிக்காமுறுசீர்நால்வர்க்கன்
றெல்லாஅறனுரையுமின்னருளாற்சொல்லினான்
நல்லார்தொழுதேத்துநாலூர்மயானத்தைச்
சொல்லாதவரெல்லாஞ்சொல்லாதார்தொன்னெறிக்கே. 3

கல்லால்நிழல் மேவி, காமுறு சீர் நால்வர்க்கு, அன்று,
எல்லா அறன்உரையும் இன்அருளால் சொல்லினான் -
நல்லார் தொழுது ஏத்தும் - நாலூர்மயானத்தைச்
சொல்லாதவர் எல்லாம் சொல்லாதார், தொல்-நெறிக்கே.

kallAl nizal mEvi, kAmuRu cir nalvarkku, an2Ru,
ellA aRan uraiyum in2 aruLAl collin2An2-
nallaR tozut Etum-nAlUr mayAn2attaic
collAtavar ellAm collAtAr. tol-neRikkE

பொருள்: கல்லால மரத்தின்கீழ் வீற்றிருந்து, தன்னை வணங்கிய சனகாதி முனிவர்களுக்கு எல்லா அறங்களையும் தெரிய உரைத்தவன் சிவபெருமான்! நல்லவர்களால் தொழுது

போற்றப்பெறும் நாலூர் மயானத்தைப் புகழ்ந்து சொல்லாதவர்கள் தொன்மையான நன்னெறியில் நில்லாதவர்களே ஆவார்கள்.

குறிப்புரை: காம் உறு – காமம் (அன்பு) உற்ற. எல்லா அறன் உரையும் – சகல தர்மோபதேசங்களும். சொல்லாதவர் – துதிக்காதவர். தொல்நெறி – அனாதியான சைவ மார்க்கம்.

Our Lord Civan of Thiru-naaloor-mayaanam, once sitting under the shade of banyan tree, made the four sages, to understand their doubts with all the intricacies of the Vedic virtues. He is manifest in Thiru-naaloor-mayaanam and is worshipped by good people. Those who do not recite the sacred name of the Lord of Thiru-naaloor-mayaanam are those who are unable to follow the ancient, right path of saiva divinity.

1963. கோலத்தார்கொன்றையான்கொல்புலித்தோலாடையான்
நீலத்தார்கண்டத்தான்நெற்றியோர்கண்ணினான்
ஞாலத்தார்சென்றேத்துநாலூர்மயானத்தில்
சூலத்தானென்பார்பாற்சூழாவாந்தொல்வினையே. 4

"கோலத்து ஆர் கொன்றையான், கொல் புலித் தோல்ஆடையான்
நீலத்து ஆர் கண்டத்தான், நெற்றி ஓர் கண்ணினான் -
ஞாலத்தார் சென்று ஏத்தும் நாலூர்மயானத்தில்
சூலத்தான்" என்பார்பால், சூழா ஆம், தொல்வினையே.

"kOlattu aR kon2RaiyAn2, kol pulit tOl ATaiyAn2,
nIlattu Ar kaNTattAn2, neRRi Or kaNNinAn2-
njAlttAr cenru Ettum nalUr mayAn2attil
cUlattAn2" en2pAr pal, cuzA Am, tolvin2AiyE.

பொருள்: ஈசன், கொன்றைமலர் மாலைகளை அணிந்தவன். புலித்தோல் ஆடையை உடுத்தியவன்; கரிய கண்டத்தை உடையவன்; நெற்றிக் கண்ணை உடையவன்; உலகத்தார் புகழ்ந்து போற்றும் நாலூர் மயானத்தில் கோயில் கொண்டவன். சூலப்படை உடைய அவனைப் போற்றுபவர்களுக்குத் தொல்வினைகள் சூழாவாம்.

குறிப்புரை: கோலத்து ஆர் – அழகால் நிறைந்த. நீலத்து ஆர் – நீலத்தைப் பொருந்திய. தொல்வினை – சஞ்சிதம். வினை சூழாவாம் என்க.

cuTum, piRai cen2n2i;cUzkAtu iTam Aka
Atum paRaicagku oliyOTu azaku Aka;
nATum ciRappu ova naLyur myan2attaip
patum cirapporpAl paRRa Am, pavamE.

பொருள்: ஈசன், இளம்பிறையைத் தலையில் சூடியவன்; சுடுகாட்டினை இடமாகக் கொண்டவன்; பறை, சங்கு போன்ற இன்னிசைக் கருவிகள் ஒலிக்க ஆடுபவன்; சிறப்புக்கள் பொருந்திய நாலூர் மயானத்தைப் போற்றிப் புகழும் சிறப்புடையவர்களைப் பாவங்கள் சென்று சேராவாம்.

குறிப்புரை: அழகாக ஆடும் என்க. ஓவா – ஒழியாத. சிறப்போர் பால் – சிறப்புடையோரிடத்தில். பாவம் பற்றாவாம் – பாவங்கள் பற்ற மாட்டாதொழிவனவாம்.

Oh! It is Civan, our Lord in Thiru-naaloor-mayaanam. Our Lord retains the moon on His head. His avocation is to dance perfectly on the cremation ground near the forest. He dances beautifully to the sound of the drum and conches. Sins will not chase those who sing the glories of our Lord in Thiru-naaloor-mayaanam, a sacred place of virtues where our Lord is manifested and where devotees in large number are drawn.

1962. கல்லால்நிழல்மேவிக்காமுறுசீர்நால்வர்க்கன்
றெல்லாஅறனுரையுமின்னருளாற்சொல்லினான்
நல்லார்தொழுதேத்துநாலூர்மயானத்தைச்
சொல்லாதவரெல்லாஞ்சொல்லாதார்தொன்னெறிக்கே. 3

கல்லால்நிழல் மேவி, காமுறு சீர் நால்வர்க்கு, அன்று,
எல்லா அறன்உரையும் இன்அருளால் சொல்லினான் -
நல்லார் தொழுது ஏத்தும் - நாலூர்மயானத்தைச்
சொல்லாதவர் எல்லாம் சொல்லாதார், தொல்-நெறிக்கே.

kallAl nizal mEvi, kAmuRu cir nalvarkku, an2Ru,
ellA aRan uraiyum in2 aruLAl collin2An2-
nallaR tozut Etum-nAlUr mayAn2attaic
collAtavar ellAm collAtAr. tol-neRikkE

பொருள்: கல்லால மரத்தின்கீழ் வீற்றிருந்து, தன்னை வணங்கிய சனகாதி முனிவர்களுக்கு எல்லா அறங்களையும் தெரிய உரைத்தவன் சிவபெருமான்! நல்லவர்களால் தொழுது

போற்றப்பெறும் நாலூர் மயானத்தைப் புகழ்ந்து சொல்லாதவர்கள் தொன்மையான நன்னெறியில் நில்லாதவர்களே ஆவார்கள்.

குறிப்புரை: காம் உறு – காமம் (அன்பு) உற்ற. எல்லா அறன் உரையும் – சகல தர்மோபதேசங்களும். சொல்லாதவர் – துதிக்காதவர். தொல்நெறி – அனாதியான சைவ மார்க்கம்.

Our Lord Civan of Thiru-naaloor-mayaanam, once sitting under the shade of banyan tree, made the four sages, to understand their doubts with all the intricacies of the Vedic virtues. He is manifest in Thiru-naaloor-mayaanam and is worshipped by good people. Those who do not recite the sacred name of the Lord of Thiru-naaloor-mayaanam are those who are unable to follow the ancient, right path of saiva divinity.

1963. கோலத்தார்கொன்றையான்கொல்புலித்தோலாடையான்
நீலத்தார்கண்டத்தான்நெற்றியோர்கண்ணினான்
ஞாலத்தார்சென்றேத்துநாலூர்மயானத்தில்
சூலத்தானென்பார்பாற்சூழாவாந்தொல்வினையே. 4

"கோலத்து ஆர் கொன்றையான், கொல் புலித் தோல்ஆடையான்
நீலத்து ஆர் கண்டத்தான், நெற்றி ஓர் கண்ணினான் -
ஞாலத்தார் சென்று ஏத்தும் நாலூர்மயானத்தில்
சூலத்தான்" என்பார்பால், சூழா ஆம், தொல்வினையே.

"kOlattu aR kon2RaiyAn2, kol pulit tOl ATaiyAn2,
nIlattu Ar kaNTattAn2, neRRi Or kaNNinAn2-
njAlttAr cenru Ettum nalUr mayAn2attil
cUlattAn2" en2pAr pal, cuzA Am, tolvin2AiyE.

பொருள்: ஈசன், கொன்றைமலர் மாலைகளை அணிந்தவன். புலித்தோல் ஆடையை உடுத்தியவன்; கரிய கண்டத்தை உடையவன்; நெற்றிக் கண்ணை உடையவன்; உலகத்தார் புகழ்ந்து போற்றும் நாலூர் மயானத்தில் கோயில் கொண்டவன். சூலப்படை உடைய அவனைப் போற்றுபவர்களுக்குத் தொல்வினைகள் சூழாவாம்.

குறிப்புரை: கோலத்து ஆர் – அழகால் நிறைந்த. நீலத்து ஆர் – நீலத்தைப் பொருந்திய. தொல்வினை – சஞ்சிதம். வினை சூழாவாம் என்க.

See! It is our Lord Civan of Thiru-naaloor-mayaanam. He is the embodiment of beauty itself, who has adorned Himself with a garland of cassia flowers. He wears the tiger's skin as His dress. His neck is dark blue in colour. He has a third eye at the center of His forehead. Our Lord is manifest in Thiru-naaloor-mayaanam where all people on the earth worship Him. Those who praise Him residing at Thiru-naaloor-mayaanam, "Oh God of trident" will be relieved of all past karma (sanchitham).

1964. கறையார்மணிமிடற்றான்காபாலிகட்டங்கன்
பிறையார்வளர்சடையான்பெண்பாகன்நண்பாய
நறையார்பொழில்புடைசூழ்நாலூர்மயானத்தெம்
இறையானென்றேத்துவார்க்கெய்துமாமின்பமே. 5

"கறை ஆர் மணிமிடற்றான், காபாலி, கட்டங்கன்,
பிறை ஆர் வளர்சடையான், பெண்பாகன் - நண்புஆய
நறை ஆர் பொழில் புடை சூழ் நாலூர்மயானத்து எம்
இறையான்" என்று ஏத்துவார்க்கு எய்தும்ஆம், இன்பமே.

"kaRai Ar manimiTaRRAn2, kApAli kattangan,
piRai Ar valarcataiyAn, peNpakan - naNpuAya
naRai Ar pozil putai cUz nAlurmayAnattu em
iRaiyAn entru EttuvAukku eitum Am, inpamE.

பொருள்: ஈசன், கறை தோய்ந்த மிடற்றினைக் கொண்டவன். பிரமகபாலத்தை ஏந்தியவன்; இளம்பிறையைச் சடையில் கொண்டவன்; உமாதேவியை உடம்பில் ஒருபாகமாகக் கொண்டவன். மலர்கள் பொருந்திய சோலைகளால் சூழப்பெற்ற நாலூர் மயானத்தில் பொருந்தி இருப்பவன். அவனைத் தொழுபவர்க்கு இன்பமே ஏற்படும்.

குறிப்புரை: கறை – விஷக்கறை. மணி – நீலமணியை ஒக்கும். மிடறு – திருக்கழுத்து. கட்டங்கன் – மழுவேந்தியவர். பெண்பாகன் – மங்கை பாகன். 'ஏழைபங்காளன்' (திருவெம்பாவை) நறை – தேன். இறையான் – இறைவன். இன்பம் எய்துமாமென்க.

Oh! See. It is Civan, our Lord of Thiru-naaloor-mayaanam. Our Lord Civa is azure necked Supreme Being. He carries in His hand the skull of Brahma. In another hand He holds the axe. He retains the moon on His matted hair. His consort who is very much attached to Him is embedded on His body. Our Lord is manifest in Thiru-

naaloor-mayaanam, surrounded by gardens full of flowers, yielding honey. Those devotees who worship our Lord of Thiru-naaloor-mayaanam as "Our God" will attain divine joy.

1965. கண்ணார்நுதலான்கனலாடிடமாகப்
பண்ணார்மறைபாடியாடும்பரஞ்சோதி
நண்ணார்புரமெய்தான்நாலூர்மயானத்தை
நண்ணாதவரெல்லாம்நண்ணாதார்நன்னெறியே. 6

கண் ஆர் நுதலான், கனல் ஆடுஇடம் ஆகப்
பண் ஆர் மறை பாடி ஆடும் பரஞ்சோதி,
நண்ணார் புரம் எய்தான், நாலூர் மயானத்தை
நண்ணாதவர் எல்லாம் நண்ணாதார் நன்நெறியே.

kaN AR nutalAn, kan2al Atu iTam Akap
paN aRmaRai pati aTum paranjcOti,
nannAr puram eytAn, nAlur mayan2attai
naNnAtavar ellAm nannAtAr nan2neriyE.

பொருள்: ஈசன், நெற்றிக் கண்ணை உடையவன்; நெருப்பைக் கையில் ஏந்தி ஆடுபவன்; மறைகளால் பாடப் பெறுபவன்; ஆடும் பரஞ்சோதி ஆவான். பொருந்தா அரக்கர்களின் முப்புரங்களை எரித்தவன். அவன் பொருந்தியிருக்கும் நாலூர்மயானத்தை விரும்பிப் போற்றாதவர்கள் நன்னெறியை அடையமாட்டார்கள்.

குறிப்புரை: ஆடு இடம் கனல் ஆக – ஆடுகின்ற இடம் நெருப்பாக. 'தீயாடி', அனலாடி; இறைவன் ஆடலுக்குப் பாடல் பண்ணார் மறை. நண்ணார் – பகைவர். நண்ணாதவர் – அடையாதவர், அணுகாதவர். நன்னெறி – சரியை. கிரியை யோகமென்னும் அழிவில்லாத தவத்தால் வரும் ஞானம் (சிவஞான–சூ–8–உரை).

Oh! Civan, He is our Lord of Thiru-naaloor-mayaanam. Our Lord Civan has a third eye at the center of His forehead. His vocation is to dance in the fire pit. He chants the songs of the four Vedas in musical tone. He is the Supreme light, divine and dancer. He shot an arrow and destroyed the three flying forts of the antagonistic asuraas. Those who do not worship His holy feet will not reach the righteous path.

1966. கண்பாவுவேகத்தாற்காமனைமுன்காய்ந்துகந்தான்
பெண்பாவுபாகத்தான்நாகத்தோலாகத்தான்
நண்பாவுகுணத்தோர்கள்நாலூர்மயானத்தை
எண்பாவுசிந்தையார்க்கேலாஇடர்தானே. 7

கண் பாவு வேகத்தால் காமனை முன் காய்ந்து உகந்தான்,
பெண் பாவு பாகத்தான், நாகத்தோல் ஆகத்தான் -
நண்பு ஆர் குணத்தோர்கள் - நாலூர்மயானத்தை
எண் பாவு சிந்தையார்க்கு ஏலா, இடர்தானே.

kaN pAvu vEkattAl kaman2ai mun2 kAyntu ukantAn2,
pen pavu pAkttAn2, nAkttOl AkattAn2-
naNpu Ar kuNttOrkaL-nAlUrmayanattai
eN pAvu cintaiyArkku Ela, itArtan2E.

பொருள்: சிவன், நெற்றிக் கண்ணைத் திறந்து அதிலிருந்து வெளிப்பட்ட நெருப்புப் பொறியின் வேகத்தால் மன்மதனை எரித்தவன். உமாதேவியை உடம்பின் பாகத்தில் கொண்டவன். யானையின் தோலை அணிந்தவன். நற்பண்புகளை உடையோர் விளங்கும் நாலூர் மயானத்தில் பொருந்தியவன். அவனை எண்ணும் மனமுடையவர்களுக்குத் துன்பமே வாரா என்க.

குறிப்புரை: பாவுதல் – பரவுதல். நாகம் – யானை. நண் – (நள்) நண்ணுதல், நள்ளுதலுமாகும். எண் – தியானம். இடர் ஏலா.

See! Our Lord at Thiru-naaloor-mayaanam. He opened His third eye on His forehead and by the heat the god of love was consumed. Our Lord was satisfied to have embedded on His body, His consort. He has covered His chest with the hide of the elephant. Good friendly people live in Thiru-naaloor-mayaanam and worship our Lord who is manifest there. Those devotees who contemplate our Lord of Thiru-naaloor-mayaanam will be free of suffering for ever.

1967. பத்துத்தலையோனைப்பாதத்தொருவிரலால்
வைத்துமலையடர்த்துவாளோடுநாள்கொடுத்தான்
நத்தினொலியோவாநாலூர்மயானத்தென்
அத்தனடிநினைவார்க்கல்லலடையாவே. 8

பத்துத்தலையோனைப் பாதத்து ஒருவிரலால்
வைத்து மலை அடர்த்து வாளோடு நாள் கொடுத்தான் -
நத்தின் ஒலி ஓவா நாலூர்மயானத்து என்
அத்தன்; அடி நினைவார்க்கு அல்லல் அடையாவே.

pattut talaiyon2aip pAtattu oruviralAl
vaittu malai aTarttu valOtu nAL kotuttan2-
nattin2 oliova nalur mayan2attu en2
attan2; ati nin2ivarkku allal aTaiyAvE.

பொருள்: பத்துத் தலைகளைக் கொண்ட இராவணனின் தோளைத் தன் கால்விரலால் அடர்த்து இறுதியில் அவனுக்கு மந்திரகாசம் என்ற வாளைக் கொடுத்து அருளியவன் சிவபெருமான். அவன், சங்கின் ஒலி எப்பொழுதும் நிறைந்திருக்கும், நாலூர் மயானத்தில் பொருந்தியிருப்பான். அவனது திருவடிகளை எப்போதும் நினைப்பவர்களுக்கு அல்லலே அடையாவாம்.

குறிப்புரை: வாளோடு நாள் – வாளும், ஆயுளும். நத்து – சங்கு. அத்தன் – பிதா. அத்தன் – அத்தை. ஆத்தன் – ஆத்தான் என்பவை தந்தை தாயரைக் குறித்த பழை வழக்கு. 'ஆத்தானை அடியேன் தனக்கு என்றும்' (தி.7 பா.680) 'அத்தை' என்பது தாயைக் குறித்து இன்றும் வழங்குகிறது. அல்லல் – துன்பங்கள்.

See! It is our Lord in Thiru-naaloor-mayaanam. When Raavanan with his ten heads tried to lift mount Kailash, our Lord pressed the mountain with His toe and subdued him. Later Raavanan realised his mistake and begged for pardon. Our Lord excused him and blessed him with Mandrakasa sword and longevity in life. This Lord is manifest in Thiru-naaloor-mayaanam where echo of the sound of conches is heard ceaselessly. Those devotees who think always of this Lord will have no suffering in their life ever.

1968. மாலோடுநான்முகனும்நேடவளரெரியாய்
மேலோடுகீழ்காணாமேன்மையான்வேதங்கள்
நாலோடுமாறங்கநாலூர்மயானத்தெம்
பாலோடுநெய்யாடிபாதம்பணிவோமே. 9

மாலோடு நான்முகனும் நேட, வளர் எரிஆய்,
மேலோடு கீழ் காணா மேன்மையான் - வேதங்கள்-
நாலோடும் ஆறுஅங்கம் நாலூர்மயானத்து எம்
பாலோடு நெய்ஆடி; பாதம் பணிவோமே.

mAlOTu nAn2mukan2um nETA valar eri Ay,
melOtu kiz kAnA mEn2maiyAn2-vEtagkaL-
nAlOtum ARua gkam naUr mayan2tu em
palOtu ney ati; patam panivOme.

பொருள்: திருமாலும் பிரமனும் தேட, அவர்கள் அடிமுடி காணமுடியாதவாறு நெருப்புருவாய் விளங்கியவன் சிவபெருமான். வேதங்கள் நான்காகவும் அதன் அங்கங்கள் ஆறாகவும் விளங்குபவன் சிவபெருமான். அவன் நாலூர் மயானத்துள் கோயில் கொண்டுள்ளான். அவனைப் பாலும் நெய்யும் கொண்டு வழிபாடு செய்து மகிழ்வோமாக.

குறிப்புரை: நேட – தேட. நாலுவேதம் ஆறு அங்கம். பாலோடு நெய் – பாலும் நெய்யும்.

See! He is our Lord Civan in Thiru-naaloor-mayaanam. Our demigod Vishnu and Brahma went out to search the head and feet of our Lord. But our unequal Lord rose as an immeasurable effulgence the origin and end of which could not be comprehended. Our Lord is the embodiment of four Vedas and its six subsidiaries (A division of learning considered as dependent on the Vedas, hence called Aarangam). He is the benevolent Supreme. Our Lord loves ablutions with milk and ghee. He manifests Himself in Thiru-naaloor-mayaanam. Let us bow at His golden feet.

1969. துன்பாயமாசார்துவராயபோர்வையார்
புன்பேச்சுக்கேளாதேபுண்ணியனைநண்ணுமின்கள்
நண்பாற்சிவாயவெனாநாலூர்மயானத்தே
இன்பாயிருந்தானையேத்துவார்க்கின்பமே. 10

துன்புஆய மாசார், துவர்ஆய போர்வையார்,
புன் பேச்சுக் கேளாதே புண்ணியனை நண்ணுமின்கள்!
நண்பால் "சிவாய!" எனா, நாலூர்மயானத்தே
இன்புஆய் இருந்தானை, ஏத்துவார்க்கு இன்பமே.

tun2pu Aya mAcAr, tuvar Aya pOrvaiyAr,
pun2 pEccuk kELAtE puNNiyan2ai naNNumin2kaL!
naNpAl civAya!" en2A nAlUrmayAn2attE
in2pu Ay irutAn2ai, EttuvArkku in2pamE.

பொருள்: மாசு உடையவராய் புன்மையான சொற்களையே கூறுபவர்கள் சமண் சாக்கியர் ஆவார்கள். அவர்களது சொற்களை ஏற்க வேண்டாம். புண்ணியமாக விளங்கும் ஈசனையே வணங்கி மகிழுங்கள். ஒன்றிய மனத்தோடு சிவாயநம என்று மொழியுங்கள். நாலூர் மயானத்தில் இன்ப வடிவினனாய் விளங்கும் ஈசனை ஏத்திப்பாடி இன்புறுங்கள்.

குறிப்புரை: துன்பு ஆய – துன்பமாகிய. மாசு – அழுக்கு. ஆர் – நிறைந்த. துவர் ஆய – பழுப்பாகிய. புன்பேச்சு – பொருளின்மையால் புல்லிய பிதற்றுரைகள். புண்ணியனை – சிவபுண்ணிய சொரூபனை, 'புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே' (சிவஞானசித்தியார் சூ – 8) நண்பு – செறிவு. யோகம் – நட்பும் ஆம். இதிற்குறித்த திருவைந்தெழுத்து அதிசூக்கும (காரண) பஞ்சாட்சரம். 'விண்ணினார் பணிந்தேத்த வியப்புறும், மண்ணினார் மறவாது சிவாயவென்று, எண்ணினார்க்கு இடமா எழில் வானகம், பண்ணினாவர் பாலைத் துறையாரே' (தி. 5 ப. 51 பா. 6) இன்பு – பேரின்பம்.

See! It is Civan, our Lord in Thiru-naaloor-mayaanam. The Jains suffer because of their misdeeds and the Buddhists are ochre-robed. You need not heed to the evil words of these two races. Our Lord is the embodiment of virtues. You may approach Him repeating the recitation of the sacred magical mantra 'Sivaaya'. Those who recite the above sacred word 'Sivaaya' with devotion on our Lord, who Himself is the embodiment of grace, will get bliss from Him.

1970. ஞாலம்புகழ்காழிஞானசம்பந்தன்றான்
நாலுமறையோதுநாலூர்மயானத்தைச்
சீலம்புகழாற்சிறந்தேத்தவல்லாருக்
கேலும்புகழ்வானத்தின்பாயிருப்பாரே. 11

ஞாலம் புகழ் காழி ஞானசம்பந்தன் தான்
நாலுமறை ஓதும் நாலூர்மயானத்தைச்
சீலம் புகழால் சிறந்து ஏத்த வல்லாருக்கு
ஏலும், புகழ்; வானத்து இன்புஆய் இருப்பாரே.

njAlm pukaz kAzi njAn2acampantan2
nAlumaRai Otum nAlUrmayAn2attaic
cIlam pukazAl ciRantu Etta vallArukku
Elum, pukaz; vAn2attu in2pu Ay iruppArE.

பொருள்: ஞாலம் போற்றும் சீகாழிப்பதியில் அவதரித்தவர் ஞானசம்பந்தர். அவர் நான்கு வேதங்களும் போற்றும் நாலூர் மயான இறைவனைப் புகழ்ந்து பாடல்கள் பாடி அருளியுள்ளார். அதனைப் பக்தியுடன் பாடிட வல்லவர்கள் வானுலகில் இன்புற்று வாழ்வார்கள் என்க.

குறிப்புரை: ஞாலம் – உலகம். சீலம் – சிவபெருமானுடைய சீலத்தை. ஒழுக்கத்தாலும் புகழாலும் எனலும் பொருந்தும். ஏலும் – இயலும். ஏற்குமெனலுமாம்.

Our saint Thiru-gnana-Sambandar who originated from the world famous city of Kaazhi came to Thiru-naaloor-mayaanam. Here the Vedic scholars recite the four Vedas daily with devotion and do their rituals without fail. In this holy city of Thiru-naaloor-mayaanam, our Lord is manifest. Those devotees who can recite in the best possible manner the ten verses which our Thiru-gnana-Sambandar chanted on our Lord's virtues and fame will get the highest fame. They are sure to win celestial happiness and be free of woes.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

46ஆம் பதிகம் முற்றிற்று
End of 46th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 183 *பதிக எண்: 47*

47. திருமயிலாப்பூர்

47. THIRU-MY-LAAP-POOR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

உமாதேவியார் மயில் உருவமாய் இறைவனைப் பூசித்த காரணம் பற்றி இப்பெயர் பெற்றது. இது மயிலாப்பு என்றும் தேவாரத்தில் கூறப்பெற்றுள்ளது. மயிலார்ப்பூரோ? மயில் யாப்பூரோ? சென்னையின் தென்பகுதியில் விளங்குவது இத்திருத்தலம். சென்னைக்குத் தெற்கே 6 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. சென்னையின் நகரப் பேருந்துகளில் அனைத்து இடங்களிலிருந்தும் மயிலாப்பூர் செல்லலாம்.

இறைவரது திருப்பெயர் கபாலீசுவரர். இறைவியார் திருப்பெயர் கற்பகவல்லியம்மை. தலவிருட்சம் புன்னை மரம். வடக்குப் பிரகாரத்தில் இருக்கிறது. இது வாயிலார் நாயனார் அவதாரம் செய்த திருப்பதி. சிவநேசச் செட்டியாருடைய மகளாகிய பூம்பாவை அரவு கடித்து இறந்தபோது, அவர் தந்தையார் அம்மையாரது உடலை எரித்து எலும்பையும் சாம்பலையும் புது மட்பாண்டத்தில் வைத்திருந்தார். அங்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தர், ‘மட்டிட்ட புன்னையங் கானல்’ என்று தொடங்கும் பதிகம் பாடி, அவரது எலும்பைப் பெண்ணுருவாக்கி அருளினார். இராமபிரான் வழிபட்டு, ஐப்பசி ஓணநாளில் பிரமோற்சவம் நடத்துவித்தார்.

பங்குனி மாதத்தில் அறுபாம்மும்மை நாயன்மார்களுடைய திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஊரின் பெயர் மயிலாப்பூர். அங்குள்ள கோயிலுக்கே கபாலீச்சரம் என்று பெயர். மயிலாப்பூர், மயிலாப்பு என்று வழங்கப் பெற்றிருப்பது, அப்பர் சுவாமிகளது திருஒற்றியூர்த் திருத்தாண்டகம் ஆறாம் திருப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. அப்பகுதி,

“வடிவுடைய மங்கையுந் தாமுமெல்லாம்
வருவாரை யெதிர்கண்டோம் மயிலாப்புள்ளே”

என்பதாகும். இதையே,

“மங்குல் மதிதவழும் மாடவீதி
மயிலாப்பி லுள்ளார் மருகலுள்ளார்”

எனக் கோயில்புக்க திருத்தாண்டகத்திலும் காணலாம்.

பதிக வரலாறு

திருவொற்றியூரை வழிபட்டு மயிலாபுரித் திருநகரை அணைந்து, கபாலீச்சரத்தமுதைப் பரவிப் போற்றிய திருஞானசம்பந்தர், 'சித்தம் இன்புறு சிவநேசர்' பால் திருவருள் செலுத்தி, 'திருமதிற் புறவாய்தலிற் கொண்டு வரச் செய்து மங்கையென்புசேர் குடத்தினை வைத்து வணங்க' நோக்கி, மண்ணோரும் விண்ணோரும் காணப், 'பூம்பாவை பேர்செப்பி', 'மண்ணினிற் பிறந்தார் பெறும் உண்மைப்பயன்' உணர்த்தி, இறைவனை உலகவர் முன் 'வருக' என்று உரைத்து, 'மட்டிட்ட புன்னை' எனத் தொடங்கும் இந்நற்பதிகத்தைப் பாடினார். அக்குடத்துள் இருந்த எலும்பு பெண்ணுருவாயிற்று. ஆதலின், இத்திருப்பதிகம் 'பூம்பாவைப் பாட்டு' எனப் பெற்றது.

திருச்சிற்றம்பலம்

1971. மட்டிட்டபுன்னையங்கானல்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய். 1

மட்டு இட்ட புன்னை அம்கானல் மடமயிலைக்-
கட்டு இட்டம் கொண்டான், கபாலீச்சுரம் அமர்ந்தான்,
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டு இட்டல் காணாதே போதியோ? பூம்பாவாய்!

maTTu iTTa pun2n2ai amkAn2al maTamayilaik-
kaTTu iTTam koNTAn2, kapAlIccuram amarntAn2,
oTTiTTa paNpin2 uruttirapal kaNattArkku
aTTu iTTal kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: தேன் நிறைந்த புன்னை மலர்ச்சோலைகள் நிறைந்த பதியே மயிலையம்பதியாம். அப்பதியினை விரும்பி கோயில் கொண்டு அமர்ந்தவனே சிவபெருமான். அவன் தன்னுடைய சிவகணத்தார்க்கு உணவளித்துப் புரக்கும் சிறப்பினைக் காணாது பூம்பாவையே நீ போவாயோ? மாட்டாய். எழுந்து வருவாயாக!

குறிப்புரை: மட்டு – கள். கானல் – கடற்கரைச் சோலை. மடமயிலைக் கட்டு – இளமயில்கள் ஆர்ப்பு மிக்க ஊரில் உள்ள திருக்கோயில். மயிலார்ப்பூர் என்பதன் மரூஉ மயிலாப்பூர். இட்டம் – திருவுள்ளத்தன்பு (இஷ்டம்). ஊர் மயிலை, மயிலாப்பூர், கோயில் கபாலீச்சரம். ஒட்டிட்ட பண்பு – அத்துவிதக் கலப்பு. 'உணரப்படுவாரோடு ஒட்டிவாழ்தி' 'ஒட்டியவனுளமாகில்லான்'. உருத்திரபல்கணத்தார் – மாகேசுரர்; அடியவர். மதிசூடும் அண்ணலாரடியார்தமை அமுது செய்வித்தல். கண்ணினால் அவர் 'நல்விழாப்பொலிவு

கண்டார்தல்'. அட்டு – திருவமுது அமைத்து. இட்டல் – இடுதல். (நட்டல் – நடுதல் போல) இதிற்குறித்த திருவிழா. பூரட்டாதியில் நிகழ்வது. இது திங்கள் முதலாக ஒவ்வொன்றிலும் நிகழ்த்தும் திருவிழாச் சிறப்பு மேல் வரும் பாக்களிற் குறிக்கப்பட்டமை உணர்க. போதியோ – போவாயோ? வருவாய் என்றவாறு.

See! It is Mayilai, a sacred place, full of palaces, surrounded by honey-filled caulophyllum, a coastal area of natural forests. Our Lord Civan called here Kabaaleeswarar, desires to manifest Himself in the temple called Kabaaleech-charam. In this city mainly round the temple young peacocks move about making sounds. In this temple festivals take place in particular periods. Here very close devotees and sacred scholars gather to do their rituals, and worship. The servitors happily serve food for those devotees who have gathered in the temple. Oh! Young girl Poombaavai! Is it your fate (destiny) to leave this world without witnessing the above grand functions in the temple?

1972. மைப்பயந்தஒண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றான்கபாலீச்சரமமர்ந்தான்
ஐப்பசிஓணவிழாவுமருந்தவர்கள்
துய்ப்பனவுங்காணாதே போதியோபூம்பாவாய். 2

மைப் பயந்த ஒண்கண் மடநல்லார் மா மயிலைக்
கைப் பயந்த நீற்றான், கபாலீச்சுரம் அமர்ந்தான்,
ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ? பூம்பாவாய்!

maip payanta oNkaN maTanallAr mA mayilaik
kaip payanta nIRRAn2, kapAlIccuram amarntAn2,
aippaci ONavizAvum aruntavarkaL
tuyppan2avum kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: மை திகழும் அழகிய கண்களைக் கொண்ட பெண்டிர் வாழும் மயிலைப்பதியில் திருநீறு அணிந்து சிவபெருமான் கோயில் கொண்டுள்ளான். அங்கு நடைபெறும் திருவோண விழாவையும் அடியவர்கள் மகிழ்ந்து போற்றுவதையும் பூம்பாவையே! நீ காணாமல் செல்வாயோ? மாட்டாய்.

குறிப்புரை: மை – கண்ணிற்கிடும் மை. கைப்பயந்த நீறு – கைமேற் பயன்தந்த திருநீறு. வழிபடுவார் கையில் அர்ச்சகர் வடிவாயிருந்து கொடுத்த திருநீற்றினன். திருநீறு வடிவாயுள்ளானெனலும் சிறந்ததே. 'கைப்பூசு நீற்றான்' (பா. 5). ஐப்பசித் திருவோண விழாச் சிறப்பும் அரியதவத்தோர்களாகிய அடியார்கள் திருவமுது செய்த காட்சியும் குறிக்கப்பட்டன. ஓணத்திற் கொடியேற்றம். கிருத்திகையில் தீர்த்தவாரி. தலவரலாறு காண்க. இராமர் வழிபாடு, ஓணம் திருமாலின் நாள்.

See Mayilai! It is a very sacred place. In this city, very young attractive damsels live in large numbers. They all wear eyetex in their bows and their sparkling eyes brighten their faces. In this city our Lord Civan is manifest in the holy temple of Kabaleechcharam. He has beautified His forehead with the holy ashes. Those devotees who receive the holy ashes from the priests apply it to their forehead. This holy ashes gives good, immediate effect to those who apply it on their forehead with sincere devotion. For this Lord there is a famous festival in the month of Iaippasi called Onam festival. On such a festive occasion very sacred saints gather in the temple, pray, and do the daily sacred rituals. They are fed by servitors very happily with rich food. Oh young girl poombaavai! Is it your destiny to leave this world without seeing and participating in these ceremonies? No! You must come back in your original physical form!!

1973. வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகில்
துளக்கில்கபாலீச்சரத்தான்தொல்கார்த்திகைநாள்
தளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணாதே போதியோபூம்பாவாய். 3

வளைக்கை மடநல்லார் மா மயிலை வண் மறுகில்-
துளக்கு இல் கபாலீச்சுரத்தான் தொல்கார்த்திகைநாள் -
தளத்து ஏந்து இளமுலையார் தையலார் கொண்டாடும் -
விளக்கீடு காணாதே போதியோ? பூம்பாவாய்!

vaLaikkai maTanallAr mA mayilai vaN maRukil-
tuLakku il kapAlIccurattAn2 tolkArttikainAL--
taLattu Entu iLamulaiyAr taiyalAr koNTATum--
viLakkITu kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: வளையல் அணிந்த கற்புடைய பெண்டிர் வாழும் மயிலை கபாலீச்சரத்தில் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளான். அத்திருக்கோயிலில் கார்த்திகைத் திருநாள் அன்று சிறுமிகளும் மாதர்களும் விளக்குகளை வரிசையாக ஏந்திநின்று வழிபாடு செய்வார்கள். அந்த விளக்கீடு விழாவை காணாமல் பூம்பாவையே நீ செல்வாயோ? மாட்டாய்.

குறிப்புரை: வளை – வளையல். மறுகு – தெரு. வண்மை – தெருவினர் கொடைவளம். துளக்கு – அசைவு, தளர்வு, வருத்தம். இல் – இல்லாத. இறைவனைக் குறித்தால் வருத்தமில்லாதவன் என்க. கபாலீச்சரத்தைக் குறித்தால் அசைவில்லாத, தளர்வில்லாத என்க. தளத்து – சாந்தினை. கார்த்திகை விளக்கீடு இளமகளிர் கொண்டாடும் திருவிழா. கார்த்திகைத் திருவிளக்கீட்டு விழாவின் தொன்மையைப் பழந்தமிழ் நூல்களிலும் சிவாகம புராணங்களிலும் உணர்க.

See! It is Civan, our Lord in Thiru-my-laap-poor, a sacred place. In the city of Thiru-my-laap-poor lovely young damsels who wear bangles in their hands live in large numbers. They live in streets of riches and stead fastness. Here our Lord Civan is manifest in the temple of Kabaleechcharam, which is a very happy place. In the Tamil month of Kaarthikai there takes place a famous festival of lights. During this festival many young girls, well breasted and decorated with sandal paste participate very joyfully. They hold in their hands beautifully lighted lamps and go round the interior premises of the temple, singing on our Lord songs of praise. Oh! Young girl poombaavai! Is it your destiny that you must leave this place without witnessing and participating in all these temple rituals and festivals?

1974. ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனில்
கார்தருசோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
ஆதிரைநாள்காணாதே போதியோபூம்பாவாய். 4

ஊர் திரை வேலை உலாவும் உயர் மயிலைக்
கூர்தரு வேல் வல்லார் கொற்றம் கொள் சேரிதனில்,
கார் தரு சோலைக் கபாலீச்சுரம் அமர்ந்தான்
ஆர்திரை நாள் காணாதே போதியோ? பூம்பாவாய்!

Ur tirai vElai ulAvum uyar mayilaik
kUrtaru vEl vallAr koRRam koL cEritan2il,
kAr taru cOlaik kapAlIccuram amarntAn2
ArtirainAL kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: கடலலைகள் நிறைந்து உலவும் மயிலையில் வாழும் நெய்தல் நிலமக்கள் கூர்மையான வேலால் மீன்களைக் குத்திப் பிடித்து வாழ்வார்கள். சோலைகள் நிறைந்த மயிலைக் கபாலீச்சரத்தில் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளான். அங்கு நடைபெறும் ஆதிரைத் திருநாள் விழாவினைப் பூம்பாவையே நீ காணாது செல்வாயோ? மாட்டாய் என்க.

குறிப்புரை: ஊர் திரை வேலை – ஊருந்திரையுடைய கடல். ஊர்தல் – மேற்படுதல். பரத்தல். வல்லார் – (நெய்தல் நிலமாக்கள்) வேலால் கடல் மீன்களைக் கொல்லவல்லவர்கள். கொற்றம் – கொன்று அடையும் வெற்றி. கார் – மேகம். ஆர்திரைநாள் – திருவாதிரை என்னும் மீன். எதுகை நோக்கின், 'ஆர்திரை' என்றதே உண்மைப் பாடம் ஆகும். 'ஆர்திரையான், ஆர்திரையான் என்றென் றயருமால் ஊர்திரை வேலியுலகு' என்னும் முத்தொள்ளாயிர முதற் செய்யுளமைதியை உணர்க. இது மார்கழித் திருவாதிரை விழாச் சிறப்புணர்த்திற்று.

See! It is Civan, our Lord in Thiru-my-laap-poor. This city Thiru-my-laap-poor is adjoining the sea, where the creeping waves go on dashing against the banks and wash the temple walls permanently. In the nearby places of the temple in Thiru-my-laap-poor tall buildings are many. The fishermen living near the seashore carry spears to kill fish. Owing to heavy rains all round the city very tall and thick trees have grown in the fertile groves; the Kabaleechcharam temple is very near the groves. In this temple our Lord Civan has manifested Himself. For Him the festival on Thiru-vaathirai day takes place in a very grand manner. This festival attracts a very huge crowd on this occasion. Oh! My dear young girl poombaavai! Is it your fate to leave this world without worshipping Him and participating in the important and happy festival? No! You should come back to life with your earlier physical body!

1975. மைப்பூசுமொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்றான்கபாலீச்சரமமர்ந்தான்
நெய்ப்பூசுமொண்புழுக்கல்நேரிழையார்கொண்டாடும்
தைப்பூசங்காணாதே போதியோபூம்பாவாய். 5

மைப் பூசும் ஒண்கண் மடநல்லார் மா மயிலைக்
கைப் பூசு நீற்றான், கபாலீச்சுரம் அமர்ந்தான்-
நெய்ப் பூசும் ஒண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும் -
தைப்பூசம் காணாதே போதியோ? பூம்பாவாய்!

maip pUcum oNkaN maTanallAr mA mayilaik
kaip pUcu nIRRAn2, kapAlIccuram amarntAn2--
neyp pUcum oN puzukkal nErizaiyAr koNTATum--
taippUcum kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: மை பூசிய கண்களைக் கொண்ட கற்புடைய மகளிர் நிறைந்த தலமே மயிலாப்பூர். இங்குள்ள கபாலீசுரத்துள் சிவபெருமான் திருநீறு அணிந்த மேனியனாய்க் கோயில் கொண்டுள்ளான். தைப்பூச விழாவன்று நெய் கலந்த சோற்றினை சிவனுக்கு படைத்து மகளிர் வழிபடுவர். அவ்விழாவினைக் காணாது பூம்பாவையே நீ செல்வாயோ? மாட்டாய்.

குறிப்புரை: மைப்பயந்த வொண்கண் கைப்பயந்தநீற்றான் (பா. 2) நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் – நெய்யால் மறைக்கப்பட்ட ஒள்ளிய சோறு.

Oh! It is Civan our Lord in Thiru-my-laap-poor. In this city young damsels of bright eyes with eyetex live in large numbers. Here the temple Kabaaleechcharam is situated near the seashore. Our Lord has smeared on His hands holy ashes. Ladies wearing fine jewellery visit the temple on the festival day of Thai-poosam. They bring well boiled rice fully mixed with plenty of ghee and coarse sugar candy. The food is served to our Lord first, it is later distributed to all the devotees and to all the poor people who have gathered in the temple on the happy festival day. Oh! My young girl poombaavai! Is it your fate to leave this place in this world without involving yourself in this grand Thai-poosam function and the festivals? No! You should come back to life to the same earlier young physical body!!

1976. மடலார்ந்ததெங்கின்மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
அடலானேறூரும்மடிகளடிபரவி
நடமாடல்காணாதே போதியோபூம்பாவாய். 6

மடல் ஆர்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடல் ஆட்டுக் கண்டான், கபாலீச்சுரம் அமர்ந்தான்,
அடல் ஆன்ஏறு ஊரும் அடிகள், அடிபரவி,
நடம்ஆடல் காணாதே போதியோ? பூம்பாவாய்!

maTal Arnta tegkin2 mayilaiyAr mAcik
kaTal ATTuk kaNTAn2, kapAlIccuram amarntAn2,
aTal An2 ERu Urum aTikaL, aTi paravi,
naTam ATal kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: அகன்ற மடல்கள் கொண்ட தென்னை மரங்கள் நிறைந்த மயிலையில் உள்ள கபாலீச்சரத்துள் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளான். அங்கு மாசித் திங்களில் கடலாடுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பெறும். சிவனும் ஆனேற்றின்மேல் வீற்றிருந்து காட்சி அருளுவார். பெண்கள் அதனைக் கண்டு ஆடிப்பரவி ஏத்துவர். அவ்விழாவினைக் காணாமல் பூம்பாவையே நீ செல்வாயோ? மாட்டாய்.

குறிப்புரை: தென்னையின் மடல் நீட்சியுடைமைபற்றி, 'மடல் ஆர்ந்த தெங்கு' எனப்பட்டது. மாசிமகநாளன்று கடலாட்டு விழா நிகழ்ந்தவுண்மை குறிக்கப்பட்டது. அடல் – வலிமை. ஆனேறு – விடை. நடம் ஆடல் – கூத்தாடுதல்; உலாவுதலுமாம். பரவி – வாழ்த்தி. மாசிக் கடலாட்டுச் சிறப்புணர்த்தியது. 'சேயிழையார் நடம்பயிலுந் திருவையாறு'. பண்ணினேர் மொழிமங்கைமார் பலர் பாடியாடிய வோசை . . . பொலியும் . . . காழி. 'பாலினேர் மொழி மங்கைமார் நடமாடி இன்னிசை பாட'. எனப்பின் வருதல் அறிக (ப. 185 – 186).

See! It is Civan, our Lord in Thiru-my-laap-poor. In the city of Thiru-my-laap-poor coconut gardens with spike-like leaves are many. In the temple Kabaaleech-charam the festival of sea bath for our Lord takes place on the day of the star of Maham in a very grand manner. He has a bull for His transport. Our Lord goes to the sea and after bath dances in several ways. Millions of people gather on the seashore and all of them take bath along with the Lord in the sea. They then worship our Lord. Oh young

girl poombaavai! Is it your fate not to witness this very great festival and the dance of Civan? Should your soul leave this place in such a way? No.

1977. மலிவிழாவீதிமடநல்லார்மாமயிலைக்
கலிவிழாக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய்பங்குனியுத்திரநாள்
ஒலிவிழாக்காணாதே போதியோபூம்பாவாய். 7

மலி விழா வீதி மடநல்லார் மா மயிலைக்
கலி விழாக் கண்டான், கபாலீச்சுரம் அமர்ந்தான்
பலி விழாப் பாடல்செய்-பங்குனி உத்திர நாள்
ஒலி விழாக் காணாதே போதியோ? பூம்பாவாய்!

mali vizA vIti maTanallAr mA mayilaik
kali vizAk kaNTAn2, kapAlIccuram amarntAn2--
pali vizAp pATalcey--pagkun2i uttaranAL
oli vizAk kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: மயிலை வீதிகளில் நாள்தோறும் விழாக்கள் நடைபெறும். பெண்டிர் விழாவினைச் சிறப்பாக சிவனது கபாலீச்சுரக் கோயிலில் கொண்டாடி மகிழ்வர். அங்கு பங்குனி உத்திர நாளில் ஆடல் பாடல்கள் மிகுந்து விளங்கும் அத்திருவிழாவைக் காணாது பூம்பாவையே நீ செல்வாயோ? மாட்டாய்.

குறிப்புரை: மலிவிழா வீதி – விழாக்கள் இடையறாது. நிகழ் விளங்கும் வீதி. 'வீதிகள் விழலின் ஆர்ப்பும்'. கலிவிழா – திருவருள் எழுச்சியை விளைக்கும் திருக்கோயில் விழாக்கள். முன்னவை பல்வகைக்களி விழாக்கள். பலி – உருத்திரபலி, திசைதோறும் இடுவது. ஒலி – விழாவின் ஆரவாரம். பங்குனி உத்தர விழாச் சிறப்புணர்த்திற்று.

See! It is Civan, our Lord of Thiru-my-laap-poor. In this city long streets with many palatial buildings exist. In these streets many young damsels also live and enjoy all the festivals. There is no break for festivals in the temple. Our Lord goes around the city during every festival in the highly decorated palanquin to enable old people and others who cannot visit the temple to worship Him. He blesses all the devotees who worship Him in the streets. Another important festival falls on the Uththiram star day in the Tamil month of Panguni when big crowds visit the temple, and sing songs on our

Lord's virtues and fame. Oh! My dear young girl poombaavai! Is it your fate to leave this city without witnessing this very pompous festival of 'Panguni Uththiram' and participating in it? No! You should come back to life and witness all the festivals of our Lord in the temple!

1978. தண்ணாவரக்கன்றோள்சாய்த்துகந்ததாளினான்
கண்ணார்மயிலைக்கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணார்பதினென்கணங்கள்தம்அட்டமிநாள்
கண்ணாரக்காணாதே போதியோபூம்பாவாய். 8

தண் ஆர் அரக்கன் தோள் சாய்த்து உகந்து தாளினான்,
கண் ஆர் மயிலைக் கபாலீச்சுரம் அமர்ந்தான்,
பண் ஆர் பதினென்கணங்கள்தம்(ம்) அட்டமிநாள்
கண் ஆரக் காணாதே போதியோ? பூம்பாவாய்!

taN Ar arakkan2 tOL cAyttu ukanta tALin2An2,
kaN Ar mayilaik kapAlccuram amarntAn2,
paN Ar patin2eNkaNagkaL tam(m) aTTami nAL
kaN Arak kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: பணிவற்ற அரக்கன் இராவணனின் தோள்களை நெரித்த தாளினை உடையவன் சிவன். அவன் மயிலை கபாலீச்சுரத்தில் கோயில் கொண்டுள்ளான். சிவனை, அட்டமி நாள் விழாவில் பதினெண்கணங்களும் கூடி, ஆடிப்பாடி மகிழ்ந்து போற்றுவர். அவ்விழாவினைக் காணாது பூம்பாவையே நீ செல்வாயோ? மாட்டாய்.

குறிப்புரை: தண்ணா – வெம்மையைச் செய்யும் என்ற குறிப்பு. சாய்தல்; தோள்கட்கும் உகத்தல்; (உயர்தல்) தாள்கட்கும் கூறிய திறம் கருதத்தக்கது. இது சித்திரையில் நிகழ்ந்தது எனக்கொள்ள இடனுண்டு. அட்டமி நாள்விழா முற்காலத்தது. இக்காலத்தார் சித்திரைப் பௌர்ணமி கொண்டனர். பதினெண்கணங்களுக்கும் அட்டமிநாள் விழாவிற்கும் உள்ள தொடர்பு புலப்பட்டிலது.

Oh! It is Civan, our Lord in Thiru-my-laap-poor. Raavanan the king of Sri Lanka by nature was furious and ill tempered. Due to his misdeed our Lord suppressed his shoulders with His holy feet. Later He graced him. The Kabaaleechcharam temple is extremely pleasing to our eyes and here our Lord of Thiru-my-laap-poor is manifest. In this temple in the Tamil month of Chiththirai on the eighth day a great festival called

Attami Carnival takes place. For this festival the eighteen attendants of Lord Civan known as Pathi-nen-gnanath-thinar visit this temple and sing in melodious tone the songs in praise of His virtues and fame, and worship Him. Oh my dear young damsel Poombaavai! Is it your fate that you should leave your body and soul in this city without worshipping our Lord on this very happy grand festival of Attami Carnival? No! certainly not! You should come back to life and join all the festivals in the city and enjoy life!

1979. நற்றாமரைமலர்மேல்நான்முகனும்நாரணனு
முற்றங்குணர்கிலாமூர்த்திதிருவடியைக்
கற்றார்களேத்துங்கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றாப்புக்காணாதே போதியோபூம்பாவாய். 9

நல்-தாமரைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
முற்றங்கு உணர்கிலா மூர்த்தி, திருவடியைக்
கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சுரம் அமர்ந்தான்,
பொன்-தாப்புக் காணாதே போதியோ? பூம்பாவாய்!

nal-tAmarai malar mEl nAn2mukan2um nAraNan2um
muRRAgku uNarkilA mUrtti, tiruvaTiyaik
kaRRArkaL Ettum kapAlIccuram amarntAn2,
pon2-tAppuk kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரம்மனாலும் அவனை ஈன்ற நாராயணனாலும் தேடிக் காணமுடியாத சிவபெருமான் மயிலைக் கபாலீச்சுரத்துள் கோயில் கொண்டுள்ளான். அந்தணர்கள் சிவனது திருவடிகளைப் போற்றி வணங்குவர். அப்பெருமானுக்கு நடைபெறும் பொன்னூஞ்சல் திருவிழாவினைக் காணாமல் பூம்பாவையே நீ செல்வாயோ? மாட்டாய்.

குறிப்புரை: நல்+தாமரை. முற்றாங்கு – முழுதும் உள்ளபடி. இது பட்டாங்கு, நல்லாங்கு, பொல்லாங்கு என்பன போல்வது. கற்றார்கள் – 'கல்லார் நெஞ்சின் நில்லான் ஈசன்' (தி. 3 ப. 40 பா. 3) என்று மேல் ஆசிரியர் அருள்வதுணர்க. 'கற்றவர்கள் பணிந்தேத்தும் கழுமலத்துள் ஈசன்' (தி. 1 ப. 129 பா. 11). 'கற்றல் கேட்டல் உடையார்' என்றதால் நிட்டை முடிய உடையாரை உபலட்சணத்தாற் கொள்க. பொன்தாம்பு (பொற்றாப்பு) பொன்னூசல் (நன். 411. சங்கர). தாம்பு – கயிறு. ஊஞ்சலுக்குத் தாம்பு கருவி. தாப்பிசை. வைகாசியில் ஊஞ்சலாடுந் திருவிழாக் குறித்தவாறு. இப்பாட்டில் 'உற்றாங்கு' எனப் பிரித்தது பொருந்தாது.

Oh! It is Civan, our Lord in Thiru-my-laap-poor. The demigod Brahma, who rests in the fine lotus flower and the protector-god of Vishnu could not comprehend fully our Lord. He then took the form of a huge effulgence with no beginning and end. The two demigods got freightened to see the dazzling fiery column. Our Lord however is manifest in Kabaaleechcharam temple to give darshan to the learned, divine scholars who prostrate before His feet. For this Lord, in the Tamil month of Vaikaasi a festival takes place called swing-festival when our god and goddess are placed in a golden swing. The swing moves forward and backward while scholarly songsters sing songs in praise of our God and Goddess in a particular melodious musical tone called 'Oonjal Paattu'. Oh! My dear young damsel poombaavai! Is it your destiny that you should not be alive to participate in the grand carnival and enjoy and worship our Lord? No, certainly not! You should come back to life in your earlier form and do your divine service.

1980. உரிஞ்சாயவாழ்க்கைஅமணுடையைப்போர்க்கும்
இருஞ்சாக்கியர்களெடுத்துரைப்பநாட்டில்
கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரமமர்ந்தான்
பெருஞ்சாந்திகாணாதே போதியோபூம்பாவாய். 10

உரிஞ்சு ஆய வாழ்க்கை அமண், உடையைப் போர்க்கும்
இருஞ் சாக்கியர்கள், எடுத்து உரைப்ப, நாட்டில்
கருஞ் சோலை சூழ்ந்த கபாலீச்சுரம் அமர்ந்தான்
பெருஞ் சாந்தி காணாதே போதியோ? பூம்பாவாய்!

urinjcu Aya vAzkkai amaN, uTaiyaip pOrkkum
irunj cAkkiyarkaL, eTuttu uraippa, nATTil
karunj cOlai cUznta kapAlIccuram amarntAn2
perunj cAnti kANAtE pOtiyO? pUmpAvAy!

பொருள்: சமணர்கள் உடை உடுத்தாத வாழ்க்கையர். சாக்கியர் உடை உடுத்தும் வாழ்க்கையர். இருவரும் தத்தம் வாய்க்கு வந்தவாறு பிதற்றித்திரிவர். அவர்கள் திரியும் மண்ணிலேயே மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சுரத்துள் சிவன் கோயில் கொண்டுள்ளான். அங்கு நிகழும் பெருஞ்சாந்தி விழாவைக் காணாது பூம்பாவையே நீ செல்வது முறையோ? காண வருவாயாக.

குறிப்புரை: உரிஞ்சு ஆயவாழ்க்கை அமண் – உடை ஒழிந்த காரணத்தால் உரிந்தது போன்று ஆகிய திகம்பர வாழ்வுடைய சமணர். உடையைப் போர்க்கும் சாக்கியர் என்றதால், சமணர்க்கு அஃதின்மை குறித்தாரெனல் பொருந்துமாறறிக. கருஞ்சோலை – பெரிய சோலை. இருளால்கரிய எனலுமாம். எடுத்து உரைப்ப – (தூற்றுமாறு) கொண்டாட. பெருஞ்சாந்தி – பவித்திரோற்சவம். கும்பாபிடேகம் என்பாருமுளர். ஆண்டுதோறும் கும்பாபிடேகம் புரிவது எளிதன்று. அதற்கீடாக பவித்திரரோற்சவமே நிகழ்த்துவதுண்டு. இவ்விழா ஆனி முதலிய மூன்று திங்களிலும் நிகழும். நிகழவே ஆண்டு முழுதும் மயிலைக் கபாலீச்சரத்தில் திருவிழா உண்டு என்றவாறு. பவித்திரோற்சவம் ஆடி முற்பக்கத்துச் சதுர்த்தசியிலும், ஆவணி புரட்டாதிகளில் இருபக்கத்திலும் வரும் எட்டு பன்னான்கிரண்டு நாள்களிலும் பவித்திரம் சாத்தல் வேண்டும். (சோமசம்புபத்ததி)

It is Civan, our Lord in Thiru-my-laap-poor. In this city, the Jains roam in the streets without any dress and as a contrast, the Buddhists cover themselves fully with ochre robes. These two races denouncing others' virtues, prattle nonsense. Oh dear people! Do not listen to them. The temple Kabaaleechcharam in the city of Thiru-my-laap-poor is surrounded by very thick groves which cannot be pierced through by the sun's rays and hence are very dark. In this temple a special festival called Pavithra festival or yearly festival takes place. Normally it takes place in any one of the months – say Aadi or Aavani or Purattaci. This is also called good Perunchanthi festival. Oh! My dear young damsel Poompaavai! Is it your fate that you should die at this young age abandoning your life without enjoying such festivals like 'Perunchanthi' of our Lord in the very famous temple of Kabaaleechcharam in the city of Thiru-my-laap-poor where you were born? No. Definitely not. You should come back to life with your early physical body and live long to worship our Lord in all the festivals.

1981. கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
தேனமர்பூம்பாவைப்பாட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தன்நலம்புகழ்ந்தபத்தும்வலார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே. 11

கான் அமர் சோலைக் கபாலீச்சுரம் அமர்ந்தான்
தேன் அமர் பூம்பாவைப் பாட்டு ஆகச் செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த பத்தும் வலார்,
வான சம்பந்தத்தவரோடும் வாழ்வாரே.

kAn2 amar cOlaik kapAlIccuram amarntAn2
tEn2 amar pUmpAvaip pATTu Akac centamizAn2
njAn2acampantan2 nalam pukaznta pattum valAr,
vAn2a campantattavarOTum vAzvArE.

பொருள்: சோலைகள் சூழ்ந்த மயிலைக் கபாலீச்சுரத்துள் சிவன் கோயில் கொண்டுள்ளான். அவனிடம் இனிய பூம்பாவையின் நலம் வேண்டி ஞானசம்பந்தப் பெருமான் பத்துப்பாடல்களைப் பாடி அருளியுள்ளார். அப்பத்துப் பாடல்களையும் ஓதவல்லவர், வீடுபெற்ற பக்தர்கணத்தோடு கூடி வாழும் பேற்றினைப் பெற்றவர் ஆவர்.

குறிப்புரை: 'தேன் அமர் பூம்பாவைப் பாட்டு' என்பதிலுள்ள பூவிற்குத் 'தேன்அமர்' என்று அடை இயல்பாம். வானசம்பந்தத்தவர் – வீடு பெற்ற வித்தகர்.

Our saint Thiru-gnana-Sambandar sang on our Lord of the temple at Kabaaleechcharam in the city of Thiru-my-laap-poor in chaste Tamil language ten verses. These sacred verses are an indirect form of appeal to our Lord to bring back to life the young girl Poombaavai in the same physical body as before, though she died and her body was burnt to ashes and was kept in the temple. Our saint Thiru-gnana-Sambandar came before the pot in which the ashes were kept and recited these ten verses. As usual this best verse is completed in this way - those devotees who are capable of reciting these ten glorious verses of Thiru-gnana-Sambandar, who sang on our Lord of the temple of Kabaaleechcharam in the city of Thiru-my-laap-poor, will have divine relationship with the celestial world and will live there forever with Civa's followers.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

47ஆம் பதிகம் முற்றிற்று
End of 47th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: *184* பதிக எண்: *48*

48. திருவெண்காடு
48. THIRU-VEN-KAADU

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

ஆக்கூரிலிருந்து சீகாழி செல்லும் பெருவழியில் பேருந்து மூலம் அல்லி விளாகத்தில் இறங்கிக் கிழக்கே 4.5 கி.மீ. தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். இது காவிரி வடகரைத் தலங்களுள் பதினொன்றாவது ஆகும். மயிலாடுதுறை, சீகாழி, பூம்புகார் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகளில் செல்லலாம்.

இறைவர் திருப்பெயர் திருவெண்காட்டீசர், சுவேதாரண்யேசர். இறைவி திருப்பெயர் பிரமவித்யாநாயகி. தீர்த்தம் – முக்குளங்கள் – சூரிய தீர்த்தம், அக்கினி தீர்த்தம், சந்திர தீர்த்தம். இக்குளங்களில் நீராடி வழிபடுகிறவர்கள் பிள்ளைப் பேற்றை அடைவார்கள். அவர்களைத் தீவினைகள் அடையா. இச்செய்திகளை இத்தலத்துக்குரிய,

‘பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயன தோளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே’

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரப்பாடல் (பண் – சீகாமரம், பாட்டு 2) இனிது தெளிவு படுத்தும்.

திருப்பெண்ணாகடத்தில் அச்சுதகளப்பாளர் என்பார் ஒருவர் புத்திரப்பேறின்றி இருந்தார். அவர் தமது ஆசாரியர் அருணந்தி சிவாசாரியார் அருளியபடி, திருமுறையில் கயிறுசாத்தினர். சாத்தியபொழுதும் ஞானசம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய ‘பேயடையா பிரிவெய்தும்’ என்னும் மேற்குறித்த திருப்பாடல் தோன்றிற்று. அதிலுள்ள, ‘வெண்காட்டு முக்குளநீர் தோய்வினையார் பிள்ளையினோடு உள்ள நினைவாயினவே வரம்பெறுவர் . . . ஒன்றும் ஐயுறவேண்டாம்’ என்னும் பொருளை அறிந்து மகிழ்ந்து, திருவெண்காட்டிற்குத் தம் மனைவியாரோடு சென்று, முக்குளத்தில் நீராடி இறைவனை வழிபட்டார்.

இங்ஙனம் வழிபட்டுவரும் நாள்களில் ஒருநாள் இறைவன் அவரது கனவில் தோன்றிச் சைவ சித்தாந்தத்தை நிலைபெறச் செய்யக்கூடிய ஒரு புத்திரனை நீ அடைவாய் என்று சொல்லி மறைந்தருளினார். அவ்வாறே அவர் புத்திரப்பேற்றை அடைந்தார். இக்குழந்தையே சைவசித்தாந்த பரமாசாரியராக விளங்கிய மெய்கண்ட தேவர் ஆவார்.

தலவிருட்சம் ஆலமரம்; கொன்றை மரம். உள்பிரகாரத்தில், அகோரமூர்த்தி கையில் சூலத்துடன் எழுந்தருளியிருக்கின்றார். அவருக்கு எதிரில் காளியின் சந்நிதி உள்ளது. சிதம்பரத்தில் இருப்பதுபோலவே இங்கு நடராஜர் பெருமையுடன் விளங்குகின்றார். இப்பதியில் வெள்ளானை பூசித்துப் பேறு பெற்றது. இதை,

‘வெள்ளானை வேண்டும்வரம் கொடுப்பர்
வெண்காடு மேவிய விகிர்தனாரே’

என்னும் அப்பர் பெருமானின் இத்தலத் தேவாரப் பகுதியாலும்,

‘அயிரா வதம்பணிய மிக்கதனுக்
கருள்சுரக்கும் வெண்காடு’

என்னும், ஞானசம்பந்தர் தேவாரப் பகுதியாலும் அறியலாம். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் மூன்று, அப்பர் பதிகம் இரண்டு, சுந்தரமூர்த்தி நாயனார் பதிகம் ஒன்று ஆக ஆறு பதிகங்கள் இருக்கின்றன. சைவ எல்லப்ப நாவலர் தலபுராணத்தை இயற்றியுள்ளார், அது அச்சில் வந்துள்ளது.

பதிக வரலாறு

முத்தமிழ் விரகர் அடியார்சூழத் திருக்கோபுரத்தை வணங்கித் திருக்கோயிலை வலம்வந்து வீழ்ந்து தொழுது மெய்ப்பொருள் ஆயினாரை முக்குளமும் சேர்த்துப் பாடியருளியது சொல்லுதற்கு அரிய இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

1982. கண்காட்டுநுதலானுங்கனல்காட்டுங்கையானும்
பெண்காட்டுமுருவானும்பிறைகாட்டுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானும்பயிர்காட்டும்புயலானும்
வெண்காட்டிலுறைவானும்விடைகாட்டுங்கொடியானே. 1

கண் காட்டும் நுதலானும், கனல் காட்டும் கையானும்,
பெண் காட்டும் உருவானும், பிறை காட்டும் சடையானும்,
பண் காட்டும் இசையானும், பயிர் காட்டும் புயலானும்,
வெண் காட்டில் உறைவானும் - விடை காட்டும் கொடியானே.

kaN kATTum nutalAn2um, kan2al kATTum kaiyAn2um,
peN kATTum uruvAn2um, piRai kATTum caTaiyAn2um,
paN kATTum icaiyAn2um, payir kATTum puyalAn2um,
veN kATTil uRaivAn2um--viTai kATTum koTiyAn2E.

பொருள்: சிவபெருமான், நெற்றிக் கண்ணுடையவன்; கையில் நெருப்பை ஏந்தியவன்; உடம்பின் ஒருபாகத்தில் உமாதேவியைக் கொண்டு விளங்குபவன்; சடையில் பிறைநிலவைத் தாங்கியவன்; பண்ணோடு இசையாய் விளங்குபவன்; பயிருக்கு உதவும் மழையாக இருப்பவன்; திருவெண்காட்டில் கோயில் கொண்டவன்; இடப வாகனத்தான் என்க.

குறிப்புரை: கண்காட்டும் – நெருப்புக்கண்ணைக் காட்டும், இவ்வாறே காட்டும் என்பதற்கு முன்னே இரண்டனுருபு(ஐ) விரித்துக் கொள்க. நுதலான், கையான், உருவான், சடையான், உறைவான் என்பன நுதல் முதலியவற்றை முறையே உடைமையால் வந்தது. உறைவானென்பது வினையாலனையும் பெயருமாம். இசையான், புயலான் என்பவற்று இசைவடிவாயும் புயல் (மேகம்) வடிவாயும் விளங்குகின்றான் என்று கொள்க. 'ஏழிசையாய் இசைப்பயனாய்', 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்பவை காண்க. விடை – எருது. கொடியான் – கொடியை உடையான். உம்மை ஏற்ற பெயர்கள் எழுவாய். கொடியான் என்பது பெயர்ப்பயனிலை (அற்புதத் திருவந்தாதி 98).

Behold! It is Civan, our Lord of Thiru-ven-kaadu. Our Lord has got a third eye at the center of His forehead. He holds fire in one of His hands. His holy body is half feminine. He retains the moon on His matted hair. He is God in the form of music and all sounds. He is like the rainy clouds and storm for growing crops. His flag shows the symbol of the bull, He has for His transport. He is manifest in the temple in Thiru-ven-kaadu city.

1983. பேயடையாபிரிவெய்தும்பிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறுவர்ஐயுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே. 2

பேய் அடையா, பிரிவு எய்தும்; பிள்ளையினோடு உள்ளம் நினைவு-
ஆயினவே வரம் பெறுவர்; ஐயுற வேண்டா, ஒன்றும்;
வேய் அன தோள் உமை பங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர் தம்மைத் தோயாஆம், தீவினையே.

pEy aTaiyA, pirivu eytum, piLLaiyOn2Tu uLLam nin2aivu--
Ayin2avE varam peRuvar; aiyuRa vENTA, on2Rum;
vEy an2a tOL umai pagkan2 veNkATTu mukkuLa nIr
tOy vin2aiyAr avartammait tOyA Am, tIvin2aiyE.

பொருள்: மூங்கில் போன்ற தோள்களைக் கொண்ட உமாதேவியைப் பாகமாகக் கொண்டு திருவெண்காட்டில் விளங்குபவரே சிவபெருமான். வெண்காட்டில் உள்ள முக்குளநீரில் தோய்ந்து நீராடியவர்களைத் தீவினைகள் சாராது நல்வரம் பெறுவர். பேயும் நாடாது. அஞ்ஞானம் நீங்கும். புத்திரப்பேறு கிட்டும். இதில் ஐயமே வேண்டா.

குறிப்புரை: பேய் – பேய்கள். அடையா – சாரா. பிரிவு எய்தும் – சார்ந்த பேய்களும் இத்தலத்தை வழிபட்டால் நீக்கமுறும். பிள்ளையினோடு உள்ளம் நினைவு ஆயினவே வரம் பெறுவர் – பிள்ளவரம் கேட்டலோடு மற்றைய வரங்களையும் மனத்தில் நினைத்தவாறே அடைவர். ஆயின – வினையாலணையும் பெயர். ஒன்றும் – சிறிதும். ஐயுற – ஐயம் அடைய. வேய் – மூங்கில். அன்ன – ஒத்த, இடைக்குறை. முக்குளம் – சோம சூரிய அக்கினி தீர்த்தங்கள். தோய் வினையார் – முழுகும் செயலுடைய அடியார் முதலியோர். தீவினை தோயாவாம் என்க. தோய்தல் – பீடித்தல். மெய்கண்ட தேவநாயனார் தோற்றத்துக்கு இத்திருப்பாடல் திருவருட்குறிப்பாயிருந்தது.

This second verse in this 48th pathigam indicates the birth of our greatest philosophical saint Sri Mei-kanda-theva-naainaar. He was bestowed with the sagacious supernal effulgence called Siva-gnaana-botham of the philosophical world at the age of less than three, He was blessed and graced by the divine saint Paran-jothi who gave him the divine name also Mei-kandaar (For full details see the history of the place, His original name is Thiru-ven-kaadar).

Behold! It is our Lord Civan of Thiru-ven-kaadu. He has embedded His consort Uma Devi whose shoulders are strong and smooth like bamboo polls and He is manifest in the temple at Thiru-ven-kaadu city. Those who suffer the evil effects of fiends should visit the temple, take bath in the three tanks - viz., Soma, Soorya and Agni. Thereafter if they worship our Lord they will be freed of all their sufferings. The fiends will leave them. Children will be born of those who need them. All desires will be granted by our Lord to those who pray. Oh! you people you need not have any doubt about these good effects.

1984. மண்ணொடுநீரனல்காலோடாகாயம்மதியிரவி
எண்ணில்வருமியமானனிகபரமுமெண்டிசையும்
பெண்ணினொடாண்பெருமையொடுசிறுமையுமாம்பேராளன்
விண்ணவர்கோன்வழிபடவெண்காடிடமாவிரும்பினனே. 3

மண்ணொடு, நீர், அனல், காலோடு, ஆகாயம், மதி, இரவி
எண்ணில் வரும் இயமானன், இகபரமும், எண்திசையும்,
பெண்ணினொடு, ஆண், பெருமையொடு, சிறுமையும், ஆம் பேராளன் -
விண்ணவர்கோன் வழிபட - வெண்காடு இடமா விரும்பினனே.

maNNOTu, nIr, an2al, kAlOTu, AkAyam, mati, iravi,
eNNil varum iyamAn2an2, ikaparamum, eNticaiyum,
peNNin2oTu, AN, perumaiyoTu, ciRumaiyum, Am pErALan2--
viNNavarkOn2 vazipaTa--veNkATu iTamA virumpin2an2E.

பொருள்: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் ஆகிய அட்டமூர்த்தியாய் விளங்குபவனே இறைவன். அவனே, இம்மை, மறுமை, எண்திசை, பெண், ஆண், பேருரு சிற்றுரு ஆகிய அனைத்துமாய் உள்ளான். அவனே இந்திரன் தன்னை வழிபாடு செய்ய வெண்காட்டில் கோயில் கொண்டுள்ளான்.

குறிப்புரை: 'மண் . . . இயமானன்' – எட்டுருவர் (அஷ்டமூர்த்தி) 'எட்டுக்கொண்டார்'. (திருவுந்தியார்) இகபரம் – இம்மை மறுமை. விண்ணவர்கோன் – இந்திரன். அவனும் வெள்ளானையும் வழிபட்டமை தலபுராணத்திற்காண்க (பா 7.9). இதில் சிவபிரான் உலகினை இறந்து நின்றது அரன் உரு . . . மூடரெல்லாம் – (சிவஞான சித்தியார்) என்பதில் குறித்த விஸ்வரூபி விஸ்வாந்தர்யாமி என்னும் இரண்டு நிலைகளை உணர்த்தியவாறு.

Behold! It is Civan, our Lord of Thiru-ven-kaadu. Our Lord is earth, water, fire, wind, sky, moon, the sun and numberless souls; like this. He has eight dispositions. He is in this world birth, and life in the next one; eight directions; male and female; He is the greatest in all other great things; He is the smallest in all the small ones. He is the most famous of all these dispositions. Lord Indra came to Thiru-ven-kaadu to worship our Lord in this place. Thus our Lord desired to be manifest in Thiru-ven-kaadu and here He graces one and all.

1985. விடமுண்டமிடற்றண்ணல்வெண்காட்டின்தண்புறவின்
மடல்விண்டமுடத்தாழைமலர்நிழலைக்குருகென்று
தடமண்டுதுறைக்கெண்டைதாமரையின்பூமறையக்
கடல்விண்டகதிர்முத்தநகைகாட்டுங்காட்சியதே. 4

விடம் உண்ட மிடற்று அண்ணல் வெண்காட்டின் தண்புறவில்,
மடல் விண்ட முடத்தாழைமலர் நிழலைக் குருகு என்று,
தடம் மண்டு துறைக் கெண்டை, தாமரையின் பூ மறையக்
கடல் விண்ட கதிர் முத்தம் நகை காட்டும் காட்சியதே.

viTam uNTa miTaRRu aNNal veNkATTin2 taNpuRavil,
maTal viNTa muTattAzaimalar nizalaik kuruku en2Ru,
taTam maNTu tuRaik keNTai, tAmaraiyin2pU maRaiya,
kaTal viNTa katir muttam nakai kATTum kATciyatE.

பொருள்: விடத்தை அமுதாக உண்ட சிவன் கோயில் கொண்டுள்ள தலமே திருவெண்காடாம். அங்கு வளர்ந்த தாழைகளின் மடல் நடுவே தாழம்பூ மலர்ந்திருக்கும். அதனை மீன்கள் தங்களை கொத்தவரும் கொக்கென்று கருதி நடுங்கி, தாமரை மலர்கள் நடுவே சென்று ஒளிந்து கொள்ளும். அதன் அறியாமையைக் கண்டு நகைப்பதுபோல் முத்துக்கள் சிதறிக் காட்சியளிக்கும் என்க.

குறிப்புரை: மிடற்று அண்ணல் – திருநீலகண்டப் பெருமான். தண்புறவில் – குளிர்ந்த முல்லை நிலத்தில். குருகு – குருகு என்னும் புள். தடம் – குளம். கெண்டை – மீன். பூ – பூவின்பால். விண்ட – விள்ளுதல் உற்ற. முத்தம் – முத்துக்கள். நகை – பல், சிரிப்புமாம். கெண்டையின் அறியாமைச் செயலைக் கண்டு கடல் நகைத்தது என்றது தற்குறிப்பேற்றம்.

Behold! It is our Civan, the Lord in Thiru-ven-kaadu. Our Lord once consumed the poison that came out of the ocean which was churned by the devas and the asuras and stopped it in His throat which became dark blue in colour forever. He is manifest in the temple in Thiru-ven-kaadu. Near this temple a cool forest exists in which a cool brook flows. On the banks of this brook luxurious pandanus flower plants grow. The sun's rays falling over their spikes, create shadow in the water below. The carp fish in the running water, mistaking the shadow to be cranes flying for food, hide themselves under the shade of the lotus flower. The pearls, which are very bright and white in colour on the banks of the seashore twinkle in the sunlight. This scenery made our saint Thiru-gnana-Sambandar to imagine as though the pearls were laughing on seeing the carp fish misunderstanding the shadow of the spikes to be cranes and hiding themselves under the lotus flower for protection. The pearls laugh at the foolishness of the carp fish, this is the poetic fancy of the saint.

1986. வேலைமலிதண்கானல்வெண்காட்டான்திருவடிக்கீழ்
மாலைமலிவண்சாந்தால்வழிபடுநன்மறையவன்றன்
மேலடர்வெங்காலனுயிர்விண்டபினைநமன்தூதர்
ஆலமிடற்றானடியாரென்றடரஅஞ்சுவரே. 5

வேலை மலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலை மலி வண் சாந்தால் வழிபடு நல் மறையவன்தன்
மேல் அடர் வெங்காலன் உயிர் விண்ட பினை, நமன் தூதர்,
ஆலமிடற்றான் அடியார் என்று, அடர அஞ்சுவரே.

vElai mali taNkAn2al veNkATTAn2 tiruvaTikklz
mAlai mali vaN cAntAl vazipaTu nal maRaiyavan2 tan2
mEl aTar vegkAlan2 uyir viNTa pin2ai, naman2 tUtar,
AlamiTaRRAn2 aTiyAr en2Ru, aTara anjcuvarE.

பொருள்: சோலைகள் நிறைந்த கடற்கரைப் பகுதியே திருவெண்காட்டுத் தலமாகும். அங்கு கோயில் கொண்டுள்ள சிவனை மலர்களாலும், மணமிக்க சந்தனத்தாலும், அலங்கரித்து வழிபாடு செய்தவனே அந்தணச் சிறுவனாகிய மார்க்கண்டேயன் ஆவான். அவனது உயிரைக் கவர வந்தவனே இயமன் ஆவான். இயமனைச் சிவன் தன் காலால் உதைத்து அருளினான். அதிலிருந்து எமதூதர்கள் சிவனடியார்களின் உயிரைக் கவர பெரிதும் அஞ்சி நிற்பர் என்க.

குறிப்புரை: வேலை – கடல். கானல் – கடற்கரைச்சோலை. காலன் – மாய்ந்ததால், தூதர் சிவனடியாரிடத்தில் அச்சமுற்றனர். இதிற்குறித்தது திருவெண்காட்டுத் தலத்தில் நிகழ்ந்த சுவேத கேது முனிவர் வரலாறு (தி. 2 ப. 61 பா. 7) இதனை மார்க்கண்டேய முனிவர் வரலாறு என்றும் கூறுகின்றனர்.

Behold! It is Civan, our Lord in Thiru-ven-kaadu. Our Lord manifests Himself in the temple in Thiru-ven-kaadu. Around the temple cool groves are in plenty along the seashore. Our Lord with garlands and sandal paste over His holy feet was worshipped by the Saint Swethakethu. At this moment our Lord kicked and killed the god of death who came to this city to covet the life of saint Swethakethu. This scenery encouraged Civa's devotees to believe that hereafter the messengers of god of death will never come near them to covet their life, out of fear of our God.

1987. தண்மதியும்வெய்யரவுந்தாங்கினான்சடையினுடன்
ஒண்மதியநுதலுமையோர்கூறுகந்தானுறைகோயில்
பண்மொழியாலவன்நாமம்பலவோதப்பசுங்கிள்ளை
வெண்முகில்சேர்கரும்பெணைமேல்வீற்றிருக்கும்வெண்காடே. **6**

தண்மதியும் வெய்ய(அ)ரவும் தாங்கினான், சடையின்உடன்;
ஒண்மதியநுதல் உமை ஓர்கூறு உகந்தான்; உறை கோயில் -
பண் மொழியால் அவன் நாமம்பல ஓத, பசுங்கிள்ளை
வெண் முகில் சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே.

taNmatiyum veyya(aravum tAgkin2An2, caTaiyin2 uTan2;
oNmatiya nutal umai OrkURu ukantAn2; uRai kOyil--
paN moziyAl avan2 nAmam pala Ota, pacugkiLLai
veN mukil cEr karumpeNai mEl vIRRirukkum veNkATE.

பொருள்: குளிர்ந்த நிலவையும், கொடிய பாம்பையும் தன் தலையில் கொண்ட சிவபெருமான், மதிபோலும் நுதலுடைய உமையவளைத் தன் உடம்பின் பாகமாகக் கொண்டுள்ளான். அவன் கோயில் கொண்டுள்ள தலமே திருவெண்காடாம். அங்குள்ள கிளிகள் உயர்ந்த பனைமரம் மீதிருந்து சிவனின் நாமத்தைக் கூறிக்கொண்டே இருக்கும்.

குறிப்புரை: தண்மை; வெம்மை இரண்டும் முறையே மதியின் நிலவும் பாம்பின் நஞ்சும் குறித்தன. ஒள்மதியம் நுதல் உமை – ஒளி பொருந்நதிய பிறை போன்ற நெற்றியையுடைய உமாதேவியார். கூறு – இடப்பால். பெணை – பெண்ணை. பனை, கிள்ளை நாமம் ஓத வீற்றிருக்கும் காடு என்க. பாரிசையும்

பண்டிதர்கள் பல்நாளும் பயின்றோதும் ஓசை கேட்டு வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் – பாருட் சொல்லும் மிழலையாமே (தி.1 ப.132 பா.1). வேதத்தொலியாற் கிளி சொற்பயிலும் வெண்காடே (ப.197 பா.2).

Behold! It is Civan, our Lord in Thiru-ven-kaadu. Our Lord retains the cool moon on His matted locks of hair and bears the venomous snake also along with the moon. His consort, our goddess Uma, whose forehead is bright like the moon, is seated on the left side of His body. In the nearby places of the temple young parrots, with multicoloured feathers, alight on the leaves of the tall black palmyrah trees where the white clouds gather on the top. Sitting on the tree they repeat with sweet syllables the great name of our God.

1988. சக்கரமாற்கீந்தானுஞ்சலந்தரனைப்பிளந்தானும்
அக்கரைமேலசைத்தானுமடைந்தயிராவதம்பணிய
மிக்கதனுக்கருள்சுரக்கும்வெண்காடும்வினைதுரக்கு
முக்குளநன்குடையானுமுக்கணுடையிறையவனே. 7

சக்கரம் மாற்கு ஈந்தானும்; சலந்தரனைப் பிளந்தானும்;
அக்கு அரைமேல் அசைத்தானும்; அடைந்த அயிராவதம் பணிய,
மிக்கு அதனுக்கு அருள் சுரக்கும் வெண்காடும், வினை துரக்கும்
முக்குளம், நன்கு உடையானும் - முக்கண் உடை இறையவனே.

cakkaram mARku IntAn2um; calantaran2aip piLantAn2um;
akku araimEl acaittAn2um; aTainta ayirAvatam paNiya,
mikku atan2ukku aruL curakkum veNkATum, vin2ai turakkum
mukkuLam, nan2ku uTaiyAn2um--mukkaN uTai iRaiyavan2E.

பொருள்: சிவன் சக்கரப் படையைத் திருமாலுக்கு அருளியவன். சலந்தராசுரனை வதம் செய்தவன். எலும்பு மாலையை அணிந்தவன். தன்னை வணங்கிய ஐராவதம் என்ற யானைக்கு அருள் செய்தவன். வெண்காட்டில் கோயில் கொண்டவன். வழிபடும் அடியவர்களின் வினைகளை நீக்கும் முக்குள நீருக்கும் உரியவன். முக்கண்ணனும் அவனே ஆவான்.

குறிப்புரை: மாற்கு – விஷ்ணுவுக்கு, அக்கு – எலும்புமாலை. அயிராவதம் – வெள்ளானை (பா. 9). அதனுக்கு – அவ்வெள்ளானைக்கு அருள்மிக்குச்சுரக்கும் என்க. காடும் குளமும் உடையான் என்றும்,

காடும் முக்குளம் உடையானும் இறையவன்; பிளந்தானும் அசைத்தானும் உடையானும் இறையவனே என்றும் கொள்ளலாம். 'வெளிய உருவத்து ஆனை வணங்கும் வெண்காடே' (பா. 19. 6).

Behold! It is Civan, our Lord in Thiru-ven-kaadu. Our Lord has a third eye at the center of His forehead. He gracefully gave the sacred weapon of the wheel to Thirumaal. He split into two the body of Chalandra asuran and killed him. He wears the garland made of bones on His waist. The great Iravatha elephant belonging to Indra came near our Lord and prostrated before Him and worshipped Him. Our Lord was highly pleased with the elephant's behaviour and gave a lot of boons and blessed the elephant. In the temple ground three tanks exist. Those who take bath in all the three tanks will find, their sins disappear. This Lord is manifest in Thiru-ven-kaadu.

1989. பண்மொய்த்தஇன்மொழியாள்பயமெய்தமலையெடுத்த
உன்மத்தனுரம்நெரித்தன்றருள்செய்தானுறைகோயில்
கண்மொய்த்தகருமஞ்ஞைநடமாடக்கடல் முழங்க
விண்மொய்த்தபொழில்வரிவண்டிசைமுரலும்வெண்காடே. 8

பண் மொய்த்த இன்மொழியாள் பயம் எய்த மலை எடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து, அன்று அருள் செய்தான் உறை கோயில் -
கண் மொய்த்த கரு மஞ்ஞை நடம்ஆட, கடல் முழங்க,
விண் மொய்த்த பொழில் வரிவண்டு இசை முரலும் வெண்காடே.

paN moytta in2moziyAL payam eyta malai eTutta
un2mattan2 uram nerittu, an2Ru aruL ceytAn2 uRai kOyil--
kaN moytta karu manjnjai naTam ATa, kaTal muzagka,
viN moytta pozil varivaNTu icai muralum veNkATE.

பொருள்: பண் நிறைந்த பாடல்போலும் இனியமொழி பேசும் உமாதேவி அஞ்ச கயிலாய மலையைப் பெயர்த்து எடுத்தவன் இராவணன். அந்த ஆணவம் மிக்க அரக்கனின் வலிமையைக் கெடுத்துப்பின் அருளியவன் சிவனே! அவன் திருவெண்காட்டில் கோயில் கொண்டுள்ளான். அங்கு தோகையுடைய மயில்கள் நடனமாடும். கடல்கள் முழங்கும். வண்டுகள் இசைபாடிக் கொண்டிருக்கும்.

குறிப்புரை: மொழியாள் – சொல்லியள் (தேவியார்). பயம் – அச்சம். உன்மத்தன் – பித்துக்கொளி. உரம் – மார்பு. கண் – தோகைக்கண்கள். கருமஞ்ஞை – நீலமயில். மயில் ஆட்டத்திற்கு முடிவு. கடல், இசைவண்டினொலி. 'விண்மொய்த்த பொழில்' என்ற தலத்தின் சோலைவளம் இன்றும் உளது.

Behold! It is Civan, the Lord of Thiru-ven-kaadu. Our Lord's consort, our goddess Paarvathi Devi was with Him on the mount Himalayas. She always speaks very delightful words similar to the musical tone of sacred songs. At one moment she got frightened by the movement of the mountain over which she was resting with her Lord. Our Lord pressed the mountain with His toe. Raavanan got crushed under the mountain. He realised his mistake, wept and begged our Lord for pardon. Our Lord exonerated him and graced him with several boons. Our Lord of this disposition is manifest in the temple in Thiru-ven-kaadu. All around the temple blue coloured peacocks unfold their very attractive feathers, with eye-like designs all over the feathers and dance. The seashore nearby makes ever-roaring noise. Near the temple thick groves with sky-high tall trees exist. There striped beetles make humming noise. It is heard as though they sing musical notes. In such a holy place called Thiru-ven-kaadu our Lord is manifest and graces all the devotees.

1990. கள்ளார்செங்கமலத்தான்கடல்கிடந்தானெனவிவர்கள்
ஒள்ளாண்மைகொளற்கோடியுயர்ந்தாழ்ந்துமுணர்வரியான்
வெள்ளானைதவஞ்செய்யும்மேதகுவெண்காட்டானென்
றுள்ளாடியுருகாதாருணர்வுடைமையுணரோமே. 9

"கள் ஆர் செங்கமலத்தான், கடல் கிடந்தான், என இவர்கள்
ஒள் ஆண்மை கொளற்கு ஓடி, உயர்ந்து ஆழ்ந்தும் உணர்வு அரியான் -
வெள்ஆனை தவம் செய்யும் மேதகு வெண்காட்டான்" என்று
உள் ஆடி உருகாதார் உணர்வு, உடைமை, உணரோமே.

"kaL Ar cegkamalattAn2, kaTal kiTantAn2, en2a ivarkaL
oL ANmai koLaRku OTi, uyarntu Azntum, uNarvu ariyAn2--
veL An2ai tavam ceyyum mEtaku veNkATTAn2" en2Ru
uL ATi urukAtAr uNarvu, uTaimai, uNarOmE.

பொருள்: தேன் நிறைந்த செந்தாமரைமலர் மேல் உள்ள பிரமனும் பாற்கடலில் கிடந்த திருமாலும் சிவனின் அடிமுடி தேட முயன்று தோற்றார்கள். உணர்வதற்கு அரியவனாகிய

சிவனை வெள்ளையானை அன்பால் வழிபட்டுச் சிறந்தது. அச்சிவன் கோயில் கொண்ட தலமே திருவெண்காடாம். அச்சிவனை உள்ளம் உருகி வழிபாடு செய்தவர்கள் நல்உணர்வு உடையவர் ஆவர்.

குறிப்புரை: கள் – தேன். கமலத்தான் – தாமரை மேலுள்ள பிரமன். கடல் – பாற்கடலில் கிடந்தான் – அறிதுயில் செய்யும் திருமால். 'தேசங்கள் தொழநின்ற திருமால்' (தி.4 ப.7 பா.6). ஆண்மை – ஆளாந்தன்மை, அடிமை திறம். கொளற்கு – கொள்ள வேண்டி. உயர்ந்து – மேல் பறந்தும் ஆழ்ந்தும், கீழ்தோண்டிச் சென்றும். உணர்வு அரியான் – உணர்வதற்கு அரியவன். 'வெள்ளானை . . . வெண்காடு' (பா. 7) வெள்ளானைக்காடு என்பது வெண்காடு என்று சுருங்கிற்று எனக்கருத இடமுண்டு. உள் ஆடி – உள்ளம் கசிந்து. உள்ளம் நடுங்கி உருகாதவரது ஞானப்பேற்றை. உணரோம் – மதியோம். உருக்கம் சிவஞானத்தை எய்துவிக்கும். உருகாமை தற்போதத்தை ஒழிக்காது.

Behold! It is Civan our Lord of Thiru-ven-kaadu. Demigod Brahma rests in the honeyed red lotus flower. Whereas Lord Vishnu sleeps over the snake in the ocean. They both wished to discontinue their egoism. Therefore, one flew high in the sky and the other went deep into the earth, but could not comprehend anything about our Lord. This Lord is manifest in the temple in Thiru-ven-kaadu, He graced the white elephant of Indra, which came to prostrate before and worship our Lord. We cannot understand those people who do not weep and shed tears with melting emotions even after coming to know about the virtues and fame of our Lord in the temple. We do not respect the life of such people for they will never be able to shed their ego.

1991. போதியர்கள்பிண்டியர்கள்மிண்டுமொழிபொருளென்னும்
பேதையர்களவர்பிரிமினறிவுடையீரிதுகேண்மின்
வேதியர்கள்விரும்பியசீர்வியன்திருவெண்காட்டானென்
றோதியவர்யாதுமொருதீதிலரென்றுணருமினே. 10

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டுமொழி பொருள் என்னும்
பேதையர்கள் அவர்; பிரிமின்! அறிவு உடையீர்! இது கேண்மின்;
"வேதியர்கள் விரும்பிய சீர் வியன்திரு வெண்காட்டான்" என்று
ஓதியவர் யாதும் ஒரு தீது இலர் என்று உணருமினே!

pOtiyarkaL piNTiyarkaL miNTumozi porul en2n2um
pEtaiyarkaL avar; pirimin2! aRivu uTaiylr! itu kENmin2;
"vEtiyarkaL virumpiya clr viyan2tiru veNkATTAn2" en2Ru
Otiyavar yAtum oru tltu ilar en2Ru uNarumin2E!

பொருள்: பௌத்தர்களும் சமணர்களும் குதர்க்கமாகப் பொருள் கொண்டு பேசுபவர்கள். எனவே, அவர்களின் உரைகளை ஏற்க வேண்டாம். மெய்ஞ்ஞானத்தை உடையவர்களே! நீங்கள் நான் கூறுவதைக் கேளுங்கள். வேதியர் விரும்பும் சிவன் திருவெண்காட்டில் கோயில் கொண்டுள்ளான். அவனையே போற்றி வழிபாடு செய்து தீதற்ற நிலையை அடைவீர்களாக.

குறிப்புரை: போதியர்கள் – சாக்கியர்கள். போதி – அரசமரம். புத்தன் போதி விருட்சத்தின் கீழினன். போதி வேந்தன், பிண்டியர்கள் – சமணர்கள். பிண்டி – அசோகமரம். 'பூமலி அசோகின் புனை நிழலமர்ந்த நான்முகன்' மிண்டு மொழி – வன்புரை. பேதையர்களாகிய அவரைப் பிரிந்து சென்மின். அறிவுடையீர் இதைக் கேண்மின். 'மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்' (திருப்பல்லாண்டு) எனல் போல அவர் 'சென்மின்' எனலுமாம். ஓதினவர் ஒருதீதும் இலர் என்று உணருமின் என்க.

Oh! People of Thiru-ven-kaadu. Do not listen to the sinful, false words of the Buddhists who do penance under the peepal tree, and the Jains who do their penance under Uvaria longifolia tree. Shun their presence and always avoid them. Oh learned people! Listen to these words. The Vedic scholars of this place, very passionately attached to our Lord, manifest in the temple in Thiru-ven-kaadu, recite the name of our Lord with sincere devotion and they will never get any slander in their life. This conviction is good enough to promote our piety to our Lord.

1992. தண்பொழில்சூழ்சண்பையர்கோன்தமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னிவிகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார்
மண்பொலியவாழ்ந்தவர்போய்வான்பொலியப்புகுவாரே. 11

தண்பொழில் சூழ் சண்பையர்கோன் - தமிழ் ஞானசம்பந்தன் -
விண் பொலி வெண்பிறைச் சென்னி விகிர்தன் உறை வெண்காட்டைப்
பண் பொலி செந்தமிழ்மாலை பாடிய பத்துஇவை வல்லார்,
மண் பொலிய வாழ்ந்தவர் போய் வான் பொலியப் புகுவாரே.

taNpozil cUz caNpaiyarkOn2--tamiz njAn2acampantan2--
viN poli veNpiRaic cen2n2i vikirtan2 uRai veNkATTaip
paN poli centamiz mAlai pATiya pattu ivai vallAr,
maN poliya vAztavar, pOy vAn2 poliyap pukuvArE.

பொருள்: குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த சீர்காழிப் பதியில் அவதரித்தவரே திருஞானசம்பந்தர் ஆவார். அவர் விண்ணில் தவழும் பிறைநிலவைத் தன்தலையில் சூடிக் கொண்ட திருவெண்காட்டுத் தலைவனை - சிவனைப் - புகழ்ந்து பத்துப்பாடல்கள் பாடியருளி உள்ளார். அப்பத்துப் பாடல்களையும் அன்புடன் பாடிட வல்லவர்கள் மண்ணிலும் விண்ணிலும் சிறப்புறுவர் என்க.

குறிப்புரை: விண்பொலி வெண்பிறை – ஆகாயத்தில் விளங்குகின்ற வெள்ளைப்பிறை. பண்பொலி செந்தமிழ்மாலை மண் பொலிய வாழ்ந்தவர் விண் பொலியப் புகுவர் என்க. வாழ்ந்தவர் எழுவாய். புகுவார் – பயனிலை.

Our saint Thiru-gnana-Sambandar hails from the sacred place Sanbai (Seerkaazhi's another name). This city is surrounded by cool gardens. Our Thiru-gnana-Sambandar is the chief of this place. He came to Thiru-ven-kaadu and sang in melodious musical tone these ten pure Tamil verses on the Lord of this place who has adorned His head with the baby moon, which traverses in the sky. Those devotees who are capable of reciting these ten rhythmic verses in the best musical tone will live not only in this world very happily, but also in the celestial world very gracefully.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

48ஆம் பதிகம் முற்றிற்று
End of 48th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 185 *பதிக எண்: 49*

49. சீகாழி

49. SEERKAAZHI

பண் : சீகாமரம் ***Pann: Seekamaram***

திருத்தல வரலாறு

137ஆவது பதிகம் காண்க.

பதிக வரலாறு

137ஆவது பதிகம் காண்க.

திருச்சிற்றம்பலம்

1993. பண்ணினேர்மொழிமங்கைமார்பலர்
பாடியாடியவோசைநாள்தொறுங்
கண்ணினேரயலேபொலியுங்கடற்காழிப்
பெண்ணினேரொருபங்குடைப்பெரு
மானையெம்பெருமானென்றென்றுன்னும்
அண்ணலாரடியாரருளாலுங்குறைவிலரே. 1

பண்ணின் நேர் மொழி மங்கைமார்பலர்
பாடி ஆடிய ஓசை நாள்தொறும்
கண்ணின் நேர் அயலே பொலியும் கடல் காழி,
பெண்ணின் நேர் ஒருபங்கு உடைப் பெருமானை
"எம்பெருமான்!" என்று என்று உன்னும்
அண்ணல் ஆர் அடியார் அருளாலும் குறைவு இலரே.

paNNin2 nEr mozi magkaimAr palar pATi ATiya Ocai nALtoRum
kaNNin2 nEr ayalE poliyum kaTal kAzi,
peNNin2 nEr orupagku uTaip perumAn2ai, "emperumAn2!" en2Ru en2Ru un2n2um
aNNal Ar aTiyAr aruLAlum kuRaivu ilarE.

பொருள்: கடலால் சூழப்பெற்ற அழகிய நகரமே சீகாழிபதி. அங்கு பண்ணின் இசை போன்று இனிய மொழி பேசும் பெண்கள் பலரும் கூடி பாடியாடி சிவனைப் பரவுவர். உமாதேவியை உடம்பின் ஒருபாகமாகக் கொண்டு விளங்கும் சிவபெருமானை வணங்கி அடியவர் போற்றுவர். சிவனின் அருளால் அடியவர்கள் குறைவின்றி வாழ்ந்து வருவர்.

குறிப்புரை: பண்ணின் – பண்ணிசையின் பத்தை. நேர் – ஒத்த. கண்ணின் நேர் – கண்ணெதிரில். பெண் . . . பங்கு – மாதியலும்பாதி. உன்னும் – தியானம் புரியும். 'அருளாலும்' என்ற உம்மை இம்மைக்குரிய பொருளாலும் அன்றி என்று இறந்தது தழீஇயிற்று.

Behold! It is our Lord Civan in Seerkaazhi. Our saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi. On the eastern side of the city the deep big ocean, the Bay of Bengal's seashore enhances the beauty of the city. Next to the seashore in the big street as well in the dance hall a good number of attractive damsels, who always speak in musical tone, sing and dance and make all the people happy. In this city, our Lord who is manifest in the temple is in the half female form, having embedded His consort on the left half of His body. The devotees always recite and establish that our Lord is the only Chief Supreme Being in the universe. Our Lord always bestows grace along with richness on these devotees.

1994. மொண்டலம்பியவார்திரைக்கடல்
மோதிமீதேறிசங்கம்வங்கமுங்
கண்டலம்புடைசூழ்வயல்சேர்கலிக்காழி
வண்டலம்பியகொன்றையானடி
வாழ்த்தியேத்தியமாந்தர்தம்வினை
விண்டலங்கெளிதாமதுநல்விதியாமே. 2

மொண்டு அலம்பிய வார் திரைக்கடல்
மோதி மீது ஏறி சங்கம் வங்கமும்
கண்டல் அம் புடை சூழ் வயல் சேர் கலிக் காழி,
வண்டு அலம்பிய கொன்றையான் அடி
வாழ்த்தி ஏத்திய மாந்தர் தம் வினை
விண்டல் அங்கு எளிது ஆம்; அது நல்விதி ஆமே.

moNTu alampiya vArtiraikkaTal mOti mItu ERi cagkam vagkamum
kaNTal am puTai cUz vayal cEr kalik kAzi,
vaNTu alampiya kon2RaiyAn2 aTi vAztti Ettiya mAntartam vin2ai
viNTal agku eLitu Am; atu nalviti AmE.

பொருள்: கடலலைகள் மோதி எறியப்பட்ட சங்குகள் வயல்வெளிகளில் நிறைந்து காணப்பெறும் பதியே சீகாழி. அங்கு கோயில் கொண்டுள்ளவனே சிவபெருமான்.

கொன்றை மலர்மாலை சூடிய சிவனது அடிகளை வாழ்த்திப்பாடும் அடியவர்களின் வினைகள் அனைத்தும் எளிதாக நீங்கப்பெறும் என்க.

குறிப்புரை: திரை – அலை. வங்கம் – மரக்கலம். கண்டல் – தாழை. புடை – பக்கம். அலம்பிய – ஒலித்த. விண்டல் – நீங்குதல். விதி – பாக்கியம்.

In the Bay of Bengal, the wind blows and rolls the seawater as waves which dash against the ships anchored in the beaches. The waves reach the shores carrying with them the conches of the sea. These conches finally reach the paddy fields of pandanus plants along with the backwater. This place of Seerkaazhi is a very famous city for its name. In the temple, our Lord is manifest. He wears a garland of cassia flowers wherein beetles always hum. The servitors and devotees go to the temple, recite His fame and worship our Lord's holy feet with all sincerity. Therefore, very easily, their sins disappear from their life; also our Lord will grace them with good virtues.

1995. நாடெலாமொளியெய்தநல்லவர்
நன்றுமேத்திவணங்குவார்பொழிற்
காடெலாமலர்தேன்துளிக்குங்கடற்காழித்
தோடுலாவியகாதுளாய்சுரி
சங்கவெண்குழையாயென்றென்றுன்னும்
வேடங்கொண்டவர்கள்வினைநீங்கலுற்றாரே. 3

நாடுஎலாம் ஒளி எய்த நல்லவர்
நன்றும் ஏத்தி வணங்கு - வார்பொழில்
காடுஎலாம் மலர் தேன் துளிக்கும் - கடல் காழி,
"தோடு உலாவிய காது உளாய்! சுரி
சங்கவெண்குழையாய்!" என்றுஎன்று உன்னும்
வேடம் கொண்டவர்கள் வினை நீங்கல் உற்றாரே.

nATu elAm oLi eyta nallavar nan2Rum Etti vaNagku--vAr pozil
kATu elAm malar tEn2 tuLikkum--kaTal kAzi,
"tOTu ulAviya kAtu uLAy! curicagka veNkuzaiyAy!" en2Ru en2Ru un2n2um
vETam koNTavarkaL vin2ai nIgkal uRRArE.

பொருள்: சோலைகளால் சூழப்பெற்று மலர்மணம் நிறைந்து விளங்கும் தலமே சீகாழி. அங்கு தோடும் குழையும் அணிந்த சிவன் கோயில் கொண்டுள்ளான். அவனை நாடெலாம் புகழ்

ஒளி பரவ நல்லடியார்கள் போற்றி வழிபடுவர். சிவவேடம் கொண்ட அடியார்கள் அனைவரும் வினைநீங்கப் பெற்றவரே ஆவர்.

குறிப்புரை: ஒளி – புகழ், விளக்கமுமாம். பொழிற்காடு – சோலைக்காடு. தேனை மலர் துளிக்கும் காடு. அக்காட்டையுடைய கடற்காழி. சங்கக்குழை – சங்கினாலாகிய குண்டலம். வேடம் – சிவவேடம்.

Behold! It is Civan, Lord of Seerkaazhi. In this city, a large number of good people with philanthropic attitude live and pray for the flourishing of the entire country. They all pray and praise our Lord. Near the city very big and large groves flourish with plentiful flowers yielding plenty of honey. The devotees who are in Civa's disguise always think in their minds of the fame and disguise of our Lord and recite His disguise as the one wearing earring in His left ear and the conch shell on His right ear. They will easily get rid of all their sins, if any in their life.

1996. மையினார்பொழில்சூழநீழலில்
வாசமார்மதுமல்கநாள்தொறுங்
கையினார்மலர்கொண்டெழுவார்கலிக்காழி
ஐயனேயரனேயென்றாதரித்
தோதிநீதியுளேநினைப்பவர்
உய்யுமாறுலகில்லுயர்ந்தாரினுள்ளாரே. 4

மையின் ஆர் பொழில் சூழ, நீழலில்
வாசம் ஆர் மது மல்க, நாள் தொறும்
கையின் ஆர் மலர் கொண்டு எழுவார் கலிக் காழி,
"ஐயனே! அரனே!" என்று ஆதரித்து
ஓதி, நீதி உளே நினைப்பவர்,
உய்யும் ஆறு உலகில் உயர்ந்தாரின் உள்ளாரே.

maiyin2 Ar pozil cUza, nIzalil vAcam Ar matu malka, nALtoRum
kaiyin2 Ar malar koNTu ezuvAr kalik kAzi,
"aiyan2E! aran2E!" en2Ru Atarittu Oti, nIti uLE nin2aipavarkaL,
uyyum ARu ulakil uyarntArin2 uLLArE.

பொருள்: பசுமை நிறைந்த சோலைகளால் சூழப்பெற்ற பதியே சீகாழி. அங்கு நறுமணம் நிறைந்து விளங்கும் அடியவர்கள் மலர்கொண்டு சிவனை, ஐயனே! அரனே! என்று அர்ச்சனை செய்து மகிழ்வர். பிறவிப் பயனைப் பெறும் நிலையில் உயர்ந்தோருடன் கூடி அடியவர்கள் இன்புற்று இருப்பர்.

குறிப்புரை: மை – மேகம். வாசம் – மணம். ஆர் – நிறைந்த. மது – தேன். மல்க – நிறைய. எழுவார் – எழுந்து. பூசனை செய்யும் சிவபத்தர்கள். கலி – ஓசை. ஆதரித்து – விரும்பி. உய்யும் ஆறு – பிறவித்துன்புறாது தப்பும் வழி. உயர்ந்தாரின் – உயர்ந்த ஞானியரினத்துள். உள்ளார் – இருப்பவராவர்.

Behold! It is Civan, Lord of Seerkaazhi. The city always has dark black clouds all over the sky. In such a shaded area very large groves with tall trees exist along with sweet smelling flower plants which yield large quantities of honey. The servitors collect a large quantity of flowers and strew them on the holy feet of Lord Civan. While praying they recite 'Oh Father! Oh Supreme Being' with all sincerity and devotion and with regularity. All of them will be the Chief of humanity in the universe.

1997. மலிகடுந்திரைமேல்நிமிர்ந்தெதிர்
வந்துவந்தொளிர்நித்திலம்விழக்
கலிகடிந்தகையார்மருவுங்கலிக்காழி
வலியகாலனைவீட்டிமாணிதன்
இன்னுயிரளித்தானைவாழ்த்திட
மெலியுந்தீவினைநோயவைமேவுவர்வீடே.

மலி கடுந்திரை மேல் நிமிர்ந்து எதிர்
வந்துவந்து ஒளிர் நித்திலம் விழ,
கலி கடிந்த கையார் மருவும் கலிக் காழி,
வலிய காலனை வீட்டி மாணி தன்
இன்உயிர் அளித்தானை வாழ்த்திட,
மெலியும் தீவினை நோய் அவை; மேவுவர், வீடே.

mali kaTun tiraimEl nimirntu etir vantu vantu oLir nittilam viza,
kali kaTinta kaiyAr maruvum kalik kAzi,
valiya kAlan2ai vITTi mANitan2 in2 uyir aLittAn2ai vAzttiTa,
meliyum, tIvin2ai nOy avai; mEvuvar, vITE.

பொருள்: வேகத்திரைகள் கரையில் வந்து மோதிக் கொண்டிருக்கும் பதியே சீகாழி. அங்கு முத்துக்கள் எங்கும் நிறைந்திருக்கும். காலனைக் காலால் காய்ந்தழித்து மார்க்கண்டேயனுக்கு அருளிய சிவன் அங்கு கோயில் கொண்டுள்ளார். அச்சிவனை வழிபாடு செய்வோரின் தீவினைகள், நோய்கள் நீங்கப்பெறும். அவர்கள் வீடு பேற்றையும் பெறுவர்.

குறிப்புரை: மலி – மிக்க. கடு – விரையும். நித்திலம் – முத்துக்கள். அலைமேல் நிமிர்ந்து எதிர்வந்து வந்து ஒளிரும். கலி – வறுமையை. கடிந்த – நீக்கிய. கையார் – கொடைக்கையினர். மருவும் –

பொருந்தி வாழும். மாணி – பிரமசாரி. மார்க்கண்டேய முனிவர். தீவினை நோயவை மெலியும். வீடு மேவுவர். நோய்கட்குக் காரணம் தீவினை. 'நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம். நோய்செய்யார் நோயின்மை வேண்டுபவர்' (குறள்).

Behold! It is Civan, our Lord of Seerkaazhi. In this city very huge and roaring waves rush to the seashore splashing bright pearls in plenty. A good number of philanthropic people do live here. They offer to the poor people plenty of money needed to wipe out their poverty. Our Lord saved the young boy Maarkandeyan from death by kicking to death the brave god of death, Kaalan. Those devotees who are sincere in their devotion to this Lord and worship Him will find their bad karma disappearing, and divine happiness will be ensured to them.

1998. மற்றுமிவ்வுலகத்துளோர்களும்
வானுளோர்களும்வந்துவைகலுங்
கற்றசிந்தையராய்க்கருதுங்கலிக்காழி
நெற்றிமேலமர்கண்ணினானை
நினைந்திருந்திசைபாடுவார்வினை
செற்றமாந்தரெனத்தெளிமின்கள்சிந்தையுளே. 6

மற்றும் இவ் உலகத்துஉளோர்களும்
வான்உளோர்களும் வந்து, வைகலும்,
கற்ற சிந்தையராய்க் கருதும் கலிக் காழி
நெற்றிமேல் அமர் கண்ணினானை
நினைந்து இருந்து இசை பாடுவார், "வினை
செற்ற மாந்தர்" எனத் தெளிமின்கள், சிந்தையுளே!

maRRum iv ulakattu uLOrkaLum vAn2 uLOrkaLum vantu, vaikalum,
kaRRa cintaiyarAyk karutum kalik kAzi,
neRRimEl amar kaNNin2An2ai nin2aintu iruntu icai pATuvAr, "vin2ai
ceRRa mAntar" en2at teLimin2kaL, cintaiyuLE!

பொருள்: இவ்வுலகில் உள்ளோர்களும், வானில் உள்ளோர்களும் நாள்தோறும் வந்து நற்சிந்தை கொண்டு சிவனை வணங்கும் பதியே சீகாழி. நெற்றிக்கண்ணுடைய சிவனை நினைந்து இன்னிசைபாடும் அடியவர்கள் வினைகள் நீங்கப்பெறும். இதனைக் கண்டு தேர்ந்து மனத்தால் கொள்ளுமின்.

குறிப்புரை: கற்ற – சிவபிரான் திருவடியை வழிபடக் கற்றறிந்த. இசைபாடுவாரை வினையைத் தீர்த்தமாந்தர் (ஞானியர்) என்று சிந்தையுள்ளே தெளிந்துகொள்மின்கள்.

Behold! It is Civan, our Lord in Seerkaazhi. Our Lord in this city has a third eye at the center of His forehead. People of this world and the celestials who visit this place are all highly learned about the divine knowledge, particularly the knowledge about worshipping His holy feet. These people come to Seerkaazhi, think about our Lord, and sing His glory in musical notes. Those people destroyed the evil effects of their bad karma. Our people may keep this in their mind.

1999. தானலம்புரைவேதியரொடு
தக்கமாதவர்தாந்தொழப்பயில்
கானலின்விரைசேரவிம்முங்கலிக்காழி
ஊனுளாருயிர்வாழ்க்கையாயுற
வாகிநின்றவொருவனேயென்றன்
றானலங்கொடுப்பாரருள்வேந்தராவாரே. 7

தான் நலம் புரை வேதியரொடு
தக்க மா தவர் தாம் தொழ, பயில்
கானலின் விரை சேர விம்மும் கலிக் காழி,
"ஊனுள் ஆர்உயிர் வாழ்க்கையாய்! உறவு
ஆகி நின்ற ஒருவனே!" என்றுஎன்று
ஆனலம் கொடுப்பார், அருள் வேந்தர் ஆவாரே.

tAn2 nalam purai vEtiyaroTu takka mA tavartAm toza, payil
kAn2alin2 virai cEra vimmum kalik kAzi,
"Un2uL Ar uyir vAzkkaiyAy! uRavu Aki nin2Ra oruvan2E!" en2Ru en2Ru
An2alam koTuppAr, aruL vEntar AvArE.

பொருள்: சோலைகளால் மணம் நிறைந்து விளங்கும் சீகாழித் தலத்தில் கோயில் கொண்டுள்ளவன் சிவபெருமான். அவனை நலமும் பெருமையும் உடைய அந்தணர்களும் மாதவம் உடையவர்களும் நாளும் தொழுது கொண்டிருப்பர். ஊனாகவும் உயிராகவும் எங்கும் நிறைந்த ஈசனை உணர்ந்து அவனைப் பஞ்சகவ்யங்களால் வழிபடுவோர், அருள்வேந்தராய் விளங்குவார்கள்.

குறிப்புரை: தான் தொழ என்று கூட்டித் தானே தொழ என்க. பாட்டின் முதலில் அசையாக்குதல் பொருந்தாது. நலம் – நன்மை. புரை – பெருமை. வேதியர்க்கு அடை. வேதியரோடு மாதவர் – மறையுணர்ந்தவரும் பெருந்தவத்தோரும். விரை – மணம். ஊனுள் – உடம்பினுள். ஆர் – பொருந்திய. ஆருயிர் எனலுமாம். உயிர்வாழ்க்கையாய் – உடம்பில் உயிர்வாழ்வது போல. உயிருள் வாழ்கின்ற பெற்றியாகி. 'இருள் அடராது உள் உயிர்க்கு உயிராய்த் தெளிக்கும் அறிவு திகழ்ந்துள்ளது' (கொடிக்கவி).

ஆன்நலம் – ஆக்கள் (பசுக்கள்) இடத்திலிருந்து பெறும் பால், தயிர், நெய் ஆகிய நலங்களை. கொடு – கொண்டு உய்ப்பார் – அபிடேகம் புரியப் பயன்படுத்தும் அன்பர். அருள் வேந்தர் – ஞானநாயகர்.

Behold! It is Civan, our Lord in Seerkaazhi. Well-learned famous Vedic scholars and the pandits and wisemen of penance - these two groups come to Seerkaazhi, go to the temple, pray and praise His fame. They live in Seerkaazhi with their body and life. They praise Him talking that He is the real relation, the unequal one, the link between life giving soul and this physical body. They give ablutions to our Lord with the fine holy things obtained from the cow with all sincerity. Our Lord is pleased to hear words of love from those servitors. He, therefore, graces them and gives them all benefits in their life. All those will become really the stalwarts of gracefulness.

2000. மைத்தவண்டெழுசோலையாலைகள்
சாலிசேர்வயலாரவைகலுங்
கத்துவார்கடல்சென்றுலவுங்கலிக்காழி
அத்தனேயரனேயரக்கனை
யன்றடர்த்துகந்தாயுனகழல்
பத்தராய்ப்பரவும்பயனீங்குநல்காயே. 8

மைத்த வண்டு எழு சோலை ஆலைகள்,
சாலி சேர் வயல், ஆர, வைகலும்
கத்து வார்கடல் சென்று உலவும் கலிக் காழி
அத்தனே! அரனே! அரக்கனை
அன்று அடர்த்து உகந்தாய்! உன கழல்
பத்தராய்ப் பரவும் பயன் ஈங்கு நல்காயே!

maitta vaNTu ezu cOlai AlaikaL, cAli cEr vayal, Ara, vaikalum
kattu vArkaTal cen2Ru ulavum kalik kAzi
attan2E! aran2E! arakkan2ai an2Ru aTarttu ukantAy! un2a kazal!
pattarAyp paravum payan2 Igku nalkAyE!

பொருள்: சீகாழிப்பதியில் வண்டுகளின் ஒலி சோலைகளிலும் கரும்பாலைகளிலும் நெல்வயல்களிலும் நிறைந்திருக்கும். அதற்கு ஈடாக கடல் ஒலியும் முழங்கும். அங்கு பக்தர்கள், அத்தனே! அரனே! அரக்கனாகிய இராவணனை அடர்த்தவனே! என்றெல்லாம் கூறி சிவனடியினை வணங்குவர். இறைவனே! உமது திருவடிகளை வணங்கும் நிலையை எனக்கும் இப்பிறவியில் அருள்வீராக.

குறிப்புரை: மைத்த – கருமையுடைய. ஆலைகள் – கரும்பாலைகள் கரும்புகளுமாம். சாலி – நெல். ஆர – நிறைய. வைகலும் – நாள்தோறும். கத்து – ஒலிக்கின்ற. அரக்கன் – இராவணன். அடர்த்து – நெருக்கி. உன – உன்னுடைய. கழல்பரவும் பயன் – பத்தராய்ப் பரவும் பயன். ஈங்கு – இம்மையிலேயே. நல்காய் – அருள்வாய்.

Behold! It is Civan, our Lord in Seerkaazhi. He is manifest in Seerkaazhi. In this holy city very dense groves which are very dark exist in large numbers. Here black coloured beetles always hum and fly for honey. The sugarcane crushers make noise with their machine. Here paddy fields abound in rich paddy. The sea waves with roaring sound are heard always. The sacred devotees and the scholars praise our Lord daily with devotion and declare "Oh! Our Lord Chief Hara! You afflicted first the king of Sri Lanka - Raavanan - and later graced him with all boons. We, the servitors with sincere devotion pray and extol Your fame. Kindly shower divine grace on us in this life itself".

2001. பருமராமொடுதெங்குபைங்கத
லிப்பருங்கனியுண்ணமந்திகள்
கருவராலுகளும்வயல்சூழ்கலிக்காழித்
திருவின்நாயகனாயமாலொடு
செய்யமாமலர்ச்செல்வனாகிய
இருவர்காண்பரியனெனஏத்துதலின்பமே. 9

பரு மராமொடு, தெங்கு, - பைங்கதலிப்
பருங்கனி உண்ண, மந்திகள்-
கருவரால் உகளும் வயல், சூழ் கலிக் காழி,
"திருவின் நாயகன் ஆய மாலொடு
செய்யமாமலர்ச் செல்வன் ஆகிய
இருவர் காண்பு அரியான்" என ஏத்துதல் இன்பமே.

paru marAmoTu, tegku,--paigkatalip parugkan2i uNNa, mantikaL--
karuvarAl ukaLum vayal, cUz kalik kAzi,
"tiruvin2 nAyakan2 Aya mAloTu ceyya mA malarc celvan2 Akiya
iruvar kANpu ariyAn2" en2a Ettutal in2pamE.

பொருள்: சீகாழிப்பதியில் பருத்த பெரிய மரங்களும், உயர்ந்த தென்னைகளும், வாழைமரங்களும் நிறைந்து விளங்கும். அங்கு, குரங்குகள் மரங்களில் வீற்றிருந்து கனிகளை உண்ணும். வயல்வெளிகளில் விரால் மீன்கள் நிறைந்து விளங்கும். அங்கு கோயில்

கொண்டுள்ள சிவனை அடியவர்கள், 'திருமகளின் நாயகனான திருமாலாலும் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனாலும் அடிமுடி தேடி அறிய முடியாதவனே' என்று கூறி வழிபடுவர். இன்புறுவர்.

குறிப்புரை: பரு – பருத்த. மராம் – வெண்கடம்பு. கதலி – வாழை. திரு – இலக்குமி. ஆய – ஆகிய. செய்ய மாமலர்ச் செல்வன் – செந்தாமரையில் வீற்றிருக்கும் மறையவன் (பிரமன்). காண்பு அரியான் – காண்பதற்கு அருமையுடையவன்.

Behold! It is Civan, our Lord in Seerkaazhi. This holy city is surrounded by groves of bulky, seed, producing Kadappa tree. Coconut groves also are alongside of the groves yielding very big coconut fruits. Rich gardens also exist. Here the monkeys enter these gardens and eat all the bulky ripe fruits. In the rich paddy fields the black fish - Varaal - Ophicephalus striatus, jump and play in the water filled fields. In such an attractive city our Lord is manifest. Thirumaal the junior god and husband of goddess Lakshmi and Brahma who is seated in red lotus flower - both could not comprehend our Lord. Those devotees who praise our Lord by chanting the famous exhibit of our Lord to these two gods will get all happiness in their life.

2002. பிண்டமுண்டுழல்வார்களும்பிரி
யாதுவண்துகிலாடைபோர்த்தவர்
கண்டுசேரகிலாரழகார்கலிக்காழித்
தொண்டைவாயுமையோடுகூடிய
வேடனேசுடலைப்பொடியணி
அண்டவாணனென்பார்க்கடையாஅல்லல்தானே. 10

பிண்டம் உண்டு உழல்வார்களும், பிரியாது
வண் துகில் ஆடை போர்த்தவர்,
கண்டு சேரகிலார்; அழகுஆர் கலிக் காழி,
"தொண்டைவாய் உமையோடு கூடிய
வேடனே! சுடலைப் பொடி அணி
அண்டவாணன்!" என்பார்க்கு அடையா, அல்லல் தானே.

piNTam uNTu uzalvArkaLum, piriyAtu vaN tukil ATai pOrttavar,
kaNTu cErakilAr; azaku Ar kalik kAzi,
"toNTaivAy umaiyOTum kUTiya vETan2E cuTalaip poTi aNi
aNTavANan2!" en2pArkku aTaiyA, allal tAn2E.

பொருள்: அழகுமிக்க சீகாழிப்பதியில் சிவன் உமையாருடன் கூடிக் கோயில் கொண்டுள்ளான். அவனை, பிண்ட உணவை உண்டு வாழும் சமணர்களும், நீண்ட துவராடை அணிந்த சாக்கியர்களும் கண்டு வணங்கார். ஆனால் அடியவர்கள், 'உமையுடன் கூடியவனே, சுடலைப்பொடி பூசியவனே, அண்டவாணனே' என்றெல்லாம் போற்றிப் பரவுவர். அத்தகைய அடியவர்களை அல்லல் சேராதாம் என்க.

குறிப்புரை: பிண்டம் – சோற்றுத்திரளை. (நின்றுண்போர்) 'நின்று கவளம்பல கொள்கையரொடு மெய்யிலிடு போர்வை யவரும்' (தி.3 ப.69 பா.10). சேரகிலார் – சேரும் அறிவாற்றல் இல்லாதவர். தொண்டை – கோவை (ப்பழம்போற் சிவந்த). வேடன் – வேடுவனான சிவபிரான். அண்டவாணன் – அண்டங்களில் வாழ்பவன். (வாழ்நன் – வாணன்) 'மன்றவாணன்' 'அம்பலவாணன்'. அல்லல்தான் அடையா என்க.

Behold! It is Civan, our Lord of Seerkaazhi. In this holy city, the Jains who eat food from their hands and the bald headed Buddhists possess no good karma in their life. You devotees do not approach them who belong to other religions. The servitors pray our Lord of Kaazhi saying "Oh! You the hunter! You manifest Yourself in the temple along with our goddess with coral like red mouth; You are the Lord of the celestials; You have smeared Your body with the holy ashes; You are manifested in the entire cosmos" and worship the holy feet of our Lord. These devotees will have no suffering at all in their life.

2003. பெயரெனும்மிவைபன்னிரன்டினும்
உண்டெனப்பெயர்பெற்றவூர்திகழ்
கயலுலாம்வயல்சூழ்ந்தழகார்கலிக்காழி
நயனடன்கழலேத்திவாழ்த்திய
ஞானசம்பந்தன்செந்தமிழுரை
உயருமாமொழிவாருலகத்துயர்ந்தாரே. 11

பெயர் எனும்(ம்) இவை பன்னிரன்டினும்
உண்டு எனப் பெயர் பெற்ற ஊர், திகழ்
கயல் உலாம் வயல் சூழ்ந்து அழகு ஆர் கலிக் காழி,
நயன் நடன் கழல் ஏத்தி வாழ்த்திய
ஞானசம்பந்தன் செந்தமிழ்உரை
உயருமா மொழிவார் உலகத்து உயர்ந்தாரே.

peyar en2um(m) ivai pan2n2iraNTin2um uNTu en2ap peyar peRRa Ur, tikaz
kayal ulAm vayal cUzntu azaku Ar kalik kAzi,
nayan2 naTan2 kazal Etti vAzttiya njAn2acampantan2 centamiz urai
uyarumA mozivAr ulakattu uyarntArE.

பொருள்: பன்னீரண்டு பெயர்களைப் பெற்ற ஊரே சீகாழிப்பதி. கயல்கள் நிறைந்த வயல்களால் சூழப்பெற்ற அழகிய பதியே சீகாழி. அங்கு கோயில் கொண்டுள்ள நடனம் புரியும் சிவபெருமானைப் புகழ்ந்து ஞானசம்பந்தப் பெருமான் பத்துப்பாடல்களை அருளிச் செய்துள்ளார். அச்செந்தமிழ்ப் பாடல்களை உணர்ந்து பாடவல்லவர்கள், உயர்ந்த பெருமக்களாகத் திகழ்வார்கள் என்க.

குறிப்புரை: பன்னிருபெயர்களையுடைய (சீகாழிச்) சிறப்புணர்த்திற்று. பெயர் – புகழ். நயன் – நீதி சொரூபன். நயன் – அருள் (கலி. 8). நடன் – கூத்தன், அருட்கூத்தன். 'ஞானக்கூத்தன்' (சிவப். பொது 37) 'நம்பனே நடனே' (ப. 188 பா. 4). உயருமா – உயர்ந்து அடையும் முறைமையில்.

These pure Tamil verses of our saint Thiru-gnana-Sambandar were written for hailing the golden feet of our Lord of Seerkaazhi. This city of Seerkaazhi is a very attractive and sacred city with twelve holy names. This is surrounded by paddy fields with leaping black fish. The devotees who recite these songs with a view to raise themselves above will soar to a great status on the earth.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

49ஆம் பதிகம் முற்றிற்று
End of 49th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 186 **பதிக எண்: 50**

50. திருஆமாத்தூர் 50. THIRU-AAMAATH-THOOR

பண் : சீகாமரம் ***Pann: Seekamaram***

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் 180ஐப் பார்க்க.

பதிக வரலாறு

திருமறைச் சிறுவர், பாம்பும் நீரும் பொற்கொன்றையும் வன்னியும் புனைந்த அங்கணரைப் போற்றிக் குலவிய இசையொடு பேரின்புறப் பாடியது இது.

திருச்சிற்றம்பலம்

2004. குன்றவார்சிலைநாணராவரி
வாளிகூரெரிகாற்றின்மும்மதில்
வென்றவாறெங்கனேவிடையேறும்வேதியனே
தென்றலார்மணிமாடமாளிகை
சூளிகைக்கெதிர்நீண்டபெண்ணைமேல்
அன்றில்வந்தணையுமாமாத்தூரம்மானே. 1

குன்ற வார்சிலை, நாண் அரா, அரி
வாளி, கூர் எரி, காற்றின், மும்மதில்
வென்றஆறு எங்கனே? - விடை ஏறும் வேதியனே!
தென்றல் ஆர் மணி மாட மாளிகை
சூளிகைக்கு எதிர் நீண்ட பெண்ணைமேல்
அன்றில் வந்து அணையும் ஆமாத்தூர் அம்மானே!

kun2Ra vArcilai, nAN arA, ari vALi, kUr eri, kARRin2, mummatil
ven2Ra ARu eggan2E?--viTai ERum vEtiyan2E!
ten2Ral Ar maNi mATa mALikai cULikaikku etir nINTa peNNaimEl
an2Ril vantu aNaiyum AmAttUr ammAn2E!

பொருள்: விடைஏறும் வேதியனாகிய சிவனே! தென்றல் காற்று மாடமாளிகைமீது வீச, அதன் எதிரே உள்ள பனைமரத்தில் வீற்றிருந்து அன்றில் பறவைகள் மகிழும் திருஆமாத்தூரில் கோயில் கொண்டவனே! மேருமலையே வில்; பாம்பே நாண்; நெருப்பும் காற்றும் அம்புகள் என்று கொண்டு முப்புரங்களை நீவீர் அழித்தது எவ்வாறு? வியப்பாக உள்ளதே!

குறிப்புரை: குன்றம் – மேருமலை. சிலை – வில். அரா – பாம்பு. அரி – திருமால். வாளி – அம்பு. கூர் – நுனி. எரி – அக்கினிதேவன். காற்று – ஈர்க்காகிய வாயுதேவன். காற்று ஈர்க்கு (தி. 1 ப. 11 பா 6). இவற்றின் உதவியால் மும்மதிலை வென்றவாறு எவ்வாறு? தென்றல் ஆர்கின்ற மாடம் என்க. குளிகை – வீட்டினுச்சி. பெண்ணை – பனை. அன்றில் – ஒரு பறவை. அம்மான் – அருமகன்.

Oh Civa! You are the Lord of Thiru-aamaath-thoor. You ride on Your bull; You are the creator of the Vedas; You used the Meru mountain as Your long bow; used the lined snake as Your bow-string; the most severely burning fire You used as the arrow; the speedy wind You used as the feather of the arrow. By using all these things how did You destroy the three flying forts of the asuras? Oh Lord! You are manifest in the city of Thiru-aamaath-thoor. In this city very ornamental palaces of great heights exist in large numbers. Here the south wind blows always. Behind the top most portion of these palaces palmyrah trees are seen, taller than these palaces, in large numbers. Here the nightingales come and rest in the trees very comfortable and enjoy the good south wind blowing over the trees. In such an attractive city our Lord manifests Himself.

2005. பரவிவானவர்தானவர்பல
ருங்கலங்கிடவந்தகார்விடம்
வெருவவுண்டுகந்தஅருளென்கொல்விண்ணவனே
கரவின்மாமணிபொன்கொழித்திழி
சந்துகாரகில்தந்துபம்பைநீர்
அருவிவந்தலைக்குமாமாத்தூரம்மானே. 2

பரவி வானவர் தானவர் பலரும்
கலங்கிட வந்த கார்விடம்,
வெருவ, உண்டு உகந்த அருள் என்கொல்? - விண்ணவனே!
கரவு இல் மா மணி பொன் கொழித்து, இழி
சந்து கார் அகில் தந்து, பம்பை நீர்
அருவி வந்து அலைக்கும் ஆமாத்தூர் அம்மானே!

paravi vAn2avar tAn2avar palarum kalagkiTa vanta kArviTam,
veruva, uNTu ukanta aruL en2kol?--viNNavan2E!
karavu il mA maNi pon2 kozittu, izi cantu kAr akil tantu, pampai nIr
aruvi vantu alaikkum AmAttUr ammAn2E!

பொருள்: சிறந்த மணிகளையும், தங்கத்தையும், சந்தனம் அகில் போன்ற மரங்களையும் கொண்டு வரும் பம்பை நதிக்கரையில் திருஆமாத்தூரில் கோயில் கொண்டுள்ள சிவனே! வானவர்களும் தானவர்களும் அஞ்சி நடுங்கிட எழுந்த நஞ்சினை நீவீர் அமுதாக உண்டு அருளியது எவ்வாறு? வியப்பாக உள்ளதே!

குறிப்புரை: தானவர் – அசுரர். வெருவ – (அஞ்சி) அலறிப்பிதற்ற. விடம் உண்டு உகந்த அருள் என்? கரவு இல் – மறைவில்லா. சந்து – சந்தன மரம். கார் அகில் – கரிய அகில் மரம். தந்து – அடித்து வந்து. பம்பை. திருக்கோவலூரின் கிழக்கில், அண்மையில், பெண்ணையாற்றினின்றும் பிரியும் ஆறு.

Oh Civa! You are Lord of Thiru-aamaath-thoor. In this holy city the river Pambai flows along the temple. The river water in the stream brings a number of multicoloured gems without hiding their natural colour. Along with these gems, the stream water also brings sandal wood logs and the black fragrant eaglewood (the smoke of this wood is used for perfuming ladies' hair). In such an attractive city, oh Lord! You are manifest where the Pambai water flows near the city of Thiru-aamaath-thoor. You are the sole celestial Supreme Being! You are the Lord of the celestials. The devas and asuras trembled on seeing the black poison that came out of the sea and rushed towards You. At that moment You consumed the poison and felt happy. What is the reason for such a grace of Yours?

2006. நீண்டவார்சடைதாழநேரிழை
பாடநீறுமெய்பூசிமாலயன்
மாண்டவார்சுடலைநடமாடுமாண்பதுஎன்
பூண்டகேழல்மருப்பராவிரி
கொன்றைவாள்வரியாமைபூணென
ஆண்டநாயகனேயாமாத்தூரம்மானே. 3

நீண்ட வார்சடை தாழ, நேரிழை
பாட, நீறு மெய் பூசி மால் அயன்
மாண்ட வார் சுடலை நடம் ஆடும் மாண்புஅது என்? -
பூண்ட கேழல் மருப்பு, அரா, விரி-
கொன்றை, வாள் வரிஆமை, பூண் என
ஆண்ட நாயகனே! ஆமாத்தூர் அம்மானே!

nINTa vArcaTai tAza, nErizai pATa, nIRu mey pUci, mAl ayan2
mANTa vAr cuTalai naTam ATum mANpu atu en2?--
pUNTa kEzal maruppu, arA, virikon2Rai, vAL ari Amai, pUN en2a
ANTA nAyakan2E! AmAttUr ammAn2E!

பொருள்: பன்றியின் கொம்பு, பாம்பு, விரிந்த கொன்றைமலர், ஆமையின் ஓடு இவற்றை ஆபரணமாகக் கொண்ட சிவனே! நீவீர், சடாமுடி தாழவும், உமாதேவி பாடவும், நீறு பூசிய மேனியுடன் மாலும் அயனும் மாண்ட மயானத்தில் ஆடும் திறம்தான் என்னே! என்னே!

குறிப்புரை: நேரிழை – உமாதேவியார். 'தளரிளவளரெனவுமை பாடத்தாளமிட' (பதி. 247) மால் அயன்மாண்டவார் சுடலை – ஆறுகோடி நாராயணரும் நூறுகோடி பிரமர்களும் இறந்த நீண்ட சுடுகாட்டில். மாண்பு – மாட்சி. என்? கேழல் மருப்பு – பன்றிக்கொம்பு. அரா – பாம்பு. 'முற்றலாமை இளநாகமொடு ஏனமுளைக் கொம்பவை பூண்டு' (தி. 1 ப. 1 பா. 2).

Oh our Lord Civan at Thiru-aamaath-thoor! Our Lord has adorned His body with the horn of the pig, the snake, the shell of bright and lined turtles, fully blossomed cassia flowers and many other things. You are our Chief Supreme Being; You are manifest in the temple in Thiru-aamaath-thoor. Your long matted hair descends further. Your consort Uma Devi sings melodious songs and You listen to the music; You have beautified Your body smearing holy ashes. In this attire You perform Your cosmic dance on the cremation ground of Thirumaal, Brahma and many others. What is the reason behind this attitude?

2007. சேலின்நேரனகண்ணிவெண்ணகை
மான்விழித்திருமாதைப்பாகம்வைத்
தேலமாதவநீமுயல்கின்றவேடமிதென்
பாலின்நேர்மொழிமங்கைமார்நட
மாடியின்னிசைபாடநீள்பதி
ஆலைசூழ்கழனியாமாத்தூரம்மானே. 4

சேலின் நேரன கண்ணி வெண்நகை
மான்விழித் திருமாதைப் பாகம் வைத்து,
ஏல மா தவம் நீ முயல்கின்ற வேடம்இது என்? -
பாலின் நேர் மொழி மங்கைமார் நடம்
ஆடி, இன்இசை பாட, நீள் பதி
ஆலை சூழ் கழனி ஆமாத்தூர் அம்மானே!

cElin2 nEran2a kaNNi veN nakai mAn2vizit tirumAtaip pAkam vaittu,
Ela mA tavam nI muyalkin2Ra vETam itu en2?--
pAlin2 nEr mozi magkaimAr naTam ATi, in2 icai pATa, nIL pati
Alai cUz kazan2i AmAttUr ammAn2E!

பொருள்: பால் போன்ற இனிய மொழி பேசும் பெண்கள் ஆடிப்பாடி மகிழும் ஆமாத்தூரில் கோயில் கொண்ட சிவனே! சேல்விழி, வெண்ணிற பற்கள், மானின் பார்வை கொண்ட உமையவளுடன் கூடிய நீவீர், தவக்கோலம் கொண்டு விளங்குவது எவ்வாறு? வியப்பாக உள்ளதே!

குறிப்புரை: நேர்அன – நேரொத்த. கண்ணி – கண்ணையுடையவள். வெள்நகை – வெண்மையுடையவாகிய பற்களையும். மான் விழி – மான்களைப்போல மருண்ட கண்களையும் உடைய. திருமாதை – அழகிய உமாதேவியாரை. ஏல – பொருந்த. தவம் புரிவார்க்கு, மங்கை பங்குடைமை முரண்பட்ட செயல் என்றவாறு. 'பால்இன்நேர்மொழி' – பால்போலும் இன்சொல்லையுடைய. ஆலை – கரும்பாலை. கரும்புமாம்.

Oh! Our Lord Civa is at Thiru-aamaath-thoor. In this holy city, young lovely damsels speak very pleasing words like milk. They sing harmoniously in chaste musical tone and dance. In the far off places the crusher in the sugarcane fields creates noise. Around the city paddy fields are many with good yield. Oh God! You are manifest in this big and long city of Thiru-aamaath-thoor. You have embedded Your consort Uma on the left half of Your body. Her eyes look like carp fish; Her teeth are bright white; She has fluttering eyes like the eyes of a deer. With goddess Umaa on Your body You have accomplished very great penance. Is this appearance the right posture for penance?

2008. தொண்டர்வந்துவணங்கிமாமலர்
தூவிநின்கழலேத்துவாரவர்
உண்டியால்வருந்தஇரங்காததென்னைகொலாம்
வண்டலார்கழனிக்கலந்தும
லர்ந்ததாமரைமாதர்வாண்முகம்
அண்டவாணர்தொழுமாமாத்தூரம்மானே. 5

தொண்டர் வந்து வணங்கி, மா மலர்
தூவி, நின் கழல் ஏத்துவார் அவர்
உண்டியால், வருந்த, இரங்காதது என்னைகொல்ஆம்? -
வண்டல் ஆர் கழனிக் கலந்து
மலர்ந்த தாமரை மாதர் வாள்முகம்
அண்டவாணர் தொழும் ஆமாத்தூர் அம்மானே!

toNTar vantu vaNagki, mA malar tUvi. nin2 kazal EttuvAr avar
uNTiyAl varunta, iragkAtatu en2n2ai kol Am?--
vaNTal Ar kazan2ik kalantu malarnta tAmarai mAtar vALmukam
aNTavANar tozum AmAttUr ammAn2E!

பொருள்: வண்டல் மண் நிறைந்த வயல்களில் தாமரை மலர்கள் நிறைந்திருக்கும் பதியே திரு ஆமாத்தூர் ஆகும். அங்கு தாமரை மலர் போன்ற முகமுடைய மகளிர் சிவனை வணங்கி மகிழ்வர். தொண்டர்களும் மாமலர் தூவி திருவடிகளை வணங்கி நிற்பர். அவர்கள் பசியுற்று வருந்திய நிலையிலும் நீவீர் அருளாது இருப்பது வியப்பாக உள்ளதே!

குறிப்புரை: தொண்டர் பூசித்தும் உணவின்றி வருந்துகின்றனர். அது கண்டு இரங்காதது ஏன்? ஆமாத்தூரில் அன்றிருந்த இந்நிலைமையை ஆசிரியர் அறிந்து பாடியருளினார். வண்டல் – நீர் ஒதுக்கிவிட்டமண். ஆர் – நிறைந்த. கழனி – கழனியில் கலந்து மலர்ந்த தாமரைப் பூக்கள் ஆமாத்தூரில் உள்ள மாதர்களுடைய ஒளி பொருந்திய முகம்போல இருக்கின்றன. தாமரைகள் முகம்போலப் பூக்கும் ஆமாத்தூர் என்று பொருத்திக் கொள்க. அண்டவாணர் – அண்டங்களில் வாழும் தேவர்கள் முதலியோர். (பதி. 185 பா. 10 இல் உள்ள 'அண்டவாணன்' என்பதன் பொருள் வேறு).

Oh! It is Civa, our Lord at Thiru-aamaath-thoor. In this holy city paddy fields are many. Here sediments are found at the bottom of the fields. Because of sediments, along with paddy a good number of lotus flowers also grows appearing like damsels who have bright attractive faces. The devas and other celestials come down to this city and worship Your holy feet. The true devotees strew flowers at Your holy feet, and worship You, but they suffer for want of food. Oh God! Why don't You have compassion for these hungry people?

2009. ஓதியாரணமாயநுண்பொருள்
அன்றுநால்வர்முன்கேட்கநன்னெறி
நீதியாலநீழலுரைக்கின்றநீர்மையதென்
சோதியேசுடரேசுரும்பமர்
கொன்றையாய்திருநின்றியூருறை
ஆதியேஅரனேயாமாத்தூரம்மானே. 6

ஓதி, ஆரணம்ஆய நுண்பொருள்,
அன்று நால்வர் முன்கேட்க நன்னெறி-
நீதி ஆலநீழல் உரைக்கின்ற நீர்மையது என்? -
சோதியே! சுடரே! சுரும்பு அமர்
கொன்றையாய்! திருநின்றியூர் உறை
ஆதியே! அரனே! ஆமாத்தூர் அம்மானே!

Oti, AraNam Aya nuNporuL, an2Ru nAlvar mun2 kETka nan2neRi-
nIti AlanIzal uraikkin2Ra nIrmaiyatu en2?--
cOtiyE! cuTarE! curumpu amar kon2RaiyAy! tiru nin2RiyUr uRai
AtiyE! aran2E! AmAttUr ammAn2E!

பொருள்: சோதியே! சுடரே! வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலர் மாலையாய்த் திருநின்றி ஊரில் உறைபவனே! அரனே! திருஆமாத்தூர் அம்மானே! வேதத்தின் நுண்பொருளை அன்று முனிவர் நால்வருக்கும் கல்லால மரத்தடியில் இருந்து உபதேசித்த உமது திறம் தான் என்னே!

குறிப்புரை: ஆரணம் – வேதம். நால்வர் – சநகாதி முனிவர். நன்னெறி – ஞானமார்க்கம். ஆலநிழல் – கல்லால் நிழல். கரும்பு – வண்டு. ஆதி – முதல்வன். அரன் – பிறப்பிறப்பை அழிப்பவன்.

Oh Lord Civa! You are the light! You are the flame. You wear garlands made of cassia flowers swarmed by bees. You are manifest in Thiru-nindra-oor as the chief of the place. Oh Supreme God! Oh the Supreme Being of Thiru-aamaath-thoor. Once upon a time the four saints reciting the Vedas were unable to understand the inner meanings. They came to our Lord and requested Him to explain. Our Lord revealed the divine meanings in the Vedas to them. You were seated under the stone banyan tree to impart wisdom to those saints. What is the reason behind such propriety?

2010. மங்கைவாணுதன்மான்மனத்திடை
வாடியூடமணங்கமழ்சடைக்
கங்கையாளிருந்தகருத்தாவதென்னைகொலாம்
பங்கயமதுவுண்டுவண்டிசை
பாடமாமயிலாடவிண்முழ
வங்கையாலதிர்க்குமாமாத்தூரம்மானே. 7

மங்கை வாள் நுதல் மான் மனத்து இடை
வாடி ஊட, மணம் கமழ் சடைக்
கங்கையாள் இருந்த கருத்துஆவது என்னைகொல்ஆம்?
பங்கயமது உண்டு வண்டு இசை
பாட, மா மயில் ஆட, விண் முழவு
அம் கையால் அதிர்க்கும் ஆமாத்தூர் அம்மானே!

magkai vAL nutal mAn2 man2attu iTai vATi UTa, maNam kamaz caTaik
kagkaiyAL irunta karuttu Avatu en2n2ai kol Am?
pagkayamatu uNTu vaNTu icai pATa, mA mayil ATa, viN muzavu
am kaiyAl atirkkum AmAttUr ammAn2E!

பொருள்: தாமரை மலர்த்தேனை வண்டுகள் அருந்தி இசைபாடும்; மயில்கள் ஆடும்; மேகங்கள் முழவுபோல் முழங்கும். இத்தகைய அழகு நிறை ஆமாத்தூரில் கோயில் கொண்ட சிவனே! அழகிய நெற்றியினைக் கொண்ட உமையவள் ஊடல் கொள்ள, உமது நீண்ட சடையில் கங்கை நல்லாளை மறைத்திருந்த திறம்தான் என்னே! என்னே!

குறிப்புரை: வாள் – ஒளி. நுதல் – நெற்றி. மங்கையாகிய வாணுதன் மான் என்பது உமாதேவியாரைக் குறித்தது. வாடி ஊடுதற்கு ஏது. சடைமேல் கங்கையாள் இருப்பது. பங்கயம் – தாமரை. மது – தேன். விண் முழவு – விண்ணிலுள்ள மேகமாகிய மத்தளத்தை. அம் – அழகிய. அதிர்க்கும் – ஒலிக்கும். கையால் அதிர்க்கும் என்றது பொருந்துமாறு புலப்பட்டிலது.

Oh! It is Civan, our Lord at Thiru-aamaath-thoor. In the holy city of Thiru-aamaath-thoor the beetles hum musical notes, sucking honey from lotus flowers. The big peacocks dance in the parks. The dark clouds dash one against the other making a very big noise as though they are beautiful hands of the winds. Oh! Father at Thiru-aamaath-thoor, You are manifest in the temple of this sacred city with natural beauty. Our goddess Parvathi Devi with bright forehead and attractive looks of a deer feels depressed due to the presence of the lady of Ganges river on Your sweet fragrant matted hair. What is the reason for You to keep her in Your matted hair?

2011. நின்றடர்த்திடுமைம்புலன்நிலை
யாதவண்ணம்நினைந்துளத்திடை
வென்றடர்த்தொருபால்மடமாதைவிரும்புதலென்
குன்றெடுத்தநிசாசரன்திரள்
தோளிருபதுதான்நெரிதர
அன்றடர்த்துகந்தாயாமாத்தூரம்மானே. 8

நின்று அடர்த்திடும் ஐம்புலன் நிலையாத
வண்ணம் நினைந்து உளத்துஇடை
வென்று அடர்த்து, ஒருபால் மடமாதை விரும்புதல் என்? -
குன்று எடுத்த நிசாசரன் திரள்
தோள் இருபதுதான் நெரிதர
அன்று அடர்த்து உகந்தாய்! ஆமாத்தூர் அம்மானே!

nin2Ru aTarttiTum aimpulan2 nilaiyAta vaNNam nin2aintu uLattu iTai
ven2Ru aTarttu, orupAl maTamAtai virumputal en?--
kun2Ru eTutta nicAcaran2 tiraL tOL irupatu tAn2 neritara
an2Ru aTarttu ukantAy! AmAttUr ammAn2E!

பொருள்: ஆமாத்தூர் அம்மானே! அன்று கயிலாய மலையைத் தூக்க முயன்ற அரக்கனின் இருபது தோள்களின் வலிமையைக் குறைத்தவனே! ஐம்புலன்களையும் வென்று அடக்கிய நீவீர் உம்முடைய ஒரு பாகத்தில் மாதினை விரும்பி வைத்தல் என்சொல். வியப்பாக உள்ளது.

குறிப்புரை: அடர்த்திடும் – வருத்திடும். நின்று . . . . அடர்ந்து என்ற பகுதி. சிவபிரானது யோக நிலையைக் குறிப்பது. அதற்கு ஒவ்வாதபடி இடப்பாடல் அம்பிகையை விரும்பிக் கொண்டது ஏன் என்று வினவினார். நிசாசரன் – இரவில் சஞ்சரிப்பவன், இராவணன்.

Oh our Lord at Thiru-aamaath-thoor! Once Raavanan tried to lift mount Kailash and to keep it aside. Then Lord, You crushed Raavanan's twenty strong shoulders. However, You later forgave him and bestowed grace on him. Oh! God of Thiru-aamaath-thoor. With Your supreme controlling energy You brought under Your mind's control the eluding five senses to become inactive. However You have embedded Your young consort and have kept her willingly on the left half of Your body. What is the reason for this activity of Yours?

2012. செய்யதாமரைமேலிருந்தவ
னோடுமாலடிதேடநீள்முடி
வெய்யவாரழலாய்நிமிர்கின்றவெற்றிமையென்
தையலாளொடுபிச்சைக்கிச்சை
தயங்குதோலரையார்த்தவேடங்கொண்
டையமேற்றுகந்தாயாமாத்தூரம்மானே. 9

செய்யதாமரைமேல் இருந்தவனோடு
மால் அடி, - தேட, - நீள் முடி;
வெய்ய ஆர் அழல்ஆய் நிமிர்கின்ற வெற்றிமை என்? -
தையலாளொடு பிச்சைக்கு இச்சை,
தயங்கு தோல் அரை ஆர்த்த வேடம் கொண்டு,
ஐயம் ஏற்று உகந்தாய்! ஆமாத்தூர் அம்மானே!

ceyyA tAmarai mEl iruntavan2OTu mAl aTi,--tETa,--nIL muTi;
veyya Ar azal Ay nimirkin2Ra veRRimai en2?--
taiyalALoTu piccaikku iccai, tayagku tOl arai Artta vETam koNTu,
aiyam ETTu ukantAy! AmAttUr ammAn2E!

பொருள்: உமாதேவியுடன், தோலை ஆடையாக உடுத்திக்கொண்டு பலிதேர்வதற்காக ஆமாத்தூரில் கோயில் கொண்டுள்ள சிவனே! தாமரை மலரில் உறையும் பிரமனும், திருமாலும் அடிமுடி தேடியும் காண முடியாதபடி பேரழலாய் ஓங்கிய வெற்றித் தன்மைதான் என்னே! என்னே!

குறிப்புரை: வெற்றிமை – வென்ற தன்மை. (பதி. 188 பா. 8). (ஐயம்) தையலாள் – உமாதேவியார். இச்சை தயங்கு – விருப்பம் விளங்குகின்ற. தயங்குதோல் – அசைகின்ற தோலுமாம். அரை – திருவரையில். ஆர்த்த – கட்டிய. ஐயம் – பிச்சையுண்டி.

Oh! Our Lord in Thiru-aamaath-thoor. You wear on Your waist the animal skin and get charmed to move about in the cosmos along with Your consort Uma Devi. In this disguise You reach the residences of ladies and accept with pleasure the alms given by them. You are the God Supreme, manifest in Thiru-aamaath-thoor. The four-faced Brahma who rests in the red lotus flower along with Thirumaal went out in search of our Lord's head and feet in vain. Concealng Yourself from their sight, You took the great form of supernal effulgence. They both got frightened and later worshipped our Lord. For the victorious disguise of Youself, what is the reason?

2013. புத்தர்புன்சமணாதர்பொய்ம்மொழி
நூல்பிடித்தலர்தூற்றநின்னடி
பத்தர்பேணநின்றபரமாயபான்மையதென்
முத்தைவென்றமுறுவலாளுமை
பங்கனென்றிமையோர்பரவிடும்
அத்தனேயரியாயாமாத்தூரம்மானே. 10

புத்தர் புன் சமண்ஆதர் பொய்ம்மொழி
நூல் பிடித்து அலர் தூற்ற, நின் அடி
பத்தர் பேண நின்ற பரம்ஆய பான்மைஅது என்? -
"முத்தை வென்ற முறுவலாள் உமை
பங்கன்!" என்று இமையோர் பரவிடும்
அத்தனே! அரியாய்! ஆமாத்தூர் அம்மானே!

puttar pun2 camaN Atar poymmozi nUl piTittu alar tURRa, nin2 aTi
pattar pENa, nin2Ra param Aya pAn2mai atu en2?--
"muttai ven2Ra muRuvalAL umai pagkan2!" en2Ru imaiyOr paraviTum
attan2E! ariyAy! AmAttUr ammAn2E!

பொருள்: முத்தினும் சிறந்த பற்களைக் கொண்ட உமாதேவியை உடம்பின் பாகமாகக் கொண்ட சிவனே! இமையோர் பரவும் அத்தனே! அரியே! ஆமாத்தூரில் உறைபவனே! புத்தர், சமணர் போன்ற பொய் நூலறிந்தவர் உம்மைத் தூற்றவும், பக்தர்கள் உன்னடியைப் போற்றவும் வேண்டுதல் வேண்டாமை அற்று நீ விளங்கும் திறம்தான் என்னே! என்னே!

குறிப்புரை: நூல் – பிடகம் முதலியன. அலர் – பழி. பத்தர் – அன்பர். பேண – விரும்ப. பரம் ஆய பான்மையது – மேலவர்க்கும் மேலாந் தன்மையுடையது. (முழு முதன்மை). முறுவல் – பல். அரியாய் – அரியவனே (எளியானல்லன் அன்பர் அல்லார்க்கு). அரியதில் அரிய அரியோன் (திருவாசகம் 3–47).

Oh! Our Lord in Thiru-aamaath-thoor. The devas praise and worship You. Oh our Chief God! You are concomitantly attached to Uma Devi. You are beyond comprehension; You are the Chief Lord of Thiru-aamaath-thoor. The beautiful smile of our goddess denounces the brightness of pearls. Your devotees always hail Your greatness in spite of the evil preaching of the Jains and the Buddhists, full of scorn and hatred to You. You never care for those words. Your devotees have greatest desire for Your Supreme Nature. What is the reason for this?

2014. வாடல்வெண்டலைமாலையார்த்தும
யங்கிருள்ளெரியேந்திமாநடம்
ஆடல்மேயதென்னென்றாமாத்தூரம்மானைக்
கோடல்நாகமரும்புபைம்பொழிற்
கொச்சையாரிறைஞானசம்பந்தன்
பாடல்பத்தும்வல்லார்பரலோகஞ்சேர்வாரே. 11

“வாடல் வெண்தலைமாலை ஆர்த்து,
மயங்கு இருள்(ள்), எரி ஏந்தி, மா நடம்-
ஆடல் மேயது என்?” என்று ஆமாத்தூர் அம்மானை,
கோடல் நாகம் அரும்பு பைம்பொழில்
கொச்சையார்இறை - ஞானசம்பந்தன் -
பாடல்பத்தும் வல்லார் பரலோகம் சேர்வாரே.

"vATal veN talaimAlai Arttu, mayagku iruL(L), eri Enti, mAnaTam-
ATal mEyatu en2?" en2Ru AmAttUr ammAn2ai,
kOTal nAkam arumpu paimpozil koccaiyAr iRai--njAn2acampantan2--
pATal pattum vallAr paralOkam cErvArE.

பொருள்: தலைமாலை கொண்டு சுடுகாட்டில் நெருப்பை ஏந்தி நடனமாடுபவன் சிவபிரான்! திருஆமாத்தூரில் கோயில் கொண்ட அவனைப் புகழ்ந்து காந்தள், நாகம் போன்ற மலர்கள் நிறைந்து விளங்கும் சீகாழிப்பதியில் அவதரித்த ஞானசம்பந்தர் பத்துப்பாடல்களைப் பாடி அருளியுள்ளார். அப்பாடல்களைப் பாட வல்லவர்கள் மேலுலகத்தை அடைந்து இன்புறுவர் என்க.

குறிப்புரை: வாடல் – வாடுதலையடைந்த (பதி 196–5 பார்க்க). ஆர்த்து – கட்டி. ஆடல் – கூத்து. மேயது – விரும்பியது. கோடல் – வெண்காந்தள். நாகம் அரும்பு – பாம்புபோல அரும்புகின்ற. நாகம், புன்னை மரமுமாம். கொச்சையார் இறை – காழியர்கோன்.

Our saint Thiru-gnana-Sambandar hails from Kochaivayam (one of the twelve names of Seerkaazhi) surrounded by groves where the flowers look like snakes in appearance. He praised our Lord's greatness and sang these ten sacred verses. Those devotees who are capable of reciting these ten verses of Thiru-gnana-Sambandar will reach the blessed world above.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

50ஆம் பதிகம் முற்றிற்று
End of 50th Hymn.

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: *187* பதிக எண்: *51*

51. திருக்களர்

51. THIRUK-KALAR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

களர் நிலத்தில் அமைந்த கோயிலை உடைய ஊராதலின் திருக்களர் என்னும் பெயர் எய்திற்று. திருத்துறைப் பூண்டியிலிருந்து களப்பாள் செல்லப் பேருந்துகள் உள்ளன. இது காவிரிக்கு வடகரையிலுள்ள நூற்றைந்தாவது தலமாகும். இறைவரின் திருப்பெயர் களர்முளைநாதர்; அடைந்தார்க்கு அருள்நாதர். இறைவியாரின் திருப்பெயர் இளங்கொம்பன்னாள். தலவிருட்சம் பாரிசாதம். தீர்த்தம் துர்வாச தீர்த்தம். துர்வாச முனிவருக்கு இறைவர் திருக்கூத்துக் காட்டியருளினார். பராசரர் முதலிய முனிவர்களும் வழிபட்டுப் பேறு எய்தினர். இதற்குத் திருஞானசம்பந்தரது பதிகம் ஒன்று உள்ளது. இதற்கு ஆதியப்பனாரால் எழுதப்பெற்ற புராணம் ஒன்று உண்டு. அஃது அச்சில் வெளிவந்துள்ளது.

பதிக வரலாறு

சிரபுரத்துச் செல்வர், பிரிவாற்றாது சாலமிகத் தளர்ந்த மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறைநாயனாரையும் 'சிவநெறி போற்றி இருப்பீர்' என்று, தகுவன அருளி, பாண்டிய நாட்டையகன்று, சோழநாட்டை அணைந்து, தொண்டரினத்தொடும் பலதலம் பணிந்து, கன்னிமதில் திருக்களரைப் போற்றிப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2015. நீருளார்கயல்வாவிசூழ்பொழில் நீண்டமாவயலீண்டுமாமதில்
தேரினார்மறுகில்விழாமல்குதிருக்களருள்
ஊருளாரிடுபிச்சைபேணும் ஒருவனேயொளிர்செஞ்சடைம்மதி
ஆரநின்றவனேயடைந்தார்க்கருளாயே. 1

நீருள் ஆர் கயல் வாவி சூழ் பொழில், நீண்ட மா வயல், ஈண்டு மா மதில்,
தேரின் ஆர் மறுகில் விழா மல்கு திருக் களருள்,
ஊர்உளார் இடு பிச்சை பேணும் ஒருவனே! ஒளிர் செஞ்சடை(ம்) மதி
ஆர நின்றவனே! அடைந்தார்க்கு அருளாயே!

nIruL Ar kayal vAvi cUz pozil, nINTa mA vayal, INTu mA matil,
tErin2 Ar maRukil vizA malku tiruk kaLaruL,
UruLAr iTu piccai pENum oruvan2E! oLir cenjcaTai(m) mati
Ara nin2Ravan2E! aTaintArkku aruLAyE!

பொருள்: நீர் மிகுந்ததும், கயல்மீன்கள் பெருகி வாழ்வதுமாகிய வாவிகள் பொழில்கள் சூழ்ந்ததும், நீண்ட பெரிய வயல்கள் நெருங்கியதும், மதிற்சுற்றுகளை உடைய தேரோடும் வீதிகளில் விழாக்கள் நிறைந்ததுமாகிய திருக்களர் என்னும் இத்திருத்தலத்தில், ஊர் மக்கள் இடுகின்ற பிச்சையை விரும்பும் ஒருவனே! செஞ்சடையில் பிறை பொருந்த நின்றவனே! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள் புரிவாய்.

குறிப்புரை: நீருள் ஆர் கயல் வாவி – என்பது குளங்களின் நீர்மிகுதியையும் அதிலுள்ள மீன்களின் பெருக்கத்தையும் குறித்தது. திருக்களர் நீர்வளம், சோலைச்சூழல், வயல் வயம், மதிற்சுற்று, தேர்வீதி, விழாமலிவும் உடையது. சடையில் மதி ஆர் (–நிறைய, பொருந்த) நின்றவனே, அடைந்த அன்பர்க்கு அருள்வாய் என்க.

Oh! It is Civan, our God of Thiruk-kalar. In this city nature is at its maximum beauty. The city has a number of ponds where water always overflows. The leaping fish leave the ponds along with the water which over flows to the lakes nearby. The forest areas, adjoining these ponds are full of tall, big trees. Long paddy fields are many around the city. Inside the city the ramparts are very close to each other. The streets and the palaces inside the city are tall enough to touch the sky. In these big, long streets, the temple chariot is drawn by people and sacred festivals of the temple also take place there. Oh Lord! You are the absolute one, beautifying Your reddish matted hair with the bright crescent moon. In the streets You move about for alms quite willingly. We beg You to be graceful to those who reach Your golden feet for worshipping.

2016. தோளின்மேலொளிநீறுதாங்கிய தொண்டர்வந்தடிபோற்றமிண்டிய
தாளினார்வளருந்தவமல்குதிருக்களருள்
வேளின்நேர்விசயற்கருள்புரி வித்தகாவிரும்பும்மடியாரை
ஆளுகந்தவனேயடைந்தார்க்கருளாயே. 2

தோளின்மேல் ஒளி நீறு தாங்கிய தொண்டர் வந்து அடி போற்ற, மிண்டிய
தாளினார் வளரும் தவம் மல்கு திருக் களருள்,
வேளின் நேர் விசயற்கு அருள்புரி வித்தகா! விரும்பும் அடியாரை
ஆள்உகந்தவனே! அடைந்தார்க்கு அருளாயே!

tOLin2mEl oLi nIRu tAgkiya toNTar vantu aTi pORRa, miNTiya,
tALin2Ar vaLarum tavam malku tiruk kaLaruL,
vELin2 nEr vicayaRku aruLpuri vittakA! virumpum aTiyArai
AL ukantavan2E! aTaintArkku aruLAyE!

பொருள்: தோளின் மீது ஒளி வீசும் திருநீறு அணிந்த தொண்டர்கள் வந்து அடி வணங்க, வலிமையுடைய தாளினார் தங்கும் தவமுடைய திருக்களர் ஊரில், மன்மதனுக்குச் சமமான அழகுடைய அருச்சுனனுக்கு அருள்புரிந்த வித்தகனே! உன்னை விரும்பும் அடியவர்களை அடிமையாக விரும்புபவனே! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள் புரிவாய்.

குறிப்புரை: தோளின் . . . நீறு – 'திரள் தோள்மேல் நீறு நின்றது கண்டனை ஆயினும் நெக்கிலை' (திருவாசகம், திருச்சதகம் 33) அங்குச் சிவபிரான் தோள், இங்குச் சிவத்தொண்டர் தோள், 'சாந்தம் ஈதென்று எம்பெருமான் அணிந்த நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களமேயவனே' என்றதால், உடையானுக்கு ஏற்றது அடியார்க்கும் ஆதல் அறிக. மிண்டிய – நெருங்கிய. தாளினார் – திருவடியுடைய சிவபிரான். வேளிர் நேர் – முருகனைப் போன்ற. விசயன் – அருச்சுனன். சிவவேடனிடம் தோற்றுச் சயம் நீங்கியவன். விசயன் – மேலான வெற்றியன் என்பது. அவன்பெற்ற பிறவெற்றிகளைக் குறித்தது. வித்தகா – ஞான வடிவா! ஆள் – அடிமையாக. உகந்தவனே – விரும்பிக் கொண்ட (ஆண்ட)வனே!

Oh! It is Civan, our Lord in Thiruk-kalar. In this city, people of sacred servitude smear their shoulders with pure holy ashes and go to the temple to worship the feet of our Lord. Their praise adds to the eminence of Your holy feet and Your pleasure too. You are manifest in Thiruk-kalar. You graced Arjunan who is equal to Lord Murugan and became great. You are pleased to accept Your devotees as Your servitors. Oh Lord! We pray that You may grace such honest people.

2017. பாடவல்லநன்மைந்தரோடு பனிமலர்பலகொண்டுபோற்றிசெய்
சேடர்வாழ்பொழில்சூழ்செழுமாடத்திருக்களருள்
நீடவல்லநிமலனேயடி நிரைகழல்சிலம்பார்க்கமாநடம்
ஆடவல்லவனேயடைந்தார்க்கருளாயே. 3

பாட வல்ல நல் மைந்தரோடு பனிமலர்பல கொண்டு போற்றிசெய்
சேடர் வாழ் பொழில் சூழ் செழு மாடத் திருக் களருள்,
நீட வல்ல நிமலனே! அடி நிரை கழல் சிலம்பு ஆர்க்க மா நடம் -
ஆட வல்லவனே! அடைந்தார்க்கு அருளாயே!

pATa valla nal maintarOTu pan2imalar pala koNTu pORRi cey
cETar vAz pozil cUz cezu mATat tiruk kaLaruL,
nITa valla nimalan2E! aTi nirai kazal cilampu Arkka mAnaTam-
ATa vallavan2E! aTaintArkku aruLAyE!

பொருள்: இசையுடன் பாடும் ஆற்றல் வல்ல நல்ல மக்களுடன், குளிர்ந்த மலர்களைக் கொண்டு நின்னை போற்றி வழிபாடு செய்யும் பெரியோர்கள் வாழ்வதும், மலர்ப்பொழில்கள் சூழ்ந்த அழகுடையதுமாய திருக்களர் என்னும் திருத்தலத்தில், நிலையாக இருந்து மலத்தை நீக்குவோனே! வரிசையாக கழலும் சிலம்பும் ஒலிக்க நடம் புரிய வல்லவனே! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்புரிவாய்.

குறிப்புரை: மைந்தர் – மக்கள். சேடர் – பெரியோர். நிமலன் – மலமில்லாதவன். அடிநிரைகழல் சிலம்பு ஆர்க்க மாநடம் ஆட வல்லவனே – திருவடிகளில் வரிசையாகக் கழலும் சிலம்பும் ஒலிக்க மகாதாண்டவம் ஆடவல்ல பெருமானே!

Oh! Our God in Thiruk-kalar! In the city tall, rich palaces are many. They are surrounded by fertile gardens and groves. Sacred singing scholars and virtuous people strewing flowers are many in this city. Our Lord of Thiruk-kalar has been manifest in the temple all these years. You dance with anklets which clink on Your feet. We beg Your grace for these servitors, who surrender themselves at Your feet.

2018. அம்பின்நேர்தடங்கண்ணினாருடன் ஆடவர்பயில்மாடமாளிகை
செம்பொனார்பொழில்சூழ்ந்தழகாயதிருக்களருள்
என்புபூண்டதோர்மேனியெம்மிறை வரஇணையடிபோற்றிநின்றவர்க்
கன்புசெய்தவனேயடைந்தார்க்கருளாயே. 4

அம்பின் நேர் தடங்கண்ணினார்உடன் ஆடவர் பயில் மாட மாளிகை
செம்பொன் ஆர் பொழில் சூழ்ந்து அழகுஆய திருக் களருள்,
என்பு பூண்டது ஓர் மேனி எம் இறைவா! இணைஅடி போற்றி நின்றவர்க்கு
அன்பு செய்தவனே! அடைந்தார்க்கு அருளாயே!

ampin2 nEr taTagkaNNin2Ar uTan2 ATavar payil mATa mALikai
cempon2 Ar pozil cUzntu azaku Ayat tiruk kaLaruL,
en2pu pUNTatu Or mEn2i em iRaivA! iNai aTi pORRi nin2Ravarkku
an2pu ceytavan2E! aTaintArkku aruLAyE!

பொருள்: அம்பினுக்கு நேரான கூர்மையுடையதும், விசாலமானதுமான கண்களை உடைய மகளிருடன் ஆடவர்கள் வாழ்கின்ற மாடமாளிகைகளைக் கொண்டதும் செம்மையானதும் அழகுடையதுமான மலர்ச்சோலைகள் சூழ்ந்து அழகியதாகிய திருக்களர் என்னும் திருத்தலத்தில், எலும்பு மாலையைப் பூண்ட ஒப்பற்ற எம்முடைய இறைவனே! நின் இணையடியைப் போற்றி நின்று வணங்கியவர்க்கு அன்பு செய்தவனே! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்புரிவாய்.

குறிப்புரை: அம்பு – வாள். தடங்கண் – விசாலாட்சம். திருக்களரிலுள்ள ஆடவர் மகளிர் பன்மையும், மாளிகைச் சிறப்பும், செல்வப்பெருக்கும், வளமிகுதியும் குறித்தார். 'எம் இறைவா' என்று வாயாரப் பாடி, இணையடி போற்றி நின்றவர்கண் இறைவன் அன்பு செய்தருள்வான் என்ற உண்மையை அறிவித்தவாறு.

Oh! It is Civan, the Lord of Thiruk-kalar. This city is very appealing and pleasing. It is surrounded by a good number of flowery gardens. This city contains many tall and attractive palatial buildings. In these buildings the couples do live and enjoy their lives. The ladies in these palaces have arrow like broad eyes which add to their beautiful appearance. "Oh Lord! You are manifested in such a divine city wearing garland of human bones. You bestowed Your grace on those who praise Your holy feet. We beg the same grace may be showered on those devotees also who physically take pains to reach Your holy feet and worship".

2019. கொங்குலாமலர்ச்சோலைவண்டினங் கிண்டமாமதுவுண்டிசைசெயத்
தெங்குபைங்கமுகம்புடைசூழ்ந்ததிருக்களருள்
மங்கைதன்னொடுங்கூடியமண வாளனேபிணைகொண்டொர்கைத்தலத்
தங்கையிற்படையாயடைந்தார்க்கருளாயே. 5

கொங்கு உலாம் மலர்ச்சோலை வண்டுஇனம் கெண்டி மா மது உண்டு இசைசெய,
தெங்கு பைங்கமுகம் புடை சூழ்ந்த திருக் களருள்,
மங்கை தன்னொடும் கூடிய மணவாளனே! பிணை கொண்டு, ஓர் கைத்தலத்து
அம்கையில் படையாய்! அடைந்தார்க்கு அருளாயே!

kogku ulAm malarccOlai vaNTu in2am keNTi mA matu uNTu icai ceya,
tegku paigkamukam puTai cUznta tiruk kaLaruL,
magkai tan2n2oTum kUTiya maNavALan2E! piNai koNTu, Or kaittalattu,
am kaiyil paTaiyAy! aTaintArkku aruLAyE!

பொருள்: மணம் வீசும் மலர்ச்சோலைகளில் வண்டுகள் கூட்டம் குடைந்து மிக்க தேனினை உண்டு இசைபாடும், தெங்கும் பைங்கமுகும் பக்கங்களில் சூழ்ந்த திருக்களருள் உமையுடன் கூடிய மணவாளனே, மான் பிணையை ஒரு கையிலும் மழுவினை ஓர் கையிலும் தாங்கியவனே! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்புரிவாய்.

குறிப்புரை: கொங்கு – மணம். பூந்தாதுக்களுமாம். கெண்டி – கிளறி. மாமது – மிக்க தேன். கமுகம் – பாக்கு. மங்கை . . . மணவாளனே – பார்வதி மணாளனே! ஒருகைத் தலத்தில் பிணை (மான்) கொண்டு அழகிய (மற்றொரு) கையில் (மழுப்) படை உடையவனே!

Oh! It is Civan, Lord of Thiruk-kalar. This city is surrounded by gardens full of honey filled flowers. Also we see many coconut groves around this area. In addition young green arecanut groves also exist. The beetles in large numbers make humming noise and reach the flowers. They kindle the pollen in the flowers and get into contact with the honey and suck it. Then making the humming noise go from one flower to another and drink honey to their stomach full. "Oh Lord of (husband of) Parvathi Devi! You have manifested Yourself in Thiruk-kalar along with Your consort, holding in one of Your hands the young beautiful deer and in another hand the battle axe. We beg Your grace to those devotees who reach Your holy feet, to worship".

2020. கோலமாமயிலாலக்கொண்டல்கள் சேர்பொழிற்குலவும்வயலிடைச்
சேலிளங்கயலார்புனல்சூழ்ந்ததிருக்களருள்
நீலமேவியகண்டனேநிமிர் புன்சடைப்பெருமானெனப்பொலி
ஆலநீழலுளாயடைந்தார்க்கருளாயே. 6

கோல மா மயில் ஆலக் கொண்டல்கள் சேர் பொழில் குலவும் - வயல் இடைச்
சேல், இளங்கயல், ஆர் புனல் சூழ்ந்த - திருக் களருள்,
நீலம் மேவிய கண்டனே! நிமிர்புன்சடைப் பெருமான் எனப் பொலி
ஆலநீழல் உளாய்! அடைந்தார்க்கு அருளாயே!

kOla mA mayil Alak koNTalkaL cEr pozil kulavum--vayal iTaic
cEl, iLag kayal, Ar pun2al cUznta--tiruk kaLaruL,
nIlam mEviya kaNTan2E! nimirpun2caTaip perumAn2 en2ap poli
Ala nIzal uLAy! aTaintArkku aruLAyE!

பொருள்: அழகிய நீலமயில்கள் தோகையை விரித்து ஆட, கரிய மேகங்கள் அடைகின்ற பொழில்களுடன், நெருங்கிய வயல்களிடையே சேல் மீன்களும் கயல்மீன்களும் நிறைந்த நீர்நிலைகள் சூழ்ந்த திருக்களர் என்னும் திருத்தலத்தில், நீலகண்டனே! நிமிர்புன்சடைப் பெருமான் எனப் பொலிகின்ற ஆலமத்தின் நீழலில் உள்ளாய்! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்புரிவாய்.

குறிப்புரை: கோலம் – அழகு. ஆல – தோகைவிரித்து ஆடி அசைய. கொண்டல்கள் – மேகங்கள். சேயல், கயல் இரண்டும் மீன்வகை. நீலம் – நீலநிறத்தை. மேவிய – பொருந்திய. நஞ்சாலானநிறம். பொலி – விளங்குகின்ற. ஆலநீழலுளாய் – தட்சிணாமூர்த்தியாகிய குருநாதரை விளித்தது.

It is Civan, the Lord of Thiruk-kalar. This city is surrounded by forest gardens full of tall trees where the clouds stay over the trees while they travel in the sky. Seeing the clouds the male peacocks, very good looking, spread their feathers and dance. In the paddy fields, full of water, the two kinds of common fish swim in the water. "Oh Lord! You are manifested in such an attractive city. You have the dark blue coloured neck. Your matted hair stands erect. The devotees say these praises and You, seated under stone banyan tree, explained the secret of divine knowledge to the saints. We beg You to grace those devotees who reach Your holy feet, and worship".

2021. தம்பலம்மறியாதவர்மதில் தாங்குமால்வரையாலழலெழத்
திண்பலங்கெடுத்தாய்திகழ்கின்றதிருக்களருள்
வம்பலர்மலர்தூவிநின்னடி வானவர்தொழக்கூத்துகந்துபேர்
அம்பலத்துறைவாயடைந்தார்க்கருளாயே. 7

தம் பலம்(ம்) அறியாதவர் மதில், தாங்கு மால்வரையால் அழல் எழத்
திண்பலம் கெடுத்தாய்! திகழ்கின்ற திருக் களருள்,
வம்புஅலர் மலர் தூவி, நின் அடி வானவர் தொழ, கூத்து உகந்து
பேரம்பலத்து உறைவாய்! அடைந்தார்க்கு அருளாயே!

tam palam(m) aRiyAtavar matil tAgku mAlvaraiyAl azal ezat
tiNpalam keTuttAy! tikazkin2Ra tiruk kaLaruL,
vampu alar malar tUvi, nin2 aTi vAn2avar toza, kUttu ukantu pE-
rampalattu uRaivAy! aTaintArkku aruLAyE!

பொருள்: தங்கள் வலிமையின் அளவினை அறியாத அசுரர்களின் கோட்டையைத் தாக்கும் மேருமலை வரை நெருப்பு எழச்செய்து, அவர்களுடைய திண்ணிய வலிமையைக் கெடுத்தவனே! விளங்குகின்ற திருக்களருள் அப்பொழுது மலர்ந்த மலர்களைத் தூவி நின்னுடைய திருவடிகளைத் தேவர்கள் தொழ, பேரம்பலத்தில் கூத்தாடுதலை விரும்பியவனே! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்புரிவாய்.

குறிப்புரை: தம் பலம் – தமது வலிமையை. அறியாதவர் – தெரிந்துணராத அசுரர். தாங்கும் மால்வரை – உலகத்தை அச்சாக நின்று தாங்கும் பெரிய மேருமலை. திண்பலம் – திண்ணிதாகிய வலிமையை. பலம் – பயனுமாம். வம்பு – மணம். அலர் – பரந்த. பேரம்பலத்து உறைவாய் – பேரம்பலத்தில் (கூத்து உகந்து) உறைபவரே! சிற்றம்பலம் பேரம்பலம் என்பவை இரண்டும் சித்சபையே ஆகும். சிதம்பரம், சிதாகாசம் என்பவற்றின் பொருள் ஞானவெளி என்பது. ஞானவெளி, ஞானசபை இரண்டும் பொருளால் ஒன்றே. அம்பலத்தின் அடைமொழியாகிய சிறுமை பெருமைகளை நோக்கின், சிற்றம்பலம் என்பது வடசொற்றொடரின் திரிபாகாது எனல் புலப்படும்.

It is Civan, the Lord of Thiruk-kalar. Oh Lord! holding the Meru mountain which holds up the world as Your bow, You destroyed with fire the three flying fortresses of the asuras who over-estimated their own strength. You destroyed their three forts. The celestials collect fresh, sweet-flowers in Thiruk-kalar and strew them at the holy feet of our Lord manifested here. You perform the cosmic dance in

'Perambalam', the great golden hall at Chidambaram. We beg Your grace for those who reach Your holy feet and pray. Perambalam is the whole universe.

2022. குன்றடுத்தநன்மாளிகைக்கொடி மாடநீடுயர்கோபுரங்கள்மேல்
சென்றடுத்துயர்வான்மதிதோயுந்திருக்களருள்
நின்றடுத்துயர்மால்வரைத்திரள் தோளினாலெடுத்தான்றன்நீள்முடி
அன்றடர்த்துகந்தாயடைந்தார்க்கருளாயே. 8

குன்று அடுத்த நல் மாளிகைக் கொடி, மாட நீடு உயர் கோபுரங்கள்மேல்
சென்று அடுத்து, உயர் வான்மதி தோயும் திருக் களருள்,
நின்று அடுத்து உயர்மால்வரை திரள்தோளினால் எடுத்தான்தன் நீள் முடி
அன்று அடர்த்து உகந்தாய்! அடைந்தார்க்கு அருளாயே!

kun2Ru aTutta nal mALikaik koTi, mATam nITu uyar kOpuragkaL mEl
cen2Ru aTuttu, uyar vAn2mati tOyum tirukkaLaruL,
nin2Ru aTuttu uyarmAlvarai tiraLtOLin2Al eTuttAn2 tan2 nIL muTi
an2Ru aTarttu ukantAy! aTaintArkku aruLAyE!

பொருள்: குன்றுபோல் உயர்ந்த நல்ல மாளிகைகளின்மேல் கொடிகள் பறக்கும் மாடங்கள், வானில் செல்லும் மதி தோயும் நீண்டு உயர்ந்த கோபுரங்கள், அத்தகைய செல்வவளமிக்க திருக்களர் என்னும் திருத்தலத்தில், உயர்ந்த கயிலை மலையைத் தன்னுடைய திரண்ட தோள்களினால் எடுத்தவனாகிய இராவணனின் உயர்ந்த முடிகளை அன்று நசுக்கியவனே! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்புரிவாய்.

குறிப்புரை: தம்மேலுள்ள கொடிகள், கோபுரங்களின் மேற்போய். சந்திரனைத் தோயும் அளவு, மாளிகைகள் உயர்ந்துள்ளன. 'வண்கொண்டல் விட்டு மதிமுட்டு வனமாடம்'. வரை – கயிலை மலையை. எடுத்தான்தன் – எடுத்த இராவணனுடைய. அன்று – எடுத்த. அந்நாளில்.

It is Civan, the Lord of Thiruk-kalar. The palaces in the city are very tall buildings. The temple towers also are equally tall. But the flags fixed on the top of the palaces flutter, looking taller than the temple towers, reach the sky and come in close contact with the moon trailing in the sky. The Himalayan mountain was very firm, tall and big. Raavanan, the king of Sri Lanka tried to lift this mount Kailash and move it aside but failed in his attempt. Our Lord subdued the mightiness of Raavanan; yet later

our Lord blessed him and showered His grace. "We beg Your grace for those who reach Your holy feet, and worship".

2023. பண்ணியாழ்பயில்கின்றமங்கையர் பாடலாடலொடாரவாழ்பதி
தெண்ணிலாமதியம்பொழில்சேருந்திருக்களருள்
உண்ணிலாவியவொருவனேயிரு வர்க்குநின்கழல்காட்சியாரழல்
அண்ணலாயஎம்மானடைந்தார்க்கருளாயே. 9

பண்ணி யாழ் பயில்கின்ற மங்கையர் பாடல் ஆடலொடு ஆர வாழ் பதி,
தெண் நிலாமதியம் பொழில் சேரும் திருக் களருள்,
உள்-நிலாவிய ஒருவனே! இருவர்க்கு நின் கழல் காட்சி ஆர்அழல்
அண்ணல்ஆய எம்மான்! அடைந்தார்க்கு அருளாயே!

paNNi yAz payilkin2Ra magkaiyar pATal ATaloTu Ara vAz pati,
teN nilAmatiyam pozil cErum tiruk kaLaruL,
uL-nilAviya oruvan2E! iruvarkku nin2 kazal kATci Ar azal
aNNal Aya emmAn2! aTaintArkku aruLAyE!

பொருள்: பண்ணுடன் யாழ் பயில்கின்ற மங்கையரின் பாடலொடு ஆடலும் நிறைய அமைந்த பதியும் தெளிந்த நிலவொளி பரப்பும் மதி தங்கும் பொழில்களும் சேர்ந்த திருக்களர் என்னும் திருத்தலத்தில், திருக்கோயிலின் உள் நிலாவும் ஒப்பற்றவனே! உன் அடியும் முடியும் தேடிய இருவர்க்கு அழலாகக் காட்சியளித்த அண்ணலாய எம்மானே! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்புரிவாய்.

குறிப்புரை: பண்+யாழ்=பண்ணியாழ். யாழைத் திருந்திய சுரம் அமையப்பண்ணி எனலுமாம். ஆர – நிறைய. பதியாகிய திருக்களருள். உள் திருக்கோயிலின் மூலத்தானத்தில். அன்பர் உள்ளத்தில் கழல் காட்சி – சீபாதசேவையை (அருளாய்).

Oh Lord Civa of Thiruk-kalar! In this city attractive damsels, well versed in music, play on the harp producing melodious tune to the dance that goes on in the hall and enjoy their life. The moon showers its clear, bright light on the groves where the trees are tall enough to touch the moon. "Oh Lord! You are there in this city of Thiruk-kalar as incomparable. Once You rose as that illimitable effulgence of which the origin and end could not be comprehended by Thirumaal and Brahma. Oh Lord! we beg Your grace for those who reach Your holy feet to worship".

2024. பாக்கியம்பலசெய்தபத்தர்கள் பாட்டொடும்பலபணிகள்பேணிய
தீக்கியல்குணத்தார்சிறந்தாருந்திருக்களருள்
வாக்கின்நான்மறையோதினாயமண் தேரர்சொல்லியசொற்களானபொய்
ஆக்கிநின்றவனேயடைந்தார்க்கருளாயே. 10

பாக்கியம்பல செய்த பத்தர்கள், பாட்டொடும் பலபணிகள் பேணிய
தீக்கு இயல் குணத்தார், சிறந்து ஆரும் திருக் களருள்,
வாக்கினால் மறை ஓதினாய்! அமண்தேரர் சொல்லிய சொற்கள்ஆன பொய்
ஆக்கி நின்றவனே! அடைந்தார்க்கு அருளாயே!

pAkkiyampala ceyta pattarkaL, pATToTum palapaNikaL pENiya
tIkku iyal kuNattAr, ciRantu Arum tiruk kaLaruL,
vAkkin2Al maRai Otin2Ay! amaNtErar colliya coRkaL An2a poy
Akki nin2Ravan2E! aTaintArkku aruLAyE!

பொருள்: சிவபுண்ணியமுடைய பத்தர்களின் பாட்டுக்களுடன், திருப்பணிகள் செய்ய விரும்பும் அக்கினி காரியம் செய்வதில் சிறந்தவர்களும் வாழும் திருக்களர் என்னும் திருத்தலத்தில், சொற்களால் வேதத்தை ஓதி அருளியவனே! அமணர்களும் தேரர்களும் மெய்யென்று சொல்லிய சொற்களைப் பொய்யாக்கி நின்றவனே! நின்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்வாய்.

குறிப்புரை: பாக்கியம் – நல்வினைகள். பத்தர்கள் – அன்பர்கள். பணிகள் – திருப்பணிகள். தீக்கு இயல் – அக்கினி காரியத்துக்கு.

It is Civan, the Lord of Thiruk-kalar. In this city, there are many devotees who have performed virtuous deeds. They do good service to the temple as well as to the public. They always pray and sing the praise of our Lord. The scholar Brahmins living here are the best, they perform their daily rituals and light the sacrificial fire every day. "In this city Oh our Lord! You are manifested, You pronounced the Vedas with Your sweet and sacred voice. You have established that the words uttered by the Buddhists and the Jains are false and a contrast to Your sacred words. We beg Your grace for those who reach You to worship".

2025. இந்துவந்தெழுமாடவீதியெ ழில்கொள்காழிந்நகர்க்கவுணியன்
செந்துநேர்மொழியாரவர்சேருந்திருக்களருள்
அந்தியன்னதொர்மேனியானை அமரர்தம்பெருமானைஞானசம்
பந்தன்சொல்லிவைபத்தும்பாடத்தவமாமே. 11

இந்து வந்து எழும் மாடவீதி எழில் கொள் காழி(ந்)நகர்க் கவுணியன்,
செந்து நேர் மொழியார் அவர் சேரும் திருக் களருள்,
அந்தி அன்னது ஓர் மேனியானை, அமரர்தம் பெருமானை, ஞானசம்-
பந்தன் சொல் இவை பத்தும் பாட, தவம் ஆமே.

intu vantu ezum mATa vIti ezil koL kAzi(n) nakark kavuNiyan2,
centu nEr moziyAr avar cErum tiruk kaLaruL,
anti an2n2atu Or mEn2iyAn2ai, amarar tam perumAn2ai, njAn2acam-
pantan2 col ivaipattum pATa, tavam AmE.

பொருள்: இனிய மொழி பேசும் பண்புடைய மங்கையர் சேரும் திருக்களருள் அந்தி வானம் போன்ற சிவந்த மேனியுடைய சிவபெருமானை, தேவர்கள் தம் பெருமானை, சந்திரன் வந்து மேல் எழும் மாட மாளிகைகளை உடைய வீதிகளால் எழில் கொள்ளும் சீகாழி நகர்க் கவுணியன் ஞானசம்பந்தன் பாடிய பாடல்கள் பத்தான இவற்றைப் பாட அது தவம் ஆகும்.

குறிப்புரை: இந்து – சந்திரன். எழில் – அழகு. செந்து – முன்பதிகம். மூன்றில் உள்ள விளக்கம் காண்க. 'அந்தி வண்ணன்'.

Our saint Thiru-gnana-Sambandar hails from the beautiful Seerkaazhi, a holy city of long streets with tall palaces and halls. The palaces are all very tall; the moon embraces the palaces while moving in the sky. He came to Thiruk-kalar where ladies who live in this city speak chaste Tamil resembling 'Chendu' music. In this city, our Lord is reddish as the evening sun. He is the Chief of Devas. Our saint Thiru-gnana-Sambandar sang on this Lord these famous ten Tamil songs. Those who can sing these ten songs will have the good effect of penance.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

51-ஆம் பதிகம் முற்றிற்று
End of 51st Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: *188* பதிக எண்: 52

52. திருக்கோட்டாறு

52. THIRU-K-KOTTAARU

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

இத்திருத்தலமானது பேரளம் – காரைக்கால் தொடர்வண்டிப் பாதையில் அம்பகரத்தூர் தொடர்வண்டி நிலையத்திற்கு வடகிழக்கே 2 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இஃது இக்காலத்தே கொட்டாரம் என்று வழங்கப் பெறுகின்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் 53ஆவது ஆகும். மயிலாடுதுறையை அடுத்த கொல்லுமாங்குடி – காரைக்கால் பேருந்து வழியில் கொட்டாரம் கைகாட்டியில் இறங்கி இவ்வூரை அடையலாம். இறைவரின் திருப்பெயர் ஐராவதேசுவரர். இறைவியாரின் திருப்பெயர் வண்டமர் பூங்குழலி. வெள்ளை யானை பூசித்துப் பேறு பெற்றது இச்செய்தி.

'நின்று மேய்ந்து நினைந்துமாகரி நீரொ டும்மலர் வேண்டி வான்மழை
குன்றினேர்ந்து குத்திப் பணிசெய்யுங் கோட்டாற்றுள்'

என்னும் இவ்வூர் திருஞானசம்பந்தத் தேவாரப் பகுதியால் அறியக் கிடக்கின்றது. இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கின்றது.

பதிக வரலாறு

முத்தமிழ் விரகர் திருநள்ளாற்றை வழிபட்டபோது, திருக்கோட்டாறு சென்று போற்றிப் பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2026. கருந்தடங்கணின்மாதராரிசை செய்யக்காரதிர்கின்றபூம்பொழிற்
குருந்தமாதவியின்விரைமல்குகோட்டாற்றில்
இருந்தஎம்பெருமானையுள்கி இணையடிதொழுதேத்துமாந்தர்கள்
வருந்துமாறறியார்நெறிசேர்வர்வானூடே. 1

கருந்தடங்கணின் மாதரார் இசைசெய்ய, கார் அதிர்கின்ற பூம்பொழில்
குருந்தம் மாதவியின் விரை மல்கு கோட்டாற்றில்
இருந்த எம்பெருமானை உள்கி, இணைஅடி தொழுது ஏத்தும் மாந்தர்கள்
வருந்தும் ஆறு அறியார்; நெறி சேர்வர், வான்ஊடே.

karuntaTagkaNin2 mAtarAr icai ceyya, kAr atirkin2Ra pUmpozil
kuruntam mAtaviyin2 virai malku kOTTARRil
irunta emperumAn2ai, uLki, iNai aTi tozutu Ettum mAntarkaL
varuntum ARu aRiyAr; neRi cErvar, vAn2 UTE.

பொருள்: கரிய, பெரிய கண்ணை உடைய மகளிர் இசைபாடி ஆட, கார் மேகங்கள் முழக்கம் செய்கின்ற மலர் பொழில்களில் குருந்தமரத்திற்படர்ந்த மாதவிக் கொடிகளின் நறுமணம் நிறைந்த திருக்கோட்டாற்றில் இருக்கும் எம்பெருமானை நினைந்து அவருடைய திருவடிகளைத் தொழுது ஏத்தும் மாந்தர்கள் துன்பத்தை அறிய மாட்டார்கள். மாறாக விண் வழியாகச் செல்லும் வீட்டு நெறியை அடைவர்.

குறிப்புரை: கண்ணின் – கண்ணையுடைய. இசைசெய்ய – (இனிய) இசைப் (பாக்களைப் பாடலும் ஆடலும்) செய்ய. கார் – மேகம். அதிர்கின்ற – முழங்குகின்ற. குருந்தம் – மரம். மாதவி – குருக்கத்திக்கொடி. 'மாடுலவு மல்லிகை குருந்து கொடி மாதவி செருந்தி குரவின் ஊடுலவு புன்னை விரைதாதுமலி சேருதவி மாணிகுழியே' (தி. 3 ப. 77 பா. 9). விரை – மணம். மல்கு – நிறைந்த. உள்கி – நினைந்து. வருந்தும் ஆறு – துன்பம் அடையும் வழியை. வான்ஊடு – விண்வழியாகச் செல்லும். நெறி – வீட்டு நெறியை.

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru. The city is a very sacred place where the black clouds make thundering noise and pass through the flowery gardens. Here the tall 'Kuruntha' trees grow in large numbers. The jasmine vine creeps near the kuruntha trees and their flowers spread their fragrance in the surrounding areas. Inside the city, in the music hall young, good looking damsels with broad black-eyes make sweet music praising our Lord. Along with the sweet music of the girls all around the area, people hear the thundering noise of the black clouds resembling the tone of the tabret. Those devotees who pray at the holy feet of our Lord will have no sufferings in their life. They will reach God's abode through the sky.

2027. நின்றுமேய்ந்துநினைந்துமாகரி நீரொடும்மலர்வேண்டிவான்மழை
குன்றின்நேர்ந்துகுத்திப்பணிசெய்யுங்கோட்டாற்றுள்
என்றுமன்னியஎம்பிரான்கழல் ஏத்திவானரசாளவல்லவர்
பொன்றுமாறறியார்புகழார்ந்தபுண்ணியரே. 2

நின்று மேய்ந்து, நினைந்து, மா கரி, நீரொடும் மலர் வேண்டி, வான் மழை
குன்றில் நேர்ந்து குத்திப் பணிசெய்யும் கோட்டாற்றுள்
என்றும் மன்னிய எம்பிரான் கழல் ஏத்தி, வான்அரசு ஆள வல்லவர்
பொன்றும்ஆறு அறியார்; புகழ் ஆர்ந்த புண்ணியரே.

nin2Ru mEyntu, nin2aintu, mA kari, nIroTum malar vENTi, vAn2 mazai
kun2Ril nErntu kuttip paNiceyyum kOTTARRuL
en2Rum man2n2iya empirAn2 kazal Etti, vAn2 aracu ALa vallavar
pon2Rum ARu aRiyAr; pukaz Arnta puNNiyarE.

பொருள்: ஓரிடத்தில் நின்று மேய்ந்த பெரிய யானை இறைவனை வழிபட நினைந்து நீரோடு மலர் வேண்டி வானில் குன்று போலிருந்த கரிய மேகத்தை உகுத்து மழை பொழிவித்துத் திருமஞ்சனம் செய்விக்கும் கோட்டாற்றுள், என்றும் தங்கிடும் எம்பிரானின் திருவடிகளை ஏத்தித் தேவருலகம் எய்தி அரசாள வல்லவர் மீண்டும் பிறப்பெடுத்து சாகார். வீட்டுலகத்தை அடைந்து புகழுடைப் புண்ணியர் ஆவார்.

குறிப்புரை: மாகரி – பெரிய யானை. கரத்தை உடையது கரி. வான் மழை – மேகத்திலுள்ள மழைநீரை. நேர்ந்து – நேர்பட்டு. உகுத்தி – உகச்செய்து (அபிடேகித்து). ஏர்ந்து – எழுந்து. குத்தி எனலுமாம். பணி – தொண்டு. மன்னிய – நிலைபெற்றுள்ள. வான் – தேவருலகம். பொன்றும் ஆறு – சாமாறு. (பிறந்திறந்துழலும் துன்பவழி). 'சாமாறே விரைகின்றேன்' (திருவாசகம், திருச்சதகம் 14). ஆர்ந்த – நிறைந்த.

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru. It is a blessed place where the big horned huge elephant, after grazing steadily in the grass field brings to its memory to worship our Lord in order to get good rains for the land. The elephant climbs the hill, pierces the cloud with its tusks, collects the water and the flowers available in the mountain and showers it over our Lord and strews the flowers and worships Him. In this Thiru-k-kottaaru, our Lord is manifest. Those devotees who hail His golden feet and worship Him will rule the celestial world. They are deathless; to be praised; are pure and blessed.

2028. விரவிநாளும்விழாவிடைப்பொலி தொண்டர்வந்துவியந்துபண்செயக்
குரவமாருநீழற்பொழில்மல்குகோட்டாற்றில்
அரவநீள்சடையானையுள்கிநின் றாதரித்துமுனன்புசெய்தடி
பரவுமாறுவல்லார்பழிபற்றறுப்பாரே. 3

விரவி நாளும் விழா இடைப் பொலி தொண்டர் வந்து வியந்து பண்செய,
குரவம் ஆரும் நீழல் பொழில் மல்கு கோட்டாற்றில்,
அரவம் நீள்சடையானை உள்கி நின்று, ஆதரித்து, முன் அன்பு செய்து, அடி
பரவும்ஆறு வல்லார் பழி பற்றுஅறுப்பாரே.

viravi nALum vizA iTaip poli toNTar vantu viyantu paNceya,
kuravam Arum nIzal pozil malku kOTTARRil,
aravam nILcaTaiyAn2ai uLki nin2Ru, Atarittu, mun2 an2pu ceytu, aTi
paravum ARu vallAr pazi paRRu aRuppArE.

பொருள்: குரவ மரங்கள் நிழல் தரும் பொழில்கள் நிறைந்த கோட்டாற்றில் நாள்தோறும் நிகழ்கின்ற விழாக்களில் பொலிவுடன் தொண்டர்கள் வந்து கலந்து பண்ணுடன் புகழ்ந்து பாட, பாம்பு ஆடுகின்ற சடையுடைய பிரானை நினைந்து விரும்பி அன்பு செய்து திருவடியை வாழ்த்தும் முறைமையை அறிந்தவர்கள் பழியும் பற்றும் அறுப்பார்கள்.

குறிப்புரை: வியந்து – நன்குமதித்து, புகழ்ந்து. குரவம் – குராமரம். 'நிழல்' என்ற பாடமே சந்தத்திற்குப் பொருந்துவது. (பதி. 186 பா. 6) அரவம் – பாம்பு. பரவும் ஆறு – வாழ்த்து முறைமை. பழி பற்று – பழியும் பற்றும். பழிக்கும் பற்று எனலுமாம்.

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru. In this city, the temple festivals take place almost daily. The devotees swarm amidst sweet music during the festival processions and become prosperous. In the city gardens large and big datura trees giving cool shade are many. Our Lord is manifest in this temple with His matted hair adorned with snake. The devotees who think of our Lord with big matted hair, and worship Him with commitment, serious concentration and deep love will be able to sever the link with all their evils and attachments and they will be pure and free forever.

2029. அம்பின்நேர்விழிமங்கைமார்பலர் ஆடகம்பெறுமாடமாளிகைக்
கொம்பினேர்துகிலின்கொடியாடுகோட்டாற்றில்
நம்பனேநடனேநலந்திகழ் நாதனேயென்றுகாதல்செய்தவர்
தம்பின்நேர்ந்தறியார்தடுமாற்றவல்வினையே. 4

அம்பின் நேர் விழி மங்கைமார்பலர் ஆடகம் பெறு மாடமாளிகைக்
கொம்பின் நேர் துகிலின் கொடி ஆடு கோட்டாற்றில்,
"நம்பனே! நடனே! நலந்திகழ் நாதனே!" என்று காதல் செய்தவர்
தம் பின் நேர்ந்து அறியார், தடுமாற்ற வல்வினையே.

ampin2 nEr vizi magkaimAr palar ATakam peRu mATa mALikaik
kon2pin2 nEr tukilin2 koTi ATu kOTTARRil,
"nampan2E! naTan2E! nalam tikaz nAtan2E!" en2Ru kAtal ceytavar
tam pin2 nErntu aRiyAr, taTumARRa valvin2aiyE.

பொருள்: கொம்பின்மேல் துகிற்கொடிகள் ஆடும் காட்சியுடைய திருக்கோட்டாற்றில் பொன் போல் ஒளிர்கின்ற மாளிகைகளில் அம்பினைப் போன்ற கூர்மையான விழிகளை உடைய மங்கையர்கள் பலர், 'நம்பனே, கூத்தனே, பேரின்பமளிக்கும் தலைவனே' என்று பத்தி செய்யவே, தமக்கு தடுமாற்றத்தைச் செய்யும் வலிய வினை நேர்ந்தறியார்.

குறிப்புரை: அம்பு – வேல். (முற்பதிகம் பா. 4) ஆடு அகம் – ஆடுகின்ற இடம். கொம்பின் ஏர் துகிலின் கொடி – கொம்பிற் கோத்து எழுகின்ற துணிக்கொடி. நேர் என்றும் பிரிக்கலாம். நடனே – கூத்தனே. (பதி. 185 பா. 11. 'நயன் நடன்') நலம் – பேரின்பம். தம்பின் தடுமாற்ற வல்வினையே நேர்ந்து அறியார் என்றியைக்க. செய்தவர் எழுவாய். அறியார் பயனிலை. நேர்தல் வினையின் செயலாகும்.

Behold! It is Civan who is manifest in Thiru-k-kottaaru as the Lord of this place. In this city, there are a good number of dancing halls in big palatial buildings. In the towered palaces the flags flutter on the tall posts. Inside the dancing halls a good number of arrow-eyed damsels dance and enjoy life, singing songs on our Lord. Our Lord happily manifested in the temple, graces all the devotees and the maidens. Those who hail Him with loving servitude as "Oh! Our God of Kottaaru, God of cosmic dance, God of all Supreme" will have no confusion in their thoughts, nor will have any karma following them.

2030. பழையதம்மடியார்துதிசெயப் பாருளோர்களும்விண்ணுளோர்தொழக்
குழலுமொந்தைவிழாவொலிசெய்யுங்கோட்டாற்றில்
கழலும்வண்சிலம்பும்மொலிசெயக் கானிடைக்கணமேத்தஆடிய
அழகனென்றெழுவாரணியாவர்வானவர்க்கே. 5

"பழைய தம் அடியார் துதிசெய, பார்உளோர்களும் விண்உளோர் தொழ,
குழலும் மொந்தை விழா ஒலி செய்யும் கோட்டாற்றில்,
கழலும் வண் சிலம்பும்(ம்) ஒலி செய, கான்இடைக் கணம் ஏத்த ஆடிய
அழகன்" என்று எழுவார், அணி ஆவர், வானவர்க்கே.

"pazaiya tam aTiyAr tuticeya, pAr uLOrkaLum viN uLOr toza,
kuzalum montai vizA oli ceyyum kOTTARRil,
kazalum vaN cilampum(m) oli ceya, kAn2 iTaik kaNam Etta ATiya
azakan2" en2Ru ezuvAr, aNi Avar, vAn2avarkkE.

பொருள்: பழைய அடியவர்கள் தம்மை துதி செய்ய, மண்ணுலகத்து மக்களும் விண்ணுலகத்து தேவர்களும் தொழுமாறு, குழல், மொந்தை முதலிய கருவிகள் இசையொலி செய்ய, திருக்கோட்டாற்றில் கழல்களும் வளமையான சிலம்பும் ஒலி செய, காட்டினில் பேய்க்கணம் துதிக்க, கூத்தாடிய அழகன் என்று வணங்குவார், தேவர்களுக்கு அணியாவர்.

குறிப்புரை: பழைய அடியார் 'பழவடியீர்' 'பண்டைப் பரிசே பழவடியார்க்கு ஈந்தருளும் அண்டம்'. பழவடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன். 'பழிப்பு இல் நின்பாதப் பழந்தொழும்பு' (திருவாசகம் 157, 183, 424, 151) பார் – மண். குழல் – வேய்ங்குழல். மொந்தை – இசைக்கருவியுள் ஒன்று. கழலும் சிலம்பும் ஒலி செய்ய என்க. கான் – காடு. கணம் – பூதகணம், பேய்க்கணம். எழுவார் – நடுநாடியில், சிவபீஜத்தொடும் சிந்தித்து எழுகின்ற யோகியர். 'சித்தம் ஆரத் திருவடியே நினைந்து உள்கி எழுவார் உள்ளம் ஏயவன் காண்' (தி. 6 பதி 64 பா. 4). இவ்வுண்மையை ஒட்டித் 'தொழுதெழுவார்' 'தொழு தெழுவாள்' என்னும் தொடர்களுக்குப் பொருள் கொள்ளல் நன்று. 'கொழுநற்றொழு தெழுவாள்' – படுக்கையின் நின்று தொழுது கொண்டே எழுதல் செய்வாள். தொழுதல் என்றதற்கு விழுந்து வணங்குதல் என்னும் பொருளே உரியது என்பார். பிறவாறெல்லாம் உரைப்பர். வானவர்க்கு அணி (பூஷணம்) ஆவர்.

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru. Our Lord is worshipped by His ancient devotees hailing from old generations. People on the earth and also angels in heaven worship His holy feet. In this city, people play on flute, making melodies. These notes accompany the beautiful music of the percussion instruments (drum open

at one end) played by experts in the city. Our handsome Lord performs that cosmic dance on the burial ground where the bhutas worship Him. While dancing, our Lord's anklets tinkle and make good music. Those devotees who pray Him mentioning these pleasing details will be celebrated by angels, and will be ornaments to them.

2031. பஞ்சின்மெல்லடிமாதராடவர் பத்தர்சித்தர்கள்பண்புவைகலும்
கொஞ்சியின்மொழியால்தொழில்மல்குகோட்டாற்றில்
மஞ்சனேமணியேமணிமிடற் றண்ணலேயெனவுள்நெகிழ்ந்தவர்
துஞ்சுமாறறியார்பிறவாரித்தொல்நிலத்தே. 6

"பஞ்சின் மெல்அடி மாதர், ஆடவர், பத்தர், சித்தர்கள், பண்பு வைகலும்
கொஞ்சி இன்மொழியால் - தொழில் மல்கு கோட்டாற்றில்,
மஞ்சனே! மணியே! மணிமிடற்று அண்ணலே!" என உள்-நெகிழ்ந்தவர்,
துஞ்சும் ஆறு அறியார்; பிறவார், இத்தொல்-நிலத்தே.

"panjcin2 mel aTi mAtar, ATavar, pattar, cittarkaL, paNpu vaikalum
konjci in2moziyAl-tozil malku kOTTARRil,
manjcan2E! maNiyE! maNimiTaRRu aNNalE!" en2a uL-nekizntavar,
tunjcum ARu aRiyAr; piRavAr, it tol-nilattE.

பொருள்: பஞ்சு போன்ற மென்மையான பாதத்தையுடைய மகளிர்களும் ஆடவர்களும், அன்பர்களும் சித்தர்களும் தன்னுடைய பண்புகளை, நாள்தோறும் கொஞ்சும் இனிய மொழியால் போற்றித் தொழும் தொழில் மல்கிய திருக்கோட்டாற்றில், 'மைந்தனே, மணியே, நீலகண்டனே' என உள்ளம் நெகிழ்ந்து துதிப்பவர் இத்தொல் உலகில் இறத்தலும் இலர், பிறத்தலும் இலர்.

குறிப்புரை: பஞ்சின் = பஞ்சுபோல. இன் – ஐந்தாவதனுருபு உவமப் பொருள். பன்+து என்றதன் மருஉ. பனுவல் என்பதற்கும் அதுவே பகுதி. பஞ்சினைப் பன்னுதல் இன்றும் உண்டு. 'பஞ்சி தன் சொல்லே பனுவல் இழையாக' (நன்னூற்பாயிரம்) 'பருத்திப் பெண்டின் பனுவலன்ன' (புறம் – 125). 'நுணங்கு – நுன்பனுவல்' (நற்றிணை – 353). (தொல் – எழுத்து – நச்சர்; இறை – சூ 1 – உரை). பத்தர் – அன்பர். சித்தர் – அட்டமாசித்து வல்லவர். வைகலும் – நாள்தோறும். பண்பு – அவர்களுடைய குணங்களை. இன்மொழியால் கொஞ்சித் தொழுதல் நிறைந்த கோட்டாறு. தொழில் – தொழுதல். மஞ்சன் – மைந்தன் என்பதன் மருஉ. 'கிஞ்சுகவாயஞ்சுகமே கேடில் பெருந்துறைக் கோன்மஞ்சன்' (திருவாசகம் 362). 'மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்பதொன்றேயன்றோ' (கம்பர் – பால – கோலங் – 19). மணிமிடற்றண்ணலே – திருநீலகண்டப் பெருமானே. துஞ்சும் ஆறு அறியார் – இனி இறக்கும் வகையை

அறியார். இத்தொல் நிலத்தே பிறவார் என்பதும். துஞ்சு மாற்றியாமை வலியுறுத்தி வீடுபெறுவரென்று விளக்கிற்று. நெகிழ்ந்தவர் – எழுவாய். அறியார் பிறவார் இரண்டும் பயனிலை.

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru. In the city of Thiru-k-kottaaru, young ladies are very beautiful with feet soft as cotton. These ladies, young men, devotees and mystics worship our Lord, daily reciting His greatness with their sweet voice. Our Lord is manifest in Thiru-k-kottaaru. Those devotees who worship Him praising Him "Oh! You the valiant one; Oh! You are the perfect gem; Oh! You are the Lord with beautiful gem like neck"; they who speak such words with melting hearts will have no birth hereafter, and no death either on this ancient earth.

2032. கலவமாமயிலாளொர்பங்கனைக் கண்டுகண்மிசைநீர்நெகிழ்த்திசை
குலவுமாறுவல்லார்குடிகொண்டகோட்டாற்றில்
நிலவமாமதிசேர்சடையுடை நின்மலாவெனவுன்னுவாரவர்
உலவுவானவரினுயர்வாகுவதுண்மையதே. 7

"கலவமாமயிலாள் ஒர் பங்கனைக் கண்டு, கண்மிசை நீர் நெகிழ்த்து, இசை
குலவும்ஆறு வல்லார் குடிகொண்ட கோட்டாற்றில்,
நிலவ மா மதி சேர் சடை உடை நின்மலா!" என உன்னுவார் அவர்
உலவு வானவரின் உயர்வு ஆகுவது உண்மையதே.

"kalava mA mayilAL or pagkan2aik kaNTu, kaNmicai nIr nekizttu, icai
kulavum ARu vallAr kuTikoNTa kOTTARRil,
nilava mA mati cEr caTai uTai nin2malA!" en2a un2n2uvAr avar
ulavu vAn2avarin2 uyarvu Akuvatu uNmaiyatE.

பொருள்: தோகை மயில் போன்ற சாயல் உடையளாகிய உமையாளைத் தன் இடப்பாகத்தில் உடையவனைக் கண்டு, கண்களில் நீர் பெருக்கி, அவன் புகழைப் போற்றி இசைக்க வல்லவர் வாழும் திருக்கோட்டாற்றில், பிறையணிப் பெருமானே! மலமற்ற தூயோனே! எனத் தியானிப்பவர்கள் விண்ணில் உலவும் தேவர்களுக்கு மேலானவராகுவர். இது உண்மை.

குறிப்புரை: கலவம் – தோகை. மயிலாள் – மயில்போலும் சாயலுடைய உமாதேவியார். கண்மிசை நீர் நெகிழ்ந்து – கண்ணீர் உகுத்து. நிலவம் – நிலாவைத்தரும். உன்னுவார் – தியானம் செய்பவர். வானவரின் – தேவரினும். உண்மையது – சத்தியமானது. ஆசிரியர் ஆணையிட்டுக் கூறுதலை நோக்கின்.

உயிர்களைச் சிவவழிபாட்டில் ஈடுபடுத்தக் கொண்டிருக்கும் பேரன்பு விளங்கும் (பதி 220 பா. 11 பதி 221 பா 11 தி. 3 பதி 118 பா 11).

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru. He is the consort of our goddess Paarvathi Devi whose beauty is like the feathered peacock's. He manifests Himself in Thiru-k-kottaaru. His long matted hair is like the pure white rays of the moon. Those devotees who go to the temple, see Him, shed tears and praise His fame in sweet musical tone saying "Oh! You are immaculate! give us Your grace" will certainly be higher in status than the angels. This is the truth.

2033. வண்டலார்வயற்சாலியாலைவ ளம்பொலிந்திடவார்புனற்றிரை
கொண்டலார்கொணர்ந்தங்குலவுந்திகழ்கோட்டாற்றில்
தொண்டெலாந்துதிசெய்யநின்ற தொழிலனேகழலாலரக்கனை
மிண்டெலாந்தவிர்த்தென்னுகந்திட்டவெற்றிமையே. 8

வண்டல் ஆர் வயல் சாலி ஆலை வளம் பொலிந்திட, வார் புனல்-திரை
கொண்டலார் கொணர்ந்து அங்கு உலவும் திகழ் கோட்டாற்றில்,-
தொண்டு எலாம் துதி செய்ய நின்ற தொழிலனே! கழலால் அரக்கனை
மிண்டு எலாம் தவிர்த்து, என் உகந்திட்ட வெற்றிமையே?

vaNTal Ar vayal cAli Alai vaLam polintiTa, vAr pun2al-tirai
koNTalAr koNarntu agku ulavum tikaz kOTTARRil-
toNTu elAm tuticeyya nin2Ra tozilan2E! kazalAl arakkan2ai
miNTu elAm tavirttu, en2, ukantiTTa veRRimaiyE?

பொருள்: மிக்க வண்டலினைச் சாலி, கரும்பு முதலியன வளமாக விளையுமாறு வயலில் கார்காலத்துப் பெருகிய ஆறு கொண்டு வந்து கொட்டி உலவும் திருக்கோட்டாற்றில், 'தொண்டர்கள் துதி செய்ய அருள் செய்து நின்றவனே' கழலணிந்த திருவடியால், இராவணனை, அவனுடைய செருக்கெல்லாம் ஒழியச் செய்து, பின் அவனுக்கு உகந்து அருள்செய்திட்ட வெற்றி என் கருதி?

குறிப்புரை: வண்டல் – நீர் ஒதுக்கிய மண். சாலி – நெல். ஆலை – கரும்பாலை கரும்பு. கொண்டலார் – 'தென்றலார்' போல். 'தென்றலார் புகுந்துலவும் திருத்தோணிபுரத்து' (தி. 1 ப. 60 பா. 7) தொண்டு – தொண்டர்கள். சொல்லால் அஃறிணை; பொருளால் உயர்திணை; வேந்து அரசு ஒற்று முதலியனபோல.

ஆகுபெயருமாம். துதி – தோத்திரம். மிண்டு – திண்மை. 'மிண்டனுக்கு இரண்டாள்' என்பது வழக்கு. தவிர்த்து – நீங்குதல். வெற்றிமை – வென்ற தன்மை. (பதி. 186 பா. 9).

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru, a sacred rich city. The city is full of rich paddy fields with loamy soil giving rich yields of rice. Sugarcane crushers are many in number. The land is very fertile because of the heavy rain brought by dark clouds in this city, which make the soil rich. "Oh! our God! You are manifested in Thiru-k-kottaaru! You are worshipped by devotees reciting Your name. You are the Lord performing the five divine operations. With your holy feet You subdued the mighty king Raavanan; but later You excused him and bestowed grace! Why did You show Your victorious grace like that?"

2034. கருதிவந்தடியார்தொழுதெழக் கண்ணனோடயன்தேடஆனையின்
குருதிமெய்கலப்பவுரிகொண்டுகோட்டாற்றில்
விருதினான்மடமாதும்நீயும்வி யப்பொடும்முயர்கோயில்மேவிவெள்
எருதுகந்தவனேயிரங்காயுனதின்னருளே. 9

கருதி வந்து அடியார் தொழுது எழ, கண்ணனோடு அயன் தேட, ஆனையின்
குருதி மெய் கலப்ப உரி கொண்டு, கோட்டாற்றில்,
விருதினால் மடமாதும் நீயும் வியப்பொடும் உயர் கோயில் மேவி, வெள்-
எருது உகந்தவனே! இரங்காய், உனது இன்அருளே!

karuti vantu aTiyAr tozutu eza, kaNNan2OTu ayan2 tETa, An2aiyin2
kuruti mey kalappa uri koNTu, kOTTARRil,
virutin2Al maTamAtum nIyum viyappoTum uyar kOyil mEvi, veL-
erutu ukantavan2E! iragkAy, un2atu in2 aruLE!

பொருள்: அடியார் கருதி வந்து அடி தொழத், திருமாலோடு பிரமனும் தேட, ஆனையின் தோலை இரத்தம் திருமேனியில் பட உரித்துப் போர்த்துக் கொண்டு, திருக்கோட்டாற்றில், அந்த வெற்றியால் வந்த விருதுடன் உமையம்மையும் நீயும் பாராட்டொடும் திருக்கோயிலில் இருப்பவனே! வெண்ணிறக் காளையினை விரும்பியவனே! உனது இனிய அருளை என் மாட்டு இரங்கி அருள்வாயாக.

குறிப்புரை: அடியார் கருதி வந்து தொழுது எழ என மாற்றுக. கண்ணன் – கிருஷ்ணன் என்னும் வடசொல்லின் திரிபாக் கொள்ளின் கறுப்பன் என்னும் பொருளாம். தமிழாக் கொள்ளின்

சினைப்பெயரடியாய்ப் பிறந்த பெயராம். கருதுபவனுமாம் ஆனையின் . . . கொண்டு – யானை உரித்த வரலாறு. குருதி – இரத்தம். விருதினான் – விருதுகளால். மடமாது – உமாதேவி. வெள்ளருது – நரைவெள்ளேறு. உகந்தவன் – விரும்பியவன்.

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru. The devotees come to the temple where our Lord is manifest; they prostrate and get up and praise You. Kannan (Thirumaal) and Brahma were searching to meet You and worship; You killed the fierce elephant and covered Your body with its hide with blood dripping. You are manifest with Your consort Uma Devi in the sacred temple, with all honour You have selected the pure white bull as Your vehicle for Your transport. With compassionate feelings You may shower Your kind and sweet grace on Your devotees.

2035. உடையிலாதுழல்கின்றகுண்டரும் ஊணருந்தவத்தாயசாக்கியர்
கொடையிலாமனத்தார்குறையாருங்கோட்டாற்றில்
படையிலார்மழுவேந்தியாடிய பண்பனேயிவரென்கொலோநுனை
அடைகிலாதவண்ணமருளாயுனடியவர்க்கே. 10

உடை இலாது உழல்கின்ற குண்டரும், ஊண் அருந்தவத்து ஆய சாக்கியர்,
கொடைஇலா மனத்தார்; குறை ஆரும் கோட்டாற்றில்,
படை இலார் மழு ஏந்தி ஆடிய பண்பனே! இவர் என்கொலோ, நுனை
அடைகிலாத வண்ணம் அருளாய், உன் அடியவர்க்கே!

uTai ilAtu ulazkin2Ra kuNTarum, UN aruntavattu Aya cAkkiyar,
koTai ilAr man2attAr; kuRai Arum kOTTARRil,
paTaiyil Ar mazu Enti ATiya paNpan2E! ivar en2kolO, nun2ai
aTaikilAta vaNNam aruLAy, un2 aTiyavarkkE!

பொருள்: உடை அணியாது அலைந்து திரியும் சமணர்களும், பிச்சை வாங்கி உண்ணுவதையே தவமாகக் கொண்ட சாக்கியர்களும் பிறருக்குக் கொடுத்து அறியாத மனத்தவர்கள். பிச்சை கேட்டு அலையும் திருக்கோட்டாற்றில், பிறர் மேல் செலுத்தாத மழுவினை ஏந்திக் கூத்தாடிய இயல்பினை உடையவனே! இவர்கள் (சமணரும் பவுத்தரும்) உன் துணையைப் பெறாத காரணம் என்ன என்று உன் அடியவர்களாகிய (எமக்குத்) தெரிவித்து அருள்வாயாக.

குறிப்புரை: குண்டர் – சமணர். ஊணருந்தவம் – உண்ணுதலில்லாத தவம். அருமை – இன்மை. 'அருங்கேடன்' (குறள்) குறை – குறை கூறுதல். இவர் – குண்டர் முதலிய இவர்கள். நுனை – உன்னை. அடைகிலாத வண்ணம் என்கொலோ – அடைந்து தொழுது உய்யாதவாறு என்னோ? உன் அடியவர்க்கு அருளாய் – உன்னடியவர்களுக்கு அக்காரணத்தை உணர்த்தியருளாய். ஆசிரியரும் தம்மை அப்படர்க்கையில் அடக்கிக் கொண்டார்.

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru. In this city, Your devotees are confused over the preaching of the naked Jains and the Buddhists who observe penance without food. You hold in one of Your hands, the strongest war weapon, the axe and perform the cosmic dance. You are God endowed with the highest quality. Why do these men, the Jains and the Buddhists avoid praying to You? Kindly clarify their bad behaviour and speak out the implication to Your devotees.

2036. காலனைக்கழலாலுதைத்தொரு காமனைக்கனலாகச்சீறிமெய்
கோலவார்குழலாள்குடிகொண்டகோட்டாற்றில்
மூலனைம்முடிவொன்றிலாதஎம் முத்தனைப்பயில்பந்தன்சொல்லிய
மாலைபத்தும்வல்லார்க்கெளிதாகும்வானகமே. 11

காலனைக் கழலால் உதைத்து, ஒரு காமனைக் கனல்ஆகச் சீறி, மெய்
கோல வார்குழலாள் குடிகொண்ட, கோட்டாற்றில்
மூலனை(ம்), முடிவு ஒன்று இலாத எம் முத்தனை, பயில் பந்தன் சொல்லிய
மாலைபத்தும் வல்லார்க்கு எளிதுஆகும், வானகமே.

kAlan2aik kazalAl utaittu, oru kAman2aik kan2al Akac cIRi, mey
kOla vArkuzalAL kuTikoNTa, kOTTARRil,
mUlan2ai(m), muTivu on2Ru ilAta em muttan2ai, payil pantan2 colliya
mAlaipattum vallArkku eLitu Akum, vAn2akamE.

பொருள்: எமனைக் கழலணிந்த திருவடியால் உதைத்து, மன்மதனைக் கண்ணில் தோன்றிய நெருப்பால் எரித்து, உடலில் உமையம்மையினைப் பாகமாகக் கொண்டு வாழும் திருக்கோட்டாற்றில், அநாதிகாரனை அந்தம் ஒன்றிலாத எம்முடைய முத்தனைப் போற்றி ஞானசம்பந்தன் சொல்லிய இத்தமிழ்மாலையில் உள்ள பாடல்கள் பத்தினையும் வல்லவர்களுக்கு வானுலகம் எளிதாக அடையத் தக்கதாகும்.

குறிப்புரை: கழலால் – கழலணிந்த திருவடியால். தானியாகுபெயர். கனலாகச்சீறி – தீயாகி வேவக் கோபித்து. கோலவார் குழலாள் மெய்குடிகொண்ட. என்று கூட்டி மாதியலும் பாதியன் என்க. (ப. 189 பா. 11). மெய் – பெருமான் திருமேனி. மூலன் – அநாதிகாரணன். 'படைப்போற் படைக்கும் பழையோன்'. முத்தன் – இயல்பாகவே பாசங்களில்லாதவன். வானகம் – வீடு.

Behold! It is Civan, the Lord of Thiru-k-kottaaru. Oh Lord! You kicked the god of death with Your ankleted feet; You burnt the god of love with a wink of Your third eye. You manifest Yourself in the temple with Your consort Uma Devi who has long beautiful and sweet smelling hair, keeping her on the left side of Your body. You are the prime root of everything in the world. You are the Supreme Being without any end. Those devotees who can recite these ten verses of tribute to our Lord sung by our saint Thiru-gnana-Sambandar, can reach heaven very easily.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

52ஆம் பதிகம் முற்றிற்று
End of 52nd Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 189 *பதிக எண்: 53*

53. திருப்புறவார்பனங்காட்டூர்

53. THIRU-P-PURAVAAR – PANANG-KAATTOOR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

பனை மரத்தைத் தலவிருட்சமாக உடைமையால் பனங்காட்டூர் என்றும், புறாவின் பொருட்டுத் தன் தசையை அரிந்திட்ட சிபிச் சக்கரவர்த்திக்கு அருள்செய்த பதியாதலின் புறவார் பனங்காட்டூர் என்னும் பெயர் பெற்றது என்றும் கூறுவர். புறவு என்பது பற்றிய புனைந்துரையோ ? விழுப்புரம் தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கேயுள்ள முண்டியம்பாக்கம் தொடர்வண்டி நிலையத்திற்கு வடகிழக்கே 1.5 கி.மீ. தூரத்திலுள்ளது. விழுப்புரம் (திருக்கனூர் வழி) பாண்டிச்சேரி செல்லும் பேருந்துகளில் கோயிலை அடையலாம். இது நடுநாட்டுத் தலங்களுள் ஒன்று. இறைவரது திருப்பெயர் பனங்காட்டீசுவரர். இறைவியார் திருப்பெயர் புறவம்மை. தலவிருட்சம் பனை. சூரியன் பூசித்துப் பேறுபெற்றான். இத்தலத்தில் சித்திரை முதல் தேதி முதல் ஏழாந்தேதி வரை ஒவ்வொரு நாளும் சூரியன் தோன்றும்பொழுது, சுவாமிமேலும் அம்மன்மேலும் கிரணங்கள் விழுகின்றன.

பதிக வரலாறு

ஆளுடைய பிள்ளையார் திருவரசிலியில் பரமசிவனை வணங்கிப் பரவி, திருப்புறவார் பனங்காட்டுரை அணைந்து நறவார் கொன்றைச் சடைமுடியன் அடிமலரைப் போற்றிப் பாடி அருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2037. விண்ணமர்ந்தனமும்மதில்களை வீழவெங்கணையாலெய்தாய்விரி
பண்ணமர்ந்தொலிசேர்புறவார்பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொருபாகமாகிய பிஞ்ஞகாபிறைசேர்நுதலிடைக்
கண்ணமர்ந்தவனேகலந்தார்க்கருளாயே. 1

விண் அமர்ந்தன மும்மதில்களை வீழ வெங்கணையால் எய்தாய்! விரி
பண் அமர்ந்து ஒலி சேர் புறவு ஆர் பனங்காட்டூர்,
பெண் அமர்ந்து ஒரு பாகம் ஆகிய பிஞ்ஞகா! பிறை சேர் நுதல்இடைக்
கண் அமர்ந்தவனே! கலந்தார்க்கு அருளாயே!

viN amarntan2a mummatilkaLai vIza vegkaNaiyAl eytAy! viri
paN amarntu oli cEr puRavu Ar pan2agkATTUr,
peN amarntu oru pAkam Akiya pinjnjakA! piRai cEr nutal iTaik
kaN amarntavan2E! kalantArkku aruLAyE!

பொருள்: ஆகாயத்தில் இருந்த மூன்று கோட்டைகளும் அழியக் கொடிய அம்பால் எய்தாய். பண் இசை தங்கிய புறவார் பனங்காட்டூரில் பெண் ஒரு பாகமாகிய திருவுருவுடைய பிஞ்ஞகனே! பிறை சேர்ந்த நெற்றியில் ஒரு கண்ணை உடையவனே! உன்னைப் புகலாக அடைந்தாருக்கு அருள்வாயாக.

குறிப்புரை: விண் அமர்ந்தன – ஆகாயத்தில் பொருந்தியனவாகிய. பிஞ்ஞகா – சடைமுடியனே. பிறைசேர் நுதலிடைக்கண் – 'பிறைநுதல் வண்ணம் ஆகின்று' (புறம், கடவுள் வாழ்த்து). நுதல்; நெற்றி + சென்னி இரண்டையும் குறித்து ஆளப்படும். யோகமார்க்கத்தில் பிறை விளங்கும் இடம் நுதல் ஆதலைக் குறித்ததுமாம்.

Oh God! It is Civan of Thiru-p-puravaar - Panang-kaattoor. It is a holy place where songsters sing harmonious songs on our Lord in the most pleasing way. This music is heard everywhere in the city along with its echo. Oh! our God of red matted hair with different beautification! Oh! our God sharing Your body with our goddess! Oh! our God with a third eye in the forehead near the crescent moon! Oh! our God, You shot an arrow of terror on the three flying forts of the asuras who inflicted intolerable misery on the devas. You destroyed them completely. We beg You to shower Your grace on those servitors who worship You with great love.

2038. நீடல்கோடலலரவெண்முல்லை நீர்மலர்நிரைத்தாதளஞ்செயப்
பாடல்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்த்
தோடிலங்கியகாதயல்மின் துளங்கவெண்குழைதுள்ளநள்ளிருள்
ஆடுஞ்சங்கரனேயடைந்தார்க்கருளாயே. 2

நீடல் கோடல் அலர, வெண்முல்லை நீர் மலர்நிரைத் தாது அளம்செய,
பாடல் வண்டு அறையும் புறவுஆர் பனங்காட்டூர்,
தோடு இலங்கிய காது அயல் மின்துளங்க, வெண்குழை துள்ள, நள்இருள்
ஆடும் சங்கரனே! அடைந்தார்க்கு அருளாயே!

nITal kOTal alara, veNmullai nIr malarnirait tAtu aLamceya,
pATal vaNTu aRaiyum puRavu Ar pan2agkATTUr,
tOTu ilagkiya kAtu ayal min2 tuLagka, veNkuzai tuLLa, naL iruL
ATum cagkaran2E! aTaintArkku aruLAyE!

பொருள்: நீண்ட இதழ்களையுடைய வெண் காந்தள், அலர்ந்த வெண்ணிற முல்லை மலர்கள், நீரில் பூக்கும் மலர்கள் முதலியன வரிசையாக உகுத்த வெண்மையான தாதுக்கள் உப்பளத்தைப் போல அழகு செய்ய, பண்ணிசை போல் வண்டுகள் முரலும் புறவார் பனங்காட்டூரில், தோடு விளங்கும் காதின் பக்கத்தில் மின்னொளி தோன்ற அசையும் வெண்குழை துள்ள, நள்ளிரவில் கூத்தாடும் சங்கரனே! உன்னைப் புகலாக அடைந்தாருக்கு அருள்வாயாக.

குறிப்புரை: நீடல் – (நீள் + தல்), நீட்சியை உடைய. கோடல் – வெண்காந்தள். நிரை – வரிசை. தாது – முல்லைப் பூந்தாதுக்கள். அளம்செய – உப்பளம்போலக் குவிக்க. இலங்கிய – விளங்கிய. அயல் – பக்கத்தில். மின் – ஒளி. நள்இருள் – செறிந்த இருளில். 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும்'. சங்கரன் – சுகத்தைச் செய்பவன்.

Oh God! It is Civan of Thiru-p-puravaar - Panang-kaattoor. In this sacred city, long grown white gloria flowers are in large numbers along with the glistening white jasmine and other water flowers. The beetles fly from flower to flower to drink honey. While flying they make a humming noise, the pollen in those flowers sticks to the body of the beetles and gathers to form a big heap. In such a city, oh Lord! You wear a stud on one ear; and on the other, a white ear ring glistening and spreading bright light everywhere. But oh Sankara (God of eternal bliss)! You perform the cosmic dance in the dead of night. You may shower Your grace on those devotees who reach Your holy feet.

2039. வாளையுங்கயலும்மிளிர்பொய்கை வார்புனற்கரையருகெலாம்வயற்
பாளையொண்கமுகம்புறவார்பனங்காட்டூர்ப்
பூளையுந்நறுங்கொன்றையும்மத மத்தமும்புனைவாய்கழலிணைத்
தாளையேபரவுந்தவத்தார்க்கருளாயே. 3

வாளையும் கயலும் மிளிர் பொய்கை வார் புனல் கரை அருகு எலாம் வயல்
பாளை ஒண் கமுகம் புறவுஆர்பனங்காட்டூர்,
பூளையும் நறுங்கொன்றையும் மதமத்தமும் புனைவாய்! கழல்இணைத்-
தாளையே பரவும் தவத்தார்க்கு அருளாயே!

vALaiyum kayalum miLir poykai vAr pun2al karai aruku elAm vayal
pALai oN kamukam puRavu Ar pan2agkATTUr,
pULaiyum naRug kon2Raiyum matamattamum pun2aivAr! kazal iNait
tALaiyE paravum tavattArkku aruLAyE!

பொருள்: வாளை மீன்களும் கயல்மீன்களும் பிறழும் நீர் நிறைந்த பொய்கைக் கரையின் அருகெலாம் வயலும், பாளைகள் ஒளிரும் கமுகுகள் காட்சியளிக்கும் புறவார் பனங்காட்டூரில், பூளைப் பூவும் நறுமணமுடைய கொன்றை மலரும், பித்தமளிக்கும் ஊமத்தம்பூவும் திருமேனியில் புனைவோனே! உன் கழலிணைகளையே துதிக்கும் தவத்தை உடையவருக்கு அருள்வாயே.

குறிப்புரை: மிளிர்தல் – ஒளிர்தல். கமுகம் – பாக்கு. பூளை – ஒரு செடி. இது சிறுமை பெருமையால் இருவகைப்படும். 'இரும்பூளை' (பதிகம் 172) 'மாருதம் அறைந்த பூளைப்பூ' என்று உவமை கூறலாவதும் இதனையே. மதமத்தம் – உக்கிரகந்தத்தையுடைய ஊமத்தை. புனைவாய் – அணிபவனே. கழல் – கழல்களை அணிந்த. இணைத்தாள் – இரண்டு திருவடிகள். ஏகாரம் பிரிநிலை, 'சாம்பகல் அகலத்தார் சார்பல்லாற் சார்பிலமே' (ப. 180 பா. 3).

Oh God! It is Civan, Lord of Thiru-p-puravaar - Panang-kaattoor. In this city, water ponds are full of water. There, the scabbard and carp fish swim and play splashing the clear water all around the shores of these ponds and fields. The spikes of the rich tall grown arecanut trees are to be seen in large numbers adding beauty to the city. In such a city You are manifested in the temple adorning Yourself with the silk plant, the fragrant cassia and datura flowers. We enjoy the sight of Your stature in this city. We beg Your grace for those devotees who worship Your holy feet of anklets.

2040. மேய்ந்திளஞ்செந்நெல்மென்கதிர்கல்வி மேற்படுதலின்மேதிவைகறை
பாய்ந்ததண்பழனப்புறவார்பனங்காட்டூர்
ஆய்ந்தநான்மறைபாடியாடும் அடிகளென்றென்றரற்றிநன்மலர்
சாய்ந்தடிபரவுந்தவத்தார்க்கருளாயே. 4

மேய்ந்து இளஞ் செந்நெல் மென் கதிர் கல்வி மேல்படுதலில், மேதி வைகறை
பாய்ந்த தண்பழனப் புறவுஆர்பனங்காட்டூர்,
"ஆய்ந்த நால்மறை பாடிஆடும் அடிகள்!" என்றுஎன்று அரற்றி, நல் மலர்,
சாய்ந்து, அடி பரவும் தவத்தார்க்கு அருளாயே!

mEyntu iLanj cennel men2 katir kavvi mElpaTutalil, mEti vaikaRai
pAynta taNpazan2ap puRavu Ar pan2agkATTUr,
"Aynta nAlmaRai pATi ATum aTikaL!" en2Ru en2Ru araRRi, nal malar,
cAyntu, aTi paravum tavattArkku aruLAyE!

பொருள்: எருமைகள் விடியற்காலைப் பொழுதில் இளஞ்செந்நெல் கதிர்களைக் கவ்வி மேய்ந்து, பின் படுகரில் பாயும் குளிர்ந்த வயல்களை உடைய புறவார் பனங்காட்டில், ஆராய்ந்த நான்கு வேதங்களையும் பாடி ஆடும் அடிகள் என்று அரற்றி நன்மலர்களைச் சாய்த்து அடி பரவும் தவம் உடையாருக்கு அருள்வாயே.

குறிப்புரை: மேதி – எருமை. வைகறை – விடியற்பொழுது. பழனம் – வயல். அடிகள் – சுவாமி, கடவுள். சிவபெருமானை 'அடி' என்றும். கள்விகுதி சேர்த்து உயர்வு குறித்து 'அடிகள்' என்றும் வழங்குதல் மரபு. திருவடி சேர்ந்தார், அடிசேர் ஞானம் என்பவற்றால் அவ்வுண்மை புலப்படும். இறைவனடி அடைவிக்கும் எதுல் ஞானபூசை என்பது முதலிய இடங்களில் சிவஞானத்தைக் குறித்தல் உணர்க. சிவனையும் சிவஞானத்தையும் அடைந்தவர் அடியார் என்பார். எல்லாவற்றிற்கும் அடி (மூலம்) சிவஞானமும், சிவமும் அன்றி வேறில்லை. 'அடியார் சிவஞானமானது பெற்றோர்' (திருமந்திரம் 1672). 'முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தை' (சிவஞான பாடியம் சூ. 10 அதி 1. ஏது வின் விளக்கம்) 'முதல்வன் திருவடியாகிய சிவானந்தாநுபூதி' (மேற்படி 11 உரை) 'முதல்வனொருவனே ஞாயிறும் ஒளியும் போலச் சிவனும் சத்தியும் எனத் தாதான்மியத்தான் இருதிறப்பட்டுச் சருவவியாபியாய்ப் பொதுமையில் நிற்பன்' (மேற்படி சூ. 2, அதி. 4) ஆதலின், 'அடி' என்று சிவத்தையும் சிவஞானத்தையும் உணர்த்தலாயிற்று. உயிர்கள் அதை அடையுங்காலம். யான் எனப்படும் ஞாதாகவும், எனதெனப்படும் ஞானமும், அதற்கு விடயமாய் எனதெனப்படும் ஞேயமும் எனப் பகுத்துக்காணும் மயக்கவுணர்விற்கு ஏதுவாகிய மலவாசனை' நீங்குங்காலம் ஆதலின், 'பரை உயிரில் யான் எனது என்று அற நின்றது அடியாம்' என்றது உண்மை நெறிவிளக்கம். பின் வந்த குமரகுருபர முனிவரும் 'யான் எனது என்பது அற்ற இடமே திருவடி' என்றருளினார்.

கடவுளைச் சிவாகம விதிப்படி உருவுடையவராகக் கற்பித்துக் கொண்டு வழிபடுவார் அதன் திருவடிகளைக் குறிக்கும் உண்மையும் ஆய்ந்துணர்க, 'உருவினதடிமுடி' (தி.1 ப.126 பா.9). 'ஆரொருவருள் குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்' (தி.6 பா.18 ப.11). 'யேன யேன ஹி ருபேண ஸாதக: ஸம்ஸ் மரேந ததாதஸ்ய தந்மயதாம் யாதி சிந்தாமணி. இவ ஈஸ்வர:' என்ற சர்வசுரோத சங்கிரகம் கூறும் ஆற்றாலும் உருவ வழிபாட்டின் சிறப்பை உணர்க. என்று என்று – அடுக்கு. பலகாலும் அரற்றல் வேண்டுமென்றது குறித்து நின்றது. மலர் சாய்ந்த அடி – பூக்கள் வீழ்ந்த திருப்பாதங்களை. தாமரை தோற்றதிருத்தாள் எனலுமாம். சாய்ந்த – அகரம் தொகுத்தல். மலரால். அடிகளைச் சாய்ந்து (விழுந்து) பரவும் (வாழ்த்தும்) எனலுமாம்.

Behold! It is Civan, the Lord of Thiru-p-puravaar – Panang-kaattoor. In this city, the paddy fields are in plenty. The red paddy fields yield paddy of fine quality. The ear of grain (spear of grass) is known to be very tender and highly tasty also to the buffalos. They, therefore, reach such of these fields in the very early morning hours, and graze the tender spear of the grass to their stomach full. Then they go to deep water ponds and take bath to digest the grass they ate. In this city, the Vedic scholars make good research of the four Vedas and understand them. Then they all recite the four Vedas before God, praise the Lord's fame and dance before Him. They repeat this several times, spread fine flowers on His holy feet and prostrate before Him. Oh God! Shower Your kind grace on these good people. It is good to repeat His name and fame.

2041. செங்கயல்லொடுசேல்செருச்செயச் சீறியாழ்முரல்தேனினத்தொடு
பங்கயம்மலரும்புறவார்பனங்காட்டூர்க்
கங்கையும்மதியுங்கமழ்சடைக் கேண்மையாளொடுங்கூடிமான்மறி
அங்கையாடலனேஅடியார்க்கருளாயே. 5

செங்கய(ல்)லொடு சேல் செருச் செய, சீறியாழ்முரல் தேன்இனத்தொடு
பங்கயம் மலரும் புறவுஆர்பனங்காட்டூர்,
கங்கையும் மதியும் கமழ் சடைக் கேண்மையாளொடும் கூடி, மான்மறி
அம் கை ஆடலனே! அடியார்க்கு அருளாயே!

cegkaya(l)loTu cEl ceruc ceya, cIRiyAz mural tEn2 in2attoTu
pagkayam malarum puRavum Ar pan2agkATTUr,
kagkaiyum matiyum kamaz caTaik kENmaiyALoTum kUTi, mAn2maRi
am kai ATalan2E! aTiyArkku aruLAyE!

பொருள்: செங்கயல்மீன் சேல் மீன் இரண்டும் போர் செய்யச் சீறி யாழ் போல வண்டுகள் கூட்டம் முரல தாமரைப் பூக்கள் மலரும் நீர்வளம் உடைய புறவார் பனங்காட்டூரில், கங்கையும் மதியும் விளங்கும் சடைக் கேண்மையாளுடன் கூடி, மானமறியை அங்கையில் கொண்டு ஆடல் புரிபவனே! நின் அடியார்களுக்கு அருள்வாயே.

குறிப்புரை: செங்கயல் சேல் இரண்டும் போர் செய்ய மலரும், தேனினத்தோடு மலரும் என்றியைக்க. சிறுமை + யாழ் – சீறியாழ். பேரியாழ் வேறுண்டு. இப்பிரிவால் பாணரும் சிறுபாணர் பெரும்பாணர் என்றிரு வகைப்படுவர். தேன் – வண்டு. யாழ்முரல் – யாழின் ஒலி போல முரலு (ஒலித்)தல். கேண்மையாள் – உமாதேவியார். கேள்+மை – கேளாத்தன்மை. உரிமை, 'உன் பெருந்தேவி என்னும் உரிமை'. மறி – கன்று. ஆடல் (ஆள்+தல்) ஆளுதல். ஆடவன் – ஆளுதலை உடையவனே. மான் கன்றேந்திய அழகிய கையன் என்றவாறு. அகங்கையுமாம். 'அங்கையிற்படையாய்' (ப. 187, பா. 5).

Oh God! It is Civan, the Lord of Thiru-p-puravaar - Panang-kaattoor. In the city cool ponds are many full of water. In this pond, the carp and the cyprines fish have tussles between them. The bees fly with the humming noise, sounding like music from the lute, the bees fly round the lotus. In the temple of this city, our Lord is manifest. He keeps in His fragrant hair the lady of the Ganges and the beautiful moon. Of course He is one with His consort Uma Devi. Also He keeps in one of His beautiful hands a young deer. With all these He performs His cosmic dance. The devotees who pray and recite all these famous acts may get all Your grace.

2042. நீரினார்வரைகோலிமால்கடல் நீடியபொழில்சூழ்ந்துவைகலும்
பாரினார்பிரியாப்புறவார்பனங்காட்டூர்க்
காரினார்மலர்க்கொன்றைதாங்கு கடவுளென்றுகைகூப்பிநாள்தொறும்
சீரினால்வணங்குந்திறத்தார்க்கருளாயே. 6

நீரின் ஆர் வரை கோலி, மால்கடல் நீடிய பொழில் சூழ்ந்து வைகலும்
பாரினார் பிரியாப் புறவுஆர்பனங்காட்டூர்,
"காரின் ஆர் மலர்க்கொன்றை தாங்கு கடவுள்!" என்று கை கூப்பி, நாள்தொறும்
சீரினால் வணங்கும் திறத்தார்க்கு அருளாயே!

nIrin2 Ar varai kOli, mAl kaTal nITiya pozil cUzntu vaikalum
pArin2Ar piriyAp puRavu Ar pan2agkATTUr,
"kArin2 Ar malarkkon2Rai tAgku kaTavuL!" en2Ru kaikUppi, nALtoRum
cIrin2Al vaNagkum tiRattArkku aruLAyE!

பொருள்: நீர் அரணாகப் பொருந்திய எல்லையை அமைத்துக் கடல்போல் நீண்ட சோலைகளால் சூழப் பெற்றுப் பாருலகத்தவர்கள் நாள்தோறும் பிரியாத புறவார் பனங்காட்டூரில் கார்காலத்தில் மலரும் கொன்றை மலரை அணியும் கடவுளே என்று கைகூப்பி நாள்தோறும் புகழுடன் வணங்கும் திறமுடையவர்களுக்கு அருள்வாயே.

குறிப்புரை: நீரின் ஆர் வரை கோலி மால் கடல் நீடிய பொழில் – நீரால் (அரணாகப்) பொருந்திய எல்லையை வகுத்துப், பெரிய கடல் நெடுகப் பரவிய சோலை. சூழ்ந்து பிரியா ஊர் என்க. சூழ்தல் சோலையின் வினை. பிரியாமை பாரினாரது. பாரினார் – மண்ணுலகத்தார். வைகலும் பிரியா – நாடோறும் நீங்காது வழிபடும். காரின் ஆர்மலர்க் கொன்றை – 'கண்ணிகார்நறுங் கொன்றை' என்றவாறு. கார்காலத்தில் கொன்றை மிகுதியாகப் பூப்பதுணர்த்திற்று. கூப்பி – குவித்து. கூம்பி – தன்வினை, கூப்பி – பிறவினை.

Oh God! It is Civan, the Lord of Thiru-p-puravaar - Panang-kaattoor. Its earth keeps as its border very long seashores. All along the shores many groves with very big trees flourish. People living in this world everyday go to the temple and worship the Lord without any break. In this Thiru-p-puravaar - Panang-kaattoor, during the autumn season cassia flowers bloom in large numbers. Our God is decorated fully with these cassia flowers. The devotees while praying before our Lord say "Oh God! You wear cassia flowers which blossom in the autumn season in large quantity". With folded hands they pray to the Lord everyday in the most pious manner. Oh God! Kindly shower Your grace on these devotees.

2043. கையரிவையர்மெல்விரல்லவை காட்டியம்மலர்க்காந்தளங்குறி
பையராவிரியும்புறவார்பனங்காட்டூர்
மெய்யரிவையொர்பாகமாகவும் மேவினாய்கழலேத்திநாள்தொறும்
பொய்யிலாஅடிமைபுரிந்தார்க்கருளாயே. 7

கை அரிவையர் மெல்விரல்(ல்) அவை காட்டி, - அம்மலர்க்காந்தள், - அம் குறி
பை அராவிரியும் புறவுஆர்பனங்காட்டூர்,
மெய் அரிவை ஓர்பாகம்ஆகவும் மேவினாய்! கழல் ஏத்தி நாள்தொறும்
பொய் இலா அடிமை புரிந்தார்க்கு அருளாயே!

kai arivaiyar melviral(l) avai kATTi,--ammalarkkAntaL,--am kuRi
pai arAviriyum puRavu Arpan2agkATUr,
mey arivai OrpAkam Akavum mEvin2Ay! kazal Etti nALtoRum
poy ilA aTimai purintArkku aruLAyE!

பொருள்: மகளிரின் கையில் அமைந்துள்ள மெல்லிய விரல்களைப் போல அரும்பிப் பாம்பின் படம் போலக் காந்தள் விரியும் புறவார் பனங்காட்டூரில், உமையம்மை ஒரு பாகமாகத் திருமேனியில் மேவினாய்! உம்முடைய கழலணிந்த திருவடிகளைப் புகழ்ந்து நாள்தோறும் பொய்யிலா அடிமை புரிந்தாருக்கு அருள்வாயே.

குறிப்புரை: அரிவையர் – மகளிர். கைமெல்விரலவை – கையிலுள்ள மெல்லிய விரல்கள். அவை ஈண்டுச் சுட்டல்ல, நிலமது பொருளது என்பவற்றில் அது என்னும் ஒருமை சுட்டாதவாறு போல இதிற்பன்மை சுட்டாது நின்றது. நிலம் பொருள் என்றல்லாத வேறு பொருளில்லை, ஈண்டு விரலல்லாத வேறு பொருள் 'அவை' என்றதற்கு இல்லை. பை – படம். அரா – பாம்பு. அராவிரியும் – அராவைப்போல மலரும், காட்டி விரியும். அரிவை – உமாதேவியார். மெய் – திருமேனியில். ஓர் பாகமாகவும் மேவியவனே! (ப. 188 பா. 11). பொய்யிலா அடிமை – மெய்யடிமை.

Oh God! It is Civan, Lord of Thiru-p-puravaar - Panang-kaattoor. In this city, many gardens flourish. In these gardens the gloria flowers open their petals as if a snake opens its hood; also the petals in these flowers symbolize the tender fingers of young girls. Oh God! You are manifest in the temple with Your consort Uma Devi on half of Your body and grace the people who gather here. We beg Your grace on behalf of those sincere devotees who are very true without any falsehood. They prostrate at Your holy feet everyday reciting Your fame as "Oh Lord Civa! You keep Your consort our goddess Uma Devi on the left half of Your body and You are the concomitant God!".

2044. தூவியஞ்சிறைமெல்நடையன மல்கியொல்கியதூமலர்ப்பொய்கைப்
பாவில்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்
மேவியந்நிலையாயரக்கன தோளடர்த்தவன்பாடல்கேட்டருள்
ஏவியெம்பெருமானென்பவர்க்கருளாயே. 8

"தூவி அம்சிறை மெல்நடை அனம் மல்கி ஒல்கிய தூ மலர்ப் பொய்கை,
பாவில் வண்டு அறையும் புறவுஆர்பனங்காட்டூர்,
மேவி, அந்நிலைஆய் அரக்கன தோள் அடர்த்து, அவன் பாடல் கேட்டு, அருள்
ஏவிய எம்பெருமான்!" என்பவர்க்கு அருளாயே!

"tUvi am ciRai men2 naTai an2am malki olkiya tU malarp poykai,
pAvil vaNTu aRaiyum puRavu Ar pan2agkATTUr
mEvi, annilai Ay arakkan2a tOL aTarttu, avan2 pATal kETTu, aruL
Eviya perumAn2!" en2pavarkku aruLAyE!

பொருள்: மெல்லிய பூஞ்சிறகுகளையுடைய அன்னப் பறவைகள் நிறைந்து தங்குதலால் நுடங்கும் தாமரை மலர்களுடைய பொய்கைப் பரப்பில் வண்டுகள் ஒலிக்கும் திருவார் பனங்காட்டூரில் மேவி இருப்பவரே! அரக்கனாகிய இராவணன் வலிமையை அடர்த்துப் பின் அவன் பாடல் கேட்டு அருள் செய்தாய். நின் பணி செய்ய ஆணை தருக என்னும் அடியவருக்கு அருள்வாயே.

குறிப்புரை: தூவி – இறகினடிப்பாகம். அனம் – அன்னப்பறவை. பாவில் – பரப்பில். ஏவிய – ஏவல் செய்ய. ஆக்ஞை செய்த.

Oh God! It is Civan, Lord of Thiru-p-puravaar - Panang-kaattoor. Flowery gardens are in large numbers in this city near the ponds. Here the bees make a humming noise like sweet music while they fly near the flowers to suck honey. In the ponds nearby a convoy of swans with feathers soft walk in slow motion which is a beautiful scene. Oh God! You subdued the mightiness of king Raavanan suppressing his shoulders. Later when he recited songs on Your fame, You excused him and bestowed mercy on him. When the devotees praise You quoting these details You may bestow Your grace on them.

2045. அந்தண்மாதவிபுன்னைநல்ல அசோகமும்மரவிந்தமல்லிகை
பைந்தண்ஞாழல்கள்சூழ்புறவார்பனங்காட்டூர்
எந்திளம்முகில்வண்ணன்நான்முகன் என்றிவர்க்கரிதாய்நிமிர்ந்ததொர்
சந்தமாயவனேதவத்தார்க்கருளாயே. 9

அம் தண் மாதவி, புன்னை, நல்ல அசோகமும்(ம்), அரவிந்தம், மல்லிகை,
பைந் தண் ஞாழல்கள், சூழ் புறவுஆர்பனங்காட்டூர்,
எந்து இள(ம்) முகில்வண்ணன், நான்முகன், என்று இவர்க்கு அரிதுஆய் நிமிர்ந்தது ஒர்
சந்தம் ஆயவனே! தவத்தார்க்கு அருளாயே!

am taN mAtavi, pun2n2ai, nalla acOkamum(m), aravintam, mallikai,
pain taN nAzalkaL, cUz puRavu Ar pan2agkATTUr,
entu iLa(m) mukilvaNNan2, nAn2mukan2, en2Ru ivarkku aritu Ay nimirntatu or
cantam Ayavan2E! tavattArkku aruLAyE!

பொருள்: அழகும் குளிர்ச்சியும் வாய்ந்த மாதவி, புன்னை, நல்ல அசோகு, தாமரை, மல்லிகை, பசிய குளிர்ச்சியுடைய ஞாழல்கள் சூழ்ந்த திருவார் பனங்காட்டூரில், மேக வண்ணனாகிய திருமால், நான்முகன் என்னும் இத்தேவர்களின் காட்சிக்கு அரிதாக உயர்ந்தவனே! தவமுடையவருக்கு அருள்வாயே.

குறிப்புரை: அம்தண் – அழகும் குளிர்ச்சியும் உடைய. அரவிந்தம் – தாமரை. தண்+ஞாழல்கள் – தணாழல்கள். ஞாழல் மரம். எந்து – எமது! முகில் – மேகம் என்ற இவர்க்கு அகரம் தொகுத்தல். சந்தம் – அழகு. கருத்து. ஆயவன் – ஆனவன்.

Oh God! It is Civan, Lord of Thiru-p-puravaar - Panang-kaattoor. This city has many flower gardens all around the city. Here various kinds of flowers are grown such as cool maatthirai - a large creeper gaertinora racemosa, caulophyllum, well grown poly olthira (asoka), lotus, sacred basil and soft and cool cragaty tree. These flowers with the best look spread their fragrance all around. Oh Lord! We beg Your grace for those men of penance who hail You as "Oh! the beautiful effulgence supreme! You could not be comprehended by Lord Vishnu, the god, coloured like the young cloud and the four-faced Brahma". You kindly grace these devotees.

2046. நீணமார்முருகுண்டுவண்டினம் நீலமாமலர்கவ்விநேரிசை
பாணில்யாழ்முரலும்புறவார்பனங்காட்டூர்
நாணழிந்துழல்வார்சமணரும் நண்பில்சாக்கியரும்நகத்தலை
ஊணுரியவனேயுகப்பார்க்கருளாயே. 10

நீணம் ஆர் முருகு உண்டு, வண்டுஇனம், நீலமாமலர் கவ்வி, நேரிசை
பாணி யாழ்முரலும் புறவுஆர்பனங்காட்டூர்,
நாண் அழிந்து உழல்வார் சமணரும் நண்பு இல் சாக்கியரும் நக, தலை
ஊண் உரியவனே! உகப்பார்க்கு அருளாயே!

nINam Ar muruku uNTu, vaNTu in2am, nIla mA malar kavvi, nEricai
pANi yAzmuralum puRavu Arpan2agkATTUr,
nAN azintu uzalvAr camaNarum naNpu il cAkkiyarum naka, talai
UN uriyavan2E! ukappArkku aruLAyE!

பொருள்: வண்டுகள் தேனை மிகுதியாக உண்டு பெரிய நீல மலர்களில் தங்கி நேரிசை என்னும் பண்ணை யாழில் மிழற்றுவது போல முரலும் திருவார் பனங்காட்டூரனே! ஆடையின்றி நாணம் அழிந்து திரியும் சமணரும் நட்புச் செய்யத் தகுதியில்லாத சாக்கியரும் சிரிக்க, மண்டையோட்டில் பிச்சை ஏற்று உணவு கொள்ளுதற்கு உரியவனே! உன்னை விரும்பும் அடியவர்களுக்கு அருள்வாயே.

குறிப்புரை: நீணம் – நீளம், 'நீணுதல்' (தி. 1 ப. 1 பா. 9) முருகு – தேன். பாண் – பாட்டு. நக – சிரிக்க. தலையூண் உரியவனே – பிரம கபாலத்தில் வாங்கி உணவு கொள்ளுதற்கு உரியவனே.

Oh God! It is Civan, Lord of Thiru-p-puravaar - Panang-kaattoor. In this city, flowers are many in the water ponds with honey brimful. The bees in swarms suck the nectar in the large blue flowers. Thereafter they fly over the flowers humming some notes, melodious like that of a lute. You, the God in the temple of this city, are mocked at by the Jains who lack dignity and the friendless Buddhists, for begging alms in the skull You carry. We beg You to shower Your grace on those devotees who admire Your actions and are pleased with You.

2047. மையினார்மணிபோல்மிடற்றனை மாசில்வெண்பொடிப்பூசுமார்பனைப்
பையதேன்பொழில்சூழ்புறவார்பனங்காட்டூர்
ஐயனைப்புகழானகாழியுள் ஆய்ந்தநான்மறைஞானசம்பந்தன்
செய்யுள்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே. 11

மையின் ஆர் மணிபோல் மிடற்றனை மாசு இல் வெண்பொடிப் பூசும் மார்பனை,
பைய தேன் பொழில் சூழ் புறவுஆர்பனங்காட்டூர்,
ஐயனை, புகழ்ஆன காழியுள் ஆய்ந்த நால்மறை ஞானசம்பந்தன்
செய்யுள் பாட வல்லார், சிவலோகம் சேர்வாரே.

maiyin2 Ar maNi pOl miTaRRan2ai, mAcu il veNpoTip pUcum mArpan2ai,
paiya tEn2 pozil cUz puRavu Ar pan2agkATTUr,
aiyan2ai, pukaz An2a kAziyuL Aynta nAlmaRai njAn2acampantan2
ceyyuL pATa vallAr, civalOkam cErvArE.

பொருள்: நீலமணி போன்ற கண்டத்தை உடையவனை, குற்றம் நீக்கும் திருநீறு பூசும் மார்பனை, பசிய தேன் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட புறவார் பனங்காட்டூரின் தலைவனை, புகழ் நிறைந்த சீகாழியுள் நான்கு வேதங்களுள் ஆராய்ச்சி மிக்க ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகச் செய்யுளைப் பாடவல்லவர்கள் சிவலோகம் சேர்வர்களே.

குறிப்புரை: மையின் – மேகத்தைப்போல. மாசு – குற்றம். பைய – பசுமையுடைய. ஆய்ந்த – (முற்பிறவியில்) ஆராய்ந்த. செய்யுள் – இத்திருப்பதிகத்தை.

Oh God Civa! You are the Lord of Thiru-p-puravaar - Panang-kaattoor. The city is full of flowery gardens full of nectar. Your neck looks dark blue in colour. You have smeared Your chest with pure white sacred ashes. Our saint Thiru-gnana-Sambandar, hailing from the sacred city of Seerkaazhi, is very well-versed with the four Vedas. He sang on our Lord in Thiru-p-puravaar - Panang-kaattoor these sacred ten verses in Tamil. Those devotees who can recite these ten songs will reach the blessed world of Civa.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

53ஆம் பதிகம் முற்றிற்று
End of 53rd Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 190 பதிக எண்: 54

54. திருப்புகலி

54. THIRU-P-PUKALI

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

137ஆவது பதிகம் காண்க.

பதிக வரலாறு

137ஆவது பதிகம் காண்க.

திருச்சிற்றம்பலம்

2048. உருவார்ந்தமெல்லியலோர்பாகமுடையீரடைவோர்க்குக்
கருவார்ந்தவானுலகங்காட்டிக்கொடுத்தல்கருத்தானீர்
பொருவார்ந்ததெண்கடலொண்சங்கந்திளைக்கும்பூம்புகலித்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. 1

உரு ஆர்ந்த மெல்லியல் ஓர் பாகம் உடையீர்! அடைவோர்க்குக்
கரு ஆர்ந்த வான்உலகம் காட்டிக் கொடுத்தல் கருத்துஆனீர்!
பொரு ஆர்ந்த தெண்கடல் ஒண்சங்கம் திளைக்கும் பூம் புகலி,
திரு ஆர்ந்த கோயிலே கோயில்ஆகத் திகழ்ந்தீரே.

uru Arnta melliyal OrpAkam uTaiyIr! aTaivOrkkuk
karu Arnta vAn2 ulakam kATTik koTuttal karuttu An2Ir!
poru Arnta teNkaTal oNcagkam tiLaikkum pUm pukali,
tiru Arnta kOyilE kOyil Akt tikazntIrE.

பொருள்: திருமேனிப் பொலிவுடைய மெல்லியளை, உம் திருமேனியில் பாகமாக உடையவரே! உம்மை அடைந்தவருக்கு அருள் வாய்ந்த வானுலகத்தைக் காட்டிக் கொடுத்தலில் கருத்தாக உடையவரே! கரையில் மோதுகின்ற தெளிந்த கடலில் ஒளியுடைய சங்குகள் திளைக்கும் திருப்புகலியுள் செல்வமுடைய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு விளங்கினீரே!

குறிப்புரை: உரு – திருமேனிப் பொலிவு. மெல்லியல் – உமாதேவியார். கரு – உருவமைந்த மாநகர்க்குக் கருவமைந்த மாடம்போல என்றதில் உள்ள பொருளே ஈண்டுங் கொள்ளப்படினும். அங்குப் பொருட்கருவும் இங்கு அருட்கருவும் என்று வேறுபட்டு நிற்கும். பொருஆர்ந்த – மோதுதல் நிறைந்த. புகலி – சீகாலி.

கோயிலாக – தலைமையில்லமாக. கோ – தலைவன், தலைமை தலைவனில்லம் இரண்டன் வேறுபாடு உணர்க.

It is Civan, the Lord of Poom-Pukali. Oh God! You have retained the most beautiful and tender goddess on the left side of Your body. Poom-Pukali is the most sacred city and beautiful too, with the bright sea conches dashing against the shore and splashing the water happily. You have chosen this beautiful temple as Your abode; it might be because You are prompted by Your desires to bestow the heavenly abode on Your followers who constantly worship You. Oh God! with goddess Umaa Devi as a part of Your body, You reside in this holy temple (Note: Pukali or Poom-Pukali is one of the twelve names of Seerkaazhi).

2049. நீரார்ந்தசெஞ்சடையீர்நிறையார்கழல்சேர்பாதத்தீர்
ஊரார்ந்தசில்பலியீருழைமானுரிதோலாடையீர்
போரார்ந்ததெண்டிரைசென்றணையுங்கானற்பூம்புகலிச்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. 2

நீர் ஆர்ந்த செஞ்சடையீர்! நிறை ஆர் கழல் சேர் பாதத்தீர்!
ஊர் ஆர்ந்த சில்பலியீர்! உழைமான்உரி-தோல்ஆடையீர்!
போர் ஆர்ந்த தெண்திரை சென்று அணையும் கானல் பூம் புகலி,
சீர் ஆர்ந்த கோயிலே கோயில்ஆகச் சேர்ந்தீரே.

nIr Arnta cenjcaTaiylr! nirai Ar kazal cEr pAtattIr!
Ur Arnta cilpaliylr! uzaimAn2 uri-tOl ATaiylr!r
pOr Arnta teNtirai cen2Ru aNaiyum kAn2al pUm pukali,
cIr Arnta kOyilE kOyil Akac cErntIrE.

பொருள்: கங்கையாற்றைத் தாங்கிய சிவந்த சடையை உடையீர்! வரிசையான கழல்கள் சேர்ந்த திருவடியினீர்! ஊரில் சிறு பிச்சை கொள்வீர்! உழையாகிய மானின் தோலை ஆடையாக உடையீர்! மோதுகின்ற அலைகள் சென்று அணையும் கடற்கானங்கள் கொண்ட அழகிய திருப்புகலியில் அழகுடைய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு விளங்கினீரே!

குறிப்புரை: நீர் – கங்கை நீர். உழைமான் – உழையாகியம்மான் 'புல்வாய் (புலி) உழை மரையே கவரி', 'நவ்வியும் உழையும்' என்னும் மரபியற் சூத்திரப்பகுதிகளால் மானின் பேதம் புலப்படும்.

It is Civan, the Lord of Poom-Pukali. You have permitted on Your matted red hair the gushing Ganges river. You have ankleted feet. You are our God going all over the cosmos for alms and accept the alms given by the ladies. You wear the deer skin on Your waist. You have manifested Yourself to grace the devotees who reach this temple; this is a blessed city because of Your presence. The rising tides of the sea dash against the shores and the groves and finally stay in the groves as backwaters. In the temple of this beautiful city surrounded by sea groves, in this celebrated temple You reside gracefully.

2050. அழிமல்குபூம்புனலுமரவுஞ்சடைமேலடைவெய்த
மொழிமல்குமாமறையீர்கறையார்கண்டத்தெண்டோளீர்
பொழில்மல்குவண்டினங்களறையுங்கானற்பூம்புகலி
எழில்மல்குகோயிலேகோயிலாகஇருந்தீரே. 3

அழி மல்கு பூம் புனலும், அரவும், சடை மேல் அடைவு எய்த,
மொழி மல்கு மா மறையீர்! கறை ஆர் கண்டத்து எண்தோளீர்!
பொழில் மல்கு வண்டுஇனங்கள் அறையும் கானல் பூம் புகலி,
எழில் மல்கு கோயிலே கோயில்ஆக இருந்தீரே.

azi malku pUm pun2alum, aravum, caTaimEl aTaivu eyta,
mozi malku mAmaRaiyIr! kaRai Ar kaNTattu eNtOLIr!
pozil malku vaNTu in2agkaL aRaiyum kAn2al pUm pukali,
ezil malku kOyilE kOyil Aka iruntIrE.

பொருள்: அழித்தல் வல்ல கங்கையின் அழகிய நீரும் பாம்பும் சடைமேல் தங்க, வாய்மொழியால் நிலைபெற்ற பெரிய வேதங்களை உடையீர்! நீலகண்டத்தையும் எட்டுத் தோள்களையும் உடையீர்! பூஞ்சோலைகளில் நிறைந்த வண்டினங்கள் ஒலிக்கும் கானங்களை உடைய அழகிய திருப்புகலியுள் எழில் நிறைந்த திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு விளங்கினீரே!

குறிப்புரை: அழி – மிகுதி. 'அற்றார் அழிபசி'. அடைவு – சார்வு. இறை – நஞ்சின் கறுப்பு. எழில் – அழகு.

Oh! It is Civan, our God of Poom-Pukali. You, our God! You have adorned Your matted hair with the surging waters of the river Ganges. Also You have kept the snakes in the matted hair. You, our Lord, are the embodiment of the four Vedas abounding in rich, sacred words. You, our Lord with dark blue coloured neck! You, our God with

eight shoulders! You grace the devotees who visit Your holy feet in Your temple. In the groves of the city beetles in large numbers fly all over, singing sweet music in that area. Here in Poom-Pukali, You have selected the beautiful temple as Your living place.

2051. கையிலார்ந்தவெண்மழுவொன்றுடையீர்கடியகரியின்தோல்
மயிலார்ந்தசாயல்மடமங்கைவெருவமெய்போர்த்தீர்
பயிலார்ந்தவேதியர்கள்பதியாய்விளங்கும்பைம்புகலி
எயிலார்ந்தகோயிலேகோயிலாகஇசைந்தீரே. 4

கையில் ஆர்ந்த வெண்மழு ஒன்று உடையீர்! கடிய கரியின்தோல்
மயில் ஆர்ந்த சாயல் மடமங்கை வெருவ, மெய் போர்த்தீர்!
பயில் ஆர்ந்த வேதியர்கள் பதியாய் விளங்கும் பைம்புகலி,
எயில் ஆர்ந்த கோயிலே கோயில்ஆக இசைந்தீரே.

kayil Arnta veNmazu on2Ru uTaiyIr! kaTiya kariyin2tOl,
mayil Arnta cAyal maTamagkai veruva, mey pOrttIr!
payil Arnta vEtiyarkaL pati Ay viLagkum paimpukali,
eyil Arnta kOyilE kOyil Aka icaintIrE.

பொருள்: கையில் ஏந்திய மழுவாயுதத்தை உடையீர்! மயில் போன்ற சாயலினை உடைய உமையம்மை அஞ்சத் திருமேனியின்மேல் சினமிக்க யானையின் தோலினைப் போர்த்தீர்! மறை பயிலும் வேதியர்களின் பதியாக விளங்கும் திருப்புகலியுள் மதிலை உடைய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு விளங்கினீரே!

குறிப்புரை: கையில் என்பதில் ஐகாரம் ஒரு மாத்திரை ஒலிப்பது 'சங்கக் கயனும்' (தி. ப. 36 பா. 9). கரி – யானை. ஆர்ந்த – ஒத்த. வெருவ – (அஞ்சிவாய்) வெருவுதலடைய. தோல் போர்த்தீர் என்க. பயில் – (மறைப்) பயிற்சி. முதனிலைத் தொழிற்பெயர். எயில் – மதில்.

Oh! It is Civan, the Lord of Poom-Pukali. You, our God, hold the white battle axe in one of Your hands. You, our Lord have covered Your body with the hide of the rutted elephant after killing it even when our goddess, the peacock-like young damsel shuddered to see that fierce action. In the city of Poom-Pukali, scholars of the four Vedas live in large numbers. In this beautiful city, the blessed place of all that is good. You have manifested Yourself in the sacred temple which has tall well-built walls all around.

2052. நாவார்ந்தபாடலீராடலரவமரைக்கார்த்தீர்
பாவார்ந்தபல்பொருளின்பயன்களானீரயன்பேணும்
பூவார்ந்தபொய்கைகளும்வயலுஞ்சூழ்ந்தபொழிற்புகலித்
தேவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. 5

நா ஆர்ந்த பாடலீர்! ஆடல் அரவம் அரைக்கு ஆர்த்தீர்!
பா ஆர்ந்த பல்பொருளின் பயன்கள் ஆனீர்! அயன் பேணும்
பூ ஆர்ந்த பொய்கைகளும் வயலும் சூழ்ந்த பொழில் புகலி,
தே ஆர்ந்த கோயிலே கோயில்ஆகத் திகழ்ந்தீரே.

nA Arnta pATalIr! ATal aravam araikku ArttIr!
pA Arnta palporuLin2 payan2kaL An2Ir! ayan2 pENum
pU Arnta poykaikaLum vayalum cUznta pozil pukali,
tE Arnta kOyilE kOyil Akat tikazntIrE.

பொருள்: நாவில் நிறைந்த வேதப் பாடல் உடையீர். படமெடுத்து ஆடுகின்ற பாம்பினை இடுப்பில் கச்சாகக் கட்டினீர். பாட்டும் அதன் பொருளும் பயனும் ஆனீர். பிரமன் விரும்பும், பூவார்ந்த பொய்கைகளும் வயலும் பொழில்களும் சூழ்ந்த திருப்புகலியுள் தெய்வீகம் வாய்ந்த திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு விளங்கினீரே!

குறிப்புரை: பாடல் – வேதகீதம். அரைக்கு – திருவிடையில். ஆர்த்தீர் – கட்டினீர். பாவும் அதன் பொருளும் அதன் பயனும் ஆயினீர். அயன் பேணும் புகலி – பிரமன் பூசித்த சீகாழி, பிரமபுரம். பூ – தாமரை மலர். 'பூவினுக்கருங்கலம்', 'பொங்கு தாமரை' பூவிற்குத் தாமரையே. தே – பிரளய காலத்திலும் அழியாத தெய்வத்தன்மை.

Oh! It is Civan, the Lord of Poom-Pukali. You, our God, You are the best musician singing the sacred songs that suit Your tongue. You, our God, have the dancing snake around Your waist as an ornament. You are the effect and also the causes which various scriptures highlight in their hymns. The sacred city of Poom-Pukali has many tanks full of lotus flowers, rich paddy fields and gardens with different kinds of sweet flowers. This is liked most by the four-faced Brahma who once worshipped our Lord in this divine temple in the city. You have selected the same temple as Your best place and have manifested Yourself here and grace the devotees who come and worship You in the temple.

2053. மண்ணார்ந்தமண்முழவந்ததும்பமலையான்மகளென்னும்
பெண்ணார்ந்தமெய்மகிழப்பேணியெரிகொண்டாடினீர்
விண்ணார்ந்தமதியமிடைமாடத்தாரும்வியன்புகலிக்
கண்ணார்ந்தகோயிலேகோயிலாகக்கலந்தீரே. 6

மண் ஆர்ந்த மண்முழவம் ததும்ப, மலையான்மகள் என்னும்
பெண் ஆர்ந்த மெய் மகிழப் பேணி, எரி கொண்டு ஆடினீர்!
விண் ஆர்ந்த மதியம் இடை மாடத்து ஆரும் வியன்புகலி,
கண் ஆர்ந்த கோயிலே கோயில்ஆகக் கலந்தீரே.

maN Arnta maNamuzavam tatumpa, malaiyAn2makaL en2n2um
peN Arnta mey makizap pENi, eri koNTu ATin2Ir!
viN Arnta matiyam miTai mATattu Arum viyan2pukali,
kaN Arnta kOyilE kOyil Akak kalantIrE.

பொருள்: மண் பொருந்திய மத்தளம் ஒலிக்க, மலையான் மகளாகிய பார்வதி எனும் பெண் பொருந்திய பாகம் மகிழ, விரும்பி எரி ஏந்திக் கூத்தாடினீர். ஆகாயத்தில் பொருந்திய மதியம் தன் ஊடு செல்ல உயர்ந்த மாடங்களை உடைய அகன்ற திருப்புகலியின்கண் பொருந்திய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு தங்கினீர்.

குறிப்புரை: மண் – மார்ச்சனை. முழவம் – மத்தளம் (மிருதங்கம்) ததும்ப மகிழ ஆடினீர் என்க. மலையான் மகள் என்னும் பெண் – இமாசலராசன் குமாரி எனப்படும் உமாதேவியார். நாமகள், திருமகள், மலைமகள், மலைப்பெண் என்புழிப் போலத் தேவி என்ற பொருளைக் குறித்தலறிக. மெய் – திருமேனி. மகிழ – பூரிக்க. மெய் மகிழ என்றது அரிய பிரயோகம். மிடை – நெருங்கிய. சந்திர மண்டலம் அளவும் ஓங்கிய மாடம் என்றவாறு. வண்கொண்டல் விட்டு மதி முட்டுவன மாடம். வியன் – அகலம். புகலிக்கண் ஆர்ந்த சீகாழியில் பொருந்திய.

Oh! It is Civan, the Lord of Poom-Pukali. You, our God did that cosmic dance amidst the music of percussion drums, smeared with a black substance to increase and regulate the sound of the drum. Our goddess, the daughter of the mountain was very much pleased to see Your dance. You are manifest in this temple. The temple in Poom-Pukali pleases the people with its beautiful structure and its sacredness. You have manifested Yourself in this holy temple at Pukali. With Your presence, the place becomes the most celebrated one with all glories. The city is full of many broad palaces where the moon, while traversing the sky, touches the high towers of the palaces.

2054. களிபுல்குவல்லவுணரூர்மூன்றெரியக்கணைதொட்டீர்
அளிபுல்குபூமுடியீரமரரேத்தஅருள்செய்தீர்
தெளிபுல்குதேனினமுமலருள்விரைசேர்திண்புகலி
ஒளிபுல்குகோயிலேகோயிலாகவுகந்தீரே. 7

களி புல்கு வல் அவுணர் ஊர்மூன்று எரியக் கணை தொட்டீர்!
அளி புல்கு பூ முடியீர்! அமரர் ஏத்த அருள்செய்தீர்!
தெளி புல்கு தேன்இனமும் அலருள் விரை சேர் திண் புகலி,
ஒளி புல்கு கோயிலே கோயில்ஆக உகந்தீரே.

kaLi pulku val avuNar Ur mUn2Ru eriyak kaNai toTTIr!
aLi pulku pU muTiyIr! amarar Etta, aruL ceytIr!
teLi pulku tEn2 in2amum alaruL virai cEr tiN pukali,
oLi pulku kOyilE kOyil Aka ukantIrE.

பொருள்: மதம் கொண்ட வலிய அவுணர்களுடைய கோட்டைகள் மூன்றும் எரிந்து விழக் கணை எய்தீர். வண்டுகள் தங்கும் பூக்களை முடியில் அணிந்தீர். தேவர்கள் ஏத்த அருள் புரிந்தீர். தெளிவு கொண்ட தேனும் தேன் வண்டுகளின் கூட்டமும் மலரின் மணமும் சேரும் திருப்புகலியுள் ஒளி பொருந்திய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே.

குறிப்புரை: களி – களிப்பு. முதனிலைத் தொழிற்பெயர். புல்கு – பொருந்திய. மூன்று ஊர் – முப்புரம். அளி – வண்டுகள். அமரர் – தேவர். மரணமில்லாதவர் – நெடிது வாழ்பவர். ஏத்த – துதிக்க. தெளி – தெளிவு. கலங்கலின்மை – கலங்கல் நீக்கம். விரை மணம். ஒளி – சிவப்பிரகாசம். சுடரொளியுமாம். உகந்தீர் – விரும்பினீர்.

Oh! It is Civan, the Lord of Poom-Pukali. The exhilarated asuras inflicted intolerable misery on the devas due to their mightiness. Our Lord with a single arrow, burnt the three flying fortresses of the asuras along with the people who lived there. Your matted hair with its fragrant flowers attracts bees that make noise like music. You blessed the angels, hearing their heartfelt prayers. You are happily manifested in the holy temple of Pukali. Because of Your presence the celebrated place is full of lights and fragrance from the flowers, full of honey that attracts bees all around. You are manifest in this holy temple, gracing the devotees who worship You.

2055. பரந்தோங்குபல்புகழ்சேரரக்கர்கோனைவரைக்கீழிட்
டுரந்தோன்றும்பாடல்கேட்டுகவையளித்தீருகவாதார்
புரந்தோன்றுமும்மதிலுமெரியச்செற்றீர்பூம்புகலி
வரந்தோன்றுகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 8

*பரந்து ஓங்கு பல்புகழ் சேர் அரக்கர்கோனை வரைக்கீழ் இட்டு,
உரம் தோன்றும் பாடல் கேட்டு, உகவை அளித்தீர்! உகவாதார்
புரம் தோன்று மும்மதிலும் எரியச் செற்றீர்! பூம் புகலி,
வரம் தோன்று கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.*

parantu Ogku palpukaz cEr arakkar kOn2ai varaikkIz iTTu,
uram tOn2Rum pATal kETTu, ukavai aLittIr! ukavAtAr
puram tOn2Ru mummatilum eriyac ceRRIr! pUm pukali,
varam tOn2Ru kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: உலகெங்கும் பரவி ஓங்கிய புகழ் சேர்ந்த அரக்கர் கோன் இராவணனைக் கயிலை மலையின் கீழ் நசுக்கி, அவன் அறிவு சார்ந்த பாடல்களைப் பாடக் கேட்டு அவன் விரும்பியவற்றை அளித்தீர். உம்மை விரும்பாத அரக்கரின் நகரம் தோன்றும் மூன்று கோட்டைகளையும் எரித்து ஒழித்தீர். அழகிய திருப்புகலியில் வரந்தரும் திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே.

குறிப்புரை: பரந்து ஓங்குபல் புகழ் – உலகம் எங்கும் பரவி ஓங்கிய பெருங்கீர்த்தி, இராவணன் திரிலோக சஞ்சாரியாதலின் அத்தகு புகழ் பெற்றனன். உரம் – அறிவு. கைத்தலங்கள் . . . பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப் பரிந்து அவனுக்கு இராவணன் என்று ஈந்த நாமதத்துவனை...ச் சாராதே சாலநாள் போக்கினேனே (தி.6 ப.79 பா.10). 'எறியுமா கடல் இலங்கையர்கோனை . . . அடர்ந்திட்டுக் குறிகொள்' பாடலின் இன்னிசை கேட்டுக் கோலவாளொடு நாளது கொடுத்த செறிவு கண்டு நின் திருவடியடைந்தேன் செழும் பொழிற்றிருப்புன் கூருளானே (தி.7 ப.55 பா.9). 'அரக்கன் ஆற்றல் அழித்து அவன் பாட்டுக்கு அன்று இரங்கிய வென்றியினானை' (தி.7 ப.62 பா.9). (ஸாம்பி: விவிதை: ஸ்தோத்ரை ப்ரணம்யஸ தஸாநந:) என்று வான்மீகி ராமாயணம் உணர்த்து மாற்றால் அச்சாமவேதத்தையே உணரத்தோன்றும் பாடல் என்றார். புரம் . . . மும்மதில் – முப்புரமாகத் தோன்றிய மதில். வரம் தோன்று கோவில் – வரபுரம் ஒன்றுணர் சிரபுரத்துறைந்தனை (தி. 1 ப. 128 அடி 31).

Oh! It is Civan, the Lord of Poom-Pukali. The king of Sri Lanka, Raavanan, despite his fame over the multiworlds for his virtuous devotion to Lord Civa, once suffered under the Himalayan mountain, pressed by our Lord. Later he sang

melodious songs of Saama Geetham. On hearing his song our Lord blissfully excused him and granted Raavanan longevity. Those asuras, who were antagonists of our Lord, were burnt along with their three flying fortresses. In the beautiful city of Pukali You have happily manifested Yourself and graced the holy temple as the temple of boons to those devotees who worship Your holy feet.

2056. சலந்தாங்குதாமரைமேலயனுந்தரணியளந்தானுங்
கலந்தோங்கிவந்திழிந்துங்காணாவண்ணங்கனலானீர்
புலந்தாங்கிஐம்புலனுஞ்செற்றார்வாழும்பூம்புகலி
நலந்தாங்குகோயிலேகோயிலாகநயந்தீரே. 9

சலம் தாங்கு தாமரைமேல் அயனும் தரணி அளந்தானும்,
கலந்தோங்கி வந்து இழிந்தும், காணா வண்ணம் கனல் ஆனீர்!
புலம் தாங்கி ஐம்புலனும் செற்றார் வாழும் பூம் புகலி,
நலம் தாங்கு கோயிலே கோயில்ஆக நயந்தீரே.

calam tAgku tAmarai mEl ayan2um, taraNi aLantAn2um,
kalantu Ogki vantu izintum, kANA vaNNam kan2al An2Ir!
pulam tAgki aimpulan2um ceRRAr vAzum pUm pukali,
nalam tAgku kOyilE kOyil Aka nayantIrE.

பொருள்: நீர் தாங்குகின்ற தாமரை மலர் மேல் இருக்கும் பிரமனும் உலகை மூவடியால் அளந்த திருமாலும் தம்மில்கூடி ஒருவன் அன்னமாக ஆகாயத்தில் பறந்து ஓங்கியும், மற்றவன் ஏனமாய்ப் பூமியைக் குடைந்து இழிந்தும் காணமுடியாதவாறு நெருப்பாக நின்றீர். ஐம்புலனையும் வென்று மெய்யுணர்வு கொண்டவர்கள் வாழும் பொலிவுடைய திருப்புகலியில் அழகிய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாக விரும்பினீரே.

குறிப்புரை: சலம் – நீர். அயன் – பிரமன். தரணி – பூமி. அளந்தான் – திருமால். மாவலியிடம் மூவடி மண் பெற்ற வரலாறு. ஓங்கியவன் அயன், இழிந்தவன் அரி. கனல் – தீ. புலம் – மெய்யுணர்வு. செற்றார் – அழித்த ஞானியார். அடியார். நலம் – அழகு, நன்மை. நயந்தீர் – விரும்பினீர்.

Oh! It is Civan, the Lord of Poom-Pukali. The creator Brahma who is seated in the lotus flower and Lord Vishnu who measured the earth and cheated the king Maavali - they both went out into the sky and deep into the earth to see and worship the holy head and feet of Civan. They failed and could not comprehend. At this stage,

our God rose as an effulgence of indescribable nature. In this city, the scholars who are well-versed in divine knowledge and control their five senses live in large numbers. They visit the temple, and worship our Lord. Oh God! You have selected and manifested Yourself in such a holy temple.

2057. நெடிதாயவன்சமணும்நிறைவொன்றில்லாச்சாக்கியருங்
கடிதாயகட்டுரையாற்கழறமேலோர்பொருளானீர்
பொடியாருமேனியினீர்புகலிமறையோர்புரிந்தேத்த
வடிவாருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 10

நெடிது ஆய வன்சமணும், நிறைவு ஒன்று இல்லாச் சாக்கியரும்,
கடிதுஆய கட்டுரையால் கழற, மேல் ஓர் பொருள்ஆனீர்!
பொடி ஆரும் மேனியினீர்! புகலி மறையோர் புரிந்து ஏத்த,
வடிவு ஆரும் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

neTitu Aya van2 camaNum, niRaivu on2Ru illAc cAkkiyarum,
kaTitu Aya kaTTuraiyAl kazaRa, mEl Or poruL An2Ir!
poTi Arum mEn2iyin2Ir! pukali maRaiyOr purintu Etta,
vaTivu Arum kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: மிக வலிய சமணரும் சமயக் கொள்கையில் நிறைவில்லாத பவுத்தரும் நீண்ட மொழிகளால் உம்மைப் பழித்துப் பேச, அவர்களால் எய்த முடியாத மேலான மெய்ப்பொருளானீர். திருநீறு பூசிய மேனியினீர். திருப்புகலியில் வாழும் மறையோர்கள் போற்ற அழகிய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே.

குறிப்புரை: நிறைவு – சமயக் கொள்கையின் நிறைவு அறிவின் நிறைவுமாம். கடிது – கடுமையுடையது. கழற – பழித்துப்போச. மேல்ஓர் பொருள் – மேலாக ஒரு மெய்ப்பொருள். பொடி – திருநீறு. புரிந்து – இடைவிடாது நினைந்து. வடிவு ஆகும் – அழகு நிறைந்த தோற்றமும் ஆம்.

Oh! It is Civan, the Lord of Poom-Pukali. You, our God became the absolute one beyond the reach of the false preachers, the well grown Jains and the imperfect Buddhists. You have beautified Your whole body with holy ashes. You have manifested Yourself in the holy temple of Pukali, the blessed place of beauty. The Vedic scholars of this place admire and praise the famous, sacred temple and pray You with

recitations. The same temple You have chosen as Your own and happily manifest Yourself there.

2058. ஒப்பரியபூம்புகலிஓங்குகோயில்மேயானை
அப்பரிசிற்பதியானஅணிகொள்ஞானசம்பந்தன்
செப்பரியதண்டமிழால்தெரிந்தபாடலிவைவல்லார்
எப்பரிசிலிடர்நீங்கியிமையோருலகத்திருப்பாரே. 11

ஒப்பு அரிய பூம் புகலி ஓங்கு கோயில் மேயானை,
அப் பரிசில் பதிஆன அணி கொள் ஞானசம்பந்தன்,
செப்ப(அ)ரிய தண்தமிழால் - தெரிந்த பாடல்இவை வல்லார்,
எப்பரிசில் இடர் நீங்கி, இமையோர் உலகத்து இருப்பாரே.

oppu ariya pUm pukali Ogku kOyil mEyAn2ai,
ap paricil pati An2a aNi koL njAn2acampantan2,
ceppa(a)riya taNtamizAl-terinta pATal ivai vallAr,
epparicil iTar nIgki, imaiyOr ulakattu iruppArE.

பொருள்: தனக்கு ஒப்பில்லாத பொலிவுடைய திருப்புகலியுள் ஓங்கி உயர்ந்த கோயிலில் இருப்பவனை, அத்தகைய இயல்புடைய தலைவன் ஞானசம்பந்தன் அருள் பெறாதவர்கள் சொல்லுதற்கு அரிய குளிர்ந்த தமிழால் ஆராய்ந்து பாடிய பாடல்களாகிய இவற்றை பாட வல்லவர்கள் எல்லா வகையான இடர்களினின்றும் நீங்கி வானவருலகத்தில் இருப்பார்கள்.

குறிப்புரை: மேயான் – மேவியவன். பரிசு – தகைமை. செப்ப அரிய – அருள்பெறாதவர் சொல்லுதற்கு அருமையாகிய. தெரிந்த – ஆராய்ந்த.

Oh! It is Civan, the Lord of Poom-Pukali. Our saint Thiru-gnana-Sambandar hailing from Kaazhi as its king, with all ornamental virtues, sang on the Lord manifested in the incomparable temple on the earth, in beautiful choicest Tamil, these ten verses. Those devotees who can recite these ten songs will be relieved of all sufferings and will be blessed to reach and stay forever in the celestial world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

54ஆம் பதிகம் முற்றிற்று
End of 54th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 191 *பதிக எண்: 55*

55. திருத்தலைச்சங்காடு

55. THIRU-TH-THALAICH-CHANGAADU

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

திருத்தலைச்சங்காடு என்னும் இத்திருத்தலமானது சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதால் மிகப் பழமைவாய்ந்ததாகும். இவ்வூர் தலைசை என மரூஉமொழியாக வழங்கப்பெறும். காவிரித் தென்கரையில் உள்ள தலங்களுள் நாற்பத்தைந்தாவது ஆகும். மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் முக்கூட்டு சென்று அங்கிருந்து சீகாழி–பூம்புகார் செல்லும் பேருந்துகளில் செல்லலாம். இறைவரது திருப்பெயர் சங்கருணாதேசுவரர். இறைவியாரது திருப்பெயர் சௌந்தரநாயகி. தீர்த்தம் காவிரியாறு. திருமால் சிவபெருமானைப் பூசித்துப் பாஞ்சசந்யம் என்னும் சங்கைப் பெற்ற தலம். இதற்கு ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பதிகம் ஒன்று உண்டு.

பதிக வரலாறு

தலைசையந்தணர்கள் எல்லாம் பெருவிருப்பால் வந்து உம்பரும் வணங்கும் மெய்ம்மை உயர்தவத்தொண்ரோடும் ஆளுடைய பெருந்தகையாரை எதிர்கொண்டு வணங்கி அழைத்துச் சென்றனர். அங்குற்று, பெருந்திருமாடக்கோயிலை எய்தி, அருமறைப் பொருளானாரைப் பணிந்து, அழகிய நல்ல வலம்புரிச்சங்கின் வடிவில் ஓங்கார ரூபமாக ஒளிரும் இறைவன் சார்ந்து விளங்குமாற்றைப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2059. நலச்சங்கவெண்குழையுந்தோடும்பெய்தோர்நால்வேதம்
சொலச்சங்கையில்லாதீர்சுடுகாடல்லாற்கருதாதீர்
குலைச்செங்காய்ப்பைங்கமுகின்குளிர்கொள்சோலைக்குயிலாலும்
தலைச்சங்கைக்கோயிலேகோயிலாகத்தாழ்ந்தீரே. 1

நலச் சங்கவெண்குழையும் தோடும் பெய்து, ஓர் நால்வேதம்
சொலச் சங்கை இல்லாதீர்! சுடுகாடு அல்லால் கருதாதீர்!
குலைச் செங்காய்ப் பைங்கமுகின் குளிர் கொள் சோலைக் குயில் ஆலும்
தலைச்சங்கைக் கோயிலே கோயில்ஆகத் தாழ்ந்தீரே.

nalac cagka veNkuzaiyum tOTum peytu, Or nAlvEtam
colac cagkai illAtIr! cuTukATu allAl karutAtIr!
kulaic cegkAyp paig kamukin2 kuLir koL cOlaik kuyil Alum
talaiccagkaik kOyilE kOyil Akat tAzttIrE.

பொருள்: வெண்சங்கினால் ஆன அழகிய குழையும் தோடும் காதில் பெய்து, ஒப்பற்ற நால்வேதங்களை ஐயமின்றிச் சொன்னவரே. சுடுகாட்டினில் விருப்பம் உடையவரே! குலையாகச் சிவந்த காய்களை உடைய பசிய கமுகஞ்சோலைகளில் குயில்கள் கூவும் தலைச்சங்காட்டில் உள்ள திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு எழுந்தருளியுள்ளீரே.

குறிப்புரை: நலம் – அழகையுடைய. சங்கவெண்குழை – சங்காலான வெளிய குண்டலம். சங்கை – ஐயம். கமுகின் குலைக்காய் செந்நிறத்தாதல் கூறப்பட்டது. தாழ்ந்தீர் – எழுந்தருளியுள்ளீர். தலைச்சங்கை – தலைச்சங்காடு என்பதன் மரூஉப்போலும்.

Oh! Our Lord Civan of Thiru-th-thalaich-changaadu, Your holy presence in Thiru-th-thalaich-changaadu temple has sanctified it. You have adorned both Your ears with different ornamental rings. In one ear Your ear ring is made up of well grown white conch shell. In another ear, the ring is made of tender palmyrah leaf. You have elucidated and epitomized the four Vedas beyond any doubtful reasoning. You do not prefer any place to the burial ground for Your dancing activities. The city is full of many groves especially areca palm groves. Here the cuckoos abide and sing sweet melodies. The trees are full of red fruits in bunches making the groves pleasing and fertile. In such an attractive and good looking city, oh God! You have selected the temple of Thalaich-changaadu as Your abode and are manifested happily.

2060. துணிமல்குகோவணமுந்தோலுங்காட்டித்தொண்டாண்டீர்
மணிமல்குகண்டத்தீரண்டர்க்கெல்லாமாண்பானீர்
பிணிமல்குநூல்மார்பர்பெரியோர்வாழுந்தலைச்சங்கை
அணிமல்குகோயிலேகோயிலாகஅமர்ந்தீரே. 2

துணி மல்கு கோவணமும் தோலும் காட்டித் தொண்டு ஆண்டீர்!
மணி மல்கு கண்டத்தீர்! அண்டர்க்கு எல்லாம் மாண்பு ஆனீர்!
பிணி மல்கு நூல் மார்பர் பெரியோர் வாழுந்ம் தலைச்சங்கை,
அணி மல்கு கோயிலே கோயில்ஆக அமர்ந்தீரே.

tuNi malku kOvaNamum tOlum kATTit toNTu ANTIr!
maNi malku kaNTattIr! aNTarkku ellAm mANpu An2Ir!
piNi malku nUl mArpar periyOr vAzum talaiccagkai,
aNi malku kOyilE kOyil Aka amarntIrE.

பொருள்: துணியால் ஆன கோவணமும் உடுத்த தோலுங் காட்டி அன்பர்களைத் தொண்டாண்டு கொண்டீர்! நீலமணி போலும் கண்டத்தை உடையீர்! தேவர்களுக்கு எல்லாம் பெருமை உடையவராணீர்! பூணூல் பிணித்த மார்பினை உடையீர்! பத்தியால் பெரியோர் வாழும் திருத்தலைச்சங்காட்டில் அழகு நிறைந்த திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு அங்கு அமர்ந்தீரே.

குறிப்புரை: மணி – நீலமணிபோலும் நிறம். அண்டர் – தேவர். மாண்பு – மாட்சி, பெருமை. பிணி – பிணித்தல். அணி – அழகு. நான்கு அடியிலும் மல்குதல் என்றதற்கு. நிறைதல் என்ற பொருளுறப் பொருத்திக் கூறிக்கொள்க.

Oh! It is Civan, our God of Thiru-th-thalaich-changaadu. You have adorned Yourself with the dress made out of ordinary cloth, as loin-cloth. You have worn around Your waist the dress made out of the hide of animals. Poor clothing, yet You rule over Your devotees. Your neck looks beautiful like the dark blue gem. You are the greatest Supreme Being among all the angels in the celestial world. In this city, great Brahmin scholars do live in large numbers wearing twisted sacred thread on their chest. This most beautiful temple of this city has been selected by You as Your abode and there You are manifested.

2061. சீர்கொண்டபாடலீர்செங்கண்வெள்ளேறூர்தியீர்
நீர்கொண்டும்பூக்கொண்டுநீங்காத்தொண்டர்நின்றேத்தத்
தார்கொண்டநூல்மார்பர்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
ஏர்கொண்டகோயிலேகோயிலாகஇருந்தீரே. 3

சீர் கொண்ட பாடலீர்! செங்கண் வெள்ஏற்று ஊர்தியீர்!
நீர் கொண்டும் பூக் கொண்டும் நீங்காத் தொண்டர் நின்று ஏத்த,
தார் கொண்ட நூல்மார்பர் தக்கோர் வாழும் தலைச்சங்கை,
ஏர் கொண்ட கோயிலே கோயில்ஆக இருந்தீரே.

cIr koNTa pATalIr! cegkaN veL ERRu UrtiyIr!
nIr koNTum pUk koNTum nIgkAt toNTar nin2Ru Etta,
tAr koNTa nUl mArpar takkOr vAzum talaiccagkai,
Er koNTa kOyilE kOyil Aka iruntIrE.

பொருள்: பெருமையான பாடல்களை உடையீர்! சிவந்த சினமிக்க கண்களை உடைய வெண்ணிறக் காளையை வாகனமாக உடையீர்! நீர், பூ ஆகியன கொண்டு உன்னை விட்டுப் பிரியாத தொண்டர்கள் நின்னை வழிபட, மாலையும் பூணூலும் அணைந்த மார்பினர்களும் அந்தணர்களும் ஆகிய பெரியோர் வாழும் திருத்தலைச்சங்காட்டில் அழகு வாய்ந்த திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு இருந்தீரே.

குறிப்புரை: சீர் – கனம், மேன்மை. பாடல் – வேதப்பாடல், சாமகானம். ஏறு – எருது. ஊர்தி – வாகனம். சிவபூசை செய்வார்க்கு இன்றியமையாத பொருள் நீரும் பூவும் என்பது குறிக்கப்பட்டது. தார் – மாலை. தார்கொண்ட மார்பர், நூல் (பூணு நூல்) அணிந்த மார்பர் என்க. தக்கோர் – 'அந்தணாளர்' (பா. 8). ஏர் – அழகு.

Oh God! It is Civan of Thiru-th-thalaich-changaadu. You sing the most distinctive, divine songs. You own for Your ride the red eyed white bull, Thirumaal himself has become Your vehicle. You wear good garlands and the sacred thread on Your chest, giving Dharshan to devotees who carry pure water and fine flowers and worship You incessantly. In this city of Thiru-th-thalaich-changaadu the sacred Brahmins live in large numbers. This attractive temple of Thiru-th-thalaich-changaadu You have selected as Your abode and manifested Yourself there.

2062. வேடஞ்சூழ்கொள்கையீர்வேண்டிநீண்டவெண்டிங்கள்
ஓடஞ்சூழ்கங்கையுமுச்சிவைத்தீர்தலைச்சங்கைக்
கூடஞ்சூழ்மண்டபமுங்குலாயவாசற்கொடித்தோன்றும்
மாடஞ்சூழ்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 4

வேடம் சூழ் கொள்கையீர்! வேண்டி நீண்ட வெண்திங்கள்
ஓடம் சூழ் கங்கையும் உச்சி வைத்தீர்ஏ தலைச்சங்கை,
கூடம் சூழ் மண்டபமும் குலாய வாசல் கொடித் தோன்றும்
மாடம் சூழ் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

vETam cUz koLkaiylr! vENTi nlNTa veNtigkaL
OTam cUz kagkaiyum ucci vaittlr! talaiccagkai,
kUTam cUz maNTapamum kulAya vAcal koTit tOn2Rum
mATam cUz kOyilE kOyil Aka makizntlrE.

பொருள்: அடியார்கள் உம்மைக் காண விரும்பும் வேடத்தில் தோன்றும் கொள்கையினை உடையீர்! பிறையாகிய ஓடம் தங்கிய கங்கையை உம்சிரசில் வைத்தீர். திருத்தலைச்சங்காட்டில் கூடமும் மண்டபமும் கூடிய வாசலில் கொடி தோன்றும் மாடங்கள் சூழ்ந்த திருக்கோயிலை கோயிலாக மகிழ்ந்தீரே!

குறிப்புரை: வேடம் – 'பலப்பல வேடம் ஆகும் பரன்', உச்சியிலுள்ள கங்கையில் திங்கள் ஓடம் போல் உளது. கூடம், மண்டபம், மாடம் என்பன இட விசேடங்கள். வாசலில் கொடி தோன்றும் மாடம் என்க.

Oh! It is Civan, our Lord of Thiru-th-thalaich-changaadu. Oh our God of Thiru-th-thalaich-changaadu! You wish to take different forms in Your manifestations and do so. You have mounted on Your matted hair the long curved moon, and the Ganges river where the moon floats like a boat. The city has many tall palaces all around the temple, where the flags flutter on the top of the palaces. Thiru-th-thalaich-changaadu has very attractive temple towers, pavilion surrounding the temple etc. Oh God! You have selected this temple as Your abode and are manifested there.

2063. சூலஞ்சேர்கையினீர்சுண்ணவெண்ணீறாடலீர்
நீலஞ்சேர்கண்டத்தீர்நீண்டசடைமேல்நீரேற்றீர்
ஆலஞ்சேர்தண்கானலன்னமன்னுந்தலைச்சங்கைக்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாகக்கொண்டீரே. 5

சூலம் சேர் கையினீர்! சுண்ண வெண்நீறுஆடலீர்!
நீலம் சேர் கண்டத்தீர்! நீண்ட சடை மேல் நீர் ஏற்றீர்!
ஆலம் சேர் தண்கானல் அன்னம் மன்னும் தலைச்சங்கை,
கோலம் சேர் கோயிலே கோயில்ஆகக் கொண்டீரே.

cUlam cEr kaiyin2Ir! cuNNa veN nIRu ATalIr!
nIlam cEr kaNTattIr! nINTa caTaimEl nIr ERRIr!
Alam cEr taNkAn2al an2n2am man2n2um talaiccagkai
kOlam cEr kOyilE kOyil Akak koNTIrE.

பொருள்: சூலப்படையை ஏந்திய கையினீர்! திருநீறாகிய பொடியில் மூழ்குவீர்! நீலநிறமான கறை உடைய கண்டத்தீர்! பரந்த சடைமேல் கங்கையாற்றை ஏற்றீர்! நீர் நிறைந்த குளிர்ந்த கானலில் அன்னப்பறவைகள் தங்கும் திருத்தலைச்சங்காட்டில் அழகு சேர்ந்த திருக்கோயிலையே உம்முடைய கோயிலாக மகிழ்ந்தீரே!

குறிப்புரை: சூலம் – 'மூவிலைவேல்'. சுண்ணம் – பொடியாகிய. ஆடவீர் – மூழ்குதலுடையீர். நீராடல் போல் நீறாடல். நீர் – கங்கை. ஆலம் – நீர். மன்னும் – பொருந்தும். கோலம் – அழகு, வடிவமுமாம்.

Oh! It is Civan, the Lord of Thiru-th-thalaich-changaadu. Oh God! You have the trident in one of Your hands. Oh God! You have smeared Your body with the holy ashes as if to bathe. Oh God! Your neck is dark blue in colour. Oh God! You have the river Ganges on Your long grown matted hair. In the city of Thiru-th-thalaich-changaadu swans in large numbers flourish in the cool waters of the groves. In such an attractive city, the beautiful temple is situated. Oh God! You have selected this temple as Your temple to manifest.

2064. நிலநீரொடாகாசமனல்காலாகிநின்றைந்து
புலநீர்மைபுறங்கண்டார்பொக்கஞ்செய்யார்போற்றோவார்
சலநீதரல்லாதார்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
நலநீரகோயிலேகோயிலாகநயந்தீரே. 6

நிலம் நீரொடு ஆகாசம் அனல் கால் ஆகிநின்று,- ஐந்து-
புல நீர்மை புறம் கண்டார் பொக்கம் செய்யார், போற்று ஓவார்,
சல நீதர் அல்லாதார், தக்கோர், வாழும், - தலைச்சங்கை,
நல நீர கோயிலே கோயில்ஆக நயந்தீரே.

nilam nIroTu AkAcam an2al kAl Aki nin2Ru,--aintu-
pula nIrmai puRam kaNTAr, pokkam ceyyAr, pORRu OvAr,
cala nItar allAtAr, takkOr, vAzum--talaiccagkai
Nala nira kOyilE kOyil Aka nayantIrE.

பொருள்: நிலம் நீரோடு ஆகாசம், அனல், காற்றும் எனும் ஐம்பூதங்களுமாக அவற்றுள் நிறைந்திருந்தும் ஐம்புலன்களையும் வென்றவர். அடியவர்களுக்குப் பொய்யார். அவர்களைக் காப்பாற்றுதலில் ஓயுதல் செய்யார். வஞ்சம் முதலிய இழிதகைமை இல்லாதவர்களும் தக்கவர்களுமாகிய பெருந்தகையாளர்கள் வாழும் திருத்தலைச்-

சங்காட்டில் அழகிய தன்மையுடைய. திருக்கோயிலையே உம்முடைய கோயிலாக விரும்பினீரே!

குறிப்புரை: நிலம் முதலிய ஐம்பெரும் பூதங்களாகி நின்றவன் இறைவன். அட்டமூர்த்தங்களுள் முதலைந்தும் இவையே. ஐந்து புல நீர்மைபுறம் கண்டார் – ஐம்புலன்களை வென்றவர். பொக்கம் – பொய். போற்று – துதி. ஒவார் – நீங்கார். சலம் – மாறுபாடு. வஞ்சகம். நீதம் – இழிஞர். 'தக்கார்' (ப. 176 பா. 10) நலநீர – அழகிய தன்மையுடைய.

Oh! It is Civan, the Lord of Thiru-th-thalaich-changaadu. Oh God! You are the embodiment of the five elements such as land, water, fire, sky and air. And You have fully controlled the five senses and You have sanctified the temple. You accept the worship of those devotees who have no falsehood in their life and You grace them. This city consists of great Brahmins who are not impostors or cheats, they never do any slander. The city is known for people of flawless nature. Therefore You have chosen to reside in this temple and bless Your devotees.

2065. அடிபுல்குபைங்கழல்களார்ப்பப்பேர்ந்தோரனலேந்திக்
கொடிபுல்குமென்சாயலுமையோர்பாகங்கூடினீர்
பொடிபுல்குநூல்மார்பர்புரிநூலாளர்தலைச்சங்கைக்
கடிபுல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. 7

அடி புல்கு பைங்கழல்கள் ஆர்ப்பப் பேர்ந்து ஓர் அனல் ஏந்தி,
கொடி புல்கு மென்சாயல் உமை ஓர் பாகம் கூடினீர்!
பொடி புல்கு நூல்மார்பர் புரிநூலாளர் தலைச்சங்கை,
கடி புல்கு கோயிலே கோயில்ஆகக் கலந்தீரே.

aTi pulku paigkazalkaL Arppap pErntu, Or an2al Enti,
koTi pulku men2cAyal umai OrpAkam kUTin2Ir!
poTi pulku nUl mArpar puri nUlALar talaiccagkai,
kaTi pulku kOyilE kOyil Akak kalantIrE.

பொருள்: அழகிய பாதத்தில் பொருந்திய கழல்கள் ஒலிக்க அடி பெயர்த்து, அனலேந்தி, கொடி போன்ற உருவமும் மென்மையான சாயலும் உடைய உமையம்மையை ஒரு பாகத்தில் கூடினீர்! திருநீறு மிகப்பூசிய பூணூலணிந்தவர், மறையோர் வாழும் திருத்தலைச்சங்காட்டுள் காவல் மிக்க திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டீரே.

குறிப்புரை: புல்கு – சார்ந்த, கூடிய. ஆர்ப்ப – ஒலிக்க. பேர்ந்து – நட்டம் ஆடி. 'கொடிபுல்கு மென்சாயல் உமை' என்றது தேவியார் திருநாமம் ஆகிய சௌந்தரியம்மை என்பதைத் தோற்றியது. பொடி – திருநீறு. புரிநூல் ஆளர் – விரும்புகின்ற வேத நூல்களை ஆள்பவர். 'நூன்மார்பர்' என்று முன் உள்ளதன் பொருளே கூறல் நன்றன்று. 'மறையாளர்' (பா. 9). கடி – காவல்.

It is Civan, our Lord of Thiru-th-thalaich-changaadu. Oh God! You wear the anklets on Your holy feet which ring according to Your steps, while You perform the cosmic dance carrying fire in one of Your hands. You have embedded on Your body Your consort Uma Devi who has a creeper like tender body. You have smeared Your body with holy ashes and wear the sacred thread on Your chest. In this city sacred Brahmins do live wearing the sacred thread in large numbers. The temple in this city is always fragrant with flowers all around. You have manifested Yourself in this temple and grace the devotees.

2066. திரையார்ந்தமாகடல்சூழ்தென்னிலங்கைக்கோமானை
வரையார்ந்ததோளடரவிரலாலூன்றுமாண்பினீர்
அரையார்ந்தமேகலையீரந்தணாளர்தலைச்சங்கை
நிரையார்ந்தகோயிலேகோயிலாகநினைந்தீரே. 8

திரை ஆர்ந்த மா கடல் சூழ் தென்இலங்கைக் கோமானை,
வரை ஆர்ந்த தோள் அடர, விரலால் ஊன்றும் மாண்பினீர்!
அரை ஆர்ந்தமேகலையீர்! அந்தணாளர் தலைச்சங்கை,
நிரை ஆர்ந்த கோயிலே கோயில்ஆக நினைந்தீரே.

tirai Arnta mA kaTal cUz ten2 ilagkaik kOmAn2ai,
varai Arnta tOL aTara, viralAl Un2Rum mANpin2Ir!
arai Arnta mEkalaiyIr! antaNALar talaiccagkai,
nirai Arnta kOyilE kOyil Aka nin2aintIrE.

பொருள்: அலைகள் நிறைந்த கரிய கடல் சூழ்ந்த தென் திசையில் உள்ள இலங்கைக்கு அரசன் இராவணனின் மலை போன்ற தோள்களை, உம்முடையத் திருவிரலால் ஊன்றி நசுக்கிய பெருமையுடையீர்! இடையில் கட்டிய மேகலையை உடையீர்! அந்தணாளர்கள் வாழும் திருத்தலைச்சங்காட்டில் வரிசையாக அமைந்த திருக்கோயிலையே உம்முடைய கோயிலாக விரும்பினீரே!

குறிப்புரை: திரை – அலை. மா – பெரியது. வரை – மலை. அரை – இடை. நிரை – வரிசை. மேகலை – அணிவிசேடம். அரை ஆர்ந்த மேகலையீர், என்பது, பாதி மாதை உடையீர் என்றவாறு. 'ஏரார்ந்த மேகலையாள் பாகங்கொண்டீர்' (பதி. 192 பா. 2).

Oh! It is Civan, the Lord of Thiru-th-thalaich-changaadu. The country Sri Lanka, surrounded by big sea with roaring waves, was ruled by Raavanan, a big gigantic king, with mountain like shoulders. Our valiant God pressed the mountain where He was staying, with His toe and it resulted in the crushing of Raavanan's mighty shoulders. You have embedded Your consort Uma Devi wearing the girdle on her waist on the left side of Your body. In this city, scholar Brahmins do live in large numbers. In this city, our Lord's temple is well built according to aagamaas and there You have manifested Yourself.

2067. பாயோங்குபாம்பணைமேலானும்பைந்தாமரையானும்
போயோங்கிக்காண்கிலார்புறம்நின்றோரார்போற்றோவார்
தீயோங்குமறையாளர்திகழுஞ்செல்வத்தலைச்சங்கைச்
சேயோங்குகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. 9

பாய் ஓங்கு பாம்புஅணை மேலானும், பைந்தாமரையானும்,
போய் ஓங்கிக் காண்கிலார்; புறம் நின்று ஓரார், போற்று ஓவார்;
தீ ஓங்கு மறையாளர் திகழும் செல்வத் தலைச்சங்கை,
சேய் ஓங்கு கோயிலே கோயில்ஆகச் சேர்ந்தீரே.

pAy Ogku pAmpu aNai mElAn2um, paintAmaraiyAn2um,
pOy Ogkik kANkilAr; puRam nin2Ru OrAr, pORRu OvAr;
tI Ogku maRaiyALar tikazum celvat talaiccagkai,
cEy Ogku kOyilE kOyil Akac cErntIrE.

பொருள்: விரிந்த பாம்பாகிய படுக்கையின்மேல் இருப்பவனாகிய திருமாலும், பசிய தாமரை மலர்மேல் இருப்பவனாகிய பிரமனும் கீழ் இடந்துபோயும் மேற்பறந்து போயும் காணாதவராயினர். புறச்சமயம் நில்லாது அகச்சமயத்தில் நிற்பார் போற்றுதலை நீங்கார். வேள்வித்தீ வளர்க்கும் வேதியர்கள் திகழும் ஆன்மீகச் செல்வம் நிறைந்த திருத்தலைச்சங்காட்டில் உயர்ந்தோங்கும் திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகச் சேர்ந்தீரே!

குறிப்புரை: பாய் – பரந்து. போய் – கீழிடந்துபோய். ஓங்கி – மேற்பறந்துயர்ந்து. புறம் நின்று ஓரார் – புறச்சமயக் கொள்கைகளில் நின்று ஆராயாதவர். அகச்சமயக் கொள்கை வழி ஆராய்பவர் என்றவாறு. புறம் வெளியுமாம். போற்று – துதி. ஓவார் – நீங்காதவர். தீ – வேள்வித்தீ. சேய் – உயர்வின் நீட்சி.

Oh! It is Civan, Lord of Thiru-th-thalaich-changaadu. Thirumaal who takes rest on the mat of the five-headed snake 'Aadhiseshan' (later he was born as Patanjali Muni, author of Yoga Sutra, Viyakarana Maha Bashyam and one medical book) and Brahma who rests in the fresh lotus flower - both failed in their attempt to trace our Lord's head and foot. You are worshipped by the devotees who are stead fast in their own religion and never listen to other religious preaching. In the city of Thiru-th-thalaich-changaadu, the Brahmin scholars, well-versed in the four Vedas, live in large numbers and light thrice the sacred fire, yaaga. They worship You in the rich tall temple, chosen by You for Your manifestation.

2068. அலையாரும்புனல்துறந்தஅமணர்குண்டர்சாக்கீயர்
தொலையாதங்கலர்தூற்றத்தோற்றங்காட்டியாட்கொண்டீர்
தலையானநால்வேதந்தரித்தார்வாழுந்தலைச்சங்கை
நிலையார்ந்தகோயிலேகோயிலாகநின்றீரே. 10

அலை ஆரும் புனல் துறந்த அமணர், குண்டர்சாக்கீயர்,
தொலையாது அங்கு அலர் தூற்ற, தோற்றம் காட்டி ஆட்கொண்டீர்!
தலைஆன நால்வேதம் தரித்தார் வாழும் தலைச்சங்கை,
நிலை ஆர்ந்த கோயிலே கோயில்ஆக நின்றீரே.

alai Arum pun2al tuRanta amaNar, kuNTar cAkkIyar,
tolaiyAtu agku alar tURRa, tORRam kATTi ATkoNTIr!
talai An2a nAlvEtam tarittAr vAzum talaiccagkai,
nilai Arnta kOyilE kOyil Aka nin2RIrE.

பொருள்: நீராடுதல் இல்லாத சமணக் குண்டர்களும் சாக்கியர்களும் இடைவிடாது பழிதூற்ற அடியார்களுக்கு உம்முடைய திருக்கோலத்தைக் காட்டி ஆட்கொண்டீர்! மேலான நான்கு வேதங்களையும் மேற்கொண்டாராகிய மறையாளர் வாழும் திருத்தலைச்சங்காட்டில் நிலையுள்ள திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு அங்கு நிலையாக நின்றீரே!

குறிப்புரை: புனல் துறந்த – குளித்தல் இல்லாத என்றவாறு. சாக்கியர் என்பது புதிய பாடம். தொலையாது – இடையில் ஒழியாமல். அலர் – பழி. நிலை – கோபுரநிலை.

Oh! It is Civan, the Lord of Thiru-th-thalaich-changaadu. The Jains and Buddhists who live in this city never take bath in the running water available there in the city. They speak ill of our Lord. But oh Lord! You ignore their words. You give darshan to the devotees who come and worship You in the temple. The Brahmin scholars who are well versed in the four Vedas live in this city and worship You consistently in the grand temple of this place. You have taken this temple as Your abode and are manifested there.

2069. நளிரும்புனற்காழிநல்லஞானசம்பந்தன்
குளிருந்தலைச்சங்கையோங்குகோயில்மேயானை
ஒளிரும்பிறையானையுரைத்தபாடலிவைவல்லார்
மிளிருந்திரைசூழ்ந்தவையத்தார்க்குமேலாரே. 11

நளிரும் புனல் காழி நல்ல ஞானசம்பந்தன்,
குளிரும் தலைச்சங்கை ஓங்கு கோயில் மேயானை,
ஒளிரும் பிறையானை உரைத்த பாடல்இவை வல்லார்
மிளிரும் திரை சூழ்ந்த வையத்தார்க்கு மேலாரே.

naLirum pun2al kAzi nalla njAn2acampantan2
kuLirum talaiccagkai Ogku kOyil mEyAn2ai,
oLirum piRaiyAn2ai, uraitta pATal ivai vallAr
miLirum tirai cUznta vaiyattArkku mElArE.

பொருள்: குளிர்ந்த நீர்வளம் உள்ள சீகாழியில் அன்புடைத் திருஞானசம்பந்தன், அருளுடைய திருத்தலைச்சங்காட்டில், ஓங்கு கோயிலில் மேவியவனை, ஒளிவீசும் பிறை சூடியவனைப் போற்றி உரைத்த பாடல்களாகிய இவற்றை ஓத வல்லார், புரளும் அலைகளை வீசும் கடலால் சூழப்பட்ட நிலவுலகத்தில் வாழ்பவருக்கு மேல் நிலையை உறுதியாக அடைவர்; அஃதாவது, வானுலகோராவர் என்க.

குறிப்புரை: நளிரும் – குளிரும். மேயானை – மேவிய பெருமானை. மிளிரும் திரை – விளங்கும் கடல். வையத்தார் – மண்ணுலகோர். மேலார் – வானுகோராவர்.

Oh! It is Civan, the Lord of Thiru-th-thalaich-changaadu. Our virtuous saint Thiru-gnana-Sambandar hails from the seashore city of Kaazhi, which is benefited by the cool waters running all around the city. Our Lord is manifest in the cool and big temple of the city. He retains the bright dazzling moon on His head. Our saint has praised our Lord of Thiru-th-thalaich-changaadu temple in these ten verses in Tamil language. Those devotees who can recite these verses will be blessed to be greater than the people of this earth, surrounded by sea on all four sides, they will enter the world of the sky.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

55ஆம் பதிகம் முற்றிற்று
End of 55th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 192 *பதிக எண்: 56*

56. திருஇடைமருதூர்

56. THIRU-IDAI-MARUTHOOR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

மருத மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட பாடல் பெற்ற பதிகள் மூன்றாகும். அவை வடநாட்டிலுள்ள மல்லிகார்ச்சுனம் என்ற சீபர்ப்பதம். பாண்டி நாட்டில் உள்ள திருப்புடைமருதூர், சோழநாட்டில் உள்ள திருவிடைமருதூர் ஆகும். இவற்றுள் சீபர்ப்பதத்துக்கும் திருப்புடை–மருதூர்க்கும் இடையில் மருத மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டிருப்பதால் இது திருஇடைமருதூர் என்னும் பெயர் பெற்றது. மயிலாடுதுறை–கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், திருவிடைமருதூர் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் இருக்கின்றது. மயிலாடுதுறை–கும்பகோணம் நெடுஞ்சாலையில் ஆடுதுறையை அடுத்துள்ளது இவ்வூர். பேருந்து வசதி மிகுதியும் உண்டு. இது காவிரிக்குத் தென்கரையில் உள்ள 30ஆவது தலமாகும்.

இறைவரின் திருப்பெயர் மருதவாணர், மகாலிங்கேசுவரர். இப்பதியைச் சுற்றி இருக்கும் சிவதலங்களின் அமைப்பை ஒட்டி நடேசமூர்த்தி – தில்லையாகவும், தட்சிணாமூர்த்தி சந்நிதி – ஆலங்குடியாகவும், நவக்கிரக கோயில் – சூரியனார் கோயிலாகவும் விநாயகர் சந்நிதி – திருவலஞ்சுழியாகவும், முருகர் சந்நிதி – சுவாமி மலையாகவும், வைரவர் சந்நிதி – சீகாழியாகவும், சண்டேசுவரர் சந்நிதி – திருச்சேய்ஞலூராகவும் விளங்குகின்றன. ஆதலால், இது மகாலிங்கத்தலம் என்றும் இறைவர்க்கு மகாலிங்கேசுவரர் என்றும் திருப்பெயர்கள் ஏற்பட்டன. இறைவியாரின் திருப்பெயர் – நன்முலைநாயகி. தீர்த்தம் – காவிரி அயிராவணத்துறை. பூச நாளில் இத்துறையில் இறைவர் தீர்த்தம் கொடுத்தருளுவர். இப்பூசநாளில் நீராடலைப்பற்றி அப்பர் பெருந்தகையார், இத்தலத்துத் திருக்குறுந்தொகையில்,

> 'ஈச னெம்பெரு மான்இடை மருதினில்
> பூச நாம்புகு தும்புன லாடவே'

எனவும், திருஞானசம்பந்தப் பெருந்தகையார்,

> 'பூசம் புகுந்தாடிப் பொலிந்தழகாய
> ஈச னுறைகின்ற விடைமருதீதோ'

எனவும் சிறப்பித்து அருளினர்.

உமாதேவியார், உருத்திரர், மூத்தபிள்ளையார், முருகர், பிரமன், விஷ்ணு முதலியோர் பூசித்துப் பேறு பெற்றனர். பெரிய அன்பினையுடைய வரகுணபாண்டியதேவரின் கொலைப்பழியைப் போக்கியருளிய தலம் இதுவாகும். பத்திரகிரியார், பட்டினத்துப் பிள்ளையார் இவர்கள் இப்பதியில் பலநாட்கள் தங்கித் தவம்புரிந்து அருள் பெற்றனர். இவர்களுள் பட்டினத்தடிகள் பிரதிமை கீழைக்கோபுர வாசலிலும், பத்திரகிரியார் பிரதிமை மேலைக்கோபுர வாசலிலும் இருக்கின்றன. வரகுணதேவரைப் பிடித்து நீங்கிய பிரமகத்தியின் உருவம் கீழைக்கோபுர வாசலில் உள்ளது.

'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆகும் துறக்கை அரிது அரிது' என்று தாயுமானவரால் பெரிதும் பாராட்டப்பெற்ற பட்டினத்து அடிகளார் இத்தலத்திற்கு மும்மணிக்கோவை ஒன்றை இயற்றியுள்ளார். அது பதினொராந்திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ளது. கோடீச்சுரக் கோவையைப் பாடிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இத்தலத்திற்குப் புராணம் இயற்றியுள்ளார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை உலா பாடியுள்ளார். இவைகளேயன்றி, மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் இத்தலமான்மியத்தை உரைநடையில் எழுதியிருக்கிறார்கள்.

'திருவிடை மருதூர்த் தெருவழகு' என்னும் உலகவழக்கு இவ்வூர்த் திருவீதிகளின் சிறப்பைப் புலப்படுத்துவதாகும். இப்பதிக்குத் திருஞானசம்பந்தரது பதிகங்கள் ஆறும், திருநாவுக்கரசரது பதிகங்கள் ஐந்தும், சுந்தரமூர்த்தி நாயனாரது பதிகம் ஒன்றும் ஆகப் பன்னிரண்டு பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

பரவுவார் பிணி தீர்க்கும் நலத்தை உடைய திருவிடைமருதூர் மகாலிங்கேசரை வணங்கிப் பாடிய பலபதிகங்களுள் இதுவும் ஒன்று. (திருஞான – புராணம் – 412)

திருச்சிற்றம்பலம்

2070. பொங்குநூல்மார்பினீர்பூதப்படையீர்பூங்கங்கை
தங்குசெஞ்சடையினீர்சாமவேதம்ஓதினீர்
எங்குமெழிலார்மறையோர்கள்முறையாலேத்தஇடைமருதில்
மங்குல்தோய்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 1

பொங்கு நூல் மார்பினீர்! பூதப்படையீர்! பூங் கங்கை
தங்கு செஞ்சடையினீர்! சாமவேதம் ஓதினீர்!
எங்கும் எழில் ஆர் மறையோர்கள் முறையால் ஏத்த, இடைமருதில்,
மங்குல் தோய் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

pogku nUl mArpin2Ir! pUtappaTaiyin2Ir! pUg kagkai
tagku cenjcaTaiyin2Ir! cAmavEtam Otin2Ir!
egkum ezil Ar maRaiyOrkaL muRaiyAl Etta, iTaimarutil,
magkul tOy kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: தவழும் பூணூல் அணிந்த மார்பினை உடையீர்! கணங்களாகிய படையினை உடையீர்! அழகிய கங்கை தங்கும் செந்நிறமான சடையினை உடையீர்! சாம வேதத்தை ஓதியருளினீர்! எங்கும் அழகாக மறையோர்கள் வேதாகம முறைப்படி வழிபடத், திருவிடைமருதூரில் மேகக்கூட்டம் வந்து தோயும் திருக்கோயிலையே உம்முடைய கோயிலாக மகிழ்ந்தீரே.

குறிப்புரை: படை – கணம். எழில் – அழகு. எங்கும் ஏத்த மகிழ்ந்தீர் என்க. மேலும் இவ்வாறே கூட்டுக. முறையால் – வேதாகம விதிப்படி. மங்குல் – மேகம்.

It is Civan, the Lord of Thiru-idai-maruthoor. Oh God! You have adorned Your bright chest with the sacred thread. You have the big army of bhoothas. You support the enticing Ganges river on Your red matted hair. You used to chant the Saama Veda in that particular musical tone. Those learned Brahmin scholars who have mastered the opulent Vedas praise You observing all the rituals in all the places in the city. You have selected the temple as Your abode and manifested Yourself in the temple with all happiness. The clouds embrace the tall towers of this temple.

2071. நீரார்ந்தசெஞ்சடையீர்நெற்றித்திருக்கணிணிகழ்வித்தீர்
போரார்ந்தவெண்மழுவொன்றுடையீர்பூதம்பாடலீர்
ஏரார்ந்தமேகலையாள்பாகங்கொண்டீரிடைமருதில்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. 2

நீர் ஆர்ந்த செஞ்சடையீர்! நெற்றித்திருக்கண் நிகழ்வித்தீர்!
போர் ஆர்ந்த வெண்மழு ஒன்று உடையீர்! பூதம் பாடலீர்!
ஏர் ஆர்ந்த மேகலையாள் பாகம் கொண்டீர்! இடைமருதில்,
சீர் ஆர்ந்த கோயிலே கோயில்ஆகச் சேர்ந்தீரே.

nIr Arnta cenjcaTaiyIr! neRRit tirukkaN nikazvittIr!
pOr Arnta veN mazu on2Ru uTaiyIr! pUtam pATalIr!
Er Arnta mEkalaiyAL pAkam koNTIr! iTaimarutil,
cIr Arnta kOyilE kOyil Akac cErntIrE.

பொருள்: கங்கை நீர் தங்கிய சிவந்த சடையினை உடையீர்! நெற்றியில் அழகிய கண்ணை விளங்கச் செய்தீர்! போருக்குரிய ஒளி வாய்ந்த மழுப்படை ஒன்றினை உடையீர்! கணங்கள் பாடுதலை உடையீர்! அழகிய மேகலை அணிந்தவளைப் பாகமாகக் கொண்டீர்! திருவிடைமருதூரில் மேன்மையுடைய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகச் சேர்ந்தீரே!

குறிப்புரை: நிகழ்வித்தீர் – விளங்கச் செய்தீர். பூதம் பாடலீர் – பூதங்கள் பாடுதலை உடையீர். ஏர் – அழகு. சீர் சிறப்பு, மேன்மை.

It is Civan, our Lord in Thiru-idai-maruthoor. Oh God! You support the river Ganges on Your red matted hair. You have on Your forehead a very attractive third eye. You carry a white battleaxe of terror in one of Your hands. Your bhoothas used to sing songs on Your praise. You have embedded Your consort Paarvathi Devi, on the left side of Your body, wearing the most brilliant waist ornament. You have selected the sacred temple in Thiru-idai-maruthoor as Your abode and manifested Yourself in the temple very happily.

2072. அழல்மல்குமங்கையிலேந்திப்பூதமவைபாடச்
சுழல்மல்குமாடலீர்சுடுகாடல்லாற்கருதாதீர்
எழில்மல்குநான்மறையோர்முறையாலேத்தஇடைமருதில்
பொழில்மல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. 3

அழல் மல்கும் அங்கையில் ஏந்தி, பூதம்அவை பாட,
சுழல் மல்கும் ஆடலீர்! சுடுகாடு அல்லால் கருதாதீர்!
எழில் மல்கும் நால்மறையோர் முறையால் ஏத்த, இடைமருதில்,
பொழில் மல்கு கோயிலே கோயில்ஆகப் பொலிந்தீரே.

azal malkum agkaiyil Enti, pUtam avai pATa,
cuzal malkum ATalIr! cuTukATu allAl karutAtIr!
ezil malkum nAl maRaiyOr muRaiyAl Etta, iTaimarutil,
pozil malku kOyilE kOyil Akap polintIrE.

பொருள்: நெருப்பினை உள்ளங்கையில் நிறைய ஏந்திப் பூதகணங்கள் பாடச் சுழலுதல் மிக்க ஆடலினை உடையீர்! சுடுகாட்டில் ஆடுதலை விரும்பினீர்! அழகுடைய நான்கு

மறைகளையும் கற்றோர் முறைமையால் வழிபடத் திருவிடைமருதூரில் பூஞ்சோலைகளை உடைய திருக்கோவிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு விளங்கினீர்.

குறிப்புரை: அழல் – தீ. கழல் மல்கும் ஆடலீர் – சூழ்தல் நிறைந்த திருக்கூத்தை உடையீர். பொழில் – பூஞ்சோலை. பொலிந்தீர் – பொன்போல் விளங்கினீர்.

It is Civan, the Lord of Thiru-idai-maruthoor. Oh God! You are the cosmic dancer with fire in Your braced hands. The bhoothas sing Your glory and You dance swirling according to their musical tone. You never think of any other place than the burial ground for Your dancing. In this city, learned Brahmin scholars, well-versed in the four Vedas, perform the rituals as per aagamaas in the temple and worship. You are manifested there. You have selected the temple for Your abode and thereby the temple is blessed for ever.

2073. பொல்லாப்படுதலையொன்றேந்திப்புறங்காட்டாடலீர்
வில்லாற்புரமூன்றுமெரித்தீர்விடையார்கொடியினீர்
எல்லாக்கணங்களும்முறையாலேத்தஇடைமருதில்
செல்வாயகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. 4

பொல்லாப் படுதலை ஒன்று ஏந்திப் புறங்காட்டு ஆடலீர்!
வில்லால் புரம்மூன்றும் எரித்தீர்! விடை ஆர் கொடியினீர்!
எல்லாக்கணங்களும் முறையால் ஏத்த, இடைமருதில்,
செல்வாய கோயிலே கோயில்ஆகச் சேர்ந்தீரே.

pollAp paTutalai on2Ru Entip puRagkATTu ATalIr!
villAl puram mUn2Rum erittIr! viTai Ar koTiyin2Ir!
ellAkkaNagkaLum muRaiyAl Etta, iTaimarutil,
celvAya kOyilE kOyil Akac cErntIrE.

பொருள்: பொலிவில்லாத கபாலம் ஒன்றை ஏந்தி இடுகாட்டில் ஆடலையுடையீர்! வில்லினால் திரிபுரம் மூன்றையும் நெருப்பில் எரித்தீர்! எருது வடிவினை எழுதிய கொடியை உடையீர்! சிவகணங்கள் எல்லாம் முறைமையால் ஏத்தத் திருவிடைமருதூரில் செல்வமாகிய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகச் சேர்ந்தீரே!

குறிப்புரை: பொல்லா – பொலிவில்லாத. விடையார் கொடி – எருதுருவெழுதிய கொடி. 'ஏர்காட்டும் கோதிலா ஏறாங்கொடி' (திருவா – திருத்தசா – 10). எல்லாக் கணங்களும் – சிவகணம் முதலிய

எல்லாமும். செலவு ஆய – செல்வமாகிய. அம்விகுதி கெட்டது. ‘செல்வாய செல்வம் தருவாய் போற்றி’, (அப்பர்) ‘செல்வாய்த் திருவாணாய் நீயே’ (அப்பர் பதி. 255 பா. 3).

It is Civan, the Lord of Thiru-idai-maruthoor. Oh God! You perform the cosmic dance on the burial ground carrying the human skull with dry flesh and a messy look. You shot and burnt the three flying forts of the asuras who inflicted intolerable misery on the devas. You have in Your flag the figure of the bull drawn as Your emblem to identify Yourself. Your entire army of bhootha ganas (globular) sings songs in praise of You as per the rules of rituals prescribed for singing and dancing. You have selected the very famous temple in Thiru-idai-maruthoor as Your abode and are manifested there.

2074. வருந்தியமாதவத்தோர்வானோரேனோர்வந்தீண்டிப்
பொருந்தியதைப்பூசமாடியுலகம்பொலிவெய்தத்
திருந்தியநான்மறையோர்சீராலேத்தஇடைமருதில்
பொருந்தியகோயிலேகோயிலாகப்புக்கீரே. 5

வருந்திய மா தவத்தோர், வானோர், ஏனோர், வந்து ஈண்டி,
பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவு எய்த,
திருந்திய நால்மறையோர் சீரால் ஏத்த, இடைமருதில்,
பொருந்திய கோயிலே கோயில்ஆகப் புக்கீரே.

varuntiya mA tavattOr, vAn2Or, En2Or, vantu INTi,
poruntiya taippUcam ATi ulakam polivu eyta,
tiruntiya nAlmaRaiyOr cIrAl Etta, iTaimarutil,
poruntiya kOyilE kOyil Akap pukkIrE.

பொருள்: தவத்தினால் உடல் வாடிய சிறந்த தவத்தைச் செய்தவர்கள், வானுலகத்தவர்கள், மண்ணுலகத்தவர், பாதாள லோகத்தவர் முதலியோர் அனைவரும் வந்து திரண்டுத் தைப்பூசத்தில் தீர்த்தமாடி, அனைத்துலகத்தவரும் சிவப்பொலிவு எய்தத் திருவிடைமருதூரில் பொருந்திய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகப் புகுந்தீரே.

குறிப்புரை: வருந்திய – தவத்தால் மெய் வருந்திய. ஏனோர் – மண்ணோர், பாதலத்தோர் முதலியோர். ஈண்டி – கூடி. இத்தலத்தில் தைப்பூசத்தில் தீர்த்தமாடி வழிபடுதல் தொன்று தொட்டு நிகழும் வழக்கு.

'தேசம் புகுந்தீண்டி ஓர் செம்மை உடைத்தாய், பூசம் புகுந்தாடி' 'பூசம் நாம் புகுதும் புனலாடவே' (அப்பர்). பொலிவு – சிவப்பொலிவு.

Oh! It is Civan, Lord of Thiru-idai-maruthoor. The celebrated angels and all other devas who observe great penance, come to Thiru-idai-maruthoor on this earth on the Thai Poosam day to take sacred bath in the river Cauvery. Of course, all people on this earth also gather in the very same place to take bath in the river Cauvery on the Thai Poosam day (which falls on the full moon day of February). The well versed Vedic scholar Brahmins also observe the rituals on this day and recite the glory of our Lord. Oh God! You are pleased to enter the temple in this city, the temple of virtues. Oh Lord! You are there in the temple in Thiru-idai-maruthoor and grace the whole world to become blessed.

2075. சலமல்குசெஞ்சடையீர்சாந்தநீறுபூசினீர்
வலமல்குவெண்மழுவொன்றேந்திமயானத்தாடலீர்
இலமல்குநான்மறையோரினிதாயேத்தஇடைமருதில்
புலமல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. 6

சலம் மல்கு செஞ்சடையீர்! சாந்தம்நீறு பூசினீர்!
வலம் மல்கு வெண்மழு ஒன்று ஏந்தி, மயானத்து ஆடலீர்!
இலம் மல்கு நால்மறையோர் இனிதா ஏத்த, இடைமருதில்,
புலம் மல்கு கோயிலே கோயில்ஆகப் பொலிந்தீரே.

calam malku cenjcaTaiylr! cAntam nIRu pUcin2Ir!
valam malku veNmazu on2Ru Enti, mayAn2attu ATalIr!
ilam malku nAlmaRaiyOr initA Etta, iTaimarutil,
pulam malku kOyilE kOyil Akap polintIrE.

பொருள்: நீர் (கங்கையாறு) நிறைந்த சிவந்த சடைமுடியினை உடையீர்! உடல்மேல் மணமுள்ள திருநீற்றைப் பூசினீர்! வெற்றி கொள்ளும் மழுப்படையை ஏந்தி மயானத்தில் ஆடுவீர்! சிவப்பற்றின்றி வேறு பற்றில்லாத நான்மறையோர் மகிழ்ச்சியுடன் வழிபடத் திருவிடைமருதூரில் ஞானம் நிறைந்த திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு விளங்கினீரே!

குறிப்புரை: சலம் – கங்கை. நீர் வலம் – வெற்றி. வலப்பக்கமும் ஆம். இலம் – இல்லம். வீடு. பற்றின்மையும் ஆகும். புலம் – அறிவு. இடமுமாம்.

Oh! It is Civan, our Lord in Thiru-idai-maruthoor. Oh God! You support the river Ganges on Your red matted hair. You have smeared Your body with holy ashes and sandal paste. You dance in the burial ground holding a mighty white axe in Your hand. In this city, the Brahmin scholars of four Vedas on religious festival days gather in the temple in Thiru-idai-maruthoor and praise Your grace and worship You alone. You have selected this temple of high divinity as Your abode and You have manifested Yourself there.

2076. புனமல்குகொன்றையீர்புலியினதளீர்பொலிவார்ந்த
சினமல்குமால்விடையீர்செய்யீர்கரியகண்டத்தீர்
இனமல்குநான்மறையோரேத்துஞ்சீர்கொளிடைமருதில்
கனமல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. 7

புனம் மல்கு கொன்றையீர்! புலியின்அதளீர்! பொலிவு ஆர்ந்த
சினம் மல்கு மால்விடையீர்! செய்யீர்! கரிய கண்டத்தீர்!
இனம் மல்கு நால்மறையோர் ஏத்தும் சீர் கொள் இடைமருதில்,
கனம் மல்கு கோயிலே கோயில்ஆகக் கலந்தீரே.

pun2am malku kon2RaiyIr! puliyin2 ataLIr! polivu Arnta
cin2am malku mAlviTaiyIr! ceyyIr! kariya kaNTattIr!
in2am malku nAlmaRaiyOr Ettum cIr koL iTaimarutil,
kan2am malku kOyilE kOyil Akak kalantIrE.

பொருள்: முல்லை நிலத்தில் பூக்கும் கொன்றை மாலையை நிறைய அணிந்தீர்! புலியின் தோலினை உடுத்தீர்! தோற்றப் பொலிவுடையதும் சினம் மிக்கதுமாகிய எருதினை வாகனமாக உடையீர்! சிவந்த மேனியினீர்! கரிய மிடற்றினை உடையீர்! திருவிடைமருதூரில் நான்மறையோர் திரண்டு வழிபடும் பெருமையுடையதும் மேகம் தங்கும் உயர்ச்சியுடையதுமாகிய திருக்கோயிலையே கோயிலாகக் கொண்டு சேர்ந்தீரே!

குறிப்புரை: புனம் – கொல்லை. அதன் – தோல். மால்விடை – திருமாலாகிய எருது. அறவிடை. உயிர்விடை என்பவை வேறு. இம்மூன்றும் சிவபிரானுக்கு ஊர்தி. செய்யீர் – செந்நிறத்தை உடையீர்.

செம்மேனியெம்மான். இனம் - கூட்டம். மறைக்கும். மறையோர்க்கும் பொது. கனம் - மேகம். கோயிலின் உயர்ச்சி குறித்தது.

Oh! It is Civan, our Lord in Thiru-idai-maruthoor. Oh God! You wear on Your head the strings of cassia flowers growing in plenty in the forest area. You wear on Your waist the tiger's hide. For the comfort of Your conveyance You use the white, good looking, but angry bull (Lord Civa has three bulls for His vehicle as conveyance. One is Thirumaal, the second is God of Virtue, and the third is the nature of souls). Your body is fully red in colour but Your neck is dark blue in colour. In this city, water is in plenty, everywhere. The Brahmin scholars who are well-versed in the four Vedas do live in large numbers in this place. They all gather in the temple of this Thiru-idai-maruthoor city and pray our Lord. This famous big temple where black clouds gather and crawl over the towers, You have selected, for Your abode and are manifested there.

2077. சிலையுய்த்தவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்திறலரக்கன்
தலைபத்துந்திண்டோளும்நெரித்தீர்தையல்பாகத்தீர்
இலைமொய்த்ததண்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தஇடைமருதில்
நலமொய்த்தகோயிலேகோயிலாகநயந்தீரே. 8

சிலை உய்த்த வெங்கணையால் புரம்மூன்று எரித்தீர்! திறல் அரக்கன்
தலைபத்தும் திண்தோளும் நெரித்தீர்! தையல்பாகத்தீர்!
இலை மொய்த்த தண்பொழிலும் வயலும் சூழ்ந்த இடைமருதில்,
நலம் மொய்த்த கோயிலே கோயில்ஆக நயந்தீரே.

cilai uytta vegkaNaiyAl puram mUn2Ru erittIr! tiRal arakkan2
talaipattum tiNtOLum nerittIr! taiyal pAkattIr!
ilai moytta taNpozil vayalum cUznta iTaimarutil,
nalam moytta kOyilE kOyil Aka nayantIrE.

பொருள்: வில்லிலிருந்து எய்த கொடிய அம்பினால் மூன்று மதில்களையும் எரித்தீர். ஆற்றலுடைய அரக்கன் இராவணனின் தலைபத்தும் திண்ணிய தோள்களை நசுக்கினீர்! உமையொரு பாகத்தீர்! தழைத்த குளிர்ச்சியுடைய சோலைகளும் வயல்களும் சூழ்ந்த திருவிடைமருதூரில் அழகு மிக்க திருக்கோயிலையே கோயிலாக விரும்பினீரே!

குறிப்புரை: உய்த்த – செலுத்திய. திறல் – வலிமை. தையல் – உமாதேவியார். நலம் – அழகு. நயந்தீர் – விரும்பினீர்.

Oh! It is Civan, the Lord of Thiru-idai-maruthoor. Oh God! You destroyed completely the three flying forts of Your adversaries, the asuras, by fixing a dreadful arrow in the bow of Meru mountain. You crushed the ten heads and shoulders of the valiant king of Sri Lanka - Raavanan. You carry Your consort on the left half of Your body. You have selected the attractive temple in the Thiru-idai-maruthoor city which is surrounded by forests of all kinds of leaves and rich paddy fields as Your abode and You are manifested there.

2078. மறைமல்குநான்முகனும்மாலுமறியாவண்ணத்தீர்
கறைமல்குகண்டத்தீர்கபாலமேந்துகையினீர்
அறைமல்குவண்டினங்களாலுஞ்சோலையிடைமருதில்
நிறைமல்குகோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. 9

மறை மல்கு நான்முகனும், மாலும் அறியா வண்ணத்தீர்!
கறை மல்கு கண்டத்தீர்! கபாலம் ஏந்து கையினீர்!
அறை மல்கு வண்டுஇனங்கள் ஆலும் சோலை இடைமருதில்,
நிறை மல்கு கோயிலே கோயில்ஆக நிகழ்ந்தீரே.

maRai malku nAn2mukan2um, mAlum aRiyA vaNNattIr!
kaRai malku kaNTattIr! kapAlam Entum kaiyin2Ir!
aRai malku vaNTu in2agkaL Alum cOlai iTaimarutil,
niRai malku kOyilE kOyil Aka nikazntIrE.

பொருள்: வேதம் வல்ல பிரமனும் திருமாலும் அறியமுடியாத இயல்பினீர்! கறையுடைய கண்டமுடையீர்! மண்டையோட்டினை ஏந்திய கரம் உடையீர்! ஒலிக்கின்ற வண்டுக் கூட்டங்கள் ஆரவாரிக்கும் சோலைகளையுடைய திருவிடைமருதூர் கோயிலையே கோயிலாக விளங்கினீரே!

குறிப்புரை: கறை – நஞ்சின் கறுப்பு. அறை – ஓசை. கபாலம் – பிரம்ம கபாலம். ஆலும் – ஒலிக்கும். நிறை – 'நிறையால் நினைபவர்'. நிகழ்ந்தீர் – விளங்கினீர்.

Oh! It is Civan, Lord of Thiru-idai-maruthoor. Lord Brahma who chants the Vedas and Lord Thirumaal could not comprehend our Lord. Thereafter He rose as that

incomprehensive, great light and gave darshan to both. Your neck is dark blue in colour. You have in Your hand the skull for getting alms. This city is surrounded by groves with humming bees in large numbers. You have selected this sacred temple as Your abode; and You are manifested there.

2079. சின்போர்வைச்சாக்கியரும்மாசுசேருஞ்சமணரும்
துன்பாயகட்டுரைகள்சொல்லியல்லல்தூற்றவே
இன்பாயஅந்தணர்களேத்துமேர்கொளிடைமருதில்
அன்பாயகோயிலேகோயிலாகஅமர்ந்தீரே. 10

சின் போர்வைச் சாக்கியரும், மாசு சேரும் சமணரும்,
துன்புஆய கட்டுரைகள் சொல்லி அல்லல் தூற்றவே,
இன்புஆய அந்தணர்கள் ஏத்தும் ஏர் கொள் இடைமருதில்,
அன்புஆய கோயிலே கோயில்ஆக அமர்ந்தீரே.

cin2 pOrvaic cAkkiyarum, mAcu cErum camaNarum,
tun2pu Aya kaTTuraikaL colli allal tURRavE,
in2pu Aya antaNarkaL Ettum Er koL iTaimarutil,
an2pu Aya kOyilE kOyil Aka amarntIrE.

பொருள்: மேனியில் சிறிய போர்வை போர்த்த சாக்கியரும் மாசு சேர்ந்த மேனியுடைய சமணரும் துன்பம் தருவனவாகியவற்றைச் சொல்லிப் பழி தூற்ற, இன்பவடிவாகிய அந்தணர்கள் வழிபடும் அழகுடைய திருவிடைமருதூரில் அன்பிற்குரிய திருக்கோயிலையே கோயிலாக விரும்பித் தங்கினீரே!

குறிப்புரை: சின் (போர்வை) – சின்மை, அற்பம், திரிபு. 'நன்பொருள்' என்பதிற் போல லகரம் னகரமாகத் திரிந்தது. துன்பு ஆய கட்டுரைகள் – துன்பந்தருவனவாய கட்டிச் சொல்லியவை. அல்லல் – துன்பம். இன்பு – இன்பம். அன்பு ஆயகோ 'அன்பே சிவம்' அன்பிற்குரியதாகிய கோயிலுமாம். அமர்தல் – விரும்பியிருத்தல்.

Oh! It is Civan, Lord of Thiru-idai-maruthoor. In this city, the Buddhists in mean dress and the dust covered Jains utter slander on Your devotees. But the Brahmins brush it aside; they who care for spiritual joy, go to the big beautiful temple and recite all songs in praise of You. Thus, it becomes the temple of supreme love. Such a beautiful abode is in Thiru-idai-maruthoor.

2080. கல்லின்மணிமாடக்கழுமலத்தார்காவலவன்
நல்லஅருமறையான்நற்றமிழ்ஞானசம்பந்தன்
எல்லியிடைமருதிலேத்துபாடலிவைபத்தும்
சொல்லுவார்க்குங்கேட்பார்க்குந்துயரமில்லையே. 11

கல்லின் மணி மாடக் கழுமலத்தார் காவலவன்-
நல்ல அருமறையான், நல்-தமிழ் ஞானசம்பந்தன்-
எல்லி இடைமருதில் ஏத்து பாடல் இவை பத்தும்
சொல்லுவார்க்கும் கேட்பார்க்கும் துயரம் இல்லையே.

kallin2 maNi mATak kazumalattAr kAvalavan2--
nalla arumaRaiyAn2, nal-tamiz njAn2acampantan2--
elli iTaimarutil Ettu pATal ivai pattum
colluvArkkum kETpArkkum tuyaram illaiyE.

பொருள்: கற்களினால் சமைக்கப்பட்ட மணிமாடங்களை உடைய கழுமலத்தில் வாழ்பவரின் காவலனும் நல்ல மறையவனும் நற்றமிழ் வல்லவனுமாகிய திருஞானசம்பந்தன் இரவு நேரத்தில் திருவிடைமருதூரில் வழிபட்டுப் பாடிய பாடல்களாகிய இவை பத்தினையும் கூறுபவர்க்கும் கூறியதைக் கேட்பவருக்கும் துயரம் இல்லை.

குறிப்புரை: கல்லின் மணிமாடம் – கல்லாற் கட்டப்பட்ட அழகிய மாடங்களையுடைய (கழுமலம்) கழுமலத்தார் – சீகாழியில் உறையும் சிவமறையோர். காவலவன் – அரசன். வேந்தன். 'சண்பையர் வேந்தன்' எல்லி – இரவு. துயரம் – பிறப்பு இறப்புக்கள்.

Oh! It is Civan, Lord of Thiru-idai-maruthoor. Our saint Thiru-gnana-Sambandar hailed from Kazhumalam as its king. This city has got a number of very attractive palaces of many storeys, all built of blue granite. Thiru-gnana-Sambandar, a scholar in Vedas went to the temple in Thiru-idai-maruthoor at night and sang these famous ten songs in praise of our Lord in rich Tamil language. Those devotees who recite these ten verses and those who hear these songs sung by others will have no suffering or sorrow in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

56ஆம் பதிகம் முற்றிற்று
End of 56th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 193 *பதிக எண்: 57*

57. திருநல்லூர்

57. THIRU-NALLOOR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

கும்பகோணம் – தஞ்சாவூர் தொடர்வண்டிப் பாதையில், சுந்தரப்பெருமாள் கோயில் தொடர்வண்டி நிலையத்திற்குத் தெற்கே 3 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரிக்குத் தென்கரையில் உள்ள இருபதாவது தலமாகும். இறைவர் திருப்பெயர் கல்யாணசுந்தரேசுவரர். இறைவி திருப்பெயர் கல்யாணசுந்தரி. தீர்த்தம் சப்தசாகரதீர்த்தம். இது கோயிலுக்கு எதிரில் உள்ளது.

திருச்சத்தி முற்றத்தில் எழுந்தருளியிருக்கும் சிவக்கொழுந்தை அப்பர் பெருமான் வழிபட்டு, அவரது திருவடியைத் தன் தலைமேல் வைத்தருள வேண்டுமென்று வேண்ட, அவர் 'நல்லூருக்கு வா ஆங்கே நின் நினைப்பதனை முடிக்கின்றோம்' என்று கூறியருள அவ்வாறே அப்பர் பெருமான் அங்குவர, நல்லூர்ப் பெருமான் தன் திருவடியை அப்பர் தலைமேல் வைத்துத் திருவடி தீட்சை செய்த பதியாகும் இது.

இச்செய்தி, 'நல்லருளாற் றிருவடியென் றலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்லவாறே' (திருத்தாண்டகம் திருப்பாடல் 4) என்னும் தேவாரப் பகுதியால் அறியலாகும். சிவனடியார்களுக்குக் கந்தை, கீளுடை கோவணம் இவைகளைக் கருத்தறிந்து உதவிவந்த அமர்நீதி நாயனார்க்கும் அவரது குடும்பத்தாருக்கும் முத்தியளித்த தலம். இச்செய்தியைத் திருநாவுக்கரசு நாயனார், இவ்வூர்த் திருவிருத்தம் ஏழாம் திருப்பாட்டில்,

'நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ் சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடந்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கோர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றோவிவ் வகலிடமே'

எனச் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

அகத்திய முனிவருக்குக் கல்யாணக் கோலத்தை இப்பதியில் சிவபெருமான் காட்டியருளினார். இவ்வூர்க்கு ஞானசம்பந்தர் பதிகங்கள் மூன்று. திருநாவுக்கரசுநாயனார் பதிகங்கள் இரண்டு ஆக ஐந்து பதிகங்கள் இருக்கின்றன. இக்கோயில் மாடக்கோயில் அமைப்பு

வாய்ந்தது. இத்தலத்தில் வைகாசி மாதத்தில் ஏழூர் விழா நடந்து வருகின்றது. இலிங்கத் திருமேனியில் துவாரங்கள் காணப்படுகின்றன.

அமர்நீதி நாயனார், அவருடைய மனைவியார் இவர்களின் பிரதிமைகள் கற்சிலையிலும் செப்புசிலையிலும் இருக்கின்றன.

பதிக வரலாறு

முதல் திருமுறை பதிகம் 86இன் பதிக வரலாறு காண்க.

திருச்சிற்றம்பலம்

2081. பெண்ணமருந்திருமேனியுடையீர்பிறங்குசடைதாழப்
பண்ணமரும்நான்மறையேபாடியாடல்பயில்கின்றீர்
திண்ணமரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்ததிருநல்லூர்
மண்ணமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 1

*பெண் அமரும் திருமேனி உடையீர்! பிறங்கு சடை தாழப்
பண் அமரும் நால்மறையே பாடி ஆடல் பயில்கின்றீர்!
திண் அமரும் பைம்பொழிலும் வயலும் சூழ்ந்த திரு நல்லூர்,
மண் அமரும் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.*

peN amarum tirumEn2i uTaiyIr! piRagku caTai tAzap
paN amarum nAlmaRaiyE pATi ATal payilkin2RIr!
tiN amarum paimpozilum vayalum cUznta tiru nallUr,
maN amarum kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: பெண்ணை ஒரு பாகத்தில் கொண்ட திருமேனியை உடையவரே! விளங்குகின்ற சடைமுடி தாழ, நான்கு மறைகளையும் இசையுடன் பாடிக் கொண்டு கூத்தாடுதலை இடைவிடாது செய்கின்றீர்! நெருங்கிய பசிய பொழிலும் வயலும் சூழ்ந்த திருநல்லூரில், மண்ணுலகத்தவர் விரும்பும் திருக்கோயிலையே உம்முடைய கோயிலாக மகிழ்ந்தீரே!

குறிப்புரை: பெண்ணமருந் திருமேனி உடையீர் – மங்கை பங்கரே. பிறங்கு – விளங்குகின்ற. பண் – இசை. திண் – உறுதி. மண் அமரு – மண்ணோர் விரும்பும். நிலத்தில் பொருந்தும் என்பது சிறந்ததன்று. 'வானமருங்கோயில்' (பா. 4) 'வான்தோயுங்கோயில்' (பா. 7).

Oh! Our God Civan is the Lord of Thiru-nalloor. Oh God! You have embedded Your consort Uma Devi on the left half of Your body. Your bright matted locks hang down Your head. You chant the songs of the four Vedas in melodious musical tone and

dance according to Your music. The temple in this city of Thiru-nalloor is surrounded by ever green gardens full of exuberant lush trees as well rich paddy fields. The people on this earth desire to visit this temple and worship You there. Oh God! You have selected this temple as Your abode and are manifested in this sacred temple.

2082. அலைமல்குதண்புனலும்பிறையுஞ்சூடிஅங்கையில்
கொலைமல்குவெண்மழுவுமனலுமேந்துங்கொள்கையீர்
சிலைமல்குவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்திருநல்லூர்
மலைமல்குகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 2

அலை மல்கு தண்புனலும் பிறையும் சூடி, அங்கையில்
கொலை மல்கு வெண்மழுவும் அனலும் ஏந்தும் கொள்கையீர்!
சிலை மல்கு வெங்கணையால் புரம்மூன்றும் எரித்தீர்! திரு நல்லூர்,
மலை மல்கு கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

alai malku taNpun2alum piRaiyum cUTi, agkaiyil
kolai malku veN mazuvum an2alum Entum koLkaiyIr!
cilai malku vegkaNaiyAl puram mUn2Rum erittIr! tiru nallUr,
malai malku kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: அலைகள் மிகவீசும் கங்கையாற்றினையும் பிறையையும் சிரசில் சூடி, அகங்கையில் கொலைத் தொழில் உடைய வெண்மையான ஒளிவீசும் மழுப்படையையும் நெருப்பையும் ஏந்துவீர்! மேரு மலையாகிய வில்லில் எய்தப் பெற்ற திருமாலாகிய கொடிய கணையினால் திரிபுரம் மூன்றையும் எரியச் செய்தீர்! திருநல்லூரில் மலைபோலும் தோற்றம் உடைய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே!

குறிப்புரை: தண்புனல் – குளிர்நீர்; கங்கை. அனல் – தீ. கொள்கை – விரதம். மேற்கோளும் ஆம். சிலை – மேருமலையாகிய வில். வெங்கணை – திருமாலாகிய அம்பில் தீயாகியமுனை உடைமையால் வெம்மை கூறப்பட்டது. கணையின் கொடுமை குறித்தலுமாம். மலைமல்கு கோயில் – மலைபோலத் தோற்றம் நிறைந்த கோயில். 'வெள்ளிமால் வரையை – நேர் விரிசுடர்க் கோயில்' (பெரி. திருஞா. 368 பா. 10 பார்க்க).

Oh! Our God Civan is the Lord of Thiru-nalloor. Oh God! You adorn Your head with the baby moon and the river Ganges of surging, cool waves. You have that killer, white axe, and blazing fire on Your attractive hands. You bent the mount Meru and

shot the dreadful arrow and burnt the three flying forts of the asuras. You have happily manifested Yourself in the big mountain-like temple in Thiru-nalloor which You have selected as Your abode.

2083. குறைநிரம்பாவெண்மதியஞ்சூடிக்குளிர்புன்சடைதாழப்
பறைநவின்றபாடலோடாடல்பேணிப்பயில்கின்றீர்
சிறைநவின்றதண்புனலும்வயலுஞ்சூழ்ந்ததிருநல்லூர்
மறைநவின்றகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 3

குறை நிரம்பா வெண்மதியம் சூடிக் குளிர்புன்சடை தாழ,
பறை நவின்ற பாடலோடு ஆடல் பேணிப் பயில்கின்றீர்!
சிறை நவின்ற தண்புனலும் வயலும் சூழ்ந்த திரு நல்லூர்,
மறை நவின்ற கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

kuRai nirampA veNmatiyam cUTik kuLirpun2caTai tAza,
paRai navin2Ra pATalOTu ATal pENip payilkin2RIr!
ciRai navin2Ra taNpun2alum vayalum cUznta tiru nallUr,
maRai navin2Ra kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: பிறைமதியைச் சடையிற்சூடி, கங்கையாற்றால் குளிர்ந்த சடை தாழ, பறை ஒலிக்கப் பாடலோடு கூத்தாடலையும் விரும்பிப் பயில்கின்றீர்! அணைகளால் தடை செய்யப்பட்ட குளிர்ந்த புனலும் வயலும் சூழ்ந்த திருநல்லூரில் வேதங்கள் மிக்கொலிக்கும் திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே!

குறிப்புரை: குறைமதியம்; நிரம்பாமதியம்; வெண்மதியம் என்க. குறை நிரம்பாத மதியமென்று கொளின் இறைவன் திருமுடி மேற்பிறை என்றும் பிறையாகவே இருப்பதாம். தேய்தலுங் குறைதலுமில்லை என்று கொள்ளலும் ஆம். பறை – வாத்தியங்கள். நவின்ற – மிக்கொலித்த. சிறை – அணை. நவின்ற – செய்த. மறை நவின்ற – வேதங்களைப் பயிலுதற்கு இடமான.

Oh Civa! You are the Lord of Thiru-nalloor. You adorned Your head with the baby moon which never waxes or wanes on your soft matted hair, cooled with cold water lapping on Your body. You are pleased to sing melodious, divine songs and dance according to the tone of the musical drums. Thiru-nalloor is surrounded by paddy fields, full of cool water flowing from the dams. In the temple of Thiru-nalloor, Vedic scholars always chant the Vedas inside the temple. Oh God! You had joyfully

selected this temple as Your abode. You, therefore, are manifested there in the temple very happily.

2084. கூனமரும்வெண்பிறையும்புனலுஞ்சூடுங்கொள்கையீர்
மானமரும்மென்விழியாள்பாகமாகுமாண்பினீர்
தேனமரும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வானமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 4

கூன் அமரும் வெண்பிறையும் புனலும் சூடும் கொள்கையீர்!
மான் அமரும் மென்விழியாள் பாகம்ஆகும் மாண்பினீர்!
தேன் அமரும் பைம்பொழிலின் வண்டு பாடும் திரு நல்லூர்,
வான் அமரும் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

kUn2 amarum veNpiRaiyum pun2alum cUTum koLkaiyIr!
mAn2 amarum men2viziyAL pAkam Akum mANpin2Ir!
tEn2 amarum paim pozilin2 vaNTu pATum tiru nallUr,
vAn2 amarum kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: வளைவான வெண்பிறையையும், கங்கையையும் சூடுவீர்! மான் பிணையின் மருண்ட கண் போலும் மருட்சியை உடைய மென்விழியாளாகிய உமையைத் திருமேனியில் பாகமாகக் கொள்ளும் பெருமை உடையீர்! தேன் உடைய பைம்பொழிலில் வண்டுகள் பாடும் திருநல்லூரில் வானளாவிய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே!

குறிப்புரை: கூன் – வளைவு. மான் அமரும் விழி – மான் மருண்டு நோக்குவது போல நோக்கும் விழிகள். கண் வேறு விழிவேறு ஆயினும் இரண்டும் ஒன்றாகக் கொண்டு இருவகை வழக்கிலும் ஆள்வர். மாண்பு – பெருமை. வான் – வானோர். அமரும் – விரும்பித் தொழும். வானளாவிய எனலுமாம். 'மண்ணமருங் கோயில்' (பா. 1) 'வான்தோயுங்கோயில்' (பா. 7).

Oh! It is Civan, the Lord of Thiru-nalloor. Oh God! You wear the curved baby moon on Your head along with the river Ganges. You have embedded Your consort Uma Devi, with delicate fluttering eyes like a deer, on the left half of Your body. You have such virtues in Your action. In the city of Thiru-nalloor, green, fertile groves overflowing with honey are many. In these areas bees hum while flying to suck honey.

The temple of this city is very tall touching the sky. You have desired to have this temple as Your abode and are manifested there with much happiness.

2085. நிணங்கவரும்மூவிலையுமனலுமேந்திநெறிகுழலாள்
அணங்கமரும்பாடலோடாடல்மேவுமழகினீர்
திணங்கவருமாடரவும்பிறையுஞ்சூடித்திருநல்லூர்
மணங்கமழுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 5

நிணம் கவரும் மூவிலையும் அனலும் ஏந்தி, நெறிகுழலாள்
அணங்கு அமரும் பாடலோடு ஆடல் மேவும் அழகினீர்!
திணம் கவரும் ஆடுஅரவும் பிறையும் சூடி, திரு நல்லூர்,
மணம் கமழும் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

niNam kavarum mUvilaiyum an2alum Enti, neRikuzalAL
aNagku amarum pATalOTu ATal mEvum azakin2Ir!
tiNam kavarum ATu aravum piRaiyum cUTi, tiru nallUr,
maNam kamazum kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: மூன்று இலைகள் போன்ற வடிவமுடைய கொழுப்புப் பூசிய சூலத்தையும், அனலையும் ஏந்தி, நெறித்த குழலாளாகிய உமாதேவியார் விரும்பும் பாடலொடு ஆடலையும் விரும்பும் அழகினை உடையீர்! (நஞ்சால்) உயிரைக் கவரும் திண்மையுடைய படமெடுத்து ஆடுகின்ற பாம்பையும் பிறையையும் சூடித் திருநல்லூரில் சிவமணங்கமழும் திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே!

குறிப்புரை: நிணம் – கொழுப்பு. நெறிகுழலாள் – நெறித்த கூந்தலை உடைய உமாதேவியார். அணங்கு – தெய்வம். குழலாளாகிய அணங்கு என்றேனும் தெய்வத்தன்மை பொருந்திய பாடல் என்றேனும் கொள்ளலாம். திணம் (திண்ணம்) – உறுதியாக. கவரும் – (நஞ்சால் உயிரைக்) கவரும். அரவு – பாம்பு பிறையைத் திண்ணங் கவரும் அரவு எனலும் பொருந்தும். 'சொலீர் . . . செஞ்சடையிற் பிறை பாம்புடன் வைத்ததே' (பதி. 137 பா. 1) மணம் – சிவமணம். கமழும் – மணக்கும்.

Oh! It is Civan, Lord of Thiru-nalloor. Oh God! You hold in Your hand a trident-battle axe which is kept always smeared in lard; a glowing flame in another hand. You are the most handsome and beautiful Lord, desirous of dancing and singing along with Your consort Uma Devi with dense sweet smelling hair. You have accommodated the snake, which covets and kills other living creatures scrupulously. Also You have

retained the moon contrasting on Your head along with the snake. The temple in the city of Thiru-nalloor, is always fragrant (Civa's fragrance) owing to the spiritual activities in the temple. You have selected this temple as Your abode and are manifested there happily.

2086. கார்மருவுபூங்கொன்றைசூடிக்கமழ்புன்சடைதாழ
வார்மருவுமென்முலையாள்பாகமாகுமாண்பினீர்
தேர்மருவுநெடுவீதிக்கொடிகளாடுந்திருநல்லூர்
ஏர்மருவுகோயிலேகோயிலாகஇருந்தீரே. 6

கார் மருவு பூங்கொன்றை சூடிக் கமழ் புன்சடை தாழ,
வார் மருவு மென்முலையாள் பாகம்ஆகும் மாண்பினீர்!
தேர் மருவு நெடுவீதிக் கொடிகள் ஆடும் திரு நல்லூர்,
ஏர் மருவு கோயிலே கோயில்ஆக இருந்தீரே.

kAr maruvu pUgkon2Rai cUTik kamaz pun2caTai tAza,
vAr maruvu men2mulaiyAL pAkam Akum mANpin2Ir!
tEr maruvu neTuvItk koTikaL ATum tiru nallUr,
vAn2 tOyum kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: கார் காலத்தில் மலரும் அழகிய கொன்றைப் பூக்களைச் சூடி, மணம் கமழும் சடை தாழ, கச்சணிந்த மென்முலையாளைப் பாகமாகக் கொண்ட பெருமையினை உடையீர்! தேரோடும் நீண்ட பெரிய வீதிகளையும் கொடிகள் ஆடும் மாளிகைகளையும் உடைய திருநல்லூரில் அழகிய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே!

குறிப்புரை: கார் – கார்காலம். 'காரார்கொன்றை' (தி.1 ப.56 பா.1). 'கார்மலி கொன்றை' (தி.3 ப.60 பா.6) 'காரினார் மலர்க்கொன்றை தாங்கு கடவுள்' (பதி. 186 பா. 6). 'கார்க்கொன்றை மாலை கலந்ததுண்டோ' 'காரினார் கொன்றைக் கண்ணியார்' (தி.2 ப.162 பா.6). வார் – கச்சு. 'தேர்மருவு நெடுவீதிக் கொடிகள் ஆடும்' என்றதால், திருநல்லூரின் பிரமோற்சவமும் மாடவீதிகளின் சிறப்பும் குறித்தவாறு. ஏர் – அழகு.

Oh! It is Civan, our Lord in Thiru-nalloor. Oh God! You have adorned Your head with strings of cassia flowers which blossom in large numbers in the rainy season. Your long sweet smelling hair descends. You have embedded Your consort on the left half of Your body with her tender breasts, covered well. Your greatness has no equal. In this temple of this city car festivals take place according to the seasons. The temple

chariot plies in the broad long streets where the flags placed on top floors of tall palaces beautifully flutter. Oh God! You have chosen the temple in this beautiful city and with Your presence glorified it.

2087. ஊன்தோயும்வெண்மழுவுமனலுமேந்தியுமைகாண
மீன்தோயுந்திசைநிறையவோங்கியாடும்வேடத்தீர்
தேன்தோயும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வான்தோயுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 7

ஊன் தோயும் வெண்மழுவும் அனலும் ஏந்தி, உமை காண,
மீன் தோயும் திசை நிறைய ஓங்கி ஆடும் வேடத்தீர்!
தேன் தோயும் பைம்பொழிலின் வண்டு பாடும் திரு நல்லூர்,
வான் தோயும் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

Un2 tOyum veN mazuvum an2alum Enti, umai kANa,
mIn2 tOyum ticai niRaiya Ogki ATum vETattIr!
tEn2 tOyum paimpozilin2 vaNTu pATum tiru nallUr,
vAn2 tOyum kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: தலை தோய்ந்த வெண்ணிற ஒளி வீசும் மழுவாயுதமும், நெருப்பும் ஏந்தி உமையம்மை காண விண்மீன்கள் பொருந்திய வானவெளி நிறையுமாறு விளங்கி ஆடும் திருவேடம் உடையீர்! தேன் நிறைந்த பசிய பொழிலில் வண்டுகள் முரலுகின்ற திருநல்லூரில் விண்முட்டும் திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே!

குறிப்புரை: ஊன் – தசை. மீன் தோயும் திசை – நட்சத்திரங்கள் பொருந்திய வானம். இது பத்துத் திக்குகளுள் மேலிடம். வேடம் – நடனக்கோலம். வான் தோயும் கோயில் – 'வான் அமரும் கோயில்' (பா. 4).

Oh! It is Civan, the Lord of Thiru-nalloor. Oh God! You hold in one of Your hands the white battleaxe with sticky flesh of the dead. In another hand You hold blazing flame. You perform the cosmic dance with Your whole divine body enveloping the vast cosmos and touching the sky with the twinkling stars and filling all the directions with its forceful vibration. Our goddess Uma Devi, is a spectator of Your magnificent dance. In the city of Thiru-nalloor, flower gardens with profuse honey are quite common. Here the bees gather making a humming noise and sucking honey from

the flowers. Oh God! You are happily manifested in this temple where the towers are tall, touching the sky.

2088. காதமரும்வெண்குழையீர்கறுத்தஅரக்கன்மலையெடுப்ப
மாதமரும்மென்மொழியாள்மறுகும்வண்ணங்கண்டுகந்தீர்
தீதமராஅந்தணர்கள்பரவியேத்துந்திருநல்லூர்
மாதமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 8

காது அமரும் வெண்குழையீர்! கறுத்த அரக்கன் மலை எடுப்ப,
மாது அமரும் மென்மொழியாள் மறுகும் வண்ணம் கண்டு உகந்தீர்!
தீது அமரா அந்தணர்கள் பரவி ஏத்தும் திரு நல்லூர்,
மாது அமரும் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

kAtu amarum veNkuzaiyIr! kaRutta arakkan2 malai eTuppa,
mAtu amarum men2moziyAL maRukum vaNNam kaNTu ukantIr!
tItu amarA antaNarkaL paravi Ettum tiru nallUr,
mAtu amarum kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: திருச்செவியில் வெண்ணிறத்த குழையை உடையீர்! சினங்கொண்ட அரக்கன் இராவணன் உம்முடைய கயிலைமலையை எடுக்கவே, காதல் நிறைந்த உமையாள் அஞ்ச, அவனை அடரும் விளையாட்டினை விரும்பினீர்! தீவினைகள் வெறுத்த நல் அந்தணர்கள் பரவி வழிபடும் திருநல்லூரில் பெருமை உடைய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே!

குறிப்புரை: காது – காதில். கறுத்த – கோபித்த. கருநிறமுடைய 'நீலமாமணி நிறத்து அரக்கனை இருபது கரத்தொடு ஒல்க வாலினால் கட்டிய வாலியார்' (தி.3 ப.91 பா.8). மாது – காதல். மறுகும் வண்ணம் – கலங்கும்படி கண்டு உகத்தல் – மகிழ் விளையாட்டு. தீது அமரா – தீ வினையை வெறுத்த. மாது – பெருமை.

Oh! It is Civan, our Lord in Thiru-nalloor. Oh God! You have fixed the white ear-ring of tender green leaf in Your right ear. The king of Sri Lanka, Raavanan, in an angry mood, due to egoism, tried his best to lift the mount Himalayas and place it aside. At that moment our goddess Uma Devi, who usually speaks tender words inspiring love, shuddered and You laughed at it. In the city of Thiru-nalloor, Brahmin scholars who never indulge in bad actions live in large numbers. They go to the temple,

prostrate and recite Your praise and worship You. Oh God! You have happily selected the same temple and are manifested there.

2089. போதின்மேலயன்திருமால்போற்றியும்மைக்காணாது
நாதனேயிவனென்றுநயந்தேத்தமகிழ்ந்தளித்தீர்
தீதிலாஅந்தணர்கள்தீமுன்றோம்புந்திருநல்லூர்
மாதராளவளோடுமன்னுகோயில்மகிழ்ந்தீரே. 9

போதின்மேல் அயன், திருமால், போற்றி உம்மைக் காணாது,
"நாதனே இவன்" என்று நயந்து ஏத்த, மகிழ்ந்து அளித்தீர்!
தீது இலா அந்தணர்கள் தீமுன்று ஓம்பும் திரு நல்லூர்,
மாதராள் அவளோடும் மன்னு கோயில் மகிழ்ந்தீரே.

pOtin2 mEl ayan2, tirumAl, pORRi ummaik kANAtu,
"nAtan2E ivan2" en2Ru nayantu Etta, makizntu aLittIr!
tItu ilA antaNarkaL tI mUn2Ru Ompum tiru nallUr,
mAtarAL avaLOTum man2n2u kOyil makizntIrE.

பொருள்: தாமரை மலர் மேலிருக்கும் பிரமனும் திருமாலும் உம்மைக் காண முயன்று இயலாமல், பின் உம்மைப் போற்றி 'நாதனே இவன்' என்று அன்புடன் வழிபட, மகிழ்ந்து அருள் செய்தீர். குற்றமற்ற அந்தணர்கள் தீ மூட்டும் திருநல்லூரில், அழகுடையளாகிய உமையம்மையோடு நிலையாகவுள்ள திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே!

குறிப்புரை: போது – செந்தாமரைப்பூ. அயன் – பிரமன். 'நாதனே இவன்' என்று ஏத்த மகிழ்ந்து அளித்தீர். நயந்து – விரும்பி. பக்தி கொண்டுமாம். தீ மூன்று – ஆகவநீயம். காருக பத்தியம். தாட்சிணாக்கினி. மாதராள் – அழகுடையாராகிய உமாதேவியார். மன்னு – நிலையுற்ற.

Oh! It is Civan, our Lord in Thiru-nalloor. Lord Brahma who rests in lotus flower and Lord Thirumaal accepted their defeat over their inability to comprehend the great light form of Yours. Thereafter they realised and prayed "He is our Lord". Then You accepted their prayer and graced them. In the city of Thiru-nalloor blemishless Brahmins live in large numbers. All of them do their daily rituals regularly, ignite the three fires and complete their prayers. Thereafter they go to the local temple and

worship You and our goddess there. Oh God! You are happily manifested in that temple with Your consort Uma Devi.

2090. பொல்லாதசமணரொடுபுறங்கூறுஞ்சாக்கியரொன்
றல்லாதாராறவுரைவிட்டடியார்கள்போற்றோவா
நல்லார்களந்தணர்கள்நாளுமேத்துந்திருநல்லூர்
மல்லார்ந்தகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. 10

பொல்லாத சமணரொடு புறம்கூறும் சாக்கியர் - ஒன்று
அல்லாதார் - அறஉரை விட்டு, அடியார்கள் போற்று ஓவா -
நல்லார்கள், அந்தணர்கள், நாளும் ஏத்தும் திரு நல்லூர்,
மல் ஆர்ந்த கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே.

pollAta camaNaroTu puRam kURum cAkkiyar--on2Ru
allAtAr--aRa urai viTTu, aTiyArkaL pORRu OvA--
nallAr, antaNarkaL, nALum Ettum--tiru nallUr,
mal Arnta kOyilE kOyil Aka makizntIrE.

பொருள்: தீயராகிய சமணருடன் பழிமொழி பேசும் சாக்கியரும் ஆகியரையும் பொருட்படுத்தத் தகாத இவர்கள் அறவுரைகள் போலக் கூறுவனவற்றை விலக்கி, அடியவர்கள் போற்றுதலை விட்டு நீங்கா நல்லவர்களாகிய அந்தணர்கள் நாளும் ஏத்தி வழிபடும் திருநல்லூரில் மலைபோன்று திண்ணிய திருக்கோயிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டு மகிழ்ந்தீரே!

குறிப்புரை: பொல்லாத – தீய. அறவுரை – இகழ்ச்சிக் குறிப்பு. போற்று – துதி. ஓவா – நீங்காத. மல் – மலை. 'மற்பகமலர்ந்த திண்டோள் வானவர்' (கம்பர், பால உரைக்காட்சிப் 52). 'மல்லினும் உயர்தோளாய் மலரடிப் பிரியாதேன்' (மேற்படி. கங்கைப். 66).

Oh! It is Civan, our Lord in Thiru-nalloor. In this city of Thiru-nalloor there do live many good people who never listen to the words of the evil Jains and the slandering words of the Buddhists. These people who never deviate from the righteous path go to the temple and worship daily our Lord. Also the good natured Brahmins go to the temple daily, pray our Lord. Oh God! You have selected the same temple on the hillock of Thiru-nalloor and are happily manifested there.

2091. கொந்தணவும்பொழில்புடைசூழ்கொச்சைமேவுகுலவேந்தன்
செந்தமிழின்சம்பந்தன்சிறைவண்புனல்சூழ்திருநல்லூர்
பந்தணவுமெல்விரலாள்பங்கன்றன்னைப்பயில்பாடல்
சிந்தனையாலுரைசெய்வார்சிவலோகஞ்சேர்ந்திருப்பாரே. 11

கொந்து அணவும் பொழில் புடை சூழ் கொச்சை மேவு குலவேந்தன் -
செந்தமிழின் சம்பந்தன் - சிறை வண் புனல் சூழ் திரு நல்லூர்,
பந்து அணவும் மெல்விரலாள் பங்கன் தன்னைப் பயில் பாடல்
சிந்தனையால் உரைசெய்வார், சிவலோகம் சேர்ந்துஇருப்பாரே.

kontu aNavum pozil puTai cUz koccai mEvu kulavEntan2--
centamizin2 campantan2--ciRai vaN pun2al cUz tiru nallUr,
pantu aNavum melviralAL pagkan2tan2n2aip payil pATal
cintan2aiyAl urai ceyvAr, civalOkam cErntu iruppArE.

பொருள்: பூங்கொத்துக்கள் மலிந்த சோலைகள் பக்கங்களில் சூழ்ந்த சீகாழியிலிருக்கும் மக்களின் தலைவர், செந்தமிழ் வல்ல ஞானசம்பந்தன் அணைகளால் சிறை செய்யப்பட்டிருக்கும் நீர்த்திரள் சூழ்ந்த திருநல்லூரில் பந்தணை மெல்விரலி பங்கனை பாடிய பாடல்களை மனஒருமையோடு பாடுவார் சிவலோகம் சேர்ந்து சிவனுடன் இருப்பரே.

குறிப்புரை: கொந்து – பூங்கொத்து. புடை – பக்கம். கொச்சை – சீகாழி. செந்தமிழில் மறைப்பொருளை அருளியதால் 'செந்தமிழின் சம்பந்தன்' என்னும் உரிமை உண்டாயிற்று. சிறை – அணை. 'பந்தார் விரலி' என்னும் அம்பிகையின் திருப்பெயரை நினைக்க. சிந்தனையால் – தியானத்தோடு.

It is Civan, our Lord in Thiru-nalloor. Our saint Thiru-gnana-Sambandar is king of Kochchai (another name of Seerkaazhi). This city is full of gardens with bunches of flowers all over the area. The city is surrounded also by fertile paddy fields of cool water. In the temple of this place our Lord is manifested with our goddess Uma Devi whose tender fingers play with the beads. Our saint praised the Lord of the temple in these ten verses in pure Tamil language. Those devotees who can recite these ten verses of Thiru-gnana-Sambandar with great concentration in their minds, will reach the world of Civa and live there happily.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

57ஆம் பதிகம் முற்றிற்று
End of 57th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 194 *பதிக எண்: 58*

58. திருக்குடவாயில் 58. THIRU-K-KUDA-VAAYIL

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

'திருணபிந்து முனிவர்க்குச் சிவபெருமான் குடத்தின் வாயில் வெளிப்பட்டுக் குட்டநோய் தீர்த்தருளிய' காரணம்பற்றி இப்பெயர் பெற்றது என்பர். கும்பகோணத்திலிருந்து தென்கிழக்கில் 15 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. தஞ்சாவூர் – திருவாரூர் தொடர்வண்டிப் பாதையிலுள்ள கொரடாச்சேரி தொடர்வண்டி நிலையத்திலிருந்து வடக்கே 9 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரையில் தொண்ணூற்று நாலாவது தலமாகும். திருவாரூர் மற்றும் கும்பகோணம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகளில் செல்லலாம்.

இறைவரது திருப்பெயர் கோணேசுவரர். இறைவியாரது திருப்பெயர் பெரிய நாயகி. திருணபிந்து முனிவர் பூசித்துப் பேறுபெற்றார். கருடன் பூசித்து அமுதம் பெற்றுத் தானும் தன் தாயும் சாபம் நீங்கப்பெற்ற தலம். அது காரணமாகவே, திருமதிலின்மேல் கருடன் உருவங்கள் வைக்கப் பெற்றுள்ளன. இத்தலத்தை ஞானசம்பந்தர் மாத்திரம் பாடியுள்ளார். அவர் பதிகங்கள் இரண்டாகும். இங்குள்ள கோயில் பெருங்கோயில் (மாடக் கோயில்) அமைப்பு உடையது.

'மகிழும் பெருமான் குடவாயின் மன்னி
நிகழும் பெருங் கோயிலி னிலாயவனே'

என்னும் இவ்வூர்த் தேவாரப்பகுதியால் அறியலாம்.

பதிக வரலாறு

தமிழ்விரகர் திருவிரும்பூளை, திருஅரதைப்பெரும்பாழி, திருச்சேறை, திருநாலூர் என்னும் தலங்களை வழிபட்டுத் திருக்குடவாயிலை அடைந்தார். அங்கு அருளிய திருப்பதிகங்களுள் இதுவும் ஒன்று.

திருச்சிற்றம்பலம்

2092. கலைவாழும்அங்கையீர்கொங்கையாருங்கருங்கூந்தல்
அலைவாழுஞ்செஞ்சடையிலரவும்பிறையுமமர்வித்தீர்
குலைவாழைகமுகம்பொன்பவளம்பழுக்குங்குடவாயில்
நிலைவாழுங்கோயிலேகோயிலாகநின்றீரே. 1

கலை வாழும் அம்கையீர்! கொங்கை ஆரும் கருங்கூந்தல்
அலை வாழும் செஞ்சடையில், அரவும் பிறையும் அமர்வித்தீர்!
குலைவாழை கமுகம் பொன்பவளம்பழுக்கும் குடவாயில்,
நிலை வாழும் கோயிலே கோயில்ஆக நின்றீரே.

kalai vAzum am kaiyIr! kogkai Arum karugkUntal
alai vAzum cenjcaTaiyil, aravum piRaiyum amarvittIr!
kulaivAzai kamukam pon2pavaLam pazukkum kuTavAyil,
nilai vAzum kOyilE kOyil Aka nin2RIrE.

பொருள்: ஆண்மான் தங்கும் அழகிய கையினை உடையீர்! நறுமணம் வீசும் கரிய, கூந்தலாகிய அலைகளை உடைய கங்கை வாழும் செஞ்சடையில் பாம்பையும் பிறையையும் ஒருங்கே இருக்கச் செய்தீர்! வாழை பொன் போலக் குலையீனும், கமும் செம்பவளம் போலப் பழுக்கும் திருக்குடவாயிலாகிய நிலையில் உள்ள திருக்கோயிலையே கோயிலாகக் கொண்டு நின்றீரே!

குறிப்புரை: கலை – ஆண் மான். புல்வாய்க்கே அன்றிக் 'கலையென் காட்சி உழைக்கும் உரித்து' (தொல். மரபியல் 42–3). கொங்கு – மணம், பூந்தாது, தேன். கூந்தல் அலை – கூந்தலை உடைய அலைமகளாகிய கங்கை. கமுகம் – பாக்கு. பொன் பவளம் பழுக்கும் – பொன்னையும் பவளத்தையும் போலப் பழுக்கும். நிலை – குடவாயில் நிலை. குடவாயிலாகிய நிலையில்.

Oh! It is Civan, our Lord in Kuda-vaayil. Oh God! You hold a living deer in Your hand. You support the lady of the Ganges with her long black hair of fragrance on Your red matted hair. You retain the moon and also the serpent - both together along with the Ganges on Your hair. In the city of Kuda-vaayil, banana gardens yielding big plantain bunches are many. Also there are areca gardens, which yield fully ripe nuts looking like gold and pearl. The yield of both these fruits renders the city very rich. In this city, the permanent, sacred temple also exists and our Lord desired to make it Your abode and are manifested there.

2093. அடியார்ந்தபைங்கழலுஞ்சிலம்புமார்ப்பஅங்கையில்
செடியார்ந்தவெண்டலையொன்றேந்தியுலகம்பலிதேர்வீர்
குடியார்ந்தமாமறையோர்குலாவியேத்துங்குடவாயில்
படியார்ந்தகோயிலேகோயிலாகப்பயின்றீரே. 2

அடி ஆர்ந்த பைங்கழலும் சிலம்பும் ஆர்ப்ப, அங்கையில்
செடி ஆர்ந்த வெண்தலை ஒன்று ஏந்தி, உலகம் பலி தேர்வீர்!
குடி ஆர்ந்த மா மறையோர் குலாவி ஏத்தும் குடவாயில்,
படி ஆர்ந்த கோயிலே கோயில்ஆகப் பயின்றீரே.

aTi Arnta paigkazalum cilampum Arppa, agkaiyil
ceTi Arnta veNtalai on2Ru Enti, ulakam pali tErvIr!
kuTi Arnta mA maRaiyOr kulAvi Ettum kuTavAyil,
paTi Arnta kOyil kOyilE Akap payin2RIrE.

பொருள்: திருவடியிற் சேர்ந்த பசிய பொன்னாலான கழலும் சிலம்பும் ஒலிக்க, அகங்கையில் நாற்றமுடைய வெளிறிய மண்டையோட்டை ஏந்தி உலகெங்கும் பிச்சை ஏற்பீர். பெருமையுடைய மறையோர்கள் குடியாக அமர்ந்து மகிழ்ந்து கொண்டாடும் குடவாயில் மண்ணில் அமைந்த திருக்கோவிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: கழலும் சிலம்பும் காலணி விசேடம். செடி – குணமின்மை, நாற்றமுமாம். தேர்வீர் – தெரிவீர். குலாவி – கொண்டாடி.

Oh! It is Civan, our Lord in Kuda-vaayil. You have tied round Your sacred feet the new anklets and hollow rings, which clink whenever You go out into the world for alms. You carry in Your hand the fleshy white skull which emits bad smell. In this city of Kuda-vaayil eminent Brahmins live in large numbers. They worship You and recite Your praise in the temple of the city. The temple has many large steps built on mounds leading to the tall temple on the hill. Oh God! You take delight in selecting the temple for Your manifestation.

2094. கழலார்பூம்பாதத்தீரோதக்கடலில்விடமுண்டன்
றழலாருங்கண்டத்தீரண்டர்போற்றுமளவினீர்
குழலாரவண்டினங்கள்கீதத்தொலிசெய்குடவாயில்
நிழலார்ந்தகோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. 3

கழல் ஆர் பூம்பாதத்தீர்! ஓதக்கடலில் விடம் உண்டு, அன்று,
அழல் ஆரும் கண்டத்தீர்! அண்டர் போற்றும் அளவினீர்!
குழல் ஆர் வண்டுஇனங்கள் கீதத்து ஒலிசெய் குடவாயில்,
நிழல் ஆர்ந்த கோயிலே கோயில்ஆக நிகழ்ந்தீரே.

kazal Ar pUmpAtattIr! OtakkaTalil viTam uNTu, an2Ru,
azal Arum kaNTattIr! aNTar pORRum aLavin2Ir!"
kuzal Ar vaNTu in2agkaL kItattu olicey kuTavAyil,
nizal Arnta kOyilE kOyil Aka nikazntIrE.

பொருள்: கழல் கட்டிய அழகிய பாதத்தை உடையீர்! அலை கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு வெப்பமான கண்டத்தை உடையீர்! தேவர்கள் போற்றி வழிபடும் அளவுக்கு அருள் செய்வீர்! மகளிர் கூந்தலில் மொய்க்கும் வண்டினங்கள் பாட்டொலி செய்யும் குடவாசலில் அருளார்ந்த திருக்கோவிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: ஓதம் – அலையை உடைய. விடம் உண்டு அன்று அழல் ஆரும் கண்டத்தீர் என்க. அழல் – நஞ்சினது வெப்பம். அண்டர் – தேவர். போற்றும் அளவினீர் – வழிபடும் அளவிற்கேற்ற அருள்வீர். குழல் – மகளிர் கூந்தல், குழலில் உள்ள மாலையிற் படிந்த வண்டு எனலுமாம். ஆர – நிறைய. குழலார – வேய்ங் குழலொலி நிறைய எனலும் பொருந்தும். நிழல் – ஒளி, அருள்.

Oh! It is Civan, our Lord in Kuda-vaayil. Oh God! You have fixed on Your holy feet the ringing anklets. In the very old days You supped the fire-like poison that came out of the ocean of milk. Before the poison moved down into Your throat, our goddess vigorously compressed the neck and prevented the poison going down into the throat. From that day onwards Your neck had been dark blue in colour. Thereafter You were called Neelakandar. The devas praise and worship You. The damsels wear flowers full of honey. Therefore, bees always move around their hair humming musical noise. In this city of Kuda-vaayil filled with bees' music, our God has delightfully selected this dazzling temple as His place for manifestation.

2095. மறியாருங்கைத்தலத்தீர்மங்கைபாகமாகச்சேர்ந்
தெறியாருமாமழுவுமெரியுமேந்துங்கொள்கையீர்
குறியாரவண்டினங்கள்தேன்மிழற்றுங்குடவாயில்
நெறியாருங்கோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. 4

மறி ஆரும் கைத்தலத்தீர்! மங்கைபாகம்ஆகச் சேர்ந்து,
எறி ஆரும் மா மழுவும் எரியும் ஏந்தும் கொள்கையீர்!
குறி ஆர வண்டுஇனங்கள் தேன் மிழற்றும் குடவாயில்,
நெறி ஆரும் கோயிலே கோயில்ஆக நிகழ்ந்தீரே.

maRi Arum kaittalattIr! magkai pAkam Akac cErntu,
eRi Arum mA mazuvum eriyum Entum koLkaiyIr!
kuRi Ara vaNTu in2agkaL tEn2 mizaRRum kuTavAyil,
neRi Arum kOyilE kOyil Aka nikazntIrE.

பொருள்: மான் கன்று தங்கும் கைத்தலம் உடையீர்! உமையம்மையைப் பாகமாகச் சேர்ந்து, எறியப்படுகின்ற பெருமையுடைய மழுவும் நெருப்பும் கரங்களில் ஏந்தும் இயல்புடையீர்! போதுகளை மலர்த்தும் குறிப்புடைய வண்டுக் கூட்டங்கள் தேன் போல இனிமையாக மிழற்றும் குடவாயிலில், வேதாகம நெறி பொருந்திய திருக்கோவிலையே உம்முடைய கோவிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: மறி – மான்கன்று. 'யாடும் குதிரையும் நவ்வியும் உழையும் ஓடும் புல்வாய் உளப்பட மறியே' (தொல். மரபியல் சூ. 12). கைத்தலத்தீர் – கையிடத்தையுடையவரே! எறி (எறிதல்) – வீசுதல். எரி – தீ. குறி – போதுகளை மலர்த்தும் குறிப்பு. ஆர – பொருந்த. தேன் உண்ணும் பொருட்டு. மிழற்றும் – பாடும். நெறி – வேதாகம வழி. ஆரும் – பொருந்தும்.

Oh! It is Civan, our Lord of Kuda-vaayil. Oh God! You hold a young deer in Your hand. You have embedded Your consort Uma Devi on the left half of Your body. You hold a hot battleaxe in one of Your hands and a blazing fire in the other hand. In this city, many flower gardens exist, where the bees in large numbers fly to suck honey from the flowers, making music with their wings. In this city, the temple has been built according to aagama rules. Oh God! You have selected this temple as Yours and are manifested there.

2096. இழையார்ந்தகோவணமுங்கீளுமெழிலாருடையாகப்
பிழையாதசூலம்பெய்தாடல்பாடல்பேணினீர்
குழையாரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தகுடவாயில்
விழவார்ந்தகோயிலேகோயிலாகமிக்கீரே. 5

இழை ஆர்ந்த கோவணமும் கீளும் எழில் ஆர் உடைஆக,
பிழையாத சூலம் பெய்து ஆடல்பாடல் பேணினீர்!
குழை ஆரும் பைம்பொழிலும் வயலும் சூழ்ந்த குடவாயில்,
விழவு ஆர்ந்த கோயிலே கோயில்ஆக மிக்கீரே.

izai Arnta kOvaNamum kILum ezil Ar uTai Aka,
pizaiyAta cUlam peytu, ATal pATal pENin2Ir!
kuzai Arum paimpozilum vayalum cUznta kuTavAyil,
vizavu Arnta kOyilE kOyil Aka mikkIrE.

பொருள்: நூலிழையினால் தைக்கப்பட்ட கோவணமும் கீளும் எழில் நிறைந்த உடையாக, குறி பிழையாத சூலம் வீசிப் பாடலுடன் ஆடல் விரும்பினீர்! தளிர்கள் தழைத்த பூஞ்சோலைகளின் நறுவாசம் வீசுங் குடவாயிலில் விழாக்கள் நிறைந்த திருக்கோவிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: இழை – நூலிழை. கீள் – கிழி, கீழ், கீள் என மருவிற்று. 'மடையில் . . . சாம்பற்பூச்சும் கீள் உடையும் கொண்ட உருவம்' (ப.23 பா.1). 'கீளார் கோவணமும் திருநீறும் மெய்ப்பூசி' (தி.7 ப.240) 'கீளலால் உடையுமில்லை' (தி.4 ப.40 பா.7). குழை – தளிர். விழவு – திருவிழாக்கள்.

Oh! It is Civan, our Lord in Kuda-vaayil. Oh God! You wear the forelap made of cotton yarn and also a loin cloth. You hold an undefeatable trident in one of Your hands and take delight to sing and dance. In this city, there are many gardens full of tender leaved trees. Paddy fields also are many around the city temple. In the temple of this city of Kuda-vaayil, many festivals take place on occasions. You have selected this temple as Your abode and are happily manifested there.

2097. அரவார்ந்ததிருமேனியானவெண்ணீறாடினீர்
இரவார்ந்தபெய்பலிகொண்டிமையோரேத்தநஞ்சுண்டீர்
குரவார்ந்தபூஞ்சோலைவாசம்வீசுங்குடவாயில்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. 6

அரவு ஆர்ந்த திருமேனி ஆன வெண்நீறு ஆடினீர்!
இரவு ஆர்ந்த பெய் பலி கொண்டு, இமையோர் ஏத்த நஞ்சு உண்டீர்!
குரவு ஆர்ந்த பூஞ்சோலை வாசம் வீசும் குடவாயில்,
திரு ஆர்ந்த கோயிலே கோயில்ஆகத் திகழ்ந்தீரே.

aravu Arnta tirumEn2i An2a veN nIRu ATin2Ir!
iravu Arnta pey pali koNTu imaiyOr Etta nanjcu uNTIr!
kuravu Arnta pUnjcOlai vAcam vIcum kuTavAyil-
tiru Arnta kOyilE kOyil Akat tikazntIrE.

பொருள்: பாம்பினைக் கச்சாகக் கட்டிய திருமேனி திருவெண்ணீற்றில் மூழ்குதலுடையீர்! இரந்து பெய்த பிச்சையைக் கொண்டு பின்னும் தேவர்கள் போற்ற நஞ்சுண்டீர்! குரவ மரங்கள் நிறைந்த பூஞ்சோலையின் வாசம் வீசும் குடவாயிலில் மங்கலமிக்க திருக்கோவிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: அரவு – பாம்பு. வெண்ணீறாடினீர் – திருவெண்ணீற்றில் மூழ்குதலுடையீர். இரவு – இரத்தல். குரவு – குராமரம். வாசம் – மணம். திரு – அழகு. 'சென்றடையாத்திரு'

Oh! It is Civan, our Lord in Kuda-vaayil. Oh God! You have that holy body adorned with snakes. You love the ablution with holy ashes on Your body. You undertake to get alms from all over the world and accept happily the alms given by willing ladies. The devas prayed for Your help to destroy the poison they got from the ocean of milk. You graced them and supped the poison. In the city of Kuda-vaayil, full of flowery gardens the bottle flower trees shed their fragrance all over the temple area. Oh God! You desired to occupy the temple as Your abode and are manifested there.

2098. பாடலார்வாய்மொழியீர்பைங்கண்வெள்ளேறூர்தியீர்
ஆடலார்மாநடத்தீரரிவைபோற்றுமாற்றலீர்
கோடலார்தும்பிமுரன்றிசைமிழற்றுங்குடவாயில்
நீடலார்கோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. 7

பாடல் ஆர் வாய்மொழியீர்! பைங்கண் வெள்ஏறு ஊர்தியீர்!
ஆடல் ஆர் மா நடத்தீர்! அரிவை போற்றும் ஆற்றலீர்!
கோடல் ஆர் தும்பி முரன்று இசை மிழற்றும் குடவாயில்,
நீடல் ஆர் கோயிலே கோயில்ஆக நிகழ்ந்தீரே.

pATal Ar vAymoziyIr! paigkaN veL ERu UrtiyIr!
ATal Ar mA naTattIr! arivai pORRum ARRalIr!
kOTal Ar tumpi muran2Ru icai mizaRRum kuTavAyil,
nITal Ar kOyilE kOyil Aka nikazntIrE.

பொருள்: வேதப்பாடல் மிக்க வாயினை உடையீர்! பசிய கண்ணை உடைய வெள்ளேற்றினை ஊர்தியாக உடையீர்! மகா தாண்டவம் ஆடுதலைப் புரிந்தீர்! பெண் (உமை) போற்றும் வலிமை உடையீர்! காந்தளில் மொய்த்த வண்டு இசை மிழற்றும் குடவாயிலில் நீண்ட திருக்கோவிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: பாடல் – வேதப்பாடலில். ஆர் – பொருந்திய. வாய் மொழியீர் – சத்தியவார்த்தையாக விளங்குபவரே. வேதப்பாடல் பொருந்திய திருவாய்ச்சொல் உடையீர் எனலுமாம். ஏறு – ரிஷபம். ஊர்தி – வாகனம். மாநடத்தீர் – மகா தாண்டவம் செய்தீர். அரிவை – உமாதேவியார். ஆற்றல் – வலிமை. கோடல் – வெண்காந்தள். தும்பி – வண்டு. முரன்று – ஒலித்து. மிழற்றும் – இசைபாடும். நீடல் – நீளுதல்.

Oh! It is Civan, the Lord of Kuda-vaayil. Oh God! You are the embodiment of true divine knowledge in the four sacred Vedas. You own a young and fresh white eyed bull as Your vehicle for conveyance. You are the embodiment of the famous cosmic dance and perform it whenever You take interest in the dance. Our goddess Uma Devi always praises Your might. In this city, the bees gather around glory lily flowers and flap making music. The temple in this city is big and very tall. You have selected this temple as Your abode and are manifested there happily.

2099. கொங்கார்ந்தபைங்கமலத்தயனுங்குறளாய்நிமிர்ந்தானும்
அங்காந்துதள்ளாடஅழலாய்நிமிர்ந்தீரிலங்கைக்கோன்
தங்காதல்மாமுடியுந்தாளுமடர்த்தீர்குடவாயில்
பங்கார்ந்தகோயிலேகோயிலாகப்பரிந்தீரே. 8

கொங்கு ஆர்ந்த பைங்கமலத்து அயனும், குறள்ஆய் நிமிர்ந்தானும்,
அங்காந்து தள்ளாட, அழல்ஆய் நிமிர்ந்தீர்! இலங்கைக் கோன்-
தம் காதல் மா முடியும் தாளும் அடர்த்தீர்! குடவாயில்,
பங்கு ஆர்ந்த கோயிலே கோயில்ஆகப் பரிந்தீரே.

kogku Arnta paigkamalattu ayan2um, kuRaL Ay nimirntAn2um,
agkAttu taLLATa, azal Ay nimirntIr! ilagkaik kOn2-
tam kAtal mA muTiyum tALum aTarttIr! kuTavAyil,
pagku Arnta kOyilE kOyil Aka parintIrE.

பொருள்: தேனும் மணமும் உள்ள அழகிய தாமரை மலரின் மேல் இருக்கும் பிரமனும், குறளாகி இருந்து விண்முட்ட நீண்டவனும் வாய் திறந்து தடுமாற தீப்பிழம்பாக நிமிர்ந்தீர்! இலங்கைக்கு அரசனான இராவணனின் பெருமை கொண்ட பெரிய முடிகளையும் வீரத்தையும் அழித்தீர்! குடவாயிலின் கூறாக அமைந்த திருக்கோவிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: கொங்கு – தேன், மணம். கமலத்து அயனும், தாமரை மீதுள்ள பிரமனும். குறளாய் – வாமனமூர்த்தியாய். நிமிர்ந்தானும் – விக்கிரமனும். அங்காந்து – வாய்திறந்து. தள்ளாட – அசைய. தம் காதல் – தம்முடைய காதலை விளக்கக்கூடிய. மா – பெரிய. தாளும் – அடியும். பங்கு – கூறு.

Oh! It is Civan, Lord of Kuda-vaayil. Lord Brahma rests in the fresh lotus flower, which yields honey. Lord Thirumaal went to the palace of king Maavali in the likeness of a very short man and asked for 3 feet of land. After getting his grant Thirumaal rose and took the shape of the tallest man of the world. These two gods went round the world, into the sky, and under the earth to see the head and foot of our Lord, but failed in their efforts. Then both became exhausted, accepted their failure and prayed to our Lord. Our Lord then appeared before them as the biggest and tallest blazing column of fire. You crushed king Raavanan with his big heads and feet. The temple forms a part of Kuda-vaayil city. You selected this temple in Kuda-vaayil as Your abode. You are manifested there and impart to the devotees divine knowledge.

9ஆம் பாட்டு கிடைக்கப்பெறவில்லை.

2100. தூசார்ந்தசாக்கியருந்தூய்மையில்லாச்சமணரும்
ஏசார்ந்தபுன்மொழிநீத்தெழில்கொள்மாடக்குடவாயில்
ஆசாரஞ்செய்மறையோர்அளவிற்குன்றாதடிபோற்றத்
தேசார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. 10

தூசு ஆர்ந்த சாக்கியரும், தூய்மை இல்லாச் சமணரும்,
ஏசு ஆர்ந்த புன்மொழி நீத்து, எழில் கொள் மாடக் குடவாயில்,
ஆசாரம் செய் மறையோர் அளவின் குன்றாது அடி போற்ற,
தேசு ஆர்ந்த கோயிலே கோயில்ஆகச் சேர்ந்தீரே.

tUcu Arnta cAkkiyarum, tUymai illAc camaNarum,
Ecu Arnta pun2mozi nIttu, ezil koL mATak kuTavAyil,
AcAram cey maRaiyOr aLavin2 kun2RAtu aTi pORRa,
tEcu Arnta kOyilE kOyil Akac cErntIrE.

பொருள்: தூசு படிந்த உடையுடுத்த சாக்கியரும், சுத்தமில்லாத சமணரும் கூறும் இகழ்ச்சி நிறைந்த புல்லிய சொற்களை நீத்து, அழகிய மாட மாளிகைகளைக் கொண்ட திருக்குடவாசலில் நல்லொழுக்கம் மிக்க மறையோர்கள் அளவில் குறையாது உம் திருவடியைப் போற்ற, ஒளி நிறைந்த திருக்கோவிலையே உம்முடைய கோயிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: தூசு – தூசு ஏறிய உடை. தூய்மை – பரிசுத்தம். ஏசு – இகழ்ச்சி. புன்மொழி – புல்லிய சொற்கள். நீத்து – நீக்கி. எழில் – அழகு. மாடம் – மாடக்கோயில், மாடங்களை உடைய எனினுமாம். ஆசாரம் – நல்லொழுக்கம் (வைதிக மார்க்கம்). குன்றாது – குறையாது. தேசு – ஒளி.

Oh! It is Civan, Lord of Kuda-vaayil. In this city of Kuda-vaayil, Vedic scholars with strict discipline live in large numbers. They always visit Your temple and worship Your holy feet there with deep fervour. All of them neglect the evil words of the lowly Buddhists and Jains, who are impure. The temple in the city of Kuda-vaayil is of very bright appearance. Oh God! You have selected that temple as Your place and manifest Yourself there gracefully.

2101. நளிர்பூந்திரைமல்குகாழிஞானசம்பந்தன்
குளிர்பூங்குடவாயிற்கோயில்மேயகோமானை
ஒளிர்பூந்தமிழ்மாலையுரைத்தபாடலிவைவல்லார்
தளர்வானதானொழியத்தகுசீர்வானத்திருப்பாரே. 11

நளிர் பூந் திரை மல்கு காழி ஞானசம்பந்தன்,
குளிர் பூங் குடவாயில் கோயில் மேய கோமானை,
ஒளிர்பூந்தமிழ்மாலை உரைத்த பாடல்இவை வல்லார்,
தளர்வுஆனதாம் ஒழிய, தகு சீர் வானத்து இருப்பாரே.

naLir pUn tirai malku kAzi njAn2acampantan2,
kuLir pUg kuTavAyil kOyil mEya kOmAn2ai,
oLirpUntamiz mAlai uraitta pATal ivai vallAr,
taLarvu An2atAm oziya, taku cIr vAn2attu iruppArE.

பொருள்: குளிர்ந்த அலைகள் மிகுதியாக வீசும் சீகாழியில் ஞானசம்பந்தன் குளிர்ச்சியுடைய அழகிய குடவாயிற் கோயிலில் இருக்கும் தலைவனை ஒளிரும் தமிழால் பாடிய சொன்மாலைப் பாடல்கள் இவை வல்லார் தளர்ச்சி தரும் துன்பங்கள் ஒழிய, தகுந்த பெருமையுடன் வானுலகத்தில் இருப்பாரே!

குறிப்புரை: நளிர் – குளிர். திரை – அலை. மல்கு – மிக்க. மேய – மேவிய. கோமானை – கோமகனை. ஒளிர் – விளங்கும். தமிழ்ப்பூமாலை என மாற்றுக. தளர்வு ஆன – தளர்வாகிய துன்பங்கள். தான் – தானே. தகுசீர் – தக்கசீர் (வினைத்தொகை).

Oh! It is Civan, our Lord of Kuda-vaayil. Our saint Thiru-gnana-Sambandar hails from Kaazhi. This city is encircled by the cool water of the nearby sea. He visited the temple in Kuda-vaayil, very attractive and always cool with cold waves. Our Thiru-gnana-Sambandar went to this temple, worshipped the Lord and sang in praise of our Lord ten verses as a garland of flowers of Tamil language. Those devotees who are capable of reciting these ten verses will reach the famous celestial world and will live there permanently, devoid of all sufferings.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

58ஆம் பதிகம் முற்றிற்று
End of 58th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 195 பதிக எண்: 59

59. சீகாழி 59. SEERKAAZHI

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

137 ஆவது பதிகத்தைக் காண்க.

பதிக வரலாறு

137 ஆவது பதிகத்தைக் காண்க.

திருச்சிற்றம்பலம்

2102. நலங்கொள்முத்துமணியுமணியுந்திரளோதங்
கலங்கள்தன்னிற்கொண்டுகரைசேர்கலிக்காழி
வலங்கொள்மழுவொன்றுடையாய்விடையாயெனஏத்தி
அலங்கல்சூட்டவல்லார்க்கடையாவருநோயே. 1

நலம் கொள் முத்தும் மணியும் அணியும் திரள் ஓதம்
கலங்கள்தன்னில் கொண்டு கரை சேர் கலிக் காழி,
“வலம் கொள் மழு ஒன்று உடையாய்! விடையாய்!” என ஏத்தி,
அலங்கல் சூட்ட வல்லார்க்கு அடையா, அருநோயே.

nalam koL muttum maNiyum aNiyum tiraL Otam
kalagkaL tan2n2il koNTu karai cEr kalik kAzi,
"valam koL mazu on2Ru uTaiyAy! viTaiyAy!" en2a Etti,
alagkal cUTTa vallArkku aTaiyA, arunOyE.

பொருள்: அழகிய முத்தையும் மணியையும் அணியுடை கடலலைகள் மரக்கலன்களில் கொண்டு வந்து சேர்க்கும் செழிப்புள்ள காழி நகரில் வெற்றிக்குரிய வலிமை கொண்ட ஒப்பற்ற மழுவினை உடையாய்! விடை ஊர்தியாய்! எனத் துதித்து மாலை சூட்ட வல்லவர்களை, நீக்குதற்கு அரிய பிறவி முதலிய நோய்கள் வந்து அடையா.

குறிப்புரை: நலம் – அழகு. முத்தும் மணியும் அணியும் தலங்களில் ஓதம் கொண்டு சேர்காழி என்க. ஓதம் – அலைகளையுடைய கடல். கலங்கள் – மரக்கப்பல். தன் – சாரியை. கலி – ஓசையையுடைய, செழிப்புமாம். வலம் – வெற்றிக்குரிய வலிமை. விடையாய் – எருது வாகனனே! அலங்கல் – பூமாலை.

அநோய் – தீர்தற்கு அருமையதான பிறவி நோய் முதலியவை. ஏத்திச் சூட்டவல்லார்க்கு நோய் அடையா என்க.

Oh! It is only Civan with various names in the Kaazhi temple of various sanctum sanctorum. The long seaport exists in the eastern side of the city. Huge boats built of strong wood are called usually Naavai. These wooden boats move into the sea and purchase valuables for cash or for barter. They purchase very attractive big sized pearls, various kinds of gems, and jewellery, and unload them in the beach of Seerkaazhi city, busy with the bustle of all those movements of loading and unloading. By the import of such valuables the citybecomes richer and richer. In the city, our Lord holds the trident of victory in one of His hands. He uses the bull for His conveyance to travel round the world. The devotees who pray "You have the trident of victory in Your hand! You God on the bull!" etc., and adore Him with flower garlands, will be freed of rebirth and other diseases in their life.

2103. ஊராருவரிச்சங்கம்வங்கங்கொடுவந்து
காராரோதங்கரைமேலுயர்த்துங்கலிக்காழி
நீரார்சடையாய்நெற்றிக்கண்ணாஎன்றென்று
பேராயிரமும்பிதற்றத்தீரும்பிணிதானே. 2

ஊர் ஆர் உவரிச் சங்கம் வங்கம் கொடுவந்து
கார் ஆர் ஓதம் கரைமேல் உயர்த்தும் கலிக் காழி,
"நீர் ஆர் சடையாய்! நெற்றிக்கண்ணா!" என்றுஎன்று
பேர்ஆயிரமும் பிதற்ற, தீரும், பிணிதானே.

Ur Ar uvaric cagkam vagkam koTuvantu
kAr Ar Otam karaimEl uyarttum kalik kAzi,
"nIr Ar caTaiyAy! neRRikkaNNA!" en2Ru en2Ru
pEr Ayiramum pitaRRa, tIrum, piNitAn2E.

பொருள்: உப்புடைய கடலில் வாழும் ஊர்தலை உடைய சங்குகளை அலைகள் அடித்துக் கொண்டு வந்து கரைமேல் உயர்த்தும்; வளமுள்ள காழியில் கங்கையாறு நிறைந்த சடையினை உடையவனே! நெற்றிக் கண்ணனே! என்றென்று பேராயிரமும் பலமுறை சொல்லப் பிணி தீரும்.

குறிப்புரை: ஊர் ஆர் சங்கம் – ஊர்தல் பொருந்திய சங்குகளையும். உவரி – உப்பையுடைய கடலில் (உள்ள சங்குகளை). வங்கம் – கப்பல். கொடு – கொண்டு. கார் ஆர் ஓதம் – மேகம் உண்ணும் கடலின் அலைகள். வங்கம் கரைமேல் உயர்த்தப்படல் இல்லையாதலின், வங்கம் செயப்படுபொருளாகாது. வங்கம் சங்கத்தைக் கொண்டு வந்த ஓதம். கரைமேல் உயர்த்தும் என்க. கொடுவரல் வங்கத்தின் வினை. உயர்த்துதல் ஓதத்தின் வினை. என்று என்று – அடுக்கு இடைவிடாது சொல்லற் பொருட்டாய் நின்ற குறிப்பு. ஆயிரம் பேரும் – அநேக நாமங்களையும். பிணிதீரும்.

Oh! It is Lord Civa who is manifest in Seerkaazhi. There are several varieties of sea creatures called conches. At times they get stuck to the huge boats and reach the shore and float about the shore. The city Seerkaazhi holds huge stock of these conches for sale. You have a third eye in Your forehead. Devotees who go to the temple and recite His praise as "Lord with matted hair! Lord with the third eye!", and repeat again and again prattling His thousand names will be relieved of all ailments.

2104. வடிகொள்பொழிவின்மழலைவரிவண்டிசைசெய்யக்
கடிகொள்போதில்தென்றலணையுங்கலிக்காழி
முடிகொள்சடையாய்முதல்வாஎன்றுமுயன்றேத்தி
அடிகைதொழுவார்க்கில்லையல்லலவலமே. 3

வடி கொள் பொழிவில் மழலை வரிவண்டு இசைசெய்ய,
கடி கொள் போதில்-தென்றல் அணையும் கலிக் காழி,
"முடி கொள் சடையாய்! முதல்வா!" என்று முயன்று ஏத்தி,
அடி கைதொழுவார்க்கு இல்லை, அல்லல் அவலமே.

vaTi koL pozilil mizalai varivaNTu icaiceyya,
kaTi koL pOtil-ten2Ral aNaiyum kalik kAzi,
"muTi koL caTaiyAy! mutalvA!" en2Ru muyan2Ru Etti,
aTi kaitozuvArkku illai, allal avalamE.

பொருள்: திருத்தமாக அமைந்த பூம்பொழிலில் மழலை போல் இனிமையாக வரி வண்டுகள் இசைக்க, மணமுடைய மலர்களில் தென்றல் அணையும் கலிக்காழியில் சடை முடியாய்! முதல்வா! என்று தவம் முயன்று ஏத்தி, திருவடியை அடிதொழுவார்க்கு, அவலமாகிய அல்லல் இல்லையாம்.

குறிப்புரை: வடி – திருத்தம். 'வடிநீள்மதில்' (புறம் 18). மாம்பிஞ்சு என்றுமாம். மழலை – நிரம்பா மொழிபோலும் இனிமை செய்யும் வண்டின் ஓசை. கடி – மணம். போதின் தென்றல் – மலரும்

பருவத்தையுடைய போதுகளிற்பட்டு அவற்றின் மணத்தைக் கொண்டு எறியும் (மந்தமாருதம்) தென்காற்று, சடைமுடி. முயன்று – 'தவமுயன்று'. அடி – திருவடிகளை. கைதொழுவார்க்கு அல்லலும் அவலமும் இல்லை என்க. அல்லலால் வரும் அவலம் எனலுமாம். அல்லல் – துன்பம். அவலம் – அழுகை, சோர்வு, வறுமை.

Oh! It is Civan, our Lord in Seerkaazhi. In the city of Seerkaazhi, there are many cultivated groves abounding in fragrant flowers. The young striped beetles make lisping melodies while sucking the honey. The southern wind kissing the flowers carries the fragrance in the air and reaches the streets in this city and the palatial buildings. People enjoy the delightful fragrant breeze. "Oh Lord of matted locks, manifested in the temple of this city! Oh Lord Absolute!". Those who recite this, observing penance and worship His divine feet by stretching their hands will have no sufferings, will have no resulting agony and no poverty of any sort in their life.

2105. மனைக்கேயேறவளஞ்செய்பவளம்வளர்முத்தங்
கனைக்குங்கடலுளோதமேறுங்கலிக்காழிப்
பனைக்கைப்பகட்டீருரியாய்பெரியாயெனப்பேணி
நினைக்கவல்லஅடியார்நெஞ்சினல்லாரே. 4

மனைக்கே ஏற வளம் செய் பவளம் வளர் முத்தம்
கனைக்கும் கடலுள் ஓதம் ஏறும் கலிக் காழி,
"பனைக்கைப் பகட்டு ஈர்உரியாய்! பெரியாய்!" எனப் பேணி,
நினைக்க வல்ல அடியார் நெஞ்சில் நல்லாரே.

man2aikkE ERa vaLam cey pavaLam vaLar muttam
kan2aikkum kaTaluL Otam ERum kalik kAzi,
"pan2aikkAp pakaTTu Ir uriyAy! periyAy!" en2ap pENi,
nin2aikka valla aTiyAr nenjcil nallArE.

பொருள்: செழிப்பான பவளம், வளர்ந்த முத்துக்கள் ஆகியன மனைக்கு ஏற, ஒலிக்கும் கடலுள் அலை ஏறும் காழியில், யானையின் ஈரமான தோலைப் போர்த்தீர்! பெரியாய்! என விரும்பி நினைக்க வல்ல அடியார் நல்ல நெஞ்சத்தவர் ஆவர்.

குறிப்புரை: மனை – வீடு. கனைக்கும் – ஒலிக்கும். ஓதம் – அலை. பனைகைபகடு ஈர் உரியாய் – பனைமரம் போலும் பருத்த துதிக்கையையுடைய யானையின் ஈர்த்த தோலைப் போர்த்தவரே! ஈர் – ஈர்த்த.

உரித்த. ஈர் உரி – (ஈர்மை – குளிர்ச்சி) ஈரியதாய உரி எனப் பண்புத் தொகையுமாம். பேணி – விரும்பி. நெஞ்சின் நல்லார் – நெஞ்சின் நன்மையை உடையார், நல்ல நெஞ்சத்தார்.

Oh! It is Civan, our Lord in Seerkaazhi. The city of Seerkaazhi receives heavy rain from the clouds, resulting in the yields of sea creatures and gems like red coral and pearls etc. Using these gems the people of the land become richer. "Oh Lord! You killed the rutted elephant with long trunk and removed its hide and covered Your body. You have manifested Yourself in the temple in Seerkaazhi. You are the greatest". Those good hearted devotees are really good at hearts, who showering their love on our Lord, hail Him in this way and are blessed.

2106. பரிதியியங்கும்பாரிற்சீரார்பணியாலே
கருதிவிண்ணோர்மண்ணோர்விரும்புங்கலிக்காழிச்
சுருதிமறைநான்கானசெம்மைதருவானைக்
கருதியெழுமின்வழுவாவண்ணந்துயர்போமே. 5

பரிதி இயங்கும் பாரில் சீர் ஆர் பணியாலே
கருதி விண்ணோர் மண்ணோர் விரும்பும் கலிக் காழி,
சுருதி மறைநான்கு ஆன செம்மை தருவானைக்
கருதி எழுமின், வழுவா வண்ணம்! துயர் போமே.

paruti iyagkum pAril clr Ar paNiyAlE
karuti viNNOr maNNOr virumpum kalik kAzi,
curuti maRai nAn2ku An2a cemmai taruvAn2aik
karuti ezumin2, vazuvA vaNNam! tuyar pOmE.

பொருள்: ஞாயிறு இயங்குகின்ற உலகினில் பெருமை உடைய திருத்தொண்டுகள் செய்யும் விருப்பத்துடன் விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் விரும்பி வரும் காழியில் கேள்வியால் பயிலப்படும் நான்மறைகளான செம்மையைத் தருவானை நினைந்து எழுமின்! உங்கள் துயர் போகும்.

குறிப்புரை: பரிதி – சூரியன். இதைப் பருதி என்றெழுதுவது குரிசில் என்பதைக் குருசில் என்றெழுதுவது போலும் பிழை. (இலக்கியச் சொல்லகராதியின் உபக்கிரமணிகையில் பக்கம் 15 பார்க்க). அடிசில். பரிசில் முதலியவற்றுள் இரண்டாவதெழுத்து உகரமாய் நிற்றலில்லாமையே அதற்குச் சான்று. 'பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும் குரிசில் வலியவாகும் நின்தாள்தோய் தடக்கை' (புறம் 14). 'பரிசில் நல்குவையாயிற் குரிசில் நீ' (புறம் 146) 'பரிசில் மன்னும் குரிசில் கொண்டதுவே' (புறம் 333) என எதுகையில் நின்றதறிக.

ஏனையிடங்களுள், குருசில் என்றிருத்தல் பொருந்தாமை. இவ்விரண்டு காரணங்களால் புலப்படும். சுருதி – வேள்வி. நான்மறைக் கேள்வியான செம்மை தருவானை வழுவா வண்ணம் கருதி எழுமின் துயர்போம் என்க. ஆசிரியர், நான்மறைகளையும் ஆறங்கங்களையும் நினைவூட்டும் இடங்களை நோக்கின் 'வேத நெறி தழைத்தோங்க . . . அமுத' உண்மை தெளிவாகும்.

Oh! It is Civan, our Lord in Seerkaazhi. The sun moves round the world. The people in this world and the devas and other celestials are all well learned in the four sacred Vedas which was passed on from generation to generation through word of mouth by scholars (originally the Vedas were not written by hand). Of course our Lord Civa is the embodiment of all the Vedas and only from Him for humanity's well-being, it originated. Those who think of our Lord, as the Giver of the Vedas as the Giver of this wealth and worship Him daily without any break will find their sufferings vanish. Consistently remembering and worshipping Lord Civa is the source of true joy.

2107. மந்தமருவும்பொழிலிலெழிலார்மதுவுண்டு
கந்தமருவவரிவண்டிசைசெய்கலிக்காழிப்
பந்தநீங்கஅருளும்பரனேயெனஏத்திச்
சிந்தைசெய்வார்செம்மைநீங்காதிருப்பாரே. 6

மந்தம் மருவும் பொழிலில் எழில் ஆர் மது உண்டு,
கந்தம் மருவ, வரிவண்டு இசைசெய் கலிக் காழி,
"பந்தம் நீங்க அருளும் பரனே!" என ஏத்திச்
சிந்தை செய்வார் செம்மை நீங்காது இருப்பாரே.

mantam maruvum pozilil ezil Ar matu uNTu,
kantam maruva, varivaNTu icai cey kalik kAzi,
"pantam nIgka aruLum paran2E!" en2a Ettic
cintai ceyvAr cemmai nIgkAtu iruppArE.

பொருள்: தென்றல் பொருந்தும் சோலையில் எழும் தேனை இனிது உண்டு மணம் பொருந்த அழகிய வண்டுகள் இசை முரலும் காழியில் பாசபந்தங்கள் நீங்க அருளுகின்ற தலைவனே! எனத் துதித்துத் தியானம் செய்வார் திருநின்ற செம்மை நீங்காதிருப்பார்.

குறிப்புரை: மந்தம் – தென்றல் காற்று. மருவும் – பொருந்தும். எழில் – எழுச்சி. மது – தேன். கந்தம் – மணம். பந்தம் பசு – பாசப்பற்று. 'பற்றற பற்றற என்பதெல்லாம் பசுபாசம் விடல் மற்றொரு பற்றறல் இல்லை' என்றான். மன்னும் வெங்கலியைச் செற்றருள் சிற்றம்பலநாடி வண்மைச் சிரபுரத்தோன் உற்றதபோதனரே

ஒழிந்தே இரும் உம்மையுமே' எனும் சிற்றம்பலநாடிகள் சாத்திரக்கொத்துள்வரும் கட்டளைக் கலித்துறையை அறிக. 'பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனை' அப்பசு, பாசம் ஆகிய பந்தம் நீங்காமல் பார்த்தல் கூடாது. 'பந்தம் நீங்க அருளும் பரனே என ஏத்திச் சிந்தை செய்வார் செம்மை நீங்காது இருப்பார்' என்பதை இனிது விளக்கிற்று. செம்மை 'திருநின்ற செம்மை' (தி.4 ப.8 பா.1; தி.7 ப.396).

Oh! It is Civan, our Lord in Seerkaazhi. In the city of Kaazhi, a place of all songs, the southern wind blows in the forest areas, full of tall trees and flower plants. The striped beetles in large numbers fly sucking honey and giving out music, with the flapping of their wings. They spread good fragrance besides melodies. In such an attractive city of Kaazhi our Lord is manifested in the temple. Those people who think with devotion about our Lord as one who graces humanity to shed their attachments to worldly matters will not have to face sufferings in their life, will be blessed with permanent wealth.

2108. புயலார்பூமிநாமமோதிப்புகழ்மல்கக்
கயலார்கண்ணார்பண்ணாரொலிசெய்கலிக்காழிப்
பயில்வான்றன்னைப்பத்தியாரத்தொழுதேத்த
முயல்வார்தம்மேல்வெம்மைக்கூற்றம்முடுகாதே. 7

புயல் ஆர் பூமி நாமம் ஓதி, புகழ் மல்க,
கயல் ஆர் கண்ணார் பண் ஆர் ஒலிசெய் கலிக் காழிப்
பயில்வான் தன்னைப் பத்தி ஆரத் தொழுது ஏத்த
முயல்வார் தம்மேல், வெம்மைக் கூற்றம் முடுகாதே.

puyal Ar pUmi nAmam Oti, pukaz malka,
kayal Ar kaNNAr paN Ar olicey kalik kAzip
payilvAn2 tan2n2aip patti Arat tozutu Etta
muyalvAr tammEl, vemmaik kURRam muTukAtE.

பொருள்: நீர் நிறைந்த பூமியிலுள்ளோர் திருநாமங்களைப் பலகாலும் ஓதிப் புகழ் பெருக, கயல்மீன் போன்ற கண்களை உடைய மகளிர் பண் நிறைந்த இசை இசைக்கும் காழியுள் என்றும் உள்ளவன்தன்னைப் பத்தி நிறையத் தொழுது ஏத்த முயற்சி செய்வார்மீது கொடுங் கூற்றனின் கொடுமை செல்லாது.

குறிப்புரை: புயல் – மேகம். பெருங்காற்று எப்போதும் உள்ள தன்மையின்மையின் பொருந்தாது. பூமி – மண்ணிடத்துள்ளோர். நாமம் – சிவனென்னும் நாமம், 'நந்தி நாமம் நமச்சிவாயவே', 'நல்ல நாமம் நவிற்றி

உய்ந்தேன்' 'நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும் . . . உரைக்கத் தருதி' 'திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்' 'பராபரன் என்பது பேராக்கொண்டார்' (அப்பர் 310. பொது 11). கயல் ஆர் கண்ணார் – மீனோக்கியர். கயற்கண்ணியர். பண் ஆர் ஒலி – பண்ணொடு பொருந்திய இசை. பயில்வான்தன்னை – பயின்ற தொல்லோனை (சிவபிரானை) பழையோன். பத்தி – பக்தி. அன்பு ஆர நிறைய. முயல்வார்மீதே முடுகாது கூற்று என்றால், முயன்றார் மீது முடுகாமை கூறல்வேண்டா. விண்ணிடைத் தருமராசன் வேண்டினால் விலக்குவார் ஆர்? பண்ணிடைச் சுவைகள் பாடி ஆடிடும் பத்தர்க்கு என்றும். கண்ணிடை மணியர் போலும் கடவூர் வீரட்டனாரே (பதி. 31 பா. 2) கொன்றாய் காலனுயிர் கொடுத்தாய் மறையோனுக்கு (தி.7 ப.281).

It is Civan, our Lord in Seerkaazhi. The city is rich in the soil because of heavy rains brought by clouds and the fields and gardens here are plenty. Young damsels with fish-like eyes in large numbers go to the temple and sing in good grace His holy names in a melodious tone. Our Lord's holy name scatters divine knowledge all over the area. In such an attractive city our Lord manifests Himself in the temple. Those who worship Him with sincere devotion and speak words of tribute will never be in the grip of the god of death and will have no rebirth at all.

2109. அரக்கன்முடிதோள்நெரியஅடர்த்தானடியார்க்குக்
கரக்ககில்லாதருள்செய்பெருமான்கலிக்காழிப்
பரக்கும்புகழான்றன்னையேத்திப்பணிவார்மேற்
பெருக்குமின்பந்துன்பமானபிணிபோமே. 8

அரக்கன் முடிதோள் நெரிய அடர்த்தான், அடியார்க்குக்
கரக்ககில்லாது அருள்செய் பெருமான், கலிக் காழிப்
பரக்கும் புகழான் தன்னை ஏத்திப் பணிவார்மேல்,
பெருக்கும், இன்பம் துன்பம்ஆன பிணி போமே.

arakkan2 muTitOL neriya aTarttAn2, aTiyArkkuk
karakkakillAtu aruLcey perumAn2, kalik kAzip
parakkum, pukazAn2 tan2n2ai Ettip paNivArmEl,
perukkum, in2pam; tun2pam An2a piNi pOmE.

பொருள்: அரக்கன் இராவணனின் முடிகளும் தோள்களும் நசுங்க அடர்த்தவனும், அடியவர்களுக்குத் தன் அருளை மறைக்காமல் அருள்பவனுமாகிய பெருமான், விழாக்கள்

மலிந்த காழிப்பதியில் விரிந்த புகழை உடையவன், தன்னை ஏத்தி வழிபடுவார்மேல் இன்பத்தைப் பெருக்கும்; அவர்கள்மேல் வருந்துன்பமாகிய பிணி தாமே நீங்கும்.

குறிப்புரை: அரக்கன் – இராவணன். அடியார்க்குக் கரக்ககில்லாது – அடியவர்க்கு (அருளை) மறைக்கமாட்டாமல். கில் – ஆற்றலை உணர்த்துவது. சிவபெருமான் தன் அடியவர்க்கு அருளை மறைக்கும் ஆற்றல் இல்லாதவன் என்பதுணர்க. குறைவிலா நிறைவு எனப்படும் பரமேச்சுவரனுக்கும் தன் அடியார்க்கு இன்பங்கள் தருவதை மறைத்துக் கொள்ளும் ஆற்றல் இல்லாத ஒரு குறை உண்டு என்று உணர்த்திய நயம் போற்றத்தக்கது. பணிவார் மேல் இன்பம் பெருக்கும். துன்பமான பிணிபோம். கில்லாமை – கிற்றிலேன். கிற்பன் உண்ணவே (திருவாசகம் 45).

Oh! It is Civan, our Lord in Seerkaazhi. Our Lord crushed the shoulders and the heads of Raavanan for his misdeed; but later graced him after he begged pardon and sang good music. Therefore our Lord is sure to bless one and all without concealing His grace. He is manifest in the temple in Kaazhi. People should go to this temple and praise our Lord whose fame is known all over the world. Those who worship Him with sincere humility will find their sufferings vanish and joys increase.

2110. மாணாயுலகங்கொண்டமாலும்மலரோனுங்
காணாவண்ணமெரியாய்நிமிர்ந்தான்கலிக்காழிப்
பூணார்முலையாள்பங்கத்தானைப்புகழ்ந்தேத்திக்
கோணாநெஞ்சமுடையார்க்கில்லைக்குற்றமே. 9

*மாண் ஆய் உலகம் கொண்ட மாலும் மலரோனும்
காணா வண்ணம் எரி ஆய் நிமிர்ந்தான், கலிக் காழிப்
பூண் ஆர் முலையாள் பங்கத்தானை, புகழ்ந்து ஏத்தி,
கோணா நெஞ்சம் உடையார்க்கு இல்லை, குற்றமே.*

mAN Ay ulakam koNTa mAlum malarOn2um
kANA vaNNam eri Ay nimirntAn2, kalik kAzip
pUN Ar mulaiyAL pagkattAn2ai, pukazntu Etti,
kONA nenjcam uTaiyArkku illai, kuRRamE.

பொருள்: பிரமச்சாரியாய் உலகத்தை அளந்த மாலும் பிரமனும் காண முடியாதபடி நெருப்பாக நிமிர்ந்தானின் காழியில் பூணார் முலை உமையாள்பங்கனைப் புகழ்ந்து ஏத்திக் கொண்டாடும் சிந்தைத் திருகல் இல்லாதவர்களுக்குப் பிறவிக்குக் காரணமான குற்றமில்லை.

குறிப்புரை: மாணாய் – பிரமசாரியாய். மாண் – மாணி. 'குறுமாண் உருவன் தற்குறியாக' (தி.1 ப.101 பா.5). 'மாணாகி வையம் அளந்ததுவும்' என்று திருமங்கை மன்னன் பாடியதிலும் மாண் என்பது இப்பொருளில் வந்திருத்தல் அறிக. பூண் – ஆபரணம். பங்கத்தானை – (வாம) பாகத்தையுடைய சிவபெருமானை. கோணா நெஞ்சம் – திருகலில்லாத உள்ளத்தை. கோணல் – 'சிந்தைத்திருகு' 'மலக்கோண்' 'யான் செய் தேன் பிறர்செய்தார் என்னது யான்' என்னும் இக்கோணை ஞான வெரியால் வெதுப்பி நிமிர்த்துத் தான் செவ்வே நின்றிட (சிவஞான சித்தியார். கடவுள் வாழ்த்துரை+சூ 10. திருவிருத்தம் 2). லுடை யார்க்குக் குற்றம் இல்லை என்க. 'இல்லைக்குற்றம்' என்று மிக்குப் புணர்ந்ததற்கு 'இல் என் கிளவி இன்மை செப்பின் வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும் . . . ஆகிடன் உடைத்தே' என்ற தொல்காப்பியச் சூத்திர (372) விதி காண்க.

Oh! It is Civan, our Lord of Seerkaazhi. Our Chief of sustenance, lord Thirumaal who took the form of a dwarfish bachelor and measured the world and cheated the king of Maavali and the four faced Brahma could not comprehend our Lord in spite of their best efforts. At that time our Lord rose as an infinite fire of greatness. Our Lord has embedded our goddess on the left half of His body, who with ornaments, has covered her breasts. Those devotees who are straight forward in their hearts, pray our Lord in Kaazhi, praising His fame, will have no fault in their mind and their life.

2111. அஞ்சியல்லல்மொழிந்துதிரிவாரமண்ஆதர்
கஞ்சிகாலையுண்பார்க்கரியான்கலிக்காழித்
தஞ்சமாயதலைவன்றன்னைநினைவார்கள்
துஞ்சலில்லாநல்லவுலகம்பெறுவாரே. 10

அஞ்சி அல்லல் மொழிந்து திரிவார் அமண்ஆதர்,
கஞ்சி காலை உண்பார்க்கு, அரியான்; கலிக் காழித்
தஞ்சம்ஆய தலைவன்; தன்னை நினைவார்கள்,
துஞ்சல் இல்லா நல்ல உலகம் பெறுவாரே.

anjci allal mozizntu tirivAr amaN Atar,
kanjci kAlai uNpArkku, ariyAn2; kalik kAzit
tanjam Aya talaivan2; tan2n2ai nin2aivArkaL,
tunjcal illA nalla ulakam peRuvArE.

பொருள்: வினைக்கு அஞ்சி அல்லல் தரும் மொழிகளைப் பேசித்திரியும் சமணர்களாகிய அறிவில்லார்; கஞ்சியினைக் காலையில் உண்ணும் தேரர்கள் ஆகியவர் அறிவதற்கு அரியவன். விழவு மலிந்த காழியில் தன்னைத் தஞ்சம் அடைந்த அன்பர்களுக்குத் தஞ்சமாகிய தலைவன். அவனை நினைபவர்கள் சாதல் பிறப்பில்லாத நல்ல வீட்டுலகத்தைப் பெறுவரே.

குறிப்புரை: அல்லல் – துன்பம் தரும் பேச்சுக்களை. ஆதர் – அறிவில்லார். காலையிற் கஞ்சி உண்ணும் தேரர் என்று கொள்க. அமணரை முற்கூறியதால், உண்பார் என்றது தேரரை என்க. தஞ்சம் – அடைக்கலம். தஞ்சம் (தி.3 ப.76 பா.10) 'தஞ்சம் என்று உள் சரண் புகுந்தேன்' (தி.3 ப.51 பா.6) (தண்+து+அம்) துன்ப வெம்மையால் வந்து அடைந்தவர்க்குத் தண்மையுடையவரே, அடைக்கலமென்ற போது அபயம் அளிப்பர். அதனால் தஞ்சம் அடைதல் எனப்பட்டது. 'தஞ்சேகண்டேன' (தி.5 ப.50 பா.3) என்று (தண் + து) அம்முப்பெறாது வருதலும் அறிக. 'தஞ்ச வண்ணத்தர்' (தி.4 ப.17 பா.3) 'அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத . . . உன் திருவடி அடைந்தேன்' (தி. 7). 'தஞ்சமென்று தன் தாளது அடைந்த பாலன்மேல் வந்த காலனை உருள நெஞ்சில் ஓர் உதை கொண்ட பிரானை நினைப்பவர் மனம் நீங்ககில்லானை' (தி.7 ப.96 பா.1). துஞ்சல் – சாதல். நல்லவுலகம் – பேரின்பவுலகு.

Oh! It is Civan, our Lord in Seerkaazhi. Our Lord is beyond the comprehension of the Jains who speak fearful and painful words and also beyond that of, the Buddhists drinking only porridge. Our Lord is manifest in the temple in Kaazhi. The devotees who think of our Lord as their refuge for their sorrows and worship Him with sincere devotion will reach the celestial world, a world of no death and no rebirth and, will enjoy eternal bliss.

2112. ஊழியாயபாரிலோங்குமுயர்செல்வக்
காழியீசன்கழலேபேணுஞ்சம்பந்தன்
தாழுமனத்தாலுரைத்ததமிழ்களிவைவல்லார்
வாழிநீங்காவானோருலகில்மகிழ்வாரே. 11

ஊழி ஆய பாரில் ஓங்கும் உயர் செல்வக்
காழி ஈசன் கழலே பேணும் சம்பந்தன்,
தாழும் மனத்தால், உரைத்த தமிழ்கள் இவை வல்லார்,
வாழி நீங்கா வானோர் உலகில் மகிழ்வாரே.

Uzi Aya pAril Ogkum uyar celvak
kAzi Ican2 kazalE pENum campantan2,
tAzum man2attAl, uraitta tamizkaL ivai vallAr,
vAzi nIgkA vAn2Or ulakil makizvArE.

பொருள்: பிரளய காலத்திலும் அழியாத செல்வத்தை உடைய காழியீசன் திருவடிகளையே விரும்பும் சம்பந்தன் பணிந்தேத்தும் மனத்தால் உரைத்த தமிழ்ப்பாடல்கள் இவற்றைப் பாட வல்லவர்கள் வானோர் உலகில் நீங்காமல் மகிழ்வார்.

குறிப்புரை: ஊழி ஆய பாரில் – உக முடிவு ஆன மண்ணுலகில் ஓங்கும் காழி – பிரளய வெள்ளத்தால் அழியாமல் மேல் மிதந்த தோணிபுரம். உயர் செல்வம் – அழியாமல் உயர்ந்த செல்வத்தை உடைய. 'கழலே பேணும் சம்பந்தன்' என்ற பிரிநிலை ஏகாரம், உண்மைச் சைவர்க்குச் சிவபக்தியில் ஓர் உறைப்பை விளைக்கும். தாழும் மனத்தால் – பணியும் உள்ளத்தால். 'வேற்காடு தாழ்வுடை மனத்தால் மனமுடையவரே', 'கோழம்பத்துறை கூத்தன் குரைகழல் தாழும் பத்தர்கள்' ஆவர். 'தாழ்வெனுந் தன்மைவிட்டுத் தனத்தையே மனத்தில் வைத்து வாழ்வதே கருதித் தொண்டர் மறுமைக்கு ஒன்று ஈயக்கில்லார்' (தி.7 ப. 79). 'வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித் தாழ் வெனுந் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறலரிது' (சிவஞான சித்தியார், 181). வாழி – வாழ்ச்சி. இகரம் தொழிற்பெயர் விகுதி.

Oh! It is Civan, our Lord in Seerkaazhi. The city of Kaazhi is the most sacred place in the world that survived in the deluge on the earth. Kaazhi with all its wealth floated and did not vanish during the end of this world. Our saint Thiru-gnana-Sambandar with sincere devotion came to the temple, worshipped our Lord and prayed at His feet. Then he sang with all humility these ten Tamil verses of garland. Those people who can recite all these ten verses will reach the celestial world and lead a blissful life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

59ஆம் பதிகம் முற்றிற்று
End of 59th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 196 *பதிக எண்: 60*

60. திருப்பாசூர் 60. THIRU-P-PAASOOR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

பசுமை + ஊர் – பாசூர். நீர்வளத்தால் நிலம் பசுமையாய் விளங்குவதால் இப்பெயர் பெற்றதாதல் வேண்டும். தலமரம் மூங்கில் ஆதலாலும், இறைவர் மூங்கிலடியில் தோன்றியவர் ஆதலாலும் இப்பெயர் பெற்றனர் என்பர் (பாசு – மூங்கில்). இது திருவள்ளூருக்கு வடக்கில் 5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. திருவள்ளூர் – பேரம்போக்கம் நகரப் பேருந்திலோ காஞ்சிபுரத்திலிருந்து கடம்பத்தூர் வழியாகத் திருவள்ளூர் செல்லும் பேருந்திலோ பாசூர் செல்லலாம்.

இறைவர் திருப்பெயர் பாசூர் நாதர். இறைவி திருப்பெயர் – பசுபதி நாயகி. குறும்பர் அரசனுக்குச் சார்பாகச் சமணர்கள் கரிகால்சோழன்மீது ஏவிய பாம்பைச் சிவபெருமான் எழுந்தருளித் தடுத்து ஆட்டினார் என்பது தலமான்மியம். இச்செய்தி, ‘படவரவொன்றது ஆட்டிப் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே’ என்னும் இத்தலத்துக்குரிய திருத்தாண்டகப் பகுதியாலும் இது உறுதி எய்துகின்றது. சந்திரன் பூசித்துப் பேறு பெற்றான். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, நாவுக்கரசர் பதிகங்கள் இரண்டு ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன. இது தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

பதிக வரலாறு

பாரெல்லாம் உய்ய வந்த பாலறாவாயர், எம்மையாளும் அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பர் திருவாலங்காடு ஆம் என்று, அம்மூதூர் மிதிக்க அஞ்சி அணுகச் சென்று, செம்மை நெறிவழுவாத பதியின் பக்கத்தில் உள்ள ஓரிடத்தில் இரவில் தங்கினார். இடை யாமத்தில் கனவில் ‘நம்மைப் பாடுவதற்கு மறந்தனையோ’ என்று ஆலங்காட்டப்பர் அருளினார். அவர் கருணை போற்றி மெய்யுருகித் ‘துஞ்ச வருவார்’ எனத் தொடங்கும் சுருதிமுறை வழுவாத திருப்பதிகம் பாடிப் பழயனூர் வரலாற்றைச் சிறப்பித்துச் சொல்லி திருவருளை உணர்த்தி அங்கிருந்து திருப்பாசூர் அணைந்து அருட்கருணைத் திருவாளன் நாமம் ‘சிந்தையிடையார்’ என்று அருளிய இசைப்பதிகம் இது.

திருச்சிற்றம்பலம்

2113. சிந்தையிடையார்தலையின்மிசையார்செஞ்சொல்லார்
வந்துமாலைவைகும்போழ்தென்மனத்துள்ளார்
மைந்தர்மணாளரென்னமகிழ்வாரூர்போலும்
பைந்தண்மாதவிசோலைசூழ்ந்தபாசூரே. 1

"சிந்தைஇடையார், தலையின்மிசையார், செஞ்சொல்லார்,
வந்து மாலை வைகும்போழ்து என்மனத்து உள்ளார்,
மைந்தர், மணாளர்" என்ன, மகிழ்வார் ஊர் போலும் -
பைந் தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூரே.

"cintai iTaiyAr, talaiyin2 micaiyAr, cenjcollAr,
vantu mAlai vaikumpOztu en2 man2attu uLLAr,
maintar, maNALar" en2n2a, makizvAr UrpOlum--
pain taN mAtavi cOlai cUznta pAcUrE.

பொருள்: என் மனத்தில் உள்ளார்; தலையின் மேல் இருக்கிறார்; செம்மையான சொல்லில் நிறைந்துள்ளார்; மாலைக்காலம் வந்து தங்கும்போது 'என் மனத்துள் நிறைந்துள்ள மைந்தனே, மணாளா' என்று துதிக்க மகிழ்வாரின் ஊர் (எதுவெனில்), பசிய குளிர்ந்த மாதவிக் கொடிகளைக் கொண்ட சோலைகள் சூழ்ந்த பாசூரே.

குறிப்புரை: சிந்தை, தலை, சொல் என மனம், காயம், வாக்கு ஆகிய திரிகரணங்களையும் உணர்த்தி அம்மூன்றிலும் சிவபெருமான் இருத்தலை மூவேறு சிறு வாக்கியங்களாக அருளிய திறம் அன்பரெல்லாராலும் அறியத்தக்கது. சிவபூஜையில் அந்தரியாகத்தாலும், தோத்திரத்தாலும் இந்நிலையை அனுபவித்து உணர்ந்து போற்றுதல் இன்றியமையாதது (பதி. 61 பா. 6). 'சிந்தையுள்ளும் நாவின் மேலும் சென்னியும் மன்னினான்' (தி. 1 ப. 73 பா. 9) சிந்தையிடார் – 'மனத்தகத்தான்'. தலையீயன் மிசையார், 'தலைமேலான்', செஞ்சொல்லார் – 'வாக்கினுள்ளான்'. 'மூவாத சிந்தையே மனமே வாக்கே தன் ஆனையாப் பண்ணியேறினான்' (அப்பர் – 227). 'வாயானை – மனத்தானை' என்பது இதனின் வேறு மாலை – மாலைப்பொழுது. (வந்து) வைகும்போழ்து – தங்கும் வேளையில். மைந்தரென்றும் மணவாளரென்றும் துதிக்க மகிழ்பவர் (சிவபெருமான்). பாசூர் மகிழ்வார் ஊர்போலுமென்று கூட்டுக. பைந்தண் மாதவி – பசுமையும் தண்மையுமுடைய குருக்கத்தி. பாசூர் – (பசுமை +ஊர்) இன்றும் பசுமை மிக்கதாகவே விளங்குகிறது.

Behold! It is Paasoor. Oh God! You are in my thoughts, You are on my head, You are in my divine words. In the evening of my life You come to my mind as my

anchor. Then I praise You and recite "Oh! You are ever in my mind. Oh my Lord! You are delighted to hear such praising words from me". You get delighted to be manifested in the temple in Thiru-p-paasoor. The temple is surrounded by many flower gardens, particularly the 'Maadavi' spine which is a common delight of the woods. This is also known as 'Kurukatthi (Hippage madablota).

2114. பேரும்பொழுதும்பெயரும்பொழுதும்பெம்மானென்
றாருந்தனையுமடியாரேத்தஅருள்செய்வார்
ஊருமரவமுடையார்வாழுமூர்போலும்
பாரின்மிசையார்பாடலோவாப்பாசூரே. 2

பேரும்பொழுதும் பெயரும்பொழுதும் "பெம்மான்" என்று
ஆரும்தனையும் அடியார் ஏத்த அருள் செய்வார்,
ஊரும் அரவம் உடையார் வாழும் ஊர் போலும் -
பாரின்மிசையார் பாடல் ஓவாப் பாசூரே.

pErum pozutum peyarum pozutum, "pemmAn2" en2Ru
Arum tan2aiyum aTiyAr Etta aruL ceyvAr,
Urum aravam uTaiyAr, vAzum UrpOlum--
pArin2 micaiyAr pATal OvAp pAcUrE.

பொருள்: இடம் விட்டுப் பெயரும் போதும் மீண்டும் வரும்போதும் இவ்விரண்டு பொழுதும் இறைவனை மனத்தில் நினைந்து அனுபவிக்கும் அடியார் 'பெம்மான்' என்று ஏத்த அருள் செய்வார்; ஊர்ந்து செல்கின்ற அரவத்தைப் பூணாக உடையவர் அவருடைய ஊர் (எதுவெனில்), மண்ணுலகத்தவரின் தோத்திரப்பாடல்களின் ஒலி ஒழியாத பாசூரே.

குறிப்புரை: பெயர்தல் – போதல் என மருவும். ஆயினும் இங்கு இரண்டும் வேறுபட்டனவாகத் தோற்றுதலால் பொருளிலும் ஏதேனுமொரு வேறுபாட்டைக் கொள்ளுதல் வேண்டும். போதல் முதன்முதலாக இடம் விட்டு அசைதல். பெயர்தல் – மீண்டும் வருதல். இவ்விரண்டு காலத்தும் இறைவனை மனம் நிறைவுறுமளவும் அடியார் ஏத்த அருள் செய்வான். தனை – அளவு. ஊரும் அரவம் – நகரும் பாம்பு. பாரின்மிசையார் – மண்ணுலகத்தார். பாடல் – தோத்திரப் பாடல்கள். ஓவா – ஒழியாத. பாசூரே அருள் செய்வார் ஊர் போலும். 'பண்ணின் மொழியார் பாடல் ஓவாப்பாசூரே' (பா. 7). இவ்வாறே மேலும் கொள்க.

Behold! It is Paasoor. The devotees come to Your temple and worship Your holy feet. As and when they leave Your temple and as and when they come back to Your temple they recollect their divine thought and worship You saying "You are my Lord and You are in my mind for ever". Our Lord bestows His grace on those devotees. You wear the moving snake on Your holy body. Oh God! You are manifested in the temple in Thiru-p-paasoor city. In this city songsters live in large numbers. They always sing divine music, which is heard all over the city.

2115. கையால்தொழுதுதலைசாய்த்துள்ளங்கசிவார்கண்
மெய்யார்குறையுந்துயருந்தீர்க்கும்விமலனார்
நெய்யாடுதலஞ்சுடையார்நிலாவுமூர்போலும்
பைவாய்நாகங்கோடலீனும்பாசூரே. 3

கையால் தொழுது தலை சாய்த்து உள்ளம் கசிவார்கண்
மெய் ஆர் குறையும் துயரும் தீர்க்கும் விமலனார்,
நெய் ஆடுதல் அஞ்சு உடையார், நிலாவும் ஊர் போலும்-
பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே.

kaiyAl-tozutu talai cAyttu uLLam kacivArkaN
mey Ar kuRaiyum tuyarum tIrkkum vimalan2Ar
ney ATutal anjcu uTaiyAr, nilAvum UrpOlum---
paivAy nAkam kOTal In2um pAcUrE.

பொருள்: கைகளைப் பெற்றதன் பயனாகத் தொழுது, தலை பெற்றதன் பயனாக வணங்கி, உள்ளம் வாய்ந்ததன் பயனாகக் கசிந்துருகி வழிபடுவோரின் உடலிற் பொருந்திய குறைகளையும் துயர்களையும் தீர்க்கும் விகிதனார், நெய் முதலிய ஆனஞ்சும் விரும்பி ஆடுதல் உடையார் தங்குகின்ற ஊர் (எதுவெனில்), படம் வாய்ந்த நாகத்தின் தோற்றம் போலக் காந்தள் மலரும் பாசூரே.

குறிப்புரை: கைகளைப் பெற்றதன் பயனாகப் பாசூரீசன் பைங்கழலைத் தொழுதும், தலை உடையதன் பயனாக வணங்கியும், உள்ளம் வாய்ந்ததன் பயனாக உருகியும் வழிபடும் அடியார்களுடைய மெய்யிற் பொருந்திய குறைகளையும் துயரங்களையும் ஒழிக்கும் அநாதி மலமுத்தர். நெய் முதலிய அஞ்சும் (ஆனைந்தும்) ஆடுதலுடையார். திருமுறைகளுள் 'ஆனைந்து' எனப்படினும் ஜலமும் மயமும் விட்டுப் பால் முதலிய மூன்றுமே கூறப்படும் உண்மையை ஆங்காங்குணர்க. 'ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்' பால் நறு நெய் தயிர் ஐந்தாடு பரம்பரன் (தி.7 ப.84 பா.9). நிலாவுதல் – நிலவுதல். பை வாய் நாகம் – படம்

வாய்ந்த நாகம். படத்தோடு கூடியவாய் எனினும் ஆம். நாகம் கோடல் ஈனும் – பாம்பைப் போல வெண்காந்தள் மலரைத் தோற்றும்.

Behold! The devotees of Lord Civan worship Him by folding their two hands. Then they prostrate on the ground before You. They become tender in their mind and heart and melt. He is our God who wipes out all their physical ailments, sufferings and sorrows and graces them. You love the ablution with the five sacred things of cow such as milk, curd, ghee, cow's urine and cow dung. You are manifest in the temple in Thiru-p-paasoor. Around the temple flower gardens are plenty where gloria flowers blossom giving the appearance of cobra's hood.

2116. பொங்காடரவும்புனலுஞ்சடைமேற்பொலிவெய்தக்
கொங்கார்கொன்றைசூடியென்னுள்ளங்குளிர்வித்தார்
தங்காதலியுந்தாமும்வாழுமூர்போலும்
பைங்கான்முல்லைபல்லரும்பீனும்பாசூரே. 4

பொங்கு ஆடுஅரவும் புனலும் சடைமேல் பொலிவு எய்த,
கொங்கு ஆர் கொன்றை சூடி, என் உள்ளம் குளிர்வித்தார்,
தம் காதலியும் தாமும் வாழும் ஊர் போலும் -
பைங்கால் முல்லை பல் அரும்பு ஈனும் பாசூரே.

pogku ATu aravum pun2alum caTaimEl polivu eyta,
kogku Ar kon2Rai cUTi, en2 uLLam kuLirvittAr,
tam kAtaliyum tAmum vAzum UrpOlum--
paigkAl mullai pal arumpu In2um pAcUrE.

பொருள்: சீறி ஆடும் பாம்பும் புனலும் தம் சடைமீது பொலிவாக விளங்க, மணமுள்ள கொன்றை சூடி என்னுடைய உள்ளத்தைக் குளிர்வித்தவர், தம்முடைய காதலியாகிய உமையம்மையும் தாமும் வாழும் ஊர் (எதுவென்னில்), பசிய காம்புகளை உடைய முல்லைக்கொடி பற்களைப் போல அரும்புகளை ஈனும் பாசூரே.

குறிப்புரை: 'கொன்றை சூடி நின்ற தேவை அன்றி ஒன்றும் நன்று இலோமே' என்று அருளிய உண்மையை உணர்ந்து நம்பி யாரூரரும், 'வம்பறாவரிவண்டு மணம் நாற மலரும் மது மலர் நற்கொன்றையான் அடியலால் பேணா எம்பிரான் சம்பந்தனடியார்க்கு மடியேன்' என்றருளினார். அதனை ஈண்டும் உணர்வாம். 'கொன்றை மாலை கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று பொய்யாத சேவடிக்கே

போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்று ஆளுடைய அரசரும் அருளியதை நினைக்க (தி.6 ப.99 பா.8). சிவபூஜை செய்வோருக்குக் கொன்றைப் பூக்களால் வழிபடும் பேரன்பு உண்டு. பொலிவு – விளக்கம். எய்த – அடைய. கொங்கு – மணம். குளிர்வித்தாராகிய தாமும் தம் காதலியும் வாழும் ஊர் என்க. காதலி – உமாதேவியார். பைங்கான் – பசிய மணம். கால் கொடியையும் காட்டையும் கொடியேற நட்ட காலையும் குறித்ததாகக் கோடலும் பொருந்தும். பல்லரும்பு – பல்போலும். அரும்பு; பல அரும்பு.

Behold! It is Paasoor. The city of Thiru-p-paasoor is surrounded by forests and gardens, where the green stemmed (vines) creeping plant jasmine abounds. They yield fragrant buds in bunches. These buds look like the teeth of young damsels. Oh God! You have adorned Your matted hair with the snake which gets angry at times, raises its head, expands its hood and dances; You also support the Ganges river on Your matted hair. You have adorned Your body with garlands of cassia flowers full of oozing honey. When I see such a form of yours my mind becomes cool and happy. You are manifested in the temple in Thiru-p-paasoor along with Your consort and grace Your devotees who gather there in the temple and worship You.

2117. ஆடற்புரியும்ஐவாயரவொன்றரைச்சாத்தும்
சேடச்செல்வர்சிந்தையுளென்றும்பிரியாதார்
வாடற்றலையிற்பலிதேர்கையாரூர்போலும்
பாடற்குயில்கள்பயில்பூஞ்சோலைப்பாசூரே. 5

ஆடல் புரியும் ஐவாய் அரவு ஒன்று அரைச் சாத்தும்
சேடச் செல்வர், சிந்தையுள் என்றும் பிரியாதார்,
வாடல்-தலையில் பலி தேர் கையார் ஊர்போலும் -
பாடல் குயில்கள் பயில் பூஞ்சோலைப் பாசூரே.

ATal puriyum aivAy aravu on2Ru araic cAttum
cETac celvar, cintaiyuL en2Rum piriyAtAr,
vATal-talaiyil pali tEr kaiyAr, UrpOlum--
pATal kuyilkaL payil pUnjcOlaip pAcUrE.

பொருள்: படமெடுத்து ஆடுதலைச் செய்யும் ஐந்தலைப் பாம்பொன்றை அரையில் கட்டும் சேடராகிய செல்வர், என் சிந்தையை விட்டு என்றும் அகலாதவர்; ஈரம் இல்லாத மண்டையோட்டில் பிச்சை ஏற்கும் கையுடையார் வாழும் ஊர் (எதுவென்னில்), பாடுகின்ற குயில்கள் தங்கும் பூஞ்சோலைகளை உடைய பாசூரே.

குறிப்புரை: ஆடல் புரியும் – (படமெடுத்து) ஆடுதலைச் செய்யும்; ஐவாய் அரவு – ஐந்தலைப் பாம்பு. அரை – திருவரை. சாத்தும் – சார்த்தும். சேடச் செல்வர் – சேடராகிய செல்வர் (தி.1 ப.5 பா.2) உடையவர். 'சேடர் வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன்'. 'சேடர் விண்ணோர்கட்குத் தேவர்' (தி.3 ப.9 பா.7). 'சேடர் தேவன் குடித்தேவர் தேவர்' (தி.1 ப.52 பா.11). வாடல் தலை – வாடுதலை அடைந்த பிரமகபாலம் – பாடல் வெண்தலை சூடினர் (தி.1 ப.56 பா.7). வாடல் வெண்டலை மாலை (தி.2 ப.50 பா.11). 'வாடற்றலை மாலை' (தி.2 ப.71 பா.3). 'வாடல் வெண்தலை' (தி.2 ப.112 பா.2). பாடல் குயில்கள் – பாடுதலையுடைய குயில்கள். பயில் – பயின்ற, பூஞ்சோலை.

Behold! It is Paasoor. Our Lord is the wealthiest with true and staunch devotees. He accommodates and uses the five-headed snake around His waist like a belt to keep the dresses in position. He never leaves the minds of His devotees who always remember Him, praise and worship Him. He goes round the world for alms by stretching His hand, which carries the skull with the dried flesh emitting bad smell. He is manifest in the temple of Thiru-p-paasoor where the cuckoos sing melodies in the flowery gardens situated all around the sacred temple.

2118. கானின்றதிரக்கனல்வாய்நாகங்கச்சாகத்
தோலொன்றுடையார்விடையார்தம்மைத்தொழுவார்கள்
மால்கொண்டோடமையல்தீர்ப்பாரூர்போலும்
பால்வெண்மதிதோய்மாடஞ்சூழ்ந்தபாசூரே. 6

கால் நின்று அதிர, கனல் வாய் நாகம் கச்சுஆக,
தோல் ஒன்று உடையார்; விடையார்; தம்மைத் தொழுவார்கள்
மால் கொண்டுஓட மையல் தீர்ப்பார்; ஊர் போலும்
பால்வெண்மதி தோய் மாடம் சூழ்ந்த பாசூரே.

kAl nin2Ru atira, kan2al vAy nAkam kaccu Aka,
tOl on2Ru uTaiyAr; viTaiyAr; tammait tozuvArkaL
mAl koNTu OTa maiyal tIrppAr; UrpOlum--
pAl veNmati tOy mATam cUznta pAcUrE.

பொருள்: கால் ஊன்றி நிலம் அதிர நடஞ்செய்ய, கொடிய நஞ்சினை உமிழும் வாய் உடைய நாகத்தைத் தம் கச்சாகவும், தோலை ஆடையாகவும் கொண்டவர்; இடப வாகனத்தார்,

அன்புடனே தம்மைத் தொழுவார்களின் அறிவு மயக்கம் ஓடத் தீர்ப்பார் ஊர் (எதுவெனில்), பால் போல் வெண்மையான ஒளி வீசும் மதி அளாவும் உயரிய மாடங்களை உடைய பாசூரே.

குறிப்புரை: கால் நின்று அதிர – திருவடி ஊன்றி நடஞ்செய்ய. கனல் – நஞ்சின் வெம்மை. கச்சு – அரைக்கு. அசைக்கும் கச்சு. விடையார் – இடபவாகனத்தார். மால் – அன்பு. (ப. 182 பா. 1). மையல் – மயக்கம். மதி தோய் மாடம் – சந்திர மண்டலத்தை அளாவிய உயரிய மாடம். பால் வெண் மதி – பால்போலும் வெண்ணிறத்தை உடைய திங்கள்.

Behold! It is Paasoor. This city and the temple are sacred as our Lord has selected it for His abode. He performs that cosmic dance, stamping His foot with force and beauty, to the music of the cymbal as per rules, and using the snake as a broad strap on His waist. He wears different hides as His dress. He sustains the white bull for His conveyance to travel all around the world. He enables His devotees who worship Him with sincere devotion, to get rid of their bewilderment completely. He is manifest in the temple in Thiru-p-paasoor city with tall palatial buildings on the top of which the white milk-like baby moon laps over while passing through the sky.

2119. கண்ணினயலேகண்ணொன்றுடையார்கழலுன்னி
எண்ணுந்தனையுமடியாரேத்தஅருள்செய்வார்
உண்ணின்றுருகஉவகைதருவாரூர்போலும்
பண்ணின்மொழியார்பாடலோவாப்பாசூரே. 7

கண்ணின் அயலே கண் ஒன்று உடையார், கழல் உன்னி
எண்ணும் தனையும் அடியார் ஏத்த அருள்செய்வார்,
உள்-நின்று உருக உவகை தருவார், ஊர்போலும்-
பண்ணின் மொழியார் பாடல் ஓவாப் பாசூரே.

kaNNin2 ayalE kaN on2Ru uTaiyAr, kazal un2n2i
eNNum tan2aiyum aTiyAr Etta aruL ceyvAr,
uL-nin2Ru uruka uvakai taruvAr, UrpOlum--
paNNin2 moziyAr pATal OvAp pAcUrE.

பொருள்: வலக்கண்ணும் இடக்கண்ணும் அயலாகும் மேற்பக்கத்திலே நெற்றிக் கண் ஒன்றை உடையவர்; அவருடைய கழலணிந்த திருவடியை நினைந்து, அத்திருவடிச் சிறப்பினைக் கருதும் அடியவர்களுக்கு அருள் செய்வார்; உள்ளத்தில் நினைக்க உவகை தருவார்;

அவருடைய ஊர் (எதுவெனில்), பண்ணைப் போல இனிமையாகப் பேசும் மகளிரின் பாடல் ஒழியாத பாசூரே.

குறிப்புரை: கண்ணின் அயலே – வலக்கண்ணுக்கும் இடக்கண்ணுக்கும் அயலாகும் மேற்பக்கத்தில். கண் ஒன்று – நெற்றிக் (தீக்கண்ணொன்றை. கழல் – திருவடி. உன்னி – நினைந்து. எண்ணும் தனையும் – அத்திருவடிச் சிறப்பைக் கருதுமளவும். உவகை – உவப்பிற்குரிய வரங்களும் முத்தி இன்பமும். 'உகவை' என்று கழகப்பதிப்பில் இருப்பது 'தான் நினைத்தைம் புலனும் அழிந்த சிந்தையந்தணாளர்' (தி.1 ப.53 பா.6) என்பதில் புலனும் என்று புள்ளி மாறியது போல் இதிலும் புள்ளி மாறி நின்றவாறறிக. (பார்க்க. பதி. 19. பா 3). உவகை தருவான் – மதுரை ஞானசம்பந்தப்பிள்ளை பதிப்பில் 'உவகை' என்றே உளது. அடங்கன்முறைப் பதிப்புகளில் அப்பதிப்பே மிக மேலானது என்பது அறிஞர் முடிபு. 'உரந்தோன்றும் பாடல் கேட்டு உகவையளித்தீர்', 'உகவாதார் புரந்தோன்றும் மும்மதிலும் எரியச் செய்தீர்' (தி.2 ப.54 பா.8). பண்ணின் – பண்ணைப்போன்ற. மொழியார் – மொழிகளை உடைய மகளிர். ஓவா – ஒழியாத. பாரின் மிசையார் பாடல் ஓவா (பா.2).

Behold! It is Paasoor. Our Lord has a third eye between the two, slightly above in the forehead. He bestows grace on the devotees who worship Him with pure thoughts of His holy feet. On seeing those servitors whose hearts melt while singing our Lord's fame, He confers delightful boons and blessings on them. Our Lord manifests Himself in the temple in Thiru-p-paasoor. In this city, young damsels whose normal speech itself is musical, carry on their divine sweet music ceaselessly forever.

2120. தேசுகுன்றாத்தெண்ணீரிலங்கைக்கோமானைக்
கூசஅடர்த்துக்கூர்வாள்கொடுப்பார்தம்மையே
பேசிப்பிதற்றப்பெருமைதருவாரூர்போலும்
பாசித்தடமும்வயலுஞ்சூழ்ந்தபாசூரே. 8

தேசு குன்றாத் தெண்நீர் இலங்கைக் கோமானைக்
கூசஅடர்த்துக் கூர்வாள் கொடுப்பார், தம்மையே
பேசிப் பிதற்றப் பெருமை தருவார், ஊர்போலும் -
பாசித் தடமும் வயலும் சூழ்ந்த பாசூரே.

tEcu kun2RAt teN nIr ilagkaik kOmAn2aik
kUca aTarttuk kUrvAL koTuppAr, tammaiyE
pEcip pitaRRap perumai taruvAr, UrpOlum--
pAcit taTamum vayalum cUznta pAcUrE.

பொருள்: ஒளி குன்றாத, கடல் நடுவிலே உள்ள, இலங்கைக்கு அரசனாகிய இராவணன் நாணிக் கூசும்படி அடர்த்துப் பின் அவன் வணங்கக் கூர்வாள் கொடுத்தருளியவர்; தம்முடைய பெருமையைப் பேசிப் பிதற்றுவோருக்கு இம்மை நலங்களும் வீட்டின்பமும் தருபவரின் ஊர் (எதுவெனில்), நீர்ப்பாசியுடைய தடாகங்களும் வயலும் சூழ்ந்த பாசூரே.

குறிப்புரை: தேசு – சூரியன் தன்மேல் செல்லாதிருப்பினும் சிவ பக்தியின் முதிர்ச்சியை உடைய அரசனது ஆட்சியாதலின் வையங்காக்கும் ஒளி. குன்றா – குறையாத. தெள்நீர் இலங்கை – தெளிந்த நீரை உடைய கடல் நடுவிலே உள்ள இலங்கை. கூச – மனம் கூசுதலடைய. வீரத்தால் நாண் என்பதும் பொருந்தும். வாள் கொடுத்த வரலாறு முன்னும் பின்னும் பலமுறை கூறப்பெற்றுள்ளது. 'கொடுப்பார் தம்மையே பேசி' என்ற ஏகாரத்தை ஊன்றி நோக்குதல் நன்று. பெருமை – இம்மை மறுமை நலங்களும் வீட்டின்பமும். பாசி – நீர்ப்பாசி. தடமும் வயலும் நீர்வளத்தால் பசுமை உடையவாதலை உணர்த்தியது. இதனால் ஈண்டுப் பாசூரென்ற பெயர்க்காரணமும் நன்கு விளங்குகின்றது.

Behold! It is Paasoor. Sri Lanka is surrounded by never diminishing bright waters of the ocean. Our Lord subdued the mightiness of the king of Sri Lanka who had excessive egoism. The king felt ashamed of himself and begged for pardon. Our Lord blessed him and gave a terribly sharp mystic sword. He gives greatness to those people who chatter about and praise His fame. Our Lord is manifest in the temple in Thiru-p-paasoor. This city is surrounded by green paddy fields and mosses covered with water pools.

2121. நகுவாய்மலர்மேலயனும்நாகத்தணையானும்
புகுவாயறியார்புறநின்றோரார்போற்றோவார்
செகுவாயுகுபல்தலைசேர்கையாரூர்போலும்
பகுவாய்நாரையாரல்வாரும்பாசூரே. 9

நகு வாய் மலர்மேல் அயனும், நாகத்துஅணையானும்,
புகு வாய் அறியார், புறம் நின்று ஓரார், போற்று ஓவார்;
செகு வாய் உகு பல்-தலை சேர் கையார் ஊர்போலும்-
பகுவாய் நாரை ஆரல் வாரும் பாசூரே.

naku vAy malarmEl ayan2um, nAkattu aNaiyAn2um,
puku vAy aRiyAr, puRam nin2Ru OrAr, pORRu OvAr;
ceku vAy uku pal-talai cEr kaiyAr UrpOlum--
pakuvAy nArai Aral vAum pAcUrE.

பொருள்: விரிந்த தாமரை மலர் மேல் இருக்கும் பிரமனும், பாம்பணைமேல் உறங்கும் திருமாலும் இறைவனைக் காணப் புகும் இடம் அறியாராகிப் புறத்தே நின்று துதித்தலை ஒழியார்; அழிந்த வாயிலிருந்து பற்கள் உதிர்ந்த பிரம கபாலம் சேரும் கை உடையவரின் ஊர் (எதுவெனில்), பிளந்த வாயை உடைய நாரை ஆரல் மீன்களை வாரிக் கொண்டு விழுங்கும் பாசூரே.

குறிப்புரை: நகு வாய் மலர் – திறந்த வாயையுடைய தாமரை. நாகத்து அணையான் – பாம்பணை மேலுறங்குபவன். புகுவாய் – சிவபெருமானைக் காணப்புகும் இடம். ஓரார் – உணரார். போற்று – துதி. ஓவார் – ஒழியார். செகு – அழிந்த. வாய் – வாயிலிருந்து. பல் உக்க தலை – பல் சிந்திய தலை. 'பல்இல் ஓடு கையேந்தி' (தி.1 ப.51 பா.4) (தி.2 ப.91 பா.6) (தி.3 ப.45 பா.4) 'பல்லார் தலைசேர் மாலை' (தி.2 ப.63 பா.3). 'வெண் பற்றலை கலனா' (தி.7 பா.506). 'பல் இல் வெள்ளைத்தலையன்' (தி.7 பா.831). பகு வாய் நாரை – பிளந்த வாயையுடைய நாரை. ஆரல் மீன்களை வாரும் பாசூர். வாடும் – வௌவும்.

Behold! It is Paasoor. The divine master Brahma who rests in the lotus flower and the divine chief, Vishnu resting on the serpent - they both could not comprehend our Lord. They did not know the correct path of salvation. They did not realise that salvation was possible only through our Lord's glory. Our Lord, whenever needed, holds in His hand the dead human skull without teeth to get alms. Our Lord is manifest in the temple in Thiru-p-paasoor. In this city, the cleft billed storks move about to pick the eel fish inside the water pools.

2122. தூயவெயில்நின்றுழல்வார்துவர்தோயாடையார்
நாவில்வெய்யசொல்லித்திரிவார்நயமில்லார்
காவல்வேவக்கணையொன்றெய்தாரூர்போலும்
பாவைக்குரவம்பயில்பூஞ்சோலைப்பாசூரே. 10

தூய வெயில் நின்று உழல்வார், துவர் தோய் ஆடையார்,-
நாவில் வெய்ய சொல்லித் திரிவார் - நயம் இல்லார்;
காவல் வேவக் கணைஒன்று எய்தார் ஊர்போலும் -
பாவைக் குரவம் பயில் பூஞ்சோலைப் பாசூரே.

tUya veyil nin2Ru uzalvAr, tuvar tOy ATaiyar,--
nAvil veyya collit tirivAr--nayam illAr;
kAval vEvak kaNai on2Ru eytAr UrpOlum--
pAvaik kuravam payil pUnj cOlaip pAcUrE.

பொருள்: கடுமையான வெயிலில் நின்று துன்பப்படுவோராகிய சமணர், துவராடை உடுத்த பவுத்தர் ஆகிய இவர்கள் நாவினில் கொடுமையான சொற்களைச் சொல்லித் திரிவர்; பேச்சில் நயம் இல்லாதவர்கள்; காவலைக் கொண்ட முப்புரம் எரியில் மூழ்க அம்பொன்று எய்தவருடைய ஊர் (எதுவெனில்), பாவை போல மலர்களை ஈனும் குரவமரங்கள் நிறைந்த பூஞ்சோலைகளை உடைய பாசூரே.

குறிப்புரை: தூய வெயில் – நல்ல வெயில். தூய்மை – கலப்பின்மை உணர்த்திற்கு. 'சுத்தப் பொய்' என்பது போல. வெய்ய – கொடிய சொற்களை. நயம் – நீதி. காவல் – மும்மதில். திரிபுரம் தொழிலாகுபெயர். பாவைக்குரவம் – பாவை போலும் பூத்தலையுடைய குரவ மரம். 'அரவின்வாயின் முள்ளெயிறு ஏய்ப்ப அரும்பு ஈன்று குரவம்பாவை முருகமர் சோலைக் குற்றாலம்' (தி.1 ப.99 பா.9).

Behold! It is Paasoor. In this city, the Jains do live and they roam all around the city in hot sun. The Buddhists wearing ochre-robes also roam. They both speak ill words. Our Lord burnt the three flying forts of the asuras who illegally guarded their forts. Our Lord shot an arrow to destroy the forts. In the forests bottle flower trees grow, their blossoms look like damsels. In this city, our Lord is manifest in the temple in the city of Thiru-p-paasoor.

2123. ஞானமுணர்வான்காழிஞானசம்பந்தன்
தேனும்வண்டுமின்னிசைபாடுந்திருப்பாசூர்க்
கானம்முறைவார்கழல்சேர்பாடலிவைவல்லார்
ஊனமிலராயும்பர்வானத்துறைவாரே. 11

ஞானம் உணர்வான் காழி ஞானசம்பந்தன்,
தேனும் வண்டும் இன்னிசை பாடும் திருப் பாசூர்க்
கானம் உறைவார் கழல் சேர் பாடல்இவை வல்லார்,
ஊனம் இலராய், உம்பர் வானத்து உறைவாரே.

njAn2am uNarvAn2 kAzi njAn2acampantan2
tEn2um vaNTum in2 icai pATum tirup pAcUrk
kAn2am uRaivAr kazal cEr pATal ivai vallAr,
Un2am ilarAy, umpar vAn2attu uRaivArE.

பொருள்: உவமையிலாக் கலை ஞானமும் பவமதனை அறமாற்றும் உணர்வரிய மெய்ஞ்ஞானமும் உணர்ந்த காழி ஞானசம்பந்தன், தேனியும் வண்டும் இன்னிசை பாடும்

திருப்பாசூர் கானம் உறைவார் திருவடிகளைப் பாடிய இப்பாடல்களை வல்லவர்கள் பிறப்பிறப்பாகிய குறைகள் இலராகி வானோர்க்கு உயர்ந்த உலகத்தில் வாழ்வார்கள்.

குறிப்புரை: ஞானம் – சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலை ஞானமும். பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானமும். உணர்வான் – திருவருண் ஞானம் குழைத்து அளித்த அம்பிகையின் திருமுலைப்பால் குடித்த அந்நிலையில் (ஓதாது) உணர்ந்தவர். தேன் – நால்வகை வண்டுள் ஒன்று. திருப்பாசூர்க் கானம் – என்பதை நோக்கின் 'பைங்கான்' (பா. 4) என்புழிக் காடென்னும் பொருள் ஏற்றதாதலறிக. ஊனம் – பிறப்பிறப்பாகிய குறைகள். உம்பர் வானத்து – வானோர்க்குயர்ந்த உலகத்தில்.

Behold! It is Paasoor. In this city, huge forest areas, full of big trees and flower plants and vines, exist. Here the beetles and bees flock together in large numbers in the forest to suck honey. While flying their humming sound resembles sweet music and is heard all over the city. Our saint Thiru-gnana-Sambandar is highly knowledgeable both in the universal information of philosophy and literature and in divine knowledge. He came to Thiru-p-paasoor, went to the temple, worshipped our Lord manifested there and sang divine songs on the holy feet of Lord of Paasoor, these ten verses. Those devotees who are capable of reciting these ten verses will be flawless and will have their abode in the celestial world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

60ஆம் பதிகம் முற்றிற்று
End of 60th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 197 பதிக எண்: 61

61. திருவெண்காடு — 61. THIRU-VENN-KAADU

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

184 ஆவது பதிகத்தைக் காண்க.

பதிக வரலாறு

184 ஆவது பதிகத்தைக் காண்க.

திருச்சிற்றம்பலம்

2124. உண்டாய்நஞ்சையுமையோர்பங்காஎன்றுள்கித்
தொண்டாய்த்திரியுமடியார்தங்கள்துயரங்கள்
அண்டாவண்ணமறுப்பானெந்தையூர்போலும்
வெண்டாமரைமேற்கருவண்டியாழ்செய்வெண்காடே. 1

"உண்டாய், நஞ்சை! உமை ஓர் பங்கா!" என்று உள்கித்
தொண்டுஆய்த் திரியும் அடியார்தங்கள் துயரங்கள்
அண்டா வண்ணம் அறுப்பான் எந்தை, ஊர்போலும் -
வெண்தாமரை மேல் கருவண்டு யாழ்செய் வெண்காடே.

"uNTAy, nanjcai! umai OrpagkA!" en2Ru uLkit
toNTu Ayt tiriyum aTiyAr tagkaL tuyaragkaL
aNTA vaNNam aRuppAn2, entai, UrpOlum--
veN tAmarai mEl karuvaNTu yAz cey veNkATE.

பொருள்: தேவர் முதலியோரைக் காக்க நஞ்சை அமுதமாக உண்டாய்! உமையை ஒரு பாகமாகக் கொண்ட அம்மையப்பரே! என்று பயபக்தியுடன் தொண்டராகிப் பணி செய்து திரியும் அடியார்களுடைய துயரங்கள் அவர்களை அண்டாத வண்ணம் நீக்குவானாகிய எம் தந்தை உறையும் ஊர் எதுவெனில், வெண்ணிறத் தாமரை மலர்மேல் கருநிற வண்டு யாழ் போல முரலும் திருவெண்காடே.

குறிப்புரை: நஞ்சை உண்டாய் உமையோர் பாங்கா என்று உள்கி – நஞ்சினை அமுதாக உண்டு தேவர் முதலியோரைக் காத்த தலைவரே! அம்மையப்பரே! என்று உள்ளத்தில் தியானம் புரிந்து. தொண்டராய்த் திரியும் அடியார் தங்கள் – தொண்டராகி உலவும் அடியவர்களுடைய. அண்டாவண்ணம் அறுப்பான் –

மீண்டும் அண்டாதவாறு அறத் தீர்த்தருள்பவன். வெண்டாமரை மலர்மேல் கருவண்டுகள் யாழ் (ஒலியைச்) செய்யும் வளத்தையுடைய திருவெண்காடு எந்தை ஊர் போலும். மேலும் இவ்வாறே கொள்க (பா. 2, 4, 5, 6, 8, 9 நோக்குக).

Oh! It is Civan, our Lord of Thiru-venn-kaadu. In this city of Thiru-venn-kaadu, white lotus flowers blossom in large numbers. The black bees attracted by these flowers with a good yield of honey approach these flowers, flapping their wings with musical tone of lute. Such is the beauty and prosperity of the city. The devotees who gather in the temple of this city, worship our Lord reciting with devotion "Oh God! You imbibed the poison that came out of the ocean of milk when devas and asuras churned the milk; You have embedded Your consort Uma Devi on the left half of Your body". Those who meditate on the Lord in this way and become His consistent servitors will not get afflictions at all. You cut off the sufferings of those devotees and see that torture never agonizes them in future in their life. This, our Father is manifest in the temple in Thiru-venn-kaadu considering it as His own abode.

2125. நாதன்நம்மையாள்வானென்றுநவின்றேத்திப்
பாதம்பன்னாள்பணியுமடியார்தங்கள்மேல்
ஏதந்தீரஇருந்தான்வாழுமூர்போலும்
வேதத்தொலியாற்கிளிசொற்பயிலும்வெண்காடே. 2

"நாதன் நம்மை ஆள்வான்!" என்று நவின்று ஏத்திப்
பாதம் ப;ல-நாள் பணியு;ம அடியார் தங்கள்மேல்
ஏதம் தீர இருந்தான் வாழும் ஊர்போலும் -
வேதத்து ஒலியால் கிளி சொல் பயிலும் வெண்காடே.

"nAtan2! nammai ALvAn2!" en2Ru navin2Ru Etti,
pAtam pal-nAL paNiyum aTiyAr tagkaL mEl
Etam tIra iruntAn2 vAzum UrpOlum--
vEtattu oliyAl kiLi col payilum veNkATE.

பொருள்: தலைவன் நம்மை ஆளாகக் கொண்டு காப்பான் என்று பலமுறையும் துதித்து ஏத்திப் பலநாளும் வணங்குகின்ற அடியார்களிடத்தில் அணுகும் துன்பங்கள் தீர்ப்பதற்குப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஊர், வேதத்து ஒலியைக் கேட்டுக் கிளி பேசிப் பயிலும் திருவெண்காடே.

குறிப்புரை: நம்மை நாதன் ஆள்வான் என்று நவின்று ஏத்திப் பல்நாள் பாதம் பணியும் அடியார் தங்கள்மேல் ஏதம் தீர இருந்தான் – நம்மை நம்பெருமான் ஆளாக் கொண்டு காப்பான் என்று கருத்திற் கொண்டு, வாயால் பயின்று துதித்துப் பல நாளும் வணங்குகின்ற அடியவர்களிடத்தில் (அணுகும்) துன்பங்கள் தீர்ந்தொழியும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். 'பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசை கேட்டு வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லும் மிழலை' (தி.1 ப.132 பா.1) கிளிகள் வேதத்தின் ஒலியாற் சொற்பயிலும், பண்மொழியால் அவன் நாமம் பலவோதப் பசுங்கிள்ளை வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே.

It is Civan, our Supreme Being, the Lord of Thiru-venn-kaadu. The devotees go to the temple daily and worship Him. There they recite His name repeatedly and praise Him with firm devotion and belief. The Supreme Being, their Lord will definitely grace them and take them under His protection. For many days they recite like this and worship His holy feet. Firm conviction in His grace helps for finally our Lord wipes out, the moral or physical blemishes of these devotees. He is manifest in the temple of Thiru-venn-kaadu. In this city, Vedic scholars repeat several times the Vedic mantras. The parrots living here as domestic birds hear the voice for long days and succeed in repeating some words of the Vedas, almost in the same tone. Thiru-venn-kaadu is such a sacred city.

2126. தண்முத்தரும்பத்தடமூன்றுடையான்றனையுன்னிக்
கண்முத்தரும்பக்கழற்சேவடிகைதொழுவார்கள்
உண்முத்தரும்பவுவகைதருவானூர்போலும்
வெண்முத்தருவிப்புனல்வந்தலைக்கும்வெண்காடே. 3

தண்முத்து அரும்பத் தடம்மூன்று உடையான்தனை உன்னி,
கண் முத்து அரும்பக் கழல்சேவடி கைதொழுவார்கள்,
உள் முத்து அரும்ப உவகை தருவான் ஊர்போலும் -
வெண்முத்து அருவிப் புனல் வந்து அலைக்கும் வெண்காடே.

taN muttu arumpat taTam mUn2Ru uTaiyAn2 tan2ai un2n2i,
kaN muttu arumpak kazal cEvaTi kaitozuvArkaL,
uL muttu arumpa, uvakai taruvAn2 UrpOlum--
veN muttu aruvip pun2al vantu alaikkum veN kATE.

பொருள்: தண்ணிய முத்துக்கள் அரும்புபோல் தோன்றத் தடங்கள் மூன்று உடையானை நினைத்துக் கண்ணில் முத்துப்போல் கண்ணீர் சொட்டக் கழலணிந்த செய்ய திருவடிகளைக் கைதொழுவார்களது உள்ளத்தே முத்துப்போல் உவகை தருவானுடைய ஊர் எதுவெனில், வெண் முத்தினைப் போன்று அருவிப் புனல் வந்து அலை வீசும் திருவெண்காடே.

குறிப்புரை: தண் முத்து – தண்ணிதாகிய முத்துக்கள். அரும்ப – அரும்பு போலத் தோன்ற, தடம் மூன்று – மூன்று திருக்குளங்களை; 'முக்குளம்' உன்னி – தியானம் புரிந்து. கண்முத்து அரும்ப – கண்களில் ஆனந்த பாஷ்பம் முத்துக்களைப் போலச் சொட்ட. கழல் சே அடி – கழலைப் பூண்ட செய்ய திருவடிகளை. உள் – உள்ளத்தே. முத்து அரும்ப – முத்துப் போலும் வெளிதான நிலை (அகளங்கம் ஆன தூய தன்மை) தோன்ற. உவகை தருவான் – இம்மை மறுமை இன்பங்களும் பேரின்பமும் அருள்பவர். வெண்முத்து அருவி – வெளிய முத்தினை ஒத்த அருவி. புனல் – நீர்.

Oh! It is Civan, our Lord of Thiru-venn-kaadu. This city of Thiru-venn-kaadu has three tanks as their sacred temple tanks. They are called (1) Solar Tank, (2) Tank of Sacred Fire, and (3) Moon Tank. The sacred temple near these three tanks is the abode of our Lord Thiru-venn-kaattu-Eesar or Suvethaaraneesar. The devotees think of the Lord of Thiru-venn-kaadu and discharge droplets from their eyes. These droplets resemble pearls. They worship the ankleted holy feet with folded hands. At this moment they get delighted in their hearts and feel the grace of our Lord that resembles pearls. Our Lord manifests Himself in the temple in Thiru-venn-kaadu. In this city water particles looking like pearls are found when the waterfalls dash into the pools below. Devotees with heart-felt teardrops looking like pearls are sure to be blessed by the Lord with His pearl like grace.

2127. நரையார்வந்துநாளுங்குறுகிநணுகாமுன்
உரையால்வேறாவுள்குவார்களுள்ளத்தே
கரையாவண்ணங்கண்டான்மேவுமூர்போலும்
விரையார்கமலத்தன்னமருவும்வெண்காடே. 4

நரையார் வந்து நாளும் குறுகி நணுகாமுன்
உரையால் வேறா உள்குவார்கள் உள்ளத்தே,
கரையா வண்ணம் கண்டான் மேவும் ஊர்போலும் -
விரை ஆர் கமலத்து அன்னம் மருவும் வெண்காடே.

naraiyAr vantu nALum kuRuki naNukAmun2,
uraiyAl vERA uLkuvArkaL uLLattE,
karaiyA vaNNam kaNTAn2 mEvum UrpOlum--
virai Ar kamalattu an2n2am maruvum veNkATE.

பொருள்: மூப்பு வந்து, உடம்பை விட்டு உயிர் நீங்கும் நாள் நெருங்கி அடையும் முன், வாயுரையோடு பொது நீக்கித் தன்னை நினைப்பவர்களின் உள்ளத்தே, அவர்கள் கரையா வண்ணம் அருள்பவன் மேவும் ஊர், மணங்கமழும் தாமரை மலர்மேல் அன்னம் பொருந்தும் திருவெண்காடே.

குறிப்புரை: நரையார் – வெளுத்த மயிர். 'தென்றலால் புகுந்துலவும் திருத்தோணி புரத்துறையுங் கொன்றைவார் சடையார்' (தி.1 ப.60 பா.7) 'கொண்டலார் கொணர்ந்து அங்கு உலவுந் திகழ கோட்டாற்றில் தொண்டெலாம் துதிசெய்ய' (ப.188 பா.8). நரையார் – (தி.1 ப.7 பா.91) நாளும் குறுகி – உயிர் உடம்பின் நீங்கும் நாளும் நெருங்கி, இனி வாழ்நாளும் சுருங்கி எனலுமாம். நணுகுதல் – நாளின் வினை. உரையால் வேறா – வாயுரையால் வேறுபடாதபடி உள்குவார்கள் – தியானிப்பவர்களது. கரையாவண்ணம் – கரைந்து ஒழியாதவாறு நிலைத்து நிற்கும் வகை. இறக்கும் முன் இறைவனை அகத்தில் நினைந்தும், வாயால் வாழ்த்தியும் வழிபடுவார் உள்ளத்தில் அவனது திருவருளுருவம் கரையாது நிற்கும் என்றவாறு. விரை – மணம். கமலத்து – தாமரை மலரில். அன்னம் – அன்னப்பறவை. மருவும் – பொருந்தி வாழும்.

Oh! It is Civan, Lord of Thiru-venn-kaadu. Our Lord bestows His agility on His devotees, who never forget their sincere prayerful words without allowing their thoughts for any straying. They follow their daily ritual without fail before they become old, their hair becomes grey and the physical body becomes stunted. At this stage our Lord's grace and Holy Form get engraved in their hearts and our Lord's shrine is Thiru-venn-kaadu, where swans live peacefully in fragrant lotuses.

2128. பிள்ளைப்பிறையும்புனலுஞ்சூடும்பெம்மானென்
றுள்ளத்துள்ளித்தொழுவார்தங்களுறுநோய்கள்
தள்ளிப்போகஅருளுந்தலைவனூர்போலும்
வெள்ளைச்சுரிசங்குலவித்திரியும்வெண்காடே. 5

"பிள்ளைப்பிறையும் புனலும் சூடும் பெம்மான்" என்று
உள்ளத்து உள்ளித் தொழுவார் தங்கள் உறு நோய்கள்
தள்ளிப் போக அருளும் தலைவன் ஊர்போலும் -
வெள்ளைச்சுரிசங்கு உலவித் திரியும் வெண்காடே.

"piLLaippiRaiyum pun2alum cUTum pemmAn2" en2Ru
uLLattu uLLit tozuvAr tagkaL uRu nOykaL
taLLip pOka aruLum talaivan2 UrpOlum--
veLLaiccuri cagku ulavit tiriyum veNkATE.

பொருள்: இளம் பிறையையும் கங்கையாற்றையும் தலையில் சூடும் பெருமான் என்று உள்ளத்தில் நினைந்து தொழுபவர்களின் மேல் உறவரும் நோய்கள் அணுகாமல் விலகிப் போயொழிய அருள் செய்யும் தலைவனின் ஊர், வெள்ளை நிறமுள்ள கரிந்த சங்குகள் உலவித் திரியும் திருவெண்காடே.

குறிப்புரை: பிள்ளைப்பிறை – இளம்பிறை. புனல் – கங்கை நீர். பெம்மான் – பெருமகனென்பதன் மரூஉ. உள்ளத்து உள்ளி தொழுவார் தங்கள் – மனத்தில் நினைந்து வழிபடும் அடியார்களுடைய உறுநோய்கள் – மிக்க நோய்கள். தள்ளி – உந்தி. போக – போயொழிய. போகத்தள்ளியருளும் எனலுமாம். வெள்ளைக்கரிச் சங்கு உலவித் திரியும் – வெண்ணிறமுடைய கரிந்த சங்குகள் உலாவித் திரியும்.

It is Civan, our Lord of Thiru-venn-kaadu. The devotees of this place go to the temple, worship our Lord and pray in their mind as under: "Oh Lord! You retain the baby moon and the river Ganges in Your matted hair". Our Lord graces those devotees and wipes out the disease of birth and death from their life for ever. This Lord is manifested in the temple in Thiru-venn-kaadu city. In this city, the conches looking black worms with white lines inside the body move along the seashore and all other places in the forest.

2129. ஒளிகொள்மேனியுடையாயும்பராளீயென்
றளியராகியழுதுற்றூறுமடியார்கட்
கெளியானமரர்க்கரியான்வாழுமூர்போலும்
வெளியவுருவத்தானைவணங்கும்வெண்காடே. 6

"ஒளி கொள் மேனி உடையாய்! உம்பர் ஆளீ!" என்று
அளியர் ஆகி அழுது ஊற்று ஊறும் அடியார்கட்கு
எளியான், அமரர்க்கு அரியான், வாழும் ஊர்போலும் -
வெளிய உருவத்து ஆனை வணங்கும் வெண்காடே.

"oLi koL mEn2i uTaiyAy! umpar ALI!" en2Ru
aLiyar Aki azutu URRu URum aTiyAr kaTku
eLiyAn2, amararkku ariyAn2, vAzum UrpOlum--
veLiya uruvattu An2ai vaNagkum veNkATE.

பொருள்: 'ஒளிகொள் மேனி உடையாய்! உம்பராளி' என்று அன்பில் முதியராகி நெகிழ்ந்து அழுது கண்ணீர் ஊற்று ஊறும் அடியார்களுக்கு எளியவன்; அமரர்களுக்கு அரியவனான இறைவன் வாழும் ஊர் எதுவெனில், வெள்ளானை தவஞ்செய்து வணங்கும் திருவெண்காடே.

குறிப்புரை: ஒளி கொள்மேனி உடையாய்! உம்பராளீ என்று – ஞானப்பிரகாசத்தைக் கொண்ட திருமேனி உடையவரே. தேவர்களை ஆள்பவரே என்று துதித்து. அளியர் ஆகி – அன்பின் முதிர்ச்சியை உடையராகி. அழுது உற்று ஊறும் அடியார்கட்கு எளியான் – உள்ளுருகியும், கண்ணீர் சொரிந்தும், (மெய்யன்பு) மிக்குத் திருவருளில் ஊறிய அடியவர்கட்கு எளியவன். அமரர்க்கு அரியான் – அழியும் இன்பத்தை விரும்பும் தேவர்கட்கு அரியவன். வெளிய உருவத்து ஆனை – வெண்ணிறத்தைப் பெற்ற வடிவத்தை உடைய யானை. 'அடைந்து அயிராவதம் பணிய மிக்கு அதனுக்கு அருள் சுரக்கும் வெண்காடு' 'வெள்ளானை தவஞ்செய்யும் மேதகு வெண்காட்டான்' (தி.2 ப.184 பா.7, 9).

Oh! It is Civan, the Lord of Thiru-venn-kaadu. "Oh Lord! the Ruler, the King of the celestials! Your body shines brightly with divinity!" The devotees with great love of Him, weep and worship His holy feet. He is easily approachable to mature and melting devotees, but unapproachable to devas who seek fleeting joys. Such a great Lord has selected and manifested Himself in the temple in Thiru-venn-kaadu. To this sacred temple the white elephant of Indra known as Iravatham came and worshipped our Lord and was graced by Him.

2130. கோள்வித்தனையகூற்றந்தன்னைக்குறிப்பினால்
மாள்வித்தவனைமகிழ்ந்தங்கேத்தமாணிக்காய்
ஆள்வித்தமரருலகமளிப்பானூர்போலும்
வேள்விப்புகையால்வானமிருள்கூர்வெண்காடே. 7

கோள் வித்து அனைய கூற்றம்தன்னைக் குறிப்பினால்
மாள்வித்து, அவனை மகிழ்ந்து அங்கு ஏத்து மாணிக்கு ஆய்
ஆள்வித்து அமரர் உலகம் அளிப்பான் ஊர்போலும் -
வேள்விப்புகையால் வானம் இருள் கூர் வெண்காடே.

kOL vittu an2aiya kURRam tan2n2aik kuRippin2Al
mALvittu, avan2ai makizntu agku Ettu mANikku Ay
ALvittu, amarar ulakam aLippAn2 UrpOlum--
vELvip pukaiyAl vAn2am iruL kUr veNkATE.

பொருள்: கொலைக்கு வித்துப் போன்ற கூற்றுவனைச் சிவத்தியானத்தினால் மாள்வித்து, அச்சிவபெருமானை மகிழ்ந்து ஏத்த அந்த பிரமச்சாரியை தேவலோகத்தை ஆளச்செய்து அருள்செய்வார் ஊர் எதுவெனில், வேள்விப் புகையால் வானம் இருள்கூரும் திருவெண்காடே.

குறிப்புரை: கோள் – கொலை. கோள் வித்து – கொலைக்கு விதை. அனைய – போன்ற. கூற்றம் தன்னை – கூற்றுவனை, எமனை. குறிப்பினால் – சிவத்தியானத்தால். 'மறிதிகழ் கையினன் வானவர்கோனை மனமகிழ்ந்து குறித்தெழு மாணி' (தி.4 ப.107 பா.4). மாள் வித்து – மாளச்செய்து. அவனை – அச்சிவபெருமானை. மாணி – பிரமசாரி. சுவேதகேது முனிவர் (தி.2 ப.48 பா.5). அமரர் உலகம் ஆள்வித்து அளிப்பான் – தேவ லோகத்தை ஆளச்செய்து அருள் செய்வான். அளித்தல் அன்பின் முதிர்தல். வேள்விப்புகை – யாகத்தீயிலிருந்து எழும் புகை. இருள் கூர் – இருள்மிகும். 'முனிவர்கள் தொக்குமிக்க மறையோர்கள் ஓமம் வளர் தூமம் ஓடி அணவிக் குனிமதி மூடி நீடும் உயர்வான் மறைத்து நிறைகின்ற கொச்சைவயமே' (தி.2 ப.83 பா.5).

It is Civan, our Lord of Thiru-venn-kaadu. The chief of death known as Yaman, is similar to a seed of death (He is the seed for killing action; Thiru-gnana-Sambandar calls him seed for murder). One saint called 'Swethakethu' was a great devotee of our Lord. Our Lord, therefore, killed the chief of death who approached the saint to take away his life; and lifted Swethakethu to heaven (This incident is also related to saint Maarkandeyan). Our Lord selected Thiru-venn-kaadu city for His abode and is manifested in the temple of this city. The city's sky is covered by smoke arising out of sacrificial fire carried out by scholarly Brahmins of the city as their daily rituals.

2131. வளையார்முன்கைமலையாள்வெருவவரையூன்றி
முளையார்மதியஞ்சூடியென்றுமுப்போதும்
இளையாதேத்தஇருந்தானெந்தையூர்போலும்
விளையார்கழனிப்பழனஞ்சூழ்ந்தவெண்காடே. 8

வளை ஆர் முன்கை மலையாள் வெருவ, வரை ஊன்றி,
முளை ஆர் மதியம் சூடி, என்றும் முப்போதும்
இளையாது ஏத்த இருந்தான்; எந்தை; ஊர்போலும் -
விளை ஆர் கழனிப் பழனம் சூழ்ந்த வெண்காடே.

vaLai Ar mun2kai malaiyAL veruva, varai Un2Ri,
muLai Ar matiyam cUTi, en2Rum muppOtum
iLaiyAtu Etta iruntAn2; entai; UrpOlum--
viLai Ar kazan2ip pazan2am cUznta veNkATE.

பொருள்: வளையல் பொருந்திய முன்கையை உடைய இமாசல குமாரி அஞ்சுமாறு கயிலைமலையைப் பெயர்க்க இயலாதவாறு ஊன்றி, முளைத்தல் பொருந்திய பிறை சூடிய பெருமானே என்று முப்போதும் ஏத்த இளைப்புறாமல் இருந்த எம் தந்தையின் ஊர் எதுவெனில், மிகுந்த விளைச்சல் கொண்ட கழனி, பழனம் சூழ்ந்த திருவெண்காடே.

குறிப்புரை: வளைஆர் முன்கை – வளையல் பொருந்திய முன் கையை உடைய. மலையாள் – இமாசலகுமாரி. வெருவ – அலற. வரை – கயிலைமலை. முளையார் மதியம் – முளைத்தல் பொருந்திய இளம்பிறை. முப்போது – காலை, பகல், மாலை. 'வானோர்கள் முப்போது முடிசாய்த்துத் தொழ நின்ற முதல்வனை' (தி.4 ப.7 பா.3). இளையாது – (மனம்) இளைப்புறாமல். விளை – விளைவு. ஆர் – நிறைந்த. கழனி – வயல். பழனம் – நீர் நிலம். 'செந்நெலங் கழனிப்பழனத்து அயல்' (தி.2 ப.1 பா.1).

Oh! It is Civan, Lord of Thiru-venn-kaadu. Our Lord has manifested Himself in the temple in Thiru-venn-kaadu. His devotees visit the temple three times daily - morning, midday and in the evening, with devotion. They worship His holy feet uttering His fame as under: "Oh my Lord! When Raavanan tried to lift and move Your abode mount Himalayas, our goddess Paarvathi Devi got shuddered due to the swaying of the mountain. You immediately pressed the top of the mountain with Your toe and crushed the shoulders and head of Raavanan. You have adorned Your head with the baby moon in Your matted hair". These devotees never hesitate to praise the Lord. This Lord is manifest in the temple in Thiru-venn-kaadu which is surrounded by rich paddy fields all around.

2132. கரியானோடுகமலமலரான்காணாமை
எரியாய்நிமிர்ந்தஎங்கள்பெருமானென்பார்கட்
குரியானமரர்க்கரியான்வாழுமூர்போலும்
விரியார்பொழிலின்வண்டுபாடும்வெண்காடே. 9

"கரியானோடு, கமலமலரான், காணாமை
எரிஆய் நிமிர்ந்த எங்கள் பெருமான்!" என்பார்கட்கு
உரியான், அமரர்க்கு அரியான், வாழும் ஊர்போலும் -
விரி ஆர் பொழிலின் வண்டு பாடும் வெண்காடே.

"kAriyAn2OTu, kamalamalarAn2, kANAmai
eri Ay nimirnta egkaL perumAn2!" en2pArkaTku
uriyAn2, amararkku ariyAn2, vAzum UrpOlum--
viri Ar pozilin2 vaNTu pATum veNkATE.

பொருள்: திருமாலோடு பிரமனும் காணவியலாதவாறு நெருப்பாக நிமிர்ந்த எங்கள் பெருமானே! என்பார்கட்கு உரியவன்; அமரர்களுக்கு அரியவன் வாழும் ஊர் எதுவெனில், விரிந்த பொழிலில் வண்டு பாடும் திருவெண்காடே.

குறிப்புரை: கரியான் – மாயன். கமல மலரான் – தாமரையில் வாழும் பிரமன். காணாமை – காணமாட்டாத வகை. எரி – தீப்பிழம்பு. என்பார்கட்கு – என்று துதிக்கும். அடியவர்களுக்கு. உரியான் – அருளும் உரிமை உடையவன். 'அமரர்க்கு அரியான்' (பா. 6) விரி – விரிவு. பொழிலின் – சோலைக்கண்.

Oh! It is Civan, Lord of Thiru-venn-kaadu. The devotees in the city of Thiru-venn-kaadu go to the temple, worship the holy feet of our Lord, pray and appraise Him saying "Oh! Our Supreme Being! When the black deity Vishnu and the four faced deity who rests in the lotus flower tried their best to see Your head and feet they failed and got exhausted. At that hour, oh Lord! you rose like an illimitable fiery column of a huge height before them and they became bewildered. He is easily approachable to such devotees, gives His darshan, and graces them. But He is a very rare Supreme Being to the devas. This Lord selected the temple in Thiru-venn-kaadu city and has manifested Himself there, surrounded by several large gardens full of flowers, yielding honey, for which bees gather and move with pleasing music.

2133. பாடுமடியார்பலருங்கூடிப்பரிந்தேத்த
ஆடுமரவமசைத்தபெருமானறிவின்றி
மூடமுடையசமண்சாக்கியர்களுணராத
வேடமுடையபெருமான்பதியாம்வெண்காடே. 10

பாடும் அடியார் பலரும் கூடிப் பரிந்து ஏத்த,
ஆடும் அரவம் அசைத்த பெருமான்; அறிவு இன்றி
மூடம் உடைய சமண்சாக்கியர்கள் உணராத
வேடம் உடைய பெருமான்; பதி ஆம் - வெண்காடே.

pATum aTiyAr palarum kUTip parintu Etta,
ATum aravam acaitta perumAn2; aRivu in2Ri
mUTam uTaiya camaN cAkkiyarkaL uNarAta
vETam uTaiya perumAn2; pati Am--veNkATE.

பொருள்: பண்ணுடன் பாடும் அடியார்கள் பலரும் கூடி அன்புடன் துதிக்க, படமெடுத்து ஆடும் பாம்பினை அரையில் கச்சாகக் கட்டிய பெருமான், அறிவில்லாத மவுட்டிகம் உடைய சமணர்களும் சாக்கியர்களும் உணரவியலாத சிவஞானவேடம் கொண்ட பெருமான் அவருடைய ஊர் திருவெண்காடே.

குறிப்புரை: பாடும் அடியார் – பண்ணொன்ற இசை பாடும் அடியார்கள். அரவம் – பாம்பு. அசைத்த – கட்டிய. உணராத வேடம் – உணரமாட்டாத சிவஞான வேடம்.

Oh! It is Civan, Lord of Thiru-venn-kaadu. In the city Thiru-venn-kaadu, servitors - male and female, young damsels - all people gather together at the temple, worship His holy feet, sing and praise His greatness. This Lord wears on His waist the hissing snake as His belt. However, He is not realised with His Supreme Nature by the senseless and downtrodden Jains and the Buddhists. He is such in His great manifestation and beyond comprehension. This Lord is manifest in the temple in Thiru-venn-kaadu.

2134. விடையார்கொடியான்மேவியுறையும்வெண்காட்டைக்
கடையார்மாடங்கலந்துதோன்றுங்காழியான்
நடையாரின்சொல்ஞானசம்பந்தன்தமிழ்வல்லார்க்
கடையாவினைகளமரலோகமாள்வாரே. 11

விடை ஆர் கொடியான் மேவி உறையும் வெண்காட்டை,
கடை ஆர் மாடம் கலந்து தோன்றும் காழியான் -
நடை ஆர் இன்சொல் ஞானசம்பந்தன் - தமிழ்வல்லார்க்கு
அடையா வினைகள்; அமரலோகம் ஆள்வாரே.

viTai Ar koTiyAn2 mEvi uRaiyum veN kATTai,
kaTai Ar mATam kalantu tOn2Rum kAziyAn2--
naTai Ar in2col njAn2acampantan2--tamiz vallArkku
aTaiyA, vin2aikaL; amaralOkam ALvArE.

பொருள்: எருது எழுதிய கொடியுடையவன் விரும்பி வாழும் திருவெண்காட்டைக் கடைவாயில் பொருந்திய மாடம் கலந்து தோன்றும் சீகாழியான், ஒழுக்க நெறியான இனியவற்றைக் கூறும் ஞானசம்பந்தன் பாடிய தமிழ்ப் பாடல்கள் இவை வல்லவர்களை வினைகள் அடையா; அவர்கள் தேவலோகத்தை ஆள்வார்கள்.

குறிப்புரை: விடை ஆர்க்கொடியான் – எருது எழுதிய கொடியை உடையவன். மேவி – விரும்பி. உறையும் – எழுந்தருளியிருக்கும். கடை ஆர் மாடம் – கடைவாயில் பொருந்திய மாடம். இது காழிக்கு அடை நடை – ஒழுக்கம். ஞானசம்பந்தன் வெண்காட்டைத் தொழுத தமிழ் என்று ஒரு சொல்வரு வித்தியைக்க. வல்லார்க்கு வினைகள் அடையா. வல்லால் அமரலோகம் ஆள்வார்.

Oh! It is Civan, Lord of Thiru-venn-kaadu. Our saint Thiru-gnana-Sambandar hails from Kaazhi, a city of many palatial buildings with broad entrances for various uses. He sang over our Lord, the famous songs full of divine way of life with pleasing words of the Tamil language. Those servitors who can recite these ten songs with devotion will have no sufferings and will reach heaven and lead good life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

61ஆம் பதிகம் முற்றிற்று
End of 61st Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 198 *பதிக எண்: 62*

62. திருமீயச்சூர் 62. THIRU-MEEYACH-CHOOR

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருமீயச்சூர் என்னும் திருத்தலமானது மயிலாடுதுறை பேரளம் தொடர்வண்டிப் பாதையில், பேரளம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே 2.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. மயிலாடுதுறையிலிருந்து பேரளம் செல்லப் பல பேருந்துகள் உள்ளன. இது காவிரித் தென்கரையில் உள்ள ஐம்பத்து மூன்றாவது தலமாகும். இறைவர் திருப்பெயர் முயற்சிநாதர். இறைவி திருப்பெயர் சுந்தரநாயகி. தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் சூர்யபுட்கரணி. சூரியன் வழிபட்டுப் பேறு எய்திய தலம். இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கின்றது. இத்திருத்தலத்தின் கோயில் மூலவிமானம் கஜப்பிரஷ்ட விமானமாகும். இக்கோயிலிலே மீயச்சூர் இளங்கோயில் என்னும் வேறு கோயில் ஒன்று வடக்குப் பிரகாரத்தில் இருக்கிறது. இங்குள்ள இறைவர் சகல புவனேச்சுவரர். இறைவியார் மின்னுமேகலாம்பாள். இது காளியால் பூசிக்கப்பட்டது. இதற்குத் திருநாவுக்கரசர் பாடிய பதிகம் ஒன்று இருக்கிறது.

பதிக வரலாறு

மண்ணெலாம் உய்யவந்த பண்ணவராகிய சண்பை வேந்தர், திருநல்லத்தில் எழுந்தருளிய மாமணியின் சேவடியை இன்றமிழால் வழிபட்டுத் திருவழுந்தூர்க்குச் செல்லுமிடையில் இத்திருப்பதியை எய்திப் பாடிப் பணிந்தது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2135. காயச்செவ்விக்காமற்காய்ந்துகங்கையைப்
பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூரன்றறுத்தமைந்தன்தாதைதன்
மீயச்சூரேதொழுதுவினையைவீட்டுமே. 1

காயச் செவ்விக் காமற் காய்ந்து, கங்கையைப்
பாயப் படர்புன்சடையில் பதித்த பரமேட்டி;
மாயச் சூர் அன்று அறுத்த மைந்தன் தாதை; தன்
மீயச்சூரே தொழுது, வினையை வீட்டுமே!

kAyac cevvik kAmaR kAyntu, kagkaiyaip
pAyap paTar pun2 caTaiyil patitta paramETTi,
mAya cUr an2Ru aRutta maintan2 tAtai; tan2
mIyac cUrait tozutu, vin2aiyai vITTumE!

பொருள்: உடலழகுடைய மன்மதனைச் சினந்து, பாயும் கங்கையைப் பொன்போலும் சடையிற் பதியச் செய்த பரமேட்டி, வஞ்சகமுடைய சூரனை அன்று அழித்த மைந்தனின் தந்தை தன்னுடைய திருமீயச்சூரைத் தொழுது பிறவிக்கு ஏதுவாகிய வினையைத் தீர்த்தொழிவீர்களாக.

குறிப்புரை: காயம் – உடம்பு. செவ்வி – அழகு. காமன் – மன்மதன் (உடலழகுடைய மன்மதன்). காமற்காய்ந்து – காமனைக் கோபித்து இரண்டன தொகை. படர்புன்சடையில் பாயக்கங்கையைப் பதித்த பரமேட்டி – படர்ந்த பொன்போலுஞ் செஞ்சடைமேல் விரைந்து பாயும் வண்ணம் கங்கையாற்றைப் பதியச் செய்த பரமேட்டி. பரமேட்டி – தனக்குமேல் ஒன்றில்லாத உயர்ந்த இடத்திலிருப்பவன். மாயச்சூர் – வஞ்சத்தையுடைய சூரபதுமனை. சூர்மாய என்று மாற்றிச் சூரபத்மன் மாயும்படி என்றலும் பொருந்தும். மைந்தன் – முருகப்பிரான். தாதை – தந்தை (சிவபிரான்). வீட்டும் – அழியின். சிவபிரானுடைய மீயச்சூர் எனும் சிவத்தலத்தை வழிபட்டுப் பிறவிக்கு ஏதுவாகிய வினையைத் தீர்த்தொழியுங்கள் என்று உபதேசித்து அருளியவாறு.

Oh! It is Civan, the Lord of Thiru-meeyach-choor. A spark of terrible heat came out of His third eye and fell on Manmathan's body and he was completely burnt. Our God has no equal to Him in any aspect; He has supported the dashing torrential river Ganges in His golden matted hair. He is the father of Lord Murugan who conquered and destroyed the physical body of Soorapanman and brought under His control his two different appearances as peacock and cock. The devotees who worship the Lord of Thiru-meeyach-choor will be freed of their karma forever.

2136. பூவார்சடையின்முடிமேற்புனலரனல்கொள்வர்
நாவார்மறையர்பிறையர்நறவெண்டலையேந்தி
ஏவார்மலையேசிலையாக்கழியம்பெரிவாங்கி
மேவார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. 2

பூ ஆர் சடையின்முடிமேல் புனலர்; அனல் கொள்வர்;
நா ஆர் மறையர்; பிறையர்; நற வெண்தலை ஏந்தி,
ஏ ஆர் மலையே சிலையா, கழி அம்பு எரி வாங்கி,
மேவார் புரம்மூன்று எரித்தார் - மீயச்சூராரே.

pU Ar caTaiyin2 muTimEl pun2alar; an2al koLvar;
nA Ar maRaiyA; piRaiyar; naRa veNtalai Enti,
E Ar malaiyE cilaiyA, kazi ampu eri vAgki,
mEvAr puram mUn2Ru erittAr--mIyaccUrArE.

பொருள்: கொன்றை மலர்கள் நிறைந்த சடையின் முடிமேல் கங்கையாறாகிய நீரை உடையவர்; அங்கையில் அனலைக் கொள்வர்; வேதங்களை அருளிய நாவினர்; பிறை சூடியவர்; நாற்றத்தை உடைய வெண்டலை ஏந்தியவர்; பெரிய மேருமலையையே வில்லாகக் கொண்டு கோலாகிய அம்பில் எரியை எய்து பகைவரது புரம் மூன்றையும் எரித்தார்; அவர் யாரெனில் மீயச்சூரரே.

குறிப்புரை: பூ – கொன்றைப்பூ. அன்பர் அர்ச்சிக்கும் பல்வேறு மலர்களும் ஆம். புனலர் – கங்கையை அணிந்தவர். அனல் கொள்வர் – தீயேந்துபவர். நாஆர் மறையார் – வேதங்களை அருளிய நாவினர். பிறையர் – பிறைசூடியவர். நற வெண்தலை – நாற்றத்தையுடைய வெளிய பிரமகபாலத்தை. ஏ – பெருமை. மலை – மேருமலை. சிலையா – வில்லாக. கழியம்பு – கோல் அம்பு. எரி – அக்கினி. திருமால் அம்பாகவும் அக்கினி அவ்வம்பின் நுனியாகவும் கொண்ட வரலாற்றை நினைக்க. ‘எரி காற்று ஈர்க்கு அரி கோல் வாசுகி நாண கல்வில்’ (தி. 1) மேவார் – பகைவரது. புரம்மூன்று – திரிபுரத்தை. புனலரும், கொள்வரும், மறையரும், பிறையரும், ஏந்தி வாங்கி எரித்தாரும் ஆகிய சிவபிரானார். மீயச்சூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

It is Civan, the Lord of Thiru-meeyach-choor. He supports the Ganges river in His matted hair, which is adorned fully with sweet fresh flowers. He holds flame, ablaze in one of His hands. He used to chant the four Vedas with His sacred tongue in musical tone. He has retained the moon on His head. He holds in one of His hands the white skull of Brahma, as His begging bowl, emitting bad smell. He holds the famous

strong Mount Meru as His bow in His hand; and the arrow is Thirumaal himself; and the tip of the arrow is the glowing hot flame. With all these He shot at the three flying fortresses of the asuraas who inflicted intolerable misery on the devaas and all other celestials. They were all completely destroyed. He is such a great Supreme Being. He is manifest in the temple in Thiru-meeyach-choor.

2137. பொன்னேர்கொன்றைமாலைபுரளுமகலத்தான்
மின்னேர்சடைகளுடையான்மீயச்சூரானைத்
தன்னேர்பிறரில்லானைத்தலையால்வணங்குவார்
அந்நேரிமையோருலகமெய்தலரிதன்றே. 3

பொன் நேர் கொன்றைமாலை புரளும் அகலத்தான்,
மின் நேர் சடைகள் உடையான், மீயச்சூரானை,
தன் நேர் பிறர் இல்லானை, தலையால் வணங்குவார்
அந் நேர் இமையோர் உலகம் எய்தர் அரிது அன்றே.

pon2 nEr kon2RaimAlai puraLum akalattAn2,
min2 nEr caTaikaL uTaiyAn2, mIyaccUrAn2ai,
tan2 nEr piRar illAn2ai, talaiyAl vaNagkuvAr
an nEr imaiyOr ulakam eytaR aritu an2RE.

பொருள்: பொன்னைப் போல ஒளியுடைய கொன்றை மாலை புரளும் மார்பினனும் மின்னல் போல் ஒளிர்கின்ற சடைகள் உடையானும் ஆகிய திருமீயச்சூரனை, தனக்கு நிகராகச் சொல்லப் பிறர் ஒருவர் இல்லாத பெரியோனைத் தலையால் வணங்குவார்க்கு அந்த நேர்மையுடைய தேவருலகத்தை அடைதல் அரிதன்று; எளிதே.

குறிப்புரை: பொன் ஏர் கொன்றை – பொன்போலும் அழகிய கொன்றை. கொன்றையைப் பலபட அருளிய வகையெல்லாம் ஆசிரியரது திருமுறையுள் ஆங்காங்கு நோக்கி உணர்தல் நன்று. 'வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும் மதுமலர் நற்கொன்றையான் அடியலால் பேணா எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்' என்றதில் கொன்றையான் என்று சிவபிரானைக் குறித்ததன் கருத்து அறியத்தக்கது. அதற்கு ஆதாரமானது இத்திருப்பாடல்: – 'கொன்றை சூடி நின்ற தேவை அன்றி ஒன்றும் நன்று இலோம்'. இதனை ஆசிரியரே அருளியதால் அவரது குறிக்கோளை நன்கு அறிந்து கொள்ளலாம். அகலத்தான் – திருமார்புடையவன். மின் ஏர் சடைகள் – மின்போலும் ஒளிர்கின்ற சடைகளை. தன் நேர் பிறர் இல்லானை – தனக்குவமையாகப் பிறர் இல்லாத தலைவனை. அவனுக்கு அவனே ஒப்பாம் என்று. அநந்நிய உவமை உணர்த்தியவாறு. தலையால் வணங்குவார்(க்கு) இமையோருலகம் எய்தல் (ஆனது) அரிதன்று. மிக

எளிது என்றவாறு. அ+நேர்+இமையோர். உலகம் – அந்த நேர்மையுடைய தேவருலகத்தை. 'எய்தலரிதன்றே' என்ற பாடமும் உண்டு.

It is Civan, our Lord of Thiru-meeyach-choor. It is the garland made up of golden, yellow cassia flowers trailing on His chest and His beauty shines. It is also due to His matted hair, which always looks like the bright lightning and blazing light. Our Lord has no other person in the world equal to His Supremacy. He is manifest in this temple. Those devotees who gather in the temple and worship our Lord by prostrating before Him and placing their head on His holy feet will reach the beautiful and virtuous world of the devaas without any need for strenuous efforts.

2138. வேகமதநல்லியானைவெருவுரிபோர்த்துப்
பாகமுமையோடாகப்படிதம்பலபாட
நாகமரைமேலசைத்துநடமாடியநம்பன்
மேகமுரிஞ்சும்பொழில்சூழ்மீயச்சூரானே. 4

வேக மத நல் யானை வெருவ உரி போர்த்து,
பாகம் உமையோடு ஆக, படிதம் பல பாட
நாகம் அரைமேல் அசைத்து நடம் ஆடிய நம்பன் -
மேகம் உரிஞ்சும் பொழில் சூழ் மீயச்சூரானே.

vEka mata nal yAn2ai veruva uri pOrttu,
pAkam umaiyOTu Aka, paTitam pala pATa,
nAkam araimEl acaittu, naTam ATiya nampan2--
mEkam urinjcum pozil cUz mIyaccUrAn2E.

பொருள்: மத வேகம் உடைய கொடிய யானையின் தோலை உரித்துப் போர்த்து, இடப்பாகத்தில் உமை துதி பல பாட, பாம்பினை அரையில் கட்டி, நடனம் ஆடிய நம்பன் யாரெனில், மேகம் உராயும் பொழில்கள் சூழ்ந்த திருமீயச்சூரனே.

குறிப்புரை: வேகம் – விரைவுடைய நடை. மதவேகமுமாம். நல்லியானை (நன்மை+யானை) – உயர்திணை அஃறிணை ஆயிருமருங்கின். ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும். மருவின் பாத்திய புணரியல் நிலையிடை உணரத்தோன்றா (தொல்.482) என்றவாறு. நல்லதாகிய யானை என்று விரித்துரைத்தற்பாலது. நன்னூற் சூத்திரப்படி. பண்பை விளக்கும் மொழி தொக்கதாகக் கொண்டு. விரித்துரைத்தல் குணகுணிபேதம் அறியாக் குற்றமுடையதாகும். உரி – தோல். பாகம் – இடப்பாகம்.

படிதம் – வல்லபை. துதி என்றாரும் உளர். அவர், சந்தர்ப்பத்திற்கேற்பத் தாமே கருதி எழுதியது அப்பொருள் என்று தோன்றுகின்றது. நாகம் – பாம்பு. அரை – திருஅரை. அசைத்து – கட்டி. நடம் – திருக்கூத்து. நம்பன் – சிவபிரான். நம்பு – நகைச. எல்லா உயிர்களும் விரும்புதற்குரியவன்.

Oh! It is Civan, our Lord in Thiru-meeyach-choor. On one occasion a rutted elephant was rushing swiftly towards our Lord and our Goddess got frightened. At that moment our Lord steered towards the elephant, killed it and peeled off its hide and covered His body with it. Our Lord wearing the dancing snake on His waist started dancing according to His wish. Our goddess instantaneously commenced singing in the melodious tone to suit His dance. Our God is the Lord of the temple in the city of Thiru-meeyach-choor where the dark clouds gather always in the forest nearby.

2139. விடையார்கொடியார்சடைமேல்விளங்கும்பிறைவேடம்
பபடையார்பூதஞ்சூழப்பாடலாடலார்
பெடையார்வரிவண்டணையும்பிணைசேர்கொன்றையார்
விடையார்நடையொன்றுடையார்மீயச்சூராரே. 5

விடை ஆர் கொடியார், சடைமேல் விளங்கும் பிறை வேடம்,
படை ஆர் பூதம் சூழப் பாடல்ஆடலார்,
பெடை ஆர் வரிவண்டு அணையும் பிணை சேர் கொன்றையார்,
விடை ஆர் நடை ஒன்று உடையார் - மீயச்சூராரே.

viTai Ar koTiyAr, caTaimEl viLagkum piRai vETam,
paTai Ar pUtam cUzap pATal ATalAr,
peTai Ar varivaNTu aNaiyum piNai cEr kon2RaiyAr,
viTai Ar naTai on2Ru uTaiyAr--mIyaccUrArE.

பொருள்: இடபம் எழுதிய கொடியை உடையவர்; சடையின் மேல் விளங்கும் பிறையை உடைய திருவேடத்தார்; பூதப்படை சூழப் பாடுதலோடு ஆடுதலும் உடையார்; பெடையுடன் அழகிய வண்டுகள் அணையும் கொன்றை மாலை அணிந்தவர்; நடை வல்ல காளை வாகனம் ஒன்றுடையவர்; அவருடைய ஊர் திருமீயச்சூரே.

குறிப்புரை: விடை ஆர் கொடியார் (ப.197 பா.11). பிறை வேடம் – பிறையை அணிந்த வேடம். சடைமேல் பிறைவேடம் விளங்கும். படை ஆர் பூதம் – படையாகப் பொருந்திய பூதங்கள். பாடல் ஆடலார் –

பாடுதலும் ஆடுதலும் உடையார். பெடை – பெண் வண்டு. பிணை – மாலை. பிணையல் – கொன்றைப்பிணை. விடைஆர் நடை – ஏறுபோல் பீடுநடை (குறள்).

Oh! It is Civan, our Lord in Thiru-meeyach-choor. Our Lord has the figure of the bull embossed on His flag to enable His worshippers to recognise His identity. In His matted hair, He retains the moon and has disguised His appearance. His followers, the bhuthaas in large number join, sing together in praise of our Lord and dance round Him. Our Lord relishes their dance and music and feels happy. He wears the garland of cassia flowers in which the male and female beetles gather round with flying noise. Though He uses the bull for His ride, He Himself walks majestically better than the bull itself.

2140. குளிருஞ்சடைகொள்முடிமேற்கோலமார்கொன்றை
ஒளிரும்பிறையொன்றுடையானொருவன்கைகோடி
நளிரும்மணிசூழ்மாலைநட்டநவில்நம்பன்
மிளிருமரவமுடையான்மீயச்சூரானே. **6**

குளிரும் சடை கொள் முடிமேல் கோலம் ஆர் கொன்றை
ஒளிரும் பிறை ஒன்று உடையான் ஒருவன், கை கோடி
நளிரும் மணி சூழ் மாலை நட்டம் நவில் நம்பன்,
மிளிரும் அரவம் உடையான் - மீயச்சூரானே.

kuLirum caTai koL muTimEl kOlam Ar kon2Rai
oLirum piRai on2Ru uTaiyAn2, oruvan2, kai kOTi
naLirum maNi cUz mAlai naTTam navil nampan2,
miLirum(m) aravam uTaiyAn2--mIyaccUrAn2E.

பொருள்: குளிர்ச்சி கொண்ட திருச்சடைமேல் அழகாக நிறைந்த கொன்றை மலர்கள் விளங்கும்; அச்சடையில் பிறையொன்று உடையான்; ஒப்பற்றவன்; கையினை வளைத்துக் குளிரும் கருமையான இருள் சூழும் மாலைக் காலத்தில் திருக்கூத்து ஆடும் நம் பெருமான்; பிரளும் பாம்பினைக் கச்சாக உடையவன்; அவன் திருமீயச்சூரனே.

குறிப்புரை: கோலம் – அழகு. ஒளிரும் – விளங்கும். சடைமுடி மேல் கொன்றையும் பிறையும் உடையான் என்க. கைகோடி – கையை வளைத்து நட்டம் நவில் நம்பன் – திருக்கூத்தாடும் சிவபெருமான். நளிரும் – குளிரும். மிளிரும் – விளங்கும். அரவம் – பாம்பு.

It is Civan, Lord of Thiru-meeyach-choor. On His cool matted hair, He wears a wreath of delightful cassia flowers. In addition, He retains the bright baby moon also on His head. He has no parallel in the world. He wears a string of gems around His forearms. While He dances He bends and twists His arm according to the dance pose, to make it attractive. Of course, He keeps on His waist the dancing snake as His belt. That God is manifested in the temple of Thiru-meeyach-choor and graces the devotees.

2141. நீலவடிவர்மிடறுநெடியர்நிகரில்லார்
கோலவடிவுதமதாங்கொள்கையறிவொண்ணார்
காலர்கழலர்கரியினுரியர்மழுவாளர்
மேலர்மதியர்விதியர்மீயச்சூராரே. 7

நீலவடிவர் மிடறு, நெடியர், நிகர்இல்லார்,
கோல வடிவு தமது ஆம் கொள்கை அறிவு ஒண்ணார்,
காலர், கழலர், கரியின்உரியர், மழுவாளர்,
மேலர், மதியர், விதியர் - மீயச்சூராரே.

nIlavaTivar miTaRu, neTiyar, nikar illAr,
kOla vaTivu tamatu Am koLkai aRivu oNNAr,
kAlar, kazalar, kariyin2 uriyar, mazuvALar,
mElar, matiyar, vitiyar--mIyaccUrArE.

பொருள்: கண்டம் கரியவர்; நீண்டவர்; தனக்கொப்பார் இல்லாதவர்; அவரது அழகிய வடிவு இதுதான் என வரையறுக்க முடியாதவர்; காலனைச் செற்ற காலர்; காலில் கழலை அணிந்தவர்; யானையின் தோலைத் தன் மேல் போர்த்தியவர்; மழுப்படை ஏந்தியவர்; மேலானவரும் ஞானசொரூபமும் ஆவர்; அவர் திருமீயச்சூரரே.

குறிப்புரை: நீலவடிவர் மிடறு – திருநீலகண்டர். நெடியர் – நீண்டவர் (உயர்ந்தோங்கிய நிலையின் எல்லை இல்லாதவர்). 'உம்பராலும் உலகின்னவராலும் தம்பெருமை அளத்தற்கரியான்' (தி.1 ப.29 பா.5). 'நுண்ணியான் மிகப்பெரியான்' (தி.1 ப.61 பா.6). நிகரில்லார் – (அதுலர்). ஒப்பிலியப்பன் கோலவடிவு நமது ஆம் கொள்கை. அறிவு ஒண்ணார் பல உருவன் (தி.1 ப.13 பா.2). 'நானாவித உருவாய் நமையாள்வான்' பலபல வேடமாகும் பரன் தன்மை யாரும் அறிவாரில்லை (தி.2 ப.6 பா.2). ஓதி யாரும் அறிவார் இல்லை – ஆர்க்கும் அறிவரியான். காலர் கழலர் – கழலணிந்த திருவடி உடையார். காலர் – காலரூபர், வாயுரூபர் எனலும். கூற்றை உதைத்தவரெனலும் ஆம். கரியின் உரியர் – யானைத் தோல் உடையவர். மழுவாளர் –

மழுவை ஆள்பவர். மழுவாளை உடையவர். மேலர் மதியர் – பிறையைச் சடைமேல் அணிந்தவர். மேலானவரும் ஞான சொரூபமும் ஆம். காலர் கழலர் மேலர் மதியர் – வடநூலார் மதம்பற்றி அடைமொழிக்கும் அடைகொளியின் விகுதி கொடுத்துக் கூறியனவாக் கொள்ளலும் ஆம். 'நுண்ணறிவால் வழிபாடு செய்யுங் காலுடையான்' (தி.1 ப.5 பா.4). 'காலனுயிர் செற்றகாலன்' (தி.1 ப.45 பா.4) எனலும் அமையும். பவமலி தொழிலது நினை விதியர் – படைப்பவரானவர். 'அரியனை . . . கரியானை நான்முகனை . . . பிறவா நாளே' (தி.6 ப.1 பா.1). 'படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகளாயினை' (தி.1 ப.128 பா.4). 'அயனவனாய்' (தி.1 ப.13 பா.5). 'வேதவிதியானை' (தி.1 ப.128 பா.4). 'எனதுள்ளம் விடகிலா விதியே' (தி.7 பா.385). 'பவமலி தொழிலது நினைவொடு பதுமன் நன் மலரது மருவிய சிவன்' (தி.1 ப.2 பா.1) என்பதில், பிரமனது இதய கமலத்திலிருந்து சிவபிரான் படைப்பித்தருள்வதாகக் குறித்த உண்மை உணர்க.

Oh! It is Civan, the Lord of Thiru-meeyach-choor. In this verse various manifestations of our Lord given in many other poems are mentioned in concise form. Here they have been condensed and ten manifestations have been sung by our saint briefly. Our Lord is dark blue in colour in the neck area. He is the tallest; He is sublime with no equals; He takes various different elegant figures on several occasions. Therefore, He is too rare to be identified. He wears ringing anklets around His legs; He covers His body with the hide of the elephant. He carries a battle axe in one of His hands. He is the highest; He retains the moon on His head. He is the creator of the entire cosmos.

2142. புலியினுரிதோலாடைபூசும்பொடிநீற்றர்
ஒலிகொள்புனலோர்சடைமேற்கரந்தாருமையஞ்ச
வலியதிரள்தோள்வன்கணரக்கர்கோன்றன்னை
மெலியவரைக்கீழடர்த்தார்மீயச்சூராரே. **8**

புலியின்உரி-தோல் ஆடை, பூசும் பொடி-நீற்றர்,
ஒலி கொள் புனல் ஓர் சடைமேல் கரந்தார், உமை அஞ்ச
வலிய திரள்தோள் வன்கண் அரக்கர்கோன் தன்னை
மெலிய வரைக்கீழ் அடர்த்தார் - மீயச்சூராரே.

puliyin2 uri-tOl ATai, pUcum poTi-nIRRar,
oli koL pun2al Or caTaimEl karantAr, umai anjca
valiya tiraL tOL van2 kaN arakkar kOn2 tan2n2ai
meliya varaikkIz aTarttAr--mIyaccUrArE.

பொருள்: உரித்த புலியின் தோல் ஆடை; அவர் பூசும்பொடி திருநீறு; முழங்கும் ஓசையுடைய கங்கையாற்றை ஒப்பற்ற சடையில் மறைத்தவர்; உமையம்மை அச்சம் கொள்ள வலிமையான திரண்ட தோள்களை உடைய வன்கண் அரக்கர் அரசனாகிய இராவணனை அவன் மெலிய கயிலை மலைக்கீழ் நசுக்கினார்; அவருடைய ஊர் திருமீயச்சூர்.

குறிப்புரை: உரிதோலாடை நீற்றார் – உரித்த தோலாகிய ஆடையையும் பூசும் திருநீற்றுப் பொடியையும் உடையவர். ஒலிகொள்புனல் – முழக்கத்தைக் கொண்ட கங்கை வெள்ளத்தை. ஓர் சடை – ஒப்பற்ற சடை, ஓர்தற்குரிய ஞானமாகிய சடை எனலுமாம். 'பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை பிறையங்க ஆடுவாய்' (ப.310 பா.6). 'நுண்சிகை ஞானமாம்' (திருமந்திரம்). கரந்தார் – மறைத்தவர். உமை – உமாதேவியார். திரள் தோள் – திரண்ட புயங்களையும். வன்கண் – அகத்திலுள்ள வலிமையைப் புறத்தே காட்டும் கண்களையும் உடைய. அரக்கர் கோன் – அரக்கர்க்குக் கோமகன். அவனை அடர்த்தார் – வரையின்கீழ் மெலிய அடர்த்தார். அடைத்தவர் மீயச்சூரிலுள்ளார்.

It is Civan, the Lord of Thiru-meeyach-choor. Our Lord is manifest in the temple in Thiru-meeyach-choor. He uses the hide of a tiger for His dress. He smears His body with the holy ashes, which is specially used for applying on the forehead. He supports on His head the forcefully rushing Ganges river with heavy noise, concealing it in His matted hair. When Umaa was in panic, with the slight tilting of Her abode, mount Himalayas, our Lord crushed the king of Sri Lanka under the mountain. He is the Lord who is manifested in the temple in Thiru-meeyach-choor.

2143. காதின்மிளிருங்குழையர்கரியகண்டத்தார்
போதிலவனும்மாலுந்தொழப்பொங்கெரியானார்
கோதிவரிவண்டறைபூம்பொய்கைப்புனல்மூழ்கி
மேதிபடியும்வயல்சூழ்மீயச்சூராரே. 9

காதில் மிளிரும் குழையர், கரிய கண்டத்தார்,
போதிலவனும், மாலும் தொழப் பொங்கு எரி ஆனார் -
கோதி வரிவண்டு அறை பூம் பொய்கைப் புனல் மூழ்கி
மேதி படியும் வயல் சூழ் மீயச்சூராரே.

kAtil miLirum kuzaiyar, kariya kaNTattAr,
pOtilavan2um mAlum tozap pogku eri An2Ar--
kOti varivaNTu aRai pUm poykaip pun2al mUzki
mEti paTiyum vayal cUz mIyaccUrArE.

பொருள்: காதில் விளங்கும் குழையை உடையவர்; நீலகண்டர்; பிரமனும் திருமாலும் தன்னைத் தொழப் பொங்கி எழும் நெருப்பானார்; அவர் யாரெனில், வரிகளை உடைய வண்டுகள் மலர்களைக் கோதி முரலும்; அழகிய மலர்களையுடைய பொய்கையில் எருமைகள் மூழ்கிப் படியும் வயல் சூழ்ந்த திருமீயச்சூரரே.

குறிப்புரை: மிளிரும் – விளங்கும். குழையார் – குழையை அணிந்தவர். குழை – தழை. ஓலை, குழை என்பன பண்டைய வழக்கத்திற்கு காரணப்பெயராயிருந்தன; 'மரக்கால் போல', பொற்கலனானபின்னும் குழை என்ற பெயராலே வழங்கப்படுகின்றது. இருப்புத் தகட்டாலான பின்னும் 'மரக்கால்' என வழங்கப்படுவதுபோல. 'பத்திரம் எழுதினான்' என்பது முதலியவற்றையும் நோக்குக. கரியகண்டத்தார் – திருநீலகண்டர். போது – பூ போது இ(ல்)லவனும் – தாமரைப் பூவை இல்லமாக உடைய பிரமனும். பொங்கும் எரி – மிக்க தீ. வண்டு கோதி அறைபூ என்க. பொய்கை – குளம். மேதி – எருமை.

Oh! It is Civan, the Lord of Thiru-meeyach-choor. In this city, the lined beetles make noise, while they fly and disentangle the flowers to suck honey. The flowers are in plenty in the cool waters of the pond. Here the buffaloes, enter and dive into the water and take bath to their full satisfaction. Then they come out and take rest on the banks of paddy fields. In such a rich city, our Lord has manifested Himself in the temple in Thiru-meeyach-choor. He wears the bright pendant in one of His ears. His neck is dark blue in colour. Brahma, who always rests in lotus flower, and Vishnu went out into the cosmos to worship our Lord, but in vain. When our Lord rose as a great tall flame of fire before them, they both recognized and worshipped our Lord.

2144. கண்டார்நாணும்படியார்கலிங்கமுடைபட்டைக்
கொண்டார்சொல்லைக்குறுகாருயர்ந்தகொள்கையார்
பெண்டான்பாகமுடையார்பெரியவரைவில்லால்
விண்டார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. 10

கண்டார் நாணும் படியார், கலிங்கம் முடை பட்டை
கொண்டார், சொல்லைக் குறுகார், உயர்ந்த கொள்கையார்,
பெண்தான் பாகம் உடையார், பெரிய வரை வில்லால்
விண்டார், புரம்மூன்று எரித்தார், மீயச்சூராரே.

kaNTAr nANum paTiyAr, kaligkam muTai paTTai
koNTAr, collaik kuRukAr, uyarnta koLkaiyAr;
peNtAn2 pAkam uTaiyAr, periya varai villAl
viNTAr puram mUn2Ru erittAr, mIyaccUrArE.

பொருள்: காண்பவர்கள் நாணம், வெட்கம் கொள்ளும்படியாக ஆடையின்றித் திரியும் சமணர்கள்; கலிங்கம் எனும் பட்டைத்துவர் தோய்ந்த ஆடையை உடுத்த பவுத்தர்கள் ஆகியோர் கூறும் பொய்யான சொற்களை உயர்ந்த கொள்கையார் நெருங்கார்; பெண்ணைப் பாகமாக உடையவர்; பெரிய மேருமலையை வில்லாக வளைத்துப் பகைவரின் முப்புரங்களை எரித்தார்; அவருடைய ஊர் திருமீயச்சூரே.

குறிப்புரை: கண்டார் நாணும்படியார் – திகம்பர சைனர். ஆடையில்லாதவர். கலிங்கம் . . . கொண்டார் – ஆடை உடைய தேரர். முடை என்று கொண்டு நாற்றம் எனலுமாம். கலிங்கமாகிய பட்டுடையை என்றலே பொருத்தம். உயர்ந்த கொள்கையார் (சைவர்) அவ்விருதிறத்தவர் சொல்லைக் குறுகார் என்க. பெண்தான்பாகம் – மங்கைபங்கு. விண்டார் – பகைவர்.

Oh! It is Civan, the Lord of Thiru-meeyach-choor. In this city, the Digambarar Jains roam all over the places, almost naked embrassing others who witness. The Buddhists wear cloth, which is full of bad smell. These two groups' false propaganda will not be listened to by the devotees of our Lord who are virtuous people with divine knowledge about Civan. Our Lord has embedded His consort on the left half of His body. Our Lord used the huge mountain Meru as His bow and burnt the three flying forts of His antagonists – the asuraas.

2145. வேடமுடையபெருமானுறையுமீயச்சூர்
நாடும்புகழார்புகலிஞானசம்பந்தன்
பாடலாயதமிழீரைந்துமொழிந்துள்கி
ஆடுமடியாரகல்வானுலகமடைவாரே. 11

வேடம் உடைய பெருமான் உறையும் மீயச்சூர்,
நாடும் புகழ் ஆர் புகலி ஞானசம்பந்தன்
பாடல் ஆய தமிழ்ஈர்-ஐந்தும் மொழிந்து, உள்கி,
ஆடும் அடியார், அகல் வான்உலகம் அடைவாரே.

vETam uTaiya perumAn2 uRaiyum mIyaccUr,
nATum pukaz Ar pukali njAn2acampantan2
pATal Aya tamiz Ir-aintum mozintu, uLki,
ATum aTiyAr, akal vAn2 ulakam aTaivArE.

பொருள்: பலப்பல வேடம் உடைய பெருமான்; அவர் உறையும் திருமீயச்சூரை விரும்பி, புகழ் நிறைந்த சீகாழி ஞானசம்பந்தன் பாடிய பாடலாகிய இப்பத்தினையும் பாடி உள்ளத்தில் நினைந்து மகிழ்ந்து ஆடும் அடியார்கள் விரிந்த தேவலோகத்தை அடைவார். இது திண்ணமே.

குறிப்புரை: வேடம் – 'பலபலவேடம்' 'ஒன்றும் பலவும் ஆய வேடத்து ஒருவர்' (தி.1 ப.68 பா.5) (ஞானவேடம்). மீயச்சூர் நாடும் புகழ் ஆர் – திருமீயச்சூரை விரும்பும் புகழ் நிறைந்த (ஞானசம்பந்தர்). 'புகழார்' சிவபிரானாகக் கொண்டு. அவரது புகலி எனலும் பொருந்தும். பாடல் ஆய தமிழ் ஈரைந்தும் என்றது இத்தமிழ்த் திருப்பதிகத்தை உணர்த்திற்று. உள்கி – நினைத்து. அடியவர், உள்ளம், உரை, உடல் மூன்றாலும் முறையே முறையே மொழிந்தும் உள்கியும் ஆடியும் இத்தமிழால் சிவபிரானை வழிபட்டால் வீடு பெறுதல் திண்ணம் என்றவாறு.

Oh! It is Civan, the Lord of Thiru-meeyach-choor. Our Lord stays in the temple in Thiru-meeyach-choor, takes different manifestations whenever needed to suit the occasions. Our saint Thiru-gnana-Sambandar hailing from the famous city of Pukali had a desire to worship the Lord in the temple in Thiru-meeyach-choor. He, therefore, reached this temple and sang these ten Tamil songs praising our Lord therein. Those devotees who memorise all these ten verses and sing and dance before our Lord and worship Him will reach the vast delightful heaven.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

62ஆம் பதிகம் முற்றிற்று
End of 62nd Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 199 *பதிக எண்: 63*

63. திருஅரிசிற்கரைப்புத்தூர் 63. THIRU-P-PUTH-THOOR

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

திருஅரிசிற்கரைப்புத்தூர் என்னும் இத்திருத்தலமானது சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம் ஆகும். கும்பகோணம் – நாச்சியார் கோயில் பேருந்தில் சென்றால் இவ்வூரை அடையலாம். இத்தலம் அழகாபுத்தூர் என வழங்கப்பெறுகிறது. சுவாமி படிக்காசு வைத்த பரமர். தேவி சிவாம்பிகை, சௌந்தர நாயகி அழகம்மை. இந்தவூர் அழகார் புத்தூர் திருப்புத்தூர் என்றும் வழங்கப்படுகிறது. அரிசில் நதி ஒடுகிறது. கோச்செங்கட்சோழன் திருப்பணி செய்த தலமாகும். சொர்ணபுரீஸ்வர சுவாமி மேற்குப் பார்த்த சந்நிதி, சந்நிதித் தெரு அழகாக அமையப் பெற்றுள்ளது. தென்னை மரங்களின் வரிசை கொண்டது.

பதிக வரலாறு

காழி வேந்தர் அரதைப் பெரும்பாழி முதலாகத் திருச்சேறை, திருநாலூர், திருக்குடவாயில், திருநறையூர் என்னும் தலங்களை வழிபட்டு வந்தபோது இத்திருப்புத்தூரை நயந்து இறைஞ்சிப் புனைந்து இறைவன் திருவடிக்குச் சாத்திய நீடுதமிழ்த் தொடையாகும் இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2146. மின்னுஞ்சடைமேலிளவெண்டிங்கள்விளங்கவே
துன்னுங்கடல்நஞ்சிருள்தோய்கண்டர்தொன்மூதூர்
அன்னம்படியும்புனலாரரிசில்லைகொண்டு
பொன்னும்மணியும்பொருதென்கரைமேற்புத்தூரே. 1

மின்னும் சடைமேல் இளவெண்திங்கள் விளங்கவே,
துன்னும் கடல்நஞ்சுஇருள் தோய் கண்டர் தொல்-மூதூர் -
அன்னம் படியும் புனல் ஆர் அரிசில் அலை கொண்டு,
பொன்னும் மணியும் பொரு தென்கரைமேல் புத்தூரே.

min2n2um caTaimEl iLaveN tigkaL viLagkavE,
tun2n2um kaTal nanjcu iruL tOy kaNTar tol-mUtUr--
an2n2am paTiyum pun2al Ar aricil alai koNTu,
pon2n2um maNiyum poru ten2 karaimEl puttUrE.

பொருள்: பொன்னிற சடைமேல் இளமையும் வெண்ணிறமும் உடைய திங்கள் விளங்க, கடலில் துள்ளிய நஞ்சு இருளாகத் தோய்ந்த கண்டத்தை உடையவரின் தொன்மையும் முதுமையும் உடைய ஊர் (எதுவென்னில்), அன்னம் தங்கும் புனல் நிறைந்த அரிசிலாறு தன் அலையால் பொன்னையும் மணியையும் வீசிப் பொரும் தென் கரைமேல் உள்ள புத்தூரே.

குறிப்புரை: சடைமேல் திங்கள் விளங்க (இருள்) தோய்கண்டர் என்று இயைக்க. சடைமேல் வெள்ளொளியும் கழுத்தில் காரிருளும் ஆக உள்ள முரணும் புலப்படக்கூறியவாறு. விளங்கத்துன்னும் என்றியையாது. துன்னுதல் – (நெருங்குதல்) கடலின் வினை. தோய்தல் – இருளின் வினை. திங்கள் விளங்க இருள் தோய்ந்தது. திங்கள் பகலின் விளங்காததன்றோ? இருளின் தோய்வு திங்களின் விளக்கத்திற்கு இன்றியமையாதது. கழுத்திலுள்ள காரிருள் சடைமேலுள்ள திங்கள் விளக்கம் நன்கு தோன்றத் துணையாயிற்று. கடல் நஞ்சு இருள் – பாற்கடலின் எழுந்த நஞ்சினாலான கறுப்பு. அன்னம் – பறவை. ஆர் – நிறைந்த. அரிசில் – அரிசிலாறு. பொரு – மோதுகின்ற. தென்கரைமேல் உள்ள புத்தூர். தொன்மூதூர் புத்தூர் என்க. தொன்மை, முதுமை இரண்டும் ஒருங்குவரல் அறியத்தக்கது. தொன்மை காலத்தைப் பற்றியது. முதுமை அக்காலத்தோடு அதில் நிகழும் வளர்ச்சியையும் பற்றியது. தோன்றி நெடிது நிலை பெற்றுவருவது தொன்மைக்கும் முதுமைக்கும் உரியதாகும். முன்னொருகால் தோன்றியிருந்து அழிந்த பொருளை நெடுங்காலங் கழித்த பின்னர் தொல்பொருள் எனலாம். முதுபொருள் எனலாகாது. காலத்தின் நெடுமையும் இடத்தின் நீட்சியும் தொன்மை எனும் வழக்கிற்கொவ்வும். தொல்லோன், தொலைந்தான், 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று இவ்வுலகத்தியற்கை' (புறம்.86). தொலைவு, தோல்வி, தொல்லை என்பவற்றை ஆராய்க. முன்னொருகால் தோன்றியிருந்த குழந்தையைப் பின்னொரு கால் தொல்குழந்தை எனலாம். முதுகுழந்தை எனலாகாது. கிழவனேல் 'தொல்லோன்' 'முதியோன்' எனலாம். 'பல நீர்மை குன்றிச் செவி . . . நரை தோன்றும் காலம்' (தி.1 ப.59 பா.6) என்றதிற் குறித்த முதுமை. நெடுங்காலமாக உள்ளனவும் காலம் அல்லாதனவும் ஆன பிற பொருள் இடம் முதலியவற்றில் இல்லை. அவற்றில் தொன்மையே உண்டு.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தொல்லோர் ஆவரேயன்றி, முதியோராகார். திருநாவுக்கரசரே தொல்லோருமாவர்; முதியோருமாவர். தொன்மையைப் புராதனம், புராணம் முதலியவற்றாலும் முதுமையை வார்தக்யம், விருத்தாப்பியம் முதலியவற்றாலும் வடமொழியிற் குறிப்பர். புராதனமும் விருத்தாப்பியமும் ஒன்றாகா. 'தொன்மூதாலத்துப் பொதியில்' என்ற குறுந்தொகை 15உம் 'தொன் மூதாலம்' என்ற

நெடுந்தொகை 70, 251உம் இக்கருத்தில் உரைக்கப்பட்டனவோ? அவற்றின் உரைகளைக் காண்க. யாண்டு முதுமை ஆண்டுத் தொன்மை எனலாம். யாண்டுத்தொன்மை ஆண்டு முதுமை எனில் ஒவ்வாது.

இப்பாட்டில் 'தொன்மூதூர் . . . புத்தூரே' என்று முரண்டொடையாய் அமைந்த நயம் அறிந்து மகிழற்பாவது. புதுமையும் தொன்(பழ)மையும் ஒன்றற்கு ஒன்று மறுதலை. இளமையும் முதுமையும் ஒன்றற்கொன்று மறுதலை. தொன்மைக்கு இளமையும் முதுமைக்குப் புதுமையும் மறுதலையாகா. நெடுங்காலமாக உள்ள வெற்றிடத்தைத் தொன்மையது எனலாம். அங்குத் தோன்றி நெடுங்காலமாகவே இருக்கும் ஒன்றனை முதுமையதெனலுமாம். ஆகவே, தொல்மூதூர் என்றதற்கு மிகப் பழைய ஊர் என்று பொருள் கோடல் குற்றமாம்.

Oh! It is Civan, our Lord in Thiru-p-puth-thoor. Our Lord is very conspicuous due to the baby moon retained by Him on His bright dazzling matted hair like lightning. His throat developed into shining dark blue in colour due to the severe poison that came out of the ocean of milk imbibed by Him. His long standing city is Thiru-p-puth-thoor. He is manifest in the temple of this city. Here the river Arisilaru flows along the city. The swans in large numbers reach the river, plunge into the water and enjoy their bath. This river brings gold and gems along with its water and splashes them on the southern banks of the river. This city is known as Thiru-p-puth-thoor.

2147. மேவாஅசுரர்மேவெயில்வேவமலைவில்லால்
ஏவாரெரிவெங்கணையாலெய்தானெய்துமூர்
நாவால்நாதன்நாமமோதிநாள்தோறும்
பூவால்நீராற்பூசுரர்போற்றும்புத்தூரே. 2

மேவா அசுரர் மேவு எயில் வேவ, மலைவில்லால்,
ஏ ஆர் எரி வெங்கணையால் எய்தான் எய்தும் ஊர் -
நாவால் நாதன் நாமம் ஓதி, நாள்தோறும்,
பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே.

mEvA acurar mEvu eyil vEva, malaivillAl,
E Ar eri vegkaNaiyAl, eytAn2 eytum Ur--
nAvAl nAtan2 nAmam Oti, nALtORum,
pUvAl nIrAl pUcurar pORRum puttUrE.

பொருள்: பகைமையுடைய அசுரர்கள் மேவிய திரிபுரம் எரியால் வேவ மேருமலையாகிய வில்லால் ஏவப்படுகின்ற எரியுடைய கொடிய கணையினால் எய்தான் அடையும் ஊர்

எதுவென்னில், நாவால் நாதன் நாமம் ஓதி நாள்தோறும் பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே.

குறிப்புரை: மேவா அசுரர் – விரும்பாத (பகைமையுடைய) திரிபுரத்தசுரர். மேவு எயில் – மேவிய மதில். வேவ – தீய. மலைவில் – மேருவில். ஏ – உணர்ச்சி. கணை எனப்பின் உள்ளதால் அம்பு எனப் பொருள்படாது. எரிகணை – அக்கினியை முனையிலுடையது. வெம்மை – தீ, வெப்பம். எய்தான் – எய்த சிவபிரான். எய்தும் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும். ஊர் – புத்தூர் என்க. நாவால் நாதன் நாமம் ஓதி நாள்தோறும் பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூர் என்றது ஆசிரியர் அங்கு அடைந்த காலத்தில், அவ்வூர்ச் சிவ வேதியர்கள் ஒரு நாளும் தவறாமல் சிவ நாமங்களை நாவாரச் சொல்லி நீரால் ஆட்டிப் பூவால் போற்றி வழிபட்ட உண்மை உணர்த்தியவாறு. 'நல்லவாறே உன்றன் நாமம் நாவில் நவின்று ஏத்த வல்லவாறே வந்து நல்காய்' (தி.1 ப.50 பா.1). 'உன்றன் நாமம் நாளும் நவிற்றுகின்றேன்' (மேற்படி.2).

Oh! It is Civan, our Lord in Thiru-p-puth-thoor. The antagonist, i.e., demigods were living in three flying fortresses and were afflicting the devas. Our Lord handled the big mountain Meru as His bow, fixed the arrow in it and placed the fire at the tip of the arrow and shot at the forts. They were all burnt and completely destroyed. He is manifest in the temple of the city of Thiru-p-puth-thoor. In this city, illustrious saiva Vedic scholars do live in large numbers. They recite the Lord's name many times a day. They carry water and flower to the temple and give ablutions to our Lord and worship Him. This city is called Thiru-p-puth-thoor.

2148. பல்லார்தலைசேர்மாலைசூடிப்பாம்பும்பூண்
டெல்லாவிடமும்வெண்ணீறணிந்தோரேறேறிக்
கல்லார்மங்கைபங்கரேனுங்காணுங்கால்
பொல்லாரல்லரழகியர்புத்தூர்ப்புனிதரே. 3

பல்ஆர்தலை சேர் மாலை சூடி, பாம்பும் பூண்டு,
எல்லாஇடமும் வெண்நீறு அணிந்து, ஓர் ஏறு ஏறி,
கல் ஆர் மங்கை பங்கரேனும், காணுங்கால்,
பொல்லார்அல்லர்; அழகியர் - புத்தூர்ப் புனிதரே.

pal Ar talai cEr mAlai cUTi, pAmpum pUNTu,
ellA iTamum veN nIRu aNintu, Or ERu ERi,
kal Ar magkai pagkarEn2um, kANugkAl,
pollAr allar; azakiyar--puttUrp pun2itarE.

பொருள்: பல்வரிசை கெடாது இருக்கின்ற தலைசேர் மாலை அணிந்து, பாம்பினை அணியாகப் பூண்டு, மெய்யெல்லாம் வெண்ணீறு பூசி, ஒப்பற்ற காளை வாகனத்தின் மேல் ஏறி வரும் மலைமங்கை பாகரேனும் காணுங்கால் பொலிவில்லாதவரல்லர், புத்தூர் புனிதர் அழகியரே.

குறிப்புரை: தலைமாலையைத் தலையிற் சூடியுள்ளார் இறைவர். அத்தலைகளில் பற்களின் வரிசை கெடாது இருக்கின்றன என்பார் 'பல் ஆர்தலை' என்றார். 'தலைமாலை தலைக்கணிந்து தலையாலே பலி தேருந்தலைவன்' எல்லா இடமும் வெண்ணீறு அணிந்து – மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியன் (தி.4 ப.5 பா.1). 'நீற்றினை நிறையப்பூசி' (தி.4 ப.49 பா.2, தி.4 ப.64 பா.8). 'நீரலைத்த திருஉரு' (தி.6 ப.75 பா.3). ஓர் ஏறு ஏறிக்கல்லார் மங்கை பங்கர் – ஒப்பற்ற எருதேறியூர்ந்து அம்பிகையை இடப்பங்கில் உடையவர். ஏறி என்னும் வினையெச்சம். 'பங்கர்' என்னும் வினைக்குறிப்பைக் கொண்டது. பொல்லார் – பொலிவில்லாதவர். அழகியவர். கல்லார் மங்கை – கல் – இமயமலை. செழுங்கல் வேந்தன் செல்வி (தி.1 ப.53 பா.5). இமாசலகுமாரி. மங்கையென்பது இத்தலத்தின் அம்பிகைக்குரிய திருப்பெயராகிய 'அழகம்மை' என்பதைக் குறித்ததுமாம்.

Oh! It is Civan, our Lord in Thiru-p-puth-thoor. Lord Civan wears a garland of human skulls full of teeth. He keeps a number of snakes all over His body. He has smeared His entire body with white holy ashes. He sustains the matchless bull for His ride. He has embedded His consort Paarvathi Devi on His left half of His body. If we make a research about all His avocations like this He is not a vicious Lord. But He is a very great handsome Supreme Being.

2149. வரியேர்வளையாளரிவையஞ்சவருகின்ற
கரியேருரிவைபோர்த்தகடவுள்கருதுமூர்
அரியேர்கழனிப்பழனஞ்சூழ்ந்தங்கழகாய
பொரியேர்புன்குசொரிபூஞ்சோலைப்புத்தூரே. 4

வரி ஏர் வளையாள் அரிவை அஞ்ச, வருகின்ற
கரி ஏர் உரிவை போர்த்த கடவுள் கருதும் ஊர் -
அரி ஏர் கழனிப் பழனம் சூழ்ந்து, அங்குஅழகுஆய
பொரி ஏர் புன்கு சொரி பூஞ்சோலைப் புத்தூரே.

vari Er vaLaiyAL arivai anjca, varukin2Ra,
kari Er urivai pOrtta kaTavuL karutum Ur--
ari Er kazan2ip pazan2am cUzntu, agku azaku Aya
pori Ar pun2ku cori pUnjcOlaip puttUrE.

பொருள்: அழகிய நிறமுடைய வளையல்களை அணிந்த பெண் அஞ்சும்படியாக வருகின்ற யானையின் தோலை உரித்துப் போர்த்த கடவுள் விரும்பும் ஊர் எதுவென்னில், நெல்லரி மிக்க பழனங்கள் சூழ்ந்து, பொரி போன்ற புங்கம் பூக்களைச் சொரிகின்ற அழகாய பூஞ்சோலைகளை உடைய புத்தூரே.

குறிப்புரை: வரி – நிறம். எர் – எழுச்சி(யை உடைய). வளையாள் – வளையலை அணிந்த அம்பிகை. கரி – கரத்தையுடைய யானை. ஏர் – அழகு. உரிவை – தோல். அரி – தவளை, வண்டு. நெல்லரி எனலுமாம். பழனம் – மருதநிலம். புன்கு சொரி பொரி ஏர் பூஞ்சோலை – புன்க மரங்கள் சொரிகின்ற பொரி போன்ற அழகிய பூக்களை உடைய சோலை. சோலை சூழ்ந்த புத்தூர்.

Oh! It is Civan, our Lord of Thiru-p-puth-thoor. Our goddess wearing different coloured, brilliant and elegant bangles, suddenly saw a rutted and ferocious elephant rushing towards her, she got frightened. Our Lord immediately killed it and peeled its hide and used it to cover His body. This Lord had a good thought to select this city for His abode. This city has many gardens of flower trees and plants all over the city. The flowers from dalbergia trees fall on the ground, giving an appearance of baked rice. In this gorgeous city, our Lord is manifested in the temple of Thiru-p-puth-thoor city.

2150. என்போடரவமேனத்தெயிறோடெழிலாமை
மின்போற்புரிநூல்விரவிப்பூண்டமணிமார்பர்
அன்போடுருகுமடியார்க்கன்பரமருமூர்
பொன்போதலர்கோங்கோங்குசோலைபுத்தூரே. 5

என்போடு, அரவம், ஏனத்துஎயிறோடு, எழில் ஆமை,
மின் போல் புரிநூல், விரவிப் பூண்ட மணிமார்பர்;
அன்போடு உருகும் அடியார்க்கு அன்பர்; அமரும் ஊர் -
பொன்போது அலர் கோங்கு ஓங்கு சோலைப் புத்தூரே.

en2pOTu, aravam, En2attu eyiROTu, ezil Amai,
min2 pOl puri nUl, viravip pUNTa manimArpar;
an2pOTu urukum aTiyArkku anpar; amarum Ur;
pon2pOtu alar kOgku Ogku cOlaip puttUrE.

பொருள்: எலும்புடன் பாம்பு, பன்றியின் பல்லுடன் அழகிய ஆமையின் ஓடு, மின்னலைப் போல் புரிநூல், கலந்து பூண்ட அழகிய மார்பினை உடையவர்; அன்புடன் உள்ளம் உருகும் அடியவர்களுக்கு அன்பர்; இவர் விரும்பித் தங்கும் ஊர் எதுவெனில், பொன்னைப் போலப் பூக்கும் கோங்க மரச்சோலைகள் ஓங்கும் புத்தூரே.

குறிப்புரை: என்பு – எலும்பு. அரவம் – பாம்பு. ஏனத்து எயிறு – பன்றிக்கொம்பு. எழில் – அழகு. மின்னைப் போலும் முப்புரி நூல். விரவி – கலந்து. மணி – அழகிய ரத்னமாலை எனலுமாம். சிவபிரானை, அன்போடு உருகும் அடியார்க்கு அன்பர் என்றது. எல்லாருள்ளத்திலும் பதியத்தக்கது. 'தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி' (திருவாசகம் – திருச்சதகம் 73). 'நேசன் காண் நேசர்க்கு' (தி.6 ப.65 பா.2). 'அன்பின் நிலையே அது' (திருவருட்பயன் 8.10). 'அன்பே சிவம்' (திருமந்திரம்). பொன் போது – பொன்னைப்போல அலரும் பூக்கள். அலர்கோங்கு – பூக்கும் கோங்கமரம். கோங்கு ஓங்கு சோலைகளை உடைய புத்தூர்.

Oh! It is Civan, our Lord of Thiru-p-puth-thoor. Our Lord wears on His chest all sorts of bones, snakes, pig teeth, elegant tortoise shell, etc., all those along with the sacred thread dazzling like lightning and all looking like a garland of multistrings. He is cordial with the devotees who, with love and devotion, worship and become tender. He is manifest in the temple in Thiru-p-puth-thoor. The temple is surrounded by gardens full of flower trees and plants such as red cotton etc., all tall trees yielding flowers in golden colour.

2151. வள்ளிமுலைதோய்குமரன்தாதைவான்தோயும்
வெள்ளிமலைபோல்விடையொன்றுடையான்மேவுமூர்
தெள்ளிவருநீரரிசில்தென்பாற்சிறைவண்டும்
புள்ளும்மலிபூம்பொய்கைசூழ்ந்தபுத்தூரே. 6

வள்ளி முலை தோய் குமரன் தாதை, வான் தோயும்
வெள்ளிமலை போல் விடை ஒன்று உடையான், மேவும் ஊர் -
தெள்ளி வருநீர் அரிசில்-தென்பால், சிறைவண்டும்
புள்ளும் மலி பூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே.

vaLLi mulai tOy kumaran2 tAtai, vAn2 tOyum
veLLimalai pOl viTai on2Ru uTaiyAn2, mEvum Ur--
teLLi varu nIr aricil-ten2pAl, ciRaivaNTum
puLLum mali pUm poykai cUznta puttUrE.

பொருள்: வள்ளியைத் தழுவும் குமரனின் தந்தை, வானளாவும் மலை போன்ற பெரிய விடையை வாகனமாக உடையவன் மேவும் ஊர் எதுவென்னில், தெளிந்து வரும் நீரையுடைய அரிசிலாற்றின் தென்பால் சிறகுகளையுடைய வண்டும் புள்ளும் மலிந்த அழகிய பொய்கை சூழ்ந்த புத்தூரே.

குறிப்புரை: வள்ளி முலை தோய் குமரன் – 'குறவி தோள் மணந்த செல்வக் குமரவேள்' (தி.4 ப.60 பா.3). 'வள்ளி வளைத்தோள் முதல்வன்' (தி.6 ப.3 பா.2). 'நம் செந்தில் மேய வள்ளி மணாளற்குத் தாதை' (தி.6 ப.23 பா.4). வான் – விண்ணிடம். வான்றோயும் மலை. விடை – எருது. வெண்ணிறத்தால் ஒப்புணர்த்த வெள்ளிமலை எனப்பட்டது. தெள்ளி – தெளிந்து. தென்கரை (பா. 1). 'வண்டும் புள்ளும் மலிபூம் பொய்கை சூழ்ந்த புத்தூர்' (பா. 6) என்று வளங்கூறிய சிறப்புணர்க.

Oh! It is Civa, Lord of Thiru-p-puth-thoor. Our Lord is the Creator, the Father of Lord Murugan who is the consort of goddess Valli. He owns the white bull which dazzles like the mount Kailash glittering like pure white silver. He has selected the city of Thiru-p-puth-thoor as His abode. This city is situated on the southern bank of the river Arisilaaru with clear crystal like waters. All around the city of Thiru-p-puth-thoor, the exquisite tanks full of water are many. In these ponds beetles and many birds flank together and enjoy themselves in these ponds.

2152. நிலந்தண்ணீரோடனல்கால்விசும்பின்நீர்மையான்
சிலந்திசெங்கட்சோழனாகச்செய்தானூர்
அலந்தஅடியானற்றைக்கன்றோர்காசெய்திப்
புலர்ந்தகாலைமாலைபோற்றும்புத்தூரே. 7

நிலம் தண்ணீரோடு அனல் கால் விசும்பின் நீர்மையான்,
சிலந்தி செங்கண்சோழன்ஆகச் செய்தான், ஊர் -
அலந்த அடியான் அற்றைக்கு அன்று ஓர் காசு எய்தி,
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே.

nilam taNNIrOTu an2al kAl vicumpin2 nIrmaiyAn2,
cilanti cegkaN cOzan2 Akac ceytAn2, Ur--
alanta aTiyAn2 aRRaikku an2Ru Or kAcu eyti,
pularnta kAlai mAlai pORRum puttUrE.

பொருள்: நிலம், தண்ணீர், அனல், காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் காரண பூதங்களின் இயல்புடையான்; சிலந்தியைச் சோழன் கோச்செங்கணானாகப் பிறக்கச் செய்தவனின் ஊர் எதுவெனில், சிவபூசைக்குப் பொருள் தட்டுப்பாடு வரத் துயரெய்திய அடியார் நாள்தோறும் ஒரு காசு பெற்றுப் பொழுது புலர்ந்த காலையிலும் மாலையிலும் வழிபாடு செய்யும் புத்தூரே.

குறிப்புரை: நிலம், தண் (குளிர்ந்த) நீர். அனல் (–தீ). கால் (–காற்று) விசும்பு (–ஆகாயம்) என்னும் ஐம்பெருங் காரண பூதங்களின் இயல்பை உடையவன். நீர்மை – இயல்பு. சிலந்திப் புச்சி. சிவபூஜைப் பயனாகக் கோச்செங்கட் சோழநாயனாராகிய வரலாறு உணர்க. அலந்த – சிவபூஜை முட்டுப்படத் துயருற்ற. அன்றைக்கு – அன்று. அந்நாட்கு – அந்நாள். அன்றாடம் ஒருகாசு எய்தி. பொழுது புலர்ந்த காலையிலும் மாலையிலும் போற்றும் புத்தூர். செய்தான் ஊர் புத்தூர் என்க. 'அடியாள்' என்றது 'செருவில்லி புத்தூர் மன்னுஞ் சிவமறை யோராகிய . . . நிகரில்லா(ப்) புகழ் நீடு புகழ்த்துணையார்' (பெரிய புராணம் மேற்படி நாயனார் 1).

Oh! It is Civan, our Lord of Thiru-p-puth-thoor. Our Lord is the embodiment of the five elements and has all the natural properties of the earth, air, fire, water and sky. Once a spider was doing ablation to Lord Civa in His Sivalinga form and covered the Lingam with string from its mouth. An elephant came and destroyed the string of the spider. The spider pushed itself into the trunk of the elephant and killed it. The elephant also killed the spider. The spider in the next birth was born as Cholan King named 'Ko-ch-chengat-cholan'. Only our Lord blessed him to take his rebirth as chola king. This graceful Lord is manifest here. A Brahmin Vedic scholar named as 'Pugazhth-thunaiyaar' once became a destitute. However, he collected one penny per day and never failed to go to the temple, both in the morning and in the evening. There he hailed and worshipped our Lord in the temple. This sacred city is Thiru-p-puth-thoor.

2153. இத்தேரேகஇம்மலைபேர்ப்பனென்றேந்தும்
பத்தோர்வாயான்வரைக்கீழலறப்பாதந்தான்
வைத்தாரருள்செய்வரதன்மருவுமூரான
புத்தூர்காணப்புகுவார்வினைகள்போகுமே. 8

"இத் தேர் ஏக இம் மலை பேர்ப்பன்" என்று ஏந்தும்
பத்துஓர்வாயான் வரைக்கீழ் அலற, பாதம்தான்
வைத்து ஆர் அருள் செய் வரதன் மருவும்(ம்) ஊர்ஆன
புத்தூர் காணப் புகுவார் வினைகள் போகுமே.

"it tEr Eka, im malai pErppan2" en2Ru Entum
pattu OrvAyAn2 varaikklz alaRa, pAtamtAn2
vaittu, Ar aruL cey varatan2 maruvum(m) Ur An2a
puttUr kANap pukuvAr vin2aikaL pOkumE.

பொருள்: என்னுடைய தேர் செல்ல இடையூறாக உள்ள இந்த மலையைப் பெயர்ப்பான் என்று அதனை ஏந்தும் இராவணன் தன் பத்து வாயாலும் அலறப் பாதத்தை அழுத்தி வைத்தான்; பின் ஆரருள் செய்தான். அவ்வரதன் எழுந்தருளியுள்ள ஊரான அரிசிற்கரைப் புத்தூரரைக் காண, தரிசனம் செய்ய நுழையும் அடியார்களுடைய வினைகள் நீங்கிப் போகும்.

குறிப்புரை: தேர் ஏக – தேர் தடையின்றிச் செல்லற்பொருட்டு. இம்மலை – இக்கயிலை மலையை. பேர்ப்பன் – பெயர்த்திடுவேன். ஓர் பத்து வாயான் – ஒரு பத்து வாயுடையவன். அக்கயிலை மலையின்கீழ். பத்து வாயாலும் அலறினான். அதனால் இரங்கி முன் வைத்த பாதம் வாங்கியருளினான். வரதன் – வரத்தைக் கொடுப்பவன். நாளும் வாளும் பெருந்தேரும் கொடுத்த வரம் ஆங்காங்குணர்க. மருவும் ஊர் ஆனபுத்தூர் – எழுந்தருளிய நகராகிய புத்தூர். புத்தூர் காணப் புகுவார் வினை – தல தரிசனம் செய்ய நுழையும் அடியார்களுடைய வினைகள் (ஆகாமியம்).

Oh! It is Civan, our Lord of Thiru-p-puth-thoor. The king of Sri Lanka, Raavanan once asserted that he will raise the mount Himalayas of our Lord and keep it aside and remove the hindrance for his chariot to pass through. He tried, failed and got crushed under the mountain when our Lord pressed with His toe the top of the mountain. He got vexed and distressed. This Lord is manifest in Thiru-p-puth-thoor. Those devotees who visit the temple to worship our Lord will easily get rid of their sufferings.

2154. முள்ளார்கமலத்தயன்மால்முடியோடடிதேட
ஒள்ளாரெரியாயுணர்தற்கரியானூர்போலும்
கள்ளார்நெய்தல்கழுநீராம்பல்கமலங்கள்
புள்ளார்பொய்கைப்பூப்பலதோன்றும்புத்தூரே. 9

முள் ஆர் கமலத்து அயன், மால், முடியோடு அடி தேட,
ஒள்ஆர்எரிஆய் உணர்தற்கு அரியான் ஊர்போலும் -
கள் ஆர் நெய்தல், கழுநீர், ஆம்பல், கமலங்கள்,
புள் ஆர் பொய்கைப் பூப்பல தோன்றும் புத்தூரே.

muL Ar kamalattu ayan2, mAl, muTiyOTu aTi tETa,
oL Ar eri Ay uNartaRku ariyAn2 UrpOlum--
kaL Ar neytal, kazunIr, Ampal, kamalagkaL,
puL Ar poykaip pUppala tOn2Rum puttUrE.

பொருள்: முள்கள் நிறைந்த தண்டில் பூத்த தாமரை மலரில் வாழும் அயன், திருமால் இருவரும் முடியுடன் அடி தேட, ஒளியுடைய தீப்பிழம்பாய் எழுந்து, அவர்கள் உணர்தற்கு அரியனாக நின்றவன் ஊர் எதுவெனில், தேன் நிறைந்த நெய்தல் பூ, கழுநீர்ப்பூ, ஆம்பல்பூ, தாமரைப்பூ ஆகிய நீர்ப்பூக்களும் நீர்ப்பறவைகளும் நிறைந்த பொய்கைகள் பல தோன்றும் புத்தூரே.

குறிப்புரை: முள் ஆர் கமலத்து – ('முட்டாட்டாமரை') முட்கள் நிறைந்த தாமரையில் வாழும். அயன்மால் முடிஅடி; முறை நிரல் நிறை. ஒள் – ஒண்மை. ஒளி, எரி – தீப்பிழம்பு. அயன்மால் உணர்தற்கு அரியான். உணர்தற்கே அரியவன் என்றால் ஓதற்கும் எளியன் அல்லன் என்பது சொல்லல் வேண்டா. 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்' (பெரிய புராணம், மங்கலம்). 'அன்பராகி மற்றருந்தவ முயல்வார் அயனுமாலும் மற்றழலுருமெழுகாம் என்பராய் நினைவார்' (திருவாசகம் செத்திலாப்பத்து 4). கள் – தேன். நெய்தல், ஆம்பல். கழுநீர், கமலங்கள், புள் – பறவைகள். பூக்களும் புட்களும் பொருந்திய பொய்கை (குளம்).

Oh! It is Civan, our Lord of Thiru-p-puth-thoor. Our demigod, the four faced, Naanmugan - Brahma who rests in the lotus flower supported by the thorny stalk in the pond - along with Thirumaal, went out to search and reach the head and feet of Lord Civa. They searched for many years and both failed to reach the head and feet and came back to their original places, getting exhausted. At this stage, our Lord Civa stood before both as a big column of fire touching the sky and the underworld with the

brightest light and they got bewildered. This Lord Civa is manifest in the city of Thiru-p-puth-thoor. The city is surrounded by maritime purple flower trees and plants full of honey. There are tanks full of copious water. There are water lily and lotus flowers in plenty and the birds flock in large numbers. Such is the beauty and prosperity of the city.

2155. கையார்சோறுகவர்குண்டர்களுந்துவருண்ட
மெய்யார்போர்வைமண்டையர்சொல்லுமெய்யல்ல
பொய்யாமொழியாலந்தணர்போற்றும்புத்தூரில்
ஐயாஎன்பார்க்கையுறவின்றியழகாமே. 10

கை ஆர் சோறு கவர் குண்டர்களும், துவருண்ட
மெய் ஆர் போர்வை மண்டையர், சொல்லு மெய் அல்ல;
"பொய்யா மொழியால் அந்தணர் போற்றும் புத்தூரில்
ஐயா!" என்பார்க்கு, ஐயுறவு இன்றி அழகு ஆமே.

kai Ar cORu kavar kuNTarkaLum, tuvaruNTa
mey Ar pOrvai maNTaiyar, collu mey alla;
"poyyA moziyAl antaNar pORRum puttUril
aiyA!" en2pArkku, aiyuRavu in2Ri azaku AmE.

பொருள்: கையில் நிறைந்த சோற்றினைக் கவர்ந்து உண்ணும் அமண் குண்டர்கள், துவருண்ட ஆடையால் உடலைப் போர்த்த மண்டையர் (தேரர்) ஆகியோர் கூறுவன மெய்யல; பொய், பொய்யா மொழியாகிய வேதத்தினால் அந்தணர் போற்றும் புத்தூரில் ஐயா என்பாருக்குச் சந்தேகமின்றிச் சிவப்பொலிவு உண்டாகும்.

குறிப்புரை: கைஆர் சோறு – கையில் நிறைந்த சோறு. 'கையிலுண்ணுங்கையர்' (தி.3 ப.53 பா.1). மெய் ஆர் போர்வை – உடம்பைப் பொருந்தப் போர்த்த போர்வை. துவர் உண்ட போர்வை. மண்டையர் – பனங்குடையில் உண்ணுமவர். சொல்லு – சொற்கள். மெய்யல்ல – பொய். பொய்யாமொழியால் – மெய்யாகிய வேதவாக்குகளால். ஐயா:– 'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' (திருவாசகம் சிவபுராணம் அடி 35). ஐயுறவு – சந்தேகம். அழகு – சிவப்பொலிவு. இம்மை மறுமைக்கான அழகுகளும் கொள்ளலாம். சொல்+து+சோறு. சொல் – நெல். 'சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல் மெல்லவே கரு விருந்தீன்று மேலவார் செல்வமே போல் தலைநிறுவித் தேர்ந்த நூற் கல்வி சேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே' என்னும் (சிந்தாமணி 53) செய்யுளில், சொல் என்றது நெல் என்று

நச்சினார்க்கினியர் எழுதிய பொருளையும் அறிக. சோறு என்பதன் பொருள் சொல்லால் ஆனது என்பதாம்.

Oh! It is Civan, our Lord of Thiru-p-puth-thoor. In this city, the stout Jains collect alms in their hands and eat them. The Buddhists cover their body with ochre coloured cloth and collect food and eat. They preach all false words that have no meaning. The devotee Brahmin scholars pray in the temple and recite divine songs. Those who say "Oh our Lord!" will live without any fear in this city with the wholehearted blessings of Lord Civa.

2156. நறவங்கமழ்பூங்காழிஞானசம்பந்தன்
பொறிகொளரவம்பூண்டானாண்டபுத்தூர்மேல்
செறிவண்டமிழ்செய்மாலைசெப்பவல்லார்கள்
அறவன்கழல்சேர்ந்தன்போடின்பமடைவாரே. **11**

நறவம் கமழ் பூங் காழி ஞானசம்பந்தன்,
பொறி கொள் அரவம் பூண்டான் ஆண்ட புத்தூர்மேல்,
செறி வண்தமிழ் செய் மாலை செப்ப வல்லார்கள்,
அறவன்கழல் சேர்ந்து, அன்போடு இன்பம் அடைவாரே.

naRavam kamaz pUg kAzi njAn2acampantan2,
poRi koL aravam pUNTAn2 ANTa puttUrmEl,
ceRi vaNtamiz cey mAlai ceppa vallArkaL,
aRavan2 kazal cErntu, an2poTu in2pam aTaivArE.

பொருள்: தேன்மணம் கமழும் சீகாழி ஞானசம்பந்தன் பாம்பினைப் பூண்ட சிவபிரான் ஆண்ட புத்தூரின் மேல் செல்லும் பொருளும் செறிந்த வளமான தமிழாற்செய்த மாலையைச் சொல்ல வல்லார்கள், அறவனாகிய சிவனின் திருவடி சேர்ந்து அன்புடன் இன்பம் அடைவார்கள்.

குறிப்புரை: நறவம் – தேன், மணம். பொறி – புள்ளிகள். பூண்டான் – பூண்ட சிவபிரான். செறி – செல்லும் பொருளும் செறிந்த. வண்தமிழ் செய்மாலை – வளவிய தமிழாற் செய்த இப்பாமாலையை. அறவன் – 'அறவாழியந்தணன்' 'அறத்தானை அறவோனை' (தி.6 ப.80 பா.7). 'தருமா போற்றி' (தி.6 ப.5 பா.10). 'தயாமூலதன்மம் என்னும் தத்துவத்தின் வழி நின்று . . . நலம் கொடுக்கும் நம்பி', 'தயா மூலதன்மவழி எனக்கு நல்கி' (தி.6 ப.20 பா.6). அன்போடு இன்பம் – அன்பும் இன்பும். 'அன்பெனும் பாசம்

வைத்தார்' (தி.4 ப.30 பா.3). 'அன்பலால் பொருளும் இல்லை' (தி.4 ப.40 பா.6). 'அன்பினில் விளைந்த ஆரமுது' 'அன்பினால் இன்பம் ஆர்வர்' 'இன்ப அன்பு'.

Oh! It is Civan, our Lord of Thiru-p-puth-thoor. Our saint Thiru-gnana-Sambandar hails from the most beautiful city where the sweet smell of honey spreads all over the area. He reached the Lord in the temple at Thiru-p-puth-thoor city where He wears the dotted snake as His garland on His chest. He worshipped the Lord and recited in rich Tamil language songs praising the Lord and His fame. This garland of Tamil songs repeated by scholars from their memory, will enable them to reach the holy feet of Lord Civa who is the embodiment of virtues. They will be graced by the Lord with love and happiness.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

63ஆம் பதிகம் முற்றிற்று
End of 63rd Hymn



திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 200 *பதிக எண்: 64*

64. திருமுதுகுன்றம்

64. THIRU-MUTHU-KUNDRAM

பண் : சீகாமரம் *Pann: Seekamaram*

திருத்தல வரலாறு

திருமுதுகுன்றம் என்னும் இத்திருத்தலமானது சிவபெருமானால் முதலில் படைக்கப்பெற்றது ஆதலின் இப்பெயர் எய்திற்று. இது விருத்தாசலம் என்றும் வழங்கப்பெறுகின்றது. இத்திருத்தலம் விழுப்புரம் – திருச்சிராப்பள்ளி தொடர் வண்டிக் குறுக்கு வழியில் விருத்தாசலம் தொடர்வண்டி நிலையத்திற்குச் சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. சிதம்பரத்திலிருந்தும் சேலத்திலிருந்தும் விருத்தாசலம் செல்லப் பேருந்துகள் உள்ளன. இது நடுநாட்டுத் தலங்களுள் ஒன்று ஆகும். இறைவர் திருப்பெயர் பழமலைநாதர். இறைவி திருப்பெயர் பெரிய நாயகி. தலவிருட்சம் வன்னி. தீர்த்தம் மணிமுத்தாறு. திருஞானசம்பந்தப் பெருந்தகையார் இத்தலத்தை அடையும்போதும், வலஞ் செய்தபோதும், வழிபட்ட போதும் தனித்தனிப் பதிகங்கள் பாடியருளிய பெருமையை உடையது. இங்கு இறப்பவர்களுக்கெல்லாம் உமாதேவியார் தமது ஆடையால் வீசி இளைப்பாற்ற, சிவபெருமான் அவர்களுக்கு ஐந்தெழுத்தை உபதேசித்துத் தமது உருவமாக்கும் திருப்பதி ஆதலால் இது காசியினும் மேம்பட்டதாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைப் பாடி பன்னீராயிரம் பொன்பெற்று அவைகளை மணிமுத்தாறு நதியில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயத்தில் பெற்றார். இதற்குத் திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகங்கள் ஏழு, திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் ஒன்று, சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய பதிகங்கள் மூன்று ஆக பதினொரு பதிகங்கள் இருக்கின்றன. துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், பழமலை அந்தாதி, பிட்சாட நல்மணிமாலை, கொச்சகக்கலிப்பா, பெரிய நாயகியம்மை நெடுங்கழி நெடிலாசிரிய விருத்தம், பெரிய நாயகியம்மை கட்டளைக் கலித்துறை என்னும் நூல்களை இயற்றியுள்ளார். அவைகளெல்லாம் அச்சில் வெளிவந்துள்ள தலபுராணம் ஞானக்கூத்தச் சிவப்பிரகாசரால் எழுதப்பெற்றது அச்சில் வெளிவந்துள்ளது.

பதிக வரலாறு

வெங்குரு வேந்தர், செங்கண் விடையவர் திருமுதுகுன்றினைத் தொழுது சென்று அணைந்து, 'முதுகுன்றடைவோம்' என்று சொன்மலர்மாலை இசையொடும் புனைந்து ஏத்தி, அடைந்து வலங்கொண்டு, தமிழ்ச்சொல்லிருக்குக் குறள் மொழிந்து, திருக்கோயிலின் உள்புகுந்து, கொன்றையார் சேவடியில் தாழ்ந்து எழுந்து, தமிழ்த்தொடை சாத்தியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2157. தேவாசிறியோம்பிழையைப்பொறுப்பாய்பெரியோனே
ஆவாவென்றங்கடியார்தங்கட்கருள்செய்வாய்
ஓவாவுவரிகொள்ளவுயர்ந்தாயென்றேத்தி
மூவாமுனிவர்வணங்குங்கோயில்முதுகுன்றே. 1

'தேவா! சிறியோம் பிழையைப் பொறுப்பாய்! பெரியோனே!
"ஆவா!" என்று, அங்கு அடியார் தங்கட்கு அருள் செய்வாய்!
ஓவா உவரி கொள்ள உயர்ந்தாய்!' என்று ஏத்தி,
மூவா முனிவர் வணங்கும் கோயில் - முதுகுன்றே.

`tEvA! ciRiyOm pizaiyaip poRuppAy! periyOn2E!
"AvA!" en2Ru, agku aTiyAr tagkaTku aruL ceyvAy!
OvA uvari koLLa uyarntAy!' en2Ru Etti,
mUvA mun2ivar vaNagkum kOyil--mutukun2RE.

பொருள்: தேவா! பெரியோனே! சிறியோமாகிய எங்கள் பிழையைப் பொறுத்து அருள்வாய்! அடியார்களுக்கு ஆ! ஆ!! என்று அங்கு அருள்செய்வாய்! ஓவா உவரி கொள்ள உயர்ந்தாய்! என்று ஏத்தி முனிவர்கள் வணங்கம் முதுகுன்றே.

குறிப்புரை: தேவா! பெரியோனே! சிறியோம் பிழையைப் பொறுப்பாய்! அடியார் தங்கட்கு ஆ! ஆ!! என்று அங்கு அருள் செய்வாய்! ஓவா உவரி கொள்ள உயர்ந்தாய்! என்று ஏத்தி வணங்கும் கோயில் முதுகுன்றே என முடிக்க. தேவா – சிவமாந்தன்மைப் பெருவாழ்வினனே. 'அயன் திருமால் செல்வமும் ஒன்றோ என்னைத் தேவு செய்யும்' எனக் கொண்டு கூட்டி, தேவு என்பதற்கு ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள், 'சிவமாந்தன்மைப் பெருவாழ்வு' எனப் பொருள் உரைத்தருளியதறிக. சிறியோம் என்று மூவா முனிவர்கள் சொல்லிக் கொள்வாராயின், அடியோம் அதனினும் இழிந்த சொல் பெற வழியில்லை. 'நின்னையான் அகன்று ஆற்றுவனோ' (திருக்கோவையார் 12) என்புழி. அதன் உரையாசிரியர் கூறிய கருத்து ஈண்டுச் சிறுமை பெருமைகட்குங் கொள்க. ஆவா என்று – 'ஆவா என அரக்கன் அலற

அடர்த்திட்டுத் தேவா என அருளார் செல்வம் கொடுத்திட்ட கோவே' (தி. 1 ப. 89 பா. 8). 'ஆவா' என்றதன்பின், 'என்' எனும் பகுதியடியாத் தோன்றிய வினைச்சொல் வருதல் உண்டு. 'ஆவா என்று எனக்கு அருள்வாய்' என்ற பொருளது கொம்பொடிந்து பிழைத்தது (திருவாசகம் போற்றித் திருவகவல் 99) 'ஆஆ செத்தேன்' (மேற்படி 3:165) என்பது போலும் இடத்தில் அவ்வினைச் சொல் தொடர்தல் வேண்டா. 'ஆவா என்ன ஆசைப்பட்டேன்' (திருவாசகம் 420). 'ஆவா என்ற நீர்மையெல்லாம்' (மேற்படி 605). 'ஆவ என்றருளி' (மேற்படி 407). ஓவா உவரி – ஒழியாத கடல். தலவரலாறு காண்க. மூவா – மூத்தலில்லாத. (அழியாத என்றவாறு). 'மூவாமுதலா' என்றதறிக. 'கோயில் முதுகுன்று' என்றதால், மலையே சிவபிரான் என்றுணர்க. திருவண்ணாமலையே சிவபிரானாகும். அச்சிறப்பு இத்தலத்துக்கும் உண்டு.

Oh! It is Civan, our Lord in Thiru-muthu-kundram. The hermits here have no birth and death in their life, prostrate before our Lord and worship Him with words like - Oh our Supreme Lord! Oh Chief of Devas! We are your humble servitors! Kindly pardon us for our mistakes and shower your grace on us. When the asura devotees cried "Aaa! Aaa!" and begged pardon; you excused them and graced them by giving boons. Once a deluge, seemed to devour the entire world. You then behaved as the top most Supreme Being and floated in the ocean by sitting in a boat". With such prayerful utterances the hermits prostrate at the holy feet of our Lord manifested in the temple of Thiru-muthu-kundram.

2158. எந்தையிவனென்றிரவிமுதலாஇறைஞ்சுவார்
சிந்தையுள்ளேகோயிலாகத்திகழ்வானை
மந்தியேறியினமாமலர்கள்பலகொண்டு
முந்தித்தொழுதுவணங்குங்கோயில்முதுகுன்றே. 2

"எந்தை இவன்" என்று இரவி முதலா இறைஞ்சுவார்
சிந்தை உள்ளே கோயில்ஆகத் திகழ்வானை,
மந்தி ஏறி, இனம் ஆம் மலர்கள்பல கொண்டு,
முந்தித் தொழுது வணங்கும் கோயில் - முதுகுன்றே.

"entai ivan2" en2Ru iravi mutalA iRainjcuvAr
cintaiyuLLE kOyil Akat tikazvAn2ai,
manti ERi, in2am Am malarkaL pala koNTu,
muntit tozutu vaNagkum kOyil--mutukun2RE.

பொருள்: என்னுடைய தந்தை இவன் என்று சூரியன் முதலாய தேவர்கள் வணங்குவார்கள். அவர்களுடைய உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு விளங்குவோனை, குரங்கு மரத்தின் மேலேறி பலரினமலர் கொண்டு வந்து மக்கள் தொழுவதற்கு முன் வழிபடும் முதுகுன்றே.

குறிப்புரை: எந்தை – என் அப்பன். தந்தை – தன் அப்பன். நுந்தை – நுன் அப்பன் என்பது பழைய வழக்கு. இவன் எந்தை – இவனே (சிவபிரானே) என் அப்பன், என்று இறைஞ்சுவார் சிந்தையுள்ளே திகழ்வானை மந்தி மலர் கொண்டு வணங்குங்கோயில் என்க. கிரியா விதிப்படி சிவபூஜை செய்வோர் முதலில் சூரிய பூஜை செய்வாராதலின் 'இரவி முதலா இறைஞ்சுவார்' என்றார். இறைஞ்சுவார் – வினையாலணையும் பெயர். இரவி – சூரியன். திகழ்வான் – ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி. மந்தி – குரங்கு. ஈண்டு இனத்தைக் குறித்தது. குரங்குகளும் மலரினம் பல கொண்டு மக்கள் தொழுவதற்கு முந்தி வழிபடும் சிறப்பு உணர்த்தப்பட்டது. இது சிவபூஜை செய்யாத மாக்களை நாணுறுத்தும்.

All the Civan devotees before commencing their daily early morning religious austerities hail "Oh Father! You are my Lord". Then they do the rites first commencing the worship to sun god. Then they further proceed to do the rituals called "Siva Pooja", with sincere devotion when our Lord Civan dwells in the temple of their minds. In the Thiru-muthu-kundram city, the monkeys unite in large numbers and climb flora trees and plants and collect different sweet smelling flowers. Then they go to the temple and strew the flowers over the holy feet of our Lord with all sincerity. Then they pay homage to our Lord before the arrival of other people at the temple. This sacred temple is located in Thiru-muthu-kundram.

2159. நீடுமலரும்புனலுங்கொண்டுநிரந்தரம்
தேடுமடியார்சிந்தையுள்ளேதிகழ்வானைப்
பாடுங்குயிலினயலேகிள்ளைபயின்றேத்த
மூடுஞ்சோலைமுகில்தோய்கோயில்முதுகுன்றே. 3

நீடும் அலரும் புனலும் கொண்டு, நிரந்தரம்,
தேடும் அடியார் சிந்தையுள்ளே திகழ்வானை,
பாடும் குயிலின் அயலே கிள்ளை பயின்று ஏத்த,
மூடும் சோலை முகில் தோய் கோயில் - முதுகுன்றே.

nITum alarum pun2alum koNTu, nirantaram,
tETum aTiyAr cintaiyuLLE tikazvAn2ai,
pATum kuyilin2 ayalE kiLLai payin2Ru Etta,
mUTum cOlai mukil tOy kOyil--mutukun2RE.

பொருள்: மலரும் பூவும் மிகுதியாகக் கொண்டு எப்பொழுதும் வழிபடும் அடியவர்களின் சிந்தையுள் விளங்குபவனை, பாடுகின்ற குயிலின் அருகில் கிளி நாமத்தைப் பேசிப் பயின்று ஏத்த, தோயும் முகிலும் சோலையும் மூடியிருக்கும் திருக்கோயில் முதுகுன்றே.

குறிப்புரை: நீடு – மிகுதி. நிரந்தரம் – எப்பொழுதும். தேடும் – ஆராயும். 'தேடிக்கண்டு கொண்டேன்' (தி.4 ப.20 பா.10). 'திருமாலொடு நான்முகனும் தேடித்தேடொணாத் தேவனை என்னுள்ளேத் தேடிக் கண்டு கொண்டேன்' (தி.4 ப.5 பா.12). 'ஓட்டற்று நின்ற உணர்வு பதி முட்டித் தேட்டற்று நின்ற இடம் சிவமாம்' – நாட்டற்று நாடும் பொருளனைத்தும் நானாவிதமாகத் தேடுமிடமன்று சிவம் (திருக்களிற்றுப்படியார் 5.29). கிள்ளை – கிளி. பயின்று – பழகி. மூடும் . . . குன்று – மலையைச் சோலையும் முகிலும் மூடியிருக்கின்றன. மூடுதல் – பொதுவினை. தோய்தல் – முகிலின் (சிறப்பு) வினை.

Oh! It is Civan, Lord of Thiru-muthu-kundram. The devotees in this city in large numbers pluck and gather a very large quantity of flowers in different colours and smell from flowering trees and plants. They also collect pure water. Then they observe the daily austerities without any fail and think in their mind only of our Lord. Therefore the minds of these devotees become His temple. The cuckoos and the parrots sing in praise of our Lord. The forest area is full of birds in plenty. The dark clouds move over these forests and mountains and cover them completely. This sacred city is Thiru-muthu-kundram.

2160. தெரிந்தஅடியார்சிவனேயென்றுதிசைதோறுங்
குருந்தமலருங்குரவினலருங்கொண்டேந்தி
இருந்துநின்றுமிரவும்பகலுமேத்துஞ்சீர்
முரிந்துமேகந்தவழுஞ்சோலைமுதுகுன்றே. 4

தெரிந்த அடியார் "சிவனே!" என்று திசைதோறும்,
குருந்தமலரும் குரவின் அலரும் கொண்டு ஏந்தி,
இருந்தும் நின்றும், இரவும் பகலும், ஏத்தும் சீர்,
முரிந்து மேகம் தவழும் சோலை - முதுகுன்றே.

terinta aTiyAr, "civan2E!" en2Ru ticaitORum,
kuruntamalarum kuravin2 alarum koNTu Enti,
iruntum nin2Rum, iravum pakalum, Ettum cIr,
murintu mEkam tavazum cOlai-mutukun2RE.

பொருள்: ஆராய்ந்து தெளிந்த அடியவர்கள் 'சிவனே' என்று இடந்தோறும் குருந்த மலரும் குராமரத்தின் மலரும் கொண்டு கையிலேந்தி, அமர்ந்திருந்தும் நின்றிருந்தும் இரவும் பகலும் ஏத்தும் பெருமையுடையது எதுவெனில், மேகம் முரிந்து தவழும் சோலைகளை உடையது முதுகுன்றே.

குறிப்புரை: தெரிந்த – சிவபிரானே வழிபாட்டிற்கரியவனாகி வீடு பேறளிக்க வல்லவன் என்று ஆராய்ந்து அறிந்த. குருந்தம் என்னும் மரங்களின் மலர்களைக் கொண்டு நின்றும் இருந்தும் இரவும் பகலும் ஏத்தி வழிபடும் சீரையுடைய முதுகுன்று. முரிந்து – மேகங்கள் வளைந்து. மேகம் முரிந்து தவழும் சோலையையுடைய முதுகுன்று.

Oh! It is Civan our Lord in Thiru-muthu-kundram. The scholars in this city make a research about divine knowledge and come to a conclusion that our Lord Civan is the only Supreme Being for reverence and for obtaining heaven for devotees like us. These great, upright people collect sweet smelling flowers from Kuruntha tree, the foliage too is like sweet smelling flowers and bottle flowers and offer prayers both by sitting and standing day and night to our Lord with sincere devotion in the sacred temple in Thiru-muthu-kundram. The dark clouds bend and break and creep and crawl over the thick forest trees in this Thiru-muthu-kundram city. In such an attractive city our Lord is manifest in the temple located here.

2161. வைத்தநிதியேமணியேயென்றுவருந்தித்தம்
சித்தநைந்துசிவனேயென்பார்சிந்தையார்
கொத்தார்சந்துங்குரவும்வாரிக்கொணர்ந்துந்தும்
முத்தாறுடையமுதல்வர்கோயில்முதுகுன்றே. 5

"வைத்தநிதியே! மணியே!" என்று வருந்தித் தம்
சித்தம் நைந்து "சிவனே!" என்பார் சிந்தையார்;
கொத்து ஆர் சந்தும், குரவும், வாரிக் கொணர்ந்து உந்தும்
முத்தாறு உடைய முதல்வர்; கோயில் - முதுகுன்றே.

"vaitta nitiyE! maNiyE!" en2Ru varuntit tam
cittam naintu, "civan2!" en2pAr cintaiyAr;
kottu Ar cantum, kuravum, vArik koNarntu untum
muttARu uTaiya mutalvar; kOyil--mutukun2RE.

பொருள்: சேம வைப்பாக வைக்கப் பெற்ற நிதியமே! மணியே! என்று கூவி, வழிபடாது வீணே கழித்த காலத்தை நினைந்து வருந்தி, உள்ளம் கசிந்து 'சிவனே' என்பவருடைய சிந்தையிலிருப்பவர், சந்தனமரக் கொத்துக்களையும் குரவக் கொத்துக்களையும் வாரிக் கொணர்ந்து உந்தித்தள்ளும் மணிமுத்தாறுடைய முதல்வர் வீற்றிருக்கும் கோயில் முதுகுன்றே.

குறிப்புரை: வைத்த நிதி – சேமவைப்பாக வைக்கப்பெற்ற செல்வம். 'வைச்ச பொருள் நமக்கு ஆகும் என்று எண்ணி நமசிவாய அச்சம் ஒழிந்தேன்' (தி.1 ப.80 பா.4). 'வைத்த பொருள் நமக்கு ஆம் என்று சொல்லி மனத்து அடைத்துச் சித்தம் ஒருக்கிச் சிவாய நம என்றிருக்கின் . . . அத்தன் அருள் பெறலாம் . . . நெஞ்சே' (தி.1 ப.94 பா.5). 'வைத்த மாடு' (தி.2 ப.72 பா.1, ப.77 பா.7). மணி – மாணிக்கம். வருந்தி – வழிபடாது கழிந்த காலத்தை எண்ணி வருந்தி. கட்டு வீடு இரண்டிலும் உபகரித்து வரும் பரசிவனை மறவாது வழிபட முயன்று. சித்தம் – சிந்திக்கும் மனம். நைந்து – மெலிந்து. சிவனே என்பார் சிந்தையார் – சிவசிவா என்று திரி கரண சுத்தியுடன் அழைத்திடும் அடியவர் சித்தத்தில் வாழ்பவர். சந்து – சந்தனமரம். குரவு – குராமரம். உந்தும் முத்தாறு – தள்ளுகின்ற (மணி) முத்த நதி. மணியாலும் முத்தாலும் கலந்து ஓடம் ஆறு மணி முத்தாறு. திருமுதுகுன்றத்தருகில் ஓடும் ஆற்றின் பெயர் குறிக்கப்பட்டது.

Oh! It is our Lord of Thiru-muthu-kundram. Oh Lord! I wasted many days without realising that You are the only One with whom we should deposit all our wealth and assets for safety so that it will be useful to us at the time needed. You are the only Being, the unique precious gem. Now with agonized hearts I regret over my failure to glorify in the past Your greatness. Now when I address You "Oh Civa! Oh Civa!" many times, You are generous enough to grace me. In such people's mind our Lord Civan glimmers. He resides in the temple of Thiru-muthu-kundram where the profuse water of Manimuthaaru deposits on its bank sandal wood and bottle flower bunches.

2162. வம்பார்கொன்றைவன்னிமத்தமலர்தூவி
நம்பாவென்னநல்கும்பெருமானுறைகோயில்
கொம்பார்குரவுகொகுடிமுல்லைகுவிந்தெங்கும்
மொய்ம்பார்சோலைவண்டுபாடுமுதுகுன்றே. 6

வம்பு ஆர் கொன்றை, வன்னி, மத்தமலர், தூவி,
"நம்பா!" என்ன, நல்கும் பெருமான் உறை கோயில் -
கொம்பு ஆர் குரவு, கொகுடி, முல்லை, குவிந்து எங்கும்
மொய்ம்பு ஆர் சோலை வண்டு பாடும் முதுகுன்றே.

vampu Ar kon2Rai, van2n2i, mattamalar, tUvi,
"nampA!" en2n2a, nalkum perumAn2 uRai kOyil--
kompu Ar kuravu, kokuTi, mullai, kuvintu egkum
moympu Ar cOlai vaNTu pATum mutukun2RE.

பொருள்: மணம் நிறைந்த கொன்றை, வன்னி, ஊமத்தை மலர் தழை தூவி, 'நம்பனே' என்று வழிபட, வேண்டுவார் வேண்டுவதே நல்கும் பெருமான் உறைகின்ற திருக்கோயில் எதுவெனில், கொம்புகள் மிகுதியாக உடைய குரவு, கொகுடி முல்லை மலர்களைக் குவித்து எங்கும் செறிந்த மலர்ச்சோலைகளில் வண்டு பண்பாடும் திருமுதுகுன்றே.

குறிப்புரை: வம்பு – மணம். வன்னி – சிறந்த பத்திரம் ஆகக் கொள்ளப்பட்ட வன்னிமரத்திலை. மத்தம் – ஊமத்தை. தூவி – அருச்சித்து. நம்பா என்று – நம்பனே என்று பூரண பக்தியுடன் அழைக்க. நல்கும் – வேண்டுவார் வேண்டுவதே ஈந்தருளும். கொகுடிமுல்லை என்பது விசேடம். 'கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயிலாடுங் கொகுடிக்கோயில்' (தி.7 ப.30 பா.1) எனத் திருக்கருப்பறியலூர் திருப்பதிகத்தில், நம்பியாரூரார் அருளியது உணர்க. மொய்ம்பு – வன்மை. மரச்செறிவு, உயர்ச்சி, உறுதி முதலியவற்றால் சோலைக்கு வன்மை கொள்ளப்படும். மொய்ப்பு – நெருக்கம் என்றதன் மெலித்தல் எனல் சிறந்ததன்று.

Oh! It is Civan, our Lord of Thiru-muthu-kundram. The truly devoted servitors collect the sweet smelling cassia flowers, the leaves of laburnum plant and the datura flowers and scatter these on the holy feet of our Lord and cry "Oh God! You are the most desirable person" and prostrate before our Lord. The Lord of Thiru-muthu-kundram showers His grace on such servitors. He is manifest in the temple of Thiru-muthu-kundram. This city is full of various trees in the dense forests.

7ஆம் பாடல் கிடைக்கப்பெறவில்லை.
7th Hymn Not Found

2163. வாசங்கமழும்பொழில்சூழிலங்கைவாழ்வேந்தை
நாசஞ்செய்தநங்கள்பெருமானமர்கோயில்
பூசைசெய்தஅடியார்நின்றுபுகழ்ந்தேத்த
மூசிவண்டுபாடுஞ்சோலைமுதுகுன்றே. 8

வாசம் கமழும் பொழில் சூழ் இலங்கை வாழ் வேந்தை
நாசம் செய்த நங்கள் பெருமான் அமர் கோயில் -
பூசை செய்த அடியார் நின்று புகழ்ந்து ஏத்த,
மூசி வண்டு பாடும் சோலை முதுகுன்றே.

vAcam kamazum pozil cUz ilagkai vAz vEntai
nAcam ceyta nagkaL perumAn2 amar kOyil--
pUcai ceyta aTiyAr nin2Ru pukazntu Etta,
mUci vaNTu pATum cOlai mutukun2RE.

பொருள்: மணங்கமழும் சோலைகள் சூழ்ந்த இலங்கையில் வாழ்கின்ற வேந்தனாகிய இராவணனை அழித்த நம்முடைய பெருமான் விரும்பி அமர்ந்திருக்கும் கோயில் எதுவெனில், சிவபெருமானைப் பூசித்து அடியவர்கள் துதிபாடி ஏத்த, வண்டுகள் மூசிப் பாடும் சோலைகளையுடைய திருமுதுகுன்றே.

குறிப்புரை: வாசம் – மணம். வேந்தை – அரசனாகிய இராவணனை. வேந்து – சொல்லால் அஃறிணை, பொருளால் உயர்திணை ஒற்று முதலியனவும் அன்னவையே. பூசை செய்த அடியார் நின்று புகழ்ந்து ஏத்த வண்டுமூசிப் பாடுஞ் சோலையை உடைய முதுகுன்று என்க. செய்த அடியார் என்று இறந்த காலத்தாற் கூறியதால், செய்யாதிருந்த காலமும் உண்டோ என்று ஐயுறலாகாது. அடியவர்கள் சிவபெருமானைப் பூசை செய்ததும் எழுந்து நின்று திருமுன் மலர்களைத் தூவி, துதிபாடியேத்தி, வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்து வழிபடும் கடமையுடையவர்கள்.

Oh! It is Civan, our Lord of Thiru-muthu-kundram. Sri Lanka is surrounded by natural forests with many sweet smelling flowers and trees. Raavanan was the king of this great country, was the greatest warrior, a mighty and dexterous king. Our Lord who ruined his mightiness is manifest in the temple in Thiru-muthu-kundram. The devotees of this city perform daily religious rituals in this temple to our Lord and sing His praise. The beetles in large numbers fly in the forest gardens making music.

2164. அல்லிமலர்மேலயனுமரவினணையானும்
சொல்லிப்பரவித்தொடரவொண்ணாச்சோதியூர்
கொல்லைவேடர்கூடிநின்றுகும்பிட
முல்லையயலேமுறுவல்செய்யுமுதுகுன்றே. 9

அல்லி மலர்மேல் அயனும் அரவின்அணையானும்,
சொல்லிப் பரவித் தொடர ஒண்ணாச் சோதி ஊர் -
கொல்லை வேடர் கூடி நின்று கும்பிட,
முல்லை அயலே முறுவல் செய்யும் முதுகுன்றே.

alli malarmEl ayan2um, aravin2 aNaiyAn2um,
collip paravit toTara oNNAc cOti Ur--
kollai vETar kUTi nin2Ru kumpiTa,
mullai ayalE muRuval ceyyum mutukun2RE.

பொருள்: அகவிதழ்களையுடைய தாமரை மலர்மேல் இருக்கும் பிரமனும், பாம்பணையின்மேல் துயிலும் திருமாலும் தோத்திரம் சொல்லி வழிபட்டுத் தொடரும் புண்ணியம் இல்லாதவர்களாயினர்; அவர்களால் தொடர முடியாத சோதியாக நின்றவனுடைய ஊர் எதுவெனில், முல்லை நிலத்து வேடர்கள் குழுமி நின்று வழிபட அயலே உள்ள முல்லைப் பூக்கள் முறுவல் செய்து நகைகாட்டும் முதுகுன்றே.

குறிப்புரை: அல்லி – அகவிதழ்கள். அரவின் அணை – பாம்பாகிய படுக்கை. பிரமனும் விண்டுவும் என்றவாறு. சொல்லி – தோத்திரம் புரிந்து. பரவி – வாழ்த்தி. தொழ – வழிபட. ஒண்ணா – ஒன்றாத. பொருந்தப் புண்ணியஞ் செய்யாதவராயினர் என்றவாறு. சோதி – தீப்பிழம்பாய்த் தோற்றிய சிவபிரான் சோதியினது ஊர் முதுகுன்று என்க. முல்லை – குறிஞ்சியை அடுத்த முல்லைத்திணை. அயல் – பக்கம். முறுவல் – புன்னகை. முதுகுன்று – குறிஞ்சி, அதனை அடுத்துள்ள முல்லை. தன்பால் பூத்த முல்லைப் பூக்கள் ஆகிய பற்களைக் காட்டிப் புன்சிரிப்புச் செய்யுந் தோற்றத்தை உடையது.

It is Civan, our Lord in Thiru-muthu-kundram. Lord Brahma is seated in lotus flower, which has a lot of internal petals. Lord Vishnu rests on the five-headed snake. They both praised our Lord, and wandered in search of His head and foot in vain. Our Lord stood before them as a great and tall effulgence. His abode is Thiru-muthu-kundram where He rests in the temple. In the woodland country the flowers look at the hunters who jointly gather and worship our Lord. The jasmine vines near the foresters unfold their buds and it appears smiling at the hunters. This place is called Thiru-muthu-kundram where our Lord is manifested in the temple.

2165. கருகுமுடலார்கஞ்சியுண்டுகடுவேதின்
றுருகுசிந்தையில்லார்க்கயலானுறைகோயில்
திருகல்வேய்கள்சிறிதேவளையச்சிறுமந்தி
முருகின்பணைமேலிருந்துநடஞ்செய்முதுகுன்றே. 10

கருகும் உடலார், கஞ்சி உண்டு கடுவே தின்று
உருகு சிந்தை இல்லார்க்கு, அயலான் உறை கோயில் -
திருகல் வேய்கள் சிறிதே வளைய, சிறு மந்தி
முருகின் பணைமேல் இருந்து நடம்செய் முதுகுன்றே.

karukum uTalAr, kanjci uNTu kaTuvE tin2Ru
uruku cintai illArkku, ayalAn2 uRai kOyil--
tirukal vEykaL ciRitE vaLaiya, ciRu manti
murukin2 paNaimEl iruntu naTam cey mutukun2RE.

பொருள்: கரிய உடம்பினர், கஞ்சி உண்டு கடுக்காயைத் திண்பவர், உருகும் சிந்தையில்லாதவராகிய சமணர், தேரர் ஆகியோருக்கு எட்டாதவனாகிய சிவபிரான் உறையும் திருக்கோயில் எதுவென்னில், கோணலாய் மூங்கில் சிறிதே வளையச் சிறு மந்திகள் அகில் மரக்கிளையின் மேலிருந்து தாவி நடனஞ் செய்யும் முதுகுன்றே.

குறிப்புரை: கருகும் உடலார் – கரிய உடம்பினர். 'காரமண் கலிங்கத்துவராடையர்' (தி.1 ப.54 பா.10). கடு – கடுக்காய். உருகு சிந்தை இல்லார் – இரங்கும் உள்ளம் வாய்க்காதவர், வண்ணெஞ்சரென்றபடி. அஃது இல்லார்க்கு அயலான் என்றது அக்கனியும் மனம் இல்லாத சமணர் கொள்கைகளுக்கு எட்டாமல் வேறாய் வேதாகமக் கொள்கைக்கு எட்டுமவன் பரமேச்சுவரன் என்றவாறு. திருகல் – கோணல். வேய்கள் – மூங்கில்கள். முருகு – அகில் மரம். பணை – கிளை. சிறிய மந்திகள் அகில் மரக்கிளை மேலிருந்து சிறிது வளைந்த வேய்களில் தாவிக் குதித்து ஆடும் என்க.

It is Civan, our Lord in Thiru-muthu-kundram. The black coloured Jains wander in the city without any compassionate feelings for other people. The Buddhists wear the ochre robe and move about without any mercy for others. Our Lord is the Penultimate Being for these two merciless people in the Thiru-muthu-kundram city. Our Lord is manifest *in the temple* in Thiru-muthu-kundram. The monkeys in this city climb the eaglewood trees and jump over the bent bamboo trees and dance and enjoy their life.

2166. அறையார்கடல்சூழந்தண்காழிச்சம்பந்தன்
முறையால்முனிவர்வணங்குங்கோயில்முதுகுன்றைக்
குறையாப்பனுவல்கூடிப்பாடவல்லார்கள்
பிறையார்சடையெம்பெருமான்கழல்கள்பிரியாரே. 11

அறை ஆர் கடல் சூழ் அம் தண் காழிச் சம்பந்தன்,
முறையால் முனிவர் வணங்கும் கோயில் முதுகுன்றைக்
குறையாப் பனுவல் கூடிப் பாட வல்லார்கள்,
பிறை ஆர் சடை எம்பெருமான் கழல்கள் பிரியாரே.

aRai Ar kaTal cUz am taN kAzic campantan2,
muRaiyAl mun2ivar vaNagkum kOyil mutukun2Raik
kuRaiyAp pan2uval kUTip pATa vallArkaL,
piRai Ar caTai emperumAn2 kazalkaL piriyArE.

பொருள்: ஒலிக்கும் கடல் சூழ்ந்த அழகிய, குளிர்ந்த காழி நகரின் ஞானசம்பந்தன் வேதாகம முறைப்படி முனிவர்கள் வணங்கும் திருக்கோயில் முதுகுன்றை நிறைவுபடப் பாடிய இப்பதிகத்தைக் குழாமாகக் கூடிப்பாட வல்லார்கள் பிறைசூடிய பெருமானின் திருவடிகளைப் பிரியார்.

குறிப்புரை: அறை – முழக்கம். அம்தண்காழி – அழகும் குளிர்ச்சியுமுடைய சீகாழி. முறையான் – வேதாகம முறைப்படி குறையாப் பனுவல் – நிறைவுறப்பாடிய இத்திருப்பதிகத்தை கூடிப்பாட வல்லவர்கள் சந்திரசேகரனாகிய எம்பெருமானுடைய திருவடி நிழலைப் பிரியாதிருந்து பேரின்பம் நுகர்வர் என்றவாறு. அப்பேரின்பமே கொடுத்தலால், உலகின்பம் வேண்டுவார்க்கும் அதைக் கொடுத்தல் இப்பனுவலுக்கு மிக எளிதின் இயலுவதொன்று எனக் கொள்க.

It is Civan, our Lord in Thiru-muthu-kundram. Our young saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi which is surrounded by the noisy sea. Of course it is an attractive city with all coolness. Thiru-gnana-Sambandar reached the temple in Thiru-muthu-kundram where the sages and saints offer their prayers and worship our Lord according to the Vedic and Aaggama rites. Here Thiru-gnana-Sambandar sang with fine perfection these ten sacred songs on our Lord. Those devotees who can jointly sing these verses before our Lord with sincere devotion will never part from the holy feet of our Lord who retains the baby moon on His matted hair.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

64-ஆம் பதிகம் முற்றிற்று
End of 64th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 201

பதிக எண்: 65

65. திருப்பிரமபுரம்

65. THIRU-P-PIRAMAPURAM

பண் : காந்தாரம்

Pann: Kaanthaaram

திருத்தல வரலாறு

137ஆவது பதிகத்தைக் காண்க.

பதிக வரலாறு

இப்பதிகம் முழுவதும் அவந்தியணி. அதாவது, சிவபெருமானின் தடத்த நிலையின் உண்மையை மறுத்துச் சொரூப நிலையை வற்புறுத்தியது. இலர் போலும் என்பது உள்ளவர் என்ற கருத்தை உணர்த்துவதாம். உயிர்களுக்காகத் தடத்த நிலையில் இவை உள்ளவர்; சொரூப நிலையில் இவை இல்லாதவர். தடத்தை நிலையில் இவை உள்ளவராக வழிபடுதல் நலம் பயக்கும். எனவே, 'இலர் போலும்' எனப் பிள்ளையார் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

2167. கறையணிவேலிலர்போலுங்கபாலந்தரித்திலர்போலும்
மறையுநவின்றிலர்போலும்மாசுணமார்த்திலர்போலும்
பறையுங்கரத்திலர்போலும்பாசம்பிடித்திலர்போலும்
பிறையுஞ்சடைக்கிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. 1

கறை அணி வேல் இலர்போலும்; கபாலம் தரித்திலர் போலும்;
மறையும் நவின்றிலர் போலும்; மாசுணம் ஆர்த்திலர் போலும்;
பறையும் கரத்து இலர்போலும்; பாசம் பிடித்திலர்போலும்;
பிறையும் சடைக்கு இலர்போலும் - பிரமபுரம் அமர்ந்தாரே.

kaRai aNi vEl ilarpOlum; kapAlam tarittilar pOlum;
maRaiyum navin2Rilar pOlum; mAcuNam Arttilar pOlum;
paRaiyum karattu ilarpOlum; pAcam piTittilar pOlum;
piRaiyum caTaikku ilarpOlum--piramapuram amarntArE.

பொருள்: பிரமபுரம் அமர்ந்த பெருமான் இரத்தக் கறைபடிந்த வேல் இலர் போலும். பிரம கபாலத்தைத் தரித்திலர் போலும்; வேதத்தைக் கூறவில்லை போலும்; பாம்பை அரையில் கட்டிலர் போலும்; உடுக்கையைக் கையில் கொண்டிலர் போலும்; பாசக் கயிற்றினைப் பிடித்திலர் போலும்; பிறையும் சடையில் இலர் போலும்.

குறிப்புரை: கறை – குருதி பட்டுலர்ந்த கறுப்பு, வேல்; பகைவர் உடம்பிற் பாய்ந்து உற்ற ரத்தம் உலர்ந்து கறுப்பாகும். வேலுக்குச் சாதியடை. கபாலம் – பிரமகபாலம். தரித்திலர் – தாங்கிலர். மறை – வேதம். மாகணம் – பாம்பு. பறை – உடுக்கை. (டமருகம்). பாசம் – கயிறு. முதற்பத்துப் பாக்களிலும் வரும் இலர்போலும் என்பது ஈற்றுப்பாட்டில் 'அண்ணல் செய்யாதன எல்லாம் அறிந்து வகை வகையாலே . . . நவின்றன' என்ற கருத்திற்கேற்றவாறு பொருள் கொளற்பாலது பரமசிவன் உண்மை (சொரூபநிலை)யில் இவை ஒன்றும் இல்லாத சச்சிதாநந்த சொரூபியாதலின் 'செய்யாதன' என்று எதிர்மறையில் கூறப்பட்டன. தடத்த நிலையாகிய பொதுவில், உயிர்களுக்கு ஐந்தொழிலும், அருட்டொழிலேயாகச் செய்யும் பொருட்டு, இவையெல்லாம் இறைவனுக்கு உள்ளன ஆதலின் 'இலர்' என உடையான் வினையாக்கியும் 'போலும்' என ஐயப்பொருட்டாக்கியும் உரைத்தருளினார். 'இலர் போலும்' என்பது உள்ளவர் என்னும் குறிப்புணர்த்துவது. இஃது இன்றும் உலக வழக்கில் இருக்கின்றது. செல்வரை, 'வறியர்போலும்' எனக் குறிப்புப் பொருள் உணர்த்தக் கூறுதல் முதலியன 'வேலிலர்' 'தரித்திலர்' 'சடைக்கிலர்' என்ற மூன்று வகை வாய்ப்பாட்டில் அடங்குமாறும் அறிக. சிவபிரான் செய்தனவாக உள்ள அத்தனையும் உண்மை ஞானம் பெற்றார்க்குச் செய்யாதனவாய்த் தோன்றும். அவற்றைச் செய்தனவாகக் கொண்டு வழிபடுவார்க்கே உண்மை ஞானம் உண்டாகும். ஆதலின் அவற்றைப் பொய்யெனலாகாது.

It is Civan, our Lord in Piramapuram. The Lord who resides in Piramapuram has no form or shape but His very shape is decided as grace. But the other aspect of god causing five poses (Panaa Kiruttigam) is called Thadatha Nilai. In this verse in various other verses also His Thadathaa Nilai is mentioned. He takes various forms depending upon His need. These two aspects must be made clear in our mind. Our Lord holds the battleaxe where the black stains of dry blood appears. He carries the skull of Brahma. His gracious divine command is the four Vedas. He wears the snake on His loins. In one of His hands He holds the small drum tapering in the middle. He holds in one of His hands the noose. He retains the baby moon in His matted hair. With such aspects our Lord is manifest in Thiru-p-piramapuram.

2168. கூரம்பதுவிலர்போலுங்கொக்கினிறகிலர்போலும்
ஆரமும்பூண்டிலர்போலுமாமையணிந்திலர்போலுந்
தாருஞ்சடைக்கிலர்போலுஞ்சண்டிக்கருளிலர்போலும்
பேரும்பலவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. 2

கூர்அம்புஅது இலர்போலும்; கொக்கின்இறகு இலர்போலும்;
ஆரமும் பூண்டிலர்போலும்; ஆமை அணிந்திலர் போலும்;
தாரும் சடைக்கு இலர்போலும்; சண்டிக்கு அருளிலர்போலும்;
பேரும் பல இலர்போலும்; பிரமபுரம் அமர்ந்தாரே.

kUr ampu atu ilarpOlum; kokkin2 iRaku ilar pOlum;
Aramum pUNTilar pOlum; Amai aNintilar pOlum;
tArum caTaikku ilarpOlum; caNTikku aruLilarpOlum;
pErum pala ilarpOlum--piramApuram amarntArE.

பொருள்: பிரமபுரம் அமர்ந்த பெருமான் கூரிய அம்பு இலர் போலும். கொக்கினது இறகு இலர் போலும்; மணிமாலை பூண்டிலர் போலும்; ஆமை ஓட்டை அணிந்திலர் போலும்; கொன்றை மாலை சடையில் இலர் போலும்; சண்டிகேசுரருக்கு அருள் செய்திலர் போலும்; பல பெயர்கள் இவருக்கு இலர் போலும்.

குறிப்புரை: கூர் அம்பு – கூரியபாணம். கொக்கினது இறகு, ஆரம் – மணிமாலை. ஆமை – முற்றலாமை (தி.1 ப.1 பா.2) தார் – கொன்றை மாலை. சண்டி – சண்டேசுரர். பேர் – திருநாமம்; பெயர் என்பதன் மரூஉ.

Oh! It is Civan, our Lord of Thiru-p-piramapuram. Our Lord who is manifest in Thiru-p-piramapuram is addressed by devotees with many names. Such names are: (1) He is the One who carries a very sharp battleaxe. (2) He wears the feather of a crane. (3) He wears many garlands on His body. (4) He wears the shell of tortoise. (5) He wears festoons in His matted hair. (6) He graced the cowboy Chandeeswarar.

2169. சித்தவடிவிலர்போலுந்தேசந்திரிந்திலர்போலுங்
கத்திவருங்கடுங்காளிகதங்கள்தவிர்த்திலர்போலும்
மெய்த்தநயனமிடந்தார்க்காழியளித்திலர்போலும்
பித்தவடிவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. 3

சித்த வடிவு இலர்போலும்; தேசம் திரிந்திலர்போலும்;
கத்தி வரும் கடுங்காளி கதங்கள் தவிர்த்திலர்போலும்;
மெய்த்த நயனம் இடந்தார்க்கு ஆழி அளித்திலர்போலும்;
பித்தவடிவு இலர்போலும் - பிரமபுரம் அமர்ந்தாரே.

citta vaTivu ilarpOlum; tEcam tirintilarpOlum;
katti varum kaTugkALi katagkaL tavirntilar pOlum;
meytta nayan2am iTantArkku Azi aLittilar pOlum;
pittavaTivu ilarpOlum-piramapuram amarntArE.

பொருள்: பிரமபுரம் அமர்ந்த பெருமான் சித்துக்களில் வல்லவர் உருவம் இலர் போலும். தேசாந்திரியாகத் திரிந்திலர் போலும்; கூக்குரலிட்டு வேகமாக வரும் காளியின் கோபாவேசத்தை நீக்கிலர் போலும்; எய்த்த நயனம் இடந்த திருமாலுக்குச் சக்கரம் ஈந்திலர் போலும்; பித்தர் வடிவு போலும் வடிவு இலர் போலும்.

குறிப்புரை: சித்தவடிவு – சித்தருருவம் போலும் உருவம். சித்துகளில் வல்லவரென்பதை உணர்த்தும் திருமேனி. தேசம் – நாடு. கதங்கள் – கோப(ாவேச)ம். தவிர்த்திலர் – நீக்கிலர். மெய்த்த – மெய்யில் (உடம்பி) லுள்ள. எய்த்த எனப் பிரித்துப் பொருள் கொள்ளல் சிறந்தது. நயனம் – கண். இடந்தார்க்கு – போர்த்(து ஆயிரம் பூவெனநிறைத்)த திருமாலுக்கு. ஆழி – சக்கராயுதம். பித்தர் வடிவுபோலும் வடிவாம்.

Oh! It is Civan, our Lord in Thiru-p-piramapuram. Our Lord who is manifest in Thiru-p-piramapuram is described by devotees with His many aspects such as:

(1) He takes the form of supernals.
(2) He has gone round various countries in the world.
(3) Kaazhi was aggressive with thundering noise and He succeeded in appeasing her.
(4) He gave a sharp circular missile to Lord Vishnu when he plucked one of his eyes from his body and offered it at our Lord's holy feet.
(5) At times He behaves and looks like a crazy man.

2170. நச்சரவாட்டிலர்போலும்நஞ்சமிடற்றிலர்போலுங்
கச்சுத்தரித்திலர்போலுங்கங்கைதரித்திலர்போலும்
மொய்ச்சவன்பேயிலர்போலும்முப்புரமெய்திலர்போலும்
பிச்சையிரந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. 4

நச்சு அரசு ஆட்டிலர்போலும்; நஞ்சம் மிடற்று இலர்போலும்;
கச்சுத் தரித்திலர்போலும்; கங்கை தரித்திலர்போலும்;
மொய்ச்ச வன்பேய் இலர்போலும்; முப்புரம் எய்திலர்போலும்;
பிச்சை இரந்திலர்போலும் - பிரமபுரம் அமர்ந்தாரே.

naccu aravu ATTilar pOlum; nanjcam miTaRRu ilarpOlum;
kaccut tarittilarpOlum; kagkai tarittilarpOlum;
moycca van2pEy ilarpOlum; muppuram eytilarpOlum;
piccai irantilarpOlum--piramapuram amarntArE.

பொருள்: பிரமபுரம் அமர்ந்த பெருமான் நஞ்சுடைய பாம்பினை ஆட்டுவது இலர் போலும்; மிடற்றில் நஞ்சிலர் போலும்; அரையில் கச்சு தரித்திலர் போலும்; சடையில் கங்கையைத் தரித்திலர் போலும்; மொய்த்த வலிய பேய்கள் சூழ்ந்திலர் போலும்; திரிபுரங்களை அழித்திலர் போலும்; பிச்சையை யாசித்திலர் போலும்.

குறிப்புரை: நச்சு அரவு – நஞ்சமுடைய பாம்பு (நஞ்சு – நச்சு, விஷம்). கச்சு – அரையிற்கட்டும் கச்சு, மொய்ச்ச – மொய்த்த. வன்பேய் – வலியபேய்கள். பிச்சை இரத்தல் – பிச்சையிடுக என்று யாசித்தல்.

Oh! It is Civan, our Lord in Thiru-p-piramapuram. The devotees describe His achievements as under:

(1) Our Lord holding in His hand the poisonous snake lets it dance.

(2) He imbibed the sea poison and kept it at His throat.

(3) He wears the snake as a strap on His loins.

(4) He supports the river Ganges in His hair.

(5) He keeps a company of mighty goblins around Him.

(6) He shot an arrow and burnt the three flying fortresses of the asuras.

(7) He used to beg alms now and then.

2171. தோடுசெவிக்கிலர்போலுஞ்சூலம்பிடித்திலர்போலும்
ஆடுதடக்கைவலியஆனையுரித்திலர்போலும்
ஓடுகரத்திலர்போலுமொள்ளழல்கையிலர்போலும்
பீடுமிகுத்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. 5

தோடு செவிக்கு இலர்போலும்; சூலம் பிடித்திலர்போலும்;
ஆடு தடக்கை வலிய ஆனை உரித்திலர்போலும்;
ஓடு கரத்து இலர்போலும்; ஒள்அழல் கை இலர்போலும் -
பீடு மிகுத்து எழு செல்வப் பிரமபுரம் அமர்ந்தாரே.

tOTu cevikku ilarpOlum; cUlam piTittilarpOlum;
ATu taTakkai valiya An2ai urittilarpOlum;
OTu karattu ilarpOlum; oL azal kai ilarpOlum--
pITu mikuttu ezu celvap piramapuram amarntArE.

பொருள்: பிரமபுரம் அமர்ந்த பெருமான் செவிக்குத் தோடு இலர் போலும்; சூலத்தைக் கையிற் பிடித்திலர் போலும்; ஆடுகின்ற பெரிய கையை உடைய வலிய யானையைத் தோல் உரித்திலர் போலும்; கரத்தில் மண்டையோடு இலர் போலும்; ஒளி வீசுகின்ற நெருப்பு கையில் இலர் போலும்.

குறிப்புரை: செவிக்குத் தோடு இலர்போலும் என்க. ஆடுகை. தடக்கை. துதிக்கை ஆடுதலும் பரியதாதலும் வெளிப்படை. வலிய ஆனையை உரித்தல் செய்யாதவர் போலும்.

Oh! It is Civan, Lord in Thiru-p-piramapuram. The devotees describe His various aspects and His attire as under:

(1) Our Lord is manifest in the temple in the sacred and rich Thiru-p-piramapuram wearing on one of His ears a role made of palm leaf.

(2) He holds in one of His hands the trident.

(3) He peeled the hide of the elephant and used its hide as His mantle.

(4) He holds the human skull in His hand.

(5) He holds in one of His hands the bright flame.

2172. விண்ணவர்கண்டிலர்போலும்வேள்வியழித்திலர்போலும்
அண்ணலயன்தலைவீழஅன்றுமறுத்திலர்போலும்
வண்ணஎலும்பினொடக்குவடங்கள்தரித்திலர்போலும்
பெண்ணின்மொய்த்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. 6

விண்ணவர் கண்டிலர்போலும்; வேள்வி அழித்திலர்போலும்;
அண்ணல் அயன்தலை வீழ, அன்றுமறுத்திலர்போலும்;
வண்ண எலும்பினொடு அக்குவடங்கள் தரித்திலர்போலும் -
பெண் இனம் மொய்த்து எழு செல்வப் பிரமபுரம் அமர்ந்தாரே.

viNNavar kaNTilarpOlum; vELvi azittilarpOlum;
aNNal ayan2talai vIza, an2Rum aRuttilarpOlum;
vaNNa elumpin2oTu akkuvaTagkaL tarittilarpOlum--
peN in2am moyttu ezu celvap piramapuram amarntArE.

பொருள்: பெண்டிர் நெருங்கி எழும் செல்வப் பிரமபுரத்து அமர்ந்த பெருமான் விண்ணிடத்திலுள்ள தேவர்கள் இவரைக் கண்டிலர் போலும்; தக்கனின் வேள்வியை

அழித்திலர் போலும்; படைத்தற் கடவுளாகிய அயன் தலைவீழ அன்று அறுத்திலர் போலும்; அழகிய எலும்பினொடு உருத்திராக்க வடங்கள் தரித்திலர் போலும்.

குறிப்புரை: விண்ணவர் – விண்ணிடத்திலுள்ள தேவர். வேள்வி – தக்கன் யாகம். அண்ணல் – படைத்தற் கடவுள், பெருமையுமாம். அயன் – பிரமன். வண்ணம் – அழகு. அக்கு – உருத்திராக்கம். பெண்ணினம் – மகளிர்கூட்டம். ஈண்டுப் பெண்ணென்னும் அஃறினைப் பெயர் பெண்டிர் என்னும் உயர்திணைப் பொருட்டாய் நின்றது. பெண்கள், ஆண்கள் என்னும் பிழை வழக்குப் பயிற்சியை நோக்குக. 'சோர்விலாள் பெண்' என்ற வள்ளுவர் காலத்துக்கு முன்னேயே இவ்வாறு வழங்கியது போலும். மொய்த்து – (கூடி) நெருங்கி.

Oh! It is Civa, our Lord in Thiru-p-piramapuram. In Thiru-p-piramapuram, female devotees in large numbers jointly pray and worship our Lord whose actions and appearances are as under:

(1) The devas are ignorant people and do not know anything about our Lord's divine knowledge.
(2) He commanded His bhuthaas to destroy the yaga of Thakkan.
(3) Our Lord removed one of Brahma's heads who is the chief of creation.
(4) He wears the rudraksha mani on His chest along with attractive bones.

2173. பன்றியின்கொம்பிலர்போலும்பார்த்தற்கருளிலர்போலுங்
கன்றியகாலனைவீழக்கால்கொடுபாய்ந்திலர்போலுந்
துன்றுபிணஞ்சுடுகாட்டிலாடித்துதைந்திலர்போலும்
பின்றியும்பீடும்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. 7

பன்றியின்கொம்பு இலர்போலும்; பார்த்தற்கு அருளிலர்போலும்;
கன்றிய காலனை வீழக் கால்கொடு பாய்ந்திலர்போலும்;
துன்று பிணம் சுடுகாட்டில் ஆடித் துதைந்திலர் போலும் -
பின்றியும் பீடும் பெருகும் பிரமபுரம் அமர்ந்தாரே.

pan2Riyin2 kompu ilarpOlum; pArttaRku aruLilarpOlum;
kan2Riya kAlan2ai vIzak kAlkoTu pAyntilarpOlum;
tun2Ru piNam cuTukATTil ATit tutaintilar pOlum--
pin2Riyum pITum perukum piramapuram amarntArE.

பொருள்: புகழும் பெருமையும் பெருகும் பிரமபுரத்தில் அமர்ந்த பெருமான் பன்றியின் கொம்பினை அணிந்திலர் போலும்; அருச்சுனனுக்கு அருள் செய்திலர் போலும்; கோபித்து வந்த எமனைக் கொல்ல கால்கொடு பாய்ந்திலர் போலும்; நெருங்கிய பிணங்களைச் சுடும் காட்டில் கூத்தாடி நெருங்கிலர் போலும்.

குறிப்புரை: பன்றியின் கொம்பு – ஏனக்கொம்பு. 'ஏனமுளைக் கொம்பு' (தி. 1 ப. 1 பா. 2). பார்த்தற்கு – அருச்சுனனுக்கு. கன்றிய – கோபித்த. காலன் – எமன். காலனைக் கால்கொடு பாய்ந்திலர், வீழப் பாய்ந்திலர் என்க. துன்று – நெருங்கிய. துதைந்திலர் – நெருங்கிலர் பின்றி – பிந்தி. 'பின்றா நேசத்தால்' (திருவாசகம்). பீடு – பெருமை.

Oh! It is Civan, our Lord of Thiru-p-piramapuram. Our Lord of Thiru-p-piramapuram's fame kept on increasing even after many centuries. He wears the tusk of the hog. He graced Arjuna and gave him a divine arrow called Paasupathasthiram. When Yama reached near Civa in an angry mood to take the life of His devotee, our Lord kicked him down. He dances around the burning ghat when corpses are burnt.

2174. பரசுதரித்திலர்போலும்படுதலைபூண்டிலர்போலும்
அரசனிலங்கையர்கோனையன்றுமடர்த்திலர்போலும்
புரைசெய்புனத்திளமானும்புலியினதளிலர்போலும்
பிரசமலர்ப்பொழில்சூழ்ந்தபிரமபுரமமர்ந்தாரே. 8

பரசு தரித்திலர்போலும்; படுதலை பூண்டிலர்போலும்;
அரசன் இலங்கையர்கோனை அன்றும் அடர்த்திலர்போலும்;
புரை செய் புனத்து இளமானும் புலியின்அதள் இலர்போலும் -
பிரசமலர்ப்பொழில் சூழ்ந்த பிரமபுரம் அமர்ந்தாரே.

paracu tarittilarpOlum; paTutalai pUNTilar pOlum;
aracan2 ilagkaiyar kOn2ai an2Rum aTarttilarpOlum;
purai cey pun2attu iLamAn2um, puliyin2 ataL, ilarpOlum--
piracamalarppozil cUznta piramapuram amarntArE.

பொருள்: தேன் மலர்ப்பொழில் சூழ்ந்த பிரமபுரம் அமர்ந்த பெருமான் மழுப்படையைத் தரித்திலர் போலும்; கபால மாலையைப் பூண்டிலர் போலும்; இலங்கை அரசனான இராவணனை அன்று அடர்த்திலர் போலும்; உயர்ந்த புனத்து இளமானும் புலியின் தோலும் இலர் போலும்.

குறிப்புரை: பரசு – மழு. படுதலை – கபாலம். கோன் – இராவணன். அடர்த்திலர் – தாக்கிலர். புரை – பன்னசாலை. அதன் – தோல். பிரசம் – தேன்.

Oh! It is Civan, our Lord in Thiru-p-piramapuram. The sacred city of Thiru-p-piramapuram, where our Lord is manifest is surrounded by forests, full of trees and plants with flowers with profuse honey from them. He holds in one of His hands the battleaxe. He carries the skull of Brahma in His hand when He cut it off. Raavanan, the king of Sri Lanka was the most skilled and the mightiest king. Our Lord subdued his power. In the forest area the hunters sit at the watchtower and look out for animals such as deer, tiger and other animals. Our Lord wears on His loins the hide of the young deer and tiger.

2175. அடிமுடிமாலயன்றேடஅன்றுமளப்பிலர்போலுங்
கடிமலரைங்கணைவேளைக்கனலவிழித்திலர்போலும்
படிமலர்ப்பாலனுக்காகப்பாற்கடலீந்திலர்போலும்
பிடிநடைமாதர்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. 9

அடி முடி மால் அயன் தேட அன்றும் அளப்பிலர்போலும்;
கடிமலர் ஐங்கணை வேளைக் கனல விழித்திலர்போலும்;
படி மலர்ப்பாலனுக்குஆகப் பாற்கடல் ஈந்திலர்போலும் -
பிடிநடை மாதர் பெருகும் பிரமபுரம் அமர்ந்தாரே.

aTi muTi mAl ayan2 tETa, an2Rum aLappilarpOlum;
kaTimalar aigkaNai vELaik kan2ala vizittilarpOlum;
paTi malarppAlan2ukku Akap pARkaTal IntilarpOlum--
piTinaTai mAtar perukum piramapuram amarntArE.

பொருள்: பெண் யானையின் நடை உடைய அழகிய பெண்கள் நிறைந்துள்ள பிரமபுரத்தமர்ந்த பெருமான் அடியையும் முடியையும் மாலும் அயனும் தேட அளப்பிலர் போலும்; மணமுடைய மலரம்புகள் ஐந்து உடைய மன்மதனை தீப்பொறி பறக்க விழித்திலர் போலும்; பூமியிர் பிறந்த பாலனுக்காகப் பாற்கடல் ஈந்திலர் போலும்.

குறிப்புரை: கடி – மணம். மலர் ஐங்கணை – ஐந்து பூங்கணை. வேள் – (கரு) வேள், மன்மதன். கனல – தீப்பொறி பறக்க. பாலன் – உபமன்யு முனிவர். 'பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான்'. பிடி – பெண் யானை.

Oh! It is Civan, our Lord of Thiru-p-piramapuram. Our Lord is manifest in Thiru-p-piramapuram where good looking women who walk like female elephant do live in vast numbers. He took a divine development like a huge supernal flame before Brahma and Vishnu who went round the cosmos and into underworld to see our Lord's head and feet, and failed in their attempt. The god of love Manmathan used a special arrow which consisted of five different sweet smelling flowers. Our Lord opened His third eye and burnt him for his misdeed against our Lord. The boy child of sage Vyakrapaathar was born and brought up in heaven with the milk of Kamdhenu, a divine cow. When this child was brought to earth it started weeping over the bad taste of earthly milk and refused to drink it. Our Lord, to help the sweet and tender flower like child, brought the milky ocean from heaven to earth to enable the child to drink heavenly milk.

2176. வெற்றரைச்சீவரத்தார்க்குவெளிப்படநின்றிலர்போலும்
அற்றவரால்நிழல்நால்வர்க்கறங்களுரைத்திலர்போலும்
உற்றவரென்றிலர்போலுமோடுமுடிக்கிலர்போலும்
பெற்றமுமூர்ந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. 10

வெற்றுஅரைச் சீவரத்தார்க்கு வெளிப்பட நின்றிலர்போலும்;
அற்றவர், ஆல்நிழல் நால்வர்க்கு அறங்கள் உரைத்திலர்போலும்;
உற்றவர் ஒன்று இலர்போலும்; ஓடு முடிக்கு இலர்போலும்;
பெற்றமும் ஊர்ந்திலர்போலும் - பிரமபுரம் அமர்ந்தாரே.

veRRu araic cIvarattArkku veLippaTa nin2RilarpOlum;
aRRavar, Alnizal, nAlvarkku aRagkaL uraittilarpOlum;
uRRavar on2Ru ilarpOlum; OTu muTikku ilarpOlum;
peRRamum UrntilarpOlum--piramapuram amarntArE.

பொருள்: பிரமபுரம் அமர்ந்த பெருமான் உடலில் ஆடையில்லாச் சமணருக்கு வெளிப்படத் தோன்றிலர் போலும்; பற்றற்றவர், ஆலமர நீழலில் முனிவர்கள் நால்வருக்கும் அறங்கள் உரைத்திலர் போலும்; மண்டையோடு தலையில் முடித்திலர் போலும்; காளையை வாகனமாக ஊர்ந்திலர் போலும்.

குறிப்புரை: வெறுமை அரைசீவரத்தார் – ஆடையில்லாச் சமணர். சீவரம் – பழுப்பேறிய ஆடை. 'துவர் ஊட்டின சீலை'யும் ஆம். 'சீவரம் போர்த்தல் மத்திம தேசத்தார் ஆசாரம் அன்றோ மூத்தோர் முன்

இளையார் போர்வை வாங்குவது போல' (நீலகேசி 3.13 உரை). அற்றவர் – பற்று ஒன்றுமில்லாதவர். 'அற்றவர்க்கு அற்று சிவன்' பெம்மாற்கு அற்றில்லாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே (திருவா–514). நால்வர் – சனகாதியர். அலர் – பழி. முடிக்கு – சடைமுடிக்கு. ஓடு – தலையோடு. 'தலைமாலை தலைக்கணிந்து'. பெற்றம் – எருது.

It is Civa, our Lord of Thiru-p-piramapuram. Our Lord could not be seen by the naked eye or through the senses of the Jains who roam in the city naked; and also by the Buddhists wearing ochre coloured robes. He taught divine knowledge and virtue to saint Janakar and others who had no desires in their life. Our Lord taught them, sitting under a banyan tree. He is always free and unaffected by anything. He looks as though He owns nothing. He wears a skull over His head. He rides on a bull and moves gently all over the universe.

2177. பெண்ணுருஆணுருவல்லாப்பிரமபுரநகர்மேய
அண்ணல்செய்யாதனவெல்லாமறிந்துவகைவகையாலே
நண்ணியஞானசம்பந்தன்நவின்றனபத்தும்வல்லார்கள்
விண்ணவரோடினிதாகவீற்றிருப்பாரவர்தாமே. 11

பெண்உரு ஆண்உரு அல்லாப் பிரமபுரநகர் மேய
அண்ணல் செய்யாதனஎல்லாம் அறிந்து, வகைவகையாலே,
நண்ணிய ஞானசம்பந்தன் நவின்றனபத்தும் வல்லார்கள்,
விண்ணவரோடு இனிதாக வீற்றிருப்பார், அவர் தாமே.

peN uru AN uru allAp piramapura nakar mEya
aNNal ceyyAtan2a ellAm aRintu, vakaivakaiyAlE,
naNNiya njAn2acampan2 navin2Ran2apattum vallArkaL,
viNNavaroTu in2itu Aka vIRRiruppAr, avartAmE.

பொருள்: பெண்ணுருவமும் ஆண் உருவமும் அல்லாத, பிரமபுரத்து அண்ணல் செய்யாதவை எல்லாம் அறிந்து அவற்றை வகையாக வகுத்து ஞானசம்பந்தன் நவின்றன பத்தும் வல்லவர்களாகிய அவர்கள் தேவர்களோடு இனிதாக வீற்றிருப்பர்.

குறிப்புரை: 'பெண்ணுரு . . . அண்ணல்' பெண்ணுருவமும் ஆணுருவமும் அல்லாத அண்ணல். 'ஆனலார் பெண்ணும் அல்லார் அதிகை வீரட்டனாரே' (தி. 4 ப. 27 பா. 8). 'பெண் அல்லை ஆண் அல்லை பேடும் அல்லை' (தி. 6 ப. 45 பா. 9). பிரமபுரநகர் மேய அண்ணல் – பிரமபுரத்தில் எழுந்தருளிய தலைவர். 'செய்யாதன எல்லாம்' என்றதால் முற்பாக்களில் உரைத்தவை சிவபிரான் செய்யாதவை என்றும்,

பொருள்சேர் புகழ் என்றும் உணர்த்தினார். வல்லவர்களாகிய அவர் வீற்றிருப்பார் என்று இயைக்க. நண்ணிய – விரும்பிய.

Oh Lord! It is Civan in Thiru-p-piramapuram. Our Lord has neither any female body nor any male body. But He is concomitant with both the male and female body in one form. In Tamil, He is described, with such a stature, as Arthanaareeswarar. This our Lord is manifest in Thiru-p-piramapuram, takes delight in this form and is the Chief of everything in this universe. Our saint comprehended all this instinct of Lord Civan as though it all happened though these did not actually happen. The saint has declared delightfully everything in an orderly manner, one by one in these ten verses. Those divine scholars who can recite these ten verses from memory and repeat it again and again will reach the company of the devas and will stay with them very happily throughout their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

65ஆம் பதிகம் முற்றிற்று
End of 65th Hymn



திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 202 பதிக எண்: 66

66. திருஆலவாய் – திருநீற்றுப்பதிகம்

66. THIRU-AALA-VAAI – THIRU-NEETTRU-P-PATHIGAM

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருஆலவாய் என்பது மதுரைக்கு உரிய வேறு பெயராகும். வம்மிசசேகர பாண்டியன் ஆட்சி செய்துவரும் காலத்தில் மக்கள் வசிப்பதற்கு இடம் போதாமையால், ஆதியில் இந்நகரத்திற்கு ஏற்பட்ட எல்லையைக் காட்டியருளுமாறு அவன் சிவபெருமானை வேண்டினான். பெருமானும் தனது திருக்கையில் கங்கணமாயுள்ள பாம்பை அளந்து காட்டுமாறு பணிக்க, அது வாலும் வாயும் ஒன்றுபடும்படி வட்டமாக வளைத்துக் காட்டியமையால் இப்பெயர்பெற்றது.

இதற்குரிய வேறுபெயர்கள் நான்மாடக்கூடல், மதுரை, கடம்பவனம், பூலோக கயிலாயம், சிவராசதானி, துவாதசாந்தத் தலம் என்பன. மதுரை தொடர்வண்டி நிலையத்திற்குக் கிழக்கே முக்கால் கிலோமீட்டர் தூரத்தில், வையையாற்றின் தென்கரையில் இருக்கிறது. தமிழகத்துப் பெருநகர்கள் பலவற்றிலிருந்தும் பேருந்துகளில் மதுரை செல்லலாம். பாண்டிய நாட்டுத் தேவாரம் பெற்ற தலங்கள் பதினான்கில் முதன்மை பெற்றது.

இறைவரின் திருப்பெயர் சொக்கலிங்கப் பெருமான். இறைவியாரின் திருப்பெயர் அங்கயற்கண்ணி. இத்திருப்பெயரை இவ்வூர்ப் பதிகத்தில் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் ‘அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவாயாவது மிதுவே’ என எடுத்தாண்டிருப்பது மகிழ்தற்குரியது. வடமொழியில் மீனாட்சிதேவி என்பர். தலவிருட்சம் கடம்பு. தீர்த்தம் பொற்றாமரை. வையை ஆறு, எழுகடல்.

பாண்டி நாடே பழம்பதி என்று சிறப்பித்து ஓதப்பெறும் மதுரை, பாண்டிய நாட்டில் பாண்டிய மன்னர்களுக்குத் தலைநகராக விளங்குவது மதுரை. புலமைமிக்க புலவர் பெருமக்கள் பலர் இருந்து தமிழ் மொழியை ஆராய்ச்சி செய்ய நிலைக்களமானது. சங்கப்பனுவலாகிய பரிபாடலில், மதுரைக்கும் வையைக்கும் முப்பது பாடல்களைக் காணலாம். இங்குச் சிவபெருமான் செய்தருளிய

அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப்போல் வேறு எங்கும் நிகழ்ந்திலது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்களுடைய பதினொரு பதிகங்களைக் கொண்டது.

திருஞானசம்பந்தப் பெருந்தகையார் அனல்வாதம், புனல்வாதம் செய்து சைவத்தைப் பாண்டிய நாட்டில் நிலைபெறச் செய்த பதி. முத்திதரும் தலங்கள் ஏழனுள் ஒன்றாய் விளங்குவது. ஐந்து சபைகளுள் வெள்ளியம்பலத்தைக் கொண்டது. மூர்த்தி நாயனார் அவதரித்த திருப்பதி. மாணிக்கவாசகரது பெருமையை அரிமர்த்தன பாண்டியனுக்கு அறிவுறுத்தி அவனை உய்விக்கச் செய்வதற்காக, நரியை பரி ஆக்கியது, பரியை நரியாக்கியது முதலான திருவிளையாடல்களைச் செய்தருளிய தலம்.

1. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம். இது வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும், பழைய திருவிளையாடல் எனவும் வழங்கப்பெறும். இது ஆராய்ச்சிக்கு சிறந்த நூல். இதை ஆக்கியோர் செல்விநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பியாவர்.
2. கடம்பவன புராணம்: இது தொண்டை நாட்டிலுள்ள இலம்பூரிலிருந்த வீமநாத பண்டிதரால் இயற்றப்பெற்றது.
3. சுந்தரபாண்டியம்: இது தொண்டை நாட்டிலுள்ள வாயிற்பதியிலிருந்த அனதாரியப்பரால் எழுதப்பெற்றது.
4. திருவிளையாடற்புராணம்: இது திருமறைக்காட்டிலிருந்த பரஞ்சோதி முனிவரால் இயற்றப் பெற்றது. இது சமய வளர்ச்சிக்கும் தமிழ்வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுவது. இது தோன்றிய பின்னர், இத்தலத்திற்குரிய வேறு புராணங்களை மக்கள் விரும்பிப் படிக்காததே இதன் பெருமையை உணர்த்துவதாகும். சங்கநூல் அறிவு சான்ற திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இதற்குச் சிறந்த உரையெழுதி உள்ளார்கள்.
5. திருவிளையாடல் போற்றிக்கலி வெண்பா. 6. மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி. இவ்விரு நூல்களும் மேற்குறித்த பரஞ்சோதி முனிவரால் இயற்றப் பெற்றனவாகும்.
7. மதுரைக் கலம்பகம். 8. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் இவ்விரு நூல்களும் குமரகுருபர அடிகளாரால் இயற்றியருளப் பெற்றன. இவைகளின்றி மதுரைக் கோவை, மதுரைச் சொக்கநாதர் உலா, தமிழ்விடு தூது முதலிய பல பிரபந்தங்களும் இறையனார் அருளிய களவியலும் (அகப்பொருள் இலக்கணம்) இத்தலத்தின் சிறப்பிற்கு உரியன.

திருஞானசம்பந்தப் பெருந்தகையார் அம்பிகை சிவஞானம் குழைத்து அருளிய இன்னமுதை உண்டவர். அவர் கடவுளைத் தவிர வேறு யாரையும் பாடாதவர். அவர், இப்பதியில், மங்கையர்க்கரசியாரை நோக்கி, ‘உமைக் காண வந்தனம்’ என்றதோடு அவரைத் திருப்பதிகத்துள் வைத்துப் பாடியருளியுள்ளார்கள். ஆதலால், மங்கையர்க்கரசியார் பெருஞ்சிறப்பு வாய்ந்தவர் என்பது தெரியவருகின்றது. மங்கையர்க்கரசியாரையும், குலச்சிறையாரையும் பதிகத்தில் வைத்துப் பாடும்பொழுது, மங்கையர்க்கரசியாரைக் குறிக்குங்கால் சிவன், உமை இவர்களோடு தொடர்பு படுத்திக் கூறியுள்ளார். குலச்சிறையாரைக் குறிக்கும்பொழுது சிவபெருமானோடு மட்டும் தொடர்பு படுத்திக் கூறியுள்ளார். இவற்றால் மங்கையர்க்கரசியார் தம் கணவரோடு வாழ வேண்டுமென்று, ஞானசம்பந்தர் திருவுளங் கொண்டதாகத் தோன்றுகின்றது. இக்கருத்தைத்தான், ‘பையவே சென்று பாண்டியற்காகவே’ என்ற அவரது தேவாரப் பகுதியும் தெரிவிக்கின்றது.

மங்கையர்க்கரசியார் திருநீறு அணிந்திருந்த செய்தி, ‘முத்தின் தாழ்வடமுஞ் சந்தனக் குழம்பும் நீறுத்தன் மார்பினின் முயங்கப் பத்தியார்கின்ற பாண்டிமாதேவி’ என்னும் ஞானசம்பந்தரது தேவாரப்பகுதியால் அறியமுடிகின்றது. நுணுகி ஆராயின் இவைபோன்ற பல உயரிய செய்திகளை இத்தலத்துத் தேவாரப் பதிகங்களால் அறியலாம்.

பதிக வரலாறு

மதுரையில், அருகர்கூடி, தம் திருமடத்தில் இட்ட தீயை புகலிவேந்தர், இனி அரசன் எய்தும் வெப்பு அகலற்பொருட்டு தீண்டி, வெண்ணீறு இடுதற்குரிய பேறு உடையன் ஆதலின், பேரருளினால் ‘பையவே செல்க’ என்று ஏவிய வெப்பு நோய் தென்னனை மேவிற்று. முயன்ற பலராலும் தீர்க்க முடியாதிருந்தது. ‘திருஞானசம்பந்தப் பிள்ளையார் கடைக்கண்ணோக்கம் பெற்றால் பிறவி நோயே ஒழியும் எனின், இந்நோய் ஒழிவதில் ஐயமில்லை’ என்று குலச்சிறையார் கூறினார். ஞானசம்பந்தர் என்ற திருப்பெயரைக் கேட்டதே பாண்டியனுக்கு ஓரளவு இன்பம் உண்டாயிற்று. அதனால், அவரை அழைத்துவர அவன் வேண்டினான். சென்று வணங்கி வேண்டி அழைத்தனர் அமைச்சர் முதலோர். திருவுளம்பற்றிப் பிள்ளையார் எழுந்தருளினார். நோக்கும் புண்ணியனானான் காக்கும் பாண்டியன். அவன் வெப்பு நோயை விலக்கப் பாடியருளியது இத்திருநீற்றுப் பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2178. மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்திருஆலவாயான்திருநீறே. 1

மந்திரம் ஆவது நீறு; வானவர்மேலது நீறு;
சுந்தரம் ஆவது நீறு; துதிக்கப்படுவது நீறு;
தந்திரம் ஆவது நீறு; சமயத்தில் உள்ளது நீறு;
செந்துவர்வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே.

mantiram Avatu nIRu; vAn2avar mElatu nIRu;
cuntaram Avatu nIRu; tutikkappaTuvatu nIRu;
tantiram Avatu nIRu; camayattil uLLatu nIRu;
centuvarvAy umai pagkan2 tiru AlavAyAn2 tirunIRE.

பொருள்: கூறுபவரைக் காக்கும் மந்திரம் போலப் பூசுவோரைக் காப்பது திருநீறு; ஆதலின் திருநீறு, மந்திரம் ஆகும். மேலோர்களாகிய சிவனடியார்கள் திருமேனியில் பூசப்பட்டது திருநீறு. அழகினைத் தருவது திருநீறு. போற்றுதலுக்கு உரியது திருநீறு. சிவாகமங்களில் பேசப்படுவது திருநீறு. சைவ சமயத்தில் 'உள்ளது' எனப்படும் சிவமே திருநீறு. பவளம் போன்ற சிவந்த வாயுடைய உமையம்மையைப் பங்கில் உடையானாகிய திருவாலவாயான் திருநீறே சிவகதி தரும்.

குறிப்புரை: திருநீறு மந்திரம் போல நினைத்ததைக் கொடுக்கும். நினைத்தவரைக் காக்கும். வானவர் – சிவலோகத்திலுள்ளவர், சிவமானவர். மேலது – திருமேனியில் பூசப்பட்டது. சுந்தரம் – அழகு, சிவப்பொலிவு. துதிக்கப்படுவது என்பதற்கு இத்திருப்பதிகமே சான்று. தந்திரம் – ஆகமம். சிவாகமத்தில் சிறப்பாகச் சொல்லப்படுவது. சமயத்திலுள்ளது – சிவ சமயத்தில் அழியாத பொருளாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள். பாசம் – பசுவின் கண் இருந்து பதியால் நீறாக்கப்பட்ட உண்மையை உணர்த்துவது. உள்ளது – சிவம். 'ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்' – (திருக்குறள்) திருநீறே சிவம். துவர் – பவளம். பங்கன் – பாகன். திருஆலவாயான் – மதுரைத்தலத்தில் திருவாலவாய்க் கோவிலினுள் எழுந்தருளி இருப்பவன். திருவாலவாயான் திருநீறு என்பது ஆறன்தொகையாதல் அறிவார்க்குத் திருநீறே சிவகதி தரும் என்னும் உண்மை இனிது புலப்படும். 'கங்காளன் பூசும் கவசத்திருநீற்றை . . . பூசி மகிழ்வாரே யாமாகில் . . . சாரும் சிவகதி . . .' (திருமந்திரம்).

It is Civan, Lord of Thiru-aala-vaai. Our goddess Uma Devi is the consort of Lord Civa who is manifest in Thiru-aala-vaai. Her mouth is very attractive with the colour of

red coral. Our Lord has smeared the holy ashes on His body and forehead. This holy ashes is equal to the magical formula (spell). This magical formula or the mantra will protect those who apply and utilize the sacred ashes. The devas smear their body with this sacred ashes, this is pretty fair like Civan's. All the divine knowledgeable books praise this holy ash. The aagamaas also praise this holy ashes. In the Saiva religion the indestructible substances are souls, god and matter. The matter is produced from cowdung as the holy ashes. This could be never destroyed. The holy ashes produce immediate effect like mantra, it is beautiful and it is the right material mentioned in the aagamaas.

2179. வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறுஉண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருஆலவாயான்திருநீறே. 2

வேதத்தில் உள்ளது நீறு; வெந்துயர் தீர்ப்பது நீறு;
போதம் தருவது நீறு; புன்மை தவிர்ப்பது நீறு;
ஓதத் தகுவது நீறு; உண்மையில் உள்ளது நீறு;
சீதப்புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

vEtattil uLLatu nIRu; ventuyar tIrppatu nIRu;
pOtam taruvatu nIRu; pun2mai tavirppatu nIRu;
Otat takuvatu nIRu; uNmaiyil uLLatu nIRu;
cItappun2al vayal cUznta tiru AlavAyAn2 tirunIRE.

பொருள்: வேதத்தில் சிறப்பாகத் திருநீறு ஓதப்பெற்றுள்ளது. கொடிய பிறவித் துயரைத் தீர்ப்பது திருநீறு. சிவஞானத்தைத் தருவது திருநீறு. அறியாமை முதலிய புன்மைகளை நீக்குவது திருநீறு. நூல்களை ஓதும்போது மனத்தூய்மை பெற அணியத் தகுவது திருநீறு. சிவத்தைப் போல என்றும் உள்ள பொருள் திருநீறு. குளிர்ந்த நீர் பாயும் வயல்கள் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே சிவகதி தரும்.

குறிப்புரை: திருநீறு வேதத்தில் சிறக்க எடுத்தோதப் பெற்றது. கொடிய பிறவித் துயரம் முதலியவற்றைத் தீர்ப்பது. சிவஞானத்தைத் தருவது. அறியாமை முதலிய புன்மைகளை நீக்குவது. ஆசிரியர் மாணாக்கர்க்கு ஓதத்தகும் அளவு பெருமை உடையது. ஓதும்போது அணியத் தகுதியுடையது. உண்மையில் நிலைபெற்றிருப்பது. உண்மை – மெய்ப்பொருளுமாம். சீதம் – குளிர்ச்சி. புனல் – நீர்.

The city Thiru-aala-vaai is surrounded by paddy fields always filled with cool water. Here our Lord Civan is manifest in the temple. The holy ash is very brightly seen on His body. The Vedas praise and recite about the holy ashes. This sacred ashes will chase bitter sufferings from our life. This will give us Civan's divine knowledge. This will remove all our ignorance. This deserves to be praised and worshipped by eminent scholars, it is glorified in the Vedas. This is truth eternal, a permanent material.

2180. முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவஇனியதுநீறு
சித்திதருவதுநீறுதிருஆலவாயான்திருநீறே. 3

முத்தி தருவது நீறு; முனிவர் அணிவது நீறு;
சத்தியம் ஆவது நீறு; தக்கோர் புகழ்வது நீறு;
பத்தி தருவது நீறு; பரவ இனியது நீறு;
சித்தி தருவது நீறு; திரு ஆலவாயான் திருநீறே.

mutti taruvatu nIRu; mun2ivar aNivatu nIRu;
cattiyam Avatu nIRu; takkOr pukazvatu nIRu;
patti taruvatu nIRu; parava in2iyatu nIRu;
citti taruvatu nIRu; tiru AlavAyAn2 tirunIRE.

பொருள்: மீண்டும் பிறந்து இறந்து உழலாத முத்தியைத் தருவது நீறு. எல்லாச் செல்வங்களையும் வெறுத்தொதுக்கிய முனிவர்கள் விரும்பி அணிவது நீறு. உள்பொருளாவது நீறு. சிவனடியார் அணிவது நீறு. எண்வகைச் சித்தி அளிப்பது நீறு. திருவாலவாயான் திருநீறே சிவகதி ஆகும்.

குறிப்புரை: வீட்டை அளிப்பது, எல்லாச் செல்வங்களையும் வெறுத்தவர் முனிவர். முனிவு – வெறுப்பு. கோபம் – முனிவர் (முநிவர்) – மனைசீலர் எனலுமாம். அணிவது – அழகு செய்வது, பூண்பதுமாம். சத்திய – எப்பொழுதும் உள்ளது. தக்கோர் – சிவனடியார். பத்தி – திருவடிக்கன்பு. பரவ – வாழ்த்த. சித்தி – எண்வகைச் சித்தி, அனிமா முதலியன.

The holy ashes of Civan in Thiru-aala-vaai will help you to go to heaven. The sages and saints always wear the holy ashes. This is reality and remains permanently forever. The scholars ever praise the holy ashes. Using this holy ashes enhances our

piety and divine religious observance and our faith in Saiva religion. To praise it is perfect. It helps to achieve the eight chithies and perform supernatural powers.

2181. காணஇனியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருஆலவாயான்திருநீறே. 4

காண இனியது நீறு; கவினைத் தருவது நீறு;
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு;
மாணம் தகைவது நீறு; மதியைத் தருவது நீறு;
சேணம் தருவது நீறு; திரு ஆலவாயான் திருநீறே.

kANa in2iyatu nIRu; kavin2ait taruvatu nIRu;
pENi aNipavarkku ellAm perumai koTuppatu nIRu;
mANam takaivatu nIRu; matiyait taruvatu nIRu;
cENam taruvatu nIRu; tiru AlavAyAn2 tirunIRE.

பொருள்: தன்னை அணிந்தாரை அழகராக்கிக் காண்பவருக்கு இனிமை தருவது நீறு. அணிவோருக்குச் சிவப்பொலிவு தருவது நீறு. விரும்பி அணிபவர்க்கெல்லாம் பெருமையைத் தருவது நீறு. மரணத்தைத் தடுப்பது நீறு. அறிவு நுட்பத்தைத் தருவது திருநீறு. பாசத்தில் உழன்று வருந்தும் சேய்மையில் உள்ளவருக்குத் திருவாலவாயான் திருநீறே சிவகதி தரும்.

குறிப்புரை: பால் வெண்ணீறாய், தன்னை அணிந்தோரைப் பிறர் கண்ணுக்கு அழகராயளித்துக் கருத்திற்கு இனிமை விளைப்பது. கவினைத்தருவது – அணிவோர்க்குச் சிவப்பொலிவு தருவது. பேணி – விரும்பி. பெருமை – திருவருட்சிறப்பு. மாணம் – இறப்பு. நீள் என்னும் பகுதி அம் என்னும் விகுதியோடு சேர்த்து நீளம் என்று ஆகின்றது. நிகள் என்பதன் முதல் நீட்சியே நீள் என்பது. துகள் தூள் என்பது போல. அதுபோல, மாள்+அம் – மாளம். ளகரம் ணகரமாதல் இயல்பு. 'நீணுதல் செய்தொழியந் நிமிர்ந்தான்' (தி.1 ப.1 பா.9) என்பதில் னகரம் ணகரமானதைக் காண்க. பெள் – பெண். எள் – எண். தகைவது – தடுப்பது. மதி – இயல்பான அறிவு. 'மதிநுட்பம் நூலோடு உடையார்' (திருக்குறள் 636). சேணம் – உயர்வு. பாசத்தார்க்குத் தூரத்ததாகிய வீடுமாம்.

It is Civan who manifests Himself in Thiru-aala-vaai. The holy ashes used by our Lord in Thiru-aala-vaai is beautiful to sight. Those who use it get graceful

appearance. Those who delightfully use it will get great dignity. It gives longevity. It increases your divine knowledge. It gives great fame and improvement by lifting us to Civa's world from the mire of worldly love.

2182. பூசஇனியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசஇனியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசைகெடுப்பதுநீறுஅந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருஆலவாயான்திருநீறே. 5

பூச இனியது நீறு; புண்ணியம் ஆவது நீறு;
பேச இனியது நீறு; பெருந் தவத்தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு; அந்தம்அது ஆவது நீறு;
தேசம் புகழ்வது நீறு; திரு ஆலவாயான் திருநீறே.

pUca in2iyatu nIRu; puNNiyam Avatu nIRu;
pEca in2iyatu nIRu; perun tavattOrkaLukku ellAm
Acai keTuppatu nIRu; antam atu Avatu nIRu;
tEcam pukazvatu nIRu; tiru AlavAyAn2 tirunIRE.

பொருள்: பூசப் பூச இனிமையைத் தருவது நீறு. பூசப்பூச சிவபுண்ணியத்தை வளர்ப்பது நீறு. (சிவத்தின் பெருமை பேச இனிதாதல் போல) பெருமையைப் பேசப்பேச இனிமை உண்டாக்குவது நீறு. பெரிய தவத்தினருக்கெல்லாம் பற்றினை ஒழிப்பது நீறு. அந்தமிலா ஆனந்தத்தை அளிப்பது நீறு. தேசங்கள் எல்லாவற்றாலும் புகழப்படுவது நீறு. திருவாலவாயான் திருநீறே சிவகதி தரும்.

குறிப்புரை: பூசப்பூச இனிமையாக்குவது, சிவபுண்ணியத்தை வளர்ப்பது பெருமையைப் பேசப்பேச இனிமை உண்டாக்குவது. பெரிய தவத்தோரெல்லாம் பற்றொழிப்பது. முடிவான பேரின்ப நிலையைத் தருவது. அந்தம் – அழகுமாம். தேசங்களெல்லாம் புகழப் பெறுவது.

It is Civan, who is manifest in Thiru-aala-vaai. Those who use the holy ashes of our Lord in Thiru-aala-vaai will get delight. It increases our virtue and the merit of our actions. It pleases us to speak of it. It severs desires from sages. It gives eternal bliss. The people in the whole world praise it.

2183. அருத்தமதாவதுநீறுஅவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருஆலவாயான்திருநீறே. 6

அருத்தம் அது ஆவது நீறு; அவலம் அறுப்பது நீறு;
வருத்தம் தணிப்பது நீறு; வானம் அளிப்பது நீறு;
பொருத்தம் அது ஆவது நீறு; புண்ணியர் பூசும் வெண்நீறு;
திருத் தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

aruttam atu Avatu nIRu; avalam aRuppatu nIRu;
varuttam taNippatu nIRu; vAn2am aLippatu nIRu;
poruttam atu Avatu nIRu; puNNiyar pUcum veN nIRu;
tirut taku mALikai cUznta tiru AlavAyAn2 tirunIRE.

பொருள்: செல்வமாவது நீறு. துன்பத்தைப் போக்குவது நீறு. வருத்தத்தை ஒழிப்பது நீறு. துறக்கத்தைத் தருவது நீறு. பொதுவாக எல்லாச் சமயத்தவருக்கும், சிறப்பாகச் சைவ சமயத்தவருக்கும் பொருத்தமாயிருப்பது திருநீறு. சிவபுண்ணியத்தவரும் பசு புண்ணியத்தவரும் பூசுவது வெண்ணீறு. அழகிய மாளிகைகள் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே சிவகதி தரும்.

குறிப்புரை: செல்வமாவது, துன்பம் போக்குவது, வருத்தம் ஒழிப்பது. வானம் – துறக்கம், சிவலோகம். அளிப்பது – கொடுப்பது. திருத்தகு மாளிகை – அழகு தக்க மாளிகைகள்.

It is Civan, the Lord of Thiru-aala-vaai. The city of Thiru-aala-vaai has many attractive palaces all around the city. Our Lord who is manifested here uses the holy ashes on His forehead and body. Those who use it will be come rich in their life. It removes the sufferings and reduces mental agony. It gives celestial delight. It is common to all, as it represents death and impermanence, the common factors of life. It is used by sincere devotees and men of virtue.

2184. எயிலதுஅட்டதுநீறுஇருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
அயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்திருநீறே. 7

எயில்அது அட்டது நீறு; இருமைக்கும் உள்ளது நீறு;
பயிலப்படுவது நீறு; பாக்கியம் ஆவது நீறு;
துயிலைத் தடுப்பது நீறு; சுத்தம் அது ஆவது நீறு;
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே.

eyil atu aTTatu nIRu; irumaikkum uLLatu nIRu;
payilappaTuvatu nIRu; pAkkiyam Avatu nIRu;
tuyilait taTuppatu nIRu; cuttam atu Avatu nIRu;
ayilaip politaru cUlattu AlavAyAn2 tirunIRE.

பொருள்: திரிபுரத்தை எரித்தது நீறு. இம்மை மறுமை இரண்டற்கும் துணையாக உள்ளது நீறு. அணிந்து பழகுவதற்கு உரியது நீறு. செல்வமாவது நீறு. அறியாமையாகிய கேவலத்தையும் மயக்கமாகிய சகலத்தையும் தடுப்பது நீறு. சுத்தாவத்தையாய் விளங்குவது நீறு. கூர்மையால் பொலியும் சூலத்தை ஏந்திய திருவாலவாயான் திருநீறே சிவகதி தரும்.

குறிப்புரை: எயில் – திரிபுரம். அட்டது – எரித்தது. அது என்பது பகுதிப் பொருள் விகுதி. இருமை – இம்மை மறுமை. பயிலப்படுவது – திருநீற்றை அணிந்து அணிந்து பழகினாலன்றி அதன் பயனை எய்துவதரிது. பாக்கியம் – செல்வம், அருள். துயிலை – கேவலத்தையும் சகலத்தையும். சுத்தமதாவது – சுத்தாவத்தையாய் விளங்குவது. அயில் – கூர்மை. பொலிதரு – விளக்கம் செய்கின்ற.

Oh! It is Civan, our Lord in Thiru-aala-vaai. Our Lord in Thiru-aala-vaai carries in one of His hands the trident which helps with its sharpness. He wears on His forehead and body the holy ashes. It helped to destroy with fire the three flying fortresses of the asuras. It gives utmost happiness both in this life and in the next life. It gives the advantage of close association with great scholars of divinity. It gives all wealth. It stops our knowledge in 'kevalathaivatham' and directs us to learn 'suddhanandham'. It gives purity, cleanliness and holiness.

2185. இராவணன்மேலதுநீறுஎண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
அராவணங்குந்திருமேனிஆலவாயான்திருநீறே. 8

இராவணன்மேலது நீறு; எண்ணத் தகுவது நீறு;
பராவணம் ஆவது நீறு; பாவம் அறுப்பது நீறு;
தராவணம் ஆவது நீறு; தத்துவம் ஆவது நீறு;
அரா வணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே.

irAvaNan2 mElatu nIRu; eNNat takuvatu nIRu;
parAvaNam Avatu nIRu; pAvam aRuppatu nIRu;
tarAvaNam Avatu nIRu; tattuvam Avatu nIRu;
Alam atu uNTa miTaRRu em AlavAyAn2 tirunIRE.

பொருள்: இராவணன் சிவனருள் பெறப் பூசியது நீறு. திருநீறு பேறளிக்கும் என்னும் உண்மை எண்ணத் தக்கது. பராசத்தியின் சொரூபமாவது நீறு. பாவத்தை ஒழிப்பது திருநீறு. மெய்ப்பொருளாவது நீறு. தத்துவமாவது நீறு. பாம்புகள் தாழ்ந்து அழகு செய்யும் திருமேனியனாகிய திருவாலவாயான் திருநீறே சிவகதி தரும்.

குறிப்புரை: இராவணன் மேலது – திரிலோக சஞ்சாரியாகிய இராவணன் தனக்கு வாய்த்த செல்வப்பெருக்கத்தை மதித்துத் திருநீற்றை அவமதிக்காமல் அணிந்து சிவபிரானருளைப் பெற்றான் என்னும் உண்மை எல்லா நன்மக்களாலும் எண்ணத்தக்கது. திருநீறே வீடு பேறளிக்கும் என்னும் உண்மை எண்ணத்தக்கது. பராவண்ணம் ஆவது – பராசக்தி சொரூபமானது. அதனால் உயிர்களின் பாவம் போக்குவதாகின்றது. தராவண்ணம் – தத்துவம், மெய்ப்பொருள். அரா – பாம்பு. வணங்கும் – வளையும். தாழும். அணங்கும் எனின் அழகு செய்யும் என்க.

Oh! It is Civan, our Lord of Thiru-aala-vaai. The snakes on our Lord's body bend and move around His body which is fully smeared with holy ashes. This holy ash was used by Raavanan, the king of Sri Lanka with full devotion for Civa and he received full grace from our Lord Civan. It deserves to be remembered for its fame by the divine scholars. It has the grace of Civa's consort called Parasakthi. It is powerful enough to remove all our sins. It is truth and reality, Lord Civan is the only reality. It explains the divine knowledge with all its truth.

2186. மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கள்தங்கள்மெய்யதுவெண்பொடிநீறு
ஏலஉடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு
ஆலமதுண்டமிடற்றெம்ஆலவாயான்திருநீறே. 9

மாலொடு அயன் அறியாத வண்ணம் உள்ளது நீறு;
மேல்உறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி-நீறு;
ஏல உடம்பு இடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு;
ஆலம்அது உண்ட மிடற்று எம் ஆலவாயான் திருநீறே.

mAloTu ayan2 aRiyAta vaNNamum uLLatu nIRu;
mEl uRai tEvarkaL tagkaL meyyatu veNpoTi-nIRu;
Ela uTampu iTar tIrkkum in2pam taruvatu nIRu;
Alam atu uNTa miTaRRu em AlavAyAn2 tirunIRE.

பொருள்: திருமாலோடு பிரமனுமறிய முடியாத வண்ணம் உள்ளது நீறு. வானுலகத்தவர்களான தேவர்களுடைய உடம்பில் பூசப்படுவது நீறு. உடம்பெடுக்கும் துன்பத்தைப் போக்கி இன்பத்தைத் தருவது நீறு. நஞ்சுண்ட கண்டனாகிய திருவாலவாயான் திருநீறே சிவகதி தரும்.

குறிப்புரை: மேல் – விண்ணுலகம். உறை – வாழ்கின்ற தேவர்கள். தங்கள் மெய்யது – தேவர்களுடைய உடம்பிற் பூசப்பட்டது. பொடி – நீறு. ஒரு பொருட் பல்பெயர். உடம்பு இடர் ஏலத்தீர்க்கும் இன்பம் – உடம்பெடுக்கும் துன்பத்தைப் பொருந்தப் போக்கும் இன்பம். உடம்பிலுள்ள இடருமாம். ஆலமது – நஞ்சு. மிடறு – திருக்கழுத்து.

Oh! It is Civan, our Lord in Thiru-aala-vaai. Our Lord Civan imbibed the poison that came out of the ocean and saved the entire universe. This Lord, addressed as Neelakandar, smears His body with the holy ashes. This ash could not be comprehended by Vishnu and Brahma with its peculiar skill. The celestials who live in the upper world smear their body with this holy ashes. This stops our rebirth again and again with its power to bring permanent, divine joy, it chases also physical ailments.

2187. குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறுகருதஇனியதுநீறு
எண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு
அண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்திருநீறே. 10

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூட,
கண் திகைப்பிப்பது நீறு; கருத இனியது நீறு;
எண்திசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு;
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே.

kuNTikaik kaiyarkaLOTu cAkkiyar kUTTamum kUTa,
kaN tikaippippatu nIRu; karuta in2iyatu nIRu;
eNticaippaTTa poruLAr Ettum takaiyatu nIRu;
aNTattavar paNintu Ettum AlavAyAn2 tirunIRE.

பொருள்: கமண்டலத்தை ஏந்திய கையராகிய கீழ்மக்கள் சமணருடன் சாக்கியர் கூட்டத்தினரைத் திகைக்கச் செய்தது நீறு. தியானிக்க இனிமையைத் தருவது நீறு. எட்டுத் திசையிலும் சிவமாகிய மெய்ப்பொருளை அடைந்தவரும் விரும்பினவரும்

வழிபடுவோருமாகிய சைவர் ஏத்தும் தகைமை உடையது நீறு. மேலுலகத்தவர் பணிந்து வழிபடும் திருவாலவாயான் திருநீறே சிவகதி தரும்.

குறிப்புரை: குண்டிகை – கமண்டலத்தை ஏந்திய. கையர்கள் – கீழ் மக்கள். கண் திகைப்பிப்பது – கண் திகைக்கச் செய்வது. கருத – தியானிக்க. எண் திசைப்பட்ட பொருளார் – எட்டுத் திசைகளிலும் பொருந்திய சிவமாகிய மெய்ப்பொருளை அடைந்தவரும். விரும்பினவரும். வழிபடுபவருமாகிய சைவர். அவர் ஏத்தும் தன்மையுடையது. அண்டத்தவர் – மேலுலகத்தவர்.

The devas and all other celestials who live in the upper world prostrate before our Lord and praise the holy ashes. The Jains who hold the water pot and the Buddhists - get stunned with bewildered eyes at the sight of this ashes. To pray it is easily pleasant. Those scholars with divine knowledge and conscious of Civan as God who has merged with the eight directions of the universe, praise the quality of the holy ashes.

2188. ஆற்றலடல்விடையேறுமாலவாயான்திருநீற்றைப்
போற்றிபுகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. 11

ஆற்றல் அடல் விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றி, புகலி நிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்,
தேற்றி, தென்னன் உடல் உற்ற தீப்பிணி ஆயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

ARRal aTal viTai ERum AlavAyAn2 tirunIRRaip
pORRi, pukali nilAvum pUcuran2 njAn2acampantan2,
tERRi, ten2n2an2 uTal uRRa tIppiNi Ayin2a tIrac
cARRiya pATalkaL pattum vallavar nallavar tAmE.

பொருள்: ஆற்றலும் கொல்லும் வலிமையும் உடைய விடையை ஊர்தியாக உடையவனாகிய ஆலவாயான் திருநீற்றைப் போற்றி, சீகாழிப் பூசுரன் (பூமியில் வாழும் தேவன்) ஞானசம்பந்தன் சிவத்தின் மாண்பினைத் தெளிவித்துப் பாண்டியனுடைய உடற்பிணி, உயிர்ப்பிணி ஆகிய தீய பிணிகள் தீரச் சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர்கள் நல்லவர்கள்.

குறிப்புரை: ஆற்றல் – வலிமை. அடல் – கொலை. இரண்டும் உடையது. விடை – ஆலவாயான் திருநீற்றைப் போற்றி – முதற் பத்துப் பாக்களால் திருவாலவாய் சிவனுடைய திருநீற்றைத் துதித்து. புகலி –

சீகாழி. பூசுரன் – பூமியிலுள்ள தேவர். தேற்றி – சைவத்தின் மாண்பைத் தெரிவித்து. தென்னன் – கூன்பாண்டியன். தீ பிணி – தீமையை விளைவிக்கும் நோய்கள். வல்லவர் எழுவாய். நல்லவர் பயனிலை.

Oh! It is Civan, our Lord of Thiru-aala-vaai. Our Lord Civan of Thiru-aala-vaai uses His bull for wandering, it is a very mighty animal and has the power to kill anybody, and He uses the holy ashes on His forehead and body. Our saint Thiru-gnana-Sambandar praises our Lord's holy ash used on His body. He also explained the divine fame of Saiva religion. And He fully cured the king Koonpandyan of the ailment he had in his body, because of the heat that was transferred to his body, from the mutt where our Thiru-gnana-Sambandar stayed. The suffering of the king was completely wiped out by the child saint with these ten verses. Those scholars who can repeat these ten verses will become good people in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

66ஆம் பதிகம் முற்றிற்று
End of 66th Hymn



திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 203 *பதிக எண்: 67*

67. திருபெரும்புலியூர் 67. THIRU-P-PERUM-PULIYOOR

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருப்பெரும்புலியூர் என்னும் இத்திருத்தலமானது புலிக்கால் முனிவரால் பூசிக்கப் பெற்றமையால் இப்பெயர் பெற்றது. சிதம்பரம் பெரும்பற்றப்புலியூர் என்று பெயர் பெறும். அதனின்று இது வேறு ஆகும். திருவையாற்றிற்கு வடமேற்கே சுமார் 3 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரி வடகரைத் தலங்களுள் ஒன்றாகும். இறைவரது திருப்பெயர் வியாக்ரபுரீசுவரர். இறைவியாரது திருப்பெயர் சௌந்தரிய நாயகி. இதற்கு திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்று உள்ளது.

பதிக வரலாறு

திருவையாற்றை நண்ணி வழிபடும் திருஞானசம்பந்தர் திருத்தொண்டர்களோடு அடைந்து பணிந்த தலங்களுள் முதலாவது இத்திருப்பெரும்புலியூர். அங்குள்ள திருக்கோயிலை அணைந்து போற்றிப் புனைந்த தமிழ்த்தொடை இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2189. மண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
விண்ணுமோர்பாகமுடையார்வேதமுடையவிமலர்
கண்ணுமோர்பாகமுடையார்கங்கைசடையிற்கரந்தார்
பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்பிரியாரே. 1

மண்ணும் ஓர் பாகம் உடையார்; மாலும் ஓர் பாகம் உடையார்;
விண்ணும் ஓர் பாகம் உடையார்; வேதம் உடைய விமலர்;
கண்ணும் ஓர் பாகம் உடையார்; கங்கை சடையில் கரந்தார்;
பெண்ணும் ஓர் பாகம் உடையார் - பெரும்புலியூர் பிரியாரே.

maNNum Or pAkam uTaiyAr; mAlum OrpAkam uTaiyAr;
viNNum Or pAkam uTaiyAr; vEtam uTaiya vimalar;
kaNNum Or pAkam uTaiyAr; kagkai caTaiyil karantAr;
peNNum OrpAkam uTaiyAr--perumpuliyUr piriyArE.

பொருள்: பெண்ணை ஓர் பாகமாக உடையார்; திருமாலையும் ஓர் பாகமாக உடையவர்; மண்ணையும் தன்மேனியில் ஒருபாகமாக உடையவர்; விண்ணையும் ஓர் பாகமாக உடையவர்; வேதத்தையும் உடைய விமலர்; கண்ணும் ஓர் பாகமாக உடையவர்; அவர் கங்கையைச் சடையில் கரந்தார்; அவர் திருப்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.
(தனது விசுவரூபத்தில் சிவபெருமான் மண்ணையும் மண்ணைப் படைக்கும் பிரமனையும், மண்ணைக் காக்கும் திருமாலையும், விண்ணையும் விண்ணில் கண்ணாக ஒளிரும் ஞாயிறையும் பாகமாக உடையவர். கபிலர் பாடிய பாடலைக் கபிலரது பாடல் என 6ஆம் வேற்றுமைச் செய்யுட் கிழமைபடக் கூறுதல் மரபு. அதுபோலச் சிவன் வேதத்தைச் செய்யுட் கிழமையாக உடையவர்.)

குறிப்புரை: சிவபெருமானது விசுவரூபத்தில் ஒவ்வொரு பாகம் மண்ணும், அம்மண்ணைப் படைக்கும் பிரமனும், காக்கும் மாலும், விண்ணும், கண்ணும், பெண்ணும் உடையவர். வேதத்தை (ச் செய்யுட் கிழமையாக) உடைய நிமலர். கங்கையைச் சடையில் ஒளித்தவர். உடையாரும், விமலரும், கரந்தாருமாகிய சிவபெருமான் புலியூர் பிரியார் என்க. உடையார் எழுவாய். பிரியார் பயனிலை. பெரும்புலியூர் செயப்படுபொருள். மேலும் இங்ஙனமே கொள்க.

Oh! It is Civan, our Lord in Thiru-p-perum-puliyoor. The famous big temple is called Perum-pattrap-puliyoor. Our Lord in Thiru-p-perum-puliyoor called Vyakrapureeswarar is manifest in Thiru-p-perum-puliyoor. He has taken the special form known as Viswaroopam. He is the Supreme Being as manifested in the whole universe - animate and inanimate in Himself. In this form our Lord is manifested as earth and sky. He is manifest in various forms. He manifests Himself as Thirumaal giving a portion in His viswaroopam to him. He has embedded His consort Uma Devi on the left side of His body. He is the creator of the four Vedas as Vimalan. He is a spotless holy being. Since He gave one half of His body to His consort, He has got one eye only. He supports the river Ganges in His matted hair.

2190. துன்னுகடற்பவளஞ்சேர்தூயனநீண்டதிண்டோள்கள்
மின்னுசுடர்க்கொடிபோலும்மேனியினாளொருகங்கைக்
கன்னிகளின்புனையோடுகலைமதிமாலைகலந்த
பின்னுசடைப்பெருமானார்பெரும்புகலியூர்பிரியாரே. 2

துன்னு கடல் பவளம் சேர் தூயன நீண்ட திண்தோள்கள்
மின்னு சுடர்க்கொடி போலும் மேனியினார்; ஒரு கங்கைக்
கன்னிகளின் புனையோடு கலைமதிமாலை கலந்த
பின்னுசடைப் பெருமானார் - பெரும்புகலியூர் பிரியாரே.

tun2n2u kaTal pavaLam cEr tUyan2a nINTa tiNtOLkaL
min2n2u cuTarkkoTi pOlum mEn2iyin2Ar; oru kagkaik
kan2n2ikaLin2 pun2aiyOTu kalaimatimAlai kalanta
pin2n2ucaTaip perumAn2Ar--perumpuliyUr piriyArE.

பொருள்: கடலில் நெருங்கித் தோன்றும் பவளத்தைப் போலத் தூயவும் நீண்டவுமாகிய திண்ணிய தோள்கள் சுடர்க்கொடி போலும் திருமேனியுடைய கங்கை எனும் கன்னிகளின் நீரோடு பிறைமதி, கலந்த பின்னிய சடையை உடைய பெருமானார் அவர் திரும்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.

குறிப்புரை: துன்னு – நெருங்கிய. பவளம் சேர் தோள்கள் – கடலிலுள்ள. பவளத்தை ஒத்த தோள்கள். தூயன தோள்கள். நீண்ட தோள்கள். திண்மை – உறுதி. சுடர்க்கொடி போலும் மேனியினாள் – சோதிக்கொடி போன்ற திருமேனி உடையவள். கங்கைக் கன்னிகள் புனையோடு – கங்கை நதியின் கிளைகளின் நீரொடு. நதிகளைப் பெண் பாலாகக் கொள்ளுதல் மரபு. நதிபதி எனக் கடலைக் கொள்ளுதலால் கன்னி என்பது பெண்ணென்னும் பொருட்டு. புனை – நீர். 'அனைவரும்ஷ கானகத்து அமுதளாவிய புனை வர உயிர்வரும் உலவை' (கம்பர். அகத்தியப் – 4). கலைமதிமாலை – பதினாறு கலைகளுடைய திங்கட்கன்னி. சிவபெருமான் சடைமேலுள்ளது. பிறையேயாயினும் மதிக்குரிய அடை கொடுத்துக் கூறுதல் உண்டு. சாதியடை. திருமுறையுள் ஆண்டாண்டுக் காண்க. புனையோடு மாலை கலந்த சடை. பின்னுசடை. சடையையுடைய பெருமானார்.

Oh! It is Civan, Lord of Thiru-p-perum-puliyoor. The river Ganges is personified as goddess of that river. Her shoulders are long and attractive, looking like the coral. Her body is bright like lightning; she looks like a vine with lean body. Other small branches of the river come and join the main big river Ganges. The baby moon with 16 phases also adorns our Lord along with the Ganges river and other minor rivers - all

bound in the matted hair looking like a garland. The Lord in Thiru-p-perum-puliyoor, adorned with these is manifested here as one who never leaves the place.

2191. கள்ளமதித்தகபாலங்கைதனிலேமிகஏந்தித்
துள்ளமிதித்துநின்றாடுந்தொழிலரெழில்மிகுசெல்வர்
வெள்ளநகுதலைமாலைவிரிசடைமேல்மிளிர்கின்ற
பிள்ளைமதிப்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. 3

கள்ளம் மதித்த கபாலம் கைதனிலே மிக ஏந்தி,
துள்ள மிதித்து நின்று ஆடும் தொழிலர்; எழில் மிகு செல்வர்;
வெள்ளம், நகுதலைமாலை, விரிசடை மேல் மிளிர்கின்ற
பிள்ளைமதிப் பெருமானார் - பெரும்புலியூர் பிரியாரே.

kaLLam matitta kapAlam kaitan2ilE mika Enti,
tuLLa mitittu nin2Ru ATum tozilar; ezil miku celvar;
veLLam, nakutalaimAlai, viricaTai mEl miLirkin2Ra
piLLai matip perumAn2Ar--perum puliyUr piriyArE.

பொருள்: கள்ளத்தைப் பொருளாகக் கொண்ட பிரமனது கபாலத்தைக் கையில் ஏந்தித் துள்ளி மிதித்து நின்று ஆடும் தொழிலை உடையவர்; அழகிய ஞானச் செல்வர்; கங்கை வெள்ளம் நகுதலை மாலை, இளம்பிறை ஆகியன விரிந்த சடைமேல் ஒளிர்கின்ற பெருமான் அவர் திருப்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.

குறிப்புரை: கள்ள மதித்த சுபாவம் – கள்ளத்தைக் கருதிய பிரமனது கபாலம். முதல் வினை சினைமேல் ஏற்றப்பட்டது. அதைக் கையில் ஏந்தித் துள்ள மிதித்து நின்று ஆடும் தொழிலை உடையவர் என்று சிவபெருமான் நடனமாடுங்காலத்துக் கபாலத்தைத் தாங்கியிருந்த உண்மை கூறப்பட்டது. எழில்மிகு செல்வர் – சென்று அடையாமையாகிய அழகுமிக்க செல்வத்தை உடையவர். வெள்ளம் – கங்கை. நகுதலை மாலை – சிரிக்கின்ற தலைகளின் வரிசை. பிள்ளைமதி – இளம்பிறை.

Oh! It is Civan, our Lord in Thiru-p-perum-puliyoor. Our Lord Civan carries in His hand one of the skulls of Brahma. He performs His vocation of the cosmic dance by carrying the skull in His hand, jumping and treading. He is the most attractive Supreme Being, wearing the Ganges river and a garland of smiling skulls. They look very bright on His matted hair. Here our Lord has kept the baby moon also on the

matted hair. This Lord is manifest in Thiru-p-perum-puliyoor without leaving this place.

2192. ஆடலிலையமுடையாரருமறைதாங்கியாறங்கம்
பாடலிலையமுடையார்பன்மையொருமைசெய்தஞ்சும்
ஊடலிலையமுடையார்யோகெனும்பேரொளிதாங்கிப்
பீடலிலையமுடையார்பெரும்புலியூர்பிரியாரே. 4

ஆடல் இலையம் உடையார்; அருமறை தாங்கி ஆறுஅங்கம்
பாடல் இலையம் உடையார்; பன்மை ஒருமை செய்து, அஞ்சும்
ஊடு அலில் ஐயம் உடையார்; யோகு எனும் பேர்ஒளி தாங்கி,
பீடு அல் இலையம் உடையார் - பெரும்புலியூர் பிரியாரே.

ATal ilaiyam uTaiyAr; arumaRai tAgki ARu agkam
pATal ilaiyam uTaiyAr; pan2mai orumai ceytu, anjcum
UTu alil aiyam uTaiyAr; yOku en2um pEr oLi tAgki,
pITu al ilaiyam uTaiyAr--perumpuliyUr piriyArE.

பொருள்: ஆடுதலில் தாள கதி உடையவர்; அரிய மறைகளோடு ஆறங்கங்களையும் பாடும் சங்கீத லயம் உடையார். பன்மையை ஒருமை செய்தும் ஐந்தும் ஊடல் இல்லையாகச் செய்தவர்; யோகம் என்னும் ஒளியைத் தாங்கி பெருமையுடைய நள்ளிரவில் லயம் (ஆடுதல்) உடையார். அவர் திருப்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.

குறிப்புரை: ஆடல் இலையம் – நடன லயம். ஆறு அங்கம் – சிக்கை. கற்ப சூத்திரம். வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிநி, சோதிடம் என்பன. பாடல் இலயம் – சங்கீத லயம். பண்மை ஒருமை செய்து – அநேகம் ஏகம் என்னும் நிலைகளைத் தோற்றி. அஞ்சும் – ஐம் பொறிகளும். ஊடலில் – ஊடுதலாலே (ஐம்பொறி அடக்கம் இல்லாதமையால்). ஐயம் உடையார் – மெய்ப்பொருள் நிச்சயமின்றி. ஐயப்படுதலுக்குரியார். யோகு – யோகம், யோக நெறி, ஒளிநெறியாதலின் யோகெனும் பேரொளி என்றார். பீடு அல் – பெருமையுடைய நள்ளிரவில். இலயமுடையார் – நட்டம் பயிலுதலுடையார், நள்ளிருளில் நட்டம் பயின்றாடும். ஆற்றல் யோகெனும் பேரொளி தாங்கியிருத்தல் கொண்டே 'உறைந்ததோர் ஒளியதாக்கி ஒடுங்கிடின் யோகபூசை' (ஞானபூசாகாரணம் 14) என்பதும், ஞானி யோகி கிரியா வான்முறையே அறிவிற்கறிவாகவும் அறிவில் ஒளியாகவும் அறிவில் மூர்த்தியாகவும் தியானிப்பர் என்பதும், 'மூன்றும் பெறின்புறப் பூசையாமே' (ஞான. 14) என்பதும். 'மூன்றும் உணர்வும் ஒளியும் மூர்த்தியும்' என்பதும் தருமையாதீனத்து முனிவருள் ஒருவராகிய ஸ்ரீமத் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் குறிப்புரையால் உணரத்தக்கன. இதனால் யோகியர் யோகெனும் பேரொளி தாங்கும் உண்மை புலப்படும்.

Oh! It is Civan, our Lord in Thiru-p-perum-puliyoor. Our Lord of Thiru-p-perum-puliyoor's vocation is to dance, whenever He decides to. He used to chant the songs of the six angaas. These six angaas praise the four Vedas. He sings them with full propriety in musical tone. He takes the shape of a single being as well as multifarious appropriate forms. He needs no control of the five senses. We, therefore, observe Him with fear. He does His dance in the dark midnight, with the bright light of His yogic power. This Lord of Thiru-p-perum-puliyoor is manifest in the temple in Thiru-p-perum-puliyoor without leaving this place.

2193. தோடுடையார்குழைக்காதிற்சுடுபொடியாரனலாடக்
காடுடையாரெரிவீசுங்கையுடையார்கடல்சூழ்ந்த
நாடுடையார்பொருளின்பநல்லவைநாளுநயந்த
பீடுடையார்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. 5

தோடு உடையார், குழைக்காதில்; சுடுபொடியார்; அனல்ஆடக்
காடு உடையார்; எரி வீசும் கை உடையார்; கடல் சூழ்ந்த
நாடு உடையார்; பொருள் இன்பம் நல்லவை நாளும் நயந்த
பீடு உடையார்; பெருமானார் - பெரும்புலியூர் பிரியாரே.

tOTu uTaiyAr, kuzaik kAtil; cUTupoTiyAr; an2al ATak
kATu uTaiyAr; eri vIcum kai uTaiyAr; kaTal cUznta
nATu uTaiyAr; poruL in2pam nallavai nALum nayan2ta
pITu uTaiyAr; perumAn2Ar--perumpuliyUr piriyArE.

பொருள்: குழையணிந்ததொரு காதில், தோடணிந்ததொரு காதில், இருகாதிலும் திருநீறணிந்து, காட்டில் எரியுடன் ஆடுபவர்; கையில் எரி ஏந்தியவர்; கடல் சூழ்ந்த நாட்டினை உடையவர்; அறம் பொருள் இன்பமான நல்லவைகளை விரும்பும் பெருமை உடையவர் பெருமானார் அவர் திருப்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.

குறிப்புரை: குழையணிந்ததொரு காதில். தோடணிந்ததொரு காதில். காதில் திருநீறணிதல் உணர்த்தப்பட்டது. காட்டில் தீயில் ஆடுபவர். கையில் எரி ஏந்தியவர். கடல் சூழ்ந்த நாடெல்லாம் உடையவர். பொருள் இன்பம் ஆகிய நல்லவற்றை நாள்தோறும் விரும்பி, அடியவர்க்கருளும் பெருமை உடையார்.

Oh! it is Civan, our Lord in Thiru-p-perum-puliyoor. Our Lord who never leaves the city in Thiru-p-perum-puliyoor wears in one of His ears the earring made of palm leaf. In the other ear He wears the earring made up of tender leaves. He applies the holy ashes all over His body. He desires to perform His avocation of dance on the burning ghat over fire during midnight. He holds in one of His hands the ball of fire. He is the Lord of the entire cosmos, which is surrounded by the oceans. He takes delight always in bestowing happiness and wealth. He is Lord of all the people, all the places and He resides permanently in Thiru-p-perum-puliyoor.

2194. கற்றதுறப்பணிசெய்துகாண்டுமென்பாரவர்தங்கள்
முற்றிதறிதுமென்பார்கள்முதலியர்வேதபுராணர்
மற்றிதறிதுமென்பார்கள்மனத்திடையார்பணிசெய்யப்
பெற்றிபெரிதுமுகப்பார்பெரும்புலியூர்பிரியாரே. 6

"கற்றது உறப்பணி செய்து காண்டும்" என்பார் அவர்தம் கண்;
"முற்று இது அறிதும்" என்பார்கள் முதலியர் வேதபுராணர்;
"மற்று இது அறிதும்" என்பார்கள் மனத்து இடையார்; பணி செய்ய,
பெற்றி பெரிதும் உகப்பார் - பெரும்புலியூர் பிரியாரே.

"kaRRatu uRap paNi ceytu kANTum" en2pAr avartam kaN;
"muRRu itu aRitum" en2pArkaL mutaliyar; vEtapurANar;
"maRRu itu aRitum" en2pArkaL man2attu iTaiyAr; paNi ceyya,
peRRi peritum ukappAr--perumpuliyUr piriyArE.

பொருள்: 'கற்றதனாலாய பயன் வாலறிவான் நற்றாள் தொழல்' என்று அறிந்து, தம்மை அடையத் திருப்பணி செய்வோருக்குக் கண்ணாகவும், இதனை முற்றும் அறிவோம் என்பார்க்கு முதல்வராகவும், வேதமும் புராணமுமாயிருப்பவர் (பழையோர்), இவை கூறும் பொருளை அறிவோம் என்பவர்களுடைய மனத்தில் இருப்பவர் ஆகிய இவர்கள் பணி செய்ய, அப்பணியின் தன்மையினைப் பெரிதும் மகிழ்ந்து அவர்களுக்கு அருள் செய்வர்; அவர் திருப்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.

குறிப்புரை: கற்றது உறப்பணி செய்து காண்டும் என்பார் அவர் தம் கண் – கற்றதனாலாய பயன் தம்மைப் பொருந்தத் திருப்பணி செய்து கடவுளைக் காண்போம் என்பார்க்கு அவர்தம் கண்ணாயுள்ளார். முற்று இது அறிதும் என்பார்கள் முதலியர் – இதனை முற்றும் அறிவோம் என்பவர்களுக்கு முதல்வராயிருப்பவர். வேதபுராணர் – வேதமும் புராணமுமாயிருப்பவர். வேதத்தால் உணர்த்தப்படும் பழையோர். மற்று இது

அறிதும் என்பார்கண் மனத்திடையார் – இதைப் பின்னே அறிவோம் என்பாருடைய மனத்தில் இருப்பவர். பணி செய்யப் பெற்றி பெரிதும் உகப்பார் – திருத்தொண்டு செய்துவரின் அத்தொண்டின் தன்மையையும் தொண்டர் தன்மையையும் மிக விரும்பி அருள் செய்வார்.

Oh! It is Civan, our Lord in Thiru-p-perum-puliyoor. Great scholars with divine knowledge study deeply and do service to Lord with firm faith that they will see God. For such people our Lord delights them in their mind being their eyes. Those people who have firm faith that they have full knowledge about divinity are graced by Him as the first and as creator of Vedas and Puranaas. There are certain people who do have in their mind that they will learn this at a later stage. For such people also He delights them in their mind. He takes special care of His devotees and takes delight in all of them. This Lord is manifest in Thiru-p-perum-puliyoor without leaving this place forever.

2195. மறையுடையாரொலிபாடல்மாமலர்ச்சேவடிசேர்வார்
குறையுடையார்குறைதீர்ப்பார்குழகரழகர்நம்செல்வர்
கறையுடையார்திகழ்கண்டங்கங்கைசடையிற்கரந்தார்
பிறையுடையார்சென்னிதன்மேற்பெரும்புலியூர்பிரியாரே. 7

மறை உடையார், ஒலிபாடல்; மா மலர்ச்சேவடி சேர்வார்,
குறை உடையார், குறை தீர்ப்பார்; குழகர்; அழகர்; நம் செல்வர்;
கறை உடையார், திகழ் கண்டம்; கங்கை சடையில் கரந்தார்;
பிறை உடையார், சென்னிதன்மேல்; - பெரும்புலியூர் பிரியாரே.

maRai uTaiyAr, olipATal; mA malarccEvaTi cErvAr,
kuRai uTaiyAr, kuRai tIrppAr; kuzakar, azakar; nam celvar;
kaRai uTaiyAr, tikaz kaNTam; kagkai caTaiyil karantAr;
piRai uTaiyAr, cen2n2itan2mEl;--perum puliyUr piriyArE.

பொருள்: வேதாகமங்களை உடையவரும், ஒலிக்கின்ற பாடல்களாலே அழகிய தாமரை மலர் போலும் சிவந்த திருவடிகளை இடைவிடாது நினைப்பவர்களும், மனக்குறை உடையவர்களும் ஆகிய அனைவரது குறையையும் தீர்ப்பர். இளைஞர், அழகர், நம்முடைய செல்வர், கண்டக் கறையுடையார், கங்கையைச் சடையில் கரந்தார், சென்னியின் மேல் பிறையுடையார்; அவர் திருப்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.

குறிப்புரை: வேதங்களுடையவரும், ஒலிக்கின்ற பாடல்களாலே அழகிய தாமரை மலர்போலும் சிவந்த திருவடிகளை இடைவிடாது நினைப்பவர்களும், மனக்குறை உடையவர்களும் ஆகிய எத்திறத்தாருடைய குறைகளையும் தீர்ப்பார். இளைஞர், சொக்கர், நம் செல்வர், நீலகண்டர், கங்கைச் சடையர், சந்திரசேகரர்.

Oh! It is Civan, our Lord of Thiru-p-perum-puliyoor. These Vedic scholars on hearing their songs, think of the holy feet of our Lord without any break. If people have any mental suffering our Lord will drive it out of their life. Our Lord is always young. He is the most attractive being. He is our real asset. He imbibed the poison and keeps it at His throat. He retains the moon on His matted hair. He supports the Ganges on His head without any visibility to others. This Lord of Thiru-p-perum-puliyoor never leaves the city of Thiru-p-perum-puliyoor.

2196. உறவியுமின்புறுசீருமோங்குதல்வீடெளிதாகித்
துறவியுங்கூட்டமுங்காட்டித்துன்பமுமின்பமுந்தோற்றி
மறவியன்சிந்தனைமாற்றிவாழவல்லார்தமக்கென்றும்
பிறவியறுக்கும்பிரானார்பெரும்புலியூர்பிரியாரே. 8

உறவியும் இன்புஉறு சீரும் ஓங்குதல், வீடு எளிதுஆகி,
துறவியும் கூட்டமும் காட்டி, துன்பமும் இன்பமும் தோற்றி,
மறவி அம் சிந்தனை மாற்றி, வாழ வல்லார் தமக்கு என்றும்
பிறவி அறுக்கும் பிரானார் - பெரும்புலியூர் பிரியாரே.

uRaviyum in2pu uRu cIrum Ogkutal, vITu eLitu Aki,
tuRaviyum kUTTamum kATTi, tun2pamum in2pamum tORRi,
maRavi amcintan2ai mARRi, vAza vallArtamakku en2Rum
piRavi aRukkum pirAn2Ar--perumpuliyUr piriyArE.

பொருள்: உறவும் இன்பமும் ஓங்கும் சிறப்பும், வீடு அடைதலும் எளிதாகி முத்தியும் பந்தமும் காட்டி, துன்பமும் இன்பமும் தோன்றச் செய்து, மறக்கும் மனத்தினை மாற்றி, வாழ வல்லவர்களுடைய பிறப்பினை அறுக்கும் பிரானார்; அவர் திருப்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.

குறிப்புரை: உறவியும் இன்புறு சீரும் ஓங்குதல் – உறவும் இன்பம் மிக்க சிறப்பும். உயர்தல் – எளிதாகி – வீடு எளிதாகி. பற்றற்றொழிதல் எளிதாகி. துறவியும் கூட்டமும் காட்டி – முத்தியும் பந்தமும் காட்டி. துன்பமும் இன்பமும் தோற்றி – துக்கமும் சுகமும் ஆக்கி. மறவி அம்சிந்தனை மாற்றி – மறத்தல் உடைய

கருத்தை ஒழித்து. வாழ வல்லவர் தமக்குப் பிறத்தல் என்றும் இல்லாமல் போக்கும் பிரானார். இத்திருப்பாடல் எல்லாருள்ளத்தும் என்றும் நிற்கத்தக்கது.

Oh! It is Civan, our Lord of Thiru-p-perum-puliyoor. Our Lord Civan who is called Vyakrapureeswarar in this city helps the human souls in many ways and stops rebirth of such souls and gives eternal bliss finally. He shows all extremes - life of detachment and life of attachment, and happiness and sufferings due to the above. Then He makes the change in thoughts and attitude in the worldly matters showing austerity against materialism. He finally makes the souls to think of Him always without forgetting and increases the happiness of the souls. He also graces and gives them the eternal bliss forever. He finally makes them not to forget Him forever. This Lord is manifest in the temple in the city Thiru-p-perum-puliyoor and will never leave this place.

2197. சீருடையாரடியார்கள்சேடரொப்பார்சடைசேரும்
நீருடையார்பொடிப்பூசும்நினைப்புடையார்விரிகொன்றைத்
தாருடையார்விடையூர்வார்தலைவரைந்நூற்றுப்பத்தாய
பேருடையார்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. 9

சீர் உடையார்; அடியார்கள்சேடர்; ஒப்பார்; சடை சேரும்
நீர் உடையார்; பொடிப் பூசும் நினைப்பு உடையார்; விரிகொன்றைத்
தார் உடையார்; விடை ஊர்வார்; தலைவர்; ஐந் நூற்றுப் - பத்துஆய
பேர் உடையார்; பெருமானார் - பெரும்புலியூர் பிரியாரே.

cIr uTaiyAr; aTiyArkaL cETar; oppAr; caTai cErum
nIr uTaiyAr; poTip pUcum nin2aippu uTaiyAr; virikon2Rait-
tAr uTariyAr; viTai UrvAr; talaivar; ain nURRup-pattu Aya
pEr uTaiyAr; perumAn2Ar--perumpuliyUr piriyArE.

பொருள்: பெருமையுடையார்; அடியவர்களின் உடையான் (சுவாமி); சடைமேல் சேரும் கங்கையை உடையார்; திருநீறு பூசும் திருவுள்ளமுடையார்; விரிந்த கொன்றைப் பூமாலையை உடையவர்; இடபத்தை ஊர்வர்; எவ்வுயிர்க்கும் உலகிற்கும் தலைவர்; அவர்தம் அடியார் திருப்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.

குறிப்புரை: சீர் – கனம். உடையார் – சுவாமி. அடியார்கள் சேடர் ஒப்பார் – அடியார்களுக்கெல்லாம் பெரியோரைப் போல்வார். சடைசேரும் கங்கை உடையார். திருநீறு பூசும் திருவுள்ளம் உடையார். விரிந்த கொன்றைமாலை அணிந்தவர். எருது ஊர்வார். எவ்வுலகிற்கும் எவ்வுயிர்க்கும் தலைவர். ஐயாயிரம் பேர் உடையார்.

Oh! It is Civan, our Lord in Thiru-p-perum-puliyoor. To the devotees who are very famous people, our Lord is the greatest. He supports the river Ganges in His matted hair. Always He remembers to smear His body with holy ashes. He wears the bright garland of cassia flowers on His head. He sustains the white bull for conveyance to move around the cosmos. He is the Chief of everything. He is named with 100 good names. He is manifest as the Supreme Being in Thiru-p-perum-puliyoor. This Lord never leaves the city of Thiru-p-perum-puliyoor and stays there happily.

2198. உரிமையுடையடியார்களுள்ளுறவுள்கவல்லார்கட்
கருமையுடையனகாட்டியருள்செயுமாதிமுதல்வர்
கருமையுடைநெடுமாலுங்கடிமலரண்ணலுங்காணாப்
பெருமையுடைப்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. 10

உரிமை உடைய அடியார்கள் உள்உற உள்க வல்லார்கட்கு
அருமை உடையன காட்டி, அருள்செயும் ஆதிமுதல்வர்;
கருமை உடை நெடுமாலும், கடிமலர் அண்ணலும், காணாப்
பெருமை உடைப் பெருமானார் - பெரும்புலியூர் பிரியாரே.

urimai uTaiya aTiyArkaL uL uRa uLka vallArkaTku
arumai uTaiyan2a kATTi, aruL ceyum Atimutalvar;
karumai uTai neTumAlum, kaTimalar aNNalum, kANAp
perumai uTaip perumAn2Ar--perumpuliyUr piriyArE.

பொருள்: திருவருள் பெறுவதற்கு உரிமை உடைய அடியார்கள் உள்ளத்தில் நினைக்க வல்லார்களுக்கு, அவர்கள் காண்பதற்கு அரியனவற்றையெல்லாம் காட்டி அருள் செய்யும் அநாதி முதல்வன். கரிய நிறமுடை நெடுமாலும் தாமரை மலர் மேல் இருக்கும் பிரமனும் காண முடியாத பெருமை உடைய பெருமானார்; அவர் திருப்பெரும்புலியூரை விட்டுப் பிரியார்.

குறிப்புரை: உரிமை உடைய . . . முதல்வர் – திருவருள் உரிமை உடைய அடியவர்களின் உள்ளத்தில் மிக நினைக்க வல்லவர்கட்குக் காண்டற்கருமையுடையனவற்றைக் காட்டி அருள் செய்யும் அநாதி முதல்வன். ஆதி முதல்வன் என்பது ஆதிக்கும் ஆதியாய அநாதி முதல்வரை உணர்த்திற்று. மாயோனும் மலரவனும் காணாத தீப்பிழம்பாகிய பெருமை உடைய பெருமான்.

Oh! It is Civan, our Lord of Thiru-p-perum-puliyoor. To those devotees who claim kinship and respectful friendship with our Lord and to those who concentrate on their mind on our Lord's holy feet, our Lord shows everything which they cannot see normally and graces them. He is the Chief and the origin of all the commencement and the cosmos. The black coloured Thirumaal and Brahma, the four-headed creator who is seated in the sweet smelling lotus flower, could not see our Lord. This Lord is manifest in the temple in Thiru-p-perum-puliyoor and never will leave this place.

2199. பிறைவளரும்முடிச்சென்னிப்பெரும்புலியூர்ப்பெருமானை
நறைவளரும்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
மறைவளருந்தமிழ்மாலைவல்லவர்தந்துயர்நீங்கி
நிறைவளர்நெஞ்சினராகிநீடுலகத்திருப்பாரே. 11

பிறை வளரும் முடிச் சென்னிப் பெரும்புலியூர்ப் பெருமானை,
நறை வளரும் பொழில் காழி நல்-தமிழ் ஞானசம்பந்தன்,
மறை வளரும் தமிழ்மாலை வல்லவர், தம் துயர் நீங்கி,
நிறை வளர் நெஞ்சினர் ஆகி, நீடு உலகத்து இருப்பாரே.

piRai vaLarum muTic cen2n2ip perumpuliyUrp perumAn2ai,
naRai vaLarum pozil kAzi nal-tamiz njAn2acampantan2,
maRai vaLarum tamizmAlai vallavar, tam tuyar nIgki,
niRai vaLar nenjcin2ar Aki, nITu ulakattu iruppArE.

பொருள்: பிறை தேய்தலின்றி வளரும் முடியைக் கொண்ட சிரமுடைப் பெரும்புலியூர்ப் பெருமானை, தேன் வளரும் மலர்ச்சோலைகள் சூழ்ந்த காழிநகர் நற்றமிழ் பாடும் ஞானசம்பந்தன் பாடிய வேதப்பொருள் வளரும் தமிழ்மாலையாகிய இந்தப் பதிகத்தை வல்லவர், தம்முடைய துயர் நீங்கி, திருத்தி மிக்க உளத்தினராகி இருப்பர்.

குறிப்புரை: பிறை தளர்தலின்றி வளர்ந்து கொண்டேயிருக்கும். சடைமுடியைக் கொண்ட தலையை உடைய பெருமான். நறை – தேன். பொழில் – சோலை. நற்றமிழ் – திருப்பதிகங்கள். மறை வளரும் தமிழ்

மாலை – இத்திருப்பதிகம். வல்லவர் எழுவாய். இருப்பார் – பயனிலை. அவர்க்குத் துயர் நீக்கமும், நெஞ்சுவளர் நிறையும் உளவாகும்.

Oh! It is Civan, our Lord in Thiru-p-perum-puliyoor. The baby moon in the matted hair of our Lord grows on gradually and becomes larger and larger day by day. Our saint Thiru-gnana-Sambandar hails from the city of Seerkaazhi. In this city, forest areas are plenty with plants and trees with fine flowers dripping honey. He came to the temple and prostrated before our Lord, and then started singing Tamil verses, which developed like Vedas. Those who study and memorise and sing these ten Tamil verses will find their suffering disappear and will experience heartfelt joy. Also they will live in the celestial world forever.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

67ஆம் பதிகம் முற்றிற்று
End of 67th Hymn



திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 204 பதிக எண்: 68

68. திருக்கடம்பூர் / 68. THIRU-K-KADAMBOOR

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருக்கடம்பூர் என்னும் இத்திருத்தலமானது சிதம்பரம் வட்டம் காட்டுமன்னார் கோயிலுக்கு 5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரி வடகரைத் தலங்களுள் முப்பத்து நான்காவது தலமாகும். சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்குடி வழியாக எய்யலூர் செல்லும் பேருந்தில் கடம்பூர் செல்லலாம். தேவாரப்பாடல் பெற்ற கோயில் மேலக்கடம்பூரில் உள்ளது.

ஊரின் பெயர் கடம்பூர் ஆயினும் இங்குள்ள கோயிலுக்குக் கரக்கோயில் என்று பெயர். இது 'தென்கடம்பைத் திருக்கரக்கோயிலான்' என்னும் இவ்வூர்த் தேவாரப் பகுதியால் அறியக் கிடக்கின்றது. இதன் உண்மைக் காரணத்தை ஆராய்ச்சியாளர் இன்னும் ஆராய்ந்து கொண்டு இருக்கின்றார்கள். புலப்படவில்லை. இத்தலத்தை வணங்கிய இந்திரன் இதனைத் தன் உலகத்திற்குக் கொண்டுபோக நினைத்துப் பாதாளம்வரை தோண்டியும் அஃது அப்பாலும் ஊடுருவிப் போவது கண்டு அஞ்சி, முன்போல் அமைத்துப் பூசித்து அமிர்தம் உண்டாகும்படி வரம் பெற்றனன் என்ற வரலாறு கருதிக் கரக்கோயில் எனப்படும் என்பர் என்று திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தாம் அருமையாக எழுதிய பெரியபுராண உரையில் குறித்திருக்கின்றார்கள் (திருத்தொண்டர் புராணம் பகுதி – 4. பக்கம் 287).

இறைவர் திருப்பெயர் அமிர்தகடேசர். இறைவியார் திருப்பெயர் சோதிமின்னம்மை. தேவேந்திரன் பூசித்துப் பேறு பெற்றான். இத்தலத்திற்கு திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசர் பதிகம் இரண்டு ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன. கோயில் கர்ப்ப இல்லின் அடிப்பாகம் இரத வடிவில் குதிரைகள் பூட்டிய நிலையில் இருக்கின்றது. இக்கடம்பூர்க்கும் கிழக்கே 1.5 கி.மீ. தூரத்தில் கடம்பூர் இளங்கோயில் இருக்கின்றது. இது முற்றிலும் இடிந்து போய் உள்ளது.

பதிக வரலாறு

வாழ்கொளிபுத்தூரில் வழிபட்டு வந்த திருஞானசம்பந்தர் பார்புகழ் பதிகங்கள் பாடி வார்பொழிற் கடம்பையும் வணங்கி மகிழ்ந்தபொழுது அருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2200. வானமர்திங்களும்நீரும்மருவியவார்சடையானைத்
தேனமர்கொன்றையினானைத்தேவர்தொழப்படுவானைக்
கானமரும்பிணைபுல்கிக்கலைபயிலுங்கடம்பூரில்
தானமர்கொள்கையினானைத்தாள்தொழவீடெளிதாமே. 1

வான் அமர் திங்களும் நீரும் மருவிய வார்சடையானை,
தேன் அமர் கொன்றையினானை, தேவர் தொழப்படுவானை,
கான் அமரும் பிணை புல்கிக் கலை பயிலும் கடம்பூரில் -
தான் அமர் கொள்கையினானை, தாள் தொழ வீடு எளிதுஆமே.

vAn2 amar tigkaLum nIrum maruviya vAr caTaiyAn2ai,
tEn2 amar kon2Raiyin2An2ai, tEvar tozappaTuvAn2ai,
kAn2 amarum piNai pulkik kalai payilum kaTampUril-
tAn2 amar koLkaiyin2An2ai, tAL toza, vITu eLitu AmE.

பொருள்: ஆகாயத்தில் பொருந்திய பிறையும் கங்கையாகிய நீரும் மருவிய நீண்ட சடையுடையானை, தேன் பொருந்திய கொன்றைப்பூ மாலையனை, தேவர்களால் தொழப்படும் தேவனை, முல்லைக்காட்டில் வாழும் பெண்மானுடன் கலைமான் பயிலும் திருக்கடம்பூரில் விரும்பித் தங்கும் கருத்துடையவனை, அவனுடைய தாள்களைத் தொழ, வீடுபேறு எளிதாகும்.

குறிப்புரை: வான் – ஆகாயத்தில். அமர் – பொருந்திய. திங்களும் – பிறையும். நீரும் – கங்கையும். மருவிய – கலந்த. வார் – நீண்ட. தேவர் தொழப்படுவானை – 'தெழுபபடுந் தேவர் தொழப்படுவானைத் தொழுதபின்னைத் தொழப்படுந் தேவர் தம்மால் தொழுவிக்கும் தன் தொண்டரையே' (தி. 4 ப. 112 பா. 5) என்றவாறு. தன் அடியாரையும் தேவர் தொழுவர் எனின், தன் (பரமசிவ)னைத் தொழுதலில் ஐயமுண்டோ?. கான் – காடு. பிணை – பெண் மான். கலை – ஆண்மான். கடம்பூர் – கடம்பு மரம் உள்ள ஊர். தலவிருட்சம். 'கானமரும் பிணைபுல்கிக் கலைபயிலுங் கடம்பூர்' என்றதால் கடம்பங்காடும் ஆகும்.

The Lord's long matted hair is decorated with the moon and the Ganges - all are in a way adornment to our Lord. He wears the garland of cassia flowers with honey in them. He is worshipped by all the devas. The city is surrounded by forest areas, where the male deer embraces the female one joyfully in the forest. In such a rich and attractive city our Lord is manifest in the temple in the city. Those devotees who worship His holy feet will reach heaven easily.

2201. அரவினொடாமையும்பூண்டுஅந்துகில்வேங்கையதளும்
விரவுந்திருமுடிதன்மேல்வெண்டிங்கள்சூடிவிரும்பிப்
பரவுந்தனிக்கடம்பூரிற்பைங்கண்வெள்ளேற்றண்ணல்பாதம்
இரவும்பகலும்பணியஇன்பநமக்கதுவாமே. 2

அரவினொடு ஆமையும் பூண்டு, அம் துகில் வேங்கைஅதளும்
விரவும் திருமுடி தன்மேல் வெண்திங்கள் சூடி, விரும்பிப்
பரவும் தனிக் கடம்பூரில் பைங்கண் வெள்ஏற்று அண்ணல் பாதம்
இரவும் பகலும் பணிய இன்பம் நமக்கு அது ஆமே.

aravin2oTu Amaiyum pUNTu, am tukil vEgkai ataLum,
viravum tiru muTi tan2 mEl veNtigkaL cUTi, virumpip
paravum tan2ik kaTampUril paigkaN veL ERRu aNNal pAtam
iravum pakalum paNiya, in2pam namakku atu AmE.

பொருள்: பாம்பினொடு ஆமை ஓட்டினையும் பூண்டு அழகிய துகிலும் வேங்கைப் புலியின் தோலும் கலக்கும். அழகிய சென்னிமேல் வெண்பிறை சூடி பரவப்படும் திருக்கடம்பூரில் பசிய கண்களையுடைய வெள்ளேற்று அண்ணலின் பாதத்தை இரவும் பகலும் பணிய நமக்கு அது இன்பம் ஆகும்.

குறிப்புரை: அரவு – பாம்பு. ஆமை – முற்றலாமை இளநாகமோடு ஏனமுளைக் கொம்பவை பூண்டு. அம்துகில் வேங்கை அதள் – அழகிய புலித்தோலாகிய ஆடை. முடிமேல் திங்கள். சூடி விரும்பிப் பரவுங் கடம்பூர் என்க. அம்பிகைக்குரிய துகிலும், அரனுக்குரிய அதளும் விரவும் (– கலக்கும்) எனலுமாம். பரவும் – எழுந்தருளிய. சூடி விரும்பி எழுந்தருளிய கடம்பூர் என்று கொள்ளாக்கால், வினைமுடிபு பொருந்தாது. பரவுதல் – வாழ்த்துதல். துதித்தல் என்று பொருள் படுதல் ஈண்டு பொருந்தாது. இதில், சூடுதலும், விரும்புதலும், பரவுதலும் இறைவன் வினையாதல் வேண்டும். சூடி என்பதைப் பெயராகக் கொண்டு கூறலாம் எனினும், பூண்டு சூடி விரும்பிப் பரவும் என்று தொடர்தலால் இடையில் ஒரு வினையெச்சத்தை மட்டும் பெயராக் கோடல் யாங்ஙனம்? அதளும் விரவும் முடி எனல் விளங்கிற்றிவது. பைங்கண் வெள்ளேறு – பசிய கண்களையுடைய வெள் விடை. ஏற்றண்ணல் – எருதூரும் பெருமானார். இரவும் பகலும் பாதம் பணிய நமக்கு இன்பமது ஆம் என்க. விரும்பிச்சூடி – அதளும் விரும்பி என்று பொருத்தினும் பொருந்தல் இல்லை. அதளும் விரவும் திருமுடி என்று கொண்டு அரையில் உடுத்த புலித்தோல் முடியையும் மறைத்துச் சுற்றியிருந்ததோ என்று எண்ணுவாரும் உளர்.

Our Lord Civan is manifest in Thiru-k-kadamboor. He dons His body with snakes and tortoise shells. He wears the good-looking tiger's hide as His dress. In His attractive head He retains the white moon. He uses the white bull for His conveyance. The eyes of the bull are like fire. Those devotees who prostrate before the holy feet of our Lord day and night and worship Him with devotion will have happiness throughout their life.

2202. இளிபடுமின்சொலினார்களிருங்குழல்மேலிசைந்தேறத்
தெளிபடுகொள்கைகலந்ததீத்தொழிலார்கடம்பூரில்
ஒளிதருவெண்பிறைசூடியொண்ணுதலோடுடனாகிப்
புலியதளாடைபுனைந்தான்பொற்கழல்போற்றுதுநாமே. 3

இளி படும் இன்சொலினார்கள் இருங்குழல்மேல் இசைந்து ஏற,
தெளிபடு கொள்கை கலந்த தீத் தொழிலார் கடம்பூரில் -
ஒளிதரு வெண்பிறை சூடி, ஒண்ணுதலோடு உடன்ஆகி, -
புலிஅதள்ஆடை புனைந்தான் பொன்கழல் போற்றுதும், நாமே.

iLi paTum in2colin2ArkaL irugkuzalmEl icaintu ERa,
teLipaTu koLkai kalanta tIt tozilAr kaTampUril--
oLitaru veNpiRai cUTi, oNNUtalOTu uTan2 Aki,--
puli ataL ATai pun2aintAn2 pon2kazal pORRutum, nAmE.

பொருள்: இனி என்னும் இசையினிமையுடைய சொல் பேசும் மகளிருடைய கரிய கூந்தலுக்கு இசைந்து, ஏறத் தெளிந்த வேதக் கோட்பாட்டுடன் வேள்வித் தொழில் புரியும் மறையோர்கள் வாழும் திருக்கடம்பூரில் ஒளியதாகிய நெற்றியையுடைய உமாதேவியாருடன் ஒளிவீசும் வெண்பிறை சூடி, புலித்தோலாடை அணிந்த சிவபெருமானின் பொற்கழலினைப் போற்றுவோம் நாம்.

குறிப்புரை: இளி – (யாழின் நரம்புகளுள் ஒன்று). ஏழிசையுள் ஒன்று. சொல்லினிமையும் இளி என்னும் இசையினிமையும் வேறுபடாது இருக்கும் என்றபடி. (சொல்லினிமைக்கு ஒவ்வாது இளியும் படும் எனலும் ஆம்). குழல் – கூந்தல். குழல்மேல் புகை இசைந்து ஏறத் தீத்தொழில் ஆர் கடம்பூர் எனலுமாம். ஏற என்னும் வினையெச்சம். ஆர் என்னும் வினைப்பகுதியொடு முடிந்தது. கலந்த என்பதனொடு முடித்தலும் கூடும். ஏறக் கொள்(ளும்) கை எனல் வலிந்து பொருள் கொள்வதாகும். ஏறத் தெளி(த்தல்) என்று பொருத்தலுங்கூடும். யாகத்தில் இருபத்தேழு நட்சத்திரப் பெண்டிர்க்கும் தீவழி உதவும் வேதவுண்மை குறிக்கப்பட்டது. தெளிபடு கொள்கை – தெளிவு பொருந்திய கோட்பாடு. வேதக்கொள்கை. தீத்தொழில் – வேள்வி. ஆர் – பொருந்தி. தீத்தொழிலார் – வேள்வியாளர் எனலுமாம். ஒளி தருபிறை – வெண்பிறை.

ஒள் நுதல் – ஒளியதாகிய நெற்றியை உடைய உமாதேவியார். பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை. 'பண்பு தொகவருஉம் கிளவியானும் . . . ஈற்று நின்றி யலும் அன்மொழித் தொகையே' (தொல். சொல் . 902). 'பண்புத் தொகை படவும் . . . அச்சொற்றொக்கபின் அத்தொகை அன்மொழித் தொகையாகாமையின், தொகுவதன்முன் அவற்றிற்கு நிலைக்களமாகிய சொற்பற்றி வரும்' (பிரயோக விவேகம் – 24 உரை). ஒடு உடன் இரண்ட பற்றிவரும் (பிரயோக விவேகம் – 24 உரை). ஒடு உடன் இரண்டனுள் ஒன்று மூன்றனுருபின் நீட்சி (தொல்காப்பியர் 'ஒடு' என்றே கூறினார்). மற்றொன்று உடனாதல் (ஒருசேர இருத்தல்) குறித்தது. 'எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைந்தால் அங்கே வந்து என்னோடும் உடனாகி நின்றருளி' (தி. 7 பா. 230) என்புழிக் காண்க. ஒடுடன் கூடி என்றலும் உண்டு. சூடி உடனாகிப் புனைந்தான் என்றியைக்க. புலி அதன் ஆடை – புலித்தோலுடையை. புனைந்தான் – அணிந்த சிவபிரான். பொன் கழல் – பொன் போலுஞ் சேவடி. கழல் – ஆகுபெயர். நாம் கழலைப் போற்றுதும் (போற்றுவோம்). 'கள்' வண்டு என்பாருமுளர். இதன் பொருளமைதி புலப்பட்டிலது.

In the city of Thiru-k-kadamboor, scholarly Brahmins offer oblations in the consecrated fire everyday. The girls who speak tender words in musical tone gather round the oblation and hold their hair in the smoke of the holy fire get it dried. In such a sacred city of Thiru-k-kadamboor very bright dazzling white moon dons our Lord's matted hair. He is manifest in the temple along with His consort Uma Devi wearing on His loins the tiger skin. Let us all with sincere devotion prostrate before Him and praise Him and worship Him.

2203. பறையோடுசங்கமியம்பப்பல்கொடிசேர்நெடுமாடம்
கறையுடைவேல்வரிக்கண்ணார்கலையொலிசேர்கடம்பூரில்
மறையொலிகூடியபாடல்மருவிநின்றாடல்மகிழும்
பிறையுடைவார்சடையானைப்பேணவல்லார்பெரியாரே. 4

பறையோடு சங்கம் இயம்ப, பல்கொடி சேர் நெடுமாடம்
கறை உடை வேல் வரிக்கண்ணார் கலை ஒலி சேர் கடம்பூரில் -
மறையொலி கூடிய பாடல் மருவி நின்று, ஆடல் மகிழும்
பிறை உடை வார்சடையானைப் பேண வல்லார் பெரியாரே.

paRaiyoTu cagkam iyampa, palkoTi cEr neTumATam
kaRai uTai vEl varikkaNNAr kalai oli cEr kaTampUril--
maRaiyoli kUTiya pATal maruvi nin2Ru, ATal makizum--
piRai uTai vArcaTaiyAn2aip pENa vallAr periyOrE.

பொருள்: பறை முதலிய இசைக்கருவிகளும் சங்கும் ஒலிக்க, கொடிகள் பல சேர்ந்த நெடிய மாடங்களில் குருதிக் கறை படிந்த வேல்போலச் செவ்வரி படர்ந்த கண்களையுடைய இளமகளிரின் ஆடல்பாடல்களாகிய கலைகளின் ஒலி கூடிய திருக்கடம்பூரில் வேத ஒலியுடன் ஆடலை மகிழும் பிறையணிவார் சடையானைப் பேண வல்லவர்களே பெரியவர்கள்.

குறிப்புரை: பறை – வாத்தியம். சங்கம் – சங்குகள். இயம்ப – ஒலிக்க. கறை – குருதிக் கறை, கறுப்பு, வேல், பிறருடம்பிற்பட்டு, இரத்தம் தோய்ந்து உலர்ந்து கறுப்புறுதல் கூறப்பட்டது. சாதியடை. கண்ணுக்குச் செவ்வேல். அதன் கொடுமையும் கூர்மையும் செம்மையும் பற்றி ஒப்பாகும். கலை – மேகலை. மாடங்களில் மகளிர் ஆடுதலால் உண்டாகும் ஒலி. மறை ஒலி – வேத முழக்கம். பாடல் – வேதகீதம். ஆடல் மகிழும் சடையான். வார் – நீண்ட. பேணவல்லார் – விரும்பி வழிபடவல்லார் – பெரியார் – திருவருட்பெருமை உடையோர். பேணவல்லார் – வித்தும் அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம். வித்தும் அதன் அங்குரமும் மெய் உணரில் – வித்ததனிற் காணாமையால், அதனைக் கைவிடுவர். கண்டவர்கள், பேணாமையால் அற்றால் பேறு (திருக்களிற்றுப்படியார் 57) என்னும் உண்மை நூலின் கண் பேணாமையாலாம். பெறாமை கூறுமுகத்தான் பேண வல்லார் பெருமை உணர்த்தப்பட்டமை விளங்கும்.

The city is full of all sorts of noises from all places of devotion. The noise of the drum and the blowing sound of the conch are heard everywhere. There are many palatial buildings with many staircases. At the top of the building the flags in many colours always swing in the air. Many young girls join together and dance and sing. The musical instruments make music. All such sounds are plentifully heard all around the city. The Vedic scholars chant the Vedas and sing songs also. They then dance and the Lord accepts it merrily. Our Lord with long matted hair with the crescent is manifested in this city. Those who sing in praise of our Lord will be great scholars.

2204. தீவிரியக்கழலார்ப்பச்சேயெரிகொண்டிடுகாட்டில்
நாவிரிகூந்தனற்பேய்கள்நகைசெயநட்டம்நவின்றோன்
காவிரிகொன்றைகலந்தகண்ணுதலான்கடம்பூரில்
பாவிரிபாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. 5

தீ விரிய, கழல் ஆர்ப்ப, சேள்எரி கொண்டு, இடுகாட்டில்,
நா விரி கூந்தல் நல் பேய்கள் நகைசெய்ய, நட்டம் நவின்றோன்-
கா விரி கொன்றை கலந்த கண்நுதலான் - கடம்பூரில்
பா விரி பாடல் பயில்வார் பழியொடு பாவம் இலாரே.

tI viriya, kazal Arppa, cEyeri koNTu, iTukATTil,
nA viri kUntal nal pEykaL nakaiceyya, naTTam navin2ROn2--
kA viri kon2Rai kalanta kaNNutalAn2--kaTampUril,
pA viri pATal payilvAr paziyoTu pAvam ilArE.

பொருள்: தீப்போலும் செஞ்சடை விரியவும் கழல் ஆர்க்கவும் செந்தீயைக் கையில் கொண்டு இடுகாட்டில் (உலகனைத்தும் அழியும் சர்வ சங்கார காலத்தில்) நீட்டிய நாவினையும் பரந்த தலைமயிரினையும் உடைய நல்ல பேய்கள் மகிழ்ச்சியால் சிரித்தலைச் செய்ய நடனம் ஆடினவன், சோலைகளில் மலர்ந்த கொன்றை மலர்களை அணிந்த நெற்றிக் கண்ணினன், அவனுடைய திருக்கடம்பூரில் பண்களால் இசை கூட்டப்பெற்ற பாடல்களைப் பயின்று பாடுவார் பழியும் பாவமும் இல்லாதவராவர்; மாறாகப் புண்ணியமும் புகழும் உடையோராவர்.

குறிப்புரை: தீவிரியக் கழல் ஆர்ப்பச் சேய் எரி கொண்டு இடுகாட்டில் நட்டம் நவின்றோன் – தீப்போலும் சடை விரியவும் கழல் ஒலிக்கவும் செந்தீயைக் கையில் கொண்டு, உலகனைத்தும் கற்பொடியென அழியுஞ் சருவசங்கார காலத்தில், அகண்டாகாரப் பெருவெளியில், தான் தனியனாகி இலங்கித், திருநடம் பயிலுஞ் சிவபெருமான், நாவிரி கூந்தல் நல்பேய்கள் நகைசெய்ய – நீட்டிய நாக்கையும் பரந்த கூந்தலையும் உடைய நல்ல பேய்கள் நகுதலைச் செய்ய (நட்டம் நவின்றோன்). காவிரி கொன்றை – சோலைகளில் மலர்ந்த கொன்றை மலர்கள். கண்ணுதலான் – நெற்றிக்கண்ணன். பாவிரி பாடல் – ஓசை (யின்பம்) பெருகிய பாட்டு. பா – பரந்து செல்வதோரோசை (தொல்.). பயில்வார் – பயிற்சி செய்வார். பழியோடு பாவம் இலார் – (புகழும் புண்ணியமும் உள்ளவராய்ப்) பழியும் பாவமும் இல்லாதவராவர்.

Our Lord Civan performs His vocation whenever He wants to do. Then His matted hair expands like fire. On His legs, the anklet clinks while dancing. He carries fire in one of His hands. On the burial ground the devils laugh seeing our Lord

dancing. He wears garlands of cassia flowers. He has a third eye on His forehead. Those devotees who reach the temple in Thiru-k-kadamboor and sing the divine songs in pleasing musical tone and worship Him will be people of no sins and flaws.

2205. தண்புனல்நீள்வயல்தோறுந்தாமரைமேலனம்வைகக்
கண்புணர்காவில்வண்டேறக்கள்ளவிழுங்கடம்பூரில்
பெண்புனைகூறுடையானைப்பின்னுசடைப்பெருமானைப்
பண்புனைபாடல்பயில்வார்பாவமிலாதவர்தாமே. 6

தண்புனல் நீள் வயல்தோறும் தாமரைமேல் அனம் வைக,
கண் புணர் காவில் வண்டு ஏற, கள் அவிழும் கடம்பூரில்,
பெண் புனை கூறு உடையானை, பின்னுசடைப் பெருமானை,
பண் புனை பாடல் பயில்வார் பாவம் இலாதவர் தாமே.

taNpun2al nIL vayaltORum tAmaraimEl an2am vaika,
kaN puNar kAvil vaNTu ERa, kaL avizum kaTampUril,
peN pun2ai kURu uTaiyAn2ai, pin2n2ucaTaip perumAn2ai,
paN pun2ai pAtal payilvAr pAvam ilAtavar tAmE.

பொருள்: குளிர்ந்த நீர் பரந்த வயல்கள் தோறும், தாமரை மலர்களின்மேல் அன்னப் பறவைகள் தங்கும். கண்ணைக் கவரும் மலர்ச்சோலைகளில் வண்டு ஏறுதலால் தேன் பாயும் திருக்கடம்பூரில், திருமேனியில் பெண்ணைப் புனைந்த கூறுடையானை, பண்ணோடு பாட வல்லவர்கள் பாவமிலாதவராவர்; மாறாகப் புண்ணியராவர்.

குறிப்புரை: தண் புனல் – குளிர்ந்ததாகிய நீர். அனம் – அன்னப்புள். கண் புணர்கா – கண்கள் தாமே சென்று புணர்தற்குத் தக்க அழகுமிக்க சோலை. கள் – தேன். அவிழும் – அலரும். வண்டுகள் ஏறுதலால் மலர்கள் தேன்நெகிழ அலரும் என்றபடி. பெண் புனை கூறு உடையான் – 'மாதியலும் பாதியன்' அர்த்தநாரீச்சுவரன். பின்னுசடை – பின்னிய சடை. பண்புனை பாடல் – பண்களால் அழகு செய்யப்பெற்ற பாடல்கள். 'பண்ணின் பயனாம் நல்லிசை' (பெரிய. சண்டேசுர. 9). கலந்த பாடல் என்றவாறு 'பாவம் இல்லாதவர்' – என்றதற்கு மேற்பாட்டில் உரைத்தாங்கு உரைத்துக் கொள்க.

In the city of Thiru-k-kadamboor, there are many tanks full of cold water and many lotus flowers. The swans in large numbers stay over the lotus flowers and enjoy. There are many gardens full of flowering plants with dripping honey from the petals.

In such a sacred city, our Lord is in concomitant form with matted hair. Those who sing songs in harmonious sound and worship Him will have no sins in their life.

2206. பலிகெழுசெம்மலர்சாரப்பாடலொடாடலறாத
கலிகெழுவீதிகலந்தகார்வயல்சூழ்கடம்பூரில்
ஒலிதிகழ்கங்கைகரந்தானொண்ணுதலாளுமைகேள்வன்
புலியதளாடையினான்றன்புனைகழல்போற்றல்பொருளே. 7

பலி கெழு செம்மலர் சார, பாடலொடு ஆடல் அறாத,
கலி கெழு வீதி கலந்த கார் வயல் சூழ் கடம்பூரில்,
ஒலி திகழ் கங்கை கரந்தான், ஒண்நுதலாள் உமை கேள்வன்,
புலிஅதள் ஆடையினான்தன் புனை கழல் போற்றல் பொருளே.

pali kezu cemmalar cAra, pATaloTu ATal aRAta,
kali kezu vIti kalanta, kAr vayal cUz kaTampUril,
oli tikaz kagkai karantAn2, oN nutalAL umai kELvan2,
puli ataL ATaiyin2An2 tan2 pun2aikazal pORRal poruLE.

பொருள்: பூசைக்குப் பொருந்திய செம்மலர்கள் அடைய, பாடுதலும் ஆடுதலும் ஒழியாத, ஆரவாரம் மிக்க தெருக்கள் கலந்த, கரிய நிறமுடைய வயல்கள் சூழ்ந்த திருக்கடம்பூரில், ஒலிக்கின்ற கங்கையாற்றினைச் சடையிற் கரந்தான் ஒளிதிகழ் நெற்றியுடையானாகிய உமையின் கணவன், புலித்தோலாடையினானுடைய கழலணிந்த திருவடிகளைப் போற்றுதல் பிறந்ததன் பயனாகும்.

குறிப்புரை: பலி – பூஜை (சேது புராணம்). செம்மலர் – செய்ய பூக்கள். பலிகெழுமலர் – பூஜைக்குப் பொருந்திய பூக்கள். சார – அடைய. பாடலொடு ஆடல் – பாட்டும் ஆட்டும். அறாத – நீங்காத. கலி – ஒலி. கடம்பூர். வீதியிலுள்ளார் சிவபூஜைக்குப் பொருந்திய பூக்கள் கொண்டு வந்து பூசித்துப் பாடுதலும் ஆடுதலும் செய்பவர் என்றவாறு. செம்மலர் என்பதற்குப் பெருமையிற் சிறந்தோர் எனலுமாம். பாடலாடலறாத கலிகெழு வீதி கலந்த கடம்பூர், வயல்சூழ்கடம்பூர். செம்மலர் என்று பொருள் கொள்ளின், பலி என்பது (அம்மல்லரது மெய்வலிமை குறிக்க). மாமிசம் என்றாகும். புலி அதள் ஆடை – (பா. 3). புனை – அழகுறுத்தப்பட்ட. கழல் – கழலணிந்த திருவடிகளை. போற்றல் – துதித்தல். பொருள் – உடம்பின் பயன். போற்றாமை – உடம்பெடுத்ததன் பயனின்மை என்றவாறு. பிறவிப் பயன் ஆகமங்களை உணர்ந்து, சிவபிரான் திருவடி மலர்களை எப்பொழுதும் இடைவிடாமல் போற்றுதலேயன்றிப் பிறிதில்லை. எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

In this sacred city of Thiru-k-kadamboor, there are broad streets where the Saiva devotees who do the Siva poojas collect very fine flowers and perform their rituals. They sing the ritual songs and dance very happily and in the streets, the Vedic noise is heard all over. The paddy fields are full of water always. In such a sacred city, our Lord is manifest in the temple in Thiru-k-kadamboor. He supports the river Ganges in His matted hair, invisible to others. He is the consort of our goddess Uma Devi. He wears on His loins the hide of the tiger. For those devotees praising the fame of our Lord is the only meaningful act in their life.

2207. பூம்படுகிற்கயல்பாயப்புள்ளிரியப்புறங்காட்டில்
காம்படுதோளியர்நாளுங்கண்கவருங்கடம்பூரில்
மேம்படுதேவியொர்பாகமேவியெம்மானெனவாழ்த்தித்
தேம்படுமாமலர்தூவித்திசைதொழத்தீயகெடுமே. 8

பூம் படுகில் கயல் பாய, புள் இரிய, புறங்காட்டில்
காம்பு அடு தோளியர் நாளும் கண் கவரும் கடம்பூரில்,
“மேம்படு தேவி ஓர்பாகம் மேவி! எம்மான்!” என வாழ்த்தி,
தேம் படு மா மலர் தூவித் திசை தொழ, தீய கெடுமே.

pUm paTukil kayal pAya, puL iriya, puRagkATTil
kAmpu aTu tOLiyar nALum kaN kavarum kaTampUril,
"mEmpaTu tEvi OrpAkam mEvi! emmAn2!" en2a vAztti,
tEm paTu mA malar tUvi, ticai toza, tIya keTumE.

பொருள்: மூங்கிலை வென்ற தோளியர் கண்ணுக்குத் தோற்ற கயல் மீன்கள் மலர்கள் நிறைந்த படுகரில் பாயவே பறவைகள் விலகிப் பறக்கும் திருக்கடம்பூரில், புறங்காட்டில், சிறந்த உமாதேவியாரை ஒரு பாகத்தில் கொண்ட எம்மான் என வாழ்த்தி, தேனுள்ள பெரிய மலர்களைத் தூவித் (திருக்கடம்பூரில் இருக்கும்) திசை நோக்கித் தொழ தீயன கெடும்.

குறிப்புரை: படுகு – படுகர், நீர்நிலை. வண்டு – வண்டர். சிறகு – சிறகர். கரும்பு – கரும்பர் எனவருதல் போல்வது இது. பூம்படுகரில் கயல்மீன்கள் பாயவும் புட் (பறவை)கள் இரிய (ஓட)வும் புறங்காட்டில் தோளிர் கண் கவரும் என்க. காம்பு அடுதோள் – மூங்கிலை நீ எனக்கு ஒப்பாகாய் என்று கொல்லும் தோள். அடுதல் – கொல்லுதல். கண்களை ஒவ்வாது தோற்றோடிக் கயல் படுகரிற் பாய்தலும் புள் (வண்டு) இரிதலும் கூறப்பட்டன. ‘கயலஞ்சப் பிறழ் கண்ணாள்’ (கம்பர் மிதிலைக். 26). ‘புள்ளுறை கமலவாவிப் பொருகயல் வெருவியோட வள்ளுறை கழிந்த வாள்போல் வரியுற வயங்கு கண்ணாள்’ (மேற்படி

In such a sacred city, our Lord is in concomitant form with matted hair. Those who sing songs in harmonious sound and worship Him will have no sins in their life.

2206. பலிகெழுசெம்மலர்சாரப்பாடலொடாடலறாத
கலிகெழுவீதிகலந்தகார்வயல்சூழ்கடம்பூரில்
ஒலிதிகழ்கங்கைகரந்தானொண்ணுதலாளுமைகேள்வன்
புலியதளாடையினான்றன்புனைகழல்போற்றல்பொருளே. 7

பலி கெழு செம்மலர் சார, பாடலொடு ஆடல் அறாத,
கலி கெழு வீதி கலந்த கார் வயல் சூழ் கடம்பூரில்,
ஒலி திகழ் கங்கை கரந்தான், ஒண்நுதலாள் உமை கேள்வன்,
புலிஅதள் ஆடையினான்தன் புனை கழல் போற்றல் பொருளே.

pali kezu cemmalar cAra, pATaloTu ATal aRAta,
kali kezu vIti kalanta, kAr vayal cUz kaTampUril,
oli tikaz kagkai karantAn2, oN nutalAL umai kELvan2,
puli ataL ATaiyin2An2 tan2 pun2aikazal pORRal poruLE.

பொருள்: பூசைக்குப் பொருந்திய செம்மலர்கள் அடைய, பாடுதலும் ஆடுதலும் ஒழியாத, ஆரவாரம் மிக்க தெருக்கள் கலந்த, கரிய நிறமுடைய வயல்கள் சூழ்ந்த திருக்கடம்பூரில், ஒலிக்கின்ற கங்கையாற்றினைச் சடையிற் கரந்தான் ஒளிதிகழ் நெற்றியுடையாளாகிய உமையின் கணவன், புலித்தோலாடையினானுடைய கழலணிந்த திருவடிகளைப் போற்றுதல் பிறந்ததன் பயனாகும்.

குறிப்புரை: பலி – பூஜை (சேது புராணம்). செம்மலர் – செய்ய பூக்கள். பலிகெழுமலர் – பூஜைக்குப் பொருந்திய பூக்கள். சார – அடைய. பாடலொடு ஆடல் – பாட்டும் ஆட்டும். அறாத – நீங்காத. கலி – ஒலி. கடம்பூர். வீதியிலுள்ளார் சிவபூஜைக்குப் பொருந்திய பூக்கள் கொண்டு வந்து பூசித்துப் பாடுதலும் ஆடுதலும் செய்பவர் என்றவாறு. செம்மலர் என்பதற்குப் பெருமையிற் சிறந்தோர் எனலுமாம். பாடலாடலறாத கலிகெழு வீதி கலந்த கடம்பூர், வயல்சூழ்கடம்பூர். செம்மலர் என்று பொருள் கொள்ளின், பலி என்பது (அம்மல்லரது மெய்வலிமை குறிக்க). மாமிசம் என்றாகும். புலி அதள் ஆடை – (பா. 3). புனை – அழகுறுத்தப்பட்ட. கழல் – கழலணிந்த திருவடிகளை. போற்றல் – துதித்தல். பொருள் – உடம்பின் பயன். போற்றாமை – உடம்பெடுத்ததன் பயனின்மை என்றவாறு. பிறவிப் பயன் ஆகமங்களை உணர்ந்து, சிவபிரான் திருவடி மலர்களை எப்பொழுதும் இடைவிடாமல் போற்றுதலேயன்றிப் பிறிதில்லை. எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

In this sacred city of Thiru-k-kadamboor, there are broad streets where the Saiva devotees who do the Siva poojas collect very fine flowers and perform their rituals. They sing the ritual songs and dance very happily and in the streets, the Vedic noise is heard all over. The paddy fields are full of water always. In such a sacred city, our Lord is manifest in the temple in Thiru-k-kadamboor. He supports the river Ganges in His matted hair, invisible to others. He is the consort of our goddess Uma Devi. He wears on His loins the hide of the tiger. For those devotees praising the fame of our Lord is the only meaningful act in their life.

2207. பூம்படுகிற்கயல்பாயப்புள்ளிரியப்புறங்காட்டில்
காம்படுதோளியர்நாளுங்கண்கவருங்கடம்பூரில்
மேம்படுதேவியொர்பாகமேவியெம்மானெனவாழ்த்தித்
தேம்படுமாமலர்தூவித்திசைதொழத்தீயகெடுமே. 8

பூம் படுகில் கயல் பாய, புள் இரிய, புறங்காட்டில்
காம்பு அடு தோளியர் நாளும் கண் கவரும் கடம்பூரில்,
"மேம்படு தேவி ஓர்பாகம் மேவி! எம்மான்!" என வாழ்த்தி,
தேம் படு மா மலர் தூவித் திசை தொழ, தீய கெடுமே.

pUm paTukil kayal pAya, puL iriya, puRagkATTil
kAmpu aTu tOLiyar nALum kaN kavarum kaTampUril,
"mEmpaTu tEvi OrpAkam mEvi! emmAn2!" en2a vAztti,
tEm paTu mA malar tUvi, ticai toza, tIya keTumE.

பொருள்: மூங்கிலை வென்ற தோளியர் கண்ணுக்குத் தோற்ற கயல் மீன்கள் மலர்கள் நிறைந்த படுகரில் பாயவே பறவைகள் விலகிப் பறக்கும் திருக்கடம்பூரில், புறங்காட்டில், சிறந்த உமாதேவியாரை ஒரு பாகத்தில் கொண்ட எம்மான் என வாழ்த்தி, தேனுள்ள பெரிய மலர்களைத் தூவித் (திருக்கடம்பூரில் இருக்கும்) திசை நோக்கித் தொழ தீயன கெடும்.

குறிப்புரை: படுகு – படுகர், நீர்நிலை. வண்டு – வண்டர். சிறகு – சிறகர். கரும்பு – கரும்பர் எனவருதல் போல்வது இது. பூம்படுகரில் கயல்மீன்கள் பாயவும் புட் (பறவை)கள் இரிய (ஓட)வும் புறங்காட்டில் தோளிர் கண் கவரும் என்க. காம்பு அடுதோள் – மூங்கிலை நீ எனக்கு ஒப்பாகாய் என்று கொல்லும் தோள். அடுதல் – கொல்லுதல். கண்களை ஒவ்வாது தோற்றோடிக் கயல் படுகரிற் பாய்தலும் புள் (வண்டு) இரிதலும் கூறப்பட்டன. 'கயலஞ்சப் பிறழ் கண்ணாள்' (கம்பர் மிதிலைக். 26). 'புள்ளுறை கமலவாவிப் பொருகயல் வெருவியோட வள்ளுறை கழிந்த வாள்போல் வரியுற வயங்கு கண்ணாள்' (மேற்படி

உண்டாட்டு 20). 'நறைபாய் வளமலர்வாய் அளிபடரச் சேல்பாய்வனகயல் பாய்வன செங்கால் மடவன்னம், போல்பாய் புனல் மடவார் படிநெடுநாடு' (மேற்படி கங்கைப் 8). இதன் பொருளமைதி புலப்பட்டிலது.

In the city of Thiru-k-kadamboor, very rich and attractive ponds are many. Inside the ponds birds of many kinds gather and live here. When the carp fish fall into the pond in large numbers and jump, the birds fly away. In this city, very young damsels are pretty with shoulders like bamboo's tender poles. Our Lord in this temple is manifest very attractively, to these girls. He dances on the burial ground. When the devotees go to Thiru-k-kadamboor and praise Him "Oh! You Lord! concomitantly one with Your consort Umaa! Oh my Lord!" and scatter the flowers and worship Him, their sins will vanish.

2208. திருமருமார்பிலவனுந்திகழ்தருமாமலரோனும்
இருவருமாயறிவொண்ணாஎரியுருவாகியஈசன்
கருவரைகாலிலடர்த்தகண்ணுதலான்கடம்பூரில்
மருவியபாடல்பயில்வார்வானுலகம்பெறுவாரே. 9

திரு மரு மார்பில் அவனும், திகழ்தரு மா மலரோனும்,
இருவரும்ஆய் அறிவு ஒண்ணா எரிஉரு ஆகிய ஈசன் -
கருவரை காலில் அடர்த்த கண்நுதலான் - கடம்பூரில்
மருவிய பாடல் பயில்வார் வான்உலகம் பெறுவாரே.

tiru maru mArpil avan2um, tikaztaru mA malarOn2um,
iruvarum Ay, aRivu oNNA eri uru Akiya Ican2--
karuvarai kAlil aTartta kaN nutatalAn2--kaTampUril
maruviya pATal payilvAr vAn2 ulakam peRuvArE.

பொருள்: திருமகள் மருவிய மார்பினை உடைய திருமாலும் பெரிய தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனும் ஆகிய இருவருங்கூடி முயன்றும் அறிவதற்கு இயலாதவாறு நெருப்புப் பிழம்பாக நின்ற ஈசன், கரியமலை போன்ற உடலைக் கொண்ட இராவணனைக் கால் விரலால் அடர்த்த நெற்றிக் கண்ணனின், கடம்பூரில் பொருந்திய திருப்பதிகங்களைப் பயில்வோர் வானுலகத்தைப் பெறுவர்.

குறிப்புரை: திருமார்பிலவனும் – திருமகள் மருவிய மார்பினை உடைய திருமாலும், திருமறுமார்பன் என்பது வேறு. அதில் ஸ்ரீவத்ஸம் என்பது திருமறு எனப்பட்டது. மாமலரோன் – செந்தாமரை மலரில்

வாழ்கின்ற பிரமன் ஆகிய இருவரும் என்று ஒரு சொல் வருவிக்க. அறிவொண்ணா – அறிதற்கு ஒன்றாத. எரி உரு – தீப்பிழம்பு வடிவம். கருவரை – கரிய மலை போலும் இராவணனை. காலில் அடர்த்த கயிலையை எடுத்தபோது திருவடிப் பெருவிரலூன்றி நெருக்கிய. காலனைக் காலாற் கடிந்த கண்ணுதலான் எனலுமாம். பிற திருப்பதிகங்களுள், ஒன்பதாவது பாட்டில், அடிமுடி தேடிய வரலாற்றை யொட்டி இராவணன் கயிலை எடுத்த வரலாற்றைக் கூறக்காணோம். சில பதிகங்களுள் இரண்டுங்கூறிப்பட்டில ஆயினும், இவ்வாறு வரலாற்றை முன்பின் ஆகக் கூறவில்லை.

Our Lord in Thiru-k-kadamboor was incomprehensible to these two – Thirumaal with goddess Lakshmi residing on his chest, and Brahma, the four-faced god Naanmugan – both failed in their attempt to see our God. Then our Lord stood before them as a superb tall flame of fire. Our Lord crushed Raavanan, king of Sri Lanka whose appearance was like a black mountain. Our Lord pressed the top of the mountain with His right toe and brought him under complete control. Our Lord of this temple resides in Thiru-k-kadamboor. The devotees who reach this temple and sing songs on our Lord, praising Him will reach heaven.

2209. ஆடைதவிர்த்தறங்காட்டுமவர்களுமந்துவராடைச்
சோடைகள்நன்னெறிசொல்லார்சொல்லினுஞ்சொல்லகண்டீர்
வேடம்பலபலகாட்டும்விகிர்தன்நம்வேதமுதல்வன்
காடதனில்நடமாடுங்கண்ணுதலான்கடம்பூரே. 10

ஆடை தவிர்த்து அறம் காட்டுமவர்களும், அம் துவர்ஆடைச்
சோடைகள், நன்நெறி சொல்லார்; சொல்லினும், சொல் அலகண்டீர்!
வேடம்பலபல காட்டும் விகிர்தன், நம் வேதமுதல்வன்,
காடுஅதனில் நடம்ஆடும் கண்நுதலான், கடம்பூரே.

ATai tavirttu aRam kATTumavarkaLum, am tuvar ATaic
cOTaikaL, nan2neRi collAr; collin2um, col alakaNTIr!
vETam pala pala kATTum vikirtan2, nam vEtamutalvan2,
kATu atan2il naTam ATum kaN nutalAn2, kaTampUrE.

பொருள்: ஆடை உடுத்தலைத் தவிர்த்து தருமோபதேச வேடிக்கை காட்டும் சமணர்களும் துவர் ஊட்டிய ஆடை போர்த்தும் சோடைகளும் நல்ல நெறி காட்டார். காட்டினாலும் அவை மெய்ந்நெறி அல்ல. திருக்கடம்பூரில் கண்ணுதலான், 'பலப்பல வேடமாகும் பரன் நாரிபாகன்' விகிர்தன், வேதமுதல்வன்; காட்டில் கூத்தாடுபவன்.

குறிப்புரை: ஆடை தவிர்த்து அறம் காட்டுமவர்களும் – ஆடை உடுக்காமல் தர்மோபதேசம் செய்யும் அமணர்களும் அம்துவர் ஆடைச்சோடைகள் – சிவப்பு ஊட்டிய உடைகளைத் தரித்த வறட்சியர் (பொருளில்லாத பேச்சுடையார் என்றவாறு). நல்நெறி – நல்லவழி (ஞான மார்க்கம்). சொல்லினும் சொல் அல – சொல்லினாலும் அவை மெய்ச்சொற்கள் அல்ல. வேடம் பலபல காட்டும் விகிர்தன் – பலவேடமாகும் பரன் நம் வேத முதல்வன். காடதனில் – காட்டில். கள்ளி முதுகாட்டில் ஆடிகண்டாய் (தி. 6 ப. 23 பா. 4).

In this city of Thiru-k-kadamboor, the Jains, who preach their virtues, wearing no dress and the Buddhists who preach divine knowledge speak untrue words. Our Lord took many forms whenever needed. He is the creator of the Vedas. He dances on the burial ground. He has a third eye on His forehead. This Lord is manifest in the temple in Thiru-k-kadamboor city.

2210. விடைநவிலுங்கொடியானைவெண்கொடிசேர்நெடுமாடம்
கடைநவிலுங்கடம்பூரிற்காதலனைக்கடற்காழி
நடைநவில்ஞானசம்பந்தன்நன்மையாலேத்தியபத்தும்
படைநவில்பாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. 11

விடை நவிலும் கொடியானை, வெண்கொடி சேர் நெடுமாடம்
கடை நவிலும் கடம்பூரில் காதலனை, கடல் காழி
நடை நவில் ஞானசம்பந்தன் நன்மையால் ஏத்திய பத்தும்,
படை நவில் பாடல் பயில்வார் பழியொடு பாவம் இலாரே.

viTai navilum koTiyAn2ai, veNkoTi cEr neTumATam
kaTai navilum kaTampUril kAtalan2ai, kaTal kAzi
naTai navil njAn2acampantan2 nan2maiyAl Ettiya pattum,
paTai navil pATal, payilvAr paziyoTu pAvam ilArE.

பொருள்: விடை தங்கும் கொடியுடையானை, வெண்கொடிகள் கட்டப்பட்டிருக்கும் உயர்ந்த மாடங்கள், நீண்ட வாயில்கள் கூடிய திருக்கடம்பூரில் அன்புருவானவனைக் கடலை அடுத்த காழிமாநகரில் ஞானநெறி கூறும் ஞானசம்பந்தன் ஆக்கமாக ஏத்திப் பாடிய இப்பத்துத் திருப்பாடல்களையும் பயில்வார் பழியொடு பாவம் இல்லாதவராவர்; மாறாகப் புகழும் புண்ணியமும் உடையோராவர்.

குறிப்புரை: விடை நவிலும் கொடியானை – எருது பயின்ற கொடியை உடையவனை. வெண்கொடி – வெள்ளைத் துணிக்கொடி. கடை – வாயில். இடமும், அங்காடியுமாம். காதலன் – உயிர்கட்கு அருட்காதல்

விளைப்பவன். அன்புருவானவன் எனலுமாம். அன்பே சிவம். நடை – ஞானாசாரம் நன்மை – மங்களம். படைநவில் பாடல். திருவருட்சாதனமாக நவின்ற பாடல்கள். படை – சாதனம். அல்லற்பட்டு செல்வத்தைத் தேய்க்கும் படை (குறள் 555). படை – நிவேதனமுமாம். இறைவன் புகழொடு படைக்கும் பாடல் என்றார். கோவை சிவக்கவிமணி முதலியாரவர்கள், பழியொடு பாவம் இலர் (பா. 5ல்) உரைத்தாங்கு உரைத்துக் கொள்க.

Our Lord manifested in the temple in Thiru-k-kadamboor has a flag of a bull's picture, which represents His aspect. In this city, there are many great palaces with tall gates and many staircases. Here the white flags always float on the flagpole. Our Lord has an eagerness to stay in this city. Our saint Thiru-gnana-Sambandar from Seerkaazhi, a city on the seashore, was a man of great character. He approached the temple in Thiru-k-kadamboor, prostrated before Lord and worshipped Him. He then sang, requesting our Lord His grace, for one and all. Those songsters who can memorise these songs of virtue and recite them before our Lord, will get rid of all their sins and evils in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

68ஆம் பதிகம் முற்றிற்று
End of 68th Hymn



திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 205 பதிக எண்: 69

69. திருப்பாண்டிக்கொடுமுடி

69. THIRU-P-PAANDI-K-KODUMUDI

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் இத்திருத்தலமானது கொடுமுடி புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 1 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது கொங்கு நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும். திருச்சிராப்பள்ளி – கரூர் – கொடுமுடி என்ற பேருந்து வழியில் பேருந்தின்மூலம் இத்தலத்தை அடையலாம். இறைவர் திருப்பெயர் கொடுமுடி நாதர். இறைவி திருப்பெயர் பண்மொழி நாயகி. தலவிருட்சம் வன்னி. தீர்த்தம் காவிரி. மூவர்களாலும் பாடப்பெற்ற பெருமை வாய்ந்தது. இத்தலத்திற்கு மூன்று பதிகங்கள் இருக்கின்றன. இத்தலத்துச் சுந்தர மூர்த்தி நாயனாரது திருப்பதிகம் நெஞ்சை உருக்கும் தன்மை வாய்ந்தது. கோயமுத்தூர் வித்துவான் கந்தசாமி முதலியாராலும் வேங்கட்ரமண தாசர் என்பவராலும் இயற்றப்பெற்ற தலபுராணம் அச்சில் வெளிவந்துள்ளது.

பதிக வரலாறு

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருக்கொடிமாடச் செங்குன்றூரில் தங்கி வழிபட்ட காலத்தில், அக்கொங்கு நாட்டில், ‘பயின்றதனால் பனித்த குளிர் முன்னான பிணி வந்து மூள்வது போல் முடுகுதலும்’ பரிசனங்கள் அதை அவர்க்கு அறிவித்து இறைஞ்சினர். திருவருளைத் தொழுது, திருநீலகண்டத்தின் தியானவுறைப்பால் அக்குளிர்நோய் அடியாரை வருத்தாமல், ‘அவ்வினைக்கு இவ்வினை ஆம்’ எனத் தொடங்குந் திருப்பதிகம் பாடியருளித் தடுத்தார். அந்நாட்டினர் எல்லோர்க்கும் அந்நோய் பற்றாது நீங்கிற்று. பின் பல தலங்களைப் பணிந்து சென்று திருப்பாண்டிக் கொடுமுடியை அடைந்து வழிபட்டுப் பாடி மகிழ்ந்து சாத்தியது இவ்வளத் தமிழ்மாலை.

திருச்சிற்றம்பலம்

2211. பெண்ணமர்மேனியினாரும்பிறைபுல்குசெஞ்சடையாருங்
கண்ணமர்நெற்றியினாருங்காதமருங்குழையாரும்
எண்ணமருங்குணத்தாருமிமையவரேத்தநின்றாரும்
பண்ணமர்பாடலினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. 1

*பெண் அமர் மேனியினாரும், பிறை புல்கு செஞ்சடையாரும்,
கண் அமர் நெற்றியினாரும், காது அமரும் குழையாரும்,
எண் அமரும் குணத்தாரும், இமையவர் ஏத்த நின்றாரும்,
பண் அமர் பாடலினாரும் - பாண்டிக்கொடுமுடியாரே.*

peN amar mEn2iyin2Arum, piRai pulku cenjcaTaiyArum,
kaN amar neRRiyin2Arum, kAtu amarum kuzaiyArum,
eN amarum kuNattArum, imaiyavar Etta nin2RArum,
paN amar pATalin2Arum--pANTikkoTu muTiyArE.

பொருள்: மாதினை ஒருபாகம் கொண்ட திருமேனியாரும், பிறை பொருந்திய சிவந்த சடையுடையவரும், கண் பொருந்திய நெற்றியை உடையவரும், காதில் பொருந்திய குழை உடையவரும், எட்டு என்னும் குணத்தை உடையவரும் தேவர்களும் வணங்கிப் பணிந்து துதிக்க நின்றவரும், பண் பொருந்திய திருப்பாடல்களாகி நின்றாரும் (யாரெனில்) திருப்பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: பெண் அமர் மேனியினார் – அர்த்தநாரீச்சுவரர். பிறைபுல்கு செஞ்சடையார் – சந்திரசேகரர். கண்ணமர் நெற்றியினார் – பால நேத்திரர். காது அமரும் குழையார் – குழைக்காதனார். எண் அமரும் குணத்தார் – எண் குணத்தார். இமையவர் ஏத்த நின்றார் – தேவர் தொழப்படுவார். பண் அமர் பாடலினார் – பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி (தி.6 ப.5 பா.57). 'பண் துளு'கப் பாடல் பயின்றாய் போற்றி' (தி.6 ப.5 பா.7). 'பண்ணினார் பாடலாகிப் பழத்தினில் இரதமாகி . . . அனைத்தும் ஆகி' (தி.4 ப.70 பா.4). இத்தலத்தின் தேவியார் திருநாமம் 'பண்மொழியம்மை'. 'வேதமே பண்ணுளார்' என (தி.2 ப.28 பா.3). முற்போந்ததும் ஈண்டறியத்தக்கது.

Our Lord Civan shares His left half of His body with the consort here. He is therefore called Arthanaareeswarar. He is also in the concomitance form. On His matted hair He retains the moon. In His forehead He has a third eye. He wears in one of His ears a special earring made out of tender leaf and called Kuzhai. He is the Supreme Being with eight attributes. The devas praise and worship Him. He used to chant various divine songs in musical tone.

2212. தனைக்கணிமாமலர்கொண்டுதாள்தொழுவாரவர்தங்கள்
வினைப்பகையாயினதீர்க்கும்விண்ணவர்விஞ்சையர்நெஞ்சில்
நினைத்தெழுவார்துயர்தீர்ப்பார்நிரைவளைமங்கைநடுங்கப்
பனைக்கைப்பகட்டுரிபோர்த்தார்பாண்டிக்கொடுமுடியாரே. 2

தனைக் கணி மா மலர் கொண்டு தாள் தொழுவார் அவர் தங்கள்
வினைப்பகை ஆயின தீர்க்கும் விண்ணவர்; விஞ்சையர்; நெஞ்சில்
நினைத்து எழுவார் துயர் தீர்ப்பார்; நிரை வளை மங்கை நடுங்கப்
பனைக்கைப் பகட்டு உரி போர்த்தார் - பாண்டிக்கொடுமுடியாரே.

tan2aik kan2n2i mA malar koNTu tAL tozuvAr avar tagkaL
vin2aippakai Ayin2a tIrkkum viNNavar; vinjcaiyar; nenjcil
nin2aittu ezuvAr tuyar tIrppAr; nirai vaLai magkai naTugkap
pan2aikkaip pakaTTu uri pOrttAr--pANTikkoTu muTiyArE.

பொருள்: கொன்றையின் அழகிய மலர் கொண்டு தன் தாள் தொழுவார்களின் தீவினைகளாகிய பகையினை முழுதும் தீர்க்கும் மேலானவன்; தேவர்கள், வித்தியாதரர்கள் மற்றும் நெஞ்சில் நினைப்பவர்கள் மனத்துயர் தீர்ப்பவர்; வரிசையாக வளையல்கள் அணிந்த உமையம்மை அஞ்சப் பனை மரம் போன்ற நீண்ட கரத்தையுடைய யானையின் தோலினை உரித்துத் திருமேனியின் மேற்போர்த்தார். அவர் யாரெனில் திருப்பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: கணி – கொன்றை. விண்ணவர் – சிவபெருமான். தன்னைக் கொன்றையின் சிறந்த அழகிய மலர் கொண்டு திருவடிப் பூஜை புரிவார்களுடைய வினையாகிய (வீட்டுப்) பகையைத் தீர்க்கும் விண்ணவன் என்றவாறு. விண்ணவர் என்றதற்கு ஏற்பத் தமை என்று இருத்தல் வேண்டுமாயினும், ஒருமைக்கும் பன்மைக்கும் உரிய கடவுளைக் கூறலின் குற்றமாகாது. 'கொன்றைசூடி நின்ற தேவை அன்றி ஒன்றும் நன்று இலோம்' என்ற ஆசிரியர். நமக்கும் அதையே உபதேசித்தருள்வதுணர்க. விஞ்சையர் – நெஞ்சில் நினைத்து எழுவார் துயர் தீர்ப்பார். விஞ்சையர் – வித்தியாதரர். சிவபெருமானைக் குறித்ததாகக் கொண்டு ஞானசொரூபர் எனலும் ஆம். விஞ்சை – வித்தை. ஞானம், நிரைவளை மங்கை – வரிசையுற்ற வளையல் அணிந்த உமாதேவியார். பனை, கை, பகடு – பனை போலும் துதிக்கையை உடைய யானை. உரி – தோல்.

Our Lord in Thiru-p-paandi-k-kodumudi chases the adverse, bitter grief and sufferings of those devotees who worship Him with cassia flowers. He is such a Chief, Supreme Being. He is the embodiment of divine knowledge. Those servitors who

remember our Lord in their mind and rise to worship Him, by the grace of our Lord, will completely be free of their distress. Our goddess Umaa feared when she saw a fierce elephant with trunk like a palmyrah tree rushing towards her. Our Lord killed the elephant and removed its hide and covered His body with that hide.

2213. சடையமர்கொன்றையினாருஞ்சாந்தவெண்ணீறணிந்தாரும்
புடையமர்பூதத்தினாரும்பொறிகிளர்பாம்பசைத்தாரும்
விடையமருங்கொடியாரும்வெண்மழுமூவிலைச்சூலப்
படையமர்கொள்கையினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. 3

சடை அமர் கொன்றையினாரும், சாந்த வெண்நீறு அணிந்தாரும்,
புடை அமர் பூதத்தினாரும், பொறி கிளர் பாம்பு அசைத்தாரும்,
விடை அமரும் கொடியாரும், வெண்மழு மூஇலைச்சூலப்-
படை அமர் கொள்கையினாரும் - பாண்டிக்கொடுமுடியாரே.

caTai amar kon2Raiyin2Arum, cAnta veN nIRu aNintArum,
puTai amar pUtattin2Arum, poRi kiLar pAmpu acaittArum
viTai amarum koTiyArum, veNmazu mU ilaiccUlap-
paTai amar koLkaiyin2Arum--pANTikkoTu muTiyArE.

பொருள்: சடையில் கொன்றையைச் சூடியவரும், மணமுள்ள வெண்ணீற்றினை அணிந்தவரும் பக்கத்தில் பூத கணங்களை உடையவரும், புள்ளிகள் விளங்குகின்ற பாம்பினை அரையிற் கட்டியவரும், எருது எழுதிய கொடியுடையவரும், வெண்ணிற மழுவினையும் மூவிலைச் சூலத்தினையும் படையாகக் கொள்வதில் விருப்பம் உடையவரும் ஆகிய (அவர் யாரெனில்) திருப்பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: சாந்தம் வெண்நீறு – சாந்தமென நீறணிந்த சைவர் (தி. 2 ப. 71 பா. 8). புடை – பக்கம். பூதத்தினார் – பூதகணங்களை உடையவர். பொறி – புள்ளிகள். கிளர் – விளங்குகின்ற. அசைத்தார் – கட்டியவர். விடை – எருது. கொடியார் – துவசம் ஏந்தியவர், இடபத் துவசம் உயர்த்தியவர். மழுவும் மூவிலைச் சூலப்படையும். அமர் கொள்கையினார் – விரும்புங் கோட்பாடுடையவர்.

Our Lord who is manifest in the temple in Thiru-p-paandi-k-kodumudi adorns His matted hair with strings of cassia flowers. He smears His body with holy ashes as sandal paste. He maintains an army of ghosts. He wears on His loin the dotted snake and uses it as a belt. He keeps a flag with a signal of the bull. He uses the trident and white axe as His weapons of war.

2214. நறைவளர்கொன்றையினாரும்ஞாலமெல்லாந்தொழுதேத்தக்
கறைவளர்மாமிடற்றாருங்காடரங்காக்கனலேந்தி
மறைவளர்பாடலினோடுமண்முழவங்குழல்மொந்தை
பறைவளர்பாடலினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. 4

நறை வளர் கொன்றையினாரும்; ஞாலம்எல்லாம் தொழுது ஏத்த,
கறை வளர் மா மிடற்றாரும்; காடு அரங்கா, கனல் ஏந்தி,
மறை வளர் பாடலினோடு, மண்முழவம், குழல், மொந்தை,
பறை வளர் பாடலினாரும் - பாண்டிக்கொடுமுடியாரே.

naRai vaLar kon2Raiyin2Arum; njAlam ellAm tozutu Etta,
kaRai vaLar mA miTaRRArum; kATu aragkA, kan2al Enti,
maRai vaLar pATalin2OTu, maNmuzavam, kuzal, montai
paRai, vaLar pATalin2Arum--pANTikkoTumuTiyArE.

பொருள்: தேன் மிகுந்த கொன்றை மலரை அணிந்தவரும், உலகமெல்லாம் தொழுது வழிபடும் கறையுடைய கரிய மிடற்றினை உடையவரும், இடுகாடே ஆடும் அரங்காக, அனலினை ஏந்திக் கொண்டு வேதப் பாடலினொடு மார்ச்சனையுடைய முழவம் குழல் மொந்தை பறை ஒலிக்கப் பாடலினாரும் ஆகிய (அவர் யாரெனில்) திருப்பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: நறை – தேன். ஞாலம் – பூமி. கறை – நச்சுக்கறுப்பு. மா – கரிய, அழகுமாம். மிடற்றார் – கண்டத்தையுடையவர். அரங்கு ஆ – நாடகசபையாக. கனல் – தீ. மறைவளர் பாடல் – வேதப்பாடல். மண் முழவம் – மார்ச்சனையையுடைய முழா. குழல் – வேய்ங்குழல். மொந்தை – ஒரு கட்பறை. பறை – வாத்தியம். சொல் எனலுமாம்.

Our Lord is manifest in the temple in Thiru-p-paandi-k-kodumudi. He has adorned His body with garlands of flowers. The entire people in the cosmos worshipped Him as He imbibed the poison and saved the entire universe, hence His throat is dark blue in colour. Our Lord's avocation is to dance on the burial ground using it as a platform for dance; while dancing He holds fire in one of His hands. And He chants the song of the four Vedas along with the music created by tabla, flute and drum. He sings to match the drum voices and dances well.

2215. போகமுமின்பமுமாகிப்போற்றியென்பாரவர்தங்கள்
ஆகமுறைவிடமாகஅமர்ந்தவர்கொன்றையினோடும்
நாகமுந்திங்களுஞ்சூடிநன்னுதல்மங்கைதன்மேனிப்
பாகமுகந்தவர்தாமும்பாண்டிக்கொடுமுடியாரே. 5

போகமும் இன்பமும் ஆகி, "போற்றி!" என்பார் அவர்தங்கள்
ஆகம் உறைவுஇடம் ஆக அமர்ந்தவர் - கொன்றையினோடும்
நாகமும் திங்களும் சூடி, நன்நுதல் மங்கைதன் மேனிப்
பாகம் உகந்தவர்தாமும் - பாண்டிக்கொடுமுடியாரே.

pOkamum in2pamum Aki, "pORRi!" en2pAr avar tagkaL
Akam uRaivu iTam Aka amarntavar--kon2Raiyin2OTum
nAkamum tigkaLum cUTi, nan2nutal magkaitan2 mEn2ip
pAkam ukantavar tAmum--pANTikkoTumuTiyArE.

பொருள்: (கட்டுண்ட) உயிருக்குச் சிற்றின்பமும், (முத்தியில்) வீட்டின்பமாகிய சிவபோகமுமாகி, 'போற்றி' என வணங்குவோரின் உடல் இடமாகக் கொண்டு அமர்ந்தவர், கொன்றையினுடன் பாம்பையும் பிறையையும் சூடி அழகிய நெற்றியுடைய உமை நங்கையைப் பாகமாக விரும்பியவர்தாம், ஆகிய (அவர் யாரெனில்) திருப்பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: போகமும் இன்பமும் ஆகி – பெத்தத்தில், தநுகரண புவனங்களொடு சேர்த்து நான்காவதாக எண்ணப்படும். போகமும், அப்போகாநுபவம் பற்றி உயிர்க்கு எய்தும் சிற்றின்பமும், முத்தியில் சிவபோகமாம் சிவாநந்தமும் ஆகி. ஆகம் – சுத்தியால் ஓங்கிய தேகம். உறைவு இடம் – வாழ்தலையுடைய இடம், கோயில். 'ஊன் உடம்பு ஆலயம்' (திருமந்திரம்). 'ஓங்குடலம் திருக்கோயில்' (ஞான பூஜா விதி 9). நாகம் – பாம்பு. நல்நுதல் மங்கை – அழகிய நெற்றியையுடைய உமாதேவியார். மேனிப்பாகம் – திருமேனியிற்பாதி. உகந்தவர் – விரும்பியவர்.

Our Lord Civan who manifests Himself in Thiru-p-paandi-k-kodumudi has eight stages of happiness as well as the final joy that arises out of these. Those devotees who pray to our Lord and adore Him will enjoy the state of our Lord staying in their body. He wears cassia flowers, snakes and the moon - all in His matted hair. He feels veryhappy to share half of His body with His consort Uma Devi and be a concomitant Supreme Being.

2216. கடிபடுகூவிளமத்தங்கமழ்சடைமேலுடையாரும்
பொடிபடமுப்புரஞ்செற்றபொருசிலையொன்றுடையாரும்
வடிவுடைமங்கைதன்னோடுமணம்படுகொள்கையினாரும்
படிபடுகோலத்தினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. 6

கடி படு கூவிளம் மத்தம் கமழ் சடைமேல் உடையாரும்,
பொடிபட முப்புரம் செற்ற பொருசிலை ஒன்று உடையாரும்,
வடிவு உடை மங்கைதன்னோடு மணம் படு கொள்கையினாரும்,
படி படு கோலத்தினாரும் - பாண்டிக்கொடுமுடியாரே.

kaTi paTu kUviLam mattam kamaz caTaimEl uTaiyArum,
poTipaTa muppuram ceRRa porucilai on2Ru uTaiyArum,
vaTivu uTai magkai tan2n2OTu maNam paTu koLkaiyin2Arum,
paTi paTu kOlattin2Arum--pANTikkoTu muTiyArE.

பொருள்: மணமுள்ள வில்வம் ஊமத்தை ஆகிய பூக்களின் மணம் கமழுகின்ற சடையைச் சிரசின்மேல் உடையவரும், திரிபுரம் மூன்றும் சாம்பலாக எரித்து அழித்த போர்வில்லொன்று உடையாரும், அழகிய மங்கை தன்னோடு கூடிய கொள்கையினை உடையவரும் எல்லா உருவங்களுக்கும் காரணமான வடிவத்தை உடையவரும் ஆகிய (அவர் யாரெனில்) திருப்பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: கடி – மணம். கூவிளம் – வில்வம். மத்தம் – ஊமத்தை. கமழ் – மணக்கின்ற. செற்ற – அழித்த. பொருசிலை – போர்வில். 'வடிவுடை மங்கை'. படிபடு கோலத்தினார் – படியாகப் பொருந்திய கோலம். எல்லா உருவங்களுக்கும் காரணவுருவம் இறைவனுடையதே. 'யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும் மாதேயும் பாகம் இலச்சினையே ஆதலினால்' (திருக்களிறு 82). காரியமான எல்லாப் படிக்கும் இறைவனது கோலமே காரணப் படியாயிற்று. படி – ஒப்பு. பிரதிசத்தம்.

Our Lord Civan who is manifest in Thiru-p-paandi-k-kodumudi temple wears bael leaves and datura flowers on His matted hair. He held the Meru mountain as His bow and destroyed the three flying forts. He married the most beautiful Paarvathi Devi. The souls before taking the shape of a body originate from His form.

2217. ஊனமர்வெண்டலையேந்தியுண்பலிக்கென்றுழல்வாரும்
தேனமரும்மொழிமாதுசேர்திருமேனியினாரும்
கானமர்மஞ்ஞைகளாலுங்காவிரிக்கோலக்கரைமேல்
பானலநீறணிவாரும்பாண்டிக்கொடுமுடியாரே. 7

ஊன் அமர் வெண்தலை ஏந்தி உண் பலிக்கு என்று உழல்வாரும்,
தேன் அமரும்மொழிமாது சேர் திருமேனியினாரும்,
கான் அமர் மஞ்ஞைகள் ஆலும் காவிரிக் கோலக் கரைமேல் -
பால்நலநீறு அணிவாரும் - பாண்டிக்கொடுமுடியாரே.

Un2 amar veNtalai Enti uN palikku en2Ru uzalvArum,
tEn2 amarum mozimAtu cEr tirumEn2iyin2Arum,
kAn2 amar manjnjaikaL Alum kAvik kOlak karaimEl--
pAl nala nIRu aNivArum--pANTikkoTu muTiyArE.

பொருள்: மாமிசம் பொருந்திய வெள்ளை மண்டையோட்டை ஏந்தி உண்ணுகின்ற பிச்சைக்கென்று திரிவாரும், தேன்போல இனிமை பயக்கும் மொழிபேசும் பண்ணார் மொழியம்மை கலந்த திருமேனியுடையாரும் முல்லை நிலத்தில் பொருந்திய மயில்கள் ஆடும் காவிரியின் அழகிய கரைமேல் பால் போன்ற வெண்ணீறு அணிவாரும் ஆகிய (அவர் யாரெனில்) திருப்பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: ஊன் – மாமிசம். தலை – பிரமகபாலம். பலி – பிச்சை. உழல்வார் – திரிவார். தேன் அமரும் மொழி மாது – பண்மொழியம்மை, இத்தலத்து தேவியின் திருநாமம். தேன்... திருமேனியினார் – அர்த்தநாரீச்சுர வடிவுடையவர். கான் – காடு. மஞ்ஞைகள் – மயில்கள். கோலம் – அழகு. பால்நலம் நீறு – பால்போலும் நன்மைகளையுடைய நீறு.

Our Lord Civan who has manifested Himself in Thiru-p-paandi-k-kodumudi goes round the cosmos to accept alms in the bowl. He carries a skull which smells bad. He is the concomitant Supreme Being sharing half of His body with His consort Paarvathi Devi whose words are as sweet as honey. He smears His body with holy ashes, which is as white as milk. He is manifested on the bed of Cauvery river where peacocks dance in the forest area of the river bed.

2218. புரந்தரன்தன்னொடுவானோர்போற்றியென்றேத்தநின்றாரும்
பெருந்திறல்வாளரக்கன்னைப்பேரிடர்செய்துகந்தாரும்
கருந்திரைமாமிடற்றாருங்காரகில்பன்மணியுந்திப்
பரந்திழிகாவிரிப்பாங்கர்ப்பாண்டிக்கொடுமுடியாரே. 8

புரந்தரன் தன்னொடு வானோர் "போற்றி!" என்று ஏத்த நின்றாரும்,
பெருந்திறல் வாள் அரக்க(ன்)னைப் பேர் இடர் செய்து உகந்தாரும்,
கருந்திரை மா மிடற்றாரும் - கார் அகில் பல்மணி உந்திப்
பரந்து இழி காவிரிப் பாங்கர்ப் பாண்டிக்கொடுமுடியாரே.

purantaran2 tan2n2oTu vAn2Or, "pORRi!" en2Ru Etta nin2RArum,
peruntiRal vAL arakkan2(n2)n2aip pEr iTar ceytu ukantArum,
karuntirai mA miTaRRArum--kAr akil palmaNi untip
parantu izi kAvirip pAgkarp pANTikkoTu muTiyArE.

பொருள்: இந்திரன் தன்னோடு வானவர்கள் 'போற்றி' என்று வழிபட நின்றவரும், பேராற்றல் வாய்ந்த வாளை ஏந்திய அரக்கனைப் பெருந்துன்பப்படச் செய்து பின் விரும்பி அருளியவரும், கருங்கடல் நஞ்சினை உண்ட கரிய மிடற்றை உடையவரும், (யாரெனில்) கரிய அகில், பன்மணிகள் முதலியவற்றை அடித்துக் கொண்டு பரந்து பாயும் காவிரியின் பாங்கரில் திருப்பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: புரந்தரன் – இந்திரன். வானோர் – தேவர். இந்திரனோடு தேவர்கள் சிவபிரானைப் போற்றி போற்றி என்று ஏத்தும் முதன்மை உணர்த்தப்பட்டது. பெருந்திறல் – மிக்க வலிமை. வாள் – கொடுமை. வாளை ஏந்திய அரக்கன் (இராவணன்) எனலுமாம். பேர் இடர் – மலையைப் பேர்க்கும் துன்பம். பெரிய துன்பம். கருந்திரை – கரிய கடல் நஞ்சு. திரை என்பது கடலுக்கு சினையாகு பெயர். கடல் என்பது நஞ்சுக்கு இடவாகு பெயர். திரை இருமடியாகு பெயர். மா – கரிய, அழகிய. மிடற்றார் – கண்டத்தினார். கார் அகில் – கரிய அகில் மரத்தினையும். பல்மணி – பலமணிகளையும். உந்தி – செலுத்தி. பரந்து – பரவி. இழி – ஒழுகும். பாங்கர் – பக்கம்.

The demigod Indra and all other celestials pray before our Lord and say 'glory to Thee'. Raavanan was the greatest warrior. Our Lord smashed his heads and shoulders and annihilated his mightiness. Later when Raavanan begged pardon our Lord excused him and graced him. He imbibed the black poison and kept it permanently inside His throat. The river Cauvery brings along with its water the black eaglewood and all kinds of gems in the fast and gushing water. By the side of the river our Lord is manifested.

2219. திருமகள்காதலினானுந்திகழ்தருமாமலர்மேலைப்
பெருமகனும்மவர்காணாப்பேரழலாகியபெம்மான்
மருமலிமென்மலர்ச்சந்துவந்திழிகாவிரிமாடே
பருமணிநீர்த்துறையாரும்பாண்டிக்கொடுமுடியாரே. 9

திருமகள்காதலினானும், திகழ்தரு மா மலர்மேலைப்
பெருமகனும்(ம்), அவர் காணாப் பேர்அழல் ஆகிய பெம்மான் -
மரு மலி மென்மலர்ச் சந்து வந்து இழி காவிரிமாடே
பரு மணி நீர்த்துறை ஆரும் பாண்டிக்கொடுமுடியாரே.

tirumakaL kAtalin2An2um, tikaztaru mA malar mElaip
perumakan2um(m), avar kANAp pEr azal Akiya pemmAn2--
maru mali men2malarc cantu vantu izi kAviri mATE
paru maNi nIrttuRai Arum pANTikkoTu muTiyArE.

பொருள்: திருமகளின் காதலரான திருமாலும் தாமரை மலர் மேல் இருக்கும் பிதாமகனான பிரமனும் காண இயலாதவாறு பேரழலாக நின்ற பெருமான் (யாரெனில்) மணம் மலிந்த மென் மலர்களும் சந்தனமும் கொண்டு வந்து பாய்கின்ற காவிரியின் பக்கத்தில் பெரிய நீர்த்துறை பொருந்திய பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: திருமகள் காதலினான் – இலக்குமி காதலரான திருமால். திகழ்தரு – விளங்குகின்ற. மாமலர் – தாமரைப்பூ. மேலை – மேலிருத்தலையுடைய. பெருமகன் – பிதாமகன் (பிரமன்). அழல் – தீ. மரு – மணம். மலி – மிக்க. சந்து – சந்தனமரம். மாடு – பக்கம். பரு – பருத்த. மணித்துறை – நீர்த்துறை. துறைமணி உம் என்றும் துறை ஆரும் என்றும் கொள்ளலாம். பெம்மான் கொடுமுடியாரே என்க. துறை ஆரும் பாண்டிக்கொடுமுடி.

The demigod Thirumaal, husband of goddess Lakshmi, and Brahma who stays in the lotus flower - both failed in their attempt to see our Lord's feet and head. At that moment our Lord stood before these two as a very big and tall superb column of fire. This Lord is manifested on the banks of the Cauvery river which brings along with its water, sweet smelling soft flowers, sandalwood logs etc. He stays in Thiru-p-paandi-k-kodumudi as the Chief Lord.

2220. புத்தரும்புந்தியிலாதசமணரும்பொய்ம்மொழியல்லால்
மெய்த்தவம்பேசிடமாட்டார்வேடம்பலபலவற்றால்
சித்தருந்தேவருங்கூடிச்செழுமலர்நல்லனகொண்டு
பத்தர்கள்தாம்பணிந்தேத்தும்பாண்டிக்கொடுமுடியாரே. 10

புத்தரும், புந்தி இலாத சமணரும், பொய்ம்மொழிஅல்லால்
மெய்த்தவம் பேசிடமாட்டார்; வேடம்பலபலவற்றால்
சித்தரும் தேவரும் கூடி, செழு மலர் நல்லன கொண்டு,
பத்தர்கள் தாம் பணிந்து ஏத்தும் பாண்டிக்கொடுமுடியாரே.

puttarum, punti ilAta camaNarum, poymmozi allAl
meyttavam pEciTamATTAr; vETam palavaRRAl
cittarum tEvarum kUTi, cezu malar nallan2a koNTu,
pattiyin2Al paNintu Ettum pANTikkoTu muTiyArE.

பொருள்: புத்தர்களும் அறிவிலாத சமணரும் பொய்ம்மொழியல்லால் மெய்ம்மைத் தவம் பற்றி எதுவும் பேசமாட்டார்கள். திருவேடம் பலபலவற்றால் சித்தர்களும் தேவர்களும் கூடிச் செழுமையான மலர்களில் நல்லன கொண்டு பத்தர்களாகப் பணிந்தேத்தும் பாண்டிக் கொடுமுடியாரே.

குறிப்புரை: புந்தி – அறிவு. மாட்டார் – வன்மையில்லாதவர். வேடம்பலபலவற்றால் – சிவமூர்த்தம். மகேசுரமூர்த்தம் எனப் பற்பலவற்றால். சித்தர் – சித்துக்களில் வல்லவர். செழுமையுடைய நல்ல மலர்களைக் கொண்டு பத்தர் (அன்பர்). சித்தர், தேவர் எல்லோரும் ஏத்தும் தலம்.

The Jains and Buddhists always speak falsehood. They never speak the true divine words. Our Lord will have several forms. Siddhars, devas, devotees and all other servitors bring fresh flowers in large quantities and strew them on the holy feet of our Lord and prostrate before Him. This Lord is our Thiru-p-paandi-k-kodumudi Supreme Being.

2221. கலமல்குதண்கடல்சூழ்ந்தகாழியுள்ஞானசம்பந்தன்
பலமல்குவெண்டலையேந்திப்பாண்டிக்கொடுமுடிதன்னைச்
சொலமல்குபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லார்துயர்தீர்ந்து
நலமல்குசிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே. 11

கலம் மல்கு தண்கடல் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன்,
பலம் மல்கு வெண்தலைஏந்தி பாண்டிக்கொடுமுடி தன்னைச்
சொல மல்கு பாடல்கள் பத்தும் சொல்ல வல்லார் துயர் தீர்ந்து,
நலம் மல்கு சிந்தையர் ஆகி, நன்னெறி எய்துவர் தாமே.

kalam malku taN kaTal cUznta kAziyuL njAn2acampantan2,
palam malku veNtalai Enti pANTikkoTu muTitan2n2aic
cola malku pATalkaL pattum colla vallAr, tuyar tIrntu,
nalam malku cintaiyar Aki, nan2neRi eytuvar tAmE.

பொருள்: மரக்கலங்கள் மிகுந்த கடலால் சூழப்பெற்ற காழிநகருள் திருஞானசம்பந்தன் பயன் நிறைந்த வெண்டலை ஏந்தியும் பாண்டிக் கொடுமுடியாகிய தன்னைப் பாடிய சொல்லச் சொல்ல இன்பம் மல்கும் திருப்பாடல்கள் பத்தினையும் சொல்ல வல்லார் துயர்கள் நீங்கிப் பேரின்பம் நிறைந்த சிந்தையராகி நன்னெறியாகிய ஞானமார்க்கத்தை எய்துவர்.

குறிப்புரை: கலம் – மரக்கலம். கடலில் தோணியாக மிதந்த காழியாதலின் 'கடல் சூழ்ந்த காழி' என்றார். பலம் – பயன். வலிமையுமாம். தலை – பிரமகபாலம். சொல – சொல்ல, பாட. சொல்லச்சொல்ல மல்கும் பாடல்கள் – நலம் – பேரின்பம். நன்னெறி – ஞானமார்க்கம்.

Our saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi city which is bordered with cool sea full of boats and ships anchored therein. Our Lord of Thiru-p-paandi-k-kodumudi carries in His hand white human skull for the benefit of the souls on the earth, and is manifested in the temple. Our saint went to this temple, worshipped Him and sang these sacred songs on His praise. Those scholars who can memorise these songs and recite them before our Lord will get rid of their sufferings, will become virtuous and will attain divine life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

69ஆம் பதிகம் முற்றிற்று
End of 69th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 206 பதிக எண்: 70

70. திருக்கழுமலம் – திருச்சக்கரமாற்று

70. THIRU-K-KAZHU-MALAM

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருக்கழுமலம் என்னும் தலமானது சீகாழி என்னும் தலமாகும். காளி, சிதம்பரத்தில் நடராசப்பெருமானோடு வாதாடிய குற்றம் நீங்க, இத்தலத்தில் இலிங்கமொன்றை எழுந்தருளுவித்து வழிபட்டுப் பேறுபெற்றமையால் இது காளிபுரம் என்னும் பெயர் எய்திற்று. ஸ்ரீகாளி என்னும் பெயரே சீகாழி என மருவியது. ஸ்ரீபாதம் – சீபாதம். ஸ்ரீமாந் – சீமான். சென்னைப் பட்டினம், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, திருவேட்டீசுவரன்பேட்டை, இராயப்பேட்டை, கோமளேசுவரன் பேட்டை, இராயபுரம், எழும்பூர் முதலான பல ஊர்களையும் சேர்த்து இக்காலம் சென்னை என வழங்குவதுபோல, பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயர்களைத் தனித்தனியே கொண்ட பன்னிரண்டு தலங்களும் வெவ்வேறாய் இருந்து வழங்கிவரப் பெற்ற பதிகளைச் சீகாழி என ஒரு தலத்தின் பெயரைச் சொல்லுதலாலே ஏனையப் பதினொன்றையும் உணர்த்தும் வழக்கம் நேர்ந்தது.

இரண்டாவது திருமுறையுள் காழி, கொச்சைவயம், சிரபுரம், பிரமபுரம், புகலி, பூந்தராய் என்னும் ஆறு மட்டும் உள்ளன. இவற்றுள் பிரமபுரம் (பிரம்மாவால் பூசிக்கப்பெற்றது) சீகாழி பெரிய கோயிலுள் பிரமேசர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலை உடைய பகுதியாகும். தோணிபுரம் என்பது பிரளய காலத்தில் தோணி போல மிதந்த காரணம் பற்றியதாகும். இது சீகாழி பெரிய கோயிலில் தோணியப்பர் பெரிய நாயகியுடன் எழுந்தருளியிருக்கும் தோணி வடிவாய் அமைந்த திருக்கோயில் உள்ள பகுதியாகும்.

மயிலாடுதுறை – சிதம்பரம் பாதையில் சீகாழி தொடர்வண்டி நிலையத்திற்குக் கிழக்கே சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. மயிலாடுதுறை – சிதம்பரம் பேருந்துச் சாலையில் உள்ளது. இது காவிரிக்கு வடகரையில் பதினான்காவது தலமாகும். பிரமபுரத்தில் இறைவரது திருப்பெயர் பிரமபுரீசுவரர். இறைவியாரது திருப்பெயர் திருநிலைநாயகி. தோணிபுரத்தில் இறைவரது திருப்பெயர் தோணியப்பர். இறைவியாரது திருப்பெயர் பெரிய நாயகி. தீர்த்தம் பிரமதீர்த்தம். இது

வடக்குக் கோபுர வாயிலுக்குத் தென்கிழக்கில், திருநிலை அம்மையார் கோயில் திருமுன்புள்ளது. திருஞானசம்பந்தப் பெருந்தையார்க்கு ஞானப்பால் ஊட்டப் பெற்றது இத்தீர்த்தக் கரையில்தான். இதுவன்றி, சூல தீர்த்தம், ஆனந்த தீர்த்தம், காளிதீர்த்தம், வைணவ தீர்த்தம், இராகு தீர்த்தம், ஆழி தீர்த்தம், சங்க தீர்த்தம், சுக்கிரதீர்த்தம், பராசர தீர்த்தம், அகத்திய தீர்த்தம், கௌதம தீர்த்தம், வன்னி தீர்த்தம், குமார தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், கேது தீர்த்தம், அண்ட தீர்த்தம், பதினென்புராண தீர்த்தம், புறவநதி, கழுமலநதி, விநாயகநதி என்னும் தீர்த்தங்கள் இருக்கின்றன.

திருஞானசம்பந்தப் பெருந்தகையார் திருஅவதாரஞ் செய்தருளப் பெற்ற பதி இது. அவர் மூன்றாம் ஆண்டில் நீராடத் தந்தையாருடன் சென்று, பிரமதீர்த்தக் கரையில் பசித்திருக்க, அம்மையப்பரால் ஞானப்பால் ஊட்டப்பெற்ற பெருமை வாய்ந்தது. ஞானசம்பந்தப் பெருந்தகையாருடைய பெருமையைக் கேள்வியுற்ற திருநாவுக்கரசு நாயனார் சீகாழிக்கு எழுந்தருளிவந்து, அவரை வணங்கி, அவருடைய நட்பைப் பெற்றதோடு அவரால் அப்பர் என்னும் திருநாமத்தைப் பெற்ற சிறப்புடைய பதி இது.

சுந்தரமூர்த்தி நாயனார் சீகாழிக்கு எழுந்தருளியபோது, இது ஞானசம்பந்தப் பெருந்தகையார் அவதரித்த திருப்பதி என்று மிதித்தற்கு அஞ்சி நகர்ப்புறத்து நின்று பாட இறைவர் அங்குக் காட்சி தரக்கண்ட பெருமை வாய்ந்தது. திருநீலகண்ட யாழ்ப்பாணர் எழுந்தருளி ஆளுடைய பிள்ளையாரை வணங்கி அவருடைய பதிகங்களை யாழிலிட்டு வாசித்து அவருடன் இருக்கும் பெருமை பெற்றது. கணநாத நாயனார் அவதரித்த திருப்பதியும் இதுவே.

இத்தலத்தில் திருத்தோணியப்பர் பக்குவ ஆன்மாக்களுக்கு உபதேசம் புரிந்து சிவஞானச் செல்வத்தை அளிப்பதற்குக் குரு வடிவமாய் அமர்ந்திருக்கின்றார். பஞ்சகிருத்தியங்களைச் செய்தருளுதற்குப் பிரமபுரீசுவரர் மூலலிங்கமாய் எழுந்தருளியிருக்கிறார். திருத்தோணிக்குத் தென்பால் சட்டைநாதர் பேரின்ப சித்திகளை அருளுதற்பொருட்டுச் சங்கம வடிவாய் விளங்குகின்றார். ஆதலால் இது குருலிங்கசங்கம பதியாய்ச் சிறந்து விளங்குவது. சந்திரன், முருகவேள், ஆதிசேடன் முதலானவர்களும் பூசித்துப் பேறு பெற்ற சிறப்பினை உடையது. மூவர் முதலிகள் பாடிய எழுபத்தொரு பதிகங்களை உடைய தனிச்சிறப்பு இப்பதிக்கு உரியதாகும்.

இக்காழியில் முக்கிய தெய்வமாக விளங்குகிறவர் சட்டை நாத சுவாமி. இவரது மூர்த்தம் சிவமூர்த்தங்களுள் ஒன்று. இரணியனைக் கொன்ற நரசிங்கத்தைத் தடிந்து அதன் தோலை சட்டையாகப் போர்த்துக் கொண்ட காரணத்தால் இவர் இப்பெயர் பெற்றார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் அர்த்த சாமத்தில் இவருக்கு சிறந்த வழிபாடு நடைபெற்று வருகின்றது.

இங்கு வடுகநாதருக்கு நித்தியபூசையும், வெள்ளிக்கிழமைதோறும் நைமித்திக பூசையும், சித்திரை மாதத்துப் பரணியில் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளி, திருஞானசம்பந்தப் பெருந்தகையார்க்குக் காட்சி தந்தருளிய அருள் வெளிக்கு ஞாயிறு காணி என்று பெயர். இங்குள்ள நந்தவனத்திற்கு இந்திர நந்தவனம் என்னும் பெயர் இன்றும் வழக்கில் இருக்கிறது. இது சிவபூசைக்காக முற்காலத்தில் இந்திரன் அமைத்ததாகும். வலம்புரி மண்டபத்தில் பல சித்திரங்கள் பழங்காலத்தில் எழுதப் பெற்றிருக்கின்றன. அவற்றுள் கிள்ளி வளவனைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

பட்டினத்து அடிகள் இத்தலத்திற்கு மும்மணிக்கோவை இயற்றியுள்ளார்கள். அது திருக்கழுமல மும்மணிக்கோவை என்னும் பெயருடையது. இது பதினொன்றாந் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ளது. இத்தலபுராணம் சீகாழி அருணாசலக் கவிராயரால் எழுதப்பெற்றது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சீகாழிக்கோவை என்னும் நூலை இயற்றியுள்ளார்கள். அது வலம்புரி மண்டபத்தில் அரங்கேற்றப் பெற்றது. இப்புராணமும் கோவையும் அச்சில் வெளிவந்துள்ளன. 1937இல் வெளிவந்துள்ள சீகாழித் தலபுராணத்தில் வசனமும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. அதை எழுதியவர் வித்துவ சிகாமணி திரு. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை ஆவர். இத்தலம் தருமை ஆதீனத்துக்குச் சொந்தமானது. கோயில் மிகத் தூய்மையாக இருக்கின்றது. இருபத்தாறாம் பட்டத்து எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் பிற்காலத்துச் சோழமன்னர்கள் செய்தது போல திடீரென்று ஆலயத்திற்கு எழுந்தருளி நித்திய நைமித்திகங்கள் எல்லாம் குறைவற நடக்கின்றனவா எனக் கவனித்து அருளுகின்றார்கள்.

இங்கு சித்திரையில் நடைபெறும் பிரமோற்சவத்தின் இரண்டாம் நாள் விழாவே திருமுலைப்பால் விழாவாகும். இவ்விழா நாட்களில் கூடும் பெருந்திரளான மக்கள் பயனுறும் பொருட்டுத் திருமுறை மாநாடுகளை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆண்டுதோறும் கூட்டுவித்தருளுகின்றார்கள். திருமுறை இசைவாணர் ஒருவருக்குத் திருமுறைக் கலாநிதி பட்டமும் ரூ.1000/– அடங்கிய பணமுடிப்பும் அளித்தருளுகின்றார்கள்.

பதிக வரலாறு

இந்தத் திருப்பதிகம் மதுரையில் அருளப் பெற்றது. திருஞானசம்பந்தப் பெருமானின் அருட்பார்வை கூன்பாண்டியன் மேற்படவும் அவன் உடற்பிணி சற்றே ஒழியவும், அவன் ஞானப்பிள்ளையாரை நோக்கித் தங்கள் திருப்பதி யாது என வினவினான். அதற்கு

மறுமொழியாகப் பிள்ளையார் 'அங்கு ஆதியாய பரமனூர் பன்னிரண்டாய் நின்ற திருக்கழுமலம் நாம் பரவும் ஊரே' என்று இப்பதிகத்தை அருளினார். அப்பன்னிரு பெயர்களையும் உணர்த்துவது இத்திருப்பதிகம். பதிகம் முழுவதும் இப்பன்னிரு பெயர்களைக் கூறுவதாகவே அமைந்துள்ளது. அப்பன்னிரண்டு பெயர்களாவன: (1) பிரமபுரம்; (2) வேணுபுரம்; (3) புகலி; (4) வெங்குரு; (5) தோணிபுரம்; (6) பூந்தராய்; (7) சிரபுரம்; (8) புறவம்; (9) சண்பை; (10) காழி; (11) கொச்சைவயம்; (12) கழுமலம்.

'பரமனூர் பன்னிரண்டாய் நின்ற திருக்கழுமலம் நாம் பரவு மூரே' என்று பிள்ளையார் கூறுவதால் ஊர் பன்னிரண்டு என்று அறிதல் வேண்டும். ஊர் பன்னிரண்டேயன்றி ஒரூருக்குப் பன்னிரண்டு பெயர்கள் அல்ல. மன்னுநிலை பெற்ற, பொன் அம் சிரபுரம் – பொன்னாகிய செல்வத்தையும் அழகையும் உடைய சிரபுரம். அரன் மன்னு தண் காழி – சிவபிரான் எழுந்தருளியிருக்கும் குளிர்ந்த காழிநகர். வெள்ளத்து ஓங்கும் தோணிபுரம் – பிரளயகாலத்தில் இந்நகரம் தோணியாக மிதந்ததனால் தோணிபுரம் எனப் பெயர் பெற்றது. தூநீர்ச் சிரபுரம் – தூய நீரை உடைய சிரபுரம். கோனிய – வளைந்த. கோட்டாற்று – கோட்டாறு சூழ்ந்த. கூரும் – மிகுதியான. காணிய – செய்யிய என்னும் வாய்ப்பாடு, பொருட்டுப் பொருளில் வந்தது. காணும் பொருட்டு, காண, வையகம் – உலகத்தவர்.

திருச்சிற்றம்பலம்

2222. பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருப்பெருநீர்த்தோணி
புரமன்னுபூந்தராய்பொன்னஞ்சிரபுரம்புறவஞ்சண்பை
அரன்மன்னுதண்காழிகொச்சைவயமுள்ளிட்டங்காதியாய
பரமனூர்பன்னிரண்டாய்நின்றதிருக்கழுமலநாம்பரவுமூரே. 1

பிரமன்ஊர், வேணுபுரம், புகலி, வெங்குரு, பெருநீர்த் தோணி-
புரம், மன்னு பூந்தராய், பொன் அம் சிரபுரம், புறவம், சண்பை,
அரன் மன்னு தண் காழி, கொச்சைவயம், உள்ளிட்ட அங்கு ஆதிஆய
பரமன் ஊர் பன்னிரண்டுஆய் நின்ற திருக்கழுமலம் - நாம் பரவும் ஊரே.

piraman2 Ur, vENupuram, pukali, vegkuru, perunIrt tONi-
puram, man2n2u pUntarAy, pon2 am cirapuram, puRavam, caNpai,
aran2 man2n2u taN kAzi, koccaivayam, uLLiTTu agku Ati Aya
paraman2 Ur pan2n2iraNTu Ay nin2Ra tiruk kazumalam--nAm paravum UrE.

பொருள்: நிகர் இல் பிரமபுரம் - ஒப்பு இல்லாத பிரமபுரம். நீர் மேல் நின்ற மூதூர் - கடல் மேல் மிதந்த தொன்மையான ஊர், தோணிபுரம். அகலிய வெங்குரு - அகன்ற நிலப்பரப்பையுடைய வெங்குரு. அந்தண் தராய் - குளிர்ந்த பூந்தராய். அமரர் பெருமான் -

தேவதேவன், மகாதேவன். இறைவனைப் பாடும் பொழுதும் நாம் கைதொழுதல் வேண்டும் என்பது இத்திருப்பாடலால் பெறப்படும் ஒழுக்கம்.

குறிப்புரை: 1. பிரமபுரம், 2. வேணுபுரம், 3. புகலி, 4. வெங்குரு, 5. தோணிபுரம், 6. பூந்தராய், 7. சிரபுரம், 8. புறவம், 9. சண்பை, 10. காழி, 11. கொச்சைவயம், 12. கழுமலம் ஆகிய திருப்பெயர்களை இம்முறையே தனித்தனி முதலிற்கொண்டு தொடங்கும் திருப்பாடல் இப்பதிகத்திற் காணப்படுகின்றன. ஈற்றுப்பாடல் மட்டும். 'கழுமலத்தின் பெயரை' என்றுரைக்கும் காரணம் பற்றியும் ஒவ்வொரு பாட்டிலும் 'கழுமலம்' என்று வருதல் பற்றியும் கழுமலம் என்று தொடங்கிற்றிலது. இம்முறையே, சேக்கிழார் சுவாமிகளும்,

'பிரமபுரம் வேணுபுரம் பெருபுகலி வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபும் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவம் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்'

(பெரிய. திருஞான. 14) என அருளியருக்கின்றார். (பார்க்க. தி. 2 பா. 109, 110). மன்னு – நிலைபெற்ற. பொன்அம் – பொன்னையும் அழகையும் உடைய. அரன் மன்னு தண்காழி – சிவபிரான் எழுந்தருளிய குளிர்ந்த காளீச்சரம். உள்ளிட்டு – உட்பட்டு. அங்கு ஆதி ஆய பரமன் ஊர். பன்னிரண்டாய் நின்ற திருக்கழுமலம் நாம் பரவும் ஊர். ஊர் பன்னிரண்டே அன்றி ஒரு ஊர்க்குப் பேர் பன்னிரண்டல்ல. இவ்வுண்மை அறியாதார் ஒரே ஊர்க்குப் பன்னிரண்டு பெயர் உள்ளன என்று எழுதியும் பேசியும் தொன்மையை அழித்தனர். தலபுராணத்திலும் தொன்மை மாறாத உண்மை உணர்த்தப்பட்டது.

Our Lord Civan manifests Himself in the cool city called Kaaleechcharam. This city is different from the other eleven cities. The twelve names mentioned here relate to eleven other villages all around this. This name relates to the main city Kaaleechcharam. This verse describes the twelve names of the twelve hamlets comprising Seerkaazhi. The Madurai king Koon Pandyan asked Thiru-gnana-Sambandar "Oh Lord! which is your sacred city?". For this question Thiru-gnana-Sambandar replied in twelve poems. This verse carries the twelve names of Seerkaazhi separately and then totally he sang 12 poems. The word Kazhumalam alone comes in almost all the poems. "The place where I live begins from Piramanoor and is completed in Kochchaivayam; it includes the twelve names and is called Kazhumalam".

2223. வேணுபுரம்பிரமனூர்புகலிபெருவெங்குருவெள்ளத்தோங்குந்
தோணிபுரம்பூந்தராய்தூநீர்ச்சிரபுரம்புறவங்காழி
கோணியகோட்டாற்றுக்கொச்சைவயஞ்சண்பைகூருஞ்செல்வங்
காணியவையகத்தாரேத்துங்கழுமலநாங்கருதுமூரே. 2

வேணுபுரம், பிரமன்ஊர், புகலி, பெரு வெங்குரு, வெள்ளத்துஓங்கும்
தோணிபுரம், பூந்தராய், தூ நீர்ச் சிரபுரம், புறவம், காழி,
கோணிய கோட்டாற்றுக் கொச்சைவயம், சண்பை, கூரும் செல்வங்
காணிய வையகத்தார் ஏத்தும் கழுமலம் - நாம் கருதும் ஊரே.

vENupuram, piraman2 Ur, pukali, peru vegkuru, veLLattu Ogkum
tONipuram, pUntarAy, tU nIrc cirapuram, puRavam, kAzi,
kONiya kOTTARRuk koccaivayam, caNpai, kUrum celvam
kANiya vaiyakattAr Ettum kazumalam--nAm karutum UrE.

பொருள்: தண் புகலி - குளிர்ச்சியான புகலி. வெள்ளங் கொள்ளத் தொங்கிய - தொங்குதல் தோணி. தொகு - கூடிய. தொல் - பழைய. தலை பண்டு ஆண்ட மூதூர் - தலை - சிரம்; சிரபுரம். எற்றான் - ஏற்ற சிவபிரான்.

குறிப்புரை: வெள்ளத்து ஓங்கும் தோணிபுரம் – பிரளய வெள்ளத்துள் மேல் ஓங்கி மிந்து விளங்கிய தோணிபுரம். தூநீர் – பரிசுத்த ஜலத்தையுடைய. கோணிய – வளைந்த. கோட்டாறு – இன்றும் உளது. 'கோட்டாறு சூழ் கொச்சை' (தி. 3 ப. 89 பா. 1). கூரும் – மிகும். காணிய – காண.

This place where I come from begins with the name Venupuram and carries twelve names including Shanbai. This place is praised by philanthropic people as Kazhumalam.

2224. புகலிசிரபுரம்வேணுபுரஞ்சண்பைபுறவங்காழி
நிகரில்பிரமபுரங்கொச்சைவயநீர்மேல்நின்றமூதூர்
அகலியவெங்குருவோடந்தண்டராயமரர்பெருமாற்கின்பம்
பகருநகர்நல்லகழுமலநாங்கைதொழுதுபாடுமூரே. 3

புகலி, சிரபுரம், வேணுபுரம், சண்பை, புறவம், காழி,
நிகர் இல் பிரமபுரம், கொச்சைவயம், நீர்மேல் நின்ற மூதூர்,
அகலிய வெங்குருவோடு, அம் தண் தராய், அமரர்பெருமாற்கு இன்பம்
பகரும் நகர் நல்ல கழுமலம் - நாம் கைதொழுது பாடும் ஊரே.

pukali, cirapuram, vENupuram, caNpai, puRavam, kAzi,
nikar il piramapuram, koccaivayam, nIrmEl nin2Ra mUtUr,
akaliya vegkuruvOTu, am taN tarAy, amarar perumARku in2pam
pakarum nakar nalla kazumalam--nAm kaitozutu pATum UrE.

பொருள்: தொல் நீரில் தோணிபுரம் - பழைய வெள்ளத்தில் மிதந்த தோணிபுரம். துயர் தீர் காழி - பிறவிக்குக் காரணமான துயர்களை நீக்கும் காழி. இன்தீர வேணுபுரம் - இனிய நீரினை உடைய வேணுபுரம். சிலம்பன் நகர் - சிரபுரம். பொன் நீர புன் சடையான் - பொன் நிறமுடைய அழகிய சடை உடையவன்.

குறிப்புரை: நிகர் – ஒப்பு. இல் – இல்லாத. நீர்மேல் நின்ற மூதூர் – தோணிபுரம். அகலிய – அகன்ற இடத்தையுடைய. அம்தண்தராய் – பூந்தருவராய். அமரர் பெருமாற்கு – தேவர் பிரானுக்கு. பகரும் – கூறும். 'நாம் கைதொழுது பாடும் ஊர்' என்றதால். நாம் பாடும்போதும் கைதொழுதல் இன்றியமையாதது என்பது விளங்கும். இத்தமிழ் மறையைப் போற்றும் அருளொழுக்கம் புலப்படும் பா. 6 குறிப்புரை பார்க்க.

The city where I worship our Lord Civan and recite sacred songs consists of towns Pugali to Poontharai and includes twelve sacred town's names. Here our Lord Civan relishes the maximum joy and this is known as Kazhumalam.

2225. வெங்குருத்தண்புகலிவேணுபுரஞ்சண்பைவெள்ளங்கொள்ளத்
தொங்கியதோணிபுரம்பூந்தராய்தொகுபிரமபுரந்தொல்காழி
தங்குபொழிற்புறவங்கொச்சைவயந்தலைபண்டாண்டமூதூர்
கங்கைசடைமுடிமேலேற்றான்கழுமலநாங்கருதுமூரே. 4

வெங்குரு, தண் புகலி, வேணுபுரம், சண்பை, வெள்ளம் கொள்ளத்
தொங்கிய தோணிபுரம், பூந்தராய், தொகு பிரமபுரம், தொல் காழி,
தங்கு பொழில் புறவம், கொச்சைவயம், தலை பண்டு ஆண்ட மூதூர்,
கங்கை சடைமுடிமேல் ஏற்றான் கழுமலம் - நாம் கருதும் ஊரே.

veN^kuru, thaNpukali, vENupuram, chaNpai veLLaN^ koLLath
thoN^kiya thONipuram pUn^tharAy thokupirama puram^thol kAzi
thaN^ku poziRpuRavam^ kochchai vayan^thalaipaN TANTa mUthUr
kaN^kai chaTaimuTimE lERRAn kazumalan^AN^ karuthu mUrE.

பொருள்: தண்ணந்தராய் - குளிர்ந்த பூந்தராய். தாமரையானூர் - தாமரையான் பிரமன்; பிரமபுரம், தலை முன் ஆண்ட அண்ணல் நகர் - தலை - சிரம்; சிரபுரம். தண் புறவம் - குளிர்ந்த புறவம். சீர் அணியார் காழி - சீர் - பெருமை, கனம். விண்ணியல் சீர் வெங்குரு - விண்ணுலகத்துக்கு நிகரான வெண்குரு. நல் வேணுபுரம் - நல்ல - அழகிய வேணுபுரம். மேலார் ஏத்தும் கண்ணுதலான் மேவிய நற்கழுமலம் - மேலார் - ஞானியர், பத்தர், சித்தர் முதலியோர்; ஏத்தும் - வழிபடும்; கண்ணுதலான் - நெற்றிக்கண்ணினனாகிய சிவபிரான்.

மேவிய - இருக்கின்ற கழுமலம். கருதுதல் - தியானித்தல். கைதொழுது கருதுமூரே - கைதொழுத வண்ணம் தியானிக்கும் ஊர் கழுமலமே.

குறிப்புரை: தண் – குளிர்ந்ததாகிய. வெள்ளம் கொள்ளத் தொங்கிய தோணிபுரம் என்றதால். தோணி தொங்குதல் உணர்த்தப்பட்டது. தொகு – கூடிய. தொல் – பழைய. பொழில் – சோலை. தலைபண்டு ஆண்ட மூதூர் – சிரபுரம். ஏற்றான் – ஏற்ற சிவபிரான்.

Our Lord Civan who supports the river Ganges in His matted hair is manifest in this place called Kazhumalam. I was born in this place, which is the last of the twelve names of the esteemed towns. Venguru and Sirapuram are among these names.

2226. தொன்னீரிற்றோணிபுரம்புகலிவெங்குருத்துயர்தீர்காழி
இன்னீரவேணுபுரம்பூந்தராய்ப்பிரமனூரெழிலார்சண்பை
நன்னீரபூம்புறவங்கொச்சைவயஞ்சிலம்பனகராநல்ல
பொன்னீரபுன்சடையான்பூந்தண்கழுமலநாம்புகழுமூரே. 5

தொல்-நீரில்-தோணிபுரம், புகலி, வெங்குரு, துயர் தீர் காழி,
இன் நீர வேணுபுரம், பூந்தராய், பிரமன்ஊர், எழில் ஆர் சண்பை,
நன்நீர பூம் புறவம், கொச்சைவயம், சிலம்பன்நகர், ஆம் நல்ல
பொன்நீர புன்சடையான் பூந் தண் கழுமலம் - நாம் புகழும் ஊரே.

tol-nIril-tONipuram, pukali, vegkuru, tuyar tIr kAzi,
in2 nIra vENupuram pUntarAy, piraman2 Ur, ezil Ar caNpai,
nan2nIra pUm puRavam, koccaivayam, cilampan2nakar, Am nalla
pon2 nIra pun2caTaiyAn2 pUn taN kazumalam--nAm pukazum UrE.

பொருள்: சீரார் சிரபுரம் - புகழ் நிறைந்த சிரபுரம். நல்ல ஆராத் தராய் - நல்ல காணுந்தோறுந் தெவிட்டாத பூந்தராய். ஏரார் கழுமலம் - மிக்க அழகுடைய கழுமலம். என்று என்று உள்கி - இடைவிடாது தியானித்து. பேரான் நெடியவனும் நான்முகனும் - பெயரான் நீண்ட திருமாலும், பெயரான் நான்முகனாகிய பிரமனும். பெயர்தல் - அகலுதல், நீங்குதல். காண்பு அரிய - காணுதற்கு அரிய. காண இயலாத. அருமை இன்மையை உணர்த்திற்று.

குறிப்புரை: தொல்நீர் – பழைய பிரளய வெள்ளம். துயர் – பிறவித் துயர் (பிறதுயர்கள் இதனுள் அடக்கம்). இன்நீர் – இனிய நீரினையுடைய. எழில் – அழகு. நல்நீர – நல்ல நீரினையுடைய. சிலம்பன் நகர் – சிரபுரம்.

The town I praise is called Thonipuram, which floated in the sea at the time of the universal deluge and destruction of all things (end of the world). Beginning from this town and ending in the twelfth town called Sirapuram is my place. Our Lord Civan's matted hair glitters like gold. He is manifest in this precious town called Kazhumalam.

2227. தண்ணந்தராய்புகலிதாமரையானூர்சண்பைதலைமுனாண்ட
அண்ணல்நகர்கொச்சைவயந்தண்புறவஞ்சீரணியார்காழி
விண்ணியல்சீர்வெங்குருநல்வேணுபுரந்தோணிபுரமேலாரேத்து
கண்ணுதலான்மேவியநற்கழுமலநாங்கைதொழுதுகருதுமூரே. 6

தண் அம் தராய், புகலி, தாமரையான்ஊர், சண்பை, தலை முன் ஆண்ட
அண்ணல் நகர், கொச்சைவயம், தண் புறவம் சீர்அணி ஆர் காழி,
விண் இயல் சீர் வெங்குரு, நல் வேணுபுரம், தோணிபுரம், மேலார் ஏத்து
கண் நுதலான் மேவிய நல் கழுமலம் - நாம் கைதொழுது கருதும் ஊரே.

tan2 am tarAy, pukali, tAmaraiyAn2 Ur, caNpai, talai mun2 ANTa
aNNal nakar, koccaivayam, taN puRavam, cIr aNi Ar kAzi,
viN iyal cIr vegkuru, nal vENupuram, tONipuram, mElAr Ettu
kaN nutalAn2 mEviya nal kazumalam--nAm kaitozutu karutum UrE.

பொருள்: நறவம் மிகு சோலைக் கொச்சை - தேன் கமழும் சோலைகளை உடைய கொச்சைவயம். தராய் - பூந்தராய். நான்முகன்றன் ஊர் - பிரமபுரம். விறலாய வெங்குரு - பெருமையுடைய வெங்குரு. விசயன் - அருச்சுனன். அரக்கன் - இராவணன். செற்றான் - அழித்தான்.

குறிப்புரை: தண் அம்தராய் – பூந்தராய். தாமரையான் ஊர் – பிரமபுரம். தலைமுன் ஆண்ட அண்ணல் நகர் – சிரபுரம். விண் – ஆகாயம். இயல் – செல்லும். சீர் – கனம். புகழ். மேலார் – தேவர். மேன்மையுடைய ஞானியர் முதலோர். மேவிய – விரும்பி எழுந்தருளியுள்ள. தியானம் புரியும்போது கைதொழுத வண்ணம் இருத்தல் வேண்டும். 'அஞ்சலி செய்திருந்து' (ஞானபூசா விதி – 8). பா. 3 குறிப்புரை பார்க்க.

The town where I offer worship with both hands and praise our Lord Civan includes the town known as Poontharai, altogether twelve along with the town

Thonipuram. Our Lord Civan who has a third eye in His forehead is manifest in this city called Kazhumalam.

2228. சீரார்சிரபுரமுங்கொச்சைவயஞ்சண்பையொடுபுறவநல்ல
ஆராத்தராய்பிரமனூர்புகலிவெங்குருவோடந்தண்காழி
ஏரார்கழுமலமும்வேணுபுரந்தோணிபுரமென்றென்றுள்கிப்
பேராலநெடியவனுநான்முகனுங்காண்பரியபெருமானூரே. 7

சீர்ஆர் சிரபுரமும், கொச்சைவயம், சண்பையொடு, புறவம், நல்ல
ஆராத் தராய், பிரமன்ஊர், புகலி, வெங்குருவோடு, அம்தண் காழி,
ஏர் ஆர் கழுமலமும், வேணுபுரம், தோணிபுரம், என்றுஎன்று உள்கி,
பேரால் நெடியவனும் நான்முகனும் காண்பு அரிய பெருமான் ஊரே.

cIr Ar cirapuramum, koccai vayam, caNpaiyoTu, puRavam, nalla
ArAt tarAy, piraman2 Ur, pukali, vegkuruvoTu, am taN kAzi,
Er Ar kazumalamum, vENupuram, tONipuram, en2Ru en2Ru uLki,
pErAl neTiyavan2um nAn2mukan2um kANpu ariya perumAn2 UrE.

பொருள்: சாயாப் பண்பார் சிரபுரம் - அழியாக் குணமுடையார், வருத்தமிலார் வாழும் சிரபுரம். தராய் - பூந்தராய். நண்பு - நட்பு. விருப்பம். வியப்பு - அழித்த. அகந்தையை அழித்த. வியத்தலுக்குக் காரணமானது அகந்தை. அதை அழித்த. விமலன் - தூயவன்.

குறிப்புரை: சீர்ஆர் – புகழ் நிறைந்த. கணம் மிக்க எனலுமாம். நல்ல ஆராத்தராய் – நல்ல தெவிட்டாத, பூந்தராய். ஏர் – அழகு. என்று என்று – அடுக்கு இடைவிடாமை மேலது. உள்கி – நினைத்து. பேரான் – பெயராதவனாய், பேரான் என்பது இருவர்க்கும் பொதுவாய்த் தனித்தனி அமையும். பேரானாய்க் காண்பு என்க.

The town to which I am connected in many ways begins from the sacred city of Sirapuram and ends in the twelfth town of Thonipuram. The demigod Thirumaal and Brahma had in their minds the sacredness of all these twelve towns. They went to this temple to worship our Lord Civan and prostrated before Him and prayed. Even then our Lord Civan was invisible to both these demigods. This is such a sacred place for Lord Civan to be manifested and this is Kazhumalam.

2229. புறவஞ்சிரபுரமுந்தோணிபுரஞ்சண்பைமிகுபுகலிகாழி
நறவமிகுசோலைக்கொச்சைவயந்தராய்நான்முகன்றனூர்
விறலாயவெங்குருவும்வேணுபுரம்விசயன்மேலம்பெய்து
திறலாலரக்கனைச்செற்றான்றன்கழுமலநாஞ்சேருமூரே. 8

புறவம் சிரபுரமும், தோணிபுரம், சண்பை, மிகு புகலி, காழி,
நறவம், மிகு சோலைக் கொச்சைவயம், தராய், நான்முகன்தன்ஊர்,
விறல்ஆய வெங்குருவும், வேணுபுரம், விசயன் மேல் அம்பு எய்து
திறலால் அரக்கனைச் செற்றான்தன் கழுமலம் - நாம் சேரும் ஊரே.

puRavam, cirapuramum, tONipuram, caNpai, miku pukali, kAzi,
naRavam miku cOlaik koccaivayam, tarAy, nAn2mukan2 tan2 Ur,
viRal Aya vegkuruvum, vENupuram, vicayan2 mEl ampu eytu
tiRalAl arakkan2aic ceRRAn2 tan2 kazumalam--nAm cErum UrE.

பொருள்: செழு மலிய பூங்காழி - செழிப்பு மலிதல் உடைய அழகிய காழி. செய்ய கொழு மலரான் நன்னகர் - செழுமையும் கொழுமையும் உடைய மலர் தாமரை. அதன் மேலான் பிரமன். விழுமிய சீர் - மிக்க புகழுடைய 'இன்னபெயர் பன்னிரண்டும் கண்ணுதலான் கருதும் ஊரே', என்றதால் இவை பன்னிரண்டு ஊர்களின் பெயர் என்பதும் ஒரு ஊருக்கே கூறப்பட்ட பன்னிரண்டு பெயர்கள் அல்ல என்பதும் பெறப்படும்.

குறிப்புரை: நறவம் – தேன். நான்முகன்றன் ஊர் – பிரமபுரம். விறல் – பெருமை. விசயன் – அருச்சுனன். திறல் – திறன். அரக்கன் – இராவணன். செற்றான் – அழித்தான்.

The town to which I am connected in my life begins with the name Puravam and ends with twelve names including Venupuram. This sacred place is connected with Lord Civan and is called Kazhumalam. This Lord Civan once waged a playful fight with Arjunan and suppressed the mightiness of Raavanan the king of Sri Lanka.

2230. சண்பைபிரமபுரந்தண்புகலிவெங்குருநற்காழிசாயாப்
பண்பார்சிரபுரமுங்கொச்சைவயந்தராய்புறவம்பார்மேல்
நண்பார்கழுமலஞ்சீர்வேணுபுரந்தோணிபுரநாணிலாத
வெண்பற்சமணரொடுசாக்கியரைவியப்பழித்தவிமலனூரே. 9

சண்பை, பிரமபுரம், தண் புகலி, வெங்குரு, நல் காழி, சாயாப்
பண்பு ஆர் சிரபுரமும், கொச்சைவயம், தராய், புறவம், பார் மேல்
நண்பு ஆர் கழுமலம் சீர் வேணுபுரம், தோணிபுரம் - நாண்இலாத
வெண்பல் சமணரொடு சாக்கியரை வியப்பு அழித்த விமலன் ஊரே.

caNpai, piramapuram, taN pukali, vegkuru, nal kAzi, cAyAp
paNpu Ar cirapuramum, koccaivayam, tarAy, puRavam, pArmEl
naNpu Ar kazumalam, cIr vENupuram, tONipuram--nAN ilAta
veNpal camaNaroTu cAkkiyarai viyappu azitta vimalan2 UrE.

பொருள்: நிச்சல் விழவு ஓவா நீடார் சிரபுரம் - நாள்தோறும் விழாக்கள் ஒழியாத காலத்தாலும் இடத்தாலும் நெடுமை பொருந்திய சிரபுரம். நச்ச + இனிய = நச்சினிய - விரும்புதற்கு இனிய. அச்சங்கள் தீர்த்து அருளும் அம்மான் - பிறப்பச்சம் முதலியவற்றை நீக்கும் அம்மான். அம்மான் - அருமகன்.

குறிப்புரை: சாலாப் பண்பு – அழியாக்குணம். பண்பார் – குணத்தார் எனினுமாம். நாண் – நாணம். வியப்பு – பெருமை. விமலன் – அநாதி மலமுத்தன்.

The town wherefrom I hailed begins from Shanbai and includes the twelfth last town called Thonipuram. Our Lord Civan is the Supreme Being who doomed the high dignity of the Jains and Buddhists in this town called Kazhumalam.

2231. செழுமலியபூங்காழிபுறவஞ்சிரபுரஞ்சீர்ப்புகலிசெய்ய
கொழுமலரான்நன்னகரந்தோணிபுரங்கொச்சைவயஞ்சண்பையாய
விழுமியசீர்வெங்குருவோடோங்குதராய்வேணுபுரமிகுநன்மாடக்
கழுமலமென்றின்னபெயர்பன்னிரண்டுகண்ணுதலான்கருதுமூரே. 10

செழு மலிய பூங்காழி புறவம், சிரபுரம், சீர்ப் புகலி, செய்ய
கொழுமலரான் நன்நகரம், தோணிபுரம், கொச்சைவயம், சண்பை, ஆய
விழுமிய சீர் வெங்குருவோடு, ஓங்கு தராய், வேணுபுரம், மிகு நல் மாடக்
கழுமலம், என்று இன்ன பெயர் பன்னிரண்டும் - கண்நுதலான் கருதும் ஊரே.

cezu maliya pUg kAzi, puRavam, cirapuram, cIrp pukali, ceyya
kozumalarAn2 nan2nakaram, tONipuram, koccaivayam, caNpai, Aya
vizumiya cIr vegkuruvoTu, Ogku tarAy, vENupuram, miku nal mATak
kazumalam, en2Ru in2n2a peyar pan2n2iraNTum--kaN nutalAn2 karutum UrE.

பொருள்: காவி - கருங்குவளை மலர். இங்குக் 'கழுமலத்தின் பெயரை நாளும் பாவிய சீர்ப் பன்னிரண்டு நன்னூலா' என்றமையான், இவை கழுமலத்தைச் சார்ந்த நகரங்கள் எனப் பெறப்படும். புரையும் - ஒக்கும். பாவிய - பரவிய. பத்திமை - அன்பு. தலை விருப்பு - தலையாய அன்பு.

குறிப்புரை: செழுமலிய – செழிப்பு மலிதலையுடைய. செய்ய கொழுமலரான் நன்னகரம் – பிரமபுரம். விழுமிய சீர் – மிக்க புகழ். பன்னிரண்டும் ஊர் என்றது ஈண்டும் காண்க.

The town wherefrom I hailed carries the name Kazhumalam. This is also the same place which our Lord Civan wished to enjoy. This is a sacred, attractive and fertile town which carries twelve names as already mentioned. Our Lord Civan is called Kannuthalaan because He has a third eye on His forehead. This Lord is fully manifest in this Kazhumalam.

2232. கொச்சைவயம்பிரமனூர்புகலிவெங்குருப்புறவங்காழி
நிச்சல்விழவோவாநீடார்சிரபுரநீள்சண்பைமூதூர்
நச்சினியபூந்தராய்வேணுபுரந்தோணிபுரமாகிநம்மேல்
அச்சங்கள்தீர்த்தருளுமம்மான்கழுமலநாமமருமூரே. **11**

கொச்சைவயம், பிரமன்ஊர், புகலி, வெங்குரு, புறவம், காழி,
நிச்சல் விழ ஓவா நீடு ஆர் சிரபுரம், நீள் சண்பைமூதூர்,
நச்சு இனிய பூந்தராய், வேணுபுரம், தோணிபுரம், ஆகி நம் மேல்
அச்சங்கள் தீர்த்து அருளும் அம்மான் கழுமலம் - நாம் அமரும் ஊரே.

koccaivayam, piraman2 Ur, pukali, vegkuru, puRavam, kAzi,
niccal vizavu OvA nITu Ar cirapuram, nIL caNpai mUtUr,
naccu in2iya pUntarAy, vENupuram, tONipuram, Aki nammEl
accagkaL tIrttu aruLum ammAn2 kazumalam--nAm amarum UrE.

பொருள்: நாம் விரும்பும் ஊர், கொச்சைவயம் முதலாகத் தோணிபுரம் உள்ளிட்ட பன்னிரு பெயர்களைக் கொண்டதும் நம்மேல் வரும் அச்சங்கள் தீர்த்தருளும் அம்மான் எழுந்தருளியிருப்பதுமான கழுமலமாகும்.

குறிப்புரை: நிச்சல் – நாடோறும். விழவு – திருவிழாக்கள். ஓவா – ஒழியாத. நீடு ஆர் – காலத்தாலும் இடத்தாலும் நெடுமை பொருந்திய. நச்ச இனிய – விரும்புதற்கு இனிய. அச்சங்கள் – பிறப்பச்சம் முதலியவை. அம்மான் – அருமகன் என்பதன் மரூஉ. பெருமகன் என்பது பெம்மான் என்று வருதல் போல.

I like the town named Kochchaivayam, it carries twelve names including Thonipuram. Our Lord Civan is manifest in the town Kazhumalam. He eradicates the fate of His devotees and graces them.

2233. காவிமலர்புரையுங்கண்ணார்கழுமலத்தின்பெயரைநாளும்
பாவியசீர்ப்பன்னிரண்டுநன்னூலாப்பத்திமையாற்பனுவல்மாலை
நாவின்நலம்புகழ்சீர்நான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
மேவியிசைமொழிவார்விண்ணவரிலெண்ணுதலைவிருப்புளாரே. 12

காவிமலர் புரையும் கண்ணார் கழுமலத்தின் பெயரை நாளும்
பாவிய சீர்ப் பன்னிரண்டும் நன்நூலாப் பத்திமையால் பனுவல்மாலை
நாவின் நலம் புகழ் சீர் நால்மறையான் - ஞானசம்பந்தன் - சொன்ன
மேவி இசை மொழிவார் விண்ணவரில் எண்ணுதலை விருப்புஉளாரே.

kAvi malar puraiyum kaNNAr kazumalattin2 peyarai nALum
pAviya clrp pan2n2iraNTum nan2nUlAp pattimaiyAl pan2uval mAlai
nAvin2 nalam pukaz clr nAlmaRaiyAn2--njAn2acampantan2--con2n2a
mEvi icai mozivAr viNNavaril eNNutalai viruppu uLArE.

பொருள்: குவளை மலர் போலும் கண்களை உடைய மகளிர் வாழும் கழுமலத்தின் பெயர்களை நாள்தோறும் புகழ்மிக்க பன்னிரு நூல்கள் போல நாவினால் நலம் புகழ்ந்து ஞானசம்பந்தன் பாடிய இப்பனுவல் மாலையை இசையோடு மொழிபவர் விண்ணவர்களில் ஒருவராக எண்ணப்பெறும் மேலான விருப்புடையவர் ஆவர்.

குறிப்புரை: காவி – நீலோற்பவம், கருங்காவி. புரையும் – ஒக்கும். பாவிய – பரவிய. பத்திமை – அன்பு. மை விகுதி தமிழ் 'பத்திமையாற் பணிந்து' (தி. 6 பதி. 54 பா. 3). தலைவிருப்பு – தலையன்பு.

In this town of Kazhumalam very attractive, young damsels live in large numbers. Their eyes resemble the blue nilambo flowers and have a very good look. The town carries twelve names. The scholars who repeat the twelve names, as though the names are twelve divine books and sing these twelve verses sung by our Thiru-gnana-Sambandar in the best musical tone, will join the celestials and be among them.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

70ஆம் பதிகம் முற்றிற்று
End of 70th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 207 *பதிக எண்: 71*

71. திருக்குற்றாலம் 71. THIRU-K-KUTRALAM

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருக்குறும்பலா என்னும் திருத்தலமானது நெல்லை மாவட்டத்தில் விளங்கும் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். தென்காசி – செங்கோட்டை பேருந்து வழியில் உள்ளது. மதுரை, திருநெல்வேலி, தென்காசி, செங்கோட்டையிலிருந்து பேருந்து வசதிகளும் தங்கும் விடுதிகளும் உள்ளன. இது குற்றாலம் என்னும் ஒரு வகை ஆலமரத்தைத் தலவிருட்சமாக உடைமையால் இப்பெயர் பெற்றது. ‘உயிர்கொண்டு போம்பொழுது குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு உற்றார் யாருளரோ’ என்னும் திருவங்கமாலைப் பகுதியும், ‘குற்றாலத்து அமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே’ என்னும் திருவாசகப் பகுதியும் இத்தலச் சிறப்பு உணர்த்துவனவாகும். இங்குள்ள இறைவர்க்குக் கூத்தர் என்றும், இறைவியாருக்கு சிவகாமி அம்மையார் என்றும் பெயர்கள் வழங்கப்பெறுகின்றன.

இக்கோயிலைச் சம்பந்தர் முதல் திருமுறையில் பாடியிருக்கின்றார். இக்குற்றாலத்திலே குறும்பலா என்ற கோயில் இருக்கின்றது. இதைத்தான் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் இரண்டாம் திருமுறையில் பாடியிருக்கின்றார்கள். திருக்குறும்பலா தலமானது திருக்குற்றாலத்தில் அருவியை அடுத்து வடகரையில் இருக்கின்றது. குறும்பலா என்னும் ஒருவகை மரத்தை தலவிருட்சமாக உடைமையால் அம்மரத்தாலேயே இக்கோயில் குறும்பலா என்னும் பெயர் எய்திற்று.

இறைவரது திருப்பெயர் குறும்பலாநாதர். இறைவியார் திருப்பெயர் குழல்வாய் மொழியம்மை. இது முதலில் விஷ்ணுதலமாய் இருந்தது. அவ்வூர் வைணவப் பெருமக்கள் சிவநிந்தையும், சிவனடியார் நிந்தையும் செய்ததோடு அகத்தியரையும் அவ்வூரில் அணுக வொட்டாது தடுத்தமையால், அவ்வைணவர்களது அகந்தையை அடக்கும் பொருட்டு அகத்தியர் வைணவ அடியார் வேடம் பூண்டு, கோயிலுக்குள் சென்று திருமாலின் திருத்தலையில் தம் கை வைத்துச் சிவலிங்க வடிவாக்கினார் என்றும் அன்று முதல் இது சிவன்கோயிலாயிற்று என்றும் பழைய வரலாறு உண்டு. இத்தலம் ஞானசம்பந்தரால் மட்டும் பாடப்பெற்றது. இதற்கு அவருடைய பதிகம் ஒன்று இருக்கின்றது.

பதிக வரலாறு7

சிரபுரத்து வந்தருளும் செல்வர் சிலநாளிலிருந்து திருப்புத்தூரை வழிபட்டு, பூவணத்தைப் போற்றிக் காண்போரைக் கைதொழுது கழியலை வணங்கிக் குற்றாலம் குறும்பலாக் கும்பிட்டு ஏத்தியது இத்திருப்பதிகம்.

Thiru-k-kurumbala or Thiru-k-kutralam, both are one and the same place in Tirunelveli District. It is on the way from Tirunelveli to Shencottai.

திருச்சிற்றம்பலம்

2234. திருந்தமதிசூடித்தெண்ணீர்சடைக்கரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதல்புரிந்தசெல்வர்
இருந்தஇடம்வினவில்ஏலங்கமழ்சோலையினவண்டுயாழ்செய்
குருந்தமணநாறுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. 1

திருந்த மதி சூடி, தெண்நீர் சடைக் கரந்து, தேவி பாகம்
பொருந்தி, பொருந்தாத வேடத்தால் காடு உறைதல் புரிந்த செல்வர்
இருந்த இடம் வினவில் - ஏலம் கமழ் சோலை இனவண்டு யாழ்செய்,
குருந்த மணம் நாறும் குன்று இடம் சூழ் தண்சாரல், குறும்பலாவே.

tirunta mati cUTi, teN nIr caTaik karantu, tEvi pAkam
poruunti, poruntAta vETattAl kATu uRaital purinta celvar
irunta iTam vin2avil--Elam kamaz cOlai in2avaNTu yAzcey,
kurunta maNam nARum kun2Ru iTam cUz taNacAral, kuRumpalAvE.

பொருள்: பிறையைச் சடையில் திருத்தமாகச் சூடி, தெளிந்த கங்கை நதியைச் சடையில் மறைத்து உமையம்மையைத்தன் மேனியில் பொருந்தி, காட்டில் உறைவதற்குப் பொருந்தாத இக்கோலத்தொடு உழிதருதலைச் செய்த செல்வர், இருக்கும் இடம் யாதென வினவில், ஏலம் மணக்கும் சோலையில் கூட்டமான வண்டுகள் யாழ்போல முரல, குருந்தம் மணம் நாறும் குன்றுகள் சூழ்ந்த, குளிர்ந்த சாரல்களையுடைய குறும்பலாவே.

குறிப்புரை: திருந்தச் சூடிக்கரந்து பொருந்திப் பொருந்தாத வேடத்தால் உறைதல் புரிந்த செல்வர் என்று இயைக்க. மதி – பிறை. தெள்நீர் – தெளிந்த கங்கைநீர். சடைக்கரந்து – சடையில் மறைந்து. தேவிபாகம் பொருந்தி – தேவியினது பாகத்தைத் தான் பொருந்தி. பொருந்தாத வேடத்தால் – காட்டில் உறைவதற்கு ஒவ்வாத கோலத்தால். புரிந்த – விரும்பிய. ஏலம் – வாசனைப் பொருள்களுள் ஒன்று. 'தக்கோலம் தீம்பூத் தகைசால் இலவங்கம் . . . கப்பூரம் சாதியோடு ஐந்து'. யாழ்செய் – யாழோசை போலும் இன்னோசை செய்கின்ற குருந்தம் – குருந்தமரம். குறும்பலா என்பது பலாவகைகளுள் ஒன்று. குற்றாலம்,

குறும்பலா இரண்டும் திருக்குற்றால மலையிலுள்ள தலவிருட்சம். வம்பார் குன்றம் . . . குற்றாலம் என்றும், குன்றிடஞ்சூழ் தண்சாரற்குறும்பலா என்றும் இருவேறு திருப்பதிகம் அருளியவாறு உணர்தற்பாலது.

Behold! It is Civan who resides in the temple called Kurumbala or Kutralam. Our Lord Civan has decorated His hair and retains the baby moon on His matted hair. He supports the river Ganges also on His matted hair and keeps it invisible. He embeds His consort Uma Devi on the left portion of His body. He loves to go and dance and spend time in the burial ground. If you question regarding the place where our Lord is manifested the answer is simple. In the entire area where He is manifested the sweet smell of cardamom is felt everywhere. The bees, always humming in the big gardens around the temple, make noise like the beautiful music of lute. There are small hillocks all around the temple wherefrom the sweet smell of Kuruntha tree spreads in the entire area. Very cool wind always blows all around His temple along with the cool light dazzling. And this place is called Kurumbala where our Lord Civan is manifest.

2235. நாட்பலவுஞ்சேர்மதியஞ்சூடிப்பொடியணிந்தநம்பான்நம்மை
ஆட்பலவுந்தானுடையஅம்மானிடம்போலுமந்தண்சாரல்
கீட்பலவுங்கீண்டுகிளைகிளையன்மந்திபாய்ந்துண்டுவிண்ட
கோட்பலவின்தீங்கனியைமாக்கடுவனுண்டுகளுங்குறும்பலாவே. 2

நாள்பலவும் சேர் மதியம் சூடிப்பொடி அணிந்த நம்பான், நம்மை
ஆள்பலவும் தான் உடைய அம்மான், இடம்போலும் - அம் தண்சாரல்,
கீள் பலவும் கீண்டு கிளைகிளையன் மந்தி பாய்ந்து உண்டு, விண்ட
கோள் பலவின் தீம்கனியை மாக் கடுவன் உண்டு உகளும் குறும்பலாவே.

nALpalavum cEr matiyam cUTip poTi aNinta nampAn2, nammai
ALpalavum tAn2 uTaiya ammAn2, iTampOlum--am taNcAral,
kIL palavum kINTu kiLaikiLaiyan2 manti pAyntu uNTu, viNTa
kOl palavin2 tIm kan2iyai mAk kaTuvan2 uNTu ukaLum kuRumpalAvE.

பொருள்: விண்மீன்கள் பலவற்றைச் சேர்கின்ற பிறையைச் சிரசில் சூடி, திருநீற்றுப் பொடியை அணிந்த சிவபெருமான், நம்மைப் பலவகையாலும் ஆளாகக் கொண்ட அம்மான் இடம் யாதெனில், அழகிய குளிர்ந்த சாரலிலே வெடித்துப் பிளக்கும் பக்குவத்தில் உள்ள பலாப்பழத்தினைக் கீறிப் பிளந்து கிளைகள் தோறும் மந்தி பாய்ந்து உண்டு விண்ட அடிப்பலாவின் இனிய கனியை உண்டு கடுவன் துள்ளும் குறும்பலாவே.

குறிப்புரை: நாள்பலவும் சேர்மதியம் – பூரண சந்திரன், 'பிள்ளைமதியும் புனலும் சூடி' எனப் (பா.7) பின்வருதலறிக. நம்பான் – சிவபெருமான். 'நம்பான் மேய நன்னகர்' (தி. 1 ப. 99 பா. 1). 'நடம் பயிலும் நம்பானே', 'நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே' (தி. 3 ப. 125 பா. 1). ஆட்பலவும் – ஆலாகும் பலவகையும். கீள்பல – பிளத்தற்குரிய பலா. கீண்டு – பிளந்து. (கிழி – கீழ் – கீள், கிழிந்து – கீழ்ந்து – கீண்டு). கிளை கிளையல் – கிளை கிளையாக. கிளையின் என்றிருந்ததோ? மந்தி – பெண் குரங்கு. விண்ட – (நீங்கிய) பிளந்த. கோள் – குலை. கடுவன் – ஆண்குரங்கு. உகளும் – துள்ளும். இது பலாவிற்கேற்ற வருணனை.

Behold! Our Lord Civan manifests Himself in Kurumbala. He retains the moon on His hair, which grows day by day with sixteen phases. He applies all over His body the holy ashes. He has affection for us. He approaches us and takes us as His servitors and graces us. He is manifested in a temple situated in the beautiful cool mountain site. Here the female monkey selects the fully riped jack fruits, bites them and enjoys eating along with the other monkeys. Then some fruits fall off from the tree and the male monkeys wandering on the ground collect these sweet fruits and eat them to their satisfaction. This is such a place called Kurumbala where our Lord Civan is manifest in the temple.

2236. வாடற்றலைமாலைசூடிப்புலித்தோல்வலித்துவீக்கி
ஆடலரவசைத்தஅம்மானிடம்போலுமந்தண்சாரல்
பாடற்பெடைவண்டுபோதலர்த்தத்தாதவிழ்ந்துபசும்பொன்னுந்திக்
கோடன்மணங்கமழுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. 3

வாடல்-தலைமாலை சூடி, புலித்தோல் வலித்து வீக்கி,
ஆடல் அரவு அசைத்த அம்மான் இடம்போலும் - அம் தண்சாரல்,
பாடல் பெடைவண்டு போது அலர்த்த, தாது அவிழ்ந்து, பசும்பொன் உந்திக்
கோடல் மணம் கமழும் குன்று இடம் சூழ் தண்சாரல் குறும்பலாவே.

vATal-talaimAlai cUTi, pulittOl valittu vIkki,
ATal aravu acaitta ammAn2 iTampOlum--am taN cAral,
pATal peTaivaNTu pOtu alartta, tAtu avizntu, pacumpon2 untik
kOTal maNam kamazum kun2Ru iTam cUz taNcAral kuRumpalAvE.

பொருள்: சதை வற்றி வறண்டுபோன தலைமாலையைச் சூடி, புலியின் தோலினை அரையில் இறுகக் கட்டி அதன்மேல் கச்சாகப் பாம்பினை அசைத்த அம்மானிடம் யாதெனில், குளிர்ந்த சாரலில் இசைபாடும் பெண் வண்டு போதினை அலர்த்தத் தாது அவிழ்ந்து பசும்பொன்னின் துகள் போலக் கிடத்தும் வெண்காந்தள் மலர் மணம் வீசும் குன்றுகள் சூழ்ந்த குறும்பலாவே.

குறிப்புரை: வாடல் – வற்றுதல். வலித்து வீக்கி – உறுதியாகக் கட்டி. அசைத்த – கட்டிய. ஆட்டிய எனலுமாம். போது – மலரும் பருவத்து. அலர்த்த – அலரச்செய்ய. கோடல் – வெண்காந்தள்.

Behold! It is Civan the Lord of Kurumbala. He adorns His body with the garland made up of human skulls, inside which the flesh is dried up. He wears on His loins the tiger hide. He has tightened His waist with the dancing snake. Lord Civan in this stature is manifest in the beautiful and cool hill temple where clouds gather during the monsoon season. Here the female bees make a humming noise like music, while flying from one flower to another where the buds start blooming. While the bees disturb the buds the pollen grains in the flowers fall on the ground like golden powder. In that area the sweet smell of the flowers - Malabar Glory Lily, red or white species spreads all around the hillock in the temple where our Lord Civan is manifest and this is called Kurumbala.

2237. பால்வெண்மதிசூடிப்பாகத்தோர்பெண்கலந்துபாடியாடிக்
காலனுடல்கிழியக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பில்
நீலமலர்க்குவளைகண்திறக்கவண்டரற்றுநெடுந்தண்சாரல்
கோலமடமஞ்ஞைபேடையொடாட்டயருங்குறும்பலாவே. 4

பால்வெண்மதிசூடி, பாகத்து ஓர் பெண் கலந்து, பாடி, ஆடி,
காலன் உடல் கிழியக் காய்ந்தார் இடம் போலும் - கல் சூழ் வெற்பில்,
நீலமலர்க்குவளை கண்திறக்க, வண்டு அரற்றும் நெடுந் தண்சாரல்
கோல மடமஞ்ஞை பேடையொடு ஆட்டு அயரும் குறும்பலாவே.

pAl veNmati cUTi, pAkattu Or peN kalantu, pATi, ATi,
kAlan2 uTal kiziyak kAyntAr iTampOlum--kal cUz veRpil,
nIlamalarkkuvaLai kaN tiRakka, vaNTu araRRum neTun taNcAral,
kOla maTamanjnjai pETaiyoTu ATTu ayarum kuRumpalAvE.

பொருள்: பால் போன்ற வெண்ணிறமான பிறையைச் சூடியும், உமையம்மையைப் பாகத்தில் கொண்டும் பாடியும் ஆடியும் எமனை உடல் பிளக்க உதைத்தும் நின்ற சிவபிரானின் இடம் யாதெனில், பாறைகள் சூழ்ந்த மலைமேல், நீல நிறமான குவளைமலர் கண்போல் திறக்க வண்டுகள் அரற்றும் நீண்ட குளிர்ந்த சாரலில், அழகிய மயில்கள் பெடையுடன் மகிழ்ந்து ஆடுதலைச் செய்யும் குறும்பலாவே.

குறிப்புரை: பிறை சூடியும், உமை மங்கையை இடப்பால் கொண்டும் பாடியும் ஆடியும் எமனை உதைத்தும் நின்ற சிவபெருமான் இடம். கல்ஆம் வெற்பு – கற்கள் சூழ்ந்த மலை. குவளைகள் கண்போல் திறக்க. அரற்றும் – ஒலிக்கும். கோலம் – அழகு. மடம் – அழகு. மென்மை, மஞ்ஞை – மயில். பேடை – பெண்மயில். ஆட்டு – ஆட்டம். அயரும் – செய்யும்.

Behold! It is Civan, who is manifest in Kurumbala. He retains the baby moon, which is white as cow's milk in His matted hair. He dances and sings beautifully to the accompaniment of music. He has embedded His consort Uma Devi on the left half of His body. While Civan sings and dances, she also participates and joins with Him. To help and save Markandeya who is the most sincere devotee of Lord Civan, He became furious and kicked Kaalan (God of Death) and tore his body. Lord Civan, who acted like this, manifests Himself in the temple surrounded by cool ponds in the nearby hillocks of big pebbles. In these water tanks purple Indian water lily and blue neulambo with fully blossomed petals look like the beautiful eyes of young girls. The bees while flying from one flower to another make good music. This being the range of mountains drizzling rains always bring coolness all around. Here the peacocks and peahens in large numbers gather, dance and enjoy their life. This is the place where our Lord Civan is manifested in the temple called Kurumbala.

2238. தலைவாண்மதியங்கதிர்விரியத்தண்புனலைத்தாங்கித்தேவி
முலைபாகங்காதலித்தமூர்த்தியிடம்போலும்முதுவேய்சூழ்ந்த
மலைவாயசும்புபசும்பொன்கொழித்திழியும்மல்குசாரல்
குலைவாழைத்தீங்கனியும்மாங்கனியுந்தேன்பிலிற்றுங்குறும்பலாவே. 5

தலை வாள்மதியம் கதிர்விரிய, தண்புனலைத் தாங்கி, தேவி
முலை பாகம் காதலித்த மூர்த்தி, இடம்போலும் - முது வேய் சூழ்ந்த
மலைவாய் அசும்பு பசும்பொன் கொழித்து இழியும் மல்கு சாரல்,
குலைவாழைத் தீங்கனியும் மாங்கனியும் தேன் பிலிற்றும் குறும்பலாவே.

talai vALmatiyam katir viriya, taNpun2alait tAgki, tEvi
mulai pAkam kAtalitta mUrtti iTampOlum--mutu vEy cUznta
malaivAy acumpu pacumpon2 kozittu iziyum malku cAral,
kulaivAzait tImkan2iyum mAgkan2iyum tEn2 piliRRum kuRumpalAvE.

பொருள்: தலையில் ஒளியுடைப் பிறை கதிர் விரிக்க, குளிர்ந்த கங்கைப் புனலைத் தாங்கி, உமையம்மையின் பாகத்தை விரும்பிய மூர்த்தியின் இடம், யாதெனில், முற்றிய மூங்கில்கள் சூழ்ந்த மலைப் பாறைகளின் மேல் பொசியும் நீர் பசும் பொன்னைக் கொழித்து இழியும்; நிறைந்த மலைச் சாரல்களில் வாழையின் இனிய கனியும் மாங்கனியும் தேன் துளிர்க்கும் குறும்பலாவே.

குறிப்புரை: தலைமதியம், வான்மதியம். வான் – ஒளி. தலையில் மதியம் கதிர்விரிய புனலைத்தாங்கி, பாகங் காதலித்த மூர்த்தி என்க. முதுவேய் – முதிய மூங்கில். அசும்பு – பொசியுநீர். பிலிற்றும் – துளிக்கும்.

Behold! It is Civan our Lord of Kurumbala. Our Lord Civan retains on His head the bright moon which spreads its white rays all around. Along with that He supports the river Ganges also on His head. He has embedded His consort Uma Devi with much affection on the left half of His body. This our Lord Civan is manifest in the most attractive place where very big and old bamboo grows in clusters. Here in this mountain area, water springs from all directions, they all join and become a big water fall leading to torrential flow of golden water from the mountains. Adjoining this area plantain gardens and mango groves are in plenty - all yielding rich fruits, honey dripping from both the trees. In such a beautiful atmosphere the famous temple of our Lord of Kurumbala magnificently exists.

2239. நீற்றேதுதைந்திலங்குவெண்ணூலர்தண்மதியர்நெற்றிக்கண்ணர்
கூற்றேர்சிதையக்கடிந்தாரிடம்போலுங்குளிர்சூழ்வெற்பில்
ஏற்றேனமேனமிவையோடவைவிரவியிழிபூஞ்சாரல்
கோற்றேனிசைமுரலக்கேளாக்குயில்பயிலுங்குறும்பலாவே. 6

நீற்று ஏர் துதைந்து இலங்கு வெண் நூலர், தண்மதியர், நெற்றிக்கண்ணர்,
கூற்று ஏர் சிதையக் கடிந்தார் இடம் போலும் - குளிர் சூழ் வெற்பில்,
ஏற்றுஏனம் ஏனம் இவையோடு அவை விரவி இழி பூஞ்சாரல்,
கோல்-தேன் இசை முரல, கேளா, குயில் பயிலும் குறும்பலாவே.

nIRRu Er tutaintu ilagku veN nUlar, taNmatiyar, neRRikkaNNar,
kURRu Er citaiyak kaTintAr, iTampOlum--kuLir cUz veRpil,
ERRu En2am En2am ivaiyOTu avai viravi izi pUnjcAral,
kOl-tEn2 icai murala, kELA, kuyil payilum kuRumpalAvE.

பொருள்: திருநீற்றுடன் நெருங்கிய வெண்மையான பூணூலை உடையவர்; குளிர்ந்த மதியைச் சூடியவர்; நெற்றிக் கண்ணினை உடையவர்; எமனுடைய ஏற்றம் அழிய ஒறுத்தவர்; அவருடைய இடம் (யாதெனில்) குளிர்ச்சி சூழ்ந்த மலையில் ஆண் பெண் பன்றிகள் தம் இனத்துடன் கலந்து கீழ் இறங்குகின்ற அழகிய சாரலில் கொம்புத் தேனி இசை முரல, அதைக் கேட்டுக் குயில் இசை பயிலும் குறும்பலாவே.

குறிப்புரை: நீற்றே – திருநீற்றிலே. வெள்நூல் – வெளிய முப்புரி நூல். கூற்று – எமன். ஏர் – எழுச்சி. சிதைய – கெட. ஏர் சிதைய – அழகு கெட எனலுமாம். ஏறு + ஏனம். ஏற்றேனம் – ஆண்பன்றி. ஏனம் – (பெண்) பன்றி. இவையோடு அவை விரவி – இவ்விலங்கு முதலியவற்றினத்தொடு அவ்விலங்கு முதலியவற்றினம் கலந்து. இழி – கீழிறங்குகின்ற. கோல்தேன் – கொம்புத்தேன். கேளா – கேட்டு.

Behold! It is Civan our Lord of Kurumbala. Our Lord Civan wears the sacred thread made of three strings, always moving on His body smeared with holy ashes. He also retains the cool moon on His head. He has a third eye in His forehead. Once He became furious with Kaalan (God of Death) for his improper behaviour and killed him. This, our Lord, is manifest in the place, where cool breeze always blows from the mountain range adjoining His temple. Here, both the male and female pigs join together and come down from the top of the mountain where dripping always subsists; the special bees found on the plants, on the plains and on low hill ranges, gather here to

suck the pure honey. They make a humming music while flying. The Indian cuckoos hearing this humming of the bees, start singing in their beautiful voice. In such awe-inspiring, wondrous area, our Lord Civan is manifest in the temple situated here.

2240. பொன்றொத்தகொன்றையும்பிள்ளைமதியும்புனலுஞ்சூடிப்
பின்றொத்தவார்சடையெம்பெம்மானிடம்போலும்பிலயந்தாங்கி
மன்றத்துமண்முழவமோங்கிமணிகொழித்துவயிரமுந்திக்
குன்றத்தருவியயலேபுனல்ததும்புங்குறும்பலாவே. 7

பொன் தொத்த கொன்றையும் பிள்ளைமதியும் புனலும் சூடி,
பின் தொத்த வார்சடை எம்பெம்மான் இடம்போலும் - பிலயம் தாங்கி,
மன்றத்து மண்முழவம் ஓங்கி மணி கொழித்து வயிரம் உந்தி,
குன்றத்து அருவி அயலே புனல் ததும்பும் குறும்பலாவே.

pon2 totta kon2Raiyum piLLaimatiyum pun2alum cUTi,
pin2 totta vArcaTai empemmAn2 iTampOlum--pilayam tAgki,
man2Rattu maNmuzavam Ogki, maNi kozittu, vayiram unti,
kun2Rattu aruvi ayalE pun2al tatumpum kuRumpalAvE.

பொருள்: பொன் போன்ற பூங்கொத்துக்களையுடைய கொன்றையும் இளம்பிறையும் கங்கைப் புனலும் சூடி, பின்னால் கூடிய சடையும் உடைய எம்முடைய பெருமானின் இடம் (யாதெனின்) பிரளய வெள்ளம் தாங்கி, அயலே குன்றத்து அருவி மணிகளைக் கொழித்து, வயிர மணிகளை உந்தித் தள்ளி மன்றத்தில் மார்ச்சனையை உடைய முழவு ஒலிப்பது போல முழங்கும் குறும்பலாவே.

குறிப்புரை: பொன் தொத்த – பொன்போலும் பூங்கொத்துக்களை உடைய. பிள்ளைமதி – இளம்பிறை. புனல் – கங்கை. பின்தொத்த – பின்கூடிய. பிலயம் – பிரளயம். 'கற்பமுறுபிரளயம் வந்து உலக மூன்றையும் அழிக்குங்காலமேனும் தற்பரரின் திரிகூடம் போல் எனக்கும் அழியாமை தருதல் வேண்டும்' (திருக்குற்றாலத் தலபுராணம், குறும்பலாச் சருக்கம் 17). திருக்குற்றாலத்தின் வீழும் அருவிகள் பிரளய வெள்ளம் போல்கின்ற பெருக்கைத் தாங்குவன. மன்றத்தில் (மண்) – மார்ச்சனையை உடைய முழவம் போல்கின்ற ஓசை மிக்கன. மணிகளைக் கொழிப்பன. வயிரமணிகளை உந்தி (செலுத்தித்தள்ளி) வருவன. அவ்வருவிநீர், அயலிலுள்ள குறும்பலாவின்பால் ததும்பும்.

Behold! It is Civan, the Lord of Kurumbala. Lord Civan, beautifies His matted hair with bunches of golden coloured Indian laburnum flowers. He also retains the

baby moon on His hair. He supports the river Ganges also on His matted hair. His long matted hair hangs at His back in big bunches. This Lord Civan is manifest in the temple, where heavy waterfalls, looking like floods that inundated the land at the time of general destruction of the universe, fall into the pools with heavy noise similar to the tabla in the temple. The waterfalls carry diamonds and gems along with the water and rushes by the side of the temple called Kurumbala of our Lord Civan.

2241. ஏந்துதிணிதிண்டோளிராவணனைமால்வரைக்கீழடரவூன்றிச்
சாந்தமெனநீறணிந்தசைவரிடம்போலுஞ்சாரற்சாரல்
பூந்தண்நறுவேங்கைக்கொத்திறுத்துமத்தகத்திற்பொலியஏந்திக்
கூந்தற்பிடியுங்களிறுமுடன்வணங்குங்குறும்பலாவே. 8

ஏந்து திணி திண்தோள் இராவணனை மால்வரைக்கீழ் அடர ஊன்றி,
சாந்தம் என நீறு அணிந்த சைவர் இடம் போலும் - சாரல்சாரல்,
பூந் தண் நறு வேங்கைக் கொத்து இறுத்து, மத்தகத்தில் பொலிய ஏந்தி,
கூந்தல்பிடியும் களிறும் உடன் வணங்கும் குறும்பலாவே.

Entu tiNi tiNtOL irAvaNan2ai mAlvaraikkIz aTara Un2Ri,
cAntam en2a nIRu aNinta caivar iTampOlum--cAralcAral,
pUn taN naRu vEgkaik kottu iRuttu, mattakattil poliya Enti,
kUntal piTiyum kaLiRum uTan2 vaNagkum kuRumpalAvE.

பொருள்: உயர்ந்து நெருங்கிய திண்ணிய தோளுடைய இராவணனை பெரிய கயிலை மலைக்கீழ் அவன் செருக்கு அழிய ஊன்றி, மணமுள்ள சந்தனம் எனத் திருநீற்றினை அணிந்த சைவரிடம் (யாதெனில்), தூறல் மழை பெய்யும் சாரலில் குளிர்ந்த பூக்களை உடைய கொத்தினை ஒடித்துத் தன் மத்தகத்தில் பொன்போல் பொலிய ஏந்திய, கூந்தற்பிடியும் களிறும் உடன் வணங்கும் குறும்பலாவே.

குறிப்புரை: திணி – நெருங்கிய. திண் – திண்ணிய. உறுதியுடைய. மால்வரை – பெரிய கயிலைமலை. சாந்தம் எனநீறு அணிந்த – சாந்தம் ஈது என்று எம்பெருமான் அணிந்த நீறு (தி. 1 ப. 52 பா. 7). சாரல் சாரல் – மழைச்சாரலை உடைய மலைச்சாரலில். சாரல் தோறும் எனல் சிறவாது. வேங்கைப் பூக்கள் தண்மை (குளிர்ச்சி)யும் நறுமை (நன்மை)யும் உடையன. (நறுநாற்றம் – நன்னாற்றம்). இறுத்து – முறித்து. பிடி – பெண்யானைக்குக் கூந்தல் உண்டென்பது மரபு. கூந்தல் மாலைக்குமரி பிடிக்குழாம் (சிந்தா. 858). 'கூந்தற்பிடிக்குழாம்' (பா. 11). 'நறைக்கூந்தற்பிடி' எனக் குமரகுருபர முனிவர் (பா. 45. 464) காலத்திலும் இவ்வழக்கம் இருந்தது. களிறு (ஆண்யானையையும்) பிடியும் வேங்கைப் பூக்களைப் பறித்து,

சிவபூஜைக்குரிய நெறியில் மத்தகத்தில் ஏந்திக் குறும்பலா நாதரை வழிபடுகின்றன. அவ்விலங்கட்குள்ள சிவபத்தி மக்கட் பிறப்பெய்தியும் அடியேற்கு இல்லை. எப்பிறப்பில் உறுமோ?

Behold! It is Civan, our Lord in Kurumbala, who crushed Raavanan, the king of Sri Lanka, with mighty shoulders for his misbehaviour. He smears His body with sacred white ashes. This Lord is manifest in the temple situated along the mountain range where the rains pour all around the year. The male and female elephants break the branches of the east Indian kino tree with flower bunches. They carry these flora bunches in their trunks and visit the temple, offer the flowers to our Lord Civan and both worship Him. This is the place called Kurumbala.

2242. அரவினணையானும்நான்முகனுங்காண்பரியஅண்ணல்சென்னி
விரவிமதியணிந்தவிகிர்தர்க்கிடம்போலும்விரிபூஞ்சாரல்
மரவமிருகரையுமல்லிகையுஞ்சண்பகமுமலர்ந்துமாந்தக்
குரவமுறுவல்செய்யுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. 9

அரவின்அணையானும், நான்முகனும் காண்புஅரிய அண்ணல், சென்னி
விரவி மதி அணிந்த விகிர்தர்க்கு இடம்போலும் - விரிபூஞ்சாரல்,
மரவம் இருகரையும் மல்லிகையும் சண்பகமும் மலர்ந்து மாந்த,
குரவம் முறுவல் செய்யும் குன்றுஇடம் சூழ் தண்சாரல் குறும்பலாவே.

aravin2 aNaiyAn2um nAn2mukan2um kANpu ariya aNNal, cen2n2i
viravi mati aNinta vikirtarkku iTampOlum--viripUnjcAral,
maravam iru karaiyum mallikaiyum caNpakamum malarntu mAnta,
kuravam muRuval ceyyum kun2Ru iTam cUz taN cAral kuRumpalAvE.

பொருள்: பாம்புப் படுகை உடையவனும் பிரமனும் காணவியலாத அண்ணல், சென்னியில் பிறையை அணிந்த மாறுபட்டவர்; அவருக்கு இடம் யாதெனில், அகன்ற அழகிய சாரலில் குங்கும மரமும் மல்லிகையும் சண்பகமும் இருகரையும் மலர்ந்து மாந்தக் குரவம் முறுவலைச் செய்யும் குன்றுகள் இடந்தோறும் சூழ்ந்த குளிர்ந்த சாரல்களுடைய குறும்பலாவே.

குறிப்புரை: அரவின் அணையான் – பாம்பின் படுக்கையை உடைய திருமால். காண்பு அரிய – காண்டற்கு அருமையாயுடைய. அண்ணல் – சிவபெருமான். சென்னி – தலை. விரவி – கலந்து. மரவம் – குங்கும மரம். மாந்த – உண்ண, குடிக்க. குரவம் – குராமரம். முறுவல் செய்ய – பற்களைப்போலப் பூக்க. (சிரிக்க என்ற பொருளும் தொனித்தல் அறிக).

Behold! It is Civan, our Lord of Kurumbala. The demigod Thirumaal who takes rest over the big snake and the other demigod four-faced Brahma, were both unable to meet and see our Lord Civan who is the Chief Supreme Being. He retains on His matted hair the baby moon very firmly. Our Lord Civan is the Supreme and is different from this world. This Lord Civan is manifest in the temple by the side of the mountain range where different kinds of flowers of fragrant trees, Arachin jasmine, a very fragrant large yellow flower, the bottle flower and champaka blossom like the laughing of young girls of the hillocks. This is the place of our Lord Civan called Kurumbala.

2243. மூடியசீவரத்தர்முன்கூறுண்டேறுதலும்பின்கூறுண்டு
காடிதொடுசமணைக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பில்
நீடுயர்வேய்குனியப்பாய்கடுவன்நீள்கழைமேல்நிருத்தஞ்செய்யக்
கூடியவேடுவர்கள்கூய்விளியாக்கைமறிக்குங்குறும்பலாவே. 10

மூடிய சீவரத்தர், முன்கூறு உண்டு ஏறுதலும் பின்கூறு உண்டு
காடி தொடு சமணைக் காய்ந்தார் இடம்போலும் - கல் சூழ் வெற்பில்
நீடு உயர் வேய் குனியப் பாய் கடுவன் நீள்கழைமேல் நிருத்தம் செய்ய,
கூடிய வேடுவர்கள் கூய் விளியா, கை மறிக்கும் குறும்பலாவே.

mUTiya cIvarattar, mun2kURu uNTu ERutalum pin2kURu uNTu
kATi toTu camaNaik kAyntAr iTampOlum--kal cUz veRpil
nITu uyar vEy kun2iyap pAy kaTuvan2 nILkazaimEl niruttam ceyya,
kUTiya vEtuvarkaL kUy viLiyA, kai maRikkum kuRumpalAvE.

பொருள்: துவர் ஊட்டிய துணியால் உடலை மூடியவர்; முன்கூறும் பின்கூறும் உண்டதன் பின்னும் காடி பருகுபவர் ஆகியோரை வெறுத்தவரின் இடம் (யாதெனில்), பாறைகள் சூழ்ந்த மலைமேல் மிக நெடியதாக உயர்ந்த மூங்கில் வளையப் பாய்கின்ற கடுவன் நீண்ட மூங்கில் மேல் கழைக்கூத்து செய்ய, அதனைக் காணக் கூடிய வேடுவர்கள் சீழ்க்கை ஒலித்து கை கவிக்கும் குறும்பலாவே.

குறிப்புரை: சீவரத்தார் – துவர் ஊட்டின சீலையை உடுத்தவர். உண்டு – உட்கொண்டு. முன்கூறிபின்கூறி – 'அறுசுவையுண்டி, அமர்ந்து இல்லாள் ஊட்ட மறுசிகை நீக்கி உண்டார்' என்றது சைனர் கூற்று. காடி – காடிநீர். சமண் – சமணர். வேய் – மூங்கில். குனிய – வளைய. கடுவன் – ஆண்குரங்கு. கழை – மூங்கிலின் கழை. நிருத்தம் – கூத்து. கூவி – அழைத்து. 'குய்விளியாக்'

'கூய்விளியாக்' என்று பாடாந்தரம் உண்டு. (சுவாமிநாத பண்டிதர் தலமுறைப்பதிப்பு பக். 911 பார்க்க). வேடர்கள் 'குய்' என விளித்தல் உண்டு. கை மறிக்கும் – கைகவிக்கும். 'தக்கார் போற் கைம்மறித்த காந்தள் அந்தோ தகாது எனவே' (சிந்தா. 1227).

Behold! It is Civan, Lord of Kurumbala. The Jains wear a special variety of cloth known as 'Seevaram' (Ochre Cloth) on their body. They eat earlier six different varieties of food; later they take sour toddy. Our Lord Civan had abhorrence for these Jains. The place where He manifests Himself is the mountain range where long bamboo clusters grow slantingly. The monkeys climb the bent branches and dance jumping from one branch to another. The forest hunters see the monkeys playing and they also enjoy making noise as 'Kuil' and drive away the monkeys and clasp their hands. In such a mountainous area our Lord Civan is manifested in the temple called Kurumbala.

2244. கொம்பார்பூஞ்சோலைக்குறும்பலாமேவியகொல்லேற்றண்ணல்
நம்பானடிபரவும்நான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
இன்பாயபாடலிவைபத்தும்வல்லார்விரும்பிக்கேட்பார்
தம்பாலதீவினைகள்போயகலும்நல்வினைகள்தளராவன்றே. 11

கொம்பு ஆர் பூஞ்சோலைக் குறும்பலா மேவிய கொல் ஏற்று அண்ணல்,
நம்பான், அடி பரவும் நான்மறையான் - ஞானசம்பந்தன் - சொன்ன
இன்புஆய பாடல் இவைபத்தும் வல்லார், விரும்பிக் கேட்பார்-
தம்பால தீவினைகள் போய் அகலும்; நல்வினைகள் தளரா அன்றே.

kompu Ar pUnjcOlaik kuRumpalA mEviya kol ERRu aNNal,
nampAn2, aTi paravum nAlmaRaiyAn2--njAn2acampantan2--con2n2a
in2pu Aya pATal ivaipattum vallAr, virumpik kETpAr-
tampAla tIvin2aikaL pOy akalum; nalvin2aikaL taLarA an2RE.

பொருள்: பூங்கொம்புகள் நிறைந்த பூஞ்சோலைகள் உடைய குறும்பலாவில் இருக்கும் எருதூரும் பெருமான், உயிர்களின் தசைக்கு உரியவர். அவருடைய திருவடியைப் பரவும் மறையவன் ஞானசம்பந்தன் சொன்ன பேரின்பமயமான திருப்பாடல்கள் இவை பத்தையும் வல்லவர், விரும்பிக் கேட்பவர் அனைவருக்கும் தம்முடைய தீவினைகள் அகன்று போக நல்வினை தளராமல் வளரும்.

குறிப்புரை: 'கொம்பார் சோலை' (திருக்குற்றாலப் பதிகம் 1 பார்க்க). ஏற்றண்ணல் – எருதூரும் பெருமான். நம்பான் – (பா. 2 பார்க்க). நம்பன் – உயிர்களின் நசைக்கு உரியவன். 'நம்பும் மேவும் நசையாகும்மே' (தொல். சொல். உரிச். 33). இன்பு ஆய பாடல் – பேரின்பமயமான திருப்பாக்கள். தம்பால – தம் இடத்திலுள்ள. தளரா – தளராமல் வளரும்.

Behold! It is Civan, our Lord of Kurumbala. Our Lord Civan manifests Himself in the Kurumbala temple which is surrounded by thick forests and men-made gardens in plenty. They are all full of young tendrils and many flowery bunches all over the trees. He is the Supreme Chief of forest hunters and all tribals. He is also loved by one and all of us, especially by those who live in His area. Our saint Thiru-gnana-Sambandar who is a great scholar of four Vedas had great delight to worship our Lord's holy feet and did sacred chant on Him. Those devotees who can recite these ten songs and those who listen to those when others chant will get rid of their bad karma and will enjoy the effect of their good deeds.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

71ஆம் பதிகம் முற்றிற்று
End of 71st Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 208 *பதிக எண்: 72*

72. திருநணா
72. THIRU-NANAA

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருநணா என்னும் இத்திருத்தலமானது வழிபடுவோருக்கு யாதொரு தீங்கும் நண்ணாத பதியாதலின் நணா என்னும் பெயர் பெற்றது. திரு அடைமொழி. இது பவாநி என்றும், காவிரியும் பவாநியும் கூடுதலால் பவாநிகூடல் என்றும் கூறப்படும். இது கொங்கு நாட்டுத் தேவாரம் பெற்ற பதிகளில் ஒன்று. இது ஈரோடு தொடர்வண்டி நிலையத்திற்கு வடமேற்கே 13.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. சேலம், கரூர், ஈரோடு, கோவை முதலிய நகர்களிலிருந்து பேருந்துகள் இயக்கப் படுகின்றன. இறைவரது திருப்பெயர் சங்கமுகநாதர். இறைவியாரது திருப்பெயர் வேதநாயகி. குபேரன், விசுவாமித்திர முனிவர், பராசர முனிவர் வழிபட்டுப் பேறுபெற்றார்கள். இது பவாநி முக்கூடல் என்னும் தீர்த்தச் சிறப்பு உடையது. பவாநி, காவிரி, அமுதநதி இவை ஆலயத்திற்கு கிழக்கே கூடுகின்றன. இவ்வாலயத்தில் தனியே ஒரு திருமால் கோயில் இருக்கின்றது. அவர் வழிபட்ட குறிப்பு 'பூமியளந்தானும் போற்ற மன்னி' என்னும் இக்கோயிலுக்குரிய ஞானசம்பந்தர் பதிகம் ஒன்பதாம் பாடல் பகுதியால் புலப்படுகிறது. இதற்கு ஞானசம்பந்தரது பதிகம் ஒன்று உண்டு.

பதிக வரலாறு

ஆளுடைய பிள்ளையார் கொங்கிற் குடபுலம் சென்று பல சிவதலங்களை வணங்கிக் கொடிமாடச் செங்குன்றூர்க்கு அடியவரும் ஏனையவரும் சிறப்புற வரவேற்கச் சென்றடைந்து வழிபட்டு இனிதிருந்தார். அதன் புறத்துள்ள சிவதலங்களை வணங்குங்கால் திருநணாவினை இறைஞ்சிப் பரவிப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2245. பந்தார்விரன்மடவாள்பாகமாநாகம்பூண்டேறதேறி
அந்தாரரவணிந்தஅம்மானிடம்போலுமந்தண்சாரல்
வந்தார்மடமந்திகூத்தாடவார்பொழிலில்வண்டுபாடச்
செந்தேன்தெளியொளிரத்தேமாக்கனியுதிர்க்குந்திருநணாவே. 1

பந்து ஆர் விரல் மடவாள் பாகமா, நாகம் பூண்டு, ஏறுஅதுஏறி,
அம் தார் அரவு அணிந்த அம்மான் இடம்போலும் - அம் தண்சாரல்
வந்து ஆர் மடமந்தி கூத்துஆட, வார்பொழிலில் வண்டு பாட,
செந்தேன் தெளி ஒளிர, தேமாக்கனி உதிர்க்கும் திரு நணாவே.

pantu Ar viral maTavAL pAkamA, nAkam pUNTu, ERu atu ERi,
am tAr aravu aNinta ammAn2 iTam pOlum--am taNcAral
vantu Ar maTamanti kUttu ATa, vAr pozilil vaNTu pATa,
centEn2 teLi oLira, tEmAgkan2i utirkkum tiru naNAvE.

பொருள்: பந்தினைப் போன்ற மெல்விரல்களையுடைய உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டு, நாகப்பாம்பினை அணியாகப் பூண்டு, இடப வாகனத்தில் ஏறி, அழகிய மாலைகளாகப் பாம்புகளை அணிந்த அருமகனின் இடம், (யாதெனில்) அழகிய குளிர்ந்த சாரல் உடையதும், காற்று வீச, இளமந்தி கூத்தாட, நீண்ட பொழிலில் வண்டுகள் பாட, செந்நிறத்தேனின் தெளிவு சொட்டத் தேமா கனியை உதிர்க்கும் திருநணாவே.

குறிப்புரை: பந்து ஆர் விரல் மடவாள் – 'பந்தார் விரலி' 'பந்தமரும் விரல் மங்கை நல்லாள்' 'பந்தார் விரலுமையாள்' 'பந்துலாவிரற் பவளவாய்த் தேன்மொழிப் பாவை' 'பந்துசேர் விரலாள்' எனப்பிற இடத்திலும் அருளியிருத்தலறிக. பாகம் – இடப்பக்கம். நாகம் – பாம்பு. ஏறது – இடபவாகனம். அம்தார் அரவு அணிந்த – அழகிய பாம்புகளை மாலைபோல் அணிந்த. அம்மான் – அருமகன் என்பதன் மரூஉ. அம் மஹாந் என்பதன் திரிபெனல் பிழை. பெம்மான் என்பது பெருமகாந் என்பதன் திரிபெனல் இல்லை. 'எம்மான்', 'தம்மான்', 'கோமான்' என்பவற்றில் மகன் என்பதே திரிந்தது. வந்து – காற்று. மந்தி – குரங்கு. தெளி – தெளிவு. தேமா – தித்திக்கும் மா – எழுவாய். கனி – செய்யப்படு பொருள். உதிர்க்கும் – பயனிலை.

Lord Civan is the Supreme Being in Thiru-nanaa. He has embedded His consort Umaa Devi on the left half of His body. Her fingers used to play very often various types of balls in different ways. He uses the snake as an ornament, it is His brilliant ornament all over His body. He sustains the white bull for His conveyance. He wears the snake as His beautiful garland also. This Lord is manifest in the temple very near

the wondrous cool mountain range. In the nearby mountains monkeys in large numbers join and dance and enjoy life. Near the mountain range thick forests exist with lots of flower trees. Here, the bees collectively join creating noise, which sounds singing. The red honey dripping from flowers forms pools and mango fruits get dropped on the ground from the trees. In such an attractive place our Lord Civan has manifested Himself.

2246. நாட்டம்பொலிந்திலங்குநெற்றியினான்மற்றொருகைவீணையேந்தி
ஈட்டுந்துயரறுக்குமெம்மானிடம்போலுமிலைசூழ்கானில்
ஓட்டந்தருமருவிவீழும்விசைகாட்டமுந்தூழோசைச்
சேட்டார்மணிகளணியுந்திரைசேர்க்குந்திருநணாவே. 2

நாட்டம் பொலிந்து இலங்கு நெற்றியினான், மற்றொரு கை வீணை ஏந்தி,
ஈட்டும் துயர் அறுக்கும் எம்மான், இடம்போலும் - இலை சூழ் கானில்
ஓட்டம் தரும் அருவி வீழும் விசை காட்ட, முந்தூழ் ஓசைச்
சேட்டார் மணிகள் அணியும் திரை சேர்க்கும் திரு நணாவே.

nATTam polintu ilagku neRRiyin2An2, maRRoru kai vINai Enti,
ITTum tuyar aRukkum emmAn2, iTampOlum--ilai cUz kAn2il
OTTam tarum aruvi vIzum vicai kATTa, muntUz Ocaic
cETTAr maNikaL aNiyum tirai cErkkum tiru naNAvE.

பொருள்: கண் அழகாக விளங்கும் நெற்றியை உடையவன், ஒருகையில் வீணையைத் தழுவி, (மற்றொரு கையில் வீணையை மீட்டி) ஈட்டும் துயர் அனைத்தும் நீக்கும் எம் தலைவன் இடம் (யாதெனில்), இலைகள் நெருங்கிய காட்டகத்தில் மூங்கில் அசையும் ஓசை, சலசலவென்று ஓடும் அருவி வீழும் ஓசையைக் காட்ட, மலையின் உயரத்தில் இருக்கும் மணிகளை அருவியின் அலைகள் கொண்டு வந்து கரை சேர்க்கும் திருநணாவே.

குறிப்புரை: நாட்டம் – கண், தீவிழி. வீணையேந்தி – மிக நல்ல வீணை தடவி (பதி. 221 – 1). ஈட்டும் துயர் – ஆகாமியகன்மம் (சஞ்சிதமாய்ப் பிராரப்தம்) ஆகுந்துயரம். கான் – காடு. விசை – வேகம். முந்தூழ் – மூங்கில். சேடு ஆர் – (மலையின்) உயரத்தில் பொருந்திய. திரை – அருவியின் அலைகள்.

Lord Civa is manifest in Thiru-nanaa. He has a beautiful third eye in His forehead, which brightens His appearance. He holds the Indian Lute (Veena) in one of His hands. He dispels the karma of His devotees. In this place, the trees with dense

leaves are many in the forest area. Here the waterfalls from the mountains produce musical sounds. The bamboo trees are too many and in bunches they grow. They dash against one another due to heavy wind and make noise. The running water in the rivulets and rivers carries all varieties of gems and they get dropped and gathered on the banks of these water areas. Such a glorious place is Thiru-nanaa where our Lord Civan is manifested.

2247. நன்றாங்கிசைமொழிந்துநன்னுதலாள்பாகமாய்ஞாலமேத்த
மின்தாங்குசெஞ்சடையெம்விகிர்தர்க்கிடம்போலும்விரைசூழ்வெற்பில்
குன்றோங்கிவன்றிரைகள்மோதமயிலாலுஞ்சாரற்செவ்வி
சென்றோங்கிவானவர்களேத்தியடிபணியுந்திருநணாவே. 3

நன்று ஆங்கு இசை மொழிந்து, நன்நுதலாள் பாகம்ஆய், ஞாலம் ஏத்த,
மின் தாங்கு செஞ்சடை எம் விகிர்தர்க்கு இடம்போலும் - விரை சூழ் வெற்பில்,
குன்று ஓங்கி வன் திரைகள் மோத, மயில் ஆலும் சாரல், செவ்வி
சென்று ஓங்கி வானவர்கள் ஏத்தி அடி பணியும் திரு நணாவே.

nan2Ru Agku icai mozintu, nan2nutalAL pAkam Ay, njAlam Etta,
min2 tAgku cenjcaTai em vikitarkku iTampOlum--virai cUz veRpil,
kun2Ru Ogki van2 tiraikaL mOta, mayil Alum cAral, cevvi
cen2Ru Ogki vAn2avarkaL Etti aTi paNiyum tiru naNAvE.

பொருள்: இசையுடைய மறைகளை நன்றாகப் பாடியருளி, அழகிய நெற்றியுடைய உமையை இடப்பாகத்தில் கொண்டு, உலக மக்கள் வழிபட மின்னொளி வீசும் சடையைத் தாங்கிய எம்முடை விகிர்தற்கு இடம் (யாதெனில்) நறுமணம் சூழ்ந்த மலைமேல் ஒலியுடன் அருவி அலைகள் மோத அவ்வொலிக்கு ஏற்ப மயில்கள் நடமாடும் சாரல்களின் அழகினை மிக உடையதும் தேவர்கள் சென்று ஏத்தி அடிவணங்குவதுமாகிய திருநணாவே.

குறிப்புரை: நன்று ஆங்கு இசைமொழிந்து – நன்றாக இசையுடைய சாமவேதத்தைப் பாடியருளி. வேதங்களைத் தோற்றுவித்தருளி எனலும், இசையைத் தோற்றியருளி எனலும் ஆம். மொழிந்து ஆய் ஏத்தத் தாங்கு செஞ்சடை விகிர்தர் என்று இயைக்க. நன்னுதலாள் – உமாதேவியார். ஞாலம் – பூமியிலுள்ளோர், உலகோர் எனலுமாம். மின் – ஒளி. விரை – மணம். வெற்பு – மலை, குன்று ஓங்கி வல்திரை (அலை)கள் மோத மயில் ஆலும் சாரல். செவ்வி – அழகு.

Lord Civan, the originator of the Vedas sings the Saama Veda in a very pleasant tone and displayed it to all (He sings other Vedas also). He has embedded His consort Umaa Devi. His entangled locks of red long hair are very bright like lightning and very conspicuous. He is manifest in this place and is glorified by the world. Here in the mountain range waterfalls are many, big and tall. The falls itself looks like small hills and the torrential flow of water dashes everywhere all around. The peacocks nearby enjoy the falls and they dance. Here, the Devas arrive near the falls and offer their worship to Lord Civa. Such a glorious place is Thiru-nanaa.

2248. கையில்மழுவேந்திக்காலிற்சிலம்பணிந்துகரித்தோல்கொண்டு
மெய்யில்முழுதணிந்தவிகிர்தர்க்கிடம்போலுமிடைந்துவானோர்
ஐயஅரனேபெருமானருளென்றென்றாதரிக்கச்
செய்யகமலம்பொழில்தேனளித்தியலுந்திருநணாவே. 4

கையில் மழு ஏந்தி, காலில் சிலம்பு அணிந்து, கரித்தோல் கொண்டு,
மெய்யில் முழுது அணிந்த விகிர்தர்க்கு இடம்போலும் - மிடைந்து வானோர்,
"ஐய! அரனே! பெருமான்! அருள்!" என்றுஎன்று ஆதரிக்க,
செய்யகமலம் பொழில் தேன் அளித்து இயலும் திரு நணாவே.

kaiyil mazu Enti, kAlil cilampu aNintu, karittOl koNTu,
meyyil muzutu aNinta vikirtarkku iTampOlum--miTaintu vAn2Or,
"aiya! aran2E! perumAn2!" en2Ru en2Ru Atarikka,
ceyyakamalam pozil tEn2 aLittu iyalum tiru naNAvE.

பொருள்: கையில் மழுவாயுதத்தை உயர்த்தி, காலில் சிலம்பினை அணிந்து, திருமேனியின்மேல் யானைத்தோல் முழுதுமாக அணிந்த விகிர்தர்க்கு இடம் (யாதெனில்) வானவர்கள் நெருங்கி, 'ஐய! அரனே! பெருமானே! அருள் செய்வீராக' என்று விரும்பிப் போற்ற, செந்தாமரை மலர்கள் சோலைகள் தேன்பொழியும் திருநணாவே.

குறிப்புரை: கரி – கரத்தையுடையது. யானை, யானைத்தோலை உடம்பு முழுதும் மறையப் போர்த்தார் என்றவாறு. கைம்மழு. காற்சிலம்பு. மெய்ப்போர்வை. மிடைந்து – நெருங்கி. 'ஐயனே', அரனே, பெருமானே அருள் என்று வானோர் விரும்பிப் போற்ற. செய்ய கமலம் – செந்தாமரை. பொழி – வெளிப்படுத்தும் தேன்தரும் என்றபடி.

Lord Civan holds the battle axe in one of His hands. He wears on His leg the tinkling anklets. He covers His body with the hide of the elephant. He is the Supreme (different from the world) Being. Here the Devas gather and offer worship to Lord Civa chanting "Oh Father! Hara" (one with the supreme power) "Oh! Noble and eminent with no parallel. Kindly grace us!" They love and pray Him. Here in the ponds red lotus flowers produce large quantity of honey. Such a glorious place is Thiru-nanaa where our Lord Civan is manifest.

2249. முத்தேர்நகையாளிடமாகத்தம்மார்பில்வெண்ணூல்பூண்டு
தொத்தேர்மலர்சடையில்வைத்தாரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த
அத்தேனளியுண்களியாலிசைமுரலவாலத்தும்பி
தெத்தேயெனமுரலக்கேட்டார்வினைகெடுக்குந்திருநணாவே. 5

முத்து ஏர் நகையாள் இடம்ஆக, தம் மார்பில் வெண் நூல் பூண்டு,
தொத்து ஏர் மலர் சடையில் வைத்தார் இடம்போலும் - சோலை சூழ்ந்த
அத் தேன் அளி உண் களியால் இசை முரல; ஆலத் தும்பி,
தெத்தே என; முரலக் கேட்டார் வினை கெடுக்கும் திரு நணாவே.

muttu Er nakaiyAL iTam Aka, tam mArpil veN nUl pUNTu,
tottu Er malar caTaiyil vaittAr iTam pOlum--cOlai cUznta
at tEn2 aLi uN kaLiyAl icai murala; Alat tumpi,
tettE en2a; muralak kETTAr vin2ai keTukkum tiru naNAvE.

பொருள்: முத்துப் போன்ற பற்களையுடைய உமாதேவியாரை இடப்பாகத்தில் கொண்டு, வெண்ணிறமான முப்புரிநூல் பூண்டு, அழகிய பூங்கொத்தைச் சடையில் வைத்த சிவபிரானின் இடம் (யாதெனில்), சோலைகளாற் சூழப் பெற்று, தேனுண்ட மகிழ்ச்சியினால் வண்டுகள் இசை முரல, தும்பிகள் 'தெத்தே' என முரல, தன்பெயரைக் கேட்ட மாத்திரத்தே செவிமடுத்த நல்வினையாளரது தீவினையைப் போக்கும் திருநணாவே.

குறிப்புரை: முத்து ஏர் நகையாள் – முத்தினைப் போலும் பற்களை உடைய உமாதேவியார். திருமார்பிற் பூணுநூல் பூண்டிருப்பது முன்னும் பின்னும் சிற்சில பதிகங்களிற் கூறப்படுகின்றது. தொத்து – (பூங்) கொத்து. ஏர் – அழகு. மலர் – கொன்றை (யும்) பிறவும். 'சடையமர் கொன்றையினார்' (தி.2 ப.205 பா.3). 'கடிபடு கூவிளமத்தங் கமழ்சடை மேலுடையார்' (மேற்படி 6). அளி – வண்டுகள். களி – கள்ளுண்ட (மயக்கம்) களிப்பு. ஆல – ஒலிக்க. 'தெத்தே' என்பது அநுகரணம். கேட்டார் வினைகெடுக்கும் – செவிமடுத்த நல்வினை யாளரது தீவினையைப் போக்கும்.

Lord Civan has embedded His consort Umaa Devi on the left side of His body. Her teeth resemble pearls, white and uniform in position. He wears on His chest white coloured sacred thread. He has adorned His locks of hair with bunches of lovely flowers. With these, He is manifest in Thiru-nanaa. This place is full of groves around the city with flowers - most of them with good quantity of honey. The bees in large numbers gather in the garden in great desire to suck honey, making noise, which resembles the word 'thetha'. The garden is such a beautiful place. Those people who hear the very name of the city as Thiru-nanaa will get their sins removed from their life. In such a great glorious place our Lord Civa is manifest.

2250. வில்லார்வரையாகமாநாகநாணாகவேடங்கொண்டு
புல்லார்புரமூன்றெரித்தார்க்கிடம்போலும்புலியுமானும்
அல்லாதசாதிகளுமங்கழல்மேற்கைகூப்பஅடியார்கூடிச்
செல்லாவருநெறிக்கேவல்லஅருள்புரியுந்திருநணாவே. 6

வில் ஆர் வரை ஆக, மா நாகம் நாண் ஆக, வேடம் கொண்டு,
புல்லார் புரம்மூன்று எரித்தார்க்கு இடம்போலும் - புலியும் மானும்
அல்லாத சாதிகளும் அம் கழல்மேல் கைகூப்ப, அடியார் கூடி,
செல்லா அருநெறிக்கே வல்ல அருள்புரியும் திரு நணாவே.

vil Ar varai Aka, mA nAkam nAN Aka, vETam koNTu,
pullAr puram mUn2Ru erittArkku iTampOlum--puliyum mAn2um
allAta cAtikaLum am kazalmEl kaikUppa, aTiyAr kUTi,
cellA aru neRikkE valla aruL puriyum tiru naNAvE.

பொருள்: மேருமலை வில்லாகப் பொருந்த, பெரிய பாம்பு வில்லின் நாணாக, தன்னைக் கூடாத பகைவர்களின் மும்மதில்களையும் எரித்தவருக்கு இடம் (யாதெனில்), புலியும் மானும் (இவையிரண்டும் பகை நீங்கி நட்புற்று வழிபடுதல் போல) அவை அல்லாத சாதி விலங்குகளும் அழகிய கழலணிந்த திருவடிகளைக் கைகுவித்து வழிபட, அடியார்கள் அனைவரும் 'செல்லாத செந்நெறிக்கே செல்ல' அருள்புரியும் திருநணாவே.

குறிப்புரை: வில் ஆர் வரை ஆக – மேருமலை வில்லாகப் பொருந்த. மாநாகம் நாண் ஆக – பெரிய பாம்பு விற்கயிறாக. புல்லார் – தழுவாத (பகை)வர். புலி, மான் இரண்டும் பகை நீங்கி நட்புற்று வழிபடுதல் போல. அவை அல்லாத விலங்கினங்களும் திருவடியைக் கைகுவித்து வழிபடுகின்றன. அதுவே அன்றி,

அடியார்கட்கு அச்சம் முதலியன உளவாகா வண்ணம். அவர்கள் போகாத வழியிலே போகின்றன. சிவபக்தியும் உடைய விலங்கினங்கட்குள்ள நல்வினை அடியேனுக்கில்லையே. இவ்வுயரிய மக்கட் பிறப்பை எய்தியும், அவனருளாலே அவன் தாள் வணங்க, அவனருள் செய்தல் வேண்டும். அதற்கு நாம் பெருந்தவம் புரிதல் வேண்டும். கழல் – திருவடிக்கு ஆகு பெயர்.

Our Lord Civan handled the Meru mountain as His bow, used the very big snake called Vasuki as a rope to bend the bow; He dressed Himself as the greatest fighter and shot an arrow on the three fortresses of Asuras which were flying in the sky and destroyed them completely along with the people who lived there. This Lord is manifest in Thiru-nanaa where tiger and deer as well as other animals come to the temple to worship our Lord. The devotees also gather daily at the temple and offer worship to our Lord. Our Lord graces all the devotees to reach heaven, which is inaccessible to the people. Such a glorious city is Thiru-nanaa.

2251. கானார்களிற்றுரிவைமேல்மூடியாடாவொன்றரைமேற்சாத்தி
ஊனார்தலையோட்டிலூணுகந்தான்தானுகந்தகோயிலெங்கு
நானாவிதத்தால்விரதிகள்நன்னாமமேயேத்திவாழ்த்தத்
தேனார்மலர்கொண்டடியாரடிவணங்குந்திருநணாவே. 7

கான் ஆர் களிற்று உரிவை மேல் மூடி, ஆடுஅரவு ஒன்று அரைமேல் சாத்தி,
ஊன் ஆர் தலைஓட்டில் ஊண் உகந்தான் தான் உகந்த கோயில் - எங்கும்
நானாவிதத்தால் விரதிகள் நன்நாமமே ஏத்தி வாழ்த்த,
தேன் ஆர் மலர் கொண்டு அடியார் அடி வணங்கும் திரு நணாவே.

kAn2 Ar kaLiRRu urivai mEl mUTi, ATu aravu on2Ru araimEl cAtti,
Un2 Ar talai OTTil UN ukantAn2 tAn2 ukanta kOyil-egkum
nAn2AvitattAl viratikaL nan2nAmamE Etti vAztta,
tEn2 Ar malar koNTu aTiyAr aTi vaNagkum tiru naNAvE.

பொருள்: காட்டில் வாழும் யானையினின்றும் உரித்த தோலை உடம்பின் மேல் போர்த்து, ஆடுகின்ற பாம்பினை இடையில் கச்சாகக் கட்டி, ஊன் பொருந்திய மண்டையோட்டில் பிச்சை ஏற்று மகிழ்ந்தவன் வாழும் திருக்கோவில் (யாதெனில்) எல்லா இடங்களிலும், பலவிதங்களிலும் தவத்தவர்கள், யோகிகள், பத்தர், சித்தர் முதலியோர் பிறவிப் பிணிக்கு மருந்தாகிய தன்னுடைய திருநாமங்களைக் கூறி வாழ்த்த, தேனார் மலர் கொண்டு அடியவர்கள் தம்முடைய திருவடிகளை வணங்கும் திருநணாவே.

குறிப்புரை: கான் – காடு. ஆர் – பொருந்திய. நிறைந்த, களிறு உரிவை – யானைத்தோல். மேல்முடி – உடம்பின்மேல் போர்த்து மறைத்து. ஆடு அரவு – ஆடும் பாம்பு. சாத்தி – சார்த்தி (கட்டி). ஊன் ஆர்தலை ஓட்டில் – மாமிசத்தோடு கூடிய பிரமகபாலத்தில். ஊண் – உண்ணுதலை. உகந்தான் – விரும்பினவன். உகந்த – விரும்பி எழுந்தருளியுள்ள. நானாவிதத்தால் – பலவகையால். விரதிகள் – தவத்தோர்கள், யாகத்தோர்கள். நல்நாமமே – பிறவிப்பிணிக்கு மருந்தாகிய திருவைந் தெழுத்தையே. அடியார் அடி – எழுவாய்த் தொடரும் ஆறன்றொகை நிலைத் தொடரும் ஆம்.

Our Lord Civan covers His body with the hide of the elephant that lives in the forest. The dancing snake is used as a belt around His waist. He accepts alms in the skull of Brahma with pieces of flesh sticking to it. He uses the skull happily. He is very joyfully manifest in the temple of the city. The yogic devotees gather in the temple and pray repeating His name. Other devotees collect flowers full of honey and place them at the holy feet of our Lord and sing songs in His praise and prostrate before His holy feet. Such a glorious place is Thiru-nanaa.

2252. மன்னீரிலங்கையர்தங்கோமான்வலிதொலையவிரலாலூன்றி
முந்நீர்க்கடல்நஞ்சையுண்டார்க்கிடம்போலும்முனைசேர்சீயம்
அன்னீர்மைகுன்றியழலால்விழிகுறையவழியுமுன்றிற்
செந்நீர்பரப்பச்சிறந்துகரியொளிக்குந்திருநணாவே. 8

மன் நீர் இலங்கையர் தம்கோமான் வலி தொலைய விரலால் ஊன்றி,
முந்நீர்க்-கடல்நஞ்சை உண்டார்க்கு இடம்போலும் - முழை சேர் சீயம்,
அல்-நீர்மை குன்றி அழலால் விழி குறைய அழியும் முன்றில்,
செந்நீர் பரப்பச் சிறந்து கரி ஒளிக்கும் திரு நணாவே.

man2 nIr ilagkaiyar tam kOmAn2 vali tolaiya viralAl Un2Ri,
munnIrk-kaTal nanjcai uNTArkku iTampOlum--muzai cEr cIyam,
al-nIrmai kun2Ri azalAl vizi kuRaiya aziyum mun2Ril,
cennIr parappac ciRantu kari oLikkum tiru naNAvE.

பொருள்: கடலிலே உள்ள இலங்கைக்கு அரசன், இராவணனின் ஆற்றலைக் கால் பெருவிரலை ஊன்றி அழித்தவரும் கடலிற் பிறந்த நஞ்சை உண்டவரும் ஆகிய பெருமானுக்கு இடம் (யாதெனில்) பகை கொண்ட சிங்கம் தன் பகை குன்றி, போரிடில்

வலிமை தோற்கும் முன்றிலில் இரத்தம் பரந்து கிடக்க சண்டையில் வென்ற யானை சிறந்து ஒளிரும் திருநணாவே.

குறிப்புரை: மன்நீர் – மிக்க நீர். நிலைபெற்ற நீர் (கடல்). முனை – பகை. சீயம் – சிங்கம். அல் – இரவு. நீர்மை – தன்மை. குன்றி – குறைந்து. அழல் – நெருப்பு. முன்றில் – முற்றம். செந்நீர் – இரத்தம். கரி – யானை, சிங்கத்தின் தொலைவும் யானையின் வெற்றியும் குறிக்கப்பட்டன.

Raavanan, the king of Sri Lanka, an island surrounded by great seas, all around was a great mighty warrior full of unparalleled courage. Our Lord Civan subdued His physical power by slightly pressing the top of His mountain abode with His toe. He once imbibed the poison that came out of the ocean of milk. This Lord Civa is manifest in Thiru-nanaa. The mountain range of this city has many caves. Inside these caves lived a lion, the king of forests. An elephant had a fierce fight with this lion and destroyed the fiery eyes of the lion and finally its physical power. On observing the lion's blood at the cave's entrance, the elephant felt proud of its strength. At times such events take place in this mountain range. Such is the specialty of the city, Thiru-nanaa.

2253. மையார்மணிமிடறன்மங்கையோர்பங்குடையான்மனைகள்தோறும்
கையார்பலியேற்றகள்வனிடம்போலுங்கழல்கள்நேடிப்
பொய்யாமறையானும்பூமியளந்தானும்போற்றமன்னிச்
செய்யாரெரியாமுருவமுறவணங்குந்திருநணாவே. 9

மை ஆர் மணிமிடறன், மங்கை ஓர்பங்கு உடையான், மனைகள்தோறும்
கை ஆர் பலி ஏற்ற கள்வன், இடம்போலும் - கழல்கள் நேடிப்
பொய்யா மறையானும், பூமி அளந்தானும் போற்ற, மன்னிச்
செய் ஆர் எரிஆம் உருவம் உற, வணங்கும் திரு நணாவே.

mai Ar maNimiTaRan2, magkai Orpagku uTaiyAn2, man2aikaL tORum
kai Ar pali ERRa kaLvan2, iTampOlum--kazalkaL nETip
poyyA maRaiyAn2um pUmi aLantAn2um pORRa, man2n2ic
cey Ar eri Am uruvam uRa, vaNagkum tiru naNAvE.

பொருள்: கருமணி போலும் கண்டத்தை உடையவன்; உமையைத் தன் மேனியில் ஒரு பாகமாக உடையவன்; இல்லங்கள் தோறும் கையில் பிச்சை ஏற்கும் கள்வன்; அவனுடைய இடம் (யாதெனில்) அவனுடைய திருவடிகளைத் தேடி பிரமனும் மூவடியால் உலகை

அளந்தவனும் வழிபட அவர்களின் முன்னிலையில் செந்நிற நெருப்புப் பிழம்பாக உருவமுற, வணங்கும் திருநணாவே.

குறிப்புரை: மைஆர் மணிமிடறன் – கருமை நிறைந்த நீலமணி போலும் திருக்கழுத்துடைய சிவபிரான். மேகத்தைப்போலும் அழகிய கண்டன் எனலுமாம். நேடி – தேடி. பொய்யாமறை – வேதம். மன்னி – நிலைத்து. செய் – செம்மை. எரியாம் உருவம் – தீப்பிழம்பு வடிவம். விடமுண்ட ஆற்றலுடையவன் பலியேற்று உண்ணல் வேண்டா. மங்கைபங்கன். தன்பால் இரப்பவர்க்கு ஈதல் வேண்டும். அவன், மனைகள்தோறும் சென்று இரப்பது, மங்கையுடைமைக்கு ஏவாது, தன் கோலத்திற்கு ஒவ்வாத செயலை மேற்கொண்டதால் அதற்கு ஓர் ஏது வெளிப்படாதிருத்தலைக் குறிக்கக் கள்வன் என்றார்.

Lord Civan's neck is dark blue in colour, because He imbibed the poison. Before it moved down the throat, Umaa pressed His neck and stopped its downward movement. He has embedded His consort on the left side of His body. He goes round the world and visits many houses and begs for alms. When the household ladies offer Him food, He covets their hearts. He is therefore called a robber. Thirumaal once upon a time measured the earth. The four-faced Brahma used to chant the four Vedas. These two went out in search of our Lord's feet and head and failed. They then prayed. Then our Lord Civan appeared before them as a tall and endless column of fire when they were terrified. Finally they worshipped Him and prayed to Him in this city of Thiru-nanaa.

2254. ஆடையொழித்தங்கமணேதிரிந்துண்பரல்லல்பேசி
மூடுருவமுகந்தாருரையகற்றும்மூர்த்திகோயில்
ஓடுநதிசேருநித்திலமும்மொய்த்தகிலுங்கரையிற்சாரச்
சேடர்சிறந்தேத்தத்தோன்றியொளிபெருகுந்திருநணாவே. 10

ஆடை ஒழித்து அங்கு அமணே திரிந்து உண்பார், அல்லல் பேசி
மூடு உருவம் உகந்தார், உரை அகற்றும் மூர்த்தி கோயில் -
ஓடும் நதி சேரும் நித்திலமும் மொய்த்த அகிலும் கரையில் சார,
சேடர் சிறந்து ஏத்த, தோன்றி ஒளி பெருகும் திரு நணாவே.

ATai ozittu agku amaNE tirintu uNpAr, allal pEci
mUTu uruvam ukantAr, urai akaRRum mUrtti kOyil--
OTum nati cErum nittilamum moytta akilum karaiyil cAra,
cETar ciRantu Etta, tOn2Ri oLi perukum tiru naNAvE.

பொருள்: ஆடையுடுத்தலை நீத்து அமணமாகத் திரிபவரும் முரட்டுத் தனமாகப் பேசிக்கொண்டு துணியால் உடலை மூடிக் கொள்வதை உகந்தவர்களும் கூறும் உரைகளை விலக்கும் மூர்த்தி இருக்கும் திருக்கோயில் (யாதெனில்), ஓடுகின்ற சேருகின்ற முத்தும் அகிலும் கரையில் அடைய, பெரியோர்கள் சிறப்பாக வழிபட, செங்காந்தள் மலர்ந்து ஒளிரும் திருநணாவே.

குறிப்புரை: 'ஆடை . . . உண்பார் என்பது திகம்பர சைனரையும் மூடும் உருவம் உகந்தார்' என்பது சுவேதாம்பர சைனரையும் தேரரையும் குறித்தன. நித்திலம் – முத்து. அகில் – அகில் மரம். சேடர் – பெரியோர். தோன்றி – செங்காந்தள். 'கொய்ம்மலர தோன்றி போற்சூட்டுடைய சேவலும்' (சீவகசிந்தாமணி 73).

The Jains move around without proper dress and beg for alms. They receive and eat these from their hands. The Buddhists cover their body with ochre robes. These two blabber distressing news all around. Our Lord Civa never listens to those words. Our Lord is manifest in the temple in Thiru-nanaa. Here the river flows nearby with rushing water. The running water carries pearls, eagle wood etc. This wood emits fragrant smell when burnt. These are flung on the banks of the river. Great wisemen visit the temple and worship our Lord daily. The red flowers collected by devotees are placed over our Lord in plenty. They emit brightness all around the area. Such a glorious city is Thiru-nanaa.

2255. கல்வித்தகத்தால்திரைசூழ்கடற்காழிக்கவுணிசீரார்
நல்வித்தகத்தாலினிதுணரும்ஞானசம்பந்தனெண்ணும்
சொல்வித்தகத்தாலிறைவன்திருநணாஏத்துபாடல்
வல்வித்தகத்தான்மொழிவார்பழியிலரிம்மண்ணின்மேலே. 11

கல் வித்தகத்தால்-திரை சூழ் கடல் காழிக் கவுணி - சீர் ஆர்
நல் வித்தகத்தால் இனிது உணரும் ஞானசம்பந்தன் - எண்ணும்
சொல் வித்தகத்தால் இறைவன் திரு நணா ஏத்து பாடல்,
வல் வித்தகத்தால் மொழிவார் பழி இலர், இம் மண்ணின்மேலே.

kal vittakattAl-tirai cUz kaTal kAzik kavuNi--cIr Ar
nal vittakattAl in2itu uNarum njAn2acampantan2--eNNum
col vittakattAl iRaivan2 tiru naNA Ettu pATal,
val vittakattAl mozivAr pazi ilar, im maNNin2mElE.

பொருள்: (சகரர்கள் தம்முடைய) திறமையால் தோண்டிய கடல் சூழ்ந்த சீகாழியில் கவுணியர்கள் குலத்தில் தோன்றிய நல்ல ஞானம் உடைய ஞானசம்பந்தன் கருத்தில் எண்ணிப் பெருமையுடைய திருநணாவை ஏத்திப்பாடிய பாடல்களைக் கற்ற வல்லமையால் மொழிபவர்கள் இம்மண்ணுலகில் பழியிலாதர்களாவர்.

குறிப்புரை: கல் வித்தகத்தால் – 'கல்லயங்குதிரை சூழநீள்கலிக் காழி' (தி.2 ப.211 பா.4). கற்சாதுரியத்தால் என்பது பொருளாயினும் ஈண்டுப் பொருந்தாது. வித்தகம் – பெருமை. சிற்பம் முதலிய சிறந்த தொழில். அதிசயம் என்னும் பொருள்களுள் ஏதேனும் பொருந்தும், காழிச்சிறப்பாகும். 'திரைசூழ்கடல்' என்பது காழிக்கு அடையாதல் கடலில் மிதந்ததும் கடல் அருகிலிருந்ததும் பற்றி. நல்வித்தகத்தால் – நல்ல ஞானத்தால். எண்ணும் சொல்வித்தகத்தால் – கருதிய சொற்சாதுரியத்தால் வல்வித்தகத்தால் – இசையில், பொருளில், அன்பில் வலிய சாதுரியத்தால். இம்மண்மேல் பழி இல்லாதவர் ஆவர்.

The city of Seerkaazhi has seashore on one side. Here the waves of the sea with regularity and uniformity beautify the shore. Our saint Thiru-gnana-Sambandar was born in this city with good divinity. He understands everything intuitively. He sang on the Lord of Thiru-nanaa songs of spiritual wisdom with the right choice of words. Those devotees who can sing these songs with high musical talent, praising our Lord, will have no blame in them and will not be ridiculed by anybody.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

72ஆம் பதிகம் முற்றிற்று
End of 72nd Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 209 *பதிக எண்: 73*

73. திருப்பிரமபுரம் 73. THIRU-P-PIRAMAPURAM

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் சீகாழியில் மின்னார்சடை அண்ணலை வணங்கி, சொல்மாலைகள் சாத்தி மகிழ்வெய்தி, சிலநாள் உடனிருந்து திருவருள் வாழ்வை நடாத்தினர். பின்னர், அரசர் பலபலதலங்களை வழிபடச் சென்றார். கவுணியர் சீகாழியில் உறைகின்ற நாளில் செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்களால் மொழிமாற்று, மாலைமாற்று, ஏகபாதம் முதலியவற்றைப் பாடுங்கால் அருளியது திருச்சக்கரமாற்று என்னும் இத்திருப்பதிகம்.

இத்திருப்பதிகம் சீகாழிப்பதிக்குரிய பன்னிரு திருப்பெயர்களையும் போற்றிப் பரவும் வகையில் அமைந்துள்ளது. இத்திருப்பதிகத்தின் முதற்பாடலில் கூறப்படும் பன்னிரு பெயர்களும் 1 முதல் 12 வரையுள்ள பாடல்களின் முதற்பெயர்களாக நின்று ஒரு வட்டமாக அமையும்படி அப்பெயர்களை மாற்றினமையின் இது ‘சக்கரமாற்று’ என்னும் பெயர்த்தாயிற்று. முதல் திருப்பாடலின் ஈற்றிலுள்ள ‘கழுமலம்’ என்னும் பெயர் இரண்டாம் திருப்பாடலின் முதற் பெயராயிற்று. இவ்வாறே இரண்டாம் திருப்பாடலின் ஈற்றிலுள்ள ‘தோணிபுரம்’ என்னும் பெயர் அடுத்த திருப்பாடலில் முதலில் அமைகின்றது. இவ்வாறே ஏனைய திருப்பாடல்களிலும் அமைந்து பன்னிரண்டாம் பாடலின், இறுதியில் பிரமபுரம் என்னும் பெயர், ‘அயனூர்’ எனவும் முதற் பாடலின் ‘பிரமனூர்’ என முதற்பெயராக நின்றும் ஒரு வட்டமாக அமைகின்றது. பன்னிரண்டு பெயர்களும் ஒரு சக்கரத்தின் ஆரைக்கால் போலச் சுழன்று வருதல் காண்க. பன்னிரண்டாம் திருப்பாடலில், இச்சக்கரஞ்சீர்த் தமிழ்விரகன் தான்சொன்ன தமிழ்தரிப்போர் என வருதலால் இத்திருப் பதிகத்திற்குச் சக்கரமாற்று எனும் பெயர் திருஞானசம்பந்தப் பிள்ளையாரே இட்டது எனலாம்.

திருச்சிற்றம்பலம்

2256. விளங்கியசீர்ப்பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருமேற்சோலை
வளங்கவருந்தோணிபுரம்பூந்தராய்சிரபுரம்வண்புறவமண்மேல்
களங்கமிலூர்சண்பைகமழ்காழிவயங்கொச்சைகழுமலமென்றின்ன
இளங்குமரன்றன்னைப்பெற்றிமையவர்தம்பகையெறிவித்திறைவனூரே. 1

விளங்கிய சீர்ப் பிரமன்ஊர், வேணுபுரம், புகலி, வெங்குரு, மேல் சோலை
வளம் கவரும் தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், வண் புறவம், மண் மேல்
களங்கம்இல் ஊர்சண்பை, கமழ் காழி, வயம்கொச்சை, கழுமலம் என்று இன்ன -
இளங்குமரன் தன்னைப் பெற்று, இமையவர் தம் பகை எறிவித்தி இறைவன் ஊரே.

viLagkiya clrp piraman2 Ur, vENupuram, pukali, vegkuru, mEl cOlai
vaLam kavarum tONipuram, pUntarAy, cirapuram, vaN puRavam, maNmEl
kaLagkam il UrcaNpai, kamaz kAzi, vayam koccai, kazumalam, en2Ru in2n2a---
iLagkumaran2 tan2n2aip peRRu, imaiyavar tam pakai eRivitta iRaivan2 UrE.

பொருள்: சீர் விளங்கிய பிரமனூர்; சீர் - பெருமை, அழகு. உயர்ந்தோங்கிய சோலைகளின் வளத்தையெல்லாம் தான் கவர்ந்து உயர்ந்து விளங்குவதால், மேற்சோலை வளம் கவரும் தோணிபுரம் என்றார். களங்கமில் ஊர் சண்பை- குற்றங்கள் இல்லாத சண்பை நகர். கமழ் காழி - மணங்கமழ்கின்ற காழி. வயங்கொச்சை - கொச்சைவயம். என்றும் இளையோனாகிய குமரனைப் பெற்று இமையவர்களுடைய பகையாகிய அசுரர்களை எறிவித்த இறைவனின் ஊர். எறிவித்திறைவனூரே - எறிவித்த என்பதில் பெயரெச்சத்தகரம் தொக்கு எறிவித்திறைவன் என ஆயிற்று.

குறிப்புரை: இப்பதிகத்திலும் அடுத்த பதிகத்திலும் 206ஆவது பதிகத்தின் முதற்பாட்டிலுள்ள முறையே பன்னிரு திருப்பெயர்களும் அமைந்திருத்தல் அறிதற்பாலது. மேற்சோலை வளம் கவரும் தோணிபுரம் என்றது, உயர்ந்தோங்கிய சோலைகளிலும் மேலோங்கி விளங்குவதால், சோலை வளத்தைத் தோணிமலை கவர்ந்து திகழ்வதாயிற்றென்றபடி. இளங்குமரன் – முருகக் கடவுள், பாலசுப்பிரமணியர். பெற்று – ஐந்து முகத்தோடு அதோமுகமும் கொண்டு. சேந்தனை முன் பயந்துலகில் தேவர்கள் தம்பகை கெடுத்தோன் திகழுமூரே (தி.2 ப.210 பா.6). பகை – பகையாய அசுரர்களை. எறிவித்த – எறியச் செய்த. பெயரெச்சத்தகரம் தொக்கது.

This poem sung by Thiru-gnana-Sambandar mentions the twelve names of Seerkaazhi in alternate terms. The well renowned names are (1) Piramapuram; (2) Venupuram, (3) Pugali, (4) Venguru - Venkuru, (5) Thonipuram, (6) Poontharai, (7) Sirapuram, (8) Puravam, (9) Shanbai, (10) Kaazhi - Seerkaazhi, (11) Kochai - Vayam and (12) Kazhumalam. The young son god Kumaran, the second son of Lord Civan

appeared in this city. The enemies of devas were rooted out by this god Kumaran in this city where Lord Civan manifests Himself.

2257. திருவளருங்கழுமலமேகொச்சைதேவேந்திரனூரயனூர்தெய்வத்
தருவளரும்பொழிற்புறவஞ்சிலம்பனூர்காழிதகுசண்பையொண்பா
உருவளர்வெங்குருப்புகலியோங்குதராய்தோணிபுரமுயர்ந்ததேவர்
வெருவவளர்கடல்விடமதுண்டணிகொள்கண்டத்தோன்விரும்புமூரே. 2

திரு வளரும் கழுமலமே, கொச்சை, தேவேந்திரன்ஊர், அயன்ஊர், தெய்வத்-
தரு வளரும் பொழில் புறவம், சிலம்பன்ஊர், காழி, தகு சண்பை, ஒண் பா
உரு வளர் வெங்குரு, புகலி, ஓங்கு தராய், தோணிபுரம் - உயர்ந்த தேவர்
வெருவ, வளர் கடல்விடம் அது உண்டு அணி கொள் கண்டத்தோன் விரும்பும் ஊரே.

tiru vaLarum kazumalamE, koccai, tEvEntiran2 Ur, ayan2 Ur, teyvat-
taru vaLarum pozil puRavam, cilampa Ur, kAzi, taku caNpai, oN pA
uru vaLar vegkuru, pukali, Ogku tarAy, tONipuram--uyarnta tEvar
veruva, vaLar kaTalviTam atu UNTu aNi koL kaNTattOn2 virumpum UrE.

பொருள்: திருவளரும் - திரு - செல்வம்; பொருட்செல்வம், கல்விச்செல்வம், ஞானச் செல்வம் மூன்றும் வளரும் கழுமலம். தேவேந்திரன் ஊர் - சூரனுக்கு அஞ்சிய இந்திரன் அடைக்கலம் புக்க ஊர். தெய்வத்தரு - கற்பகமரம். சிலம்பனூர் - சிரபுரம். நாகநாத சுவாமியைச் சிலம்பன் என்றார். நாகம் - சிலம்பு - மலை. இவை ஒரு பொருளன. ஒள் பா உரு வளர் வெங்குரு - ஒன்பா - அறிவொளி அருளொளி உடைய பாடல்கள்; அப்பாடல்களின் உருவில் வளர்கின்ற வெங்குரு. ஓங்கு தராய் - மேலும் மேலும் வளர்ந்தோங்குகின்ற பூந்தராய். வெருவ - அஞ்சியோட.

குறிப்புரை: அயனூர் – பிரமபுரம். தெய்வத்தரு – கல்பக விருக்ஷாதி. சிலம்பனூர் – சிரபுரம். நாகநாத சுவாமியைச் சிலம்பன் என்றருளினார் போலும். நாகம் – மலை. ஒள்பா உருவளர் – அறிவொளியுடைய அருட்பாக்கள் வடிவில் வளர்கின்ற. வெருவ – அஞ்சியலற.

Long long ago, the devas and asuras churned the ocean of milk where deadly poison came out of the ocean. All the devas and asuras were terrified and ran away to Lord Civan and requested Him to save them from the deadly poison. Lord Civan then imbibed the poison when goddess Umaa Devi stopped the poison from going down the throat. His throat therefore retains the dark blue colour. This Lord Civan wished to manifest Himself in this city. This city is very famous where goddess Lakshmi also is

manifest and this Kazhumalam carries twelve other names and is commonly known as Seerkaazhi city.

2258. வாய்ந்தபுகழ்மறைவளருந்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்வாழூர்
ஏய்ந்தபுறவந்திகழுஞ்சண்பையெழிற்காழியிறைகொச்சையம்பொன்
வேய்ந்தமதிற்கழுமலம்விண்ணோர்பணியமிக்கயனூரமரர்கோனூர்
ஆய்ந்தகலையார்புகலிவெங்குருவதரன்நாளுமமருமூரே. 3

வாய்ந்த புகழ் மறை வளரும் தோணிபுரம், பூந்தராய், சிலம்பன் வாழ் ஊர்,
ஏய்ந்த புறவம், திகழும் சண்பை, எழில் காழி, இறை கொச்சை, அம் பொன்
வேய்ந்த மதில் கழுமலம், விண்ணோர் பணிய மிக்க(ய)யன்ஊர், அமரர்கோன்ஊர்,
ஆய்ந்த கலை ஆர் புகலி, வெங்குருஅது, - அரன் நாளும் அமரும் ஊரே.

vAynta pukaz maRai vaLarum tONipuram, pUntarAy, cilampan2 vAz Ur,
Eynta puRavam, tikazum caNpai, ezil kAzi iRai koccai, am pon2
vEynta matil kazumalam, viNNOr paNiya mikka(a)yan2 Ur, amararkOn2 Ur,
Aynta kalai Ar pukali, vegkuru atu--aran2 nALum amarum UrE.

பொருள்: புகழ் வாய்ந்ததும் மறை வளர்வதுமாகிய தோணிபுரம். சிலம்பன் வாழூர் - சிரபுரம். நாகநாத சுவாமி கோயில். அயன் ஊர் - பிரமபுரம். அமரர்கோன் - இந்திரன். ஆய்ந்த கலையார் புகலி - கலைகளை ஆராயும் அறிஞர்கள் வாழ்கின்ற புகலி.

குறிப்புரை: மறை – வேதம். சிலம்பன் வாழ் ஊர் – சிரபுரம். நாகநாத சுவாமி கோயில்.

Our Lord Civan every day manifests Himself in this city. This city is very famous and the Vedas were elicited every day here. This city is called by twelve names such as Thonipuram etc., but it is commonly known as Seerkaazhi.

2259. மாமலையாள்கணவன்மகிழ்வெங்குருமாப்புகலிதராய்தோணிபுரம்வான்
சேமமதில்புடைதிகழுங்கழுமலமேகொச்சைதேவேந்திரனூர்சீர்ப்
பூமனூர்பொலிவுடையபுறவம்விறற்சிலம்பனூர்காழிசண்பை
பாமருவுகலையெட்டெட்டுணர்ந்தவற்றின்பயன்நுகர்வோர்பரவுமூரே. 4

மாமலையாள் கணவன் மகிழ் வெங்குரு, மாப்புகலி, தராய், தோணிபுரம், வான்
சேம மதில் புடை திகழும் கழுமலமே, கொச்சை, தேவேந்திரன்ஊர், சீர்ப்
பூமன்ஊர், பொலிவு உடைய புறவம், விறல் சிலம்பன்ஊர், காழி, சண்பை,
பா மருவு கலை எட்டு-எட்டு உணர்ந்த, அவற்றின் பயன் நுகர்வோர் பரவும்ஊரே.

mAmalaiyAL kaNavan2 makiz vegkuru, mAp pukali, tarAy, tONipuram, vAn2
cEma matil puTai tikazum kazumalamE, koccai, tEvEntiran2 Ur, cIrp
pUmakan2 Ur, polivu uTaiya puRavam, viRal cilampan2 Ur, kAzi, caNpai--
pA maruvu kalai eTTu-eTTu uNarntu, avaRRin2 payan2 nukarvOr paravum UrE.

பொருள்: மாமலையாள் - இமயமலையின் புதல்வி. பார்வதி. அவளுடைய கணவன் விரும்பும் வெங்குரு. மாப்புகலி - பெரிய புகலி. வானத்தை முட்டும் காவல் மதில் சுற்றிலும் திகழும் கழுமலம். பூமகன் - தாமரை மலர்மேல் இருக்கும் பிரமன். பொலிவு - விளக்கம். விறல் - வலிமை, வெற்றி. பா - வேதம் கலை எட்டெட்டு - 64 கலைகள். பயன் நுகர்வோர் - அனுபவிக்கும் அறிஞர்கள். வேதக் கல்வியுடன் அறுபத்து நான்கு கலைகளையும் ஆய்ந்து நுகர்வோர் வாழும் சிறப்புடையது காழி.

குறிப்புரை: மாமலையாள் – இமாசல குமாரியான உமாதேவியார். சேமம் – காவல். பூமகனூர் – பிரமபுரம். பொலிவு – விளக்கம். விறல் – வலிமை. வெற்றி. கலை எட்டெட்டு – அறுபத்து நான்கு கலைகள். நுகர்வோர் – அநுபவிக்கும் அறிஞர்கள்.

In the ancient days, the Tamil language contained various literature mostly in political form. They deal with sixty-four arts and sciences such as Puraanam, Vyakaranam, and Neethi Saastras etc. In those days, in the city of Seerkaazhi lived very great scholars who mastered all the sixty-four arts and sciences. They devotedly studied those arts and sciences and benefited by that knowledge. Such scholars adore our Lord in this city. Lord Civan who is the consort of Umaa, daughter of the mountain king wished to manifest Himself in Seerkaazhi, which carries twelve names as such Venguru etc.

2260. தரைத்தேவர்பணிசண்பைதமிழ்க்காழிவயங்கொச்சைதயங்குபூமேல்
விரைச்சேருங்கழுமலமெய்யுணர்ந்தயனூர்விண்ணவர்தங்கோனூர்வென்றித்
திரைச்சேரும்புனற்புகலிவெங்குருச்செல்வம்பெருகுதோணிபுரஞ்சீர்
உரைச்சேர்பூந்தராய்சிலம்பனூர்புறவமுலகத்திலுயர்ந்தவூரே. 5

தரைத்தேவர் பணி சண்பை, தமிழ்க் காழி, வயம்கொச்சை, தயங்கு பூமேல்
விரைச் சேரும் கழுமலம், மெய் உணர்ந்த(அ)யன்ஊர், விண்ணவர்தம் கோன்ஊர், வென்றித்
திரைச் சேரும் புனல் புகலி, வெங்குரு, செல்வம் பெருகு தோணிபுரம் சீர்
உரைச் சேர் பூந்தராய், சிலம்பன்ஊர், புறவம் - உலகத்தில் உயர்ந்த ஊரே.

taraittEvar paNi caNpai, tamizk kAzi, vayam koccai, tayagku pUmEl
viraic cErum kazumalam, mey uNarnta(a)yan2 Ur, viNNavar tam kOn2 Ur, ven2Rit
tiraic cErum pun2al pukali, vegkuru, celvam peruku tONipuram, cIr
urai cEr pUntarAy, cilampan2 Ur, puRavam--ulakattil uyarnta UrE.

பொருள்: தரைத் தேவர் - பூசுரர். மறையோர். தமிழ்க்காழி - தமிழ் சிறக்கும் காழிநகர். வயங்கொச்சை - கொச்சைவயம். மெய்யுணர்ந்தயனூர் - மெய் உணர்ந்த அயனூர். 'த'கர பெயரெச்ச விகுதி தொக்கது; பிரமனூர். விண்ணவர் தம் கோனூர் - விண்ணவர் தம் கோன், இந்திரன். அவன் சூரபன்மனுக்கு அஞ்சி சீகாழியில் மூங்கில் வடிவத்தில் இருந்தமையால், இவ்வூர் வேணுபுரமாயிற்று. உரை - புகழ்.

குறிப்புரை: தரைத்தேவர் – பூசுரர். அந்தணர் – தமிழ்க்காழி என்றதால் ஸ்ரீகாளிபுரம் என்றதன் திரிபென்ற கூற்று ஆராயத்தக்கது. விரை – மணம். மெய் உணர்ந்த அயன் என்க. அயனூர் – பிரமபுரம். விண்ணவர்தம் கோன் ஊர் – வேணுபுரம். திலை – அரை. உரை – (புகழ்) மொழி.

The greatest city in the world is Shanbai. This city is called Shanbai also, it is one of the twelve names, the chief name being Seerkaazhi. The devotees visit the temple here daily and serve our Lord, they are virtuous Brahmins and the devas of the earth.

2261. புண்டரிகத்தார்வயல்சூழ்புறவமிகுசிரபுரம்பூங்காழிசண்பை
எண்டிசையோரிறைஞ்சியவெங்குருப்புகலிபூந்தராய்த்தோணிபுரஞ்சீர்
வண்டமரும்பொழில்மல்குகழுமலநற்கொச்சைவானவர்தங்கோனூர்
அண்டயனூரிவையென்பரருங்கூற்றையுதைத்துகந்தஅப்பனூரே. 6

புண்டரிகத்து ஆர் வயல் சூழ் புறவம், மிகு சிரபுரம், பூங் காழி, சண்பை,
எண்திசையோர், இறைஞ்சிய வெங்குரு, புகலி, பூந்தராய், தோணிபுரம், சீர்
வண்டு அமரும் பொழில் மல்கு கழுமலம், நல் கொச்சை, வானவர் தம்கோன்ஊர்,
அண்டு அயன்ஊர், இவை என்பார் - அருங்கூற்றை உதைத்து உகந்த அப்பன் ஊரே.

puNTarikattu Ar vayal cUz puRavam, miku cirapuram, pUg kAzi, caNpai,
eN ticaiyOr iRainjciya vegkuru, pukali, pUntarAy, tONipuram, cIr
vaNTu amarum pozil malku kazumalam, nal koccai, vAn2avar tam kOn2 Ur,
aNTu ayan2 Ur, ivai en2par--arugkURRai utaittu ukanta appan2 UrE.

பொருள்: புண்டரிகத்து வயல் சூழ் புறவம் - புண்டரிகம் - தாமரை; ஆர் - நிறைந்த தாமரை மலர்கள் நிறைந்த கழனி சூழ்ந்த புறவம் எட்டுத் திசையிலுள்ளோரும் வணங்கிய வெங்குரு.

குறிப்புரை: புண்டரிகத்து ஆர்வயல் – தாமரை மலர்களால் நிறைந்த கழனி. இறைஞ்சிய – வணங்கிய. வானவர் கோனூர் – வேணுபுரம். அண்ட அயனூர் – பிரமதேவனூர், பிரமபுரம். காலசங்காரகர்த்தர் என்க.

All around the city of Thiru-p-piramapuram paddy fields were in plenty with lotus flowers therein. Our Lord Civan once upon a time kicked the demigod of death, Yama, very brave and mighty. Civan wished to be manifest in this glorious city, which

has the name of Puravam which is one of the twelve names, the chief name being, of course, Seerkaazhi.

2262. வண்மைவளர்வரத்தயனூர்வானவர்தங்கோனூர்வண்புகலியிஞ்சி
வெண்மதிசேர்வெங்குருமிக்கோரிறைஞ்சுசண்பைவியன்காழிகொச்சை
கண்மகிழுங்கழுமலங்கற்றோர்புகழுந்தோணிபுரம்பூந்தராய்சீர்ப்
பண்மலியுஞ்சிரபுரம்பார்புகழ்புறவம்பால்வண்ணன்பயிலுமூரே. 7

வண்மை வளர் வரத்து அயன்ஊர், வானவர்தம்கோன் ஊர், வண் புகலி, இஞ்சி
வெண்மதி சேர் வெங்குரு, மிக்கோர் இறஞ்சு சண்பை, வியன் காழி, கொச்சை,
கண் மகிழும் கழுமலம், கற்றோர் புகழும் தோணிபுரம், பூந்தராய், சீர்ப்
பண் மலியும் சிரபுரம், பார் புகழ் புறவம் - பால்வண்ணன் பயிலும் ஊரே.

vaNmai vaLar varattu ayan2 Ur, vAn2avar tam- kOn2 Ur, vaN pukali, injci
veN mati cEr vegkuru, mikkOr iRainjcu caNpai, viyan2kAzi, koccai,
kaN makizum kazumalam, kaRROr pukazum tONipuram, pUntarAy, cIrp
paN maliyum cirapuram, pAr pukazum puRavam--pAlvaNNan2 payilum UrE.

பொருள்: வண்மை - வள்ளன்மை. வரத்து - மேன்மை வண்புகலி. வளமுடைய புகலி. இஞ்சி - மதில் இஞ்சி வெண்மதி சேர் வெங்குரு - வெண்மதி வந்து சேரும் உயர்ந்த மதில்களை உடைய வெங்குரு. மிக்கோர் - ஞானத்தில் மிக்கவர்கள். கண்மகிழும் - கண்ணுக்குப் பொலிவான. கற்றோர் புகழுந்தோணிபுரம் - சிவனை வழிபடக் கற்றோர். வேதாகமங்களைக் கற்றோர் எனலுமாம்.

குறிப்புரை: வண்மை – கொடை. வரத்து – மேன்மையை உடைய. இஞ்சி – மதில். மிக்கோர் – ஞானம், தவம். தொண்டு, பூஜை முதலியவற்றால் மேம்பட்டவர். கற்றோர் – சிவபிரானை வழிபடும் நெறியை உணர்ந்தோர். வேதாகமங்களைக் கற்றவர் எனலுமாம். பார் – உலகம்.

The city of Thiru-p-piramapuram has big palaces with walls tall enough to reach the moon, which passes through the sky. Here great scholars who are well versed in books of wisdom praise the city. They are high philanthropists. Our Lord Civan has adorned His body with white sacred ashes. He, therefore, exhibits pure whiteness all around. He manifests Himself in Thiru-p-piramapuram, which carries twelve names, the most important being Seerkaazhi.

2263. மோடிபுறங்காக்குமூர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்காழிமூதூர்
நீடியலுஞ்சண்பைகழுமலங்கொச்சைவேணுபுரங்கமலநீடு
கூடியயனூர்வளர்வெங்குருப்புகலிதராய்தோணிபுரங்கூடப்போர்
தேடியுழலவுணர்பயில்திரிபுரங்கள்செற்றமலைச்சிலையனூரே. 8

மோடி புறங்காக்கும் ஊர், புறவம், சீர்ச் சிலம்பன்ஊர், காழிமூதூர்,
நீடுஇயலும், சண்பை, கழுமலம், கொச்சை, வேணுபுரம், கமலம் நீடு
கூடிய(ய)யன்ஊர், வளர் வெங்குரு, புகலி, தராய், தோணிபுரம் - கூடப் போர்
தேடி உழல் அவுணர் பயில் திரிபுரங்கள் செற்ற மலைச்சிலையன் ஊரே.

mOTi puRagkAkkum Ur, puRavam, cIrc cilampan2 Ur, kAzimUtUr,
nITu iyalum caNpai, kazumalam, koccai, vENupuram, kamalam nITu
kUTiya(a)yan2 Ur, vaLar vegkuru, pukali, tarAy, tONipuram--kUTap pOr
tETi uzal avuNar payil tiripuragkaL ceRRa malaiccilaiyan2 UrE.

பொருள்: மோடி புறங்காக்கும் - மோடி - கொற்றவை. காவல் தெய்வம். புறங்காக்கும். நகரைக் காவல் செய்யும் புறவம். சிலம்பன் ஊர் - சிரபுரம். கமலநீடு கூடியவன். தாமரை மலர் மீது தங்கியவன் ஊர்- பிரமபுரம். கூடப் போர்தேடி உழல் அவுணர் - போர் கூடத் தேடி அலைகின்ற அவுணர் - போருக்கு வருவோரைத் தேடி அலைகின்ற அசுரர்கள். செற்றமலைச் சிலையன் - செற்ற. அழித்த. மலைச்சிலை - மலை வில் மேருமலையாகிய வில்.

குறிப்புரை: மோடி – துர்க்கை. புறங்காக்கும் – காவல் செய்யும். மோடி புறங்காக்கும் ஊராகிய புறவம் என்க (தி.2 ப.210 பா.8). சீர்ச்சிலம்பன் ஊர் – சிரபுரம். கமல நீடு கூடியவன் ஊர் – பிரமபுரம். (தாமரையில் வாழ்பவன்). போர், புரங்கள், செற்றமலை சிலையன் – திரிபுரத்தசுரரை அழித்த மேருவில்லியாகிய சிவபிரான்.

We have already mentioned about the twelve names of Seerkaazhi. Our Thiru-gnana-Sambandar uses the different names of the city in different poems to start with. Similarly in this verse he uses the name Puravam and adds some historical truth. Here he says the city Puravam is watched and safeguarded by a demigoddess called Durga. The asuras roamed all over the sky causing misery to devas. They waged war with their enemies causing intolerable misery to many. Our Lord Civan, therefore, destroyed their three fortresses and completely eradicated their mightiness and killed them all. This Civan wishes to be manifested in Thiru-p-piramapuram.

2264. இரக்கமுடையிறையவனூர்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்றன்னூர்
நிரக்கவருபுனற்புறவநின்றதவத்தயனூர்சீர்த்தேவர்கோனூர்
வரக்கரவாப்புகலிவெங்குருமாசிலாச்சண்பைகாழிகொச்சை
அரக்கன்விறலழித்தருளிகழுமலமந்தணர்வேதமறாதவூரே. 9

இரக்கம்(ம்) உடை இறையவன் ஊர் தோணிபுரம், பூந்தராய், சிலம்பன்தன் ஊர்,
நிரக்க வருபுனல் புறவம், நின்ற தவத்து அயன்ஊர், சீர்த் தேவர்கோன்ஊர்,
வரக் கரவாப் புகலி, வெங்குரு, மாசு இலாச் சண்பை, காழி, கொச்சை,
அரக்கன் விறல் அழித்துஅருளி கழுமலம் - அந்தணர் வேதம் அறாத ஊரே.

irakkam(m) uTai iRaiyavan2 Ur tONipuram, pUntarAy, cilampan2tan2 Ur,
nirakka varupun2al puRavam, nin2Ra tavattu ayan2 Ur, cIrt tEvarkOn2 Ur,
varak karavAp pukali, vegkuru, mAcu ilAc caNpai, kAzi, koccai,
arakkan2 viRal azittu aruLi kazumalam--antaNar vEtam aRAta UrE.

பொருள்: இரக்கமுடைய இறைவன் ஊர் தோணிபுரம் - தோணிபுரம் கருணையே வடிவான சிவபெருமானின் ஊர். நிரக்க வரும் புனல் புறவம் - நீர் பெருக்குடன் விரைந்து பாயும் திருப்புறவம். தவத்து அயனூர் - தவத்தினையுடைய பிரமனின் ஊர். தேவர்கோன் ஊர் - சிரபுரம். வரக்கரவா புகலி - புகலாக வந்தவர்களுக்குக் கரவாத திருப்புகலி. அரக்கன் இராவணன். விறல் - வலிமை. அழித்தருளி - அழித்து அருளியவன். இகர ஈற்றுப் பெயர், சிவன், கழுமலம் அந்தணர் மறையோதல் அறாத வூரே.

குறிப்புரை: இரக்கம் உடை இறையவன் – கருணையே உருவமாகிய சிவபிரான். நிரக்க வருபுனல் என்றது நீரின் பெருக்கத்தையும் விரைவையும் உணர்த்தும். தவத்து அயன் – தவத்தையுடைய பிரமன். புகல் என்றெண்ணி வரக்கரவாத புகலி. மாசு – குற்றம். அரக்கன் – இராவணன். விறல் – வலி. அருளி – சிவன்.

Our Lord Civan is the embodiment of grace to His devotees. He is manifest in Thonipuram, this is one of the twelve names of Seerkaazhi. In this city scholarly Brahmins chant the Vedas without any break. In such a glorious city, our Lord who subdued the mighty Raavanan has manifested Himself. The city is well known for streams with profuse and fast flowing water.

2265. மேலோதுங்கழுமலமெய்த்தவம்வளருங்கொச்சையிந்திரனூர்மெய்ம்மை
நூலோதுமயன்றனூர்நுண்ணறிவார்குருப்புகலிதராய்தூநீர்மேல்
சேலோடுதோணிபுரந்திகழ்புறவஞ்சிலம்பனூர்செருச்செய்தன்று
மாலோடுமயனறியான்வண்காழிசண்பைமண்ணோர்வாழ்த்துமூரே. 10

மேல் ஓதும் கழுமலம், மெய்த்தவம் வளரும் கொச்சை, இந்திரன்ஊர், மெய்ம்மை-
நூல் ஓதும் அயன்தன்ஊர், நுண் அறிவார் குரு, புகலி, தராய், தூ நீர் மேல்
சேல் ஓடு தோணிபுரம், திகழ் புறவம் சிலம்பன்ஊர், செருச் செய்து அன்று
மாலோடும் அயன் அறியான் வண் காழி, சண்பை - மண்ணோர் வாழ்த்தும் ஊரே.

mEl Otum kazumalam, meyttavam vaLarum koccai, intiran2 Ur, meymmai-
nUl Otum ayan2 tan2 Ur, nuN aRivAr kuru, pukali, tarAy, tU nIrmEl
cEl OTu tONipuram, tikaz puRavam, cilampan2 Ur, ceruc ceytu an2Ru
mAlOTum ayan2 aRiyAn2 vaN kAzi, caNpai--maNNOr vAzttum UrE.

பொருள்: மெய்த்தவம் உண்மைச் சரியை கிரியா யோகங்கள், வேதம். நுண்ணறிவு ஆர் குரு - நுட்பமான அறிவுடையோர் வாழும் வெங்குரு. சேல் - சேல்மீன் இனம். செரு - போர். மண்ணோர் - மண்ணுலகத்தவர்.

குறிப்புரை: மெய்த்தவம் – உண்மைத் தவம் (தபசு). மெய்ம்மை நூல் – சத்தியமான வேதங்கள். நுண் அறிவு ஆர் குரு – நுட்பமான அறிவு பொருந்திய குரு, வெங்குரு. சேல் – மீனினம். செரு – போர்.

People in the entire world praise and felicitate this city of Seerkaazhi. Here scholars chant always rich wisdom. Our Lord Civan is manifest in this city of Kazhumalam, which is one of the twelve names of Seerkaazhi. He is the Lord whose greatness was not known to Thirumaal and Brahma. This is the city where many lakes with variety of fish are found.

2266. ஆக்கமர்சீரூர்சண்பைகாழியமர்கொச்சைகழுமலமன்பானூர்
ஒக்கமுடைத்தோணிபுரம்பூந்தராய்சிரபுரமொண்புறவநண்பார்
பூக்கமலத்தோன்மகிழூர்புரந்தரனூர்புகலிவெங்குருவுமென்பர்
சாக்கியரோடமண்கையர்தாமறியாவகைநின்றான்தங்குமூரே. 11

ஆக்கு அமர் சீர் ஊர் சண்பை, காழி, அமர் கொச்சை, கழுமலம், அன்பான் ஊர்
ஒக்கம்(ம்) உடைத் தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், ஒண் புறவம், நண்பு ஆர்
பூக்கமலத்தோன் மகிழ் ஊர், புரந்தரன் ஊர், புகலி, வெங்குருவும், என்பர் -
சாக்கியரோடு அமண்கையர் தாம் அறியா வகை நின்றான் தங்கும் ஊரே.

Akku amar cIr Ur caNpai, kAzi, amar koccai, kazumalam, an2pAn2 Ur
Okkam(m) uTait tONipuram, pUntarAy, cirapuram, oN puRavam, naNpu Ar
pUkkamalattOn2 makiz Ur, purantaran2 Ur, pukali, vegkuruvum, en2par--
cAkkiyarOTu amaNkaiyar tAm aRiyA vakai nin2RAn2 tagkum UrE.

பொருள்: ஆக்கு - ஆக்கம். ஆக்கமர் சீரூர் - ஆக்கம் மிக்க ஊர். அன்பான் ஊர் - அன்பான் சிவபெருமான், அவனுடைய ஊர் அன்பான் ஊர். ஒக்கம் - உயர்ச்சி. ஒண் - விளக்கம். புரந்தரன் - இந்திரன். கையர் - கீழ்மக்கள் ஒழுக்கமில்லாதவர்கள்.

குறிப்புரை: ஆக்கு – ஆக்கம். 'ஆக்கம்மிக்க ஊர்' (தி.2 பா.210 பா.8). (மன்று மன்றம், இன்பு இன்பம், நீட்டு நீட்டம், பாட்டு பாட்டம் என்பவைபோல் அம்முப்பெற்றது). ஆக்கம் அமர் சீர் ஊர் என்க. அன்பான் ஊர் – அன்புருவான் சிவபிரான் ஊர். அன்பானூராகிய தோணிபுரம். 'அன்பே சிவம்'. கமலத்தோன் – பிரமதேவன். புரந்தரன் – இந்திரன். ஒக்கம் – உயர்ச்சி. ஓங்குவது ஒக்கம். நீங்குவது நீக்கம், தேங்குவது தேக்கம், அடங்குவது அடக்கம், தொடங்குவது தொடக்கம். பழக்கம், பழகு. ஙகரவொற்றில்லை. இறக்கம் – இறங்கு. ஙகர வொற்றிருக்கின்றது. பகுதியில் அவ்வொற்றிருப்பினும் இன்றாயினும் வல்லொற்றுடைமை காண்க.

Our Lord Civan is an embodiment of affection and love. He is un-understandable to the Jains and the Buddhists. In this city all are affectionate to each other and praise our Lord. Our Lord Civan manifests Himself in the city of Shanbai which is full of greatness. This name is one of the twelve names of Seerkaazhi.

2267. அக்கரஞ்சேர்தருமனூர்புகலிதராய்தோணிபுரமணிநீர்ப்பொய்கை
புக்கரஞ்சேர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்புகழ்க்காழிசண்பைதொல்லூர்
மிக்கரஞ்சீர்க்கழுமலமேகொச்சைவயம்வேணுபுரமயனூர்மேலிச்
சக்கரஞ்சீர்த்தமிழ்விரகன்றான்சொன்னதமிழ்தரிப்போர்தவஞ்செய்தாரே. 12

அக்கரம் சேர் தருமன் ஊர், புகலி, தராய், தோணிபுரம், அணி நீர்ப் பொய்கைப்
புக்கரம் சேர் புறவம், சீர்ச் சிலம்பன்ஊர், புகழ்க் காழி, சண்பை, தொல் ஊர்,
மிக்கர் அம் சீர்க் கழுமலமே, கொச்சைவயம், வேணுபுரம், அயன்ஊர், மேல் இச்
சக்கரம் சீர்த் தமிழ்விரகன்தான் சொன்ன தமிழ் தரிப்போர் தவம் செய்தாரே.

akkaram cEr taruman2 Ur, pukali, tarAy, tONipuram, aNi nIrp poykaip
pukkaram cEr puRavam, cIrc cilampan2 Ur, pukazk kAzi, caNpai, tol Ur
mikkar am cIrk kazumalamE, koccai vayam, vENupuram, ayan2Ur, mEl ic
cakkaram cIrt tamizvirakan2 tAn2 con2n2a tamiz tarippOr tavam ceytOrE.

பொருள்: அக்கரம் - அக்ஷரம். க்ஷரம் - அழிவு. அக்ஷரம் - அழிவின்மை. தருமன் - இயமன், குரு. தருமனூர் - வெங்குரு. புக்கரம் - புஷ்கரம், தீர்த்தம். தொல்லூர் - பழமையான ஊர்.

மிக்கரன் சீர் - மிக்க அரன் சீர். அரனின் புகழை மிகவும் கொண்ட. இச்சக்கரம் - இந்த சக்கரபந்தம்.

குறிப்புரை: அக்கரம் (அக்ஷரம்) – அழிவின்மை. க்ஷரம் – அழிவு. அழியாத தருமனூர் என்றது வெங்குருவினை. தருமன் – இயமதருமன் . . . பூவை பாகன் – அன்பழுத்தும் அறமகற்கு இவ்வருள் பழுத்து . . . பின்பழிச்சி ஒரு தருமன் தன் பதத்தின் இனிதிருக்கப் பெற்றான். (சீகாழித்தலபுராணம்), (தி. 7 ப. 38 பா. 9). புக்கரம் – தாமரை. தொல்லூர் – (புராதனபுரி) பழமையதாகிய ஊர். மிக்கரஞ்சீர் – மிக்கு அரன் சீர் என்றதாகக் கொண்டுரைக்கலாம். நன்கு புலப்பட்டிலது. இச்சக்கரம் எனச்சுட்டியதால், இப்பதிகம் சித்திரக் கவியுள் ஒன்றான சக்கர பந்தம் என்றறிந்து முன்னோர் தலைப்பிற் குறித்தனர்.

This last poem, the twelfth one is peculiar to this section. All other sections carry only 11 verses. Thiru-gnana-Sambandar mentions all the twelve names of Seerkaazhi. Hence, he has composed 12 poems in this section. This section is called Thiru-ch-chakkara-maatru. Our Thiru-gnana-Sambandar is a very famous Tamil scholar very skilful too. He got immersed in the grace of our Lord Civan and in these verses he has mentioned all the twelve names of Seerkaazhi. Those devotees who can praise our Lord and sing melodiously these twelve verses will be considered the most scholarly people who perform all the religious penance.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

73ஆம் பதிகம் முற்றிற்று
End of 73rd Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 210 பதிக எண்: 74

74. திருப்பிரமபுரம் – கோமூத்திரி

74. THIRU-P-PIRAMAPURAM

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

இந்தத் திருப்பதிகம் திருக்கோமூத்திரி அந்தாதி என்னும் மிறைக்கவி அமைப்பில் உள்ளது. ஒரு செய்யுளின் முன்னிரண்டடி மேல்வரியாகவும் பின்னிரண்டடி கீழ்வரியாகவும் எழுதி அவ்விரண்டு வரியின் எழுத்துக்களையும் கோமூத்திர ரேகை போல் மாறிமாறிப் படிக்க அச்செய்யுளாகும்படி அமைத்துப் பாடுஞ் சித்திரக்கவி (தண்டி. 95). இந்த விதி இத்திருப்பதிகத்துக்குப் பொருந்துமாறில்லை. இத்திருப்பதிகமும் திருச்சக்கரமாற்றைப் போல, அந்தாதித் தொடையில் அமைந்துள்ளமை அறியத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

2268. பூமகனூர்புத்தேளுக்கிறைவனூர்குறைவிலாப்புகலிபூமேல்
மாமகளூர்வெங்குருநற்றோணிபுரம்பூந்தராய்வாய்ந்தஇஞ்சிச்
சேமமிகுசிரபுரஞ்சீர்ப்புறவநிறைபுகழ்ச்சண்பைகாழிகொச்சை
காமனைமுன்காய்ந்தநுதற்கண்ணவனூர்கழுமலநாங்கருதுமூரே. 1

பூமகன்ஊர், புத்தேளுக்கு இறைவன்ஊர், குறைவு இலாப் புகலி, பூமேல்
மாமகள்ஊர், வெங்குரு, நல்-தோணிபுரம், பூந்தராய், வாய்ந்த இஞ்சிச்
சேமம் மிகு சிரபுரம், சீர்ப் புறவம், நிறை புகழ்ச் சண்பை, காழி, கொச்சை,
காமனை முன் காய்ந்த நுதல்கண்ணவன் ஊர் கழுமலம் - நாம் கருதும் ஊரே.

pUmakan2 Ur, puttELukku iRaivan2 Ur, kuRaivu ilAp pukali, pUmEl
mAmakaL Ur, vegkuru, nal-tONipuram, pUntarAy, vAynta injcic
cEmam puku cirapuram, cIrp puRavam, niRai pukazc caNpaii, kAzi, koccai,
kAman2ai mun2 kAynta nutal kaNNavan2 Ur kazumalam--nAm karutum UrE.

பொருள்: பூமகன் - பிரமன். பூமகனூர் - பிரமனூர். புத்தேளுக் கிறைவன் - இந்திரன்; புத்தேளுக் கிறைவனூர் - சிரபுரம். பூமேல் மாமகளூர்; பூமேல் மாமகள் - இலக்குமி. பூமேல் மாமகளூர் - திருமகள் பரவும் ஊராகிய திருவெங்குரு. அவள் வாழும் ஊர் எனலுமாம்.

இஞ்சி - மதில். இஞ்சிச் சேமமிகும் சிரபுரம் - மதிற்காவலுடைய சிரபுரம். காமன் - மன்மதன். இவ்வூர்கள் இறைவன் விரும்பும் ஊர்களாகும்.

குறிப்புரை: பூமேல் மாமகளூர் வெங்குரு– திருமகள் பரவும் ஊராகிய வெங்குரு. அவள் வாழும் ஊர் எனலுமாம். செல்வம் பற்றியது. இஞ்சி – மதில். சேமம் – காவல். காமனை – மன்மதனை. நுதல் – நெற்றி.

In this Chapter also there are twelve verses. Every poem reports most of the twelve names of Seerkaazhi. However, this chapter is called by a special name "திருக்கோமுத்திரி அந்தாதி" and it is mentioned in the heading. The last two lines have beautiful rhymes. Goddess Lakshmi is manifest in this city of Venguru. By her grace the city is very rich. The palaces in this city have very tall walls, this city is guarded by Kaazhi. Also in this city our Lord Civan kicked the god of death Yama and he died. Piramapuram is one of the twelve names of Kazhumalam.

2269. கருத்துடையமறையவர்சேர்கழுமலமெய்த்தோணிபுரங்கனகமாட
உருத்திகழ்வெங்குருப்புகலியோங்குதராயுலகாருங்கொச்சைகாழி
திருத்திகழுஞ்சிரபுரந்தேவேந்திரனூர்செங்கமலத்தயனூர்தெய்வத்
தருத்திகழும்பொழிற்புறவஞ்சண்பைசடைமுடியண்ணல்தங்குமூரே. 2

கருத்து உடைய மறையவர் சேர் கழுமலம், மெய்த் தோணிபுரம், கனக மாட
உருத் திகழ் வெங்குரு, புகலி, ஓங்கு தராய், உலகு ஆரும் கொச்சை, காழி,
திருத் திகழும் சிரபுரம், தேவேந்திரன்ஊர், செங்கமலத்து அயன்ஊர், தெய்வத்-
தருத் திகழும் பொழில் புறவம், சண்பை - சடைமுடி அண்ணல் தங்கும் ஊரே.

karuttu uTaiya maRaiyavar cEr kazumalam, meyt tONipuram, kan2aka mATa
urut tikaz vegkuru, pukali, Ogku tarAy, ulaku Arum koccai, kAzi,
tirut tikazum cirapuram, tEvEntiran2 Ur, cegkamalattu ayan2 Ur, teyvat-
tarut tikazum pozil puRavam, caNpai--caTaimuTi aNNal tagkum UrE.

பொருள்: கருத்துடை மறையவர் - சிவஞானமுடைய மறையவர். கனகமாடம் - பொன் மாடம். உருத்திகழ் வெங்குரு - அழகாகத் திகழும் வெங்குரு. ஓங்குதராய் - மேலும் மேலும் உயரும் பூந்தராய். உலகாரும் கொச்சை - உலகமக்கள் சேரும் கொச்சைவயம். திருத்திகழும் சிரபுரம் தேவேந்திரனூர் - செல்வமிக்க சிரபுரம் தேவேந்திரனூர் (புகலி). செங்கமலத்தயனூர் - பிரமனூர். தருத்திகழும் பொழிற் புறவம் - தரு - மரம். மரங்கள் நிறைந்த சோலைகளால் அழகுடன் திகழும் புறவம். இவை இறைவன் தங்கும் ஊர்களாகும்.

குறிப்புரை: கனகம் – பொன். திரு – இலக்குமி, அழகு. தரு – மரம். கற்பகம் முதலியவை.

Our Lord Civan has a lot of entangled locks of hair. He is manifest in Kazhumalam which is one of the twelve names of Seerkaazhi. In this city, Vedic scholars live in large numbers and do their rituals regularly. Goddess Lakshmi also stays in this city. In such a glorious city our Lord Civan is manifest. In the forest area, all around the city, Karpagam tree and many other trees grow in large numbers. Karpagam tree grows usually in the celestial world. It is supposed to yield whatever one wishes to have.

2270. ஊர்மதியைக்கதுவவுயர்மதிற்சண்பையொளிமருவுகாழிகொச்சை
காா்மலியும்பொழில்புடைசூழ்கழுமலமெய்த்தோணிபுரங்கற்றோரேத்துஞ்
சீர்மருவுபூந்தராய்சிரபுரமெய்ப்புறவமயனூர்பூங்கற்பத்
தார்மருவுமிந்திரனூர்புகலிவெங்குருக்கங்கைதரித்தோனூரே. 3

ஊர் மதியைக் கதுவ உயர் மதில் சண்பை, ஒளி மருவு காழி, கொச்சை,
கார் மலியும் பொழில் புடை சூழ் கழுமலம், மெய்த் தோணிபுரம், கற்றோர் ஏத்தும்
சீர் மருவு பூந்தராய், சிரபுரம், மெய்ப் புறவம், அயன்ஊர், பூங் கற்பத்-
தார் மருவும் இந்திரன்ஊர், புகலி, வெங்குரு - கங்கை தரித்தோன் ஊரே.

Ur matiyaik katuva uyar matil caNpai, oLi maruvu kAzi, koccai,
kAr maliyum pozil puTai cUz kazumalam, meyt tONipuram, kaRROr Ettum
cIr maruvu pUntarAy, cirapuram, meyp puRavam, ayan2 Ur, pUg kaRpat-
tAr maruvum intiran2 Ur, pukali, vegkuru--kagkai tarittOn2 UrE.

பொருள்: ஊர் மதியைக் கதுவ உயர் மதிற் சண்பை - ஊர் மதி - விண்ணில் ஊர்ந்து செல்லும் சந்திரன். கதுவ - பொருந்த, பற்ற. விண்ணில் ஊர்ந்து செல்லும் மதியைப் பொருந்துமளவு உயர்ந்த மதில்களை உடைய சண்பை. ஒளி மருவும் காழி - பிரகாசமான காழிநகர். கார் மலியும் பொழில் புடைசூழ் கழுமலம் - கார்மேகங்கள் தங்கும் உயர்ச்சியும் குளிர்ச்சியும் கொண்ட சோலைகள் சூழ்ந்த கழுமலம். மெய்த்தோணிபுரம் - என்றும் உள்ள தோணிபுரம், பிரளய காலத்திலும் நின்று நிலவுதலைக் குறித்தது. கற்றவர்கள் போற்றும் பூந்தராய். என்றுமுள்ள புறவம். அயனூர் - பிரமபுரம். கற்பகத்தார் - தார் - மாலை, கற்பகப்பூ மாலை கற்பகத்தார் மருவும் இந்திரன் ஊர் புகலி - கற்பக மாலையை அணிந்த இந்திரன் அசுரனுக்கு அஞ்சிப் புகலாக அடைந்த ஊராதலின் புகலி, வெங்குரு இவை கங்கையைச் சடையில் தரித்தோன் ஊர்களே.

குறிப்புரை: ஊர்மதி – விண் ஊர்ந்து செல்லும் சந்திரன். கதுவ – பற்ற. கற்பத்தார் – கற்பகப் பூமாலை. தரித்தோன் – தாங்கியவன்.

Our Lord Civan supports the river Ganges in His entangled locks of hair. In the city of Shanbai, which is one of the twelve names of Seerkaazhi, the moon moves in the sky above the high walls of the palaces, which look as though they touch the moon. In such a glorious city our Lord Civan is manifest.

2271. தரித்தமறையாளர்மிகுவெங்குருசீர்த்தோணிபுரந்தரியாரிஞ்சி
எரித்தவன்சேர்கழுமலமேகொச்சைபூந்தராய்புகலியிமையோர்கோனூர்
தெரித்தபுகழ்ச்சிரபுரஞ்சீர்திகழ்காழிசண்பைசெழுமறைகளெல்லாம்
விரித்தபுகழ்ப்புறவம்விரைக்கமலத்தோனூருலகில்விளங்குமூரே. 4

தரித்த மறையாளர் மிகு வெங்குரு, சீர்த் தோணிபுரம், தரியார் இஞ்சி
எரித்தவன் சேர் கழுமலமே, கொச்சை, பூந்தராய், புகலி, இமையோர்கோன்ஊர்,
தெரித்த புகழ்ச் சிரபுரம், சீர் திகழ் காழி, சண்பை, செழுமறைகள் எல்லாம்
விரித்த புகழ்ப் புறவம், விரைக்கமலத்தோன் ஊர் - உலகில் விளங்கும் ஊரே.

taritta maRaiyALar miku vegkuru, cIrt tONipuram, tariyAr injci
erittavan2 cEr kazumalamE, koccai, pUntarAy, pukali, imaiyOr kOn2 Ur,
teritta pukazc cirapuram, cIr tikaz kAzi, caNpai, cezumaRaikaL ellAm
viritta pukazp puRavam, viraikkamalattOn2 Ur-ulakil viLagkum UrE.

பொருள்: (சிவனை சிரசிலும் சிந்தையிலும்) தரித்த மறையவர்கள் மிகுதியாக வாழும் வெங்குரு, புகழுடைத் தோணிபுரம், தன்னைத் தரியாத பகைவர்களாகிய முப்புராதிகளின் மும்மதில்களை எரித்தவன் சேரும் கழுமலம். கொச்சைவயம். பூந்தராய். புகலியாகிய தேவர்களின் தலைவன் ஊர். ஆராய்ந்த புகழுடைய சிரபுரம். பெருமையுடன் விளங்கும் காழி சண்பை. பொருள் வளமுள்ள மறைகளையெல்லாம் விரித்த பெருமையை உடைய புறவம். மணமுடைய தாமரை மலரில் இருப்பவனூர் - பிரமபுரம். இவை உலகில் நின்று விளங்கும் ஊரே.

குறிப்புரை: தரியார் – பகைவர். இஞ்சி – மும்மதில். திரிபுரம். இமையோர்கோன் – இந்திரன். விரை – மணம்.

The city Venguru is the most cherished city of the world. In this city, the Vedic scholars chant the Vedas everyday. Our Lord Civan once upon a time destroyed the three fortresses of the asuraas while manifesting Himself here. Indiran, the chief of

devas visits the city and offers worship to our Lord. In such a glorious city of Venguru which carries the twelve names of Seerkaazhi our Lord wishes to manifest Himself.

2272. விளங்கயனூர்பூந்தராய்மிகுசண்பைவேணுபுரமேகமேய்க்கும்
இளங்கமுகம்பொழிற்றோணிபுரங்காழியெழிற்புகலிபுறவமேரார்
வளங்கவரும்வயற்கொச்சைவெங்குருமாச்சிரபுரம்வன்னஞ்சமுண்டு
களங்கமலிகளத்தவன்சீர்க்கழுமலங்காமன்னுடலங்காய்ந்தோனூரே. 5

விளங்கு அயன்ஊர், பூந்தராய், மிகு சண்பை, வேணுபுரம், மேகம் ஏய்க்கும்
இளங் கமுகம், பொழில் - தோணிபுரம், காழி, எழில் புகலி, புறவம், ஏர் ஆர்
வளம் கவரும் வயல் கொச்சை, வெங்குரு, மாச் சிரபுரம், வன்நஞ்சம் உண்டு
களங்கம் மலி களத்தவன் சீர்க் கழுமலம் - காமன்(ன்) உடலம் காய்ந்தோன் ஊரே.

viLagku ayan2 Ur, pUntarAy, miku caNpai, vENupuram, mEkam Eykkum
iLag kamukam pozil-tONipuram, kAzi, ezil pukali, puRavam, Er Ar
vaLam kavarum vayal koccai, vegkuru, mAccirapuram, van2 nanjcam uNTu
kaLagkam mali kaLattavan2 cIrk kazumalam--kAman2(n2) uTalam kAyntOn2 UrE.

பொருள்: விளங்கு அயன் ஊர் - நிலவுகின்ற பிரமபுரம். பூந்தராய். ஏற்றம் மிகு சண்பை. வேணுபுரம். மேகமண்டலத்தைப் பொருந்த உயர்ந்த கமுகஞ் சோலைகளை உடைய தோணிபுரம் - காழி. அழகிய புகலி. புறவம். அழகு நிறைந்த வளமையுடைய வயல்கள் நிறைந்த கொச்சைவயம். வெங்குரு. பெரிய சிரபுரம். வலிய நஞ்சத்தை உண்டு கறை மலிந்த கண்டத்தனாகிய திருநீலகண்டனின் பெருமைமிகு கழுமலம். இவை மன்மதன் உடலை எரித்தவனின் ஊரே.

குறிப்புரை: மேகம் ஏய்க்கும் – மேக மண்டலத்தை ஒன்ற ஓங்கும். கமுகம் – பாக்குமரம். எழில் – அழகு. ஏர் ஆர் வளம் – அழகு நிறைந்த வளமை. வல்நஞ்சம் – வலிய விடம். களங்கம் – குற்றம். களத்தவன் – (திருநீல) கண்டன். காமன் – மன்மதன். காய்ந்தோன் – காய விழித்தவன், கோபித்தவன்.

Our Lord Civan, manifest in the city of Thiru-p-piramapuram, burnt the body of Kaaman, the god of love. His throat is dark blue in colour. He is therefore called Thiru-neela-kandan. In this city, a large number of areca trees are grown in the garden. The trees are all very tall and look tall enough to touch the moving moon in the sky. This city is full of rich trees all over the area. This Thiru-p-piramapuram is one of the names of Seerkaazhi city. In such a glorious city, our Lord Civan is manifest.

2273. காய்ந்துவருகாலனையன்றுதைத்தவனூர்கழுமலமாத்தோணிபுரஞ்சீர்
ஏய்ந்தவெங்குருப்புகலியிந்திரனூரிருங்கமலத்தயனூரின்பம்
வாய்ந்தபுறவந்திகழுஞ்சிரபுரம்பூந்தராய்கொச்சைகாழிசண்பை
சேந்தனைமுன்பயந்துலகில்தேவர்கள்தம்பகைகெடுத்தோன்திகழுமூரே. 6

*காய்ந்து வரு காலனை அன்று உதைத்தவன் ஊர் கழுமலம், மாத் தோணிபுரம், சீர்
ஏய்ந்த வெங்குரு, புகலி, இந்திரன்ஊர், இருங் கமலத்து அயன்ஊர், இன்பம்
வாய்ந்த புறவம், திகழும், சிரபுரம், பூந்தராய், கொச்சை, காழி, சண்பை,
சேந்தனை முன் பயந்து உலகில் - தேவர்கள்தம் பகை கெடுத்தோன் திகழும் ஊரே.*

kAyntu varu kAlan2ai an2Ru utaittavan2 Ur kazumalam, mAt tONipuram, cIr
Eynta vegkuru, pukali, intiran2 Ur, irug kamalattu ayan2 Ur, in2pam
vAynta puRavam, tikazum cirapuram, pUntarAy, koccai, kAzi, caNpai--
cEntan2ai mun2 payantu ulakil-tEvarkaL tam pakai keTuttOn2 tikazum UrE.

பொருள்: சினந்து வருகின்ற எமனை அன்று (மார்க்கண்டேயருக்காக) உதைத்தவன் ஊர் கழுமலம். பெரிய தோணிபுரம். புகலி பொருந்திய வெங்குரு. புகலி இந்திரனூர். இருங்கமலத்து அயனூர் - பிரமபுரம். இன்பம் பொருந்திய திருப்புறவம். சிரபுரம். பூந்தராய் கொச்சை, காழி, சண்பை முருகனை முன் பெற்று உலகில் தேவர்களின் பகைவர்களாகிய அசுரர்களை அழித்தவன் திகழ்கின்ற ஊரே.

குறிப்புரை: காய்ந்து – கோபித்து. காலனை – இயமனை. சேந்தனை – முருகப்பிரானை. பயந்து – பெற்று. பகை – சூரன்படை. (பதி. 209 பா. 1 பார்க்க.)

Our Lord Civan created Lord Muruga, Lord Murugan completely destroyed the mightiness of Soorapanman and admitted him into his good grace as javelin and peacock. Kaalan appeared before Lord Civan in an angry mood and our Lord Civan kicked him and destroyed him. Our Lord is manifest in this city of Kazhumalam and this is one of the twelve names of this great city of Seerkaazhi.

2274. திகழ்மாடமலிசண்பைபூந்தராய்பிரமனூர்காழிதேசார்
மிகுதோணிபுரந்திகழும்வேணுபுரம்வயங்கொச்சைபுறவம்விண்ணோர்
புகழ்புகலிகழுமலஞ்சீர்ச்சிரபுரம்வெங்குருவெம்போர்மகிடற்செற்று
நிகழ்நீலிநின்மலன்றன்னடியிணைகள்பணிந்துலகில்நின்றவூரே. 7

*திகழ் மாடம் மலி சண்பை, பூந்தராய், பிரமன்ஊர், காழி, தேசு ஆர்
மிகு தோணிபுரம், திகழும் வேணுபுரம், வயம்கொச்சை, புறவம், விண்ணோர்
புகழ் புகலி, கழுமலம், சீர்ச் சிரபுரம், வெங்குரு - வெம்போர் மகிடற் செற்று,
நிகழ் நீலி, நின்மலன்தன் அடி இணைகள் பணிந்து உலகில் நின்ற ஊரே.*

tikaz mATam mali caNpai, pUntarAy, piraman2 Ur, kAzi, tEcu Ar
miku tONipuram, tikazum vENupuram, vayam koccai, puRavam, viNNOr
pukaz pukali, kazumalam, cIrc cirapuram, vegkuru--vempOr makiTaR ceRRu,
nikaz nIli, nin2malan2 tan2 aTi iNaikaL paNintu ulakil nin2Ra UrE.

பொருள்: விளங்கும் மாட மாளிகைகள் மிக்க சண்பை. பூந்தராய். பிரமனூர், காழி. ஒளிமிகு தோணிபுரம். திகழும் வேணுபுரம். கொச்சைவயம். புறவம். தேவர்கள் புகழும் புகலி. கழுமலம். புகழுடைய சிரபுரம். வெங்குரு. கொடிய போரினைச் செய்யும் மகிஷாசுரனைக் கொன்றழித்து புகழுடன் விளங்குகின்ற நீலி (கொற்றவை) மலமற்றவனாகிய சிவனின் அடியிணைகளைப் பணிந்து உலகில் நின்ற ஊரே.

குறிப்புரை: மலி – மலிந்த, மிக்க. தேசு – ஒளி. மகிடற்செற்று – மகிடாசுரனைக் கொன்று. மகிடம் – எருமைக்கடா. நீலி – மாயோள் (துர்க்கை) கறுப்பாயி.

The demi-goddess called Durga Devi, also called Neeli, fought a severe battle against a very fierce asura called Mahidasuran and killed him finally. Her anger did not subside. Also she wanted to wipe out her life's blame for killing an asura. She therefore went to the city of Shanbai and prostrated before our Lord Civan and got His grace and wiped out her sins of killing the asura. Shanbai is one of the twelve names of the city of Seerkaazhi. This goddess Neeli is none else than Durga Devi. She is also called Karuppayee. The asura's name is Mahidasuran. Mahida means buffalo, especially a female. The asura always used to ride on a male buffalo. He is therefore called Mahidasuran.

2275. நின்றமதில்சூழ்தருவெங்குருத்தோணிபுரநிகழும்வேணுமன்றில்
ஒன்றுகழுமலங்கொச்சையுயர்காழிசண்பைவளர்புறவமோடி
சென்றுபுறங்காக்குமூர்சிரபுரம்பூந்தராய்புகலிதேவர்கோனூர்
வென்றிமலிபிரமபுரம்பூதங்கள்தாங்காக்கமிக்கவூரே. 8

நின்ற மதில் சூழ் தரு வெங்குரு, தோணிபுரம், நிகழும் வேணு, மன்றில்
ஒன்று கழுமலம், கொச்சை, உயர் காழி, சண்பை, வளர் புறவம், மோடி
சென்று புறங்காக்கும் ஊர், சிரபுரம், பூந்தராய், புகலி, தேவர்கோன்ஊர்,
வென்றி மலி பிரமபுரம் - பூதங்கள் தாம் காக்க மிக்க ஊரே.

nin2Ra matil cUztaru vegkuru, tONipuram, nikazum vENu, man2Ril
on2Ru kazumalam, koccai, uyar kAzi, caNpai, vaLar puRavam, mOTi
cen2Ru puRagkAkkum Ur, cirapuram, pUntarAy, pukali, tEvar kOn2 Ur,
ven2Ri mali piramapuram--pUtagkaL tAm kAkka mikka UrE.

பொருள்: உயர்ந்த மதிலால் சூழப்பெற்ற வெங்குரு, தோணிபுரம், நின்று நிலவும் தோணிபுரம், கழுமலம், கொச்சைவயம், காழி, சண்பை, வளர்கின்ற திருப்புறவம், மோடி (கொற்றவை) காக்கும் ஊர் சிரபுரம், பூந்தராய், புகலி, இந்திரனூர் (வேணுபுரம்) வெற்றி மிக்க பிரமபுரம், பூதங்கள் தாங்கும் ஆக்கம் மிக்க ஊர்.

குறிப்புரை: மன்றில் – பொதியில். புறம் என்னும் பொருளது. மன்றில் ஒன்று எனல் பொருந்து மேற்கொள்க.

The city Venguru is supported by Siva Bootas on all the eight sides. Here the fortress of the city is tall and very strong. Venguru is one of the twelve names of the famous city of Seerkaazhi.

2276. மிக்ககமலத்தயனூர்விளங்குபுறவஞ்சண்பைகாழிகொச்சை
தொக்கபொழிற்கழுமலந்தூத்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்சேரூர்
மைக்கொள்பொழில்வேணுபுரமதிற்புகலிவெங்குருவல்லரக்கன்திண்டோள்
ஒக்கஇருபதுமுடிகளொருபதுமீடழித்துகந்தஎம்மானூரே. 9

மிக்க கமலத்து அயன்ஊர், விளங்கு புறவம், சண்பை, காழி, கொச்சை,
தொக்க பொழில் கழுமலம், தூத் தோணிபுரம், பூந்தராய், சிலம்பன்சேர் ஊர்,
மைக் கொள் பொழில் வேணுபுரம், மதில் புகலி, வெங்குரு, வல் அரக்கன் திண்தோள்
ஒக்க இருபது முடிகள்ஒருபதும் ஈடு அழித்து உகந்த எம்மான் ஊரே.

mikka kamalattu ayan2 Ur, viLagku puRavam, caNpai, kAzi, koccai,
tokka pozil kazumalam, tUt tONipuram, pUntarAy, cilampan2 cEr Ur,
maik koL pozil vENupuram, matil pukali, vegkuru--val arakkan2 tiNtOL
okka irupatum muTikaL orupatum ITu azittu ukanta emmAn2 UrE.

பொருள்: தாமரை மலரின் மேலிருப்பவனாகிய அயனுடைய ஊர், பிரமபுரம். விளங்குகின்ற திருப்புறவம். சண்பை. காழி. கொச்சைவயம். சோலைகள் நெருங்கிய கழுமலம். தூய தோணிபுரம். திருப்பூந்தராய். சிலம்பன் சேரூர். சிரபுரம். கரிய மேகம்போல் நிழல்தங்கும் பொழில்கள் உடைய வேணுபுரம். மதில் உடைய புகலி. வெங்குரு. அரக்கனின் திண்ணிய தோள்கள் இருபதினையும் முடிகள் ஒரு பத்தினையும் ஒருசேர வலி அழித்த எம்மானுடைய ஊர்.

குறிப்புரை: தூ – தூய்மை உடைய. எல்லாவுயிர்க்கும் பற்றுக் கோடாகிய. மை – மேகம். கருமையுமாம். பொழில் – சோலை. அரக்கன் – இராவணன். ஈடு – வலிமை. பெருமையுமாம். எம்மான் எம்பெருமான்.

Raavanan, the king of Sri Lanka physically was very powerful, virile and the mightiest with no equal to him in the world. He had twenty shoulders and ten heads

with rich crowns. Our Lord Civan destroyed his widespread reputation. This Lord Civan wishes to manifest Himself in the city of Brahma called Thiru-p-piramapuram. Brahma used to be seated in the most beautiful lotus flower. This city Thiru-p-piramapuram is one of the twelve names of Seerkaazhi.

2277. எம்மான்சேர்வெங்குருச்சீர்ச்சிலம்பனூர்கழுமலநற்புகலியென்றும்
பொய்ம்மாண்பிலோர்புறவங்கொச்சைபுரந்தரனூர்நற்றோணிபுரம்போர்க்
கைம்மாவையுரிசெய்தோன்காழியயனூர்தராய்சண்பைகாரின்
மெய்ம்மால்பூமகனுணராவகைதழலாய்விளங்கியஎம்மிறைவனூரே. 10

எம்மான் சேர் வெங்குரு, சீர்ச் சிலம்பன்ஊர், கழுமலம், நல் புகலி, என்றும்
பொய்ம்மாண்பு இலோர் புறவம், கொச்சை, புரந்தரன்ஊர், நல்-தோணிபுரம், போர்க்
கைம்மாவை உரி செய்தோன் காழி, அயன்ஊர், தராய், சண்பை - காரின்
மெய்ம் மால், பூ மகன், உணரா வகை தழல்ஆய் விளங்கிய எம் இறைவன் ஊரே.

emmAn2 cEr vegkuru, cIrc cilampan2 Ur, kazumalam, nal pukali, en2Rum
poymmANpu ilOr puRavam, koccai, purantaran2 Ur, nal-tONipuram, pOrk
kaimmAvai uriceytOn2 kAzi, ayan2 Ur, tarAy, caNpai--kArin2
meym mAl, pU makan2, uNarA vakai tazal Ay viLagkiya em iRaivan2 UrE.

பொருள்: எம் தலைவன் சேர்ந்திருக்கும் வெங்குரு. பெருமை உடைய சிலம்பனூர் கழுமலம். நல்ல திருப்புகலி. என்றும் மெய்ப்புகழுடையோர் சேரும் திருப்புறவம், கொச்சைவயம், வேணுபுரம், நல்ல தோணிபுரம், போர் செய்யும் துதிக்கையுடைய களிற்றை உரித்தவனின் காழி, பிரமனூர், சண்பை, கார்மேகம் போலும் மேனியனாகிய திருமால், பிரமன் அறிய வியலா வகை தழற்பிழம்பாய் நின்ற எம் இறைவன் ஊரே.

குறிப்புரை: பொய்ம்மாண்பிலோர் – மெய்ப்புகழுடையோர். புரந்தரன் – இந்திரன். கைம்மா – துதிக்கையை உடைய யானை. காரின் மெய்மால் – மேகம்போலும். திருமேனியை உடைய திருமால். பூமகன் – பிரமன். தழல் – தீ.

Thirumaal resembles black clouds in his entire frame. The four faced Brahma is seated in the lotus flower. These two demigods were unable to see the holy head and feet of our Lord Civan, but He stood before these two as a tall and big effulgence. This our Lord Civan is manifest in Venguru city which is one of the twelve names of Seerkaazhi.

2278. இறைவனமர்சண்பையெழிற்புறவமயனூரிமையோர்க்கதிபன்சேரூர்
குறைவில்புகழ்ப்புகலிவெங்குருத்தோணிபுரங்குணமார்பூந்தராய்நீர்ச்
சிறைமலிநற்சிரபுரஞ்சீர்க்காழிவளர்கொச்சைகழுமலந்தேசின்றிப்
பறிதலையோடமண்கையர்சாக்கியர்கள்பரிசறியாஅம்மானூரே. 11

இறைவன் அமர் சண்பை, எழில் புறவம், அயன்ஊர், இமையோர்க்கு அதிபன் சேர் ஊர்,
குறைவு இல் புகழ்ப் புகலி, வெங்குரு, தோணிபுரம், குணம் ஆர் பூந்தராய், நீர்ச்
சிறை மலி நல் சிரபுரம், சீர்க் காழி, வளர் கொச்சை, கழுமலம் - தேசு இன்றிப்
பறி தலையோடு அமண்கையர், சாக்கியர்கள், பரிசு அறியா அம்மான் ஊரே.

iRaivan2 amar caNpai, ezil puRavam, ayan2 Ur, imaiyOrkku atipan2 cEr Ur,
kuRaivu il pukazp pukali, vegkuru, tONipuram, kuNam Ar pUntarAy, nIrc
ciRai mali nal cirapuram, cIrk kAzi, vaLar koccai, kazumalam--tEcu in2Rip
paRi talaiyoTu amaNkaiyar, cAkkiyarkaL, paricu aRiyA ammAn2 UrE.

பொருள்: இறைவனாகிய சிவபிரான் விரும்பி அமர்கின்ற சண்பை. எழிலுடைய புறவம். தேவர்களுக்கு அதிபனாகிய இந்திரன் சேரும் ஊர். குறைவில்லாத புகழுடைய திருப்புகலி. வெங்குரு. தோணிபுரம். நற்பண்புகள் உடைய பூந்தராய். நீர் அணைகள் மலிந்த நல்ல சிரபுரம். அழகிய காழி. கொச்சைவயம். கழுமலம். ஒளியின்றி மயிர் பறித்த தலையோடு சமணராகிய கீழ்மக்கள் சாக்கியர்களால் அறியமுடியாத இயல்புடைய அம்மானுடைய ஊரே.

குறிப்புரை: இறைவன் – சிவபிரான். அமர் – விரும்பியெழுந்தருளிய. எழில் – அழகு. அதிபன் – இந்திரன். சிறை – அணை. தேசு – ஒளி. கையர் – கீழோர். பரிசு – சிவமாம்பெற்றி. சிவன் இயல்பு.

The Jains remove their hair from their head and appear dull, these people and the Buddhists could not understand our Lord Civan. Our Lord Civan with a longing has manifested Himself in this city of Shanbai, which is one of the twelve names of the city Seerkaazhi.

2279. அம்மான்சேர்கழுமலமாச்சிரபுரம்வெங்குருக்கொச்சைபுறவமஞ்சீர்
மெய்ம்மானத்தொண்புகலிமிகுகாழிதோணிபுரந்தேவர்கோனூர்
அம்மான்மன்னுயர்சண்பைதராயயனூர்வழிமுடக்குமாவின்பாச்சல்
தம்மானொன்றியஞானசம்பந்தன்தமிழ்கற்போர்தக்கோர்தாமே. 12

அம்மான் சேர் கழுமலம், மாச் சிரபுரம், வெங்குரு, கொச்சை, புறவம், அம் சீர்
மெய்ம் மானத்து ஒண் புகலி, மிகு காழி, தோணிபுரம், தேவர்கோன்ஊர்,
அம் மால் மன் உயர் சண்பை, தராய், அயன்ஊர், வழி முடக்கும் ஆவின்பாச்சல்
தம்மான் ஒன்றிய ஞானசம்பந்தன் தமிழ் கற்போர், தக்கோர் தாமே.

ammAn2 cEr kazumalam, mAc cirapuram, vegkuru, koccai, puRavam, am cIr
meym mAn2attu oN pukali, miku kAzi, tONipuram, tEvar kOn2 Ur,
am mAl man2 uyar caNpai, tarAy, ayan2 Ur, vazi muTakkum Avin2pAccal
tammAn2 on2Riya njAn2acampantan2 tamiz kaRpOr, takkOr tAmE.

பொருள்: இறைவன் சேர் கழுமலம்; பெருமையுடைய சிரபுரம். வெங்குரு. கொச்சைவயம். திருப்புறவம். அழகிய மெய்ம்மையான புகழ் ஒளியுடைய புகலி. காழி. தோணிபுரம். இந்திரனூர். உயர் சண்பை. பூந்தராய். பிரமனூர் வழி முடக்கும் ஆவின் பாச்சலின் இயல்பில் தம்பிரானை ஒன்றிய, ஞானசம்பந்தன் பாடிய தமிழைக் கற்போர் பெருமை உடையவராவர்.

குறிப்புரை: மா – பெருமை. இலக்குமியுமாம். மானத்து – பெருமையையுடைய. ஒள் – ஒளி. அம்மால் – அழகிய திருமால் (கிருட்டின மூர்த்தி) சிவபிரானுமாம். வழிமுடக்கும் ஆவின் பாச்சல் – கோமுத்திரி என்னுஞ் சித்திரபந்தத்தினியல்பு கூறப்பட்டது. தம்மான் – தம்பிரான். 'தன்னடைந்தார் தம்பிரான் ஆவான்' (தி. 2 ப. 176 பா. 1). தம்மானை ஒன்றிய என்று இரண்டனுருபு விரித்து. சிவபிரானோடு அத்துவிதமுற்று என்று பொருள் கொள்க. தமிழ் – சைவமும் தமிழும் என்ற தொடர்க்கண் உள்ள தமிழ்மறை.

Our Lord Civan is also known as Ammaan. He is manifest in the city called Kazhumalam, which is one of the twelve names of Seerkaazhi. In this chapter, all the twelve verses are made up of a special name called Komuththiri. All the twelve names of the city are the alternate names in all the twelve verses. Our saint Thiru-gnana-Sambandar, merged with our Lord Civan of this place, chanted these twelve verses in chaste Tamil language. Those devotees who can memorise and sing these twelve verses before our Lord Civan will become great scholars.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

74ஆம் பதிகம் முற்றிற்று
End of 74th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 211 *பதிக எண்: 75*

75. சீகாழி 75. SEERKAAZHI

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

137ஆவது பதிகத்தைப் பார்க்க.

பதிக வரலாறு

137ஆவது பதிகத்தைப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

2280. விண்ணியங்குமதிக்கண்ணியான்விரியுஞ்சடைப்
பெண்ணயங்கொள்திருமேனியான்பெருமானனற்
கண்ணயங்கொள்திருநெற்றியான்கலிக்காழியுள்
மண்ணயங்கொள்மறையாளரேத்துமலர்ப்பாதனே. 1

விண் இயங்கும் மதிக்கண்ணியான், விரியும் சடைப்
பெண் நயம் கொள் திருமேனியான், பெருமான், அனல்-
கண் நயம் கொள் திருநெற்றியான் - கலிக் காழியுள்,
மண் நயம் கொள் மறையாளர் ஏத்து மலர்ப்பாதனே.

viN iyagkum matikkaNNiyAn2, viriyum caTaip
peN nayam koL tirumEn2iyAn2, perumAn2, an2al-
kaN nayam koL tiruneRRiyAn2--kalik kAziyuL,
maN nayam koL maRaiyALar Ettu malarppAtan2E.

பொருள்: ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பிறைமதித் தலைக்கண்ணியை அணிந்தவன்; பெண்ணைப் பாகத்தில் பொருத்தமாகக் கொண்ட திருமேனியன்; பெருமகன்; அனல் பொருந்திய கண்ணை நெற்றியில் உடையவன். மகிழ்ச்சி நிறைந்த காழியில், உலகத்தவரின் நன்மையைக் கருதுகின்ற தாமரை மலர் போன்ற திருப்பாதங்கள் உடையவனாகிய சிவபெருமானே.

குறிப்புரை: விண் இயங்கும் மதிக்கண்ணியான் – ஆகாயத்தில் சஞ்சரிக்கும் திங்களாகிய தலைமாலையை அணிந்த சிவபிரான். பெண் நயம் கொள் திருமேனியான் – அர்த்தநாரீசுவர வடிவினன்.

அனல் கண் நயம் கொள் திருநெற்றியான் – நெருப்புக் கண்ணைக் கொண்ட அழகிய நெற்றியை உடையவன். மண் நயம் கொள் – மண்ணோர் நலமாக்கொண்ட.

The city of Seerkaazhi is full of loud noise and pomposity. In this city, Vedic scholars for the sake of virtue and for the benefit of the world worship the holy and flowery feet of our Lord in the temple everyday. This Lord Civan retains the crescent moon of the sky on His head as an ornament. His hair locks are widely spread. He has embedded His consort Umaa Devi on the left side of His body. He is therefore known as Arthanaareeswarar. He is the Supreme Being with no parallel. He has a third eye on His forehead which is fiery.

2281. வலிய காலன் உயிர் வீட்டினான், மடவாளொடும்
பலிவிரும்பியதொர்கையினான்பரமேட்டியான்
கலியைவென்றமறையாளர்தங்கலிக்காழியுள்
நலியவந்தவினைதீர்த்துகந்தஎந்நம்பனே. 2

வலியகாலனுயிர்வீட்டினான்மடவாளொடும்
பலி விரும்பியது ஓர் கையினான், பரமேட்டியான் -
கலியை வென்ற மறையாளர்தம் கலிக் காழியுள்
நலிய வந்த வினை தீர்த்து உகந்த எம் நம்பனே.

valiya kAlan2 uyir vITTin2An2, maTavALoTum
pali virumpiyatu or kaiyin2An2, paramETTiyAn2--
kaliyai ven2Ra maRaiyALar tam kalik kAziyuL,
naliya vanta vin2ai tIrttu ukanta em nampan2E.

பொருள்: ஆற்றல் மிகுந்த எமனுடைய உயிரை வாங்கினான்; உமாதேவியாரை உடன்கொண்டு பிச்சையேற்ற கையை உடையவன். யாவர்க்கும் மேலான இடத்திலிருப்பவன். உயிர்களின் துன்பங்களை விரட்டும் மறையாளர்கள் வாழும் மகிழ்ச்சி நிறைந்த காழியுள் உயிர்களை வருத்துவதற்கு வந்த வினைகளை ஒழித்து உயர்ந்தவன்; எம் விருப்பாயுள்ள சிவபெருமானே.

குறிப்புரை: மடவாள் – உமாதேவியார். பரமேட்டியாள் – தனக்கு மேலான தொன்றில்லாத ஸ்நாநத்தையுடைய முழுமுதற் பொருள். ஆன்விகுதி தமிழ். கலியை – வறுமை முதலிய துன்பங்களை. உகந்த – உயர்ந்த. எம் நம்பன் – எம் விருப்பாயுள்ளவன்.

In the city of Seerkaazhi religious scholarly Brahmins live in large numbers. They conduct the ritual oblations in the sacrificial pit with an aim to wipeout poverty and sufferings of people. Our Lord Civan eliminates the bad karma of the devotees and is pleased to do it. Once He kicked and destroyed Kaalan, the god of death. He has embedded His consort Uma Devi on His chest. He accepts the alms in His hands. He is the Supreme Being, nonpareil.

2282. சுற்றலாநற்புலித்தோலசைத்தயன்வெண்டலைத்
துற்றலாயதொருகொள்கையான்சுடுநீற்றினான்
கற்றல்கேட்டலுடையார்கள்வாழ்கலிக்காழியுள்
மற்றயங்குதிரள்தோளெம்மைந்தனவனல்லனே. 3

சுற்றல் ஆம் நல் புலித்தோல் அசைத்து, அயன் வெண்தலைத்
துற்றல் ஆயது ஒரு கொள்கையான், சுடுநீற்றினான் -
கற்றல் கேட்டல் உடையார்கள் வாழ் கலிக் காழியுள்,
மல்-தயங்கு திரள்தோள் எம் மைந்தன் அவன் அல்லனே!

cuRRal Am nal pulittOl acaittu, ayan2 veNtalait
tuRRal Ayatu oru koLkaiyAn2, cuTu nIRRin2An2--
kaRRal kETTal uTaiyArkaL vAz kalik kAziyuL,
mal-tayagku tiraLtOL em maintan2 avan2 allan2E!

பொருள்: அழகிய புலித்தோலை இடுப்பைச் சுற்றி உடுத்து, பிரமனின் கபாலத்தில் பிச்சை ஏற்று உண்ணுதலாகிய கொள்கையை உடையவன். சுட்ட சாம்பலாகிய திருநீற்றுப் பூச்சினான்; நூல்களைக் கற்ற ஞானமும் செவியால் கேட்ட ஞானமும் வாய்ந்த பெரியோர்கள் மகிழ்ச்சியுடன் வாழும் காழியுள், வலிமையும் திரட்சியும் கொண்ட தோள்களை உடைய எம் வீரன்; உயிர்கள்பால் கருணை கொண்ட சிவபெருமானே.

குறிப்புரை: சுற்றல் ஆம் புலித்தோல் – சுற்றுதல் – அரையிற் சுற்றி உடுத்தல். அசைத்து – கட்டி. துற்றல் – உண்ணல். சுடுநீறு (தி.2 ப.214 பா.2) மல் – வலிமை. தயங்கு – விளங்குகின்ற. மைந்தன் – வலியன். வீரன்.

In the city of Seerkaazhi great scholars well-versed in useful subjects are many. Also the scholars constituting a learned assembly listening to a new literary work are many and efficient in this city of Seerkaazhi. Our Lord Civan who is the mightiest with

well developed shoulders, fit for wrestling resides here. He is a virtuous Supreme Being. He wears the hide of a tiger on His waist. He asks for alms, holding Brahma's skull. He has all goodness and propriety.

2283. பல்லயங்குதலையேந்தினான்படுகானிடை
மல்லயங்குதிரள்தோள்களாரநடமாடியுங்
கல்லயங்குதிரைசூழநீள்கலிக்காழியுள்
தொல்லயங்குபுகழ்பேணநின்றசுடர்வண்ணனே. 4

பல் அயங்கு தலை ஏந்தினான், படுகான் இடை
மல் அயங்கு திரள்தோள்கள் ஆர நடம் ஆடியும்-
கல் அயங்கு திரை சூழ நீள் கலிக் காழியுள்,
தொல் அயங்கு புகழ் பேண நின்ற சுடர்வண்ணனே.

pal ayagku talai Entin2An2, paTukAn2 iTai
mal ayagku tiraL tOLkaL Ara naTam ATiyum--
kal ayagku tirai cUza nIL kalik kAziyuL,
tol ayagku pukaz pENa nin2Ra cuTar vaNNan2E.

பொருள்: பற்கள் நிலைகுலைந்த மண்டையோட்டினைக் கையில் ஏந்தியவன்; பிணங்கள் நிறைந்த காட்டினிடையில் வலிமை திரண்ட தோள்கள் அசையக் கூத்தாடுபவனும், சகரரால் கல்லித் தோண்டப் பட்ட கடல் சூழ் கலிக்காழியுள், தொன்று தொட்டு எங்கும் பரவிய புகழை அடியவர்கள் விரும்பிப் போற்ற நின்ற ஒளி சுடரும் நிறத்தினனாகிய சிவபெருமானே.

குறிப்புரை: அயங்கு – அசங்கிய, நிலைகுலைந்த (தி.2 ப.140 பா.3). மல் . . . தோள் – வலிமையால் அசைந்த தோள். 'மற்றயங்கு திரடோள்' என்றதை மேற்பாட்டில் காண்க. ... தோள்கள் ஆர நடமாடுதல். 'கல் அயங்குதிரை சூழ' – கற்களில் அசங்கிய அலை. 'கல் வித்தகத்தால் திரைசூழ் கடற்காழி' (தி.2 ப.208 பா.11). 'தொல் புகழ்', 'அயங்குபுகழ்' – (எங்கும்) பரவிய கீர்த்தி. பேண – அடியவர் விரும்பிப் புகல. 'பொருள்சேர் புகழ் புரிந்தார்', சுடர் வண்ணன் – 'அந்தி வண்ணன்' 'அழல் வண்ணன்' என்பன அவன் திருநாமங்கள்.

On the seashore in the city of Seerkaazhi, the waves are very huge which forcibly dash against the shore and toss the stones on the banks. Our Lord Civan is the Supreme Effulgence. This bright light has spread all over the area for ages over long years. His fame is widespread because of the effulgence spread everywhere. This Lord Civan

In the city of Seerkaazhi religious scholarly Brahmins live in large numbers. They conduct the ritual oblations in the sacrificial pit with an aim to wipeout poverty and sufferings of people. Our Lord Civan eliminates the bad karma of the devotees and is pleased to do it. Once He kicked and destroyed Kaalan, the god of death. He has embedded His consort Uma Devi on His chest. He accepts the alms in His hands. He is the Supreme Being, nonpareil.

2282. சுற்றலாநற்புலித்தோலசைத்தயன்வெண்டலைத்
துற்றலாயதொருகொள்கையான்சுடுநீற்றினான்
கற்றல்கேட்டலுடையார்கள்வாழ்கலிக்காழியுள்
மற்றயங்குதிரள்தோளெம்மைந்தனவனல்லனே. 3

சுற்றல் ஆம் நல் புலித்தோல் அசைத்து, அயன் வெண்தலைத்
துற்றல் ஆயது ஒரு கொள்கையான், சுடுநீற்றினான் -
கற்றல் கேட்டல் உடையார்கள் வாழ் கலிக் காழியுள்,
மல்-தயங்கு திரள்தோள் எம் மைந்தன் அவன் அல்லனே!

cuRRal Am nal pulittOl acaittu, ayan2 veNtalait
tuRRal Ayatu oru koLkaiyAn2, cuTu nIRRin2An2--
kaRRal kETTal uTaiyArkaL vAz kalik kAziyuL,
mal-tayagku tiraLtOL em maintan2 avan2 allan2E!

பொருள்: அழகிய புலித்தோலை இடுப்பைச் சுற்றி உடுத்து, பிரமனின் கபாலத்தில் பிச்சை ஏற்று உண்ணுதலாகிய கொள்கையை உடையவன். சுட்ட சாம்பலாகிய திருநீற்றுப் பூச்சினான்; நூல்களைக் கற்ற ஞானமும் செவியால் கேட்ட ஞானமும் வாய்ந்த பெரியோர்கள் மகிழ்ச்சியுடன் வாழும் காழியுள், வலிமையும் திரட்சியும் கொண்ட தோள்களை உடைய எம் வீரன்; உயிர்கள்பால் கருணை கொண்ட சிவபெருமானே.

குறிப்புரை: சுற்றல் ஆம் புலித்தோல் – சுற்றுதல் – அரையிற் சுற்றி உடுத்தல். அசைத்து – கட்டி. துற்றல் – உண்ணல். சுடுநீறு (தி.2 ப.214 பா.2) மல் – வலிமை. தயங்கு – விளங்குகின்ற. மைந்தன் – வலியன். வீரன்.

In the city of Seerkaazhi great scholars well-versed in useful subjects are many. Also the scholars constituting a learned assembly listening to a new literary work are many and efficient in this city of Seerkaazhi. Our Lord Civan who is the mightiest with

well developed shoulders, fit for wrestling resides here. He is a virtuous Supreme Being. He wears the hide of a tiger on His waist. He asks for alms, holding Brahma's skull. He has all goodness and propriety.

2283. பல்லயங்குதலையேந்தினான்படுகானிடை
மல்லயங்குதிரள்தோள்களாரநடமாடியுங்
கல்லயங்குதிரைசூழநீள்கலிக்காழியுள்
தொல்லயங்குபுகழ்பேணநின்றசுடர்வண்ணனே. 4

பல் அயங்கு தலை ஏந்தினான், படுகான்இடை
மல் அயங்கு திரள்தோள்கள் ஆர நடம் ஆடியும்-
கல் அயங்கு திரை சூழ நீள் கலிக் காழியுள்,
தொல் அயங்கு புகழ் பேண நின்ற சுடர்வண்ணனே.

pal ayagku talai Entin2An2, paTukAn2 iTai
mal ayagku tiraL tOLkaL Ara naTam ATiyum--
kal ayagku tirai cUza nIL kalik kAziyuL,
tol ayagku pukaz pENa nin2Ra cuTar vaNNan2E.

பொருள்: பற்கள் நிலைகுலைந்த மண்டையோட்டினைக் கையில் ஏந்தியவன்; பிணங்கள் நிறைந்த காட்டினிடையில் வலிமை திரண்ட தோள்கள் அசையக் கூத்தாடுபவனும், சகரரால் கல்லித் தோண்டப் பட்ட கடல் சூழ் கலிக்காழியுள், தொன்று தொட்டு எங்கும் பரவிய புகழை அடியவர்கள் விரும்பிப் போற்ற நின்ற ஒளி சுடரும் நிறத்தினனாகிய சிவபெருமானே.

குறிப்புரை: அயங்கு – அசங்கிய. நிலைகுலைந்த (தி.2 ப.140 பா.3). மல் . . . தோள் – வலிமையால் அசைந்த தோள். 'மற்றயங்கு திரடோள்' என்றதை மேற்பாட்டில் காண்க. தோள்கள் ஆர நடமாடுதல். 'கல் அயங்குதிரை சூழ' – கற்களில் அசங்கிய அலை. 'கல் வித்தகத்தால் திரைசூழ் கடற்காழி' (தி.2 ப.208 பா.11). 'தொல் புகழ்', 'அயங்குபுகழ்' – (எங்கும்) பரவிய கீர்த்தி. பேண – அடியவர் விரும்பிப் புகல. 'பொருள்சேர் புகழ் புரிந்தார்', சுடர் வண்ணன் – 'அந்தி வண்ணன்' 'அழல் வண்ணன்' என்பன அவன் திருநாமங்கள்.

On the seashore in the city of Seerkaazhi, the waves are very huge which forcibly dash against the shore and toss the stones on the banks. Our Lord Civan is the Supreme Effulgence. This bright light has spread all over the area for ages over long years. His fame is widespread because of the effulgence spread everywhere. This Lord Civan

holds the skull with teeth for begging alms. After people die, their physical body is taken to the burning ghat. Our Lord Civan dances on this burning ghat moving His very strong and mighty shoulders, which can do wrestling very easily and successfully.

2284. தூநயங்கொள்திருமேனியிற்பொடிப்பூசிப்போய்
நாநயங்கொள்மறையோதிமாதொருபாகமாக்
கானயங்கொள்புனல்வாசமார்கலிக்காழியுள்
தேனயங்கொள்முடிஆனைந்தாடியசெல்வனே.. 5

தூ நயம் கொள் திருமேனியில் பொடிப் பூசிப் போய்,
நா நயம் கொள் மறைஓதி மாது ஒருபாகமாக்
கான் நயம் கொள் புனல் வாசம் ஆர் கலிக் காழியுள்,
தேன் நயம் கொள் முடி ஆன்ஐந்துஆடிய செல்வனே.

tU nayam koL tirumEn2iyil poTip pUcip pOy,
nA nayam koL maRai Oti, mAtu orupAkamA,
kAn2 nayam koL pun2al vAcam Ar kalik kAziyuL,
tEn2 nayam koL muTi An2aintu ATiya celvan2E.

பொருள்: தூய்மையான திருமேனிமேல் திருநீற்றுப் பொடி பூசி, நாவின் நற்பயனைக் கொண்ட வேதத்தினை ஓதி, உமையைத் தன் உடலில் ஒருபாகமாகக் கொண்டு, வாய்க்கால் வழியோடும் நீர் மணம் நிறைந்த கலிக்காழியுள் தேன்கொண்டு ஆட்டப்படும் முடியுடையான், ஆனைந்து ஆடும் செல்வன் சிவபெருமானே.

குறிப்புரை: தூ – பரிசுத்தம். நயம் – நன்மை. நாநயம் கொள்மறை – நாவினது நற்பயனைக் கொண்ட வேதம். நாவாலுள்ளதாய நயம் – நாநலம். நாவாலுளதாய நலம் (குறள் 641 உரை). பூசிப் போய்க் கொள்மறையோதி என்றியைக்க. ஓதி – பெயர். தேன் கொள்முடி – தேனாட்டப்படும் திருமுடி. அம்முடியில் ஆனைந்து ஆடிய செல்வன். ஆனைந்து – பால், தயிர், நெய், பிற சேரா.

The Seerkaazhi city is surrounded by large forests from which, the wind carries the sweet smell of all flowers. The forest area also has many ponds, which are filled with this forest fragrance. Our Lord loves the ablution of the five products of the cow and also the ablution with honey. He places upon His body the holy ashes. He used to chant the songs of the Vedas in musical tone, which increases the efficacy of the tongue.

2285. சுழியிலங்கும்புனற்கங்கையாள்சடையாகவே
மொழியிலங்கும்மடமங்கைபாகமுகந்தவன்
கழியிலங்குங்கடல்சூழுந்தண்கலிக்காழியுள்
பழியிலங்குந்துயரொன்றிலாப்பரமேட்டியே. 6

சுழி இலங்கும் புனல்கங்கையாள் சடை ஆகவே,
மொழி இலங்கும் மடமங்கை பாகம் உகந்தவன் -
கழி இலங்கும் கடல் சூழும் தண் கலிக் காழியுள்,
பழி இலங்கும் துயர் ஒன்று இலாப் பரமேட்டியே.

cuzi ilagkum pun2al kagkaiyAL caTai AkavE,
mozi ilagkum maTamagkai pAkam ukantavan2--
kazi ilagkum kaTam cUzum taN kalik kAziyuL,
pazi ilagkum tuyar on2Ru ilAp paramETTiyE.

பொருள்: நீர்ச்சுழி விளங்கும் ஆறாகிய கங்கையான் சடையனாகவும், புகழ் விளங்கும் உமையாளைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகவும் உகந்தவன், (யாரெனில்) கழி விளங்கும் கடல் சூழும் கலிக்காழியுள் நிந்தையாகிய பழியால் வரும் துயரம் ஒன்றும் இல்லாத பரமேட்டியாகிய சிவபெருமானே.

குறிப்புரை: சுழி – நீர்ச்சுழி. 'கொவ்வைத்துவர் வாயார் குடைந்தாடுத் திருச்சுழியல்' (தி. 7 பா. 834). மொழி இலங்கும் மடமங்கை. பாகம் உகந்தவன் – 'மாதியலும் பாதியன்' கங்கையைச் சடையிலும் உமை நங்கையை வாமபாகத்திலும் உடையவன். பழி இலங்கும் துயர் – நிந்தையால் தோன்றும் துயரம். ஒன்று – சிறிதும் என்னும் பொருட்டு.

The city of Seerkaazhi is surrounded by salt pans which are adjacent to the seashore. The city is always cool with the sea breeze. Our Lord Civan is the Supreme Lord, with none equal to Him. Also there are no people to criticise Him and cause Him suffering. He supports the river Ganges in His hair locks, which is curved and curled with eddies. In addition He has embedded His consort Uma Devi, who talks with musical resonance, on one part of His body.

2286. முடியிலங்குமுயர்சிந்தையான்முனிவர்தொழ
அடியிலங்குங்கழலார்க்கவேயனலேந்தியுங்
கடியிலங்கும்பொழில்சூழுந்தண்கலிக்காழியுள்
கொடியிலங்கும்மிடையாளொடுங்குடிகொண்டதே. 7

முடி இலங்கும்(ம்) உயர் சிந்தையால் முனிவர் தொழ,
அடி இலங்கும் கழல் ஆர்க்கவே, அனல் ஏந்தியும்,
கடி இலங்கும் பொழில் சூழும் தண் கலிக் காழியுள்,
கொடி இலங்கும்(ம்) இடையாளொடும் குடிகொண்டதே!

muTi ilagkum(m) uyar cintaiyAl mun2ivar toza,
vaTi ilagkum kazal ArkkavE, an2al Entiyum,
kaTi ilagkum pozil cUzum taN kalik kAziyuL,
koTi ilagkum(m) iTaiyALoTum kuTi koNTatE!

பொருள்: முனிவர்கள் தங்கள் தியானத்தில் துவாதசாந்தப் பெருவெளியில் வைத்துத் தொழ விளங்கும் திருவடிகளில் கழல்கள் ஆர்ப்பரிக்க, அனலேந்தி (ஆடும் இறைவன்), மணம் கமழும் பொழில்சூழும் குளிர்ந்த கலிக்காழியுள் கொடிபோன்ற இடையை உடைய உமையுடன் குடிகொண்டதோ?

குறிப்புரை: முடி இலங்கும் உயர் சிந்தையால் முனிவர் தொழ அடி இலங்கும் கழல் ஆர்க்க – துவாதசாந்தத் தலத்தில் விளங்கும் உயர்ந்த தியானத்தால் மனன சீலர்கள் வழிபடத் திருவடியில் பிரகாசிக்கும் கழல்கள் ஒலிக்க. கொண்டது முடி இலங்கும் என்று இயைத்துப் பொருள் கூறலும் ஆம். கொடி இலங்கும் இடையாள் – மின்னல் கொடி போலத் திகழும் மெல்லிடையுடைய உமாதேவியார். தொழ ஆர்க்க ஏந்தியும் காழியுட் குடிகொண்டதோ என்று அறிவினாவாக்குக.

In the city of Seerkaazhi, men of noble conduct and character live in large numbers. They do yoga, while doing yoga they focus their thoughts at the mystic centre which is believed to be at the crown. While doing such practice they worship the holy feet of our Lord Civan of this place. Civan wears on His legs perfectly shaped warrior's anklet. They make noise while the wearer dances. These noblemen can hear the noise of the warrior's anklets on the legs of Lord Civan. While our Lord Civan dances, He holds in His hands the supernal effulgence. In the city of Seerkaazhi the forests with the flower trees give out a fresh, pure and fascinating smell. Our Lord's consort Paarvathi Devi's waist is thin like creepers. He is manifest with her in this city.

2287. வல்லரக்கன்வரைபேர்க்கவந்தவன்தோள்முடி
கல்லரக்கிவ்விறல்வாட்டினான்கலிக்காழியுள்
நல்லொருக்கியதொர்சிந்தையார்மலர்தூவவே
தொல்லிருக்கும்மறையேத்துகந்துடன்வாழுமே. 8

வல் அரக்கன், வரை பேர்க்க வந்தவன், தோள்முடி
கல் அரக்க(வ்) விறல் வாட்டினான் கலிக் காழியுள்,
நல் ஒருக்கியது ஓர் சிந்தையார் மலர் தூவவே,
தொல்இருக்கும் மறை ஏத்து உகந்து உடன்வாழுமே.

val arakkan2, varai pErkka vantavan2, tOLmuTi
kal arakka(v) viRal vATTin2An2 kalik kAziyuL,
nal orukkiyatu or cintaiyAr malar tUvavE,
tol irukkumaRai Ettu ukantu uTan2 vAzumE.

பொருள்: வலிய அரக்கன் இராவணன், கயிலை மலையைப் பெயர்க்க வந்தவனின் கல்போலும் தோள்களையும் முடியையும் வருத்தி, அவனுடைய வலிமையை வாட்டிய சிவபெருமான், கலிக்காழியுள் ஒருமையுடன் (அத்துவிதமாக) நல்ல சிந்தையுடையோர் மலர் தூவி வழிபட பழைய இருக்கு வேதமாகிய மறை துதி செய்ய, உமையுடன் விரும்பி உறைகிறான்.

குறிப்புரை: நல்சிந்தை, ஒருக்கியதோர் சிந்தை – ஒற்றுமையாக்கியதொரு மனம். சிவனோடொற்றுமை. அத்துவிதம். மலர்தூவ – பூக்களைத் தூய் வழிபட. தொல் – தொன்மை. இருக்கும் மறை – விரித்தல் விகாரமாகக் கொண்டு இருக்கு வேதம் எனல் சிறந்தது. இருக்கும் எனில் அழியாது நிலைபெறும் என்க. மறையேத்து – வேதஸ்துதியை. உடன் – அம்பிகையுடன்.

Raavanan, the mighty king of Sri Lanka came near mount Kailash where our Lord was seated along with His consort Uma Devi. He tried his best to slightly move the mountain but failed in his attempt. Then our Lord pressed the top of the same mountain slightly with His toe. Raavanan's shoulder and head got crushed and his valour was subdued. The scholars in the city of Seerkaazhi have single mindedness in their spiritual thoughts, reach the temple and strew flowers at our Lord's holy feet and pray. Also they chant the very old Rig Veda verses before our Lord, and worship Him.

Here our Lord takes delight is manifesting Himself happily in this city along with His consort Umaa Devi.

2288. மருவுநான்மறையோனுமாமணிவண்ணனும்
இருவர்கூடியிசைந்தேத்தவேயெரியான்றனூர்
வெருவநின்றதிரையோதம்வார்வியன்முத்தவை
கருவையார்வயற்சங்குசேர்கலிக்காழியே. 9

மருவு நால்மறையோனும் மா மணிவண்ணனும்
இருவர் கூடி இசைந்து ஏத்தவே, எரியான்தன் ஊர் -
வெருவ நின்ற திரைஓதம் வார வியல் முத்து அவை
கருவை ஆர் வயல் சங்கு சேர் கலிக் காழியே.

maruvu nAlmaRaiyOn2um mA maNivaNNan2um
iruvar kUTi icaintu EttavE, eriyAn2 tan2 Ur--
veruva nin2Ra tirai Otam vAra viyal muttu avai
karuvai Ar vayal cagku cEr kalik kAziyE.

பொருள்: பொருந்திய நான்மறையவனாகிய பிரமனும் நீலமணி வண்ணனாகிய திருமாலும் ஆகிய இருவரும் கூடி ஒற்றுமைபட்டு வழிபடவே, தீப்பிழம்பாக நின்றவனது ஊர், அச்சம் தோன்ற உயர்ந்த கடலலைகள் கொண்டு வந்த அகன்று பரவிய முத்துக்கள், கரிய வைக்கோல் கொண்ட வயல்கள், சங்குகள் ஆகியவை சேர்ந்த கலிக்காழியே.

குறிப்புரை: எரியான்தன் ஊர் – தீப்பிழம்பாக நின்றவனதூர். வியல் முத்தவை – அகன்று பரவிய முத்துக்கள். கருவை – கரிய வைக்கோல். கருவேல மரமுமாம். முத்தவையும் சங்கும் சேர் காழி என்க.

Brahma who chants the well developed four Vedas and Thirumal with azure coloured body - both worshipped our Lord who stood before them as a tall supernal effulgence in this city. Here the fierce sea waves dash and inundate the seawater flinging pearls and conches on the shore which finally reach the paddy fields where black hay is stored. Such is the wealth of the city Seerkaazhi.

2289. நன்றியொன்றுமுணராதவன்சமண்சாக்கியர்
அன்றியங்கவர்சொன்னசொல்லவைகொள்கிலான்
கன்றுமேதியிளங்கானல்வாழ்கலிக்காழியுள்
வென்றிசேர்வியன்கோயில்கொண்டவிடையாளனே. 10

நன்றி ஒன்றும் உணராத, வன்சமண், சாக்கியர்,
அன்றி அங்கு அவர் சொன்ன சொல்அவை கொள்கிலான் -
கன்று மேதி இளங் கானல் வாழ் கலிக் காழியுள்,
வென்றி சேர் வியன்கோயில் கொண்ட விடையாளனே.

nan2Ri on2Rum uNarAta van2camaN, cAkkiyar,
an2Ri agku avar con2n2a col avai koLkilAn2--
kan2Ru mEti iLag kAn2al iLag kAn2al vAz kalik kAziyuL,
ven2Ri cEr viyan2kOyil koNTa viTaiyALan2E.

பொருள்: நன்மையானதொன்றும் அறிகிலராகிய வலிய சமணர்களும் சாக்கியர்களும் பகைத்து அவர்கள் கூறிய புறமொழிகளைப் பொருட்டாகக் கொள்ளாதவன். அவன் இளங்கன்றுடன் எருமைகள் வாழும் நெய்தலங் கானல்களையுடைய கலிக்காழியுள் வெற்றியுடைய பெரிய கோயிலைக் கொண்ட எருது வாகனனே (சிவபெருமானே).

குறிப்புரை: நன்றி – நன்மை. ஒன்றும் – சிறிதும். அன்றி – பகைத்து. கானல் – கடற்கரைச் சோலை. வென்றி – வெற்றி. வியன்கோயில் – பெரிய கோயில். விடை ஆளன் – எருதை (ஊர்தியாக) ஆள்பவன்.

Our Lord Civan is manifest in the famous big temple in Seerkaazhi city. He has the white bull for His conveyance. On the small gravel soil the buffaloes and their young ones live happily in this area. Here live the Jains and Buddhists who without understanding the virtuous knowledge of our Lord speak among themselves controversial ideas very often. Our Lord never listens to these words of the Jains and Buddhists.

2290. கண்ணுமூன்றுமுடையாதிவாழ்கலிக்காழியுள்
அண்ணலந்தண்ணருள்பேணிஞானசம்பந்தன்சொல்
வண்ணமூன்றுதமிழில்தெரிந்திசைபாடுவார்
விண்ணுமண்ணும்விரிகின்றதொல்புகழாளரே. 11

கண்ணுமூன்றும் உடை ஆதி வாழ் கலிக் காழியுள்
அண்ணல் அம் தண் அருள் பேணி ஞானசம்பந்தன் சொல்,
வண்ணம் மூன்றும் தமிழில்-தெரிந்து இசை பாடுவார்,
விண்ணும் மண்ணும் விரிகின்ற தொல்புகழாளரே.

kaNNu mUn2Rum uTai Ati vAz kalik kAziyuL
aNNal am taN aruL pENi njAn2acampantan2 col,
vaNNam MUn2Rum tamizil-terintu icai pATuvAr,
viNNum maNNum virikin2Ra tolpukazALarE.

பொருள்: மூன்று கண்களை உடைய முதல்வன் வாழும் கழிக்காழியுள் தலைவனான சிவபெருமானின் குளிர்ந்த அருளைப் போற்றி ஞானசம்பந்தன் தமிழிற் சொன்ன சொல்லை (பதிகத்தை) வண்ணம் மூன்றினையும் தெரிந்து இசையாகப் பாடுவார் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் புகழ் உடையோராவர்.

குறிப்புரை: கண்ணு மூன்றும் – முக்கண்ணும். உடை – உடைய. ஆதி – முதல்வன். உம்மை இனைத்தென அறிந்த சினைக்கு வினைப்படுதொகுதியின் வேண்டுவது (தொல். சொல். 33). உடை – குறிப்பு. வினை. வண்ணம் மூன்றும் – மெலிவு. சமன், வலிவு என்பவை. இசைபாடுவார். இம்மூன்றும் தெரியாது பாடுவரேல் அவ்விசை, கேட்பவரை எழுப்பும் விசையுடையதாகும்.

Our Lord Civan has three eyes. He is the Supreme Being. He is manifest in Seerkaazhi. Our saint Thiru-gnana-Sambandar had all praise for our Lord's virtuous deeds and sang these ten verses. Those devotees capable of singing these verses of eulogy for the graceful Lord, in proper musical tone, will be praised all over the earth and also in heaven.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

75ஆம் பதிகம் முற்றிற்று
End of 75th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 212 பதிக எண்: 76

76. திருஅகத்தியான்பள்ளி 76. THIRU-AGATH-THIAAN-PALLI

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

வேதாரணியத்திற்குத் தெற்கே 2 கி. மீ. தூரத்தில் இருக்கின்றது. இது சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் 126ஆவது தலம். வேதாரணியத்திலிருந்து கோடியக்கரை செல்லும் பேருந்தில் சென்றால் இத்தலத்தை அடையலாம். திருக்கயிலையில் வீற்றிருக்கும் அருட்கடலாகிய சிவபெருமானது திருமணக் கோலக் காட்சியைக் காணும்பொருட்டு அகத்தியர் தங்கித் தவஞ்செய்த பதியாதலின் அகத்தியான் பள்ளி என்னும் பெயர் பெற்றது என்பர்.

இறைவர் திருப்பெயர் அகத்தீசுவரர், இறைவி திருப்பெயர் பாகம்பிரியாள்நாயகி. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அம்பாள் சந்நிதி மேற்கு நோக்கி அமைந்துள்ளது. அகத்தியர் கோயில் மூலத்தானத்திற்கு மேற்கில் உள்ளது. பழைய வேலை செங்கல்லால் புதிய வேலை கருங்கல்லால் இயன்றது. அம்மன் உருவம் சிறியது. கோயில் முப்பது ஆண்டுகளுக்கு முன் புதுப்பிக்கப்பட்டது.

1. அகத்திய தீர்த்தம் – இது அகத்தீசுவரர் திருக்கோயிலுக்கு அண்மையில் மேல்புறத்திலுள்ளது. 2. அக்னிதீர்த்தம் – இது அகத்தீசுவரர் சந்நிதிக்கு கிழக்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ள சமுத்திர தீர்த்தமாகும். 3. அக்னிபுட்கரிணி – இது அகத்தீசுவரர் சந்நிதியில் உள்ள தீர்த்தம். 4. எமதருமதீர்த்தம் – இது அக்னிபுட்கரிணிக்கு வடக்கே உள்ளது. வன்னி தலவிருட்சம்.

அகத்தியர் பூசித்தது. சிவபெருமானின் திருமணக் கோலத்தை, அண்மையில் உள்ள திருமறைக்காட்டில் காட்டக், கண்டு வணங்கியது. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் இயற்றும் பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மூவரையும் தமக்குப் புதல்வராகப் பெறுதற்குத் தவம் இயற்றி அவ்வாறே பெற்றது. எமதருமராசன் சீவன் முத்தி பெற்றது. இத்தலத்தை வழிபட்டாலும் நினைத்தாலும் தீவினை நீங்கும் பெருமை வாய்ந்தது. திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய பதிகம் ஒன்று பெற்ற பெருமைக்குரியது இத்தலம்.

பதிக வரலாறு

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருமறைக்காட்டினின்றும் சிவிகைமீதேறி, சிவனடியை முடியிற்கொண்டு வணங்கி அடியவர் கூட்டம் கடலொலிபோல அரகர முழக்கஞ் செய்யவும், மங்கல தூரியம் தழைக்கவும் மறை முழங்கவும், சங்கபடகம் முதலிய வாத்தியங்கள் எங்கும் இயம்பவும், மலர் மாரி பொழியவும், மங்கல வாழ்த்திசைக்கவும், பூரண கும்பம் முதலியவை பொலியவும், அடியார் எதிர்கொள்ளவும் சென்று, பல தலங்களை வணங்கித் தெண்டிரை சூழ்கடற் கானற்றிரு–வகத்தியான்பள்ளியில் அண்டர்பிரான் கழல் வணங்கிப் பாடிய அருந்தமிழ் மாமறை இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2291. வாடியவெண்டலைமாலைசூடிமயங்கிருள்
நீடுயர்கொள்ளிவிளக்குமாகநிவந்தெரி
ஆடியஎம்பெருமானகத்தியான்பள்ளியைப்
பாடியசிந்தையினார்கட்கில்லையாம்பாவமே. 1

வாடிய வெண்தலைமாலை சூடி, மயங்கு இருள்,
நீடு உயர் கொள்ளி விளக்கும் ஆக நிவந்து எரி-
ஆடிய எம்பெருமான் அகத்தியான்பள்ளியைப்
பாடிய சிந்தையினார்கட்கு இல்லைஆம், பாவமே.

vATiya veNtalai mAlai cUTi, mayagku iruL,
nITu uyar koLLi viLakkum Aka, nivantu eri-
ATiya emperumAn2 akattiyAn2 paLLiyaip
pATiya cintaiyin2ArkaTku illai Am, pAvamE.

பொருள்: ஊன் வற்றிய வெண்மையான மண்டையோடுகளால் ஆன மாலையைச் சூடி, செறிந்த இருளில் நீண்டு உயர்ந்த மயானக் கொள்ளிகள் விளக்குகளாக ஒளி செய்ய, ஆகாயம் முட்ட உயர்ந்து ஆடிய எம்முடைய பெருமானின் அகத்தியான்பள்ளியைப் பாடிய சிந்தையை உடையவர்களுக்குப் பாவம் இல்லையாகும்.

குறிப்புரை: வாடிய – வற்றிய. தலைமாலை, 'தலைமாலை தலைக்கணிந்து', மயங்கு இருள் – செறிந்த இருள். கொள்ளி – தீக்கொள்ளி. கொள்ளி விளக்கொளி செய்ய என்றபடி. நிவந்த – உயர்ந்த. வளர்ந்த, அகரம் தொகுத்தல் விகாரம். எரி ஆடிய – தீயில் ஆடிய. 'அனலாடி' 'தீயாடி' என்பவை சிவநாமங்கள். பாவம் இல்லையாம் என்க.

Our Lord Civan's avocation is to dance on the burning ghat where in deep darkness the fire from the burning bodies, spreading flames, grows rapidly as tall flames and gives light all around. There our Lord dances wearing the garland of skulls, which retain dry flesh portions inside. This Lord is manifest in Thiru-agath-thiaan-palli temple. Those devotees who can praise and sing songs about the fame of our Lord with concentrated mind will have no sins in their life.

2292. துன்னங்கொண்டவுடையான்துதைந்தவெண்ணீற்றினான்
மன்னுங்கொன்றைமதமத்தஞ்சூடினான்மாநகர்
அன்னந்தங்கும்பொழில்சூழகத்தியான்பள்ளியை
உன்னஞ்செய்தமனத்தார்கள்தம்வினையோடுமே. 2

துன்னம் கொண்ட உடையான், துதைந்த வெண்நீற்றினான்,
மன்னும் கொன்றை மதமத்தம் சூடினான், மா நகர் -
அன்னம் தங்கும் பொழில் சூழ்-அகத்தியான்பள்ளியை
உன்னம் செய்த மனத்தார்கள்தம் வினை ஓடுமே.

tun2n2am koNTa uTaiyAn2, tutainta veN nIRRin2An2,
man2n2um kon2Rai matamattam cUTin2An2, mA nakar--
an2n2am tagkum pozil cUz--akattiyAn2 paLLiyai
un2n2am ceyta man2attArkaL tam vin2ai OTumE.

பொருள்: தைக்கப்பட்ட உடையை உடையவன்; முழு நீறு பூசியவன்; கொன்றை, ஊமத்தை மலர்களைச் சூடியவன்; பெரிய நகரில் அன்னப்பறவைகள் தங்கும் பொழில்கள் சூழ்ந்த அகத்தியான்பள்ளியை நினைந்த மனத்தவர்களின் வினையெல்லாம் நில்லாமல் ஓடி நீங்கும்.

குறிப்புரை: துன்னம் – தைத்தல். துதைந்த – நெருங்கிய. முற்றப் பூசிய. 'முழுநீறு பூசிய மூர்த்தி போற்றி' (தி. 6 ப. 5 பா. 3). 'முழுநீறு பூசிய முனிவர்'. உன்னம் – தியானம். மனத்தார்கள். தம் வினை – மனத்தையுடையவர் வினைகள்.

Our Lord Civan wears well-stitched dress. He has spread on His body the pure white holy ashes. He has crowned his head with bunches of Indian laburnum (cassia fistula) and datura flowers. He is manifest in the temple in Thiru-agath-thiaan-palli. In this city, swans live in plenty in the forest areas. Those devotees who can bring to their

mind the name Thiru-agath-thiaan-palli and chant the Lord's mystic name will get rid of all their sins.

2293. உடுத்ததுவும்புலிதோல்பலிதிரிந்துண்பதுங்
கடுத்துவந்தகழற்காலன்றன்னையுங்காலினால்
அடர்த்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
தொடுத்ததுவுஞ்சரமுப்புரந்துகளாகவே. 3

உடுத்ததுவும் புலிதோல்; பலி, திரிந்து உண்பதும்;
கடுத்து வந்த கழல் காலன்தன்னையும், காலினால்
அடர்த்ததுவும்; பொழில்சூழ் அகத்தியான்பள்ளியான்
தொடுத்ததுவும் சரம் முப்புரம் துகள்ஆகவே.

uTuttatuvum pulittOl; pali, tirintu uNpatum;
kaTuttu vanta kazal kAlan2 tan2n2aiyum, kAlin2Al
aTarttatuvum; pozil cUz akattiyAn2 paLLiyAn2
toTuttatuvum caram, muppuram tukaL AkavE.

பொருள்: உடுத்ததுவும் புலியின் தோல்; உண்பதுவும் திரிந்து ஏற்ற பிச்சை ஊண்; வென்றதுவும் காலால், சினந்து வந்த காலன் தன்னை; அகத்தியான்பள்ளியான் சரம் தொடுத்ததுவும் முப்புரங்கள் துகள் ஆகவே.

குறிப்புரை: உடுத்ததும் தோல், உண்பதும் பலி, காலினால் அடுத்ததும் காலனை, முப்புரம் துகளாகத் தொடுத்ததும் சரம் என்க. கடுத்து – கோபித்து.

Our Lord Civan has worn on His waist the hide of a tiger. He consumes the food He receives in the skull. He killed the regent of death by kicking him with anger, wears the anklets on His legs. This Lord is manifest in the temple in Thiru-agath-thiaan-palli where the natural forest areas are plenty. He shot an arrow and destroyed the three fortresses of the asuras in the sky.

2294. காய்ந்ததுவுமன்றுகாமனைநெற்றிக்கண்ணினால்
பாய்ந்ததுவுங்கழற்காலனைப்பண்ணினான்மறை
ஆய்ந்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
ஏய்ந்ததுவும்மிமவான்மகளொருபாகமே. 4

காய்ந்ததுவும் அன்று காமனை, நெற்றிக்கண்ணினால்;
பாய்ந்ததுவும் கழல் காலனை; பண்ணின்; நால்மறை,
ஆய்ந்ததுவும்; பொழில்சூழ் அகத்தியான்பள்ளியான்
ஏய்ந்ததுவும் இமவான் மகள் ஒருபாகமே.

kAyntatuvum an2Ru kAman2ai, neRRikkaNNin2Al;
pAyntatuvum kazal kAlan2ai; paNNin2, nAlmaRai,
Ayntatuvum; pozil cUz akattiyAn2 paLLiyAn2
Eyntatuvum imavAn2 makaL oru pAkamE.

பொருள்: அன்று காய்ந்ததுவும் (எரித்ததுவும்) காமனை நெற்றிக் கண்ணினால்; பாய்ந்ததுவும் (ஒறுத்ததுவும்) கழற் காலனை; பண்ணினால் ஆய்ந்ததுவும் மறையினை; அகத்தியான் பள்ளியான் பொருந்தியதும் இமாசலகுமாரியின் பாகத்தை.

குறிப்புரை: அன்று நெற்றிக்கண்ணால் காய்ந்ததும் மன்மதனை, பாய்ந்ததும் இயமனை, பண்ணினால் ஆராய்ந்ததும் வேதத்தை, பொருந்தியதும் இமாசல குமாரி பாகத்தை.

Our Lord kicked and killed the regent of death, Yaman. He killed the Indian cupid - Manmathan, angrily opening His third eye in the forehead. He used to chant the songs of the four Vedas in musical tone. He has embedded His consort, the daughter of the Himalayan king on His body. In such a glorious place our Lord Civan is manifest.

2295. போர்த்ததுவுங்கரியின்னுரிபுலித்தோலுடை
கூர்த்ததோர்வெண்மழுவேந்திக்கோளரவம்மரைக்
கார்த்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
பார்த்ததுவும்அரணம்படரெரிமூழ்கவே. 5

போர்த்ததுவும் கரியின்(ன்)உரி; புலித்தோல், உடை;
கூர்த்தது ஓர் வெண்மழு ஏந்தி; கோள் அரவம், அரைக்கு
ஆர்த்ததுவும்; பொழில் சூழ் அகத்தியான்பள்ளியான்
பார்த்ததுவும்(ம்) அரணம், படர்எரி மூழ்கவே.

pOrttatuvum kariyin2(n2) uri; pulittOl, uTai;
kUrttatu Or veNmazu Enti; kOL aravam, araikku
Arttatuvum; pozil cUz akattiyAn2 paLLiyAn2
pArttatuvum(m) araNam, paTar eri mUzkavE.

பொருள்: போர்த்ததுவும் யானையின் தோல்; உடை புலித்தோல்; கூரியதோர் வெண்ணிற மழுவேந்தி அரையில் கட்டியதும் கொல்லும் பாம்பினை; பொழில் சூழ்ந்த அகத்தியான் பள்ளியான் பார்த்ததுவும் முப்புரம் படரும் எரியில் மூழ்கவே.

குறிப்புரை: போர்த்ததும் யானைத்தோல். உடை – புலித்தோல். உடை என்பது தொழிலாகு பெயர். அது (உடுத்தது) வினையாலணையும் பெயர்ப் பொருளில் எழுவாய் நின்று புலித்தோலென்னும் பெயர்ப்பயனிலை கொண்டது. மழுவை ஏந்தி அரைக்கு ஆர்த்ததும் அரவம் (பாம்பு) என்க. பார்த்ததும் படர்ந்த எரியில் அரணம் (மும்மதில்) மூழ்க.

Our Lord Civan cloaked His body with the hide of an elephant. He wears on His waist the hide of the tiger. He holds in His hand the sharp white battle axe. He wears around His waist the snake. He witnessed the three crumbling fortresses of asuras in fire. This Lord is manifest in Thiru-agath-thiaan-palli.

2296. தெரிந்ததுவுங்கணையொன்றுமுப்புரஞ்சென்றுடன்
எரிந்ததுவுமுன்னெழிலார்மலருறைவான்றலை
அரிந்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
புரிந்ததுவுமுமையாளோர்பாகம்புனைதலே. 6

தெரிந்ததுவும் கணை ஒன்று; முப்புரம், சென்று உடன்-
எரிந்ததுவும்; முன் எழில் ஆர் மலர்உறைவான் தலை,
அரிந்ததுவும்; பொழில்சூழ் அகத்தியான்பள்ளியான்
புரிந்ததுவும்(ம்) உமையாள் ஓர்பாகம் புனைதலே.

terintatuvum, kaNai on2Ru; muppuram, cen2Ru uTan2-
erintatuvum; mun2 ezil Ar malar uRaivAn2 talai,
arintatuvum; pozil cUz akattiyAn2paLLiyAn2
purintatuvum(m) umaiyAL OrpAkam pun2aitalE.

பொருள்: ஆராய்ந்ததுவும் அம்பு ஒன்றினை. ஒன்றையொன்று ஒருசேரச் சென்று எரிந்ததுவும் திரிபுரத்தை; அரிந்ததுவும் முன் எழிலார் தாமரை மலர் மேலானாகிய பிரமனின் சிரம் ஒன்றினை; அகத்தியான்பள்ளியான் புரிந்ததுவும் உமையாளை ஒரு பாகம் புனைதலையே.

குறிப்புரை: தெரி (ஆராய்)ந்ததும் கணை (பாணம்). ஒன்றை ஒரு சேரச்சென்று எரித்ததும் திரிபுரத்தை. முன் அரிந்ததும் அழகு பொருந்திய பூவில் வாழும் பிரமன் தலையை, புரிந்தது (விரும்பிக் கொண்டது)ம் உமாதேவியார் ஒரு பாகத்தைப் புனைதலை, அப்பனது ஒரு பாகத்தை அம்மை அழகு செய்ததனாற்றான் உயிர்கட்கு அவ்வழகு உண்டாயிற்று. அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம் (சித்தியார் சூ. 1–69).

Our Lord Civan selected the arrow and shot and burnt the asura's three fortresses that were flying in the sky. Lord Brahma stays in the good-looking lotus flower. Our Lord plucked and removed one of his four heads to punish him. He has embedded His consort Uma Devi on the left portion of His body. Our goddess made Civa look lovely and attractive because of her concomitance. The people of the world attain beauty because of Uma Devi's concomitance.

2297. ஓதியெல்லாமுலகுக்கோரொண்பொருளாகிமெய்ச்
சோதியென்றுதொழுவாரவர்துயர்தீர்த்திடும்
ஆதியெங்கள்பெருமானகத்தியான்பள்ளியை
நீதியால்தொழுவாரவர்வினைநீங்குமே. 7

"ஓதி, எல்லாம்! உலகுக்கு ஓர் ஒண் பொருள் ஆகி! மெய்ச்-
சோதி!" என்று தொழுவார் அவர் துயர் தீர்த்திடும்
ஆதி, எங்கள் பெருமான், அகத்தியான்பள்ளியை
நீதியால்-தொழுவார் அவர் வினை நீங்குமே.

"Oti, ellAm! ulakukku or oN poruL Aki! meyc-
cOti!" en2Ru tozuvAr avar tuyar tIrttiTum
Ati, egkaL perumAn2, akattiyAn2 paLLiyai
nItiyAl-tozuvAr avar vin2ai nIgkumE.

பொருள்: வேதங்களையெல்லாம் ஓதி அருளியவனே! உலகங்களுக்கெல்லாம் ஒப்பற்ற ஒளிர் பொருளானவனே! உண்மையொளியே! என்று தொழுபவர் துயர்களைத் தீர்த்திடும் ஆதியாகிய பெருமானது அகத்தியான் பள்ளியைத் தொழுவார்களின் வினைகள் நீங்கும்.

குறிப்புரை: எல்லாம் ஓதி – வேதங்களையெல்லாம் ஓதியருளியவனே! உலகுக்கு ஓர் ஒண்பொருள் ஆகி – உலகங்களுக்கு ஒப்பற்ற ஒளிர் பொருளானவனே. மெய்ச்சோதி – உண்மையொளியே என்று கூறித்

தொழுபவர் துயர்களைத் தீர்த்திடும் ஆதியாகிய பெருமானது பள்ளியைத் தொழுவார் வினை நீங்கும் என்க.

Our Lord Civan is one from whom originated all the four Vedas. He is the only Supreme Being for the entire universe. And He is the only Being who gives the supernal effulgence to the universe. The devotees who chant His fame by quoting the above two aspects of our Lord in an order will get rid of all their sufferings. This Lord is the Supreme and is manifest in Thiru-agath-thiaan-palli.

2298. செறுத்ததுவுந்தக்கன்வேள்வியைத்திருந்தார்புரம்
ஒறுத்தவும்ஒளிமாமலருறைவான்சிரம்
அறுத்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
இறுத்ததுவுமரக்கன்றன்தோள்களிருபதே. 8

செறுத்ததுவும் தக்கன் வேள்வியை; திருந்தார் புரம்,
ஒறுத்தவும் ஒளி மா மலர் உறைவான் சிரம்,
அறுத்ததுவும் பொழில் சூழ் அகத்தியான்பள்ளியான்
இறுத்ததுவும் அரக்கன்தன் தோள்கள் இருபதே.

ceRuttatuvum takkan2 vELviyai; tiruntAr puram,
oRuttatuvum; oLi mA malar uRaivAn2 ciram,
aRuttatuvum; pozil cUz akattiyAn2 paLLiyAn2
iRuttatuvum arakkan2 tan2 tOLkaL irupatE.

பொருள்: சினந்து அழித்ததுவும் தக்கனது வேள்வியை; தண்டித்து அழித்ததுவும் பகைவர்களின் திரிபுரத்தை; அறுத்ததுவும் பெரிய மலராகிய தாமரையின்மேல் இருப்பவனாகிய பிரமனின் சிரத்தை; மலர்ச்சோலைகள் சூழ்ந்த அகத்தியான் பள்ளியான் முறித்ததுவும் அரக்கன் இராவணனின் இருபது தோள்களையும்.

குறிப்புரை: செறுத்ததும் தக்கன் யாகத்தை. செறுத்தல் – கோபித்தல். அழித்தல். ஒறுத்தல் – கடிதல், வருத்துதல், ஒறுத்ததும் பகைவர் திரிபுரத்தை. திருந்தார் – பகைவர். திருந்தியவர் நண்பவராவர். அறுத்ததும் ஒளியை உடைய தாமரைப்பூவில் வாழும் பிரமன் தலையை. இறுத்ததும் (முறித்ததும்) இராவணனுடைய இருபது தோள்களையும்.

Our Lord Civan arranged the demolition and destruction of Thakshan's huge sacrificial fire and all the items. He chastised the asuras and burnt the three fortresses

of the enemies of the devas. Lord Brahma stays in bright and attractive lotus flower. Our Lord plucked one of his heads to punish his egoism. Our Lord squeezed the twenty shoulders of Raavanan, the king of Sri Lanka. Our Lord of all this fame is manifest in Thiru-agath-thiaan-palli.

2299. சிரமுநல்லமதிமத்தமுந்திகழ்கொன்றையும்
அரவமல்குஞ்சடையானகத்தியான்பள்ளியைப்
பிரமனோடுதிருமாலுந்தேடியபெற்றிமை
பரவவல்லாரவர்தங்கள்மேல்வினைபாறுமே. 9

சிரமும், நல்ல மதிமத்தமும், திகழ் கொன்றையும்,
அரவும், மல்கும் சடையான் அகத்தியான்பள்ளியைப்
பிரமனோடு திருமாலும் தேடிய பெற்றிமை
பரவ வல்லார்அவர்தங்கள்மேல் வினை பாறுமே.

ciramum, nalla matimattamum, tikaz kon2Raiyum,
aravum, malkum caTaiyAn2 akattiyAn2 paLLiyaip
piraman2OTu tirumAlum tETiya peRRimai
parava vallAr avar tagkaL mEl vin2ai pARumE.

பொருள்: தலைமாலையும் அழகிய பிறையும் ஊமத்தை மலரும் கொன்றைப் பூவும் பாம்பும் செறியும் சடையை உடையவனின் அகத்தியான்பள்ளியைப் பிரமனோடு திருமாலும் தேடிய இயல்பினைப் போற்ற வல்லவர்களின் மேலுள்ள வினைகள் அழியும்.

குறிப்புரை: சிரமும் – தலைமாலையும், நல்லமதி (உம்) – அழகிய பிறையும். மத்தமும் – ஊமத்தம் பூவும். 'மத்தங்கமழ்சடை' (தி. 2 ப. 205 பா. 6). அரவும் – பாம்பும். 'அரவம்' என்ற பாடம் பிழை என்பது முதலடியாலே விளங்கும். பெற்றிமை – தன்மை. பாறும் – ஓடும்.

Our Lord puts on His body the garland of skulls. He retains the young moon; He wears the datura flowers on His matted hair. Also He wears the Indian laburnum flower on His hair. He has tied around His waist the snake. He adorns His disheveled locks with all these. Lord Brahma and Thirumal were unable to meet our Lord in spite of their best efforts. Those devotees who can praise our Lord's fame as above and worship will get rid of any sins that may approach them.

2300. செந்துவராடையினாரும்வெற்றரையேதிரி
புந்தியிலார்களும்பேசும்பேச்சவைபொய்ம்மொழி
அந்தணனெங்கள்பிரானகத்தியான்பள்ளியைச்
சிந்திமின்நும்வினையானவைசிதைந்தோடுமே. 10

செந்துவர் ஆடையினாரும், வெற்று அரையே திரி
புந்திஇலார்களும், பேசும் பேச்சு அவை பொய்ம்மொழி;
அந்தணன் எங்கள் பிரான், அகத்தியான்பள்ளியைச்
சிந்திமின்! நும் வினைஅனவை சிதைந்து ஓடுமே.

centuvar ATaiyin2Arum, veRRu araiyE tiri
punti ilArkaLum, pEcum pEccu avai poymmozi;
antaNan2, egkaL pirAn2, akattiyAn2 paLLiyaic
cintimin2! num vin2ai An2avai citaintu OTumE.

பொருள்: செந்துவர் ஊட்டிய ஆடையை உடுத்தவர்களாகிய சாக்கியரும் வெற்று உடம்பினராகிய சமணரும் ஆகிய அறிவிலாதவர்கள் பிதற்றும் பேச்சாகிய பரசமயக் கொள்கைகள் பொய்ம்மொழிகளாம். எவ்வுயிர்க்கும் செந்தண்மை கொண்ட அந்தணனின் அகத்தியான் பள்ளியைச் சிந்தியுங்கள்! உங்களுடைய வினைகள் சிதைந்து ஓடும்.

குறிப்புரை: செந்துவர் ஆடை – செங்காவித்துணி. பேசும் பேச்சவை – சொல்லும் பரசமயக்கோள்கள். அந்தணன் – சிவன். சிந்திமின் – தியானம் புரியுங்கள். நும் வினையானவை சிதைந்து ஓடும்.

In this city of Thiru-agath-thiaan-palli, the Jains and the Buddhists live. The Buddhists wear red ochre robes on their body; the Jains roam about in the city without any proper dress on their body. They roam about and speak absurdity without any aim. Oh! You devotees, do not listen to those words and do not think about them. Concentrate in your mind on our virtuous Lord, the Supreme Being, who is manifest in Thiru-agath-thiaan-palli, your sins will disappear.

2301. ஞாலமல்குந்தமிழ்ஞானசம்பந்தன்மாமயில்
ஆலுஞ்சோலைபுடைசூழகத்தியான்பள்ளியுள்
சூலநல்லபடையானடிதொழுதேத்திய
மாலைவல்லாரவர்தங்கள்மேல்வினைமாயுமே. 11

ஞாலம் மல்கும் தமிழ் ஞானசம்பந்தன், மா மயில்
ஆலும் சோலை புடை சூழ் அகத்தியான்பள்ளியுள்,
சூலம் நல்ல படையான் அடி தொழுது ஏத்திய
மாலை வல்லார் அவர்தங்கள்மேல் வினை மாயுமே.

njAlam malkum tamiz njAn2acampantan2, mA mayil
Alum cOlai puTai cUz akattiyAn2 paLLiyuL,
cUlam nalla paTaiyAn2 aTi tozutu Ettiya
mAlai vallAr avar tagkaL mEl vin2ai mAyumE.

பொருள்: உலகம் புகழும் திருஞானசம்பந்தன் பெரிய மயில் ஆடும் சோலைகள் பக்கங்களில் சூழ்ந்த திருஅகத்தியான்பள்ளியுள் சூலப்படையானாகிய நல்லவனின் அடி தொழுது ஏத்திய இப்பாமாலையை வல்லவர்களின் ஆகாமிய வினைகள் அழியும்.

குறிப்புரை: ஆலும் – ஆடும். புடை – பக்கம். நல்ல சூலப்படையான் என்றும் சூலமாகிய நல்ல படையான் என்றும் கூறலாம். நல்ல பாம்பு. மாலை – இத்திருப்பதிகம். மேல்வினை – ஆகாமிய கன்மம் என்றலும் பொருந்தும்.

The good name and fame of our saint Thiru-gnana-Sambandar expand all over the world. He paid a visit to the temple in Thiru-agath-thiaan-palli and worshipped and praised the holy feet of our Lord Civan who holds the battle axe in one of his hands. He is manifest in Thiru-agath-thiaan-palli temple. Our saint chanted this Tamil garland of ten verses. Those devotees who can memorise and chant these verses will get rid of the bad karma of their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

76ஆம் பதிகம் முற்றிற்று
End of 76th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: *213* பதிக எண்: *77*

77. திருஅறையணிநல்லூர் 77. THIRU-ARAI-ANI-NALLOOR

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருவறையணிநல்லூர் என்னும் இத்திருத்தலமானது திருக்கோவலூர் தொடர்வண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே உள்ளது. இது நடுநாட்டுத் தலங்களுள் ஒன்று. இக்காலத்தில் அறகண்டநல்லூர் என்று வழங்குகிறது. திருவண்ணாமலை, பண்ணுருட்டி ஆகிய ஊர்களிலிருந்து திருக்கோவலூர் வருவதற்குப் பேருந்துகள் பல உள்ளன. அறையணி நல்லூர் பெண்ணையாற்றின் வடகரையில் உள்ளது. வானளாவிய கோபுரத்துடன் ஆலயம் விளங்குகிறது. திருக்கோவலூரில் இருந்து வடக்கே 1 கி. மீ. தூரத்தில் ஊர் உள்ளது.

பாறையின்மீது அழகாகக் கட்டப்பெற்ற கோயிலை உடைய ஊர் என்று பொருள்படும். இவ்வூர்ப் பெயரை, பாண்டவர் வனவாச காலத்தில் தாம் கண்ட ஐந்து அறைகள் அந்த நல்லூர்க்கு அலங்காரஞ் செய்யும் காரணத்தால் எய்தியது என்றும் கூறுவர். இறைவரின் திருப்பெயர் அறையணிநாதேசுவரர். இறைவியாரின் திருப்பெயர் அருள்நாயகி. பாறையில் பல்லவர் குடை மண்டபம் இருக்கிறது. வழி சரியாக இல்லை. முருகன் கோயில், திரௌபதியம்மன் கோயிலாகப் மாற்றப்பெற்றதாக இருக்கலாம். கங்கையம்மன் கோயில் ஒன்று புதிதாகக் கட்டியிருக்கிறார்கள். தீர்த்தம் பெண்ணையாறு. பிரசண்ட முனிவர் பூசித்துப் பேறு பெற்றார். இது திருஞானசம்பந்தரது ஒரே பதிகத்தைப் பெற்றது.

பதிக வரலாறு

திருஞானசம்பந்தப் பெருமானார் திருஆமாத்தூரையும் திருக்கோவில்வீரட்டத்தையும் வழிபட்டு, திருஅறையணி நல்லூரை அணைந்து ஏத்தி அடியார் அன்பின் மேன்மையை உலகம் அறிந்துய்யப் பாவலர்ந்த செந்தமிழ் கொண்டு பரவியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2302. பீடினாற்பெரியோர்களும்பேதைமைகெடத்தீதிலா
வீடினாலுயர்ந்தார்களும்வீடிலாரிளவெண்மதி
சூடினார்மறைபாடினார்சுடலைநீறணிந்தாரழல்
ஆடினாரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே. 1

பீடினால் பெரியோர்களும், பேதைமை கெடத் தீது இலா
வீடினால் உயர்ந்தார்களும் - வீடு இலார், இளவெண்மதி
சூடினார், மறை பாடினார், சுடலை நீறு அணிந்தார், அழல்-
ஆடினார், அறையணிநல்லூர் அம் கையால் - தொழுவார்களே.

pITin2Al periyOrkaLum, pEtaimai keTat tItu ilA
vITin2Al uyarntArkaLum--vITu ilAr, iLaveNmati
cUTin2Ar, maRai pATin2Ar, cuTalai nIRu aNintAr, azal-
ATin2Ar, aRaiyaNi nallUr am kaiyAl-tozuvArkaLE.

பொருள்: அழிவில்லாதவரும், இளமையான வெண்ணிற பிறையைச் சூடியவரும், வேதங்களை இசைத்தவரும், சுடுநீறாகிய சாம்பலைப் பூசியவரும், தீயாடினாரும் ஆகிய சிவபெருமானை அறையணிநல்லூரில் தொழுமவர்கள் பெருமையினால் பெரியோர்களாவர்; தங்களறியாமை கெட முத்திக்குரிய முற்றிய பற்றற்ற உயர்ந்தவர்களுமாவர்.

குறிப்புரை: பீடு – பெருமை. பேதைமை – அறியாமை. ஈண்டுப் பண்பாகுபெயராய் ஆணவத்தையும் இனம்பற்றி மாயை கன்மங்களையும் உணர்த்தி நின்றது. தீதிலா வீடு – முற்றத்துறந்து பற்றற்ற நிலை. 'ஒரு பற்றிலாமையும் கண்டிரங்காய்' வீடினால் – விடுதலால். வீடு இலார் – (அழிவில்லாத) நித்தியர். இளமதி, வெண்மதி – பிறை. சுடலைநீறு – மகாசங்கார காலத்தில் அனைத்துலகையும் அழித்துப் பொடித்த பொடி. அழல் – தீயில். பெரியோர்களும் உயர்ந்தார்களும் ஆவார் எவர் என்னில், அறையணி நல்லூரைத் தொழுபவர்களே என்று இயைத்துணர்க. வீடிலாரும் சூடினாரும் பாடினாரும் ஆடினாரும் ஆகிய சிவபெருமானது ஊர் என்க.

Our Lord Civan has no end. He retains the young moon on His matted hair, He is the author of the four Vedas. He applies all over His body the holy ashes that arose while the big destruction of the universe happened. His avocation is to dance near the fire of the burning ghats. Those devotees who worship this Lord with their clean hands will become great in their lineage. The obstructive factor of emotional attachment will be shed by them and they will become great people.

2303. இலையினார்சூலமேறுகந்தேறியேயிமையோர்தொழ
நிலையினாலொருகாலுறச்சிலையினால்மதிலெய்தவன்
அலையினார்புனல்சூடியஅண்ணலாரறையணிநல்லூர்
தலையினாற்றொழுதோங்குவார்நீங்குவார்தடுமாற்றமே. 2

இலையின் ஆர் சூலம், ஏறு உகந்து ஏறியே, இமையோர் தொழ,
நிலையினால் ஒரு கால் உறச் சிலையினால் மதில் எய்தவன்,
அலையின் ஆர் புனல் சூடிய அண்ணலார், அறையணிநல்லூர்
தலையினால்-தொழுது ஓங்குவார் நீங்குவார், தடுமாற்றமே.

ilaiyin2 Ar cUlam, ERu ukantu ERiyE, imaiyOr toza,
nilaiyin2Al oru kAl uRac cilaiyin2Al matil eytavan2,
alaiyin2 Ar pun2al cUTiya aNNalAr, aRaiyaNi nallUr
talaiyin2Al-tozutu OgkuvAr nIgkuvAr, taTumARRamE.

பொருள்: மூவிலைத் தோற்றம் கொண்ட சூலம் ஏந்தியவர்; எருதினை வாகனமாக விரும்பி ஏறுவர்; தேவர்கள் தொழும் நிலையில், ஒரு காலால் மலையை வில்லாக வளைத்து பகைவரது மும்மதில்களை அழித்தவர்; அலைகள் கொண்ட கங்கையாற்றைத் தலையில் சூடிய தலைவர் ஆகிய சிவபிரானின் அறையணிநல்லூரைத் தலையினால் தொழுதெழுவார் பிறவியில் விழும் தடுமாற்றத்திலிருந்து நீங்குவார்கள்.

குறிப்புரை: இலையின் ஆர் சூலம் – 'மூவிலைவேல்' 'இலையாருஞ் சூலத்தாய்' (அப்பர் திருத்தாண்டகம்). 'இலைமலிந்த வேல்நம்பியெறி பத்தர்' (திருத்தொண்டத்தொகை). தடுமாற்றம் – பிறவிக்குழியில் விழுந்தடுமாற்றம். ஓங்குவார் தடுமாற்றம் நீங்குவார் என்க. 'ஆரூர் தம் கையினால் தொழுவார் தடுமாற்றுப்பாரே' (தி. 1 ப. 105 பா. 6).

Our Lord Civan holds in one of His hands the three pronged battle axe with the shape of leaves. He is eager to sustain the white bull for His conveyance. At the request of the devas He pressed the bow with His foot and shot an arrow on the three fortresses of the asuras and destroyed them. He supports the Ganges river which has big waves on His matted hairlocks. This Lord is manifest in the temple in Arai-ani-nalloor. Those devotees who reach the temple in Arai-ani-nalloor and worship Him with their heads are noble persons, free from stumbling thoughts.

2304. என்பினார்கனல்சூலத்தாரிலங்குமாமதியுச்சியான்
பின்பினாற்பிறங்குஞ்சடைப்பிஞ்ஞகன்பிறப்பிலியென்று
முன்பினார்மூவர்தாந்தொழுமுக்கண்மூர்த்திதன்தாள்களுக்
கன்பினாரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே. 3

"என்பினார், கனல் சூலத்தார், இலங்கும் மா மதி உச்சியான்,
பின்பினால் பிறங்கும் சடைப் பிஞ்ஞகன் பிறப்புஇலி" என்று
முன்பினார்மூவர்தாம் தொழு முக்கண் மூர்த்திதன் தாள்களுக்கு
அன்பினார்-அறையணிநல்லூர் அம் கையால் தொழுவார்களே.

"en2pin2Ar, kan2al cUlattAr, ilagkum mA mati ucciyAn2,
pin2pin2Al piRagkum caTaip pinjnjakan2, piRappu ili" en2Ru
mun2pin2Ar mUvartAm tozu mukkaN mUrttitan2 tALkaLukku
an2pin2Ar--aRaiyaNi nallUr am kaiyAl-tozuvArkaLE.

பொருள்: அறையணி நல்லூர் இறைவர் எலும்பணிந்தவர், சூலம் கையேந்தியவர், விளங்கும் பிறை தரித்த உச்சியார், பின்புறத்தில் தாழ்ந்த சடையுடையவர், தலைக்கோலம் அணிந்தவர், பிறப்பில்லாதவர், ஆதிமூர்த்தி என்று கையால் தொழுவாரே மூவரும் வணங்கும் முக்கண்மூர்த்தி திருவடிக்கு அன்பராவர்.

குறிப்புரை: என்பினார் – எலும்பணிந்தவர். கனல்சூலத்தார் – கனலும் (தீய்க்கும்) சூலப்படை ஏந்தியவர். மதியுச்சியான் – சந்திரசேகரன். பின்பு இன் ஆல் – பின்பினால். பின்புறத்தில். பின் – பின்புறத்தில், பின்னால் – பின்னலால் என்னும் பொருந்தும். 'பின்றாழ்சடை' (தி.1 ப.71 பா.4, ப.80 பா.2). 'பின்னு சடைகள்' (தி.1 ப.74 பா.6). 'பின்னிய தாழ்சடையார்' (தி.1 ப.8 பா.10). பிறங்கும் – விளங்கும். பிஞ்ஞகன் என்பது சடையை அடையாக்கொண்டு நின்றதால் முடியன் என்ற மட்டில் அமைந்தது. முன்பினார் – வலிமை, பழமையுடையார் நினைத்தலை உடையவர் எனலுமாம். முன்பின் ஆர் என்று பிரித்துக் காலத்தையும் இடத்தையும் குறித்துக் கூறலுமாம். என்பினார் சூலத்தார் உச்சியான் பிஞ்ஞகன் பிறப்பிலி என்று கையால் தொழுவாரே மூவரும் தொழும் முக்கண் மூர்த்தி திருவடிக்கு அன்பராவர்.

Our Lord Civan adorns His body with the garland made up of skulls. He holds the glowing trident in one of His hands. He retains the bright young moon in His hair locks on the top of His head. At the back of His head the disheveled matted hair locks hang low carrying garland of flowers. He has no birth. This Lord is manifest in Arai-ani-nalloor temple. Those celestials - Brahma, Thirumaal and Rudran - all the three high powered demigods worship our Lord Civan who is three eyed, those who worship the holy feet of Arai-ani-nalloor Lord are the pious devotees of this three-eyed Lord.

2305. விரவுநீறுபொன்மார்பினில்விளங்கப்பூசியவேதியன்
உரவுநஞ்சமுதாகவுண்டுறுதிபேணுவதன்றியும்
அரவுநீள்சடைக்கண்ணியாரண்ணலாரறையணிநல்லூர்
பரவுவார்பழிநீங்கிடப்பறையுந்தாஞ்செய்தபாவமே. 4

விரவு நீறு பொன்மார்பினில் விளங்கப் பூசிய வேதியன்,
உரவு நஞ்சு அமுதுஆகஉண்டு உறுதி பேணுவது அன்றியும்,
அரவு நீள்சடைக் கண்ணியார், அண்ணலார், அறையணிநல்லூர்
பரவுவார் பழி நீங்கிட, பறையும், தாம் செய்த பாவமே.

viravu nIRu pon2mArpin2il viLagkap pUciya vEtiyan2,
uravu nanjcu amutu Aka uNTu uRuti pENuvatu an2Riyum,
aravu nILcaTaik kaNNiyAr, aNNalAr, aRaiyaNi nallUr
paravuvAr pazi nIgkiTa, paRaiyum, tAm ceyta pAvamE.

பொருள்: திருநீற்றினை மார்பில் பூசிய மறையவன், கடல் நஞ்சினை அமுதமாக உண்டு உயிர்களுக்கு உய்தி அளித்தவன். அஃதல்லாமலும், அரவினை நீண்ட சடையில் தலைமாலையாகக் கொண்டவரும் தலைவருமாகிய அறையணிநல்லூர் சிவபிரானைப் பரவுவார் தம்மேல் வரும் பழிநீங்கப் பாவம் ஓடும்.

குறிப்புரை: மார்பில் நீறு பூசிய வேதியன் என்றது சிவபிரானை. உரவு – கடல். அரவு – பாம்பு. கண்ணியார் – தலைமாலை உடையார். பரவுவார் – வாழ்த்தி வணங்குபவர். பழிநீங்கப் பாவம் ஓடும்.

Our Lord Civan is one who applies a lot of holy ashes to His attractive chest and body. He is the author of the four Vedas. He is the Supreme Being who stopped the universe from complete destruction by imbibing the poison. He has used the long serpent in His matted hair locks as garland for the hair. This Lord is manifest in the temple in Arai-ani-nalloor. Those devotees who adore, worship and pay reverence to our Lord will get rid of their sins in their life.

2306. தீயினார்திகழ்மேனியாய்தேவர்தாந்தொழுதேவன்நீ
ஆயினாய்கொன்றையாயனலங்கையாயறையணிநல்லூர்
மேயினார்தமதொல்வினைவீட்டினாய்வெய்யகாலனைப்
பாயினாயதிர்கழலினாய்பரமனேயடிபணிவனே. 5

தீயின் ஆர் திகழ் மேனியாய்! தேவர் தாம் தொழும் தேவன் நீ
ஆயினாய்! கொன்றையாய்! அனல் அங்கையாய்! அறையணிநல்லூர்,
மேயினார்தம தொல்வினை வீட்டினாய்! வெய்ய காலனைப்
பாயினாய்! அதிர் கழலினாய்! பரமனே! அடி பணிவனே.

tIyin2 Ar tikaz mEn2iyAy! tEvartAm tozum tEvan2 nI
Ayin2Ay! kon2RaiyAy! an2al agkaiyAy! aRaiyaNi nallUr,
mEyin2Ar tama tolvin2ai vITTin2Ay! veyya kAlan2aip
pAyin2Ay! atir kazalin2Ay! paraman2E! aTi paNivan2E.

பொருள்: தீயைப் போல ஒளிரும் திருமேனியை உடையாய்! தேவர்கள் எல்லோரும் தொழும் மகாதேவன் நீ ஆயினாய்! கொன்றையினாய்! அங்கையில் அனலேந்தினாய்! அறையணி நல்லூரை அடைந்தவர்களின் தொன்று தொட்டு வருகின்ற வினைகளை ஒழித்தாய்! காலன் அழியப் பாய்ந்தாய்! ஒலிக்கும் கழலினாய்! பரமனே! அடி பணிந்தேன்.

குறிப்புரை: தீயின் ஆர் திகழ் மேனியாய் – தீயைப் போலப் பொருந்திய பிரகாசிக்கும் திருமேனியை உடையாய். தேவர் நாம் தொழுதேவன் நீ ஆயினாய். கொன்றையினாய். அனல் அங்கையாய், வீட்டினாய், பாயினாய், கழலினாய், பரமனே என மனமுருக வாய்குளிர அழைத்து. அடிபணிவன் என்றது பக்தி சாகரத்தில் அழுத்துகின்றது. தம் – தம்முடைய. பாயினாய் – பாய்ந்தாய்.

Our Lord Civan looks extremely bright like the red supernal effulgence. He is the head of all the devas who worship Him. He wears the cassia fistula flowers on His head. He holds fire in one of His hands. Those devotees who reach the temple of Arai-ani-nalloor and worship our Lord will get rid of their past sins. He kicked and destroyed the god of death. He wears the trinket on His legs. Oh! Lord I worship Your holy feet.

2307. விரையினார்கொன்றைசூடியும்வேகநாகமும்வீக்கிய
அரையினாரறையணிநல்லூரண்ணலாரழகாயதோர்
நரையினார்விடையூர்தியார்நக்கனார்கூறும்போதுசேர்
உரையினாலுயர்ந்தார்களுமுரையினாலுயர்ந்தார்களே. 6

விரையின் ஆர் கொன்றை சூடியும், வேக நாகமும் வீக்கிய
அரையினார், அறையணிநல்லூர் அண்ணலார், அழகுஆயது ஓர்
நரையின் ஆர் விடை ஊர்தியார், நக்கனார், கூறும்போது சேர்
உரையினால் உயர்ந்தார்களும் உரையினால் உயர்ந்தார்களே.

viraiyin2 Ar kon2Rai cUTiyum, vEka nAkamum vIkkiya
araiyin2Ar, aRaiyaNi nallUr aNNalAr, azaku Ayatu Or
naraiyin2 Ar viTai UrtiyAr, nakkan2Ar, kURumpOtu cEr
uraiyin2Al uyarntArkaLum uraiyin2Al uyarntArkaLE.

பொருள்: மணமுள்ள கொன்றையைச் சூடி, விடவேகமுள்ள நாகத்தை அரையில் கட்டி, அழகாயதொரு வெள்விடை ஊர்தியை உடையவர்; ஆடையற்றவர்; ஆகிய அறையணிநல்லூரில் அண்ணலாரை நறிய பூவால் அருச்சித்து தோத்தரித்து உயர்பவர் புகழலால் உயர்வினை அடைவார்.

குறிப்புரை: வேகம் – விடவேகம். பத்துவேகம் 'பத்துக்கொலாம் அவர் பாம்பின்கண் பாம்பின்பல்' (தி.4 ப.18 பா.10). நாகம் – பாம்பு. வீக்கிய – கட்டிய. அரையில் நாகம் வீக்கினார் என்க. நரையின் ஆர் விடை – வெண்ணிறத்தினைப் பொருந்திய எருது. நறும்போது – நறுமணம் கமழும் பூக்கள். உரையினால் – 1. தோத்திரங்களால் – 2, புகழலால், பூவால் அருச்சித்து வாயால் தோத்திரம் புரிதல் பற்றிப். 'போதுசேர் உரை' என்றார். 'உரை மாலையெல்லாம் உடைய அடி' (தி.6 ப.6 பா.7). 'உரையாலுணரப்படாத அடி' 'உரையாரும் புகழானே' (தி.6 ப.62 பா.6). 'உரைப்பார் உரை உகந்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய்' (தி.7 பா.936). 'உரையார் தமிழ்மாலை' (தி.1 ப.84 பா.11). 'உரைப்பார் உரைப்பவையெல்லாம் இரப்பார்க் கொள்றீவார் மேல் நிற்கும் புகழ்' (குறள்). அர்ச்சனையில் உயர்வது புகழில் உயர்வதாகும் என்றவாறு. வழிபாட்டால் வரும் புகழேயன்றி மற்றைய வழிகளால் வரும் புகழ் உயர்வுடையதன்று. 'உரையார் பொருளுக்குப்பிலான்' (தி.6 ப.11 பா.7) என்பதற்கேற்பப் பொருள் உரைத்தலுமாம்.

Our Lord Civan wears the garland made up of cassia fistula, which has sweet fragrance. He wears around His waist the ill-tempered poisonous snake. He is the Supreme Being manifest in the temple in Arai-ani-nalloor. He uses the handsome white bull for His conveyance. Those who strew flowers and praise our Lord with pleasing holy words will become famous in their life.

2308. வீரமாகியவேதியர்வேகமாகளியானையின்
ஈரமாகியவுரிவைபோர்த்தரிவைமேற்சென்றஎம்மிறை
ஆரமாகியபாம்பினாரண்ணலாரறையணிநல்லூர்
வாரமாய்நினைப்பார்கள்தம்வல்வினையவைமாயுமே. 7

வீரம் ஆகிய வேதியர் வேக மா களியானையின்
ஈரம் ஆகிய உரிவை போர்த்து, அரிவைமேல் சென்ற எம் இறை;
ஆரம் ஆகிய பாம்பினார்; அண்ணலார்; அறையணிநல்லூர்
வாரம்ஆய் நினைப்பார்கள்தம் வல்வினைஅவை மாயுமே.

vIram Akiya vEtiyar; vEka mA kaLiyAn2aiyin2
Iram Akiya urivai pOrttu, arivaimEl cen2Ra em iRai;
Aram Akiya pAmpin2Ar; aNNalAr; aRaiyaNi nallUr
vAram Ay nin2aippArkaL tam valvin2ai avai mAyumE.

பொருள்: ஞானமுடைய வேதியர், வேகமாக மதத்துடன் வந்த பெரிய யானையின் குருதி ஈரமுடைய தோலினை உரித்துப் போர்த்து உமாதேவி அஞ்ச அவர்பாற் சென்ற எம்முடைய இறைவர், மாலையாகப் பாம்பினை உடையவர்; தலைவர். அவருடைய அறையணிநல்லூரை அன்புடன் நினைப்பவர்கள்தம் வல்வினை ஆயவை மாயும்.

குறிப்புரை: வீரம் – ஞானம், ஞான வேதியர் – சிவபிரான். அட்ட வீரட்டம் (எட்டு வீரத்தலம்) நோக்கின் சிவபிரானுக்குப் பொருந்தும். (வீரம் ஆகிய வேதியர்) தக்க யாகத்தில் இருந்தவர்களும் ஆம். வேகமாகளியானை – அவர்கள் வேகத்துடன் போதர ஏவிய பெரிய மதக்களிப்பை உடைய யானை. யானையின் ஈரம் ஆகிய உரிவை – அந்த யானை ஈரிய தோல். அரிவை – உமாதேவியார். பாம்பு மாலை அணிந்தவர். வாரம் – அன்பு நினைப்பார்கள் தம் வல்வினை மாயும் – தியானம் புரிபவர்களுடைய தீவினை அழியும்.

Our Lord Civan is an embodiment of super intelligence and He is the author of the four Vedas. He covered His body with the wet hide of an enraged big elephant and appeared before His consort Uma Devi. He wears the snake as His garland. He is manifest in the temple in Arai-ani-nalloor as the Supreme Being. Those who think and repeat His name with sincere devotion will get rid of their strong karma in their life.

2309. தக்கனார்பெருவேள்வியைத்தகர்த்துகந்தவன்தாழ்சடை
முக்கணான்மறைபாடியமுறைமையான்முனிவர்தொழ
அக்கினோடேழிலாமைபூணண்ணலாரறையணிநல்லூர்
நக்கனாரவர்சார்வலானல்குசார்விலோம்நாங்களே. 8

தக்கனார் பெருவேள்வியைத் தகர்த்து உகந்தவன், தாழ்சடை
முக்கணான், மறை பாடிய முறைமையான், முனிவர் தொழ
அக்கினோடு எழில் ஆமை பூண் அண்ணலார், அறையணிநல்லூர்
நக்கனார் அவர் சார்வுஅலால் நல்கு சார்வு இலோம் நாங்களே.

takkan2Ar peru vELviyait takarttu ukantavan2, tAzcaTai
mukkaNAn2, maRai pATiya muRaimaiyAn2, mun2ivar toza
akkin2OTu ezil Amai pUN aNNalAr, aRaiyaNi nallUr
nakkan2Ar avar cArvu alAl nalku cArvu ilOm, nAgkaLE.

பொருள்: தக்கனுடைய பெரிய வேள்வியைத் தகர்த்து மகிழ்ந்தவர்; தாழ்ந்த சடை உடையவர்; முக்கண்களை உடையவர்; முனிவர்கள் முறைமையால் வழிபட எலும்பினோடு

ஆமையோட்டையும் அழகாகப் பூண்டவர். தலைவர். அறையணி நல்லூர் நக்கனார், யாம் அவருடைய திருவடிச் சார்பினை அல்லாது பேரின்பம் பயக்கும் வேறுசார்பு இலோம்.

குறிப்புரை: தக்கனார் – தக்ஷன். முக்கணான் – திரிநேத்திரன். அக்கு – எலும்பு, உருத்திராக்கமுமாம். ஆமை பூண்ட அண்ணலார். அவர்சார்வு – அச்சிவபிரான்றிருவடிச் சார்பு. நாங்கள் அவர் சார்வு அல்லால் பேரின்பம் பயக்கும் சார்வு வேறிலோம். அடுத்த பாடலின் ஈற்றடியும் ஈதேயாதல் அறிக (தி.2 ப.44 பா.3).

Our Lord Civan ordered to demolish the sacrificial fire of Thakkan. His matted hair hangs very low on His back. He has three eyes. The sages pray Him, He authored the four Vedas in the proper manner. He is the super intellect wearing the tortoise shell and the garland made of skulls. He is the mendicant in the temple in Arai-ani-nalloor. We worship Him alone for ultimate happiness and do not seek anybody else.

2310. வெய்யநோயிலர்தீதிலர்வெறியராய்ப்பிறர்பின்செலார்
செய்வதேயலங்காரமாமிவையிவைதேறியின்புறில்
ஐயமேற்றுணுந்தொழிலராமண்ணலாரறையணிநல்லூர்
சைவனாரவர்சார்வலால்யாதுஞ்சார்விலோம்நாங்களே. 9

வெய்ய நோய் இலர்; தீது இலர்; வெறியராய்ப் பிறர் பின் செலார்;
செய்வதே அலங்காரம் ஆம்; இவைஇவை தேறி இன்புஉறில்,
ஐயம் ஏற்று உணும் தொழிலர்ஆம் அண்ணலார், அறையணிநல்லூர்
சைவனார் அவர், சார்வுஅலால், யாதும் சார்வுஇலோம், நாங்களே.

veyya nOy ilar; tItu ilar; veRiyarAyp piRar pin2 celAr;
ceyvatE alagkAram Am; ivai ivai tERi in2pu uRil,
aiyam ERRu uNum tozilar Am aNNalAr, aRaiyaNi nallUrc
caivan2Ar avar, cArvu alAl, yAtum cArvu ilOm, nAgkaLE.

பொருள்: பிறப்பிறப்பாகிய கொடிய நோயிலர்; வெறி பிடித்தவர் போலப் பிறர்பின் செல்லார் (தற்சுதந்திரம் உடையவர்); அவர் செய்து கொள்வதே அலங்காரம் (தூய உடம்பினர்); இவ்வியல்புகளை ஆராய்ந்து தெளிந்தால், பிச்சையேற்று உண்ணும் தொழிலராகிய தலைவர் அறையணி நல்லூர்ச் சைவனார் (சிவபிரான்) அவருடைய திருவடிச் சார்பினை அல்லாது பேரின்பம் பயக்கும் சார்பு வேறு நாம் இலோம்.

குறிப்புரை: வெய்ய – வெம்மையுடைய. வெறியராய் – வெறி பிடித்தவர்போல. செய்வதே அலங்காரம் ஆம் இவை இவை என்பது செய்வனவே அழகாக்கும் பெற்றி போலும். அவர் 'கொண்டதே கோலம்'

என்றலும் அமையும். எருக்கு முதலிய அணிதல், பாம்பணிதல் முதலியவை நோக்கின், சிவபிரானுக்கு அன்றிப் பிறர்க்கு அவை அலங்காரமாதல் இன்மை விளங்கும். சைவன் – சிவபிரான். சைவா போற்றி (திருவாசகம்) 'மான்மறிவொன்றேத்துஞ் சைவன்' (தி. 4 ப. 62 பா. 4). சைவத்தசெல்வவுருவன் திருநீற்றன் (தி. 7 பா. 838).

Our Lord Civan has no disease due to the sun's heat. He never follows others with violent desires. Whatever He carries to beautify Himself is good enough. We must understand His actions fully well and accept Him as He is. His behaviour of begging alms also must be accepted and we must depend on Him for our ultimate happiness, without any second thought for any other faith. Let us depend only on one Lord, the Lord of Arai-ani-nalloor.

2311. வாக்கியஞ்சொல்லியாரொடும்வகையலாவகைசெய்யன்மின்
சாக்கியஞ்சமணென்றிவைசாரேலும்மரணம்பொடி
ஆக்கியம்மழுவாட்படையண்ணலாரறையணிநல்லூர்ப்
பாக்கியங்குறையுடையீரேற்பறையுமாஞ்செய்தபாவமே. 10

வாக்கியம் சொல்லி, யாரொடும் வகை அலா வகை செய்யன்மின்!
சாக்கியம் சமண் என்று இவை சாரேலும்(ம்) அரணம் பொடி
ஆக்கிய(ம்) மழுவாள்படை அண்ணலார் அறையணிநல்லூர்ப்
பாக்கியம் குறை உடையீரேல், பறையும்ஆம், செய்த பாவமே.

vAkkiyam colli, yAroTum vakai alA vakai ceyyan2min2!
cAkkiyam camaN en2Ru ivai cArElum(m) araNam poTi
Akkiya(m) mazuvAL paTai aNNalAr aRaiyaNi nallUrp
pAkkiyam kuRai uTaiyIrEl, paRaiyum Am, ceyta pAvamE.

பொருள்: பழகத் தகுதி அற்றோர் யாவரோடும் பேச்சுக் கொடுத்து செய்யத் தகாதனவற்றைச் செய்யாதீர்; சாக்கியர், சமணர் என்னும் இவர்களுடன் சாராதீர்; மதில்களைச் சாம்பலாக்கியவர் ஆகிய அந்த மழுவாள் படைத் தலைவர் அறையணி நல்லூரினை இன்றியமையாப் பொருளாக அடைவீரேல் செய்த பாவம் பறந்து போகும்.

குறிப்புரை: வாக்கியம் – பொருள் முற்றுப்பெற்ற சொற்றொடர். சாரேலும் – சாராதீர்கள். சாராதேயுங்கள். சாரேல் – ஒருமை. அதனொடு 'உம்' சேர்த்து முன்னிலைப் பன்மை யேவலாக்கினர். இது திருமுறையில் பல இடத்தில் காணப்படும். (தி.2 ப.119 பா.10; தி.3 ப.91 பா.10) காண்க. அரணம் – திரிபுரம். ஆக்கிய மழு, மகர மெய் விரித்தல் விகாரம். பாக்கியம் குறை – பாக்கியமாகிய இன்றிமையாப் பொருள்.

பாக்கியம் – தெய்வம். (குறள் 1141). எதுவந்தால் முடிவுறும்? அஃது இல்லாமல் குறையாகி அவாவப்படும். படவே குறை என்பதற்கு முடிக்கப்படும் பொருள். இன்றியமையாப் பொருள் என்று பொருளுரைத்தனர் சான்றோர் (குறள் 612).

Oh! people of Arai-ani-nalloor! please do not indulge in long idle talk and improper actions. Do not listen to the words of the Jains and the Buddhists nor join those sections. Oh! You devotees! if you have any attachments to fulfil, you may go to the temple in Arai-ani-nalloor and worship our Lord who burnt the three footresses and completely destroyed those. Of course, He carries a battle axe in one of His hands and is manifest in the temple in Arai-ani-nalloor. If you follow this you will get what you want and will also get rid of the sins of your past life.

2312. கழியுலாங்கடற்கானல்சூழ்கழுமலமமர்தொல்பதிப்
பழியிலாமறைஞானசம்பந்தன்நல்லதோர்பண்பினார்
மொழியினாலறையணிநல்லூர்முக்கண்மூர்த்திதன்தாள்தொழக்
கெழுவினாரவர்தம்மொடுங்கேடில்வாழ்பதிபெறுவரே. 11

கழி உலாம் கடல் கானல் சூழ் கழுமலம் அமர் தொல் பதிப்
பழி இலா மறை ஞானசம்பந்தன், நல்லது ஓர் பண்பின் ஆர்
மொழியினால் அறையணிநல்லூர் முக்கண்மூர்த்திதன் தாள் தொழக்
கெழுவினார் அவர், தம்மொடும் கேடு இல் வாழ் பதி பெறுவரே.

kazi ulAm kaTal kAn2al cUz kazumalam amar tol patip
pazi ilA maRai njAn2acampantan2, nallatu Or paNpin2 Ar
moziyin2Al, aRaiyaNi nallUr mukkaN mUrttitan2 tAL tozak
kezuvin2Ar avar, tammoTum kETu il vAz pati peRuvarE.

பொருள்: கழிகள் உலாவுகின்ற கடற்கானல் சூழப் பெற்ற சீகாழியாகிய பழைமையான பதியில், பழியிலாத மறைகள் வல்ல ஞானசம்பந்தன் நன்மை பயக்கும் இயல்பினதாக மொழிந்த இத்திருப்பதிகத்தைக்கூறி அறையணி நல்லூர் முக்கண் மூர்த்தியினுடைய திருத்தாள்களைத் தொழப் பொருந்தினர் தம்மையும் பெறுவர்; சிவலோகத்தையும் பெறுவர்.

குறிப்புரை: பழி இல்லாமை மறைக்கு அடை பண்பின் ஆர் மொழியினால் – இத்திருப்பதிகத்தால். கெழுவினார் – பொருந்தினவர். கேடு இல்வாழ்பதி – சிவலோகம். தம்மோடும் பதி பெறுவர் என்றதால், தம்மையும் பெறுவர். பதியையும் பெறுவர் என்க. தம்மைப் பெறுதல் – தம்மையுணர்ந்து தலைமையுடைய

தன்னுணர்வார் (சிவஞான அவையடக்கம்) என்றவாறு தம்மையுணர்தல். தன்னுயிர்தானறப் பெற்றானை ஏனைய மன்னுயிரெல்லாந்தொழும் (குறள் 268), பதி – சிவம்.

In the city of Kazhumalam salt pans are many by the side of the seashore. Along with the pans there are many thick gardens all around. In this old city of Kazhumalam our saint Thiru-gnana-Sambandar was born. He is spotless and is an expert in all the four Vedas. He reached the temple in Arai-ani-nalloor and chanted these ten verses. Those virtuous scholars with good manners, reaching the temple in Arai-ani-nalloor, may recite these verses. There they may worship and pray to the triple eyed Lord at His holy feet. They will reach the Sivaloka where faultless saints live by attaining Civagnanams.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

77ஆம் பதிகம் முற்றிற்று
End of 77th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 214 *பதிக எண்: 78*

78. திருவிளநகர் 78. THIRU-VILA-NAGAR

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருவிளநகர் என்னும் இத்திருத்தலமானது காவிரித் தென்கரையில் உள்ள நாற்பதாவது தலம். மயிலாடுதுறைக்குக் கிழக்கே 6 கி. மீ. தூரத்தில் இருக்கின்றது. மயிலாடுதுறையிலிருந்து செம்பொனார் கோயில் செல்லும் பேருந்துகளில் செல்லலாம். இறைவர் திருப்பெயர் துறை காட்டும் வள்ளலார். அருள் வித்தகர் என்னும் அந்தணர் பூக்கூடையை எடுத்துக் கொண்டு காவிரியாற்றில் இறங்கி வந்தபோது, வெள்ளம் அவரை அடித்துக் கொண்டு சென்றது. அவரோ பூக்கூடையை விடாது சிவபெருமானையே சிந்தித்தார். அவருக்கு இறைவர் ஒரு துறையைக் காட்டிக் கரையேறச் செய்து ஞான உபதேசம் செய்தருளிய காரணத்தால் இப்பெயரை இத்தலத்து இறைவர் பெற்றார். காவிரித்துறை காட்டினார் என்று இவ்வூர்த் தேவாரத்திலும் குறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இறைவி திருப்பெயர் தோழிநாயகி இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கின்றது. இது தருமை ஆதீன அருளாளுகைக்கு உட்பட்ட ஆலயமாகும்.

பதிக வரலாறு

சிரபுரத்து வள்ளலார் திருச்செம்பொன்பள்ளியை வணங்கி மெய்த்தகாதலால் விளநகர் விடையவர் பாதம் பத்தரோடு பணிந்து பாடியருளிய இசைப்பதிகம் ஈதாகும்.

திருச்சிற்றம்பலம்

2313. ஒளிரிளம்பிறைசென்னிமேலுடையர்கோவணஆடையர்
குளிரிளம்மழைதவழ்பொழிற்கோலநீர்மல்குகாவிரி
நளிரிளம்புனல்வார்துறைநங்கைகங்கையைநண்ணினார்
மிளிரிளம்பொறியரவினார்மேயதுவிளநகரதே. 1

ஒளிர் இளம்பிறை சென்னிமேல் உடையர், கோவண ஆடையர், -
குளிர் இள(ம்)மழை தவழ் பொழில் கோல நீர் மல்கு காவிரி
நளிர் இளம்புனல் வார் துறை - நங்கைகங்கையை நண்ணினார்,
மிளிர் இளம் பொறி அரவினார், மேயது - விள நகர் அதே.

oLir iLampiRai cen2n2imEl uTaiyar, kOvaNa ATaiyar,--
kuLir iLa(m) mazai tavaz pozil kOla nIr malku kAviri
naLir iLampun2al vAr tuRai--nagkai kagkaiyai naNNin2Ar,
miLir iLam poRi aravin2Ar, mEyatu--viLanakar atE.

பொருள்: பிரகாசிக்கின்ற சிரசின்மீது பிறையை உடையவர்; கோவணம் ஆகிய ஆடையை உடுத்தவர்; குளிர்ந்த நீர்த்துறைகளை உடைய கங்கை நங்கையைப் பொருந்தினவர்; மெல்லிய புள்ளிகளோடு புரள்கின்ற பாம்பினை அணிகலனாக உடையவராகிய இறைவர் மேவியது, கூதன்மாரி தவழும் பொழில்களூடே வளமான, பெருக்கெடுத்து தெளிந்த நீரோடும் காவிரி பாயும் திருவிளநகரதே.

குறிப்புரை: ஒளிர் – பிரகாசிக்கின்ற. சென்னிமேல் பிறை உடையர். கோவணம் ஆகிய ஆடை உடுத்தவர். குளிர் மழைக்கு இளமை. பெய்து வெளிறாமை. நளிர் – குளிர்ச்சி. துறை நதிசாதியடை. மிளிர் – பிறழ்கின்ற, புரள்கின்ற, விளங்குகின்ற. பொறி – பாம்பின் படத்திலுள்ள புள்ளிகள். 'பொறியரவம்' (தி.1 ப.132 பா.2). 'பொறிகிளர்அரவம்' (தி.3 ப.92 பா.3). 'பொறிகிளர் பாம்பு' (தி.3 ப.101 பா.2). 'பொறியரவு' (தி.4 ப.35 பா.6) என்று பயின்ற ஆட்சியாயிருந்தும். ஆகரங்காட்டிய அகராதியில் அராப்பொறி இராப்பொறியாயிற்று.

Our Lord Civan retains the bright young moon on His head. He wears the fore-lap cloth on His loins. He supports His beloved lady of the river the Ganges on His hair. He wears on His waist the bright young snake with dots on its head. Our Lord desires to manifest Himself in the temple in Thiru-vila-nagar. In this city black clouds gather to shower cool rains. The city is surrounded by thick natural forests as well as ponds with cool water. The river is full of fresh water with long banks, such is the beauty of the city.

2314. அக்கரவ்வணிகலனெனஅதனொடார்த்ததோராமைபூண்
டுக்கவர்சுடுநீறணிந்தொளிமல்குபுனற்காவிரிப்
புக்கவர்துயர்கெடுகெனப்பூசுவெண்பொடிமேவிய
மிக்கவர்வழிபாடுசெய்விளநகரவர்மேயதே. 2

அக்கு அர(வ்)வு அணிகலன் எனஅதனொடு ஆர்த்தது ஓர் ஆமை பூண்டு,
உக்கவர் சுடுநீறு அணிந்து, ஒளி மல்கு புனல் காவிரிப்
புக்கவர் - "துயர் கெடுக!" எனப் பூசு வெண்பொடி மேவிய
மிக்கவர் வழிபாடு செய் - விளநகர், அவர் மேயதே.

akku ara(v)vu aNikalan2 en2a atan2oTu Arttatu Or Amai pUNTu,
ukkavar cuTunIRu aNintu, oLi malku pun2al kAvirip
pukkavar--" tuyar keTuka!" en2a pUcu veNpoTi mEviya
mikkavar vazipATu cey--viLanakar, avar mEyatE.

பொருள்: எலும்புடன் பாம்பினையும் அவற்றுடன் ஆமையோட்டினையும் சேர்த்து அணிகலன் என அணிந்து, இறந்தவரைச் சுட்ட சாம்பலைப் பூசி, இறையவர் மேவியது, தெளிந்த நீர்ப்பரப்புள்ள காவிரியாற்றில் புக்கு நீராடி 'துயர் கெடுக' எனத் திருநீற்றுப் பொடி தரித்த மேலோர் வழிபாடு செய்யும் திருவிளநகரதே.

குறிப்புரை: அக்கு அரவு அணிகலன் என அதனொடு ஆர்த்தது. ஓர் ஆமை பூண்டு – எலும்பும் பாம்பும் (அழகுற) அணியும் ஆபரணம் என்ன, அவ்வாபரணத்தோடு கட்டியதோராமை அணிந்து, அணிகலனைச் சுட்டாமல் அக்கரவு – தட்டிற்றெனில் அவற்றொடு எனல் வேண்டும். அக்கர் எனின், வலிந்து பொருள் கொள்ளலாம். உக்கவர் – அழிந்தவர். சுடுநீறு – முற்பதிகத்தின் முதற்பாட்டுரையிற் பார்க்க (ப. 211 பா. 3). 'ஒளிமல்கு புனல் காவிரி' என்றது இன்றும் கண்கூடு. பூண்டு அணிந்து அவர் மேயது விளநகர் என்க. காவிரிப்புக்கவர் என்பது சிவபிரானைக் குறித்ததாகக் கொள்ளின், அணிந்து புக்கவர் என்க. காவிரிப்புக்கவர் – காவிரி நீரிற் புகுந்து முழுகியவர். இது சிவபிரான் தீர்த்தம் அருளற்பொருட்டு எழுந்தருளும் உண்மை குறித்தது. 'துயர்கெடுக' எனச் சங்கற்பஞ்செய்து திருநீறு பூசுதல் வேண்டும். துயர் – பிறவித் துன்பம். துயர்க்கெடு – பாசநீக்கம். துயர் கெடுக என்றார்க்கு இன்புறுக என்றலும் உட்கோளாகும். அவ்வின்பாக்கம் – சிவப்பேறு. இவ்விரண்டும் சேர்ந்ததே ஆன்மலாபமாகிய முத்தி. 'பாசவீடும் சிவப்பேறும்' எனப் பயன் இருவகைப்படும். அவ்விரண்டனுள் பாசவீடாகிய பயனைப் பெறுமாறு உணர்த்து . . . தல் பயனோத்தின் முதற்பாதமாகிய இப்பத்தாஞ் சூத்திரத்தின் கருத்து என்க (சிவஞானபோதம், சூ. 10 மாபாடியம்). 'ஆன்மலாபம் இரண்டனுள் முடிவாய் எஞ்சி நின்ற சிவப்பேறு கூடுமாறுணர்த் . . . துதல் பயனோத்தின் இரண்டாம் பாதமாகிய பதினோராஞ்சூத்திரத்தின் கருத்து என்க' 'ஆன்மலாபம் எனப்படும் பயன் இரண்டனுள் பாசநீக்கம் உணர்த்திய பின்னர்ச் சிவப்பேறு உணர்த்துதல் முறைமை' (மேற்படி சூ. 11). இவ்விரண்டும் 'சிவாயநம' என்று நீறணிந்தேன் என்று, 'திருவருளால்' வந்த தேவாரத்தில் உள்ளன. 'துயர்கெடுப்பன் பூசுவெண்பொடி' என்றதால், பூசும்பொழுது திருவைந்து எழுத்தோதாது பூசுவது தகாது. மிக்கவர் – மேலான அடியவர் வழிபாடு – அருள் வழிபடுஞ் சிவதரிசனம் முதலியவை. 'நிலைநிலையாப் பொருளுணர்ந்து பற்றிகந்து கரணம் ஒரு நெறியே செல்லப் புலனெறி நீத்து அருள்வழிபோதல்' வழிபாடு (திருவிளையாடற்புராணம்).

Our Lord Civan wears over His body a garland made up of human skulls, snakes and also tortoise skull. He applies on His body the ashes of dead people. He is manifest in Thiru-vila-nagar temple. In this city the devotees take bath in the Cauvery river and apply holy ashes over their body and they worship our Lord. They pray to our Lord to get rid of their sufferings in their life.

2315. வாளிசேரடங்கார்மதில்தொலையநூறியவம்பின்வேய்த்
தோளிபாகமமர்ந்தவருயர்ந்ததொல்கடல்நஞ்சுடன்
காளமல்கியகண்டத்தர்கதிர்விரிசுடர்முடியினர்
மீளியேறுகந்தேறினார்மேயதுவிளநகரதே. 3

வாளி சேர் அடங்கார் மதில் தொலைய நூறிய வம்பின் வேய்த்-
தோளி பாகம் அமர்ந்தவர், உயர்ந்த தொல்கடல்நஞ்சு உண்ட
காளம் மல்கிய கண்டத்தர், கதிர் விரி சுடர் முடியினர்,
மீளி ஏறு உகந்து ஏறினார், மேயது - விளநகர் அதே.

vALi cEr aTagkAr matil tolaiya nURiya vampin2 vEyt-
tOLi pAkam amarntavar, uyarnta tol kaTal nanjcu uNTa
kALam malkiya kaNTattar, katir viri cuTar muTiyin2Ar,
mILi ERu ukantu ERin2Ar, mEyatu--viLanakar atE.

பொருள்: படைக்கலன் வலிமை கொண்ட பகைவர்களின் மதில் சாம்பலாகுமாறு அழித்தவர்; புதிய மூங்கிலை ஒக்கும் தோளினை உடைய இறைவியைத் தன் மேனியின் ஒரு பாகமாக விரும்பியவர்; உயர்ந்ததும் பழமையானதுமாகிய பாற்கடலில் தோன்றிய நஞ்சுடன் கருமை நிறம் கொண்ட கண்டத்தர்; செவ்வொளி வீசுகின்ற முடியினை உடையவர்; வலிமை வாய்ந்த எருதினை வாகனமாக ஊர்ந்தவர் ஆகிய இறைவர் மேவியது திருவிளநகரதே.

குறிப்புரை: வாளி – அம்பு. அடங்கார் – பகைவர். மதில் – மும்மதில். நூறிய – அழித்த. வம்பின் வேய்த்தோளி – புதிய மூங்கிலை ஒத்த தோள்களை உடைய உமாதேவியார். இரண்டு கணுக்கட்கும் இடைப்பகுதியே தோளுக்கு ஒப்பு. வம்பு – புதுமை. உயர்ந்த கடல். தொல் கடல் – பாற்கடல். நஞ்சு – விஷம். காளம் – கருமை. மல்கிய – நிறைந்த. காளமல்கிய கண்டத்தர் – திருநீலகண்டர். கதிர் – செவ்வொளி. விரி – விரியும். சுடர்முடியினர் – நெருப்பைப்போலும் சடைமுடியுடையவர். அலரும் எரிசெஞ்சடை (பதி. 37). எரிதருசடை (பதி. 122) எரியார் சடை (பதி. 154) அனல்நிகர்சடை (பதி. 123) கனல் செய்தகமழ்சடை (பதி. 121) தீச்செய்தசடை (பதி. 119) நெருப்பினாற் குவித்தாலொக்கு நீள்சடை (தி. 5 ப. 30

பா.7). நெருப்பராய் நிமிர்ந்தாலொக்கும் நீள்சடை (மேற்படி 9) என்னும் திருமுறைச்சான்று கொண்டு இப்பொருள் எழுதப்பட்டது. மீளி – வலிமை, பெருமையுமாம். ஏறு – விடை, எருது. உகந்து – விரும்பி, உயர்ந்து. மேயது – எழுந்தருளியிருப்பது.

Our Lord Civan fitted the bow properly and completely destroyed the three fortresses of the antagonists, the asuras. He has embedded His consort Uma Devi on the left side of His body. Her shoulders are very attractive like the tender and new bamboo poles. He imbibed the poison that came out of the ancient ocean; because of the poison in side the throat His neck is dark blue in colour. His hair locks are broad and bright like glowing fire. He is pleased to use the strong white bull for His conveyance. This Lord is manifest in Thiru-vila-nagar.

2316. கால்விளங்கெரிகழலினார்கையிலங்கியவேலினார்
நூல்விளங்கியமார்பினார்நோயிலார்பிறப்பும்மிலார்
மால்விளங்கொளிமல்கியமாசிலாமணிமிடறினார்
மேல்விளங்குவெண்பிறையினார்மேயதுவிளநகரதே. 4

கால் விளங்கு எரி கழலினார், கை இலங்கிய வேலினார்,
நூல் விளங்கிய மார்பினார், நோய் இலார், பிறப்பும்(ம்) இலார்,
மால் விளங்கு ஒளி மல்கிய மாசு இலா மணிமிடறினார்,
மேல் விளங்கு வெண்பிறையினார், மேயது - விளநகர் அதே.

kAl viLagku eri kazalin2Ar, kai viLagkiya vElin2Ar,
nUl viLagkiya mArpin2Ar, nOy ilAr, piRappum(m) ilAr,
mAl viLagku oLi malkiya mAcu ilA maNimiTaRin2Ar,
mEl viLagku veNpiRaiyin2Ar; mEyatu--viLanakar atE

பொருள்: காலில் வீரம் தோன்றும் கழலினை உடையவர்; கையில் விளங்கும் வேலினை உடையவர்; முப்புரி நூல் விளங்கும் மார்பினர்; நோகும் துன்பமிலார்; பிறப்பும் இலார்; கருமை நிறம் மல்கிய, குற்றமற்ற நீலமணி போலும் மிடறினை உடையவர்; சென்னியின்மேல் விளங்கும் பிறையினை உடையவர்; ஆகிய இறைவர் மேவியது திருவிளநகரதே.

குறிப்புரை: நூல் – பூணுநூல். நோய் (உம்) இலார் பிறப்பும் இலார் – நோகுந்துன்பமும் இல்லார் பிறத்தலும் இல்லார். மால் – கருமை. மால் விளங்கிய மிடறினார் – திருநீலகண்டர். விளங்கு ஒளி மல்கிய மிடறு மாசிலா மணிமிடறு – குற்றம் இல்லாத நீலமணி போலும் மிடறு. அழகிய மிடறுமாம். மால் விளங்கு

என்பதற்கு – இடமால் தழுவிய பாகம் (தி. 4 ப. 2 பா. 4; ப. 22 பா. 4; ப. 24 பா. 7; ப. 37 பா 7; ப. 40 பா. 5; ப.62 பா. 8; ப. 66 பா 8; ப. 78 பா. 7; தி. 6 ப. 24 பா. 5) என்றும் கூறலாம்.

Our Lord Civan has worn the warrior's trinket on His legs. He holds the trident in one of His hands. Over His body the sacred thread is conspicuous. He has no birth and no death and has no illness. His neck is dark blue in colour like the sapphire gem. It is very bright and conspicuous. He retains the bright white moon of the sky on His head. This Lord is manifest in the temple in Thiru-vila-nagar.

2317. பன்னினார்மறைபாடினார்பாயசீர்ப்பழங்காவிரித்
துன்னுதண்டுறைமுன்னினார்தூநெறிபெறுவாரெனச்
சென்னிதிங்களைப்பொங்கராக்கங்கையோடுடன்சேர்த்தினார்
மின்னுபொன்புரிநூலினார்மேயதுவிளநகரதே. 5

பன்னினார், - மறை, - பாடினார்; பாய சீர்ப் பழங்காவிரித்
துன்னு தண்துறை முன்னினார், தூ நெறி பெறுவார் என;
சென்னி திங்களைப் பொங்கு அரா, கங்கையோடு, உடன்சேர்த்தினார்;
மின்னு பொன் புரிநூலினார்; மேயது - விள நகர் அதே.

man2n2in2Ar,--maRai,--pATin2Ar; pAya cIrp pazagkAvirit
tun2n2u taNtuRai mun2n2in2Ar, tU neRi peRuvAr en2a;
cen2n2i tigkaLaip pogku arA, kagkaiyOTu, uTan2 cErttin2Ar;
min2n2u pon2 purinUlin2Ar; mEyatu--viLa nakar atE.

பொருள்: வேதங்களை ஆராய்ந்தவர்; வேதங்களைப் பாடினவர்; பரவிய பழமையான புண்ணிய காவிரி நதியின் குளிர்ந்த துறையை அணுகினவர்; தூநெறியாகிய சிவகதியைப் பெறுவாரென்று அறிவித்து, சென்னியில் பிறையையும் சினமிக்க அரவினையும் கங்கையுடன் சேர்த்தினவர்; பொன்னால் ஆன பூணூல் அணிந்தவராகிய இறைவர் மேவியது திருவிளநகரதே.

குறிப்புரை: பன்னினார் – சொன்னார், ஆராய்ந்தார். மறை இடை நிலை விளக்கு. பாய – பரவிய. சீர்க்காவிரி, பழங்காவிரி, காவிரித்துறை. முன்னினார் – அணுகினவர். தூநெறி – தூய (சிவ) கதி (பா.11). திங்களை அராவோடும் கங்கையோடும் உடன் சேர்த்தவர். ஒடு உடன் இரண்டும் ஒரு சேர நின்றதறிக.

Our Lord Civan is the author of the four Vedas; He used to chant the songs of the Vedas in musical tone. On His head He wears the baby moon, the lady river Ganges

and the snake, which is ferocious. He wears over His body the three-plaited sacred thread, which is as bright as gold. This Lord is manifest in the temple on the banks of the river Cauvery in the city of Thiru-vila-nagar. He graces His devotees who come and worship Him to enable them to become virtuous. The river Cauvery is widespread and has reputation in all the area and the city of Thiru-vila-nagar is situated on the bank of the river.

2318. தேவரும்மமரர்களுந்திசைகள்மேலுளதெய்வமும்
யாவரும்மறியாததோரமைதியாற்றழலுருவினார்
மூவரும்மிவரென்னவும்முதல்வரும்மிவரென்னவும்
மேவரும்பொருளாயினார்மேயதுவிளநகரதே. 6

தேவரும்(ம்), அமரர்களும், திசைகள்மேல் உள தெய்வமும்,
யாவரும்(ம்) அறியாதது ஓர் அமைதியால்-தழல் உருவினார்;
மூவரும்(ம்) இவர் என்னவும், முதல்வரும்(ம்) இவர் என்னவும்,
மேவ(அ)ரும் பொருள் ஆயினார்; மேயது - விளநகர் அதே.

tEvarum(m), amararkaLum, ticaikaL mEl uLa teyvamum,
yAvarum(m) aRiyAtatu Or amaitiyAl-tazal uruvin2Ar;
mUvarum(m) ivar en2n2avum, mutalvarum(m) ivar en2n2avum,
mEva(a)rum poruL Ayin2Ar; mEyatu--viLanakar atE.

பொருள்: தேவர்கள், அமரர்கள், திசைகளின் மேலுள்ள பிற தெய்வங்கள் யாவராலும் அறிய ஒண்ணாதவர். அவர்கள் அறிய முடியாதபடி தழற்பிழம்பானவர்; முத்தொழிற்கும் கர்த்தராகிய மூவரும் இவரே என்னவும், மூவருக்கும் மேலாகிய முதல்வர் இவரே என்னவும் இம்மூவரும் அடைதற்கு அரிய பொருளாயினாரும் ஆகிய இறைவர் மேயது விளநகரதே.

குறிப்புரை: தேவர் அமரர் என்பர் வெவ்வேறு எனல் காண்க. தேவர் – தெய்வமாவார். அமரர் – மரணமில்லாதவர். அமரார் என்றிருந்தது. கால் குறைந்தது போலும், மரணமில்லாமையுடையவராய்த் தெய்வமாகாதவர் அமரர். தெய்வமாகி மரணம் உடையார் தேவர். 'நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்' (தி. 5 ப. 100 பா. 3) என நுதலுந் தேவாரத்தால் தேவர்க்கு மரணம் உண்மை வெள்ளிடைமலை. 'செத்துச் செத்துப் பிறப்பதே வென்று பத்திசெய் மனப்பாறைகட்கு ஏறுமோ' (தி. 5 ப. 100 பா. 2). திசைகள் மேல் உள தெய்வமும் – அஷ்டதிக் பாலகர்களும் யாவரும் அறியாதது ஓர் அமைதி – 'ஏனையாவரும் எய்திடல் உற்று மற்று இன்னது என்று அறியாத தேனை . . . சிவனை . . . குறுகிலேன்' (திருவாசகம், திருச்சதகம் 42).

மூவரும் இவரே எனவும் முதல்வரும் இவரே எனவும் மேவ அரும்பொருள் ஆயினார். இத்திருப்பாடலில் சிவபரத்துவம் உணர்த்தப்பட்டதறிக. மேவ – அடைய.

The devas who are mortal deities; the amarars - immortal devas, one of the 18 ganangals and the tutelary deities of the eight quarters, or regents of the eight points of the compass, cannot understand our Lord Civan. He looks like a supernal effulgence. The three mortal demigods or deities such as Brahma, Thirumaal and Rudran, they declare that Lord Civan is their chief Supreme Being. Our Lord Civa is such a rare, chief being. He is manifest in the temple in Thiru-vila-nagar.

2319. சொற்றரும்மறைபாடினார்சுடர்விடுஞ்சடைமுடியினார்
கற்றருவ்வடங்கையினார்காவிரித்துறைகாட்டினார்
மற்றருந்திரள்தோளினார்மாசில்வெண்பொடிப்பூசினார்
விற்றரும்மணிமிடறினார்மேயதுவிளநகரதே. 7

சொல்-தரும் மறை பாடினார், சுடர்விடும் சடைமுடியினார்,
கல்-தரு(வ்) வடம் கையினார், காவிரித் துறை காட்டினார்,
மல்-தரும் திரள்தோளினார், மாசு இல் வெண்பொடிப் பூசினார்,
வில்-தரும் மணிமிடறினார், மேயது - விளநகர் அதே.

col-tarum maRai pATin2Ar, cuTarviTum caTaimuTiyin2Ar,
kal-taru(v) vaTam kaiyin2Ar, kAvirit tuRai kATTin2Ar,
mal-tarum tiraL tOLin2Ar, mAcu il veNpoTip pUcin2Ar,
vil-tarum maNimiTaRin2Ar, mEyatu--viLa nakar atE.

பொருள்: எழுதாக் கிளவியாகிய மறையைப் பாடினார்; செஞ்சுடர் வீசும் சடைமுடியினார்; செபமாலையைக் கொண்ட கையினார்; காவிரித் துறையைக் காட்டினார்; வலிய திரண்ட தோளினார்; தூய வெண் பொடியான திருநீற்றினைப் பூசினார்; ஒளி வீசும் நீல மணி மிடற்றினார் ஆகிய இறைவர் மேயது திருவிளநகரதே.

குறிப்புரை: சொல்தரும் மறை – 'எழுதாக்கிளவி' யாதலின் கண்வழியே காணும் எழுத்தாலன்றிச், செவிவழியே கேட்டு உணரச் சொல்லால் தரும் உயர்வுடைய வேதம். 'சொற்றருமறை முதல் தொன்மை நூல் முறை கற்றொளிர் சிவப்பிரகாச நூல்புகல் கொற்றவன் குடிவருகுரவன்' (சிவபுண்ணியத்திரட்டு). கல்தருவடம் – செபமணி மாலை. தருவ்வடம் – வகரம் விரித்தல் விகாரம். மல் – வலிமை.

திரள்தோளினார் – பொடிப் பூசினார் – திருநீற்றை அணிந்தவர், ஒற்றுமிகை. வில் – ஒளி. தரும்மணி – நீலரத்நம். முதலடியில் தருதல் துணைவினை யாதலும் கூடும்.

The ancient four Vedas were not written by hand by anybody. Our Lord Civan who was the author of all the four Vedas used to chant these. Those godly saints who heard His voice repeated it to other scholars. They used to repeat them to others and it went on through generations of scholars. That is why originally the Vedas are called "unwritten, very ancient maxims". His hair lock is bright. He holds in one of His hands the Rosary for silent recitation of mantras. His shoulders are extremely strong, suitable for wrestling. His body is besmeared with the pure, white holy ashes. His neck is dark blue in colour like the sapphire gem. This Lord is manifest in the temple in Thiru-vila-nagar.

2320. படர்தருஞ்சடைமுடியினார்பைங்கழலடிபரவுவார்
அடர்தரும்பிணிகெடுகெனஅருளுவாரவரையினார்
விடர்தரும்மணிமிடறினார்மின்னுபொன்புரிநூலினார்
மிடறரும்படைமழுவினார்மேயதுவிளநகரதே. 8

படர்தரும் சடைமுடியினார், பைங்கழல்அடி பரவுவார்
அடர்தரும் பிணி கெடுக எனஅருளுவார், அரவு அரையினார்,
விடர் தரும் மணி மிடறினார், மின்னு பொன் புரிநூலினார்,
மிடல் தரும் படைமழுவினார், மேயது - விளநகர் அதே.

paTar tarum caTai muTiyin2Ar, paigkazal aTi paravuvAr
aTar tarum piNi keTuka en2a aruLuvAr, aravu araiyin2Ar,
viTar tarum maNi miTaRin2Ar, min2n2u pon2 purinUlin2Ar,
miTal tarum paTaimazuvin2Ar, mEyatu--viLanakar atE.

பொருள்: படரும் சடை முடியினார்; பசிய கழலை அணிந்த கழலடியைப் பணிவார்களுடைய வருத்தும் பிணிநோய்கள் கெடுக என அருளுவார்; பாம்பைக் கச்சாகக் கட்டிய அரையினார்; விடம் தங்கிய கண்டத்தினர்; மின்னுகின்ற பொன்னால் ஆன முப்புரி நூலினர்; வெற்றியைத் தரும் மழுப்படையினர் ஆகிய இறைவர் மேவியது திருவிளநகரதே.

குறிப்புரை: படர்தரும் – படரும். பைங்கழல் அடி – பசிய கழலை அணிந்த திருப்பாதம். ஒற்று விரித்தல் விகாரம். அடர்தரும் – தாக்கும். பிணிகெடுக என அருளுவார். 'துயர் கெடுக என' (பா. 2).

இவ்வீரிடத்தும் வியங்கோள்வினையின் ஈற்றுயிர் கெட்டது. அரவு அரையினார் – பாம்பைக் கச்சாகக் கட்டிய திருவரையுடையவர். விடர் – மலைப்பிளப்பு. மலைகளில் மணி கிடைத்தல்பற்றிக் கூறியது. மின்னுபொன்புரி நூலினார் (பா. 5).

Our Lord Civan's disheveled hair locks are very broad and spread all over the body. These devotees come to the temple and prostrate at the holy feet of our Lord with devotion. Then our God graces them and destroys the afflictions caused to them. His waist is decorated with the snake around it. His neck has the luminosity of dark blue gem that comes out of the cracked rocks of the mountain. He has adorned His body with the three-plaited sacred thread. He holds in one of His hands the battle axe. That Lord is manifest in the temple in Thiru-vila-nagar.

2321. கையிலங்கியவேலினார்தோலினார்கரிகாலினார்
பையிலங்கரவல்குலாள்பாகமாகியபரமனார்
மையிலங்கொளிமல்கியமாசிலாமணிமிடறினார்
மெய்யிலங்குவெண்ணீற்றினார்மேயதுவிளநகரதே. 9

கை இலங்கிய வேலினார், தோலினார், கரி காலினார்,
பை இலங்கு அரவு அல்குலாள் பாகம் ஆகிய பரமனார்,
மை இலங்கு ஒளி மல்கிய மாசு இலா மணிமிடறினார்,
மெய் இலங்கு வெண்நீற்றினார், மேயது - விளநகர் அதே.

kai ilagkiya vElin2Ar, tOlin2Ar, kari kAlin2Ar,
pai ilagku aravu alkulAl2 pAkam Akiya paraman2Ar,
mai ilagku oLi malkiya mAcu ilA maNi miTaRin2Ar,
mey ilagku veN nIRRin2Ar, mEyatu--viLa nakar atE.

பொருள்: கையில் விளங்கும் வேலினை உடையவர்; யானைத் தோலும் புலித்தோலும் தரித்தவர்; சர்வசங்கார காலத்தில் எல்லாம் எரிந்து கரியான பின்னும் தாம் ஒருவராக அழியாது நிற்பவர்; பாம்பின் படம் போன்ற அல்குலை உடைய உமையைப் பாகமாக உடையவர்; கரிய ஒளி நிறைந்த குற்றமிலாத நீலமணி போன்ற கண்டத்தை உடையவர்; திருமேனிமேல் விளங்கும் வெண்ணீற்றினர்; அவ்விறைவர் மேவியது திருவிளநகரதே.

குறிப்புரை: கை இலங்கிய வேலினார் (பா.4), தோலினார் கரிகாலினார் என்பது காலினார் கரித்தோலினார் என்றிருந்து பிறழ்ந்தது போலும். தோலினார் – யானைத்தோலும் புலித்தோலும் தரித்தவர்.

கரிகாலினார் – எல்லாம் வெந்து கரிந்து போகுஞ் சருவசங்கார காலத்தில் தாம் ஒருவரே அழியாது நிற்பவர். கரிதல் – வெந்து கரியான காமன். கால் – காலம். பை – படம். பின்புறத்தில் இடுப்பிற்கும் புறங்காலிற்கும் இடைப்பகுதி. படம் விரித்த பாம்பின் தோற்றம் இருத்தலால், அல்குலுக்கு அரவு ஒப்பாயிற்று. அல்குலைக் குறி எனல் குற்றம். திருமுறையில் அஃது ஒவ்வாது. மெய் – திருமேனி. உண்மையுமாம். உண்மையிலுள்ளது நீறு, சத்தியமாவது நீறு, தத்துவமாவது நீறு (பதி. 202).

Our Lord Civan holds in one of His hands the shining battle axe. He wears on His waist the hide of animals. At the time of the universal deluge and destruction of all things in the world, our Lord Civan alone will be left over finally. He is the only Supreme Being not to be destroyed. Lord Civan has His consort Uma Devi on the left side of His body whose back beauty resembles the widespread hood of the snake. Our Lord's neck resembles the dark sapphire gem. He has smeared on His body the sacred bright holy ashes. This Lord is manifest in the temple in Thiru-vila-nagar.

2322. உள்ளதன்றனைக்காண்பன்கீழென்றமாமணிவண்ணனும்
உள்ளதன்றனைக்காண்பன்மேலென்றமாமலரண்ணலும்
உள்ளதன்றனைக்கண்டிலாரொளியார்தருஞ்சடைமுடியின்மேல்
உள்ளதன்றனைக்கண்டிலாவொளியார்விளநகர்மேயதே. 10

"உள்ள தன் தனைக் காண்பன், கீழ்" என்ற மா மணிவண்ணனும்,
"உள்ள தன் தனைக் காண்பன் மேல்" என்ற மா மலர் அண்ணலும்,
உள்ள தன் தனைக் கண்டிலார்; ஒளி ஆர்தரும் சடைமுடியின்மேல்
உள்ள தன் தனைக் கண்டிலா ஒளியார், விளநகர், மேயதே.

"uLLatan2 tan2aik kANpan2, kIz" en2Ra mA maNivaNNan2um,
"uLLatan2 tan2aik kANpan2, mEl" en2Ra mA malar aNNalum,
uLLatan2 tan2aik kaNTilAr; oLi Artarum caTaimuTiyin2mEl
uLLatan2 tan2aik kaNTilA oLiyAr, viLanakar, mEyatE.

பொருள்: (பாதாளம் ஏழினும்) கீழ் உள்ள பாதத்தைக் காண்பன் என்ற நீலமணி வண்ணனும், (எல்லாவற்றிற்கும்) மேலுள்ள முடியைக் காண்பன் என்ற தாமரை மலர் மேல் இருக்கும் பிரமனும் எங்கும் உள்ள தன்தனை (சிவபிரானை)க் கண்டிலர்; ஒளிதரும் சடைமுடியைச் சிரசின் மேல் உள்ள தன்தனை (எங்கும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் சிவபெருமானை) கீழே காண்பன் என்றும், மேலே காண்பன் என்றும் திருமாலும் பிரமனும் உழன்றும் கண்டிலாத ஒளியராகிய சிவபிரான் மேயது திருவிளநகரே.

குறிப்புரை: கீழ் உள்ளதைக் காண்பன் என்ற மாமணி வண்ணன் – திருமால். மேல் உள்ளதைக் காண்பன் என்ற மாமலர் அண்ணல் – பிரமன். இவ்வாறு கொள்ளாமல், எங்கும் உள்ள தன்னைக் கீழ் காண்பன் மேல் காண்பன் என்றதாக் கொள்ளுதல் சிறப்புடையது. வண்ணனும் அண்ணலும் கண்டிலார் என்க. உள்ளது + அன் + தன் + ஐ – உள்ளதன்றனை எனக் கொண்டு. சிவபிரானை என்று பொருளுரைத்தல் மிக்க பொருத்தமுடையதாம். ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப் பேர்த்து உள்ள வேண்டா பிறப்பு என நீதி நூலும், உள்ளது – சத்து. சத்தெனவே அவிநாபாவமாகிய சிதாநந்தமும் பெறப்படும். சர்வ வியாபகவஸ்துவே உள்ளது எனப்பட்டது.

The black-bodied Thirumaal, a tutelary deity asserted that he would see the holy feet of Lord Civan in the underworld. The other deity Brahma who stays in lotus flower asserted that he would see the holy head of Civan in the sky. But, they both could not see our Lord Civan's head or feet or body, He is the inner reality. None could see the bright baby moon and other things retained by our Lord Civan on His head. For He took the form of supernal effulgence unobserved by anyone, inclusive of these two demigods. He, however, is manifest in the temple in Thiru-vila-nagar to enable His devotees to come to the temple and worship Him.

2323. மென்சிறைவண்டியாழ்முரல்விளநகர்த்துறைமேவிய
நன்பிறைநுதலண்ணலைச்சண்பைஞானசம்பந்தன்சீர்
இன்புறுந்தமிழாற்சொன்னஏத்துவார்வினைநீங்கிப்போய்த்
துன்புறுந்துயரம்மிலாத்தூநெறிபெறுவார்களே. 11

மென்சிறைவண்டு யாழ்முரல் விளநகர்த் துறை மேவிய
நன் பிறை நுதல் அண்ணலைச் சண்பை ஞானசம்பந்தன், சீர்
இன்புஉறும் தமிழால் சொன்ன ஏத்துவார், வினை நீங்கிப் போய்,
துன்புஉறும் துயரம்(ம்) இலாத் தூநெறி பெறுவார்களே.

men2 ciRaivaNTu yAzmural viLanakart tuRai mEviya
nan2 piRai nutal aNNalaic caNpai njAn2acampantan2, cIr
in2pu uRum tamizAl con2n2a EttuvAr, vin2ai nIgkip pOy,
tun2pu uRum tuyaram(m) ilAt tUneRi peRuvArkaLE.

பொருள்: மெல்லிய சிறகுகளை உடைய வண்டுகள் யாழ்போல முரலும் திருவிளநகர்த் துறையில் இருக்கும் அழகிய பிறை அணிந்த நெற்றியை உடைய அண்ணலைச் சண்பை

(சீகாழி) ஞானசம்பந்தன் சீரும் இன்பமும் உடைய தமிழால் சொன்ன திருப்பாடல்களைப் பாடி வணங்குவார் தம்முடைய வினைகள் நீங்கி அகன்றுபோய், துன்புறுத்தும் துயரம் இலராய் தூநெறி பெறுவார்கள்.

குறிப்புரை: வண்டுகள் யாழோசையைச் செய்கின்ற துறை என்று வளங்கூறப்பட்டது. சண்பை – சீகாழிப் பெயர்களுள் ஒன்று. சீர் இன்பு – சீரும் இன்பமும். துன்பு உறும் துயரம் – துன்பமும் அடையும் துயரமும். அண்ணலைச் சொன்னவற்றை ஏத்துவார் தூநெறி பெறுவார்கள்.

Our Lord Civan is manifest in the temple near Cauvery riverbed. Here the beetles with tender wings make musical noise. The noise resembles lute's music. Here our Lord retains the baby moon on His head. Our saint Thiru-gnana-Sambandar was born in Shanbai. He chanted these ten verses in perfect and meticulous Tamil words. Those devotees who can memorise and chant these verses will get rid of their bad karma and the resulting agony. They will also enter the pure celestial world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

78ஆம் பதிகம் முற்றிற்று
End of 78th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 215 *பதிக எண்: 79*

79. திருவாரூர் 79. THIRU-AAROOR

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருவாரூர் என்னும் இத்திருத்தலமானது மயிலாடுதுறை – திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர் – திருத்துறைப்பூண்டி தொடர்வண்டிப் பாதையில் உள்ள தொடர்வண்டி நிலையம். மயிலாடுதுறை, தஞ்சை, காரைக்கால் முதலிய பல நகரங்களிலிருந்து பேருந்துகள் உள்ளன. இது சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் எண்பத்தேழாவது திருத்தலம் ஆகும்.

இவ்வூர் மிகப் பழமை வாய்ந்தது. இச்செய்தியை, 'திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே' என்னும் அப்பர் சுவாமிகள் தேவாரப் பகுதியால் அறியலாம். இவ்வூரில் பூங்கோயில், அரநெறி, பரவையுண் மண்டளி என்னும் மூன்று பாடல் பெற்ற கோயில்கள் இருக்கின்றன. இவற்றுள் புற்றிடங்கொண்டார் (வன்மீக நாதர்) எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலே பூங்கோயில் எனப் பெயர் பெறும். இதுவே திருமூலட்டானம் எனவும் வழங்கப் பெறும். இதற்கு முப்பத்துநான்கு திருப்பதிகங்கள் இருக்கின்றன.

அரநெறி, நமிநந்தி அடிகள் நாயனார் தண்ணீரால் திருவிளக்கேற்றி வைத்து வழிபட்ட திருக்கோயிலாகும். இச்செய்தியைத் திருநாவுக்கரசு பெருந்தகையார் இவ்வூர்த் திருவிருத்தத்தில் 'நம்பி நந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீணாடறியுமன்றே' எனச் சிறப்பித்துள்ளனர். இது, கோயில் திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்டராதித்த சோழ தேவரது மனைவியாராகிய செம்பியன் மாதேவியாரால் கட்டப்பெற்ற கற்றளியை உடையது. இதற்கு அப்பர் அருளிய பதிகங்கள் இரண்டு உள்ளன. இக்கோயில் இரண்டாம் பிரகாரத்தில் மேற்கு முகமாக இருக்கின்றது.

பரவையுள் மண்டளி, பரவை நாச்சியார் தமது மாளிகையின் ஒரு பகுதியில் மண்ணால் சிறுகோயில் கட்டி, அதில் இறைவனை எழுந்தருளுவித்து நாளும் வழிபட்ட கோயிலாகும். இது சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்ற சிறப்புடையது. இது தெற்குக் கோபுரத்திற்கு அண்மையில் இருக்கின்றது (ஒரு காலத்து வருணன் இந்நகர்மீது அனுப்பிய கடலை உண்டமைபற்றி இத்தலத்து பரவையுண் மண்டளி என்னும் பெயரெய்தியது என்றும் கூறுபவர்).

ஆக, இத்தலத்திற்கு முப்பத்தேழு பதிகங்களும் வேறு திருமுறைகளில் பல பாடல்களும் இருக்கின்றன. இத்தலத்தின் தேரும், திருவிழாவும், திருக்கோயிலும், திருக்குளமும் இவ்வூர்

தேவாரங்களில் வைத்துப் பாடப்பெற்றுள்ளன. திருக்குளமும் திருக்கோயிலும், செங்கழுநீர் ஓடையும் தனித்தனி ஐந்து வேலிகள் பரப்புடையன. பிறக்க முத்தி தருவது, தியாகேசர் எழுந்தருளிய ஏழுவிடங்கத் தலங்களுள் முதன்மை பெற்றது. பஞ்ச பூதத் தலங்களில் பிருதிவித் தலமாயுள்ளது. திருமகளால் பூசிக்கப் பெற்றது. இங்குள்ள தேவாசிரிய மண்டபத்திலிருந்த அடியவர்களைக் கண்டுதான் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையை அருளினார். அவர் விருத்தாசலத்தில் மணிமுத்தா நதியில் இட்ட பொன்னை மிகப்பெரிய கமலாலயம் என்னும் திருக்குளத்திலிருந்து எடுத்துப் பரவையார்க்குக் கொடுத்த பழம்பதி இதுவேயாகும். அவர் பொருட்டுப் பரவை நாச்சியாரிடம் சிவபெருமான் இருமுறை நள்ளிரவில் தூது நடந்து சென்ற திருவீதியை உடையது. இச்செய்தியை 'அடியேற்கு எளிவந்த தூதனை' என்னும் அவரது தேவாரப் பகுதி உறுதிப்படுத்தும். காஞ்சிபுரத்தில் ஒருகண் பெற்ற அவர், 'மீளா அடிமை' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி மற்றொரு கண்பார்வையும் பெற்றது இத்தலத்தில்தான். நமிநந்தி அடிகள், செருத்துணை நாயனார், தண்டியடிகள் நாயனார், கழற்சிங்க நாயனார், விறன்மிண்ட நாயனார் இவர்கள் முத்தி பெற்றதும் இப்பதியிலேதான்.

இத்தலம் சோழ மன்னர்கள் முடிசூட்டிக் கொள்ளும் தலங்கள் ஐந்தனுள் ஒன்றாகும். ஒரு குலத்துக்கு ஒரு மகன் உள்ளான் என்பதையும் ஓராது ஓரான்கன்றுக்காகத் தன் மகனது உயிரைப் போக்கிய மனுநீதிச் சோழன் ஆண்டதும் இப்பதியேதான். 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருப்பதால் இப்பதியின் பெருமையை அளவிடுவார் யார்? இதை விரிப்பின் அகலும். தொகுப்பின் எஞ்சும். பெரியபுராணத்தில் உள்ள திருவாரூர்ச் சிறப்பு என்னும் பகுதி படித்து இன்புறுதற்குரியதாகும்.

திருவாதிரைத் திருவிழா, பழங்காலத்தில் இவ்விழா பெருஞ்சிறப்புடன் கொண்டாடப்பட்டு வந்தது. அவ்விழாவை அப்பர் சுவாமிகள் கண்டு களித்து, அதன் சிறப்பை 'முத்து விதானம்' என்று தொடங்கும் ஒரு தனித் திருப்பதிகத்தினால் ஞானசம்பந்தப் பெருந்தகையார்க்குக் கூறி அருளியிருக்கின்றார்கள். பங்குனி உத்திரத் திருவிழா இது மாசி மாதம் அத்த நட்சத்திரத்தில் கொடியேறி, பங்குனி உத்திர நட்சத்திரத்தில் தீர்த்தம் நடைபெறும் திருவிழாவாகும். இவ்விழா நினைவிற்கு வரவே ஒற்றியூரிலிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் சூளுறவையும் மறந்து, திருவாரூருக்குப் புறப்பட்டார் என்று பெரியபுராணம் கூறுகின்றது. அதனால் இவ்விருவிழாக்களும் பழங்கால முதல் நடந்துவரும் சிறப்புடையனவாதலை நன்கறியலாம்.

பூங்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் திருப்பெயர்கள் வன்மீகநாதர், புற்றிடங்கொண்டார், திருமூலட்டானநாதர். இறைவியாரின் திருப்பெயர் அல்லியம் பூங்கோதை

அம்மை. யோகநிலையில் தனிக்கோயிலில் கமலாம்பிகை எழுந்தருளியுள்ளார். இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் தியாகராசர் முதலில் திருமாலால் திருப்பாற்கடலில் வழிபடப் பெற்றவர். பிறகு அவரால் இந்திரனுக்கும், பிறகு இந்திரனால் முசுகுந்த சக்கர வர்த்திக்கும் அளிக்கப்பெற்றது. அந்த முசுகுந்த சக்கரவர்த்தியால் இவ்வூரில் பிரதிட்டை செய்யப் பெற்றவர். மார்கழி திருவாதிரையும் பங்குனி உத்திரமும் இவரை வழிபடற்குரிய சிறந்த நாள்கள் என்று அறிஞர்கள் உரைத்துள்ளனர்.

இவர் எழுந்தருளியிருக்கும் இடம் தேவசபை என்றும், இவருக்குத் தென்றல் காற்று வரும் கல்சன்னல் திருச்சாலகம் என்றும், இவருக்குரிய கொடி தியாகக்கொடி என்றும், இவருடைய தேருக்கு ஆழித்தேர் என்றும், இவரை எழுந்தருளப்பண்ணும் பிள்ளைத் தண்டுகள் திருவாடுதண்டு, மாணிக்கத்தண்டு என்றும் பெயர் பெற்றுள்ளன. இவர் சந்நிதியில் நந்திதேவர் நின்ற திருக்கோலத்தில் உள்ளார். இத்தலத்து வழிபாட்டுக் காலங்களுள் திருவந்திக் காப்பு மிக்க விசேடமுடையது. இவருடைய நடனம் அஜபா நடனம், புயங்க நடனம் எனப் பாராட்டப்படும். ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச சுவாமிகள் தருமை ஆதீனத்தை நிறுவிய ஸ்ரீ குருஞான சம்பந்தருக்கு உபதேசம் செய்த அருள்மிகு சித்தீச்சரம் திருக்கோயில் ஆலயத்தின் வடபால் உள்ளது. தலவிநாயகர் வாதாபி விநாயகர்.

1. திருவாரூர் மும்மணிக்கோவை – இது அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய சேரமான் பெருமான் நாயனாரால் இயற்றப்பெற்றது. பதினோராந் திருமுறையில் உள்ள நூல்களுள் ஒன்றாய் விளங்கும் சிறப்புடையது.
2. கமலாலயச் சிறப்பு – இது சிதம்பரம் மறைஞான சம்பந்தரால் இயற்றப்பெற்றது.
3. திருவாரூர்ப் புராணம் – நிரம்ப அழகிய தேசிகருடைய மாணாக்கராகிய அளகைச் சம்பந்தர் என்பவரால் செய்யப்பெற்றது.
4. திருவாரூர் உலா – அந்தக்கவி வீரராகவ முதலியாரால் இயற்றப்பெற்றது.
5. தியாகராச லீலை – திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. இது முற்றுப்பெறாத நிலையில் உள்ளது.
6. திருவாரூர் நான்மணிமாலை – இதை அருளியவர் குமரகுருபர சுவாமிகள்.
7. தியாகராசப் பள்ளு – இதை ஆக்கியோர் பதினாறாம் நூற்றாண்டில் விளங்கியிருந்த கமலை ஞானப்பிரகாசர் ஆவர்.
8. திருவாரூர்ப் பன்மணி மாலை – இலக்கண விளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் ஆக்கப்பெற்றது.

9. திருவாரூர் ஒரு துறைக்கோவை – இது வெறிவிலக்கு என்னும் ஒரு துறையை வைத்துக் கொண்டு நானூறு பாடல்களால் ஆக்கப் பெற்றதொரு நூல். இதன் ஆசிரியர் கீழ்வேளூர்க் குருசாமி தேசிகர் என்பர்.

10. திருவாரூர்க் கோவை – இது எல்லப்ப நயினார் என்னும் புலவரால் பாடப்பெற்ற சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய நூல்.

11. கமலாம்பிகை பிள்ளைத் தமிழ் – தருமை ஆதீனத்து அடியார் கூட்டங்களில் ஒருவராய் விளங்கியிருந்த சிதம்பர முனிவரால் இயற்றப்பெற்றது.

இவைகளன்றித் திருவாரூர் மாலை, கமலாம்பிகை மாலை முதலான நூல்களும், காளமேகப் புலவர் முதலானோரின் தனிப்பாடல்களும் இருக்கின்றன. கமலாலயத்தின் வடகிழக்கு மூலையில் மாற்றுரைத்த பிள்ளையாரின் திருக்கோயில் இருக்கின்றது. 'திருவாரூர்த் தேரழகு' என்னும் உலக வழக்கு இவ்வூர்த் தேரின் சிறப்பைத் தெரிவிப்பதாகும். தலப்பெருமையை விளக்கும் புராணப் பாடல் ஒன்று பின்வருமாறு:

'திருமகள் தவஞ்செய் செல்வத் திருவாரூர் பணிவ னென்னா
ஒருவனே முடிந டந்து மீண்டிடின் ஒப்பில் காசி
விரிபுனற் கங்கை யாடி மீண்டவ னாவனென்றால்
இருடிகாள் ஆரூர் மேன்மை பிரமற்கு மியம்ப வற்றோ'

– திருவாரூர்ப் புராணம் தலமகிமைச் சுருக்கம்.

பதிக வரலாறு

திருவாரூரிற் புற்றிடங்கொண்டருளும் பொற்றியாகராசரைத் திருநீற்றடைவே மெய்ப்பொருளின்ப வாழ்வு என்று அறிந்து, அநுபவித்து விளங்கும் திருத்தொண்டர்களுடன் இருந்தருளி, வழிபட்டுவருந் திருஞானசம்பந்த சுவாமிகள், திருப்புகலூரில் எழுந்தருளியிருக்கும் திருநாவுக்கரசு சுவாமிகளைக் காண விரும்பினார்கள். ஆரூர்ப்புறத்தே போந்தார்கள். போந்ததும் ஆரூரையே நோக்கி நின்றார்கள். திருப்புகலூர் வருக என்று அழைக்கின்றது. திருவாரூர் செல்லவொட்டாது தடுக்கின்றது. பிள்ளையார் உள்ளம், இடையில் ஒன்றும் துணியாது நிற்கின்றது. அந்நிலையை நோக்கி, அவ்வுள்ளத்தை அறிவுறுத்தும்போது, அவம் இல்லாத நெஞ்சமே நீ அஞ்சாதே. உய்யும்வகையை உணர்வாய் நீ, செம்பொற் புற்றின் மாணிக்கச் செழுஞ்சோதியை நேர்தொழும் சீலத்தை மறவாதே, தொழுதெழுந்து வழிபடு என்றருளியவராய்ப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2324. பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சுட்டவுண்டு
சிவனதாள்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினாயே
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்டன்
அவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 1

பவனம்ஆய், சோடைஆய், நா எழா, பஞ்சு தோய்ச்சு அட்ட உண்டு,
சிவன தாள் சிந்தியாப் பேதைமார், போல, நீ வெள்கினாயே?
கவனம்ஆய்ப் பாய்வதுஓர் ஏறு உகந்து ஏறிய காளகண்டன்-
அவனது ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

pavan2am Ay, cOTai Ay, nA ezA, panjcu tOyccu aTTa uNTu,
civan2a tAL cintiyAp pEtaimAr pOla, nI veLkin2AyE?
kavan2am Ayp pAyvatu Or ERu ukantu ERiya kALa kaNTan2-
avan2atu ArUr tozutu uyyal Am; maiyal koNTu anjcal, nenjcE!

பொருள்: நெஞ்சமே! பிராணன் மேல் வாங்கி, நாவற்றி, நீரினையும் உட்கொள நாவெழாது, பஞ்சில் தோய்த்துப் பிழிந்ததை உண்டு, மரணமுறுங் காலத்தில் சிவனடியைச் சிந்திக்க இயலாத அறிவிலிகளைப் போல நீ நாணம் கொண்டாயே! கவனமாய்ப் பாய்கின்ற ஏறின்மீது உகந்து ஏறிய நீலகண்டனது திருவாரூரைத் தொழுது உய்யலாம்; திருவாரூரைத் தொழப் பெறாமல் உயிர் கழியுமோ என மயக்கம் கொண்டு அஞ்சற்க.

குறிப்புரை: நெஞ்சே! மரணமுறுங்காலத்தில் சிவனடியைச் சிந்திக்கும் பாக்கியமில்லாத அஞ்ஞானிகளைப்போல நாணினையே. விடையின்மேல் ஏறிவந்தருளும் திருநீலகண்டப் பெருமானுடைய திருவாரூரைத் தொழுது உய்யலாகும், மையல்கொண்டு அஞ்சாதே. ஆரூரைத் தொழப்பெறாதே கழியுமோ என்று கருதி மயங்கி அஞ்சாதே மீண்டும் போந்து தொழப்பெறலாம் என்பது கருத்து. கொண்டு அஞ்சேல் என்பது காரணப் பொருட்டாய் வினையெச்சம். கொண்டு என்பது அஞ்சு என்னும் முதனிலை கொண்டது. பவனம் – காற்று. இறக்குங்கால், பிராண வாயு உடலின் நீங்கும் பொருட்டுப் பெருகும். அது மேல்மூச்சு வாங்குகின்றது என்ற வழக்கினாலும் அறியப்படும். நாக்கு உலர்ந்து போம். சோடை – வறட்சி. நாக்கு உலர்ந்து போதலோடு அதன்கண் எய்தும் உணவை உட்செலுத்த எழமாட்டாமலும் போம். நா எழாது என்பதில் துவ்விகுதி கெட்டது. ஒருமையாதலின் வல்லெழுத்து மிக்கது. பன்மையாயின், 'காக்கை கரவா கரைந்துண்ணும்' (குறள் 527) என்பது போன்று இயல்பாகும். நாவானது பால் முதலியவற்றை உட்செலுத்தமாட்டாது (வலி குன்றியது) பற்றி, அருகில் இருப்பவர் அப்பாலையோ பிறிதொருணவையோ பஞ்சில் தோய்த்து உட்புகுமாறு பிழிவர். அப்பிழிவை உயிரை ஓம்புதற்பொருட்டு, இரையை எண்ணிப் பழகிய பழக்கத்தால் இறையை எண்ணாத பேதையர் தம்மை அறியாதே உட்செலுத்தப் பெறுவர். பஞ்சு

தோய்ச்சு அட்ட உண்டு சிந்தியாப்பேதைமார் என்க. தோய்த்து என்பதன் மரூஉ. தோய்ச்சு என்பது போலி என்பாருமுளர். காய்தல் முதலியவும் இவ்வாறு மருவியுள. சிவன் + அ = சிவன. ஆறனுருபு. தாளிரண்டாதலின் பன்மையுருபு நின்றது. 'நுனகழலினை' (திருவிசைப்பா 7). அட்ட – பிழிந்து ஒழுக்க. கவனம் – விரைவு. கண்டனவன் எனப் பிரிக்காமல் கொள்வதே பொருத்தம். பிரித்துச் சுட்டுதல். வேண்டாதது. உய்யலாம் மையல் என்க. மையல் கொண்டஞ்சல் உய்யலாம் என்பாருமுளர். பேதைமார் போலாமையை 'அவமிலா நெஞ்சமே' (பெரிய புராண. 518) எனச் சேக்கிழார் சுவாமிகள் விளக்கியது உணர்க.

"There is nothing new in death", this is a line in Pura Naanooru sung by Kaniyan Poongundranar. Our saint Thiru-gnana-Sambandar explains in detail the moment of death for human beings. The human body struggles and has long breathing just before death and reaches a dry stage. The movement of the tongue stops due to dryness in the tongue and around it. The near and dear ones - the bystanders near the dying man used to squeeze small cotton balls soaked in milk into the mouth of the dying body. Just at the moment of death the ignorant person is unable to think in his mind the holy feet of our Lord Civan. Oh! my dear heart and mind! you are afraid whether this kind of stage will come to you also at the time of your death. With sincere devotion, you may think of our Lord Civan who is manifest in Thiru-aaroor and who sustains the bull, which runs galloping, for His conveyance. You may go to Thiru-aaroor and worship our Lord Neelakandan there. By worshipping Him at Thiru-aaroor you will never get any doubt or vagueness in your mind. And you can definitely ensure salvation.

2325. தந்தையார்போயினார்தாயரும்போயினார்தாமும்போவார்
கொந்தவேல்கொண்டோருகூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டுபோவார்
எந்தநாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாலேழைநெஞ்சே
அந்தணாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 2

தந்தையார் போயினார்; தாயரும் போயினார்; தாமும் போவார்;
கொந்த வேல் கொண்டு ஒரு கூற்றத்தார் பார்க்கின்றார், கொண்டு போவார்;
எந்த நாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால்? ஏழைநெஞ்சே!
அம் தண் ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

tantaiyAr pOyin2Ar; tAyarum pOyin2Ar; tAmum pOvAr;
konta vEl koNTu oru kURRattAr pArkkin2Rar, koNTu pOvAr;
enta nAL vAzvataRkE man2am vaittiyAl? Ezai nenjcE!
an^thaNA rUrthozu thuyyalA maiyalkoNtu anchal n^enychE.

பொருள்: நெஞ்சமே! தந்தையரும் தாயரும் இறந்து போயினர்; அனைவரும் ஒருகாலத்தில் இறந்து போவதற்கு உரியவரே! உயிரைக் கொத்திக் கொண்டு போவதற்கு வேல் கொண்டு கூற்றுவன் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றான். எந்த நாள் வாழ்வதற்கு நீ மனம் வைத்துள்ளாய்? ஏழை நெஞ்சே! எவ்வுயிர்க்கும் செந்தண்மை கொண்டுள்ள ஆரூரைத் தொழுது உய்தி பெறலாம், மையல் கொண்டு அஞ்சற்க.

குறிப்புரை: தந்தையர் தாயர் என்பன பலர்பால். தாமும் போவார் என்னும் பன்மை நோக்கி நின்றன. கொந்த – குத்த. 'கொந்தி அயில் அகல் அம்பால் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து' (பெரிய. கண்ணப்பர். 145). எரிய என்றுமாம். 'கொந்தழல்' (சிந். 1499). கூற்றத்தார் – இயமதூதர். (உடம்பும் உயிரும் கூறுபடுதலைச் செய்பவர்). கொண்டு போவாராய்ப் பார்க்கின்றனர். வைத்தி – வைப்பாய்? எந்த நாள் வாழ்வதற்கு மனம் வைத்தி என்று வினாவியருளினார். மனம் வாழாத நெஞ்சம் எனப்படும். வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே, சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பலகாலும். வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே என்பது திருவாசகம். வாழ்க்கை, உரித்தன்று உனக்கு இவ்வுடலின் தன்மை உண்மை உரைத்தேன் விரதம் எல்லாம் தரித்தும் தவமுயன்றும் வாழாநெஞ்சே (தி. 6 ப. 42 பா. 10) என்றதிற் குறித்தது. தம்முன்னோர் எல்லாரும் இறந்தவாறே தாமும் இறப்பது திண்ணம். மாய்க்க மறலிதூதர் சித்தமாயுள்ளனர். இறப்பு அண்மையில் இருக்கிறதென்றால், இறவாமல் என்றும் வாழ்வதற்கு எந்தநாள் மனம் வைப்பாய்? வாழ்வது – திருவடி நிழலில் அழியாத இன்பத்தைத் துய்த்துக் கொண்டிருப்பது. ஆரூர் தொழுது உய்யலாம். நெஞ்சே மையல் கொண்டு அஞ்சாதே. முதலாவது விளி அதன் போக்கை உணர்த்த. இரண்டாவது விளி அதற்கு அபயம் அளிக்க.

Oh my poor mind! My father died. My mother died. I will also one day die. The servants of Yama (god of death) holding spears wait to plunge them into our body so as to remove the soul. Like this our life is transitory. Oh my dear mind! when are you going to choose deathless life? Do not get frightened due to your delusions. Be calm. If you go to Thiru-aaroor and prostrate before the holy feet of our Lord in Thiru-aaroor

known as Vanmeekanathar, you are sure to get salvation, shed your fear, if you worship our Lord in Thiru-aaroor you can get deliverance (i.e.) deathlessness with perfect awareness of our Lord.

2326. நிணங்குடர்தோல்நரம்பென்புசேராக்கைதான்நிலாயதன்றால்
குணங்களார்க்கல்லதுகுற்றநீங்காதெனக்குலுங்கினாயே
வணங்குவார்வானவர்தானவர்வைகலும்மனங்கொடேத்தும்
அணங்கனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 3

நிணம், குடர், தோல், நரம்பு, என்பு, சேர் ஆக்கைதான் நிலாயது அன்றால்;
குணங்களார்க்கு அல்லது குற்றம் நீங்காது எனக் குலுங்கினாயே?
வணங்குவார் வானவர் தானவர் வைகலும் மனம்கொடு ஏத்தும்
அணங்கன் ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

niNam, kuTar, tOl, narampu, en2pu, cEr AkkaitAn2 nilAyatu an2RAl;
kuNagkaLArkku allatu kuRRam nIgkAtu en2ak kulugkin2AyE?
vaNagkuvAr vAn2avar tAn2avar vaikalum man2amkoTu Ettum
aNagkan2 ArUr tozutu uyyal Am; maiyal koNTu anjcal, nenjcamE!

பொருள்: தசை, குடர், தோல், நரம்பு, எலும்பு ஆகியவற்றால் யாக்கப்பட்ட இவ்வுடம்பு நிலையிலாதது; நல்ல குணங்கள் உடையவர்களுக்கு அல்லாமல் பிறவியாகிய குற்றம் நீங்காது என நடுக்கம் கொண்டாயே; வணங்குவாராய் தேவர்கள், அசுரர்கள் முதலியோர் நாள்தோறும் (உடலால் மட்டுமன்றி) மனத்தாலும் தொழுது ஏத்தும், கடவுளின் ஆரூர் தொழுது உய்யலாம்; மயக்கம் கொண்டு அஞ்சற்க நெஞ்சே!

குறிப்புரை: யாக்கை (கட்டப்பட்டது, உடம்பு). ஆக்கை என்று ஆயிற்று. யகரமெய் முதலிற்கொண்ட சொற்கள் அதனை ஊர்ந்த ஆமுதலாய் வழங்கப்படுதல், யாறு – ஆறு. யாமை – ஆமை. யாய் – ஆய். யாண்டு – ஆண்டு. யானை – ஆனை முதலியவற்றிற் காணப்படும். நிலாயது – நிலாவியது. குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே உடம்போடுயிரிடை நட்பு (குறள் 338). நல்ல குணங்களுடையார்க்கே குற்றம் நீங்கும். அல்லாதார்க்கு (தீய குணங்களை அடைவார்க்கு)க் குற்றம் நீங்காது. குலுங்கினாய் – நடுங்கினாய். சுராசுரர் எல்லாரும் நாடோறும் வணங்குவராய் மணம் (தூபம் முதலியவற்றைக்) கொண்டு ஏத்தும் கடவுள். மனம் என்ற பாடம் கழகப் பதிப்பில் உளது. மனம் கொடு – தியானித்து. அணங்கு – தெய்வத்தன்மை. அணங்கன் – சிவபிரான். குணம், குற்றம் இரண்டும் உடைமை குறிக்கச் சுராசுரரைக் குறித்தார்போலும்.

The human body is made up of fats, intestines, skin, veins, nerves etc. As and when age advances all these parts get deteriorated gradually. Therefore one should not think that, one came into existence in this body permanently. People of good character get rid of all their suffering in their life, whereas people of bad character cannot get rid of their sins. This thought makes, you shiver. The devas, asuras and all other celestials come to Thiru-aaroor and prostrate before our Lord there. With such good devotion they pray and lead good life. If you worship with sincere devotion the Lord of Thiru-aaroor - Vanmeekanathar, you can get salvation. Do not get frightened by delusions and illusions in your mind.

2327. நீதியால்வாழ்கிலைநாள்செலாநின்றனநித்தநோய்கள்
வாதியஆதலால்நாளுநாளின்பமேமருவினாயே
சாதியார்கின்னரர்தருமனும்வருணனுமேத்துமுக்கண்
ஆதியாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 4

நீதியால் வாழ்கிலை; நாள் செலாநின்றன, நித்தம் நோய்கள்
வாதிய; ஆதலால் நாளும் நாள் இன்பமே மருவினாயே?
சாதி ஆர் கின்னரர் தருமனும் வருணனும் ஏத்து முக்கண்
ஆதி ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

nItiyAl vAzkilai; nAL celA nin2Ran2a, nittam nOykaL
vAtiyA; AtalAl nALum nAL in2pamE maruvin2AyE?
cAti Ar kin2n2arar taruman2um varuNan2um Ettu mukkaN
Ati ArUr tozutu uyyal Am; maiyal koNTu anjcal, nenjcE!

பொருள்: நெஞ்சமே! நீ நீதி வழியே வாழவில்லை; ஆதலால் உன் வாழ்நாட்களும் நோய்கள் வாதித்து வீணே கழிகின்றன; இன்பத்தை நீ பொருந்தினாயோ? நற்சாதியார், கின்னரர், இயமன், வருணன் முதலியோர் தொழுது ஏத்தும் மூன்று கண்களையுடைய முதல்வரின் திருவாரூரைத் தொழுது உய்யலாம்; மயக்கம் கொண்டு அஞ்சற்க.

குறிப்புரை: நெஞ்சே, நீதிவழியே வாழவில்லை, காலம்பல வீணே கழிக்கின்றன. நாளும் நோய்கள் வருத்தா. நோய்கள் வாதியா நாள் செலா நின்றன என்று கொண்டு கூட்டறிக. வாதியா – வாதித்து. வருத்தி. இதற்கு வாதிப்பனவாயின என்றுரைப்பது எவ்வாறு? நாளும். நாளும் இன்பத்தையே பொருந்தினாய். சாதி – குலம். ஆர் – பொருந்திய. கின்னரரும் தருமனும் வருணனும் வழிபட்டனரென்று குறித்தார். ஆதியாரூர் என்றது காவிரி நாட்டிடைத் தொன்மையில் மிக்கது. திசையெட்டும் தெரிப்பதற்கு

முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே என்ற கருத்தைக் குறித்தது. ஆதியின் ஆரூர் என்றலுமாம். ஆதி பாதமே ஓதி உய்ம்மினே (தி. 1 ப. 90 பா. 3).

My dear mind! You have not led your life as per morality and right conduct. You have lived sufficiently for long periods. Almost everyday in your life various diseases troubled you and gave you all kinds of uncomfortableness. You, therefore, everyday very much liked to have sensual enjoyments. One of the demigods who was a celestial musician, Kinnarar is supposed to have the figure of a man, and the head of a horse; Dharuman, is the deity of justice and righteousness described as placing four feet on the earth in golden age, three in the silver, two in the bronzen and one in the iron age. Varuna is the deity (demigod) of the ocean and of the maritime tracts, also of rains, these and many others worship and praise our Lord who is the most ancient Supreme Being in Thiru-aaroor. He has a third eye in His forehead. If you also worship Him with sincere devotion you can get atonement and be freed from the pain caused by various diseases. Keep this in mind and do not get frightened by delusions.

2328. பிறவியால்வருவனகேடுளஆதலாற்பெரியஇன்பத்
துறவியார்க்கல்லதுதுன்பநீங்காதெனத்தூங்கினாயே
மறவல்நீமார்க்கமேநண்ணினாய்தீர்த்தநீர்மல்குசென்னி
அறவனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 5

பிறவியால் வருவன கேடு உள ஆதலால், பெரிய இன்பத்
துறவியார்க்கு அல்லது துன்பம் நீங்காது எனத் தூங்கினாயே?
மறவல், நீ மார்க்கமே நண்ணினாய்; தீர்த்தநீர் மல்கு சென்னி
அறவன் ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

piRaviyAl varuvan2a kETu uLa AtalAl, periya in2pat
tuRaviyArkku allatu tun2pam nIgkAtu en2at tUgkin2AyE?
maRaval, nI! mArkkamE naNNin2Ay; tIrtta nIr malku cen2n2i
aRavan2 ArUr tozutu uyyal Am; maiyal koNTu anjcal, nenjcE!

பொருள்: நெஞ்சமே! பிறப்பினால் இறப்பாகிய கேடும் வரும்; ஆதலால் உலகத்தைத் துறந்தவர்க்கே துன்பம் நீங்கும்; துறவாதவர்க்குத் துன்பம் தொலையாது, என்று உளம் சோர்ந்தனையே! நீ ஆரூரை மறவாதே! சன்மார்க்கத்தையே பொருந்தினாய்! கங்கையாகிய

தீர்த்தம் நிறைந்த சென்னியனாகிய அறவனுடைய ஆரூரைத் தொழுது உய்யலாம்; மயக்கங்கொண்டு அஞ்சற்க.

குறிப்புரை: அவமிலா நெஞ்சம் (பெரிய. திருஞா. 518) உயிர்க்குப் பிறத்தலும் இறத்தலும் பெருந்துன்பங்கள். மற்றையெல்லாத் துன்பங்களும் அவற்றிடை விளைவன. இறத்தலும் பிறத்தலால் உண்டாவதே. 'தோற்றம் உண்டேல் மரணம் உண்டு' (தி. 7 பா. 63). பிறந்தால் பிணிப்பட வாய்ந்தசைந்துடலம் புகுந்து நின்று இறக்குமாறுளதே இழித்தேன் பிறப்பினை நான் (தி. 4 ப. 20 பா. 8). கெடுவது இப்பிறவி சீசீ (தி. 4 ப. 76 பா. 10). துறவு வீடு பேரின்பத்தைக் கொடுப்பது. அத்துறவு பிறவியால் விளையும் கேடுகளை உணர்ந்தவர்க்கே உண்டாகும். ஆதலின், பிறவியால் கேடு வருவன உள. ஆதலின் துன்பம் நீங்கும். துறவாதார்க்குத் துன்பம் நீங்காது என்று சோர்ந்தது நெஞ்சு. தூங்குதல் – சோர்தல். நெஞ்சே! துன்பம் நீங்காது எனச் சோர்ந்தாய். சோர்வு வேண்டா. நீ ஆரூரை மறவல் (மறவாதே). மார்க்கமே நண்ணினாய் – சன்மார்க்கத்தினையே சேர்ந்தாய். மார்க்கர்கண்ட நூலோதி வீடு காதலிப்பவர் (சித்தியார்) என்புழிப்போல் நின்றது. தயாமூலதன்மம் என்னும் தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலங்கொடுக்கும் நம்பி (தி. 6 ப. 20 பா. 6)யாயிருத்தலாலும் தயாமூலதன்மவழி எனக்கு நல்கி மனந்திருத்தும் மழபாடி வயிரத்தூண் என்றதில் அடியார்க்கு நல்கும் தயாமூலதன்மவழி யுடையனதலாலும் அறவாழி அந்தணன் சிவனே. அறப் பெருஞ்செல்வி சிவையே. அவன் கல்லாற் கீழிருந்து உரைத்தருளிய அறத்தின் ஏகதேசமே ஏனையோர் பால் இருப்பது. பிறவி அறுப்பீர்காள், அறவனாரூரை மறவாதேத்துமின் துறவியாகுமே என்றதை (தி. 1 ப. 91 பா. 2). மறவல் நெஞ்சமே (தி.1 ப.90 பா. 8). என்பதனோடு ஒப்பு நோக்கி உணர்க. மறவன் என்று பிரிப்பது மறமன்றி அறமாகாது.

My dear mind! Birth in this world brings only harm. You languish in your mind thinking that ascetic people who wish to have eternal bliss alone will get rid of their suffering. You should never forget about our Lord Civan. You may follow the footsteps of great, wise people. Our Lord Civan, the sea of all virtue, supports the river Ganges in His matted hair. So go to Thiru-aaroor and worship our Lord and praise Him, you can get redemption. Do not get frightened by your delusions.

2329. செடிகொள்நோயாக்கையம்பாம்பின்வாய்த்தேரையாய்ச்சிறுபறவை
கடிகொள்பூந்தேன்சுவைத்தின்புறலாமென்றுகருதினாயே
முடிகளால்வானவர்முன்பணிந்தன்பராயேத்துமுக்கண்
அடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 6

செடி கொள் நோய் ஆக்கை அம் பாம்பின்வாய்த் தேரையாய்ச் சிறுபறவை
கடி கொள் பூந்தேன் சுவைத்து இன்புறல் ஆம் என்று கருதினாயே?
முடிகளால் வானவர் முன் பணிந்து, அன்பராய் ஏத்து முக்கண்
அடிகள் ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

ceTi koL nOy Akkai am pAmpin2 vAyt tEraivAyc ciRupaRavai
kaTi koL pUntEn2 cuvaittu in2puRal Am en2Ru karutin2AyE?
muTikaLAl vAn2avar mun2 paNintu, an2parAy Ettum mukkaN
aTikaL ArUr tozutu uyyal Am; maiyal koNTu anjcal nenjcE!

பொருள்: பாவத்துக்கும் துன்பத்துக்கும் ஏதுவான துர்நாற்றம் உள்ள உடம்பினால் இன்பம் அடையலாம் என்பது, பாம்பின் வாயில் உள்ள தேரை, அதன் வாயில் உள்ள வண்டு, அவ்வண்டின் வாயில் உள்ள தேன்துளியைச் சுவைத்து உண்ணலாம் எனக் கருதுவது ஒக்கும்; அத்தகைய உடலின்பத்தை விரும்பினாயே! தலை பெற்றதன் பயனாக வானவர்கள் முடி சாய்த்து அன்பராய்த் தன்முன் பணிந்து வழிபடும் மூன்று கண்களையுடைய சுவாமிகளின் ஆரூரினைத் தொழுது உய்யலாம். மயக்கங்கொண்டு அஞ்சற்க.

குறிப்புரை: செடி – பாவம், துன்பம், தீ நாற்றமுமாம் (தி. 2 ப. 93 பா. 2) (தி. 6 ப. 82 பா. 7) (திருவாலவாயுடையார் புராணம் 54 – 19). நோயையுடைய யாக்கை (பா. 3). ஐம்பாம்பு என்ற பாடமே மதுரை – ஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் பதிப்பிலுள்ளது. அம்பாம்பு என்ற பாடம் சிறவாது. பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை ஓம்பி நீ உய்யக் கொள்ளாய் ஒற்றியூருடைய கோவே (தி. 4 ப. 47 பா. 1). பாம்பின் வாயில் தேரை, தேரையின் வாயில் சிறு பறவை (வண்டு). அவ்வண்டின் வாயில் மலர்த்தேன் துளி. அதைச் சுவைத்துக் கொண்டிருக்கும் அச்சிறுபறவைக்கும், அதை உண்ணும் தேரைக்கும், அதை விழுங்கும் பாம்பிற்கும் அவ்வவ்வுணவால் எய்தும் இன்பத்தின் சிறுமையும் தாம் உற்ற துன்பத்தின் பெருமையும் உவமை. உயிர்கள் விரும்பும் உலக இன்பத்தின் சிறுமையும் அதனை விழைந்து முயன்று தேடிப்பெறும் பொருட்டு உயர்ந்த பிறவியைப் பயன்படுத்தித் திருவருளிற் செலுத்தாமையால், அடையப் பெறாத உண்மை யின்பத்தின் பெருமையும் உவமேயம். சிறு பறவை முதலிய மூன்றற்கும் உள்ளது போல்வதொரு பெருங்கேடு யாக்கையின் செடி கொள் நோய். நோய் பாம்பைக் கொல்லும், பாம்பு தேரையைக் கொல்லும். தேரை வண்டைக் கொல்லும். அந்நிலையில் பாம்பு முதலிய மூன்றும் தேரை, வண்டு, தேன்றுளியால் முறையாகச் சிறிது இன்புறும் செயலால், பின் உள்ள

பெருந்துயரை அறியாதுள்ளன. இந்நிலைமையை நெஞ்சிற்கு அறிவுறுத்தி. நிலைத்த பொருளை நாடுவித்தலே இதன் உட்கோள்.

'அடுகரி தொடர வீழ ஐந்தலை நாகங் காண
இடிகிணற் றறுகின் வேரைப் பற்றிநான் றிடஅவ் வேரைக்
கடுகஓர் எலியும் வந்து கறித்திட அதில்நின் றோனுக்
கிடைதுளி தேன்நக் கின்பம் போலும் இப்பிறவி யின்பம்'

'கொண்டு விண்படர் கருடன்வாய்க் கொடுவரி நாகம்
விண்ட நாகத்தின் வாயினில் வெருண்டவன் றேரை
மண்டு தேரையின் வாய்தனில் அகப்படு தும்பி
வண்டு தேன்நுகர் இன்பமே மானிடர் இன்பம்'

என்னும் தனிப்பாடல்களையும் 'வனப்பாழ்ங்கிணற்றுள் வெம்பாம்பு பற்றும் விடத் தேரை வாய்வண்டு தேன் வேட்டல் போல் விரித்துக் கொடுபோய்விட் . . . கூற்றை எண்ணாது எண்ணும் வேட்கையெல்லாம் விட... அரங்கன் திருத்தாளில் விழுநெஞ்சமே' (திருவரங்கத் தந்தாதி 93) என்பதையும் துன்பத்துள் துன்பமான உலக வாழ்க்கையில் இருந்து கொண்டே தனக்கு உடனே வரக்கடவதாகிய துன்பத்தைச் சிறிதும் நினையாமல் இன்பத்தையே மேன்மேல் அவாவும் பேதைமையியல்புக்கு . . . கானகத்தில் நீரற்ற பாழ்ங் கிணற்றிலே பாம்பின் வாய்ப்பட்டு நஞ்சு தலைக்கு ஏறிய தேரையின் வாயில் அகப்பட்டதொரு வண்டு தேனை விரும்புதலை உவமை கூறினார் என்றும் அதன் விளக்கத்தையும் நோக்கி உணர்க. இதற்குப் பிறர் எழுதியது பொருந்துமா என்று ஆய்க.

The human body, a stone house of sins and agony, smells of offensive odour, the five-headed snake catches the toad with its mouth, the toad catches the beetle with its mouth. The beetle just before being swallowed by the toad thinks it is going to enjoy the honey from the sweet smelling flower. In a similar manner man desires to enjoy worldly pleasures. The devas, as usual, bow their heads piously before our Lord in Thiru-aaroor, and praise Him who has a third eye in His forehead. Oh my dear man! (or mind), if you follow the devas and with sincere devotion worship Lord Civan, you can also get redemption. Do not get frightened by your illusions.

2330. ஏறுமால்யானையேசிவிகையந்தளகமீச்சோப்பிவட்டில்
மாறிவாழுடம்பினார்படுவதோர்நடலைக்குமயங்கினாயே
மாறிலாவனமுலைமங்கையோர்பங்கினர்மதியம்வைத்த
ஆறனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 7

ஏறு மால்யானையே, சிவிகை, அந்தளகம், ஈச்சோப்பி, வட்டின்
மாறி வாழ் உடம்பினார் படுவதுஓர் நடலைக்கு மயங்கினாயே?
மாறு இலா வனமுலை மங்கை ஓர்பங்கினர், மதியம் வைத்த
ஆறன், ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

ERu mAlyAn2aiyE, civikai, antaLakam, IccOppi, vaTTin2
mARi vAz uTampin2Ar paTuvatu Or naTalaikku mayagkin2AyE?
mARu ilA van2amulai magkai Or pagkin2ar, matiyam vaitta
ARan2, ArUr tozutu uyyal Am; maiyal koNTu anjcal, nenjcE!

பொருள்: நெஞ்சமே! மீதூர்கின்ற பெரிய களிறு, சிவிகை, கவசம், ஈச்சோப்பி முதலிய ஆரவாரங்களைக் கண்டு, மாற்றுகின்ற சட்டையைப் போன்று மாறுகின்ற உடல் ஆகிய பொய்க்கு மயக்கம் கொண்டாயே! உமையம்மையைப் பங்கில் கொண்டவர். பிறையையும் கங்கை ஆற்றையும் உடையவரின் திருவாரூரைத் தொழுது உய்யலாம். மயக்கங்கொண்டு அஞ்சற்க.

குறிப்புரை: ஏகாரம் எண்ணுப் பொருட்டு, சிவிகை – பல்லக்கு அந்தளகம் – கவசம் (தமிழ் லெக்ஸிகன் பக். 82). ஈச்சோப்பி – ஈயோட்டி. விருது என்றாருமுளர். வட்டின்மாறி வாழ் உடம்பு – உடையை மாற்றுவது போல் உடம்பினை மாற்றுவது, அவ்வுடம்பினை எடுக்கச் செய்யும் வினைப்பயனாக உயிர்க்கு நிகழ்வது. வட்டு – உடை. வட்டின் – வட்டுப்போல. உடம்பில் மாறி வாழ்தல் ஆவது எடுத்த உடம்பினை விடுத்துப் புதியதோருடம்பிற்புகுதல். யானை, சிவிகை, அந்தளகம், ஈச்சோப்பி என்பவற்றை உடையவர் அருள் வாழ்வு பெறாராயின், அழியாத பேற்றை அடைவாரல்லார். மாறி வாழ் உடம்பினாரேயாவர். அவர் அந்நடலையே படுவர். நடலை – பொய். அதை நன்று என்று மயங்கிப் பற்றின் பிறவி தொலையாது, அல்லியங் கோதையார் பாகராகிய தியாகராயரைத் தொழுது பிறவித் துன்பத்தினின்றும் உய்தி அடையலாம். நெஞ்சே மையல் கொண்டு அஞ்சாதே என்க. செல்வராயிருந்தபோது யானைமீதும் சிவிகை மூதும் சென்றவர், வறியரானபோது, ஈயோட்டும் இழி நிலையும் உண்ணும் வட்டில் மாறும் நிலையும் அடைவது பற்றிக் கூறியதாகக் கொள்ளலும் பொருந்தும்.

Oh my dear heart! The big elephant just before starting for a procession changes its palanquin, armors (coat of mail), banner and other dresses. Like this human beings

in their various rebirths get different kinds of physical appearance according to the place of birth, religion, caste etc. In every such birth you always get perturbed by distress in your life due to ignorance. Our Lord Civan, manifest in Thiru-aaroor, is concomitant with His consort Uma Devi, the most incomparable beauty with graceful breasts. Our Lord retains the baby moon and supports the river Ganges - both on His matted hair. If you worship this Lord with sincere devotion you can get atonement. Do not get frightened by your mental delusions.

2331. என்பினாற்கழிநிரைத்திறைச்சிமண்சுவரெறிந்திதுநம்மில்லம்
புன்புலால்நாறுதோல்போர்த்துப்பொல்லாமையான்முகடுகொண்டு
முன்பெலாமொன்பதுவாய்தலார்குரம்பையின்மூழ்கிடாதே
அன்பனாரூர்தொழுதுய்யலாம்மையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 8

என்பினால் கழி நிரைத்து, இறைச்சிமண் சுவர் எறிந்து - இது நம் இல்லம் -
புன் புலால் நாறு தோல் போர்த்து, பொல்லாமையால் முகடு கொண்டு,
முன்புஎலாம் ஒன்பது வாய்தல் ஆர் குரம்பையில் மூழ்கிடாதே,
அன்பன் ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

en2pin2Al kazi niraittu, iRaicci maN cuvar eRintu--itu nam illam--
pun2 pulAl nARu tOl pOrttu, pollAmaiyAl mukaTu koNTu,
mun2pu elAm on2patu vAytal Ar kurampaiyil mUzkiTAtE,
an2pan2 ArUr tozutu uyyal Am; maiyal koNTu anjcal, nenjcE!

பொருள்: நெஞ்சமே! நம்முடைய இவ்வுடல் என்புகளாகிய கழிகளை வரிசையாக வைத்து நரம்புகளால் கட்டி, மாமிசமாகிய மண்ணைக் குழைத்துச் சுவராக எறிந்து அப்பி, புலால் நாற்றமுடைய தோலினை மேற்கூரையாகப் பொலிவின்றிப் போர்த்து அமைத்த குடிசையாகும். முன்னால் ஒன்பது வாயில்களைக் கொண்ட இக்குடிசையில் கவர்ச்சி கொள்ளாதே! அன்பனின் திருவாரூரைத் தொழுது உய்யலாம். மயக்கங்கொண்டு அஞ்சாதே!

குறிப்புரை: எறிந்து – நீளக்கட்டி. முகடு – மேல்மூடு. ஒன்பது வாய்தல் – நவத்துவாரம். குரம்பை – உடற்குடில் (தி. 4 ப. 33 பா. 4). அன்பன் – சிவபிரான். அன்பே சிவம், கால்கொடுத்தெலும்பு . . . கூரை (தி. 4 ப. 67 பா. 13). ஊன் உடுத்தி ஒன்பது வாசல் வைத்து ஒள்ளெலும்பு தூணா உரோமம் மேய்ந்து தாம் எடுத்த கூரை (தி. 6 ப. 12 பா. 1). முகடு என்பது மூடு என மரூஉவாகும். ஒன்பது வாய்தல் – புழுப்பெய்த

பண்டிதன்னைப் புறம் ஒரு தோலான் மூடி ஒழுக்க அறா ஒன்பது வாய் ஒற்றுமை ஒன்றும் இல்லை (தி. 4 ப. 5 பா. 2). குரம்பை – (தி. 4 ப. 31 பா. 2, 3). புலால் கமழ்பண்டம் (தி. 4 ப. 67 பா. 8).

Oh my dear mind! Our living place called 'Illam' is our physical body. This body is made up of pole-like bones; the walls are made of the flesh of the body; to cover the flesh, the insignificant skin, emitting bad smell, similar to meat is used; the top of the body is made up of a bad, thatched cover. Our body from the beginning has had nine openings. Do not involve yourself fully to nurture this body tenderly. Instead if you worship our Lord in Thiru-aaroor who always graces you, you will get atonement. Do not get frightened by delusions.

2332. தந்தைதாய்தன்னுடன்தோன்றினார்புத்திரர்தாரமென்னும்
பந்தநீங்காதவர்க்குய்ந்துபோக்கில்லெனப்பற்றினாயே
வெந்தநீறடியாராதியார்சோதியார்வேதகீதர்
எந்தையாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 9

தந்தை, தாய், தன்னுடன் தோன்றினார், புத்திரர், தாரம், என்னும்
பந்தம் நீங்காதவர்க்கு, உய்ந்துபோக்கு இல் எனப் பற்றினாயே?
வெந்தநீறுஅடியார், ஆதியார், சோதியார், வேதகீதர்,
எந்தை ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

tantai, tAy, tan2n2uTan2 tOn2Rin2Ar, puttirar, tAram, en2n2um
pantam nIgkAtavarkku, uyntupOkku il en2ap paRRin2AyE?
venta nIRu ATiyAr, AtiyAr, cOtiyAr, vEta kItar,
entai ArUr tozutu uyyal Am; maiyal koNTu anjcal, nenjcE!

பொருள்: நெஞ்சமே! தந்தை, தாய், உடன்பிறந்தோர், மக்கள், மனைவி என்னும் பற்றினை விட்டு நீங்காதவர்களுக்கு உய்யும் வழி இல்லை என்று உள்ளத்தில் ஆரூரனின் திருவடிகளை உறுதியாகப் பற்றிக் கொண்டாய். சுட்டநீற்றினைப் பூசியவர், முதல்வர், சோதியார் மறையைப் பாடியவர், எம்முடைய தந்தையாரின் ஆரூரைத் தொழுது உய்யலாம். மயங்கி அஞ்சற்க.

குறிப்புரை: நெஞ்சே, நீ அஞ்சாதே, தந்தை, தாய், சகோதரர், புத்திரர், மனைவி என்னும் பற்று நீங்காதவர்க்குப் பிறவித் துன்பத்தினின்றும் உய்தி அடையும் உபாயம் இல்லை என்று தெளிந்து, திருவாரூர்த் தியாகராசப் பெருமான் திருவடியே கதி எனப் பற்றிக் கொண்டாய். ஆரூர் தொழுது

உய்யலாம் மையல் கொண்டாய். தந்தையார் தாயாருடன் பிறந்தார், தாரமார் புத்திரார் தாந்தாமாரே. வந்தவாறெங்ஙனே போமாறேதோமாயமா மிதற்கேது மகிழ வேண்டா. சிந்தையீருமக்கொன்று சொல்லக் கேண்மின், திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ்சென்னி யெந்தையார் திருநாம நமச்சிவாய வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே. உடலைத் துறந்து உலகேழுங் கடந்து உலவாத துன்பக் கடலைக் கடந்து உய்யப் போயிடலாகும் . . . சுடலைப் பொடிக் கடவுட்கு அடிமைக்கண் துணி நெஞ்சமே (தி. 6 ப. 93 பா. 10), (தி. 4 ப. 112 பா. 2).

Oh my dear mind! One's own father, mother, brethren, one's children, wife, these are the worldly relationships. Those who are not freed of their bondage and earthly attachment to these relations will not get atonement. You better understand this fact. If you worship our Lord Civan who is manifest in Thiru-aaroor with sincere devotion you can attain salvation. Our Lord has smeared His body with holy ashes; He is the oldest in the universe. He is the supernal effulgence; He used to chant the Vedic songs; He is our own Supreme Being. Do not get frightened by delusions of your mind.

2333. நெடியமால்பிரமனும்நீண்டுமண்ணிடந்தின்னம்நேடிக்காணாப்
படியனார்பவளம்போலுருவனார்பனிவளர்மலையாள்பாக
வடிவனார்மதிபொதிசடையனார்மணியணிகண்டத்தெண்டோள்
அடிகளாரூர்தொழுதுய்யலாம்மையல்கொண்டஞ்சல்நெஞ்சே. 10

நெடிய மால் பிரமனும், நீண்டு மண் இடந்து, இன்னம் நேடிக் காணாப்
படியனார்; பவளம் போல் உருவனார்; பனி வளர் மலையாள் பாக
வடிவனார்; மதி பொதி சடையனார்; மணி அணி கண்டத்து எண்தோள்
அடிகள்; ஆரூர் தொழுது உய்யல் ஆம்; மையல் கொண்டு அஞ்சல், நெஞ்சே!

neTiya mAl piraman2um, nINTu maN iTantu, in2n2am nETik kANAp
paTiyan2Ar; pavaLam pOl uruvan2Ar; pan2i vaLar malaiyAL pAka
vaTivan2Ar; mati poti caTaiyan2Ar; maNi aNi kaNTattu eNtOL
aTikaL; ArUr tozutu uyyal Am; maiyal koNTu anjcal, nenjcE!

பொருள்: நெஞ்சே! நெடிய மால் திருவடியைக் காண மண்ணை இடந்தான்; பிரமன் வானில் திருமுடியைக் காண நீண்டு பறந்தான். இருவரும் காண இயலாத பண்பினர். பவளத்தைப் போன்ற சிவந்த நிறத்தவர். இமய மலையில் வளர்ந்த மலையரசன் மகளைப் பாகமாகக் கொண்ட வடிவினர். பிறை பொலிந்த சடைமுடியினர். நீலமணி போலும் அழகிய

கண்டனார். எட்டுத் தோளினர். இத்தகைய சுவாமிகளது ஆரூர் தொழுது உய்யலாம். மயக்கங்கொண்டு அஞ்சற்க.

குறிப்புரை: நெடிய மால் மண் (பூமியை) இடந்தான் – பேர்த்தான் பிரமன் (வானில் உயர) நீண்டாள், பறந்தான், நீண்டு. இடந்து இன்னம் நேடிக் காணப்பாடியனார் என்க. படி – பண்பு. உருவம் எனில் ஈண்டுந் தீப்பிழம்புருவம் ஆகும். இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே (தி. 6 ப. 97 பா. 10) என்பதில் காட்சிக்குரியது எனல் உணர்க. பாகவடிவு – அர்த்தநாரீச்சுரரூபம். மணி – நீலரத்நம்.

Oh my dear mind! Do you know that the tutelary deity Thirumaal who took the shape of the tallest being started digging the earth in pig's form to see the holy feet of our Lord while Brahma took the shape of a swan and flew over the universe to see our Lord's holy head. But they both failed in their efforts. Our Lord Civan is the illustrious Chief Supreme Being; the beauty of His form is like red coral. His consort Parvathi Devi is on the left side of His body. She is the daughter of the Himalayan King; He retains the baby moon on His head; His neck is very charming like sapphire; He has eight shoulders. If you go to Thiru-aaroor and prostrate at the holy feet of our Lord Civan and worship Him with sincere devotion, you can have salvation. Do not get frightened by your mental delusions.

2334. பல்லிதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூரன்
நல்லவேநல்லவேசொல்லியஞானசம்பந்தனாரூர்
எல்லியம்போதெரியாடுமெம்மீசனையேத்துபாடல்
சொல்லவேவல்லார்தீதிலாரோதநீர்வையகத்தே. 11

பல்இதழ் மாதவி அல்லி வண்டு யாழ் செயும் காழி ஊரன் -
நல்லவே நல்லவே சொல்லிய ஞானசம்பந்தன் - ஆரூர்
எல்லிஅம்போது எரிஆடும் எம் ஈசனை ஏத்து பாடல்
சொல்லவே வல்லார், தீது இலார், ஓதநீர் வையகத்தே.

pal itaz mAtavi alli vaNTu yAz ceyum kAzi Uran2--
nallavE nallavE colliya njAn2acampantan2--ArUr
elli ampOtu eri ATum em Ican2ai Ettu pATal
collavE vallavar, tItu ilAr, Ota nIr vaiyakattE.

பொருள்: பல இதழ்களையுடைய மாதவி, அல்லி முதலிய மலர்களில் மொய்த்து வண்டு யாழ்போல முரல் செய்யும் சீகாழியூரன், நல்லன நல்லனவே சொல்லும் ஞானசம்பந்தன் ஆரூரில் இரவுப் போதில் எரியாடும் என ஈசனை ஏத்திப் பாடிய பாடல்களைச் சொல்ல வல்லவர் இந்தக் கடலால் சூழப்பெற்ற உலகத்தே தீதிலராக வாழ்வர்.

குறிப்புரை: யாழ் – யாழொலியை. நல்லவே நல்லவே என்ற அடுக்கும் ஏகாரமும் ஆசிரியர் திருவாய் மலர்ச்சியின் எய்தும் ஆன்மலாபத்தை உறுதிப்படுத்தி நின்றன. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீயவழுக்கியும் வாயாற்சொலல் (குறள். 139) என்றதனுரையில் பரிமேலழகர் எழுதிய தாற்பரியம் ஈண்டுக் கருதற்பாலது. எல்லியம்போது – இரவு. ஓதம் – கடல் வையகத்தே பாடல் சொல்ல வல்லவர் தீது இலர் என்க. இத்திருப்பதிகம் நித்திய பாராயணத்திற்கு உரியனவற்றுள் ஒன்றாகும்.

Our saint Thiru-gnana-Sambandar is a native of Seerkaazhi city. In this city, the madhavi vine and the delightful bottle flower of the woods are plenty. Among the petals of this flower, which are many in number, the beetles make noise like lute and suck honey from the flowers and enjoy it. Thiru-gnana-Sambandar who used to chant repeatedly virtues in his songs reached the temple in Thiru-aaroor and praised Lord Civan manifested there. Our Lord used to dance on the burning ghat and this is His avocation. Our Thiru-gnana-Sambandar chanted these ten sons praising our Lord Civan. Those devotees who can memorise and chant these ten verses and worship our Lord are people of great wisdom and they will have no blemishes in their life in this world.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

79ஆம் பதிகம் முற்றிற்று
End of 79th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 216 பதிக எண்: 80

80. திருக்கடவூர்மயானம் 80. THIRUK-KADA-OOR-MAYAANAM

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருக்கடவூர் மயானம் என்னும் இத்திருத்தலமானது சிவபெருமான் ஒரு கல்பத்தில் பிரமதேவரை எரித்து, நீறாக்கி அவரை மீளவும் உயிர்ப்பித்துப் படைப்புத் தொழிலை அருளிய தலமாதலின் மயானம் என்னும் பெயர் எய்திற்று என்பர். இதை இக்காலம் மெய்ஞ்ஞானம் என்று மக்கள் வழங்குகின்றனர். இது திருக்கடவூர்க்குக் கிழக்கே 2 கி. மீ. தூரத்தில் இருக்கிறது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் நாற்பத்தெட்டாவது ஆகும்

எமவாதனையைக் கடத்தற்குரிய ஊர் ஆதலின் இப்பெயர் பெற்றது என்பர். (இவ்வூரில் திருக்கடவூர் – வீரட்டானம், திருக்கடவூர் – மயானம் என்னும் இரு (தேவாரம் பெற்ற) தலங்கள் இருக்கின்றன. அவற்றுள் திருக்கடவூர் மயானம் என்பது பற்றியது ஈண்டுத் தரப்பட்டுள்ளது. இறைவரது திருப்பெயர் பெரிய பெருமான் அடிகள், பிரமபுரீசர். இறைவியாரது திருப்பெயர் மலர்க்குழல் மின்னம்மை. காசிதீர்த்தம். இதிலிருந்துதான் திருக்கடவூர் வீரட்டானேசுவரருக்கு நாடோறும் திருமஞ்சனம் கொண்டு வரப்படுகிறது. பங்குனி மாதம் சுக்கிலபட்சம் அசுவதி நட்சத்திரத்திலே இத்தீர்த்தத்தில் மக்கள் மிகுதியாக வந்து நீராடுகின்றனர். பிரமதேவர் பூசித்தது. இது மூவர்களாலும் பாடப்பெற்றது. இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, அப்பர் பதிகம் ஒன்று, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

காழியார் வாழவந்தருளிய மறைவேந்தர் திருநாவுக்கரசு நாயனாரொடு திருஅம்பர் மாகாளம் முதலியவற்றை வழிபட்டுத் தொண்டர்களோடு திருக்கடவூரை அடைந்து, காலனை உதைத்த கால்மலர் வணங்கிச் 'சடையுடையான்' எனத் தொடங்கிப் பாடிப் பரவி அரிதிற்போந்து நண்புடைய குங்கிலியக்கலய நாயனார் திருமனையடைந்து விருந்தமர்ந்த நாளில் திருமயானத்தையும் பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2335. வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி
எரியமதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே. 1

வரிய மறையார், பிறையார், மலை ஓர் சிலையா வணக்கி
எரிய மதில்கள் எய்தார், எறியும் முசலம் உடையார்,
கரிய மிடறும் உடையார் - கடவூர் மயானம் அமர்ந்தார்;
பெரிய விடைமேல் வருவார் அவர் எம்பெருமான் அடிகளே.

variya maRaiyAr, piRaiyAr, mali Or cilaiyA vaNakki
eriya matilkaL eytAr, eRiyum mucalam uTaiyAr,
kariya miTaRum uTaiyAr--kaTavUr mayAn2am amarntAr;
periya viTaimEl varuvAr avar emperumAn2 aTikaLE.

பொருள்: சிரேட்டமான மறைகளையுடைய வேதியர்; பிறை சூடியவர்; மேருமலையை ஒரு வில்லாக வளைத்து சாம்பலாகுமாறு மும்மதில்களை எய்து எரித்தவர்; வீசும் உலக்கையை உடையவர்; நீலகண்டர்; திருக்கடவூர் மயானத்தில் விரும்பித் தங்கினார்; பெரிய எருதின்மேல் வருவார்; அவர் எம்பெருமான்; அடிகளாவார்.

குறிப்புரை: வரிய மறையார் – வரிகளை உடைய வேதியர். வரிய – சிரேட்டமுடைய எனலும் பொருந்தும். மலையை ஒரு சிலையாக வணக்கி என்க. சிலை – வில். வணக்கி – வளைத்து. மதில்கள் எரிய எய்தவர். எறியும் முசலம் – வீசும் உலக்கை. மிடறு – கழுத்து.

Our Lord Civan is the author of the ancient four Vedas in musical tone. He retains the baby moon on His matted hairlocks. Once upon a time He removed the Meru mountain from its original place and used it as His bow. With this bow He shot an arrow on the three flying fortresses in the sky belonging to the asuras. These asuras were afflicting intolerable misery on the devas. The arrow carrying at its tip an extraordinary strong effulgence burnt the three fortresses completely. Our Lord at times used a big iron bar shaped as a weapon in ancient warfare. At times He used to keep it in His hand. His neck is dark blue in colour like the sapphire. He is manifest in the temple of Thiruk-kada-oor-mayaanam. He used to ride on His big bull and moves around. He is our Chief Lord and Preceptor.

2336. மங்கைமணந்தமார்பர்மழுவாள்வலனொன்றேந்திக்
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார்
செங்கண்வெள்ளேறேறிச்செல்வஞ்செய்யாவருவார்
அங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே. 2

மங்கை மணந்த மார்பர், மழுவாள் வலன் ஒன்று ஏந்திக்
கங்கை சடையில் கரந்தார் - கடவூர்மயானம் அமர்ந்தார்;
செங்கண் வெள்ஏறு ஏறிச் செல்வம் செய்யா வருவார்,
அம் கை ஏறிய மறியார் அவர் எம்பெருமான் அடிகளே.

magkai maNanta mArpar, mazuvAL valan2 on2Ru Entik
kagkai caTaiyil karantAr--kaTavUr mayAn2am amarntAr;
cegkaN veN ERu ERic celvam ceyyA varuvAr,
am kai ERiya maRiyAr avar emperumAn2 aTikaLE.

பொருள்: உமையம்மையை இடப்பாகத்தில் உடையவர்; மழுவாயுதத்தை வலக்கையில் ஏந்தியவர்; கங்கையாற்றின் பெருவெள்ளத்தைச் சடையில் மறைத்தவர்; திருக்கடவூர் மயானத்தில் விரும்பித் தங்கினார்; சிவந்த கண்ணையுடைய வெள்ளேறு ஏறி அடியார்களுக்குத் திருவருட்காட்சி அளித்து வருவார்; அங்கையில் தங்கிய மான்மறியை உடையவர்; அவர் எம் பெருமான்; அடிகளாவார்.

குறிப்புரை: மங்கை மணந்த மார்பர் – உமாதேவியாரை இடப்பால் உடையவர். மார்பு இடப்பக்கத்து. 'போகமார்த்த பூண் முலையாள் தன்னோடும் பொன்னகலம் பாகமார்த்த . . . அண்ணல்'. வலன் – வலக்கையில். கரந்தோர் – மறைத்தார். செல்வம் – அடியார்கட்குத் திருவருட் காட்சி கிடைக்கும் பாக்கியம். செய்யா – செய்து. மறி – மான்கன்று (பா. 5). அதை ஏந்தியதால் அங்கை ஏறிய மறியார் என்றார்.

Our Lord Civan is manifest in the temple in the city called Thiruk-kada-oor-mayaanam. He has embedded His consort Uma Devi on the left side of His body. He carries a battleaxe in His right hand. He supports the river Ganges in His matted hairlocks and conceals her. It is a divine vision, rich too, when He rides on the white and red eyed bull to move about. He holds in His charming hand a deer. He is our Lord and the Chief Supporter.

2337. ஈடலிடபமிசையஏறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பாடலிசைகொள்கருவிபடுதம்பலவும்பயில்வார்
ஆடலரவமுடையாரவரெம்பெருமானடிகளே. 3

ஈடு அல் இடபம் இசைய ஏறி, மழு ஒன்று ஏந்தி,
காடு அது இடமா உடையார் - கடவூர்மயானம் அமர்ந்தார்;
பாடல் இசை கொள் கருவி படுதம்பலவும் பயில்வார்,
ஆடல் அரவம் உடையார் அவர் எம்பெருமான் அடிகளே.

ITu al iTapam icaiya ERi, mazu on2Ru Enti,
kATu atu iTamA uTaiyAr--kaTavUr mayAn2am amarntAr;
pATal icai koL karuvi paTutam palavum payilvAr,
ATal aravam uTaiyAr avar emperumAn2 aTikaLE.

பொருள்: தனக்கு நிகர் வேறு இல்லாத இடபத்தின் மேலேறி, மழுவாயுதம் ஒன்றேந்தி, இடுகாட்டினைத் தன் இடமாகக் கொண்டவர்; திருக்கடவூர் மயானத்தில் விரும்பி அமர்ந்தார்; இசைகொளப் பாடுவார்; கருவிகள் இசைப்பார்; கூத்துப்பலவும் ஆடுவார்; ஆடுகின்ற அரவத்தை உடையவர்; அவர் எம் பெருமான்; அடிகளாவர்.

குறிப்புரை: ஈடு + அல் = ஈடல். தன்னொடு பிறிதொன்று ஒப்பு அல்லாத இடபம். காடது இடமாக உடையவர். பாடல் இசை – பாடுதலில் இசை. படுதம் – கூத்து. 'பாகம் உமையோடாகப் படிதம் பல பாட' (பதி. 198 பா. 4) என்பதில் 'படிதம்' என்றுள்ளதறிக.

Our Lord Civan, known in this place as Brahmapureeswarar is manifest in the temple in Thiruk-kada-oor-mayaanam. He moves about riding on an incomparable bull. He carries a battleaxe in one of His hands. He uses the burning ghat as His place of avocation. He used to chant the songs of Vedas etc., in musical tone with related instruments and dances. He is our Lord and Chief Supporter.

2338. இறைநின்றிலங்குவளையாளிளையாளொருபாலுடையார்
மறைநின்றிலங்குமொழியார்மலையார்மனத்தின்மிசையார்
கறைநின்றிலங்குபொழில்சூழ்கடவூர்மயானமமர்ந்தார்
பிறைநின்றிலங்குசடையாரவரெம்பெருமானடிகளே. 4

இறை நின்று இலங்கு வளையாள்இளையாள் ஒருபால் உடையார்,
மறை நின்று இலங்கு மொழியார், மலையார், மனத்தின்மிசையார் -
கறை நின்று இலங்கு பொழில் சூழ் கடவூர்மயானம் அமர்ந்தார்;
பிறை நின்று இலங்கு சடையார் அவர் எம்பெருமான் அடிகளே.

iRai nin2Ru ilagku vaLaiyAL iLaiyAL orupAl uTaiyAr,
maRai nin2Ru ilagku moziyAr, malaiyAr, man2attin2 micaiyAr--
kaRai nin2Ru ilagku pozil cUz kaTavUr mayAn2am amarntAr;
piRai nin2Ru ilagku caTaiyAr avar emperumAn2 aTikaLE.

பொருள்: முன்கையில் வளையல்கள் உடையவளாகிய இளமங்கை உமையை ஒருபாகமாக உடையவர்; வேத மொழிக்குப் பொருளாயிருப்பவர்; மயக்கம் இல்லாத அடியவருடைய மனத்தில் இருப்பவர்; கரிய நிறம் தங்கிய பொழில்கள் சூழ்ந்த திருக்கடவூர் மயானத்தில் அமர்ந்தவர்; பிறை தங்கி விளங்கும் சடையை உடையவர். அவர் எம் பெருமான் அடிகளே.

குறிப்புரை: இறை – முன்கை. வளையாள் – வளையலையுடையவள். இளையாள் – தேவியாரைக் குறித்தவை. மறை . . . மொழி யார் – வேதவாக்கியப் பொருளாயுள்ளவர். மலையார் – மலைத்தல் இல்லாதவர். தெளிந்தவர். அவர் மனத்தின் மிசையார். மனம் ஊர்தி. சிவபிரான் – ஊர்பவர். 'அன்பர் மனமாங்குதிரை'. கறை – கறுப்பு நிறம். மரச்செறிவால் இருள்மிக்க சோலை.

Our Lord Civan retains His consort Uma Devi on the left of His body. She wears bangles in her forearms, very bright and prominent. She is a young and tender and good-looking goddess. He is the author of the four Vedas and used to chant them. He is manifest in the minds of great saints of good wisdom. His avocation is to be present at the dark burning ghat surrounded by thick dark forests. On His matted hair He retains the moon. He is our Lord and Chief Supporter.

2339. வெள்ளையெருத்தின்மிசையார்விரிதோடொருகாதிலங்கத்
துள்ளுமிளமான்மறியார்சுடர்பொற்சடைகள்துலங்கக்
கள்ளநகுவெண்டலையார்கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையாரவரெம்பெருமானடிகளே. 5

வெள்ளைஎருத்தின்மிசையார், விரி தோடு ஒரு காது இலங்கத்
துள்ளும் இளமான்மறியார், சுடர் பொன்சடைகள் துலங்கக்
கள்ளம் நகுவெண்தலையார் - கடவூர்மயானம் அமர்ந்தார்;
பிள்ளைமதியம் உடையார் அவர் எம்பெருமான் அடிகளே.

veLLai eruttin2 micaiyAr, viri tOTu oru kAtu ilagkat
tuLLum iLamAn2 maRiyAr, cuTar pon2 caTaikaL tuLagkak
kaLLam naku veNtalaiyAr--kaTavUr mayAn2am amarntAr;
piLLai matiyam uTaiyAr avar emperumAn2 aTikaLE.

பொருள்: வெள்ளை எருதின் மேல் வருவார். ஒளிவிரியும் தோடு ஒரு காதில் விளங்க, துள்ளுகின்ற மான்மறியினை ஒருகரத்தில் உடையவர்; பொன்னொளி சுடர்விடுகின்ற சடைகள் அசைய அதன்மீது நகைசெய்யும் வெள்ளைத் தலையை உடையவர்; திருக்கடவூர் மயானத்தில் அமர்ந்தவர்; இளம் பிறையை உடையவர்; அவர் எம் பெருமான் அடிகளே.

குறிப்புரை: ஒளிவிரியும் தோடு ஒரு காதிலும், குழை ஒரு காதிலும் விளங்க. மான்மறி (பா. 2) துலங்க – ஒளி செய்ய. பிள்ளை மதியம் – இளம்பிறை.

Our Lord Civan is manifest in the temple city of Thiruk-kada-oor-mayaanam. He goes round riding on the white bull. In one of His ears a very bright earring made of tender leaf hangs. In one of His hands He holds the deer, young and jumping about. His golden coloured matted hair is very bright and prominent. By the side of the earring He wears the white head gear which makes derision. His avocation is to visit the burning ghat; He retains the baby moon in His mattress. He is our Lord and Chief Supporter.

2340. பொன்றாதுதிருமணங்கொள்புனைபூங்கொன்றைபுனைந்தார்
ஒன்றாவெள்ளேறுயர்த்ததுடையாரதுவேயூர்வார்
கன்றாவினஞ்சூழ்புறவிற்கடவூர்மயானமமர்ந்தார்
பின்றாழ்சடையாரொருவரவரெம்பெருமானடிகளே. 6

பொன்தாது உதிரும் மணம் கொள் புனை பூங்கொன்றை புனைந்தார்,
ஒன்றா வெள்ஏறு உயர்த்தது உடையார், அதுவே ஊர்வார் -
கன்று ஆஇனம் சூழ் புறவின் கடவூர்மயானம் அமர்ந்தார்;
பின் தாழ்சடையார், ஒருவர்அவர் எம்பெருமான் அடிகளே.

pon2tAtu utirum maNam koL pun2ai pUgkon2Rai pun2aintAr,
on2RA veL ERu uyarttatu uTaiyAr, atuvE UrvAr--
kan2Ru A in2am cUz puRavin2 kaTavUr mayAn2am amarntAr;
pin2 tAzcaTaiyAr, oruvar avar emperumAn2 aTikaLE.

பொருள்: பொன்னிறமான தாதுக்கள் உதிரும் மணம் வீசி அழகு செய்யும் கொன்றை மலரைப் புனைந்தார்; சிறப்புடைய வெள்ளை ஏற்றுக் கொடியினை உயர்த்தார்; அந்த வெள்ளையேற்றினையே வாகனமாக ஊர்வார்; கன்றுகளை உடைய ஆவினஞ் சூழ்ந்த முல்லைக் காடுடைய திருக்கடவூர் மயானத்தில் அமர்ந்தார்; பின்னால் தாழ்ந்த சடையை உடைய ஒப்பற்றவர்; அவர் எம்பெருமான் அடிகளே.

குறிப்புரை: பொன்தாது உதிரும் கொன்றை, மணம் கொள் கொன்றை. புனை கொன்றை. பூங்கொன்றை என்று இயைத்துக் கொள்க. புனை – அழகு செய்யும். புனைந்தார் – அணிந்தார். வெள்ளேறு – வெளியவிடை. ஒன்றா – ஒன்றாக. சிறப்புடையதாக. உயர்த்தது – தூக்கியது. அதுவே – அவ்விடையே. கன்று ஆ இனம் – கன்றுகளை உடைய பசுக்கூட்டம். புறவு – காடு.

Our Lord Civan crowns His head with garlands of cassia fistula flowers that have golden coloured pollen grains, these flowers are very fragrant. His flag has the figure of the bull as its insignia. He uses the white bull as His conveyance. The cows and their calves graze in the forests of the city. Our Lord has manifested Himself in Thiruk-kada-oor-mayaanam. His long matted hair laps over His back. He is non-pareil; He is our Lord and Chief Supporter. At the back of His head, His hair hangs upto a very low level. He has no peers. He is our Lord and Chief Supporter.

2341. பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையார்
ஆசைதீரக்கொடுப்பாரலங்கல்விடைமேல்வருவார்
காசைமலர்போல்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே. 7

பாசம்ஆன களைவார், பரிவார்க்கு அமுதம் அனையார்,
ஆசை தீரக் கொடுப்பார், அலங்கல் விடைமேல் வருவார்,
காசைமலர் போல் மிடற்றார் - கடவூர்மயானம் அமர்ந்தார்;
பேச வருவார் ஒருவர் அவர் எம்பெருமான் அடிகளே.

pAcam An2a kaLaivAr, parivArkku amutam an2aiyAr,
Acai tIrak koTuppAr, alagkal viTai mEl varuvAr;
kAcai malar pOl miTaRRAr--kaTavUr mayAn2am amarntAr;
pEca varuvAr, oruvar avar emperumAn2 aTikaLE.

பொருள்: மும்மலங்களையும் அவற்றின் காரியங்களையும் போக்குவார்; அன்பர்களுக்கு அமுதம் போன்று இன்பமளிப்பார்; மூவாசைகளும் தீரச் செய்வார்; மாலையணிந்த விடைமீது வருவார்; காயாம்பூ மலர் போன்ற நிறத்த கண்டத்தர்; திருக்கடவூர் மயானத்தில் அமர்ந்தார்; அனைவரும் புகழுமாறு வருவார்; அவர் எம்பெருமான் அடிகளே.

குறிப்புரை: பாசம் ஆன களைவார் – மலம் ஆயின ஐந்தையும் போக்குவார். ஆணவம், மாயை, கன்மம் என்று மும்மலமும். அவற்றையே மாயேயம். திரோதன சத்தியுடன் கூட்டி ஐம்மலமும் உண்டு என்பர்.

சிவஞானமாபாடியம் சூ. 2 அதி. 2. பார்க்க 'மலங்கள் ஐந்தாற் கழல்வன்' (திருவாசகம் 133). ஆன – வினைப்பெயர். பரிவார்க்கு – அன்பர்க்கு. பரிவு – அன்பு. அமுதம் அனையார் – அமிர்தத்தைப் போல்பவர். ஆசைதீர – மூவாசையும் (மண், பொன், பெண்) ஒழிய. அலங்கல் – மாலை. காசை மலர் – காயாம்பூ; திருநீல கண்டத்துக்கு ஒப்புரைப்பது மரபு.

Our Lord Civan is manifest in the temple situated in the city of Thiruk-kada-oor-mayaanam. He annihilates the three evils in the soul of His devotees. For His sincere devotees He is like amrit. He graces His devotees to chase desires from their mind. He rides on His bull which wears garland of flowers. His neck is dark blue in colour. All the people praise His fame and come to the temple and worship Him. He is an incomparable Supreme Being. He is our Lord and Chief Supporter.

2342. செற்றஅரக்கனலறத்திகழ்சேவடிமெல்விரலாற்
கற்குன்றடர்த்தபெருமான்கடவூர்மயானமமர்ந்தார்
மற்றொன்றிணையில்வலியமாசில்வெள்ளிமலைபோல்
பெற்றொன்றேறிவருவாரவரெம்பெருமானடிகளே. 8

செற்ற அரக்கன் அலறத் திகழ் சேவடி மெல்விரலால்
கல்குன்று அடர்த்த பெருமான் - கடவூர்மயானம் அமர்ந்தார்;
மற்று ஒன்று இணை இல் வலிய மாசு இல் வெள்ளிமலை போல்
பெற்றொன்று ஏறி வருவார் அவர் எம்பெருமான் அடிகளே.

ceRRa arakkan2 alaRat tikaz cEvaTi melviralAl
kal kun2Ru aTartta perumAn2--kaTavUr mayAn2am amarntAr;
maRRu on2Ru iNai il valiya mAcu il veLLimalai pOl
peRRon2Ru ERi varuvAr avar emperumAn2 aTikaLE.

பொருள்: சினங்கொண்டு மாறுபட்ட அரக்கன் இராவணன் அலற தன் திருவடியின் திருவிரலால் அவனைக் கயிலை மலையின்கீழ் நசுக்கிய பெருமான், திருக்கடவூர் மயானத்தில் அமர்ந்தார்; பிறிதொன்று இணையில்லாத, வலிய குற்றம் இல்லாத வெள்ளிமலை போலும் எருது ஒன்று ஏறி வருவார்; அவர் எம் பெருமான் அடிகளே.

குறிப்புரை: செற்ற – கோபத்தையுடைய. கற்குன்று – கயிலைமலை. மற்று ஒன்று இணை இல்லாத வலிய மாசு (குற்றம்) இல்லாத வெள்ளி மலைபோலும் பெற்று (எருது) ஒன்று ஏறிவருவார் என்க. பெற்றம் – பெற்று என்று நின்றது.

Raavanan, the king of Sri Lanka was a very angry king; he got vexed when our Lord crushed him under the mountain. Our Lord Civan pressed His mount Kailash with His toe. Thus our Lord controlled his wickedness. Our Lord is manifest in the temple in the city of Thiruk-kada-oor-mayaanam. He rides on His bull which is incomparable. The bull is blemishless and appears like a silver mountain. He is our Lord and our Chief Supporter.

2343. வருமாகரியினுரியார்வளர்புன்சடையார்விடையார்
கருமானுரிதோலுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
திருமாலொடுநான்முகனுந்தேர்ந்துங்காணமுன்னொண்ணாப்
பெருமானெனவும்வருவாரவரெம்பெருமானடிகளே. 9

வரு மா கரியின் உரியார், வளர்புன்சடையார், விடையார்,
கருமான்உரி-தோல் உடையார் - கடவூர்மயானம் அமர்ந்தார்;
திருமாலொடு நான்முகனும் தேர்ந்தும் காண முன் ஒண்ணாப்
பெருமான் எனவும் வருவார் அவர் எம்பெருமான் அடிகளே.

varu mA kariyin2 uriyAr, vaLarpun2 caTaiyAr, viTaiyAr,
karumAn2 uri-tOl uTaiyAr--kaTavUr mayAn2am amarntAr;
tirumAloTu nAn2 mukan2um tErntum kANa mun2 oNNAp
perumAn2 en2avum varuvAr avar emperumAn2 aTikaLE.

பொருள்: தன்மேல் அடர்த்து வந்த பெரிய களிற்றின் உரியை உடையவர்; நீண்ட பொன்னிறமான சடையுடையார்; மானின் உரியாகிய தோல் உடையார்; திருமாலோடு நான்முகனும் ஆராய்ந்தும் காண ஒண்ணாத பெருமான் என வருவார். அவர் எம் பெருமான் அடிகளே.

குறிப்புரை: மான் உரிதோல் – மானை உரித்த தோல். மானினது உரியாகிய தோல் எனலுமாம். முன்னது வினைத்தொகை. பின்னது பண்புத்தொகையாதல் உரித்தோல் என்று நிற்புழி. ஒண்ணா – ஒன்றாத. மரூஉ. கன்று – கண்ணு. மூன்று – மூணு முதலியவைபோல.

A huge elephant rushed towards our Lord to kill Him. Our Lord killed the elephant and stripped off its hide and covered His body with that hide. His tresses are very long and thin. It dangles behind His head. He uses His bull for His conveyance. He wears the hide of a deer as His dress for His waist. He is manifest in the temple

situated in the city of Thiruk-kada-oor-mayaanam. Both Thirumaal and the four-faced Brahma searched long to see our Lord but failed. Everyone speaks His fame to that extent. He is our Lord and Chief Supporter.

2344. தூயவிடைமேல்வருவார்துன்னாருடையமதில்கள்
காயவேவச்செற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொல்லுஞ்சிறுபுன்தேரரமணர்
பேய்பேயென்னவருவாரவரெம்பெருமானடிகளே. 10

தூய விடைமேல் வருவார், துன்னார் உடைய மதில்கள்
காய வேவச் செற்றார் - கடவூர்மயானம் அமர்ந்தார்;
தீய கருமம் சொல்லும் சிறு புன் தேரர், அமணர்,
"பேய், பேய்!" என்ன வருவார் அவர் எம்பெருமான் அடிகளே.

tUya viTai mEl varuvAr, tun2n2Ar uTaiya matilkaL
kAya vEvac ceRRAr-- kaTavUr mayAn2am amarntAr;
tIya karumam collum ciRu pun2 tErar, amaNar,
"pEy, pEy!" en2n2a varuvAr avar emperumAn2 aTikaLE.

பொருள்: புனிதமான விடையின்மேல் வருவார். பகைவருடைய மதில்கள் எரிந்து வேகச் சினந்தார்; திருக்கடவூர் மயானம் அமர்ந்தார். தீய செயல்களைச் செய்யச் சொல்லும் சிறுமையுடைய புல்லியதோர் அமணர் இறையைப் பேய் பேய் என்ன வருவார் அவர் எம் பெருமான் அடிகளே.

குறிப்புரை: துன்னார் – பகைவர். செற்றார் – கோபித்தார். தீய கருமம் – கெட்ட செயல்கள். இறையை. பேய் பேய் என்பார் தேரரும் அமணரும், சிறுமை புன்மை இரண்டும் பொது அடை தீயகருமஞ் செய்தல் சிறுமை. சொல்லுதல் புன்மை சிறுமை யுறுபசெய்பறியலரே (நற்றிணை. 1).

Our Lord moves all over the universe on His bull which is a huge, unblemished animal. He got angry with His antagonists - the asuras and destroyed them completely in fire along with their three forts which were flying in the sky. He is manifest in the temple city of Thiruk-kada-oor-mayaanam. Our Lord is renowned. The mean-minded Jains and Buddhists in this city preach to the public to do bad actions. They think of Him as a devil and move away from our Lord. Such a Being is our Lord and our Chief Supporter.

2345. மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
அரவமசைத்தபெருமானகலமறியலாகப்
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொல்மாலை
இரவும்பகலும்பரவிநினைவார்வினைகளிலரே. 11

மரவம்பொழில் சூழ் கடவூர் மன்னு மயானம் அமர்ந்த,
அரவம் அசைத்த, பெருமான் அகலம் அறியல்ஆகப்
பரவும் முறையே பயிலும் பந்தன் செஞ்சொல்மாலை,
இரவும் பகலும் பரவி நினைவார் வினைகள் இலரே.

maravampozil cUz kaTavUr man2n2u mayAn2am amarnta,
aravam acaitta, perumAn2 akalam aRiyal Akap
paravum muRaiyE payilum pantan2 cenjcol mAlai,
iravum pakalum paravi nin2aivAr, vin2aikaL ilarE.

பொருள்: குங்கும மரங்கள் கொண்ட பொழில்கள் சூழ்ந்த கடவூரில் மன்னிய மயானத்தில் அமர்ந்த, அரவத்தைக் கச்சாக அரையில் கட்டிய பெருமானின் வியாபகத்தை அறிய இயலாது, அறிந்தபடி பாடிய சம்பந்தனின் செஞ்சொல் மாலையை இரவும் பகலும் நினைவார் வினைகள் இலராவர்.

குறிப்புரை: மரவம் – குங்கும மரம். அசைத்த – கட்டிய. அகலம் – வியாபகம். அறியல் ஆக – அறிவது இசையும்படி. பரவுமுறையே பயிலுதல் ஆசிரியர்க்கே இருந்ததெனின், நம்மனோர்க்கு அதன் இன்றியமையாமை கூறல் வேண்டுமோ?

In the natural forest area around Thiruk-kada-oor-mayaanam plenty of saffron plants grow in large number (bulbous rooted plant). Our Lord Civan is renowned wearing snakes over His waist and His fame is too great, to be known fully well. Therefore, let the devotees repeat His fame as chanted by our saint Thiru-gnana-Sambandar by day and night. They may chant these verses sincerely and worship our Lord. They will be then freed of karma in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

80ஆம் பதிகம் முற்றிற்று
End of 80th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 217 பதிக எண்: 81

81. திருவேணுபுரம்

81. THIRU-VENU-PURAM

பண் : காந்தாரம்

Pann: Kaanthaaram

திருத்தல வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

2346. பூதத்தின்படையினீர்பூங்கொன்றைத்தாரினீர்
ஓதத்தினொலியோடுமும்பர்வானவர்புகுந்து
வேதத்தினிசைபாடிவிரைமலர்கள்சொரிந்தேத்தும்
பாதத்தீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. 1

பூதத்தின் படையினீர் பூங்கொன்றைத் தாரினீர்
ஓதத்தின் ஒலியோடு மும்பர் வானவர் புகுந்து
வேதத்தின் இசைபாடி விரைமலர்கள் சொரிந்து ஏத்தும்
பாதத்தீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே.

pUtattin2 paTaiyin2Ir! pUgkon2Rait tArin2Ir!
Otattin2 oliyOTum umparvAn2avar pukuntu,
vEtattin2 icai pATi, viraimalarkaL corintu, Ettum
pAtattIr!--vENupuram pati Akak koNTIrE.

பொருள்: பூதகணங்களைப் படையாக உடையீர்! கொன்றைப்பூ மாலையினை அணிந்தீர்! கடலொலி போன்ற முழக்கமொடு உம்பர்களும் வானவர்களும் திருக்கோவிலினுள் புகுந்து, வேதம் இசைத்து மணமிக்க மலர்களைச் சொரிந்து வழிபடும் திருவடிகளை உடையிர்! திருவேணுபுரத்தை உம் திருப்பதியாகக் கொண்டீரே!

குறிப்புரை: பூதகணம், கொன்றைப் பூமாலை சிவபிரானுக்குள்ளவை, வேணுபுரம் கடலிடத்தாகலின் ஓதத்தின் ஒலியோடும் வேதத்தின் இசைபாடி எனப்பட்டது. 'உம்பர், வானவர்' உம்பரும் வானவரும். உம்மைத்தொகை. 'உம்பரும் வானவரும் உடனே நிற்கவே எனக்குச் செம்பொனைத் தந்தருளி' (தி.7 ப.25

பா.2). 'ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும் ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே' (தி.6 ப.1 பா.10). 'அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும் கண்டு வீற்றிருக்கும் கருத்து ஒன்றிலோம்' (தி.5 ப.39 பா.3). 'மண்ணினார் ஏத்த வானுளால் பரச அந்தரத்து அமரர்கள் போற்றப் பண்ணினார் எல்லாம்' (தி.3 ப.118 பா.4). தாரன்மாலையன் தண்ணறுங்கண்ணியன் (தி.5 ப.12 பா.7) என்பதால் இருபாலும் ஒவ்வொரு பூவைத்துத் தொடுக்கும் தார், ஒருபால் காம்பும் ஒருபால் மலரும் அமையத்தொடுக்கும் கண்ணிக்கும், பன்மலர் மாலைக்கும் வேறுபட்டது எனல் விளங்கும். ஓதம் – கடல்.

Oh! Our Lord Civa! You own large armies of goblins called Bhuta Ganangal. They are dwarfish with huge pot-bellies and very small legs. You have adorned Your body with garlands made of cassia fistula flowers. The sea makes heavy noise. Along with this noise, the celestials and devas come to earth and chant the Vedic songs. They carry the sweet smelling flowers and scatter them over the holy feet of our Lord and worship Him. Oh Lord! You have selected Venupuram as Your place to manifest.

2347. சுடுகாடுமேவினீர்துன்னம்பெய்கோவணந்தோல்
உடையாடையதுகொண்டீருமையாளையொருபாகம்
அடையாளமதுகொண்டீரங்கையினிற்பரசுஎனும்
படையாள்வீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. 2

சுடுகாடு மேவினீர் துன்னம் பெய்கோவணம் தோல்
உடை ஆடையது கொண்டீர் உமையாளை ஒருபாகம்
அடையாளம் அதுகொண்டீர் அங்கையினில் பரசு எனும்
படை ஆள்வீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே.

cuTukATu mEvin2Ir! tun2n2am pey kOvaNam, tOl-
uTai ATai atu, koNTIr! umaiyALai orupAkam
aTaiyALam atu koNTIr! am kaiyin2il paracu en2um
paTai ALvIr!--vENupuram pati Akak koNTIrE.

பொருள்: சர்வ சங்கார காலத்தில் அனைத்தும் எரிந்துபோன சுடுகாட்டினில் இருந்தீர்! தைக்கப்பட்ட கோவணமும் தோலும் உடுக்கும் ஆடையாகக் கொண்டீர்! உமையாளை உமது ஒரு பாகத்தில் உமது கருணைக்கு அடையாளமாகக் கொண்டீர்! அழகிய உம் திருக்கையினில் பரசு எனும் மழுவாயுதத்தைப் படையாகக் கொண்டீர்! திருவேணுபுரத்தை உம் திருப்பதியாகக் கொண்டீரே!

குறிப்புரை: துன்னம் – துளைத்தல், தைத்தல். கோவணம் தோல் உடையாடை – 'புலியதள் கோவணங்களுடை ஆடையாக உடையான்' (ப.219 பா.6). அங்கை – அகங்கை, உள்ளங்கை, அழகிய கையும் ஆம். பரசு எனும் படை – மழு என்னும் ஆயுதம்.

Oh! Lord Civa! Your avocation is to visit the burning ghat to dance. You cover Your loins with damaged forelap cloth but cover your waist with tiger's hide. You grace Your devotees. As a symbol of grace You have embedded Your consort Uma Devi on one side of Your body. In Your attractive hand You hold an axe. Oh Lord! You are manifest in the city of Venupuram.

2348. கங்கைசேர்சடைமுடியீர்காலனைமுன்செற்றுகந்தீர்
திங்களோடிளஅரவந்திகழ்சென்னிவைத்துகந்தீர்
மங்கையோர்கூறுமையீர்மறையோர்கள்நிறைந்தேத்தப்
பங்கயஞ்சேர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. 3

கங்கைசேர் சடைமுடியீர் காலனை முன்செற்று உகந்தீர்
திங்கள் ஓடுஇள அரவம் திகழ்சென்னி வைத்து உகந்தீர்
மங்கையோர் கூறுமையீர் மறையோர்கள் நிறைந்து ஏத்தப்
பங்கயம் சேர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே.

kagkai cEr caTaimuTiyIr! kAlan2ai mun2 ceRRu ukantIr!
tigkaLOTu iLa aravam tikaz cen2n2i vaittu ukantIr!
magkai OrkURu uTaiyI!--maRaiyOrkaL niRaintu Etta,
pagkayan2 cEr vENupuram pati Akak koNTIrE.

பொருள்: கங்கையாறு சேர்ந்த சடைமுடியினீரே! எமனை முன் அழித்து மகிழ்ந்தீர்! உமை மங்கையைப் பாகமாக உடையீர்! மறையவர்கள் திரண்டு நின்று ஏத்தி வழிபடத் தாமரை மலர்கள் மலரும் தடாகங்கள் சேரும் திருவேணுபுரத்தை உம் திருப்பதியாகக் கொண்டீரே!

குறிப்புரை: செற்று – அழித்து. அரவம் – பாம்பு. சென்னி – தலை. பங்கயம் – தாமரை.

Oh Lord Civa! You support the river Ganges in Your matted hair. Once upon a time You kicked Kaalan, the god of death, and thereafter were pleased to grace him. You are happy to retain the serpent along with the baby moon on Your matted hair, making these two shed their enmity. You have kept Your consort on one half of Your

body. The Vedic scholars join together and praise Your fame. The city is full of big pools filled with lotus flowers as well as rich paddy fields. You have selected such a good looking city of Venupuram as Your place for manifestation.

2349. நீர்கொண்டசடைமுடிமேல்நீள்மதியம்பாம்பினொடும்
ஏர்கொண்டகொன்றையினோடெழில்மத்தமிலங்கவே
சீர்கொண்டமாளிகைமேற்சேயிழையார்வாழ்த்துரைப்பக்
கார்கொண்டவேணுபுரம்பதியாகக்கலந்தீரே. 4

நீர்கொண்ட சடைமுடிமேல் நீள்மதியம் பாம்பினொடும்
ஏர்கொண்ட கொன்றையினோடு எழில்மத்தம் இலங்கவே
சீர்கொண்ட மாளிகைமேல் சேய் இழையார் வாழ்த்து உரைப்பக்
கார்கொண்ட வேணுபுரம் பதியாகக் கலந்தீரே.

nIr koNTa caTaimuTimEl nIL matiyam pAmpin2oTum
Er koNTa kon2Raiyin2oTu ezil mattam ilagkavE,
cIr koNTa mALikaimEl cEyizaiyAr vAzttu uraippa,
kAr koNTa vENupuram pati Akak kalantIrE.

பொருள்: கங்கைநீர் கொண்ட சடைமுடிமேல் ஒளி நீண்ட பிறையைப் பாம்பினோடும் அழகிய கொன்றையினோடும் எழில் ஊமத்தை மலர் விளங்கவே, பெருமையுடைய மாளிகைகள் மேல் மகளிர் உம்மைப் போற்றி வாழ்த்துரைப்ப, மேகத்தை அளாவிய திருவேணுபுரத்தை உம் திருப்பதியாகக் கொண்டீரே!

குறிப்புரை: நீர் – கங்கைநீர், அபிடேக நீரும் ஆம். மதியம் – பிறை. மத்தம் – ஊமத்தை. மாளிகை – நகரில் உள்ள உயரிய வீடுகளும் தோணியப்பர் மலைக்கோயிலும் ஆம். கார்கொண்ட வேணுபுரம் என்றதனால் மூங்கிலின் உயர்ச்சி விளங்கும்.

Oh Lord Civa! You support the river Ganges on Your matted hair that is flanked on both sides by the moon, the snake, the attractive cassia and the fine datura flowers, everything looks bright. You get upon the palaces from where lovely girls wearing a lot of jewellery greet You. The clouds traverse and gather on the tall bamboo trees which are a characteristic part of the city. Oh Lord! You have selected such a city of Venupuram as Your place for manifestation.

2350. ஆலைசேர்தண்கழனியழகாநறவுண்டு
சோலைசேர்வண்டினங்களிசைபாடத்தூமொழியார்
காலையேபுகுந்திறைஞ்சிக்கைதொழமெய்மாதினொடும்
பாலையாழ்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. 5

ஆலைசேர் தண்கழனி அழகா நறவுண்டு
சோலைசேர் வண்டினங்கள் இசைபாடத் தூமொழியார்
காலையே புகுந்து இறைஞ்சிக் கைதொழ மெய்மாதினொடும்
பாலையாழ் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே.

Alai cEr taNkazan2i azaku Aka naRavu uNTu,
cOlai cEr vaNTu in2agkaL icai pATa, tU moziyAr
kAlaiyE pukuntu iRainjcik kaitoza, mey mAtin2oTum
pAlaiyAz vENupuram pati Akak koNTIrE.

பொருள்: கரும்புகள் விளைந்த கழனிகளில் தேனையுண்டு பூஞ்சோலைகளை அழகாகச் சேர்கின்ற வண்டினங்கள் இசைபாட, தூய்மையான மொழியே பேசும் மகளிர் வைகறைப் போதிலேயே திருக்கோயிலிற் புகுந்து வழிபட்டுக் கைதொழுமாறு, உமையம்மையினொடும் பாலையாழ் இசைக்கும் திருவேணுபுரத்தை உம் திருப்பதியாகக் கொண்டீரே!

குறிப்புரை: ஆலை – கரும்பாலை, கரும்பு. நறவு – தேன். தூ – தூய்மை. காலையே . . . கைதொழ – என்றதால் பண்டு மகளிர் நாள்தோறும் காலையில் தவறாமல் கோயிலுக்குச் சென்று வழிபட்ட உண்மை புலப்படுகிறது. பாலையாழ் – நாற்பெரும் பண்ணுள் ஒன்று. பாலையாழ், 'அராகம் நோந்திறம் உறுப்புக் குறுங்கலி ஆசான் ஐந்தும் பாலையாழ்த்திறனே' என்பது பிங்கலந்தை – 1381. நோந்திறத் தின்மறுதலை செந்நிறம். 'கைக்கிளை செந்நிறம் பெருந்திணை நோந்திறம்' தொல். அகத். 55 உரை இளம்பூரணம்.

The city of Venupuram has a number of cool fields where sugarcane grows in plenty and the sugarcane plants work. In the well-developed garden area a large number of flower plants grow. Here the beetles fly and gather and suck honey from the flowers singing their music and making the people happy. In the early morning hours, lovely girls, who speak pleasing words, visit the temple and worship our Lord by raising both their hands. There is good music of 'Paalai Lute' and the entire area is full of happiness. Oh Lord Civa! You, concomitant with Your consort Uma Devi, are manifest in Venupuram.

2351. மணிமல்குமால்வரைமேல்மாதினொடுமகிழ்ந்திருந்தீர்
துணிமல்குகோவணத்தீர்சுடுகாட்டிலாட்டுகந்தீர்
பணிமல்குமறையோர்கள்பரிந்திறைஞ்சவேணுபுரத்
தணிமல்குகோயிலேகோயிலாகஅமர்ந்திரே. 6

மணிமல்கு மால்வரைமேல் மாதினொடு மகிழ்ந்து இருந்தீர்
துணிமல்கு கோவணத்தீர் சுடுகாட்டில் ஆட்டுகந்தீர்
பணிமல்கு மறையோர்கள் பரிந்து இறைஞ்ச வேணுபுரத்
தணிமல்கு கோயிலே கோயிலாக அமர்ந்திரே.

maNi malku mAlvarai mEl mAtin2oTu makizntu iruntIr!
tuNi malku kOvaNattIr! cuTukATTil ATTu ukantIr!--
paNi malku maRaiyOrkaL parintu iRainjca, vENupurattu
aNi malku kOyilE kOyil Aka amarntIrE.

பொருள்: மணிகள் நிறைந்த பெரிய மலையின் மேல் உமையம்மையுடன் மகிழ்ந்து இருந்தீர்! துணித்த கோவண ஆடையினீர்! சுடுகாட்டினில் கூத்தாடுதலை உகந்தீர்! சிவத்தொண்டு செய்யும் மறையோர்கள் பத்திகொண்டு வணங்க வேணுபுரத்தில் அழகு நிறைந்த திருக்கோயிலையே கோயிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: 'மணி மல்கு . . . இருந்தீர்' தோணிபுரம் எனப்படும் மலைக்கோயிலில் அம்மையப்பராக வீற்றிருந்தீர். அக்கோயில் 'நாலைந்து புள்ளினம் ஏந்தின' (தி.4 ப.82 பா.1) அமைப்புடையது. துணி – துண்டு. ஆட்டு – கூத்து. பரிந்து – அன்புகொண்டு.

Oh Lord Civa! You have joyfully manifested Yourself along with Your consort on the big Thiruth-thoni hillock where a good number of big gems are studded. You wear on Your loins the worn-out fore-lap cloth. Your avocation is to go gladly to the burning ghat and dance there. The scholars in this city who are very much engrossed in service to You come to Your temple and worship You with dedication. You have conspicuously manifested Yourself in the cool temple city of Venupuram, considering it as Your much desired temple.

2352. நீலஞ்சேர்மிடற்றினீர்நீண்டசெஞ்சடையினீர்
கோலஞ்சேர்விடையினீர்கொடுங்காலன்றனைச்செற்றீர்
ஆலஞ்சேர்கழனியழகார்வேணுபுரமமருங்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாக்கொண்டீரே. 7

நீலம்சேர் மிடற்றினீர் நீண்ட செஞ்சடையினீர்
கோலம்சேர் விடையினீர் கொடுங்காலன் தனைச்செற்றீர்
ஆலஞ்சேர் கழனிஅழகார் வேணுபுரம் மருங்
கோலஞ்சேர் கோயிலே கோயிலாக் கொண்டீரே.

nIlam cEr miTaRRin2Ir! nINTa cenjcaTaiyin2Ir!
kOlam cEr viTaiyin2Ir! koTugkAlan2 tan2aic ceRRIr!--
Alam cEr kazan2i azaku Ar vENupuram amarum
kOlam cEr kOyilE kOyilAkak koNTIrE.

பொருள்: நீலகண்டத்தினீர்! நீண்ட சிவந்த சடையினை உடையீர்! அழகிய விடையை உடையீர்! கொடிய எமனை அழித்தீர்! நீர்வளமிக்க கழனிகளுடன் அழகிய திருவேணுபுரத்தில் உள்ள திருக்கோயிலினையே உமது கோயிலாகக் கொண்டீரே!

குறிப்புரை: நீலஞ்சேர் மிடற்றினீர் – திருநீலகண்டத்தீர். கோலம் – அழகு. ஆலம் – நீர். கலப்பையும் ஆம். கோலம் – வளைவு.

Oh Lord Civa! Your throat is dark blue in colour like the sapphire. You have long reddish matted hair. You have a very attractive bull for Your conveyance. Once upon a time You destroyed the ferocious Kaalan - the god of death. You have manifested Yourself in the temple of appealing Venupuram. In this city, there are many ponds full of cool water. The temple is full of very rich and admirable workmanship and is shining to look at. You have considered this temple as Yours and are manifest there.

2353. இரைமண்டிச்சங்கேறுங்கடல்சூழ்தென்னிலங்கையர்கோன்
விரைமண்டுமுடிநெரியவிரல்வைத்தீர்வரைதன்னிற்
கரைமண்டிப்பேரோதங்கலந்தெற்றுங்கடற்கவினார்
விரைமண்டுவேணுபுரமேயமர்ந்துமிக்கீரே. 8

இரை மண்டிச் சங்குஏறும் கடல்சூழ் தென்இலங்கையர் கோன்
விரை மண்டு முடிநெரிய விரல்வைத்தீர் வரை தன்னிற்
கரை மண்டிப் பேரோதம் கலந்தெற்றும் கடற்கவினார்
விரை மண்டு வேணுபுர மேய அமர்ந்து மிக்கீரே.

tirai maNTic cagku ERum kaTal cUz ten2 ilagkaiyar kOn2
virai maNTu muTi neriya viral vettIr! varai tan2n2in2
karai kaNTip pEr Otam kalantu eRRum kaTal kavin2 Ar
virai maNTu vENupuramE amarntu mikkIrE.

பொருள்: ஒலித்தல் மிகுந்த, சங்குகளேறும் கடல் சூழ்ந்த தென்திசையில் உள்ள இலங்கையின் அரசன் இராவணனின் மணமுள்ள முடி நெரியுமாறு திருவிரலை வைத்தீர்! மலை போன்ற அலைகள் நிறைந்து மோதும் நீர் நிறைந்த கடலழகுடன் மணமிக்க திருவேணுபுரமே அமர்ந்து விளங்கினீரே!

குறிப்புரை: மண்டி – மேற்சென்று. நெருங்கியும் ஆம். விரை – நறுமணம். கவின் – அழகு. ஓதம் – நீர். எற்றும் – மோதும்.

Many hundreds of conches lie on the seashore, actually these are insects, big and small. These insects in the conches eat the sea food in large quantities and take rest on the shore. Such shores of the sea surround Sri Lanka, and the king of this southern land, Raavanan, was once suppressed with his ten heads under mount Kailash by Lord Civan. Oh Lord! You subdued him simply by pressing Your mountain with Your toe. Of course finally he was pardoned and blessed. The city of Venupuram has a long seashore on the east and the huge waves of the sea disturb the shore, bringing large quantities of water. Oh Lord! You have chosen this beautiful and fragrant city as Yours and manifest Yourself as a renowned Lord.

2354. தீயோம்புமறைவாணர்க்காதியாந்திசைமுகன்மால்
போயோங்கியிழிந்தாரும்போற்றரியதிருவடியீர்
பாயோங்குமரக்கலங்கள்படுதிரையால்மொத்துண்டு
சேயோங்குவேணுபுரஞ்செழும்பதியாத்திகழ்ந்தீரே. 9

தீஓம்பு மறைவாணர்க்கு ஆதியாம் திசைமுகன் மால்
போய்ஓங்கி இழிந்தாரும் போற்றரிய திருவடியீர்
பாய்ஓங்கு மரக்கலங்கள் படுதிரையால் மொத்துண்டு
சேய்ஓங்கு வேணுபுரம் செழும்பதியாய் திகழ்ந்தீரே.

tI Ompu maRaivANarkku Ati Am ticai mukan2, mAl,--
pOy Ogki izintArum--pORRa(a)riya tiruvaTiyIr!
pAy Ogku marak kalagkaL paTu tiraiyAl mottuNTu,
cEy Ogku vENupuram cezum patiyAt tikazntIrE.

பொருள்: வேள்வி செய்யும் மறையவருக்கு முதல்வனாகிய பிரமன் மால் இருவரும் முறையே மேலோங்கி உயர்ந்தும் கீழ் நோக்கி இழிந்தும் இருவராலும் போற்றுதற்கு அரிய திருவடியை உடையீர்! உயர்ந்த பாய்களையுடைய மரக்கலங்கள் ஒலிக்கின்ற கடல் அலைகளால் மொத்துண்டு விண்ணளவு உயர்கின்ற திருவேணுபுரத்தை உம் செழும்பதியாகக் கொண்டு திகழ்ந்தீரே!

குறிப்புரை: தீயோம்பு . . . முகன்:– பிராமணர்க்கு முதல்வன் பிரமன் என்னும் உண்மை உணர்த்தப்பட்டது. மால் – திருமால். ஓங்குதல் – பிரமன் செயல். இழிதல் – மால்வினை. போற்ற அரிய திருவடி எனத் திருவடிச்சிறப்பு உணர்த்தப்பட்டது. பாய் . . . வேணுபுரம். பண்டு சீகாழியில் மரக்கலங்கள் (கடற்றுறையுள்) இருந்தமை தெளிவாகும். சேய் . . . புரம் – விண்ணில் ஓங்கிய உயர்ச்சியைக் குறிப்பது.

In this verse our saint Thiru-gnana-Sambandar establishes that tutelary god Brahma as the chief god for Brahmins. They daily involve themselves in starting the three sacrificial fires Kaarugapaththiyam, Aahavaniyam and Thatchinakkini. Brahmins are guardians of the three sacrificial fires. The chief of brahmins is Brahma who flew in the sky to see our Lord's head. The second one Thirumaal delved deep into the earth to see our Lord's holy feet. But they both failed. Oh Lord! You are the master with imperceptible holy feet and head. The city of Venupuram, adjoining the sea, has a lot of vessels with mast, anchored near the shore. These vessels are tossed by the big sea waves. The city's sacred tree is bamboo. These tall trees are in plenty here. Oh Lord! You desired to have the rich Venupuram as Your abode and You are renowned in the temple of this wealthy city.

2355. நிலையார்ந்தவுண்டியினர்நெடுங்குண்டர்சாக்கியர்கள்
புலையானாரறவுரையைப்போற்றாதுன்பொன்னடியே
நிலையாகப்பேணிநீசரணென்றார்தமையென்றும்
விலையாகஆட்கொண்டுவேணுபுரம்விரும்பினையே. 10

நிலை ஆர்ந்த உண்டியினர் நெடுங்குண்டர் சாக்கியர்கள்
புலை ஆனார் அற உரையைப் போற்றாது உன்பொன்னடியே
நிலையாகப் பேணி நீசரணென்றார் தமையென்றும்
விலையாக ஆட்கொண்டு வேணுபுரம் விரும்பினையே.

nilai Arnta uNTiyin2ar neTug kuNTar, cAkkiyarkaL,--
pulai An2Ar--aRa uraiyaip pORRAtu, un2 pon2 aTiyE
nilai Akap pENi, "nI caraN!" en2RAr tamai, en2Rum
vilai Aka ATkoNTu, vENupuram virumpin2aiyE.

பொருள்: நின்று உண்ணும் சமணர், உடல் தடித்த சாக்கியர்கள் புலையரானார்களாகிய இவர்கள் உரைக்கும் உரையைப் பொருட்படுத்தாது உன் பொன்னடியே நிலையாகப் பேணி நீயே சரண் என்றார்தமை, என்றும் அதற்கு ஈடாக ஆட்கொண்டு திருவேணுபுரத்தில் இருத்தலை விரும்பினையே!

குறிப்புரை: நிலையார்ந்த உண்டியினர் – நின்று உண்பவர். அடுத்த பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் ஈற்றில் அருளிய திறத்தை நோக்கினால் உன் பொன்னடியே நிலையாகப் பேணி நீ(யே) சரண் என்றாரை. என்றும் விலையாக ஆட்கொள்ளும் திறம் வாய்மையாதல் விளங்கும்.

In this city of Venupuram, the Jains and the Buddhists live here in large numbers. They used to take food in standing posture. They preach deceptive literacy. The Siva devotees who live in this city never pay heed to the words of the Jains and the Buddhists. They worship our Lord and eagerly take refuge at the feet of our Lord Civan. He therefore takes such devotees as His own servitors and graces them substantially. He loves to be manifested in the temple of Venupuram.

11ஆவது பாடல் கிடைக்கப்பெறவில்லை.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

81ஆம் பதிகம் முற்றிற்று
End of 81st Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 218 *பதிக எண்: 82*

82. திருத்தேவூர் 82. THIRU-THEVOOR

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

தேவர்கள் பூசித்துப் பேறு பெற்ற தலமாதலால் இப்பெயர் பெற்றது. இது கீழ்வேளூர் தொடர்வண்டி நிலையத்திற்குத் தெற்கே 2.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. திருவாரூரிலிருந்து வலிவலம் செல்லும் நகரப் பேருந்தில் செல்லலாம். காவிரித் தென்கரையில் உள்ள எண்பத்தைந்தாவது தலம் ஆகும். இறைவரது திருப்பெயர் தேவகுருநாதர். இறைவியாரது திருப்பெயர் மதுரபாடணியம்மை. தீர்த்தம் தேவதீர்த்தம். தலமரம் வாழை. இந்திரன், குபேரன், வியாழன் முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற தலம். கௌதம முனிவரும் பூசித்தார். மாடக்கோயில் அமைப்புடையது. இதற்கு ஞானசம்பந்தர் பதிகங்கள் இரண்டு இருக்கின்றன.

பதிக வரலாறு

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரொடும் திருவாரூர் முதலிய தலங்களை வழிபட்ட காலத்து, இத்திருத்தேவூரை அணைந்து பாடியருளியதும் முற்பதிகத்தின் ஈற்றில் அருளியவாறே தமது சிவபக்தியின் உறைப்பை இதன்கண் ஒவ்வொரு திருப்பாட்டின் ஈற்றிலும் விளங்கவைத்துப் பாடியருளிச், சைவர் எல்லோரும் சிவபெருமான் திருவடியே சேரப் பெறுமாறு உணர்த்துவதும் ஆகும் இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2356. பண்ணிலாவியமொழியுமைபங்கனெம்பெருமான்
விண்ணில்வானவர்கோன்விமலன்விடையூர்தி
தெண்ணிலாமதிதவழ்தருமாளிகைத்தேவூர்
அண்ணல்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. 1

பண்ணில் ஆவிய மொழியுமை பங்கனெம் பெருமான்
விண்ணில் வானவர் கோன் விமலன் விடை ஊர்தி
தெண்ணில் ஆமதி தவழ் தருமாளிகைத் தேவூர்
அண்ணல் சேவடி அடைந்தன மல்லலொன்றிலமே.

paN nilAviya mozi umai pagkan2, emperumAn2,
viNNil vAn2avarkOn2, vimalan2, viTai Urti--
teN nilA matil tavaz taru mALikait tEvUr
aNNal; cEvaTi aTaintan2am, allal on2Ru ilamE.

பொருள்: 'பண் நிலாவிய மொழி உமை'யைத் தன் பாகத்தில் கொண்டவன்; எங்களுடைய பெருமான்; விண்ணில் வாழும் வானவர்களின் தலைவன்; மலம் அற்றவன்; எருதினை ஊர்பவன் ஆகிய தெளிந்த நிலவொளியுடைய சந்திரன் தவழும் உயர்ந்த மாளிகைகள் நிறைந்த திருத்தேவூர் அண்ணலின் சேவடியை அடைந்தனம்; அடைந்த காரணத்தால் துன்பம் ஏதும் இலோம்.

குறிப்புரை: 'பண்ணிலாவிய மொழியுமைபங்கன்' என்றதில், இத்தலத்தின் தேவிக்கு வழங்கிய திருப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இதைப் பின்னோர் 'மதுர பாடணியம்மை' என்று மாற்றினர். விண்ணில் வானவர் என்பது தேவகணம் எல்லாவற்றையும் குறித்தது. கோன் – சிவபெருமான். விமலன் – மலரகிதன். விடையூர்தி – எருதூர்பவன். தெள்நிலா – தெளிந்த நிலவுடைய. மதி – பூரண சந்திரன், பிறையுமாம். அண்ணல் – பெரியோன், சிவன், அடைந்தது காரணம். அல்லல் இன்மை காரியம். அல்லல் – பிறவித் துன்பம். பிறப்பில் எய்தும் துன்பம் எனலும் பொருந்தும். ஒன்று இலம் – ஒன்றும் இல்லேம். சிறிதும் இல்லேம் எனலுமாம்.

Our Lord Civan has embedded His consort - and therefore is a concomitant Supreme Being. He is our Chief. He is also the Chief for all the devas and all the other celestials. He is an immaculate Supreme Being. He uses the bull for His conveyance. He is manifest in Thiru-thevoor temple in this city. The moon, shedding pure white light creeping over the sky, seems to lap over the tall palatial buildings of the city. We have prostrated before the holy feet of our Lord, and worship Him. We, therefore, are free of any misfortune.

2357. ஓதிமண்டலத்தோர்முழுதுய்யவெற்பேறு
சோதிவானவன்துதிசெயமகிழ்ந்தவன்தூநீர்த்
தீதில்பங்கயந்தெரிவையர்முகமலர்தேவூர்
ஆதிசேவடியடைந்தனமல்லலொன்றிலமே. 2

ஓதிமண்டலத்தோர் முழுதுய்ய வெற்பேறு
சோதி வானவன் துதிசெய மகிழ்ந்தவன் தூநீர்த்
தீதில் பங்கயந் தெரிவையர் முகமலர் தேவூர்
ஆதி சேவடியடைந்தன் மல்லலொன்றிலமே.

Oti maN talattOr muzutu uyya, veRpu ERu
cOti vAn2avan2 tuticeya, makizntavan2--tU nIrt
tItu il pagkayam terivaiyar mukammalar tEvUr
Ati; cEvaTi aTaintan2am, allal on2Ru ilamE.

பொருள்: மண்ணுலகத்தவர் தன்னுடைய புகழ்களை ஓதி முழுதும் உய்ய, உதயகிரியில் ஏறி சூரியன் துதி செய்ய மகிழ்ந்தவன், தூய்மையான நீரில் குற்றமற்ற தாமரை மலர்போல் மலர்ந்த முகமுடைய மகளிர் வாழும் திருத்தேவூர் முதல்வனுடைய சேவடியை அடைந்தனம். அடைந்த காரணத்தால் துன்பம் ஏதும் இலோம்.

குறிப்புரை: மண்தலத்தோர் ஓதி முழுது உய்ய – மண்ணிடத்து வாழும் மக்கள் திருப்புகழ்களை ஓதிப்பூரணமான உய்வைப் பெற. வெற்பு ஏறு சோதி வானவன் – உதயகிரியில் ஏறி ஒளிர்கின்ற சூரிய தேவன். துதி செய – வழிபட. மகிழ்ந்தவன் – உவந்து அருள்புரிந்த சிவபிரான். தேவூரில், நீரில், குற்றம் இல்லாத தாமரைப் பூக்கள் மகளிருடைய முகம் போலப் பூக்கும் என்பது நீர் நிலவளம் உணர்த்திற்று. தேவூர் ஆதி – தேவூரில் கோயில் கொண்டெழுந்தருளிய முதல்வன்.

People living on this earth who wish to have good life worship the sun god which rises in the early morning from behind the mountain called Udayagiri. The sun god, of course, worships our Lord Civan. Indran who is the chief of devas also worships our Lord Civan. Our Lord, seeing these two worship Him, feels happy and graces them immediately. Our Lord Civan is manifest in the temple in Thiru-thevoor city, where lotus ponds are many. The flawless lotus flowers bloom and resemble the faces of beautiful girls in this Thiru-thevoor city. We all worship the holy feet of our Chief Supreme Being. Therefore misfortunes will never enter our life.

2358. மறைகளான்மிகவழிபடுமாணியைக்கொல்வான்
கறுவுகொண்டவக்காலனைக்காய்ந்தவெங்கடவுள்
செறுவில்வாளைகள்சேலவைபொருவயல்தேவூர்
அறவன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. 3

மறைகளால் மிகவழிபடு மாணியைக் கொல்வான்
கறுவு கொண்டவக் காலனைக் காய்ந்த வெங்கடவுள்
செறுவில் வாளைகள் சேல் அவை பொரு வயல் தேவூர்
அறவன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.

maRaikaLAl mika vazipaTu mANiyaik kolvAn2
kaRuvu koNTavak kAlan2aik kAynta em kaTavuL--
ceRuvil vALaikaL cEl avai poru vayal-tEvUr
aRavan2; cEvaTi aTaintan2am, allal on2Ru ilamE.

பொருள்: வேதங்கள் ஓதி மிகவும் வழிபாடு செய்யும் பிரமசாரியாகிய மார்க்கண்டேயனைக் கொல்லும் பொருட்டுக் கோபித்து வந்த எமனைக் கொன்ற எம் கடவுள்; சேற்றில் வாளைமீன்கள், சேல்மீன்கள் ஆகியன பொரும் வயல்கள் கொண்ட திருத்தேவூரில் அறவன் சேவடியை அடைந்தனம். அடைந்த காரணத்தால் துன்பம் ஏதும் இலோம்.

குறிப்புரை: மாணி – பிரமசாரி. மார்க்கண்டேயர். கறுவு – கோபம். எம்கடவுள், செறுவில் – சேற்றில். பொரு – போர் செய்கின்ற. அறவன் – தருமரூபி, சிவபிரான். 'அறவாழியந்தணன்' (குறள்).

The young devotee Markandeyan seriously involved himself in the daily rituals as per Vedic rules. Without adhering to general principles, Kaalan, the god of death ferociously came to take away the life of the young saint Markandeyan. Our Lord Civan, indignant at the action of Kaalan, destroyed him by kicking. The carp fish and the saw fish fight against each other in the paddy fields in the city of Thiru-thevoor. Here our Lord Civan who is the Lord of charity is manifest in the temple. We have prostrated at His holy feet. Therefore, we will have no misfortune in our life.

2359. முத்தன்சில்பலிக்கூர்தொறும்முறைமுறைதிரியும்
பித்தன்செஞ்சடைப்பிஞ்ஞகன்றன்னடியார்கள்
சித்தன்மாளிகைசெழுமதிதவழ்பொழில்தேவூர்
அத்தன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. 4

முத்தன் சில்பலிக் கூர்தொறும் முறை முறை திரியும்
பித்தன் செஞ்சடைப் பிஞ்ஞகன்தன் அடியார்கள்
சித்தன் மாளிகை செழுமதி தவழ் பொழில் தேவூர்
அத்தன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.

muttan2, cil palikku UrtoRum muRai muRai tiriyum
pittan2, cenjcaTaip pinjnjakan2, tan2 aTiyArkaL
cittan2--mALikai cezu mati tavaz pozil-tEvUr
attan2; cEvaTi aTaintan2am, allal on2Ru ilamE.

பொருள்: அநாதி முத்தன்; சிறு பிச்சைக்கென ஊர்தோறும் முறைமுறையாகத் திரியும் பித்தன்; சிவந்த சடைமுடியினன்; தன்னுடைய அடியார்களின் சித்தத்தில் வாழ்பவன்; செழுமையான மதி தவழும் உயரமுள்ள மாளிகைகள், பொழில்கள் கொண்ட தேவூர்த் தந்தை அடைந்தனம். அடைந்த காரணத்தால் துன்பம் ஏதும் இலோம்.

குறிப்புரை: முத்தன் – அநாதிமுத்தன். இயல்பாகவே பாசங்கள் இல்லாதவன். எண்குணத்துள் ஒன்று. சடைப்பிஞ்ஞகன் – மயிர் முடியினன். தன் அடியார்கள் சித்தன் – தன் அடியை வழிபடுவோரது சித்தத்தில் இருப்பவன். சித்தன் – அறிவுக்கறிவாயிருப்பவன் என்றலும் அமையும். 'மதிதவழ்பொழில்' சோலையின் உயர்ச்சியைக் குறித்தது.

Our Lord Civan has infinite detachment from the three evil passions. He is the most gracious one. He is a crazy person to collect alms from many people, visiting them in an orderly manner. His red disheveled locks of hair bears the Ganges river and the new moon. He is manifest in the divine thoughts of His devotees. In this city many tall palaces exist and also many forests with tall trees with the moon crawling over them. In such a sacred city of Thiru-thevoor and Lord is manifest in the temple. We worship Him in the temple and prostrate at His holy feet. Therefore, we have not even an atom of suffering in our life.

2360. பாடுவாரிசைபல்பொருட்பயனுகந்தன்பால்
கூடுவார்துணைக்கொண்டதம்பற்றறப்பற்றித்
தேடுவார்பொருளானவன்செறிபொழில்தேவூர்
ஆடுவானடியடைந்தனமல்லலொன்றிலமே. 5

பாடுவார் இசை பல்பொருள் பயன் உகந்தன்பால்
கூடுவார் துணைக் கொண்ட தம்பற்றறப் பற்றித்
தேடுவார் பொருள் ஆனவன் செறிபொழில் தேவூர்
ஆடுவான் அடியடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.

pATuvAr icai, palporuL payan2 ukantu an2pAl
kUTuvAr, tuNaikkoNTa tam paRRu aRap paRRit
tETuvAr, poruL An2avan2--ceRi pozil-tEvUr
ATuvAn2; aTi aTaintan2am, allal on2Ru ilamE.

பொருள்: அடியவர்களுக்குப் பேறாகவுள்ள பல்பொருள்களின் பயனைவிரும்பிப் பாடுவாருக்கு அவர்கள் விரும்பிய பொருளானவன்; தன்பால் கூடுமவருக்குக் கொண்ட துணையானவன்; பிற பற்றுக்கள் எல்லாம் அற்றொழியத் தன்னைப் பற்றித் தேடுவாருக்கு அவர்கள் தேடும் பொருளானவன்; செறிந்த பொழில்கள் உள்ளத் திருத்தேவூரில் கூத்தாடுவான் ஆகிய சிவபிரான், அவனுடைய அடியைப் புகலாக அடைந்தனம். அடைந்த காரணத்தால் துன்பம் ஏதும் இலோம்.

குறிப்புரை: பாடுவாரும் கூடுவாரும் தேடுவாருமான அடியார்கட்குப் பேறாயுள்ள பொருளானவன். தேவூர்க்கூத்தன் என்றவாறு. இசைபாடுவார் சிவபிரானைத் துணையாக் கொண்டவர்கள். தங்கள் பற்றுக்கள் எல்லாம் அற்றொழிய அச்சிவபிரானையே பற்றாகப் பற்றித் தேடுவார்கள். அவர்களுக்கு அவனன்றி வேறுபொருள் இல்லையாதலின், 'தேடுவார் பொருளானவன்' என்றார். துணையாகக் கொண்ட தமது பற்று அற எனலுமாம். முன் துணையெனப் பற்றப்பட்டது பின் பொய்யாய்த் தோன்ற, மெய்த்துணை உயிர்த்துணையாகிய சிவபிரானே எனல் விளங்கும். விளங்கின் அதையே பற்றுதலும் தேடுதலும் நிகழும். 'ஆடுவான்' என்றது எல்லாத் தலங்களிலும் ஒரு ஞானக்கூத்தனே எழுந்தருளியிருக்கும் உண்மை பற்றியது. இச்சித்தாந்த உண்மை உணராமல் உரைப்பவை பொருந்தா (பதி. 152 பா. 1).

To the devotees who used to chant divine songs in praise of our Lord, to the devotees who realise that Lord Civan is the only Chief and the activating force in all matters, and as a result worship Him with love in big gatherings and to those who,

having detached themselves from their kith and kin and all wordly matters, cling to Him with all seriousness, our Lord Civan alone is the only matter, is their only kin. We have reached this Lord's feet and He is the Lord who dances in the temple of Thiru-thevoor surrounded by dense forests. Therefore we are free from sufferings.

2361. பொங்குபூண்முலைப்புரிகுழல்வரிவளைப்பொருப்பின்
மங்கைபங்கினன்கங்கையைவளர்சடைவைத்தான்
திங்கள்சூடியதீநிறக்கடவுள்தென்தேவூர்
அங்கணன்றனையடைந்தனமல்லலொன்றிலமே. 6

பொங்கு பூண்முலைப் புரிகுழல் வரிவளைப் பொருப்பின்
மங்கைபங்கினன் கங்கையை வளர்சடை வைத்தான்
திங்கள் சூடிய தீநிறக் கடவுள் தென் தேவூர்
அங்கணன் தனைஅடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.

pogku pUN mulaip purikuzal varivaLaip poruppin2
magkai pagkin2an2, kagkaiyai vaLarcaTai vaittAn2,
tigkaL cUTiya tI niRak kaTavuL, ten2 tEvUr
agkaNan2 tan2ai aTaintan2am; allal on2Ru ilamE.

பொருள்: ஆபரணம் அணிந்தவளும் சுழன்ற குழலை உடையவளும் வரிவளைக் கையினளும் ஆகிய மலையரயன் மங்கை பார்வதியைப் பங்கில் உடையவன்; கங்கையை நீண்ட சடையில் வைத்தவன்; பிறையைச் சூடிய செந்தீ நிறக் கடவுள்; தென் திருத்தேவூரில் கருணையாளனாகிய சிவபிரானை அடைந்தனம்; அடைந்த காரணத்தால் துன்பமொன்றும் இலோம்.

குறிப்புரை: பூண் – ஆபரணம். குழல் – கூந்தல். பொருப்பின் மங்கை – இமாசலகுமாரி. தீநிறக் கடவுள் – அழல்வண்ணனாகிய சிவபிரான். அங்கணன் – கருணாக்கடாக்ஷன். கண்ணுக்கு அழகு கருணை.

Our goddess Parvathi Devi is the daughter of the Himalayan king. Her breasts are well-developed and are covered with rich jewellery. Her thick tresses and rich lined bangles enhance her beauty. Our Lord is concomitant with her. Our Lord supports the river Ganges in His hairlocks. He retains the moon also on His head. He shines like dark red effulgence. He is manifest in the temple in the attractive city of Thiru-thevoor.

Our Lord is the storehouse of grace. We have reached Him and prostrated before His holy feet. Therefore, we do not have even a very slight suffering in our life.

2362. வன்புயத்தவத்தானவர்புரங்களையெரியத்
தன்புயத்துறத்தடவரைவளைத்தவன்தக்க
தென்தமிழ்க்கலைதெரிந்தவர்பொருந்தியதேவூர்
அன்பன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. 7

வன் புயத்தவத்தான் அவர் புரங்களை எரியத்
தன் புயத்துறத்தட வரை வளைத்தவன் தக்க
தென் தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
அன்பன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.

van2 puyatta at tAn2avar puragkaLai eriyat
tan2 puyattu uRat taTavarai vaLaittavan2--takka
ten2tamizk kalai terintavar poruntiya tEvUr
an2pan2; cEvaTi aTaintan2am; allal on2Ru ilamE.

பொருள்: வலிய புயங்களை உடைய அந்த அசுரர்களின் புரங்களை எரியத் தன் புய வலியால் பெரிய மேருமலையை வில்லாக வளைத்தவன்; பெருமையுடைய செந்தமிழ்களை ஆராய்ந்தவர் வாழும் திருத்தேவூரின் அன்பனின் சேவையை அடைந்தனம்; அடைந்த காரணத்தால் துன்பமொன்றும் இலோம்.

குறிப்புரை: வல்புயத்த அத்தானவர் – வலிய புஜங்களை உடைய அந்த அசுரர். அ – பண்டறிசுட்டும் உலகறி சுட்டுமாம். புயத்து அவம் எனப் பிரித்துரைத்தலும் அமையும். வரை – மேரு மலை. தேவூரில் தமிழ்ப்புலவர் இருந்த உண்மை உணர்த்தப்பட்டது. அன்பன் – அன்பே சிவம்.

The asuras were very sturdy with very strong shoulders. They had built three fortresses in air. Our Lord Civan with His strong arms took the big Meru mountain and used it as His bow to destroy them. In the city of Thiru-thevoor many scholars, well learned in the arts of southern Tamil, live. Our Lord Civan who is the embodiment of love is manifest in the temple in this city. We have reached His holy feet, and praised Him. Therefore, we are never affected even by small sufferings.

2363. தருவுயர்ந்தவெற்பெடுத்தஅத்தசமுகன்நெரிந்து
வெருவவூன்றியதிருவிரல்நெகிழ்த்துவாள்பணித்தான்
தெருவுதோறுநற்றென்றல்வந்துலவியதேவூர்
அரவுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. 8

தரு உயர்ந்த வெற்பெடுத்த அத்தசமுகன் நெரிந்து
வெருவ ஊன்றிய திருவிரல் நெகிழ்த்து வாள்பணித்தான்
தெருவு தோறும் நல்தென்றல் வந்து உலவிய தேவூர்
அரவு சூடியை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.

taru uyarnta veRpu eTutta at tacamukan2 nerintu
veruvum Un2Riya tiruviral nekizntu, vAL paNittAn2--
teruvu tORum nal-ten2Ral vantu ulaviya--tEvUr
aravu cUTiyai aTaintan2am; allal on2Ru ilamE.

பொருள்: கற்பக மரங்கள் உயர்ந்த கயிலை வெற்பினை எடுக்க முயன்ற அந்த பத்துத்தலை இராவணன் அஞ்சி நசுங்க விரலைச் சற்று ஊன்றி, பின் அருள் கொண்டு ஊன்றிய விரலை நெகிழ்த்து வாள், வாழ்நாள் ஆகியன பணித்தருளினான். தெருக்கள்தோறும் நல்ல தென்றல் வந்து உலவும் திருத்தேவூரில் பாம்பினைச் சூடிய சிவபிரானாகிய அவனை அடைந்தனம்; அடைந்த காரணத்தால் துன்பமொன்றும் இலோம்.

குறிப்புரை: தசமுகன் – இராவணன். தேவூர்த் தெருக்களின் நலம் கூறப்பட்டது. சூடி – அணிந்த சிவன்.

Our Lord Civan is manifest along with His consort on the Himalayan mountain. Here very significant old trees are plenty. Raavanan, the mighty ten-headed king of Sri Lanka, with egoism, tried his best to lift this Kailash mountain and keep it aside to make his pathway in the sky while flying. But alas he got his heads crushed and became terrified because our Lord slightly pressed the top of the mountain with His toe. Raavanan realised his misdeeds and praised, our Lord by chanting divine music (Saama Vedic song). On hearing the song, our Lord relented at heart. Then He graced him and gave a divine sword and more presents to him. In the city of Thiru-thevoor, filled with the good southern wind, our Lord Civan manifests Himself in the temple wearing on His body snakes as jewellery. We have reached His holy feet, to take refuge under Him. Therefore, we have no sufferings in our life.

2364. முந்திக்கண்ணனுநான்முகனும்மவர்காணா
எந்தைதிண்டிறலிருங்களிறுரித்தஎம்பெருமான்
செந்தினத்திசையறுபதமுரல்திருத்தேவூர்
அந்திவண்ணனையடைந்தனமல்லலொன்றிலமே. 9

முந்திக் கண்ணனும் நான்முகனும் அவர்காணா
எந்தை திண்டு இறலிரும் களிறுரித்த எம்பெருமான்
செந்தினத் திசைஅறுபதம் முரல் திருத்தேவூர்
அந்தி வண்ணனை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.

muntik kaNNan2um nAn2mukan2um(m) avar kANA
entai, tiN tiRal irugkaLiRu uritta emperumAn2,
centu in2attu icai aRupatam mural tirut tEvUr
anti vaNNan2ai aTaintan2am; allal on2Ru ilamE.

பொருள்: கண்ணனும் நான்முகனும் அடிமுடிகளைக் காண முந்திக் கொண்டு சென்றும் காணாத எம்முடைய தந்தை, திண்மையும் திறலும் உடைய பெரிய களிற்றின் தோலை உரித்த எம் பெருமான்; செந்து என்னும் பண்ணின் இனத்து இசையைத் தேன் வண்டு முரலும் திருத்தேவூர் அந்திவண்ணனை அடைந்தனம்; அடைந்த காரணத்தால் துன்பமொன்றும் இலோம்.

குறிப்புரை: களிற்றிற்குத் திண்மையும் திறலும் இருமையும் அடைகளாயின. செந்து – பெரும்பண்களுள் ஒன்று. 'செந்து மண்டலி' பிங்கலந்தை. செந்து இனத்து இசை – செந்து என்னும் பண்வகையைச் சார்ந்த இசையை. 'செந்திலங்கு மொழியவர்' (தி. 2 ப. 3 பா. 10) 'செந்து நேர்மொழி யார்' (தி. 2 ப. 51 பா. 11). 'செந்திசை பாடல்' (தி. 1 ப. 114 பா. 11). அறுபதம் – வண்டு. முரல் – ஒலிக்கும். திருத்தேவூர் என்று ஆசிரியரே சிவதலங்களை வழங்குமாறு உபதேசித்தருளியவாறு உணர்க.

The tutelary two deities Thirumaal and Brahma argued with each other and decided to see the holy feet or the head of Lord Civan first. They both searched for years and failed in their efforts. Then they worshipped our father Lord Civan. Our Lord once peeled the hide of a very big, fat and mighty elephant. He shines like the red glow of sunset. In the city of Thiru-thevoor, the beetles make soft sound as of a lute's music known as 'Chendu'. We worship and have taken refuge under His holy feet. Therefore we have no sufferings in our Life.

2365. பாறுபுத்தருந்தவமணிசமணரும்பலநாள்
கூறிவைத்ததோர்குறியினைப்பிழையெனக்கொண்டு
தேறிமிக்கநஞ்செஞ்சடைக்கடவுள்தென்தேவூர்
ஆறுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. 10

பாறு புத்தரும் தவமணி சமணரும் பலநாள்
கூறி வைத்ததோர் குறியினைப் பிழையெனக் கொண்டு
தேறி மிக்க நம் செஞ்சடைக் கடவுள் தென் தேவூர்
ஆறுசூடியை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.

pARu puttarum, tavam aNi camaNarum, palanAL
kURi vaittatu or kuRiyin2aip pizai en2ak koNTu,
tERi, mikka nam cenjcaTaik kaTavuL ten2 tEvUr
ARu cUTiyai aTaintan2am; allal on2Ru ilamE.

பொருள்: அழிவாராகிய பவுத்தர்களும் தவ வேடம் பூண்ட சமணரும் பலநாட்களாகக் கூறிவந்த கொள்கையினைப் பிழையெனத் தெளிந்து தேறி நம்முடைய செஞ்சடைக் கடவுளான சிவபிரானின் தென்தேவூர் கங்கை சூடியை அடைந்தனம். அடைந்த காரணத்தால் துன்பமொன்றும் இலோம்.

குறிப்புரை: பாறுபுத்தர் – ஓடுகின்ற புத்தர்கள். பாறல் – ஓடுதல். தவம் அணி – தவக்கோலம் அணிந்த. குறி – குண்டர் சாக்கியர் கூறியதாம் குறியின்மையே சொலீர் (பதி. 137 பா. 10). தேறி – தெளிந்து.

The Buddhists running about, and the Jains who do penance, preach about false target. We, the devotees, discovered that their utterances were all utterly false and have recognised that our Lord is the chief one. We have reached Thiru-thevoor where our Lord is manifest whose fame spreads everywhere in the world. His matted hair is red and bright. We have taken refuge under Lord Civan who supports the river Ganges on His head. We, therefore, have no sufferings even in small quantity in our life.

2366. அல்லலின்றிவிண்ணாள்வர்கள்காழியர்க்கதிபன்
நல்லசெந்தமிழ்வல்லவன்ஞானசம்பந்தன்
எல்லையில்புகழ்மல்கியஎழில்வளர்தேவூர்த்
தொல்லைநம்பனைச்சொல்லியபத்தும்வல்லாரே. 11

அல்லல் இன்றி விண்ணாள்வர்கள் காழியர்க்கு அதிபன்
நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம்பந்தன்
எல்லையில் புகழ்மல்கிய எழில்வளர் தேவூர்த்
தொல்லை நம்பனைச் சொல்லிய பத்தும் வல்லாரே.

allal in2Ri viN ALvarkaL--kAziyarkku atipan2,
nalla centamiz vallavan2, njAn2acampantan2,
ellai il pukaz malkiya ezil vaLar tEvUrt
tollai nampan2aic colliya pattum vallArE.

பொருள்: சீகாழி மக்களுக்குத் தலைவன்; நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம்பந்தன், அளவற்ற புகழ் நிறைந்த பழமையான அழகிய திருத்தேவூரில் நம் விருப்பத்திற்கு உரியவனாகிய சிவபிரானைப் பாடிய திருப்பாடல்கள் பத்தினையும் வல்லவர் அல்லல் இன்றி விண் ஆள்வர்.

குறிப்புரை: அல்லல் இன்றி விண்ணவாள்வர்கள் வல்லார் என்க. முற்பாக்களில் யாம் அல்லல் ஒன்று இலம் என்றருளி, இதில் இப்பத்தும் வல்லார் அல்லல் இலராவர் என்ற உண்மை உணர்த்தப்பட்டது. இத்திருப்பதிகத்தை நாடோறும் நியமமாகப் பாராயணம் செய்பவர் அல்லல் அடையார் என்பது திண்ணம். அதிபன் – தலைவன்.

Our young saint Thiru-gnana-Sambandar is the chief of people of Seerkaazhi. He is a great scholar in pure Tamil language. He praised the originator - Lord who is manifest in Thiru-thevoor. The city is highly famous all over the universe. These ten verses are the real praise of our Lord. Those devotees who can chant these ten verses daily from memory in the presence of our Lord will rule the celestial world without any suffering in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

82ஆம் பதிகம் முற்றிற்று
End of 82nd Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 219 *பதிக எண்: 83*

83. திருக்கொச்சைவயம்

83. THIRU-KOCH-CHAI-VAYAM

பண் : காந்தாரம் *Pann: Kaanthaaram*

திருத்தல வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

2367. நீலநன்மாமிடற்றனிறைவன்சினத்தநெடுமாவுரித்தநிகரில்
சேலனகண்ணிவண்ணமொருகூறுருக்கொள்திகழ்தேவன்மேவுபதிதான்
வேலனகண்ணிமார்கள்விளையாடுமோசைவிழவோசைவேதவொலியின்
சாலநல்வேலையோசைதருமாடவீதிகொடியாடுகொச்சைவயமே. 1

நீல நன்மாமிடற்றன் இறைவன் சினத்த நெடுமா உரித்த நிகரில்
சேலன கண்ணி வண்ணம் ஒருகூறு உருக்கொள் திகழ்தேவன் மேவு பதிதான்
வேலன கண்ணிமார்கள் விளையாடும் ஓசை விழ ஓசை வேத ஒலியின்
சால நல்வேலை ஓசை தருமாடவீதி கொடி ஆடு கொச்சைவயமே.

nIla nal mAmiTaRRan2; iRaivan2; cin2atta neTumA uritta, nikar il
cEl an2a kaNNi vaNNam orukURu uruk koL, tikaz tEvan2; mEvu patitAn2--
vEl an2a kaNNimArkaL viLaiyATum Ocai, vizavu Ocai, vEta oliyin2,
cAla nal vElai Ocai, taru mATa vIti koTi ATu koccaivayamE.

பொருள்: திருநீலகண்டம் உடைய இறைவன்; கோபத்தை உடைய பெரிய யானையின் தோலினை உரித்தவன்; தனக்கு நிகரில்லாத சேல் மீன் போன்ற கண்ணியாகிய உமையை ஒரு கூறாகக் கொண்டு திகழ்கின்ற கடவுள், அவர் பொருந்திய பதிதான் ஏதோவெனில், வேல் போன்ற கூரிய கண்களையுடைய மகளிர் விளையாடும் பண்ணோசையும் விழவினோசையும், வேதமுழக்கமும் மிக்க கருங்கடலின் ஓசையும் கலந்து தரும் கொடியாடும் மாடவீதிகளை உடைய திருக்கொச்சைவயமே.

குறிப்புரை: நீலநன்மாமிடற்றன் – திருநீலகண்டத்தர். சினத்த – கோபத்தை உடைய. மா – யானை. சேல் அன்ன கண்ணி – சேல்மீன் போன்ற கண்களையுடைய உமாதேவியார். கூறு – பாகம். உருகொள் திகழ் தேவன் என்க. கண்ணுக்கு வேல் ஒப்பு. மகளிர் விளையாட்டோசையும் விழாவினோசையும், வேதமுழக்கமும், கடலோசையும் உடைய வீதிகள், பதிதான் கொச்சைவயம் என்க. முதல் 9 பாக்கட்கும் இவ்வாறே கொள்க.

The name of the city Koch-chai-vayam is one of the twelve names of Seerkaazhi. Our Lord Civan's neck is dark blue in colour. Once He peeled off the hide of a very big, sturdy and ferocious elephant. He has embedded His consort Uma Devi on the left side of His body. Her eyes resemble the carp fish and she is an incomparable goddess. Our Lord Civan is manifest in the temple in Koch-chai-vayam city. In this city the noise created by beautiful girls with spear like eyes, playing different games in large numbers, is always heard. The loud noise of pompous festivals; the noise created by Vedic scholars chanting the Vedas; the noise created by the waves of the ocean, all these noises are always heard in the city. Also the flags flying in the streets filled with big palatial buildings are many. In such a pompous city our Lord Civa manifests Himself in the temple.

2368. விடையுடையப்பனொப்பில்நடமாடவல்லவிகிர்தத்துருக்கொள்விமலன்
சடையிடைவெள்ளெருக்கமலர்கங்கைதிங்கள்தகவைத்தசோதிபதிதான்
மடையிடையன்னமெங்குநிறையப்பரந்துகமலத்துவைகும்வயல்சூழ்
கொடையுடைவண்கையாளர்மறையோர்களென்றும்வளர்கின்றகொச்சைவயமே. 2

விடை உடையப்பன் ஒப்பில் நடமாட வல்ல விகிர்தத்து உருக்கொள் விமலன்
சடை யிடை வெள் எருக்கமலர் கங்கை திங்கள் தகவைத்த சோதி பதிதான்
மடை இடை அன்னம் எங்கு நிறையப் பரந்து கமலத்து வைகும் வயல்சூழ்
கொடை உடை வண்கையாளர் மறையோர்கள் என்றும் வளர்கின்ற கொச்சைவயமே.

viTai uTai appan2; oppu il naTam ATa valla vikirtattu uruk koL vimalan2;
caTai iTai veL erukkamalar, kagkai, tigkaL, taka vaitta cOti; patitAn2--
maTai iTai an2n2am egkum niRaiyap parantu kamalattu vaikum, vayalcUz,
koTai uTai vaNkaiyALar maRaiyOrkaL en2Rum vaLarkin2Ra, koccaivayamE.

பொருள்: எருதினை உடைய எங்கள் அப்பன்; நிகரில்லாத திருக்கூத்து நிகழ்த்த வல்ல விகிர்த உருக்கொண்ட விமலன்; தன் சடையின் இடையே வெள்ளெருக்கமலரையும், கங்கையையும்

திங்களையும் பொருந்த வைத்த சோதி; அவருடைய பதிதான் ஏதோவெனில், நீர் பாயும் பள்ளமடைகளெங்கும் அன்னப் பறவைகள் பரந்து தாமரை மலர்களிலே தங்கும் வயல்கள் சூழ்ந்த, வள்ளன்மையுடையவர்களும் மறையோர்களும் விருத்தியடைகின்ற திருக்கொச்சைவயமே.

குறிப்புரை: ஒப்புஇல் நடம் – உவமை இல்லாத ஞானத்திருக்கூத்து. விகிர்தம் – மாறுபாடு (பா. 10). சடையிடை, வெள்ளெருக்க மலர் – 'வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பு' (கம்பர். யுத்தகாண். இராவணன் வதைப். 237). தக – தகுமாறு, பொருந்த. சோதிபதி – ஆறன்தொகை, அன்னம்பரந்து கமலத்து வைகும் வயல். கொடையுடைவண்கையாளர் – கொடையில் ஓவார் குலமும் உயர்ந்த மறையோர்கள் (தி. 2 ப. 122 பா. 1). உரவார் கலையின் கவிதைப் புலவர்க்கு ஒரு நாளும் கரவாவண்கைக் கற்றவர் சேரும் கலிக்காழி (தி.1 ப. 102 பா. 1).

Our Lord who is our Father loves to have a bull for His conveyance. His avocation is to dance in various styles, which are unparalleled. He is our immaculate Supreme Being used to take various forms. His matted hair is decorated with white Yarcum flowers, the Ganges river, the baby moon etc. He shines with all these decorations. Our Lord Civan is manifest in the temple in Koch-chai-vayam. Here the swans stay in large numbers, resting over the lotus flowers in various fields and ponds. In this city, Vedic scholars who are good philanthropists do live in large numbers repeating the Vedic chanting. In such a gorgeous city of Koch-chai-vayam, our Lord is manifest in the temple of this Koch-chai-vayam city.

2369. படஅரவாடுமுன்கையுடையானிடும்பைகளைவிக்குமெங்கள்பரமன்
இடமுடைவெண்டலைக்கைபலிகொள்ளுமின்பனிடமாயவேர்கொள்பதிதான்
நடமிடமஞ்ஞைவண்டுமதுவுண்டுபாடுநளிர்சோலைகோலுகனகக்
குடமிடுகூடமேறிவளர்பூவைநல்லமறையோதுகொச்சைவயமே. 3

பட அரவாடு முன்கை உடையான் இடும்பை களைவிக்கும் எங்கள் பரமன்
இட முடை வெண் தலைக் கைபலிகொள்ளுமின் பனிடம் ஆயவேர் கொள்பதிதான்
நட மிட மஞ்ஞை வண்டு மதுஉண்டு பாடு நளிர் சோலை கோலு கனகக்
குட மிடுகூட ஏறி வளர் பூவை நல்ல மறையோது கொச்சைவயமே.

paTa aravu ATu mun2 kai uTaiyAn2, iTumpai kaLaivikkum egkaL paraman2,
iTam uTai veN talaik kai pali koLLum in2pan2, iTam Aya Er koL patitAn2--
naTam iTa manjnjai, vaNTu matu uNTu pATu naLir cOlai, kOlu kan2akak
kuTam iTu kUTam ERi vaLar pUvai nalla maRai Otu, koccaivayamE.

பொருள்: படமெடுத்து ஆடும் பாம்பினைக் கங்கணமாகக் கொண்ட முன்கையன்; துன்பங்களைக் களையும் எங்கள் மேலானவன்; வெண்டலையில் பலியேற்றலில் இன்பம் கொள்பவன் ஆகிய சிவன் அழகாகக் கொள்ளும் பதிதான் ஏதோவெனில், மயில்கள் நடமாட, வண்டுகள் தேனினை உண்டு பாடும் குளிர்ந்த சோலைகளில் பொற்குடங்கள் நாட்டப் பெற்ற கூடமேறிக் கூட்டமான நாகணவாய்ப் புள்கள் நன்றாக மறையோதும் திருக்கொச்சைவயமே.

குறிப்புரை: மஞ்ஞை – மயில். மயில் ஆட வண்டு பாடும். நளிர் – குளிர்ச்சி. கூடத்தின் மிசைக் குடம் இடுதல் முன்பே இருந்தது. பூவை – நாகணவாய்ப்புள். கூடம் ஏறி மறை ஓதும் கொச்சைவயம் என்க.

Our Lord Civan's forearm accommodates the moving snake, which has its hood. He is our Chief who removes all our misery in life. He loves to beg alms in the broad white skull. The attractive place Koch-chai-vayam is the place of His stay. In this city peacocks, many in number, move about and dance. The bees suck honey and make musical noise in the cool forest area. At the top most floor of palatial buildings a flat area on the top was provided to fix a golden pot full of water covered with sprays of mango leaves and a coconut atop of it. Here in the halls, bush myna birds make noise beautifully. In such a beautiful city of Koch-chai-vayam, our Lord is manifest in the temple.

2370. எண்டிசைபாலரெங்குமிகலிப்புகுந்துமுயல்வித்தசிந்தைமுடுகிப்
பண்டொளிதீபமாலையிடுதூபமோடுபணிவுற்றபாதர்பதிதான்
மண்டியவண்டன்மிண்டிவருநீரபொன்னிவயல்பாயவாளைகுழுமிக்
குண்டகழ்பாயுமோசைபடைநீடதென்னவளர்கின்றகொச்சைவயமே. 4

எண் திசை பாலர் எங்கும் இகலிப் புகுந்து முயல் வித்த சிந்தை முடுகிப்
பண்டு ஒளி தீபமாலை இடு தூபமோடு பணிவுற்ற பாதர் பதிதான்
மண்டிய வண்டல் மிண்டி வருநீர பொன்னி வயல் பாய வாளை குழுமிக்
குண்ட கழ்பாயும் ஓசை படை நீட தென்ன வளர்கின்ற கொச்சைவயமே.

eN ticai pAlar egkum ikalip pukuntu, muyal vitta cintai muTuki,
paNTu, oLi tIpa mAlai, iTu tUpamOTu paNivu uRRa pAtar patitAn2--
maNTiya vaNTan miNTi varum nIra pon2n2i vayal pAya, vALai kuzumik
kuNTu akaz pAyum Ocai paTai nITa tenna vaLarkin2Ra koccaivayamE.

பொருள்: எட்டுத் திசையிலும் உள்ள காவலர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் போட்டியிட்டு முந்திக் கொண்டு புகுந்து முன்பு தீபம், தூபம், பூமாலைகளுடன் வழிபட்டுப் பணிந்த திருவடிகளை உடையவர் பதிதான் ஏதோவெனில், அடித்துக் கொண்டுவரும் வண்ணடல் நிறைந்து வரும் காவிரியின் நீர், வயலிற்பாய, வாளைமீன்கள் திரண்டு குழிந்த பள்ளங்களில் வீழும் ஓசை வாளினை ஏந்தி காலாட்படை குழுமிய தொக்கும் திருக்கொச்சைவயமே.

குறிப்புரை: பாலர் – பாலகர். இகலி – பகைத்து. வழிபடு முறையுட் சிறிது உணர்த்திற்று. ஒளி தீபமாலை – தீபாவளி. பாதர் – திருவடியுடையவர். குண்டு – ஆழம்.

The regents who guard and control the eight cardinal points of the universe as world protectors, are Indiran, Agni, Yaman, Viruthi, Varunan, Vaayu, Kuberan and Easan Murthy. They all visit the city of Koch-chai-vayam. They all join together with mental happiness and pour the oil into the lamps in an orderly manner and light it. Then, they prostrate at the holy feet of our Lord Civan and worship Him. Our Lord Civan's holy place is Koch-chai-vayam. In this city the Cauvery river brings sediments along with sand. The water of the river flows into the fields in plenty. Here the fish in large numbers join together and play in deep waters creating a loud noise. This noise is similar to the noise of hostile armies proceeding for a war.

2371. பனிவளர்மாமலைக்குமருகன்குபேரனொடுதோழமைக்கொள்பகவன்
இனியனஅல்லவற்றையினிதாகநல்குமிறைவன்னிடங்கொள்பதிதான்
முனிவர்கடொக்குமிக்கமறையோர்களோமம்வளர்தூமமோடியணவிக்
குனிமதிமூடிநீடுமுயர்வான்மறைத்துநிறைகின்றகொச்சைவயமே. 5

பனி வளர் மாமலைக்கு மருகன் குபேரனொடு தோழமைக் கொள் பகவன்
இனியன அல்லவற்றை இனிதாக நல்கும் இறைவன் இடம்கொள் பதிதான்
முனிவர்கள் ஒக்குமிக்க மறையோர்கள் ஓமம்வளர் தூமம் ஓடி அணவிக்
குனி மதிமூடி நீடும் உயர்வான் மறைத்து நிறைகின்ற கொச்சைவயமே.

pan2i vaLar mAmalaikku marukan2, kupEran2oTu tOzamaik koL pakavan2,
in2iyan2a allavaRRai in2itu Aka nalkum iRaivan2(n2), iTamkoL patitAn2--
mun2ivarkaL okku, mikka maRaiyOrkaL Omam vaLar tUmam OTi aNavi,
kun2imati mUTi, nITum uyar vAn2 maRaittu niRaikin2Ra koccaivayamE.

பொருள்: இமாசலகுமாரனுக்கு மருமகன்; குபேரனோடு தோழமை கொண்ட பகவன்; இனியன அல்லாதவற்றையும் இனியனவாக ஆக்கி நல்கும் இறைவன்; அவன் இடங்கொள் பதிதான் யாதெனில், முனிவர்கள் கூடியிருக்க, மிகுந்த மறையோர்கள் ஆற்றும் வேள்வியில் எழும் புகை ஆகாயத்தை முட்டி வளைந்த மதியையும் மூடி உயர்வானையும் மறைத்து நிறைகின்ற திருக்கொச்சைவயமே.

குறிப்புரை: பனி . . . மலைக்கு. இமாசலராசனுக்கு. குபேரன் சிவபிரானுக்குத் தோழனாதல் பிரசித்தம். இனிக்காதவற்றையும் இனியவாகச் செய்தருளும் பெருமான். பிறப்பு இன்னாதது என்பது சர்வமத சம்மதம். அதனை இனியதாகப் பலவுயிரும் விரும்புகின்றன. அவ்விருப்பம் மீண்டும் பிறப்பதற்கு உரிய வினையாகின்றது. இது திருவருட்செயல். அணவி – கிட்டி. 'வேள்விப் புகையால் வானம் இருள்கூர் வெண்காடே' (பதி. 197 பா. 7).

Our Lord Civan is the son-in-law of the king of snow-capped Himalayan mountain. Our God mentioned by Thiru-gnana-Sambandar as Bagavan is a close friend of Kuberan, the god of wealth. He bestows all good grace on His devotees even though they do not chant pleasing praise. In this city, Vedic scholars create the sacrificial fire along with the sages. The smoke arising out of the sacrificial fire rushes and spreads over the sky and makes the baby moon invisible. Also the entire sky becomes invisible. This gorgeous city is Koch-chai-vayam where our Lord Civan is manifest.

2372. புலியதள்கோவணங்களுடையாடையாகவுடையான்நினைக்குமளவில்
நலிதருமுப்புரங்களெரிசெய்தநாதன்நலமாவிருந்தநகர்தான்
கலிகெடஅந்தணாளர்கலைமேவுசிந்தையுடையார்நிறைந்துவளரப்
பொலிதருமண்டபங்களுயர்மாடநீடுவரைமேவுகொச்சைவயமே. 6

புலியதள் கோவணங்க உடைஆடையாக உடையான் நினைக்கும் அளவில்
நலிதரு முப்புரங்கள் எரிசெய்த நாதன் நலமா விருந்த நகர்தான்
கலிகெட அந்தணாளர் கலைமேவு சிந்தை உடையார் நிறைந்துவளரப்
பொலிதரு மண்டபங்கள் உயர்மாட நீடுவரை மேவு கொச்சைவயமே.

puli ataL kOvaNagkaL uTai ATai Aka uTaiyAn2, nin2aikkum aLavil
nalitaru muppuragkaL ericeyta nAtan2, nalamA irunta nakartAn2--
kali keTa antaNALar, kalai mEvu cintai uTaiyAr, niRaintu vaLara,
politaru maNTapagkaL uyar mATam nIlTu varai mEvu koccaivayamE.

பொருள்: புலியின் தோலையும் கோவணத்தையும் உடையாக உடையன்; நினைத்த மாத்திரத்தில் முப்புரங்களையும் எரித்த தலைவன்; அவன் மகிழ்ந்து இருந்த தலம் யாதெனில், வறுமை கெட வேள்விசெய்யும் அந்தணாளர்; வேதம் முதலிய கலைகள் பற்றிய சிந்தனை உடையவர்கள் நிறைந்து மேலோங்க, பொலிவுடைய மண்டபங்கள், உயர்மாடங்கள் மலைபோல உயர்ந்து அமைந்துள்ள திருக்கொச்சைவயமே.

குறிப்புரை: அதள் – தோல். உடையாடை (ப.217 பா.2). கலி – வறுமை. அந்தணாளர் – அழகும் தண்மையும் ஆள்பவர். கலை – வேத முதலிய கலைகள்.

Our Lord Civan wears around His waist tiger's skin as His dress. He uses the forelap cloth to cover His loins. He is the Hero, who in the fraction of a second, destroyed the three fortresses of the asuras who inflicted misery on the devas as well as on the world. In this city, Vedic scholars making sacrificial fire for chasing kali (suffering and sorrow) from this world and people of artistic leanings are many. The city contains beautiful halls open on one side and connected with a temple, and very many palatial buildings and these together look like a range of mountains, such is the beauty of Koch-chai-vayam. This city is Koch-chai-vayam where our Lord Civan is manifest.

7ஆவது பாடல் கிடைக்கப்பெறவில்லை.

2373. மழைமுகில்போலுமேனியடல்வாளரக்கன்முடியோடுதோள்கள்நெரியப்
பிழைகெடமாமலர்ப்பொன்னடிவைத்தபேயொடுடனாடிமேயபதிதான்
இழைவளரல்குல்மாதரிசைபாடியாடவிடுமூசலன்னகமுகின்
குழைதருகண்ணிவிண்ணில்வருவார்கள்தங்களடிதேடுகொச்சைவயமே. 8

மழை முகில் போலு மேனியடல் வாளரக்கன் முடியோடு தோள்கள் நெரியப்
பிழை கெட மாமலர்ப் பொன்னடி வைத்த பேயொடு உடனாடி மேய பதிதான்
இழை வளர் அல்குல் மாதர் இசை பாடிஆட விடுமூசலன்ன கமுகின்
குழை தருகண்ணி விண்ணில் வருவார்கள் தங்களடி தேடு கொச்சைவயமே.

mazai mukil pOlum mEn2i aTal vAL arakkan2 muTiyOTu tOLkaL neriya,
pizai keTa, mA malarppon2 aTi vaitta pEyoTu uTan2 ATi mEya patitAn2--
izai vaLar alkul mAtar icai pATi ATa, iTum Ucal an2n2a kamukin2
kuzai taru kaNNi viNNil varuvArkaL tagkaL aTi tETu koccaivayamE.

பொருள்: கார்மேகம் போன்ற மேனியையும் வெற்றி படைத்த வாளையும் கொண்ட அரக்கன் இராவணனின் பத்து முடிகளுடன் இருபது தோள்களும் நெரிய, அவன் செய்த பிழை கெட தாமரை போன்ற பொன்னடியை வைத்த, பேய்க்கணங்களுடன் ஆடுவோன் பொருந்திய பதிதான் யாதெனில், மேகலை முதலிய அணிகள் அணிந்த அல்குலை உடைய மாதர்கள் இசைபாடியாட, கமுகாகிய ஊசலில் கட்டிய கயிறு விண்ணில் வருவார்களின் அடியைத் தடுக்கும் திருக்கொச்சைவயமே.

குறிப்புரை: மழை முகில் – மழையைப் பொழியும் மேகம். அரக்கன் – இராவணன். இராவண்ணன் என்றவாறு. பிழை – மதியாது மலையெடுத்த குற்றம். இழை – மேகலை முதலியன. கண்ணி – வலை. புட்களைப் படுக்கும் முடிப்புக் கயிறுமாம். கமுகின் குழை – (தளிர்) தருக்கண்ணி, விண்ணில் வருவோர் காலைச்சிக்கச் செய்யும் என்றதால். அதன் உயர்ச்சி கூறிற்று.

The king of Sri Lanka, Raavanan, with his body like black clouds which carry water in the sky, and a strong sword at his waist, had his ten heads and shoulders crushed under mount Kailash, the abode of our Lord. Our Lord pressed the top of His mountain, with His flower like holy feet, very slightly. Raavanan realised his egoism and begged pardon to our Lord for his misdeed. (His avocation is to dance in the company of fiends. In this city, very attractive girls wearing jeweled girdle of seven or eight strands over their waist dance and sing in the music halls. In this city, the areca palm trees in large numbers grow very tall reaching the sky, with their leaf stalks waving around the legs of the celestials who move about in the sky. Such is the richness of the city.

2374. வண்டமர்பங்கயத்துவளர்வானும்வையம்முழுதுண்டமாலுமிகலிக்
கண்டிடவொண்ணுமொன்றுகிளறிப்பறந்துமறியாதசோதிபதிதான்
நண்டுணநாரைசெந்நெல்நடுவேயிருந்துவிரைதேரமோதுமதுவிற்
புண்டரிகங்களோடுகுமுதம்மலர்ந்துவயல்மேவுகொச்சைவயமே. 9

வண்டமர் பங்கயத்து வளர்வானும் வையம் முழுதுண்டமாலும் இகலிக்
கண்டிட ஒண்ணு மொன்று கிளறிப் பறந்தும் அறியாத சோதி பதிதான்
நண்டுண நாரை செந்நெல் நடுவே இருந்து இரை தேரமோது மதுவிற்
புண்டரிகங்களோடு குமுதம் மலர்ந்து வயல்மேவு கொச்சைவயமே.

vaNTu amar pagkayattu vaLarvAn2um, vaiyam muzutu uNTa mAlum, ikali,
"kaNTiTa oNNum" on2Ru kiLaRi, paRantum, aRiyAta cOti patitAn2--
naNTu uNa, nArai cennel naTuvE iruntu; irai tEramOtu maTuvil
puNTarikagkaLOTu kumutam malarntu--vayal mEvu koccaivayamE.

பொருள்: வண்டுகள் அமர்கின்ற தாமரை மலரில் இருக்கும் நான்முகனும் வையமுண்ட திருமாலும் தம்முள் மாறுபட்டு முறையே முடியும் அடியும் காண முனைந்து வானத்தில் பறந்தும் பூமியைக் கிளறியும் அறியவியலாத நீதியினது பதிதான் யாதெனில், நண்டினை உண்ண வேண்டி நாரை செந்நெல் வயலின் நடுவேயிருந்து இரைதேட, போதுகளில் தேனுடன் தாமரைகளோடு குமுதங்களும் மலரும் வயல்கள் பொருந்திய திருக்கொச்சைவயமே.

குறிப்புரை: வளர்வான் – பிரமன். மால் கிளறி. வளர்வான் பறந்தும். நண்டு உண்ண. நாரை இரையைத் தேர (ஆராய). புண்டரிகம் – தாமரை. குமுதம் – ஆம்பல்.

The demigod Brahma rests in the lotus flower where long bees swarm in large numbers. The tutelary god Thirumaal once devoured the entire world. They both had different ideas about who was superior to the other. Then they decided that they should see the head and feet of our Lord Civan, and the one who saw them first was superior. Thirumaal took the form of a swine and Brahma became the swan and one went deep down the earth and the other over the sky. They both could not see the head and feet. Then our Lord Civan took the form of supernal effulgence, and He resides in the city of Koch-chai-vayam. In this city, there are rich fields and ponds always full of water. The cranes stand in the midst of red paddy fields and search for their food such as crabs. The lotus flowers are full of honey, blossom in large numbers in the fields. Along side the lily flowers also blossom in the fields. Such a delightful city is Koch-chai-vayam where our Lord Civan is manifest.

2375. கைனிலுண்டுமேனியுதிமாசர்குண்டரிடுசீவரத்தினுடையார்
மெய்யுரையாதவண்ணம்விளையாடவல்லவிகிர்தத்துருக்கொள்விமலன்
பையுடைநாகவாயிலெயிறாரமிக்ககுரவம்பயின்றுமலரச்
செய்யினில்நீலமொட்டுவிரியக்கமழ்ந்துமணநாறுகொச்சைவயமே. 10

கைனில் உண்டு மேனியுதிமாசர் குண்டரிடு சீவரத்தின் உடையார்
மெய் உரையாத வண்ணம் விளையாட வல்ல விகிர்தத்து உருக்கொள் விமலன்
பையுடை நாகவாயில் எயிறார மிக்க குரவம் பயின்று மலரச்
செய்யினில் நீலமொட்டு விரியக் கமழ்ந்து மணநாறு கொச்சைவயமே.

kaiyin2il uNTu mEn2i utir mAcar kuNTar, iTu cIvattin2 uTaiyAr,
mey uraiyAta vaNNam viLaiyATa valla vikirtattu uruk koL vimalan2--
pai uTai nAka vAyil eyiRu Ara mikka kuravam payin2Ru malara,
ceyyin2il nIlam moTTu viriyak kamazntu maNam nARu koccaivayamE.

பொருள்: உணவினைக் கையில் வாங்கி ஏந்து உண்டு, உடலில் உதிரும் அழுக்குடைய சமணக் குண்டர்கள் துவரூட்டிய உடையராகிய பவுத்தர்கள் ஆகிய புறச் சமயத்தினர் சமயாதீதனான பரசிவத்தின் உண்மை உணரமாட்டார்; அவர்களுக்கு மெய்ப்புலப்படா வண்ணம் விளையாட வல்ல விகிர்தத்து உருவினைக் கொள்ளும் மலமற்றவன் வாழும் பதி யாதெனில், நச்சுப் பையினையுடைய நாகத்தின் வாயில் உள்ள பல்லினை ஒத்த பூக்களைக் குரவம் மிகுதியாக மலர, வயல்களில் நீலோற்பவம் மொட்டு விரியக் கமழ்ந்து மணம் நாறும் திருக்கொச்சைவயமே.

குறிப்புரை: மாசர் – அழுக்கர். புறப்புறச்சமயத்தார்க்குச் சமயாதீதனான பரசிவத்தின் மெய் புலப்படாமை கூறிற்று. எயிறு – பல். பயின்று – மிகுதியாய். செய் – கழனி. (மொட்டு – அரும்பு). கமழ்ந்து – பரந்து. வியலிடம் கமழ் (புறநா. 50).

The Jains do live in this city. They accept alms in their hands and eat it from their hands. Therefore, the dirt and dust from the body falls now and then. Some are strong and stout people. The Buddhist monks wear salmon coloured dresses. They both preach undesirable and false wisdom. Our Lord Civan used to take different kinds of forms according to need. He is manifest in Koch-chai-vayam. In this city, common bottle flower blossoms. This flower looks like the tooth and gums of the hooded snake. In the fields blue Indian water lily blossoms in large numbers. Because of the blossoming of these two flowers sweet smell spreads everywhere in the city Koch-chai-vayam. In such a gorgeous city our Lord is manifest.

2376. இறைவனையொப்பிலாதஒளிமேனியானையுலகங்களேழுமுடனே
மறைதருவெள்ளமேறிவளர்கோயில்மன்னியினிதாஇருந்தமணியைக்
குறைவிலஞானமேவுகுளிர்பந்தன்வைத்ததமிழ்மாலைபாடுமவர்போய்
அறைகழலீசனாளுநகர்மேவியென்றுமழகாஇருப்பதறிவே. 11

இறைவனை ஒப்பிலாத ஒளிமேனியானை உலகங்கள் ஏழும் உடனே
மறைதரு வெள்ளம் ஏறிவளர் கோயில் மன்னி இனிதா இருந்த மணியைக்
குறைவில ஞானமேவு குளிர்பந்தன் வைத்த தமிழ்மாலை பாடும் அவர்போய்
அறை கழல் ஈசனாளும் நகர் மேவிஎன்று மழகா இருப்பதறிவே.

iRaivan2ai, oppu ilAta oLi mEn2iyAn2ai, ulakagkaL Ezum uTan2E
maRaitaru veLLam ERi vaLar kOyil man2n2i in2itA irunta maNiyai,
kuRaivu ila njAn2am mEvu kuLir pantan2 vaitta tamizmAlai pATumavar, pOy,
aRai kazal Ican2 ALum nakar mEvi, en2Rum azakA iruppatu aRivE.

பொருள்: இறைவனை, ஒப்பு இலாத ஒளிமேனியான் தன்னை, ஏழு உலகங்களும் ஒருசேர மறையுமாறு ஊழிக்காலப் பெருவெள்ளம் மேவியபோது, அழியாமல் நின்ற திருக்கொச்சைவயம் திருக்கோயிலில் இனிதாக நிலைத்து இருந்த மணியைக் குறைவிலாத நிறைந்த ஞானம் மேவும் அருளுடை திருஞானசம்பந்தன் பாடி வைத்த தமிழ்மாலையைப் பாடுமவர் ஒலிக்கும் கழலணிந்த ஈசன் ஆளும் சிவலோகத்திற்குப் போய் அங்கு என்றும் மகிழ்ச்சியுடன் இருப்பர்; இதனை அறியும் அறிவே அறிவு.

குறிப்புரை: ஒப்பு இலாத ஒளி மேனியான் – உவமையில்லாத பிரகாசத்தையுடைய திருமேனியை உடையவன். 'அங்கு இங்கு என்னாதபடி எங்கும் பிரகாசமாய்' (தாயுமான. 1). விளங்குவது வேறொன்றில்லாமையால் ஒப்பின்மை தெளிவாம். மறைக்கும் வெள்ளம் ஊழிப்பிரளயம்.

Our Lord Civan is manifest everywhere in all directions in the universe since He is all pervasive. He shines in supernal effulgence. At the time of the deluge the whole universe was immersed in water, except the Thiru-th-thoni mountain temple which alone floated. Our Lord Civan manifesting Himself in this temple enjoyed everything. Thiru-gnana-Sambandar who is bestowed with divine knowledge chanted these famous garlands of Tamil, in ten verses. Those devotees who can memorise all these ten verses, chant them before our Lord will be blessed by Him. They will reach the Siva Loka, where our Lord Civan wearing the tinkling anklets rules over. There they will happily stay with divine subtle body.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

83ஆம் பதிகம் முற்றிற்று
End of 83rd Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 220

பதிக எண்: 84

84. திருநனிபள்ளி

84. THIRU-NANI-PALLI

பண் : காந்தாரம்

Pann: Kaanthaaram

திருத்தல வரலாறு

திருநனிபள்ளி என்னும் இத்திருத்தலமானது திருஞானசம்பந்த சுவாமிகளுடைய அருமைத் தாயாரின் பிறப்பகம் ஆகும். இது இக்காலம் புஞ்சை கடாரங் கொண்டான் என்று வழங்கப்பெறுகின்றது. இது காவிரிக்குத் தென்கரையில் உள்ள 43ஆவது தலமாகும். மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதி உள்ளது. இறைவரின் திருப்பெயர் நற்றுணையப்பர். இறைவியாரின் திருப்பெயர் மலையான்மடந்தை. இத்தலம் முன் பாலை நிலமாய் இருந்தது. ஞானசம்பந்தப் பெருந்தகையார் இதை நெய்தல் நிலமாகுமாறு பாடினார். பின்னர் இதையே, கானகமும் வயலுமாக ஆக்கினர். இச்செய்தி,

'நாதன் நனிபள்ளி சூழ்நகர் கானக மாக்கியஃதே
போதின் மலிவயல் ஆக்கிய கோன்'

என்னும் பதினொன்றாந் திருமுறையிலுள்ள ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் (செய்யுள் 17) கூறப்பெற்றுள்ளது.

ஞானசம்பந்தர் பாலையை நெய்தலாகப் பாடியதை 'பாலை நெய்தல் பாடியதும்' என்னும் திருக்களிற்றுப்படியார் பாடலாலும் அறியலாம். இக்கோயிலுக்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசு நாயனார் பதிகம் ஒன்று, சுந்தர மூர்த்தி நாயனார் பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன. திருநாவுக்கரசு நாயனார் இக்கோயில் பதிகம் ஐந்தாம் திருப்பாட்டில் சமணர்கள், தமக்கு நஞ்சு கலந்த சோறு கொடுத்ததை,

'வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலாவமணர் தந்த
நஞ்சமுதாக்கு வித்தார் நனிபள்ளியடிகளாரே'

எனக் குறித்துள்ளார்கள்.

பதிக வரலாறு

திருஞானசம்பந்தர் திருவருள்பெற்றுச் சீகாழியில் எழுந்தருளியுள்ள உண்மையைக் கேட்டறிந்தனர். உலகோர் பலர் 'தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையாரை

மணிவயிற்றில் உலகுய்ய வைத்து வழங்கிய பகவதியார்' திருஅவதாரம் செய்த தலமாகிய திருநனிபள்ளியின் மறையவரும் அதைக் கேட்டுணர்ந்தனர். அதன்பின் சீகாழியை அடைந்தனர். ஆளுடை பிள்ளையார் அடிமலர் வணங்கினர். தாம் வாழும் திருப்பதிக்கு எழுந்தருளும்படி வேண்டினர். நாயனாரும் அதற்கு இசைந்து புறப்பட்டுத் திருநனிபள்ளியை அணுகினார். அவரை அருளிய சிவபாதவிருதயர் அதுதான் திருநனிபள்ளி என்றனர். அதுகேட்ட ஞானப்பிள்ளையார் இத்திருப்பதிகத்தைப் பாடி, அத்தலத்தை அடைந்து திருக்கோவிலினுட்புகுந்து வழிபட்டார். இத்திருப்பதிகமே பாலையாயிருந்த அத்திருநனிபள்ளியை நெய்தலாக்கிற்று' என்பர் பெரியோர். 'ஒண்கெழுவு ஞானத்தினரறிய மன்னு நனிபள்ளியது, பாலைதனை நெய்தலாக்கியும்' என நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருஉல மாலையிலும், 'ஓடஞ் சிவிகை உலவாக்கிழியடைக்கப் பாடல் பனைதானம் பாலை நெய்தல்' எனத் திருக்களிற்றுப் படியாரிலும் (70) உள்ளமை அறிக.

திருச்சிற்றம்பலம்

2377. காரைகள்கூகைமுல்லைகளவாகையீகைபடர்தொடரிகள்ளிகவினிச்
சூரைகள்பம்மிவிம்முசுடுகாடமர்ந்தசிவன்மேயசோலைநகர்தான்
தேரைகளாரைசாயமிதிகொள்ளவாளைகுதிகொள்ளவள்ளைதுவள
நாரைகளாரவல்வாரிவயன்மேதிவைகுநனிபள்ளிபோலுநமர்காள். 1

காரைகள் கூகை முல்லை களவாகை ஈகை படர்தொடர் இகள்ளி கவினிச்
சூரைகள் பம்மி விம்முசுடு காடமர்ந்த சிவன்மேய சோலை நகர்தான்
தேரைகள் ஆரைசாய மிதிகொள்ள வாளைகுதி கொள்ள வள்ளை துவள
நாரைகள் ஆரவல் வாரிவயன்மேதி வைகும் நனிபள்ளி போலும் நமர்காள்.

kAraikaL, kUkai, mullai, kaLa, vAkai, Ikai, paTar toTari, kaLLi, kavin2i;
cUraikaL pammi; vimmu cuTukATu amarnta civan2 mEya cOlai nakartAn2--
tEraikaL Arai cAya mitikoLLa, vALai kutikoLLa, vaLLai tuvaLa,
nAraikaL Araval vAri, vayan mEti vaikum nan2ipaLLi pOlum; namarkAL!

பொருள்: காரைச் செடிகள், கூகைமுல்லைகள், கனவாகைகள், படர்கின்ற முட்கொடிகள், கள்ளிச்செடிகள் முதலிய தாவரங்கள் அழகு செய்ய, சூரைகள் செறிந்துள்ள சுடுகாட்டில் தங்கும் சிவன் பொருந்திய சோலைநகர்தான் எதுவெனில், தேரைகள் ஆரைப்புற்கள் சாயுமாறு மிதிக்க, வாளைமீன்கள் குதிக்க, வள்ளைக் கொடிகள் துவள, நாரைகள் ஆரல்மீன்களை வாரியுண்ண, வயல்களில் எருமைகள் தங்கும் நனிபள்ளியாம், நம்மவர்களே!

குறிப்புரை: காரை முதலிய தாவரங்கள் சுடுகாட்டில் மிக்குள்ளன. 'முட்காற்காரை' (புறம். 258). கள – களா. 'கருவையிலும் சிங்கையிலும் களவாண்டான்' (தனிப்பாடல்). ஈகை – இண்டஞ்செடி. ஈங்கை – புலி தொடக்கி எனலுமுண்டு. 'இண்டு படர்ந்த இருள்சூழ் மயானத்து'. தொடரி – முட்செடி. 'கடுவும்

தான்றியும் கொடுமுள் தொடரியும்'. சூரை – 'கான்றையும் சூரையும் கள்ளியும் அடர்ந்து' மணிமேகலை. 6–81. பம்மி – செறிந்து. 'குளத்தினில் ஆரை படர்ந்து' திருமந்திரம் 2911. 'மகளிர் வள்ளை கொய்யும்' பதிற். 29–2.

Oh! My dear relatives and people!! Several vegetations such as Kaarai, Kookai, Mullai, Kalavaagai, and Eekai spread as creepers, also Thodari and Kalli cause admirable beauty all around. Here our Lord Civan is manifest in the burning ghat situated in this area; hedge caper shrub growing all around the burning ghat is plenty. However the city is surrounded by man-made gardens. Here the Indian toads jump over the common mountain ebony and press and destroy the creepers. On seeing this, the swordfish jumps over the frog, catches them and eats them. The creepers get destroyed by the fish. On seeing the swordfish the herons come near and eat the fish in the watery fields. Here the buffaloes in large numbers enter into the deep waters and enjoy taking bath here.

2378. சடையிடைபுக்கொடுங்கியுளதங்குவெள்ளம்வளர்திங்கள்கண்ணியயலே
இடையிடைவைத்ததொக்குமலர்தொத்துமாலையிறைவன்னிடங்கொள்பதிதான்
மடையிடைவாளைபாயமுகில்வாய்நெரிந்துமணநாறுநீலமலரும்
நடையுடையன்னம்வைகுபுனலம்படப்பைநனிபள்ளிபோலுநமர்காள். 2

சடை இடைபுக்கு ஒடுங்கி உளதங்கு வெள்ளம் வளர்திங்கள் கண்ணியயலே
இடை இடை வைத்தது ஒக்குமலர் தொத்து மாலை இறைவன் இடங்கொள் பதிதான்
மடை இடை வாளை பாய முகில்வாய் நெரிந்து மண நாறு நீலமலரும்
நடை இடை அன்னம் வைகுபுனலம் படப்பை நனிபள்ளி போலுநமர் காள்.

caTai iTai pukku oTugki uLa tagku veLLam, vaLar tigkaL kaNNi, ayalE
iTai iTai vaittatu okkum malar tottu mAlai, iRaivan2(n2) iTam koL patitAn2--
maTai iTai vALai pAya, mukiz vAy nerintu maNam nARu nIla malarum,
naTai uTai an2n2am vaiku, pun2al am paTappai nan2ipaLLi pOlum; namarkAL!

பொருள்: சடையின் இடையே புகுந்து அங்கே ஒடுங்கித் தங்கும் கங்கைவெள்ளம், வளருகின்ற பிறைச்சந்திரனெனும் தலைமாலை அதற்குப் பக்கத்தில் வைத்தது போன்ற பல மலர்க்கொத்து மாலைகளை அணிந்த இறைவன் இடங்கொண்டிருக்கின்ற பதிதான் எதுவெனில், நீர்மடையிடையே வாளைமீன்கள் பாய நீலமலர் மொட்டு வாய் நெகிழ்ந்து மணம் பரக்க நாற மலருவதும், அழகாக நடக்கும் அன்னப்பறவைகள் தங்கியிருப்பதுமாகிய வயற் படப்பைகள் உடைய நனிபள்ளியாம்! நம்மவர்களே!

குறிப்புரை: உள்ள + தங்கு + வெள்ளம் எனப் பிரிக்க. படப்பை – தோட்டம். பக்கம் எனலுமாம். அன்னத்தின் நடை உவமிக்குஞ் சிறப்புடையது. ஆதலின், நடையுடையன்னம் எனப்பட்டது.

The river Ganges enters the entangled locks of hair of our Lord Civan, stays there and is supported. Also the baby moon stays along with the river Ganges in the entangled locks of hair. In between these two are beautiful flower garlands of different kinds of flowers. This Lord is manifest in Kadaram-kondan. In this city in the water channels flowing rapidly, the sea fish jumps through the sluices. There the Indian purple water lily blossoms and the sweet smell spreads all around. Also in this city gardens are many and ponds are many from which water flows through the sluices. Here beautiful swans move near the sluices. This gorgeous city is Kadaram-kondan.

2379. பெறுமலர்கொண்டுதொண்டர்வழிபாடுசெய்யலொழிபாடிலாதபெருமான்
கறுமலர்கண்டமாகவிடமுண்டகாளையிடமாயகாதல்நகர்தான்
வெறுமலர்தொட்டுவிட்டவிசைபோனகொம்பின்விடுபோதலர்ந்தவிரைசூழ்
நறுமலரல்லிபுல்லியொலிவண்டுறங்குநனிபள்ளிபோலுநமர்காள். 3

பெறுமலர் கொண்டு தொண்டர் வழிபாடு செய்யல் ஒழிபாடிலாத பெருமான்
கறுமலர் கண்டமாக விடமுண்ட காளை இடமாய காதல் நகர்தான்
வெறுமலர் தொட்டு விட்ட விசைபோன கொம்பின் விடுபோது அலர்ந்த விரைசூழ்
நறுமலர் அல்லிபுல்லி ஒலிவண்டு உறங்கு நனிபள்ளி போலுநமர் காள்.

peRu malar koNTu toNTar vazipATu ceyyal ozipATu ilAta perumAn2,
kaRumalar kaNTam Aka viTam uNTa kALai, iTam Aya kAtal nakartAn2--
veRumalar toTTu viTTa vicai pOn2a kompin2 viTu pOtu alarnta virai cUz
naRumalar alli pulli, oli vaNTu uRagkum nan2ipaLLi pOlum; namarkAL!

பொருள்: நெருங்கிய மலர்கள் கொண்டு தொண்டர்கள் வழிபாடு செய்தலாகிய தொண்டினை ஒழியாது கொள்ளும் பெருமான்; கருங்குவளை மலரினைக் காட்டும் மிடறாக விடத்தினை உண்ட காளை ஆகிய சிவனின் காதல் நகர்தான் ஏதோவெனில், தேனை விரும்பிய வண்டுகள் முன்னரே பூத்து மணம் நீங்கிய வெறும் பூக்களைத் தொட்டுத் தங்கியதால் தாழ்ந்து (அவ்வண்டுகள் தேனின்மை கண்டு எழுந்துவிட்டதால்) ஓங்கி எழுந்து விசையுடன் சென்ற மலர்க்கொம்புகளில், அவ்வண்டுகள் தொடாது விடுபோதுகள் பூத்தமையால் மணம் சூழும். பரவும் அந்த மணத்தினால் பூத்த அம்மலர்களின் அகவிதழ்களைப் பொருந்தி ஒலிக்கின்ற வண்டுகள் தேனை உண்டு உறங்கும் நனிபள்ளியாகும்! நம்மவர்களே!

குறிப்புரை: தேனை விரும்பிய வண்டுகள் முன்னரே பூத்து மணம் நீங்கிய வெறும்பூக்களைத் தொட்டுத் தங்கியதால் தாழ்ந்து எழுந்துவிட்டதால் ஓங்கி எழுந்து விசையுடன் சென்ற மலர்க்கொம்புகளில், அவ்வண்டுகள் தொடாது விட்ட போதுகள் பூத்தமையால் மணம் பரவிற்று. பரவிய அம்மணத்தால், பூத்த மலர்களின் அகவிதழ்களைப் பொருந்தி வண்டுகள் ஒலி அடங்கித் தேனுண்டு உறங்கின. இவ்வியற்கையை ஆசிரியர் அருளிய திறத்தை உணர்ந்து மகிழ்க.

The devotees of the city collect the flowers available and carry them to the temple and strew them over the feet of our Lord. He accepts all the flowers without rejecting any. He is our Chief. His throat is dark blue and is similar to the purple Indian water lily, because He, the Hero, imbibed the poison. Civan desired to manifest Himself in the temple in Kadaram-kondan. Here the honey bees fly near flowers where there is no honey. However, they make heavy musical noise because of which the buds blossom. Here the bees suck the sweet honey and take rest and sleep inside the petals. Such manmade gardens are many in the city.

2380. குளிர்தருகங்கைதங்குசடைமாடிலங்குதலைமாலையோடுகுலவி
ஒளிர்தருதிங்கள்சூடியுமைபாகமாகவுடையானுகந்தநகர்தான்
குளிர்தருகொம்மலோடுகுயில்பாடல்கேட்டபெடைவண்டுதானுமுரல
நளிர்தருசோலைமாலைநரைகுருகுவைகுநனிபள்ளிபோலுநமர்காள். 4

குளிர்தரு கங்கைதங்கு சடைமாடு இலங்கு தலைமாலையோடு குலவி
ஒளிர்தரு திங்கள் சூடி உமைபாகமாக உடையான் உகந்த நகர்தான்
குளிர்தரு கொம்மலோடு குயில் பாடல் கேட்ட பெடை வண்டுதானும் முரல
நளிர்தரு சோலை மாலை நரை குருகு வைகு நனிபள்ளி போலும் நமர்காள்.

kuLir taru kagkai tagku caTaimATu, ilagku talaimAlaiyOTu kulavi,
oLir taru tigkaL cUTi, umai pAkam Aka uTaiyAn2 ukanta nakartAn2--
kuLirtaru kommalOTu kuyil pATal kETTa peTaivaNTu tAn2um murala,
naLir taru cOlai mAlai narai kuruku vaikum nan2i paLLipOlum; namarkAL!

பொருள்: குளிர்ந்த கங்கை தங்கும் சடையின் அருகில் விளங்கும் தலைமாலையோடு கலந்து ஒளிர்கின்ற பிறையை அணிந்து உமையைப் பாகமாக உடையவன் ஆகிய இறைவன் உகந்த நகர்தான் யாதெனில், குளிர்ச்சியைத்தரும் கொம்பின்மீது குயிலின் பாடலைக் கேட்ட வண்டு தானும் முரல, குளிர்ச்சி தருகின்ற சோலையில் மாலையில் வெளுத்த குருகு தங்கும் நனிபள்ளியாகும்! நம்மவர்களே!

குறிப்புரை: மாலையோடு குலவிப் பிரகாசிக்கும் பிறைசூடி, கொம்பில் என்றே மதுரைத் திருஞானசம்பந்தப்பிள்ளை பதிப்பில் உள்ளது. சுவாமிநாத பண்டிதரும் வேறு சிலரும் பதித்தவற்றுள், கொம்மல் என்றுள்ளது. குளிர்ச்சியைத்தரும் கும்மிப் பாடலொடு குயிலின் பாடலைக் கேட்ட வண்டு என்று கூறுவதினும் கொம்பு என்னும் இசைக்கருவியின் ஒலியொடு குயிலின் பாடலைக் கேட்ட வண்டு எனக்கூறுவது சிறந்தது.

Our Lord Civan entertains the cool Ganges in His entangled hair along with the head garland of cassia flowers. He has the ornament of the bright young moon. He has embedded His consort Uma Devi on the left half of His body. This Lord desires to manifest Himself in the temple in Kadaram-kondan. Here in the city there are people who can sing beautiful songs using the special instrument called 'Kombu'. The Indian cuckoo on hearing the sound of Kombu makes its music. The female bees which hear both the musical notes, start singing their music too. In the nearby gardens the stork and small herons wait for their food making lines. Such a city is called Thiru-nani-palli or Kadaram-kondan.

2381. தோடொருநாதனாகியொருகாதிலங்குசுரிசங்குநின்றுபுரளக்
காடிடமாகநின்றுகனலாடுமெந்தையிடமாயகாதல்நகர்தான்
வீடுடனெய்துவார்கள்விதியென்றுசென்றுவெறிநீர்தெளிவிப்பவிரலால்
நாடுடனாடுசெம்மையொலிவெள்ளமாருநனிபள்ளிபோலுநமர்காள். 5

தோடு ஒருநாதனாகி ஒருகாது இலங்கு சுரிசங்கு நின்று புரளக்
காடு இடமாக நின்று கனலாடும் எந்தை இடம் ஆய காதல் நகர்தான்
வீடு உடன் எய்துவார்கள் விதி என்று சென்று வெறி நீர் தெளிவிப்ப விரலால்
நாடு உடனாடு செம்மை ஒலி வெள்ளம் ஆரு நனிபள்ளி போலும் நமர்காள்.

tOTu oru kAtan2 Aki, oru kAtu ilagku curicagku nin2Ru puraLa,
kATu iTam Aka nin2Ru, kan2al ATum entai iTam Aya kAtal nakartAn2--
vITu uTan2 eytuvArkaL viti en2Ru cen2Ru veRi nIr teLivippa viralAl,
nATu uTan2 ATu cemmai oLi veLLam Arum nan2ipaLLi pOlum; namarkAL!

பொருள்: ஒருகாதில் தோடும் மற்றொருகாதில் சுரிந்த சங்கு புரளும் காதினனாகி, சுடுகாடு இடமாக நின்று நெருப்பில் ஆடும் எந்தையின் காதல் நகர்தான் யாதெனவெனில், பேரின்ப வீட்டினை விரைந்து எய்தும் சுத்தாத்துவித சைவர்கள் நீராடும் விதிமுறைப்படி சென்று நீரினை விரலால் தெளிப்ப, நாட்டு மக்கள் திரளாக நீராடும் வெள்ளம் நிறையும் நனிபள்ளியாகும்! நம்மவர்களே!

குறிப்புரை: ஒரு காதில் சங்கத்தோடும் ஒரு காதில் சங்கக் குழையும் அணிந்தமை குறிக்கப்பட்டது. கனல் – தீயில். வீடுடன் எய்துவார்கள் பேரின்ப வீட்டை விரைந்து எய்தும் வைதிக சைவர்கள் மனைவியுடன் நீராடச் சென்று அடையும் வைதிகர்கள் எனலுமாம். விரலால் தெளித்தல் – கை (விரல்)களால் அர்க்கியங் கொடுத்தல். நாடுடன் நாடு வெள்ளமா ஆரும் குடகு நாட்டில் தோன்றிக் கொங்கு நாட்டில் பாய்ந்து சோழ நாட்டில் கடலை அடைவது நோக்கின் நாடுடன் நாடு காவிரி வெள்ளம் நிறையும்.

Our Lord Civan has worn the Ola Roll in one of His ears. In another ear, He has worn a round chunk moving here and there in a low bend. His avocation is to visit the burning ghat and dance there in the midnight by the side of the burning fire. The devotees of this place who are desirous to attain salvation go to the river Cauvery and according to the rituals known to them perfectly, they take bath. Then they hold the sweet smelling water in a particular vessel and do the rituals, with their fingers sprinkling holy water from the special vessel over the river Cauvery by doing Arkkiyam - water offered reverentially to gods. The water thus sprinkled in the river is carried along the flood water and spreads all over the city. The city Kadaram-kondan is on the bank of the river Cauvery.

2382. மேகமொடோடுதிங்கள்மலராவணிந்துமலையான்மடந்தைமணிபொன்
ஆகமொர்பாகமாகஅனலாடுமெந்தைபெருமானமர்ந்தநகர்தான்
ஊகமொடாடுமந்தியுகளுஞ்சிலம்பவகிலுந்தியொண்பொனிடறி
நாகமொடாரம்வாருபுனல்வந்தலைக்குநனிபள்ளிபோலுநமர்காள். 6

மேகமொடு ஓடுதிங்கள் மலரா அணிந்து மலையான் மடந்தை மணிபொன்
ஆகம் ஓர் பாகமாக அனலாடும் எந்தை பெருமான் அமர்ந்த நகர்தான்
ஊகமொடு ஆடுமந்தியுகளும் சிலம்ப அகில் உந்தி ஒண்பொன் இடறி
நாகமொடு ஆரம் வாருபுனல் வந்தலைக்கு நனிபள்ளி போலும் நமர்காள்.

mEkamoTu OTu tigkaL malarA aNintu, malaiyAn2 maTantai maNipon2
Akam Or pAkam Aka, an2al ATum entai perumAn2 amarnta nakartAn2--
UkamoTu ATu manti ukaLum, cilampa akil unti oNpon2 iTaRi
nAkamoTu Aram vAru pun2al vantu alaikkum, nan2ipaLLipOlum; nakarkAL!

பொருள்: விண்ணில் மேகத்துடன் செல்லும் பிறைமதியைச் சடையில் மலரினைப் போல அணிந்து இமயராசனின் திருமகளின் அழகிய பொன்னுடலைத் தன் ஒருபாகமாகக் கொண்டு அனலாடும் எந்தை பெருமான் விரும்பி அமர்ந்த நகர்தான் யாதோவெனில்,

ஆண்குரங்குடன் மந்தி மகிழ்ந்து குதிக்கும் மலையில் விளையும் அகிலினை உந்தி ஒளிரும் பொன்னினைத் தள்ளிக் கொண்டு நாகம், சந்தனம் ஆகிய மரங்களை வாரிக் கொணர்ந்து காவிரி வெள்ளம் வந்து பாயும் நனிபள்ளியாகும்! நம்மவர்களே!

குறிப்புரை: ஊகம் – கருங்குரங்கு, குரங்குமாம். மந்தி – பெண் குரங்கு. உகளும் – பாயும், குதிக்கும். இடறி – எற்றி, தள்ளி. நாகம் – நாகமரம். ஆரம் – சந்தனமரம். பாம்பும் (நாகரத்தமும்) முத்தும் ஆம். வாருபுனல் – கொழிக்கும் நீர்.

Our Lord Civa concorporates His consort, the daughter of the king of Kailash mountain on the left half of His frame which is an attractive golden bright body. His avocation is to dance near fire. This our Lord is manifested in the temple in this city. In this city, the dark male monkeys play with their female monkeys. Here from the mountain eaglewood trees, the bright golden particles, jamoon plum trees, sandalwood trees - all these move along with the river flood which drops them along the river banks. Such a glorious city is Kadaram-kondan.

2383. தகைமலிதண்டுசூலமனலுமிழுநாகங்கொடுகொட்டிவினைமுரல
வகைமலிவன்னிகொன்றைமதமத்தவைத்தபெருமானுகந்தநகர்தான்
புகைமலிகந்தமாலைபுனைவார்கள்பூசல்பணிவார்கள்பாடல்பெருகி
நகைமலிமுத்திலங்குமணல்சூழ்கிடக்கைநனிபள்ளிபோலுநமர்காள். 7

தகை மலி தண்டு சூலம் அனலும் உமிழும் நாகம் கொடுகொட்டி வினை முரல
வகை மலி வன்னி கொன்றை மதமத்த வைத்த பெருமான் உகந்த நகர்தான்
புகை மலி கந்தம் மாலை புனைவார்கள் பூசல்பணிவார்கள் பாடல்பெருகி
நகை மலி முத்து இலங்கு மணல்சூழ் கிடக்கை நனிபள்ளி போலும் நமர்காள்.

takai mali taNTu, cUlam, an2al umizum nAkam, koTu koTTi vINai murala,
vakai mali van2n2i, kon2Rai, matamattam, vaitta perumAn2 ukanta nakartAn2--
pukai mali kantam mAlai pun2aivArkaL pUcal, paNivArkaL pATal, peruki,
nakai mali muttu ilagku maNal cUz kiTakkai nan2ipaLLi pOlum; namarkAL!

பொருள்: பெருமைமிக்க தண்டாயுதம், திரிசூலம், நெருப்பைக் கக்கும் பாம்பு ஆகியவற்றை ஏந்தி, வீணை முதலிய வாத்தியங்கள் முழங்க கொடுகொட்டிக் கூத்தாடுவார்; வகை வகையாக நிறைந்த வன்னி, கொன்றை, ஊமத்தை மலர் ஆகியவற்றை அணிந்த பெருமானார்; அவர் விரும்பும் நகர்தான் யாதோவெனில், வாசனைப் புகை படிந்த மணமாலை புனைவார்களின் பூசல் ஓசையும், வழிபாடு செய்வார்களின் பாடலோசையும்

பெருகி, ஒளிமிக்க முத்துக்கள் விளங்கும் மணல்சூழ் வெளிகளை உடைய திருநனிபள்ளியேயாகும்! நம்மவர்களே!

குறிப்புரை: தகை – தடை. தண்டு – தண்டாயுதம். சிவிகையுமாம். கொடுகொட்டி – திரிபுர தகனகாலத்திற் சிவபிரான் ஆடிய திருக்கூத்து. கந்தம் – மணம். நகை – வெண்மை.

Our Lord Civan is the master with bludgeon, the trident, the snake which spins out spark of fire. He has adorned Himself in an orderly manner with the summer tree leaves, Indian laburnum, cassia and datura flowers and others on His head. At the time of destroying the three fortresses of the asuras which were flying in the sky, our Lord Civa made a very special dance called 'Kodukotti', this one among the eleven dances. This Lord desired to manifest Himself in the temple in Kadaram-kondan city. In this city, while fabricating garlands smoke-like fragrance spreads all around. The garland makers praise our Lord and start singing. The prostrating devotees also sing and all this noise spreads all over the domain. The various different coloured gems smear their brightness all over the sandy landscape. Such a gorgeous city is Thiru-nani-palli.

2384. வலமிகுவாளன்வேலன்வளைவாளெயிற்றுமதியாஅரக்கன்வலியோ
டுலமிகுதோள்களொல்கவிரலாலடர்த்தபெருமானுகந்தநகர்தானே
நிலமிகுகீழுமேலும்நிகராதுமில்லையெனநின்றநீதியதனை
நலமிகுதொண்டர்நாளுமடிபரவல்செய்யுநனிபள்ளிபோலுநமர்காள். 8

வலம் மிகு வாளன் வேலன் வளை வாள் எயிற்று மதியா அரக்கன் வலியோடு
உலமிகு தோள்கள் ஒல்க விரலால் அடர்த்த பெருமான் உகந்த நகர்தானே
நிலமிகு கீழும் மேலும் நிகர் ஆதும் இல்லை என நின்ற நீதி அதனை
நலமிகு தொண்டர் நாளும் அடிபரவல் செய்யு நனிபள்ளி போலும் நமர்காள்.

valam miku vALan2, vElan2, vaLai vAL eyiRRu matiyA arakkan2 valiyOTu
ulam miku tOLkaL olka viralAl aTartta perumAn2 ukanta nakartAn2--
nilam miku kIzum mElum nikar Atum illai en2a nin2Ra nIti atan2ai
nalam miku toNTar nALum aTi paraval ceyyum nan2ipaLLi pOlum; namarkAL!

பொருள்: வெற்றி மிக்க வாளினையும் வேலினையும் வளைந்த கூரிய பற்களையும் உடைய, (இறைவன் இருக்கும் கயிலைமலையை) மதியாத அரக்கன் இராவணனின் ஆற்றலோடு கற்றூண் போன்ற திண்ணிய தோள்கள் வாடத் தன் திருவிரலால் வென்ற பெருமான் விரும்பும் நகர்தான் யாதோவெனில், கீழேழுலகம் மேலே ஏழுலகம் ஆகிய நிலங்களில்

இதற்கு நிகரானது ஒன்றும் இல்லை என நின்ற நீதியாகிய இறைவனை அன்புடைய தொண்டர்கள் நாள்தோறும் திருவடி வழிபாடு செய்யும் திருநனிபள்ளியேயாகும்! நம்மவர்களே!

குறிப்புரை: வாளன் – சிவபிரான் அருளிய வாளை உடையவன் (இராவணன்). வாளன் வேலன் இரண்டும் சிவபிரானைக் குறித்தவை எனலும் ஆம். உலம் – கற்றூண், திரண்டகல். ஆதும் – யாதும். 'ஆதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது' (தி. 4 ப. 3 பா. 1). இதில், பிறபத்தும் நோக்காதார் 'யாதும்' என்று எழுதிவிட்டனர். 'சென்று ஆது வேண்டிற்று ஒன்று ஈவான்' (தி. 6 ப. 20 பா. 9).

Raavanan, the king of Sri Lanka is a very robust and sturdy person. He has very firm muscular shoulders like stone pillars. He holds strong sword and trident. His teeth are all very bright and curved. But he had egoism and never cared for others. Our Lord made him lose his haughtiness and crushed his sturdy shoulders by just slightly pressing the top of His abode - the mount Kailash with His toe. Raavanan surrendered. Our Lord desired to manifest Himself in the temple in Kadaram-kondan city. Lord Civan is the Supreme Being of equity, implacable and immaculate. There is no equal to Him both in the underworld and top world to be compared to Him. He is the peerless embodiment of justice. Those servitors of very good character every day go to the temple and prostrate before our Lord's holy feet and worship Him.

2385. நிறவுருவொன்றுதோன்றியெரியொன்றிநின்றதொருநீர்மைசீர்மைநினையார்
அறவுருவேதநாவனயனோடுமாலுமறியாதஅண்ணல்நகர்தான்
புறவிரிமுல்லைமௌவல்குளிர்பிண்டிபுன்னைபுனைகொன்றைதுன்றுபொதுளி
நறவிரிபோதுதாதுபுதுவாசநாறுநனிபள்ளிபோலுநமர்காள். 9

நிறவுரு ஒன்று தோன்றி எரிஒன்றி நின்றதொரு நீர்மை சீர்மை நினையார்
அறவுரு வேத நாவனயனோடு மாலுமறியாத அண்ணல் நகர்தான்
புறவிரி முல்லை மௌவல் குளிர்பிண்டி புன்னை புனை கொன்றை துன்று பொதுளி
நறவிரி போது தாது புதுவாச நாறு நனிபள்ளி போலும் நமர்காள்.

niRa uru on2Ru tOn2Ri eri on2Ri nin2Ratu oru nIrmai cIrmai nin2aiyAr,
aRa uru vEta nAvan2 ayan2OTu mAlum aRiyAta aNNal, nakartAn2--
puRa viri mullai, mauval, kuLir piNTi, pun2n2ai, pun2ai kon2Rai, tun2Ru potuLi
naRa viri pOtu tAtu putuvAcam nARum nan2ipaLLi pOlum; namarkAL!

பொருள்: செந்நிறப் பிழம்பு ஒன்று தோன்றி நெருப்பு என நின்ற அதன் இயல்பையும் பெருமையையும் நினையாதவராய், அறங்கூறும் வேத நாவனாகிய அயனும் மாலும் அறியவியலாத அண்ணலுடைய நகர்தான் யாதோவெனில், புறவில் விரிகின்ற முல்லை, மௌவல் குளிர்ந்த அசோகு, புன்னை, புனையப்பட்டது போன்ற கொன்றை ஆகிய மலர்கள் நெருங்கித் தழைத்து தேன்கமழும் போதுக்களின் வாசமும் மகரந்தப் பொடியின் வாசமும் நாறும் திருநனிபள்ளியாகும்! நம்மவர்களே!

குறிப்புரை: முதலீரடியில் அரியும் அயனும் அடிமுடி தேடிய வரலாறு குறிக்கப்பட்டது. பின்னீரடியில் முல்லை மௌவல் முதலியவற்றின் மணம் வீசும் சிறப்பு நனிபள்ளிக்கு உண்டென்பது கூறப்பட்டது. புற – புறவம். 'குறியதன்கீழாக்குறுகல்' (நன்னூல்).

Our Chief Lord's city is Thiru-nani-palli. In the surrounding area of the city, big forests full of big trees and flower plants are many. The flowering plants are Arabian jasmine, jasmine, asoka tree mastwood and Indian laburnum. These flowers spread their fragrance all over the forest and city area. This is the city of our Lord who appeared as a bright column of fire, its greatness and perfection were not recognised by Brahma, whose tongue keeps on chanting mantras, and also by Thirumaal.

2386. அனமிகுசெல்குசோறுகொணர்கென்றுகையிலிடவுண்டுபட்டஅமணும்
மனமிகுகஞ்சிமண்டையதிலுண்டுதொண்டர்குணமின்றிநின்றவடிவும்
வினைமிகுவேதநான்குவிரிவித்தநாவின்விடையானுகந்தநகர்தான்
நனமிகுதொண்டர்நாளுமடிபரவல்செய்யுநனிபள்ளிபோலுநமர்காள். 10

அனமிகு செல்கு சோறு கொணர் கென்று கையிலிட உண்டுபட்ட அமணும்
மனமிகு கஞ்சி மண்டையதில் உண்டு தொண்டர் குணமின்றி நின்றவடிவும்
வினைமிகு வேதநான்கு விரிவித்த நாவின் விடையான் உகந்த நகர்தான்
நனமிகு தொண்டர் நாளும் அடிபரவல் செய்யு நனிபள்ளி போலும் நமர்காள்.

an2am miku, celku, cORu koNarka!" en2Ru kaiyil iTa uNTu paTTa amaNum,
man2am miku kanjci maNTai atil uNTu toNTar kuNam in2Ri nin2Ra vaTivum,
vin2ai miku vEtam nAn2kum virivitta nAvin2 viTaiyAn2 ukanta nakartAn2--
nan2imiku toNTar nALum aTi paraval ceyyum nan2ipaLLipOlum; namarkAL!

பொருள்: 'செல்க' 'சோறு கொணர்க' என்று கேட்டு அன்னத்தை மிகுதியாகக் கையில் இட உண்டு பழக்கப்பட்ட அமணர்களும் விருப்பத்துடன் கஞ்சியை மண்டை வட்டிலில் உண்டு அடியவர்களுக்குரிய குணம் இல்லாத வடிவினராகிய தேரரும் வினை மிகுவோராவர்.

வேதங்கள் நான்கினையும் விரித்த நாவினனாகிய எருது வாகனன் விரும்பும் நகர்தான் யாதோவெனில் திருநனிபள்ளியே! நம்மவர்களே!

குறிப்புரை: செல்கு – செல்லும். செல்குசோறு – வினைத்தொகை. கொணர்க – கொண்டு வருக. மண்டை – பனைமட்டையாலான உண்கலம். சிவபிரான் வேதங்களை அருளியவன் என்பது இங்கு உணர்த்தப்பட்டது. நன – நனவு, தெளிவு.

The Jains in the city go round the city and ask for food, they get their food in their hand, eat, and roam about the city. Some people offer rice gruel in the food vessel made up of palmyrah leaves to the Buddhist monks. They drink it. Both these groups of people make false propaganda among the crowd. But the devotees of our Lord never listen to those words. Our Lord Civan's tongue chants the four Vedas accompanied by the sacrificial rites. He loves to have His bull for His conveyance. He desires to manifest Himself in the temple in Thiru-nani-palli. Here the scholar devotees who are well-versed in divine knowledge go to the temple everyday, prostrate at our Lord's holy feet and worship Him and praise Him. This city is Kadaram-kondan.

2387. கடல்வரையோதமல்குகழிகானல்பானல்கமழ்காழியென்றுகருதப்
படுபொருளாறுநாலுமுளதாகவைத்தபதியானஞானமுனிவன்
இடுபறையொன்றஅத்தர்பியன்மேலிருந்தினிசையாலுரைத்தபனுவல்
நடுவிருளாடுமெந்தைநனிபள்ளியுள்கவினைகெடுதலானைநமதே. 11

கடல் வரைஓதமல்கு கழிகானல் பானல் கமழ்காழி என்று கருதப்
படு பொருளாறு நாலுமுளதாக வைத்த பதியான ஞானமுனிவன்
இடு பறையொன்ற அத்தர் பியன்மேல் இருந்து இனிசையால் உரைத்த பனுவல்
நடு இருளாடும் எந்தை நனிபள்ளி உள்க வினைகெடுதல் ஆனை நமதே.

kaTal varai Otam malku kazi kAn2al pAn2al kamaz kAzi en2Ru karuta,
paTu poruL ARum nAlum uLatu Aka vaitta pati An2a njAn2amun2ivan2,
iTu paRai on2Ra attar piyan mEl iruntu in2 icaiyAl uraitta pan2uval,
naTu iruL ATum entai nan2ipaLLi uLka, vin2ai keTutal ANai namatE.

பொருள்: கடல்நீரின் ஓதம் மலிந்து கழியும் கானலும் பானலும் மணங்கமழ்கின்ற காழி என்று தியானிக்கப்படு பெயர்; ஆறங்கம் நால்வேதங்கள் என்றும் உளதாக வைத்த பதி; அதிலான ஞான முனிவன் (ஞானசம்பந்தன்) பறை ஒலிக்கத் தந்தையின் தோள்மீது அமர்ந்து

இசையால் உரைத்த இத்திருப்பனுவல் வழியே நடுயாமத்தில் கூத்தாடும் என் தந்தையின் நனிபள்ளியைத் தியானிப்பவர் வினை கெடுக! இஃது நமது ஆணை!

குறிப்புரை: ஆறும் நாலும் – ஆறங்கங்களும் நால்வேதங்களும் (தி. 2 பதி. 6 பா. 3). அத்தர் பியல்மேல் இருந்து – தந்தையார் திருத்தோள்மிசை அமர்ந்து. ஆணை நமதே (தி. 2 ப. 84 – 85 பா. 11; தி. 3 ப. 78 பா. 11; தி. 3 ப. 118 பா. 11).

Our saint Thiru-gnana-Sambandar was born in the city of Kaazhi. This city is near the seashore. On the banks of the sea ponds, and gardens, full of trees flourish. In that area the fragrance of purple Indian water lily flowers gets dispersed all over the area. Our Thiru-gnana-Sambandar is well-versed in the six angas and four Vedas. He was travelling by sitting on his father's shoulders and began singing these ten verses in good music. The servitors may chant these ten verses in musical voice and approach our Lord dancing in the dead of night for drum music in Nani-palli. If they think our Lord of Thiru-nani-palli, their karma will be wiped out.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

84ஆம் பதிகம் முற்றிற்று
End of 84th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: *221* பதிக எண்: *85*

85. பொது - கோளறுதிருப்பதிகம்

85. KOLARU-THIRU-P-PATHIGAM

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

பதிக வரலாறு

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் திருமறைக் காட்டில் பாலறாவாயர் எழுந்தருளியிருப்பதை அறிந்து விடுத்த ஏவலர் போற்றிச் செய்து கொண்ட விண்ணப்பத்திற்கு அவர் இசைந்தார். புகலி மன்னர், மொழிமன்னர்க்குத் தென்னாடுற்ற செயலையும் அதைப் பாண்டிமா தேவியாரும் அமைச்சரும் உரைத்து விட்ட வார்த்தையையும் புகன்றருளிக்கன்னி நாட்டிற்கு எழுந்தருளத் துணிந்தார். அப்பொழுது நாவரசப் பெருந்தகையார் 'பிள்ளாய்' அந்த அமண் கையர் வஞ்சனைக்கு ஓர் அவதி (எல்லை) இல்லை, உரைசெய்வது உளது. உறுகோள் தாமும் தீய. எழுந்தருள உடன்படுவது ஒண்ணாது என்றருளினார். அது கேட்ட புகலி வேந்தர், 'பரசுவது நம் பெருமான் கழல்கள் என்றால், பழுது அணையாது' எனப் பகர்ந்து பரமர் தாள்போற்றி வேயுறு தோளியை விளம்பியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2388. வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தஅதனால்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழன்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 1

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

vEy uRu tOLi pagkan2, viTam uNTa kaNTan2, mika nalla vINai taTavi,
mAcu aRu tigkaL kagkai muTimEl aNintu, en2 uLamE pukunta atan2Al--
njAyiRu, tigkaL, cevvAy, putan2 viyAzam, veLLi, can2i pAmpu iraNTum, uTan2E
Acu aRum; nalla nalla; avai nalla nalla, aTiyAr avarkku mikavE.

பொருள்: மூங்கிலைப் போன்ற தோள்களை உடைய உமையம்மையை இடப்பாகத்தில் உடையவர்; நஞ்சுண்ட கண்டர்; அவர் நல்ல வீணையை மீட்டு, குற்றமற்ற பிறை, கங்கை ஆகியவற்றைத் தம் முடிமேல் அணிந்து என்னுடைய உள்ளத்தில் புகுந்தார்; அவ்வாறு

என்னுள்ளத்தில் அவர் இருப்பதனால் ஞாயிறு முதல் சனி வரையிலான ஏழு கோள்களும், இராகு கேது ஆகிய இரு பாம்புகளும், எனக்குக் குற்றம் நீங்கினவாகும்; அவை தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும்; அடியவர்களிடத்து அன்புள்ளன ஆகும்.

குறிப்புரை: வேயுறு தோளிபங்கன் – மூங்கிலின் இரு கணுக்களுக்கும் இடைப்பட்ட பகுதியைப் போலும் தோள்களையுடைய உமாதேவியாரை இடப்பால் உடையவர். ஞாயிறு – பாம்பு இரண்டும் சூரியன் முதலிய ஒன்பது கோள் (கிரகங்)களும். ஆசு அறு நல்ல நல்ல – குற்றம் அற்ற நலத்தைச் செய்வன. அவை அடியார்களுக்கு மிக நல்லன நல்லன. பாம்பு இரண்டும் – இராகுவும் கேதுவும்.

Our Lord Civan has embedded His consort Uma Devi on the left side of His body. Her shoulders are as smooth as the bamboo stems in between the two joints (node). He imbibed the poison and kept it in His larynx. He retains the moon and supports the river Ganges - both adorning His head. In this posture happily playing music on His veena, He has entered my mind and stays there. Because of His stay in my mind the nine planets (such as sun, moon, chevvai, budhan, guru, sukkiran, sani, raghu and kethu) will do all good without any evil. They will always do only good deeds to Civa's devotees.

2389. என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கஎருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெனுளமேபுகுந்தஅதனால்
ஒன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறுமுடனாயநாள்களவைதாம்
அன்பொடுநல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 2

என்பொடு கொம்பொடு ஆமை இவைமார்பு இலங்க எருது ஏறி ஏழை உடனே
பொன் பொதி மத்த மாலை புனல்சூடி வந்து என் உளமே புகுந்த அதனால்
ஒன்பது ஒன்றொடு ஏழுபதினெட்டொடு ஆறும் உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

en2poTu kompoTu Amai ivai mArpu ilagka, erutu ERi, Ezai uTan2E,
pon2 poti mattamAlai pun2al cUTi vantu, en2 uLamE pukunta atan2Al--
on2patoTu, on2RoTu, Ezu, patin2eTToTu, ARum, uTan2 Aya nALkaL avaitAm,
an2poTu nalla nalla; avai nalla nalla, aTiyAr avarkku mikavE.

பொருள்: எலும்பு, பன்றிக் கொம்பு, ஆமையின் ஓடு இவை மார்பில் விளங்கித் தோன்ற, எருதேறி, உமையுடனே பொன்பொதிந்தது போன்ற கொன்றை, ஊமத்தை மலர்மாலை சூடி வந்து என் உள்ளத்தில் புகுந்தார்; அவ்வாறு என் உள்ளத்தில் அவர் இருப்பதினால், ஒன்பது, ஒன்பதோடு ஒன்று, ஒன்பதோடு ஏழு, பதினெட்டு, ஆறு மற்றும் இவற்றுடன் ஆய ஆகாத

நாட்கள் என்பனவும் எனக்குக் குற்றம் நீங்கினவாகும். அவை தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும்; அடியவர்களிடத்து அன்புள்ளனவாகும்.

குறிப்புரை: கொம்பு – பன்றிக்கொம்பு. ஆமை – முற்றலாமையோடு. ஏழை – உமாதேவியார். 'ஏழை பங்காளனையே பாடேலோரெம்பாவாய்'. ஒன்பது – அசுவினி முதலாகக் கொண்டு எண்ணின் ஒன்பதாவது நட்சத்திரம் ஆயிலியம். ஒன்பதோடொன்று – பத்து – மகம். ஒன்பதொடெழு – பதினாறு – விசாகம். பதினெட்டு. கேட்டை. ஆறு – திருவாதிரை. உடனாய நாள்கள் மற்றயவை. அவை – பரணி, கார்த்திகை. பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி, நாள்கள் என்றதால். ஆகாத திதிகளும் கிழமைகளும் அடங்கின. இவ்வுண்மையை,

'ஆதிரை பரணி ஆரல் ஆயில்யமுப் பூரம் கேட்டை
தீதுறு விசாகம் சோதி சித்திரை மகமீ ராறும்
மாதனம் கொண்டார் தாரார் வழிநடைப் பட்டார் மீளார்
பாய்தனில் படுத்தார் தேறார் பாம்பின்வாய்த் தேரைதானே'

என்னுஞ் சோதிடநூற் பாட்டால் உணர்க. கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் அவர்கள் எழுதிய அகத்தியர் தேவாரத் திரட்டின் உரையில் உள்ளதும், தமிழ்ப்பொழில் – துணர் 7, 8, 9ல் பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை அவர்களும் எம். எஸ். பூரணலிங்கம்பிள்ளை அவர்களும் எழுதிய கட்டுரைகளால் ஐயந்தீர்த்து முடிவு செய்யப்பட்டதுமான உரையே இதில் குறிக்கப்பட்டதாகும். ஆயினும் சிவபெருமானுக்குரிய திருவாதிரையை முதலாக் கொண்டு, அதற்கு ஒன்பது சித்திரை, அதனொடு ஒன்று சுவாதி. அதிலிருந்து முன் ஏழு ஆயில்யம். அதற்குப் பதினெட்டு பூரட்டாதி. அதற்கு முன் ஆறு பூராடம் என்றும், உடனாய நாள்கள். பரணி, கார்த்திகை, மகம், பூரம், விசாகம், கேட்டை என்றும் உரைப்பாருமுளர்.

Our Lord Civa has adorned His body with bones, hog's husk, shell of the tortoise. He wears a garland made up of datura flowers which contain golden coloured granules of pollen grains. He also retains the river Ganges in His matted hair. In this posture, having mounted on His bull along with His consort Uma Devi He has entered into my mind and stays there. Because of His presence in my mind the inauspicious stars such as Aswini, Aayilyam etc., all these eighteen stars and other stars, will always do good to me with all sincerity. For devotees of Lord Civa also these stars will do all good.

2390. உருவளர்பவளமேனிஒளிநீறணிந்துவுமையோடும்வெள்ளைவிடைமேல்
முருகலர்கொன்றைதிங்கள்முடிமேலணிந்தெனுளமேபுகுந்தஅதனால்
திருமகள்கலையதூர்திசெயமாதுபூமிதிசைதெய்வமானபலவும்
அருநெதிநல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 3

உருவளர் பவளமேனி ஒளிநீறணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்து என் உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமிதிசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

uru valar pavaLa mEn2i oLi nIRu aNintu, umaiyOTum, veLLai viTai mEl,
muruku alar kon2Rai tigkaL muTimEl aNintu, en2 uLamE pukunta atan2Al--
tirumakaL, kalai atu Urti, ceyamAtu, pUmi, ticai teyvam An2a palavum,
aru neti nalla nalla; avai nalla nalla, aTiyAr avarkku mikavE.

பொருள்: அழகு மேலோங்கும் பவளம் போன்ற செம்மேனியில் ஒளிவீசும் வெண்ணீறணிந்து, உமையம்மையோடு வெள்ளை எருதின் மீது அமர்ந்து, மணம் நாறும் கொன்றை மாலை சூடி, திங்களை முடிமேல் அணிந்து என் உள்ளமே புகுந்தார்; அவ்வாறு என் உள்ளத்தில் அவர் இருப்பதனால், திருமகள், கலைமானை ஊர்தியாகக் கொண்ட கொற்றவை, நிலமகள், திக்குத் தெய்வங்கள், அரிய திதிகள் ஆயின பலவும் எனக்குக் குற்றம் நீங்கினவாகும். அவை தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும்; அடியவர்களிடத்து அன்புள்ளனவாகும்.

குறிப்புரை: உருவளர் பவளமேனி – அழகுவளரும் பவளம் போன்ற செம்மேனியில். கலையதூர்தி – துர்க்கை. நேதி – திரவியம்.

Our Lord Civa's brilliant body looks like the brightest coral. Over His body, He has applied the holy ashes all over. His head is adorned with Indian laburnum along with the baby moon. In this stature Civa with His consort Uma Devi riding on His white bull has entered into my mind. In lieu of this grace, goddesses Lakshmi, Durgai, Victory, Earth, the gods of the eight directions of the earth and others will give all the rare riches to me as well as to the devotees.

2391. மதிநுதல்மங்கையோடுவடபாலிருந்துமறையோதுமெங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெனதுளமேபுகுந்தஅதனால்
கொதியுறுகாலனங்கிநமனோடுதூதர்கொடுநோய்களானபலவும்
அதிகுணநல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 4

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேலணிந்து என் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுண நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

mati nutal magkaiyOTu, vaTa pAl iruntu maRai Otum egkaL paraman2,
natiyoTu kon2Rai mAlai muTimEl aNintu, en2 uLamE pukunta atan2Al--
koti uRu kAlan2, agki, naman2OTu tUtar, koTu nOykaL An2apalavum,
atikuNamm nalla nalla; avai nalla nalla, aTiyAr avarkku mikavE.

பொருள்: பிறைமதி போன்ற நெற்றி உடையாளுடன் ஆலமர நீழலில் இருந்து வேதம் ஆகிய அறத்தை உரைக்கும் எங்கள் பரமன், கங்கை நதி, கொன்றை மாலை ஆகியவற்றைத் தன் முடிமேல் அணிந்து என் உள்ளத்தில் புகுந்தான். அவ்வாறு உள்ளத்தில் அவர் இருப்பதனால் சினமுடைய காலன், நெருப்பு, எமன் அவனுடைய தூதர்கள், கொடுநோய்கள் ஆன பலவும் எனக்குக் குற்றம் நீங்கினவாகும்; அவை தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும்; அடியவர்களிடத்து அன்புள்ளனவாகும்.

குறிப்புரை: வடபால் – ஆலின்கீழ். வடம் – ஆலமரம். 'கல்லால் நிழற்கீழ் வாடாமுலை மங்கையும் தானும் மகிழ்ந்து ஈடா உறைகின்ற இடைமருது' (தி.1 ப.32 பா.1). வடபக்கம் என்பாருமுளர். கொதி – கோபம். உக்கிரம். காலன் – 'காளமேகந் நிறக்காலனோடு அந்தகன்' (தி.2 ப.119 பா.6). அங்கி – அக்கினி. நமனொடு தூதர் – இயமனும் இயமதூதரும். 'மண்ணிடைக் குரம்பை தன்னை மதித்து நீர் மையல் எய்தில் விண்ணிடைத் தருமராசன் வேண்டினால் விலக்குவார் ஆர்?' (தி.4 ப.31 பா.2). 'தரும ராசற்காய் வந்த கூற்றினைக்குமைப்பர்' (தி.4 ப.49 பா.2) என்பவற்றால், நமன் (தருமராசன்) வேறு நமனுடைய தூதராகிய கூற்றுவர் வேறு என்றும், 'சூலத்தால் அந்தகனைச் சுருளக்கோத்துத் தொல்லுலகில் பல்லுயிரைக் கொல்லுங் கூற்றைக் காலத்தால் (–காலால்) உதைசெய்து' (தி.6 ப.83 பா.9) என்பதில் அந்தகன் வேறு கூற்று வேறு என்றும் உணர்த்தல் அறிக.

Our Lord Civa authored all the Vedas while seated along with His consort Uma Devi under the stone banyan tree. He wears over His head the flower - Indian laburnum and the river Ganges. In this stature He has entered my mind. Because of this reason the ferocious god of death, god of fire, Yaman, Yama's servitors - all will do

all good by converting all the severe ailments into good actions. For His devotees also all good things will happen.

2392. நஞ்சணிகண்டனெந்தைமடவாள்தனோடும்விடையேறுநங்கள்பரமன்
துஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தஅதனால்
வெஞ்சினஅவுணரோடுமுருமிடியுமின்னுமிகையானபூதமவையும்
அஞ்சிடும்நல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 5

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும் விடையேறு நங்கள் பரமன்
துஞ்சு இருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னுமிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

nanjcu aNi kaNTan2, entai, maTavAL tan2OTum viTai ERum nagkaL paraman2,
tunjcu iruL--van2n2i, kon2Rai, muTimEl aNintu--en2 uLamE pukunta atan2Al--
venjcin2a avuNarOTum, urum-iTiyum, min2n2um, mikai An2a pUtam avaiyum,
anjciTum; nalla nalla; avai nalla nalla, aTiyAr avarkku mikavE.

பொருள்: நஞ்சினை அணியாகக் கண்டத்திற் கொண்ட எம்முடைய தந்தை, உமையம்மையுடன் எருதினை ஊர்தியாகக் கொண்ட பரமன், இருள் துஞ்சும் வன்னித்தழை, கொன்றைமலர் ஆகியன சூடி என் உள்ளத்திற் புகுந்தான். அவன் அவ்வாறு என் உள்ளத்தில் இருப்பதனால், கொடிய சினத்தைக் கொண்ட அசுரர்களுடன் உரும் இடியும், மின்னலும் வலிமையுடைய பூதங்களும் மற்றும் அச்சம் விளைவிக்கும் எவையும் எனக்குக் குற்றம் நீங்கினவாகும்; அவை தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும்; அடியவர்களிடத்து அன்புள்ளனவாகும்.

குறிப்புரை: துஞ்சிருள்வன்னி – வன்னிமரத்தின் இலைகள் மிகுந்தும் அடர்ந்தும் தழைத்திருத்தலால் இருள் துஞ்சும் நிலையினது உளத்திற்கு ஏற்றினும் அமையும்.

Our Lord Civa is our Father whose throat appears dark blue because He imbibed the poison and kept it in His larynx. He has entered my heart along with His consort Uma Devi riding on His white bull, wearing on His head the darkened bunch of summer tree leaves and a garland made up of Indian laburnum flowers, because of this the ferocious Jains, thunder, lightning, the haughty bhutas - all will be afraid to meet us but will do only good deeds to us. For all the devotees also they will always do good.

2393. வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்மடவாள்தனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெனுளமேபுகுந்தஅதனால்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்கொடுநாகமோடுகரடி
ஆளரிநல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 6

வாள்வரி அதள தாடைவரி கோவணத்தர் மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடிவந்து என் உளமேபுகுந்த அதனால்
கோள் அரிஉழுவையோடு கொலை யானை கேழல் கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

vALvari ataLa tATai vari kOvaNattar maTavAL tan2OTum uTan2 Ay,
nALmalar van2n2i kon2Rai nati cUTi vantu, en2 uLamE pukunta atan2Al--
kOL ari, uzuvaiyOTu, kolai yAn2ai, kEzal, koTu nAkamOTu, karaTi,
AL ari, nalla nalla; avai nalla nalla, aTiyAr avarkku mikavE.

பொருள்: வாள் போன்ற வரிகளையுடைய புலியின் தோலினை ஆடையாக உடையவர்; வரித்த கோவணத்தர்; உமையம்மையாகிய மடவாளுடன், அப்போது அலர்ந்த மலர் வன்னி, கொன்றை கங்கை நதி ஆகியவற்றைச் சூடி வந்து என் உள்ளத்தில் புகுந்தார்; அவர் அவ்வாறு என் உள்ளத்தில் புகுந்து இருப்பதனால், கொல்லும் வலிமையுடைய புலியுடன் கொலைத்தொழில் வல்ல யானை, பன்றி, கொடிய நாகப்பாம்பு, கரடி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகளும் எனக்குக் குற்றம் நீங்கினவாகும்; அவை தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும்; அடியவர்களிடத்து அன்புள்ளனவாகும்.

குறிப்புரை: வரி – கீற்றுக்களை உடைய புலியினது. வாள்வரி – அன்மொழித்தொகை. கோள் – வலிமை. அரி – குரங்கு. கோளு (வலிமை, கொலையு)ம் அரி (பகை)யும் உடைய உழுவை (புலி) எனலுமாம். ஆளரி – சிங்கம். ஆளரியேறனையான் (பெரிய. திருஞான. 474).

Our Lord wears on His waist tiger's hide which is bright and lined. He also dons tightly on His forelap the special cloth. He beautifies His head by wearing fresh flowers, leaves of summer tree, Indian laburnum flowers, along with the river Ganges. Our Lord along with His consort goddess Uma Devi has entered into my heart, because of this ferocious monkey, tiger, murderous elephant, hog, poisonous snake, bear, lion and such others will always do good to us. For the devotees also they only do good always.

2394. செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாகவிடையேறுசெல்வனடைவார்
ஒப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தஅதனால்
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்தும்வினையானவந்துநலியா
அப்படிநல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 7

செப்பு இளமுலை நன்மங்கை ஒருபாகமாக விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பு இளமதியும் அப்புமுடிமேலணிந்து என் உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதமிகையான பித்தும் வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

ceppu iLamulai nal magkai orupAkam Aka viTai ERu celvan2, aTaivu Ar
oppu iLamatiyum appum muTimEl aNintu, en2 uLamE pukunta atan2Al--
veppoTu, kuLirum, vAtam, mikai An2a pittum, vin2ai An2a, vantu naliyA;
appaTi nalla nalla; avai nalla nalla, aTiyAr avarkku mikavE.

பொருள்: செம்பு போன்ற வடிவினதாகிய இளமுலையுடைய உமையம்மையைத் தன் ஒருபாகமாகக் கொண்டு எருதேறுபவன் தன்னை அடைந்தார்க்குச் செல்வன் ஆகிய பெருமான், இளம்பிறையையும் கங்கை நீரையும் முடிமேல் அணிந்து என்னுடைய உள்ளத்தில் புகுந்தான். அவ்வாறு அவன் என் உள்ளத்தில் புகுந்து நின்றதனால், வெம்மை நோய், குளிர் வாதம், கேடு செய்யும் பித்தம் முதலியன தீவினையின் பயனாக வந்து என்னை துன்புறுத்தல் செய்யா. அப்படி அவை எனக்குக் குற்றம் நீங்கினவாகும். அவை தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும். அடியவர்களிடத்து அன்புள்ளனவாகும்.

குறிப்புரை: செப்பு – சிமிழ். அடைவு ஆர் – அடைதலுற்ற. அப்பு – கங்கை. வெப்பு – வெம்மை. சுரநோய் சிலேத்துமம். வாதம் – வளி. பித்து – பித்தம். மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளி முதலா எண்ணிய மூன்று (குறள். 941).

My Lord Civa, riding on His white bull along with His concomitant consort on the left side of His body, whose young breasts look like the wooden little box, has adorned His head by retaining the young moon by the side of river Ganges. He has entered into my mind and is manifested in my body. Since He is within me heat, cold, the severe bile, bad karma - all will never approach me and will never cause sufferings to me. For the devotees also they will bring only good.

2395. வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்துமடவாள்தனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெனுளதேபுகுந்தஅதனால்
ஏழ்கடல்சூழிலங்கைஅரையன்றனோடுமிடரானவந்துநலியா
ஆழ்கடல்நல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 8

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்து என் உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும் இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

vEL paTa vizi ceytu, an2Ru, viTamEl iruntu, maTavAL tan2OTum uTan2 Ay,
vANmati van2n2i kon2Raimalar cUTi vantu en2 uLamE pukunta atan2Al--
EzkaTal cUz ilagkai araiyan2 tan2OTum iTar An2a vantu naliyA;
Az kaTal nalla nalla; avai nalla nalla, aTiyAr avarkku mikavE.

பொருள்: மன்மதன் எரிந்து அழியும்படி நெற்றி விழியால் பார்த்து, உமையம்மையுடனாய் எருதின் மீதிருந்து, ஒளியுடைய பிறைமதி, வன்னி, கொன்றை மலர் சூடி வந்து என்னுடைய உள்ளமே புகுந்தான். அவன் அவ்வாறு என் உள்ளத்தில் புகுந்து இருந்ததனால், கடலால் சூழப்பட்டிருந்த இலங்கைக்கு அரசனாகிய இராவணன் தன்னோடும் துன்பமானவைகள் வந்து வருத்தா. ஆழமான கடல்கள் போன்ற துன்பங்களும் எனக்குக் குற்றம் நீங்கினவாகும். அவை தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும்; அடியவர்களிடத்து அன்புள்ளனவாகும்.

குறிப்புரை: விழிசெய்து – நெற்றிவிழி திறந்து எரித்து. வாள் – ஒளி. அரையன் – அரசன். இராவணன். இடர் ஆன – துன்பமானவை, கடல் நல்ல.

Once my father Lord Civa burnt the god of love Manmathan (cupid) by opening His third eye in the forehead. He, along with His consort Uma Devi, riding on His bull has entered into my mind. Retaining the bright moon on His head, beautifying it with leaves of summer tree and Indian laburnum flowers, He resides in me. Because of this featured manifestation Raavanan, the king of Sir Lanka surrounded by the seven seas, and any other factor will not cause any suffering to me. The deep seas also will do good to me. For our devotees also only good will be done by these people.

2396. பலபலவேடமாகும்பரனாரிபாகன்பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தஅதனால்
மலர்மிசையோனுமாலும்மறையோடுதேவர்வருகாலமானபலவும்
அலைகடல்மேருநல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 9

பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுஏறும் எங்கள் பரமன்
சலமகள் ஓடு எருக்கு முடிமேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்
மலர் மிசையோனும் மாலும் மறையோடு தேவர் வருகாலம் ஆன பலவும்
அலை கடல் மேரு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

pala pala vETam Akum paran2, nAripAkan2, pacu ERum egkaL paraman2,
cala makaLOTu erukku muTimEl aNintu, en2 uLamE pukunta atan2Al--
malar micaiyOn2um mAlum maRaiyOTu tEvar varu kAlam An2a palavum,
alaikaTal, mEru, nalla; avai nalla nalla aTiyAr avarkku mikavE.

பொருள்: பலபல வேடங்களைத் தரித்துக் கொள்பவனும் பரனும் மாதொரு பாகனும் எருது வாகனனும் ஆகிய எங்கள் பரமன், சலமகளாகிய கங்கையுடன் எருக்க மலரினையும் முடிமேல் அணிந்து என்னுடைய உள்ளமே புகுந்தான். அவன் அவ்வாறு என்னுள்ளத்தில் இருந்ததனால், பிரமனும் மாலும் வேதங்களோடு தேவர்கள் கெட்ட காலங்களான அவையும் ஆழ்கடல் போன்றனவும் மலைபோல அசைக்க முடியாதனவுமாகிய துன்பங்களும் எனக்குக் குற்றம் நீங்கினவாகும்; அவை தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும்; அடியவர்களிடத்து அன்புள்ளனவாகும்.

குறிப்புரை: 'வேடம் பலவாகி நின்ற பரமன்' (தி. 2 ப. 87 பா. 6). ஒருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே (தி. 3 ப. 10 பா. 8). ஒன்றொடொன்று ஒவ்வாவே (தி. 3 ப. 102 பா. 6). ஒன்றோடொன்றொவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு நின்றனன் (சித்தியார். 71). நாரி – உமாதேவியார். மலர்மிசையோன் – செந்தாமரை மேலிருக்கும் பிரமன். காலம் ஆன – கெட்டகாலங்களானவை.

My Chief Lord Civa takes many forms according to circumstances and graces people. He is concomitant with His consort Uma Devi. Both came to me riding on His bull and have entered into my mind. He sustains the river Ganges along with the flowers of yercum on His head. Because of this feature, the demigod Brahma who is seated on the lotus flower, the other tutelary deity Thirumaal, will bring us only good, also Vedas, Devas and other celestials. Bad time, the waves of the seas, the mountain Meru - all these which do bad actions will result only in good. For devotees also they will bring only good.

2397. கொத்தலர்குழலியோடுவிசையற்குநல்குகுணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாகமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தஅதனால்
புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ணல்திருநீறுசெம்மைதிடமே
அத்தகுநல்லநல்லஅவைநல்லநல்லஅடியாரவர்க்குமிகவே. 10

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகமும் முடிமேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

kottu alar kuzaliyOTu vicayaRku nalku kuNam Aya vETa vikirtan2,
mattamum matiyum nAkam muTimEl aNintu, en2 uLamE pukunta atan2Al--
puttarotu amaNai vaatil azivikkum aNNal tirunIru cemmai titamE,
attaku nalla nalla; avai nalla nalla, aTiyAr avarkku mikavE.

பொருள்: கொத்தாளமலர்கள் சூடிய குழலியாகிய உமையுடன் கூடி வந்து அருச்சுனனுக்கு அருளும் அருளாற் கொண்ட வேடத்தை உடைய விகிர்தன்; அவன், ஊமத்தைப்பூவும் பிறைமதியும் நாகமும் முடிமேல் அணிந்து என் உள்ளத்தே புகுந்தான். அவன் அவ்வாறு என் உள்ளத்தில் இருந்த காரணத்தால், புத்தரையும் சமணரையும் வாதில் அழிவிக்கும் அண்ணலுடைய திருநீறு உறுதியாக நன்மை பயக்கும். அந்த முறையில் எனக்குக் குற்றம் நீங்கி நல்லனவேயாகும்; தீயனவேயாயினும் சிவனடியார்களுக்கு நல்லனவாக மாறும்; தீயவும் அடியர்வகளிடத்து அன்புள்ளனவாகும்.

குறிப்புரை: விசையற்கு – அர்ச்சுனனுக்கு. வேடவிகிர்தன் – வேடனாக மாறியவன். வாதில் – மதுரையில் நடந்த அனற்போர் புனற்போர்களிலும் போதிமங்கைக்கருகில் புத்தருடன் நடந்த போரிலும்.

Our Lord Civa once took the form of a hunter and, accompanied by His consort Uma Devi, exposed His posture to Arjunan and graced him. Uma had beautified her head and hair with bunches of flowers. Lord Civa's head was adorned with datura flowers along with the moon and the snake. In this posture, He appealed and has entered into my mind. The Buddhists and the Jains were defeated in the argument with the power of the holy ashes. Therefore the bad deeds of these people will do only good to me. For devotees also they will always do good.

2398. தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெல்துன்னிவளர்செம்பொனெங்கும்நிகழ
நான்முகனாதியாயபிரமாபுரத்துமறைஞானஞானமுனிவன்
தானுறுகோளுநாளுமடியாரைவந்துநலியாதவண்ணமுரைசெய்
ஆனசொல்மாலையோதுமடியார்கள்வானில்அரசாள்வராணைநமதே. 11

தேனமர் பொழில் கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே.

tEn2 amar pozil koL Alai viLai cennel tun2n2i, vaLar cempon2 egkum nikaza,
nAn2mukan2 Ati Aya piramApurattu maRainjAn2a njAn2amun2ivan2,
tAn2 uRu kOLum nALum aTiyArai vantu naliyAta vaNNam urai cey
An2a col mAlai Otum aTiyArkaL, vAn2il aracu ALvar; ANai namatE.

பொருள்: தேன் நிறைந்த பொழில்கள், கரும்பு, நன்கு விளைந்த செந்நெல் வயல்கள் சூழ்ந்து, செல்வ வளம் எங்கும் விளங்க, பிரமனை ஆதிமகனாகக் கொண்ட பிரமாபுரத்தில் மறைஞான முனிவனாகிய திருஞானசம்பந்தன், தான் உறும்கோளும் நாளும் அடியாரை வருத்தாத முறையில் உரை செய்த இத்திருப்பதிகத்தை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர். இது (சிவகுமாரனாகிய) என்னுடைய ஆணை.

குறிப்புரை: மறைஞான ஞானமுனிவன் – அபரஞானமும் பரஞானமும் ஆகிய இரண்டையும் உடைய முனிவர். பெரிய. திருஞான. 'சிவனடியே சிந்திக்கும் சிவஞானம்' (ஆகிய) உணர்வரிய விஞ்ஞானம் பவம் . . . அறமாற்றும் . . . ஓங்கிய ஞானம் (ஆகிய) உவமையிலாக் கலைஞானம் தவமுதல்வர் சம்பந்தர் . . . உணர்ந்தார். கோளும் – சூரியன் முதலிய கிரகங்களும். நாளும் – அசுவினி முதலிய நட்சத்திரங்களும்.

The demigod Brahma was in this city of Brahmapuram, the first and foremost person on the earth. Around this city, natural forests are many. They have many honey yielding flowering plants. The sugarcane and red variety paddy fields are many. The red paddy heaps were many in all the places around the fields. Our saint Thiru-gnana-Sambandar who was a divine scholar and divine saint was born in Brahmapuram. He worshipped and prayed before the Lord of Brahmapuram to remove all the sufferings that might accumulate as bad karma in the lives of the servitors. Thus he sang the garlands of ten Tamil verses before the Lord. Those devotees who can memorise and sing these ten songs will rule over heaven. This is his oath and swearing.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

85ஆம் பதிகம் முற்றிற்று
End of 85th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 222 *பதிக எண்: 86*

86. திருநாரையூர் 86. THIRU-NAARAIYOOR

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

நாரை பூசித்துப் பேறுபெற்றதால் இப்பெயர் பெற்றது. சிதம்பரத்திலிருந்து காட்டு மன்னார் கோயிலுக்குப் போகும் பேருந்து வழியில் 5 கி. மீ. தூரத்தில் இருக்கின்றது. சிதம்பரத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது. காவிரிக்கு வடகரையிலுள்ள 33ஆவது தலமாகும். இறைவரின் திருபெயர் சௌந்தரேசுவரர். இறைவியாரின் திருப்பெயர் திரிபுரசுந்தரி.

திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடிய நம்பியாண்டார் நம்பிகள் அவதரித்த திருப்பதி இது. தேவாரத் திருமுறைகள் கனகசபையின் மேல்பாலுள்ள ஒரு அறையில் இருந்ததை நம்பியாண்டார்நம்பி மூலமாய் வெளிப்படுத்திய பொல்லாப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் தலமும் இதுவேயாகும்.

பொள்ளா என்பது பொல்லா என்று வந்துள்ளது. பொள்ளாதது என்பது உளி முதலியவற்றால் செய்யப்படாதது. எனவே சுயம்பு மூர்த்தியாகும். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் 3, அப்பர் பதிகம் 2 ஆக ஐந்து பதிகங்கள் உள்ளன. பொல்லாப் பிள்ளையார் தனி மண்டபம், மகா மண்டபத்தில் ஆறுமுகருடைய உருவம் கல்லில் செதுக்கப்பட்டது. அருகில் சித்தல புரம் இருக்கிறது. நம்பியாண்டார்நம்பி, இராஜராஜசோழன் உருவங்கள் மகாமண்டபத்தில் இருக்கின்றன. அர்த்தசந்திர விமானம், விமானத்தின் உச்சியில் இரண்டு கலசங்கள் உண்டு. பிரகாரம் 204–370 மதில் உயரம் 9 அடி. அம்பிகை தெற்கு முகம். அபயகுல ராசராசர் திருமுறை வகுக்கும்படி சொன்ன இடம். நம்பியாண்டார்நம்பி வகுத்தது. இருவர் விக்கிரகங்களும் உண்டு. திருமுறை கண்ட புராணம் காண்க.

பதிக வரலாறு

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கடம்பையை வழிபட்ட பிறகு நலந்திகழ் நாரையூரை நண்ணி நம்பரைக் கும்பிடும் விருப்பொடு குறுகி வணங்கிப் பாடியருளிய செந்தமிழ் மாலை இத்திருப்பதிகம் ஆகும்.

திருச்சிற்றம்பலம்

2399. உரையினில்வந்தபாவமுணர்நோய்களும்மசெயல்தீங்குகுற்றமுலகில்
வரையினிலாமைசெய்தஅவைதீரும்வண்ணமிகவேத்திநித்தநினைமின்
வரைசிலையாகஅன்றுமதில்மூன்றெரித்துவளர்கங்குல்நங்கைவெருவத்
திரையொலிநஞ்சமுண்டசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. 1

உரையினில் வந்த பாவம் உணர் நோய்கள் உம்ம செயல் தீங்கு குற்றம் உலகில்
வரையினில் ஆமை செய்த அவைதீரும் வண்ணம் இகவேத்தி நித்த நினைமின்
வரைசிலையாக அன்று மதில் மூன்று எரித்து வளர் கங்குல் நங்கை வெருவத்
திரையொலி நஞ்சமுண்ட சிவன் மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே.

uraiyin2il vanta pAvam, uNar nOykaL, u(m)ma ceyal tIgku kuRRam, ulakil
varaiyin2 nilAmai ceyta avai tIrum vaNNam mika Etti, nittam nin2aimin2--
varai cilai Aka, an2Ru, matil mUn2Ru erittu, vaLar kagkul, nagkai veruva,
tirai oli nanjcam uNTa civan2 mEya celvat tiru nAraiyUr kaitozavE!

பொருள்: மேருமலையை வில்லாகக் கொண்டு அன்று திரிபுரங்களாகிய மூன்று மதில்களையும் எரித்தவர்; வளரும் இருட்போதில் உமை நங்கை அச்சம் கொள அலை ஒலிக்கின்ற பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவர்; ஆகிய சிவன் மேவிய திருநாரையூரைத் தொழுதால், வாக்கால் வந்த பாவம், மனத்தால் நினைப்பதில் வரும் தீங்குகள், உடலால் செயலில் வரும் தீங்குகள் மற்றும் உலகில் அளவிலாமல் செய்த பிழைகளாவன அவைகள் அனைத்தும் தீரும். அவை தீரும் வண்ணம் சிவன் மேய செல்வத் திருநாரையூரை நித்தமும் நினைமின்.

குறிப்புரை: உரையினில் வந்த பாவம் – வாக்கால் வந்த தீவினைகள். உணர்நோய்கள் – (மனத்தால்) நினைப்பால் உண்டான தீவினைகள். செயல் தீங்கு குற்றம் – (காயத்தால்) தீச்செயல்களால் வந்த தீவினைகள். தீங்கு செயல் என மாற்றுக. பாவம், நோய்கள், குற்றம் மூன்றற்கும் 'உம்ம' என்னும் ஆறனுருபு ஏற்ற சொல் பொதுவாய் நின்றது. உம்முடைய பாவம் நோய்கள் குற்றம் என்க. செயல் தீங்கு குற்றம் – செயலது தீங்காலாகும் குற்றமென விரித்தலும் ஆகும். வரையினிலாமை – அளவில்லாமை, அளவில் நில்லாமை (மை) எதிர்மறை வினையெச்சமும் பெயரும் ஆம். கைதொழுதால், செய்த அவை தீரும். அவை – உம்முடைய உரையால் வந்த பாவமும் உணர் நோய்களும் தீச்செயலான குற்றமும்.

Our Lord Civa took hold of the Meru mountain and used it as His bow and shot an arrow on the three fortresses of the asuras and completely destroyed them. He imbibed the poison from the ocean of milk and kept it in His larynx. At this moment our goddess Uma Devi got terrified on seeing the dark neck. Our Lord Civa is manifest

in the rich city of Thiru-naaraiyoor. Those devotees who worship this city with their hands will find their bad karma, brought about by the action of their mind, words, and body, wiped out. Oh! Ye devotees praise and worship this Lord at Thiru-naaraiyoor daily and keep Him in your mind. Your bad actions causing endless misery will be wiped out.

2400. ஊனடைகின்றகுற்றமுதலாகியுற்றபிணிநோயொருங்குமுயரும்
வானடைகின்றவெள்ளைமதிசூடுசென்னிவிதியானவேதவிகிர்தன்
கானிடையாடிபூதப்படையானியங்குவிடையானிலங்குமுடிமேல்
தேனடைவண்டுபாடுசடையண்ணல்நண்ணுதிருநாரையூர்கைதொழவே. 2

ஊன் அடைகின்ற குற்றம் முதலாகி உற்ற பிணி நோய் ஒருங்கும் உயரும்
வான் அடைகின்ற வெள்ளை மதிசூடு சென்னி விதியான வேத விகிர்தன்
கான் இடையாடி பூதப்படை யான் இயங்கு விடையான் இலங்கு முடிமேல்
தேன் அடைவண்டு பாடு சடையண்ணல் நண்ணு திருநாரையூர் கைதொழவே.

Un2 aTaikin2Ra kuRRam mutal Aki uRRa piNi nOy orugkum--uyarum
vAn2 aTaikin2Ra veLLaimati cUTu cen2n2i viti An2a vEta vikirtan2,
kAn2 iTai ATi, pUtappaTaiyAn2, iyagku viTaiyAn2, ilagku muTimEl-
tEn2 aTai vaNTu pATu caTai aNNal, naNNu tiru nAraiyUr kaitozavE.

பொருள்: உயரும் வானில் இருக்கும் வெண்ணிறப் பிறைமதியைச் சூடும் சென்னியன்; வேதங்களில் விதிக்கப்பட்ட அறங்களின் பயன்களை அளிக்கும் விகிர்தன்; சுடுகாட்டில் ஆடுபவன்; பூதகணங்களாகிய படையை உடையவன்; சஞ்சரிக்கின்ற விடையை வாகனமாக உடையவன்; முடிமேல் விளங்குகின்ற மலர்களின்மேல் தேன்வண்டு பாடும் சடையர் ஆகிய அண்ணல் இருக்கும் திருநாரையூரைக் கைதொழுதால் ஊன் பொதிந்த உடலில் பிறப்பினால் வரும் குற்றங்கள், உற்ற நோயாகிய பிணிகள் ஒரு சேரக் கெடும்.

குறிப்புரை: ஊன் – உடம்பு. ஆகுபெயர். ஒருங்கும் – கெடும். உயரும்வான், வான் அடைகிற் மதி, வெள்ளைமதி என்க. ஆடி – பெயர். இயங்கு விடையான் – சஞ்சரிக்கும் இடப வாகனன்.

Our Lord Civa retains the white moon moving in the top sky on His head. He is the Supreme Being different from the world and the author of the four Vedas. His avocation is to dance in the burning ghat along with His army of bhutaas. He moves on His strong bull, He has decorated His entangled locks of hair on His bright head, with the flowers full of honeybees jumping among the bunches of flowers. This Lord is

manifest in Thiru-naaraiyoor. Those devotees who worship our Lord there with both their hands will get rid of all the misdeeds committed by their body as well as the diseases connected with their physical body.

2401. ஊரிடைநின்றுவாழுமுயிர்செற்றகாலன்துயருற்றதீங்குவிரவிப்
பாரிடைமெள்ளவந்துபழியுற்றவார்த்தையொழிவுற்றவண்ணமகலும்
போரிடையன்றுமூன்றுமதிலெய்தஞான்றுபுகழ்வானுளோர்கள்புணரும்
தேரிடைநின்றஎந்தைபெருமானிருந்ததிருநாரையூர்கைதொழவே. 3

ஊர் இடைநின்று வாழும் உயிர்செற்ற காலன் துயருற்ற தீங்கு விரவிப்
பார் இடை மெள்ள வந்து பழியுற்ற வார்த்தை ஒழிவுற்றவண்ணம் அகலும்
போர் இடையன்று மூன்று மதில் எய்த ஞான்று புகழ் வான் உளோர்கள் புணரும்
தேர் இடைநின்ற எந்தை பெருமான் இருந்த திருநாரையூர் கைதொழவே.

Ur iTai nin2Ru vAzum uyir ceRRa kAlan2, tuyar uRRa tIgku viravi,
pAr iTai meLLa vantu, pazi uRRa vArttai ozivu uRRa vaNNam, akalum--
pOr iTai an2Ru, mUn2Ru matil eyta njAn2Ru, pukaz vAn2 uLOrkaL puNarum
tEr iTai nin2Ra entai perumAn2 irunta tiru nAraiyUr kaitozavE.

பொருள்: போரில் அன்று திரிபுரங்களை எரித்த அப்பொழுது புகழுடைய வானோர்கள் கூடித் தேராக நிற்க, என்னுடைய தந்தை பெருமானாகிய சிவன் இருக்கும் திருநாரையூரைக் கைதொழுதால் உலகில் நின்று வாழும் உயிர்களை அழிக்கும் இயமன் வருத்தத், துயருற்ற தீங்குகள், உலகினில் மெள்ள வந்த பழியுற்ற வார்த்தைகள் ஒழிந்த வண்ணம், (பாவம்) அகலும்.

குறிப்புரை: இத்திருப்பாட்டின் முற்பகுதியில் காலன் தீங்கு விரவிப் பாரிடை வந்து பழியுற்ற வார்த்தை ஒழிவுற்ற வரலாறு கூறப்பட்டது. அது திருநாரையூர்ப் புராணத்தில் காணப்படவில்லை. ஞான்று – நாளன்று என்பதன் மரூஉ. இது கல்வெட்டுக்களில் பயின்றுள்ளது. 'நாளன்று போகி' (புறம். 124) என்புழிப்பம் பொருள் ஈண்டுக் கொள்ளலாகாது. நாளாகிய அன்று, அந்நாள், பொழுது என்னும் பொருளில் ஆளப்படுகின்றது. 'திருமுடியூர் ஆற்றுத் தளிப்பெருமானடிகளுடைய . . . திருக்கற்றளியாக அமைப்பித்து, இவ்வாடை மகர ஞாயிற்றுச் சனிக்கிழமை பெற்ற இரேவதி ஞான்று கும்பதாரை' (Archaeological Survey of India, Annual Report, 1905-1906, pp. 182-183).

Long ago, our Lord Civa got wild with the three asuras and destroyed the three fortresses with His arrow, which He shot on the fortresses. At that period the devas

were glad because their enemy was destroyed by Lord Civa. Therefore, all the devas jointly built a car for our Lord Civa. He then mounted the car in Thiru-naaraiyoor. He then graced all His devotees. If those devotees can worship the city Thiru-naaraiyoor, where Lord Civa mounted the car and pray they will get rid of the danger caused by Kaalan, the god of death. Also they will get rid of bad and ridiculous words of the common people of the world about them.

2402. தீயுறவாயஆக்கையதுபற்றிவாழும்வினைசெற்றவுற்றவுலகின்
தாயுறுதன்மையாயதலைவன்றன்நாமம்நிலையாகநின்றுமருவும்
பேயுறவாயகானில்நடமாடிகோலவிடமுண்டகண்டன்முடிமேல்
தேய்பிறைவைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. 4

தீ உறவாய ஆக்கையதுபற்றி வாழும் வினை செற்றவுற்ற உலகின்
தாய் உறுதன்மையாய தலைவன் தன்நாமம் நிலையாக நின்று மருவும்
பேய் உறவாய கானில் நடமாடி கோலவிடம் உண்ட கண்டன் முடிமேல்
தேய் பிறைவைத்து உகந்த சிவன் மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே.

tI uRavu Aya Akkai atu paRRi vAzum vin2ai ceRRa, uRRa ulakin2
tAy uRu tan2mai Aya, talaivan2 tan2 nAmam nilai Aka nin2Ru maruvum--
pEy uRavu Aya kAn2il naTam ATi, kOla viTam uNTa kaNTan2, muTimEl-
tEy piRai vaittu ukanta civan2, mEya celvat tiru nAraiyUr kaitozavE.

பொருள்: பேய்களுடன் கூடிநின்று சுடுகாட்டினில் கூத்தாடுவோன்; விடத்தை அழகாக நிறுத்திய கண்டன்; சென்னிமேல் தேய்ந்த பிறையைச் சூடி உகந்த சிவனுடைய திருநாரையூரைக் கைதொழுதால், நம் உயிர் தீமைகளுக்கு உறவாகிய உடலைப்பற்றி வாழும் வினைகள் ஒழிந்து உலகில் தாய்போற் கருணையாளனாய தலைவனின் நிறைவினில் மருவி நிலையாக நிற்றலைப் பொருந்தும்.

குறிப்புரை: செற்ற – நெருங்கிய. பின்னிய. செற்றவுலகு என்று இயைக்க. செய்ய என்பதற்கு அழித்த என்று பொருள் கொள்ளின் தலைவன் என்பதோடியையும். 'உலகின் தாய்' 'தாயாய் முலையைத் தருவானே' (திருவாசகம் 50–5) (தி. 2 ப. 24 பா.8). நடமாடி – பெயர், தேய்பிறை என்றது இயல்படை. சிவபெருமான் திருமுடியில் உள்ள பிறைக்குத் தேய்தலும் வளர்தலும் இல்லை. தொழமருவும் என்க.

Our Lord Civa has His avocation to dance in the burning ghat where He is closely associated and dances with the devils. His larynx is dark blue in colour since He

imbibed the poison. He retains the moon on His head. He is manifest in the temple in Thiru-naaraiyoor. Those devotees, who worship and pray our Lord in the city of Thiru-naaraiyoor, will get rid of all the sufferings that might get accrued for being born in this world. Also His divine motherly name will grace you and can be meditated upon in your mind.

2403. வசையபராதமாயவுவரோதநீங்குந்தவமாயதன்மைவரும்வான்
மிசையவராதியாயதிருமார்பிலங்குவிரிநூலர்விண்ணுநிலனும்
இசையவராசிசொல்லஇமையோர்களேத்தியமையாதகாதலொடுசேர்
திசையவர்போற்றநின்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. 5

வசை அபராதம் ஆய உவரோதம் நீங்கும் தவமாய தன்மை வரும் வான்
மிசையவர் ஆதியாய திருமார்பு இலங்கு விரிநூலர் விண்ணும் நிலனும்
இசையவர் ஆசிசொல்ல இமையோர்கள் ஏத்தி அமையாத காதலொடு சேர்
திசையவர் போற்ற நின்ற சிவன் மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே.

vacai aparAtam Aya uvarOtam nIgkum; tavam Aya tan2mai varum--vAn2
micaiyavar; Ati Aya tirumArpu ilagku virinUlar; viNNum nilan2um
icaiyavar, Aci colla; imaiyOrkaL Etti; amaiyAta kAtaloTu cEr
ticaiyavar pORRa, nin2Ra civan2; mEya celvat tiru nAraiyUr kaitozavE.

பொருள்: மேலுலகத்தவராகிய வானவர்களுக்கும் தலைவர்; அழகிய மார்பில் விரிந்த பூணூலை உடையவர்; விண்ணுளோர்களும் மண்ணுளோர்களும் புகழ்ந்து வாழ்த்துவர்; இமையோர்கள் வணங்கும் பொருட்டு நிறையாத அன்புடன் வந்து சேர்வர்; இவ்வாறு எட்டுத் திசையிலும் வாழ்பவர் போற்ற நின்ற சிவன் மேவிய செல்வத் திருநாரையூரைக் கைதொழுதால், கடல் அளவாய பழிகள், குற்றங்களானவை நீங்கும்; தவமாய தன்மை வரும்.

குறிப்புரை: உவரோதம் – உபரோதம். இடையூறு உவர் ஓதம் என்னும் தொடர் உப்பு நீர்க்கடல் என்னும் பொருளதுமாம். அப்பொருள் கொள்ளின் வசை ஆம் அபராதமாய உவரோதம் என்பதற்குக் கடல் அளவு குற்றமாம்.

Our Lord Civa existed before all the celestials who were in the heavenly abode. On His attractive chest three-ply sacred thread hangs beautifying His body. He is the Supreme Being manifested everywhere in the universe including the earth and the sky. All the devas worship and praise Him, He graces them all. He is worshipped and praised by all the eight tutelary deities of the eight directions sincerely and with love. If

the devotees worship and praise our Lord Civan who is manifested in Thiru-naaraiyoor, they will get rid of all their bad karma even when it is equal to the sea. They will get our Lord's grace and will do all austerities.

2404. உறைவளரூனிலாயவுயிர்நிற்கும்வண்ணமுணர்வாக்குமண்மையுலகில்
குறைவுளவாகிநின்றகுறைதீர்க்குநெஞ்சினிறைவாற்றுநேசம்வளரும்
மறைவளர்நாவன்மாவினுரிபோர்த்தமெய்யனரவார்த்தஅண்ணல்கழலே
திறைவளர்தேவர்தொண்டினருள்பேணநின்றதிருநாரையூர்கைதொழவே. 6

உறை வளர் ஊன் நிலாய உயிர்நிற்கும் வண்ணம் உணர்வு ஆக்கும் உண்மை உலகில்
குறைவு உள ஆகிநின்ற குறைதீர்க்கும் நெஞ்சில் நிறைவு ஆற்றும் நேசம் வளரும்
மறை வளர் நாவன் மாவின் உரி போர்த்த மெய்யன் அரவு ஆர்த்த அண்ணல் கழலே
திறை வளர் தேவர் தொண்டின் அருள்பேண நின்ற திருநாரையூர் கைதொழவே.

uRai vaLar Un2 nilAya uyir niRkum vaNNam uNarvu Akkum; uNmai ulakil
kuRaivu uLa Aki nin2Ra kuRai tIrkkum; nenjcil niRaivu ARRum; nEcam vaLarum--
maRai vaLar nAvan2, mAvin2 uri pOrtta meyyan2, aravu Artta aNNal, kazalE
tiRai vaLar tEvar toNTin2 aruL pENa nin2Ra tiru nAraiyUr kaitozavE.

பொருள்: வேதம் வளரும் திருநாவினன்; யானையின் உரியைப் போர்த்த திருமேனியன்; பாம்பினைக் கச்சாகக் கட்டிய தலைவன்; ஆகிய சிவபெருமானின் கழலணிந்த திருவடிகளுக்குத் தேவர்கள் திருத்தொண்டு செய்து, அதன் வழித் திருவருளை அடைய விரும்புவர்; அவ்வாறு தேவர்கள் பணி செய்து திருவருளை அடைய விரும்பும் திருநாரையூரைக் கைதொழுதால், உறைபோல வளர்கின்ற உடம்பில் நிலவுகின்ற உயிர் சிவனடியில் நிற்கும் வண்ணம் ஞானம் அளிக்கும். உலக வாழ்வில், மெய்யுணர்வு இன்றி, உழலும் குறையைத் தீர்க்கும்; உள்ளத்தில் நிறைவளிக்கும் சிவபத்தி வளரும்.

குறிப்புரை: வேதம் வளரும் திருநாவினன், யானை உரி போர்த்த திருமேனியன், பாம்பைக் கச்சாகக் கட்டிய தலைவன் ஆகிய சிவபெருமான் திருவடிகளையே தேவர்கள் திருத்தொண்டின் எய்தும் திருவருளால் விரும்ப நின்ற திருநாரையூர். திறைவளர்தேவர் – சிவபிரானுக்குத் திறையாக வளர்கின்ற தேவர்கள். திறையாதல் – தம்மை அர்ப்பணம் செய்தல். அடைக்கலமும் ஆம். தெறுதல் – தெறை – திறை. 'ஒன்னார்த் தெறுபொருள் – பகைவரைத் திறையாகக் கொள்ளும் பொருள். தெறுதலான் வரும் பொருள் எனவிரியும்' (குறள் 756, உரை).

Our Lord Civa is the Author of the four Vedas. Our saint says: – In His tongue the Vedas developed and took the form of six angaas. He covers His body with the

hide of the elephant. He administers on His waist the snake and tightens like a corset. He is the protagonist as the Chief Supreme Being. The devas consider His holy feet precious and at His feet surrender their life. They wait in Thiru-naaraiyoor and serve Him so that they can get His grace. With this hope they worship and pray at the city of Thiru-naaraiyoor. We may believe that by worshipping Him, their soul will permanently and happily settle in their physical body which is a covering. Also that will promote spiritual awareness. It will remove their faults. They will get fulness in their heart. With such feelings we may often visit Thiru-naaraiyoor and worship our Lord and praise Him.

2405. தனம்வருநன்மையாகுந்தகுதிக்குழந்துவருதிக்குழன்றவுடலின்
இனம்வளரைவர்செய்யும்வினயங்கள்செற்றுநினைவொன்றுசிந்தைபெருகும்
முனமொருகாலமூன்றுபுரம்வெந்துமங்கச்சரமூன்றெரிந்தஅவுணர்
சினமொருகாலழித்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. 7

தனம் வரும் நன்மை ஆகும் தகுதிக்கு உழந்து வரு திக்கு உழன்ற உடலின்
இனம் வளர் அவர் செய்யும் வினயங்கள் செற்று நினைவு ஒன்று சிந்தை பெருகும்
முனம் ஒருகாலம் மூன்று புரம் வெந்து மங்கச் சரம் மூன்று எரிந்த அவுணர்
சினம் ஒருகால் அழித்த சிவன் மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே.

tan2am varum; nan2mai Akum; takutikku uzantu varu tikku uzan2Ra uTalin2
in2am vaLar avar ceyyum vin2aiyagkaL ceRRu, nin2aivu on2Ru cintai perukum--
mun2am oru kAlam, mUn2Ru puram ventu magkac caram mun2 terinta, avuNar
cin2am oru kAl azitta, civan2 mEya celvat tiru nAraiyUr kaitozavE.

பொருள்: முன்னொரு காலத்தில் திரிபுரங்கள் மூன்றும் நெருப்பில் எரிந்து ஒழிந்து மங்குமாறு அம்பினை எய்தவர்; அவுணர்களின் சினத்தை அழித்தவர் ஆகிய சிவன் மேவிய செல்வத் திருநாரையூரைக் கைதொழுதால், செல்வம் வரும்; நலங்கள் உளவாகும்; மேன்மை பெறுதற்கு வருந்திய திசையெல்லாம் அலைந்து திரிந்து, உழலுகின்ற உடம்பில் வளர்கின்ற ஐம்புலன்களாகிய கள்வர் செய்கின்ற வஞ்சகங்களை அழித்து சிவபெருமான் திருவடிக்கே பதித்த சிந்தை வளரும்.

குறிப்புரை: திருநாரையூரைத் தொழுதலால் செல்வம் வரும். தலங்கள் உளவாகும். மேன்மை பெறுதற்கு முயன்று திசையெல்லாம் சுழன்ற உடம்பில் கூட்டமாக வளர்கின்ற ஐம்புலக் கள்வர் செய்கின்ற வஞ்சகங்கள் அழித்து, சிவபெருமான் திருவடிக்கே பதித்த சிந்தை வளரும்.

In the olden days, our Lord Civa shot an arrow and destroyed the three fortresses of the asuras. This Lord manifests Himself in Thiru-naaraiyoor. Those servitors who worship our Lord in the city with both their hands will acquire wealth and all that is good. To earn fame and name people may take strenuous efforts, move in all directions, with their perverted and wicked thoughts arising out of their sensory organs. After being relieved of such things, with their thoughts on His feet they will achieve full spiritual concentration and be masters of their five senses when they worship the Lord of Thiru-naaraiyoor.

2406. உருவரைகின்றநாளிலுயிர்கொள்ளுங்கூற்றநனியஞ்சுமாதலுறநீர்
மருமலர்தூவியென்றும்வழிபாடுசெய்ம்மினழிபாடிலாதகடலின்
அருவரைசூழிலங்கையரையன்றன்வீரமழியத்தடக்கைமுடிகள்
திருவிரல்வைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. 8

உரு வரைகின்ற நாளில் உயிர் கொள்ளும் கூற்ற நனியஞ்சும் ஆதல் உற நீர்
மருமலர் தூவி என்றும் வழிபாடு செய்ம்மின் அழிபாடு இலாத கடலின்
அருவரை சூழ் இலங்கை அரையன்றன் வீரம் அழியத் தடக்கை முடிகள்
திருவிரல் வைத்து உகந்த சிவன் மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே.

uru varaikin2Ra nALil uyir koLLum kURRam nan2i anjcum; Atal uRa, nIr
marumalar tUvi, en2Rum vazipATu ceymmin2!--azipATu ilAta kaTalin2
aru varai cUz ilagkai araiyan2 tan2 vIram aziya, taTakkai muTikaL,
tiruviral vaittu ukanta civan2 mEya celvat tiru nAraiyUr kaitozavE.

பொருள்: அழிதலிலாத கடலின் நடுவில் மலைகளால் சூழப்பெற்றது இலங்கை. அதற்கு அரசனாகிய இராவணனுடைய வீரம் அழிய, அவனுடைய பெரியனவும் வலிமை உடையனவுமாகிய இருபது கைகள் பத்து முடிகள் நசுங்கத் திருவிரல் வைத்து உயர்ந்த சிவன் மேவிய திருநாரையூரைக் கைதொழுதால், உடம்பை விட்டு உயிர் நீங்குங்காலத்தில் உயிரைப் பற்ற வரும் கூற்றுவன் 'இவன் சிவனடியான்' என மிக அஞ்சுவான்; ஆதலின், அத்தகைய சிறப்பினை உற நீர் மணமுள்ள மலர்களைத் தூவி என்றும் சிவவழிபாடு செய்ம்மின்.

குறிப்புரை: திருநாரையூரைத் தொழ உடம்பு நீங்கும் காலத்தில் உயிரைக் கொள்ளும் கூற்றுவன் மிக அஞ்சுவன். ஆதலால் நீர் மிகுதியாக மணமலர்களைத் தூவி எப்பொழுதும் சிவ வழிபாடு செய்மின். அழிதலில்லாத கடல் நடுவே மலைகள் ஆழப் பெற்ற இலங்கைக்கு வேந்தனாகிய இராவணனது வீரம்

அழியவும் பத்துத் தலைகளும் இருபது கைகளும் நசுங்கவும் ஒரு திருக்காற் பெருவிரலை ஊன்றி உயர்ந்த சிவபெருமான் எழுந்தருளிய செல்வத்தை உடைய திருநாரையூர்.

Raavanan was the king of Sri Lanka, surrounded by the indestructible ocean and bordered by big and thick mountains. Our Lord Civa reduced Raavanan's mightiness, and crushed his long hands and heads. He did these actions by pressing the top of His abode, mount Kailash, with His toe. He desired to manifest Himself in Thiru-naaraiyoor. Those servitors who worship and praise our Lord Civa's city Thiru-naaraiyoor with both their hands could not be approached easily by Yama, the god of death for he will fear to come near them at the time of their death. Therefore the devotees are advised to worship and praise our Lord in Thiru-naaraiyoor by spreading fresh sweet smelling flowers over His feet.

2407. வேறுயர்வாழ்வுதன்மைவினைதுக்கமிக்கபகைதீர்க்குமேயவுடலில்
தேறியசிந்தைவாய்மைதெளிவிக்கநின்றகாவைக்கரந்துதிகழும்
சேறுயர்பூவின்மேயபெருமானுமற்றைத்திருமாலுநேடஎரியாய்ச்
சீறியசெம்மையாகுஞ்சிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. 9

வேறு உயர்வாழ்வு தன்மை வினை துக்கம் மிக்க பகை தீர்க்கும் மேய உடலில்
தேறிய சிந்தை வாய்மை தெளிவிக்க நின்ற காவைக் கரந்து திகழும்
சேறு உயர்பூவின் மேய பெருமானும் மற்றைத் திருமாலும் நேட எரியாய்ச்
சீறிய செம்மை ஆகும் சிவன் மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே.

vERu uyar vAzvu tan2mai; vin2ai; tukkam, mikka pakai tIrkkum; mEya uTalil-
tERiya cintai vAymai teLivikka, nin2Ra karavaik karantu, tikazum--
cERu uyar pUvin2 mEya perumAn2um maRRait tirumAlum nETa, eri Ayc
cIRiya cemmai Akum civan2 mEya celvat tiru nAraiyUr kaitozavE.

பொருள்: சேற்றில் உயரும் தாமரை மலரில் பொருந்தியிருக்கும் பிரமனும் திருமாலும் தேட நெருப்புப் பிழம்பாகக் கனன்ற செம்மையாகும் சிவபெருமான் மேவிய செல்வத் திருநாரையூரைக் கைதொழுதால், பிறப்பிறப்பிற்பட்டுச் சுழலும் உலக வாழ்க்கைக்கு வேறாய் நிலையான பேரின்ப வாழ்க்கை திகழும்; வினையும் அதனால் வரும் துக்கமும் மிக்க பகையும் தீர்க்கும். பொருந்திய உடலில் தெளிந்த சிந்தையும் மெய்யுணர்வும் தெளியச் செய்யும்; திருவருள் தனது மறைவை ஒழித்து விளங்கும்.

குறிப்புரை: சேற்றில் தோன்றி உயர்ந்த தாமரைப் பூவில் மேவிய பெரியோனாகிய பிரமனும் திருமாலும் தேடத் தீப்பிழம்பாகிக் கனன்ற செம்மையாகும் சிவபெருமான் எழுந்தருளிய செல்வத்தை உடைய திருநாரையூரைக் கைதொழுதால் பிறந்திறந்துழலும் துன்ப வாழ்விற்கு வேறாய் உயர்ந்த பேரின்ப வாழ்வாகிய சகச நிலை திகழும். வினையும் அதனால் வரும் துக்கமும் மிக்க பகையைத் தீர்க்கும். பொருந்திய உடலில் தெளிந்த சிந்தையும் உண்மையும் தெளியச் செய்ய நின்ற தனது மறைவை ஒழித்து விளங்கும். தன்மை = சகசம், சுபாவம், இயல்பு, வினையாகிய துக்கம் மிக்க பகை. வினையைப் பகை என்றல் திருமுறையில் பயிலக்காணலாம். 'கரப்பர் கரிய மனக்கள்வர்க்கு உள்ளம் கரவாதே தம் நினையகிற்பார் பாவம் துரப்பர்' (தி. 6 ப. 17 பா 5).

The tutelary deity Brahma, seated on the lotus flower which grows high from the mud, and the other deity Thirumaal, both went in search Civa's head and feet. They both failed in their attempts. At that moment, Lord Civa appeared before them as dazzling Supernal Infinite Flame. They both were terrified and realised their mistaken quarrel about their different ideas. This Lord Civan is manifest in Thiru-naaraiyoor. Those servitors who worship the Lord in Thiru-naaraiyoor by raising both their hands will be freed from birth and death. Their sufferings caused by their bad karma and bitter enmity will be eradicated. In their clear mind truth will arise and Civa, so far invisible, will now appear and establish Himself in their minds.

2408. மிடைபடுதுன்பமின்பமுளதாக்குமள்ளம்வெளியாக்குமுன்னியுணரும்
படையொருகையிலேந்திப்பலிகொள்ளும்வண்ணமொலிபாடியாடிபெருமை
உடையினைவிட்டுளோருமுடல்போர்த்துளோருமுரைமாயும்வண்ணமழியச்
செடிபடவைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. 10

மிடை படு துன்பம் இன்பம் உளது ஆக்கும் உள்ளம் வெளி ஆக்கும் உன்னி உணரும்
படை ஒரு கையில் ஏந்திப் பலி கொள்ளும் வண்ணம் ஒலி பாடி ஆடி பெருமை
உடையினை விட்டு உளோரும் உடல் போர்த்து உளோரும் உரை மாயும் வண்ணம் அழியச்
செடி பட வைத்து உகந்த சிவன் மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே.

miTai paTu tun2pam in2pam uLatu Akkum; uLLam veLi Akkum; mun2n2i uNarum,
paTai oru kaiyil Entip pali koLLum vaNNam oli pATi ATi perumai!--
uTaiyin2ai viTTu uLOrum, uTal pOrttu uLOrum, urai mAyum vaNNam aziya,
ceTi paTa vaittu, ukanta civan2 mEya celvat tiru nAraiyUr kaitozavE.

பொருள்: உடை உடுத்தாத சமணரும் உடையால் உடலைப் போர்த்திக் கொள்ளும் பவுத்தரும் பேச்சற்றுக் கொள்கை அழியக் குற்றப்படச் செய்த சிவன் மேவிய செல்வத் திருநாரையூரைக் கைதொழுதால் துன்பஞ் செறிந்த வாழ்க்கையை இன்பமுளதாக்கும். மருள் கொண்ட உள்ளம் ஒளியுடையதாக்கும். அதனால் மழுப்படையை ஒருகையில் ஏந்திக்கொண்டு பிச்சை ஏற்கும் வண்ணம் இசையுடன் பாடி ஆடுகின்ற சிவனின் பெருமையைத் தியானித்து உணர்மின்.

குறிப்புரை: வெளியாக்கும் – ஒளியை ஆக்கும். அடியார்கள் உளமான வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே (சிவப்பிரகாசம் – காப்பு). உன்னி உணரும் – தியானித்து உணருங்கள். முன்னி எனப்பிரித்தலும் ஆம். அதற்கு நினைந்து என்றும் முந்தி என்றும் கொள்க. உணரும் – நிகழ்காலஉம்மீறு அன்று எதிர்காலம் உணர்த்தும் முன்னிலைப் பன்மை. சீவக. 808 உரை. சமணசாக்கிய சமயங்களின் கொள்கைகள். செடி – குணம் இல்லாமை. கைதொழ வெளியாக்கும் அதனால் ஆடியின் பெருமையை உன்னி உணரும் என்று இயைக்க.

Our Lord Civa holds the trident in one of His hands and accepts the alms. He sings good songs and dances about. His fame is misrepresented by the Jains and the Buddhists who roam with and without dress in the city. But our Lord nullifies all their sayings and protects our devotees. He is manifest in the rich Thiru-naaraiyoor. Those servitors who worship our Lord in the city of Thiru-naaraiyoor will get rid of their sufferings. Happiness will flourish in their lives. Their mind will get brightened. Therefore, you servitors! think of Thiru-naaraiyoor and realise our Lord's fame and worship Him.

2409. எரியொருவண்ணமாயவுருவானையெந்தைபெருமானையுள்கிநினையார்
திரிபுரம்ன்றுசெற்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவான்
பொருபுனல்சூழ்ந்தகாழிமறைஞானசம்பந்தனுரைமாலைபத்துமொழிவார்
திருவளர்செம்மையாகியருள்பேறுமிக்கதுளதென்பர்செம்மையினரே. 11

எரி ஒரு வண்ணம் ஆய உருவானை எந்தை பெருமானை உள்கி நினையார்
திரிபுரம் அன்று செற்ற சிவன் மேய செல்வத் திருநாரையூர் கை தொழுவான்
பொரு புனல் சூழ்ந்த காழி மறை ஞான சம்பந்தன் உரை மாலை பத்தும் மொழிவார்
திரு வளர் செம்மை ஆகி அருள் பேறு மிக்கது உளது என்பர் செம்மையினரே.

eri oru vaNNam Aya uruvAn2ai--entai perumAn2ai--uLki nin2aiyAr,
tiripuram an2Ru ceRRa civan2 mEya celvat tiru nAraiyUr kaitozuvAn2,
poru pun2al cUznta kAzi maRai njAn2acampantan2 urai mAlaipattum mozivAr,
tiru vaLar cemmai Aki aruL pERu mikkatu uLatu en2par, cemmaiyin2arE.

பொருள்: தீயைப் போன்ற செஞ்சுடர் வண்ணமாய நிறத்தை உடையவன்; எம்முடைய தந்தை; இப்பெருமகனைத் தியானித்து நினையாத முப்புராரிகளை அழித்த சிவன் மேவிய திருநாரையூரைக் கைதொழுவானும், மோதுகின்ற நீர்வளம் சூழ்ந்த காழியினனும் ஆகிய மறைஞானசம்பந்தன் உரைத்த மாலையாகிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தினையும் மொழிவார் திருவளர் செம்மையராகி திருவருட் பேறு உடையவராம்படிக்குச் செம்மையினராவர்.

குறிப்புரை: எரி . . . உருவானை – தீயைப் போலும் ஒப்பற்ற அழகியதாய நிறத்தை உயைவனை. அழல் வண்ணன் என்பது திருநாமம். எந்தை பெருமானை உள்கித் திருநாரையூரைக் கைதொழுவான் ஆகிய மறைஞானசம்பந்தன் உரை(த்த) மாலை பத்தும் மொழிவார் செம்மையாகிப் பேறுமிக்கதுள்ளது என்பராய்ச் செம்மையினர் ஆவர் என ஆக்கம் விரித்து முடிக்க. உள்குதல் கைதொழுதல் இரண்டும் மொழிவார்க்கு ஏற்றி உரைத்தலும் பொருந்தும். அப்பொருட்குத் தொழுவான் என்பது வினையெச்சமாகும். முன்னைய பொருளுக்கு வினையாலனையும் பெயர்.

Our Lord Civa is our Supreme Father. His complexion is reddish like fire. The asuras never melt in their mind and think of our Lord Civan and His fame. Long ago Civa destroyed their three fortresses and saved the devas. He is manifest in the temple in Thiru-naaraiyoor. Our saint Thiru-gnana-Sambandar who is a scholar in Vedas hails from Seerkaazhi which has plenty of water areas such as tanks, ponds etc. He visited and worshipped Thiru-naaraiyoor and our Lord Civa who is manifest in the temple of the city. He chanted this Tamil garland of ten verses. Those servitors who memorise and chant these ten verses will get His grace, which could bring wealth and perfections.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

86ஆம் பதிகம் முற்றிற்று
End of 86th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 223 பதிக எண்: 87

87. திருநறையூர்ச்சித்தீச்சரம்

87. THIRU-NARAIYOOR-CHITH-TH-EECHARAM

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருநறையூர்ச்சித்தீச்சரம் என்னும் இத்திருத்தலமானது சித்தர்களால் பூசிக்கப்பெற்ற கோவில் என்று பொருள்படும். ஊரின் பெயர் திருநறையூர். கோவிலின் பெயர் சித்தீச்சரம். இது கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 8 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரையிலுள்ள உள்ள அறுபத்தைந்தாவது தலமாகும். கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது. இறைவர் திருப்பெயர் சித்தநாதர். இறைவி பெயர் அழகம்மை. தீர்த்தம் பிரம்மதீர்த்தம். இது கோயிலுக்கு வடபால் இருக்கின்றது. சித்தர்கள் பூசித்துப் பேறுபெற்றனர். இதற்கு ஞானசம்பந்தர் தேவாரம் மூன்று, சுந்தரர் தேவாரம் ஒன்று ஆக நான்கு பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அரதைப் பெரும்பாழி, சேறை, நாலூர், குடவாயில் என்பவற்றை வணங்கித் திருநறையூரைச் சார்ந்து, சித்தீச்சரத்தைப் போற்றிப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2410. நேரியனாகுமல்லனொருபாலுமேனியரியான்முனாயவொளியான்
நீரியல்காலுமாகிநிறைவானுமாகியுறுதீயுமாயநிமலன்
ஊரியல்பிச்சைபேணியுலகங்களேத்தநல்குண்டுபண்டுசுடலை
நாரியொர்பாகமாகநடமாடவல்லநறையூரின்நம்பனவனே. 1

நேரியன் ஆகும் அல்லன் ஒருபாலும் மேனி அரியான் முன் ஆய ஒளியான்
நீர் இயல் காலும் ஆகி நிறைவானும் ஆகி உறு தீயும் ஆய நிமலன்
ஊர் இயல் பிச்சை பேணி உலகங்கள் ஏத்த நல்குண்டு பண்டு சுடலை
நாரி ஓர் பாகமாக நடமாட வல்ல நறையூரின் நம்பன் அவனே.

nEriyan2 Akum; allan2, orupAlum; mEn2i ariyAn2; mun2 Aya oLiyAn2;
nIr iyal, kAlum Aki, niRai vAn2um Aki, uRu tIyum Aya nimalan2--
Ur iyal piccaip pENi, ulakagkaL Etta, nalka uNTu, paNTu, cuTalai,
nAri Or pAkam Aka naTam ATa valla naRaiyUrin nampan2 avan2E.

பொருள்: ஊரில் ஏற்கும் பிச்சையை விரும்பி, உலகவர் வழிபட்டுப் பிச்சை நல்க அதனை உண்பவன்; சுடலையில் மாதொருபாகனாக நடனம் ஆட வல்லவன்; திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே, நுண்ணியனும் அல்லன், பரியனும் அல்லன்; ஒருபக்கமும் திருமேனி ஒருதன்மைத்து ஆதல் இல்லாதவன்; அநாதியான ஒளியான்; நீரும், இயங்குகின்ற காற்றும் ஆகி, எங்கும் நிறைந்த ஆகாயமுமாகி, மிக்க நெருப்புமாகி மலமற்றவனுமானவன்.

குறிப்புரை: நேரியன் – நுண்ணியன், தோன்றுபவன் (சித்தி. 280). முன் ஆய ஒளியான் – அநாதியாகிய சிவப்பிரகாசன். திருமால் முன் சோதிப் பிழம்பு ஆனவன் எனலும் ஆம். அல்லன் – நேரியனல்லாத பரியன். நீரியல் . . . நிமலன் – நீர், காற்று, விண், தீ ஆகிய விமலன். நல்குண்டு. அகரம்.

Our Lord Civa visits many cities in the universe and accepts the alms given by people with good mind and eats them. He along with His consort as concomitant being, used to dance in the burning ghat. This Lord manifests Himself in the Chith-th-eecharam temple in the city of Naraiyoor. He is the most elite Supreme Being among all other men. He is the smallest object. Also He is the Supreme Being, biggest in size with no parallel to Him. Our Lord Civa, who offered a part of His body, before the tutelary deity Thirumaal, stood as dazzling supernal infinite flame. He is the embodiment of the five natural original elements such as earth, fire, water, wind and ether.

2411. இடமயிலன்னசாயல்மடமங்கைதன்கையெதிர்நாணிபூணவரையில்
கடுமயிலம்புகோத்துஎயில்செற்றுகந்துஅமரர்க்களித்ததலைவன்
மடமயிலூர்திதாதையெனநின்றுதொண்டர்மனநின்றமைந்தன்மருவும்
நடமயிலாலநீடுகுயில்கூவுசோலைநறையூரின்நம்பனவனே. 2

இடம் மயில் அன்ன சாயல் மட மங்கை தன் கை எதிர் நாணி பூண வரையில்
கடும் அயில் அம்பு கோத்து எயில் செற்று உகந்து அமரர்க்கு அளித்த தலைவன்
மடமயில் ஊர்தி தாதை என நின்று தொண்டர் மன நின்ற மைந்தன் மருவும்
நடம் மயில் ஆல நீடு குயில் கூவு சோலை நறையூரின் நம்பன் அவனே.

iTam mayil an2n2a cAyal maTa magkai tan2 kai etir nANi pUNa, varaiyil
kaTum ayil ampu kOttu, eyil ceRRu ukantu, amararkku aLitta talaivan2;
maTamayil Urti tAta en2a nin2Ru, toNTar man2am nin2Ra maintan2--maruvum
naTam mayil Ala, nITu kuyil kUvu cOlai naRaiyUrin nampan2 avan2E.

பொருள்: நடனம் மருவும் மயில்கள் ஆட, குயில்கள் கூவும் சோலைகளையுடைய திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே, இடப்பாகத்தில் உறையும் மயில் போன்ற சாயல் உடைய இளமங்கையாகிய இறைவி தன்கையால் மலையாகிய வில்லில் நாணினைப் பூட்ட, கடிய கூரிய அம்பினைப் பூட்டி திரிபுரங்களை அழித்து உயர்ந்தவன்; தேவர்களுக்கு அருள் செய்தவன்; அழகிய மயிலினை ஊர்தியாகக் கொண்ட முருகனுக்குத் தந்தை எனப் போற்றும் தொண்டர்களின் மனத்தில் நிலையாக நின்ற மைந்தனாவான்.

குறிப்புரை: நாணி – வில்லின்நாண். வரை – மேருவாகிய வில். கடும் அயில் அம்பு – கடிய கூரிய கணை. மயிலூர்தி – முருகப் பெருமான் நின்று நின்றமைந்தன் எனக் காட்டுக.

In the renowned city of Naraiyoor the peacocks dance and scream. Their noise is heard everywhere; the charming and pleasing song of the cuckoo is also heard all around the area. The city is surrounded by natural forests. In this city is manifest our Lord who is the Supreme Being. He has embedded His consort Uma Devi on the left side of His body. She has the likeness of peacock and is the daughter of the mountain king. Civa had a big bow of Meru mountain to which He tied the five headed snake as the rope. She fixed the hard and sharp arrow to the bow and He destroyed the three fortresses of the asuras. He was satisfied because He gave happiness to devas. The devotees worshipped our Lord Civa, standing before Him they chanted 'Glory to Thee - You are the Father of Lord Murugan who owns a young peacock as his conveyance'. When they say, this Lord Murugan's father Lord Civa enters into the minds of the devotees and makes them happy.

2412. சூடகமுன்கைமங்கையொருபாகமாகஅருள்காரணங்கள்வருவான்
ஈடகமானநோக்கியிடுபிச்சைகொண்டுபடுபிச்சனென்றுபரவத்
தோடகமாயொர்காதுமொருகாதிலங்குகுழைதாயவேழவுரியன்
நாடகமாகவாடிமடவார்கள்பாடுநறையூரின்நம்பனவனே. 3

சூடக முன்கை மங்கை ஒருபாகமாக அருள் காரணங்கள் வருவான்
ஈடக மான நோக்கி இடு பிச்சை கொண்டு படுபிச்சன் என்று பரவத்
தோடக மாயொர் காதும் ஒருகாதிலங்கு குழைதாய வேழ உரியன்
நாடகம் ஆக வாடி மடவார்கள் பாடு நறையூரின் நம்பன் அவனே.

cUTaka mun2kai magkai oru pAkam Aka, aruL kAraNagkaL varuvAn2;
ITu akam An2a nOkki, iTu piccai koNTu, "paTu piccan2" en2Ru parava,
tOTu akam Ay Or kAtum, oru kAtu ilagku kuzai tAya, vEza uriyan2--
nATakam Aka ATi, maTavArkaL pATum naRaiyUril nampan2 avan2E.

பொருள்: அழகிய மகளிர் புகழ்ந்து பாடும் திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே; சூடகம் அணிந்த முன்கையினளாகிய மங்கை ஒருபாகமாக உயிர்களுக்கு அருளும் காரணங்களுக்காக வருவார்; பெரிய இல்லங்கள் தோறும் இடுகின்ற பிச்சை கொள்வான்; பித்து மிகக் கொண்டவன் இவன் என்று எல்லோரும் இவனைப் புகழ்வர்; தோடு ஒருகாதிலும் ஒரு காதில் குழையும் தாழ உடையவன்; யானையின் உரியை உடையவன்; கூத்தாடி.

குறிப்புரை: சூடகம் – வளையல். ஈடு அகம் ஆன – பெரிய வீடுகள் ஆனவற்றை நோக்கி. தோடும் குழையும் இருவேறு திருச்செவியிலும் அணிந்தது முன்னும் குறிக்கப்பட்டது (தி. 2 ப. 84 பா. 5).

In the city of Naraiyoor, young girls daily dance singing good songs on Civa and go to the temple and praise our Lord, who is the most elite, saying 'glory to Thee'. His consort wearing bangles on her forehands, Uma Devi is on the left side of His body and He graces His devotees. He goes near very big palatial houses and accepts the alms they give. The devotees adore and worship Him. He is the liberator from worldly life (redeem). He wears in His two ears - stud in one ear and earring made of palm leaf in the other ear. He covers His body with the hide of the elephant, He is a dancer.

2413. சாயனன்மாதொர்பாகன்விதியாயசோதிகதியாகநின்றகடவுள்
ஆயகமென்னுள்வந்தஅருளாயசெல்வனிருளாயகண்டனவனித்
தாயெனநின்றுகந்ததலைவன்விரும்புமலையின்கண்வந்துதொழுவார்
நாயகனென்றிறைஞ்சிமறையோர்கள்பேணும்நறையூரின்நம்பனவனே. 4

சாயனன் மாதொர் பாகன் விதியாய சோதி கதியாக நின்ற கடவுள்
ஆயகம் என்னுள் வந்த அருளாய செல்வன் இருளாய கண்டன் அவனித்
தாய் என நின்று உகந்த தலைவன் விரும்பும் மலையின்கண் வந்து தொழுவார்
நாயகன் என்று இறைஞ்சி மறையோர்கள் பேணும் நறையூரின் நம்பன் அவனே.

cAyanan mAtu orpAkan2; viti Aya cOti; kati Aka nin2Ra kaTavuL;
Ay akam en2n2uL vanta, aruL aruL Aya, celvan2; iruL Aya kaNTan2; avan2it
tAy en2a nin2Ru ukanta talaivan2--"virumpu malaiyin2 kaN vantu tozuvAr-
nAyakan2" en2Ru iRainjci, maRaiyOrkaL pENum naRaiyUril nampan2 avan2E.

பொருள்: கயிலை மலையின்கண்ட வந்து தொழுமவரின் தலைவன் என்று தாழ்ந்து மறையவர்கள் போற்றும் திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே, அழகிய மாதினைத் தன்னில் ஒரு பாகமாக உடையவன்; நெறி காட்டும் ஒளி; உயிர்கள் சென்று அடையும் கதியாகிய கடவுள்; என் உள்ளமாகிய அகத்துள் வந்த அருளாய செல்வன்; இருண்ட கண்டன்; உயிர்களுக்குத் தாயென நின்று உயர்ந்த தலைவன் ஆவன்.

குறிப்புரை: கதியாக நின்ற கடவுள் – சிவகதியாக நிற்கும் பரமேச்சுவரன். அவனித்தாய் – தாயவன்காண் உலகிற்கு (தி.6 ப.64 பா.4). மலையின்கண் வந்து தொழுவார் நாயகன் – மலையினிருந்து வந்து வழிபடுகின்ற சித்தர்க்கு ஈசுவரன் என்று மறையோர்கள் இறைஞ்சிப் பேணும் நறையூர் என்க. பா. 'சித்தர் பேண'.

Our father Lord Civa is the Supreme Being. He is concomitant with His most appealing consort. He eradicates bad karma of all His devotees. He took the form of supernal infinite flame. He enters into my mind and graces His devotees. His neck is dark blue. He becomes our mother and regards His devotees with grace. The supernals inhabiting the intermediate area between the earth and the sun, the mystic group of people stay on the mountain they like and do penance in that area. They come down to Chith-th-eecharam and worship our Lord Civa. The Vedic scholars worship our Lord as Eeswaran – Lord of the Universe.

2414. நெதிபடுமெய்யெமையனிறைசோலைசுற்றிநிகழம்பலத்தின்நடுவே
அதிர்படஆடவல்லஅமரர்க்கொருத்தனெமர்சுற்றமாயஇறைவன்
மதிபடுசென்னிமன்னுசடைதாழவந்துவிடையேறியில்பலிகொள்வான்
நதிபடவுந்திவந்துவயல்வாளைபாயும்நறையூரின்நம்பனவனே. 5

நெதி படு மெய் எம் அயன் இறை சோலை சுற்றி நிகழ் அம்பலத்தின் நடுவே
அதிர் பட ஆடவல்ல அமரர்க்கு ஒருத்தன் எமர் சுற்றம் ஆய இறைவன்
மதி படு சென்னி மன்னு சடை தாழ வந்து விடையேறி இல் பலி கொள்வான்
நதி பட உந்தி வந்து வயல் வாளை பாயும் நறையூரின் நம்பன் அவனே.

neti paTu mey em aiyan2; niRai cOlai cuRRi nikaz amapalattin2 naTuvE
atirpaTa ATa valla amararkku oruttan2; emar cuRRam Aya iRaivan2;
mati paTu cen2n2i man2n2u caTai tAza vantu,--viTai ERi--il pali koLvAn2--
nati paTa unti vantu vayal vALai pAyum naRaiyUrin nampan2 avan2E.

பொருள்: நதி நீர் உந்தித் தள்ள வந்து வயலில் வாளைமீன் பாயும் திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே, மெய்ப்பொருள் ஆகிய நிதி; எம்முடைய ஐயன் செழுமையான சோலைகள் சுற்றி விளங்கும் அம்பலத்தின் பிறை விளங்கும் சென்னியில் நிலை பெற்றுள்ள சடை தாழும்படியாக வந்து எருதின் மேலேறி வந்து பிச்சை கொள்வான். நடுவே அதிர வீசி ஆடவல்லவன்; அமரர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தலைவன்; எம்மவரும் சுற்றமும் ஆகிய சிவன்.

குறிப்புரை: நெதிபடுமெய் – நிதியாகப் படுகின்ற மெய்(ப்பொருள்) அமரர்க்கு ஒருத்தன் – தேவாதி தேவர்க்கெல்லாம் தலைவன். அமரரால் அமரப்படுவான் (தி. 7 பா. 384). எமர் சுற்றம் ஆய இறைவன் – எம்மவராகிய அடியார்களுக்கு உறவாய கடவுள். இல் – வீடுதோறும்.

The sword fish swims through the river and jumps into the fields in the city of Chith-th-eecharam. Here our Lord is manifest. He is considered the richest Supreme who could keep the riches in reserve for our soul's future. He is our Chief. The city is surrounded by several forest gardens. Here is the open dancing hall. Lord Civan dances, it creates a tremor all around. He is the Chief of the devas. For His devotees He is very close like relatives. On His head the baby moon is retained. His matted hair hangs low. He rides on His bull to reach the houses to accept alms.

2415. கணிகையொர்சென்னிமன்னுமதுவன்னிகொன்றைமலர்துன்றுசெஞ்சடையினான்
பணிகையின்முன்னிலங்கவருவேடமன்னுபலவாகிநின்றபரமன்
அணுகியவேதவோசையகலங்மாறின்பொருளானஆதியருளான்
நணுகியதொண்டர்கூடிமலர்தூவியேத்துநறையூரின்நம்பனவனே. 6

கணிகை ஒர்சென்னி மன்னும் மது வன்னி கொன்றை மலர் துன்று செஞ்சடையினான்
பணிகையின் முன் இலங்க வரு வேடம் மன்னு பலவாகி நின்ற பரமன்
அணுகிய வேத ஓசை அகல் அகம் ஆறின் பொருளான ஆதி அருளான்
நணுகிய தொண்டர் கூடி மலர் தூவி ஏத்து நறையூரின் நம்பன் அவனே.

kaNikai or cen2n2i man2n2um, matu van2n2i kon2Rai malar tun2Ru cenjcaTaiyin2An2;
paNikaiyin2 mun2 ilagka, varu vETam man2n2u pala Aki nin2Ra paraman2;
aNukiya vEta Ocai akal agkam ARin2 poruL An2a Ati-aruLAn2
naNukiya toNTar kUTi malar tUvi Ettum naRaiyUril nampan2 avan2E.

பொருள்: நெருங்கிய தொண்டர்கள் கூடி மலர் தூவி வழிபடும் திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே. பணிப்பெண்ணாகிய கங்கை தங்கும் சென்னியில்

தேனுடைய வன்னி கொன்றை மலர் செறிந்த சிவந்த சடையினன்; பாம்பு முன்கையில் விளங்க அருளால் பலவேடங்கள் கொண்டு நின்ற மேலான இறைவன்; தன்னை அடைய வேண்டும் என்று தேடிக் கிட்டிய வேத முழக்கம். வேதத்தின் அகன்ற ஆறங்கங்கள் ஆகியவற்றின் பொருளானவன்; முதல்வன்; அருளாளன் ஆவான்.

குறிப்புரை: கணிகை – கங்கை. கணிகையொர் சென்னி – தியானிப்போர், பிரமரந்திரன் எனல் பொருந்தாது. சென்னியில் வன்னியும் கொன்றை மலரும் துன்றிய செஞ்சடை உடையவன். பணிகையின் முன் – வணங்குதற்கு முன்னரே பணிகின்ற கை என்ன வினைத்தொகையாகக் கொள்ளலும் பொருந்தும். அணுகிய வேத ஓசை – தன்னை அடைய வேண்டும் என்று தேடிக்கிட்டிய வேத முழக்கம். அகல் அங்கம் ஆறின் பொருள் – விரிந்த ஆறங்கங்களின் பொருள்.

The devotees of Civa bring flowers and spread them on His holy feet and praise Lord Civa who resides in Naraiyoor. He supports the Ganges river on His head. He has adorned his hair with the leaves of summer tree and Indian laburnum flowers, He takes several postures even before His servitors worship Him, He graces them. He is the embodiment of compassion and the Chief of the matter contained in the broad six angaas, which ultimately contain the essence of the Vedas that approached Him in the form of sounds.

2416. ஒளிர்தருகின்றமேனியுருவெங்குமங்கமவையாரஆடலரவம்
மிளிர்தருகையிலங்கஅனலேந்தியாடும்விகிர்தன்விடங்கொள்மிடறன்
துளிதருசோலையாலைதொழில்மேவவேதமெழிலாரவென்றியருளும்
நளிர்மதிசேருமாடமடவார்களாருநறையூரின்நம்பனவனே. 7

ஒளிர் தருகின்ற மேனி உரு எங்கும் அங்கம் அவை ஆர ஆடல் அரவம்
மிளிர் தரு கை இலங்க அனல் ஏந்தி ஆடும் விகிர்தன் விடங்கொள் மிடறன்
துளி தரு சோலை ஆலை தொழில் மேவ வேதம் எழில் ஆர வென்றி அருளும்
நளிர் மதி சேரு மாட மடவார்கள் ஆரு நறையூரின் நம்பன் அவனே.

oLir tarukin2Ra mEn2i uru egkum, agkam avai Ara, ATal aravam
miLirtaru kai ilagka, an2al Enti ATum vikirtan2; viTam koL miTaRan2--
tuLi taru cOlai Alai tozil mEva, vEtam ezil Ara, ven2Ri aruLum,
naLirmati cErum mATam maTavArkaL Arum, naRaiyUril nampan2 avan2E.

பொருள்: குளிர்ந்த பிறை தங்கும் உயர்ந்த மாடங்களில் அழகிய மங்கையர் சேரும் திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே. செந்நிறம் பிரகாசிக்கும் தன் திருஉடலில் (வெண்ணிற) எலும்பு அணி அணிந்து, மிளிர்கின்ற பாம்பு கையில் விளங்க, தீயினை ஏந்தி ஆடும் விகிர்தன்; நஞ்சு தங்கிய மிடறன். தேன் துளிர்க்கும் சோலைகளில் கரும்பாலைத் தொழில் நிறையும் தொழில் வளமும் வேத முழக்கத்தின் எழுச்சி நிறையும் அருள் வளமும் அருளுவான்.

குறிப்புரை: மேனி – நிறம். துளிதரல் – தேன்துளித்தல். வேதம் எழில் ஆர – வேத முழக்கத்தின் எழுச்சி நிறைய. மதிசேரும் மாடம் – வண்கொண்டல் விட்டு மதிமுட்டுவன மாடம் (கம்பர்).

Our Lord Civa is manifest in the temple in Naraiyoor city. Around the city manmade gardens are many. There flower trees and plants grow in large numbers. They produce honey always. In the sugarcane gardens the machinery that is used to extract the juice of the sugarcane makes heavy noise and it converts the juice into sugar candy. The Vedic scholars raise heavy sound while chanting the Vedas. In the rich palatial tall buildings, reaching heaven, live beautiful girls and maidens. Here Civa's body is very bright and disperses the light all over. On the various parts of His body snakes dance about. He holds fire in one of His hands and dances. He is the Supreme Being quite different from the world, with poison filled throat.

2417. அடலெருதேறுகந்தஅதிருங்கழற்களெதிருஞ்சிலம்பொடிசையக்
கடலிடைநஞ்சமுண்டுகனிவுற்றகண்டன்முனிவுற்றிலங்கையரையன்
உடலொடுதோளனைத்துமுடிபத்திறுத்துமிசைகேட்டிரங்கியொருவாள்
நடலைகள்தீர்த்துநல்கிநமையாளவல்லநறையூரின்நம்பனவனே. 8

அடல் எருது ஏறு உகந்த அதிரும் கழல்கள் எதிரும் சிலம்பொடு இசையக்
கடல் இடை நஞ்சம் உண்டு கனிவுற்ற கண்டன் முனிவு உற்று இலங்கை அரையன்
உடல் ஒடு தோள் அனைத்து முடி பத்து இறுத்தும் இசை கேட்டு இரங்கி ஒரு வாள்
நடலைகள் தீர்த்து நல்கி நமை ஆள வல்ல நறையூரின் நம்பன் அவனே.

aTai erutu ERu ukanta, atirum kazalkaL etirum cilampoTu icaiya,
kaTal iTai nanjcam uNTu kan2ivu uRRa kaNTan2-- mun2ivu uRRu ilagkai araiyan2
uTaloTu tOL an2aittum muTipattu iRuttum, icai kETTu iragki, oru vAL
naTalaikaL tIrttu nalki, namai ALa valla naRaiyUril nampan2 avan2E.

பொருள்: திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே. வலிமை உடைய எருது ஊர்தலை விரும்பியவன்; ஆரவாரிக்கின்ற கழல்களுக்கு எதிராகச் சிலம்பினை அணிந்தவன். கடலிடை எழுந்த நஞ்சினை உண்டு களங்கனிவுற்ற மிடறன்; சினந்து இலங்கை அரசன் இராவணனை அவன் உடலோடு தோள்கள் இருபதினையும் முடி பத்தினையும் அழித்து, அவன் இசையைக் கேட்டு இரங்கித் துன்பம் தீர்த்து ஒப்பற்ற வாள் நல்கி ஆள வல்லவன்; அவனே நம்மை ஆள வல்லவனாவான்.

குறிப்புரை: கழல்கள் எனற்பாலது கழற்கள் எனத் திரிந்தது. அரையன் – அரசன், இராவணன். உடல் தோள் முடி அனைத்தும் இறுத்தும் கேட்டு. இரங்கி, தீர்த்து (வாள்) நல்கி என்க. நல்கி ஆளவல்ல நம்பன்.

Our Lord Civa loves to sustain the strong white bull for His conveyance. In one of His legs ring is tied up and on the other anklets move rapidly during His movement. With these sounds He moves around. He imbibed the poison that came out of the ocean and kept it in His larynx. Our Lord Civa squeezed the body, shoulders and the ten heads of Raavanan, the powerful king of Sri Lanka, who cried and repented. Later Civa heard his musical tone in 'Saama Geetha' and enjoyed his music. He removed his sufferings and gave him a divine sword. He, therefore, to grace us is manifest in Naraiyoor.

2418. குலமலர்மேவினானுமிகுமாயனாலுமெதிர்கூடிநேடிநினைவுற்
றிலபலஎய்தொணாமையெரியாயுயர்ந்தபெரியானிலங்குசடையன்
சிலபலதொண்டர்நின்றுபெருமைக்கள்பேசவருமைத்திகழ்ந்தபொழிலின்
நலமலர்சிந்தவாசமணநாறுவீதிநறையூரின்நம்பனவனே. 9

குலமலர் மேவினானும் மிகு மாயனாலும் எதிர்கூடி நேடி நினைவுற்று
இலபல எய்த ஒணாமை எரியாய் உயர்ந்த பெரியான் இலங்கு சடையன்
சிலபல தொண்டர் நின்று பெருமைக்கள் பேச அருமைத் திகழ்ந்த பொழிலின்
நலமலர் சிந்த வாச மணம் நாறு வீதி நறையூரின் நம்பன் அவனே.

kulamalar mEvin2An2um miku mAyan2Alum etir kUTi nETi, nin2aivuR-
Rila pala eyta oNAmai eri Ay uyarnta periyAn2; ilagku caTaiyan2--
cila pala toNTar nin2Ru perumai(k) kaL pEca, varu mait tikaznta pozilin2
nala malar cinta, vAca-maNam nARu vIti naRaiyUril nampan2 avan2E.

பொருள்: சிலரும் பலருமாகத் தொண்டர்கள் கூடி நின்று தன்னுடைய பெருமைகளைப் பேசி மகிழ, பெருமைகளுடன் திகழ்ந்த மலர்ச்சோலைகள் புதுமலர்கள் சிந்த, வாசங்கமழும்

வீதிகளை உடைய திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே. குலமுயர்ந்த தாமரை மலர்மேல் இருக்கும் பிரமனும் மாயம் மிக்க திருமாலும் இருவரும் எதிரெதிர் கூடி நின்று, தேடி முயன்றும் அவர்களால் நினைவாலும் அடையமுடியாத பொருள்சேர் புகழ்களை உடையவன்; அவர்களிடையே எரிபிழம்பாக உயர்ந்த பெரியவன்; விளங்கும் சடைகளை உடையவன்.

குறிப்புரை: மேவினான்; பிரமன், மிகுமாயன் – மாயம் மிக்கவன். நேடி – தேடி. நினைவுற்றில. பல – நினைப்பில் உற்றில்லாதன பலவாய். பெருமைகள் – பொருள் சேர்புகழ்கள். பெருமைக்கள் என்பதில் கவ்வொற்று இசைப்பொருட்டு விரித்தலாயிற்று. அருமை – அரிய மேகம். வரும்மை, அருமை எனலுமாம். பொழில் இனிய நல்ல மலர்களைச் சிந்த. வாசமணம். ஒருபொருளிரு சொல்.

In the city of Naraiyoor, good people live around the city. They join together and always speak about the fame of our Lord Civa. In the city natural forests are many where dark clouds always gather. The sweet smell of the flowers filling the garden spreads all over the streets in the city. Here is manifest our Lord who is the elite among men. The tutelary deity Brahma seated in the lotus flower, the best among flowers and the highly renowned deity Thirumaal, both were in search of our Lord in opposite directions. But our Lord Civa could not be even thought of in their minds with His eminency. They could not see Him at all. He, the Supreme Being, appeared before them as dazzling, infinite supernal flame. He has bright matted hair on His head.

2419. துவருறுகின்றஆடையுடல்போர்த்துழன்றவவர்தாமுமல்லசமணும்
கவருறுசிந்தையாளருரைநீத்துகந்தபெருமான்பிறங்குசடையன்
தவமலிபத்தர்சித்தர்மறையாளர்பேணமுறைமாதர்பாடிமருவும்
நவமணிதுன்றுகோயிலொளிபொன்செய்மாடநறையூரின்நம்பனவனே. 10

துவர் உறுகின்ற ஆடை உடல் போர்த்து உழன்ற அவர் தாமும் அல்ல சமணும்
கவர் உறுசிந்தையாளர் உரை நீத்து உகந்த பெருமான் பிறங்கு சடையன்
தவம் மலிபத்தர் சித்தர் மறையாளர் பேண முறை மாதர் பாடி மருவும்
நவமணி துன்று கோயில் ஒளி பொன் செய் மாட நறையூரின் நம்பன் அவனே.

tuvar uRukin2Ra ATai uTal pOrttu uzan2Ra avar tAmum, alla camaNum,--
kavar uRu cintaiyALar--urai nIttu ukanta perumAn2; piRagku caTaiyan2--
tavam mali pattar cittar maRaiyALar pENa, muRai mAtar pATi maruvum
navamaNi tun2Ru kOyil, oLi pon2 cey mATa naRaiyUril nampan2 avan2E.

பொருள்: தவம் நிறைந்த பத்தர்கள், சித்தர்கள், மறை வல்லவர்கள் முதலியோர் போற்றி வழிபடுவதுவும், மகளிர் முறையே பாடி மருவுவதும், நவமணிகள் பதிக்கப்பட்டதுமாகிய திருக்கோயிலும், பொன்னொளி வீசும் மாடங்களுமுடைய திருநறையூரில் நம்மால் விரும்பப்படுபவன் ஆகிய சிவன் அவனே, துவரூட்டப்பட்ட ஆடையை உடல்மேல் போர்த்துத் திரிகின்ற தேரர்களும், தேரர்கள் அல்லாத சமணரும் ஆகிய பலவழி ஓடும் சிந்தையாளர்களின் உரைகளை ஒழித்து அவைகளுக்கு அகப்படாது உயர்ந்த பெருமான்.

குறிப்புரை: துவர் உறுகின்ற ஆடை – துவர் (காவி) ஊட்டிய துணி. அல்ல – (தேரர்) அல்லாத. கவர் உறு சிந்தையாளர் – பல தலையாய் உற்ற மணம் உடையவர். பலதலை – ஐயம். தவம்மலி பத்தர் சித்தர் மறையாளர் பேண – தவத்தின் மிகுந்த அன்பரும் சித்துவல்லாரும் வேதியரும் விரும்பிவழிபட (பா. 4). இல் 'மலையின் கண் வந்து தொழுவார்' என்றது இதிற்குறித்த சித்தரையே.

The devotees and the mystic scholars, Vedic scholars, all these people very much desire to worship our Lord Civa. The fair sex, the women folk chant the divine songs in an orderly manner and reach the temple and worship our Lord. The city has very palatial golden buildings. Our Lord Civa is manifest in the temple in Naraiyoor filled with nine gems. Here in this city, the Buddhists who wear saffron coloured cloth all around their body and the Jains have different ideas varied from our Lord Civa. Our Lord is too above all these ideas of these people. He has entangled locks of hair in His head.

2420. கானலுலாவியோதமெதிர்மல்குகாழிமிகுபந்தன்முந்தியுணர
ஞானமுலாவுசிந்தையடிவைத்துகந்தநறையூரின்நம்பனவனை
ஈனமிலாதவண்ணமிசையாலுரைத்ததமிழ்மாலைபத்துநினைவார்
வானநிலாவவல்லர்நிலமெங்குநின்றுவழிபாடுசெய்யுமிகவே. 11

கானல் உலாவி ஓதம் எதிர் மல்கு காழி மிகு பந்தன் முந்தி உணர
ஞானம் உலாவு சிந்தை அடிவைத்து உகந்த நறையூரின் நம்பன் அவனை
ஈனம் இலாத வண்ணம் இசையால் உரைத்த தமிழ் மாலை பத்து நினைவார்
வான நிலாவ வல்லர் நிலம் எங்கும் நின்று வழிபாடு செய்யும் மிகவே.

kAn2al ulAvi Otam etir malku kAzi miku pantan2, munti uNara
njAn2am ulAvu cintai aTi vaittu ukanta naRaiyUril nampan2 avan2ai,
In2am ilAta vaNNam, icaiyAl uraitta tamiz mAlai pattum nin2aivAr
vAn2am nilAva vallar; nilam egkum nin2Ru vazipATu ceyyum, mikavE

பொருள்: நெய்தற்கானலுள் உலாவிய கடல்நீரின் ஓதம் எதிரேறும் கழிகள் நிறைந்தது காழிநகர். அக்காழியில் ஞானமிகுந்த ஞானசம்பந்தன் திருப்பெருகு சிவஞானம் உலாவுகின்ற திருவுள்ளத்தில் சிவனின் திருவடிகளை வைத்து மகிழ்வார்; அவ்வாறு அவர் சிந்தையில் வைத்து மகிழ்ந்த திருவடிகளை உடைய திருநறையூர் நம்பனாகிய சிவனைக் குற்றம் இலாத வண்ணம் இசையோடு உரைத்த இத்தமிழ்ப்பாமாலைப் பாடல்கள் பத்தையும் சிந்திப்பவர் மண்ணுலகத்தவர் மிகவும் வணங்க வானுலகத்தில் இருக்க வல்லவராவர்.

குறிப்புரை: ஞானம் உலாவு சிந்தை – திருப்பெருகு சிவஞானம் உலாவுகின்ற திருவுள்ளத்தில் சிந்திக்கும் வண்ணம்.

Our saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi city. Here the seawater flows and crosses into the gardens and forms stagnant ponds. In his young age itself, he became very famous with his divine knowledge. In his mind, he fixed the holy feet of Lord Civan of Thiru-naraiyoor and was highly satisfied. Without any flaw he sang in pure musical tone a garland of flowers, these ten Tamil verses. Those devotees who can understand and memorise these ten stanzas and sing them before Lord Civa will become praiseworthy enough to be hailed by the earth and live in the world of the sky.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

87ஆம் பதிகம் முற்றிற்று
End of 87th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 224 *பதிக எண்: 88*

88. தென்திருமுல்லைவாயில் 88. THEN-THIRU-MULLAI-VOYIL

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

தென்திருமுல்லைவாயில் என்னும் இத்திருத்தலமானது சீகாழிக்குக் கிழக்கே பதின்மூன்று கி.மீ. தூரத்தில் கடற்கரையில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் ஏழாவது ஆகும். சீகாழியிலிருந்து பேருந்துகளில் செல்லலாம். இறைவர் திருப்பெயர் முல்லைவனநாதர். இறைவியாரின் திருப்பெயர் கோதையம்மை. தலவிருட்சம் முல்லை. உமாதேவி வழிபட்டுத் தட்சிணாமூர்த்தியிடம் ஐந்தெழுத்து உபதேசம் பெற்ற தலம். இதற்கு திருஞானசம்பந்தர் பதிகம் மாத்திரம் இருக்கின்றது. சோழநாடு, நாகை மாவட்டம், சீகாழி வட்டம். கோயிலின் வாயில் கிழக்குப் புறத்திலுள்ளது. கல்லாலான திருப்பணி. அம்மனுக்குத் தனிப்பிரகாரமுண்டு. கோயிலுக்கும் கடற்கரைக்கும் இடையில் சிந்தனை பிள்ளையார் கோயில் ஒன்று இருக்கின்றது. வடக்கே நந்த கோபால தீர்த்தம் என்ற குளம் இருக்கிறது.

பதிக வரலாறு

திருவெண்காட்டில் மெய்ப்பொருளாயினாரை வழிபட்ட முத்தமிழ்விரகர் பத்தராம் அடியார் சூழத் திருமுல்லைவாயில் நித்தனாரை வணங்கிப் பாடிச் சாத்திய செந்தமிழ் மாலை இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2421. துளிமண்டியுண்டுநிறம்வந்தகண்டன்நடமன்னுதுன்னுசுடரோன்
ஒளிமண்டியும்பருலகங்கடந்தவுமைபங்கனெங்களரனூர்
களிமண்டுசோலைகழனிக்கலந்தகமலங்கள்தங்குமதுவில்
தெளிமண்டியுண்டுசிறைவண்டுபாடுதிருமுல்லைவாயிலிதுவே. 1

துளி மண்டி உண்டு நிறம் வந்த கண்டன் நடம் மன்னு துன்னு சுடரோன்
ஒளி மண்டி உம்பர் உலகம் கடந்த உமைபங்கன் எங்கள் அரன் ஊர்
களி மண்டு சோலை கழனிக் கலந்த கமலங்கள் தங்கும் மதுவில்
தெளி மண்டி உண்டு சிறை வண்டு பாடு திருமுல்லைவாயில் இதுவே.

tuLi maNTi uNTu niRam vanta kaNTan2, naTam man2n2u tun2n2u cuTarOn2,
oLi maNTi umpar ulakam kaTanta umaipagkan2, egkaL aran2, Ur-
kaLi maNTu cOlai, kazan2ik kalanta kamalagkaL tagkum matuvin2
teLI maNTi uNTu, ciRaivaNTu pATu tiru mullai vAyil ituvE.

பொருள்: பாற்கடலில் பரந்து வந்த நஞ்சினைத் துளிபோல ஆக்கி உண்டு கரிய நிறம் வந்த கண்டத்தை உடையவன்; அநவரதம் நடம் செய்யும் செறிந்த சுடரொளி செய்வோன்; ஒளி நிறைந்து வானோர் உலகமும் கடந்தவன்; உமையைத் தன் மேனியின் ஒரு பங்கில் கொண்டவன்; எங்கள் அரசனாகிய சிவனின் ஊர் எதுவெனில், இருள் நிறைந்த சோலைகள், கழனிகளில் இருக்கும் தாமரை மலர்களில் நிறைந்து இருக்கும் தேனின் தெளிவினை மிகுதியாக உண்டு சிறகுகளை உடைய வண்டுகள் பாடும் திருமுல்லை வாயிலாகிய இதுவே.

குறிப்புரை: துளி – விஷத்துளி. நிறம் – ஈண்டுக் கருமை. தெளி – தெளிவு, தேறல். ஊர் – எழுவாய் (திருமுல்லைவாயிலாகிய). இது பயனிலை. இதுவே அரனூர் எனலுமாம்.

Our Lord Civa, with fine concern, imbibed the poison that came out of the ocean and kept it in His larynx. His neck therefore looks dark blue in colour. His avocation is to dance with the bhutaas. He is concomitant with His consort Uma Devi. He took the form of dazzling supernal tall flame which crossed the world of the devas. The city Then-thiru-mullai-voyil has plenty of attractive delightful joyous gardens. Next to these gardens, rich fields with lotus flowers are many in which the bees settle, drink the honey to their stomach full and then sing. This glorious city is called Then-thiru-mullai-voyil.

2422. பருவத்தில்வந்துபயனுற்றபண்பனயனைப்படைத்தபரமன்
அரவத்தொடங்கமவைகட்டியெங்குமரவிக்கநின்றஅரனூர்
உருவத்தின்மிக்கவொளிர்சங்கொடிப்பியவையோதமோதவெருவித்
தெருவித்தில்வந்துசெழுமுத்தலைக்கொள்திருமுல்லைவாயிலிதுவே. 2

பருவத்தில் வந்து பயன் உற்ற பண்பன் அயனைப் படைத்த பரமன்
அரவத்தொடு அங்கம் அவை கட்டி எங்கும் அரவிக்க நின்ற அரனூர்
உருவத்தின் மிக்க ஒளிர் சங்கொடு இப்பி அவை ஓதம் மோத வெருவித்
தெருவித்தில் வந்து செழு முத்தலை கொள் திருமுல்லைவாயில் இதுவே.

paruvattil vantu payan2 uRRa paNpan2, ayan2aip paTaitta paraman2,
aravattoTu agkam avai kaTTi egkum aravikka nin2Ra aran2, Ur--
uruvattin2 mikka oLircagkoTu ippi avai Otam mOta veruvi,
teruvattil vantu, cezu muttu alaik koL tiru mullai vAyil ituvE

பொருள்: வேண்டுங்காலத்தில் வெளிப்பட்டுப் பயன் செய்யும் இயல்புடையவன்; உலகத்தைப் படைக்கும் பிரமனைப் படைத்த மேலோன்; பாம்பாகிய சங்கிலியை அணிந்து அவை ஒலிக்க நின்ற அரன்; அவனுடைய ஊர் எதுவெனில், உருவில் பெரியதும் ஒளிர்வதுமாகிய சங்கொடு முத்துச் சிப்பிகள் நீரோட்டத்தில் வந்து மோதி, அஞ்சி தெருக்களில் வந்து செழுமையான முத்துக்களை ஈன்று அலையும் திருமுல்லைவாயிலாகிய இதுவே.

குறிப்புரை: பருவத்தில் வந்து பயன் உற்ற பண்பன் என்பது இரு வினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் நிகழப்பெற்று, குருவருளால் சிவஞானம் வளரலுற்று, பழமலம் பற்றறுத்து, சிற்றறிவு தீர்ந்து, திருவடி அடையும் பருவத்தில் எழுந்தருளி வந்து, பயனாகப் பொருந்திய எண்குணத்தன். அரவிக்க – ஒலிக்க. தெருவம் – தெரு. முத்து + அலை + கொள் எனப் பிரிக்க. அலை – அலைதல். சங்கும் இப்பியும் முத்துக்களை ஈன்ற குறிப்புணர்த்தப்பட்டது.

Our Lord Civa approaches people who become competent to get His grace and then gives heavenly bliss to those souls. He is such a great and qualitative Supreme Being. He created the tutelary god Brahma. He adorns His entire body with snakes. All the devotees and servitors and others praise Him and say 'glory to thee'. This Lord Civa is manifest in Then-thiru-mullai-voyil. The big size changu and shellfish get terrified by the dashes of the sea waves and reach the streets of the city and deliver their rich pearls all over the areas.

2423. வாராதநாடன்வருவார்தம்வில்லினுமெல்கிநாளுமுருகில்
ஆராதஇன்பனகலாதஅன்பனருள்மேவிநின்றஅரனூர்
பேராதசோதிபிரியாதமார்பினலர்மேவுபேதைபிரியாள்
தீராதகாதனெதிநேரநீடுதிருமுல்லைவாயிலிதுவே. 3

வாராத நாடன் வருவார் தம்வில்லினும் மெல்கி நாளும் உருகில்
ஆராத இன்பன் அகலாத அன்பன் அருள்மேவி நின்ற அரனூர்
பேராத சோதி பிரியாத மார்பின் அலர்மேவு பேதை பிரியாள்
தீராத காதன் எதிநேர நீடு திருமுல்லைவாயில் இதுவே.

vArAta nATan2, varuvAr tam villin2 uru melki nALum urukil
ArAta in2pan2, akalAta an2pan2, aruL mEvi nin2Ra aran2, Ur--
pErAta cOti piriyAta mArpin2 alar mEvu pEtai piriyAL,
tIrAta kAtal neti nEra, nITu tiru mullai vAyil ituvE.

பொருள்: மீண்டும் வருதலில்லாத நாடுடையவன்; வானவில் போல் தோன்றி விரைவில் அழியும் உடம்பு மெலிந்து நாள்தோறும் அன்பினால் உருகில் தெவிட்டாத இன்பம் தருபவன்; நீங்காத அன்பன்; அருள் தங்கிய சிவனுடைய ஊர் எதுவெனில், பெயராத ஒளி தங்கும் திருமார்பில் தங்கி இருப்பவள் திருமகள்; அத்திருமகள் நீங்காத, தீராத விருப்பத்துடன் செல்வவளங்கள் எல்லாம் தோன்ற நிலைத்திருக்கின்ற ஊர் திருமுல்லை வாயிலாகிய இதுவே.

குறிப்புரை: வாராத நாடன் – மீண்டு வாராத பேரின்ப நாடுடையவன். வில்லின்உரு – வானவில்லைப் போலத் தோன்றி விரைந்து மறையும் உடம்பு. வாங்குசிலைபுரையும் உடல் நால்வர் நான்மணிமாலை. வில்லைப்போலக் கூனிக் கெடும் உடம்பெனலுமாம். நாளும் உருகில் ஆராத இன்பன் – நாள்தோறும் பக்தியால் உருகித் தற்போதம் அற்றுச் சிவபோதம் உற்றால், அமையாத பேரின்பமாக விளங்குபவன். 'உள்ளம் உருகில் உடனாவார்' (தி.2 ப.111 பா.3). கௌத்துவ மணி நீங்காத திருமால் மார்பின்கண் வீற்றிருக்கும் திருமகள், மலர்மகள் பிரியாது, நீங்காத காதலுடன் செல்வம் தோன்ற நீடுகின்ற திருமுல்லைவாயில் என்னும் பொருளும் உரியதாகும்.

Our Lord Civa is manifest in such a place where salvation will never vanish. Those who are born on this earth are like the rainbow, they appear and soon disappear. But the people who live long are those whose body melts and becomes very lean; still they continue to worship our Lord Civa. For such people He gives heavenly bliss. He has infinite mercy which never diminishes. This Lord has manifested Himself in Then-thiru-mullai-voyil. Here the tutelary deity Thirumaal is manifest. In his chest special gem called gowththuvamani, the most bright gem disperses light all around. Goddess Lakshmi who never leaves Thirumaal's chest will grace everybody and will make richness to grow in the city. Such a glorious city is Then-thiru-mullai-voyil.

2424. ஒன்றொன்றொடொன்றுமொருநான்கொடைந்துமிருமூன்றொடேழுமுடனாய்
அன்றின்றொடென்றும்அறிவானவர்க்குமறியாமைநின்றஅரனூர்
குன்றொன்றொடொன்றுகுலையொன்றொடொன்றுகொடியொன்றொடொன்றுகுழுமிச்
சென்றொன்றொடொன்றுசெறிவால்நிறைந்ததிருமுல்லைவாயிலிதுவே. 4

ஒன்று ஒன்றொடு ஒன்றும் ஒரு நான்கொடு ஐந்தும் இருமூன்றொடு ஏழும் உடனாய்
அன்று இன்றொடு என்றும் அறிவானவர்க்கும் அறியாமை நின்ற அரனூர்
குன்று ஒன்றொடு ஒன்று குலை ஒன்றொடு ஒன்று கொடி ஒன்றொடு ஒன்று குழுமிச்
சென்று ஒன்றொடு ஒன்று செறிவால் நிறைந்த திருமுல்லைவாயில் இதுவே.

on2Ru on2RoTu on2Rum oru nAn2koTu aintum- iru-mUn2RoTu Ezum uTan2 Ay,
an2Ru in2RoTu en2Rum, aRivu An2avarkkum aRiyAmai nin2Ra aran2 Ur--
kun2Ru on2RoTu on2Ru, kulai on2RoTu on2Ru, koTi on2RoTu on2Ru, kuzumic
cen2Ru, on2RoTu on2Ru ceRivAl niRainta tiru mullaivAyil ituvE.

பொருள்: தத்துவங்கள் இருபத்து நான்கு, அவற்றுடன் கூடி அவையாகவே இருந்து அவற்றை அனுபவிப்பது ஆன்மா; புருடனாகிய ஆன்மா அறிவுடைப் பொருளாகிய சேதனன்; பிரகிருதியிலிருந்து தோன்றிய தத்துவங்கள் அறிவற்ற அசேதனங்கள். அறிவற்ற தத்துவங்களாகிய பிரகிருதியைத் தன்னிடமிருந்து வேறாய்ப் பிரித்து அறிவதே ஞானம்; அவ்வாறு அறிகின்ற கருத்தா ஆன்மா. அந்த ஞானம் பெற்ற ஆன்மாவே கடவுள் என்ற மயக்கத்தையே அறிவாகக் கொண்டவர்களால் அறியப் பெறாமல் நின்ற பரமனாகிய சிவனின் ஊர் எதுவெனில், குன்றுகள் ஒன்றோடொன்று நெருங்கியிருப்பது போன்று உயர்ந்த மாளிகைகள் நெருங்கியிருப்பதும், குலைகள் ஒன்றோடொன்றும் கொடிகள் ஒன்றோடொன்றும் செறிந்து நிறைந்திருக்கும் சோலைகளை உடையதுமாகிய திருமுல்லை வாயிலாகிய இதுவே.

குறிப்புரை: ஒன்று . . . ஏழும் உடனாய் – இருபத்தைந்தும் உடனாகி. தத்துவம் இருபத்தைந்தும் இவ்வாறு (1+1+1+4+5+6+7) தொகுத்து உரைக்கப்பட்டன. 1. மூலப்பகுதி (குணதத்துவ காரணம்), 2. புத்தி, 3. அகங்காரம், 4. மனம், 5. செவி, 6. மெய் (துவக்கு), 7. கண் (நோக்கு), 8. வாய் (நாக்கு), 9. மூக்கு, 10. வாக்கு, 11. பாதம், 12. பானி, 13. பாயு, 14. உபத்தம், 15. சத்தம், 16. பரிசம், 17. உருவம், 18. இரதம், 19. கந்தம், 20. ஆகாயம், 21. வாயு, 22. தேயு, 23. அப்பு, 24. பிருதிவி என்னும் இருபத்து நான்கும் ஆன்மத்தத்துவங்களாகும். அவற்றுள், பிருதிவியை முதலாகக் கொண்டு எண்ணின், எண்ணப்பட்ட இருபத்து நான்கின் வேறாய் எண்ணுகின்ற கர்த்தா ஒன்று உண்டு. அதுவே ஆன்மா. அவ்வான்மாவே கடவுள் என மயங்கி, அம்மயக்கத்தை தெளிவெனக் கொண்டவர்க்கு பரமான்மா வேறொன்று உண்டு எனப் புலப்படாது. அவர், ஆன்மாக்களின் வேறாய், அவற்றிற்கு உயிராய், உடனாய் இருக்கின்ற

மெய்ப்பொருள் வேறு. இருபத்து நான்கு தத்துவங்களையும் கொண்டு நிற்கும் ஆன்மாக்கள் வேறு; அவ்வுண்மையை அறியாதார் பசுவைப் பதியாக் கொள்ளும் மயக்கம் மயக்கமே; தெளிவன்று; அது பாதகம் என்று உண்மையுணர்த்துவது சமயக் குரவர்க்குக் கடனாதலின், இத்திருப்பாட்டின் முன்னீரடியிலும் தமது கடமையாற்றினார் நமது சமயத்தின் ஆசிரியர். புருட தத்துவம் இருபத்தைந்தாவது. அதையே முடிவான பொருள் எனக் கொள்ளும் சமயமும் உண்டு. சிவதருமோத்தருத்துள், 10வது சிவஞானயோகவியலின் 32ஆவது செய்யுளுரைக்கீழ் பௌராணிகர் மதத்தின்படி கூறியுள்ளதும் அதன் உரையில், ஐயஞ்சின் அப்புறத்தாலும் ஆரூரமர்ந்த அம்மானே (தி. 4 ப. 4 பா. 10) என்று மேற்கோள் காட்டியதும் உணர்க.

The knowledge about truth (i.e. good) is called Thath-thuvam. There are 24 thathuvams about soul's move. Above the 24th thathuvam, Prithvi, our Supreme God Civa is manifest. Philosophy is different from gnanam, wisdom. In case the soul completes all these 25 thathuvam they become eligible to get the holy bliss of Lord Civa. In the 25th thathuvam the soul is attached to the three malams. They are aanava malam, kanma malam and maaya malam - deceit. The soul must regret and abandon these malams. Thereafter they can reach the 25th stage. Ignorant people say God manifests Himself in the 25th stage. Such people of philosophical research declare that the Supreme Being is in 25th stage. However our Lord, manifest in the same Then-thiru-mullai-voyil, ignores the confusion of these people. This city is similar to hillocks against other hillocks, so close are the many tall buildings here. The clusters of fruits and flowers and the vines mix together very closely. Our Lord Civa is beyond the reach of philospher's confusing concepts.

2425. கொம்பன்னமின்னினிடையாளொர்கூறன்விடைநாளுமேறுகுழகன்
நம்பன்னெமன்பன்மறைநாவன்வானின்மதியேறுசென்னியரனூர்
அம்பன்னவொண்கணவராடாங்கினணிகோபுரங்களழகார்
செம்பொன்னசெவ்விதருமாடநீடுதிருமுல்லைவாயிலிதுவே. 5

கொம்பு அன்ன மின்னின் இடையாள் ஓர் கூறன் விடை நாளும் ஏறு குழகன்
நம்பன் எம் அன்பன் மறை நாவன் வானின் மதியேறு சென்னி அரனூர்
அம்பு அன்ன ஒண் கணவர் ஆடு ஆங்கின் அணி கோபுரங்கள் அழகார்
செம்பொன்ன செவ்வி தருமாட நீடு திருமுல்லைவாயில் இதுவே.

kompu an2n2a min2n2in2 iTaiyAL or kURan2, viTai nALum ERu kuzakan2,
nampan2, em an2pan2, maRai nAvan2, vAn2in2 mati ERu cen2n2i aran2, Ur--
ampu an2n2a oNkaNavar ATu angkin2 aNi kOpuragkaL, azaku Ar
cempon2n2a cevvi taru mATam, nITu tiru mullai vAyil ituvE.

பொருள்: பூங்கொம்பு போன்றவளும் மின்னல் போன்ற இடையுடையவளுமாகிய உமாதேவியாரைத் தன் உடலின் ஒரு கூறாக உடையவன்; நாளும் எருதினை வாகனமாக ஏறும் இளைஞன். நம் விருப்பத்திற்கு உரியவன்; எம்முடைய அன்பன்; மறைகூறும் நாவன்; வானிலூறும் மதி தங்கிய சென்னியன் ஆகிய சிவனுடைய ஊர் எதுவெனில், அம்பு நிகர்த்த கூர்விழிகளை உடைய மகளிர் ஆடலரங்குகளையும், வரிசையான கோபுரங்களையும் அழகிய செம்பொன்னின் நிறம் வீசும் மாடங்களையும் உடைய திருமுல்லை வாயிலாகிய இதுவே.

குறிப்புரை: பூங்கொம்பு உமாதேவியார்க்கும் மின் இடுப்பிற்கும் கொள்ளலாம். குழகன் – இளைஞன். அழகன். கணவர் – கண்ணுடை மகளிர். பொன்ன – பொன்னினுடைய.

Our Lord Civa is concomitant with His consort Uma Devi. She is lean like the vine; her waist is compared to lightning. Everyday He rides on His bull and goes round; He is young in appearance. He is elite among men; He loves us. He chants the four Vedas with His tongue. He retains the moon on His head. He is manifest in Then-thiru-mullai-voyil. In this city, there are many dancing halls where young girls dance often with eyes bright and shining like the arrows. The temple towers are all very attractive. The palatial tall houses are bright like gold. Such a glorious city is Then-thiru-mullai-voyil.

2426. ஊனேறுவேலினுருவேறுகண்ணியொளியேறுகொண்டவொருவன்
ஆனேறதேறியழகேறுநீறனரவேறுபூணுமரனூர்
மானேறுகொல்லைமயிலேறிவந்துகுயிலேறுசோலைமருவித்
தேனேறுமாவின்வளமேறியாடுதிருமுல்லைவாயிலிதுவே. 6

ஊனேறு வேலின் உருவேறு கண்ணி ஒளியேறு கொண்ட ஒருவன்
ஆன் ஏறு அது ஏறி அழகு ஏறு நீறன் அரவு ஏறு பூணும் அரனூர்
மான் ஏறு கொல்லை மயில் ஏறி வந்து குயில் ஏறு சோலை மருவித்
தேன் ஏறு மாவின் வளம் ஏறியாடு திருமுல்லைவாயில் இதுவே.

Un2 ERu vElin2 uru ERu kaNNi oLi ERu koNTa oruvan2,
An2 ERu atu ERi, azaku ERum nIRan2, aravu ERu pUNum aran2, Ur--
mAn2 ERu kollai mayil ERi vantu, kuyil ERu cOlai maruvi,
tEn2 ERu mAvin2 vaLam ERi, ATu tiru mullai vAyil ituvE.

பொருள்: ஊன் தங்கிய வேல் போன்ற கூரிய வடிவுடைய கண்ணினள். ஒளி மிக்கவள் ஆகிய உமையம்மையைப் பாகமாக உடையவன்; ஆனினத்தில் சிறந்த ஏற்றினை ஊர்பவன்; கவினேறும் நீற்றினைப் பூசியவன்; உயர்ந்த பாம்பாகிய பூணினைப் பூண்டவன் ஆகிய அரன் சிவனுடைய ஊர் எதுவெனில், மான் தங்கும் கொல்லை நிலத்தில் மயிலேறி வந்து, குயில்கள் தங்கும் சோலையில், தேன்வளமிக்க மாவின்மீதேறி ஆடும் திருமுல்லைவாயிலாகிய இதுவே.

குறிப்புரை: கண்ணி – உமாதேவியார். அழகு ஏறும் நீறன் – சுந்தரமாவது நீறு, கவினைத் தருவது நீறு, அழகு ஏறுதலால் கண்திகைப்பது நீறு. கொல்லையில் மானும், சோலையில் மயிலும் குயிலும் ஏறுதல் இயல்பு. மா – வண்டு. தேன் – மலர்கள். முல்லை மாவின் வளத்தில் ஏறியாடும் என்றால் மா – மரத்தையும், மாவின் வளம் முல்லையில் ஏறியாடும் என்றால் மா வண்டினையும் குறித்ததாகக் கொள்க.

Our Lord Civa's consort's eyes are similar to the arrows with fleshy tips. Also it bestows black light on Civa. He rides on His bull and has administered the holy ashes on His forehead, which adds to His attraction. He uses the snakes as His ornaments. He is manifest in the temple in Then-thiru-mullai-voyil. Here the deer jump and play in the forest region (precinct). Peacock and the Indian cuckoo live in big natural gardens. Here the flower plants are many and they produce a lot of honey. The bees in large numbers fly here to suck honey. Such opulent areas are many in this glorious city.

2427. நெஞ்சாரநீடுநினைவாரைமூடுவினைதேயநின்றநிமலன்
அஞ்சாடுசென்னியரவாடுகையனனலாடுமேனியரனூர்
மஞ்சாருமாடமனைதோறுமையமுளதென்றுவைகிவரினுஞ்
செஞ்சாலிநெல்லின்வளர்சோறளிக்கொள்திருமுல்லைவாயிலிதுவே. 7

நெஞ்சார நீடு நினைவாரை மூடு வினை தேய நின்ற நிமலன்
அஞ்சாடு சென்னி அரவாடு கையன் அனல் ஆடும் மேனி அரனூர்
மஞ்சு ஆருமாட மனை தோறும் ஐயம் உளது என்று வைகி வரினுஞ்
செஞ்சாலி நெல்லின் வளர் சோறு அளிக்கொள் திருமுல்லைவாயில் இதுவே.

nenjcu Ara nITu nin2aivArai mUTu vin2ai tEya nin2Ra nimalan2;
anjcu ATu cen2n2i, aravu ATu kaiyan2; an2al ATum mEn2i aran2; Ur--
manjcu Arum mATaman2ai tORum, "aiyam uLatu" en2Ru vaiki varin2um,
cenjcAli nellin2 vaLar cORu aLik koL tiru mulla vAyil ituvE.

பொருள்: நெஞ்சம் நிறைய இடைவிடாது நெடிது தன்னையே தியானிக்கும் தன் மெய்யடியவரை வந்து சூழும் இருவினைகளும் அவர்தம்மைப் பற்றாது தேய்ந்தொழிந்து அழியுமாறு செய்ய அவர்களுடைய உள்ளமாகிய தாமரையில் வீற்றிருக்கும் தூயவன்; ஆனைந்தாடும் சென்னியன்; அரவு ஆடுகின்ற கையன்; ஆரழல் போற்சிவந்த மேனியன் ஆகிய அரனாகிய சிவனின் ஊர்தான் எதுவெனில், உணவு உளதோ எனக் கேட்டு இரவு நேரம் தாழ்ந்து வந்து எந்த வீட்டில் கேட்டாலும் செஞ்சாலி நெல்லின் சோற்றினை நிறைய அளிக்கும் மக்கள் வாழும் திருமுல்லைவாயிலாகிய இதுவே.

குறிப்புரை: நெஞ்சார நீடு நினைவாரை மூடுவினை – உள்ளத்தாமரையில் சிவபெருமான் திருவடியே அன்றி மற்று எதையும் எண்ணாமல், இடைவிடாது கருதிப் பணிகின்ற மெய்யடியாரைச் சூழும் இருவினையும் தேய அவரைப் பற்றாது முற்றும் தேய்ந்தொழிய. நின்ற நிமலன் – அவர் உள்ளத்தாமரையில் நிலைத்தருளிய பரசிவன். ஈயப்படும் பொருளின் உயர்வு விளங்கச் செஞ்சாலி நெல்லின் வளர்சோறு எனக் குறிக்கப்பட்டது.

Our Lord Civa removes the bad karma of devotees who think always of our Lord in their mind and pray. He likes to be ablutioned by all the five products of cow such as milk etc. In His hands the snakes dance. His body resembles the supreme fire. This Lord is manifest in the temple in Then-thiru-mullai-voyil. In this city very tall buildings are many. Here live people, who always give cooked red rice to anybody who reaches the houses at late night and asks for food and, lead good, happy life. Such a plentiful city is Then-thiru-mullai-voyil.

2428. வரைவந்தெடுத்தவலிவாளரக்கன்முடிபத்துமிற்றுநெரிய
உரைவந்தபொன்னினுருவந்தமேனியுமைபங்களெங்களரனூர்
வரைவந்தசந்தொடகிலுந்திவந்துமிளிர்கின்றபொன்னிவடபால்
திரைவந்துவந்துசெறிதேறலாடுதிருமுல்லைவாயிலிதுவே. 8

வரை வந்து எடுத்த வலி வாளரக்கன் முடிபத்தும் இற்று நெரிய
உரை வந்த பொன்னின் உருவந்த மேனி உமை பங்கன் எங்கள் அரனூர்
வரை வந்த சந்தொடு அகிலும் உந்தி வந்து மிளிர்கின்ற பொன்னி வடபால்
திரை வந்து வந்து செறி தேறலாடு திருமுல்லைவாயில் இதுவே.

varai vantu eTutta vali vAL arakkan2 muTipattum iRRu neriya,
uraivanta pon2n2in2 uruvanta mEn2i umaipagkan2; egkaL aran2; Ur--
varai vanta cantoTu akil unti vantu miLirkin2Ra pon2n2i vaTapAl,
tirai vantu vantu ceRi tERal ATu tiru mullai vAyil ituvE.

பொருள்: தன் செருக்கால் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க வந்த வலிமையும் வெற்றியைத் தரும் வாளையும் உடைய அரக்கன் இராவணனின் முடிகள் பத்தினையும் இற்றுவிழ நெரித்தவன்; மாற்றுயர்ந்த பொன்னின் சிறந்த பொன்னிறம் பொருந்திய திருமேனி உடைய உமாதேவியாரைத் தன்பங்கில் உடையவன் ஆகிய எங்கள் அரனாகிய சிவனுடைய ஊர் எதுவெனில், மலைகளின்மேல் தோன்றிய சந்தன மரங்களோடு அகிலும் தள்ளிக் கொண்டு வந்து பிறழ்கின்ற காவிரியாற்றின் வடகரைப்பால் அலைந்து அலைந்து வந்து தெளிதேன் ஆடுகின்ற திருமுல்லைவாயிலாகிய இதுவேயாம்.

குறிப்புரை: உரை வந்த பொன்னின் உருவந்தமேனி உமை – கட்டளைக் கல்லில் மாற்று உரைக்கப்பெற்ற சிறந்த பொன்னிறம் பொருந்திய திருமேனியை உடைய உமாதேவியார். தேறல் – தெளிதேன்.

Raavanan, the demon king of Sri Lanka, owned a strong sword. When he came to remove and replace the Himalayan mountain, our Lord Civa crushed his ten heads. He is concomitant with His consort Uma Devi whose body glitters like fine gold rubbed against to see the quality. He manifest in the temple in Then-thiru-mullai-voyil. In this city, the Cauvery river brings from the mountain area sandalwood pieces and eaglewood particles and leaves them on the northern banks of the river. Here the hanging honeycombs sway due to the wind. Such an attractive city is Then-thiru-mullai-voyil.

2429. மேலோடிநீடுவிளையாடல்மேவுவிரிநூலன்வேதமுதல்வன்
பாலாடுமேனிகரியானுமுன்னியவர்தேடநின்றபரனூர்
காலோடுநீலமலர்துன்றிநின்றகதிரேறுசெந்நெல்வயலிற்
சேலோடுவாளைகுதிகொள்ளமல்குதிருமுல்லைவாயிலிதுவே. 9

மேல் ஓடி நீடு விளையாடல் மேவு விரி நூலன் வேத முதல்வன்
பால் ஆடு மேனி கரியானும் முன்னியவர் தேட நின்ற பரனூர்
கால் ஓடு நீலமலர் துன்றி நின்ற கதிர் ஏறு செந்நெல் வயலிற்
சேல் ஓடு வாளை குதி கொள்ள மல்கு திருமுல்லைவாயில் இதுவே.

mEl OTi nITu viLaiyATal mEvu virnUlan2; vEtamutalvan2,
pAl ATu mEn2i kariyAnum, mun2n2iyavar tETa nin2Ra paran2; Ur--
kAl ATu nIla malar tun2Ri nin2Ra katir ERu cennel vayalil
cElOTu vALai kutikoLLa, malku tiru mullai vAyil ituvE.

பொருள்: விரிந்த முப்புரிநூல் தன்மேல்புரண்டு அசையும் திருமேனியன்; வேதப் பொருளாகிய முதல்வன்; பால் போன்ற மேனியனாகிய பிரமனும் கரியனாகிய திருமாலும் தம் முனைப்பினால் காண முனைந்து தோற்று திகைக்க நின்ற பரன் ஆகிய சிவனின் ஊர் எதுவெனில், காம்பின்மீது அசைகின்ற நீலமலர்கள் செறிந்து நின்ற, கதிர்கள் நிறைந்த செந்நெல் வயலில் சேல்மீன்களுடன் வாளைமீன்களும் குறித்து மகிழும் வளம் நிறைந்த திருமுல்லைவாயிலாகிய இதுவே.

குறிப்புரை: மேலோடி . . . நூலன் – திருமார்பில் அணிந்த முப்புரி நூல் அவனது திருமேனியில் திருத்தோள்மேல் ஓடி நீடும் விளையாடுதல் மேவுதலை உணர்த்திற்று. விரிநூலன் என்பது சிவபிரான் என்னும் பொருட்டாய் நின்றதென்றும், அவன் விளையாடல் மேவியவன் என்றும் கொள்ளலும் பொருந்தும்.

Over the body of our Lord Civa, the three ply sacred thread moves and sways and gets elongated. He is the chief author of the four Vedas. The two tutelary deities Brahma and Thirumaal searched and failed to see the head and feet of Lord Civa. At that moment Lord Civa appeared before them as infinite supernal dazzling tall flame. They both got perplexed. Our Lord Civa is manifest in the temple in Then-thiru-mullai-voyil. In this city, the blue nelumbia flowers sway in the air in large numbers. In the red paddy fields the ears of the grains are richly grown. In this red paddy field carp fish and the sword fish jump and plunge and play.

2430. பனைமல்குதிண்கைமதமாவுரித்தபரமன்னநம்பனடியே
நினைவன்னசிந்தையடையாததேரர்மண்மாயநின்றஅரனூர்
வனைமல்குகைதைவகுளங்களெங்குமுகுளங்களெங்குநெரியச்
சினைமல்குபுன்னைதிகழ்வாசநாறுதிருமுல்லைவாயிலிதுவே. 10

*பனை மல்கு திண் கைமதமா உரித்த பரமன் நம் நம்பன் அடியே
நினை வன்ன சிந்தை யடையாத தேரர் மண் மாய நின்ற அரனூர்
வனை மல்கு கைதை வகுளங்கள் எங்கும் முகுளங்கள் எங்கு நெரியச்
சினை மல்கு புன்னை திகழ் வாச நாறு திருமுல்லைவாயில் இதுவே.*

pan2ai malku tiN kai matamA uritta paraman2; nam nampan2; aTiyE
nin2aivu an2n2a cintai aTaiyAta tErar, amaN, mAya nin2Ra aran2; Ur--
van2am malku kaitai, vakuLagkaL egkum, mukuLagkaL egkum neriya,
cin2ai malku pun2n2ai tikaz vAcam nARu tiru mullai vAyil ituvE.

பொருள்: பனை மரம் போன்ற திண்ணிய துதிக்கையும் மிக்க மதத்தையும் உடைய களிற்றின் தோலை உரித்த பரமன்; நம்மால் விரும்பப்படுபவன்; அவனுடைய திருவடியை நினையாத நெஞ்சினராகிய தேரர், அமணர் மாய நின்ற அரனாகிய சிவனுடைய ஊர் எதுவெனில், காடுபோல் வளர்ந்த தாழைகளும், மகிழமரங்களும் எங்கும் மலர் மொட்டுக்களும் நெரியக் கிளைகள் நிறைந்த புன்னையின் மலர்கள் வாசனை நாறும் திருமுல்லைவாயிலாகிய இதுவே.

குறிப்புரை: பனை கை – பனைக்கை மும்மதவேழம் பரமன் நம் நம்பன். நம்பன் அடியே நினைவு அன்ன சிந்தை – சிவபெருமான் திருவடியே நினைக்கும் அத்தகைய சித்தத்தை. வகுளங்கள் – மகிழ மரங்கள். முகுளங்கள் – மொட்டுக்கள்.

The elephant with its trunk similar to the palmyrah tree in a rutted stage (a period of sexual excitement) rushed before our Lord Civa who He ripped off its hide. He is the most elite among men and has affection for us. He has come to destroy the Jains and Buddhists who never think about our Lord's holy feet. This Lord is manifest in the temple in Then-thiru-mullai-voyil. In this city a large number of trees such as fragrant screwpine and pointed lean ape flower tree shed a large quantity of tender flower buds. The alexandrian laurel trees also shed tender buds. The fragrant smell of all these flowers spreads all over the city. Such attractive city is Then-thiru-mullai-voyil.

2431. அணிகொண்டகோதையவணன்றுமேத்தஅருள்செய்தவெந்தைமருவார்
தீணிகொண்டமூன்றுபுரமெய்தவில்லிதிருமுல்லைவாயிலிதன்மேல்
தணிகொண்டசிந்தையவர்காழிஞானமிகுபந்தனொண்டமிழ்களின்
அணிகொண்டபத்துமிசைபாடுபத்தரகல்வானமாள்வர்மிகவே. 11

அணி கொண்ட கோதை அவள் நன்றும் ஏத்த அருள் செய்த எந்தை மருவார்
தீணி கொண்ட மூன்று புரம் எய்த வில்லி திருமுல்லைவாயில் இதன் மேல்
தணி கொண்ட சிந்தையவர் காழி ஞானமிகு பந்தன் ஒண் தமிழ்களின்
அணி கொண்ட பத்து மிசை பாடு பத்தர் அகல்வானம் ஆள்வர் மிகவே.

aNi koNTa kOtai avaL nan2Rum Etta aruL ceyta entai, maruvAr
tiNi koNTa mUn2Rupuram eyta villi, tiru mullaivAyil itan2mEl,
taNi koNTa cintaiyavar kAzi njAn2am miku pantan2 oN tamizkaLin2
aNi koNTa pattum icai pATu pattar, akalvAn2am ALvar, mikavE.

பொருள்: அணி கொண்ட கோதை அவள் பத்தியுடன் வழிபட அவளுக்கு அருள் செய்த எந்தை, பகைவர்களான முப்புராதிகளாகிய அவுணரின் திண்ணிய மூன்று புரங்களையும் அழித்த வில்லி, அவருடைய நகராகிய திருமுல்லைவாயில் இதன்மேல், நின்ற சிந்தையராகிய காழி ஞானசம்பந்தன் பாடியருளிய அழகிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் இசையோடு பாடும் பத்தர்கள் அகன்ற வானுலகத்தை மிக ஆள்வர்.

குறிப்புரை: அணி கொண்ட கோதையவள் என்பது இத்தலத்து அம்பிகையின் திருப்பெயர். தணி கொண்ட சிந்தையவர் – விருப்பு வெறுப்புக்களால் உண்டாகும் வெப்பம் தணிதலை உடைய உள்ளத்தவர் (தி. 1 ப. 57 பா. 4), (தி. 7 ப. 8 பா. 7), சித்தியார் – 181 என்பவற்றில் குறிக்கப்பட்ட மனமே தணி கொண்டதாகும்.

In this city Then-thiru-mullai-voyil, the goddess is named as jeweled Kothai-Ambigai. She prayed and worshipped our Lord who graced her. He is our father. He holds a bow and destroyed the three strong fortresses of the asuras who inflicted intolerable misery on the devas. Our saint Thiru-gnana-Sambandar has a strong appeal in his mind for our Lord in the city of Then-thiru-mullai-voyil. He hailed from the city of Seerkaazhi. He has the highest divine knowledge. He chanted before the Lord, the famous Tamil songs like a garland of ten verses. Those devotees who can chant these ten verses in good musical tone will rule the broad upper world happily for long.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

88ஆம் பதிகம் முற்றிற்று
End of 88th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 225 பதிக எண்: 89

89. திருக்கொச்சைவயம்

89. THIRU-K-KOCHAI-VAYAM

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

2432. அறையும்பூம்புனலோடுமாடரவச்சடைதன்மேற்
பிறையுஞ்சூடுவர்மார்பிற்பெண்ணொருபாகமமர்ந்தார்
மறையினொல்லொலியோவாமந்திரவேள்வியறாத
குறைவிலந்தணவர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரே. 1

அறையும் பூம்புனலோடும் ஆடரவச் சடை தன்மேற்
பிறையும் சூடுவர் மார்பில் பெண் ஒருபாகம் அமர்ந்தார்
மறையின் ஒல்லொலி ஓவாமந்திர வேள்வியறாத
குறைவில் அந்தணவர் வாழும் கொச்சைவயம் அமர்ந்தாரே.

aRaiyum pUmpun2alOTum ATu aravac caTaitan2 mEl
piRaiyum cUTuvar; mArpil peN oru pAkam amarntAr--
maRaiyin2 olloli OvA mantira vELvi aRAta,
kuRaivu il antaNar vAzum, koccai vayam amarntArE.

பொருள்: ஆடுகின்ற பாம்பினை அணிந்த சடைமுடிமீது ஒலிக்கின்ற அழகிய புனலாகிய கங்கையுடன் பிறையுஞ் சூடுவர். மார்பின் இடப்பக்கத்தைப் பெண்பாகமாக விரும்பினர்; மறையோதும் ஒலி நீங்காத, மந்திரமோதிச் செய்யும் வேள்விகள் அறாத, குறைவின்றி அந்தணர்கள் வாழும் திருக்கொச்சைவயத்தை விரும்பித் தங்கினாரே.

குறிப்புரை: அறையும் – ஒலிக்கும். மறையின் ஒல்ஒலி – வேதங்களை ஓதுவதால் உண்டாகும் ஒல்லென்னும் ஒலி. குறைவு இல் அந்தணர் – வேதாத்தியயனத்திலும், வைதிகாசாரத்திலும், யாக

கிருத்தியங்களிலும் குறைபாடில்லாத அழகும் குளிர்ச்சியும் உடையவர். வேதாந்தத்தை அணவுவார் அந்தணர் என்றார் நச்சினார்க்கினியர்.

Our Lord Civa is manifest in the temple in the city Kochai-vayam. Thiru-k-kochai-vayam is one of the 12 names of Seerkaazhi. He supports the dainty river Ganges which makes noise with its rippling. He accommodates the snake also on His head along with the river Ganges. Also He retains the moon on His head. He is concomitant by embedding His consort Uma Devi on the left side of His body. In the city the sound 'Oll' is generated by reciting the Vedas. Along with this they conduct the fire rituals according to rules. These scholarly Brahmins live in large numbers in this city of Kochai-vayam.

2433. சுண்ணத்தர்தோலொடுநூல்சேர்மார்பினர்துன்னியபூதக்
கண்ணத்தர்வெங்கனலேந்திக்கங்குல்நின்றாடுவர்கேடில்
எண்ணத்தர்கேள்விநல்வேள்வியறாதவர்மாலெரியோம்பும்
வண்ணத்தஅந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரே. 2

சுண்ணத்தர் தோலொடு நூல் சேர் மார்பினர் துன்னிய பூதக்
கண்ணத்தர் வெங்கனல் ஏந்திக் கங்குல் நின்றாடுவர் கேடில்
எண்ணத்தர் கேள்வி நல்வேள்வி அறாதவர் மால் எரி ஓம்பும்
வண்ணத்த அந்தணர் வாழும் கொச்சைவயம் அமர்ந்தாரே.

kaNNattar; tOloTu nUl cEr mArpin2ar; tun2n2iya pUtak-
ka(N)Nattar; vegkan2al Entik kagkul nin2Ru ATuvar--kETu il
eNNattar--kELvi nal vELvi aRAtavar, mAl eri Ompum
vaNNatta antaNar--vAzum koccaivayam amarntArE.

பொருள்: திருநீற்றுப் பொடியர்; தோலோடு நூல் சேர்ந்த மார்பினர்; நெருங்கிய பூதகணத்தர்; வெம்மையான கனலை ஏந்தி இரவில் நின்று ஆடுவர் ஆகிய இறைவர், தீயன சிந்தியாதவர்கள். சுருதி கேட்டல், நல்வேள்விகள் வேட்டல் ஆகியன அறாத இயற்றுவோர், மிக்க எரி ஓம்பும் வருணத்தராகிய அந்தணர் ஆகியோர் வாழும் திருக்கொச்சைவயத்தை விரும்பித் தங்கினாரே.

குறிப்புரை: சுண்ணத்தர் (திருநீற்றுப்) பொடியர். பூதகண்ணத்தர் என்பதில், ணகரமெய் எதுகை நோக்கி விரிந்தது. பூதகணத்தையுடையவர் என்பது பொருள். கேள்வி – சுருதி.

Our Lord Civa always smears the holy ashes on His body. He wears on His chest the three ply sacred thread along with the hide of the deer. He has the company of hobgoblins always with Him. Lord Civa's avocation is the dance at midnight holding supernal flame in one of His hands. He is manifest in the hearts of people with probity who have no blemishes in their life. In this city, virtuous men of good knowledge, Vedic scholars, who never fail to conduct the sacrificial fire of superior quality, live. These people live in large numbers in the city Kochai-vayam.

2434. பாலையன்னவெண்ணீறுபூசுவர்பல்சடைதாழ
மாலையாடுவர்கீதமாமறைபாடுதல்மகிழ்வர்
வேலைமால்கடலோதம்வெண்டிரைகரைமிசைவிளங்குங்
கோலமாமணிசிந்துங்கொச்சைவயமமர்ந்தாரே. 3

பாலை அன்ன வெண்ணீறு பூசுவர் பல்சடை தாழ
மாலை ஆடுவர் கீதம் மாமறை பாடுதல் மகிழ்வர்
வேலை மால்கடல் ஓதம் வெண் திரைகரை மிசை விளங்கும்
கோல மாமணி சிந்தும் கொச்சைவயமம் அமர்ந்தாரே.

pAlai an2n2a veN nIRu pUcuvar; palcaTai tAza,
mAlai ATuvar; kIta mA maRai pATutal makizvar--
vElai-mAlkaTal Otam veN tirai karai micai viLagkum
kOla mA maNi cintum koccai vayam amarntArE.

பொருள்: பாலைப் போன்ற வெண்மையான திருநீற்றைப் பூசுவர்; பலசடைகள் தாழ சந்தியா காலத்தில் நடனமாடுவர்; கீதம் மாமறைகள் பாடுவதில் மகிழ்வர் ஆகிய இறைவராகிய சிவன், பெரிய கடலின் ஓதமும் வெண்ணிறமான அலைகளும் கரையின்மேல் அழகு விளங்கும் மாமணிகளைக் கொணர்ந்து சிந்தும் திருக்கொச்சைவயத்தையே விரும்பித் தங்கினாரே.

குறிப்புரை: பாலை அன்னவெண் நீறு – 'பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறு'. மாலை – இரவு. கீதம் . . . பாதல் மகிழ்வர் (தி. 4 ப. 77 பா.3; தி. 6 ப. 34 பா. 8; தி. 2 ப. 43 பா. 5). மாமணி – உத்தமரத்நம். அழகிய முத்தும் நீலமணியும் ஆம்.

The water in the big ocean collected as flood water in ponds carries along with the waves very attractive and colourful gems. They are collected on the banks of the ocean and in other places. In such an attractive city, our Lord Civa manifests Himself in

the temple of this city. He smears over His body the milky white holy ashes. Civa's entangled locks of hair hang low on His back. His avocation is to dance during night hours. He desires to sing the Vedic songs whenever possible.

2435. கடிகொள்கூவிளமத்தங்கமழ்சடைநெடுமுடிக்கணிவர்
பொடிகள்பூசியமார்பிற்புனைவர்நன்மங்கையோர்பங்கர்
கடிகொள்நீடொலிசங்கினொலியொடுகலையொலிதுதைந்து
கொடிகளோங்கியமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. 4

கடிகொள் கூவிளம் மத்தங்கமழ் சடைநெடு முடிக்கு அணிவர்
பொடிகள் பூசிய மார்பில் புனைவர் நன்மங்கை ஓர்பங்கர்
கடிகொள் நீடொலி சங்கினொலி ஒடுகலை ஒலி துதைந்து
கொடிகள் ஓங்கிய மாடக் கொச்சைவயமம் அமர்ந்தாரே.

kaTi koL kUviLam mattam kamaz caTai neTu muTikku aNivar;
poTikaL pUciya mArpin2 pun2aivar; nal magkai orpagkar--
kaTi koL nITu oli, cagkin2 oliyoTu, kalai oli, tutaintu,
koTikaL Ogkiya mATak koccaivayam amarntArE.

பொருள்: ஒளிரும் வில்வம், ஊமத்தம்பூ ஆகியவற்றை மணங்கமழும் நெடுமுடிக்கு அணியாக அணிவர்; மார்பில் திருநீற்றுப் பொடியினைப் பூசிப் புனைவர்; அழகிய உமை மங்கையைப் பாகமாக உடையர் ஆகிய இறைவராம் சிவன்; மங்கல நீள்ஒலி, சங்கினொலியொடு வேதம் முதலியன ஓதும் கலையொலியுடன் கலந்து ஒலிப்பதும், கொடிகள் பறப்பதும் விண்ணுயர் மாடங்கள் உடையதுமாகிய திருக்கொச்சைவயத்தை விரும்பித் தங்கினாரே.

குறிப்புரை: மத்தம் கமழ்சடை மார்பில் புனைதல் – முதற்பாட்டின் குறிப்பிற் காண்க. கடி – மணம் (விவாகம்). கலை – வேதம் முதலிய கலை. துதைந்து – நெருங்கி.

In marriage houses, the sound of chunks is heard long at a stretch. Along with this sound noise raised by Vedic scholars chanting the Vedas is also heard all over the city. In the palatial tall houses flags fly always. In this attractive city, our Lord Civa is manifest in the temple. He wears the trifoliage bael leaves and datura flowers as long clusters tied on either side of the string. He has smeared the holy ashes over His chest, which He has shared with His consort and thus becomes a concomitant Supreme Being.

2436. ஆடன்மாமதியுடையாராயினபாரிடஞ்சூழ
வாடல்வெண்டலையேந்திவையகமிடுபலிக்குழல்வார்
ஆடல்மாமடமஞ்ஞையணிதிகழ்பேடையோடாடிக்
கூடுதண்பொழில்சூழ்ந்தகொச்சைவயமமர்ந்தாரே. 5

ஆடன் மாமதி உடையார் ஆயின பாரிடம் சூழ
வாடல் வெண் தலை ஏந்தி வையகம் இடுபலிக்கு உழல்வார்
ஆடல் மாமட மஞ்ஞை அணி திகழ் பேடையோடு ஆடிக்
கூடு தண்பொழில் சூழ்ந்த கொச்சைவயம் அமர்ந்தாரே.

ATal mA mati uTaiyAr; Ayin2a pAriTam cUza,
vATal veNtalai Enti, vaiyakam iTu palikku uzalvAr--
ATal mA maTamanjnjai aNi tikaz pETaiyoTu ATik
kUTu taNpozil cUznta koccaivayam amarntArE.

பொருள்: அசைகின்ற பெரிய மதியை உடையார்; பூதங்களாயின சூழ வற்றிய வெண்மையான தலையோட்டினை ஏந்திக் கொண்டு உலகத்தவர் இடுகின்ற பிச்சைக்கு அலைவார் ஆகிய இறைவராம் சிவன், ஆடுகின்ற பெரிய அழகிய மயில் தன் அழகிய பேடையோடு மகிழ்ந்து ஆடிக் கூடுகின்ற குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்த திருக்கொச்சைவயத்தையே விரும்பித் தங்கினாரே.

குறிப்புரை: பாரிடம் – பூதம். வையகம் – பூமியோர். இடவாகு பெயர். உழல்வார் – கழல்வார். தடுமாறுவார். இடுபலிக்கு வையகத்தில் திரிவார் எனலுமாம்.

In this city, the male young peacocks join together with their peahen and happily play in the cool forest areas. In such a city our Lord Civa is manifest in the temple of the city. He retains the lovely moon, which roams in the sky, on His head. He used to toil to get alms from women in the world by holding a white skull wherein the dried flesh is still left. He goes along with His army of goblins to get alms.

2437. மண்டுகங்கையுமரவுமல்கியவளர்சடைதன்மேல்
துண்டவெண்பிறையணிவர்தொல்வரைவில்லதுவாக
விண்டதானவராணம்வெவ்வழலெரிகொளவிடைமேல்
கொண்டகோலமதுடையார்கொச்சைவயமமர்ந்தாரே. 6

மண்டு கங்கையும் அரவும் மல்கிய வளர்சடை தன்மேல்
துண்ட வெண்பிறை அணிவர் தொல்வரை வில்லதுவாக
விண்ட தானவர் ஆணம் வெவ்வழல் எரிகொள விடைமேல்
கொண்ட கோலம் அது உடையார் கொச்சைவயம் அமர்ந்தாரே.

maNTu kagkaiyum aravum malkiya vaLar caTai tan2mEl-
tuNTa veNpiRai aNivar; tolvarai vil atu Aka,
viNTa tAn2avar ANam vev azal-eri koLa, viTaimEl
koNTa kOlam atu uTaiyAr--koccaivayam amarntArE.

பொருள்: கங்கை வெள்ளமும் பாம்பும் தங்கிய நீண்ட சடையின்மேல் வெண்பிறைத் துண்டத்தை அணிவர்; புராதனமான மேருமலையை வில்லாகக் கொண்டு, பகைவராகிய அசுரர்களின் கோட்டைகளை வெவ்விய அழலில் எரியும்படியாகச் செய்ய எருதின்மேல் அழகாக ஊர்ந்து வருவாராகிய சிவன் திருக்கொச்சைவயத்தையே விரும்பித் தங்கினாரே.

குறிப்புரை: மண்டு – மிக்குச்செல்லும். கங்கையும் பாம்பும் மல்கிய சடை. வளர்சடை. துண்டப்பிறை. வெண்பிறை. தானவர் – அசுரர்.

Our Lord Civa reveals Himself in Kochai-vayam He supports the river Ganges full of water, and the snake in His long matted hair. He retains the moon also on His head. Once He took the very old mountain Meru and converted it into His bow. Then He shot an arrow on the three fortresses and burnt it and destroyed it completely, they were owned by asuras who inflicted intolerable misery on the devas. He exposes Himself riding on the white bull, gracing His devotees.

7ஆவது பாடல் கிடைக்கப்பெறவில்லை.

2438. அன்றவ்வால்நிழலமர்ந்துஅறவுரைநால்வர்க்கருளிப்
பொன்றினார்தலையோட்டிலுண்பதுபொருகடலிலங்கை
வென்றிவேந்தனையொல்ககூன்றியவிரலினர்வான்தோய்
குன்றமன்னபொன்மாடக்கொச்சைவயமமர்ந்தாரே. 8

அன்று அவ்ஆல் நிழல் அமர்ந்து அறவுரை நால்வர்க்கு அருளிப்
பொன்றினார் தலை ஓட்டில் உண்பது பொரு கடல் இலங்கை
வென்றி வேந்தனை ஒல்க கூன்றிய விரலினர் வான் தோய்
குன்றம் அன்ன பொன் மாடக் கொச்சைவயம் அமர்ந்தாரே.

an2Ru a(v) Al nizal amarntu aRa urai nAlvarkku aruLi,
pon2Rin2Ar talai OTTil uNpatu, porukaTal ilagkai
ven2Ri vEntan2ai olka kUn2Riya viralin2ar--vAn2 tOy
kun2Ram an2n2a pon2 mATak koccai vayam amarntArE.

பொருள்: அன்று அந்த ஆலமர நிழலில் அமர்ந்து தவமுனிவர்கள் நால்வர்க்கு அறவுரை வழங்கினார்; உண்பது இறந்துபட்டவரின் மண்டையோட்டில்; மோதுகின்ற கடல் சூழ்ந்த இலங்கையின் வெற்றி வேந்தனாகிய இராவணன் ஒடுங்க ஊன்றிய கால்விரலினர் ஆகிய இறைவராகிய சிவன் வானளாவிய குன்றம் நிகர்த்த பொன்மாடங்கள் அமைந்த திருக்கொச்சைவயத்தை விரும்பித் தங்கினாரே.

குறிப்புரை: அன்று அ ஆல் நிழல் என்று பிரிக்க. பொன்றினார் தலை - இறந்த அயனார் தலை. வான்நோய் குன்றம் அன்னமாடம். பொன்மாடம். சீகாழியின் செல்வநெடுமாடம் சென்று சேணோங்கிய சிறப்புணர்த்திற்று.

Our Lord Civa is manifest in the city of Kochai-vayam. This city is composed of many, tall attractive palatial buildings, they appear as though they are mountains in contact with the clouds in the sky. In olden days, He sat under the shade of a banyan tree and graced the four saints by explaining the inner, deep meaning of the virtue of divinity. He used to take alms and eat the food dropped in the skull of Brahma which He was carrying after his death. Raavanan, the king of Sri Lanka, surrounded by heavy seashore came to tilt the Himalayan mountain where our Lord was staying. Our Lord pressed the top of the mountain with His toe and crushed Raavanan and reduced his mightiness.

2439. சீர்கொள்மாமலரானுஞ்செங்கண்மாலென்றிவரேத்த
ஏர்கொள்வெவ்வழலாகியெங்குமுறநிமிர்ந்தாரும்
பார்கொள்விண்ணழல்கால்நீர்ப்பண்பினர்பால்மொழியோடுங்
கூர்கொள்வேல்வலனேந்திக்கொச்சைவயமமர்ந்தாரே. 9

சீர்கொள் மாமலரானும் செங்கண் மால் என்று இவர் ஏத்த
ஏர்கொள் வெவ்வழல் ஆகி எங்கும் உற நிமிர்ந்தாரும்
பார்கொள் விண்ணழல் கால் நீர்ப்பண்பினர் பால் மொழியோடும்
கூர்கொள் வேல் வலன் ஏந்திக் கொச்சைவயம் அமர்ந்தாரே.

cIr koL mA malarAn2um cegkaNmAl en2Ru ivar Etta,
Er koL vev azal Aki egkum uRa nimirntArum;
pAr, koL viN, azal, kAl, nIr, paNpin2ar--pAlmoziyOTum,
kUr koL vEl valan2 Enti, koccaivayam amarntArE.

பொருள்: அழகியதும் பெரியதுமாகிய தாமரை மலர்மேல் இருப்பவனாகிய பிரமனும், சிவந்த கண்ணையுடைய திருமாலும் என்று இவர்கள் துதிக்க, சீர்கொள் வெவ்வழல் தூணாகி, வானம் பாதாளம் எங்கும் உற உயர்ந்தார்; நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐம்பெரும் பூதத்தின் இயல்பை உடையார் ஆகிய இறைவராகிய சிவனார் பால்மொழி மங்கையோடும் கூர்மையான வேலினை வெற்றியுடன் ஏந்திக் கொண்டு திருக்கொச்சைவயத்தையே விரும்பித் தங்கினாரே.

குறிப்புரை: பார்கொள்விண் அழல்கால் நீர்ப்பண்பினர் – நிலம். வான், தீ, வளி, புனல் என்னும் ஐம்பெரும் பூதத்தின் இயல்பை உடையவர். 'மண்ணிற்றிண்மை', நீரில் இன்சுவை, தீயின் வெம்மை, காலின் ஊக்கம், வானிற்கலப்பு இவற்றினைத் தோற்றியவன் இறைவனாதலின், அப்பண்புகள் அவனுடைமையல்லவோ? எல்லாம் உன் உடைமையே (தாயுமானவர் பாடல்). பால்மொழி – உமாதேவியார்.

Our Lord Civa is manifest in the temple in Kochai-vayam city. He holds a very sharp spear in one of His hands keeping company with His consort Uma Devi. She speaks very sweet words similar to milk. Brahma, the four-faced deity who is seated in the very attractive lotus flower as well the red eyed Thirumaal praised our Lord and worshipped Him. At that moment our Lord Civa appeared before them as a dazzling, good looking, supreme tall flame. He is the embodiment of the five elements such as earth, sky etc.

2440. குண்டர்வண்துவராடைபோர்த்ததொர்கொள்கையினார்கள்
மிண்டர்பேசியபேச்சுமெய்யலமையணிகண்டன்
பண்டைநம்வினைதீர்க்கும்பண்பினரொண்கொடியோடுங்
கொண்டல்சேர்மணிமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. 10

குண்டர் வண்துவராடை போர்த்ததொர் கொள்கையினார்கள்
மிண்டர் பேசிய பேச்சு மெய் அல மையணி கண்டன்
பண்டை நம்வினை தீர்க்கும் பண்பினர் ஒண் கொடியோடும்
கொண்டல் சேர்மணி மாடக் கொச்சைவயம் அமர்ந்தாரே.

kuNTar, vaN tuvar ATai pOrttatu or koLkaiyin2ArkaL,--
miNTar--pEciya pEccu mey ala; mai aNi kaNTar,
paNTai nam vin2ai tIrkkum paNpin2ar, oNkoTiyOTum
koNTal cEr maNi mATak koccai vayam amarntArE.

பொருள்: குண்டராகிய சமணர், துவரூட்டிய ஆடையினைப் போர்த்த பவுத்தர் ஆகிய பொய்யர்கள் பேசிய பேச்செல்லாம் மெய்யல்ல. நீலமணி போன்ற கண்டம் உடையவர்; நம்முடைய பழவினைகளையெல்லாம் தீர்க்கும் பண்பினர் ஆகிய இறைவர் சிவனார் ஒளிரும் கொடியாகிய உமையொடும் கார்மேகம் தங்கும் உயர்ந்த மாடங்கள் அமைந்த திருக்கொச்சைவயத்தையே விரும்பித் தங்கினாரே.

குறிப்புரை: துவர்க்கு வண்மை அடையாதலின் அதனது துவர் நிறத்தின் மிகுதி புலப்படும். பார்ப்பவர் கண்ணுக்கும் கருத்திற்கும் முறையே தோற்றத்தாலும் நினைப்பாலும் வெறுப்பை விளைக்கும் வண்டுவர் ஆடையில் ஊட்டப்பட்டது என்க. பேசிய பேச்சு மெய்யல்லாதவை. பொய்ப்பேச்சு.

The Jains are men of low character. Buddhists wear salmon coloured cloth covering their body. These strong people speak false ideas. Those devotees who do not care for these words, our Lord graces them. His throat is dark blue in colour like the colour of sapphire. He wipes out the bad karma of His devotees. He is such a great helping character, the Supreme Being. In this city, very tall palatial buildings are many where the clouds crawl on top. In this attractive city, He is manifest along with His consort Uma Devi who is bright and lean like vine plants.

2441. கொந்தணிபொழில்சூழ்ந்தகொச்சைவயநகர்மேய
அந்தணனடியேத்துமருமறைஞானசம்பந்தன்
சந்தமார்ந்தழகாயதண்டமிழ்மாலைவல்லார்போய்
முந்திவானவரோடும்புகவலர்முனைகெடவினையே. 11

கொந்தணி பொழில் சூழ்ந்த கொச்சைவய நகர் மேய
அந்தணன் அடியேத்தும் அருமறை ஞானசம்பந்தன்
சந்தம் ஆர்ந்த அழகாய தண்டமிழ் மாலை வல்லார் போய்
முந்தி வானவரோடும் புகவலர் முனை கெட வினையே.

kontu aNi pozil cUznta koccaivaya nakar mEya
antaNan2 aTi Ettum arumaRai njAn2acampantan2
cantam Arntu azaku Aya taN tamiz mAlai vaLLOr, pOy,
munti vAn2avarOTum puka valar; mun2ai, keTa, vin2aiyE.

பொருள்: கொத்துக் கொத்தான மலர்களால் அழகமைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த கொச்சைவய நகர்தனில் தங்கும் அந்தணனாகிய சிவனாரின் திருவடிகளை ஏந்திப் போற்றும் அருமறை வல்ல ஞானசம்பந்தன் பாடிய, சந்தம் நிறைந்த, அழகாய குளிர்ந்த தமிழ்மாலை

வல்லவர்கள் முன்பு செய்த வினைகளின் முனைப்புக் கெட்டு, வானவருடன் புக வல்லவராவர்.

குறிப்புரை: அந்தணன் – தோணியப்பர். 'அறவாழி அந்தணன்', 'அந்தணர் என்போர் அறவோர்' 'அந்தணர் நூல்' என்பவற்றால் திருவள்ளுவர் குறிக்கும் பொருளைக் காண்க. அருமறை ஞானசம்பந்தன் – மறையின் அருமையும், அம்மறையால் எய்தும் ஞானமும், அந்த ஞானத்தோடு தமக்குள்ள சம்பந்தமும் உணர்த்திப் பெயர்க்காரணம் புலப்படுத்தியவாறு. இத்திருப்பதிகம் சந்தம் நிறைந்தும் அழகுடையதாயும் உள்ள தமிழ் மாலை. அழகு – சொல்லழகு. பொருளழகு, தொடையழகு, திருவருட்பொலிவு வினைகெடமுனை (முன்பு) புகவல்லவர் என்க.

In this city of Kochai-vayam, there are many natural attractive gardens where many bunches of flowers blossom. Our Lord Civa who is a gracious one is manifest here. Our Saint Thiru-gnana-Sambandar who is a great scholar in four Vedas prostrated before the holy feet of our Lord. He chanted these canta-p-pattu (stanza of four lines with four to twenty-six syllables in a line) of ten good verses as a garland in Tamil language. Those devotees who can memorise and chant these with affection before our Lord will get rid of all their sufferings that accrue from their past life. They will enter the celestial world in advance and will live in the world of devas.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

89ஆம் பதிகம் முற்றிற்று
End of 89th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 226 பதிக எண்: 90

90. திருநெல்வாயிலரத்துறை 90. THIRU-NEL-VOYIL-ARA-TH-THURAI

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருநெல்வாயில் அரத்துறை என்னும் இத்திருத்தலமானது, விழுப்புரம் – திருச்சி குறுக்குத் தொடர்பாதையில் திருப்பெண்ணாகடத்திற்குத் தென்மேற்கே 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. விருத்தாசலத்திலிருந்து தொழுதூர் செல்லும் பேருந்துகளில் ஏறிக் கொடிக்களம் என்னும் இடத்தில் இறங்கித் தெற்கே 1 கி.மீ. தூரத்தில் அமையப்பெற்றுள்ளது.

இறைவர் திருப்பெயர் அரத்துறைநாதர். இறைவி திருப்பெயர் ஆனந்தநாயகி. சுந்தரமூர்த்தி நாயனார் 'வண்டார் குழலாள்' என்று கூறியுள்ளார். 'வண்டார் குழலாள் மங்கை பங்கினனே' (தி.7 ப.3 பா.3) என்பது அவரது தேவாரப்பகுதி. அரத்துறை என்பது ஆலயத்தின் பெயர். திருஞானசம்பந்தப் பெருந்தையார்க்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் இவைகளை அருளிய தலம். மூவர் பாடலும் பெற்றது. திருப்புகழும் பெற்றது.

இத்தலம் நிவாநதியின் கரையின்மேல் இருப்பதாக ஞானசம்பந்தர் குறிப்பித்துள்ளார். கடும்புனல் நிவாமல்கு கரைமேல் அந்தண்சோலை நெல்வாயில ரத்துறையடிகள் தம்மருளே (தி.2 ப.226 பா.1) என்பது இவர் தேவாரப் பகுதி. இங்கே நிவா என்றது வடவெள்ளாறு ஆகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருக்குறள், நாலடியார் இவைகளிலுள்ள கருத்து, அடி இவைகளை இவ்வூர் ஏழாம் பாடலில் எடுத்தாளுகின்றார். இத்தலத்துக்கு திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசர் பதிகம் ஒன்று, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

திருமுதுகுன்று, திருப்பெண்ணாகடம், பணிந்து திருவரத்துறை வரும்பொழுது, (ஒவ்வொருகால், தந்தையார் தோள்மேல் ஏறிவரும்) பிள்ளையார் பாததாமரை நோதலையும் நோக்காது பைய நடந்தார். சிவனருளால், அரத்துறை அந்தணர் கண்டவாறு, ஞானவேந்தர் ஏற, முத்துச் சிவிகையும், அவர்க்கு நிழலிட முத்துக்குடையும், தென் தமிழ் விளங்க வந்த திருக்கழுமலத்தான் வந்தான் . . . வந்தான் என்று ஊத முத்துச் சின்னங்களும் இருந்தன. அன்பர் பலரொடும் சென்று அவற்றை ஆளுடைய பிள்ளையாரிடம் அரத்துறை அந்தணர் கொடுத்தனர்.

அவர் மன்றுளார் அருள் என்று வணங்கினார். எந்தையீசன் என எடுத்து இவ்வருள் வந்தவாறு மற்று எவ்வண்ணமோ என்று சிந்தை செய்தருளியதே இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2442. எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றால்
கந்தமாமலருந்திக்கடும்புனல்நிவாமல்குகரைமேல்
அந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 1

எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்று ஏத்திச்
சிந்தை செய்பவர்க்கு அல்லால் சென்று கைகூடுவது அன்றால்
கந்த மா மலர் உந்திக் கடும்புனல் நிவா மல்கு கரைமேல்
அம் தண்சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

"entai! Ican2! emperumAn2! ERu amar kaTavuL!" en2Ru Ettic
cintai ceypavarkku allAl, cen2Ru kaikUTuvatu an2RAl--
kanta mA malar unti, kaTum pun2al nivA malku karaimEl,
am taNcOlai nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: மணமுள்ள மலர்களை உந்தித்தள்ளிக் கொண்டு புதுவெள்ளம் பெருகி வருகின்ற நிவாநதியின் கரைமேல் அழகும் குளிர்ச்சியும் கொண்ட சோலைகளையுடைய நெல்வாயில் திருவரத்துறை அடிகளின் திருவருள், எம்முடைய தந்தையே! ஈசனே! எங்களுடைய பெருமானே! விடையேறும் கடவுளே! என்று துதித்து வழிபட்டு நினைப்பவர்களுக்கே கூடுவதாம்; மற்றையோர்க்குக் கூடாதாகும்.

குறிப்புரை: இத்திருப்பதிகம் முத்துச் சிவிகையில் ஏறுவதன் முன்னர், திருவருட் சிறப்புணர்த்தப் பாடியருளியது. அப்பொழுது ஆங்கு இருந்த அன்பர் அனைவருக்கும் ஆண்டவன் திருவருளைப் பெறுவதற்கு வேண்டும் வழிபாட்டை வற்புறுத்துவதை ஒவ்வொரு பாடலிலும் உணரலாம். எட்டாவது திருப்பாட்டில் அருளைச் செயப்படுபொருளாக கொள்ளல் வேண்டும். ஏனைய ஒன்பது பாக்களிலும் அருள் எழுவாயாக நிற்றலறிக. ஈற்றுப்பாட்டில் அருளைச் சொன்ன பாடல் என்றதுணர்க. எந்தை, ஈசன், எம்பெருமான், ஏறமர்கடவுள் (தி. 2 ப. 92 பா. 5) என்று எடுத்து வாக்கால் ஓதி மனத்தால் சிந்தித்து, (காயத்தால் வழிபாடு) செய்பவர்க்கே அடிகள் திருவருள் கைகூடுவது, சென்று – மலவழி மலநடை கொள்ளாது நீக்கி அருள்வழியில் அருணடை கொண்டு. நிவா–ஆற்றின் பெயர். அரத்துறை–அறுத்துறை என்பதன் மரூஉ. அரன் துறை என்பது சிறவாது. றகரம் ரகரமாக ஒலித்தல் பல சொற்களிற் காணலாம்.

Our Lord Civa is manifest in the temple in the Arath-thurai city. The city lies on the banks of the river Niva. The gardens are many around the city. Very attractive cool trees are many in the gardens. The water in the Niva river carries a good quantity of sweet smelling flowers and passes through the city Thiru-nel-voyil. "Our Lord is our Father! Our Chief! The most noble minded Supreme Being! You appear before us riding on a bull". The devotees, who chant repeating His many names, with devoted mind and worship Him will get His plentiful grace. But those who do not follow this will not be graced.

2443. ஈரவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செல்வமுமேத்தாச்சிதடர்கள்தொழச்செல்வதன்றால்
வாரிமாமலருந்திவருபுனல்நிவாமல்குகரைமேல்
ஆருஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 2

ஈரவார் சடைதன் மேல் இளம்பிறை அணிந்த எம்பெருமான்
சீரும் செல்வமும் ஏத்தாச் சிதடர்கள் தொழச் செல்வது அன்றால்
வாரி மா மலர் உந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
ஆரும் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

Ira vAr caTai tan2 mEl iLampiRai aNinta emperumAn2
cIrum celvamum EttAc citaTarkaL tozac celvatu an2RAl--
vAri mA malar unti, varupun2al nivA malku karaimEl,
Arum cOlai nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: திரளான மலர்களை வாரிக்கொண்டு வருகின்ற நீர்ப்பெருக்குடைய நிவாநதியின் கரைமேல், சோலைகள் செறிந்த நெல்வாயில் அடிகளின் திருவருள், குளிர்ந்த நீண்ட சடைமேல் இளம்பிறை அணிந்த எம்பெருமானின் பெருமையையும் ஐசுவரியத்தையும் துதிக்க அறியாத குருடர்களுக்குக் கைகூடுவது அன்று.

குறிப்புரை: ஈரம் – குளிர்ச்சி. குளிருஞ்சடை (தி. 2 ப. 62 பா. 6). குளிர்ந்தார் சடையன் (தி. 1 ப. 134 பா. 3). சிதடர் – குருடர், பேதையர்.

Our Lord is manifest in the temple in Arath-thurai in the city of Thiru-nel-voyil. This city is on the banks of the river Niva. This river carries and brings a large quantity of fine flowers. The water rises as waves, and surf and passes on. On the banks of the

river big gardens are many. Here our Lord is manifest in the temple and graces honest devotees with the moon on His long, cool matted hair. Those unfortunate persons who cannot praise our Lord by saying 'Oh greatest Lord - You are the Supreme Being' and those who do not glorify His fame, and grace and are unable to worship Him will not be eligible for salvation.

2444. பிணிகலந்தபுன்சடைமேற்பிறையணிசிவனெனப்பேணிப்
பணிகலந்துசெய்யாதபாவிகள்தொழச்செல்வதன்றால்
மணிகலந்துபொன்னுந்திவருபுனல்நிவாமல்குகரைமேல்
அணிகலந்தநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 3

*பிணி கலந்த புன்சடை மேற்பிறை அணி சிவன் எனப்பேணிப்
பணி கலந்து செய்யாத பாவிகள் தொழச் செல்வதன்றால்
மணி கலந்து பொன் உந்தி வருபுனல் நிவா மல்கு கரைமேல்
அணி கலந்த நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.*

piNi kalanta pun2caTaimEl piRai aNi civan2 en2ap pENip
paNi kalantu ceyyAta pAvikaL tozac celvatu an2RAl--
maNi kalantu pon2 unti, varupun2al nivA malku karaimEl,
aNi kalanta nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: பொன்னையும் மணியையும் உந்திக்கொண்டு வரும் வெள்ளமுடைய நிவாநதிக்கரையின்மேல் அழகமைந்த நெல்வாயில் அறத்துறை அடிகளுடைய திருவருள், பிணிப்பினையுடைய பொலிவான சடையின்மேல் பிறையை அணிந்த சிவன் என விரும்பி, மனம், வாக்கு, காயம் எனும் முக்கரணங்களாலும் தொண்டு செய்யாத பாவிகளுக்குக் கைகூடுவது அன்று.

குறிப்புரை: பிணி – பிணிப்பு. சடையாதற்குப் பிணிப்பு இன்றியமையாதது. கலந்து – திரிகரணங்களும் ஒற்றுமையுற்று. பணி செய்யாத பாவிகள். மணிகளையும் பொன்னையும் உந்தி (த் தள்ளி)க் கொண்டு வரும் நீர்.

Our Lord Civa is manifest in the fascinating Arath-thurai temple in Thiru-nel-voyil city. The temple is situated on the banks of the Niva river. The water in the river carries different kinds of gems and golden particles and thrusts them forward. On the banks of the river in the magnificent temple our Lord is manifest. He keeps the

servitors spell bound with His divine grace. "Your matted hair is very soft where You retain the moon". The sinners who do not praise our Lord like this and do not do service to Him, and do not worship Him will not be eligible to get His grace and salvation.

2445. துன்னஆடையொன்றுடுத்துத்தூயவெண்ணீற்றினராகி
உன்னிநைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றால்
பொன்னுமாமணியுந்திப்பொருபுனல்நிவாமல்குகரைமேல்
அன்னமாருநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 4

துன்ன ஆடை ஒன்று உடுத்துத் தூய வெண்ணீற்றினர் ஆகி
உன்னி நைபவர்க்கு அல்லால் ஒன்றும் கைகூடுவது அன்றால்
பொன்னும் மா மணி உந்திப் பொருபுனல் நிவா மல்கு கரைமேல்
அன்னம் ஆரு நெல்வாயிலரத்துறை அடிகள்தம் அருளே.

tun2n2a ATai on2Ru uTuttu, tUya veN nIRRin2ar Aki,
un2n2i naipavarkku allAl, on2Rum kaikUTuvatu an2RAl--
pon2n2um mA maNi unti, poru pun2al nivA malku karaimEl,
an2n2am Arum nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: பொன்னையும், நிறைய மணிகளையும், உந்தித் தள்ளிக்கொண்டு வருகின்ற வெள்ளத்தையுடைய நிவாநதியின் கரைமேல் அன்னங்கள் தங்கும் திருநெல்வாயில் அரத்துறை அடிகளின் அருள் தைக்கப்பட்ட ஆடை ஒன்றை உடுத்துத் தூய வெண்ணீற்றைப் பூசினராகி, சிவனை நைந்து நினைபவர்க்கல்லால் சிறிதும் கைகூடுவதன்று.

குறிப்புரை: துன்ன ஆடை - தைத்தலையுடைய ஆடை. அன்னம் - பறவை. திருஞானசம்பந்தர் காலத்தில் அன்னப்புள் இருந்த உண்மை இதனாலும் புலனாயிற்று.

Our Lord Civa with His divine grace is manifest in Arath-thurai temple. This temple is situated on the banks of Niva river where swans stay long and happily live. The river water carries golden pieces and very valuable gems and thrusts them on the bank of the river. Our Lord wears a forelap cloth, which is already torn and stitched. He has tied it round the loins. He smears the holy ashes over His body and is brilliantly eminent. Unless people think and praise His fame and grieve and melt they will not get His grace and be eligible for salvation.

2446. வெருகுரிஞ்சுவெங்காட்டிலாடியவிமலனென்றுள்கி
உருகிநைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றால்
முருகுரிஞ்சுபூஞ்சோலைமொய்ம்மலர்சுமந்திழிநிவாவந்
தருகுரிஞ்சுநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 5

வெருகு உரிஞ்சு வெங்காட்டில் ஆடிய விமலன் என்று உள்கி
உருகி நைபவர்க்கு அல்லால் ஒன்றும் கைகூடுவது அன்றால்
முருகு உரிஞ்சு பூஞ்சோலை மொய்ம்மலர் சுமந்து இழிநிவாவந்
தருகு உரிஞ்சு நெல்வாயிலரத்துறை அடிகள்தம் அருளே.

"veruku urinjcu vegkATTil ATiya vimalan2" en2Ru uLki
uruki naipavarkku allAl, on2Rum kaikUTuvatu an2RAl--
muruku urinjcu pUnjcOlai moymmalar cumantu izi nivA vantu
aruku urinjcu nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: நறுமணம் உராய்கின்ற பூஞ்சோலையின் மொய்த்த மலர்களைச் சுமந்து கொண்டு ஓடும் நிவாநதி வந்து உராய்கின்ற திருநெல்வாயில் அரத்துறை அடிகளுடைய அருள், காட்டுப்பூனை உராய்கின்ற வெம்மையான காட்டில் ஆடும் மலமற்றவன் மேலானவன் என்று நினைந்து உருகி நைபவர்க்கு அல்லால் ஒரு சிறிதும் கை கூடுவதன்று.

குறிப்புரை: வெருகு – காட்டுப்பூனை. உரிஞ்சு – தேய்க்கின்ற. உருகி நைபவர் – உள்ளம் உருகி இதுகாறும் இறைவனை வழிபட மறந்தமைக்கு வருந்துவோர். இழி – இறங்குகின்ற.

Our Lord Civa is manifest in the Arath-thurai temple showering His grace on His devotees. There are gardens all along the riverside. There, very sweet smelling flowers in bunches, blossom and spread their sweet smell all around. The river runs fast carrying these good flowers very near the temple. People who do not praise our Lord's fame by telling 'Oh Civa! You are immaculate Supreme Being! Oh Lord! dancing on the fierce burning ghat where wild cats live!' cannot get His grace and be eligible for salvation, if they do not chant His fame and melt with feelingful grief.

2447. உரவுநீர்ச்சடைக்கரந்தவொருவனென்றுள்குளிர்ந்தேத்திப்
பரவிநைபவர்க்கல்லாற்பரிந்துகைகூடுவதன்றால்
குரவநீடுயர்சோலைக்குளிர்புனல்நிவாமல்குகரைமேல்
அரவமாருநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 6

உரவுநீர்ச் சடைக்கரந்த ஒருவன் என்று உள்குளிர்ந்து ஏத்திப்
பரவி நைபவர்க்கு அல்லால் பரிந்து கைகூடுவது அன்றால்
குரவ நீடுயர் சோலைக் குளிர்புனல் நிவா மல்கு கரைமேல்
அரவம் ஆரு நெல்வாயிலரத்துறை அடிகள்தம் அருளே.

"uravu nIr caTaik karanta oruvan2" en2Ru uL kuLirntu Ettip
paravi naipavarkku allAl, parintu kaikUTuvatu an2RAl--
kurava nItuyar colaik, kuLirpun2al nivA malku karaimEl,
aravam Arum nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: குரா மரங்கள் நீண்டு உயர்ந்த சோலைகள் அருகே குளிர்ந்த புனல் வெள்ளம் உடைய நிவாநதியின் கரையின்மேல் பாம்பணிந்த திருநெல்வாயில் அரத்துறை அடிகளுடைய அருள், உலவுகின்ற கங்கை நீரைச் சடையில் மறைத்த ஒருவன் என்று உள்ளம் குளிர்ந்து ஏத்திப் பரவி நைபவர்க்கல்லால் பரிவுடன் கை கூடுவது அன்று.

குறிப்புரை: உரவுநீர் – பரந்த கங்கை. ஊரங்கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால் பேரும் பிறிதாகித் தீர்த்தமாம் (நாலடி. 175) என்பதில் பரந்த கடல்நீரைக் குறித்தல் அறிக. பரவி – வணங்கி வாழ்த்தி. பரவுவார் பிணிகளைவாய் என்பதில் வணக்கமும், வாழ்த்துவதும் . . . யானும் உன்னைப் பரவுவனே (திருவாசகம் 20) என்பதில் வாழ்த்தும் உணர்த்துவது உணர்க.

Our Lord Civa is manifest in the temple Arath-thurai and graces His devotees. Common bottle flower trees are grown tall and thick in the gardens that are all along the river. The water is cool. The water snakes take rest on the banks of the river and happily live there. Unless people develop pleasing minds and praise our Lord with devotion saying 'Oh Lord, You are incomparable Supreme Being; You support the river Ganges and keep her concealed in Your matted hair, it is impossible to get His love'. Saying this they must praise, worship and grieve in their mind for Him. If they do not do so, our Lord does not grace such people and does not love them. Every thing is impossible to them.

2448. நீலமாமணிமிடற்றுநீறணிசிவனெனப்பேணும்
சீலமாந்தர்கட்கல்லாற்சென்றுகைகூடுவதன்றால்
கோலமாமலருந்திக்குளிர்புனல்நிவாமல்குகரைமேல்
ஆலுஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 7

நீல மாமணி மிடற்று நீறு அணி சிவன் எனப்பேணும்
சீல மாந்தர்கட்கு அல்லால் சென்று கைகூடுவது அன்றால்
கோல மா மலர் உந்திக் குளிர்புனல் நிவா மல்கு கரைமேல்
ஆலும் சோலை நெல்வாயிலரத்துறையடிகள்தம் அருளே.

"nIla mA maNi miTaRRu, nIRu aNi civan2!" en2ap pENum
cIla mAntarkaTku allAl, cen2Ru kaikUTuvatu an2RAl--
kOla mA malar unti, kuLir pun2al nivA malku karaimEl,
Alum cOlai nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: அழகிய மணம் மிக்க மலர்களை உந்தித் தள்ளிக் கொண்டு வரும் குளிர்ந்த புனலுடைய நிவாநதிக்கரையின்மேல் அசையும் சோலைகளை உடைய திருநெல்வாயில் அரத்துறை அடிகளின் அருள்நீலமணி போன்ற கண்டன்; திருநீறு அணிந்த சிவன் எனப் போற்றும் ஒழுக்கமுடைய மாந்தர்களுக்கு அல்லால் கைகூடுவது அன்று.

குறிப்புரை: சீலமாந்தர் – ஞானியர். அவரே சிவனெனப்பேணும் உண்மை நிலை உணர்ந்தவர். திருநீலகண்டா! நீறணி முதல்வா! சிவபெருமானே! எனப் போற்றும் மனிதரும் ஆம்.

Our Lord Civa is manifest in the Arath-thurai temple situated on the banks of the river Niva and graces His devotees. The river's cool water carries attractive flowers in large numbers, runs fast and thrusts the flowers forward. The gardens are in plenty on the banks of the river and they are very thick and the branches wave creating noise. The devotees of Civa with devotion pray 'Oh Lord of dark blue throat - Neelakandan; You have applied the holy ashes on Your body'. Unless for such people, our Lord never shows His love and grace to the people who never praise Him pleasingly.

2449. செழுந்தண்மால்வரையெடுத்தசெருவலியிராவணனலற
அழுந்தவூன்றியவிரலான்போற்றியென்பார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக்குளிர்புனல்நிவாமல்குகரைமேல்
அழுந்துஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 8

செழுந்தண் மால்வரை எடுத்த செருவலி இராவணன் அலற
அழுந்த ஊன்றிய விரலான் போற்றி என்பார்க்கு அல்லது அருளான்
கொழுங்கனி சுமந்து உந்திக் குளிர்புனல் நிவா மல்கு கரைமேல்
அழுந்தும் சோலை நெல்வாயிலரத்துறை அடிகள்தம் அருளே.

cezun taN mAl varai eTutta ceru vali irAvaNan2 alaRa,
azunta Un2Riya viralAn2; "pORRi!" en2pArkku allatu aruLAn2--
kozug kan2i cumantu unti, kuLirpun2al nivA malku karaimEl,
azuntum cOlai nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: கொழுவிய கனிகளைச் சுமந்து உந்திக்கொண்டு வரும் வெள்ளமுடைய நிவாநதியின் கரைமேல் நெருங்கிய சோலைத் திருநெல்வாயில் அரத்துறை அடிகள் தம்முடைய அருளை, 'செழுமையும் குளிர்ச்சியும் உடைய கயிலைமால்வரையை எடுத்த பேராற்றல் உடைய இராவணன் அலற அழுந்த ஊன்றிய திருவிரலானே போற்றி' என்பார்க்கு அல்லது அருளார்.

குறிப்புரை: விரலான் – அண்மை விளி. அருளான் – அருள் செய்யான். அருள் அருளான் என்று இயைக்க. அடிகள் தம் அருளை. போற்றி என்பார்க்கு அல்லது அருளான்.

Our Lord Civa is manifest in the temple Arath-thurai situated on the banks of the river Niva. The cool water of the river carries big sweet fruits and thrusts them forward. The gardens are many with plenty of fruit trees. Those devotees who pray with devotion saying 'Oh Lord! the mighty Raavanan tried to tilt the rich, thick forested mountain of the Himalayas. Then You pressed the mountain with Your toe, Raavanan trembled and got crushed under the mountain. You have such a toe'. Like this the devotees may praise Him and worship Him. Those do not follow this will not get the grace of our Lord.

2450. நுணங்குநூலயன்மாலுமிருவருநோக்கரியானை
வணங்கிநைபவர்க்கல்லால்வந்துகைகூடுவதன்றால்
மணங்கமழ்ந்துபொன்னுந்திவருபுனல்நிவாமல்குகரைமேல்
அணங்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 9

நுணங்கு நூல் அயன்மாலும் இருவரும் நோக்கு அரியானை
வணங்கி நைபவர்க்கு அல்லால் வந்து கைகூடுவது அன்றால்
மணம் கமழ்ந்து பொன்னும் உந்திவருபுனல் நிவா மல்கு கரைமேல்
அணங்கும் சோலை நெல்வாயிலரத்துறை அடிகள்தம் அருளே.

nuNagku nUl ayan2 mAlum iruvarum nOkka (a)riyAn2ai
vaNagki naipavarkku allAl, vantu kaikUTuvatu an2RAl--
maNam kamazntu pon2 unti, varupun2al nivA malku karai mEl,
aNagkum cOlai nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: மணம் கமழ்ந்து பொன்னினை உந்தி வரும் புனலுடைய நிவாநதியின் கரைமேல் அழகு செய்யும் சோலைகளுடைய திருநெல்வாயில் அரத்துறை அடிகளுடைய அருள், நுண்ணிய கேள்வியறிவுடைய அயன் மால் இவ்விருவரும் காணுதற்கு அரியானை வணங்கி நைபவர்க்கு அல்லால் வந்து கைகூடுவதன்று.

குறிப்புரை: நுணங்கும் நூல் – நூற்பொருளின் நுண்மை நூலின் மேல் ஏற்றிக் கூறப்பட்டது. நுணங்கிய கேள்வியர் (குறள் 419) என்பதற்கு. கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை. கேள்வி மேலேற்றப்பட்டது என்ற பரிமேலழகர் உரையால் அறியலாம். அவன் வேதம் நுணங்கிய நூல். நோக்க அரியான் – நோக்கரியான். நான்கன்றொகையாக்கலும் ஆம். கமழ்ந்து – தோற்றி. கமழ்ந்து உந்தி வருபுனல் என்றியைத்துக் கொள்க. அணங்கும் – அழகு செய்யும்.

Oh! Our Lord Civa is manifest in the Arath-thurai temple on the banks of river Niva. He graces His devotees who come to the temple and worship Him. The river water carries golden particles and sweet smelling flowers and thrusts them forward on the bank of river. Along the banks of the river, very attractive gardens are many. The tutelary deity Brahma has acute divine knowledge and is a scholar. The other deity Thirumaal also had precise divine knowledge. They both could not see our Lord. He is such a rarity. Those servitors who worship Him and feelingfully grieve and pray will be graced by our Lord, while others who do not follow this could not get His grace.

2451. சாக்கியப்படுவாருஞ்சமண்பாடுவார்களுமற்றும்
பாக்கியப்படகில்லாப்பாவிகள்தொழச்செல்வதன்றால்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப்பொருபுனல்நிவாமல்குகரைமேல்
ஆர்க்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகள்தம்மருளே. 10

சாக்கியப் படுவாரும் சமண் பாடுவார்களும் மற்றும்
பாக்கியப் படகில்லாப் பாவிகள் தொழச் செல்வது அன்றால்
பூக் கமழ்ந்து பொன் உந்திப் பொருபுனல் நிவா மல்கு கரைமேல்
ஆர்க்கும் சோலை நெல்வாயிலரத்துறை அடிகள்தம் மருளே.

cAkkiyap paTuvArum camaN paTuvArkaLum maRRum
pAkkiyap paTakillAp pAvikaL tozac celvatu an2RAl--
pUk kamazntu pon2 unti, poru pun2al nivA malku karaimEl,
Akkum cOlai nelvAyil arattuRai aTikaL tam(m) aruLE.

பொருள்: மலர்களின் நறுமணங் கமழ்ந்து, பொன்னினை உந்தி மோதும் நீர்ப்பெருக்கம் உடைய நிவாநதியின் கரைமேல், ஒலிக்கும் சோலைசூழ் திருநெல்வாயில் அரத்துறை அடிகளுடைய அருள், சாக்கியமதமாகிய குழியில் படுவோர், சமணசமயப் படுகுழியில் படுவோர் மற்றும் சைவநெறியில் வாழும் புண்ணியம் இல்லாத பாவிகளுக்குக் கைகூடுவதன்றாம்.

குறிப்புரை: சாக்கியப்படுவார் – சாக்கிய மதத்தில் விழுபவர். சமணப்படுவார் – சமண மதத்தில் விழுபவர். மற்றும் பாக்கியப் பகில்லாப் பாவிகள் – சாக்கியரும் சமணரும் அல்லாத வேறு மதங்களில் விழுந்து, சைவ சமயம் புகும் பாக்கியத்தை அடையமாட்டாத தீய வினையின் பயனை நுகர்பவர்கள். ஆர்க்கும் – ஒலிக்கும்.

Our Lord Civa is manifest in the Arath-thurai temple situated on the banks of the river Niva. The river water carries golden particles as well as sweet smelling flowers and dashes them against the banks and thrusts forward. Along the banks of the river noisy gardens are many. Our Lord who resides in this temple graces His devotees. The Buddhists, the Jains and those who follow other different faiths, but could not follow the Saiva faith are all sinners. They could not worship our Lord Civa and could not get His grace.

2452. கறையினார்பொழில்சூழ்ந்தகாழியுள்ஞானசம்பந்தன்
அறையும்பூம்புனல்பரந்தஅரத்துறையடிகள்தம்மருளை
முறைமையாற்சொன்னபாடல்மொழியும்மாந்தர்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைப்பாட்டிவைபத்தும்வல்லர்க்கே. 11

கறையினார் பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த அரத்துறையடிகள் தம்அருளை
முறைமையால் சொன்ன பாடல் மொழியும் மாந்தர் வினை போய்ப்
பறை உமை உறவில்லைப் பாட்டு இவை பத்தும் வல்லர்க்கே.

karaiyin2 Ar pozil cUznta kAziyuL njAn2acampan2,
aRaiyum pUm pun2al paranta arattuRai aTikaL tam(m) aruLai
muRaimaiyAl con2n2a pATal, moziyum mAntar tam vin2aip pOyp
paRaiyum, aiyuRavu illai, pATTu ivai pattum vallArkkE.

பொருள்: இருண்ட பொழில்கள் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன் ஒலிக்கும் பூம்புனல் பரந்த அரத்துறை அடிகளுடைய திருவருளை தக்க முறையில் சொன்ன திருப்பாடல்கள் பத்தும் வல்லவராய்ப் பாடுவோரின் வினைகள் நீங்கிப் போய்விடும். இதில் ஐயமேதும் இல்லை.

குறிப்புரை: பொழில் (சோலை) மரச்செறிவால் கதிரொளி புகப்பெறாது, இருண்டு கிடக்கும் நிலைபற்றிக் கறுப்பு நிறம் உரித்தாயிற்று. நிழல் என்பதற்கு ஒளி என்பது பொருளாதலின், பொழிலின் நிழல் காரொளியுடையதாதல் வேண்டும். அவ்வாறன்றி, உட்புக இயலாமல் தாவரச் செறிவு கறுத்த நிழலைச் செய்திருக்கின்றது என்றவாறு. மாந்தராகிய வல்லார்க்கு அவர் தம் வினைபோய்ப் பறையும். அதற்கு ஐயம் இல்லை. பறைதல் – அழிதல். வினை பறைவதில் வல்லார்க்கு ஐயம் இல்லை எனலுமாம். மொழிவதும் வன்மையுறுவதும் ஒன்றாகா. இத்திருப்பதிகத்துள், திருவருளைக்கூட வேண்டின் சிவநாமங்களை எடுத்தோதியும் அவன் சீரும் செல்வமும் சொல்லிப் போற்றியும், உருகிப் பரவி நைந்தும், பேணிப் பணிகள் செய்தும் வழிபடுவது இன்றியமையாதது என்பது உணர்த்தப்பட்டது.

Our saint Thiru-gnana-Sambandar appeared in Seerkazhi city which was surrounded by dark thick forests. He came to Thiru-nel-voyil Arath-thurai surrounded by attractive river and worshipped our Lord. He orderly chanted the ways and means to get the grace of our Lord in these ten verses. Those who can memorise and chant these ten verses with devotion will definitely get rid of the bad karma of their life. This is a positive declaration. This is a sacred formula (Manthiram).

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

90ஆம் பதிகம் முற்றிற்று
End of 90th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 227 பதிக எண்: 91

91. திருமறைக்காடு 91. THIRU-MARAI-K-KAADU

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

பதிகத்தொடர் எண் 173ஐப் பார்க்க.

பதிக வரலாறு

திருவாய்மூரில் சிவபிரான் திருவடியைப் பணிந்து பாடி அங்கு வைகி, கூடும் மெய்யன்பு பொங்க, திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் சேர்ந்து, மீண்டும் திருமறைக் காடுற்றனர். அத்தமிழ்மொழித் தலைவரோடு சண்பை நாடுடைய பிள்ளை அம்மறைக் காட்டுறையும் மணாளன் மலரடிகளை வணங்கிக் கொண்டு வாழ்ந்திருந்த காலத்தில் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2453. பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தம்
கங்குலாரிருள்போழுங்கலிமறைக்காடமர்ந்தார்தாம்
திங்கள்சூடினரேனுந்திரிபுரமெரித்தனரேனும்
எங்குமெங்கள்பிரானார்புகழலதிகழ்பழியிலரே. 1

பொங்கு வெண் மணல் கானல் பொருகடல் திரை தவழ் முத்தம்
கங்குலார் இருள்போழும் கலி மறைக்காடு அமர்ந்தார்தாம்
திங்கள் சூடினர் ஏனும் திரிபுரம் எரித்தனரேனும்
எங்கும் எங்கள் பிரானார் புகழ் அலது இகழ்பழி இலரே.

pogku veNmaNal kAn2al porukaTal-tirai tavaz muttam
kagkul Ar iruL pOzum kali maRaikkATu amarntAr tAm
tigkaL cUTin2arEn2um, tiripuram erittan2arEn2um,
egkum--egkaL pirAn2Ar--pukaz alatu, ikaz pazi ilarE.

பொருள்: மேன்மேல் புதிதாகத் தோன்றுகின்ற வெண்மணற் பரப்புடைய கடற்சோலைகளில், மோதுகின்ற கடல் அலைகளினால் தவழ்கின்ற முத்துக்கள் இரவின் இருளைப் பிளக்கின்ற காட்சி உடையது; ஒலி நிறைந்தது ஆகிய திருமறைக்காட்டில் அமர்ந்தவராகிய இறைவர்

திங்களைச் சென்னியில் சூடினர்; திரிபுரத்தை எரித்தனர்; என்றாலும் எங்கள் இறைவராகிய சிவனார் புகழே உடையவர்; இகழாகிய பழியிலார்.

குறிப்புரை: போழும் – பிளக்கும். கலி – ஒலி. மறைக்கு அடை. காட்டிற்கு அன்று திங்களைச் சூடியதும் திரிபுரத்தை எரித்ததும் புகழே அன்றிப் பழியாகாது. இகழ்பழி – வினைத்தொகை. இகழாகிய பழி எனலும் பொருந்தும்.

Our Lord Civa is manifest in the temple in Thiru-marai-k-kaadu city. In this city, the vast white sandy area on the seashore was in abundance. Here the gardens are along the shore. The sea waves dash on the shore. In the waves pearls crawl and reach the banks during night. They break the darkness of the night and give bright light all over the area. There in the seashore the noise of the sea waves is always heard. Our Lord manifest here, retains the moon on His head. Once He burnt the three forts of the asuras. However, all over the world His fame spreads and He is blemishless and it is not a sin to kill the asuras.

2454. கூனிளம்பிறைசூடிக்கொடுவரித்தோலுடையாடை
ஆனிலங்கிளரைந்துமாடுவர்பூண்பதுமரவம்
கானலங்கழியோதங்கரையொடுகதிர்மணிததும்பத்
தேனலங்கமழ்சோலைத்திருமறைக்காடமர்ந்தாரே. 2

கூன் இளம்பிறை சூடிக்கொடு வரித்தோல் உடை ஆடை
ஆனில் அம்கிளர் ஐந்தும் ஆடுவர் பூண்பதும் அரவம்
கானல் அம்கழி ஓதம் கரையோடு கதிர் மணி ததும்பத்
தேன் அலம் கமழ் சோலைத் திருமறைக்காடு அமர்ந்தாரே.

kUn2 iLampiRai cUTi, koTu varit-tOl uTai ATai,
An2il amkiLar aintum ATuvar; pUNpatuvum aravam--
kAn2al am kazi Otam karaiyoTu katir maNi tatumpa,
tEn2 nalam kamaz cOlait tiru maRaikkATu amarntArE.

பொருள்: வளைந்த இளம்பிறையைச் சென்னியில் சூடியவர்; வளைந்த வரிகளையுடைய புலியின் தோலை ஆடையாகத் தரித்தவர்; ஆனைந்தாடுவர்; அவர் பூண்பது பாம்பு; அவர் நெய்தலங்கானில் கழியோதத்தின் கரையினில் ஒளிவீசும் மணிகள் ஒளிர, தேன்மணம் கமழும் சோலைகளையுடைய திருமறைக்காட்டில் விரும்பி அமர்ந்து இருந்தார்.

குறிப்புரை: ஆனில் அம் கிளர் ஐந்து (தி. 2 ப. 10 பா. 5) 'நாயன்மார் ஆனைந்தில் இரண்டுபோ் உரையார் நவையெனமற்று இரண்டொன்று நயந்துள்ளது. ஆன்முலைக்கண்' என்னும் ஞானபூசாவிதி 14ன் உரைக்கண். கோமயம் கோசலம் இரண்டும் ஆகா என்று இவையிற்றில்போ் ஐந்து என்ற திருப்பாட்டுக்களில் அருளிச் செய்யாமல் அடக்கியருளிச் செய்தார்கள். நின்ற நெய் பால் தயிருமாக அஞ்சையும் ஒரு பாத்திரத்திலே கூட்டி உண்டாக்கி வைத்து என்று எழுதியிருத்தலை உணர்க (தி. 2 ப. 60 பா. 3; தி. 5 ப. 49 பா. 10; தி. 7 ப. 5 பா. 1).

Our Lord Civa is manifest in Thiru-marai-k-kaadu temple. In the seashore thick gardens are many. The waves of the sea dash against the saltpans. The bright gems, flung by the sea waves, spread their bright light all over the area. The gardens have many trees - with sweet smelling honey in the honeycombs. Our Lord retains the curved moon on His head. He wears tiger's hide which has curved lines all over its body. He loves to be ablutioned by the five items from the cow. He uses the snake as His jewellery.

2455. நுண்ணிதாய்வெளிதாகிநூல்கிடந்திலங்குபொன்மார்பில்
பண்ணியாழெனமுரலும்பணிமொழியுமையொருபாகன்
தண்ணிதாயவெள்ளருவிசலசலநுரைமணிததும்பக்
கண்ணிதானுமொர்பிறையார்கலிமறைக்காடமர்ந்தாரே. 3

நுண்ணிதாய் வெளிதாகி நூல்கிடந்து இலங்கு பொன் மார்பில்
பண்ணியாழ் என முரலும் பணிமொழி உமை ஒருபாகன்
தண்ணிதாய வெள்ளருவி சலசல நுரை மணி ததும்பக்
கண்ணி தானும் ஓர்பிறையார் கலி மறைக்காடு அமர்ந்தாரே.

nuNNitu Ay veLitu Aki nUl kiTantu ilagku pon2 mArpil,
paNNiyAz en2a muralum paNimozi umai oru pAkan2;
taNNiyatu Aya veL aruvi cala cala nurai maNi tatumpa,
kaNNi tAn2um or piRaiyAr--kali maRaikkATu amarntArE.

பொருள்: நுண்மையும் வெண்மையும் உடைய முப்புரிநூல் மார்பில் கிடந்து விளங்கும்; யாழ் முரலுவதுபோல இன்சொல் பேசும் உமையம்மையைத் தன்னில் ஒருபாகத்தில் உடையார்; பிறையைத் தலைமாலையாக உடையார்; அத்தகைய இறைவர் குளிர்ந்த வெண்ணிற அருவிகள் சலசல என ஒலிக்க நுரை மணிபோலத் ததும்ப ஒலி நிறைந்த திருமறைக்காட்டில் விரும்பி அமர்ந்திருந்தார்.

குறிப்புரை: மார்பில் அணியும் நூல் நுண்மையும் வெண்மையும் உடையதாயிருத்தல் வேண்டும். அதுகொண்டு முதுகின் அழுக்காற்றுவார்க்கு இது தெரியுமே? பண் + யாழ் = பண்ணியாழ். மாதர்பிறைக்கண்ணியான் (தி. 4 ப. 3 பா. 1).

Our Lord Civa is manifest in Thiru-marai-k-kaadu where pomposity and loud noise are always heard. He wears over His chest slender white sacred thread, which increases His gorgeous appearance. He has His consort Uma Devi on the left side of His body. She speaks very soft words equal to the stringed musical instrument (lute). She speaks with modesty and composure. The cool white waterfalls come down with permanent noise, the floodwater foams and gems are found overflowing the entangled locks of hair of Civa. He retains the young moon on His head as a garland.

2456. ஏழைவெண்குருகயலேயிளம்பெடைதனதெனக்கருதித்
தாழைவெண்மடற்புல்குந்தண்மறைக்காடமர்ந்தார்தாம்
மாழையங்கயலொண்கண்மலைமகள்கணவனதடியின்
நீழலேசரணாகநினைபவர்வினைநலிவிலரே. 4

ஏழை வெண்குரு கயலே இளம் பெடை தனது எனக்கருதித்
தாழை வெண் மடல் புல்குந்தண் மறைக்காடு அமர்ந்தார்தாம்
மாழை அங்கயல் ஒண்கண் மலைமகள் கணவனது அடியின்
நீழலே சரணாக நினைபவர் வினை நலிவிலரே.

Ezai veN kuruku, ayalE iLampeTai tan2atu en2ak karutit
tAzai veNmaTal pulkum taN maRaikkATu amarntArtAm,
mAzai am kayal oNkaN malaimakaL kaNavan2atu aTiyin2
nIzalE caraN Aka nin2aipavar, vin2ai nalivu ilarE.

பொருள்: அறியாமையுடைய வெண்ணிறக் குருகு அருகிருக்கும் தாழை வெண் மடலைத்தன் பெடையென மயங்கிப் புல்கும் காட்சியையுடைய குளிர்ந்த திருமறைக்காட்டினை விரும்பி அமர்ந்தவர்; மாழைமைப் பண்பினையும் அழகிய கயலின் வடிவத்தையும் கொண்ட கண்களை உடைய பார்வதியின் கணவன் ஆகிய சிவபிரானின் திருவடி நீழலே தமக்குப் புகலிடம் என நினைப்பவர் வினைகளினால் துன்பப்படுதல் இலராவர்.

குறிப்புரை: வேதாரணியத்தில் ஏழை வெண்ணாரையானது தாழை மடலைத் தனது நற்றுணைப் பேடை என்று கருதித் தழுவுமென்க. (நாரை) இது தாழை இதுபேடை எனப் பகுத்தறியும் அறிவு இல்லாமையால்

ஏழை நாரை என்றார். புல்குதல் – கூடுதல். மாழை – அழகு, இளமை, அடியின் நீழலே சரணா நினைபவர் என்றதால். சிவனடியார்கள் சிந்தனைக்குரியது சிவனடியே அன்றிப் பிறிதும் யாதும் இல்லை என்றுணரலாம். 'காதலால் . . . அவை இரண்டுமே செய்கருத்து உடையார்' (திருநீலநக்கர் 5) என்புழி அருச்சித்தல் பணிதல் என்று தொழிலால் இரண்டாயினும் சிந்தனையால் ஒன்றே ஆதல் உணர்க.

Our Lord Civa is manifest in Thiru-marai-k-kaadu. The white ignorant heron very near sees the screwpine plant. The leaves are fragrant and yellow in colour. The heron thinks the flower petals as its young female bird (Pedai) and tries to copulate with the petals of the screwpine. Our Civa is the consort of the mountain king's daughter. She is youthful and her eyes look carp fish. Those devotees who always surrender to Him and think the shadow of Civa's holy feet is the only grace-giving supreme shadow will have no suffering in their life.

2457. அரவம்வீக்கியஅரையுமதிர்கழல்தழுவியஅடியும்
பரவநாஞ்செய்தபாவம்பறைதரஅருள்பவர்பதிதான்
மரவநீடுயர்சோலைமழலைவண்டியாழ்செயுமறைக்காட்
டிரவுமெல்லியும்பகலுமேத்துதல்குணமெனலாமே. 5

அரவம் வீக்கிய அரையும் அதிர்கழல் தழுவிய அடியும்
பரவ நாம் செய்த பாவம் பறைதர அருள்பவர் பதிதான்
மரவ நீடுயர் சோலை மழலை வண்டு யாழ்செயும் மறைக்காட்டு
இரவும் எல்லியும் பகலும் ஏத்துதல் குணம் எனலாமே.

aravam vIkkiya araiyum, atirkazal tazuviya aTiyum,
parava, nAm ceyta pAvam paRai tara aruLuvar patitAn2--
maravam nITu uyar cOlai mazalai vaNTu yAz ceyum--maRaikkATTu
iravum elli am pakalum Ettutal kuNam en2al AmE.

பொருள்: பாம்பினைக் கச்சாகக் கட்டிய திருவரையையும், ஒலிக்கின்ற கழல்கள் கட்டிய திருவடிகளையும் போற்றினால் நாம் செய்த பாவங்கள் அழியும் வண்ணம் அருள்செய்பவர்; சிவபிரானாகிய அவரை, வெண்கடம்ப மரங்கள் நிறைந்த சோலைகளில் இளவண்டுகள் யாழிசை போல ஒலிசெய்தற்கு இடமாகிய திருமறைக்காட்டில், இரவும் எல்லியும் பகலும் ஏத்தி வழிபடல் நற்குணம் ஆகும்.

குறிப்புரை: வீக்கிய – கட்டிய. அரை – திருவரை (இடுப்பு). கழலடி. அரையையும் அடியையும் பரவினால் பாவம் அழியும் வண்ணம் அருள் செய்யும் பரசிவன். மரவம் – குங்குமமரம். இரவும் எல்லியும் பகலும் – 'இரவும் எல்லியும் ஏத்தித் தொழுமினே' (தி. 5 ப. 74 பா. 9), 'எல்லியும் பகலும் இசைவானவர் சொல்லிடீர்' (தி. 5 ப. 75 பா. 6), 'எல்லியும் பகலும் உள்ளே ஏகாந்தமாக ஏத்தும்' (தி. 4 ப. 41 பா. 3), 'எல்லியும் பகலும் பணியது செய்வேன்' (தி. 7 ப. 69 பா. 7), 'இரவும் எல்லியும் பகலும் ஏத்துவார், எம்மையும் ஆளுடையாரே' (தி. 7 ப. 75 பா. 8) என்பவற்றை ஆராய்ந்தால் இரவுக்கும் பகலுக்கும் வேறாயது எல்லி என்று புலனாகும். ஆயின், அவ்விரண்டினும் வேறாய் நிற்பது அவ்விரண்டன் சந்தியேயன்றி வேறில்லை. இரவோடு பகலும், பகலோடு இரவும் சந்திக்கும் இரண்டிலும் எல் (ஒளி) இருப்பதால் 'எல்லி' என்ற பெயர் பெற்றது. எல் – ஒளி, சூரியன், பகல், எல்லியை இரவென்னும் பொருளில் வழங்குதல் பயின்றுளது. எல்லியம் பகல் – ஒளி வீசும் பகற்பொழுது. எல்லியம் பகல் – என்பது நல்ல பாடம்.

Our Lord Civa administers around His waist the snake and tightens it with a corset. He wears the tinkling anklet on His ankle. If we prostrate before Civa, He will chase our suffering caused by our bad past karma. He is manifest in Thiru-marai-k-kaadu. Around the city, tall thick trees are grown in gardens. The Crocus sativus trees are many in gardens (fragrant trees). In these gardens, bees make music like lute sound. One should worship night and day our Lord who is manifest here. We must chant His fame always. These will give us good health.

2458. பல்லிலோடுகையேந்திப்பாடியுமாடியும்பலிதேர்
அல்லல்வாழ்க்கையரேனுமழகியதறிவரெம்மடிகள்
புல்லமேறுவர்பூதம்புடைசெலவுழிதர்வர்க்கிடமாம்
மல்குவெண்டிரையோதமாமறைக்காடதுதானே. 6

பல்லில் ஓடு கையேந்திப் பாடியும் ஆடியும் பலிதேர்
அல்லல் வாழ்க்கையர் ஏனும் அழகியது அறிவர் எம்மடிகள்
புல்லம் ஏறுவர் பூதம் புடை செலவு உழிதர்வர்க்கு இடமாம்
மல்கு வெண் திரை ஓதமா மறைக்காடு அதுதானே.

pal il OTu kai Entip pATiyum ATiyum pali tEr
allal vAzkkaiyarEn2um, azakiyatu aRivar; em aTikaL;
pullam ERuvar; pUtam puTai cela uzitarvarkku iTam Am--
malku veN tirai Otam mA maRaikkATu atutAn2E.

பொருள்: பற்கள் இல்லாத மண்டையோட்டினைக் கையிலேந்திப் பாடியும் ஆடியும் பிச்சை கொள்வர்; அத்தகைய அழகில்லாத அல்லல் வாழ்க்கையை உடையவரென்றாலும் அவருக்கு அது அழகியது; அதனையும் அவர் அறிவார்; அத்தன்மையவராகிய எம்முடைய இறைவர்; எருதினை ஊர்தியாக உடையவர்; சிவகணங்கள் புடைசூழத் திரிவர்; அவருக்கு இடமாவது யாதெனில், நிறைந்த வெண்மையான அலைகள் கடலோதம் மிக்க திருமறைக்காடாகிய அதுவாம்.

குறிப்புரை: பல் இல் (லாத) ஓடு. பலிதேரும் வாழ்க்கை அல்லலை ஆக்குவதேனும் அடிகளுக்கு அழகியது. அதனையும் அவரே அறிவார். புல்லம் – (புல்லைமேயும்) எருது. 'புல்வாய்' என மானைக் குறித்தல் காண்க. உழிதர்வர் – உழிதருவர் (பா. 10). திரிவர். 'உழிதருகால்' (திருவாசகம்) திரிதருவர் – திரிதர்வர், திரிதவர். 'தேவர் என்றே இறுமாந்து என்னபாவம் திரிதவரே' (மேற்படி).

Our Lord Civa has manifested Himself in Thiru-marai-k-kaadu. He holds a skull without any teeth and dances and sings and goes all round the universe to get alms. Such a way of life gives distress, He Himself knows this. However, it is good for Him. He rides on His bull and goes around. Goblins accompany Him in large number and He roams all over with them. Thiru-marai-k-kaadu is the place He desires as His place for manifestation. The city has pure white waves of the sea around it all through the year.

2459. நாகந்தான்கயிறாகநளிர்வரையதற்குமத்தாகப்
பாகந்தேவரொடசுரர்படுகடலளறெழக்கடைய
வேகநஞ்செழஆங்கேவெருவொடுநிமிர்ந்தெங்குமோட
ஆகந்தன்னில்வைத்தமிர்தமாக்குவித்தான்மறைக்காடே. 7

நாகம் தான்கயிறாக நளிர் வரை அதற்கு மத்தாகப்
பாகம் தேவரொடு அசுரர் படுகடலளறு எழக் கடைய
வேக நஞ்சுஎழ ஆங்கே வெருவொடு நிமிர்ந்து எங்கும் ஓட
ஆகம் தன்னில் வைத்த அமிர்தம் ஆக்குவித்தான் மறைக்காடே.

nAkam tAn2 kayiRu Aka, naLir varai ataRku mattu Aka,
pAkam tEvaroTu acurar paTu kaTal aLaRu ezak kaTaiya,
vEka nanjcu eza, AgkE veruvou nimirntu egkum OTa,
Akam tan2n2il vaittu amirtam AkkuvittAn2 maRaikkATE.

பொருள்: நாகந்தனைக் கடை கயிறாகவும், குளிர்ந்த சிகரமுள்ள மந்தாரமலையை மத்தாகவும் இருபக்கங்களில் தேவர்களும் அசுரர்களும் ஒலிக்கும் கடல் சேறெழக் கடைய வெப்பமான நஞ்செழுந்தது. நஞ்செழக் கண்ட தேவர்களும் அசுரர்களும் அஞ்சிச் சிதறி எத்திசையிலும் ஓட, அந்த நஞ்சினைத் தன் கழுத்தினில் வைத்து அமிர்தம் ஆக்குவித்த அச்சிவனின் ஊர் திருமறைக்காடே.

குறிப்புரை: வரை – மந்தரமலை. தேவாசுரர் பாற்கடல் கடைந்த வரலாறு. வெருவ – வாய்பிதற்றல். ஆகம் – மார்பு, உடம்பு, உடம்பாயின், உடம்பினுள் என்றும், மார்பாயின் அதன்மேல் ஆதேயமான கழுத்தில் என்றும் கருதுக.

Our Lord Civa is manifest in Thiru-marai-k-kaadu. Long ago devas and asuras brought the very big snake called Vaasuki and used it as the rope; they used the heavy Mantara mountain as the churning rod, then they decided between the two who is to hold the head-end and the other the tail-end - and started churning the dark milky ocean. While they were churning slough came from the seawater. Along with this mud a highly horrifying poison also came out of the seawaters. Those who were churning saw the poison, got terrified and ran away, far beyond the sea. Then our Lord imbibed the poison and His Devi stopped it from going down the throat into His body. He converted it into Amirtham. This Lord is manifest in this Thiru-marai-k-kaadu city.

2460. தக்கன்வேள்வியைத்தகர்த்தோன்றனதொருபெருமையையோரான்
மிக்குமேற்சென்றுமலையையெடுத்தலுமலைமகள்நடுங்க
நக்குத்தன்திருவிரலாலூன்றலுநடுநடுத்தரக்கன்
பக்கவாயும்விட்டலறப்பரிந்தவன்பதிமறைக்காடே. 8

தக்கன் வேள்வியைத் தகர்த்தோன் தனது ஒருபெருமையை ஓரான்
மிக்கு மேல் சென்று மலையை எடுத்தலும் மலைமகள் நடுங்க
நக்குத் தன் திருவிரலால் ஊன்றலும் நடுநடுத்தரக்கன்
பக்க வாயும் விட்டலறப் பரிந்தவன் பதி மறைக்காடே.

takkan2 vELviyait takarttOn2; tan2atu oru perumaiyai OrAn2;
mikku mEl cen2Ru malaiyai eTuttalum, malaimakaL naTugka,
nakku, tan2 tiru viralAl Un2Ralum, naTu naTuttu arakkan2
pakka vAyum viTTu alaRap parintavan2; pati--maRaikkATE.

பொருள்: தக்கன் இயற்றிய வேள்வியைத் தகர்த்தவன்; தன்னுயை நிகரற்ற பெருமையை அறியாத இராவணன் அகந்தை மிகச் சென்று கயிலை மலையைப் பெயர்த்தெடுத்தலும், மலைமகளாகிய பார்வதி நடுங்கவே, அலட்சியமாகச் சிரித்துத் தன் பெருவிரலினை ஊன்றினான்; ஊன்றலும் அரக்கன் வாய்விட்டலறினான்; அவன் அலறலைக் கண்டு அவன்மேல் பரிதாபம் கொண்டு இரங்கியருளிய சிவனின் ஊர், திருமறைக்காடே ஆகும்.

குறிப்புரை: தனது பெருமையை ஓரான் – தன்பெருமைதான் அறியாத் தன்மையன் (திருவாசகம்). ஓரான் – உணரான் என்பதன் மரூஉவாகும். நக்கு – சிரித்து. நடுநடுத்து – நடுநடுங்கி. பரிந்தவன் – இரங்கியவன்.

The tutelary deity and father-in-law of Lord Civa, Thakkan arranged for a very elaborate sacrifice according to spiritual discipline with several sacrificial pits etc., without inviting our Lord Civa to participate in the sacrificial function. Our Lord Civa got wild and arranged to demolish and destroy the entire sacrificial area. Without understanding the peerlessness and fame of such a Lord, Raavanan, the asura king, due to his haughtiness, reached the Kailash mountain and tried to dislocate. At the very moment, the mountain king's daughter trembled. Immediately our Lord laughed at the ignorance of Raavanan and pressed the top of the mountain with His toe. Instantaneously, Raavanan trembled and wept with all his mouth. Civa understood his foolishness, excused him and graced him. This Lord is manifested in Thiru-marai-k-kaadu city.

2461. விண்டமாமலரோனும்விளங்கொளியரவணையானும்
பண்டுங்காண்பரிதாயபரிசினனவனுறைபதிதான்
கண்டலங்கழியோதங்கரையொடுகதிர்மணிததும்ப
வண்டலங்கமழ்சோலைமாமறைக்காடதுதானே. 9

விண்ட மா மலரோனும் விளங்கு ஒளி அரவணையானும்
பண்டும் காண்பரிதாய பரிசினன் அவனுறை பதிதான்
கண்டலம் கழிஓதம் கரையொடு கதிர்மணி ததும்ப
வண்டலம் கமழ் சோலை மா மறைக்காடு அதுதானே.

viNTa mA malarOn2um, viLagku oLi aravi aNaiyAn2um,
paNTum kANpu aritu Aya paricin2an2 avan2 uRai patitAn2--
kaNTal am kazi Otam karaiyoTu katir maNi tatumpa,
vaNTal am kamazcOlai mA maRaikkATu atutAn2E.

பொருள்: இதழ்கள் விரிந்த தாமரை மலர்மேல் இருக்கும் பிரமனும், மாணிக்கமணிகளால் ஒளிபரப்பும் பாம்புப் படுக்கையனான திருமாலும் பண்டும் இன்றும் காண அரியவனாகிய இயல்பினன் ஆகிய சிவபெருமான் வாழ்கின்ற ஊர்தான் யாதெனில், தாழைகள் மிகுந்த கடற்கழி ஓதத்தின் கரையினில் சுடர்விடும் மணிகள் கிடக்க, வண்டலின் மணம் கமழும் சோலைகளை உடைய திருமறைக்காடேயாம்.

குறிப்புரை: விண்ட – (பூத்த) இதழ்கள் விள்ளலுற்ற. அரவு – அணை – சர்ப்ப சயனம். பண்டும் என்றதால் இன்றும் காணாமை எனப்படும். கண்டல் – தாழை. நீர்முள்ளியும் ஆம்.

The tutelary deity Brahma who stays in the blossomed lotus flower and Thirumaal who takes rest on the big snake spreading light all around, they both from age-old days tried their best but could not see our Lord Civa who was a rarity for them. This Lord is manifest in Thiru-marai-k-kaadu. In the seashore gardens the screwpine trees are many; adjacent are backwaters overflowing with bright gems, the oozy soil in the groves spreads the fragrance of the flowers. Such is the beauty of Thiru-marai-k-kaadu.

2462. பெரியவாகியகுடையும்பீலியுமவைவெயிற்கரவாக்
கரியமண்டைகையேந்திக்கல்லெனவுழிதருங்கழுக்கள்
அரியவாகவுண்டோதுமவர்திறமொழிந்துநம்மடிகள்
பெரியசீர்மறைக்காடேபேணுமின்மனமுடையீரே. 10

பெரிய வாகிய குடையும் பீலியும் அவைவெயில் கரவாக்
கரிய மண்டை கையேந்திக் கல்லென உழிதரும் கழுக்கள்
அரிய வாக உண்டோதும் அவர்திற மொழிந்து நம்மடிகள்
பெரிய சீர்மறைக்காடே பேணுமின் மனமுடையீரே.

periya Akiya kuTaiyum pIliyum avai veyil karavA,
kariya maNTai kai Enti, kallen2a uzitarum kazukkaL--
ariya Aka uNTu Otumavar--tiRam ozintu, nam aTikaL
periya cIr maRaikkATE pENumin2!--man2am uTaiyIrE!

பொருள்: சிந்திக்கும் மனமுடையீர்! பெருங்குடையும் மயிற்பீலியும் ஆகிய இவை வெயிலை மறைக்கா. கரிய மண்டையைக் கையிலேந்தி பிச்சை கேட்டு அலையும் சமணர்கள், அரிதாக 'உண்டு, இல்லை, உண்டும் இல்லையும் ஆம்' எனவோதும் அவர்களுடைய கொள்கையை ஒழிமின்! நம்முடைய இறைவனாகிய சிவபிரானின் பெரும்புகழுடைய திருமறைக்காட்டினையே போற்றுமின்!

குறிப்புரை: பெருங்குடையும் மயிற்பீலியும் உடைய அப்புறப்புறச் சமயத்தவர். மண்டை – உள்கலம். உண்டு – உணவு கொண்டு. 'உண்டாம் இல்லையாம்' என்பன முதலியவை.

The Jains and Buddhists, the wretched groups of people hold big umbrella and peacock feathers to protect themselves from sun's heat and go round for alms. They carry a smutty pot to get alms and move about with pomposity. While roaming they chant mystical words 'undaam; illayaam'. My dear good-hearted people - "You better keep yourself away from these Jains and Buddhists. Lord Civa who is our Chief and the famous Supreme Being is manifest in the temple in Thiru-marai-k-kaadu and you will worship Him".

2463. மையுலாம்பொழில்சூழ்ந்தமாமறைக்காடமர்ந்தாரைக்
கையினாற்றொழுதெழுவான்காழியுள்ஞானசம்பந்தன்
செய்தசெந்தமிழ்பத்துஞ்சிந்தையுட்சேர்க்கவல்லார்போய்ப்
பொய்யில்வானவரோடும்புகவலர்கொளவலர்புகழே. 11

மையுலாம் பொழில் சூழ்ந்த மாமறைக்காடு அமர்ந்தாரைக்
கையினால் தொழுதெழுவான் காழியுள் ஞானசம்பந்தன்
செய்த செந்தமிழ் பத்தும் சிந்தையுள் சேர்க்க வல்லார் போய்ப்
பொய்யில் வானவரோடும் புகவலர் கொளவலர் புகழே.

mai ulAm pozil cUznta mA maRaikkATu amarntAraik
kaiyin2Al-tozutu ezuvAn2, kAziyuL njAn2acampantan2,
ceyta centamiz pattum cintaiyuL cErkka vallAr, pOy,
poy il vAn2avarOTum puka valar; koLa valar, pukazE.

பொருள்: மேகங்கள் உலவுகின்ற பொழில்கள் சூழ்ந்த திருமறைக்காட்டில் அமர்ந்த இறைவராகிய சிவபெருமானை, கையினால் தொழுது கொண்டே எழுவானாகிய காழிஞானசம்பந்தன், பாடிய செந்தமிழ்த் திருப்பதிகத்தில் உள்ள திருப்பாடல்கள்

பத்தினையுமுள்ளத்தில் இருத்த வல்லவர்கள், வானவர்களோடும் கூடிச் சென்று அழியாத வீட்டுலகில் புகழுடன் புகவல்லவராவர்.

குறிப்புரை: மை – மேகம். பொய்யில்வானவர் – அழியாத வீட்டுலகினர்.

In the city of very attractive Thiru-marai-k-kaadu clouds spread out in the sky and move over the natural forest area. Here is manifest our Lord Civa. Our saint Thiru-gnana-Sambandar hailing from Seerkaazhi worships the Lord with both his hands and prostrates before Him. Then he gets up and chants the pure Tamil ten songs. Those servitors who can memorise the ten verses and keep them in their mind and praise the fame of our Lord will be eligible to reach the devas world without falsehood along with the celestials. They will shine with all fame in the universe.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

91ஆம் பதிகம் முற்றிற்று
End of 91st Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 228 பதிக எண்: 92

92. திருப்புகலூர்வர்த்தமானீச்சரம்

92. THIRU-P-PUGALOOR – VARTHA-MAANEECH-CHARAM

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் என்னும் இத்திருத்தலத்தில் அருளாசி புரிகின்ற இறைவர் திருப்பெயர் வர்த்தமானேச்சுரர். இறைவியார் திருப்பெயர் கருந்தாழ்குழலியம்மை. திருப்புகலூர் ஆலயத்திற்குள் வடபக்கத்தில் திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் அமைந்துள்ளது. இது ஆண்டவன் பெயரைக் குறிக்கின்றது. இங்கே அக்கினீசுவரர் உருவமும், அதற்கடுத்து வடபக்கத்தில் வர்த்தமானேசுவரர் சந்நிதியும் முருக நாயனார் திருவுருவமும் அமைந்துள்ளன.

பதிக வரலாறு

திருப்புகலூர்த் தொண்டர்களொடும் செம்மை முருகனார் எதிர்கொள்ள வந்து, வேதமுதல்வர் திருக்கோயிலை எய்திப்புகுந்து பூமலிமுன்றிற் புடைவலங் கொண்டு ஒருப்படு சிந்தையொடும் அணைந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், பணிந்து சாத்திய தமிழ்த்தொடை மாலை இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2464. பட்டம்பால்நிறமதியம்படர்சடைச்சுடர்விடுபாணி
நட்டநள்ளிருளாடுநாதனார்நவின்றுறைகோயில்
புட்டன்பேடையொடாடும்பூம்புகலூர்த்தொண்டர்போற்றி
வட்டஞ்சூழ்ந்தடிபரவும்வர்த்தமானீச்சரத்தாரே. 1

பட்டம் பால் நிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி
நட்ட நள்ளிருள் ஆடுநாதனார் நவின்று உறைகோயில்
புட்டன் பேடையொடு ஆடும் பூம்புகலூர்த் தொண்டர் போற்றி
வட்டம் சூழ்ந்த அடிபரவும் வர்த்தமானீச்சரத்தாரே.

paTTam, pAlniRa matiyam, paTar caTaic cuTar viTu pANi,
naTTam naL iruL ATum nAtan2 navin2Ru uRai kOyil,
puL-tan2 pETaiyoTu ATum pUm pukalUr, toNTar pORRi
vaTTam cUzntu aTi paravum varttamAn2IccarattArE.

பொருள்: நெற்றிப் பட்டம் பாலின் நிறமான பிறை மதியம்; படருகின்ற சடையில் ஒளிர்கின்ற கங்கை நதி; நட்ட நடு இரவில் கூத்தாடும் தலைவன் ஆகிய சிவன் வெளிப்பட்டு உறைகின்ற திருக்கோயில் யாதெனில், ஆண்பறவை தன் பெடையோடு ஆடும் பூம்புகலூரில் தொண்டர்கள் போற்றி வலம் வந்து திருவடியைப் பரவும் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: பட்டம் – உத்தரீயம். பாணி – கங்கை. 'பாணி மூவுலகும் புதைய மேல்மிதந்த தோணிபுரத்துறைந்தனை' (தி. 1 ப. 1 பா. 128). 'விண்ணியல் பாணியன்' (பொன்வண். 30). 'நள்ளிருள் நட்டம் பயின்றாடும் நாதன்'. புள் – பறவை. பேடை – பெண் பறவை.

Our Lord Civa is manifest in Pugaloor - Vartha-maaneech-charam. In this attractive city male birds love to join the female birds, and enjoy dancing. Here the devotees stand in a circle and praise our Lord by chanting divine songs and worship the Lord in Pugaloor - Vartha-maaneech-charam. He wears a cloth loosely over the shoulders (upper garment). In His matted hair He sustains the bright white moon. He supports the bright Ganges also in His matted hair. His avocation is to dance in midnight. He is the Chief Dancer. He is manifest in the temple called Thiru-p-pugaloor - Vartha-maaneech-charam.

2465. முயல்வளாவியதிங்கள்வாண்முகத்தரிவையிற்றெரிவை
இயல்வளாவியதுடையஇன்னமுதெந்தையெம்பெருமான்
கயல்வளாவியகழனிக்கருநிறக்குவளைகண்மலரும்
வயல்வளாவியபுகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. 2

முயல் வளாவிய திங்கள் வாண்முகத்து அரிவையில் தெரிவை
இயல் வளாவியது உடைய இன்னமுது எந்தை எம்பெருமான்
கயல் வளாவிய கழனிக் கருநிறக் குவளை கண் மலரும்
வயல் வளாவிய புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

muyal vaLAviya tigkaL vALmukattu arivaiyil-terivai
iyal vaLAviyatu uTaiya in2 amutu, entai, emperumAn2--
kayal vaLAviya kazan2ik karuniRakkuvaLai kaN malarum
vayal valAviya pukalUr varttamAn2Iccarattare.

பொருள்: முயலாகிய களங்கம் பொருந்திய திங்கள் போன்று குளிர்ச்சியும் ஒளியும் உடைய முகத்து அரிவையை மனைவியாகப் பெற்றவர்; இன்னமுது போன்று இன்பம் அளிப்பவர்; எம் தந்தை, எம்முடைய பெருமகன் ஆகிய இறைவர் கயல்மீன்கள் பொருந்திய கழனிகளில்

கரிய நிறக் குவளை கண்போல மலரும்; கயல்கள் பொருந்திய திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: முயல் – களங்கம். திங்கள் (சந்திரன்) இடத்திருப்பது. அரிவை தெரிவை இரண்டும் மாதர் பருவத்தின் வேறுபாட்டாற்பெற்ற பெயர்கள். கண்மலரும் – கண் போல் பூக்கும். குவளைகள் பூக்கும் எனலுமாம்.

In the city of Pugaloor - Vartha-maaneech-charam, carp fish are in plenty in the paddy fields. There are ponds and fields nearby where black coloured Indian water lily blossoms. Our Lord Civa is manifest in this temple in this city. His consort Uma Devi, the chief among women is very bright faced like the moon, which has the dark spot. He is sweet like amrit. He is our Chief as well as our Father.

2466. தொண்டர்தண்கயமூழ்கித்துணையலுஞ்சாந்தமும்புகையும்
கொண்டுகொண்டடிபரவிக்குறிப்பறிமுருகன்செய்கோலம்
கண்டுகண்டுகண்குளிரக்களிபரந்தொளிமல்குகள்ளார்
வண்டுபண்செயும்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. 3

தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலும் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பு அறிமுருகன் செய் கோலம்
கண்டு கண்டு கண் குளிரக் களிபரந்து ஒளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

toNTar taNkayam mUzkit tuNaiyalum cAntamum pukaiyum
koNTu koNTu aTi paravi, kuRippu aRi murukan2 cey kOlam
kaNTu kaNTu, kaN kuLirak kaLi parantu, oLi malku kaL Ar
vaNTu paN ceyum pukalUr vartta mAn2IccarattArE.

பொருள்: திருமுருகனார், குளிர்ந்த கயத்தில் மூழ்கி மாலையும் சந்தனமும் தூபமும் கொண்டு திருவடி தொழுது, திருக்குறிப்பினை நன்கு அறிந்து இறைவருக்குச் செய்கின்ற திருக்கோலத்தைத் தொண்டர் கண்குளிரக் கண்டு கண்டு, களி பரந்து ஒளி நிறையும்; அவ்விறைவர், தேனினை மிகுதியாக உண்ட வண்டுகள் பண்பாடும் திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: கயம் – நீர்நிலை. துணையல் – மாலை. 'கொண்டு' இரண்டனுள். ஒன்று துணையல் முதலியவற்றைக் கொண்டு என்றும் மற்றொன்று அடியை உளங்கொண்டு என்றும் கொள்ள நின்றமை

உணர்க. குறிப்பு அறிமுருகன் – முருக நாயனார் சிறப்புணர்த்திற்று. அவரது குறிப்பு அறியும் ஆற்றலை. தமக்கு நண்பருமாம் பெருமை தந்தை பிள்ளையாரே அறிவார். பூக்கள் திறக்கும் அநுபவ மிகுதியால் அவற்றைக் கொள்ளும் சமயக் குறிப்பும் ஆம்.

A group of devotees join together, take bath in cool water ponds. Thereafter they collect flowers, make garlands, prepare sandalwood paste, materials to emit fragrant smell, reach the temple and prostrate before the holy feet of Civa in the temple and worship Him. The saint Muruga Nayanar noted the spiritual sacrifice and rituals done by the devotees. Then he helped them and did service to our Lord in the same way as the devotees did. He decorated our Lord and saw His graceful look and happily worshipped our Lord. In the forest area the beetles suck the honey and make sound like musical tone. Our Lord Civa is manifest in Pugaloor - Vartha-maaneech-charam with pleasure.

2467. பண்ணவண்ணத்தராகிப்பாடலொடாடலறாத
விண்ணவண்ணத்தராயவிரிபுகலூரரொர்பாகம்
பெண்ணவண்ணத்தராகும்பெற்றியொடாணிணைபிணைந்த
வண்ணவண்ணத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரத்தாரே. 4

பண்ண வண்ணத்தராகிப் பாடலொடு ஆடல் அறாத
விண்ண வண்ணத்தராய விரிபுகலூர் ஓர்பாகம்
பெண்ண வண்ணத்தராகும் பெற்றியொடு ஆணிணை பிணைந்த
வண்ண வண்ணத்து எம்பெருமான் வர்த்தமானீச்சரத்தாரே.

paNNa vaNNattar Aki, pATaloTu ATal aRAta
viNNa vaNNattar Aya viri pukalUrar, orpAkam
peNNa vaNNattar Akum peRRiyoTu, AN iNaipiNainta
vaNNa vaNNattu emperumAn2--varttamAn2IccarattArE.

பொருள்: 'ஏழிசையாய் இசைப்பய'னாகிய பண்ணிசைமயமானவர்; பாடுதலும் ஆடுதலும் ஒழியாதவர்; ஆகாச இயல்புடையர் ஆகிய திருப்புகலூர் தம்முடைய ஒருபாகம் பெண் தன்மையராகும் இயல்புடையவர்; ஆண் இணை பிணைந்த மிகுந்த அழகுடைய எம்பெருமானாகிய அவர் திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: பண்ண வண்ணத்தர் – பண்ணிசை மயமான சிவபெருமான். 'ஏழிசையாய் இசைப்பயனாய்'. விண்ணவண்ணத்தர் – ஆகாசரூபர். பாகம் பெண்ண வண்ணத்தர் – அம்மையப்பர். அர்த்தநாரீசுவரர். ஆண் இணை பிணைந்த வண்ண வண்ணத்து எம்பெருமான் என்றது அறியத்தக்கது.

Our Lord Civa is manifest in wide area of Pugaloor – Vartha-maaneech-charam. His avocation is to dance with the accompaniment of musical tone. He used to sing along with the lute. He exposes Himself as the embodiment of the sky. He kept His consort on the left side of His body. He is concomitant, the female shape jointly with the male, called Artha-naarees-warar.

2468. ஈசனேறமர்கடவுளின்னமுதெந்தையெம்பெருமான்
பூசுமாசில்வெண்ணீற்றர்பொலிவுடைப்பூம்புகலூரில்
மூசுவண்டறைகொன்றைமுருகன்முப்போதுஞ்செய்முடிமேல்
வாசமாமலுடையார்வர்த்தமானீச்சரத்தாரே. 5

ஈசன் ஏறமர் கடவுளின் அமுது எந்தை எம்பெருமான்
பூசு மாசில் வெண்ணீற்றர் பொலிவுடைப் பூம்புகலூரில்
மூசு வண்டறை கொன்றை முருகன் முப்போதும் செய்முடிமேல்
வாச மாமலுடையார் வர்த்தமானீச்சரத்தாரே.

Ican2, ERu amar kaTavuL, in2 amutu, entai, emperumAn2,
pUcum mAcu il veN nIRRar--polivu uTaip pUm pukalUril,
mUcu vaNTu aRai kon2Rai murukan2 muppOtum cey muTimEl
vAcamAmalar uTaiyAr, varttamAn2IccarattArE.

பொருள்: செல்வன், அறவிடை ஊர்தியாக உடைய கடவுள்; இனிய அமுது; எம் தந்தை; எம்முடைய பெருமான்; பூசுதற்கு மாசு அற்ற வெண்ணீறு உடையவர்; பொலிவுடைய திருப்புகலூரில், முருக நாயனார் முப்போதும் முடிமேல் சூட்டுகின்ற முரலும் வண்டுகள் ஒலிக்கும் மணம் மிக்க கொன்றை மாமலர் உடையார்; அவர் திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: இதன் முதலடியோடு ஒத்தது முன் (தி. 2 ப. 90 பா. 1) உணர்ந்தது. பூச – பூசுதற்கு. நீற்றர் – நீறுடையவர். பூச என்னும் எச்சம் நீற்றர் என்னும் வினைக்குறிப்பில் உடையர் என்பதோடு முடிந்தது.

The saint Muruga Nayanar, belonging to this gorgeous city of Pugaloor, goes daily and collects the Indian laburnum flowers where the beetles swarm in large

numbers over the flower. Then he goes to the temple all the three times of the day when the sun shines and worships our Lord by spreading the flowers on the holy feet of our Lord. The Lord of Pugaloor - Vartha-maaneech-charam, who exposes Himself with the fragrant flowers all over His body, is the Chief Supreme Being for all. He sustains the white bull for His conveyance. He is like the sweet ambrosia. He is our Father. He is the greatest Supreme Being. He applies faultless holy ashes over His body.

2469. தளிரிளங்கொடிவளரத்தண்கயமிரியவண்டேறிக்
கிளரிளம்முழைநுழையக்கிழிதருபொழிற்புகலூரில்
உளரிளஞ்சுனைமலருமொளிதருசடைமுடியதன்மேல்
வளரிளம்பிறையுடையார்வர்த்தமானீச்சரத்தாரே. 6

தளிர் இளங்கொடி வளரத் தண்கயம் இரிய வண்டு ஏறிக்
கிளர் இளம்முழை நுழையக் கிழிதரு பொழில் புகலூரில்
உளர் இளம்சுனை மலரும் ஒளிதரு சடை முடி அதன்மேல்
வளர் இளம்பிறை உடையார் வர்த்தமானீச்சரத்தாரே.

taLir iLag koTi vaLara, taNkayam iriya vaNTu ERik
kiLar iLam(m) uzai nuzaiya, kizitaru pozil pukalUril,
uLar iLanj cin2ai malarum oLitaru caTaimuTi atan2 mEl
vaLar iLampiRai uTaiyAr--varttamAn2Iccarattar E.

பொருள்: தளிர்களை உடையதும் இளமையானதுமாகிய கொடிகள் வளர்ந்து குளிர்ந்த நீர்நிலையில் சாய வண்டுகள் ஏற, இளமான் உள் நுழைவதற்குக் கிழிபடும் சோலைகளை உடைய திருப்புகலூரில் இளஞ்சுனையில் மலரும் ஒளிதருஞ்சடை முடிமேல் வளருகின்ற இளம்பிறையை உடையவர் திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: இளமுழை - இளமான். உளர் - அசைகின்று; கழல்கின்று. தளிர்களையுடைய கொடி. இளங்கொடி. தண்கயம் - குளிர்ந்த நீர் நிலையில். இரிய - சாய. சுனை மலரும் ஒளிருஞ்சடை. சடைமுடிமேல் பிறை உடையார்.

In the city of Pugaloor, forests are many all around, inside cool water ponds are located all over. Adjoining the water pools, grows young cowslip creeper in large numbers. The beetles suddenly rise and enter through the holes of tender shoots of creepers and plants. While crossing they destroy the tender leaves of the creepers. Our

Lord Civa adorns His matted hair with flowers that blossomed in the water ponds. Along with this He retains the moon also on His matted hair. He is the Lord of Pugaloor - Vartha-maaneech-charam.

2470. தென்சொல்விஞ்சமர்வடசொல்திசைமொழியெழில்நரம்பெடுத்துத்
துஞ்சுநெஞ்சிருள்நீங்கத்தொழுதெழுதொல்புகலூரில்
அஞ்சனம்பிதிர்ந்தனையஅலைகடல்கடையவன்றெழுந்த
வஞ்சநஞ்சணிகண்டர்வர்த்தமானீச்சரத்தாரே. 7

தென் சொல்விஞ் சமர்வட சொல்திசை மொழி எழில் நரம்பு எடுத்துத்
துஞ்சு நெஞ்சு இருள் நீங்கத் தொழுது எழுதொல் புகலூரில்
அஞ்சு அனம் பிதிர்ந்து அனைய அலைகடல் கடையவன்று எழுந்த
வஞ்ச நஞ்சணி கண்டர் வர்த்தமானீச்சரத்தாரே.

ten2 col, vinjcu amar vaTa col,-ticai mozi, ezil narampu eTuttut
tunjcu nenjcu iruL nIgkat tozutu ezu tol pukalUril,
anjcan2am pitirntan2aiya, alaikaTal kaTaiya an2Ru ezunta,
vanjca nanjcu aNi kaNTar--varttamAn2IccarattArE.

பொருள்: தொண்டர்கள் தமிழ்மொழி, விஞ்சமர் வடமொழி மற்றும் திசைமொழிகளில் இசை எழுச்சியுடைய சிவதோத்திரங்களை, சோர்ந்த நெஞ்சில் உள்ள அகத்திருள் நீங்கக் கூறித் தொழுதுகொண்டே எழுகின்ற திருப்புகலூரில், மை பிதிர்ந்து எழுந்ததுபோல அன்று கடலைக் கடைய எழுந்த கரிய (ஆலகால) நஞ்சினை அணிந்த கண்டத்தர்; திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: தென்சொல் – தமிழ். விஞ்சுதல் – மிகுதல். வடசொல் – ஆரியபாடை. திசைமொழி – ஏனைய மொழிகளினின்று தமிழில் வந்து வழங்கும் சொற்கள். சிவதோத்திரம் பாடும் பாஷைகள் குறிக்கப்பட்டன. நெஞ்சு இருள் – நெஞ்சிலுள்ள (அகத்து) இருள். எழில் நரம்பெடுத்தலாவது – இசை எழுச்சியையுடைய யாழ்நரம்பில் அமைத்துப் பாடுதல். அஞ்சனம் – மை. நஞ்சுக்குவமை.

Sincere devotees who are scholars in Tamil, Sanskrit and in other languages fillip the strings of lute and adjust it and then play on it divine songs for shedding their mental agony. Then they worship our Lord in Pugaloor. This Lord imbibed the poison that came out of the ocean when the seawater was churned. As He stopped the poison

in the throat His neck is like dark blue gem. He is the Lord who is manifest in Pugaloor - Vartha-maaneech-charam.

2471. சாமவேதமோர்கீதமோதியத்தசமுகன்பரவும்
நாமதேயமதுடையார்நன்குணர்ந்தடிகளென்றேத்தக்
காமதேவனைவேவக்கனலெரிகொளுவியகண்ணார்
வாமதேவர்தண்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. 8

சாமவேதம் ஓர்கீதம் ஓதி அத்த சமுகன் பரவும்
நாமதேயம் அதுடையார் நன்குணர்ந்து அடிகள் என்றேத்தக்
காமதேவனை வேவக்கனல் எரிகொளுவிய கண்ணார்
வாமதேவர் தண் புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

cAma vEtam Or kItam Oti at tacamukan2 paravum
nAma tEyam atu uTaiyAr, nan2ku uNarntu, "aTikaL" en2Ru Etta;
kAma tEvan2ai vEvak kan2al eri koLuviya kaNNAr;
vAma tEvar--taN pukalUr varttamAn2Iccarattar.

பொருள்: சாமவேத கீதம் ஓதி, அந்தப் பத்துத்தலை இராவணன் தன்னை வழிபட்டு நலமுற்றான் என்ற பெயருடையார்; அவரே நம் சுவாமிகள் என்று நன்குணர்ந்து ஏத்த, மன்மதன் எரிந்து வீழக் கனல் எரி கொளுத்திய நெற்றிக் கண்ணர்; வாமதேவர் ஆகிய அவர் திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: தசமுகன் (இராவணன்) சாமவேத கீதம்பாடி நலம் உற்றான். நாமதேயம் – பெயராற் சுட்டப்படுவது. கண்ணார் – நெற்றிக் கண்ணினார். வாமதேவர் – பஞ்சப்பிரம மந்திர ரூப மூர்த்திகளுள் ஒன்றாய் விளங்கும் சிவபிரான். சதாசிவருடைய ஐந்துமுகத்தில் நான்காவது வாமதேவம்.

Our Lord is manifest in cool Pugaloor. Raavanan, the king of Sri Lanka got crushed under the Himalayas mountain. He then sang divine songs in Saama Vedam and praised the city and its God's name. He understood and praised him as Supreme Being. This Lord burnt the deity of love - Kaaman through His third eye.

2472. சீரணங்குறநின்செருவுறுதிசைமுகனோடு
நாரணன்கருத்தழியநகைசெய்தசடைமுடிநம்பர்
ஆரணங்குறுமுமையையஞ்சுவித்தருளுதல்பொருட்டால்
வாரணத்துரிபோர்த்தார்வர்த்தமானீச்சரத்தாரே. 9

சீரணம் அங்குற நின்செருவுறு திசைமுகனோடு
நாரணன் கருத்தழிய நகை செய்த சடைமுடி நம்பர்
ஆரணம் குறும் உமையை அஞ்சுவித்து அருளுதல் பொருட்டால்
வாரணத்து உரிபோர்த்தார் வர்த்தமானீச்சரத்தாரே.

cIr aNagku uRa ninRa ceru uRu ticaimukan2OTu
nAraNan2 karuttu aziya nakai ceyta caTai muTi nampar;
Ar aNagku uRum umaiyai anjcuvittu, aruLutal poruTTAl,
vAraNattu uri pOrttAr--varttamAn2IccarattArE.

பொருள்: தங்களுடைய பெருமை அழிவுறப் போரிட்டு நின்ற பிரமனோடு நாரணனும் அவர்களுடைய அகந்தை அழியப் புன்முறுவல் செய்தவர்; சடை முடி உடைய நம்பர்; மிக்க அழகுடைய உமையம்மையை அஞ்சுவித்து அருளும் காரணத்தால் யானையின் தோலை உரித்துப் போர்த்தார்; அவ்விறைவர், திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: அணங்கு – தெய்வம், அழகுமாம். செரு – இருவரும். சிவபிரானைக் காண்பேன் என்று சொல்லி நிகழ்த்திய போர். 'அவனொடு நாராயணனும் கருத்தழிய நம்பர் நகை செய்தார்'. அஞ்சுவித்து – அஞ்சச்செய்து. வாரணத்து உரி – யானைத்தோல்.

Tutelary deity Brahma and Thirumaal - both had pride between them and exulted to find out the chief of them. To dispel the wrong opinion of these two, our Lord Civa appeared before them as dazzling infinite supernal tall flame and laughed at them. Uma Devi trembled to see a big elephant coming towards her. Instantaneously our Lord Civa stripped off the hide of the elephant after killing it before her, to enable Uma Devi to ward off her terror.

2473. கையிலுண்டுழல்வாருங்கமழ்துவராடையினால்தம்
மெய்யைப்போர்த்துழல்வாருமுரைப்பனமெய்யெனவிரும்பேல்
செய்யில்வாளைகளோடுசெங்கயல்குதிகொளும்புகலூர்
மைகொள்கண்டத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரத்தாரே. 10

கையில் உண்டுழல் வாரும் கமழ் துவர் ஆடையினால் தம்
மெய்யைப் போர்த்து உழல்வாரும் உரைப்பன மெய் என விரும்பேல்
செய்யில் வாளைகளோடு செங்கயல் குதிகொளும் புகலூர்
மைகொள் கண்டத்து எம்பெருமான் வர்த்தமானீச்சரத்தாரே.

kaiyil uNTu uzalvArum, kamaz tuvar ATaiyin2Al-tam
meyyaip pOrttu uzalvArum, uraippan2a mey en2a virumpE!
ceyyil vALaikaLOTu cegkayal kutikoLum pukalUr,
mai koL kaNTattu emperumAn2--varttamAn2Iccarattare.

பொருள்: கையில் பிச்சை ஏற்று உண்டு அலைந்து திரியும் சமணரும் நாறும் துவராடையால் உடலைப் போர்த்துத் திரியும் பவுத்தரும் உரைப்பன மெய்யுரை என அவற்றை விரும்பற்க. வயலில் வாளை மீன்களோடு செங்கயல்மீன்கள் மகிழ்ச்சியில் குதி கொள்ளும் புகலூரில் உள்ள, கரிய கண்டத்து எம்பெருமான் வர்த்தமானீச்சரத்தாரே.

குறிப்புரை: ஆடையினால் தம் உடம்பைப் போர்த்து உழல்வார் தேரர். உரைப்பன – உரைக்கும். புறப்புறச் சமயக் கொள்கைகளை. மெய் – வாய்மை. விரும்பேல் – விரும்பாதே. செய் – கழனி. வாளையும் கயலும் மீன்கள். மை – கருநிறம்.

Our Lord Civa is the Neelakandar. He is manifest in Pugaloor. In this city the carp fish and the sword fish jump and play in the fields, full of water and enjoy themselves. Our Lord of this city is very famous and the most exalted Supreme Being. Oh! My dear devotees, do not think that the preaching of the Jains who accept food in their hands and eat, as well as the teaching of the Buddhists who cover their body with ochre cloth are real, divine, virtuous knowledge. They are only false propaganda.

2474. பொங்குதண்புனல்சூழ்ந்துபோதணிபொழில்புகலூரில்
மங்குல்மாமதிதவழும்வர்த்தமானீச்சரத்தாரைத்
தங்குசீர்திகழ்ஞானசம்பந்தன்தண்டமிழ்பத்தும்
எங்குமேத்தவல்லார்களெய்துவரிமையவருலகே. 11

பொங்கு தண்புனல் சூழ்ந்து போதணி பொழில் புகலூரில்
மங்குல் மாமதி தவழும் வர்த்தமானீச்சரத்தாரைத்
தங்கு சீர்திகழ் ஞானசம்பந்தன் தண்டமிழ் பத்தும்
எங்கும் ஏத்த வல்லார்கள் எய்து வரிமை அவருலகே.

pogku taNpun2al cUzntu pOtu aNi pozil pukalUril,
magkul mA mati tavazum varttamAn2Iccarattarai,
tagku cIr tikaz njAn2acampantan2 taN tamizpattum
egkum Etta vallArkaL, eytuvar, imaiyavar ulakE.

பொருள்: மேலெழுந்து பெருகும் குளிர்புனல் சூழ்ந்து மலர்கள் அழகு செய்யும் சோலைகள் உடைய புகலூரில் ஆகாயத்தில் பெரிய மதி தவழ்ந்து செல்லும் வர்த்தமானீச்சரத்தாரை, புகழ் நின்று விளங்கும் ஞானசம்பந்தன் பாடிய தண்ணிய தமிழ்ப்பாடல்கள் பத்தினையும் எவ்விடத்திலும் ஏத்த வல்லவர்கள் இமையவர் உலகை எய்துவர்.

குறிப்புரை: போது – பூவின் முன்னைய பருவத்தது. மங்குல் – ஆகாயம். மதி தவழும் ஈச்சுரம் என்று கொண்டு. அத்திருக்கோயிலின் உயர்ச்சியைக் கருதுக. ஈச்சரத்தாருக்கு ஏற்றின் பிறையணிந்த வரலாறு குறித்ததாம். தங்கு சீர் – நிலைத்த சீர்த்தி. தண்டமிழ் என்றது இத்திருப்பதிகத்தை.

The famous city of Pugaloor is full of cool water in plenty in ponds and tanks. Also the city is surrounded by big forests full of good trees with flowers. Here the temple in which our Lord of Pugaloor - Vartha-maaneech-charam is manifest is very big and tall towers reach the sky. Our saint Thiru-gnana-Sambandar who is a very famous scholar came to Pugaloor and praised our Lord, worshipped Him and sang ten divine songs on Him. Those devotees, who memorise, and chant devotedly these ten songs everywhere they visit, will reach the world of devas.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

92ஆம் பதிகம் முற்றிற்று
End of 92nd Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 229 பதிக எண்: 93

93. திருத்தெங்கூர்

93. THIRU-TH-THENKOOR

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருத்தெங்கூர் என்னும் இத்திருத்தலமானது காவிரித் தென்கரைத் தலங்களுள் 116ஆவது தலமாகும். இது திருநெல்லிக்காவிற்குத் தென்மேற்கில் சுமார் 4 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. திருவாரூரிலிருந்து திருநெல்லிக்கா செல்லப் பேருந்துகள் உள்ளன. ஊரின் பெயர் தெங்கூர் என்றே சம்பந்தர் தேவாரத்தில் காணப்படுகிறது. சுந்தரர் ஊர்த்தொகையில் தேங்கூர் என்று குறிப்பிட்டுள்ளார். 'நாங்கூருறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பானே' என்பன அவர் வாக்கு.

இறைவரின் திருப்பெயர் வெள்ளிமலை நாதர். இவ்வூர்த் திருப்பதிகத்தில் ஒவ்வொரு திருப்பாடலிலும் 'வெள்ளியங் குன்றமர்ந்தாரே' என்று இறைவர் திருப்பெயரைக் குறிப்பிட்டுள்ளார் சம்பந்தர். இறைவியாரின் திருப்பெயர் பெரிய நாயகி. திருமகளும், நவக்கோள்களும் பூசித்துப் பேறு எய்தினர். திருமகள் வழிபட்ட இலிங்கம். அத்திருமகள் சந்நிதிக்கு எதிரில் இருக்கின்றது. இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று உள்ளது. நவக்கிரகங்கள் பூசித்த லிங்கங்கள் உண்டு. அம்பாள் கோவில் தனியாக உள்ளது. அக்கோயில் தெற்கு பார்த்து அமையப்பெற்றுள்ளது. சுவாமி கோயிலுக்குத் தென்கிழக்குத் திக்கில் உள்ளது. அம்மன் உருவம் சிறியது. நவக்கிரகங்கள் பூசித்தன என்பதற்குப் பிரகாரத்தில் 9 லிங்கங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

திருஞானசம்பந்த நாயனார், திருவாரூர், திருக்காறாயில், தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம் ஆகிய தலங்களை வழிபட்டு வந்த காலத்தில், தெங்கூரை அணைந்து பரவிப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2475. புரைசெய்வல்வினைதீர்க்கும்புண்ணியர்விண்ணவர்போற்றக்
கரைசெய்மால்கடல்நஞ்சையுண்டவர்கருதலர்புரங்கள்
இரைசெய்தாரழலூட்டியுழல்பவரிடுபலிக்கெழில்சேர்
விரைசெய்பூம்பொழில்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 1

புரை செய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரை செய் மால்கடல் நஞ்சை உண்டவர் கருதலர் புரங்கள்
இரை செய்து ஆரழலூட்டி உழல்பவர் இடுபலிக்கு எழில்சேர்
விரை செய் பூம்பொழில் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

purai cey valvin2ai tIrkkum puNNiyar; viNNavar pORRa,
karai cey mAl kaTal nanjcai uNTavar; karutalar puragkaL
irai ceytu Ar azalUTTi, uzalpavar, iTupalikku;--ezil cEr
virai cey pUmpozil-tegkUr veLLi am kun2Ru amarntArE.

பொருள்: துன்பம் செய்யும் வலிய வினைகளைத் தீர்க்கும் புண்ணியர்; தேவர்கள் போற்றித் துதிக்கவே பேரொலியுடன் கரிய கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவர்; பகைவர்களின் மதில்களை மிக்க நெருப்பினுக்கு ஊட்டி இரை செய்தவர்; ஊரார் இடுகின்ற பிச்சைக்கு அலைந்து திரிபவர்; இத்தகைய இயல்புடையவர் நறுமணம் செய்கின்ற பூஞ்சோலைகளை உடைய திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றில் அமர்ந்தார்.

குறிப்புரை: ஆரழலுக்கு இரையாச் செய்து ஊட்டி, இடுபலிக்கு உழல்பவர் அமர்ந்தார் என்றார். தென்கு (தெங்கு) + ஊர் + தெங்கூர்.

The city 'Thenkoor' is surrounded by fascinating forest areas. Fragrance is always felt all around the area. Our Lord Civa is manifest in the temple called 'Velliyan Kundru'. He removes past bad karma that causes ailments to the devotees. He is the embodiment of virtuous deeds. He imbibed the poison that came out of the sea. He was adored by devas. He burnt the three forts of asuras. He used to roam about to get alms.

2476. சித்தந்தன்னடிநினைவார்செடிபடுகொடுவினைதீர்க்கும்
கொத்தின்தாழ்சடைமுடிமேற்கோளெயிற்றரவொடுபிறையன்
பத்தர்தாம்பணிந்தேத்தும்பரம்பரன்பைம்புனல்பதித்த
வித்தன்தாழ்பொழில்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 2

சித்தம் தன் அடி நினைவார் செடி படு கொடுவினை தீர்க்கும்
கொத்தின் தாழ் சடை முடிமேல் கோள் எயிற்று அரவொடு பிறையன்
பத்தர் தாம் பணிந்து ஏத்தும் பரம்பரன் பைம்புனல் பதித்த
வித்தன் தாழ்பொழில் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

cittam tan2 aTi nin2aivAr ceTi paTu koTuvin2ai tIrkkum,
kottin2 tAzcaTai muTimEl kOL eyiRRu aravoTu piRaiyan2;
pattar tAm paNintu Ettum paramparan2; paimpun2al patitta
vittan2--tAzpozil-tegkUr veLLi am kun2Ru amarntArE.

பொருள்: சித்தத்தில் தன் திருவடிகளை நினைவாரின் பாவத்தில் தோன்றிய கொடிய வினைகளைத் தீர்ப்பவர்; முடிச்சு முடிச்சான தாழ்ந்த சடைமுடிமேல் கொல்லுகின்ற நச்சுப் பற்களையுடைய பாம்பினொடு பிறையையும் அணிந்தவர்; பத்தர்கள் பணிந்து ஏத்தும் பரம்பரன்; குளிர்ந்த புனலில் பதியச் செய்த விதையானவன் ஆகிய சிவன், அடர்ந்த பூஞ்சோலைகளை உடைய திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றில் அமர்ந்தார்.

குறிப்புரை: தன் அடி சித்தம் நினைவார் வினை என்றியைக்க. சித்தத்தில் நினைவார். செடிபடு – பாவத்தாலுண்டான. பிறையன் என்பது சிவனென்னும் பெயரளவாய் நின்று. தீர்க்கும் எனுமெச்சத்தைக் கொண்டது. கோள் – வலிமை, கொலை. புனல் பதித்த வித்தன் – நீரில் பதியச் செய்த விதையானவன் (தி. 6 ப. 15 பா. 2) (திருவாசகம் 253).

Our Lord Civa is manifest in Thenkoor city in the temple called Velliyan Kundru. The city is surrounded by forest area where short trees are many. He removes the strong severe sins of devotees who think of Him with oneness of mind. His bulky entangled locks of hair is adorned by the young moon along with the snake which moves around the moon. The servitors prostrate and praise Him and worship Him. He is the age old Supreme Being. He resembles the seeds dropped in water.

2477. அடையும்வல்வினையகலஅருள்பவரானலுடைமழுவாட்
படையர்பாய்புலித்தோலர்பைம்புனற்கொன்றையர்படர்புன்
சடையில்வெண்பிறைசூடித்தார்மணியணிதருதறுகண்
விடையர்வீங்கெழில்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 3

அடையும் வல்வினை அகல அருள்பவர் ஆனலுடை மழுவாட்
படையர் பாய்புலித் தோலர் பைம்புனல் கொன்றையர் படர்புன்
சடையில் வெண்பிறை சூடித்தார் மணிஅணிதரு தறுகண்
விடையர் வீங்கெழில் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

aTaiyum valvin2ai akala aruLpavar, an2al uTai mazuvAL-
paTaiyar, pAy pulittOlar, paimpun2a kon2Raiyar, paTar pun2-
caTaiyil veNpiRai cUTit tAr maNi aNi taru taRukaN
viTaiyar-vIgku ezil-tegkUr veLLi am kun2Ru amarntArE.

பொருள்: அடைந்த, அடைய இருக்கின்ற வலிய வினைகள் அகல அருள்பவர்; வெப்பமுடைய மழுவாள் படையினர்; பாயும் புலியின் தோலை உடுத்தவர்; குளிர்ந்த புனலையும் கொன்றை மாலையையும் உடையவர்; படர்ந்த பொன்னிற சடையில் வெண்பிறையைச் சூடியவர்; கழுத்தில் மணியைத் தாராக அணிந்ததும் தறுகண்மை உடையதுமாகிய விடையை வாகனமாக உடையவர் ஆகிய இறைவர், மிக்க அழகுடைய தெங்கூர் வெள்ளியங்குன்றில் அமர்ந்தவரே.

குறிப்புரை: வினை அகல அருள்பவர். விடை எருதுக்கு அதன் கழுத்தில் மணி கட்டுதல் உண்மையான், மணி அணிதிரு விடை எனப்பட்டது. தறுகண் – கொடுமை; அஞ்சத் தக்கவற்றிற்கு அஞ்சாமை. 'தறுகணன்' (நன்னூல்) கண் என்பதன் முன் சில முதனிலைகள் சேர்ந்து வெவ்வேறு பொருள் பயத்தலை – அலக்கண், புண்கண், இடுக்கண் (இடுங்குகண்) வண்கண் முதலியவற்றிற் காண்க.

Our Lord Civa is manifest in the very fascinating city of Thenkoor. He removes the severe sins of His devotees completely. He holds a battleaxe, which is very hot. He wears on His waist tiger's hide as His dress. His entangled locks of hair He adorns with Indian laburnum flowers. Near the flowers He retains the moon. He loves to sustain the white strong bull for His conveyance and He moves about on His bull. A bell has been tied round the neck of the bull and it goes on ringing whenever He moves fast.

2478. பண்டுநான்செய்தவினைகள்பறையவோர்நெறியருள்பயப்பார்
கொண்டல்வான்மதிசூடிக்குரைகடல்விடமணிகண்டர்
வண்டுமாமலரூதிமதுவுணஇதழ்மறிவெய்தி
விண்டவார்பொழில்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 4

பண்டு நான் செய்த வினைகள் பறையவோர் நெறி அருள் பயப்பார்
கொண்டல் வான்மதி சூடிக்குரை கடல் விட மணிகண்டர்
வண்டு மாமலர் ஊதி மதுவுண இதழ் மறிவு எய்தி
விண்டவார் பொழில் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

paNTu nAn ceyta vin2aikaL paRaiya, Or neRi aruL payappAr;
koNTal vAn2mati cUTi; kurai kaTal viTam aNi kaNTar--
vaNTu mA malar Uti matu uNa, itaz maRivu eyti
viNTa vAr pozil-tegkUr veLLi am kun2Ru amarntArE.

பொருள்: முன்பு நான் செய்த வினைகள் அழியச் சிறந்ததொரு வழியை அருள் செய்வார்; மேகம் தவழும் வானத்தில் உள்ள பிறைமதியைச் சூடியவர்; ஒலிக்கின்ற கடலில் பிறந்த விடம் தங்கிய நீலமணி போன்ற கண்டத்தை உடையவர்; வண்டுகள் பெரிய மலர்களிடத்து முரன்று தேனை உண்ண மலரிதழ்கள் அசைவெய்தி விரிந்த நீண்ட மலர்ச்சோலைகளைக் கொண்ட திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றில் அமர்ந்தவரே.

குறிப்புரை: பறைய – அழிய, பயப்பார். கொண்டல் – மேகம். வானிற்கு அடை. குரைகடல் – முழங்கும் கடல். வண்டு . . . விண்ட பொழில் – இயற்கை உணர்த்திற்று.

The city Thenkoor is surrounded by many forest areas. Here tall trees and plants with good flowers are many. The beetles come in large numbers to suck the honey in these flowers. As the beetles disturb the buds they all blossom. In this city, our Lord Civa is manifest in the temple called Velliyan Kundru. He eradicates the entire sins that accrued in the past births due to bad karma and graces me by giving virtuous divine knowledge. He retains on His head the baby moon moving in the sky. His neck is dark blue in colour like sapphire because He imbibed the poison that came out of the milky ocean.

2479. கழித்தவார்புனற்கங்கைசூடியோர்காலனைக்காலால்
தெழித்துவானவர்நடுங்கச்செற்றவர்சிறையணிபறவை
கழித்தவெண்டலையேந்திக்காமனதுடல்பொடியாக
விழித்தவர்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 5

கழித்தவார் புனல் கங்கை சூடியோர் காலனைக் காலால்
தெழித்து வானவர் நடுங்கச் செற்றவர் சிறை அணி பறவை
கழித்த வெண்தலை ஏந்திக் காமனது உடல் பொடியாக
விழித்தவர் திருத்தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

cuzitta vAr pun2al kagkai cUTi, or kAlan2aik kAlAl-
tezittu, vAn2avar naTugkac ceRRavar; ciRai aNi paRavai
kazitta veNtalai Enti; kAman2atu uTal poTi Aka
vizittavar--tirut tegkUr veLLi amkun2Ru amarntArE.

பொருள்: சுழற்சியைக் கொண்ட மிக்க புனலுடைய கங்கையைச் சிரசில் சூடியவர்; கொலைத் தொழிலில் ஒப்பற்ற காலனைச் சினந்து அதட்டிக் காலால் தேவர்கள் நடுக்கங் கொள்ள அழித்தவர்; அன்னப்பறவையை வாகனமாகக் கொண்ட பிரமனின் வெண்மையான

கபாலத்தில் பிச்சை ஏந்தியவர்; மன்மதனின் உடலைச் சாம்பலாகும்படி விழித்து எரித்தவர் ஆகிய இறைவர் திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றில் அமர்ந்தாரே.

குறிப்புரை: கழித்த – சுழற்சியைச் செய்த. தெழித்து – கோபித்து. சிறையணிபறவை கழித்த வெண்டலை – பிரமகபாலம். அன்னப்பறவையான காரணம் பற்றியது.

Our Lord Civa is manifest in Thiru-th-thenkoor – temple Velliyan Kundru. He supports the river Ganges in His matted hair. He kicked Kaalan, the deity for death. On seeing this event the celestials trembled. The tutelary deity Brahma took the form of a swan and flew high in the sky. Our Lord holds Brahma's skull in His hand to receive alms. He opened His third eye in the forehead and burnt the body of Kaaman, the god of love.

2480. தொல்லைவல்வினைதீர்ப்பார்சுடலைவெண்பொடியணிசுவண்டர்
எல்லிசூடிநின்றாடுமிறையவரிமையவரேத்தச்
சில்லைமால்விடையேறித்திரிபுரந்தீயெழச்செற்ற
வில்லினார்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 6

தொல்லை வல்வினை தீர்ப்பார் சுடலை வெண்பொடி அணி சுவண்டர்
எல்லி சூடி நின்றாடு மிறையவர் இமையவர் ஏத்தச்
சில்லை மால் விடை ஏறித் திரிபுரந் தீஎழச் செற்ற
வில்லினார் திருத்தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

tollai valvin2ai tIrppAr; cuTalai veNpoTi aNi cuvaNTar;
elli cUTi nin2Ru ATum iRaiyavar; imaiyavar Etta,
cillai mAlviTai ERi, tiripuram tI ezac ceRRa
villin2Ar--tirut tegkUr veLLi am kun2Ru amarntArE.

பொருள்: முன்பு ஈட்டிய வலிய வினைகள் இரண்டையும் தீர்ப்பார். சுடுகாட்டுச் சாம்பலை அணியும் வீரர்; தண்ணொளியுடைய திங்களைச் சூடி ஆடும் இறையவர்; தேவர்கள் போற்றி செய்யச் சிலைக்கும் பெரிய எருதினை ஊர்த்து முப்புரம் தீயெழ அழித்த மலைவில்லை உடையவர் ஆகிய இறைவர் திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றில் அமர்ந்தாரே.

குறிப்புரை: தொல்லைவினை – பூர்வகர்மம், பிராரப்தம், சஞ்சிதம் இரண்டும். சுவண்டர் – சு = அண்டர் நல்லதேவர் எனவும் இடனில்லை. 'சுந்தரராய்த் தூமதியம் சூடுவது சுவண்டே' (தி. 7 பா. 470) என்பது கொண்டு முன் பொருத்தம் என்றும். அது இங்குப் பொருந்தாது. எல்லி – தண்ணொளியுடைய திங்கள்.

எல் – ஒளி. சில்லை – இழிவு. பாசக்கடற்குளே வீழ்கின்றதே இழிவு. வில்லினார் – மேருமலையாகிய வில்லை உடையார்.

Our Lord Civa is manifest in Thiru-th-thenkoor temple known as Velliyan Kundru. He eradicates the sins of past karma of devotees. He applied the holy ashes of the burning ghat over His body. His avocation is to dance. He does so retaining the moon on His matted hair. He is the holder of a big bow. He rode on His bull and fired and destroyed completely the three forts of asuras, when the celestials prayed to our Lord Civa for His help.

2481. நெறிகொள்சிந்தையராகிநினைபவர்வினைகெடநின்றார்
முறிகொள்மேனிமுக்கண்ணர்முளைமதிநடுநடுத்திலங்கப்
பொறிகொள்வாளரவணிந்தபுண்ணியர்வெண்பொடிப்பூசி
வெறிகொள்பூம்பொழில்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 7

நெறிகொள் சிந்தையராகி நினைபவர் வினைகெட நின்றார்
முறிகொள் மேனி முக்கண்ணர் முளைமதி நடுநடுத்து இலங்கப்
பொறிகொள் வாளரவு அணிந்த புண்ணியர் வெண்பொடிப் பூசி
வெறிகொள் பூம்பொழில் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

neRi koL cintaiyar Aki nin2aipavar vin2ai keTa nin2RAr;
muRi koL mEn2i mukkaNNar; muLaimati naTu naTuttu ilagka,
poRi koL vAL aravu aNinta puNNiyar; veNpoTippUci--
veRi koL pUmpozil-tegkUr veLLi am kun2Ru amarntArE.

பொருள்: சிவநெறியில் பயிலும் சிந்தை உடையவராகித் தன்னை தியானிப்பவரின் வினை கெடும்படித் துணையாக நின்றவர்; செந்தளிர் போன்ற மேனியர்; முக்கண்ணர்; பிறை மதி நடுநடுங்கி விளங்க அதனுடன் புள்ளிகளையுடைய கொல்லும் பாம்பினையும் சேர்த்து அணிந்தவர்; புண்ணியர்; திருநீற்றினைப் பூசியவர் ஆகிய இறைவர் மிக்க மணமுடைய பூம்பொழில் திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றில் அமர்ந்தாரே.

குறிப்புரை: நெறி – திருநெறி. முறி – தளிர். முளைமதி – பிறை. வெறி – மணம்.

Our Lord Civa is manifest in the temple known as Velliyan Kundru situated in the city of Thiru-th-thenkoor. The city is surrounded by big forest areas full of flower plants. The flowers blossom and spread fragrance all over the area. He smears His

body with holy ashes. Those devotees who live honestly with virtuous mind and think always about God Civa will get rid of their sins. His body is very fine like tender leaves and He has three eyes. The moon He retains on His head gets freightened to see the snake moving around His head.

2482. எண்ணிலாவிறலரக்கனெழில்திகழ்மால்வரையெடுக்கக்
கண்ணெலாம்பொடிந்தலறக்கால்விரலூன்றியகருத்தர்
தண்ணுலாம்புனற்கண்ணிதயங்கியசடைமுடிச்சதுரர்
விண்ணுலாம்பொழில்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 8

எண்ணிலா விறலரக்கன் எழில்திகழ் மால்வரை எடுக்கக்
கண்ணெலாம் பொடிந்து அலறக்கால் விரல் ஊன்றிய கருத்தர்
தண்ணுலாம் புனல் கண்ணி தயங்கிய சடை முடிச்சதுரர்
விண்ணுலாம் பொழில் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

eN ilA viRal arakkan2 ezil tikaz mAlvarai eTukka,
kaN elAm poTintu alaRa, kAlviral Un2Riya karuttar;
tan2 ulAm pun2al kan2n2i tayagkiya caTai muTic caturar--
viN ulAm pozil--tegkUr veLLi am kun2Ru amarntArE.

பொருள்: அளவில்லாத ஆற்றலுடைய அரக்கன் இராவணன் அழகு விளங்கும் கயிலை மால்வரையை எடுக்க, அவனுடைய இருபது கண்களும் நீர் சொரிந்து அலறக் கால்விரல் ஊன்றிய தலைவர்; குளிர்ச்சி தங்கிய கங்கையில் பிறையாகிய கண்ணி அசையும் சடைமுடியை உடைய திறலர் ஆகிய இறைவர் விண்ணளவு ஓங்கிய பொழில்களையுடைய திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றில் அமர்ந்தாரே.

குறிப்புரை: எண் – கணக்கு. விறல் – வலிமை. கருத்தர் தலைவர் வினை முதல்வர். கண்ணி – கங்கை. பிறைக்கண்ணியுமாம். விண் உலாம் பொழில் – சோலையுயர்வு குறித்தது.

Lord Civa is manifest in the temple known as Velliyan Kundru in the city of Thiru-th-thenkoor. The city is surrounded by very big forest areas. Here the trees are all very big and tall, covering the sky. The king of Sri Lanka has immeasurable prowess in abundance. He once came near the Himalayas mountain and tried to displace the mountain. While he was trying to do it, our Chief Lord Civa slightly pressed the top

area of the mountain with His toe. At that moment Raavanan's eyes were crushed and he wept and swaggered. The Lord supports the cool river Ganges on His matted hair.

2483. தேடித்தானயன்மாலுந்திருமுடியடியிணைகாணார்
பாடத்தான்பலபூதப்படையினர்சுடலையிற்பலகால்
ஆடத்தான்மிகவல்லாருச்சுனற்கருள்செயக்கருதும்
வேடத்தார்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 9

தேடித்தான் அயன்மாலும் திருமுடி அடியிணை காணார்
பாடத்தான் பலபூதப் படையினர் சுடலையிற் பலகால்
ஆடத்தான் மிகவல்லாருச் சுனற்கருள் செயக்கருதும்
வேடத்தார் திருத்தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

tETittAn2, ayan2 mAlum, tirumuTi aTi iNai kANAr;
pATattAn2 pala pUtappaTaiyin2ar; cuTalaiyil palakAl
ATattAn2 mika vallar; aruccun2aRku aruL ceyak karutum
vETattAr--tirut tegkUr veLLi am kun2Ru amarntArE.

பொருள்: அயனும் மாலும் முறையே தம்முடைய திருமுடியினையும் திருவடியினையும் தேடித்தான் காணார்; பாடுவதற்கு பல சிவகணங்களை உடையவர்; சருவ சங்கார காலத்தில் அனைத்தும் அழிந்தொழிந்த நிலைக்களத்தில் புனருற்பவத்தின் பொருட்டு ஐந்தொழிற் கூத்து ஆடுவதற்குத்தான் மிக வல்லவர்; அருச்சுனனுக்கு அருள்செயக் கருதும் வேட்டுவக் கோலத்தார் ஆகிய இறைவர் திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றில் அமர்ந்தாரே.

குறிப்புரை: அயனும் மாலும் முறையே திருமுடியையும் திருவடியையும் தேடித் தான்காணார். இணை – ஒத்தன (இரண்டும்). பாட . . . படையினார் – பாட என்னும் வினையெச்சம் படையை உடையவர் என்பதில் உள்ள உடையவர் எனும் வினைக் குறிப்பைக் கொண்டது, ஆடவல்லர். வேடத்தார் – வேட்டுவக் கோலத்தார்.

The tutelary deities Brahma and Thirumaal went out in the universe to search and see our Lord's holy head and holy feet, but both failed in their attempts. Our Lord's army of Bhutas goes on singing and dancing in the burning ghat where our Lord dances for long. He graced Arjuna in the guise of a hunter. This Lord resides in Thiru-th-thenkoor.

2484. சடங்கொள்சீவரப்போர்வைச்சாக்கியர்சமணர்சொல்தவிர
இடங்கொள்வல்வினைதீர்க்குமேத்துமினிருமருப்பொருகைக்
கடங்கொள்மால்களிற்றுரியர்கடல்கடைந்திடக்கனன்றெழுந்த
விடங்கொள்கண்டத்தார்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. 10

சடங்கொள் சீவரப் போர்வைச் சாக்கியர் சமணர் சொல்தவிர
இடங்கொள் வல்வினை தீர்க்கும் ஏத்தும் இனிருமருப் பொருகைக்
கடங்கொள் மால்களிற்று உரியர் கடல் கடைந்திடக் கனன்று எழுந்த
விடங்கொள் கண்டத்தார் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.

caTam koL cIvarappOrvaic cAkkiyar, camaNar, col-tavira,
iTam koL valvin2ai tIrkkum; Ettumin2--irumaruppu orukaik
kaTam koL mAl kaLiRRu uriyar, kaTal kaTaintiTak kan2an2Ru ezunta
viTam koL kaNTattar, tegkUr veLLi am kun2Ru amarntArE!

பொருள்: உடலின்மேல் துவருட்டிய போர்வை போர்த்த சாக்கியர், சமணர்கள் தவிர்க்கும், மாயையைப் பற்றுக்கோடாகக் கொண்ட வல்வினையைத் தீர்க்கும், இரண்டு பெரிய தந்தங்களையும் ஒரு பெரிய துதிக்கையினையும் மதநீரையுங் கொண்ட பெரிய களிற்றின் தோலைப் போர்த்தியவர்; கடலைக் கடைந்திட கனன்று எழுந்த நஞ்சினைக் கொண்ட கண்டத்தினர் ஆகிய இறைவர் திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றமர்ந்தாரே அவரை ஏத்துமின்.

குறிப்புரை: சடம் – உடம்பு, பொய். இடம் கொள் – மாயையைப் பற்றுக் கோடாகக் கொண்ட. இருமருப்பு – இரண்டு (பெருங்) கொம்பு. கடம் – மதநீர். களிற்றுரியர் – யானைத்தோலர். கனன்று – வெம்மை வீசி.

In the city of Thiru-th-thenkoor, the Jains and Buddhists wear ochre cloth, and go on preaching false propaganda against our Lord and against our saiva religion. Our Lord got disgusted with those two religionists and hated them, whereas He eradicates the sins of His devotees accrued from the past bad karma and graces them. He covered the His body with the hide of the big elephant, which He killed and ripped off. The elephant has two big tusks. He imbibed the poison which came out of the milky ocean while it was churned by devas and asuras. He kept the poison in His throat, and gave the appearance of sapphire, which is dark blue in colour.

2485. வெந்தநீற்றினர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரைக்
கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியுள்ஞானசம்பந்தன்
சந்தமாயினபாடல்தண்டமிழ்பத்தும்வல்லார்மேல்
பந்தமாயினபாவம்பாறுதல்தேறுதல்பயனே. 11

வெந்த நீற்றினர் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரைக்
கந்தமார் பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன்
சந்தமாயின பாடல் தண்டமிழ் பத்தும் வல்லார்மேல்
பந்தமாயின பாவம் பாறுதல் தேறுதல் பயனே.

venta nIRRin2ar tegkUr veLLi am kun2Ru amarntArai,
kantam Ar pozil cUznta kAziyuL njAn2acampantan2,
cantam Ayin2a pATal-taNtamiz pattum vallArmEl,
pantam Ayin2a pAvam pARutal tERutal payan2E.

பொருள்: சுட்ட திருநீற்றினர்; திருத்தெங்கூர் வெள்ளியங்குன்றமர்ந்தார் ஆகிய இறைவரை மணம் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன் பாடிய சந்தமுடைய தண்டமிழ் திருப்பதிகப் பாடல்கள் பத்தும் வல்லவர்கள் மேல் வினைப்பற்று உண்டாவதற்கு ஏதுவான பாவங்கள் நீங்கி ஓடுதலும் தெளிதலும் அடையும் பயனாம்.

குறிப்புரை: சந்தம் ஆயின பாடல் – சந்தப்பாடல். பந்தம் ஆயின பாவம் – வினைப்பற்று உண்டாவதற்கு ஏதுவான பாவங்கள். பாறுதல் – ஓடுதல். தேறுதல் – தெளிதல்.

Our Lord Civa is manifest in the temple known as Velliyan Kundru. He smears His body with holy ashes. Our Thiru-gnana-Sambandar was born in Seerkaazhi. This city is surrounded by vast big areas with sweet smelling flower plants. He came to Thiru-th-thenkoor, worshipped our Lord. Then he chanted these ten verses - a special verse called Chandap-paadal (stanza of four lines with four to twenty-six syllables to a line). Those devotees who can memorise these ten verses and chant them before our Lord will get rid of their sins accumulated from previous births. Their minds will get very clear ideas and all benefits.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

93ஆம் பதிகம் முற்றிற்று
End of 93rd Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 230 பதிக எண்: 94

94. திருவாழ்கொளிபுத்தூர் 94. THIRU-VAAZH-KOZHI-PUTH-OOR

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

திருவாழ்கொளிபுத்தூர் என்னும் இத்திருத்தலமானது மதுரை, இராமசுவாமிப் பிள்ளை என்னும் ஞானசம்பந்தப் பிள்ளையால் அச்சிடப்பெற்ற தேவாரத்தில், வாள்கொளி புத்தூர் என்றும், வேறுசில பதிப்பில், வாளொளி புற்றூர் என்றும் காணப்பெறுகின்றது. சேக்கிழார், பெரிய புராணத்தில் திருவாழ்கொளிபுத்தூர் என்றே குறித்துள்ளனர்.

மயிலாடுதுறை – சிதம்பரம் தொடர்வண்டிப் பாதையில் நீடூர் தொடர் வண்டி நிலையத்திற்கு வடக்கே 9 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இக்காலம் மயிலாடுதுறை, மணல்மேடு ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதியும் உண்டு. வைத்தீசுவரன் கோயிலுக்கு நேர் மேற்கிலும் 10 கி.மீ. அளவே. இறைவர் திருப்பெயர் மாணிக்க வண்ணர். இது திருமேனியின் ஒளிகாரணமாக ஏற்பட்ட திருப்பெயராகும். இப்பெயரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்வூர்க்குரிய ஒவ்வொரு திருப்பாட்டிலும், ‘வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை மறந்து என்நினைக்கேனே’ என இப்பெயரை எடுத்தாண்டுள்ளார்கள்.

இறைவி திருப்பெயர் வண்டமர் பூங்குழலி. இத்திருப்பெயரை, ஞானசம்பந்தர் இவ்வூர்ப் பதிகம் பாடல் எட்டில், ‘வண்டமர்பூங்குழல் மங்கையொர் பாகமாயவன்’ என்று குறித்தருளினார். திருமால், அருச்சுனன் ஆகியோர் பூசித்துப் பேறு பெற்றார்கள். துர்க்காதேவியாரும் வழிபட்ட தலம். துர்க்கைக்கு வழிபாடு இத்தலத்தில் சிறப்பாக நடைபெறுகின்றது. வாசுகி வழிபட்ட தலம். அவ்வாசுகிக்கு ஆண்டுதோறும் அபிடேக பூஜை நடைபெறுகின்றது. அருச்சுனனது வாளாயுதத்தை ஈசுவரன் மறைத்து வைக்கும் ஆற்றால் அவனை ஆட்கொள்ளக் கருதினார். வாளை எடுத்துச் செல்லும் வழியில், அவன் அதைத் தேடிவர, வாகையிலைகளை அறிகுறியாக இட்டுச் சென்றான். வாளிருந்த இடத்தில் வாசுகி மறைத்திருந்தது. அதை வழிபட்டு வாளைப் பெற்றான் அருச்சுனன். அக்காரணத்தால் வாளொளிபுற்றூர் என்று பெயர் வழங்கலாயிற்று.

தலவிருட்சம் வாகை. நெடுங்காலம் அது நின்றது. கி.பி. 1951ல் அம்மரம் பட்டுவிட்டது. ஆனால்,

'வாகை நுண்டுளி வீசும்
வாழ்கொளி புத்தூரு ளாரே'

எனவரும் தேவார அடிகளிலே இன்று அந்த வாகை வாழ்கிறது. திரிசிரபுரம் மகாவித்துவான், திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற தலபுராணம் அச்சில் வெளிவந்துள்ளது. இப்புராணத்தை எழுதுவித்தவர் புலவர் திரு. அ. ஐயாத்துரைப் பிள்ளை அவர்கள். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் இரண்டு, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

காழிவேந்தர், திருப்பந்தணைநல்லூரையும், திருவோமாம்புலியூரில் உள்ள வடதளியையும் வழிபட்டு, 'அலர்ந்த செந்தமிழ்ச் சொற்றொடை' பாடி, பிரியா விடைபெற்று, மதில் சூழ்ந்த பொற்பதியாகிய வாழ்கொளிபுத்தூர் அடைந்து போற்றிப் புனைந்தவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2486. சாகையாயிரமுடையார்சாமமுமோதுவதுடையார்
ஈகையார்கடைநோக்கியிரப்பதும்பலபலவுடையார்
தோகைமாமயிலனையதுடியிடைபாகமுமுடையார்
வாகைநுண்டுழிவீசும்வாழ்கொளிபுத்தூருளாரே. 1

சாகை ஆயிரமுடையார் சாமமும் ஓதுவது உடையார்
ஈகையார் கடைநோக்கி இரப்பதும் பலபல உடையார்
தோகை மாமயிலனைய துடியிடை பாகமும் உடையார்
வாகை நுண்டுழி வீசும் வாழ்கொளிபுத்தூர் உளாரே.

cAkai Ayiram uTaiyAr, cAmamum Otuvatu uTaiyAr,
IkaiyAr kaTai nOkki irappatum palapala uTaiyAr;
tOkai mA mayil an2aiya tuTiyiTai pAkamum uTaiyAr--
vAkai nuN tuLi vIcum vAzkoLiputtUr uLArE.

பொருள்: வாகை மரம் நுண்துளிகளைச் சிந்தும் திருவாழ்கொளிபுத்தூருளார், வேதத்தின் எண்ணற்ற சாகைகளின் பொருளை உடையவர்; சாமவேதம் ஓதுவதை உடையார்; ஈகை உடையார்; வாயிற்கடையில் நின்று பிறரிடம் இரப்பதும் பல உடையார்; தோகையை உடைய மயிலேறுவின் சாயலையும் துடிபோன்ற இடையையும் உடையவளாகிய உமையைப் பாகமாகவும் உடையார்.

குறிப்புரை: சாகை – வேதநூற்பிரிவு. சாமம் – சாமவேதம். ஈகை – வினைத்தொகை. வார்ந்த நஞ்சு அயின்று வானோர்க்கு அமுதம் ஈ வள்ளல் போற்றி (திருவாசகம் 73). இட்டும் வட்டியும் ஈ தொழில் பேணில் என்? (தி. 5 ப. 99 பா. 3) என்பவற்றில் உள்ள வினைத் தொகையை நோக்குக.

Our Lord Civa is manifest in Vaazh-kozhi-puth-oor city. Here fragrant sirissa trees grow in large numbers. The fine tender leaves fall in large numbers from the trees. He is the Chief Author of the various inner sections in Vedas. He used to sing divine songs in the peculiar tone called Saama Kaanam. He moves in different postures to those houses to get alms from the owners. He has happily accommodated Uma Devi on the left half of His body. She is brilliant like the graceful peacock and her waist is slender like the middle of the drum.

2487. எண்ணிலீரமுமுடையாரெத்தனையோரிவரறங்கள்
கண்ணுமாயிரமுடையார்கையுமொராயிரமுடையார்
பெண்ணுமாயிரமுடையார்பெருமையோராயிரமுடையார்
வண்ணமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. 2

எண்ணில் ஈரமும் உடையார் எத்தனையோர் இவர் அறங்கள்
கண்ணும் ஆயிரம் உடையார் கையுமொர் ஆயிரமுடையார்
பெண்ணும் ஆயிரம் உடையார் பெருமையோர் ஆயிரம் உடையார்
வண்ணம் ஆயிரம் உடையார் வாழ்கொளிபுத்தூர் உளாரே.

eNNil Iramum uTaiyAr; ettan2aiyO ivar aRagkaL!
kaNNum Ayiram uTaiyAr; kaiyum Or Ayiram uTaiyAr;
peNNum Ayiram uTaiyAr; perumai Or Ayiram uTaiyAr;
vaNNam Ayiram uTaiyAr--vAz koLiputtUr uLArE.

பொருள்: உயிர்களிடத்து அளவில்லாத அன்புடையவர்; இவருடைய அறங்கள் எத்தனையோ; இவர் ஆயிரங்கண்ணர்; இவர் கைகள் ஆயிரம் உடையர்; பெண்ணும் ஆயிரம் உடையவர்; அளவற்ற பெருமைகள் உடையவர்; அளவற்ற வடிவங்கள் உடையர்; இவர் திருவாழ்கொளிபுத்தூருளாரே.

குறிப்புரை: எண் இல் ஈரம் – 'அளவுபடாததோர் அன்பு' (தி. 4 ப. 3 பா. 10). எண்ணில் – ஆராய்ந்தால் எனலுமாம். இவர் அறங்கள் எத்தனையோர் என்று கொள்க. அறங்கள் எத்தனை? எத்தனை (யுடை) யோர்? இவர் எத்தனையோர்? தனை – அளவு ஆயிரங்கண்ணர். ஆயிரங்கையர். பெண்ணும் ஆயிரம்

உடையார் – சிவசக்தியை உடையது சிவம். சிவமும் சத்தியும் உருவம் முதலியவை இல்லாத உயர்வின. அவற்றில் ஆண் பெண் என்ற பேதம் இல்லை. ஆற்றலைப் பெண்மையாயும் ஆற்றலுடையதை ஆண்மையாயும் உருவகித்தமையால், உண்மையிற் பெண் என்றும் அஃது ஆயிரம் என்றும் கொண்டு, நினைப்பென்னும் நெடுங்கிணற்றில் விழுதல் பெரும்பாவமாகும். சிவசக்தியும் சிவமும், அவ்வச்சத்திகட்கு இடமாய விந்துவும் முறையே பலவேறு வகையான விருத்திப்பட்டும் நிற்கும். சிவஞான மாபாடியத்தில் சூ. 2 அதி. 2ஆல் அறியலாம்.

Our Lord is manifest in Vaazh-kozhi-puth-oor temple. He shows love and grace to devotees in innumerable ways. Those people who were graced with virtue are numerous. He has thousand eyes. He has thousand hands. He is the embodiment of goddess Sakthi and owns numerous items. He has done very famous deeds. His appearance is various.

2488. நொடியோராயிரமுடையார்நுண்ணியராமவர்நோக்கும்
வடிவுமாயிரமுடையார்வண்ணமுமாயிரமுடையார்
முடியுமாயிரமுடையார்மொய்குழலாளையுமுடையார்
வடிவுமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. 3

நொடியோர் ஆயிரம் உடையார் நுண்ணியர் ஆமவர் நோக்கும்
வடிவும் ஆயிரம் உடையார் வண்ணமும் ஆயிரம் உடையார்
முடியும் ஆயிரம் உடையார் மொய் குழலாளையும் உடையார்
வடிவும் ஆயிரம் உடையா ர்வாழ்கொளிபுத்தூர் உளாரே.

noTi or Ayiram uTaiyar; nuNNiyar Am, avar nOkkum;
vaTivum Ayiram uTaiyAr; vaNNamum Ayiram uTaiyAr;
muTiyum Ayiram uTaiyAr; moykuzalALaiyum uTaiyAr;
vaTivum Ayiram uTaiyAr--vAzkoLiputtUr uLArE.

பொருள்: நொடி ஒரு ஆயிரம் உடையார்; நோக்குக்கு நுண்ணியர் அவர்; நோக்கும் நோக்கமும் எண்ணிலாதவை; நிறமும் அளவிலாதன் உடையவர்; ஆயிரம் முடிகளை உடையார்; மொய்த்த கூந்தலாளாகிய உமையைப் பாகமாக உடையார்; எண்ணற்ற வடிவுகளை உடையவர்; அவ்விறைவர் திருவாழ்கொளிபுத்தூருளாரே.

குறிப்புரை: நுண்ணியர் – 'நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே' திருவா. 1 அடி 76.

Our Lord Civa is manifest in Vaazh-kozhi-puth-oor. He is illustrious in time measurement. He is a minute Supreme Being. His visibility is in many different aspects and ways. He exposes Himself in many different colours. His hair is of many kinds. He retains His consort Uma Devi on the left side of His body. He takes very many forms according to His need. His hair is of various types. He exposes himself in many shapes.

2489. பஞ்சிநுண்துகிலன்னபைங்கழற்சேவடியுடையார்
குஞ்சிமேகலையுடையார்கொந்தணிவேல்வலனுடையார்
அஞ்சும்வென்றவர்க்கணியாரானையினீருரியுடையார்
வஞ்சிநுண்ணிடையுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. 4

பஞ்சி நுண்துகில் அன்ன பைங்கழல் சேவடி உடையார்
குஞ்சி மேகலை உடையார் கொந்தணி வேல்வலன் உடையார்
அஞ்சும் வென்றவர்க் கணியார் ஆனையின் இருரியுடையார்
வஞ்சி நுண்ணிடை உடையார் வாழ்கொளிபுத்தூர் உளாரே.

panjci nuN tukil an2n2a paigkazal cEvaTi uTaiyAr;
kunjci mEkalai uTaiyAr; kontu aNi vEl valan2 uTaiyAr;
anjcum ven2Ravarkku aNiyAr; An2aiyin2 Ir uri uTaiyAr;
vanjci nuNNiTai uTaiyAr--vAzkoLiputtUr uLArE.

பொருள்: பஞ்சிலான நுண்ணிய துகில்போல மென்மையானதும் பசிய கழல் அணிந்ததுமாகிய சிவந்த திருவடிகளை உடையவர்; தலைமுடிமேல் துணியைப் போர்த்தியவர்; சினமிக்க வேலின் வலத்தை உடையார்; பொறிவாயில் ஐந்தும் அவித்தவர்களுக்கு நெருக்கமானவர்; ஆனையின் உரித்த ஈரமான தோலை உடையவர்; கொடி போன்ற நுண்ணிய இடையுடைய உமையைப் பாகத்தில் உடையார் ஆகிய இறைவர் திருவாழ்கொளிபுத்தூரரே.

குறிப்புரை: சேவடியின் மென்மை உணர்த்தப்பட்டது. குஞ்சி மேகலையுடையார் – சைவத் துறவியர் சடைமுடி மறைக்கும் கல்லாடையைக் குறித்தது போலும். குஞ்சிமேற் கலையுடையார் என்றிருந்ததோ? மகளிர் இடையில் அணிவது மேகலை. இங்குக் குஞ்சி (தலைமயிர்) மேல் உடையது மேகலை என்று குறிக்கின்றது. கொந்து – கோபம் (ஞானாமிர்தம்). அஞ்சும் வென்றவர் – பொறிவாயில் ஐந்தவித்தார். இடைக்கு உவமை வஞ்சிக்கொடி.

Our Lord Civa is manifest in the temple in Vaazh-kozhi-puth-oor city. In this city, girls with slender body like the vine 'common rattan of South India' live in large numbers. He wears rich attire. His foot is red in colour like red lotus flower. In His hair locks He wears a cloth. He holds a battleaxe to represent His victory. He fixes bunches of flowers at the top of the battleaxe. He is very near His devotees who have repressed the sensations of the five sensory organs. He has covered His body with the hide of an elephant.

2490. பரவுவாரையுமுடையார்பழித்திகழ்வாரையுமுடையார்
விரவுவாரையுமுடையார்வெண்டலைப்பலிகொள்வதுடையார்
அரவம்பூண்டதுமுடையாராயிரம்பேர்மிகவுடையார்
வரமுமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. 5

பரவுவாரையும் உடையார் பழித்து இகழ்வாரையும் உடையார்
விரவுவாரையும் உடையார் வெண்டலைப் பலிகொள்வதும் உடையார்
அரவம் பூண்டதும் உடையார் ஆயிரம்பேர் மிகவுடையார்
வரமும் ஆயிரமுடையார் வாழ்கொளிபுத்தூர் உளாரே.

paravuvAraiyum uTaiyAr; pazittu ikazvAraiyum uTaiyAr;
viravuvAraiyum uTaiyAr; veN talaip pali koLvatu uTaiyAr;
aravam pUNpatum uTaiyAr; Ayiram pEr mika uTaiyAr;
varavum Ayiram uTaiyAr--vAzkoLiputtUr uLArE.

பொருள்: தன்னைத் துதிப்போரையும் அடியவர்களாக உடையார்; தன்னைப் பழித்து இகழ்பவரையும் அடியவர்களாக உடையார்; தன்னொடு கலந்து நிற்கும் மெய்யன்பர்களையும் அடியவர்களாக உடையார்; வெண்மையான தலையில் பிச்சை ஏற்றலை உடையவர்; பாம்பினை அணியாகப் பூண்பதை உடையவர்; திருநாமம் பேராயிரத்திற்குமேலாக உடையவர்; அளவற்ற வரங்கள் ஈயும் கொடையும் ஆற்றலும் உடையவர்; இறைவராகிய அவர் திருவாழ்கொளிபுத்தூருளாரே.

குறிப்புரை: விரவுவார் – மெய்யன்புடைய அடியார். 'பரவுவார் இமையோர்கள் . . . விரவுவார் மெய்யன்பின் அடியார்கள்' திருவா. 21–விரவுதல். 'கலந்து நின் அடியாரோடு அன்று வாளா களித்திருந்தேன்' (திருவா. 485). 'எனைக் கலந்து' (திருவா. 84). கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட விடையவனே (திருவா. 105).

Our Lord is manifest in Vaazh-kozhi-puth-oor. There the deceptive people and other religionists who take vengeance and despise Civa's followers also live. However, Civa without caring for them, looks after His devotees and the devas who follow our God. He takes alms in Brahma's skull. He adorns His body with snakes. He is addressed with thousand names. He graces people granting their wishes.

2491. தண்டுந்தாளமுங்குழலுந்தண்ணுமைக்கருவியும்புறவில்
கொண்டபூதமுமுடையார்கோலமும்பலபலவுடையார்
கண்டுகோடலுமரியார்காட்சியுமரியதோர்கரந்தை
வண்டுவாழ்பதியுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. 6

தண்டும் தாளமும் குழலும் தண்ணுமைக் கருவியும் புறவில்
கொண்ட பூதமும் உடையார் கோலமும் பலபலவுடையார்
கண்டு கோடலும் அரியார் காட்சியும் அரியதோர் கரந்தை
வண்டு வாழ்பதி உடையார் வாழ்கொளிபுத்தூர் உளாரே.

taNTum tALamum kuzalum taNNumaikkaruviyum puRavil
koNTa pUtamum uTaiyAr; kOlamum pala pala uTaiyAr;
kaNTu kOTalum ariyAr; kATciyum ariyatu; or karantai
vaNTu vAz pati uTaiyAr--vAzkoLiputtUr uLArE.

பொருள்: தண்டு, தாளம், குழல், தண்ணுமைக்கருவி, புறங்காட்டில் பூதமும் உடையார்; பலபல கோலங்களும் உடையார்; கண்டுகொள்வதும் அரியவர்; காட்சிக்கும் அரியவர்; கரந்தைப் பூவில் வண்டு வாழ்கின்ற பதியை உடையார்; அவர் திருவாழ்கொளி புத்தூருடையாரே.

குறிப்புரை: தண்டு, தாளம், குழல், தண்ணுமைக்கருவி, பூதம், பல பல கோலம். காட்சியருமை. கண்டு கொள்ளலருமை ஆகியவற்றை இறைவன் உடையவன். தண்டு – வீணை. சிவிகை என்றும் பொருள் உண்டு. அஃது இங்குப் பொருந்தாது. தாளம் முதலிய இன்னிசைக் கருவிகளாகிய இனம்பற்றி வீணை என்பதே. 'வேயுறு தோளிபங்கன் . . . மிக நல்ல வீணை தடவி' (தி. 2 ப. 85 பா. 1). கரந்தைப் பூவில் வண்டு வாழ்கின்ற வளமுடையபதி, 'செஞ்சடைசேர் கரந்தையான்' (தி. 1 ப. 61 பா. 3). அவர் காட்சி கொடுப்பதும் அரிது. அவரைக் கண்டு கொள்வதும் அரிது என்பதன் உண்மை. அத்துவிதமாய் நின்றுணர்வோர்க்கே விளங்கும்.

Our Lord Civa is manifest in Vaazh-kozhi-puth-oor city. In this city, fragrant basil plants grow in large numbers. Beetles live in these flowers in large numbers. Such a fertile area is Vaazh-kozhi-puth-oor. Our Lord holds a kind of drum that could create sound when both our hands are used, flute, thannumer and along with this the bhutas who reside in forest - all these He manages. He takes multifarious shapes. He could not be seen; He is a variety.

2492. மானவாழ்க்கையதுடையார்மலைந்தவர்மதிற்பரிசறுத்தார்
தானவாழ்க்கையதுடையார்தவத்தொடுநாம்புகழ்ந்தேத்த
ஞானவாழ்க்கையதுடையார்நள்ளிருள்மகளிர்நின்றேத்த
வானவாழ்க்கையதுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. 7

மான வாழ்க்கையது உடையார் மலைந்தவர் மதிற்பரிசு அறுத்தார்
தான வாழ்க்கையது உடையார் தவத்தொடு நாம் புகழ்ந்து ஏத்த
ஞான வாழ்க்கையது உடையார் நள்ளிருள் மகளிர் நின்று ஏத்த
வான வாழ்க்கையது உடையார் வாழ்கொளிபுத்தூர் உளாரே.

mAn2a vAzkkai atu uTaiyAr; malaittavar matil paricu arittAr;
tAn2a vAzkkai atu uTaiyAr; tavattoTu nAm pukazntu Etta,
njAn2a vAzkkai atu uTaiyAr; naL iruL makaLir nin2Ru Etta,
vAn2a vAzkkai atu uTaiyAr--vAzkoLi puttUr uLArE.

பொருள்: மாண்பிறந்த மானவாழ்க்கையராகிய அசுரர், தன்னுடன் பகைத்தபொழுது அவர்களுடைய திரிபுரத்தின் திண்மையை அழித்தவர்; இரப்பவர்க்கு மறுக்காதே ஈயும் தான வாழ்க்கையுடையவர்களும், நாம் புகழ்ந்து ஏத்துதற்கு உரிய தவத்தொடு ஞான வாழ்க்கையுடையவர்களும், மகளிரும் நின்று நள்ளிருளிலும் ஏத்தும் வானவாழ்க்கை உடையார்; அவர் திருவாழ்கொளிபுத்தூருளாரே.

குறிப்புரை: மலைந்தவர் - மாறுபட்ட (பகை)வர். தவத்தொடு ஞானவாழ்க்கை உடையவர். புகழ்ந்து ஏத்தற்குரியது ஞான வாழ்வு ஒன்றே. மற்றைய வாழ்வெல்லாம் இகழ்ந்து ஒதுக்கற் பாலன. நள்ளிருள் மகளிர் நின்று ஏத்த வானவாழ்க்கையை துடையார் அல்லிய . . . குழலார் . . . பரவ . . . வல்லார் என்பதொடு பொருத்திக் காண்க.

Our Lord Civa is manifest in Vaazh-kozhi-puth-oor. He is the noblest Supreme Being. His life is the greatest. He destroyed the three fortresses of asuras who became

unfriendly with Him. He is in the habit of giving *divine grace*. *When we follow truth* of divine virtue, He gives us divine love and divine life. The celestial damsels stand in a row in large numbers and praise Him. He is manifest in the celestial land.

2493. ஏழுமூன்றுமோர்தலைகளுடையவனிடர்படஅடர்த்து
வேழ்விசெற்றதும்விரும்பிவிருப்பவர்பலபலவுடையார்
கேழல்வெண்பிறையன்னகெழுமணிமிடறுநின்றிலங்க
வாழிசாந்தமுமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. 8

ஏழு மூன்றும் ஓர்தலைகள் உடையவன் இடர்பட அடர்த்து
வேழ்வி செற்றதும் விரும்பி விருப்பவர் பலபல உடையார்
கேழல் வெண்பிறை அன்ன கெழுமணி மிடறு நின்று இலங்க
வாழி சாந்தமும் உடையார் வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Ezum mUn2Rum or talaikaL uTaiyavan2 iTarpaTa aTarttu,
vEzvi ceRRatum virumpi, viruppu avar palapala uTaiyAr;
kEzal veNpiRai an2n2a kEz maNimiTaRu nin2Ru ilagka
vAzi cAntamum uTaiyAr--vAzkoLiputtUr uLArE.

பொருள்: பத்துத் தலைகளை உடைய இராவணன் துன்புற நசுக்கியும், தக்கன் செய்த யாகத்தை விரும்பி அழித்தும் உடையார்; அவர் பலபல விருப்புடையார்; வெண்பிறை போன்ற பன்றியின் மருப்பு போன்று வேறு பிறவும் தன் மார்பிலும், நீலமணிபோல விடம் மிடறிலும் விளங்க, சந்தனப் பூச்சுடையார் திருவாழ்கொளிபுத்தூருளாரே.

குறிப்புரை: பத்துத் தலையுடையவன், வேழ்வி – வேள்வி. தக்கன் செய்த யாகம். எதுகை நோக்கி ளகரம் ழகரமாயிற்று. விரும்பிச் செற்றதும் உடையார் என்றும் அவர் பலபல விருப்புடையார் என்றும் இயைக்க. கேழல் – பன்றிக் கொம்பு. 'ஏனக்கொம்பு' (தி. 2 ப. 102 பா. 2). அன்ன – அவைபோல்வன. (ஆமை, நாகம், தலையோடு முதலியன). மிடறு – திருக்கழுத்து. சாந்தம் – சந்தனம். பொறுமையுமாம். அட்டபுட்பத்துள் ஒன்று.

Our Lord Civa is manifest in Vaazh-kozhi-puth-oor. He crushed Raavanan, the king of Sri Lanka who had ten heads. Raavanan suffered and was terrified. Lord Civan ordered to destroy the holy worship performed with sacrificial fire in the sacrificial hall arranged by the deity Thakkan. He has a liking for many different objects. He has tied

round His neck a tusk of the pig which looks like the white moon. He has applied the sandal paste all over His body.

2494. வென்றிமாமலரோனும்விரிகடல்துயின்றவன்தானும்
என்றுமேத்துகையுடையாரிமையவர்துதிசெயவிரும்பி
முன்றின்மாமலர்வாசமுதுமதிதவழ்பொழிற்றில்லை
மன்றிலாடலதுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. 9

வென்றி மாமலரோனும் விரிகடல் துயின்றவன் தானும்
என்றும் ஏத்துகை உடையார் இமையவர் துதிசெய விரும்பி
முன்றின் மாமலர் வாச முதுமதி தவழ் பொழில் தில்லை
மன்றில் ஆடல் அது உடையார் வாழ்கொளிபுத்தூர் உளாரே.

ven2Ri mA malarOn2um, virikaTal-tuyin2Ravar tAn2um,
en2Rum Ettukai uTaiyAr; imaiyavar tuti ceya, virumpi,
mun2Ril mA malar vAcam mutu mati tavaz pozil-tillai
man2Ril ATal atu uTaiyAr--vAzkoLiputtUr uLArE.

பொருள்: பெரிய தாமரை மலர்மேல் இருக்கும் பிரமன், பரந்த பாற்கடல் மேல் துயிலும் திருமால் ஆகிய இருவராலும் வணங்கப்படுதலை உடையவர்; இமையவர்கள் தம்மைத் துதிசெய்ய மகிழ்ந்து, முற்றத்தில் மலர்களின் நறுமணம் வந்து கமழ, முழுநிலவு தவழ்கின்ற பொழில்களையுடைய தில்லை மாநகரில் கூத்தாடுதலை உடையார் இருப்பது திருவாழ்கொளிபுத்தூரரே.

குறிப்புரை: ஏத்துகை – துதிக்கை. வினைத்தொகையும் ஆம். பா.1. ஈகை. பார்க்க. துதி – (தோத்திரம்) புகழ்ச்சி மலர்வாசம் பொழில். மதி தவழ் பொழில். ஆடலது – திருக்கூத்தாடுதலை.

Our Lord Civa Himself manifests in Vaazh-kozhi-puth-oor. Brahma who is seated in lotus flower as well as Thirumaal who rests in the broad ocean - they both daily worship our Lord. He accepts their prayers. The devas were anxious to worship our Lord Civa daily. To satisfy these devas He dances in the Chidambaram temple where the sacred flowers spread their very attractive fragrance all over the temple area.

2495. மண்டைகொண்டுழல்தேரர்மாசுடைமேனிவன்சமணர்
குண்டர்பேசியபேச்சுக்கொள்ளன்மின்திகழொளிபுத்தூருளானை
துண்டவெண்பிறைசூடிச்சுண்ணவெண்பொடியணிந்தெங்கும்
வண்டுவாழ்பொழில்சூழ்ந்தவாழ்கொளிபுத்தூருளாரே. 10

மண்டை கொண்டு உழல் தேரர் மாசுடை மேனிவன் சமணர்
குண்டர் பேசிய பேச்சுக் கொள்ளன்மின் திகழ் ஒளிபுத்தூர் உளானை
துண்ட வெண்பிறை சூடிச் சுண்ண வெண்பொடி அணிந்து எங்கும்
வண்டு வாழ்பொழில் சூழ்ந்த வாழ்கொளிபுத்தூர் உளாரே.

maNTai koNTu uzal tErar, mAcu uTai mEn2i van2camaNar,--
kuNTar,--pEciya pEccuk koLLan2min2! tikaz oLi nalla
tuNTa veNpiRai cUTi, cuNNa veNpoTi aNintu, egkum
vaNTu vAz pozil cUznta vAzkoLiputtUr uLArE.

பொருள்: மண்டைப் பாத்திரங்கொண்டு அலைகின்ற தேரர்களும் அழுக்கு படிந்த உடலுடைய வலிய சமண குண்டர்களும் பேசிய வீண்பேச்சுக்களைப் பொருளாகக் கொள்ளல்மின். நல்ல ஒளிதிகழும் துண்ட வெண்பிறைசூடி, சுண்ண வெண்பொடி அணிந்து, எவ்விடத்தும் வண்டு வாழும் பொழில்கள் சூழ்ந்த திருவாழ்கொளிபுத்தூரரே.

குறிப்புரை: பிறைக்கு அடை திகதொழியும் நன்மையும் துண்டமும், வெண்மையும், சுண்ணப் பொடி என்பதிலும் சுண்ணமும் பொடியும் எனல் சிறந்தது. சுண்ணம் – திருப்பொற் சுண்ணம்.

The Buddhists roam about in the city of Vaazh-kozhi-puth-oor holding a skull in their hands to receive alms, the Jains whose body is full of dirt are stout, these two fat bodied people preach all falsehood. Oh! Ye! People do not bother to heed to the false propaganda they preach. Our Lord Civa sustains on His head the very bright moon. He smears all over His body the holy ashes. He is manifest in Vaazh-kozhi-puth-oor city where the beetles live in large numbers in the forest areas. Oh! Ye devotees worship this our Lord and praise Him and live virtuous life.

2496. நலங்கொள்பூம்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
வலங்கொள்வெண்மழுவாளன்வாழ்கொளிபுத்தூருளானை
இலங்குவெண்பிறையானையேத்தியதமிழிவைவல்லார்
நலங்கொள்சிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே. 11

நலம் கொள் பூம்பொழில் காழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
வலம் கொள் வெண் மழுவாளன் வாழ்கொளிபுத்தூர் உளானை
இலங்கு வெண் பிறையானை ஏத்திய தமிழ் இவை வல்லார்
நலம் கொள் சிந்தையராகி நன்னெறி எய்துவர் தாமே.

nalam koL pUmpozil kAzi nal-tamiz njAn2acampantan2,
valam koL veN mazuvALan2 vAzkoLiputtUr uLAn2ai--
ilagku veNpiRaiyAn2ai--Ettiya tamiz ivai vallAr,
nalam koL cintaiyar Aki, nan2neRi eytuvar tAmE.

பொருள்: மங்கலமுள்ள பூம்பொழில்களுடைய காழி நல்ல தமிழ் வல்ல ஞானசம்பந்தன், வெற்றி கொள்கின்ற வெண்ணிற மழுவையுடையன், திருவாழ்கொளிபுத்தூருளானை, விளங்குகின்ற வெண்பிறையாளனைப் புகழ்ந்து பாடிய தமிழான இத்திருப்பதிகத்தைக் கற்று வல்லார் நல்ல சிந்தையராகி நல்ல நெறியை எய்துவர்.

குறிப்புரை: நலம் – குறைவிலாமங்கலம். நன்னெறி – சரியையாதியின் பயனாகிய ஞானம்.

Our saint Thiru-gnana-Sambandar hails from the city of Seerkaazhi. The city is surrounded by vast natural forest areas. There the very attractive trees are fully grown, such a famous city is Seerkaazhi. The saint came to Vaazh-kozhi-puth-oor and worshipped our God Lord Civan who holds a white axe which always brings Him victory. He sustains the moon on His head. Our saint Thiru-gnana-Sambandar praised His fame, worshipped Him and chanted the Tamil garland of ten verses. Those devotees who can memorise and chant these ten verses before our Lord will be virtuous in their life and will also get divine knowledge.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

94ஆம் பதிகம் முற்றிற்று
End of 94th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 231 பதிக எண்: 95

95. திருஅரசிலி

95. THIRU-ARACILI

பண் : பியந்தைக்காந்தாரம்

Pann: Piyanthai Kaanthaaram

திருத்தல வரலாறு

திருவரசிலி என்னும் இத்திருத்தலமானது அரச மரத்தை இறைவன் இல்லாக உடைமையின் இப்பெயர் பெற்றது என்பர். இது இக்காலம் ஒழிந்தியாப்பட்டு என்று மக்களால் வழங்கப் பெறுகின்றது. பாண்டிச்சேரி – திண்டிவனம் (வழி கிளியனூர்) பேருந்தில் ஒழிந்தியாப்பட்டு கைகாட்டி அருகில் இறங்கி கிழக்கே 2 கி. மீ. சென்றால் அரசிலி ஆலயத்தை அடையலாம். இது தொண்டை நாட்டுத்தலமாகும்.

இறைவரின் திருப்பெயர் அரசிலி நாதர். இறைவியாரின் திருப்பெயர் பெரிய நாயகி. இறைவரின் திருப்பெயர் திருஅரசிலி ஆளுடையார் ஆலாலசுந்தரர் என்னம், திரு அரசிலி ஆளுடையார் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. வாமதேவ முனிவர் பூசித்துப் பேறு பெற்றது. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்று உள்ளது. இங்குள்ள தீர்த்தம் அரசடித் தீர்த்தம். குளம் பெரியது. இவ்வூர்க் கல்வெட்டுக்கள் அனைத்தும் சந்திவிளக்கு மற்றும் திருநந்தா விளக்குகளுக்கு ஆடுகள் விடப்பட்ட செய்திகளை உணர்த்துகின்றன.

பதிக வரலாறு

கவுணியர் வேந்தர், அச்சிறுபாக்கம் முதலிய தலங்களை வணங்கி வழிபட்ட காலத்தில், வேறுபலநதியும் காடும் கடந்து அரசிலியை அடைந்தார். இது தொண்டை நாட்டிற்குச் சென்று மீண்ட காலத்து நிகழ்ச்சி, சேக்கிழார் சுவாமிகள், திருவரசிலியை மீளுங்கால் எடுத்தோதியதாலும் செல்லுங்கால் குறிப்பாகவும் காட்டாமையாலும் மீண்டு அருளும்போது பாடப்பட்டதாகும் இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2497. பாடல்வண்டறைகொன்றைபால்மதிபாய்புனற்கங்கை
கோடல்கூவிளமாலைமத்தமுஞ்செஞ்சடைக்குலாவி
வாடல்வெண்டலைமாலைமருவிடவல்லியந்தோள்மேல்
ஆடல்மாசுணமசைத்தஅடிகளுக்கிடமரசிலியே. 1

பாடல் வண்டறை கொன்றை பால்மதி பாய்புனல் கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமும் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்டலை மாலை மருவிட வல்லியம் தோள்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக்கு இடம் அரசிலியே.

pATal vaNTu aRai kon2Rai, pAlmati, pAy pun2al kagkai,
kOTal, kUviLa mAlai, mattamum, cenjcaTaik kulAvi,
vATal veN talai mAlai maruviTa, valliyam tOlmEl
ATal mAcuNam acaitta aTikaLukku iTam--araciliyE.

பொருள்: வண்டுகள் பாடி மொய்க்கின்ற கொன்றை, பால்நிறப் பிறைமதி பாய்கின்ற புனலை உடைய கங்கைநதி, வெண்காந்தள் மலர், வில்வமாலை, ஊமத்தம்பூ ஆகியன செஞ்சடையில் கலந்து குலாவ, வற்றிய வெண்டலைமாலை மார்பில் மருவ இடையில் புலித்தோலாடையின்மேல் ஆடும் பாம்பினைக் கச்சாகக் கட்டிய சுவாமிகளுக்கு இடம் திருவரசிலியே.

குறிப்புரை: செஞ்சடையில் குலாவுவன – கொன்றை, பிறை, கங்கை, கோடல் (வெண் காந்தள்). கூவிள (வில்வ) மாலை, ஊமத்தம்பூ. தலைமாலை. வல்லி – உமாதேவியார். மாசுணம் – பாம்பு. நிலத்திலூர்ந்தும் புரண்டும் மாசு உண்ணுங் காரணத்தாற்பெற்ற பெயர். அழுக்கு அடையும் ஆடைக்கு மாகணி என்ற பெயர் உள்ளமை அறிக. பிறர் உடுத்த மாகணியும் தீண்டார் (ஆசாரக்கோவை). 'வல்லியத் தோல்' என்றிருந்தது. லகரம் ளகரம் ஆகிய பிழை போலும். வல்லியம் – புலி.

Our Lord Civa adorns His head with Indian laburnum flowers. In this bunch of flowers beetles join together and sing music. He retains the milky white moon also on His head along with the gushing river Ganges near the moon. In the neck white species of malabar glory lily flowers, garland of bael leaves, garland of datura flowers - all hang together. In addition, there hangs the white dried skull where the dried flesh is still attached to the bones. On His waist, He wears the hide of a tiger, He covers His shoulders with the snakes. Our Lord Civa desires to manifest Himself in the city of Thiru-aracili.

2498. ஏறுபேணியதேறியிளமதக்களிற்றினையெற்றி
வேறுசெய்ததனுரிவைவெண்புலால்கலக்கமெய்போர்த்த
உறுதேனவனும்பர்க்கொருவனல்லொளிகொளொண்சுடராம்
ஆறுசேர்தருசென்னியடிகளுக்கிடமரசிலியே. 2

ஏறு பேணியது ஏறி இளமதக் களிற்றினை எற்றி
வேறு செய்ததன் உரிவை வெண்புலால் கலக்க மெய்போர்த்த
உறு தேனவன் உம்பர்க்கு ஒருவன் அல்லொளி கொளொண் சுடராம்
ஆறு சேர்தரு சென்னியடிகளுக்கு இடம் அரசிலியே.

ERu pENi atu ERi; iLa matakkaLiRRin2ai eRRi,
vERu ceytu, atan2 urivai vempulAl kalakka mey pOrtta
URu tEn2 avan2; umparkku oruvan2; nal oLi koL oN cuTar Am;
ARu cErtaru cen2n2i aTikaLukku iTam--araciliyE.

பொருள்: விரும்பி விடைதன்மேல் ஏறியவன்; இளமதக் களிற்றினை வென்று அதனைக் கொன்று அதன்தோலினைத் தன்மேல் அதன் வெண்நிணம் கலக்க உடல்மேல் போர்த்தியவன்; நினைவார்க்கு ஊறுகின்ற தேன்போல் இனியவன்; தேவர்களுக்கு அனல்போல ஒளிவீசுகின்ற செஞ்சுடராம்; கங்கையாறு சென்னிமேல் சேர்தருகின்ற சுவாமிகளுக்கு இடம் திருவரசிலியே.

குறிப்புரை: களிறு – களிப்புடையது என்னுங் காரணப் பொருட்டாய், ஆண் யானையைக் குறிப்பது. உரிவை – தோல், புலால் கலக்க மெய்யிற் போர்த்த இனியன். யானையை உரித்துப் போர்த்தவன் இன்னாதவன் என்று கொள்ளுதல் பொருந்தாமை உணர்த்த. ஊறுதேனவன் (சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறிநின்று பிறந்த பிறப்பு அறுக்கும் இனியவன்) என்றருளினார். ஆணவமல நாசஞ்செய்வதே யானையுரி வரலாற்றின் தாற்பரியம். உம்பர்க்கு ஒருவன் – அமரரால் அமரப்படுவான். சுடர் – சிவம். ஒளி – சத்தி.

Our Lord Civa loves to sustain the white bull for His conveyance and goes round the universe. The rutted elephant, which was about to dash against our Lord Civa was kicked and killed by our Lord. Then He ripped off its hide and covered His body with it, with the white flesh attached to its hide enabling it to mix with His body. He is the only top Supreme Being praised by devas. He exhibits the brightest supernal light. In

His matted hair, He sustains the river Ganges. For such a Lord the city of Thiru-aracili is a much desired place to manifest.

2499. கங்கைநீர்சடைமேலேகதமிகக்கதிரிளவனமென்
கொங்கையாளொருபாகமருவியகொல்லைவெள்ளேற்றன்
சங்கையாய்த்திரியாமேதன்னடியார்க்கருள்செய்து
அங்கையாலனலேந்துமடிகளுக்கிடமரசிலியே. 3

கங்கைநீர் சடைமேலே கதமிகக் கதிர் இளவனமென்
கொங்கையாள் ஒருபாகம் மருவிய கொல்லை வெள்ளேற்றன்
சங்கையாய்த் திரியாமே தன்னடியார்க்கு அருள்செய்து
அங்கையால் அனலேந்தும் அடிகளுக்கு இடம் அரசிலியே.

kagkai nIr caTaimElE katam mika, katir iLavan2a men2-
kogkaiyAL orupAkam maruviya, kollai veL ERRan2;
cagkai Ayt tiriyAmE tan2 aTiyArkku aruL ceytu,
agkaiyAl an2al Entum aTikaLukku iTam--araciliyE.

பொருள்: வேகம் மிக்க கங்கைநீரினைச் சடையின் மேலும், அழகும் இளமையும் மென்மையும் உடைய முலையாளை ஒருபாகத்திலும் பொருந்தியவன்; முல்லை நிலத்து வெள்ளை நிற எருதினை உடையவன்; அச்சத்துடன் திரியாமல் தன்னடியாருக்கு அருள்செய்பவன் ஆகிய அங்கையில் அனலேந்திய சுவாமியாகிய சிவனுக்கிடம் திருவரசிலியே.

குறிப்புரை: கதம் – வேகம். வனம் – அழகு. சங்கை – சந்தேகம். அடியார்கள் 'தமக்கு ஆண்டவன் அருள்வானோ அருளானோ' என்னும் ஐயுறவு கொண்டு திரிந்து, வீண்காலம் போக்கும் அவ்வப்பொழுது நேராது சிவப்பொழுது போக்குமாறு அவர்கட்கு அருள்வான் என்பது கருத்து. திரியாமே அருள்செய்து அனல் ஏந்தும் அடிகள் என்க. எருதேறித் திரியும் இறைவன் எனினும் அடியார்க்கு அருள்செய்யத் தவறான் என்றும். சங்கை – ஐயம். ஐயம் – பிச்சை. இரப்போர்க்கு இன்று நாம் இரப்பது சிறக்கக் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற ஐயம் பற்றிய காரணப் பெயர். பிச்சைக்காரனாய்த் திரியும் ஒன்றே செய்யாமல் அடியார்க்கு அருள்வதையும் செய்து என்றும், பிச்சையெடுத்தாலும் அடியார்க்கு அருளும் பெருஞ்செல்வன் என்றும் கொள்ளும் பொருள் வலிந்து கொள்வனவேயாம்.

Our Lord Civan is highly satisfied to be manifested in Thiru-aracili. He supports the river Ganges, which came very fast with plenty of water on His matted hair. His

consort Uma Devi is very bright, young with highly attractive breasts. He keeps her on the left side of His body. The bull belongs to forest area, He loves to sustain the white bull for His conveyance. He graces His devotees who have no doubt whether Lord Civa will give or not give His divine grace; and they never spend any idle time; but only concentrate on God Civa. In His dainty hand He holds fire. Such a Lord is highly satisfied to manifest Himself in Thiru-aracili.

2500. மிக்ககாலனைவீட்டிமெய்கெடக்காமனைவிழித்துப்
புக்கவூரிடுபிச்சையுண்பதுபொன்திகழ்கொன்றை
தக்கநூல்திகழ்மார்பிற்றவளவெண்ணீறணிந்தாமை
அக்கினாரமும்பூண்டஅடிகளுக்கிடமரசிலியே. 4

மிக்க காலனை வீட்டி மெய்கெடக் காமனை விழித்துப்
புக்கவூர் இடு பிச்சை உண்பது பொன்திகழ் கொன்றை
தக்க நூல் திகழ்மார்பில் தவள வெண்ணீறு அணிந்து ஆமை
அக்கின் ஆரமும் பூண்ட அடிகளுக்கு இடம் அரசிலியே.

mikka kAlan2ai vITTi, mey keTak kAman2ai vizittu,
pukka Ur iTu piccai uNpatu, pon2 tikaz kon2Rai,
takka nUl tikaz mArpil-tavaLa-veN nIRu aNintu, Amai
akkin2 Aramum pUNTa aTikaLukku iTam--araciliyE.

பொருள்: மேம்பட்ட காலனைக் காலால் அழித்து, உடல் எரித்து நீறாகக் காமனை நெற்றிக் கண்ணால் நோக்கி, புகுந்த ஊரினர் இடுகின்ற பிச்சையை உண்டு, பொன்போல் திகழ்கின்ற கொன்றைமாலையும் தகுதியுடைய பூணூல் திகழ்கின்ற மார்பில் தவள வெண்ணீறும் அணிந்து, ஆமை ஓட்டினையும் எலும்பு மாலையும் பூண்ட சுவாமிகளுக்கு இடம் திருவரசிலியே.

குறிப்புரை: மிக்க காலன் – இன்னான் இனியான் என்று கருதாது, உரிய காலத்தில் கூறுபடுத்தும் அறத்தில் மேம்பட்ட தருமராசன். தக்கநூல் – வேதாந்தம் என்னத் தக்க பூணூல். நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம் (திருமந்திரம்). அக்கின் ஆரம் – எலும்பு மாலை. இனமல்லாமையால் ஆமையோடும் உருத்திராக்க மாலையும் எனல் ஒவ்வாது.

Our Lord Civa kicked and killed Yama, the god of death, who comes with divine virtue only to take the life of people. He burnt Manmathan into ashes with His third eye. He accepts and eats the alms given by people. He wears over His chest the

garland made of Indian laburnum flowers glittering like gold. He has glorified His chest by wearing the sacred thread and the holy ashes. He has adorned His body with the tortoise shell and the garland made of skull bones. This God Civa is highly satisfied to be manifested in the temple in Thiru-aracili city.

2501. மானஞ்சும்மடநோக்கிமலைமகள்பாகமுமருவித்
தானஞ்சாவாண்மூன்றுந்தழலெழச்சாமதுதுரந்து
வானஞ்சும்பெருவிடத்தையுண்டவன்மாமறையோதி
ஆனஞ்சாடியசென்னியடிகளுக்கிடமரசிலியே. 5

மான் அஞ்சும் மடநோக்கி மலைமகள் பாகமும் அருவித்
தானம் சாவாண் மூன்றும் தழல் எழச் சாமது துரந்து
வான் அஞ்சும் பெருவிடத்தை உண்டவன் மாமறை ஓதி
ஆன் அஞ்சாடிய சென்னி அடிகளுக்கு இடம் அரசிலியே.

mAn2 anjcum maTa nOkki malaimakaL pAkamum maruvi,
tAnam cAvAN mUn2Rum tazal ezac caram atu turantu,
vAn2 anjcum peruviTattai uNTavan2; mAmaRai Oti;
An2 anjcu ATiya cen2n2i aTikaLukku iTam--araciliyE.

பொருள்: மான் அஞ்சும்படியான மடப்பம் பொருந்திய நோக்கினை உடையவளாகிய பார்வதியைப் பாகமாகப் பொருந்தி, அகந்தையினால் தன்னை மதியாத அசுரர்களின் முப்புரங்களும் தழலால் எரிந்து வீழ அம்பினைச் செலுத்தி, வானவர்கள் அஞ்சும்படிப் பெருகிய விடத்தைக் களிபோல் திரட்டி உண்டவன்; வேதங்களை ஓதியவன்; பசு தரும் ஐந்தினையும் ஆடிய சென்னியன் ஆகிய இறைவனுக்கு இடம் திருவரசிலியே.

குறிப்புரை: மான் அஞ்சும் மடநோக்கியாகிய மலைமகள், நோக்கி – (கண்ணி) நோக்கத்தையுடையவள். மானினது கண்போன்ற கண் என்னாது, அக்கண்ணினது நோக்கம் போன்ற நோக்கம் எனல் முன்னோர் கருத்து, மான்விழி என்பதும் மான் கண் என்பதும் ஒன்றாகா, விழிப்பது விழி. கண்ணுவது கண். விழித்தல் – இமை திறத்தல். கண்ணுதல் – மனம் கருதல். இமை திறந்தும் திறவாதும் கருதல் செய்யலாம். திறக்கக் கருதினாலன்றி இமை திறத்தல் நிகழாது. வான் – வானோர், அசுரர். ஓதி – பெயர்.

Our Lord Civa joined together with the daughter of the mountain king and kept her on the left side of His body. The deer in the forest, whenever they see the eyes of Uma Devi, are afraid and run away from her sight. He shot an arrow with terrible fire

in the sky of asuras who opposed our Lord Civa without any fear. They were destroyed along with their followers. He imbibed the serpent's poison that came out of the ocean. The devas trembled to see our Lord devouring the poison. He loves to be ablutioned by the five sacred products of the cow on His head, over the matted hair. This Lord is highly satisfied to be manifested in Thiru-aracili city.

2502. பரியமாசுணங்கயிறாப்பருப்பதமதற்குமத்தாகப்
பெரியவேலையைக்கலங்கப்பேணியவானவர்கடையக்
கரியநஞ்சதுதோன்றக்கலங்கியஅவர்தமைக்கண்டு
அரியஆரமுதாக்குமடிகளுக்கிடமரசிலியே. 6

பரிய மாசுணம் கயிறாப் பருப்பதம் அதற்கு மத்தாகப்
பெரிய வேலையைக் கலங்கப் பேணிய வானவர் கடையக்
கரிய நஞ்சது தோன்றக் கலங்கிய அவர் தமைக் கண்டு
அரிய ஆரமுதாக்கும் அடிகளுக்கு இடம் அரசிலியே.

pariya mAcuNam kayiRA, paruppatam ataRku mattu Aka,
periya vElaiyaik kalagka, pENiya vAn2avar kaTaiya,
kariya nanjcu atu tOn2Rak kalagkiya avar tamaik kaNTu,
ariya Ar amutu Akkum aTikaLukku iTam--araciliyE.

பொருள்: பெரிய பாம்பு கயிறாக, மந்தாரமலை அந்தக் கயிறுக்கு மத்தாகப் பெரிய பாற்கடல் கலங்க அமுதத்தை விரும்பிய வானவர் கடையக் கரிய நஞ்சு தோன்றியது. அமுதுக்குப் பதில் நஞ்சு தோன்றக் கண்டு கலங்கிய அவ்வானவர்களைக் கண்டு இரக்கங்கொண்டு, அக்கொடிய நஞ்சை அரிய ஆரமுது ஆக்கும் சுவாமிக்கு இடம் திருவரசிலியே.

குறிப்புரை: பரிய – பெரிய. அரிய அமுது எனவே அமையும். 'அரிய ஆரமுது' என்றது பெரிய பேராசிரியர் (மகாமகோபாத்தியார்) என்ற (ஆன்மாக்களின் அகங்காரத்தை வளர்க்கும்) பட்டப்பெயர் போல்வது. ஆருயிர் – காருடல் என்பன போல ஆரமுதும் பண்புத் தொகை. அரிய – நஞ்சு அமுது ஆதல் முன் இன்மை குறித்தது. ஆர் – முன் இல்லாத அஃது இப்பொழுது (அமுதாக்கிய சமயம்) விளங்குதலைக் குறித்தது. அருமை – இன்மை, விளக்கம்.

The devas desired to drink amrit from the ocean. They took the big Vaasuki snake as the rope to churn the ocean. They took the big mountain manthaaram as the churning staff and started churning the big ocean of milk. At that time a black coloured

strong animal poison was vomitted by Vaasuki. The devas and asuras got terrified on seeing the poison and ran away to our Lord Civa. On seeing them our Lord pitied them and arranged to bring the poison to Him. Then He imbibed it as amrit. Thus He saved all the devas and all other celestials. This Lord's suitable place for manifestation is Thiru-aracili.

7ஆம் பாடல் கிடைக்கப்பெறவில்லை.

2503. வண்ணமால்வரைதன்னைமறித்திடலுற்றவல்லரக்கன்
கண்ணுந்தோளுநல்வாயுநெரிதரக்கால்விரலூன்றிப்
பண்ணின்பாடல்கைந்நரம்பாற்பாடியபாடலைக்கேட்டு
அண்ணலாயருள்செய்தஅடிகளுக்கிடமரசிலியே. 8

வண்ண மால்வரை தன்னை மறித்திடல் உற்ற வல்லரக்கன்
கண்ணும் தோளுநல் வாயுநெரி தரக்கால் விரலூன்றிப்
பண்ணின் பாடல் கைந்நரம்பால் பாடி பாடலைக் கேட்டு
அண்ணலாய அருள் செய்த அடிகளுக்கு இடம் அரசிலியே.

vaNNa mAlvarai tan2n2ai maRittiTal uRRa val arakkan2
kaNNum tOLum nalvAyum neritarak kAlviral Un2Ri,
paNNin2 pATal kainnarampAl pATiya pATalaik kETTu,
aNNalAy aruL ceyta aTikaLukku iTam--araciliyE.

பொருள்: கயிலை மால் வரையை மறித்திட்ட வலிய அரக்கன் இராவணனின் கண்ணும் தோளும் வாயும் நெரிதரக் கால்விரல் ஊன்றிப், பின் அவன் கை நரம்பால் யாழ்செய்து பண்ணொடு பாடிய பாடலைக் கேட்டு அண்ணலாய் அருள் செய்த சுவாமிகளுக்கு இடம் திருவரசிலியே.

குறிப்புரை: வண்ணமால்வரை – கயிலைமலை. மறித்திடல் – கீழ் மேலோக்குதல். கண், தோள், வாய் நெரிய என்க. கைந்நரம்பு – இராவணன் கையிலிருந்த யாழ். பண்ணின் பாடல் நரம்புக்கு அடை பாடிய பாடல் – அந்தரம்பாற் பாடிய பாடல். அண்ணலாய் – நாளும் வாளும் அருளிய பெருமையிற் சிறந்தவனாகி; இன்னா செய்தாற்கும் இனியவே செய்யும் பெருமையனாகி.

Raavanan, the king of Sri Lanka due to His haughtiness and mightiness tried to turn the admirable Kailash mountain topsy-turvy. Then he got crushed under the mountain with all his eyes, shoulders and mouths. Thus he suffered because our Lord

Civa slightly pressed the top of His mountain with His toe. Raavanan then realised his fault and decided to be pardoned by Lord Civa. He therefore took out of his own hand the nerves and made it a veena and sang praising our Lord Civa in the most intrinsic tune called Saama Gaanam. On hearing the music our Lord Civa showered benevolence on him and graced him with many gifts. This Lord highly likes to be manifested in Thiru-aracili.

2504. குறியமாணுருவாகிக்குவலயமளந்தவன்றானும்
வெறிகொள்தாமரைமேலேவிரும்பியமெய்த்தவத்தோனும்
சொறிவொணாவகையெங்குந்தேடியுந்திருவடிகாண
அறிவொணாவுருவத்தெம்மடிகளுக்கிடமரசிலியே. 9

குறிய மாணுருவாகிக் குவலயம் அளந்தவன் தானும்
வெறி கொள் தாமரை மேலே விரும்பிய மெய்த் தவத்தோனும்
சொறி ஒணாவகை எங்கும் தேடியும் திருவடிகாண
அறிவு ஒணா உருவத்து எம் அடிகளுக்கு இடம் அரசிலியே.

kuRiya mAN uru Akik kuvalayam aLantavan2 tAn2um,
veRi koL tAmarai mElE virumpiya meyttavattOn2um,
ceRivu oNA vakai egkum tETiyum, tiruvaTi kANa
aRivu oNA uruvattu em aTikaLukku iTam--araciliyE.

பொருள்: குறுகிய பிராமண பிரமசாரி உருவாகி உலகத்தை அளந்தவனான திருமாலும் மணமுள்ள தாமரை மலர்மேலே இருத்தலை விரும்பிய தவத்தவனாகிய பிரமனும் எங்கும் தேடிய திருவடியைக் காணவும் அறியவும் ஒணாத உருவத்து எம்முடைய சுவாமிகளுக்கு இடம் திருவரசிலியே.

குறிப்புரை: குறிய மாணுரு – வாமன அவதாரம். 'குறுமாணுருவன்' (தி. 1 ப. 101 பா. 5). வெறி – மணம். மெய்த்தவத்தோன் – பிரமன். செறிவு ஒணா – செறிதல் ஒன்றா. செறிதல் – பொருந்துதல். அறிவொணாவுருவம் – ஐம்பொறிகளாலும், மனாதியாலும், ஜீவ போதத்தாலும் அறிதல் ஒன்றாத ஞான சொரூபம். 'பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாதநீழற்கீழ்' நின்று அறியப்படும் திருவுருவம் அது. 'அறிவினில் அருளான் மன்னி' (சித்தியார்).

Our tutelary deity Thirumaal once took the dwarfish stature of Vaamana. Later he took the form of a very big and tall being and measured the whole world in one step. The other tutelary deity Brahma highly likes the fragrant lotus flower. These two demigods searched all over the world to see the head and feet of our Lord Civa and failed in their attempts to know or to reach Lord Civa's form. At that moment our Lord Civa appeared before them dazzlingly as infinite, supernal and tall flame and graced them. This Lord highly likes to be manifested in Thiru-aracili temple.

2505. குருளையெய்தியமடவார்நிற்பவேகுஞ்சியைப்பறித்துத்
திரளைகையிலுண்பவருந்தேரருஞ்சொல்லியதேறேல்
பொருளைப்பொய்யிலிமெய்யெம்நாதனைப்பொன்னடிவணங்கும்
அருளையார்தரநல்குமடிகளுக்கிடமரசிலியே. 10

குருளை எய்திய மடவார் நிற்பவே குஞ்சியைப் பறித்துத்
திரளை கையில் உண்பவரும் தேரரும் சொல்லிய தேறேல்
பொருளைப் பொய்யிலி மெய் எம்நாதனைப் பொன்னடி வணங்கும்
அருளை ஆர்தர நல்கும் அடிகளுக்கு இடம் அரசிலியே.

kuruLai eytiya maTavAr niRpavE kuRinjciyaip paRittut
tiraLai(k) kaiyil uNpavarum, tErarum, colliya tEREl!
poruLai, poy ili mey em nAtan2ai, pon2 aTi vaNagkum
aruLai Artara nalkum aTikaLukku iTam--araciliyE.

பொருள்: இளம்பெண்கள் அருகில் நிற்க, தலைமயிரைப் பறித்து, கையில் திரட்டி வைத்த உணவுப் பிண்டத்தை உண்ணும் சமணரும் தேரரும் மெய்யெனக் கூறிய மொழிகளை மெய்யெனத் தெளியவேண்டா. உண்மைப் பொருள், பொய்யிலாத மெய் ஆகிய எம் தலைவன் அவனுடைய பொன்னடியை வணங்கும் அருளை ஆர்தர அளிக்கும் சுவாமிகளுக்கு இடம் திருவரசிலியே.

குறிப்புரை: உண்பவர் – சமணர். சொல்லிய – சொன்னதம் சமயக் கொள்கைகளை. வினையாலனையும் பெயர். பொருள் – 'உயர் பொருள்' (தி.1 ப.13 பா.5). 'உரமென்னும் பொருள்' (தி.7 ப.86 பா.5). 'பல்கலைப்பொருள்' (தி.7 ப.69 பா.10). 'மெய்ப்பொருள்' (தி.4 ப.74 பா.9). 'கொன்றைத் தொங்கலான் அடியவர்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே' (தி.2 ப.41 பா.7) என்றதால் ஆன்மாக்களுக்குப் பொருளாவது சிவபரம் பொருளே என்றறிக. குருளை என்பது ஈண்டு இளமையைக் குறித்தது. இளமகளிரை

வாழ்க்கைத் துணையாகப் பெற்றிருந்தும், தலைமயிரைப் பறித்து விடுவது பொருத்தம் ஆகாமையை உணர்த்துவதுடன், அதற்கு ஏதுவாவது அமிர்தபோஜனப்ரியம் என்றும் குறித்தார்.

In the city young damsels do live in good numbers. The Jains do not live jointly with them and enjoy life. Instead they remove the hair from their head and become baldheaded. They roam around the city and get alms in their hands and eat it. These people as well as the Buddhists preach the details of their religion which is all falsehood. Ye devotees! do not listen to their religious propaganda. Our Lord Civa is the object for our goal. He is beyond any vicious speech and has no falsehood. He is the embodiment of truth. He fully graces the devotees who prostrate over His holy feet. For such a Lord of ours, the suitable place for manifestation is Thiru-aracili.

2506. அல்லிநீள்வயல்சூழ்ந்தஅரசிலியடிகளைக்காழி
நல்லஞானசம்பந்தன்நற்றமிழ்பத்திவைநாளும்
சொல்லவல்லவர்தம்மைச்சூழ்ந்தமரர்தொழுதேத்த
வல்லவானுலகெய்திவைகலுமகிழ்ந்திருப்பாரே. 11

அல்லி நீள்வயல் சூழ்ந்த அரசிலி அடிகளைக் காழி
நல்ல ஞானசம்பந்தன் நற்றமிழ் பத்து இவை நாளும்
சொல்ல வல்லவர் தம்மைச் சூழ்ந்த அமரர்தொழுது ஏத்த
வல்ல வானுலகு எய்தி வைகலும் மகிழ்ந்திருப்பாரே.

alli nIL vayal cUznta aracili aTikaLai, kAzi
nalla njAn2acampantan2 nal-tamiz pattu ivai, nALum,
colla vallavar, tammaic cUzntu amarar tozutu Etta,
valla vAn2 ulaku eyti, vaikalum makizntu iruppArE.

பொருள்: அல்லிமலர்கள் மலரும் நீண்ட வயல்கள் சூழ்ந்த திருவரசிலி அடிகளைக் காழி நல்ல ஞானசம்பந்தன் பாடிய நற்றமிழ்ப் பாடல்களான இவை பத்தினையும் நாளும் பாட வல்லவர்; அமரர்கள் தம்மைச் சூழ்ந்து தொழுதேத்த வல்லவராய் வான் உலகெய்தி எந்நாளும் மகிழ்ந்திருப்பர்.

குறிப்புரை: அல்லி – அகவிதழ் (இரவில் பூக்கம் பூக்கள்). நற்றமிழ் – பிறவிப்பிணிக்கு மருந்தாகிய தமிழாகிய இத்திருப்பதிகம். 'நாளும் சொல்ல வல்லவர் வைகலும் மகிழ்ந்திருப்பார்' ஒருநாள் தவறின் அன்று மகிழ்ந்திரார் என்பது அவரவர் அநுபவத்தால் உணரப்படும்.

Our Lord Civa is manifest in Thiru-aracili. This city is surrounded by long paddy and other fields. Here water lily grows in good number. Our good scholarly saint Thiru-gnana-Sambandar, born in Seerkaazhi, chanted these ten verses on our Lord Civan manifested in Thiru-aracili. These devotees who can memorise and chant daily these ten verses and worship our Lord will reach the celestial world. the devas and others will praise them. They will live there happily forever.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

95ஆம் பதிகம் முற்றிற்று
End of 95th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 232 பதிக எண்: 96

96. சீர்காழி
96. SEERKAAZHI

பண் : பியந்தைக்காந்தாரம் *Pann: Piyanthai Kaanthaaram*

திருத்தல வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

2507. பொங்குவெண்புரிவளரும்பொற்புடைமார்பனெம்பெருமான்
செங்கணாடரவாட்டுஞ்செல்வனெஞ்சிவனுறைகோயில்
பங்கமில்பலமறைகள்வல்லவர்பத்தர்கள்பரவுந்
தங்குவெண்டிரைக்கானற்றண்வயற்காழிநன்னகரே. 1

பொங்கு வெண்புரி வளரும் பொற்புடை மார்பன் எம்பெருமான்
செங்கணால் அரவாட்டும் செல்வன் எம் சிவன் உறைகோயில்
பங்கமில் பலமறைகள் வல்லவர் பத்தர்கள் பரவும்
தங்கு வெண்டிரைக் கானல் தண்வயல் காழி நன் நகரே.

pogku veNpuri vaLarum poRpu uTai mArpan2, emperumAn2,
cegkaNAl aravu ATTum celvan2, em civan2, uRai kOyil--
pagkam il palamaRaikaL vallavar, pattarkaL, paravum
tagku veNtiraik kAn2al-taNvayal kAzi nan2 nakarE.

பொருள்: அசையும் வெண்ணிற முப்புரிநூல் பொலிவுடன் விளங்கும் மார்பன்; எம்முடைய பெருமான்; சிவந்த கண்ணுடைய பாம்பினை ஆட்டும் செல்வன்; எம்முடைய சிவன் உறைகின்ற திருக்கோயில், பங்கமில்லாத மறைகள் வல்லவர், பத்தர்கள் போற்றித் தங்கி வாழ்வதும், வெண்ணிற அலைகள் மோதும் கடற்கானல்களும், குளிர்ந்த வயல்களும் உள்ள காழி நல்ல நகரே.

குறிப்புரை: வெண்புரி – வெண்ணிறத்தை உடைய நூலாலாகிய முப்புரி. பங்கம் – தோல்வி. மறைப்பொருள்கள் வேறு எந்நூற் பொருள்களுக்கும் தோல்வி அடையாமையைக் குறிக்க. பங்கம் இல்

மறைகள். அழியாமையினைக் குறித்தது ஆகும். வேதம் நித்தியம், வல்லவர்களும் பத்தர்களும் பரவும் காழி நன்னகர் என்க.

Our Lord Civa is manifest in the temple in Seerkaazhi. On His attractive chest the white three ply sacred thread rolls over. He catches and makes the red eyed snake to dance. He is an immensely prosperous Supreme Being who is manifested in the temple. Vedic scholars who never fail in their Vedic knowledge and the notaries of divine knowledge extol together our Lord. The city has a large number of gardens along the seashore where the white waves always dash against the shore. Also there are many paddy fields round the city, such a city is the most attractive city of Seerkaazhi.

2508. தேவர்தானவர்பரந்துதிண்வரைமால்கடல்நிறுவி
நாவதாலமிர்துண்ணநயந்தவரிரிந்திடக்கண்டு
ஆவவென்றருநஞ்சமுண்டவனமர்தருமூதூர்
காவலார்மதில்சூழ்ந்தகடிபொழிற்காழிநன்னகரே. 2

தேவர் தானவர் பரந்து திண்வரை மால் கடல் நிறுவி
நாவது ஆலமிர் துண்ண நயந்தவர் இரிந்திடக் கண்டு
ஆவ என்றரு நஞ்சம் உண்டவன் அமர்தரு மூதூர்
காவலார் மதில் சூழ்ந்த கடிபொழில் காழி நன் நகரே.

tEvar tAn2avar parantu, tiN varai mAl kaTal niRuvi,
nAvatu Alamirtu uNNa nayantavar irintiTak kaNTu,
"Ava!" en2Ru aru nanjcam uNTavan2 amartaru mUtUr--
kAval Ar matil cUznta kaTi pozil kAzi nan2nakarE.

பொருள்: சுரரும் அசுரரும் திரண்டு திண்ணிய மந்தரமலையை மத்தாகப் பெரிய பாற்கடலில் நிறுவி, நாவினால் அமிழ்தம் உண்ண விரும்பிய அவர்கள் அஞ்சிச் சிதைந்து ஓடக் கண்டு, ஆ ஆ என்று இரங்கி உண்ணற்கு அரிய நஞ்சை உண்டவன், விரும்பித் தங்கும் பழமையான ஊர், காவலாக மதில் சூழ்ந்ததும் மணமிக்க பொழில்கள் உடையதுமாகிய காழி நன்னகரே.

குறிப்புரை: நிறுவி – மத்தாக நிறுத்தி. நாவதால் – நாக்கால். அது பகுதிப் பொருள் விகுதி. இரிந்திட – சாய. ஆவ என்று – ஆஆ என்று இரங்கி. இத்தொடர் திருமுறைகளில் பயின்றுள்ளதை ஆங்காங்கு நோக்குக. காவல் ஆர் மதில் சூழ்ந்த நகர். பொழிலை உடைய காழி நகர்.

The devas and asuras jointly wanted to enjoy drinking ambrosia withtheir tongue. They brought the very strong Manthara mountain and used it as churn-staff and fixed it and started churning the big milky ocean. While churning a very serious animal poison came out of the ocean. On seeing the poison they trembled and cried 'Ah! Ah!' and ran towards our Lord Civa and prayed and solicited for His help to save their life. Our Lord Civa collected the poison and imbibed it in His throat. Thus He saved devas, asuras and all other celestials. This Lord Civa is manifest in the very big temple city of Seerkaazhi. The city is protected with tall protective walls around the city. This city is surrounded by natural forests where sweet smelling flower plants are many and spread the sweet smell all over the area.

2509. கரியின்மாமுகமுடையகணபதிதாதைபல்பூதந்
திரியஇல்பலிக்கேகுஞ்செழுஞ்சுடர்சேர்தருமூதூர்
சரியின்முன்கைநன்மாதர்சதிபடமாநடமாடி
உரியநாமங்களேத்துமொலிபுனற்காழிநன்னகரே. 3

கரியின் மாமுகம் உடைய கணபதி தாதை பல்பூதம்
திரிய இல்பலிக்கே குஞ்சு எழுஞ்சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கை நன்மாதர் சதிபட மாநடமாடி
உரிய நாமங்கள் ஏத்தும் ஒலிபுனல் காழி நன் நகரே.

kariyin2 mA mukam uTaiya kaNapati tAtai, palpUtam
tiriya il palikku Ekum cezunjcuTar, cErtaru mUtUr--
cariyin2 mun2kai nal mAtar catipaTa mA naTam ATi,
uriya nAmagkaL Ettum oli pun2al kAzi nan2nakarE.

பொருள்: யானையின் பெரிய முகமுடைய கணபதியின் தந்தை; பூதங்களுடன் திரிந்து இல்லந்தோறும் பிச்சைக்கு எழுபவர்; அடியார்கள் உள்ளத்தில் ஒளிரும் செழுஞ்சுடர்; அவர் சேர்ந்திருக்கும் பழைமையான ஊர் யாதெனில், வளையல்கள் சரியும் முன்கைகளுடைய இளமகளிர் தாள ஜதியுடன் நடனமாடி சிவனின் திருப்பெயர்களைப் பாடி வழிபடுவது ஒலிக்கும் புனல் நிறைந்ததுமாகிய காழி நன்னகரே.

குறிப்புரை: கரத்தை உடையது கரி எனப்பட்டது. பூதகணங்களோடு பலிக்கு ஏகினார் எனல் அறிக. செழுஞ்சுடர் – அழியாததும் அறியும் ஆன்மாக்களிடத்தில் வளர்வதுமாகிய ஒளி – 'செழுஞ்சுடரே

செழுஞ்சுடர் நற்சோதி மிக்கவுருவே' அப்பர் 'ஒளிவளர் விளக்கே' (திருவிசைப்பா). சரி – வளையல். சதிபட மாநடம் ஆடல் தண்ணுமை விளங்கலுறு தாளம் இசையெல்லாம் வண்ணமலர் மெல்லடி வழிச்சதியில் நிற்பக் கண்ணினை கொள்பல் வளைய கைவழி நடப்ப. (பிரபுலிங்க. மாயை பூசைகதி 52). நடித்தல், செப்பமைந்த தண்ணுமையிசை தாளம் மென்சிறுதாட் டுப்பமைந்த வொண்சதிதழீ இச்சுவைய பல்காய முப்பமைந்தலின் கறியென நடித்தல். (பிரவு கைலாச 31). உரிய நாமங்கள் ஓதி என்றதால், அக்காலத்து மகளிர்க்குச் சிவநாமம் ஓதும் உரிமையை ஆசிரியர் உணர்ந்து மகிழ்ந்து பாட்டிலும் நாட்டிய உண்மை புலப்படும். இக்கால மகளிர் பலர், இறைவனை ஏத்த உரிய நாமங்களை உணராமைக்குக் காரணத்தை ஆராய்ந்து கண்டு, போக்குதல், சமய வளர்ச்சிக்கு வழி கோலுவதாம். மகளிரே சமயம் வளர்க்கத் தக்கார்.

Our Lord Civa is the father of Lord (elephant-headed) Ganesha. Accompanied by several bhutas He goes round the houses asking for alms. He accepts the food and moves around the universe. He appears as Supreme Flame. He manifests Himself in the old city of Seerkaazhi. In this city, very radiant girls wearing bangles in their forearms dance. They dance on tinkling plates that create musical sounds with attractive postures and sing divine songs on His name. Finally they worship Him, praying and declaring 'glory to Thee – Oh Lord – glory to Thee'. The city is surrounded by sea waves making noise all the year round.

2510. சங்கவெண்குழைச்செவியன்தண்மதிசூடியசென்னி
அங்கம்பூணெனவுடையஅப்பனுக்கழகியவூராந்
துங்கமாளிகையுயர்ந்ததொகுகொடிவானிடைமிடைந்து
வங்கவாண்மதிதடவுமணிபொழிற்காழிநன்னகரே. 4

சங்க வெண்குழைச் செவியன் தண்மதி சூடிய சென்னி
அங்கம் பூண் எனவுடைய அப்பனுக்கு அழகிய ஊராம்
துங்க மாளிகை உயர்ந்த தொகு கொடி வானிடை மிடைந்து
வங்க வாண்மதி தடவுமணி பொழில் காழி நன் நகரே.

cagka veNkuzaic ceviyan2, taNmati cUTiya cen2n2i
agkam pUN en2a uTaiya appan2ukku azakiya UrAm--
tugka mALikai uyarnta toku koTi vAn2 iTai miTaintu,
vagka vAN mati taTavum maNi pozil kAzi nan2 nakarE.

பொருள்: சங்கால் ஆன வெண்ணிறக் குழை அணிந்த செவியன்; குளிர்ந்த பிறைமதி சூடிய சென்னியன்; எலும்புமாலையைப் பூணென உடைய அப்பன்; அந்த அப்பனுக்கு அழகிய ஊராம் அது எதுவெனில், உயர்ந்த மாளிகைகள் உயரத்தில் தொக்க கொடிகள்

ஆகியவற்றுடன் நெருங்கித் தோணி போன்ற வடிவுடைய பிறை தடவும் அழகிய பொழில்களை உடைய காழி நன்னகரே.

குறிப்புரை: அங்கம் – எலும்பு. துங்கம் – உயர்ச்சி. தொகு கொடி – தொக்க கொடிகள். வினைத்தொகை. மிடைந்து – நெருங்கி. வங்கமதி – வெள்ளியைப் போன்ற திங்கள்.

Our Lord Civa in one of His ears wears the white chunk as an earring. In His matted hair He retains the cool moon. He is our Chief who wears the garland made up of bones. This Lord likes His best to be manifested in attractive Seerkaazhi. In this city, very tall palatial buildings are many. In the top terrace of these buildings very big, glorious flags are tied to the flag poles. Many flags flying in the sky sway gently near the white moon moving in the sky. The city is surrounded by natural forests, very beautiful to look at. Such a very famous city is Seerkaazhi.

2511. மங்கைகூறமர்மெய்யான்மான்மறியேந்தியகையான்
எங்களீசனென்றெழுவாரிடர்வினைகெடுப்பவற்கூராஞ்
சங்கையின்றிநன்னியமந்தாஞ்செய்துதகுதியின்மிக்க
கங்கைநாடுயர்கீர்த்திமறையவர்காழிநன்னகரே. 5

மங்கை கூறமர் மெய்யான் மான்மறி ஏந்திய கையான்
எங்களீசன் என்று எழுவாரிடர் வினை கெடுப்பவர் கூராம்
சங்கையின்றி நன்னிய மந்தாஞ் செய்து தகுதியின் மிக்க
கங்கை நாடுயர் கீர்த்தி மறையவர் காழி நன் நகரே.

"magkai kURu amar meyyAn2, mAn2maRi Entiya kaiyAn2,
egkaL Ican2!" en2Ru ezuvAr iTarvin2ai keTuppavaRku Ur Am--
cagkai in2Ri nan2 niyamam tAm ceytu, takutiyin2 mikka
kagkai nATu uyar kIrtti maRaiyavar kAzi nan2nakarE.

பொருள்: பெண்ணொரு பாகமான உடலன்; மான்கன்றினை ஏந்திய கையன்; எங்களுடைய ஈசன் என்று விழித்து எழுவாரின் இடர்வினைகளைக் கெடுப்பவன்; அவருக்கு ஊர் யாதெனில், ஐயமின்றி நல்ல ஆசார ஒழுக்கத்தால், கங்கை நதி பாயும் நாடுவரைப் பரவிய, புகழ் வாய்ந்த மறையவர் வாழும் சீகாழி நன்னகரே.

குறிப்புரை: உண்மை வடிவானவன் என்பது பொருந்துமேல் கொள்க. எழுவார் – விழித்து எழுதல். மூலாதாரத்திலிருந்து சுழுமுனை நாடி வழியாகத் தியானித்து எழுதல். இடர்வினை. இரண்டன் உருபும்

பயனும் உடன் தொக்க தொகையாயும் உம்மைத் தொகையாயும் கொள்ளலாம். வினை கெடுப்பவன் – வினைகளைப் போக்கிப் பிறவியை ஒழித்துப் பேரின்பம் அருளும் சிவபெருமான். சங்கை – ஐயம். தகுதி – ஒழுக்கத்தால் உயர்தல் மிக்க மறையவர். கீர்த்தியை உடைய மறையவர். உயர்கீர்த்தி வினைத்தொகை. கங்கை நாடு – கங்காநதி பாயும் நாட்டினின்றும் வந்த மறையவர் என்றேனும் அந்நாடு வரையிலும் பரவிய கீர்த்தியை உடைய மறையவர் என்றேனும் கொள்க.

Our Lord Civa gave half of His body to His consort Uma Devi. In one of His hands He holds a young deer. Those people who, while getting up from their bed in the early hours think in their mind and utter 'Oh! Civa is our Lord' will find their past bad karma wiped out by our Lord Civa. For such a Lord Seerkaazhi is the city and there He is manifested. In that city Vedic scholars with much clarity and no doubts, do all the daily sacred rituals without any fault. Their fame spreads all over the country where the Ganges river flows. They live in such a glorious city Seerkaazhi.

2512. நாறுகூவிளமத்தநாகமுஞ்சூடியநம்பன்
ஏறுமேறியாஈசனிருந்தினிதமர்தருமூதூர்
நீறுபூசியவுருவர்நெஞ்சினுள்வஞ்செமொன்றின்றித்
தேறுவார்கள்சென்றேத்துஞ்சீர்திகழ்காழிநன்னகரே. 6

நாறு கூவிளம் அத்த நாகமும் சூடிய நம்பன்
ஏறும் ஏறிய ஈசன் இருந்து இனிது அமர் தரு மூதூர்
நீறு பூசிய உருவர் நெஞ்சினுள் வஞ்சம் ஒன்றின்றித்
தேறுவார்கள் சென்று ஏத்தும் சீர்திகழ் காழி நன் நகரே.

nARu kUviLam mattam nAkamum cUTiya nampan2,
ERum ERiya Ican2, iruntu in2itu amartaru mUtUr--
nIRu pUciya uruvar, nenjcin2uL vanjcam on2Ru in2Rit
tERuvArkaL, cen2Ru Ettum cIr tikaz kAzi nan2nakarE.

பொருள்: மணமுடைய கூவிளம், ஊமத்தை, சுரபுன்னை ஆகிய மலர்களைச் சூடிய நம்பன்; விடை ஏறிய செல்வன்; அவ்வீசன் விரும்பி இருந்தருளும் ஊர் யாதெனில், திருநீறு பூசிய உருவராய், நெஞ்சில் வஞ்சம் ஒன்றும் இன்றிச் சிவனே தம் தெய்வம் என்று தெளிந்தவர்களாகிச் சென்று ஏத்தும் பெருமை திகழும் காழி நன்னகரே.

குறிப்புரை: ஏறும் ஏறிய ஈசன் – என்பதிலுள்ள உம்மை ஏற்றின் அடங்காமையையும் அதை அடக்கிய ஈசன் ஆற்றலையும் குறித்தது. பசுக்களுக்கு எல்லாம் பதியாதலை உணர்த்துவதே அதன் உண்மைக் கருத்து. இருந்து அமர்தரும் ஊர் என்றதால் நிலைத்திருக்கையும் மிக்க விருப்பமும் புலப்படும்.

Our Lord Civa, the most elite Supreme Being, adorns His head with the sweet smelling bael leaves and datura flowers. Along with these He accommodates the snake also on His hair. He is our Lord who loves to sustain the white bull and rides on it. This Lord is manifested in Seerkaazhi. In this city, the servitors always smear their body with holy ashes. They have no evil feelings in their mind. They are very clear in their thoughts. Such good people go to the temple in Seerkaazhi and worship our Lord Civa daily.

2513. நடமதாடியநாதன்நந்திதன்முழவிடைக்காட்டில்
விடமமர்ந்தொருகாலம்விரித்தறமுரைத்தவற்கூராம்
இடமதாமறைபயில்வாரிருந்தவர்திருந்தியம்போதிற்
குடமதார்மணிமாடங்குலாவியகாழிநன்னகரே. 7

நடமதாடிய நாதன் நந்தி தன் முழவிடைக் காட்டில்
விடம் அமர்ந்து ஒருகாலம் விரித்தற முரைத்த வற்கூராம்
இடம் அதாமறை பயில்வார் இருந்தவர் திருந்தியம் போதிற்
குடம் அதார் மணி மாடம் குலாவிய காழி நன் நகரே.

naTam atu ATiya nAtan2, nantitan2 muzavu iTaik kATTil;
viTam amarntu, oru kAlam, virittu aRam uraittavaRku Ur Am--
iTam atA maRai payilvAr; iruntavar, tirunti am pOtiR
kuTam atu Ar maNi mATam kulAviya, kAzi nan2nakarE.

பொருள்: நந்தியினுடைய முழவுக்கு ஏற்பத் திருக்கூத்து ஆடிய நாதன்; காட்டில் கல்லாலின் கீழ் அமர்ந்து ஒரு காலத்தில் அறத்தை விரித்து உரைத்தவருக்கு ஊராம்; அது யாதெனில், பெருந்தவத்தோர், மறைபயில்வார்க்கு இடமதாம்; திருத்தமான போதுபோன்ற கலசம் அமைந்த மாடங்கள் நெருங்கிய காழி நன்னகரே.

குறிப்புரை: நடமது – திருக்கூத்து, நடனமாகியமது எனக் கொண்டுரைத்தலுமாம். ஆனந்த நடனம் என்பதை நடமது எனப் பொருந்தும் மதுவை உண்டு அடையும் இன்பத்தை மது எனலாம். ஆனந்தத்தைக் குறிக்க அச்சொல்லை ஆள்வது பொருந்தும். நந்தி மத்தளம் வாசிக்க நடமாடினார் என்னும் வரலாறு

பயனும் உடன் தொக்க தொகையாயும் உம்மைத் தொகையாயும் கொள்ளலாம். வினை கெடுப்பவன் – வினைகளைப் போக்கிப் பிறவியை ஒழித்துப் பேரின்பம் அருளும் சிவபெருமான். சங்கை – ஐயம். தகுதி – ஒழுக்கத்தால் உயர்தல் மிக்க மறையவர். கீர்த்தியை உடைய மறையவர். உயர்கீர்த்தி வினைத்தொகை. கங்கை நாடு – கங்காநதி பாயும் நாட்டினின்றும் வந்த மறையவர் என்றேனும் அந்நாடு வரையிலும் பரவிய கீர்த்தியை உடைய மறையவர் என்றேனும் கொள்க.

Our Lord Civa gave half of His body to His consort Uma Devi. In one of His hands He holds a young deer. Those people who, while getting up from their bed in the early hours think in their mind and utter 'Oh! Civa is our Lord' will find their past bad karma wiped out by our Lord Civa. For such a Lord Seerkaazhi is the city and there He is manifested. In that city Vedic scholars with much clarity and no doubts, do all the daily sacred rituals without any fault. Their fame spreads all over the country where the Ganges river flows. They live in such a glorious city Seerkaazhi.

2512. நாறுகூவிளமத்தநாகமுஞ்சூடியநம்பன்
ஏறுமேறியஈசனிருந்தினிதமர்தருமூதூர்
நீறுபூசியவுருவர்நெஞ்சினுள்வஞ்செமொன்றின்றித்
தேறுவார்கள்சென்றேத்துஞ்சீர்திகழ்காழிநன்னகரே. 6

நாறு கூவிளம் அத்த நாகமும் சூடிய நம்பன்
ஏறும் ஏறிய ஈசன் இருந்து இனிது அமர் தரு மூதூர்
நீறு பூசிய உருவர் நெஞ்சினுள் வஞ்சம் ஒன்றின்றித்
தேறுவார்கள் சென்று ஏத்தும் சீர்திகழ் காழி நன் நகரே.

nARu kUviLam mattam nAkamum cUTiya nampan2,
ERum ERiya Ican2, iruntu in2itu amartaru mUtUr--
nIRu pUciya uruvar, nenjcin2uL vanjcam on2Ru in2Rit
tERuvArkaL, cen2Ru Ettum cIr tikaz kAzi nan2nakarE.

பொருள்: மணமுடைய கூவிளம், ஊமத்தை, சுரபுன்னை ஆகிய மலர்களைச் சூடிய நம்பன்; விடை ஏறிய செல்வன்; அவ்வீசன் விரும்பி இருந்தருளும் ஊர் யாதெனில், திருநீறு பூசிய உருவராய், நெஞ்சில் வஞ்சம் ஒன்றும் இன்றிச் சிவனே தம் தெய்வம் என்று தெளிந்தவர்களாகிச் சென்று ஏத்தும் பெருமை திகழும் காழி நன்னகரே.

குறிப்புரை: ஏறும் ஏறிய ஈசன் – என்பதிலுள்ள உம்மை ஏற்றின் அடங்காமையையும் அதை அடக்கிய ஈசன் ஆற்றலையும் குறித்தது. பசுக்களுக்கு எல்லாம் பதியாதலை உணர்த்துவதே அதன் உண்மைக் கருத்து. இருந்து அமர்தரும் ஊர் என்றதால் நிலைத்திருக்கையும் மிக்க விருப்பமும் புலப்படும்.

Our Lord Civa, the most elite Supreme Being, adorns His head with the sweet smelling bael leaves and datura flowers. Along with these He accommodates the snake also on His hair. He is our Lord who loves to sustain the white bull and rides on it. This Lord is manifested in Seerkaazhi. In this city, the servitors always smear their body with holy ashes. They have no evil feelings in their mind. They are very clear in their thoughts. Such good people go to the temple in Seerkaazhi and worship our Lord Civa daily.

2513. நடமதாடியநாதன்நந்திதன்முழவிடைக்காட்டில்
விடமமர்ந்தொருகாலம்விரித்தறமுரைத்தவற்கூராம்
இடமதாமறைபயில்வாரிருந்தவர்திருந்தியம்போதிற்
குடமதார்மணிமாடங்குலாவியகாழிநன்னகரே. 7

நடமதாடிய நாதன் நந்தி தன் முழவிடைக் காட்டில்
விடம் அமர்ந்து ஒருகாலம் விரித்தற முரைத்த வற்கூராம்
இடம் அதாமறை பயில்வார் இருந்தவர் திருந்தியம் போதிற்
குடம் அதார் மணி மாடம் குலாவிய காழி நன் நகரே.

naTam atu ATiya nAtan2, nantitan2 muzavu iTaik kATTil;
viTam amarntu, oru kAlam, virittu aRam uraittavaRku Ur Am--
iTam atA maRai payilvAr; iruntavar, tirunti am pOtiR
kuTam atu Ar maNi mATam kulAviya, kAzi nan2nakarE.

பொருள்: நந்தியினுடைய முழவுக்கு ஏற்பத் திருக்கூத்து ஆடிய நாதன்; காட்டில் கல்லாலின் கீழ் அமர்ந்து ஒரு காலத்தில் அறத்தை விரித்து உரைத்தவருக்கு ஊராம்; அது யாதெனில், பெருந்தவத்தோர், மறைபயில்வார்க்கு இடமதாம்; திருத்தமான போதுபோன்ற கலசம் அமைந்த மாடங்கள் நெருங்கிய காழி நன்னகரே.

குறிப்புரை: நடமது – திருக்கூத்து, நடனமாகியமது எனக் கொண்டுரைத்தலுமாம். ஆனந்த நடனம் என்பதை நடமது எனப் பொருந்தும் மதுவை உண்டு அடையும் இன்பத்தை மது எனலாம். ஆனந்தத்தைக் குறிக்க அச்சொல்லை ஆள்வது பொருந்தும். நந்தி மத்தளம் வாசிக்க நடமாடினார் என்னும் வரலாறு

இதில் குறிக்கப்பட்டது. ஒருகாலம் அறம் விரித்து உரைத்தவற்கு என்பதில் சநகாதியர்க்குக் கல்லாலின்கீழ் இருந்து உபதேசித்த உண்மை குறிக்கப்பட்டது. இடம் – பரப்பு. வேதப்பொருளின் விரிவைக் குறித்தது. இருந்தவர் – பெருந்தவத்தோர்.

Our Lord Civa is our Chief. He dances in the burning ghat while the servitor, Nandhi plays the drum. Lord Civa imbibed the animal poison, which came from the ocean. Once He explained the deep knowledge about divine virtue to the four saints Janakar and others. He highly likes the city of Seerkaazhi. In this city, Brahmin scholars have mastered all the entire Vedas. Attractive components looking like water pot are fixed at the top portion of the pillars with gems in the palaces all over the area. Such a glorious city is Seerkaazhi.

2514. கார்கொள்மேனியவ்வரக்கன்றன்கடுந்திறவினைக்கருதி
ஏர்கொள்மங்கையுமஞ்சஎழில்மலையெடுத்தவன்நெரியச்
சீர்கொள்பாதத்தோர்விரலாற்செறுத்தவெஞ்சிவனுறைகோயில்
தார்கொள்வண்டினஞ்சூழ்ந்தண்வயற்காழிநன்னகரே. 8

கார் கொள் மேனி அவ்வரக்கன் தன் கடுந்திற வினைக்கருதி
ஏர் கொள் மங்கையும் அஞ்ச எழில் மலை எடுத்தவன் நெரியச்
சீர் கொள் பாதத்தோர் விரலால் செறுத்த வெஞ்சிவன் உறைகோயில்
தார் கொள் வண்டினம் சூழ்ந்தண் வயல் காழி நன் நகரே.

kAr koL mEn2i av arakkan2--tan2 kaTun tiRa vin2aik karuti,
Er koL magkaiyum anjca, ezil malai eTuttavan2--neriya,
cIr koL pAtattu orviralAl ceRutta ven civan2 uRai kOyil--
tAr koL vaNTu in2am cUznta taNvayal kAzi nan2 nakarE.

பொருள்: கார்மேகத்தின் நிறங்கொண்ட மேனியன்; அரக்கன் இராவணனின் வலிய திறனைக் குறித்து அழகிய மங்கையாகிய உமையும் அஞ்ச, அழகிய கயிலைமலை எடுத்தவன் நசுங்கப் பெருமையுடைய திருவடியின் ஒருவிரலால் அழித்த எம்முடைய சிவன் உறைகின்ற திருக்கோயில், யாதெனில், பூவில் மொய்க்கும் வண்டினம் சூழ்ந்த குளிர்ந்த வயல்களை உடைய காழி நன்னகரே.

குறிப்புரை: ஏர் கொள் மங்கை – அழகுடைய உமாதேவியார். எழில் மலை – அழகிய கயிலை. உயர்ச்சியைக் குறித்த எழுச்சியுமாம். தார் – பூ.

Raavanan, the king of Sri Lanka, a dark bodied person, considered his mightiness as great and tried to tilt mount Kailash where the most delightful charming Uma Devi stayed. She got frightened by the movement of the mountain. Immediately our Lord Civa pressed the mountain with the small toe of His holy feet. Raavanan got crushed under the mountain. This Lord Civa is manifest in the famous city of Seerkaazhi temple. Here honey is available in plenty in flowers. Bees gather in large numbers near the flowers to suck honey. Also cool paddy fields are many round the city.

2515. மாலுமாமலரானுமருவிநின்றிகலியமனத்தாற்
பாலுங்காண்பரிதாயபரஞ்சுடர்தன்பதியாகுஞ்
சேலும்வாளையுங்கயலுஞ்செறிந்துதன்கிளையொடுமேய
ஆலுஞ்சாலிநற்கதிர்களணிவயற்காழிநன்னகரே. **9**

*மாலும் மாமலரானும் மருவி நின்றி கலிய மனத்தால்
பாலும் காண்பரிதாய பரஞ்சுடர் தன் பதியாகும்
சேலும் வாளையும் கயலும் செறிந்து தன்கிளையொடு மேய
ஆலும் சாலி நற்கதிர் களணி வயல் காழி நன் நகரே.*

mAlum mA malarAn2um maruvi nin2Ru, ikaliya man2attAl,
pAlum kANpu aritu Aya paranjcuTar tan2 pati Akum--
cElum vALaiyum kayalum ceRintu tan2 kiLaiyoTu mEya,
Alum cAli nal katirkaL aNi, vayal kAzi nan2 nakarE.

பொருள்: திருமாலும் பெரிய தாமரை மலர் மேலிருக்கும் பிரமனும் இருவரும் கூடித் தம்முள் மாறுபட்ட மனத்தராய்த் தன்னுடைய பக்கத்தையும் கூடக் காண்டற்கு இயலாத பெரிய சோதி; அந்த மெய்யொளியின் ஊராவது, சேல்மீனும் வாளை மீனும் கயல் மீனும் தம் சுற்றத்தோடு நெருங்கி மேயவே, ஆடுகின்ற கதிர்களைக் கொண்ட சாலிநெல் வயல்களை உடைய சீகாழி நன்னகரே.

குறிப்புரை: பாலும் காண்பு அரிதாய பரஞ்சுடர் – தனது பக்கத்தையும் காண்பதற்கு எளிதல்லாத மெய்யொளி. சேல், வாளை, கயல் என்பன வெவ்வேறு வகை மீன்களாதலை அறியாமல் எழுதியுள்ள இடம் பல உள. ஆலும் சாலி – ஆடுகின்ற நெல்.

Tutelary deities Thirumaal and Brahma had different opinions about their superiority. By their side our Lord Civa was available but could not be seen by these two demigods. Then instantly Lord Civa appeared as a dazzling, infinite supernal flame. This Lord Civa is manifest in the famous temple in Seerkaazhi. In this city, carnatic carp fish, sword fish, and carp tank fish - all join together with their young ones and jointly live and play with each other. Also the paddy fields are full of paddy with the ear of the grains moving in the air.

2516. புத்தர்பொய்மிகுசமணர்பொலிகழலடியிணைகாணுஞ்
சித்தமற்றவர்க்கிலாமைத்திகழ்ந்தநற்செழுஞ்சுடர்க்கூராஞ்
சித்தரோடுநல்லமார்செறிந்தநன்மாமல்கொண்டு
முத்தனேயருளென்றுமுறைமைசெய்காழிநன்னகரே. **10**

புத்தர் பொய் மிகு சமணர் பொலி கழலடி இணை காணும்
சித்த மற்றவர்க் கிலாமைத் திகழ்ந்த நற்செழுஞ்சுடர்க் கூராம்
சித்தரோடு நல்லமார் செறிந்த நன்மாமல் கொண்டு
முத்தனே அருள் என்று முறைமை செய் காழி நன் நகரே.

puttar, poy miku camaNar, poli kazal aTi iNai kANum
cittam maRRu avarkku ilAmait tikaznta nal cezunjcuTarkku Ur Am--
cittarOTu nal amarar, ceRinta nanmAmal koNTu,
"muttan2E, aruL!" en2Ru muRaimai cey kAzi nan2nakarE.

பொருள்: பொய்மிகு பவுத்தரும், பொய்மிகு சமணரும், பொன்போல் ஒளிரும் கழல் அணிந்த இரு திருவடிகளின் உணரும் பேறு இல்லாதவர்கள். அவர்களுக்கு இல்லாமையாகத் திகழ்ந்த நற்செழுஞ் சுடருக்கு ஊர் யாதெனில், சித்தர்களுடன் நல்ல அமரர்களும் திரண்ட நன்மலர்கள் கொண்டு 'முத்தனே அருள்க' என்று முறைமை செய்யும் காழி நன்னகரே.

குறிப்புரை: 'பொய்மிகு' என்பது இடைநிலை விளக்கு. பொலிகழல் இணைகாணும் சித்தம் அற்றவர்க்கு – பொன்போல் ஒளி செய்யும் கழல் அணிந்த இரண்டு திருவடிகளையும் உணரும் உள்ளம் ஒழிந்த அப்புத்தர்க்கும் சமணர்க்கும். இல்லாமை – பெறுதல் இல்லாதபடி. திகழ்ந்த நல்செழுஞ்சுடர்க்கு – சிவனடியார்க்கு விளங்கிய நல்ல செழித்த ஒளியாகிய சிவபிரானுக்கு. சித்தரோடு அமரர் மலர் கொண்டு வழிபாடு செய்யும்போது 'முத்தனே அருள்' என்று முறையிட்டுக் கொண்டனர் என்றபடி. குறையிரந்து முறைமை செய்தல். அரசர் முதலியவர்பால் குடிகள் முதலியார்க்கு உள்ளது.

Our Lord Civa wears on His holy feet very good looking anklets. The Buddhists and Jains are all liars. Our Lord could not be seen by these groups of people. This Lord looks very bright like red flame, to manifest Himself Seerkaazhi is the right place. The supernals and celestials with fine flowers come to the temple and do the poojas - homage to the deity and declare 'Muthane! - one emancipated from evil-grace us!'. This is the city Seerkaazhi where these people pray.

2517. ஊழியானவைபலவுமொழித்திடுங்காலத்திலோங்கு
* *
* *
* 11

ஊழி ஆனவை பலவும் ஒழித்திடும் காலத்தில் ஓங்கு
* *
* *
* *

Uzi An2avai palavum ozittiTum kAlattil Ogku...........

பொருள்: பல ஊழிக்காலங்கள் மாறிமாறி வந்துறும் காலங்களிலும் அழியாது ஓங்கி நிற்கும் சீகாழி.

The Seerkaazhi is not destroyed even after many deluges.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

96ஆம் பதிகம் முற்றிற்று
End of 96th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 233 *பதிக எண்: 97*

97. சீர்காழி

97. SEERKAAZHI

பண் : திருவிராகம் *Pann: Thiruviraagam*

திருத்தல வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகம் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

2518. நம்பொருள்நம்மக்களென்றுநச்சியிச்சைசெய்துநீர்
அம்பரமடைந்துசாலஅல்லலுய்ப்பதன்முனம்
உம்பர்நாதனுத்தமனொளிமிகுத்தசெஞ்சடை
நம்பன்மேவுநன்னகர்நலங்கொள்காழிசேர்மினே. 1

நம் பொருள் நம்மக்கள் என்று நச்சி இச்சை செய்துநீர்
அம்பரம் அடைந்து சால அல்லல் உய்ப்பதன் முனம்
உம்பர் நாதன் உத்தமன் ஒளி மிகுத்த செஞ்சடை
நம்பன் மேவு நன்னகர் நலம் கொள் காழி சேர்மினே.

"nam poruL, nam makkaL" en2Ru nacci, iccai ceytu, nIr,
amparam aTaintu, cAla allal uyppatan2 mun2am--
umpar nAtar, uttaman2, oLi mikutta cenjcaTai
nampan2, mEvu nan2 nakar-nalam koL kAzi cErmin2E!

பொருள்: பொருட் சார்பும் உடற்சார்பும் விரும்பி பொருளின் மேலும் மக்கட் சுற்றத்தின் மேலும் பற்றுவைத்து ஆசைக்கடலுள் அழுந்தி மிக்க துன்பம் அடைந்து கேடுறுவதன் முன் தேவர்களுக்கும் தேவனான உத்தமன், ஒளிமிக்க செஞ்சடையன்; நம் விருப்பத்திற்கு உரியவன் ஆகிய சிவன் மேவும் நல்ல நகர், அழகுடைய காழியைச் சேர்மின்.

குறிப்புரை: பொருட்பற்றாலும் மக்கட்பற்றாலும், லோகந்தரம் சேர்ந்து, துன்பம் அடைதற்கு முன்னமே சீகாழியைச் சேருங்கள் நீங்கள் என்று உபதேசம் புரிந்தருள்வதை உணர்க. அம்பரம் அடைதல் – நாதனார் ஆனை உய்க்க நரகொடு சுவர்க்கம் போய்ச் சேர்தல்.

You declare that it is your wealth; they are your children. Before being immersed in the fathomless sea of attachment and before you get languished, toiling and moiling in your life, you please reach the attractive city temple of Seerkaazhi. Prostrate before our Lord's holy feet and worship Him. Our Lord is the Chief of devas, He is the Supreme Being of exemplary conduct. His red hair locks are very bright. He is the most elite among men.

2519. பாவமேவுமுள்ளமோடுபத்தியின்றிநித்தலும்
ஏவமானசெய்துசாவதன்முனம்மிசைந்துநீர்
தீபமாலைதூபமுஞ்செறிந்தகையராகிநந்
தேவதேவன்மன்னுமூர்திருந்துகாழிசேர்மினே. 2

பாவம் ஏவும் உள்ளம் ஒடு பத்தியின்றி நித்தலும்
ஏவம் ஆன செய்து சாவதன் முனம் இசைந்துநீர்
தீப மாலை தூபமும் செறிந்த கையராகிநம்
தேவ தேவன் மன்னும் ஊர் திருந்து காழி சேர்மினே.

pAvam mEvum uLLamOTu, patti in2Ri, nittalum
Evam An2a ceytu, cAvatan2 mun2am--icaintu nIr,
tIpam mAlai tUpamum ceRinta kaiyar Aki, nam
tEvatEvan2 man2n2um Ur--tiruntu kAzi cErmin2E!

பொருள்: பாவமான நினைவுகள் உடைய நெஞ்சினோடு இறைவன்மீது பத்தியின்றிக் குற்றமானவையே செய்து நீர் இறந்து போவதற்கு முன்னம், தீபம், மாலை, தூபம் ஆகியன கையில் கொண்டு நம் பதியினை வழிபட்டு உய்ய, தேவதேவனாகிய மகாதேவன் இருக்கும் ஊர் திருத்தமான காழியைச் சேர்மினே.

குறிப்புரை: நல்வினை தீவினை என்பன கன்மங்கள். அவை ஆகாமியவினை. அவ்விரண்டும் அறமும் மறமும் ஆகும் நிலைமையில் சஞ்சிதம் எனப்படும். அறம் – புண்ணியம். மறம் – பாபம். அப்புண்ணிய பாவம் இரண்டும் அநுபவத்திற்கு வந்து சுக துக்கங்கள் ஆக்கும். அப்போது அவ்விரண்டும் பிராரப்தம் எனப்படும். புண்ணியம் பசு புண்ணியம், சிவ புண்ணியம் என இருவகைப்படும். அவற்றுள் ஈண்டுச் சிவபுண்ணியத்துள் அடங்கும் சிவபூஜையைக் கருத வேண்டும். 'புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு' என்பது திருமந்திரம். அப்புண்ணியத்தைச் செய்க என விதிப்பாராய், 'நீர், தீபம், மாலை, தூபம்

என்பவை செறிதல் வேண்டும்' என்றருளினார். நீர் என்பது முன்னிலைப் பெயராயினும் பொருத்தமா-யிருத்தலின் வழிபாட்டிற்குரிய பொருள்களுள் ஒன்றாகவும் கருதப்பட்டது.

Oh! Ye people! with a wrong bent of your mind, you execute unfair and sinful actions in your life. You have no devotion to God and lack the divine, virtuous mind. Everyday you undertake corrupted, bad actions using false words. But before you die, create devotion and love for Lord Civa and reach the temple carrying light and incense, and flower garlands, and prostrate before His holy feet and worship our Lord Civa who is manifest in the temple of Seerkaazhi as the Chief of devas.

2520. சோறுகூறையின்றியேதுவண்டுதூரமாய்நுமக்
கேறுசுற்றமெள்கவேயிடுக்கணுய்ப்பதன்முனம்
ஆறுமோர்சடையினானாதியானைசெற்றவன்
நாறுதேன்மலர்ப்பொழில்நலங்கொள்காழிசேர்மினே. 3

சோறு கூறை இன்றியே துவண்டு தூரமாய் நுமக்கு
ஏறு சுற்றம் எள்கவே இடுக்கண் உய்ப்பதன் முனம்
ஆறும் ஓர்சடையினான் ஆதியானை செற்றவன்
நாறு தேன்மலர்ப் பொழில் நலம் கொள் காழி சேர்மினே.

cORu kURai in2RiyE tuvaNTu, tUram Ay, numakku
ERu cuRRam eLkavE, iTukkaN uyppatan2 mun2am--
ARum Or caTaiyin2An2, Ati yAn2ai ceRRavan2,
nARu tEn2 malarppozil nalam koL--kAzi cErmin2E!

பொருள்: உண்ண உணவும் உடுத்த உடையும் இன்றிச் சோர்ந்து போக, உம்முடைய பெருகிய சுற்றத்தாரும் உம்மை விட்டுத் தூர விலகிப்போய் இகழ, நீர் துன்பம் எய்தும் முன்னமே, கங்கையாற்றையும் அது தங்கிய ஒப்பற்றதொரு சடையையும் உடையவன்; எப்பொருட்கும் முதலாமவன், ஆனையின் தோலை உரித்து அதனை அழித்தவன்; அச்சிவனுடைய தேன் நாறும் மலர்பொழில்களை உடைய அழகிய காழியைச் சேர்மினே.

குறிப்புரை: இடுக்கண் என்பது மரூஉ. அலக்கண், தறுகண், வன்கண், புன்கண் முதலியவை உள்ளேயுற்ற நிலையை வெளியே தோற்றும் கண்ணென்னும் உறுப்பைப் பற்றித் தோன்றிய பெயர்களாதல் அறிக. ஆறும் – சுவதந்திரம் முதலிய அறுகுணங்களும் எனக் கொண்டு, அவற்றால் ஓர்தற்குரிய சடையுடையான் எனல் சிறக்கும். சடைஞானமயமாகும். 'நுண்சிகை ஞானமாம்' (திருமந்திரம்).

Oh my dear people! You may become very poor in your life. You are unable to help your close, poor relatives who require food, dress and comforts because of their poverty; you are not able to support them; you feel very bad and become very unhelpful to your poor relatives and suffer in your mind. But before you reach such bad times you may reach the very attractive temple in the rich city of Seerkaazhi and worship our Lord Civa. You should realise and know that our Lord Civa supports the river Ganges in His matted hair. You should remember that our Lord plucked one of the four heads of Brahma. Our Lord is highly satisfied to manifest Himself in Seerkaazhi which is surrounded by many forest areas, full of flowers which spread the sweet smell of honey all round the area.

2521. நச்சிநீர்பிறன்கடைநடந்துசெல்லநாளையும்
உச்சிவம்மெனும்முரையுணர்ந்துகேட்பதன்முனம்
பிச்சர்நச்சரவரைப்பெரியசோதிபேணுவார்
இச்சைசெய்யுமெம்பிரானெழில்கொள்காழிசேர்மினே. 4

நச்சி நீர்பிறன் கடை நடந்து செல்ல நாளையும்
உச்சிவம் எனும் உரையுணர்ந்து கேட்பதன் முனம்
பிச்சர் நச்சரவரைப் பெரிய சோதி பேணுவார்
இச்சை செய்யும் எம்பிரான் எழில் கொள் காழி சேர்மினே.

nacci nIr piRan2 kaTai naTantu cella, "nALaiyum
ucci vam!" en2um urai uNarntu kETpatan2 mun2am--
piccar, naccu aravu araip periya cOti, pENuvAr
iccai ceyyum empirAn2,--ezil koL kAzi cErmin2E!

பொருள்: பொருளைப் பெரிதும் விரும்பிப் பிறரொருவர் வாசலில் போய் நின்று இரக்க, அவர் கொடுக்க மனமின்றி 'நாளை வருக; உச்சிப்போதில் வருக' என அலைக்கழிக்கும் உரையைக் கேட்டு வருந்தும் நிலை எய்தும் முன்னமேயே, பித்தர், நஞ்சுடைய பாம்பினை அணிந்தவர், பேரொளியானவர், தன்னைப் பேணுவாரை விரும்பும் எம்பிரானாகிய சிவனின் அழகிய காழியைச் சேர்மினே.

குறிப்புரை: இரப்பவர் பிறர் கடைவாயில் நின்று 'இடுக' என்று இரக்க. அவர் 'நாளை நண்பகலில் வருக' என்று சொல்லும் சொல்லைக் கேட்டுணர்ந்து வருந்தும் நிலையெய்தும் முன்னரே சிவபிரான் திருக்காழியைச் சேருங்கள்.

Oh! Ye poor people! You walk and reach rich man's house for help. That rich man even after seeing your poor status, neglects you and tells you to come next day at day time. As soon as you hear such words from the rich man you feel sorry and get disappointed to hear his corrupt words. But before hearing such words from that rich man, you may go to the temple where our Lord Civa is manifest in the city of Seerkaazhi and worship Him. He has full concern for your life; He is the brightest Supreme Being with the poisonous snake on His waist; He shows much affection to those who worship Him. You may realise this our Lord Civa is manifest in such a glorious temple in Seerkaazhi city and reach the temple in that city and worship Him.

2522. கண்கள்காண்பொழிந்துமேனிகன்றியொன்றலாதநோய்
உண்கிலாமைசெய்துநும்மையுய்த்தழிப்பதன்முனம்
விண்குலாவுதேவருய்யவேலைநஞ்சமுதுசெய்
கண்கள்மூன்றுடையவெங்கருத்தர்காழிசேர்மினே. 5

கண்கள் காண்பொழிந்து மேனி கன்றியொன்றலாத நோய்
உண்கிலா மைசெய்து நும்மை உய்த்தழிப் பதன்முனம்
விண்குலாவு தேவர் உய்ய வேலை நஞ்சமுது செய்
கண்கள் மூன்று உடைய வெங்கருத்தர் காழி சேர்மினே.

kaNkaL kANpu ozintu, mEn2i kan2Ri, on2Ru alAta nOy
uNkilAmai ceytu, nummai uyttu azippatan2 mun2am--
viN kulAvu tEvar uyya vElai nanjcu amutu cey,
kaNkaL mUn2Ru uTaiya, em karuttar--kAzi cErmin2E!

பொருள்: முதுமை எய்தி கண்கள் காணும் தன்மை ஒழிந்து உடல் தளர்ந்து இன்னதென்று அறிய முடியாத நோய் வந்து உணவு உட்கொள இயலாமையைச் செய்து நும்மை வருத்தி அழிப்பதன் முன்னம், விண்ணுலகத்தில் மகிழ்ந்திருக்கின்ற தேவர்கள் உய்வதற்காகக் கடலில் தோன்றிய நஞ்சினை அமுதாக உண்டருளியவரும் கண்கள் மூன்று உடையவருமாகிய எம்முடைய கருத்தர் சிவனிருக்கும் காழி சேர்மினே.

குறிப்புரை: காண்பு – காட்சி. 'காண்பரிதாய பரசுடர்' 'காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்' 'காண்பினிய மணிமாடம்' (தி. 7 ப. 46 பா. 2, 3) 'கண்கள் காண்பொழிந்து'.

Oh! Ye people! Before you lose the vision of your eyes, before your body gets rotten, before you get more than one disease in your body, before such evil effects destroy your body i.e., before your die, well before such things happen *to you, you may* go to the temple of our Lord, our Chief who is manifest in the temple in Seerkaazhi city. He saved the devas and all other celestials from death, from the poison that came out of the ocean and He imbibed it. He has three eyes. He is our Chief. You better go there, worship Him and get benefits in your life.

2523. அல்லல்வாழ்க்கையுய்ப்பதற்கவத்தமேபிறந்துநீர்
எல்லையில்பிணக்கினிற்கிடந்திடாதெழும்மினோ
பல்லில்வெண்டலையினிற்பலிக்கியங்குபான்மையான்
கொல்லையேறதேறுவான்கோலக்காழிசேர்மினே. **6**

அல்லல் வாழ்க்கை உய்ப்பதற்கு உவத்தமே பிறந்துநீர்
எல்லையில் பிணக்கு இனிற் கிடந்திடாது எழும்மினோ
பல்லில் வெண்தலை இனிற்பலிக்கியங்கு பான்மையான்
கொல்லை ஏறதேறுவான் கோலக் காழி சேர்மினே.

allal vAzkkai uyppataRku avattamE piRantu, nIr,
ellai il piNakkin2il kiTantiTAtu ezu(m) min2O!
pal il veN talaiyin2il palikku iyagku pAn2maiyAn2,
kollai ERu atu ERuvAn2, kOlak kAzi cErmin2E!

பொருள்: துன்பமயமான வாழ்க்கையை வாழ்வதற்கு வீணாகப் பிறந்து நீர் அளவிலாத சிக்கல்களில் சிக்கி அவற்றில் அழுந்திடாது எழும்மினோ. பற்கள் இல்லாத வெண்மையான தலையில் பிச்சைக்கு இரந்து அலையும் இயல்புடையவன், கொல்லை நிலத்துக்கு உரிய எருதின் மீது ஊருவோன் ஆகிய சிவனின் அழகிய காழி சேர்மினே.

குறிப்புரை: அவத்தம் – (அபத்தம்) தவறு. பொய். பலிக்கு இயங்குபான்மையான், இயங்குதல் – நடத்தல்.

Oh! Ye people! You get disease, ailment, sorrow, distress, calamity, diverse circumstances - all these happen to you because your birth is vain and reach the stage of an unprofitable life. Before such things happen to you, please go to the temple in Seerkaazhi city where our Lord Civa is manifest and worship Him. He moves round

the forest area on His bull to get alms in the white skull which has no teeth in the skull bone.

7ஆவது பாடல்கிடைக்கப் பெறவில்லை.

2524. பொய்மிகுத்தவாயராய்ப்பொறாமையோடுசெல்லுநீர்
ஐமிகுத்தகண்டராயடுத்திரைப்பதன்முனம்
மைமிகுத்தமேனிவாளரக்கனைநெரித்தவன்
பைமிகுத்தபாம்பரைப்பரமர்காழிசேர்மினே. 8

பொய் மிகுத்த வாயராய்ப் பொறாமையோடு செல்லுநீர்
ஐமிகுத்த கண்டராய் அடுத்திரைப்ப தன்முனம்
மைமிகுத்த மேனி வாளரக்கனை நெரித்தவன்
பைமிகுத்த பாம்பரைப் பரமர் காழி சேர்மினே.

poy mikutta vAyarAyp poRAmaiyOTu cellum nIr
ai mikutta kaNTarAy aTuttu iraippatan2 mun2am--
mai mikutta mEn2i vAL arakkan2ai nerittavan2,
pai mikutta pAmpu araip paramar,--kAzi cErmin2E!

பொருள்: பொய்யே பேசும் வாயினை உடையராய், பிறர் ஆக்கங் கண்டு பொறாமையுடன் வாழும் நீர், கோழைபட்ட மிடறு உடையராய் பேசவும் முடியாமல் மூச்சிரைப்பதன் முன், கரிய மேனியனான அரக்கன் இராவணனை நசுக்கியவன், நச்சுப்பையை உடைய பாம்பினைக் கச்சாகக் கட்டியவன் ஆகிய பரமனாகிய சிவனின் காழியைச் சேர்மினே.

குறிப்புரை: ஐமிகுத்த கண்டர் – கோழை பெருகிய கழுத்தினர். இரைப்பது என்பது கோழை கட்டியபின் பேசமுடியாமல் மூச்சுடன் வரும் ஒலி.

Oh! Ye people! You are all great liars; you speak falsehood. You speak out of jealousy and speak ill words. You get much mucous in your throat and find it difficult for breathing. But before the breathing stops, you may go to the temple in Seerkaazhi where our Lord Civa is manifest. You should know that our Lord Civa crushed the black bodied Raavanan's body, his heads and shoulders. He wears on His waist the hooded snake. This Lord will chase all your suffering if You worship Him well before starting a bad way of life.

2525. காலினோடுகைகளுந்தளர்ந்துகாமநோய்தனால்
ஏலவார்குழலினாரிகழ்ந்துரைப்பதன்முனம்
மாலினோடுநான்முகன்மதித்தவர்கள்காண்கிலா
நீலமேவுகண்டனார்நிகழ்ந்தகாழிசேர்மினே. 9

காலினோடு கைகளும் தளர்ந்து காம நோய்தனால்
ஏலவார் குழலினார் இகழ்ந்துரைப்ப தன்முனம்
மாலினோடு நான்முகன் மதித்தவர்கள் காண்கிலா
நீலமேவு கண்டனார் நிகழ்ந்த காழி சேர்மினே.

kAlin2OTu kaikaLum taLarntu, kAmnOytan2Al
Ela vArkuzalin2Ar ikaztu uraippatan2 mun2am--
mAlin2OTu nAn2mukan2--matittavarkaL--kANkilA
nIlam mEvu kaNTan2Ar nikaznta--kAzi cErmin2E!

பொருள்: காமமாகிய பெருநோயை அனுபவித்தலால் கையுடன் கால்களும் தளர்ந்து கட்டற்றுப்போய், அன்புடன் உபசாரங்கள் செய்து போற்றி வந்த மனைவியரும் பழித்துரைக்கும் இழிவை அடையும் முன்னர், தற்போதத்தால் அறியப் புகுந்த திருமாலோடு நான்முகனும் காண இயலாதவராய், நீல நிறம் மேவிய கண்டர் வாழும் காழியைச் சேர்மினே.

குறிப்புரை: காலுங் கையுந்தளர்ந்து, நோய்மிகப் பெற்றமையால் அன்பொடு உபசாரங்கள் செய்து போற்றிவந்த மனைவியரும் இகழ்ந்துரைக்கும் இழிவை அடையும் முன்னரே காழிசேர்மின் என்க. ஏலம் – மயிர்ச்சாந்து.

Oh! Ye people! Your hands and legs fail in their strength and you loiter and swing here and there. You get all sorts of ailment and suffer. Then your good and beautiful wife may show her affection and treat you lovingly. But after a long period of illness she will get disgusted and speak ill of you. But before hearing her ill words you may go to the temple in Seerkaazhi and worship our Lord. You know that the two demigods Thirumaal and Brahma were unable to see our Lord. That Civa is our Neelakandar. You should reach the temple and worship our Lord Civa who is manifest there in the temple.

2526. நிலைவெறுத்தநெஞ்சமோடுநேசமில்புதல்வர்கள்
முலைவெறுத்தபேர்தொடங்கியேமுனிவதன்முனந்
தலைபறித்தகையர்தேரர்தாந்தரிப்பரியவன்
சிலைபிடித்தெயிலெய்தான்திருந்துகாழிசேர்மினே. 10

நிலை வெறுத்த நெஞ்சமோடு நேசமில் புதல்வர்கள்
முலை வெறுத்த பேர் தொடங்கியே முனிவ தன்முனந்
தலை பறித்த கையர் தேரர் தாம் தரிப்பரியவன்
சிலை பிடித்து எயிலெய்தான் திருந்து காழி சேர்மினே.

nilai veRutta nenjcamOTu nEcam il putalvarkaL
mulai veRutta pEr toTagkiyE mun2iva tan2 mun2am--
talai paRitta kaiyar, tErar, tAm tarippa(a)riyavan2;
cilai piTittu eyil eytAn2;--tiruntu kAzi cErmin2E!

பொருள்: நோயில் கிடக்கும் நிலையினால் வெறுப்படைந்த அன்பிலாத புதல்வர்களும் பால் குடி மறந்த இளம் பாலகர்களும் சலித்து வெறுப்படையா முன்னம், சமணர் பவுத்தர் ஆகிய புறச்சமயத்தவர் தரிப்பதற்கு அரியவன், மலையை வில்லாகப் பிடித்து மும்மதில் எய்தான் ஆகிய சிவனின் திருத்தம் எய்திய காழியைச் சேர்மினே.

குறிப்புரை: பெற்றவரை வழிபட்ட மக்களும் பலநாள் படுக்கையிற் கிடந்தும் வருந்தும் அப்பெற்றோர்க்கு அவ்வப்போது வேண்டுவன செய்து சலித்து, வெறுத்து, இவ்வாறு கிடந்து தாமும் துன்புற்று நம்மையும் துன்புறுத்தும் இவர்கள் இருப்பதினும் இறப்பதே நன்று, என முன்னைய நிலைய வெறுப்பர். அதனை 'நிலைவெறுத்த நெஞ்சம்' என்றார். வெறுத்தல் செறிதல், நெருங்கல்.

Oh! Ye people! You may ail and suffer for long periods. Your children may comfort you initially as their father, but later on when the illness is prolonged the wife and children will be disgusted and angry. Before such an angry situation arises, you may go to the temple of Seerkaazhi and worship our Lord Civa. You may reach this city of Lord Civa, who is too rare to be realised by the Jains who pluck the hair from their head and by the Buddhists. This Civa is the Lord, who holding a bow, burnt the three fortresses of the asuras. Worship the Lord of this beautiful city.

2527. தக்கனார்தலையரிந்தசங்கரன்றனதரை
அக்கினோடரவசைத்தஅந்திவண்ணர்காழியை
ஒக்கஞானசம்பந்தனுரைத்தபாடல்வல்லவர்
மிக்கஇன்பமெய்திவீற்றிருந்துவாழ்தல்மெய்ம்மையே. 11

தக்கனார் தலை அரிந்த சங்கரன் தனதரை
அக்கினோடு அரவசைத்த அந்திவண்ணர் காழியை
ஒக்க ஞானசம்பந்தன் உரைத்த பாடல் வல்லவர்
மிக்க இன்பம் எய்தி வீற்றிருந்து வாழ்தல் மெய்ம்மையே.

takkan2Ar talai arinta cagkaran2--tan2atu arai
akkin2OTu aravu acaitta antivaNNar--kAziyai,
okka njAn2acampantan2 uraitta pATal vallavar,
mikka in2pam eyti vIRRiruntu vAztal meymmaiyE.

பொருள்: தக்கனுடைய தலையை அரிந்த சங்கரனார், எலும்புடன் பாம்பினையும் திருமேனிமேல் தரித்தவர், அந்தி வண்ணர், அவருடைய காழியைப் பொருத்தமாகத் திருஞானசம்பந்தன் உரைத்த இத்திருப்பதிகப் பாடல்களை வல்லவர், மிகுந்த இன்பத்தை எய்தி, சிறப்புடன் வாழ்தல் மெய்யாகும்.

குறிப்புரை: தலையரிந்த சங்கரன் என்றதால், தலை அரிந்த கொடுமை செய்தல் கடவுட்குத்தகுமோ? என்பார்க்குச் சுகத்தைச் செய்பவன் அசுகத்தை விளைக்குமளவு மிக்க அபராதங்களைத் தக்கன் செய்தான் என்றும், ஆண்டும் சிவபிரான் மறக்கருணையால் ஆண்டு சுகத்தையே பின்விளைவாகச் செய்தான் என்றும் உணர்க.

Our Lord Civa is manifest in the temple situated in the glorious city of Seerkaazhi. Our Lord chopped off the head of Thakkan, a tutelary deity. Our Lord Civa is Sankaran, the author of all good things. He wears on His waist the snake along with the garland of skull bones. He pities people in distress. Our saint Thiru-gnana-Sambandar guided us to Lord Civan in the temple in Seerkaazhi city and chanted these ten verses. Those devotees who can memorise these ten songs and chant it before our Lord Civan will get delight in the senses and pleasure in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

97ஆம் பதிகம் முற்றிற்று
End of 97th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 234 பதிக எண்: 98

98. திருத்துருத்தி 98. THIRU-TH-THURUTHI

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

துருத்தி என்பதற்கு ஆற்றிடைக்குறை என்பது பொருள். இவ்வூர் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் காவிரியின் நடுவுள் இருந்தது. 'பொன்னியின் நடுவுதன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும் துன்னிய துருத்தியானை' என்னும் இவ்வூர்த் தேவாரப் பகுதியால் இச்செய்தியை அறியமுடிகிறது.

குத்தாலம் என்னும் ஒருவகை ஆத்தி மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டுள்ளமையால் இது மரத்தின் பெயரால் குத்தாலம் என்று வழங்கப்பெறுகின்றது. இதைக் குற்றாலம் என்றும் வழங்குவர். குத்தாலம் என்பதே மருவிக் குற்றாலம் என்று வழங்குகின்றது. திருநெல்வேலி மாவட்டம் குற்றாலம் வேறு இது வேறு. இது மயிலாடுதுறை – கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில், குத்தாலம் தொடர்வண்டி நிலையத்திற்கு 1 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரிக்குத் தென்கரையில் உள்ள 37ஆவது பதியாகும். மயிலாடுதுறை – கும்பகோணம் பேருந்து வழியில் செல்லும் பேருந்துகளில் இவ்வூருக்குச் செல்லலாம்.

இறைவரின் திருப்பெயர், 'சொன்னவாறு அறிவார்'; வீங்கு நீர் துருத்தி உடையார்; கற்றளிமகாதேவர் என்பன. வடமொழியில் உத்தரவேதீசுவரர் என்பர். இறைவியாரின் திருப்பெயர் அரும்பன்ன வனமுலை அம்மை. வடமொழியாளர் மிருது முகிழாம்பிகை என்பர். திருவேள்விக்குடிப் பதிகத்தில், சம்பந்தர் இவ்வூர் அம்பாள் பெயரை 'அரும்பன வனமுலை யரிவையோடொருபக லமர்ந்த பிரான்' என்று அருளியிருக்கின்றார். தீர்த்தம் காவிரி, வடகுளம் என்பன. இவற்றுள் வடகுளம் என்பது, கோயிலினுள் வடபாலில் இருக்கின்றது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்திற்கு எழுந்தருளி, தம்மேல் உற்ற பிணி வருத்தத்தைத் தீர்த்தருளுமாறு சிவபெருமானை வேண்டினார். 'வடகுளத்துக்குளி' என்று சிவபெருமான் மொழிந்தருள, சுவாமிகளும் வேதமெல்லாம் தொக்க வடிவாய் இருந்த துருத்தியாளரைத் தொழுது, அக்குளத்தில் மூழ்கினார். அக்கணமே பிணி நீங்கி, மணியொளிசேர் திருமேனி ஆயினார். இச்செய்தியைச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். சுவாமிகளும் இவ்வூர்ப்பதிகத்தில் 'என் உடம்படும் பிணியிடர் கெடுத்தானை' எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அக்கினி, வருணன் முதலானோர் பூசித்துப் பேறு பெற்றனர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இத்தலத்திற்குப் புராணம் எழுதியுள்ளார்கள். மூவர்களும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். மூன்று பதிகங்கள் உள்ளன. இத்தலம் தருமை ஆதீன அருளாட்சியில் உள்ளது. இவ்வூரில் விக்கிரமசோழீச்சரம், ஓங்காரேச்சரம், மன்மதேச்சரம் என்னும் கோயில்கள் இருக்கின்றன. அவைகள் பாடல் பெறாதவைகள். இத்தலத்தைப்பற்றி ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய வெண்பா பின்வருமாறு:

வஞ்சியன நுண்ணிடையார் வாள்தடங்கண் நீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேற் கொண்டிருந்து – கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னாமுன் நெஞ்சே
திருத்துருத்தி யான்பாதஞ் சேர்.

பதிக வரலாறு

ஆளுடைய பிள்ளையார் அழுந்தூர் மாடக்கோயிலின் வான்பொருளினை வணங்கிப் பரவி மீண்டு, திருத்துருத்தியின் இறைவராகிய சொன்னவாறறிவாரைத் தொழுது பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2528. வரைத்தலைப்பசும்பொனோடருங்கலன்களுந்திவந்
திரைத்தலைச்சுமந்துகொண்டெறிந்திலங்குகாவிரிக்
கரைத்தலைத்துருத்திபுக்கிருப்பதேகருத்தினாய்
உரைத்தலைப்பொலிந்துனக்குணர்த்துமாறுவல்லமே. 1

வரைத்தலைப் பசும்பொன் ஓடு அருங்கலன்கள் உந்திவந்
திரைத்தலைச் சுமந்துகொண்டு எறிந்து இலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்தி புக்கிருப்பதே கருத்தினாய்
உரைத்தலைப் பொலிந்து உனக்கு உணர்த்துமாறு வல்லமே.

varaittalaip pacum pon2OTu arug kalagkaL unti vantu,
iraittu, alaic cumantu koNTu eRintu, ilagku kAvirik
karaittalait turutti pukku iruppatE karuttin2Ay!
uraittalaip polinta un2akku uNarttum ARu vallamE?

பொருள்: மலையின் உச்சியிலிருந்து பசும்பொன்னுடன் அரிய மணிகளை உந்தி அலைகள் தம் தலைமீது சுமந்துகொண்டு வந்து வீசி விளங்கும் காவிரியின் கரையில் அமைந்துள்ள திருத்துருத்தியில் சென்று தங்கியிருப்பதே கருத்தாக உடையாய்! சொன்னவாறு அறிதலில் விளங்கிய உனக்கு உணர்த்துமாறு வல்லமோ? எல்லோமல்லோம் என்றவாறு.

குறிப்புரை: காவிரியிலிருந்து கிளைத்த விக்ரமம் என்னும் ஆறு செல்ல அவற்றைச் சார்ந்திருத்தலின் துருத்தி எனப்பட்ட இத்தலத்தின் இறைவன் திருப்பெயர் சொன்னவாறறிவார் என்பது. அது கருதி, உரைத்தலைப் பொலிந்த – சொன்ன வாறறறிதலில் விளங்கிய உனக்கு உணர்த்துமாறு வல்லோமோ? வல்லோம் அல்லோம். அறிவார்க்கு அறிவிப்பது எப்படி என்றவாறு. பொலிந்த உனக்கு என்பதில் பெயரெச்சத்து அகரம் தொக்கது. சொன்னவாறு அறியவல்ல உனக்கு உரைத்தலைப் பொலிந்து உணர்த்துமாறு வல்லமோயாம்? வெளிப்படச் சொல்லாத முன்பே அன்பர் நினைத்தவற்றைச் சொன்னவாறு அறியும் உனக்கு யாம் உணர்த்தும் வன்மையுடையோமோ? இல்லை, எனலுமாம்.

Our Lord Civa is highly enthusiastic to stay in the temple of Thiru-th-thuruthi city. The river Cauvery brings from the mountain gold particles and rare gems and pushes them forward. They make gushing noise and waves are formed in the river. On the bank of this river our Lord is manifest. You, the Lord, have the ability to understand what we think, but may not express to You with clarity. Therefore, we lack the ability to make You realise; but You, being the Lord, are efficient in knowing our thoughts fully well, without our effort.

2529. அடுத்தடுத்தகத்தியோடுவன்னிகொன்றைகூவிளம்
தொடுத்துடன்சடைப்பெய்தாய்துருத்தியாயோர்காலனைக்
கடுத்தடிப்புறத்தினானிறத்துதைத்தகாரணம்
எடுத்தெடுத்துரைக்குமாறுவல்லமாகினல்லமே. 2

அடுத்து அடுத்து அகத்தியோடு வன்னி கொன்றை கூவிளம்
தொடுத்து உடன் சடைப் பெய்தாய் துருத்தியா ஓர்காலனைக்
கடுத்த அடிப்புறத்தினான் இறத்து உதைத்த காரணம்
எடுத்து எடுத்து உரைக்குமாறு வல்லம் ஆகில் நல்லமே.

aTuttu aTuttu akattiyOTu, van2n2i, kon2Rai, kUviLam,
toTuttu uTan2 caTaip peytAy! turuttiyAy! Or kAlan2aik
kaTuttu, aTippuRattin2Al niRattu utaitta kAraNam
eTuttu eTuttu uraikkum ARu vallam Akil, nallamE.

பொருள்: அகத்தியொடு வன்னியிலை, கொன்றை மலர், வில்வம் என்பவற்றை அடுத்தடுத்து வைத்துத் தொடுத்த மாலையைச் சடையில் வைத்துள்ளாய்! துருத்தியில் உள்ளாய்!

காலனைச் சினந்து புறங்காலினால் அவன் மார்பில் உதைத்த காரணத்தை எடுத்தெடுத்துப் போற்றுமாறு வல்லமோ? வல்லமை உடையோமல்லோம்.

குறிப்புரை: சிவபிரான் சடையில், அகத்திப்பூ, வன்னியிலை, கொன்றை மலர், வில்வம் என்பவற்றை அடுத்தடுத்து வைத்துத் தொடுத்த மாலையை அணிந்துளான் என்னும் உண்மை வேறு யாண்டும் காண்டல் அரிது.

Our Lord Civa adorns His matted hair with variety of flowers, one after another, fastened as a garland. The flowers are coronilla gaandiflora (Agatthi Poo), leaves of summer tree, trifoliage bael leaves, Indian laburnum flowers and cassia fistula flowers. Our Lord is manifest in the temple of Thiru-th-thuruthi. Oh Lord! You were furious with Kaalan, the god of death and kicked his chest with Your holy feet and destroyed Him. If we explain the reason for this behaviour again and again we will achieve benefits and rise to eminence.

2530. கங்குல்கொண்டதிங்களோடுகங்கைதங்குசெஞ்சடைச்
சங்கிலங்குவெண்குழைசரிந்திலங்காதினாய்
பொங்கிலங்குபூணநூலுத்திராதுருத்திபுக்
கெங்குநின்னிடங்களாவடங்கிவாழ்வதென்கொலோ. 3

கங்குல் கொண்ட திங்களோடு கங்கை தங்கு செஞ்சடைச்
சங்கு இலங்கு வெண்குழை சரிந்து இலங்காதினாய்
பொங்கு இலங்கு பூணநூல் உத்திரா துருத்திபுக்கு
எங்கு நின்னிடம் களா அடங்கி வாழ்வது என் கொலோ.

kagkul koNTa tigkaLOTu kagkai tagku cenjcaTaic
cagku ilagku veNkuzai carintu ilagku kAtin2Ay!
pogku ilagku pUNa nUl uruttirA! turutti pukku,
egkum nin2 iTagkaLA aTagki vAzvatu en2koLO?

பொருள்: இரவில் தோன்றும் பிறைச்சந்திரனுடன் கங்கை தங்கும் செஞ்சடையும், சங்கினால் ஆன வெண்ணிறக் குழை சரிந்து தொங்குகின்ற காதினை உடையாய்! கிளர்ந்து விளங்குகின்ற பூணூலை உடைய உருத்திரனே! எவ்விடமும் நின் இடமாக இருக்கவும் துருத்தியில் புக்கு அங்கு அடங்கி வாழ்வது என்கொல்?

குறிப்புரை: பூணூல் உருத்திரா – முப்புரி நூலைப் பூண்ட உருத்திர மூர்த்தியே. துருத்திபுக்கு எங்கும் நின் இடங்களா அடங்கி வாழ்தல் என்கொல் – புக்கது துருத்தியாயினும் எல்லா இடங்களும் சிவப்பிரகாசத்தால் உன் நிறைவையே உணர்த்துகின்றன. அவ்வாறு ஓரிடத்திருந்து பலவிடத்தும் காட்சி தரும் ஆற்றல் இருந்தவாறென்னே! என்றபடி, துருத்தியில் இன்றும் அத்திருக்கோயில் பொலிவு அத்தலம் முழுதும் விளங்கக் காணலாம்.

Oh! Lord Civa! In Your red matted hair You protect the baby moon which illuminates the night hours. Along with the moon, the river Ganges also is sustained in Your matted hair. From Your ear, the white ola roll hangs. The sacred thread brightly adorns Your chest. Oh! Lord Rudramoorthy, all places in the universe are Yours and You are manifested in the universe. Such is Your ability. What is the reason for You to enter into the temple and manifest Yourself in this city Thiru-th-thuruthi?

2531. கருத்தினாலோர்காணியில்விருத்தியில்லைதொண்டர்தம்
அருத்தியாற்றம்மல்லல்சொல்லியையமேற்பதன்றியும்
ஒருத்திபால்பொருத்திவைத்துடம்புவிட்டுயோகியாய்
இருத்திநீதுருத்திபுக்கிதென்னமாயமென்பதே. 4

கருத்தினால் ஓர்காணியில் விருத்தி இல்லை தொண்டர்தம்
அருத்தி ஆற்றம் அல்லல் சொல்லியை ஐயம் ஏற்பது அன்றியும்
ஒருத்தி பால் பொருத்தி வைத்து உடம்பு விட்டு யோகியாய்
இருத்தி நீதுருத்தி புக்கிதென்ன மாயம் என்பதே.

karuttin2Al or kANi il; virutti illai; toNTar tam
aruttiyAl,-tam(m) allal colli, aiyam ERpatu an2Riyum,
oruttipAl porutti vaittu, uTampu viTTu yOkiyAy
irutti nI, turutti pukku; itu en2n2a mAyam en2patE!

பொருள்: அக்கறையுடன் காணி நிலத்தில் உழவுத் தொழில் செய்து வாழ்தல் இல்லை; விருப்பினோடு தொண்டர்களின் வறுமைத் துன்பத்தை உரைத்து ஐயம் ஏற்கின்றீர்; அத்துடன் ஒருத்திபால் உடம்பைப் பொருத்தி வைத்துவிட்டு யோகியாய்த் திருத்துருத்தியில் புகுந்து அங்கு இருக்கின்றீர்! இது என்ன மாயமென்பதோ?

குறிப்புரை: யோகியாயிருந்த உண்மை உணர்த்தியவாறு. ஒரு காணி நிலம் உடையவனாகி, அதிற் பயிரிட்டு ஜீவனம் புரிதல் இல்லை. தம் வறுமைத் துன்பம் உரைத்துப் பிச்சை எடுப்பது. 'பகலிடம் புகலிடம் .

. . துருத்தியார், இரவிடத் துறைவர் வேள்விக் குடியே' என்று முதலிற் கூறியதுமன்றிப் பாடல்தொறும் அதனைத் தெரிவித்திருப்பதாலும் (தி. 3 ப. 90 பா. 1). 'ஒருத்திபால் பொருத்தி வைத்து உடம்பு விட்டுத் துருத்திபுக்கு இருத்தி, இது என்ன மாயம் என்பதோ?' என்று இங்கு வினாவியதாலும் 'காப்பது வேள்விக்குடி தண் துருத்தி யெங்கோன் அரைமேல் ஆர்ப்பது நாகம்' என்றதாலும் ஆளுடைய பிள்ளையார் காலத்துக்கும் முன்பே, பகலில் துருத்திவாசமும் இரவில் வேள்விக்குடி வாசமும் உண்டு என்ற வரலாறு வழங்கப்பட்டமை விளங்கும். இவை இல்லையேல் இரண்டு தலங்களையும் ஒருங்கு பாடார் என்க. 'வட்டக் குண்டத்தில் எரிவளர்த் தோம்பி மறைபயில்வார், அட்டக்கொண் டுண்பதறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோம்' என்றதில் 'வேள்விக்குடி' என்னும் பெயர்க் காரணம் உள்ளதறிக. மான்தோல் ஒன்றை உடுத்துப் புலித்தோல் பியற்கும் இட்டு யானைத்தோல் போர்ப்பதறிந்தோமெனில் நாம் இவர்க்கு ஆட்படோம் என்பதில் துருத்தி யோகியை நினைவூட்டினாரென்பர்.

Oh! Lord Civa! If I think about Your economic status, You have no agricultural land of Yours. You cannot, therefore, develop the land and grow edible paddy and get income from the land. You have affection for Your devotees. Therefore whenever they pray to thee explaining their suffering, You understand their prayers and grace them. You become concorporate with Your consort by giving one half of Your body to her. However You efface from Your memory Your longing to be with her. You observe meditation (called Yoga) and are manifest in Thiru-th-thuruthi temple. What is the reason for this?

2532. துறக்குமாசொலப்படாய்துருத்தியாய்திருந்தடி
மறக்குமாறிலாதஎன்னைமையல்செய்திம்மண்ணின்மேல்
பிறக்குமாறுகாட்டினாய்பிணிப்படுமுடம்புவிட்
டிறக்குமாறுகாட்டினாய்க்கிழுக்குகின்றதென்னையே. 5

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்கு மாறிலாத என்னை மையல் செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்புவிட்டு
இறக்குமாறு காட்டினாய்க்கு இழுக்குகின்ற தென்னையே.

tuRakkumA colappaTAy! turuttiyAy! tiruntu aTi
maRakkum ARu ilAta en2n2ai maiyal ceytu, im maNNin2mEl
piRakkum ARu kATTin2Ay! piNippaTum uTampu viTTu
iRakkum ARu kATTin2Aykku izukkukin2Ratu en2n2aiyE?

பொருள்: எந்நிலையிலும் விட்டு நீங்கப்படாதாய்! திருத்துருத்தியாய்! உன்னுடைய திருந்திய திருவடிகளை மறக்க இயலாத என்னை மயக்கம் செய்து இம்மண்ணுலகில் பிறக்கும்படி செய்தாய். நோய்களுக்கு இடமாகும் உடம்பைவிட்டு இறக்குமாறு காட்டினால் உனக்கு ஏற்படும் நஷ்டம் என்ன?

குறிப்புரை: துருத்தியில் எழுந்தருளிய முதல்வனே, பகலில் துறவிபோல வேடங்கொண்டு இரவில் வேள்விக்குடியில் மணவாளக் கோலம்பூண்டு, தழும்பும் உற இணை விழைச்சுடையாய்; துறக்கும் ஆறு சொல்லப்படாய், உன் திருந்திய திருவடிகளை மறக்கும் மாறுபாடு சிறிதும் இல்லாத என்னை, மையல்செய்து, இம்மண்ணுலகில் பிறக்குமாறு காட்டியருளினை, நோய்களுக்கு இடமாகும் உடம்பைத் தவிர்த்து, இறக்குமாறு காட்டியருளினை; இவ்வாறு பிறப்பும் இறப்பும் நீ காட்ட நான் உனக்குச் செய்த இழுக்கு யாது? மறக்கும் ஆறு எனலும் உண்டு. நான்கடியிலும் ஆறு என்றே கொள்ளல் ஏலாததன்று. 'பிணிப்படும் உடம்பு' – 'இடும்பைக் கிடும்பை' (மூதுரை) என்றதுணர்க.

Oh! Lord Civa! You are manifest in Thiru-th-thuruthi. During daytime You stay in Thiru-th-thuruthi as a saint, but during night hours You take the appearance of a married husband and are manifest in Velvikudi city. You have not suggested to us the ways and means to become a saint and be yogic. I prostrated at Your holy feet and felt ecstatic in eternal bliss. However, You made me be born on this earth and get involved in the world of illusion. Then shedding the body, subject to all sorts of diseases You make me die. Have I done to You any harm? Please inform me.

2533. வெயிற்கெதிர்ந்திடங்கொடாதகங்குளிர்ந்தபைம்பொழில்
துயிற்கெதிர்ந்தபுள்ளினங்கள்மல்குதண்துருத்தியாய்
மயிற்கெதிர்ந்தணங்குசாயல்மாதொர்பாகமாகமூ
எயிற்கெதிர்ந்தொரம்பினாயெரித்தவில்லியல்லையே. 6

வெயிற்கு எதிர்ந்து இடம் கொடாத கங்குளிர்ந்த பைம்பொழில்
துயில் எதிர்ந்த புள்ளினங்கள் மல்குதண் துருத்தியாய்
மயில் எதிர்ந்தணங்கு சாயல் மாதொர் பாகமாகமூ
எயில் கெதிர்ந்து ஓரம்பினாய் எரித்த வில்லி அல்லையே.

veyiRku etirntu iTam koTAtu akam kuLirnta paim pozil
tuyiRku etirnta puL in2agkaL malku taN turuttiyAy!
mayiRku etirntu aNagku cAyal mAtu orpAkam Aka mU-
eyiRku etirntu or ampin2Al eritta villi allaiyE?

பொருள்: முற்றிய வெயிலோடு பகைத்த குளிர் அஞ்சாது அகத்தில் தங்கியிருக்கும் அடர்ந்த பசுமையான பொழில்களில், உறங்குதற்குப் பறவைகள் வந்து தங்கும் குளிர்ந்த திருத்துருத்தியில் உள்ளவரே! நீர், மயிலை வென்ற சாயலை உடைய உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்டு மூன்று எயில்களைப் பகைத்து ஒரு அம்பினால் எரித்த வில்லாளி அல்லவா?

குறிப்புரை: துருத்தியில் உள்ள சோலைவளம் கூறியவாறு. வெயிலுக்கு எதிர்த்து இடம் கொடாது குளிர்ந்த சோலை இப்பொழுதும் உண்டு. அணங்கு – அழகு.

Around the city of Thiru-th-thuruthi, there are many dense forests full of tall trees and plants. They never give any space for sun's rays. The area is naturally very cool. The varieties of birds come and stay in this cool shades and enjoy their life. In such a glorious city, Lord Civa is manifest. His consort, the most enticing woman makes the peacock distressed because her beauty is nothing when compared to that of Uma Devi. Lord Civa confronted the asuras and burnt the three forts with one shot of His arrow. Oh Civa! Are You not then the best bowman?

2534. கணிச்சியம்படைச்செல்வாகழிந்தவர்க்கொழிந்தசீர்
துணிச்சிரக்கிரந்தையாய்கரந்தையாய்துருத்தியாய்
அணிப்படுந்தனிப்பிறைப்பனிக்கதிர்க்கவாவுநல்
மணிப்படும்பைநாகநீமகிழ்ந்தஅண்ணலல்லையே. 7

கணிச்சியம் படைச்செல்வா கழிந்தவர்க் ஒழிந்தசீர்
துணிச்சிரக்கு இரந்தையாய் கரந்தையாய் துருத்தியாய்
அணிப்படும் தனிப்பிறைப் பனிக்கதிர்க்க வாவுநல்
மணிப்படும்பை நாகநீ மகிழ்ந்த அண்ணலல்லையே.

kaNicci ampaTaic celvA! kazintavarkku ozinta cIr
tuNic cirak kirantaiyAy! karantaiyAy! turuttiyAy!
aNippaTum tan2ip piRaip pan2ik katirkka avAvum nal
maNip paTum painAkam nI makiznta aNNal allaiyE?

பொருள்: மழுப்படைச் செல்வனே! இறந்து போன பிரமர், நாரணர் ஆகியோரின் எண்ணற்ற தலைகளை முடித்த மாலையாய்! கரந்தை அணிந்தவனே! துருத்தி மேயவனே! அழகிய

பிறையின் குளிர்ந்த கதிரொளியை விரும்பும் நல்ல மணியுடன் நச்சுப் பையும் உடைய நாகத்தை உடன் வைத்த தலைவன் அல்லவா நீ?

குறிப்புரை: கணிச்சி படை – கணச்சியம்படை, மழுப்படை. கழிந்தவர் – நூறு கோடி பிரமர்கள் நொந்தினார், ஆறு கோடி நாராயணர் அங்கனே, ஏறுகங்கை மணல் எண்ணில் இந்திரர், 'ஈறிலாதவன் ஈசன் ஒருவனே' (தி. 5 ப. 100 பா. 3) என்றதிற் குறித்தவர்கள். துணி சிரம் கிரந்தை – துணிந்த தலை முடிச்சு; தலை மாலையை அணிந்தவனே, கரந்தையாய் – சிவகரந்தையைச் சூடியவனே.

Oh Lord Civa! You are an immensely prosperous Supreme Being. You hold in Your hand a battleaxe. The demigods of Thirumaal and Brahma who were famous deities were dead and gone many years ago. You have braided their skull bones with tight knots. You have worn on Your head the fragrant basil leaves and flowers - Indian globe thistle. You are manifested in the temple in Thiru-th-thuruthi city. Oh Civa! Are You not the Chief Supreme Being keeping on Your head the radiant, and unparalleled young baby moon, loving its cool light, along with the hooded snake which keeps in its body the bright good gem? You are the Chief with such desires.

2535. சுடப்பொடிந்துடம்பிழந்தநங்கனாயமன்மதன்
இடர்ப்படக்கடந்திடந்துருத்தியாகஎண்ணினாய்
கடற்படையுடையவக்கடலிலங்கைமன்னனை
அடற்படஅடுக்கலில்டர்த்தஅண்ணலல்லையே. 8

சுடப்பொடிந்து உடம்பு இழந்த நங்கனாய மன்மதன்
இடர்ப்படக் கடந்திடந் துருத்தியாக எண்ணினாய்
கடற்படை உடையவக் கடல் இலங்கை மன்னனை
அடற்பட அடுக்கலில் அடர்த்த அண்ணல் அல்லையே.

cuTap poTintu uTampu izantu anagkan2 Aya man2matan2
iTarppaTak kaTantu, iTam turutti Aka eNNin2Ay!
kaTal paTai uTaiya ak kaTal ilagkai man2n2an2ai,
aTal paTa, aTukkalil aTartta aNNal allaiyE?

பொருள்: நெற்றிக் கண்ணால் சுட்டெரிக்க உடம்பினை இழந்த மன்மதன், 'அங்கன் அநங்கன்' ஆயினான்; உருவிழந்த அந்த மன்மதன் இடர்படும்படி அவனை வென்று நீ துருத்தியை இடமாகக் கொள்ள நினைந்தாய்; கடல் போலும் பெரும்படை உடைய

கடலிடை இலங்கைக்கு அரசனாகிய இராவணன் கொலையுறக் கயிலை மலையை அழுத்தி அடர்த்த இறைவன் நீ அல்லையோ?

குறிப்புரை: நெற்றிக்கண்ணால் சுட்டொழிக்க, சாம்பலாகி மெய்யிழந்த உருவிலியாகிய மன்மதன். இடர்ப்படும்படி வென்று துருத்தி இடம் ஆகத் திருவுள்ளம் கொண்டருளினை. கடல் போலும் பெரும் படையை உடைய அப்பிரசித்தி பெற்ற கடலின் நடுவே உள்ள இலங்கைக்கு வேந்தனை, கொலை உறத் திருக்கயிலை மலையை அழுத்தி அடர்த்த இறைவன் அல்லையோ?

Oh Lord Civa! Your third internal eye on Your forehead has supernal hot flame. The demigod of love, Manmathan, burnt by Your third eye flame lost his body. You killed him. You are now manifested in the temple in Thiru-th-thuruthi city. The king of Sri Lanka, Raavanan, had a naval force. Oh Lord Civa! Are You not chiefly responsible for crushing him and almost killing him under Your mount Kailash?

2536. களங்குளிர்ந்திலங்குபோதுகாதலானுமாலுமாய்
வளங்கிளம்பொனங்கழல்வணங்கிவந்துகாண்கிலார்
துளங்கிளம்பிறைச்செனித்துருத்தியாய்திருந்தடி
உளங்குளிர்ந்தபோலொலாமுகந்துகந்துரைப்பனே. 9

களம் குளிர்ந்து இலங்கு போதுகாதலானும் மாலுமாய்
வளங் கிளம்பொனங் கழல்வணங்கி வந்து காண்கிலார்
துளங் கிளம்பிறைச் செனித்துருத்தியாய் திருந்தடி
உளங் குளிர்ந்த போலொலா முகந்து உகந்துரைப்பனே.

kaLam kuLirntu ilagku pOtu kAtalAn2um, mAlum Ay,
vaLam kiLar pon2 am kazal vaNagki vantu kANkilAr;
tuLagku iLampiRaic cen2it turuttiyAy! tiruntu aTi,
uLam kuLirnta pOtu elAm, ukantu ukantu uraippan2E.

பொருள்: குளிர்ச்சியுடன் விளங்குகின்ற தாமரையாகிய கனத்தில் இருக்கும் பிரமனும் மாலுமாய், பொன்போல் ஒளிரும் கழலணிந்த நின்திருவடிகளை வணங்கிப் பணிந்து காணவியலாதவர்கள் ஆயினர்; பிரகாசிக்கும் இளம்பிறையை அணிந்த சென்னியாய்; திருத்துருத்தியாய்! என்னுடைய உள்ளம் குளிர்ச்சி அடைந்த போதெல்லாம் உன் திருவடியைப் புகழ்ந்து பாடுவேன்.

குறிப்புரை: கள் அம் குளிர்ந்து, இலங்கும்போது காதலான் – தேனுடைய அழகிய குளிர்வுற்று விளங்கும் தாமரைப்பூவை விரும்புமவன். களம் இடமுமாம். போது ஆகிய களம், களமாகிய போது களம்போது ஆகக் காதலிப்பவன்.

The tutelary deity Brahma, manifest in the lotus flower which contains cool honey, and the demigod Thirumaal - both came to worship our Lord; but they both could not see the holy feet of our Lord. Oh Lord of Thiru-th-thuruthi! Civa! You retain on Your head the bright lighted young moon. Oh Lord! Whenever I am pleased in mind, the fame of Your holy feet I chant and feel happy.

2537. புத்தர்தத்துவமிலாச்சமணுரைத்தபொய்தனை
உத்தமமெனக்கொளாதுகந்தெழுந்துவண்டினம்
துத்தநின்றுபண்செயுஞ்சூழ்பொழில்துருத்தியெம்
பித்தர்பித்தனைத்தொழப்பிறப்பறுத்தல்பெற்றியே. 10

*புத்தர் தத்துவமிலாச் சமண் உரைத்த பொய்தனை
உத்தமம் எனக்கொளாது உகந்தெழுந்து வண்டினம்
துத்தநின்று பண்செயும் சூழ்பொழில் துருத்தியெம்
பித்தர் பித்தனைத் தொழப் பிறப்பறுத்தல் பெற்றியே.*

puttar, tattuvam ilAc camaN, uraitta poytan2ai
uttamam en2ak koLAtu, ukantu ezuntu, vaNTu in2am
tuttam nin2Ru paN ceyum cUz pozil-turutti em
pittar pittan2ait toza, piRappu aRuttal peRRiyE.

பொருள்: புத்தர்களும் மெய்ந்நெறி இலாத சமணர்களும் உரைத்த பொய்களை உத்தமம் எனக் கொள்ளாது, விரும்பி எழுந்து, வண்டுக் கூட்டம் இசைபாடும் பொழில்கள் சூழ்ந்த திருத்துருத்தியில், எம் பித்தர் பித்தனைத் தொழப் பிறப்பறுத்தல் தக்கது ஆகும்.

குறிப்புரை: உத்தமம் எனக் கொள்ளாது மேகம் துத்தம் – ஏழிசையுள் ஒன்றானது. பித்தர் பித்தன் – பித்தர்க்கெல்லாம் பித்தனாயிருப்பவனைத் தொழுதலால் பிறவிப் பெருங்கடலைத் தீர்த்தலே பெற்றிமையாகும்.

The Buddhists and the Jains who have no philosophy for their religion carry on false propaganda about their faith and religion. The true devotees of our Lord Civa never believe their words and realise it is false. In the city of Thiru-th-thuruthi, the bees get up with happiness and sing melody known as 'Thuttham' in the thick cool forest area. The sincere devotees of this city worship our Lord, and He graces them with affection. Those who worship this Lord with devotion will get rid of the birth and death cycle of life.

2538. கற்றுமுற்றினார்தொழுங்கழுமலத்தருந்தமிழ்
சுற்றுமுற்றுமாயினானவன்பகர்ந்தசொற்களால்
பெற்றமொன்றுயர்த்தவன்பெருந்துருத்திபேணவே
குற்றமுற்றுமின்மையிற்குணங்கள்வந்துகூடுமே. 11

கற்று முற்றினார் தொழுங் கழுமலத் தருந்தமிழ்
சுற்று முற்றுமாய் இனானவன் பகர்ந்த சொற்களால்
பெற்ற மொன்று உயர்த்தவன் பெருந்துருத்தி பேணவே
குற்ற முற்றுமின் மையிற்குணங்கள் வந்து கூடுமே.

kaRRu muRRin2Ar tozum kazumalattu aruntamiz
cuRRum muRRum Ayin2An2 avan2 pakarnta coRkaLAl,
peRRam on2Ru uyarttavan2 perun turutti pENavE,
kuRRam muRRum in2maiyin2, kuNagkaL vantu kUTumE.

பொருள்: முற்றக் கற்றவர்கள் தொழும் திருக்கழுமலத்தில், தமிழாகரன் பகர்ந்த திருப்பாடல்களால் விடைக்கொடி உயர்ந்தவனின் திருத்துருத்தியைப் போற்றவே குற்றம் முற்றும் இன்மையாகி குணங்கள் வந்து கூடும்.

குறிப்புரை: சுற்றும் முற்றும் ஆயினன் – சுற்றிலும் முற்றிலும் ஆகிய சிவபிரான். பெற்றம் – எருது எழுதிய கொடிக்கு ஆகு பெயர்.

In the city of Kazhumalam the sincere devotees who have mastered all the divine knowledge worship our Lord Civa manifested in the temple in that city. In this city, our saint Thiru-gnana-Sambandar was born. He was well-versed in the sacred Tamil. With this divine knowledge he chanted ten verses before our Lord in Thiru-th-thuruthi. Those devotees who chant these ten verses with sincere devotion before our Lord, manifested in the temple in Thiru-th-thuruthi city, and worship Him will have no blemishes in their life. All good qualities will get into them.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

98ஆம் பதிகம் முற்றிற்று
End of 98th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 235 பதிக எண்: 99

99. திருக்கோடிகா
99. THIRU-K-KODIKA

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

திருக்கோடிகா என்னும் பெயர்க்காரணம் புலப்படவில்லை. இது திரிகோடி அதாவது மூன்றுகோடி ரிஷிகள் பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது என்பர். அது பொருந்துமாறு இல்லை. இத்திருத்தலமானது மயிலாடுதுறை – கும்பகோணம் தொடர் வண்டிப் பாதையில் நரசிங்கன்பேட்டை தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கே 1.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரி வடகரைத்தலங்களுள் முப்பத்தேழாவது ஆகும். காவிரி வடகரை வழியாக மயிலாடுதுறை – கும்பகோணம் பேருந்து வழியில் இத்தலம் உள்ளது. இறைவரது திருப்பெயர் கோடிகாஈசுவரர். இறைவியாரது திருப்பெயர் வடிவம்மை. தீர்த்தம் சிருங்கதீர்த்தம். இது கோயிலுக்கு வடபால் உள்ளது. இவ்வூர்க்குச் சம்பந்தர் பதிகம் ஒன்று, அப்பர் பதிகம் மூன்றுமாக நான்கு பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவேள்விக்குடி, திருத்துருத்தி என்னும் தலங்களைப் பரவி மணாளக்கோலத்தைத் தழும்பிய தன்மையும் கூடப்பாடித் திருக்கோடிகாவில் தேவர்சிகாமணியைப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2539. இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றஇச்சையால்
பொன்றுகின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்தயங்குசோதியான்வெண்மதிவிரிபுனல்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே. 1

இன்று நன்று நாளை நன்று என்று நின்ற இச்சையால்
பொன்று கின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றை துன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

"in2Ru nan2Ru, nALai nan2Ru" en2Ru nin2Ra iccaiyAl
pon2Rukin2Ra vAzkkaiyaip pOka viTTup pOtumin2!
min2 tayagku cOtiyAn2--veNmati, viripun2al,
kon2Rai, tun2Ru cen2n2iyAn2--kOTi kAvu cErmin2E!

பொருள்: இன்றைக்கு நன்மைகளே விளைந்தன. இன்று போலவே நாளையும் நன்மையே விளையும் என்ற இச்சையால், அழிகின்ற வாழ்க்கையை இப்படியே அழிந்து போக விட்டுவிடாமல், மின்னல் போலச் சுடர்விடுகின்ற சோதியானும், வெண்மதிப்பிறை, பரந்த புனல், கொன்றைமலர் ஆகியன நெருங்கிய சென்னியை உடையவனின் திருக்கோடிகாவைச் சேர்மினே.

குறிப்புரை: இத்திருப்பதிகம் முழுதும் உள்ள உபதேசத்தை உணர்ந்தொழுகுக. பொய் வாழ்க்கையைப் போக்கி, மெய் வாழ்க்கையைப் பெறும் அன்புற்று வம்மின் உலகீர், சிவபெருமான் எழுந்தருளிய திருக்கோடிகாவைச் சேர்மின் (தி. 5 ப. 78 பா. 2, 6) (ஐயடிகள் க்ஷேத்திர வெண்பா 6).

Today is a good day; tomorrow is a good day. With these stupid thoughts and desire, you spend your days without worshipping our Lord. To get rid of this way of wrong doing, you have to follow divine life. Our Lord Civa is a very bright Supreme Being like lightning. He adorns His head with the white moon, river Ganges and Indian laburnum flower. He is manifest in the temple in Thiru-k-kodika city. You devotees reach the city and worship our Lord manifest there.

2540. அல்லல்மிக்கவாழ்க்கையைஆதரித்திராதுநீர்
நல்லதோர்நெறியினைநாடுதுந்நடம்மினோ
வில்லையன்னவாணுதல்வெள்வளையொர்பாகமாம்
கொல்லைவெள்ளையேற்றினான்கோடிகாவுசேர்மினே. 2

அல்லல் மிக்க வாழ்க்கையை ஆதரித்த இராது நீர்
நல்லதோர் நெறியினை நாடுதும் நடம்மினோ
வில்லை அன்னவாண் நுதல் வெள்வளை ஓர் பாகமாம்
கொல்லை வெள்ளை ஏற்றினான் கோடிகாவு சேர்மினே.

allal mikka vAzkkaiyai Atarittu irAtu nIr,
nallatu Or neRiyin2ai nATutum, naTa(m)min2O!
villai an2n2a vAL nutal veLvaLai or pAkam Am
kollai veLLai ERRin2An2 kOTi kAvu cErmin2E!

பொருள்: துன்பமயமான வாழ்க்கையின்மீது நீர் ஆசை வையாதீர்; நல்லதொரு நெறியை நாம் விரும்பி அடைவோம். வம்மின், வில் போன்ற ஒளியுடைய நுதலையும் வெண்ணிற சங்கு வளையல்களையும் கொண்ட உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவர்; தரும விடைமீது ஏறுவார்; அவருடைய திருக்கோடிகாவினைச் சேர்மின்.

குறிப்புரை: துன்பம் மிக்க வாழ்க்கையை விரும்பியிராமல், நல்லதொரு கதியை நாடுவோம். வம்மின், வெள்ளேற்றண்ணலது திருக்கோடிகாவைச் சேர்மின்.

Ye people! Do not undergo the life which is full of pain and suffering. You start straightaway to get good life by following divine spiritual mode of living. Our Lord Civa has embedded His consort Uma on the left side of His body. Her forehead is very bright like the bow. She wears white bangles on her hands. He sustains the white bull of the forest area for His conveyance. Oh! Ye people may reach the temple in the Thiru-k-kodika city and worship our Lord manifest there and lead a virtuous life.

2541. துக்கமிக்கவாழ்க்கையின்சோர்வினைத்துறந்துநீர்
தக்கதோர்நெறியினைச்சார்தல்செய்யப்போதுமின்
அக்கணிந்தரைமிசையாறணிந்தசென்னிமேல்
கொக்கிறகணிந்தவன்கோடிகாவுசேர்மினே.

3

துக்கம் மிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்து நீர்
தக்கதோர் நெறியினைச் சார்தல் செய்யப் போதுமின்
அக்கணிந்து அரைமிசையார் அணிந்த சென்னிமேல்
கொக்கிறகு அணிந்தவன் கோடிகாவு சேர்மினே.

tukkam mikka vAzkkaiyin2 cOrvin2ait tuRantu nIr,
takkatu Or neRiyin2aic cArtal ceyyap pOtumin2!
akku aNintu, araimicai, ARu aNinta cen2n2i mEl
kokku iRaku aNintavan2 kOTi kAvu cErmin2E!

பொருள்: துக்க மிக்க வாழ்க்கையினால் தோன்றும் சோர்வினை ஒழித்து நீர், தகுதியான நற்கதியை அடைவதற்குப் போதுமின்; எலும்பு மாலையை அரையில் கட்டி, கங்கையாற்றினை அணிந்த சென்னிமேல் கொக்கின் இறகை அணிந்தவனின் திருக்கோடிகாவினைச் சேர்மின்.

குறிப்புரை: துக்கம் மிக்க வாழ்க்கையினால் வரும் இளைப்பை ஒழித்து தக்கதொரு கதியை அடையத் திருக்கோடிகாவைச் சேர்மின்.

Oh ye people! You are distressed in your life and get exhausted. To get relieved of these, follow good and spiritual life. Our Lord wears the garland of bones round His waist. On His head He supports the river Ganges and places the crane's feathers. Oh! Ye people reach the temple where our Lord Civa is manifest in the city of Thiru-k-kodika.

2542. பண்டுசெய்தவல்வினைபற்றறக்கெடும்வகை
உண்டுமக்குரைப்பன்நானொல்லைநீரெழுமினோ
மண்டுகங்கைசெஞ்சடைவைத்துமாதொர்பாகமாக்
கொண்டுகந்தமார்பினான்கோடிகாவுசேர்மினே. 4

பண்டு செய்த வல்வினை பற்றறக் கெடும்வகை
உண்டும் அக்குரைப்பன் நான் ஒல்லை நீர் எழுமினோ
மண்டு கங்கை செஞ்சடை வைத்து மாது ஓர்பாகமாக்
கொண்டு உகந்த மார்பினான் கோடிகாவு சேர்மினே.

paNTu ceyta valvin2ai paRRu aRak keTum vakai
uNTu; umakku uraippan2, nAn2; ollai nIr ezumin2O!
maNTu kagkai cenjcaTai vaittu mAtu orpAkamAk
koNTu ukanta mArpin2An2 kOTi kAvu cErmin2E!

பொருள்: முற்பிறவிகளில் நீர் செய்த வினைகள் முற்றும் கெடும் வகை உண்டு; அதனை உமக்கு நான் உரைப்பன்; விரைந்து எழுமின்; பொங்கி எழுகின்ற கங்கையாற்றை செஞ்சடையில் வைத்து உமையம்மையைப் பாகமாகக் கொண்டு மகிழ்ந்த மார்பினை உடையவனாகிய சிவனின் திருக்கோடிகாவினைச் சேர்மின்.

குறிப்புரை: முற்பிறவியில் செய்த வினை பசையறக் கெடும்படி திருக்கோடிகாவைச் சேர்மின்.

Oh ye devotees! There is one way to wipe out the strong ill effects of your past bad karma. I will tell you the way. You may start immediately to proceed to the temple in the city of Thiru-k-kodika where our Lord Civa is manifest and worship Him there. Our Lord supports the river Ganges in His red mattress. He has embedded His consort Uma Devi on the left side of His body.

2543. முன்னைநீர்செய்பாவத்தால்மூர்த்திபாதஞ்சிந்தியா
தின்னநீரிடும்பையில்மூழ்கிறீரெழும்மினோ
பொன்னைவென்றகொன்றையான்பூதம்பாடஆடலான்
கொன்னவிலும்வேலினான்கோடிகாவுசேர்மினே. 5

முன்னை நீர் செய் பாவத்தால் மூர்த்தி பாதம் சிந்தியாது
இன்ன நீர் இடும்பையில் மூழ்கிறீர் எழும்மினோ
பொன்னை வென்ற கொன்றையான் பூதம்பாட ஆடலான்
கொன்னவிலும் வேலினான் கோடிகாவு சேர்மினே.

mun2n2ai nIr cey pAvattAl mUrtti pAtam cintiyAtu,
in2n2am nIr iTumpaiyin2 mUzkiRIr, ezu(m)min2O!
pon2n2ai ven2Ra kon2RaiyAn2, pUtam pATa ATalAn2,
kol-navilum vElin2An2, kOTi kAvu cErmin2E!

பொருள்: முற்பிறவியில் நீர் செய்த பாவத்தால், சிவமூர்த்தியின் திருவடியைச் சிந்தை செய்யாமல் இன்னமும் துன்பத்தில் முழுகுகின்றீர்; இத்துன்பத்தினின்றும் எழும்மினோ; பொன்னின் நிறத்தை வென்ற கொன்றை மாலையை உடையவன், சிவகணங்கள் பாட ஆடுபவன்; கூர்மையான வேலினை உடையவன் ஆகிய சிவபிரானின் திருக்கோடிகாவினைச் சேர்மின்.

குறிப்புரை: முற்பிறவியில் செய்த பாவத்தால், சிவமூர்த்தியின் திருவடியைச் சிந்தை செய்யாமல் துன்பத்தில் முழுகுகின்றீர். எழுமின், சிவபிரானது திருக்கோடிகாவைச் சேர்மின்.

Oh ye people! You do not worship the holy feet of our Lord Civa, therefore you suffer. This happens on account of your past bad karma. Follow my advice. Start immediately to the temple in Thiru-k-kodika city, where our Lord Civa is manifest. He wears in His matted hair the Indian laburnum flowers, brighter than real gold. His avocation is to dance in the company of His boothas who sing and dance with Him. He holds in His hand the battleaxe which has high power to kill the enemies of our Lord. Again I tell you go to the temple in Thiru-k-kodika and worship our Lord Civa with sincere devotion.

2544. ஏவமிக்கசிந்தையோடின்பமெய்தலாமெனப்
பாவமெத்தனையுநீர்செய்தொருபயனிலைக்
காவல்மிக்கமாநகர்காய்ந்துவெங்கனல்படக்
கோவமிக்கநெற்றியான்கோடிகாவுசேர்மினே. 6

ஏவமிக்க சிந்தையோடு இன்பம் எய்தலாம் எனப்
பாவம் எத்தனையும் நீர் செய்து ஒருபயனிலைக்
காவல் மிக்க மாநகர் காய்ந்து வெங்கனல்படக்
கோவம் மிக்க நெற்றியான் கோடிகாவு சேர்மினே.

Evam mikka cintaiyOTu in2pam eytal Am en2ap
pAvam ettan2aiyum nIr ceytu oru payan2 ilai;
kAval mikka mA nakar kAyntu vegkan2al paTak
kOvam mikka neRRiyAn2 kOTi kAvu cErmin2E!

பொருள்: குற்றம் மிக்க சிந்தையோடு இன்பம் எய்தலாமென நினைந்து பாவமான செயல்கள் எத்தனை செய்தாலும் அவற்றால் உமக்கு ஆவதொரு நன்மையும் இல்லை. பாதுகாவல் மிக்க திரிபுரங்கள் நெருப்பில் கனன்று எரியச் சினமிக்க நெற்றிவிழி உடையானது திருக்கோடிகாவினைச் சேர்மினே.

குறிப்புரை: ஏவம் – இகழ்ச்சி, குற்றம். காவல் மிக்க மாநகர் – திரிபுரம்.

Oh ye people! You live in this world of disrespect lacking in greatness. You imagine the life in this world as one of happiness. Without dignity and honor, you may suffer in your advanced age and feel unhappy. Before this happens to you, you may go to the temple in Thiru-k-kodika city and worship the holy feet of our Lord Civa manifest there. He wears on His body the garland made of white bones as jewellery. In His golden hair He retains the white curved young moon. Go to this temple in Thiru-k-kodika city and worship Him.

2545. ஏணழிந்தவாழ்க்கையையின்பமென்றிருந்துநீர்
மாணழிந்தமூப்பினால்வருந்தன்முன்னம்வம்மினோ
பூணல்வெள்ளெலும்பினான்பொன்றிகழ்சடைமுடிக்
கோணல்வெண்பிறையினான்கோடிகாவுசேர்மினே. 7

ஏணம் அழிந்த வாழ்க்கையை இன்பம் என்று இருந்துநீர்
மாண் அழிந்த மூப்பினால் வருந்தன் முன்னம் வம்மினோ
பூணல் வெள்எலும்பினான் பொன் திகழ் சடைமுடிக்
கோணல் வெண்பிறையினான் கோடிகாவு சேர்மினே.

EN azinta vAzkkaiyai in2pam en2Ru iruntu nIr,
mAN azinta mUppin2Al varuntal mun2n2am vammin2O!
pUNal veL elumpin2An2, pon2tikaz caTai muTik
kONal veNpiRaiyin2An2, kOTikAvu cErmin2E!

பொருள்: அறத்தின் வலிமை அற்ற வாழ்க்கையை இன்பம் என்று இருந்து நீர் நற்குணம் நற்செயல்கள் இன்றி மூப்படைந்து வருத்துவதன் முன்னம் வம்மின். வெள்ளெலும்பினை அணிகலனாகப் பூண்டவன்; பொன்போலத் திகழ்கின்ற சடைமுடியில் கோணிய வெண்பிறையைச் சூடியவன் ஆகிய சிவனின் திருக்கோடிகாவினைச் சேர்மினே.

குறிப்புரை: மூப்படைந்து, அதனால் தளர்ச்சி எய்தி வருந்துவதன் முன்னரே, வம்மின்; திருக்கோடிகாவைச் சேர்மின். ஏண் – பெருமை. பொன்போலும் சடையில் வெண்பிறையைச் சூடியவன்.

Oh ye people! thinking that this life is full of happiness, which really has no benevolence, you get exhausted and disgusted in your advanced age. But before such a stage happens to you, do come to me. I will tell you go to the temple in Thiru-k-kodika city and worship our Lord Civa manifest there. Our Lord wears white garland of bones as His jewellery. He retains the white young moon on His golden bright matted head. I repeat, go to the temple in Thiru-k-kodika city with sincere devotion, and praise our Lord's fame.

2546. மற்றிவாழ்க்கைமெய்யெனும்மனத்தினைத்தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின்சேவடிபணிந்துவந்தெழுமினோ
வெற்றிகொள்தசமுகன்விறல்கெடஇருந்ததோர்
குற்றமில்வரையினான்கோடிகாவுசேர்மினே. 8

மற்றி வாழ்க்கை மெய் எனும் மனத்தினைத் தவிர்ந்து நீர்
பற்றி வாழ்மின் சேவடி பணிந்து வந்து எழுமினோ
வெற்றி கொள் தசமுகன் விறல் கெட இருந்ததோர்
குற்றம் இல் வரையினான் கோடிகாவு சேர்மினே.

maRRu i(v) vAzkkai mey en2um man2attin2ait tavirntu nIr,
paRRi vAzmin2, cEvaTi! paNintu vantu ezumin2O!
veRRi koL tacamukan2, viRal keTa iruntatu Or
kuRRam il varaiyin2An2 kOTi kAvu cErmin2E!

பொருள்: இந்த உலகவாழ்க்கையை மெய்யெனக் கருதும் மனத்தைத் தவிர்ந்து நீர், சிவனின் சேவடியைப் பற்றி வாழ்மின், சேவடியை உவந்து பணிந்து எழுமின், வெற்றியே கொண்டு வாழ்ந்த இராவணனின் ஆற்றல் அழிய இருந்த ஒப்பற்றதும் தூய்மையானதும் ஆகிய கயிலைமலையை உடையவனின் திருக்கோடிகா சேர்மினே.

குறிப்புரை: இது மெய் வாழ்க்கை அன்று என்று நீக்கித் திருக்கோடிகாவைச் சேர்மின்.

Oh ye people! You have firm faith in this life. You also believe that this life is true and permanent. Drop these false ideas completely. Immediately prostrate before the holy feet of our Lord Civa, grip Him with sincere devotion and lead a good life. Our Lord Civa destroyed the mightiness of Raavanan who got victory in every walk of his life. Our Lord belongs to mount Kailash which has no blemishes. You may reach the temple in the city of Thiru-k-kodika and worship Him with sincere devotion.

2547. மங்குநோயுறும்பிணிமாயும்வண்ணஞ்சொல்லுவன்
செங்கண்மால்திசைமுகன்சென்றளந்துங்காண்கிலா
வெங்கண்மால்விடையுடைவேதியன்விரும்புமூர்
கொங்குலாம்வளம்பொழிற்கோடிகாவுசேர்மினே. 9

மங்கு நோய் உறும்பிணி மாயும் வண்ணம் சொல்லுவன்
செங்கண் மால் திசைமுகன் சென்று அளந்தும் காண்கிலா
வெங்கண் மால் விடை உடை வேதியன் விரும்பும் ஊர்
கொங்குலாம் வளம்பொழில் கோடிகாவு சேர்மினே.

magku nOy uRum piNi mAyum vaNNam colluvan2;
cegkaN mAl, ticaimukan2, cen2Ru aLantum kANkilA--
veg kaN mAlviTai uTai--vEtiyan2 virumpum Ur,
kogku ulAm vaLam pozil, kOTi kAvu cErmin2E!

பொருள்: உயிருணர்வு மங்குதற்கு ஏதுவாகிய நோய் அடைவதற்குக் காரணமாகிய கட்டு அழியும் வழியைச் சொல்வேன்; செங்கண்மால், திசைமுகன் இருவரும் அகழ்ந்தும் மேனோக்கிப் பறந்தும் சென்றளந்து காண அரியவன்; செங்கண் மால்விடை உடையவன், வேதியன் ஆகிய சிவன் உறைகின்ற ஊர், நறுமணம் உலாவுகின்ற திருக்கோடிகாவினைச் சேர்மினே.

குறிப்புரை: நோய் அடைதற்கு ஏதுவாகிய கட்டு, உடலையும் அதைச் சார்ந்து உயிரையும் பிணித்தலால் பிணி எனப்பட்டது. பிறவிப் பிணி அழியும் வகை சொல்வேன். திருமாலும் நான்முகனும் சென்று அளந்தும் காணமாட்டாத பெருமையவன்.

Oh ye people! I will give you the beneficial suggestions to wipe out the bad karma that creates ailments in your present life that make life dim or dull. There will be no more difficulties if you immediately go to the temple in Thiru-k-kodika city and worship Him with sincere devotion. The red eyed deity Thirumaal and the four-faced Brahma strolled all over the cosmos to see Him. They were unable to achieve their aim. He is such a famous Supreme Being. He loves to sustain the white strong bull for His conveyance. He is the author of the four Vedas. Go to the city of natural forests with a lot of honey in the flowers.

2548. தட்டொடுதழைமயிற்பீலிகொள்சமணரும்
பட்டுடைவிரிதுகிலினார்கள்சொற்பயனிலை
விட்டபுன்சடையினான்மேதகும்முழவொடும்
கொட்டமைந்தஆடலான்கோடிகாவுசேர்மினே. 10

தட்டொடு தழை மயிற்பீலி கொள் சமணரும்
பட்டு உடைவிரி துகிலினார்கள் சொல் பயனிலை
விட்ட புன்சடையினான் மேதகும் முழவொடும்
கொட்டு அமைந்த ஆடலான் கோடிகாவு சேர்மினே.

taTToTu tazai mayil plli koL camaNarum,
paTTu uTai viri tukilin2ArkaL, col payan2 ilai;
viTTa pun2 caTaiyin2An2, mEtakum muzavoTum
koTTu amainta ATalAn2, kOTikAvu cErmin2E!

பொருள்: தடுக்கு பாயுடன் மயிற்பீலியைக் கைக்கொள்ளும் சமணரும் பட்டுடையை விரித்துப் போர்க்கும் தேரரும் உரைக்கும் சொற்களினால் பயனில்லை. தொங்கவிட்ட பொன்னார் சடையினான்; சிறப்புடைய முழவொடு தாளக் கொட்டமைந்த ஆடலான் ஆய சிவனின் திருக்கோடிகாவினைச் சேர்மினே.

குறிப்புரை: சொல்லுஞ் சொல் பயனில்லை. தொங்கவிட்ட பொன்னார் செஞ்சடை.

The Jains stroll all around the city carrying a flat plate in which the peacock's feather is fixed. The Buddhists cover their body with broad silk shawl. They both make meaningless announcements. You never listen to them. You may go to the temple in the Thiru-k-kodika city and worship Him with sincere devotion. His entangled locks of hair hang downwards on His back. His avocation is to dance to the music of the fascinating drum. Again I repeat, ye people go immediately to the temple in the city of Thiru-k-kodika, pray to Lord Civa and worship Him with sincere devotion.

2549. கொந்தணிகுளிர்பொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனைச்சீர்மிகுதிறலுடை
அந்தணர்புகலியுளாயகேள்விஞானசம்
பந்தனதமிழ்வல்லார்பாவமானபாறுமே. **11**

கொந்தணி குளிர்பொழில் கோடிகாவு மேவிய
செந்தழல் உருவனைச் சீர்மிகு திறலுடை
அந்தணர் புகலி உளாய கேள்வி ஞானசம்
பந்தன தமிழ்வல்லார் பாவம் ஆன பாறுமே.

kontu aNi kuLirpozil kOTi kAvu mEviya
centazal uruvan2ai, clrmiku tiRal uTai
antaNar pukaliyuL Aya kELvi njAn2acam-
pantan2a tamiz vallAr pAvam An2a pARumE.

பொருள்: பூங்கொத்துக்களுடைய குளிர்ந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்கோடிகாவினில் மேவிய செந்தழல் போன்ற திருமேனியனைப் பெருமைமிக்க திறலுடை அந்தணர்கள் வாழும் புகலியுள் மிக்க கேள்விஞானம் கொண்ட ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகமான தமிழ்ப்பாடல்கள் வல்லவர்களின் பாவமாயின அழியும்.

குறிப்புரை: திருக்கோடிகாவை மேவிய அந்தணர் வாழும், திருப்புகலியுள் ஆய்ந்த மறையாகிய வேள்வியை உடைய திருஞானசம்பந்தருடைய இத்தமிழ் மாலை பாட வல்லவர் பாவம் போக்குவர். கொந்து – பூங்கொத்து. கேள்வி – கருதி. அந்தணர் புகலி என்றதால் அங்கு அக்காலத்தில் சிவபத்தியிற் சிறந்த அந்தணர் பலர் இருந்தமையும், அதிற் சிறவாதாரைக் கூறார் என்பதும், கூறியது கொண்டு அவரை நாமும் இப்பொழுது நினைந்து பணிந்து நலம் பெறலாயிற்று என்பதும் உணர்க.

Our Lord Civa is manifest in the temple in Thiru-k-kodika city. The city is surrounded by big natural cool forests where flower plants have bunches of blossom. His body is like bright red supernal flame. Our saint Thiru-gnana-Sambandar was born in the city of Pukali. Here the scholar Brahmins, well versed in all divine knowledge, live in large numbers. Our saint is a scholar in Vedas. He chanted these ten verses on our Lord Civa who is in the temple in Thiru-k-kodika city. Those scholars who memorise and repeat these ten verses before our Lord Civa in the temple will get rid of their sins, if any in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

99ஆம் பதிகம் முற்றிற்று
End of 99th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 236 *பதிக எண்: 100*

100. திருக்கோவலூர்வீரட்டம் 100. THIRU-K-KOVALOOR-VEERATTAM

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

கோவலூர் என்பது ஊரின் பெயராகவும், வீரட்டம் என்பது கோயிலின் பெயராகவும் அமைந்துள்ளன. வீரட்டம் என்றால் வீரத்தைக் காட்டிய இடம். இச்செய்தி 'கோவலூர்தனுள் – வீரட்டானஞ் சேர்துமே' என்னும் இக்கோயிலுக்குரிய திருஞான சம்பந்தர் தேவாரப் பகுதியால் அறியக் கிடக்கின்றது. இத்தகைய தலங்கள் எட்டாகும். அவைகளுள் இது ஒன்று. இது அந்தகாசுரனைக் காய்ந்த இடம். இச்செய்தியை,

அவுணரிற் கள்வ னான அந்தகற் காய்ந்து மூன்று
புவனமும் கவலை தீர்த்த புண்ணியன் புரமீ தாகும்

என்னும் பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணத்தின் அர்ச்சனைப் படலமும் வலியுறுத்தும்.

இறைவரது திருப்பெயர் – வீரட்டநாதர். இறைவியாரது திருப்பெயர் – சிவானந்தவல்லி. தீர்த்தம் பெண்ணையாறு. இது பெண்ணையாற்றின் தென்கரையில் இருக்கிறது. திருக்கோவலூர் என்னும் தொடர்வண்டி நிலையத்தில் வடக்கே 1/2 கி.மீ. தூரத்திலுள்ள திருஅறையணி நல்லூரை அடைந்து, அங்கிருந்து பெண்ணையாற்றைக் கடந்து தென்கரையிலுள்ள இத்தலத்தை அடையலாம். இது நடுநாட்டுத் தலங்கள் இருபத்திரண்டில் பதினொன்றாவது ஆகும். பண்ணுருட்டியிலிருந்தும், திருவண்ணாமலையிலிருந்தும் பேருந்துகள் செல்கின்றன. பேருந்து நிலையத்துக்கு வடபால் கோயில் உள்ளது. மலாடர் கோமானாகிய மெய்ப்பொருள் நாயனார், தம்மோடு பலமுறை போர்புரிந்து, தோற்ற முத்தநாதனால், வஞ்சனையால் உயிர்க்கு இறுதி நேர்ந்த இடத்தும், 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' எனும் உறுதியால், அவனைக் காத்துக் கூத்தப் பெருமான் திருவடி நீழல் அடைந்த பதி இதுவாகும். இத்திருக்கோயிலுக்குச் சம்பந்தர் பதிகம் ஒன்று அப்பர் பதிகம் ஒன்று ஆக இரு பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

திருமறைச் சிறுவர் திருவாமாந்தூரரை அணைந்து போற்றித் திருக்கோவலூரைச் சேர்ந்து ஏத்திப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2550. படைகொள்கூற்றம்வந்துமெய்ப்பாசம்விட்டபோதின்கண்
இடைகொள்வாரெமக்கிலையெழுகபோதுநெஞ்சமே
குடைகொள்வேந்தன்மூதாதைகுழகன்கோவலூர்தனுள்
விடையதேறுங்கொடியினான்வீரட்டானஞ்சேர்துமே. 1

படைகொள் கூற்றம் வந்து மெய்ப்பாசம் விட்ட போதின்கண்
இடை கொள்வார் எமக்கு இலை எழுக போது நெஞ்சமே
குடை கொள் வேந்தன் மூதாதை குழகன் கோவலூர்தனுள்
விடையது ஏறும் கொடியினான் வீரட்டானம் சேர்துமே.

paTai koL kURRam vantu, meyp pAcam viTTapOtin2kaN,
iTai koLvAr emakku ilai; ezuka! pOtu, nenjcamE!
kuTai koL vEntan2 mUtAtai, kuzakan2, kOvalUr tan2uL--
viTai atu ERum koTiyin2An2--vIraTTAn2am cErtumE.

பொருள்: நெஞ்சமே! சூலப்படையைக் கொண்ட எமன் உடலிலிருந்து உயிரைப் பறிக்கும் பாசக்கயிற்றை நம்மீது விட்டபோதில் இடைநின்று தடுக்க வல்லவர் எமக்கு ஒருவருமிலர்; ஆகவே எழுக! என்னுடன் போதுக! குடைக் கூத்தனாகிய முருகனின் தாதை; குழகன்; விடைக்கொடியினான் ஆகிய சிவனின் திருக்கோவலூர் தனுள் வீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: பாசம் – கயிறு; எமபாசம். நெஞ்சமே எழுக, போதுக. வெண்கொற்றக் குடையைக் கொண்ட மலையமான் முதுதாதையாகிய குழகன் சிவபிரான். குழகன் இத்தலத்தின் இறைவன் திருப்பெயர்; (பா. 3, 6, 9) விடையது – அது பகுதிப் பொருள் விகுதி. வீரட்டானம், வீரஸ்தாநம்.

The demigod of death Yaman will come to You with arms and weapons. He will put round Your body the noose to remove the soul from Your body. At that moment nobody could prevent him and help you. Oh my dear heart! get up, join with me and get satisfied. The canopy of royalty is owned by Malayaman, the Supreme Being, the Father, our Lord Civa. Our Lord Civa has the insignia of the bull in His flag. He is manifest in the Veerattam temple in Kovaloor city. Let us reach there.

2551. கரவலாளர்தம்மனைக்கடைகள்தோறுங்கால்நிமிர்த்
திரவலாழிநெஞ்சமேயினியதெய்தவேண்டில்நீ
குரவமேறிவண்டினங்குழலொடியாழ்செய்கோவலூர்
விரவிநாறுகொன்றையான்வீரட்டானஞ்சேர்துமே. 2

கரவல் ஆளர் தம்மனைக் கடைகள் தோறும் கால்நிமிர்த்
திரவல் ஆழிநெஞ்சமே இனியது எய்த வேண்டில்நீ
குரவம் ஏறிவண்டினம் குழல் ஒடியாழ் செய் கோவலூர்
விரவி நாறு கொன்றையான் வீரட்டானம் சேர்துமே.

karavalALar tam man2aikkaTaikaL tORum kAl nimirttu,
iraval-Azi nenjcamE!--in2iyatu eyta vENTin2, nI!
kuravam ERi vaNTu in2am kuzaloTu yAz cey kOvalUr,
viravi nARu kon2RaiyAn2, vIraTTAn2am cErtumE.

பொருள்: கடல்போல் அலைகின்ற நெஞ்சமே! கரத்தலில் வல்லவர்களின் மனைவாசல் தோறும் கால் நடந்து இரத்தலைச் செய்யாதே. நீ இனியதை வேண்டுவாய் ஆயின், குரவ மரத்தின் மேலேறிப் பூக்களை மொய்த்து, வண்டினங்கள் குழலோடு யாழ்போல முரலும் திருக்கோவலூரில், மணம் நாறுகின்ற கொன்றையான் சிவனுடைய திருவீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: கரப்பவர் வீடுகளின் கடைவாயில் தோறும், கால் நிமிர்த்து (நடந்து) இரப்பதைச் செய்யாதே; நெஞ்சமே! ஆழி நெஞ்சம் – கடலாழத்தினும் காண்டற்கரிய ஆழமுடைய நெஞ்சமே! நினைப்பென்னும் நெடுங்கிணறு. இனியதை எய்த வேண்டினால், சிவபெருமான் வீரட்டானத்தைச் சேர்வோம்.

Oh my dear people! Do not walk straight to the gates of great people and beg for alms. Oh my dear heart! You are in an impervious depth, which is deeper than the ocean. If you wish to become morally noble, the only remedy is we should go to the Veerattam temple of our Lord Civa in the city of Kovaloor and worship Him. The city has trees with flowers swarmed around by bees and thier humming is like music of flutes and lutes. Our Lord wearing the fragrant cassia resides in the temple.

2552. உள்ளத்தீரேபோதுமின்னுறுதியாவதறிதிரேல்
அள்ளற்சேற்றிற்காலிட்டிங்கவலத்துளழுந்தாதே
கொள்ளப்பாடுகீதத்தான்குழகன்கோவலூர்தனுள்
வெள்ளந்தாங்குசடையினான்வீரட்டானஞ்சேர்துமே. 3

உள்ளத்தீரே போதுமின் உறுதியாவது அறிதிரேல்
அள்ளற் சேற்றிற் காலிட்டு இங்கவலத்து உள் அழுந்தாதே
கொள்ளப் பாடு கீதத்தான் குழகன் கோவலூர் தனுள்
வெள்ளம் தாங்கு சடையினான் வீரட்டானம் சேர்துமே.

uLLattIrE! pOtumin2(n2), uRuti Avatu aRitirEl!
aLLal-cERRil kAl iTTu, igku avalattuL azuntAtE,
koLLap pATu kItattAn2, kuzakan2, kOvalUrtan2uL--
veLLam tAgku caTaiyin2An2--vIraTTAn2am cErtumE.

பொருள்: ஊக்கமுடைய உள்ளத்தீரே! போதுமின்! உயிருக்கு உறுதி யாது என்பதை அறிதிரேல், பிரபஞ்சம் என்னும் சேற்றில் கால் வைத்து இங்கு துன்பத்தில் அழுந்தாமல், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கீதம் பாடுமவன், குழகன், திருக்கோவிலூரில் கங்கை வெள்ளம் தங்கும் சடையனாகிய சிவனின் திருவீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: நல்ல உள்ளத்தை உடையவரே உயிர்க்கு உறுதியாவதை அறிதிர் என்னில் திருக்கோவலூர் வீரட்டானம் சேர்வோம். அள்ளற்சேறு – நரகம்.

Oh my dear people! You are noble hearted people. If you want to achieve the only redeeming reality for your life, do not involve yourself in the mire of bad deeds, which will take you to hell. Our Lord Civa, singing such noble songs pleasing to our ears, supports the river Ganges on His matted hair. He is manifest in the Veerattam temple in Kovaloor. Let us reach the place and worship Him. Do come.

2553. கனைகொளிருமல்சூலைநோய்கம்பதாளிகுன்மமும்
இனையபலவுமூப்பினோடெய்திவந்துநலியாமுன்
பனைகளுலவுபைம்பொழிற்பழனஞ்சூழ்ந்தகோவலூர்
வினையைவென்றவேடத்தான்வீரட்டானஞ்சேர்துமே. 4

கனைகொள் இருமல் சூலை நோய் கம்பதாளி குன்மமும்
இனைய பலவும் மூப்பினோடு எய்தி வந்து நலியாமுன்
பனைகள் உலவு பைம்பொழில் பழனம் சூழ்ந்த கோவலூர்
வினையை வென்ற வேடத்தான் வீரட்டானம் சேர்துமே.

kan2aikoL irumal, cUlainOy, kampatALi, kun2mamum,
in2aiya palavum, mUppin2OTu eyti vantu naliyAmun2,
pan2aikaL ulavu paimpozil pazan2am cUznta kOvalUr,
vin2aiyai ven2Ra vETattAn2, vIraTTAn2am cErtumE.

பொருள்: இருமல் முதலாய நோய்கள் பலவும் மூப்பினொடு பொருந்தி வந்து வருத்துவதற்கு முன், பனை மரங்கள் இருக்கும் பைம்பொழில்கள் பழனங்கள் சூழ்ந்த திருக்கோவலூரில், இருவினையை வென்ற சிவவேடத்தானின் திருவீரட்டானத்தைச் சேர்துமே.

குறிப்புரை: கம்பதாளி – தாள்நடுங்கும் ஒருவகை நோய். கம்பம் – நடுக்கம். தாளி – கால்களைப் பற்றுவது. 'பெண்ணை' என்றதற்கேற்ப பனந்தோப்பு மிக்கிருக்கும் நாடு. இருவினையையும் போக்கிய சிவவேடத்தை உடையவன்.

Oh my dear people! In your advanced age you will get cough with guttural sound in your throat (croaking). Arthritic complaints, stiffness, shivering, chronic, enlargement of spleen and such other diseases will affect you severely. Before such a stage happens, let us go to the Veerattam temple and worship Lord Civa manifest there. Around the city of Kovaloor, green palmyrah trees are in large numbers. Forest areas are there. Paddy fields are there. In such a glorious city, our Lord Civa who is detached from the dual karma manifests Himself and graces devotees. We will go there to worship Him.

2554. உளங்கொள்போகமுய்த்திடாருடம்பிழந்தபோதின்கண்
துளங்கிநின்றுநாடொறுந்துயரலாழிநெஞ்சமே
வளங்கொள்பெண்ணைவந்துலாவயல்கள்சூழ்ந்தகோவலூர்
விளங்குகோவணத்தினான்வீரட்டானஞ்சேர்துமே. 5

உளம் கொள் போகம் உய்த்திடார் உடம்பு இழந்த போதின்கண்
துளங்கி நின்று நாள்தொறும் துயர் ஆழி நெஞ்சமே
வளம் கொள் பெண்ணை வந்து உலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்
விளங்கு கோவணத்தினான் வீரட்டானம் சேர்துமே.

uLam koL pOkam uyttiTAr, uTampu izantapOtin2 kaN;
tuLagki nin2Ru nALtoRum tuyar, Azi nenjcamE!
vaLam koL peNNai vantu ulA vayalkaL cUznta kOvalUr,
viLagku kOvaNattin2An2, vIraTTAn2am cErtumE.

பொருள்: மனம் கொள்ளத் தக்கதாய போகத்தைப் புண்ணியம் இல்லாதவர்கள் உடம்பிழந்த போது அனுபவியார் என்று கலங்கி நின்று நாள்தொறும் துயரமாகிய கடலில் ஆழ்கின்ற நெஞ்சமே! பெண்ணையாற்று நீர் வந்து உலாவும் வயல்கள் சூழ்ந்த திருக்கோவலூரில் மறைப்பொருளாய் விளங்கும் கோவணத்தினானின் திருவீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: ஆழி நெஞ்சமே! – ஆழ்தலை உடைய மனமே! மனத்தில் விரும்பப்பட்ட போகங்களை அநுபவிக்கச் செய்யும் புண்ணியம் இல்லாதவர்கள் கட்டையை விட்டகன்ற சமயத்தில், தளர்ந்து நின்று நாள்தோறும் துயரம் அடையாதே.

Oh my dear people! In your advanced age you cannot achieve whatever you want, especially comforts and enjoyments in your life. Everyday you will suffer because of your physical inability. Avoid all your tragic thoughts and agony. Let us go to the Veerattam temple in Kovaloor city and worship our Lord Civa who is manifest in that temple. The river Pennai flows around the city. Paddy fields are in plenty all around this city. Our Lord Civa wears forelap cloth on His waist and graces the people there.

2555. கேடுமூப்புச்சாக்காடுகெழுமிவந்துநாள்தொறும்
ஆடுபோலநரைகளாயாக்கைபோக்கதன்றியும்
கூடிநின்றுபைம்பொழிற்குழகன்கோவலூர்தனுள்
வீடுகாட்டுநெறியினான்வீரட்டானஞ்சேர்துமே. **6**

கேடு மூப்புச் சாக்காடு கெழுமி வந்து நாள்தொறும்
ஆடு போல நரைகள் யாக்கை போக்கதன்றியும்
கூடி நின்று பைம்பொழில் குழகன் கோவலூர் தனுள்
வீடு காட்டு நெறியினான் வீரட்டானம் சேர்துமே.

kETu mUppuccAkkATu kezumi vantu nALtoRum,
ATu pOla naraikaL yAkkai pOkku atu an2Riyum,
kUTi nin2Ru, paimpozil kuzakan2 kOvalUrtan2uL--
vITu kATTum neRiyin2An2--vIraTTAn2am cErtumE.

பொருள்: நாள்தோறும் கேடும் மூப்பும் இறப்பும் பொருந்துவதோடன்றி, குறியாட்டினைப் போல நரைகளாகி உடம்பு அழியுந்தன்மையது; அதனால் அன்பர்கள் குழாத்துடன் குழுமி நின்று குழகனின் பைம்பொழிற் திருக்கோவலூர்தனுள் வீடுகாட்டு நெறியினானின் வீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: கேடும் முதுமையும் இறப்பும் பொருந்தி வந்து நாள்தொறும் ஆடுகளைப்போல நரைகளாகி உடம்பு அழிதலுடையது. பேரின்ப வீட்டைக் காட்டும் திருநெறி. நெறியினான் – திருநெறியில் சென்று அடையப்பெறும் சிவபிரான்.

Our body gets weakened in advanced age and becomes grey. Decay in our body moves all the time like goats. Therefore, the worst factors of our life, like advanced age, mortality and decay come near us and destroy life. Oh my dear heart, let us go to the Veerattam temple in the city of Kovaloor and worship our Lord Civa manifest there. All around the city green thick forests are many. Lord Civa will show the way to eternal bliss.

2556. உரையும்பாட்டுந்தளர்வெய்தியுடம்புமூத்தபோதின்கண்
நரையுந்திரையுங்கண்டெள்கிநகுவர்நமர்களாதலால்
வரைகொள்பெண்ணைவந்துலாவயல்கள்சூழ்ந்தகோவலூர்
விரைகொள்சீர்வெண்ணீற்றினான்வீரட்டானஞ்சேர்துமே. 7

உரையும் பாட்டும் தளர்வு எய்தி உடம்பு மூத்த போதின்கண்
நரையும் திரையும் கண்டு எள்கி நகுவர் நமர்கள் ஆதலால்
வரை கொள் பெண்ணை வந்து உலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்
விரை கொள் சீர்வெண்ணீற்றினான் வீரட்டானம் சேர்துமே.

uraiyum pATTum taLarvu eyti uTampu mUttapOtin2 kaN,
naraiyum tiraiyum kaNTu eLki nakuvar namarkaL AtalAl,
varai koL peNNai vantu ulA vayalkaL cUznta kOvalUr,
virai koL cIr veN nIRRin2An2, vIraTTAn2am cErtumE.

பொருள்: பாட்டும் உரையுமாக மகிழ்ச்சியுடன் இருந்த உடல் மூப்பு வந்து தளர்வு அடையும்; நரையும் திரையும் கண்டு எள்கி நமர்கள் நகுவர்; ஆதலால், மலைமீது தோன்றிய பெண்ணையாறு வந்து உலவுகின்ற வயல்கள் சூழ்ந்த திருக்கோவலூரில் மணமும் பெருமையும் உள்ள திருநீற்றினானின் வீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: உரையும் பாட்டும் – பேச்சும் பாடலும். 'பாட்டும் உரையும் பயிலாதன இரண்டோட்டைச் செவியும் உள'.

In our advanced age our life full of speech and song dwindles and becomes ineffective. Our relatives laugh on seeing our gray hair and wrinkles in the skin and dispraise us. Therefore, let us go to the Veerattam temple in Kovaloor city and worship our Lord Civa manifest there. In this city the river Pennai comes down from the mountain and flows around the city. Paddy fields are in large number around the city. Our Lord Civa, having applied over His body the sweet smelling holy ashes, which spreads fragrance, resides there.

2557. ஏதமிக்கமூப்பினோடிருமலீளையென்றிவை
ஊதலாக்கையோம்புவீருதியாவதறிதிரேல்
போதில்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனுள்
வேதமோதுநெறியினான்வீரட்டானஞ்சேர்துமே. 8

ஏதம் மிக்க மூப்பினோடு இருமல் ஈளை என்று இவை
ஊதல் ஆக்கையோம்புவீர் இதியாவது அறிதிரேல்
போதில் வண்டு பண்செயும் பூந்தண் கோவலூர் தனுள்
வேதம் ஓதுநெறியினான் வீரட்டானம் சேர்துமே.

Etam mikka mUppin2OTu, irumal, ILai, en2Ru ivai
Utal Akkai Ompuvlr! uRuti Avatu aRitirEl,
pOtil vaNTu paNceyum pUn taN kOvalUr tan2uL,
vEtam Otu neRiyin2An2, vlraTTAn2am cErtumE.

பொருள்: பழுதுடைய மூப்பினோடு இருமல், ஈளை என்று இவையுடன் ஊதல் ஆகும் உடம்பை விரும்புவீர்; உமக்கு ஆக்கம் அளிப்பது எது என அறிவீரேல் மலர்ப்போதுகளில் வண்டுகள் வந்து பண் மிழற்றும் குளிர்பூக்கள் மலிந்த திருக்கோவலூர்தனுள் வேதம் ஓதும் நெறியினானின் வீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: ஈளை – சிலேட்டும தோடத்தால் வரும் நோய் வகையுள் ஒன்று. ஊதல் ஆக்கை – பருத்தலை உடைய உடம்பு. உறுதி – ஆன்ம லாபம். அறிதிர் ஏல் – அறிவீர் எனில். வேதம் ஓதும் நெறியினான் – வேதநெறியை அருளியவன்.

You people of obesity! You develop your heavy body and roam with many ailments in your advanced age. Cough and phlegm give you all trouble despite your care for your body. If you want to achieve the real fitness for your eternal life, please do

come to me. Let us go to the Veerattam temple in the gorgeous city Kovaloor and worship our Lord Civa with sincere devotion. He is the author of the four Vedas and will chant it wherever needed. In this city beetles fly to the flowers and make harmonious sound.

2558. ஆறுபட்டபுன்சடையழகனாயிழைக்கொரு
கூறுபட்டமேனியான்குழகன்கோவலூர்தனுள்
நீறுபட்டகோலத்தான்நீலகண்டனிருவர்க்கும்
வேறுபட்டசிந்தையான்வீரட்டானஞ்சேர்துமே. 9

ஆறு பட்டபுன் சடை அழகனாய் இழைக்கு ஒரு
கூறுபட்ட மேனியான் குழகன் கோவலூர் தனுள்
நீறுபட்ட கோலத்தான் நீலகண்டன் இருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான் வீரட்டானம் சேர்துமே.

ARu paTTa pun2caTai azakan2, Ayizaikku oru-
kURu paTTa mEn2iyAn2, kuzakan2, kOvalUr tan2uL--
nIRu paTTa kOlattAn2, nIlakaNTan2, iruvarkkum
vERupaTTa cintaiyAn2,--vIraTTAn2am cErtumE.

பொருள்: கங்கையாறு தங்கிய புன்சடை அழகன்; உமையம்மைக்குத் தன் உடலின் ஒரு கூறினை அளித்த மேனியன்; குழகன்; திருக்கோவலூர்தனுள் திருநீறு படிந்த கோலமுடையவன்; திருநீலகண்டன்; திருமால் பிரமன் ஆகிய இருவருக்கும் வேறுபட்ட சிந்தையான்; அவனுடைய வீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: ஆயிழை – உமாதேவியார். திருவெண்ணீறு சண்ணித்த மேனியழகினன். இருவர் – மாலும் அயனும். வேறுபட்ட சிந்தைக்கு ஏதுவாயிருந்தவன். 'அந்தணர் தம் சிந்தையானை', 'வாயானை, மனத்தானை, மனத்துள் நின்ற கருத்தானை'.

Our Lord Civa has permitted the river Ganges to stay in His fine mattresses and looks a very attractive Supreme Being. He espoused His consort Uma Devi and has happily accommodated her on the left half of His body. He is manifest in the Veerattam temple in Kovaloor city. He smears His body with sacred ashes. He is called Neelakandar because He imbibed the poison in His throat. Our Lord was

unrecognizable to Brahma and Thirumaal with different thoughts. He is manifest in the Veerattam temple. Let us go to the temple and worship Him. Do come.

2559. குறிகொளாழிநெஞ்சமேகூறைதுவரிட்டார்களும்
அறிவிலாதஅமணர்சொல்லவத்தமாவதறிதியேல்
பொறிகொள்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனுள்
வெறிகொள்கங்கைதாங்கினான்வீரட்டானஞ்சேர்துமே. 10

குறிகொள் ஆழிநெஞ்சமே கூறை துவர் இட்டார்களும்
அறிவிலாத அமணர் சொல்ல வத்தமாவது அறிதியேல்
பொறி கொள் வண்டுபண் செயும்பூந்தண் கோவலூர் தனுள்
வெறி கொள் கங்கை தாங்கினான் வீரட்டானஞ் சேர்துமே.

kuRikoL, Azi nenjcamE! kURai tuvar iTTArkaLum,
aRivu ilAta amaNar, col avattam Avatu aRitirEl,
poRi koL vaNTu paNceyum pUn taN kOvalUr tanul,
veRi koL kagkai tAgkin2An2, vIraTTAn2am cErtumE.

பொருள்: கடல் போல ஆழமான நெஞ்சமே! குறிகொள்! துவரூட்டிய ஆடை உடுத்திட்ட பவுத்தர்களும் மெய்யறிவில்லாத சமணர்களும் சொல்லும் சொற்கள் உறுதியற்றன; அதனை அறிதியேல் புள்ளிகளை உடைய வண்டுகள் பண் செய்யும் குளிர்ச்சியும் அழகும் உடைய திருக்கோவலூர்தனுள் மணமுள்ள கங்கையைச் சிரமேல் தாங்கியவனின் வீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: 'ஆழி நெஞ்சமே', நீராழங்கண்டாலும் நெஞ்சாழம் காண முடியாது. அவத்தம் – பொய். பொறி – வரி. வெறி – மணம்.

Oh my dear heart! You think of many deep and different ideas. The Buddhists cover their body with red ochre cloth. The Jains have no virtuous knowledge. What they both announce is purposeless. If you admit their uselessness we shall go to the temple of Veerattam in the city of Thiru-k-kovaloor and worship our Lord Civa with sincere devotion. The branded bees sing in musical tone. Our Lord supports the sweet smelling river Ganges in His mattress. Let us go to the Veerattam temple and worship Lord Civa with sincere devotion.

2560. கழியொடுலவுகானல்சூழ்காழிஞானசம்பந்தன்
விழிகள்தீரச்சொன்னசொற்பாவநாசமாதலால்
அழிவிலீர்கொண்டேத்துமினந்தண்கோவலூர்தனுள்
விழிகொள்பூதப்படையினான்வீரட்டானஞ்சேர்துமே. 11

கழியொடு உலவு கானல்சூழ் காழி ஞானசம்பந்தன்
விழிகள் தீரச் சொன்ன சொற் பாவநாசம் ஆதலால்
அழிவிலீர் கொண்டு ஏத்துமின் அந்தண் கோவலூர்தனுள்
விழிகொள் பூதப்படையினான் வீரட்டானம் சேர்துமே.

kaziyoTu ulavu kAn2al cUz kAzi njAn2acampantan2,
vizikaL tIrac con2n2a col pAvanAcam AtalAl,
azivu illr, koNTu Ettumin2! am taN kOvalUrtan2ul,
vizi koL pUtappaTaiyin2An2, vIraTTAn2am cErtumE.

பொருள்: கழிகள் உலவுகின்ற கடற்கானல்கள் சூழ்ந்த காழியின் ஞானசம்பந்தன் பழிகள் நீங்கப் பாடிய இத்திருப்பதிகம் பாவங்களை நாசம் ஆக்கும். ஆதலால், பிறப்பு இறப்பு ஆகிய அழிவு நீங்கப் பெறுவீர்! இத்திருப்பதிகத்தை உள்ளத்திற் கொண்டு சிவனை வழிபடுங்கள். அழகும் குளிர்ச்சியும் உடைய திருக்கோவலூர்தனுள் விழிகொள் பூதப்படையினானின் வீரட்டானம் சேர்துமே.

குறிப்புரை: பழிகள் தீரச்சொன்ன சொல். பாவநாசம் – பழிகள் ஒழியப் பாடியருளிய இத்திருப்பதிகத்தினை ஓதுவார்க்கு பாவங்கள் அழியும். கொண்டு – இத்திருப்பதிகப் பொருளை உள்ளத்திற்கொண்டு.

Oh! Ye people, you need not rot in unprofitable ways and incur any loss. Our saint Thiru-gnana-Sambandar was born in the Seerkaazhi city with saltpans and thick forest areas on the shores. He came to the temple and chanted these ten verses in Tamil language. These verses will chase our sins. Oh! Ye people chant these verses and worship our Lord Civa manifest in the temple in the cool and gorgeous city of Thiru-k-kovaloor. Here our Lord Civa has an army of goblins with large eyes to help Him. Let us reach the Veerattam temple in the city of Thiru-k-kovaloor and worship our Lord Civa.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

100ஆம் பதிகம் முற்றிற்று
End of 100th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 237 பதிக எண்: 101

101. திருஆரூர் — 101. THIRU-AAROOR

பண் : திருவிராகம் *Pann: Thiruviraagam*

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 215ஐப் பார்க்க.

பதிக வரலாறு

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்புகலூரிலிருந்து, திருவாரூரைத் தரிசிக்க, அதன் அருகில் வரும்போது, ஒரு பேரொளிமயமாக ஆரூர் தோன்றிற்று. அது கண்டு பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2561. பருக்கையானைமத்தகத்தரிக்குலத்துகிப்புக
நெருக்கிவாயநித்திலந்நிரக்குநீள்பொருப்பனூர்
கருக்கொள்சோலைசூழநீடுமாடமாளிகைக்கொடி
அருக்கன்மண்டலத்தணாவுமந்தணாரூரென்பதே. 1

பருக்கை யானை மத்தகத்து அரிக்குலத்து உகிப்புக
நெருக்கி வாய நித்திலம் நிரக்குநீள் பொருப்பன் ஊர்
கருக்கொள் சோலைசூழ நீடு மாட மாளிகைக் கொடி
அருக்கன் மண்டலத்து அணாவும் அம்தண் ஆரூர் என்பதே.

paruk kai yAn2ai mattakattu arikkulattu ukip puka
nerukki, vAya nittilam nirakku nIL poruppan2 Ur--
karuk koL cOlai cUza, nITu mATa mALikaik koTi
arukkan2 maNTalattu aNAvum am taN ArUr en2patE.

பொருள்: பெரிய கையை உடைய யானையின் மத்தகத்தின்மேல் சிங்கக்கூட்டம் அறையவே, அவற்றின் நகம் செறிந்த பிளவிலிருந்து முத்துக்கள் சொரியும் உயர்ந்த கயிலை மலைக்கு உரியவனின் ஊர், எதுவெனில், கரிய இருளைத் தன்னுள்கொள்கின்ற அடர்ந்த சோலைகள் சூழ, உயர்ந்த மாடமாளிகைகளின்மேல் படர்ந்த கொடிகள் சூரிய மண்டலத்தைத் தடவும் அழகும் குளிர்ச்சியும் உடைய திருவாரூர் என்பதாகும்.

குறிப்புரை: மத்தகம் – தலை, நெற்றி. அரி – சிங்கம். அருக்கன் – சூரியன். அணாவும் – கிட்டும். ஆரூர் – 'ஆத்தி' பற்றி வந்த காரணப்பெயர். அது சோழ மன்னரது தார்.

The elephant has a big and heavy trunk called its hand. With this big animal, the lion, animal king of the forest once upon a time put up a fight. The lion's very sharp and powerful nails, while fighting with the elephant, scratched the elephant's head and tore it deeply. From the head of the elephant a large number of pearls came out and fell down on the ground of mount Kailash where our Lord Civa permanently manifests Himself. However, He desires to stay in Thiru-aaroor. This city is surrounded by very big tall and thick trees in the garden all around the area. The trees in these gardens are so tall, they appear as though they touch the sun's orbit. The city is full of palatial tall buildings everywhere. In the terrace of these tall buildings flag posts have been fixed and the flags always keep swinging.

2562. விண்டவெள்ளெருக்கலர்ந்தவன்னிகொன்றைமத்தமும்
இண்டைகொண்டசெஞ்சடைமுடிச்சிவனிருந்தவூர்
கெண்டைகொண்டலர்ந்தகண்ணினார்கள்கீதவோசைபோய்
அண்டரண்டமூடறுக்குமந்தணாரூரென்பதே. 2

விண்ட வெள்ளெருக்கு அலர்ந்த வன்னி கொன்றை மத்தமும்
இண்டை கொண்ட செஞ்சடை முடிச்சிவன் இருந்த ஊர்
கெண்டை கொண்டு அலர்ந்த கண்ணினார்கள் கீதஓசை போய்
அண்டர் அண்டம் ஊடறுக்கும் அம்தண் ஆரூர் என்பதே.

viNTa veL erukku, alarnta van2n2i, kon2Rai, mattamum,
iNTai, koNTa cenjcaTai muTic civan2 irunta Ur--
keNTai koNTu alarnta kaNNin2ArkaL kIta Ocai pOy,
aNTar aNTam UTu aRukkum am taN ArUr en2patE.

பொருள்: இதழ் விரிந்து மலர்ந்த வெள்ளெருக்க மலர், வன்னியிலை, கொன்றைமாலை, ஊமத்தம் பூ ஆகியனவற்றைத் தலைமாலையாகக் கொண்ட சிவந்த சடைமுடியனாகிய சிவன் இருக்கும் ஊர், எதுவெனில், கெண்டைமீன் போன்று அகலமான கண்ணினராகிய மகளிர் பாடும் கீத ஓசைமேல் நோக்கிப் போய்த் தேவலோகத்தின் அண்டத்தையும் ஊடுறுவும் அழகும் குளிர்ச்சியும் உடைய திருவாரூர் என்பதாகும்.

குறிப்புரை: இண்டை - திங்கள் வட்டம்போலத் திரட்சியுள்ள பத்திரபுட்பங் கலந்த மாலைவகை. சிவலிங்கத்திற்கு இண்டை இன்றியமையாதது. அண்டம் – மேலுலகம்.

Our Lord Civa desires to stay especially in Thiru-aaroor. He adorns His entangled locks of hair with blossomed white yercum flowers, broad widened leaves of summer tree, datura flowers etc. All these flowers are arranged in circlets and placed in His red mattress. In the city young damsels with broad eyes like carp fish join together and chant beautiful songs. This noise reaches the celestial orbit and is heard there. The city of Thiru-aaroor is such a glorious city.

2563. கறுத்தநஞ்சமுண்டிருண்டகண்டர்காலனின்னுயிர்
மறுத்தமாணிதன்றனாகம்வண்மைசெய்தமைந்தனூர்
வெறித்துமேதியோடிமூசுவள்ளைவெள்ளைநீள்கொடி
அறுத்துமண்டியாவிபாயுமந்தணாரூரென்பதே. 3

கறுத்த நஞ்சம் உண்டு இருண்ட கண்டர் காலன் இன்னுயிர்
மறுத்த மாண் இதன்று அனாகம் வண்மை செய்த மைந்தன் ஊர்
வெறித்து மேதியோடி மூசு வள்ளை வெள்ளை நீள்கொடி
அறுத்து மண்டி ஆவிபாயும் அம்தண் ஆரூர் என்பதே.

kaRutta nanjcam uNTu iruNTa kaNTar, kAlan2 in2 uyir
maRuttu mANitan2 tan2 Akam vaNmai ceyta maintan2, Ur--
veRittu mEti OTi, mUcu vaLLai veLLai nIL koTi
aRuttu maNTi, Avi pAyum am taN ArUr en2patE.

பொருள்: கொல்லுதற்கெனச் சினந்து எழுந்த நஞ்சினை உண்டதால் இருண்ட கண்டத்தை உடையவன்; எமனின் இனிய உயிரை அழித்து, மாணியின் உடம்பை அழியாததாக்கினான். அத்தகைய வலிமையை உடையவனின் ஊர் எதுவெனில், மிரண்ட எருமை ஓடி, மொய்த்து வளர்ந்திருந்த வள்ளை வெள்ளை நீண்ட கொடிகளை அறுத்துக் கொண்டு நெருங்கிக் குளத்தில் பாயும் குளிர்ச்சியும் அழகும் உடைய திருவாரூர் என்பதே.

குறிப்புரை: 'பாலாகித்தோன்றிப் பருகினாராவிகொள்ளும் ஆலாலம்' கந்தபுராணம் – வள்ளியம்மையார். மாணி – பிரமசாரி. மார்க்கண்டேய முனிவர், வண்மை – கொடைமை, வண்மை என்றும் பாடம் இருத்தல் கூடும். வெறித்து – மயங்கி, கலங்கி, வள்ளை என்பது ஒரு கொடி. ஆவி – குளம்.

Our Lord Civa's favourite place to manifest Himself is Thiru-aaroor. His throat is dark blue in colour because He imbibed the poison that came out of the ocean when it was churned. Our Lord Civa is the youngest, but the strongest Supreme Being. Once

Kaalan, the god of death came to snatch the soul of His young devotee Maarkandeyan. At that time our Lord saved His devotee and graced him to live forever with his youthful posture. In this city the buffaloes get confused and run here and there destroying the creepers, panicled bindweeds and thereafter enter into cool tanks and stay there.

2564. அஞ்சுமொன்றியாறுவீசிநீறுபூசிமேனியில்
குஞ்சியராவந்திசெய்யஅஞ்சலென்னிமன்னுமூர்
பஞ்சியாருமெல்லடிப்பணைத்தகொங்கைநுண்ணிடை
அஞ்சொலாரங்கெடுக்குமந்தணாரூரென்பதே. 4

அஞ்சும் ஒன்றி ஆறுவீசி நீறுபூசி மேனியில்
குஞ்சு இயரா வந்திசெய்ய அஞ்சல் என்னிமன்னும் ஊர்
பஞ்சி ஆரும் மெல்லடிப் பணைத்த கொங்கை நுண் இடை
அஞ்சொல் ஆரம் கெடுக்கும் அம்தண் ஆரூர் என்பதே.

anjcum on2Ri, ARu vIci, nIRu pUci mEn2iyil,
kunjci Ara vanti ceyya, "anjcal!" en2n2i man2n2um Ur--
panjci Arum mel aTi, paNaitta kogkai, nuN iTai,
amcolAr aragku eTukkum am taN ArUr en2patE.

பொருள்: ஐந்து இந்திரியங்களும் தத்தம் புலன்களின் வழியே செல்லுவதொழிந்து, சிவத்தின் திறத்தில் ஒன்றி, காமம் முதலிய அறுபகைகளையும் அழித்து, உடலில் திருநீறு பூசி, தலையாரக் கும்பிட்டு வந்தனை செய்ய அஞ்சேல் என்று அருள்பவன் நிலை பெற்று இருக்கும் ஊர் எதுவெனில், பஞ்சு போலும் மெல்லிய பாதத்தையும் பெருத்த கொங்கைகளையும் நுண்ணிய இடையினையும் அழகிய பேச்சினையும் உடைய மகளிர் அரங்கேறி நடஞ்செய்யும் அழகும் குளிர்ச்சியும் கொண்ட திருவாரூர் என்பதே.

குறிப்புரை: அஞ்சும் ஒன்றுதல் – ஐம்பொறிகளும் தத்தம் புலன்களைக் கொள்வதில் சிவபெருமான் திறத்திலன்றி மற்றெத்திறத்திலும் ஈடுபடாமை. 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள' ஆறு வீசுதல் – காமக் குரோத லோப மோக மத மாற்சரியம், அறு பகையும் செற்று ஐம்புலனும் அடக்கி நிற்றல். குஞ்சி – தலைமயிர். ஈண்டுத் தலைக்கு ஆகு பெயர். குஞ்சி ஆர – தலையார. வந்தி – வந்தனை. தலையாரக் கும்பிட்டு. அஞ்சல் என்னி – அஞ்சாதே என்னும் சிவபிரான். பஞ்சியாருமெல்லடி – பஞ்சுலாவிய மெல்லடி (தி. 2 ப. 105 பா. 9). அடியின் மென்மைக்குப் பஞ்சு ஒப்பு. மகளிர் அரங்கில் ஏறி நடஞ்செய்யும் திறம் அவையோரால் எடுத்துப் புகழ்ந்து பாராட்டும் அளவுடையதாகும்.

Our Lord Civa is manifest in Thiru-aaroor. He graces His devotees saying 'Do not get any fear!' These devotees drop out the six enemical attitude. Their senses join together and they prostrate before our Lord and worship Him. In this city young damsels' feet are as soft as cotton. Their breasts are large and their waists are very narrow. They speak sweet gentle words. These girls reach the dancing hall and dance there in large numbers.

2565. சங்குலாவுதிங்கள்சூடிதன்னையுன்னுவார்மனத்
தங்குலாவிநின்றஎங்களாதிதேவன்மன்னுமூர்
தெங்குலாவுசோலைநீடுதேனுலாவுசெண்பகம்
அங்குலாவியண்டநாறுமந்தணாரூரென்பதே. 5

சங்கு உலாவு திங்கள்சூடி தன்னை உன்னுவார் மனத்
தங்கு உலாவி நின்ற எங்கள் ஆதிதேவன் மன்னும் ஊர்
தெங்கு உலாவு சோலை நீடுதேன் உலாவு செண்பகம்
அங்கு உலாவி அண்ட நாறும் அம்தண் ஆரூர் என்பதே.

cagku ulAvu tigkaL cUTi, tan2n2ai un2n2uvAr man2attu
agku ulAvi nin2Ra egkaL AtitEvan2 man2n2um Ur--
tegku ulAvu cOlai, nITu tEn2 ulAvu ceNpakam
agku ulAvi, aNTam nARum am taN ArUr en2patE.

பொருள்: சங்கினைப் போலும் வடிவுடைய வெண்பிறையைச் சூடியவன் (சிவபிரான்); தன்னை நினைப்பவரின் மனத்தில் உலாவி நிற்பவன்; எங்களுடைய ஆதிதேவன்; அவன் நிலையாகத் தங்கும் ஊர் எதுவெனில், தென்னை மரங்கள் நிறைந்த சோலைகளும், தேனீக்கள் மொய்க்கின்ற செண்பக மரங்களும் உயர்ந்து வானில் உள்ள அணங்களிலும் நறுமணம் வீசும் அழகும் குளிர்ச்சியும் கொண்ட திருவாரூரென்பதே.

குறிப்புரை: சங்கு உலாவு திங்கள் – சங்கினைப் போலும் வெண்டிங்கள். சூடி – சூடிய சிவபிரான். எங்கள் ஆதி தேவன் என்று உரைக்கும் உரிமை ஆசிரியர்க்கு உண்டு.

Our Lord Civa called in this verse Aathithevan retains the white young moon, which looks like chunk. He stays fully in those devotees' mind who think of Him always. He is manifest in Thiru-aaroor, a city with large and tall coconut gardens. Also the sweet smelling flowers with their fragrance reaching the upper world, of Michelia champaca trees in the gardens are many. They grow in large numbers. Thiru-aaroor is such a glorious city where our Lord Civa is manifest.

2566. கள்ளநெஞ்சவஞ்சக்கருத்தைவிட்டருத்தியோ
டுள்ளமொன்றியுள்குவாருளத்துளானுகந்தவூர்
துள்ளிவாளைபாய்வயற்சுரும்புலாவுநெய்தல்வாய்
அள்ளல்நாரையாரல்வாருமந்தணாரூரென்பதே. 6

கள்ள நெஞ்ச வஞ்சக் கருத்தை விட்டருத்தியோடு
உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்துளான் உகந்த ஊர்
துள்ளி வாளை பாய் வயல் சுரும்பு உலாவு நெய்தல் வாய்
அள்ளல் நாரை ஆரல்வாரும் அம்தண் ஆரூர் என்பதே.

kaLLa nenjca vanjcakak karuttai viTTu, aruttiyOTu
uLLam on2Ri uLkuvAr uLattu uLAn2 ukanta Ur--
tuLLi vALai pAy vayal, curumpu ulAvu neytalvAy
aLLal nArai Aral vArum, am taN ArUr en2patE.

பொருள்: கள்ள நெஞ்சில் தோன்றும் வஞ்சகக் கருத்துக்களை விட்டொழித்து, அன்புடன் உள்ளம் ஒன்றி நினைவாரது உள்ளத்தில் உள்ள சிவபிரான் விரும்பிய ஊர் எதுவெனில், வயல்களில் வாளைமீன்கள் துள்ளிப் பாய நெய்தல் மலர்களில் வண்டுகள் உலவ சேற்றில் நாரைகள் ஆரல் மீன்களை உண்ணும் குளிர்ச்சியும் அழகும் கொண்ட திருவாரூரென்பதே.

குறிப்புரை: கள்ளநெஞ்சு வஞ்சகக்கருத்து – நெஞ்சத்தின் இயல்பும் அது காரணமாகத் தோன்றும் வஞ்சகமாகிய காரியமும், அக்காரியத்தின் விளைவான தீயகருத்தும் உணர்த்தப்பட்டன. அத்தீயக்கருத்து உள்ளவரை அருள்பெறலரிது. அக்கருத்தை ஒழித்து, அன்போடு, உள்ளம் ஒன்றியிருந்து, தியாநம் புரிபவர் உள்ளத்தில் உள்ள சிவபெருமான், வாளைகள் துள்ளிப்பாய்கின்ற வயல். வயலில் நாரை ஆரும் ஆரூர், நெய்தற் பூக்களைச் சூழ்ந்து வண்டுகள் உலாவும். அள்ளல் – சேறு. நெய்தற்கண் உள்ள ஆரல் மீன்கள்.

Our Lord Civa is manifest in Thiru-aaroor. He evidently manifests Himself in those devotees' minds, who drop the viciousness from their minds, cunning and fraudulent actions and bad thoughts. After dropping all these they develop benevolence in their life and with concentrated mind worship our Lord. He evidently manifests Himself in the mind of such people. In this city, sword fish jump and swim in the paddy fields. White Indian water lily flowers grow in many places. The cranes devour and eat brownish or greenish eel fish in the wet ploughed land. Thiru-aaroor is such a glorious city where our Lord Civa evidently manifests Himself.

2567. கங்கைபொங்குசெஞ்சடைக்கரந்தகண்டர்காமனை
மங்கவெங்கணால்விழித்தமங்கைபங்கன்மன்னுமூர்
தெங்கினூடுபோகிவாழைகொத்திறுத்துமாவின்மேல்
அக்கண்மந்திமுந்தியேறுமந்தணாரூரென்பதே. 7

கங்கை பொங்கு செஞ்சடைக் கரந்த கண்டர் காமனை
மங்க வெங்கணால் விழித்த மங்கை பங்கன் மன்னும் ஊர்
தெங்கின் ஊடுபோகி வாழை கொத்தி இறுத்து மாவின் மேல்
அக்கண் மந்தி முந்தி ஏறும் அம்தண் ஆரூர் என்பதே.

kagkai pogku cenjcaTaik karanta kaNTar, kAman2ai
magka vegkaNAl vizitta magkaipagkan2, man2n2um Ur--
tegkin2 UTu pOki vAzai kottu iRuttu, mAvin2mEl
am kaN manti munti ERum am taN ArUr en2patE.

பொருள்: பொங்கும் கங்கையைச் செஞ்சடையில் மறைத்த வீரர்; காமன் மறைய வெம்மை மிக்கக் கண்ணால் விழித்தவர்; மங்கை பங்கர் ஆகிய சிவனார் நிலைபெற்ற ஊர் எதுவெனில், அழகிய கண்ணுடைய மந்தி தென்னையினூடு சென்று, வாழையின் குலையை ஒடித்து, மாமரத்தின் மேல் முந்தியேறும் அழகும் குளிர்ச்சியும் கொண்ட ஆரூரென்பதே.

குறிப்புரை: கங்கைநீர் பொங்குஞ் செஞ்சடை, கங்கையைக்கரந்த அகண்டர். அகண்டர் – சருவவியாபகர். மந்தி – பெண் குரங்குகள். தெங்கினூடுபோய், வாழைக்குலையை ஒடித்து, மாமரத்தின் மேல் ஏறும் வளமுடைய.

Our Lord Civa is manifest everywhere in the universe. He supports the river Ganges, rapidly flowing with heavy noise, and conceals it in His entangled hair. He opened His third eye and destroyed Kaaman, the god of love. He has embedded His consort on the left side of His body and becomes a concorporated Supreme Being. He evidently manifests Himself in the temple in Thiru-aaroor city. In this city, the female monkeys climb the coconut trees and break the nearby banana bunches and further jump on to the mango tree and do a lot of havoc to all the trees. Thiru-aaroor is such a glorious city where our Lord Civa is manifest.

2568. வரைத்தலம்மெடுத்தவன்முடித்தலம்முரத்தொடும்
நெரித்தவன்புரத்தைமுன்னெரித்தவன்னிருந்தவூர்
நிரைத்தமாளிகைத்திருவின்னேரனார்கள்வெண்ணகை
அரத்தவாய்மடந்தைமார்களாடுமாரூரென்பதே. 8

வரைத்தலம் எடுத்தவன் முடித்தலம் முரத்தொடும்
நெரித்தவன் புரத்தை முன் நெரித்தவன் இருந்த ஊர்
நிரைத்த மாளிகைத் திருவின் நேரனார்கள் வெண்ணகை
அரத்த வாய் மடந்தை மார்கள் ஆடும் ஆரூர் என்பதே.

varaittalam(m) eTuttavan2 muTittalam(m) urattoTum
nerittavan2, purattai mun2(n2) erittavan2(n2), irunta Ur--
niraitta mALikait tiruvin2 nEr an2ArkaL, veN nakai
aratta vAy maTantaimArkaL ATum ArUr en2patE.

பொருள்: கயிலை மலையைப் பெயர்த்து எடுத்தவனாகிய இராவணனின் பத்துத் தலைகளையும் அவனுடைய மார்புடன் சேர்த்து நெரித்தவன்; திரிபுரத்தை முன்னர் எரித்தவன் ஆகிய சிவன் இருக்கும் ஊர் எதுவெனில், வரிசையாக உள்ள மாளிகைகளில் திருமகளுக்கு நிகரானவர்கள், வெண்ணிற பற்களும் சிவந்த வாயிதழ்களும் கொண்ட மகளிர்கள் நடனமாடும் திருவாரூர் என்பதே.

குறிப்புரை: உரத்தொடும் – மார்போடும், வலியுடன், நிரைத்த – வரிசையுற்ற. திருவின் நேரனார்கள் – திருமகளை நேரொத்தவர்கள். அரத்தவாய் – செவ்வாய்.

Our Lord Civa crushed Raavanan's ten heads and chest when he tried to replace mount Kailash. He burnt the three fortresses of asuras. In this glorious city our Lord Civa is manifest. In this city, many palatial buildings are very tall and beautiful. In such residences very attractive girls, beautiful like goddess Lakshmi, live. Their lips are red in colour and their teeth are pure white. They go to dancing halls and dance jointly and enjoy life. Here our Lord Civa is manifest.

2569. இருந்தவன்கிடந்தவன்னிடந்துவிண்பறந்துமெய்
வருந்தியுமளப்பொணாதவனாவன்மகிழ்ந்தவூர்
செருந்திஞாழல்புன்னைவன்னிசெண்பகஞ்செழுங்குரா
அரும்புசோலைவாசநாறுமந்தணாரூரென்பதே. 9

இருந்தவன் கிடந்தவன் இடந்து விண் பறந்து மெய்
வருந்தியும் அளப்பொணாதவன் ஆனாவன் மகிழ்ந்த ஊர்
செருந்தி ஞாழல் புன்னை வன்னி செண்பகம் செழுங்குரா
அரும்பு சோலை வாசநாறும் அம்தண் ஆரூர் என்பதே.

iruntavan2 kiTantavan2(n2), iTantu viN paRantu, mey
varuntiyum aLappu oNAta vAn2avan2 makiznta Ur--
cerunti, njAzal, pun2n2ai, van2n2i, ceNpakam, cezug kurA,
arumpu cOlai vAcam nARum am taN ArUr en2patE.

பொருள்: தாமரை மலர்மேல் இருந்தவனாகிய பிரமனும் பாற்கடலில் பாம்பணைமேற் கிடந்தவனாகிய திருமாலும் முறையே விண்ணில் அன்னமாகப் பறந்தும் ஏனமாக நிலத்தை இடந்தும் உடல் வருந்தியும் அளப்பதற்கு ஒண்ணாத வானவன் ஆகிய சிவன் மகிழ்ந்து தங்கும் ஊர் எதுவெனில், செருந்தி, ஞாழல், புன்னை, வன்னி, செண்பகம், செழுமையான குரா முதலிய மரங்கள் மலர்களை அரும்பும் சோலைகளிலிருந்து நறுமணம் நாளும் அழகும் குளிர்ச்சியும் கொண்ட திருவாரூரென்பதே.

குறிப்புரை: நான்முகன் திருமால் இடந்தும் பறந்தும் வருந்தியும் அளப்பதற்கு ஒன்றாத உம்பரான். செருந்தி – ஒருவகைமரம்.

Brahma, the tutelary deity used to stay in the lotus flower. The other deity Thirumaal used to rest always on the five-headed snake. They both flew in the sky and went deep into the earth and searched for our Lord's holy feet and head. They both could not see our Lord after years of search and were exhausted. In this city several big groves with a number of flower plants such as panicled blossomed pear tree, orange eup calyxed, Alexandrian laural, leaves of summer tree, nichelia champaca, common bottle flower are many. They all blossom and spread their fragrance all over the nearby areas, such a glorious city is Thiru-aaroor where Lord Civa is manifest.

2570. பறித்தவெண்டலைக்கடுப்படுத்தமேனியார்தவம்
வெறித்தவேடன்வேலைநஞ்சமுண்டகண்டன்மேவுமூர்
மறித்துமண்டுவண்டல்வாரிமிண்டுநீர்வயற்செநெல்
அறுத்தவாயசும்புபாயுமந்தணாரூரென்பதே. 10

பறித்த வெண்தலைக் கடுப்படுத்த மேனியார் தவம்
வெறித்த வேடன் வேலை நஞ்சம் உண்ட கண்டன் மேவும் ஊர்
மறித்து மண்டு வண்டல் வாரி மிண்டுநீர் வயல் செநெல்
அறுத்த வாயசும்பு பாயும் அம்தண் ஆரூர் என்பதே.

paRitta veNtalaik kaTup paTutta mEn2iyAr tavam
veRitta vETan2, vElai nanjcam uNTa kaNTan2, mEvum Ur--
maRittu maNTu vaNTal vAri miNTu nIr vayal cenel
aRutta vAy acumpu pAyum am taN ArUr en2patE.

பொருள்: பறித்து விட்டதால் மயிர் நீங்கின வெண்தலை, கடுப்பொடியைக் கவசமாகப் பூசிய உடல் உடைய சமண பவுத்தர்கள் ஆகியோர் கொண்ட தவத்தை வெறும் முயற்சியாக ஆக்கிய சிவவேடன், கடலில் எழுந்த நஞ்சினை உண்ட கண்டன் ஆகிய சிவன் மேவும் ஊர் எதுவெனில், ஆற்று நீரைத் தடுத்து மண்டிய வண்டலை வாரிக் கொண்டு மீதோடுகின்ற நீர் செந்நெல் வயல்களின், வரப்புகளில் பொசியும் அழகும் குளிர்ச்சியும் கொண்ட திருவாரூரென்பதே.

குறிப்புரை: பறிகொள்தலையினாக கடுப்படுத்த மேனி. கடுப்பொடியுடற்கவசர். கடுவே நின்று மெய்ப்பொடியட்டி. வெறித்த வேடன் – அஞ்சிய சிவவேடமுடைய சிவபிரான். அச்சம் – நெறியல்லா நெறியிற் செல்வதுபற்றித் தோன்றுவது. மறித்து – தடுத்து. திருப்பி. அசும்பு – நீர்ப்பொசிவு.

The Jains who live in the city with the hair from their head removed, and on their body the powder of mysobalan smeared, undergo false austerity and get frightened on seeing our Lord Civa's disguise. He imbibed the poison and His throat is dark blue in colour. He is manifest in the temple in Thiru-aaroor city. Along with the river water, the silt gushes in large quantities. The ploughing people remove the silt again and again and prevent the water flow and harvest the red paddy. However water comes out of the spring and flows. Such silt in plenty and water in plenty are available in Thiru-aaroor. Thus the city is known for very rich soil and profuse water.

2571. வல்லிசோலைசூதநீடுமன்னுவீதிபொன்னுலா
வல்லிமாதமர்ந்திருந்தஅந்தணாரூராதியை
நல்லசொல்லுஞானசம்பந்தன்நாவினின்னுரை
வல்லதொண்டர்வானமாளவல்லர்வாய்மையாகவே. 11

வல்லி சோலை சூதநீடு மன்னு வீதி பொன்னுலா
வல்லி மாது அமர்ந்து இருந்த அம்தண் ஆரூர் ஆதியை
நல்ல சொல்லு ஞானசம்பந்தன் நாவின் இன்னுரை
வல்ல தொண்டர் வானமாள வல்லர் வாய்மையாகவே.

valli cOlai cUtam nITu man2n2u vIti--pon2 ulA
alli mAtu amarntu irunta--am taN ArUr Atiyai,
nalla collum njAn2acampantan2 nAvin2 in2 urai
valla toNTar, vAn2am ALa vallar, vAymai AkavE.

பொருள்: மலர்க்கொடிகள் நிறைந்த சோலை மாமரங்கள் நீண்ட தெருக்கள் பொன்னுலா அல்லியங்கோதை அமர்ந்திருக்கும் அழகும் குளிர்ச்சியும் கொண்ட திருவாரூரில் இருக்கும்

முதல்வனை ஞான நன்னெறியினை உணர்த்தும் ஞானசம்பந்தன் நாவினின்றும் பிறந்த பேரின்பத் திருப்பாடல்களை வல்ல தொண்டர்கள் மெய்யாகவே வானுலகத்தை ஆள வல்லவராவர்.

குறிப்புரை: சூதம் – மாமரம். பொன்னுலாவல்லிமாது – அல்லியங்கோதை தேவியின் திருநாமம். நல்ல – ஞான நன்னெறியுணர்த்துஞ்சொற்களை. இன்னுரை – பேரின்பப்பாடல். வானம் – தேன்வந்த முதின்றெளிவி னொளிவந்தவான் (திருவாசகம் 178). வானுக்குள் ஈசனைத் தேடும் மதி இலீர் (திருமந்திரமாலை முத்தி நிச்சயம் பக். 139). வாய்மை – வாயின் (நாவின்) பொய்யாமொழி. வாய்மை எனப்படுவது யாதெனின் என்று ஒரு வினாவை ஏறிட்டுக் கொண்டு அதற்கு விடையிறுக்கும் ஆசிரியர், யாதொன்றும் தீமை இலாத(வற்றைச்) சொலல் என்றார். செயல் என்றோ எண்ணல் என்றோ உரைத்தாரல்லர், அதனால், வாய்மை சொற்களைப் பற்றியதாதல் விளங்கும். உள் – உள்ளம். உள்ளத்தின் தன்மை உண்மை. உள்ளுதலின் பொய்யாமை குறித்து. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன். மெய்ம்மை – மெய்யாற் செய்யுஞ் செயலின் பொய்யாமை. உண்மையும் முறையே எண்ணம் செய்கை இரண்டனையும் பற்றிய காரணப் பெயர்களாம்.

In and around the city of Thiru-aaroor groves are many and are full of vines. The mango trees are in large numbers in the wide streets of the city where temple festivals take place in all the seasons. In the temple of this city our Lord Civa evidently manifests Himself along with His consort, the most attractive goddess, here known as Alliyang Kothai Ammai. Our canonized saint Thiru-gnana-Sambandar came to Thiru-aaroor temple and chanted the divine songs with his tongue and worshipped Lord Civa. Any devotees who can memorise and chant these ten wise songs will reign the upper world. This is true.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

101ஆம் பதிகம் முற்றிற்று
End of 101st Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 238 பதிக எண்: 102

102. திருச்சிரபுரம் 102. THIRU-CH-CHIRAPURAM

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

சீகாழிக்குரிய பதிகங்களுள் ஒன்று. பாடப்பட்ட காலம் இடம் முதலியன குறிக்கப்பட்டில.

திருச்சிற்றம்பலம்

2572. அன்னமென்னடையரிவையொடினிதுறையமரர்தம்பெருமானார்
மின்னுசெஞ்சடைவெள்ளெருக்கம்மலர்வைத்தவர்வேதந்தாம்
பன்னுநன்பொருள்பயந்தவர்பருமதிற்சிரபுரத்தார்சீரார்
பொன்னின்மாமலரடிதொழுமடியவர்வினையொடும்பொருந்தாரே. 1

அன்ன மென் நடை அரிவையொடு இனிது உறை அமரர்தம் பெருமானார்
மின்னு செஞ்சடை வெள்ளெருக்கம் மலர் வைத்தவர் வேதந்தாம்
பன்னு நன்பொருள் பயந்தவர் பருமதில் சிரபுரத்தார் சீரார்
பொன்னின் மாமலரடி தொழும் அடியவர் வினையொடும் பொருந்தாரே.

an2n2a men2 naTai arivaiyOTu in2itu uRai amarartam perumAn2Ar,
min2n2u cenjcaTai veL erukkammalar vaittavar, vEtam tAm
pan2n2um nan2poruL payantavar--paru matil cirapurattAr; cIr Ar
pon2n2in2 mA malar aTi tozum aTiyavar vin2aiyoTum poruntArE.

பொருள்: அன்னப் பறவையின் நடைபோல மெல்லிய நடையுடைய உமையம்மையோடு இனிது உறைவர்; தேவர்தம் பெருமானார்; மின்னுகின்ற செஞ்சடைமேல் வெள்ளெருக்கம்மலர் வைத்தவர்; வேதங்கள் பேசுகின்ற நல்ல பொருள்களின் பயனை அளித்தவர்; வலிய மதில்களைக் கொண்ட சிரபுரத்தவர்; பெருமையுடையவர்; அவருடைய பொற்றாமரை மலரடிகளைத் தொழும் அடியவர் வினையொடும் பொருந்தார்.

குறிப்புரை: அன்னப்பறவையின் நடைபோல மெல்லிய நடையுடைய உமாதேவியார். அடியவர் வினையொடும் பொருந்தார். இத்திருப்பதிகம் முழுதும் பாராயணம் புரிவாரது வினைதீர்க்கும் உண்மையை அனுபவித்துணர்க.

The name Thiru-ch-chirapuram is one of the twelve names known for Seerkaazhi. The main name is of course Seerkaazhi. Our Lord Civa is the Chief of devas. Goddess Uma, consort of our Lord Civa, abides on the left half of her consort's body. Her walk is similar to the steps of the swan with gentle and soft manners. Our Lord Civa adorns His entangled locks of red hair with white yercum flowers. He explained essential part of Vedas and it is the Upanishad, the most recondite and mysterious parts of Vedas. In the city of Thiru-ch-chirapuram very tall, big and strong compound walls are built all round the city. Our Lord is manifest in this city. He is the most famous Supreme Being with appealing holy feet. Those devotees who prostrate at His holy feet will get rid of the bad karma of their past life.

2573. கோலமாகரியுரித்தவராவொடுமேனக்கொம்பிளஆமை
சாலப்பூண்டுதண்மதியதுசூடியசங்கரனார்தம்மைப்
போலத்தம்மடியார்க்குமின்பளிப்பவர்பொருகடல்விடமுண்ட
நீலத்தார்மிடற்றண்ணலார்சிரபுரந்தொழவினைநில்லாவே. 2

கோல மா கரி உரித்தவர் அரவொடும் எனக்கொம்பு இளஆமை
சாலப் பூண்டு தண்மதி அது சூடிய சங்கரனார் தம்மைப்
போலத் தம் அடியார்க்கும் இன்பு அளிப்பவர் பொருகடல் விடமுண்ட
நீலத்து ஆர் மிடற்று அண்ணலார் சிரபுரம் தொழவினை நில்லாவே.

kOla mA kari urittavar; aravoTum, En2akkompu, iLa Amai,
cAlap pUNTu, taNmati atu cUTiya cagkaran2Ar; tammaip
pOlat tam aTiyArkkum in2pu aLippavar; porukaTal viTam uNTa
nIlattu Ar miTaRRu aNNalAr; cirapuram toza, vin2ai nillAvE.

பொருள்: தோற்றப் பொலிவு உடைய பெரிய களிற்றின் தோலை உரித்தவர்; பாம்பொடு, பன்றியின் கொம்பு, இள ஆமையின் ஓடு ஆகியவற்றை அமையப் பூண்டு குளிர்ந்த மதிப்பிறையைச் சூடிய சங்கரனார்; இன்பமே வடிவானவர்; தம்மைப் போலவே தம்மை அடைந்தவர்களுக்கும் தனது பேரின்ப வடிவினை அளிப்பவர்; பெரிய கடலில் பிறந்த

நஞ்சினை உண்டு கண்டத்தில் அடக்கியதால் அவர் நீல மிடற்று அண்ணலார்; அவருடைய திருச்சிரபுரம் தொழ வினை நில்லாவே.

குறிப்புரை: சால – அமைய, சங்கரன் – சுகத்தைச் செய்பவன், நித்தியசுகம். பேரின்ப வடிவினனாகிய பரமசிவன் தன் அடி அடைந்தவர்க்குத் தனது பேரின்பவடிவினை அருள்கின்றான் (முத்தி நிச்சயப் பேருரை, பக். 74, 177).

Our Lord Sankaran (He who gives bliss - another name of Lord Civa) removed the hide of the big and attractive elephant. He puts on His body the garland of snakes, hog's horn, young tortoise shell - all in good numbers. He retains the cool moon in His entangled hair locks. He graces His devotees with bliss like His own. He is called Neelakandar because He imbibed the severe poison that came out of the big ocean. Those devotees who prostrate and worship the Chief of Thiru-ch-chirapuram will get their past karma of bad deeds destroyed.

2574. மானத்திண்புயவரிசிலைப்பார்த்தனைத்தவங்கெடமதித்தன்று
கானத்தேதிரிவேடனாயமர்செயக்கண்டருள்புரிந்தார்பூந்
தேனைத்தேர்ந்துசேர்வண்டுகள்திரிதருஞ்சிரபுரத்துறையெங்கள்
கோனைக்கும்பிடுமடியரைக்கொடுவினைகுற்றங்கள்குறுகாவே. 3

மானத் திண்புய வரிசிலைப் பார்த்தனைத் தவம் கெட மதித்து அன்று
கானத்தே திரிவேடனாய் அமர் செயக் கண்டு அருள்புரிந்தார் பூந்
தேனைத் தேர்ந்து சேர்வண்டுகள் திரிதரும் சிரபுரத்து உறை எங்கள்
கோனைக் கும்பிடும் அடியரைக் கொடுவினை குற்றங்கள் குறுகாவே.

mAn2at tiNpuya varicilaip pArttan2ait tavam keTa matittu, an2Ru,
kAn2attE tiri vETan2Ay, amar ceyak kaNTu, aruLpurintAr--pUn
tEn2ait tErntu cEr vaNTukaL tiritarum cirapurattu uRai--egkaL
kOn2aik kumpiTum aTiyAraik koTuvin2ai, kuRRagkaL, kuRukAvE.

பொருள்: தற்பெருமையும் புயவலியும் வரித்த வில்லும் உடைய பார்த்தனை அவனுடைய தவங்கெட அன்று அறிந்து, கானகத்தில் திரிகின்ற வேடன் உருக்கொண்டு விரும்பி அவனுடன் போர் செய்து அருள்புரிந்தார்; பூக்களில் உள்ள தேனைத் தெரிந்து அடையும் வண்டுகள் திரிதரும் சிரபுரத்து உறையும் எங்கள் அரசனைக் கும்பிடும் அடியவரைக் கொடிய வினைகளாகிய குற்றங்கள் அடையா.

குறிப்புரை: மானம் – பெருமை, வலி, பார்த்தன் அர்ச்சுனன், புருதையின் புதல்வன் என்னும் பொருளது. மதித்து – அறிந்து. கானத்தே திரிவேடன் – வனசரன். அமர் – விரும்பிச் செய்யும் போர். பகைத்துச் செய்யும் போரன்று. களிப்பு மிகுதி குறிக்கின்றுழி. 'அமர்க்களம்' என்பது உலகவழக்கு.

Arjunan, one of the Paandava brothers, a very strong and famous bowman, travelled long in the Himalayas to do penance and to get a bow from Lord Civa. While He was doing the serious penance, our Lord Civa in the posture of a hunter along with His consort went near him and disturbed his peace. Our Lord opposed Him and fought against Him. He appreciated Arjuna's valour and graced him with bliss. In this city the bees fly searching for good honey among the various flowers. He is our Chief. These devotees who worship our Lord will never find their strong bad karma nearing them.

2575. மானிதன்னுயிர்மதித்துணவந்தஅக்காலனையுதைசெய்தார்
பேணியுள்குமெய்யடியவர்பெருந்துயர்ப்பிணக்கறுத்தருள்செய்வார்
வேணிவெண்பிறையுடையவர்வியன்புகழ்ச்சிரபுரத்தமர்கின்ற
ஆணிப்பொன்னினையடிதொழுமடியவர்க்கருவினையடையாவே. 4

மானிதன் உயிர் மதித்து உண வந்த அக்காலனை உதை செய்தார்
பேணி உள்கு மெய் அடியவர் பெருந்துயர்ப் பிணக்கு அறுத்து அருள் செய்வார்
வேணி வெண் பிறை உடையவர் வியன் புகழ்ச் சிரபுரத்து அமர்கின்ற
ஆணிப் பொன் இனை அடிதொழும் அடியவர்க்கு அருவினை அடையாவே.

mANitan2 uyir matittu uNa vanta ak kAlan2ai utai ceytAr,
pENi uLkum mey aTiyavar perun tuyarp piNakku aRuttu aruL ceyvAr,
vENi veNpiRai uTaiyavar, viyan2pukazc cirapurattu amarkin2Ra
ANippon2n2in2ai, aTi tozum aTiyavarkku aruvin2ai aTaiyAvE.

பொருள்: மாணி (மார்க்கண்டேயன்)யினுடைய ஆயுட்காலம் நிறைவுற்றதை அறிந்து அவனுடைய உயிரை விழுங்க வந்த அக்காலனை அவன் உயிர் நீங்குமாறு உதைத்தார். விரும்பிப் போற்றி நினையும் மெய்யடியவர்களின் பெருந்துயர்ப் பிணக்காகிய மாறுபாட்டினை அறுத்து அருள்செய்வார். சடையில் வெண்பிறையை உடையவர்; விரிந்த புகழுடைய சிரபுரத்தில் அமர்கின்ற செல்வனின் ஆணிப்பொன் போல் ஒளிரும் திருவடிகளைத் தொழும் அடியவரை அரிய வினைகள் அடையா.

குறிப்புரை: முனிவர் உயிரை அறிந்து கொள்ளவந்த அக்கூற்றுவனை 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை' (குறள்) என்பதில் பரிமேலழகர் மதிப்பது என்றுரைத்தார். உண்மை அடியவர்க்குத் திருவடி வேட்கையும், சதாகால தியானமும் இன்றியமையாதவை. துயர்ப்பிணக்கு – துயரத்தைத் தரும்மாறுபாடு.

Maarkandeyan, young boy of sixteen years, was a very sincere devotee of our Lord Civa. Kaalan, the god of death, when the soul's lifetime ended, himself came to remove the soul of Maarkandeyan. Our Lord Civa kicked Kaalan, the deity of death for the southern side of the universe. Our Lord Civa graces and wipes out the heavy sufferings of His sincere devotees who always think of Him with love and affection. He retains the white moon in His entangled hair. The city of Thiru-ch-chirapuram is a very grand city of fame that spreads all over the universe. Our Lord Civa is the top most like gold of fine, tested quality, He is manifest in Thiru-ch-chirapuram. Those devotees who worship His holy feet will never get any severe distress.

2576. பாருநீரொடுபல்கதிரிரவியும்பனிமதியாகாசம்
ஓரும்வாயுவுமொண்கனல்வேள்வியிற்றலைவனுமாய்நின்றார்
சேருஞ்சந்தனமகிலொடுவந்திழிசெழும்புனற்கோட்டாறு
வாருந்தண்புனல்சூழ்சிரபுரந்தொழுமடியவர்வருந்தாரே. 5

பாரும் நீரொடு பல்கதிர் இரவியும் பனிமதி ஆகாசம்
ஓரும் வாயுவும் ஒண்கனல் வேள்வியில் தலைவனும் ஆய்நின்றார்
சேரும் சந்தனம் அகிலொடு வந்திழி செழும்புனல் கோட்டாறு
வாரும் தண்புனல் சூழ் சிரபுரம் தொழும் அடியவர் வருந்தாரே.

pArum, nIroTu, palkatir iraviyum, pan2imati, AkAcam,
Orum vAyuvum, oNkan2al, vELviyil-talaivan2um Ay nin2RAr--
cErum cantan2am akiloTu vantu izi cezum pun2al kOTTARu
vArum taNpun2al cUz--cirapuram tozum aTiyavar varuntArE.

பொருள்: நிலனும் நீருடன் அளவற்ற கதிர்களையுடைய ஞாயிறும் குளிர்ந்த சந்திரனும் வானும் வாயுவும் ஒள்ளிய நெருப்பும் வேள்வி இயமானனுமாய் நின்ற சிவன்; சந்தன மரங்களை அகிலோடு கொண்டு வந்து இழியும் செழுமையான நீர்வெள்ளத்தை உடைய கோட்டாற்றின் குளிர்ந்த புனல் சூழும் சிரபுரத்தைத் தொழும் அடியவர் வருத்தம் அடையார்.

குறிப்புரை: வேள்வித்தலைவன் – இயமானன். 'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங் காற்றுமாகி அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி' (அப்பர்) சிவனை நினையாத உயிர்கள் அவ்வெட்டுருவங்களுள் சிறந்த ஒன்று ஆமோ? கோட்டாறு – கோணிய கோட்டாற்றுக் கொச்சை (தி. 2 ப. 70 பா. 2). 'கோட்டாறு சூழ் கொச்சை' (தி. 3 ப. 89 பா. 1).

Lord Civa is an embodiment of the eight tutelaries on eight sides such as the earth, water, the sun with several rays, the cool moon, the sky, the wind, the bright fire, and the chief of the soul in the very hot sacrificial fire as the eighth Supreme Being. He is manifest in the temple in Thiru-ch-chirapuram where the river Kottar flows with cool water. The water in the river brings sandalwood logs, eaglewood logs etc., and comes down with large quantity of flood water.

2577. ஊழியந்தத்திலொலிகடலோட்டந்திவ்வுலகங்களவைமூட
ஆழியெந்தையென்றமரர்கள்சரண்புகஅந்தரத்துயர்ந்தார்தாம்
யாழின்நேர்மொழியேழையோடினிதுறையின்பனெம்பெருமானார்
வாழிமாநகர்ச்சிரபுரந்தொழுதெழவல்வினைஅடையாவே. 6

ஊழி அந்தத்தில் ஒலிகடல் ஓட்டந்து இவ் உலகங்கள் அவை மூட
ஆழி எந்தை என்று அமரர்கள் சரண்புக அந்தரத்து உயர்ந்தார் தாம்
யாழின் நேர்மொழி ஏழையோடு இனிது உறையின்பன் எம்பெருமானார்
வாழி மாநகர்ச் சிரபுரம் தொழுது எழ வல்வினை அடையாவே.

Uzi antattil, olikaTal OTTantu, iv ulakagkaL avai mUTa,
"Azi, entai!" en2Ru amararkaL caraNpuka, antarattu uyarntAr tAm,
yAzin2 nEr mozi EzaiyOTu in2itu uRai in2pan2, emperumAn2Ar,
vAzi mA nakarccirapuram tozutu eza, valvin2ai aTaiyAvE.

பொருள்: ஊழிக்காலத்தின் முடிவில் பேரொலியுடன் கடல் வெள்ளம் ஓட்டம் தந்து உலகங்களை மூழ்கடிக்க, அருட்கடலே! எந்தையே! என்று தேவர்கள் அடைக்கலம் புக, வானத்துயர்ந்த சிவனார், தாம் யாழின் இசைபோல இனிமையாகப் பேசும் அம்மையுடன் இனிது உறைகின்ற இன்பன், எம்பெருமானாரின் பெருங்கோயில் திருச்சிரபுரத்தைத் தொழுவாரை வலிய வினைகள் அடையமாட்டா.

குறிப்புரை: யுகாந்த காலத்தில் வெள்ளம் உலகங்களை மூடி அழிக்கும்போது தேவர்கள் சிவபெருமானைச் சரண் புகுந்தனர் என்பது வரலாறு. ஓட்டந்து – ஓட்டம் தந்து. ஆழி – அருட்கடல். அந்தரம் – வானம். இன்பன் – ஆனந்தரூபன். மாநகர் – பெருங்கோயில்.

At the end of ages, the heavy noisy waves of the ocean spread all over the universe devouring the entire world, the devas got freightened and reached Lord Civa and prayed saying "Oh Lord! You are the grace of the ocean, our Father" and surrendered. At that moment our Lord Civa made the Thonipuram city float in the ocean and saved all the celestials. He is the Lord who manifests Himself along with His consort Uma Devi whose words are similar to lute's sound. Our Civa is the most graceful Supreme Being and is manifest in the big city of Thiru-ch-chirapuram. Those devotees who prostrate and worship at His feet with sincerity will not get their past bad karma's irresistible, resultant deeds.

2578. பேய்கள்பாடப்பல்பூதங்கள்துதிசெய்ப்பிணமிடுசுடுகாட்டில்
வேய்கொள்தோளிதான்வெள்கிடமாநடமாடும்வித்தகனாரொண்
சாய்கள்தான்மிகவுடையதண்மறையவர்தகுசிரபுரத்தார்தாந்
தாய்களாயினார்பல்லுயிர்க்குந்தமைத்தொழுமவர்தளராரே. 7

பேய்கள் பாடப் பல்பூதங்கள் துதிசெய்ப் பிணம் இடு சுடுகாட்டில்
வேய்கொள் தோளி தான்வெள்கிட மாநடமாடும் வித்தகனார் ஒண்
சாய்கள் தான் மிகவுடைய தண்மறையவர் தகு சிரபுரத்தார்தாம்
தாய்கள் ஆயினார் பல்லுயிர்க்கும் உந்தமைத் தொழும் அவர் தளராரே.

pEykaL pATa, palpUtagkaL tuticeya, piNam iTu cuTukATTil,
vEy koL tOLitAn2 veLkiTa, mA naTam ATum vittakan2Ar; oN
cAykaLtAn2 mika uTaiya taN maRaiyavar taku cirapurattAr tAm;
tAykaL Ayin2Ar, pal uyirkkum; tamait tozumavar taLarArE.

பொருள்: பேய்க்கணங்கள் பாடவும் பூதகணங்கள் துதி செய்யவும் பிணங்களை இடும் சுடுகாட்டில் மூங்கில் போன்ற தோள்களையுடைய காளி நாணம் கொள்ள நடனமாடும் வித்தகனார், ஒள்ளிய சாய்ப்புல்கள் மிகவுடையதும், குளிர்ந்த மனமுடைய மறையவர்கள் வாழும் தகுதியுடைய சிரபுரத்தராகிய சிவனார், பல்லுயிர்களுக்குத் தாயும் தந்தையும் ஆயினார்; அவர்தமைத் தொழுமவர் சோர்ந்து போகார்.

குறிப்புரை: பேய்கள் பாடவும் பூதங்கள் துதிக்கவும் காளி நாணவும் மகாதாண்டவம் ஆடிய ஞான சொரூபர். சாய்கள் – புகழ்கள். 'இந்திரன்தன் சாயாப் பெருஞ்சாய் கெடத் தாம்புகளால் தடந்தோள் போய் ஆர்த்தவன்' (கம்ப. யுத்த. நாக 21). 'தாய்களாயினார் பல்லுயிர்க்கும் – (தாயவன் காண் உலகிற்கு)'. (அப்பர்) பல்லுயிர்க்கும் தாய்களாயினார் தமை என்று மாற்றிக் கூட்டிச் சிவபெருமானை எனப் பொருளுரைக்க.

Our Lord Civa's avocation is to dance. He is the most proficient in all deeds and dances. Devils chant the praise, many goblins dance and worship our Lord; the female deity of dark complexion, Kaali with soft shoulders, bamboo-like, felt shy on seeing our God's famous dance. The famous Vedic scholars live in Thiru-ch-chirapuram. Our Lord is the mother for all souls. Such a famous Lord is manifest in Thiru-ch-chirapuram. Those devotees who worship this Lord will not become decrepit in old age.

2579. இலங்குபூண்வரைமார்புடையிராவணனெழில்கொள்வெற்பெடுத்தன்று
கலங்கச்செய்தலுங்கண்டுதங்கழலடிநெரியவைத்தருள்செய்தார்
புலங்கள்செங்கழுநீர்மலர்த்தென்றல்மன்றதனிடைப்புகுந்தாருங்
குலங்கொள்மாமறைவர்சிரபுரந்தொழுதெழவினைகுறுகாவே. 8

இலங்கு பூண்வரை மார்பு உடை இராவணன் எழில் கொள் வெற்பெடுத்து அன்று
கலங்கச் செய்தலும் கண்டு தங்கழலடி நெரிய வைத்தருள் செய்தார்
புலங்கள் செங்கழுநீர் மலர்த் தென்றல் மன்றதனிடைப் புகுந்தாரும்
குலங்கொள் மாமறைவர் சிரபுரம் தொழுதெழ வினை குறுகாவே.

ilagku pUNvarai mArpu uTai irAvaNan2 ezil koL veRpu eTuttu, an2Ru,
kalagkac ceytalum, kaNTu, tam kazal aTi neriya vaittu, aruL ceytAr--
pulagkaL cegkazu nIrmalart ten2Ral man2Ru atan2 iTaip pukuntu Arum,
kulam koL mA maRaiyavar--cirapuram tozutu eza, vin2ai kuRukAvE.

பொருள்: விளங்கும் பூண்கள் அணிந்த மலைபோன்ற மார்பினனாகிய இராவணன், அழகிய கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற அன்று அவன் நெரியக் கழலடி வைத்துக் கலங்கச் செய்தார்; பின் அருளும் செய்தார்; அவருடைய வயல்களில் உள்ள செங்கழுநீர்மலர்களிலிருந்து தென்றல் மன்றில் புகுந்து நிறைவதும்; சிறப்புடைய மறையவர்கள் கூட்டமாக வாழ்வதுமாகிய திருச்சிரபுரத்தைத் தொழுதெழ வினை நில்லா.

குறிப்புரை: நெரியக் கழலடியை வைத்து என்க. புலன்கள் – வயல்கள். கள்தேனுமாம். மன்றில் தென்றல் புகுந்து என மாற்றுக. குலம் – கூட்டம். மா – பெருமை.

Raavanan, the king of Sri Lanka wears very bright and excellent jewellary. His chest is very big and broad, looks like a mountain. He tried to shift the admirable mount Kailash and to place it aside. On noticing this, our Lord pressed the top of the mountain with the toe of His holy feet. Raavanan got crushed under the mountain. He bemoaned for his bad action and begged pardon. Then our Lord Civa pardoned and graced him. In the city's fields purple Indian water lily flowers' fragrance, mixed with the southern wind, enters into the city. They give comforts to people. In the city Brahmins who are Vedic scholars do live in large numbers. Those devotees who worship this city will find that the evil effects of their past karma will never affect them.

2580. வண்டுசென்றணைமலர்மிசைநான்முகன்மாயனென்றிவரன்று
கண்டுகொள்ளவோரேனமோடன்னமாய்க்கிளறியும்பறந்துந்தாம்
பண்டுகண்டதுகாணவேநீண்டவெம்பசுபதிபரமேட்டி
கொண்டசெல்வத்துச்சிரபுரந்தொழுதெழவினையவைகூடாவே. 9

வண்டு சென்றணை மலர்மிசை நான்முகன் மாயன் என்று இவர் அன்று
கண்டு கொள்ள ஓர் ஏனமோடு அன்னமாய்க் கிளறியும் பறந்துந்தாம்
பண்டு கண்டது காணவே நீண்ட வெம் பசுபதி பரமேட்டி
கொண்ட செல்வத்துச் சிரபுரம் தொழுதெழ வினை அவை கூடாவே.

vaNTu cen2Ru aNai malarmicai nAn2mukan2, mAyan2, en2Ru ivar an2Ru
kaNTu koLLa, Or En2amoTu an2n2am Ay, kiLaRiyum paRantum, tAm
paNTu kaNTatu kANavE nINTa em pacupati; paramETTi;
koNTa celvattuc cirapuram tozutu eza, vin2ai avai kUTAvE.

பொருள்: வண்டுகள் சென்று மொய்க்கின்ற தாமரை மலர்மீது இருக்கும் பிரமன், திருமால் என்னும் இவர் இருவரும் அன்று அடிமுடி காண ஒரு பன்றியும் அன்னமுமாக நிலத்தைக் கிளறியும் வானத்திற் பறந்தும் தாம் முன்பு கண்டதையே கண்டதல்லால் அடியும் முடியும் கண்டிலர்; அவ்வாறு நீண்ட எம்முடைய பசுபதி, பரமேட்டியாகிய செல்வத்தைக் கொண்ட திருச்சிரபுரத்தைத் தொழுதெழ வினைகளாயவை கூடா.

குறிப்புரை: பண்டு கண்டது காண்டல் – புதிதாக ஒன்றும் காணாமை. அறியுந்தோறும் அறியாமை காண்பது புதுக்காட்சி. அறியாமை விலகாதிருப்பதே பண்டு கண்டது காண்டலாகும்.

Our tutelary Brahma in the lotus flower with a lot of bees swarming and the other deity Thirumaal - both decided to see Civa's head and feet. Brahma took the form of a swan and flew high in the sky, Thirumaal took that of a hog and went deep into the earth by digging. They both failed in their efforts. They both saw only what they had seen long before. At that moment, Lord Civa appeared before them in the same posture as dazzling infinite supernal tall flame. This Lord Pasupathi and His consort Parametti, both evidently are manifest in the temple in Thiru-ch-chirapuram, which is a very prosperous city. Those devotees who worship Civa in Thiru-ch-chirapuram will find their bad karma never affecting them.

2581. பறித்தபுன்தலைக்குண்டிகைச்சமணரும்பார்மிசைத்துவர்தோய்ந்த
செறித்தசீரவத்தோருந்தேர்கிலாத்தேவர்கள்பெருமானார்
முறித்துமேதிகள்கரும்புதின்றாவியின்மூழ்கிடஇளவாளை
வெறித்துப்பாய்வயற்சிரபுரந்தொழவினைவிட்டிடுமிகத்தானே. 10

பறித்த புன்தலைக் குண்டிகைச் சமணரும் பார்மிசைத் துவர் தோய்ந்த
செறித்த சீரவத்தோரும் தேர்கிலாத் தேவர்கள் பெருமானார்
முறித்து மேதிகள் கரும்பு தின்றாவியின் மூழ்கிட இளவாளை
வெறித்துப் பாய்வயல் சிரபுரம் தொழ வினை விட்டிடு மிகத்தானே.

paRitta pun2talaik kuNTikaic camaNarum, pArmicait tuvar tOynta
ceRitta cIvarat tErarum, tErkilAt tEvarkaL perumAn2Ar--
muRittu mEtikaL karumpu tin2Ru Aviyil mUzkiTa, iLa vALai
veRittup pAy vayal--cirapuram toza, vin2ai viTTiTum, mikat tAn2E.

பொருள்: மயிர் பறித்த புல்லிய தலையும் குண்டிகையும் உடைய சமணர்களும் துவர் தோய்ந்த ஆடையைப் போர்த்த சமணர்களும் இப்பூமி மேல் அறிய இயலாத தேவாதிதேவன்; சிவபெருமானார்; அவருடைய, எருமைகள் கரும்பை முறித்துத் தின்று குளத்தில் மூழ்கிட மிரண்ட இளமையான வாளைமீன்கள் அஞ்சிப் பாயும் வயல்களை உடைய, திருச்சிரபுரத்தைத் தொழ வினைகள் விட்டு மிகத் தூரத்தில் நீங்கிவிடும்.

குறிப்புரை: மேதிகள் கரும்பை முறித்துத் தின்று குளத்தில் மூழ்க வாளை கலங்கிப் பாயும் வயல். ஆவி – குளம். வெறித்து – கலங்கி, அஞ்சி.

The Jains who live in this city remove their hair from their head and move baldheaded. In their hands they carry the ascetic's bowl. The Buddhists wear the salmon coloured dress - both could not see our Lord Civa. Lord Civa is the Chief of devas manifest in Thiru-ch-chirapuram temple. In this city the oxen break the sugarcane plants and eat them. Then they reach the ponds of cool water and sink there. On seeing this sword fish get perplexed and dash to the fields. In such an environment our Lord Civa is manifest and those who worship Him will get all their bad karma removed.

2582. பரசுபாணியைப்பத்தர்களத்தனைப்பயைரவோடக்கு
நிரைசெய்பூண்திருமார்புடைநிமலனைநித்திலப்பெருந்தொத்தை
விரைசெய்பூம்பொழிற்சிரபுரத்தண்ணலைவிண்ணவர்பெருமானைப்
பரவுசம்பந்தன்செந்தமிழ்வல்லவர்பரமனைப்பணிவாரே. 11

பரசு பாணியைப் பத்தர்கள் அத்தனைப் பயை அரவோடக்கு
நிரை செய் பூண் திருமார்புடை நிமலனை நித்திலப் பெருந்தொத்தை
விரை செய் பூம்பொழில் சிரபுரத்து அண்ணலை விண்ணவர் பெருமானைப்
பரவு சம்பந்தன் செந்தமிழ் வல்லவர் பரமனைப் பணிவாரே.

paracu pANiyai, pattarkaL attan2ai, pai aravOTu akku
nirai cey pUN tiru mArpu uTai nimalan2ai, nittilap peruntottai,
virai cey pUmpozil cirapurattu aNNalai, viNNavar perumAn2ai,
paravu campantan2 centamiz vallavar paraman2aip paNivArE.

பொருள்: மழுவேந்திய கரத்தனை, அன்புடையாருக்கு அப்பனை, நச்சுப்பையுடைய பாம்பினோடு எலும்புமாலையை நிரலாகப் பூண்ட மார்புடைய நிமலனை, முத்து மாலையை, மணம் வீசும் பூம்பொழில்களையுடைய திருச்சிரபுரத்து அண்ணலை, தேவர்கள் பெருமானை, போற்றும் ஞானசம்பந்தன் பாடிய இச்செந்தமிழ்த் திருப்பதிகத்தை வல்லவர் பரமன் ஒருவனையே பணிவார்.

குறிப்புரை: பரசுபாணி – மழுவேந்தியகையன். பத்தர்கள் அத்தன் – மெய்யன்புடையார்க்கு இறைவன். அத்தன் – கையகப்படுவோன் எனலுமாம். அக்கு – எலும்பு.

Our Lord Civa carries in one of His hands the battle axe. He is the Chief for His devotees. He wears on His body hooded snakes and garland made of bones on His chest, very attractive. He is the Supreme Being. He appears as a bunch of pearls. He is a respectable Supreme Being manifested in the city with natural forests full of sweet smelling flower plants. He is the Chief of devas. Our saint Thiru-gnana-Sambandar paid respectful homage to Lord Civa and chanted ten verses in pure Tamil language. Those devotees who can praise Lord Civa with these songs will get rid of their bad karma.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

102ஆம் பதிகம் முற்றிற்று
End of 102nd Hymn



திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 239 பதிக எண்: 103

103. திருஅம்பர்மாகாளம் 103. THIRU-AMBAR-MAAKAALAM

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

அம்பன், அம்பாசுரன் என்ற இரண்டு அரக்கர்களைக் கொன்ற பாவம் நீங்கக் காளி பூசித்த பதியாதலின் இப்பெயர் பெற்றது. இது கோயில் மாகாளம் எனவும் வழங்கப்பெறும். பேரளம் – திருவாரூர் தொடர்வண்டித் தொடரில் பூந்தோட்டம் நிலையத்திலிருந்து கிழக்கே 4 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது காவிரியின் தென்கரைத் தலங்களுள் ஐம்பத்தைந்தாவது தலம் ஆகும். கோயில் ஊர் நடுவில் இருக்கின்றது. இவ்வூரில் நல்ல ஸ்தபதிகளுள்ளனர். சோழர் திருப்பணி. ஆனால் பூர்த்தியாகவில்லை.

இறைவரின் திருப்பெயர் காளகண்டேசுவரர். இறைவியின் திருப்பெயர் பட்சநாயகி. கிழக்கு நோக்கிய சந்நிதி. அம்மன் சுவாமிக்கு வலப்புறம் விளங்குகிறார். தியாகராசர் சந்நிதிக்கு எதிர்ப்புறம் சுந்தரரும் பரவையாரும் உள்ளனர். தீர்த்தம் மாகாளதீர்த்தம். காளியால் பூசிக்கப்பெற்றது. இச்செய்தியை, 'காளி ஏத்தும் அழகனார் அரிவையோடிருப்பிடம் அம்பர் மாகாளந்தானே' என்னும் இத்தலத்துத் தேவாரப் பகுதியால் அறியலாம். இங்குக் காளிக்குத் தனிக்கோயில் தெற்குத் திருச்சுற்றாலையில் (பிரகாரத்தில்) இருக்கின்றது. மாகாள இருடியரும் பூசித்துப் பேறு பெற்றனர். இத்தலத்து இறைவரைப் புதிய மலர், சந்தனம், புகை இவைகளைக் கொண்டு வழிபடுவோர் தாம் எண்ணிய பொருளைப் பெறுவர். இத்தலத்திற்கு திருஞானசம்பந்தர் திருப்பதிகங்கள் மூன்று உள்ளன.

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் ஆயில்யநாளில் சோமாசி மாற நாயனார் யாகவிழா மிக்க சிறப்புடன் நடைபெறும். அம்பருக்கும் அம்பர்மாகாளத்திற்கும் இடையில் சோமாசிமாற நாயனார் யாகம் செய்த மண்டபம் இருக்கின்றது. சோமாசி மாற நாயனார் அவருடைய மனைவியார் இவர்களின் பிரதிமைகள் கோயிலில் இருக்கின்றன. அதிகார நந்தி மானிட உருவம் முன்நந்தி இடம் மாறி இருக்கிறது. நந்திக்கு அருகில் நாயனாருக்கு இறைவனும் இறைவியும் காட்சி தரும் வண்ணம் எழுந்தருளியிருக்கிறார்கள். அருகில் நாகநாதர் என்ற பெயரில் மற்றொரு சிவலிங்கம் இருக்கின்றது.

பதிக வரலாறு

அம்பர்மாநகர் மாகாளத்தை வழிபட்ட திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனாருடன் வாழ்ந்திருந்த பொழுது பாடிய திருப்பதிகங்களுள் ஒன்று இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2583. புல்குபொன்னிறம்புரிசடைநெடுமுடிப்போழிளமதிசூடிப்
பில்குதேனுடைநறுமலர்க்கொன்றையும்பிணையல்செய்தவர்மேய
மல்குதண்டுறையரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
அல்லுநண்பகலுந்தொழுமடியவர்க்கருவினையடையாவே. 1

புல்கு பொன் நிறம் புரிசடை நெடுமுடிப் போழ் இளமதிசூடிப்
பில்கு தேனுடை நறுமலர்க் கொன்றையும் பிணையல் செய்தவர்மேய
மல்கு தண்டு உறை அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
அல்லு நண்பகலும் தொழும் அடியவர்க்கு அருவினை அடையாவே.

pulku pon2 niRam puri caTai neTu muTip pOz iLamati cUTi,
pilku tEn2 uTai naRu malark kon2Raiyum piNaiyal ceytavar mEya--
malku taN tuRai aricilin2 vaTakarai, varupun2al--mAkALam,
allum naN pakalum tozum aTiyavarkku aruvin2ai aTaiyAvE.

பொருள்: பொன்னிறம் பொருந்திய முறுக்குண்ட சடையின் உயர்ந்த முடிமேல், மதியைப் பிளந்தது போன்ற வடிவமுடைய இளம்பிறையைச் சூடித் தேன் துளிர்க்கும் நறுமலர்க் கொன்றையை மாலையாகச் சூடியவர் இருக்கும் தலம், பொலிவான குளிர்ந்த துறைகளை உடையதும் புது வெள்ளம் வருவதும் ஆகிய அரிசிலாற்றின் வடகரையில் உள்ள மாகாளம். இதனை இரவும் பகலும் தொழும் அடியார்களின் நீக்குதற்கு அரிய வினைகள் அவர்களை அடையாது நீங்கிப்போம்.

குறிப்புரை: அரிசிலாற்றின் வடகரையில் மாகாளத்தை இராப்பகல் இடைவிடாமல் வழிபடும் அடியார்களுக்கு நீக்குதற்கு அரிய வினைகள் நீங்கிப்போம். அவை மீண்டும் அவரை அடைய வல்லன அல்ல. 'அல்லும் நண்பகலும் தொழும் அடியவர்'. 'கங்குலும் பகலும் தொழும் அடியவர்' (பா. 4).

Our Lord Civa's engangled locks of hair are golden coloured in which He retains the young moon. Also He puts on a garland made of Indian laburnum flowers full of honey. These two have been conjoined and worn by Him. He evidently manifests Himself in Thiru-ambar-maakaalam, which is situated on the northern side of Arisilaru

river. Those devotees who worship our Lord day and night will never get any bitter suffering in their life.

2584. அரவமாட்டுவரந்துகில்புலியதளங்கையிலனலேந்தி
இரவுமாடுவரிவையிவர்சரிதைகளிசைவனபலபூதம்
மரவந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
பரவியும்பணிந்தேத்தவல்லாரவர்பயன்றலைப்படுவாரே. 2

அரவ மாட்டுவர் அம் துகில் புலி அதள் அங்கையில் அனலேந்தி
இரவும் ஆடுவர் இவை இவர் சரிதைகள் இசைவன பலபூதம்
மரவம் தோய்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பரவியும் பணிந்து ஏத்த வல்லார் அவர் பயன் தலைப்படுவாரே.

aravam ATTuvar; am tukil puli ataL; agkaiyil an2al Enti,
iravum ATuvar; ivai ivar caritaikaL! icaivan2a, palapUtam;
maravam tOy pozil, aricilin2 vaTakarai, varupun2al, mAkALam
paraviyum paNintu Etta vallAr avar payan2 talaippaTuvArE.

பொருள்: பாம்பை ஆட்டுவர்; புலியின் தோல் அழகிய துகில்; அழகிய கையில் அனலை ஏந்தி இரவு நேரத்திலும் ஆடுவர்; இவை இவரது செயல்கள்; பல பூதங்கள் பாடுவன; இவர் இருக்கும் தலம் மராமரங்கள் நிறைந்த சோலைகளை உடையதும் புதுவெள்ளம் வரும் அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதுமாகிய மாகாளம். இதனைப் பரவியும் பணிந்தும் ஏத்த வல்லார் நற்பயனை அடைவார்கள்.

குறிப்புரை: பாம்பாட்டுபவர். புலித்தோல் உடுப்பவர். கையில் எரி ஏந்துவர். ஏந்தி இரவில் ஆடுவர். இவர் சரிதைகள் இவை. இசைவன – இசைபாடுவன. தலைப்படுவார் – அடைவார்.

Our Lord Civa used to catch hold of snakes and let it dance. He wears the hide of the tiger as His loincloth. He holds in His attractive hand fire in a firepot and dances in the night. His goblins sing His fame of the stories and dance with Him and worship Him. The Thiru-ambar-maakaalam city is surrounded by gardens full of white seaside oak trees. The city Thiru-ambar-maakaalam is on the northern bank of the river Arisilaru. Our Lord is manifest in the temple in Thiru-ambar-maakaalam city. Those devotees who pay respect and praise our Lord and worship Him and prostrate before Him will get their desired benefit in their life.

2585. குணங்கள்கூறியுங்குற்றங்கள்பரவியுங்குரைகழலடிசேரக்
கணங்கள்பாடவுங்கண்டவர்பரவவுங்கருத்தறிந்தவர்மேய
மணங்கொள்பூம்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
வணங்குமுள்ளமோடணையவல்லர்களைவல்வினையடையாவே. 3

குணங்கள் கூறியும் குற்றங்கள் பரவியும் குரைகழல் அடிசேரக்
கணங்கள் பாடவும் கண்டவர் பரவவும் கருத்து அறிந்தவர் மேய
மணங்கொள் பூம்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
வணங்கும் உள்ளமோடு அணைய வல்லர்களை வல்வினை அடையாவே.

kuNagkaL kURiyum kuRRagkaL paraviyum kuraikazal aTi cErak
kaNagkaL pATavum, kaNTavar paravavum, karuttu aRintavar mEya--
maNam koL pUmpozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam
vaNagkum uLLamoTu aNaiya vallArkaLai valvin2ai aTaiyAvE.

பொருள்: அடியார் கூட்டங்கள் குணங்களை எடுத்துக் கூறிப் பாராட்டியும் குற்றங்களைக் கூறுதல் போலப் புகழ்ந்தும் ஒலிக்கின்ற கழல்கள் அணிந்த திருவடிகளுடன் கூட வேண்டிப் பாடவும், தரிசித்தோர் வாழ்த்தவும், இவ்வாறு வழிபடுவோரின் கருத்தை அறிந்து அருளும் சிவபிரான் எழுந்தருளியிருப்பதும், மணமுடைய பூஞ்சோலைகளை உடையதும் புதுவெள்ளம் வரும் அரிசிலாற்றின் வடகரையில் இருப்பதுமாகிய மாகாளம். இதனை வணங்கும் உள்ளத்துடன் சேர வல்லவர்களை அடையும் வலிமை வினைகளுக்கு இல்லை.

குறிப்புரை: கணங்கள் பாடவும், தரிசித்தோர் வாழ்த்தவும் அவரவர் கருத்தை அறிந்து அருளும் சிவபிரான் எழுந்தருளிய அரிசிற்கரை மாகாளத்தை வணங்கும் உள்ளத்தோடும் சேர வல்லவர்களை அடையும் வன்மை வினைகளுக்கு இல்லை.

Our Lord graces the servitors who speak of His noble qualities, but explain their own inadequate nature and speak of their degradation and thereafter try to prostrate at His holy feet. The goblins sing His fame. The devotees praise and pay respect to Him. Then our Lord will understand our desire and will similarly agree to grace us. Those servitors, able to reach the city of Thiru-ambar-maakaalam with a sincere devotion in their mind to worship Him, will never get the effect of their bad karma in their life.

2586. எங்குமேதுமோர்பிணியிலர்கேடிலரிழைவளர்நறுங்கொன்றை
தங்குதொங்கலுந்தாமமுங்கண்ணியுந்தாமகிழ்ந்தவர்மேய
மங்குல்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
கங்குலும்பகலுந்தொழுமடியவர்காதன்மையுடையாரே. 4

எங்கும் ஏதுமோர் பிணியிலர் கேடில் அரிழை வளர் நறுங்கொன்றை
தங்கு தொங்கலும் தாமமுங் கண்ணியுந்தா மகிழ்ந்தவர்மேய
மங்குல் தோய் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கங்குலும் பகலும் தொழும் அடியவர் காதன்மை உடையாரே.

egkum Etum Or piNi ilar, kETu ilar, izai vaLar naRugkon2Rai
tagku togkalum tAmamum kaNNiyum tAm makizntavar, mEya--
magkul tOy pozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam,
kagkulum pakalum tozum aTiyavar kAtan2mai uTaiyArE.

பொருள்: எந்தயிடத்தும் ஒரு சிறிதும் பிணி எய்திலர்; கெடுதலிலர்; மணமுடைய கொன்றை மலர்களைத் தொங்கலாகவும் தாராகவும் கண்ணியாகவும் அணிந்து மகிழ்பவர்; அவர், எழுந்தருளிய தலம் மேகம் தவழுகின்ற பொழில்களை உடையதும், புதுவெள்ளம் வருகின்ற அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதும் ஆகிய மாகாளம். இதனை இரவும் பகலும் தொழும் அடியவர்பால் சிவபெருமான் காதன்மை உடையவர்.

குறிப்புரை: எவ்விடத்தும் ஒருசிறிதும் பிணி எய்திலர். கெடுதலிலர். தொங்கல் – மாலை. தாமம் – தார். காதன்மை – காதலின் இயல்பு.

The heavy clouds in the sky over the city of Thiru-ambar-maakaalam have crowded over the forest area of the city. The city is on the northern bank of the river Arisilaru. Our Lord Civa wears the garland full of sweet smelling Indian laburnum flowers. This garland is entwined along with different, two or more flowers tied on either side of the string, and our Lord wears this sort of garland. The servitors, with passionate tender feelings, who worship our Lord both day and night will never get even small ailment in their life.

2587. நெதியமென்னுளபோகமற்றென்னுளநிலமிசைநலமாய
கதியமென்னுளவானவரென்னுளர்கருதியபொருள்கூடில்
மதியந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
புதியபூவொடுசாந்தமும்புகையுங்கொண்டேத்துதல்புரிந்தோர்க்கே. 5

நெதியம் என் உளபோகம் மற்றென்னு உளநிலமிசை நலமாய
கதியம் என்னுள வானவர் என்னுளர் கருதிய பொருள் கூடில்
மதியம் தோய்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
புதிய பூவொடு சாந்தமும் புகையும் கொண்டு ஏத்துதல் புரிந்தோர்க்கே.

netiyam en2 uLa? pOkam maRRu en2 uLa? nilammicai nalam Aya
katiyam en2 uLa? vAn2avar en2 uLar?--karutiya poruL kUTil--
matiyam tOy pozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam,
putiya pUvoTu cAntamum pukaiyum koNTu Ettutal purintOrkkE.

பொருள்: வானில் உள்ள சந்திரனோடு தோய்கின்ற அளவு உயர்ந்த பொழில்களையும் புதுவெள்ளம் வருகின்ற அரிசிலாற்றின் வடகரையில் இருப்பதுமாகிய மாகாளத்தை புதிய மலர்கள், சந்தனம், தூபம் ஆகியவற்றைக் கொண்டு ஏத்தி வழிபடும் சிவ புண்ணியம் உடையவர்களுக்கு, இச்சிவபூசையால் எய்தப் பெறும் திருவருளைக் காட்டிலும் பெறத்தக்க நிதியம் எவை உள? சுகபோகம் எவை உள? இந்தப் பூமியின்மேல் நன்மை பயக்கும் கதி எவை உள? இவற்றைக் காட்டிலும் சிறந்த நிதியமோ, போகமோ, கதியோ, தேவர்கள் என்ன பெற்றுள்ளனர்? (ஒன்றும் இல்லையாம்). இப்புண்ணியம் உடையோருக்கே கருதிய பொருள் கூடும்.

குறிப்புரை: நெதியம் – நிதியம். மதியம் – தோய்புனல். கதியம் – வழி. மாகாளத்துப் பரசிவனைப் புதுப்பூக்கள் சந்தனம் தூபம் (முதலியவை) கொண்டு ஏத்தி வழிபடும் சிவபுண்ணியத்தை உடையவர்க்கு அச்சிவபூஜையால் எய்தும் திருவருளினும் நிதியம் சுகபோகம் வேறு என்ன இருக்கின்றன?

The city of Thiru-ambar-maakaalam is surrounded by thick forest areas where the moon passes through and appears as settled there. The city is on the northern bank of the river Arisilaru. These servitors do the daily rituals for Lord Civa of Thiru-ambar-maakaalam daily with fresh flowers, sandal paste, grand fragrance of smoke etc. As the result of their daily Siva Pooja they get our Lord's grace in plenty. These religious people get wealth, family life of full pleasure etc. Above all, they get Lord Civa's grace. Is there anything else to be got in the world? No.

2588. கண்ணுலாவியகதிரொளிமுடிமிசைக்கனல்விடுசுடர்நாகம்
தெண்ணிலாவொடுதிலகமுநகுதலைதிகழவைத்தவர்மேய
மண்ணுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
உண்ணிலாநினைப்புடையவர்யாவரிவ்வுலகினிலுயர்வாரே. 6

கண் உலாவிய கதிரொளி முடிமிசைக் கனல் விடுசுடர் நாகம்
தெண் நிலாவொடு திலகமும் நகுதலை திகழ வைத்தவர் மேய
மண்ணுலாம் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
உண்ணிலா நினைப்புடையவர் யாவர் இவ்வுலகினில் உயர்வாரே.

kaN ulAviya katir oLi muTimicaik kan2al viTu cuTar nAkam,
teN nilAvoTu, tilakamum, nakutalai, tikaza vaittavar mEya--
maN ulAm pozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam
uL-nilAm nin2aippu uTaiyavar yAvar, iv ulakin2il uyarvArE.

பொருள்: வைத்த கண் வாங்கமுடியாத கதிரொளி வீசும் செஞ்சடை முடியின்மீது நெருப்பை உமிழ்கின்ற நாகப்பாம்பு, தெளிந்த பிறை நிலவொடு திலகமும், நகும் தலையையும் விளங்க வைத்தவராகிய சிவபிரானார், எழுந்தருளியுள்ள தலம், நிலத்துக்கு அழகாகிய பொழிலையும் புதுவெள்ளம் வருகின்ற அரிசிலாற்றின்கரையின் வடகரையில் உள்ளதுமாகிய மாகாளம். இதனை மனத்தில் தியானிப்பவர் யாவர்? அவர் இவ்வுலகில் உயர்வுடையவராவர்.

குறிப்புரை: கண் உலாவிய கதிர் ஒளி முடி – செஞ்சடை முடியின் ஒளியை உணர்த்திற்று. திலதம் – திலகம். வைத்தவர் – சிவபிரானார். உள் – மனத்தில். நிலாம் – நிலாவுகின்ற.

Our Lord Civa's entangled locks of hair give out the most supernal bright light similar to sun's rays. He has adorned His head by retaining the snake and the young moon on it. He puts on the garland of skulls also on His head. The city Thiru-ambar-maakaalam is surrounded by thick forest area. It is on the northern banks of the river Arisilaru. In the temple of this city, Thiru-ambar-maakaalam, our Lord resides. Whosoever deeply think of this city and worship our Lord with devotion in their mind will rise in this world as the people of virtues.

2589. தூசுதானரைத்தோலுடைக்கண்ணியஞ்சுடர்விடுநறுங்கொன்றை
பூசுவெண்பொடிப்பூசுவதன்றியும்புகழ்புரிந்தவர்மேய
மாசுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
பேசுநீர்மையர்யாவரிவ்வுலகினிற்பெருமையைப்பெறுவாரே. 7

தூசு தானரைத் தோலுடைக் கண்ணி அம்சுடர் விடுநறும் கொன்றை
பூசு வெண்பொடிப் பூசுவது அன்றியும் புகழ் புரிந்தவர் மேய
மாசுலாம் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பேசு நீர்மையர் யாவர் இவ்வுலகினில் பெருமையைப் பெறுவாரே.

tUcu tAn2 arait tOl uTai, kaNNi am cuTarviTu naRugkon2Rai,
pUcu veNpoTip pUcuvatu, an2Riyum, pukaz purintavar mEya--
mAcu ulAm pozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam
pEcu nIrmaiyar yAvar, iv ulakin2il perumaiyaip peRuvArE.

பொருள்: அரையில் உடையாவது தோல்; தலைமாலையாவது பொன்னொளி வீசும் கொன்றை மலர்; பூசுவது வெண்மையான திருநீறு; அஃதல்லாமல், சிவனின் புகழைப் பல்காலும் பேசுதலை விரும்பியவர் வாழும் தலம் யாதெனில், மேகம் தங்கிய பொழில்களையும் புதுவெள்ளம் வருகின்ற அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதுமான மாகாளம். இதனைப் போற்றும் இயல்புடையவர் யாவர்? அவர் பெருமையைப் பெறுவாரே.

குறிப்புரை: தூசு – உடை. அரையில் தோலுடையே. தூசு. கொள்கையே – கண்ணி. பூசுவது வெண்பொடி. புரிந்தவர் – விரும்பினவர். மாசு – மேகம். யாவர்? அவர் பெருமை பெறுவார் என்க.

Our Lord Civa puts as cloth on His waist the hide. The Indian laburnum flower garland He puts on His body. He applies the white holy ashes on His body. He likes to be praised. Those who speak of the fame of Thiru-ambar-maakaalam will get all the benevolence in their life.

2590. பவ்வமார்கடலிலங்கையர்கோன்றனைப்பருவரைக்கீழூன்றி
எவ்வந்தீரஅன்றிமையவர்க்கருள்செய்தஇறையவனுறைகோயில்
மவ்வந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
கவ்வையாற்றெழுமடியவர்மேல்வினைகனலிடைச்செதிளன்றே. 8

பவ்வமார் கடல் இலங்கையர் கோன்றனைப் பருவரைக் கீழ் ஊன்றி
எவ்வந்தீர அன்று இமையவர்க்கு அருள்செய்த இறையவன் உறைகோயில்
மவ்வந் தோய்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கவ்வை ஆற்று எழுமடியவர் மேல்வினை கனலிடைச் செதிளன்றே.

pavvam Ar kaTal ilagkaiyar kOn2 tan2aip paruvaraik klz Un2Ri,
evvam tIra an2Ru imaiyavarkku aruL ceyta iRaiyavan2 uRai kOyil--
mavvam tOy pozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam
kavvai ARRu ezum aTiyavar *mEl vin2ai kan2al iTaic cetiL an2RE!*

பொருள்: நீர்க்குமிழிகள் மிகுந்த கடலின் நடுவுள் உள்ள இலங்கையர்க்கு அரசனைப் பெரிய மலையாகிய கயிலை மலைக்கீழ் ஊன்றி நசுக்கி, துயரம் தீர அன்று தேவர்களுக்கு அருள் செய்த இறைவன் உறைகின்ற திருக்கோயில், மேகத்துடன் தோய்கின்ற அளவு உயர்ந்துள்ள பொழில்கள் உள்ளதும் புதுவெள்ளம் வருகின்ற அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதுமாகிய மாகாளம். இதனைத் தோத்திர முழக்குடன் தொழும் அடியவர்களின் மேல் வரும் வினைகள் தீயினிற் தூசாக ஒழியும்.

குறிப்புரை: பவ்வம் ஆர் (கடல்) – நீர்க்குமிழி நிறைந்த. நுரையும் ஆம். 'நுரை மொக்குள் பௌவத்தோடு நொவ்விய புற்புதங்கள் திரைகொள் நீர்க்குமிழி ஐந்தாம்' (சூடாமணி நிகண்டு 5, பெயர்ப்பிரிவு 2.5). மவ்வம் – மேகம். அழகு (தோய்பொழில்) எனல் பொருந்தாது. (தமிழ் லெக்ஸிகன், பக் 3112). கவ்வை – தோத்திர முழக்கம். தீயிற்பட்ட மரத்தூள் போல வினை அழியும்.

Raavanan was the king of Sri Lanka, bordered by the oceans on all four sides. Our Lord Civa got him crushed under mount Kailash and destroyed his mightiness. He graced the devas and removed their difficulties. This Lord evidently is manifest in the temple in Thiru-ambar-maakaalam. The devotees praise the city and the Lord with pomposity. Those devotees' past karma and bad deeds, if any, will get destroyed like the dust falling into fire flame and be burnt.

2591. உய்யுங்காரணமுண்டென்றுகருதுமினொளிகிளர்மலரோனும்
பைகொள்பாம்பணைப்பள்ளிகொளண்ணலும்பரவநின்றவர்மேய
மையுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
கையினாற்றெழுதவலமும்பிணியுந்தங்கவலையுங்களைவாரே. 9

உய்யுங் காரணம் உண்டு என்று கருதும் ஒளிகிளர் மலரோனும்
பைகொள் பாம்பணைப் பள்ளிகொள் அண்ணலும் பரவ நின்றவர்மேய
மையுலாம் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கையினால் எழுதவலமும் பிணி உந்தம் கவலையும் களைவாரே.

2589. தூசுதானரைத்தோலுடைக்கண்ணியஞ்சுடர்விடுநறுங்கொன்றை
பூசுவெண்பொடிப்பூசுவதன்றியும்புகழ்புரிந்தவர்மேய
மாசுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
பேசுநீர்மையர்யாவரிவ்வுலகினிற்பெருமையைப்பெறுவாரே. 7

தூசு தானரைத் தோலுடைக் கண்ணி அம்சுடர் விடுநறும் கொன்றை
பூசு வெண்பொடிப் பூசுவது அன்றியும் புகழ் புரிந்தவர் மேய
மாசுலாம் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பேசு நீர்மையர் யாவர் இவ்வுலகினில் பெருமையைப் பெறுவாரே.

tUcu tAn2 arait tOl uTai, kaNNi am cuTarviTu naRugkon2Rai,
pUcu veNpoTip pUcuvatu, an2Riyum, pukaz purintavar mEya--
mAcu ulAm pozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam
pEcu nIrmaiyar yAvar, iv ulakin2il perumaiyaip peRuvArE.

பொருள்: அரையில் உடையாவது தோல்; தலைமாலையாவது பொன்னொளி வீசும் கொன்றை மலர்; பூசுவது வெண்மையான திருநீறு; அஃதல்லாமல், சிவனின் புகழைப் பல்காலும் பேசுதலை விரும்பியவர் வாழும் தலம் யாதெனில், மேகம் தங்கிய பொழில்களையும் புதுவெள்ளம் வருகின்ற அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதுமான மாகாளம். இதனைப் போற்றும் இயல்புடையவர் யாவர்? அவர் பெருமையைப் பெறுவாரே.

குறிப்புரை: தூசு – உடை. அரையில் தோலுடையே. தூசு. கொள்கையே – கண்ணி. பூசுவது வெண்பொடி. புரிந்தவர் – விரும்பினவர். மாசு – மேகம். யாவர்? அவர் பெருமை பெறுவார் என்க.

Our Lord Civa puts as cloth on His waist the hide. The Indian laburnum flower garland He puts on His body. He applies the white holy ashes on His body. He likes to be praised. Those who speak of the fame of Thiru-ambar-maakaalam will get all the benevolence in their life.

2590. பவ்வமார்கடலிலங்கையர்கோன்றனைப்பருவரைக்கீழூன்றி
எவ்வந்தீரஅன்றிமையவர்க்கருள்செய்தஇறையவனுறைகோயில்
மவ்வந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
கவ்வையாற்றெழுமடியவர்மேல்வினைகனலிடைச்செதிளன்றே. 8

பவ்வமார் கடல் இலங்கையர் கோன்றனைப் பருவரைக் கீழ் ஊன்றி
எவ்வந்தீர அன்று இமையவர்க்கு அருள்செய்த இறையவன் உறைகோயில்
மவ்வந் தோய்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கவ்வை ஆற்று எழுமடியவர் மேல்வினை கனலிடைச் செதிளன்றே.

pavvam Ar kaTal ilagkaiyar kOn2 tan2aip paruvaraik kIz Un2Ri,
evvam tIra an2Ru imaiyavarkku aruL ceyta iRaiyavan2 uRai kOyil--
mavvam tOy pozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam
kavvai ARRu ezum aTiyavar mEl vin2ai kan2al iTaic cetiL an2RE!

பொருள்: நீர்க்குமிழிகள் மிகுந்த கடலின் நடுவுள் உள்ள இலங்கையர்க்கு அரசனைப் பெரிய மலையாகிய கயிலை மலைக்கீழ் ஊன்றி நசுக்கி, துயரம் தீர அன்று தேவர்களுக்கு அருள் செய்த இறைவன் உறைகின்ற திருக்கோயில், மேகத்துடன் தோய்கின்ற அளவு உயர்ந்துள்ள பொழில்கள் உள்ளதும் புதுவெள்ளம் வருகின்ற அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதுமாகிய மாகாளம். இதனைத் தோத்திர முழக்குடன் தொழும் அடியவர்களின் மேல் வரும் வினைகள் தீயினிற் தூசாக ஒழியும்.

குறிப்புரை: பவ்வம் ஆர் (கடல்) – நீர்க்குமிழி நிறைந்த. நுரையும் ஆம். 'நுரை மொக்குள் பௌவத்தோடு நொவ்விய புற்புதங்கள் திரைகொள் நீர்க்குமிழி ஐந்தாம்' (சூடாமணி நிகண்டு 5, பெயர்ப்பிரிவு 2.5). மவ்வம் – மேகம். அழகு (தோய்பொழில்) எனல் பொருந்தாது. (தமிழ் லெக்ஸிகன், பக் 3112). கவ்வை – தோத்திர முழக்கம். தீயிற்பட்ட மரத்தூள் போல வினை அழியும்.

Raavanan was the king of Sri Lanka, bordered by the oceans on all four sides. Our Lord Civa got him crushed under mount Kailash and destroyed his mightiness. He graced the devas and removed their difficulties. This Lord evidently is manifest in the temple in Thiru-ambar-maakaalam. The devotees praise the city and the Lord with pomposity. Those devotees' past karma and bad deeds, if any, will get destroyed like the dust falling into fire flame and be burnt.

2591. உய்யுங்காரணமுண்டென்றுகருதுமினொளிகிளர்மலரோனும்
பைகொள்பாம்பணைப்பள்ளிகொளண்ணலும்பரவநின்றவர்மேய
மையுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
கையினாற்றெழுதவலமும்பிணியுந்தங்கவலையுங்களைவாரே. 9

உய்யுங் காரணம் உண்டு என்று கருதும் ஒளிகிளர் மலரோனும்
பைகொள் பாம்பணைப் பள்ளிகொள் அண்ணலும் பரவ நின்றவர்மேய
மையுலாம் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கையினால் எழுதவலமும் பிணி உந்தம் கவலையும் களைவாரே.

uyyum kAraNam uNTu en2Ru karutumin2! oLi kiLar malarOn2um,
pai koL pAmpu aNaippaLLi koL aNNalum, parava nin2Ravar mEya--
mai ulAm pozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam
kaiyin2Al-tozutu, avalamum piNiyum tam kavalaiyum kaLaivArE.

பொருள்: ஒளியுடைய தாமரை மலர்மேல் இருக்கும் பிரமனும் நச்சுப்பையுடைய பாம்பாகிய அணையில் பள்ளி கொள்ளும் திருமாலும் வழிபட நின்றவர் எழுந்தருளிய தலம் யாதெனில், மேகம் உலவுகின்ற பொழில் உள்ளதும் புதுவெள்ளம் வரும் அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதுமான மாகாளம். இதனைக் கையினால் தொழுவாரின் அவலமும் பிணியும் ஆக்கும் பிறவியைக் களைவார்; உய்யும் காரணம் அவ்வடியவர்களுக்கே உண்டு என்று நீவிர் கருதுமின்.

குறிப்புரை: அவலமும் பிணியும், கவலையும் (ஆக்கும் பிறவியைக்) களைவார் மாகாளத்தைத் தொழுவாரே. அடியார்க்கே அவற்றைக் களையும் நிலைமை உண்டு. உய்யும் காரணம் அவர்க்கு உண்டு என்று நீவிர் கருதுமின்.

Oh! Ye good people! If you want to be saved and to pull through your difficulties and to be rescued there is a way out. You remember that there is a doctrine. The tutelary deity Brahma and Thirumaal showed great enthusiasm and admiration for our Lord Civa. He likes to be manifested in the temple in Thiru-ambar-maakaalam city. The city is surrounded by thick forest area. The city lies on the banks of the river Arisilaru. There are sincere devotees who worship Him with both their hands. They will have no misery, ailment and anxiety in their life forever.

2592. பிண்டிபாலருமண்டைகொள்தேரரும்பீலிகொண்டுழல்வாரும்
கண்டநூலருங்கடுந்தொழிலாளருங்கழறநின்றவர்மேய
வண்டுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனல்மாகாளம்
பண்டுநாஞ்செய்தபாவங்கள்பற்றறப்பரவுதல்செய்வோமே. 10

பிண்டி பாலரு மண்டை கொள்தேரரும் பீலிகொண்டு உழல்வாரும்
கண்ட நூலரும் கடுந்தொழிலாளரும் கழற நின்றவர் மேய
வண்டுலாம் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பண்டு நாம்செய்த பாவங்கள் பற்றறப் பரவுதல் செய்வோமே.

piNTipAlarum, maNTai koL tErarum, plli koNTu uzalvArum,
kaNTa nUlarum, kaTun tozilALarum, kazaRa nin2Ravar mEya--
vaNTu ulAm pozil, aricilin2 vaTakarai, varupun2al--mAkALam,
paNTu nAm ceyta pAvagkaL paRRu aRap paravutal ceyvOmE.

பொருள்: பிண்டி பாலத்தை ஏந்திய தேரரும், மயிற்பீலியைக் கையில் கொண்டு அலைகின்ற சமணரும் கண்ட நூலரும் கடுந்தொழிலாளரும் வெறுத்து மொழிய நின்றவர் எழுந்தருளிய தலம் யாதெனில், வண்டுகள் உலவுகின்ற பொழில்களும் புதுவெள்ளம் வருகின்ற அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதும் ஆகிய மாகாளம். இதனைப் பண்டு நாம் செய்த பாவங்கள் முற்றும் பற்றற வழிபடுவோம்.

குறிப்புரை: பிண்டி பாலர் – தலையிலே பீலி கட்டப்பட்டு. எறிகின்ற படையான பிண்டிபாலத்தை ஏந்திய ஒருவகைச் சமணர், 'பெருவலியதனை நோனான் பிண்டி பாலத்தை யேந்தி' சிந்தா. 2269 என்பதன் உரையில் நச்சினார்க்கினியர் எழுதியதைக் காண்க.

The Jains in the city are those who eat flour gruel to appease their hunger. They carry the human skull to get alms and stand in front of each house. They carry the peacock's feather swinging here and there. They carry various unimportant books calling them Vedic books. They do hard physical work. Oh! Ye devotees, do not listen to those people's false propaganda. You may pray and worship our Lord Civa, manifest in the temple in Thiru-ambar-maakaalam city. By following this if you pay respect to our Lord, you will get rid of all your past bad karma deeds that chase you birth after birth.

2593. மாறுதன்னொடுமண்மிசையில்லதுவருபுனல்மாகாளத்
தீறுமாதியுமாகியசோதியையேறமர்பெருமானை
நாறுபூம்பொழிற்காழியுள்ஞானசம்பந்தனதமிழ்மாலை
கூறுவாரையுங்கேட்கவல்லாரையுங்குற்றங்கள்குறுகாவே. 11

மாறு தன்னொடு மண்மிசை இல்லது வருபுனல் மாகாளத்
தீறும் ஆதியுமாகிய சோதியை ஏறமர் பெருமானை
நாறு பூம்பொழில் காழியுள் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
கூறுவாரையும் கேட்க வல்லாரையும் குற்றங்கள் குறுகாவே.

mARu tan2n2oTu maNmicai illatu varupun2al mAkALattu,
IRum Atiyum Akiya cOtiyai, ERu amar perumAn2ai,
nARu pUm pozil kAziyuL njAn2acampantan2a tamiz mAlai
kURuvAraiyum kETka vallAraiyum kuRRagkaL kuRukAvE.

பொருள்: இப்பூமியில் தனக்கு நிகராக ஒப்புக் கூறத்தக்கது வேறு ஏதும் இல்லாததும், புதுவெள்ளம் வரும் அரிசிலாற்றின் வடகரையில் உள்ளதும் ஆகிய மாகாளத்தில், ஆதியும் அந்தமுமாகிய சோதியை, விடையேறும் பெருமானை மணம் வீசும் பூம்பொழில்களை உடைய காழியுள் இருக்கும் ஞானசம்பந்தன் பாடிய தமிழ்மாலையாகிய இத்திருப்பதிகத்தைக் கூறுவாரையும் கேட்க வல்லாரையும் பிறவிக்குக் காரணமாகிய குற்றங்கள் அடையா.

குறிப்புரை: மண்மிசை தன்னோடு மாறு இல்லது – இப்பூமியில் தன்னுடன் ஒப்புக்கூறத் தக்கது. வேறு யாதும் இல்லாதது. ஈறும் ஆதியும் – அநாதி நித்தமுத்த சுத்த சித்துருவாகிய பரசிவம் உயிர்கட்கு அருளற்பொருட்டு ஆதியும் அந்தமும் ஆகி உபகரித்தல் குறித்தது. 'ஆதியும் அந்தமும் ஆயினார்' (திருவாசகம் 214). இறைவன் ஏறுவதால் ஏறு எனப் பெயர் பெற்றது எனல் இதுபோலும் இடங்களில் பொருந்துவதே.

Our Lord Civa is manifest in the temple in Thiru-ambar-maakaalam city - with no other parallel city in the world. He stays there. He has no beginning and no end, the Supreme Being and the supernal flame. He loves to ride on His bull to go round the universe. On this Lord our saint Thiru-gnana-Sambandar sang Tamil poems. Those who memorise and chant and those who hear these poems will not find blameful deeds nearing them.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

103ஆம் பதிகம் முற்றிற்று
End of 103rd Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 240

பதிக எண்: 104

104. திருக்கடிகுளம்

104. THIRU-K-KADIK-KULAM

பண் : நட்டராகம்

Pann: Nattaraagam

திருத்தல வரலாறு

திருக்கடிக்குளம் என்னும் இத்திருத்தலமானது கற்பகநாதர்குளம் எனவும் வழங்கப்பெறும். கற்பகவிநாயகர் சிவபெருமானைப் பூசித்து மாம்பழம் பெற்ற வரலாறு பற்றி இப்பெயர் எய்திற்று என்பர். திருத்துறைப்பூண்டி தொடர்வண்டி நிலையத்திற்குத் தென்மேற்கே 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து தொண்டியக்காடு செல்லும் பேருந்தில் கடிக்குளம் செல்லலாம். இறைவரது திருப்பெயர் கற்பகநாதர். இறைவியாரது திருப்பெயர் சௌந்தரநாயகி. தீர்த்தம் விநாயகதீர்த்தம்.

ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பதிகம் ஒன்று இருக்கின்றது. தற்போது இக்கோயில் திருப்பணி செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. கரையங்காடு என்பது இவ்வூரைச் சார்ந்ததாகும். இங்கு இரண்டாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இங்கிருந்து மேற்கே ஒருகல்லில் இடும்பாவனம் என்ற கோயில் இருக்கிறது. இக்கோயிலின் பரப்பு 11–52 ஏக்கராகும். இதில் சிவாலயம், மற்றைய மூர்த்திகள், கற்பக விநாயகர் திருக்கோயில், திருக்குளம் முதலியன அமைந்துள்ளன.

ஐதீகப்படி கார்த்திகார்ச்சுனன் என்ற அசுரன் கற்பக லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தானாம். சுவாமிக்கும் விநாயகருக்கும் இடையில் கோதண்டராமன் சந்நிதி கட்டப் பட்டுள்ளது. தீர்த்தத்தின் பெயரே கடிக்குளம் என்பது ஆகும். இக்கோயிலின் தலமரம் பலா. இக்கோயிலுக்குக் கரையங்காடு என்ற ஊர் தஞ்சை மன்னரால் தரப்பட்டது. இதற்கு இன்னும் பல கிராமங்களில் நிலங்கள் உண்டு.

பதிக வரலாறு

தோணிபுரத்தோன்றலார் அருந்தமிழ் மாமறைபாடிக் கோடிக்குழகரைக் கும்பிட்டுத் தொண்டர்களோடு திருக்கடிக்குளம் புகுந்து பரவியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2594. பொடிகொள்மேனிவெண்ணூலினர்தோலினர்புலியுரியதளாடை
கொடிகொளேற்றினர்மணிகிணினெனவருகுரைகழல்சிலம்பார்க்கக்
கடிகொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தைத்தம்
முடிகள்சாய்த்தடிவீழ்தருமடியரைமுன்வினைமூடாவே. 1

பொடி கொள் மேனி வெண்ணூலினர் தோலினர் புலி உரிய தளாடை
கொடி கொளேற்றினர் மணி கிணி எனவருகு உரைகழல் சிலம்பு ஆர்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்து உறையும் கற்பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரும் அடியரைமுன் வினைமூடாவே.

poTi koL mEn2i veN nUlin2ar, tOlin2ar, puli uri-ataL ATai,
koTi koL ERRin2ar, maNi, kiNin2 en2a varu kurai kazal cilampu Arkka,
kaTi koL pUmpozil cUztaru kaTikkuLattu uRaiyum kaRpakattai, tam
muTikaL cAyttu aTi vIztarum aTiyarai mun2vin2ai mUTAvE.

பொருள்: திருநீறு பூசிய திருமேனியர்; வெண்மையான பூணூலினர்; புலிதோலாடையர்; விடைக் கொடியினர்; மணிகள் கிணின் என ஒலிக்க, கழல்களும் சிலம்பும் ஆர்க்க, மணமுள்ள பூம்பொழில்கள் சூழ்தரும் திருக்கடிக் குளத்தில் உறையும் கற்பகத்தைத் தம்முடைய முடிகளைச் சாய்த்துத் திருவடிகளில் வீழ்தரும் அடியாரைப் பண்டு செய்த வினைகள் வந்து சூழமாட்டா.

குறிப்புரை: கடிக்குளத்தில் எழுந்தருளிய கற்பகத்தைத் தலைசாய்த்துத் திருவடியை வணங்கும் அடியார்களை வினைகள் சூழமாட்டா. கற்பகம் – இத்தலத்தில் இறைவன் திருநாமம்.

Our Lord Civa is manifest in the temple in Thiru-k-kadik-kulam city. He spreads on His forehead and all over His body the sacred ashes. He puts on the white supernal thread on His chest. He puts on His waist the tiger's hide as His dress. He covers His body with the hide of an elephant. He carries the flag of His bull as the insignia. On His ankle He puts on a round tinklet, and the tinkling anklets round His ankle make noise when He walks. The city is surrounded by very thick and attractive forest areas with plants and trees full of sweet smelling flowers. In the temple of the city our Lord Civa is manifest. Those devotees who prostrate before His Lord's holy feet and worship Him find their past bad karma deeds never affecting them.

2595. விண்களார்தொழும்விளக்கினைத்துளக்கிலாவிகிர்தனைவிழவாரும்
மண்களார்துதித்தன்பராயின்புறும்வள்ளலைமருவித்தம்
கண்களார்தரக்கண்டுநங்கடிக்குளத்துறைதருகற்பகத்தைப்
பண்களார்தரப்பாடுவார்கேடிலர்பழியிலர்புகழாமே. 2

விண்களார் தொழும் விளக்கினைத் துளக்கிலா விகிர்தனை விழவாரும்
மண்களார் துதித்து அன்பராயின் புறும்வள்ளலை அருவித்தம்
கண்களார் தரக்கண்டு நங்கடிக் குளத்துறை தருகற்பகத்தைப்
பண்களார் தரப்பாடுவார் கேடிலர் பழியிலர் புகழாமே.

viNkaLAr tozum viLakkin2ai, tuLakku ilA vikirtan2ai, vizavu Arum
maNkaLAr tutittu an2parAy in2pu uRum vaLLalai, maruvi, tam
kaNkaL Artarak kaNTu, nam kaTikkuLattu uRaitaru kaRpakattaip
paNkaL Artarap pATuvAr kETu ilar; pazi ilar; pukaz AmE.

பொருள்: விண்ணுளார் தொழும் விளக்கு; தளர்ச்சியிலாரின் விகிர்தன்; திருவிழாக்கள் நிறைந்த மண்ணுலகில் வாழ்வார் துதித்து அன்பராகிப் பேரின்பம் ஈந்தருளும் வள்ளல்; கடிக்குளத்தில் உறைதரும் அக்கற்பகத்தை மருவித் தம்முடைய கண்கள் ஆரக்கண்டு பண்களோடு பாடுவார் கேடும் பழியும் இலராவர்; புகழ் உளராவர்.

குறிப்புரை: விண்ணோர் தொழும் விளக்கு. துளக்கு – தளர்ச்சி. விகிர்தன் – முரனுறுசெயலினன். திருவிழாக்கள் நிறைந்த மண்ணுலகில் வாழ்வோர் அன்பராகிப் பேரின்பம் பெற ஈந்தருளும் வள்ளல். அவ்வள்ளலைச் சேர்ந்து கண்ணாரக் கண்டு பண்ணாரப் பாடிப் பணிவார் கேடும் பழியும் இலராவர். புகழ் உளராவர். தரிசனமும் கீதமும் திருந்தவும் முற்றவும் செய்தால் எய்தும் பயன்கள் உணர்த்தப்பட்டன.

The devas worship our Lord Civa as supernal flame. He has no slackness, no languishing. He is the pre-eminent, Supreme Lord. People on this earth celebrate many temple festivals. They worship and have happy attachment to Him. They who sing divine songs in musical tone and praise Him will have no annihilation in their life. Their life will be free of sins and harm. They will be praised by one and all.

2596. பொங்குநற்சரியுரியதுபோர்ப்பதுபுலியதளழல்நாகம்
தங்கமங்கையைப்பாகமதுடையவர்தழல்புரைதிருமேனிக்
கங்கைசேர்தருசடையினர்கடிக்குளத்துறைதருகற்பகத்தை
எங்குமேத்திநின்றின்புறுமடியரையிடும்பைவந்தடையாவே. 3

பொங்கு நற்சரி உரியது போர்ப்பது புலி அதளழல் நாகம்
தங்க மங்கையைப் பாகம் அதுடையவர் தழல்புரை திருமேனிக்
கங்கை சேர்தரு சடையினர் கடிக்குளத்து உறைதரு கற்பகத்தை
எங்கும் ஏத்தி நின்று இன்பு உறும் அடியரை இடும்பை வந்து அடையாவே.

pogku nan2 cari uri atu pOrppatu, puli ataL uTai, nAkam
tagka magkaiyaip pAkam atu uTaiyavar, tazal purai tirumEn2ik
kagkai cErtaru caTaiyin2ar, kaTikkuLattu uRaitaru kaRpakattai,
egkum Etti nin2Ru in2pu uRum aTiyarai iTumpai vantu aTaiyAvE.

பொருள்: போர்ப்பது, சினம் பொங்கும் நல்ல யானையின் உரியும் புலியின் அதளுமாம். பூண்பது நெருப்புப் போல் சினக்கும் நாகம்; பொன் போலொளிரும் மங்கையைத் தனது ஒருபாகத்தில் உடையவர்; செந்தழல் போன்ற திருமேனியர்; கங்கை தங்கிய சடையினர்; அவர், கடிக்குளத்துறை கற்பகம்; அவரை எவ்விடத்திலும் ஏத்தி வழிபட்டு இன்புறும் அடியவரை இடும்பைகள் வந்து அடையா.

குறிப்புரை: கடிக்குளத்து எழுந்தருளும் கற்பகத்தை எவ்விடத்தும் வழிபட்டு இன்பத்தை அடையும் அடியார்களை இடும்பைகள் வந்து அடையமாட்டா.

Our Lord Civa covered His body with the hide of the elephant which came to Him with anger. He wears on His waist the hide of the tiger. He plays with the ferocious snake which comes round and round His body. He has embedded His consort on the left side of His body. His frame is red, similar to supernal fire. He retains the river Ganges on His entangled hair locks. With these our Lord Civa is manifest in the temple in Thiru-k-kadik-kulam city. The servitors, who praise our Lord in all places they visit, and happily speak about Him, will have no misery in their life.

2597. நீர்கொள்நீள்சடைமுடியனைநித்திலத்தொத்தினைநிகரில்லாப்
பார்கொள்பாரிடத்தவர்தொழும்பவளத்தைப்பசும்பொனைவிசும்பாரும்
கார்கொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகந்தன்னைச்
சீர்கொள்செல்வங்களேத்தவல்லார்வினைதேய்வதுதிண்ணமே. 4

நீர்கொள் நீள்சடை முடியனை நித்திலத் தொத்தினை நிகர் இல்லாப்
பார்கொள் பாரிடத்தவர் தொழும் பவளத்தைப் பசும்பொனை விசும்பாரும்
கார்கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்துறையுங் கற்பகம் தன்னைச்
சீர்கொள் செல்வங்கள் ஏத்தவல்லார் வினைதேய்வது திண்ணமே.

nIr koL nIL caTai muTiyan2ai, nittilat tottin2ai, nikar illAp
pAr koL pAr iTattavar tozum pavaLattai, pacumpon2n2ai, vicumpu Arum
kAr koL pUmpozil cUztaru kaTikkuLattu uRaiyum kaRpakam tan2n2ai,
cIr koL celvagkaL Etta vallAr vin2ai tEyvatu tiNam AmE.

பொருள்: கங்கையாற்றினைக் கொண்ட நீண்ட சடைமுடியனை; முத்துக்களின் கொத்தினை; பாரிடத்தில் உள்ளவர்கள் தொழும் ஒப்பில்லாப் பவளத்தை; பசும்பொன்னை, விண்ணளாவிய கார்முகில்களைக் கொள்ளும் பூம்பொழில்கள் சூழ்ந்த கடிக்குளத்தில் உறையும் கற்பகத்தின் பெருமையுடைய செல்வங்களைப் புகழ வல்லவர்களின் வினைகள் தேய்ந்தொழிவது திண்ணமே.

குறிப்புரை: திருக்கடிக்குளத்தில் எழுந்தருளும் கற்பகத்தின் செல்வங்களைப் புகழ வல்லவருடைய வினைகள் தேய்ந்தொழிவது உறுதி. செல்வங்கள் – அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம் (சித்தியார் 89).

Our Lord Civa's entangled locks of hair are very long and hang down. He supports the river Ganges in the locks of hair, He is a string of pearls. People from all parts of the earth come to Thiru-k-kadik-kulam and worship our Lord. He looks like real gold. The city is surrounded by very thick delightful forest area where the clouds in the sky pass through the forest. They seem to stay there over the trees. In such glorious city Thiru-k-kadik-kulam, our Lord is manifest. His divine grace of ever lasting wealth is praised by devotees. They come and worship Him in this city. It is certain their bad karma will definitely disappear.

2598. சுரும்புசேர்சடைமுடியினன்மதியொடுதுன்னியதழல்நாகம்
அரும்புதாதவிழ்ந்தலர்ந்தனமலர்பலகொண்டாடியவர்போற்றக்
கரும்புகார்மலிகொடிமிடைகடிக்குளத்துறைதருகற்பகத்தை
விரும்புவேட்கையோடுளமகிழ்ந்துரைப்பவர்விதியுடையவர்தாமே. 5

சுரும்புசேர் சடைமுடியினன் மதியொடு துன்னிய தழல் நாகம்
அரும்பு தாதவிழ்ந்து அலர்ந்தன மலர்பல கொண்டாடியவர் போற்றக்
கரும்பு கார்மலி கொடிமிடை கடிக்குளத்துறை தருகற்பகத்தை
விரும்பு வேட்கையோடு உளமகிழ்ந்து உரைப்பவர் விதியுடையவர் தாமே.

curumpu cEr caTaimuTiyin2an2, matiyoTu tun2n2iya tazal nAkam,
arumpu tAtu avizntu alarntan2a malarpala koNTu aTiyavar pORRak
karumpu kAr mali koTi miTai kaTikkuLattu uRaitaru kaRpakattai,
virumpu vETkaiyOTu uL makizntu uraippavar viti uTaiyavar tAmE.

பொருள்: சந்திரன், தீப்போல் சினக்கும் நாகம், நெருங்கிய வண்டுகள் தங்கும் சடைமுடியினன்; அரும்புகள் தாதவிழ்ந்து அலர்ந்த பலவகை மலர்கள் கொண்டு அடியவர்கள் தன்னைப் போற்றி வழிபட, கரும்பு வளரும் வயல்களும் மேக மண்டலத்தை அளாவிய கொடிகளும் பின்னிய கடிக்குளத்தில் எழுந்தருளும் கற்பகத்தை மனமகிழ்ந்து வழிபட்டுப் புகழ்ந்துரைப்பவர்கள் விதிக்குத் தாம் ஆளாகாமல் விதிக்குத் தாம் விதியாவர்.

குறிப்புரை: அரும்புகள் தாது அவிழ்ந்து விரிந்த பல மலர்களைக் கொண்டு அடியவர்கள் வழிபடக் கடிக்குளத்து எழுந்தருளும் கற்பகம். கரும்புகளும் மேக மண்டலத்தை அளாவிய கொடிகளும் பின்னிய கடிக்குளம். மனமகிழ்ந்து தோத்திரம் சொல்லும் அடியவர்கள் செல்வமுடையவராவார்கள். விதி – செல்வம்.

In the entangled locks of hair, our Lord has a garland of flowers where bees swarm in large numbers. He lets the ferocious, poisonous snake to live along with its enemy, the moon, by removing its enmity. His devotees bring the buds and blossomed flowers full of pollen inside the flowers. They spread the flowers at His feet and praise Him. In the garden area, sugarcane plants are very tall and vines get entwined with the sugarcane plants. Thiru-k-kadik-kulam is such a glorious city, where our Lord is manifest. Here the devotees with sincere devotion praise our Lord who is eternal bliss, eternal wealth. They will enjoy all the good karma and good wealth in their life by praising our Lord here wholeheartedly, with deep love.

2599. மாதிலங்கியபாகத்தன்மதியமொடலைபுனலழல்நாகம்
போதிலங்கியகொன்றையுமத்தமும்புரிசடைக்கழகாகக்
காதிலங்கியகுழையினன்கடிக்குளத்துறைதருகற்பகத்தின்
பாதங்கைதொழுதேத்தவல்லார்வினைபற்றறக்கெடுமன்றே. 6

மாதிலங்கிய பாகத்தன் மதியமொடு அலைபுனடல அழல் நாகம்
போதிலங்கிய கொன்றையும் மத்தமும் புரிசடைக்கு அழகாகக்
காதிலங்கிய குழையினன் கடிக்குளத்துறை தருகற்பகத்தின்
பாதம் கைதொழுது ஏத்தவல்லார் வினை பற்றறக் கெடுமன்றே.

mAtu ilagkiya pAkattan2; matiyamoTu, alaipun2al, azal, nAkam,
pOtu ilagkiya kon2Raiyum, mattamum, puricaTaikku azaku Aka,
kAtu ilagkiya kuzaiyin2an2; kaTikkuLattu uRaitaru kaRpakattin2
pAtam kaitozutu Etta vallAr vin2ai paRRu aRak keTum an2RE.

பொருள்: உமை ஒரு பாகன்; சந்திரனுடன் கங்கையும் தீயுமிழ் நாகமும் கொன்றை மலரும் ஊமத்தம்பூவும் பின்னிய சடைக்கு அழகாக அணிந்தவன்; காதில் விளங்கும் குழையை உடையவன்; அவன், கடிக்குளத்தில் எழுந்தருளியுள்ள கற்பகம். அவனுடைய திருவடிகளைக் கைதொழுது ஏத்த வல்லவர்களின் வினைகள் உறுதியாகப் பற்றறக் கெடும்.

குறிப்புரை: கற்பகத்தின் திருவடியைக் கைகூப்பித் தொழவல்லவர் வினைகள் முழுதும் கெட்டொழியும்.

Our Lord Civa has embedded His consort Uma on the left side of His body. He retains very beautifully in His entangled locks of curved hair the moon, the river Ganges, the furious snake, Indian laburnum flowers, datura flowers and others. He puts on the earlobe in His ears. He is manifest in the temple in Thiru-k-kadik-kulam city. Those devotees who can touch His holy feet with their hands, pray and worship, will find their past bad karma entirely eliminated.

2600. குலவுகோலத்தகொடிநெடுமாடங்கள்குழாம்பலகுளிர்பொய்கை
உலவுபள்ளினமன்னங்களாலிடும்பூவைசேருங்கூர்தல்
கலவைசேர்தருகண்ணியன்கடிக்குளத்துறையுங்கற்பகத்தைச்சீர்
நிலவிநின்றுநின்றேத்துவார்மேல்வினைநிற்ககில்லாதானே. 7

குலவு கோலத்த கொடி நெடுமாடங்கள் குழாம் பலகுளிர் பொய்கை
உலவு பள்ளின மன்னங்களால் இடும்பூவை சேரும் கூர்தல்
கலவை சேர்தரு கண்ணியன் கடிக்குளத்து உறையும் கற்பகத்தைச்சீர்
நிலவி நின்று நின்று ஏத்துவார் மேல்வினை நிற்ககில்லாதானே.

kulavu kOlatta koTi neTumATagkaL kuzAm, pala kuLir poykai,
ulavu puL in2am, an2n2agkaL iTum pUvai cErum--kUntal
kalavai cErtaru kaNNiyan2--kaTikkuLattu uRaiyum kaRpakattaic clr
nilavi nin2Ru nin2Ru EttuvAr mEl vin2ai niRkakillA tAn2E.

பொருள்: பலவகைக் கோலத்தனவாகிய கொடிகள் நிறைந்து உயர்ந்த மாடங்களின் குழாமும், புலவு நாறிடும் நீர்ப்பறவைகள், அன்னங்கள், ஒலியிடும் பூவை சேரும் குளிர்ந்த பொய்கைகள் பலவும் உடையதும், கூந்தலுடன் கலந்த கண்ணியன் எழுந்தருளி உள்ளதுமாகிய கடிக்குளத்துள் உறையும் கற்பகத்தின் புகழினைப் பலபடியாக ஏத்துவார்மேல் உள்ள வினைகள் நிற்கமாட்டா. விலகி நீங்கும்.

குறிப்புரை: பூவைசேரும் கூந்தற்கலவையென்பது வாமபாகத்தைக் குறித்தது. கற்பகத்தை ஏத்துவார்பால் வினைகள் நிற்கமாட்டா.

In the city of Thiru-k-kadik-kulam, many palatial dwellings are seen in large numbers. In the top terrace portion very attractive flags are fixed and they swing in the air. There are many ponds in the city with cool water for damsels to take bath. The cranes and other meat eating birds and swans play, flying and swinging here and there, and enjoying their life. In this glorious city, our goddess Uma Devi with bunches of sweet smelling flowers (chaplet) on her hair appears very attractive. Those devotees who can visit the Thiru-k-kadik-kulam city, come to the temple, praise our Lord Civa will never get bad karma deeds. They will fade away from their life.

2601. மடுத்தவாளரக்கன்னவன்மலைதன்மேல்மதியிலாமையிலோடி
எடுத்தலும்முடிதோள்கரநெரிந்திறஇறையவன்விரலூன்றக்
கடுத்துவாயொடுகையெடுத்தலறிடக்கடிக்குளந்தனில்மேவிக்
கொடுத்தபேருட்கூத்தனையேத்துவார்குணமுடையவர்தாமே. 8

மடுத்த வாளரக்கன் அவன்மலை தன்மேல் மதி இலாமையில் ஓடி
எடுத்தலும் முடிதோள் கரநெரிந்திற இறையவன் விரல் ஊன்றக்
கடுத்து வாயொடு கையெடுத்து அலறிடக் கடிக்குளம் தனில்மேவிக்
கொடுத்த பேருட் கூத்தனை ஏத்துவார் குணம் உடையவர்தாமே.

maTutta vAL arakkan2(n2) avan2 malaitan2 mEl mati ilAmaiyil OTi
eTuttalum, muTitOL karam nerintu iRa iRaiyavan2 viral Un2Ra,
kaTuttu vAyoTu kai eTuttu alaRiTa, kaTikkuLam tan2il mEvik
koTutta pEr aruL kUttan2ai EttuvAr kuNam uTaiyavar tAmE.

பொருள்: வாளரக்கன் இராவணன்; தன்னுடைய திக்கு விசயத்திற்கு இடையூறு மடுத்த கயிலை மலையை, அறிவில்லாமல் ஓடிப் பெயர்த்தெடுக்க முயலவும், அவனுடைய முடிகளும் தோள்களும் கரங்களும் நெரித்து இற்றுப் போகும்படி கால்திருவிரல் ஊன்றி, நடுநடுங்கி, அவன் கையொடு வாயெடுத்து அலறிடச் செய்தவன்; கடிக்குளத்தில் எழுந்தருளி அருள் கொடுத்த பேரருட்கூத்தனை ஏத்தி வழிபடுவார்; இறைவனின் எண்குணம் உடையவர் தாமே.

குறிப்புரை: மடுத்த – (பகைவர் உடம்பின்) உட்புகுத்திய. இரு – முரிய. அருட்கூத்தன் – ஞானநாடகமாடும்பிரான். குணம் – எண்குணம்.

Raavanan, the king of Sri Lanka had a divine sword which could kill all his enemies and their army and forces. Without virtuous knowledge and prompted by egoism, he disturbed mount Kailash, to lift and keep it aside. At that moment, our Lord Civa pressed the top of His mount with His toe. Raavanan's ten heads and all shoulders were crushed and were about to be destroyed. At that time, Raavanan realised his mistakes and begged for pardon and worshipped our Lord with both his hands and cried. Our Lord Civa pardoned him and graced him with many boons. This Lord of Supreme Character is manifested in the temple in Thiru-k-kadik-kulam city. Those devotees who reach the city Thiru-k-kadik-kulam, go to the temple, praise our Lord and sing His fame will all be very virtuous people.

2602. நீரினார்கடற்றுயின்றவனயனொடுநிகழடிமுடிகாணார்
பாரினார்விசும்புறப்பரந்தெழுந்ததோர்பவளத்தின்படியாகிக்
காரினார்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தின்றன்
சீரினார்கழலேத்தவல்லார்களைத்தீவினையடையாவே. 9

நீரினார் கடல் துயின்றவன் அயனொடு நிகழ் அடிமுடி காணார்
பாரினார் விசும்புறப் பரந்து எழுந்ததோர் பவளத்தின் படியாகிக்
காரினார் பொழில் சூழ்தரு கடிக்குளத்து உறையும் கற்பகத்தின்றன்
சீரினார் கழல் ஏத்த வல்லார்களைத் தீவினை அடையாவே.

nIrin2 Ar kaTal-tuyin2Ravan2, ayan2oTu, nikaz aTi muTi kANAr;
pArin2 Ar vicumpu uRa, parantu ezuntatu Or pavaLattin2 paTi Aki,
kArin2 Ar pozil cUz taru kaTikkuLattu uRaiyum kaRpakattin2 tan2
cIrin2 Ar kazal Etta vallArkaLait tIvin2ai aTaiyAvE.

பொருள்: நீர் நிறைந்த கடலிடைத் துயின்றவனான திருமால் பிரமனோடு அடியும் முடியும் காண இயலாதவாறு நிலம் முதல் விசும்புறப் பரந்து எழுந்த ஒப்பற்ற பவள வடிவமதாகி, இருள் நிறங் கொண்ட பொழில்கள் சூழும் கடிக்குளத்தில் எழுந்தருளியிருக்கும் கற்பகத்தினுடைய பெருமையுடைய கழல்களை ஏத்த வல்லார்களைத் தீவினை அடையா.

குறிப்புரை: கடல் துயின்றவன் – பாற்கடலில் யோக நித்திரை செய்யும் திருமால். விசும்பு – ஆகாயம். படி – உருவம். கற்பகத்தின் கழல் ஏத்தவல்லவர்களுக்கு வினை இல்லை.

The tutelary deity Thirumaal who takes rest over the snake in the ocean, as well as Brahma tried their best to see our Lord's head and feet. They failed in their attempt and were unable to apprehend our Lord. At that moment, our Lord appeared before them as dazzling infinite supernal tall flame between the top most sky and the bottom of the earth. They both realised and became wearied. He is manifest in the temple in Thiru-k-kadik-kulam city. His very famous holy feet are worshipped by sincere devotees who praise Him. They will never get their bad karma deeds, which only will leave them.

2603. குண்டர்தம்மொடுசாக்கியர்சமணருங்குறியினில்நெறிநில்லா
மிண்டர்மிண்டுரைகேட்டவைமெய்யெனக்கொள்ளன்மிவ்விடமுண்ட
கண்டர்முண்டநன்மேனியர்கடிக்குளத்துறைதருமெம்மீசர்
தொண்டர்தொண்டரைத்தொழுதடிபணிமின்கள்தூநெறியெளிதாமே. 10

குண்டர் தம்மொடு சாக்கியர் சமணரும் குறியினில் நெறிநில்லா
மிண்டர் மிண்டுரை கேட்டவை மெய் எனக் கொள்ளன் இவ்விடம் உண்ட
கண்டர் முண்ட நன்மேனியர் கடிக்குளத்துறை தரும் எம் ஈசர்
தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள் தூநெறி எளிதாமே.

kuNTar tammoTu cAkkiyar camaNarum, kuRiyin2il neRi nillA
miNTar miNTu urai kETTu, avai mey en2ak koLLan2 min2! viTam uNTa
kaNTar, muNTam nal mEn2iyar, kaTikkuLattu uRaitarum em Icar,
toNTar toNTarait tozutu aTi paNimin2kaL! tU neRi eLitu AmE.

பொருள்: குண்டர்களோடு சாக்கியரும் சமணரும் குறிக்கோளுடைய நெறியில் நில்லா மிண்டர்கள். அவர்களுடைய மிண்டுரை கேட்டு அவை மெய்யெனக் கொள்ளாதீர்; விடமுண்ட கண்டர்; திரிபுண்டரமாக நீறணிந்த அழகிய மேனியர்; கடிக்குளத்தில் உறைகின்ற

எம்முடைய இறைவர்; அவருடைய தொண்டருக்குத் தொண்டரைத் தொழுது அடிபணிமின்கள். உங்களுக்குத் தூய நெறியாகிய சிவநெறி எளிதாகும்.

குறிப்புரை: குறி – குறிக்கோள். தொண்டர் தொண்டர் – தொண்டர்க்குத் தொண்டர். தூநெறி – திருநெறி, சிவநெறி.

The Jains and Buddhists are all goondas. They all carry wilful fault in the words. Do not consider their preaching as divine words. Our Lord resting in the temple in Thiru-k-kadik-kulam city, imbibed the poison that came out of the ocean. He has applied the holy ashes over His body. Oh! Ye good people! go and worship in the city, the devotees of His devotees and prostrate over their feet. The pure divine grace of our Lord Civa will easily be with such devotees of devotees.

2604. தனமலிபுகழ்தயங்குபூந்தராயவர்மன்னன்நற்சம்பந்தன்
மனமலிபுழ்வண்டமிழ்மாலைகள்மாலதாய்மகிழ்வோடும்
கனமலிகடலோதம்வந்துலவியகடிக்குளத்தமர்வானை
இனமலிந்திசைபாடவல்லார்கள்போயிறைவனோடுறைவாரே. 11

தனமலி புகழ் தயங்கு பூந்தராயவர் மன்னன் நற்சம்பந்தன்
மனமலி புழ்வண் தமிழ்மாலைகள் மாலதாய் மகிழ்வோடும்
கனமலி கடலோதம் வந்துலவிய கடிக்குளத்து அமர்வானை
இனமலிந் திசை பாடவல்லார்கள் போய் இறைவனோடு உறைவாரே.

tan2am mali pukaz tayagku pUntarAyavar man2n2an2--nal campantan2--
man2am mali pukaz vaN tamiz mAlaikaL mAl atu Ay, makizvOTum,
kan2am mali kaTal Otam vantu ulaviya kaTikkuLattu amarvAn2ai,
in2am malintu icai pATa vallArkaL, pOy iRaivan2OTu uRaivArE.

பொருள்: செல்வமும் மிக்க புகழும் விளங்கும் பூந்தராய் மக்களின் தலைவன் சம்பந்தன் மனம் நிறைந்து புகழ்ந்த வளமான தமிழ் மாலைகளை அன்புடனும் மகிழ்ச்சியுடனும், மேகத்துடன் கடலோதம் வந்து உலவும் கடிக்குளத்து அமர்வானாகிய கற்பகத்தை அடியார் கூட்டத்தொடும் இசையுடன் பாட வல்லவர்கள் போய் இறைவனுடன் வாழ்வார்கள்.

குறிப்புரை: செல்வமும் மிக்க புகழும். மாலது – அன்பு. கனம் – மேகம். இனம் – அடியார் கூட்டம்.

Poontharai (one of the twelve names of Seerkaazhi) is a very rich town. The city is very famous around the earth. Those who live in this city, consider our saint Thiru-gnana-Sambandar as their chief king. He came to the temple in Thiru-k-kadik-kulam, worshipped our Lord there. With full divine knowledge and fully contented heart he chanted in pure chaste Tamil the garland of ten verses. Those devotees who get attached to these ten Tamil verses of Thiru-gnana-Sambandar may visit this city with dashing waves on the banks of the ocean. Along with other devotees they may prostrate before our Lord and jointly chant these ten verses in good musical tone. They will live in the world of Lord Civa.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

104ஆம் பதிகம் முற்றிற்று
End of 104th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 241 *பதிக எண்: 105*

105. திருக்கீழ்வேளூர் 105. THIRU-K-KEEZH-VELOOR

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

வேள் (முருகப்பெருமான்) வழிபட்ட காரணத்தால் இப்பெயர் பெற்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் எண்பத்து நான்காவது ஆகும். கீழ்வேளூர் தொடர்வண்டி நிலையத்திற்கு வடக்கே 1.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. திருவாரூரிலிருந்து நாகை செல்லும் பேருந்து வழியில் உள்ளது. நகரப் பேருந்துகளும் உள்ளன. இறைவரது திருப்பெயர் கேடிலியப்பர். இப்பெயர் இவ்வூர்த் திருத்தாண்டகத்துள் எடுத்தாளப் பட்டுள்ளது. இறைவியாரது திருப்பெயர் வனமுலை நாயகி.

இத்திருப்பெயரை ஞானசம்பந்தப் பெருந்தகையார் இவ்வூர்ப்பதிகம் இரண்டாம் திருப்பாட்டில் 'வாருலாவிய வனமுலையவளொடு' என்று எடுத்து ஏத்தியிருப்பது பெருமகிழ்ச்சிக்கு உரியதாகும். தீர்த்தம் சரவணப்பொய்கை. முருகவேள் பூசித்துப் பேறுபெற்ற பதி. அவருடைய பூசைக்கும் தவத்துக்கும் கெடுதியுண்டாகாதவாறு இறைவியார் துர்க்கையின் அம்சமாகக் காவல் பூண்டிருந்தார். அவர்க்கு அஞ்சு வட்டத்து அம்மை என்று பெயர். அவருடைய திருக்கோயில் முதல் பிரகாரத்தில் வடபக்கத்தில் இருக்கின்றது. இச்செய்தி,

'மண்டுபே ரொளியான கேடிலியை
யர்ச்சித்த வள்ளிநாயகன் வருகவே
மாகாளிகாத்த கீழ்வேளூரில் மாதவம்
வளர்த்த வேலவன் வருகவே'

என்னும் இத்தலத்தைப்பற்றிய க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழால் அறியலாம். அகத்தியர், கூத்தப்பெருமானது வலத்திருவடியைக் கண்டு தரிசித்த பதியும் இதுவேயாகும்.

குபேரனுக்குத் தனியாகக் கோயில் உள்ளமையால் அவனும் பூசித்துப் பேறுபெற்றிருக்க வேண்டும். இதற்கு சம்பந்தர் பதிகம் ஒன்று, அப்பர் பதிகம் ஒன்று ஆக இரண்டு திருப்பதிகங்கள் இருக்கின்றன. இத்திருக்கோயிலைப் பெருந்திருக்கோயில் என்று இவ்வூர்ப் பதிகத்தில் ஞானசம்பந்தப் பெருந்தகையார் கூறியுள்ளார். எனவே, கோயில் இறைவனார் இறைவியார் திருப்பெயர்கள் எல்லாம் தேவாரத்தில் போற்றப்பட்ட சிறப்புடையனவாகும்.

பதிக வரலாறு

நாகைக் காரோணத்தை வழிபட்டு வரும் காழிவேந்தர் கீழ்வேளூர் விமலரையும் தரிசித்துப் பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2605. மின்னுலாவியசடையினர்விடையினர்மிளிர்தருமரவோடும்
பன்னுலாவியமறையொலிநாவினர்கறையணிகண்டத்தர்
பொன்னுலாவியகொன்றையந்தாரினர்புகழ்மிகுகீழ்வேளூர்
உன்னுலாவியசிந்தையர்மேல்வினையோடிடவீடாமே. 1

மின்னுலாவிய சடையினர் விடையினர் மிளிர்தரு மரவோடும்
பன்னுலாவிய மறையொலி நாவினர் கறையணி கண்டத்தர்
பொன்னுலாவிய கொன்றையம் தாரினர்புகழ்மிகு கீழ்வேளூர்
உன்னுலாவிய சிந்தையர் மேல் வினை ஓடிட வீடாமே.

min2 ulAviya caTaiyin2ar, viTaiyin2ar, miLirtarum aravOTum
pan2 ulAviya maRaioli nAvin2ar, kaRai aNi kaNTattar,
pon2 ulAviya kon2Rai amtArin2ar, pukaz miku kIzvELUr
un2 ulAviya cintaiyar mEl vin2ai OTiTa, vITu AmE.

பொருள்: மின்னுதல் விளங்கிய சடையினர்; ஒளிரும் பாம்பணியுடன் எருது வாகனர்; வேதத்தைப் பலமுறை ஓதும் நாவினர்; நஞ்சின் கறையை உடைய கண்டர்; பொன்போன்ற மகரந்தத் தாதினை உடைய கொன்றைப் பூ மாலையர் ஆகிய புகழ்மிகும் கீழ்வேளூர்ச் சிவனை உன்னுதல் நிலாவிய உள்ளத்தினரின் வினைகள் நீங்கிப் போகவே வீடு ஆகும்.

குறிப்புரை: உன் – உன்னுதல். திருக்கீழ்வேளூரை நினைப்பவர்க்கு வினையில்லை. வீடுண்டு என்று அருளியது. இவ்வூர்ப்பெருமான் திருப்பெயர் கேடிலியப்பர் என்பதன் உண்மைப் பொருளை உலகோர்க்கு உணர்த்துவதாகும்.

Our Lord Civa's entangled hair is very bright like lightning. He loves to have a bull for His conveyance. He puts on His body snakes as jewellery. He chants the four Vedas in musical tone with His tongue. His throat is dark blue in colour. He puts on His body the garland made of gold-like Indian laburnum flowers. This city Thiru-k-keezh-veloor is very famous all over the earth. Our Lord Civa is manifest in the temple

in this city. Those devotees who think of Him always in their mind will get rid of their bad deeds of karma and will get salvation.

2606. நீருலாவியசடையிடையரவொடுமதிசிரநிரைமாலை
வாருலாவியவனமுலையவளொடுமணிசிலம்பவையார்க்க
ஏருலாவியஇறைவனதுறைவிடமெழில்திகழ்கீழ்வேளூர்
சீருலாவியசிந்தைசெய்தணைபவர்பிணியொடுவினைபோமே. 2

நீருலாவிய சடையிடை அரவொடு மதிசிர நிரைமாலை
வாருலாவிய வனமுலை அவளொடு மணிசிலம்பவை ஆர்க்க
ஏருலாவிய இறைவனது உறைவிடம் எழில் திகழ் கீழ்வேளூர்
சீருலாவிய சிந்தை செய்து அணைபவர் பிணியொடு வினைபோமே.

nIr ulAviya caTai iTai aravoTu, mati, ciram niraimAlai,
vAr ulAviya van2amulaiyavaLoTu maNi cilampu avai Arkka,
Er ulAviya iRaivan2atu uRaivu iTam ezil tikaz kIzvELUr
cIr ulAviya cintai ceytu aNaipavar piNiyoTu vin2ai pOmE.

பொருள்: உலவும் கங்கை நீர் தங்கிய சடை; அச்சடையின் இடையே பாம்பொடு சந்திரனும்; சிரங்கள் நிரலே அமைந்த மாலை ஆகியவற்றுடன், கச்சு நிலவும் முலையவளாகிய இறைவியுடன் மணிப்பரல்கள் உடைய சிலம்புகள் ஒலிக்க, அழகு நிறைந்த இறைவன் எழுந்தருளும் இடம் எழில்மிக்க கீழ்வேளூர். அதனைத் தியானித்து அடைபவரின் பிணிகளொடு வினைகளும் நீங்கிப் போகும்.

குறிப்புரை: திருக்கீழ்வேளூரைச் சிந்திப்பவர்கட்குப் பிணிகளும் வினைகளும் போம்.

Our Lord Civa supports the river Ganges in His entangled locks of hair. Along with that He puts on the snakes and the young moon. Also He puts on His head, the garland of skulls. He happily accommodates His consort Uma Devi, who wears a corset over her soft breasts, on the left side of His body. He wears very graceful anklets, which make noise while He used to walk. This Lord is manifest in the temple in Thiru-k-keezh-veloor city. Those servitors, who think about the city in their mind and pray the Lord, will get rid of their all ailments and past bad deeds.

2607. வெண்ணிலாமிகுவிரிசடையரவொடுவெள்ளெருக்கலர்மத்தம்
பண்ணிலாவியபாடலோடாடலர்பயில்புறுகீழ்வேளூர்ப்
பெண்ணிலாவியபாகனைப்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
உண்ணிலாவிநின்றுள்கியசிந்தையாருலகினிலுள்ளாரே. 3

வெண்ணிலா மிகுவிரி சடை அரவொடு வெள் எருக்கலர் மத்தம்
பண்ணிலாவிய பாடலோடு ஆடலர் பயில்புறு கீழ்வேளூர்ப்
பெண்ணிலாவிய பாகனைப் பெருந்திருக்கோயில் எம்பெருமானை
உண்ணிலாவி நின்று உள்கிய சிந்தையார் உலகினில் உள்ளாரே.

veN nilA miku viricaTai aravoTum, veL erukku, alarmattam,
paN nilAviya pATalOTu ATalar payil puRu kIzvELUr,
peN nilAviya pAkan2ai, peruntirukkOyil emperumAn2ai,
uL-nilAvi nin2Ru uLkiya cintaiyAr ulakin2il uLLArE.

பொருள்: வெண்பிறை தங்கிய விரிந்த சடையில் பாம்புடன் வெள்ளெருக்கம்மலர்; ஊமத்தை மலர்; பண் பொருந்திய பாடலினொடு ஆடுதலும் உடையவர் ஆகிய கீழ்வேளூரில் எழுந்தருளியிருக்கும் மாதொரு பாகனை, பெருந்திருக்கோயில் எம்பெருமானை உள்ளத்தின் உள்ளே நிலவச் செய்து உள்கும் பயிற்சி உடையவரே உள்ளார் எனும் பெருமை உடையர்.

குறிப்புரை: கீழ்வேளூரில் பெருந்திருக்கோவிலில் எழுந்தருளிய அம்மையப்பரை உள்கும் பயிற்சி உடையார் எவ்வுலகில் இருப்பினும் சிவலோகத்தில் இருப்பவரேயாவர். 'நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே யிருக்கப்பெறின் இறைவா! உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே' திருவாசகம் 6–2.

Our Lord Civa retains the moon in His broad entangled hair locks which gives the white bright moon light. Along with the moon, He puts on the snake, white yercum flowers, datura flowers, on the hair. He is manifest in the big temple in Thiru-k-keezh-veloor city along with His consort. Those devotees, with the inner most divine thoughts on our Lord, may always make a practice of it, they will live in this world firmly with all virtues and will also live in Siva Loka.

2608. சேடுலாவியகங்கையைச்சடையிடைத்தொங்கவைத்தழகாக
நாடுலாவியபலிகொளுநாதனார்நலமிகுகீழ்வேளூர்ப்
பீடுலாவியபெருமையர்பெருந்திருக்கோயிலுட்பிரியாது
நீடுலாவியநிமலனைப்பணிபவர்நிலைமிகப்பெறுவாரே. 4

சேடு உலாவிய கங்கையைச் சடை இடைத்தொங்க வைத்தழகாக
நாடு உலாவிய பலிகொளு நாதனார் நலமிகு கீழ்வேளூர்ப்
பீடு உலாவிய பெருமையர் பெருந்திருக்கோயில் உட்பிரியாது
நீடு உலாவிய நிமலனைப் பணிபவர் நிலைமிகப் பெறுவாரே.

cETu ulAviya kagkaiyaic caTai iTait togkavaittu azaku Aka
nATu ulAviya pali koLum nAtan2Ar, nalam miku kIzvELUrp
pITu ulAviya perumaiyar, peruntirukkOyilin2 piriyAtu
nITu ulAviya nimalan2aip paNipavar nilai mikap peRuvArE.

பொருள்: பெருமையுடைய கங்கையை சடையில் ஒழுங்கு பெற ஒழுக வைத்து, அழகாக நாட்டில் அலைந்து பிச்சை கொள்ளும் தலைவர்; அழகிய கீழ்வேளூரில் வலிமையுடைய பெருமையர்; பெருந்திருக்கோயிலைப் பிரியாது நெடிது இருக்கும் மலமற்றவனைப் பணிபவர் நிலைத்த பேரின்ப வாழ்வு மிகப் பெறுவர்.

குறிப்புரை: சேடு – பெருமை. பீடு – வலிமை. நீடு – அழியாமை. கீழ்வேளூர்ப் பெருமானார் பெருந்திருக்கோயிலை வழிபடுவோர் நிலைத்த பேரின்பவாழ்வு மிகப் பெறுவர்.

Our Lord Civa supports the very famous river Ganges in His hair on the head. He is the Supreme Being, goes round the world in an appealing posture and gets alms from all over the world. Our Lord is manifest in the big good temple. He is the Supreme Being with very great fame. Those servitors who worship our Lord without any break will get permanent heavenly joy.

2609. துன்றுவார்சடைச்சுடர்மதிநகுதலைவடமணிசிரமாலை
மன்றுலாவியமாதவரினிதியல்மணமிகுகீழ்வேளூர்
நின்றுநீடியபெருந்திருக்கோயிலின்நிமலனைநினைவோடும்
சென்றுலாவிநின்றேத்தவல்லார்வினைதேய்வதுதிணமாமே. 5

துன்று வார்சடைச் சுடர்மதி நகுதலை வடமணி சிரமாலை
மன்று உலாவிய மாதவர் இனிதியல் மணமிகு கீழ்வேளூர்
நின்று நீடிய பெருந்திருக்கோயிலின் நிமலனை நினைவோடும்
சென்று உலாவி நின்று ஏத்தவல்லார் வினை தேய்வது திணமாமே.

tun2Ru vArcaTaic cuTar mati, nakutalai, vaTam aNi ciramAlai,
man2Ru ulAviya mA tavarin2itu iyal maNam miku kIzvELUr
nin2Ru nITiya peruntirukkOyilin2 nimalan2ai, nin2aivOTum
cen2Ru ulAvi nin2Ru, Etta vallAr vin2ai tEyvatu tiNam AmE.

பொருள்: நீண்ட சடையுடன் நெருங்கிய வெண்பிறை, பிரம கபாலம், அக்குமணி, சிரமாலை ஆகியவற்றை அணிந்து, மன்றினுள் உலாவிய மாதவத்தர் ஆகிய சிவபிரான் இனிது இயங்குகின்ற கீழ்வேளூரில் நெடிது நிற்கும் பெருந்திருக்கோயிலின் நிமலனை வேறு நினைவின்றி அவரையே ஏத்த வல்லாரின் வினை தேய்ந்தொழிவது திண்ணமே.

குறிப்புரை: நகுதலை – பிரமகபாலம். வடம் – கயிறு. சிரம் – தலைகள். திருக்கோயில் மன்றத்துள் மாதவத்தோர் உலாவிய சிறப்பு உணர்த்திற்று. சிரமாலையை உடையவரும் மன்றுள் நடமாடியவரும் ஆகிய மாதவர் எனச் சிவபெருமானைக் குறித்ததாயின் நிமலன் என்னும் ஒருமைக்கு ஏலாது.

Our Lord Civa retains the moon in the dense and long entangled locks of hair. He also puts on a garland of skulls, gems twined in a rope, which twine over as head wear. The highly skilled scholars performing penance spend their time usefully in the place of assembly. They come to the temple where our Lord, the immaculate Supreme Being, exhibits Himself. Those servitors who think of our Lord with concentrated mind and pray and worship Him will definitely get rid of their past bad deeds.

2610. கொத்துலாவியகுழல்திகழ்சடையனைக்கூத்தனைமகிழ்ந்துள்கித்
தொத்துலாவியநூலணிமார்பினர்தொழுதெழுகீழ்வேளூர்ப்
பித்துலாவியபத்தர்கள்பேணியபெருந்திருக்கோயில்மன்னும்
முத்துலாவியவித்தினையேத்துமின்முடுகியஇடர்போமே. 6

கொத்து உலாவிய குழல் திகழ் சடையனைக் கூத்தனை மகிழ்ந்து உள்கித்
தொத்து உலாவிய நூலணி மார்பினர் தொழுது எழுகீழ்வேளூர்ப்
பித்துலாவிய பத்தர்கள் பேணிய பெருந்திருக்கோயில் மன்னும்
முத்து உலாவிய வித்தினை ஏத்துமின் முடுகிய இடர்போமே.

kottu ulAviya kuzal tikaz caTaiyan2ai, kUttan2ai, makizntu uLkit
tottu ulAviya nUl aNi mArpin2ar tozutu ezu kIzvELUr--
pittu ulAviya pattarkaL pENiya--peruntirukkOyil man2n2um
muttu ulAviya vittin2ai, Ettumin2! muTukiya iTar pOmE.

பொருள்: பூங்கொத்துக்கள் நிலவும் குழல் திகழும் சடையனை; கூத்தனை; உளமகிழ்ச்சியுடன் நினைந்து கொத்தான பூணூலினை அணிந்த மார்பினராகிய மறையோர் தொழுதெழும் கீழ்வேளூரில் திருவடிப் பித்துக் கொண்ட பத்தர்கள் விரும்பிய பெருந்திருக்கோயிலில் நிலைபெற்றிருக்கும் முத்தினைப் பவளத்தை வழிபடுங்கள். உங்களை நெருக்கிய துன்பங்கள் ஒழிந்து போகும்.

குறிப்புரை: கொத்து – பூங்கொத்துக்கள். தொத்து – கூடுதல். பித்து – திருவடிப்பற்று. முத்து . . . வித்து – 'முத்தினைப் பவளத்தை' 'வித்தாம் முளையாகும் வேரேதானாம்'.

Our Lord Civa puts on clusters of flowers on His entangled locks of hair. His avocation is to dance whenever He wants. He is manifest in the big sacred temple in Thiru-k-keezh-veloor. In this city Brahmin devotees who wear the sacred thread on their chest think and melt in their mind about our Lord. They worship Him in the temple. He is like pearls. He is the seed of everything in this world. Oh! Ye devotees! praise our Lord. Any bad karma deeds which approach you and persistently follow you will be discarded.

2611. பிறைநிலாவியசடையிடைப்பின்னலும்வன்னியுந்துன்னாரும்
கறைநிலாவியகண்டரெண்டோளினர்காதல்செய்கீழ்வேளூர்
மறைநிலாவியஅந்தணர்மலிதருபெருந்திருக்கோயில்மன்னும்
நிறைநிலாவியஈசனைநேசத்தால்நினைபவர்வினைபோமே. 7

பிறை நிலாவிய சடை இடைப்பின்னலும் வன்னியும் துன்னாரும்
கறை நிலாவிய கண்ட ரெண்டோளினர் காதல் செய்கீழ்வேளூர்
மறை நிலாவிய அந்தணர் மலிதரு பெருந்திருக்கோயில் மன்னும்
நிறை நிலாவிய ஈசனை நேசத்தால் நினைபவர் வினைபோமே.

piRai nilAviya caTai iTaip pin2n2alum van2n2iyum tun2 Arum
kaRai nilAviya kaNTar, eNtOLin2ar, kAtal cey kIzvELUr--
maRai nilAviya antaNar malitaru--peruntirukkOyil man2n2um
niRai nilAviya Ican2ai nEcattAl nin2aipavar vin2ai pOmE.

பொருள்: பிறை தங்கிய சடையில் பின்னலும் வன்னியும் நெருங்கிய ஆத்தி மலரும் உடையர்; நஞ்சின் கறை தங்கிய கண்டர்; எட்டுத் தோளினர்; அவர் விரும்பும் கீழ்வேளூர் மறை பயின்ற அந்தணர் மிக்க பெருந்திருக்கோயில், நிலைபெற்று இருக்கும் குறைவிலா நிறைவு உடைய ஈசனை அன்பால் நினைபவர் வினைநீங்கிப் போகும்.

குறிப்புரை: 'மறைநிலாவிய அந்தணர் மலிதரு பெருந்திருக்கோயில்' என்றதால், அக்காலத்து வேதியர் சிறப்பும் அவர்க்குள்ள கோயில் வாழ்வும் புலப்படும். நின்ற – 'குறைவிலா நிறைவு', அவ்வத்தேவரை அவ்வப்புவனத்தில் அவரவர்க்கு உரிய தொழிலில் நிறுத்துவதாம்.

Our Lord Civa retains the moon in His entangled hair locks. Along with this He supports the river Ganges and puts on leaves of the summer tree also in His matted hair. His throat is dark blue in colour. He has immaculate body. He likes the city full of Vedic scholars by Brahmins and also the big sacred temple in Thiru-k-keezh-veloor city. He has no deficiency and no defect. He is perfect and noble minded. He is flawless perfection. Those people who think of our Lord with sincere love and devotion will get rid of their bad karma.

2612. மலைநிலாவியமைந்தனம்மலையினையெடுத்தலுமரக்கன்றன்
தலையெலாநெரிந்தலறிடவூன்றினானுறைதருகீழ்வேளூர்க்
கலைநிலாவியநாவினர்காதல்செய்பெருந்திருக்கோயிலுள்
நிலைநிலாவியஈசனைநேசத்தால்நினையவல்வினைபோமே. 8

மலை நிலாவிய மைந்தனம் மலையினை எடுத்தலும் அரக்கன்தன்
தலை எலாநெரிந்து அலறிட ஊன்றினான் உறைதரு கீழ்வேளூர்க்
கலை நிலாவிய நாவினர் காதல் செய் பெருந்திருக்கோயிலுள்
நிலை நிலாவிய ஈசனை நேசத்தால் நினைய வல்வினை போமே.

malai nilAviya maintan2 am malaiyin2ai eTuttalum, arakkan2tan2
talai elAm nerintu alaRiTa, Un2Rin2An2 uRaitaru kIzvELUr--
kalai nilAviya nAvin2ar kAtal cey--peruntirukkOyiluL
nilai nilAviya Ican2ai nEcattAl nin2aiya, valvin2ai pOmE.

பொருள்: மலைபோலும் வலிமை உடையவன்; கயிலை மலையினை எடுக்கலுற்ற அவ்வரக்கன் இராவணனுடைய தலை பத்தினையும் நெரித்து அலறிட விரல் ஊன்றினான்; அவன் உறைகின்ற கீழ்வேளூரில் சகல கலைகளும் ஓதிய நாவினர். பத்தி செய்கின்ற பெருந்திருக்கோயிலுள் நிலைத்து உறைகின்ற ஈசன்; அவனைப் பத்தியுடன் நினைய வல்லவரின் வினைகள் நீங்கிப் போகும்.

குறிப்புரை: மைந்தன் – வீரன், அழகன், வலியன், மலைநிலாவிய மைந்தன் – மலைபோலுந் தோற்றமுடைய (ஞான) வீரன். பத்துத் தலைகளும் என்னத் 'தலையெல்லாம்' என்று குறித்தருளினார். தலைநிலாவிய நாவினர் – வேதாகமாங்க பிராணேதிகாசாதி சகல கலைகளுமுணர்ந்த நாவினர்.

Our Lord Civa displays Himself as the best warrior manifested on mount Kailash. Raavanan tried to lift and displace Kailash mountain. Then our Lord pressed the mountaintop with His toe. But his heads were all crushed and he bled. This Lord Civa is manifest in the big sacred temple of Thiru-k-keezh-veloor. He permanently displays Himself there. The scholars of the city who have mastered all the subjects such as Vedas, puranaas, ithikasams chant all these arts and sciences. They love and worship our Lord in this city. They will get rid of their strong bad deeds of karma.

2613. மஞ்சுலாவியகடற்கிடந்தவனொடுமலரவன்காண்பொண்ணாப்
பஞ்சுலாவியமெல்லடிப்பார்ப்பதிபாகனைப்பரிவோடும்
செஞ்சொலார்பலர்பரவியதொல்புகழ்மல்கியகீழ்வேளூர்
நஞ்சுலாவியகண்டனைநணுகுமின்நடலைகள்நணுகாவே. 9

மஞ்சு உலாவிய கடல் கிடந்தவனொடு மலரவன் காண்பொண்ணாப்
பஞ்சு உலாவிய மெல்லடிப் பார்ப்பதி பாகனைப் பரிவோடும்
செஞ்சொல் ஆர்பலர் பரவிய தொல் புகழ்மல்கிய கீழ்வேளூர்
நஞ்சு உலாவிய கண்டனை நணுகுமின் நடலைகள் நணுகாவே.

manjcu ulAviya kaTal kiTantavan2oTu malaravan2 kANpu oNNAp
panjcu ulAviya mel aTip pArppati pAkan2ai, parivOTum
cenjcolArpalar paraviya tolpukaz malkiya kIzvELUr--
nanjcu ulAviya kaNTan2ai, naNukumin2! naTalaikaL naNukAvE.

பொருள்: மேகம் தவழும் கடலில் கிடப்பவனாகிய திருமால்; அவனோடு பிரமன். இருவராலும் காண முடியாதவனும் பஞ்சு போலும் மென்மையான பாதத்தை உடைய பார்வதியைத் தன் பாகத்தில் கொண்டவனும் ஆகிய சிவனை, பத்தியுடன் செவ்விய சொற்களைப் பேசும் பலரும் வழிபட்டேத்திய பழம் பெருமை நிறைந்த கீழ்வேளூரில் நஞ்சு தங்கிய கண்டனை அணுகுங்கள். துன்பங்கள் உம்மை அணுகா.

குறிப்புரை: கடல் – பாற்கடல். காண்பு – பார்வை. 'காண்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்' 'கண்கள் காண்பு ஒழிந்து' 2. 97–5.

The passing clouds move over the ocean where Thirumaal takes rest. Brahma stays in the lotus flower. Both tried their best to search our Lord, but failed. Our Lord was invisible to them. Our Lord is concomitant with His consort Paarvathi Devi. Her feet are soft like cotton. She walks very gently. His throat is dark blue in colour. In this city virtuous scholars extol and worship our Lord. Our sufferings will never trouble us, only will disappear, if we also worship this Lord Civan.

2614. சீறுலாவியதலையினர்நிலையிலாஅமணர்கள்சீவரத்தார்
வீறிலாதவெஞ்சொற்பலவிரும்பன்மின்சுரும்பமர்கீழ்வேளூர்
ஏறுலாவியகொடியனையேதமில்பெருந்திருக்கோயில்மன்னு
பேறுலாவியபெருமையன்திருவடிபேணுமின்தவமாமே. 10

சீறு உலாவிய தலையினர் நிலையிலா அமணர்கள் சீவரத்தார்
வீறு இலாத வெஞ்சொற் பலவிரும்பன் மின்சுரும்பமர் கீழ்வேளூர்
ஏறு உலாவிய கொடியனை ஏதமில் பெருந்திருக்கோயில் மன்னு
பேறு உலாவிய பெருமையன் திருவடி பேணுமின் தவமாமே.

cIRu ulAviya talaiyin2ar nilai ilA amaNarkaL, cIvarattAr,
vIRu ilAta venjcol pala virumpan2 min2! curumpu amar kIzvELUr--
ERu ulAviya koTiyan2ai--Etam il peruntirukkOyil man2n2u
pERu ulAviya perumaiyan2 tiruvaTi pENumin2! tavam AmE.

பொருள்: தாறுமாறான தலைமுடியினர்; நிலையான கொள்கையில்லாத சமணர்; துவரூட்டிய ஆடையராகிய தேரர் ஆகியோரின் பெருமையில்லாத கொடிய சொற்கள் பலவற்றையும் விரும்பாதொழிக. வண்டுகள் மொய்க்கும் கீழ்வேளூர் விடைக்கொடியன், ஆன்மாக்களுக்குரிய பேறு உலாவிய பெருமையன்; குற்றமில்லாத பெருந்திருக்கோயிலில் இருப்பவன் ஆகிய சிவனின் திருவடியைப் போற்றுங்கள். அதுவே உண்மைத் தவம்.

குறிப்புரை: சீறு – முதனிலைத் தொழிலாகுபெயர். சீவரார் – துவரூட்டிய சீலையர் (தேரர்). வீறு – பெருமை, வெற்றியுமாம். பேறு – ஆன்மாக்களுக்குரிய பேறு (சிவானந்தம்). பேறு உலாவிய பெருமையன். ஆனந்தம் நிகழும் பெருமையை உடைய பரமசிவன்.

The Jains in the city keep themselves baldheaded. Their words and actions are all false. The Buddhists wear the red ochre cloth. Do not believe their words of no virtue. Our Lord is manifest in the big sacred temple of Thiru-k-keezh-veloor with a

flag which has the bull figure. He is the Supreme Being, graces His devotees with endless blessings. He is the Chief for all. Oh ye people! Worship the holy feet of Lord Civa. This is the only powerful austerity.

2615. குருண்டவார்குழற்சடையுடைக்குழகனைஅழகமர்கீழ்வேளூர்த்
திரண்டமாமறையவர்தொழும்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
இருண்டமேதியினினமிகுவயல்மல்குபுகலிமன்சம்பந்தன்
தெருண்டபாடல்வல்லாரவர்சிவகதிபெறுவதுதிடமாமே. 11

குருண்ட வார்குழல் சடைஉடைக் குழகனை அழகமர் கீழ்வேளூர்த்
திரண்ட மாமறையவர் தொழும் பெருந்திருக்கோயில் எம்பெருமானை
இருண்ட மேதியினின மிகுவயல் மல்கு புகலி மன்சம்பந்தன்
தெருண்ட பாடல் வல்லாரவர் சிவகதி பெறுவது திடமாமே.

kuruNTa vAr kuzal caTai uTaik kuzakan2ai, azaku amar kIzvELUrt
tiraNTa mA maRaiyavar tozum peruntirukkOyil emperumAn2ai,
iruNTa mEtiyin2 in2am miku vayal malku pukali man2 campantan2
teruNTa pATal vallAr avar, civakati peRuvatu tiTam AmE.

பொருள்: முன் கொண்டையும் நீண்ட குழலும் சேர்ந்த சடை கொண்ட இளைஞன். அழகு குடியிருக்கும் கீழ்வேளூரில் திரண்ட மறையவர்கள் தொழும் பெருந்திருக்கோயிலில் வீற்றிருக்கும் எம்முடைய பெருமான் ஆகிய சிவனை, இருள்போற்கரிய எருமைகள் மேயும் வயல்கள் மிகுந்த புகலிக்குத் தலைவன் ஞானசம்பந்தன் பாடிய ஞானம் நிறைந்த பாடல்களை வல்லவர் சிவகதி பெறுதல் உறுதி.

குறிப்புரை: 'குருண்டவார் குழற்சடைக் குழகன்' – 'குருள்குஞ்சி' (தி. 2 ப. 116 பா. 4). குழகன் – இளையன், அழகன். புகலி – சீகாழி. மன் – இறைவன். தெருண்ட – தெளிந்த.

Our Lord's matted hair is curved and dishevelled. He is the youngest Lord, manifested in the attractive big sacred temple in Thiru-k-keezh-veloor city. Our saint Thiru-gnana-Sambandar is the chief of the city Pugali (Seerkaazhi). In this city black buffaloes are in large numbers. The paddy fields are plenty. He chanted these sacred and elaborate verses on our Lord Civa. Those devotees who can memorise and chant these songs on our Lord will definitely get salvation.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

105ஆம் பதிகம் முற்றிற்று
End of 105th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 242

பதிக எண்: 106

106. திருவலஞ்சுழி

106. THIRU-VALAM-CHUZHI

பண் : நட்டராகம்

Pann: Nattaraagam

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 138ஐப் பார்க்க.

பதிக வரலாறு

திருநல்லூரில் மீண்டும் வந்து அணைந்து வணங்கி மகிழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருவலஞ்சுழியில் எழுந்தருள்வதை அறிந்த அத்தலத்து மெய்யன்பர்கள் எதிர்கொண்டனர். சூழ்ந்தனர். அச்சூழல் வெண்மதியை வெண்மேகக்கூட்டம் சூழ்ந்த காட்சி போல் இருந்தது. கலந்த அன்பர்கள் தொழுது எழுந்தனர். கவுணியர் தலைவர் கும்பிட்டுக் கொண்டே திருவலஞ்சுழிக் கோபுரத்தை இறைஞ்சிக் கோயிலினுள் புகுந்தார். புக்க அப்பெரியோர் சிவபிரானை வினவும் பொருளுடையதாகப் பாடியதை ஊனமில்லாத இசையுடன் விளக்கியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2616. என்னபுண்ணியஞ்செய்தனைநெஞ்சமேயிருங்கடல்வையத்து
முன்னநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கள்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழியிடமாகக்
கொண்டநாதன்மெய்த்தொழில்புரிதொண்டரோடினிதிருந்தமையாலே. 1

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் அரளங்கள்
மன்னு காவிரி சூழ் திருவலஞ்சுழி இடமாகக்
கொண்ட நாதன் மெய்த்தொழில் புரிதொண்டரோடு இனிது இருந்தமையாலே.

en2n2a puNNiyam ceytan2ai--nenjcamE! irugkaTal vaiyattu,
mun2n2am nI puri nalvin2aip payan2 iTai, muzumaNittaraLagkaL
man2n2u kAviri cUz tiru valanjcuzi iTamAkak
koNTa nAtan meitozil puritontarOTu iniTu iunTamaiyAlE.

பொருள்: நெஞ்சமே! பெரிய கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் காவிரி ஆறு பாயும் திருவலஞ்சுழி வாணனை வாயாரப் பலபன்னி ஆதரித்தும் ஏத்தியும் பாடியும் நீ

வழிபடுவதற்கு முற்பிறவிகளிலே நீ செய்துள்ள நல்வினைப் பயன்களில் எத்தகைய புண்ணியம் செய்துள்ளாய்?

குறிப்புரை: நெஞ்சமே! நீ (இவ்) வையத்து, திருவலஞ்சுழி வாணனை வாயாரப்பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே என்ன புண்ணியஞ் செய்தனை? புண்ணியஞ் செய்ததா அன்றா என்னும் ஐயம் இல்லை. பல்வகைப் புண்ணியத்துள் இவ்வழிபாட்டிற்குரிய புண்ணியம் யாதென்பதே ஐயம். 'நல்வினைப் பயன்' என்று கொண்ட முடிவே அதற்குச் சான்றாயிற்று. அந்நல்வினையுள் யாது என்பது கருத்து. இத்திருமுறையுள் 79ஆவது திருப்பதிகத்துள் வரும் பல திருப்பாடலுள் 'பேதைமார்போலநீ வெள்கினாயே' 'மறவல்நீ மார்க்கமே நண்ணினாய்' என்றுள்ள சிறப்பையும் அவ்வுண்மையைக் குறித்தருளக் கருதிய ஸ்ரீசேக்கிழார் பெருமானார், 'அவமிலா நெஞ்சமே அஞ்சல் நீ உய்யுமாறு அறிதி' என்று அருளியதையும் உணர்ந்தால், நல்வினை பற்றிய ஐயம் இல்லாமையும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருவுள்ளத்தை நாம் உணரத்தகும் முறைமையும் தெளிவாகும். வாயாரப் பன்னுதல் பாடுதல் – வாக்கின் வினை. ஆதரித்தல் – மனத்தின்றொழில். ஏத்துதல் – காயத்தின் செயல்.

Oh my dear heart! You were born in this world. What virtuous deed have you done in your life when you live in this world, which is surrounded by deep oceans! You had the opportunity to pay obeisance to our Lord Civa who is manifest in the temple in Thiru-valam-chuli city. You get chances to show your respectful affection to Him, to chant His fame, to prostrate before Him, and to worship Him. His temple is surrounded by the river Cauvery, which brings fully matured and refined gems, pearls, and other good articles. Oh my dear heart! a lot of virtuous deeds you have done, that perhaps, must have resulted in your good experience. What are the good deeds among the many that have now brought this blissful experience? I wonder at the deed which has given me this joyful experience.

2617. விண்டொழிந்தனநம்முடைவல்வினைவிரிகடல்வருநஞ்சம்
உண்டிறைஞ்சுவானவர்தமைத்தாங்கியஇறைவனையுலகத்தில்
வண்டுவாழ்குழல்மங்கையொர்பங்கனைவலஞ்சுழியிடமாகக்
கொண்டநாதன்மெய்த்தொழில்புரிதொண்டரோடினிதிருந்தமையாலே. 2

விண்டொழிந்தன நம்முடை வல்வினை விரிகடல் வருநஞ்சம்
உண்டிறைஞ்சு வானவர் தமைத்தாங்கிய இறைவனை உலகத்தில்
வண்டு வாழ்குழல் மங்கையொர் பங்கனைவலம் சுழியிடமாகக்
கொண்ட நாதன் மெய்த்தொழில் புரிதொண்டரோடு இனிது இருந்தமையாலே.

viNTu ozintan2a, nammuTai valvin2ai--virikaTal varu nanjcam
uNTu iRainjcu vAn2avar tamait tAgkiya iRaivan2ai, ulakattil
vaNTu vAz kuzal magkai orpagkan2ai, valanjcuzi iTam Akak
koNTa nAtan2, meyttozil puri toNTarOTu in2itu iruntamaiyAlE.

பொருள்: அகன்ற பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு, தன்னை இறைஞ்சிய வானவர்களைக் காத்த இறைவனை, இவ்வுலகத்தில் வண்டு வாழ்கின்ற குழலுடைய மங்கையாகிய அம்மையைத் தன்பங்கில் கொண்டவனைத் திருவலஞ்சுழியைத் தன் இருப்பிடமாகக் கொண்டவனை, உடையானாகக் கொண்டு அவனுக்கு உண்மையான அடிமைத் தொழில் விரும்பிப் புரிகின்ற மெய்த்தொண்டரோடு மகிழ்ச்சியுடன் இருந்தமையாலே நம்முடைய வல்வினைகளாயின விண்டு ஒழிந்தன.

குறிப்புரை: இனிதிருந்தமையாலே விண்டொழிந்தன வல்வினை. விண்டு – நீங்கி. கடல் – பாற்கடல். இறைஞ்சு வானவர் – வழிபடும் விண்ணவர். தாங்கிய – நஞ்சுண்டு காத்தருளிய. 'வண்டார் குழலி' – தேவியார் திருப்பெயர். அவை கோட்டாறு, கோளிலி, பிரமபுரம், மருகல் என்பவை. மெய்த்தொழில் – உண்மைத் தொண்டு.

Our Lord Civa imbibed the poison that came out of the ocean and saved the devas and all other celestials. He is the consort of goddess Uma. He is manifest in the temple situated in Thiru-valam-chuli city and exhibits Himself there. Worship our Lord Civa in this temple. You have now joined the true servitors who sincerely participated in their real service. You have received their favour and stayed jointly with them during their service. Because of this fervor, definitely our bad karma will get eliminated and we are freed.

2618. திருந்தலார்புரந்தீயெழச்செறுவனவிறலின்கணடியாரைப்
பரிந்துகாப்பனபத்தியில்வருவனமத்தமாம்பிணிநோய்க்கு
மருந்துமாவனமந்திரமாவனவலஞ்சுழியிடமாக
இருந்தகாயகனிமையவரேத்தியஇணையடித்தலந்தானே. 3

திருந்தலார் புரந்தீயெழச் செறுவன விறலின் கணடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன மந்திரமாவன வலஞ்சுழி இடமாக
இருந்த காயகனிமை அவரேத்திய இணையடித் தலந்தானே.

tiruntalAr puram tI ezac ceRuvan2a; iRalin2 kaN aTiyAraip
parintu kAppan2a; pattiyil varuvan2a; mattam Am piNinOykku
maruntum Avan2a; mantiram Avan2a--valanjcuzi iTam Aka
irunta kAyakan2, imaiyavar Ettiya, iNai aTittalam tAn2E.

பொருள்: திருவலஞ்சுழியைத் தன் இடமாகக் கொண்டு இருந்தருளும் நாயகனின், தேவர்களும் தொழுதேத்திய திருவடிகளே, பகைவரின் முப்புரங்களையும் நெருப்பில் எரிந்தொழிய அழிப்பன. அடியவர்களைப் பெருமையுடன் வாழக் கருணையுடன் காப்பன; சிவபத்தியால் வருவன; உன்மத்தமாகிய பிணிக்கு மருந்தும் ஆவன; மந்திரமும் ஆவன.

குறிப்புரை: திருந்தலார் – பகைவர். விறல் – பெருமை, வெற்றி. பரிந்து – இரங்கி. பத்தி – சிவபத்தி. 'பத்திவலையிற் படுவோன் காண்க'. மத்தம் – மயக்கம். பிணியும் நோயும் மயக்கத்தால் வருவனவே. தெளிவு நோயை விளைவிக்காது. இணையடித் தலந்தான் புரம்செறுவன, அடியாரைக் காப்பன பத்தியில் வருவன. நோய்க்கு மருந்தாவன, மந்திரமாவன என்க. அப்பர் அருளிய 'சிந்திப்பரியன' என்பது முதலிய இருபது திருவிருத்தங்களையும் இங்கு எண்ணுக.

Our Lord Civa is manifest in the temple in Thiru-valam-chuli city. The devas praise and worship Him. His holy feet destroyed the three fortresses of the asuras who were His antagonists. He graces His devotees. He gives His appearance in the hearts of those who do sincere service to Him. He is the medicine for all lapses and ailments caused by delusions.

2619. கறைகொள்கண்டத்தர்காய்கதிர்நிறத்தினரறத்திறமுனிவர்க்கன்
றிறைவராலிடைநீழலிலிருந்துகந்தினிதருள்பெருமானார்
மறைகளோதுவர்வருபுனல்வலஞ்சுழியிடமகிழ்ந்தருங்கானத்
தறைகழல்சிலம்பார்க்கநின்றாடியஅற்புதமறியோமே. 4

கறைகொள் கண்டத்தர் காய்கதிர் நிறத்தினர் அறத்திற முனிவர்க்கன்று
இறைவரால் இடை நீழலில் இருந்து உகந்து இனிது அருள்பெருமானார்
மறைகளோதுவர் வருபுனல் வலஞ்சுழி இடமகிழ்ந்தருங்கானத்
தறை கழல் சிலம்பு ஆர்க்க நின்றாடிய அற்புதமறியோமே.

kaRai koL kaNTattar; kAykatir niRattin2ar; aRattiRam mun2ivarkku an2Ru--
iRaivar--Al iTai nIzalil iruntu ukantu in2itu aruL perumAn2Ar;
maRaikaL Otuvar; varupun2al valanjcuzi iTam makizntu, arugkAn2attu,
aRai kazal cilampu Arkka, nin2Ru ATiya aRputam aRiyOmE!

பொருள்: நஞ்சினால் கறுத்த கண்டத்தை உடையவர்; செஞ்சூரியனின் நிறத்தவர்; அன்று ஆலமரத்தில் நீழலில் முனிவர்களுக்கு அறத்தின் கூறுபாடுகளை மகிழ்வுடன் இனிது அளித்து அருளியவர்; வேதம் ஓதுவர் ஆகிய பெருமானார் ஆகிய இறைவர், புதுவெள்ளம் பாய்கின்ற திருவலஞ்சுழியினை இடமாக மகிழ்ந்து, அரிய கானத்தில் ஒலிக்கின்ற கழலும் சிலம்பும் ஆர்க்க நின்றாடிய அற்புதத்தை அறியோம்.

குறிப்புரை: கறை – நஞ்சாலாய கறுப்பு. கதிர் – சூரியன். அறத்திறம் – தருமங்களின் வகைகளும் வேதாகம நூற்பொருளின் கூறுபாடும். கழல் சிலம்பு – உம்மைத்தொகை.

Our Lord Civa is known as Neelakandar; His body is of red colour. Once He gave religious and moral teachings about divine morality and about virtuous deeds to the four saints. He is the author of the four Vedas. Such a Lord is manifest in Thiru-valam-chuli. Here He dances with His anklets. We are unable to understand His wonderful prowess to do all such things.

2620. மண்ணர்நீரர்வண்காற்றினராற்றலாமெரியுருவொருபாகம்
பெண்ணராணெனத்தெரிவருவடிவினர்பெருங்கடற்பவளம்போல்
வண்ணராகிலும்வலஞ்சுழிபிரிகிலார்பரிபவர்மனம்புக்க
எண்ணராகிலுமெனப்பலஇயம்புவரிணையடிதொழுவாரே. 5

மண்ணர் நீரர்வண் காற்றினர் ஆற்றலாம் எரியுரு ஒருபாகம்
பெண்ணராண் எனத் தெரிவரு வடிவினர் பெருங்கடல் பவளம்போல்
வண்ணராகிலும் வலஞ்சுழி பிரிகிலார் பரிபவர் மனம்புக்க
எண்ணராகிலும் எனப்பல இயம்புவர் இணையடி தொழுவாரே.

maNNar; nIrar; vaN; kARRin2ar; ARRal Am eri uru; orupAkam
peNNar; AN en2at terivu aru vaTivin2ar; perugkaTal pavaLam pOl
vaNNar; Akilum, valanjcuzi pirikilAr; paripavar man2am pukka
eNNar; Akilum, en2aip pala iyampuvar, iNai aTi tozuvArE.

பொருள்: மண் முதல் பஞ்ச பூதங்களிலும் பூதருபமாக இருப்பவர்; ஒரு பாகம் பெண்ணுருவினர்; ஆணோ பெண்ணோ எனத் தெரிய முடியாத வடிவினர்; பெரிய கடலில் விளையும் பவளம் போன்ற நிறத்தினர்; திருவலஞ்சுழியைப் பிரியாது உறைபவர்; தன் தாளிணைகளைத் தொழும் எளியவர் மனம் புகும் எண்ணமுடையவர்; என இயல்பு பலவும் கூறுதற்கு உரியர்.

குறிப்புரை: சிவபிரான் ஐம்பெரும் பூதரூபமாக உள்ளவர். அட்டமூர்த்தங்களுள் முதல் ஐந்து அம்மையப்பர், அர்த்தநாரீசுவரர். பவள வண்ணர். நீங்காது வாழ்பவர்.

Our Lord Civa is the embodiment of five elements such as earth, sky etc. He is concomitant i.e., both male and female bodied Supreme Being. His body is like the sea coral in colour. He is manifest in Thiru-valam-chuli and will never leave this place. He enters into the minds of His devotees and acts in their ideas. Those servitors who prostrate and worship His holy feet will chant always such famous deeds of our Lord.

2621. ஒருவராலுவமிப்பதையரியதோர்மேனியர்மடமாதர்
இருவராதரிப்பார்பலபூதமும்பேய்களுமடையாளம்
அருவராததோர்வெண்டலைகைப்பிடித்தகந்தொறும்பலிக்கென்று
வருவரேவலர்வலஞ்சுழியடிகளேவரிவளைகவர்ந்தாரே. 6

ஒருவரால் உவமிப்பதை அரியதோர் மேனியர் மடமாதர்
இருவராது அரிப்பார் பலபூதமும் பேய்களும் அடையாளம்
அருவராதது ஓர்வெண்டலை கைப்பிடித்து அகந்தொறும் பலிக்கென்று
வருவரே வலர்வலஞ்சுழி அடிகளே வரிவளை கவர்ந்தாரே.

oruvarAl uvamippatai ariyatu Or mEn2iyar; maTamAtar
iruvar AtarippAr; palapUtamum pEykaLum aTaiyALam;
aruvarAtatu or veNtalai kaip piTittu, akamtoRum palikku en2Ru
varuvarEl, avar valanjcuzi aTikaLE; vari vaLai kavarntArE!

பொருள்: ஒருவராலும் உவமை கூற முடியாத அழகிய திருமேனியர்; கங்கை, உமை எனப்படும் இரு மாதர்களாலும் விரும்பப்படுபவர்; பல பூதங்களும் பேய்களும் அருவறுப்புறாமல் வெண்தலையைக் கையில் கொண்டு இல்லந்தோறும் பிச்சைக்கென்று வருவரேல், அவர் வேறொருவரும் அல்லர்; அவர் திருவலஞ்சுழி அடிகளே; அவரே என் வரிவளை கவர்ந்த தலைவர்.

குறிப்புரை: இறைவன் திருமேனிக்கு ஒப்புரைக்க வேறு யாதும் இல்லாமையால் 'ஒருவரால் உவமிப்பதை அரியதோர் மேனியர்' என்க. 'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே (அப்பர்) அருவராதது – அருவருக்காதது. முறுமுறுப்பு, சுறுசுறுப்பு, கிறுகிறுப்பு முதலியவற்றைப்போல அறுவறுப்பு என்பதும் உண்டு. மனத்தை அறுப்பது பற்றிய பெயர். அஃது இடையெழுத்தாக மருவிற்று. அஞ்சனம்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பதமாய்க் குஞ்சி வெளுத்துடலம் கோணாமுன் நெஞ்சமே . . . சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து' (க்ஷேத்திரவெண்பா 15).

Our Lord Civa's divine body cannot be compared to anybody or to any other similarity. He has concern for both Uma Devi and the Ganges river, the goblins and the devils dance around Him and chanting good songs. Our Lord carries the white skull and moves to many houses to get alms. The Supreme Being manifests Himself in Thiru-valam-chuli. "He is the Lord who seized eagerly my bangles from my hand" the goddess says.

2622. குன்றியூர்குடமூக்கிடம்வலம்புரங்குல்வியநெய்த்தானம்
என்றிவ்வூர்களிலோமென்றுமியம்புவரிமையவர்பணிகேட்பார்
அன்றியூர்தமக்குள்ளனஅறிகிலோம்வலஞ்சுழியானார்பால்
சென்றவூர்தனில்தலைப்படலாமென்றுசேயிழைதளர்வாமே. 7

குன்றியூர் குடமூக்கிடம் வலம்புரம் குல்விய நெய்த்தானம்
என்று இவ் ஊர்களிலோம் என்றும் இயம்பு வரிமையவர் பணிகேட்பார்
அன்றியூர் தமக்குள்ளன அறிகிலோம் வலஞ்சுழியானார் பால்
சென்றவூர் தனில் தலைப்படலாம் என்று சேயிழை தளர்வாமே.

kun2RiyUr, kuTamUkku iTam, valampuram, kulaviya neyttAn2am,
en2Ru iv UrkaL i(l)lOm en2Rum iyampuvar; imaiyavar paNi kETpAr;
an2Ri, Ur tamakku uLLan2a aRikilOm; valanjcuzi aran2ArpAl
cen2Ru, a(v) Urtan2il-talaippaTal Am en2Ru cEyizai taLarvu AmE.

பொருள்: குன்றியூர், குடமூக்கு, திருவலம்புரம், திருநெய்த்தானம் எனப்படும் இவ்வூர்களில் இல்லம் உடையேம் என்று இயம்புவர்; இமையவர்கள் பணி செய ஏற்பர்; இவையன்றி அவர்தமக்கு ஊர்கள் இன்னும் பலவுள; அவற்றை முழுதுமாக அறியோம்; திருவலஞ்சுழி அரனார்பாற் சென்று அவ்வூரில் அரனார்பால் கூடலாம் எனச் சென்று சேயிழை தளர்வடைவானோ?

குறிப்புரை: இதிற் குறித்த குன்றியூர் எங்குளதோ? தெரிந்திலது. 'வலம் என்றால் இடம் இருத்தல் வேண்டும்'. தலைப்படல் – சேர்தல். 'தம்மிற்றலைப்பட்டார்' (திருக்களிறு 2). சேயிழை – தலைவி.

Our saint Thiru-gnana-Sambandar said in the verse that the city called Kuntriyoor and the other one Kudamookku are all places for our Lord to manifest. The devas listen to His commands. Our saint Thiru-gnana-Sambandar mentions the two cities in this verse. But we do not know any city other than these two where our Lord is

manifest. He belongs to all cities in the cosmos. However let us reach and go to the temple in Thiru-valam-chuli. These words were chanted by the heroine and she got released from restraint.

2623. குயிலினேர்மொழிக்கொடியிடைவெருவுறக்குலவரைப்பரப்பாய
கயிலைப்பிடித்தெடுத்தவன்கதிர்முடிதோளிருபதுமூன்றி
மயிலினேரனசாயலோடமந்தவன்வலஞ்சுழியெம்மானைப்
பயிலவல்லவர்கதிகாண்பவரல்லவர்காணாரே. 8

குயிலினேர் மொழிக் கொடியிடை வெருவுறக் குலவரைப் பரப்பாய
கயிலைப் பிடித்தெடுத்தவன் கதிர்முடி தோள் இருபதுமூன்றி
மயிலினேரன சாயலோட மந்தவன் வலஞ்சுழி எம்மானைப்
பயில வல்லவர் கதிகாண்பவர் அல்லவர் காணாரே.

kuyilin2 nEr mozik koTiyiTai veru uRa, kula varaip parappu Aya
kayilaiyaip piTittu eTuttavan2 katir muTi tOL irupatum Un2Ri,
mayilin2 Er an2a cAyalOTu amarntavan2, valanjcuzi emmAn2aip
payila vallavar parakati kANpavar; allavar kANArE.

பொருள்: குயிலின் குரலைப் போல் இனிமையான மொழியும் கொடியிடையும் கொண்டவர் உமாதேவியார்; அவர் அச்சமடைய மலைக்குலத்தில் உயர்ந்ததும் பரந்ததுமாகிய கயிலை மலையை இராவணன் தனது இருபது கரங்களினால் பற்றி எடுத்தான்; அவனது மகுடம் தரித்த தலைகள் பத்தும் தோள்கள் இருபதும் நெரியக் கால்விரலை ஊன்றி மயிலின் சாயலை ஒத்தவளுடன் அமர்ந்தவன், திருவலஞ்சுழி எம்மான்; அவனைப் பயில வல்லவர் பரகதி காண்பர்; அல்லவர் காணார்.

குறிப்புரை: கொடியிடையும் மயிலை நேரொத்த சாயலும் உமாதேவியாரைக் குறித்தன. வல்லவர் காண்பவர். அல்லவர்காணார்.

Our Lord Civa's consort Uma Devi speaks very gentle and fine words like the Indian cuckoo. Her waist is as thin as the vine plants. She has tender body like the peacock. She stayed on mount Kailash. To her astonishment and fear, Raavanan was trying to tilt the mountain to keep it aside. But our Lord pressed the top of the mountain with His toe and crushed Raavanan's twenty shoulders. The Lord is manifest along with His consort in the temple in Thiru-valam-chuli city. Those scholars who can

memorise these ten verses and chant them before our Lord will get salvation. They will have no sufferings in their life.

2624. அழலதோம்பியஅலர்மிசையண்ணலுமாவணைத்துயின்றானும்
கழலுஞ்சென்னியுங்காண்பரிதாயவர்மாண்பமர்தடக்கையில்
மழலைவீணையர்மகிழ்திருவலஞ்சுழிவலங்கொடுபாதத்தால்
சுழலுமாந்தர்கள்தொல்வினையதனொடுதுன்பங்கள்களைவாரே. 9

அழலது ஓம்பிய அலர்மிசை அண்ணலும் மாவணைத்து உயின்றானும்
கழலும் சென்னியும் காண்பரிதாயவர் மாண்பமர் தடக்கையில்
மழலை வீணையர் மகிழ்திருவலஞ்சுழி வலங்கொடு பாதத்தால்
சுழலும் மாந்தர்கள் தொல்வினை அதனொடு துன்பங்கள் களைவாரே.

azal atu Ompiya alarmicai aNNalum, aaNait tuyin2RAn2um,
kazalum cen2n2iyum kANpu aritu Ayavar; mANpu amar taTakkaiyil
mazalai vINaiyar; makiz tiru valanjcuzi valamkoTu pAtattAl
cuzalum mAntarkaL tolvin2ai atan2oTu tun2pagkaL kaLaivArE.

பொருள்: மறைவிதிப்படித் தீயோம்புவோனும் தாமரை மலர்மீது இருப்பவனுமாகிய பிரமனும், பாம்பணையில் அறிதுயில் கொண்ட திருமாலும் ஆகிய இருவரும் முறையே சென்னியும் கழலும் காண முயன்று காண அரிதாயவர் ஆகிய சிவபிரானை, தடக்கையில் மழலை போல இனிய இசையை ஒலிக்கும் வீணையுடன் பாடி மகிழ்ந்து திருவலஞ்சுழியைப் பாதத்தால் வலங்கொண்டு சுழலும் மாந்தர்கள் சஞ்சித வினைகளுடன் துன்பங்களைக் களைவார்.

குறிப்புரை: அழலது – தீ. 'சுற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார்'. அண்ணல் – பிரமன். அரவணை – பாம்பாகிய படுக்கை. துயின்றான் – திருமால். ஆயவர் – சிவபிரான். மழலை வீணையர் – 'மிக நல்ல வீணை தடவி' பாதத்தால் சுழலும் மாந்தர்கள் – திருக்கோயிலை வலம் வரும் அன்பர்கள். தொல்வினை – சஞ்சித கர்மம்.

The tutelary gods Thirumaal and Brahma were unable to see our Lord's head and holy feet. At that moment our Lord Civa appeared before them as dazzling infinite supernal tall flame. He holds in His hand the Indian lute. Those servitors who can reach the temple in Thiru-valam-chuli city and worship Him will get rid of their past bad karma which causes sufferings in their life.

2625. அறிவிலாதவன்சமணர்கள்சாக்கியர்தவம்புரிந்தவஞ்செய்வார்
நெறியலாதனகூறுவர்மற்றவைதேறன்மின்மாறாநீர்
மறியுலாந்திரைக்காவிரிவலஞ்சுழிமருவியபெருமானைப்
பிறிவிலாதவர்பெறுகதிபேசிடிலளவறுப்பொண்ணாதே. 10

அறிவிலாதவன் சமணர்கள் சாக்கியர் தவம்புரிந்தவம் செய்வார்
நெறியலாதன கூறுவர் மற்றவை தேறன்மின் மாறாநீர்
மறியுலாம் திரைக்காவிரி வலஞ்சுழி மருவிய பெருமானைப்
பிறிவிலாதவர் பெறுகதி பேசிடில் அளவறுப் பொண்ணாதே.

aRivu ilAta van2camaNarkaL, cAkkiyar, tavam purintu avam ceyvAr--
neRi alAtan2a kURuvar; maRRu avai tERan2 min2! mARA nIr
maRi ulAm tiraik kAviri valanjcuzi maruviya perumAn2aip
piRivu ilAtavar peRu kati pEciTil, aLavu aRuppu oNNAtE.

பொருள்: நல்லறிவில்லாத கொடிய மனமுடைய சமணர்களும் சாக்கியர்களும் தவம் என்று அவமே புரிவார்; நெறியல்லாதவற்றைப் போதிப்பார்; அவர்கள் கூறும் சொற்களை நம்பாதீர்! மாறாக, அலை மறித்து வீசும் காவிரியாறு பாய்கின்ற திருவலஞ்சுழியில் இருக்கும் பெருமானைப் பிரியாது அடைக! அவனைப் பிறிவிலாதவர் பெறும் நற்கதிகளைக் கூறி அளக்க ஒண்ணாது.

குறிப்புரை: தவம் புரிந்து அவம் செய்தல் – மேற்கொண்ட தவத்திற்கு ஒவ்வாத பாவச்செய்கையை உடையராதல். நெறி அல்லாதவற்றைப் போதிப்பர். தேறல்மின் – தெளியத்தக்கன அல்ல என்று தெளியாது ஒழிமின். பிறிவு இல்லாதவர் – இடைவிடாமல் வழிபடும் அடியவர்.

The Jains and Buddhists of this town are ignorant people without divine knowledge. They of course, do some penance, but do all bad deeds in their life. Do not listen to their words, which are all false and non-virtuous. Instead we may talk of those servitors who go to the temple and worship our Lord Civa of Thiru-valam-chuli and think of Him always in their mind. The benefits they get from our Lord cannot be explained and they are all immensely high.

2626. மாதொர்கூறனைவலஞ்சுழிமருவியமருந்தினைவயற்காழி
நாதன்வேதியன்ஞானசம்பந்தன்வாய்நவிற்றியதமிழ்மாலை
ஆதரித்திசைகற்றுவல்லார்சொலக்கேட்டுகந்தவர்தம்மை
வாதியாவினைமறுமைக்குமிம்மைக்கும்வருத்தம்வந்தடையாவே. 11

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயல்காழி
நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்து இசை கற்று வல்லார் சொலக்கேட்டு உகந்தவர் தம்மை
வாதியா வினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே.

mAtu or kURan2ai, valanjcuzi maruviya maruntin2ai, vayal kAzi
nAtan2--vEtiyan2, njAn2acampantan2--vAy naviRRiya tamizmAlai
Atarittu, icai kaRRu vallAr, colak kETTu ukantavar tammai
vAtiyA vin2ai; maRumaikku immaikkum varuttam vantu aTaiyAvE.

பொருள்: உமையம்மையை இடப்பாகத்தில் கொண்டவன்; திருவலஞ்சுழியில் அமுதமாக இருப்பவன் ஆகிய சிவனை, வயல்கள் சூழ்ந்து இருக்கும் சீகாழித் தலைவன், மறையவன், ஞானசம்பந்தன் வாய்மையாகக் கூறிய இத்தமிழ் மாலையை, விரும்பிப் போற்றி இசையுடன் கற்று வல்லவர்கள், சொல்லக் கேட்டு உளம் மகிழ்ந்தவர்கள் ஆகியோரை வினைகள் வருத்தா; மறுமையும் இம்மையும் அவர்களை வருத்தம் வந்து அடையா.

குறிப்புரை: கூறன் – பாகத்தன். மருந்து – பிறவிநோய் தீர்க்கும் மருந்து. தீராநோய் தீர்த்தருள வல்ல மருந்து. 'வருந்துயரந் தீர்க்கும் மருந்து' 'காழிநாதன்' 'வேதியன்' என்பன ஆசிரியர் சிறப்புணர்த்தின. நவிற்றிய – திருவருள் நவிலச்செய்த 'நித்தம் நோய்கள் வாதியா' (தி. 2 ப. 79 பா. 4). வாசித்தல் – வருந்துதல்.

Our Lord Civa who has embedded His consort Uma Devi on the left side of His body is manifest in the temple in Thiru-valam-chuli. He is the Supreme Being, the top most curator of all ailments of all the souls. Our saint Thiru-gnana-Sambandar came to the temple in Thiru-valam-chuli city and chanted with devotion and praised the Lord in these ten verses. Those devotees who can memorise and chant these ten verses with devotion and in the musical tone and those who hear these songs from the devotees - both will get rid of their past bad karma deeds. In this life and in their after life at any period during their life, no sufferings will reach them.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

106ஆம் பதிகம் முற்றிற்று
End of 106th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 243 பதிக எண்: 107

107. திருக்கேதீச்சரம்
107. THIRU-K-KETHEE-CHURAM

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

இஃது ஈழநாட்டுத் தலங்களுள் ஒன்று. மன்னார் தொடர்வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 7.5 கி.மீ தொலைவில் பாலாவி ஆற்றின் கரைமேல் உள்ளது. இலங்கையில் தலை மன்னாருக்கு அருகில் உள்ளது. மாதோட்டம் இது 'மாவின் களிதூங்கும் பொழிலின் மாதோட்ட நன்னகரில், பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல், தேவன் எனையாள்வான் திருக்கேதீச்சரத்தானே' என்னும் இக்கோயிலுக்குரிய, சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. சம்பந்தமூர்த்தி நாயனாரும் இக்கோயில் பதிகத்தில் இதைக் கூறி உள்ளார்கள். இறைவர் திருப்பெயர் திருக்கேதீசுவரர். இறைவியாரது திருப்பெயர் கௌரியம்மை. தீர்த்தம் பாலாவி ஆறு. துவட்டா என்னும் முனிவர் தவம் செய்து பேறு பெற்ற தலமாகும். சம்பந்தர் பதிகம் ஒன்று, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக இரண்டு பதிகங்கள் இருக்கின்றன.

பதிக வரலாறு

ஞானவேந்தர் திருவிராமேச்சுரத்தை நண்ணிப் பாண்டியனும் மங்கையர்க்கரசி அம்மையாரும் மெய்ம்மை மந்திரியாரும் சூழ வழிபட்டுக் கொண்டு பலநாள்கள் இருந்தனர். வழக்கம்போலக் கடற்கரையில் இனிதிருந்த ஒருநாள் ஈழநாட்டுத் திருக்கோணமலையைப் பாடிப் பணிந்தார். அப்போது மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சுரத்தைப் பரவினார். அதுவே இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2627. விருதுகுன்றமாமேருவில்நாணரவாஅனலெரியம்பாப்
பொருதுமூவெயில்செற்றவன்பற்றிநின்றுறைபதியெந்நாளும்
கருதுகின்றவூர்கனைகடற்கடிகமழ்பொழிலணிமாதோட்டம்
கருதநின்றகேதீச்சரங்கைதொழக்கடுவினையடையாவே. 1

விருது குன்றமா மேருவில் நாணரவா அனல் எரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றி நின்று உறைபதி எந்நாளும்
கருதுகின்ற ஊர்கனை கடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரம் கைதொழக் கடுவினை அடையாவே.

virutu kun2Ra, mAmEru vil, nAN aravA, an2al-eri ampA,
porutu mUveyil ceRRavan2 paRRi nin2Ru uRai pati--ennALum
karutukin2Ra Ur--kan2aikaTal kaTi kamaz pozil aNi mAtOTTam,
karuta nin2Ra kEtIccuram kaitoza, kaTuvin2ai aTaiyAvE.

பொருள்: விருது வில், மேருக் குன்றமாக, நாண், வாசுகி எனும் பாம்பாக, அக்கினி அம்பாக, திரிபுரத்தைப் பொருது அழித்தவன் ஆகிய சிவன் விரும்பி உறையும் தலம் திருக்கேதீச்சுரம் ஆகும். எந்நாளும் அவன் கருதுகின்ற ஊர்; ஒலிக்கின்ற கடலும் மணங்கமழ்கின்ற சோலைகள் அழகு செய்யும் மாதோட்டத்தில் யாவரும் விரும்ப நிற்கும் கேதீச்சுரத்தைக் கைதொழ கொடிய வினைகள் அடையாமல் நீங்கும்.

குறிப்புரை: விருது – வெற்றி. அடையாளம் மாமேருகுன்றம் வில் ஆ – மகாமேருமலை வில்லாக. மாதோட்டம் என்பது தலப்பெயர் கேதீச்சுரம் என்பது திருக்கோயில். மகாதுவட்டாபுரம் என்பதன் திரிபன்று. அங்குப் பொழிலணி மாதோட்டம் உளது. இக்கேதீச்சுரத்தில் 'கேது' இருப்பதை இன்றுங்காணலாம். இத்தலத்தை வழிபடுவோர் வினைகளும் நோய்களும் தீரப்பெற்றின்புறுவர் என்பது திண்ணம்.

Our Lord Civa, as a symbol of His victory over the flying three fortresses of asuras, killing all of them at one shot, used the following. He used the big Meru mountain as His bow. He fixed the snake to bend the bow and fasten it by string. He used the burning fire at the tip of the arrow. Thereafter, He shot only one arrow and burnt the three fortresses. After that He created a liking to be manifested in Thiru-k-kethee-churam temple. In this city, the servitors realise that this temple is for Civa's manifestation. This city is surrounded by sea. There are many natural forests near the city. In these forests the flowers spread their sweet smell all around. All the people living in this city never fail to visit the Thiru-k-kethee-churam temple and worship our

Lord. Those who worship our Lord *with their hands*, will never get any severe karma in their life.

2628. பாடல்வீணையர்பலபலசரிதையரெருதுகைத்தருநட்டம்
ஆடல்பேணுவரமரர்கள்வேண்டநஞ்சுண்டிருள்கண்டத்தர்
ஈடமாவதுஇருங்கடற்கரையினிலெழில்திகழ்மாதோட்டம்
கேடிலாதகேதீச்சரந்தொழுதெழக்கெடுமிடர்வினைதானே. 2

பாடல் வீணையர் பலபல சரிதையர் எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்ட நஞ்சு உண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது இருங்கடல் கரையினில் எழில் திகழ்மாதோட்டம்
கேடிலாத கேதீச்சரம் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே.

pATal vINaiyar, pala pala caritaiyar, erutu ukaittu aru naTTam-
ATal pENuvar, amararkaL vENTa nanjcu uNTu iruL kaNTattar,
ITam Avatu--irugkaTal karaiyin2il ezil tikaz mAtOTTam,
kETu ilAta kEtIccuram tozuteza, keTum, iTar vin2aitAn2E.

பொருள்: மறை பாடுவதுடன் யாழினையும் இசைப்பர்; பல ஒழுக்கத்தவர்; எருதினை வாகனமாகச் செலுத்துபவர்; ஆடல் பாடல் விரும்புபவர்; தேவர்கள் வேண்ட நஞ்சினை உண்டதால் இருண்ட கண்டத்தர்; அவருடைய இடமாகிய பெரிய கடற்கரையினில் அழகுடன் விளங்கும் மாதோட்டத்தில் அழிவிலாத கேதீச்சரத்தை தொழுதெழ இடர்செயும் வினைகள் கெட்டு ஒழியும்.

குறிப்புரை: சரிதையர் – ஒழுக்கத்தவர். உகைத்து – செலுத்தி. இருள் – இருண்ட. ஈடம் – முதல் நீட்சி.

Our Lord Civa used to pluck the strings of the lute and adjust the strings and then He will sing sweet melodious songs on the lute. He is the embodiment of various old (Puranic history) stories. He dances very intricate postures perfectly. At the request of devas, He imbibed the poison. His throat is dark blue in colour. He selects the Maathottam city, which is near dark seashore. However, the city is very attractive and is therefore called Maathottam. In this city, the temple Thiru-k-kethee-churam has no blemishes. Those who worship our Lord in this temple, will find that diseases and bad deeds get destroyed in their lives.

2629. பெண்ணோர்பாகத்தர்பிறைதவழ்சடையினரறைகழல்சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித்தாடுவர்பாடுவரகந்தொறுமடுபிச்சைக்
குண்ணலாவதோரிச்சையினுழல்பவருயர்தருமாதோட்டத்
தண்ணல்நண்ணுகேதீச்சரமடைபவர்க்கருவினையடையாவே. 3

பெண் ஓர்பாகத்தர் பிறைதவழ் சடையினர் அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித்து ஆடுவர் பாடுவர் அகந்தொறும் அடுபிச்சைக்
குண்ணலாவதோர் இச்சையின் உழல்பவர் உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணு கேதீச்சரம் அடைபவர்க் கருவினை அடையாவே.

peN or pAkattar, piRai tavaz caTaiyin2ar, aRai kazal cilampu Arkkac
cuNNam Atarittu ATuvar, pATuvar, akamtoRum iTu piccaikku
uNNal Avatu Or iccaiyin2 uzalpavar, uyartaru mAtOTTat,
aNNal, naNNu kEtIccuram aTaipavarkku aruvin2ai aTaiyAvE.

பொருள்: மாதொரு பாகத்தர்; பிறை தவழ்கின்ற சடையை உடையவர்; ஒலியுடைய கழலும் சிலம்பும் ஆரவாரிக்கத் திருவெண்ணீற்றினைப் பூசி ஆடுவர்; பாடுவர்; இல்லங்கள் தோறும் இடுகின்ற பிச்சையேற்று உண்ண அலைவர்; உயர்ந்த மாதோட்டத்தில் தலைவர் எழுந்தருளி இருக்கும் திருக்கேதீச்சுரத்தை அடைபவரை அருவினை அடையா.

குறிப்புரை: சுண்ணம் – திருவெண்ணீறு. பிச்சைக்கு இச்சை – 'தந்த துன்றன்னைக் கொண்டதென்றன்னை' என்ற கருத்தும் ஈண்டுப் பொருந்தும்.

Our Lord Civa has embedded His consort Uma Devi on His body. In His mattress the young moon crawls. He likes to spread the holy ashes over His body. He dances while the anklets and the roll create noise. He used to sing also. He goes from house to house to get alms as though He will eat the food given to Him. Our Lord Civa is manifest in Thiru-k-kethee-churam temple situated in the attractive city - Maathottam. Those devotees who reach the temple and worship our Lord Civa will never get the intense kind of karma.

2630. பொடிகொள்மேனியர்புலியதளரையினர்விரிதருகரத்தேந்தும்
வடிகொள்மூவிலைவேலினர்நூலினர்மறிகடல்மாதோட்டத்
தடிகளாதரித்திருந்தகேதீச்சரம்பரிந்தசிந்தையராகி
முடிகள்சாய்த்தடிபேணவல்லார்தம்மேல்மொய்த்தெழுவினைபோமே. 4

பொடிகொள் மேனியர் புலி அதள அரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர் மறிகடல் மாதோட்டத்
தடிகளாது அரித்திருந்த கேதீச்சரம் பரிந்த சிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேல் மொய்த்தெழு வினைபோமே.

poTi koL mEn2iyar, puli ataL araiyin2ar, viritaru karattu Entum
vaTi koL mUvilai vElin2ar, nUlin2ar, maRikaTal mAtoTTattu
aTikaL, Atarittu irunta kEtIccuram parinta cintaiyar Aki,
muTikaL cAyttu, aTi pENa vallAr tammEl moyttu ezum vin2ai pOmE.

பொருள்: திருநீறு பூசிய திருமேனியர்; புலித்தோல் உடுத்த அரையினர்; விரிந்த கரத்தினில் ஏந்திய மூவிலை வேலினர்; முப்புரி நூலினர்; மோதுகின்ற அலைகளை உடைய கடற்கரை மாதோட்டத்தில் அடிகள் விரும்பி இருக்கும் கேதீச்சுரத்தை மனத்தில் பத்தியுடன் தலை சாய்த்து வணங்கித் திருவடி போற்ற வல்லவர்கள்மேல் திரண்டு எழுகின்ற வலிய வினைகள் நீங்கும்.

குறிப்புரை: பொடி – திருநீறு. இலைவேல் – முத்தலைச் சூலம். அடிகள் – சிவபெருமானை. பரிந்த – அன்பு கொண்ட.

Our Lord Civa's holy body is smeared with holy ashes. He wears on His waist tiger's hide. He holds in His open wide hand the three fold battleaxe which is very sharp. He puts on His chest the three ply sacred thread. With great desire our Lord is manifest in the Thiru-k-kethee-churam temple situated in the city of Maathottam. This city is bordered by the sea, which brings waves that dash on the seashore one after another. Those devotees who with intense fondness go to this temple and worship our Lord Civa will find their bad karma disappear. They will have no suffering in their life.

2631. நல்லராற்றவும்ஞானநன்குடையர்தம்மடைந்தவர்க்கருளீய
வல்லர்பார்மிசைவான்பிறப்பிறப்பிலர்மலிகடன்மாதோட்டத்
தெல்லையில்புகழெந்தைகேதீச்சரமிராப்பகல்நினைந்தேத்தி
அல்லலாசறுத்தரனடியிணைதொழுமன்பராமடியாரே. 5

நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர் தம்மடைந்தவர்க்கு அருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப்பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லலா சறுத்தரன் அடியிணை தொழும் அன்பராம் அடியாரே.

nallar, ARRavum njAn2am nan2ku uTaiyar--tam aTaintavarkku aruL Iya
vallar, pAr micaivAn2 piRappu iRappu ilar, mali kaTal mAtOTTattu
ellai il pukaz entai, kEtIccuram irAppakal nin2aintu Etti,
allal Acu aRuttu, aran2 aTi iNai tozum an2par Am aTiyArE.

பொருள்: ஆற்றவும் நல்லர்; ஆற்றவும் ஞானம் நன்கு உடையர்; தம்மை அடைந்தவர்களுக்கு அருள் செய்ய வல்லவர்; மண்ணுலகத்திலோ வானுலகத்திலோ பிறப்பதும் இறப்பதும் இல்லாதவர்; பெரிய கடற்கரையில் உள்ள மாதோட்டத்தில் அளவிலாத புகழுடைய எம் தந்தையின் கேதீச்சுரத்தை அடியவர்கள் இரவும் பகலும் நினைந்து வழிபட்டு அல்லலையும் ஆசினையும் அறுத்து அன்பர் ஆவார்.

குறிப்புரை: ஆற்றவும் – மிகவும். அருள் ஈய வல்லர். பார்மிசைவான் – மண்ணிலும் விண்ணிலும். எல்லை – அளவு. அல்லல் – துன்பம். ஆசு – குற்றம்.

Our Lord Civa is the most virtuous being. He has the highest divine knowledge. He graces those who reach Him. He has no birth or death on the earth or in the heaven. He has fame everywhere and there is no end. He is manifest in Thiru-k-kethee-churam temple situated in the Maathottam city, which is surrounded by the vast ocean. The people, who think on the Thiru-k-kethee-churam temple both day and night, pray our Lord, and worship Him, will have no suffering and no deficiency in their life. Those who have sincere affection for our Lord are the real devotees.

2632. பேழைவார்சடைப்பெருந்திருமகள்தனைப்பொருந்தவைத்தொருபாகம்
மாழையங்கயற்கண்ணிபாலருளியபொருளினர்குடிவாழ்க்கை
வாழையம்பொழில்மந்திகள்களிப்புறமருவியமாதோட்டக்
கேழல்வெண்மருப்பணிந்தநீள்மார்பர்கேதீச்சரம்பிரியாரே. 6

பேழை வார்சடைப் பெருந்திருமகள்தனைப் பொருந்த வைத்தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணி பாலருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை ஐம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண் மருப்பணிந்த நீள்மார்பர் கேதீச்சரம் பிரியாரே.

pEzai vArcaTaip perun tirumakaL tan2aip porunta vaittu, orupAkam
mAzai am kayal kaNNipAl aruLiya poruLin2ar, kuTivAzkkai--
vAzai ampozil mantikaL kaLippu uRa maruviya mAtOTTa,
kEzal veNmaruppu aNinta nIL mArpar, kEtIccuram piriyArE.

பொருள்: பெருமையும் நீட்சியும் உடைய சடையில் பெருந்திருமகள்தனைப் பொருந்த வைத்து, ஒருபாகத்தில் மாவடு போன்ற கண்ணியை வைத்து அவளுக்கு அருளிய பொருளினை உடையவர்; பன்றியின் வெண்மையான மருப்பினை அணிந்த பரந்த மார்பர். அவர் வெளிப்பட்டு எழுந்தருளிய தலம், அழகிய பொழிலில் மந்திகள் களிப்புடன் விரும்பித் தங்கிய மாதோட்டத்தில் உள்ள கேதீச்சுரம், அவர் அதைப் பிரியாரே.

குறிப்புரை: பேழை – பெருமை. 'பேழைப் பெருவயிற்றோடும் புகுந்து என் உளம்பிரியாந்' (மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை 4). பெருந்திருமகள் – கங்கை. மாழை – அழகு. இங்கு மாதோட்டம் என்பதன் விளக்கம் உளது. கேழல் பன்றி. மருப்பு – கொம்பு.

Our Lord Civa in His long entangled locks of hair keeps and supports the river Ganges and keeps her secretly without visibility. He has embedded His consort Uma Devi on the left side of His body. Her eyes are like the eyes of carp fish. This Lord adorns His body with the white tusk of the pig on His wide chest. He manifests Himself in the Thiru-k-kethee-churam temple and never leaves this place.

2633. பண்டுநால்வருக்கறமுரைத்தருளிப்பல்லுலகினிலுயிர்வாழ்க்கை
கண்டநாதனார்கடலிடங்கைதொழக்காதலித்துறைகோயில்
வண்டுபண்செயுமாமலர்ப்பொழில்மஞ்ஞைநடமிடுமாதோட்டம்
தொண்டர்நாள்தொறுந்துதிசெயஅருள்செய்கேதீச்சரமதுதானே. 7

பண்டு நால்வருக்கற முரைத்தருளிப் பல்லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடல் இடங்கைதொழக் காதலித்து உறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய் கேதீச்சரம் அதுதானே.

paNTu nAlvarukku aRam uraittu aruLip pal ulakin2il uyir vAzkkai
kaNTa nAtan2Ar, kaTaliTam kaitoza, kAtalittu uRai kOyil--
vaNTu paN ceyum mA malarppozil manjnjai naTam iTu mAtOTTam,
toNTar nALtoRum tuticeya, aruL cey kEtIccuram atutAn2E.

பொருள்: முன்பு முனிவர் நால்வருக்கு அறம் உரைத்தருளியவர்; பல உலகங்களையும் படைத்து அவற்றில் உடம்புடன் உயிர் வாழ்க்கையையும் அவ்வுயிர்களின் கன்மத்திற்கேற்பப் படைத்தருளிய தலைவர்; கடலால் சூழப்பட்ட தலத்தில் வாழ் மக்கள் கைதொழுது உய்யும் பொருட்டு விரும்பி உறைகின்ற திருக்கோயில், யாதோவெனில், அது, வண்டுகள் பண்பாடும் பெரிய பொழில்களில் மயில்கள் நடமாடும் மாதோட்டத்தில் தொண்டர்கள் நாள்தோறும் துதி செய்து வணங்க அருள் செய்யும் திருக்கேதீச்சுரம் தானே.

குறிப்புரை: பல உலகங்களிலும் உடம்போடு உயிர்வாழ்க்கையை, அவ்வவ்வுயிர்களின் கன்மத்திற்கேற்ப அருளிய முதல்வன் பரமசிவனே என்றதாம். பண் – பண்ணிசை. மஞ்ஞை – மயில்.

In olden days, our Lord Civa explained divine virtues with deep meaning to four saints. He is the sole divine Supreme Being who establishes the effect of karma of all souls born in all the worlds surrounded by the oceans, to enable those people to visit this Lord in the Thiru-k-kethee-churam temple and worship Him with devotion, He manifests Himself in the Thiru-k-kethee-churam temple. In this city bees sing melody and fly to the forest area. In the gardens of very attractive flowers peacocks dance in Mathottam city. Here the servitors daily visit the temple situated in Mathottam city and pray our Lord and worship Him.

2634. தென்னிலங்கையர்குலபதிமலைநலிந்தெடுத்தவன்முடிதிண்டோள்
தன்னலங்கெடஅடர்த்தவற்கருள்செய்ததலைவனார்கடல்வாயப்
பொன்னிலங்கியமுத்துமாமணிகளும்பொருந்தியமாதோட்டத்
துன்னியன்பொடுமடியவரிறைஞ்சுகேதீச்சரத்துள்ளாரே. 8

தென் இலங்கையர் குலபதி மலை நலிந்து எடுத்தவன் முடிதிண்டோள்
தன்னலம் கெடஅடர்த்தவற்கு அருள்செய்த தலைவனார் கடல்வாயப்
பொன் இலங்கிய முத்துமாமணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னியன் பொடுமடியவர் இறைஞ்சு கேதீச்சரத்து உள்ளாரே.

ten2 ilagkaiyar kulapati, malai nalintu eTuttavan2, muTi tiNtOL
tan2 nalam keTa aTarttu, avaRku aruL ceyta talaivan2Ar--kaTalvAy ap
pon2 ilagkiya muttu mA maNikaLum poruntiya mAtOTTattu,
un2n2i an2poTum aTiyavar iRainjcu--kEtIccurattu uLLArE.

பொருள்: தெற்குத் திக்கில் உள்ள இலங்கையில் வாழும் அரக்கர் குலத்தினருக்குத் தலைவன், இராவணன். கயிலை மலையை வருந்தி எடுத்தவன்; அவனது முடிகள் திண்ணிய தோள்கள் ஆகியவற்றின் வலிமை கெட அடர்த்துப் பின் அவனுக்கு அருள் செய்த தலைவனார்; கடலினிடத்து பொன், விளங்கிய முத்துக்கள் மாமணிகள் ஆகியன பொருந்திய மாதோட்டத்தைத் தியானித்து அன்பொடும் அடியவர் இறைஞ்சுகின்ற கேதீச்சுரத்துள்ளாரே.

குறிப்புரை: குலபதி – குலத்திற்குத் தலைவன். நலிந்து – நெருக்கி. அடர்த்து அவனுக்கு அருள் செய்த தலைவனார். உன்னி – தியாநித்து.

Raavanan, the king of south Sri Lanka tried to squeeze with his hands and shoulders mount Kailash. Then his head and shoulders lost their strength and beauty due to Lord Civa's action. Then Civa heard his melodious song and pardoned him and graced him. Our Lord is such a Chief. The devotees reach the Maathottam and praise our Lord and worship Him who is in the Thiru-k-kethee-churam temple situated in the most attractive city of Maathottam where gold, pearls, ruby and other gems are all fully available. So our Lord desired to manifest Himself in the temple Thiru-k-kethee-churam.

2635. பூவுளானுமப்பொருகடல்வண்ணனும்புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிநின்னடியினைகாண்கிலாவித்தமென்னாகும்
மாவும்பூகமுங்கதலியும்நெருங்குமாதோட்டநன்னகர்மன்னித்
தேவிதன்னொடுந்திருந்துகேதீச்சரத்திருந்தஎம்பெருமானே. 9

பூ உளானும் பொருகடல் வண்ணனும் புவியிடந்து எழுந்தோடி
மேவி நாடி நின் அடியினை காண்கிலா வித்தம் என்னாகும்
மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர் மன்னித்
தேவி தன்னொடுந்திருந்து கேதீச்சரத்து இருந்த எம்பெருமானே.

pU uLAn2um ap poru kaTal vaNNan2um, puvi iTantu ezuntu OTi,
mEvi nATi, nun2 aTi iNai kANkilA vittakam en2 Akum?--
mAvum pUkamum kataliyum nerugku mAtOTTa nan2nakar man2n2i,
tEvi tan2n2oTum tiruntu kEtIccurattu irunta emperumAn2E!

பொருள்: பிரமனும் கடல் வண்ணனாகிய திருமாலும் முறையே மேலெழுந்து பறந்தும் நிலத்தை இடந்தும் பொருந்தித் தேடி உம்முடைய திருமுடி மற்றும் திருவடிகளைக் காண்கிலார்; அவ்வாறு அவர்கள் காண முடியாது நின்ற உம்முடைய சாதுரியம் என்னாகும்? மாவும் பூகமும் கதலியும் நெருங்கும் மாதோட்ட நன்னகரில் தங்கித் தேவி தன்னொடும் அழகிய திருக்கேதீச்சுரத்திலே இருந்த எம் பெருமானே.

குறிப்புரை: பூவுளான் – பிரமன். புவி – பூமி. இடந்து – போந்து. இடந்தவன் மாயன் ஓடியவன் அயன். நுன் அடியினை – உன்னுடைய திருவடிகளிரண்டும். வித்தகம் – சாதுரியம். மா – பூகம் (பாக்கு), கதலி எல்லாம் உள்ளது அம்மாதோட்டம். தேவி – கௌரி (திருக்கேதீச்சரமான்மியம், பகுதி 1 பா. 36).

Oh! Our Lord Civa! You are manifested and reside along with your consort in the attractive temple Thiru-k-kethee-churam permanently. In this city, mango trees, arecanut trees, plantain trees are well in plenty, in the city of Maathottam the temple Thiru-k-kethee-churam is situated. The tutelary god four faced Brahma, manifest in lotus flower, and Thirumaal, the master of the oceans who excavated deep into the earth while Brahma flew very high in the sky, both failed to see Your holy feet and head. Then You stood as a tall infinite dazzling figure, but not visible to those two demigods. For such an action, what an ability You had?

2636. புத்தராய்ச்சிலபுனைதுகிலுடையவர்புறனுரைச்சமணாதர்
எத்தராகிநின்றுண்பவரியம்பியஏழைமைகேளேன்மின்
மத்தயானையைமறுகிடவுரிசெய்துபோர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபாலாவியின்கரையிற்கேதீச்சரமடைமின்னே. 10

புத்தராய்ச் சிலபுனை துகில் உடையவர் புறன் உரைச் சமண் ஆதர்
எத்தராகி நின்று உண்பவர் இயம்பிய ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னு பாலாவியின் கரையில் கேதீச்சரம் அடைமின்னே.

puttarAyc cila pun2ai tukil uTaiyavar, puRan2 uraic camaN Atar,--
ettar Aki nin2Ru uNpavar--iyampiya Ezaimai kElEn2min2!
mattayAn2aiyai maRukiTa uriceytu pOrttavar, mAtOTTattu
attar, man2n2u pAlAviyin2 karaiyil kEtIccuram aTaimi(n2)n2E!

பொருள்: பவுத்தர்களாய் துகில் புனைவார் சிலர்; பழியே உரைக்கின்ற சமணர்களாகிய ஏமாற்றுவோர்; நின்று உண்பவர்களாகிய அவர்கள் இயம்பிய அறியாமையைத் தோற்றுவிக்கும் சொற்களைக் கேளாதீர்! மதம் கொண்ட களிறு கலங்க அதன் தோலினை உரித்துப் போர்த்தவர்; மாதோட்டத்துத் தலைவர்; அவர் இருக்கும் பாலாவியின் கரைமேல் திருக்கேதீச்சுரத்தை அடைமின்!

குறிப்புரை: ஆதர் – அறிவிலார். எத்தர் – ஏமாற்றுவோர், விரகுள்ளவர். ஏழைமை – அறியாமை தோற்றும் சொற்கள். மறுகிட – கலங்க. பாலாவி – அத்தலத்தின் தீர்த்தம் அது மிகப்பெரியது.

The Buddhists wear on their body-stitched cloth. They speak slander and back bite. The Jains cheat and stand and eat. Do not listen to their ignorant words. Our Lord made the rutting elephant tremble at His sight. He stripped off its hide and covered His body with the same hide. Ye devotees! reach the Thiru-k-kethee-churam temple which is situated on the river banks of Paalavi river and worship our Lord who is manifest in the temple.

2637. மாடெலாமணமுரசெனக்கடலினதொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளையணிகாழி
நாடுளார்க்கிறைஞானசம்பந்தன்சொல்நவின்றெழுபாமாலைப்
பாடலாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே. 11

மாடு எலாம் மணமுரசு எனக்கடலினது ஒலிகவர் மாதோட்டத்
தாடல் ஏறுடை அண்ணல் கேதீச்சரத்து அடிகளை அணிகாழி
நாடு உளார்க்கு இறை ஞானசம்பந்தன் சொல்நவின்று எழுபாமாலைப்
பாடல் ஆயினபாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே.

mATu elAm maNamuracu en2ak kaTalin2atu oli kavar mAtOTTattu,
ATal ERu uTai aNNal kEtIccurattu aTikaLai, aNi kAzi
nATu uLArkku iRai--njAn2acampantan2--col navin2Ru ezu pAmAlaip
pATal Ayin2a pATumin2, pattarkAL! parakati peRal AmE.

பொருள்: பக்கம் எல்லாம் மங்கல மணமுரசொலியென கடலொலி முழங்கும் மாதோட்டத்தில் வெற்றி விடையை ஏறும் தலைவர், திருக்கேதீச்சுரத்து அடிகளை, அழகிய காழி நகருளாருக்குத் தலைவன் ஞானசம்பந்தன் சொன்ன இனிய பாமாலைப் பாடல்களாயினவற்றைப் பாடுமின்! பத்தர்களே! பரகதி உறுதியாகப் பெறலாம்.

குறிப்புரை: மணமுரசு – வீரமுரசு, தியாகமுரசு என்னும் மூவகையுள் ஒன்று. 'இமிழ்குரல் முரசம் மூன்று உடன் ஆளும் தமிழ்க்கெழுகூடல் தண்கோல்வேந்து' (புறம் 58). 'வம்மின் எனப்புலவோரை அளித்திடுவண் கொடைமுரசு . . . மணமுரசு . . . திறல்முரசு' (முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் 8). ஆடல் – வெற்றி. காழிநாடுளார்க்கிறை ஆசிரியர். பரகதி – சிவானந்தப்பேறு அடையும் நெறி.

The city Maathottam is on the banks of the sea. The noise of the sea waves is so full that people hearing it assume that a marriage is going on with drum music. In this Maathottam city, our Lord is the most valiant and Chief Supreme Being manifested in Thiru-k-kethee-churam temple. Our saint Thiru-gnana-Sambandar hails from the attractive city of Seerkaazhi. He sang in a melodious tone this garland of ten verses on the Lord at Thiru-k-kethee-churam temple. Oh ye devotees! memorise and chant these ten songs, pray and worship our Lord in the temple. You will get salvation.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

107ஆம் பதிகம் முற்றிற்று
End of 107th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 244 *பதிக எண்: 108*

108. திருவிற்குடிவீரட்டம் 108. THIRU-VIRKUDI-VEERATTAM

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

சிவபெருமான் தன் வீரத்தைக் காட்டிய இடங்கள் எட்டு, அவற்றுள் இது சலந்தரனைச் சங்கரித்த பதி. மயிலாடுதுறை–பேரளம் தொடர்வண்டிப் பாதையில், விற்குடி தொடர்வண்டி நிலையத்திற்கு 1.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. திருவாரூரிலிருந்து பேருந்து வசதி உள்ளது. இறைவர் திருப்பெயர் வீரட்டநாதர். இறைவி திருப்பெயர் ஏலவார் குழலி. கோயில் கட்டுமலையில் இருக்கின்றது. உற்சவ மூர்த்தியின் கையில் சக்கரம் இருக்கின்றது. இதற்குப் ஞானசம்பந்தருடைய பதிகம் ஒன்று மட்டும் உள்ளது.

பதிக வரலாறு

நாவரசரும் ஞானவேந்தரும் திருப்புகலூரில் வழிபட்ட காலத்தில் பிள்ளையார் திருவிற்குடி வீரட்டஞ் சென்று மேவிப் பணிந்து பற்பல ஆயிரம் தொண்டரோடும் போற்றிப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2638. வடிகொள்மேனியர்வானமாமதியினர்நதியினர்மதுவார்ந்த
கடிகொள்கொன்றையஞ்சடையினர்கொடியினருடைபுலியதளார்ப்பர்
விடையேறுமெம்மானமர்ந்தினிதுறைவிற்குடிவீரட்டம்
அடியராகிநின்றேத்தவல்லார்தமைஅருவினையடையாவே. 1

வடிகொள் மேனியர் வான மாமதியினர் நதியினர் மது ஆர்ந்த
கடிகொள் கொன்றை அம்சடையினர் கொடியினர் உடைபுலியது அளார்ப்பர்
விடை ஏறும் எம்மான் அமர்ந்து இனிது உறைவிற் குடிவீரட்டம்
அடியராகி நின்று ஏத்தவல்லார் தமை அருவினை அடையாவே.

vaTi koL mEn2iyar, vAn2a mA matiyin2ar, natiyin2ar matu Arnta
kaTi koL kon2Rai am caTaiyin2ar, koTiyin2ar, uTai puli atu alArppar,
viTai ERum emmAn2, amarntu in2itu uRai viRkuTi vIraTTam,
aTiyar Aki nin2Ru, Etta vallAr tamai aruvin2ai aTaiyAvE.

பொருள்: அழகிய திருமேனியர்; ஆகாயத்தில் தவழும் பிறையைச் சூடியவர்; கங்கை நதியைச் சடையில் தாங்கியவர்; மணமுள்ள கொன்றை மலரை அணிந்த சடையினர்; உமாதேவியாகிய கொடியைப் பாகத்தில் உடையவர்; உடையாகப் புலித்தோலை அரையில் அசைப்பர்; ஊர்தியாக விடையை ஏறுவர்; இப்பண்புகளை உடைய எங்கள் பெம்மான் விருப்பத்துடன் இனிது உறையும் இடம் திருவிற்குடி வீரட்டம்; இவருக்கு அடியாராகிப் பணிய வல்லார்தமை அருவினைகள் அடையா.

குறிப்புரை: வடி – தெளிவு. மது – தேன். கொடி – உமாதேவியார் அருவினை அடையாமைக்கு வேண்டுவது அடியாராகிநின்று ஏத்தும் வன்மை.

Our Lord Civa's body is bright, He has a divine body. He retains on His head the moon that crawls in the sky and the river Ganges. He adorns His matted hair with the flower of sweet Indian laburnum, which is full of honey. He is the consort of Uma Devi who is lean like a vine creeper. He uses on His waist the hide of the tiger. He rides on the bull to move about in the cosmos. This is our Lord who loves to be manifested in the temple in Thiru-virkudi-veerattam city. Those devotees who serve before our Lord and praise His fame will never get any serious sufferings in their life.

2639. களங்கொள்கொன்றையுங்கதிர்விரிமதியமுங்கடிகாமழ்சடைக்கேற்றி
உளங்கொள்பத்தர்பாலருளியபெருமையர்பொருகரியுரிபோர்த்து
விளங்குமேனியரெம்பெருமானுறைவிற்குடிவீரட்டம்
வளங்கொள்மாமலரால்நினைந்தேத்துவார்வருத்தமதறியாரே. 2

களம் கொள் கொன்றையும் கதிர்விரி மதியமும் கடிகாமழ் சடைக்கேற்றி
உளம் கொள் பத்தர்பால் அருளிய பெருமையர் பொருகரி உரிபோர்த்து
விளங்கு மேனியர் எம்பெருமான் உறைவிற் குடிவீரட்டம்
வளம் கொள் மாமலரால் நினைந்து ஏத்துவார் வருத்தம் அது அறியாரே.

kaLam koL kon2Raiyum katir viri matiyamum kaTi kamaz caTaikku ERRi,
uLam koL pattarpAl aruLiya perumaiyar; poru kari uri pOrttu
viLagku mEn2iyar; emperumAn2; uRai viRkuTi vIraTTam,
vaLam koL mA malarAl nin2aintu EttuvAr varuttam atu aRiyArE.

பொருள்: தேனுடைய கொன்றை மலர்களும், நிலவொளி விரிக்கும் பிறைமதியமும் மணங்கமழ் சடைக்கு ஏற்றி அவற்றை உள்ளத்தில் கொள்கின்ற பத்தர்களுக்கு அருளிய பெருமை உடையவர்; போர் செய்யும் களிற்றின் தோலை உரித்துப் போர்த்திய மேனியர்;

அவர் எம்முடைய பெருமான்; அவர் எழுந்தருளியுள்ள விற்குடி வீரட்டத்தை வளமான மலர்களால் வழிபட்டு மனத்தில் நினைந்து வாயால் துதிப்பவர் வருத்தம் என்பதையே அறியார்.

குறிப்புரை: கதிர் – நிலவு. கடி – மணம். பத்தியை உள்ளத்திற் கொண்டவரிடத்தில் சிவனருள் விளங்கும். கரி – யானை. மலரால் வழிபட்டு மனத்தில் நினைத்து வாயால் துதிப்பார்.

Our Lord Civa adorns His head with the Indian laburnum flowers which blossom in saline soil and the moon which broadens its rays on the eighth day, Civa wears these on His sweet smelling mattress. The devotees with concentrated mind, pray to Lord Civa and get His grace, such is His fame. His whole body is brilliant white. He covers His body with the hide of the elephant after He killed it. This Lord is manifest in the temple in Thiru-virkudi-veerattam city. Those servitors who carry rich fresh flowers and spread it on His holy feet with concentrated mind, and pray to Him will never know what unhappiness is.

2640. கரியகண்டத்தர்வெளியவெண்பொடியணிமார்பினர்வலங்கையில்
எரியர்புன்சடையிடம்பெறக்காட்டகத்தாடியவேடத்தர்
விரியுமாமலர்ப்பொய்கைசூழ்மதுமலிவிற்குடிவீரட்டம்
பிரிவிலாதவர்பெருந்தவத்தோரெனப்பேணுவருலகத்தே. 3

கரிய கண்டத்தர் வெளிய வெண்பொடி அணிமார்பினர் வலங்கையில்
எரியர் புன்சடை இடம்பெறக் காட்டு அகத்தாடிய வேடத்தர்
விரியு மாமலர்ப் பொய்கை சூழ்மதுமலி விற்குடிவீரட்டம்
பிரிவிலாதவர் பெருந்தவத்தோர் எனப்பேணுவர் உலகத்தே.

kariya kaNTattar, veLiya-veNpoTi aNi mArpin2ar, valagkaiyil
eriyar, pun2caTai iTam peRak kATTu akattu ATiya vETattar,
viriyum mA malarppoykai cUz matu mali viRkuTi vIraTTam
pirivu ilAtavar perun tavattOr en2ap pENuvar, ulakattE.

பொருள்: நஞ்சுண்டதால் கருமையான கண்டத்தை உடையவர்; வெள்ளை வெளேர் என வெளுத்த வெண்ணீற்றினை அணிந்த மார்பினர்; கைவலத்தில் எரியினை ஏந்தியவர்; பொன் போல் பொலியும் சடையர்; இடுகாட்டகத்தாடிய சிவ வேடத்தர்; அவருடைய, தேன் நிறைந்த தாமரை மலர்கள் பரந்துள்ள பொய்கைகள் சூழ்ந்த விற்குடி வீரட்டத்தை

மனத்தாலும் வாக்காலும் மெய்யாலும் பிரிவிலாதவர் பெரிய தவத்தைச் செய்தவர் என இவ்வுலகத்தில் போற்றப்படுவர்.

குறிப்புரை: வலங்கை – வலக்கை இடக்கையென்றாலே குற்றமில்லாதது. வேடம் – சிவவேடம். பிரிவிலாதவர் – மனத்தாலும் வாக்காலும் மெய்யாலும் நீக்கமின்றி நினைத்தும் போற்றியும் வழிபட்டும் வரும் அடியார்.

Our Lord Civa's throat is dark blue in colour. On His chest, He smears the holy white ashes. In His right hand He holds brightening fire. His matted locks of hair are thick and lap over the ground whenever He moves on. This is how He dances in the burning ghat. This Lord Civa is manifest in the city of Thiru-virkudi-veerattam. This city is surrounded by many flower ponds. These servitors worship our Lord in the temple without any break. All the people in the world will praise those servitors as the real great austere men on earth.

2641. பூதஞ்சேர்ந்திசைபாடலராடலர்பொலிதரநலமார்ந்த
பாதஞ்சேரிணைச்சிலம்பினர்கலம்பெறுகடலெழுவிடமுண்டார்
வேதமோதியநாவுடையானிடம்விற்குடிவீரட்டம்
சேருநெஞ்சினர்க்கல்லதுண்டோபிணிதீவினைகெடுமாறே. 4

பூதம் சேர்ந்து இசை பாடலர் ஆடலர் பொலிதர நலம் ஆர்ந்த
பாதம் சேரிணைச் சிலம்பினர் கலம்பெறுகடல் எழுவிடம் உண்டார்
வேதம் ஓதிய நாவுடையான் இடம் விற்குடிவீரட்டம்
சேரு நெஞ்சினர்க்கு அல்லது உண்டோ பிணி தீவினை கெடுமாறே.

pUtam cErntu icaipATalar, ATalar, politara, nalam Arnta
pAtam cEr iNaiccilampin2ar, kalam peRu kaTal ezu viTam uNTAr,
vEtam Otiya nA uTaiyAn2, iTam viRkuTi vIraTTam
ceru nenjcin2arkku allatu uNTO, piNi tIvin2ai keTum ARE?

பொருள்: பூதங்களுடன் கூடிப் பாடுதலையும் ஆடுதலையும் உடையர்; அழகுடன் பொலியும் திருப்பாதத்துடன் சேர்ந்த இணைச் சிலம்பினர்; மரக்கலம் செல்லும் கடலிடை எழுந்த நஞ்சினை உண்டார்; வேதம் ஓதிய நாவினை உடையார்; அவருடைய இடம் திருவிற்குடி வீரட்டம்; அதனைச் சேரும் நெஞ்சினருக்கு அல்லால் பிணி, தீவினை கெடும் வழி உண்டோ? இல்லை என்க.

குறிப்புரை: பாடுதலுடையார், ஆடுதலுடையார், மரக்கலம், வேதங்களை அருளிச்செய்த முதல்வன், இடைவிடாது நினைக்கும். சேர்தல் – இடைவிடாது நினைத்தல் (குறள் 3 உரை). பிணியும் வினையும் கெடுமாறு, வீரட்டம் சேரும் நெஞ்சினர்க்கே உண்டு. சேரும் என்பது எதுகைத் தொடைக்கு ஏலாது.

Our Lord Civa chants the songs along with the host of goblins. He dances whenever He needs. He wears the tinkling anklets that are tied to His dainty holy feet. He imbibed the poison that came out of the ocean where huge wooden vessels often sail. He is the author of the Vedas which came out of His tongue. This Lord Civa has selected and manifested Himself in the temple in Thiru-virkudi-veerattam city. Are there ways to get rid of bad karma and diseases for anybody unless they go to the temple and worship Lord Civa? No.

2642. கடியஏற்றினர்கனலனமேனியரனலெழலூர்மூன்றும்
இடியமால்வரைகால்வளைத்தான்றனதடியவர்மேலுள்ள
வெடியவல்வினைவீட்டுவிப்பானுறைவிற்குடிவீரட்டம்
படியதாகவேபரவுமின்பரவினாற்பற்றறுமருநோயே. 5

கடிய ஏற்றினர் கனலன மேனியரனல் எழலூர் மூன்றும்
இடிய மால்வரை கால்வளைத்தான் தனது அடியவர் மேல் உள்ள
வெடிய வல்வினை வீட்டுவிப்பான் உறைவிற் குடிவீரட்டம்
படியதாகவே பரவுமின் பரவினாற் பற்றறும் அருநோயே.

kaTiya ERRin2ar, kan2al an2a mEn2iyar, an2al eza Ur mUn2Rum
iTiya mAlvarai kAl vaLaittAn2, tan2atu aTiyavarmEl uLLa
veTiya valvin2ai vITTuvippAn2, uRai viRkuTi vIraTTam
paTiyatu AkavE paravumin2! paravin2Al, paRRu aRum, arunOyE.

பொருள்: வேகமாகச் செல்லும் எருதுடையவர்; நெருப்புப் போலச் சிவந்த மேனியர்; திரிபுரம் மூன்றும் இடிந்து போக உயர்ந்த மேருமலையைக் கால் ஊன்றி வளைத்தவர்; தம்முடைய அடியவர் மேலுள்ள பகையாகிய வினையை அழிப்பர்; அவருடைய விற்குடி வீரட்டத்தினை முறையாகப் பணிமின்; பரவினால், அது, நோய் பற்றறுக்கும் மருந்தாகும்.

குறிப்புரை: ஏற்றினர் – எருதுடையவர். கனல் அன்ன மேனியர் – 'தீவண்ணர் திறம் ஒருகால் செப்பாராகில்'. ஊர் மூன்றும் – திரிபுரங்களும். வரை – மேரு. வெடிய – பகையாகிய. கேடாகிய அச்சத்தினைச் செய்யும். வீட்டுவிப்பான் – கொல்விப்பவன். படி – பண்பு. நோய் பற்று அறும்.

Our Lord Civa sustains the bull which moves very fast. His body is as bright as the supernal fire. He handled the Meru mountain by pressing it with His leg and bent it and then fired over the three fortresses of asuras and burnt them all down. He removes the entire, strong, bad karma of His devotees from their life. This Lord Civa is manifest in the temple in Thiru-virkudi-veerattam city. Oh! Ye people, with good devotion go to the Thiru-virkudi-veerattam city temple and worship our Lord manifest that. If you worship, the severe diseases in your life will leave your body and you will feel happy.

2643. பெண்ணொர்கூறினர்பெருமையர்சிறுமறிக்கையினர்மெய்யார்ந்த
அண்ணலன்புசெய்வாரவர்க்கெளியவராரியவரல்லார்க்கு
விண்ணிலார்பொழில்மல்கியமலர்விரிவிற்குடிவீரட்டம்
எண்ணிலாவியசிந்தையினார்தமக்கிடர்கள்வந்தடையாவே. **6**

பெண் ஓர்கூறினர் பெருமையர் சிறுமறிக்கையினர் மெய்யார்ந்த
அண்ணல் அன்பு செய்வார் அவர்க்கு எளியவர் ஆரியவர் அல்லார்க்கு
விண்ணிலார் பொழில் மல்கிய மலர்விரி விற்குடிவீரட்டம்
எண்ணிலாவிய சிந்தையினார் தமக்கிடர்கள் வந்தடையாவே.

peN or kURin2ar; perumaiyar; ciRumaRik kaiyin2ar; mey Arnta
aNNal; an2pu ceyvAr avarkku eLiyavar; ariyavar, allArkku;
viNNil Ar pozil malkiya malar viri viRkuTi vIraTTam
eN nilAviya cintaiyin2Ar tamakku iTarkaL vantu aTaiyAvE.

பொருள்: மாதொரு பாகர்; பெருமை உடையவர்; சிறிய மான்கன்றினைக் கையில் ஏந்தியவர்; உண்மையான தலைவர்; தன்மாட்டு அன்பு செய்பவர்க்கு எளியவர்; அன்பிலார்க்கு அரியவர்; அவருடைய, மலர்கள் விரிந்துள்ள விண்முட்டும் பொழில்கள் நிறைந்துள்ள விற்குடி வீரட்டத்தைச் சிந்திக்கும் சிந்தை உடையவர்களை இடர்கள் வந்து அடையா.

குறிப்புரை: கூறு – பாகம். மறி – மான். அன்பர்க்கு எளியவர் அல்லார்க்கு அரியவர். 'அளவறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு, அடியவர்க்கு எளியான்' 'மெய்யடியார்க்கு எண்மையனே என்றும் சேயாய் பிறர்க்கு' (திருவாசகம்) விண்ணில் ஆர் பொழில் என்க. எண் – எண்ணுதல்.

Our Lord Civa espoused His consort on the left side of His body. He is God of fame. He holds in His hand a young deer. He is the real Chief. He is an uncomplicated Supreme Being for those who are deeply devoted to Him. He is a very rare person to

those who are not sincere to Him. This Lord is manifest in the temple in Thiru-virkudi-veerattam city. This city is surrounded by great big forests where large number of flower plants, very tall, reaching the sky with large quantity of flowers, are available. Those servitors who always think of this temple and praise our Lord in their mind will never get any hindrance in their life.

7ஆவது பாடல் கிடைக்கப்பெறவில்லை.

2644. இடங்கொள்மாகடலிலங்கையர்கோன்தனையிகழிதாவூன்று
திடங்கொள்மால்வரையானுரையார்தருபொருளினனிருளார்ந்த
விடங்கொள்மாமிடறுடையவனுறைபதிவிற்குடிவீரட்டம்
தொடங்குமாறிசைபாடிநின்றார்தமைத்துன்பநோயடையாவே. 8

இடம் கொள் மாகடல் இலங்கையர் கோன்தனை இகழிதாவூன்று
திடம் கொள் மால்வரையான் உரையார்தரு பொருளினன் இருளார்ந்த
விடம் கொள் மாமிடறு உடையவன் உறைபதி விற்குடிவீரட்டம்
தொடங்கு மாறிசை பாடி நின்றார்தமைத் துன்பநோய் அடையாவே.

iTam koL mAkaTal ilagkaiyar kOn2 tan2ai ikazi tAUn2Ru
tiTam koL mAlvaraiyAn2, urai Artaru poruLin2an2, iruL Arnta
viTam koL mA miTaRu uTaiyavan2, uRaipati viRkuTi vIraTTam
toTagkum ARu icai pATi nin2RAr tamait tun2pam nOy aTaiyAvE.

பொருள்: மணி முதலிய செல்வங்களைத் தன்னிடம் கொண்டுள்ள பெரிய கடலின் நடுவில் உள்ள இலங்கையின் அரசனாகிய இராவணனின் வலிமை அழியக் கால் விரலை ஊன்றியவன்; திண்ணிய பெரிய கயிலை மலையன்; புகழ்வார் புகழுக்கெல்லாம் பொருளானவன்; இருண்மையான விடம் கொண்ட கரிய மிடறுடையவன்; அவன் உறைகின்ற பதியாகிய திருவிற்குடி வீரட்டத்தை இசைபாடி நின்றார் தமைத் துன்பமும் நோயும் அடையாவே.

குறிப்புரை: இகல் – வலி. மிடறு – திருக்கழுத்து. தொடங்கும் ஆறு – தொடங்கும் நெறி. சிவசம்பந்தமான இசைப்பாட்டு என்றவாறு. துன்பநோய் – துன்பத்தைத் தரும் நோய்கள்.

Raavanan is the king of Sri Lanka. This island is surrounded on all sides by vast big broad oceans. Lord Civa is the owner of the strong and big mount Kailash. To destroy the hostile mightiness of Raavanan our Lord Civa pressed the top of the

mountain with His toe. He represents the meaning of all words. His throat is very dark blue in colour because He imbibed the poison. This Lord is manifest in the temple in Thiru-virkudi-veerattam city. Those scholars who can chant divine songs before our Lord in such ways as to long for and remember the fame of Thiru-virkudi-veerattam city will never get any hardships or diseases in their life.

2645. செங்கண்மாலொடுநான்முகன்தேடியுந்திருவடியறியாமை
எங்குமாரெரியாகியஇறைவனையறைபுனல்முடியார்ந்த
வெங்கண்மால்வரைகரியுரித்துகந்தவன்விற்குடிவீரட்டம்
தங்கையால்தொழுதேத்தவல்லாரவர்தவமல்குகுணத்தாரே. 9

செங்கண் மாலொடு நான்முகன் தேடியும் திருவடி அறியாமை
எங்குமார் எரியாகிய இறைவனை அறைபுனல் முடி ஆர்ந்த
வெங்கண் மால்வரை கரி உரித்து உகந்தவன் விற்குடிவீரட்டம்
தங்கையால் தொழுது ஏத்தவல்லார் அவர்தவமல்கு குணத்தாரே.

cegkaN mAloTu nAn2mukan2 tETiyum tiruvaTi aRiyAmai
egkum Ar eri Akiya iRaivan2ai--aRaipun2al muTi Arnta,
veg kaN mAlvaraikkari urittu ukantavan2--viRkuTi vIraTTam
tam kaiyAl-tozutu Etta vallAr avar tavam malku kuNattArE.

பொருள்: சிவந்த கண்களை உடைய திருமாலோடு நான்முகனும் தேடியும் திருவடியை அறியாதவாறு எங்கும் நிறைந்த நெருப்பாகிய இறைவனை, ஒலிக்கின்ற நீரருவிகளை முடியில் கொண்ட மலைபோன்ற களிற்றின் தோலை உரித்து மகிழ்ந்தவன்; அவனுடைய திருவிற்குடி வீரட்டத்தைத் தம் கையால் தொழுது வழிபட வல்லவர்கள் தவம் நிறைந்த குணத்தவரே.

குறிப்புரை: அறியாமை – அறியாதவாறு. ஆர் எரி – நிறைந்த தீ. வரைக்கரி – மலைபோலும் யானை.

The tutelary demigods of Thirumaal and the four faced Brahma were searching to see our Lord's head and feet. They could not see at all. But at that moment, the Lord took the form of a dazzling, infinite, supernal, tall flame before these two demigods. He wears the Ganges on His head. The ferocious elephant came before our Lord Civa. He then killed it and covered His body with its hide and was satisfied with for His action. Those devotees who can go to the temple in the Thiru-virkudi-veerattam city and

worship our Lord by raising their hands and praising His fame will be the real, austere great men of the city.

2646. பிண்டமுண்டுழல்வார்களும்பிரிதுவராடையரவர்வார்த்தை
பண்டுமின்றுமோர்பொருளெனக்கருதன்மின்பரிவுறுவீர்கேண்மின்
விண்டமாமலர்ச்சடையவனிடமெனில்விற்குடிவீரட்டம்
கண்டுகொண்டடிகாதல்செய்வாரவர்கருத்துறுங்குணத்தாரே. 10

பிண்டம் உண்டு உழல்வார்களும் பிரி துவர் ஆடையர் அவர் வார்த்தை
பண்டு மின்றுமோர் பொருள் எனக்கருதன்மின் பரிவுறுவீர் கேண்மின்
விண்ட மாமலர்ச் சடையவன் இடம் எனில் விற்குடிவீரட்டம்
கண்டு கொண்டடி காதல் செய்வார் அவர் கருத்துறும் குணத்தாரே.

piNTam uNTu uzalvArkaLum, piri tuvar ATaiyar, avar vArttai
paNTum in2Rum Or poruL en2ak karutan2 min2! parivu uRuvIr, kENmin2;
viNTa mA malarc caTaiyavan2 iTam en2il, viRkuTivIraTTam;
kaNTu koNTu aTi kAtal ceyvAr avar karuttu uRum kuNattArE.

பொருள்: சோற்றுக் கவளம் உண்டு திரிபவர்கள் துவரூட்டிய ஆடையைப் போர்த்த பவுத்தர்கள் ஆகியோர் வார்த்தைகளை முன்பும் இன்றும் இனி எப்பொழுதும் ஒருபொருளாகக் கருதாதீர்! அன்புள்ளவர்களே! கேளுங்கள்! விரிந்த பெரிய மலர்களை அணிந்த சடையனின் இடம் ஆன திருவிற்குடிவீரட்டத்தைக் கண்டு கொண்டு, அவனுடைய திருவடிகள்மேல் பத்தி செய்வார் உயர்வடையும் குணத்தை உடையவர்களாவர்.

குறிப்புரை: வார்த்தையை ஒரு பொருள் என்று கருதாதீர்கள். பரிவு உறுவீர் – அன்புமிக்கரே! அடி – திருவடிகளை.

Oh ye people! You have intense love of others. Please listen. The Jains eat rice balls and roam. The Buddhists wear ochre cloth. In the olden days and today what these people preach has no substance. Our Lord Civa adorns His matted hair with blossomed flowers. If you ask where Lord Civa is manifested, it is Thiru-virkudi-veerattam. Those who see the temple and develop affection for the Lord and worship Him with devotion will be considered as people of good nature to be remembered.

2647. விலங்கலேசியிடமெனவுடையவன்விற்குடிவீரட்டத்
திலங்குசோதியையெம்பெருமான்றனையெழில்திகழ்கழல்பேணி
நலங்கொள்வாழ்பொழிற்காழியுள்ஞானசம்பந்தனற்றமிழ்மாலை
வலங்கொடேயிசைமொழியுமின்மொழிந்தக்கால்மற்றதுவரமாமே. 11

விலங்கல் ஏசியிடம் என உடையவன் விற்குடிவீரட்டத்து
இலங்கு சோதியை எம்பெருமான் தனை எழில்திகழ் கழல்பேணி
நலங்கொள் வாழ்பொழில் காழியுள் ஞானசம்பந்தன் நற்றமிழ்மாலை
வலங்கொடு இசைமொழியும் இன்மொழிந்தக்கால் மற்றது வரமாமே.

vilagkal Eci iTam en2a uTaiyavan2, viRkuTivIraTTattu
ilagku cOtiyai, emperumAn2 tan2ai, ezil tikaz kazal pENi,
nalam koL vAr pozil kAziyuL njAn2acampantan2 nal-tamizmAlai
valam koTE icai moziyumin2! mozintakkAl, maRRu atu varam AmE.

பொருள்: மலையையே வில்லாகவும் இருப்பிடமாகவும் உடையவன்; அவனுடைய திருவிற்குடி வீரட்டத்தில் விளங்குகின்ற சோதியை, எம்முடைய தலைவனை, எழில் விளங்குகின்ற திருவடிகளைப் போற்றி, அழகுடைய நீண்ட மலர்ப்பொழில்களை உடைய காழியிலிருக்கும் ஞானசம்பந்தனுடைய நல்ல தமிழ் மாலையை வல்லமை பெற்று இசையுடன் பாடுமின்! அவ்வாறு இசைப்பதுவே எல்லாவற்றையும் நல்கும் வரமாகும்.

குறிப்புரை: விலங்கலே (மேருமலையே) சிலையெனவும் (கயிலைமலையே) இடமெனவும் உடைய சிவன். எழில் – அழகு. நலம் – அழகு, செறிவு முதலிய நலங்கள்.

Our Lord Civa uses the Meru mountain as His bow, His place of living is mount Kailash. This Lord of supernal fire manifests Himself in Thiru-virkudi-veerattam city temple. Our saint Thiru-gnana-Sambandar who was born in Seerkaazhi, fully surrounded by attractive gardens, desired to worship His holy feet. He therefore came to Thiru-virkudi-veerattam city and chanted these ten verses in chaste Tamil language. Those devotees who can memorise and chant these Tamil verses in its proper musical style and worship our Lord will get all beneficial things in life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

108ஆம் பதிகம் முற்றிற்று
End of 108th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 245

பதிக எண்: 109

109. திருக்கோட்டூர்

109. THIRU-K-KOTTUR

பண் : நட்டராகம்

Pann: Nattaraagam

திருத்தல வரலாறு

திருத்துறைப்பூண்டி தொடர்வண்டி நிலையத்திற்கு வடமேற்கே 13.5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரைத்தலங்களுள் 111ஆவது ஆகும். திருத்துறைப்பூண்டி – மன்னார்குடிப் பேருந்து வழியில் கோட்டூர் உள்ளது. பேருந்து நிலையத்திலிருந்து வடக்கே சிறிது தூரம் சென்றால் ஆலயத்தை அடையலாம்.

இறைவரின் திருப்பெயர் – கொழுந்து நாதர். இச்செய்தி, 'கொந்துலாமலர் விரிபொழிற் கோட்டூர் நற்கொழுந்தினை' என்னும் இக்கோயிலுக்குரிய திருஞானசம்பந்தரது தேவாரப் பகுதியால் விளங்குகின்றது. இறைவியாரின் திருப்பெயர் தேன்மொழிப்பாவை. தலவிருட்சம் வன்னி. தேவர்களும் குச்சர இருடிகளும் பூசித்துப் பேறு எய்தினர். இச்செய்திகள் இவ்வூர்த் தேவாரத்திலும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

கோட்டூரில் மேற்கிலுள்ளதே இப்பாடல் பெற்ற தலமாகும். இவ்வூருக்குக் கிழக்கில் ஒரு கோயில் இருக்கிறது. இது கீழ்க்கோட்டூர் மணியம்பலமாகும். அது கருவூர்த்தேவர், திருவிசைப் பாடப்பெற்றது. இது திருஞானசம்பந்தப் பெருமானாரால் பாடப்பெற்றது. அவருடைய பதிகம் ஒன்று இருக்கின்றது.

பதிக வரலாறு

சண்பை வேந்தர் மொழி வேந்தரோடு கூடியிருந்து, வற்கடம்போக்கி நாட்டை வாழ்வித்த பின்னர், திருவாஞ்சியம் முதலியவற்றைப் போற்றிக் கோட்டூரில் ஏத்திப்பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2648. நீலமார்தருகண்டனேநெற்றியோர்கண்ணினேயொற்றைவிடைச்
சூலமார்தருகையனேதுன்றுபைம்பொழில்கள்சூழ்ந்தழகாய
கோலமாமலர்மணங்கமழ்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சாலநீள்தலமதனிடைப்புகழ்மிகத்தாங்குவர்பாங்காலே. 1

நீலம் ஆர்தரு கண்டனே நெற்றியோர் கண்ணினே ஒற்றைவிடைச்
சூலம் ஆர்தரு கையனே துன்று பைம்பொழில்கள் சூழ்ந்து அழகாய
கோல மாமலர் மணம் கமழ் கோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவார்கள்
சால நீள்தலம் அதனிடைப் புகழ்மிகத் தாங்குவர் பாங்காலே.

"nIlam Artaru kaNTan2E! neRRi Or kaNNan2E! oRRai viTaic
cUlam Artaru kaiyan2E! tun2Ru paimpozilkaL cUzntu azaku Aya
kOla mA malar maNam kamaz kOTTUr naRkozuntE!" en2Ru ezuvArkaL
cAla nIL talam atan2 iTaip pukaz mikat tAgkuvar, pAgkAlE.

பொருள்: நீலநிறமுடைய ஆலகால விடத்தை உண்ட கண்டனே! நெற்றியில் ஒப்பற்ற கண்ணை உடையோனே! ஒற்றை விடையனே! சூலம் பொருந்திய கையனே! நெருங்கிய பசும்பொழில்கள் சூழ்ந்து அழகாய பொலிவுடைய சிறந்த மலர்களின் மணம் கமழ்கின்ற 'திருக்கோட்டூர் நற்கொழுந்தே' என்று தொழுது எழுவார்கள் இவ்வுலகில் மிகவும் புகழ் பெறுவர்.

குறிப்புரை: நீலம் – நீலநிறமுடைய ஆலகாலவிடம். கோலம் – அழகு. கொழுந்து என்பது இறைவன் திருப்பெயர். சாலநீள் தலம் – சிவலோகம்.

Oh Lord Civa! You are Neelakandan. You are Netrikkannan. You ride on a single bull and go round everywhere. You hold in one of Your hands the three pronged - trident. You are called Kolundhunaathar. You are manifest in Thiru-k-kottur temple surrounded by thick forests where fine flowers full of fragrance blossom. The servitors chant all the fame of Lord Civa while getting up in the early morning and worship Him. He is the tender leaf of the city. Such servitors will reach Civa Loka and will stay very near Lord Civa and will get all praise and good fame.

2649. பங்கயம்மலர்ச்சீறடிப்பஞ்சுறுமெல்விரலரவல்குல்
மங்கைமார்பலர்மயில்குயில்கிளியெனமிழற்றியமொழியார்மென்
கொங்கையார்குழாங்குணலைசெய்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சங்கையொன்றிலராகிச்சங்கரன்திருவருள்பெறலெளிதாமே. 2

பங்கயம் மலர்ச்சீறடிப் பஞ்சுறு மெல்விரல் அரவல்குல்
மங்கை மார்பலர் மயில் குயில் கிளி என மிழற்றிய மொழியார்மென்
கொங்கையார் குழாங்குணலை செய்கோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவார்கள்
சங்கை ஒன்றிலர் ஆகிச் சங்கரன் திருவருள் பெறல் எளிதாமே.

"pagkayammalarcclRaTi, panjcu uRu melviral, aravu alkul,
magkaimAr palar--mayil, kuyil, kiLi, en2a mizaRRiya moziyAr, men2--
kogkaiyAr kuzAm--kuNalai cey kOTTUr naRkozuntE!" en2Ru ezuvArkaL
cagkai on2Ru ilar Aki, cagkaran2 tiru aruL peRal eLitu AmE.

பொருள்: செந்தாமரை மலரிதழ் போன்ற செம்பஞ்சுக் குழம்பு பூசப்பெற்ற சிறிய பாதங்களையும் மெல்லிய விரல்களையும் அல்குலையும் உடைய மங்கையர்; மயிலெனச் சாயலையும் குயில் கிளியென மிழற்றிய மொழியும் உடையவர்கள். மென்மையான கொங்கையர் ஆகிய மங்கையர் பலரும் கூட்டமாகக் குணலைக் கூத்து ஆடுவர்; அத்தகைய ஊராகிய கோட்டூரில் நற்கொழுந்தே என்று தொழுது எழுவார் ஐயமே இன்றிச் சங்கரன் திருவருளை எளிதாகப் பெறுவர்.

குறிப்புரை: பங்கயம் – தாமரை. மயிலும் மொழிக்கு ஒப்பாக்கூறுவது உண்டுபோலும். குயில்மொழி, கிளிமொழி என்பனபோல மயில்மொழி என்று கேட்டிலோம். மிழற்றிய – மெல்லச் சொல்லிய. குணலை – கூத்துள் ஒன்று. சங்கை – சந்தேகம்.

Oh Lord Civa is manifest in Thiru-k-kottur. The damsels' young legs are very attractive, small and tender. Their fingers are thin and soft like cotton. Their waist looks like the hood of the snakes. Their speech, songs and music are similar to that of peacock, Indian cuckoo and parrot. Their breasts are all very soft. Such young girls perform musical drama and dance and enjoy life in the city of Thiru-k-kottur. Our Lord Civa is manifest and called 'Nar-kolundhe'. Those servitors who chant 'Nar-kolundhe' and worship our Lord Civa, with His name as known Sankaran, while getting up in the morning, will get His good grace without any doubt in their life.

2650. நம்பனார்நலமலர்கொடுதொழுதெழுமடியவர்தமக்கெல்லாம்
செம்பொனார்தருமெழில்திகழ்முலையவர்செல்வமல்கியநல்ல
கொம்பனார்தொழுதாடியகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
அம்பொனார்தருமுலகினிலமரரோடமர்ந்தினிதிருப்பாரே. 3

நம்பனார் நலமலர் கொடு தொழுது எழும் அடியவர் தமக்கு எல்லாம்
செம்பொனார் தரும் எழில் திகழ் முலையவர் செல்வ மல்கிய நல்ல
கொம்பனார் தொழுது ஆடிய கோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவார்கள்
அம்பொனார் தரும் உலகினில் அமரரோடு அமர்ந்து இனிது இருப்பாரே.

"nampan2Ar, nal malarkoTu tozutu ezum aTiyavar tamakku ellAm;
cempon2 Artarum ezil tikaz mulaiyavar, celvam malkiya nalla
kompu an2Ar, tozutu ATiya kOTTUr naRkozuntE!" en2Ru ezuvArkaL
am pon2 Artarum ulakin2il amararOTu amarntu in2itu iruppArE.

பொருள்: நல்ல மலர்களைக் கொண்டு தொழுதெழும் அடியவர்களுக்கெல்லாம் நம்பனார்; செம்பொனாற் செய்யப்பட்டது போலும் அழகு திகழ்கின்ற முலையினராகிய வாழ்க்கைத் துணை நலத்துடன் நல்ல கொழுகொம்பு அன்னவர்கள் தொழுது ஆடித் 'திருக்கோட்டூர் நற்கொழுந்தே' எனத் தொழுது எழுவார்கள்; அவர்கள் பொன்னுலகில் தேவரொடும் இனிது இருப்பர்.

குறிப்புரை: அடியவர் தமக்கு எல்லாம் நம்பனார். பொன்னுலகில் தேவரொடும் இனிதிருப்பர்.

Our Lord Civa is supremely desirable for those servitors who in the morning, worship Him with enticing flowers. He is worshipped by dancing and singing women who have thin bodies like red gold, very attractive breasts, those young women look like young tendrils. Lord Civa is manifest in the excellent Thiru-k-kottur city. Those servitors who get up in the early morning chanting the name of Civa of this temple as 'Kolundheesarae' will happily live in the golden heaven along with devas.

2651. பலவுநீள்பொழில்தீங்கனிதேன்பலாமாங்கனிபயில்வாய
கலமஞ்ஞைகள்நிலவுசொற்கிள்ளைகளன்னஞ்சேர்ந்தழகாய
குலவுநீள்வயற்கயலுகள்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
நிலவுசெல்வத்தராகிநீள்நிலத்திடைநீடியபுகழாரே. 4

பலவு நீள்பொழில் தீங்கனி தேன் பலா மாங்கனி பயில்வாய
கல மஞ்ஞைகள் நிலவு சொற்கிள்ளைகள் அன்னம் சேர்ந்து அழகாய
குலவு நீள் வயல் கயலுகள் கோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவார்கள்
நிலவு செல்வத்தராகி நீள் நிலத்திடை நீடிய புகழாரே.

"palavum nIL pozil-tlm kan2i tEn2palA, mAgkan2i, payilvu Aya--
kalavamanjnjaikaL nilavu col kiLLaikaL an2n2am cErntu azaku Aya,
kulavu nIL vayal kayal ukaL--kOTTUr naRikozuntE!" en2Ru ezuvArkaL
nilavu celvattar Aki, nIL nilattu iTai nITiya pukazArE.

பொருள்: இனிய கனிகளை அளிக்கும் தேன்பலா மாங்கனி முதலிய பலமரஞ்செடி கொடிகள் நிறைந்ததும் தோகை மயில்கள், மழலைச் சொற்கள் பயிலும் கிள்ளைகள், அன்னங்கள் எனப் பலவும் சேர்ந்து அழகுடன் விளங்கும் நீண்ட வயல்களில் கயல்மீன்கள் உகளும் 'கோட்டூர் நற்கொழுந்தே' என்று தொழுது எழுவார்கள் அழியாத செல்வம் உடையராவதுடன், இப்பரந்த உலகில் அழியாப் புகழும் உடையராவர்.

குறிப்புரை: பலவு – பல மரஞ்செடி கொடிகளும். கலவம் – தோகை. மஞ்ஞை – மயில். கிள்ளை – கிளி. நிலவு செல்வத்தர் – அழியாத ஐசுவரியமுடையவர். நீடிய – அழியாத.

The city of Thiru-k-kottur provides a forest area on all sides. Inside these jack fruit, mango fruit and many other fruit trees grow in large numbers. The male peacocks with long feathers, parrots, and the swans – all play and enjoy life inside the forests and eat all the fruits available, the forests are full of trees, plants and vines. All the fish very delightedly play and get satisfied in the very rich and gorgeous paddy fields. In such an attractive city of Thiru-k-kottur our Lord is manifest. Those devotees who pray to our Lord Civa and chant 'Nar-kolundhe' (embodiment of sweetest fragrance) will become rich and live with fame in this world.

2652. உருகுவாருள்ளத்தொண்சுடர்தனக்கென்றுமன்பராமடியார்கள்
பருகுமாரமுதெனநின்றுபரிவொடுபத்திசெய்தெத்திசையும்
குருகுவாழ்வயல்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
அருகுசேர்தருவினைகளுமகலும்போயவனருள்பெறலாமே. 5

உருகுவார் உள்ளத்து ஒண்சுடர் தனக்கு என்றும் அன்பராம் அடியார்கள்
பருகுமார் அமுது என நின்று பரிவொடு பத்திசெய்து எத்திசையும்
குருகு வாழ்வயல் சூழ்தரு கோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவார்கள்
அருகு சேர்தரு வினைகளும் அகலும் போயவன் அருள் பெறலாமே.

"urukuvAr uLLattu oNcuTar! tan2akku en2Rum an2par Am aTiyArkaL
parukum Ar amutu!" en2a nin2Ru, parivoTu patti ceytu, "etticaiyum
kuruku vAz vayal cUztaru kOTTUr naRkozuntE!" en2Ru ezuvArkaL
aruku cErtaru vin2aikaLum akalum, pOy; avan2 aruL peRal AmE.

பொருள்: தன்னை நினைந்து உருகுபவர் உள்ளத்தில் ஒளிவளர் விளக்கு; தனக்கு என்றும் அன்பராகும் அடியவர்கள் உண்ணும் அரிய அமுது; என அன்புடன் எத்திசையிலும் பத்தி செய்து, குருகுகள் வாழும் வயல்கள் சூழ்ந்த 'கோட்டூர் நற்கொழுந்தே' என்று தொழுது எழுமவர்களின் நீக்கற்கு அரிய வினைகள் அகன்று போகும்; இறைவனது அருள் பெறலாகும்.

குறிப்புரை: உள்ளம் உருகுவார்க்கு ஒளிவளர் விளக்கு, அன்புடையடியார்க்கு உண் ஆரமுது, பரிவும் பக்தியும் செய்து கோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவார் வினைகள் விலகும். திருவருள் வாய்க்கும்.

To those devotees who think of Him with melting minds, our Lord is supernal flame. To other devotees of ardent love, Lord Civa is the divine nectar. This Lord is manifested in Thiru-k-kottur city. To Him, the servitors with tender love and piety for our Lord offer service to Him. These devotees live in Thiru-k-kottur city where herons are many. They worship our Lord and address Him as 'Nar-kolundhe'. The bad karma of these devotees will be wiped out and our Lord's divine grace will be showered on them.

2653. துன்றுவார்சடைத்தூமதிமத்தமுந்துன்னெருக்கார்வன்னி
பொன்றினார்தலைக்கலனொடுபரிகலம்புலியுரியுடையாடை
கொன்றைபொன்னெனமலர்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவாரை
என்றுமேத்துவார்க்கிடரிலைகேடிலைஏதம்வந்தடையாவே. 6

துன்று வார்சடைத் தூமதி மத்தமும் துன்எருக்கார் வன்னி
பொன்றினார் தலைக் கலனொடு பரிகலம்புலி உரியுடை ஆடை
கொன்றை பொன் என மலர் தருகோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவாரை
என்றும் ஏத்துவார்க்கு இடரிலை கேடிலை ஏதம் வந்தடையாவே.

"tun2Ru vArcaTait tUmati, mattamum, tun2 erukku, Ar van2n2i,
pon2Rin2Ar talai, kalan2oTu, parikalam, puli uri uTai ATai,
kon2Rai pon2 en2a malartaru kOTTUr naRkozuntE!" en2Ru ezuvArai--
en2Rum EttuvArkku iTar ilai; kETu ilai;--Etam vantu aTaiyAvE.

பொருள்: பின்னிய நீண்ட சடையில் தூயமதி; ஊமத்தை மலர்; நெருங்கிய எருக்கு, ஆத்தி, வன்னியிலையும், இறந்த பிரமனின் மண்டையோடு உண்கலன்; புலித்தோல் ஆடை; கொன்றை மாலை பொன்னாபரணம் எனப் பொலிதரும் 'கோட்டூர் நற்கொழுந்தே' என்று தொழுது எழுமவரை என்றும் ஏத்துவாருக்கு இடரில்லை; கேடில்லை; ஏதமும் வந்தடையா.

குறிப்புரை: கோட்டூர் நற்கொழுந்தே என்று எழும் அடியவரை என்றும் வழிபடுவார்க்கு இடரும் கேடும் ஏதமும் இல்லை.

Our Lord's matted locks of hair droop behind Him. On His hair locks, He retains the moon, datura flowers, white yercum flowers, and leaves of summer tree. He adorns His head with the above and places a garland of skulls over His body. He holds a skull in His hand using it to get alms. He wears the tiger's skin on His waist. On all sides of the city, the temple Indian laburnum flowers blossom in large quantities with golden colour. In such a city of Thiru-k-kottur our Lord is manifest and renowned. This Lord is known as Kolundheesar. Those devotees who get up in the early morning, go to the temple daily and worship Him by chanting His name as above will have no distress, no annihilations nor any affliction in their life.

2654. மாடமாளிகைகோபுரங்கூடங்கள்மணியரங்கணிசாலை
பாடுசூழ்மதிற்பைம்பொன்செய்மண்டபம்பரிசொடுபயில்வாய
கூடுபூம்பொழில்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
கேடதொன்றிலராகிநல்லுலகினிற்கெழுவுவர்புகழாலே. 7

மாட மாளிகை கோபுரம் கூடங்கள் மணி அரங்கு அணி சாலை
பாடு சூழ்மதில் பைம்பொன் செய் மண்டபம் பரிசொடு பயில்வாய
கூடு பூம்பொழில் சூழ்தரு கோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவார்கள்
கேடது ஒன்றிலராகி நல்லுலகினில் கெழுவுவர் புகழாலே.

"mATa mALikai, kOpuram, kUTagkaL, maNi aragku, aNi cAlai,
pATu cUz matil paimpon2 cey maNTapam, paricoTu payilvu Aya
kUTu pUmpozil cUztaru kOTTUr naRkozuntE!" en2Ru ezuvArkaL
kETu atu on2Ru ilar Aki, nal ulakin2il kezuvuvar; pukazAlE.

பொருள்: மாட மாளிகைகள், கோபுரங்கள், கூடங்கள், அழகிய அரங்கங்கள், தெருக்கள், பக்கங்களில் சூழ்ந்த மதில்கள், பொன் மண்டபம் முதலியவை நிறைந்து, பூஞ்சோலைகள் சூழ்ந்த 'திருக்கோட்டூர் நற்கொழுந்தே' என்று தொழுது எழுமவர் சிறிதும் கேடிலராகி நல்லுலகில் புகழுடன் விளங்குவர்.

குறிப்புரை: மாளிகை, கோபுரம், கூடம், மணி அரங்கம், சாலை, பொன் மண்டபம், மதில், பொழில், எல்லாம் கோட்டூர்ச் சிறப்பை உணர்த்தின. கேடில்லாதவராய். உலகெலாம் விளங்கிய – புகழ் உடையவராவர்.

Our Lord is manifest in the temple in Thiru-k-kottur city. This city has got on all sides very attractive forests. This city is full of palatial buildings, very large temple towers, gem fixed stages, very well planned city roads, the famous city walls, and the golden hall open on one side etc. The devotees get up and chant 'Oh Lord Nar-kolundhe', pray and worship Him. These devotees will have no downfall in their life. They will have high fame all over the world.

2655. ஒளிகொள்வாளெயிற்றரக்கனவ்வுயர்வரையெடுத்தலுமுமையஞ்சிச்
சுளியவூன்றலுஞ்சோர்ந்திடவாளொடுநாளவற்கருள்செய்த
குளிர்கொள்பூம்பொழில்சூழ்தருகோட்டூர்கொழுந்தினைத்தொழுவார்கள்
தளிர்கொள்தாமரைப்பாதங்களருள்பெறுந்தவமுடையவர்தாமே. 8

ஒளி கொள்வாள் எயிற்று அரக்கன் அவ் உயர்வரை எடுத்தலும் உமை அஞ்சிச்
சுளிய ஊன்றலும் சோர்ந்திட வாளொடு நாள் அவற்கு அருள்செய்த
குளிர் கொள் பூம்பொழில் சூழ்தரு கோட்டூர் கொழுந்தினைத் தொழுவார்கள்
தளிர் கொள் தாமரைப் பாதங்கள் அருள்பெறும் தவம் உடையவர் தாமே.

oLi koL vAL eyiRRu arakkan2 av uyarvarai eTuttalum, umai anjci,
cuLiya Un2Ralum, cOrntiTa, vALoTu nAL avaRku aruL ceyta--
kuLir koL pUmpozil cUztaru--kOTTUr naRkozuntin2ait tozuvArkaL,
taLir koL tAmaraippAtagkaL aruLpeRum tavam uTaiyavar tAmE.

பொருள்: ஒளிவீசும் வாளினைப் போலும் கோரைப் பல்லினனாகிய அரக்கன், இராவணன் கயிலை மலையாகிய உயர் வரையைப் பெயர்த்து எடுக்க முயலும்போது உமை அஞ்சிச் சுளிக்க இறைவன் கால் விரலை ஊன்றினான்; ஊன்றவே, அவன் சோர்ந்து வருந்தினான். சோர்ந்திட்ட, அவனுக்கு வாட்படையும் வாழ்நாளும் அருள் செய்தவன்; குளிர்ச்சியுடைய பைம்பொழில்கள் சூழ்ந்த திருக்கோட்டூர் நற்கொழுந்தினைத் தொழுதெழுமவர் தாமரைத் தளிர் போன்ற திருவடிகளின் அருளைப் பெறுதற்குரிய தவத்தைச் செய்தவராவர்.

குறிப்புரை: வாள் எயிறு – வாள்போலும் கோரைப்பல். சுளிய – சுளிக்க. வாளொடுநாள் – வாட்படையும் ஆயுளும். தளிர்கொள் தாமரைப் பாதங்கள். அருளைப் பெறுதற்குரிய தவம்.

Raavanan, the king of Sri Lanka has very bright and sharp teeth. He once attempted to shift the Kailash mountain, then Uma Devi, sitting on the mount, was frightened due to the slight movement of the mountain. Our Lord Civa, with His holy foot's big toe slightly bent and pressed the mountain top. Raavanan got crushed and

prayed and begged for pardon. Our Lord Civa pardoned him and gave him a divine sword and long life and graced him. This Lord is manifested in the temple in Thiru-k-kottur city, which is surrounded by forests. Those devotees worship the Lord in this city known as Kolundheeswarar. This worship is equal to penance and they could reach the holy lotus feet of our Lord Civa.

2656. பாடியாடுமெய்ப்பத்தர்கட்கருள்செயுமுத்தினைப்பவளத்தைத்
தேடிமாலயன்காணவொண்ணாதஅத்திருவினைத்தெரிவைமார்
கூடியாடவர்கைதொழுகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
நீடுசெல்வத்தராகியிவ்வுலகினில்நிகழ்தருபுகழாரே. 9

பாடி ஆடும் மெய்ப் பத்தர்கட்கு அருள் செயும் முத்தினைப் பவளத்தைத்
தேடி மால் அயன் காணவொண்ணாத அத்திருவினைத் தெரிவைமார்
கூடி ஆடவர் கைதொழு கோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவார்கள்
நீடு செல்வத்தராகி இவ்வுலகினில் நிகழ்தரு புகழாரே.

pATi ATum meyp pattarkaTku aruL ceyum muttin2ai, pavaLattai,
tETi mAl ayan2 kANa oNNAta at tiruvin2ai, "terivaimAr
kUTi ATavar kaitozu kOTTUr naRkozuntE!" en2Ru ezuvArkaL
nITu celvattar Aki, iv ulakin2il nikaztaru pukazArE.

பொருள்: பத்தியோடு பாடியாடுகின்ற பத்தர்களுக்கு அருள்செய்கின்ற முத்தினைப் பவளத்தை; திருமாலும் பிரமனும் தேடிக் காண முடியாத செல்வத்தை; மகளிருடன் கூடி ஆடவர்கள் கைதொழும் 'திருக்கோட்டூர் நற்கொழுந்தே' எனத் தொழுதெழுமவர் அழிவிலாத செல்வத்தை உடையராகி, இவ்வுலகெலாம் நிகழும் புகழும் உடையவராவர்.

குறிப்புரை: பாடிஆடுகின்ற உண்மையடியார்க்கு அருளும் முத்து. அரி அயன் அறியாத திரு. மகளிரும் ஆடவரும் கூடித்தொழும் கோட்டூர்க் கொழுந்தே என்று எழுவார்க்கு நீடிய செல்வமும் உலகெலாம் நிகழும் புகழும் உண்டாம்.

Our Lord Civa, to His true devotees dancing and singing His praise, is an embodiment of grace and is like pearls and coral. He is the Supreme Being of felicity but unknown to Thirumaal and the four faced Brahma who went out in search of Lord Civa and could not see Him at all. Men and women join together and go to the temple in Thiru-k-kottur city and worship our Lord Civa known as 'Kolundhu', manifest in

Thiru-k-kottur city. These devotees will get lasting riches and will become world famous forever.

2657. கோணல்வெண்பிறைச்சடையனைக்கோட்டூர்நற்கொழுந்தினைச்செழுந்திரளைப்
பூணல்செய்தடிபோற்றுமின்பொய்யிலாமெய்யன்நல்லருளென்றும்
காணலொன்றிலாக்காரமண்தேரர்குண்டாக்கர்சொற்கருதாதே
பேணல்செய்தானைத்தொழுமடியவர்பெருமையைப்பெறுவாரே. 10

கோணல் வெண்பிறைச் சடையனைக் கோட்டூர் நற்கொழுந்தினைச் செழுந்திரளைப்
பூணல் செய்தடி போற்றுமின் பொய்யிலா மெய்யன் நல்லருள் என்றும்
காணல் ஒன்றிலாக் காரமண் தேரர் குண்டாக்கர் சொல் கருதாதே
பேணல் செய்தானைத் தொழும் அடியவர் பெருமையைப் பெறுவாரே.

kONal veNpiRaic caTaiyan2ai, kOTTUr naRkozuntin2ai, cezuntiralai,
pUNal ceytu aTi pORRumin2! poy ilA meyyan2 nal aruL en2Rum
kANal on2Ru ilAk kAr amaN, tErarkuNTu Akkar, col karutAtE,
pENal ceytu, aran2ait tozum aTiyavar perumaiyaip peRuvArE.

பொருள்: வளைந்த வெண்பிறையை அணிந்த சடையனை; திருக்கோட்டூர் நற்கொழுந்தினை, செழுந்திரளை, அலங்காரம் செய்து அடி போற்றுமின்; பொய்யிலா மெய்யனாகிய சிவனின் அருளினை என்றும் காணுதலில்லாக் கரிய சமணர்; தேரர் குண்டாக்கர் ஆகியோர் கூறும் சொற்களைப் பொருட்டாகக் கொள்ளாதே. சிவனைப் பத்தி செய்து தொழும் அடியவர் உறுதியாகப் பெருமையைப் பெறுவர்.

குறிப்புரை: பூணல் – மலர்களாலும் ஆடை ஆபரணங்களாலும் அலங்கரித்தல். அரனைப் பேணல் செய்து தொழும் அடியவர். பேணல் – பக்தி.

Our Lord Civa retains the curved white moon in His matted hair. He is manifest in the temple in Thiru-k-kottur city. He is known as Kolundheesar. His luxurious body is adorned with fresh flowers. The devotees praise His fame and worship His holy feet. The Jains and Buddhists have not done any good karma in their past life. Therefore, they were unable to see and get the grace of our Lord who is the embodiment of truth and is free without falsehood. Our Lord's devotees do not listen to their preaching, but with devotion worship our Lord and get all fame in their life.

2658. பந்துலாவிரற்பவளவாய்த்தேன்மொழிப்பாவையோடுருவாரும்
கொந்துலாமலர்விரிபொழிற்கோட்டூர்நற்கொழுந்தினைச்செழும்பவளம்
வந்துலாவியகாழியுள்ஞானசம்பந்தன்வாய்ந்துரைசெய்த
சந்துலாந்தமிழ்மாலைகள்வல்லவர்தாங்குவர்புகழாலே. 11

பந்து உலாவிரற் பவளவாய்த் தேன்மொழிப் பாவையோடு உருவாரும்
கொந்துலா மலர்விரி பொழில் கோட்டூர் நற்கொழுந்தினைச் செழும்பவளம்
வந்து உலாவிய காழியுள் ஞானசம்பந்தன் வாய்ந்துரை செய்த
சந்துலாந் தமிழ்மாலைகள் வல்லவர் தாங்குவர் புகழாலே.

pantu ulA viral pavaLavAyt tEn2 mozippAvaiyOTu uru Arum
kontu ulAm malar viri pozil kOTTUr naRkozuntin2ai, cezum pavaLam
vantu ulAviya kAziyuL njAn2acampantan2 vAyntu uraiceyta
cantu ulAm tamizmAlaikaL vallavar tAgkuvar, pukazAlE.

பொருள்: பந்து நிலவுகின்ற கைவிரல்கள், பவளம் போற் சிவந்த வாய், தேன்போல் இனிக்கும் பேச்சு ஆகியன உடையவள்; பாவை போல அழகியள் ஆகிய உமையைத் தன் உருவில் ஒருபாகமாகக் கொண்டவன்; கொத்துக் கொத்தாக மலர்கள் விரிகின்ற பூம்பொழில்களை உடைய திருக்கோட்டூர் நற்கொழுந்தினைச் செழும்பவளம் வந்து உலவும் காழியுள் ஞானசம்பந்தன் உரை செய்த சந்தம் பொருந்திய இத்தமிழ்மாலையினை வல்லவர் புகழைத் தாங்குவர்.

குறிப்புரை: தேன்மொழிப்பாவை – இத்தலத்தில் உள்ள தேவியார் திருப்பெயர். இதனை மதுரவசனி என்று பின்னோர் மொழிபெயர்த்தனர். கொந்து – பூங்கொத்து. சந்து – சந்தம். பாவண்ணம்.

Our Lord Civa's consort Uma Devi has very thin and fine fingers with which she plays balls. Her mouth looks like coral beads. Her speech and voice are very gentle and sweet like honey. Along with her, our Lord Civa is manifest in the temple in Thiru-k-kottur city, where He is known as Kolundheesar. On all sides of this city, the forests are full of plants with plenty of flowers. Our saint Thiru-gnana-Sambandar hails from Seerkaazhi where the sea waves bring plenty of coral gems to the seashore. He came to the temple in Thiru-k-kottur city, worshipped our Lord Civa and chanted these ten verses in chaste Tamil language. Those who memorise and chant these poems will get all fame in their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

109ஆம் பதிகம் முற்றிற்று
End of 109th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 246 பதிக எண்: 110

110. திருமாந்துறை 110. THIRU-MAANTH-THURAI

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

திருமாந்துறை என்னும் இத்திருத்தலமானது வடகரை மாந்துறை என்று வழங்குகின்றது. காவிரிக்குத் தென்கரையில் ஒரு மாந்துறை இருக்கின்றது. இதை வேறு பிரித்துக் காட்டுதற்கு வடகரை மாந்துறை என்னும் பெயர் வழங்குகிறது. தென்கரை மாந்துறை வைப்புத் தலமாகும். தனக்கெனத் தனிப்பதிகமின்றி, வேறு ஓர் பதியில் வைத்துப் பாடப்பட்டது வைப்புத்தலம் என்னும் பெயர் பெறும்.

இது லால்குடி தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கில் 5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரி வடகரையில் ஐம்பத்தெட்டாவது தலமாகும். திருச்சிராப்பள்ளியிலிருந்தும் லால்குடியிலிருந்தும் பேருந்துகள் செல்கின்றன. இறைவர் திருப்பெயர் ஆம்பிரவனநாதர். இறைவி திருப்பெயர் அழகம்மை. மருதவானவரும் (மருத்துக்களும்) கண்ணுவ முனிவரும் பூசித்துப் பேறு பெற்றனர். இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கின்றது. இதற்கு ஆம்பிரவனம் என்ற வேறு பெயரும் உண்டு. ஆம்பிரவனம் என்றால் மாமரங்கள் உள்ள காடு என்று பொருள்.

பதிக வரலாறு

சைவ முதல் மறையோர் அன்பிலாலந்துறை முன்னவனைத் தொழுது பதியும் பணிந்து வடகரை மாந்துறை அணைந்தார். வலஞ்செய்து உள்புக்குத்தாழ்ந்து, பரிதி மதி மருத்துக்கள் தொழுது வழிபாடு செய்ய நின்ற நிலையைச் சிறப்பித்துப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2659. செம்பொனார்தருவேங்கையும்ஞாழலுஞ்செருந்திசெண்பகமானைக்
கொம்புமாரமும்மாதவிசுரபுனைகுருந்தலர்பரந்துந்தி
அம்பொனேர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகின்ற
எம்பிரானிமையோர்தொழுபைங்கழலேத்துதல்செய்வோமே. 1

செம்பொனார் தருவேங்கையும் ஞாழலும் செருந்தி செண்பக மானைக்
கொம்பு மாரமும் மாதவி சுரபுனை குருந்தலர் பரந்து உந்தி
அம்பொனேர் வருகாவிரி வடகரை மாந்துறை உறைகின்ற
எம்பிரான் இமையோர் தொழு பைங்கழல் ஏத்துதல் செய்வோமே.

cempon2 Artaru vEgkaiyum, njAzalum, cerunti, ceNpakam, An2aik
kompum, Aramum, mAtavi, curapun2ai, kuruntu, alar parantu unti,
am pon2 nEr varu kAviri vaTakarai mAntuRai uRaikin2Ra
empirAn2, imaiyOr tozu, paigkazal Ettutal ceyvOmE.

பொருள்: செம்பொன்னைப் போலப் பூக்கும் வேங்கை ஞாழ! செருந்தி செண்பகம் ஆனைக் கொம்பு சந்தனம் மாதவி, சுரபுன்னை, குருந்தமலர் முதலியவற்றை உந்திக் கொண்டு பரந்து, பொன்னின் நேர்வரு காவிரிவடகரை திருமாந்துறை உறைகின்ற தம்பிரானின், இமையோர் தொழுகின்ற கழலணிந்த திருவடிகளைப் போற்றுதல் செய்வோம்.

குறிப்புரை: வேங்கை பொன் போல் பூக்கும் வேங்கை முதலியவை காவிரி வெள்ளத்தால் உந்தப்பட்டுவருவன. ஆரம் – சந்தனம். பொன் நேர்வருகாவிரி – பொன்னி.

Our Lord Civa is manifest in the temple situated in the city of Thiru-maanth-thurai on the northern bank of river Cauvery. This river water brings parts of kino tree, orange cup calyxed, panicled and blossomed pear tree twigs, michelia chambaca flowers, the tusks of elephants, twigs and branches of sandalwood - also Alexandria laurel flowers, a kind of tree with fragrant folios and flowers and such other things. The running water of the river pushes all these items forward along with its flow. They were left on the banks of the river and people collect them. Lord Civa's holy feet at Thiru-maanth-thurai are worshipped by the devas. We will also worship these holy feet and praise His fame.

2660. விளவுதேனொடுசாதியின்பலங்களும்வேய்மணிநிரந்துந்தி
அளவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானத்
துளவமான்மகனைங்கணைக்காமனைச்சுடவிழித்தவனெற்றி
அளகவாணுதலரிவைதன்பங்கனையன்றிமற்றறியோமே. 2

விளவு தேனொடு சாதியின் பலங்களும் வேய்மணி நிரந்து உந்தி
அளவி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை உறைவானத்
துளவ மான்மகன் ஐங்கணைக் காமனைச் சுட விழித்தவன் எற்றி
அளக வாணுதல் அரிவை தன்பங்கனை அன்றி மற்றறியோமே.

viLavu tEn2oTu cAtiyin2 palagkaLum vEy maNi nirantu unti,
aLavi nIr varu kAviri vaTakarai mAntuRai uRaivAn2, at
tuLava mAlmakan2 aigkaNaik kAman2aic cuTa vizittavan2, neRRi
aLaka vALnutal arivai tan2 pagkan2ai an2Ri, maRRu aRiyOmE.

பொருள்: விளாங்கனி, தேன், சாதிக்காய், மூங்கில்முத்து முதலியன நிரம்ப உந்திக் கலந்து வருகின்ற காவிரியாற்றின் வடகரையிலுள்ள திருமாந்துறை உறைவான். துழாய் மாலை அணிந்த திருமாலுக்கு மகனான ஐங்கணைக் காமன் எரித்து விழ விழித்த நெற்றிக் கண்ணன்; நெற்றியில் சுருண்ட கூந்தலைக் கொண்ட அரிவையாகிய உமையின் பங்கன் ஆகிய சிவனை அன்றி வேறொரு தெய்வம் அறியோமே.

குறிப்புரை: விளவு – விளா. வேய்மணி – மூங்கில்முத்து. துளவமால் மகன் – துழாய் அணிந்த திருமாலுக்கு மகனான. அளகம் – கூந்தல். ஈற்றடியைச் சைவர் மறத்தல் கூடாது (பா. 3, 4 பார்க்க).

Our Lord Civa is manifest in the city of Thiru-maanth-thurai in the temple situated on the northern bank of the river Cauvery. This river carries the fruits of the wood apple tree which are very useful for people to eat. Along with this, the water carries pearl oysters also. Our Lord Civa with the fire of His third eye burnt Kaaman, the god of love and son of Thirumaal, and killed him. Our Lord conspicuously shines in the temple at Thiru-maanth-thurai along with His consort Uma. We people do not know any other Supreme Being in the world than Lord Civa who is manifest in Thiru-maanth-thurai.

2661. கோடுதேன்சொரிகுன்றிடைப்பூகமுங்கூந்தலின்குலைவாரி
ஓடுநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைநம்பன்
வாடினார்தலையிற்பலிகொள்பவன்வானவர்மகிழ்ந்தேத்தும்
கேடிலாமணியைத்தொழலல்லதுகெழுமுதலறியோமே. 3

கோடு தேன் சொரி குன்று இடைப் பூகமும் கூந்தலின் குலைவாரி
ஓடுநீர் வருகாவிரி வடகரை மாந்துறை உறை நம்பன்
வாடினார் தலையிற் பலிகொள்பவன் வானவர் மகிழ்ந்து ஏத்தும்
கேடிலா மணியைத் தொழல் அல்லது கெழுமுதல் அறியோமே.

kOTu tEn2 cori kun2Ru iTaip pUkamum kUntalin2 kulai vAri
OTu nIr varu kAviri vaTakarai mAntuRai uRai nampan2,
vATin2Ar talaiyil pali koLpavan2, vAn2avar makizntu Ettum
kETu ilAmaNiyait tozal allatu, kezumutal aRiyOmE.

பொருள்: கொம்புத்தேன், குன்றுகளில் வளர்ந்த கூந்தற்பனையின் கூந்தற் குலையை வாரிக் கொண்டு ஓடிவருகின்ற வெள்ளப் பெருக்குடைய காவிரியாற்றின் வடகரையில் உள்ள திருமாந்துறையில் உறையும் நம்பன்; பிரமகபாலத்தில் பிச்சை கொள்பவன்; வானவர்கள் மகிழ்ந்து வழிபடும் கேடிலா மணியைத் தொழுதல் அல்லது வேறு முதல்வனை அறியோம்.

குறிப்புரை: வாடினார்தலை – பிரமகபாலம். கேடிலாமணி – இத்தலத்து இறைவர் திருப்பெயர். மாந்துறை மணி என்பன முன் வழங்கியவை. கெழுமுதல் – நிறைவு, பொருத்தம்.

The river Cauvery begins its source from the mountain where in between two small hills, honey flows down. After passing through this place, it carries the leaves of arecanut trees. On the banks of the river, in the city of Thiru-maanth-thurai, conspicuously shines our Lord Civa who has no flaws. We do not know to worship any other god in the world than this Lord of Thiru-maanth-thurai temple.

2662. இலவஞாழலுமீஞ்சொடுசுரபுன்னையிளமருதிலவங்கம்
கலவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகண்டன்
அலைகொள்வார்புனலம்புலிமத்தமுமாடரவுடன்வைத்த
மலையைவானவர்கொழுந்தினையல்லதுவணங்குதலறியோமே. 4

இலவ ஞாழலும் ஈஞ்சொடு சுரபுன்னை இளமருது இலவங்கம்
கலவி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை உறைகண்டன்
அலை கொள்வார் புனலம் புலிமத்தமும் ஆடரவுடன் வைத்த
மலையை வானவர் கொழுந்தினை அல்லது வணங்குதல் அறியோமே.

ilavam, njAzalum, InjcoTu, curapun2n2ai, iLamarutu, ilavagkam,
kalavi nIr varu kAviri vaTakarai mAntuRai uRai kaNTan2;
alai koL vArpun2al, ampuli, mattamum, ATu aravu uTan2 vaitta
malaiyai; vAn2avar kozuttin2ai; allatu vaNagkutal aRiyOmE.

பொருள்: இலவம், ஞாழல், ஈஞ்சு, சுரபுன்னை, இளமருது, இலவங்கம் முதலிய மரங்களோடு கலந்து நீர்பெருகி வருகின்ற காவிரியாற்றின் வடகரையிலுள்ள திருமாந்துறையில் உறைகின்ற கண்டன், அலைபாயும் மிக்க புனலைடைய கங்கை அம்புலி ஊமத்தம்பூ ஆகியவற்றைப் பாம்புடன் சேர வைத்த மலை போன்றவனை, தேவர்களின் கொழுந்தினை அல்லது வேறு தேவரை வணங்குதல் அறியோம்.

குறிப்புரை: இலவம் முதலியவை மரங்கள். ஈஞ்சு – ஈந்து, போலி. கண்டன் – தலைவன். புனல் – கங்கை. அம்புலி – பிறை. மலை – 'அருள் நிதிதரவரும் ஆனந்த மலையே' திருப்பள்ளியெழுச்சி.

Our Lord Civa is the Chief of Thiru-maanth-thurai. He adorns His matted hair by supporting the river Ganges, and retains the moon and the snake. The river Cauvery brings the twigs and branches of the silk cotton tree and also many other things. On the northern riverbanks, the temple is situated. We do not worship anybody except the Chief of devas now manifested in Thiru-maanth-thurai temple. He is the Lord who has adorned His hair with the Ganges, the crescent and the snake.

2663. கோங்குசண்பகங்குருந்தொடுபாதிரிகுரவிடைமலருந்தி
ஓங்கிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானைப்
பாங்கினாலிடுந்தூபமுந்தீபமும்பாட்டவிமலர்சேர்த்தித்
தாங்குவாரவர்நாமங்கள்நாவினில்தலைப்படுந்தவத்தோரே. 5

கோங்கு சண்பகம் குருந்தொடு பாதிரி குரவிடை மலர் உந்தி
ஓங்கிநீர் வருகாவிரி வடகரை மாந்துறை உறைவானைப்
பாங்கினால் இடும் தூபமும் தீபமும் பாட்டு அவி மலர் சேர்த்தித்
தாங்குவார் அவர் நாமங்கள் நாவினில் தலைப்படும் தவத்தோரே.

kOgku, ceNpakam, kuruntoTu, pAtiri, kuravu, iTai malar unti,
Ogki nIr varu kAviri vaTakarai mAntuRai uRaivAn2ai,
pAgkin2Al iTum tUpamum tIpamum pATTu avi(m) malar cErtti,
tAgkuvAr avar, nAmagkaL nAvin2il-talaippaTum tavattOrE.

பொருள்: கோங்கு, சண்பகம், குருந்தம், பாதிரி, குரா ஆகிய மலர்களை உந்திக் கொண்டு வரும் நீர்ப்பெருக்குள்ள காவிரியாற்றின் வடகரையில் திருமாந்துறையில் உறைவானை விதிப்படி இடுகின்ற தூபமும் தீபமும் தோத்திரத்துடன் நிவேதனம் மலரும் சேர்த்துச் சிவபூசை செய்பவர் நாவால் சேரும் தவத்தை உடையவரே ஆவர்.

குறிப்புரை: குரவு – குராமரம். பாங்கு – சிவாகம விதி. பாட்டு – தோத்திரம். அவி – நிவேதனம். தாங்குவார் – சிவபூஜாதுரந்தரர். தலைப்படல் – சேர்தல்.

The river Cauvery brings along with the flood water, flowers, twigs, branches of trees, logs of wood etc., of different kinds from the mountain area such as a kind of champaca, and the twigs and branches of all sorts of trees, the trumpet flower tree, the dote tree. All these are dropped on the northern banks of the river where our God Civa is manifest in the temple in the city of Thiru-maanth-thurai. Those devotees, who reach the temple carrying flowers, an oblation, a lamp, incense, and prayer books and spread the flowers, worship Him and chant His various names, are people of religious penance.

2664. பெருகுசந்தனங்காரகில்பீலியும்பெருமரம்நிமிர்ந்துந்திப்
பொருதுகாவிரிவடகரைமாந்துறைப்புனிதனெம்பெருமானைப்
பரிவினாலிருந்திரவியும்மதியமும்பார்மன்னர்பணிந்தேத்த
மருதவானவர்வழிபடுமலரடிவணங்குதல்செய்வோமே. 6

பெருகு சந்தனம் கார் அகில் பீலியும் பெருமரம் நிமிர்ந்து உந்திப்
பொருது காவிரி வடகரை மாந்துறைப் புனிதன் எம்பெருமானைப்
பரிவினால் இருந்து இரவியும் மதியமும் பார்மன்னர் பணிந்து ஏத்த
மருத வானவர் வழிபடு மலரடி வணங்குதல் செய்வோமே.

peruku cantan2am, kAr akil, pIliyum, peru maram, nimirntu unti,
porutu kAviri vaTakarai mAntuRaip puLitan2 emperumAn2ai--
parivin2Ar iruntu, iraviyum matiyamum pAr man2n2ar paNintu Etta,
marutavAn2avar vazipaTum--malar aTi vaNagkutal ceyvOmE.

பொருள்: பெருகிய சந்தன மரங்கள், கரிய அகில் மரங்கள், மயிற்பீலி, சாய மரங்கள் ஆகியவற்றை ஏறெடுத்து உந்திக் கொண்டு மோதிவரும் வெள்ளமுடைய காவிரியாற்றின் வடகரையில் உள்ள திருமாந்துறையில் உறையும் புனிதனாகிய எம்பெருமானைப்

பத்தியுடன் இருந்து சூரியனும் சந்திரனும் தேவர்களும் பார்மன்னரும் வழிபடும் மலரடிகளை நாமும் வணங்குதல் செய்வோம்.

குறிப்புரை: பரிவு – பக்தி. இரவி – சூரியன். மருதவானவர் – மருத்துக்கள். இதில், இத்தலத்தை வழிபட்டவர்களை உணர்த்தியருளினார்.

The river Cauvery brings very huge quantity of floodwater from the mountain. Along with the profuse water, twigs and branches of sandalwood and eaglewood trees also move on in the water. On the way, especially on the banks of the river at Thiru-maanth-thurai, these logs settle down in plenty. In the temple, our Lord is manifest. He is worshipped by the sun, the moon, the kings and the seven winds with true devotion. We also will worship our Lord's holy feet.

2665. நறவமல்லிகைமுல்லையும்மௌவலும்நாண்மலரவைவாரி
இறவில்வந்தெறிகாவிரிவடகரைமாந்துறையிறையன்றங்
கறவனாகியகூற்றினைச்சாடியஅந்தணன்வரைவில்லால்
நிறையவாங்கிவலித்தெயிலெய்தவன்நிரைகழல்பணிவோமே. 7

நறவ மல்லிகை முல்லையும் மௌவலும் நாண்மலர் அவைவாரி
இறவில் வந்து எறிகாவிரி வடகரை மாந்துறை இறையன்றங்கு
அறவனாகிய கூற்றினைச் சாடிய அந்தணன் வரைவில்லால்
நிறைய வாங்கி வலித்து எயில் எய்தவன் நிரை கழல் பணிவோமே.

naRavam mallikai mullaiyum mauvalum nALmalar avai vAri
iRavil vantu eRi kAviri vaTakarai mAntuRai iRai, an2Ru agku
aRavan2 Akiya kURRin2aic cATiya antaNan2, varaivillAl
niRaiya vAgkiyE valittu eyil eytavan2, nirai kazal paNivOmE.

பொருள்: தேனுள்ள மல்லிகை மலர், முல்லை மலர், காட்டு மல்லிகை மலர் ஆகியவற்றை வாரிக் கொண்டு வந்து சாரலில் எறிகின்ற காவிரியாற்றின் வடகரையில் உள்ள திருமாந்துறையில் உறையும் இறைவன், அன்று தருமனாகிய கூற்றுவனைக் குலைத்த அந்தணன்; மலையாகிய வில்லை, நன்கு வளைத்து திரிபுரத்தை எய்தவன்; அவனுடைய திருவடிகளைப் பணிவோம்.

குறிப்புரை: நறவம் – தேன், மணம். மௌவல் – காட்டு மல்லிகை. இறவில் – மிகுதியில். அறவனாகிய கூற்று – தருமராசன். வரைவில் – மேருவாகியவில். வாங்கி – வளைத்து. எயில் – திரிபுரம்.

The river Cauvery, while flowing down the mountain, carries the jasmine flowers, Arabian jasmine, forest jasmine musk and the reeds in big quantity - all these get along the flood water and gradually settle down on the northern banks of the river at Thiru-maanth-thurai. In the temple situated on the banks of the river, our Lord Civa is manifest. He once kicked and killed the god of death, Kaalan. He once used the Meru mountain as His bow and burnt the three forts of asuraas in the sky. Let us all worship the holy feet of the Lord and get salvation.

2666. மந்தமார்பொழில்மாங்கனிமாந்திடமந்திகள்மாணிக்கம்
உந்திநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானை
நிந்தியாவெடுத்தார்த்தவல்லரக்கனைநெரித்திடுவிரலானைச்
சிந்தியாமனத்தாரவர்சேர்வதுதீநெறியதுதானே. 8

மந்தமார் பொழில் மாங்கனி மாந்திட மந்திகள் மாணிக்கம்
உந்தி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை உறைவானை
நிந்தியா வெடுத்து ஆர்த்த வல்லரக்கனை நெரித்திடு விரலானைச்
சிந்தியா மனத்தாரவர் சேர்வது தீ நெறியது தானே.

mantam Ar pozil mAgkan2i mAntiTa mantikaL, mANikkam
unti nIr varu kAviri vaTakarai mAntuRai uRaivAn2ai;
nintiyA eTuttu Artta val arakkan2ai nerittiTu viralAn2ai;
cintiyA man2attAr avar cErvatu tI neRi atutAn2E.

பொருள்: தென்றல் உலாவுகின்ற பொழில்களில் மந்திகள் மாங்கனி உண்டிட, மணிகளை உந்தி வரும் காவிரியாற்றின் வடகரையில் திருமாந்துறையில் உறையும் இறைவனை, நிந்தித்து கயிலை மலையைப் பெயர்த்து ஆரவாரித்த வலிய அரக்கன் இராவணனை நெரித்த விரலுடையவனைச் சிந்திக்காதவர் சேர்வது தீநெறியதுவே.

குறிப்புரை: மந்தம் – தென்றல். நிந்தியா – நிந்தித்து. சிந்தியா மனத்தார் – சிந்திக்காத மனமுடையவர். தீநெறி – நரகிற் செலுத்தும் தீயகதி.

On all sides of the city of Thiru-maanth-thurai, big gardens with large mango and other fruit trees are grown together. The female monkeys reach these gardens and eat the well riped mango fruits and happily stay there enjoying their life. In the temple of this city Thiru-maanth-thurai, our Lord Civa is manifest. Raavanan, the king of Sri

Lanka slandered our Lord Civa and tried to lift our Lord's mountain and shouted in gratification. Our Lord Civa then pressed the top of the mountain with His toe and crushed Raavanan. Those people who do not think of this action of our Lord Civa will come upon misfortune, calamity and adversity.

2667. நீலமாமணிநித்திலத்தொத்தொடுநிரைமலர்நிரந்துந்தி
ஆலியாவருகாவிரிவடகரைமாந்துறையமர்வானை
மாலுநான்முகன்தேடியுங்காண்கிலாமலரடியினைநாளும்
கோலமேத்திநின்றாடுமின்பாடுமின்கூற்றுவன்நலியானே. 9

நீல மாமணி நித்திலத்து ஒத்தொடு நிரை மலர் நிரந்து உந்தி
ஆலியா வருகாவிரி வடகரை மாந்துறை அமர்வானை
மாலும் நான்முகன் தேடியும் காண்கிலா மலரடியினை நாளும்
கோலம் ஏத்தி நின்றாடுமின் பாடுமின் கூற்றுவன் நலியானே.

nIlamAmaNi nittilattottoTu nirai malar nirantu unti
AliyA varu kAviri vaTakarai mAntuRai amarvAn2ai--
mAlum nAn2mukan2 tETiyum kANkilA--malar aTi iNai nALum
kOlam Etti nin2Ru ATumin2! pATumin2! kURRuvan2 naliyAn2E.

பொருள்: நீலமணிகளை முத்துக் கொத்தொடு பல்வகை மலர்களுடன் சேர்த்து நிரந்து உந்தி முழக்கத்துடன் வருகின்ற காவிரியாற்றின் வடகரையில் திருமாந்துறையில் விரும்பி உறைபவனைத் திருமாலும் நான்முகனும் தேடியுங் காண்கிலார்; அம்மலரடியிணையை நாளும் சிவக்கோலத்துடன் ஏத்தி நின்றாடுமின்! பாடுமின்! இது செய்தீராகின் கூற்றுவன் உம்மை வருத்தமாட்டான்.

குறிப்புரை: நித்திலத்தொத்து – முத்துக்கொத்து. ஆலியா – துளித்து. இணை – இரண்டு. நாளும் – நாடோறும். கோலம் – சிவக்கோலம். நலியான் – வருத்தமாட்டான்.

The floodwater of river Cauvery, while flowing down the mountain, carries the blue sapphire gems, pearls and flowers forward. The river Cauvery runs north of the city of Thiru-maanth-thurai. On the banks of the river all the articles will gradually settle down. Our Lord Civa is manifest in the temple on the northern banks of the river. However, He could not be seen by demigods Thirumaal and Brahma in spite of their search to see our Lord Civa. Oh ye people! please go to the temple and chant divine songs on His holy feet and worship Him, the god of death will not chastise us.

2668. நின்றுணுஞ்சமண்தேரருநிலையிலர்நெடுங்கழைநறவேலம்
நன்றுமாங்கனிகதலியின்பலங்களும்நாணலின்நுரைவாரி
ஒன்றிநேர்வருகாவிரிவடகரைமாந்துறையொருகாலம்
அன்றியுள்ளழிந்தெழும்பரிசழகிதுஅதுவவர்க்கிடமாமே. 10

நின்று உணுஞ் சமண் தேரரும் நிலையிலர் நெடுங்கழை நறவு ஏலம்
நன்று மாங்கனி கதலியின் பலங்களும் நாணலின் நுரைவாரி
ஒன்றி நேர்வரு காவிரி வடகரை மாந்துறை ஒருகாலம்
அன்றி உள் அழிந்து எழும் பரிசு அழகிது அது அவர்க்கு இடமாமே.

nin2Ru uNum camaN, tErarum, nilai ilar; neTugkazai, naRavu, Elam,
nan2Ru mAgkan2i, kataliyin2 palagkaLum, nANalin2 nurai vAri,
on2Ri nErvaru kAviri vaTakarai mAntuRai, oru kAlam
an2Ri, uL azintu ezum paricu azakitu; atu avarkku iTam AmE.

பொருள்: கையிலேந்தி நின்று உண்ணும் சமணர்களும் தேரரும் நிலையான கொள்கையிலர். நீண்ட மூங்கில், தேன், ஏலம், நன்கு பழுத்த மாங்கனி, வாழையின் கனிகளும், நாணல் மலர்கள் ஆகியவற்றை வாரிக் கொண்டு நேர்வருகின்ற காவிரியாற்றின் வடகரையில் திருமாந்துறையில் ஒருகாலத்தன்றி எக்காலமும் உள்ளம் கசிந்து உருகி எழும் தன்மை அழகியது. இப்பரமானந்த நிலை அவ்விறைவர் இருக்கும் இடமாகும்.

குறிப்புரை: கழை – மூங்கில், கரும்பு. நறவு – மணம். கதலி – வாழை. பலம் – பழம். ஒருகாலம் அன்றி – எக்காலத்தும். உள் அழிந்து எழும் பரிசு – நெஞ்சுருகி எழுகின்ற தன்மை. அது – அப்பரமானந்தநிலை.

The Jains of this city stand before houses, beg for alms and eat the food standing on the road sides. The Bhuddhists as well as these people preach false propaganda. The floodwater of river Cauvery carries long bamboo branches, twigs and logs of trees full of honey, mangoes and bananas. The reeds produce foam in the river water. The waves carry these foams of the reeds and reach the northern bank of the river Cauvery. In the temple situated here on the northern banks of the river our Lord Civa is manifest. We must worship all the year this Lord Civa in the temple. That divine supreme stage leads to supreme salvation.

2669. வரைவளங்கவர்காவிரிவடகரைமாந்துறையுறைவானைச்
சிரபுரம்பதியுடையவன்கவுணியன்செழுமறைநிறைநாவன்
அரவெனும்பணிவல்லவன்ஞானசம்பந்தனன்புறுமாலை
பரவிடுந்தொழில்வல்லவரல்லலும்பாவமுமிலர்தாமே. **11**

வரை வளங்கவர் காவிரி வடகரை மாந்துறை உறைவானைச்
சிரபுரம் பதி உடையவன் கவுணியன் செழுமறை நிறைநாவன்
அரவு எனும் பணிவல்லவன் ஞானசம்பந்தன் அன்புறு மாலை
பரவிடும் தொழில் வல்லவர் அல்லலும் பாவமும் இலர்தாமே.

varai vaLam kavar kAviri vaTakarai mAntuRai uRaivAn2ai,
cirapurampati uTaiyavan2--kavuNiyan2, cezumaRai niRai nAvan2,
ara en2um paNi vallan2, njAn2acampantan2--an2pu uRu mAlai
paraviTum tozil vallavar, allalum pAvamum ilar tAmE.

பொருள்: குறிஞ்சி வளங்களைக் கவர்ந்து கொண்டு வருகின்ற காவிரியாற்றின் வடகரையில் உள்ள திருமாந்துறையில் உறையும் இறைவனைச் சிவபுரமென்னும் காழியைப் பதியாக உடையவன் கவுணிய கோத்திரத்தவன், வளமான வேதங்களைப் பயின்ற நாவன், ஹரஹர என்று முழங்குதல் வல்லவன் ஆகிய திருஞானசம்பந்தன் பாடிய பக்தி நிறைந்த இப்பாமாலையைக் கொண்டு தொழுதிட வல்லவர் அல்லும் பகலும் பாவம் இலராவர்.

குறிப்புரை: வரைவளம் – மலைவளங்களை, மறை நிறைநாவன் – வேதங்கள் நிறைந்த நாவினர். அர – அரகர என்னும் முழக்கம். இப்பணியில் வல்லமை நல்லுயிர்க்கே உண்டாகும்.

Our Lord Civa is manifest in the temple situated on the northern bank of the river Cauvery in the city of Thiru-maanth-thurai. The river water brings all products of the mountain forests. Our saint Thiru-gnana-Sambandar belongs to the sect of kounyas. He utters the Vedas with his tongue. He does all the sacrificial duties for Lord Civa. He hails from Seerkaazhi city. He sang with sincere devotion, this garland of verses. Those devotees who memorise and chant them before our Lord and worship Him get rid of all sufferings and sins of their life.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

110ஆம் பதிகம் முற்றிற்று
End of 110th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: *247* பதிக எண்: *111*

111. திருவாய்மூர் 111. THIRU-VAAI-MOOR

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

திருவாய்மூர் என்னும் இத்திருத்தலமானது திருக்குவளை என்று இக்காலம் வழங்கும் திருக்கோளிலிக்குத் தென்கிழக்கே 3 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் ஒன்றாகும். திருவாரூரிலிருந்து திருக்குவளை வழியாக வேதாரணியம் செல்லும் பேருந்துகளில் செல்லலாம். இறைவர் திருப்பெயர் வாய்மூர்நாதர். இறைவியார் திருப்பெயர் பாலினுநன்மொழியாள். தீர்த்தம் சூரிய தீர்த்தம். இது கோயிலுக்கு எதிரில் இருக்கிறது. தலவிருட்சம் பலா.

விடங்கர் எழுந்தருளியிருக்கும் தலங்கள் ஏழனுள் ஒன்று. இவர் நீலவிடங்கர், நடனம் கமல நடனம், சூரியன் பூசித்துப் பேறு பெற்றான். சைவப் பெருமக்களாகிய அப்பரும், சம்பந்தரும் திருமறைக் காட்டில் எழுந்தருளியிருந்த பொழுது வாய்மூர் இறைவர், அப்பர் கனவில் தோன்றி, 'நாம் வாய்மூரில் இருப்போம் வா' என்றனர். உடனே அப்பர் விரைவில் எழுந்து இறைவரைத் தொடர்ந்து சென்றார். திருக்கோயிலுக்கு அருகில் சென்றதும் இறைவர் மறைந்து விட்டனர்.

இதற்குள் ஞானசம்பந்தரும் எழுந்தருள, அப்பர், 'கதவைத் திறக்கப் பாடிய என்னினும், செந்தமிழ் உறைக்கப் பாடி அதை அடைத்த ஞானசம்பந்தப் பெருந்தகையாரும் எழுந்தருளியுள்ளார். அவர்க்குக் காட்சி அளிக்கவாவது வெளிப்பட்டருள வேண்டும்' என்று பாட அவ்வாறே வாய்மூர் இறைவர் காட்சி தந்தருளினார்.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று அப்பர் பதிகங்கள் இரண்டு ஆக மூன்று பதிகங்கள் இருக்கின்றன. சுந்தரரும் 'வாய்மூர் மணாளனை' என்கின்றார்.

பதிக வரலாறு

சிவபிரான் சண்பை வேந்தர்க்கு திருவாய்மூரில் அம்பிகையுடனே கூட மன்னிய ஆடல் காட்டினார். அதை அவர் மொழிவேந்தர்க்கும் காட்டிப் போற்றிப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2670. தளிரிளவளரெனவுமைபாடத்தாளம்மிடவோர்கழல்வீசிக்
கிளரிளமணியரவரையார்த்தாடும்வேடக்கிறிமையார்
விளரிளமுலையவர்க்கருள்நல்கிவெண்ணீறணிந்தோர்சென்னியின்மேல்
வளரிளமதியமொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 1

தளர் இளவளர் என உமை பாடத் தாளம் இட ஓர்கழல் வீசிக்
கிளர் இளமணி அரவரை ஆர்த்தாடும் வேடக் கிறிமையார்
விளர் இளமுலை அவர்க்கு அருள்நல்கி வெண்ணீறு அணிந்தோர் சென்னியின்மேல்
வளர் இளமதியமொடு இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

"taLir iLa vaLar" en2a umai pATa, tALam(m) iTa, Or kazal vIci,
kiLar iLa maNi aravu arai Arttu, ATum vETak kiRimaiyAr;
viLar iLamulaiyavarkku aruL nalki veN nIRu aNintu, Or cen2n2iyin2 mEl
vaLar iLamatiyamoTu,--ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: வளரும் இளங்கொம்பு போன்ற உமை பாடவும் தாளம் இடவும் ஒருதாளை எடுத்து வீசி, கிளர்ந்தெழும் மணியுடைய பாம்பினை அரையில் கட்டி ஆடும் வேடமுடைய பொய்ம்மையார்; பசை கொண்ட இளமுலையருக்கு அருள் நல்கி, வெண்ணீறணிந்து, சென்னியின்மேல் வளரும் இளமதியமொடு, 'அன்புடையீர்! (அப்பரே)' திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: இப்பதிகத்தில் அகத்துறை அமைந்தமை உணர்க. உமையம்மையார் தளிர் இளவளர் எனப் பாடவும் தாளம் இடவும் ஒருதாள் எடுத்தும் ஆடும் கிறிமையார். கிறிமை – பொய்ம்மை. விளர் – வெழுப்பு. 'மன்னிய ஆடல்காட்ட' எனச் சேக்கிழார் சுவாமிகள் அருளியதை நோக்கின், இவர் காணீர் என்று இருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது. அதில் ககர உயிர்மெய் எட்டில் கெட்டிருக்க ரகர ஆகாரமாகக் கொண்டனர் போலும்.

Our Lord Civa's avocation is to dance. Whenever He dances, His consort Uma Devi, similar to young and tender vine with tender leaves - stays near Him and chants divine music in proper tone along with her beating cymbal. At that moment Lord Civa waves His hand which holds the supernal fire. He wears the snake on His waist which has ruby in its hood. He blessed the women who get attached to Him, they have big breasts. He applies the holy ashes all over His body. He retains the moon on His hood and explicitly appears before His audience. This Lord Civa in Thiru-vaai-moor gives His darshan. Oh! ye people see His beautiful appearance.

2671. வெந்தழல்வடிவினர்பொடிப்பூசிவிரிதருகோவணவுடைமேலோர்
பந்தஞ்செய்தரவகைத்தொலிபாடிப்பலபலநடைதொறும்பலிதேர்வார்
சிந்தனைபுகுந்தெனக்கருள்நல்கிச்செஞ்சுடர்வண்ணர்தம்மடிபரவ
வந்தனைபலசெயஇவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 2

வெந்தழல் வடிவினர் பொடிப் பூசி விரிதரு கோவண உடை மேலோர்
பந்தம் செய்து அர வகைத்தொலி பாடிப் பலபல நடைதொறும் பலிதேர்வார்
சிந்தனை புகுந்து எனக்கு அருள்நல்கிச் செஞ்சுடர் வண்ணர்தம் அடிபரவ
வந்தனை பல செய இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

ventazal vaTivin2ar; poTip pUci, viritaru kOvaNa uTaimEl Or
pantam ceytu, aravu acaittu, oli pATi, pala pala naTaitoRum pali tErvAr;
cintan2ai pukuntu, en2akku aruL nalki, cenjcuTar vaNNar tam aTi parava,
vantan2ai pala ceya,--ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: செந்தழல் போலும் வடிவினர்; திருநீற்றினைப் பூசியவர்; விரிந்த கோவண ஆடையர்; அதன்மேல் இறுக்கிப் பாம்பினைக் கச்சாகக் கட்டியவர்; இசையுடன் பாடிக் கொண்டு வாயிற்கடைகள்தொறும் பிச்சை தேர்வார்; என்சிந்தனையுட் புகுந்து எனக்கு அருள் செய்தவர்; செஞ்சுடர் வண்ணர்; அவருடைய திருவடிகளைப் பரவவும், வந்தனைகள் பல செய்யவும் 'அன்புடையீர்! (அப்பரே)' திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: இறைவர் என் சிந்தனையுட்புகுந்து எனக்கு அருள் நல்கித் தன்னைப் பரவச் செய்ய வருவார் காணீர் என்க.

Our Lord Civa's entire divine body appears like supernal fire. He has applied the holy ashes all over His body. He wears the broad fore lap cloth and has tied it round the body using the snake as cord, to have the cloth properly fixed on the loins. He chants and creates the vedic musical sound. He moves on to many houses and accepts the alms. His red supernal fire-coloured body, the Thiru-vaai-moor Lord enters in my mind and graces me. He comes allowing the devotees externally to worship His holy feet. Oh ye people! come to see our Lord who comes towards all of us.

2672. பண்ணிற்பொலிந்தவீணையர்பதினென்கணமுமுணராநஞ்
சுண்ணப்பொலிந்தமிடற்றினாருள்ளமுருகிலுடனாவார்
சுண்ணப்பொடிநீறணிமார்பர்சுடர்பொற்சடைமேல்திகழ்கின்ற
வண்ணப்பிறையோடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 3

பண்ணிற் பொலிந்த வீணையர் பதினென் கணமும் உணரா நஞ்சு
உண்ணப் பொலிந்த மிடற்றினார் உள்ளம் உருகில் உடனாவார்
சுண்ணப் பொடி நீறணி மார்பர் சுடர் பொற்சடை மேல் திகழ்கின்ற
வண்ணப் பிறையோடு இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

paNNin2 polinta vINaiyar; patin2eN kaNamum uNarA nanjcu
uNNap polinta miTaRRin2Ar; uLLam urukin2 uTan2 AvAr;
cuNNappoTi-nIRu aNi mArpar; cuTar pon2 caTai mEl-tikazkin2Ra
vaNNap piRaiyOTu,--ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: பண்ணிசையில் சிறந்த வீணையர்; தேவர் கூட்டத்தால் அறியப்படாதவர்; நஞ்சுண்டதனால் பொலிந்த மிடற்றினர்; உள்ளம் உருகி நினைக்கின் உடன் ஆவர்; திருநீற்றுப் பொடி அணிந்த மார்பினர்; பொன்போலச் சுடரும் சடையின்மேல் விளங்குகின்ற அழகிய பிறையுடன், 'அன்புடையீர்! (அப்பரே)' திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: பண் – பண்ணிசை. வீணையர் – (பா. 8 பார்க்க) பதினெண்கணம் – பதினெட்டுத் தேவர் கூட்டம். நஞ்சு உண்ணப் பொலிந்த மிடற்றினார் – நஞ்சு உண்டும் சாவா ஒருவன் என்ற கருத்தை உணர்த்திற்று. 'உள்ளம் உருகில் உடனாவர்' என்னும் பரமாப்த வசனத்தைத் திருவுந்தியாரில் (7) அமைத்து, உள்ளம் உருகில் உடனாவர் அல்லது தெள்ள அரியர் என்று உந்தீபற; சிற்பரச் செல்வர் என்று உந்தீபற . . . என்றருளியது காண்க. சுண்ணம் – சுவர்ணம். திருநீற்றுப் பொற்சுண்ணம். பொன்போலச் சுடருஞ் சடை.

Our Lord Civan holds in His hands the Indian lute, veena. He imbibed the poison, is beyond the knowledge of 18 special devas. His divine throat is dark blue similar to sapphire. He has applied the white holy ashes paste on His chest. In His attractive plaited locks of hair He retains the moon. This Lord is renowned in the temple in Thiru-vaai-moor city. He will come to give His darshan, the full perception.

2673. எரிகிளர்மதியமொடெழில்நுதன்மேலெறிபொறியரவினொடாறுமூழ்க
விரிகிளர்சடையினர்விடையேறிவெருவவந்திடர்செய்தவிகிர்தனார்
புரிகிளர்பொடியணிதிருவகலம்பொன்செய்தவாய்மையர்பொன்மிளிரும்
வரியரவரைக்கசைத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 4

எரிகிளர் மதியம் ஒடெழில் நுதன் மேல் எறிபொறி அரவினொடாறு மூழ்க
விரிகிளர் சடையினர் விடையேறி வெருவ வந்திடர் செய்த விகிர்தனார்
புரிகிளர் பொடியணி திருவகலம் பொன் செய்த வாய்மையர் பொன்மிளிரும்
வரியரவு அரைக்கசைத்து இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

eri kiLar matiyamoTu ezil nutalmEl, eRi poRi aravin2oTu, ARu mUzka
viri kiLar caTaiyin2ar; viTai ERi; veruva vantu iTar ceyta vikirtan2Ar;
puri kiLar poTi aNi tiru akalam pon2 ceyta vAymaiyar; pon2miLirum
vari aravu araikku acaittu,--ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: அழகிய நெற்றியின் மேல் ஒளிசெய்கின்ற பிறைமதியம், தாக்குதலைச் செய்யும் பாம்பு, கங்கையாறு ஆகியனவெல்லாம் மூழ்கும்படியாக விரிந்த சடையினர்; விடையேறி, யான் மருள வந்து உள்ளத்தைக் கவர்ந்த விகிர்தனார்; பூணூல், திருநீற்று அணி பொலிவு செய்யும் மார்பினர்; சத்திய ரூபர்; பொன்போல ஒளிரும் பாம்பினை அரைக்கு அசைத்து, 'அன்புடையீர்! (அப்பரே)' திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: பொறி – படப்பொறி. அகலம் – மார்பு (பா. 7). வாய்மையர் – சத்தியரூபர். வாய்மைரூபர் என்பதன் மரூஉவே வாய்மூர். அரவு அரைக்கு அசைத்து வருவார் இவர் காணீர் என்க.

Our Lord Civan retains the moon in His matted locks of hair. The moon shines as supernal fire. In His attractive top portion of His forehead, He contains the snake and supports the river Ganges near the snake. He moves on His bull towards us and disturbs us. He is the Supernal Lord. He has besmeared His chest with holy ashes. He is the embodiment of truth. He is renowned in the temple in Thiru-vaai-moor. He has tied a snake shining like gold round His waist and will come to meet us. Please do come to see Him.

2674. அஞ்சனமணிவணமெழில்நிறமாவகமிடறணிகொளவுடல்திமல
நஞ்சினையமரர்களமுதமெனநண்ணியநறுநுதலுமைநடுங்க
வெஞ்சினமால்களியானையின்தோல்வெருவுறப்போர்த்ததன்றிமுமஃதே
வஞ்சனைவடிவினொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 5

அஞ்சன மணிவணம் எழில்நிறம் ஆகம் இடறணி கொள உடல் திமல
நஞ்சினை அமரர்கள் அமுதம் என நண்ணிய நறுநுதல் உமை நடுங்க
வெஞ்சின மால் களி யானையின் தோல் வெருவுறப் போர்த்த அன்றி முமஃதே
வஞ்சனை வடிவினொடி இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

anjcan2a maNivaNam ezil niRamA akammiTaRu aNi koLa, uTal timila,
nanjcin2ai, amararkaL amutam en2a, naNNiya naRu nutal umai naTugka
venjcin2a mAlkaLiyAn2aiyin2 tOl veru uRap pOrttu, atu an2ri mumaHtE,
vanjcan2ai vaTivin2oTu, --ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: இருள்நிற நஞ்சினை அமுதமென நண்ணிய அமரர்கள் உடல் அஞ்சன மணிவணம் கொள, தன்னுடைய மிடறிடம் அணிகொள, உமையம்மை நடுங்க வெஞ்சினத்ததாகிய பெரிய களிற்றின் தோலினைப் போர்த்த தன்னுடைய நிறமும், அந்நஞ்சின் கரிய நிறமாய், அவ்வஞ்சனை வடிவுடன், 'அன்புடையீர்! (அப்பரே)' திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: நீலமணி போலும் மேனியர். அஞ்சனம் – கருநிறம். மணிவண்ணம் போலும் அழகிய நிறம். அகம் மிடறு – கழுத்திடம். திமிலம் – பேரொலி.

The entire devas trembled to see the poison coming out of the ocean and ran to Lord Civa and begged to save them. Then our Lord Civa imbibed the poison to gain azure colour for His body and to make His throat attractive. Therefore, He treated the poison as ambrosia and imbibed it. His consort Uma Devi with very attractive forehead trembled to see the rutted elephant. Our Lord stripped off the hide of the elephant while those who witnessed it got frightened. Then our Lord covered His body with the hide of the elephant. This Lord of Thiru-vaai-moor, to entice the ladies, comes in the posture of a deceitful person. Please do come.

2675. அல்லியமலர்புல்குவிரிகுழலார்கழலிணையடிநிழலவைபரவ
எல்லியம்போதுகொண்டெரியேந்தியெழிலொடுதொழிலவையிசையவல்லார்
சொல்லியஅருமறையிசைபாடிச்சூடிளமதியினர்தோடுபெய்து
வல்லியந்தோலுடுத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 6

அல்லிய மலர் புல்கு விரிகுழலார் கழல் இணையடி நிழலவை பரவ
எல்லி அம்போது கொண்டு எரியேந்தி எழிலொடு தொழிலவை இசைய வல்லார்
சொல்லிய அருமறை இசைபாடிச் சூடிளமதியினர் தோடு பெய்து
வல்லியம் தோல் உடுத்தி இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

alliya malar pulku virikuzalAr kazal iNai aTi nizal avai parava,
elli ampOtu koNTu eri Enti, eziloTu tozil avai icaiya vallAr;
colliya arumaRai icai pATi, cUTu iLamatiyin2ar; tOTu peytu,
valliyantOl uTuttu,--ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: அகவிதழ்களையுடைய மலர்களைச்சூடிய விரிந்த கூந்தலை உடைய மகளிர் தம்முடைய கழலணிந்த திருவடிகளைப் பரவிப் போற்ற, சந்தியா காலத்தில் எரியேந்தி அழகுடன் மகாசங்காரதாண்டவம் ஆட வல்லார்; தாம் சொல்லிய மறைகளை இசையுடன் பாடியவர்; இளம்பிறையைச் சூடியவர்; ஒரு காதில் தோடும் பெய்து புலித்தோலுடுத்து, 'அன்புடையீர்! (அப்பரே)' திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: இதன் முதலீரடியொடும். நள்ளிருள் மகளிர் நின்று ஏத்தவான வாழ்க்கையது உடையார். (தி. 2 ப. 94 பா. 7) என்பதைப் பொருத்திக் காண்க. மகா சங்கார தாண்டவத்தைப் பல்வேறு கூறுபாடுற்ற சத்திகள் ஒருங்கு சேர்ந்து காணும் உண்மை உணர்த்திற்று. வல்லியம் – புலி.

Our Lord Civa's avocation is to dance at midnight holding fire in His hand. The young girls who adorn their hair with different kinds of flowers, one after another in a string attach it over their broadened hair. They all go to the temple at night and extol Him with great enthusiasm and admiration. Our Lord accepts the girls' affection and graces them. Our Lord Civa, manifest in the temple in Thiru-vaai-moor city, goes on singing vedic songs. He retains the young moon in His matted hair. He wears on one of His ears the ola roll. He wears on His waist the hide of a tiger and appears before us. Please do come to see our Lord of Thiru-vaai-moor.

2676. கடிபடுகொன்றைநன்மலர்திகழுங்கண்ணியர்விண்ணவர்கனமணிசேர்
முடிபில்குமிறையவர்மறுகினல்லார்முறைமுறைபலிபெயமுறுவல்செய்வார்
பொடியணிவடிவொடுதிருவகலம்பொன்னெனமிளிர்வதொராரவினொடும்
வடிநுனைமழுவினொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 7

கடிபடு கொன்றை நன்மலர் திகழும் கண்ணியர் விண்ணவர் கனமணிசேர்
முடிபில்கும் இறையவர் மறுகினல்லார் முறை முறை பலிபெய முறுவல் செய்வார்
பொடி அணி வடிவொடு திருவகலம் பொன் என மிளிர்வதொர் ஆரவினொடும்
வடி நுனை மழுவினொடி இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

kaTipaTu kon2Rai nan2malar tikazum kaNNiyar; viNNavar kan2a maNi cEr
muTi pilkum iRaiyavar; maRukil nallAr muRai muRai pali peya, muRuval ceyvAr;
poTi aNi vaTivoTu, tiru akalam pon2 en2a miLirvatu or aravin2oTum,
vaTi nun2ai mazuvin2oTu, --ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: மணமுள்ள கொன்றையாகிய நண்மலர்கள் விளங்கிய கண்ணியர்; விண்ணவராகிய சூரிய சந்திரர் போல ஒளி சிதறும் முடியணிந்த இறையவர்; தெருக்களில் மகளிர் முறைமுறையே பிச்சையிடப் புன்முறுவல் செய்வார்; திருநீறு பூசிய மார்பகத்தில் பொன்னால் ஆன பூணூலைப் போல் மிளிர்வதொரு பாம்புடையவர்; கூரிய நுனை உடைய மழுவினர், ‘அன்புடையீர்! (அப்பரே)’ திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: கண்ணியர் – தலையிற்சூடும் மாலையர். மணிமுடி. பில்கும் – (ஒளி) சிதறும். (பா. 4). பொடி – திருநீறு. வடி – கூர்மை.

Our Lord Civa adorns His plaited locks of hair with the garland of sweet smelling Indian laburnum flowers. The bright light emitted by the gems on His crown gets reflected like the sun and the moon. In the streets of Thiru-vaai-moor ladies bring alms and offer it in His skull. He used to smile at them as though He has kindly accepted their offering. He exhibits Himself by smearing holy ashes all over His body. On His chest, He puts on the snake, which flashes light like gold. He holds a sharp axe in His hand. With such an appearance He comes before us. People may come to see Him.

2677. கட்டிணைபுதுமலர்க்கமழ்கொன்றைக்கண்ணியர்வீணையர்தாமுமஃதே
எட்டுணைசாந்தமொடுமைதுணையாஇறைவனாருறைவதோரிடம்வினவில்
பட்டிணையகலல்குல்வரிகுழலார்பாவையர்பலியெதிர்கொணர்ந்துபெய்ய
வட்டணையாடலொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 8

கட்டிணை புதுமலர்க் கமழ் கொன்றைக் கண்ணியர் வீணையர் தாமும் அஃதே
எட்டுணை சாந்தமொடு மைதுணையா இறைவனார் உறைவதோர் இடம் வினவில்
பட்டிணை அகல அல்குல் வரிகுழலார் பாவையர் பலிஎதிர் கொணர்ந்து பெய்ய
வட்டணை ஆடலொடு இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

kaTTu iNai putumalar kamaz kon2RaikkaNNiyar; vINaiyar; tAmum aHtE;
eN-tuNai cAntamoTu umai tuNaiyA, iRaivan2Ar uRaivatu or iTam vin2avil,
paTTu iNai akal alkul virikuzalAr pAvaiyar pali etir koNarntu peyya,
vaTTaNai ATaloTu,--ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: இணை இணையாகக் கட்டிய புது மலர்கள் மணங்கமழ்கின்ற கொன்றைக் கண்ணியர்; வீணையர்; அவ்வீணையைப் போலப் பாடிக்கொண்டு, எண்மடங்கு சந்தனம் அணிந்து உமை துணையாக இறைவன் உறையும் ஊர் எது என வினவில், பட்டாடை அணிந்த அகன்ற அல்குலையுடைய மகளிர், விரிந்த குழலை உடையவர், பாவையனையர் பலியினை எதிர்கொண்டு இட, வட்டணை யாடலொடு, 'அன்புடையீர்! (அப்பரே)' திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: கட்டிணை புதுமலர் – இணை இணையாகக் கட்டப்படும் புதிய பூக்கள். எட்டுணை – (எண் + துணை) எண்மடங்கு. பட்டு இணைந்த – பட்டிசைந்த. பாவையர் – தாருகவனத்து மகளிர். வட்டணை – வட்டம். தாளம் போடுதலுமாம்.

Our Lord Civa adorns His matted locks of hair with fresh Indian laburnum flowers, piled up side by side closely, appearing a garland. He used to make music on the Indian lute. He has profusely applied the sandalwood paste all over His body and manifests Himself jointly with His consort in the temple in Thiru-vaai-moor city. He goes near the ladies of dharukan forest who are dressed in pure silk sarees. He approaches them and asks for alms. When they bring food He clasps His hands, dances before them that they could be bewitched and He entices them. This Lord will come to us. Please do come to see Him.

2678. ஏனமருப்பினொடெழிலாமையிசையப்பூண்டோரேறேறிக்
கானமதிடமாவுறைகின்றகள்வர்கனவில்துயர்செய்து
தேனுணமலர்களுந்திவிம்மித்திகழ்பொற்சடைமேல்திகழ்கின்ற
வானநன்மதியினொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 9

ஏன மருப்பினொடு எழிலாமை இசையப் பூண்டோர் ஏறு ஏறிக்
கானம் அது இடமா உறைகின்ற கள்வர் கனவில் துயர் செய்து
தேன் உணமலர்கள் உந்தி விம்மித் திகழ் பொற்சடை மேல் திகழ்கின்ற
வான நன்மதியினொடு இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

En2amaruppin2oTu ezil Amai icaiyap pUNTu, Or ERu ERi,
kAn2am atu iTamA uRaikin2Ra kaLvar; kan2avil-tuyar ceytu,
tEn2 uNa malarkaL unti vimmit tikaz pon2 caTaimEl-tikazkin2Ra
vAn2a nalmatiyin2oTu,--ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: பன்றியின் கொம்பு, அழகிய ஆமையோடு இரண்டையும் தம்மில் இசையப் பூண்டவர்; ஒரு எருதினை வாகனமாகவும், கானகத்தைத் தம் உறைவிடமாகவும் கொண்ட கள்வர்; அவர் கனவில் எனக்குத் துயர் செய்து, வண்டுகள் தேனினை உண்ண மலர்கள் உந்தி விம்மத் திகழ்கின்ற பொன்போல் ஒளி வீசும் சடையின் மேல் விளங்குகின்ற தூய நன்பிறைமதியொடு, 'அன்புடையீர்! (அப்பரே)' திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: ஏனம் – பன்றி. மருப்பு – கொம்பு. பன்றிக்கொம்பும் ஆமையோடும் பூண்டவர் என்று திருமுறைகளில் பல இடங்களில் இருத்தல் வெளிப்படை.

Our Lord Civa adorns His body with the tusk of the hog along with tortoise shell - both tied in a rope and made as garland. He rides on His bull and prefers to stay in the forest area. He appears in our dreams, disturbing us, and removes our bad karma. He adorns His body with the garland of Indian laburnum flowers full of honey. In His attractive locks of hair He retains the young moon. That Lord, manifest in Thiru-vaai-moor temple, comes to our presence. Please do come to see this Supreme Being.

2679. சூடல்வெண்பிறையினர்சுடர்முடியர்சுண்ணவெண்ணீற்றினர்சுடர்மழுவர்
பாடல்வண்டிசைமுரல்கொன்றையந்தார்பாம்பொடுநூலவைபசைந்திலங்கக்
கோடனன்முகிழ்விரல்கூப்பிநல்லார்குறையுறுபலியெதிர்கொணர்ந்துபெய்ய
வாடல்வெண்டலைபிடித்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. 10

சூடல் வெண்பிறையினர் சுடர் முடியர் சுண்ண வெண்ணீற்றினர் சுடர் மழுவர்
பாடல் வண்டிசை முரல் கொன்றைம் தார்பாம்பொடு நூலவை பசைந்திலங்கக்
கோட நன்முகிழ் விரல்கூப்பி நல்லார் குறையுறு பலிஎதிர் கொணர்ந்து பெய்ய
வாடல் வெண்டலை பிடித்து இவர் ஆணீர் வாய்மூர் அடிகள் வருவாரே.

cUTal veNpiRaiyin2ar; cuTar muTiyar; cuNNa veN nIRRin2ar; cuTar mazuvar;
pATal vaNTu icai mural kon2Rai amtAr pAmpoTu nUl avai pacaintu ilagka,
kOTal nan2 mukizviral kUppi, nallAr kuRai uRu pali etir koNarntu peyya,
vATal veNtalai piTittu,--ivarANIr--vAymUr aTikaL varuvArE.

பொருள்: வெண்பிறையைச் சூடியவர்; ஒளிவீசும் சடைமுடியினர்; திருநீற்றுப் பொடி பூசியவர்; சுடர் ஒளி மழுவினர்; வண்டுகள் மொய்த்து இசைபாடுகின்ற கொன்றையந் தாரினைப் பூணூல் பாம்பு ஆகியவற்றினொடு மார்பில் ஆசையுண்டாக அணிந்து, செங்காந்தள் அரும்பு போன்ற விரல்களையுடைய மகளிர், கைகள் கூப்பி பலி ஏற்றுக் கொள்ளுமாறு குறையுற்று எதிர் கொணர்ந்து இட, வறண்ட பிரமகபாலத்தை ஏந்திக் கொண்டு, ‘அன்புடையீர்! (அப்பரே)’ திருவாய்மூர் அடிகள் வருவாரே.

குறிப்புரை: பசைந்து – பற்றி. பசுமையுற்று, கோடல் – வெண்காந்தள். ஈண்டுக் காந்தளையுணர்த்தி. மகளிர் செவ்விரல்களுக்கு ஒப்பாயிற்று. முகிழ் – அரும்பு.

Our Lord Civa retains the moon on His locks of matted hair. His hair locks are very bright like supernal fire. He besmears His body with holy ashes. He holds in His hand the battleaxe. He adorns His matted hair locks with a garland of Indian laburnum flowers. He adorns His body with the snake and with the three ply sacred thread. His hands resemble the Kaanthal flower with closed petals. He goes in front of the wives of the holy sages of dharuka vanam and demands alms in the skull of Brahma. Our Lord Civa of Thiru-vaai-moor temple will come towards us. Please do come to see Him.

2680. திங்களொடொருவரைப்பொழிற்சோலைத்தேனலங்கானலந்திருவாய்மூர்
அங்கமொடருமறையொலிபாடலழல்நிறவண்ணர்தம்மடிபரவி
நங்கள்தம்வினைகெடமொழியவல்லஞானசம்பந்தன்தமிழ்மாலை
தங்கியமனத்தினால்தொழுதெழுவார்தமர்நெறியுலகுக்கோர்தவநெறியே. 11

திங்களொடு ஒருவரைப் பொழிற்சோலைத் தேன் நலம் கானல் அம் திருவாய்மூர்
அங்கமொடு அருமறையொலி பாடலழல் நிறவண்ணர் தம் அடிபரவி
நங்கள் தம்வினை கெடமொழிய வல்ல ஞானசம்பந்தன் தமிழ்மாலை
தங்கிய மனத்தினால் தொழுதெழுவார் தமர்நெறி உலகுக்கோர் தவநெறியே.

tigkaLoTu oruvaraip pozil-cOlait tEn2 nalam kAn2al am tiru vAymUr,
agkamoTu arumaRai oli pATal azal niRa vaNNartam aTi paravi,
nagkaL tam vin2ai keTa moziya valla njAn2acampantan2 tamiz mAlai
tagkiya man2attin2Al-tozutu ezuvAr tamar neRi, ulakukku Or tavaneRiyE.

பொருள்: திங்களுடன், மலைபோல உயர்ந்த பொழிற்சோலை, தேனலங்கானல்களை உடையது திருவாய்மூர்; அங்கு, நால்வேதங்களும் ஆறு அங்கங்களும் பாடல்களும் முழங்க, தீவண்ணராகிய சிவனின் அடியைப் பரவி, நம்முடைய வினைகளெல்லாம் கெட, மொழிய வல்லவர் திருஞானசம்பந்தர்; அவருடைய இந்தத் தமிழ் மாலையை மனத்தில் நிறுத்தித் தொழுது எழுவார் தமராவர்; அவருடைய நெறி உலகுக்குத் தவநெறி.

குறிப்புரை: வரைப்பொழில் – மலையிலுள்ள சோலைகள். மறையொலி – வேதமுழக்கம். நங்கள் தம்வினை – எழுவார் நெறி. எழுவார்க்குத் தமர்நெறி, உலகுக்கு ஒரு தவநெறி.

In the mountain area of Thiru-vaai-moor city, thick forests with tall trees grow very high and touch the moon. The compound walls in the city are also very tall and they touch the moon. Our Lord, in the city who is the embodiment of all the Vedas, and the Veda aagamas - the sciences are subordinate to the Vedas - exhibits Himself as supernal fire. We must worship His holy feet and extol Him with great enthusiasm and admiration. Then our bad karma will be chased from our life as and when we chant the Tamil garland of ten verses of our saint Thiru-gnana-Sambandar. Those devotees who worship the Lord with sincere devotion in this religious way are people of real penance.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

111ஆம் பதிகம் முற்றிற்று
End of 111th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: *248* | பதிக எண்: *112*

112. திருஆடானை
112. THIRU-AADAANAI

பண் : நட்டராகம் | *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

திருவாடானை என்னும் இத்திருத்தலமானது தேவகோட்டை தொடர்வண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே 35 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. காளையார் கோவிலில் (திருக்காணப்பேர்) இருந்தும் தேவகோட்டையிலிருந்தும் திருவாடானை செல்லப் பேருந்துகள் உள்ளன. பேருந்துகளில் வருவதே எளிதானதாகும். இது பாண்டி நாட்டுப் பாடல் பெற்ற பதிகளுள் ஒன்று.

ஆட்டுத் தலையும் யானை உடலுமாகச் சபிக்கப்பெற்ற பிருகு முனிவர், அவ்வுருவத்துடன் வந்து வழிபட்டுச் சாபம் நீங்கப் பெற்ற தலமாதலின் இப்பெயர் பெற்றது. தலவிருட்சம் வில்வம். இறைவரின் திருப்பெயர் அதிரத்தினேசுவரர். ஆடானை நாதர் என்ற வேறுபெயரும் உண்டு. இறைவியாரின் திருப்பெயர் அம்பாயிரவல்லி. திருக்கோயிலையொட்டி நான்கு மாடவீதிகள் இருக்கின்றன. சூரிய தீர்த்தம் திருக்கோயிலின் வடகிழக்கிலுள்ளது.

நீலமணியைச் சிவலிங்கமாகத் தாபித்து, சூரியன் வழிபாடாற்றிப் பேறுபெற்றான். இதற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கிறது. கமலை ஞானப்பிரகாச தேசிகர் மாணாக்கர் சுவாமிநாத தேசிகரால் இயற்றப்பெற்ற தலபுராணம் அச்சில் வெளிவந்துள்ளது. தூணுகுடி குருசுப்பிரமணியக் குருக்கள் பண்டாரம் அவர்களால் இயற்றப்பெற்ற பதிகமும் அச்சில் உள்ளது.

பதிக வரலாறு

திருவிராமேச்சுரத்திலிருந்து திருக்கேதீச்சரத்தை நினைந்து போற்றிய ஞானச்செல்வர் வடதிசைமேற் செல்வாராய், பல சிவதலம் பணிந்து, கடற்கரைவாய் தவிரப் போந்து, திருவாடானை சேர்ந்து சாத்திய செந்தமிழ்மாலை இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2681. மாதோர்கூறுகந்தேறதேறிய
ஆதியானுறையாடானை
போதினாற்புனைந்தேத்துவார்தமை
வாதியாவினைமாயுமே. 1

மாது ஓர் கூறு உகந்து ஏறது ஏறிய
ஆதியான் உறை ஆடானை
போதினாற் புனைந்து ஏத்துவார் தமை
வாதியா வினை மாயுமே.

mAtu Or kURu ukantu, ERu atu ERiya
AtiyAn2 uRai ATAn2ai
pOtin2Al pun2aintu, EttuvAr tamai
vAtiyA vin2ai mAyumE.

பொருள்: அம்பிகை பாகன்; விடை மேலேறி அருளும் முதல்வன்; அவன் உறைகின்ற திருவாடானையைப் மலர்களால் அலங்கரித்தும் அருச்சித்தும் வழிபடுவோரை வினைகள் வருத்தம் செய்யா; மாறாக, அவை அழிந்து ஒழியும்.

குறிப்புரை: அம்பிகை பாகனாகி விடைமேலேறியருளும் முதல்வன் திருவாடானையைப் போது (அரும்பு, பூக்)களால் அலங்காரமும் அருச்சனையும் புரிந்து பூசிப்பவரை வினைகள் வருத்தமாட்டாதனவாய் மாய்ந்துவிடும். இப்பதிகம் முழுதும் அருச்சனையின் பயன் உணர்த்தப்பட்டமை அறிக.

Our Lord Civa is delighted to keep His consort on one half of His body. The Lord is known as Aathian in this temple. He rides on His bull and goes round the city along with His consort. The devotees reach the temple carrying flowers, decorate Him with flowers and do the pooja as per religious regulations and worship Him. For such devotees their bad karma will disappear and they will have no suffering in their life.

2682. வாடல்வெண்டலைஅங்கையேந்திநின்
றாடலானுறையாடானை
தோடுலாமலர்தூவிக்கைதொழ
வீடுநுங்கள்வினைகளே. 2

வாடல் வெண் தலை அம் கையேந்தி நின்று
ஆடலான் உறை ஆடானை
தோடுலா மலர் தூவிக் கைதொழ
வீடு நுங்கள் வினைகளே.

vATal veN talai agkai Enti nin2Ru
ATalAn2 uRai ATAn2ai
tOTu ulAm malar tUvik kaitoza,
vITum, nugkaL vin2aikaLE.

பொருள்: வற்றிய பிரமகபாலத்தை கையிலேந்தி நின்று ஆடுதலை உடையானது திருவாடானையை இதழ்களுள்ள மலர்களைத் தூவிக் கைதொழ, உங்கள் வினைகள் அழியும்.

குறிப்புரை: வற்றிய பிரமகபாலத்தை ஏந்தி நின்று ஆடுதலை உடைய சிவபிரான் ஆடானையை மலர்தூவித் தொழுதால் வினைகள் அழியும். தோடு – பூவிதழ்.

Our Lord Civa carries in His hand the dry skull of Brahma and dances before the houses of ladies demanding alms. If you go to the temple in Thiru-aadaanai and spread the flowers over His holy feet and worship Him, your bad karma will be destroyed.

2683. மங்கைகூறினன்மான்மறியுடை
அங்கையானுறையாடானை
தங்கையால்தொழுதேத்தவல்லவர்
மங்குநோய்பிணிமாயுமே. 3

மங்கை கூறினன் மான் மறி உடை
அங்கையான் உறை ஆடானை
தம் கையால் தொழுது ஏத்த வல்லவர்
மங்கு நோய் பிணி மாயுமே.

magkai kURin2an2, mAn2maRi uTai
am kaiyAn2, uRai ATAn2ai
tam kaiyAl-tozutu, Etta vallAr
magku nOy piNi mAyumE.

பொருள்: மங்கை பங்கன்; மான்மறியை ஏந்திய திருக்கரத்தன்; அவன் உறைகின்ற திருவாடானையைத் தம்முடைய கையினால் தொழுது ஏத்த வல்லவரை மங்கச் செய்யும் நோயும் பிணியும் மாயும்.

குறிப்புரை: மங்கைபங்கன், மான்கன்றேத்திய திருக்கரத்தன், ஆடானையைத் தம் கைகளால் தொழுது ஏத்தவல்லவர் நோயும் பிணியும் மாயும். மங்குதல் – கெடுதல்.

Our Lord Civa is concomitant along with His consort Uma Devi. He holds the young deer in one of His hands. He is manifest in the temple in Thiru-aadaanai city. Those who reach the temple and worship our Lord with both hands and praise Him will get rid of their ailments in life. Their bad karma will disappear.

2684. சுண்ணநீறணிமார்பில்தோல்புனை
அண்ணலானுறையாடானை
வண்ணமாமலர்தூவிக்கைதொழ
எண்ணுவாரிடரேகுமே. 4

சுண்ண நீறணி மார்பில் தோல் புனை
அண்ணலான் உறை ஆடானை
வண்ண மாமலர் தூவிக் கைதொழ
எண்ணுவார் இடர் ஏகுமே.

cuNNa nIRu aNi mArpil-tOl pun2ai
aNNalAn2 uRai ATAn2ai
vaNNa mA malar tUvik kaitoza
eNNuvAr iTar EkumE.

பொருள்: திருநீறு அணிந்த மார்பில் பூணூலொடு தோல்புனை அண்ணல் உறைகின்ற திருவாடானையை பலநிற மலர்களிட்டுத் தூவிக் கைதொழுது வழிபட்டுத் தியானம் செய்வாருடைய இடர்களானவை நீங்கும்.

குறிப்புரை: தோல் – மான்றோல் பூணுநூலொடு சேர்த்துத் தரித்துக் கொள்வது. (தி. 1 ப.28 பா. 2; தி. 1 ப. 133 பா. 4; தி.1 ப.80 பா.9; தி. 1 ப.6 பா.3). வண்ணம் – அழகு. எண்ணுவார் – தியானம் புரிவார் (பா. 8).

Our Lord Civa smears sandalwood paste and holy ashes all over His body. He wears on His body the sacred thread to which is attached a bit of hide of deer. He is our Chief Supreme Being. He is manifest in the temple in Thiru-aadaanai city. Those people who can reach the temple and spread very fine and sweet smelling flowers on the holy feet of Civa and worship Him with both hands will find their ailment fully vanish from their life.

2685. கொய்யணிம்மலர்க்கொன்றைசூடிய
ஐயன்மேவியஆடானை
கையணிம்மலரால்வணங்கிட
வெய்யவல்வினைவீடுமே. 5

கொய்யணிம் மலர்க் கொன்றை சூடிய
ஐயன் மேவிய ஆடானை
கையணிம் மலரால் வணங்கிட
வெய்ய வல்வினை வீடுமே.

koy aNi(m) malarkkon2Rai cUTiya
aiyan2 mEviya ATAn2ai
kai aNi(m) malarAl vaNagkiTa,
veyya valvin2ai vITumE.

பொருள்: கொய்த அழகிய கொன்றை மலர்களைச் சூடிய ஐயன் எழுந்தருளியுள்ள திருவாடானையைக் கை நிறைந்த மலர்கள் தூவி வணங்கிட கொடிய வல்வினைகள் அழிந்து போகும்.

குறிப்புரை: கொய் – கொய்த. ஐயன் – தலைவன். பிதா, தலந்தொறும் கைநிறையப் பூக்களைக் கொண்டு தூவி வழிபடுவது சைவர்க்குரிய நன்னெறியாதலைப் பெரிய புராணத்துட்காண்க.

Our Lord Civa adorns His matted locks of hair with fine Indian laburnum flowers picked up by hands, very attractive flowers. He is manifest in the temple in Thiru-aadaanai city. These servitors reach the temple and spread fine flowers with their hands on His holy feet and body and then they worship Him. The bad karma of the past life of these servitors will vanish and they will lead good life.

2686. வானிளம்மதிமல்குவார்சடை
ஆனஞ்சாடலன்ஆடானை
தேனணிம்மலர்சேர்த்தமுன்செய்த
ஊனமுள்ளவொழியுமே. 6

வான் இளம் மதி மல்குவார் சடை
ஆனஞ்சு ஆடலன் ஆடானை
தேன் அணிம்மலர் சேர்த்த முன்செய்த
ஊனம் உள்ள ஒழியுமே.

vAn2 iLa(m) mati malku vArcaTai
An2 anjcu ATalan2 ATAn2ai
tEn2 aNi(m) malar cErtta, mun2 ceyta
Un2am uLLa oziyumE.

பொருள்: தூய நிறமுடைய இளம்பிறை பொருந்திய நீண்ட சடையை உடையவர்; பஞ்ச கௌவியம் ஆடுவர்; ஆகியவரின் திருவாடானையை தேனுடைய மலர்களைச் சேர்த்தலால் முன் செய்த பழவினை பற்றறக் கெடும்.

குறிப்புரை: பிறை மல்கு நீள்சடை, பஞ்ச கௌவியம், அஞ்சு – ஐந்து. போலி, அணிமலர் சேர்த்தலால் பழவினை பற்றறும் 'உள்ளத்தே புகுந்தளிப்பவன் ஊனம் எலாம் ஓட'.

Our Lord Civa retains the young moon moving on the sky on His holy matted locks of hair. His entangled locks of hair are very long. He loves to be ablutioned with the five products of the cow. He is manifest in the temple in Thiru-aadaanai city. The servitors reach the temple and spread the honey filled, very attractive flowers over His holy feet. The bad effect of these servitors' past karma will be completely wiped out of their life.

2687. துலங்குவெண்மழுவேந்திச்சூழ்சடை
அலங்கானுறையாடானை
நலங்கொள்மாமலர்தூவிநாள்தொறும்
வலங்கொள்வார்வினைமாயுமே. 7

துலங்கு வெண்மழு ஏந்திச் சூழ்சடை
அலங்கான் உறை ஆடானை
நலம் கொள் மாமலர் தூவி நாள்தொறும்
வலம் கொள்வார் வினை மாயுமே.

tulagku veNmazu Enti, cUz caTai
alagkalAn2, uRai ATAn2ai
nalam koL mA malar tUvi, nALtoRum
valam koLvAr vin2ai mAyumE.

பொருள்: வெண்மையான ஒளியுடன் விளங்கும் மழுப்படையினை ஏந்தியவன்; சடையைச் சூழ்ந்த மாலையன் ஆகிய சிவன் உறைகின்ற திருவாடானையை அழகுடைய மிக்க மலர்களைத் தூவி நாள்தோறும் வழிபட்டு வலம் கொள்வாருடைய வினை மாயும்.

குறிப்புரை: சடையசைதலையும் ஒளிர்தலையும் மாலையையும் கூறலாம். நலம் – அழகு. வலங்கொள்ளல் வழிபாட்டின் உறுப்புக்களுள் ஒன்று.

Our Lord Civa holds the white battleaxe in one of His hands. In His entangled matted locks of hair, He wears Indian laburnum flowers and bael leaves made as garlands. This Lord Civa is manifest in the temple in Thiru-aadaanai city. The servitors of this city reach the temple, spread very fine and sweet smelling flowers and then worship Him. They do their rituals daily and go round the temple through the right hand side daily. Such peoples' past bad karma will vanish fully out of their life and they will lead good life.

2688. வெந்தநீறணிமார்பில்தோல்புனை
அந்தமில்லவன்ஆடானை
கந்தமாமலர்தூவிக்கைதொழும்
சிந்தையார்வினைதேயுமே. 8

வெந்த நீறணி மார்பில் தோல் புனை
அந்தம் இல்லவன் ஆடானை
கந்த மாமலர் தூவிக் கைதொழும்
சிந்தையார் வினை தேயுமே.

venta nIRu aNi mArpil-tOl pun2ai
antam illavan2 ATAn2ai
kanta mAmalar tUvik kaitozum
cintaiyAr vin2ai tEyumE.

பொருள்: சுட்ட திருநீற்றை அணிந்த மார்பில் பூணூலொடு தோல் புனைவர்; அந்தமில்லவர்; அவர் உறையும் திருவாடானையை மணமுள்ள மலர்களைத் தூவிக் கைதொழும் சிந்தனையை உடையவரது வினை தேய்ந்து ஒழியும்.

குறிப்புரை: பா. 4 பார்க்க. 'ஆதியும் . . . அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி' சிந்தையார் வினை – சிந்தனை உடையவரது வினை.

Our Lord Civa smears His body with the holy ashes. The cow dung was burnt in fire and turned into white holy ashes. On His chest He wears deer's hide attached to

the sacred thread. He has no blemishes in His appearance. He is manifest in the temple in Thiru-aadaanai city. Those who have the mind to go to the temple and spread the sweet smelling flowers on our Lord will find bad karma of their past life diminish and they will ever live happily.

2689. மறைவலாரொடுவானவர்தொழு
தறையுந்தண்புனல்ஆடானை
உறையுமீசனையேத்தத்தீவினை
பறையும்நல்வினைபற்றுமே. 9

மறைவலார் ஒடு வானவர் தொழுது
உறையும் தண்புனல் ஆடானை
உறையும் ஈசனை ஏத்தத் தீவினை
பறையும் நல்வினை பற்றுமே.

maRaivalaroTu vAn2avar tozutu
aRaiyum taNpun2al ATAn2ai
uRaiyum Ican2ai Etta, tIvin2ai
paRaiyum; nalvin2ai paRRumE.

பொருள்: மறைவல்ல பூசுரர்களொடு சுரர்களும் தொழும், ஒலிக்கும் நீர்த்தடங்கள் உடைய திருவாடானையில் உறையும் ஈசனை ஏத்தத் தீவினை அழியும்; நல்வினையாகிய சிவபுண்ணியம் வந்து சேரும்.

குறிப்புரை: வலார் – வல்லவர், பூசுரர். வானவர் – சுரர். ஆடானையில் எழுந்தருளும் உடையவனை. பறையும் – அழியும். பறைவது தீவினை. பற்றுவது நல்வினை.

Our Lord Civa is manifest in the temple in Thiru-aadaanai city. This city has plenty of water sources and the land is very rich for water facility. In the city, the Vedic Brahmin, famous, scholars visit our Lord in the temple and worship Him. Along with them, the devas living in the heavenly abode also come to Thiru-aadaanai city and worship our Lord in the temple. Those who visit this temple and worship our Lord manifested in Thiru-aadaanai city will get rid of their bad karma and good actions of their life, beneficial to them will get collected.

2690. மாயனும்மலரானுங்கைதொழ
ஆயஅந்தணன்ஆடானை
தூயமாமலர்தூவிக்கைதொழத்
தீயவல்வினைதீருமே. 10

மாயனும் மலரானும் கைதொழ
ஆய அந்தணன் ஆடானை
தூய மாமலர் தூவிக் கை தொழத்
தீய வல்வினை தீருமே.

mAyan2um malarAn2um kaitoza
Aya antaNan2 ATAn2ai
tUya mA malar tUvik kaitoza,
tIya valvin2ai tIrumE.

பொருள்: திருமாலும் மலர்மேல் உறையும் நான்முகனும் கைதொழல் ஆகிய அந்தணனின் திருவாடானையை தூய்மைமிக்க மலர்களைத் தூவிக் கைதொழத் தீவினைகள் தீரும்.

குறிப்புரை: ஆய - ஆகிய. தீயவினை; வல்வினை. அந்தணன் - சிவபிரான். மலர்தூவிக் கையால் தொழ வினை தீரும்.

Our Lord Civa is manifest in the temple in Thiru-aadaanai city. The tutelary god Thirumaal and the four faced Brahma resting in the lotus flower, both worship our Lord Civa with both hands. Those servitors reach the temple in Thiru-aadaanai city and worship our Lord Civa spreading very bright and pleasing flowers with their hands. Thereafter they worship our Lord with both their hands. Their diseases and sufferings will disappear.

2691. வீடினார்மலிவெங்கடத்துநின்
றாடலானுறையாடானை
நாடிஞானசம்பந்தன்செந்தமிழ்
பாடநோய்பிணிபாறுமே. 11

வீடினார் மலி வெங்கடத்து நின்று
ஆடலான் உறை ஆடானை
நாடி ஞானசம்பந்தன் செந்தமிழ்
பாட நோய் பிணி பாறுமே.

vITin2Ar mali vegkaTattu nin2Ru
ATalAn2 uRai ATAn2ai
nATi, njAn2acampantan2 centamiz
pATa, nOy piNi pARumE.

பொருள்: இறந்தவர்கள் மலிந்த வெந்த காட்டில் நின்று ஆடலான் ஆகிய சிவன் உறைகின்ற திருவாடானையை நாடி, ஞானசம்பந்தனின் செந்தமிழ்த் திருப்பதிகத்தைப் பாட நோயும் பிணியும் அழியும்.

குறிப்புரை: வீடினார் – இறந்தவர். வெங்கடம் – வெப்பமுடைய காடு. 'கள்ளிமுதுகாட்டிலாடி' பாடலால் நோயும் பிணியும் அழியும்.

Our Lord Civa spends His time in dancing in the burning ghat where dead bodies are burnt. He does then the special dance known as Uruthira Thaandavam. Our saint Thiru-gnana-Sambandar went to the temple in Thiru-aadaanai city and praised our Lord chanting these ten verses in pure classical Tamil. Those devotees who can memorise and chant these ten verses before our Lord and worship Him will find their ailments and sufferings wiped out.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

112ஆம் பதிகம் முற்றிற்று
End of 112th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 249 பதிக எண்: 113

113. சீகாழி

113. SEER-KAAZHI

பண் : நட்டராகம் *Pann: Nattaraagam*

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

2692. பொடியிலங்குந்திருமேனியாளர்புலியதளினர்
அடியிலங்குங்கழலார்க்கஆடும்மடிகள்ளிடம்
இடியிலங்குங்குரலோதம்மல்கவ்வெறிவார்திரைக்
கடியிலங்கும்புனல்முத்தலைக்குங்கடற்காழியே. 1

பொடி இலங்கும் திருமேனியாளர் புலியதளினர்
அடி இலங்கும் கழல் ஆர்க்க ஆடும் அடிகள் இடம்
இடி இலங்கும் குரல் ஓதம் மல்கவ் வெறிவார் திரைக்
கடி இலங்கும் புனல் முத்தலைக்கும் கடற்காழியே.

poTi ilagkum tirumEn2iyALar, puli ataLin2ar,
aTi ilagkum kazal Arkka ATum aTikaL(L), iTam--
iTi ilagkum kural Otam malka(v) eRi vAr tiraik
kaTi ilagkum pun2al muttu alaikkum kaTal kAziyE.

பொருள்: திருநீறு விளங்கும் திருமேனியாளர்; புலித்தோலினர்; திருவடியில் விளங்கும் கழல்கள் ஒலிக்கக் கூத்தாடும் அடிகள்; அவருடைய இடம், இடிபோல் முழங்கும் கடலோதம் மல்க, மோதும் அலைகள் மிகுதியாக விளங்க, நீர் முத்துக்களை எறியும் கடற்காழியே.

குறிப்புரை: இலங்கும் – விளங்கும். கடல் அலையொலி இடியொலி போலுள்ளதாம். கடி – விரைவு. மிகுதி. அடிகள் இடம் கடற்காழி என்றவாறே மேலும் இயைத்துக் கொள்க.

Our Lord Civa smears His divine body with holy ashes. He wears the tiger's hide on His waist. He dances when the anklets shining at His holy feet make loud noise. He is manifest in the holy city of Seerkaazhi. In this city, the sea waves create heavy noise like thunder. The sea waves with large quantity of water dash against the shore bringing large quantities of pearls along the seawater and they settle down on the seashore.

2693. மயிலிலங்குந்துயர்மாசறுப்பானருந்தொண்டர்கள்
அயலிலங்கப்பணிசெய்யநின்றவ்வடிகள்ளிடம்
புயலிலங்குங்கொடையாளர்வேதத்தொலிபொலியவே
கயலிலங்கும்வயற்கழனிசூழுங்கடற்காழியே. 2

மயில் இலங்கும் துயர் மாசறுப்பான் அருந்தொண்டர்கள்
அயல் இலங்கப் பணி செய்ய நின்ற இவ்வடிகள் இடம்
புயல் இலங்குங் கொடையாளர் வேதத்து ஒலிபொலியவே
கயல் இலங்கும் வயல் கழனி சூழும் கடற்காழியே.

mayal ilagkum tuyar mAcu aRuppAn2, arun toNTarkaL
ayal ilagkap paNi ceyya nin2Ra(v) aTikaL(L), iTam--
puyal ilagkum koTaiyALar vEtattu oli poliyavE,
kayal ilagkum vayal kazan2i cUzum kaTal kAziyE.

பொருள்: அறிவை மயக்கும் துயரினையும் மாசினையும் அறுக்க வேண்டி அருந்தொண்டர்கள், அருகிலிருந்து திருப்பணி செய்ய நின்ற சுவாமிகளுக்கு இடம், யாதெனில், கைம்மாறு கருதாது மழையெனக் கொடுக்கும் கொடையாளர்கள் வாழ்வதும், வேதவொலியால் பொலிவுற்றதும் கயல்மீன்கள் விளங்கும் வயல்களும் கழனிகளும் சூழுங்கடற் காழியே.

குறிப்புரை: துயர்மாசு – உம்மைத்தொகை. 'கைம்மாறு வேண்டாக் கடப்பாடுமாரி மாட்டு என் ஆற்றுங்கொல்லோ உலகு' (குறள். 211). கொடையாளர் – அந்தணர்.

The servitors of Lord Civa think of getting rid of their ill effects in their life due to past bad karma. They therefore come and settle where Civa is manifest and serve Him. Lord Civa is manifest in Seerkaazhi city. In this city, people of philanthropic nature do live, magnanimous like the clouds which give rain in plenty without any aim to receive anything from anybody. Also in the city, vedic scholars always chant the

Vedas and this noise is heard all over the city. The carp fish swim all over the paddy fields in large numbers in this city.

2694. கூர்விலங்குந்திரிசூலவேலர்குழைக்காதினர்
மார்விலங்கும்புரிநூலுகந்தம்மணவாளனூர்
நேர்விலங்கல்லனதிரைகள்மோதந்நெடுந்தாரைவாய்க்
கார்விலங்கல்லெனக்கலந்தொழுகுங்கடற்காழியே. 3

கூர் விலங்கும் திரிசூல வேலர் குழைக் காதினர்
மார் விலங்கும் புரிநூல் உகந்தம் மணவாளனூர்
நேர் விலங்க அல்லன திரைகள் மோதந் நெடுந்தாரைவாய்க்
கார் விலங்கல் எனக் கலந்து ஒழுகும் கடற்காழியே.

kUrvu ilagkum tirucUlavElar, kuzaik kAtin2ar,
mArvu ilagkum purinUl ukanta(m) maNavALan2, Ur--
nEr vilagkal(l) an2a tiraikaL mOta(n), neTun tAraivAyk
kAr vilagkal(l) en2ak kalantu ozukum kaTal kAziyE.

பொருள்: கூர்மை விளங்கும் திரிசூல வேலர்; குழையுடைய காதினர்; மார்பில் விளங்கும் முப்புரி நூல் உகந்தவர்; நித்த மணாளர்; மலைபோல் உயர்ந்து விளங்கும் அலைகள் மோத, நீண்ட மழைத் தாரையிடத்து கார்மேகம் மலையெனக் கலந்தொழுகும் கடற்காழியே.

குறிப்புரை: திரிசூலமாகி, வேலுடையவர், மார்வு – மார்பு. உகந்த மணவாளன். விலங்கல் – மலை. தாரை – நீரொழுக்கு, பெருமழை.

Our Lord Civa holds in one of His hands the sharp battle axe with three tridents. In one of His ears, He wears the ola roll. He wears the three ply sacred thread over His body and gives an appearance of a bridegroom. He loves to manifest Himself in the city of Seerkaazhi where the sea waves dash against the seashore.

2695. குற்றமில்லார்குறைபாடுசெய்வார்பழிதீர்ப்பவர்
பெற்றநல்லகொடிமுன்னுயர்த்தபெருமானிடம்
மற்றுநல்லார்மனத்தாலினியார்மறைகலையெலாம்
கற்றுநல்லார்பிழைதெரிந்தளிக்குங்கடற்காழியே. 4

குற்றம் இல்லார் குறைபாடு செய்வார் பழிதீர்ப்பவர்
பெற்ற நல்லகொடி முன் உயர்த்த பெருமானிடம்
மற்று நல்லார் மனத்தால் இனியார் மறை கலையெலாம்
கற்று நல்லார் பிழை தெரிந்து அளிக்கும் கடற்காழியே.

kuRRam illAr, kuRaipATu ceyvAr pazi tIrppavar,
peRRam nalla koTi mun2 uyartta perumAn2, iTam--
maRRu nallAr, man2attAl in2iyAr, maRai kalai elAm
kaRRu nallAr, pizai terintu aLikkum kaTal kAziyE.

பொருள்: குற்றமில்லாதவரது குறையைக் கருதுதல் செய்வார்; அவரது பழியைத் தீர்ப்பவர்; நல்ல எருதுக் கொடியினை உயர்த்த பெருமான்; அவருடைய இடம், நல்லவர்கள், மனத்தில் இனியவர்கள், மறை மற்றும் பிற கலைகளெல்லாம் கற்று வல்லவரானவர், அவர்களுடைய குறையை அறிந்து தலையளி செய்யும் கடற்காழியே.

குறிப்புரை: குற்றம் இல்லார், குறைபாடு செய்பவரது பழியைத் தீர்ப்பவர். நல்லார்; இனியார், கலையெல்லாம் கற்று நல்லாரானவர் என்று அந்தணரைக் குறித்தல் அறிக. அளிக்கும் – தலையளிசெய்யும்.

Our Lord Civa is an Immaculate Supreme Being. He removes the sins and harm in the lives of people of flawless character and in the lives of those servitors who make a request to Him, speaking out their faults. He holds high His bull flag. He loves to be manifested on the seashore of Seerkaazhi city. Here people of good and pleasing character, and scholars of Vedic knowledge are many. When they go wrong they take a note of it carefully and consciously avoid it later. Such great men live in Seerkaazhi city in large numbers where our Lord is manifest.

2696. விருதிலங்குஞ்சரிதைத்தொழிலார்விரிசடையினார்
எருதிலங்கப்பொலிந்தேறுமெந்தைக்கிடமாவது
பெரிதிலங்கும்மறைகிளைஞரோதப்பிழைகேட்டலாற்
கருதுகிள்ளைக்குலந்தெரிந்துதீர்க்குங்கடற்காழியே. 5

விருது இலங்கும் சரிதைத் தொழிலார் விரிசடையினார்
எருது இலங்கப் பொலிந்து ஏறும் எந்தைக்கு இடமாவது
பெரிது இலங்கும் மறைகிளைஞர் ஓதப் பிழை கேட்டலாற்
கருது கிள்ளைக் குலந்தெரிந்து தீர்க்கும் கடற்காழியே.

virutu ilagkum caritait tozilAr, viricaTaiyin2Ar,
erutu ilagkap polintu ERum entaikku iTam Avatu--
peritu ilagkum maRai kiLainjar Ota, pizai kETTalAl,
karutu kiLLaikkulam terintu tIrkkum kaTal kAziyE.

பொருள்: பிறருக்கு இல்லாத சரிதைச் சிறப்பு உள்ளவர்; விரிந்த சடையினை உடையவர்; எருது பொலிய அதன்மீது ஏறும் எந்தையார்; அவருக்கு இடமாவது, பெருமையுடன் விளங்கும் மறைகளைக் கிளைஞர் ஓத, அவ்வோதலில் பிழை கண்டு கிளிக்கூட்டம் அப்பிழைகளைத் தீர்க்கும் கடற்காழியே.

குறிப்புரை: சரிதை – ஒழுக்கம். சீகாழியில் வேதியர்கள் வேதத்தை ஓதுங்கால் கேட்டுணர்ந்து, முன்புற்ற கேள்வி வன்மையால், கிளியினங்கள் அதன்கண் பிழைகளைத் திருத்தும் அற்புதம் உணர்த்தப்பட்டது.

Our Lord Civa is the author of all puranic history which contains different victorious stories. His entangled locks of hair are very broad. His conveyance is the bright bull. Our Father Lord Civa rides on His bull and appears handsome. His proper place to live is Seerkaazhi. In this city, Vedic scholars chant very rich Vedas accurately. The parrots used to hear the Vedas without any mistake from great scholars. Then later some young scholars make mistakes while chanting the Vedas, but the parrots then and there correct the mistakes of the young scholars. Such parrots do live in the Seerkaazhi city in large number.

2697. தோடிலங்குங்குழைக்காதர்வேதர்சுரும்பார்மலர்ப்
பீடிலங்குஞ்சடைப்பெருமையாளர்க்கிடமாவது
கோடிலங்கும்பெரும்பொழில்கள்மல்கப்பெருஞ்செந்நெலின்
காடிலங்கும்வயல்பயிலுமந்தண்கடற்காழியே. 6

தோடு இலங்கும் குழைக்காதர் வேதர் சுரும்பார் மலர்ப்
பீடு இலங்கும் சடைப் பெருமையாளர்க்கு இடமாவது
கோடு இலங்கும் பெரும்பொழில்கள் மல்கப் பெரும் செந்நெலின்
காடு இலங்கும் வயல் பயிலும் அந்தண் கடற்காழியே.

tOTu ilagkum kuzaik kAtar, vEtar, curumpu Ar malarp
pITu ilagkum caTaip perumaiyALarkku iTam Avatu--
kOTu ilagkum perum pozilkaL malka, perunj cennelin2
kATu ilagkum vayal payilum am taN kaTal kAziyE.

பொருள்: ஒருகாதில் தோடு விளங்குங் குழைக் காதர்; வேதத்தை உடையவர்; வண்டுகள் மொய்க்கும் மலர்கள் பீடுற விளங்கும் சடைப் பெருமையாளர்; அவருடைய இடமாவது, கிளைகள் கொம்புகள் விளங்கும் பெரிய பொழில்கள் மல்கப் பெருகும் செந்நெல்லின்

பெருங்காடுடன் விளங்கும் வயல்கள் நிறைந்திருக்கும் அழகும் குளிர்ச்சியும் உடைய கடற்காழியே.

குறிப்புரை: தோடும் குழையும் இலங்கும் காதர். வேதர் – வேதத்தை உடையவர். கோடு – கொம்பு. செந்நெலின்காடு – செந்நெற்பயிர் நெருக்கம்.

Our Lord Civan wears in one of His ears the tender leaf as His earring. In another ear He wears ola roll as the earring. These different earrings are very bright. He is the author of all the four Vedas. His matted locks of hair He beautifies by wearing the garland of Indian laburnum flowers where the bees swarm in large numbers. In the bright entangled hair He retains the Ganges river also. This Lord loves to manifest Himself in the city of Seerkaazhi. In this city natural forests are many with large trees - of big branches full of leaves. Also in the city area red paddy fields are many - rich and dense.

2698. மலையிலங்குஞ்சிலையாகவேகம்மதில்மூன்றெரித்
தலையிலங்கும்புனற்கங்கைவைத்தவ்வடிகட்கிடம்
இலையிலங்கும்மலர்க்கைதைகண்டல்வெறிவிரவலால்
கலையிலங்குங்கணத்தினம்பொலியுங்கடற்காழியே. 7

மலை இலங்கும் சிலையாக வேகம் மதில் மூன்று எரித்
தலை இலங்கும் புனல் கங்கை வைத்த அவ்வடிகட்கு இடம்
இலை இலங்கும் மலர்க் கைதை கண்டல் வெறி விரவலால்
கலை இலங்கும் கணத்தினம் பொலியும் கடற்காழியே.

malai ilagkum cilai Aka vEka(m) matil mUn2Ru erittu,
alai ilagkum pun2al kagkai vaitta(v)aTikaTku iTam--
ilai ilagkum malarkkaitai kaNTal veRi viravalAl,
kalai ilagkum kaNattu in2am poliyum kaTal kAziyE.

பொருள்: மேருமலை விளங்கும் வில்லாக திரிபுரம் மூன்றும் தீயில் வேவ எரித்தவர்; தலையில் விளங்கப் புனற் கங்கையை வைத்தவர் ஆகிய சிவனுக்கு இடமாவது, இலைகள் விளங்கும் தழை கைதை கண்டல் ஆகியவற்றின் மலர்மணம் விரவுவதும் கலைகள் விளங்கும் கூட்டம் பொலிவதும் ஆகிய கடற்காழியே.

குறிப்புரை: வைத்த அடிகள் என்னும் பெயரெச்சத் தொடர்க்கு இடையில் வகரமெய் பிற்பதிப்புக்களில் இருக்கின்றது. கைதை – தாழை. கண்டல் – நீர்முள்ளி. கலையிலங்குங்கணத் தினம். கல்வி விளங்கும் மறையவர் கூட்டம்; மான்கூட்டம்.

Our Lord Civa used the Meru mountain as His bow and destroyed the three forts of the asuras with fire. He supports the river Ganges with waves in His matted locks of hair. This Lord loves to be manifested in Seerkaazhi city. In this city, fragrant screw pine plant grows in large numbers along with the leaves and flowers. Thorny bushes also are found along with this. The fragrance of these spreads all over the city. A large group of Vedic scholars do live in this city.

2699. முழுதிலங்கும்பெரும்பொருள்வாழும்முரண்இலங்கைக்கோன்
அழுதிரங்கச்சிரமுரமொடுங்கவ்வடர்த்தாங்கவன்
தொழுதிரங்கத்துயர்தீர்த்துகந்தார்க்கிடமாவது
கழுதும்புள்ளும்மதிற்புறமதாருங்கடற்காழியே. 8

முழுது இலங்கும் பெரும் பொருள் வாழும் முரண் இலங்கைக் கோன்
அழுது இரங்கச் சிரம் உரமொடு இங்கு அவ்வடர்த்து ஆங்கவன்
தொழுது இரங்கத் துயர் தீர்த்து உகந்தார்க்கு இடமாவது
கழுதும் புள்ளும் மதிற்புறம் அதாரும் கடற்காழியே.

muzutu ilagkum perum poruL vAzum muraN ilagkaik kOn2
azutu iragka, ciram uram oTugka(v) aTarttu, agku avan2
tozutu iragkat tuyar tIrttu, ukantArkku iTam Avatu--
kazutum puLLum matil puRam atu Arum kaTal kAziyE.

பொருள்: அனைத்துமாக விளங்கும் பரம்பொருள் வாழும் இடமாவது; முரண்பட்ட இலங்கையர்கோன் அழுது வருந்த, அவனுடைய பத்துச் சிரங்களும் மார்பும் ஒடுங்குமாறு அடர்த்தவர்; ஆங்கு அவன் தொழுது இரக்க, அவனுடைய துயரைத் தீர்த்து அருள்புரிந்து உயர்ந்த சிவபிரான்; அவருக்கு இடமாவது கழுதும் புள்ளும் மதிற் புறத்தில் விளங்கும் கடற்காழியே.

குறிப்புரை: முரண் – வலி, மாறுபாடு. சிரம் உரம் – தலையும் மார்பும். உகந்தார் – உயர்ந்த சிவபிரான். கழுது – வண்டு, பேயும் ஆம். புள் – பறவை.

The King of Sri Lanka, Raavanan led a life of contradiction. Our Lord Civa crushed his head and chest. Then Raavanan realised his mistake and begged pardon and worshipped our Lord Civa. Lord Civa pardoned him and wiped out his sufferings. Civa loves to manifest Himself in Seerkaazhi city. In this city bees, beetles, and all birds live on the back side of the compound wall of the city. This city is also known as Kadalkaazhi.

2700. பூவினானும்விரிபோதின்மல்குந்திருமகள்தனை
மேவினானும்வியந்தேத்தநீண்டாரழலாய்நிறைந்
தோவியங்கேயவர்க்கருள்புரிந்தவ்வொருவர்க்கிடங்
காவியங்கண்மடமங்கையர்சேர்கடற்காழியே. 9

பூவினானும் விரிபோதின் மல்கும் திருமகள்தனை
மேவினானும் வியந்து ஏத்த நீண்ட ஆரழலாய் நிறைந்து
ஓவியங்கு ஏயவர்க்கு அருள்புரிந்த அவ்வொருவர்க்கு இடம்
காவியங் கண் மட மங்கையர் சேர் கடற்காழியே.

pUvin2An2um, viripOtil malkum tirumakaL tan2ai
mEvin2An2um, viyantu Etta, nINTu Ar azal Ay niRaintu,
Ovi, agkE avarkku aruL purinta(v) oruvarkku iTam--
kAvi am kaN maTamagkaiyar cEr kaTal kAziyE.

பொருள்: தாமரைப் பூவில் இருப்பவனாகிய பிரமனும் செந்தாமரை மலரானாகிய திருமகளை விரும்பும் திருமாலும், வியந்து போற்ற நீண்ட ஆரழலாக நிறைந்து, பின்னர் அவர்களுக்கு அருள்புரிந்த அவ்வொப்பற்றவருக்கு இடமாவது, கருங்குவளை நிகர்த்த கண்ணினை உடைய இளமங்கையர் சேரும் கடற்காழியே.

குறிப்புரை: விரிபோது – பூத்த தாமரைமலர். மேவினான் – விரும்பிய திருமால். ஓவி – நீங்கி. புரிந்த ஒருவர் என்னும் பெயரெச்சத் தொடரில் வகரம் விரித்தல் விகாரம்.

The four faced Brahma and Thirumaal who loves to be with his consort Lakshmi manifested in the lotus flower - these two demigods wondered to see the dazzling infinite supernal fiery column of Lord Civa. Thereafter Lord Civa shed this form of the column and graced these two demigods. This Lord is manifest in the city of

Kadalkaazhi, where very pretty girls with eyes, which resemble purple Indian water lily flower do live in large numbers.

2701. உடைநவின்றாருடைவிட்டுழல்வாரிருந்தவத்தார்
முடைநவின்றம்மொழியொழித்துகந்தம்முதல்வன்னிடம்
மடைநவின்றபுனற்கெண்டைபாயும்வயல்மலிதரக்
கடைநவின்றந்நெடுமாடமோங்குங்கடற்காழியே. 10

உடை நவின்றார் உடைவிட்டு உழல்வார் இருந்தவத்தார்
முடை நவின்றம் மொழி ஒழித்து உகந்தம் முதல்வன் இடம்
மடை நவின்ற புனற்கெண்டை பாயும் வயல் மலிதரக்
கடை நவின்ற நெடுமாடம் ஓங்கும் கடற்காழியே.

uTai navin2RAr, uTai viTTu uzalvAr,--irun tavattAr--
muTai navin2Ra(m) mozi ozittu, ukanta(m) mutalvan2(n2) iTam--
maTai navin2Ra pun2al keNTai pAyum vayal malitara,
kaTai navin2Ra(n) neTumATam Ogkum kaTal kAziyE.

பொருள்: உடை உடுத்தவராகிய தேரர், உடைவிட்டு உழல்வாராகிய சமணர் பெருந்தவத்தினர்போல் காட்சியளிக்கும் அவர்களுடைய முடை நாற்றம் எடுத்த மொழிகளை ஒழித்து உயர்ந்தவன் இடம் யாதெனின், மடைகளில் ஓடும் நீரில் கெண்டை மீன்கள் பாயும் வயல்கள் நிறைந்ததும் நெடுமாடங்கள் நிறைந்ததுமாகிய கடற்காழியே.

குறிப்புரை: உடை நவின்றார் - உடை செய்தார், உடுத்தார், தேரர். உடைவிட்டு உழன்றார் - ஆடையின்றித் திரிந்தவர், சமணர். முடை - நாற்றம்.

In this city of Seerkaazhi, Buddhists wearing dresses and the Jains without any dresses on their body roam about. They carry out harsh penance for their austerity. Their false propaganda is avoided by our Lord Civa. He was pleased to manifest Himself in Seerkaazhi city. In this city carp fish jump and move on to the paddy fields, which are full of water with proper outlets. In the city area very tall and palatial buildings with broad entrances are many. Of course this city is called Seerkaazhi.

2702. கருகமுந்நீர்திரையோதமாருங்கடற்காழியுள்
உரகமாருஞ்சடையடிகள்தம்பாலுணர்ந்துறுதலாற்
பெருகமல்கும்புகழ்பேணுந்தொண்டர்க்கிசையார்தமிழ்
விரகன்சொன்னஇவைபாடியாடக்கெடும்வினைகளே. 11

கருக முந்நீர் திரைஓதம் ஆரும் கடற்காழியுள்
உரக ஆரும் சடையடிகள் தம்பால் உணர்ந்து உறுதலாற்
பெருக மல்கும் புகழ் பேணும் தொண்டர்க்கு இசையார் தமிழ்
விரகன் சொன்ன இவை பாடியாடக் கெடும் வினைகளே.

karuku munnIr tirai Otam Arum kaTal kAziyuL,
urakam Arum caTai aTikaL tampAl uNarntu uRutalAl,
peruka malkum pukaz pENum toNTarkku, icai Ar tamiz-
virakan2 con2n2a ivai pATi ATa, keTum, vin2aikaLE.

பொருள்: கரிய நிறக் கடலின் அலையோதம் ஆர்க்கும் கடற்காழியுள் பாம்பு தங்கும் சடையடிகள் ஆகிய சிவபிரானிடத்தில் அவரே புகலிடம் என்று அறிந்து அடைந்த புகழை விரும்பும் தொண்டர்கள் இசையினால் தமிழ் விரகன் ஞானசம்பந்தன் சொன்ன இத்திருப்பதிகத்தைப் பாடி ஆடக் கெடும் வினைகளே.

குறிப்புரை: உரகம் – பாம்பு. அடிகள் தம்பால் – சிவபிரானிடத்தில். விரகன் – வல்லவன். அறிஞன்.

From the vast big black ocean waves bring plenty of flood inundated water into all sides of the city. Our Lord Civa has worn the serpent all over His body. His entangled matted hair is very bright in appearance. We must understand His grace and chant His divine name, His fame will spread all over the earth. The servitors live very happily and do service to our Lord Civa. Our Thiru-gnana-Sambandar is the most skilful person. He chanted these ten verses. Those devotees who memorise and chant these ten verses and dance before our Lord will find their bad karma destroyed.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

113ஆம் பதிகம் முற்றிற்று
End of 113th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 250 *பதிக எண்: 114*

114. திருக்கேதாரம்

114. THIRU-K-KETHARAM

பண் : செவ்வழி *Pann: Chevvazhi*

திருத்தல வரலாறு

காசியிலிருந்து தொடர்வண்டியில் ஹரித்துவார் சென்று அங்கிருந்து பேருந்துகளில் கௌரிகுண்டம் வரைசென்று, அங்கிருந்து குதிரைகளிலோ, கால்நடையாகவோ கேதாரம் செல்லலாம். இது வடநாட்டு தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. பிருங்கி முனிவரின் பொருட்டு இறைவியார் இறைவரைப் பூசித்து இடப்பாகம் பெற்ற தலமாகும். இத்தலத்தில் ஆறுமாதம் தேவர்களாலும், ஆறுமாதம் மனிதராலும் பூசைகள் செய்யப்படுகின்றன. இத்தலத்தில் தேவபூசை ஐப்பசி பௌர்ணமியில் தொடங்குகிறது. அப்பொழுது பனிக்கால மாதலால் அங்கு மனிதர்களே இருக்க முடியாது. அர்ச்சகர் முதலானோர் மலையைவிட்டு வந்து விடுவர். பனிக்காலமாகிய ஆறுமாதம் கழித்துப் பூசைக்குச் செல்வர். திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும், திருக்காளத்தியிலிருந்தே இத்தலத்தைப் பாடியுள்ளனர். இத்தலத்திற்கு இரண்டு பதிகங்கள் இருக்கின்றன. இறைவரின் திருப்பெயர் கேதார நாதர், இறைவியாரின் திருப்பெயர் கேதார கௌரியம்மை.

பதிக வரலாறு

திருக்காளத்தி மலையின் மிசை வீற்றிருந்து ஏழுலகும் உடைய தேனை, சண்பை ஆளும் புரவலனார் பருகி ஆர்ந்து, தமிழ்வழக்கு நிகழாத வடக்கிலும் குடக்கிலும் உள்ள தானந்தோறும் சென்று தமிழிசை பாடுஞ் செய்கை போல வடகயிலை வணங்கிப் பாடித் திருக்கேதாரம் தொழுது இசை திருந்தப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2703. தொண்டரஞ்சுகளிறும்மடக்கிச்சுரும்பார்மலர்
இண்டைகட்டிவழிபாடுசெய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவரிக்
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே. 1

தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடம் என்பரால்
வண்டு பாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டை பாயச் சுனை நீலம் ஒட்டல் அரும் கேதாரமே.

toNTar anjcukaLiRum(m) aTakki, curumpu Ar malar
iNTai kaTTi, vazipATu ceyyum iTam en2parAl--
vaNTu pATa, mayil Ala, mAn2 kan2Ru tuLLa(v), varik-
keNTai pAya, cun2ai nIlam moTTu alarum kEtAramE.

பொருள்: வண்டுகள் பாட, அவ்விசைக்கேற்ப மயில்கள் ஆட, மகிழ்ச்சியால் மான்கன்று துள்ள, மருண்ட கெண்டைமீன்கள் பாயச் சுனையில் நீலமலர் மொட்டு விரியும் திருக்கேதாரமே, தொண்டர்கள் ஐம்புலன்களாகிய அஞ்சத்தக்க களிறுகளையும் அடக்கிச் சுரும்புகள் மொய்க்கும் பருவத்தில் உள்ள மலர்களை இண்டையாகக் கட்டி வழிபாடு செய்யும் இடம் என்பரால்.

குறிப்புரை: அஞ்சுகளிறும் – ஐம்புலங்களாகிய ஆண்யானைகளையும், 'ஐம்புலனும் அடக்கி ஞானம் புகலுடையோர் தம் உள்ளப் புண்டரிகத்துள் இருக்கும் புராணர்' (தி. 1 ப. 32 பா.6). இண்டை கட்டி வழிபாடு செய்தல் வடநாட்டிலும் உண்டு போலும்!. 'என்பரால்' என்றது. காணாது கேட்டுப் பாடியருளியதைக் குறித்தது.

The devotees, able to control the five sense organs, collect the flowers that blossom on that day and sacred leaves and make circlet for head wear, garlands and adore our God Civa and worship Him manifested in the Himalayas city called Thiru-k-ketharam. In this city, the bees go round and round the flower plants humming. The peacocks dance to their music. The young deer jump about in the mountain forests. The carp fish swim and jump in the water. The blue Indian lily buds blossom and the petals flourish. Such an attractive city is Thiru-k-ketharam.

2704. பாதம்விண்ணோர்பலரும்பரவிப்பணிந்தேத்தவே
வேதநான்கும்பதினெட்டொடாறும்விரித்தார்க்கிடம்
தாதுவிண்டமதுவுண்டுமிண்டிவருவண்டினம்
கீதம்பாடமடமந்திகேட்டுகளுங்கேதாரமே. 2

பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்து ஏத்தவே
வேத நான்கும் பதினெட்டொடு ஆறும் விரித்தார்க்கு இடம்
தாது விண்டம் அது உண்டு மிண்டி வருவண்டினம்
கீதம் பாட மடமந்தி கேட்டு உகளும் கேதாரமே.

pAtam viNNOr palarum paravip paNintu EttavE,
vEtam nAn2kum patin2eTToTu ARum virittArkku iTam--
tAtu viNTa(m), matu uNTu miNTi(v) varu vaNTu in2am
kItam pATa(m), maTamanti kETTu ukaLum kEtAramE.

பொருள்: விரிந்த மலர்களில் தேனை உண்டு கிளர்ந்து வரும் வண்டுக்கூட்டம் கீதம் பாட இளமந்தி கேட்டுத் துள்ளும் கேதாரமே, விண்ணோர் பலரும் பாதம் பரவிப் பணிந்து ஏத்த வேதம் நான்கினையும் அங்கங்கள் ஆறினையும் புராணங்கள் பதினெட்டையும் விரித்தாருக்கு இடம் என்பர்.

குறிப்புரை: விண்ணோர் பலரும் பாதம் பரவிப் பணிந்து ஏத்த விரித்தார்க்கு இடம் கேதாரம் என்க. வண்டினம் கீதம் பாட மந்திகள் கேட்டுத் துள்ளும்.

See the celestials in heaven prostrate before the holy feet of Lord Civa manifested in the temple in Thiru-k-ketharam city in the Himalayas and then worship Him. That Civan is the author of the four Vedas, the six sub Vedas, eighteen puranic stories. He explained the meanings of all His writings in the three divine books. This Lord Civa is manifest in the temple in Thiru-k-ketharam. In this area the bees, which suck the honey from the flowers sing divine songs. The monkeys living in the same area hear and enjoy the music of the bees and live happily. Such a glorious city is Thiru-k-ketharam.

2705. முந்திவந்துபுரோதாயமூழ்கிமுனிகள்பலர்
எந்தைபெம்மானெனநின்றிறைஞ்சும்மிடமென்பரால்
மந்திபாயச்சரேலச்சொரிந்தும்முரிந்துக்கபூக்
கெந்தநாறக்கிளருஞ்சடையெந்தைகேதாரமே. 3

முந்தி வந்து புரோதாய மூழ்கி முனிகள் பலர்
எந்தை பெம்மான் என நின்று இறைஞ்சும் இடம் என்பரால்
மந்தி பாயச்சரேலச் சொரிந்தும் முரிந்துக்க பூக்
கெந்த நாறக்கிளரும் சடை எந்தை கேதாரமே.

munti vantu purOtayam mUzki(m) mun2ikaL palar,
"entaipemmAn2!" en2a nin2Ru iRainjcum iTam en2parAl--
manti pAya, carElac corintu(m) murintu ukka pUk
kentam nARa, kiLarum caTai entai kEtAramE.

பொருள்: மந்தி பாயவே, சரேலென்று கிளைகளில் உள்ள மலர்கள் சொரிந்தும் முரிந்தும் உதிர்ந்த பூக்கள் மணம் நாறக் கிளருஞ் சடை எம் தந்தையின் கேதாரமே, புலர்வதன் முன் எழுந்து வந்து, நீரில் புரோதயம் மூழ்கி முனிவர்கள் பலர், 'எந்தை எம்மான்' என நின்று இறைஞ்சும் இடம் என்பர்.

குறிப்புரை: புரோதாயம் – புர + உதயம் = புரோதயம். புர – கீழ்த் திசை உதயத்திற்கு முன்னர் எனலுமாம். 'நீராண்ட புரோதாயம் ஆடப் பெற்றோம்' புரோதயம் என்பது புரோதாயம் எனப் பிழையாய் நின்றது. சிவாலிங்கம், சடாட்சரம் ஆதினம் ஆதிபன் ஆம்பா (கண்ணாம்பா ஜகதாம்பா) முதலியவற்றில் நீண்டதுபோல உதயம் – உதாயம் என்று நீண்டது பிழை வழக்கு. புரா+உத்+ஆயம் எனின், (கதிரவன்) எழுமுன் என்க. 'தாயம்' என்பதை ணமுல் ப்ரத்யயாந்த மாகக் கொள்ளின் முன்னர்க்கொடுத்து என்றுரைக்க. முனிகள் பலர் இறைஞ்சும் இடம் கேதாரம். 'சரேல் எனச் சொரிந்து' என்றிருந்தது போலும்.

All the holy sages in that area get up much earlier than sun rise and take bath, and then go to the temple. There they chant and say 'Enthan Perumaan'. "Oh You are our Father - You are the noblest above all the nobles". Civa with entangled matted hair has manifested Himself in Thiru-k-ketharam temple. In this area, the monkeys jump from one branch to another. As a result branches with honey drops get broken and fall on the ground. The fragrance of these flowers spreads all over the area of Thiru-k-ketharam. Such a glorious city is Thiru-k-ketharam.

2706. உள்ளமிக்கார்குதிரைம்முகத்தாரொருகாலர்கள்
எள்கவில்லாஇமையோர்கள்சேரும்மிடமென்பரால்
பிள்ளைதுள்ளிக்கிளைபயில்வகேட்டுப்பிரியாதுபோய்க்
கிள்ளையேனற்கதிர்கொணர்ந்துவாய்ப்பெய்யுங்கேதாரமே. 4

உள்ள மிக்கார் குதிரைம் முகத்தார் ஒருகாலர்கள்
எள்க வில்லா இமையோர்கள் சேரும் இடம் என்பரால்
பிள்ளை துள்ளிக் கிளை பயில்வ கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளையே நற்கதிர் கொணர்ந்து வாய்ப் பெய்யும் கேதாரமே.

uLLam mikkAr, kutirai(m) mukattAr, oru kAlarkaL,
en2kal illA imaiyOrkaL, cErum(m) iTam en2parAl--
piLLai tuLLik kiLai payilva kETTu, piriyAtu pOy,
kiLLai, En2al katir koNarntu vAyp peyyum kEtAramE.

பொருள்: கிளிப்பிள்ளைகள் துள்ளிக்கொண்டு கிளி பயில்வதைக் கேட்டுத் தாய்க்கிளி பிரியாது பிரிந்து சென்று தினைக் கதிரைக் கொய்துவந்து பிள்ளைக் கிளிகளின் வாயினில் ஊட்டும் காட்சியை உடைய திருக்கேதாரமே, மன ஊக்கமிக்கவர்கள், குதிரை முகம் உடையவர்கள், ஒற்றைக் காலுடையவர்கள், இகழ்தல் இலாத இமையோர்கள் சேரும் இடம் என்பர்.

குறிப்புரை: உள்ளம் மிக்கார் – தியானபலம் மிகுந்தவர். குதிரை முகத்தார் – கின்னரர் ஸ்யாநிக், க்ஷரஹ்: கிம்ருபுர த்ருட வதனோ மயூம் என்பது (அமரகோசம் முதற்காண்டம் சுலோகம் 74). ஒருகாலர்கள் – 'கொம்பைப் பிடித்தொருக்காலர்கள் இருக்கான் மலர்துவி' (தி. 7 ப. 78 பா. 3). பிரமதகணத்தவருள் ஒருவகையர் என்னும் பவிடிய புராணக்கூற்று இங்குப் பொருந்துமோ?

Our Lord Civa is manifest in the temple city of Thiru-k-ketharam, where people who are experts in meditation go to the temple and worship our God. Also the demigods who are celestial choristers with the human figure and the head of a horse (Kinnarar) and single legged celestials, and all other heavenly people - all gather in the temple and worship our Lord. The very young parrots call their mothers to give them food, because they are very hungry. Immediately the elderly parrots fly out and bring sheaves of millets with seeds attached to it and put them in the mouth of the young ones.

2707. ஊழியூழியுணர்வார்கள்வேதத்தினொண்பொருள்களால்
வாழியெந்தையெனவந்திறைஞ்சும்மிடமென்பரால்
மேழிதாங்கியுழுவார்கள்போலவ்விரைதேரிய
கேழல்பூழ்திகிளைக்கமணிசிந்துங்கேதாரமே. 5

ஊழி ஊழி உணர்வார்கள் வேதத்தின் ஒண்பொருள்களால்
வாழி எந்தை என வந்து இறைஞ்சும் இடம் என்பரால்
மேழி தாங்கி உழுவார்கள் போலவ் விரை தேரிய
கேழல் பூழ்தி கிளைக்க மணிசிந்தும் கேதாரமே.

Uzi Uzi uNarvArkaL, vEtattin2 oN poruLkaLAl,
"vAzi, entai!" en2a vantu iRainjcum iTam en2parAl--
mEzit tAgki uzuvArkaL pOla(v), virai tERiya,
kEzal pUzti, kiLaikka, maNi cintum kEtAramE.

பொருள்: ஏர்கொண்டு நிலத்தை உழுவோரைப் போல, இரை தேடும் பன்றிகள் புழுதி மண்ணைக் கிளைக்க, மாணிக்கங்கள் சிதறும் திருக்கேதாரமே, ஊழி பலவும் அறியும் உணர்வுடைய சிவயோகிகள் வேதத்தில் உள்ள ஒள்ளிய பொருள்களால் வாழ்க எம் தந்தை என வந்து இறைஞ்சும் இடம் என்பர்.

குறிப்புரை: ஊழிஊழி உணர்வார்கள். புழுதியின் மரூஉ. பூழ்தி. (பொழுது – போழ்து), கிளைக்க – கிண்ட.

The devotees of Civa through out the ages have been understanding the deep meaning of Vedas. They all praise our Lord and worship Him with devotion. They gather in the city of Thiru-k-ketharam. In this city, like farmers who make furrows with ploughs while tilling the soil, pigs dig the soil for food and gems get scattered on the ground. Such a glorious city is Thiru-k-ketharam.

2708. நீறுபூசிநிலத்துண்டுநீர்மூழ்கிநீள்வரைதன்மேல்
தேறுசிந்தையுடையார்கள்சேருமிடமென்பரால்
ஏறிமாவின்கனியும்பலவின்னிருஞ்சுளைகளும்
கீறிநாளும்முசுக்கிளையொடுண்டுகளுங்கேதாரமே. 6

நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரை தன்மேல்
தேறு சிந்தை உடையார்கள் சேரும் இடம் என்பரால்
ஏறிமாவின் கனியும் பலவின்னிரும் சுளைகளும்
கீறிநாளும் முசுக்கிளையொடு உண்டுகளும் கேதாரமே.

nIRu pUci, nilattu uNTu, nIr mUzki, nIL varaitan2 mEl
tERu cintai uTaiyArkaL cErum(m) iTam en2parAl--
ERi mAvin2 kan2iyum palAvin2(n2) irunj cuLaikaLum
kIRi, nALum mucuk kiLaiyoTu uNTu ukaLum kEtAramE.

பொருள்: முசுக்கள் தம் கிளையுடன் நாளும் மாமரத்திலேறி மாவின் இனிய கனிகளை உண்டும், பலாவின் கனிகளைக் கீறியுண்டும், துள்ளி விளையாடும் திருக்கேதாரமே, திருநீற்றினை நிறையப் பூசி, நீர்மூழ்கி, நிலத்தில் உண்டு உயர்ந்த மலைகளின் மேல் தங்கும் தெளிந்த சிந்தையுடையராகிய விரதிகள் சேரும் இடம் என்பர்.

குறிப்புரை: தாபதரொழுக்கம் முதலீரடிகளில் குறிக்கப்பட்டது. தேறு சிந்தை – தெளிந்த உள்ளம். மாமரத்தில் ஏறிப் பழங்களையும் பலாவைக் கீறிச் சுளைகளையும் உண்டு திரிவன குரங்கினங்கள்.

The ascetics who live in the Thiru-k-ketharam city take bath in the early morning every day. Then they smear their body with holy ashes. They take food from the land. They live on the long mountain ranges. They have clear ideas about the divine Supreme Being. They live in Thiru-k-ketharam city. In this city, the monkeys climb on the mango and jack trees and tear the fruits and eat them and live happily in the Thiru-k-ketharam city. Such a glorious city is Thiru-k-ketharam.

2709. மடந்தைபாகத்தடக்கிம்மறையோதிவானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல்வினைதீர்க்கநின்றார்க்கிடமென்பரால்
உடைந்தகாற்றுக்குயர்வேங்கைபூத்துதிரக்கல்லறைகண்மேல்
கிடந்தவேங்கைசினமாமுகஞ்செய்யுங்கேதாரமே. 7

மடந்தை பாகத்து அடக்கிம் மறைஓதி வானோர் தொழத்
தொடர்ந்த நம்மேல் வினை தீர்க்க நின்றார்க்கு இடம் என்பரால்
உடைந்த காற்றுக்கு உயர்வேங்கை பூத்துதிரக் கல்லறை கண்மேல்
கிடந்த வேங்கை சினமாமுகம் செய்யும் கேதாரமே.

maTantai pAkattu aTakki(m), maRai Oti vAn2Or toza,
toTarnta nammEl vin2ai tIrkka nin2RArkku iTam en2parAl--
uTainta kARRukku uyar vEgkai pUttu utira, kal aRaikaL mEl
kiTanta vEgkai cin2amA mukam ceyyum kEtAramE.

பொருள்: காற்று வீச, மரங்கள் அசைய வேங்கைப் பூக்கள் கற்பாறைகள் மேல் கிடக்க, அதனைக் கண்ணுற்ற வேங்கை வேறொரு வேங்கை எனச் சினங்கொண்ட முகத்தைக் காட்டும் அத்தகைய காட்சியுள்ள கேதாரமே, உமையைத் தன் பாகத்தில் கொண்டவர்; மறை ஓதி வானவர்களால் தொழப்படுபவர்; தொடர்ந்து நம்மேல் வினைகளைத் தீர்க்க நின்றவர் ஆகிய சிவபிரானுக்கு இடம் என்பர்.

குறிப்புரை: சிவபிரான், மங்கைபங்கராகியும் வேதாகமங்களை அருளியும் உயிர்களின் வினைகளைத் தீர்க்கின்ற உண்மை முன்னீரடிகளில் உணர்த்தப்பட்டது. 'ஆரணம் ஆகமங்கள் அருளினால் உருவு கொண்டு, காரணன் அருளானாகில் கதிப்பவர் இல்லை ஆகும்' என்பது சிவாகம வசனம். காற்றடிக்கப்

பூத்த வேங்கைப் பூக்கள். கற்பாறைகளின் மேல் உதிர்ந்து கிடந்தன. வேங்கை கண்டு பிறிதொரு வேங்கை எனச் சினந்தது.

Our Lord Civa chants the Vedas drawing to Him the devas to worship Him. He is a concomitant Supreme Being with His consort in half of His body. He is the author of all the Vedas and the aagamaas. He is manifest in Thiru-k-ketharam to wipe out the bad karma of His devotees. In this city of Thiru-k-ketharam, severe wind blows very often because it is a high mountain range. The flowers in kino trees fall down in large numbers over the rocks giving a delightful appearance. The tigers moving in the mountain area, on seeing the kino flowers over the rock, opine the flowers themselves are real tigers and get deluded and run away.

2710. அரவமுந்நீரணியிலங்கைக்கோனையருவரைதனால்
வெருவவூன்றிவிரலாலடர்த்தார்க்கிடமென்பரால்
குரவங்கோங்கங்குளிர்பிண்டிஞாழல்சரபுன்னைமேல்
கிரமமாகவரிவண்டுபண்செய்யுங்கேதாரமே. 8

அரவமும் நீரணி இலங்கைக் கோனை அருவரைதனால்
வெருவ ஊன்றி விரலால் அடர்த்தார்க்கு இடம் என்பரால்
குரவம் கோங்கங் குளிர் பிண்டி ஞாழல் சர புன்னை மேல்
கிரமம் ஆக வரிவண்டு பண்செய்யும் கேதாரமே.

arava munnIr aNi ilagkaik kOn2ai, aruvaraitan2Al
veruva Un2Ri, viralAl aTarttArkku iTam en2parAl--
kuravam, kOgkam, kuLir piNTi, njAzal, curapun2n2ai, mEl
kiramam Aka varivaNTu paN ceyyum kEtAramE.

பொருள்: குரா, கோங்கு, குளிர்ந்த அசோகு, ஞாழல், சுரபுன்னை மேல் முறையாக அழகிய வண்டுகள் பண்ணொலி செய்யும் திருக்கேதாரமே முழங்குகின்ற கடலிடை அழகிய இலங்கையின் அரசன் இராவணனைக் கயிலை மலையின் கீழ் அவன் அஞ்சி அலற ஊன்றி அடர்த்த சிவபெருமானுக்கு இடம் என்பர்.

குறிப்புரை: அரவம் – முழக்கம். வரை – மலை. குரவம் – குராமரம். பிண்டி – அசோகம். கிரமம் – முறை.

Once upon a time - Raavanan, the king of the ocean-bordered Sri Lanka tried to lift the Kailash mountain. At that time our Lord Civa pressed the top of the mountain with His toe. Raavanan got pressed under the mountain. This Lord is manifest in Thiru-k-ketharam. Here the bees in an orderly manner suck the honey fromthe flowers in trees such as bottle flower plants, a kind of cotton tree, ashoca tree, orange cup tree, alexandria laurel - making musical notes. Such a glorious city is Thiru-k-ketharam.

2711. ஆழ்ந்துகாணாருயர்ந்தெய்தகில்லாரலமந்தவர்
தாழ்ந்துதந்தம்முடிசாயநின்றார்க்கிடமென்பரால்
வீழ்ந்துசெற்றுநிழற்கிறங்கும்வேழத்தின்வெண்மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங்குருகுண்ணமுத்துதிருங்கேதாரமே. 9

ஆழ்ந்து காணார் உயர்ந்து எய்தகில்லார் அலமந்தவர்
தாழ்ந்து தந்தம் முடிசாய நின்றார்க்கு இடம் என்பரால்
வீழ்ந்து செற்று நிழற்கு இறங்கும் வேழத்தின் வெண்மருப்பினைக்
கீழ்ந்து சிங்கம் குருகுண்ண முத்து உதிரும் கேதாரமே.

Azntu kANAr, uyarntu eytakillAr, alamantavar
tAzntu, tam tam muTi cAya nin2RArkku iTam en2parAl--
vIzntu ceRRu(n) nizaRku iRagkum vEzattin2 veN maruppin2aik
kIzntu cigkam kuruku uNNa, muttu utirum kEtAramE.

பொருள்: தன்னுடைய நிழலைப் பிறிதொரு வேழம் எனக் கருதிச் சினந்து நிழலை விரும்பி இறங்கும் களிற்றின் வெண்மருப்பினை சிங்கம் பிளந்து அடிக்குருத்தினை உண்ண முத்துக்கள் உதிரும் திருக்கேதாரமே பூமியை அகழ்ந்தும் காணார், வானத்தில் உயர்ந்து பறந்தும் அடையார்; மனங்கலங்கி அவர் பணிந்து தத்தம் முடிகளைச் சாய்த்து வணங்க நின்றவருக்கு இடம் என்பர்.

குறிப்புரை: ஆழ்ந்து காணார் - பன்றியுருக்கொண்டு மண் இடந்தும் காணாத திருமால். உயர்ந்து எய்தகில்லார் - அன்னப்புள் வடிவு கொண்டு விண்பறந்தும் காணாத அயன், தாழ்ந்து தம்தம் முடிசாய நின்றவர் சிவபிரான். சாய்ந்தவர் - அயனும் அரியும். சிங்கம் யானை மேல் வீழ்ந்து அழித்து மருப்பைப் பிளந்து உண்ணுகின்றுழி முத்துக்கள் உதிரும்.

The demigod Brahma took the shape of swan and flew high in the sky to see our Lord's head. The other one, Thirumaal took the hog's body and went down the earth to see the feet of Lord Civa. They both failed. They came before our Lord and prostrated

before Him and asked for His grace. This Lord Civa loves to be manifested in Thiru-k-ketharam. In this city, the king of the forests, the lion, dashes against the elephant and kills it. Then it tears off the rutted head portion and eats its flesh. While eating, pearls from the elephant's head fall down on the ground. Such a glorious city is Thiru-k-ketharam.

2712. கடுக்கள்தின்றுகழிமீன்கவர்வார்கள்மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பாரவரெய்தவொண்ணாஇடமென்பரால்
அடுக்கநின்றவ்வறவுரைகள்கேட்டாங்கவர்வினைகளைக்
கெடுக்கநின்றபெருமானுறைகின்றகேதாரமே. 10

கடுக்கள் தின்று கழிமீன் கவர்வார்கள் மாசுடம்பினர்
இடுக்கண் உய்ப்பார் அவர் எய்த ஒண்ணா இடம் என்பரால்
அடுக்க நின்று அவ் அறவுரைகள் கேட்டாங்கவர் வினைகளைக்
கெடுக்க நின்ற பெருமான் உறைகின்ற கேதாரமே.

kaTukkaL tin2Ru kazi mIn2 kavarvArkaL, mAcu uTampin2ar,
iTukkaN uyppAr avar eyta oNNA iTam en2parAl--
aTukka nin2Ra(v) aRa uraikaL kETTu Agku avar vin2aikaLaik
keTukka nin2Ra perumAn2 uRaikin2Ra kEtAramE.

பொருள்: அடுத்து நின்று தாம் உரைக்கும் அறவுரைகள் கேட்டவர்களுடைய வினைகளைக் கெடுக்க என்றே நின்ற சிவபெருமானது இடம் கடுக்காயைத் தின்று கழியிலுள்ள மீன்களைக் கவருவாராகிய தேரர், அழுக்குடம்பினராகிய சமணர், இவ்விரு கூட்டத்தாரும் துன்பத்தினை செலுத்துவர்; இவர்களால் அடைய முடியாத திருக்கேதாரம் என்பர்.

குறிப்புரை: கடுக்கள் தின்று – துவர்க்காய்கள் தின்று. கழிமீன்கள் கவர்வார்கள் என்றதில் அவர் புலைமை குறிக்கப்பட்டது. இடுக்கண் – (இடுங்குகண்) துன்பம்.

The Jains in that city eat astringent seeds. They also eat damaged fish products without the knowledge of other people. They never care for their body but keep it dirty. They preach false and miserable words. These Jains do not approach the area where our Lord is manifested. Our Lord's devotees pray and preach real virtuous words. Our Lord listens to them and wipes out the bad karma of His devotees. Lord Civa is manifest in Thiru-k-ketharam city.

2713. வாய்ந்தசெந்நெல்விளைகழனிமல்கும்வயற்காழியான்
ஏய்ந்தநீர்க்கோட்டிமையோருறைகின்றகேதாரத்தை
ஆய்ந்துசொன்னஅருந்தமிழ்கள்பத்தும்மிசைவல்லவர்
வேந்தராகியுலகாண்டுவீடுகதிபெறுவரே. 11

வாய்ந்த செந்நெல் விளை கழனி மல்கும் வயற்காழியான்
ஏய்ந்த நீர்க்கோட்டு இமையோர் உறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்து சொன்ன அருந்தமிழ்கள் பத்தும் இசைவல்லவர்
வேந்தராகி உலகாண்டு வீடுகதி பெறுவரே.

vAynta cennel viLai kazan2i malkum vayal kAziyAn2,
Eynta nIrkkOTTu imaiyOr uRaikin2Ra kEtArattai
Ayntu con2n2a aruntamizkaL pattum icai vallavar,
vEntar Aki ulaku ANTu, vITukati peRuvarE.

பொருள்: செந்நெல் விளை கழனிகள் மலிந்த வயல்களையுடைய காழியான், சுனைகள் பொருந்தியதும், இமையோர் உறைகின்ற சிகரங்களை உடையதுமாகிய திருக்கேதாரத்தைக் குறித்து ஆய்ந்து சொன்ன அருந்தமிழ்ப் பாடல்களாகிய இப்பத்தினையும் இசைக்க வல்லவர் அரசராகி உலகத்தை ஆண்டு பரமவீடாகிய சிவகதியைப் பெறுவார்.

குறிப்புரை: ஏய்ந்த நீர்க்கோட்டு இமையோர் உறைகின்ற கேதாரம் என்றதில். கேதாரத்தை வழிபடும் இமையவர் அவ்வாறு திங்களும் உறைகின்ற இடம் நீர்க்கோடு என்பது குறிக்கப்பட்டது. வீடுகதி – வீட்டிற்குரிய நெறி. வீடும் (பாசநீக்கம்) கதியும் (சிவப்பேறு) என உம்மைத் தொகையுமாம்.

Our saint Thiru-gnana-Sambandar came into existence in the city of Kaazhi which is full of paddy fields. Our saint Thiru-gnana-Sambandar investigated about Thiru-k-ketharam city and then chanted these in the chaste Tamil language on the Lord. The city of Thiru-k-ketharam has many waterfalls all around the area. The devas reside here. The devotees who memorise and chant these ten verses in musical tone and worship our Lord there will rule over the country like kings and finally they will get salvation and their bad karma will be wiped out.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

114ஆம் பதிகம் முற்றிற்று
End of 114th Hymn

திருச்சிற்றம்பலம்

THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 251

பதிக எண்: 115

115. திருப்புகலூர்

115. THIRU-P-PUGALOOR

பண் : செவ்வழி

Pann: Chevvazhi

திருத்தல வரலாறு

சிவபிரானிடத்தில் புகலடைந்த காரணம் பற்றிய பெயர் என்பர். திருஞானசம்பந்தர் அருளிய பதிகமாகிய க்ஷேத்திரக்கோவையில் 'துலைபுகலூ ரகலா திவை காதலித்தா னவன் சேர்பதியே' என்று அருளியிருப்பதால், ஏதோ வரலாற்றை உட்கொண்டு அவ்வாறு கூறியிருக்க வேண்டும். துலைபுகல் என்பது துலாபாரம் புகுதல் என்று பொருள்படும்.

திருப்புகலூர் என்னும் இத்திருத்தலமானது மயிலாடுதுறை – பேரளம் தொடர் வண்டிப் பாதையில் உள்ள நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 6 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. சன்னா நல்லூரிலிருந்தும் நாகையிலிருந்தும் பேருந்துகளில் திருப்புகலூர் செல்லலாம். இது காவிரிக்குத் தென்கரைத் தலமாகும்.

இறைவரின் திருப்பெயர் அக்நீசர். இது அக்கினி பூசித்த காரணத்தால் ஏற்பட்ட பெயராகும். இதுவன்றிப் புகலூர் நாதர், சரண்யபுரீசர், புன்னாக நாதர், கோணப்பிரான் என்னும் பெயர்களும் வழங்குகின்றன. இறைவியாரின் திருப்பெயர் கருந்தாழ்குழலி. இத்திருப்பெயரை, அப்பர் சுவாமிகள் (தி. 4 ப. 26 பா. 3),

'பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை சூடிக்
கருந்தாழ் குழலியுந் தாமுங் கலந்து
திருந்தா மனமுடை யார்திறத் தென்றும்
பொருந்தார் புகலூர்ப் புரிசடை யாரே'

என எடுத்தாண்டுள்ளார்.

தலவிருட்சம் புன்னை. தீர்த்தம் அக்கினி தீர்த்தம், பாணதீர்த்தம் என்பன. அக்கினி தீர்த்தம் கோயிலைச்சுற்றிலும் அகழிபோல் சூழ்ந்திருக்கின்றது.

இது முருகநாயனார் அவதாரம் செய்த திருப்பதியாகும். முருகநாயனார் திருமடத்தில் திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்தபொழுது, அப்பர் திருவாரூரை வழிபட்டுப் புகலூர்க்கு எழுந்தருளி ஞானசம்பந்தரைக் கண்டு அளவளாவியிருந்ததோடு, திருவாரூர்ச் சிறப்பை 'முத்து விதானம்' என்று தொடங்கும் பதிகத்தால் ஓதியருளியதும் இத்திருத்தலம்.

திருப்பூந்துருத்தியிலிருந்து அப்பர் பெருமான் எழுந்தருளி இங்குத் தங்கி, கைத்தொண்டும் பாடுந்தொண்டும் செய்தார். அவர் சித்திரைச் சதய நாளிற் சிவானந்த ஞானவடிவான தலமும் இதுவே. பங்குனி உத்திரத் திருநாளுக்குப் பரவையார்க்குப் பொன் வேண்டி, சுந்தரர் இங்கு எழுந்தருளி, இறைவனை வணங்கித் திருப்பணிக்காக வைத்திருந்த செங்கற்களைத் தலையணையாகக் கொண்டு தூங்கி, விழித்தெழுந்தபோது, அக்கற்கள் பொன்னாயிருந்தமை கண்டு வியந்து, 'தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளியது இத்தலத்திலேதான்.

திருப்புகலூர் அந்தாதியை இயற்றியவர் பக்தர் நெற்குன்றவாணர். இது அச்சில் வெளிவந்துள்ளது. தருமை ஆதீனப் புலவர், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களாலும் ஒரு புதிய பதிப்பு வெளியிடப்பெற்றுள்ளது. வடமொழியில் தலபுராணம் இருக்கின்றது. அச்சாகவில்லை. இவ்வந்தாதியின் அமைப்பும் சொற்பொருளின்பமும் பிற திரிபந்தாதிகளுக்கு வாய்க்காத எளிமையும், அஃது அமைந்த அருமையும், பெரும் புலவர்களுக்கும் விருந்தாயிருக்கும். புகழுரு எய்திய உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் எழுதிய மகாவித்துவான் சரித்திரத்தில் இதன் சிறப்பை அறியலாம். இக்கோயிலின் முன்கோபுரம் 27 மீ. உயரம் உடையது. மதில்களின் நீளம் 98 மீ. அகலம் 68 மீ. சுற்றிலும் நந்தவனம் உள்ளது. அதைச்சுற்றி 40 மீ. அகலம் கொண்ட அகழி உள்ளது. உள்ளே இரண்டு பிரகாரங்கள் உள்ளன.

பதிக வரலாறு

'ஓதாது ஞானமெல்லாம் உணர்ந்தார்' ஆகிய சண்பை வேந்தர். திருப்புகலூர்த் திருத்தொண்டரொடும் செம்மை முருகனார் எதிர்கொள்ளத் திருக்கோயிலை எய்தி, உள்புகுந்து, தாழ்ந்து, விழுந்து, எழுந்து, நெக்குருகும் சிந்தையில் அன்பு பொங்கவும் கண்மலரில் நீரருவி செய்யவும் சார்த்திய தமிழ்த் தொடை மாலையுள் ஒன்று இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2714. வெங்கள்விம்முகுழலிளையராடவ்வெறிவிரவுநீர்ப்
பொங்குசெங்கட்கருங்கயல்கள்பாயும்புகலூர்தனுள்
திங்கள்சூடித்திரிபுரமோரம்பாலெரியூட்டிய
எங்கள்பெம்மானடிபரவநாளும்மிடர்கழியுமே. 1

வெங்கள் விம்மு குழல் இளையர் அடவ் வெறி விரவு நீர்ப்
பொங்கு செங்கட் கருங்கயல்கள் பாயும் புகலூர்தனுள்
திங்கள் சூடித் திரிபுரம் ஓரம்பால் எரியூட்டிய
எங்கள் பெம்மான் அடிபரவ நாளும் இடர்கழியுமே.

veg kaL vimmu kuzal iLaiyar ATa(v) veRi viravu nIrp
pogku cegkaN karugkayalkaL pAyum pukalUrtan2uL--
tigkaL cUTi, tiripuram or ampAl eriyUTTiya--
egkaL pemmAn2 aTi parava, nALum(m), iTar kaziyumE.

பொருள்: தேன் துளிக்கும் மலர்களைச் சூடிய குழலினராகிய இளைய மகளிர் ஆடுதலால், நாற்றம் விரவும் நீர்ப்பரப்பில் துள்ளும் செங்கட் கருங்கயல்கள் பாயும் திருப்புகலூர்தனுள் சந்திரசேகரன், திரிபுரத்தை ஒரே அம்பால் எரியூட்டிய எங்கள் பெருமான், அவருடைய திருவடியை நாளும் வழிபட இடர்கழியும்.

குறிப்புரை: குழலில் மலரினது கள் இருத்தலால். 'வெங்கள் விம்மு குழல்' எனப்பட்டது. செங்கட் கருங்கயல்; திரிபுரம் ஓரம்பு – முரண்டொடை. நாளும் பரவ இடர்கழியும்.

In the city of Thiru-p-pugaloor, young maidens adorn their hair locks with flowers full of honey. They dance in the hall with many other young girls. In the ponds around the city spreads sweet fragrance, the black tank fish jump here and there. Their eyes are dark red in colour. Here in this city is manifested our Lord Civa who retains the moon on His locks of hair. He burnt with one shot the asuras' three sky forts. Those devotees who can extol our Lord with great admiration will get their bad karma destroyed.

2715. வாழ்ந்தநாளும்மினிவாழுநாளும்மிவையறிதிரேல்
வீழ்ந்தநாளெம்பெருமானையேத்தாவிதியில்லிர்காள்
போழ்ந்ததிங்கட்புரிசடையினான்றன்புகலூரையே
சூழ்ந்தவுள்ளமுடையீர்களுங்கள்துயர்தீருமே. 2

வாழ்ந்த நாளும் இனி வாழுநாளும் இவை அறிதிரேல்
வீழ்ந்த நாள் எம்பெருமானை ஏத்தா விதியில்லிர்காள்
போழ்ந்த திங்கட் புரிசடையினான் தன்புகல் ஊரையே
சூழ்ந்த உள்ளம் உடையீர்கள் உங்கள் துயர் தீருமே.

vAznta nALum(m), in2i vAzum nALum(m), ivai aRitirEl
vIznta nAL emperumAn2ai EttA vitii(l)lIrkAL!
pOznta tigkaL puricaTaiyin2An2 tan2 pukalUraiyE
cUznta uLLam uTaiyIrkAL! ugkaL tuyar tIrumE.

பொருள்: உடம்புடன் வாழ்ந்த காலமும், வாழ்கின்ற காலமும் இவையென அறிதிரேல், இறைவனை ஏத்தாது வீணாகக் கழிந்து போன நாள் இறந்த நாள். வீதியில்லீர்காள்! பிறைச் சந்திரனை அணிந்த சடையினானுடைய புகலூரையே ஆராய்ந்த உள்ளம் உடையீர்காள்! உங்கள் துயர் தீரும்.

குறிப்புரை: உடம்பொடு உயிர்வாழ்வின் இறந்த காலத்தையும் அறிவீர் எனில் – 'ஆர் அறிவார் சாநாளும் வாழ்நாளும்' (தி. 1 ப. 41 பா. 3). எம்பெருமானை ஏத்தாத நாள் வாழ்ந்த நாளாகா. 'நின்திரு வருளே பேசின் அல்லால் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே' (தி. 6 ப. 47 பா. 10) சூழ்ந்த – ஆராய்ந்த.

Oh ye people of the city! If you are able to understand the days you have lived so far and the days you are going to live hereafter, and also if you come to know the past days when you had not worshipped our Lord, you would realise that you had no good karma to enable you to worship Him so far. However, it is never too late, now you can regret over your past lapses and atone for it, you may go to Thiru-p-pugaloor and worship our Lord who retains the moon on His hair locks, your sufferings will disappear.

2716. மடையினெய்தல்கருங்குவளைசெய்யம்மலர்த்தாமரை
புடைகொள்செந்நெல்விளைகழனிமல்கும்புகலூர்தனுள்
தொடைகொள்கொன்றைபுனைந்தானொர்பாகம்மதிசூடியை
அடையவல்லாரமருலகமாளப்பெறுவார்களே. 3

மடையின் எய்தல் கருங்குவளை செய்ய அம்மலர்த் தாமரை
புடை கொள் செந்நெல் விளைகழனி மல்கும் புகலூர்தனுள்
தொடை கொள் கொன்றை புனைந்தானொர் பாகம்மதி சூடியை
அடைய வல்லார் அமருலகம் ஆளப் பெறுவார்களே.

maTaiyil neytal, karugkuvaLai, ceyya(m) malarttAmarai,
puTai koL cennel viLai kazan2i malkum pukalUrtan2uL,
toTai koL kon2Rai pun2aintAn2,--or pAkam,--maticUTiyai
aTaiya vallAr amarulakam ALappeRuvArkaLE.

பொருள்: மடைகளில் நெய்தல், கருங்குவளை, செந்தாமரை மலர்கள், பக்கங்களில் செந்நெல் விளைகின்ற கழனிகள் மல்கிய திருப்புகலூர்தனுள், தொடுக்கப்பட்ட மாலை போல மலர்கின்ற கொன்றையைப் புனைந்தான். சந்திர சேகரனை, அடையப்பெற்ற புண்ணியம் உடையவர்கள் தேவலோகத்தை ஆளப் பெறுவார்களே.

குறிப்புரை: தொடை – மாலை. அமருலகம் – அமரர் உலகம் என்பது இவ்வாறு ஆளப்பட்டது. வன்மை பேற்றிற்குக் காரணம்.

In the city of Thiru-p-pugaloor, there are many creeks where water always flows. Here white Indian water lily, purple Indian water lily and the red lotus blossom, flowers of beauty. Nearby paddy fields exist with red paddy. Here our Lord is manifested with His hair locks ornamented with Indian laburnum flowers. He also retains the moon in His hair locks; He is concomitant with His consort Uma Devi. Those who can reach the temple and worship His holy feet and chant prayerful songs will rule over heaven.

2717. பூவுந்நீரும்பலியுஞ்சமந்துபுகலூரரையே
நாவினாலேநவின்றேத்தலோவார்செவித்துளைகளால்
யாவுங்கேளாரவன்பெருமையல்லாலடியார்கள்தாம்
ஓவுநாளும்முணர்வொழிந்தநாளென்றுளங்கொள்ளவே. 4

பூவும் நீரும்பலியும் சமந்து புகலூரரையே
நாவினாலே நவின்று ஏத்தலோவார் செவித்துளைகளால்
யாவும் கேளாரவன் பெருமையல்லால் அடியார்கள்தாம்
ஓவுநாளும் உணர்வொழிந்த நாளென்று உளம் கொள்ளவே.

pUvum nIrum paliyum cumantu, pukalUraiyE
nAvin2AlE navin2Ru Ettal OvAr; cevittuLaikaLAl
yAvum kELAr, avan2 perumai allAl, aTiyArkaLtAm,
"Ovum nALum uNarvu ozinta nAL" en2Ru uLam koLLavE.

பொருள்: பூவும் நீரும் நிவேதனமும் சுமந்து சென்று, திருப்புகலூரரையே நாவினால் பலமுறையும் பயின்று ஏத்துதல் ஒழியார்; செவித்துளைகளில் புகலூரின் பெருமையை அல்லால் யாதுங்கேளார் அடியார்கள். இவை செய்யாத நாள்கள் ஓவும் நாள் என்றும் உணர்வொழிந்த நாள் என்றும் கொள்ளவே.

குறிப்புரை: பலி – நிவேதனம். ஓவார் – நீங்கார், அடியார்கள் அவன் பெருமை அல்லால் செவித்துளைகளால் யாதும் கேளார். ஓவார், ஓவும் நாள் உணர்வு ஒழிந்த நாள் என்க. 'ஓவும் நாள் உணர்வு அழியும் நாள்' (தி. 7 ப. 48 பா. 3).

The servitors of our Lord take flowers, water and items for oblation and reach the temple. They chant with their tongue the fame of our Lord. They will not listen to any words other than the fame of our Lord. They will serve Him always. They will seriously think that the days on which they do not think or speak about our Lord's fame are the days lost without any benefit and the days of barren consciousness. The servitors are such good people.

2718. அன்னங்கன்னிப்பெடைபுல்கியொல்கியணிநடையவாய்ப்
பொன்னங்கரஞ்சிமலர்ச்சின்னமாலும்புகலூர்தனுள்
முன்னம்மூன்றுமதிலெரித்தமூர்த்திதிறங்கருதுங்கால்
இன்னரென்னப்பெரிதரியரேத்தச்சிறிதெளியரே. 5

அன்னம் கன்னிப்பெடை புல்கி ஒல்கி அணிநடையவாய்ப்
பொன்னம் கரஞ்சி மலர்ச்சின்ன மாலும் புகலூர்தனுள்
முன்னம் மூன்று மதில் எரித்த மூர்த்தி திறம் கருதுங்கால்
இன்னர் என்னப் பெரிது அரியர் ஏத்தச் சிறிது எளியரே.

an2n2am kan2n2ippeTai pulki, olki aNi naTaiyavAy,
pon2n2am karanjci malarccin2n2am Alum pukalUrtan2uL,
mun2n2am mUn2Ru matil eritta mUrtti tiRam karutugkAl,
in2n2ar en2n2ap peritu ariyar; Ettac ciRitu eLiyarE.

பொருள்: சேவல் அன்னம் கன்னிப் பெடையைப் புல்கித் தளர்ந்து அழகிய நடையினவாய் 'பொன்னங்காஞ்சி மலர்ச்சின்னம் மாலும்' திருப்புகலூர் தன்னுள், முன்பு மும்மதில்களையும் எரித்த மூர்த்தியின் திறத்தினை நினையுங்கால் இன்னர் என அறியவொண்ணாத பெரியர்; ஆயினும் அனைவரும் தொழுது ஏத்தச் சிறிது எளியரே.

குறிப்புரை: புல்கி – தழுவி. ஒல்கி – ஒதுங்கி. இன்னர் என்னப் பெரிது. அரியர் – அவன் இவன் என்று யாவர்க்கும் அறியவொண்ணார் (தி. 6 ப. 85 பா. 3). இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே (தி.6 ப. 97 பா. 10).

In the city of Thiru-p-pugaloor, there are some kinds of trees called Kaanchi. They look golden with their cool shades. Here the male swans embrace the young maiden swans and reach the shades of Kaanchi tree and enjoy their life with clamour. Here our Lord Civa is manifested. Once upon a time, He burnt the three forts of the asuras. The devotees think about our Lord Civa as a great, rare personality and a unique and courageous Supreme Being. But He becomes very humble to His devotees who chant His fame. They are wonder-struck.

2719. குலவராகக்குலமிலருமாகக்குணம்புகழுங்கால்
உலகினல்லகதிபெறுவரேனும்மலரூறுதேன்
புலவமெல்லாம்வெறிகமழுமந்தண்புகலூர்தனுள்
நிலவமல்குசடையடிகள்பாதந்நினைவார்களே. 6

குலவர் ஆகக் குலம் இலரும் ஆகக் குணம் புகழுங்கால்
உலகில் நல்லகதி பெறுவரேனும் மலர் ஊறுதேன்
புலவம் எல்லாம் வெறிகமழும் அந்தண் புகலூர்தனுள்
நிலவம் மல்கு சடை அடிகள் பாதம் நினைவார்களே.

kulavar Aka; kulam ilarum Aka; kuNam pukazugkAl,
ulakil nalla kati peRuvarEn2um, malar URu tEn2
pulavam ellAm veRi kamazum am taN pukaLurtan2uL,
nilavam malku caTai aTikaL pAtam nin2aivArkaLE.

பொருள்: உயர்குலத்திற் பிறந்தவராகுக அல்லது குலம் இல்லாதவராகுக; மலரில் ஊறுகின்றதேன் வயலெல்லாம் பரவும் மணங்கமழும் புகலூர்தனுள் பிறை நிலவு இருக்கும் சடையை உடைய அடிகளின் பாதம் நினைந்து; குணங்களைப் புகழ்வார் யாவர், அவர் உலகில் நல்ல கதியைப் பெறுவர்.

குறிப்புரை: குலவர் – உயர்குலத்திற் பிறந்தவர். ஆக – இரண்டும் வியங்கோள். குணம் – இறைவனுக்குள்ள எண்குணங்கள். பொருள் சேர்புகழ்கள். நல்லகதி – நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவு இலை (தி. 3 பா. 24 பா.1). புலவும் – புலால் நாற்றம் உடையவை. நிலவம் – பிறை.

In the city of Thiru-p-pugaloor, people born in the higher caste or otherwise will get salvation provided they praise our Lord's eight dominant qualities and worship Him. Therefore, the devotees always pray our Lord and think of His holy feet. Thiru-p-pugaloor is a fine place because fragrance spreads not only in the honey-filled flowery area, but also in the places abounding in dead flesh. Devotees find no difference between these two areas. Our Lord Civan, retaining the moon on His matted hair, is always thought of by His devotees.

2720. ஆணும்பெண்ணும்மெனநிற்பரேனும்மரவாரமாகப்
பூணுமேனும்புகலூர்தனக்கோர்பொருளாயினான்
ஊணுமூராரிடுபிச்சையேற்றுண்டுடைகோவணம்
பேணுமேனும்பிரானென்பராலெம்பெருமானையே. 7

ஆணும் பெண்ணும் என நிற்பரேனும் அரவு ஆரமாகப்
பூணுமேனும் புகலூர் தனக்கு ஓர்பொருள் ஆயினான்
ஊணும் ஊரார் இடுபிச்சை ஏற்று உண்டு உடைகோவணம்
பேணுமேனும் பிரான் என்பரால் எம்பெருமானையே.

ANum peNNum(m) en2a niRparEn2um(m), aravu Aramap
pUNumEn2um, pukalUrtan2akku Or poruL Ayin2An2;
UNum UrAr iTu piccai ERRu uNTu, uTaikOvaNam
pENumEn2um, pirAn2 en2parAl, emperumAn2aiyE.

பொருள்: ஆண் எனவும் பெண் எனவும் நின்றார் என்றாலும், பாம்பினை மாலையாகப் பூணுவர் என்றாலும், புகலூருக்குச் செல்வம் ஆயினான்; ஊணாக ஊரார் இடும் பிச்சை ஏற்று உண்டு உடையாகக் கோவணம் விரும்பும்; எளியவர் என்றாலும் அந்த எம்பெருமானையே பிரான் என்பர்.

குறிப்புரை: ஊணும் ஊரார் இடுகின்ற பிச்சையுண்டி, உடையும் கோவணம், பிச்சையைப் பேணும் (விரும்பும்) கோவணத்தைப் பேணும் எம்பெருமானையே பிரான் என்பர்.

Our Lord Civan is manifest in the temple at Thiru-p-pugaloor and considers the place as His desired one. He may be in the form of male or female. He might wear the snakes as jewellery over His body. He may collect and eat alms given by women. He may cover His body with one single forelap cloth on His loins. The devotees know about all the above features of our Lord; yet they declare that He is their Chief Supreme Being.

2721. உய்யவேண்டில்லெழுபோதநெஞ்சேயுயரிலங்கைக்கோன்
கைகளொல்கக்கருவரையெடுத்தானையோர்விரலினால்
செய்கைதோன்றச்சிதைத்தருளவல்லசிவன்மேயபூம்
பொய்கைசூழ்ந்தபுகலூர்புகழப்பொருளாகுமே. 8

உய்ய வேண்டில் எழுபோத நெஞ்சே உயர் இலங்கைக்கோன்
கைகள் ஒல்கக் கருவரை எடுத்தானை ஓர்விரலினால்
செய்கை தோன்றச் சிதைத்து அருளவல்ல சிவன் மேயபூம்
பொய்கை சூழ்ந்த புகலூர் புகழப் பொருளாகுமே.

uyya vENTil(l) ezu, pOta! nenjcE! uyar ilagkaik kOn2
kaikaL olkak karuvarai eTuttAn2ai orviralin2Al
ceykai tOn2Rac citaittu aruLa valla civan2 mEya, pUm
poykai cUznta, pukalUr pukaza, poruL AkumE.

பொருள்: நெஞ்சே! நீ உய்ய வேண்டுவையாயின் போத எழுக! உயர்ந்த இலங்கையர்கோன் இராவணன் கைகள் தளரக் கையால் மலையை எடுத்தானை ஓர் விரலினால் சிதைத்தருள வல்ல சிவன் எழுந்தருளியுள்ள இடமாகிய பூம்பொய்கை சூழ்ந்த திருப்புகலூரைப் புகழ்ந்தால் மெய்ப்பொருள் கிட்டும்.

குறிப்புரை: நெஞ்சே! உய்ய வேண்டுவையாயின் எழு. போத – புகுத என்பதன் மரூஉ. ஒல்க – தளர. புகழ்ந்தால் மெய்ப்பொருள் கிட்டும்.

Oh my dear heart, if you want to get relief, get up in the early morning, go to the temple of our Lord Civan and worship Him. Raavanan, the king of Sri Lanka, once tried to lift mountain Kailash with his hands. Then our Lord pressed the top of the mountain with His toe and damaged His body to show His mightiness. Then He graced him. This Lord Civan is manifested in the temple in Thiru-p-pugaloor city. This city is surrounded by good water ponds. The devotees praise His fame everywhere. This is the only way to get salvation for them.

2722. நேமியானும்முகநான்குடையந்நெறியண்ணலும்
ஆமிதென்றுதகைந்தேத்தப்போயாரழலாயினான்
சாமிதாதைசரணாகுமென்றுதலைசாய்மினோ
பூமியெல்லாம்புகழ்செல்வமல்கும்புகலூரையே. 9

நேமியானும் முகம் நான்கு உடையந் நெறி அண்ணலும்
ஆமிது என்று தகைந்து ஏத்தப் போயார் அழலாயினான்
சாமி தாதை சரணாகும் என்று தலை சாய்மினோ
பூமி எல்லாம் புகழ் செல்வ மல்கும் புகலூரையே.

`nEmiyAn2um, mukam nAn2ku uTaiya(n) neRi aNNalum,
"Am itu" en2Ru takaintu Ettap pOy, Ar azal Ayin2An2;
cAmitAtai; caraN Akum' en2Ru, talaicAymin2O--
pUmi ellAm pukaz celvam malkum pukalUraiyE!

பொருள்: சக்ராயுதத்தானும் நான்கு முகமுடைய நெறியண்ணலும் இறைவன் இருக்கும் இடமிது. ஆம் என நிலைபெறுத்திக் கூறி ஏத்தப் போக நெருப்பாக உயர்ந்தான்; முருகனுடைய தந்தை; அவனே சரணாகும் என்று புகலூரையே தலை வணங்குமின்! நிலவுலகெல்லாம் உமக்குப் புகழும் செல்வமும் பெருகும்.

குறிப்புரை: நேமியான் – சக்கிராயுதம் ஏந்திய திருமால், நான்கு முகமுடைய நெறியண்ணல் எனமாறுக. ஆம் இது என்று தகைந்து – மேலிடம் ஆகும் கீழிடமாகும் இ(றைவனது இ) ந்நிலை என்று கூறுபடுத்தி. சாமி – முருகன். புகழ் செல்வம் – வினைத்தொகை. உம்மைத்தொகையும் ஆம்.

Thirumaal, the demigod who carries the sharp chakra and the four faced Brahma decided on a proper method to see our Lord's head and feet. That is both should take the appearance of hog and swan and should try. They both searched and failed in their attempt. Then Lord Civa became an infinite Supreme Flame. He is the Father of Murugan. This Lord is manifested in the temple in Thiru-p-pugaloor city. He is the Chief Lord and proper Supreme Being to worship. They must prostrate and worship Him. Then you will get the assets of the world and goodness and the world will praise you.

2723. வேர்த்தமெய்யருருவத்துடைவிட்டுழல்வார்களும்
போர்த்தகூறைப்போதிநீழலாரும்புகலூர்தனுள்
தீர்த்தமெல்லாஞ்சடைக்கரந்ததேவன்திறங்கருதுங்கால்
ஓர்த்துமெய்யென்றுணராதுபாதந்தொழுதுய்ம்மினே. 10

வேர்த்த மெய்யர் உருவத்துடை விட்டு உழல்வார்களும்
போர்த்த கூறைப்போதி நீழலாரும் புகலூர்தனுள்
தீர்த்தம் எல்லாம் சடைக்கரந்த தேவன் திறம் கருதுங்கால்
ஓர்த்து மெய் என்று உணராது பாதம் தொழுது உய்ம்மினே.

vErtta meyyar uruvattu uTaiviTTu uzalvArkaLum,
pOrtta kURaip pOti nIzalArum,--pukalUrtan2uL
tIrttam ellAm caTaik karanta tEvan2 tiRam karutugkAl--
Orttu, mey en2Ru uNarAtu, pAtam tozutu uymmin2E!

பொருள்: வியர்வை நீர் பாய்ந்த மேனியராய், உடையைத் துறந்து திரியும் சமணர்களும், துவராடையால் உடலைப் போர்த்திய அரசமர நீழலராகிய தேரரும் ஆராய்ந்து மெய்யென்று

உணரார்; திருப்புகலூர்தனுள் கங்கை நீரைச் சடையிற் கரந்த தேவன்; அவருடைய பாதங்களைத் தொழுது உய்ம்மினே!

குறிப்புரை: கூறை – ஆடை. போதி – அரசமரம். தீர்த்தம் – கங்கை. கரந்த – மறைத்த. ஓர்த்து – ஆராய்ந்து.

In the city, Jains sweat profusely in their body, and move on roads without any dress, and the Buddhists cover their body and take rest under the pipal tree – all these people preach wrong moral qualities. Do not listen to them. Our Lord supports the river Ganges on His hair locks; go to the temple and prostrate at His holy feet and pray. But do not try to make any research on His nature and customs and habit. Concentrate on and worship His holy feet to obtain heavenly bliss.

2724. புந்தியார்ந்தபெரியோர்களேத்தும்புகலூர்தனுள்
வெந்தசாம்பற்பொடிப்பூசவல்லவிடையூர்தியை
அந்தமில்லாஅனலாடலானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடியாடக்கெடும்பாவமே. 11

புந்தி ஆர்ந்த பெரியோர்கள் ஏத்தும் புகலூர்தனுள்
வெந்த சாம்பற் பொடிப் பூச வல்ல விடை ஊர்தியை
அந்தம் இல்லா அனலாடல் ஆனை அணி ஞானசம்
பந்தன் சொன்ன தமிழ் பாடிஆடக் கெடும் பாவமே.

punti Arnta periyOrkaL Ettum pukalUrtan2uL,
ventacAmpalpoTip pUca valla viTai Urtiyai,
antam illA an2al ATalAn2ai, aNi njAn2acam-
pantan2 con2n2a tamiz pATi ATa, keTum, pAvamE.

பொருள்: அறிவு நிறைந்த பெரியோர்கள் ஏத்தும் திருப்புகலூர்தனுள் திருநீற்றினைப் பூசும், எருதேறியை, அழிவிலாத அனலாடுவானைத் திருஞானசம்பந்தன் சொன்ன இத்தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடப் பாவம் கெடும்.

குறிப்புரை: புந்தி – அறிவு. அந்தம் – முடிவு, முடிவின்மை இறைவனுக்குரியது (தி. 2 ப. 117 பா. 11). தமிழ் – இத்திருப்பதிகம் பாடி ஆடினால் பாவம் கெடும்.

In the city of Thiru-p-pugaloor, very great men of knowledge praise and worship our Lord Civan manifested in the temple. He smears His body with well burnt holy ashes. He sustains the bull for His conveyance. Our Lord who has no end in His life dances over the supernal fire. Our saint Thiru-gnana-Sambandar chanted these Tamil songs on our Lord. Those servitors sing these verses in proper musical tone and dance before our Lord and praise Him saying 'glory to thee'. Therefore, their bad karma will disappear.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

115ஆம் பதிகம் முற்றிற்று
End of 115th Hymn



திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 252 *பதிக எண்: 116*

116. திருநாகைக்காரோணம் 116. THIRU-NAAGAI-K-KAARONAM

பண் : செவ்வழி *Pann: Chevvazhi*

திருத்தல வரலாறு

நாகராசனாகிய ஆதிசேடனால் பூசிக்கப்பெற்றமையின் நாகை என்னும் பெயர் பெற்றது. புண்டரீக முனிவரைக் காயத்தோடு ஆரோகணம் செய்து கொண்டமையால் காயாரோகணம் என்னும் பெயர் எய்திற்று. அதுவே காரோணம் என்று மருவிற்று. இது நாகப்பட்டினம் தொடர்வண்டி நிலையத்திற்கு வடமேற்கே சுமார் 2 கி.மீ. தூரத்திலிருக்கிறது. இது காவிரிக்குத் தென்கரையில் உள்ள எண்பத்திரண்டாவது தலம். சென்னை, கும்பகோணம், தஞ்சை, திருச்சி, திருவாரூர், மயிலாடுதுறை முதலிய பல நகரங்களிலிருந்து பேருந்துகள் உள்ளன.

இறைவரின் திருப்பெயர் காயாரோகணேசுவரர். இறைவியாரின் திருப்பெயர் நீலாயதாட்சி. தீர்த்தம் தேவதீர்த்தம், புண்டரீக தீர்த்தம், இவை முறையே கோயிலுக்குத் தெற்கிலும் வடக்கிலும் இருக்கின்றன. அதிபத்த நாயனார் திருஅவதாரம் செய்த திருப்பதியாகும். சுந்தர மூர்த்தி நாயனார் காற்றனைய வேகத்தையுடைய குதிரை, ஒளியுள்ள முத்துமாலை, சிறந்த பட்டு முதலானவைகளை வேண்டிப் பெற்றார். விடங்கர் தலங்கள் எழனுள் ஒன்று.

திருக்கோயிலில் முதலில் இருக்கும் விநாயகருக்கு நாகாபரண விநாயகர் என்று பெயர். உள்ளேயிருக்கும் பிள்ளையாருக்கு மாவடிப் பிள்ளையார் எனப் பெயர். இத்தலத்து அம்மன் மிகச் சிறப்புடையவர். இத்தலத்தைப்பற்றி 'காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி, நாகை நீலாயதாட்சி' என்னும் பழமொழி வழங்குகின்றது.

இக்கோயிலுக்கு திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டு, திருநாவுக்கரசு நாயனார் பதிகம் நான்கு, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக ஏழு பதிகங்கள் இருக்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் பதிகத்தின் இறுதிப்பாட்டை வெள்ளிப்பாடல் என்பர். வெள்ளிப்பாடல் என்பது பின்னால் யாரோ ஒருவரால் எழுதிச்சேர்க்கப் பெற்றதாகும்.

அவர்கள் அங்ஙனங் கூறுதற்குக் காரணம் ஐந்தாம் திருப்பாடலில், 'சுந்தரனே கந்த முதலாடை யாபரணம் பண்டாரத்தே யெனக்குப் பணித்தருள வேண்டும்' என்றிருப்பதாலும், 11ஆம் திருப்பாட்டில் 'ஒளிமுத்தம் பூணாரமொண்பட்டும் பூவுங் கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும்

வேண்டும்' என்றிருப்பதாலும், முதலில் கூறியவற்றுள் சில இரண்டாவது கூறியவற்றுள் காணப்படுதலால் கூறியது கூறல் என்னும் குற்றத்தின் பாற்படுத்தி, இதை வெள்ளிப்பாட்டு என்பர்.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தலபுராணம் எழுதியுள்ளார்கள். அது புலவர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப்படும் பெருஞ்சிறப்பு வாய்ந்தது. 'கற்றோர் பயில் கடல் நாகைக்காரோணம்' என்று ஞானசம்பந்தர் கூறியிருத்தலாலும், பாக்கு விளையாடிக் கொண்டிருந்த பாலகர்களை நோக்கிப் பசியினால் காளமேகப்புலவர் 'சோறு எங்கு விக்கும்' என்று கேட்டதற்கு, அப்பாலகர்கள் தொண்டையில் விக்கும் என்று பதில் கூறினார்கள். (விற்கும் = என்பதைப் பேச்சு வழக்கில் விக்கும் எனக் கூறுதலுண்டு). உடனே புலவர் கோபித்து அவர்கள் மீது வசைபாடும் பொருட்டு, 'பாக்கு தறித்து விளையாடும் பாலகர்க்கு' என்பது வரை சுவரில் எழுதிவிட்டு, பசி தீர்ந்தபிறகு எஞ்சிய பகுதியைப் பாடி முடிவு செய்வதாக வைத்துவிட்டுப் பசியாற்றிக் கொண்டு அவ்விடம் வந்தபொழுது, அவர் எழுதியதற்குமேல் 'நாக்குத் தமிழுரைக்கும் நன்னாகை' என்று அவ்விளஞ்சிறார் எழுதியதைப் பார்த்து மதிமயங்கிச் சென்றதாகத் தனிப்பாடல் ஒன்று இருக்கின்றது. இவைகளால் இவ்வூர் மக்களின் கல்வித்திறம் புலப்படும். இவ்வூரில் இருந்த காத்தான் சத்திரத்தைப் பற்றிய காளமேகப் புலவர் பாடலொன்றும் உண்டு.

இந்த ஊர் ஒரு துறைமுகம். வாணிகத்தலம். கீழைத் தஞ்சையின் தலைநகரம். இவ்வூரில் மங்களாசாசனம் பெற்ற திருமால் கோயில் சௌந்தரராஜப் பெருமாள் என்ற பெயரால் விளங்குகிறது. மேலும் மேலைக்கயா என்ற சட்டநாதர் கோயில் ஒன்று இருக்கின்றது. மற்றும் காவல் தெய்வமாகிய கோதண்ட ஐயனார் கோயில், அமர்ந்தீசர் கோயில், மலைச்சுரம் கோயில் (கயிலாயநாதர்) (இது ஒரு கட்டுமலை), குமாரர் கோயில், நடுவண் நாதர் கோயில், அழகிய நாதர் கோயில் முதலிய பல கோயில்கள் இருக்கின்றன.

திருக்கோயில் 586–250 அடிகள் கொண்டது. இராயகோபுரம் முற்றுப்பெறவில்லை. உட்கோபுரம் 3 அடுக்குக் கொண்ட சோழன் கோபுரம். மடைப்பள்ளிக்கெதிரில் அதிபத்தர் திருவுருவம் உள்ளது. மாமரம் தலமரம். அதனடியில் மாவடிப்பிள்ளையார் இருக்கிறார். இராசதானி மண்டபத்தில் தியாகராசர் இருக்கிறார். சுந்தரவிடங்கர் சுவாமி பெயர் காரோணம் என்பது காயாரோகணர் என்பதன் மரூஉ.

புண்டரீகரிஷியை சரீரத்தோடு ஏற்றுக்கொண்டதனால் காயாரோகணர் என்று வந்ததாகப் புராணம் கூறும். நீலாயதாட்சி என்ற வடமொழிப்பெயர் கருந்தடங்கண்ணி எனத் தமிழில் வழங்கும். இது சக்தி பீடங்கள் அறுபத்து நான்கில் ஒன்று. மாடங்களில் சிற்பவேலை அழகாக இருக்கிறது. இவ்வூர்த்தேர் கண்ணாடி ரதம் அல்லது பீங்கான் ரதம் என வழங்கும்.

பதிக வரலாறு

அவயந்தியைப் பணிந்த பாலறாவாயர், திருத்தொண்டர் குழாத்தொடும், கற்றவர் வாழ் கடல்நாகைக்காரோணத்துக் கண்ணுதலைக் கைதொழுது பாடிய கொற்றமிழ் மாலைகளுள் ஒன்று இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2725. கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றந்நெடுவெண்ணிலா
ஏனற்பூத்தம்மராங்கோதையோடும்விராவுஞ்சடை
வானநாடன்அமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 1

கூனல் திங்கள் குறுங்கண்ணி கான்றந் நெடுவெண்ணிலா
ஏனல் பூத்தம் மராங் கோதையோடும் விராவும் சடை
வான நாடன் அமரர் பெருமாற்கு இடம் ஆவது
கானல் வேலி கழிசூழ் கடல் நாகைக்காரோணமே.

kUn2al-tigkaL kuRugkaNNi kAn2Ra(n) neTu veN nilA,
vEn2al pUtta(m) marAm kOtaiyOTum virAvum caTai,
vAn2a nATan2, amarar perumARku iTam Avatu--
kAn2al vEli kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: வளைந்த பிறையாகிய தலைமாலையின் வெண்மையான ஒளியுடன், வேனிற் காலத்தில் பூத்த கடம்ப மலர்களையும் கலந்த சடையுடையவன்; வானநாடன்; அமரர் பெருமான்; அவனுக்கு இடமாவது, நெய்தலங் கானலாகிய வேலி சூழ்ந்த கடல் நாகைக் காரோணமே.

குறிப்புரை: கூனல் திங்கட் குறுங்கண்ணி – வளைத்த பிறையாகிய சிறிய தலைமாலை. ஏனல் – தினை. மராங்கோதை – கடம்பலர் மாலை. 'வான நாடன்; அமரர் பெருமான்' (தி.3 ப. 118 பா. 4; தி. 7 ப. 25 பா. 2; தி. 81 ப. 1 பா. 5; தி. 39 ப. 3).

Our Lord Civan adorns His head with the curved small garland similar to the young moon. The brightness of the young moon spreads its light all over Civa's head. In the mountain area millet gardens grow in plenty. In that garden the seaside Indian oak tree also grows. These flowers are made into garland and our Lord ties it round

His entangled locks of hair. He is the head of devas as well as the chief of saints. He is willingly manifest in the temple in Thiru-naagai-k-kaaronam city. In this city, the gardens are many forming the fence of the city. There are many saltpans.

2726. விலங்கலொன்றுசிலையாமதில்மூன்றுடன்வீட்டினான்
இலங்குகண்டத்தெழிலாமைபூண்டாற்கிடமாவது
மலங்கியோங்கிவருவெண்டிரைமல்கியமால்கடல்
கலங்கலோதங்கழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 2

விலங்கல் ஒன்று சிலையா மதில் மூன்றுடன் வீட்டினான்
இலங்கு கண்டத்து எழில் ஆமை பூண்டாற்கு இடமாவது
மலங்கி ஓங்கிவரு வெண்திரை மல்கிய மால்கடல்
கலங்கல் ஓதம் கழிசூழ் கடல் நாகைக்காரோணமே.

vilagkal on2Ru cilaiyA matil mUn2Ru uTan2 vITTin2An2,
ilagku kaNTattu ezil Amai pUNTARku iTam Avatu--
malagki Ogki(v) varu veNtirai malkiya mAlkaTal
kalagkal Otam kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: மலையொன்றை வில்லாகக் கொண்டு மதில்கள் மூன்றனையும் ஒருசேர அழித்தான், விளங்கும் கண்டத்தில் ஆமையைப் பூண்டான்; அவனுக்கு இடமாவது, உயர்ந்து அலைந்து வருகின்ற வெள் அலைகள் மல்கிய கருங்கடலின் கலங்கிய ஓதமுடைய கழிகள் சூழ்ந்த கடல்நாகைக் காரோணமே.

குறிப்புரை: விலங்கல் – மேருமலை. ஆமை கழுத்திற் பூண்டான். மலங்கி – அலைந்து.

Our Lord Civa made a big bow using the Meru mountain and destroyed the three forts of the asuras. He wears on His pretty neck the tortoise shell. He manifests Himself in the sea city of Thiru-naagai-k-kaaronam. In the seashore near the city the white surging waves bring mixed water and run into the saltpans. These pans are many near the city, and are all full of muddy water and sand.

2727. வெறிகொளாருங்கடற்கைதைநெய்தல்விரிபூம்பொழில்
முறிகொள்ஞாழல்முடப்புன்னைமுல்லைம்முகைவெண்மலர்
நறைகொள்கொன்றைந்நயந்தோங்குநாதற்கிடமாவது
கறைகொளோதங்கழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 3

வெறி கொள் ஆரும் கடற் கைதை நெய்தல் விரி பூம்பொழில்
முறி கொள் ஞாழல் முடப்புன்னை முல்லைம் முகை வெண்மலர்
நறை கொள் கொன்றைந் நயந்தோங்கு நாதற்கு இடமாவது
கறை கொள் ஓதம் கழிசூழ் கடல் நாகைக்காரோணமே.

veRi koL--Arum kaTal kaitai, neytal, viri pUmpozil--
muRi koL njAzal, muTappun2n2ai, mullai(m)mukai, veNmalar,
naRai koL kon2Rai(n), nayantu Ogku nAtaRku iTam Avatu--
kaRai koL Otam kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: தேனுடைய கொன்றை மலர்மாலையை விரும்பும் உயர்ந்த தலைவருக்கு இடமாவது, நாற்றம் மிகவும் உடைய கடல்தாழை, நெய்தல், தளிர் மிக்க ஞாழல் மரங்கள், வளைந்த புன்னை, முல்லை வெண்மலரின் முகைகள் பரந்த பூம்பொழில்களும் கரிய ஓதக் கழிகளும் சூழ்ந்த கடல்நாகைக் காரோணமே.

குறிப்புரை: வெறி – மணம். கைதை – தாழை. முறி – தளிர். ஞாழல் – மரம், கோங்கு. நறை – தேன். கறை – கறுப்பு.

Our Lord Civa adorns His head with the orange cup flowers along with its tender leaves. The flowers of the curved mast wood tree, the white Arabian jasmine flower buds, the Indian laburnum flowers full of honey - the Lord desires to wear all these flowers and to manifest Himself in the city of seas, Thiru-naagai-k-kaaronam. This city is surrounded by groves of sweet smelling screw pine tree full of flowers; and white Indian water lily - all in the natural forests which are around the city full of dark pans.

2728. வண்டுபாடவ்வளர்கொன்றைமாலைம்மதியோடுடன்
கொண்டகோலங்குளிர்கங்கைதங்குங்குருள்குஞ்சியுள்
உண்டுபேரலும்மெனவைத்துகந்தவ்வொருவற்கிடம்
கண்டல்வேலிகழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 4

வண்டு பாட வளர் கொன்றை மாலைம் மதியோடு உடன்
கொண்ட கோலம் குளிர்கங்கை தங்கும் குருள்குஞ்சியுள்
உண்டு பேரலும் என வைத்து உகந்த ஒருவற்கிடம்
கண்டல் வேலி கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.

vaNTu pATa(v) vaLar kon2Rai, mAlai(m) matiyOTu uTan2--
koNTa kOlam, kuLirkagkai tagkum kuruLkunjciyuL
uNTupOlum en2a vaittu ukanta(v) oruvaRku iTam--
kaNTal vEli kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: வண்டு பாட வளரும் கொன்றை மலர்மாலையை மதியுடன் குளிர் கங்கை தங்கும் கொண்ட கோலம், 'குருள் குஞ்சி உள் உண்டு போலும்' என வைத்து உகந்தவர்க்கிடம் ஆவது, கண்டல் வேலியும் கழியும் சூழ்ந்த கடல்நாகைக்காரோணமே.

குறிப்புரை: மாலைமதி – 'மாசில் வீணையும் மாலைமதியமும்'. கோலம் – அழகு. சிவவேடம். குருள்குஞ்சி – குருண்டசடை, குருண்டவார் குழற்சடையுடைக்குழகன் (தி. 2 ப. 105 பா. 11).

Our Lord Civa adorns His head with blossomed Indian laburnum flower garlands tied along with the young moon. He also supports the cool river Ganges inside His curved and entangled hair locks and prevents its visibility. He feels happy over such arrangements. This city is surrounded by screw pine plants as fencing for the city. There exist many saltpans near the seashore. This city where our Lord manifests Himself is called Thiru-naagai-k-kaaronam.

2729. வார்கொள்கோலம்முலைமங்கைநல்லார்மகிழ்ந்தேத்தவே
நீர்கொள்கோலச்சடைநெடுவெண்டிங்கள்நிகழ்வெய்தவே
போர்கொள்சூலப்படைபுல்குகையார்க்கிடமாவது
கார்கொளோதங்கழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 5

வார் கொள் கோலம் முலை மங்கை நல்லார் மகிழ்ந்து ஏத்தவே
நீர் கொள் கோலச் சடை நெடு வெண்திங்கள் நிகழ்வெய்தவே
போர் கொள் சூலப்படை புல்குகையார்க்கு இடமாவது
கார் கொள் ஓதம்கழிசூழ் கடல் நாகைக்காரோணமே.

vAr koL kOlam mulai magkai nallAr makizntu EttavE,
nIr koL kOlac caTai neTu veN tigkaL nikazvu eytavE,
pOr koL cUlappaTai pulku kaiyArkku iTam Avatu--
kAr koL Otam kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: முலைக்கச்சு விளங்கும் பொலிவுடைய அழகிய மங்கையர் மகிழ்ந்து வழிபடவும் கங்கை நீர் தங்கும் பொலிவுடைய சடையில் அழியாத வெண்பிறை விளங்கவும் போரில்

விளங்கும் சூலப்படை பொருந்திய கையராகிய சிவபிரானுக்கு இடமாவது; கார்மேகம் போலும் கரிய நிறமுடைய கழிகள் சூழும் கடல்நாகைக்காரோணமே.

குறிப்புரை: வார் – கச்சு. நிகழ்வு – விளக்கம். கார் – மேகம். ஏத்தவும் எய்தவும் புல்குகையார்க்கு இடம் காரோணம் என்க. 'பரமாயவர்' என்றும் பாடம்.

In this city, good people were happy to praise our Lord Civan. Civan manifests Himself in the temple in sea Thiru-naagai-k-kaaronam along with His consort Uma Devi. He happily and gracefully accommodates her who wears a corset over her soft breasts. In His cool entangled locks of hair, the moon spreads its long rays. He holds the battle-axe in one of His hands. Such a Lord desires to manifest Himself in the sea Thiru-naagai-k-kaaronam. In this city, big waves flush water into the black saltpans.

2730. விடையதேறிவ்விடவரவசைத்தவ்விகிர்தரவர்
படைகொள்பூதம்பலபாடஆடும்பரமாயவர்
உடைகொள்வேங்கையுரிதோலுடையார்க்கிடமாவது
கடைகொள்செல்வங்கழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 6

விடையது ஏறி இவ்விட அரவு அசைத்தவ் விகிர்தர் அவர்
படை கொள் பூதம் பலபாட ஆடும் பரமாயவர்
உடை கொள் வேங்கை உரிதோல் உடையார்க்கு இடமாவது
கடை கொள் செல்வங்கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.

viTai atu ERi(v) viTa aravu acaitta vikirtar avar,
paTai koL pUtampala ATum param Ayavar,
uTai koL vEgkai uri-tOl uTaiyArkku iTam Avatu--
kaTai koL celvam kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: விடையை ஏறுபவர்; நஞ்சுடைய பாம்பினை அரைக்குக் கச்சாக அசைத்த விகிர்தர். படையாகிய பூதங்கள் பலபாடக் கூத்தாடும் பரமர்; உடையாக வேங்கையினின்றும் உரித்த தோலை உடையவர்; அவருக்கு இடமாவது, மிக்க செல்வமுடையதும் கழிசூழ்ந்ததுமாகிய திருநாகைக்காரோணமே.

குறிப்புரை: விடை ஏறி நச்சுப்பாம்பை அரைக்கச்சாகக் கட்டிய விகிர்தர். பூதங்கள் பாட ஆடும் பரமர்.

Our Lord Civan rides on His bull to meet His devotees. He is Supreme, different from the world and He ties round His waist the poisonous snake. He is the Lord who dances according to the music of His bhuta army. He wears the tiger's hide as His dress. Lord Civa is manifested in the city of sea Thiru-naagai-k-kaaronam. In this city, the saltpans are many where the fishes flourish in large quantity which are real wealth for the city.

2731. பொய்துவாழ்வார்மனம்பாழ்படுக்கும்மலர்ப்பூசனை
செய்துவாழ்வார்சிவன்சேவடிக்கேசெலுஞ்சிந்தையார்
எய்தவாழ்வாரெழில்நக்கரெம்மாற்கிடமாவது
கைதல்வேலிகழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 7

பொய்து வாழ்வார் மனம் பாழ்படுக்கும் மலர்ப்பூசனை
செய்து வாழ்வார் சிவன் சேவடிக்கே செலும் சிந்தையார்
எய்த வாழ்வார் எழில் நக்கர் எம்மாற்கு இடமாவது
கைதல் வேலிகழி சூழ்கடல் நாகைக்காரோணமே.

poytu vAzvu Ar man2am pAzpaTukkum malarp pUcan2ai
ceytu vAzvAr, civan2 cEvaTikkE celum cintaiyAr,
eyta vAzvAr; ezil nakkar; emmARku iTam Avatu--
kaital vEli kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: பொய்த்து வாழ்பவர் மனத்தைப் பாழ்படுத்துபவர்; மலரால் பூசனை செய்து வாழ்பவர்; சிவனுடைய திருவடிக்கே செலுத்தும் சிந்தையை உடையவர் ஆகியோர் தன்னை அடையும் பொருட்டு எழுந்தருளிய அழகுடைய நக்கர்; அந்த எம்மானுக்கு இடமாவது; தாழைகளாகிய வேலி சூழ்ந்த கடல் நாகைக்காரோணமே.

குறிப்புரை: பொய்து வாழ்வு – பொள்ளலுடையதாகிய வாழ்வு. ஆர் – பொருந்திய. வாழ்வாரும் சிந்தையாரும் எய்த வாழ்வாராகிய நக்கர். பொய்து வாழ்வார் மனத்தைப் பாழ்படுக்கும் பூசனை என்றலும் பொருந்தும். பூசனை செய்து வாழ்வாரும் சிவன் சேவடிக்கே செலுஞ்சிந்தையாரும் எய்த வாழ்பவர் நக்கர். கைதல் (–தாழை) என்பது அருஞ்சொல். கைதல் சூழ்கழிக்கானல் (தி. 3 ப. 66 பா. 2).

In the city of sea Thiru-naagai-k-kaaronam, the Lord resides making Himself approachable even to people, who with false ideas in their mind spoil their life pursuing wrong ways. There are some other people who are devotees of Civa. They

think always of Civa's holy feet. They carry flowers to the temple, spread these flowers and do the rituals. They lead a good life. Our, good Lord the pivot of all such lives has manifested Himself in the city of sea Thiru-naagai-k-kaaronam. This city has got screw pine trees in large numbers. They grow like fencing plants. Also there are many saltpans all round the city. This city is known as sea Thiru-naagai-k-kaaronam.

2732. பத்திரட்டிதிரள்தோளுடையான்முடிபத்திற
அத்திரட்டிவிரலாலடர்த்தார்க்கிடமாவது
மைத்திரட்டிவ்வருவெண்டிரைமல்கியமாகடல்
கைத்திரட்டுங்கழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 8

பத்து இரட்டி திரள் தோள் உடையான் முடிபத்திற
அத்திரட்டி விரலால் அடர்த்தார்க்கு இடமாவது
மைத்திரட்டி இவ்வரு வெண்திரை மல்கிய மாகடல்
கைத்திரட்டும் கழி சூழ்கடல் நாகைக்காரோணமே.

pattu iraTTi tiraL tOL uTaiyAn2 muTipattu iRa,
attu iraTTi, viralAl aTarttArkku iTam Avatu--
mait tiraTTi(v) varu veNtirai malkiya mAlkaTal
kattu iraTTum kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: இருபது தோள்கள் உடையான் ஆகிய இராவணனின் முடிகள் பத்தும் இற்றுப் போகுமாறு தன் சிவந்த விரலால் அடர்த்த சிவனுக்கு இடமாவது, கருமை நிறத்த நீரில் திரண்டு வரும் வெண்மையான அலைகள் நிறைந்த பெரிய கடல் பேரொலி செய்யும் கழிசூழ் கடல்நாகைக் காரோணமே.

குறிப்புரை: பத்து இரட்டி தோள் – இருபது தோள்கள். அத்து – சிவப்பு. மை திரட்டி வரு வெள்திரை எனப் பிரிக்க. கத்து – ஒளி.

Our Lord Civa with His red toe pressed the top of mount Kailash and Raavanan, bearing twenty shoulders and ten heads, got crumbled. This Lord is manifest in the temple situated in the city of sea Thiru-naagai-k-kaaronam. In this city the sea on the eastern side of the city brings big white sea waves with black sand and thrusts them into the saltpans which are near the seashore. The saltpans are very bright and raise heavy noise.

2733. நல்லபோதிலுறைவானுமாலுந்நடுக்கத்தினால்
அல்லராவரெனநின்றபெம்மாற்கிடமாவது
மல்லலோங்கிவ்வருவெண்டிரைமல்கியமாகடல்
கல்லலோதங்கழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 9

நல்ல போதில் உறைவானும் மாலும் நடுக்கத்தினால்
அல்லர் ஆவர் என நின்ற பெம்மாற்கு இடமாவது
மல்லல் ஓங்கி இவ்வரு வெண்டிரை மல்கிய மாகடல்
கல்லல் ஓதம்கழி சூழ்கடல் நாகைக்காரோணமே.

nalla pOtil(l) uRaivAn2um, mAlum, naTukkattin2Al,
"allar, Avar" en2a nin2Ra pemmARku iTam Avatu--
mallal Ogki(v) varu veNtirai malkiya mAlkaTal
kallal Otam kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: தாமரை மலரில் வாழும் பிரமனும், திருமாலும் அறிவு மயங்கி ஐயுற நின்ற பெருமானுக்கு இடமாவது, வளமான வெள் அலைகள் மல்கிய கடல் ஓதம் நிறைந்த கழிசூழ் கடல்நாகைக்காரோணமே.

குறிப்புரை: இவர் சிவபெருமான் அல்லார் எனவும் இவரே சிவபரஞ்சுடர் ஆவார் எனவும் ஐயுற நின்ற பெருமான். மல்லல் – வளம். கல்லல் – (சகரர்) தோண்டுதல்.

The tutelary god Brahma resting over the beautiful lotus flower and the other demigod Thirumaal - these two trembled due to fear in their mind. They both had doubts whether our Lord Civa was the Supreme eternal fire or not. Lord Civa is manifested in the temple in the city of sea Thiru-naagai-k-kaaronam. This city has the ocean on its eastern side. Here the silvery big waves create heavy noise. This creates inundation, the saltpans are near the seashore.

2734. உயர்ந்தபோதின்னுருவத்துடைவிட்டுழல்வார்களும்
பெயர்ந்தமண்டையிடுபிண்டமரவுண்டுழல்வார்களும்
நயந்துகாணாவகைநின்றநாதர்க்கிடமாவது
கயங்கொளோதங்கழிசூழ்கடல்நாகைக்காரோணமே. 10

உயர்ந்த போதின் உருவத்துடை விட்டு உழல்வார்களும்
பெயர்ந்த மண்டையிடு பிண்டம் அரவுண்டு உழல்வார்களும்
நயந்து காணா வகை நின்ற நாதர்க்கு இடமாவது
கயங்கொள் ஓதம்கழி சூழ்கடல் நாகைக்காரோணமே.

uyarnta pOtin2(n2) uruvattu uTai viTTu uzalvArkaLum,
peyartta maNTai iTu piNTam AravuNTu uzalvArkaLum,
nayantu kANA vakai nin2Ra nAtarkku iTam Avatu--
kayam koL Otam kazi cUz kaTal nAkaikkArONamE.

பொருள்: உடலில் ஆடையின்றி அலைகின்ற சமணரும், மண்டையில் பெய்த உணவைப் பிண்டமாக்கி உண்டு உழல்கின்ற தேரரும் விரும்பிக் காணாத வகை நின்ற தலைவருக்கு இடமாவது, ஆழமான ஓதக் கழிசூழ் கடல்நாகைக்காரோணமே.

குறிப்புரை: சமணரும் தேரரும் இங்குக் குறிக்கப்பட்டவாறு காண்க. கயம் – ஆழம். நீர், பெருமை. பியர்ந்த பி. பே.

The Jains and Buddhists roam in the city. Some wear red coloured cloth similar to the cloth of red lotus flower. Some other roam without any dress on their body. They eat the food given by the public in the human skull they carry. These two, the Buddhists and the Jains have no desire to see our Lord Civa. This Lord Civa is manifest in the temple in sea Thiru-naagai-k-kaaronam city surrounded by deep salt pans full of sea water.

2735. மல்குதன்பூம்புனல்வாய்ந்தொழுகும்வயற்காழியான்
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தன்நல்லார்கள்முன்
வல்லவாறேபுனைந்தேத்துங்காரோணத்துவண்டமிழ்
சொல்லுவார்க்குமிவைகேட்பவர்க்குந்துயரில்லையே. 11

மல்குதன் பூம்புனல் வாய்ந்து ஒழுகும் வயற்காழியான்
நல்ல கேள்வித் தமிழ் ஞானசம்பந்தன் நல்லார்கள் முன்
வல்லவாறே புனைந்து ஏத்தும் காரோணத்து வண்டமிழ்
சொல்லுவார்க்கும் இவை கேட்பவர்க்கும் துயர் இல்லையே.

malku taN pUm pun2al vAyntu ozukum vayal kAziyAn2--
nalla kELvit tamiz njAn2acampantan2--nallArkaL mun2
valla ARE pun2aintu Ettum kArONattu vaN tamiz
colluvArkkum ivai kETpavarkkum tuyar illaiyE.

பொருள்: குளிர்ந்த நீர் நிறைந்து கால்வழியே பாய்ந்தொழுகும் வயல்கள் மிக்க காழியான், கேள்வி ஞானமுள்ள தமிழ் ஞானசம்பந்தன், நல்ல அடியவர்களின் முன்தான் வல்லவாறு

புனைந்து ஏத்திப் பாடிய திருநாகைக்காரோணத்து வளமான இத்திருப்பதிகத்தைச் சொல்லுவார்க்கும் இவை கேட்பவருக்கும் துயரில்லையே.

குறிப்புரை: திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருநாகைக்காரோணத்தில், நல்லோர்கள் முன்னர், இத்திருப்பதிகத்தைப் பாடியருளிய உண்மை குறிக்கப்பட்டது.

Our saint Thiru-gnana-Sambandar was born in the city of Seerkaazhi. This city is surrounded by fields full of water. He has good command over Tamil language and great wisdom. He chanted before scholars in proper musical tone these ten songs on Lord Civa, manifested in sea Thiru-naagai-k-kaaronam. Those who can memorise these ten verses and repeat them in musical mode and those who can hear those songs - both these groups will have no sufferings in their lives.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

116ஆம் பதிகம் முற்றிற்று
End of 116th Hymn



திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 253 *பதிக எண்: 117*

117. திருஇரும்பைமாகாளம் 117. THIRU-IRUMBAI-MAAGAALAM

பண் : செவ்வழி *Pann: Chevvazhi*

திருத்தல வரலாறு

மாகாளர் பூசித்துப் பேறு பெற்ற காரணத்தால் இது மாகாளம் எனப் பெயர் பெற்றது. இரும்பைப் பதியிலுள்ள மாகாளம் என்னும் கோயில் என்பது இத்தொடரின் பொருளாகும். இது புதுச்சேரி தொடர்வண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. பாண்டிச்சேரி–திண்டிவனம் (வழி கிளியனூர்) செல்லும் பேருந்துகளில் திருச்சிற்றம்பலம்–கூட்ரோட்டை அடுத்துள்ள இரும்பை கைகாட்டி அருகே இறங்கி இவ்வூரை அடையலாம். இது தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

இறைவரின் திருப்பெயர் மாகாளேசுவரர். இறைவியாரின் திருப்பெயர் குயில்மொழிநாயகி. இத்தலத்துக்கு திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கிறது. கோயில் முன் பெரிய இலுப்பைத் தோப்பு இருக்கிறது. கோயில் ஒழுங்காகக் கட்டப்படவில்லை. மூலத்தானத்திற்குப் பின்னது முருகன் கோயில். மூலத்தானம் கற்பணி. மற்றவை செங்கல்வேலை. ஊர் சிறியது.

பதிக வரலாறு

பிள்ளையார் திருவக்கரையை அணைந்து, முகங்களொடு திகழும் மூர்த்தியை வணங்கிச் சென்று, திருவிரும்பையுள்ளே மாகாளத்தைப் போற்றி அச்செக்கர் மேனியாரைப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2736. மண்டுகங்கைசடையிற்கரந்தும்மதிசூடிமான்
கொண்டகையாற்புரமூன்றெரித்தகுழகன்னிடம்
எண்டிசையும்புகழ்போய்விளங்கும்மிரும்பைதனுள்
வண்டுகீதம்முரல்பொழில்சுலாய்நின்றமாகாளமே. 1

மண்டு கங்கை சடையிற் கரந்தும் மதிசூடி மான்
கொண்ட கையால் புரமூன்று எரித்த குழகன் இடம்
எண் திசையும் புகழ் போய் விளங்கும் இரும்பைதனுள்
வண்டு கீதம் முரல் பொழில் சுலாய் நின்ற மாகாளமே.

maNTu kagkai caTaiyil karantum, mati cUTi, mAn2
koNTa kaiyAn2, puram mUn2Ru eritta kuzakan2(n2), iTam--
eNticaiyum pukaz pOy viLagkum irumpaitan2uL,
vaNTu kItam mural pozil culAy nin2Ra mAkALamE.

பொருள்: பெருகும் கங்கை நதியைச் சடையில் மறைத்தவன்; பிறையைச் சூடி, மான் ஏந்திய கையான்; திரிபுரம் மூன்றையும் எரித்த அழகன்; அவனுடைய இடம், எட்டுத்திசையும் பரவி விளங்கும் இரும்பை அதனுள் வண்டுகள் கீதம் முரல்கின்ற பொழில்கள் சூழ்ந்த மாகாளமே.

குறிப்புரை: கங்கைச்சடையன், பிறைசூடி, மானேந்தி, முப்புரமெரித்த முதல்வன். திசையெலாம் பரவிய புகழுடைய தலம். 'மான்' உமாதேவியுமாம். 'விற்றாங்கி யகரம் வேல்நெடுங்கண்ணி வியன் கரமே' (அப்பர்) 'இசையால் திசைபோயது'. கலாய் – சுற்றி. ஊர் இரும்பை. கோயில் மாகாளம்.

Our Lord Civa supports the river Ganges inside His entangled hair locks without any visibility. He retains the moon in His hair locks. In one of His hands He holds a young deer. With the same hand He shot an arrow and destroyed completely the three forts of the asuras. This Lord is manifest in the temple in the city Thiru-irumbai-maagaalam. This city is praised on all the eight directions. There are natural forests in the city where the bees make humming sound which represents their songs.

2737. வேதவித்தாய்வெள்ளைநீறுபூசிவினையாயின
கோதுவித்தாநீறெழக்கொடிமாமதிலாயின
ஏதவித்தாயினதீர்க்குமிடம்மிரும்பைதனுள்
மாதவத்தோர்மறையோர்தொழநின்றமாகாளமே. 2

வேத வித்தாய் வெள்ளை நீறு பூசி வினையாயின
கோது வித்தா நீறு எழக் கொடி மாமதிலாயின
ஏத வித்தாயின தீர்க்கும் இடம் இரும்பைதனுள்
மா தவத்தோர் மறையோர் தொழ நின்ற மாகாளமே.

vEtavittAy, veLLai nIRu pUci, vin2ai Ayin2a
kOtu vittA, nIRu ezak koTi mA matil Ayin2a,
Eta vittu Ayin2a tIrkkum(m) iTam(m)--irumpaitan2uL,
mA tavattOr maRaiyOr toza nin2Ra mAkALamE.

பொருள்: வேதவித்து; வெண்ணீறு பூசி; வினையாயினவாகிய கோதுகளை அவித்தான்; சாம்பலாகக் கொடி பறக்கும் மும்மதில்களை எரித்தவன்; ஏதங்களுக்கு வித்தாயினவற்றைத்

தீர்ப்பவன்; அவனுடைய இடம் இரும்பை தன்னுள் மாதவத்தோரும் மறையோரும் தொழ நின்ற மாகாளமே.

குறிப்புரை: மாதவத்தோரும் மறையோரும் தொழ நின்ற சிறப்புடையது மாகாளம். சிவபிரான் வேதவித்து. வெண்ணீறாடி, வினையெலாம் நீறுபட அழித்தவன். கோதுவித்தா என்றது பிழை. கோத வித்தாய் என்றிருத்தல் வேண்டும். ஏதவித்து – குற்றத்திற்கு விதை.

Our Lord Civa is the seed i.e., He is the Author of all the four Vedas. He smears His body with white holy ashes. He will destroy all the bad karma of His devotees. The asuras inflicted intolerable misery on the devas. Our Lord shot an arrow and destroyed the three harmful forts of asuras with fire. Grave faults which are the seeds for bad actions, He completely wiped out and graced the devas. He evidently is manifest in the temple situated in the city of Irumbai. In this city, the great people who do religious penance and the other scholars well-versed in Vedas live. They both used to visit the temple of Lord Civa and worship Him daily.

2738. வெந்தநீறும்மெலும்பும்மணிந்தவிடையூர்தியான்
எந்தைபெம்மானிடமெழில்கொள்சோலையிரும்பைதனுள்
கந்தமாயபலவின்கனிகள்கமழும்பொழில்
மந்தியேறிக்கொணர்ந்துண்டுகள்கின்றமாகாளமே. 3

வெந்த நீறும் எலும்பும் அணிந்த விடை ஊர்தியான்
எந்தை பெம்மான் இடம் எழில் கொள் சோலை இரும்பைதனுள்
கந்தம் ஆய பலவின் கனிகள் கமழும் பொழில்
மந்தி ஏறிக் கொணர்ந்து உண்டு கள்கின்ற மாகாளமே.

venta nIRum elumpum aNinta viTai UrtiyAn2,
entaipemmAn2 iTam--ezil koL cOlai irumpaitan2uL,
kantam Aya palavin2 kan2ikaL kamazum pozil
manti ERik koNarntu uNTu ukaLkin2Ra mAkALamE.

பொருள்: சுட்ட சாம்பலும் எலும்பும் அணிந்தவன்; விடை ஊர்தியான்; என்னுடைய தந்தை; என்னுடைய பெருமான் ஆகிய சிவனின் இடமாவது, அழகிய சோலைகள் நிறைந்த இரும்பைத்தன்னுள் மணங்கமழும் பொழில்களில் மந்தி மரமேறி பலாப்பழத்தைக் கொண்டு வந்து உண்டு துள்ளித் திரிகின்ற மாகாளமே.

குறிப்புரை: பலவின்கனிகள் – பலாப்பழங்கள். பல இனிய கனிகள் எனலும் பொருந்தும். மந்திகள் கொண்டு வந்து, உண்டு திரியும் மாகாளம்.

Our Lord Civa smears His body with holy ashes. He also adorns His body wearing garlands of bones. He loves to sustain the white strong bull for His conveyance to move around the universe. He is our Holy Father. He is our Chief Supreme Being. This Lord is evidently manifest in the temple known as Thiru-maagaalam situated in the city of Irumbai. In this city many attractive gardens have developed all around the area. In these gardens, jack fruit smell is strongly felt. The monkeys reach these gardens, climb the jack fruit trees and pluck the fruits, eat them and roam happily.

2739. நஞ்சுகண்டத்தடக்கிநடுங்கும்மலையான்மகள்
அஞ்சவேழமுரித்தபெருமானமருமிடம்
எஞ்சலில்லாப்புகழ்போய்விளங்குமிருமபைதனுள்
மஞ்சிலோங்கும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளமே. 4

நஞ்சு கண்டத்து அடக்கி நடுங்கும் மலையான் மகள்
அஞ்ச வேழம் உரித்த பெருமான் அமரும் இடம்
எஞ்சல் இல்லாப் புகழ் போய் விளங்கும் இரும்பைதனுள்
மஞ்சுல் ஓங்கும் பொழில் சூழ்ந்த அழகாய மாகாளமே.

nanjcu kaNTattu aTakki(n), naTugkum malaiyAn2makaL
anjca, vEzam uritta perumAn2 amarum(m) iTam--
enjcal illAp pukaz pOy viLagkum(m) irumpaitan2uL,
manjcil Ogkum pozil cUzntu azaku Aya mAkALamE.

பொருள்: ஆலகால விடத்தைக் கண்டத்தில் அடக்கி; நடுங்கும் மலைமகள் அஞ்சக் களிற்றின் தோலை உரித்த பெருமான் ஆகிய சிவன் உறையும் இடம், குறைவிலாமல் நிறைந்த புகழ் எங்கும் விளங்கும் இரும்பை தன்னுள், கார்மேகங்கள் தங்கும் பொழில்கள் சூழ்ந்ததும் அழகுடையதுமாகிய மாகாளமே.

குறிப்புரை: மலையான் – இமாசலராசன். வேழம் – யானை. எஞ்சல் – குறைதல். மஞ்சு – மேகம்.

Our Lord imbibed the poison in His throat. The daughter of Himalayan king and the consort of our Lord Civa got frightened to see the ferocious big elephant and

trembled. Immediately our Lord Civa dashed towards the elephant, killed it and peeled its hide and covered His body with it. This Lord is diligently manifest in the very attractive temple Thiru-maagaalam. This temple is in the city of Irumbai which is a very famous city without any blemishes. Here the clouds gather in the natural forests which exist all around the city.

2740. பூசுமாசில்பொடியான்விடையான்பொருப்பான்மகள்
கூசஆனையுரித்தபெருமான்குறைவெண்மதி
ஈசனெங்கள்ளிறைவனிடம்போலிரும்பைதனுள்
மாசிலோர்கள்மலர்கொண்டணிகின்றமாகாளமே. 5

பூசும் மாசில் பொடியான் விடையான் பொருப்பான் மகள்
கூச ஆனை உரித்த பெருமான் குறை வெண்மதி
ஈசன் எங்கள் இறைவன் இடம் போல் இரும்பைதனுள்
மாசு இலோர் கள்மலர் கொண்டு அணிகின்ற மாகாளமே.

pUcum mAcu il poTiyAn2, viTaiyAn2, poruppan2makaL
kUca An2ai uritta perumAn2, kuRaiveNmati
Ican2, egkaL(L) iRaivan2, iTampOl--irumpaitan2uL,
mAcu ilOr kaLmalarkoNTu aNikin2Ra mAkALamE.

பொருள்: தூய்மையான திருநீற்றினை அணிந்தவன்; விடை ஊர்தியான்; இமய அரசன் மகள் பார்வதி நடுங்க ஆனையின் தோலை உரித்த பெருமான்; பிறைமதி அணிந்த ஈசன்; எங்கள் இறைவன் ஆகிய சிவனின் இடம், இரும்பை தன்னுள் குற்றமிலாத அடியவர்கள் மலர்கொண்டு அலங்காரம் செய்கின்ற மாகாளமே.

குறிப்புரை: பூசும்பொடி, மாசு இல்பொடி. பொருப்பான் – இமாசலராசன். தேவியார் கூசுமாறு ஆனையை உரித்தான். மாசு இலோர்கள் – மும்மலமாகிய குற்றம் இல்லாத சைவ மறையோர் அடியார் முதலியோர்கள் (தி. 2 ப.6 பா. 10 பார்க்க).

Our Lord Civan smears His body with holy ashes which has no defect. He sustains the white bull for His conveyance. Uma Devi, the daughter of the Himalayan king, His consort got dazzled to see the death of the ferocious big elephant. Our Lord dashed towards the elephant, killed it and peeled off its hide. He retains the moon and adorns His head with it. He is our God Civan. Our Lord delightedly manifests Himself in the temple in Irumbai city. Civa's devotees daily go to the temple with flowers, adore

Him with the flowers and happily praise Him and worship Him. This temple is known as Thiru-maagaalam.

2741. குறைவதாயகுளிர்திங்கள்சூடிக்குனித்தான்வினை
பறைவதாக்கும்பரமன்பகவன்பரந்தசடை
இறைவனெங்கள்பெருமானிடம்போலிரும்பைதனுள்
மறைகள்வல்லார்வணங்கித்தொழுகின்றமாகாளமே. 6

குறைவது ஆய குளிர் திங்கள் சூடிக் குனித்தான் வினை
பறைவது ஆக்கும் பரமன் பகவன் பரந்த சடை
இறைவன் எங்கள் பெருமான் இடம் போல் இரும்பைதனுள்
மறைகள் வல்லார் வணங்கித் தொழுகின்ற மாகாளமே.

kuRaivatu Aya kuLirtigkaL cUTik kun2ittAn2, vin2ai
paRaivatu Akkum paraman2, pakavan2, paranta caTai
iRaivan2, egkaL perumAn2, iTampOl--irumpaitan2uL,
maRaikaL vallAr vaNagkit tozukin2Ra mAkALamE.

பொருள்: குளிர்ந்ததும் குறையுடையதுமாகிய திங்களைச் சூடிக் கூத்தாடிய பிரான்; வினைகளை அழிப்பவன்; பரமன்; பகவன்; விரிந்த சடையுடைய எங்கள் பெருமான் ஆகிய சிவனின் இடம் இரும்பைதன்னுள் வேதம் வல்ல அந்தணர்கள் வணங்கித் தொழ நின்ற மாகாளமே.

குறிப்புரை: குனித்தான் – கூத்தாடிய பிரான். பறைவது – அழிவது. பரமன் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருள். பகவன் – சாட்குண்யன்.

Our Lord Civa retains the waning moon on His hair locks and dances. He wipes out the bad karma of His devotees. He is our Supreme Being. He controls the pure rivers and water ponds. His entangled hair locks are very wide. He is our Lord. He manifests Himself in the temple in Irumbai city where Vedic scholars worship our Lord in the Thiru-maagaalam temple.

2742. பொங்குசெங்கண்ணரவும்மதியும்புரிபுன்சடைத்
தங்கவைத்தபெருமானெனநின்றவர்தாழ்விடம்
எங்குமிச்சையமர்ந்தானிடம்போலிரும்பைதனுள்
மங்குல்தோயும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளமே. 7

பொங்கு செங்கண் அரவும் மதியும் புரிபுன் சடைத்
தங்க வைத்த பெருமான் என நின்றவர் தாழ்விடம்
எங்கும் இச்சை அமர்ந்தான் இடம் போல் இரும்பைதனுள்
மங்குல் தோயும் பொழில் சூழ்ந்த அழகாய மாகாளமே.

pogku cegkaN(N) aravum matiyum puripun2caTait
tagkavaitta perumAn2 en2a nin2Ravar tAzvu iTam--
egkum iccai amarntAn2 iTampOl--irumpaitan2uL,
magkul tOyum pozil cUzntu azaku Aya mAkALamE.

பொருள்: சினத்தாற் சீறிப் பொங்குவதும் சிவந்த கண்ணை உடையதுமாகிய பாம்பையும் பிறையையும் புரிந்த பொன்னிற சடையில் தங்க வைத்த பெருமான் உறையும் இடம், எங்கும் விருப்பத்துடன் அமர்ந்தவன் இடம் இரும்பைதன்னுள், மேகம் தோயும் பொழில்கள் சூழ்ந்ததும் அழகாயதும் ஆகிய மாகாளமே.

குறிப்புரை: சடையில் பாம்பும் பிறையும் பகையின்றி வாழவைத்த பெருமான். 'பொங்கு செங்கண்ணரவு' என்றதால், விளங்கும் பெருங்கோபம் சடையின்கண் தணிந்தது. தாழ்வு – எழுந்தருளுதல்.

Our Lord Civa retains the moon along with the snake in His hair locks and wipes out the enmity between them. He willingly manifests Himself in any place and is renowned conspicuously. This Lord Civa manifests Himself in the city of Irumbai in the temple known as Thiru-maagaalam. In this city natural forests all around the city exist. There the trees are all very tall reaching the cloudy sky.

2743. நட்டத்தோடுநரியாடுகானத்தெரியாடுவான்
அட்டமூர்த்தியழல்போலுருவன்னழகாகவே
இட்டமாகவிருக்கும்மிடம்போலிரும்பைதனுள்
வட்டஞ்சூழ்ந்துபணிவார்பிணிதீர்க்குமாகாளமே. 8

நட்டத்தோடு நரியாடு கானத்து எரி ஆடுவான்
அட்ட மூர்த்தி அழல்போல் உருவன் அழகாகவே
இட்டம் ஆக இருக்கும் இடம் போல் இரும்பைதனுள்
வட்டம் சூழ்ந்து பணிவார் பிணிதீர்க்கும் மாகாளமே.

naTTattOTu nari ATu kAn2attu eri ATuvAn2,
aTTamUrtti, azal pOl uruvan2(n2), azaku AkavE
iTTam Aka irukkum(m) iTampOl--irumpaitan2uL,
vaTTam cUzntu paNivAr piNi tIrkkum mAkALamE.

பொருள்: நரிகள் நடமாடுகின்ற சுடுகாட்டிலே கூத்தாடுதலோடு எரியாடுவான்; எட்டுருவத்தன்; ஆரழல் போல சிவந்த உருவன்; அழகாகவே விருப்பத்துடன்

எழுந்தருளியிருக்கும் இடமாவது; இரும்பை தன்னுள் வலம் வந்து பணிவாரின் பிணிகளைத் தீர்க்கும் மாகாளமே.

குறிப்புரை: நட்டம் – திருக்கூத்து. அட்ட மூர்த்தி – எட்டுருவத்தன். மண், நீர், அனல், வளி, விண், இருஞ்சுடர், வேள்வித்தலைவன், இட்டம், விருப்பம். வட்ட சூழ்ந்தல் – வலம் வரல்.

Our Lord Civa holding fire in one of His hands, dances in the burning ghat where the jackals roam and play. He takes the eight forms such as spiritual and natural, regarded as His bodies. He takes the form of infinite and supernal fire whenever required. He very willingly and evidently is manifest in the temple known as Thiru-maagaalam in the city of Irumbai. In this temple our Lord wipes out the illness of people who come round the temple by right side.

2744. அட்டகாலன்றனைவவ்வினானவ்வரக்கன்முடி
எட்டுமற்றும்மிருபத்திரண்டும்மிறவூன்றினான்
இட்டமாகவிருப்பானவன்போலிரும்பைதனுள்
மட்டுவார்ந்தபொழில்சூழ்ந்தெழிலாருமாகாளமே. 9

அட்ட காலன்தனை வவ்வினான் அவ்வரக்கன் முடி
எட்டு மற்றும் இருபத்து இரண்டும் இற ஊன்றினான்
இட்டம் ஆக விருப்பான் அவன்போல் இரும்பைதனுள்
மட்டு ஆர்ந்த பொழில் சூழ்ந்து எழிலாரும் மாகாளமே.

aTTa kAlan2 tan2ai vavvin2An2, av arakkan2 muTi
eTTum maRRum irupattiraNTum(m) iRa Un2Rin2An2,
iTTam Aka iruppAn2 avan2pOl-irumpaitan2uL,
maTTu vArnta pozil cUzntu ezil Arum mAkALamE.

பொருள்: போராடிய காலனின் உயிரைப் பறித்தான்; இராவணனாகிய அரக்கனின் பத்து முடியும் இருபது தோள்களும் இற்று வீழும்படி விரல் ஊன்றினான்; அச்சிவன் விருப்பத்துடன் எழுந்தருளிய இடம் இரும்பை தன்னுள், தேன் நிறைந்த பொழில்கள் சூழ்ந்ததும் அழகுடையதுமாகிய மாகாளமே.

குறிப்புரை: அட்ட – மார்க்கண்டேய முனிவரோடு போராடிய. எட்டும் இருபத்திரண்டும் – பத்துத் தலையும் இருபது கையுமாகிய முப்பதும். மட்டு – தேன்.

Our Lord Civa, embittered against Kaalan, the god of death, who was fighting against Maarkandeyar, destroyed the life of Kaalan. He pressed the top of His mount Kailash with His holy feet and disintegrated Raavanan's ten heads and twenty shoulders. This Lord Civa willingly and evidently manifests Himself in the temple in the city of Thiru-maagaalam and extols Himself. This city is surrounded by vast forest areas, with honey dripping from the flowers of plants.

2745. அரவமார்த்தன்றனலங்கையேந்தியடியும்முடி
பிரமன்மாலும்மறியாமைநின்றபெரியோனிடம்
குரவமாரும்பொழிற்குயில்கள்சேரும்மிரும்பைதனுள்
மருவிவானோர்மறையோர்தொழுகின்றமாகாளமே. 10

அரவம் ஆர்த்தன் தன்னலம் கை ஏந்தி அடியும்முடி
பிரமன் மாலும் அறியாமை நின்ற பெரியோனிடம்
குரவம் ஆரும் பொழில் குயில்கள் சேரும் இரும்பைதனுள்
மருவி வானோர் மறையோர் தொழுகின்ற மாகாளமே.

aravam Arttan, tannalam kai Enti, aTiyum muTi
piraman2 mAlum(m) aRiyAmai nin2Ra periyOn2 iTam--
kuravam Arum pozil kuyilkaL cErum(m) irumpaitan2uL,
maruvi vAn2Or maRaiyOr tozukin2Ra mAkALamE.

பொருள்: பாம்பினை அரையில் கச்சாகக் கட்டி, நெருப்பினை அங்கையில் ஏந்தி அடியும் முடியும் அயனும் மாலும் அறியாத வண்ணம் நின்ற பெரியோன் எழுந்தருளிய இடம், குயில்கள் வந்து சேரும் குராமரங்கள் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த இரும்பை தன்னுள் வானோரும் மறையோரும் பொருந்தித் தொழுகின்ற மாகாளமே.

குறிப்புரை: ஆர்த்து – கட்டி. அனல் – தீ. குரவம் – குராமரம். வானோரும் மறையோரும் தொழுகின்ற தலம்.

Our Lord Civan has fastened the snake on His waist. Also He holds fire in one of His hands. He stood as an infinitely tall supernal fire and made Brahma and Thirumaal unable to see His holy feet and head. This Lord Civa manifests Himself in the temple situated in Thiru-irumbai city. The scholarly people of the Vedas as well as the devas worship our Lord manifested in the temple known as Thiru-maagaalam.

2746. எந்தைபெம்மானிடமெழில்கொள்சோலையிரும்பைதனுள்
மந்தமாயபொழில்சூழ்ந்தழகாருமாகாளத்தில்
அந்தமில்லாஅனலாடுவானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடவல்லார்பழிபோகுமே. 11

எந்தை பெம்மான் இடம் எழில்கொள் சோலை இரும்பைதனுள்
மந்தம் ஆயபொழில் சூழ்ந்த அழகாரும் மாகாளத்தில்
அந்தம் இல்லா அனல் ஆடுவானை அணிஞானசம்
பந்தன் சொன்ன தமிழ் பாட வல்லார் பழிபோகுமே.

entai pemmAn2 iTam, ezil koL cOlai irumpaitan2uL,
mantam Aya pozil cUzntu azaku Arum mAkALattil,
antam illA an2al ATuvAn2ai, aNi njAn2acam--
pantan2 con2n2a tamiz pATa vallAr pazi pOkumE.

பொருள்: எம்முடைய தந்தை; பெருமான் எழுந்தருளியுள்ள இடம், அழகு தங்கிய சோலைகள் உள்ள இரும்பை தன்னுள் குளிர்ச்சியுடைய பொழில்கள் சூழ்ந்து அழகு நிறைந்த மாகாளத்தில் அந்தமிலா அனலாடுவான் மேல் ஞானசம்பந்தன் சொன்ன இத்தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடவல்லாரின் பழிபோய்விடும்.

குறிப்புரை: எழில்கொள் சோலை இரும்பை எனத் திருத்தலத்தையும் பொழில்சூழ்ந்து அழகு ஆரும் மாகாளம் எனத் திருக்கோயிலையும் குறித்ததால் அவ்விரண்டையும் சுற்றிக்கிடக்கும் சோலைவளம் குறிக்கப்பட்டது. 'மந்தமாய பொழில்' (தி. 2 ப. 117 பா. 11).

Our Lord Civa is our Father. He is our Chief Supreme Being. This Lord evidently manifests Himself in the Thiru-maagaalam temple. The southern wind blows through the temple area and in the city of Thiru-irumbai where natural forests exist. Our Lord dances holding eternal fire. Our saint Thiru-gnana-Sambandar chanted ten Tamil verses on the Lord of this temple. Those devotees who can memorise these ten Tamil verses and chant them before our Lord will get rid of their blame due to the grace of our Lord.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

117ஆம் பதிகம் முற்றிற்று
End of 117th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 254 *பதிக எண்: 118*

118. திருத்திலதைப்பதி 118. THIRU-TH-THILATHAIP-PATHI

பண் : செவ்வழி *Pann: Chevvazhi*

திருத்தல வரலாறு

இராம இலக்குமணர்கள், தசரதச் சக்கரவர்த்திக்கு எள்ளும் புனலும் இறைத்த (திலதர்ப்பணஞ்செய்த) பதியாதலின் இப்பெயர் பெற்றது என்பர். பேரளம் தொடர்வண்டி நிலையத்திற்குத் தென்மேற்கே 5 கி.மீ. தூரத்தில் (பூந்தோட்டத்திற்குத் தெற்கே ஒரு கல்தூரத்தில்) அரிசிலாற்றின் தென்கரையில் இருக்கின்றது. சிதலைப்பதி என வழங்கும் ஊருக்கு, முக்கால் மைல் தூரத்தில் இருக்கின்றது. காவிரித் தென்கரைத் தலங்களுள் 58ஆவது தலம் ஆகும்.

ஊரின் பெயர் திலதைப்பதி எனவும் அது வழங்குகிறது ஆயினும், இங்குள்ள கோயிலின் பெயர் மதிமுத்தம் என்பதாகும். இறைவரின் திருப்பெயர் மதிமுத்தர். இவ்வூர்ப்பதிகத்தின் இறுதிப்பாட்டில் 'திலதை மதிமுத்தர்மேல்' எனவரும் தேவாரப்பகுதி இதனை வலியுறுத்தும். இறைவியாரின் திருப்பெயர் பொற்கொடிநாயகி. பொற்கொடியம்மை. தலவிருட்சம் மந்தாரம். தீர்த்தம் சந்திரதீர்த்தம்.

'புரவியேழும் மணிபூண்டியங்குங் கொடித்தேரினான்
பரவி நின்று வழிபாடு செய்யும் பரமேட்டியூர்'

என்னும் இவ்வூர் தேவாரப் பகுதி சூரியன் பூசித்துப் பேறு பெற்றதை உணர்த்துகின்றது. இத்தலத்துக்கு ஞானசம்பந்தர் பதிகம் உள்ளது. இத்தலத்திற்கு புராணம் இருக்கிறது. அது நாகலிங்கம் பிள்ளையால் இயற்றப்பெற்றது.

பதிக வரலாறு

சொல் வேந்தரும் சண்பை நல்வேந்தரும் திருவீழிமிழலை பேணுபெருந்துறை ஆகிய சிவதலங்களை வழிபட்ட காலத்தில் திலதைப்பதியை அடைந்து மதிமுத்தத்தில் இறைவனைப் பணிந்து பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2747. பொடிகள்பூசிப்பலதொண்டர்கூடிப்புலர்காலையே
அடிகளாரத்தொழுதேத்தநின்றவ்வழகன்னிடம்
கொடிகளோங்கிக்குலவும்விழவார்திலதைப்பதி
வடிகொள்சோலைம்மலர்மணங்கமழும்மதிமுத்தமே. 1

பொடிகள் பூசிப் பலதொண்டர் கூடிப் புலர் காலையே
அடிகள் ஆரத்தொழுது ஏத்தநின்ற அவ் அழகன் இடம்
கொடிகள் ஓங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி
வடிகொள் சோலைம் மலர் மணம் கமழும் மதிமுத்தமே.

poTikaL pUcip palatoNTar kUTi, pular kAlaiyE,
aTikaL Arat tozutu, Etta nin2Ra(v) azakan2(n2) iTam--
koTikaL Ogkik kulavum vizavu Ar tilataippati,
vaTi koL cOlai(m) malar maNam kamazum matimuttamE.

பொருள்: பொழுது புலர்வதற்கு முன்பே தொண்டர்கள் பலர்கூடி, நீறணிந்து, திருவடிகளைத் தொழுது ஏத்த அழகன் நின்ற இடம், கொடிகளுயர்ந்து ஓங்க, விழாக்கள் நிறைந்த திலதைப் பதியில் வடிவான சோலைகளின் மணங்கமழும் மதிமுத்தமே.

குறிப்புரை: தலம் – திலதைப்பதி. கோயில் – மதிமுத்தம். அடியார்கள் பலர் வைகறையில் நியமங்களை முடித்துத் திருநீற்றுப் பொலிவுடன் திருக்கோயில் வழிபாடு செய்த பண்டைய உண்மை நிகழ்ச்சி குறிக்கப்பட்டது. ஆரத்தொழுதல் – 'தலையாரக் கும்பிட்டு' 'வாயாரப் பாடுந் தொண்டரினத்தகத்தான்' 'நாவார நம்பனையே பாடப்பெற்றோம்', 'கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்' என்பவை முதலியவற்றால் செய்வன திருந்தவும் நிறையவும் செய்தல் வேண்டும் என்று வற்புறுத்தல் காண்க.

Devotees in this city of Thiru-th-thilathaip-pathi, get up in the early morning daily and collectively join together in their observance of religious rites by smearing their body with holy ashes. Then they go to the temple and with sincere devotion worship the holy feet of Lord Civa. And they praise the Lord saying 'glory to thy holy feet'. This Lord is manifest in the temple of Thiru-th-thilathaip-pathi. In the temple, the tall religious flags always wave in the air. In this temple, festivals go on round the year without any break. In the nearby temple beautiful gardens are many, the flowers in the plants spread their fragrance all over the temple and nearby areas.

2748. தொண்டர்மிண்டிப்புகைவிம்முசாந்துங்கமழ்துணையலும்
கொண்டுகண்டார்குறிப்புணரநின்றகுழகன்னிடம்
தெண்டிரைப்பூம்புனலரிசில்சூழ்ந்ததிலதைப்பதி
வண்டுகெண்டுற்றிசைபயிலுஞ்சோலைம்மதிமுத்தமே. 2

தொண்டர் மிண்டிப் புகைவிம்மு சாந்தும் கமழ் துணையலும்
கொண்டு கண்டார் குறிப்பு உணரநின்ற குழகன் இடம்
தெண் திரைப் பூம்புனல் அரிசில் சூழ்ந்த திலதைப்பதி
வண்டு கெண்டுற்று இசை பயிலும் சோலைம் மதிமுத்தமே.

toNTar miNTi, pukai vimmu cAntum kamaz tuNaiyalum
koNTu, kaNTAr kuRippu uNara nin2Ra kuzakan2(n2) iTam--
teNtiraip pUmpun2al aricil cUznta tilataippati,
vaNTu keNTu uRRu icai payilum cOlai(m) matimuttamE.

பொருள்: தொண்டர்கள் நெருங்கி, விம்மும் தூபமும் கமழ்கின்ற சந்தனமும் மாலைகளும் கொண்டு, தன்னை வழிபட, அடியார்களின் மனக்கருத்தினை அறிந்து நின்ற குழகனின் இடம், தெளிந்த பூம்புனல் ஓடும் அரிசிலாறு சூழ்ந்த திலதைப்பதியில் வண்டுகள் மலர்களைக் கெண்டி இசைபயிலும் சோலைகள் கொண்ட மதிமுத்தமே.

குறிப்புரை: மிண்டி – நெருங்கி. முத்தம் – முற்றம், மரூஉ. 'நிலா முற்றம்' 'சத்திமுற்றம்'. கண்டார் – தரிசனம் புரிந்த அடியவர். குறிப்பு – கருத்து. அரிசில் ஆற்றங்கரையில் உள்ளது இத்தலம்.

Our Lord Civan is manifest in the temple known as Mathimuththam situated in Thiru-th-thilathaip-pathi city. This city is on the banks of the river Arisilaaru where clear water always flows. This city is surrounded by good gardens where flower plants are many. Fully blossomed flowers are in huge quantity. They disseminate their pleasant smell, the bees reach the garden and learn to sing their song in the particular mode called Kendisai. Devotees gather with others and reach the temple taking with them the sweet incense, sandalwood mix, flower garlands and offer all these to God. Then they all worship Him. Our Lord, understanding the devotees' demand, blesses them gracefully and suitably.

2749. அடலுளேறுய்த்துகந்தானடியாரமரர்தொழக்
கடலுள்நஞ்சமமுதாகவுண்டகடவுள்ளிடம்
திடலடங்கச்செழுங்கழனிசூழ்ந்ததிலதைப்பதி
மடலுள்வாழைக்கனிதேன்பிலிற்றும்மதிமுத்தமே. 3

அடல் உள் ஏறு உய்த்து உகந்தான் அடியார் அமரர் தொழக்
கடல் உள் நஞ்சம் அமுதாக உண்ட கடவுள் இடம்
திடல் அடங்கச் செழுங்கழனி சூழ்ந்த திலதைப்பதி
மடல் உள்வாழைக் கனி தேன் பிலிற்றும் மதிமுத்தமே.

aTal uL ERu uyttu ukantAn2, aTiyAr amarar tozak
kaTaluL nanjcam amutu Aka uNTa kaTavuL(L), iTam--
tiTal aTagkac cezug kazan2i cUznta tilataippati,
maTaluL vAzaikkan2i tEn2 piliRRum matimuttamE.

பொருள்: வெற்றியையே கருதுகின்ற போரேற்றை ஊர்தியாகக் கொண்டு மகிழ்ந்தவன்; அடியவர்களும் அமரர்களும் தொழுது இரக்க, கடலில் எழுந்த நஞ்சினை அமுதமாக உண்ட கடவுள் ஆகிய சிவன் எழுந்தருளிய இடம், வெளி முழுவதும் செழுமையான கழனிகள் சூழ்ந்த திலதைப்பதியில், தாழை மடலுள் வாழைக்கனி சாறு பிலிற்றும் மதிமுத்தமே.

குறிப்புரை: அடல் உள் ஏறு – வெற்றியை உள்ளு (கருது) கின்ற விடை. வலிமைக்கு ஒப்புறுத்த உள்ளுகின்ற விடையையும் ஆம். 'ஏறுபோற் பீடுநடை'. பிலிற்றும் – கொப்புளிக்கும்.

Our Lord Civan is manifest in Mathimuththam temple in the city of Thiru-th-thilathaip-pathi. There are small hillocks in the city area. Around these hillocks paddy fields are many. In the waterways plantain juice drips running through small sluices. Our Lord loves to sustain the white strong bull for His conveyance. Our Lord imbibed the poison that arose from the ocean and treated it as nectar. This action was seen by the devotees and all celestials and they all worshipped Him. This Lord desires to manifest Himself in the temple known as Mathimuththam in the city of Thiru-th-thilathaip-pathi.

2750. கங்கைதிங்கள்வன்னிதுன்னெருக்கின்னொடுகூவிளம்
வெங்கண்நாகம்விரிசடையில்வைத்தவிகிர்தன்னிடம்
செங்கயல்பாய்புனலரிசில்சூழ்ந்ததிலதைப்பதி
மங்குல்தோயும்பொழில்சூழ்ந்தழகார்மதிமுத்தமே. 4

கங்கை திங்கள் வன்னி துன் எருக்கின்னொடு கூவிளம்
வெங்கண் நாகம் விரிசடையில் வைத்த விகிர்தன் இடம்
செங்கயல் பாய்புனல் அரிசில் சூழ்ந்த திலதைப்பதி
மங்குல் தோயும் பொழில் சூழ்ந்த அழகார் மதிமுத்தமே.

kagkai, tigkaL, van2n2i, tun2 erukki(n2)n2oTu, kUviLam,
veg kaN nAkam, viricaTaiyil vaitta vikirtan2(n2) iTam--
cegkayal pAy pun2al aricil cUznta tilataippati,
magkul tOyum pozil cUzntu azaku Ar matimuttamE.

பொருள்: கங்கைநதி, பிறைநிலவு, வன்னி இலையுடன் நெருங்கிய எருக்கம்பூ, வில்வம், கொடிய கண்ணுடைய நாகம் ஆகியவற்றை விரிந்த சடையில் வைத்த விகிர்தன் ஆகிய சிவனுக்கு இடம், சிவந்த நிறமுடைய கயல்கள் பாயும் வெள்ளம் பாயும் அரிசிலாறு சூழ்ந்த திலதைப்பதியில் மேகங்கள் தோயும் பொழில்கள் சூழ்ந்ததும் அழகு நிறைந்ததுமாகிய மதிமுத்தமே.

குறிப்புரை: திருச்சடையில் உள்ளன என்று கங்கை முதலிய ஆறு கூறப்பட்டன. மங்கல், மேகம்.

Our Lord Civan supports the river Ganges in His entangled hair locks. The young moon, He retains it in the hair locks along with the Ganges. He adorns His entangled hair locks with garlands made of leaves of summer tree, yercum, the vilvam leaves and jasmine flowers. He is Supreme, different from the world. This city called Thiru-th-thilathaip-pathi, is surrounded by the Arisilaaru river. Here the tank fish swim and leap in the river water. Also natural forests are many where clouds slowly move over the trees and embrace the branches of the tall trees. Here the attractive temple Mathimuththam exists.

2751. புரவியேழும்மணிபூண்டியங்குங்கொடித்தேரினான்
பரவிநின்றுவழிபாடுசெய்யும்பரமேட்டியூர்
விரவிஞாழல்விரிகோங்குவேங்கைசுரபுன்னைகள்
மரவமவ்வவ்மலருந்திலதைம்மதிமுத்தமே. 5

புரவி ஏழும் மணிபூண்டு இயங்கும் கொடித் தேரினான்
பரவி நின்று வழிபாடு செய்யும் பரமேட்டி ஊர்
விரவி ஞாழல் விரிகோங்கு வேங்கை சுரபுன்னைகள்
மரவம் அவ் அவ்மலரும் திலதை மதிமுத்தமே.

puravi Ezum maNi pUNTu iyagkum koTittErin2An2
paravi nin2Ru vazipATu ceyyum paramETTi Ur--
viravi njAzal, viri kOgku, vEgkai, curapun2n2aikaL,
maravam, avvav malarum, tilatai(m) matimuttamE.

பொருள்: குதிரைகள் ஏழு பூட்டி இயங்கும் அழகிய தேரினனாகிய சூரியன் போற்றி நின்று வழிபடும் பரமேட்டியாகிய சிவன் எழுந்தருளியுள்ள ஊர், ஞாழல் மரங்கள் கலந்து, விரிந்த கோங்கு, சுரபுன்னைகள், வேங்கை, மரா மரங்களுள்ளதும் முல்லை மலர்வதுமாகிய திலதைப் பதியில் உள்ள மதிமுத்தமே.

குறிப்புரை: சூரியன் கதிரில் உள்ள ஏழுநிறமும் ஏழு குதிரைகளாக உருவகிக்கப்பட்டன. மரவம் – குங்குமமரம். சூரியன் பூசித்த தலம் என்பது முற்பகுதியால் விளங்கும்.

The rich city of Thiru-th-thilathaip-pathi is surrounded by parks. Here in these parks, orange cup calyxed plants, a kind of cotton trees, silk cotton, the kino tree, mastwood tree, seaside Indian oak and Arabian jasmine are all in plenty. The sun god, who travels in the sky in his special car drawn by horses in this city Thiru-th-thilathaip-pathi worships our Lord Civan who is manifest in this temple.

2752. விண்ணர்வேதம்விரித்தோதவல்லாரொருபாகமும்
பெண்ணரெண்ணாரெயில்செற்றுகுந்தபெருமானிடம்
தெண்ணிலாவிண்ணொளிதீண்டுசோலைத்திலதைப்பதி
மண்ணுளார்வந்தருள்பேணநின்றம்மதிமுத்தமே. 6

விண்ணர் வேதம் விரித்து ஓதவல்லார் ஒருபாகமும்
பெண்ணர் எண்ணார் எயில் செற்று குந்த பெருமானிடம்
தெண்ணிலா விண்ணொளி தீண்டு சோலைத் திலதைப்பதி
மண்ணுளார் வந்தருள் பேண நின்றம் மதிமுத்தமே.

viNNar, vEtam virittu Ota vallAr, orupAkamum
peNNar, eNNAr eyil ceRRu ukanta perumAn2, iTam--
teN nilAvin2(n2) oLi tINTu cOlait tilataippati,
maN uLAr vantu aruL pENi nin2Ra(m) matimuttamE.

பொருள்: விண் உலகத்தவன்; வேதங்களை விரித்து ஓத வல்லார்; ஒருபாகத்தில் பெண்ணை உடையவர்; பகைவரின் மூன்று மதில்களை எரித்தழித்து உயர்ந்த பெருமான் ஆகிய சிவன் எழுந்தருளியுள்ள இடம் தெளிந்த நிலவின் ஒளி தீண்டும் சோலைகளை உடைய திலதைப்பதி; அங்கு, மண்ணுலகத்தவர்கள் வந்து தன்னுடைய அருளை வேண்டி வழிபட நின்ற மதிமுத்தமே.

குறிப்புரை: விண்ணோரும் வல்லாரும் பெண்ணரும் ஆகிய பெருமான்.

Our Lord Civan is the Author of the four Vedas. He has embedded His consort on one part of His body. The asuras of Thripurathar never paused to think about our Lord. Our Lord destroyed their forts in the first instance. However, later on He graced them. This Lord is manifest in the temple known as Mathimuththam situated in the city Thiru-th-thilathaip-pathi. The city is surrounded by developed gardens where the moon's pure rays always fall over the trees and the garden area. The people of the earth, to get our Lord's grace, reach this city and worship our Lord Civa.

2753. ஆறுசூடியடையார்புரஞ்செற்றவர்பொற்றொடி
கூறுசேரும்முருவர்க்கிடமாவதுகூறுங்கால்
தேறலாரும்பொழில்சூழ்ந்தழகார்திலதைப்பதி
மாறிலாவண்புனலரிசில்சூழ்ந்தம்மதிமுத்தமே. 7

ஆறு சூடி அடையார் புரம் செற்றவர் பொற்றொடி
கூறு சேரும் உருவர்க் இடமாவது கூறுங்கால்
தேறல் ஆரும் பொழில் சூழ்ந்த அழகார் திலதைப்பதி
மாறு இலாவண் புனல் அரிசில் சூழ்ந்த மதிமுத்தமே.

ARucUTi, aTaiyAr puram ceRRavar, poRRoTi
kURu cErum uruvarkku iTam Avatu kURugkAl--
tERal Arum pozil cUzntu azaku Ar tilataippati,
mARu ilA vaN pun2al aricil cUznta(m) matimuttamE.

பொருள்: கங்கையாற்றைச் சடையில் சூடியவர்; தன்னைச் சரணாக அடையாத முப்புரத்தாரை அழித்தவர்; பொற்றொடியாகிய உமை ஒரு கூறாகச் சேரும் உருவர் ஆகிய

சிவனுக்கு இடமாவது தேன் மிகுந்த பொழில்கள் சூழ்ந்ததுவும் அழகு நிறைந்ததுமாகிய திலதைப்பதியில் வற்றாத புனல் பாயும் அரிசிலாறு சூழ்ந்த மதிமுத்தமே.

குறிப்புரை: சூடி – பெயர். அடையார் – பகைவர். செற்றவர் – அழித்தவர். பொற்றொடி – வேற்றுமை தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. தேறல் – தேன். பொற்றொடி நாயகி என்னுந் தேவியார் திருப்பெயரில் தொடி என்பது கொடி என்றாயிற்றோ?

Our Lord supports the river Ganges over His head. He destroyed the three forts of the enemies of Thripurathar. He retains His consort on one half of His body. This Lord is manifest in the temple known as Mathimuththam situated in the city of Thiru-th-thilathaip-pathi. This city is surrounded by the river called Arisilaaru where water never dries up. The city is surrounded by attractive forests full of flowers, yielding honey always.

2754. கடுத்துவந்தகனல்மேனியினான்கருவரைதனை
எடுத்தவன்றன்முடிதோளடர்த்தார்க்கிடமாவது
புடைக்கொள்பூகத்திளம்பாளைபுல்கும்மதுப்பாயவாய்
மடுத்துமந்தியுகளுந்திலதைம்மதிமுத்தமே. 8

கடுத்து வந்த கனல் மேனியினான் கருவரைதனை
எடுத்தவன் தன்முடி தோள் அடர்த்தார்க்கு இடமாவது
புடைக் கொள் பூகத்து இளம்பாளை புல்கும் மதுப் பாயவாய்
மடுத்தும் மந்தியுகளும் திலதை மதிமுத்தமே.

kaTuttu vanta kan2al mEn2iyin2An2, karuvaraitan2ai
eTuttavan2 tan2 muTitOL aTarttArkku iTam Avatu--
puTaik koL pUkattu iLam pALai pulkum matup pAya, vAy-
maTuttu manti ukaLum tilatai(m) matimuttamE.

பொருள்: தீப்போல் சினந்து வெப்பத்துடன் வந்தவன்; பெரிய கயிலைமலையை எடுத்தவன் ஆகிய இராவணனுடைய பத்து முடி இருபது தோள்களை நசுக்கியவர்க்கு இடமாவது, பக்கத்தில் புடைத்து வளரும் இளம் பாளைகளிலிருந்து தேன்பாய மந்திகள் அதனை வாய்மடுத்து உண்டு துள்ளும் திலதைப்பதியில் உள்ள மதிமுத்தமே.

குறிப்புரை: கனல் – தீ. பூகம் – பாக்கு மரம். மது – கள். மடுத்து – உண்டு.

Raavanan came towards mount Kailash in an angry mood and with an appearance of dark clouds, he came to take the heavy mountain and to replace it. But our Lord quashed his head, shoulders etc. This Lord evidently is manifest in the Mathimuththam temple situated in the city of Thiru-th-thilathaip-pathi. This city is full of tall areca trees in many places, from the tender sheathes honey drips in the garden. The monkeys drink this honey, enjoy and play all around the area.

2755. படங்கொள்நாகத்தணையானும்பைந்தாமரையின்மிசை
இடங்கொள்நால்வேதனுமேத்தநின்றஇறைவன்னிடம்
திடங்கொள்நாவினிசைதொண்டர்பாடுந்திலதைப்பதி
மடங்கல்வந்துவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. 9

படம் கொள் நாகத்து அணையானும் பைந்தாமரையின் மிசை
இடம் கொள் நால்வேதனும் ஏத்த நின்ற இறைவன் இடம்
திடம் கொள் நாவின் இசை தொண்டர் பாடும் திலதைப்பதி
மடங்கல் வந்து வழிபாடு செய்யும் மதிமுத்தமே.

paTam koL nAkattu aNaiyAn2um, paintAmaraiyin2 micai
iTam koL nAlvEtan2um, Etta nin2Ra iRaivan2 iTam--
tiTam koL nAvin2(n2) icai toNTar pATum tilaitaippati,
maTagkal vantu vazipATu ceyyum matimuttamE.

பொருள்: படமுடைய பாம்புப் படுக்கை கொண்ட திருமாலும் தாமரை மலர் மேலிருக்கும் நான்முகனும் வழிபட நின்ற இறைவன் ஆகிய சிவன் எழுந்தருளியுள்ள இடம் நாவினால் அவனுடைய புகழைத் தொண்டர் பாடும் திலதைப்பதியில் சிங்கம் வந்து வழிபாடு செய்யும் மதிமுத்தமே.

குறிப்புரை: மடங்கல் – இயமன். இடி, சிங்கம் என்பவற்றுள் ஒன்று பூசித்த தலமாயிருந்தால் தான் சிங்கம் வந்து வழிபாடு செய்யும் மதிமுத்தம் என்றிருக்கலாம்.

The tutelary Thirumaal treated the snake Aathi Sedan with thousand heads as his bed roll. In the new and fresh lotus flower, the demigod, the four faced Brahma resides. These two demigods came to worship our Lord Civa manifested in Mathimuththam temple in the city of Thiru-th-thilathaip-pathi. Here in this temple

devotees with very strong and clean tongue chant songs on our Lord and worship Him. To the temple lions also come and worship our Lord.

2756. புத்தர்தேரர்பொறியில்சமணர்கருவீறிலாப்
பித்தர்சொன்னம்மொழிகேட்கிலாதபெருமானிடம்
பத்தர்சித்தர்பணிவுற்றிறைஞ்சுந்திலதைப்பதி
மத்தயானைவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. 10

புத்தர் தேரர் பொறியில் சமணர் கரு ஈறிலாப்
பித்தர் சொன்னம் மொழி கேட்கிலாத பெருமான் இடம்
பத்தர் சித்தர் பணிவுற்று இறைஞ்சும் திலதைப்பதி
மத்த யானை வழிபாடு செய்யும் மதிமுத்தமே.

puttar tErar, poRi il camaNar karu IRu ilAp
pittar--con2n2a(m) mozi kETkilAta perumAn2 iTam--
pattar, cittar, paNivu uRRu iRainjcum tilataippati,
mattayAn2ai vazipATu ceyyum matimuttamE.

பொருள்: பவுத்தராகிய தேரர்கள், அறிவற்ற சமணர்கள் ஆகிய பெருமையில்லாப் பித்தர்கள் சொன்ன மொழிகளை ஒருபொருட்டாகக் கேட்காத பெருமான் ஆகிய சிவன் எழுந்தருளியுள்ள இடம், பத்தர்களும் சித்தர்களும் பணிவுடன் தொழுது வணங்கும் திலதைப்பதியில் மத்தயானை வழிபாடு செய்யும் மதிமுத்தமே.

குறிப்புரை: பொறி – அறிவு. வீறு இல்லாத பித்தர். பத்தர் – அன்பர். சித்தர் – அறிஞர். யானை வழிபட்ட தலம்.

Our Lord Civan in this city never listens to the false propaganda of the Buddhists, the ignorant Jains and others who have no knowledge about virtuous deeds. This Lord is manifest in the temple Mathimuththam in the city of Thiru-th-thilathaip-pathi. The devotees in this city, and scholars, reach the temple, bow before our God and worship Him. This temple and city are famous because an elephant that ran amok worshipped our Lord in the temple.

2757. மந்தமாரும்பொழில்சூழ்திலதைம்மதிமுத்தர்மேல்
கந்தமாருங்கடற்காழியுள்ளான்தமிழ்ஞானசம்
பந்தன்மாலைபழிதீரநின்றேத்தவல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வார்சிவன்சேவடிசேர்வதுதிண்ணமே. 11

மந்தம் ஆரும் பொழில் சூழ் திலதை மதிமுத்தர்மேல்
கந்தம் ஆரும் கடற்காழி உள்ளான் தமிழ்ஞானசம்
பந்தன் மாலை பழிதீர நின்று ஏத்த வல்லார்கள் போய்ச்
சிந்தை செய்வார் சிவன் சேவடி சேர்வது திண்ணமே.

mantam Arum pozil cUz tilatai(m) matimuttarmEl,
kantam Arum kaTal kAzi uLLAn2--tamiz njAn2acam-
pantan2--mAlai, pazi tIra nin2Ru Etta vallArkaL, pOyc
cintaiceyvAr, civan2 cEvaTi cErvatu tiNNamE.

பொருள்: குளிர்ச்சி நிறைந்த பொழில்கள் சூழ்திலதைப்பதியில் மதிமுத்தத்து இறைவர்மேல் மணம் கமழும் கடற்காழியில் உள்ளான் தமிழ்ஞானசம்பந்தன் பாடிய இத்தமிழ்மாலையைப் பாடி நின்று ஏத்த வல்லார்கள், சிந்திப்பவர்கள் சிவனின் சேவடிகளைப் போய்ச் சேர்வது திண்ணம்.

குறிப்புரை: மந்தம் – 'மந்தமாய பொழில்' (தி. 2 ப.117 பா. 11). கந்தம் – மணம், புலால் நாற்றம். 'பழிதீர நின்று மாலை ஏத்த'.

Our Lord Civa is manifest in the temple Mathimuththam in the city of Thiru-th-thilathaip-pathi where the southern wind blows through the temple and through the gardens. The saint Thiru-gnana-Sambandar was born in the city of Seerkaazhi surrounded by seashore of sweet fragrance. He sang the ten Tamil verses as garland of flowers on Lord Civan. Those devotees who worship our Lord's holy feet and concentrate in their mind on the holiness of our Lord will certainly reach our Lord's holy feet.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

*118*ஆம் பதிகம் முற்றிற்று
End of 118th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 255 *பதிக எண்: 119*

119. திருநாகேச்சரம் 119. THIRU-NAAKECH-CHURAM

பண் : செவ்வழி *Pann: Chevvazhi*

திருத்தல வரலாறு

ஐந்தலை அரவால் பூசிக்கப்பெற்ற கோயிலை உடையது ஆதலின் இப்பெயர் பெற்றது. இச்செய்தி, இக்கோயிலுக்குரிய நாவுக்கரசரது திருக்குறுந்தொகையிலுள்ள (திருப்பாட்டு – 4),

'ஐந்தலை யரவின் பணி கொண்டருள்
மைந்தர் போன்மணி நாகேச் சுவரரே'

என்ற தேவாரப் பகுதியால் அறியலாகும்.

மயிலாடுதுறை – கும்பகோணம் தொடர்வண்டிப் பாதையில் திருநாகேசுவரம் தொடர்வண்டி நிலையத்திலிருந்து தெற்கே சுமார் 2 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரையில் உள்ள 29ஆவது தலமாகும். கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதிகள் இருக்கின்றன.

இறைவர் திருப்பெயர் சண்பகாரணியர், இறைவியார் திருப்பெயர் குன்றமுலைநாயகி. தீர்த்தம் சூர்யபுஷ்கரிணி. ஐந்தலை நாகமன்றி, சந்திர சூரியர்களால் பூசிக்கப்பெற்றது. தெய்வப் பாக்கிழாராகிய சேக்கிழார் பெருமானுக்கு மிக்க விருப்பமுள்ள தலம். சேக்கிழார் தமது ஊராகிய குன்றத்தூரில் ஒரு கோயில் எடுப்பித்து அதற்குத் திருநாகேச்சுரம் என்று பெயர் வைத்துள்ளமை இதை நன்கு புலப்படுத்தும்.

திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டு, திருநாவுக்கரசு நாயனாரது பதிகம் மூன்று, சுந்தரமூர்த்தி நாயனாரது பதிகம் ஒன்று ஆக ஆறு பதிகங்களைப் பெற்ற பெருமை உடையது. நாளும் வணங்குவார் பிணி தீர்க்கும் பெற்றியுடையது.

'நாளு நாதனமர் கின்ற நாகேச்சுர நண்ணுவார்
கோளு நாளுந் தீயவேனு நன்காங் குறிக்கொண்மினே'

என்னும் இக்கோயில் சம்பந்தர் தேவாரப்பகுதி சிந்திக்கற்பாலது.

பதிக வரலாறு

திருஞானசம்பந்தர் திருக்குடமூக்கினை அணைந்து, திருக்கீழ்க் கோட்டத்திருந்த வான் பொருளினை வணங்கி, காரோணத்தாரமுதைப் பணிந்தேத்தி, திருநாகேச்சுரத்து அமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைப் பாடி அம்மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத்தாள் வணங்கி நாணாளும் பரவியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2758. தழைகொள்சந்தும்மகிலும்மயிற்பீலியுஞ்சாதியின்
பழமுமுந்திப்புனல்பாய்பழங்காவிரித்தென்கரை
நழுவில்வானோர்தொழநல்குசீர்மல்குநாகேச்சரத்
தழகர்பாதந்தொழுதேத்தவல்லார்க்கழகாகுமே. 1

தழை கொள் சந்தும் அகிலும் மயிற்பீலியும் சாதியின்
பழமும் அந்திப் புனல் பாய் பழங்காவிரித் தென்கரை
நழுவில் வானோர் தொழ நல்கு சீர்மல்கு நாகேச்சரத்து
அழகர் பாதம் தொழுது ஏத்த வல்லார்க்கு அழகு ஆகுமே.

tazai koL cantum(m), akilum, mayilplliyum, cAtiyin2
pazamum, untip pun2al pAy pazagkAvirit ten2karai,
nazuvu il vAn2Or toza, nalku clr malku nAkEccurattu
azakar pAtam tozutu Etta vallArkku azaku AkumE.

பொருள்: தழைத்த சந்தனம், அகில், மயிற்பீலி, சாதியின் பழம் முதலியவற்றை உந்திக் கொண்டு வெள்ளம் பாய்கின்ற பழங்காவிரியாற்றின் தென்கரையினில் வழுவுதல் இன்றி வானோர்கள் தொழ அவர்களுக்கு அருளும் பெருமை நிறைந்த திருநாகேச்சுரத்து அழகருடைய திருப்பாதங்களைத் தொழுது ஏத்த வல்லாருக்கு அது அழகாகும்.

குறிப்புரை: சந்து – அகில், பீலி, சாதிப்பழம் எல்லாம் காவிரி வெள்ளத்தால் கொள்ளப்பட்டவை. நழுவு. இல் – விலகுதல் இல்லாத. அழகராதலின் வணங்க வல்லார்க்கும் அழகு அருள்கின்றார்.

Our Lord evidently is manifest in the very attractive temple in Naakech-churam which has been very old on the southern bank of Cauvery river. This river water carries the sandalwood trees along with its branches, eaglewood trees, peacock's feathers, very good fruits and many other items. They are pushed forward by the running water of the Cauvery. They reach near Naakech-churam city and a portion is pushed forward

further. Here devas never move away, but worship our Lord Civan's holy feet in the temple and get our Lord's grace. They who praise Him will get enticing life forever.

2759. பெண்ணொர்பாகம்மடையச்சடையிற்புனல்பேணிய
வண்ணமானபெருமான்மருவும்மிடமண்ணுளார்
நண்ணிநாளுந்தொழுதேத்திநன்கெய்துநாகேச்சரம்
கண்ணினாற்காணவல்லாரவர்கண்ணுடையார்களே. 2

பெண் ஓர்பாகம் அடையச் சடையில் புனல்பேணிய
வண்ணம் ஆன பெருமான் மருவும் இடம் மண் உளார்
நண்ணி நாளும் தொழுது ஏத்தி நன்கு எய்து நாகேச்சரம்
கண்ணினால் காண வல்லார் அவர் கண் உடையார்களே.

peN orpAkam(m) aTaiya, caTaiyil pun2al pENiya
vaNNam An2a perumAn2 maruvum(m) iTam--maN uLAr
naNNi nALum tozutu Etti nan2ku eytum--nAkEccuram,
kaNNin2Al kANa vallAr avar kaN uTaiyArkaLE.

பொருள்: பெண்கோலம் ஒருபாகத்தில் பொருந்த, சடையில் கங்கைப் புனலை வைத்த அழகன் ஆகிய பெருமான் எழுந்தருளும் இடம் உலகில் உள்ளவர்கள் வந்து நாளும் தொழுது ஏத்தி நன்மை எய்தும் திருநாகேச்சுரம். அதைக் கண்ணினால் காண வல்லவர்கள் கண்ணுடையவர்களே.

குறிப்புரை: நன்கு – சிவபுண்ணியம் முதலிய நன்மைகள். கண்ணினால் என்றது காண்பதற்கு கடவுளையே பொருளாகக் கொண்ட கண் என்று அதன் சிறப்புணர்த்த.

Our Lord Civa has embedded His consort on one part of His body. In His entangled hair locks He supports the Ganges river. This gorgeous Lord Civan is the Supreme Being. He is manifest in the temple in Naakech-churam city. Here the people on this earth every day reach Naakech-churam and worship our Lord and get all His grace. Those people who can see our Lord in Naakech-churam city with their eyes are the only persons who own eyes.

2760. குறவர்கொல்லைப்புனங்கொள்ளைகொண்டும்மணிகுலவுநீர்
பறவையாலப்பரக்கும்பழங்காவிரித்தென்கரை
நறவநாறும்பொழில்சூழ்ந்தழகாயநாகேச்சரத்
திறைவர்பாதந்தொழுதேத்தவல்லார்க்கிடரில்லையே. 3

குறவர் கொல்லைப் புனம் கொள்ளை கொண்டும் மணிகுலவுநீர்
பறவை ஆலப் பரக்கும் பழங்காவிரித் தென்கரை
நறவ நாறும் பொழில் சூழ்ந்த அழகாய நாகேச்சரத்து
இறைவர் பாதம் தொழுது ஏத்த வல்லார்க்கு இடர் இல்லையே.

kuRavar kollaippun2am koLLaikoNTum, maNi kulavu nIr,
paRavai Ala, parakkum pazagkAvirit ten2karai--
naRavam nARum pozil cUzntu azaku Aya--nAkEccurattu
iRaivar pAtam tozutu Etta vallArkku iTar illaiyE.

பொருள்: குறிஞ்சிக் குறவர்களின் கொல்லையில் தினைப் புனம் முதலியவற்றைக் கொள்ளை கொண்டும், ஒளி குலவும் வெள்ளநீரில் வண்டுகள் மொய்க்கவும்; பரந்து வரும் பழங்காவிரியின் தென்கரையில் தேன் மணக்கும் பொழில்கள் சூழ்ந்ததுவும் அழகாயதும் ஆகியது திருநாகேச்சுரம். திருநாகேச்சுரத்து இறைவருடைய திருப்பாதங்களைத் தொழுது ஏத்த வல்லார்க்கு இடரே இல்லை.

குறிப்புரை: ஆல – அசைய. அழகாய நாகேச்சரம். நாகேச்சரத்து அழகர் (பா. 1) என்றவற்றால் தலமும் மூர்த்தியும் அழகுடைமை உணர்க.

The nomadic community who are called Kuravaas mainly lives in mountainous area. Some live in the forests also. The river Cauvery runs over these areas spreading the gems available all around the waterways. The river Cauvery spreads its water and pushes on to the southern bank of Naakech-churam city. In this city, the attractive smell of honey emanates from the gardens and spreads all over the area. Here our radiant Lord Civa of Naakech-churam city resides in the temple. Those servitors who can worship and praise our Lord will never get any suffering in their life.

2761. கூசநோக்காதுமுன்சொன்னபொய்கொடுவினைகுற்றமும்
நாசமாக்கும்மனத்தார்கள்வந்தாடுநாகேச்சரம்
தேசமாக்குந்திருக்கோயிலாக்கொண்டசெல்வன்கழல்
நேசமாக்குந்திறத்தாரறத்தார்நெறிப்பாலரே. 4

கூச நோக்காது முன் சொன்ன பொய் கொடு வினை குற்றமும்
நாசம் ஆக்கும் மனத்தார்கள் வந்தாடு நாகேச்சரம்
தேசம் ஆக்கும் திருக்கோயிலாக் கொண்ட செல்வன் கழல்
நேசம் ஆக்கும் திறத்தார் அறத்தார் நெறிப்பாலரே.

kUcam nOkkAtu mun2 con2n2a poy, koTuvin2ai, kuRRamum,
nAcam Akkum man2attArkaL vantu ATum nAkEccuram,
tEcam Akkum tiruk kOyilAk koNTa celvan2 kazal
nEcam Akkum tiRattAr aRattAr; neRippAlarE.

பொருள்: கூசச் சொன்ன பொய், நோக்காது சொன்ன பொய், கொடு வினை குற்றம் முதலாய பாவங்களை நாசமாக்கும் கருத்தினர்கள் வந்து தீர்த்தமாடும் தலம் திருநாகேச்சுரம். திருநாகேச்சுரத்தைத் திருக்கோயிலாகக் கொண்ட செல்வனின் திருவடிகள்மேல் அன்பு கொளும் திறத்தார் சிவதன்மமுடையார்; அவர்கள் நன்னெறிப்பாலரே ஆவர்.

குறிப்புரை: கூசச் சொன்ன பொய், நோக்காது சொன்ன பொய், பொய்யும் வினையும் குற்றமும் நாசம் ஆக்கும் மனத்தார்கள். ஆடுதல் – தீர்த்தமாடுதல். நேசம் – அன்பு. அறத்தார் – சிவ தருமமுடையவர். நெறிபாலர் – வீட்டு நெறிக்கண் ஒழுகுபவர்.

Some people utter lies without thinking deeply and this affects others who get ashamed. Mistakes due to serious bad karma are committed by some people. These two bad items are never committed by good thinking people. These people happily reach the very bright temple of Naakech-churam city where our Lord Civan who is the owner of all wealth is manifested. Those devotees who have sincere devotion for this Lord's holy feet are the greatly respected people who follow the spiritual, divine values.

2762. வம்புநாறும்மலரும்மலைப்பண்டமுங்கொண்டுநீர்
பைம்பொன்வாரிக்கொழிக்கும்பழங்காவிரித்தென்கரை
நம்பன்நாளும்அமர்கின்றநாகேச்சரநண்ணுவார்
உம்பர்வானோர்தொழச்சென்றுடனாவதுமுண்மையே. 5

வம்பு நாறும் மலரும் மலைப் பண்டமும் கொண்டு நீர்
பைம் பொன் வாரிக் கொழிக்கும் பழங்காவிரித் தென்கரை
நம்பன் நாளும் அமர்கின்ற நாகேச்சர நண்ணுவார்
உம்பர் வானோர் தொழச் சென்று உடனாவதும் உண்மையே.

vampu nARum malarum malaip paNTamum koNTu, nIr
paim pon2 vArik kozikkum pazagkAvirit ten2karai--
nampan2 nALum amarkin2Ra--nAkEccuram naNNuvAr
umparvAn2Or tozac cen2Ru, uTan2 Avatum uNmaiyE.

பொருள்: புதுமணம் கமழும் மலர்களும் மலைப்பண்டங்களும் கொண்டு வெள்ளநீர் பசும்பொன்னை வாரிக் கொழிக்கும் பழங்காவிரியின் தென்கரையில் நம் விருப்பத்திற்குரியவன் நாளும் விரும்பி அமர்கின்ற திருநாகேச்சுரத்தை அடைவார் மேலுலகத்து வானவர்கள் தொழச் சென்று அத்தேவர்களுடன் வாழ்வதும் உண்மையே.

குறிப்புரை: உம்பரும் வானோரும், உடனாவது – அத்துவிதமுறுவது ஒன்றாய் வேறாய் உடனாதல். அஃது ஈண்டு ஆன்மாச் சிவனுடனாதலை உணர்த்திற்று.

The Cauvery river water carries the sweet smelling flowers and the products of the mountain and golden particles and pushes them to the running water ways and reaches the very old banks of Naakech-churam city. Here our most desirable Lord Civan is manifest in the temple of Naakech-churam city, every day. Those servitors who reach the Naakech-churam city and then worship our Lord in the temple will be worshipped by the devas and celestials since they will become one with Lord Civan in the advaita stage.

2763. காளமேகந்நிறக்காலனோடந்தகன்கருடனும்
நீளமாய்நின்றெய்தகாமனும்பட்டனநினைவுறின்
நாளுநாதன்னமர்கின்றநாகேச்சரநண்ணுவார்
கோளுநாளுந்தீயவேனுநன்காங்குறிக்கொண்மினே. 6

காளமேகம் நிறக் காலனோடு அந்தகன் கருடனும்
நீளமாய் நின்று எய்த காமனும் பட்டன நினைவு உறின்
நாளும் நாதன் அமர்கின்ற நாகேச்சர நண்ணுவார்
கோளும் நாளும் தீயவேனும் நன்கு ஆம் குறிக்கொண்மினே.

kALamEkam niRak kAlan2OTu, antakan2, karuTan2um,
nIlam Ay nin2Ru eyta kAman2um, paTTan2a nin2aivu uRin2,
nALum nAtan2 amarkin2Ra nAkEccuram naNNuvAr
kOLum nALum tIyavEn2um, nan2ku Am; kuRikkoNmin2E!

பொருள்: காளமேக நிறக்காலன்; அந்தகன், கருடன், தூரத்தே நின்று மலரம்பு எய்த காமன் முதலியோர் அழிந்த காரணத்தை நினைவுற்றால் தலைவனாகிய சிவன் நாளும் விரும்பி அமர்ந்துள்ள திருநாகேச்சுரத்தை நண்ணுவார்; திருநாகேச்சுரத்தைச் சரணாக நண்ணியவர்களைக் கோளும் நாளும் தீயவேனும் தீய செய்யா; நன்மையே செய்யும்; இவ்வுண்மையைக் கருத்தில் கொண்மின்.

குறிப்புரை: காளம் – கருமை. காலன் அந்தகன் என்னும் இருவரும் வெவ்வேறு ஆவர். கருடன் பட்டது – இத்தலத்தில் ஐந்தலைப் பாம்பின் பணி கொண்டு கருடனைச் செற்ற வரலாறு குறித்தது. 'மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத்தாள்' (பெரிய. 2310). கோள்களும் நாள்களும் தீயன எனினும் நல்லன ஆகும்.

The black-coloured god of death (Kaalan), the blind man, the mystical bird Garuda (i.e.) the conveyance of Thirumaal – all these and Kaaman, the god of love who used his arrow from a distance, were defeated by Lord Civan. The devotees who think daily of these actions of Civan and worship the Lord will find even bad planets and bad days doing only good to them. Remember this always.

2764. வேயுதிர்முத்தொடுமத்தயானைமருப்பும்விராய்ப்
பாய்புனல்வந்தலைக்கும்பழங்காவிரித்தென்கரை
நாயிறுந்திங்களுங்கூடிவந்தாடுநாகேச்சரம்
மேயவன்றன்னடிபோற்றியென்பார்வினைவீடுமே. 7

வேய் உதிர் முத்தொடு மத்த யானை மருப்பும் விராய்ப்
பாய் புனல் வந்தலைக்கும் பழங்காவிரித் தென்கரை
நாயிறும் திங்களும் கூடி வந்தாடு நாகேச்சரம்
மேயவன் தன்னடி போற்றி என்பார் வினை வீடுமே.

vEy utir muttoTu mattayAn2ai maruppum virAy,
pAy pun2al vantu alaikkum pazagkAvirit ten2karai--
nAyiRum tigkaLum kUTi vantu ATum--nAkEccuram
mEyavan2tan2 aTi "pORRi!" en2pAr vin2ai vITumE.

பொருள்: மூங்கில் உதிர்த்த முத்துக்களுடன் யானையின் தந்தங்களும் கலந்து பாய்கின்ற வெள்ளம் கொண்டுவந்து அலைக்கும் பழங்காவிரியின் தென்கரையில், சூரியனும் சந்திரனும் கூடி வந்து தீர்த்தம் ஆடும் திருநாகேச்சுரத்தில் எழுந்தருளியிருப்பவனின் திருவடிகளைப் போற்றி என வழிபடுவோருடைய வினைகள் அனைத்தும் அழியும்.

குறிப்புரை: ஞாயிறு – சூரியன். சூரிய சந்திரர் வழிபட்ட தலம். சந்திரன்னொடு சூரியர் தாம் உடன் வந்து சீர்வழிபாடுகள் செய்தபின் ஐந்தலையரவின் பணிகொண்டருள் மைந்தர்போல் மணிநாகேச்சுரவரே (தி. 5 ப.52 பா.4). வீடும் – அழியும்.

The river Cauvery water carries the pearls said to have fallen from the bamboo plants and the tusks of elephants, these get dropped on the banks of the south Cauvery near the city of Naakech-churam. The city flourishes with these, the Cauvery wealth. The sun and the moon visit the city of Naakech-churam and worship our Lord Civan in the temple. Those servitors who worship the holy feet of our Lord and praise Him will get their bad karma wiped out.

2765. இலங்கைவேந்தன்சிரம்பத்திரட்டியெழில்தோள்களும்
மலங்கிவீழும்மலையாலடர்த்தானிடமல்கிய
நலங்கொள்சிந்தையவர்நாள்தொறும்நண்ணுநாகேச்சரம்
வலங்கொள்சிந்தையுடையாரிடராயினமாயுமே. 8

இலங்கை வேந்தன் சிரம்பத் திரட்டி எழில் தோள்களும்
மலங்கி வீழ அம்மலையால் அடர்த்தான் இடம் மல்கிய
நலம் கொள் சிந்தையவர் நாள்தொறும் நண்ணு நாகேச்சரம்
வலம் கொள் சிந்தை உடையார் இடர் ஆயின மாயுமே.

ilagkai vEntan2 cirampattu, iraTTi ezil-tOLkaLum,
malagki vIza(m) malaiyAl aTarttAn2 iTam--malkiya
nalam koL cintaiyavar nALtoRum naNNum--nAkEccuram,
valamkoL cintai uTaiyAr iTar Ayin2a mAyumE.

பொருள்: இலங்கை வேந்தன் இராவணனின் தலை பத்தும் இருபது எழிலான தோள்களும் சாய்ந்து வீழக், கயிலை மலையின் அடியில் நசுக்கினான்; அச்சிவன் எழுந்தருளிய இடம், நலம் நல்கும் சிந்தனையை உடையவர்கள் தினந்தோறும் அடையும் திருநாகேச்சுரம். அதை வலம் வரும் கருத்து உடையவர்களின் இடர்கள் ஆயின மாய்ந்தொழியும்.

குறிப்புரை: வீழ அடர்த்தான், சிந்தைக்கு நலம் தியாகபலம். வலம் – திருக்கோயிலைச் சூழ்தல்.

Our Lord Civan pressed His Himalayan mountain with His toe and crushed king Raavanan's ten heads and twenty shoulders. This Lord Civan is manifest in the temple in Naakech-churam city. The servitors of brilliant virtues and pleasing manners go to

the temple daily and worship our Lord. In this temple those who take the right side and worship our Lord with sincere mind will get their sufferings wiped out fully in their life.

2766. கரியமாலும்மயனும்மடியும்முடிகாண்பொணா
எரியதாகிந்நிமிர்ந்தானமரும்மிடமீண்டுகா
விரியினீர்வந்தலைக்குங்கரைமேவுநாகேச்சரம்
பிரிவிலாதவ்வடியார்கள்வானிற்பிரியார்களே. 9

கரிய மாலும் அயனும் அடியும் முடி காண்பு ஒணா
எரியதாகி நிமிர்ந்தான் அமரும் இடம் ஈண்டுகா
விரியினீர் வந்து அலைக்கும் கரைமேவு நாகேச்சரம்
பிரிவிலாத அவ் அடியார்கள் வானிற் பிரியார்களே.

kariya mAlum, ayan2um, aTiyum muTi kANpu oNA
eriatu Aki(n) nimirntAn2 amarum iTam--INTu kA-
viriyin2 nIr vantu alaikkum karai mEvum--nAkEccuram
pirivilAta(v) aTiyArkaL vAn2il piriyArkaLE.

பொருள்: கரியனாகிய திருமாலும், நான்முகனும் அடியும் முடியும் காண முடியாமல் நெருப்பு பிழம்பாக உயர்ந்தான் ஆகிய சிவன் விரும்பி அமரும் இடம், காவிரி வெள்ளம் பெருகி மோதி அலைக்கும் கரையில் மேவிய திருநாகேச்சுரம் அதை விட்டுப் பிரிதல் இல்லாத அடியார்கள் சிவலோகத்தைப் பிரியார்.

குறிப்புரை: காண்பு – காட்சிக்கு. காவிரியினீர் கரையை அலைக்கும் நாகேச்சுரத்தைப் பிரியாதவர் சிவலோகத்தைப் பிரியார்.

The dark coloured demigod Thirumaal and Brahma were unable to see our Lord's holy feet and head. At the moment our Lord Civan became an infinitely tall, supernal flame. This Lord is manifest in the temple in Naakech-churam city situated on the southern bank of the Cauvery where the floodwater rushes speedily with waves. Those servitors who never move away from Naakech-churam city and the temple and worship Him regularly will not leave Civa Lokam.

2767. தட்டிடுக்கியுறிதூக்கியகையினர்சாக்கியர்
கட்டுரைக்கும்மொழிகொள்ளலும்வெள்ளிலங்காட்டிடை
நட்டிருட்கண்நடமாடியநாதன்நாகேச்சரம்
மட்டிருக்கும்மலரிட்டடிவீழ்வதுவாய்மையே. 10

தட்டிடுக்கி உறி தூக்கிய கையினர் சாக்கியர்
கட்டுரைக்கும் மொழி கொள்ளலும் வெள் இலங்காட்டிடை
நட்டிருட் கண் நடமாடிய நாதன் நாகேச்சரம்
மட்டிருக்கும் மலரிட்டடி வீழ்வது வாய்மையே.

taTTu iTukki uRi tUkkiya kaiyin2ar, cAkkiyar,
kaTTuraikkum mozi koLLElum! veLLil amkATTu iTai
naTTiruLkaN naTam ATiya nAtan2 nAkEccuram,
maTTu irukkum malar iTTu, aTi vIzvatu vAymaiyE.

பொருள்: பாயை இடுக்கி உறியைத் தூக்கிய கையினராகிய சமணரும், சாக்கியரும் கற்பனை செய்து உரைக்கும் மொழிகளைக் கொள்ளன்மின். பாடைகள் கிடக்கும் சுடுகாட்டிடை நள்ளிருளில் கூத்தாடிய நாதன் திருநாகேச்சுரத்தானைத் தேனிருக்கும் மலரினை இட்டுத் திருவடிகளில் வீழ்வது மெய்ம்மையான நன்மையைப் பயக்கும்.

குறிப்புரை: கட்டுரைக்கும் மொழி கொள்ளலும் – கட்டிச் சொல்லும் சொற்களைக் கொள்ளாதேயுங்கள். கொள்ளல் என்னும் முன்னிலை ஒருமை ஏவல் வினையுடன் உம்மைச் சேர்த்துப் பன்மையேவல் வினையாக்கியவாறுணர்க. வெள்ளில் – பிணப்பாடை. நடு இருள் – நட்டிருள்.

The Jains move about in the city carrying food plates in their armpit, and a pot hanging from the pole on their shoulders. The Jains and the Buddhists preach false propaganda with embellished similes. The devotees of Lord Civan, dancing at midnight in the burning ghat, never listen to these men. These servitors take plenty of flowers filled with honey, go to the temple and prostrate before Lord Civan and sing in praise of Him. This piety will yield the truest benefit.

2768. கந்தநாறும்புனற்காவிரித்தென்கரைக்கண்ணுதல்
நந்திசேருந்திருநாகேச்சரத்தின்மேல்ஞானசம்
பந்தன்நாவிற்பனுவல்லிவைபத்தும்வல்லார்கள்போய்
எந்தையீசன்னிருக்குமுலகெய்தவல்லார்களே. 11

கந்த நாறும் புனற் காவிரித் தென்கரைக் கண்ணுதல்
நந்தி சேரும் திருநாகேச்சரத்தின் மேல் ஞானசம்
பந்தன் நாவில் பனுவல்லிவை பத்தும் வல்லார்கள் போய்
எந்தை ஈசன் இருக்கும் உலகெய்த வல்லார்களே.

kantam nARum pun2al kAvirit ten2karai, kaNNutal
nanti cErum tiru nAkEccurattin2 mEl, njAn2acam-
pantan2 nAvil pan2uval(l) ivaipattum vallArkaL, pOy,
entai Ican2 irukkum(m) ulaku eyta vallArkaLE.

பொருள்: மணம் நாறும் புனல் வெள்ளமுடைய காவிரியாற்றின் தென்கரையினில் நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் எழுந்தருளும் திருநாகேச்சுரத்தின்மேல் ஞானசம்பந்தன் நாவினால் நவின்ற இத்திருப்பனுவல் பத்தினையும் வல்லவர்கள் எந்தை ஈசனாகிய சிவபிரான் இருக்கும் உலகினை எய்த வல்லவர்களாவர்.

குறிப்புரை: கந்தம் – மணம். கண்ணுதல் நந்தி – சிவபிரான். உலகு – சிவலோகம்.

Our Lord is known as the Lord with third eye on the forehead. He is manifest in the temple in Naakech-churam city. The temple is on the southern bank of the river Cauvery which flows with sweet smelling water. Our saint Thiru-gnana-Sambandar chanted over this Lord at Naakech-churam city these ten Tamil verses. The eminent scholars may go to the temple and chant these ten verses sung by our Thiru-gnana-Sambandar on the Lord of Naakech-churam city. Such sincere people will definitely reach the Civa Loka, the top most heaven where our Supreme Being is manifested.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

119ஆம் பதிகம் முற்றிற்று
End of 119th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 256 பதிக எண்: 120

120. திருமூக்கீச்சரம் 120. THIRU-MUKKEECH-CHURAM

பண் : செவ்வழி *Pann: Chevvazhi*

திருத்தல வரலாறு

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 2 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது, காவிரியின் தென்கரைத் தலங்களில் ஐந்தாவது தலம் ஆகும். திருச்சிராப்பள்ளி பேருந்து நிலையத்திலிருந்து உறையூர் செல்ல நகரப் பேருந்துகள் பல உள்ளன. இது உறையூரிலுள்ள திருக்கோயிலாகும். இறைவர் பஞ்சவர்ணேசுவரர். இறைவியார் காந்திமதியம்மை. தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் சிவதீர்த்தம். இது புகழ்ச்சோழ நாயனார் அவதரித்த திருப்பதியாகும். தமிழ்நாட்டு மூவேந்தரும் சேர்ந்து வழிபட்ட பதியாகும். உதங்க முனிவர்க்குச் சிவபெருமான் ஐந்து காலங்களில் ஐந்து வர்ணமாகக் காட்சியளித்த தலம். கத்துருவின் மகன் கார்க்கோடகன் வந்து பூசித்துப் பேறுபெற்றான். வேதச் சுருதி என்னும் அந்தணன் பூசித்துப் பேயுரு நீங்கப்பெற்றான்.

வீரவாதித்தன் என்னும் சோழ அரசன் உலாவரும்பொழுது அவனது யானையைக் கோழி வென்றமையால் இத்தலத்திற்குக் கோழியூர் என்ற வேறு பெயரும் உண்டு. இதற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று இருக்கின்றது. திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இதற்குத் தலபுராணம் எழுதியுள்ளார்கள். அது அச்சில் வெளிவந்துள்ளது. உறையூர்க் காந்திமதியம்மை பிள்ளைத் தமிழையும் அவர் செய்திருக்கிறார். இன்னம் பல பிரபந்தங்கள் இக்கோயிலுக்கு உண்டு. பழுதுபட்டிருந்த இந்தக் கோயிலைத் தேவகோட்டையார் திருப்பணி செய்துள்ளனர். கல்தூண்களில் புராண வரலாறுகள் செதுக்கப் பட்டிருக்கின்றன.

பதிக வரலாறு

கற்குடி மாமலைமேல் எழுந்த கனகக் கொழுந்தினைப் போற்றி நற்றமிழ்மாலை புனைந்தருளிய ஞானசம்பந்தர், புலன்கள் ஐந்தும் செற்றவரது திருமூக்கீச்சரம் பணிந்து பாடியது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2769. சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவர்
காந்தளாரும்விரலேழையோடாடியகாரணம்
ஆய்ந்துகொண்டாங்கறியந்நிறைந்தாரவரார்கொலோ
வேந்தன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மெய்ம்மையே. 1

சாந்தம் வெண்ணீறு எனப்பூசி வெள்ளம் சடை வைத்தவர்
காந்தளாரும் விரல் ஏழையோடு ஆடிய காரணம்
ஆய்ந்து கொண்டாம் அறிய நிறைந்தாரவர் ஆர்கொலோ
வேந்தன் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றதோர் மெய்ம்மையே.

cAntam veNnIRu en2ap pUci, veLLam caTai vaittavar,
kAntaL Arum viral EzaiyoTu ATiya kAraNam
Ayntu koNTAm, aRiya(n) niRaintAr avar ArkolO?
vEntan2 mUkkIccurattu aTikaL ceykin2Ratu Or meymmaiyE.

பொருள்: சாந்தம் ஈது என வெண்ணீறு பூசி, கங்கை வெள்ளத்தைச் சடையில் வைத்தவர்; செங்காந்தளை ஒத்த விரல்களை உடைய ஏழையுடன் மகிழ்ந்தவர்; அவ்வாறு மகிழ்ந்து ஆடியதற்குக் காரணம் ஆய்ந்து அறியத் தக்கது; வேந்தன் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்ற மெய்ம்மையை ஆராய்ந்து அறிய அறிவு நிறைந்தவர் யார்கொல்?

குறிப்புரை: வெண்ணீறு சாந்தம் எனப்பூசி 'சாந்தம் ஈது என்று எம் பெருமான் அணிந்த நீறு' (தி. 1 ப. 52 பா. 7). காந்தள் ஆரும் விரல் – காந்தளை ஒத்த கைவிரல்கள். ஏழை – உமாதேவியார். கடவுள் நிறைவு ஆய்ந்து கொண்டறியத்தக்கது. கோச்செங்கட்சோழ நாயனார் கட்டுவித்த மாடக்கோயில் ஆதலின் வேந்தன் மூக்கீச்சரம் எனப்பட்டது. இப்பதிகத்தில் வரலாறு பற்றிய உண்மைகளைக் காண்க.

Our Lord Civan smears all over His body the holy ashes treating it as sandalwood paste. He supports the river Ganges in His entangled hair locks. Our Lord has embedded His consort Uma Devi on the left half of His body. Her fingers are similar to white species of malabar glory lily. Is there any one who made any research to find out the reason for our Lord to become a concomitant Supreme Being with His consort Uma Devi? The temple was built by the Chola king Kochengat-cholan. The Lord is present in this Thiru-mukkeech-churam temple. The Lord's sincerity in this temple is that He is one with His consort and called Arthanaareeswarar.

2770. வெண்டலையோர்கலனாப்பலிதேர்ந்துவிரிசடைக்
கொண்டலாரும்புனல்சேர்த்துமையாளொடுங்கூட்டமா
விண்டவர்தம்மதிலெய்தபின்வேனில்வேள்வெந்தெழக்
கண்டவர்மூக்கீச்சரத்தெம்மடிகள்செய்கன்மமே. 2

வெண் தலையோர் கலனாப்பலி தேர்ந்து விரிசடைக்
கொண்டல் ஆரும் புனல் சேர்த்து உமையாளொடு கூட்டமா
விண்டவர் தம்மதில் எய்தபின் வேனில்வேள் வெந்தெழக்
கண்டவர் மூக்கீச்சரத்து எம்மடிகள் செய் கன்மமே.

veNtalai Or kalan2Ap pali tErntu, viricaTaik
koNTal Arum pun2al cErttu, umaiyALoTum kUTTamA,
viNTavartam matil eyta pin2, vEn2ilvEL ventu ezak
kaNTavar--mUkkIccurattu em aTikaL--ceyum kan2mamE.

பொருள்: பிரம கபாலமாகிய வெளிறிய தலையைக் கலனாகக் கொண்டு பிச்சை தேர்வார்; விரிந்து பரந்த சடையில் நிறுத்த அரிய கங்கைப் புனலைச் சேர்த்தவர்; உமையாளொடும் கூடியவர்; பகைத்தவர்களின் மதில்களை எய்து அழித்தார்; பின் வேனில் வேளும் எரியில் வேவச் செய்து பின் எழக்கண்டார்; இவை மூக்கீச்சரத்து அடிகள் செய்த செயல்கள்.

குறிப்புரை: கொண்டல் – கொள்ளுதல். காற்று, மேகம் எனல் இங்குப் பொருந்தாது. வேனில் வேள் – மன்மதன்.

Our Lord Civan carries in His hand the human white skull to accept alms. He supports the river Ganges in His entangled hair locks. He retains His consort Uma Devi on the left side of His body. He exterminated the three forts of the asuras who were His antagonists by sending an arrow to their three castles in the air. He burnt the god of love, Manmathan, by opening His third eye in His forehead which emitted fire and destroyed Manmathan. All these actions were executed by our Lord, manifest in the temple in Thiru-mukkeech-churam.

2771. மருவலார்தம்மதிலெய்ததுவும்மான்மதலையை
உருவிலாரவ்வெரியூட்டியதும்முலகுண்டதால்
செருவிலாரும்புலிசெங்கயலானையினான்செய்த
பொருவின்மூக்கீச்சரத்தெம்மடிகள்செயும்பூசலே. 3

மருவலார் தம்மதில் எய்ததுவும் மான் மதலையை
உருவிலார் அவ் எரியூட்டியதும் உலகு உண்டதால்
செருவில் ஆரும்புலி செங்கயல் ஆனையினான் செய்த
பொருவின் மூக்கீச்சரத்து எம்மடிகள் செயும் பூசலே.

maruvalArtam matil eytatuvum, mAl matalaiyai
uruvil Ara(v) eriyUTTiyatum,--ulaku uNTatAl,
ceru vil, Arum puli, cegkayal ANaiyin2An2 ceyta--
poru il mUkkIccurattu em aTikaL ceyum pUcalE.

பொருள்: சேர பாண்டியர்களை வென்று தமிழ்கூறும் நல்லுலகை ஆண்ட கோச்செங்கட்சோழன் சமைத்த நிகரிலாத மூக்கீச்சரத்து எம் சுவாமிகள் தன்னொடு பொருந்தாத அசுரர்களின் முப்புரங்களை அழித்ததுவும், திருமாலின் மகனை உருவில் நிறைய எரியூட்டியதும் ஆகிய பூசலை ஆராய்ந்து மெய்ம்மையை அறிவர் யார்?

குறிப்புரை: மால்மதலை – மன்மதன். உருவில் ஆர – வடிவத்தில் நிறைய. புலிசெங்கயல் ஆனை – சோழ பாண்டிய சேரர்க்குரிய மூன்றும் மூவேறுயிர்களையும் முறையே மும்மண்டலத்திலும் உள்ளனவாயும் இருத்தல் அறிக. புலிவிற் கெண்டை என்பதில் வானவரம்பனாதலின், வானிற்றோற்றும் வில்லைக் கொண்டனர். 'தென்னவனாயுலகாண்ட செங்கனார்க்கு அடியேன்' மூக்கீச்சரத்தில் மூவேந்தர் திருப்பணியும் உண்டு போலும்.

The emperor for the three kingdoms of Cheraas, Cholaas and Pandyaas was Kochengat-cholan. He built the temple in the city of Thiru-mukkeech-churam. In this city our Supreme Being is manifest. The conflicts in which Civan participated ended in the destruction of the three castles of the asuras. Then He burnt Kaaman, the god of love and son of Thirumaal. These two actions are well known to the whole world.

2772. அன்னமன்னந்நடைச்சாயலாளோடழகெய்தவே
மின்னையன்னசடைக்கங்கையாள்மேவியகாரணம்
தென்னன்கோழியெழில்வஞ்சியுமோங்குசெங்கோலினான்
மன்னன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்மாயமே. 4

அன்னம் அன்னந் நடைச் சாயலாளோடு அழகு எய்தவே
மின்னை அன்ன சடைக் கங்கையாள் மேவிய காரணம்
தென்னன் கோழி எழில் வஞ்சியும் ஓங்கு செங்கோலினான்
மன்னன் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றது ஓர் மாயமே.

an2n2am an2n2a(n) naTaic cAyalALoTu, azaku eytavE
min2n2ai an2n2a caTaik kagkaiyAL mEviya kAraNam--
ten2n2an2, kOzi ezil vanjciyum Ogku cegkOlin2An2,
man2n2an2--mUkkIccurattu aTikaL ceykin2Ratu Or mAyamE!

பொருள்: அன்னப் பறவை போன்ற மென்னடைச் சாயல் கொண்ட உமையம்மையை இடப்பாகத்திற் கொண்ட அழகுடன் மின்னலைப் போல ஒளிதிகழும் சடையில் கங்கையாளைப் பொருந்திய காரணம் பாண்டிய, சோழ சேர மண்டலங்களில் ஓங்கிய செங்கோலினை உடைய வேந்தன் கோச்செங்கணான் சமைத்த திருமூக்கீச்சத்து அடிகளாகிய சிவபிரான் செய்யும் மாயமே, இதன் மெய்ம்மையை யாரறிவார்?

குறிப்புரை: சாயலாள் - உமையம்மையார். தென்னன் - தென்பாண்டி நாட்டான். செங்கோல் ஏனையிரண்டும் மண்டலத்திலும் ஓங்கும் பெருமை நாயனாருக்கு உண்டு என்று உணர்த்துகின்றதால் மும்மண்டலத்தும் ஓங்கும் செங்கோல் என்க. தென்னன் என்பது பாண்டி மண்டலத்துக்கு ஆவதால் ஆகுபெயர்.

In the area of southern kingdoms, the city Uraiyoor and Vanchi are the capitals of Cholaas and Pandyaas. However, the very famous honest ruler holding in his hand the sceptre as the symbol of royal power was called Kochengat-cholan. He extolled the himself as emperor and built the temple in the city of Thiru-mukkeech-churam. The Supreme Being is manifest in the temple in Thiru-mukkeech-churam city along with His consort Uma Devi in a gorgeous manner. She walks like swan. Our Lord who is such a great Supreme Being supports the river Ganges in His lightning like entangled hair locks. What is His purpose?

2773. விடமுனாரவ்வழல்வாயதோர்பாம்பரைவீக்கியே
நடமுனாரவ்வழலாடுவர்பேயொடுநள்ளிருள்
வடமனீடுபுகழ்ப்பூழியன்தென்னவன்கோழிமன்
அடன்மன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரச்சமே. 5

விடம் முனார் அவ் அழல் வாயதோர் பாம்பரை வீக்கியே
நடம் முனார் அவ் அழல் ஆடுவர் பேயொடு நள்ளிருள்
வடம் மன் ஈடுபுகழ்ப் பூழியன் தென்னவன் கோழிமன்
அடன் மன் முக்கீச்சரத்து அடிகள் செய்கின்ற ஓர் அச்சமே.

viTam mun2 Ar av azal vAyatu Or pArampu arai vIkkiyE.
naTam mun2 Ar av azal ATuvar, pEyoTu naL iruL;--
vaTa man2 nITu pukazp pUziyan2, ten2n2avan2, kOziman2,
aTal man2--mUkkIccurattu aTikaL ceykin2Ratu Or accamE!

பொருள்: தீயினைப் போலச் சுட்டெரிக்கும் நஞ்சினை வாயில் உடைய கொடிய பாம்பினை அரையில் கட்டி, பேயொடு நள்ளிருளில் ஊழித் தீயில் கூத்தாடுதலையும் உடையர்; வடக்கில் நீண்ட புகழினை உடையவன்; சேரன், பாண்டியன், சோழ மன்னன் போர்வேந்தனாகிய கோச்செங்கட்சோழன் சமைத்த மூக்கீச்சரத்து அடிகள் செய்யும் செயல் பேரச்சமே. இச்செயலின் மெய்ம்மையை அறிவார் யார்?

குறிப்புரை: நஞ்சுடைய பாம்பை அரையில் கட்டிப் பேயொடு நள்ளிருளில் தீயில் நடமாடுவர். வடமன்நீடுபுகழ் – வடக்கில் மிக நீடிய கீர்த்தி. பூழியன் – பாண்டியன். கோழிமன் – உறையூர்க் கிறைவன். அடல்மன் – போர்வேந்தன்.

The mighty emperor Kochengat-cholan was considered a famous pandyan king for the northern kingdom, and as a chola king for Uraiyoor. He created the temple in the city of Thiru-mukkeech-churam. In this city temple, our Lord Civan is manifest. He puts on His waist the snake which has poison in its fiery mouth. In the dark midnight He dances with the devils in the fire of the burning ghat. Are not these two actions of Civan terrible to those who witness them?

2774. வெந்தநீறுமெய்யிற்பூசுவராடுவர்வீங்கிருள்
வந்தெனரவ்வளைகொள்வதுமிங்கொருமாயமாம்
அந்தண்மாமானதன்னேரியன்செம்பியனாக்கிய
எந்தைமூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரேதமே. 6

வெந்த நீறு மெய்யிற் பூசுவர் ஆடுவர் வீங்கிருள்
வந்து எனர் அவ்வளை கொள்வது இங்கொரு மாயமாம்
அந்தண் மா மானதன் நேரியன் செம்பியன் ஆக்கிய
எந்தை மூக்கீச்சரத்தடிகள் செய்கின்றது ஓர் ஏதமே.

venta nIRu meyyil pUcuvar; ATuvar, vIgku iruL;
vantu, en2 Ar av vaLai koLvatum igku oru mAyam Am--
am taN mA mAn2atan2, nEriyan2, cempiyan2 Akkiya--
entai mUkkIccurattu aTikaL ceykin2Ratu Or EtamE.

பொருள்: வெந்த சாம்பலை மேனியில் பூசுவர்; வீங்கு இருளில் கூத்தாடுவார்; இங்கு வந்து என்னுடைய கைவளை கொள்வதும் ஒரு மாயமாம்; செந்தண்மை உடையவன்; பகைவரது மானத்தை அழிப்பவன்; நேரியன்; செம்பியன்; கோச்செங்கட் சோழன் உண்டாக்கிய மூக்கீச்சரத்துள் எந்தை; அவ்வடிகள் செய்கின்றது ஒரு ஏதமே.

குறிப்புரை: மெய்யில் நீறு பூசுவர், இருளில் ஆடுவர். இங்கு வந்து என்வளை கொள்வதும் ஒரு மாயமாம். இத்திருக்கோயில் மூவேந்தராலும் வழிபடப்பட்டது என்பதை 3, 9 பாடல்களாலும் அறிக. மானதன் – பகைவரது மானத்தை அழிப்பவன், மானத்தை உடையவன். நேரியன் என்பவை சோழனையே குறித்தன.

The mighty emperor is honoured by poets in meaningful songs. He is called Nerian and Chembian - these two words represent the Chola King - the emperor is Kochengat-cholan. He created the temple in Thiru-mukkeech-churam city. In this temple, our Lord Civan is manifest. He smears His body with holy ashes and is grand in appearance. His avocation is to dance whenever He wants to do. In dark hours, He comes very near me and with inflamed desire removes my very precious bangles. Is it not a fallacy of Lord Civan?

2775. அரையிலாருங்கலையில்லவனாணொடுபெண்ணுமாய்
உரையிலாரவ்வழலாடுவரொன்றலர்காண்மினோ
விரவலார்தம்மதில்மூன்றுடன்வெவ்வழலாக்கினான்
அரையன்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோரச்சமே. 7

அரையிலார் அருங்கலை இல்லவன் ஆணொடு பெண்ணுமாய்
உரையிலார் அவ் அழல் ஆடுவர் ஒன்றலர் காண்மினோ
விரவலார் தம் மதில் மூன்று உடன் வெவ்வழல் ஆக்கினான்
அரையன் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றது ஓர் அச்சமே.

araiyil Arum kalai illavan2; ANoTu peNNum Am
uraiyil Ar av azal ATuvar; on2Ru alar; kANmin2O--
viralArtam matil mUn2Ru uTan2 vev azal Akkin2An2,
araiyAn2 mUkkIccurattu aTikaL, ceykin2Ratu Or accamE!

பொருள்: இடையில் பொருந்தும் ஆடையில்லாதவன்; பெண்ணுமாவன்; ஆணுமாவன்; இவ்விரண்டில் ஒன்றாகச் சொல்லப்படுவானல்லன்; தீயாடுவர்; ஒன்றலர்; பகைவருடைய மதில்கள் மூன்றையும் ஒருசேர வெவ்வழல் கொளச் செய்தான்; வேந்தன் செய்த மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றது ஓர் அச்சமே.

குறிப்புரை: அரையில் ஆரும் கலையில்லவன் – இடையிற் பொருந்தும் உடையில்லாதவன். திகம்பரன், பெண்ணுமாய் ஆணுமாகி (பெரிய, தில்லைவாழ்). ஒன்றலர்காண் – பலபலவேடமாகும் பரன். விரவலார் – பகைவர். அரையன் – கோச்செங்கட்சோழநாயனார்.

Our Lord Civan is a renowned figure, half male and half female. His avocation is to dance holding fire on His hand. He disguises Himself in many ways. He destroyed the three castles of His antagonists with an arrow carrying fire on its tip. Our Lord Civa is manifest in the temple in Thiru-mukkeech-churam city built by chola king Kochengat-cholan. Our Lord's terrific actions are these, a few out of many.

2776. ஈர்க்குநீர்செஞ்சடைக்கேற்றதுங்கூற்றையுதைத்ததும்
கூர்க்குநன்மூவிலைவேல்வலனேந்தியகொள்கையும்
ஆர்க்கும்வாயானரக்கன்னுரதைந்நெரித்தவ்வடல்
மூர்க்கன்மூக்கீச்சரத்தடிகள்செய்யாநின்றமொய்ம்பதே. 8

ஈர்க்கு நீர் செஞ்சடைக்கு ஏற்றதும் கூற்றை உதைத்ததும்
கூர்க்கு நன்மூவிலை வேல்வலன் ஏந்திய கொள்கையும்
ஆர்க்கும் வாயான் அரக்கன் உரதை நெரித்த அவ்வடல்
மூர்க்கன் மூக்கீச்சரத்து அடிகள் செய்யா நின்ற மொய்ம்பதே.

Irkkum nIr cenjcaTaikku ERRatum, kURRai utaittatum,
kUrkkum nal mUilaivEl valan2 Entiya koLkaiyum,--
Arkkum vAyAn2 arakkan2(n2) urattai(n2) nerittu, av aTal
mUrkkan2--mUkkIccurattu aTikaL ceyyA nin2Ra moympu atE.

பொருள்: ஆரவாரிக்கும் வாயான் அரக்கன் இராவணனின் நெஞ்சுரத்தை நெரித்த வலியனாகிய ஆகிய மூக்கீச்சரத்து அடிகள்; தன் ஓட்டத்தில் இழுத்துச் செல்லும் நீரினைச் செஞ்சடையில் ஏற்றதும்; எமனை உதைத்துக் கொன்றதும்; கூர்மையான நல்ல மூவிலை வேலினை வலம் ஆக ஏந்திய கொள்கையும் ஆகிய செயல்கள் அவருடைய வல்லமையை வெளிப்படுத்துவனவே.

குறிப்புரை: ஈர்க்கும் – இழுக்கும். கூர்க்கும் – கூராக இருக்கும். ஆர்க்கும் – ஆரவாரம் செய்யும்.

Our Lord Civan is manifest in the temple in Thiru-mukkeech-churam city. What He has done as strong actions are (1) our Lord supports the river Ganges in His entangled hair locks and keeps it invisible. The Ganges water is extremely cool. Those who touch the water get benumbed. (2) He holds in His hand the three-pronged very sharp battle-axe as an emblem of His victory in various actions. (3) Raavanan shouts out 'hurrah!' out of joy from his mouth, an extraordinary, strong angry foe to devas. He

was crushed by the Lord. These are the strong actions of our Lord of Thiru-mukkeech-churam.

2777. நீருளாரும்மலர்மேலுறைவான்நெடுமாலுமாய்ச்
சீருளாருங்கழல்தேடமெய்த்தீத்திரளாயினான்
சீரினாலங்கொளிர்தென்னவன்செம்பியன்வில்லவன்
சேருமூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்செம்மையே. 9

நீர் உளாரும் மலர் மேல் உறைவான் நெடுமாலும் ஆய்ச்
சீர் உளாரும் கழல் தேட மெய்த் தீத்திரள் ஆயினான்
சீரினால் அங்கு ஒளிர் தென்னவன் செம்பியன் வில்லவன்
சேரும் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றதோர் செம்மையே.

nIruL Arum malarmEl uRaivAn2, neTumAlum Ay,
cIruL Arum kazal tETa, meyt tIttiraL Ayin2An2--
cIrin2Al agku oLir ten2n2avan2, cempiyan2, villavan2,
cErum--mUkkIccurattu aTikaL ceykin2Ratu Or cemmaiyE.

பொருள்: நீருள் பூக்கும் மலராகிய தாமரையின் மேல் உறைபவன் பிரமன். நெடுமால் இருவரும் கூடிப் பெருமையுடைய கழல்களைத் தேட ஞானத்திரளாய் நின்ற பெருமான்; பெருமையுடன் ஒளிரும் தென்னவன் செம்பியன் வில்லவன் மூவரும் சேர்ந்து வழிபடும் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றது ஒப்பற்ற செம்மையே.

குறிப்புரை: மெய்த்தீத்திரள் – ஞானத்திரளாய் நின்ற பெருமான் (தி. 1 ப. 69 பா.3). தென்னவன் – பாண்டியன். வில்லவன் – சேரன். செம்பியன் – சோழன்.

The eminent and most distinct kings are pandya kings, chera kings and chola kings. All these three kings visited the temple in Thiru-mukkeech-churam city and worshipped our Lord Civan manifest here. In the deep water tanks the lotus flower blossoms with very long stem. In that flower our tutelary four faced Brahma is manifest. He and the tall Thirumaal went in search of the famous holy feet of our Lord Civan and His holy head. At that moment, Lord Civa appeared as dazzling infinite, supernal flame before these two.

2778. வெண்புலான்மார்பிடுதுகிலினர்வெற்றரையுழல்பவர்
உண்பினாலேயுரைப்பார்மொழியூனமதாக்கினான்
ஒண்புலால்வேல்மிகவல்லவனோங்கெழிற்கிள்ளிசேர்
பண்பின்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்பச்சையே. 10

வெண் புலான் மார்பிடு துகிலினர் வெற்றரை உழல்பவர்
உண்பினாலே உரைப்பார் மொழி ஊனம் அதாக்கினான்
ஒண் புலால் வேல் மிக வல்லவன் ஓங்கு எழில் கிள்ளிசேர்
பண்பின் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றதோர் பச்சையே.

veN pulAl mArpu iTu tukilin2ar, veRRu arai uzalpavar,
uN pin2AlE uraippAr mozi Un2am atu Akkin2An2--
oN pulAl vEl mika vallavan2, Ogku ezil kiLLi cEr
paNpin2--mUkkIccurattu aTikaL ceykin2Ratu Or paccaiyE.

பொருள்: பகைவரின் உடலைச் சிதைத்த வேலினனாகிய எழில்மிகு கிள்ளி சேரும் மூக்கீச்சரத்து அடிகள் பருத்த உடல்மேல் துகிலைப் போர்ப்பவராகிய தேரர்; ஆடையில்லாமல் அலைபவராகிய சமணர் தன் முன்னை வினைப்பயன் நுகர்வாலே உரைக்கும் பொய்மொழிகளை வெற்றுரையாக்கினான். அவன் செய்கின்ற செயல் என்றும் வாடாது நிற்பதுவே.

குறிப்புரை: துகில் – ஆடை. வெற்றரை – ஆடையில்லாமை குறித்தது. உண்பினாலே – உண்டபிறகு.

The Buddhists cover their body with white dress which emits bad smell of raw meat. The Jains roam about without any dress. While these people take their food, they utter false propaganda. Our Lord rendered those words meaningless. Our Lord holds His conquering lance, which emits foul smell of meat. The chola king constructed this temple in Thiru-mukkeech-churam city. Our Lord manifests Himself in the temple and His action against the Buddhists' and Jains' false propaganda proving it as vain is His novel action.

2779. மல்லையார்மும்மடிமன்னர்மூக்கீச்சரத்தடிகளைக்
செல்வராகநினையும்படிசேர்த்தியசெந்தமிழ்
நல்லராய்வாழ்பவர்காழியுள்ஞானசம்பந்தன்
சொல்லவல்லாரவர்வானுலகாளவும்வல்லவரே. 11

மல்லையார் மும்மடி மன்னர் மூக்கீச்சரத்து அடிகளைக்
செல்வராக நினையும்படி சேர்த்திய செந்தமிழ்
நல்லராய் வாழ்பவர் காழியுள் ஞானசம்பந்தன்
சொல்ல வல்லார் அவர் வானுலகு ஆளவும் வல்லவரே.

mallai Ar mum muTiman2n2ar mUkkIccurattu aTikaLaic
celvar Aka nin2aiyum paTi cErttiya centamiz,
nallavarAy vAzpavar kAziyuL njAn2acampantan2
colla vallAr avar, vAn2 ulaku ALavum vallarE.

பொருள்: செல்வம் மிக்க முடிமன்னர்கள் மூவரும் வந்து வணங்க நின்றவர் மூக்கீச்சரத்து அடிகள். அவரைச் செல்வராக நினையும்படி காழியுள் ஞானசம்பந்தன் செந்தமிழில் சொன்னது இத்திருப்பதிகம். அன்புடையோராய் இத்திருப்பதிகப் பாடல்களைச் சொல்ல வல்லவர் இவ்வுலகத்தை மட்டுமன்றி வானுலகாளவும் வல்லர்.

குறிப்புரை: மல் – வலிமை. மும்முடி மன்னர் – முடிவேந்தர் மூவர். ஞானசம்பந்தன் என்று இத்திருப்பாடல்களைக் குறித்தருளினார். சொல்லவும் வல்லார். ஆளவும் வல்லார்.

All three kings i.e., pandyaas, cheras, and cholas were expert wrestlers. They come to Thiru-mukkeech-churam city and worship our Lord Civa in the temple. Our saint Thiru-gnana-Sambandar is a native of Seerkaazhi city where virtuous scholars live. He came before the Lord in the temple at the Thiru-mukkeech-churam city and sang in praise of the Lord in chaste Tamil ten verses. Those scholars who can memorise and could sing these verses will be able to rule heaven too.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

120ஆம் பதிகம் முற்றிற்று
End of 120th Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 257 *பதிக எண்: 121*

121. திருப்பாதிரிப்புலியூர் 121. THIRU-P-PAATHIRI-P-PULIYOOR

பண் : செவ்வழி *Pann: Chevvazhi*

திருத்தல வரலாறு

பாதிரி மரத்தைத் தலத்துக்குரிய மரமாகக் கொண்டமையாலும், புலிக்கால் முனிவரால் (வியாக்கிரபாதர்) பூசிக்கப்பெற்றமையாலும் இது இப்பெயர் பெற்றது. திரு – அடைமொழி. இது திருப்பாதிரிப்புலியூர் என்னும் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் இருக்கின்றது. கடலூர் (புதுநகர்) என இவ்வூர் வழங்குகிறது. தமிழகத்தின் அனைத்து நகரங்களிலிருந்தும் கடலூர் வரப்பேருந்துகள் உள்ளன. இது நடுநாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

இறைவர் திருப்பெயர் தோன்றாத்துணைநாதர். ‘திருப்பாதிரிப்புலியூர்த் தோன்றாத் துணையாயிருத்தனன் தன்னடியோங்களுக்கே’ என்ற இத்தலத்து முதற்பதிகத்திலுள்ள அப்பர் பெருமானின் திருவாக்கு இதற்குச் சான்றாகும். இறைவியார் திருப்பெயர் பெரிய நாயகி அம்மை. தலவிருட்சம் பாதிரி. இதை வடமொழியில் பாடலம் என்பர். தீர்த்தம் – கெடிலநதி. இது தென்திசைக் கங்கை என்று பாராட்டப்பெற்றுள்ளது.

திருநாவுக்கரசர் பெருமானைச் சமணர்கள் கல்லில் கட்டிக் கடலில் தள்ள, அப்பொழுது அவர் ‘சொற்றுணை வேதியன்’ எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தை ஓதிக் கரையேறப் பெற்றதால், அவ்வூர் இப்பொழுது கரையேறவிட்ட குப்பம் என்று வழங்கப் பெறுகின்றது. சுவாமிகள் கரையேறி இப்பதிக்கு முதலில் வந்தபோது ‘ஈன்றாளுமாய்’ எனத் தொடங்கும் பதிகம் பாடப்பெற்றது. மங்கண முனிவர் என்பவர் முடங்கிய காலுடைய முயல் வடிவமாகச் சாபமிடப் பெற்றார். அவர் இத்தலத்து இறைவரைப் பூசித்துச் சாபநீக்கம் பெற்றார். இச்செய்தி, ‘முன்னநின்ற முடக்கான் முயற்கருள் செய்து’ என்னும் இக்கோயிலுக்குரிய திருஞானசம்பந்தப் பெருந்தகையாரின் திருவாக்கால் புலப்படுகின்றது. இத்தலத்திற்கு திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசர் பதிகம் ஒன்று ஆக இரண்டு பதிகங்கள் இருக்கின்றன. சிதம்பரநாத முனிவர் இயற்றிய தலபுராணமும், தொல்காப்பியர் இயற்றிய கலம்பகமும் இருக்கின்றன.

'சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூரானே'

என்னும் அப்பர் பெருமானுடைய திருவாக்கு. 'சிவாய நம' என்று சொல்லித் திருநீற்றை அணிந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது. 'திருந்தா வமணர்தந் தீநெறிப் பட்டுத் திகைத்து முத்திதரும் தாளிணைக்கே சரணம் புகுந்தேன்' என்னும் அவருடைய திருவாக்கு. அவர் சமண சமயத்திலிருந்ததற்கு அகச்சான்றாய் உள்ளது.

இவ்வூரில் திருக்கோவலூர் ஆதீனத்தைச்சேர்ந்த ஒரு மடாலயம் இருக்கின்றது. அது வீரசைவ மடமாகும்.

பதிக வரலாறு

செல்வமல்கிய தில்லைமூதூரில் திருநடம் பணிந்து, திருத்திணைநகர் பாடித் திருமாணிகுழியை அணைந்து ஏந்தி, திருப்பாதிரிப்புலியூரை உற்று, முன்னம் மாமுடக்கால் முயற்கு அருள்செய்த வண்ணத்தை மொழிந்து ஏத்திப்பாடிய திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

2780. முன்னநின்றமுடக்கால்முயற்கருள்செய்துநீள்
புன்னைநின்றுகமழ்பாதிரிப்புலியூருளான்
தன்னைநின்றுவணங்குந்தனைத்தவமில்லிகள்
பின்னைநின்றபிணியாக்கையைப்பெறுவார்களே. 1

முன்ன நின்ற முடக்கால் முயற்கு அருள்செய்து நீள்
புன்னை நின்று கமழ் பாதிரிப்புலியூர் உளான்
தன்னை நின்று வணங்கும் தனைத்தவம் இல்லிகள்
பின்னை நின்ற பிணி ஆக்கையைப் பெறுவார்களே.

mun2n2am nin2Ra muTakkAl muyaRku aruLceytu, nIL
pun2n2ai nin2Ru kamaz pAtirippuliyUr uLAn2-
tan2n2ai nin2Ru vaNagkum tan2ait tavam i(l)likaL,
pin2n2ai nin2Ra piNi yAkkaiyaip peRuvArkaLE.

பொருள்: முன்னொரு காலத்தில் இங்கு வழிபட்ட முடங்கிய கால் முயலுக்கு அருள் செய்தவர். நெடிய புன்னை மரங்கள் நின்று கமழ்கின்ற பாதிரிப்புலியூரில் உள்ளார். அவரை வழிபட்டு நிற்கும் தவம் சிறிதேனும் இல்லாதவர்கள் பின்னர் வருந்தும் பிணியுள்ள உடலைப் பெறுவார்கள்.

குறிப்புரை: முடக்கால் முயற்கு அருள் செய்து – இத்தலத்தில் முற்காலத்தில் முடங்கிய காலொடு முயலாகும் சாபம் பெற்ற மங்கண முனிவர் அச்சாபம் நீங்கப்பெற்ற வரலாற்றைக் குறிப்பது. சிவபிரானை வழிபடும் தவம் வாய்க்கப்பெறாதவர்கள் பிணியுடைய உடம்பொடு வருந்துவர்.

Long ago in this city, there was a saint by name Mangala Munivar. He got a curse to become a rabbit with crippled legs. Our Lord Civa, manifest in Thiru-p-paathiri-p-puliyoor, rescued him from the curse, graced him and gave back his original life. In this city, very long mast wood trees grow in large numbers. Their flowers spread smell all over the areas. Those who do not have the grace to pray to this Lord, will get bad diseases in their birth.

2781. கொள்ளிநக்கபகுவாயபேய்கள்குழைந்தாடவே
முள்ளிலவம்முதுகாட்டுறையும்முதல்வன்னிடம்
புள்ளினங்கள்பயிலும்பாதிரிப்புலியூர்தனை
உள்ளநம்மேல்வினையாயினஒழியுங்களே. 2

கொள்ளி நக்க பகு ஆய பேய்கள் குழைந்து ஆடவே
முள் இலவம் முதுகாட்டு உறையும் முதல்வன் இடம்
புள் இனங்கள் பயிலும் பாதிரிப்புலியூர் தனை
உள்ள நம்மேல் வினையாயின ஒழியுங்களே.

koLLi nakka pakuvAya pEykaL kuzaintu ATavE,
muL ilavam mutu kATTu uRaiyum mutalvan2(n2) iTam,
puL in2agkaL payilum pAtirip puliyUr tan2ai
uLLa, nammEl vin2ai Ayin2a oziyugkaLE.

பொருள்: எரிகொள்ளி போன்று தீயினை உமிழும் பிளந்த வாயை உடைய பேய்கள் மகிழ்ந்து ஆடும் சுடுகாடு; முள் இலவமரங்கள் உள்ள அச்சுடுகாட்டில் உறையும் முதல்வனின் இடம் எதுவெனில், பறவையினங்கள் வாழும் திருப்பாதிரிப்புலியூர். அத்திருப்பாதிரிப்புலியூரில் அருளாட்சி புரியும் இறைவன் தன்னை நினைத்து வழிபட்டு உம்மேல் உள்ள வினைகளாயினவற்றை ஒழியுங்கள்.

குறிப்புரை: முதல்வனது திருப்பாதிரிப்புலியுரை நினைத்து வழிபட்டு வினைகளை ஒழியுங்கள் (நுணுகுங்கள் பா. 8).

The bhutas, when they laugh, emit fire through their mouth. They sway their body and dance. In this burning ghat the thorny shrub, grows in large numbers. Here, our Lord Civa's avocation is to dance. In this city, swan, peacock and such other birds live in large numbers. Oh ye people! think of this city Thiru-p-paathiri-p-puliyoor and worship our Lord Civan in the temple. Then you can wipe out your bad karma from your life.

2782. மருளினல்லார்வழிபாடுசெய்யும்மழுவாளர்மேல்
பொருளினல்லார்பயில்பாதிரிப்புலியூருளான்
வெருளின்மானின்பிணைநோக்கல்செய்துவெறிசெய்தபின்
அருளியாகத்திடைவைத்ததுவும்மழகாகவே. 3

மருள் இல் நல்லார் வழிபாடு செய்யும் மழுவாளர் மேல்
பொருள் இல் நல்லார் பயில் பாதிரிப்புலியூர் உளான்
வெருளின் மானின் பிணை நோக்கல் செய்து வெறி செய்தபின்
அருளி ஆகத்திடை வைத்ததுவும் அழகாகவே.

maruL il nallAr vazipATu ceyyum mazuvALar, mEl
poruL il-nallAr payil--pAtirip puliyUr uLAn2,
veruLin2 mAn2in2 piNai nOkkal ceytu, veRi ceyta pin2
aruLi AkattiTai vaittatuvum(m) azaku AkavE.

பொருள்: மயக்கமற்ற ஞானிகள் வழிபாடு செய்யும் மழுவாளர்; தனக்குமேல் ஒருபொருள் இல்லாத நல்லார் ஆகிய சிவனார் திருப்பாதிரிப்புலியூரில் உள்ளார். வெருண்ட மானின் பிணையை நோக்கி, காதல் கொள்ளச் செய்து பின் அருளித் தம்முடைய திருமேனியிடப் பாகத்தில் வைத்ததுவும் அழகே.

குறிப்புரை: மருள் இல் நல்லார் – மயக்கமற்ற ஞானிகள். மேல் பொருள் இல்நல்லார் – தனக்குமேல் ஒரு பொருள் இல்லாத சிவனார். அம்மையப்பரான உண்மை குறித்தது.

The saints who have no fear in their minds and never get infatuated, worship our Lord Civan in the temple, this Lord is peerless, with nobody above Him. His consort Paarvathi has fluttering eyes like a female deer. Lord Civan directly sees the giddiness of Paarvathi and draws her towards Him to appreciate Him. Then He embedded her on His body and this is the most gorgeous and exquisite action.

2783. போதினாலும்புகையாலுமுய்த்தேயடியார்கள்தாம்
போதினாலேவழிபாடுசெய்யப்புலியூர்தனுள்
ஆதிநாலும்வலம்மிலாதஅடிகள்மறை
ஓதிநாளும்மிடும்பிச்சையேற்றுண்டுணப்பாலதே. 4

போதினாலும் புகையாலும் உய்த்தே அடியார்கள்தாம்
போதினாலே வழிபாடு செய்யப் புலியூர்தனுள்
ஆதிநாலும் வலம்இலாத அடிகள்மறை
ஓதிநாளும் இடும் பிச்சை ஏற்றுண்டு உணப்பாலதே.

pOtin2Alum pukaiyAlum uyttE aTiyArkaL tAm
pOtin2AlE vazipATu ceyya, puliyUrtan2uL,
Atin2Alum(m) avalam(m) ilAta aTikaL maRai
Oti, nALum iTum piccai ERRu uNTu, uNappAlatE?

பொருள்: மலர்கள் தூபம் முதலியன கொண்டு அடியார்கள் ஆகமங்களில் விதித்த பொழுதுகளில் வழிபாடு செய்யத் திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியுள்ள, முதல்வன்; அவலம் இலாத அடிகள் ஆகிய சிவன் நான்கு மறைகள் ஓதி நாளும் இடப்பெறும் பிச்சை ஏற்று உணப்பாலதே.

குறிப்புரை: போது – புஷ்பம். போதினால் – விதித்த காலங்களில். நாலும் – நான்கும், தொங்கும், பிச்சைக்குச் செல்லும்போதும் வேதம் ஓதிய உண்மையுணர்க. உண்டு உணப்பாலது என்பதை ஆராய்தல் வேண்டும்.

The devotees in Thiru-p-paathiri-p-puliyoor city go to the temple in all seasons. They spread good flowers and burn incense to produce good aromatic smoke. They worship our Lord Civan without fail daily at the proper time. Our Lord who manifests Himself in the temple in Thiru-p-paathiri-p-puliyoor city has no bad passions. He daily chants the Vedas and reaches the house of the devotees and accepts the charity they give and has the habit of eating the food He receives from them. All this is good.

2784. ஆகநல்லாரமுதாக்கவுண்டானழலைந்தலை
நாகநல்லார்பரவந்நயந்தங்கரையார்த்தவன்
போகநல்லார்பயிலும்பாதிரிப்புலியூர்தனுள்
பாகநல்லாளொடுந்நின்றஎம்பரமேட்டியே. 5

ஆக நல்லார் அமுதாக்க உண்டான அழல் ஐந்தலை
நாக நல்லார் பரவ நயந்த அங்கு அரை ஆர்த்தவன்
போக நல்லார் பயிலும் பாதிரிப்புலியூர்தனுள்
பாக நல்லாளொடு நின்ற எம் பரமேட்டியே.

Akam nallAr amutu Akka uNTAn2; azal aintalai-
nAkam, nallAr parava(n), nayantu agku arai Arttavan2--
pOkam nallAr payilum pAtirippuliyUrtan2uL,
pAkam nallALoTu nin2Ra em paramETTiyE.

பொருள்: உமாதேவியார் நஞ்சினை அமுதமாக ஆக்க அதனை உண்டான்; நல்லார் பரவ நச்சு வெப்பத்தை உடைய நாகத்தைக் கச்சாக அரையில் ஆர்த்தவன்; போக நல்லார் வாழும் திருப்பாதிரிப்புலியூரில் மாதொருபாகமாக எம் பரமேட்டி நின்றார்.

குறிப்புரை: உமாதேவியார் அமுதாக்கிக் கொடுக்க நஞ்சையுண்டான் நல்லோர் பரவ நச்சு வெப்பத்தை உடைய ஐந்தலைப் பாம்பை விரும்பி அரையிற்கட்டியவன். போகமாதர் பயிலும் புலியூர்.

The young damsels learn music, dance and various other arts for advancement in their life. Our Lord embeds His consort on the left side of His body. Uma Devi who occupies the left portion of our Lord's body converted the poison into amrit and gave it to our Lord. Our Lord imbibed the poison. Scholars, the good people of this city extol our Lord Civa. He likes to wear the five-headed snake, with the dreadful poison, around His waist as an ornament.

2785. மதியமொய்த்தகதிர்போலொளிம்மணற்கானல்வாய்ப்
புதியமுத்தந்திகழ்பாதிரிப்புலியூரெனும்
பதியில்வைக்கப்படுமெந்தைதன்பழந்தொண்டர்கள்
குதியுங்கொள்வர்விதியுஞ்செய்வர்குழகாகவே. 6

மதியம் மொய்த்த கதிர் போல் ஒளிம் மணல் கானல்வாய்ப்
புதிய முத்தம் திகழ் பாதிரிப்புலியூர் எனும்
பதியில் வைக்கப்படும் எந்தை தன்பழந் தொண்டர்கள்
குதியும் கொள்வர் விதியும் செய்வர்கு அழகாகவே.

matiyam moytta katir pOl oLi(m) maNal kAn2alvAyp
putiya muttam tikaz pAtirippuliyUr en2um
patiyil vaikkappaTum entai tan2 pazantoNTarkaL
kutiyum koLvar; vitiyum ceyvar, kuzagAvE.

பொருள்: நெய்தற்கானலில், மொய்த்தது போல் வீசும் நிலவொளியில் வெண்மணற் பரப்பு புதிய முத்துக்கள் பரப்பியது போல் இலங்குகின்ற திருப்பாதிரிப்புலியூர் என்னும் பதியில்

வைத்து வணங்கப்படும் எம் தந்தையின் பழந்தொண்டர்கள் அழகாக ஆனந்தக் கூத்தும் ஆடுவர்; ஆகம விதியும் செய்வர்.

குறிப்புரை: மணல்நிலாப்போல் ஒளிர்கின்றது. பழந்தொண்டர்கள் அழகாக ஆனந்தக்கூத்தும் ஆகமவிதியும் செய்வர்.

Age-old devotees in this city perform their rituals as per aagama rules in a very grand manner. Then they do spiritual dance in the temple before our Lord. Near the seashore there are many developed gardens and the white sea sand in bright moon light looks like pearls. In such a gorgeous city, our Lord Civa is manifest in the temple.

2786. கொங்கரவப்படுவண்டறைகுளிர்கானல்வாய்ச்
சங்கரவப்பறையின்னொலியவைசார்ந்தெழப்
பொங்கரவம்முயர்பாதிரிப்புலியூர்தனுள்
அங்கரவம்மரையில்லசைத்தானையடைமினே. 7

கொங்கு அரவப் படுவண்டறை குளிர் கானல்வாய்ச்
சங்கு அரவப் பறை இன்னொலியவை சார்ந்து எழப்
பொங்கு அரவம் உயர் பாதிரிப்புலியூர்தனுள்
அங்கர் அவம் அரையில் அசைத்தானை அடைமினே.

kogku aravappaTu vaNTu aRai kuLir kAn2alvAyc
cagku aravap paRaiyin2(n2) oli avai cArntu eza,
pogku aravam(m) uyar pAtirippuliyUr tan2uL
agku aravam(m) araiyil(l) acaittAn2ai aTaimin2E!

பொருள்: பூந்தாதுக்களில் மொய்க்கும் வண்டுகளின் ஒலி நிறைந்த குளிர்ந்த கானலில் சங்கொலி, பறையொலி முதலியவை சேர்ந்து எழ, ஒலிகள் பொங்கி எழும் உயர்வுடைய திருப்பாதிரிப்புலியூரில் பாம்பினை அரையிலசைத்த பரமனை அடையுங்கள்.

குறிப்புரை: பூந்தாதுக்களில் ஒலி செய்யும் வண்டுகள், சங்கொலி, பறையின் ஒலி, பாம்பரையார்த்த பரமனை அடையுங்கள்.

In the city of Thiru-p-paathiri-p-puliyoor, the noise due to pomposity is heard always. The noise is due to bees when they enter the flowers to suck honey, the noise of the conch shell of various sizes, drum beating on the tabor of various kinds and another

type of drum. Our Lord Civa wears the snake as a band round His waist. Oh ye devotees! go to the temple and worship our Lord Civa manifest here.

2787. வீக்கமெழும்மிலங்கைக்கிறைவிலங்கல்லிடை
ஊக்கமொழிந்தலறவ்விரலாலிறையூன்றினான்
பூக்கமழும்புனற்பாதிரிப்புலியூர்தனை
நோக்கமெலிந்தணுகாவினைந்நுணுகுங்களே. 8

வீக்கம் எழும் இலங்கைக்கு இறை விலங்கல் இடை
ஊக்கம் ஒழிந்து அலற அவ்விரலால் உறை ஊன்றினான்
பூக்கமழும் புனற் பாதிரிப்புலியூர்தனை
நோக்கம் மெலிந்தணுகா வினை நுணுகுங்களே.

vIkkam ezum(m) ilagkaikku iRai vilagkal(l) iTai
Ukkam ozintu alaRa(v) viralAl uRai Un2Rin2An2,
pUk kamazum pun2al, pAtirippuliyUr tan2ai
nOkka, melintu aNukA,--vin2ai,--nuNukugkaLE.

பொருள்: செருக்குடன் எழும் இலங்கைக்கு அரசன் இராவணன் கயிலை மலையினைப் பெயர்த்து எடுத்தபோது, அவனது மனவெழுச்சி முற்றும் ஒழிந்து வாய்விட்டு அலறக் கால்விரலை ஊன்றி அடர்த்தான். அத்தகு பெருமை வாய்ந்த இறைவனுடைய மலர் மணங்கமழும் நீர்வளம் உடைய திருப்பாதிரிப்புலியூர்தனைத் தரிசித்தலால் வினைமெலிந்து அணுகாது நுணுகும்.

குறிப்புரை: வீக்கம் – பெருமை. விலங்கல் – கயிலை. இறை – சிறிது. நோக்க – நோக்குதலால் – வினைமெலிந்து. அணுகா நுணுகுங்கள் (ஒழியுங்கள் பா. 2).

The king of Sri Lanka was a great renowned personality. He tried to lift mount Kailash where our Lord Civa was manifest. Then our Lord Civa crushed him by pressing the top of the mountain with His toe. This Lord is manifest in the temple in Thiru-p-paathiri-p-puliyoor city. Everywhere in this city, sweet smell is carried by the air. Also here plenty of water is available everywhere. Those people who visit Thiru-p-paathiri-p-puliyoor city, go to the temple and worship our Lord Civa will find their bad karma languishing and finally wiped out completely from their life.

2788. அன்னந்தாவும்மணியார்பொழில்மணியார்புன்னை
பொன்னந்தாதுசொரிபாதிரிப்புலியூர்தனுள்
முன்னந்தாவியடிமூன்றளந்தவன்நான்முகன்
தன்னந்தாளுற்றுணராததோந்தவநீதியே. 9

அன்னம் தாவும் மணியார் பொழில் மணியார் புன்னை
பொன்னம் தாது சொரி பாதிரிப்புலியூர்தனுள்
முன்னம் தாவி அடி மூன்று அளந்தவன் நான்முகன்
தன்னம் தாள் உற்று உணராத தோந்தவ நீதியே.

an2n2am tAvum aNi Ar pozil, maNi Ar pun2n2ai
pon2 am tAtu cori pAtirippuliyUr tan2uL,
mun2n2am tAvi aTimUn2Ru aLantavan2, nAn2mukan2,
tan2n2am tAL uRRu uNarAta Ontava nItiyE.

பொருள்: அன்னப் பறவைகள் தாவி விளையாடும் அழகிய பொழில்களில் மணி போன்ற புன்னை மலர்கள் தாது சொரியும் திருப்பாதிரிப்புலியூர்தனுள், முன்பு, தாவி மூன்றடியால் உலகை அளந்தவன்; நான்முகன் இருவரும் முயன்றும் சிறிது தாளினை உற்று உணராதவராயினர். இது அவருடைய மிக்க நீதி முறைமையாகும்.

குறிப்புரை: புன்னை பொன்போலும் தாதுக்களைச் சொரியும் உண்மை – திருமுறையில் முதற்பாட்டில் உணர்த்தப்பட்டது. முன்னம் . . . அளந்தவன் – திருவிக்கிரமன். தன்னம் – அற்பம். திருவடியாகக் கொள்ளின் இனம்பற்றித் திருமுடியும் கொள்ளப்படும்.

In this gorgeous city, swans play in the beautiful gardens. In these gardens, the flowers in the mast wood trees look like pearl gems. They shower their filaments on the ground. They look like golden powder. In ancient days, the demigod Thirumaal measured the whole universe with his three strides. The other demigod Brahma, was four faced. These two went out in the search of the head and feet of our Lord Civa, but failed in their attempts. At that moment, our Lord Civan as the embodiment of justice which is the result of virtuous penance, took a posture and became conspicuous (the infinite light).

2789. உரிந்தகூறையுருவத்தொடுதெருவத்திடைத்
திரிந்துதின்னுஞ்சிறுநோன்பரும்பெருந்தேரும்
எரிந்துசொன்னவ்வுரைகொள்ளாதேயெடுத்தேத்துமின்
புரிந்தவெண்ணீற்றண்ணல்பாதிரிப்புலியூரையே. 10

உரிந்த கூறையுர் உருவத்தொடு தெருவத்திடைத்
திரிந்து தின்னும் சிறுநோன்பரும் பெருந்தேரும்
எரிந்து சொன்ன உரை கொள்ளாதே எடுத்து ஏத்துமின்
புரிந்த வெண்ணீற்று அண்ணல் பாதிரிப்புலியூரையே.

urinta kURai uruvattoTu teruvattu iTait
tirintu tin2n2um ciRu nOn2parum, perun tErarum,
erintu con2n2a(v) urai koLLAtE, eTuttu Ettumin2-
purinta veNnIRRu aNNal pAtirippuliyUraiyE!

பொருள்: நீக்கப்பட்ட உடையுடன் தெருவில் திரிந்து தின்னும் இழிந்த விரதிகளாகிய சமணரும், தேரரும் வயிற்றெரிச்சலினால் சொன்ன பொய்யுரைகளைக் கொள்ளாமல்; விருப்பத்தைத் தரும் வெண்ணீறு பூசிய அண்ணலார் திருப்பாதிரிப்புலியூரையே எடுத்து ஏத்துமின்.

குறிப்புரை: உரிந்த . . . நோன்பர் – ஆடையின்றித் தெருவில் திரிந்து தின்னும் அற்பவிரதத்தை உடையவர் என்னும் சமணர். எரிந்து சொன்ன உரை – எரிவினாற் சொன்னார்.

The Jains roam in the streets without any dress and eat the food they get observing fasting. These people and the Buddhists preach indignant words. Oh ye people! do not listen to the words of these two races. Instead you turn to worship our Lord Civa and praise His virtuous words, and declare His fame by saying 'glory to Thee, oh Lord Civa'. Our Lord smears His body with holy ashes and is manifest in the temple in Thiru-p-paathiri-p-puliyoor city.

2790. அந்தணல்லாரகன்காழியுள்ஞானசம்
பந்தனல்லார்பயில்பாதிரிப்புலியூர்தனுள்
சந்தமாலைத்தமிழ்பத்திவைதரித்தார்கள்மேல்
வந்துதீயவ்வடையாமையால்வினைமாயுமே. 11

அந்தண் அல்லாரகன் காழியுள் ஞானசம்
பந்தன் நல்லார் பயில் பாதிரிப்புலியூர்தனுள்
சந்த மாலைத் தமிழ்பத்து இவை தரித்தார்கள்மேல்
வந்து தீய அடையாமையால் வினைமாயுமே.

am taN nallAr akan2 kAziyuL njAn2acam--
pantan2, nallAr payil pAtirippuliyUrtan2uL,
canta mAlaittamiz pattu ivai tarittArkaL mEl,
vantu tIya(v) aTaiyAmaiyAl, vin2ai mAyumE.

பொருள்: எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்ட அந்தண நல்லார் வாழும் அகன்ற காழி நகருள் ஞானசம்பந்தன், அழகிய மகளிர் பயில் திருப்பாதிரிப்புலியூரில் பண்ணிசைத் தமிழ்மாலையாகிய இத்திருப்பாடல்கள் பத்தையும் பாடவல்லவர்மேல் தீயவை வந்து அடையா; தீமை உடையவை சேராமையால் வினைகள் ஒழியும்.

குறிப்புரை: அம்தண்நல்லார் – அந்தணர். நல்லார் – பெண்டிர். சந்தம் – பண்ணிசை. தீமை உடையவை சேராமையால் வினைகள் ஒழியும்.

Our saint Thiru-gnana-Sambandar is a resident of Seerkaazhi city. The scholarly brahmins do live in the broad streets of Seerkaazhi city. He went to Thiru-p-paathiri-p-puliyoor city where women of great fame do live in large numbers. He went to the temple in this city and worshipped our Lord Civa, praised Him and chanted these ten verses on our Lord in good musical tone. Those devotees who can memorise these ten verses, chant them before our Lord and worship Him will find their bad deeds disappear from their life forever.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM

121ஆம் பதிகம் முற்றிற்று
End of 121st Hymn

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAMBALAM

பதிகத் தொடர் எண்: 258 *பதிக எண்: 122*

122. திருப்புகலி
122. THIRU-P-PUKALI

பண் : செவ்வழி *Pann: Chevvazhi*

திருத்தல வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

பதிக வரலாறு

பதிகத் தொடர் எண் 137ஐப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

2791. விடையதேறிவெறியக்கரவார்த்தவிமலனார்
பசடையதாகப்பரசுதரித்தார்க்கிடமாவது
கொடையிலோவார்குலமும்முயர்ந்தம்மறையோர்கள்தாம்
புடைகொள்வேள்விப்புகையும்பருலாவும்புகலியே. 1

விடைஅது ஏறி, வெறி அக்கு அரவு ஆர்த்த விமலனார்,
படைஅதுஆகப் பரசு தரித்தார்க்கு இடம்ஆவது -
கொடையில் ஓவார், குலமும்(ம்) உயர்ந்த(ம்) மறையோர்கள்தாம்
புடை கொள் வேள்விப்புகை உம்பர் உலாவும் புகலியே.

viTai atu ERi, veRi akku aravu Artta vimalan2Ar,
paTai atu Akap paracu tarittArkku iTam Avatu--
koTaiyil OvAr, kulamum(m) uyarnta(m) maRaiyOrkaL tAm
puTai koL vELvippukai umpar ulAvum pukaliyE.

பொருள்: எருதினை ஊர்தியாக ஏறுவோன்; நாற்றம் வீசும் எலும்பினையும் அரவினையும் அணிந்த பெருமானார்; ஆயுதமாக மழுவினை ஏந்தினார்; அவர் எழுந்தருளிய இடமாவது; கொடைக்குச் சலியாதவர்கள், குலமும் உயர்ந்தவர்கள் ஆகிய மறையோர்கள் தம் பக்கங்களில் ஆற்றும் வேள்விகளிலிருந்து எழும் புகை விண்ணுலகிலும் உலவும் புகலியே.

குறிப்புரை: ஆர்த்த – கட்டிய. விமலனார் – இயல்பாகவே பாசங்கள் இல்லாதவர், அநாதிமலமுத்தர். பரசு – மழு. புடை – பக்கம். வேள்வி – யாகம். உம்பர் – ஆகாயம். கலை நிலவிய புலவர்களிடர்களை தருகொடை பயில்பவர் (தி. 1 ப. 20 பா. 3). புகலி – புகலடைந்த காரணம் பற்றிய பெயர். ‘அமரர் புகலால் மலிந்த பூம்புகலி மேவிய புண்ணியனே’ (தி. 1 ப. 63 பா. 3).

This city's name Thiru-p-pukali is one of the twelve names of Seerkaazhi. Our Lord Civan sustains the white bull for His conveyance to move about in the cosmos. He wears a garland of bones emitting bad smell of meat. He also puts on His body the snakes as a garland. He is an immaculate Supreme Being. He holds the battleaxe in one of His hands. Our Lord is manifest in the temple in Thiru-p-pukali city. In this city, big philanthropists do live in large numbers. Vedic scholars of the high positions, Brahmins do live here. They make the sacrificial fire. The smoke from the sacrificial fire spreads in the sky over this city.

2792. வேலைதன்னில் மிகு நஞ்சினை உண்டு இருள் கண்டனார்,
ஞாலம் எங்கும் பலி கொண்டு உழல்வார் நகர்ஆவது –
சால நல்லார் பயிலும் மறை கேட்டுப் பதங்களைச்
சோலை மேவும் கிளித்தான் சொல் பயிலும் புகலியே. 2

வேலை தன்னில் மிகு நஞ்சினை உண்டு இருள்கண்டனார்
ஞாலம் எங்கும் பலிகொண்டு உழல்வார் நகராவது
சால நல்லார் பயிலும் மறை கேட்டுப் பதங்களைச்
சோலை மேவும் கிளித்தான் சொற் பயிலும் புகலியே.

vElai tan2n2il miku nanjcin2ai uNTu iruL kaNTan2Ar,
njAlam egkum pali koNTu uzalvAr nakar Avatu--
cAla nallAr payilum maRai kETTup patagkaLaic
cOlai mEvum kiLittAn2 col payilum pukaliyE.

பொருள்: பாற்கடலில் மிக்கு எழுந்த நஞ்சினை உண்டதால் இருண்ட கண்டத்தினர்; உலகமெங்கும் பிச்சையேற்று அலைவார்; அவருடைய நகராவது, மிகவும் நல்லவர்கள் வாழ்வது; மறையோர்கள் வேதங்களைச் சொல்லச் சோலைகளில் தங்கும் கிளிகள் மறைச் சொல்லைப் பயிலும் புகலியே.

குறிப்புரை: வேலை – பாற்கடல். உண்டு என்னும் வினையெச்சம். இருள் என்னும் வினைப்பகுதி கொண்டது. இருள்கண்டார் – இருண்ட திருக்கழுத்தினை உடையவர். ஞாலம் – பூமி, உலகம், நாலம் என்பதன் மரூஉ. உழல்வார் – திரிபவர். நல்லார் சாலப்பயிலும் மறை என்க. சால நல்லார் என்றே கொள்ளலுமாம். கிளிகள் நல்லார் பயிலும் மறை(யைக்) கேட்டுப் பதங்களைச் சொற்பயிலும் என்க.

'கிளித்தான்' என்பது. 'வேற்றுமையல்வழி' (தொல். தொகைமரபு. 16) என்னுஞ் சூத்திரத்தின்படி வல்லெழுத்து மிக்கது.

Our Lord Civan imbibed the severe poison that came out of the ocean of milk. Therefore His throat looks dark blue in colour. He rambles all over the cosmos and accepts the alms given to Him. This Civan is manifest in the temple in the city of Thiru-p-pukali. Very great scholars learn the Vedas word by word. The parrots living in the garden trees nearby listen to these Vedic words and repeat the words as heard by them. Thiru-p-pukali is such a gorgeous city where our Lord Civan is manifest.

2793. வண்டுவாழுங்குழல்மங்கையோர்கூறுகந்தார்மதித்
துண்டமேவுஞ்சுடர்த்தொல்சடையார்க்கிடமாவது
கெண்டைபாயமடுவில்லுயர்கேதகைமாதவி
புண்டரீகம்மலர்ப்பொய்கைநிலாவும்புகலியே. 3

வண்டு வாழும் குழல் மங்கை ஓர் கூறு உகந்தார், மதித்-
துண்டம் மேவும் சுடர்த் தொல்சடையார்க்கு இடம்ஆவது -
கெண்டை பாய மடுவில்(ல்), உயர் கேதகை, மாதவி,
புண்டரீகம் மலர்ப்பொய்கை நிலாவும் புகலியே.

vaNTu vAzum kuzal magkai Or kURu ukantAr, matit-
tuNTam mEvum cuTart tolcaTaiyArkku iTam Avatu--
keNTai pAya maTuvil(l), uyar kEtakai, mAtavi,
puNTarIkammalarp poykai nilAvum pukaliyE.

பொருள்: வண்டுகள் வாழும் குழல் மங்கையைத் தன் திருமேனியின் கூறாகக் கொண்டு உயர்ந்தார்; பிறைத்துண்டம் பொருந்திய ஒளிரும் தொல் சடையார்; அவருக்கு இடமாவது, மடுவில் கெண்டை மீன் பாய, தாழை, குருக்கத்தி, தாமரை மலர்களை உடைய பொய்கை நிலவும் புகலியே.

குறிப்புரை: மங்கை – உமாதேவியார். அவர் குழலில் வண்டுகள் வாழும் என்றது சாதியடை. மதித்துண்டம் – பிறை. 'திங்கட்பிளவு' சுடர்ச்சடை. தொல்சடை என்க. தொல்சடை என்னும் பண்பு தொகுதிமொழி. சுடர் என்னும் அடைகொண்டதாதலின், சுடரை (–ஒளியை) உடைய தொல்சடை என விரிக்க. தொல்சடை என்பதைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறலாகாது என்பதை, 'ஐம்பாலறியும் பண்பு தொகுதிமொழியும் . . . தொழில் தொகுமொழியும் . . . பிறவும்' . . . மருவின் பாத்திய, புனரியல் நிலையிடை

உணரத்தோன்றா என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் (எழுத்து. 482) உணர்க. கேதகை – தாழை. மாதவி – குருக்கத்திக்கொடி. புண்டரீகம் – தாமரை. பொய்கை – மானுட ராக்காத நீர்நிலை (சிந்தாமணி 337).

Our Lord Civan has embedded His consort Uma Devi on the left half of His body with affection. In her entangled locks of hair bees in large numbers swarm round. He retains the bright moon on His age-old entangled hair locks. This Lord Civan is manifest in the city of Thiru-p-pukali. In this city carp fish jump and play in deep ponds full of water. Also in the city, fragrant screw pine plants are many, the common delight of the forest, and deep tanks full of water where lotus flowers grow in large numbers are also many. Such a fascinating city is Thiru-p-pukali.

2794. திரியுமூன்றுபுரமும்மெரித்துத்திகழ்வானவர்க்
கரியபெம்மானரவக்குழையார்க்கிடமாவது
பெரியமாடத்துயருங்கொடியின்மிடைவால்வெயிற்
புரிவிலாததடம்பூம்பொழில்சூழ்தண்புகலியே. 4

திரியும் மூன்றுபுரமும்(ம்) எரித்து, திகழ் வானவர்க்கு
அரிய பெம்மான், அரவக் குழையார்க்கு இடம்ஆவது -
பெரிய மாடத்து உயரும் கொடியின் மிடைவால், வெயில்
புரிவு இலாத தடம் பூம்பொழில் சூழ் தண் புகலியே.

tiriyum mUn2Ru puramum(m) erittu, tikaz vAn2avarkku
ariya pemmAn2, aravak kuzaiyArkku iTam Avatu--
periya mATattu uyarum koTiyin2 miTaivAl, veyil
purivu ilAta taTam pUmpozil cUz taN pukaliyE.

பொருள்: விண்ணில் திரிகின்ற மும்மதில்களையும் எரித்தவர்; இமையவர்க்கு அரிய பெருமான்; சர்ப்ப குண்டலம் அணிந்தவர்; அவர் எழுந்தருளிய இடமாவது, பெரிய மாடங்களின்மேல் உயர்ந்த கொடிகளின் நெருக்கத்தால் வெயில் நிகழ்வதின்றி நிழலைச் செய்வதும், பெரிய பொழில்கள் சூழ்ந்ததும் ஆகிய புகலியே.

குறிப்புரை: 'அளவறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு' (திருவாசகம் – திருச்சதகம் 35). அரவக்குழையார் – சர்ப்ப குண்டலம் அணிந்தவர். மிடைவால் – நெருக்கத்தால். வெயில் புரிவு இலாத – வெயிலைச் செய்தலின்றி நிழலைச் செய்தலுடைய. தட – பெரிய. பூம்பொழில் – மலர்க்கா.

The asuras roamed about in the sky in the three forts they had built and inflicted intolerable misery on the devas. Our Lord Civa burnt the three cities. He excels as the rare Supreme Being for devas. He uses sprouted leaves for His ear lobe. He is manifest in Thiru-p-pukali city. In this city very big palatial residential buildings are many where the flags waver in the top terrace. Also here the white rays of the sun could not enter because of dense gardens with many tall trees.

2795. ஏவிலாருஞ்சிலைப்பார்த்தனுக்கின்னருள்செய்தவர்
நாவினாள்மூக்கரிவித்தநம்பர்க்கிடமாவது
மாவிலாருங்கனிவார்கிடங்கில்விழவாளைபோய்ப்
பூவிலாரும்புனற்பொய்கையில்வைகும்புகலியே. 5

ஏவில் ஆரும் சிலைப் பார்த்தனுக்கு இன்அருள் செய்தவர்,
நாவினாள் மூக்கு அரிவித்த நம்பர்க்கு இடம்ஆவது -
மாவில் ஆரும் கனி வார் கிடங்கில் விழ, வாளை போய்ப்
பூவில் ஆரும் புனல் பொய்கையில் வைகும் புகலியே.

Evil Arum cilaip pArttan2ukku in2 aruL ceytavar,
nAvin2AL mUkku arivitta namparkku iTam Avatu--
mAvil Arum kan2i vAr kiTagkil viza, vALai pOyp
pUvil Arum pun2al poykaiyil vaikum pukaliyE.

பொருள்: விற்போர் வல்ல அருச்சுனனுக்கு இனிய அருள் செய்தவர்; நாமகளின் மூக்கை அரிவித்த நம்பர்; அவருக்கு இடமாவது, மாஞ்சோலையில் உள்ள மாங்கனிகள் அகழியில் விழ, வெருண்ட வாளைமீன் துள்ளிப் போய்த் தாமரை பூவலர்ந்த பொய்கையில் தங்கும் புகலியே.

குறிப்புரை: நாவினாள் – நாமகள். மூக்கு அரிவித்த நம்பர் – மூக்கினை அரியச்செய்த சிவபிரானார். தக்கயாக சங்காரத்தில் வீரபத்திரர் அரிந்தார். சுருதியான் தலையும் நாமகள் மூக்கும் . . . இறுத்து அவர்க்கு அருளும் பரமனார் (தி. 3 ப. 118 பா. 5). நம்பர் – உயிர்களின் விருப்பிற்குரியர். விருப்பாயிருப்பவர். மாவில் ஆரும் கனி – மாமரத்தில் நிறைந்த பழங்கள். வார் கிடங்கில் – நீண்ட அகழியில். விழ – விழலால். வாளை போய்ப் பொய் கையில் வைகும் என்க.

Our Lord Civa graced Archunan (one of Pandava brothers). He is a very famous archer in the bow. Our Lord instructed Veerabadran to destroy the sacrificial hall

created by Thakkan. When he went there he saw many devas. Among them he saw Brahma and his wife goddess Saraswathi. Because of her presence in Thakkan's sacrificial hall Veerabadran chopped her nose. Later our Lord graced her. This Lord is manifest in Thiru-p-pukali. In this city, mango fruits, fully ripe fall into the big ponds under the trees. The sword fish rush to these ponds, full of flowers. The Thiru-p-pukali city is such an awe-inspiring city.

2796. தக்கன்வேள்விதகர்த்ததலைவன்தையலாளொடும்
ஒக்கவேயெம்முரவோனுறையும்மிடமாவது
கொக்குவாழைபலவின்கொழுந்தண்கனிகொன்றைகள்
புக்கவாசப்புன்னைபொன்திரள்காட்டும்புகலியே. 6

*தக்கன் வேள்வி தகர்த்த தலைவன், தையலாளொடும்
ஒக்கவே எம் உரவோன் உறையும் இடம்ஆவது -
கொக்கு, வாழை, பலவின் கொழுந் தண் கனி, கொன்றைகள்,
புக்க வாசப்புன்னை, பொன்திரள் காட்டும் புகலியே.*

takkan2 vELvi takartta talaivan2, taiyalALoTum
okkavE em uravOn2 uRaiyum(m) iTam Avatu--
kokku, vAzai, palavin2 kozun taN kan2i, kon2RaikaL,
pukka vAcappun2n2ai, pon2tiraL kATTum pukaliyE.

பொருள்: தக்கன் செய்த வேள்வியைத் தகர்த்தவன்; தலைவன், உமாதேவியாருடன் சமமாக எம்முடைய வலியோன் உறையும் இடமாவது, மா, வாழை, பலவின் கொழுமையான கனிகளுடன் கொன்றைகள் புன்னைகள் பொன் திரட்சியைக் காட்டும் புகலியே.

குறிப்புரை: தக்கன் – தக்ஷன். தகர்த்த – அழித்த. தையலாள் – உமாதேவியார். கொக்கு – மாமரம். புன்னைகள் பொன் போலப் பூக்கும். திரள் என்பது இங்குத் திரட்சி என்னும் பொருளதாயிற்று.

Our Lord Civan is the Chief to order the destruction of the sacrificial fire of tutelary Thakkan. Lord Civan is the embodiment of spiritual, profound knowledge that may induce self-restraint. He is manifest along with His consort in the temple in Thiru-p-pukali city. In this city mango trees, banana trees, jack fruit trees are plenty. The sweet fragrance of the fruits of all these trees spreads all over the area. Also Indian laburnum flower plants, screw pine trees are many in this city. From these trees many

pollen grains of the flowers fall on the ground. It appears as though golden dust has spread all over the area. Such a fascinating city is Thiru-p-pukali.

7ஆம் பாடல் கிடைக்கப்பெறவில்லை.

2797. தொலைவிலாதஅரக்கன்னுரத்தைத்தொலைவித்தவன்
தலையுந்தோளுந்நெரித்தசதுரர்க்கிடமாவது
கலையின்மேவும்மனத்தோரிரப்போர்க்குக்கரப்பிலார்
பொலியுமந்தண்பொழில்சூழ்ந்தழகாரும்புகலியே. 8

தொலைவு இலாத அரக்கன்(ன்) உரத்தைத் தொலைவித்து, அவன்
தலையும் தோளும் நெரித்த சதுரர்க்கு இடம்ஆவது -
கலையின் மேவும் மனத்தோர், இரப்போர்க்குக் கரப்புஇலார்,
பொலியும்-அம் தண்பொழில் சூழ்ந்து அழகு ஆரும் - புகலியே.

tolaivu ilAta arakkan2(n2) urattait tolaivittu, avan2
talaiyum tOLum nerittu caturarkku iTam Avatu--
kalaiyin2 mEvum man2attOr, irappOrkkuk karappu ilAr,
poliyum--am taNpozil cUzntu azaku Arum--pukaliyE.

பொருள்: தோல்வியையே கண்டிராத அரக்கன் இராவணனின் வலிமையை தொலைவித்து, அவனுடைய தலையுந் தோளும் நெரித்த சதுரர்; அவருக்கு இடமாவது வேத ஆகம புராண இதிகாசம் முதலிய கலைகளில் வல்ல உள்ளத்தை உடையவர்கள். இரந்து வந்தவர்களுக்கு இல்லையென மறைக்காதவர்கள் சிறந்து வாழ்வதும் குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்ததும் அழகு நிறைந்ததுமாகிய புகலியே.

குறிப்புரை: தொலைவு – தோல்வி. உரத்தை – வலியை. மார்பை எனலுமாம். தொலைவித்து – ஒழித்து. அவன் தலையும் தோளும் நெரித்த சதுரர் என்க. சதுரர்க்கு – மூவர்க்கும் மேலாய முதல்வர். கலை – வேதாகம புராணேதிகாசாதி கலைகள். மனத்தோர் – உள்ளத்தையுடைய அந்தணர். சுரப்பு இலார் – மறைத்தலில்லாமல் ஈந்துவப்பவர். கரப்பு – மறைப்பு. பொலியும் – விளங்கும். அம் – (அழகு) ஆரும் – நிறையும்.

The king of Sri Lanka is the most courageous person without any defeat in his life. Our Lord Civan shattered his mightiness and crushed his heads and shoulders. Lord Civan is the able and Supreme Being. He is manifest in the temple in Thiru-p-pukali city. In this city very highly knowledgeable persons in all arts and culture live in

large numbers. These people will never deny anything to those poor people who ask for charity. They are such virtuous people in the city. Such an attractive city is Thiru-p-pukali for it has people of aesthetic hearts and generous behaviour.

2798. கீண்டுபுக்கார்பறந்தாரயர்ந்தார்கேழலன்னமாய்க்
காண்டுமென்றார்கழல்பணியநின்றார்க்கிடமாவது
நீண்டநாரையிரையாரல்வாரநிறைசெறுவினிற்
பூண்டுமிக்கவ்வயல்காட்டுமந்தண்புகலியே. 9

கீண்டு புக்கார் பறந்தே உயர்ந்தார் - கேழல் அன்னம்ஆய்க்
"காண்டும்" என்றார் - கழல் பணிய நின்றார்க்கு இடம்ஆவது -
நீண்ட நாரை இரை ஆரல் வார, நிறை செறுவினில்
பூண்டு மிக்க(வ்) வயல் காட்டும் அம் தண் புகலியே.

kINTu pukkAr paRantE uyarntAr--kEzal an2n2am Ayk
"kANTum" en2RAr--kazal paNiya nin2RArkku iTam Avatu--
nINTa nArai irai Aral vAra, niRai ceRuvin2il
pUNTu mikka(v) vayal kATTum am taN pukaliyE.

பொருள்: நிலத்தைப் பிளந்து புகுந்த திருமால்; ஆகாயத்தே பறந்து உயர்ந்த நான்முகன் இருவரும் முறையே பன்றியும் அன்னமுமாய்க் காண்போம் என்றவர், காணவியலாமல் கழல் பணிய நின்றார்; அவருக்கு இடமாவது, உயரமான நாரைக்கு இரையாகிய ஆரல் மீன்கள் நிறைய ஒழுகியோடும் சேறுபூண்டு மிக்க வயல்கள் உள்ள குளிர்ந்த புகலியதே.

குறிப்புரை: கீண்டு – (நிலத்தைப்) பிளந்து. திருமால் செயல். கேழல் – பன்றி. காண்டும் – காண்போம். பறந்துயர்ந்தார். பிரான் திருவடிகளை. பணிய – பணிந்து வழிபட நின்றார்க்கு – நின்ற சிவபெருமானுக்கு. நாரைக்கு இரையாகிய ஆரல் மீன்கள் ஒழுகியோட. நிறைந்த செறு. செறு – சேறு மிக்க வயல் என்பது சந்தம் நோக்கி விரித்தல் விகார முற்றது.

The demigod Thirumaal assumed the form of a hog and cut the earth deeply. Brahma, the other tutelary, took the posture of a swan and flew over the sky to see our Lord's head. They both quarrelled to see Lord Civan's head and feet earlier than the other. They tried their level best but failed in the efforts. Then they stood before Lord Civan to prostrate on His feet. This Lord Civan is manifest in the temple in Thiru-p-pukali city. In this city, herons seek brownish or greenish fish. But these fish run along

with the water flow. Also in the city the fields are full of mud and rich plants. Such a fascinating city is Thiru-p-pukali.

2799. தடுக்குடுத்துத்தலையைப்பறிப்பாரொடுசாக்கியர்
இடுக்கணுய்ப்பாரிறைஞ்சாதஎம்மாற்கிடமாவது
மடுப்படுக்குஞ்சுருதிப்பொருள்வல்லவர்வானுளோர்
அடுத்தடுத்துப்புகுந்தீண்டுமந்தண்புகலியே. 10

தடுக்கு உடுத்துத் தலையைப் பறிப்பாரொடு, சாக்கியர், -
இடுக்கண் உய்ப்பார் - இறைஞ்சாத எம்மாற்கு இடம்ஆவது -
மடுப்பு அடுக்கும் சுருதிப்பொருள் வல்லவர், வான்உளோர்,
அடுத்து அடுத்துப் புகுந்து ஈண்டும் அம் தண் புகலியே.

taTukku uTuttut talaiyaip paRippAroTu, cAkkiyar,--
iTukkaN uyppAr--iRainjcAta emmARku iTam Avatu--
maTuppu aTukkum curutipporuL vallavar, vAn2 uLOr,
aTuttu aTuttup pukuntu INTum am taN pukaliyE.

பொருள்: தடுக்குப் பாயினை உடுத்துத் தலைமயிரைப் பறிப்பாராகிய சமணர்களும், சாக்கியர்களும் துன்பத்திற் செலுத்துவார்கள். யாரையும் வணங்காத எம்மானுக்கு இடமாவது, வைகறைப் போதில் மடுவில் நீர் மூழ்கும் சுருதிப்பொருள் வல்லவர்களாகிய மறையவர்கள், வானுலகத்தவர்கள் முதலியோர் வந்து புகுந்து திரளும் புகலியே.

குறிப்புரை: பறிப்பார் – சமணர். உய்ப்பார் – செலுத்துவார். உண்டாக்குவார் என்றவாறு. இறைஞ்சாத – தலைவணங்காத. வணங்கப்பெறாமை எம்மானது. மடுப்படுக்கும் – (வைகறையில் நீர்) மடுவில் குளிக்கும். சுருதிப்பொருள் – வேதார்த்தம். வல்லவர் – வல்ல அந்தணர். மடுப்பு அடுக்கும் எனப் பிரித்து. உட்கொள்ளுதலைப் பொருந்தும் என்று கொண்டு. சுருதிப்பொருளையுட்கொண்டு என்க. வான் உளோர் – தேவர். பூதேவரும் மாதேவரும் அடுத்து அடுத்துப் புகுந்து ஈண்டும் புகலி.

The Jains in this city put on their body the mat stitched with palmyrah leaves. They used to remove their hair from the head. The Buddhists and the Jains do not worship our Lord. Our Lord is manifest in the temple in Thiru-p-pukali city. The Vedic scholarly Brahmins and the devas who live in heaven come to Thiru-p-pukali city one after another and worship our Lord.

2800. எய்தவொண்ணாஇறைவன்னுறைகின்றபுகலியைக்
கைதவமில்லாக்கவுணியன்ஞானசம்பந்தன்சீர்
செய்தபத்தும்மிவைசெப்பவல்லார்சிவலோகத்தில்
எய்திநல்லஇமையோர்களேத்தஇருப்பார்களே. **11**

எய்த ஒண்ணா இறைவன் உறைகின்ற புகலியை,
கைதவம் இல்லாக் கவுணியன் - ஞானசம்பந்தன் - சீர்
செய்த பத்தும்(ம்) இவை செப்ப வல்லார், சிவலோகத்தில்
எய்தி, நல்ல இமையோர்கள் ஏத்த, இருப்பார்களே.

eyta oNNA iRaivan2 uRaikin2Ra pukaliyai,
kaitavam illAk kavuNiyan2--njAn2acampantan2--cIr
ceyta pattum(m) ivai ceppa vallAr, civalOkattil
eyti, nalla imaiyOrkaL Etta, iruppArkaLE.

பொருள்: பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரன்; திருக்கோயில் கொண்டு உறைகின்ற திருப்புகலியை, வஞ்சகம் இல்லாக் கவுணிய குலத்தவன் ஞானசம்பந்தன் சீராகச் சொன்ன இப்பத்துத் திருப்பாடல்களையும் செப்ப வல்லவர்கள் சிவலோகத்தை எய்திச் சிவபுண்ணியம் செய்த தேவர்கள் போற்றி வழிபடச் சிவானந்தம் துய்த்துப் பதமுத்தி அடைவார்கள்.

குறிப்புரை: எய்த ஒண்ணா இறைவன் – பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரன் (சித்தியார் சூத். 9). 'இமையோர் கூட்டம் எய்துமாறு அறியாத எந்தாய்' (திருவாசகம் – திருச்சதகம் 25). உறைகின்ற திருக்கோயில் கொண்டு (கடல் கொண்ட கடை நாளிலும்) அடியார்க்கு அருளற்பொருட்டு எழுந்தருளியுள்ள. கைதவம் – வஞ்சகம். நல்ல இமையோர்கள் – சிவலோகத்தை அடையச் சிவபுண்ணியம் செய்த நன்மைகளையுடைய தேவர்கள். ஏத்த – எடுத்துப் புகழ்ந்து வழிபட, இருப்பார்களே – பேரின்பம் நுகர்ந்து அழியாதிருந்து விளங்கும் சாலோகமான பத முத்தியடைந்தாரே யாவர்.

The souls in the physical body cannot comprehend or conceive our Lord. This Lord is manifest in the temple in Thiru-p-pukali city. Our saint Thiru-gnana-Sambandar by birth belonged to Kouniyar family. He came to the temple and before the Lord chanted the famous ten verses. Those scholars who can memorise these songs and chant these ten verses before our Lord will reach the Civa Loka - the celestial world and will enjoy bliss. There the scholarly devas will praise them and they will attain everlasting Mukti.

திருச்சிற்றம்பலம்
THIRU-CH-CHITRAM-BALAM
122ஆம் பதிகம் முற்றிற்று
End of 122nd Hymn

முதல் திருமுறை

பாட்டு முதற்குறிப்பகராதி

பாடல்	பாடல் எண்
அ	
அகமலியன்பொ	480
அகனமர்ந்தவன்	1421
அங்கமாதுசேர்	972
அங்கமாறும்வேத	709
அங்கமுநான்மறை	1166
அங்கமும்வேதமு	55
அங்கமொடரு	1175
அங்கமொராறு	460
அங்கமொராறும்	1081
அங்கோல்வளை	921
அசைவுறுதவ	224
அச்சம்மிலர்	186
அஞ்சாதேகயிலாய	1401
அஞ்சொண்புல	407
அடர்செவிவேழ	432
அடலேறமருங்	360
அடல்வந்தவானவரை	1390
அடல்மலிபடை	225
அடிகளாலவாய்	1024
அடிமுடிகாண்கில	1204
அடியவர்குழுமிட	1345
அடியிணைகண்டி	1268
அடையாதவர்	399
அடையார்தம்புர	701
அடையார்புர	893
அடைவாகியவடி	133
அணங்கோடொரு	410
அணிபெறுவடமர	210
அணிமலர்மகடலை	236
அணியார்தொழ	398
அணியார்மலை	897
அண்டத்தாலெண்	1362
அண்ணலாலவாய்	1019
அத்தமண்டோய்து	424
அத்தன்முதுகுன்றை	1004
அந்தணாளர்தம்	1042
அந்தண்சோற்றுத்	304
அந்தண்புனல்	958
அந்தமாதியயனு	795
அந்தமின்ஞான	1237
அந்தமில்புகழ்	1017
அந்தமுமாதியுந்தான்	62
அந்தமுமாதியுமாகிய	415
அந்தம்மறியாதவரு	341
அந்தரத்திற்றேரூ	674
அந்திமதியோடு	917
அமைவனதுவரி	204
அம்பொனாலவாய்	1020
அயனுமாலுமாய் (பிரம)	978
அயனுமாலுமாய் (வீழி)	1000
அயனொடுமெழிலமர்	214
அயிலுடைவேலோ	1086
அயிலுறுபடையினர்	853
அரக்கனாண்மையழிய	312
அரக்கனாண்மையை	988
அரக்கன்வலி	367
அரக்கனார்வலி	1021
அரக்கனெரிதர	999
அரசளிக்குமரக்கன்	597
அரப்பள்ளியானு	1066
அரவச்சடைமேன்	393
அரவார்புனலன்பிலா	359
அரவின்வாயின்	1077

பாடல்	பாடல் எண்
அரவுற்றநாணான்	1442
அரனுறைதரு	213
அரனையுள்குவீர்	969
அரியுநம்வினை	623
அரியொடுமலர	1323
அருகரொடு	128
அருத்தனை	1196
அருநெறிய	11
அருந்திறலவு	1178
அருமறைஞான	1184
அருமையன்எளி	1306
அரும்புங்குரும்	494
அருவனாலவாய்	1022
அரைகெழுகோ	427
அரைபுல்குமைந்	418
அரையாரழனாக	910
அரையார்தரு	962
அரையார்விரி	371
அரையோடலர்	502
அலங்கன்மலி	1385
அலரும்மெறி	395
அலர்மகண்மலி	1337
அலைமலிதண்புனலோ	1153
அலைமலிதண்புனல்சூழ்	1162
அலையார்புனலை	699
அலையார்புனல்சூடி	870
அல்லாடரவமிய	753
அவ்வினைக்கிவ்வினை	1249
அழுவல்லவராடி	373
அழிவல்லமண	402
அளைவளர்நாக	431
அறங்கிளருநால்	1411
அறையார்கடலிலங்கை	159
அறையார்கழலந்த	123
அறையார்கழன்மேலர	397
அறையார்புனலு	690
அறையார்புனலோடகி	266

பாடல்	பாடல் எண்
அறையும்மரிகுர	149
அனனிகர்சடை	1329
அன்புடையானை	75
அன்றடற்காலனை	1208
அன்றிநின்றவவு	311
அன்றியலுருவு	1356
அன்றியவமணர்	1226
அன்றினரரியென	1342
அன்னமலிபொழில்	1404
ஆ	
ஆகத்துமைகேள்வ	930
ஆசியாரமொழி	32
ஆச்சியப்பேய்க	1291
ஆடரவத்தழ	668
ஆடலரவசைத்தான்	1122
ஆடலழனாக	495
ஆடலான்பாட	1283
ஆடலேற்றினான்	1018
ஆடனாக	613
ஆணும்பெண்ணுமா	908
ஆதல்செய்தாரைக்	1118
ஆதியாயநான்	545
ஆமையரவோ	796
ஆம்பலதவமு	862
ஆயாதனசம	112
ஆரநாகமாம்	1023
ஆலக்கோலத்	877
ஆலநீழலார்	1016
ஆலிளமதியினொ	1198
ஆலும்மயிலின்	807
ஆவாவெனவர	965
ஆவிக்கமலத்தன்ன	1109
ஆவிலைந்தமர்ந்த	1213
ஆழியானுமலரி	313
ஆழ்கடலெனக்	615
ஆழ்தருமால்கட	422
ஆறணிசெஞ்சடை	1124

பாடல்	பாடல் எண்
ஆறாடுசடைமுடி	1422
ஆறுடைச்சடை	817
ஆற்றலுடைய	258
ஆற்றையுமேற்ற	843
ஆனூராவழி	664
ஆன்முறையாலாற்ற	528
இ	
இகழுருவொடு	215
இகழ்ந்தருவரை	1224
இசைவிளங்குமெ	276
இடந்தபெம்மா	1119
அடியார்கடனஞ்	396
இடியார்குரலேறு	362
இடையீர்போகா	581
இட்டமதமர்பொடி	1327
இந்தணையுஞ்	80
இயங்குகின்ற	538
இயலாடிய	127
இயலும்விடை	954
இயல்வழிதாவிது	237
இரவணனிருபது	1333
இரவன்பகலோ	885
இரவிற்றிரிவோர்	878
இருநிலமிதன்	1338
இருநிலனது	234
இரும்பொன்மலை	882
இருவரறியாத	1011
இருவர்கெரியாகி	368
இருவர்க்கெரியாய	1033
இருவர்தேவருந்	598
இருவர்நாடிய	1044
இருளைப்புரை	718
இரைக்கும்புனல்	326
இலகும்முடி	400
இலங்கைத்தலை	1267
இலங்கைமன்னன்முடி	170
இலங்கையர்வேந்	41

பாடல்	பாடல் எண்
இலங்கையிராவண	72
இலைமருதேயழ	63
இலைமலிதர	1335
இலைமலிபொழி	1195
இலையார்தரு	960
இழைந்தவிடை	746
இழைமேவு	1409
இழைவளர்	230
இளகக்கமலத்	1104
இறையார்வளை	331
இறையூண்டு	640
இறைவராயி	993
இன்குரலிசை	1207
இன்பம்வேண்	1041
ஈ	
ஈசன்முதுகுன்	1006
ஈர்க்கும்புனல்	485
ஈறாய்முதலொன்	109
உ	
உடையார்துகில்	325
உண்டுடுக்கையின்	710
உண்ணலாகா	534
உண்ணற்கரிய	804
உண்ணாமுலை	97
உதிரும்மயிர்	100
உமையாளொரு	386
உம்பராலு	309
உயர்வரை	433
உய்யலுறு	984
உரமன்னுயர்	725
உரவம்புரிபுன்	374
உரவன்புலி	799
உரவார்கலை	1102
உரவெங்கரி	405
உரிஞ்சனகூறை	829
உரித்ததுபா	1262
உருமலிகட	1328

பாடல்	பாடல் எண்
உருவிற்றிகழு	747
உரைசேரு	1419
உரையரு	1319
உரையாதா	596
உளங்கொள்	1108
உலந்தவரெ	464
உலங்கொள்வா	823
உளையாவலி	378
உள்வேர்போல்	582
உள்ளமோ	1135
உறிகொள்	578
ஊ	
ஊனாப்பலி	740
ஊரும்மரவஞ்	351
ஊருலாவுபலி	305
ஊரெதிர்ந்திடு	857
ஊர்கின்ற	1387
ஊறியார்தரு	591
ஊனடைந்த	517
ஊனத்திருணீ	406
ஊனார்தலை	782
ஊனியன்ற	28
ஊன்பாயு	1397
ஊன்றும்பிணி	637
எ	
எங்கள்பெரு	932
எடுத்தவரக்க	257
எடுத்தான்புய	1032
எடுத்தான்றரு	889
எண்டிசையா	86
எண்டிசையோரஞ்	1053
எண்டிசையோர்மகிழ	1147
எண்ணாரெயிலெய்	496
எண்ணாரெயில்	702
எண்ணார்தங்க	453
எண்ணார்தரு	134
எண்ணார்மும்	1284
எண்ணார்முத்த	1105
எண்ணிடை	855
எண்ணிறந்த	1425
எண்ணுமடி	1027
எண்ணொன்றி	394
எந்தையென்	251
எய்யாவென்றி	1047
எரித்தவன்	1218
எரியார்மழு	678
எரியொருகர	856
எருதேகொணர்	685
எழின்மலை	1214
எழுந்துலகை	1418
எறிசுறவங்	646
எறியார்கடல்	246
எனைத்தோரு	748
என்றானிம்மலை	587
ஏ	
ஏதம்வந்த	625
ஏராரெருக்கத்	968
ஏரிசையும்	1416
ஏரினார்பொழி	1436
ஏலமலிகுழ	1123
ஏவலத்தால்	477
ஏவார்சிலை	124
ஏறார்தரு	131
ஏறிலெரு	927
ஏறுதாங்கியூ	530
ஏறுமொன்	837
ஏனத்தெயி	909
ஏமருப்பினொடு	1145
ஏனமன்ன	609
ஐ	
ஐயனொய்யன்	25

பாடல்	பாடல் எண்
ஐயன்முது	1005
ஒ	
ஒடுங்கும்பிணி	634
ஒண்டுவரார்	53
ஒருக்கியவுணர்	1344
ஒருங்களிநீ	462
ஒருமைபெண்மை	5
ஒல்லையாறியு	537
ஒழுகியபுனன்	1320
ஒளியார்விட	363
ஒளிறுபுலி	104
ஒள்ளிதுள்ள	612
ஒற்றையேற	26
ஒன்றும்பல	737
ஒன்னார்புர	317
ஓ	
ஓங்கியமூவி	1157
ஓடுந்திரிபுர	953
ஓடேகலனு	338
ஓதிநன்குண	442
ஓரியல்பில்லா	811
ஓருருவாயினை	1382
க	
கங்காளர்கயிலாய	1396
கங்கையோர்வார்	1138
கச்சுமொள்	838
கஞ்சத்தேனுண்	1369
கடந்தாங்கிய	89
கடமணி	845
கடலினஞ்ச	30
கடலென	202
கடிபடுகமல	445
கடியாரலங்	693
கடியார்கொள்	730
கடுக்கொள்சீ	990
கடைநெடு	1085

பாடல்	பாடல் எண்
கடையார்கொ	689
கடையார்மாட	458
கட்டார்	688
கணைநீடெரி	349
கணையும்வரி	488
கண்கொணு	756
கண்டான்கழு	731
கண்ணமர்	1168
கண்ணன்கடிக்	956
கண்ணார்கமழ்	348
கண்ணிறைந்த	29
கண்ணிற்கன	886
கண்ணுதலான்	1121
கண்ணுமூன்று	509
கண்மேற்கண்	723
கதமிகுகரு	223
கதிமலிகளி	232
கதிரொளி	1412
கந்தங்கமழ்	483
கந்தமர்சந்து	1092
கந்தமாமலர்	1449
கந்தனைமலி	830
கயலார்நட	319
கரத்தான்	114
கரமிருபது	1355
கரமுதலிய	229
கரம்பயில்	1343
கரவின்றி	404
கரிகாலன	103
கரிதாகிய	375
கரிந்தாரிடு	1441
கரிபுன்புற	497
கரியகண்டனை	975
கரியமாலுஞ்	784
கரியவனான்	434
கருக்கமெல்	279

பாடல்	பாடல் எண்
கருக்குமணி	955
கருதார்புர	1026
கருதுசம்ப	1035
கருத்தன்கடவுள்	1437
கருப்பமிகு	786
கருவார்பொழி	1230
கருவுடையா	1255
கருவைக்கழி	814
கரைபொரு	772
கரையார்கடல்	914
கரையார்கடனா	286
கரையுலாவு	716
கலமார் கடலுள்	863
கலிகெழு	471
கலைபுனை	1339
கலைமலியக	1348
கலைமலிவிர	1321
கலையவன்	1179
கலையார்கலி	392
கலையார்மதி	382
கலையுடை	1309
கல்லார்மதிற்	337
கல்லார்வரை	500
கல்லானிழற்	113
கல்லானிழன்மே	915
கல்லுயர்கழு	1270
கல்லுயர்மாக்	436
கல்வியாளர்	307
கவர்பூம்	683
கவிழமலை	489
கழலினோசை	17
கழலுஞ்சிலம்	1030
கழன்மல்குகா	848
கழன்மல்குபந்	35
கழுதுதுஞ்சுங்	797
கழுமலமுது	1381

பாடல்	பாடல் எண்
கழுவார்துவ	336
கறிவளர்குன்	420
கறுத்தமனத்	1148
கறுத்தான்	322
கறைமலி	233
கறையார்மிட	165
கறையிலங்குமலர்	666
கற்றவர்கள்	1393
கற்றவர்திரு	1227
கற்றறிவெய்	1052
கற்றாங்கெரி	864
கற்றைச்சடை	1260
கனமலர்க்கொன்றைய (வாழ்கொளிபுத்தூர்)	430
கனமலர்க்கொன்றைய (பாச்சிலாச்சிராமம்)	473
கனைத்தெழுந்த	560
கன்னவிலு	673
கன்னியராடல்	36
கா	
காடடைந்த	520
காடதணி	1259
காடுநாடுங்	306
காட்டினாலு	616
காணவுள்	970
காணுமாறரி	1420
காண்டகைய	648
காதார்கள்	320
காதிலங்கு	13
காமருகண்	1101
காமருவார்	469
காமனெரிப்	40
காமனெழில்	933
காமன்வேவ	996
காரடைந்த	523
காரமண்	589
காரார்கொன்றை	601

பாடல்	பாடல் எண்
காரார்வண்ண	269
காரார்வயல்	260
காரிருளுரு	833
கார்கொண்ட	846
காலதுகங்கை	1265
காலைநன்	809
காலையிலுண்	1172
காவினையிட்டும்	1250
காழிமாநகர்	1002
காழியானய	1379
கானமுஞ்சுட	844
கி	
கிடந்தானி	890
கிளர்மழை	828
கீ	
கீர்த்திமிக்க	1294
கு	
குடைமயிலி	1324
குணமறிவு	226
குணமின்றிப்	1392
குண்டமணர்	435
குண்டர்சா	446
குண்டர்தேரரு	1045
குண்டாடுகுற்	1403
குண்டாய்	1089
குண்டுந்	457
குண்டுபட்டமண்	1435
குண்டுமுற்றி	292
குண்டைக்கு	493
குயிலார்கோல	775
குரவங்கமழ்குழலாள்	949
குரவங்கமழ்நறு	130
குருந்தவன்	1228
குரும்பையாண்	590
குலவெஞ்சிலை	726
குழலார்சடை	771
குழலினோசை	706
குழலின்னி	189
குழையார்	584
குளித்துணா	1236
குளிரும்மதி	918
குளிர்ந்தார்	1439
குறிகலந்த	12
குறியார்திரை	1107
குறியில்சம	924
குறைபடாத	510
குற்றமறுத்தார்	81
குற்றமின்மை	554
குன்றம்மது	194
குன்றினுச்சி	566
கூ	
கூரார்வளி	694
கூருலாவு	310
கூர்வாளர	871
கூவிளங்கை	1261
கூழையங்	1464
கூறுகொண்டா	565
கூறைபோர்க்கு	281
கூனற்பிறை	151
கே	
கேடும்பிறவி	482
கேணவல்லான்	1113
கை	
கைம்மகவே	1059
கைம்மாமத	146
கையடைந்த	507
கையதுவெண்	1269
கொ	
கொக்கிறகோடு	438
கொக்கின்னிற	384
கொங்கணி	1274
கொங்குசெரு	255

பாடல்	பாடல் எண்
கொச்சையண்ணல்	1380
கொடியார்நெடு	184
கொட்டும்பறை	926
கொட்டுவரக்க	1263
கொண்டலு	854
கொந்தண்பொழிற்	896
கொய்தவம்மல	1221
கொய்யணிநறு	1199
கொலைக்கணித்	859
கொலையார்தரு	365
கொலையார்மழு	900
கொலைவரை	1062
கொல்லுங்	931
கொல்லைமுல்லை	505
கொல்லைவிடை	256
கொழுமலரு	203
கொன்னவின்ற	553
கோ	
கோடலிரும்புறவில்	1151
கோணாகணை	872
கோதுசாற்றி	303
கோலம்முடி	160
கோவண	71
ச	
சங்கக்கயனு	390
சங்களவிய	1215
சங்கொளியி	39
சங்கொளிர்	1238
சங்கோடி	681
சடங்கொண்ட	1280
சடைதனைத்	416
சடைமுயங்	7
சடையன்	1446
சடையார்	350
சடையார்பிறை	376
சடையார்புன	108
சடையினர்மே	813
சத்தியுளாதி	1241
சந்தநன்	1239
சந்தம்மலர்	945
சந்தளறேறு	38
சமண்சாக்	369
சரிகுழலில	1243
சலசலசந்த	48
சலசலசொரி	1317
சனம்வெரு	235
சா	
சாகம்பொன்	1432
சாக்கியப்பட்	1257
சாடிக்காலன்	300
சாத்துவர்	1264
சாநாளும்	636
சாந்தங்கம	492
சார்ந்தவர்க்	1222
சாலமாமலர்	594
சி	
சிக்கார்	891
சிட்டமார்ந்த	533
சித்தந்தெளி	981
சிந்தையில்	1194
சிரங்கையி	411
சிலைதனை	228
சிவனுறை	1217
சிறுதேரரு	347
சிறைகொண்ட	385
சிறையாரு	654
சிறையார்வண்	789
சிறையார்வரி	901
சினமலிகரி	216
சினமலியறு	221
சீ	
சீரணிதி	437

பாடல்	பாடல் எண்
சீரூர்	991
சீர்கெழு	1276
சீலம்மிகு	176
சு	
சுடர்மணிமா	1374
சுடுகூரெரி	937
சுடுநீறமணி	155
சுடுமணி	1271
சுரர்மாத	122
சுருதிகள்	222
சுழிந்தகங்	575
சூ	
சூடுமதி	1126
சூடுமிளந்திங்கட் (நல்லூர்)	928
சூடுமிளந்திங்கட் (வடுகூர்)	939
சூதகஞ்சேர்	713
சூலப்படையான்	329
சூலப்படையொன்	755
சூலம்படை	185
செ	
செங்கணர	802
செங்கமலப்	1099
செடிநுகருஞ்	665
செடியமண்	632
செடியார்	355
செதுவாய்	126
செந்தளிர்	1424
செந்துவராடையினான்	1141
செப்பநெஞ்	294
செம்பைச்சேர்	1366
செம்பொனின்	1160
செம்பொன்செய்	69
செம்மென்	132
செய்தவத்	21
செய்பூங்	450
செய்யகலிங்	957

பாடல்	பாடல் எண்
செய்யதண்	1235
செய்யமேனியீர்	994
செய்யமேனிவெ	16
செய்யருகே	45
செய்யர்செய்ய	296
செருக்குவாய்	1376
செருவடை	1322
செல்வநெடு	868
செல்வமல்கிய	1458
செல்வமல்கு	1071
செறியார்கழலுஞ்	377
செறியார்தரு	171
செறிமுளரித்	42
செற்றவர்	52
செற்றிட்டே	1364
சே	
சேயடைந்த	525
சேவுயருந்	1383
சேற்றெழுந்	650
சோ	
சோலைமிக்க	558
சோலையில்	1134
ஞா	
ஞாலத்துயர்	874
ஞாலத்தை	412
ஞாலமுண்ட	577
ஞாழல்	503
ஞாலம்ஏழு	1015
ஞானத்திரள்	745
த	
தகரமணி	952
தக்கனது	1407
தக்கன்பெரு	916
தக்கன்றன	90
தங்குமோ	624
தங்கையிட	880

பாடல்	பாடல் எண்
தசமுகன்	1378
தடங்கொண்ட	339
தடநிலவிய	206
தடமலிபுக	1314
தடமலிபொ	1090
தடவரைய	1245
தடுக்காலுட	139
தடுக்குஅமருஞ்	676
தடுக்குடைக்	74
தடுக்கையுடக்	183
தட்டிட்டே	1368
தட்டையிடு	752
தணிநீர்	682
தணியார்மதிசெஞ்	408
தணியார்மதியர	166
தண்டமர்	467
தண்ணம்பு	936
தண்ணறு	67
தண்ணார்	1091
தண்புனலும்	536
தமிழினீர்	794
தருக்கினவர	1192
தருக்கின்	1455
தருஞ்சரத	1388
தருவளர்	1094
தரைமுதலு	1331
தரையொடு	207
தலமல்கிய	162
தலைமதி	199
தலையவன்	1231
தலையின்	387
தழல்சேர்	125
தழுக்கொள்	242
தழைமயி	1240
தழையார்	120
தளருங்	942

பாடல்	பாடல் எண்
தளையவிழ்	49
தறிபோலா	1247
தறியார்	358
தனமணி	1246
தா	
தாணுதல்	9
தாதலர்	1130
தாதார்கொன் (ஒத்தூர்)	586
தாதார்கொன் (கயிலை)	738
தாமரைமே	1171
தாயவனு	1219
தாயுநீயே	543
தாரார்கொன்	704
தாரிடுகொன்	429
தார்கொள்	791
தாவியவனு	672
தாழ்ந்தகுழல்	1242
தாறிடு	1100
தி	
திகழ்சிவ	227
திகைநான்	1292
திக்கிற்றே	1363
திங்கட்கே	1361
திங்களம்	66
திங்களுச்சி	531
திண்ணார்	700
திருநீலமலர்	1289
திருமலர்க்	821
திருமாலடிவீழத் (நாகை)	912
திருமாலடிவீழத் (வடுகூர்)	946
திருவார்சிலை	366
திருவிலிச்சில்	1457
திருவொளி	423
திரைகள்	46
திரைபொரு	1197
திரையார்புனலோ	895

பாடல்	பாடல் எண்
திரையார்புனல்	361
தீ	
தீதிலாமலை	1234
தீயராய	550
து	
துஞ்சவரு	481
துஞ்சுநாள்	440
துஞ்சும்போ	541
துடிகளோடு	299
துணியாரு	941
துணிவளர்	470
துணிவுடை	1351
துணையல்	1115
துவராடை	391
துவரும்புரி	940
துவருறுவிரி	1313
துவர்சேர்	686
துளங்குஞ்	498
துளங்குந்	380
துளிவண்தேன்	876
துள்ளுமிரு	989
துறைபல	1275
துறைமல்	1061
துறையவன்	1232
துனியுறு	1273
துன்பந்	983
துன்னலினா	439
துன்னார்	1050
தூ	
தூசுபோர்த்து	599
தூர்த்தனைச்	1043
தூவணநீறு	1466
தெ	
தெங்குநீண்ட	514
தெரிந்திலங்கு	288
தென்றிலரக்	977
தென்னிலங்கை	19
தே	
தேக்குந்	344
தேங்கமழ்	849
தேடிக்காணார்	751
தேமருவார்	1465
தேமாங்கனி	98
தேயநின்றான்	1120
தேரரமணரும்	1012
தேரரமணரை	979
தேரரக்கன்	708
தேரார்தரு	181
தேவராயு	570
தேவாவரனே	1051
தேவியோர்கூறி	79
தேகனத்தார்	1114
தேனமர்தரு	1334
தேனயம்பாடு	1068
தேனார்மத	894
தேனினுமினி	832
தேனுமாயமுது	824
தேனைவென்ற	252
தேன்மலர்	1248
தொ	
தொங்கலு	659
தொடுத்தார்	739
தொடையார்	592
தொண்டர்	409
தொழிலான்	323
தொழுமனத்	980
தொழுவாரி	302
தோ	
தோடணிரு	847
தோடணிம்மலர்	1431
தோடுடையகா	517
தோடுடையசெவி	1

பாடல்	பாடல் எண்
தோடுடையானொரு	1112
தோடுடையான்	663
தோடொர்காதினன்	1025
தோட்டீரே	583
தோலினாலு	617
தோலுடை	47
தோலுநூலு	1430
தோலுந்தம்	1451
தோலொடு	57
தோற்றவன்	1186

ந

பாடல்	பாடல் எண்
நகலார்	680
நகுவெண்	964
நகையார்	1410
நடைமரு	1304
நதியதன்	441
நம்பனை	677
நயர்காழி	414
நரையார்விடை	1443
நலங்கொள்கா	249
நலமலிஞான	1303
நலமலிதரு	212
நலமாகியஞான	370
நலமார்மறை	925
நலமிகுதிரு	231
நலனாயபலி	1287
நலிதருதரை	1332
நல்லகேள்வி	282
நல்லபுனற்	1142
நல்லம்மலர்	192
நல்லாரறஞ்	913
நல்லாரும்	602
நல்லார்நீமேவு	875
நளிர்காழி	381
நறவநிறை	798
நறவமார்	976
நறவார்புகலி	271
நறுநீருகுங்	1447
நறைகொண்ட	656
நறைமலி	220
நற்பதங்கண்	653
நனிவளர்	1191
நன்றாநான்	588
நன்றுடை	1058
நன்றுதீதென்	695
நன்றுநகு	669

நா

பாடல்	பாடல் எண்
நாகத்தணை	923
நாகபணந்	37
நாகமும்வான்	1165
நாகம்வைத்த	20
நாடவல்ல	291
நாணமுடை	675
நாணாதுடை	1067
நாணாரமணர்	785
நாணொடுகூடி	479
நாதனென்	971
நாமருகேள்	58
நாலுங்குலைக்	64
நாளாயபோ	667
நாறவிண்ட	275
நாற்றம்லர்மிசை	1256
நாற்றமலர்மேல்	247
நாற்றமாமலரா	1456
நாற்றமிக்க	552
நானாவித	91

நி

பாடல்	பாடல் எண்
நித்திலன்	1347
நிலனொடு	451
நிழலார்சோலை	245
நிழலார்வயல்	158
நிழலான்மலி	687

பாடல்	பாடல் எண்
நிழலினார்	628
நிறையவன்	1190
நிறைவு	1040
நிறைவெண்கொ	867
நினைப்பெனு	1278
நினைவார்நினை	801
நின்றுணுஞ்சமணும்	413
நின்றுண்சமணர்	774
நின்றுண்சமண்	1034
நின்றுமலர்தூவி	1003
நின்றுமுது	1013
நின்றுலா	1400
நின்னடியே	561
நீ	
நீடலர்கொன்றையொடு (கொடிமாடச்)	1158
நீடலர்கொன்றையொடு (பாதாளீச்சரம்)	1164
நீடலர்சோதி	1080
நீடவல்லநிமிர்	308
நீடவல்லவார்	569
நீடிருஞ்சடை	836
நீடும்புனற்	353
நீண்டசடை	770
நீதிபேணு	1038
நீதியறியாதா	172
நீத்தநெறி	929
நீந்தலாகா	788
நீரகலந்தரு	461
நீரடைந்த	506
நீரார்முடி	769
நீரிடங்கொண்	1082
நீரின்மல்	15
நீரின்மிசை	1149
நீருளான்	826
நீரொடுங்	544
நீரோடு	1398

பாடல்	பாடல் எண்
நீர்பரந்த	3
நீலநெய்த	1075
நீலமாமிடற்	1014
நீறடைந்த	516
நீறணிமேனியனாய்	1139
நீறணிமேனியனீ	1177
நீறாரகல	759
நீறார்திரு	354
நீறுசேர்வ	1448
நீறுடையார்	82
நீறுபூசினீர்	995
நீறுமெய்பூசி	475
நீறேறியதிரு	180
நு	
நுகரார	156
நுணங்குமறை	487
நுண்ணியான்	661
நூ	
நூலடைந்த	515
நெ	
நெடியர்சிறி	943
நெடியானான்	501
நெடியான்நீடா	806
நெடியான்பிரம	773
நெய்தலாம்பல்	278
நெய்தவழ்	56
நெய்யணிமூவி	1146
நெருப்புரு	1266
நெறிநீர்மை	179
நெறியில்வரு	193
நே	
நேருமவர்க்	1463
நொ	
நொந்தசுடலை	758
நோ	
நோதல்செய்	1203

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
நோயும்பிணி	642	பந்தத்தால்	1359
நோய்புல்கு	1272	பந்தமுடைய	800
நோற்றலா	839	பந்தவிடை	1029
ப		பந்தார்விரலு	178
பகடூர்பசி	643	பயிலும்மறை	884
பகலுமிரவும்	490	பரக்கினார்	620
பக்கம்வாழை	1072	பரக்குந்	1054
பங்கமேறு	712	பரக்கும்பெருமை	761
பங்கயங்கண்	285	பரிந்தவன்	1176
படரொளி	1349	பருமாமதகரி	144
படவரவே	1201	பலவிலமிடு	850
படிநோன்பவை	947	பலவும்பய	332
படைப்புந்நிலை	88	பல்லடைந்த	504
படையார்தரு	959	பல்லியல்	1093
படையிலங்கு	24	பல்லிலோடு	551
படையுடைமழுவினன்	1187	பல்வீழ்ந்து	641
பட்டைத்து	873	பவளவண்ணப்	287
பணிந்தவ	1293	பழகுந்தொண்டர்	1037
பணியுடை	73	பழுதிலகட	219
பணிவாயு	452	பறப்பைப்	865
பணைமுலையு	1188	பறிகொடலை	1001
பண்டாழ்	898	பறையின்	187
பண்டேழு	116	பறையுஞ்	486
பண்ணிலாவு	14	பறையுநம்	626
பண்ணினார்மறை	627	பறையும்பழி	153
பண்ணும்பத	111	பற்றியொரு	191
பண்ணுறு	419	பற்றுமாகி	571
பண்பழனக்	647	பணியார்	364
பதைத்தெழு	1223	பண்மலர்வை	1173
பத்தராயினீர்	1039	பன்றிக்கோலம்	1367
பத்தரேத்தும்	711	பன்னீர்மை	639
பத்தரோடு	23	பா	
பத்தர்கணம்	43	பாகமுந்	70
பத்தர்மன்	611	பாங்கிலா	816
பத்திப்பேர்	1365	பாங்கினல்	563
பத்துத்தலையோனைக்	1010	பாங்குநல்ல	274

பாடல்	பாடல் எண்
பாசமறுப்	986
பாடகமெல்	65
பாடலகாக்	1133
பாடலன்முழவும்	59
பாடுடைக்	818
பாடுவாருக்	573
பாதம்பல	499
பாந்தனார்	974
பாராரே	649
பாரார்விடை	403
பாரிதனை	1386
பாரும்விண்	289
பாரோர்தொழ	906
பார்த்தவன்	1220
பார்மலிந்	447
பாலமதி	484
பாலன்நீ	1154
பாலனாம்	822
பாலினானறு	660
பாலுந்நறு	938
பாலுநெய்	295
பாலுந்துறு	163
பாறணி	1229
பானாறு	652
பி	
பிச்சக்குடை	935
பிச்சைக்கே	1360
பிடியதனுரு	1330
பிணிகொளா	297
பிணிகொள்	997
பிணிநீர	635
பிணிபடு	196
பிணியும்	951
பிண்டமறுப்பீர்	985
பிண்டியேன்று	763
பிரமபுரத்	1370
பிரமனுந்	1434
பிறந்தபிறவி	1258
பிறப்பாதி	1440
பிறவியறுப்	982
பிறைகொள்	765
பிறைபெற்ற	1285
பிறையணி	195
பிறையார்சடை	1031
பிறையுடை	51
பிறையுநெடு	944
பிறையும்புன	724
பிறையும்மரவும்முற	352
பிறையுமரவும்புன	298
பின்றாழ்சடை	768
பின்னியதாழ்	85
பின்னுசடை	803
பீ	
பீரடைந்த	521
பீலிம்மயில்	99
பு	
புகழ்மகடுணை	1341
புடைபுல்கு	1277
புண்டரிகத்தவன்	1372
புண்ணியர்பூதி	76
புத்தருகர்	967
புத்தரொடமணர்	1357
புத்தரோடுசமணர்	513
புத்தரோடுபுன்	557
புத்தரோடுபொ	10
புத்தர்கடத்	1468
புந்தியர்	1358
புந்தியொன்றி	27
புயம்பல	860
புரமெரித்	508
புரிகொள்	734
புரிசடை	542

பாடல்	பாடல் எண்
புலனைந்து	1394
புல்கவல்ல	529
புவம்வளி	217
புவிமுதலைம்	1389
புள்வாய்	459
புற்றில்வாழு	22
புனலிலங்	630
புனைதல்	372
புனையழலோ	60
புனையும்விரி	904
பூ	
பூசுரர்சேர்	1375
பூணற்பொறி	241
பூணெடு	428
பூண்டங்கு	61
பூண்டவ்வரை	188
பூதமும்பல்	417
பூதம்பாடப்	614
பூத்தேர்ந்தா	580
பூந்தராய்ப்	1046
பூமகடன்	1391
பூவார்சூழ	345
பூவார்கொன்	250
பூவார்பொய்	780
பூவார்பொற்	1413
பூவார்மலர்	743
பூவியல்புரி	1326
பூவினில்	68
பூவுந்திங்கள்	604
பெ	
பெண்தான்	240
பெண்டிர்	539
பெண்ணாணெ	905
பெண்ணார்	922
பெண்ணினல்	1233
பெண்ணினைப்	810
பெண்ணோர்பாகமு	301
பெயலார்	679
பெரியமேரு	31
பெரியவன்சிறிய	1225
பெரியவன்பெண்	1193
பெருகிய	205
பெருகும்புன	102
பெருக்கப்	259
பெருக்கெண்	1098
பெருந்தடங்	1384
பெருந்தண்சா	1078
பெருமைகட	851
பெற்றமாசு	248
பே	
பேயடைந்த	519
பேயாயின	154
பேய்பலவு	1167
பை	
பைம்மாநா	448
பையாரரவு	257
பையாரும்	593
பையுடைய	1116
பைவாயரவம்	696
பொ	
பொங்கார்	766
பொங்கிவரும்	78
பொங்கிள	476
பொங்குநடை	1460
பொடிகள்பூசித்	1070
பொடிகொளு	733
பொடிபுல்கு	1202
பொடியார்	1288
பொடியுடை	426
பொதியிலா	546
பொந்தின்னிடை	173
பொய்யாமொழி	728

பாடல்	பாடல் எண்
பொய்யாவேத	698
பொரிபடு	1307
பொருகடல்	1325
பொருவாரே	137
பொருளார்	182
பொழிலவன்	1189
பொழிலார்	177
பொறியரவ	1417
பொன்றிகழா	1156
பொன்றிகழ்காவிரி	1206
பொன்றிரண்	831
பொன்னங்	455
பொன்னடி	1377
பொன்னார்	808
பொன்னியல்கொன்றை	1084
பொன்னியல்சீ	1150
பொன்னியறா	54
பொன்னியன்மா	1057
பொன்னெடு	1469
போ	
போகமார்த்த	526
போதார்	779
போதியர்பிண்டிய	1161
போதியாரும்	720
போதுபொன்திகழ்	606
போதும்பொன்	1076
போரார்கட	742
போரார்மத	692
போர்மலி	463
போர்மிகு	655
போழம்பல	491
ம	
மகரத்தாடு	714
மங்கைபங்	998
மங்கையங்கோர்	703
மங்கையோர்கூறு	1128
மசங்கற்சமண்	117
மஞ்சைப்போழ்	744
மஞ்சோங்கு	729
மடைச்சுர	852
மடையில்	239
மணியார்திகழ்	919
மணியார்முது	1007
மண்டான்	719
மண்டையிற்	1216
மண்ணார்முழ	644
மண்ணுதல்	1205
மண்ணோர்	92
மண்புனலன	1210
மண்பொடி	421
மதியால்	888
மதியொன்றிய	383
மத்தக்களிறா	150
மத்தநன்	1159
மத்தமதக்	1144
மத்தம்மலி	161
மத்தாவரை	119
மந்தம்முழவம்	1060
மயங்குமா	576
மயநீர்மை	638
மயிலார்சா	243
மயில்புல்கு	142
மரவஞ்சிலை	101
மரவத்தொடு	147
மருதிடைநட	1312
மருந்தவன்	1185
மருந்தனமுதன்	1438
மருவலர்	209
மருவார்குழ	261
மருவார்மதில்	691
மருவியவல்	1279
மருவியெங்	280

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
மருளுடை	1302	மற்றிணை	1253
மருள்செய்	379	மனமார்தரு	174
மலைபலவளர்	218	மனமுலாமடி	825
மலைபுரிந்த	562	மன்மதனெ	1346
மலைமகடனை	208	மன்னானவ	168
மலைமகண்	1209	மன்னிமாலொ	600
மலைமல்கு	1065	மன்னியவலி	1336
மலையதனாரு	290	மன்னிபூரி	1036
மலையார்சார	1073	மா	
மலையார்தரு	175	மாகந்தோய	605
மலையான்மக	265	மாகரஞ்சேர்	717
மலையார்மாட	1110	மாசடைந்த	524
மலையார்மங்	778	மாசாருடம்	270
மலையான்மகளஞ்ச	93	மாசுமெய்யர்	535
மலையான்மகள்கண	164	மாசூர்வடி	902
மலையினார்	820	மாசேறிய	95
மலையெடுத்த	511	மாடமர்சன	1340
மல்கிய	1170	மாடமல்கு	293
மல்லன்மும்	618	மாடவீதிமன்	697
மழுவாளேந்தி	264	மாடவீதிவரு	1079
மழைநுழை	1305	மாடார்மலர்க்	333
மழையார்சாரல்	1106	மாடேயோ	254
மறக்குமன	1254	மாணாவென்றி	253
மறந்தான்கரு	750	மாண்டார்	324
மறிதிரை	1316	மாதர்மடப்பிடி	1459
மறுத்தவர்	1181	மாதொருபா	1048
மறுமானுரு	1095	மாந்தர்தம்	474
மறைகலந்த	6	மாலாயிரங்	887
மறையவனுலகவன்மதி (திருவிடைமருதூர்)	1311	மாலினுக்கு	443
		மாலினோடு	512
மலையவனுலகவன்மாய (திருக்கடைமுடி)	1200	மாலுமயனும்	84
		மாலும்பிரம	879
மறையவன்மதி (சிவபுரம்)	1352	மாவடைந்த	522
மரையானெடு	966	மாவினுரி	735
மறையின்னி	757	மாறிலவுணர்	1143
மறையுடையாய்	559	மாறிலாமணி	595
மறையுமோது	1453		

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
மாறிலாமல	621	முன்றில்	651
மாறிலாமாதொ	1244	முன்னிற்ப	115
மாறெதிர்	1212	முன்னுயிர்த்	858
மானாரரவு	136	முன்னொருகா	1097
மானிடமார்	465	மூ	
மி		மூத்துவராடை	468
மிக்கார்	585	மூப்பூர்	781
மிளிரும்மர	899	மூரல்வெண்	619
மிளிரும்மணி	143	மூரன்முறு	190
மின்னியலு	1426	மூவராய	284
மின்னியல்செஞ்	1163	மூவருமாகி	449
மீ		மூவாவண்	793
மீத்திகழண்	1055	மெ	
மு		மெய்த்தன்னுறும்	167
முகில்சேர்	129	மெய்த்துலாவு	315
முடிகையி	50	மெய்த்தாறு	1405
முடிகொள்	767	மெய்யராகி	540
முடியார்தரு	169	மெய்யின்மாசர்	314
முடியார்மன்	777	மே	
முட்டாமுது	148	மேகத்திடி	145
முதிருறு	201	மேலதுநான்	478
முதிர்சடை	1353	மேலோடிவிசும்	1402
முத்தியர்	77	மேனியிற்	1414
முந்திநின்ற	283	மேனின்றிழி	892
முந்தியிவ்வையம்	1088	மை	
முந்நீர்சூழ்	736	மைசேர்	705
முருகுவிரி	950	மைச்செறி	841
முலைத்தட	1251	மைத்தகுமேனி	1087
முலையாழ்கெழுவ	684	மைந்தணி	1127
முழங்கொலி	1415	மைம்மரு	34
முளிவெள்	792	மைம்மலர்க்	834
முள்ளின்மே	1282	மைம்மாநீல	1074
முற்றலாமையிள	2	மையாடிய	152
முற்றாததொர்	346	மையாரொண்	866
முற்றுஞ்சடை	948	மையார்நிற	334
முன்பனை	1298	மையினார்மலர்	662

பாடல்	பாடல் எண்
மொ	
மொய்சேர்	1103
மொய்த்து	579
மொய்யார்	1008
மொய்வல்ல	715
மொழிசூழ்	907
வ	
வசையறுமலர்	238
வசையறுவலி	211
வசைவிற்கொ	135
வஞ்சமனத்	671
வடந்திகழ்	459
வடிகொள்வாவி	1111
வடிவுடைமலை	1354
வணங்கிம்	357
வண்டணைகொன்	812
வண்டரங்க	645
வண்டர்மும்	629
வண்டார்	87
வண்டுவைகு	33
வண்ணநன்	1182
வண்ணமல	934
வண்ணவெண்	1429
வந்தமணலா	670
வந்திருக்கும்	749
வந்தியோடு	721
வம்பார்குன்	1069
வம்மினடி	110
வயமுண்டவ	94
வரந்திகழு	1428
வரந்தையான்	658
வரமுன்னி	401
வரமொன்றி	388
வரிந்தவெஞ்	1295
வரியாயமல	1290
வரியார்	762
வரியுறு	197
வரிவளரவி	842
வருநலம்	1308
வருமாந்	869
வரைநிரிதர	1350
வரைபொருதி	200
வரையார்சங்	263
வரையார்திர	783
வரையொன்ற	389
வலங்கொள்	911
வலமார்படை	321
வலியின்மதி	318
வல்லிநுண்	815
வல்லியந்தோலு	1140
வழங்குதிங்கள்	574
வளமென	1310
வளம்பட்ட	138
வளர்பூங்	1083
வளைக்குமெயிற்றின்	1444
வற்றாநதி	1049
வன்புற்றிள	343
வன்றிறல்	1299
வன்னிகொன்றை	547
வா	
வாசங்கமழ்காழி	881
வாசங்கமழ்மாமலர்	342
வாசம்மலர்	920
வாசிதீர	992
வாடல்வெண்டலைசூடி	607
வாடாவிரி	330
வாணிலாச்	973
வாணிலாமதி	1433
வாதுசெய்	840
வாதைப்படு	883
வாய்ந்தவல்ல	1296
வாரார்கொங் (குடந்தை)	776

பாடல்	பாடல் எண்
வாரார்கொங் (செம்பொன்)	262
வாரிமாகம்	572
வாருறுகொங்	1155
வாருறுமென்	1462
வாருறுவன	1174
வாரேற்ற	657
வார்மலி	1467
வானமர்வீரர	466
வானத்துயர்	754
வானமர்மதிபுல்கு	1297
வானமர்மதியொடு	1180
வானார்திங்கள்	268
வானார்சோதி	787
வானிற்பொலி	141
வி	
விடங்கொணா	556
விடத்தார்	356
விடலேறு	1395
விடைசேர்	328
விடைத்தவல் (பாம்புரம்)	444
விடைத்தவல் (ஐயாறு)	1300
விடையமர்ந்து	549
விடையார்கொடியுடை	157
விடையான்	1009
விடையினர்	1318
விடையுமேறு	1454
விண்டமாம்	622
விண்டலர்பொழி	1371
விண்டலர்மத்த	1169
விண்டானதிர	805
விண்ணவருக்	1096
விண்ணவர்தம்	1301
விண்ணார்திங்கட் (கானூர்)	790
விண்ணார்திங்கள் (பாற்றுறை)	603
விண்ணியன்மா	425
விண்ணியல்வி	819
விண்ணிழி	44
விண்ணுலகாள்	1252
விண்ணுலாமதியஞ்	835
விண்ணுறு	1461
விண்ணோர்	961
விண்மகிழ்ந்	4
விதியாய்	316
வியரிலங்கு	8
விரவிநீறுமெய்	1452
விரிதருபுவி	1315
விரியார்	1028
விருதுபகரு	741
விருத்தனாகிப்	564
விரையாலு	1286
விலங்கலொன்று (சோபுரம்)	555
விலங்கலொன்றே (கழுமலம்)	861
வில்லியநுண்	1129
விழவாரொ	764
விழுநீர்	327
விழையாருள்	454
விளங்கும்பி	140
விளங்கொண்	1445
வீ	
வீறுநன்	1211
வெ	
வெங்கணானை	548
வெங்கள்விம்முவெறி	272
வெஞ்சுடராடு	472
வெஞ்சுடர்த்	532
வெங்சொற்ற	568
வெடிகொள்	244
வெண்கோவ	340
வெண்செநெல்	1281
வெண்டலைமா	83
வெண்ணிறத்த	277
வெந்தநீற்றி	610

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
வெந்தலாய	707	வெற்றரையுழல்	1183
வெந்தவெண்ணீறணி	1152	வே	
வெந்தவெண்பொடி	1427	வேதத்தொலி	96
வெந்துவர்	1131	வேதமோதி	722
வெந்துறு	1136	வேதமோர்	1132
வெம்புந்திய	107	வேதர்வேத	1450
வெம்மைமிகு	1408	வேந்தாகி	1399
வெய்யதண்	1063	வேயுயர்	1064
வெய்யவினைநீ	987	வேய்முத்	732
வெரிநீர்கொ	903	வேரிமிகு	1406
வெவ்வமேனி	608	வேருலாம்	827
வெள்ளத்தா	631	வேர்வந்து	106
வெள்ளமது	1125	வேழவெண்	567
வெள்ளமார்ந்து	18	வேனல்விம்மு	273
வெள்ளமெல்	1117	வை	
வெறியார்மலர்த்	335	வையகநீர்	1056

* * * * * * * * * *

இரண்டாம் திருமுறை

பாட்டு முதற்குறிப்பகராதி

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
அ		அரவம்பூண்	1541
அக்கரஞ்சேர்	2267	அரவம்வீக்கிய	2457
அக்கரவ்வணி	2314	அரவார்கரவன்	1646
அக்கிருந்த	1917	அரவார்ந்ததிரு	2097
அஞ்சனமணி	2674	அரவினொடாமை	2201
அஞ்சியல்லல்	2111	அரவினனை	2242
அஞ்சுமொன்றி	2564	அருஞானம்வல்	1687
அடலுளேறு	2749	அருத்தமதா	2183
அடலெருது	2417	அருந்தானை	1582
அடிபுல்குபைங்	2065	அருப்பினார்	1738
அடிமுடிமால்	2175	அரையார்கலை	1649
அடியார்ந்தபை	2093	அரையிலாருங்	2775
அடுத்தடுத்து	2529	அலைசேர்புன	1704
அடையும்வல்	2477	அலைமல்குதன்	2082
அட்டகாலன்	2744	அலையாரும்புன	2068
அட்டான	1886	அலையார்புனல்	1681
அணிகொண்ட	2431	அல்லலின்றி	2366
அண்ணாமலை	1885	அல்லல்மிக்க	2540
அத்தியினீருரி	1934	அல்லல்வாழ்க்	2523
அந்தணர்காள	1840	அல்லிநீள்வயல்	2506
அந்தண்பூங்	1600	அல்லிமலர்மே	2164
அந்தணல்லார்	2790	அல்லியமலர்	2675
அந்தன்மாதவி	2045	அழலதோம்பிய	2624
அம்பின்நேர்த	2018	அழல்மல்கு	2072
அம்பின்நேர்வி	2029	அழிமல்குபூம்	2050
அம்மானையருந்	1894	அறத்தாலுயிர்	1666
அம்மான்சேர்	2279	அறப்பள்ளி	1887
அயிலாருமம்	1634	அறிவிலாதவன்	2625
அரக்கன்முடி	2109	அறிவில்சமணு	1664
அரவமார்த்தன்	2745	அறையார்கடல்	2166
அரவமுந்நீர்	2710	அறையார்கழலன்	1705
அரவமாட்டுவர்	2584	அறையார்கழ	1657

பாடல்	பாடல் எண்
அறையும்பூம்	2432
அற்றமறையாவ	1806
அனமிகுசெல்	2386
அனற்படுதடக்	1791
அன்பாலடிகை	1854
அன்றவான்	2438
அன்னங்கன்னி	2718
அன்னந்தாவும்	2788
அன்னமன்னந்	2772
அன்னமென்	2572
ஆ	
ஆகநல்லாரமு	2784
ஆகம்மழகாய	1647
ஆக்கமர்சீரூர்	2266
ஆடலரவார்	1829
ஆடலமர்ந்தா	1927
ஆடலரவசைத்	1949
ஆடலிலையமு	2192
ஆடற்புரியுஜ	2117
ஆடன்மாமதி	2436
ஆடைதவிர்த்	2209
ஆடையொழித்	2254
ஆணும்பெண்	2720
ஆதியடியை	1803
ஆதியாரந்த	1748
ஆரூர்தில்லை	1884
ஆலமுண்டமு	1566
ஆலைசேர்தண்	2350
ஆழ்ந்துங்காணார்	2711
ஆறுசூடியடை	2753
ஆறுபட்டபுன்	2558
ஆறைவடமா	1888
ஆற்றலடல்	2188
ஆற்றானே	1628
ஆனிலங்கிள	1573

பாடல்	பாடல் எண்
இ	
இடங்கொள்மா	2644
இடமயிலன்ன	2411
இத்தேரேக	2153
இந்துவந்தெழு	2025
இரக்கமில்குண	1815
இரக்கமுடை	2264
இரக்கமொன்	1565
இராவணன்	2185
இருக்குநீள்	1880
இருந்தவன்	2569
இரைமண்டிச்	2353
இலங்குபூண்	2579
இலங்கைக்கிறை	1662
இலங்கையரி	1793
இலங்கைவேந்	2765
இலவஞாழலு	2662
இலையினார்	2303
இழையார்ந்த	2096
இளிபடுமின்	2202
இறைநின்றி	2338
இறைவனமர்	2278
இறைவனை	2376
இன்றுநன்று	2539
ஈ	
ஈசனேறமர்	2468
ஈடலிடபமிசை	2337
ஈரமேதுமில	1520
ஈரவார்சடை	2443
ஈர்க்குநீர்	2776
உ	
உகலியாழ்கட	1731
உடுத்ததுவும்	2293
உடைநவின்றார்	2701
உடையிலாது	2035
உடையிலார்	1904

பாடல்	பாடல் எண்
உண்டாய்	2124
உயர்ந்தபோதி	2734
உயர்ந்தவனுரு	1827
உய்யவேண்டில்	2721
உய்யுங்காரண	2591
உரக்கடல்விட	1837
உரங்கெடுப்ப	1560
உரமனுஞ்	1489
உரவுநீர்ச்சடை	2447
உரிஞ்சாய	1980
உரிந்தகூறை	2789
உரிமையுடை	2198
உருகுவாருள்	2652
உருவரைகின்ற	2406
உருவளர்	2390
உருவார்ந்த	2048
உரைசெய்	1532
உரையினில்	2399
உரையும்பாட்	2556
உழுதுமாநிலத்	1772
உளங்கொள்	2554
உள்ளதன்	2322
உள்ளத்தீரே	2552
உள்ளமிக்கார்	2706
உறவியும்	2196
உறைவள	2404
ஊ	
ஊத்தைவாய்ச்	1882
ஊராருவரிச்	2103
ஊரிடை	2401
ஊர்திரை	1974
ஊர்மதியை	2270
ஊழியந்தத்தி	2577
ஊழியாய	2112
ஊழியானவை	2517
ஊழியூழியுணர்	2707
ஊனடைஇன்	2400
ஊனமர்வெண்	2217
ஊனேறுவேலி	2426
ஊன்தோயும்	2087
எ	
எங்குமாகி	1529
எங்குமேது	2586
எங்கேனு	1900
எடுத்தவல்லரக்	1760
எடுத்தானை	1641
எண்டிசைபா	2370
எண்ணானை	1640
எண்ணிலா	2482
எண்ணியீரமு	2487
எண்ணுமொ	1833
எந்தையிரும்	1861
எந்தையிவ	2158
எந்தையீச	2442
எந்தைபெம்மா	2746
எம்பிரான்	1895
எம்மான்சேர்	2277
எயிலதுஅட்	2184
எய்தவொண்ணா	2800
எய்ப்பானார்க்	1636
எரிகிளர் மதியொடு	2673
எரித்தமயிர்	1902
எரியார்கணை	1695
எரியார்சடை	1663
எரியொருவண்	2409
எளியாயரியாய்	1691
எறியார்பூங்	1638
எற்றுதெண்டிரை	1471
என்பினார்	2304
என்பினார்கழி	2331
என்பொடு	2389
என்பொனென்	1755

பாடல்	பாடல் எண்
என்போடரவ	2150
என்றன்னுள	1703
என்னபுண்ணியம்	2616
ஏ	
ஏடுமலி	1819
ஏணழிந்த	2545
ஏதமிக்க	2557
ஏதனைஏத	1603
ஏந்துதிணி	2241
ஏய்ந்தசீரெழில்	1633
ஏவமிக்க	2544
ஏவிலாருஞ்	2795
ஏவும்படை	1651
ஏழுமூன்று	2493
ஏழைமார்	1877
ஏழைவெண்	2456
ஏறுபேணிய	2498
ஏறுமால்	2330
ஏனமருப்பினோ	2678
ஏனையோர்புக	1883
ஒ	
ஒப்பரியபூம்	2058
ஒருக்கும்மனத்	1858
ஒருத்தியுமை	1801
ஒருவரால்	2621
ஒலிநீர்சடை	1658
ஒளிகொள்மேனி	2129
ஒளிகொள்வாள்	2655
ஒளிரிளம்பிறை	2313
ஒளிரும்பிறை	1650
ஒளிர்தருகின்ற	2416
ஒன்றொன்றொ	2424
ஓ	
ஓடுந்நதியும்	1700
ஓதிமண்டலத்	2357
ஓதியாரண	2009

பாடல்	பாடல் எண்
ஓதியாருமறிவா	1530
ஓதியெல்லா	2297
ஓயாத அரக்க	1727
க	
கங்குல்கொண்	2530
கங்கைதிங்கள்	2750
கங்கைசேர்	2348
கங்கைநீர்சடை	2499
கங்கைபொங்கு	2567
கடலேறிய	1678
கடல்வரை	2387
கடிகொள்கூவி	1734
கடிபடுகூவிள	2216
கடிபடுகொன்	2676
கடியஏற்றினர்	2642
கடுக்கள்தின்று	2712
கடுத்தவாரைக்	1771
கடுத்தானே	1630
கடுத்துவந்த	2754
கடுத்துவருங்	1937
கடுத்துவல்லரக்	1826
கடுவாய்மலி	1709
கட்டர்குண்	1762
கட்டலர்ந்த	1909
கட்டிணைபுதுமலர்	2677
கட்டுவட	1810
கணிகையொர்	2415
கணிச்சியம்ப	2534
கண்கள்காண்	2522
கண்காட்டுநுத	1982
கண்டார்நா	2144
கண்ணன்கடி	1652
கண்ணனவண்	1521
கண்ணாருங்காழி	1644
கண்ணார்நுத	1965
கண்ணியையலே	2119

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
கண்ணுதலான்	1899	கலைவாழும்	2092
கண்ணுமுன்	2290	கல்லால்நிழல்மேய	1722
கண்ணுலாவிய	2588	கல்லால்நிழல்மேவி	1962
கண்பாவுவே	1966	கல்லின்மணி	2080
கந்தநாறும்	2768	கல்லித்தகத்தா	2255
கந்தமரவுந்து	1809	கழலார்பூம்	2094
கந்தமாமலர்ச்	1486	கழிகாடலனே	1679
கந்தமார்பொழில்காழியுள்	1557	கழியார்சீரோத	1589
கந்தமார்பொழில்சூழ்ந்த	1763	கழியார்பதிகா	1698
கந்தமார்பொழில்காழி	1774	கழியுலாங்	2312
கந்தமுத்தக்	1550	கழியொடுலவு	2560
கரவலாளர்	2551	களங்குளிர்ந்	2536
கரவிடைமனத்	1737	களங்கொள்	2639
கரியகண்டத்தர்	2640	களிபுல்கு	2054
கரியமாலும்	2766	களையும்வல்	1558
கரியானும்	1903	கள்ளநெஞ்ச	2566
கரியானோடு	2132	கள்ளமதித்த	2191
கரியின்மாமுக	2509	கள்ளார்செங்	1990
கருகமுந்நீர்	2702	கள்ளார்ந்த	1928
கருகுமுடலார்	2165	கறுத்தநஞ்	2563
கருங்குழி	1796	கறைகொள்	2619
கருங்கையானை	1571	கறையணிவே	2167
கருதிவந்	2034	கறையார்மணி	1964
கருத்தினாலோர்	2531	கறையினார்	2452
கருத்துடைய	2269	கற்றதுறப்பணி	2194
கருந்தடங்கண்	2026	கற்றமணருற்	1784
கரையுலாங்	1502	கற்றுமுற்றி	2538
கலங்கொள்	1869	கனத்தார்	1675
கலமார்கடல்சூ	1730	பாடல்	பாடல் எண்
கலமார்கடல்	1654	கனிதனைக்கனி	1614
கலமல்குதண்	2221	கனைகொளிரு	2553
கலவமா மயிலா	2032	கன்னெடிய	1924
கலியின்வல்ல	1567	கா	
கலைமான்	1724	காசக்கடலில்	1648
கலையானே	1627	காச்சிலாத	1559
கலையான்	1701		

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
காண இனியது	2181	குண்டர்தம்	2603
காதமரும்	2088	குண்டர்வண்	2440
காதின்மிளி	2143	குண்டிகைக்	2187
காயச்செவ்வி	2135	குத்தங்குடி	1893
காய்ந்ததுவு	2294	குயினினோர்	2623
காய்ந்தானைக்	1618	குரவங்குருக்க	1864
காய்ந்துவரு	2273	குரவதாண்	1531
காரானைக்கடி	1605	குருண்டவார்	2615
காரினார்கொள்	1747	குருளையெய்தி	2505
காருலாங்கட	1494	குரையார்	1725
காரைகள்	2377	குலமலர்	2418
கார்கொள்மே	2514	குலவராகக்	2719
கார்மருவுபூங்	2086	குலவுகோலத்	2600
காலகாலா	1537	குலவுபாரிடம்	1753
காலனைக்கழ	2036	குலாவுதிங்	1891
காலாலுயிர்	1712	குளிருஞ்சடை	2140
காலினோடு	2525	குளிர்தருகங்	2380
காலெடுத்ததி	1499	குறங்காட்டு	1915
கால்விளங்	2316	குறவர்கொல்	2760
காவிமலர்	2233	குறிகொளாழி	2559
காழிநகரான்	1872	குறியமாணுரு	2504
காளமேகந்	2763	குறைநிரம்பா	2083
கானமர்சோலை	1981	குறைவதாய	2741
கானயங்கிய	1504	குறைவிலார்	1754
கானலுலாவி	2420	குற்றமில்லார்	2695
கானார்களிற்	2251	குன்றடுத்தநன்	2022
கானின்றநிர	2118	குன்றவார்சிலை	2004
கி		குன்றானைக்	1587
கிண்ணவண்	1482	குன்றியூர்குட	2622
கீ		குன்றேயமர்	1715
கீண்டுபுக்கார்	2798	குன்றேய்க்கு	1593
கீதத்தைமிகப்	1932	கூ	
கு		கூசநோக்கர்	2761
குணங்கள்	2585	கூரம்பதுவிலர்	2168
குண்டமண்டு	1751	கூர்விலங்குந்	2694
குண்டருங்	1621	கூறுபெண்	1526

பாடல்	பாடல் எண்
கூனமரும்	2084
கூனற்றிங்கட்	2725
கூனிளம்பிறை	2454
கே	
கேடுமூப்புச்	2555
கை	
கைம்மாவின்	1940
கையரிவையர்	2043
கையார்சோறு	2155
கையால்தொ	2115
கையிலங்கிய	2321
கையிலங்கு	1540
கையிலார்ந்த	2051
கையிலுண்டு	2473
கையிலுண்டுழ	1534
கையில்எழு	2248
கையினிலுண்டு	2375
கொ	
கொக்கரவர்	1822
கொங்கரவப்	2786
கொங்கார்ந்த	2099
கொங்குசேர்ந்	1920
கொங்குலாமலர்	2019
கொச்சைவயம்	2232
கொடிகொளேற்	1759
கொத்தலர்	2397
கொத்திரைத்த	1498
கொந்துலாவிய	2610
கொந்தணவும்	2091
கொந்தணிகுளிர்	2549
கொந்தணிபொ	2441
கொம்பன்ன	2425
கொம்பார்பூஞ்	2244
கொய்யணிம்மலர்	2685
கொலையார்கரி	1711
கொல்லைவென்	1484

பாடல்	பாடல் எண்
கொள்ளிநக்க	2781
கோ	
கோங்கன்ன	1910
கோங்குசெண்பகம்	2663
கோட்டுத்த	1497
கோடலொடுகூன்	1783
கோடலொடு	1831
கோடல்கோங்	1524
கோடுதேன்சொரி	1661
கோடெலாநின்ற	1483
கோணல்வெண்	2657
கோணாகப்பே	1942
கோலத்தார்	1963
கோலமாகரி	2573
கோலமாமயி	2020
கோள்வித்	2130
கோனென்று	1870
ச	
சக்கரமாற்	1988
சங்கந்தரள	1863
சங்கவெண்கு	2510
சங்குசெம்பவ	1472
சங்குலாவு	2565
சடங்கொள்	2484
சடையமர்	2213
சடையாயெனு	1655
சடையானைச்	1612
சடையானைத்த	1594
சடையானைத்	1604
சடையிடைபுக்	2378
சண்பைபிரம	2230
சதுரம்மறை	1862
சந்தவார்குழ	1564
சந்துயர்ந்தெழு	1503
சலந்தாங்கு	2056
சலமல்குசெ	2075

பாடல்	பாடல் எண்
சந்றேயுந்	1643
சா	
சாகையாயிர	2486
சாக்கியப்படு	2451
பாடல்	பாடல் எண்
சாதல்புரி	1834
சாநாளின்	1898
சாந்தம்வெண்	2769
சாந்தராகநீறணி	1911
சாமவரை	1944
சாமவேத	2471
சாயணன்	2413
சாவாயும்	1588
சி	
சித்தந்தன்னடி	2476
சித்தவடிவிலர்	2169
சிந்தாயெனு	1656
சிந்தைதிரு	1828
சிந்தையிடை	2113
சிரமுதல்ல	2299
சிலையதுவெஞ்	1901
சிலையுய்த்த	2077
சிறவார்	1721
சின்போர்வை	2079
சீ	
சீரணங்குற	2472
சீரார்கழலே	1852
சீரார்சிரபுரமுங்	2228
சீரினார்மணியும்	1569
சீருடையாரடி	2197
சீர்கொண்ட	2061
சீர்கொள்மா	2439
சீறுலாவிய	2614
சு	
சுடப்பொடிந்	2535

பாடல்	பாடல் எண்
சுடுகாடுமேவி	2347
சுண்ணத்தர்	2433
சுண்ணநீறணி	2484
சுரும்புசேர்	2598
சுலவுஞ்சடை	1702
சுழித்தவார்	2479
சுழியிலங்கு	2285
சுறவக்கொடி	1713
சுற்றமொடு	1797
சுற்றலாநற்	2282
சுற்றார்ந்தடி	1856
சூ	
சூடகமுன்	2412
சூடல்வெண்பிறை	2679
சூடும்பிறைச்	1961
சூலஞ்சேர்	2063
சூலமுண்டு	1514
சூலமேந்தி	1539
செ	
செங்கட்பெயர்	1714
செங்கண்மாலொடு	2645
செங்கயல்	2041
செடிகொள்நோ்	1544
செடிகொள்	2329
செடியாய	1938
செடியாரும்	1632
செந்தமிழ்	1785
செந்துவராடை	2300
செந்நெலங்கழ	1470
செப்பானமென்	1585
செப்பிளமுலை	2394
செம்பினாரு	1515
செம்பபொனார்	2659
செய்யதாமரை	2012
செழுந்தண்	2449
செழுமலிய	2231

பாடல்	பாடல் எண்
செறுத்ததுவுந்	2298
செற்றஅரக்	2342
சே	
சேடுலாவிய	2608
சேமவன்மதில்	1473
சேர்த்தானே	1629
சேலின்தேரன	2007
சொ	
சொல்லானைச்	1607
சொல்லானைத்	1642
சொற்றரும்	2319
சோ	
சோதியை	1613
சோறுகூறை	2520
ஞா	
ஞாலம்புகழ்	1970
ஞாலமல்குந்	2301
ஞாலமுன்	1577
ஞானமுணர்	2123
த	
தகைமலி	2383
தக்கனார்தலை	2527
தக்கனார்பெரு	2309
தக்கன்வேள்வியை	2460
தக்கன்வேள்வி	2796
தக்கில்வந்த	1509
தடுக்குடுத்து	2799
தடுமாறுவல்	1683
தட்டிடுக்கி	2767
தட்டொடு	2548
தண்டுத்தாளமு	2491
தண்ணந்தராய்	2227
தண்ணாவரக்க	1978
தண்புனலோங்	1611
தண்புனல்நீள்	2205
தண்பொழில்	1992

பாடல்	பாடல் எண்
தண்மதியும்	1987
தண்முத்தரும்	2126
தன்வயல்	1959
தந்தத்திந்தத்	1516
தந்தைதாய்	2332
தந்தையார்	2325
தம்பலம்பறி	2021
தரித்தமறை	2271
தருவுயர்ந்த	2363
தரைத்தேவர்	2260
தலைதானது	1669
தலைவான்	2238
தவந்தான்	1670
தவர்கொண்ட	1697
தவளவெண்	1496
தழல்தாமரை	1674
தழைகொள்	2758
தளரிளவளரென	2670
தளரிளங்	2469
தனமலிபுகழ்	2604
தனம்வரு	2405
தனைக்கணி	2212
தன்மையாரு	1525
தன்னடைந்	1905
தா	
தாமென்று	1896
தாயானே	1626
தாளாலரக்கன்	1946
தானலம்புரை	1999
தி	
திகழுந்திருமா	1699
திகழ்மாடமலி	2274
திக்குலாம்	1501
திங்களொடரு	2680
திரியுமூன்று	2794
திருத்திகழ்	1808

பாடல்	பாடல் எண்
திருந்தமதி	2234
திருந்தலார்	2618
திருமகள்கா	2219
திருமருமார்	2208
திருவளருங்	2257
திருவார்தரு	1717
திரையார்ந்த	2066
திறங்கொண்ட	1933
தீ	
தீயினார்திகழ்	2306
தீயுறவாய	2402
தீயோம்பு	2354
தீர்த்தநீர்வந்	1488
தீவிரியக்	2204
து	
துக்கமிக்க	2541
துங்கவானவர்	1878
துணிநீலவண்	1659
துணிமல்கு	2060
துணைநன்	1860
துணையாக	1689
துயராயின	1859
துலங்குவெண்	2687
துவராடையர்	1850
துவருறுகின்ற	2419
துளிமண்டி	2421
துறக்குமா	2532
துன்பாய	1969
துன்பானைத்	1586
துன்றுவார்	2609
துன்றுவார்சடை	2653
துன்னஆடை	2445
துன்னங்கொ	2292
துன்னம்பெய்	1939
துன்னுகடற்	2190
துன்னுகுழல்	1814
தூ	
தூசார்ந்த	2100
தூசுதானரைத்	2589
தூநயங்கொள்	2284
தூயவிடை	2344
தூயவெயில்	2122
தூயானைத்தூ	1597
தூவியஞ்சிறை	2044
தெ	
தெரிந்தவடியார்	2160
தெரிந்தது	2296
தெரிந்தவன்	1563
தெற்றலாகிய	1554
தென்சொல்	2470
தென்றல்	1546
தென்னிலங்	2634
தே	
தேசுகுன்றாத்	2120
தேடித்தா	2483
தேய்ந்துமலி	1954
தேவருமமரர்	2318
தேவர்தான	2508
தேவர்திங்க	1769
தேவாசிறியோம்	2157
தேனமர்பொழி	2398
தேனுமாயமு	1574
தேனுலாமலர்	1562
தேனுற்றநறு	1487
தேனையேறு	1518
தை	
தையலாளொரு	1929
தையலோர்	1950
தொ	
தொடலறிய	1913
தொண்டரஞ்சு	2703
தொண்டர்தண்	2466

பாடல்	பாடல் எண்
தொண்டர்வந்	2008
தொண்டெலா	1764
தொலைவிலாத	2797
தொல்லையூழிப்	1523
தொல்லைவல்	2480
தொழலார்	1853
தொழுமாறு	1677
தொன்னீற்	2226
தோ	
தோடார்மலர்	1857
தோடிலங்கும்	2697
தோடுசெவிக்	2171
தோடுடையார்	2193
தோடொருகா	2381
தோளின்மே	2016
ந	
நகுவாய்மலர்	2121
நகுவான்	1723
நச்சரவாட்டி	2170
நச்சுத்தொழு	1855
நச்சிநீர்பிறன்	2521
நஞ்சணி	2392
நஞ்சுகண்டத்	2739
நடம் மதாடிய	2513
நடநண்ணி	1692
நட்டத்தோடு	2743
நண்ணியொர்	1811
நம்பனார்நல	2650
நம்பொருள்	2518
நம்மானமாற்றி	1581
நரையார்வந்து	2127
நலங்கொள்பூண்	2496
நலங்கொள்முத்	2102
நலச்சங்க	2059
நலநாராணன்	1696
நலந்தருபுனற்	1807

பாடல்	பாடல் எண்
நலந்தானவன்	1668
நல்குரவுமின்	1781
நல்லபோதி	2733
நல்லராற்ற	2631
நல்லார்பயில்	1851
நல்லானை	1580
நளிரும்புனற்	2069
நளிரும்மலர்க்	1846
நளிர்பூந்திரை	2101
நறவங்கமழ்	2156
நறவமல்லிகை	2665
நறவார்தலையி	1682
நறைவளர்	2214
நற்றாமரைமலர்	1979
நன்மையானர	1925
நன்றாங்கிசை	2247
நன்றியொன்று	2289
நன்னெஞ்சே	1897
நா	
நாகந்தான்	2459
நாகம்பூணேற	1598
நாசமாம்	1756
நாடினார்மணி	1750
நாடெலா	1995
நாட்டம்பொ	2246
நாட்பலவுஞ்	2235
நாதன்நம்மை	2125
நாமருவுப்புன்	1926
நாவார்ந்த	2052
நாறுகூவிளநா	1875
நாறுகூவிளம	2512
நி	
நிச்சலேது	1744
நிணங்கவரும்	2085
நிணங்குடர்	2326
நித்தலுந்நிய	1873

பாடல்	பாடல் எண்
நிலந்தண்ணீரோடு	2152
நிலநீரொடா	2064
நிலவும்புன	1645
நிலையார்ந்த	2355
நிலைவெறுத்த	2526
நிறவுருவொன்	2385
நிறைவில்	1843
நின்றடர்த்திடு	2011
நின்றநெடு	1838
நின்றமதில்	2275
நின்றுணுஞ்	2668
நின்றுதுய்ப்பவர்	1740
நின்றுமெய்ந்	2027
நீ	
நீடல்கோட	2038
நீடல்மேவு	1513
நீடுமலரும்	2159
நீணமார்முரு	2046
நீண்டவார்	2006
நீதியர்நெடுந்	1825
நீதியார்நினைந்	1765
நீதியால்வாழ்	2327
நீநாளும்நன்	1906
நீராரவார்சடை	1918
நீரார்ந்தசெஞ் . . . நிறை	2049
நீரார்ந்தசெஞ் . . . நெற்றி	2071
நீரானேநீள்	1623
நீரானைநிறை	1616
நீரினாற்கடர்	2602
நீரினார்வரை	2042
நீருலாவிய	2606
நீருளாரும்	2777
நீருளார்கயல்	2015
நீர்கொண்ட	2349
நீர்கொள்நீள்	2597
நீலஞ்சேர்	2352
நீலநன்மா	2367
நீலமாமணிநித்	2667
நீலமாமணிமிட	2448
நீலமார்தரு	2648
நீலநெய்தல்நீ	1549
நீலவடிவர்	2141
நீறார்தருமேனி	1845
நீறுபூசிநிலத்	2708
நீற்றானைநீள்	1601
நீற்றேதுதைந்	2239
நு	
நுணங்குநூ	2450
நுண்ணியதாய்	2455
நெ	
நெஞ்சமிது	1823
நெஞ்சார	2427
நெடிந்தாய	2057
நெடியமால்	2333
நெடியாய்	1690
நெடியானொ	1609
நெடியானொடு	1849
நெடியானோட	1609
நெண்பயங்கு	1752
நெதிபடுமெய்	2414
நெதியமென்னு	2587
நெதியானை	1584
நெறிக்கொள்	2481
நெற்குன்றம்	1892
நே	
நேமியானும்	2722
நேரியனாகு	2410
நொ	
நொச்சியே	1591
நொடியோரா	2488
நொம்பைந்து	1916

பாடல்	பாடல் எண்
ப	
பக்கநுந்த	1495
பங்கயம்மலர்ச்	2649
பங்கயம்மலர்ப்	1768
பஞ்சிநுண்	2489
பஞ்சின்மெல்	2031
படஅரவாடு	2369
படங்கொள்	2755
படர்செம்பவ	1865
படர்தருஞ்	2320
படைகொள்	2550
பட்டம்பானி	2464
பட்டைநற்	1556
பணங்கொளா	1570
பண்டமரர்	1953
பண்டலை	1874
பண்டாலின்	1606
பண்டுசெய்த	2542
பண்டுநால்	2633
பண்டுநான்	2478
பண்ணவண்	2467
பண்ணியாழ்	2023
பண்ணியாள்	1732
பண்ணிலாவிய	2356
பண்ணிற்பொலிந்த	2672
பண்ணினார்படி	1770
பண்ணினல்ல	1527
பண்ணினோர்	1993
பண்ணொளி	1922
பண்ணொன்ற	1935
பண்மொய்த்த	1989
பதிதானிடு	1667
பத்திரட்டி	2732
பத்துத்தலையோ	1967
பந்தார்விரன்	2245
பந்துலாவிரற்	2658
பரசுதரித்	2174
பரசுபாணியை	2582
பரந்தது	1805
பரந்தோங்கு	2055
பரப்புறு	1782
பரவக்கெடும்	1841
பரவிவானவர்	2005
பரவுவாரை	2490
பரிதியிலங்கும்	2106
பரியமாசுண	2502
பருக்கையானை	2561
பருத்துருவ	1816
பருமராமொடு	2001
பருவத்தில்	2422
பலகாலங்கள்	1867
பலபலவேட	2396
பலரும்பரவப்	1660
பலவுநீள்	2651
பலிகெழு	2206
பலிதிரிந்து	1535
பல்லியங்கு	2283
பல்லார்தலை	2148
பல்லிதழ்	2334
பல்லிலோடுகை	2458
பவனமாய்ச்	2324
பவ்வமார்கடல்	2590
பழகும்வினை	1847
பழையதம்மடி	2030
பள்ளமார்	1561
பள்ளமீனிரை	1474
பறித்தபுன்	2581
பறித்தவெண்	2570
பறையினோ	1572
பறையொடு	2203
பற்றினாரைக்	1749
பனிவளர்	2371

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
பனைமல்கு	2430	பிள்ளைப்பிறை	2128
பன்றியின்	2173	பிறவியால்	2328
பாக்கியமதோ	1817	பிறைதான்	1672
பாக்கியம்பல	2024	பிறைநிலாவிய	2611
பாசமான	2341	பிறையார்சடை	1693
பாடலார்நான்	1952	பிறையானே	1631
பாடலார்வாய்	2098	பிறையுமாசில்	1517
பாடல்நெறி	1943	பிறைவளரும்	2199
பாடல்வண்	2497	பீ	
பாடல்வீணை	2628	பீடினாற்பெரி	2302
பாடவல்லநன்	2017	பு	
பாடியாடுமெய்ப்	2656	புகரேதுமிலா	1676
பாடுமடியார்	2133	புகலிசிரபுரம்	2224
பாடுவாரிசை	2360	புடையினாற்	1742
பாதத்தாரொலி	1735	புண்டரிகத்தார்	2261
பாதம்விண்	2704	புத்தராய்	2636
பாம்பரைச்	1941	புத்தருந்தோ	1610
பாயோங்கு	2067	புத்தரும்புந்தி	2220
பாரல்வெண்	1481	புத்தர்தத்து	2537
பாராரும்	1592	புத்தர்தேர்	2756
பாருநீரொடு	2576	புத்தர்பலரோ	1718
பாலனடி	1824	புத்தபுன்சம	1773
பாலூருமலைப்	1960	புத்தர்பொய்	2516
பாலையன்ன	2434	புந்தியார்ந்த	2724
பால்வெண்	2237	புயலார்	2108
பாவணவு	1777	புரந்தரன்	2218
பாவமேவு	2519	புரவியேழும்	2751
பாறுபுத்த	2365	புரைசெய்	2475
பி		புலியதள்	2372
பிச்சைபிறர்	1948	புலியினுரிதோ	2142
பிணிகலந்த	2444	புல்குபொன்	2583
பிண்டமுண்டுதிரி	1545	புல்லமேறி	1741
பிண்டமுண்டுபிரித்துவர்	2646	புள்ளுங்கமல	1947
பிண்டமுண்டுபிரியாது	2002	புறவஞ்சிரபுர	2229
பிண்டிபாலரு	2592	புற்றானைப்	1583
பிரமனூர்	2222	புனமல்கு	2076

பாடல்	பாடல் எண்
புனலாடிய	1688
பூ	
பூசஇனியது	2182
பூசநீர்பொழி	1485
பூசுமாசில்	2740
பூதஞ்சேர்ந்திசை	2641
பூதத்தின்	2346
பூதமொடுபேய்	1813
பூமகனூர்	2268
பூம்படுகிற்	2207
பூவவர்ந்தன	1491
பூவார்சடை	2136
பூவினானும்வி	2700
பூவினானொடு	1761
பூவுந்நீரும்	2717
பூவுளானு	2635
பெ	
பெண்ணமருந்	2081
பெண்ணமர்	2211
பெண்ணுரு	2177
பெண்ணொர்பாகத்தர்	2629
பெண்ணொர்பாகம்	2759
பெண்ணொர்கூ	2643
பெயரெனும்மி	2003
பெரியவாகிய	2462
பெரியாய்	1684
பெருகுசந்தனம்	2664
பெரும்பிணி	1790
பெறுமலர்	2379
பே	
பேயடையா	1983
பேய்கள்பாடப்	2578
பேரும்பொ	2114
பேழைவார்	2632
பொ	
பொங்காடரவு	2116
பொங்குசெங்	2742
பொங்குதண்	2474
பொங்குநற்	2596
பொங்குபூண்	2361
பொங்குநூல்	2070
பொங்குவெண்	2453
பொங்குவெண்புரி	2507
பொடிகள்பூசி	2747
பொடிகொள்	2594
பொடிகொள்மேனி	2630
பொடியிலங்குந்	2692
பொய்துவாழ்	2731
பொய்மிகுத்த	2524
பொருதுவார்	1510
பொலியுமால்	1576
பொல்லாத	2090
பொல்லாப்	2073
பொன்றாது	2340
பொன்றொத்த	2240
பொன்னேர்கொன்	2137
பொன்னேர்தரு	1720
பொன்னொப்ப	1707
போ	
போகமுமின்	2215
போகம்மறி	1653
போதியர்கள்	1991
போதியார்பிண்டி	1599
போதினாலும்	2783
போதின்மே	2089
போதுலவு	1957
போதுலாவிய	1507
போய்க்காடே	1907
போர்த்ததுவுங்	2295
ம	
மகரவார்கடல்	1479
மங்குநோ	2547

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
மங்குல்தங்கு	1551	மந்தமருவும்	2107
மங்குல்தோய்	1912	மந்திரந்தரு	1500
மங்கைகூறமர்	2511	மந்திரமாவது	2178
மங்கைகூறினன்	2683	மயலிலங்குந்	2693
மங்கைமணந்	2336	மரவம்பொழில்	2345
மங்கையோர்கூ	1955	மருவலார்தம்	2771
மங்கைவாணுத	2010	மருவாரு	1622
மஞ்சுலாவியக	2613	மருவுமான்	1757
மஞ்சுலாவியமா	1505	மருவுநான்	2288
மடங்கொள்	1548	மருளினல்லார்	2782
மடந்தை	2709	மலம்பரவிய	1729
மடம்படுமலை	1800	மலிகடுந்திரை	1997
மடலார்ந்த	1976	மலியுமாளிகை	1568
மடுத்தவாள்	2601	மலிவிழாவீதி	1977
மடையினெய்	2716	மலைநிலாவிய	2612
மட்டிட்ட	1971	மலையன்றெ	1716
மணிநீள்முடி	1685	மலையிலங்குஞ்	2698
மணிமல்கு	2351	மல்குதண்	2735
மண்டுகங்கை	2736	மல்லையார்மும்	2779
மண்டுகங்கையு	2437	மழுவானோ	1595
மண்டை	2495	மழைமுகில்	2373
மண்ணர்நீரர்	2620	மழையார்மிட	1710
மண்ணார்ந்த	2053	மறத்துறை	1792
மண்ணினிற்	1506	மறம்பயமலைந்	1786
மண்ணினைமுன்	1958	மறியாருங்	2095
மண்ணினைவா	1620	மறுத்தானை	1619
மண்ணுமோர்	2189	மறைகளான்	2358
மண்ணொடு	1984	மறைத்தான்	1673
மண்புகார்	1906	மறைமல்கு	2078
மதிநுதல்	2391	மறையானை	1590
மதியமொய்த்த	2785	மறையினார்மழு	1745
மதியானே	1624	மறையினானொ	1736
மந்தணமிகு	1836	மறையுடையார்	2195
மந்தமாம்	1579	மறைவலா	2689
மந்தமார்பொழின்	2666	மற்றிவாழ்க்	2546
மந்தமாரும்	2757	மற்றுமிவ்வுல	1998

பாடல்	பாடல் எண்
மனவஞ்சந்	1889
மனைக்கேயேற	2105
மன்னீரவங்	2252
மா	
மாகாயம்	1931
மாடநீடு	1543
மாடமாளிகை	2654
மாடெலாமண	2637
மாட்டூர்மடப்	1890
மாணாயுலகங்	2110
மாணிதன்	2575
மாதிலங்கியபா	2599
மாதிலங்கியமங்	1475
மாதொர்கூறனை	2626
மாதொர்கூறுடை	1512
மாதோர்கூறுகந்து	2681
மாபதம்மறி	1522
மாமலையாள்	2259
மாயனும்மல	2690
மாலினோடயன்	1881
மாலினோடரு	1555
மாலுஞ்சோதி	1533
மாலுநான்முக	1739
மாலுமாமல	2515
மாலோடயனறி	2186
மாலோடுநான்	1968
மாறாதவெங்	1945
மாறுதன்னொடு	2593
மானஞ்சும்	2501
மானத்தின்	2574
மானவாழ்க்கை	2492
மி	
மிக்கமலத்	2276
மிக்ககாலனை	2500
மிடைபடு	2408
மின்னுஞ்சடை	2146
மின்னுலாவிய	2605
மு	
முடியர்மும்	1767
முடியார்சடை	1688
முடியிலங்கு	2286
முடையார்தரு	1726
முதிருஞ்சடை	1694
முத்தன்சில்	2359
முத்தமிகு	1830
முத்திதருவது	2180
முத்தினைமுழு	1617
முத்தேர்நகை	2249
முந்திக்கண்	2364
முந்திவந்து	2705
முயல்வளாவிய	2465
முழுதிலங்கும்	2699
முள்ளார்கமலத்	2154
முன்னமிரு	1779
முன்னநின்ற	2780
முன்னியகலைப்	1775
முன்னுமாடம்	1553
முன்னைநீர்	2543
மூ	
மூடியசீ	2243
மூத்தானை	1615
மெ	
மெய்யின்மாசி	1578
மென்சிறை	2323
மே	
மேகமொடோடு	2382
மேய்ந்திளஞ்	2040
மேலோடிநீடு	2429
மேலோதுங்	2265
மேவயருமும்	1835
மேவாஅசுரர்	2147
மேவிலொன்	1538

பாடல்	பாடல் எண்
மை	
மைதவழு	1778
மைதழைத்	1511
மைத்தவண்	2000
மைப்பயந்த	1972
மைப்பூசு	1975
மையார்மணி	2253
மையான	1602
மையினார்பொ	1996
மையினார்மணி	2463
மையுலாம்	
மொ	
மொட்டைய	1839
மொண்டலம்பி	1994
மொழியானை	1639
மோ	
மோடிபுறங்	2263
வ	
வங்கமலியுங்	1780
வசையபராத	2403
வடங்கெட	1794
வடிகொள்பொ	2104
வடிகொள்மே	2638
வண்டணை	1798
வண்டமர்	2374
வண்டலங்	1478
வண்டலார்	2033
வண்டிரைத்த	1508
வண்டிரைத்து	1552
வண்டிறைமதி	1776
வண்டுசென்ற	2580
வண்டுபாடல்	2728
வண்டுவாழுங்	2793
வண்ணமால்	2503
வண்மைவளர்	2262
வம்படுத்த	1493
வம்பார்கொள்	2162
வம்புநாறும்	2767
வயஞானம்	1665
வரங்கள்	1876
வரிகொள்	1477
வரியமறை	2335
வரியரவே	1956
வரியேர் வளை	2149
வருக்கமார்தரு	1476
வருந்திய	2074
வருமார்கரியி	3343
வரைத்தலம்	2568
வரைத்தலைப்	2528
வரையார்திரள்	1706
வரையார்த்	1848
வரைவந்தெடு	2428
வரைவளங்கவர்	2669
வலமிகுவா	2384
வலியகால	2281
வல்லரக்கன்	2287
வல்லிசோலை	2571
வழுவாள்	1661
வளங்கெழு	1789
வளைக்கைமட	1973
வளையார்	2131
வள்ளிமுலை	2151
வன்புயத்த	2362
வன்னிகொன்றை	1536
வா	
வாக்கியஞ்	2311
வாங்கினார்மதின்	1743
வாசங்கமழும்	2163
வாசநலஞ்	1930
வாசமலியும்	1818
வாடல்வெண்டலைமாலை	2014
வாடல்வெண்டலைய	2682

பாடல்	பாடல் எண்
வாடற்றலைமா	2236
வாடியவெண்	2291
வாய்ந்தசெந்நெல்	2713
வாய்ந்தபுகழ்ம்	2258
வாய்ந்தபுகழ்வி	1804
வாராதநாடன்	2423
வார்கொள்கோ	2729
வாலியபுரத்	1832
வாழ்ந்தநாளும்	2715
வாளார்கண்	1919
வாளிசேரடங்	2315
வாளையுங்கயலு	2039
வாள்வரி	2393
வானமர்திங்களும்	2200
வானிளம்மதி	2686
வானுலாவும்	1547
வானேமலையே	1680
வானோர்மறை	1866
வி	
விடக்கொரு	1795
விடமுண்ட	1985
விடமல்கு	1951
விடைநவிலுங்	2210
விடையதேறி	2791
விடையதேறிவ	2730
விடையார்	2134
விடையார்கொடி	2139
விடையானை	1637
விடையுடைய	2368
விண்சுளார்	2595
விண்டமாமல	2461
விண்டவெள்	2562
விண்டார்புர	1842
விண்டெலாமல	1480
விண்டொழிந்தன	2617
விண்ணமர்ந்த	2037
விண்ணவர்வேதம்	2752
விண்ணவர்கண்	2172
விண்ணவர்கள்	1802
விண்ணானே	1625
விண்ணியங்கும்	2280
விண்ணியம்பி	1820
விண்ணிலான	1542
விண்ணுலா	1766
விண்ணுளார்	1596
விதியானை	1635
விரவிநாளும்	2028
விரவிநீறுபோ	2305
விரித்தனை	1787
விரிந்தனை	1788
விருதிலங்குஞ்	2696
விருதுகுன்ற	2627
விருத்தனாகிவெ	1746
விரையினார்	2307
விலங்கலேசிலை	2647
விலங்கலொன்	2726
வில்லார்வரை	2250
விழிக்குந்நுதன்	1844
விளங்கயனூர்	2272
விளங்கியசீர்ப்	2256
விளங்கிழை	1821
விளவுதேனொடு	2660
விளைக்கும்	1492
விற்றானை	1608
வீ	
வீக்கமெழும்	2787
வீக்கினாணாடர்	1921
வீங்கினார்	1923
வீசுமின்புரை	1733
வீடினார்மலி	2691
வீடுஞானமும்	1490
வீரமாகிய	2308

பாடல்	பாடல் எண்
வெ	
வெங்கள்விம்மு	2714
வெங்குருந்	2225
வெண்ணிலாம்	1758
வெண்ணிலாமி	2607
வெண்டலையோ	2770
வெண்ணாவலமர்	1719
வெண்புலான்	2778
வெந்தநீறணி	2688
வெந்தநீறுமெய்	2774
வெந்தநீறும்	2738
வெந்தநீற்றினர்	2485
வெந்தழல்வடிவினர்	2671
வெயிலின்	1708
வெயிற்கெ	2533
வெய்யதோ	2310
வெருகுரிஞ்சு	2446
வெருவிவேழ	1519
வெள்ளையெ	2339
வெறிகொளா	2727
வெறியார்மலர்க்	1671
வெற்றரைச்	2176
வென்றிமாமல	2494
வென்றிமிகு	1812

பாடல்	பாடல் எண்
வே	
வேகமதநல்	2138
வேடஞ்சூழ்	2062
வேடமுடைய	2145
வேணுபுரம்	2223
வேதத்திலுள்	2179
வேதநாவினர்	1879
வேதமொடு	1799
வேதம்பலவோ	1871
வேதவித்தாய்	2737
வேதித்தார்	1936
வேயுதிர்முத்	2764
வேயுறுதோளி	2388
வேர்த்தமெய்ய	2723
வேலாவலயத்	1868
வேலைதன்னின்	2792
வேலைமலிதண்	1986
வேள்பட	2395
வேள்படுத்திடு	1575
வேறுயர்	2407
வேனலானை	1528
வை	
வைத்தநிதியே	2161
வையநீரேற்	1914

* * * * * * * * * *

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

எடுத்தாண்ட நூல்கள்

REFERENCES

1. திருஞானசம்பந்தர் தேவாரம் – இரண்டாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு எண் 987, வெளியிட்ட வருடம் 1997, மிகவும் விரிவான நூல் 1217 பக்கங்களைக் கொண்டது.

2. தேவாரம் அடங்கன்முறை – மயிலை கிழார் இளமுருகனார் பதிப்பு, பதிப்பு வருடம் 1953.

3. பன்னிரு திருமுறை வரலாறு – முதற்பகுதி – முதல் ஏழு திருமுறைகள் – ஆக்கியோர்: வித்துவான் க. வெள்ளைவாரணன் – துணைப் பேராசிரியர், தமிழ்த் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, வெளியீட்டு வருடம் 1972.

4. குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டு, இவரது காலம் 17ஆம் நூற்றாண்டு முற்பகுதியாக இருத்தல் கூடும்.

5. Hymns of the Tamil Saivite Saints by F. Kingsbury and G. P. Philips, First Edition, 1921, Reprint 1988.

6. South Arcot in Sacred Song, Printed in 1938.

7. Poems to Lord Civa, Hymns of Tamil Saints, First Print 1989.

8. Hymns and Proverbs, Translated by Sri T. B. Siddulingam, M.A. and published by Sri Kasi Mutt, 1964.

9. Tamil Vedam by Suddhanantha Bharathiar.

10. 'Thirumurai the Sixth' by Seekkizhar-Adi-p-Podi Sri Dr. T. N. Ramachandran published by Dharmapuram Aadheenam in the year 1995.

11. Saiva Darshanam by Seekkizhar-Adi-p-Podi Sri Dr. T. N. Ramachandran printed on 12th July 2003 in London.

12. மெய்கண்ட சாத்திரம் (சைவ சித்தாந்தம்), தருமைப் பதிப்பு, வெளியீடு எண். 377, பதிப்பித்த வருடம் 1956.

13. Songs of the Harsh Devotee - The Thevaaram of Sundaramurthi Nayanar translated and annotated by David Dean Shulman (The Hebrew University of Jersusalem, published in the year 1990 in USA).

14. திருஞான சம்பந்தர் – ஓர் ஆய்வு, முதல் மற்றும் இரண்டாம் பகுதிகள், வை. இரத்தின சபாபதி, பதிப்பித்த வருடம் 2000.

15. 'பெரிய புராணம்', நான்காம், ஐந்தாம் தொகுதி, சிவக்கவிமணி ஊ. மு. சுப்பிரமணிய முதலியார், பதிப்பித்த ஆண்டு 1950.

16. தேவாரத் திருப்பதிகங்கள் – அடங்கன்முறை, அ. ச. ஞானசம்பந்தன், மயிலைக்கிழார் இளமுருகனார் அடங்கன்முறையின் மறுபதிப்பு, பதிப்பித்த வருடம் 1998.

17. திருக்குறள் – பரிமேலழகர் உரை.

18. தொல்காப்பியம் – உரை, ஆங்கில மொழி பெயர்ப்பு, Dr. S. V. சுப்பிரமணியன்.

19. Thevaaram written by Kalvi-k-kadal T. V. Gopalaiyer published by French Institute of Indology, Pondicherry - Three Volumes.

— * * * * * —

குறிப்பு